உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருள்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

(நான்காம் தொகுதி) 4/7

வம்பறா வரிவண்டுச் சருக்கம் - முதற் பாகம்



ACC. No. 27945
3/2


திருஞானசம்பந்தர்

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

சேக்கிழார் சுவாமிகள் என்னும் அருண்மொழித்தேவர்

அருளிய

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

(பன்னிரண்டாம் திருமுறை)

(நான்காம் தொகுதி) 4/7

(பாடல் எண்கள் : 1899 - 2541)

திருஞானமுண்டருளியது

வம்பறா வரிவண்டுச் சருக்கம்

(முதற் பாகம்)

கோவை - வழக்கறிஞர்

திரு. C.K. சுப்பிரமணிய முதலியார், B.A., அவர்கள்

தொகுத்தியற்றிய

உரையுடன்

பதிப்பாசிரியர்

டாக்டர் இராச. வசந்தகுமார்

நிறுவன வேந்தர்

கற்பகம் பல்கலைக்கழகம்

KO... LIBRARY. KOVILO...
A. No. 27945

பன்னிரு திருமுறை ஆய்வு மையம்

கற்பகம் பல்கலைக்கழகம்

ஈச்சனாரி, கோவை - 21

நூற்குறிப்பு

நூல் பெயர்	:	**பன்னிரண்டாம் திருமுறை** (நான்காம் தொகுதி) 4/7
மூல நூலாசிரியர்	:	**சேக்கிழார் சுவாமிகள்**
உரை நூலாசிரியர்	:	**சிவக்கவிமணி C.K. சுப்பிரமணிய முதலியார், B.A.**
நூல் வகை	:	செய்யுள் மற்றும் உரைநூல்
வெளியீடு	:	**பன்னிரு திருமுறை ஆய்வு மையம்** **கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.**
வெளியீட்டு எண்	:	**62**
வெளியிடும் நாள்	:	**24 - 02 - 2018**
பக்கங்கள்	:	**1008**
பதிப்புரிமை	:	**© க. மங்கையர்க்கரசி**
தாள்	:	மேப்லித்தோ 80 gsm
அளவு	:	கிரவுன் 1/8
அச்சகம்	:	செஞ்சுடர் அச்சகம் கோ.வா.பாளையம், போத்தனூர், கோவை – 23. செல் : 98431 74238





திருநாரையூர்ப் பொள்ளாப் பிள்ளையார்



நம்பியாண்டார் நம்பிகள் பிள்ளையாரை அமுதூட்டும் திருக்கோலம்

(திருநாரையூரில் உள்ளது)



இராசராசச் சோழர்

(திருநாரையூரில் உள்ளது)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை (நான்காம் தொகுதி) 4/7

பொருளடக்கம்

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை

(நான்காம் தொகுதி) 4/7

வழிபாட்டுக் கருத்தரங்கம்

24.02.2018, 25.02.2018 - சனி, ஞாயிறு

நாவாண்ட பலகலையும் நாமகளும் நலஞ்சிறப்பப்
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்தச்
சேவாண்ட கொடியவர்தம் சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டில் உலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன். - பெரியபுராணம்-1952

பதிப்புரை

பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார்
இறைவன் அடிசேரா தார். - திருக்குறள் (10)

1. உயிரின் நோக்கம் / இலட்சியம் - வீடுபேறு, முத்தி, மோட்சம். (சொர்க்க நரகங்கள் அல்ல)

2. எடுத்துக்கொண்ட கொள்கைகள்

அ) எந்நிலையில் நின்றாலும் எக்கோலம் கொண்டாலும் மன்னியசீர்ச் சங்கரன் தாள் மறவாமை.

ஆ) யாதொரு தெய்வங் கொண்டீர்; அத்தெய்வமாகி ஆங்கே மாதொரு பாகர் தாம் வருவார் எனத் தெளிதலும்/ உறுதிபட நிற்றலும்.

இ) பூதம் ஐந்தும் நிலையிற் கலங்கினும், மாதொரு பாகர் மலர்த்தாள் மறப்பிலாமை.

ஈ) சிவத்தைத் தவிர மற்றொரு தெய்வத்தைக் கனவிலும் நினையாதிருத்தல்.

உ) "ஞாலம் நின்புகழே மிக வேண்டும் தென் ஆலவாயில் உறையும் எம் ஆதியே" என்று எந்நேரமும் சிவன் புகழையே பாடிக்கொண்டிருத்தல். நம் புகழைப் பாடவோ, பரப்பவோ முயற்சி செய்யாதிருத்தல்.

ஊ) தம்மைத் தாம் முற்றிலும் மறத்தல்.

3. வகுத்துக்கொண்ட நெறிகள்

1) சிவபூசை - விசேட தீக்கை பெற்றுத் தினமும் சூரிய உதயத்தில் ஆன்மார்த்த படிகலிங்க மூர்த்திக்கு ஆனைந்துத் திருமஞ்சனத்துடன் 1008 போற்றி மலர் வழிபாடு.

2) எழில் ஞானபூசை - திருமுறைகளையும், சாத்திரங்களையும் ஓதுதல், ஓதுவித்தல்.

3) சிவாலயத் திருப்பணிகள் - அன்றாட, வாராந்தர, மாதாந்தர, வருடாந்தர பெருஞ்சாந்திப் பெருவிழாக்கள் நடத்த உதவி செய்தல் - நல்விழாப் பொலிவு காணுதல் - காண்பித்தல்.

அன்புடையீர் வணக்கம்.

4281 பாடல்களைக் கொண்ட பெரியபுராணத் தேவாமிர்தத்துக்கு 7 தொகுதிகளாக உரை வெளியிடத் திருவருள் கூட்ட 3 தொகுதிகளுடன் முதற்காண்டம் நிறைவு பெற்றுள்ள நிலையில் இத்தொகுப்பு (4) இரண்டாம் காண்டம் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் தொடர்கிறது. இச்சருக்கத்தின் நாயகர் திருஞானசம்பந்தர். பிள்ளைபாதி – புராணம்பாதி என்பதொரு தொன்மொழியும் உண்டு. தொகுதிகள் 4, 5 இரண்டும் ஆளுடையபிள்ளையார் புராணங்களாக அமைய, 6ஆம் தொகுதியில் வம்பறா வரிவண்டுச் சருக்கத்தில் இடம்பெற்றுள்ள ஏனைய நாயன்மார்களான ஏயர்கோன் கலிக்காமர், திருமூலர், தண்டியடிகள், மூர்க்கர், சோமாசிமாறர் ஆகியோரின் வரலாறுகள் இடம் பெறவுள்ளன.

எல்லாம் வல்ல சிவபரம்பொருளின் திருவருளால் இயற்றப்பட்ட நம் சமய நூல்களைப் படித்துப் பொருளுணர்ந்து, ஆய்வு செய்து, அனுபவிக்க முற்படும் பொழுதெல்லாம் ஏராளமான ஐயங்கள் எழுகின்றன. அந்நூல்களில் எடுத்தியம்பப்பட்டுள்ள உயரிய கருத்துக்களைப் புரிந்து கொள்வதற்கு உரை விளக்கங்கள் தேவைப்படுகின்றன. மூல நூல்களில் சொல்லப்பட்டிருக்கும் பகுதிகளுக்கு நம் காலத்துக்கும், வாழ்க்கைச் சூழலுக்கும் ஏற்ற வண்ணம் மூலத்திலிருந்து அடி பிறழாமல் விளக்கங்கள் அளிப்பவைகளே நல்ல உரை நூல்கள், ஓர் உரைநூல் எப்படி அமைய வேண்டுமென்ற கேள்விக்கு விரிவான விளக்கமளிப்பது நன்னூலாகும்.

உரையின் உறுப்புக்கள் அனைத்தும் நன்னூலார் கூறும்
பதினான்கு உறுப்புக்களுள் அடங்கும்.

கீழ்க்கண்ட நன்னூல் நூற்பாவில் உரைக்கு இன்றியமையாதனவாக 14 பண்புகள் கூறப்பட்டுள்ளன.

"பாடங்கருத்தே சொல்வகை சொற்பொருள்
தொகுத்துரை உதாரணம் வினாவிடை விசேடம்
விரிவு அதிகாரம் துணிவு பயனொடு
ஆசிரிய வசனம் என்று ஈரேழ் உரையே"

மூலநூல் பாடம், கருத்துரை, சொல்வகை, சொற்பொருள், தொகுத்துரை, உதாரணம், வினா, விடை, விசேடம், விரிவு, அதிகாரவரவு காட்டல், துணிவு, பயன், "ஆசிரிய வசனம்" என்ற பதினான்கு பண்புகளையும் செவ்வனே எந்த உரையில் காணமுடிகிறதோ அவ்வுரையே சிறந்த உரையாகிறது. அந்த வகையில் நம் சைவ சமயப் பனுவல்களின் கருவூலத்தில் சிறந்த உரைகளாகக் கீழ்க்கண்ட உரைகளை உற்று நோக்கத் திருவருள் கூட்டுவித்தது.

1. கோவை சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் திருத்தொண்டர் புராண உரை.

2. பண்டிதமணி கதிரேசஞ் செட்டியாரின் திருவாசகத்தில் திருச்சதகம் மற்றும் நீத்தல் விண்ணப்ப உரைகள்.

3. தணிகைமணி செங்கல்வராயப்பிள்ளையின் திருப்புகழ் உரை.

4. இலங்கை திருவிளங்கத்தின் சிவஞான சித்தியார் உரை.

இவ்வுரை ஆசிரியர்கள் தங்கள் வாழ்நாள் முழுவதும் மெய்வருத்தம் பாராது, பசிநோக்காது, கண் துஞ்சாது, கொண்ட கொள்கையே உயிரென வாழ்ந்து உரை எழுதினார்கள். உண்ணும் உணவும், பருகும் நீரும் அந்தந்த நூல்கள் என்றே வாழ்ந்தார்கள். அவர்கள் பொருளாக எதையும் நேசித்ததாக வரலாறு இல்லை. அவர்கள் வரலாறுகளையும், உரைநூல்களையும் படித்தபின் கண்ணீர் வராத மனம் கல்மனம்.

அவர்கள் சமயப்பனுவல்களையும், பழந்தமிழ் இலக்கியங்களையும், சிற்றிலக்கியங்களையும் இலக்கண நூல்களையும் கசடறக் கற்றவர்கள். மறந்தும் பிறன் கேடு நினைக்காதவர்கள்.

ஒரே பாட்டிற்கு மட்டும் பல பக்கங்களில் உரையெழுதுவார்கள். அவற்றிற்கு 7 அல்லது 8 நூல்களிலிருந்து உதாரணம் காட்டுவார்கள். அவர்களுடைய மேசைகள் மிகப்பெரியதாக இருந்திருக்கவேண்டும் அல்லது தரையில் விரிப்பின் மேல் அமர்ந்துகொண்டு ஒரே சமயத்தில் குறைந்தது 10 நூல்களையாவது புரட்டிப் பார்க்காமல் அவர்கள் எழுதிய மாதிரி தெரியவில்லை. அவ்வளவு குறிப்புக்களையும், உதாரணங்களையும், இலக்கண நுட்பங்களையும் சுட்டிக் காட்ட ஒரு பிறவிக் கல்வி போதாது. "எழுமையும் ஏமாப்புடைத்து" என்றபடி அவர்கள் பல பிறவிகளில் கற்று முதிர்ந்துள்ளனர். உதாரணமாக சிவக்கவிமணி அவர்கள் ஒரு பெரியபுராணப் பாடலுக்கு உரை காணும்போது, தமக்குத் தெரிந்தவற்றையெல்லாம் சொல்லிவிட்டு அதற்கு மேல் விளக்கம் விரும்புவோர் கந்தபுராணம் ததீசி உத்தரப்படலத்தில் காணலாம் என்பார். உடனே அந்நூல் நமது மேசை மேல் இருந்தால் அவ்விடத்துக்குச் சென்று அதைப் படித்துவிட்டு ஒப்பு நோக்குங்கால் தெளிவிற்காகக் காஞ்சிப்புராணத்தில் ஒரு பாடல் பார்க்க வேண்டிய நிலை ஏற்படும். அந்த நூல்களையும் புரட்டி அதற்கும் உரைமூலம் பொருளைப் பார்த்துவிட்டு மூலத்துக்கு வந்துசேர 3 அல்லது 4 மணி நேரம் ஆகும். நமக்கு தூக்கம் வந்துவிடும். 8 மணி நேர வயிற்றுப்பிழைப்புக்குப்பின் அதற்குமேல் நேரம் ஒதுக்க முடியாது. இதுதான் நமது இன்றைய வாழ்க்கைச் சூழல். எப்படியெல்லாம் இடர்ப்பட்டு 15/20 ஆண்டுகள் வரை கூட ஓயாமல் உழைத்து உரைநூலை உருவாக்கி இருப்பார்கள்? தற்காலத்தைப் போன்ற வசதிகள் இல்லாத காலம், இரண்டாம் உலகப் போரின்போது அவர்களுக்குக் காகிதமே கிடைக்கவில்லை. தலவரலாற்றுக்குப் புகைப்படம் எடுக்க முடியவில்லை. தகுந்த பொருளாதார வசதியுமில்லை. இவ்வளவு இடர்ப்பாடுகளையும் தாண்டி நாம் உய்ய – சைவம் உய்ய உரைதந்த அந்த உரையாளர்களைப் போற்றிமகிழ வேண்டும். அவர்கள் பெருமை நம் இளைய தலைமுறையினருக்கும் தெரிய வேண்டும். அவர்களும் அதைப் படித்துணர்ந்து அனுபவிக்க வேண்டும் என்ற உயரிய நோக்கில் சிவக்கவிமணி அவர்கள் எழுதிய பெரியபுராண உரையைத் தொடர்ந்து வெளியிட்டு வருகிறோம் அவருக்குச் சொல்லகராதி தேவையில்லை. ஏனெனில் அவரே ஒரு அகராதி.

கருத்துரைத்தல், கண்ணழித்தல், பொழிப்புத்திரட்டல், அகலங்கூறல் ஆகிய நால்வகை முறையிலும் உரைகண்ட அந்தத் திருவாளரின் வாழ்க்கை வரலாற்றை சுருக்கமாக அளிக்கிறோம்.

சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியாரின் வாழ்க்கை வரலாறு

சிவக்கவிமணி அவர்கள் கி.பி. 1878–ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 20–ஆம் நாள் வித்துவான் கந்தசாமி முதலியார் வடிவம்மை தம்பதிகளுக்குத் திருமகனாகப் பிறந்தார். அவர் பள்ளி கல்லூரிக் கல்விகளை முறையாகப் பயின்று 1903–ஆம் ஆண்டில் சென்னை மாநிலக் கல்லூரியில் இளங்கலைப்பட்டம் பெற்ற பட்டதாரி ஆவார். தமிழில் மாநில முதன்மைக்காகத் தங்கப்பதக்கம் பெற்றபின் சட்டம் பயின்று சட்டப்பட்டமும் பெற்று வழக்கறிஞராக விளங்கினார். முன்செய்தவத்தால் சைவக்குடும்பத்தில் பிறந்து இளமை முதலே பெரியபுராணத்தின்மேல் அவரையும் அறியாமலே ஒரு விருப்பம் உண்டாகி வளர்ந்து வந்துள்ளது. 1894–ஆம் ஆண்டில் முதன்முதலாக சு. திருச்சிற்றம்பலம் என்ற தமிழாசிரியர் மூலமாக முறைப்படி பெரியபுராணம் பாடம் கேட்டார். 1906–ஆம் ஆண்டு திருச்சிற்றம்பலனாரின் மறைவிற்குப் பின் சில ஆண்டுகள் அவருக்கு ஆசிரியராக யாரும் அமையவில்லை.

1918–ஆம் ஆண்டு திருப்பேரூர் சாந்தலிங்கர் சன்மார்க்க சங்க ஆண்டு விழாவிற்கு வருகைபுரிந்த சான்றோர் கயப்பாக்கம் சதாசிவம் செட்டியார், சைவ அன்பர்களின் அழைப்பினை ஏற்று பெரியபுராண விரிவுரை செய்யத் தொடங்கிய காலத்துக் கையேடு படிக்கும் வாய்ப்பு சிவக்கவிமணி அவர்களுக்கு கிடைத்தது.

மூன்றாண்டுகள் அவரிடம் பாடம் கேட்டு அரிய கருத்துக்களை மனதில் வாங்கிக் கொண்டார். திருமுறைகள் ஓதுவதையும், பெரியபுராணம் முழுமையும் படிக்கும் வழக்கத்தையும் கொண்டு விளங்கினார். அக்காலச்சான்றோர்கள் பலருடன் கலந்து பழகும் வாய்ப்பு ஏற்பட்ட போதெல்லாம் பெரியபுராணப்பாடல்கள் பலவற்றின் அருமை, பெருமை, நயங்களை உணர முடிந்தது.

கோவைக்கிழார் இராமச்சந்திரன் செட்டியாருடன் இணைந்து 1915–ல் கோவைத் தமிழ்ச்சங்கம் கண்டார். தேவாரப்பாடசாலை ஒன்றையும் சேக்கிழார் திருக்கூட்டத்தையும் நிறுவினார். தந்தையார் ஏற்படுத்திய சைவப் பிரசங்க சாலையில் பல சொற்பொழிவுகளை நிகழ்த்தினார்.

1926, 1929 ஆண்டுகளில் சென்னைப் பல்கலைக்கழகத் தமிழ்மொழி ஆணையராக இருந்து தமிழ்மொழி வளர அயராது உழைத்தார்.

பெரியபுராணத்தைத் தெளிவாகக் கற்றிருந்த சுப்பிரமணிய முதலியாரை சென்னைப் பல்கலைக்கழகம் 1930–ஆம் ஆண்டு உரையாற்ற அழைத்தபோது, சென்னை பச்சையப்பன் கல்லூரி மண்டபத்தில் இரண்டு நாட்கள் "சேக்கிழார்" என்ற தலைப்பில் ஆற்றிய உரையை பின்னாளில் நூலாக வெளியிட்டார். அந்நூலுக்கும், பேச்சுக்கும் பொதுமக்களிடமிருந்து கிடைத்த வரவேற்புக்குப் பின்னரே பெரியபுராணத்திற்கு விளக்கவுரை காணும் எண்ணம் அவருக்கு ஏற்பட்டது.

உரை எழுதும் முயற்சியில் முதலில் மூலப்பிரதிகளையும், ஏட்டுப்பிரதிகளையும் தேடித் தொகுத்தார். பழம்பெரும் தமிழாசிரியர்கள் சிலரின் உரைக்கையெழுத்துக் குறிப்புக்களும்,

உரைப்பிரதிகளும் அவருக்கு அப்பணியில் உறுதுணையாக இருந்தன.

சிவக்கவிமணி அவர்கள் தமது ஐம்பத்தெட்டாவது அகவையில் 1935–ஆம் ஆண்டு உரை எழுதும் பணியைத் துவங்கி 1949–ஆம் ஆண்டு உரை எழுதும் கையெழுத்துப் பணியை நிறைவு செய்தார். ஏழு பகுதிகளாகக் கோவைத் தமிழ்ச் சங்க வெளியீடாக வருவதற்கும் ஏற்பாடு செய்தார். உரையின் முதல் தொகுதி 15.09.1937–இல் வெளிவந்தது. பொருளாதாரப் பற்றாக்குறை, நிதிப்பற்றாக்குறை, உலகப்போர்கள் இவற்றால் பல தடங்கல்களைச் சந்தித்து இறுதிப்பகுதி 06.05.1954–இல் அன்று வெளியிடப்பட்டது.

இறைவன் அருளாலும், பலருடைய பொருட் கொடையாலும், உழைப்பாலும், 19 ஆண்டுகள் உழைத்து இந்த உரைநூலை ஆக்கினார். 1894 முதல் 1934 வரை ஏறத்தாழ 40 ஆண்டுகள் படித்துத் தயாரானார். 1935 முதல் 1954 வரை உரைஎழுதிக் கீழ்க்கண்டவாறு வெளியிட்டார்.

பகுதி	சருக்கம்	உரைநூல் முதல் பதிப்பு வெளியிட்ட நாள்	பாடல்கள்	பக்கங்கள்
1.	திருமலைச்சருக்கம் – தில்லை வாழந்தணர் சருக்கம்	05.03.1937	1–550	696
2.	இலைமலிந்த சருக்கம் – மும்மையாலுலகாண்ட சருக்கம்	25.12.1940	551–1265	980
3–1.	திருநின்ற சருக்கம் – I	26.11.1943	1266–1694	782
3–2.	திருநின்ற சருக்கம் – II	23.03.1946	1695–1898	315
4.	வம்பறாவரிவண்டுச் சருக்கம் – I	19.02.1948	1899–2530	784
5.	வம்பறாவரிவண்டுச் சருக்கம் – II	01.06.1950	2531–3154	828
6.	வம்பறாவரிவண்டுச் சருக்கம் – III வார்கொண்ட வன முலையாள் சருக்கம்–I	01.02.1953	3155–3747	672
7.	வார்கொண்ட வன முலையாள் சருக்கம்–II முதல் வெள்ளானைச் சருக்கம் முழுதும்	29.06.1954	3748–4281	656
	மொத்தம்	17 ஆண்டுகள்	4281 பாடல்கள்	5713 பக்கங்கள்

கடல் சூழ்ந்த இவ்வுலகில் உள்ள வேறு எந்த மொழியிலும் எந்த ஒரு நூலுக்கும் இவ்வளவு பெரிய உரைநூல் இருப்பதாக நாங்கள் பார்த்த அளவு தெரியவில்லை. அப்படி ஒரு உரை இருப்பின், அதை யாராவது தெரிவித்தால் நாம் அதையும் ஒப்பு நோக்கலாம். அத்தகைய அரிய உரை நூலின் நான்காம் தொகுதியில் திருஞானசம்பந்தநாயனாரின் புராணத்தை முழுமையாகச் சிந்திக்க உள்ளோம்.

திருக்கோயில் வழிபாடு பற்றிய சரியையினை உள்ளடக்கிய கிரியை நிலையை உலகிற்கு எடுத்துக்காட்டி அதன்மூலம் உலகையும், உலகமக்களையும் வழிப்படுத்த வேண்டுமென்ற நோக்கில் ஞானப்பால் உண்ட திருஞானசம்பந்தப் பெருமான் தலங்கள் தோறும் சென்று மக்களை நெறிப்படுத்தினார். எச்செயலைச் செய்தாலும் ஐந்தெழுத்து ஓதியபின்தான் செய்தல், ஒரு தலத்தினின்று புறப்படும்போது இறைவரது அருள்விடைபெற்றுச் செல்லுதல், ஒரு தலத்தைக் குறித்துச் செல்லும்போது இடையிலும், மருங்கிலும் உள்ள தலங்களிலும் சென்று வணங்குதல், மாலற நேயமும், மலிந்தவர் வேடமும், ஆலயந்தானும் அரனெனத் தொழுதல் என்ற மரபுகளைப் பின்பற்றியே தலப்பயணம் செய்துவந்த சம்பந்தப்பெருமான் தந்தையார் தோளிலிருந்த வண்ணமும், நின்று நடந்த வண்ணமும், சிவிகையில் அமர்ந்த வண்ணமும், சுவாமியின் திருமுன்னரும், ஆலயத்திலும், சுவாமியையோ, ஆலயத்தையோ, நகரையோ வலம் வரும்போதும், தேமதுரத்தமிழால் பல்வேறுவிதமான பண்ணிசைகளால், சிவப்பரம்பொருளைப் பாடிப் பரவியுள்ளார். இன்றைய சுற்றுச்சூழல் வல்லுநர்களின் கருத்துக்களை / கண்டுபிடிப்புகளைப் பற்றி ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சொன்னவர் ஆளுடையப்பிள்ளையார் ஆவார். மரம் நடுதல், தலமரங்களைப் பாதுகாத்தல், குளம், நீர் நிலைகளை உருவாக்கிப் பராமரித்தல், அனைத்து இயற்கை வளங்களைப் பேணுதல், 84 லட்சம் யோனி பேதங்களுடன் உயிருறவு கொண்டு இன்புறுதல் என்ற கருத்துக்களுக்குப் பல பாடல்களில் முன்னுரிமை கொடுத்துள்ளார். இறைவன் அவர்மாட்டுப் பல அற்புதங்களை நிகழ்த்தினார். அவரும் மக்கள்மாட்டுப் பல அற்புதங்களை / செயற்கரிய செயல்களைச் செய்து காட்டினார். தமிழ், தமிழ் என்று அவர் சொன்னதுபோல் தமிழ்நாட்டில் தமிழ் பாடிய வேறு எந்தப்புலவரும் சொன்னதில்லை. தமிழ்கூறும் எல்லைகளுக்கு அப்பால் அவர் செல்லவில்லை. அந்த முத்தமிழ் விரகன் ஓதிய செந்தமிழ் மாலையில்தான் பரசமய நிராகரணமும், சைவ விளக்கமும், தாபனமும் நடந்தேறின. போக்குவரத்து வசதிகளில்லாத அந்தக்காலத்தில் சுமார் 234 தலங்களுக்கு அடியார் பெருமக்களுடன் யாத்திரைசெய்து 383 பதிகங்களைப் பாடி நாமெல்லாம் உய்யும் நெறி காண்பித்தார். திருஞானசம்பந்தர் என்ற ஒருவர் இல்லையானால் தமிழ், தமிழ்ப்பண்பாடு, நாகரிகம், மரபு என்பன அழிந்தே போயிருக்கும் என்பதை உணர்ந்தவரான, அறுபத்துமூன்று நாயன்மார்கள் புராணமெழுதிய சேக்கிழார்சுவாமிகள் பிள்ளைபாதி – புராணம்பாதி என்று சொல்லுமளவு 4281 பாடல்கள் கொண்ட பெரியபுராணத்தில் திருஞானசம்பந்தர் வரலாற்றை மட்டும் 1256 பாடல்களில் விளக்கியுள்ளார். தாம் அவதரித்த சீர்காழி மிகத்தொன்மையான ஊரென்றும் அதற்குப் பிரமபுரம் முதல் கழுமலம் ஈறாக 12 பெயர்கள் உள்ளதென்றும் தமது வழிபடுதெய்வம் – ஞானம் நல்கிய தோணியப்பரை இமைப்பொழுதும் மறவாமல் பாடி வாழ்த்தியதன்மூலம் நாம் ஒவ்வொருவரும் பிறந்த ஊரையும், நாட்டையும், வழிபடு தெய்வத்தையும்

எந்நிலையில் நின்றாலும் மறக்கக்கூடாது என்றதொரு அரிய கருத்தினை ஆணித்தரமாகப் பல இடங்களில் எடுத்துரைத்துள்ளார். ஆறுமுறை தலப்பயணம் மேற்கொண்டார். அவர் ஒவ்வொரு முறையும் சீர்காழியில் தொடங்கிச் சீர்காழியிலேயே நிறைவு செய்வார். முருகப்பெருமானுக்கு அடுத்தபடியாகக் கல்வியில் கரைகண்ட புலவனென்று திருஞானசம்பந்தரைத்தான் சொல்லவேண்டும் என்று போற்றுமளவு தெய்வப்பண்பு, கல்வி, செல்வம், வீரம், பண்பாடு அனைத்தும் அவரிடம் நிரம்பியிருந்தன. துன்ப வினைகளிலிருந்து நாம் உய்திபெறச் சம்பந்தப்பெருமான் பாடல்களே போதும்; வேறு எதுவும் தேவையில்லை.

இப்படியன், இந்நிறத்தன், இவ்வண்ணத்தன் என்று எழுதிக்காட்ட முடியாத பரம்பொருளை, தோடுடைய செவியன், விடையேறி, தூவெண்மதிசூடி, சுடலைப்பொடிபூசி என்று குறிப்பிட்டுத் தாம் கண்ட கடவுளை அனைத்துலக மக்களுக்குக் காண்பிப்பதற்காகவும், அவர் இப்படிப்பட்ட குணங்களை உடையவர் என்று எடுத்தியம்புவதற்காகவும், அவரை அடைய இத்தகைய வழிபாடுகளை மேற்கொள்ள வேண்டுமென்பதைச் சொல்வதற்காகவும், அளவிடற்கரிய காலங்கடந்த பெருமையுடைய சைவ நன்னெறியை மறுமலர்ச்சி இயக்கமாக மாற்றி செயற்படுத்திக் காட்டுவதற்காகவும் பதிகப் பெருவழி என்ற வழியைக் கண்டறிந்து தொண்டாற்றிப் பரவியவர்தான் திருஞானசம்பந்தர்.

திருப்பதிகப் பெருவழியைத் தொடங்கிய பெருமானாகிய திருஞானசம்பந்தப் பெருந்தகையின் தொண்டு இறைவனைத் தமிழ்த் திருப்பதிகங்களில் பாடுவதுமட்டுமன்று. திருப்பதிகப்பெருவழி என்பது பல பாடல்களை உள்ளடக்கிய திருப்பதிகங்கள் மூலம் இறையனுபவத்தை அனைத்துயிர்களும் பெறுமாறு செய்விப்பதே. இதனை,

"மல்லல் நெடுந்தமிழால் இம்மாநிலத் தோர்க்கு உரைசிறப்ப
பல்லுயிரும் களிகூரத் தம்பாடல் பரமர்பால்
சொல்லும் முறை பெறுதற்கு" – என்ற திருத்தொண்டர்புராணப் பாடலால் (1978)

அறியலாம்.

திருப்பதிகப் பெருவழி என்பது திருநெறிய தமிழ் என வெளிப்படுகிறது. அது திருஞான சம்பந்தரின் அகத்தே விளைந்த சிவ போகத்தை அடிப்படையாகக் கொண்ட மெய்ம்மொழியே. அம்மொழியானது கேட்கும் மக்களின் செவியை வழியாகக் கொண்டு அவர்களின் உள்ளத்திற்பட்டு பின் உயிரிற்படும். அது பேருணர்வுப் பெருமொழி. நிறைமொழி கேட்கும் மக்களுக்கு அம்மொழியானது திருஞானசம்பந்தர் பெற்ற அதே சிவபோகத்தை உண்டாக்கினால் தான் அவர்களும் அத்தகைய உண்மை அனுபவத்தைப் பெற முடியும். எனவே ஓர் உணர்வு மொழியாக – பேருணர்வு மொழியாக வந்த ஒன்று கேட்போரின் ஐம்புலன்களிலும் சென்று ஐந்தாகப் பிரிந்து பதிய வேண்டும். ஐம்புலன்களிலும் சிவானந்த அனுபவத்தைப் பதிய வைக்க வேண்டும். அங்கே முன்பிருந்த ஆசை, மயக்கம் ஆகியவற்றை அகற்ற வேண்டும். அந்த உணர்வுகளை உண்பிக்க திருஞானசம்பந்தர் தாம் பயன்படுத்திய திருப்பதிகப் பெருவழியில் எழுந்த ஒரு உன்னதமான

பதிகத்தின் திருக்கடைக் காப்பில் ஆனமொழி, போன மொழி, ஞான மொழி, தேனமொழி என்று பலமொழிகளை மொழிகிறார்.

ஆனமொழியான திறலோர் பரவும் அவளிவணநல்லூர் மேல்
போனமொழி நன்மொழிகளாய புகழ் தோணிபுரவூரன்
ஞானமொழி மாலைநலம்நாடு புகழ் ஞானசம்பந்தன்
தேனமொழி மாலை புகழ்வார் துயர்கள் தீயது இலர்தாமே.

தமிழுக்கு எப்படியெல்லாம் மகுடம் சூட்டித் தமிழின் பெருமையை உலகத்தார்க்குத் தெரிவிக்கலாம் என திருஞானசம்பந்தர் தாம் பாடிய தேவாரப்பதிகங்களில் ஏராளமான அடைமொழிகளைத் தந்து சிறப்பித்துள்ளார். அவற்றைத் தமிழ்ச் சைவப் பேரவை கீழ்க்கண்டவாறு தொகுத்து வெளியிட்டுள்ளது.

1. அருந்தமிழ்	23. சந்தமிவை தண்தமிழ்
2. அருளே மருவிய தமிழ்	24. சந்தமொடு செந்தமிழ்
3. ஆரா அருந்தமிழ்	25. சந்தம் இன்தமிழ்
4. இசைமலி தமிழ்	26. சந்தமே பாடவல்ல தமிழ்
5. இசையார் தமிழ்	27. சந்துலாம் தமிழ்
6. இன்தமிழ்	28. சீரின்மலி செந்தமிழ்
7. இன்புறு தமிழ்	29. சீர்மிகுந்த தமிழ்
8. உருவாகும் ஒண்தமிழ்	30. செந்தமிழ்
9. ஊறும் இன்தமிழ்	31. செந்தண்தமிழ்
10. ஏரினார் தமிழ்	32. செப்பரிய தண்தமிழ்
11. ஒண்தமிழ்	33. செறிவண் தமிழ்
12. ஒளிர் பூந்தமிழ்	34. சொல்லார் தமிழ்
13. கருத்தின் தமிழ்	35. சொற்றமிழ்
14. கலைமலி தமிழ்	36. ஞாலமிக்க தண்டமிழ்
15. குலமார் தமிழ்	37. ஞானத்தமிழ்
16. குற்றமில் செந்தமிழ்	38. தலைமலி தண்தமிழ்
17. குன்றாத் தமிழ்	39. தண்தமிழ்
18. சக்கரம் சீர்த்தமிழ்	40. தலமார் தமிழ்
19. சந்த நிறை தண்தமிழ்	41. தலமார் தரு செந்தமிழ்
20. சந்தமார் தமிழ்	42. தவமல்கு தமிழ்
21. சந்தமார்ந்து அழகிய தண்தமிழ்	43. தன்னார்வர் செய்தமிழ்
22. சந்தமாலைத் தமிழ்	44. தன்னியல் கலைவலத் தமிழ்

45. தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்
46. திருநெறிய தமிழ்
47. துளங்கில் தமிழ்
48. தெய்வஒண் தீந்தமிழ்
49. தேன் நேர் ஆர் தமிழ்
50. நாடவல்ல நற்றமிழ்
51. நாடிய தமிழ்
52. நலங்கொள் தமிழ்
53. நல்லகேள்வித் தமிழ்
54. நல்ல தமிழ்
55. நல்லவாய இன்தமிழ்
56. நல்ல செந்தமிழ்
57. நற்றமிழ்
58. படமலி தமிழ்
59. பண்ணாரும் தமிழ்
60. பண்ணுலாம் தமிழ்
61. பண்பொலி செந்தமிழ்
62. பாவார் தமிழ்
63. பலந்தரு தமிழ்
64. பலமிகு தமிழ்
65. பழுதில் இறைஎழுதுமொழி தமிழ்
66. பாடலாய தமிழ்
67. பாமரு செந்தமிழ்
68. பாரினார் தமிழ்
69. பாரின் மலிகின்ற புகழ் நின்றமிழ்
70. பேரியலின் தமிழ்
71. மலி செந்தமிழ்
72. மறையிலங்கு தமிழ்
73. மிகுதலை தமிழ்
74. முடிவில் இன்தமிழ்
75. முத்தமிழ்
76. வடமார் தமிழ்
77. வண்டமிழ்
78. வாயுரைத் தமிழ்
79. வித்தக மறைமலி தமிழ்
80. விரும்பு தமிழ்
81. விலையுடை அருந்தமிழ்

கர்ப்பச்சூட்டில் பிறந்து, சிவஞானம் அருளப்பெற்று, தீர்மானங்களுடன் பாட ஆரம்பித்து, வரையறைகள் செய்துகொண்டு முத்தமிழையும் வாழ வைத்து, செத்தவரை எழுப்பும் ஆற்றலுடன் நம்மைப் போன்றவரை வழிநடத்தி, சமாதியின்றி சிவபதம் பெற்ற அவர் பண்டு திருவடி மறவாத பான்மையர். அவர்தம் புராணத்தைத் தெய்வச் சேக்கிழார் அருளிய வண்ணம் உணரத் திருவருள் கூட்டுவித்த நிலையில் இதுவரை பதிப்பித்து வெளிவந்துள்ள நமது பன்னிரு திருமுறை ஆய்வுமைய நூல்களை கீழ்க்கண்டவாறு பட்டியலிடுகிறோம்.

முதல் திருமுறை	டிசம்பர் 27, 28 - 2014
இரண்டாம் திருமுறை	பிப்ரவரி 21, 22 - 2015
மூன்றாம் திருமுறை	ஏப்ரல் 18, 19 - 2015
நான்காம் திருமுறை	ஜீன் 27, 28 - 2015
ஐந்தாம் திருமுறை	ஆகஸ்டு 29, 30 - 2015

ஆறாம் திருமுறை	அக்டோபர் 24, 25 - 2015
ஏழாந் திருமுறை	டிசம்பர் 26, 27 - 2015
எட்டாம் திருமுறை - I	பிப்ரவரி 27, 28 - 2016
எட்டாம் திருமுறை - II	ஏப்ரல் 23 - 2016
ஒன்பதாம் திருமுறை	ஏப்ரல் 24 - 2016
பத்தாம் திருமுறை - I	ஜீன் 26, 27 - 2016
பத்தாம் திருமுறை - II	ஆகஸ்ட் 27, 28 - 2016
பத்தாம் திருமுறை - III	அக்டோபர் 22, 23 - 2016
பதினொன்றாம் திருமுறை - I	டிசம்பர் 24, 25 - 2016
பதினொன்றாம் திருமுறை - II	பிப்ரவரி 18, 19 - 2017
பதினொன்றாம் திருமுறை - III	ஏப்ரல் 29, 30 - 2017
பதினொன்றாம் திருமுறை - IV	ஜுன் 24, 25 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (முதல் தொகுதி) 1/7	ஆகஸ்டு 26, 27 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (இரண்டாம் தொகுதி) 2/7	அக்டோபர் 28, 29 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (மூன்றாம் தொகுதி- முதல் பாகம்) 3(1)/7	டிசம்பர் 23 - 2017
பன்னிரண்டாம் திருமுறை (மூன்றாம் தொகுதி- இரண்டாம் பாகம்) 3(2)/7	டிசம்பர் 24 - 2017

ஏழு தொகுதிகளாகப் பெரியபுராணத்தைப் பதிப்பிக்கத் திருவருள் கூட்டுவித்த நிலையில் சிவக்கவிமணி சி.கே. சுப்பிரமணிய முதலியார் பதிப்பித்த உரை இருக்க இன்னொரு உரை புதிதாக எழுத முயற்சிக்க வேண்டிய தேவையில்லை என அடியார் பெருமக்கள் நினைத்ததற்கேற்ப அப்பதிப்புரிமை பெற்றிருந்த சி.கே.எஸ் அவர்களின் குடும்பத்தினரை அணுகினோம். அவர்களும் மனமுவந்து ஒருமுறை மட்டும் பதிப்பிக்க அனுமதி அளித்தார்கள். அப்பதிப்புரிமையைக் கட்டிக் காத்துவரும் திரு. கண்ணாயிரம், திருமதி. மங்கையர்க்கரசி கண்ணாயிரம், திரு. சிவசுப்பிரமணியம் ஆகியோர்களுக்கும் மனமுவந்த நன்றிகளை உரித்தாக்குகின்றோம். அம்முறையில் நான்காம் தொகுதியாக 1948, 1971, 2003 ஆம் ஆண்டுகளில் சிவக்கவிமணி அவர்கள் குடும்பத்தாரால் வெளியிடப்பட்ட இந்நூலை நான்காம் முறையாக மறுபடியும் வெளியிட்டுக் கருத்தரங்கம் நடத்தத் திருவருள் கூட்டுவித்த நிலையில் கீழ்க்காண் அட்டவணைப்படி நிகழ்வுகள் நடைபெறும்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

பன்னிரண்டாம் திருமுறை (நான்காம் தொகுதி)

வழிபாட்டுக் கருத்தரங்கம் - 24.02.2018, 25.02.2018 - சனி, ஞாயிறு

நிகழ்ச்சி நிரல்
(திருஞானசம்பந்தர் புராணம்)

சொற்பொழிவாளர் நாள்/நேரம்	பாடல்கள்	பாடல் எண்ணிக்கை
பேராசிரியர் **ம.வே. பசுபதி** அவர்கள் 24.02.2018 சனி காலை 09.00 - 11.00	1899 - 1974	76
பேராசிரியர் **புரிசை நடராசன்** அவர்கள் 24.02.2018 சனி நண்பகல் 11.00 - 01.00	1975 - 2054	80
சிவத்திரு **சி. மதன் முரளி** அவர்கள் 24.02.2018 சனி பிற்பகல் 02.00 - 04.00	2055 - 2136	82
சிவத்திரு **குடவாசல் இராமமூர்த்தி** அவர்கள் 24.02.2018 சனி மாலை 04.00 - 06.00	2137 - 2217	81
சிவத்திரு **சு. குஞ்சிதபாதம்** அவர்கள் 25.02.2018 ஞாயிறு காலை 09.00 - 11.00	2218 - 2303	86
சிவத்திரு **சிவ. காந்தி** அவர்கள் 25.02.2018 ஞாயிறு நண்பகல் 11.00 - 01.00	2304 - 2384	81
சிவத்திரு **ப. குமரலிங்கம்** அவர்கள் 25.02.2018 ஞாயிறு பிற்பகல் 02.00 - 04.00	2385 - 2461	77
முதுமுனைவர் **ந.இரா. சென்னியப்பனார்** அவர்கள் 25.02.2018 ஞாயிறு மாலை 04.00 - 06.00	2462 - 2541	80

இரண்டு திங்களுக்கு ஒருமுறை சுமார் பன்னூறு பாடல்கள் கொண்ட ஒரு திருமுறையை முறையாகப் படித்து, அச்சுப்பிழை பலமுறை பார்த்துக் கடின உழைப்பின் பயனாக நூலை வெளியிடும் முனைவர் ப. தமிழரசியைத் தலைவராகக் கொண்டு செயல்படும் தமிழ்த்துறையின் முனைவர் இரா. மதன்குமார், முனைவர் செ. ஆறுச்சாமி உள்ளிட்டோருக்கும், நூலாக்க ஒருங்கிணைப்புப் பணியில் செயலாற்றுகின்ற திரு. ப. வெள்ளிங்கிரி, கணினி நிபுணர்களான திரு.மு. மகேஷ், திரு. து. சசி அவர்களுக்கும், நூலைச் சிறப்பாக அச்சிட்டு வழங்கும் செஞ்சுடர் அச்சகத்தார்க்கும் மனமுவந்த நன்றிகள். அவர்கள் இம்மை, மறுமை, இன்பம் பெறுவார்களாக.

அனைவரும் வருக. சிவனருள் பெறுக.

நன்றி.

அன்பன்,
இராச. வசந்தகுமார்
நிறுவன வேந்தர்
கற்பகம் பல்கலைக்கழகம்

இடம் : கோயமுத்தூர்
நாள் : **19.01.2018**

உ

சிவமயம்

நான்காம் தொகுதியின் முதற்பதிப்பின் முன்னுரை

(19 – 12 – 1948)

1. மூன்றாம்பகுதி வெளியிட்டு இரண்டரை ஆண்டுகளில் இந்த நான்காம் பகுதி வெளிவருகின்றது - திருவருள்: இதனுள் ஆளுடைய பிள்ளையார் புராணம் 1-632 பாட்டுக்களின் உரையும், தேவாரக் குறிப்புக்களும், வருகின்றன. அவரது புராணம் எஞ்சிய பகுதி ஐந்தாம் பகுதியாகப் புராணத்தின் எஞ்சிய பாட்டுக்கள் வெளிவரத் திருவருள் கூட்டி வைக்கும் என்று நம்புகிறேன். பாட்டுக்களில் மிகுதிக் கேற்ப அடுத்த ஆறாம் பகுதி இரண்டு பாகங்களாக [VI(1), VI(2)]* வெளிவரும்.

பெரியார் பலரின் உதவிகளும் நன்றியும்

2. இவ்வெளியீட்டினிடையில் அன்பர்கள் மகிழ்தற்குரியதொரு பெருநிகழ்ச்சி ஒன்றினைத் திருவருள் கூட்டிற்று: அஃதாவது இவ்வுரை முழுதும் எழுத்துப்பணி நிறைவெய்தியமையும் அதன் பொருட்டுத் திருத்தில்லையில் 12-7-1948 ஆனித் திருமஞ்சனத் திருநாளில் அச்சுவடிகளை இறைவர் திருவடிகளிற் சார்த்தி வழிபட்ட வழிபாடும், சிறப்பு அரங்கேற்றக் கூட்டமும் ஆம் இதனைப் பற்றிய விவரம் இப் பகுதியின் முகப்பில் தரப்பட்டுள்ளது. இனி, எஞ்சிய பகுதிகளை அச்சிட்டு நிறைவேற்றி வெளிவரக் காணுதல் திருவருட்டுணை கொண்டு அன்பர்களின் கடமை. இப்பகுதி பல பெரியார்களின் அன்புகனிந்த பேருதவிகளால் வெளிவந்துள்ளது என்பதனை நன்றியறிதலுடன் இங்கு எடுத்துரைப்பது எனது கடமை. ஆளுடைய பிள்ளையாரது முதற்பதிக நிகழ்ச்சிவரை உள்ள சீகாழியினைப் பற்றிய முதற் சஞ்சிகை தருமபுர ஆதீனம் மகா சந்நிதானங்களின் அருளாசியினால் அவர்களது டிரஸ்டி உரிமைப்பட்ட (மேற்படி) தேவஸ்தான வெளியீடாகப் போந்தது, அதனை 25-4-47 சீகாழியில் திருமுலைப்பால் விழா நன்னாளில் வெளியிடச் செய்து அரங்கேற்ற விழாவும் நிகழ்த்தி யருளினார்கள். அடுத்த இரண்டாம் சஞ்சிகை பிள்ளையாரது தில்லை, திருக்கழிப்பாலை, வழிபாட்டினை உட்கொண்டு நிற்கும் உரிமைபற்றிச் சிதம்பரம் - சி.ப. தேவார பாடசாலை அதிபர் திரு. பழனியப்ப முதலியார் அவர்களின் அன்பு மேலிட்ட உதவியை உட்கொண்டது: மூன்றாவது சஞ்சிகை பிள்ளையாரது திருப்பனந்தாள் வழிபாட்டினை உட்கொண்டிருந்தமை பற்றித் திருப்பனந்தாள் - ஸ்ரீ காசிமடம் - அதிபர் ஸ்ரீமத் அருணந்தித் தம்பிரான் சுவாமிகளின் அருளுதவிகொண்டு வெளிவந்தது: நான்காவது சஞ்சிகை

---

*இவை VI, VII பகுதிகளாக வெளிவந்துள்ளன.

பிள்ளையாரது திருவாவடுதுறை வழிபாட்டினை உட்கொண்டு விளங்குதலின் திருவாவடுதுறை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ மகாசந்நிதானங்களின் ஆசியினை உட்கொண்ட அருளாணையின்படி வெளிவந்துள்ளது: இவர்கட்கெல்லாம் எனது மனமார்ந்த நன்றியினை அவ்வச் சஞ்சிகைகளின் முகப்பில் அவ்வப்போதே வெளிப்படப் பகர்ந்துள்ளேன்.

உரை எழுத்து நிறைவு விழா

உரைஎழுத்துப்பணி நிறைவு விழாவில் *வழிபாட்டிலும், சிறப்புக் கூட்டத்திலும் கலந்து கொண்டும் எல்லாவகையாலும் உடனிருந்து உதவி ஊக்கமும் ஆசியும் வாழ்த்தும் வழங்கி நின்ற எல்லாப் பெருமக்களுக்கும் என் வணக்கமாகிய நன்றியறிவித்துக் கொள்கின்றேன். அந்நிறைவு விழாவில் புராண உரை எழுதி முடிந்ததனைக் காட்டும் அறிகுறியாக 13 வது வெள்ளானைச் சருக்கத்திறுதி 14 பாட்டுக்களின் உரை அச்சிட்டு வழங்கப்பட்டது: அதில் "பின்னுரையின் முன்னுரை" என்ற வரலாறு கவனித்தற் குரியது.*

படங்கள்

அதற்குரிய திருப்பிடவூர்ப் படங்களைத் தந்தருளிய திருத்தருமபுரம் ஆதீனம் மகாசந்நிதானங்களுக்கு எனது நன்றி உரித்து. சஞ்சிகைகளிற் காணப்படும் படங்கள் பெரும்பாலும் அவற்றின் வெளிப்பாட்டுக்குதவிய பெருமக்களே அன்புடன் எடுத்து உதவினார்கள். ஏனைச் சஞ்சிகைகளின் படங்களை எடுத்து உதவிய (1) கும்பகோணம் அன்பர் திரு. குஞ்சிதபாதம் செட்டியார் அவர்கள், (2) திருச்சி - கொசூர் - கர்ணம் திரு. B. வைத்தியலிங்க முதலியார் அவர்கள், (3) திருக்கழிப்பாலை திரு. சின்னையா முதலியார் அவர்கள் முதலிய எல்லா அன்பர்களுக்கும் என் நன்றி உரியது. 25-26 சஞ்சிகைகளுக்கு வேண்டிய காகிதம் அரசாங்க நிலவரப்படி கிடைக்க, அன்புடன் உதவிய மந்திரியார் திரு T.S. அவிநாசி லிங்கஞ் செட்டியார் அவர்களுக்கும் எனது நன்றி செலுத்துகின்றேன். இவ்வாறே எஞ்சிய பகுதிகளுக்கும் வேண்டிய காகிதம் பெற உதவி பெறுமாறு அவர்களை வேண்டிக் கொள்கிறேன். இவ்வுதவி அடியேனுக்கன்றிச் சைவத்தமிழ் உலகிற்குச் செய்த பேருதவியாகும்.

சென்னைப் பல்கலைக் கழகத்தார் ஒப்பிய நன்கொடையின் ஒரு பகுதி ரூ. 500 இப்புராண உரை நிறைவேறிய பின் தருவதாக நிறுத்தி வைத்திருந்தார்கள். அதனை இப்போதே உதவிய பெருங்கொடைக்கு என் நன்றி உரியது. இவ்வுரைப் பணியினை முன்னறியாது புத்தகத்தை வீ.பி. மூலம் பெற்ற ஞான்றே ரூ. 50 நன்கொடை அனுப்பிய அன்பர் சேலம் - இராசிபுரம் - ப.சுப்பிரமணிய பண்டாரம் அவர்களுக்கும் என் நன்றி உரியதாகும்.

நன்றி

தம் வருத்தமும் உடல் நலக்குறைவும் துன்பங்களும் பொருட்படுத்தாது இப்பகுதிக்குரிய காகிதங்களைப் பல முறையும் அலைந்தலைந்து தேடிப் பெற்றும். மற்றும் பல வகை உதவிகள் செய்தும் சலியாது முயன்றுவரும் தவப்பெருந்தொண்டர் திருத்துறையூர் திரு. K. ஆறுமுக நாயனார் அவர்களுக்கு என் உளமார்ந்த நன்றியும் கடப்பாடும் உரியது. படங்களுள் 20 படங்கள் வரை கும்பகோணம் உயர்சைவத் திரு P.T.S. குமாரசாமி செட்டியார் அவர்கள் (குடந்தைச் சிவனடியார் திருக்கூட்டத் தலைவர்) மூலம் கிடைத்தன. அவற்றை இலகுவான செலவில் ஆக்கியளித்த அன்பர், குடந்தைச் சிவனடியார் திருக்கூட்ட நிர்வாகக் கமிட்டி உறுப்பினர், திரு. வி. ராமசாமி பிள்ளை அவர்கள். அவரது அலுவலாளர் அன்பர் திரு. வி. ராமரத்தினம் ஐயர் வண்டிச் செலவு முதலிய ஒன்றுமின்றித் தமது சொந்த சைகிளில் ஏறத்தாழ 60 மைல் தூரம் வரை தலங்கள் தோறும் சென்று படம் எடுத்துதவியவர். இவர் 'எனக்கு இப்பணி கிடைத்ததே' என்று குழையும் அன்புடையவர். இவர்கள் அன்பு பாராட்டத்தக்கது. எல்லோருக்கும் எனது நன்றி உரித்தாகுக.

எஞ்சிய பகுதிகளும் விரைவில் வெளிவரத் திருவருள் துணை செய்வதாக. அன்பர்கள் ஆசிபுரிவார்களாக.

கோயமுத்தூர்
சேக்கிழார் நிலயம்
19-12-1948

அடியேன்
C.K. சுப்பிரமணிய முதலியார்
உரை ஆசிரியன்.

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

இரண்டாம் பதிப்பின் முன்னுரை

திருத்தொண்டர் புராண உரை வரிசையில் ஆளுடைய பிள்ளையார் புராணப் பாடல்களின் உரையின் முதல் பாகமாகிய இந்த நான்காம் பகுதி 19-12-1948ல் உரையாசிரியர் அவர்களால் முதன்முதலில் வெளியிடப் பெற்றது. அதன் பிறகு இருபத்திரண்டு ஆண்டுகள் ஐந்து திங்கள் கழித்து இந்த நான்காம் பகுதியின் இரண்டாம் பதிப்பு ஆளுடைய பிள்ளையாரின் திருநாளாகிய இன்று வெளிவருவது திருவருளினாலாகும்.

இடையிட்ட இந்த நீண்ட கால எல்லையில் இவ்வுரை நூலின் முற்பகுதிகள் முற்றும் செலவாகிவிட்டன. விரும்பிக் கேட்கும் பல அன்பர்களுக்கு உரை நூற்பகுதிகள் முற்றும் கொடுக்க இயலாதாயிற்று. கால மாறுதலால் அச்சுக்கூலி, காகித விலை, கட்டுக்கூலி போன்றவையும் ஏனைய பிற செலவுகளும் பன்மடங்கு உயர்ந்து மறுபதிப்பு வேலையை அரியதாக்கின. ஆயினும் தமிழ் மறுமலர்ச்சியும் சமயத்துறையில் விழிப்பும் வியக்கத்தக்க அளவு நாட்டில் வளர்ந்து இவ்வுரை நூற்பகுதிகளை விரும்பி வேண்டும் அன்பர்கள் கூட்டமும் பெருகிற்று. அவர்களது இடையறா வற்புறுத்தலையும் உற்சாகத்தையும் காரணமாக்கித் திருவருள் உண்ணின்று ஊக்குவிக்கும் துணைகொண்டு இவ்வுரை நூல்களின் மறுபதிப்பை பத்தாண்டுகளின் முன்பு உரையாசிரியர் அவர்களே தமது இறுதி நாட்களில் தொடங்கி வைத்தார்கள். அதன் தொடர்ச்சியாக இப்பகுதியின் மறுபதிப்பு இப்பொழுது வெளிவருகின்றது.

இவ்வுரை நூல்களின் மறுபதிப்புக்கள் சைவத் திருவாளர் மு. நாராயணசாமி முதலியார் அவர்களால் தமது முருகன் அச்சகத்தில் திருத்தமும் வனப்பும் பெற அச்சிட்டு உதவப் பெறுகின்றன. ஆளுடைய பிள்ளையார் புராண உரைப்பகுதி எனும் சிறப்புப்பற்றி இப்பகுதி மேலும் அழகுற அமையும்படி எழுத்துக்களை முற்றும் புதியனவாக வார்த்து அச்சிட்டுள்ளார்கள். அவர்களுக்கு எனது கடப்பாடுடைய நன்றி உரித்தாகுக.

இவ்வுரை நூல் வரிசையில் ஏனைய பகுதிகளின் மறுபதிப்புக்களும் விரைவில் வெளிவரத் துணைபுரியும்படி திருவருளை வழுத்துகின்றேன்.

சேக்கிழார் நிலையம்
கோயமுத்தூர் - 1
10-6-71

க. மங்கையர்க்கரசி

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

மூன்றாம் பதிப்பின் முன்னுரை

திருத்தொண்டர் புராண உரை வரிசையில் ஆளுடைய பிள்ளையார் புராண உரையின் முதற்பாகமாகிய இந்த நான்காம் பகுதி முதன் முதலாக 19-12-1948ல் உரையாசிரியர் அவர்களால் வெளியிடப்பட்டது. இவ்வுரைப் பகுதிகளைத் தொடர்ந்து மறுபதிப்பிடும் பணியை அவர்கள் என்னிடம் ஒப்படைத்தார்கள். இப்பகுதியின் இரண்டாம் பதிப்பு 10.6.1971-ல் என்னால் வெளியிடப்பட்டது. முப்பத்தொரு ஆண்டுகள் ஏழுத்திங்கள் கழித்துச் சண்டேசுர நாயனார் குருபூசைத் தினமான இன்று இம்மூன்றாம் பதிப்பு திருவருளின் துணையால் வெளிவருகின்றது.

மிக நீண்ட இந்தக் கால எல்லையுள் அச்சுக்கலையில் வியக்கத்தக்க பல மாறுதல்கள் நிகழ்ந்துள்ளன. எழுத்துக்களை ஒவ்வொன்றாக அச்சுக்கோர்க்கும் முறைமாறி கணினியில் எழுத்தமைத்தல் படங்களை பிளாக்குகள் இன்றிக் கணினி வழி அச்சிடுதல் போன்றவை வளர்ந்துள்ளன. ஒவ்வொரு பகுதியும் மறுபதிப்பிடப் பெரும் தொகைகளை முதலீடு செய்ய வேண்டியுள்ளது. உரைப்பகுதியை விரும்பி வாங்கும் அன்பர்களின் கூட்டமும் பெருகி வருகின்றது. அவர்கள் ஆர்வமே இவ்வெளியீட்டுக்கு உறுதுணையாக நிற்கின்றது. இனி வரும் பகுதிகளின் மறுபதிப்புக்களுக்கும் துணை நிற்கும்.

இப்பகுதியின் மறுபதிப்பு சிவகாசி அசோக் கம்ப்யூட்டர் செண்டரில் திருத்தமும் பொலிவும் மிளிர எழுத்துக்களையம் படங்களையும் அமைத்து அச்சிட்டு உதவும் அதன் உரிமையாளர் திரு M. அசோகன் அவர்களுக்கும், புரூபுகள் திருத்துவதில் உதவிய கோவை - திரு. M.G.M. இராமச்சந்திரன் அவர்களுக்கும் என் நன்றி.

சேக்கிழார் நிலையம்
178, வைசியாள் வீதி,
கோயமுத்தூர் - 641 001.
23.01.2003

க. மங்கையர்க்கரசி

நான்காம் தொகுதியிலுள்ள படங்கள்

முன் சேர்க்கை – 1

உ
சிவமயம்

பெயர் விளக்கம்

(எண்கள் - பாட்டு எண்கள்)

அயவந்தி - 2359. திருச்சாத்த மங்கையில் இறைவர் எழுந்தருளிய கோயிலின் பெயர்.

அருக்கன் - 1920. சூரியன் - நவகோள்களுள் ஒன்று.

ஆதிரை நாள் - 1920 - 2393. நாள் மீன்கள் 27-ல் ஒன்று. சிவனுக்குகந்த நாள்.

ஒருநாமத் தஞ்செழுத்து - 2518. சிவனாமமாகிய சீபஞ்சாக்கரத்திருமந்திரம்.

கடையுகம் - 1956. கலியுகம்: நான்கு யுகங்களுள் இறுதியில் உள்ளது.

கணபதீச்சரம் - 2367. திருச் செங்காட்டங் குடியில் இறைவர் எழுந்தருளியுள்ள கோயிலின் பெயர். கணபதி வழிபட்ட பதி.

கலயர் - 2431. குங்கலியக்கலய நாயனார். திருக்கடவூரிறைவர் பெயர் சூட்டி வழங்கப் பெற்றவர்.

கவுணிய கோத்திரம் - 1913. குலம் 1926. ஆளுடைய பிள்ளையார் அவதரித்த குலமரபு; குடி என்பர்.

கழுமலம் - 1900 - 1998. சீகாழியின் 12 பெயர்களுள் 12வது பெயர் அடைந்தாரது மலங்களைப் போக்கித் தூய்மை செய்வது.

கன்னிநாடு - 2512. பாண்டி நாடு.

காவிரி - 1999. பொன்னி 2020. பெருந் தீர்த்தநதிகளுள் ஒன்று.

குலச்சிறையார் - 2502. நின்றசீர்நெடுமாறனாரது மந்திரியார்.

கொங்கிற் குடபுலம் - 2221. மேல் கொங்கு நாடு.

கொல்லிமழவன் - 2209. ஆளுடைய பிள்ளையாரால் முயலகனோய் தீர்த்தருளப்பட்ட பெண்ணின் தந்தை: மேல் மழநாட்டை ஆண்ட சிற்றரசன்.

கொள்ளிடத் திருநதி - 2043 - 2044. காவிரியின் வடிகாலாய் பெருநதியாகச் சோழர்களால் வெட்டப்பட்டுக் கடலிற் கலப்பது.

கோச்செங்கண் அரசன் - 2243 - 2430. கோச்செங்கட் சோழர். அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர். சிவனுக்கு 78 மாடக்கோயில்கள் எடுப்பித்தவர். புராணம் பார்க்க.

சண்பை - 1931. 1995-2003-2007-2009-2029. சீகாழியின் 12 பெயர்களுள் 9வது பெயர்.

சிரபுரம் - 2040 - சீகாழியின் 12 பெயர்களுள் 7 வது பெயர்.

சிவபாத விருதயர் - 1913 - 1916 - 1970. ஆளுடைய பிள்ளையாரின் தந்தையார்.

சிவ பெருமான் - 1965.

சிறுத்தொண்டர் - 2366. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவர்: புராணம் பார்க்க.

ஞாயிறு - 2282. சூரியன்

தனிமுதற் குழவி - 1939. முருகப் பெருமான்.

தில்லைவாழந்தணர் - 2052 - 2060 - 2068 - 2069 தில்லை மூவாயிரவர்: நடராசருக்கு அகம்படித் தொண்டு பூண்டு உரிமைப் பணிபுரிவோர்: தில்லை நான் மறையோர் 2072.

திருநாவுக்கரையர் - 2166. திருநாவுக்கரசு நாயனார்:

திரு அணுக்கன் திருவாயில் - 2057. தில்லையம்பலத்தில் நடராசருக்கு அணுக்கமாக உள்ள திருவாயில்.

திரு அரத்துறை - நெல்வாயிலரத்துறை எனப்படும். ஆளுடைய பிள்ளையாருக்கு முத்துச்சிவிகை முதலியன அருளிய பதி.

திரு எருக்கத்தம் புலியூர் - 2076. நடு நாட்டுப் பதிகளுள் ஒன்று. தலவிசேடம் பார்க்க.

திரு எல்லை - 2045. தில்லைப்பதியினின்றும் காததூரத்தில் நாற் புறமும் உள்ள அமைப்பு.

திருக்களிற்றுப்படி - 2071. தில்லைத் திருச்சிற்றம்பலத்தின் ஐந்துபடிகள்; களிற்றுக்கை போன்ற அமைப்பு இருபுறமும் உள்ள காரணத்தாற் போந்த பெயர்.

திருக்கயிலை - 2244. இறைவரது திருமலை.

திருக்கருவூர் ஆனிலை - 2237. கருவூர் - கொங்கு நாட்டுப் பகுதிகளுள் ஒன்று.

ஆனிலை - திருக்கோயிலின் பெயர்.

திருக் கொடிமாடச் செங்குன்றூர் - 2222. கொங்கு நாட்டுப் பதிகளுள் ஒன்று. திருச்செங்கோடு என வழங்குவது.

திருத்தூங்கானை மாடம் - 2082. திருப் பெண்ணாகடத்தின் கோயில்.

திருத்தோணி - 1997 - 2041. சீகாழியில் தோணியப்பர் எழுந்தருளியிருக்கும் தோணி வடிவாகிய சிகரக்கோயில். கோயிலினுள் மலை என வழங்குவர்.

திருநணா - 2225. பவானி என வழங்கும். கொங்கு நாட்டுப்பதிகளுள் ஒன்று

திருநீலகண்டப் பெரும்பாணர் - 2029 - 2042 - 2075. 63 நாயன்மார்களுள் ஒருவர்.

திருநீல நக்கர் - 2358. மேற்படி மேற்படி

திருநீலகண்டம் - 2233. இறைவரது கழுத்து: கரிய விடந்தங்கியதால் காரணப் பெயர் பெற்றது.

திருநெல் வெண்ணெய் - 2127. நடு நாட்டுப்பதிகளுள் ஒன்று

திருப்பள்ளி எழுச்சி - 2098. இறைவரது வழிபாட்டுக்குரிய முதற்காலம்

திருப்பாண்டிக் கொடுமுடி 2235. கொங்கு நாட்டுப்பதிகளுள் ஒன்று

திருமயேந்திரம் 2244. மயேந்திரமாமலை; இங்கே சிவபெருமான் ஆகமங்களை வெளிப்படுத்தியருளினார். "மன்னு மாமலை மகேந்திர மதனிற் சொன்ன ஆகமந்தோற்றுவித் தருளியும்" (திருவாசகம்-கீர்த்தி).

திருமுதுகுன்றம் - 2078. நடுநாட்டுப் பதி: நம்பிகள் 12000 பொன் பெற்ற பதி

துணைப்புண ரோரை - 2282. மிதுனராசி.

தூங்கானை மாடம் - 2082. திருப்பெண்ணாகடத்தில் இறைவர் எழுந்தருளியிருக்கும் கோயிலின் பெயர்.

தென்னவன் - 2498. பாண்டியன்.

தோணிபுரம் - 2004: சீகாழியின் 12 பெயர்களுள் 5-வது பெயர்

நந்தியெம் பெருமான் - 2057. திருநந்தி தேவர். சிவபெருமானால் சிவாகமங்களை உபதேசிக்கப் பெற்ற முதல் மாணாக்கர்.

நாமகள் - 1952. கலைவாணி - சரசுவதி.

நிவாநதி - 1074. தில்லையின் வடக்கில் உள்ள நதி. திருமணிமுத்தாறுடன் கூடிச்சென்று பறங்கிப் பேட்டையருகு கடலிற் கூடுவது. தேவாரங்களுட் போற்றப் பட்டது.

பகவதியார் - 1914. ஆளுடைய பிள்ளையாரை ஈன்ற தாயார்.

பாண்டி மாதேவி - 2501. மங்கையர்க்கரசியம்மையார். மானியார்.

பிரமபுரம் - 2511: 1912 - சீகாழியின் 12 பெயர்களுள் முதலாவது பெயர். இப்பாட்டில் அந்தப் பன்னிரு பெயர்களும் காலவரிசையிற் கூறப்பட்டுள்ளன. இவ்வரிசை ஆளுடைய பிள்ளையாரால் காட்டியருளப்பட்டது.

புகலி - 2328 2042. சீகாழியின் 12 பெயர்களுள் 3 வது பெயர்.

புகார் - 2020. காவிரிப்பூம்பட்டினம்; திருச்சாய்க்காடு இதனுடன் சேர்த்துச் சொல்லப் பெறும்.

புற்றிடங் கொண்டார் - 2390. திருவாரூர்த் திருமூலட்டான நாதர்.

பூந்தராய் - 2007 சீகாழியின் 12 பெயர்களுள் 6வது பெயர்.

பூழியர் - 2500. பாண்டியர்.

பேரம்பலம் - 2071. தில்லைக் கோயிலினுள் 5 அம்பலங்களுள் திருச்சிற்றம்பலத்தினை அடுத்துக் கிழக்கில் உள்ள பெருமன்றம்.

மதங்க சூளாமணியார் - 2029 - 2075. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாரின் தேவியார். இவரும் பாடல் வல்லவர். "மன்னுமிசை வடிவான மதங்க சூளாமணியார்.

மதுரை - 2529. பாண்டி நாட்டுப்பதி. தலைநகர்.

மந்தரம் - 1902. மேருமலை.

மாமாத்திரர் - 2369. சிறுத்தொண்ட நாயனாரது மரபு (குலம்).

மாறன்பாடி - 2089. திருப்பெண்ணாகடத்திலிருந்து திருவரத்துறைக்குச் செல்லும்போது வழியில் இரவில் ஆளுடைய பிள்ளையார் தங்கிய பதி. திருவரத்துறை இறைவர் தந்தருளிய முத்துச்சிவிகை - குடை - காளம் - சின்னம் இவற்றை அவராணைப்படி அடியார்கள் ஏந்தி இங்குக் கொணர்ந்து அளித்தனர்.

முக்குளம் - 2024. திருவெண்காட்டுக் கோயிலினுள் உள்ள சோம சூரிய அக்கினி என்ற மூன்று தீர்த்தக் குளங்கள். தேவாரத்தினுட் போற்றப்பட்டன.

முருக நாயனார் - 2387: 63 நாயன்மார்களுள் ஒருவர்.

வாலியார் - 2196. இராமாயணத்தில் வரும் பாத்திரங்களுள் ஒருவர். சிவனை வழிபட்டுப் பெரு வரங்கள் பெற்ற பேரன்பர். சுக்கிரீவனின் தமையன்.

வெங்குரு - 2145. சீகாழியின் 12 பெயர்களுள் 4 வது பெயர்.

சோழநாட்டுப் பதிகள்:- இவை ஆளுடைய பிள்ளையார் வழிபட்டுப் பதிகமருளியவை. தலவிசேடங்கள் அவ்வத்திருப் பாட்டுக்களின் கீழே பதிகக் குறிப்புக்களின் கீழ்த் தரப் பட்டுள்ளன, கண்டு கொள்க. அகத்தியான் பள்ளி -2520. அரதைப் பெரும்பாழி - 2301; அம்பர் மாகாளம் - 2428; அவளிவனல்லூர் மாடம் - 2434 - ஆக்கூர் - பதியின் பெயர் - தான்றோன்றி மாடம் - கோயிலின் பெயர்; மாடம் - மாடக்கோயில்களுள் ஒன்று; ஆரூர் - 2244 - 2394; ஆலம்பொழில் - 2249; ஆவடுதுறை - 2315; ஆவூர்ப் பசுபதீச்சரம் - 2274; ஆவூர்-பதி; பசுபதீச்சரம்-கோயில். ஆறை மேற்றளி - 2397; ஆறைவடதளி - 2287; ஆனைக்கா - 2242; இடை மருது - 2310; இடும்பாவனம் - 2521; இரும்பூளை - 2298; இன்னம்பர் - 2194; ஈங்கோய்மலை - 2220; உசாத்தானம் - 2523; உச்சி - 2065; சிவபுரி என வழங்கப்படும். எதிர்கொள்பாடி - 2188; எறும்பியூர் மலை - 2246; ஐயாறு - 2197; ஓமாம்புலியூர் - 2148; கஞ்சனூர் - 2190; கடம்பை - 2150 - திருக்கடம்பூர்; கடம்பூர் - 2431; கடவூர் மயானம் - 2433; கடிக்குளம் - 2522; கண்டியூர் - 2250; களர் - 2473; கடனாகைக்காரோணம்; 2472; கானூர் 2201; கீழ்வேளூர் - 2365; குடந்தைக்காரோணம் - 2306; குடந்தைக் கீழ்க் கோட்டம் - 2306; குடமூக்கு - 2303; குடவாயில் - 2301; (தென்) குரங்காடு துறை - 2314; (வட) குரங்காடு துறை - 2195;

குறுக்கை - 2187; கைச்சினம் - 2472; கொடுங்குன்றம் - 2527; கொள்ளிக்காடு - 2472 கோடிக்குழகர் - 2521; கோடிகா - 2189; கோட்டூர் - 2472; கோலக்கா - 1998 திருத்தாளமுடையார் கோயில் என்று வழங்கப்படுவது ஆளுடைய பிள்ளையார் பொற்றாளம் பெற்ற பதி; கோழம்பம் - 2329; கோளிலி - 2473; சக்கரப்பள்ளி - 2259; சத்திமுற்றம் - 2288; சாத்தமங்கை - 2357; சிராப்பள்ளி மலை - 2241; சிவபுரம் - 2301; செங்காட்டங்குடி - 2366; செம்பொன் பள்ளி - 2338; செந்துறை - 2240; சேய்ஞலூர் - 2140; சண்டேச நாயனார் அவதரித்த பெருமையுடைய பதி. சேலூர் - 2262; சேறை - 2301; சோற்றுத்துறை - 2251; தண்டலை நீணெறி - 2473; தருமபுரம் - 2341; தலைசை - (தலைச்சங்காடு) 2015; தலையாலங்காடு - 2471; தவத்துறை - 2245; திருந்து தேவன்குடி - 2193; தில்லை 2040; (சிதம்பரத்தலம்); துருத்தி 2189 - 2334; தேங்கூர் - 2472; தேவூர் - 2472; நல்லம் - 2331; நல்லூர் - 2263; நள்ளாறு - 2352; நறையூர் - 2301; நனிபள்ளி - 2010; நாகேச்சுரம் - 2309; நாரையூர் 2181; நாலூர் - 2301; நின்றியூர் - 2185; நீடூர் - 2185; நெடுங்களம் - 2246; நெய்த்தானம் - 2203; நெல்லிக்கா - 2472; பட்டீச்சரம் - 2289; பட்டீச்சர் - சுவாமி பெயர்; பனந்தாள் - 2187; பந்தணைநல்லூர் - 2148 - 2187; பராய்த்துறை - 2238; பருதிநியமம் - 2273; பல்லவனீச்சரம் - 2020; பழமண்ணிப் படிக்கரை - 2186; பழனம் - 2196; பழுவூர் - 2133; பறியலூர் (வீரட்டம்) - 2340; பனையூர் - 2417; பாச்சிலாச்சிராமம் - 2208; பாலைத்துறை - 2262; பாம்புரம்; 2435. பாற்றுறை - 2246; புகலூர் - 2385; புத்தூர் - (அரிசிற்கரைப் புத்தூர்) 2301; புள்ளமங்கை - 2261; புள்ளிருக்கு வேளூர் - 2184; வைத்தீசுவரன் கோயில்; புறம்பயம் - 2138; புன்கூர் - 2185; பூவனூர் - 2273; பெரும்புலியூர் - 2201; பெருவேளூர் 2471; பேணுபெருந்துறை - 2447; பைஞ்ஞீலி - 2219; மங்கலக்குடி - 2191; மணஞ்சேரி - 2188; மயிலாடுதுறை - 2336; மருகல் - 2370; மழபாடி - 2203; மறைக்காடு - 2473; வடகரைமாந்துறை - 2206; மாந்துறை - 2191; மீயச்சூர் - 2435; முல்லை வாயில் - 2025; இது தென்திரு முல்லைவாயில் எனப்படும். (வடதிரு முல்லை வாயில் தொண்டை நாட்டில் உள்ள பதி); . . மூவலூர் - 2334; வலஞ்சுழி - 2276; வலம்புரம் - 2018; வாஞ்சியம் - 2470; வாழ்கொளி புத்தூர் - 2149; வாய்மூர் - 2491; விசயமங்கை - 2136; வியலூர் - 2192; விளநகர் - 1338; விளமர் - 2471; விற்குடி (வீரட்டம்) - 2395; வீழிமிழலை - 2436; வெண்காடு - 2022; வெண்டுறை - 2472; வெண்ணி - 2256; வேட்களம் - 2064; வேட்டக்குடி - 2341; வேள்விக்குடி - 2188; வேதிகுடி - 2254;

திருஞானசம்பந்த நாயனார்;- பெயர்களுட் சில; திருஞான சம்பந்தர் - 1899 - 2040; சிவம் பெருக்கும் பிள்ளையார் - 1924; புகலிப் பிள்ளையார் - 1943; பிள்ளையார் - 1955 - 1957 - 1959 - 1964 - 2032 - 2036 - 2039. ஆளுடைய பிள்ளையார் - 1967 - 2007; சிவஞான சம்பந்தர் - 1967; ஞானபோனகர் - 2033 - 2080.

முன் சேர்க்கை – 2

உ
சிவமயம்

மேற்கோள் நூல் அகராதி

திருஞானசம்பந்தர் புராணம் – பெரியபுராணம்
(1899 முதல் 2541 பாட்டுக்களுக்கு அகராதி)

(எண்கள் - பாட்டு எண்கள்)

முன் சேர்க்கை – 3

உ
சிவமயம்

திருமுறைகளின் இச்சரிதப்பகுதியின் ஆதரவு

ஆளுடைய பிள்ளையார் புராணம் பற்பல பகுதிகளுக்கும் சைவ தெய்வத் திருமுறைகளின் சரித ஆதரவு காணலாம். அவற்றுள் இப்பகுதியைப் பற்றிய சிலவற்றை, ஈண்டுத் தருகின்றேன். ஏனைய பகுதிகளைப் பற்றியவற்றை ஆங்காங்குக் குறிக்க எண்ணியுள்ளேன்.

தேவாரம் : "போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத்
தாதையார் முனிவுறத் தானெனை யாண்டவன்" - பிள்ளையார் – தேவாரம்

11 ம் திருமுறை
பட்டினத்துப் பிள்ளையார்

"* * * உலக மூன்றுக்குங் களைக ணாகி,
முதலில் கால மினிதுவீற் றிருந்துழித்
தாதையோடு வந்த வேதியச் சிறுவன்,

தளர்நடைப் பருவத்து வளர்பசி வருத்த,
"அன்னா யோ" வென் றழைப்பமுன் னின்று,
ஞான போனகத் தருளட்டிக் குழைத்த
ஆனாத் திருளை யவன்வயி னருள,
வந்தணன் முனிந்து தந்தா ரியா? ரென,
அவனைக் காட்டுவ னப்ப! வானார்
தோடுடைய செவிய னென்றும்
பீடுடைய பெம்மா னென்றுங்
கையிற் சுட்டிக் காட்ட,
ஐயநீ வெளிப்பட் டருளினை யாங்கே."

– திருக்கழுமல மும்மணிக்கோவை (1)

நம்பியாண்டார் நம்பிகள்:–

* * * அம்மென் குதலைச் செவ்வாய்,
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்,
றைய லருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே.

– திருத்தொண்டர் திருவந்தாதி (33)

* * * "வேதத்தலைவனை மெல் விரலாற்,
றோட்டியல் காத னிவனென்று தாதைக்குச் சூழ்விசும்பிற்,
காட்டிய கன்று. . . ." – ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி (13)

"இருந்தண்புகலி . . . . . போனகம். . . . . அரனளித்த,
பெருந்தகை. . . . . . ." - மேற்படி 40

துளிவந்த கண்பிசைந் தேங்கலு மெங்க ளரன்றுணையாங்
கிளிவந்த சொல்லிபொற் கிண்ணத்தில் ஞான வமுதளித்த" – மேற்படி 73

"குஞ்சிகூடாப் பருவத்துக் குன்றவில்லி
பங்குதங்கும் மங்கை தன்னருள் பெற்றவன்" – திருச்சண்பை விருத்தம் 2

"ஞானத்திரளையிலே யுண்டனை என்று"

– ஆளுடையபிள்ளையார் திருமும்மணிக்கோவை – 12

"..... அமுதுண்டு செவ்வா யருவி தூங்க" மேற்படி – 19

".... எஞ்சாமை, யாதிச் சிவனருளா லம்பொன் செய்வட் டிலினிற்
கோதி லமுது நுகர் குஞ்சரத்தை"

–ஆளுடைய பிள்ளையார் திருவுலாமாலை.

"... ஈங்கருளி யெம்போல்வார்க் கிடர்கெடுத்தல் காரணமா
ஓங்குபுகழ்ச் சண்பையெனு மொண்பதியு ளாதித்தனையே
செஞ்சடைவெண் மதியணிந்த சிவனெந்தை திருவருளால்
வஞ்சியன நுண்ணிடையாண் மலையரையன் பொற்பாவை
நற்கண்ணி யளவிறந்த ஞானத்தை யமிர்தாக்கிப்
பொற்கிண்ணத் தருள்புரிந்த போனகமுன் னுகர்ந்தனையே
தோடணிகா தினனென்றுந் தொல்லமரர்க் கெஞ்ஞான்றுந்
தேடரிய பராபரனைச் செழுமறையி னகன்பொருளை
யந்திச்செம் மேனியனை யடையாளம் பலசொல்லி
உந்தைக்குக் காணவர னுவனாமென் றுரைத்தனையே

– ஆளுடைய பிள்ளையார் திருக்கலம்பகம் (1)

"... மலைமா துமையொடு மிவனா வானென முன்னா ளுரை
செய்தவன்......." மேற்படி – (7)

"பண்டமுது செய்துமை நங்கை யருண்மேவு சிவஞானம்" மேற்படி – (9)

"பூவார் திருநுதன்மேற் பொற்சுட்டி யிட்டொளிரக்
கோவாக் குதலை சிலம்பரற்ற - வோவா

"தழுவான் பசித்தா" னென் றாங்கிறைவன் காட்டத்
தொழுவான் றுயர்தீர்க்குந் தோகை - வழுவாமே

முப்பத் திரண்டறமுஞ் செய்தாண் முதிராத
செப்பொத்த கொங்கைத் திருநுதலி-யப்பன்

அருளாலே யூட்டுதலு மப்பொழுதே ஞானத்
திரளாகி முன்னின்ற செம்மல்-இருடீர்ந்த

காழி முதல்வன் கவுணியர்தம் போரேறு
"ஊழி முதல்வ னுவ"னென்று காட்டவலான்...."

– ஆளுடைய பிள்ளையார் திருத்தொகை

குறிப்பு:– பிள்ளையார் சீகாழிப் பதியில் அவதரித்தமையும், அந்தணர் மரபில் கவுணிய கோத்திரத்தில் வந்தமையும் அவரது பல பதிகங்களிலும் திருமுறைகளிலும் காணத்தக்கன. "கழுமல வூரர்க்கு" (அரசுகள், நேரிசை.) பிறவும் பார்க்க.

முன் சேர்க்கை – 4

உ
சிவமயம்

கல்வெட்டுகளில் இச்சரிதப் பகுதியின் ஆதரவு

1. 1020 - A.D.: இராஜேந்திர சோழர் - 7-ம் ஆண்டு-தஞ்சை-நன்னிலம்- திருவிடைவாய் – கோயில் முன்வாயிற் சுவர் - விடையபுரம் என்ற விருதராச பயங்கர புரத்து வியாபாரிகள், அப்பதியில் சொக்கக் கூத்தர், நாச்சியார், திருஞானம் பெற்ற நம்பி இவர்களது பிரதமைகளைத் தாபித்துப் பூசை நடத்த ஏற்பாடு செய்தது: இத்தலத்தில் தான் கல்வெட்டில் திருமுறைப் பதிப்புக்களில் முன் கிடைக்காத, ஆளுடைய பிள்ளையாரது "மறியார்கரத்தெந்தை" என்ற பதிகம் கண்டு பிடிக்கப் பட்டது. இது சேக்கிழார் காலத்துக்கு முந்தியது.

2. 1224 A.D. இராசராசர் III - 9-வது ஆண்டு - மன்னார்குடி - கோட்டூர் கொழுந்தீசர் கோயில் - கொழுந்தாண்டார் ஆலயத்தில் திருஞானம் பெற்ற பிள்ளையார் கோயிலுக்கு நாகமங்கலமுடையான் அம்பலவன் கோயில் கொண்டான் பணம் உதவியது 450 1912.

3. 1234 A.D. இராசராசர் III - 18-ம் ஆண்டு - மேற்படி ஆலயத்தில் தாபிக்கப் பெற்ற திருஞானம் பெற்ற ஆளுடைய பிள்ளையார் சந்நிதிக்குப் பூதானம் - 485-1912.

4. 1267 A.D. (14-2-1267) இராசேந்திரச் சோழர் III - 28-ம் ஆண்டு - பட்டுக் கோட்டை - கோவிலூர் என்ற திரு உசாத்தானம் கோயில்: மும்முடிச் சோழபுரத்து வியாபாரி தாபித்த திருஞானம் பெற்ற பிள்ளையார் நித்தியப் படித் தரத்துக்கு பூதானம், 161-1908.

5. 22-2-1198 A.D. சடாவர்மன் வீரபாண்டியன் 9-வது ஆண்டு திருஞானம் பெற்ற பிள்ளையாரை எடுப்பித்து நிபந்தங்களுக்குப் பணமும் தேவாரம் ஓதுதற்குப் பணமும் சிவநெறி காட்டினார் தந்தது. (பிரான் மலை 208-24)

6. திருஞானம் – என்ற பெயர் தனியாகவே சில கல்வெட்டுக்களிற் காணப்படுகின்றது.

7. பிள்ளையார் அவதரித்த சீகாழிப் பதியில் அவரது தனிக் கோயிலில் 11 - தான சாசனக் கல் வெட்டுக்கள் உண்டு: ஆனால் அவை இச்சரிதப் பகுதி பற்றியனவல்ல.

இனிச் சரிதத்தின் ஏனைப் பகுதிகளைப்பற்றி கல்வெட்டு ஆதரவுகளும், திருமுறை ஆதரவுகளும் அவ்வப் பகுதிகளில் இயன்ற அளவு குறிக்கப்பெறும்.

நம்பியாண்டார் நம்பிகள் அருளிய நூல்களில் ஆளுடைய பிள்ளையார் சரிதத்தின் பற்பல பகுதிகளின் ஆதரவுகள் விளங்குகின்றன. அவை ஆசிரியருக்குப் பேராதரவாயிருந்தன என்பது புராணப் பாயிரத்தாலும் அறியவுள்ளது.

குறிப்பு:– மேலே குறித்த கல்வெட்டு ஆதரவுகள் எனது அரிய நண்பர் திரு. இராவ்பகதூர் C.M. இராமசந்திரன் செட்டியார் B.A., B.L., F.R.G.S., F.M.U. அவர்களால் அன்புடன் உதவப்பட்டன.



அடியேனின் தந்தையார் கோயம்புத்தூர் - மகாவித்துவான் கந்தசாமி முதலியார் அவர்கள் 1838 - 1890



அடியேனின் தமிழாசிரியர் பண்டிதர் - ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் 1904





சென்னை கயாப்பாக்கம் திரு சதாசிவச் செட்டியார், பி.ஏ. அவர்கள் கோயம்புத்தூரில் பெரியபுராணப் பிரசங்கம் (1918-1922) செய்து நிறைவாக்கியவர் : இவ்வமைப்பின் கருத்து உதிக்க ஆதாரமாகிய உத்தமர்




(திருக்கூட்டப் படம்)
பெரியபுராண உரை எழுத்து நிறைவு பற்றிய விழாவில் சிதம்பரம் ஆயிரக்கால் மண்டபத்தில் எடுத்தது
12.7.48 (சர்வதாரி - ஆனி - 29 - ஆனி உத்திரம் - தரிசனம்)









(இலங்கை) திரிகோணமலை மலையடியில் அலைக்கும் கடலினுள் டச்சுக்காரர் தகர்த்த இக்கோயிலடையாளங்கள் காணலாம்.

(இலங்கை) திரிகோணமலை யடுத்த தம்பலகம் கிராமப் பக்கம் வெந்நீர்க் கிணறுகள் ஏழு (ஒவ்வொன்றும் வெவ்வேறு வெப்ப நிலை உள்ளது. இராவணன் உண்டாக்கியவை என்பர்.

(பழைய புதிய படங்கள்)

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்

பெரிய புராணம் என்னும்

திருத்தொண்டர் புராணம்

இரண்டாங் காண்டம்

ஆறாவது

வம்பறா வரிவண்டுச் சருக்கம்

திருச்சிற்றம்பலம்

வம்பறா வரிவண்டு மணநாற மலரு
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
எம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்;
ஏயர்கோன் கலிக்காம னடியார்க்கு மடியேன்;
நம்பிரான் றிருமூல னடியார்க்கு மடியேன்;
நாட்டமிகு தண்டிக்கு மூர்க்கர்க்கு மடியேன்:
அம்பரான் சோமாசி மாறனுக்கு மடியேன்:
ஆரூர னாரூரி லம்மானுக் காளே.

திருச்சிற்றம்பலம்

- திருத்தொண்டத்தொகை - (5)



திருஞானசம்பந்த நாயனார் (வைகாசி - மூலம்)

உ
சிவமயம்

28. திருஞானசம்பந்த நாயனார் புராணம்

தொகை

"வம்பறா வரிவண்டு மணநாற மலரும்
மதுமலர்நற் கொன்றையா னடியலாற் பேணா
வெம்பிரான் சம்பந்த னடியார்க்கு மடியேன்..."

- திருத்தொண்டத்தொகை (5)

வகை

"வைய மகிழயாம் வாழ வமணர் வலிதொலைய
ஐயன் பிரம புரத்தரற் கம்மென் குதலைச்செவ்வாய்
பைய மிழற்றும் பருவத்துப் பாடப் பருப்பதத்தின்
தைய லருள்பெற் றனனென்பர் ஞானசம் பந்தனையே. (34)

பந்தார் விரலியர் வேள்செங்கட் சோழன் முருகனல்ல
சந்தா ரகலத்து நீலநக் கன்பெயர் தான்மொழிந்து
கொந்தார் சடையர் பதிகத்தி லிட்டடி யேன்கொடுத்த
வந்தாதி கொண்ட பிரானருட் காழியர் கொற்றவனே. (35)

- திருத்தொண்டர் திருவந்தாதி

விரி

1899. வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்கப்
பூதபரம் பரைபொலியப் புனிதவாய் மலர்ந்தழுத
சீதவள வயற்புகலித் திருஞான சம்பந்தர்
பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம். 1

இரண்டாம் காண்டம்:- இப்புராணத்தின் பெரும்பிரிவுக ளிரண்டனுள் இரண்டாம் பிரிவு.

சருக்கம்:- இனி நிறுத்தமுறையானே, ஆறாவதாகத் திருத்தொண்டத் தொகையினுள் "வம்பறாவரிவண்டு" என்று தொடங்கும் திருப்பாட்டிற் றுதிக்கப்பட்ட ஆறு அடியார்களது சரிதம் கூறும் பகுதி. அவர்களாவார்: திருஞானசம்பந்த நாயனார், ஏயர்கோன் கலிக்காம நாயனார், திருமூல நாயனார், தண்டியடிகணாயனார், மூர்க்க நாயனார், சோமாசிமாற நாயனார் என்ற அறுவர்.

புராணம்:- அச்சருக்கத்தினுள் முதலாவது திருஞானசம்பந்தநாயனாரது சரித வரலாறும் பண்புங் கூறும் பகுதி. இவ்வாற்றான் முதலாவது திருஞானசம்பந்த நாயனார் சரிதங் கூறத் தொடங்குகின்றார்.

தொகை:- வம்பினிடத்து மாறாதிருக்கும் வரிகளையுடைய வண்டுகளுடன் மணம் வீச மலர்த்தும் தேன் பொருந்திய மலராலாகிய நல்ல கொன்றை மாலையை யணிந்த சிவபெருமானது திருவடிகளை யல்லாது வேறொன்றனையும் பேணாத எம்பிரான் திருஞானசம்பந்த நாயனாருடைய அடியவர்க்கும் நான் அடியேனாவேன்.

வம்பறா. . . மலரும் என்ற அளவும் கொன்றைக்கு அடைமொழிகள். **வம்பறா வரிவண்டு - வம்பு** - மணம்: அதனை உட்கொண்டு விரியும் பருவத்துள்ள மலர் மொட்டுக்கு ஆகுபெயர். மலருந் தருணத்து மதுவுண்ணும் ஆசையினால் வண்டுகள் ஊதி மொட்டுக்களை மலர்த்துதற்கு மொய்த்துக்கொண்டிருக்கும். மலரும் - மலர்த்தும் பிறவினை. **மணநாற** - மணநாற்றம் அறிவித்தலினால் வண்டுகள் மது ஊற்றத்தை அறிந்தன என்பது குறிப்பு.

மதுமலர் நற் கொன்றை - மது - தேன். தேனை ஊற்றாகத் தரும் கொன்றை மலர். **கொன்றையான்-** கொன்றை மலர் மாலையைத் தமது திருவடையாள மாலையாகக் கொண்ட சிவபெருமான். **அடியலாற்பேணா எம்பிரான் சம்பந்தன்-அடியலாற்பேணா**- எதிர்மறைகள் உறுதிப்பொருள் தந்தன. அடியே பேணுதலால் எமது பரம குருமூர்த்தி யாகிய சம்பந்தன் என்று காரணக் குறிப்புடன் நின்றது. திருத்தொண்டத்தொகை உரைக் குறிப்புக்கள் பார்க்க. இறைவரது அருள் முன்னிடவே, அதனாற் குறிக்கொள்ளும் உயிர்கள் வந்து பற்றிச் சூழ, அருளமுதம் பருக வெளிப்பட்டுத் துய்க்கப்படும் என்ற உள்ளுறை காண்க. "காலமுண்டாகவே" என்ற திருவாசகமும், "இம்மலைப் பெருந்தேன் சூழ்ந்து" (750), "மன்றுளாடு மது வின்னசை யாலே" (242) என்பனவற்றில் உரைத்தவையும் இங்குக் கருதத் தக்கன. இறைவ ரருளமுதத்தை இடைவிடாது பருகிக்கொண்டிருப்பவர் ஆளுடைய பிள்ளையார் என்ற உட்குறிப்பும் காண்க. "மறக்குமா றிலாத வென்னை" (தேவா.) "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" (புரா. 1952 (1)),

வகை:- வையம் மகிழ - உலகம் மகிழவும்: யாம் வாழ - யாங்கள் வாழவும்: அமணர்வலி தொலைய - அமணர்களது வன்மைகள் தொலையவும்: ஐயன் பிரமபுரத்து அரற்கு - பிரமபுரத்தில் எழுந்தருளிய தோணியப்பரை: பாட - பாடுதற்கு: அம்மென். . . பருவத்து - அழகிய மெல்லிய குதலை மொழியைச் செவ்வாயின் மெல்ல மிழற்றும் அச்சிறிய பருவத்தில்: பருப்பதத்தின். . . . என்பர் - பார்வதியம்மை யாருடைய அருளமுதத்தைப் பெற்றவர் என்று சொல்லுவர்: ஞானசம்பந்தனையே - திருஞானசம்பந்த நாயனாரையே.

பந்தார் விரலியர் - பந்து பொருந்திய கையினையுடைய மங்கையர்க்கரசி யம்மையர்: வேள்- குலச்சிறையார்: செங்கட் சோழன் -கோச் செங்கட் சோழர்: முருகன் - முருகநாயனார்: நல்ல சந்து ஆர் அகலத்து நீலநக்கன் - நல்ல சந்தனம் பொருந்திய மார்பினையுடைய திருநீலநக்க நாயனார்: பெயர் தான் மொழிந்து கொந்து ஆர் சடையர் பதிகத்தில் இட்டு - இவர்களது பெயர்களை மணமுடைய சடையாரைப் பாடிய திருப்பதிகங்களில் மொழிந்து வைத்து: அடியேன் கொடுத்த அந்தாதி கொண்ட பிரான் - அடியேன் விண்ணப்பித்துக்கொண்ட திருவந்தாதியை ஏற்றுக்கொண்ட பெருமான்: அருட் காழியர் கொற்றவனே-அருளுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையாரே யாவர்.

வையம் மகிழ யாம் வாழ அமரர் வலி தொலைய - பாட என்க. இதன் பொருளை "வேத நெறி தழைத் தோங்க" என்ற பாட்டில் விரித்தனர் ஆசிரியர். பிள்ளையார் பாடலினால் இவைகள் பயனாயின என்பதாம். **அமணர் வலி தொலைய** வேதநெறித் தழைத்தோங்கிற்று: **யாம் வாழ** என்றது சைவத்துறை விளங்கிய பயன்: **வையம் மகிழ** என்றது பூதபரம்பரை பொலிவுறுதல் குறித்தது. **பாட** - பாட்டினால் இப்பயன்கள் போந்தன என்பதாம். இவை பாசநீக்கமும் சிவப்பேறும் என்ற இரண்டினுள் அடங்கிப் பிறவி நீங்கும் முத்தி சாதனமாகிய ஒன்றினைக் குறிக்கும் என்று "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத். துறவி யெனுந் தோற்றோணி கண்டீர். . . . ஞானத் தமிழ்" (ஆபிள் மும் கோ.11) என்று பிறிதோ ரிடத்தில் இவ்வாசிரியர் அருளினர். **குதலை. . . . பருவம்** - மூன்றாண்டு வயது. **யாம் வாழ** - "எங்களை வாழ முன்னா ளேடுவை கையினி லிட்டார்" (புரா.) **பருப்பதத்தின் தையல் அருள்பெற்றனன்** - ஞானத்திருமுலைப்பால் தாப் பெற்றனர். ஞானசம்பந்தனை அருள்பெற்றனன் என்பர் என்று கூட்டுக. அமணர் தொலைய என்னாது வலி தொலைய என்றது சைவச் சிறப்பு. **தன் அளவுள் நில்லாது மீறிக் கேடு செய்வதைத் தடுப்பதே சைவத்தின் நோக்கமென்க.**

விரலியர் - **வேள்** - (சிறந்த ஆண்மகன்: இங்குக் குலச்சிறையாரைக் குறித்தது)- செங்கட்சோழன் - முருகன் - நீலநக்கன் (இவர்களின்) பெயர் மொழிந்து - அந்தாதி கொண்ட பிரான் என்று முடிக்க. **பந்தார் விரலியர்** - மங்கையர்க்கரசியம்மையார். "பந்தார் விரன்மடவாள் பாகமா" (பிள்.தேவா.நணா.) "பந்தணை விரலாள் பங்க" (திருவா.) "பந்தணை விரலாள் பாண்டிமா தேவி" - (பிள்.புறநீர்மை. ஆலவாய்.) இவர் பெயரும் குலச்சிறையார் பெயரும் மொழிந்தமை "மங்கையர்க்கரசி" என்ற (புறநீர்மை) திருப்பதிகத்தினுட் காண்க. **செங்கட் சோழன்** - கோச்செங்கட் சோழர். "செம்பியன் கோச்செங்க ணான்செய் கோயிலே" (வைகன் மாடக் கோயில்: 5) முதலியவற்றுள் அவர் பெயர் மொழியப்பெற்றன. திருப்புகலூர் வர்த்தமானீச்சுரம் (பியந்தைக் காந்தாரம்), திருச்சாத்தமங்கை (பஞ்சுரம்) இத்திருப்பதிகங்களுள் முறையே முருகநாயனார், திருநீலநக்கர் இவர்களின் பெயர்கள் மொழியப்பட்டன. இனி **வேள்** என்றதனைச் செங்கட்சோழனுக்கு அடையாக்கின் அரசர்- **வேள்**-ஆண்மைமிக்க அரசர் தலைமகன் என்று பொருள் கொள்க. அடையாக்காதவழி, நின்றசீர்நெடுமாறனார், சிறுத்தொண்டர், கண்ணப்பர் இவர்களையும் கொள்ளலாம் என்பாருமுண்டு. **பெயர் மொழிந்து - சடையர் பதிகத்தில் இட்டு** - சடையர்மீது பாடிய பதிகத்தில் வைத்துச் சிறப்பித்து. **அந்தாதி** - ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி. (11-ம் திருமுறை) எனவே இத்திருத்தொண்டர் திருவந்தாதி பின்னர் இயற்றப்பட்டதென்பது போதரும். **கொந்தார் சடை** - மணநிறைந்த சடை. "மணங்கமழ் சடை" (பிள். தேவா. சிறுகுடி): "வெறிகமழ் சடை" (மேற்படி ஆமாத்தூர்)

பெயரும் அருட்குருவாம் பெருமையும் தொகைநூல் பேசிற்று. ஊரும், பெயரும், அம்மை திருமுலைப்பாலுண்டு அதனால் ஞானம் பெற்றமையும், அமணர்வலி தொலைத்தமையும், அதனால் உலகை வாழ்வித்தமையும், மங்கையர்க்கரசியம்மையார் - முருக நாயனார் - திருநீலநக்க நாயனார் முதலியோர் தொடர்புபற்றிய சரிதக் குறிப்புக் களையும் வகைநூல் வரலாற்றுமுறையில் வகுத்துக் காட்டிற்று. இவை விரிந்த படியை

விரிநூலாகிய மாபுராணத்துள், ஆளுடைய பிள்ளையார் புராணத்துள் வரும் இடங்களிற் கண்டுகொள்க. முன்குறித்த ஏனை நாயன்மார் தொகை பற்றிய பாடல்களும் பிள்ளையார் புராணத்துள் ஏற்றபெற்றி சுருக்கியும், அவ்வவர் புராணத்துள் விரித்தும் கூறுவதும் காண்க. அமணர் வலி தொலைய என்றதனாற் பெறப்படும் பரசமய நீக்கம் நாயனாரது அவதார உள்ளுறையாதலின் அதனை முதற்பாட்டில் வைத்தார். அச்செயலுக்குத் துணையாய் நின்ற அம்மையாரை அடுத்த பாட்டில் வைத்தோதினார் (34).

விரி:- 1899. பொருளுரை:- *வேத ... ஓங்க - வேதத்தின் நெறிகள் தழைத்து ஓங்கவும்; மிகு... விளங்க - அவற்றுள்ளே மிக்க சைவத் துறைகள் விளங்கவும்; பூத ... பொலிய - பூதங்களின் தொடர் வழிவழி பொலிவுறவும்; புனித ... அழுத - தூய திருவாய் மலர்ந்து அழுதவராகிய; சீத... திருஞானசம்பந்தர் - குளிர்ந்த வளமுடைய வயல்களாற் சூழப்பட்ட புகலி என்னும் சீகாழித் திருத்தலத்தில் அவதரித்த திருஞானசம்பந்த நாயனாருடைய; பாதமலர். ... பரவுவாம் - இரண்டு திருவடிகளாகிய மலர்களையும் தலையிலே சூட்டிக்கொண்டு அத்துணையாலே, அவர் செய்த திருத்தொண்டினது திறங்களைப் போற்றப் புகுவோம்.*

விளக்கவுரை:- வேதநெறி-வேத விதிதமாகிய வழி. வேதம் - இறைவன் திருவாக்கு; அறிதற்குக் கருவியானது என்பது சொற்பொருள். **வேதம்** - காண்டல் கருதல்களால் அறியப்படாத பொருளை அறிதற்குக் கருவியாயுள்ள பொருள். **நெறி** - வழி. **நெறி தழைத்தோங்க - தழைத்தல்** - வழிச்செல்வோரை வருத்தமுறுத்துகின்ற முள்ளும் கல்லும் குழியும் பிறவும் இல்லாமலிருத்தல்; **ஓங்குதல்** - அந்நிலை நிலை பெற்றிருத்தலும், வழிச் செல்வோருக்கு உதவிபுரியும் நிழலும் நீரும் முதலியன மிக்கிருத்தலும் குறித்தன. **வேதநெறி தழைத்தோங்குதலாவது** - வேதங்காட்டும் வழிகளின் பொருள் தூர்வையாகாது பிறழ்வுணர்வுகளால் மயங்கவைக்காது நிற்றலும், நற்பொருள் பெறுதற்கு உதவும் சாதனங்கள் மிகுதலுமாம். **நெறி** - உவமை யாகுபெயர்.

மிகுசைவத் துறை விளங்க - வேதம் **நெறி** என்றும், சைவம் **துறை** என்றும் கூறப்பட்டன. **சைவம் -** ஆகமம். "சிவாகமங்கள் சித்தாந்தம்" (சித்தி); சேரும் இடம் ஒன்றாக, அதற்குப் பல வழிகள் உளவாம். "ஒன்றது பேரூர் வழியா றதற் குள" (திருமந்). அதுபோல் வேதங்கள் கூறும் வழிகள் பற்பல. அவை பலதிறப்படும். வழியினாற் சென்று குறியிடம் சேரினும் அவ்விடத்துப் புகும் துறைகளும் பல உளவாம். பெரும்பான்மை நீர்நிலைகளிலும், சிறுபான்மை தரையிலும் வானிலும் துறைகள் அறியப்படும். நெறிகள்போலத் துறைகளும் பலதிறப்படும். வழுக்கல்துறை, அழுக்குத்துறை, குளிக்குந்துறை, முதலையுள்ள துறை என்றிவ்வாறு நீர்த்துறைகளில் வேற்றுமை காணுமாறு, வேதநெறி காட்டக் கண்டு சென்றடையும் சமயத் துறைகளும் பலப்பல. **அவற்றுள்ளே** சைவத்துறையே எத்தகைய குறைபாடு மின்றி மிக்கது என்பார் **மிகு சைவத்துறை** என்றார். உயிர்களின் பக்குவபேதம் நோக்கி பலப்பல துறைகளும் வேண்டப்படுவன; அவை அவ்வாறு தத்தம் அளவில் அமையாது அதிகரித்து உயிர்களை மயக்கிக் கேடு செய்யுங் காலத்தில் அவற்றை நிராகரித்து அளவுபடுத்தி நெறிகளையும் துறைகளையும் கேடுறுத்தாது செய்தல் இறைவராணையால் வருவது. ஈண்டுத்

திருஞானசம்பந்தர் அவ்வாறு நெறியையும் துறையையும் புன்னெறித் துன்மார்க்கங்களாற் றிமையுறாது தூய்மைசெய்து உயிர்களைப் பொலிவுற வருளினர். அதற்காகவே அவதரித்தனர். அவ்வருட் செயல் அவர் அமுததன் காரணமாக ஞானப்பால் உண்டருள உளதாயிற்று என்று காணும்படி **ஓங்க - விளங்க** - பொலிய - **அமுத** என்று காரணகாரியமுறை தோன்றவைத்தார்.

வேதநெறி - வேதவிதிப்படி நிகழும் வைதிக ஒழுக்கம்.

சைவத்துறை - சிவாகம விதிப்படி நிகழும் சரியை முதலிய சிவதருமங்கள்.

வேத சிவாகமங்களிரண்டும் சிவன் திருவாக்குக்கள். வேதம் உலகர்க்கும். சிவாகமங்கள் சத்திநிபாதர்க்கும் அருளப்பட்டன: வேதம் பொது: ஆகமம் சிறப்பு. "வேதமொ டாகமம் மெய்யா மிறைவனூல், ஓதும் பொதுவுஞ் சிறப்புமென் றுன்னுக" (திருமந்திரம்). "வேதம் பசு, வதன்பால் மெய்யாகமம்" முதலியவை காண்க. வேதம் முடிந்த இடத்தில் சிவாகமம் தொடங்குகிறது. இன்னதென்று காணமுடியாதது என்று சாந்திமொழியுடன் வேதம் இளைத்துநிற்கின்ற இடத்தில் அப் பதிப்பொருள் இன்ன தன்மையுடையது என்று சுட்டிக்காட்டித் தொடங்குகிறது சிவாகமம். இக்குறிப்புக்களை உள்ளீடாகக் கொண்டு வேதநெறி **தழைத்தோங்க** என்றும், மிகுசைவத்துறை **விளங்க** என்றும் கூறினார்.

பூத பரம்பரை பொலிய - உயிர்கள் வழிவழி மேம்பாடடைய. **பூதம்** - உயிர்கள். பிறவியினுள் தோற்றுவிக்கப்படும் - சிருட்டியினுட்படும் - உயிர்கள். பூ - பகுதி. தோன்றுதல் என்பது பொருள். பொலிதலாவது கன்மத்துக்கீடாகப் பற்பல பிறவிகளிலும் வரும் உயிர்கள் சிருட்டியின் கருத்தாகிய திருஅருளினை அவ்வவற்றின் பக்குவத்துக்கேற்பப் பெறுதற்குத் தகுதிபெற மேலோங்குதல். இது வேதநெறியாகச் சைவத் துறையில் பெறப்படும் என்பது முன் உரைக்கப்பட்டது. அவ்வாறு பொலிவடைந்தேறும் படிமுறையினைப் "புறச்சமய நெறிநின்றும் அகச்சமயம் புக்கும், புகன்மிருதி வழியுழன்றும் புகலுமாச் சிரம, வறத்துறைக ளவை யடைந்து மருந்தவங்கள் புரிந்து, மருங்கலைகள் பலதெரிந்து மாரணங்கள் படித்துஞ், சிறப்புடைய புராணங்க ளுணர்ந்தும் வேதச் சிரப்பொருளை மிகத் தெளிந்துஞ் சென்றாற், சைவத், திறத்தடைவ ரிதிற்சரியை கிரியா யோகஞ் செலுத்தியபின் ஞானத்தாற் சிவனடியைச் சேர்வர்" (சித்தி.8-11) என்று அருணந்திசிவாசாரியார் அருளியது காண்க. "ஆதிநூ லநாதிய மலன்றருநூ லிரண்டு மாரணநூல் பொதுசைவ மருஞ்சிறப்பு நூலாம், நீதியினா லுலகர்க்குஞ் சத்திநிபா தர்க்கு நிகழ்த்தியது நீண்மறையி னொழி பொருள்வே தாந்தத், தீதில்பொருள் கொண்டுரைக்கும் நூல்சைவம்: பிறநூல், திகழ் பூர்வஞ்: சிவாகமங்கள் சித்தாந்த மாகும்" (மேற்படி - 8- 15) என்ற அவ்வாசாரியர் ஞான நூல்களை அளவுபடுத்திக்காட்டியதும் காண்க.

இந்நுட்பங்களை உணராதார் தம்மைச் சித்தாந்த சைவர் என்றும் சொல்லிக் கொண்டு சைவத்தின் முழுமையாய் நிறைந்த உண்மைகளுள் ஒன்றொன்றேனும் சிற்சிலவேனும் இலைமறை காய்போற்கொண்டு மின்மினி விளக்கங்காட்டும் புறச் சமய நூல்களையும் வேத சிவாகமங்களோடொப்ப எண்ணியும், அப் புறச்சமயக் குரு மாரை நமது பதிவாழ்விற் பெருமக்களோடொப்ப வாய்கூசாது கூறியும், "குருடுங் குருடுங்

குருட்டாட்ட மாடிக், குருடுங் குருடுங் குழிவிழு மாறே (திருமந்.) என்றபடி தாமுங் கேடுற்றுப் பிறரையும் கேடுறுத்துகின்றனர். அந்தோ பாவம்! பாவம்! "அவனொன் றறியாப் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண் மேற் றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரிதவரே" (திருவாசகம்.) "சிவனொடொக் குந்தெய்வந் தேடினு மில்லை அவனொடொப் பாரிங் கியாவரு மில்லை" (திருமந்.) "விரிவிலா வறிவி னார்கள் வேறொரு சமயஞ் செய்தே யெரிவினாற் சொன்னா ரேனு மெம்பிராற் கேற்ற தாகும்" (தேவாரம்) "யாதொரு தெய்வங் கொண்டீ ரத்தெய்வ மாகி யாங்கே மாதொரு பாகனார்தாம் வருவர்மற் றத்தெய்வங்கள் வேதனைப் படுமி றக்கும் பிறக்கு மேல் வினையுஞ் செய்யு மாதலா லிவையி லாதா னறிந்தருள் செய்வ னன்றே" (சித்தி-2,25) "செய்வானுஞ் செய்வினையும் பயன்றுய்ப் பானுஞ் சேர்ப்பானும், மெய்வகையா னான்காகும் விதித்தபொரு ளெனக்கொண்டே யிவ்வியல்பு சைவநெறி யல்லவற்றுக் கில்லையென, உய்வகையாற் பொருள்சிவனென் றருளாலே யுணர்ந்திருந்தார்" (சாக்-புரா). என்பனவாதி அருட் பெருந் திருவாக்குக்களி னுண்மையினையும் ஓர்கிலார். சமணபுத்தம் முதலிய பரசமயங்களை நிராகரித்துத் திருநீற்றினை வளர்த்த திருஞான சம்பந்த நாயனார், மாணிக்கவாசக சுவாமிகள் (பரபக்கமெடுத்துக் கூறி நிராகரித்துச் சைவ சித்தாந்தஞ்செய்த) அருணந்திசிவா முதலிய பரம ஆசாரியர்களுக்கெல்லாம் இழுக்குப்படப் பேசி ஒழுகிவரும் இவர்கள் கன்மமலன் இருந்தவாறுதான் என்னே? கற்புடைநாயகி தனது நாயகனோடொப்பப் பிறனொருவனை எண்ணுவது கற்புக் கிழுக்காவதாம். அதுபோல எல்லாவுயிர்களுக்கும் உயிர்க்குயிராயிருந்து அருளும் பரமபதியாகிய சிவனையும், அவனை ஐயந்திரிபற உய்வகை மண்ணுளோருக் குதவிக் காட்டிய ஒப்புயர்வற்ற எந்தம் பரமாசாரியர்களாகிய உண்மை நாயன்மார்களையும் பிறரோடொப்ப எண்ணுவது பாவமாகும். சைவ சித்தாந்தத்திற்காணும் முழு உண்மைத் திறனும், உலக உண்மைகளெல்லாவற்றையும் தன்னகத்தடக்கிக் காட்டும் சோபான முறையும் என்ற இவற்றின் தத்துவங்களை உணராதாரே புறச்சமயங்களைச் சைவத்தோ டொப்பிடுவர். இற்றைநாட் சைவவுலகம் அடைந்து நிற்கும் இப்பரிதாப நிலை வருந்தத் தக்கது. "வைதிக சைவத்துக்கு வழங்கும் பெயர்கள் பலப்பல: அவற்றின் பொருள் ஒன்றே" என்பனவாதி கூற்றுக்கள் மயக்கத்துக் கேதுவாவன. இலக்கணத்தால் வேற்றுமையில்லாதவழி, இலக்கியம் பலவாதல் செல்லாது என்பது அளவைநூல் காட்டும் உண்மை. பூதம் பொலிய என்னாது பூத பரம்பரை பொலிய என்றது வழிவழி பக்குவத்துக்கேற்ப உயிர்கள் பொலிவுறுதல் வேண்டும் என்ற கருத்தை உள்ளடக்கியது.

புனிதவாய் மலர்ந்து அழுத - புனிதவாய் - அழுது ஞான அமுதம் பெறுதற்கு முன்னும், அத்திருவாய் புனிதமுடையது என்பதாம். திருஞானசம்பந்த நாயனாரது அவதாரம் கன்மத்துக்கீடாக வந்ததன்று. முன்னைநிலையில் அவர் சிவனை மறக்குமா றிலாத பெரியார். உலகுக்கு **அருள்**புரியும் பொருட்டே அவரைச் சிவபெருமான் உலகில் பிறந்தருளவருளினர் என்பது. "புண்ணியக் கங்கைநீரிற் புனிதமாந் திருவாய் நீரில்" (671) என்றாற்போலக் காண்க. **அழுத** - பிரமதீர்த்தக் கரையில் நின்று மூன்றாண்டில் திருத்தோணிச் சிகரம்பார்த்து "அம்மே யப்பா" என்றழுததன் காரணம் 1958-1959 பாட்டுக்களிற் காண்க. "அழுதுலகை வாழ்வித்த" (திருப்புகழ் - கதிர்காமம்.)

சீதவள வயற் புகலி - பிறவி வெப்பந் தணிக்குந் தட்பம் உடைமை குறிப்பு. **புகலி**

1900. **சென்னிவளர் மதியணிந்த சிலம்பணிசே வடியார்தம்**
மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்
பொன்னிவளந் தருநாடு பொலிவெய்த நிலவியதாற்
கன்னிமதில் மருங்குமுகி னெருங்குகழு மலமூதூர். 2

- சூரனுக் கஞ்சித் தேவர்கோன் புகலடைந்தமையாற் போந்த பெயர். வழி மொழித் திருவிராகம் முதலியவை பார்க்க. சீகாழிக்கு ஊழிக்கிரமத்திற் போந்த 12 திருப்பெயர்களுள் மூன்றாவது பெயர். அத் திருத்தலம்போலவே திருஞான சம்பந்த நாயனாரது பாதமலர்களும் புகலடைந்தார்க்குப் பிறவி வெப்பந் தீர்க்க வல்லன என்பது குறிப்பு. "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவி யெனுந் தோற்றோணி கண்டீர். . . . ஞானத்தமிழ்" (நம்பியாண்டார் நம்பிகள்.)

திருஞானசம்பந்தர் - இப் பெயர்போந்த வரலாறு (1966 - 1967) பாட்டுக்களிற் காண்க.

பாதமலர் தலைக்கொண்டு திருத்தொண்டு பரவுவாம் - அவர்தம் திருவடிகளைத் தலைமேற் சூடி அவரது திருத்தொண்டின் வரலாற்றினைத் துதிக்கப் புகுகின்றேன் என்று ஆசிரியர் இப்புராணத்துக்குத் தோற்றுவாய் செய்தனர். முன் சருக்கத் தொடக்கமும் பிறவும் காண்க.

தொண்டு - செய்த தொண்டின் வரலாறு. **பரவுதல்** - துதித்தல். அவ்வரலாறு எம்மால் எல்லை கண்டு சொல்லுந் தரமுடையதன்றாதலின் துதிக்கமட்டில் இப்புராணம் அமையும் என்றதாம். இங்குத் தொடங்கிய இக்கருத்தையே பற்றி "அருந் தமிழா கரர்சரிதை யடியேனுக் கவர்பாதந், தரும்பரிசா லறிந்தபடி துதிசெய்தேன்" (1254) என்று முடித்துக்காட்டியதும் காண்க.

இப்பாட்டில் நாயனாரது அவதாரத்தின் உள்ளுறையினையும் பயனையும் திருப் பெயரையும் நகரத்தையும் எடுத்துக் கூறியவகையால் சரித முழுமையும் குறிப்பிற் கூறிப்போந்த திறமும் காண்க. 1

1900. பொருளுரை:- சென்னி. . . குடி - வளருந்தன்மை பெறவுள்ள பிறையினைத் தலையிற் சூடிய, சிலம்பணிந்த திருவடியினை யுடையாராகிய சிவபெருமானது நிலைபெற்ற சைவத்துறையில் வழிவழியாக வந்த குடியாகிய: வளவர் - சோழர்களுடைய: பொன்னி. . . நிலவியது - காவிரியாறு வளஞ்செய்கின்ற நாடு பொலிவுபெறும்படி நிலைபெற்றுள்ளது: கன்னிமதில். . . கழுமலமூதூர் - கடியப்படாத மதிலின் பக்கத்தில் முகில்கள் நெருங்குகின்ற திருக்கழுமலம் என்னும் பழம்பதியாகும்.

விளக்கவுரை:- சரிதந் தொடங்குகின்ற ஆசிரியர் இப்பாட்டால் சரிதமுடைய நாயனாரது ஆற்றுவளம் நாட்டுவளம் நகரவளம் கூறித் தொடங்குகின்றார்.

வளர்மதி சென்னி அணிந்த - என்க. **வளர்** - வளருந்தன்மை பெற்றுள்ள. **சென்னியும் சேவடியும்** உடையார் என்று தலைமுதல் அடிவரை கூறியபடி. அடியடைந்தாரை உயர்த்துபவர் என்பது குறிப்பு.

1901. அப்பதிதா னந்தணர்தங் கிடைகளரு மறைமுறையே
செப்புமொலி வளர்பூகச் செழுஞ்சோலை புறஞ்சூழ
ஒப்பினக ரோங்குதலா லுகக்கடைநா ளன்றியே
எப்பொழுதுங் கடன்மேலே மிதப்பதென விசைந்துளதால். 3

மன்னிய சைவத்துறை - மன்னுதல் - *என்றும் அழியாது நிலைபெற்றிருத்தல் புறப்பகை உட்பகைகளால் இடையிடையே வரும் நலிவுகளால் விளக்கம் குன்றுதலன்றி அழிந்துபடுவதில்லை என்பதாம்.* ***உண்மை*** *சிலபோது ஒளிவு மறைக்கப்படுவதன்றி எஞ்ஞான்றும் அழிக்கப்படாதென்க. இப்புராண வரலாற்றுக் குறிப்புப் 1916 வது பாட்டுப் பார்க்க.* ***சைவத்துறை*** *முன்பாட்டிற் கூறியவை பார்க்க.*

வழிவந்த குடிவளவர் - வழிவருதல் - *வழிவழியாக அத்துறையில் வழுவாது வருதல்* ***குடி*** - *என்பது அதில் தாங்கள் அரசர் என்றெண்ணாது அடிமை என்ற நினைவு தாங்கி வருதல் குறித்தது. இச்சரிதத்தினுள் வரும் "செய்வகையி னிடையே தப்பிப் புறச்சமயம் சார்ந்த பாண்டியர் போலன்றி என்ற குறிப்பும் காண்க.* ***வளவர்*** - *வளம் - செல்வம்* ***வளவர்*** - *செல்வமுடையவர். "வளம்பட வேண்டாதார்" (நாலடி) "வளவனாயினு மளவறிந்துண்" - "வளத்தன" - "மாவளத்தான்"- "கரிகாற் பெருவளத்தான்" முதலியவையும் காண்க.*

பொன்னிவளம் தரும் நாடு - *காவிரி பாய்ந்து வளத்தைத் தருதற் கிடமாகிய சோழநாடு.*

நாடு பொலி வெய்தக் - கழுமல மூதூர் நிலவியது - *என்க. சோழநாடு பல பெரிய ஊர்களையுடையதாயினும் அதன் பொலிவுக்குப் பெருங் காரணம் சீகாழியைத் தன்னகத் துடைமையேயாம்.* ***பொலிவு*** - *அருட் சிறப்பு. உலகத்தைத் திருத்திச் சிவனருளிற் சிறக்க உதவிய பிள்ளையாரவதரித்த தலமாதல் குறிப்பு.* ***நிலவுதல்*** - *ஊழிகளிலும் அழியாமல் மிதந்திருத்தல். "தேசமெல்லாம் விளக்கிய" (46).*

கன்னி மதில் - *பகைவரால் கடியப்படாமல், அமைத்த நாட்போலவே தன்மை நீடியிருத்தல். மதில் மருங்கு முகில் நெருங்கு என்பது மதிலின் உயர்ச்சி குறித்தது, உயர்வு நவிற்சி. அப்பதியந்தணர் செய்யும் வேள்விப் பயனும் குறிப்பு.*

கழுமலம் - *சீகாழியின் பன்னிரண்டாவது பெயர்.* ***மூதூர்*** - *பல ஊழிகளினும் அழியாதிருத்தல் குறிப்பு.* *2*

1901. பொருளுரை:- ***அந்தணர் தங்கிடைகள். . . ஒலி*** - *மறைச்சிறு மாணவர்களின் கூட்டம் அருமறைகளை ஓதிவந்த முறையிலே சொல்லுகின்ற ஒலியும்:* ***வளர். . . புறம் சூழ*** - *வளர்கின்ற கமுகுகளின் செழும் சோலைகள் புறத்திற் சூழாநிற்ப:* ***ஒப்பில் நகர் ஓங்குதலால்*** - *ஒப்பில்லாத அந்த நகரம் மேலே ஓங்குதலினால்:* ***அப்பதிதான்*** - *அந்தக் கழுமலம் என்னும் தலமானது:* ***உகக்கடை நாளன்றியே. . . இசைந்துளது*** - *ஊழிக் காலத்தில் மிதப்பது மட்டுமேயன்றி எக்காலத்திலும் கடல் மீதிலே மிதப்பதாகும் என்னும்படி தோற்றத்தைப் பொருந்தியுள்ளது.*

விளக்கவுரை:- அந்தணர்தம் கிடை - *வேத மோதும் மறைச் சிறுவர் கூட்டம். "ஓது கிடை" (1208).*

1902. அரியயனே முதலமர ரடங்கவெழும் வெள்ளங்கள்
விரிசுடர்மா மணிப்பதண மீதெறிந்த திரைவரைகள்
புரிசைமுதற் புறஞ்சூழ்வ பொங்கோதங் கடைநாளில்
வரியரவ மந்தரஞ்சூழ் வடம்போல வயங்குமால். 4

மறை முறையே செப்பும் ஒலி - வேதங்களை ஆசான் பயிற்றும் பதம், கிரமம். சடை, கனம் என்று சொல்லப்படும் முறைகளின்படி பின்பற்றிச் சொல்கின்றதனால் எழும் ஒலி. வேதச் சத்தமாதலின் ஒலி எனப்பட்டது. இது ஊழிக் கடல் ஒலிக்கு உவமிக்கப்பட்டது பெருஞ்சத்தக் கூட்டமாதல் என்னும் ஒரு புடை ஒப்பாகிய பொதுத் தன்மைபற்றி என்க.

பூகச் செழுஞ் சோலை - பூகம் - கமுகு. கமுகுச் சோலைகள் மிக்க பசுமை நிறம் காட்டுதலால் கருநீல நிறங் காட்டும் கடனிறத்துக்கு ஒரு புடை ஒப்பாயிற்று. மறை முழக்கமும் சோலைப் பசுமையும் கடல் ஓசையினையும் கடனிறத்தினையும் காட்டுதலால் அந்நகர் கடல்மேல் மிதப்பது போன்றது என்க.

உகக் கடைநாள் - ஊழியில் நீர் வெள்ளப் பெருக்கு. நீர்ப் பிரளய மென்பர். ***கடைநாள்*** என்றார் ஊழியில் நீரினுள் உலக மழிந்துபடுதலின். ***உகம்*** - ஊழி. ஊழியிற் பெருவெள்ளத்தில் உலகமெல்லாம் அழிகின்றபோது தான் அழிந்துபடாது தோணியாய் மிதப்பதனால் இது **தோணிபுரம்** எனப்படும்.

கடைநாள் அன்றியே எப்பொழுதும் கடல்மேலே மிதப்பதென - ஊழியில் மிதப்பதுவே யன்றி எந்நாளும் மிதப்பதென்னும்படி தோற்றம் கொண்டு. இது தல சரிதக் கண்கொண்டு ஆசிரியர் காணும் தெய்வக் காட்சி.

கடல் மேலே - ஒலியும் சோலையும் மேலே கிளம்பித் தோற்றப்படுவதனால் மேலே என்றார். **ஓங்குதலால்** என்ற கருத்துமிது.

அந்தணர்தம் கிடை முறையே செப்பும் ஒலி - மேல் இந்நகரில் வந்தவதரித்து மறை முறையினைத் தமிழில் விரிக்கும் மறைப் பிள்ளையாரது குறிப்பும், மறையே திருத்தோணியாம் என்ற வரலாற்றுக் குறிப்பும் பட நின்றது

இசைந்துளது - இசைதல் - ஒத்திருத்தல். 3

1902. ***பொருளுரை:-*** அரி அயனே. . . வெள்ளங்கள் - திருமாலும் பிரமனும் முதலாகிய தேவர்கள் அடங்கும்படி மேலே எழுகின்ற பல நீர்ப் பெருக்குக்கள்: விரிசுடர். . .வரைகள் - விரிந்து ஒளி வீசும் பெருமணிக ளழுத்திய மேடைகளின்மீது வீசிய அலைகளால் உண்டாகிய கீற்றுக்கள்: புரிசை. . . சூழ்வ - புறமதிலின் புறத்தில் வரிசை பெறச் சூழ்ந்திருப்பன; பொங்கு ஓதம். . . வயங்கும் - பொங்கும் பாற் கடலைக் கடைந்த காலத்தில் மந்தர மலையை வரிவரியாகச் சுற்றிய வாசுகி என்ற பாம்பாகிய வடம்போல விளங்கும்.

விளக்கவுரை : அமரர் அடங்க எழும் வெள்ளங்கள் - தேவருலகங்களும் அழிந்து பட மேலோங்கி எழுகின்ற ஊழி நீர்ப் பெருக்குக்கள். இவை பலவாதலின் பன்மையாற் கூறினார்.

1903. வளம்பயிலும் புறம்பணைப்பால் வாசப்பா சடைமிடைந்த
தளம்பொலியும் புனற்செந்தா மரைச்செவ்வித் தடமலராற்
களம்பயினீர்க் கடன்மலர்வ தொருபரிதி யெனக்கருதி
யிளம்பரிதி பலமலர்ந்தாற் போல்பவுள விலஞ்சிபல. 5

பதணம் *- மதிலின் மேலிடமாகிய மேடைகள்*

வெள்ளங்கள் - திரை எறிந்த வரைகள் சூழ்வ *- வடம்போல வயங்கும் என்று கூட்டி முடிக்க.*

ஒவ்வோர் ஊழி வெள்ளப் பெருக்குக்கள் ஒன்றின்மேல் ஒன்று மயா . அவ்வெல்லாக் காலத்தும் இந்நகர் அழியாது தோணியாகி மிதத்தலால் வெள்ளங்களின் அலைகள் மேலோங்கியும் கீழ் வற்றியும் நகர் மதிலின்மீது மோதியதனால் ஆய வரைகள் - நீர் நின்ற நிலை காட்டும் கீற்றுக்கள் - உளவாக அவை அவ்வாறு மேல் கீழாக வரிசைப்பட நகரைச் சூழ்ந்த மதிலைச் சுற்றிக் காணப்படுகின்றன. அக்காட்சி திருப்பாற்கடலைக் கடைந்த காலத்து மத்தாக நட்ட மந்தரத்தைச் சூழ்ந்து கயிறாகச் சுற்றிய வாசுகி யாவு சூழ்ந்திருப்பதுபோலத் தோன்றிற்று. மெய்பற்றி வந்த உவமம். நகர், சூழ்ந்த மதில் மந்தா மலையினையும், அதனைச் சுற்றிய கீற்றுக்கள், பாம்பு சுற்றி யதனையும் போன்றன. அக்கீற்றுக்கள் வெள்ளப்பெருக்கின் கணக்கினையும் காட்டுதலால் நகரின் தொன்மையைப் போற்றும் குறிப்புமாம். 4

1903. **பொருளுரை:-** களம்பயில் நீர்க்கடல் மலர்வது ஒரு பரிதியெனக் கருதி - கருமை மிக்க நீர்நிறைந்த கடலினிடத்தே தோன்றுவது ஒரு ஞாயிறேயாம் என்று கருதி: வளம்பயிலும் புறம்பணைப்பால் - வளமிக்க மணமுடைய மருதநிலத்தின் புறம்பணையினிடத்து: வாசப்பாசடை. . . தடமலரால் - வாசனையுடைய பசிய இலைகளினிடையே நெருங்கிய இதழ்களுடன் விளங்கும் நீர்ப்பூவாகிய செந்தாமரையின் அன்றலர்ந்த பெரும்பூக்களின் பொலிவினால்: இளம்பரிதி பல மலர்ந்தாற்போல்ப - இளஞாயிறு பலவற்றைத் தோற்றினாற்போலும் காட்சியுடையனவாகிய: பல இலஞ்சி உள - நன்னீர்ப் பொய்கைகள் பல உள்ளன.

விளக்கவுரை:- இப்பாட்டுத் தற்குறிப்பேற்ற அணி.

புறம்பணை - மருதநிலத்தின் வெளிப்பக்கம். **பாசடை** - பசிய இலைகள்: **தளம் பொலியும்** - இதழ்கள் விளங்கும். **தளம்** - இதழ். **புனல்** - **தாமரை** - நீர்ப்பூக்கள் பலவற்றுள்ளும் தாமரை என்ற வகை.

செந்தாமரை - செம்மை - வெண்டாமரை ஈண்டைக் கேலாமையின் பிறிதி னியைபு நீக்கிய விசேடணம்: இளஞாயிற்றினைப் போன்று விளங்குவது செந்தாம ரையேயாம்.

செவ்வித் தடமலர் - செவ்வி - சமயம், தருணம். இங்குப் புதிதின் அலரும் பருவம் குறித்தது. **தட** - பருமை. **இலஞ்சி** - நன்னீர்ப் பொய்கை.

மலரால் (கடல்) போல்ப என்று கூட்டுக. மலரால்-மலர்-பால்பகா அஃறிணை: மலர்கள், மலரின் காட்சியினால்: மலரின் தோற்றம் ஈண்டுவமைக்குப் பொதுத் தன்மை. **இலஞ்சி** - கடலுக்கும், **செந்தாமரை** - இளம் பரிதிக்குமாக மெய்பற்றி வந்த உவமங்கள்.

1904. உளங்கொண்மறை வேதியர்த மோமதூ மத்திரவும்
கிளர்ந்ததிரு நீற்றொளியிற் கெழுமியநண் பகலுமலர்ந்
தளந்தறியாப் பல்லூழி யாற்றுதலா லகலிடத்து
விளங்கியவம் மூதூர்க்கு வேறிரவும் பகலுமிகை. 6

கருதி - இலஞ்சி பலவும் தாம் கடல்போல்வனவாதற்குத் தம்மிடம் பரிதி மலர்தல் வேண்டும்: அவ்வாறு மலரினும் ஒன்று மலர்தல் ஏனைக் கடல்களுக்கும் ஒத்தலால் சிறப்பின்று: பரிதி பல மலர்தற் கிடமாயின் தனிச் சிறப்புக்காட்டும் என்பது கருதி, இலஞ்சி, பல மலரால் மலர்த்திக் காட்டின என்பது. ஒரு கடலுக்குப் பல கடல்கள் என்ற சிறப்பும் குறிப்பது.

மலர்வது - மலர்ந்தால் - மலர்தல் - தோன்றுதல் என்ற பொருளிலும். **மலர்ந்தால்** - மலர்வித்தால் எனப் பிறவினைப் பொருளிலும் உரைக்க நின்றது.

களம் பயில் நீர்க்கடல் - என்றதனால் உவர் நீர்க்கடல் என்றும், **இலஞ்சி**, அது போலன்றி நன்னீர் உடையன என்றும் குறிப்பித்தபடி.

இளம் பரிதி - கடலில் வந்தெழும்போது உள்ள ஞாயிற்றின் தோற்றம், "இளஞாயிறின் சோதி யன்னான்" (பிள். தேவா. நட்டபாடை - ஆலந்துறை 6). பின்னர், இந்நகரில் வந்தவதரித்து இளஞாயிறுபோல மலரும் பிள்ளையாரது குறிப்பினை இலஞ்சிகள் காட்டின என்பதும் உட்கோள். "சேம வுதயப் பரிதியிற் றிகழ் பிரானை" (1939) என்பது காண்க.

இலஞ்சி பலவும் - கடல்போலப் பெருமையுடையன என்பது உவம உள்ளுறை. முன்னிரண்டு பாட்டுக்களினும் தோணிபுரம் ஊழியிற் கடலுள் மிதந்த தன்மை பற்றிக் கூறியதனையே தொடர்ந்து கூறிய தொடர்நிலை உவமக் குறிப்பும் காண்க. 1901-ம் திருப்பாட்டில் நகர், மேலே மிதக்கும்படி கடல் சூழ்ந்த தன்மையாலும், 1902-ம் பாட்டில் அவ்வாறு பலமுறை மிதந்து அடங்கிய வரைகளாகிய அடையாளங்களைப் பற்றிய தன்மையாலும், இப்பாட்டில் அவ்வாறு வற்றியங்கிய பின் முன் ஒரு கடல் சூழ்ந்தது போலன்றி அதனினும் சிறந்த பல கடல்கள் சூழ்ந்துள்ளன என்ற தன்மைபற்றியும் கூறிய நயம் காண்க. ஊழிக் காலத்தில் உலகமழியும்போது நாம் கண்டு பயன்பெற இயலாமையால் நாம் இன்றும் இந்நகரின் நிலை பேறாகிய அத்தெய்வத் தன்மையைக் கண்டு பயன்பெறும்படி விளங்குவதாம் என்று காட்டிய நயமும் கண்டு கொள்க.

இளம் பரிதி பல - கடலில் மலரும் பரிதிகள் ஊழியில் அழிவனவாக, அவற்றை அழியாத நிலைமையில் தம்பாற் காட்டுவன என்ற குறிப்பும் காண்க.

மலரக் களம்பயில் - என்பதும் பாடம். 5

1904. பொருளுரை:- உளம். . . . இரவும் - உள்ளத்தில் கொண்ட மறையின் ஒழுக்கத்தினை யுடைய வேதியர்கள் செய்யும் ஓமங்களின் புகைப் படலங்களாலாகிய இரவும்: கிளர்ந்த. . . பகலும் - கிளர்ச்சி பெற்ற திருநீற்றொளியினாற் பொருந்திய நண் பகலுமாக: மலர்ந்து - எப்போதும் மிக்கு விளங்கி: அளந்தறியாப் பல் ஊழி ஆற்றுதலால்

- எல்லை கண்டறியப்படாத பல ஊழிகளிலும் செய்வதனால்; அகலிடத்து விளங்கிய அம்மூதூர்க்கு - அகன்ற உலகத்தில் விளங்கிய அந்தப் பழைய ஊரினுக்கு; வேறு இரவும் பகலும் மிகை - வேறே இரவும் பகலும் வேண்டப்படா.

விளக்கவுரை:- உளங் கொள் மறை - வேதியர் - எழுதப்படாமல் பரம்பரையாக வழி வழி வரும் மறையாகிய வேதம். **உளங்கொள்** - கிரியைக் குரிய பாவனையாய் மனங்கொள்ளும் என்பாருமுண்டு.

ஓம தூமத்து இரவு - வேத வேள்விகளின் புகையாற் செய்யப்பட்ட இருள் சூழ்ந்தமையால் காட்டப்பட்ட இரவுப்பொழுது **தூமம்** - புகை. **தூமத்து** - தூமத்தினால் உளதாகும்.

கிளர்ந்த திருநீற்று ஒளியிற் கெழுமிய நண்பகல் - திருநீற்றின் வெள்ளிய ஒளியினாற் காட்டப்பட்ட நண்பகற்பொழுது. "கடும்பகலின் வேலையே போன்றிலங்கும் வெண்ணீறு" (அற்.அந்.65). **கிளர்ந்த** - கிளர்ச்சி பெற்ற. **நீற்றின் கிளர்ந்த ஒளி** என்று கூட்டுக. **கிளர்ந்த நீறு என்று** கூட்டி கிளர நின்ற என்று கொண்டு இப்பதியில் அவதரித்த பிள்ளையாரால் மீளக் கிளர்ச்சி பெற நின்ற நீறு என்ற குறிப்புப்படக் கூறலுமாம். "பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாதொழியக் கண்டு" (1916), "பரசமய நிராகரித்து நீறு ஆக்குதற்" (1917), "தூய திருநீற்று நெறி யெண்டிசையுந் தனிநடப்ப" (1921), "சராசரங்க ளெல்லாம் சிவம் பெருக்கும்" (1924); "வெண்ணீற்றின் சோதி மாதிரந் தூய்மை செய்ய" (2756 திருஞான புரா. 858), "திருநெறி நடந்த தன்றே" (2757 மேற்படி 859) முதலியவை காண்க.

மலர்ந்து - மலர்தல் ஈண்டு உண்டாதல் என்னும் பொருளில் வந்தது. இரவும் பகலுமாக மலர்ந்து, இவ்வாறு பல வூழிகளிலும் ஆற்றுதலால் என்க.

பல் ஊழி - இவ்வூர் மிதந்து அழியாதிருக்கும் பலவாகிய பன்னிரண்டு ஊழிகளிலும். **அளந்தறியா** - என்றது அவ்வூழிகளிற் சென்ற காலத்தின் அளவினை.

அகல் இடத்து விளங்கிய - **அகலிடம்** - விரிந்த உலகம். **அகல்** - அழிந்த என்று கொண்டு ஏனை உலகம் அழிந்த அவ்விடத்து - அப்போது - அழியாது விளங்கிய என்றலுமாம்.

வேறு இரவும் பகலும் மிகை - வேறு - தூம இரவும் நீற்றொளிப் பகலுமன்றி இவற்றின் வேறாகிய அஃதாவது சூரியனாற் செய்யப்பட்ட பக லிரவு என்ற நாட் கூறுகள், **மிகை** என்றது. சூரியனும் அவன் செய்யும் காலக்கூறுபாடும் இருந்தும் அதுபற்றி நாட் கழியாமலும் அழியாமலு மிருத்தலாலும், ஊழிதோறும் வரும் பல சூரியர்களைக் கண்டும் வேறுபடாது ஒன்றுபோல விளங்கும் பகல் இரவுகளைக் கொண்டுள்ளமையாலும் **மிகை** என்றார். பகலில் தூமத்திரவும் இரவில் நீற்றொளிப் பகலும் விளங்குதலால் ஒரு பகல் இரவுகள் மிகையாக - அதிகமாக உள்ளன என்றலுமாம்.

இரவும் பகலும் மிகை - முன் பாட்டிற் பரிதி பல என்றும், ஒரு பரிதி என்றும் கூறிய கருத்தைத் தொடர்ந்து அப்பரிதிகள் வரினும் அவற்றால் வரும் நாட்கூறு இதனைத் தாக்காது செல்லுதலின் மிகையாம் என்று கூறிய உள்ளுறையும் காண்க. **இரவும் பகலும்** என்பது அவற்றை செய்யும் காலக் கடவுளை உணர்த்தி அக்கடவுளின் தொழிற்பாடு

1905. பரந்தவிளை வயற்செய்ய பங்கயமாம் பொங்கெரியில்
வரம்பில்வளர் தேமாவின் கனிகிழிந்த மதுநறுநெய்
நிரந்தரநீ ளிலைக்கடையா லொழுகுதலா னெடிதவ்வூர்
மரங்களுமா குதிவேட்குந் தகையவென மணந்துளதால். 7

வேண்டப்படுவதின்று. ஈண்டு மாயையைக் கடந்த சிவச்செயலே செயலாக நிகழ்தலான் என்றலுமாம்.

வேத வேள்வியும் நீற்றொளியும் - இந்நகருக்கும் அதுபோலவே உயிர்களுக்கும் அழிவில்லாத தன்மையைச் செய்வன என்ற சாத்திர உண்மை விளக்கமும் காண்க. ஒளிப்பெருக்கால் திருக்காளத்தியில் இரவொன்றில்லை (780) என்றும், திருநீற்றொளியால் இரவு களங்கமின்றி விளங்கும் (1018) என்றும் வந்த கருத்துக்களும் இங்கு நினைவு கூர்தற்பாலன. 6

1905. **பொருளுரை:-** பரந்த . . . எரியில் - இடமகன்ற விளைவோடு கூடிய வயலில் எழுந்த சிவந்த தாமரை மலராகிய பொங்கும் தீயினில்: வரம்பில். . . நெய்-அவ்வயல் வரம்பிலே வளர்கின்ற தேமாமரத்தின் பழம் பிளந்ததனால் வரும் சாறாகிய நறு நெய்யானது: நிரந்தரம். . . . ஒழுகுதலால் - நீண்ட இலை நுனியின் மூலம் இடைவிடாது ஒழுகுவதனால்; மரங்களும். . . தகையவென - உரிய மக்களே யன்றி மரங்களும் ஆகுதிவேட்கும் தன்மையுடையன என்னும்படி: அவ்வூர் மணந்துளதால் - அவ்வூர் பொருந்தியுள்ளது. ஆல் - அசை.

விளக்கவுரை:- இத்திருப்பாட்டுத் தொழில்பற்றிப் போந்த நுட்ப வணியினையும் தற்குறிப்பேற்ற வணியினையும் உள்ளுறுத்த முற்றுருவகம்.

விளை வயல் - ஆகுதி வேள்விக்களமாகவும், **பங்கயம்** - எரியாகவும்: **மாங்கனிச் சாறு** - எரியிற் பெய்யும் ஓம நெய்யாகவும்: **மாவிலை** - அந்நெய்யினை எடுத்துப் பெய்யும் ஓமத்துடுப்பாகவும்: மா முதலிய **மரங்கள்** ஆகுதி செய்யும் தலைவர்களாகவும் உருவகிக்கப்பட்டன. **இலைக்கடையால்** - என்றதனால் மரங்களின் கிளைகள் வேள்வியில் நெய் சொரியும் கைகளாகக் கொள்ள நின்றன. **பங்கயம்** - மலருக்கு ஆகுபெயர்.

மரங்களும். . . தகைய - வேதியர்களது ஓமதூமம் இடைவிடாது நிற்றல் முன் பாட்டிற் கூறினார்: அதனைத் தொடர்ந்து அவ்வேதியர்களே யன்றி மரங்களும் ஆகுதி வேட்கும் தன்மை தோன்ற நின்றன என்றார். **மரங்களும்** - உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. **வேட்கும்** - வேள்வி செய்யும். விரும்பும் என்ற தற்குறிப்பேற்றமும் காண்க. **தகைய-தகைமை-தன்மையை-யுடையன: அவ்வூர் மணந்துளது**-என்று கூட்டி முடித்துக் கொள்க. இவ்வாறே நாடு - நகரம் - ஆறு - மரம்-முதலியவற்றின் இயற்கைவளங்களை அவ்வந் நாயன்மார்களது சரிதக்கண்கொண்டு அத்தன்மையே பெறக்காணும் ஆசிரியது தெய்வக் கவிநலன்பற்றி முன் 1018-1019 - 1020 - 1042 பாட்டுக்களையும் ஆண்டுரைத்தவற்றையும் பார்க்க. இதுபோன்று மேல்வரும் 1907-ம் பிறவும் காண்க.

வயற் செய்ய பங்கயம் - இது நீர்ச் சிறப்பினால் இன்றும் பல இடங்களிற் காணவுள்ளது.

பங்கயமாம் பொங்கு எரியில் - ஆம் - *ஆக்கச் சொல் உவம உருபாக நின்றது. இதனை மது முதலிய ஏனையிடங்களிலும் கொள்க. "செழுநீர்க் கமலங்கள் போல மலர்கள் நிற்" (பிள்.தேவா. வீழி).*

வரம்பில் வளர் தேமா - வயலின் *பயிர்களுக்கு நிழல் தாக்காதபடி மா* முதலியவற்றை வயல் ஓரங்களில் வளர்க்கும் *முறையை அறிவிக்க* வரம்பில் வளர் *என்றார்.* **தேமா -** மாவின் சிறந்த ஒருவகை.

மது நறு நெய் - மது - *என்பது சுவையினையும்,* ***நறு -*** *மணத்தினையும் உணர்த்தின. இவை மாங்கனியின் சாற்றுக்கும் ஓம நெய்யினுக்கும் ஒப்ப உரிய பண்புகள்.*

நிரந்தரம் நீள் இலைக்கடையால் ஒழுகுதலால் - நிரந்தம் ஒழுகுதல் - *வேள்வியில் நெய் சொரியும் பண்பு. மிகுதியாய்ச் சொரிதலும், இடையறுதலும் இன்றி ஒரு தன்மைத்தாய் மெல்லியதாய் ஒழுகவிடுதல் முறை. தைலதாரை என்பர்.* ***நீள் இலைக் கடையால் - நீள் இலை -*** *மாவிலை தன்மைநவிற்சி. "நெட்டிலை யிருப்பை" என்ற புறப்பாட்டின் சுவையினும் மேம்பட்ட சுவை இம்மாவின் நீளிலையிற் கண்டு கொள்க. மாவிலை கொண்டு ஆகுதி நெய் சொரியும் வழக்கும் காண்க.* ***ஆல் -*** *மூன்றனுருபு.* ***நீளிலை-*** *நெய் பெய்யும் துடுப்பாக (சிருக்கு) உருவகம்.* ***ஒழுகுதலால் -*** *ஒழுகுதலால் என்ற பிறவினைப் பொருளில் வந்தது. இவ்வாறு காணும்* ***ஒழுக்கத்தைக்*** *கொண்டிருத்தலால் என்ற குறிப்புடன் இரட்டுற மொழிந்துகொள்ளவும் நின்றது.*

நெடிது - *நீண்டகாலம். "அளந்தறியாப் பல்லூழி"யும் (1904).*

தன்மை - உவமை - உருவகம் - குறிப்பு - தற்குறிப்பேற்றம் முதலிய பல அணிச்சுவைகளும் கொண்டு விளங்கும் பெருஞ்சிறப்புடைய இத்திருப்பாட்டுப் புலவர்க்குப் பெருவிருந்தாகும்.

தகைமையென - வயங்கியதால் - மலர்ந்துளதால் - என்பனவும் பாடங்கள்: *7*

1906. பொருளுரை:- வேலை. . கங்குல் - ஞாயிறு கடலினுள் படிந்தபின் உளதாகும் பின் இரவில் விளங்கும் வெள்ளிய மதியம்; சோலை. . .பொழுது - சோலைகள்தோறும் நுழைந்து நுழைந்து வெளிப்பட்டுத் தோன்றும்பொழுது; துதைந்த. . . பயின்று - நெருங்கிய மலர்களின் பக்கத்தில் அடைந்து அவற்றின் தேனிலே தோய்ந்தும் மகரந்தங்களை அளாவியும் இவ்வாறு நெடுநேரம் பயின்றதனால்; அந்தி......வதியுமால் - அந்திமாலைப்போதில் எழுகின்ற செவ்வொளியினையுடைய மதியினைப்போல் (இந்நகரத்தில்) நிலைபெற்று விளங்கும்.

விளக்கவுரை:- கங்குல் வெண்மதியம் - அந்திமாலை எழும் செம்மதியம்போல் வதியும் - என்று கூட்டியுரைக்க. மதி, அந்திமாலையில உதிக்கும்போது செவ்வொளி காட்டும்; பின்னர் வெண்மதியாய் விளங்கும். இந்நகரத்தில் அவ்வாறன்றி இரவிலும் செவ்வொளியுடன் விளங்கும் என்றபடி: அதன் காரணம், சோலைதொறும் நுழைந்து மலர்த்தேன் றோய்தலும் மகரந்தம் அளாவுதலுமாம் என்பது.

வெண்மதியம் - செவ்வொளிய மதியம்போல் வதியும் - வெண்மதி நுழைந்து -

1906. வேலையழற் கதிபடிந்த வியன்கங்குல் வெண்மதியஞ்
சோலைதொறு நுழைந்துபுறப் படும்பொழுது துதைந்தமலர்ப்
பாலணைந்து மதுத்தோய்ந்து தாதளைந்து பயின்றந்தி
மாலையெழுஞ் செவ்வொளிய மதியம்போல் வதியுமால். 8

அணைந்து - தோய்ந்து - அளைந்து - பயின்று செம்மதிபோல வதியும் என்றலுமாம் இது தொழில்பற்றி வரும் அதிசய அணி. வினையெச்சங்கள் காரணப்பொருளில் வந்தன.

சோலைதொறும் நுழைந்து - அந்நகரினைச்சூழ்ந்த சோலைகள் பலவும் வானுற நீண்டு வளர்ந்து ஆகாய வெளியை மறைப்பனவாக உள்ள நிலை காட்டப்பட்டது. அழற்கதிரின் வெப்பமாற்றாது பல சோலைதொறும் நுழைந்தது என்று தற்குறிப்பேற்றம்பட உரைத்ததும் காண்க.

நுழைதல் முதலிய தொழில்களை மதியம் செய்யாவிடினும் செய்ததுபோலவும், அதன்பயனாகத் தன்மையும் கோலமும் மாறியதுபோலவும் கூறுதல் அணிநயம்.

அழற்கதிர் - ஞாயிறு. **அழல்** - வெப்பம். **கதிர்** - ஒளி. அதனையுடைய ஞாயிற்றுக் காயிற்று. **அழற்கதிர் வேலைபடிந்த** - என்று கூட்டுக.

வியன் கங்குல் - வியன் - பெரிய: முற்றிய. **அந்தி மாலை** - கதிர்படிவதற்கு முன் உள்ள நேரம். **வியன் கங்குல்** - பின்னுள்ள நேரம் (**வியன்** - வியப்புமாம்.)

நுழைதல் - புறப்படுதல் - அணைதல் - தோய்தல் - அளைதல் - பயிலுதல் என்ற இச்செயல்கள் நில அண்டமும் மதி யண்டமும் என்ற இவற்றின் சுழல்கையினால் ஆவனவேனும் இவை மதியின் செயல்களாகத் தோற்றப்படுதலின் மதியின் மேலேற்றிக் கூறினார். **கதிர்படி**தலும் அவ்வாறு மலர்ப்பால் அணைதலும் மதுத்தோய்தலும் தாது அளைதலும் என்ற இவை அவ்வவற்றின் வழியாக மதியின் கதிர்கள் பலநிறக் கண்ணாடிமூலம் காண்பது காட்சிப்படும்போது உள்ள தோற்றம் குறித்தன. இவை இயற்கையிற்காணும் தன்மையணிப்பாற்படுவன என்க. அந்தி மாலையில் மலர்கள் மலரும் இயல்பும் காண்க.

செவ்வொளிய மதியம்போல் - மாலை எழுந்தபின் நெடுநேரம் கழியவும் எழுந்த போது உள்ளபடியே விளங்கச்செய்யவல்லது இந்நகரத்தின் தொடர்பு என்றதனால் காலத்தால் கழிந்துபடாது நிலைபேறு பெறுவிக்கும் சிவத்தன்மை பெற்றது இந்நகரம் என்றது குறிப்பு. **வெண் மதியம்** - மூப்பால் வரும் நரைத்தன்மையினையும், **செவ்வொளி** - மாறாநிலையாகிய செம்மை என்னும் சிவத்தன்மையினையும் குறிப்பாலுணர்த்தின. முன் 1903 - 1904 பாட்டுக்களில் ஞாயிறுபற்றி இத்தன்மை குறிப்பித்தபடி இங்குத் திங்கள்பற்றியும் அதனைக் குறிப்பித்த நயமும் கண்டுகொள்க.

சோலை - இந்நகரில் இந்திரன் நந்தவனம் வைத்து வழிபட்ட கந்தபுராண வரலாற்றுக் குறிப்பும் காண்க.

சேயொளிய - என்பதும் பாடம். 8

1907. காமர்திருப் பதியதன்கண் வேதியர்போற் கடிகமழுந்
தாமரையும் புல்லிதழுந் தயங்கியநூ லுந்தாங்கித்
தூமருநுண் டுகளணைந்து துளிவருகண் ணீர்ததும்பித்
தேமருமென் சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால். 9

---

*1907. **பொருளுரை:-** காமர் திருப்பதி அதன்கண் - அழகிய அத்திருநகரிடத்து; கடிகமழும் தாமரையும் - மணங்கமழும் தாமரையும்; வேதியர்போல் - வேதியர்களைப்போல; புல்லிதழும் ... தாங்கி - புறவிதழ்களையும் விளங்கும் நூலையும் தாங்கிக்கொண்டு; தூமரு நுண்துகள் அணிந்து - தூய்மை பொருந்திய நுண்ணிய துகள்களை அணிந்து; துளிவரு கண்ணீர் ததும்பி - துளித்துவரும் கண்ணீர் ததும்பி; தேமரு. . . பாடும் - தேம் பொருந்தவரும் வண்டினிசைபோல இனிய சாமகீதத்தைப் பாடும்.*

விளக்கவுரை:- *இத்திருப்பாட்டினால் சிலேடை வகையினால் தாமரையும் வேதியர் போன்றன என்று கூறியபடி. சொற் சிலேடையை உள்ளுறுத்த தொழிலும் மெய்யும்பற்றி வந்த உவமையணி.*

வேதியர்போல் - தாமரையும் *- தாமரை வேதியர்க்குரிய அடையாள மாலை. இவ்வித் தன்மையால் ஒப்புமைபற்றி அத்தகுதிபெற்ற தென்ற உள்ளுறையும் காண்க.*

புல்லிதழும் நூலும் தாங்குதல் - நுண்துகள் அணிதல் - கண்ணீர் ததும்புதல் - இசையாற் சாமம் பாடுதல் *என்ற இவை ஒப்புமைப் பண்புகள்.*

*தாமரைபற்றிக் கொள்ளும்போது, **புல்லிதழ்** - புறவிதழ்; **தயங்கிய நூல்** - தண்டின் உள்ள நூல்; **நுண்துகள்**-பூந்தாது; **கண்ணீர்**-தேனாகிய நீர் (கள் - தேன்); **பாடுதல்** - வண்டினிசையால் **சாமம் இசைத்தல்** - சாமம் இசைப்பொது எனவும்;*

***வேதியர்**பற்றிக் கொள்ளும்போது, **புல்லிதழ்** - (புல்-தருப்பை) தருப்பை இதழ் களாலாகிய பவித்திரம்; **நூல்** - பூணூல்; **நுண்துகள்** - திருநீறு; **கண்ணீர்** - **அன்பு** மிகுதியினால் துளித்துவரும் ஆனந்தக் கண்ணீர்; **சுரும்பிசையால் சாமம் பாடுதல்** - வண்டின் இசைச் சுரம்போலப் பல சுரங்களும் பொருந்தச் சாம வேத கீதம் பாடுதல்; எனவும் கொள்க. **புல்லிதழ்** - முஞ்சி நாண் என்றும், புல் ஆடை என்று முரைப்பாருமுண்டு.*

***தூமரு நுண்துகள் - தேமரு (மென்) சுரும்பிசை** - வேதியர் பாற்கொள்ளும் போது தூய்மை செய்வது திருநீறு என்றதும், (தே - தெய்வத் தன்மை) தெய்வத் தன்மைபற்றி எழுதுவது வேத நாத இசை என்றதும் குறிப்பு.*

முன்னர், மரங்களும் ஆகுதி வேட்கும் தகைய (1905) என்றதனையே தொடர்ந்து ஆண்டு வேள்விச் சாதனங்களாகிய எரி - நெய் - துடுப்பு முதலியவைப்பற்றிக் கண்ட காட்சி நிலையிற் கூறிய ஆசிரியர், ஈண்டு வேள்வி வேட்போராது காட்சியையும் தாவரங்களிற் கண்டு காட்டுகின்றார். முன் உரைத்தவை யெல்லாம் ஈண்டும் கொள்க.

1908. புனைவார்பொற் குழையசையப் பூந்தானை பின்போக்கி
வினைவாய்ந்த தழல்வேதி மெழுக்குறவெண் சுதையொழுக்கும்
கனைவான முகிற்கூந்தற் கதிர்செய்வட மீன்கற்பின்
மனைவாழ்க்கைக் குலமகளிர் வளம்பொலிவ மாடங்கள். 10

செழும் சாமம் - செழுமையாவது எல்லாச் சுரங்களும் பொருந்தும் சிறப்பு. வேதியர்பாற் கூறும்போது **சுரும்பு இசையால்** *என்றது சுரும்பின் (இரீங்காரம்) இசை போன்ற ஒலி பெற என்க.* **இசையால் - ஆல்** *- உவம உருபு.* 9

1908. பொருளுரை:- புனை. . . அசைய - அணியும் நீண்ட பொன்னாலாகிய குழைகள் காதில் அசைய; பூந்தானை பின் போக்கி - அழகிய பட்டுடையின் தானையினைப் பின் புறமாகச் செருகி, வினைவாய்ந்த. . . ஒழுக்கும் - செயல் வாய்க்கப் பெற்ற தீ வளர்க்கும் வேதிகையினை மெழுக்குப் பொருந்தச் செய்து வெண் சுண்ணக் கோலம் இடுகின்ற; கனைவான முகில் கூந்தல் - ஒலியினைப் பொருந்திய வானில் எழும் மேகம் போன்ற கூந்தலினையுடைய; கதிர் செய்வடமீன் கற்பின் - ஒளி செய்யும் வடமீன் என்னும் அருந்ததியின் கற்பு வாய்க்கப் பெற்ற; மனை வாழ்க்கை. . . மாடங்கள் - இல் வாழ்க்கைத் துணையாய் விளங்கும் குலமகளிர் நிரம்பிய வளங்களால் மாடங்கள் விளக்கம் பெறுவன.

விளக்கவுரை:- குழை யசைய - தானை பின் போக்கி - என்பனவற்றால் மகளிரின் அணிநலன், ஆடை நலன்களையும், **வேதி மெழுக்குற வெண் சுதை ஒழுக்கும்** - என்றதனால் தொழில் நலனையும்; **முகிற் கூந்தல்** - உடல் அழகு அமைப்பு நலனையும்; **வடமீன் கற்பின்** - என்றதனால் குண நலனையும்; **மனை வாழ்க்கைக் குலமகளிர்** - என்றதனால் உலகியலில் மகளிர்பால் வேண்டப்படும் ஏனை இல்லற நலன்களையும் கூறிய நயம் கண்டுகொள்க.

குலம் - உயர்குடி. **வளம்** - மேற்கூறிய நலன்களெல்லாவற்றானும் வரும் பயன்களின் தொகுதி. **வளம்** - வளங்களால் என்க.

மாடங்கள் வளங்களாற் பொலிவ - என்று கூட்டுக. வளம் மாடங்களிற் பொலிவன என்றலுமாம். **வளம்** - என்றதனால் வாழ்க்கைத் துணைநலம் என்ற பகுதியிலும், **மனைவாழ்க்கை** என்றதனால் இல்வாழ்க்கை என்ற பகுதியிலும், திருவள்ளுவனார் கூறும் நலன்கள் எல்லாவற்றையும் வைத்துக் கண்டுகொள்க.

வார் பொற் குழை அசைய - குழை - காதணி - அசையும்படி நீண்ட காதுடைமை முன்னாள் அணி நலமாகக் கொள்ளப்பட்டது. இந்நாளில் காது நீளாது அணி குழி மட்டும் நீண்டு தொங்குதல் அணியாகக் கொள்ளப்படும் வழக்குக் காண்க.

பூந்தானை பின் போக்கி - தானை - ஆடையின் நுனி. முன் தானை என்பர். அதனைப் பின்புறமாகச் செருகுதல் முன்னாள் வழக்கு. முன்புறம் செருகுதல் பிற்கால வழக்கு. பின் செருகுதல் வினை செய்யும் வசதிக்கும் உதவுவதாம்.

1909. வேள்விபுரி சடங்கதனை விளையாட்டுப் பண்ணைதொறும்
பூழியுற வகுத்தமைத்துப் பொன்புனைகிண் கிணியொலிப்ப
ஆழிமணிச் சிறுதேரூர்ந் தவ்விரதப் பொடியாடும்
வாழிவளர் மறைச்சிறார் நெருங்கியுள மணிமறுகு. 11

வேதி மெழுக்குறச் சுதை ஒழுக்குதல் - *வேதியர் தலைமகளிர் செய்யத்தக்க கடமைகள் பலவற்றுள்ளும் தலைமையாகிய சிறப்புப்பற்றி இதனை எடுத்துக் கூறினார். இதனால் ஏனைய எல்லாமடக்கிக் கொள்ளப்படும். வேதியர் வேதவேள்விச் செயல் பற்றி முன் 1904 - 1905 - 1907 பாட்டுக்களிற் கூறினாராதலின் அதற்கேற்ப அவர் மகளிரும் தத்தம் கணவருடன் கலந்து வேள்விக்காவன முறை புரிகின்றனர் என்று கூறியபடி. மனைவேள்விகள் கணவன் மனைவி இருவரும் கூடிச் செய்யற்பாலது என்பது விதி*

சுதை ஒழுக்கும் - *வெண் சுண்ணக்கோலம் (மாக்கோலம் என்பது இந்நாள் வழக்கு) ஒழுக்கி யிடுதற்பாலது.*

கனை வானம் - கனைத்தல் - *சத்தித்தல்: வானம், ஒலி என்ற ஒரே குண முடையது.*

முகிற் கூந்தல் - *உருப் பற்றி வந்த உவமம். "மஞ்சு தழைத்தென வளர்ந்த மலர்க் கூந்தல்" (894) என்ற விடத்திற் போலப் பயனுவமுமாம்.*

வட மீன் - *அருந்ததி; கற்புக்கிலக்கியமாகக் கூறப்படும் வான மீன்.* ***கதிர் செய்தல்*** *- ஒளியால் விளங்குதல். இப்பாட்டால் அந்நகர் மாடங்களின் சிறப்பும் இல்வாழ்க்கை நலமுடைய மறையோர் மகளிர் சிறப்பும் கூறப்பட்டன. முன் பாட்டுக்களிற் புறநகர்ச் சிறப்புக் கூறிவந்த ஆசிரியர் இனி, உண்ணகரச் சிறப்புப் பற்றிக் கூறப்புகுகின்றார்.* 10

1909. ***பொருளுரை:-*** *வேள்வி புரி சடங்கதனை - வேள்விகளிற் செய்யும் சடங்குகளை; விளையாட்டு . . . அமைத்து - தாம் விளையாடும் இடங்களிலெல்லாம் மண்ணின் புழுதி பொருந்தும்படி வகுத்து அமையச் செய்து; பொன் புனை. . ஊர்ந்து - பொன்னாலியன்ற கிண்கிணிகள் சத்திக்கும்படிச் சக்கரம் பூட்டிய அழகிய சிறு தேர்களை ஊர்ந்து; அவ்விரதப் பொடி ஆடும் - அந்தத் தேரூர்தலினால் கிளம்பிய மண் துகள் படிய விளையாடுகின்ற; வாழி வளர். . . மறுகு - வாழும்படி வளர்கின்ற மறைச் சிறுவர் நெருங்கி யுள்ளன அழகிய தெருக்கள்.*

விளக்கவுரை:- *வேதியர்களையும் அவரது மகளிர்களையும் முன்னர் வேள்வி பற்றிச் சிறப்பித்துக் கூறிய ஆசிரியர், அதனையே தொடர்ந்து அவர்தஞ் சிறார்களது சிறப்பினையும் அத்தன்மை பற்றியே கூறுகின்றார். பெற்றோரது வாழ்க்கையின் இயல்பினைக் கண்டு அதனையே பின்பற்றுவது அவ்வச்சிறாரினியல்பாகும் என்ற உண்மையும் காண்க.*

வேள்வி புரி சடங்கு அதனை *- வேள்விக்கண் புரியும் என ஏழனுருபு விரிக்க.* ***புரி சடங்கு*** *- பெரியோர்கள் புரியும்.* ***சடங்கு*** *- சடங்குகள். பால்பகா அஃறிணை.* ***அது*** *- பகுதிப்பொருள் விகுதி.*

1910. விடுசுடர்நீண் மணிமறுகின் வெண்சுதைமா ளிகைமேகந்
தொடுகுடுமி நாசிதொறுந் தொடுத்தகொடி சூழ்கங்குல்
உடுவெனுநாண் மலரலர வுறுபகலிற் பலநிறத்தால்
நெடுவிசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள மருங்கெல்லாம். 12

விளையாட்டுப் பண்ணை *- விளையாடும் இடம்; ஆடிடம்;* ***பண்ணை*** *- இடம் என்ற பொருளில் வந்தது என்பர்.* ***பண்ணை*** *- கூட்டம் என்று கொண்டு விளையாடும் கூட்டந்தோறும் என்றலுமாம்.*

பூழியுற வகுத்து அமைத்து *-* ***பூழி*** *- புழுதி - மண்: யாகசாலை, வேதிகை முதலியவற்றை ஆடிடத்தில் மண்ணால் வகுத்தலும் அமைத்தலும் செய்து.* ***வகுத்தல்*** *- இடம் அளவு படுத்தல்.* ***அமைத்தல்*** *- அதனுள் வேதிகை முதலியவற்றைக் கூறிட்டு நிறுவுதல்.* ***சிறு தேர் ஊர்ந்து*** *- இதனால் அவ்வாறு ஆடும் சிறாரின் பருவங் கூறப் பட்டது. 3-வது மாதம் முதல் ஒற்றைப்பட 21-வது மாதம் முடியப் பத்துப் பருவங்களும் வரும். (அமுதாம்பிகை பிள்ளைத் தமிழ் பார்க்க.) இப்புராணத்தில் 51, 52-வது பாடல்களும் பார்க்க. சிறு தேர்ப் பருவம் 20, 21-வது மாதங்களில் நிகழ்வது.*

அவ்விரதப் பொடி ஆடும் *- தாம் ஊர்ந்த அந்தச் சிறு தேரின் உருளையினால் கிளம்பிய மண் புழுதி படிய விளையாடுகின்ற.* ***அகரம்*** *- தாம் ஊர்ந்த அந்த என முன்னறி சுட்டு.* ***இரதப் பொடி*** *- இரத மூர்ந்ததனால் உளதாகும் பொடி.*

வாழி வளர் மறைச்சிறார் *- சிறார்களைப் பற்றிச் சிறப்புக் கூறியது, முன்னர்க் கூறிய இல்வாழ்க்கையின் மங்கலமாவது நன் மக்கட் பேறே என்று திருவள்ளுவர் இல்வாழ்க்கையின் அடுத்து மக்கட்பேறு என்ற அதிகாரத்தினை வகுத்த குறிப்புத் தருவதாம்.*

வாழிவளர் மறைச்சிறார் *- இச்சிறார் கூட்டத்தினுள் இனி ஆளுடைய பிள்ளை யாரும் கூடி விளையாடி வருவாராதலின் அதன் பொருட்டு* ***வாழிவளர்*** *என்று வாழ்த்திய குறிப்புமாம். வேத வேள்வியை நிந்தனை செய்துழலும் அமண்டேரர்களை வாதில் வென்றழித்து மறைவழக்க மெடுக்க இங்கு மறையவர்குலத்து வந்து அவதரிப்பவர் பிள்ளையாராதலான், இந்நகரச் சிறப்புக்களையெல்லாம், அக்குல நலமுடைய வேள்விச்சிறப்புப்பற்றியே கூறுகின்றார். (1904-1905-1907-1908-1909): பிள்ளையார் சிறார்களுடன் விளையாடும் சிறப்பு ''குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியாடியகோல, மறுகிடைப்பே ரொளிபரப்ப வந்துவளர்ந் தருளு நாள்" (1950) என்பது முதலியவற்றாற் காண்க.*

சிறுதேர் ஊர்ந்து *- யாக முடிவில் பெரியோர் "அவபிருதஸ்நானம் செய்து", நீறு பூசித், தேர்ஊர்ந்து, நகர்வலம் வந்து, வீடு புகுவதுபோலச், சிறாரும் இரதப்பொடி யாடிச் சிறுதேர் ஊர்ந்து மனை செல்வர் என, முற்றுவமக் குறிப்பும் காண்க.* 11

1910. ***பொருளுரை:-*** *விடுசுடர் நீள்மணி மறுகின் மாளிகை - சுடர்விடுகின்ற நீண்ட மணிகள் அழுத்திய வீதிகளின் வெள்ளிய சுண்ணச் சாந்தினால் இயன்ற மாளிகைகள்;*

மேகம் . . . தொடுத்த கொடி - மேக மண்டலத்தைத் தொடுவதுபோல நீண்ட சிகர நாசிகள்தோறும் கட்டப்பட்ட கொடிகளால்; கங்குல் - நள்ளிரவாகிய இராப்போதிலே உடுவெனும் நாள் மலர் அலர - விண் மீன்கள் என்றும் புதிய பூக்கள் அலர்தற்கு உறுபகலில் - உற்றபகற் போதிலே; பல நிறத்தால் நெடுவிசும்பு தளிர்ப்பதென - பல நிறங்களுடன் நீண்ட வானத்தில் தளிர்ப்பது போன்று - பக்கங்களெல்லாம் நெருங்கியுள - பக்கங்களிலெல்லாம் நெருங்கியுள்ளன.

விளக்கவுரை: மாளிகைக் குடுமி மணி நாசிதொறும் - பல மாளிகைகளின் சிகரங்களின் மணிகள் இழைத்த வாய்தல்கள்தோறும். **நாசி** - புறம்புறம் நீண்ட வாயில்கள். “காமர் மணி **நாசிகையின்** மருங்கு” (1172) என்பதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. மாளிகைகள் பளிங்கு முதலிய மணிகளைக் கொண்டு வானத்தில் ஓங்கி விளங்கும் தன்மை பற்றி 1167 முதல் 1174 வரை பாட்டுக்களும் “பாங்குமணிப் பலவெயிலுஞ் சுலவெயிலும் புனை மாடம்” (870) என்றதும், பிறவும் பார்க்க. **நாசி** - மாளிகைகளிற் கொடி நடுவதற்குற்ற ஓர் உறுப்பு; நாடி என்றும் கூறப்படும்.

வெண்சுதை மாளிகை . . . கொடி - மாளிகைகள் மேகமண்டலத்தை அளாவவுயர்ந்தன: அவற்றின் உயர்ந்த சிகரத்தின் முன்பு நீண்ட நாசிகைகள் தோறும் வரிசைபெறக் கொடிகள் கட்டப்பட்டுள்ளன என்றதாம்.

மணி வெண்சுதை மாளிகைக் - கொடி - கங்குல் - உடுவெனும் - மலர் அலரப் - பகலில் விசும்பு தளிர்ப்பதென - நெருங்கியுள - என்றது வெண்சுதையாலியன்று உயர்குடுமிகளில் மணிகள் பதித்த மாளிகைகளில் நாசிகைதொறும் பலநிறக் கொடிகள் வரிசைபெறக் கட்டப்பட்டுள்ளன; வெண்சுதை மணிமாளிகை நெருக்கம் பகல் செய்தது; மணிகள் சூழ் இரவினிடத்து உடுக்களாகிய மலர்கள் அலர்வன போன்றன; மணிமாளிகைகள் சுதைப்பகலாகிய ஒளியிடத்து இரவில் உடுக்களாகிய மலர்கள் தம்மிடம் அவர்தற்பொருட்டுப் பகலில் கொடிகளால் பல நிறத்தால் விசும்பில் தளிர்ப்பனபோல அக்கொடிகளின் சூழல் விளங்கிற்று. இவ்வாறுள்ள வெண்சுதை மணிமாளிகைகளும் அவற்றிற் கொடிகளும் மருங்கெல்லாம் நெருங்கியுள என்பதாம். **மறுகின் - வெண்சுதை - மணிமாளிகை - கொடி - நெருங்கியுள** - என்று கூட்டுக. தற்குறிப்பேற்றம்.

மறுகின் - முன்பாட்டில் **நெருங்கியுள மணிமறுகு** என்ற அந்த மறுகு என முன்னறி சுட்டு விரித்துக்கொள்க. இவற்றின் தன்மை முன்விரித்தபடியால் அடை மொழியாற் சுருக்கிக் கூறினார். அந்த மறுகின் மாளிகை - கொடி - என்க.

மாளிகை - கங்குல் - உடு - அலரப் - பகலில் விசும்பு தளிர்ப்பதென நெருங்கியுள - ஓமதூமத்திரவும் நீற்றின் பகலும் ஆற்றுதலால் வேறு இரவும் பகலுமிகையாக அம்மூதூர் விளங்கியதனால், அதன் மறுகுகளின் வெண் சுதை மணி மாடங்களும் கொடிகளும் இரவினும் பகலினும் உள்ள செயல் தம்மிடத்தே தோன்ற விளங்கின என்றதாம். **அலர** - அலர்தற்கு: காரணப் பொருளில் வந்தது.

கங்குல் - உடு என்னும் நாண் மலர் அலரப், பகலில் விசும்பு பல நிறத்தால் தளிர்ப்பது என - தாவரங்கள் பகலில் ஞாயிற்றின் உதவியால் தளிர்ப்பன; இராவிற் பல

1911. மடையெங்கு மணிக்குப்பை; வயலெங்குங் கயல்வெள்ளம்;
புடையெங்கு மலர்ப்பிறங்கல்; புறமெங்கு மகப்பொலிவு;
கிடையெங்குங் கலைச்சூழல்; கிளர்வெங்கு முரலளிகள்;
இடையெங்கு முனிவர்குழா; மெயிலெங்கும் பயிலெழிலி. 13

மலர்கள் அலர்வன என்ற தாவாநூற் கருத்தும்பட வருதல் காண்க. **பல நிறத்தால் தளிர்ப்பன** என்றது தளிர்களின் பல நிறங்களை. இவை கொடிகளின் பல நிறங்களுக்கு உவமிக்கப்பட்டன. ஞாயிற்றின் கதிர் ஏழு நிறங்கள் பொருந்திய சேர்க்கை என்றும், அவற்றுள் ஒவ்வொன்றின் செயல் மிகுதியும் குறைவும்பற்றித் தாவரங்களில் தளிர். இலை. மலர் முதலியவை பல நிறம் பெறுவன என்றும் வரும் கலைஞானப் பகுதியும் குறிப்பு. **நாண் மலர்** - என்றது புதிதின் அலர்தல் குறித்தது. **கொடி** - பூக்கொடி எனவும் தொனிப்படுமாதலின் அதற்கேற்ப, **மலரும் தளிரும்** கூறப்பட்ட நயமும் காண்க.

மணிமாளிகை - கொடி - சூழ்கங்குல் உடுவெனு மலரலரப் - பகலில் விசும்பு தளிர்ப்பதென - மருங்கெல்லாம் நெருங்கியுள என்று கூட்டி முடித்துக் கொள்க. 12

1911. **பொருளுரை:-** வெளிப்படை. (அத்திருநகரில்) மடைகளிலெங்கும் மணிகளின் குவியல்கள் உள்ளன; வயல்களில் எங்கும் நீர் வெள்ளத்துடன் கயல் மீன்களின் கூட்டம் உள்ளன; அவ்வயல்களின் பக்கங்களிலெங்கும் பூக்குவியல்கள் உள்ளன; அவற்றின் புறத்தில் எங்கும் யாகங்களின் பொலிவு நிறைந்துள்ளது; வேதம் ஓதும் கிடைகளில் எங்கும் கலைகளின் சூழல்கள் விளங்கியுள்ளன; கிளர்வாகிய சோலைகளில் எங்கும் முரலுகின்ற வண்டுகளின் கூட்டங்கள் உள்ளன; இச்சோலைகளினிடை எங்கும் மறை முனிவர்களின் கூட்டம் உள்ளன; மதில்களில் எங்கும் தவழ்கின்ற மேகங்கள் உள்ளன.

விளக்கவுரை:- எங்கும் எங்கும் - இவை யிவை காட்சிப்பட உள்ளன என்று முற்று வினை விரித்துக்கொள்க. **வினை** (கன்மம்) விரிவுபடாது மறையும் நகரமாதல் குறிப்பு. முற்று வினை விரித்துக் கூறுதலினும், இவ்வாறு எங்கும் எங்கும் என்று அடுக்கித் தொக வைத்துக் கூறுதல் இசையின்பமும் பொருட்செறிவும் பொருந்துதல் காண்க. இது ஆசிரியரது கவிநலச் சிறப்புக்களுள் ஒன்று. 77-83 பாட்டுக்களும், பிறவும் பார்க்க.

மடை - வயல்களில் நீர் பாயும் மடைகள், **குப்பை** - பயன் படாது, விலக்கப்படுவது என்பது குறிப்பு. "அலகிடுங் குப்பை யாக்கும்" (திருவிளை - புரா - பாயி).

மணி - மடைகளின் வழி நீர்ச்செலவிற்குத் தடையிராமல் ஒதுக்கப்படுவனவும், நீரால் ஒதுக்கப்படுவனவுமாகிய முத்து முதலிய மணிகள். இவை காவிரி நீருடன் வருவன.

வெள்ளக் கயல் என்க - நீர்ப் பெருக்குடன் கயல்கள் நிறைவன என்பது. கயலுடன் கூடிய வெள்ளம். கயலின் கூட்டம் என்பாருமுண்டு. "மடையில் வாளைபாய" (பிள் - தேவா - திருக்கோலக்கா.)

புடை எங்கும் மலர்ப்பிறங்கல் - வயல் வரம்பிலும் ஓரங்களிலும் உழத்தியர்கள் களைகட்டலாலும் உழவர் அரிந்து குவித்தலாலும் உளவாகிய தாமரை நீலம் ஆம்பல்

முதலிய நீர்ப்பூக்களின் குவியல். **பிறங்கல்,** மலைபோல் மிகுதி பற்றிக் கூறியது; "மத்தின் சுடர்ப்பெரும் பொருப்பு" "மலர்க் கற்றை வேரி பொழிந்திழி வெற்பு" என்றதும் 73 பிறவும் பார்க்க.

புறம் - அவ்வயல்களின் புறமாகிய புறம்பணை "பெரும் பெயர்த் தனை" 77. **மகம்** - சிவ வேள்வி: **மக** - சிறார் என்று கொண்டு அந்த விளையாடும் மகவுகளின் கூட்டம் என்றுரைத்தலுமாம்.

கிடை - சிறுவர்க்கு வேத மோதுவிக்கும் பள்ளிகள் 1208 - 1222 பார்க்க.

கலைச்சூழல் - வேதம் வேதாங்க முதலிய கலைகள் கற்பிக்கப்படுகின்ற புழுக்கம் இடையறாது கிடைகளின் பல பக்கமும் அலை போல முழங்கிச் சூழ்வதனால் **சூழல்** என்றார். **சூழல்** - கலைகள் தம்முட்பட்டாரைச் சூழ்ந்து புறம் போகவிடாது பிணிக்கும் தன்மையும் குறிப்பு. "இசைச் சூழல் புக்கோ" (திருக்கோவை)

கிளர்வு எங்கும் முரல் அளிகள் - கிளர்வு - சிறார் வேதம் ஓதிப் பயிலும் ஒலிக் கிளர்ச்சி. அஃது ஆகு பெயராய் அஃது உளதாகும் இடத்தைக் குறித்தது **கிளர்வு** - சோலை என்றலுமாம். இவை வண்டுகள் முரலும் ஓசை போல்வன ஆதலின் கிடைகளின் பக்கமுள்ள சோலைகளின் வண்டுகள் முரலும் ஓசை இவற்றின் எதிரொலி போல்வன என்பது குறிப்பு. "சுரும்பிசையாற் செழுஞ்சாமம் பாடுமால்" (1907) என்றதனைத் தொடர்ந்து கொள்க.

இடை - வண்டுகள் முரலும் சோலைகளினிடையே. **முனிவர் குழாம்** - மறை முனிவர் கூட்டம். "போகமும் பொலிவு மெங்கும் புண்ணிய முனிவ ரெங்கும்" (81):

எயில் - மதில். முன் கூறிய இடங்கள் புற நகர்: அதனை அடுத்து உண்ணகரைச் சூழ்ந்துள்ளது எயில்.

பயில் எழிலி - மகச் சாலைகளின் பயனாய் வருவன மேகங்களாதலின் அக்குறிப்புப்பட மகப் பொலிவு என்றதனை அடுத்து எழிலி பயில்வதனைக் கூறினார். மதிலின் உயர்ச்சி கூறியபடியுமாம், "மேகமும் களிறு மெங்கும் வேதமுங் கிடையு மெங்கும், யாகமுஞ் சடங்குமெங்கும்" (81) "மங்குறோய் மாடச்சாலை மருங்கிறை யொதுங்கு மஞ்சும்" (836) என்றும் காரியகாரணக் குறிப்புப்பட முன் கூறியனவும், பிறவும் காண்க.

மடைகளின் புறம் வயலும், அவற்றின் புறத்துப் புறம்பணையும், அதனை யடுத்துக் கிடையும் சோலையும், அவை கழிய உண்ணகர் மதிலும் என்றிவ்வாறு முறையேபுறத்தி னின்று உட் செல்லும் ஆறு கண்டு கொள்க. முன் கூறிய பாட்டுக்களின் வைப்பு முறையும் இவ்வாறே அமைதிப் படுத்திக்கொள்ளத் தக்கது. மேல் வரும் பாட்டில் இவ்வாறு கண்ட மதிலின் உள்ளே விளங்கும் திருநகரத்தின் பெயர்களை வரிசை பெறக் கூறும் வகையாற் சிறப்புக் கூறி, மேற் சரிதத்தினுட் புகுகின்ற அமைதியும் காண்க.

கலை ஒலிகள் - என்பதும் பாடம். 13

1912. பிரமபுரம் வேணுபுரம் புகலிபெரு வெங்குருநீர்ப்
பொருவிறிருத் தோணிபுரம் பூந்தராய் சிரபுரமுன்
வருபுறவஞ் சண்பைநகர் வளர்காழி கொச்சைவயம்
பரவுதிருக் கழுமலமாம் பன்னிரண்டு திருப்பெயர்த்தால். 14

1912. பொருளுரை:- வெளிப்படை. (அத் திருநகரம்) பிரமபுரம் என்றும், வேணுபுரம் என்றும், புகலி என்றும், பெரிய வெங்குரு என்றும், நீரினுள் ஒப்பில்லாது விளங்கும் திருத் தோணிபுரம் என்றும், பூந்தராய் என்றும், சிரபுரம் என்றும், முன் வரும் புறவம் என்றும், சண்பைநகர் என்றும், வளரும் காழி என்றும், கொச்சைவயம் என்றும், போற்றும் திருக்கழுமலம் என்றும் இவ்வாறு ஆகி வருகின்ற பன்னிரண்டு திருப் பெயர்களை யுடையது.

விளக்கவுரை:- இத்திருப் பாட்டினாற் சீகாழி நகரச் சிறப்பினை அதன் பன்னிரண்டு பெயர்களாலும் போற்றி அறிவித்தபடி; என்னை ? இவை ஒவ்வோர் ஊழிகளிலும் ஒவ்வோர் காரணம்பற்றிப் போந்தபடியால் இதன்பழஞ்சரிதமும், ஊழியிலும் அழியாத நிலையும் அறிவிக்கப் பட்டவாறு; இவ்வரிசை காலக்கிரமத்திற் போந்த வரிசைப்படி அமைந்துள்ளது; ஆதலின் இவ்வரிசையிற் போற்றுதல் வேண்டுமென்று ஆசிரியர் அறிவித்தபடியும் காண்க.

இதுபற்றி முன் 257-ம் திருப்பாட்டின் கீழ் உரைத்தவையும், பிறவும் பார்க்க. "கமழ்காழி யென்று கருதப் படுபொரு **ளாறு நாலு** முளதாக வைத்த பதி" (பிள் - தேவா, பியந்தைக் காந். நனி பள்ளி. 11) என்றதில் **காழி** என்பது 10-வது பெயராக வைக்கத் தக்கதென்றும், "ஒன்றி ரண்டொரு மூன்றொடு சேர்பதி - பூந்தராய்" (காந்தார பஞ் - 2. பூந்தராய்.) என்றதில் **பூந்தராய்** என்பது 6-வது பெயராக வைக்கத் தக்கதென்றும், வகுத்தருளியவாற்றால் ஆளுடைய பிள்ளையார் இவ்வரிசைப்பாடு அவ்வாறே வைத்து ஓதத்தகுவது என்று காட்டியருளியது காண்க.

(1) **பிரமபுரம்** - பிரமன் பூசித்த காரணத்தாற் போந்த பெயர். "ஏடுடைய மலரான் முனைநாட் பணிந்தேத்த வருள்செய்த. . .பிரமாபுரம்" (நட்ட பாடை - 1): "நாவியலு மங்கையொடு நான்முகன்றான் வழிபட்ட நலங்கொள் கோயில்" (கழுமலம் - மேகரா - குறி - 1): "சுருதி சிரவுரையினாற், பிரமனுய ரரனெழில்கொள் சரணவிணை பரவ வளர் பிரமபுரமே" (பிரமபுரம் - சாதாரி - 1) முதலியவை பார்க்க.

(2) **வேணுபுரம்** - சூரபதுமனுக் கஞ்சி இந்திரன் பூசித்தபோது இறைவர் வேணு (மூங்கில்) வாய் முளைத்தருளினர் என்றும், ஆசாரியனைப் பிழைத்த பழியும் விருத்திரா சுரனைக் கொன்ற பழியும் போக்கும்படி இந்திரன் வேணு வழியாய் அடைந்தனன் என்றும் வரும் காரணத்தாற் போந்த பெயர்.

(3) **புகலி** - சூரபதுமனால் வந்த துன்பம் பொறுக்க லாற்றாது முருகப் பெருமானைத் தந்தருளும்படி தவங்கிடந்த தேவர்கள் புகலடைந்ததனாற் போந்த பெயர். "பகைகளையும் வகையிலறு முகவிறையை மிகவருள நிகரிலிமையோர் புக. . . புகலி" (மேற்படி 3).

(4) **பெரு வெங்குரு** - பிரமனால் இகழப்பட்ட அசுர குருவாகிய சுக்கிரன் நாரத முனிவ உபதேசத்தின்படி வந்து பூசித்துத் தேவ குருவுக்கு இணையாகப் பெற்றனன்; நாகர் தன்னைக் கொடியன் என்று இகழும் பழி நீங்க இயமன் பூசித்து முன்னுணர்ச்சி பெற்று மௌன நிலை பெற்றனன்; இவற்றால் இப்பெயர் போந்தது. "மதி பொங்கெரி புலன்கள் களைவோர், வெங்குரு விளங்கியுமை பங்கர் சரணங்கள்பணி வெங்குரு" (மேற்படி 4); "செங்கோ னடாவிப் பல்லு யிர்க்குஞ் செய்வினை மெய் தெரிய, வெங்கோத் தருமன் மேவி யாண்ட வெங்குரு" (தக்கேசி - மேற்படி 4).

(5) **நீர்ப் பொருவில் திருத்தோணிபுரம்** - ஊழி நீர்ப் பெருக்குக்களில் உலக மெல்லாம் அமிழ்ந்தபோது பிரணவமாகிய தோணியாக மிதந்து தன்னகத்துச் சிவ பெருமான் அம்மையாருடன் எழுந்தருளப் பெறுவதால் இப்பெயர் பெற்றது நீர் - பெருநீரினுள்; **பொருவில்** - ஏனை உலகமெல்லாம் அழியவும் தான் அழியாது மிதத்தலின் ஒப்பற்றது. "அணிநீ ருலக மாகி யெங்கு மாழ்கட லாலழுங்கத், துணிநீர் பணியத் தான்மி தந்த தோணிபுரம்." (தக்கேசி-மேற்படி 5); பாணியமர் பூணவருள் மாணுபிர மாணியிட மேணி முறையிற், பாணியுல காளமிக வாணின்மலி தோணிநிகர் தோணிபுரம்" (மேற்படி 5).

(6) **பூந்தராய்** - சங்கநிதி, பதுமநிதி என்னும் இரண்டு நிதிகளின் தெய்வங்களும் பூசித்து மாறாது கொடுக்கும் வரம் பெறுவதற்காகப் பூந்தாராய் இருந்து பூசித்தமையாலும், இரணியாக்கனைக் கொல்லத் திருமால் வெள்ளைப்பன்றியாகிச் சென்று கொன்று. பூமியைக் கொம்பிலேற்று வருத்திய பழிபோகப் பூசித்தமையாலும், இப்பெயர் போந்ததென்பர். (1) பூந்தார் - பூமாலை: (2) பூ - பூமி ' தாராய் - (கொம்பில் தரித்தவன், "அவர்பூ ணரையர்க் காதி யாய வடன்மன்ன னாள்மண்மேற், றவர்பூம் பதிகளெங்கு மெங்குந் தங்கு தராயவனே" (தக். மேற்படி 6): "அராமிசை யிராதெழி றராயர பராயண வராக வுருவா, தராயனை விராயெரி பராய்மிகு தராய்மொழி விராய பதியே" (மேற்படி - 6).

(7) **சிரபுரம்** - தேவருடன் அமுதுண்ண வேற்றுருவுடன் அமர்ந்திருந்த சயிங்கேயன் (சிலம்பன்?) என்னும் அசுரனைச் சூரியன் காட்டத் திருமால் சட்டுவத்தால் வெட்ட அவனது தலை (சிரம்) இராகுவாக நின்று பூசித்த காரணத்தாற் போந்த பெயர். "தலையாய்க் கிடந்திவ் வைய மெல்லாந் தன்னதோ ராணைநடாய்ச், சிலையால் மலிந்த சீர்ச் சிலம்பன் சிரபுரம்" (தக். மேற்படி 7): "பரவமுது விரவ வுடல் புரளமுறு மரவையரி சிரமரியவச், சிரமரன சரணமவை பரவவிரு கிரகமமர் சிரபுரமதே" (மேற்படி 7).

(8) **புறவம்** - இந்திரன் பருந்தாகவும் தீக்கடவுள் புறாவாகவும் யாகத்தில் பரிசோதிக்கவரச், சிபிச்சக்கிரவர்த்தி புறாவின் எடைக்குத் தன் தசையரிந்திடவும் போதாமை கண்டு துலையேறித் தன் புகழ் நிறுத்திட, அப்பாவம் போகப் புறாவாகிய தீக்கடவுள் பூசித்தமையாற் போந்த பெயர். "குறைவின்மிக நிறைதையுழி மறையமரர் நிறையருள முறையொடுவரும், புறவனெதிர் நிறைநிலவு பொறையனுடல் பெறவருளு

புறவமதுவே" (மேற்படி 8). கோதம முனிவனது சாபத்தால் புறா வடிவம் பெற்ற பிரசாபதி முனிவன் புறவாயிருந்து பூசித்துச் சாபநீக்கம் பெற்றதனாலும் போந்தபெயர் என்பதும் வரலாறு.

(9) **சண்பை**-கபில முனிவர் சாபத்தால் தமது குலத்தினன் வயிற்றுதித்த பிள்ளையாகிய இருப்புலக்கையைப் பொடியாக்கிக் கொட்டிய தூள், சண்பைப் புல்லாக முளைக்க, அவற்றையே ஆயுதமாகக்கொண்டு போர்செய்து யாதவகுமரர்மடிய, அப்பழி போகும்படி கண்ணனும் அம்முனிவனும் பூசித்த காரணத்தால் இப்பெயர் போந்தது. முனிவர் துருவாச முனிவர் என்ற வரலாறுமுண்டு. "மண்பரியு மொண்பொழிய நுண்புசகர் புண்பயில விண்படரவச், சண்பைமொழி பண்பமுனி கண்பழிசெய் பண்புகளை சண்பைநகரே" (மேற்படி 9).

(10) **வளர் காழி** - காளிதன் என்னும் பாம்பும், நடனத்தில் தோல்வியுற்ற காளியும் பூசித்ததனால் இப்பெயர் பெற்றது. "கீழிசைகொள் மேலுலகில் வாழரசு சூழரசு வாழவரனுக், காழியசில் காழிசெய வேழுலகி லூழிவளர் காழிநகரே" (மேற்படி 10): "அழலா யுலகங் கவ்வை தீர வைந்தலை நீண்முடிய, கடனா கரையன் காவலாகக் காழி யமர்ந்தவனே" (தக் - மேற்படி 10): வரத்தால் இப்பெயரே மலிந்து வழங்குதலால் **வளர் காழி** என்றார்.

(11) **கொச்சைவயம்** - பராசரர் ஆற்றிடையில் மச்சகந்தியைப் புணர்ந்ததனால் உண்டாகிய கெட்ட நாற்றமும் பழியும் ஏனைய முனிவர்களது இகழ்வும் நீங்கும்படி பூசித்து வரம் பெற்றமையால் இப்பெயர் போந்தது. "மச்சமத நச்சிமத மச்சிறுமியைச்செய்தவ வச்சவிரகக், கொச்சைமுர வச்சர்பணி யச்சுரர்கள் நச்சிமிடை கொச்சை நகரே" (மேற்படி 11). **கொச்சை** - தீ நாற்றம். **வயம்** - சயம்: போக்குதல் குறித்தது.

(12) **கழுமலம்** - உரோமச முனிவர் அடைந்து பூசித்ததனால் ஞானோபதேசம் பெற்று உலகில் உயிர்களது மலங்கழுவும் வரம் பெற்றனர். பெயர் அதனாற் போந்தது. "ஒழுகலரி தழிகலியி லுழியுலகு பழிபெருகு வழியை நினையா, முழுதுடலி லெழு மயிர்க டழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத், தொழுதுலகி லிழுகுமல மழியும் வகை கழுவுமுரை கழுமல நகர்" (மேற்படி 12).

திருப் பெயர்த்து - இப்பெயர்கள் ஒவ்வொன்றும் சிவனருள் விளைவைக் காட்டி நிற்றலால் **திருப்பெயர்** என்றார். இப்பெயர்களை மந்திரங்களாகச் சொல்லிப்போற்றுதல் சிவனருள் பெறுதற்குச் சாதனமாம் என்பது.

பரவு திருக்கழுமலம் - **பரவு** - **திரு** - என்ற இரண்டு அடைமொழிகள், இப்பெயர் கால வரிசையிற் கடைசியாய்ப் போந்ததென்றும், அதனால் அதுவே மேல்வரும் ஊழி வரையில் உயிர்கள் போற்ற நின்றதென்றும், மலம் கழுவப்பெற்றச் சிவத்தை யடைவதே உயிர்கள் பெறும் பேறாதலின் அதனைச்செய்யும் கருத்துடன் பரவ நின்ற சிறப்புடையதென்றும் குறிக்கின்றன.

பெரும்புகலி வெங்குரு - என்பதும் பாடம். 14

குடி-கோத்திரம்-பிதா

1913. அப்பதியி னந்தணர்தங் குடிமுதல்வ: ராசின்மறை
கைப்படுத்த சீலத்துக் கவுணியர்கோத் திரம்விளங்கச்
செப்புநெறி வழிவந்தார்: சிவபாத விருதயரென்
றிப்புவிவா ழத்தவஞ்செ யியல்பினா: ருளரானார். 15

---

*1913. **பொருளுரை:-** அப்பதியின் ... முதல்வர் - அத்தலத்தில் அந்தணர்களுடைய குடியில் வந்த முதன்மை பெற்றவர்: ஆசில் மறை ... வழி வந்தார் - குற்றம் நீக்கும் வேதங்களிற் கூறியபடி ஒழுகிய சீலத்தையுடைய கவுணியர் கோத்திரம் விளங்கும்படி செப்பும் சூத்திரத்தின் (உட்பிரிவு) வழியிலே வந்தவர்; சிவபாத விருதயர் இயல்பினார் - சிவபாதவிருதயர் என்று இந்த உலகம் வாழும் பொருட்டுத் தவஞ்செய்யும் இயல்பை யுடையவர்; உளரானார் - உள்ளவரானார்.*

விளக்கவுரை:- இதுவரை நாயனாரது நாடு நகர முதலிய சிறப்புக்களைக் கூறி வந்த ஆசிரியர், இனி, வரன்முறையே அவர் அவதரித்த மரபு முதலியனவும், அவரைப் பெற்றோர தியல்பும், அவர் அவதரிக்க நேர்ந்த வரலாறும் கூறத்தொடங்குகின்றார்.

இப்பாட்டினால், **அந்தணர்** என்று குடிமரபும், **கவுணியர் கோத்திரம்** என்று அதனுட்பிரிவாகிய கோத்திரமும் (குலமும்), **செப்பு நெறி வழி** என்று அதனுட் பிரிவுகளாகிய சூத்திரம் பிரவரம் முதலியனவும், **சிவபாதவிருதயர்** என்று தந்தையார் பெயரும், **தவஞ்செய் இயல்பினார்** என்று அவரது தன்மையும், **உளரானார்** என்று அவரது பேற்றின் பயனும் கூறியவாறு கண்டுகொள்க.

அந்தணர் குடி - கவுணியர் கோத்திரம் - செப்பு நெறி வழி - குடியும் கோத்திரமும் நெறி வழியும் என்றிவை வேண்டடத்தக்கன என்பது மனித வாழ்க்கையின் நல் அமைப்புக்களுள் ஒன்று. இதனை ஆசிரியர் பலவிடத்தும் பலவாற்றாலும் காட்டிச்செல்கின்றார். "தருமுறைக் கோத்தி ரத்தின் றங்குலஞ் செப்பி" எனப் (திருஞான - புரா - 1235) பின்னர்க் கூறுதலும், "குலம் - குடி" (1280) என்றதும், பிறவும் காண்க.

முதல்வர் - முதன்மை பெற்ற சிறப்புடையவர். **கைப்படுத்தல்** - கைக்கொண்டொழுகுதல். **ஆசில்மறைச் சீலம்** - என்க. **ஆசு இல்** - குற்றங்களை யில்லையாகச் செய்யும். **மறைச் சீலம்** - மறைகளின் விதித்த ஒழுக்கம். இவை **தருமம் சத்தியம்** முதலாயின பொது ஒழுக்கங்களாம்; **வேள்வி சிவபூசை** முதலியனவே **சிறப்பொழுக் கங்களாம்**.

கவுணியர் கோத்திரம் - இப்போது கௌண்டின்ய கோத்திரம் என வழக்கிலுள்ளது. **செப்புநெறி வழி** - அக்கோத்திரத்திற் குரித்தாய் எடுத்துச் சொல்லப் பட்ட சூத்திரம் - பிரவரம் முதலாயின உள் நெறிகள்

சிவபாதவிருதயர் - ஆளுடைய பிள்ளையாரின் தந்தையாரது பெயர். சிவன் றிருவடிகளை எப்போதும் கொண்ட மனத்தையுடையவர் என்பது பொருள். காரண

தாயார்

1914. மற்றவர்தந் திருமனையார் வாய்ந்தமறை மரபின்வரு
பெற்றியினா; ரெவ்வுலகும் பெறற்கரிய பெருமையினார்;
பொற்புடைய பகவதியா ரெனப்போற்றும் பெயருடையார்;
கற்புமேம் படுசிறப்பிற் கணவனார் கருத்தமைந்தார். **16**

இடுகுறியாக இவருக்கு அது பொருந்துவதாம் என்பதனை. "அரவணிந்த சடைமுடியா ரடியலா லறியாது. பாவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையர்" (1915) என்று ஆசிரியர் அறிவித்துள்ளார். இவரது அத்தன்மை மேதினி மேற் சமணர் முதலியவர்களது பொய் மிகுத்துப் பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாதொழியக் கண்டு இடருழந்து தோணியப்பரை நோக்கி அதனை நீக்கும் பிள்ளை வேண்டுமென்று வரங்கிடந்தமையாலும், சிவவேள்வி செய்தற்குப் பிள்ளையாரிடம் பொருள் வேண்டியமையாலும், பலகாலம் பிரிந்திருந்த பின்பு கவலைகொண்டு பிள்ளையாரைக் காணும் விருப்பினுடன் மதுரைக்குச் சென்று சேர்ந்தபோதும் உடனே அவருடைய திருமடத்திற் செல்லாது, திருவாலவாயமர்ந்த நாதனார் திருக்கோயிலுக்குச் சென்று வணங்கிய பின்னரே திருமடத்தை விசாரித்துச் சேர்ந்தமையாலும், பிறவாற்றாலும் நன்கு விளங்கும்.

இப்புவிவாழத் தவம்செய் இயல்பினார் - தந்நலங் கருதித் தாம் வாழ எண்ணாது, உலகம் வாழும் பொருட்டுத் தவம் செய்வது என்பதனைச் செயற்கைப் பழக்கத்தாலன்றித் தம்மியல்பாக உடையவர். "தாமென்று மனந்தளராத் தகுதியரா யுலகத்துக், காமென்று சரண்புகுந்தார் தமைக்காக்குங் கருணையினான்" (பிள் - பிரமபுரம் - சீகா.) என்று இத்தன்மையும் அதற்குச் சிவன் அருள் செய்வதனையும் பிள்ளையார் கூறி யருளுகின்றார்.

உளரானார் - உலகத்துக்காகத் தவஞ்செய்தலின் உள்ளவராயினார். 1281 பார்க்க. 15

1914. பொருளுரை:- மற்று அவர் தம் திருமனையார் - அவருடைய திருமனைவியார்; வாய்ந்த. . . பெற்றியினார் - வாய்ப்புடைய வேதியரது மரபில் வரும் தன்மையுடையவர்; எவ்வுலகும். . . பெருமையினார் - எவ்வுலகமும் பெறுதற்கரிய பெருமையினை யுடையவர்; பொற்புடைய. . . பெயரார் - அழகுடைய பகவதியார் என்று போற்றுப் படுகின்ற பெயரினையுடையவர்; கற்பு. . . கருத்து அமைந்தார் - கற்பினாலே மேம்பாடு பெறும் சிறப்புப்பற்றிக் கணவனாரது கருத்துக் கிசையத் தாம் அமைந்து ஒழுகி வருவாரானார்.

விளக்கவுரை:- இதனால் பிள்ளையாரது திருத்தாயாரின் மரபுநலனும் குணநலனும் கற்புநலனும் கூறப்பட்டன.

வாய்ந்த மறை மரபு - சிவபாத விருதயரது மரபு - குடி - கோத்திரம் முதலியவற்றுடன் அணைவதற் குரிமைவாய்ந்த மரபு. இது உடல் பற்றிய தன்மை. மேல் "மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மை" (1915) என்று இதனைத் தொடர்ந்து உயிரின் தன்மைபற்றிக் கூறுவதும் காண்க.

எவ்வுலகும் பெறற்கு அரிய பெருமை - இது 1940 ல் விளக்கப்பட்டபடி உமை

மனை வாழ்க்கை நலம்

1915. மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மையராய்
அரவணிந்த சடைமுடியா ரடியலா லறியாது
பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையராய்
விரவுமறை மனைவாழ்க்கை வியப்பெய்த மேவுநாள், 17

யம்மையாரின் திருமுலை ஞானப்பால் உண்ண உள்ள பிள்ளையாருக்குத் தமது முலைப் பால் ஊட்டிய பெருமை.

பகவதியார் *- உமையம்மையாரது பெயர். **பகவன்** என்ற சிவபெருமானது பெயரின் பெண்பாற் பெயர். கடவுளரின் பெயரை மக்கள் இட்டு வழங்கும் முறை.*

போற்றும் பெயர் *- யாவரும் போற்றும் பெயர் என்றது உமையம்மை பெயருக்கும் பிள்ளையாரது திருத்தாயாராதலின் இவ்வம்மையார் பெயருக்கும் பொருந்தும்.*

கற்பு. . . கருந்தமைந்தார் *- கற்பின் தன்மை விளக்கப்பட்டது.*

சிறப்பாற் *- என்பதும் பாடம்.* 16

*1915. **பொருளுரை:-** மரபு. . .கேண்மையராய் - இருமரபுகளும் சைவ நெறியில் வழி வழி வந்த கேண்மை பொருந்தியவர்களாய்; அரவு. . . அறியாது - பாம்பை அணிந்த சடை முடியினை யுடைய சிவபெருமானது திருவடிகளையேயன்றி வேறொன்றையும் பொருள் என்று அறியாமல்; பரவு . . . தன்மையராய் - பரவும் திருநீற்றின் அன்பினையே பாதுகாக்கும் தன்மையுடையவராகி; விரவு. . . மேவு நாள் - வேத விதியின் வரும் மனைவாழ்க்கைத் திறத்தில் யாவரும் வியப்பெய்தும்படி மேவு நாளிலே;*

விளக்கவுரை:- *பிள்ளயாரது திருத்தந்தையாருடைய சிறப்பைத் (1913) தனி ஒரு பாட்டினாலும், திருத்தாயரின் சிறப்பைத் (1914) தனி மற்றொரு பாட்டினாலும் முன் உரைத்த ஆசிரியர், அவ்விருவரும் கூடிய இகபர சாதனமான இல்வாழ்க்கைத் திறத்தை இவ்வொரு பாட்டிற் சேரக்கூறிய நயம் கண்டுகொள்க.*

மரபு இரண்டும். . .கேண்மை - மரபு இரண்டு *- தனித்தனி சிவபாத விருதயர் பகவதியம்மையார் என்ற இருவரின் மரபுகள். **இரண்டாவன** தந்தை தாய் என்ற இரு வழி. "இருவர்ச் சுட்டிய பல்வேறு தொல்குடி" (திருமுருகு) என்று இவ்வந்தணர் மரபுச் சிறப்பைக் கூறுதல் காண்க. **சைவ நெறி** - சிவனையே முதல்வராகக் கொண்டு செல்லும் நெறி. **வழி வந்த கேண்மை** - இடையீடின்றி வழி வழி (பரம்பரை) யாகத் தொடர்ந்து வந்த சுற்றத் தொடர்பு. **கேண்மை** - சுற்றம் என்ற பொருளில் வந்தது. இடையில் வைணவர் முதலிய ஏனை மறையோரது தொடர்பின்றி வந்தவழி என்பது; அவ்வாறு வேற்றுநெறிக் கலப்பு, இந்நாளிற்போலவே, முன்னாளிலும் காணப்பட்டமை திருவிளையாடற் புராணம் (விருத்த குமார பாலரான படலம்), கந்த புராணம் (ததீசிப் படலமும் பிறவும்) முதலியவற்றாற் கருதப்படும்.*

அரவணிந்த... தன்மையராய் *- முந்தை மரபின் வழிச்சிறப்பு மட்டில் அமைந்து*

சமண் பரவக் கண்டு இடருழத்தல்

1916. மேதினிமேற் சமண்கையர் சாக்கியர்தம் பொய்ம்மிகுத்தே
ஆதியரு மறைவழக்க மருகியரு ணடியார்பாற்,
பூதிசா தனவிளக்கம் போற்றல்பெறா தொழியக்கண்
டேதமில்சீர்ச் சிவபாத விருதயர்தா மிடருழந்தார். **18**

படாது. தாமும் அந்நெறி ஒழுகிய தன்மை. முந்தையோரது பெருமை மட்டிலும் கொண்டு, தாம் அவ்வொழுக்கம் சிறிதும் பேணாமல் குலப்பெருமை கொண்டாடும் இந்நாள் மாக்கள் இதனைச் சிந்திப்பாராக.

அடியலா லறியாது-எதிர் மறை முகத்தாற் கூறினார், ஏனையெதனையும் அறியாத உறுதிப்பொருள் தருதற்கு. "ஒடுங்கின சங்காரத்தினல்லது உற்பத்தியில்லை" என்னுஞ் சிவஞானபோதத்துக்கு "எதிர் மறை முகத்தாற் கூறியது ஏனைக்கடவுளரின் உளதாகாமை யாப்புறுத்தற் பொருட்டு" என்றுரைத்ததனை நினைவுகூர்க. இதனால் பிரமன்-மால்-அக்கினி- வாயு முதலிய உபசாரக் கடவுளரை உண்மைப் பரமென்று வழி பட்டுழலும் ஏனை வைதிக ஒழுக்கங்கள் ஒதுக்கப்பட்டமை காண்க.

பரவு திருநீற்று அன்பு பாலிக்கும் தன்மை - **பரவு** - வேதத்தாற் பரவப்பட்ட; யாவரும் பரவவுள்ள என்றலுமாம். "பரவிய திருநீற் றன்பு பாதுகாத் துய்ப்பீர்" (488) என்ற விடத்துரைத்தவை பார்க்க. **பாலித்தல்** - சோர்வு வாராமற் காத்தல்.

மறை மனை வாழ்க்கை - மறைகளின் விதித்தபடி செலுத்தப்படும் இல்லற நிலை **வியப்பெய்த** - உலகம் வியக்க.

மேவும் நாள் - **சிவபாதவிருதயர்** - **இடருழந்தார்** என வரும்பாட்டுடன் முடிக்க.

கேண்மையினார்-என்பதும் பாடம். 17

1916. **பொருளுரை:**- மேதினி. . . மிகுத்தே - உலகில் சமண்கையர்கள் சாக்கியர்கள் என்றிவர்களுடைய பொய்கள் மிகுதியாக்கப்பட்டே (அதனால்); ஆதி அருமறை வழக்கம் அருகி - ஆதியின் அரிய மறை வழக்கங்கள் சுருங்கி; அடியார். . . கண்டு - அடியார்களிடத்துத் திருநீற்றுச் சாதனத்தின் விளக்கமானது போற்றுதல் பெறாமல் மறையக்கண்டு; ஏதமில். . . இடருழந்தார் - குற்றமில் சிறப்பினையுடைய சிவபாத விருதயர் தாம் மிகவும் துன்பத்தில் அழுந்தினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை: **கையர்** - கீழ் மக்கள். **பொய் மிகுத்தல்** - பொய்யாய கட்டுரைகள் வலுப்பட்டு மக்களிடம் மிகுதியாய்ச் செல்லுதல் மிகுத்தலால் என்க.

ஆதி அருமறை வழக்கம் - **ஆதி** - சிவபெருமான்: ஆதி சொன்ன மறைவழக்கு. ஆதியாகிய என்றலுமாம்.

அருகுதல்... குறைந்து செல்லுதல்: மெலிவடைதல்.

சிவபாத விருதயர் தவம்

1917. மனையறத்தி லின்பமுறு மகப்பெறுவான் விரும்புவார்
அனையநிலை தலைநின்றே யாடியசே வடிக்கமல
நினைவுறமுன் பரசமய நிராகரித்து, நீறாக்கும்
புனைமணிப்பூண் காதலனைப் பெறப்போற்றுந் தவம்புரிந்தார். 19

பூதி... போற்றல் பெறா தொழிய - திருநீறு போற்றி அணியப்படாமல் இதனை இக்கால நிலையினாலறியலாம்.

ஏதமில் - குற்றத்தை இல்லையாகச் செய்யும். ஏதமாவது சிவனை மறந்த குற்றம். இதனை இல்லையாகச் செய்தமை பிள்ளையாரது அருட் செய்கைகளுட் கண்டு கொள்க.

இடருழத்தல் - மனவருத்த மிகுதல். உலகம் சிவநெறியினின்றும் வழுவியது கண்டு மனம் வருந்துதல் உயிர்களின்மேற் கருணைகொள்ளும் உயர்ந்தோர் செயல். 18

1917. பொருளுரை:- மனையறத்தின்...விரும்புவார் - மனை வாழ்க்கையில் இன்பம் செய்யும் மகவைப்பெறும் விருப்பத்தைக் கொள்பவர்; அனைய நிலை தலை நின்றே - அந்நிலையிற் சிறந்து நின்றே; ஆடிய சேவடிக்கமலம் நினைவுற - சிவபெருமானது திருக்கூத்தியற்றும் சேவடிக்கமலங்களை நினைத்து; முன் பரசமயம் நிராகரித்து - முன்னர்ப் பரசமயங்களின் தீமையைப் போக்கி; நீறு ஆக்கும் - திருநீற்றின் விளக்கத்தினை மிகுதிப் படுத்தும்; புனைமணி...தவம் புரிந்தார் - அழகிய அணிகளைப் புனையும் திருமகனைப் பெறும் பொருட்டுப் போற்றும் தவத்தைச் செய்தனர்.

விளக்கவுரை:- மனையறத்தில் இன்பமுறும் மகவு - "மனைமாட்சி மற்றதன், நன்கல னன்மக்கட் பேறு", "அமிழ்தினு மாற்ற வினிதே": "மக்கண்மெய் தீண்ட லுடற் கின்ப மற்றவர், சொற்கேட்ட லின்பஞ் செவிக்கு" (குறள்) என்பன வாதியாகக் கூறப்பட்ட அறிவறிந்த மக்கட்பேற்றினால் இல்வாழ்க்கையுட் பெறப்படும் இன்ப மெல்லாம் கொள்க.

அனையநிலை தலைநின்றே...பரசமய நிராகரித்து நீறு ஆக்கும் காதலனைப்பெற - என்றது, அவ்வாறு இல்வாழ்க்கையில் தமக்கு இன்பஞ் செய்யும் மகப்பேறு, வேண்டும்; அம்மகவே பரசமயம் போக்கியும் சைவத்தை ஆக்கியும் உலகுயிர்க்கு இன்பஞ்செய்யும் அறிவறிந்ததாயிருக்கவும் வேண்டும் என்றபடி; **அனைய நிலை** - அத்தன்மையாவது தமக்கு மகப்பேறு வேண்டுதல்.

ஆடிய சேவடிக்கமலம் நினைவுறப் போற்றும் தவம் - என்க. **ஆடிய சேவடி** என்றது ஐந்தொழிற் பெருங்கூத்து ஆடிய சிவன் றிருவடி. ஐந்தொழிலினுள் படைப்பு முதலாவதாகக் கணிக்கப்படுதலின் மக்கட்பேற்றினை வேண்டிய அவர் ஆடிய திருவடியை நினைவுறப் போற்றினர் என்க. "தாளுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மை தலைமைபெற" (1923) என்று இக்கருத்தைத் தொடர்ந்து எடுத்துச் சொல்லுதல் காண்க.

பரசமயம் நிராகரித்து நீறு ஆக்கும்...காதலன் - பரசமயம் - வேத சிவாகம

நெறிகளுக்குப் புறமான சமயங்கள். **பரம்** - அப்பாற்பட்டது-புறமானது. அவற்றை **நிராகரித்தலாவது** அவற்றின் பொய்ம்மைகளை வெளிப்படுத்தி அவை பொருளன்றாம் படியினை உலகறியச் செய்தல். சைவம் எல்லாச் சமயங்களையும் ஒவ்வோர் அங்கங்களாகக் கொண்டு எல்லாவற்றையும் தன்னுள் அடக்கித் தான் ஒன்றினு மடங்காது நிற்பது: ஆதலின் நிராகரிப்பது எற்றுக்கெனின்?. அவை முழு உண்மையன்றாம்படியைக் காட்டுமாற்றால் உலகம் அவற்றுள் அமைந்து மயங்கி நின்றுவிடாமற் செய்தற்கென்க: அன்றியும் அவை தம்மளவில் நில்லாது மிகுத்துச் சைவத் திறத்தைப் பழித் தழிக்க வரின் அதனைத் தடுத்துச் சைவத்தை விளக்கம் செய்தற்குமாம்.

நீறு ஆக்கும் - திருநீற்று நெறியினை ஒளி குன்றாமல் ஓங்கி விளங்கச்செய்யும். நீற்று நெறியே சைவ நெறி; சைவ நெறி நீற்று நெறியே; முன், "பூதி சாதன விளக்கம் அரனடியார்பாற் போற்றல் பெறாது" (1916) என்றதும், பின், "சைவ முதல் வைதிகமுந் தழைத் தோங்க" (1920), "தொண்டர்மனங் களிசிறப்பத் தூயதிரு நீற்றுநெறி, யெண்டிசையுந் தனிநடப்ப" (1921) என்பதும், பின்னர்ப் பிள்ளையார் திருநீற்றினாற் சைவம் பெருகச்செய்த வரலாறும், பிறவும் காண்க.

பரசமய நிராகரித்து நீறாக்கும் - இதற்கு இவ்வாறன்றிப், பரசமயங்களை அழித்துப் பாழ்படுத்திப் பொடியாக்கும் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள். சைவம் எச்சமயத்துடனும் பிணக்கிலதாய், அவை எல்லாம் தனது ஓரிடத்தே காண நிற்பதொன்றாதலின் எச்சமயத்தையும் அழிவுபடுத்தவும் பொடியாக்கவும் மாட்டாது; உண்மை நிலையை விளக்கஞ்செய்து அவ்வவற்றுக்குரிய நிலைகளைப் படிமுறையால் நிறுவிப், பக்குவத்துக்கு ஏற்றவாறு நிறுத்தியதே சைவ சமய பரமாசாரியர்களாற் செய்தருளப்பட்டது. சைவ நூல்களின் பரபக்கம் விதித்த கருத்துமிஃது. **ஆதலின்** அவ்வுரைகள் பொருந்தா என்க. பிள்ளையார் திருநீற்றுப் பதிகத்தாற் பரசமய நிராகரிப்பும் சைவ விளக்கமும் செய்தருளிய வரலாறும் ஈண்டுக் குறிக்க.

புனைமணிப்பூண் காதலனை - மணிப்பூண்புனை - என்றது பின்னர் மகவுபெற்ற வழி அணி பல புனைந்து பாராட்டும் மகிழ்ச்சிச் செயலை. **காதலன்** என்றதும் அவ்வாறு அவர் கொண்ட ஆசையினைக் குறித்து நின்றது. இங்குப் பூண்புனைந்தவாறே பிறக்கும் மகவு என்று உரைகொண்டு, முருகப்பெருமானையே தமக்கு மகனாகப் பெறத் தவம் புரிந்தார் என்றுரைத்தாருமுண்டு. அதற்கேற்றவாறே மேல்வரும் பாட்டுக்களிலும் அவர் உரைகொண்டனர். முருகப்பெருமானே ஆளுடைய பிள்ளையாராய் அவதரித்தார் என்ற கொள்கை பொருத்தமன்றாம்படியினையும் அவ்வுரைகள் பொருந்தாமையையும் ஆசிரியர் திருவாக்கானும், பிள்ளையார் திருவாக்கானும்.,ஞான நூன் முடிபுகளானும் பின்னர்ப் பலவிடத்தும் காட்டப்படும்; கண்டுகொள்க. **முன்** - நிராகரித்தல் முன்னும், ஆக்குதல் பின்னும் நிகழ என்க; பாச நீக்கமும் சிவப்பேறும் போல ஒருங்கு நிகழுமாயினும் தொடங்குதல் பற்றி **முன்** என்றார்.

பெற்றெடுக்கும் தவம் - என்பதும் பாடம். 19

பகவதியார் தவமும், பிள்ளைப் பேறும்

1918. பெருத்தெழுமன் பாற்பெரிய நாச்சியா ருடன்புகலித்
திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிபட்டுக்
கருத்துமுடிந் திடப்பரவுங் காதலியார் மணிவயிற்றில்
உருத்தெரிய வரும்பெரும்பே றுலகுய்ய வுளதாக. 20

---

*1918. **பொருளுரை:-** பெருத்து எழும் அன்பால் - மேன்மேலும் பெருகி எழுகின்ற அன்பினாலே; பெரியநாச்சியாருடன்....வழிபட்டு - பெரியநாயகி யம்மையாருடனே புகலியில் திருத்தோணியிலே வீற்றிருந்தாராகிய தோணியப்பருடைய சேவடிகளின்கீழ் வழிபாடு செய்து; கருத்து...வயிற்றில் - கணவனாரது கருத்து முற்றுப்பெறும்படி பரவும் காதலியாராகிய பகவதியாரது மணிவயிற்றினிடமாக; உருத்தெரிய உளதாக - உருவம் தெரியவரும் கருப்பமாகிய பெரும்பிள்ளைப்பேறு உலகமுய்யும்படி உளதாயிற்று; அவ்வாறாகவே.*

விளக்கவுரை:- *இப்பாட்டிற் கணவனார் புரிந்த தவத்தின் பயன்பெறும் பொருட்டு அவரது கருத்தமைந்த கற்புநெறியில் நின்ற மனைவியார் செய்த வழிபாடும் பயனும் கூறப்பட்டது.*

பெரியநாச்சியார் *- பெரியநாயகியம்மையார். திருத்தோணியில் எழுந்தருளிய அம்மையாரின் திருப்பெயர். இவரே பின்னர்ப் பிள்ளையாரைப் பாலூட்டியவர்.*

வழிபட்டுப் பரவும் *- என்க. சிவபாதவிருதயர் செயலைத் **தவம் புரிந்தார்** என்றும், அது முடியும்படி மனைவியார் செய்த செயலை **வழிபட்டுப் பரவும்** என்றும் கூறியது, கணவர் செயலே தமது செயலாகக்கொண்டு அதற்கேற்றபடி ஒழுகும் கற்புநிலையினைக் காட்டுங் கருத்து. "கற்புமேம் படுசிறப்பாற் கணவனார் கருத்தமைந்தார்" (1914) என்றதும் இது.*

திருத்தோணி வீற்றிருந்தார் *- சீகாழியில் இலிங்கம், குரு, சங்கமம் என்ற மூன்று திருமேனிகளிலும் இறைவர் வெளிப்பட்டுத், திருக்கோயிலிற் பிரமபுரீசர் என்றும், தோணியில் தோணியப்பர் என்றும், மேல் விமானத்தில் சட்டைநாதர் என்றும் எழுந்தருளியுள்ளார். அவருள்ளே பகவதியார் வழிபட்டது தோணியப்பரை என்பதாம். பிள்ளையாருக்கு வெளிப்பட் டருள்புரிந்த வரலாறு பின்னர்க் காண்க.*

வயிற்றில் உருத்தெரியவரும் பெரும்பேறு - உளதாக *- வயிற்றினிடமாகப் பிள்ளையாரது திருஉருவம் வெளிப்படும் காரணமான பெரும்பேறாகிய கருப்பம் தரித்ததாக. **பேறு** - பிள்ளைப்பேறு: மக்கட்பேறு - என்ற வழக்கும் காண்க. ஏனைய மக்கட்பேறு போலன்றி இது மக்களையெல்லாம் உய்விக்கவல்லது என்பார் **பெரும் பேறு** என்றார்.*

உலகுய்ய *என்றது அக்கருத்தை விளக்கியதுடன், சிவபாதவிருதயர் வேண்டியபடி அப்பேறு அமைந்ததனையும் குறித்தது. **உருத்தெரிய - உளதாக** என்றதற்குக் கருப்பத் தோற்றம் மட்டும் உளதாயிற்று என்றுரைப்பாருமுளர்.*

திருவயிற்றில் *- என்பதும் பாடம்.* 20

பத்துத் திங்களினும் சடங்கு

1919. ஆளுடையா ளுடன்றோணி யமர்ந்தபிரா னருள்போற்றி
மூளுமகிழ்ச் சியிற்றங்கள் முதன்மறைநூன் முறைச்சடங்கு
நாளுடைய வீரைந்து திங்களினு நலஞ்சிறப்பக்
கேளிருடன் செயல்புரிந்து பேரின்பங் கிளர்வுறுநாள். **21**

1919. பொருளுரை:- ஆளுடையாருடன்...போற்றி - ஆளுடைய பிராட்டியோடு திருத்தோணியில் எழுந்தருளிய பெருமானுடைய திருவருளைத் துதித்து: மூளும் மகிழ்ச்சியின் - பெருகும் மகிழ்ச்சியுடனே: தங்கள்_செயல் புரிந்து - தங்கள் முதன்மையான வேதங்களின் விதித்த முறைப்படிசெய்யும் உரிய சடங்குகளை யெல்லாம் நாளினை முதலாகவுடைய பத்து மாதங்களிலும் நலம் பெருகும்படி சுற்றத்தாருடனே கூடிச் செய்து: பேரின்பம் கிளர்வுறும் நாள் - பெரிய இன்பம் கிளர்வுறும் அத்திருநாளிலே.

விளக்கவுரை:- அருள் போற்றி *- வழிபட்டுப் பரவியபடி அவரது திருவருளினால் வேறு உளதாயிற்றாகலான் அதனை மறவாது போற்றினார்.*

முதன்மறை நூல் முறைச் சடங்கு - முதன்மறை *- முதன்மை பெற்ற மறை - முதன் மறை - ருக்வேதமென்று கொண்டு, சிவபாத விருதயர் ருக்வேதி யென்று கூறுவாருமுண்டு.* ***நூல்முறை*** *- மறைவழி வந்த கற்பசூத்திரங்களில் விரிக்கப்பட்ட ஒழுங்குப்படி; ஆகம பத்ததிகளிலும் சிவ தீக்கையில் கிரியாமார்க்கம் ஞானமார்க்கம் என இச்சடங்குகள் வகுத்துக் கூறப்படும்.*

நாளுடைய ஈரைந்து திங்களினும் *- கருப்பந்தரித்த நாளை முதலாகக்கொண்டுடைய பத்து மாதங்கள். கருப்பம் முற்றிப் பிள்ளை பிறப்பதற் கிடைப்பட்ட காலம் என்றுரைப்பார் ஆறுமுகத் தம்பிரானார், இக்காலப் பகுதி 280 முதல் 300 நாள் வரை உள்ளது என்பது உடற்கூற்று நூன் முடிவு.* ***திங்களினும்*** *- மாதங்கள் எல்லாவற்றிலும் என உம்மை முற்றும்மை. முப்பதில் மிகுந்தும் குறைந்தும் வரும் அளவு நீக்கி முந்நூறு நாட்கொண்ட மாத அளவு கோடற்கு* ***நாளுடைய*** *என்றார்.*

நலஞ்சிறப்ப *- இச்சடங்குகள் பிள்ளைக்கும் பெற்றோருக்கும் அக்காலத்தில் வரும் தீங்குகள் நீங்கி நன்மைவரும் பொருட்டுச் செய்யத்தக்கன. அக்காலத்தில் மாதந்தோறும் வரும் தீங்குகளை மணிவாசகப் பெருமானார், போற்றித் திருவகவலுள், "மானுடப் பிறப்பினுண் மாதா வுதரத், தீனமில் கிருமிச் செருவினிற் பிழைத்தும், ஒருமதித் தான்றியி னிருமையிற் பிழைத்தும்" என்பது முதலாக அருளியிருத்தல் காண்க. ஏழாவது எட்டாவது மாதங்களிற் செய்யும் சீமந்தம் முதலிய சடங்குகள் தீங்கு வராமற் குழவியைக் காக்குங் கருத்துடையன என்பது நூன்முறை. உடற்கூற்று நூல்களும் இக்காலத்தில் தாயார் உடல் கவனமாய்ப் பேணத் தக்கதென்று இக்கருத்தை வலியுறுத்துவன. அத்திருவகவலுக்கு வேறு பலவாறு உரைப்பாருமுண்டு.*

கேளிருடன் செயல் புரிந்து *- இச்சடங்குகள் சுற்றத்தார் கூடிச் செய்யத் தக்கன என்பது. ஈண்டுக் கருப்பக் குறிப்புக்கள் மட்டில் உளவாகவும் அவை கண்டு உலகர் கருப்பம் என்று கொண்டு பத்து மாதமும் உரிய சடங்குகளைச் செய்தனர் என்றுரைப்பாரு முண்டு.*

திரு அவதாரம்

1920. அருக்கன்முதற் கோளனைத்து மழகியவுச் சங்களிலே
பெருக்கவலி யுடனிற்கப், பேணியநல் லோரையெழத்.
திருக்கிளரு மாதிரைநாட், டிசைவிளங்கப் பரசமயத்
தருக்கொழியச், சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க. 22

பேரின்பம் கிளர்வுறு நாள் - திருவவதாரஞ் செய்தார் (1924) என்று முடிக்க நாள் - காலம் என்ற பொருளில் வந்தது. அவதரித்த திருநாளையும் பேரின்பம் கிளர்வுறும் என்ற குறிப்பாலுணர்த்தி நின்றது. பேரின்பமாவது திருநீற்றொளிப் பெருக்கம் பற்றிய மகிழ்ச்சி.

பெரிதின்பம் - என்பதும் பாடம். 21

1920. பொருளுரை:- அருக்கன்...நிற்க - ஞாயிறு முதற்கோள்கள் எல்லாமும் அவ்வவற்றுக்கு நியமமாகிய அழகிய உச்சவிடங்களிலே பெருக்கமும் வலிமையுடையனவாகவும் நிற்கவும்; பேணிய நல் ஓரை எழ - சோதிட நூலார் விரும்பிய நல்ல வேளை வரவும்; திருக்கிளரும் ஆதிரை நாள் திசை விளங்க - செம்மை மிகும் திருவாதிரைநாள் திசை விளக்கமடையவும்; பரசமயத் தருக்கு ஒழிய - பரசமயங்களின் தருக்கிய செயல்கள் நீங்கவும்; சைவமுதல்...ஓங்க - முதற் சைவத் துறையும் வைதிக நெறியும் தழைத்து ஓங்கியிடவும்.

விளக்கவுரை: அருக்கன்...நிற்க - உச்சங்களில் நிற்றலாவது கோள்கள் தமக்கு மிக்க வலிமையுடைய இராசிகளில் தங்குதல். திருவாதிரை நாள் கொண்டு ஞாயிறு உச்சத்தில் நிற்றலால் பிள்ளையார் அவதரித்தது சித்திரைத் திங்கள் என்று கருதப்படுகின்றது. "ஆளுடைய பிள்ளையா ரவதரித்த நாளு மவரமுது திருஞான மமுது செய்த நாளுஞ், சூளுடையா திரைநாளாஞ் சித்திரை யாதிரைநாள்" (திருத்தொண்டர் புராண வரலாறு - 70) என்ற உமாபதியார் திருவாக்குக் காண்க. ஆயின் அந்நாளுக்கும் திங்களுக்கும் பொருந்த உச்சமாகாத சந்திரன் முதலியன உளவாதலின் எல்லாக் கோள்களும் உச்சம் பெற்று நிற்க என்றுரை கூறுதல் தவறாம். உச்சம் பெறாத கோள்கள் ஆட்சி, பார்வை முதலிய வலிமைகளுடன் நின்றன என்க. இதுபற்றியே **அழகிய வுச்சங்களிலே** என்ற ஆசிரியர், **பெருக்கவலியுடன்** என்று பிரித்தோதியருளினார். இவ்வாறுரையாக்கால் சோதிடநூலுடன் மாறுபாடுறுவதோடு **பெருக்க வலியுடன்** என்பது மிகையாம்; உச்சநிலையே வலிமையை எடுத்துக் காட்டுதலால் என்க. கோளும் நாளும் நிற்றல் பிள்ளையாரது அவதாரத்திற் சிவப்பணிகட்குத் துணை நின்று தாந்தாம் பயன் பெறக் கருதியே யன்றி, அவர்க்கு வலிமை தருதற்கன்று என்க. "வேயுறு தோளி பங்கன்" என்ற கோளறு பதிகம் பார்க்க. "கை காட்டு வான்போலக் கதிர்காட்டி யெழும்" (783) என்றதும் கருதுக.

பேணிய நல் ஓரை எழ - பேணிய - சோதிடநூல் போற்றிய. **ஓரை** - வேளை. முகூர்த்தம் என்பர். இது 33/4 நாழிகை கொண்ட நாட் கூறுபாடு; இலக்கினம்; இராசி என்றும் கூறுப. **ஓரை - ஹோரா** என்ற கிரேக்க கணித மொழியினின்றும் போந்த திசை மொழி. இம்மொழியாட்சி கொண்டு ஓரைக் கணக்குக் கிரேக்கர் கூட்டுறவின் பயனாகத் தமிழரால் அறியப்பட்டதென்று ஆராய்ச்சி செய்யும் சோதிட நூலாராய்ச்சியாளரு

பூண்டு வேளை - நற்பொழுது என்பனவும், பிறவும் அப்பொருளைக் குறிக்கும் தமிழ் வழக்குக்களாம். "செங்கை, பற்றுதற் குரிய பண்பிற் பழுதினற் பொழுது நண்ண" (திருஞான புரா. 1237) ஓரை என்பது இராசி - வீடு - என்ற பொருளினும் வழங்கக் காண்டலானும் இவ்வாராய்ச்சி செல்லாமை காண்க. "வானிற், றிகழ்ந்த ஞாயிறு துணைப்புண ரோரையுட் சேர்ந்து, நிகழ்ந்த தன்மையின்" (மேற்படி 384) என்றவிடத்துத், துணைப்புணர் ஓரை - மிதுனராசியைக் குறித்தல் காண்க. "ஓரையு நாளும் துறந்த வொழுக்கம்" (பொரு.கா.44) என்ற தொல்காப்பியமும் காண்க. ஹோரா சாத்திரம் என்றொரு கணித நூலும் உளது.

திருக்கிளரும் ஆதிரை நாள் - சிவபெருமா னுக்குகந்தநாள் திருவாதிரை என்பது. "ஆதிரை நாளுகந்தான்" - "ஆதிரை நன்னாளான்" (தேவா) - "அரனுக் கிசைந்த பேர்வழியி னாளும்" (புராண வரலாறு - 70). **திரு** - சிவத் தன்மை - செம்மை. விண்மீன்களுள் **திரு** என்ற சிறப்படைமொழி பெற்றது இந்நாள் என்பதும் குறிப்பு. "ஆதிரையா னாதிரையா னென்றே யாற்றுமால், ஊர்திரை வேலி யுலகு" (முத்தொள்ளாயிரம்). **திசை விளங்க** - ஞாயிறு உதித்தாற்போல: "சேமவுத யப்பரிதி யிற் றிகழ்பிரான்" (1939).

பரசமயத் தருக்கு ஒழிய - சைவமுதல் வைதிகமுந் தழைத்தோங்க - தருக்கு - செருக்கும், அதனாற் பிற சமயங்கட்குச் செய்யும் தீமையும் குறித்தது. சமணர் சைவ சமய அரசரைத் தம்வயமாக்கியும், அத்துணைகொண்டு திருக்கோயில்களுக்கு முட்டுப்பாடு செய்தும், சைவ சமயத்தவரைத் தமது சமயம் சாரச் சூட்சிசெய்தும் வந்த வரலாறுகள் அந்நாளின் மிக்கிருந்தன என்பது திருநாவுக்கரசு நாயனார் புராணம் - மூர்த்தி நாயனார் புராணம்-நமிநந்தியார் புராணம் முதலியவற்றால் நன்கறியக்கிடக்கும் உண்மை. ஆயினும் அச்சமயங்களை ஒழித்தல் சைவத்தின் கருத்தன்று; அவற்றால் தமக்கு நேர்ந்த தீமையை ஒழித்தலே கருத்து என்பார் **பரசமயமொழியஎன்னாது, தருக்கொழிய** என்றார். **புரைநெறிகள் பாழ்பட** (1924) என்றது மிக்கருத்து. இங்குக் கூறியது வாதில் வெல்லுதலும், பின்னர்க் கூறுவது தீமையை அழித்தலுமாதலின் கூறியது கூறலன்மை யுணர்க. "பழுதுட னீங்க", "வாதில் வென்றழிக்க" (திருஞான. புரா - 736 - 739) என்ற புராணமும், முறையே அக்கருத்தினைக் கொண்ட "காட்டுமா.....**வாதுசெயத்** திருவுள்ளமே" என்றும், "வேதவேள்வி...**வாதில் வென்றழிக்கத்** திருவுள்ளமே" என்றும் வரும் இரண்டு பதிகங்களின் உட்குறிப்பும் காண்க.

ஒழிய...ஓங்க - ஒழிய - ஒழிதலால் ஓங்க என்று காரணப்பொருளில் வந்த வினையெச்சம். பயிர் ஓங்குதற்குக் களை கட்டுதல்போல. களை கட்டல் விளைபயிரின் ஆக்கங்கருதி அதனுட் புகுந்த பிறவற்றைக் களைதல் என்றமட்டேயன்றி, அப் புல் பூண்டு முதலிய சாதியை எங்குமில்லாது தொலைக்கும்பொருட் டன்றென்பது வெளிப்படை. அதுபோல உட்புகுந்த பரசமயத் தருக்கை உயிர் ஓங்குதற்பொருட்டு ஒழித்தல் வேண்டப்படும். "அமணிருள் மாய்ந்த தன்றே" (புரா-858). "பான்மையழி புத்தர்களும் பணிந்து வீழ்ந்தார்" (மேற்படி 924).

சைவமுதல் வைதிகமும் தழைத்தோங்க - முதற் சைவமும் வைதிகமும் என்க. "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" (1899); "பொருட் சமய முதற்சைவ நெறி" (1450) என்பனவும் அங்குரைத்தவையும் பார்க்க. 22

1921. தொண்டர்மனங் களிசிறப்பத், தூயதிரு நீற்றுநெறி
எண்டிசையுந் தனிநடப்ப, வேழுலகுங் களிதூங்க,
அண்டர்குல மதிசயிப்ப, வந்தணரா குதிபெருக,
வண்டமிழ்செய் தவநிரம்ப, மாதவத்தோர் செயல்வாய்ப்ப. 23

1921. பொருளுரை:- தொண்டர் மனம் களிசிறப்ப - திருத்தொண்டர்களின் மனங்கள் எல்லாம் களிப்புப் பெருகவும்; தூய...நடப்ப - தூய்மை செய்யும் திருநீற்று நெறி எட்டுத் திக்குக்களினும் தலைசிறந்து செல்லவும்; ஏழ் உலகும் களி தூங்க - ஏழுலகத்துள்ள உயிர்கள் எல்லாம் களிப்பில் மிகுந்திருக்கவும்; அண்டர் குலம் அதிசயிப்ப - தேவர் கணங்கள் அதிசயித்துக் காணவும்; அந்தணர் ஆகுதி பெருக - அந்தணர்களின் வேள்விகள் பெருகவும்; வண் தமிழ் செய் தவம் நிரம்ப - வண்மையுடைய தமிழ் செய்த தவம் முற்றுப் பேறு பெற்று நிரம்பவும்; மாதவத் தோர் செயல்வாய்ப்ப - பெருந்தவஞ்செய்வோர்களின் செயல்கள் பயன்பெறவும்;

விளக்கவுரை:- தொண்டர் மனங் களிசிறப்ப - பரசமயத் தருக்கினால் திருநீற்றின் விளக்கம் குன்றியது கண்டு சிவபாதவிருதயர்போலவே மனம் வருந்திய தொண்டர் மனமெல்லாம் இவ்வவதாரத்தினால் சைவம் ஓங்கியது கண்டு களிப்ப. "தொண்டர் யாவரும் மகிழ்ச்சி யெய்திப், புண்ணியப் பிள்ளையாரைப் போற்றி" (மேற்படி புரா - 862).

தூய-தனிநடப்ப - தூய - தூய்மை தருவதாகிய. **திருநீற்று நெறி** - சைவ நெறி. **தனி நடத்தல்** - சிறப்பாய் நடைபெறுதல். "தேனலர் கொன்றை யார்தந் திருநெறி நடந்த தன்றே" (புரா - 859); "மேதினி புனித மாக வெண்ணீற்றின் விரிந்த சோதி, மாதிரந் **தூய்மை** செய்ய வமணிருள் மாய்ந்த தன்றே" (புரா-858); "மன்னனீ றணிந்தா னென்று மற்றவன் மதுரை வாழ்வார், துன்னிநின் றார்க ளெல்லாந் தூயநீ றணிந்து கொண்டார்" (மேற்படி 857); புத்தர்களும் "முன்றொழுது விழுந்தெழுந்து சைவ ரானார்" (மேற்படி புரா - 926).

ஏழுலகும் களி தூங்க - எவ்வுலகத்திலும் உள்ள எல்லாவுயிர்களும் பிள்ளையாரது அருளிப்பாடுகளினாற் சிவனருள் பெருகப் பெற்ற இன்பத்தை அடைந்ததனால் களிப்படைந்தன. "ஆழ்க தீயது; எல்லாம் அரன் நாமமே சூழ்க" என்ற அருளிப்பாட்டின் பயன் "தொல்லுயிர் யாவையும் வாழி யஞ்செழுத் தோதி வளர்கவே" (புரா-823) என்று ஆசிரியர் விரித்தமை காண்க. **குளிர் தூங்க** - என்பது பாடமாயின் பிறவிவெப்பத்தி னீங்கிப் பதியின் தண்ணிழலினையடைய என்க.

அண்டர்குலம் அதிசயிப்ப - குலம் - கூட்டம்; பிரமன் - மால் - இந்திரன் - தீக்கடவுள் - நீர்க்கடவுள் - விஞ்சையர் முதலிய பல கடவுளர். "கொளுவும் சுடர் பைய வேசென்று பாண்டியற் காகவே", "எரியிடிலிவை பழுதிலை", "செல்ல வுந்துக சிந்தை யார்தொழ, நல்கு மாரரு ணம்பனே", "ஏடுசென் றணைதரும் ஏடகத் தொருவன்" என்பனவாதி தேவாரத் திருவாக்குக்களும், "தேவரு முனிவர் தாமுந் திருவருட் சிறப்பு நோக்கிப், பூவரு விரைகொண் மாரி பொழிந்தனர்" (புரா-1093), "விஞ்சைய ரியக்கர் சித்தர் கின்னரர் மிடைந்த தேவர்....விசும்பின்மீது மணவணி காணச் சென்றார்" (மேற்படி 1204),

"நணுகப்பெறா. விண்ணவரு முனிவர்களும் விரிஞ்சனே முதலானார்-ஏத்தினார்" (மேற்படி 1255) முதலிய புராணத் திருவாக்குக்களுங் காண்க.

அதிசயிப்ப - பின்னர் வரும் பெருஞ் சிறப்புக்களை எல்லாம் திருஅவதாரத்திலே காணப்பெற்று அதிசயிக்க. "அதிசயம் கண்டாமே" (திருவா). கண்ணப்ப நாயனார் அவதரித்தபோது "தேவ துந்துபியு மார்த்த" (663) என்றும், "உலகமெல்லா மளப்பரும் பெருமை காட்டித், தருங்குறி பலவும் சாற்றுந் தன்மையிற் பொலிந்து தோன்ற" (665) என்றதும் கூறியவை இங்கு நினைவுகூர்தற்பாலன.

அந்தணர் ஆகுதி பெருக - **அந்தணர் ஆகுதி** - வேத வேள்வி. "வாழ்க அந்தணர் வானவ ரானினம்" என்ற திருவாக்கு வேள்வியைப் பெருகச்செய்தற் கெழுந்தது என்று ஆசிரியர் விரித்தமை (புரா - 821-822) காண்க.

வண்தமிழ் செய்தவம் நிரம்ப - இறைவனது வாக்கில் வந்த வேதம், "இவன் இறைவன்" என்று சுட்டிக்காட்டாது, அன்மைச் சொல்லினாற் றுதித்து இளைத்து நிற்கவும், அவ்வாறன்றிப் "பெம்மானிவன்" என்று இறைவனைச் சுட்டிக்காட்டும் பெருமை பெறும்பொருட்டும், ஏனைய பல பொருள்களையும் சொல்லி மக்களை வீணாள் கழிக்கச் செய்யாது சிவனொருவனையே காட்டியும் சொல்லியும் உயிர்களைப் பாசநீக்கமும் சிவப்பேறும் பெறும்படி செய்விக்க வல்ல தன்மை பெறும்பொருட்டும் தமிழ் தவம் செய்திருந்தது; அது பிள்ளையார் திருவவதாரத்தின் துணையால் நிரம்பப் பெற்றது என்பதாம். "**நான்மறை நாவன் நற்றமிழ்க் கின்றுணை ஞானசம் பந்தன்**" (குறிஞ்சி. இலம்பையங் கோட்டூர் - 11). "இறையனாரகப்பொருள் முதலிய இலக்கணங்களையும், தேவாரம் திருவாசகம்-முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாக எண்ணாது, நன்னூல், சின்னூல், அகப்பொருள்...முதலிய இலக்கணங்களையும், பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதினெண்கீழ்க்கணக்கு, இராமன்கதை....முதலிய இலக்கியங்களையும் ஓர் பொருளாகவெண்ணி வாணாள் வீணாள் கழிப்பர்" என்று இலக்கணக்கொத்துடையார் சுவாமிநாத தேசிகர் உரைத்தபடி, தமிழ்மொழி தன்னைப் பயில்வார் வீணாள் போக்க உதவியிருந்த தன்மை நீங்கத் தவஞ் செய்திருந்தது; பிள்ளையாரது திருவாக்கினின்றும் போந்தபோது தன்னைப் பயில்வார்க்கு இதுவரை அற முதலிய நான்கினையும் பொதுவகையா லறிவித்தபடியன்றி, நன்னெறி யாகிய ஞானத்தைக் காட்டி வீட்டுநெறி யொன்றுமே கூறுஞ் சிறப்புடையதாயமைதலால் அத்தவம் நிரம்பிற்று. "நான்கனுள் வீட்டுநூல் சிறப்பு, அற முதலிய மூன்று நூலும் அத்துணைச் சிறப்பின்று; வீட்டுநூல் நான்கனுள், அறிவு (ஞானம்) நூல் சிறப்பு, சரியை முதலிய மூன்று நூலும் அச்சிறப்பின்று" (இலக்கணக் கொத்து) என்றபடி. பிள்ளையாரது வாக்கில் "ஞானத்தமிழ்" (திருக்கலம்பகம்- 11. திருமுறை) என்று தமிழ் சிறப்புப் பெற்றது. "தமிழ்மாலை, பற்றியென் றும்மிசை பாடியமாந்தர் பரமனடி சேர்ந்து, குற்றமின்றி" (நட்டபாடை. புகலூர்); "தமிழ்வல்லவ ரடிபேணுதல் தவமே" (மேற்படி அண்ணாமலை). "தமிழ்பத்தும், யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம், ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே" (மேற்படி வீழி) முதலிவை பார்க்க. "திருநெறிய தமிழ்" (மேற்படி பிரமபுரம்) எனத் தொடங்கிற்று; "ஒண்டமிழ் வல்லார்க், கறும் பழிபாவ மவல மிலாரே" (அந்தாளிக்குறிஞ்சி

1922. திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற,
மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனிவெல்ல,
அசைவில்செழுந் தமிழ்வழக்கே யயல்வழக்கின் றுறைவெல்ல,
இசைமுழுது மெய்யறிவு மிடங்கொள்ளு நிலைபெருக. **24**

- நல்லூர்ப் பெருமணம்) **என்று வழிதிறந்தது;** "தமிழ் ஞான சம்பந் தன்சொல் சிந்தையான்மகிழ்ந் தேத்தவல் லாரெலாம், பந்தபாச மறுக்கவல் லார்களே" (கௌசிகம் - நமச்சிவாயப் பதிகம்) என்று, கேட்டாரை யெல்லாம் ஒருவரொழியாமே முன் **வீட்டில் உய்க்கவல்ல தன்மையினைத்** தமிழ் பெற்றது; இவ்வாறு தமிழின் தனி நிலைமை பெற்றது.

தமிழ் - இங்குக் கூறியது தமிழ்மொழி; **தமிழ் வழக்கே**...வெல்ல (1922) என்று மேற்கூறுவது அத்தமிழ் மொழியாற் பெற்ற வழக்கு. ஆதலின் கூறியது கூறலன்மை யுணர்க.


மாதவத்தோர் செயல்வாய்ப்ப - மாதவம் - சரியை கிரியை முதலாகிய சிவ புண்ணியங்கள். **செயல் வாய்த்தலாவது** குறைநீங்கி நிரம்பப்பெறுதல். திருவோத்தூர் - திருமயிலை முதலியனவாய் வரும் பிள்ளையாரது சரித வரலாறுகள் பார்க்க. "நல்லோர் நற்றுணையாம் பெருந்தன்மை ஞானசம் பந்தன்" (மேகரா - குறி. கழுமலம்) 23

1922. பொருளுரை:- **திசையனைத்தின்...ஏற** - திசைகள் எல்லாவற்றின் பெருமைகள் எல்லாவற்றையும் தெற்குத் திசையின் பெருமையே வெற்றிகொண்டு மேம்படவும்; மிசையுலகும்...வெல்ல - மேல் உலகமும் பிற உலகமும் என்றிவற்றை நிலவுலகமே சிறப்புப்பெற்று வெல்லவும், அசைவில்...வெல்ல - அசைதல் இல்லாத செழுந்தமிழ் வழக்கே அயல் வழக்குக்களின் துறைகளை வெல்லவும்; இசை முழுதும்...பெருக - இசை முழுவதும் மெய்யறிவும் பொருந்தும்நிலை பெருகவும்;

விளக்கவுரை:- திசையனைத்தின்...ஏற - 46-ம் திருப்பாட்டிற் "பேசி லத்திசை யொவ்வா பிறதிசை" என்றும், "மாதவஞ் செய்த தென்றிசை" (35) என்றும் கூறியவை காண்க. **"வென்று ஏற"** என்றது புறச் சமயங்களை வெற்றி கொண்டு தீமை போக்கி மேம்பாடு செய்தற்கிடமாக என்றதாம். **வெல்லுதல்** - தீமை போக்குதலும், **ஏறுதல்** - நன்மை ஆக்குதலும் குறித்தன. பிள்ளையார் சரித வரலாறுகள் பலவும் காண்க.

மிசை உலகும்...வெல்ல - மிசை உலகு - விண்ணுலகம். பிறவுலகு - கீழ் உலகம். கீழுலகம் எண்ணவும் சொல்லவும்படா தென்பார் **பிற** என்ற மரபாற் கூறினார். "ஞாலமே விண்ணே **பிறவே**" (5); "வானே நிலனே **பிறவே**" (6) (திருவெம்) என்ற திருவாசகக் குறிப்புக் காண்க. **மேதினியே தனி வெல்ல** என்றது மேல் கீழ் உலகத்தவர், அங்குப் பிறவிக்குரிய போகமேயன்றி வீட்டுச் சாதனமின்மையால், இப்புவனியில் வந்து சிவனுய்யக் கொள்ளும் முறையில் வழிபட்டுய்தற் கிடமாதல் குறித்தது. முன் "அண்டர்குல மதிசயிப்ப" என்றது. மற்று அவர்கள்பால் நிகழ்ச்சியை. ஈண்டுக் கூறியது அவ்வாறு வெற்றிகொண்ட இவ்வுலகின் பெருமைபற்றியது.

அசைவில் செழுந்தமிழ் வழக்கே அயல்வழக்கின் துறை வெல்ல - தமிழ் வழக்கு - என்றது தமிழ்நாட்டின் தெய்வ வழிபாட்டு வழக்கு. **அயல் வழக்கின் துறை** என்றது




(1) திருத்தோணி (குரு); (2) பிரமபுரீசர் (இலிங்கம்);
(3) சட்டைநாதர் (சங்கமம்), விமானங்கள் ஒருங்கே காணும் காட்சி
- சீகாழி



சிவபாதவிருதயர் ஆன்மார்த்தமாகப் பூசித்த கோயில்

- சீகாழி



திருஞானசம்பந்த நாயனார் அவதரித்த இடம் (மனை).

- சீகாழி

1923. தாளுடைய படைப்பென்னுந் தொழிற்றன்மை தலைமைபெற
நாளுடைய நிகழ்கால மெதிர்கால நவைநீங்க,
வாளுடைய மணிவீதி வளர்காழிப் பதிவாழ,
ஆளுடைய திருத்தோணி யமர்ந்தபிரா னருள்பெருக, 25

மிக்கருத்து. "அங்கண்வட திசைமேலுங் குடக்கின் மேலு மருந்தமிழின் வழக்கங்கு நிகழா தாக" (புரா - 1026) என்ற சரித வரலாறு நோக்கற்பாலது. **அசைவில்** *- பிற எவற்றானும் வெல்லப்படாதது.*

இசை முழுதும்-நிலைபெருக - இசை *- தமிழுக்கே சிறப்புரிமையாகிய பண்ணமைதி.* **முழுதும்** *- வேற்று இடங்களில் ஒரோர் இசைப்பகுதியே அமைவுற, ஈண்டு முற்றும் அமைந்து உள்ளதென்பது. "ஏழே யேழே நாலே மூன் றியலிசை யிசையியல் பாய்' (தேவா.வியாழக்குறிஞ்சி. தாளச்சதி - கழுமலம் - 11); பண்கள் பலவும் முற்றிய நிலையிற் பிள்ளையார் தேவாரங்களுள் காணப்படுதல் குறிக்க.* **மெய் யறிவு** *- உண்மை ஞானம். ஏனை அறிவுகள் எல்லாம் பொய்யாய்க் கழிவன என்பது.* **மெய்** *- பிறிதினியைபு நீக்கிய அடை.* **இசை,** *வெற்றிசையா யொழியாது ஞானந் தொடுத்த தமிழிசையா யமைதல்வேண்டும் என்பார் இசையும் அறிவுமென இரண்டும் கூட்டி உடன் கூறினார்.*

இடங்கொள்ளும் நிலை *- ஞானமும், அதன் வாயிலாகிய இசையும் பிள்ளையாரது தமிழிற் பொருந்துதல். "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞானசம் பந்தனுக்கு" (நம்பிகள் - தக்கேசி - கோலக்கா).* **பெருக - இன்றும்** *பயன் தந்து மேன்மேல் வளர.*

இப்பாட்டினால், மூவுலகினும் நிலவுலகு வெல்ல, அதனில் தென்திசை வெல்ல, அதனில் தமிழ் வழக்கு வெல்ல, அதனில் இசையும் மெய்யறிவும் பிள்ளையாரது தமிழினாற் பெருக என்று தொடர்ந்துரைக்கப்பட்டது.

அயல் வழங்கும் *- என்பதும் பாடம்.* 24

1923. **பொருளுரை:-** *தாளுடைய...தலைமைபெற - தாளினையுடைய படைப்பு என்னும் தொழிலின் தன்மை தலைமை பெறவும்; நாளுடைய...நவைநீங்க - காலக் கூறுபாட்டில் நிகழ்காலத்தும் எதிர்காலத்தும் வருவனவாகிய குற்றங்கள் வாராது நீங்கவும்; வாளுடைய...வாழ - ஒளி பொருந்திய மணிகளையுடைய வீதிகளுடன் வளருந் தன்மை பெற்ற சீகாழிப்பதி வாழவும்; ஆளுடைய...பெருக - ஆளுடைய திருத்தோணியில் எழுந்தருளிய சிவபெருமானருள் பெருகவும்;*

விளக்கவுரை:- தாளுடைய-தலைமை பெற - தாளுடைய படைப்பு *- அடியில் - தொடக்கத்தில் - நிற்கும் சிருட்டி;* **தலைமை பெற** *- தலையாகிய - முதலாகிய - இடம் பெற. இறைவரது ஐந்தொழில்களினுள் படைப்பு அடியிலும் அருள் தலையிலும் உள்ளன. படைப்பு மேற்றொழில்களுக்கு வாயிலாக அருளாவதன்றித் தானே அருளாவ தின்று. இங்குப் பிள்ளையாரைத் "தவமறைக் குலத்தோர் வழிபாட்டி னளித்தரு" ளி (1953) அவதரிக்கச் செய்த இறைவரது சிருட்டியே உயிர்களுக்கு "ஈனமாம் பிறவி தீர யாவரும் புகுக" (புரா - 1248) என்று வீடுபேற்றினைச் செய்யு மூலமாயினமை யால்* **அருள்** *என்னும்*

தலையிடத்தைப் பெற்றது. "ஆடிய சேவடிக் கமல நிறைவுற" (1917) என்ற குறிப்பும் காண்க. **தாள்** - அடியில் நிற்கும் தன்மை. **தலைமை** - முதன்மை. "காலாந்தச் சத்தி யாதென்பர் காரணம், பாலொன்று ஞானமே பண்பார் தலையுயிர், காலாந்த ஞானத்தைக் காட்டவீ டாகுமே" (8304) என்ற திருமந்திரமுங் காண்க. இதற்கு, இவ்வாறன்றி "முயற்சியையுடைய மக்கட் படைப்பென்னும் பிரமனது தொழிற்குணமானது முதன்மை பெற" என்று உரைத்து "இதுகாறு மில்லாத தலைமை மிக்க பிள்ளையாரது திருவவதாரம் அப்படைப்புத் தொழிலுக்குள் அடங்குதலால் அத்தொழிற்றன்மை தலைமை பெற" என்று விசேடமும் கூறி உரைத்தனர் ஆறுமுகத் தம்பிரானார். "பிரமன் சிருட்டிக்கும் காரணம் என்னும் உயிர்கள் தீவினை புரிந்து நிரயம் புகாமல் சிவஞானம் பெற்று வீடடைந்து அப்படைப்பின் பிரயோசனம் முதன்மை பெற அவைகட்கு உண்மைஞான முணர்த்தப் பிள்ளையார் அவதரித்தனர்" என்று பொருள் கூறினர் மற்றோர் உரைகாரர். இவ்விரண்டினையும் மறுத்துத் **தாள்** - முயற்சி என்றுகொண்டு "சிவனருள்பெறும் முயற்சிகளை உயிர்கள் செய்யும் பொருட்டுச் சிருட்டியை இறைவன் தலைமையாகக் கொள்ள" என்று உரை கூறினர் ஆலால சுந்தரம் பிள்ளை அவர்கள். பிள்ளையாரது அவதாரம் பிரமன் படைப்புக்குள் வந்தது என்பது பிழை. பிள்ளையாரது அவதாரம் வினைக்கீடாக வந்ததன்று; "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்; மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி **னளித்தருள**; (1853) என்றபடி சிவன் சிருட்டி 'அரியயனே முதலமர ரடங்கவெழும் வெள்ளங்க'ளுள்ள 'ஊழியு மழியாக் காழி' நகர் தானும் பிரமன் சிருட்டிக்குட்படாமை காண்க. சிவன் சிருட்டித் தொழில் தலைமையாகக் கொள்வதற்கும் ஈண்டுப் பிள்ளையார் திருவவதாரச் சிறப்புக்கும் இயைபு காண உரைத்தலும் வேண்டும். அன்பர்கள் ஆய்ந்து கொள்க.

நாளுடைய நிகழ்கால மெதிர்காலம் நவை நீங்க - **நாள் உடைய** - காலக்கூறு பாட்டின் அமைவுடைய. இறந்தகாலத்துப் போந்த தீமைகள் பிள்ளையார் திருவவதாரத்தால் நீக்கப்படுவதனைத் திசை விளங்க - ஓங்க (1920) என்றும், தூய...பெருக (1921) என்றும் முன் உரைத்தாராதலின், எஞ்சிய நிகழ்காலம் எதிர்காலம் என் றிரண்டுமே இங்குக் கூறினர். **நீங்க** - அணுக வாராது விலக என்ற பொருளில் வந்தது.

வாளுடைய மணிவீதி - "விடுசுடர்நீண் மணிமறுகு" (1410); **வாள்** - ஒளி; காழிப்பதியின் வீதிகளில் மணியிலகுதல் 'ஒண்மணி வரன்றி–ஓதவன் றிரைகரைக் கெற்றுங் கழுமலம்" (பிள்.தேவா.குறிஞ். 5) என்றதனாலுங் காணலாம். (திரு.வ.சு.செங்கல்வராய பிள்ளையவர்கள் குறிப்பு.)

வளர் காழிப்பதி வாழ - **வளர்** - முன்னர் அழியாது நின்று வளர்ச்சி பெற்ற; **வாழ** - அவ்வளர்ச்சியோடமையாது சிவானந்தப் பெருவாழ்வை அளிக்கும் தன்மை பெற்றோங்க; அது திருவருளால் நிகழ்வதென்பார் **அருள் பெருக** - என்று மேற்கூறினார்.

அருள் பெருக - பெருமானதருள் பிள்ளையார் மூலம் குருவருளாகி உலகிற் பெருகியிட.

ஆளுடைய பிரான் என்று கூட்டுக. 25

1924. அவம்பெருக்கும் புல்லறிவி னமண்முதலாம் பரசமயப்
பவம்பெருக்கும் புரைநெறிகள் பாழ்பட, நல் லூழிதொறுந்
தவம்பெருக்குஞ் சண்பையிலே தவில்சரா சரங்களெலாஞ்
சிவம்பெருக்கும் பிள்ளையார் திருவவதா ரஞ்செய்தார். **26**

1924. பொருளுரை:- அவம்...பாழ்பட - அவத்தொழிலே பெருகச் செய்யும் புன்மை அறிவுகொண்ட சமணம் முதலாகிய பரசமயங்களாகிய பிறவி பெருக்கும் குற்றமுடைய நெறிகள் பாழ்படவும்; நல் ஊழிதொறும்-சண்பையிலே - நல்ல ஊழிக் காலங்கள்தோறும் தான் அழியாது மிதந்து நின்று தவநெறியைப் பெருகச் செய்யும் சண்பைமா நகரின்கண்ணே; தாவில்...திருவவதாரம் செய்தார் - குற்றமில்லாத சரம் அசரம் ஆகிய உயிர்களில் எல்லாம் சிவத்தன்மை பெருகச் செய்யும் பிள்ளையார் திரு வவதாரம் செய்தருளினர்.

இந்த ஐந்த திருப்பாட்டுக்களும் முன் இரண்டு பாட்டுக்களுடன் கூட்டி ஒரு முடிபுபடுத்தி உரைக்க நின்றன. பொருளியைபின் தொடர்புபற்றி இவ்வைந்தும் தனி யுரைக்கப்பட்டன.

விளக்கவுரை:- பவம் பெருக்கும் *- நல்லறிவு பெறும் ஊழில்லாமையால் புல்லறிவு பெருக்கிப் பிறவி மேன்மேற் பெருகி வருவதற் கேதுவாகிய செயலே செய்யும்.*

பரசமயப் புரைநெறிகள் பாழ்பட *- பரசமயம் பாழ்பட என்னாது இவ்வாறு கூறி யதுபற்றி முன் "பரசமயத் தருக்கொழிய" (1920) என்றவிடத் துரைத்தவை பார்க்க.*

ஊழிதொறும் தவம் பெருக்கும் *- சரம் அசரம் என்று இருபகுப்புட்பட்ட உயிர்கள் எல்லாமும் ஒன்று போலவே சிவனருள் பெற்றுச் சிவத்தன்மையில் ஓங்கச் செய்யும். அசரங்களும் சிவம் பெருகப் பெற்ற தன்மை, திருவோத்தூர் வரலாற்றில் பனைகளும் பிள்ளையாரது திருவாக்கிற்பட்ட சிறப்பினாற் பாச நீங்கிப் பிறவி யொழித்துச் சிவத்தைக் கூடிய (புரா - 983) என்றதனால் அறியலாம். சரங்களின் வகையிலே மக்கள் ஒழிந்த ஏனை உயிர்கள் சிவம் பெருகப் பெற்றதிறம் "வண்டரங்கப் புனற்கமலம்" (தோணிபுரம் - பழம்பஞ்சுரம்) என்பது முதலிய பதிகங்களால் அறியப்படும். மக்கள் சிவம் பெருகப் பெற்றமை எண்ணிறந்த திருப்பதிகப் பயன் கூறிய வகையாலும், திருநல்லூர்ப் பெருமண வரலாற்றாலும் இனிது உறுதிபெற விளங்கும்.*

பிள்ளையார் - பிள்ளை *- குமாரன்-மகன்;* ***ஆர்*** *- சிறப்புணர்த்தும் பலர்பால் விகுதி. யாவர்க்கும் தந்தைதா யாவார்க்குப் பிள்ளையாதலின் பிள்ளையார் என அடை மொழியில்லாது கூறினார். இதனை ஆளுடைய பிள்ளையார் என்ற பெயர்ப்பொருளை விளக்கும் வகையால் ஆசிரியர் மேல் (1967) உணர்த்துதல் காண்க.* ***சரா சரங்களெல்லாம் - சிவம் பெருக்கும்*** *- என்ற விடத்து இவர் "ஒரு கூட்டத்தாருக்கோ ஒரு நாட்டார்க்கோ குருவாயிராது உலகுக்கே குருவாயிருத்தலான்" என்று விசேட முரைப்பாரு முண்டு.*

திருவவதாரம் செய்தார் - அவதாரம் *- இறங்குதல்; திருவடி மறவாப் பான்மை யோராய் இருந்த இவரை மறைக்குலத்தோர் வழிபாட்டினால் இறைவர் அளித்தருளி*

திருவவதார நன்னிமித்தங்கள்

1925. அப்பொழுது பொற்புறு திருக்கழு மலத்தோர்
எப்பெயரி னோருமய லெய்துமிடை யின்றி
மெய்ப்படு மயிர்ப்புளக மேவியறி யாமே
யொப்பில்களி கூர்வதொ ருவப்புற வுரைப்பார்: 27

னாராதலின் அப்பெரு நிலையினின்றும் இறங்கினார் என்க. இது ஏனை உயிர்களது பிறப்புப் போன்றதன்று என்பது குறிக்கத் திரு என்ற செம்மையடை கூட்டி விதந்தோதினார். திருவை உயிர்களுக்குத் தரும் அவதாரம். "தீதகன் றுலக முய்யத் திருவவதாரஞ், செய்தார் - (149); "வந்துதயஞ் செய்தார் விசார சருமனார்" (1217): "சீராள தேவரெனுந் திருமைந்த ரவதரித்தார்" (சிறுத்.புரா. 17); என்பன வாதியாகக் கூறுவது காண்க. "பிள்ளையார் திருவவதாரஞ் செய்த பெரும்புகலி" (258)

1920 முதல் 1924 வரை இவ்வைந்து பாட்டானும் பிள்ளையாரது திருவவதாரச் சிறப்புக் கூறினார். "தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன்" (வியாழக் குறிஞ்சி - பாதாளேச்சுரம் - 11) என்றபடி சிவனடிமறவாத நிலையில் அளவின்றுயர்ந்த சிவமயமாய்ச் சூழ்ந்த சிவவொளியிற்றோன்றும் பிள்ளையாரது சிவத்தன்மைப் பெருக்கினைப்பற்றி ஐந்து பாட்டுக்களிற் கூறியது குறிக்க. இவை ஒவ்வொன்றிலும் திருக்கிளரும் - சைவம் முதல் (1920): தூயதிருநீற்றுநெறி (1921): மெய்யறிவு - நிலை-(1922), தோணியமர்ந்த பிரானருள் (1923): சிவம் பெருக்கும் (1924) என்று ஒவ்வோர் தன்மைபற்றி முறையே ஈசான முதலாகச் சதாசிவத்தி னைம்முகங்களின் அருட்டொழிற் குறிப்புப்பெறக் கூறுதலும் காண்க. "ஈசான: சர்வ வித்யா நாம்" (வேதம்) என்றபடி "சைவமுதல் வைதிகமும்" என எல்லா வித்தைகளையும் அடக்கி ஈசான முகத்தன்மையும்: அஞ்ஞானம் போக்கி ஞானமளிக்கு முறைபற்றி மூன்றாவதில் மெய்யறிவு வெல்ல என்று ஞானம் தரும் அகோரமுகத் தன்மையும் விளங்குவதாம்: இவ்வாறே பிறவும் கண்டு கொள்க. பரசமயத் தருக்கொழிய (1920) என்பது முதல் "பவம் பெருக்கும் புரை நெறிகள் பாழ்பட" (1924) என்பது வரை உள்ள பத்தொன்பது வகைப்பயன்களும் விதையின் மரம் அடங்கி தோற்றுதல் போலப் பிள்ளையாரது சரித விளைவுகளாகிய முழுதும் திருவவதாரத்திலே தோன்ற நின்ற குறிப்புப்படக் கூறியதும் காண்க. *26*

1925. பொருளுரை:- அப்பொழுது....எப்பெயரினோரும் - அப்பொழுது அழகிய திருக்கழுமல நகரில் உள்ளவர்களாகிய எவ்வகைப்பட்டவர்களும்: அயலெய்து மிடையின்றி - பக்கங்களில் வேறு பொருந்தும் இடமின்றி: மெய்ப்படும்...உவப்புற - உடம்பிற் கூடும் மயிர்ப்புளகம் பொருந்தித் தன்மையறியாமலே ஒப்பற்ற மகிழ்ச்சி மிகுவதாகிய ஒரு உவகை தோன்ற: உரைப்பார் - சொல்வாராயினர்:

***விளக்கவுரை:- எப்பெயரினோரும்** - எப்பெயரினாலும் சிவநெறியில் ஒழுகியவர்கள். "அறுவகை விளங்குஞ் சைவத் தளவிலா விரதஞ் சாரு, நெறிவழி நின்ற வேட நீடிய தவத்தி னுள்ளோர்" (புரா.1203): "ஆறுவகைச் சமயத்தி லருந்தவரு மடியவருங், கூறுமறை முனிவர்களும்" (மேற்படி 1252): "பம்புசடைத் திருமுனிவர் கபாலக் கையர் பலவேடச்*

1926. "சிவனரு ளெனப்பெருகு சித்தமகிழ் தன்மை
யிவணிது நமக்குவா வெய்தியதென் ?" னென்பார்
"கவுணியர் குலத்திலொரு காதல னுதித்தான்
அவன்வரு நிமித்தமிது" வென்றதி சயித்தார். 28

சைவர்" (மேற்படி 1018) முதலாகப் பிள்ளையாரது திருமணத்துடன் சேர்வோரும், பிள்ளையாரை எதிர்கொள்வோரும் ஆகிய பலவகைப் பெயரின் உள்ள சிவநெறிக் கூட்டத்தார். இதற்குப் பல வருணத்தார்களும் என்றும், சாதி மதம் முதலிய வேற்றுமையின்றி எல்லோரும் என்றும் உரைப் பாருமுண்டு. எவ்வகையானுஞ் சிவநெறிமுயல்வோர்க்கே தம்மை அறியாது அருள் விளக்கமாகிய அடையாளங்கள் தோன்றுமென்க.

அயல் எய்து மிடையின்றி - புளகம் மேவி என்க. உடம்பில் எங்கும் மெய்ம் முழுதும் மயிர்ப் புளகம் பொருந்த இடையின்றி மேவுதல்: உடல் முழுதும் இடையில்லாது புளகம் பொருந்துதல். இதற்கு இடம் பெறாது நெருங்கிக் கூடி என்றரைப்பாரு முண்டு.

மயிர்ப்புளகம் மேவி...அறியாமே களிகூர்வதொர் உவப்புற - மயிர்ப்புளகம் புற உடல் நிகழ்ச்சியாகிய மெய்ப்பாடு: ***உவப்பு*** - உள் நிகழ்ச்சி: ***அறியாமே***-உவகையும் புளகமும் முன் அறிந்த ஒரோர் காரணம்பற்றி நிகழ்வன: இங்கு இயல்பு அறியாமே வருதலால் வினவுவாராயினர்.

ஒப்பில் களிகூர்வதொர் உவப்பு - இதுவரை தாம் கொண்டிராத களிப்பை உள்ளெழுவிக்கும் உவகை. 27

1926. பொருளுரை:- சிவனருள்...என்பார் - "சிவபெருமான்றிருவருளைப் போலவே பெருகும் மனமகிழ்கின்றதன்மை இங்கு இவ்வாறு நமக்கு வந்த தென்னை?" என்று வினவுவார்: கவுணியர்...அதிசயித்தார் - "கவுணியர் கோத்திரத்தில் ஒரு காதலன் உதித்தான்: அவ்வாறு அவன் உதித்த நிமித்தம் இது" என்று தெளிந்து கொண்டு அதிசய மடைந்தனர்.

இந்த இரண்டுபாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை:- சிவனருள் என... தன்மை-சிவனருள் வெளிப்பாடு நிகழும் போது அது சிவானந்த நிறைவாக உருப்பட்டு அச்சிவத்தினிறைவுள்ள உயிர்கள் தோறும் தாக்கும்: அப்போது அவ்வுயிர்களில் தம்மையறியாமல் ஒப்பற்ற ஆனந்தத் தோன்றும்: இவ்வாறு ஆனந்தம் விளையவே அது சிவனருள் காரணமாக வந்ததென்று கருதலளவையால் ஆய்ந்தனர் என்க. வாகீசர் இறைவரது நிறைவுக்குள் கலந்தபோது "யோனிகள் ஆயின எல்லாம் உண்ணிறைந்த பெருமகிழ்ச்சி தானிறைந்த" (1963) வரலாறும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. ஆண்டுச் சிவனருளில் அருணிறைந்த உயிர் கலந்த போது உண்டாகிய ஆனந்த நிலை: ஈண்டு அச் சிவனருணிறைவில் கலந்திருந்த உயிர் அவனருளால் அந்நிலையினின்றும்போந்து வெளிப்பாடுற்ற ஆனந்த நிலை.

எய்தியது என் என்பார் - என்ன காரணம் என்று வினவி ஆராய்வாராய்: ***என்பார்*** - என்பாராகி - முற்றெச்சம். என்பார் - என்று - துணிந்து என்னும் வினையெச்சத்துடன் கூட்டுக.

1927. பூமுகை யவிழ்ந்துமண மேவுபொழி லெங்குந்
தேமருவு தாதொடு துதைந்ததிசை யெல்லாந்
தூமருவு சோதிவிரி யத்துக ளடக்கி
மாமலைய மாருதமும் வந்தசையு மன்றே. 29

கவுணியர்...இது-சிவநெறி யொழுக்கத்தில் நின்றாராதலின் இந்நிகழ்ச்சியாகிய நிமித்தம் கண்டு அதன் காரணத்தைத் துணிந்தனர். **நிமித்தம் - பின்வரும் நன்மையும் தீமையும் முன்காட்டும் வெளித் தோற்றங்களாகிய அறிகுறிகள்.** "விளங்குநன் னிமித்தம்" (புரா - 642): "துன்னிமித் தங்க ளங்கு நிகழ்ந்தன" (புரா - 631) சிவபாதவிருதயரும் பகவதியாரும் உலகுய்யச் செய்த தவமும், அது காரணமாக ஒரு காதலனுதித்தமையும் அறிந்தாராதலின் இந்நன்னிமித்தத்தின் காரணம் இதுவே என்று துணிந்தனர். **வரும் நிமித்தம் இது** - வருதலை அறிவிக்கும் நிமித்தமாக இது நிகழ்ந்தது என்க.

கவுணியர் குலத்தில் - உதித்தான் - பிள்ளையார் திருப்பதிகங்களுட் பலவிடத்தும் இக்குலம்பற்றித் தம்மை அறிவித்தருளுதல் காண்க.

காதலன் - பலநாளும் காதல் செய்ததன் பயனாக வந்தவர் என்றும், உலகுயிர்கள் காதலித்து வழிபடவுள்ளவர் என்றும் குறிக்க இப்பெயராற் கூறினார். ஒரு - ஒப்பற்ற.28

1927. பொருளுரை:- பூமுகை....திசை எல்லாம் - பூக்கள் மொட்டலர்தலால் மணம் பொருந்திய சோலைகளிலெங்கும் தேன் பொருந்திய மகரந்தங்கள் பரவுதலினால் நிறைந்த திசைகளில் எல்லாம்: தூமருவு.....அடக்கி - தூய்மையுள்ள ஒளி விரியும் படி அத் துகளை அடக்கி: மாமலைய....அசையும் - பெருமையுடைய பொதியமலையி னின்றும் வரும் மாருதமாகிய தென்றலும் வந்து மெல்லிதாய் அசையும்: அன்றே - அப்போதே.

விளக்கவுரை:- சோலைகளின் பூக்கள் விரிந்து மணமுடைய பூந்தாதுக்களை திசை யெங்கும் பரப்பி மணமும் குணமும் செய்தன: அதனால் ஒளி குறையவே, மலயமாருதம் வந்து அசைந்து துகள் அடக்கிச் சோதி விரியச் செய்தது என்பது.

பொழில் - இந்நகரைச் சூழ்ந்துள்ள சோலைகள். "சோலை தொறும்" (1906) "கிளர் வெங்கு முரலளிகள்" (1911): இந்திரன் உண்டாக்கி வழிபட்ட நந்தவனமும் ஈண்டுக் கருதுக. **எங்கும் உள்ள தாதொடு** என்க. **தேமருவு தாது** - தேனிற்றோய்ந்த பூந்துகள்.

தாதொடு துதைதலால் இருள் பரந்த திசை - என்பது குறிப்பு.

தூமருவு சோதி - தூய்மை செய்யும் ஒளி. தாது சூழ்தலால் மணமும் இனிய சுவையும் பரந்தாலும் அவை சுகக்கேடு விளைப்பன. அதனைத் தூய்மை செய்து சுகங்கொடுப்பது ஒளி.

விரிய - விரியும்படி **துகளடக்கி** - துகளை மேலெழுந்து பரவாமல் அடக்கி ஒடுக்கி. சோதி **விரியத்** துகள் **அடக்கி** என்ற நயமும் காண்க.

மாமலைய மாருதமும் வந்து - உம்மை உயர்வு சிறப்பு. **வந்து** - மாமலையத்தினின்றும் வந்து: "பொங்குதமிழ்ப் பொதியமலைப் பிறந்துபூஞ் சந்தனத்தின்,

1928. மேலையிமை யோர்களும் விருப்பொடு கரப்பில்
சோலைமலர் போலமலர் மாமழை சொரிந்தே
ஞாலமிசை வந்துவளர் காழிநகர் மேவுஞ்
சீலமறை யோர்களுட னோமவினை செய்தார். 30

கொங்கணைந்து குளிர்சார லிடைவளர்ந்த கொழுந்தென்றல், அங்கணைய" (ஏயர்.புரா-270): **வந்து அடக்கி - அசையும்** என்க. அடக்கி என்றதனால் பொதிகைச் சந்தனமணமும் சாரற்றண்மையும் கொண்டலைதலினால் அத்தாதுக்களின் பயனையும் தந்தது. ஆயின் அவற்றினால் போந்த இருளையும் போக்க ஒளி விரியச் செய்தது என்பது குறிப்பு. அணிமையில் உள்ள பொழில் இடர் செய்ய, அதனை நீக்கச் சேய்மையினின்றும் விரைந்து போந்து மாருதம் இன்பம் செய்தது என்றதனால் அணிமையினின்றும் துன்பம் செய்வாரும் சேய்மையினின்றும் இன்பஞ் செய்வாரும் உண்டு என்ற குறிப்பும் பெறக் கூறிய நயம் காண்க. மலைய மாருதத்தின் தன்மை மூன்றனுள், **அசைய** என்றதனால் மென்மை கூறவே, ஏனைத் **தண்மையும் மணமும்** உபலக்கணம்பற்றிக் கொள்ளப்படும்.

அசையும் - கடிதாய் வீசாமல் மென்மையாய் அசைந்து சேவகஞ் செய்யும். "பவனன் பணிசெய" (1428).

துகள் அடக்கி - மாருதம் வீசுங்கால் துகளை எழுப்பு மியல்பு நீங்கித் துகளை அடக்கி வீசியது ஓர் நற்சகுனக் குறிப்பு என்பர் இராமநாதச் செட்டியார். அவ்வாறே மேல்வரும் பாட்டுக்களினு முரைப்பர். **துகள் அடக்கி** - சமணர்களது குற்ற நிறைந்த கொள்கைகளை அடக்குவதற்கும்: **சோதி விரிய** - திருவெண்ணீற்றின் ஒளிபரப்புதற்கும்: **மலையமாருதம் வந்து** - அவற்றிற்குக் காரணராகிய பிள்ளையாரது வருகைக்கும் உள்ளுறை உவமமாய் விளங்குவன - என்பது திரு.வ.சு.செங்கல்வராய பிள்ளையவர்கள் குறிப்பு. 29

1928. பொருளுரை:- மேலை யிமையோர்களும்_சொரிந்தே - மேலுலகத்தவர்களாகிய தேவர்களும் விருப்பினுடன் கரத்திலில்லாது, சோலைமலர்களைப்போலக், கற்பக முதலிய தேவதரு மலர்களை மழையாகப் பொழிந்தே: ஞாலமிசை வந்து - நிலவுலகத்தின் கண் வந்து: வளர்....செய்தார் - வளரும் காழிப் பதியிற் பொருந்திய சீலமுடைய வேதியர்களுடன்கூடி வேள்வித் தொழில்களைச் செய்தனர்.

விளக்கவுரை:- மேலை - மேல் உலகத்துள்ள: தம்மை மேலோர்கள் என்று எண்ணிக் கொள்கின்ற என்றலுமாம். **இமையோர்களும்** - உம்மை உயர்வு சிறப்பு.

கரப்பில் மலர் - என்று கூட்டுக. **மலர்** - இங்குத் தேவதரு மலர்களைக் குறித்து நின்றது. **கரப்பில் சோலை** என்று கூட்டி உரைத்தலுமாம்.

சொரிந்தே - வந்து - செய்தார் என்று முடிக்க. **சொரிந்தே** - வானுலகத்தினின்று சொரிந்துகொண்டே.

மறையோர்களுடன் ஓமவினை செய்தார் - ஓமவினை - வேள்வித் தொழில். இவ்வேள்வி, மகப் பெற்ற பின்னர்ச் செய்யப்படுவது. வேள்வியில் தேவர்களுக்குரிய

1929. பூதகண நாதர்புவி வாழவருள் செய்த
நாதனரு ளின்பெருமை கண்டுநல முய்ப்பார்:
ஓதுமறை யோர்பிறி துரைத்திடினு மோவா
வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும். 31

1930. பயன்றருவ பஃறருவும் வல்லிகளு மல்கித்
தயங்குபுன லுந்தெளிவு தண்மையுட னண்ணும்:
வயங்கொளி விசும்புமலி னங்கழியு மாறா
நயம்புரிவ புள்ளொலிக ணல்லதிசை யெல்லாம். 32

இடங்களில் அமர்ந்து தமக்கு உரிய அத்தொழிலிற் கலந்துகொண்டனர் என்பதாம். வேள்வியில் உரிய தேவர்களை எண்ணும்போது அங்கு வெளிப்பட்டு வந்து உரிய தொழில் செய்தனர் என்க. ஏனை எல்லா வேள்வியிலும் வருவாரேனும் அங்கங்கு மந்திரங்களுள் அமைந்துபடுவர். ஈண்டுச் சிறப்புடன் வெளிப்பட்டமர்ந்தனர் என்க. நேரே பூசுரர்களாய்க் கோலங்கொண்டு வந்தனர் என்பாருமுண்டு. 30

1929. பொருளுரை:- பூதகண நாதர்...உய்ப்பார் - சிவபூதகணத் தலைவர்கள். உலகமெல்லாம் வாழும் பொருட்டுச் சிவபெருமான் பிள்ளையாரைத் தந்தருளிய திருவருளின் பெருமையைக் கண்டு அதற்கேற்ற நலங்களைச் செய்வாராயினர்; ஓதும்...உரைத்திடினும் - மறை ஓதுகின்றவர்கள் பிற மொழிகளை உரைத்திடினும்; ஓவா...எங்கும் - இடைவிடாத வேத மந்திரங்களால் வரும் ஒலியாகவே எங்கும் விளங்கி எழும்.

விளக்கவுரை:- இப்பாட்டினாற் சிவபூத கணங்களின் செயலும் வேத ஒலியே எழுந்த செயலும் கூறப்பட்டன.

நலமுய்த்தல் - இமையோர் ஓமவினை செய்ததுபோலப் பூதகணநாதர்கள் உரிய நலஞ்செய்தல், இவை பிள்ளையாரைப் பேணுதல் முதலாயின.

பிறிதுரைத்திடினும் - வேத மொழியால் ஒலி விளங்கி எழுதல் - வேதமொழி முழக்கவுள்ள மறையோர் அது செய்யாது வேறு உரைத்தாலும் வேதவொலி தாமே பெருகி முழங்குதலால் இடைவிடாது அவையே மிக்கன. அருள்பற்றி வேத நாதம் பிறர் சொல்லாமலே முழங்கின என்பதுமாம். இவ்வாறே, "இயற்றுபவ ரின்றியும் மங்கல முழக்கொலி மலிந்தன" (1931) என ஓசைபற்றிப் பின் கூறுதல் காண்க. 31

கொண்டுநலம் - என்பதும் பாடம்.

1930. பொருளுரை:- திசை எல்லாம் - எல்லாத் திசைகளிலும்: பயன் தருவ...மல்கி - பலவகையான மரங்களும் கொடிகளும் பெருகித் தத்தம் பயன்களைத் தருவனவாயின: தயங்கு...நண்ணும் - கலக்கமுடைய நீரும் தெளிவுடனும் குளிர்ச்சியோடுமிருந்தன: வயங்கு...கழியும் - விளங்கும் ஒளிகளையுடைய ஆகாயமும் களங்கம் நீங்கின: மாறா...புள் ஒலிகள் - மாறுபாடில்லாத நன்மையையே புட்களின் ஒலிகள் செய்வனவாயின: நல்ல - இவ்வாறு எல்லாம் நல்லவாயின.

1931. அங்கண்விழ விற்பெருகு சண்பையகன் மூதூர்ச்
சங்கபட கங்கருவி தாரைமுத லான
வெங்கணு மியற்றுபவ ரின்றியு மியம்பும்
மங்கல முழக்கொலி மலிந்தமறு கெல்லாம். **33**

விளக்கவுரை:- **திசையெல்லாம்** என்பதனை எல்லா வினைமுற்றுக்களுடனும் கூட்டுக. நல்ல என்பதனை அடைமொழியாக்கி **நல்ல திசை** என்று கூட்டியுரைப்பினுமாம்.

பயன்-மல்கி - தரு - பயன் மரங்களையும், **வல்லி** -- பூ, கனி, மூலம் என்றின்ன பயன் தரும் கொடிகளையும் குறித்தன. **பயன் தருவ** - என்றது காலத்தை எதிர்நோக்காது பலன் தருவனவாயின என்றதாம்.

தயங்கு...நண்ணும் - தயங்குதல் - கலங்குதல்: தெளிவு, தண்மை என்றின்ன பண்பில்லாத நீரும் அப்பண்புடன் பொருந்துவனவாயின.

வயங்கொளி-கழியும் - ஒளி வயங்கு விசும்பு - என்க. **ஒளி** - விண்ணொளிகளாகிய மதி - ஞாயிறு - விண்மீன் முதலியவை. **மலினம்** - வானத்தை மறைக்குங் களங்கங்களாகிய மேகம், புயற்காற்று முதலாயின.

மாறா-ஒலிகள் - மாறா - மாறுபடாத - தீமை செய்யாத: புள்ளொலிகளான் வரும் மாறுபாடாவன - "கூகையோ டாந்தை தீய புள்ளின மான தம்மிற் பூசலிட் டழிவு சாற்று" தல் (புரா - 632) முதலியவை. **மாறா நயம்** என்று கூட்டியுரைப்பினு மமையும். ஒலிகள் தீமையின்றி மங்கலத்தையே காட்டின என்பது. ஒரு பொருள் பற்றிக் கொள்ளப்படுதலால் ஓசை என்னாது ஒலி என்றார். 32

1931. பொருளுரை:- அங்கண்....மூதூர் - அங்கண் விழாவின் மங்கலங்களாற் பெருகுகின்ற சீகாழி என்னும் பழைய ஊரில் உள்ள: சங்கம் படகம் கருவி தாரை முதலான - சங்கங்கள், ஒருகட்பாறை, வேறு நரம்புக் கருவிகளும், தாரை சின்னம் முதலாயின இசைக் கருவிகளும்: எங்கணும்... இயம்பும் - எங்கும் ஒலிக்கச் செய்பவர்களின்றியும் சத்திக்கின்ற: மங்கல முழக்கொலி மறுகு எல்லாம் மலிந்த - மறுகுகளில் எல்லாம் மங்கலமாகிய பேரொலி மலிந்தன.

விளக்கவுரை:- **அங்கண்** - திசையெல்லாம் என முன்பாட்டிற் கூறிய திசைகளுள் வைத்து அவ்விடத்தே. அழகிய இடங்கள் தோறும் என்றலுமாம்.

விழா - மங்கலமாகிய சகுனங்களும் கொண்டாட்டம் முதலியனவும்.

படகம் - பேரி முதலிய ஒருமுகப் பறையும், முழவு முதலிய இருமுகப் பறைகளும். **கருவி** - நரம்புக் கருவி, துளைக்கருவி முதலியன. **தாரை** - இனம்பற்றிக் காளம் - சின்னம் முதலியனவும் கொள்க.

இயற்றுபவரின்றியும் இயம்பும் மங்கல முழக்கு ஒலி - என்றது **அருள்வெளிப்பாட்டின் பயனாக எழுந்த காற்று ஒலியலைகள்**. இவற்றை இயக்க, அவ்வவையும் அவ்வாறே மங்கல முழக்காக ஒலித்தன. "வேத வொலியால்" என முன்

பத்து நாள் மங்கலச் சடங்குகள்

1932. இரும்புவன மித்தகைமை யெய்தவவர் தம்மைத்
தருங்குல மறைத்தலைவர் தம்பவன முன்றிற்
பெருங்களி வியப்பொடு பிரானருளி னாலே
அருந்திரு மகப்பெற வணைந்தவணி செய்வார். 34

பாட்டிற் கூறியவாறே இதனையும் கொள்க. சில நற்காலங்களில் காற்றினியக்கத்தால் வானிற் குழல், யாழ் முதலிய ஓசைகள் கேட்கப்படுதல் கண்கூடு. இங்கும் முன்பாட்டினும் கூறியவை எல்லாம் நற்சகுனமாய்த் தெய்வீக மங்கல நிகழ்ச்சியைக் காட்டின

முழங்கொலி - என்பதும் பாடம். 33

1932. பொருளுரை:- இரும்புவனம்..எய்த - பெரிய புவனம் இந்தத் தன்மை அடைய: அவர் தம்மை...முன்றில் - அத்திருவுடைப்பிள்ளையாரைப் பெற்ற வேதியர் தலைவராகிய சிவபாத விருதயர் தமது திருமனை முன்றிலில்: பெருங்களி..செய்வார் - பெருமகிழ்ச்சியும் வியப்பும் பொருந்தச் சிவபெருமான்றிருவருளினால் அரிய திருமகவினைப் பெறப் பொருந்திய அணிகளைச் செய்வாராகி:

விளக்கவுரை:- இரும்புவனம் இத்தகைய எய்த - என்றதனால் முன் 1925 முதல் 1931 வரை ஏழு திருப்பாட்டுக்களிலும் கூறியபடி உலகம் பொருந்திய மங்கலச் சகுனம் முதலாகிய தன்மைகள் குறிக்கப்பட்டன. திருவவதாரத்தினால் உலகம் பயன்பெற்றது. சிவபாத விருதயரின் மனைவாழ்க்கையும் பயன் பெற்றது. இவ்விரண்டினையும் ஒருங்கு கருதியே அந்த மறைத் தலைவர் தவஞ் செய்தார்: இவற்றுட் சிறந்தது உலகம் பெற்ற பயன் என்ற குறிப்புப்பெற இந்த இரண்டினையும் பற்றியெழுந்த சிறப்புக்களைத் தனித்தனி ஏழேழு திருப்பாட்டுக்களாற் கூறிய ஆசிரியர் உலகப்பயனை முன் வைத்தோதி, மற்றதனைப் பின்வைத்ததுமன்றி, முன்னதனைப் **புவனம் இத்தகைமை எய்த** என்று பிரித்துங் காட்டினார்.

அவர் தம்மைத்தரும் குலமறைத் தலைவர் - சிவபாத விருதயர்.

பவனம் - திருமாளிகை. இதனாலும் இனிக் கூறப்படுவன எல்லாம் திருமாளிகையில் நடந்த செயல்கள் என்று முன்னவற்றினின்றும் பிரித்துக் கூறப்பட்ட திறம் காண்க.

பிரான் - அருளினாலே - 1917 -1918-ல் சொல்லிய வழிபாட்டின் பயனாகப் பிரான் செய்த அருள்.

செய்வார் - செய்வாராகி: முற்றெச்சம். சிறப்பாராய்த் திளைப்பாராய்ச் செய்வாராகி (1933): மடந்தையர்கள் - செய்வார் (1934): செய்வார்-வைப்பார்-நிரைப்பாராக (1935): ஏனையோருடன் கூடிச் செய்வார் - உய்ப்பார் - தொடுப்பார் - செய்வாராய் (1936) விளைப்பாராகி (1937) இவ்வாறு செய்தொழில் விளைத்தார் - (1938) என்று இந்த ஏழு பாட்டுக்களையும் (1932-1938) கூட்டி வினை முடிபு செய்து கொள்க. 34

1933. காதல்புரி சிந்தைமகி ழக்களி சிறப்பார்;
மீதணியு நெய்யணி விழாவொடு திளைப்பார்;
சூதநிகழ் மங்கல வினைத்துழனி பொங்கச்
சாதக முறைப்பல சடங்குவினை செய்வார். 35

1934. மாமறை விழுக்குல மடந்தையர்க டம்மிற்
றாமுறு மகிழ்ச்சியொடு சாயன்மயி லென்னத்
தூமணி விளக்கொடு சுடர்க்குழைகண் மின்னக்
காமர்திரு மாளிகை கவின்பொலிவு செய்வார்; 36

1933. பொருளுரை:- காதல்... சிறப்பார் - ஆசை கொள்ளும் சிந்தை மகிழப் பெருங்களிப்படைவார்: மீதணியும்...திளைப்பார் - மேலே பூசப்படும் நெய்யாட்டு விழாச் செய்து மகிழ்வார்: சூதநிகழ்.....செய்வார் - திருவவதாரத்தாற் பொருந்திய மங்கலச் செயல்களின் ஆரவாரம் பெருகச் சாதகன்மம் முதலிய பல சடங்குகளின் தொழில்களையும் செய்வார்:

விளக்கவுரை:- மீதணியும் நெய்யணி விழா *- மேலே பூசும் நெய் விழா என்பர். **நெய்யணி** - மகப்பேற்றின் பின் தொடக்குநீங்க நெய் பூசிக் குளித்தல். "கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி, நயந்த கிழவனை" (தொல்-பொ- கற்பி 6): இது சுற்றத்தாரும் ஊரவரும் கலந்து கோடற்குரியதாதலின் விழா என்றார். "திருமலிநெய் யாடல்விழாச் செங்காட்டங் குடியெடுப்ப". (சிறுத்.புரா-18) மங்கலஸ்நானம் என்பது வடமொழி வழக்கு.*

சூதம்*-பிறப்பு என்ற பொருள் தருவது: பிராணிகளின் பிறப்பு என்பது பாணினி சூத்திரம்.*

சாதக முறைப் பல சடங்கு *- ஆண்மகவுக்குரிய 16 சடங்குகளுள் ஒன்று: **சாதகன்மம்** என்பர். அத்திர மந்திரத்தால் ஆறு முறை ஓமஞ் செய்து, வாம மந்திரத்தினால் மகவை முகமெதிர் நோக்கிப் பஞ்சப்பிரம மந்திரத்தால் உச்சிமோந்து, தற்புருடத்தினை வலக்காதிற் செலுத்துதல். இதன் விரிவெல்லாஞ் சிவாகம விதிகளுள்ளும், வேதவழிவரும் மிருதிகளுள்ளும் கண்டுகொள்க. பிறந்த நாட்குறித்து எழுதும் நாட்கோள் நிலைக் குறிப்பைச் சாதகம் என வழங்குவது உலக வழக்கு. **பல என்றதனால்** அது குறித்த எல்லா மடங்கும்.* 35

1934. பொருளுரை:- வெளிப்படை - விழுப்பமுடைய வேதியர் மகளிர் தம்மிற் கலந்த பெரு மகிழ்ச்சியோடும், சாயலையுடைய மயிலேபோலத் தூய அழகிய விளக்குக் களுடனே ஒளியுடைய குழை முதலிய அணிகள் மின்ன அழகிய அத்திருமாளிகை யினை அழகு மேம்படச் செய்வாராகி.

விளக்கவுரை:- இப்பாட்டினாலும் மேல் வரும்பாட்டினாலும் அச்சிறப்புக்களுள் குல மகளிர் செய்யும் செயல்கள் கூறப்பட்டன. இவர் கிளைஞர்கள். **குலமகளிர்** - என்றது அக்கருத்து.

1935. சுண்ணமொடு தண்மலர் துதைந்ததுகள் வீசி
உண்ணிறை விருப்பினுட னோகையுரை செய்வார்;
வெண்முளைய பாலிகைகள் வேதிதொறும் வைப்பார்;
புண்ணிய நறும்புனல்கொள் பொற்குட நிரைப்பார்; 37

தூமணி விளக்கொடு சுடர்க்குழைகள் மின்ன - *விளக்கேந்திய மங்கைகள் செய்வாராதலின் அவ்விளக்குக்களின் ஒளியசைவினாலும் மங்கையரசைவினாலும்* ***குழைகள்*** *மின்னுவன.* ***மணி*** *- அழகிய: மணிகளிழைத்த என்றலுமாம்.*

திருமாளிகை *- பிள்ளையார் அவதரிக்கும் பேறு பெற்றமையால் இவ்வாறு கூறினார். "பொன்மாளிகை" "திருமாளிகைப்பத்தி" முதலியனவாய் இறைவர் எழுந்தருளிய இடங்களுக்கு வழங்கும் வழக்கு இதற்கும் ஒப்பாதல் குறிப்பு.*

கவின் பொலிவு செய்வார் *- முன்னரே கவின் பெற்றிருந்ததனை மேலும்* ***பொலிவு*** *செய்தனர். மாளிகையின் இயல்பு 1910ல் உரைத்தவை பார்க்க. "அழகலங்கரித்து வைத்தார்" (புரா1223).* 36

1935. பொருளுரை:- சுண்ணமொடு...செய்வார் - சுண்ணப்பொடிகளுடனே குளிர்ந்த மலர்த் தாதுக்களை வீசி உள்ளே நிறைந்த விருப்பத்துடன் அத்திருவவதார மகிழ்ச்சிச் செய்தியை எங்கும் சொல்வார்கள்: வெண் முளைய....வைப்பார் - வெண்முளைகளுடன் கூடிய முளைப் பாலிகைகளை மேடைகள்தோறும் வைப்பார்கள்: புண்ணிய...நிரைப்பார்- மணமுடைய புண்ணியப் புதுநீர் கொள்ளப்பெற்ற பொற்குடங்களை வரிசைபெற வைப்பார்கள்:

விளக்கவுரை:- சுண்ணம் *- பொற் சுண்ணம்: வாசனைத்தூள்.*

ஓகை உரை செய்தல் *- திருவவதார நற்செய்தியை அறிவித்துக் கொள்ளுதல்.*

வெண்முளைய பாலிகை-*வெண்முளைகளையுடைய முளைப்பாலிகைகள்.* ***முளைய*** *- முளைகளை உடையனவாகிய. அகரவீற்றுப் பன்மைப் பெயர்.*

குடம் நிரைத்தல் *- நிறைகுடங்களை வரிசைபெற வைத்தல்: மங்கலங்களுள் ஒன்று.* ***நிரை*** *- வரிசை.* ***புண்ணிய நறும்புனல்*** *- காவிரி முதலிய புண்ணிய தீர்த்தங்கள்.* 37

1936. பொருளுரை: செம்பொன்...செய்வார் - செம்பொன் முதலான பலவற்றைத் தானஞ் செய்வார்கள்; நம்பரடியார்...உய்ப்பார் - சிவனடியார்கள் திருவமுது செய்தற்கு வேண்டும் நலங்களை நாடிச் செய்வார்கள்; வம்பலர்....தொடுப்பார்-புதிதின் மலரும் மணமலர் மாலைகளை அவற்றில் மொய்த்திருக்கும் வண்டுகளுடன் சேர்த்துத் தொடுப்பார்கள்; நிம்ப முதலான....செய்வார் - வேம்பு செருகுதல் முதலாகக் காப்புமிக்க தொழில்களை செய்வார்கள்.

விளக்கவுரை:- செம்பொன்...தானவினை *- பொன் முதலானவற்றைத் தானமாகக் கொடுத்தல் மகிழ்ச்சிக்குறி. இதனால் சிறு தோடங்கள் நீங்கும் என்று கூறுவர்.*

1936. செம்பொன்முத லானபல தானவினை செய்வார்;
நம்பரடி யாரமுது செய்யநல முய்ப்பார்;
வம்பலர் நறுந்தொடையல் வண்டொடு தொடுப்பார்;
நிம்பமுத லானகடி நீடுவினை செய்வார்; 38

1937. ஐயவி யுடன்பல வமைத்தபுகை யாலு
நெய்யகி னறுங்குறை நிறைத்தபுகை யாலும்
வெய்யதழ லாகுதி விழுப்புகையி னாலுந்
தெய்வமண நாறவரு செய்தொழில் விளைப்பார்; 39

தானவினை என்றும், ***அமுது செய்ய நலம்*** என்றும் கூறியவதனால் அடியாரை அமுது செய்வித்தலின் சிறப்பினை எடுத்துக் காட்டியபடி. வைப்பு முறையும் அக்கருத்து.

தொடையல் வண்டொடு தொடுத்தல் - புதிய - பூக்களாதலின் அவற்றில் வண்டு மொய்த்தலால் தொடுக்கும்போது அவ்வண்டுகளையும் தொடுத்தல் போலாம் என்பது.

நிம்ப முதலான கடிநீடு வினை - வேப்பிலை செருகுதல், வேம்பிழைத்து இடையிற்கட்டுதல் முதலிய காப்புச் செயல்கள். 38

1937. பொருளுரை:- ஐயவி...புகையாலும் - வெண்கடுகு முதலான பண்டங்கள் சேர்த்து அமைக்கப்பட்ட புகையினாலும்: *நெய் அகில்...புகையாலும்* - நெய்யுடன் நல்லமணமுடைய அகிற்றுண்டுகளால் நிறைவித் துண்டாக்கப்பட்ட புகையினாலும்: *வெய்ய....புகையினாலும்* - விருப்பம் தரும் ஆகுதிகளையுடைய வேள்வித்தீயின் விழுமிய புகையினாலும்: *தெய்வமணம்...விளைப்பார்* - தெய்வமணங் கமழும்படியாக உள்ள செய்கைகளை விளைப்பார்கள்.

விளக்கவுரை:- ஐயவி - வெண்கடுகு. இதன்புகை தீமையை விலக்கிக் காக்கும் தன்மை யுடையது. இத்தன்மைபற்றி இதற்குக் கடிப்பகை என்ற காரணப் பெயரும் வழங்கும். "ஐயவிப் புகையு மாட்டி" (676): நெய்யணிந்து ஐயவி யப்புதலு முண்டு. "நெய்யோ டையவி யப்பியை துரைத்து" (முருகு).

உடன் பல அமைத்தலாவது - வெள்ளைக் குங்குலியம், கருப்பூரம் முதலான பல பண்டங்களையும் சேர்த்துத் தூளாக்குதல்.

நறு அகிற்குறை என்க. ***குறை*** - துண்டங்கள். குறைத்தலாற் பெறுவது குறை எனப்பட்டது.

வெய்ய - விருப்பத்தைத்தரும். ***வெம்மை*** - வேண்டுதல். "வெம்மை வேண்டல்" (**தொல்** - உரி. 38): வேண்டுவனவற்றைத்தருதல் நோக்கி வேள்வி என்றாறிற்று.

விழுப்புகை - முன்கூறிய இரண்டுவகைப் புகையினின்றும் வேறு பிரிக்க: ***விழு*** என்ற அடைமொழி தந்தோதினார். பிறிதினியைபு நீக்கிய விசேடணம். ***விழுமிய வெல்லாம் தருவதும் வேள்வி என்றதாம்.***

1938. ஆயபல செய்தொழில்க ளன்றுமுதல் விண்ணோர்
நாயக னருட்பெருமை கூறுநல மெய்தத்
தூயதிரு மாமறை தொடர்ந்தநடை நூலின்
மேயவிதி யையிரு தினத்தினும் விளைத்தார். 40

தெய்வ மணம் நாற - தெய்வத்தன்மை விளங்கச் சாதனமாகவுள்ள மணம். தெய்வக்காட்சி-தெய்வப் பாட்டு என்பனபோல. இக்கருத்தேபற்றி எழுந்த "தெய்வ மணக்குஞ் செய்யுளெலாம்" என்றது சேக்கிழார் பிள்ளைத்தமிழ் (தால்-5). 39

1938. பொருளுரை:- ஆய பல செய் தொழில்கள் - அவ்வாறாகிய பற்பல செய்கைகளையெல்லாம்: விண்ணோர் நாயகன்..எய்த - தேவர் தலைவராகிய சிவபெருமானுடைய திருவருளின் பெருமைமிகும்படியாகிய நலம்பொருந்துபடி: தூய..விதி - தூய்மை செய்யும் திருமாமறைகளிலும் அவற்றைத் தொடர்ந்த கற்ப சூத்திரம் முதலிய ஒழுக்க நூல்களினும் பொருந்திய விதிமுறையின்படி: அன்று முதல் ஐயிரு தினத்தினும் விளைத்தார் - திருவவதாரம் நிகழ்ந்த நாள் முதலாகப் பத்து நாட்களிலும் விளைத்தனர்.

இந்த ஏழுபாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன. இவற்றாற் பிள்ளையார் திருவவதாரத் திருநாள் தொடங்கிப் பத்து நாட்களினும் அவரவதரித்த திருமாளிகையில் நடந்த வேத நூல் விதிச் சடங்குகளையும் ஏனைச் சிறப்புக்களையும் தொடர்ந்து கூறினார்.

விளக்கவுரை:- அன்றுமுதல் ஐயிருதினம் - என்க. திருவவதாரம் செய்த அந்நாள் முதலாகவரும் பத்து நாட்கள் அந்த மங்கலச் செயல்கட்குரியவை.

விண்ணோர் நலம்...எய்த - மேற்கூறிய சடங்குகள் முதலிய செய்தொழில்களின் உள்ளுறையும், கருத்தும் கூறியபடி: ஏனையோர் இவ்வகைச் சடங்குகள் தத்தம் உலகநலம் பற்றிச் செய்வர். இங்குத் திருவருள் சிறக்க வேண்டுமென்ற ஒருகருத்துப் பற்றியே செய்தனர் என்பது.

தூய.. விதி - இதனை மங்களாசௌச ஒழுக்கம் என்பது வடமொழி வழக்கு. **மறை தொடர்ந்த நடைநூல்** - வேதங்களின் வழிவந்த ஒழுக்க நூல்கள்: கற்பசூத்திரங்கள் எனப்படும். 40

1939. பொருளுரை:- நாமகரணத்து...நிறுத்தி - பெயர் இடுதலாகிய அழகிய சடங்கினைத் திருவவதார நாளுக்கு இசையும்படி நிலைபெறச் செய்வித்து: சேம..பிரானை - சேமஞ் செய்ய உதிக்கும் இளஞாயிறு போலத் திகழ்கின்ற பெருமானை: தாமரை..என்ன - தாமரையின்மேல் எழுந்தருளிய தனி முதலாகிய குழவிபோல: தூமணி..அமர் வித்தார் - தூயமணிகள் வரிசைபெற அழுத்தி அணி செய்யப்பட்ட தொட்டிலில் அமரும்படி செய்தனர்.

நாமகரணம்; தொட்டிலிடுதல்

1939. **நாமகர ணத்தழகு நாள்பெற நிறுத்திச்,**
சேமவுத யப்பரிதி யிற்றிகழ் பிரானைத்
தாமரை மிசைத்தனி முதற்குழவி யென்னத்
தூமணி நிரைத்தணிசெய் தொட்டிலமர் வித்தார். 41

விளக்கவுரை:- இத்திருப்பாட்டு மிகச் சிறந்த உவமை நலத்தினை விளக்கி உளங்கொளத் தக்க தொன்று. பிள்ளையார் முருகனது அவதாரம் என்று கூறவோர் கூற்றுப் பொருந்தாமையைக் காட்டுதற்குப் பெருந்துணையாவது இத்திருப்பாட்டு.

தாமரை மிசைக் குழவி என்னத் தொட்டிலில் பிரானை அமர்வித்தார் - என்று உவமை கண்டுகொள்க: **தாமரை** - தொட்டிலுக்கும், **குழவி** - பிரானுக்கும் உவமை.

உதயப் பரிதியிற் றிகழ்-என்பது உவமான உவமேய மீரிடத்தும் ஒக்கும் பொதுத்தன்மை: "பலர் புகழ் ஞாயிறு கடற்கண் டாஅங்கு" (முருகு). அசுரரைவென்று அவர்கள் சிறையிட்ட அமரரை முருகன் மீட்டதுபோலப், பிள்ளையார் அமணரை வென்ற அவர்கள் அபகரித்து சைவத்தை மீட்டதும் குறிப்பு.

நாமகரணத்தழகு - பெயரிடுதலாகிய சடங்கு.

நாள் பெற நிறுத்துதல் - அவதரித்த நாளுக்குப் பொருந்தும்படி நிலை பெறுத்துதல்; **நாள்** - இங்குத் திருவாதிரைமீனைக் குறித்தது. நாளுக்குரிய எழுத்தை முன்னிட்டுப் பெயரிடும் வழக்குக் குறித்தது.

சேம உதயப் பரிதியின் திகழ் பிரானை - சேமமாவது ஒளியினாலும் வெப்பத்தினாலும் உலகுக்குப் பலவாற்றாலும் நலஞ்செய்தல். இங்கு இருள் போக்கி ஒளி கொடுக்கும் தன்மை சிறப்பாகக் குறிக்கப்பட்டது. "பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாது" (1916);"அமணென்னும் வல்லிருள்போய் மாய்வதனுக், கானபெரு கொளிப்பரப்பா லண்டமெலாங் கொண்டதொரு, ஞானமணி விளக்கெழுந்து வருவதென" (புரா - 652); "அமணிருள் மாய்ந்த தன்றே" (புரா - 858) முதலிய கருத்துக் காண்க. **உதயப்பரிதி** - கடலினின்றும் தோன்றி முளைத்தெழும் இளஞாயிறு **இன்** - உவம உருபு. **பரிதியின்**- பரிதிபோல. **பரிதி** - ஞாயிறு. **பிரான்** - தலைவன்; இங்கு ஆளுடைய பிள்ளையாரைக் குறித்து நின்றது.

தாமரை மிசைத் தனிமுதற் குழவி என்ன - குழவித் **தனி**முதல் என்க. **தனிமுதல்** சிவபெருமான்; "தனிமுதலாம் பரனென்று" (789); சிவபெருமானது சத்தியே குழவியாய் உருக்கொண்டு முருகன் என வந்தது என்பது கந்தபுராணத்துட்கண்ட உண்மை. "நமது சத்தி யறுமுக னவனும் யாமும், பேதக மன்றா னம்போற் பிரிவிலன் யாண்டு நின்றான்" (கந்தபுரா - திருவிளை - பட); **தனிமுதற்குழவி** - முருகன். **தாமரை மிசை** - ஈண்டு - அன்பால் நினைப்பவர்களது உள்ளத்தாமரையில் வீற்றிருப்பதுவும், சரவணப் பொய்கையில் எழுந்த தாமரையில் வீற்றிருந்ததுவும் குறித்தது. இதய குகையில் இருக்கை கொள்ளுதலாற் **குகன்** - எனப்படுதலும் காண்க. **இதயம்** - வடிவத்தாலும், இறைவன்

பாலூட்டுதல்

1940. பெருமலை பயந்தகொடி பேணுமுலை யின்பால்
அருமறை குழைத்தமுது செய்தருளு வாரைத்
தருமறைவி யார்பரமர் தாள்பரவு மன்பே
திருமுலை சுரந்தமுது செய்தருளு வித்தார். 42

இருக்கும் ஆதனமாதலாலும் தாமரை எனப்படும். தொட்டிலில் அமர்ந்திருந்தபோது பிள்ளையார் தாமரையில் இருந்த முருகனாகிய தனிமுதற் குழவி போன்றார் என்பதாம். "சரவணப்பூங் கட்டில்" என்றுவரும் சிலப்பதிக்காரக் (குன்றக் குரவை) கருத்தும் சிந்திக்க. முருகனைத் **தனிமுதற்குழவி** என்றதனாலும், உவமானமாக எடுத்தலானும் பிள்ளையாரே முருகன் என்பார் கூற்றுப் பொருந்தா தொழிதல் காண்க. "தருதிட் டாந்தமுந் தாட்டாந் திகமு, மொருபொரு ளாகிலுவமை பெறாதே" (சங் - நிரா); **தாமரைமிசைக்- குழவி** - பிரமதேவன் என்றுரைப்பாரு முண்டு. அது பொருந்தாமையறிக.

தூமணி நிரைத்து - குற்றமில்லாத மணிகளை வரிசைபெற அழுத்தி.

இப்பாட்டினால் குழவியைத் தொட்டிலில் இடுதல் என்ற சடங்கு கூறப்பட்டது. *41*

1940. **பொருளுரை:-** பெருமலை...அருளுவாரை - பெரிய இமயமலையரசன் பெற்ற கொடிபோலும் பார்வதியம்மையாரது பேணுகின்ற திருமுலைக்கண்ணதாகிய இனிய பாலுடன் அரிய சிவஞானத்தினைக் குழைத்து அமுதுசெய்தருளவுள்ள பிள்ளையாரை: தரும் மறைவியார்-பெற்றெடுத்த மறைக்குல அம்மையாராகிய பகவதியார்: பரமர்...அமுதுசெய் தருளுவித்தார் - சிவபெருமானது திருவடிகளைப் போற்றும் அன்பே தமது திருமலையிற் பாலாகச் சுரக்க அதனைத் திருவமுது செய்தருளும்படிப் பாலூட்டினார்.

விளக்கவுரை:- **பெருமலை பயந்த கொடி-பெருமலை** - இமயமலை. **மலை** - மலைக்கு அரசனையும், **கொடி** - கொடிபோன்ற உமையம்மையாரையும் குறித்துநின்றன. மலை - மலையின் அரசனுக்கு வந்தது இலக்கணை: **கொடி** - உவமை ஆகுபெயர். **மலை பெற்ற கொடி** - என்றதும் அணிநயம்.

பேணுதல் - ஊட்டி வளர்த்தல், ஈண்டு உயிர்களுக்கு அறிவு தந்து அவ்வவர் திறத்துக்கேற்ப வளர்த்தல் குறித்தது.

அருமறை - மறைகளின் முடிந்த முடிபாகிய சிவஞானங் குறித்து நின்றது: **அருமை** - என்ற அடைமொழி அக்குறிப்புத் தருவது.

மறைகுழைத் தமுதுசெய் தருளுவாரை - மேல் 1965-ல் உரைக்கப்படுவது. அமுதுசெய் தருளவுள்ளவரை என்க.

தரும் மறைவியார் - தருதல் - ஈன்றெடுத்தல். **மறைவியார்** - மறைக்குல அம்மையாகிய பகவதியம்மையார்.

காப்பு

1941. ஆறுலவு செய்யசடை யையரரு ளாலே
பேறுலகி னுக்கென வரும்பெரிய வர்க்கு
வேறுபல காப்புமிகை யென்றவை விரும்பார்
நீறுதிரு நெற்றியினி றுத்திநிறை வித்தார். 43

தாள்பரவும் அன்பே திருமுலை சுரந்து - "அன்பினாலே திருத்தோணி வீற்றிருந்தார் சேவடிக்கீழ் வழிப்பட்டுக், கருத்து முடிந்திடப் பரவி"ப் (1918) பிள்ளையாரைப் பெற்றாராதலின் அவ்வாறு பரவிய அன்பினையே தாரகமாக அப்பிள்ளையாரை ஊட்டி வளர்க்க வேண்டினார்: அதுவே பற்றாக முலை சுரக்க, அவ்வமுதத்தை அமுது செய்வித்தனர் என்பதாம். உலகில் ஏனைத் தாயர்க்கெல்லாம் குழவி பற்றுக்கோடாக முலை சுரக்கும்: இங்கு, இக்குழவியைப் பரமர்பாற் பெறத் துணைசெய்த அன்பே பற்றுக் கோடாகப் பால் சுரந்ததென்க. "அருளென்னு மன்பீன் குழவி" (குறள்) என்றபடி பின்னர் அருளுருவாகும் பிள்ளையாரை அன்பினையே அமுது செய்விக்கும் தகுதியும் குறிப்பு. ஞானப்பாலுண்ணப் பிறந்தார்க்குப் பகவதியாரின் மாயைப்பாலுண்ணல் கூடாமையின்... அவர் உண்டது பகவதியாரின் பாலையன்று - அஃது ஆண்டவன் அன்புப்பால் என்று ஈண்டு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு அன்பினாற் பெற்ற பொருளை அன்புகொண்டு ஊட்டினார் என்பதே பொருளாதலின் அது பொருந்தாமையறிக

அமுது செய்தருளுவாரைத் தரும் என்றும், *அமுதுசெய் தருளுவாரை - அமுது செய் தருளுவித்தார்* என்றம் கூட்டியுரைக்கநின்றது.

மறைகுழைத் தமுதுசெய் தருளுவார் - பிள்ளையாரை மறைவியார் பால் அமுது செய்வித்தலே இங்குக் கூறும் பொருளாயினும், அவர் இங்கு ஊட்டப்பெறப், பின்னரும் ஊட்டப்பெற, இவை இரண்டினுள்ளும் சிறப்புப்பற்றிப் பின்னதனை முன்வைத்து ஈண்டுக் கூறினார்.

தருமிறைவியார் - என்பதும் பாடம். 42

1941. பொருளுரை:- ஆறு உலவு...அருளாலே-கங்கையாறு உலவுதற்கிடமாகிய சிவந்த சடையினையுடைய சிவபெருமானது திருவருளினாலே: பேறு உலகினுக்கு...பெரியவர்க்கு - உலகத்துக்கு அதைக் காக்கும் பேறாவார் இவர் என வந்தவதரித்த பெரியவராகிய பிள்ளையாருக்கு: வேறு...விரும்பார் - வேறு பல காப்புக்கள் மிகையாகும் என்று அவை யெவற்றையும் விரும்பாதவராகி: நீறு..நிறைவித்தார் - திருநீற்றினை அவரது திருநெற்றியில் நிலைபெற அணிந்து காப்புச் சடங்கினை நிறைவாக்கினார் (மறைவியார்).

விளக்கவுரை:- உலகினைக் காக்கவரும் இவருக்கு வேறு காப்புக்கள் அணிதல் தகாது என்றுகொண்டு **இறைவரது காப்பாகிய திருநீற்றுக் காப்பினை அணிந்தார்**.

வேறு

தாலாட்டு முதலியன

1942. தாயர்திரு மடித்தலத்துந் தயங்குமணித் தவிசினிலுந்
தூயசுடர்த் தொட்டிலினுந் தூங்குமலர்ச் சயனத்துஞ்
**சேயபொருட் டிருமறையுந் தீந்தமிழுஞ் சிறக்கவரு
நாயகனைத் தாலாட்டு** நலம்பலபா ராட்டினார். **44**

நீறு - "இரட்சை" என்று வேதத்தினுள் (உபநிடதம்) பேசப்படுவது. "வேதத்தி லுள்ளது நீறு", "மந்திர மாவது நீறு", "ஏல வுடம்பிடர் தீர்க்கு மின்பந் தருவது நீறு" முதலிய பிள்ளையாரது திருவாக்குகள் காண்க.

நிறைவித்தார் - மறைவியார் என்ற எழுவாய் முன் பாட்டினின்றும் வருவிக்க.

நீறு நிறைவித்தார் - திருநீற்றுக் காப்பு அணிதல். "இறைவர்திரு நீற்றுக்காப் பேந்தி முன்சென் றீன்றதா யார்சாத்தி" (புரா.262) என்று பின்னரும் வருதல் காண்க.

வேறு பல காப்பு - வேம்புகோத் தணிதல் முதலாயின. 667-ம் பிறவும் பார்க்க.

பேறுஉலகினுக்கு எனவரும் - "பரசமய நிராகரித்து நீறாக்கும்" (1917) தன்மையுடன் அருளால் அவதரித்த. "பெரும்பே றுலகுய்ய" (1918).

மிகை - திருநீற்றுக் காப்பின்மேற் சிறந்த காப்பு இல்லை என்பதாம்.

அருளாலே - "அருள் பெருக" (1923): "அருள் போற்றி" (1919). 43

1942. **பொருளுரை:-** சேய...நாயகனை - செம்மையுடைய பொருளைத் தரும் வேதங்களும் தீந்தமிழும் சிறப்புப்பெற வந்தவதரித்த நாயகராகிய பிள்ளையாரை: தாயர்... சயனத்தும் - நற்றாயர் முதலியோர் தமது திருமடியினிடத்தும், விளங்கும் மணிகளையுடைய பீடத்தினிலும், தூய ஒளியுடைய தொட்டிலிலும், தூங்கும் மலர்ப் பள்ளியினிலும்: தால்ஆட்டும் நலம்பல பாராட்டினார் - தாலாட்டுதலால் அவர் அவதரிக்க வந்த பல நலங்களையும் பாராட்டிப் பாடினார்.

விளக்கவுரை:- நாயகனைத் தமது மடித்தல் முதலியவற்றுள் - தாலாட்டு நலம் பல - தாயார் பாராட்டினார் என்க.

தாயர் - பாராட்டுந் தாய், ஊட்டுந் தாய், நற்றாய், கைத்தாய், செவிலித்தாய் என்னும் ஐவகைத் தாயரையும் குறிக்கத் **தாயர்** என்றார்.

தாலாட்டு - தாலு - நா. **தாலு** என்பது ஈற்றுகரந் தொக்குத் **தால்** எனவரும்.

தொட்டிலினும் ஏனையிடத்தும் குழவியை வைத்து அசைத்து ஆட்டி நாவசைத்துப் பாடும் பாட்டு. தால் என்னும் ஒசையோடு அசைத்தாட்டும் பாட்டு என்றலுமாம். **மடித்தலம்** முதலியவை பாராட்டும் இடங்களும் நிலைகளும் நலங்களும் குறித்தன.

செங்கீரை

1943. வருமுறைமைப் பருவத்தில் வளர்புகலிப் பிள்ளையார்
அருமறைக டலையெடுப்ப வாண்டதிரு முடியெடுத்துப்,
பெருமழுவர் தொண்டல்லாற் பிறிதிசையோ மென்பார்போற்
றிருமுகமண் டலமசையச் செங்கீரை யாடினார். 45

தால் ஆட்டுதல் - தாலப் பருவம் என்பர். இஃது ஏழா மாதத்தில் நிகழ்வது.

தாலாட்டு நலம்பல பாராட்டுதலாவது அவதார நன்மைகளைப் பலவாறும் புகழ்ந்து பாடுதல்.

தாலாட்டு நலம்பல பாராட்டினார் - இவை தாயர் செயல். தாலாட்டும் செயல்களினால் பாராட்டினார் என்க.

சேயபொருள் - செம்மைப் பொருளாவது சிவம் பெருக்கும் முத்திப் பொருள். இதனைத் திருமறைக்கும் தீந்தமிழுக்கும் தனித்தனி கூட்டுக. **சேய** - கிட்டுதற்கரிய என்றலுமாம். பொருள் சேய்மையிற் காணவுரைக்கும் மறை என்றலுமாம்,

திருமறை - வேதங்கள். "வேதநெறி தழைத்தோங்க" என்ற கருத்து.

தீந்தமிழ் - தெய்வத் தன்மையை இனிமையாய்ப் புகட்டும் தமிழ். "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞானசம் பந்தன்" (நம்பி.தேவா).

நாயகன் - நடத்துவேன் - ஆசாரியன் - என்ற கருத்து.

மடித்தலம் - தவிசு - தொட்டில் - சயனம் என்ற இந்நான்கும் குழவியை அமர்த்தித் தாலாட்டும் இடங்கள்.

தூய சுடர்த் தொட்டில் - தூய்மை - 1939-ல் கூறிய கருத்து.

தூங்கும் மலர்ச் சயனம் - தூங்கும் - தொங்கும் என்றும், தூங்கச் செய்யும் என்றும் இரு பொருள்பட நின்றது. **சயனம்** - பள்ளியமரச் செய்யும் அமைப்பு.

மேல்வரும் மூன்று பாட்டுக்களினாலும் அவ்வாறு தாயார் பாராட்டப் பிள்ளையார் பருவந்தோறும் வளர்ந்த சிறப்பு கூறப்படுவன. **தாலாட்டு நலம் பல** - தாயார் பாராட்டுப் பொதுமைகுறித்து நின்றன. 44

1943. பொருளுரை:- வரும்...பிள்ளையார் - முறைமையால் வரும் பருவந்தோறும் உரிய வாறு வளர்ச்சிபெறும் பிள்ளையார்: அருமறைகள்...எடுத்து - அரிய வேதங்கள் தலை எடுக்கும்படி அணையிற் பதிந்த திருமுடியை மேலெடுத்தும்: பெருமழுவர்...அசைய - பெரிய மழுவினை யேந்திய சிவபெருமானுடைய திருத்தொண்டினையன்றிப் பிறிதொன்றினையும் இசையோம் என்று காட்டுவார்போலத் திருமுகமண்டலம் அசைய: செங்கீரை ஆடினார் - செங்கீரை யாடியருளினார்

விளக்கவுரை:- செங்கீரை ஆடுதல் - குழவி வளர்ச்சியில் வரும் பருவங்களுள் ஒன்று. ஐந்தாவது மாதத்தில் நிகழும். ஐந்துமுதல் ஏழாம்மாத அளவில்நிகழ்வதா

மென்பாருமுண்டு. ஒருகாலை மடக்கி, ஒருகாலை நீட்டி இருகைகளையும் நிலத்தில் ஊன்றித் தலைநிமிர்ந்தசைதல் இதன் செயல்: இளங் கீரைத்தண்டு காற்றில் அசைதல் போல என்ப.

திருமுடி எடுத்து - திருமுக மண்டலம் அசைய என்று சிறப்புப்பற்றித் தலை நிமிர்த்தலையும் முகம் அசைத்தலையும் கூறி ஏனையவாகிய கால் கைகளின் செயல்களையும் உடன்கொள்ளவைத்தார்.

மறைகள் தலைஎடுப்ப என்றும், தொண்டல்லாற் **பிறிதிசையோம்** என்பார் போல் என்றும் கூறியன தற்குறிப்பேற்றச் சுவைபடத் தொழில்பற்றி வந்த தன்மையணி மேல் வரும் இரண்டு பாட்டுக்களினும், 1948-லும் இவ்வாறே கொள்க.

முறைமை வரும் பருவம் எனவும், **வளர் பிள்ளையார்** - எனவும் கூட்டுக. **வளர்** என்பதனைப் புகலி என்பதனுடன் கூட்டி, ஊழிகளிலும் ஆழாது மேல்வளரும் என்றுரைக்கவும் நின்றது.

தலை எடுப்ப - முடி எடுத்து - தலை எடுப்ப என்றதனால் அதற்கு முன் தலை கவிழ்ந்திருந்த என்பது குறிப்பு. "பொய்மிகுத்தே, ஆதியரு மறைவழக்க மருகி' (1916) **செங்கீரை** - செவ்விய மொழி தொடங்கல் என்றுரைப்பன பொருந்தா என்பர்.

ஆண்ட - அணையிற் பதிந்த என்பர் இராமநாதச் செட்டியார். அழகிய என்றலுமாம். நம்மை ஆட்கொண்டருளிய என்றனர் முன் உரைகாரர்கள். ஆளுடைய என்புழிப்போலக் கொள்வது மொன்று. **எடுத்து** - மேலே தூக்கி.

பெருமழுவர் - சிவபெருமான். **மழு** - பரசு. சிவனுக்குரியது என்பாரு பெருமழு என்றார்.

தொண்டல்லாற் பிறிது இசையோம்-எதிர்மறைகள் உறுதி குறித்தன. **இசையோம்** - பேணமாட்டோம். கைக்கொள்ளோம் என்றலுமாம். "அடியலாற் பேணா" என்ற திருத்தொண்டத்தொகை (5) யும், "கழலலாற் பேணாக் கருத்துடை" (அச்சிறுபா - 11. குறிஞ்சி), "பங்கனை யன்றிமற் றறியோமே" (மேற்படி நட்டரா - திருமாந்துறை-2) முதலியனவாக வரும் பிள்ளையார் தேவாரங்களும் இங்கு நினைவு கூர்தற்பாலன. முகத்தை அசைத்தல் எதிர்மறைக் குறிப்புக் காட்டுவதாதலின் இவ்வாறு கூறினார். **இசையோம்** - பேசோம் என்றலுமாம்: "மற்றோர் பேச்சிலோமே" (கீழை - காட்டுப்பள். நட்டபா -9). 45

1944. பொருளுரை:- நாம் அறியோம்...கொட்டுவதும் - "நாம் சைவமேயன்றிப் பரசமயங்களை அறியமாட்டோம்: (ஆதலின் பரசமயத்தீரே!) இவ்வுலகத்தில் எதிர்ப்பட நாடாது அகலப் போமின்கள்" என்று அங்கைகளைக் கொட்டுவதனையும்: புனிதன் பால்...ஒத்துவதும் - சிவபெருமானிடத்து விருப்பந் தரும் தாளத்தைப் பெறுவதற்காகக் கைகளை ஒத்துவதனையும்: காட்டுவபோல் - காட்டுவனபோல: தாமரை....கொட்டினார் - தாமரைபோன்ற சிவந்த கைகளினால் சப்பாணி கொட்டியருளினார் (புகலிப் பிள்ளையார்).

சப்பாணி

1944. "நாமறியோம் பரசமய முலகிலெதிர் நாடாது
போமகல" வென்றங்கை கொட்டுவதும், புனிதன்பாற்
காமருதா ளம்பெறுதற் கொத்துவதுங், காட்டுவபோற்
றாமரைச்செங் கைகளினாற் சப்பாணி கொட்டினார். 46

விளக்கவுரை:- இத்திருப்பாட்டினாற் பிள்ளைப் பருவங்களுட் சப்பாணிப் பருவங் கூறப்பட்டது. இது ஒன்பதாம் மாத அளவில் நிகழ்வது. இரண்டு கைகளையுஞ் சேரக் கொட்டுதல் இதன் செயல். ச - சகிதம் - சேர்ந்தது: **பாணி** - கை.

பரசமயம் நாம் அறியோம் - பரசமங்களை அறியமாட்டோம் என்றது, சைவமன்றிப் பரசமயங்களை நாம் பொருளாக மதிக்கமாட்டோம்: ஆதலின் அகலப்போம் என்ற குறிப்புப்பட வந்தது.

"உலகில் எதிர்நாடாது போம் அகல" என்று - இது பரசமயத்தினரை நோக்கிக் கூறுவது. **எதிர்நாடுதலாவது** - பகையாய் எதிர்த்துநின்ற சைவவுண்மை நெறிக்குக் கேடுசூழக் கருதுதல். **அகலப் போம்** - என்க. தீங்கு செய்யாத தூரத்தே உமக்கரிய இடத்தில் நிற்க என்றதாம். அளவுமீறி வந்து தீங்குபுரியாமல் தடுத்தலேயன்றிப் பரசமயங்களை அழித்தல் சைவத்தின் கருத்தன்று. **உலகீர்** - என்ற பாடம் தவறு.

அங்கை கொட்டுதல் - கையொடு கைதட்டும் ஓசையினால் விளித்துத் தூரத்தே போகச் செய்தல்: பெரியோர்கள் நச்சுப் பிராணிகளையும் அழிவு செய்யாது அருளினாற் கைதட்டி ஓசைகாட்டித் துரத்துதல்போல என்பது குறிப்பு.

காமரு தாளம் பெறுதற்கு ஒத்துவது - **காமருதல்** - விரும்புதல். இன்னிசைக் குதவியாகித் தமிழ் பரப்புதற்குத் துணையாய் உலகம் விரும்பவுள்ளது என்பது குறிப்பு. **காமம் மரு** - என்பது காமரு என நின்றது. **பெறுதற்கு ஒத்துவது** - பெறும்பொருட்டுக் கைகளைத்தட்டி ஒத்தறுத்தல். "கையதனா லொத்தறுத்துக் கலைப் பதிகங் கவுணியர்கோன் பாடுங் காலை" (புரா. 102) என்றபடி அச்செயல் திருக்கோலக்காவில் நிகழவுள்ளதன் முற்குறிப்புப்போல இப்பருவத்தே இது நிகழ்ந்தது என்றதாம்.

ஒத்துவது - கையொடு கை மெல்லச் சேர்த்தலும், தாள ஓசை ஒத்தறுத்தலும் என இரு பொருளும்பட நின்றது.

காட்டுவ - செங்கைகள் என்றது எழுவாய்.

அகலப் போமென்று கொட்டுதல் பரசமய நிராகரிப்பாகிய பாசநீக்கமும், **தாளம் பெறுதற்கொத்துதல்** நீறு ஆக்குதலாகிய சிவப்பேறும் குறிப்பாக உட்கொண்டன. கைகளிரண்டும் கூடிய வழியே ஓசை பிறத்தலால் இரண்டு பயனையும் பெறுதல் கூறினார். ஈண்டு, ஞானம் பெற்றார்க்கு, ஒரு தெய்வமும் ஒரு நெறியுமே தோன்றும்: பல தெய்வமும் பல நெறியும் அவர்கட்கு விகாரமாய்த் தோன்றும் - என்பன முதலான ஆராய்ச்சிகள் பொருந்தாமையறிக.

அங்கை தட்டுவதும் - ஒற்றுவதும் - என்பனவும் பாடங்கள். 46

1945. விதிதவறு படும்வேற்றுச் சமயங்க ளிடைவிழுந்து
கதிதவழ, விருவிசும்பு நிறைந்தகடி வார்கங்கை
நதிதவழுஞ் சடைமுடியார் ஞானமளித் திடவுரியார்
மதிதவழ்மா ளிகைமுன்றின் மருங்குதவழ்ந் தருளினார். 47

1945. **பொருளுரை:-** விதி...கதிதவழ - இறைவனது வேத விதிகளினின்றும் தவறுபடுகின்ற புறச் சமயங்கள் இடையில் வீழ்ந்து நிலைதலையுமாறு: இருவிசும்பு..உரியார் - பெரிய ஆகாயத்தில் நிறைந்து அளவாக்கப்பட்டுப் போந்த நெடிய கங்கையாறு தவழ்ந் தோடுதற்கிடமாகிய சடைமுடியினையுடைய சிவபெருமான் ஞானம் கொடுத்தற்குரியவராகும் பிள்ளையார்: மதிதவழ்... தவழ்ந்தருளினார் - சந்திரன் தவழும் மாளிகையின் முற்றத்தின் பக்கத்தில் தவழ்ந்தருளினார்.

விளக்கவுரை:- விதி...சமயங்கள் - வேத சிவாகமங்களில் விதித்தவற்றினின்றும் வழுவியும் அவற்றை முழுதும் மறுத்தும், சிலவற்றை மறுத்தும், இவ்வாறு நிகழ்ந்து படுகின்றனவும், வைதிக சைவத்துடன் மலைந்துபடுகின்றனவும் ஆகிய புறச்சமயங்களும் அகப்புறச் சமயங்களும் என்றிவையெல்லாம். **வேற்றுச் சமயங்கள்** - என்றமையால் சமண புத்தாதி புறச்சமயங்களே குறிக்கப்பட்டன என்பாருமுண்டு.

இடைவிழுதலாவது - தலை நிமிர்ந்து முன்சென்ற வேகத்தில் முற்றும் செல்ல மாட்டாது இடையிலே முறிந்து விழுதல். **கதி தவழுதல்** - ஓங்கி நடந்தகதி நீங்கி, விழுந்து, எழமாட்டாமல் நகர்ந்து செல்லுதல். இதனால் முற்றும் அழிவுபடுத்தல் சைவக்கருத்தன்று என்பது குறிப்பு. கதிதவற என்ற பாடமுமாம்.

கடி - வார் - கங்கை - ஆயிரமா முகத்தினொடு பாய்ந்த நிலையைக் கடியப்பட்டுப் பனிபோலாக உலகுக்கு வார்க்கப்பட்ட நிலையினைப் பெற்ற கங்கை. "பரந்திழியும் புனற்கங்கை பனிபோ லாகச் செறுத்தானை" (தாண் - வீழி - 10). **கடி** - வாசனை என்று கொண்டு **வார் சடை** என்று கூட்டிச் சடைக்கு அடையாக்கி யுரைத்தனர் முன் உரைகாரர். **நதி தவழ்தல்** - வேகநீங்கி மெல்ல இறங்குதல்.

சடைமுடியார் ஞானம் அளித்திட உரியார் - "பால்அடிசில்..ஊட்டு" (1964) என்று அருளி அம்மையாரால் ஞானம் அளிப்பித்தாராதலின் **முடியார் அளித்திட** என்றார். ஏவுதற் கருத்தா. அன்றியும், தானும் தன் தையலும் குணிகுணமாகப் பிரிப்பின்றி நிற்கும் தாழ்சடையோ னாதலின் அவ்வியைபு தோன்றக் கூறியதுமாம்.

உரியார் - ஞானம் பெறும் உரிமை முன்னை நிலையிலே பெற்றவர் என்பதாம். "தவத்தினிலுணர்த்த" (சிவஞானபோதம் - 8 சூத்.) என்றும், "**முற்செய் தவத்தான்** ஞான நிகழும்' என்றும், "ஆளுடைய பிள்ளையார்முதலாயினார்க்குத் தவமின்றியும் ஞானநிகழ்ந்தவா றென்னையென்னுங் கடாவை விடுத்தற்கு மேற்செய்துழி என ஈண்டும் வலியுறுத்தார்" (சிற்றுரை) என்றும் "ஒரு பணி செய்யாச் சிரபுரச் செல்வரும் ஞானம் பெற்ற நன்மை" (சங்.நிரா.) என்றும், வரும் ஞான சாத்திர உண்மைகள் ஈண்டுச் சிந்திக்கற்பாலன **உரியார்** - உரிமை - தகுதி - யுடன் தோன்றியவர் என்பது கருத்து.

வருகை

1946. சூழவரும் பெருஞ்சுற்றத் தோகையருந் தாதியருங்
"காழியர்தஞ் சீராட்டே! கவுணியர்கற் பகமே!" யென்
றேழிசையும் பலகலையு மெவ்வுலகுந் தனித்தனியே
வாழவரு மவர்தம்மை "வருக !வரு" கெனவழைப்ப, 48

மதிதவழ் மாளிகை - மாளிகைகளின் உயர்த்தி குறித்தது. (1910 பார்க்க). சிவத்தோற்றக் குறிப்புமாம்.

தவிழ்ந்தருளுதல் - ஓராண்டு நிறைவுக்கு முன் 10,11, மாத அளவில் குழவிகள் தவழ்ந்து செல்லும் பருவக் குறிப்பு பிள்ளைத் தமிழ் நூல்களுள் இதனுள் முத்தப் பருவங் கூறுவர்.

வேற்றுச் சமயங்கள் - கதிதவழத் - தவழ்ந்தருளினார் - என்றதுவும்: முன்னர்ப் பிள்ளையார் திருமுடி எடுக்க, மறைகள் தலைஎடுத்தன (1943) என்றும், மேல், "கீழ்மைநெறிச் சமயங்கள், தளர்நடையிட் டறத்தாமுந் தளர்நடையிட் டருளினார்" (1948) என்றும் கூறுவனவும்: மேன்மைக்கு மேன்மையும்: கீழ்மைக்குக் கீழ்மையும் தரவல்லது சிவனருளொன்றே என்னு முண்மையைப் புலப்படுத்தும். 47

1946. பொருளுரை:- சூழ.. தாதியரும் - சூழ்ந்து வருகின்ற பெருகும் சுற்றத்தாராகிய மறைக்குல மகளிர்களும் தாதிமார்களும்: காழியர்...என்று - காழிநகரார்கள் யாவர்க்கும் சிறப்புச் செய்யும் செல்வமே! கவுணிய குலத்தவர்களின் கற்பகம்போன்றவரே! என்று கூறி: ஏழிசையும்...அவர் தம்மை - குரல் முதலாகிய ஏழு இசைகளும், வேத முதலாகிய பல கலைகளும் எல்லா வுலகுயிர்களும் தனித் தனியே வாழும் படி வந்தவதரித்த பிள்ளையாரை: வருக வருகென அழைப்ப - வருக! வருக! என்று அழைய நிற்ப,

விளக்கவுரை:- இந்த இரண்டு திருப்பாட்டுக்களாலும் வருகைப் பருவத்தின் நிகழ்ச்சிகள் கூறப்பட்டன. இவை பத்துப் பதினொன்றாம் மாத அளவில் நிகழும்.

சூழவரும் பெரும் சுற்றத் தோகையர் - சுற்றம் - சுற்றிச் சூழ்வதனாற் போந்த பெயர். ***சூழவரும்*** - என்பது வேண்டிய காலத்து வேண்டுவன செய்து உதவிச் சூழும் இயல்பு குறித்து நின்று, அவ்வாறு செய்யாது ஒதுங்கும் சுற்றத்தை நீக்கி நிற்றலின், பிறிதினியைபு நீக்கிய விசேடணம். இயற்கையடைமொழி எனினுமமையும்.

தோகையார்-தோகை - சினையாகு பெயராய் மயிலை உணர்த்திற்று. ***தோகையர்*** - மயில் போன்ற சாயலுடையார் என்ன உவமை ஆகு பெயராய்ப் பெண்களை உணர்த்திற்று. இதுமடியாகுபெயர்.

தாதியர் - பிள்ளைப் பேற்றின்போதும், பிள்ளை வளர்ச்சியிலும் உடனிருந்து உதவுவோர். இவர்களும் ஐவகைத் தாயரில் வைத்துச் செவிலித்தாயர் என்று எண்ணப்படுவார்.

காழியர் தம் சீராட்டே! கவுணியர் கற்பகமே! - சீராட்டு - சிறப்புக் கொண்டாட்டத்திற்குரிய பொருள்: செல்வம். ***கவுணியர் கற்பகம்*** - கவுணியர் குலம் தாம்

விளங்கவும் உலகம் உய்யவும் பெற்றெடுத்த கற்பகம் போன்றவர் சீராட்டு-தொழிலாகு பெயர்: **கற்பகம்**-உவமைஆகு பெயர். "**காழியர் தவமே! கவுணியர் தனமே!**" (1988) என்று பின்னரும் இக்கருத்தேபற்றி இம்முறையே கூறுதல் காண்க. பொருள்கள் எவற்றாலும் உவமிப்பதற் கரியாராதலின் குணப் பெருமைபற்றி யுவமப்படுத்திக் கூறினார் "ஞானத்தின் திருவுருவை" (புரா - 728) என்ற விடத்தும், பிறாண்டும் இவ்வாறே காண்க. காழி நகரார் யாவரும் தத்தம் நிலையிற்பெற்ற உரிமைபற்றிப் பாராட்டுதலாலும், பிள்ளையார் திரு அவதாரத்தில் உலகவர் நலம் பற்றிய உரிமை பெரிதும் குலத்தவர் உரிமை சிறிது மாதலானும் காழியரை முன்வைத்தும், கவுணியர் குலத்தைப் பின்வைத்தும் ஓதினார். முன் 1925-1926 பாட்டுக்களினும் இவ்வாறே காண்க.

ஏழிசையும் பலகலையும் எவ்வுலகும் தனித் தனியே வாழவரும் அவர் - ஏழிசையும் வாழ்வடைதலாவது - இசைகள் வேறுவேறு அழியுந்தன்மைப் பொருள்களிடத்து இசைந்தொழியாது பிள்ளையாரது தேவாரத்திருவாக்கினுட்பட்டுச் சிவன் புகழ்பாடுந்தன்மையிற் பயன்படுதல். **பலகலையும் வாழ்வடைதல்** - கலைகள்போலப் பல பயன்களையும் காட்டாது சிவன் புகழ்களையே முடிந்த முடிபாகத் தேவாரங்களுட் காட்டுதல்: **எவ்வுலகும்** - உலகு ஈண்டு உலகுயிர்களைக் குறித்தது. **எவ்வுயிர்களும் வாழ்வடைதலாவது** பல திறத்தும் ஈடழிந்து இறத்தல் பிறத்தலுட்படாது பிள்ளையார் அருளிய நெறியிற் பயின்று இறவாத நெறியினிற் படுதல். **ஏழிசை** - குரல் முதலாயின. முன் 221 -ல் உரைத்தவை பார்க்க. இனிய இசையாற் கலைகளின் முடிந்த பொருளை இனிதாகப் புகட்டி உயிர்களை வாழவைக்க வந்தவர் என்று இம்மூன்றும் தொடர் புடைமை காண்க.

வருக! வருக! என அழைப்ப - இஃது இப்பருவத்தே குழவிகளைக் கைதட்டி அழைக்கும் மரபு. இஃது இருபாலும் **அன்பின்** வெளிப்பா டாவதன்றியும் குழவிகள் அவ்வழைப்பிற்கிணங்கத் தவழ்ந்து செல்லும் முயற்சியினையும் ஊக்குவித்து உடல் வளர்ச்சிக்குத் துணை செய்யும் திறத்தது என்ப தியற்கைநலம். இதனை ஆசிரியர் அழகுபெற மேல் வரும்பாட்டில் எடுத்துக்கூறும் திறம் கண்டுகொள்க. இப்பருவம் வாரானை (**ஆனை** - தொழிற்பெயர் விகுதி) என்று பிள்ளைத்தமிழ் நூல்களுள் வழங்கப்பட்டுத், தெய்வங்களின்அருட்டிறனை அருமைப்பாடு பெறத் தோற்றும் வழியாலமையும் பகுதியாகும். **அழைப்ப** - தோகையரும் தாதியரும் அழைக்க. அவ்வாறு அழைத்தவர்களது முகங்களை மலர்வித்தல் முதலியவாற்றால் பிள்ளையார் இன்புற அளித்தார் என மேல் வரும் பாட்டுடன் முடிக்க: தோகையரும் தாதியரும் அழைக்கப் - பிள்ளையார் அளித்தார் என்க. அழைக்க என்ற வினையெச்சம் பிறவினை முதல் வினைகொண்டு முடிந்தது. இவ்வாறன்றி **அழைப்ப** - என்பதனைப் பகரவீற்றுப் பலர்பால் வினை முற்றாகவே கொண்டு அழைப்பார்கள் - அழையா நிற்பார்கள் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள்.

அழைப்ப-அளித்தார் - முன் 1944-ல் இருகை கொட்டிச் சப்பாணி கொட்டுதற் கேற்ப இருபொருள் கூறியது போல, ஈண்டு அழைப்பாரும் அழைக்கப்படுவாரும் என்றிருதிறத்தவருள், உலகநிலையினின்று அழைத்தார்களது செயலை இப்பாட்டாலும், அதிற்கீடாக அழைக்கப்பட்ட பிள்ளையாரது அருட் செயலை வேறாக மேல் வரும்

1947. திருநகையா லழைத்தவர்தஞ் **செழுமுகங்கண் மலர்வித்தும்,**
வருமகிழ்வு தலைசிறப்ப மற்றவர்மேற் **செலவுகைத்தும்,**
உருகிமனங் கரைந்தலைய வுடனணைந்து **தழுவியு,** முன்
பெருகியவின் புறவளித்தார் பெரும்புகலிப் பிள்ளையார். 49

---

*பாட்டாலும் கூறிய தெய்வக் கவிநயமும் காண்க. பெருகிய இன்பு என்றும், **அளித்தார்** - என்றும் கூறும் சொல்லாற்றற் குறிப்புக்களும் காண்க.*

சுற்றத்தில் - ஏழுலகும் *- என்பனவும் பாடங்கள்.* *48*

1947. பொருளுரை:- திருநகையால்...மலர்வித்தும் - அவ்வாறு அழைத்தவர்களது செழுமுகங்களைத் தமது திருநகைப்பினால் மலரச் செய்தும்: வருமகிழ்வு-செல வுகைத்தும் - அதனால் வரும் மகிழ்ச்சி மேலும் பெருகும்படி அவர்கள் மேனி மேல் பொருந்தும்படி உந்தியும்: உருகி...தழுவியும் - மனம் உருகிக் கரைந்து நிலைபெறாது இளகும்படி உடன்சேர்ந்து தழுவியும்: முன்....அளித்தார் முன்பு பெருக்கெடுக்கும் இன்பம் பொருந்தும்படி அளித்தருளினார்: பெரும் புகலிப் பிள்ளையார் - பெரிய சீகாழிப் பதியில் அவதரித்த பிள்ளையார்.

இந்த இரண்டும் பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை:- திருநகையால் - மலர்வித்தும் *என்க.* ***நகை*** *- அழைத்தவர்களது அழைப்பினை ஏற்ற அருள் வெளிப்பாடாகிய சிரிப்பு.* ***செழுமுகங்கள் மலர்வித்தும்*** *- முன்னரே செழிப்புடைய முகங்களை மேலும் இன்பம் மூண்டமையால் மலரச் செய்தும்.*

வரும் மகிழ்வு தலை சிறப்ப *- அவ்வாறு பெற்ற மிகுமகிழ்ச்சி மேலும் மூண்டு எழும்படி.*

மேற் செலவுகைத்தலாவது *மேற்சென்று திருமேனிபட உந்துதல். திருவடியால் உதைத்தல் என்பாரு முண்டு.*

உருகி மனம் கரைந்து அலைய *- மேற்கூறிய இரண்டுவகையாலும் பெருகிய மகிழ்ச்சி மேலும் மூள்வதனால் மனம் உருகுதலும், கரைதலும், அளவுபடாது அலைதலும் ஆகும்படி.*

உடனணைந்து தழுவியும் *- நகைத்தல் - உகைத்தல் - தழுவுதல் என்ற இவை குழவிகள் தம் செயற்கையால் தாயரை இன்பமூட்டும் இயல்பின. "மக்கண்மெய் தீண்ட லுடற்கின்பம்" (குறள்)*

திருநகையால் அழைத்து *- மலர்வித்து என்று கொண்டு நகைப்பினுடன் கூடிய உங்கார ஒலியினால் அவர்களைத் தாமும் எதிர் கூவி அழைத்து என்று உரைத்தலுமாம். இதனை முத்தப் பருவங் குறித்த செயல் என்பர் இராமநாதச் செட்டியார்.*

நகையால் முகநோக்குதல், திருவடி சூட்டுதல், மேனி தீண்டுதல் இவை பக்கு ஆன்மாக்களுக்கு நல்லாசாரியர் செய்யும் தீக்கைக் குறிப்புக்களாதலும் காண்க. *49*

1948. **வளர்பருவ முறையாண்டு வருவதன்முன் மலர்வரிவண்**
டுளர்கருமென் சுருட்குஞ்சி யுடனலையச் செந்நின்று,
கிளரொலிகிண் கிணியெடுப்பக் கீழ்மைநெறிச் சமயங்கள்
தளர்நடையிட் டறத்தாமுந் தளர்நடையிட் டருளினார். 50

ஓர் ஆண்டு நிறைவு

1949. **தாதியர்தங் கைப்பற்றித் தளர்நடையி னசைவொழிந்து**
சோதியணி மணிச்சதங்கை தொடுத்தவடம் புடைசூழ்ந்த
பாதமலர் நிலம்பொருந்தப் பருவமுறை யாண்டொன்றின்
மீதணைய நடந்தருளி விளையாடத் தொடங்கினார். 51

---

*1948. **பொருளுரை:-** வளர்...முன் - மேலே சொல்லியபடி வளரும் பருவங்களின் முறையிலே ஓராண்டு நிறைவு வருவதன் முன்னே: மலர்...செந்நின்று - மலர்களில் வரிவண்டுகள் ஒலிக்கும் கரிய மெல்லிய சுருண்ட குஞ்சியுடன் அசையச் செம்மையாய் நேர் நின்று: கிளர்...எடுப்ப - கிளரும் ஒலியினைக் கிண்கிணிகள் சத்திக்க: கீழ்மை.. தளர்நடையிட்டருளினார் - கீழ் நெறிகளைக் காட்டும் சமயங்கள் தள்ளாடி ஒழியும்படி தாமும் தளர்நடை பயின்றருளினார்.*

***விளக்கவுரை:-** இஃது ஓராண்டுநிறைவின்முன் நிகழும் தளர்நடைப்பருவத்தின் நிகழ்ச்சி கூறியபடி.*

***வளர் பருவம்** - முன் 1942 முதல் கூறிய முறையில் வளர்ச்சியடையும் பருவங்களின்படி.*

***மலர்** - பிள்ளையார் சிரத்திற் குஞ்சியிற் சூடிய மலர்கள். **குஞ்சி** - ஆண்மக்கள் தலைமயிர்: **உடன் அலைய** - திருமேனியசையுந்தோறும் குஞ்சியும் அசைய. **அலைதல்** - கட்டப்படாமல் அசைதல்.*

***செந்நின்று** - தளர் நடையினின்றும் நேரே நிமிர்ந்து நின்று.*

***கீழ்மை நெறிச் சமயங்கள்** - இவை புறச் சமயங்கள்.*

***தளர்நடையிட்டறுதல்** - தட்டழிந்து மந்தகதியாய்ச் சென்று ஒதுங்குதல்.*

***கிண்கிணி கிளர் ஒலி எடுப்ப** - **எடுப்ப** - எடுத்தலால் **அற** - என்று காரணப் பொருளில்வந்தது. எடுப்ப என்ற குறிப்பு மது. **எடுத்தல்** - ஓங்குதல். **கிண்கிணி** சதங்கை ஒலிக் குறிப்பாற் போந்த பெயர். ஒலி ஓங்க அவை தளர்ந்தன என்க.*

***ஒளிக்கிங்கிணி** - **சுடர்க்குஞ்சி** - என்பனவும் பாடங்கள். 50*

*1949. **பொருளுரை:-** தாதியர்தம்....ஒழிந்து - தாதியர்களுடைய கையைப்பற்றி நடத்தலால் தளர்நடையின் அசைவு தீர்ந்து: சோதி...நிலம் பொருந்த - ஒளியும் அழகும் உடைய மணிகளிழைத்த சதங்கைகள் கட்டிய வடம் பக்கத்தே சுற்றிய பாதமலர்கள்*

சிறுதேர் சிற்றில்

1950. **சிறுமணித்தேர்** தொடர்ந்துருட்டிச், செழுமணற்சிற்றில்களிழைக்கு
நறுநுதற்பே தையர்மருங்கு நடந்தோடி **யடர்ந்தழித்துங்,**
குறுவியர்ப்புத் துளியரும்பக் கொழும்பொடியா டியகோல
மறுகிடைப்பே ரொளிபரப்ப வந்துவளர்ந் தருளுநாள்: 52

நிலத்திற் பொருந்தும்படி: பருவமுறை....அணைய - பருவங்களின் முறையில் ஓராண்டு நிறைவாகி மேற்செல்ல: நடந்தருளி....தொடங்கினார் - நடந்து சென்றருளவும் விளையாடவும் தொடங்கினார்.

__விளக்கவுரை:-__ இப்பாட்டால் ஓராண்டு நிறைவின்மேல் திருவிளையாட்டுப்பருவ நிகழ்ச்சிகளைக் கூறினார்.

__தாதியர்.... ஒழிந்து__ - இதனால் தளர் நடையில் செந்நின்று தள்ளாடி நடக்கத் தொடங்கி நடைபயிலும் குழவி அத்தளர் வொழிந்து நடக்கும் திறத்தின் பயிற்சி கூறப்பட்ட திறம் காண்க.

__பருவமுறை...மீதணைய__ - "வளர்பருவ முறையாண்டு வருவதன் முன்" என்று முன்பாட்டிற் கூறியதற் கேற்ப, அவ்வாறு வந்த பருவம் ஓராண்டின் மேற் செல்ல என்றார். __அணைய__ - அணைந்த காலத்தில்.

__நடந்தருளி__ - முன் தவழ்ந்தருளினார் (1945), நடையிட்டருளினார் (1948) என்றதற்கேற்ப __அருளி__ என்றார். "மேல் வளர்ந்தருளுநாள்" (1950) என்பதும் காண்க. பிள்ளையாரது வளர்ச்சிப் பருவச் செயல்கள்யாவும் இறைவரது அருளிப் பாடுகளேயாம் என்பது.

1941 முதல் பத்துப் பாடல்களிலும் காப்புப்பருவம் முதலிய பத்துப்பருவங்களும் அடங்க வைத்து, 3-வதுமாத முதல் 21 மாதம் வரை பத்தையும் முடித்து, இரண்டாவது ஆண்டுடன் __வளர்ந்தருளினார்__ என முடித்து, அருட்பேறுபெறும் மூன்றாவது ஆண்டைத் தனியே தொடங்கினார் என்பாரும் உளர்: 1951-ல் __வளர்ந்தருளி__ என்றது அநுவாதம் என்றும் கொள்வர். *51*

1950. __பொருளுரை:-__ சிறு......உருட்டி - அழகிய சிறுதேரினைப் பற்றித் தொடர்ந்து உருட்டிச் சென்றும்: செழுமணல்....அழித்தும் - செழுமணலால் சிற்றில்கள் கட்டி விளையாடும் நறிய நெற்றியையுடைய பேதைப் பெண்களிடத்து நடந்தும் ஓடியும் அச்சிற்றில்களைக் காலால் அழித்து விளையாடியும்: குறுவியர்ப்பு....வளர்ந்தருளும் நாள் - சிறு வேர்வைத்துளிகள் திருமேனியில் அரும்ப அதனுடன் திரு நீற்றினைப் பூசிவிளங்கிய திருக்கோலம் அத்திருவீதியிற் பேரொளி பரப்ப வந்து இவ்வாறு வளர்ந்தருளும் நாளிலே,

__விளக்கவுரை:-__ இப்பாட்டினால் சிற்றிற்பருவமும், சிறுதேர்ப் பருவத் தொடக்கமும் கூறினார். சிற்றிற் பருவச் செயல்கள் மூன்றாண்டு அளவிலும், சிறுதேர்ப்பருவத் தொடக்கச் செயல்கள் மூன்றாண்டு இறுதியிலும் நான்காவதாண்டுத் தொடக்கத்திலும் நிகழ்வன: சிறுதேர்ப் பருவம் ஆண்பாற் பிள்ளைத்தமிழ் நூல்களில் கூறப்படும் பத்துப் பருவங்களுள்

மூவாண்டு

1951. மங்கையோ டுடனாகி வளர்தோணி வீற்றிருந்த
திங்கள்சேர் சடையார்தந் திருவருட்குச் செய்தவத்தின்
அங்குரம்போல் வளர்ந்தருளி, யருமறையோ டுலகுய்ய
எங்க ள்பிரா னீராண்டின் மேலோராண் டெய்துதலும்: 53

இறுதியில் வைத்துப் பாராட்டப்படுவது. மூவாண்டு நிறைவெய்தும் பருவம் கூறி உலக நிலையிற் பிள்ளைப் பருவத்தை நிறைவாக்கிக்கொண்டு மேலே தெய்வநிலையில் அருள்ஞானப்பாலுண்டு அருள் ஞானப்பிள்ளையாகும் பருவங்கூறப்புகுகின்றாராதலின் இவ்வாறு முடித்துக் காட்டினார். பிள்ளைப்பருவக் குறிப்புக்கள் கண்ணப்ப நாயனார் புராணத்துக் கூறுவனவும் ஈண்டு நோக்கற்பாலன. இஃது மனையின் புறத்தும் போந்து விளையாடும் பருவம்.

மணற் சிற்றில்கள் இழைக்கும் - பேதையர் *- மணலினால் சிறு வீடுகட்டி விளையாடும் இளஞ்சிறுமியர். இது சிறுமியர்க்குரிய விளையாடல்.* ***செழுமணல்*** *- ஈரமுடைய நன்மணல்: அது சிறுவீடு கட்டுதற்கு உதவுவது.* ***பேதையர்*** *- சிறுமியர் என்ற பொதுமை குறித்தது. ஐந்து வயது முதல் ஏழுவயதுவரை உள்ள பேதை பருவங் குறித்ததென்பதுமாம். சிற்றில் அழித்துக் குறுநடைக்குறும்பு செய்து விளையாடுதல் சிறுவர்க்குரிய விளையாட்டு. "எயினப் பிள்ளைப் பேதைய ரிழைத்த வண்டல், அடிச்சிறு தளிராற் சிந்தி" (673) என்றதும் காண்க.*

அழித்தும் *- சிறுபோதில் நிலையழியும் மணற் சிறுவீடு கட்டிச் சிறுமகிழ்வுறும் பேதைகளுக்கு அழியாத பேரானந்தந்தரும் பெருவீட்டினை அளிக்கும் நிலைபெறுவன இத்திருவடிகள் எனக் காட்டுவார்போன்று அச்செயல் விளங்கிற்று என்ற குறிப்பும் காண்க.*

தொழும் பொடியாடிய கோலம் *- பொடி - திருநீறு. "பொடிநுகருஞ் சிறுத் தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாக" (பிள்.தேவா. செங்காட்). புழுதிபடிய விளையாடிய என்றலுமாம். "அவ்விரதப் பொடியாடும் வாழிவளர் மறைச்சிறார்' (1909) என்ற குறிப்புக் காண்க. பின்னர்த் தாதையார் பின் மனைமுன்றிற் றொடர்ந்து சென்றது இப்பருவ நிலையால் போந்தது.* ***மறுகிடை - வந்து*** *- என்க.*

பேரொளி பரப்ப *- முழுஞானப் பேருணர்விற் பொலியும் பேரொளி பின்னர்ப் பரப்பும் நிலையினை முன் அறிவிக்கும் இளஞ்சோதி காட்ட.*

வந்து - வளர்ந்தருளும் நாள் - எய்துதலும் (1951) - நிகழ்ந்ததனை (1952) என்று மேல் வரும் பாட்டுக்களுடன் கூட்டி முடித்துரைத்துக் கொள்க.

செழுமணிச் சிற்றில் *- என்பதும் பாடம்.* 52

1951. ***பொருளுரை:-*** *மங்கையோடுடனாகி.....திருவருட்கு - பெரிய நாயகியா ருடனாகியிருந்து, வளரும் திருத்தோணியில் வீற்றிருந்தருளும் மதி சேர்ந்த சடையினையுடைய தோணியப்பரது திருவருளாகிய பயனுக்கு: செய்தவத்தின்...வளர்ந்தருளி - செய்யும் தவத்தின் மூலம் உளதாகும் முளையைப் போல வளர்ந்தருளி:*

1952. நாவாண்ட பலகலையு நாமகளு நலஞ்சிறப்பப்,
பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்தச்,
சேவாண்ட கொடியவர்தஞ் சிரபுரத்துச் சிறுவருக்கு
மூவாண்டி னுலகுய்ய நிகழ்ந்ததனை மொழிகின்றேன். 54

அருமறையோடு....எய்துதலும் - அரிய மறைகளினால் உலகம் உய்யும்படி எமது பெருமானாகிய பிள்ளையார் இரண்டு ஆண்டுகளின் நிறைவின்மேல் ஓர் ஆண்டு நிறையும் பருவத்தினைப் பொருந்தியபோது:

*விளக்கவுரை:- **திங்கள் சேர்** - திங்கள் அபயம் புக்குச் சேர்ந்த - வந்தடைந்த.*

மங்கையோடு உடனாகித் தோணி வீற்றிருந்த - சடையார் - அம்மையப்பராகி ஒருங்கு எழுந்தருளிய நிலை. இந்நிலையே ஐயன் வெளிவந்து பிள்ளையார்க்கு ஞானபோனகம் அருளவுள்ளதனையும் இவர்களிடத்தே வரங்கிடந்து சிவபாதவிருதயரும் பகவதியாரும் (1918-1923) பேறுபெற்றதனையும் குறிக்க இவ்வாறு கூறினார்.

***திருவருட்கு** - திருவருளாகிய பயன் தருதற்கு.*

***அங்குரம்** - முளை. ஏகதேச வுருவகம். **செய்தவத்தின்** - சிவபாதவிருதயரும் தேவியாரும் செய்த தவத்தினாற் பெற்ற. **அங்குரம்** - பிள்ளையார்: **அருள்** - பயன்.*

***அங்குரம்போல் வளர்ந்தருளி** - அங்குரம் வளர்வதுபோல வளர்ந்தது.*

***அருமறையோடு உலகு உய்ய** - அருமறைகளின் உண்மைப் பொருளைப் பெறுதலால் உலகம் உய்வடையும் பொருட்டு. ஒடு - கருவிப் பொருளில் வந்தது. மறையுய்யவும் உலகுய்யவும் என்று பிரித்துரைத்தலுமாம். மறை உய்தலாவது உலகுக்குப் பயன் விளையாதிருந்த நிலை நீங்கிப் பயன் செய்தல்.*

***ஈராண்டில்மேல் ஓராண்டு எய்துதலும்** - ஆண்டாண்டாக வளர்ச்சி கூறுவார் இவ்வாறு கூறினார். "ஆண்டொன்றின்" (1949) **ஓர்** - நினைக்கத்தக்க என்றதுமாம். 53*

1952. பொருளுரை:- நாவாண்ட.....நலஞ்சிறப்ப - நாவினால் ஓதிப்பயிலும் வேத முதலிய பல கலைகளும், நாவின் கிழத்தியாகிய கலைகளும் சிறந்த நன்மை பெற்றோங்கவும்: பூவாண்ட....பொலிவெய்த - பூவில் இருக்கும் திருமகளும் சிவபுண்ணியமும் பொலிவு பொருந்தவும்: சேவாண்ட....மொழிகின்றேன் - இடபத்தைக் கொடியாகவுடைய சிவபெருமான் எழுந்தருளிய சிரபுரத்தில் அவதரித்த சிறுவராகிய பிள்ளையாருக்கு மூன்றாண்டுப் பருவத்தில் உலகமுய்ய நிகழ்ந்த அருட் செய்கையினை இனி மொழியப் புகுகின்றேன்.

*விளக்கவுரை:- **நாவாண்ட பலகலையும் நாமகளும்** - நாவினை இடமாகக் கொண்டு பெருகும் வேதமுதலிய கலைகள். **நா ஆண்ட** எழுதிப் பயிலாமல் ஓதியே பயிலப்பட்ட. **கலையும் நாமகளும்** - கலைகளும் அதற்கு உரியதெய்வமாகிய வாணியும். **நலஞ்சிறத்தலாவது** இதுவரை பயனற்றிருந்ததுபோலன்றி நன்மை தரவல்ல சிறப்புப்*

1953. பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர் தமைப்பரமர்
மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருளத்,
தொண்டினிலை தரவருவார் தொடர்ந்தபிரி வுணர்வொருகாற்
கொண்டெழலும் வெருக்கொண்டாற் போலழுவர் குறிப்பயலாய். 55

பெறுதல். மறைகளை முன்னர்க் (1951) கூறினாராதலின் ஏனைக் கலைகளை இங்குக் கொள்ளவைத்தார். நாமகளை உடன்கூறிய கருத்துமது.

பூவாண்ட திருமகளும் புண்ணியமும் பொலிவெய்த - பூ - தாமரை. திருமகள் - இலக்குமி. ஆண்ட - இருக்கையாக்கொண்டு ஆட்சி செலுத்துகின்ற என்ற பொருளில் வந்தது. புண்ணியம் - சிவபுண்ணியம். திருமகள் - ஈண்டு ஞானமுதல்வியாகிய அம்மை - ஞான வாணி - என்றலுமாம். பொலிவெய்துதல் - ஓங்கி விளங்குதல்.

சேவாண்ட கொடி - "சேவேந்து வெல்கொடி", "கோதிலா வேறாங் கொடி" என்றபடி இங்கு இனி உளதாக்கப்பெறும் சிவஞான வெற்றிக் குறிப்புப்படக் கொடியினைத் தேற்றம்பட உயர்த்திக் கூறினார். கொடியவர்தம் சிரபுரம் - கொடியுடையார்க் கிடமாகிய சிரபுரம். சிரபுரம் - சீகாழியின் ஏழாவது திருப்பெயர். உலகில் சைவம் தலைமை பெற எழுவிப்பதென்பது குறிப்பு. கொடியவர்தஞ் சிறுவர் - என்று கூட்டிப் பிள்ளையாரை உணர்த்தியதாகக் கூறுவாரும், அக்குறிப்பினால் அவர் முருகப் பெருமானாவர் என்பாருமுளர். அவை பொருந்தாமை முன் உரைக்கப் பட்டது. பின்னரும் உரைக்கப்படும். கடைப்பிடிக்க.

உலகுய்ய நிகழ்ந்ததனை - அந்நிகழ்ச்சி அவர் பொருட்டாலன்றி உலகுய்ய நிகழ்ந்ததாம் என்பது. "உலகெலாம்" என்ற அருண்மொழிக் குறிப்புமாம்: "மனையறத்தி லின்பமுறு மகப்" (1917) பேறு தந்த நிகழ்ச்சியினை இதுவரை கூறியபடி, இனிப் "பரசமய நிராகரித்து நீறாக்கும் - காதல" ராகிய பேற்றின் நிகழ்ச்சியினை மேல் உரைக்கின்றாராதலின் அவ்வேறுபாட்டினை இவ்வாறு குறிக்கின்றார்.

மொழிகின்றேன் - இனி மொழிவேன்: விரைவுபற்றி நிகழ்காலத்தாற் கூறினார். அன்றியும் இந்நிகழ்ச்சியின் பெருமையும் தெய்வத் தன்மையும் படிப்போரது மனத்திற் படிய வற்புறுத்தும்படித் தொடங்கிக் காட்டியதுமாம். இது ஆசிரியர் மரபு. "நிகழ்ந்தது மொழிவே னுய்ந்தேன்" (173) முதலியவை காண்க. 54

1953. பொருளுரை:- பண்டு...தமை - முன்னை நிலையில் திருவடியை மறவாத பான்மை யோராய் நின்றவரை: பரமர் - சிவபெருமான்: மண்டு...அளித்தருள - மிக்க தவம் செய்த மறைக்குலத்தோராகிய சிவபாதவிருதயருடைய வழிபாட்டிற்குப் பயனாகக் கொடுத்தருளினாராக: தொண்டின் நிலைதரவருவார் - திருத்தொண்டின் நிலையினை உலகுக்கு அருள்வதற்காக அவதரித்த பிள்ளையார்: தொடர்ந்த...கொண்டெழலும் - சிவனையே தொடர்ந்து கொண்ட நிலையறாது பிரிந்து போந்த பிரிவுணர்வு ஒருகால் மனத்துட் கொண்டு அந்நினைவெழுந்தவுடனே: வெருக்கொண்டாற்போல்..... அயலாய் - வெருவுதலைக் கொண்டவர்போல அயலாகியதொரு குறிப்புடன் அழுவார்.

விளக்கவுரை: இத்திருப்பாட்டுப் பிள்ளையாரது முன்னை நிலையினை நிலைபெறவுணர்வதற்குப் பேருதவி செய்ய ஆசிரியர் அளித்த அருளமுதமாகும். நாயன்மார்களின் முன்னைநிலையை இவ்வாறு குறிப்பாலுணர்த்துவது ஆசிரியரது சிறந்த மரபு. 751-ம் பாட்டின்கீழ் உரைத்தவை பார்க்க.

பண்டு திருவடி மறவாப் பான்மையோர்தமை - "சித்திக்கே யுய்த்திட்டுத் திகழ்ந்தமெய்ப் பரம்பொருள் சேர்வார் தாமே தானாகச் செயுமவன்" (பிள்.தேவா-கழுமலம் - தாளச்சதி- வியாழக்குறிஞ்சி. 7) என்றபடி பிறவியில் வாரா நிலையில் இறைவரை மறவாதுட்கொண்டு அவனேதானாக ஆனந்தத்தில் இருந்த ஓர் முத்தான்மா என்பது பிள்ளையாரது முன்னை நிலையாம். **மறவாமை** என்பது அதன் அடிப்படை. "மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி" (வாயிலார் - புரா-8): "மறவா திருக்க வரந்தர வேண்டும்" (அரசுகள் தேவா - திருவிருத் - பாதிரிப்புலி):

"மறந்தேயுந் தன்கழனான் மறவா வண்ண நல்கியவத், திறம்பாடல்" (திருவா-தெள்):

"என்றும் மறவாமை வேண்டும்" (1776) முதலிய கருத்துக் காண்க.

பிள்ளையார் இந்நிலை கைவரப் பெற்றிருந்தவர் என்பது "திருந்தடி, மறக்குமா றிலாதவென்னை மையல் செய்திம் மண்ணின்மேற், பிறக்கு மாறு காட்டினாய் பிணிப்படு முடம்புவிட், டிறக்கு மாறு காட்டினாய்க் கிழுக்கு கின்ற தென்னையே" (பிள்.தேவா-துருத்தி - நட்டரா -5) என்ற அவரது திருவாக்கா லுணரப்படும். ஆசிரியர் கூறும் இச்சரிதப் பகுதிக்கு இது சிறந்த அகச்சான்றாகும். - **திருவடி மறவா** என்றதற்குப் பூசித்த என்று கொண்டும், திருச்சேய்ஞலூரிலும், திருச்செந்திலிலும் முருகப்பெருமான் சிவபூசை செய்த வரலாற்றினை உட்கொண்டும் இங்கு அப்பெருமானைக் குறிக்கத் தகாத உரைகொள்வாருமுண்டு. அவ்வரலாறுகள் சிவபூசை செய்து உய்யும்படி உலகுக்கு அறிவுறுத்திக்காட்டும் ஆசாரியத்தன்மைபற்றி எழுந்தனவேயன்றித், தந்நிலையின் ஆன்மாக்கள் உய்திபெறும் அடிமறவா நிலைபற்றியன அல்ல என்பது தேற்றம். "முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே", "சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன்சீர் பரவி" முதலியனவாக முருகப்பெருமானைப் பிள்ளையார் எடுத்துக் கூறும் பகுதிகளின் கருத்தும் உன்னுக. "பண்டுதாம் பிரிந்தெய்துஞ் சேயநன்னெறி குறுகிட" (வெள் - சருக் - 28) என்று ஆளுடையநம்பிகளைப்பற்றிக் கூறும் திறமும் ஈண்டு ஒப்புநோக்கற்பாலது. "தவநெறி வளர்க்க வந்தார் தலைப்படுஞ் சார்பு நோக்கிப், **பவமறவென்னை முன்னா ளாண்டவப் பண்பு கூட, நவமலர்ப் பாதங் கூட்டு** மென்னு நல் லுணர்வு நல்க" (புரா - 1244) என்றும், "நம்பனே யுன்பாத மெயந்நீழல் சேரும் பருவமீ தென்று பாட" (மேற்படி 1245) என்றும்வரும் சரிதத் திருவாக்குக்களும் காண்க. இன்னும் இவைபோல ஆண்டாண்டு வருவனவும், முன் உரைத்தனவும் பார்க்க.

பான்மை-தன்மை: **திருவடி மறவாப் பான்மையாவது** இறைவன் செய்யும் உபகாரத்தை மறத்தற்கேதுவாகிய மலவாசனையுமில்லாத சுத்தநிலையின் றன்மை. சீவன் முத்தி நிலையினும் ஒரோவழி "இங்குளி வாங்குங் கலம்போல" மெல்லிய வாதனை தாக்குதலும் உண்டு. அதுவுமில்லாத முத்தநிலைமையினர் பிள்ளையாரென்க.

1954. மேதகைய விந்நாளில் வேறொருநாள் வேதவிதி
நீதிமுறைச் சடங்குநெறி முடிப்பதற்கு நீராடத்
தாதையார் போம்பொழுது, தம்பெருமா னருள்கூடச்
சோதிமணி மனைமுன்றிற் றொடர்ந்தழுது பின்சென்றார். 56

மண்டுதவ மறைக்குலத்தோர் - சிவபாதவிருதயர். ***மண்டு*** - பெரிய ***வழிபாட்டின்*** - தவத்தின் பயனாக (1917-1918). ***தமை - வழிபாட்டினால் - அருள*** என்க.

தொண்டின் நிலைதர - திருத்தொண்டினை நிலைபேறு பெறுவித்து உலகுக்கு விளக்க. ***வருவார்*** - பிள்ளையார் அவதரித்தது பிறவி தரும் வினைப்பான்மை எதுவும் பற்றியன்று: திருத்தொண்டினை நிறுவுவதற்கேயாம் என்பது. ***"புண்ணியக்கன் றனையவர்"*** (1960), "***வழிபாட்டி னளித்தருள***" என்றது மிக்கருத்து.

தொடர்ந்த பிரிவுணர்வு - திருவடியை மறவாது தொடர்ந்தநிலை யறாது பிரிந்து போந்த உணர்ச்சி. ***பிரிவுணர்வு*** - பிரிந்தேம் என்ற உணர்ச்சி - நினைவு. ***தொடர்ந்த பிரிவு*** - தொடர்வற வினைப்பிறவியிற் பிரிந்து செல்வதுபோலாது, தொடர்ச்சியறாத பிரிவு: மலத்தால் மறந்து பிரிந்து பிறப்பார்போலல்லாமல், மறவாத தன்மை நழுவாது - மறக்காது - அருளாற் றொண்டினிலைதரப் பிரிந்த பிரிவு: பிரியாத பிரிவு,

ஒருகாற் கொண்டு எழலும் - ஒவ்வோர் காலத்தில் மனத்தை இடங்கொண்டு மேல் எழும்புதலும். ***பிரிவுணர்வு - எழலும்*** (உலகில் வந்தமைபற்றி) ***அழுவர்*** என்க.

வெருக்கொண்டாற்போல் - வெருக்கொள்ளுதல் - வெருவுதல். சடுதியிற் றோன்றி மறைவதோர் அச்சம்போன்ற மனநிலை: துணுக்கு என்றலும் பொருந்தும்.

அயற் குறிப்பாய் அழுவர் - என்க. அயற்குறிப்பாவது காரணங் காணமுடியாத வேற்றுநிலைக் குறிப்பு. குழவிகள் அழுங்குறிப்பின் காரணத்தால் அவற்றுக்கு வேண்டுவனவற்றை அறிந்து தாயர் இயற்றுவர். அதுபோல் அறியமுடியாத நிலையில் அழுதலால் அயற்குறிப்பு எனப்பட்டது.

உணர்வொருபால் - என்பதும் பாடம். 55

1954. ***பொருளுரை:-*** மேதகைய..நாள் - (இவ்வாறு) மேம்பட்ட இந்நாள்களில் வேறுமொரு நாளிலே: வேதவிதி...பொழுது - வேதங்களில் விதிக்கப்பட்ட நியதியின் முறையில் செய்யும் சடங்கு நெறியினை முடிப்பதற்காக முன்னர்நீராடும்பொருட்டுத் தாதையார் போகும்பொழுது: தம்பெருமான் அருள்கூட - தமது பெருமானது திருவருள் கைகூடுதலால்: சோதி....பின்சென்றார் - திருமனையின் ஒளியும் அழகும் உடைய முன்றிலிக்கண்ணே பிள்ளையார் தாமும் தாதையாரைத் தொடர்ந்து அழுது கொண்டு பின்னே சென்றனர்.

விளக்கவுரை:- மேதகைமை - தொடர்ந்த பிரிவு உணர்வு மேம்பாடு. இறைவாது இடையறாத உணர்வு நீங்க உலகத்திருக்கின்றோமே என்ற நினைவு மேம்பாடுடையது.

1955. பின்சென்ற பிள்ளையார் தமைநோக்கிப் பெருந்தவத்தோர்
முன்செல்கை தனையொழிந்து முனிவார்போல் விலக்குதலும்,
மின்செய்பொலங் கிண்கிணிக்கால் கொட்டியவர் மீளாமை
"யுன்செய்கை யிதுவாகிற் போ" தென்றங் குடன்சென்றார். 57

வேறொரு நாள் - வெருக்கொண்டாற்போலக் குறிப்பயலாய் அழுத பல நாள்களும் மேதகைமையுடையன. அவற்றுள் அன்று அழுது தொடர்ந்து பின்சென்ற நாள் வேறாகத் தனிச் சிறப்புடையது என்பதாம். என்னை? முன், அந்நாள் பலவும் பிரிவுணர்வுகொண்டு அழுத அம்மட்டில் அமைய, இந்நாள், அப்பிரிவு நீங்க இறைவரைக் காணக்கூட்டும் சிறப்புத் தரும் நாளாதலின் என்க. **தொடர்ந்து அழுது** - என்ற குறிப்புமது. இனி, இவ்வறு அழுது சென்ற நாட்கள் முன்னரும் பலவுள வேனும், இஃது அவற்றின் வேறாய் இறைவரது ஞானம்பெறக் கூட்டி முன்னைய உலக நிலையினின் மீளாது, வேறுபட்டுத் திருமனைக்குத் திரும்பும் நாள் என்றலுமாம். "வெவ்வே றியல்பினி லமைத்துக்கொண்டு" (811).

வேதவிதி-நீராட - மறைவிதி நியமமாகிய நித்தியகருமங்களைச் செய்து முடித்தற்கண் முன் அங்கமாக நீராடுதல் - குளித்தல் - செய்ய. நீதி - நியதி: **சடங்கு** - சுருதிகளில் விதித்தவை. சிரௌதம் என்ப. இவை (1957) பின் உரைக்கப்படுவன.

தம்பெருமான் அருள்கூடப் - பின்சென்றார் என்க. கூடுதலால் என்றும், கூடும் பொருட்டு என்றும் உரைக்க நின்றது.

தொடர்ந்தழுது - வெருக்கொண்டாற்போல் சடுதியில் அழுது நின்றுவிடாது தொடர்ச்சிபெற அழுது என்ற குறிப்புமாம், தாதையார்பின் பிள்ளையார் பின்சென்றார் என எழுவாய் வருவிக்க. 56

1955. பொருளுரை:- பின்சென்ற....விலக்குதலும் - தமது பின் தொடர்ந்து சென்ற பிள்ளையாரைப் பெருந்தவத்தோராகிய சிவபாதவிருதயர் நோக்கி, மேற்செல்வதனை நிறுத்தி முனிவுகொள்பவர்போலக் காட்டி, அவர் தமது பின்செல்வதை விலக்குதலும்: மின்செய்....மீளாமை - ஒளி வீசுகின்ற பொன்னாற் செய்யப்பட்ட கிண்கிணியணிந்த கால்களைக் கொட்டி இவர் மீளாது நின்றாராக: உன் செய்கை...உடன் சென்றார் - உனது செயல் இதுவானால் போதுவாயாக என்று சொல்லி அவருடனே சென்றனர்.

விளக்கவுரை:- முனிவார்போல் விலக்குதலும் - விலக்கிய செயலை வற்புறுத்தக் கோபக்குறி காட்டினர். **போல்** - உண்மையிற் சினங்கொள்ளாது சினந்தவர்போலக் காட்டினர் என்க. பின்னர்க் "கைச்சிறிய தொருமாறு கொண்டோச்ச" (1971) என்ற நிகழ்ச்சியும் இக்கருத்து. **விலக்குதல்** - பின்வருதலைத் தடுத்தல்.

கால் கொட்டுதல் - பெரியோர் தடைசெய்த செயலைத் தம்மிச்சையில் விடாது பற்றும்போது குழந்தைகள் மேற்கொள்ளும் செயல்: இரண்டு கால்களையும் கொட்டி அச்செயலிற் பிடிவாதம் செய்தலாம். இது மிக உயர்வாகிய தன்மைநவிற்சியணி. **மீளாமை** - மீளாது நின்றமையால்.

பிரமதீர்த்தச் சிறப்பு

1956. கடையுகத்திற் றனிவெள்ளம் பலவிரிக்குங் கருப்பம்போல்
இடையறாப் பெருந்தீர்த்த மெவற்றினுக்கும் பிறப்பிடமாய்
விடையுயர்த்தார் திருத்தோணிப் பற்றுவிடாமேன்மையதாந்
தடமதனிற் றுறையணைந்தார் தருமத்தின் றலைநின்றார். 58

உன் போது *- பிள்ளையார் செயலை உடன்பட்டுத் தாதையார் முனிவுக்குறி நீக்கி அவரை நோக்கிக் கூறுயது.* ***உன் செய்கை*** *- முன்னைய தொடர்ந்த செயல் என்றதும் குறிப்பு.* ***போல்*** *- முனிதல் பெரியோரொ ழுக்கமன்று என்பதும் குறிப்பு*

அங்கு *- அவ்விடத்து - அப்போது. இடமும் காலமும் குறித்தது.* ***உடன் சென்றார்*** *- உடன் கொண்டுசென்றனர். 57*

1956. பொருளுரை:- கடை உகத்தில்...போல் - ஊழிமுடிவில் வரும் பெருவெள்ளங்கள் பலவற்றையும் தன்னிடத்திலிருந்து விரியும்படி தோற்றுவிக்கும் கருப்பம் போல: இடையறா...பிறப்பிடமாய் - இடையறாது நிற்கும் பெருந்தீர்த்தங்கள் எல்லாவற்றுக்கும் பிறப்பிடமாய்: விடையுயர்த்தார்...தடமதனில்-இடபக்கொடியை உயர்த்திய சிவபெருமான் எழுந்தருளிய திருத்தோணியின் தொடர்ச்சியினை நீங்காத மேன்மை யுடையதாகிய தடாகத்தின்: துறை அணைந்தார் - துறையினைச் சென்றணைந்தனர்: தருமத்தின் தலைநின்றார் - அறநெறியிற் றலைநின்றவராகிய சிவபாதவிருதயர்.

விளக்கவுரை:- கடை...கருப்பம் போல் *- உகக்கடையில் - என்க.* ***உகம்*** *- ஊழி:* ***தனிவெள்ளம்*** *- பெரு வெள்ளம் - நீர்ப்பெருக்கு.* ***பல*** *- ஒவ்வோர் ஊழியிலும் நீர் பெருகுதலால்* ***பல*** *என்றார்,* ***விரிக்கும் கருப்பம்*** *- இதனினின்றும் பெருகி விரிதல் போல உளவாதலால்* ***கருப்பம் போல்*** *என்றார். தொழில் பற்றி வந்த உவமம்.*

இடையறாப்...பிறப்பிடமாய் - இடையறாப் பெருந்தீர்த்தம் *- இடையே வற்றுதல் இல்லாத புனிதப்பெருநீர்கள். இவை கங்கை, காவிரி முதலாயின.* ***பிறப்பிடமாய்*** *- தோன்றுதற்கிடமாகி. விரிந்த பலவெள்ளங்களுடன் ஒன்றாய்க் கலந்த அப்பெருந்தீர்த்தங்கள். அப்பெருவெள்ளங்கள் மீள இத்தலத்தில் சுருங்கிக், காலத்தில் தாம் முன்போலப் பலவாகப் பரவிநிகழ்தலால் இத்தடம் அவற்றுக்கெல்லாம் பிறப்பிடமாம் என்றார். அவ்வாறு கலந்த போதும், அதன் முன்னரும், மீள முன் போலப்பரவியபோதும் அவை இடையே வற்றுதல் இல்லையாதலின்* ***இடையறா*** *என்றார். பெருவெள்ளமாகிய கடல் எல்லாத் தீர்த்தங்களுக்கும் இருப்பிடமும் பிறப்பிடமுமாதலின் இவ்வாறு கூறினார் எனினுமாம்.* ***பலவுதிக்கும்*** *- என்ற பாடமுமுண்டு.*

திருத்தோணிப்பற்று விடா மேன்மையதாம் *- சுருங்கித் தடத்தினளவில் அமைந்த காலத்தில் திருத்தோணிச் சிகரக் கோயிலினருகிற் பற்றியிருத்தலானும், பெரு வெள்ளமாகப் பரந்த காலத்திலும் அதன்மேல் மிதந்த திருத்தோணியினைப் பற்றி நிற்றலானும்* ***பற்றவிடா***

1957. பிள்ளையார் தமைக்கரையில் வைத்துத்தாம் பிரிவஞ்சித்
தெள்ளுநீர் புகமாட்டார், தேவியொடுந் திருத்தோணி
வள்ளலா ரிருந்தாரை யெதிர்வணங்கி, மணிவாவி
யுள்ளிழிந்து புனல்புக்கா ருலகுய்ய மகப்பெற்றார். 59

மேன்மை - என்றார். **விடையுயர்த்தார்** - வெள்ளத்தில் தோணி செலுத்தி நிறுத்தும் மீகாமன் போன்றார் என்று விசேடங் காண்பாருமுண்டு.

தடம் அதனிற் றுறை - **தடம்** - பிரமதீர்த்தம் என்று வழங்குவர்: **துறை** - கரை

தருமத்தின் தலைநின்றார் - **தருமம்** - அறநெறி: ஈண்டு இல்லற நெறியினையும் வேத நெறியினியையும், சைவ நெறி விளங்கத் தவஞ்செய்யும் சிவதருமத்தினையும் குறித்தது: **தலைநிற்றல்** - சிறத்தல்: **தலை** ஏழனுருபு என்றலுமாம். 58

1957. பொருளுரை:- பிள்ளையார்...வைத்து - பிள்ளையாரைத் தீர்த்தக்கரையில் விட்டு: தாம் பிரிவு அஞ்சி - தாம் பிரிதலை அஞ்சி: தெள்ளுநீர் புகமாட்டார் - தெளியும் நீரினுள்ளே மூழ்க மாட்டாதவராகி: தேவியொடும்....புக்கார் - பெரிய நாயகியம்மை யாரோடும் திருத்தோணியில் வள்ளலாராகி எழுந்தருளியிருந்த பெருமானை எதிரில் வணங்கிக்கொண்டு, அழகிய வாவியினுள்ளே இறங்கி நீரினுள் மூழ்கினார்: உலகுய்ய மகப் பெற்றார் - உலகமுய்யும்படி மகவைப்பெற்ற சிவபாத விருதயர்.

விளக்கவுரை:- தாம் பிரிவு அஞ்சி பிள்ளையாரைத் தனியே கரையில் வைத்துத்தாம் பிரிந்தால் நீராடிக் கரையேறுமளவும் அவர், துணையும் காவலும் பெறாதிருப்பரே என்று பயந்து. பிள்ளையாரைத் தாம் பிரியமாட்டா தஞ்சி என்றுரைப்பாருமுண்டு. அவரைப் பிரிந்து நீராடிப் போக வந்தாராதலின் அவ்வுரை பொருந்தா தென்க.

தெள்ளும் நீர் - உயிரைப் பிணித்த மருளைத் தெளிவிக்கும் தெய்வத் தன்மையுடையது இந்நீர் என்பது. **தெள்ளுதல்** - அகற்றுதல் - போக்குதல் என்று கொண்டு, அஞ்ஞானத்தையும் அது காரணமாக வரும் பிறவியையும் போக்கும் என்றலுமாம். "துயர் ஒன்றொழியா வண்ண மெல்லாந் தெள்ளுங் கழல்" (திருவாச - கோத்):

தேவியொடும்...வணங்கி-வள்ளலார் - வேண்டுவார் வேண்டுவதே ஈவார்: தாம் வேண்டியபடியே முன் கொடுத்தவர் என்றதைக் கண்டாராதலின், இப்போதும் அவரே காவல் புரிவார் என்பது குறிப்பு. **எதிர்வணங்கி** - கரையில் நின்றபடியே கண்டு வணங்கி: குழவியைக் காவல்புரிக என்று வணங்கி: தோணியப்பரையே காவலாக வைத்து என்பதாம். இவருடைய பெருந்தவங் காரணமாக அவ்வாறே தோணியப்பர் காவலாக நின்று வெளிப்பட்டு வந்தருளினமை பின் நிகழ்ச்சியாற் காண்க. "எண்ணிய வெண்ணியாங் கெய்துப வெண்ணியார், திண்ணிய ராகப் பெறின்" (குறள்).

உலகுய்ய மகப் பெற்றார் - 1917-பார்க்க. சிவபாத விருதயர் வேண்டிய இருபயன்களுள், இம் மூன்றாண்டுகள் வரையும் பெற்றெடுத்துப் பாலூட்டி வளர்த்தது தமது இல்லற நிலைக்குரிய மகவாகப் பெற்ற நிலை: இனி, ஞானப்பாலுண்டு மேல் வளரும்

1958. **நீராடித் தருப்பித்து நியமங்கள் பலசெய்வார்**
சீராடுந் திருமகனார் காண்பதன்முன் செய்ததற்பின்
ஆராத விருப்பினா லகமருடம் படியவழி
பேராது மூழ்கினார் பெருங்காவல் பெற்றாராய். **60**

நிலை அம்மகவு சிவம் பெருக்கவுளதாகும் நிலை என்பது தோன்ற **உலகுய்ய மகப் பெற்றார்** என்றார். **பெற்றார்** என்பது வினைப்பெயராகவும் வினைமுற்றாகவும் கொண்டு உரைக்க நின்றது. **மணிவாவி** - முத்துமணிகளைக் கரையிற் கொழிக்கும் வாவி என்றலுமாம். *59*

1958. **பொருளுரை:-** **நீராடி....செய்வார்** - நீரினுட் குளித்துத் தருப்பணம் செய்து பின் வேதநியமங்கள் பலவற்றையும் செய்வாராகிய சிவபாத விருதயர்: **சீராடும்...செய்ததற்பின்** - பலரும் சீராட்டவுள்ள திருமகனார் தம்மைத் தேடிக் காண்பதன்முன் அவற்றையெல்லாம் செய்து முடித்ததன் பின்பு : **பெருங்காவல் பெற்றாராய்** - மகனாருக்குத் தம்மினும் பெரிய காவலினைப் பெற்றாராகி: **ஆராத....மூழ்கினார்** - அடங்காத விருப்பத்தினாலே அதன்மேல் அகமருட ஸ்நானஞ் செய்யும் பொருட்டுத் தான் நின்றவிடத்தினின்றும் அடிபெயர்க்காது நீரிற் படிய மூழ்கினார்.

விளக்கவுரை:- தருப்பித்தல் - தருப்பணம் செய்தல்: சூரியன் முதலியோரை எண்ணி உரிய பாவனை மந்திரங்களால் நீரை அள்ளியிறைத்தல். இது குளித்தலுக்குப்பின் அடுத்துச் செய்யப்படுவது.

பலநியமங்கள் - என்க. இவை சந்தியாவந்தனம் - சூக்தபடனம் - மார்ச்சனம் முதலாகத் தீர்த்தத்தினின்று குளித்தலி னங்கமாக அதன்பின் முறையிற் செய்யப்படுவன.

செய்வார் - செய்ததற்பின் - பெற்றாராய்ப் படிய மூழ்கினார் என்று முடிக்க.

அகமருடம் படிய - அகமருடணஸ்நானம் என்னும் நியமத்தினைச் செய்யும் பொருட்டு. **அகமருடண** - ஸ்நானமாவது அகமருடண சூக்தத்தை நீரில் நின்று மூன்று முறை செபித்துக்கொண்டு மூழ்குதல். அகமருஷணசூக்தம் இருக்கு வேதத்திற் பத்தாவது மண்டலத்துள் நூற்றுத் தொண்ணூறாவது சூக்தம் என்ப. **அகமர்ஷணம்** - என்ற வடசொல் பாவத்தைக் கெடுப்பது என்ற பொருள் தருவது. **படிய - மூழ்கினார்** என்று கூட்டுக.

சீராடும்....முடித்ததற்பின் - சீராடும் - யாவராலும் சிறப்பிற் கொண்டாடப் பெறும். "காழியர்தஞ் சீராட்டே" (1946): சீராடல் - சிறுபிணக்கு என்ற உலக வழக்கிற் பொருள் கொண்டு தாதையாரைக் காணாது பிணங்கும் என்பாருமுண்டு. **காண்பதன்முன் செய்ததற்பின்** - பிள்ளையார் தம்மைக் காணாது தேடுவதன் முன்னே முடித்த பின்பு. காண்பது - தேடிக்காண முயற்சிப்பது என்ற பொருளில் வந்தது. "தேடிக்கண்டு கொண்டேன்" (திரு அங்கமாலை). காண்பது **தன்முன்** மீண்டும் காணும் விருப்பம் கொள்ளுமுன். **அடிபேராது** - நின்றநிலையினின்றும் அடிபெயர்க்காது. நின்ற அந்நிலையிலே மூழ்கிய நிலையினின்றும் மேற் கிளம்பிப் பிள்ளையாரைக் கவனிக்கு

முன் உணர்வு

1959. மறைமுனிவர் மூழ்குதலு மற்றவர்தம் மைக்காணா
திறைதரியா ரெனுநிலைமை தலைக்கீடா, வீசர்கழல்
முறைபுரிந்த முன்னுணர்வு மூளவழத் தொடங்கினார்
நிறைபுனல்வா விக்கரையி னின்றருளும் பிள்ளையார். 61

---

*நிலையில்லாது என்பதுமாம். **காண்பு அதன்முன் - காண்பு** - காட்சி என்று கொண்டு. காட்சியின்முன் - காட்சிப்பட காணும்படி என்று உரைத்தலுமொன்று: முன்கூறிய நீராடல் முதலிய நியமங்களை மகனார் காணச் செய்ததன்பின் என்றுரைக்கவும் நின்றது. இப்பொருளில் **அது** பகுதிப் பொருள் விகுதி. இனி நிகழ்வது அவர் காணாமற் செய்வது என்பதாம். "காண்பின் நெடுவரை" (மலைபடுகடாம் - 315): காண்பின் காலை" (புறம் - 119.)*

***மூழ்கினார்** - இங்கு மூழ்குதல், முன்னர் "**நீராடி**" என்பதனின் வேறு. "மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக், கையாற் குடைந்து குடைந்து" (திருவெம்.11) என்றபடி நீராடுதலினும் (குளிப்பதினும்) நீரினுள்ளே மூழ்குதல் வேண்டுமாயினும், இங்கு அகமருடணத்துக்காக மூழ்குதல் அந்நிலை நின்றபடியே குறித்த எல்லை அளவில் செபித்துக்கொண்டு மூழ்கியிருத்தலாம். முன்னையது உடற்தூய்மையும், பின்னையது உயிர்த்தூய்மையும் பற்றியது. இங்கு மந்திரத்துடனே மூழ்கி நிற்றல் குறித்தது.*

***பெருங்காவல் பெற்றாராய் மூழ்கினார்** - மூழ்கி எழுதற்குச் சிறிது காலம் செல்லு மாதலின் அதுவரை பிள்ளையாரைக் காவல்புரியத் தம்மினும் பெரியதொரு காவல் பெற்றதனால் மூழ்கி நின்றார் என்பது குறிப்பு. பிள்ளையாரது காவல் பற்றிய எண்ணம் மனத்துள் நின்றிட்டதாயின், மனம் இருநிலையாப் பிளவுபட்டுச் செபத்தில் முழுநினைவும் செல்லாதாதலின், பெருங்காவலில் பிள்ளையார் இருக்கப்பெற்றார் என்ற நினைவுட்கொண்டு விட்டமையால் செபத்தில் முழுநினைவும் கொள்ளவல்லராயினர் என்பது குறிப்பு. **பேராது** என்ற குறிப்புமது. **பெற்றாராதலின்** என்க.*

***ஆராதவிருப்பு** - அகமருட நியதியில் வைத்த அளவில் அடங்காத பெரு விருப்பம்.*

***சீராடும் - படியநீர் - பெருங்காதல்** - என்பனவும் பாடங்கள். 60*

*1959. **பொருளுரை:-** மறை முனிவர் மூழ்குதலும் - மறை முனிவராகிய சிவபாத விருதயர் முன்கண்ட அந்நிலையில் மூழ்குதலும்: மற்று அவர்-தலைக்கீடா - மற்று அவரைக் கண்ணெதிரே காணாமல் சிறிது போதும் தரித்திரார் என்ற நிலைகாரணமாகக் காட்டி: ஈசர்...மூள - சிவபெருமானது திருவடிகளை முறையால் மறவாமல் இடைவிடாது நினைந்திருந்த முன்னுணர்வு வந்து மூண்டதனாலே: அழ..பிள்ளையார் - நிறைந்த நீரினையுடைய தடத்தின் கரையில் நின்றருளும் பிள்ளையார் அழத்தொடங்கினார்.*

***விளக்கவுரை:- அவர் தம்மை..தலைக்கீடா** -"தந்தையாரைக்காணாது ஒரு சிறிதும் தரித்திரிக்க மாட்டார்" என்பது உலக நிலையிற் குழவிகளிடத்துக் காணும் ஓர்நிலை*

அழுதல்

1960. கண்மலர்க ணீர்ததும்பக் கைமலர்க ளாற்பிசைந்து
வண்ணமலர்ச் செங்கனிவாய் மணியதரம் புடைதுடிப்ப.
எண்ணின்மறை யொலிபெருக வெவ்வுயிருங் குதூகலிப்பப்
புண்ணியக்கன் றனையவர்தாம் பொருமியழு தருளினார். 62

இது தாதையார் தம்மிடத்துக் கொண்டிருந்த பேரன்பினுக்கேற்பத் தாமும் எதிர் காட்டுவார்போன்ற நிலை.

தலைக்கீடு - போலிக் காரணம்: வியாஜம்: உண்மைக் காரணம் வேறாக உள்ளது என்பது குறிப்பு. "புள்ளோப்புதல் தலைக் கீடாக" (சிலப் - 7 - 9): சிவபாதவிருதயர் இவரைத் தமது பிள்ளை எனக்கொண்டு ஆதரித்துப் பேரன்பு செய்தனர். ஆயின், பிள்ளையார், அவர் சார்பிலே கண்டு தோணியப்பரையே தமது அப்பராகக் கண்டுகொண்டிருந்தனர் என்பது பின் சரித நிகழ்ச்சியிற் பல இடங்களிலும் காணும் உண்மை. "அவர்சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப், பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினைவுற்றார்" (புரா 879), "அருந்தவத்தீர் எனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட, பெருந்தகையெம் பெருமாட்டி யுடனிருந்ததே (மேற்படி - 880) என்று தாதையார் சார்விலே அம்மையப்பரைக் கண்டு வினாவிய நிகழ்ச்சியை ஈண்டுக் கருதுக. ஞானமுண்ணவரும் இந்நாளுக்குமுன் ஓரோர் காலத்துத் தொடர்ந்த பிரிவொருகாற் கொண்டெழும்போது அம்மையப்பரை உட்கொண்டு, ஏனையபோது தாயர் தந்தையரைக் கண்டருளினர். ஞானமுண்டபின் எப்போதும் அம்மையப்பரையே கண்டனர் என்பார் இங்குத் **தலைக்கீடா** என்றார்.

முறைபுரிந்த முன் உணர்வு - முறை - விதி: முறைப்படி: புரிதல்-இடைவிடாது நினைத்தல்: "புகழ்புரிந்தார் மாட்டு" (குறள்) 1932 பார்க்க: **முன்உணர்வு** - முன்னை நிலையின் நினைவு: **மூள** -இங்குவந்து பொருந்த - மிகுந்த தாக்க. "பாலனாயதொண்டு செய்து பண்டுமின்றும்" (பிள்.தேவா.) **ஈசர் கழல் முறை புரிந்த முன்னுணர்வு மூள** - பிள்ளையார் முருகப்பெருமா னவதார மன்று என்று காட்ட இஃதும் ஒரு நல்ல ஆதரவாம்: "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்" (1953) என்றதும் ஆண்டுரைத்தவையும் பிறவும் காண்க

மற்றவரை முற்காணாது - என்பதும் பாடம். 61

1960. **பொருளுரை:-** கண்மலர்கள்...புடைதுடிப்ப - கண்களாகிய மலர்களினின்றும்நீர் ததும்பும்படி கைம் மலர்களாலே அவற்றைப் பிசைந்து, அழகிய தாமரை மலரையும் சிவந்த கொவ்வைக்கனியையும் போன்ற திருவாயின் அழகிய உதடுகள் புடை பெயர்ந்து துடிக்க: எண்ணில்... குதூகலிப்ப - எண்ணில் மறைகளின் ஒலிபெருகவும் எவ்வுயிர்களும் களிப்படையவும்: புண்ணியக்கன்று...அழுதருளினார் - புண்ணியக் கன்றுபோன்றவராகிய பிள்ளையார் பொருமிப் பொருமி அழுதருள்வாராயினர்.

விளக்கவுரை:- கண்மலர்கள்-துடிப்ப - முதலிற் கண்களின் நீர்ததும்ப நிற்றலும். பின்னர்க் கைகளால் கண்களைப் பிசைதலும், அதன்பின் உதடுகள் துடித்தலும், அதன்பின்னர் ஒலிபெருகத் தேம்பி யழுதலும் முறையாக நிகழ்வது குழவிகளிடத்துக் காணும் மெய்ப்பாட்டு நிலைகள். அவற்றை அம்முறையே வைத்துக் கூறித் தன்மையணிச் சுவைபட உரைத்த கவிநயம் காண்க.

கண்மலர்கள் - கைம்மலர்கள் - மலர்ச் செங்கனிவாய் - கண்களும் கைகளும் வாயும் எல்லாம் தாமரை மலர்களாகவே உள்ள எழில் கொண்டன. காண்பவர்களது மனமுங் கண்ணும் கவர உள்ள அழகும் பயனும் பற்றி இவ்வாறு உருவகப்படுத்தி அருமைப்பாடு பெறக் கூறினார். பயனாவது சிவத்தன்மையடைதற்குத் தகுதி பெறுவித்தல்: "எவ்வுயிருங் குதூகலிப்ப" என்று பயன் குறித்துரைத்தது காண்க. அஃதெவ்வாறோ எனின், ஆசாரியரது கண்பார்வையானும், கைதலைமிசைவைத்தலானும், உபதேசித்தலானும் பக்குவப்படுத்தும் செயல்களின் குறிப்பு. **மலர்கள்** ஈண்டு மலர்களுட்சிறந்த தாமரை மலர்களைக் குறித்தன. "தங்கிய - அங்கை **கமல மடி** கமல மானோக்கி, கொங்கை கமல முகங்கமலம்" என்ற திருவுலாவும், "திருவளர் தாமரை" என்ற திருக்கோவையும் "கமலமே வதனம் கமலமே நயனம்" என்னுந் திருவிசைப்பாவும் கருதுக. **கனிவாய்** - வாயினுக்குக் கனிவிக்கப்பாடும் தன்மை குறிக்கச் **செங்கனி** என்று மேலும் சிறப்புக்கூட்டி உரைத்தார். **மணிஅதரம்** என்ற குறிப்பும் அது.

எண்ணில் மறை ஒலிபெருக எவ்வுயிருங் குதூகலிப்ப - மறை ஒலிபெருகுதலினால் உயிர் குதூகலித்தல் நிகழ என்று காரண காரிய முறைபற்றி வந்ததோர் பயன் கூறியவாறு. முன்னிரண்டடிகளிற் கூறியவை சாதனவகையாலும், இது பயன்வகையாலும் கொள்ளத்தக்கன. **எண்ணில்** - அளவு இல்லாத: எண்ணத்தின் கண் நிலவும் என்றலுமாம். **மறைபெருக** - என்னாது மறைஒலி பெருக என்றது மறை, ஒலியும் பொருளுமாகிய அளவில் தமிழ் மொழியில் வெளிவருவது என்ற கருத்து.

மறைஒலிபெருகுதல்-வேதசாரமாகிய தேவாரங்கள் உலகிற் பரவுதல்: "தேசமெலாங் குரவையிடத் தமிழ்வேதம் விரித்தருளும்" என்று இதனை மாதவச் சிவஞான முனிவர் பெருமான் விரித்துரைத்தல் காண்க. இக்கருத்துப் பின்னரும் "எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த வெழுதுமறை, மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத் தோர்க் குரைசிறப்ப" (1973) என்றதனாலும் விளங்கும். **குதூகலம்** - சிவானந்த மகிழ்ச்சி.

புண்ணியக்கன்று அனையவர் - புண்ணியத்தின் இளமைக்கோலம் கன்று எனப் பட்டது: "மொய்த்து வளர் பேரழகு மூத்த வடிவேயோ?" (178) என்புழிப்போல: **புண்ணிய**மாவது சிவனை மறவாது அநுபவித்திருக்கும் நன்மை. வினை காரணமாக இப்பிறவியில் வராதவர் என்பதும் குறிப்பு.

62

எவ்வுலகும் - என்பதும் பாடம்.

சிகரம் பார்த்தழுதழைத்தல்

1961. மெய்ம்மேற்கண் டுளிபனிப்ப வேறெங்கும் பார்த்தழுவார்
தம்மேலைச் சார்புணர்ந்தோ? சாரும்பிள் ளைமைதானோ?
செம்மேனி வெண்ணீற்றார் திருத்தோணிச் சிகரம்பார்த்
தம்மே! யப்பா! வென்றென்றழுதருளி யழைத்தருள. 63

1961. பொருளுரை:- மெய்ம்மேல்.....அழுவார்-தமது திருமேனியின்மேல் கண்ணீர்த் துளிகள் வீழ வேறு எவ்விடங்களிலும் சுற்றிப்பார்த்து அழும் நிலையில் நின்றவராகிய பிள்ளையார்: தம்மேலை...தானோ? - தமது மேலைச் சார்பினை உணர்ந்தமை காரணமாகவோ? அன்றித் தாம் அப்போது சாரும் பிள்ளைமை காரணமாகவோ? (அறியோம்): செம்மேனி...அழைத்தருள - செம்மேனிமேல் வெண்ணீற்றினையுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருத்தோணிச் சிகரத்தைப் பார்த்து, "அம்மே! அப்பா!" என்று அழுதுகொண்டருளியபடியே அழைத்தருளினாராக:

*விளக்கவுரை:- **வேறு எங்கும் பார்த்து அழுவார்** - தாதையைக்காண வேறு எல்லாவிடங்களிலும் பார்த்துக் காணாது அழத்தக்க நிலையில் நின்றவர். **அழுவார்** - அழும் நிலைநின்றவர். வினைப்பெயர். **அழுவார் - அழுது - அழைத் தருள** என்று கூட்டிமுடிக்க.*

***கண் துளி மெய்ம்மேல் பனிப்ப** என்க. **பனித்தல்** - விடாமழை போலத் துளிக்க. "பனித்த சடையும்" (தேவா).*

***தம் மேலைச் சார்பு உணர்ந்தோ? - சாரும் பிள்ளைமைதானோ?** - அம்மே அப்பா என்று அழுதழைத்ததற்கு இரண்டுகாரணம் இருக்கக்கூடும்: அவை, மேலைச் சார்பு ஒன்று - பிள்ளைமை மற்றொன்று: இவற்றுள் ஈண்டைக்குப் பொருந்துவது இன்னதென்று நம்மால் அறியவாராது: நிகழ்ச்சிபற்றி நீங்கள் கருதலளவையால் உய்த்துணர்ந்து கொள்ளுங்கள் என்பது. இஃது ஆசிரியரது சிறந்த மரபு. "உம்பர் நாயகிக்குமஃ தறியவோ? பிரியா நங்கைதா னறியாமையோ? அறியோம்" (407) என்றதும் ஆண்டுரைத்தவையும், "அவர்மாட்டுத் திருவிளையாட் டினைமகிழ்ந்தோ? வஞ்சியிடைச் சங்கிலியார் வழியடிமைப் பெருமையோ?" (ஏயர்கோன் - புரா. 250) என்பதும் முதலியன பார்க்க.*

***மேலைச் சார்பு** - இறைவர்: சிவபெருமான்: **உணர்தல்** - உணர்ச்சியுள் வெளிப் படக்காணுதல், "சார்புணர்ந்து" (குறள்). சார்பு என்றலே அமையுமாகலின், **மேலை** என்ற அடைமொழி, ஈண்டுப்பிள்ளையார் பெற்றனவாகிய சிவபெருமானும் - சிவபாதவிருதயரும் என்ற இருசார்புகளுள் பின்னையதான உலகம்பற்றியதாயொழியத்தக்க கீழைச் சார்பினை விலக்க நின்ற பிறதினியைபு நீக்கிய விசேடணம். ஆயினும் அதுவும் சிவச்சார்பாகிய மேலைச் சார்பினைத் தன்னுள் வைத்துக்காண உதவுவதாதலின் **சார்பு** என்று உபசரித்துக் கூறப்படும்: "தாதையா ரெதிர்தொழுவா, ரவர் சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப், பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினை வுற்றார்" (புரா.879): "சார்புணர்ந்து சார்பு கெடவொழுகின்" என்று திருக்குறளினுள் விளக்கம்பற்றிக் கூறினாரேனும், மேலைச்*

சார்புடன் ஈண்டு அதனையும் ஒக்கச் சார்பென்று கூறத்தகாமையானும், கீழை என்றல் சிறப்பின்மையானும். அக்கீழ்ச் சார்பு உணர்வில் வரல் தகாமையானும், மேற்கூறியபடி கீழ்ச்சார்புணர்ந்தோ என்னாது வாளா "**சாரும் பிள்ளைமைதானோ?** என்ற மட்டில் அமைத்துக்கூறினார். **சாரும்** என்றது உலகநிலையில் ஏனைக்குழவிகளிடத்தெல்லாம் பொருந்தும் என்றும். ஏனைக் குழவிகள் பொருந்தும் பொருள்தந்து நின்றது. **சாரும்** என்றதனுள் உலகச் சார்பு கொள்ளவைத்தமையும் காண்க. **பிள்ளைமை** - குழவிப் பருவச் செயலுடைமை. சிறப்புப்பற்றி **மேலைச்சார்பினை** முன்வைத்தோதினார். ஐயப்பாடாகிய இரண்டு காரணங்களுள் இதுவே துணிபென்று காட்டிய குறிப்புமாம். என்னை? "கழல் முறை புரிந்த முன்னுணர்வு மூள" (1959) என்று முன்னும், "முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான்" (1962) என்று பின்னர் வரும்பாட்டிலுமாக முன்னும் பின்னும் வைத்தோதுதல் இம்முடிபைக் குறிப்பிப்பதாம். தாதையார் புனலினுள் கீழே இறங்கிய நிலையில் அவரைக் காணக் கீழே பார்த்து அழாமல், மேலே சிகரம் பார்த்தழுதலும் இக்கருத்தை உணர்த்துவதாம்.

திருத்தோணிச் சிகரம் பார்த்து - திருத்தோணி - சீகாழிக் கோயிலினுள் பிரம புரீசர் திருக்கோயிலின் அயலே மலை என்று வழங்குவதாய், மாடமோங்கிய நிலையில், தோணி வடிவாயமைந்த தனிப்பெருந் திருக்கோயில். **சிகரம்** - அதன் விமானத்தின் தூபி எனப்படும் தலையங்கம்: **பார்த்து** - பிரமதீர்த்தக்கரையினின்றும் தோணிச் சிகரத்தை நோக்கிய வண்ணமாய்.. இவ்வாறன்றிக் **கரம்** சாரியை என்று கொண்டு **சிகரம் - சி** என்ற எழுத்து என்று பொருள் கொண்டு, இதற்குத், திருத்தோணியில் உள்ள **சிகரப்** பொருளாகிய சிவபெருமானை உள்ளே பார்த்து என்றுரைக்கநின்ற சிறப்பும் காண்க. திருவைந்தெழுத்தினுள் 'ஈசனரு ளாவி யெழிலார் திரோதமலம், ஆசிலெழுத் தஞ்சினடைவாம்" (உண்மை விளக்கம். 40) என்றபடி **சி** - சிவனைக்குறிப்பது என்ற ஆகமமும் காண்க. "அம்மே அப்பா" என்றழைத்தற்கும் இப்பொருள் அமைவுடைத்தாகும்.

அம்மே! அப்பா! - "தாயுடன் சென்றுபின் தாதையைக் கூறி" (பட்டினத்தார்) என்றபடி தாதையை அறிவித்து அவருடன் கூடுதற் குதவிபுரிதலின் தாயை முற்கூறினார். "அம்மையே அப்பா" என்ற திருவாசகமும் காண்க. தாம் காண விரும்பியது தந்தையாரையேயாயினும் அம்மையே என்று உடன் கூறியதும் இக்கருத்து: இதுபற்றியே பின்னர் நிகழ்ச்சியிலும் அம்மையுடன் போந்து திருமுலைப் பாலுடனே ஞானம் கொடுக்கச் செய்த வரலாறும் காண்க.

அம்மே! அப்பா! - வாயைத்திறத்தலால் அகரம் பிறக்கும்: அவ்வாறு திறந்த வாயின் இதழ்களை மூடுதலால் பகரமும் மகரமும் பிறக்கும்: "மீகீ ழிதழுறப் பம்மப் பிறக்கும்" என்பதிலக்கணம். எனவே இவைதாம் முதலில் குழவிகளின் வாக்கிற் பிறக்கும்: ஆதலின் **அம்மே - அப்பா!** என்ற இச்சொற்கள் மகவுகளின் முதன்மழலைச் சொற்களாதல் இயல்பு. இது தமிழ் மொழியின் இயற்கை நலனையும் உயர்வையும் காட்டுவது: சுத்தமாயை அதிட்டித்து நின்ற சத்தி துணையாக நிற்க, அவற்றிற் கலந்து இறைவர் உலகத்தைத்தோற்றுவிப்பர் என்பது உண்மை நூலுட் கண்டது. ஆகலின் சத்தி சிவமாகிய இவர்களே உலகத்துக்கு அம்மையும் அப்பனுமாவர் - (இவை திரு. க. சதாசிவ செட்டியார்

இறைவர் வெளி வருதல்

1962. அந்நிலையிற் றிருத்தோணி வீற்றிருந்தா ரருணோக்கான்
முன்னிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க் கருள்புரிவான்
பொன்மலைவல் லியுந்தாமும் பொருவிடைமே லெழுந்தருளிச்
சென்னியிளம்பிறைதிகழச் செழும்பொய்கை மருங்கணைந்தார். **64**

---

*உரைக்குறிப்பு). சிகரம் பார்த்து இவ்வாறு **அழைத்தழுதலின்** அவர் நடுவே வந்தனர் என்பதாம். சிகரம் அவரிருக்கு மிடம் என்பது குறிப்பு. **அம்மே! அப்பா!** - "உயிர்கட் கெல்லா மறிவைப் பிறப்பிக்கு மம்மையப்பனு மாகி" என்று "அம்மையோ டப்பனாகி" என்ற சிவஞானசித்தியாரின் உரை ஈண்டுக் குறிக்கற்பாலது. ஈண்டு அம்மையப்பர் வந்து தந்தருளும் ஞானம் உயிர்கட்கெல்லாம் ஞானம் தருவதாய் விளைவதும் கருதுக.*

*அழுவார் - அழுதருள: வீற்றிருந்தார் - அருள்புரிவான் - எழுந்தருளி - அணைந்தார் எனவரும்பாட்டுடன் முடிக்க. **அழுதருள** - என்ற வினையெச்சம் **அணைந்தார்** என்று பிறவினைமுதல் வினைகொண்டு முடிந்தது.* *63*

1962. பொருளுரை:- *அந்நிலை...வீற்றிருந்தார் - அந்நிலையின்கண், திருத்தோணியில் வீற்றிருந்தருளும் சிவபெருமான்: அருள் நோக்கால்...அருள்புரிவான் - அருள் நோக்கஞ் செய்தலால், முன்னை நிலைமைத் திருத்தொண்டு நினைந்த அவருக்கு அருள்புரியும் பொருட்டு: பொன்மலை...எழுந்தருளி - பொன்மலை வல்லியாகிய பெரிய நாயகியம்மையாரும் தாமும் போர்விடையின்மேல் ஏறி எழுந்தருளிச் சென்னியிற் சூடிய இளம்பிறை திகழ்ந்து தோன்றச் செழிய பொய்கையின் பக்கத்தில் அணைந் தருளினார்.*

இந்த இரண்டுப்பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

விளக்கவுரை:- அருள் நோக்கால் *- அருள் நோக்கம் புரிதலால்: "திருக்கண்ணோக் குற்ற தன்றே" (1772)*

முன்நிலைமைத் திருத்தொண்டு முன்னியவர்க்கு அருள்புரிவான் - முன்நிலைமைத் திருத்தொண்டு *- "ஈசர்கழல் முறைபுரிந்த முன்னுணர்வு" (1959): "பண்டு திரு வடிமறவாப் பான்மையோர்" (1953) : என்றவை பார்க்க. **முன்னியவர்க்கு** - தொண்டின் காரணமாக நினைந்தவர்க்கு என்றும், தொண்டினை (இறைவர்) முன்னி - முன்னிட்டு - அவர்க்கு (பிள்ளையார்க்கு) என்றும் உரைக்கவும் நின்றது.*

அருள் புரிவான் *- வானீற்று வினையெச்சம் அருள் புரியும் பொருட்டு.*

பொன்மலை...பிறைதிகழ...அணைந்தார்-அம்மே அப்பா *என்றழைத்த அம்முறைக்கேற்ப வல்லியும் தாமும் என்றார். அம்மையும் தாமுமாக விடைமேற்கொண்டு பிறை திகழவந்தார் என்ற இத்திருக்கோலமே பிள்ளையார் தாதையாருக்குக் காட்டிப் பாடியருளியது என்பதற்குத் **"தோடுடைய செவியன், விடையேறி, ஓர் தூவெண்மதிசூடி"** என்ற அகச்சான்று காண்க. தேவாரப் பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க.*

1963. திருமறைநூல் வேதியர்க்குந் தேவியர்க்குந் தாங்கொடுத்த
பெருகுவர நினைந்தோதான் றம்பெருமைக் கழல்பேணும்
ஒருநெறியில் வருஞானங் கொடுப்பதனுக் குடனிருந்த
அருமறையா ளுடையவளை யளித்தருள வருள்செய்வார், **65**

செழும் பொய்கை மருங்கு அணைந்தார்-தோணியினின்றும் பொய்கைக் கரையின் பக்கம் பிள்ளையார் நின்றழுத இடத்தில் என்க. *பொய்கை*-பிரமதீர்த்தம். 64

1963. பொருளுரை:- திருமறைநூல்-நினைந்தோ-திருமறை நூல்களின் துறைபோகிய வேதியராகிய சிவபாத விருதயருக்கும் அவரது தேவியராகிய பகவதியாருக்கும் தாம் கொடுத்தருளிய பெருகும் வரத்தினையும் நிறைவாக்க நினைந்தருளி யதனாற்போலும்: தம் பெருமை...கொடுப்பதனுக்கு - தமது பெருமையுடைய திருவடிகளையே பேணுகின்ற ஒருமைப்பாடுற்ற நெறியினில் நிற்க வரும் சிவஞானத்தைக் கொடுப்பதற்காக: உடனிருந்த.. அருள் செய்வார் - தம்முடன் இருந்த அருமறைகளைத் தம் உருவாகக் கொண்டு ஆளுகின்ற ஞான முதல்வியாராகிய பெரியநாயகி யம்மையாரை அதனை அளித்தருளும்படி அருள் செய்வாராகி,

விளக்கவுரை:- திருமறைநூல் - வேதமும் அங்கநூல்களும்: **வேதியர்** - என்றலே அமையுமாயினும் மரபு வகையால் மட்டுமன்றிப் பயிற்சியும் ஒழுக்கமும்வல்லர் என்பது குறிக்கத் திருமறை நூல் என்று அடைகொடுத்தோதினார். **வேதியர்** - சிவபாதவிருதயர். **தேவியர்** - பகவதியார். **தேவி** - மனைவி என்ற பொருளில் வந்தது: "தேவியை வவ்விய தென்னிலங்கை" (பிள்-காந்தார-இராமே - 2).

பெருகுவரம் - 1917, 1918ல் உரைக்கப்பட்டது. கவுணிய கோத்திரம் விளங்க மகவளித்தமையும், பரசமய நிராகரிப்பும் சைவ விளக்கமும் பெற அளித்தமையும் என்றைக்கும் நீடும் பயன்களாதலின் **பெருகு** என்றார். **வரத்தினையும்** என்ற இறந்தது தழுவிய எச்சவும்மை தொக்கது.

நினைந்தோதான் - நினைந்துதானோ என்று ஓகாரத்தைப் பிரித்துக் கூட்டுக. அழைத் தருளப் (1961) பிள்ளையாருக் கருளிபுரிய நினைந்தமை யன்றியும், அவரைப் பெற்ற வேதியர்க்கும் தேவியர்க்கும் கொடுத்த வரத்தினையும் உடனே நிறைவேற்றப்போலும் என்க.

வரம் நினைந்தோதான்-அழைத்த பிள்ளையாருக் கருள்வது மலைவல்லியும் தாமும் எழுந்தருளியவதனாலே அமையும்: மேலும் ஞான போனகம் தருதல் அவர்க்கருள்வதனுடன், வரத்தையும் நிறைவேற்றற்காவது ஆதலின் அதனையும் நினைந்தோ என்றார்: என்னை? ஞானபோனகம் கொடுத்தவதனால் அது தமிழ் மறையாக வெளிப்பட்டுப் பரசமய நீக்கமும் சைவ ஆக்கமும் விளைத்தற் கேதுவாயிற் றென்பதாம். **அருமறையாளுடையவளை** - என்ற குறிப்புமது. ஞானமே காரணமாகப் பின் சரித விளைவுகள் எல்லாம் விளைந்தன என்பது "நீடிய ஞானம் பெற்றார் நிறுத்தவும் வல்லர்" (புரா-807) என்றவிடத்தும், பிறாண்டும் விளக்கப்படுதல் காண்க.

கழல்பேணும் ஒரு நெறியில் வருஞானம் - கழல்பேணும் - பண்டு திருவடி

1964. அழுகின்ற பிள்ளையார் தமைநோக்கி, யருட்கருணை
யெழுகின்ற திருவுள்ளத் திறையவர்தா மெவ்வுலகுந்
தொழுகின்ற மலைக்கொடியைப் பார்த்தருளித் "துணைமுலைகள்
பொழிகின்ற பாலடிசில் பொன்வள்ளத் தூட்" டென்ன. **66**

மறவாப்பான்மை என்றதும் ஆண்டுரைத்தவையும், திருத்தொண்டத் தொகைப் பதிகப் பாட்டுக் குறிப்பு - "அடியலாற் பேணா" (5) என்ற விடத்துரைத்தவையும் பார்க்க **ஒரு நெறி** *- ஒருமைநெறி. "கழலே பேணும்" (தேவா). பொதுநீக்கி ஒன்றுபட்ட மனத்துடனே செல்கின்ற நெறி. "ஒருநெறிய மனம் வைத்துணர் ஞானசம்பந்தன்" (பிரமபுரம் - 11) என்று இந்த ஞானம் பெற்ற உடனே பிள்ளையார் இதன் தன்மையை அறிவித்தருளினர்*

வருஞானம் *- கழல் பேணிய நெறியின் பயனாக வருகின்ற ஞானம்.* **கொடுப்பதனுக்கு** *- கழலே பேணிய ஒரு நெறியின் பயனாக இந்த ஞானம் வருமாயினும், அதனை இறைவர் கொடுத்தாலன்றி அது தானே வந்து கூடாது என்ற உண்மை நூற்றுணிபு உணர்த்தப்பட்டது. "செய்வினையும் செய்வானு மதன்பயனுஞ் சேர்ப்பானும்" (சாக் - புரா - 5) என்ற உண்மை காணத்தக்கது.* **கொடுப்பதனுக்கு** *- கொடுக்கும் பொருட்டு.*

உடனிருந்த *- ஒன்றுமல்லாது வேறுமல்லாது உடனாகி நிற்பது தமது அருட்சத்தி என்பதாம்.*

அருமறை ஆளுடையவள் *- மறைகளே தமது பொது உருவமாயமைந்து அவற்றுள்ளே பொதிந்த ஞானங்களை ஆளும் முதல்வி: வேதரூபி. ஞான முதல்வி. மறைகளே ஞானமாம். ஞான முதல்வியே அதனைத் தரத்தக்கவள். அதனைத் தரப்பெற்ற பிள்ளையார் அதனால் பெற்ற ஞான மொழிகளே அவரது தேவாரத் திருவாக்குக்கள் என்பனவெல்லாம் ஈண்டுக் கருதுக.*

அருள் செய்வார் (1963):- தமை நோக்கப் - பார்த்தருளி - "ஊட்டு" என்னச் - (1964): சிவபெருமா னருளுதலும், சீரணங்கு - உமையம்மை - சென்றணைந்து - கரந்தருளி (1965): குழைத்தருளி - துடைத்தருளி - அளித்து - என ஊட்ட - அங்கணனார் - அழுகை தீர்த்து - அருள் புரிந்தார். (1966) என்று இந்த நான்கு பாட்டுக்களையும் தொடர்ந்து வினைமுடிபு கொள்க.

ஒருமைநெறி - அழைத்தருளி யருள்செய்வார் *- என்பனவும் பாடங்கள்.* *65*

1964. பொருளுரை:- *அழுகின்ற.. நோக்கி-அழுகின்ற பிள்ளையாரை நோக்கி: அருட் கருணை..இறையவர் தாம் - அருளும் கருணையும் எழுகின்ற திருவுள்ளத்தையுடையராய் முழுமுதல்வராகிய சிவபெருமான்: எவ்வுலகும்..என்ன-எல்லா வுலகங்களும் தொழுகின்ற மலையரசன் மகளாராகிய கொடிபோன்ற பெரியநாயகி யம்மையாரைப் பார்த்தருளி "இரண்டு திருமுலைகளும் பொழிகின்ற பாலமுதத்தினைப் பொற்கிண்ணத்தில் இப்பிள்ளையை ஊட்டுக!" என்று அருளிச்செய்ய,*

விளக்கவுரை:- அருட்கருணை எழுகின்ற திருவுள்ளம் *- அருளாகிய கருணை எனக்*

கொள்ளநின்றது. "அருட்கருணை தானாய திருவுள்ள முடையதவ வல்லி" (963) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. **எழுகின்ற** என்றது அருள் பிறக்குமிடம் இறைவர் என்பதாம். அந்த அருளே அம்மையார் என்பது முன் "அருட் கருணை தானாய திருவுள்ளம்" என்றதனால் உணர்த்தப்பட்டது. பெத்தநிலையில் அருளும் மறக்கருணை போலாது. முத்தநிலையில் பராசத்தி ரூபமாகிய அறக்கருணை என்றலும் ஆம்.

எவ்வுலகும் தொழுகின்ற மலைக்கொடி - **மலைக்கொடி** - பார்வதியம்மையார். **மலை**-இமயமலை: **கொடி** - கொடிபோல்வார். உவமையாகுபெயர். இமயமலையரசன் பெற்ற கொடிபோல்வார். எவ்வுருவத்தாலேனும் சத்தியையும் ஞானத்தையும் பெற விரும்பாத உயிர்கள் யாண்டும் இல்லையாதலின் **எவ்வுலகும்** தொழுகின்ற என்றார்.

துணைமுலைகள் பொழிகின்ற பால் அடிசில் - **துணை** - இரண்டு. உயிர்கள் ஞானவளர்ச்சி பெற்றுய்தற்கு இன்றியமையாத துணையாகிய என்றலுமாம். **துணை முலைகள்** - இரண்டு தனங்களாவன பரஞானம் - அபரஞானம் என்ற இரண்டுமேயாம். **பால் அடிசில்** - பால் என்ற அமுதம். ஞானமாகிய பாலமுது. இதனைப்பற்றி "ஆதி நாயகன் கருணையா யமலமாய்ப் பரம, போத நீரதா யிருந்ததன் கொங்கையிற் பொழிபால்" (சரவணப் படலம் - 23) என்று கந்தபுராணங் கூறுதல் இங்குக் கருதற்பாலது. "போதையார் பொற்கிண்ணத் தடிசில்" (பிள்.தேவா.) என்று பிள்ளையார் இதன் ஞானத் தன்மையினைக் கூறியருளினர்.

பொன்வள்ளத்து ஊட்டு என்ன - **பொன் வள்ளம்** - "பொற்கிண்ணம்". முன் காட்டி தேவாரத்தினும் "பொற்கிண்ணத் தடிசில்" என்றது காண்க. உமை அம்மையாரது திருமுலை அவர் கறந்து ஊட்டுவதன்றி நேரே வாய்வைத்துண்ண லாகாதது. "உண்ணாமுலை" என்பதாம். "அபீதகுசாம்பா" என்ற வடமொழிப் பெயரும் காண்க. அதுகாரணம்பற்றியே இறைவர் "பாலடிசில் ஊட்டு" என்னாது "**பொன்வள்ளத்து ஊட்டு**" என்றருளினாரென்க. சரவணப் பொய்கையினின்றும் கந்தக் கடவுளை எடுத்தணைத்துத் தமது "கொங்கையிற் பொழிபால், ஏதிலாததோர் குருமணி **வள்ளமீ தேற்றுக்**, காதன் மாமகற் கன்பினா லருத்தினாள் கவுரி" (சரவணப்படலம் - 23) என்ற வரலாற்றின் உள்ளுறையும் காண்க. பக்குவத்துக்கேற்றவாறு குழவிக்குத் தாய் பாலூட்டுமாறுபோல, ஞானமும் உயிர்களின் பக்குவ நோக்கி உலகமாதாவாகிய ஞானவல்லியினால் இறைவ னாணையின்படி ஊட்டப் படுமென்றும்., தாயினால் ஊட்டப்பட்டாலன்றிப் பால் பெறாத குழவிபோல உயிர்களும் அவ்வாறு ஞானம் ஊட்டித் தரப்பெற்றாலன்றித் தாமே உண்ணலாகா என்றும் அறிவது கருத்து. இக்கருத்தறியாது, வரலாறும் நோக்காது, முருகப் பெருமான் வாய்வைத்துண்ட திருமுலை என்று உரை கூறுவாருமுளர். 66

1965. **பொருளுரை:-** சிவபெருமான் அருளுதலும் - (மேற்கூறியபடி) சிவபெருமான் அருளிச் செய்யவே: ஆரணமும்-சீரணங்கு - வேதங்களையும் ஏழுலங்களையும் பெற்றருளி எல்லா பொருட்கும் மூலகாணமாயும் நிற்கின்றவரும், வளம்பெருகும் கருணையே தமது திருவடிவமாயவரும் ஆகிய சிறப்புடைய அம்மையார்: சென்றணைந்து..கறந்தருளி - பிள்ளையாரருகிற் போய் அணைந்து கச்சுப்பொருந்திய தமது திருமுலைப்பாலினைப் பொற்கிண்ணத்திற் கறந்தருளி:

1965. ஆரணமு முலகேழு மீன்றருளி யனைத்தினுக்குங்
காரணமாய் வளம்பெருகு கருணை திருவடிவான
சீரணங்கு சிவபெருமா னருளுதலுஞ் சென்றணைந்து
வாரிணங்கு திருமுலைபொன் வள்ளத்துக் கறந்தருளி. 67

விளக்கவுரை:- ஆரணமும் உலகேழும் ஈன்றருளி - ***ஆரணம்*** - *வேதங்கள் முதலிய நூல்களின் தொகுதி.*

உலகேழும் *என்றது ஏழுலகங்கள் எனப்படும் புவனத் தொகுதியினையும், அவற்றின் எழுவகைப் பிறப்பில் வரும் உயிர்த் தொகுதியினையும் குறித்து நின்றது* ***உயிர்களை ஈன்றருளுத*** *லாவது கேவலத்திற் கட்டுண்டு கிடந்த அவற்றை எடுத்துச் சகலத்தில் வரும்படி உணர்வைப் பிறப்பித்து நடத்துதல்.*

அனைத்தினுக்கும் காரணமாய் - காரணமாய் *என்பது துணைக் காரணமாய், மாயையினின்றுந் தநு கரணம் முதலியவற்றைத் தருபவளாய் அவற்றின்மூலம் உயிர்கள் கன்மபலனை அனுபவித்துக் கழித்து ஈடேறச் செய்பவளாய் என்ற பொருளில் வந்தது.*

வளம்பெருகு கருணை திருவடிவான - வளம் - *போகமும் வீடுமாய செல்வம்:* ***பெருகும்*** - *பெருகுதற்கேதுவாகிய என ஏதுப்பொருளில் வந்த வினைத்தொகை:* ***கருணை*** - *உயிர்களை ஈடேற்றுவதற்கென்றே கொள்ளப்பட்டது என்பார் பெருகு என்றும்,* ***வடிவான*** *என்றும் கூறினார்.*

சீர் அணங்கு - *உமையம்மையார்.* ***சீரிணங்கு*** *என்பது பாடமாயின் மேற்கூறிய பண்பெல்லாம் உடைய என்று சிவபெருமானுக்கு அடையாக்கித் தமது சத்தியின் மூலம் என்று சேர்த்துரைத்துக் கொள்க.*

ஆரணம் ஈன்றருளுதலும், கருணை வடிவாதலும் *உலகின் பொருட்டாதலின்* ***உலகேழும் ஈன்றருளி*** - *என்ற தன்மையை இடையில் வைத்தார். "ஐவகையெனும் பூத மாதியை வகுத்ததனு ளசரசர பேத மான யாவையும் வகுத்துநல் லறிவையும் வகுத்து மறையாதி நூலையும் வகுத்து" (தாயுமானார்) என்பதனுள் இக்கருத்து விரித்துரைக்கப்படுதல் காண்க.*

சென்று அணைந்து - *பொய்கையின் மருங்கினின்றும் பிள்ளையார் நின்றழுத இடத்தின்கட்சென்று சேர்ந்து.*

வாரணங்கு *என்பது பாடமாயின்,* ***அணங்குதல்*** - *பொருந்துதல் என்க.*

காரணமாம் - திருமுலைப்பால் வள்ளத்து - *என்பனவும் பாடங்கள்.* 67

1966. ***பொருளுரை:-*** *உமையம்மை - பெரியநாயகி யம்மையார்: எண்ணரிய.. குழைத்தருளி - எண்ணுதற்கரிதாகிய சிவஞானமாகிய இனிய அமுதத்தினைப் பாலுடனே குழைத்தருளி: எதிர்நோக்கும்..அளித்து - தம்மை எதிர்நோக்கிய பிள்ளையாரது*

1966. எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி
"யுண்ணடிசி" லெனவூட்ட வுமையம்மை யெதிர்நோக்குங்
கண்மலர்நீர் துடைத்தருளிக், கையிற்பொற் கிண்ணமளித்,
தண்ணலையங் கழுகைத்தீர்த் தங்கணனா ரருள்புரிந்தார். 68

கண்மலர்களின் நீரைத் துடைத் தருளி அவரது கையிற் பொற்கிண்ணத்தை அளித்து: "உண் அடிசில்" என ஊட்ட - "பாலமுதத்தினை உண்பாயாக" என்று உண்பிக்க அண்ணலை அருள்புரிந்தார்-'அண்ணலாராகிய பிள்ளையாரை இவ்வாறு அங்கு அழுகை தீர்த்து அங்கணனார் அருள் செய்தனர்.

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டன.

விளக்கவுரை:- எண் அரிய சிவஞானத்து இன் அமுதம் குழைத்தருளி - முன் கூறிய பர அபர ஞானங்கள் அநுபானம்போல் உதவுவன. சிவஞானம் அவற்றுக்கு மேலாய், அநுபானத்திற் குழைக்கப்படும் மருந்து (மாத்திரை) போல் உள்ளது. ஆதலின் அவற்றின் மேம்பட்டதென்பார் **எண்ணரிய** என்றார். "வேத சாத்திர மிருதி புராண கலைஞானம், விரும்பசபை வைகரிய தித்திறங்கள் மேலாம், நாதமுடி வானவெலாம் பாச ஞானம்" (சித்தி 9-2) "திருஞான மிவையெலாங் கடந்த சிவஞானம்" (மேற்படி 11-2): **சிவஞானம்** - திருவடி ஞானம் என்றும் ஒளிஞானம் என்றும் பேசப்படுவது. இது பரஞானம் அபரஞானம் இரண்டினையும் உணர்த்தும். எனவே பிள்ளையாருக்கு அம்மை அளித்த ஞானமும் அம்மையப்பரிருவர் தன்மையும் கொண்டது. இது, பின்னர் இது காரணமாக உலக மின்பமுற வெளிப்போந்த தேவாரத் திருவாக்குக்களின் தன்மையால் விளங்கும். என்னை? **வேதமுடிபுகளை வேதியருக்குக் கூறியருளிப் பஞ்சாக்கரத் திருப்பதிகம் அருளியமையும், சத்திநிபாதர்க்கு நமச்சிவாயத் திருப்பதிகத்தால் சிவனடிசேர் ஞான முதவிச் சிவனடி சேர்த்தமையும், திருவாக்கிற் பிறத்தலாலே பனைகளும் சிவமே கூடிய திறம் பெற அருளியமையும், பிறவும் காண்க. சிவஞானத்து இன் அமுதம்** என்றது மிக்குறிப்பு. **அமுதம்** இறவாமையும் பிறவாமையும் செய்யவல்ல தென்பது குறிப்பு.

குழைத்தருளி - குழைவு செய்து பாலிற் கலந்து. உமையம்மை - குழைத் தருளி - துடைத்தருளி - அளித்து - ஊட்ட என்று கூட்டுக.

எதிர் நோக்கும் கண்மலர்நீர் - "கால் கொட்டி" (1955) என்றதுபோல இதுவும் அரியதோர் தன்மைநவிற்சியணி: பால் முதலிய பொருள்களைத் தரின் குழவிகள், தரும் அவருடைய முகம் நோக்கியே வாங்கும் இயல்பு குறித்தது. 1960-ல் உரைத்தாங்கு ஈண்டும் **கண்மலர்** என்றார். கண்ணாகிய மலரின் வரும் நீர் என்றும், கண்ணின் மலர்ந்து வரும் நீர் என்றும் உரைக்க நின்றது. **கண்ணீர் துடைத்தல்** - குழவிகளை அழுகை தீர்த்துத் தேற்றுவதன் முதன் முயற்சி: **பொற்கிண்ணம் அளித்தல்** - அதன்பின் செய்யும் செயல். **அளித்து** - அளிக்க என்றுரைத்தலுமாம்

அழுகை தீர்த்து - இவ்வாறாகிய செயல்களை ஏவிச் செய்வித்ததனால் தீர்த்து: ஏவுதற்கருத்தா - சிவனே எல்லாம் பிரேரிப்பவர் - நியந்தா என்ற குறிப்பு. அம்மை முன்

சொல்லியபடி உள்ள செயல்களால் அழுகை தீர்ப்பினும், அவை ஐயன் செயல்களேயாம் என்பது. 1963-1964-ன் கருத்துக்களை நோக்குக.

அங்கணன் - எல்லா உயிர்களின் மேலும் வைத்த அங்கண்மை - பேரருள் - உடையவன்.

அண்ணல் - முன்னரே தவமுற்றிய பெருமையுடையார் என்பது குறிப்பு. **அண்ணல்** - பெருமையுடையோர். 68

பிள்ளையார் - ஞானசம்பந்தர்

1967. யாவர்க்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தார்
ஆவதனா லாளுடைய பிள்ளையா ராயகில
தேவருக்கு முனிவருக்குந் தெரிவரிய பொருளாகுந்
தாவிறனிச் சிவஞான சம்பந்த ராயினார். 69

1967. பொருளுரை:- யாவர்க்கும்....ஆளுடைய பிள்ளையாராய் - எல்லா உயிர்களுக்கும் தாயும் தந்தையுமாவார் என்னும் அம்மையப்பர் இவ்வாறு வெளிப்பட்டுத் தாமே அளித்தார்களாதலால் ஆளுடைய பிள்ளையாராகி; அகில...ஆயினார் - எவ்வகைத் தேவர்களுக்கும் முனிவர்களுக்கும் தெரிவதற்கரிய பொருளாகின்ற ஒப்பற்ற தனிச் சிவஞானமாகிய சிவசத்தி சிவத்தோடு தாதான்மியமாய் நிற்பதுபோல இவரும் அதனுள் அடங்கச் சிவ தாதான்மிய சம்பந்த விளக்கம் பெற்றவராக ஆயினார்.

விளக்கவுரை:- இப்பாட்டினால் **ஆளுடைய பிள்ளையார்** என்றும் **திருஞானசம்பந்தர்** என்றும் வழங்கப்படும் வழக்குக்களின் பொருளை விரித்துரைத்தருளினர் ஆசிரியர்.

யாவர்க்கும் தந்தைதாய் எனும் அவர் - **யாவர்க்கும்** - எல்லாவுயிர்களுக்கும். சிறப்புப்பற்றி உயர்திணையிற் கூறினாரேனும் அஃறிணையுயிர்களையும் உடன் கொள்க. **எனும்** - தந்தைதாய் என்பன உபசார வழக்காதலின் **எனும்** என்றார். **அவர்** - சிவன் சத்தி என இருவராகக் காட்டினும் பொருள் ஒன்றே என்பது. உமை - ஊட்ட அங்கணனார் தீர்த்தருள் புரிந்தார் என முன்பாட்டிற் கூறியது காண்க. **இப்படி அளித்தார்** - உமையும் தாமுமாகத் தமது உருவத் திருமேனிகொண் டெழுந்தருளி முன் வந்தும், பால் தந்தும், ஞானமுதவியும் ஆட்கொண்டனர், இது பிரளயாகலருக்கு அருளும் முறை. "கன்மமலத் தார்க்குமலர்க் கண்மூன்றும் தாழ்சடையும், வன்மழுவு மானுமுடன் மால்விடைமேன் - மின்னிடத்துப், பூத்த பவளப் பொருப்பொன்று வெள்ளிவெற்பில், வாய்த்தனைய தெய்வ வடிவாகி - மூத்த, கருமமலக் கட்டறுத்துக் கண்ணருள் செய்து" என்ற கந்தர் கலிவெண்பாவும், முதலிருவர்க்கு "நிராதாரமாகிக் கரையிலருட் பரன்றுவிதா சத்திநிபா தத்தாற் கழிப்பன் மலம்" (முதலிருவர் - பிரளாயாகலர், விஞ்ஞானாகலர்) (சித்தி 8-2) என்ற ஞான சாத்திரமும் காண்க. **இப்படி** என்றது இவ்வாறு முன்னின்றருளும் வகையும் பலவகையுளவாதலின் இங்குச் செய்த அருள் வகையைப் பிரித்துணர்த்திற்று. ஆளுடைய நம்பிகளுக்குத் திரு வெண்ணெய் நல்லூரில் வைத்துக் கொடுத்த அருளின் வெளிப்பாடும், பிறவும் ஒப்பு நோக்குக.

ஆவதனால் ஆளுடைய பிள்ளையாராய் - **ஆளுடைய** என்ற வழக்கையும் **பிள்ளையார்** என்ற வழக்கையும் பொருள் விரித்தவாறு. **ஆளுடைய**-இறைவனால் ஆட்கொள்ளப்பட்ட "ஆளுடைய நம்பி" (285) : "உடையவரசு" (229) : ஆசாரியராக ஆன்மாக்களை ஆளாகக் கொண்டு ஈடேற்றும் தன்மையுடைய என்ற குறிப்புமாம். **பிள்ளையார்** - தாய் தந்தையர்கள் பாலு ஞானமும் கொடுத்து அழுகை தீர்த்தமையாற் பிள்ளை முறைமை பெற்றவர். "அடுத்த தாதை யினியுனக்கு நாமென் றருள"ப்பெற்ற சண்டீச நாயனாரும் அவ்வாறு மகன்மை முறை பெற்றமை பற்றிச் "சேய்ஞலூர்ப் **பிள்ளையார்**" (1263) "வண்புகலிப் பிள்ளையார் தாமெழுந் தருளிடத் தங்கள் பிள்ளையார்" (புரா. 245) "சண்டீசப் **பிள்ளையார்**" (மேற்படி 248) என்று வழங்கப்படுதல் காண்க. **ஆளுடைய** என்றது ஆளாகக் - அடிமையாகக் - கொண்ட என்ற ஆண்டானடிமைத் தன்மையே குறிப்பிடுகின்றது. "போதையார் பொற்கிண்ணத் தடிசில்பொல் லாதெனத், தாதையார் முனிவுறத் தானெனை **யாண்டவன்**" (தேவா) என்று இத்தன்மை பற்றியே பிள்ளையார் உரைப்பதும் காண்க. எனவே பொய்கைக் கரையில் அம்மையப்பர் எழுந்தருளி வந்து பொற்கிண்ணத்திற் பால் தந்த அதனாலே சரவணப் பொய்கையில் அவ்வாறு தரப்பெற்ற ஒப்புமைபற்றிக் குமாரக் கடவுளே இவராம் என்று உரை கூறுதல் பொருந்தா தென்க. பிள்ளையாராய் என்றும், ஞானசம்பந்தராயினார் என்றும் கூறிய ஆக்கச் சொற்களின் பொருளையும் ஓர்க. "பகைகளையும் வகையிலறு முகவிறையை மிகவருள நிகரிலிமையோர் புகவுலகு புகழவெழி றிகழநிக ழலர்பெருகு புகலிநகரே" (சாதாரி) என்று குமாரக் கடவுளைக் கூறுவதன் பொருளையும், குமாரக்கடவுளுக்குச் சிவஞானங் குழைத்தூட்டப் பெறாமையும் கருதுக. "அடையும்வகையாற் பரவியரனையடிகூடு சம்பந்தன்" (சாதாரி - மாகறல் 11), "எம்மானையடி சேருமணி காழிநகரான்" (மேற்படி மாணிகுழி - 11) என்பனவாதியாகத் தம்மைக் கூறுதலும் கருதுக.

அகில...சிவஞானம் - சிவஞானம் திருவருளின் வழியே கொடுக்கப் பெற்றாலன்றித் தேவர் முனிவர் முதலியவர் எவர்க்கும் தெரிவரிதாகும் என்பது. **பொருள்** - சிவஞானம். "தெரிவரிய மெய்ஞ்ஞானஞ் சேர்ந்த வாறே சிவம்பிரகா சிக்குமிங்கே சீவன்முத்த னாகும்" (சித்தி - 11.4). **தாவில் தனி** - **தா** - ஒப்பு: **தனி** - **தன்னைப்** போன்றது எதுவுமில்லாதது தனிச் சிறப்பு: ஒப்பற்றனவும் பலவிருக்கலாம் போலும் என்ற ஐயம் நீக்குதற்குத் தனி என்றார். இருவகை ஞானமுங் குறிக்க இரண் டடை மொழிகள் தந்தோதினார். **தாவில்** - கேடுபடாத என்றலுமாம்.

சிவஞான சம்பந்தர் ஆயினார் - திருஞான சம்பந்தர் என்ற பெயர்போந்த காரணமும் இப்படி அளித்தமையே என்று பின்னும் கூட்டி உரைக்க நின்றது. சிவஞானம் குழைத்து அளித்தமையால் ஞானசம்பந்தராயினார் என்க. **ஆயினார்** - ஈண்டு ஆக்கச் சொல் வெளிப்பாடு என்ற பொருளில் வந்தது. **சிவஞான சம்பந்தர்** - சிவஞான சம்பந்தம் போன்ற சம்பந்தமுடையவர்:

தெரிவரிய பொருளாகும்... ஆயினார் - **சிவஞான சம்பந்தம்** - சிவஞானம் கூடியது போன்ற சம்பந்தம்: **சம்பந்தம்:** கூட்டு - **சிவஞானம்** - சிவசத்தி: அது சிவபரம் பொருளோடு

ஞானமுணர்தல்

1968. சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞானம்
பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்
உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானந்
தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில். 70

தாதான்மியமாய் நிற்பது: (தாதான்மியம் என்னும் சொல்லியல்பு "அது தானுதல்" என்றவாறு: ஒன்றுதானே ஒருவாற்றான் இருவகைப் பட்டுப் பிரிப்பின்றி நிற்றற் குரித்தாந் தன்மை: (மாபாடியம் 2. சூ. 4 அ. 2 அதி): ஈண்டு, இவரும், அச்சத்தி போல அதனுள் அடங்கிச் சிவதாதான்மியமாகிய அத்துவித சம்பந்த விளக்கம் பெற்றார்: **தெரிவரிய பொருள்** - இச்சம்பந்த முழுவதும் விளங்கப் பெறுவது நின்மலதுரியாதீத நிலையிலன்றிக் கூடாதாதலின் தெரிவரிய என்றார். அவ்வதீதநிலையில் நிகழும் பரமானந்தப் பழங்கடலுட் டிளைக்குங்கால் "ஆவி யாக்கை யானென தென்ற" ஞாதிரு ஞான சங்கற்ப ஞானங்களும், சிந்தத்தற் கேதுவாகிய கலை ஞானங்களும் தோன்றா: ஆயின் பின்னர் இருவகை ஞானங்களையும் அந்நிலையில் உணர்ந்தார் எனக் கூறுவதென்னையோ? எனின், உலகம் உய்யவந்தாராதலின் அவற்றை உலகர் பொருட்டு உணர்ந்தார் என்க: மேற்பாட்டில் மேலும் விளக்கப்படும்: பதிகத்தில் "என்னுள்ளங் கவர் கள்வன்" என்பது முதலாக அத்துவித சிவாநந்தக் கலவியுண்மை அருளிச்செய்தலும் காண்க: **சிவஞான சம்பந்தராயின** பின்பே ஞானங்களை உணர்ந்தமைப்பற்றியும் அவ்வுணர்ச்சி உலகர் பொருட்டென்பது விளங்கும். 69

1968. பொருளுரை:- சிவனடியே...சிவஞானம் - சிவன் அடிகளையே சிந்தித்தலாகிய செம்மை பெருகச் செய்யும் சிவஞானமாகிய: உவமையிலாக் கலைஞானம் - ஒப்பற்ற கலைஞானத்தினையும்: பவமதனை...ஞானம் - பிறவிக் கேதுவாகிய மலவாதனையை வேரறமாற்றும் தெளிதலின் மேலாகி விளங்குஞ் ஞானமாகிய: உணர்வரிய-மெய்ஞ்ஞானம்- உணர்வரியதாகிய மெஞ்ஞானத்தினையும்: தவமுதல்வர்...அந்நிலையில்-தவமுதல்வராதலிற் றிருஞானசம்பந்தர்தாம் அந்நிலையில் உணர்ந்தார்.

விளக்கவுரை:- சிவனடியே....சிவஞானம் என்பது உவமையிலாக்கலைஞானம் என்றும்: பவமதனை....ஓங்கியஞானம் என்பது உணர்வரிய மெய்ஞ்ஞானம் என்றும் நிரனிரையாகக் கூட்டி உரைத்துக்கொள்க. இவையே பரோட்சஞானம் எனவும் அபரோட்சஞானம் எனவும் வழங்கப்படுவன.

உவமையிலாக் கலைஞானம் - அபரஞானத்தையும், **உணர்வரி மெய்ஞ்ஞானம்** - பரஞானத்தையும் குறித்து நின்றன. **சிவனடியே..சிவஞானம் - பவமதனை.. ஓங்கிய ஞானம்** என்பன முறையே இவற்றை விளக்கும் விசேடணமாகக் கொள்க. இவ்வாறுகொள்வது ஆசிரியர் கருத்தென்பதனை "மேவரு ஞான மிரண்டவற் றொன்று விமலனார் பாததா மரையே, யோவறு மன்பி னுணர்திரு வளிக்கு மொப்பிலா வுயர்-கலை ஞானம், தாவரும் பவத்தை வேரொடுங் களையுந் தக்கமெய்ஞ் ஞானமொன் றிவற்றாற், சாவதும் பிறப்புந் தணப்புறச் சிவத்தைச் சார்ந்தது வாய்நிற்றல் யோகம்" (திருத்தணிகைப் புராணம் - அகத்திய

னருள்பெறு படலம் - 353) என்ற கச்சியப்ப முனிவர் இத்திருப்பாட்டினை விரிவுரை செய்தருளியவாற்றால் நன்கு புலப்படும். "உயர்ஞான மிரண்டா மாறாமலமகல வகலாத மன்னு போதத் திருவருளொன் றொன் றதனைத் தெளிய வோதுஞ் சிவாகமமென் றுலகறியச் செப்பு நூலே" (பாயிரம் - 10) என்று சிவப்பிரகாசத்தினுள் உமாபதிசிவனார் உபதேசித்தருளியவற்றாலும் இது தெளிவுபடும். (ஈண்டு, அருள் - அருள்ஞானம்: மெய்ஞ்ஞானம்). "சிவனுடைய நிர்மலமான சமவேதமான **ஞானசத்தி**யே ஞானமென்று நூல்களால் உரைக்கப்படும்: **சாத்தம் - அந்த** ஞானத்தைக் கருதலளவையா லுணர்தற்கு ஏதுவாம்" என்ற பௌஷ்ராகமப் பிரமாணமும் காண்க. "சிவஸ்ய சம வேதாய சக்திர் ஞானாத்மிகமலா, சைவஞான மிதிப்ரோக்தம் சாப்தந்தநுமாமகம்" என்பது பவுட்கராகமம் - (பதிபடலம்) இங்குச் சிறப்புப்பற்றிச் **சாத்தம்** என்பது சிவாகமஞானமே என்றும், வேதமும் சிவாகமத்தோ டொற்றுமையுடையதொரு முதனூலாய்த் தத்துவஞானத்தினை விளக்கும் சாதனமாதலின் பொதுவகையால் அதுவும் **சாத்தம்** என்றதனாற் கொள்ளப்படுமென்றுமுணர்க.

சிவனடியே... சிவஞானம் - உவமையிலாக் கலைஞானம் - ஏகாரம் பிரிநிலை: "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்" என்றும், "மறக்குமாறிலாத" என்றும் வரும் திருவாக்குக்கள் ஈண்டு நினைகூர்தற்பாலன. **திருப்பெருகு** - திருவைப் பெருகச் செய்யும். **சிந்திக்கும் திரு** - சிந்தித்தலாகிய திரு. பெருகுசிவஞானம் - வினைத்தொகை: நோய்தீர் மருந்து என்புழிப்போல ஏதுப் பெருளில் வந்தது சித்தித்தலே திருவென்றார்: "நின்முகங் காணுமருந்தினேன் என்னுமால்" என்பது போல நின்றது. திரு - சிவத்தன்மை பயக்கும் முத்தி: அருட்செல்வம் பஞ்சாக்கரம் வேத சிவாகமங்கள்: ஏனைக் கலைஞானங்கள் போலாது சிவனருளைத் தப்பாது விளைக்குஞ் சாதனமாகிய செல்வம் என்பது கருத்து.

உவமையிலாக் கலைஞானம் - தத்துவ ஞானத்தை உணர்த்தும் சிறப்பினால் ஏனைக் கலைஞானங்களிலும் மேம்பட்டு நிற்குந்தன்மை **உவமையிலா** எனப்பட்டது. வேதாகமங்கள் ஏனைக் கலைஞானங்களுக்கெல்லாம் உவமையாகி - எடுத்துக்காட்டாகி - நிலைபெறுமென்றவாறு. உவமம் "உயர்ந்ததன் மேற்றே" என்ப திலக்கணம். இங்குக் **கலைஞானம்** என்பது முக்கியப் பொருளினால் முத்தி பஞ்சாக்கரத்தை யுணர்த்துமாயினும் கௌணப் பொருள்பற்றி வேத சிவாகமங்களையும் அவைகளினின்றும் விரிந்த ஏனைக் கலைஞானங்கள் எல்லாவற்றையு முணர்த்தும். அவையெல்லாம் அதன் பரப்பாய் நிற்பனவாகலான் அவ்வாறுணர்த்து மென்பது. **திருப்பெருகு** என்ற கருத்துமிது. "தாவிறனிச் சிவஞான சம்பந்தர்" (1967) என்றதுகாண்க.

சிவஞானமாகிய கலைஞானம் என்க. **சிவஞானமாகிய கலைஞானம்** என்பதனால் கேட்டலும், **சிவனடியே சிந்திக்கும் திரு** - என்றதனால் சிந்தித்தலும் என்ற ஞான சாதனங்கள் பெறப்பட்டன. கலைஞானத்தைச் சிவஞானமென்றது உபசாரம்.

பவமதனை...ஓங்கியஞானம் - உணர்வரிய மெய்ஞ்ஞானம் - பவம் - பிறவி: ஈண்டுப் பிறவிக் கேதுவாகிய மலவாதனை (வாசனாமலம்) என்ற பொருளில் வந்தது. அதுவும் பற்றறத் தீர்ந்தவழியேபிறவியறுமாதலால். 'பவமற வென்னை முன்னா ளாண் டவப் பண்பு கூட, நவமலர்ப் பாதஞ் சூட்டு மென்னுநல் லுணர்வு" (புரா.1244) என்றது ஈண்டுச் சிந்திக்கத்

தக்கது. **பவம் அதனை - அது**-பகுதிப் பொருள் விகுதி பாங்காக வந்த தெளிவு **பாங்கு** என்று உபசரித்துக் கூறப்பட்டது. பாங்காவது நிட்டை என்றும் அநுபூதி ஞானத்துக்கு அணித்தாயுள்ள தன்மை. **மாற்றும் பாங்கு** - மாற்றுதலே பாங்கு, எனக் சிந்திக்கும் **திரு** என்றதுபோலப்-**பாங்கினில் ஓங்கிய** என்றார். **இல்** - உறழ் பொருளின் வந்த ஐந்தனுருபு. "அறத்தினூஉங் காக்கமும்" என்புழிப் போல. **பவம்** - பிறவி. **மதன்** - அறியாமை என்றுகொண்டு பிறவிக்குக் காரணமாகிய அறியாமை என்றும் ஆணவத்தைப் பாகஞ் செய்யும் என்றலுமாம்: "மதனுடை நோன்றாள்" (முருகு) என்றாற்போல.

உணர்வரிய - அருமை - பசுஞான பாசஞானங்களால் அறியப்படாமை குறித்தது. உணர்வரிய மெய்ஞ்ஞானம் - பரஞானமாதலின் அதனை யடைந்தார் தம் உணர்ச்சி தேய்ந்து அதுவாய் நிற்றலால் என்க. **உணர்வரிய** - தமது முதல்வனே தநு வடிவங்கொண்டு வந்து உணர்த்தினாலன்றி வேறு எவ்வாற்றானு முணரமுடியாத (மெய்ஞ்ஞானம்) என்றுரைத்தலும் பொருந்தும். **உணர்வரிய மெய்** - சிவசத்து என்பது குறித்தது.

பவமதனையற மாற்றும் பாங்கு-என்றதனால் தெளிதலும் **உணர்வரிய (மெய்ஞ்ஞான)** மென்றதனால் நிட்டையும் உள்ளீடாகிய ஞான சாதனங்களாக உணர்த்தப்பட்டன. இவையிரண்டும் பரஞானமாதலின் முன்னது பாச நீக்கமும் பின்னது சிவப்பேறும் பயப்பிப்பனவென்று **பவமதனையற மாற்றும்** எனவும், **உணர்வரிய மெய்** - எனவும் தந்த அடைமொழிகளால் உணர்த்தி யருளினார்.

கலைஞானமும் மெய்ஞ்ஞானமுமாகிய அபர பர ஞானங்களிரண்டினையும் உணர்ந்தார் என்று முடிக்க. இரண்டென்னும் செவ்வெண்ணும் முற்றும்மையும் விகாரத்தாற் றொக்கன.

தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் - தவமுதல்வராதலின் - உணர்ந்தார் எனக் காரணப்பொருள்பட உடம்பொடு புணர்த்தி ஓதியருளினார். முன்னைத்தவ விசேடத்தால் திருஞான சம்பந்தராகி விளங்கும் ஆளுடைய பிள்ளையார். "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" *(1953)* என்ற விடத்துரைத்தவை பார்க்க. **முதல்வர்** - வினையெச்சமுற்று. **தாம்** - கட்டுரைச் சுவைபட வந்த உயர்வு குறித்த பன்மைச்சொல். **சம்பந்தர் தாம்** - சம்பந்தராகிய என்று ஆக்கச் சொல் விரிக்க. "**சம்பந்தராயினார்**" என்ற முன்பாட்டினைத் தொடர்ந்து கொண்டு ஆக்கச் சொல் ஆயினமையால் என்று காரணப் பொருள்படவு முரைத்துக் கொள்க. இப்படி அளித்தார் - ஆவதனால் - ஆயினார் - *(1967)* - ஞானம் - உணர்ந்தார் என்று காட்டக் கண்ட தன்மை கூறப்பட்டதுங் காண்க.

தவமுதல்வர்-மூன்று கண்ணும், நான்கு தோளும், கருநட்ட கண்டமும் முதலிய உறுப்புக்களுடன் முத்தொழிலும் இயற்றும் தனது இயற்கை வடிவே குருவடிவமாகக் காட்டி முதல்வன் பிரளயாகலர்க்குப்போல முன்னின்று உயர்ஞானம் உணர்த்துதற் கேதுவாகிய பெருந்தவ மென்பது குறிக்கத் **தவமுதல்** என்றார். முதற்றவமாவது பக்குவ முதிர்ச்சியால் வரும் நாலாஞ் சத்திநிபாதம் முற்றியதனாற் பெறப்பட்டுப் பதினாறாவது எல்லையில் நிற்கும் தலைமைச் சிவபுண்ணியம். நாற்சீர்க் கலிவிருத்தத்தாற் கூறியருளியதும் இக்குறிப்புத் தருவதாம்.

தாம் உணர்ந்தார் - அரிசி தானேயட்ட தென்றாற்போல எளிதின் உணர்ந்தார் என்றுரைத்தலுமாம். இப்பொருட்டுத் **தாம்** - பெயர்: தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கதென்க.

அந்நிலை - "சிவஞான சம்பந்தராயின" நிலை. ஞானபோனக முண்டருளிய போதே சிவானந்தானுபவம் பெற்ற நின்மல துரியாதீத நிலைபெற்றுச் சிவஞான சம்பந்தரானார்: **அந்நிலையில்** - அந்த நிலையிலே உலகமுய்யும் பொருட்டு இருவகை ஞானங்களும் அவருக்கு விடயமாயின என்க: ஏனையோர்போலச் சாதக நிலையில் அபர - பர ஞானங்களை அவர் பெற்றாரல்லர் என்பது ''என்னுள்ளங் கவர் கள்வன்'' என்றருளியவாற்றாற் பெறப்படும். முன்பாட்டிலுரைத்தவை பார்க்க.

"கேட்டலுடன் சிந்தித்தல் தெளித னிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்" (சித்தி 8-24) என்ற இடத்துக் கூறப்பட்ட கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்ற ஞான சாதனங்கள் நான்கினையும் இவ்வாறு முன்னிரண்டை அபரஞானப்பகுதியினும், பின்னிரண்டைப் பரஞானப் பகுதியினுமாகப் பிரித்து ஈண்டு இரண்டாகப் பிரித்து வைத்தோதியது என்னை? எனின், முன்னைய விரண்டும் நூலும் அருளும் பற்றுக்கோடாக நிகழ்வன: பின்னையவிரண்டும் நூல்வேண் டாது அருளே பற்றுக்கோடாக நிகழ்வன ஆதலின் என்க. இங்குக் கூறிய கேட்டல் முதலிய மூன்றும் முத்தி சாதனமாகிய ஞானத்தைப் பெறுதற்கு உபாயங்களேயாம். கேட்டலால் வருவது, சிந்தித்தலால் வருவது, தெளிதலாற் பெறுவது, நிட்டைகூட உதவுவது என்ற ஞானம். "உபதேசத்தாற் **கேட்டறியலாம்: கேட்டதனை** அதற்கனுகூலமான **வளவையாற் சிந்தித்து மறியலாம். சிந்தித்ததனைத்** தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான், மாசறத் **தெளிந்துமறியலாம்:** அதனாற் பாசக்ஷயம்பண்ணி **நிட்டைகூடிச் சிவாநந்தானுபூதி**யும் பெறலாம்" என்று சிவஞான முனிவர் விளக்கியபடி கேட்டல் முதலிய மூன்றும் முற்றிய ஞானம் பெறவும் அதனால் வீடு பெறவும் வாயில்களாம் என்பது பெறப்படும்.

எனவே ஞானம் என்பது தொகையால் ஒன்றாம்: வகையால் பரம் அபரம் என இரண்டாம்: பெறும் வாயில் விரியால் கேட்டல் முதலியவற்றால் நான்காம். இனி, ஞான வேள்வி என ஐந்தாயும், சரியை முதலிய நிலைபற்றி உண்மை உபாயம் என்ற வேறுபாட்டால் எட்டாயும், தசகாரியம்பற்றிப் பத்தாயும், முன்கூறிய எட்டு நிலைகளும் ஒவ்வொன்று நான்காகு முறைபற்றி முப்பத்திரண்டாயும் இன்னும் பலவாறாயும் விரிந்து நிற்பது ஞானம் என்பர். அவையெல்லாம் பரம் அபரம் என்ற இருமுதல் ஞானங்களுள் அடங்குமென்க.

தவமுதல்வர்.. உணர்ந்தார் - "தாவில் தனிச் சிவஞான சம்பந்த ராயினார்" (1967) என்ற முன் பாட்டினைத் தொடர்ந்துகொண்டு, அவ்வாறு பிள்ளையாருக்குத் "தவமின்றியு ஞான நிகழ்ந்தவாறென்னை?" என்ற ஆசங்கையை முன்னிட்டு அதனை நீக்குதற் கெழுந்தது இத்திருப்பாட்டு: அதனுடன் அவருணர்ந்த ஞானம் முற்றிய ஞானமென்று கூறி அதன் பாகுபாட்டையு முணர்த்திற்று.

இது, நோக்குறுப்புப் பெரிது முடையதாய், என்று கால நெறியின் ஆற்றிய அறிவனது தேயத்ததாய்ப், பத்துக் குணங்களும் பயின்றதாய், அறத்தின் பயனாகிய வீடு பேற்றுக் குரியதாய் வந்த வாகைப் பாடாண் பாட்டென்பர் உணர்ந்தோர். இனி இதன் அருமைகளை அறிவோர் பல திறத்தானும் உணர்ந்தநுபவிப்பர். மேற்கூறியவை சபாபதி நாவலர் எழுதிய சூடாமணியின் உரையைப் பெரும்பான்மை தழுவி எழுதப்பட்டன.

இனி, மேற்கூறியபடியன்றிச் சிவஞானமாகிய ஓங்கிய ஞானம் என்றும், கலை ஞானமாகிய மெய்ஞ்ஞானம் என்றும், கூட்டி உரை கூறுவாருமுளர். இது பொருள் பற்றாமை உணரப்படும். இனி, அந்தக் கேட்டல் முதலிய நான்கினையும் இத்திருப்பாட்டிற் கூறிய நான்கு ஞானங்களாகக் கூறுவாருமுளர். அவர், கலைஞானம், சிந்திக்கும் சிவஞானம், ஓங்கிய ஞானம், மெய்ஞ்ஞானம் என்ற ஞானப் பிரயோகங்கள் நான்கும் முறையே கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டைகூடல் என்ற நான்கு ஞானங்களையும் கூறுவன என்பர். இந்நான்கும் ஞானம் பெறும் வாயிற் சாதனங்க ளாமாறும், அபர பர ஞானங்களுட்பட்டு வருமாறும் முன் உரைக்கப் பட்டன காண்க.* 70

1969. பொருளுரை:- எப்பொருளும்...உணர்வும் - எல்லாப் பொருள்களையும் இயக்குபவன் ஈசனே என்கின்ற உணர்ச்சியும்; அப்பொருள்தான்...அறிவும் - அந்தப் பொருளாவது அவ்வாறு ஆளுடையாரும் அவரது அடியார்களுமேயாவர் என்னும்

---

*(கி.பி.1887-ம் ஆண்டில்) இற்றைக்குச் சற்றேறக்குறைய 60 ஆண்டுகளின் முன் இத்திருப்பாட்டு மேற்கூறியபடி அபரம் பரம் என்னுமிரு ஞானங்களை நுதலிற்றா? அன்றிக் கேட்டல் முதலிய நான்கு ஞானங்களை நுதலிற்றா? என்பது பற்றியதொரு மூண்ட வாதம் (சென்னையிற்) பல புலவர்பெருமக்களிடை நிலவிற்று. காசிவாசி - செந்தி நாதையர், சபாபதி நாவலர் - மயிலைத் தணிகாசல முதலியார் - சுப்பராய முதலியார் - சிவாநந்த முதலியார் - வல்லை சண்முக சுந்தர முதலியார் முதலியவர்க ளொருபுறமும், சூளை சோமசுந்தர நாயகர் - சூளை சுப்பராய நாயகர் மற்றொரு புறமுமாக அதிற் கலந்து கொண்டனர். ஞானபேத விளக்கச் சூறாவளி, விபரீத ஞான நிக்ரஹம் ஆகிய ஞான பேதத் தெளிவு, ஞான சூடாமணி, துர்வாத நிக்ரஹம் ஆகிய ஞானபேதத் துணிவு, ஞானபேத விளக்க மறுப்பு, நியாயபேத விளக்க நியாய ரக்ஷாமணி, ஞான வழக்கு முடிவு என்னும் சிறு நூல்கள் ஒன்றன்மே லொன்று கண்டனமாக அதிவிரைவில் வெளிவந்தன. இவையேயன்றி, இதோபதேசம், தோல்வியறிவிப்பு, நன்மதிகூறல் முதலிய தனித்துண்டுத் தாள்களும் அவ்வாறே வெளிப்போந்தன, அவ்வாறு இதுபற்றித் தமிழ்ப் பெரும் புலவர்களிடையிற் பெரும் பூசலும் பெரு நிந்தை வழங்கலும் உளவாயின. அவற்றிற் காணப்பெற்ற பெரும்பாலான நிந்தைத் திரள்களை ஒதுக்கி, உரைக் கோட்பாடுகளை மட்டும் எடுத்து மேலே தரப்பட்டுள்ளது. அன்பர்கள் ஆய்ந்து மெய்யுரை தெளிவார்களாக. அத்துண்டு நூல்களையும் தாள்களையும் யாது காரணம் பற்றியோ எனது அருமைத் தந்தை யார் வித்வான் கந்தசாமி முதலியார் சேர்த்து ஓர் புத்தகமாகக் கட்டி **"ஞானபேத விளக்கக் கட்சி"** என்று பேரிட்டுத் தமது புத்தக சாலையில் வைத்திருந்தனர். அவர் சிவபதமெய்திய 56 ஆண்டுகளின்பின் இவ்வுரை எழுதும்போது அப்புத்தகத்தை அடியேன் கண்டு படித்து இதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். இப்பயனை என் தந்தையார் சிறிதும் எண்ணியிருத்த லியலாது. திருவருளின் வழிஇப்புராண உரைக்கு முன் உதவியாய் வைக்கப்பட்ட சேம வைப்பு அது என்று கருதுகிறேன். எனக்கு "எப்பொருள மாக்குவா னீசனேயெனு முணர்வு" என்ற மேல்வரும் பாட்டும் இதற்காதரவாமென்பேன். 60 ஆண்டுகளின் முன் சிவஞானத்தைப் பற்றித் தத்தம் உயிரும் அவ்வுயிர்க்குயிராகிய சிவனுமே பற்றுக் கோடாகப் பூசலிட்டு வலிந்தும் சைவத் திறத்தைப் பற்றிக் கொண்டு நின்ற சென்னைமா நகரம் சைவஞான ஒழுக்கம் பற்றி ஒரு சிறிதும் பற்றாது ஞானம் எவ்வாறாயினு மெமக்கென்ன? என்று கவலை யற்றிருப்பதைக் காண்பது காலக் கொடுமை! ஏன்? சென்னைமட்டுமா? நாடு முழுதுந்தான்!

1969. எப்பொருளு "மாக்குவா னீசனே" யெனுமுணர்வும்,
"அப்பொருடா னாளுடையா ரடியார்க" ளெனுமறிவும்,
இப்படியா லிதுவன்றித் தம்மிசைவு கொண்டியலுந்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார். 71

அறிவும்: இப்படியால் - இதுவே நெறியாக: இதுவன்றி-எழுவார் - இவ்வாறன்றித் தத்தமது அறிவுக்கேற்றவாறு உட்கொண்டு இயல்கின்ற துப்புரவில்லாரது துணிபுகளையெல்லாம் துகள் படும்படி எண்ணி எழுவாராயினார்.

விளக்கவுரை:- உணர்வும் - அறிவும் - இப்படியாக: இதுவன்றி - இயலும் - துணிவு - துகளாக - எழுந்தார் என்று முடித்து உரைத்துக் கொள்க.

எப்பொருளும்- உணர்வும் - உணர்வு - முன் பாட்டில் **உணர்ந்தார்** என்று முடித்த அந்நிலையினைத் தொடர்ந்து மேற்கொண்டபடி. ஞானப்பால் அமுதுண்டனர் பிள்ளையார்: அது உள்ளே புகுந்தது: ஞான உணர்வை விளைத்தது: அவ்வாறு விளைத்த ஞான உணர்வு இரண்டுவகை: இனி, அவ்வுள்ளுணர்வாகிய உணர்ச்சிநிலை ஏனையோர்க்குப்போல அவர்மட்டில் பயன்தந்து அமைந்துபடாது, உலகம் பயன்பெற மேல் எழுந்தது: அவ்வாறெழுந்து மேற் கொள்ளப்பட்ட வகை முன்னர் உட்சென்ற ஞான மிருவகையின் பாலதாய்த் தானு மிரண்டு வகையாய், உணர்வும் அறிவுமாய் எழுந்தது: அவற்றுள் இது, உணர்வு இன்ன தன்மையது என விளக்குகின்றது. "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" என்ற உவமையிலாக் கலை ஞானத்தின் விளைவு என்க.

எப்பொருளும் ஆக்குவான் ஈசனே - ஈசனே - ஈசன் என்றது முழுமுதற் பொருளாய்ப் **பதி** எனப்படும் சிவபெருமான். ஈசன் - பகவன் - என்பன சிவபெருமானைக் குறிக்கும் என்பது சூடாமணி நிகண்டு. **ஈசனே** - ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாய் வந்தது. **எப்பொருளும்** - என்றதனால் பசு பாசங்களாகிய இருபொருளும் உணர்த்தப்பட்டன. இருவகையும் குறிக்க **எப்பொருளும்** என்றார். **ஆக்குதல்** - பசுக்களைப் பற்றியவழிப் படைத்தலாதிய தொழில்களுள்ளே படும்படி உயிர்களைச் செலுத்துதல் என்றும்; பாசத்தைப் பற்றியவழிக் கன்மபலன் நுகர்வித்தற் பொருட்டு மாயா மலத்தைத் தொழிற்படுத்தி ஆணவத்தை மெலிவித்தல் என்றும் பொருள் கொள்க. எனவே பொருட்டுணிவு பெற்று ஈசனை யடைதல் உறுதிப் பொருள் என்றது **உணர்வு** எனப்பட்டது. இது **உவமையிலாக் கலைஞான** முடிபாய்த் "தெளிவின்" பாற்பட்டுப் பாச நீக்கப் பயன் குறித்துச் சிவஞானபோதம் பத்தாஞ் சூத்திரக் கருத்துணர்த்தி நின்றது. இதனால் வேறு எல்லாச் சமயவாதங்களும் நிராகரிக்கப்படும் துணிவு பெற்றமை உணர்த்தப்பட்டது.

அப்பொருள்தான்—அறிவு - அறிவு - முன் பெறப்பட்ட உணர்வின் பயனாய், அதுமுற்றி விளையுமிடமாவன இலிங்கமும் குருவுமாகிய ஆளுடையார் என்ற திரு மேனிகளும், சங்கமம் ஆகிய அடியார் திருமேனியும் என்ற இவையிரண்டுமே என்ற சிவப்பேறும் வாசனாமல நீக்கமும் ஆகிய **உணர்வரிய மெய்ஞ்ஞானப்** பயன் குறித்துப் பதினொன்று பன்னிரண்டாஞ் சூத்திரங்களின் முடிபுணர்த்தி நின்றது. இதனால் பரசமய

இது, நோக்குறுப்புப் பெரிது முடையதாய், மூன்று காலமு நெறியின் ஆற்றிய அறிவனது தேயத்ததாய்ப், பத்துக் குணங்களும் பயின்றதாய், அறத்தின் பயனாகிய வீடு பேற்றுக் குரியதாய் வந்த வாகைப் பாடாண் பாட்டென்பர் உணர்ந்தோர். இனி இதன் அருமைகளை அறிவோர் பல திறத்தானும் உணர்ந்தநுபவிப்பர். மேற்கூறியவை சபாபதி நாவலர் எழுதிய சூடாமணியின் உரையைப் பெரும்பான்மை தழுவி எழுதப்பட்டன.

இனி, மேற்கூறியபடியன்றிச் சிவஞானமாகிய ஓங்கிய ஞானம் என்றும், கலை ஞானமாகிய மெய்ஞ்ஞானம் என்றும், கூட்டி உரை கூறுவாருமுளர். இது பொருள் பற்றாமை உணரப்படும். இனி, அந்தக் கேட்டல் முதலிய நான்கினையும் இத்திருப்பாட்டிற் கூறிய நான்கு ஞானங்களாகக் கூறுவாருமுளர். அவர், கலைஞானம், சிவஞானம், ஓங்கிய ஞானம், மெய்ஞ்ஞானம் என்ற ஞானப் பிரயோகங்கள் நான்கும் முறையே கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டைகூடல் என்ற நான்கு ஞானங்களையும் கூறுவன என்பர். இந்நான்கும் ஞானம் பெறும் வாயிற் சாதனங்க ளாமாறும், அபர பர ஞானங்களுட் பட்டு வருமாறும் முன் உரைக்கப் பட்டன காண்க.* 70

1969. பொருளுரை:- எப்பொருளும்...உணர்வும் - எல்லாப் பொருள்களையும் இயக்குபவன் ஈசனே என்கின்ற உணர்ச்சியும்; அப்பொருள்தான்....அறிவும் - அந்தப் பொருளாவது அவ்வாறு ஆளுடையாரும் அவரது அடியார்களுமேயாவர் என்னும்

---

*(கி.பி.1887-ம் ஆண்டில்) இற்றைக்குச் சற்றேறக்குறைய 60 ஆண்டுகளின் முன் இத்திருப்பாட்டு மேற்கூறியபடி அபரம் பரம் என்னுமிரு ஞானங்களை நுதலிற்றா? அன்றிக் கேட்டல் முதலிய நான்கு ஞானங்களை நுதலிற்றா? என்பது பற்றியதொரு நீண்ட வாதம் (சென்னையிற்) பல புலவர்பெருமக்களிடை நிலவிற்று. காசிவாசி - செந்தி நாதையர், சபாபதி நாவலர் - மயிலைத் தணிகாசல முதலியார் - சுப்பராய முதலியார் - சிவாநந்த முதலியார் - வல்லை சண்முக சுந்தர முதலியார் முதலியவர்க ளொருபுறமும், சூளை சோமசுந்தர நாயகர் - சூளை சுப்பராய நாயகர் மற்றொரு புறமுமாக அதிற் கலந்து கொண்டனர். ஞானபேத விளக்கச் சூறாவளி, விபரீத ஞான நிக்ரஹம் ஆகிய ஞான பேதத் தெளிவு, ஞான சூடாமணி, துர்வாத நிக்ரஹம் ஆகிய ஞானபேதத் துணிவு, ஞானபேத விளக்க மறுப்பு, நியாயபேத விளக்க நியாய ரக்ஷாமணி, ஞான வழக்கு முடிவு என்னும் சிறு நூல்கள் ஒன்றன்மே லொன்று கண்டனமாக அதிவிரைவில் வெளிவந்தன. இவையேயன்றி, இதோபதேசம், தோல்வியறிவிப்பு, நன்மதிகூறல் முதலிய தனித்துண்டுத் தாள்களும் அவ்வாறே வெளிப்போந்தன, அவ்வாறு இதுபற்றித் தமிழ்ப் பெரும் புலவர்களிடையிற் பெரும் பூசலும் பெரு நிந்தை வழங்கலும் உளவாயின. அவற்றிற் காணப்பெற்ற பெரும்பாலான நிந்தைத் திரள்களை ஒதுக்கி, உரைக் கோட்பாடுகளை மட்டும் எடுத்து மேலே தரப்பட்டுள்ளது. அன்பர்கள் ஆய்ந்து மெய்யுரை தெளிவார்களாக. அத்துண்டு நூல்களையும் தாள்களையும் யாது காரணம் பற்றியோ எனது அருமைத் தந்தை யார் வித்வான் கந்தசாமி முதலியார் சேர்த்து ஓர் புத்தகமாகக் கட்டி **"ஞானபேத விளக்கக் கட்சி"** என்று பேரிட்டுத் தமது புத்தக சாலையில் வைத்திருந்தனர். அவர் சிவபதமெய்திய 56 ஆண்டுகளின்பின் இவ்வுரை எழுதும்போது அப்புத்தகத்தை அடியேன் கண்டு படித்து இதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். இப்பயனை என் தந்தையார் சிறிதும் எண்ணியிருத்த லியலாது. திருவருளின் வழிஇப்புராண உரைக்கு முன் உதவியாய் வைக்கப்பட்ட சேம வைப்பு அது என்று கருதுகிறேன். எனக்கு "எப்பொருள மாக்குவா னீசனேயெனு முணர்வு" என்ற மேல்வரும் பாட்டும் இதற்காதரவாமென்பேன். 60 ஆண்டுகளின் முன் சிவஞானத்தைப் பற்றித் தத்தம் உயிரும் அவ்வுயிர்க்குயிராகிய சிவனுமே பற்றுக் கோடாகப் பூசலிட்டு வலிந்தும் சைவத் திறத்தைப் பற்றிக் கொண்டு நின்ற சென்னைமா நகரம் சைவஞான ஒழுக்கம் பற்றி ஒரு சிறிதும் பற்றாது ஞானம் எவ்வாறாயினு மெமக்கென்ன? என்று கவலை யற்றிருப்பதைக் காண்பது காலக் கொடுமை! ஏன்? சென்னைமட்டுமா? நாடு முழுதுந்தான்!

1969. எப்பொருளு "மாக்குவா னீசனே" யெனுமுணர்வும்,
"அப்பொருடா னாளுடையா ரடியார்க" ளெனுமறிவும்,
இப்படியா லிதுவன்றித் தம்மிசைவு கொண்டியலுந்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார். 71

அறிவும்: இப்படியால் - இதுவே நெறியாக: இதுவன்றி-எழுவார் - இவ்வாறன்றித் தத்தமது அறிவுக்கேற்றவாறு உட்கொண்டு இயல்கின்ற துப்புரவில்லாரது துணிபுகளையெல்லாம் துகள் படும்படி எண்ணி எழுவாராயினார்.

விளக்கவுரை:- உணர்வும் - அறிவும் - இப்படியாக: இதுவன்றி - இயலும் - துணிவு - துகளாக - எழுந்தார் என்று முடித்து உரைத்துக் கொள்க.

எப்பொருளும்- உணர்வும் - உணர்வு - முன் பாட்டில் **உணர்ந்தார்** என்று முடித்த அந்நிலையினைத் தொடர்ந்து மேற்கொண்டபடி. ஞானப்பால் அமுதுண்டனர் பிள்ளையார்: அது உள்ளே புகுந்தது: ஞான உணர்வை விளைத்தது: அவ்வாறு விளைத்த ஞான உணர்வு இரண்டுவகை: இனி, அவ்வுள்ளுணர்வாகிய உணர்ச்சிநிலை ஏனையோர்க்குப்போல அவர்மட்டில் பயன்தந்து அமைந்துபடாது, உலகம் பயன்பெற மேல் எழுந்தது: அவ்வாறெழுந்து மேற் கொள்ளப்பட்ட வகை முன்னர் உட்சென்ற ஞான மிருவகையின் பாலதாய்த் தானு மிரண்டு வகையாய், உணர்வும் அறிவுமாய் எழுந்தது: அவற்றுள் இது, உணர்வு இன்ன தன்மையது என விளக்குகின்றது. "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" என்ற உவமையிலாக் கலை ஞானத்தின் விளைவு என்க.

எப்பொருளும் ஆக்குவான் ஈசனே - ஈசனே - ஈசன் என்றது முழுமுதற் பொருளாய்ப் **பதி** எனப்படும் சிவபெருமான். ஈசன் - பகவன் - என்பன சிவபெருமானைக் குறிக்கும் என்பது சூடாமணி நிகண்டு. **ஈசனே** - ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாய் வந்தது. **எப்பொருளும்** - என்றதனால் பசு பாசங்களாகிய இருபொருளும் உணர்த்தப்பட்டன. இருவகையும் குறிக்க **எப்பொருளும்** என்றார். **ஆக்குதல்** - பசுக்களைப் பற்றியவழிப் படைத்தலாதிய தொழில்களுள்ளே படும்படி உயிர்களைச் செலுத்துதல் என்றும்; பாசத்தைப் பற்றியவழிக் கன்மபலன் நுகர்வித்தற் பொருட்டு மாயா மலத்தைத் தொழிற்படுத்தி ஆணவத்தை மெலிவித்தல் என்றும் பொருள் கொள்க. எனவே பொருட்டுணிவு பெற்று ஈசனை யடைதல் உறுதிப் பொருள் என்றது **உணர்வு** எனப்பட்டது. இது **உவமையிலாக் கலைஞான** முடிபாய்த் "தெளிவின்" பாற்பட்டுப் பாச நீக்கப் பயன் குறித்துச் சிவஞானபோதம் பத்தாஞ் சூத்திரக் கருத்துணர்த்தி நின்றது. இதனால் வேறு எல்லாச் சமயவாதங்களும் நிராகரிக்கப்படும் துணிவு பெற்றமை உணர்த்தப்பட்டது.

அப்பொருள்தான்—அறிவு - அறிவு - முன் பெறப்பட்ட உணர்வின் பயனாய், அதுமுற்றி விளையுமிடமாவன இலிங்கமும் குருவுமாகிய ஆளுடையார் என்ற திரு மேனிகளும், சங்கமம் ஆகிய அடியார் திருமேனியும் என்ற இவையிரண்டுமே என்ற சிவப்பேறும் வாசனாமல நீக்கமும் ஆகிய **உணர்வரிய மெய்ஞ்ஞானப்** பயன் குறித்துப் பதினொன்று பன்னிரண்டாஞ் சூத்திரங்களின் முடிபுணர்த்தி நின்றது. இதனால் பரசமய

தக்கது. **பவம் அதனை - அது**-பகுதிப் பொருள் விகுதி. பாங்காக வந்தது தெளிவு **பாங்கு** என்று உபசரித்துக் கூறப்பட்டது. **பாங்காவது** நிலைமை என்றும் அனுபூதி ஞானத்துக்கு அணித்தாயுள்ள தன்மை. **மாற்றும் பாங்கு** - மாற்றுதலே பாங்கு என்க. சிந்திக்கும் **திரு** என்றதுபோலப்-**பாங்கினில் ஓங்கிய** என்றார் **இல்** - உறழ் பொருளின் வந்த ஐந்தனுருபு. "அறத்தினூஉங் காக்கமும்" என்புழிப் போல. **பவம்** - பிறவி. **மதன்** - அறியாமை என்றுகொண்டு பிறவிக்குக் காரணமாகிய அறியாமை என்றும் ஆணவத்தைப் **பாகஞ்** செய்யும் என்றலுமாம்: "மதனுடை நோன்றாள்" (முருகு) என்றாற்போல.

உணர்வரிய - அருமை - பசுஞான பாசஞானங்களால் அறியப்படாமை குறித்தது. **உணர்வரிய மெய்ஞ்ஞானம்** - பரஞானமாதலின் அதனையடைந்தார் தாம் உணர்ச்சி தேய்ந்து அதுவாய் நிற்றலால் என்க. **உணர்வரிய** - தமது முதல்வனே குருவடிவங்கொண்டு வந்து உணர்த்தினாலன்றி வேறு எவ்வாற்றானும் உணரமுடியாத (மெய்ஞ்ஞானம்) என்றுரைத்தலும் பொருந்தும். **உணர்வரிய மெய்** - சிவசத்து என்பது குறித்தது.

பவமதனையற மாற்றும் பாங்கு-என்றதனால் தெளிதலும் **உணர்வரிய (மெய்ஞ்ஞான)** மென்றதனால் நிட்டையும் உள்ளீடாகிய ஞான சாதனங்களாக உணர்த்தப்பட்டன. இவையிரண்டும் பரஞானமாதலின் முன்னது பாச நீக்கமும் பின்னது சிவப்பேறும் பயப்பிப்பனவென்று **பவமதனையற மாற்றும்** எனவும், **உணர்வரிய மெய் -** எனவும் தந்த அடைமொழிகளால் உணர்த்தி யருளினார்.

கலைஞானமும் மெய்ஞ்ஞானமுமாகிய அபர பர ஞானங்களிரண்டினையும் உணர்ந்தார் என்று முடிக்க. இரண்டென்னும் செவ்வெண்ணும் முற்றும்மையும் விகாரத்தாற் றொக்கன.

தவமுதல்வர் சம்பந்தர் தாம் உணர்ந்தார் - தவமுதல்வராதலின் - உணர்ந்தார் எனக் காரணப்பொருள்பட உடம்பொடு புணர்த்தி ஓதியருளினார். முன்னைத்தவ விசேடத்தால் திருஞான சம்பந்தராகி விளங்கும் ஆளுடைய பிள்ளையார். "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" (1953) என்ற விடத்துரைத்தவை பார்க்க. **முதல்வர்** - வினையெச்சமுற்று. **தாம்** - கட்டுரைச் சுவைபட வந்த உயர்வு குறித்த பன்மைச்சொல். **சம்பந்தர் தாம்** - சம்பந்தராகிய என்று ஆக்கச் சொல் விரிக்க. "**சம்பந்தராயினார்**" என்ற முன்பாட்டினைத் தொடர்ந்து கொண்டு ஆக்கச் சொல் ஆயினமையால் என்று காரணப் பொருள்படவு முரைத்துக் கொள்க. இப்படி **அளித்தார்** - ஆவதனால் - **ஆயினார்** - (1967) - **ஞானம்** - உணர்ந்தார் என்று காட்டக் கண்ட தன்மை கூறப்பட்டதுங் காண்க.

தவமுதல்வர்-மூன்று கண்ணும், நான்கு தோளும், கருநட்ட கண்டமும் முதலிய உறுப்புக்களுடன் முத்தொழிலும் இயற்றும் தனது இயற்கை வடிவே குருவடிவமாகக் காட்டி முதல்வன் பிரளயாகலர்க்குப்போல முன்னின்று உயர்ஞானம் உணர்த்துதற் கேதுவாகிய பெருந்தவ மென்பது குறிக்கத் **தவமுதல்** என்றார். முதற்றவமாவது பக்குவ முதிர்ச்சியால் வரும் நாலாஞ் சத்திநிபாதம் முற்றியதனாற் பெறப்பட்டுப் பதினாறாவது எல்லையில் நிற்கும் தலைமைச் சிவபுண்ணியம். நாற்சீர்க் கலிவிருத்தத்தாற் கூறியருளியதும் இக்குறிப்புத் தருவதாம்.

தாம் உணர்ந்தார் - அரிசி தானேயட்ட தென்றாற்போல எளிதின் உணர்ந்தார் என்றுரைத்தலுமாம். இப்பொருட்டுத் **தாம்** - பெயர்: தேற்றேகாரம் விகாரத்தாற் றொக்கதென்க.

அந்நிலை - "சிவஞான சம்பந்தராயின" நிலை. ஞானபோனக முண்டருளிய போதே சிவானந்தானுபவம் பெற்ற நின்மல துரியாதீத நிலைபெற்றுச் சிவஞான சம்பந்தரானார்: **அந்நிலையில்** - அந்த நிலையிலே உலகமுய்யும் பொருட்டு இருவகை ஞானங்களும் அவருக்கு விடயமாயின என்க: ஏனையோர்போலச் சாதக நிலையில் அபர - பர ஞானங்களை அவர் பெற்றாரல்லர் என்பது ''என்னுள்ளங் கவர் கள்வன்'' என்றருளியவாற்றாற் பெறப்படும். முன்பாட்டிலுரைத்தவை பார்க்க.

"கேட்டலுடன் சிந்தித்தல் தெளித னிட்டை கிளத்தலென வீரிரண்டாங் கிளக்கின் ஞானம்" (சித்தி 8-24) என்ற இடத்துக் கூறப்பட்ட கேட்டல், சிந்தித்தல், தெளிதல், நிட்டை கூடல் என்ற ஞான சாதனங்கள் நான்கினையும் இவ்வாறு முன்னிரண்டை அபரஞானப்பகுதியினும், பின்னிரண்டைப் பரஞானப் பகுதியினுமாகப் பிரித்து ஈண்டு இரண்டாகப் பிரித்து வைத்தோதியது என்னை? எனின், முன்னைய விரண்டும் நூலும் அருளும் பற்றுக்கோடாக நிகழ்வன: பின்னையவிரண்டும் நூல்வேண் டாது அருளே பற்றுக்கோடாக நிகழ்வன ஆதலின் என்க. இங்குக் கூறிய கேட்டல் முதலிய மூன்றும் முத்தி சாதனமாகிய ஞானத்தைப் பெறுதற்கு உபாயங்களேயாம். கேட்டலால் வருவது, சிந்தித்தலால் வருவது, தெளிதலாற் பெறுவது, நிட்டைகூட உதவுவது என்ற ஞானம். "உபதேசத்தாற் **கேட்டறியலாம்: கேட்டதனை** அதற்கனுகூலமான **வளவையாற் சிந்தித்து** மறியலாம். **சிந்தித்ததனைத்** தன்னறிவின்கண்ணே சிவஞானத்தான், மாசறத் **தெளிந்துமறியலாம்:** அதனாற் பாசக்ஷயம்பண்ணி **நிட்டைகூடிச் சிவாநந்தானுபூதியும்** பெறலாம்" என்று சிவஞான முனிவர் விளக்கியபடி கேட்டல் முதலிய மூன்றும் முற்றிய ஞானம் பெறவும் அதனால் வீடு பெறவும் வாயில்களாம் என்பது பெறப்படும்.

எனவே ஞானம் என்பது தொகையால் ஒன்றாம்: வகையால் பரம் அபரம் என இரண்டாம்: பெறும் வாயில் விரியால் கேட்டல் முதலியவற்றால் நான்காம். இனி, ஞான வேள்வி என ஐந்தாயும், சரியை முதலிய நிலைபற்றி உண்மை உபாயம் என்ற வேறுபாட்டால் எட்டாயும், தசகாரியம்பற்றிப் பத்தாயும், முன்கூறிய எட்டு நிலைகளும் ஒவ்வொன்று நான்காகு முறைபற்றி முப்பத்திரண்டாயும் இன்னும் பலவாறாயும் விரிந்து நிற்பது ஞானம் என்பர். அவையெல்லாம் பரம் அபரம் என்ற இருமுதல் ஞானங்களுள் அடங்குமென்க.

தவமுதல்வர்... உணர்ந்தார் - "தாவில் தனிச் சிவஞான சம்பந்த ராயினார்" (1967) என்ற முன் பாட்டினைத் தொடர்ந்துகொண்டு, அவ்வாறு பிள்ளையாருக்குத் "தவமின்றியு ஞான நிகழ்ந்தவாறென்னை?" என்ற ஆசங்கையை முன்னிட்டு அதனை நீக்குதற் கெழுந்தது இத்திருப்பாட்டு: அதனுடன் அவருணர்ந்த ஞானம் முற்றிய ஞானமென்று கூறி அதன் பாகுபாட்டையு முணர்த்திற்று.

இது, நோக்குறுப்புப் பெரிது முனையதாய், மூன்று காலமு நெறியின் ஆற்றிய அறிவனது தேயத்ததாய்ப், பத்துக் குணங்களும் பயின்றதாய், அறத்தின் பயனாகிய வீடு பேற்றுக் குரியதாய் வந்த வாகைப் பாடாண் பாட்டென்பர் உணர்ந்தோர். இனி இதன் அருமைகளை அறிவோர் பல திறத்தானும் உணர்ந்தறிவிப்பர். மேற்கூறியவை சபாபதி நாவலர் எழுதிய சூடாமணியின் உரையைப் பெரும்பான்மை தழுவி எழுதப்பட்டன.

இனி, மேற்கூறியபடியன்றிச் சிவஞானமாகிய ஓங்கிய ஞானம் என்றும், கலை ஞானமாகிய மெய்ஞ்ஞானம் என்றும், கூட்டி உரை கூறுவாருமுளர். இது பொருள் பற்றாமை உணரப்படும். இனி, அந்தக் கேட்டல் முதலிய நான்கினையும் இத்திருப்பாட்டிற் கூறிய நான்கு ஞானங்களாகக் கூறுவாருமுளர். அவர், கலைஞானம், சிந்தித்தற் சிவஞானம், ஓங்கிய ஞானம், மெய்ஞ்ஞானம் என்ற ஞானப் பிரயோகங்கள் நான்கும் முறையே கேட்டல் - சிந்தித்தல் - தெளிதல் - நிட்டைகூடல் என்ற நான்கு ஞானங்களையும் கூறுவன என்பர். இந்நான்கும் ஞானம் பெறும் வாயிற் சாதனங்க ளாமாறும், அபரபர ஞானங்களுட்பட்டு வருமாறும் முன் உரைக்கப் பட்டன காண்க.* 70

1969. **பொருளுரை:-** எப்பொருளும்...உணர்வும் - எல்லாப் பொருள்களையும் இயக்குபவன் ஈசனே என்கின்ற உணர்ச்சியும்: அப்பொருள்தான்...அறிவும் - அந்தப் பொருளாவது அவ்வாறு ஆளுடையாரும் அவரது அடியார்களுமேயாவர் என்னும்

---

*(கி.பி.1887-ம் ஆண்டில்) இற்றைக்குச் சற்றேறக்குறைய 60 ஆண்டுகளின் முன் இத்திருப்பாட்டு மேற்கூறியபடி அபரம் பரம் என்னுமிரு ஞானங்களை நுதலிற்றா? அன்றிக் கேட்டல் முதலிய நான்கு ஞானங்களை நுதலிற்றா? என்பது பற்றியதொரு நீண்ட வாதம் (சென்னையிற்) பல புலவர்பெருமக்களிடை நிலவிற்று. காசிவாசி - செந்தி நாதையர், சபாபதி நாவலர் - மயிலைத் தணிகாசல முதலியார் - சுப்பராய முதலியார் - சிவாநந்த முதலியார் - வல்லை சண்முக சுந்தா முதலியார் முதலியவர்க ளொருபுறமும், சூளை சோமசுந்தர நாயகர் - சூளை சுப்பராய நாயகர் மற்றொரு புறமுமாக அதிற் கலந்து கொண்டனர். ஞானபேத விளக்கச் சூறாவளி, விபரீத ஞான நிக்ரஹம் ஆகிய ஞான பேதத் தெளிவு, ஞான சூடாமணி, துர்வாத நிக்ரஹம் ஆகிய ஞானபேதத் துணிவு, ஞானபேத விளக்க மறுப்பு, நியாயபேத விளக்க நியாய ரக்ஷாமணி, ஞான வழக்கு முடிவு என்னும் சிறு நூல்கள் ஒன்றன்மே லொன்று கண்டனமாக அதிவிரைவில் வெளிவந்தன. இவையேயன்றி, இதோபதேசம், தோல்வியறிவிப்பு, நன்மதிகூறல் முதலிய தனித்துண்டுத் தாள்களும் அவ்வாறே வெளிப்போந்தன, அவ்வாறு இதுபற்றித் தமிழ்ப் பெரும் புலவர்களிடையிற் பெரும் பூசலும் பெரு நிந்தை வழங்கலும் உளவாயின. அவற்றிற் காணப்பெற்ற பெரும்பாலான நிந்தைத் திரள்களை ஒதுக்கி, உரைக் கோட்பாடுகளை மட்டும் எடுத்து மேலே தரப்பட்டுள்ளது. அன்பர்கள் ஆய்ந்து மெய்யுரை தெளிவார்களாக. அத்துண்டு நூல்களையும் தாள்களையும் யாது காரணம் பற்றியோ எனது அருமைத் தந்தை யார் வித்வான் கந்தசாமி முதலியார் சேர்த்து ஓர் புத்தகமாகக் கட்டி "ஞானபேத விளக்கக் கட்சி" என்று பேரிட்டுத் தமது புத்தக சாலையில் வைத்திருந்தனர். அவர் சிவபதமெய்திய 56 ஆண்டுகளின்பின் இவ்வுரை எழுதும்போது அப்புத்தகத்தை அடியேன் கண்டு படித்து இதற்குப் பயன்படுத்திக் கொண்டேன். இப்பயனை என் தந்தையார் சிறிதும் எண்ணியிருத்த லியலாது. திருவருளின் வழிஇப்புராண உரைக்கு முன் உதவியாய் வைக்கப்பட்ட சேம வைப்பு அது என்று கருதுகிறேன். எனக்கு "எப்பொருள மாக்குவா னீசனேயெனு முணர்வு" என்ற மேல்வரும் பாட்டும் இதற்காதரவாமென்பேன். 60 ஆண்டுகளின் முன் சிவஞானத்தைப் பற்றித் தத்தம் உயிரும் அவ்வுயிர்க்குயிராகிய சிவனுமே பற்றுக் கோடாகப் பூசலிட்டு வலிந்தும் சைவத் திறத்தைப் பற்றிக் கொண்டு நின்ற சென்னைமா நகரம் சைவஞான ஒழுக்கம் பற்றி ஒரு சிறிதும் பற்றாது ஞானம் எவ்வாறாயினு மெமக்கென்ன? என்று கவலை யற்றிருப்பதைக் காண்பது காலக் கொடுமை! ஏன்? சென்னைமட்டுமா? நாடு முழுதுந்தான்!

1969. எப்பொருளு "மாக்குவா னீசனே" யெனுமுணர்வும்,
"அப்பொருடா னாளுடையா ரடியார்க" ளெனுமறிவும்,
இப்படியா: லிதுவன்றித் தம்மிசைவு கொண்டியலுந்
துப்புரவில் லார்துணிவு துகளாகச் சூழ்ந்தெழுந்தார். 71

அறிவும்: இப்படியால் - இதுவே நெறியாக: இதுவன்றி-எழுவார் - இவ்வாறன்றித் தத்தமது அறிவுக்கேற்றவாறு உட்கொண்டு இயல்கின்ற துப்புரவில்லாரது துணிபுகளையெல்லாம் துகள் படும்படி எண்ணி எழுவாராயினார்.

விளக்கவுரை:- *உணர்வும் - அறிவும் - இப்படியாக: இதுவன்றி - இயலும் - துணிவு - துகளாக - எழுந்தார் என்று முடித்து உரைத்துக் கொள்க.*

எப்பொருளும்- உணர்வும் - உணர்வு *- முன் பாட்டில்* ***உணர்ந்தார்*** *என்று முடித்த அந்நிலையினைத் தொடர்ந்து மேற்கொண்டபடி. ஞானப்பால் அமுதுண்டனர் பிள்ளையார்: அது உள்ளே புகுந்தது: ஞான உணர்வை விளைத்தது: அவ்வாறு விளைத்த ஞான உணர்வு இரண்டுவகை: இனி, அவ்வுள்ளுணர்வாகிய உணர்ச்சிநிலை ஏனையோர்க்குப்போல அவர்மட்டில் பயன்தந்து அமைந்துபடாது, உலகம் பயன்பெற மேல் எழுந்தது: அவ்வாறெழுந்து மேற் கொள்ளப்பட்ட வகை முன்னர் உட்சென்ற ஞான மிருவகையின் பாலதாய்த் தானு மிரண்டு வகையாய், உணர்வும் அறிவுமாய் எழுந்தது: அவற்றுள் இது, உணர்வு இன்ன தன்மையது என விளக்குகின்றது. "சிவனடியே சிந்திக்கும் திருப்பெருகு சிவஞானம்" என்ற உவமையிலாக் கலை ஞானத்தின் விளைவு என்க.*

எப்பொருளும் ஆக்குவான் ஈசனே - ஈசனே *- ஈசன் என்றது முழுமுதற் பொருளாய்ப்* ***பதி*** *எனப்படும் சிவபெருமான். ஈசன் - பகவன் - என்பன சிவபெருமானைக் குறிக்கும் என்பது சூடாமணி நிகண்டு.* ***ஈசனே*** *- ஏகாரம் தேற்றமும் பிரிநிலையுமாய் வந்தது.* ***எப்பொருளும்*** *- என்றதனால் பசு பாசங்களாகிய இருபொருளும் உணர்த்தப்பட்டன. இருவகையும் குறிக்க* ***எப்பொருளும்*** *என்றார்.* ***ஆக்குதல்*** *- பசுக்களைப் பற்றியவழிப் படைத்தலாதிய தொழில்களுள்ளே படும்படி உயிர்களைச் செலுத்துதல் என்றும்; பாசத்தைப் பற்றியவழிக் கன்மபலன் நுகர்வித்தற் பொருட்டு மாயா மலத்தைத் தொழிற்படுத்தி ஆணவத்தை மெலிவித்தல் என்றும் பொருள் கொள்க. எனவே பொருட்டுணிவு பெற்று ஈசனை யடைதல் உறுதிப் பொருள் என்றது* ***உணர்வு*** *எனப்பட்டது. இது* ***உவமையிலாக் கலைஞான*** *முடிபாய்த் "தெளிவின்" பாற்பட்டுப் பாச நீக்கப் பயன் குறித்துச் சிவஞானபோதம் பத்தாஞ் சூத்திரக் கருத்துணர்த்தி நின்றது. இதனால் வேறு எல்லாச் சமயவாதங்களும் நிராகரிக்கப்படும் துணிவு பெற்றமை உணர்த்தப்பட்டது.*

அப்பொருள்தான்....அறிவு - அறிவு *- முன் பெறப்பட்ட உணர்வின் பயனாய், அதுமுற்றி விளையுமிடமாவன இலிங்கமும் குருவுமாகிய ஆளுடையார் என்ற திரு மேனிகளும், சங்கமம் ஆகிய அடியார் திருமேனியும் என்ற இவையிரண்டுமே என்ற சிவப்பேறும் வாசனாமல நீக்கமும் ஆகிய* ***உணர்வரிய மெய்ஞ்ஞானப்*** *பயன் குறித்துப் பதினொன்று பன்னிரண்டாஞ் சூத்திரங்களின் முடிபுணர்த்தி நின்றது. இதனால் பரசமய*

1970. சீர்மறையோர் சிவபாத விருதயருஞ் சிறுபொழுதில்
நீர்மருவித் தாஞ்செய்யு நியமங்கண் முடித்தேறிப்
பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தமைநோக்கி
"யாரளித்த பாலடிசி லுண்டதுநீ?" யெனவெகுளா, **72**

நிராகரித்தவழி "நீறு ஆக்குதல்" என்னும் சைவத்தாபனமாகிய துணிவு உணர்த்தப்பட்டது. **ஆளுடையார்** - இலிங்கமும் குருவுமாகிய திருமேனிகள் ஆளுடையார் என்ற பன்மை யிரண்டினையும் குறித்தது. ஆளுடையார்களும் அடியார்களும் தான் அப்பொருளார் என்ற எண்ணும்மைகள் விரித்துக் கூட்டி முடித்துக் கொள்க. ஒன்று "மண்ணி னிற்பிறந் தார்பெறும் பயன்" (புரா-1087) என்ற கருத்துச் சிந்திக்கத் தக்கது. **அப்பொருள்** - முன்கூறிய **உணர்வு** என்பதற்குப் பொருளாய் நிற்பன. "அருளே யுலகெலா மாள்விப்ப தீசன், அருளே பிறப்பறுப்ப தானால்-அருளாலே மெய்ப்பொருளை நோக்கும் விதியுடையே னெஞ்ஞான்றும், எப்பொருளு மாவதெனக்கு" (அற் - அந். 9) என்ற அம்மையார் திருவாக்கின் கருத்து ஈண்டுச் சிந்திக்கற்பாலது.

இப்படியால்- இந்தத் தன்மை - (உண்மை) - ஆயிருக்க.

இது அன்றி - இது - தொடர்புபட்ட இத்துணிபுகளின் தொகுதி.

தம் இசைவு கொண்டு - "தாந்தாங்கண்ட துணிபுகளையே முடிபாகக் கொண்டு. **இயலுதல்** - செல்லுதலும் செலுத்துதலும்.

துப்புரவு - உண்மை அனுபவம் - மனத்திட்பம்; தூய்மை என்றலுமாம். "துப்புரவொன்றில்லா, வெற்றரையர்" (தேவா).

துகளாகச் சூழ்ந்து - நிலையழிவு பெற்றொழிய எண்ணி. "நிராகரித்து" (1917) என்றது கருதுக. 1966 முதல் 1969 வரை நான்கு பாட்டுக்களும் ஞான அமுத முண்ட விளைவாகிய நிலையினைப் படிப்படியாக எடுத்துரைத்தன. அங்கணனார் அருள் புரிந்தார் (1966); அதனால் ஆளுடைய பிள்ளையாராய்ச் சிவஞான சம்பந்தராயினார் (1967); அதனால் உவமையிலாக் கலைஞான முணர்வரிய மெய்ஞ்ஞானம் என்ற அபரபரஞானங்களிரண்டினையும் அந்நிலையில் உணர்ந்தார் (1967); அவ்வுணர்வும் இப்படி; இதுவன்றி இயலுவோர் துணிவு துகளாகும்படி சூழ்ந்து எழுந்தார் (1969) என்று இந்நான்கு திருப்பாட்டுக்களையும் தொடர்புபடுத்தி உரைத்துக் கொள்க. "உண்ணிறைந்து பொழிந்தெழிந்த" (1972) என்றது கருதுக.

எழுந்தார் - முன்னையதின் மேல்நிலைகொண்டனர். **எழுதல்**-பேருணர்வில் ஓங்கிப் பொலிதல்; "பேருணர்விற் பொலிகின்ற" என்றுவரும் பாட்டும், அதன்மேல் "சிறிய பெருந்தகையார்" (1971) என்பதும் பார்க்க.

அப்பொருளும்-என்பதும், **ஆளுடையான்** - என்பதும் பாடங்கள். **71**

1970. **பொருளுரை:-** சீர்மறையோர்...ஏறி - சிறப்புப் பெற்ற மறையவராகிய சிவபாதவிருதயரும் சிறிது பொழுதிலே நீரினுள்ளே பொருந்தித் தாம் செய்யும் நியமங்களை யெல்லாம் முடித்துக்கொண்டு கரையேறி: பேருணர்வில்...நோக்கி -

பேருணர்வினோடும் விளங்குகின்ற பிள்ளையாரை நோக்கி; யார் அளித்த-வெகுளா-யாவர் அளித்த பாலமுதினை நீ உண்டாய்? என்று கோபித்து.

விளக்கவுரை:- சீர்மருவு - "ஈன்ற பொழுதிற் பெரிதுவக்குந் தன்மகனைச் சான்றோ னெனக்கேட்ட தாய்" (குறள்) என்றபடி, தவங்கிடந்து அரிதிற்பெற்ற மகப்பேற்றின் சிறந்த பயனை இன்று பெற்றனராதலின் **சீர்மருவும்** என்றார்.

சிவபாத விருதயரும் - பிள்ளையார் - எழுந்தாராக. அவர் தந்தையாரும் என்று உம்மை இறந்தது தழுவிய எச்சம்.

சிறு பொழுதின் - மேற்கூறியபடி இறைவரால் ஆட்கொள்ளப்பட்டு ஞானம் பெற்றபின் சிறிது நேரத்தில்; சிறுபொழுதின் - முடித்து ஏறி என்க. இவ்வாறன்றி மகனாரைக் கரையில் வைத்துப் போனாராதலின் விரைந்து கடன் முடித்தார் என்று உரைப்பாருமுண்டு. அது பொருந்தாமை யறிக. சிவபாத விருதயர் என்றும் நியமந்தப்பாத விரத ஒழுக்கமுடையராதல் மேல் (1958) உரைக்கப்பட்டது. ஆதலின் காலம் போக்காது விரைந்து நியம முடித்தார் என்பது அவரது சீலத்துக்கும் தவத்துக்கும் இழுக்காகும். தவம் புரிந்தார் (1917), குலமறைத் தலைவர் (1632), மண்டு தவமறைக் குலத்தோர் (1953), வேதவிதி நீதிமுறைச் சடங்கு நெறிமுடிப்பதற்கு நீராட (1954), மறை முனிவர் (1959), ஈறில் பெருந்தவமுன் செய்து (1983) என்பனவும், பிறவும் அவரது நியமசீலத்தை உணர்த்துவன.

நீர்மருவித் தாம்செய்யும் நியமங்கள் - இவை முன் 1958-ல் உரைக்கப்பட்டன. **நீர்மருவி** - நீரினுள் நின்று; **ஏறி** - நீரினின்றும் பொய்கைக்கரையில் மேல் ஏறிவந்து.

பேருணர்விற் பொலிதலாவது - முற்று முணர்ந்த தாவில் தனிச் சிவஞான ஒளியினால் விளங்குதல்; **பேருணர்வு** - "தாமுணர்ந்தார்" (1968) என்றும், உணர்வும் - அறிவும் (1969) என்றும் கூறியவற்றின் தொகுதி. "ஈசன்றன்னொளியான" (தேவா); "சூழ்ந்த வொளியிற் றோன்றினார்" (1260) எனப்படும் அறிவொளி. ஞானம் வெளித் தோற்றும் ஓர் ஒளியுடைய தென்க. **இன்** - மூன்றாவதன் சாரியை; உணர்வினால் என்க. சாரியையுள்வழித் தன்னுருபு தொக்கது.

நோக்கி - கூர்ந்து பார்த்து. **நோக்கி - வெகுளா** என்க.

உண்டது நீ - முன்பின்னாக மாறியது வெகுட்சிக் குறிப்பு.

யார்....வெகுளா - பாலமுதம் யாவரும் தரப்பெறும் பண்டமா யிருப்பவும் ஈண்டுச் சிவபாத விருதயர் வெகுண்டதென்னையோ? எனின், அது, குலமேம்பாட் டெண்ணம்பற்றி எழுந்ததன்று. தாயின் உடற்றன்மை குணத் தன்மைகளின் மாறுபாடுகளாலும், கொள்கலத்தின் தூய்மையின்மையாலும், பிறவாற்றாலும் பால்தானும் யாவரிடத்தும் யாண்டும் பெறுதற்குரித்தன்று என்ப. இனி, இளங் குழவிகளுக்கு ஊட்டப்படும் பால் இன்னும் நுண்ணிதாய்ப் பிரித்து அறியப்படுதல் வேண்டும்; அல்லாவிடின் குழவிகளுக்குப் பிணி தாக்கவும், குணமாறுபாடு முதலியவை உண்டாகவும் காரணமாகும். அன்றியும் பல காரணங்களாலும் நல்லதொரு குழவிக்குக் கேடு சூழ்வாரும் பலருளராவர் என்றபோது, சிவபாதவிருதயர் கொண்ட வெகுளிக்கும் கவலைக்கும் போதிய காரணமுண்டென்க.

1971. **"எச்சின்மயங் கிடவுனக்கீ திட்டாரைக் காட்" டென்று**
கைச்சிறிய தொருமாறு கொண்டோச்சக். காலெடுத்தே
யச்சிறிய பெருந்தகையா ரானந்தக் கண்டுளிபெய்
துச்சியினி லெடுத்தருளு மொருதிருக்கை விரற்சுட்டி. **73**

வெகுளா - வெகுண்டு; வெகுளா - ஓச்ச என்ற சொல்லை நடப்பாற்றின் முடிக்க. முன்னர் "முனிவார்போல்" (1955) என்றவிடத்து முனிவு உள்ளமையில் எழாமல், எழுந்ததுபோலக் காட்டினார். இங்குத் தீங்கு வந்தபோது என்று உள்ளமையில் அஞ்சினா ராதலின் சிறிது வெகுளியே போந்ததென்க. **72**

1971. பொருளுரை:- எச்சில்...என்று - "எச்சில் பொருந்தும்படி இதனை உனக்கு இட்டவரைக் காட்டு" என்று சொல்லி; கைச் சிறியது-ஓச்ச - சிறியதாகிய ஒரு கோலினைக் கையில் கொண்டு அடிப்பவர் போன்று ஓச்சினாராக; அச்சிறிய பெருந்தகையார் - அந்தச் சிறிய பெருந்தகையாராகிய பிள்ளையார்; கால் எடுத்தே - ஒரு காலை எடுத்து நின்று; கண் ஆனந்தத் துளிபெய்து - கண்களினின்று ஆனந்த மேலீட்டினால் நீர்த்துளிகளைப் பெய்து; உச்சியினில்...சுட்டி - உச்சியின்மேல் தூக்கியருளிய கையினின் ஒரு திருவிரலினாற் சுட்டிக்காட்டி,

விளக்கவுரை:- எச்சில் மயங்கிட - தீங்கு கலக்கும்படி. **எச்சில்** - இங்குத் தீங்கு என்ற பொருளில் வந்தது. "கண்ணெச்சில்" (ஞானவுலா) என்பது காண்க. **மயக்கம் -** வேற்றுப் பொருள் வந்து கூடுதல்; "திணைமயக்கம்"; உடனிலை மயக்கம் - வேற்றுநிலை மயக்கம் - என்பவற்றுட்போல **மயக்கம்** - பொருள் தரல் என்று கொண்டுரைத்தலுமாம்.

உனக்கு ஈது இட்டாரைக் காட்டு - "காட்டு" என்று சிவபாத விருதயர் கேட்டதன் காரணம் கூறப்பட்டபடி. தீங்கு விளையும் தன்மை உளவாயின் உரிய மாற்றுக்களால் நீக்கிக் கொள்ளுதற் பொருட்டு.

சிறிய தொரு மாறு கொண்டு கை ஓச்ச என்க. **மாறு** - மெல்லிய கோல். **ஓச்சுதல்** - உயரத்தூக்கி அடிப்பார் போன்று ஓங்குதல். **சிறிய மாறு** - என்றதும், **ஓச்ச** - என்றதும், அவர் வெகுண்டாராயினும் அதனால் தந்நிலை தவிர்ந்து பிள்ளையார் பாற்கொண்ட பேரன்பின்றிறத்திற்கு மாறுபட்டுச் செயல் செய்திலர் என்பது குறித்தன.

கால் எடுத்து - ஒரு காலைத் தூக்கி. இஃது ஆனந்தானுபவத்திற்குரிய தொரு மெய்ப்பாட்டுச் செயல். "கால் கொட்டி" (1955) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

அச்சிறிய பெருந்தகையார் - அகரம் முன்னறி சுட்டு; **சிறிய பெருந்தகை -** உருவத்தாலும் பருவத்தாலும் சிறியவர்; தன்மையாற் பெரியவர் என்றபடி. முரண் **அணி;** தந்தையாரது எண்ணத்தில் அதுபோழ்து சிறிய பிள்ளையாராய் எண்ணப் பட்டவர்; ஆனால் அவரால் அப்போது அறியப்படாத பெருமை பெற்றவர் என்ற குறிப்புமாம். "நீரோ பெரிய சிறுத்தொண்டர்" (சிறுத்.புரா.) என்ற கருத்து இங்கு வைத்து ஒப்பு நோக்குதற்பாலது.

கண் ஆனந்தத் துளிபெய்தலாவது - *ஆனந்தங் காரணமாகக் கண்களினின்றும் மழைபெய்தல்போல நீர்த்துளிகள் பொழிதல். "ஆர்வலர் புன்கணீர்" என்புழிப் போலத் துன்பங் காரணமாகவும் கண்ணீர் வருதலுண்டாமாதலின், அதனின் வேறு பிரிக்க* ***ஆனந்தத்துளி*** *என்றார்.* ***ஆனந்தம்*** - *ஈண்டுப் பிறிதினியைபு நீக்கிய விசேடணம். இனிக் "கண்மலர்க ணீர்ததும்ப" (1960), "மெய்ம்மேற்கண் டுளிபனிப்ப" (1961) என்று முன்னரும் வேறு காரணம் பற்றிக் கண்ணீர் பெய்யப் பிள்ளையார் நின்றாராதலின் அதனின் வேறு பிரித்துக் காட்டியதுமாம்.*

உச்சியினில்... சுட்டி - ***உச்சியினில் எடுத்தருளும் விரல் சுட்டி*** - *தாதையார் பிள்ளையாரை வினவுகின்ற அந்நேரத்தில் தோணியப்பர் அவரைப் பாலூட்டி அழுகை தீர்த்து மேலெழுந்தருளிப் பிள்ளையாருக்குக் காட்சியளித்துத் தேவியாருடன் விடை மேல் விண்ணில் நின்றருளினார்; தந்தையார் அவரைக்காணாது பால்தந்த அடையாளம் மட்டில் பிள்ளையார்பாற் கண்டனர்; ஆதலின் யார் அளித்த பால் உண்டனை? என்று கேட்ட தாதையாருக்கு, அவரறியா வண்ணம்* **மேலே நின்றருளிய** *இறைவரைச் சுட்டிக் காட்டவேண்டியவராயினார்; அதனால் உச்சியின் விரல் எடுத்துச் சுட்டினார். இறைவர் யாண்டு முள்ளவர். அவரை யாண்டும் சுட்டலாமாயினும் இங்கு மேலே உச்சிற் சுட்டியது, தத்துவப் படிமுறையிற் கீழே நின்ற உயிர்களை உணர்வித்து மேலே உயர்த்துதல் கருத்தாகச் சிவபாத விருதயர்மூலம் திருவுளச் செயல் நிகழ்ந்ததாதலின் என்க.*

இனி, ***உச்சியினில் எடுத்து அருளும் - இல்*** - *நான்கனுருபின் பொருளில் வந்ததாகக் கொண்டு தாழ்ந்த உயிர்களை உச்சிக்கு வரும்படி மேலெடுத்து அருள் புரியும் என்றுரைப்பதும் ஒரு குறிப்பு; ஈண்டு உச்சி என்றது அசுத்தம் - சுத்தா சுத்தம், சுத்தம் என்ற நிலம் மூன்றனுள் உச்சியில் நின்ற சுத்தமாகிய சிவபுவனத்தை.*

இனி, உச்சியினில் எடுத்து அருளும் - இல் - *நீக்கப் பொருளில் வந்த ஐந்தனுரு பாகக் கொண்டு வேதாகமத் தலையினின்றும் எடுத்து. மெய்ப் பொருளை உலகுக்கு அருளும் என்றுரைப்பதும் ஒரு குறிப்பு. "வேத வாகமச் சென்னியில் விளைபொருள்" (திருவிளை - புரா.)*

ஒரு திருக்கை *என்றும்,* ***கை ஒரு திருவிரல்*** *என்றும் இருவகையும் கூட்டுக. "அஞ்செழுத்து மெழுதியசெம் பொற்றா ளங்கள், வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்த வன்றே" (புரா-103) என்ற கைகள்; மீனவன் வெப்புத்தீர மேனியில் நீறுபூசும் திருக்கை; சைவந்தழைக்கத் திருமுறையை நிமிர்த்தி எடுத்த திருவேட்டினைத் தீயிலிட்டு மீட்டும் எடுத்து அம்முறையே கோக்கும் அழகிய திருக்கை; "எங்களை வாழ முன்னாள்" ஆற்றினில் ஏடு இட்டு நிலவுந் திருக்கை; புத்தர் முதலியோரும் வாழ நீறுதந் தீடேற்றும் திருக்கை என்றிவ்வாறு வரும் பெருமைகள் பலவும் காண்க.*

ஒரு திருவிரல் - *காட்டுகின்ற உபகாரம் செய்வதாதலின் சுட்டுவிரல் சிறப்புடையது. ஆசாரியலட்சணத்துக்குதவும் சிறப்புப் பெற்ற அங்கம். ஐந்தெழுத்தின் உள்ளீடாக உள்ள சிகாரவாச்சியனாகிய இறைவனை "இவன்" என்று காட்டுதற்கு உதவியது இது. இனி, அவ்வைந்தெழுத்தினுள், அறிவிக்கப்பட்ட பொருளாகிய உயிர் பாசங்களினீங்கி அடிமைத்*

1972. **விண்ணிறைந்த பெருகொளியால் விளங்குமழ விடைமேலே**
பண்ணிறைந்த வருமறைகள் பணிந்தேத்தப் பாவையுடன்
எண்ணிறைந்த கருணையினா னின்றாரை யெதிர்காட்டி
யுண்ணிறைந்து பொழிந்தெழுந்த வுயர்ஞானத் திருமொழியால். **74**

திறத்தினை அறிந்து இறைவன்றிருவடியை அடைந்து உய்யுந் தன்மையைக் காட்டும் மோன முத்திரையில் பயன்பெற்ற உயிரினைக் காட்ட உதவுவதும் இவ்விரலேயாம். "சுட்டிறந்த ஞானத்தைச் சொல்" என்றபடி சுட்டியுணரப்படுவனவெல்லாம் அசத்து என்ற ஞானநூல் விதிக்கு விலக்காக ஈண்டுச் சத்துப் பொருளாகிய சிவத்தினைச் சுட்டியுணர்த்தியது இந்த ஞானத் திருவிரலின் சிறப்பு. விரல் - விரலினால் - விரல் கொண்டு எனக் கருவிப் பொருளில் வரும் மூன்றனுருபு விரிக்க.

சிறுமாறு - உச்சியின்மேல் - என்பனவும் பாடங்கள். *73*

1972. பொருளுரை;- விண்ணிறைந்த-எதிர் காட்டி - ஆகாயத்தில் நிறைந்த பெருகும் ஞான வொளியினால் விளங்குகின்ற இளமையுடைய இடபத்தின்மேல், பண்ணினால் நிறைவுடைய அரிய மறைகள் பணிந்தேத்த உமையம்மையாருடனே எண்ணிறைந்த கருணையினாலே நின்ற திருத்தோணிபுரேசரை எதிரிற் காட்டி; உண்ணிறைந்து...திரு மொழியால் - உள்ளே நிறைந்துத் தேக்கி மேல் எழுந்து பொழிந்த உயர்ந்த ஞானத் திருமொழியினாலே,

விளக்கவுரை:- விண் நிறைந்த பெருகு ஒளியால்...நின்றார் - ஈண்டு ஒளி என்றது ஞான ஒளி. விண் - ஞானாகாயம். எல்லாவுயிர்களிடத்தும் அவ்வவற்றின் பக்குவ பேதத்துக் கேற்றவாறு விளங்கி, அவை அறிவாற் பெருகும் வகை உபகரிப்பதால் பெருகு ஒளி என்றார். இங்கு இவ்வொளியினைப் பிள்ளையார் கண்டு நின்றார். ஒளியிருந்தும் தாதையார் காணாது நின்றார்; பின்னர்ப் பிள்ளையார் கூறிச் சுட்டிக் காட்டியருள அவ்வருந் தமிழின் பொருளான குறிப்பு ஓர்ந்தும் (1983) நிகழ்ந்தன கண்டும் (1984) ஒருவாறு கருதித் துணிய நின்றமையும் காண்க.

பண்... ஏத்த - பண் - ஈண்டுச் சுர அமைதி குறித்து நின்றது. "பண்ணிடைத் தமிழ் ஒப்பாய்" (நம்பி - குருகாவூர்); "பண்ணின் பயனா மின்னிசையும்" என்றபடி இசை நிறைவாயினும் பயன் கொண்ட முழு நிறைவாந் தன்மை இனிப் பிள்ளையாரது தமிழின் உருவத்துள் நின்றுபெற உள்ளனவாதலின் அருமறைகள் பணிந்து ஏத்த என்றார்.

பாவையுடன்...நின்றாரை - பாவை - உமையம்மை - பாவை போன்றாரைப் பாவை என்றது ஆகுபெயர். பாவையுடன் எண்ணிறைந்த கருணையினால் நின்றார் என்றது பிள்ளையாரை அழுகை தீர்க்க வந்த காரியம் முற்றுப்பெற்ற பின்னரும் வெளிப்பட நின்றதற்கு அவரது அளவற்ற கருணையே காரணம் என்றபடி. எண்ணிறைந்த கருணை - ஈண்டு உயிர்களின் மேல்வைத்த பெருங்கருணை குறித்தது என்னை? விடை மேல் பாவையுடன் நின்றமையால் அந்த அடையாளங்களுடன் பிள்ளையார் சுட்டிக் காட்டிப் பாடியருள ஏதுவாயிற்று; அதனைத் தாதையார் கேட்க அவர்மூலம் உலகத்துயிர்கள்

1973. எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த வெழுதுமறை
மல்லனெடுந் தமிழாலிம் மாநிலத்தோர்க் குரைசிறப்பப்
பல்லுயிருங் களிகூரத் தம்பாடல் பரமர்பாற்
செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து, 75

அனைத்தும் கேட்டு ஓதிப் பயன்பெற ஏதுவாயிற்று என்க. ***எண்*** *- எண்ணம்;* ***எண் நிறைந்த கருணை*** *- உலகுயிர்களினுள்ளே பிறிவறப் பொருந்திய அருள்.*

எதிர் காட்டி *- காட்டு என்று தாதையார் கேட்டபடி எதிரிலே கண்டு காணும் படி எதிரிற் சுட்டிக்காட்டி.*

உள்நிறைந்து-உயிர்ஞானத் திருமொழி *-* ***உள்*** *- தமது அறிவினுள்ளே;* ***நிறைதலாவது*** *- முற்றும் தனது தன்மையேயாம்படி பெருகுதல்.* ***எழுந்து பொழிந்த*** *என்க.* ***எழுதல்*** *- நிறைவாகி மேல் எழுதல்;* ***பொழிதல்*** *- வழிதல்; மிக்குப் பெருகுதல்;* ***உயர்ஞானம்*** *- உயர்த்தும்; உயர்விக்கும் என்க. உயர்வுடைய என்றலுமாம்.*

திருமொழி *- "தோடுடைய செவியன்" என்னும் தமிழ்த் திருப்பதிகம். திருமொழியால் - எடுத்த - தமிழால் என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.*

ஓச்சக் - கால் - எடுத்தே - சுட்டி (1971) - எதிர்காட்டி - மொழியால் (1972), எடுத்த - தமிழால் - சிறப்பித்து (1973), எடுத்த - திருப்பதிகம் - சாற்றி - இசைத்தார் (1974) என்பது முடிபு.

செல்லுநெறி பெறுவதற்கு *- என்பதும் பாடம்.* *74*

1973. ***பொருளுரை:-*** *எல்லையிலா...எடுத்த - எல்லையிலாத மறைகளின் முதலெழுத்தை மெய்யுடனே தொடங்கிய; எழுதும் மறை - எழுதும் மறையை; மல்லல் நெடுந் தமிழால் - வளப்பமுடைய நீண்டதமிழ் மொழியினால்; இம்மாநிலத்தோர்க்கு உரை சிறப்ப - இந்தப் பெரிய உலகத்தில் உள்ளோர்க்கு உரை சிறந்து பயன் செய்ய; பல்உயிரும் களிகூர - பல உயிர்களும் இன்பம் பெருக; தம்பாடல்...சிறப்பித்து - தமது திருப்பாடல் இறைவரிடம் செல்லும் வகையினைப் பெறும் பொருட்டுத் திருச் செவியினைச் சிறப்பித்துப் போற்றி,*

விளக்கவுரை;- ***மறை முதல்*** *- பிரணவத்தின் முதலாகிய ஓகாரம். இது உயிர்;* ***மெய்*** *- தகர வித்தையைக் குறிக்கும்* ***த்*** *என்ற குறியீடாகிய மெய் எழுத்து.* ***தகரவித்தையாவது*** *சிவசத்தியின் உண்மைநிலை;* ***தகர*** *மெய் காயத்திரி மந்திரங்களின் இறுதி எழுத்தாயுள்ளது; சாந்தோக்கிய முதலிய உபநிடதங்களில் பிரமப் பொருளைக் குறிக்கும் சொல்லாகக் கூறப்படும். "****சத்****" என்ற சொல்லின் இறுதி எழுத்தாகிய* ***த்*** *என்பது சிவரூபம் என்று வாயு சங்கிதை கூறும். "சக்திச் சிவச்ச சத் சப்தப்ர கிருதிப் பிரத்திய யோதிதௌ" - (சத்தியும் சிவமும்* ***சத்*** *சொல்லின் முதனிலையும் இறுதி நிலையுமாம் என்பது சுலோகப் பொருள்.* ***மறை முதல் மெய்யுடன் எடுத்த த்+ஓ=தோ*** *என்று தொடங்கிய;* ***எல்லையிலா மறை*** *- அல்லை ஈது - அல்லை ஈது - என்று*

எல்லாப்பொருள்களையும் நேதிகளைந்து அளவுபடாது சொல்லுந் தன்மையுடையது எழுதாமறையாகிய வேதம். அது அளவுகாட்டி எழுத உயர்ந்த தன்மை பெறாது ஓதும் தன்மையே பெறுதலின் ஓத்து எனப்படும். இவ்வாறு உயிர் முதலாய் எடுத்தபோது ஓத் எனப்பட்டு, அதுவே முதன்மெய்யுடன் எடுத்தபோது தோ என்றாகித் தேவாரத்தின் முதலாகி எடுத்தபோது எழுதும் மறையாகி, இறைவனை எல்லையுட் படுத்திச் சுட்டிக் காட்டவல்லதாயிற்று என்ற குறிப்புப்பெற எல்லையிலா மறை என்றார். முதன் மெய்யுடன் எடுத்த எழுது மறை என்றும் குறிப்பித்தார். தகரம் என்ற ஒற்றாய் உயிரேறுஞ் சிறந்து அதனை உயர்த்துவதாதலின் அச்சிறப்புத் தோன்ற உடன் என்றுஞ் சொல்லுருபை மெய்யுடன் என்று மெய்யோடு புணர்த்தினார் மெய்-என்ற சொற்குறிப்பும். அது "ஓகாரம் ஈசுரம் வித்யாது ஜோதிஸ்ஸர்வ பலபிரதம்", "தகாரம் வாஸ்து தைவத்யா சுவேதம் ஸர்வ ஜயம் பவேது" (வாதுளம்), "ஓங்காரம் சிவ தைவத்யம் ஜோதிர்நிர்ப்பய மநுக்ராஹம்", "தகாரம் தநதம் வித்யாது பிரேமைசுவர்ய வர்த்தநம்", "தகாரோ தநுரீஜகார்" என்னும் வசனங்களால் ஓகார, தகார மாதிருகா வர்ணங்களின் அதிதேவதைகளும் பலனும் அறியப்படும்.

மல்லல் நெடுத் தமிழ் - மல்லல் - வளப்பம். வேண்டுவ வேண்டியாங்குதவும் செழுமையும் வண்மையும் குறித்தது. நெடுமை-மெய்ப்பொருளை நிச்சயிக்கும் அளவு கருவி என்ற பொருளில் வந்தது. "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத் தமிழ்" (970) என்றது காண்க.

தமிழால் இம்மாநிலத்தோர்க்கு உரை சிறப்ப - தமிழ் இந்நிலவுலகத்தோர்க்கு உபதேசித்து ஈடேற்றும் பொருட்டு; இங்கு மாநிலத்தோர் என்றது ஆறறிவுடைய மக்களை; அவர்களே பொதுவிதி பற்றிப் பெரும்பான்மை உரை என்ற வாசக தீக்கையால் பயன் பெறுபவர்களாதலின். "விட்ட வெம்பரி செவியினிற் புவிமுதல் வேந்தர்தாம் விதியாலே, யிட்ட மாஞ்சிவ மந்திர மோதலி னிருவிசும் பெழப்பாய்ந்து" (வெள்.சருக்-36) என்ற கழறிற்றறிவார் நாயனார் செயலின் தன்மை வேறு; அது சிவமந்திர வலிமையால் பரியை வானிற் செலுத்திய சித்துவகை. நாரைக்கு உபதேசித்தது, கரிக் குருவிக் குபதேசித்தது முதலிய இறைவரது திருவிளையாடல்களும், "தொன்மைக் கோலமே நோக்கிக் குளிர்ந்தூதாய் கோத்தும்பீ", "ஏராரிளங் கிளியே", "கீதமினிய குயிலே" என்று மணிவாசகனாரும், "சிறையாரு மடக் கிளியே" என்பது முதலாக ஆளுடையபிள்ளையார் முதலாயினாரும் அருளியவைகளும் சிறப்பு விதி பற்றி நிகழ்ந்தன.


பல்லுயிருங் களிகூர - உயிர் என்றது இங்கு மக்களொழிந்த ஏனை உயிர்களை.

திருச்செவியைச் சிறப்பித்து - மாநிலத்தோர்க்கு உரை சிறக்கவும், பல **உயிர்களும்** களிகூரவும் தம் பாடல் பரமர்பாற் செல்ல என்றதனால் பிள்ளையார் தமது பாடல்களால் உலகுயிர்கள் துன்ப நீங்கி யின்பமடைதலே பொருளாகக் கொண்டனரன்றித் தம்பொருட்டுக் கொண்டனரல்லர் என்பதும், அதன் பொருட்டே அப்பாடல்கள் பரமனார் திருச் செவியிற் சேரச் "**செவியன்**" என்று சிறப்பித்தனர் என்பதும் விளங்கும். **மாநிலத்தோர்க் குரை சிறத்தல்**, பஞ்சாக்கரப் பதிகங்கள், திருநீற்றுப் பதிகம், திருப்பாசுரம்,



திருஞானசம்பந்த நாயனார் கையிற் பொற்கிண்ணத்துடன்
இறைவரைச் சுட்டிப்பாடும் திருக்கோலம்

- *சீகாழி*



பிரம்ம தீர்த்தமும் திருத்தோணியும்



ஆளுடைய பிள்ளையார் ஞானப்பாலுண்டு முதற் பதிகம் பாடிய கோலம்

1974. செம்மைபெற வெடுத்ததிருத் "தோடுடைய செவிய"னெனும்
மெய்ம்மைமொழித் திருப்பதிகம் பிரமபுர மேவினார்
தம்மையடை யாளங்க ளுடன்சாற்றித் தாதையார்க்
"கெம்மையிது செய்தபிரா னிவனன்றே" யெனவிசைத்தார். 76

---

*கோளறு பதிகம் முதலியவற்றாலும், **பல் உயிருங் களிகூர்தல்** திருவோத்தூர்த் திருப்பதிகம் முதலியவற்றாலும் அறியப்படுவன.*

பாடல் பரமர்பாற் செல்லும் உரை பெறுவதற்கு *- பாடல் உரை பெறுதலாவது கேட்கப் பெறுதல். "திருவுலாப்புறம் பாடினேன்; திருச்செவி சாத்திடப் பெற வேண்டும்", "அன்பருங் கேட்பித்தார்" (வெள்.சருக் - 47);* ***பரமர்பாற் செல்லுதலாவது*** *திருவுளங் கொள்ளுமாறு நிகழ்தல்.* ***செம்மைபெற எடுத்த*** *- என்று மேற்கூறுதலும் காண்க.*

திருச் செவியைச் சிறப்பித்தவகை *மேல்வரும் பாட்டிற் கூறுவார்; திருவடி முதலிய ஏனைத் திருவங்கற்களாற் கூறாது* ***செவியன்*** *என்றதனாலும்,* ***தோடு*** *என்று அருட் சத்தியாகிய அம்மையணியும் அணியைச் சுட்டிய அடைமொழியினாலும், அம்மையைப்பற்றி எடுத்தமையினாலும் இஃது உணரப்படும்.* ***செவி*** *- ஓங்காரவடிவ முடையதாதலும் குறிப்பு.*

செல்லுமுறை பெறுவதற்கு *- என்பதும் பாடம்.* *75*

1974. ***பொருளுரை:-*** *செம்மை பெற-திருப் பதிகம்-செம்மை பெறும்படி தொடங்கிய திருத் "தோடுடைய செவியன்" என்ற மெய்ம் மொழியாகிய திருப்பதிகத்தினை; பிரமபுர மேவினார் தம்மை...சாற்றி - திருப் பிரமபுரத்தில் எழுந்தருளிய இறைவரை அடையாளங்களுடனே சொல்லி; தாதையார்க்கு-இசைத்தார் - "எம்மை இது செய்தவன் இப்பெருமானன்றே!" என்று தந்தையாருக்குச் சொல்லியருளினார்.*

இந்த ஐந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்கநின்றன.

விளக்கவுரை; செம்மை பெற...செவியன் எனும் *-* ***செம்மை*** *- சிவத்தன்மை.* ***பெற*** *- உயிர்கள் பெறும் பொருட்டு;* ***எடுத்தல்*** *- தொடங்குதல்.* ***தோடுடைய செவியன் எனும்*** *- முதற் குறிப்பு; எனும் திருப்பதிகம். முதற்குறிப்பினாற் பதிகத்துக்குப் பெயர் போந்தது. "வேயுறுதோ ளியையெடுத்து விளம்பி னாரே" (புரா - 616) முதலியவை காண்க.*

மெய்ம்மை மொழித் திருப்பதிகம் - மெய்ம்மை மொழி *- சத்தாகிய பொருளைக் காட்டி உணர்த்தும் மொழி; சத்தாகிய மொழி; சத்தைப் பயப்பிக்கும் மொழி என்று பலவும் கொள்க. "போதியோ வென்னும் அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம்" (புரா - 1089), "குரும்பை யாண்பனை யீனுமென்னும் வாய்மை" (புரா - 981) "அருளின்* ***வாய்மை****" (புரா - 984). மெய்ஞ்ஞானமாகிய தகரத்தை முதலிற்கொண்ட மொழி என்ற குறிப்புமாம்.*

அடையாளங்கள் *- தோடுடைய செவியன்; விடையேறி; மதிசூடி; பொடிபூசி என்பனவாதியாகப் பதிகத்துள் வருவன*

1975. மண்ணுலகில் வாழ்வார்கள் பிழைத்தாலும் வந்தடையிற்
கண்ணுதலான் பெருங்கருணை கைக்கொள்ளு மெனக்காட்ட
எண்ணமிலா வல்லரக்க னெடுத்துமுறிந் திசைபாட
வண்ணலவற் கருள்புரிந்த வாக்கப்பா டருள்செய்தார். **77**

"எம்மை இது செய்தபிரான் இவன் அன்றே" - எம்மை - நானச் சிறப்புணர்த்தும் பன்மை. **இது** - இத்தன்மை; சிவமயமாகச் செய்தது: சிவானந்த வடிவாம் அகத்துக் கண்கொண்டு காண்பதாகிய இத்தன்மை; பிரான்-தலைவர்-நாயகர் 'பெருமான் இவன் அன்றே" என்ற தேவாரப் பொருள். **இவன்** - இதோ முன்னே நிற்கின்ற என்ற அணிமைச் சுட்டு. **அன்றே!** - உறுதி குறித்தது. ஏகாரம் பிரிநிலை; **தாதையார்க்கு** - "காட்டு" என்று கேட்ட தாதையாருக்கு. இப்பாட்டினால் பதிகக் குறிப்பும் பதிகப் பாட்டுக் குறிப்பும் உள்ளுறையும் கூறுமுகத்தால் இத்திருப் பதிகப் பொருள் கண்டு காட்டியவாறு.

இசைத்தார் - விடைகூறினார். **இசைத்தல்** - பொருந்தச் செய்தல்: ஈண்டுத் தாதையார் கருதியதற்கு வேறாக உண்மை நிலையை இசைவித்தார் என்றலுமாம். **76**

1975. **பொருளுரை;-** மண்ணுலகில்...எனக்காட்ட - நிலவுலகத்தில் வாழும் உயிர்கள் பிழை செய்தாலும் அவை தம்மை வந்து அடைந்தால், நுதற்கண்ணையுடைய சிவபெருமான் பெருங்கருணையினாலே அவைகளைக் கைகொடுத்தெடுத்து ஆட்கொண்டு ஏற்றருளும் என்று காட்டும்பொருட்டு; எண்ணமில்லா...அருள்புரிந்த ஆக்கப்பாடு-எண்ண மில்லாதவனாய் வன்கண்மையுடைய அரக்கனாகிய இராவணன் திருக்கயிலைமலையை எடுத்து உடல் முரிவுபட்டுப் பின்னர் இசையினைப் பாடவே, பெருமையுடைய இறைவர் அவனுக்கும் அருள் செய்த ஆக்கப்பாடுகளை; அருள் செய்தார் - அத்திருப்பதிகத்தினுள் வைத்துப்பாடியருளினார்.

விளக்கவுரை:- திருப்பதிகத்தினுள் எட்டாவது திருப்பாட்டினுள் இராவணனுக்கு இறைவர் செய்த அருளிப் பாட்டைக் கூறியருளியதன் கருத்தை விளக்குவது இத்திருப்பாட்டு; இவ்வொரு பதிகத்திலன்றிப் பிள்ளையார் இனி அருளும் பதிகங்கள் தோறும் இவ்வாறு வைத்தருளுகின்றாராதலின் ஈண்டு அதன் கருத்தை ஆசிரியர் விளக்குதல் கடனாயிற்று.

இவ்வாறே மேல் ஒன்பதாவது திருப்பாட்டில், ஈண்டும் ஏனைப்பதிகங்களிலும் அயனுக்கும் மாலுக்கும் அருளிய திறத்தினையும், பத்தாவதில் புத்தர் சமணர்களை நிராகரித்தருளிய திறத்தினையும் வைத்தருள்வாராதலின் அவற்றின் கருத்தையும் அவ்வாறே மேல்வரு மிரண்டு பாட்டுக்களால் முறையே விளக்கியருளுகின்றார் ஆசிரியர். இத்திறம் பதிகங்கள்தோறும்வைத் துணர்ந்துகொள்க.

பிழைத்தாலும் வந்தடையின் - கைக்கொள்ளும்-என்று கூட்டுக. **வந்தடைதல் -** சரண்புகுந்து சார்தல். **கைக்கொள்ளுதல்** - குழியின் வீழ்ந்தாரைக் கைதூக்குதல் போல எடுத்து ஏற்றுக் கொள்ளுதல். **பெருங்கருணை** - கருணையினால். பெருமையாவது இத்திறம் பிறிதெவர்க்கும் அரிதாதல். "பிழையுளன பொறுத்திடுவர்" (நம்பி).

1976. தொழுவார்க்கே யருளுவது சிவபெருமா னெனத்தொழார்
வழுவான மனத்தாலே மாலாய மாலயனும்
இழிவாகுங் கருவிலங்கும் பறவையுமா யெய்தாமை
விழுவார்க ளஞ்செழுத்துந் துதித்துய்ந்த படிவிரித்தார். 78

எண்ணம் இலா - மலையின் மேலிருப்பவர் பரமபதியாகிய சிவபெருமான் என்றும், அவர் எல்லாம்வல்லவர் என்றும், தனக்கு வரங்கொடுத்தவர் என்றும் எண்ணாது. வரைந்திய தோள்களை" என்பது இத்தேவாரம்.

வல் அரக்கன் - வன்கண்மையுடைய இராவணன். **வலிமை** - ஈண்டுத் தீவினை அஞ்சாத ஆணவச்செருக்காகிய மன வன்கண்மைத் தீக்குணம் குறித்தது. "வன்னெஞ்சக் கள்வன் மனவலியன்" (திருவா . கோத்) "**வலி செற்று**" - என்றது இத்தேவாரம்.

எடுத்து, முறிந்து, இசைபாட - **எடுத்து** - திருக்கயிலை மலையினை நிலைபெயர்க்கும்படி தூக்க முயன்று; **முறிந்து** - அது காரணமாக இறைவரது திருவடிச் சிறு விரலால் சிறிதே ஊன்றப்பட்டு மலைக்கீழ்ச் சிக்கித் தோள்களும் பிற ஆண்மை நிலைகளும் முறிவுபட்டு; **இசைபாட** - பலகாலம் ஆற்றாது அழுது புலம்பிப் பின்னர், விரகறிந்து அவரைச் சரணடைந்து சாமகானம்பாட. **பாட** - **அருள்புரிந்த** - "தசமுகனை விட்டார்தம் பாட்டறிவே" (தக்-பர-226). **எண்ணம் - எண்** - மதிப்பு என்றலுமாம்.

அருள்புரிந்த ஆக்கப்பாடு - **அருள்புரிதல்** - பிழை பொறுத்து ஏற்றருளுதல். **கைக்கொள்ளும்** என்றது. **ஆக்கப்பாடு** - நாளும் வாளும் தருதல்.

கண்ணுதலான் - கருணைக் கண்ணோட்ட முடையான் என்றது குறிப்பு. நுதற்கண்ணால் எரித்தாரேனும், பின்னர் அதனாலே அருள் நோக்கமும் செய்தார் என்ற வரலாறும் குறிப்பு. **மண்ணுலகில்** - "இந்தப்பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறு" (திருவா). 77

1976. பொருளுரை;- தொழுவார்க்கே..என-தொழும் அவர்களுக்கே அருளும் இயல்புடையவர் சிவபெருமான் என்று தெரிந்து; தொழார் - தொழாதாராகி; வழுவான மனத்தாலே மாலாய-தவறு செய்த மனத்தினால் மயக்க மடைந்த; மால் அயனும்...விழுவார்கள் - திருமாலும் அயனும் இழிவாகிய பன்றியும் அன்னப் பறவையுமாகக் கீழும் மேலும் சென்று காணமாட்டாது விழுவார்கள்; அஞ்செழுத்தும்...விரித்தார் - திருவைந்தெழுத்தினையும் துதித்து உய்வுபெற்ற தன்மையை மேலே விரித்தருளினர்.

விளக்கவுரை:- இஃது பதிகத்துள் ஒன்பதாவது திருப்பாட்டின் கருத்துணர்த்திற்று.

சிவபெருமான் அருளுவது தொழுவார்க்கே என்க. ஈண்டு **அருளுவது** என்பது உண்மை விளங்க வைத்து விரைய ஈடேறத் துணைசெய்தல் என்ற அளவில் வந்தது. ஏகாரம் பிரிநிலை. ஆயின், தொழாதார்க்குச் சிவபெருமான் அருளுகின்றதில்லையோ? எனின் அற்றன்று; அவர்க்கும் அவ்வவரது அறியாமை நோய்க்குத் தக்கவாறு தண்ட

1977. வேதகா ரணராய வெண்பிறைசேர் செய்யசடை
நாதர்நெறி யறிந்துய்யார் தம்மிலே, நலங்கொள்ளும்
போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கும்
ஏதமே யெனமொழிந்தா ரெங்கள்பிரான் சம்பந்தர். 79

முதலியவாற்றால் வெளிப்படுப்பர் என்க. அவையும் அவ்வாற்றால் அருளேயாம். "சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்ச் - சார்ந்தடியார் தாந்தானாய்ச் செய்துபிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்" (போதம் - 10); அறக்கருணை மறக்கருணை பற்றியு முணர்க; "தொழுவார்க் கிரங்கி" (அரசு).

எனத் தொழார் *- என்று தெளிந்து தொழாதவர்களாகி. தொழார் -* ***வழுவான மனத்தாலே - எய்தாமை விழுவார்கள் - துதித்து உய்ந்தபடி*** *என்று கூட்டுக.*

மாலாய *- ஈண்டு* ***மால்*** *- மயக்கம். நாம் காண்பேம் என்ற தற்போத முனைப்புக் குறித்தது.* ***வழுவான மானத்தால்*** *என்பதும் பாடம்; இதற்கு,* ***மானம்*** *- பெருமை: தவறாக மானம் (Vanity) என்க.*

கரு விலங்கு *- பன்றி.* ***இழிவாகும்*** *- என்றதனைப் பறவைக்கும் கூட்டுக. விலங்குக்குக் கூட்டும்போது* ***இழிவு*** *- அளற்றிற்படுதலும் மலந்தின்னுதலும் முதலாயின;* ***பறவைக்குக் கூட்டும்போது இழிவுஆகும்*** *- என்பது அவ்வரலாற்றின்படி பொய்கூறி அபசாரப்படும் இழிவு குறித்தது.* ***ஆய்*** *- அவ்வுருவெடுத்து.*

எய்தாமை விழுவார்கள் *- அடையமாட்டாது நிலைதவறினவர்கள். "எய்யாமையே அறியாமையே" (தொல்).*

அஞ்செழுத்து *- சிவன்றிருநாமம். இத் தேவாரத்தினுள் "தாணுதல் செய்து இறைகாணிய"என்றருளியது குறிப்பு.*

முன்பாட்டு "மண்ணுலகில் வாழ்வார்களுக்கு" உபதேசித்தது. இத்திருப்பாட்டு விண்ணுலகத்தார் நலம்பெற உபதேசித்தது.

முன்பாட்டில் "எடுத்து - முறிந்து - இசைபாட அருள்புரிந்த ஆக்கப்பாடு" என்பன முறையே வினையும், வினைப்பயன் நுகர்ச்சியும், அதன் தீர்வும் இன்பம் பெறவுற்ற சாதனமும், அதனாற் போந்த பயனும் என்ற நால்வகையும் குறித்தது போலவே இப்பாட்டில் வழுவான மனத்தாலே - விழுவார்கள் - அஞ்செழுத்தும் துதித்து - உய்ந்தபடி என்று அந்நான்கு உண்மைப் பொருள்களையே எடுத்து உபதேசித்தமை காண்க. 78

1977. பொருளுரை:- வேதகாரணராய...தம்மிலே-வேதங்களுக்குக் காரணராகிய வெள்ளிய பிறை சேர்ந்த சிவந்த சடையினையுடைய சிவபெருமானது நெறியினை அறிந்து அடைந்து உய்தி பெறாதவர்களாகிய புறச்சமயத்தவர்களுள்ளே; நலங்கொள்ளும்....வழி - நன்மைகொள்ளும் ஞானமில்லாத சமணர்களும் புத்தர்களும் ஆகிய இவர்கள் கூறும் நெறிகள்; பழியாக்கும் ஏதமே என - பழியை விளைக்கும் கேடுகளே யாவன என்று;

எங்கள் பிரான் சம்பந்தர் மொழிந்தார் - எங்கள் பெருமானாகிய திருஞான சம்பந்தர் மொழிந்தருளினர்.

விளக்கவுரை:- இத்திருப்பாட்டால் பதிகப் பத்தாவது பாட்டின் கருத்துக் கூறப் பட்டது. சமண சாக்கியராதி பரசமயத்தாரது கேடுகளை நிராகரித்தலும், திரு நீற்று விளக்கத்தினைப் பெருக்குதலும் என்றிவையிரண்டுமே பிள்ளையாரின் திருவவதார உள்ளுறையாதலின், அவற்றுட் பெரும் பகுதியான முன்னையது இதன் கருத்தாய்த் திருவவதாரச் செய்திப் பயன் இம்முதற் பதிகத்தினின்றே தொடங்கி நிகழ்வதா யினமை காண்க. அச்சிறப்புப்பற்றிப் பிள்ளையார் திருப்பதிகங்களில் பத்தவாது திருப் பாட்டுச் "சமண் பாட்டு" என்று பெயர் வழங்கப் பெறும். "எடுத்த பாட்டினில் வடிவுபெற் றிருநான்கு திருப்பாட், டடுத்த வம்முறைப் பன்னிரண் டாண்டள வணைந்து, தொடுத்த **வெஞ்சமண் பாட்டினிற்** றோன்றிடக் கண்டு" (புரா - 1091) என்றது காண்க. இக்கருத்தினைப் பின்னர் "நானில முய்ய, ஏனை வெஞ்சமண் சாக்கிய மிழித்தழித் ததுவும்" (புரா - 1037) என்றவிடத்துக் காட்டப்படுதல் காண்க.

சிவநெறிச் சாதனமாகிய திருவைந்தெழுத்து முதலியவற்றை முன்னிரண்டு பாட்டானுணர்த்திய ஆசாரியர்பெருந்தகை, அவசாதனமாய் விலக்குதற்குரிய வற்றை ஈண்டு வற்புறுத்தியருளினமையும் அதனானே, பாட்டுவைப்பு முறையும் கண்டுகொள்க. முன்னவற்றை அருள் செய்தார் - விரித்தார் என்றதும் இதனை **மொழிந்தார்** என்றதும் இக்குறிப்பு.

வேதகாரணர் - வேதங்களை அருளிய முதல்வர். வேதங்களாற் சொல்லப்பட்ட உலக நிமித்த காரணர் - முதல்வர் - என்றலுமாம்.

நாதர்நெறி - சிவநெறி; சரியையாதி நான்கும், சிவாகமங்களின் முடிபுகளும்.

உய்யார் தம்மிலே - சமண்கையர் புத்தர் - வழி - என்க. **உய்யார்** - சிவநெறி சார்ந்துய்யும் நல்லூழ் பெறாது உழலும் புறச்சமயிகளின் தொகுதி.

உய்யார் தம்மிலே நலங்கொள்ளும் - என்பதற்கு உய்யாராகித் தம் அறிவாற் படைத்து மொழிந்தவற்றைத் தாமே பாராட்டுகின்ற சமண்கையர் புத்தர் வழி எனக் கூறுலுமொன்று. இப்பொருட்டு நலங்கொள்ளும் சமண்கையர், போதமிலாச் சமண் கையர் எனப் பெயரெச்ச அடுக்குச் சமண்கையர் புத்தர் என்னும் பெயர்கொண்டு முடிந்தது.

நலங்கொள்ளும் போதம் - நன்மையைப் பெறும் அறிவு. சிவஞான உணர்வு.

வழி - கூறும் நெறி - செல்லும் நெறி.

பழி ஆக்கும் ஏதமே - பழியினை விளைக்கும் கெடுதியே. ஏகாரம் பிரிநிலை. தேற்றமுமாம். **ஆக்குதல்** - விளைத்தல். **பழி**-இறைவர், நன்மைக்கு வகுத்த அறிவைத் துர்நெறியிற் செலுத்தும் நம்பிக்கைத் துரோகமாகிய பழிப்பு.

1978. திருப்பதிக நிறைவித்துத் திருக்கடைக்காப் புச்சாத்தி
யிருக்குமொழிப் பிள்ளையா ரெதிர்தொழுது நின்றருள.
வருட்கருணைத் திருவாள னாரருள்கண் டமரரெலாம்
பெருக்கவிசும் பினிலார்த்துப் பிரசமலர் மழைபொழிந்தார். 80

எங்கள் பிரான் சம்பந்தர் - *அருள் செய்தார் (1975); விரித்தார் (1976); மொழிந்தார் என்ற மூன்றுக்கும் எழுவாய், பதிகப்பாட்டு நிறைவாதல் குறித்தலும் உறுதியும்பற்றி இறுதியில் வைக்கப்பட்டது. சிறிய பெருந்தகையர் (1971) இசைத்தார் (1974) என்று பதிகத் தொடக்கத்து வைத்ததும், ஈண்டுப் பதிகப்பாட்டுப் பற்றிய இறுதியில் அவ்வாறே வைத்ததும் கருதுக.* ***எங்கள் பிரான்*** - *சைவ சமய பரம ஆசாரியராகிய உரிமைக் குறிப்பு. ஆசிரியருக்குப் பிள்ளையார்பாலுள்ள உரிமை யன்பின் குறிப்புமாம்; "எங்கள் பிரான்"*
79
(மங்கை - புரா - 1).

1978. **பொருளுரை:-** திருப்பதிகம்-நின்றருள - திருப்பதிகத்தினை நிறைவாக்கித் திருக் கடைக்காப்பினைச் சாத்தியருளி, இருக்கு மொழிப் பிள்ளையார் எதிரில் தொழுது நின்றாராக; அருட்கருணை-கண்டு - அருட்கருணையுடைய திருவாளராகிய சிவபெருமானது நிறைந்த அருளினைக் கண்டு; அமரரெலாம்..பொழிந்தார் - தேவர்கள் எல்லாம் பெருக்கெடுத்த ஆகாயத்தில் ஆரவாரித்துத் தேன் ததும்பும் தெய்வமலர்களை மழையாகப் பொழிந்தனர்.

விளக்கவுரை: திருப்பதிக நிறைவித்து - பத்தாவது பாட்டாகிய சமண் பாட்டினுடன் பதிகத்தை நிறைவாக்கி; **பதிகம்** - பத்துப் பாட்டுக் கொண்ட சொன்மாலை என்ற காரணப்பெயர். இது பெரும்பான்மை, சிறுபான்மை இந்த அளவிறந்தும் வரும். திருவங்கமாலை - வழிமொழித் திருவிராகம், முதலியவை பார்க்க. "பதிகப் பாட்டான பத்தும் பாடனிரம் பியபின்னும்" *(புரா - 582)*

திருக்கடைக் காப்புச் சாத்தி - பதிகம் நிரம்பியபின் அதனை முடித்துக் காட்டும் வகையால் தமது பெயரும் பதிகப்பயனும் முதலாகிய முத்திரைகளைப் பொறித்துக் கூறும் (பதினொராவது) திருப்பாட்டாக அருளிச் செய்யும் பாடலை திருக்கடைக் காப்பு என்று வழங்குவர். பலசுருதி என்றும், திருநாமப் பாட்டென்றும் கூறுவர். சாத்தி - அணிந்து; ஆரத்தினை இணைத்துக் கூட்டி விளங்கும் முகமணிபோல என்பது குறிப்பு.

இருக்கு மொழி - இருக்கு - வேதப் பொதுமை குறித்தது. பிள்ளையார் மொழி வேதமே என்பதாம். இறைவர் மொழியே இவரது திருவாக்கில் இங்ஙனம் போந்த தென்பது முன்னரும் "எழுதுமறை மல்லனெடுந் தமிழ்" (1973) என்றதனால் விளக்கினார். "எனதுரை தனதுரையாக" (இலம்பையங் கோட்டூர்) என்பது பிள்ளையாரது திருவாக்கு. **இருக்கும் மொழி** - எந்நாளும் அழிவில்லாது நிலைபெற்றிருக்கும் மொழி என்றும், இருத்தும் எனப் பிறவினையாகக் கொண்டு பயில்வோரைச் சிவலோகத்தில் இருக்கச் செய்யும் அருள்மொழி என்றும் உரைக்க நின்ற குறிப்பும் காண்க. பிள்ளையார் தேவாரம் "ருக்வேத சாரம்" என்பர். பிள்ளையாரது திருவாக்கினை, "ஆகமவேத புராண நூல்", "சுருதித் தமிழ்க்கவி", "ஆரணாகீத

1979. வந்தெழுமங் கலமான வானதுந் துபிமுழக்கும்,
கந்தருவர் கின்னரர்கள் கானவொலிக் கடன்முழக்கும்,
இந்திரனே முதற்றேவ ரெடுத்தேத்து மிசைமுழக்கும்,
அந்தமில்பல் கணநாத "ரர"வெனுமோ சையினடங்க. **81**

கவிதை", 'உபநிட மதுர கவிதை" என்று பலபடத் திருப்புகழினுட் பாராட்டுவர் அருணகிரியார்.

எதிர் தொழுது *- விண்ணிலே கருணையினானின்றாரை எதிரே தொழுது.*

அருட்கருணைத் திருவாளன் *- சிவபெருமான் அம்மையப்பராய் நின்றமையால் அருள் - கருணை என்று ஒருபொருட் பன்மொழியாற் கூறினார். அவ்வாறிரண் டாயினும் பொருண்மையால் ஒருவரே என்பார்* ***திருவாளன்*** *என்றார்.* ***திருவாளன்*** *- முத்தித்திருவை ஆள்பவன்.* ***திரு*** *- முத்தித்திரு. இப்பெயர் சிவபெருமானுக்கும் அவனேயாகிய தன்மைபெற்ற பெரியோருக்குமே உரித்தாய் வரும். "தேசமுய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்", "உயிரளித்த திருவாளன்" (வெள்.சருக் - 12).*

மலர் *- கற்பகம், மந்தாரம் முதலிய தெய்வமரப் பூக்கள்.* ***பிரசம்*** *- தேன்.* *80*

1979. பொருளுரை:- அந்தமில்....அடங்க - அழிவில்லாத பல சிவகணநாதர்கள் முழக்கும் "அரகர" என்னும் ஓசையினுள் அடங்கும்படி; மங்கலமான...இசை முழக்கும்- மங்கலமாகிய வானதுந்துபி முழக்கமும், கந்தருவர்கள், கின்னரர்கள் முதலிய தேவச் சாதியர்களின் கானவொலியினது கடல்போன்றெழும் முழக்கமும், இந்திரனே முதலாகிய தேவர்கள் எடுத்துத் துதிக்கின்ற இசைகளின் முழக்கமும் ஆகிய இவ்வகை ஓசைகளின் தொகுதி; வந்து எழும் - இங்குவந்து எழுந்து முழங்குவதாகும்.

விளக்கவுரை:- ஓசையின் அடங்க - முழக்கும் - முழக்கும் - முழக்கும் - வந்து - எழும் *- என்று கொண்டு கூட்டி முடிபு கொள்க.*

மங்கலமான வானதுந்துபி *- பெருமங்கலநிகழ்ச்சிக்குறியாக வானகத்தில் ஐந்து துந்துபி என்னும் தேவமுழக்கம் தானே நிகழ்வதாமென்ப. "விண்ணுலகின் மேனிறைந்த வைந்து பேரிய வொலியும்" (1693), "கடவுண்மால் வரையி னுச்சி யதிர்தரு மோசை யைந்து மார்கலி முழக்கங் காட்ட" (750).*

கந்தருவர் - கின்னரர்கள் *- இசைவல்ல தேவச் சாதியர். 1614 பார்க்க.*

கானவொலிக் கடல் முழக்கு *- பலரும் ஒலித்த கானமாகிய ஒலிகளின் தொகுதி கடல்போல முழங்கிற்று என்க.* ***கடல்*** *- கடல் போன்றதைக் கடல் என்றுபசரித்தார். முன்னைய துந்துபி முழக்கு இயக்குபவரின்றியும் தானாய்ச் சத்திப்பது; இவை பிறர் முழக்கச் சத்திப்பன.* ***ஒலி*** *- ஓசை என்னாது ஒலி என்றார் களிப்பாகியதோர் உட்குறிப்பைப் புலப்படுத்தி நிற்றலால்.*

இந்திரனே முதல் தேவர் - ஏகாரம் எண்ணின்கண் வந்தது முதற்றேவர் - பிரமன் - விட்டுணு முதலிய தேவர்கள். **ஏத்தும் இசை** - சிவன் புகழ்பாடும் கீதம்.

அந்தம் இல் பல்கணநாதர் - சிவ கணநாதர்கள் சிவத்தன்மை பெற்று ஊழியிலும் அழிவுபெறாது சிவன் றிருநடங்கண்டு நிற்போர் **அந்தமில்** என்ற அடை மொழியால் முன்கூறிய ஏனையோர் அந்தம் உடையராய் ஊழி முடிவில் அழிவு பெறுவர் என்பது குறித்தார். கணநாதர்களை இறுதியில் வைத்தார் சிறப்புணர்த்தற்கு.

அரவெனும் ஓசையின் அடங்க - அரவெனும் ஓசை இனத்தாலும் தன்மையாலும் பயனாலும் பெரியது; ஏனையவை எவ்வாற்றானும் அதனிற்றாழ்வுடையனவாய் அதனுள் அடங்குவன என்பது குறிப்பு. **முழக்கு** - மூன்று கூறி, **அர** என்பதொன்று கூறியதும் அக்குறிப்பு. **அடங்க** - முன்கூறிய மூவகை முழக்கங்களும் கணநாதர் அர என்ற ஓசையினுள் அடங்கி ஒடுங்கின. **அடங்க - எழும்** - முழங்கி எழுவனவாயினும் அர என்பதனுள் அடங்குவனவே.

இவ்வாறு தெய்வச் சாதியர்களும் ஆர்த்தது தமது வானுலகமுட்பட எல்லா உலகங்களும் சைவ விளக்கம் பெற்று இன்பமடைதற் பயன்கருதி என்க. "மண்ணுலக மேயன்றி வானுலகுஞ் செய்தபெரும், புண்ணியத்தின் படையெழுச்சி போலெய்தும் பொலிவெய்த" (புரா. 650).

81

அந்தமில்சீர்-என்பதும் பாடம்.

திருப்பிரமபுரம் திருச்சிற்றம்பலம் **பண். நட்டபாடை**

தோடுடை யசெவி யன்விடை யேறியோர் தூவெண் மதிசூடிக்
காடுடை யசுட லைப்பொடி பூசியென் னுள்ளங் கவர்கள்வன்
ஏடுடை யமல ரான்முனை நாட்பணிந் தேத்த வருள்செய்த
பீடுடை யபிர மாபுர மேவிய **பெம்மா"னிவ" னன்றே!** 1

அருநெ றியமறை வல்ல முனியகன் பொய்கை யலர்மேய
பெருநெ றியபிர மாபுர மேவிய பெம்மா னிவன்றன்னை
யொருநெ றியமனம் வைத்துணர் ஞானசம் பந்த னுரைசெய்த
திருநெ றியதமிழ் வல்லவர் தொல்வினை தீர்த லெளிதாமே. 11

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு;- "எச்சில் மயங்கிடப் பால் இட்டாரைக்காட்டு" என்றுகேட்ட தாதையார்க்கு "எம்மை இதுசெய்த பிரான் இவன்" என்று அவரை அடையாளங்களுடன் சுட்டிக்காட்டியருளியது. ஆன்மாக்களுக்கு இறைவரையும் அவரை அடையும் வழிகளையும் அறிவித்து, அவர்கள் வினை நீங்கி இன்பமடையும்படி செய்வது ஆசாரிய ரியல்பு என்ற தன்மைக் குறிப்புமாம். "பெம்மான் இவனன்றே!" இவ் இறைவனைப் பாடவல்லவர் தொல்வினை தீர்தல் எளிது! என்றது காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு - (1) இம் முதற்றிருப்பாட்டில் அளவிறந்த அரும் பொருள்களைக் காண்பர் பெரியோர். அவையெல்லாம் அனுபவமுள்ள ஞானதேசிகர்கள்பால் முறையால் உணர்தற்பாலன.

தோடு - பெண்கள் காதணி. **செவியன் - அன்** - ஆண்பால் விகுதி; பெண்ணும் ஆணுமாகக்கூடிவந்து. அருளி நிற்கும் இவன். குழவிகள் அன்னையை முன் உணரும். பின்னரே அத்தன்றன்னை உணரும். ஈண்டுப் பிள்ளையார் முதலில் கண்டு-பால் ஊட்ட உண்டு - அழுகை தீர்க்கப் பெற்றதற்குப் பொருளாவர் உமையம்மையார். இக் கருத்துப்பற்றியே பிள்ளையாரது சீகாழிப் பதிகப் பாட்டுக்களுட் பெரும்பான்மையும் அம்மையாரைச் சுட்டி உடன்கூறுவதும் காண்க. இருள் போக்குதலில் ஞாயிற்றின் கதிர் முன்னர்ப் போந்துவர அதன் பின்னே ஞாயிறு வருதல்போல - அம்மையின் அருள் முன்வைக்கப்பட்டது. **செவி** - அருள் நோக்கம் பெறுபவன் கண்வளத்தினையும் கொடை பெறுபவன் கைவளத்தினையும் சிறப்பித்துக் கூறுதல்போல ஈண்டுச் செவியால் நன்மை பெறக் கருதிச் செவியைச் சிறப்பித்தார். "தம்பாடல் பரமர்பாற் செல்லுமுறை பெறுவதற்குத் திருச்செவியைச் சிறப்பித்து" (1973) என்று ஆசிரியர் எடுத்துக்காட்டியருளினர். இது தமிழ்ச் சுருதி என்பதும், முதல்வர் சொல்லியருளக் குருபரம்பரையில் செவிவழியாக வழி வழி கேட்டுவர வழங்குவது என்பதும் குறிப்பு. **ஏறி - சூடி - பூசி** - என்பன எச்சங்கள். ஏறியும் சூடியும் பூசியும் கவர் என்க. **தூ - வெண் - தூய்மை** - அகத்தும், **வெண்மை** - புறத்தும் சிறப்பு. **காடு உடைய சுடலை** - உலகம் சங்கரிக்கப்பட்டநிலை. **பொடி** - திருநீறு. **உள்ளம்** - உயிருணர்வு - **ஆன்மா** என்றலுமாம். **மலரான்** - பிரமன்; **மலர்** - தாமரை; பிரமன் பூசித்த காரணத் தாற் பிரமபுரமெனப் பெற்ற பெயர்க் காரணத்தைக் குறிப்பித்தபடி. **மலரான்-ஆன்**-கருவிப்பொருளில் வந்த மூன்றனுருபு எனக்கொண்டு காயத்தாலும், **பணிந்து** என்றதனால் மனத்தாலும், **ஏத்த** என்றதனால் வாக்காலும் செய்த வழிபாடுகளைக் குறிப்பாக உரைத்தலும், இதனால் பிள்ளையாரது "முன்னிலைமைத் திருத்தொண்டு" குறித்ததாகக் கொள்வது மொன்று. **பீடு** - குரு லிங்க சங்கமம் என்ற மூன்றும் உடைமைச் சிறப்பு. குரு - தோணியப்பர். **பிரமாபுரம்** - ஆன்மாக்கள் மலம்போக்குதற்கு நித்திய முதலியன செய்தற்கு உரிய உறுப்புக்களுடையது. "சிறந்த வன்பால், நாவியலு மங்கையொடு நான்முகன்றான் வழிபட்ட" (தேவா). **அன்றே** - ஏகாரம் பிரிநிலை. **தோடுடைய** செவி - பேரருளுடைமை; **விடையேறி** - தன்வயத்தனாதல்; **மதிசூடி** - முற்றறிவுடைமை; **பொடிபூசி** - வரம்பிலின்ப முடைமை; **உள்ளங்கவர் கள்வன்** - இயல்பாகவே பாசங்களினீங்குதல்; இயற்கை யுணர்வு; **பிரமபுரம்** - அளவிலாற்றலுடைமை என்ற எண்குணங்களாய்ச் சிறப்பியல்பு களாகிய இறைமைத்தன்மை குறிப்பன என்றும்-**பிரமாபுரம்**-நாடும் ஊரும்; **விடையேறி** - கொடியும் ஊர்தியும்; **பொடிபூசி**-முரசும் படையும்; **மதிசூடி**-மலையும் ஆறும்; **தோட்டுச் செவி** - தாரும் என்றிவ்வாறு இறைவரது தசாங்கம் குறிப்பாலுணர்த்தி நின்றன என்றும்-**விடையேறி - மதிசூடி** என்பன உருவம் - **பொடிபூசி-பிரமாபுரம்** அருவுருவம் - **உள்ளங்கவர் கள்வன்** - அருவம் என்ற மூவகைத் திருமேனிகளைக் குறிப்பன என்றும்-**தோடு** - காரியப் பொருள் - அது காரணத்தை அனுமானத்தால் அறிவித்துநிற்றல்போல் கருத்தாவுண்மையை உணர்த்தி நிற்பது என்பது "எப்பொருளு

மாக்குவா னீசனே யெனுமுணர்வு" (1969) என்றதனால் ஆசிரியர் அறிவித்தருளினர் என்றும்; "சிவனடியே" (1968) என்ற திருப்பாட்டு உணர்ச்சி நிகழ்ந்த செயலையும் "எப்பொருளும்" என்றது அவ்வுணர்ச்சியின் பயனையும் உணர்த்தின; பயனாவது உணர்ந்த வழியே ஒழுகுதல்; இஃது அபரஞானப்பயன் - "அப்பொருளா னநமை யாளுடையார்கள் எனுமறிவு" என்றது பரஞானப்பயன் - "அறிவறிவான் றனையறிய வாக்கை யாக்கி" என்பன காண்க என்றும் - **தோடு** பொருட் பிரபஞ்சத்தையும், செவி சொற்பிரபஞ்சத்தையும் உணர்த்தவே சிவன் இவ்விரண்டிலும் ஐந்தொழில் புரியும் வினைமுதல் என்பார் செவியன் என்றதனால் உபதேசித்தருளினார்; இதனாலும் உடைப்பொருளும் உடையானும் அவன் அதை நடத்து முறையும் உணர்த்தப்பட்டன என்றும் - "அவன்" என்று மறைகள் முறையிட்டு ஓதியதனை "இவன்" என்று சுட்டியருளுகின்றமையால் தம்மைப்போல அதனைக் காணுதல் பெறாத தந்தையாருக்கும், அவர் ஏலர் உலகுக்கும் இலக்கணமுணர்த்தி, இதன்பின் இலக்கியமுணர்த்தும் போதனை முறைபற்றி அங்கங்களை அடையாளங்களுடன் சாற்றி ஓதியருளினார் என்றும்-பொடிபூசி-நோய் தீர்க்கும் மருந்தினைக் குழவிகளின்பொருட்டுத் தாய் உண்பதுபோலத் தாம் திருநீறு அணிவர் என்ற குறிப்பு என்றும்- **உள்ளங் கவர்கள்வன்** - எஞ்ஞான்றும் எம்மின்வேறாகாது அகத்தினின்று உபகரிக்கும் தமது முதலுபகாரம் உணர்த்தும் குறிப்பு என்றும்-பிரமா புரமேவிய என்றது சதாசிவதத்துவமாகிய தமது உயர் நிலையினின்றும் இறங்கி உயிர்கள் எளிதின் வழிபட வந்த நிலையின் அருட்பெருக்கின் குறிப்பு என்றும்-செவியன்-முதலிய ஆறும் கூறி முடிவில் **இவன்** என்று கூறுதலால் "அறுவகைச் சமயத் தோர்க்கும்" (சித்தி) என்றபடி ஆறு சமயங்களினும் விரவி மேம்பட்ட முடிபு கூறும் சைவ முதன்மையும் சிவனது முதன்மையும் குறிப்பிடப்பட்டது என்றும்-தோடு முதலிய ஆறும் அங்கங்கும் முடிந்தும் முடிவுபெறாது சென்று முடிக்கும்சொல்லை அவாவி நிற்க, **இவன்** என்றது ஒன்றனையும் அவாவாமல் முடிபுபெற்று நிற்பதனால், பதமுத்திகள் பலவோடும் சாயுச்சிய முத்திநிலை குறிக்கப்பட்டது என்றும்-தோடு முதலிய 36 மொழிகளால் ஓதுதலால் 36 தத்துவசொரூபமும் அவை கருவியாமாறும், நான்கு அடிகளாற் கூறுதலால் சரியையாதி நாற்பாதமும் பயனும், அடிதோறும் ஐஞ்சீரான் ஓதுதலால் ஐவேறு ஐந்தெழுத்தும், காரணக் கடவுளர் ஐவரின் பதங்களும், ஐந்தொழிலும், ஐம்மலங்களும்; 18 எழுத்துக்களால் அமைத்தல் பதினெண்வித்தைகளினியல்பும், குறிக்கப்பட்டன என்றும்-தோடு - **விடை** என்றவை அஃறிணையும்; **செவியன்** என்ற உயர்திணையும் இந்த இரண்டுமாய் நிற்பவன் இறைவன் என்ற குறிப்பு என்றும் **பணிந்தேத்த அருள் செய்த** என்றதனால் சாதனமும் பயனும் உணர்த்துவது குறிப்பு என்றும்-இவ்வாறு ஞானகாண்டம் ஞானபாதங்களின் துணிபுகள் எல்லாம் குறிப்பினாற்பெறும்படி கொண்டுணர்த்தி உபதேசித்த எழுதும்மறை இதுவாகும். இது பொருட்டன்மையணி. **இவன்** என்று சுட்டிக் காட்டித் தொடங்கிய முதற்றிருமுறை முதற்பாசுரத்தின்படி இவனதியல்பே திருமுறைகள் முழுதுமாம் என்று இன்னோரன்னவை ஸ்ரீமத் செப்பறைச் சிதம்பர சுவாமிகளின் குறிப்புக்கள்.

இனி, இத்திருப்பாட்டினைப் பிள்ளையார் (1) தம்மை "உனக்கீ திட்டாரைக் காட்டு" என்று வினவிய தாதையார்க்கு விடை கூறுமுகத்தானும் (2) தாம்பெற்ற அருள்ஞானத்தின்

பொருட்டு இறைவனைத் தாம் ஏத்தும் துதிமுகத்தானும். (3) உலகுயிர்களுக்கு மெய்ஞ்ஞான நூற்றுணிபினை உபதேசிக்கும் முகத்தானும் என இம்மூன்று பொருளும் நுதலி எடுத்துக்கொண்டனர்:-மறையானது சுரலட்சணங்கள் பொருந்த இசைக்கப்படுவது: சுரங்கள் ஓதுதலிற் பிழைபட்ட வழிப் பயன் தராததுமன்றித் அநர்த்தமாகித் தீமையும் பயக்கும்; சுரவியல்பான அது எழுத முடியாதது; ஆதலின் **அவ்வாறன்றி இஃது எழுதும் மறையாகி அப்பயன்தரத் தமிழில் இசைக்கப்பட்டது**. இதுபற்றியே தாதையார் கேட்ட கேள்விக்கு மறைச்சிறுவர் மறையினால் விடை கூறாது தமிழினாற் கூறினார் என்பது **இருக்குமொழிப் பிள்ளையார்** (1978) என்ற குறிப்பு - **தோடு** - பெண்பாகமும், **செவியன்** - ஆண்பாகமும் குறித்து நின்று "தோலும் துகிலும்" என்ற திருவாசகத்திற் கண்டபடி இறைவரது இருகூறாகி யியைந்த தொன்மைக் கோலத்தைக் குறித்தது; - **விடையேறி** - சிருட்டி; சங்காரத்தில் அறக்கடவுள் அழியாது இறைவர்பால் நின்று மீள உலக சிருட்டியில் உளதாதற் குறிப்பு; **மதிசூடி** - திதி; சாபத்தால் அழிந்துபடாமல் சந்திரனைக் காத்த குறிப்பு; **பொடிபூசி** - மாசங்காரம்; **கள்வன்** - திரோபவம் - மறைப்புக் குறிப்பு; **அருள் செய்த** - அனுக்கிரகம் என்ற அருட்குறிப்பு. என்று இவை ஐந்தொழிலும் செய்யும் இவன் என்ற குறிப்பு; இறைவரைத் தாதைக்கும் அவர்மூலம் உலகர்க்கும் காட்டி உபதேசிக்கும் ஆசாரிய ராதற் குறிப்பு. இன்னோரன்னவை திரு. கயப்பாக்கம் சதாசிவ செட்டியார் குறிப்புக்கள். மேலுங் காண்க.

தோடு - "தோடையா னொருகாதிற் றூயகுழை தாழ" (தேவா), "ஒருபாற் றோடு மொருபாற் குழையும், இகுபாற் பட்ட மேனி யெந்தை" (கோயினான் - 36) என்றபடி இறைவர் பெண்ணாணாய பேரருளாளன் என்றும், அசுவதரன் கம்பளன் என்ற இரண்டு கந்தருவர்கள் சிவனைப் பாட வரம்பெற்றுக் காதிலே தோடும் குழையுமாகிய உருவுடன் இருக்கப்பெற்றனராதலின் அதுபோலவே தமது பாடலும் இறைவர் திருச்செவியி லேற்றருள்வர் என்றும் குறிப்புக்கள் காண்க; ஓர் **தூவெண்மதி** - தூய்மையும் வெண்மையும் இறைவர் சூடும் சந்திரன் அப்பிராகிருத சந்திரனாவான் என்பது குறிப்பன. **சுடலைக் காடு** - ஐந்து கலைகளிலுமடங்கிய எல்லாப் புவனங்களையும் சங்கரிக்கும் மாசங்காரத்தில் உளதாவது; **உள்ளங்கவர் கள்வன்** - சுத்தநிலையில் அழுந்திய சிவஞானானந்த முதிர்ச்சி; எழுதும் மறையினைத் தமிழால் ஓத எடுக்கின்றாராதலின் பிரணவம் உரைத்தே வேதம் தொடங்கும் மரபுப்படி **தோடு** என்ற முதன்மொழியில் ஓகாரம் புணர்த்தி எடுத்தருளினர்; "மறையெ வற்றிற்கு மாதியினவில்வான்நின்றதோர்தனி மொழியைமுன் னோதின னெறியால்" (கந்த. அய. சிறைபுரி பட -8); அப் பிரணவநாதம் பூதாகாயத்தினன்றிச் சிதாகாயமாகிய தகரா காயத்திற்றோன்றும் சுத்தநாதமாதல் குறிக்கத் **தகர** மெய்யுடன் கூட்டி உரைத்தருளினார். இவ்வாறு முதற்றிருமுறை - முதற்பதிகம் - முதலடி - முதன்மொழி - முதலெழுத்தாகிய இவ்வோகாரம் பன்னிரண்டாம் திருமுறையின் ஈற்றுச் சருக்கம் - ஈற்றுச் செய்யுள் - ஈற்றடி - ஈற்றுச் சொல் - ஈற்றெழுத்தாகிய மகரத்தோடு புணர்ந்து **ஓம் என்று முடிந்து தமிழ்வேதத் திருமுறைகள் யாவும் பிரணவ பீஜத்திற்** றோன்றி யடங்கி நிற்கும் தன்மையும் காணத் தக்கது; (2) **முற்றல் ஆமை** - **விஷ்ணுவின்** கூர்மாவதாரமாகிய முதிர்ந்த ஆமை ஓடு. **ஏன முளைக் கொம்பு**. விஷ்ணுவின் வராக அவதாரத்திற் கொண்ட முளைபோன்ற கொம்பு. விஷ்ணு, பலகோடி கற்பங்களாகிய

ஆயுளுடைமையால் முற்றல் என்றார். **பூண்டு** - பூணாக அணிந்து; **வற்றல் ஓடு** - பிரமனது தசை வற்றிய மண்டைஓடு. **கலன்** - பலிப்பாத்திரம். **இளநாகம்** - பல சதுர்யுகங்களை ஆயுளாகக்கொண்ட அனந்தன் முதலியவை. **உடையாராகிய** - பெரியார் என்க. **கற்றல்** - இறைஞானக் கல்வி கேள்வியால் அவர் தொழுதேத்த என்றார். "கல்லார் நெஞ்சி னில்லா னீசன்", "கற்றவர் விழுங்கும்" -(3) **நீர்** - கங்கை. **வளை** - வளைசோர என்றது ஆன்மாக்களை நாயகிகளாக வைத்தோதும் அகத்துறை பற்றிக் கூறியது. **முதலாகிய** - ஊழியிலும் அழியாது எஞ்சிய முதன்மைபெற்ற. **பேர்**-அதனால் வந்த தோணிபுரம் என்ற காரணப் பெயர்-(4) **விண்மகிழ்ந்த** - மகிழ்ந்த சஞ்சரித்த என்றபொருளில் வந்தது; **மதில்** - மதிலையுடைய திரிபுரங்கள். ஆகுபெயர்; **எய்தது** - எய்வார்போல நின்று எரித்ததை எய்ததென்றதுபசாரம்; **தேரிய** - தேரும் பொருட்டு; **மார்பிற் பெண் மகிழ்ந்த** - பெண்ணை ஒரு பாகத்தில் உடைய. **மண்மகிழ்ந்த பிரமாபுரம்** என்றும், **பெண் மகிழ்ந்த பெம்மான்** என்றும் கூட்டுக-(5) **ஒருமை பெண்மையுடையன்**-ஒருபாகத்திற் பெண்ணையுடையவர். **ஒருமை** என்பதனைச் சடையன் என்றதுடன் கூட்டலுமாம். அஃதாவது ஒருபுறம் சடை மற்றொருபுறம் குழல் என்க. **கருமைபெற்ற** -பெற்ற என்றதனால் கருமை அதன் இயல்பாகிய நிறமன்றென்பது.-(6) **மறை கலந்த வொலி பாடல்** - மறை இறைவர் வாய்மொழி (ஒற்.ஒருபாவொ- ஃது -1.) **இறைகலந்த** - கையிற் பொருந்திய; **இறை** - கையிறை; **வளைசோர்தல்** - ஒன்றொன்றாக் கழன்றுவீழ்தல்; உள்ளங்கவர்தலால் உடல் மெலிவுபட்டு வளைகழன்றன என்பது. **சோர** - சோரும்படி. **கறை** - இருள்; **கடி** - மணம்; **பொழில்** - நந்தனவனங்களையும், **சோலை** - ஏனை மரச் சோலைகளையும் குறித்தன. **கதிர் சிந்த - பிறை கலந்த** - சோலைகளின் செறிவினால் பலபுறமும் கதிர்கள் சிதறும்படி பிறை புகுந்தது போன்ற; இதனை "வெண்மதியஞ் சோலைதொறு நுழைந்துபுறப் படும்பொழுது" (1906) என்று ஆசிரியர் அழகு படுத்துதல் காண்க.-(7) **முயங்குதல்** - சேர்தல் என்ற பொருளில் வந்த சொற்பொருட் பின்வருநிலை; **புனல்** - கங்கை; **அனல்** - கையில் ஏந்திய தீ; **எரிவீசி - உழிதந்து** என்று கூட்டுக; **சதிர்வு** - அழகு; **உடைமுயங்கும்** - **அரவு** - புலியுரியுடையின் மேல் கச்சாக வீக்கிய பாம்பு. ஒற்றைக் கோவண உடையாகச் சேர்ந்த பாம்பு என்றலுமாம். "அற்ற மறைப்பது முன்பணியே"; **கடற்கழிசூழ் பிரமாபுரம்** - என்க. "மகர வார்கடல் வந்தண வும்மணற் கானல்வாய்ப், புகலி ஞானசம்பந்தன்" (தேவா); **கானல்** - கடற்கரைச் சோலை. **உழிதருதல்** - திரிதல்-(8) **வியர்** - வேர்வை. **வியர் இலங்கு** - **தோள்** - என்க. **தோள்களை** - தோள்களினால். உருபு மயக்கம். **துயர் இலங்கும் உலகு** - பிறவித் துன்பத்தால் மிகும் இவ்வுலகம். **ஊழி** - உகமுடிவிற்பேரும் பெருநீர்ப் பெருக்கு என்ற பொருளில் வந்தது. **ஊழி தோன்றும் பொழுதெல்லாம் பெயர் இலங்கு** - ஒவ்வோர் ஊழியினும் ஏனை உலகம் அழியத் தான் அழியாது நின்று ஒவ்வோர் பெயரும் விளங்கப்பெற்ற. மூலமலம் பக்குவப்படும் பொருட்டுச் சிருட்டியும், கன்மமலம் பக்குவப்படும் பொருட்டும், உயிர்கள் இளைப்பாறும் பொருட்டும், மாயா மலச்சத்திகள் வலிபெறும்பொருட்டும், சங்காரமும் செய்யப்படுமாதலின், பிறவியை விளைக்கும் மும்மலமும் பக்குவப்படும்படி உலகினை ஒடுக்குதலும் மீளத் தோற்றுவித்தலும் செய்தலின், பல ஊழிகள் தோன்றுவன. தலமாகிய பொருள் அழியாதபோது அதன் பெயராகிய சொல்லும் அழியாது; ஆதலின் **பெயர் இலங்கும்** என்றார். "முன்னா ணிகழ்ந்த

பன்னீ ருகத்து. வேறு வேறு பெயரி னூறின் றியன்ற. மையறு சிறப்பிற் றெய்வத் தன்மைப். புகலி" (கழுமல.மும்.கோ.10): "பன்னிரண்டு திருப்பெயர்த்தால்" (1912) என்று இக்கருத்தையும். இப்பாட்டின் கருத்தை 1974லும் விளக்கினர் ஆசிரியர் -(9) **தாள்நுதல் செய்து** - திருவடியையும் திருமுடியையும் குறிவைத்து: **இறைகாணிய** - இறைவரைக் காணும்பொருட்டு: இறுதியைக் (முடிவைக்) காணும்பொருட்டு என்றலுமாம்: **நீணுதல்**- நீளுதல் என்பது நீணுதல் என மருவிற்று. .. "நண்ணனல் வேவாத நற்றவர்" (போதம் 10) "நீணுலகெலாம்" (தேவா) என்புழிப்போல. **நீணுதல் செய்**தலாவது மேன்மேற் பறந்தும் கீழ்க்கீழ் அகழ்ந்தும் செல்லுதல்; **செய்தொழிய** - செய்து பயன் பெறாது நிற்கும்படி; **நிமிர்தல்** - அப்பாற்படுதல்; **பேணுதல்** - காத்தல்; இப்பாட்டின் நுதலிய பொருளை ஆசிரியர் 1975-ல் விரித்தருளினர்-(10) **சமண்**-சமண் சமயத்தவர். **புறங்கூற** - புறச்சமயம்பற்றி இகழ்ந்துகூற; **நெறிநில்லா உலகம் ஒத்த சொல்ல** என்க. **நெறி** - இறைவனூல்களில் விதித்த நெறி; **ஒத்த** - அப் புறங் கூற்றுமொழியுடன் ஒத்த; மனம் போனபடிக்கான - பிதற்றாகிய; **மத்தயானை** - ஓர் அசுரன்; **மாயம் இதுவென்ன** - தேவர்கள் அஞ்சிவந்து அபயம் புகுந்து கண்மூடித் திறக்குமுன் யானையை உரித்துப் போர்த்து விடுதலின் இது வியப்பாகிய ஒரு மாயமோ என்னும்படி.-(11) **அருநெறிய** - அரிய நெறிகளை வகுக்கின்ற. **முனி** - பிரமதேவர். **பொய்கை** - பிரமதீர்த்தம். **அலர் மேய** - **அலர் பொய்கைப் பிரமா புரம்** என்க. **பெரு நெறிய** - முத்தி நெறியை உடைய. **பெரு நெறிய** - **பெம்மான்** என்க. இப்பாட்டில் **நெறிய** என்றவிடம் எல்லாம் அகரம் பெயரெச்ச விகுதி. **ஒரு நெறிய மனம்** - ஒருமைப்பட்ட மனநிலை. **உணர்** - உணர்ச்சியிற்றெளிந்த. **திருநெறிய தமிழ்**-சிவநெறிகாட்டும் தமிழ்; ஏனைய மறையாகிய தேவார திருவாசக முதலிய சைவத் திருமுறைகளுக்கும் பொருந்தும். "தோடு செய்த திருநெறிய செந்தமிழ்" (திருத்தொண்டர் புராணவரலாறு-90); "திருநெறித் தமிழ் வல்லபேர்" (ஷை 67). "மல்ல னெடுந் தமிழ்" (1973) என ஆசிரியர் இதனை விளக்கஞ்செய்தல் காண்க; **தொல்வினை தீர்தல்**-இனி அனுபவித்துக் கழிக்கும்படி எஞ்சிநிற்கும் பழவினை. இது தீர்ந்தால் மேலைக்குப் பிறவி வித்தாகிய வினையில்லாமையின் பிறவியில்லை என்றும், முத்தியாம் என்றும் கூறியபடி; பதிகப்பயன் கூறியவாறு. உயிர்களின் பிறவித் துன்பநீக்கி முத்திப்பயன் காட்டியருளும் ஆசாரியராகப் பிள்ளையார் அவதரித்தாராதல் குறிப்பு. "**இவனன்றே**" என்று சுட்டிக்காட்டிய தொடக்கமும், இறுதியில் திருவைந்தெழுத்தை உபதேசித்து முத்தி காட்டி" உறும் பொருளாற் சொன்ன தமிழ் வல்லார்க்கு" "அறும்பழிபாவ மவல மிலாரே" என்றும், அவர் "மேற் பந்த பாச மறுக்க வல்லார்களே" என்றும் முடிபருளியதும் கருதுக. இக்கருத்தே பற்றி "எம்பந்த வல்வினை நோய் தீர்த்திட் டெமை யாளுஞ் சம்பந்தன்" என்று திருவிசைப்பாவினுள் பிள்ளையாரை ஆசாரியராந் தன்மைபற்றியருளியதும், பிறவும் காண்க. பதிகப்பயன் இவ்வாறே பிற பதிகங்களினும் வருவனவும் அவ்வப்பயன்களை அன்றுமுத லின்றளவும் தந்தே நிலவும் உண்மையும் காண்க.

1980. **பொருளுரை:-** மறைகள்..முழங்கிட - வேதங்கள் எழுந்து ஒலிவளரும்படி முழக்கம் செய்யவும், வானோர்...சிந்திட - தேவர்களுடைய நிறைந்த கிரீடங்கள் ஒன்றொடொன்று தாக்கலால் வரிசையாகிய மணிகள் சிந்துதலினாலே; நீள்...நிறைந்திட -

வேறு

1980. மறைகள் கிளர்ந்தொலி வளர முழங்கிட, வானோர்தந்
நிறைமுடி யுந்திய நிரைமணி சிந்திட நீள்வானத்
துறையென வந்துல கடைய நிறைந்திட வோவாமெய்ப்
பொறைபெரு குந்தவ முனிவ ரெனுங்கடல் புடைசூழ, 82

அவை நீண்ட ஆகாயத்தினின்றும் வீழும் நீர்த்துளிகள்போல வந்து உலகத்தில் எங்கும் நிறைந்திடவும்; ஓவா...புடைசூழ - இடையறாது மெய்ம்மையும் சாந்தமும் பெருகும் தவமுனிவர்களின் கூட்டமாகிய கடல் பக்கங்களில் சூழவும்,

விளக்கவுரை:- மறைகள்...முழங்கிட - வேதங்கள் தாமே சத்தித்து மங்கல முறை ஒலிபெருக ஆரவாரித்தன. மறைகளாய் ஒலித்த முன்னை நிலையில் ஆதி அருமறை வழக்கம் அருகிப் பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாதிருந்தது (1916); இனி, அதுவே எழுதுமறையாகி இத்திருப்பதிகமாகிய மல்ல னெடுந்தமிழ் உருவுபெற்றுப் பிள்ளையார் திருவாக்கினின்றும் போந்தபோது அருகிய மறை வழக்க மிகுந்திடவும், பூதிசாதனம் போற்றல் பெறவும் காரணமுண்டாயிற்றாதலின் அம் மறைகள் **ஒலிவளர முழங்கின** என்க. **ஒலிவளர்**தலாவது முன் ஒரு வகையாய் நின்றது இனி இருவகையாலும் ஒலித்தல்.

வானத்து உறை என - வானினின்றும் வீழும் நீர்த்துளிகள்; நீர்த்துளிகள் முத்துக்கள்போல உள்ளமையால் மெய்பற்றிவந்த உவமம். **உறை** - நீர்த்துளி. மழைத்துளிகள் இப்பியின் வயிற்றிற் புக்கபோது முத்துக்கள் உண்டாவன என்பதும் குறிப்பு.

உலக அடைய - அடைய - முழுமையும். **உலகடைய** - உலகை அடையும்படி என்றலுமாம், உலகை அடைதலாவது வானோர் முடியின் மணிகள். அங்கிருத்தலினும் உலகின் கீழ் அடைதல் அடியார் சார்பினாலுளதாகும் சிறப்பினைத்தரும் என்று வந்து அடைந்தனபோல எனத் தற்குறிப்பேற்றக் குறிப்பு.

ஓவா மெய்ப் பொறைபெருகும் - வாய்மையும் பொறையும் இடையறாது பெருக நிகழ்வது தவத்தின் இயல்பு என்பதாம்.

கடல் - முனிவர்கூட்டம் நிறைதல் கடல் என்றுபசரிக்கப்பட்டது. *82*

1981. **பொருளுரை:-** அணைவுற... அடியார்பால்-தம்மை வந்து அடையும்படி வந்து எழுகின்ற- பரிபக்குவப்பட்ட உணர்ச்சி கைகூடிய அடியார்களிடத்தினின்றும்; இணையில்-இகந்திட - ஒப்பற்ற வலிமையுடைய பிறவி பெருகும் கடல்கள் நீங்கும் படி; இருதாளின்...அங்கணர் - தமது இரண்டு பாதங்களாகிய இனிய புணையை அருளும் அங்கண்மையுடைய திருத்தோணியப்பர்; பொருவிடை...தோணி - பொருகின்ற இடபத்தின்மேல் தம்முடன் தங்கிய இணைந்த பாகத்தில் எழுந்தருளிய துணைவியாருடனே வேதங்கள் தொடர்ந்த பெருந்திருத்தோணியில் அணைந்தனர்.

இந்த இரண்டுபாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

1981. அணைவுற வந்தெழு மறிவு தொடங்கின வடியார்பால்
இணையில் பவங்கிளர் கடல்க ளிகந்திட விருதாளின்
புணையரு ளங்கணர் பொருவிடை தங்கிய புணர்பாகத்
துணையொ டணைந்தனர் சுருதி தொடர்ந்த பெருந்தோணி. 83

விளக்கவுரை:- **அணைவுற வந்தெழு அறிவு தொடங்குதல்** - காரணமும், **புணையருளுதல்** காரியமுமாம்.

அணைவுற - தாள்களைத் தஞ்சமாக அடையும்படி. **அடியார்பால்** - அடியாரினின்றும்; பால் - நீக்கப்பொருளது.

இணையில் பவம் - பிறவி ஒன்றன்பின் ஒன்றாய்த் தொடர்ந்து மாறி மாறி அகப்படுத்துதலின் **இணையில்** என்றார். **இணையில்** - **இருதாள்** என்று கூட்டியுரைத்தலுமாம்.

தாளின் புணை - (பவங்கிளர்) கடல் என்றதற்கேற்பப் **புணை** என்றார். "அஞ்செழுத்தின் புணை பிடித்து" (திருவா). உருவகம். புணை - தெப்பம், மரக்கலம், உதவி, ஒப்பு.

அங்கணர் - அடைந்தார்க்கருளும் அருட்கண்ணையுடையார் என்ற குறிப்பு. திருத்தோணியப்பர்.

பொருவிடை - புணர்பாகத்துணை - முறையே "பொருவிடைமேல்" என்றும், "பொன்மலை வல்லி" என்றும் முன் (1962) கூறியது காண்க. **துணை** - துணைவியார்; பெரியநாயகியம்மையார். **விடை** - "விடையேறி" (தேவா); **துணை** - "தோடுடைய" (தேவா).

சுருதி தொடர்ந்த பெருந்தோணி - தோணியின் வடிவெடுத்து வேதங்கள் இறைவரைத் தொடர்ந்து கொண்டன என்பது குறிப்பு. சுருதிகளாற் றுதிக்கப்பட்ட என்றலுமாம். **தோணியின்கண்** - என்று ஏழனுருபு விரிக்க. **அணைந்தனர்** - விண்ணிறைந்த பெருகொளியால் (1972) பொய்கையின்மேல் பிள்ளையாருக்குக் காட்சி தந்து நின்ற அந்நிலையினின்றும் தோணியில் அணைந்தனர்.

இருதாளின் புணைஅருள் - ஞானங் கிரியை என்ற இரு தாள்களாகிய புணையினை, அணையும் அறிவு தொடங்கிய அடியார்கள் பற்றும்படி ஆசாரியத்தன்மை அருளித் தந்து பிள்ளையாரது பதிகத்தை அருளிய அங்கணர் என்றதோ ருட்குறிப்பும் காண்க. பிள்ளையாரின் அவதார உள்ளுறை, பரசமய நிராகரிப்பும் திருநீற்றின் ஆக்கமும் ஆம் என்று முன் கூறியது காண்க.

இப்பொருளில் **அணைவுற-அடியார்** - அருள்விளக்கங் கண்டு அறிவு தொடங்கிச் சீகாழியில் வந்தணைந்த அடியார்களும், திருநனிபள்ளி - தலைச்சங்காடு முதலிய தலங்களில் அங்கங்கும் வந்தணைந்தோரும், அணிமுத்தின் சிவிகைமுத லணிதாங்கிச் செல்ல அணைந்தவரும், கொல்லிமழவன்-சிவநேசர் முதலாயினாரும், மங்கையர்க்கரசியார் - குலச்சிறையார் - நெடுமாறர் பாண்டிநாட்டவர் முதலாயினோரும், வாதுக்கென அறிவு தொடங்கி வந்தணைந்த புத்தர் முதலாயினோரும், ஓடத்திலேறி உடன் அணைந்த அடியாரும்

முதலாகப், பெருமணத்தில் வீடுபெற வந்தணைந்தார் ஈறாக உள்ள எண்ணிறந்த எல்லாரையும் கொள்ளக்கிடத்தல் காண்க.

தொடங்கிய - அருளால் தொடங்கப்பெற்ற எனக் கொள்க

அறிவு தொடங்கிய-புணையருள் - அவ்வறிவும் இறைவனே தரப்பெறுதல்வேண்டும். "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவா); **இருதாளின் புணை** - "கத்தித் திரிபிறவிச் சாகரத்து ளாழாமே - பத்தித் தனித்தெப்பம் பார்வாழத் தந்தபிரான்" (பிள்.திருத்தொகை27-28), "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவி யெனுந் தோற்றோணி கண்டீர், நிறையுலகிற்-சம்பந்தன், றன்மாலை ஞானத் தமிழ்" (பிள்.மும்.கோவை-11) முதலிய (பதினொராந் திருமுறை) நம்பியாண்டார் நம்பிகள் திருவாக்குக்கள் காண்க. **இருதாள்** - ஞானக்கிரியா சத்திகளே இரண்டு திருவடியாம் என்பது மரபு.

அணைந்தனர் - பெருந்தோணி - ஞானப் பாலூட்டி அழுகைதீர்த் தருள்புரிந்தார் (1966) என்ற அப்போதே இறைவர் வெளிப்பட்டுவந்த செய்தி முற்றியதாயினும், தந்தையார் போந்து முனியவும், பிள்ளையார் சுட்டிக்காட்டிப் பாடி முடிக்கவும் கூடிய இவ்வளவும் அவர் விண்ணிலே கோலங்காட்டி நின்றருளியது அடியார்களுக்கு இருதாளின் புணையாகிய தன்மையை அருளும் பொருட்டேயாம் என்க. என்னை? பிள்ளையாரது அருட்பேருபதேசமாகிய திருப்பதிகங்களே அப்புணையின் தன்மை வாய்ந்தன வென்பதும், சுட்டிக்காட்டுமளவும் அதற்குத் தாம் பொருளாய் நின்றிருத்தல் வேண்டுமென்பதும் கருதுக. "**திருநெறிய தமிழ்** வல்லவர் தொல்வினை தீர்தலெளி தாமே" என்று இங்குத் தொடங்கிய பிள்ளையார், "பெரும்பத நல்லூர்ப் பெருமணத்தானை, யுறும்பொருளாற் சொன்ன வொண்டமிழ் வல்லார்க்கு, அறும்பழி பாவ மவல மிலாரே, "**தமிழ்ஞான** சம்பந்தன்சொல்...வல்லாரெலாம் பந்தபாச மறுக்க வல்லார் களே" என்று முத்திபஞ்சாக்கர உபதேசத்துடன் முடித்தருளுதலும், அவற்றுள் **தமிழ்**பற்றிக் கூறுதலும், "மல்லனெடுந் **தமிழாலிம்** மாநிலத்தோர்க் குரைசிறப்ப" (1973) என்றதும், பிறவும் கருதுக. தமிழ்ப் புணையருளுதல் நிகழ்ந்துவிட்டதாதலின் அதன்பொருட்டு அதுகாறும் வெளிப்பாடுற்று நின்றருளிய இறைவர் பெருந்திருத் தோணிக்கு எழுந்தருளினர் என்று காரணகாரிய முணர்த்திய சிறப்பும் கண்டுகொள்க. "**புணை**" அருளியதனால் அங்கணர் அணைந்தனர் என்க.

இவ்வாறு இச்சரிதம் பற்றிய பெருங்கருத்துக்கள் பலவும் ஊற்றெடுத்துத் தோன்ற நிற்பது இத்திருப்பாட்டின் தெய்வக் கவிநலம், மெல்லிசைச் சந்த வண்ண யாப்பமைதியும் அடியார்க்கெளிவரும் அங்கணரின் அருளின் தன்மை குறிப்பது. 83

1982. **பொருளுரை:**- அண்ணல் அணைந்தமை கண்டு - இறைவர் தோணியில் அவ்வா றெழுந்தருளியதனைக்கண்டு; தொடர்ந்தெழும் அன்பாலே - அவரைத் தொடர்ந்தெழுகின்ற அன்பினாலே; கண்வழி...கலந்து ஏக - கண்களின் வழியே சென்ற கருத்து விடாமற் கலந்து ஏகியதனால்; மண்மிசை...அன்னாரும் - பொய்கைக் கரை யின்கண் நிலத்தில் நின்றருளிய வேதச் சிறு யானை போன்ற பிள்ளையாரும்; புண்ணியர் உட்புக்கார்

1982. அண்ண லணைந்தமை கண்டு தொடர்ந்தெழு மன்பாலே
மண்மிசை நின்ற மறைச்சிறு போதக மன்னாருங்
கண்வழி சென்ற கருத்து விடாது கலந்தேகப்
புண்ணியர் நண்ணிய பூமலி கோயிலி னுட்புக்கார். **84**

- *புண்ணியராகிய சிவபெருமான் அணைந்த அழகிய திருத்தோணிக் கோயிலினுட் சென்று புக்கனர்.*

விளக்கவுரை:- அணைந்தமை *"பெருந்தோணியில் அணைந்தனர்" என்று முன் பாட்டிற்கூறிய அதனை; இரண்டனுருபு விரிக்க.*

தொடர்ந்து எழும் அன்பாலே *- அவரை விடாது தொடர்ந்து அணைய வேண்டுமென்று மேன்மேல் எழுகின்ற அன்புகாரணமாக, அன்பாலே - ஏக - உட்புக்கார் என்று முடிக்க.* **தொடர்தல்** *- விடாது பற்றிச் செல்லுதல். முன்னைத் தொடர்புமாம்.*

மண்மிசை *- நிலத்தின்மேல்; பிரமதீர்த்தப் பொய்கைக் கரையின்கண். இறைவர் காட்சி தந்து விண்மிசை நின்றாராகப், பிள்ளையார் காட்சி கண்டு மண்மிசை நின்றார்.* **மிசை** *- மேன்மை பெற்று என்ற குறிப்புமாம்.*

மறைச் சிறுபோதகம்-*வேதியச் சிறுவராகிய யானைக்கன்று;* **போதகம்**-*யானைக் கன்று; "வைதிக வாரணம்" என்பர். (தக்கயாகப் பணி - 183; திருவால - புரா - 372; கடம்பவன புரா - லீலாசங்கிர - 37).* **போதகம்** *- போதிக்கின்ற - உபதேசிக்கின்ற - பொருளாவார் என்றதும் குறிப்பு. சிவன் சிவம் என வருவதுபோலப் பெருமைபற்றிப் போதகன் என்பது போதகம் என வந்ததென்றலுமாம்.*

கண்வழிசென்ற கருத்துவிடாது கலந்து ஏக - கண்வழி சென்ற கருத்தாவது *"ஐந்துபே றறிவுங் கண்களே கொள்ள" (252) என்ற நிலை; ஆண்டுரைத் தவை ஈண்டைக்குமாம்.* **கலந்து** *- ஏனைக் கரணங்கள் குணங்கள் செயல்களுடன் ஒத்துக் கலந்து.* **ஏக** *- ஏகுதலினால்; காரணப்பொருளில் வந்தது. உட்புகுதலுக்குக் கருத்துக் கலந்தேகுதலும், அவ்வேகுதலுக்குத் தொடர்ந்தெழும் அன்பும் முறையே காரணமாயின*

புண்ணியர் *- சிவபெருமான்; "புண்ணியப் பொருள்" "புண்ணியா வுன்னடி" (தேவா). "புண்ணியனைப் பூசித்த புண்ணியத்தினாலே" (சித்தி. 8-31). "போக மீன்ற புண்ணிய னெய்த கணையேபோல்" (சீவக) எனப் பிறருங் கூறுதல் காண்க.*

நண்ணிய *- அணைந்த; எழுந்தருளிய; முன் நண்ணிய - பின் வெளிப்போந்து - பின் சென்று அணைந்த.*

பூமலிகோயில் *- பெருந்தோணிக் கோயில்.*

உட்புக்கார் *- பொய்கைக் கரையினின்றும் இறைவரைக் கண்டுகொண்டு அவ்வண்ணமேயாகச் சென்று திருத்தோணிக் கோயிலினுள்ளே பிள்ளையார் புகுந்தனர்.*
84

1983. ஈறில் பெருந்தவ முன்செய்து தாதை யெனப்பெற்றார்
மாறு விழுந்த மலர்க்கை குவித்து மகிழ்ந்தாடி
வேறு விளைந்த வெருட்சி வியப்பு விருப்போடுங் **85**
கூறு மருந்தமி ழின்பொரு ளான குறிப்போர்வார்.

1983. பொருளுரை:- ஈறில்...எனப் பெற்றார் - எல்லையில்லாத பெரிய தவத்தை முன்னேசெய்து (இவர்க்குத்) தந்தை என்று சொல்லும் நிலை பெற்ற சிவபாத விருதயர்; மாறு...மகிழ்ந்து ஆடி-(ஓச்சிய) சிறு கோல் கீழே நழுவி விட்ட மலர்க்கைகளைக் கூப்பிக்கொண்டு மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி; வேறு விருப்போடும்-வேறாக விளைந்தனவாகிய வெருட்சியும், வியப்பும், விருப்பும் என்ற இவற்றுடனே கூடியவராய்; கூறும்...ஓர்வார் - பிள்ளையார் எடுத்துக்கூறும் அருந்தமிழின் பொருளாகிய குறிப்பினை ஓர்வாராகி,

விளக்கவுரை:- **ஈறில் பெருந்தவம் முன்செய்து - ஈறுஇல்** - என்றது தொகையாலும், **பெரும்** - என்றது வகையாலும் மிகுதி யுணர்த்தின; **முன்** - முற்பிறப்பிலும், இப்பிறப்பில் இதற்கு முன்பும். **தவம்** - சிவவழிபாடு.

தாதை எனப் பெற்றார் - பிள்ளையார்க்குத் தாதை என்னும் பேறு பெற்றவர். **என** - தாதை என்றநிலை உபசார மாத்திரையளவாய் நிற்கத்தக்கது என்பது குறிப்பு.

மாறு விழுந்த - மாறு - ஓச்சி எடுத்த சிறுகோல்; "சிறிய தொருமாறு கொண்டோச்ச" (1971); **விழுந்த** - தானே நழுவிய. **மலர்க்கை குவித்து** - மாறு எடுத்த கையும் மற்றைக் கையும் சேர்த்து மேலே கூப்பி. ஓச்ச எடுத்து கை, கும்பிடக் கூப்பியதாயிற்று என்க.

வேறு விளைந்த வெருட்சி வியப்பு விருப்பு - வேறு - முன் கொண்டிருந்த மன நிலையின் வேறாக; **விளைந்த** - வெருட்சி முதலிய மூன்றும் ஒன்றன்பின் ஒன்றாய் மேன்மேல் வெவ்வேறாகி வருதலின் **விளைந்த** என்றார். **வெருட்சி** - திருவருள் விளைவறியாது முனிவுகொண்டதன் பொருட்டுப் பயம். **வியப்பு** - தாமொன்று எண்ண அது, எண்ணாத வேறொரு பெருநிலையாய்க் கைவரப் பெற்றது கண்ட மனநிலை. **விருப்பு** - அவ்வாறு கைவந்து கிடைத்த அதனில் எழும் ஆசை. **விருப்போடும் ஓர்வார்** என்க.

கூறும் அருந்தமிழின் பொருளான குறிப்பு - கூறும் - "இவன்" என்று சுட்டிக் கூறும்; **அருந்தமிழ்** - திருநெறிய தமிழ் என்றது; தமிழது இனிய பொருள் என்றலுமாம். **தமிழ்** - சொல்லும், **பொருள்** - அதனால் நுதலப்படுபொருளும் என்க. தமிழின் குறிப்பு - பொருளின் குறிப்பு என்க. **ஓர்தல்** - கண்டதும் கேட்டதும் கொண்டு கருதலளவையால் அறிதல்; **ஓர்வார்** - ஓர்பவராகி; முற்றெச்சம்; **ஓர்வார்** - **பின் சென்றார்** என்று மேல் வரும் பாட்டுடன் கூட்டுக.

1984. தாணுவி னைத்தனி கண்டு தொடர்ந்தவர் தம்மைப்போற்
காணுதல் பெற்றில ரேனு நிகழ்ந்தன கண்டுள்ளார்
தோணி புரத்திறை தன்னரு ளாத றுணிந்தார்வம்
பேணு மனத்தொடு முன்புகு காதலர் பின்சென்றார். **86**

1984. பொருளுரை:- தாணுவினை..பெற்றிலரேனும் - சிவபெருமானைத் தனி கண்டு தொடர்ந்தவராகிய பிள்ளையாரைப்போல அவரைத் தாம் காணப் பெற்றிலரா யினும்: நிகழ்ந்தன கண்டுள்ளார் - நிகழ்ந்தனவாகிய அடையாளக் குறிப்புக்களையும் திருப்பதிகத் தமிழ்பாடிச் சுட்டிக்காட்டியதனையும் கண்டாராதலின்: தோணிபுரத்து இறை..துணிந்து - இது தோணிபுரேசருடைய திருவருள் ஆதலைத் துணிந்துகொண்டு: ஆர்வம்...பின்சென்றார் - ஆசை பெருகிய மனத்துடனே முன்சென்று புகும் திரு மகனாரைப் பின்றொடர்ந்து சென்றனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

*விளக்கவுரை:- **தாணு** - நிலை பெற்றவர். சர்வசங்காரத்தினும் தாம் அழியாது நிலைத்தவர்; பெருமான்.*

***தனிகண்டு** - **தனி** - தாமே. வேறெவரும் காணாத, தனியாக; பிள்ளையார் கண்டு தொடர்ந்ததுபோல் முன்னும் பின்னும் வேறெவரும் கண்டாரிலர் என்க.*

***கண்டு தொடர்ந்தவர்** - தனி தொடர்ந்து என்று ஈண்டும் கூட்டுக; ஆளுடைய பிள்ளையார்,. "கண்டு தொடர்ந்தெழு மன்பாலே" (1982) இறைவர் விண்மிசையிலும் தாம் மண்மிசையிலுமாக உள்ளும் புறம்பும் கண்டுகொண்டே இவ்வாறு தொடர்ந்தார் பிறரிலர் என்பதாம்.*

***தொடர்ந்தவர் தம்மைப்போல் காணுதல் பெற்றிலரேனும் நிகழ்ந்தன கண்டுள்ளார்** - தமக்கியன்ற வகையாற் கண்டார் என்க. **நிகழ்ந்தன** - பால் உண்ட அடையாளங்களும், திருப்பாட்டும், சுட்டிக்காட்டிய வகையும் முதலியன. **கண்டுள்ளார்** - கண்டாராகிய சிவபாதவிருதயர்; பெயர். **நிகழ்ந்தன கண்டு,** (அதுகொண்டு) காணாத **திருவருளாதலைக்** கருதலளவையாலே **துணிந்து** என்க.*

***முன்பு புகாது-பின் சொன்றார்** - திருவருளாதல் துணிந்தாராதலின் அருள் பெற்றவரின் முன் செல்லுதல் முறையன்று என்ற மரபினாற் பின்சென்றனர் என்பதாம். **பின் செல்லுதல்** - பின்றொடர்ந்து செல்லுதல்.*

***ஆர்வம் பேணும்** - ஆர்வத்தாற்பேணுகின்ற.*

அறிந்தார்வம்-முன்புகு காதலர்-என்பதும் பாடங்கள். *86*

1985. பொருளுரை:- அப்பொழுது..மறையோர்கள் - அப்பொழுது அங்கு நிகழ்ந்தனவற்றைக் கண்டவர்களும், காணாது கேட்டவர்களும், ஏனையோரில் முப்புரி

1985. அப்பொழு தங்க ணணைந்தது கண்டவ ரல்லாதார்
முப்புரி நூன்மறை யோர்க ளுரோம முகிழ்ப்பெய்தி
"யிப்படி யொப்பதொ ரற்புத மெங்குள ?" தென்றென்றே
துப்புறழ் வேணியர் கோயிலின் வாயில் புறஞ்சூழ, 87

நூலணிந்த வேதியர்களும்; உரோமம் முகிழ்ப்பெய்தி-மயிர்க்கூச் செய்தி; இப்படி...என்றென்றே - இப்படிப் போல்வதோர் அற்புத நிகழ்ச்சி வேறே எங்கு உள்ளது? என்று தாந்தாம் கூறி; துப்புறழ்...புறஞ்சூழ - பவளம் போன்ற சிவந்த சடையினையுடைய சிவபெருமானது திருத்தோணிக் கோயிலின் திருவாயிற்புறத்தில் வந்து சூழ்ந்தார்களாக,

விளக்கவுரை:- அணைந்தது - திருத்தோணியிற் பிள்ளையார் அணைந்ததும், அவரைப் பின்றொடர்ந்து தாதையார் அணைந்ததும்.

கண்டவரும் அல்லாதாரும் மறையோர்களும் - உம்மை விரித்துரைத்துக்கொள்க. **அல்லாதார்** - காணாதாராயினும் கேட்டறிந்தோர். மறையோர்களை வேறொடுத்தோதியது தங்குலத் தொருபிள்ளை என்ற தனிக் களிப்பை எடுத்துக்காட்ட.

உரோம முகிழ்த்தல் - மயிர்ப் புளகங் கொள்ளுதல். அற்புதம் கொள்ளும் மனநிலையின் மெய்ப்பாடு.

என்றென்றே - பலமுறை சொல்வதும், பலவாறு சொல்வதும் பலரும் சொல்வதும் குறிக்க அடுக்கிக் கூறினார்.

துப்பு உறழ் வேணி-துப்பு - பவளம்; **உறழ்தல்** - போன்றிருத்தல்; **கோயில்** - திருத்தோணிக் கோயில்.

புறஞ்சூழ - உள்ளே பிள்ளையார் எழுந்தருளினராதலின் ஏனையோர் தகுதிபற்றிப் புறத்திற் சூழ்ந்தனர். 87

வாய்தல் - என்பதும் பாடம்.

1986. **பொருளுரை:- ஞானத்தமுதுண்டார்** - ஞானவமுதினை உண்டருளிய பிள்ளையார்; பொங்கொளி...தலைப்பட்டே - பொங்கும் ஒளியுடைய மால் விடையின் மேல் போந்து அழகிய பொன் பொருந்திய தோணியில் எழுந்தருளியிருந்த பெருந்திருவாழ்வினைச் சென்றுகூடி; "இங்கு...இருந்தான்" என்று - என்னையாளுடைய பெருமான் உமையம்மையாருடன் இங்கு எழுந்தருளியிருந்தான்" என்ற கருத்துடன் (அச்சொற் பொருளுடைய திருப்பதிகத்தினை); அங்கு...புகன்றனர் - அவ்விடத்தில் திருமுன்பு நின்று சொல்லித் துதித்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை;- பொங்கு ஒளி மால் விடை - விடை, அறத்தின் உருவ மாதலின் ஒளி எக்காலத்தும் குறையாத பெருகி விளங்கும் என்க. **மால்** - பெரிய.

விடைமீது - ஏறி என்க. **தோணி** - **புகுந்து** - **தங்கியிருந்த** என்று கூட்டுக.

1986. பொங்கொளி மால்விடை மீது புகுந்தணி பொற்றோணி
தங்கியி ருந்தபெ ருந்திரு வாழ்வு தலைப்பட்டே
"யிங்கெனை யாளுடை யானுமை யோடு மிருந்தா"னென்
றங்கெதிர் நின்று புகன்றனர் ஞானத் தமுதுண்டார். **88**

பெருந் திருவாழ்வு *- பெருந்திருவாவது திரு வெனப்படுவன வெல்லாவற்றுள்ளும் பெரியதாகி முத்தித்திரு. வாழ்வுதரும் பொருளை* **வாழ்வென்றது***உபசாரம்.*

தலைப்படுதல் *- கூடப்பெறுதல். "தம்பிரா னாரைத் தலைப்படக் கிடைத்தபின்" (ஏயர்.புரா. 91).*

இங்கெனை-இருந்தான் *- திருப்பதிகத்தின் மகுடமும் கருத்துமாகிய குறிப்பு.*

புகன்றனர் *- போற்றினர்; எடுத்தோதித் துதித்தனர்.*

ஞானத் தமுதுண்டார் *- ஞானவமுது தந்தாண்ட தன்மை காரணமாக இவ்வாறு ஆளுடையான் என்று புகன்றனர் என்பது குறிக்க உடம்பொடு புணர்த்தி யோதினார்.*

மீது புகுந்தொளிர்-நின்று புகுந்தனர்-*என்பனவும் பாடங்கள்.* *88*

புறவம் - *திருச்சிற்றம்பலம்* ***பண் - தக்கேசி***

நறவ நிறைவண் டறைதார்க் கொன்றை நயந்து நயனத்தால்
சுறவஞ் செறிவண் கொடியோ னுடலம் பொடியா விழிசெய்தான்
புறவ முறைவண் பதியா மதியார் புரமூன் றெரிசெய்த
இறைவ னறவ னிமையோ ரேத்த ***வுமையோ டிருந்தானே.*** *1*

பொன்னார் மாட நீடுஞ் செல்வப் புறவம் பதியாக
மின்னா ரிடையா ***ளுமையா ளோடு மிருந்த விமலனைத்***
தன்னார் வஞ்செய் தமிழின் விரக னுரைத்த தமிழ்மாலை
பன்னாள் பாடி யாடப் பிரியார் பரலோ கந்தானே. *11*

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு;- *பொய்கைக் கரையில் வெளிப்பட வந்து அருளி என்னை ஆளாகக்கொண்ட உடையவர் உமையாளோடும் திருத்தோணியில் இங்கு இருந்தார்.* ***புறவம் - சீகாழியின் பன்னிரண்டு பெயர்களுள் ஒன்று.***

ஆசிரியர் இதனை"இங்கெனை யாளுடையா னுமையோடும் இருந்தான்" என்று அங்குப் புகன்றனர் (1886) என்று அறிவித்தமை காண்க. பதிகமுழுதும் "உமையோ டிருந்தானே" என்று முடியும் மகுடமும், "எனையாளுடையான்" (4), "என்னையுடை யான்" (6), "இருந்த விமலனை" (11) எனவரும் பதிகச் சொற்றொடர்களும் காண்க. இது பிள்ளையார் திருவாக்கினின்றும் போந்தவற்றுள் இரண்டாவது பதிகமும், திருத்தோணிக் கோயிலின் அருளப்பட்டவற்றுள் முதலாவது பதிகமும் ஆகும். எனையாளுடையான் - எனை உடையான் என்றவை திருஅருள் பெற்ற சிறப்பினைக் குறிக்கும் சரித ஆதரவுகளாம்.

இமைப்பொழுது மென்னெஞ்சி னீங்காதான் றாள்வாழ்க" (திருவாசகம்); "துணிந்தேயுமக் காட்செய்து வாழ லுற்றால்" (திருநா.தேவா); "ஆளாயினி யல்லேனெனலாமே" (நம்பி - தேவா); என இவ்வாறே இறைவர் ஆட்கொண்டவுடன் அவ்வாறு ஆட்பட்டு உடையானுக்கு ஆளாயின அடிமைத் திறம் பற்றியே அநுபவித்துப் போற்றிய **ஆர்வம்** காண்க. "**தன்னார்வஞ்செய்** - தமிழின் - மாலை" (பதிகம் - 11) "என்னுள்ளங் கவர் **கள்வன்**" என்றவையும் கருதுக.

பதிகப் பாட்டுக் குறிப்பு;- (1) நறவம் - தேன், வாசனை. சுறவஞ் **செறிவன் கொடியோன்** - மீனக்கொடியுடைய மன்மதன்; **சுறவம்** - மீனின் பொதுமை யுணர்த்திற்று. **கொடியோன்** - கொடுமை செய்பவன் என்ற குறிப்புமாம். புறவம் - இத்தலப் பன்னிரு பெயர்களுள் எட்டாவது பெயர். **அறவன்** - "அறவாழி யந்தணன்" (குறள்); "நீதி பலவுந் தன்ன துருவாம்" (பிள்.தேவா); "அறவா" (1776); **இமையோ ரேத்த** - உலகம் நீர்ப் பெருக்கினுள் அழுந்த வரும் வெள்ளத்தில் தோணியாக மிதத்தலின் தேவர்கள் பறவை வடிவுடன் தோணியை ஏந்திப் போற்றியிருந்தனர் என்ற சரிதக் குறிப்பு. "பார்கொண்டு மூடிக் கடல்கொண்ட ஞான்றுநின் பாதமெல்லாம், நாலைந்து புள்ளின மேந்தின வென்பர்" (திருநா.தேவா); பார்க்க. இச்சரிதக் குறிப்பினாலும் இத்திருப்பதிகம் திருத்தோணியின்கண் நின்று அருளியது என்பது கருதப்படும்.

இறைவன்-முழுமுதலாகிய பதிப்பொருள். எம்மை ஆளுடையார் என்பதும் குறிப்பு. **இருந்தானே** - விண்ணிற் கண்டபடி போந்த பெருமான் இதோ இங்குவந் தெழுந் தருளியிருந்தான் என்ற சரிதக் குறிப்பு. ஏகாரம் - அற்புதக் குறிப்பு; தேற்றம் - (2) **உரவன்** - வலிமையுடையவன். "ஒருதா மாகிய உரவோர்" (புற. 184). **விகிர்தன்** - (**கிர்தன்**- செய்யப்பட்டவன்; ஆக்கப்பட்டவன்). **விகிர்தன்** - ஆக்கப்படாதவன் - சுயம்பு என்றபடி. **உகிர்** - நகம். - (3) **பந்தம்** - திருவடி பிரியாத் தொண்டு. **கரிகாடு** - உலகமழிந்த ஊழியினிடம்.- (4) **கனை** - கனைத்தல். **எனையாளுடையான்** - (1986).- (5) **செங்கண் - நகுவெண் - முகிழ்வெண்** - அடைகள் இயல்பு குறித்தன. முகிழ்த்தல்-முளைத்தல். -(6) **கேழல் எயிறு** - பன்றியின் கொம்பு. திருமாலின் வராக அவதாரத்தில் பறிக்கப்பட்ட வென்றிக்குறியாக அணிந்தது. 'ஐயிரு பிறப்பினு மரியருச் சித்தலின்" (அரதத்தாசாரியர் சுலோக பஞ்சக மொழிபெயர்ப்பு) **புன்னை** - நெய்த னிலக் கருப்பொருள். "கடல்சூழ்ந் தழகார் புறவம்" (3). **மடல்** - பெரிய இலைகள். **என்னையுடையான்** - ஆளாக உடையவன் (1986). **தோழம்**-பேரெண் (எண்ணிறந்த). **பொலிய** - பொலியும்படி. சாவாது அவரவர் நிலையில் இருந்து விளங்கும்படி. **பொலிய** - **அளித்த** என்க. **எண்** - எண்ணுதல். (9) **நெடியான்** - திருமால். எண்ணும்மை தொக்கது. **பொடி**-திருநீறு. **இடி**-இடிபோன்ற ஒலி. "முழவதிர மழையென் றஞ்சி" - **முழவார்** - **முழவு** - இயங்களின் பொதுமை. **முழவார்** - முழா முதலியவற்றை ஏந்தியவராய் - (10) **ஆலுதல்** - மயிலின் இயற்கை . **குழுவும்** - தொகுதியாகக் கூடும். தழலும் உடையான் என்று கூட்டுக. **தழல்**-கையில் ஏந்தியது. **எழில் வான்** - செவ்வான் ஒளி. உம்மை சிறப்பு. **ஏலும் வகை** - இயன்ற அளவு. "ஒல்லும் வகை"; முற்றும் ஏத்துல் இமையோர்க்கு மரிது என்ற குறிப்பு. (11) **இருந்த** -- "தங்கி யிருந்த" (1986). **ஆர்வஞ்செய் தமிழின் மாலை** - **செய்** - (அன்பை) விளைக்கும். **இன்** - இனிய - (1987).

1987. இன்னிசையேழு மிசைந்த செழுந்தமி ழீசற்கே
சொன்முறை பாடு தொழும்பருள் பெற்ற தொடக்கோடும்
பன்மறை வேதியர் காண விருப்பொடு பானாறும்
பொன்மணி வாயினர் கோயிலி னின்று புறப்பட்டார். 89

1987. பொருளுரை;- விருப்பொடு-வாயினர் - அன்புடனே ஞானவமுதத்தின் மணங் கமழும் திருவாயினையுடைய பிள்ளையார்: பன்மறை வேதியர் காண - எல்லையில்லாத மறைகளை ஓதும் வேதியர்கள் கண்டுகொண்டிருக்க: இன்னிசை...செழுந் தமிழ் - இனிய ஏழிசைகளும் பொருந்திய செழுந்தமிழ்த் திருப்பதிகங்களை: சொன்முறை ஈசற்கே பாடும் தொழும்பு - சொன்முறையாகச் சிவபெருமானுக்கே பாடுகின்ற திருத்தொண்டாகிய அடிமைத் திறத்தினையும்: அருள்-அருளினையும் பெற்ற தொடக்கோடும் - பெற்ற தொடக்குடனே: கோயிலினின்று புறப்பட்டார் - திருக்கோயிலினின்றும் வெளியே புறப்பட்டனர்.

விளக்கவுரை;- இன்னிசை ஏழும் இசைந்த - இதுவும் இறைவர் திருவாக்கோடொப்ப மறையேயாதலின் ஏழு இசைகளும் இசைந்து நிறைந்தன என்பது. **இசை ஏழு** - துத்தம் முதலாகிய ஏழு; சத்த சுரமென்பது வடமொழி. **இசைந்த** - முயற்சியின்றித் தாமே வந்து கூடிப் பொருந்திய என்பது குறிப்பு. **ஏழும்** - முற்றுமை.

ஈசற்கே - தமிழ் - பாடும் - என்க. ஏகாரம் பிரிநிலை. "ஈசன் கழலே பேணுஞ் சம்பந்தன்", "கொன்றையா னடியலாற் பேணா வெம்பிரான் சம்பந்தன்."

சொன் முறை - மேலே திருப்பதிக அமைப்புப்பற்றி சொல்லிய முறையில். 1975 முதல் 1978 வரை பார்க்க. **முறை** - திருமுறை என்றலும், உயிர்கள் வந்து திருவடியில் விண்ணப்பிக்கும் முறையீடாக என்றலும் குறிப்பு.

தொழும்பு - திருத்தொண்டு. "மீளா வடிமை" (தேவா).

தொழும்பும் அருளும் பெற்ற - என்க. எண்ணும்மைகள் தொக்கன. தொழும்பினை அருளப்பெற்ற என்றும், தொழும்பாகிய அருளினைப் பெற்ற என்றும் உரைப்பாருமுண்டு.

தொடக்கோடும் - புறப்பட்டார் - கோயிலினின்று வெளியே போந்தாராயினும், தொழும்பினாற் பிணைக்கப்பட்டபடியே போந்தனர். தொடக்குண்டே சரித்தன ராதலின் புறம்போதல் என்பது உபசார மாத்திரையே என்பதாம்.

விருப்பொடு பால் நாறும் - விருப்பு - திருவடியிற்கொண்ட ஆர்வம். "**தன்னார்வஞ் செய்தமிழின் மாலை**" என்றது காண்க. விருப்புடன் கூடிய ஞான அமுதம்; ஞானமும் அன்பும் கலந்து கமழும் திருவாக்கு என்பதாம். இவ்வாறன்றி **விருப்பொடு - புறப்பட்டார்** என்று கூட்டிப் பின்னரும் மீண்டு வந்து தொழும் விருப்பத்துடன் வெளிப் போந்தனர் என்றுரைத்தலுமாம். "சேவடிக் கமலங் கருத்திலுற விடையறாக் காதல் கொண்டு, நாமநெடுங் கதிருதிப்ப நண்ணினார் திருத்தோணி நம்பர் கோயில்" (1997) என்பது கருதுக.

1988. பேணிய வற்புத நீடருள் பெற்றபி ரான்முன்னே
நீணிலை யிற்றிகழ் கோபுர வாயிலி னேரெய்தி
வாணில விற்றிகழ் வேணியர் தொண்டர்கள் வாழ்வெய்துந்
தோணிபு ரத்தவர் தாமெதிர் கொண்டுது திக்கின்றார். 90

பொன்மணி வாயினார் - ***பொன்*** - செம்பொன் போன்ற இதழ்களும், **மணி** - முத்துப்போன்ற திருமுறுவலும் பெறவைத்த குறிப்பு. பயின்றாரைக், களிம்பு **நீங்கிய** பொன்போலவும், கடைதலால் ஒளிவிடும் மணிபோலவும் ஆக்கும் தமிழ் பெறும் **வாய்** என்று இங்கு விசேட உரை காண்பர் திரு. ஆலாலசுந்தரம் பிள்ளை. **செழுந்தமிழீசற்கஞ்-** என்பதும் பாடம். *89*

1988. பொருளுரை:- பேணிய.. பிரான் முன்னே - விரும்பிய அற்புதமாகிய நீடிய திருவருளைப் பெற்ற பிள்ளையாரது திருமுன்பு; வாணிலவின்...தொண்டர்கள் - ஒளியுடைய சந்திரனிலும் மிக்கு விளங்குகின்ற சடையினையுடைய சிவபெருமானது தொண்டர்களும்; வாழ்வெய்தும் தோணிபுரத்தவர் - வாழ்வடையும் திருத்தோணிபுரத்திலுள்ளவர்களும்; நீள்நிலையின்...நேர் எய்தி - நீண்ட நிலைகளுடன் விளங்குகின்ற திருக்கோபுர வாய்தலின் முன்பாக அடைந்து; தாம் எதிர்கொண்டு துதிக்கின்றார் - தாம் கூடி எதிர்கொண்டு துதிக்கின்றார்; (அவர்கள் துதிக்கின்றமை மேல்வருமாறு).

விளக்கவுரை:- பேணிய அற்புதம் நீடு அருள்-பேணிய - முன்னை நிலையில் பேணியமை" மறக்குமா றிலாத வென்னை" (பிள்.தேவா.துருத்தி) என்றதனாலும், அற்றை நிலையினும் முன் பேணியமை, "தொடர்ந்தபிரி வுணர்வொருகாற் கொண்டெழலும்" (1952) என்றதனாலும், இனியும் என்றும் பேண உள்ளமை, "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே...வழிபடு மதனாலே" (தேவா) என்றதனாலும், பிற வாற்றாலுமறிக. **அற்புதம்** - காணுந்தோறும் புதிதா யிருத்தல். **நீடுதல்** - எக்காலத்தும் குறையாது மிகுதல்.

அருள் பெற்ற பிரான் - ஆளுடைய பிள்ளையார். அருள் பெற்றதனால் எமக்குப் பிரான் (தலைவர்) ஆயினவர்.

வாள் நிலவில் திகழ் வேணியர் - நிலவினும் மிக்குச் சடை விளங்கும் என்றது; சூடிய நிலவினாற் செவ்வானம்போன்ற சடை விளங்குதலின்றிச் சடையினால் நிலவு விளங்கும் என்றதாம்.

தொண்டர்களும் தோணிபுரத்தவர்களும் - என்று எண்ணும்மை விரிக்க. அருளின் விளக்கம் கேட்டுப் பிள்ளையாரைக் கோபுரவாயிலில் முதலிய எதிர்கொண்டவர் திருத்தொண்டர்கள் என்பது குறிப்பு.

துதிக்கின்றார்களாகி - **என்பார்** - **என்பார்** - ஆயினர் என மேல்வரும் மூன்று பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. *90*

வேறு

1989. "காழியர் தவமே! கவுணியர் தனமே! கலைஞானத்
தாழிய கடலே! யதனிடை யமுதே! யடியார்முன்
வாழிய வந்திம் மண்மிசை வானோர் தனிநாதன்
ஏழிசை மொழியா டன்றிரு வருள்பெற் றனை"யென்பார்; **91**

1989. பொருளுரை:- வெளிப்படை. "காழியர்களுடைய தவப்பயனாக உள்ளவரே!; கவுணியர்களின் குலதனமாக வந்தவரே!; கலைஞான நிறைந்த ஆழ்ந்த கடல் போன்றவரே!; அக்கடலின் அமுதமானவரே!; முன் அடியார்கள் கண்டு வாழும் பொருட்டு இந்த மண் உலகத்தின்மேல், அவதரித்து வந்து தேவர்களது ஒப்பற்ற நாயகராகிய, சிவபெருமானும் ஏழிசைமொழியாளும் என்றிவருடைய திருவருளையும் ஒருங்கே பெற்றருளினீர்" என்பவர்களும்;

விளக்கவுரை:- ***தவமே - தனமே - கடலே - அமுதே*** *- தவம் முதலிய பொருள்களின் தன்மை மிகுதிப்பாட்டினையே பிள்ளையாராகக் கண்டு துதித்தனர் என்க; "திருவேயென் செல்வமே" (தேவா) என்புழிப்போல. மேல்வரும் இரண்டு பாட்டுக்களினும் இவ்வாறே கொள்க. "ஞானத்தின் றிருவுருவை" (புரா-728) என்பதும் காண்க. இனிக் "கால முலகம்" (தொல் - சொல் - கிளவி 57) என்ற விதிப்படிக் காதலும் சிறப்பும் பற்றி, உயர்திணைச் சொல்லாயினும் அஃறிணைப் பாலா யிசைந்தன என்றலுமாம்.*

தவம் *- தவத்தின் பயன்.* ***காழியர் தவம்*** *என்று முதலிற் கூறியது இப்பெரும் பேறு பெறும் வாழ்வு உலகில் ஏனையோர் எவர்க்குமின்றி முதலில் தம்மையுள்ளிட்ட காழிநகரவர்க்கு வந்தது என்ற பெருமிதம்பற்றியது.*

கவுணியர் தனம் - தனம் *- குலதனம். "கானவர் குலம் விளங்க" (662).*

கலைஞானத்து ஆழிய கடல் - கலைஞானம் *- அபரஞானத்தின் தொகுதி. "உவமையிலாக் கலைஞானம்" (1967).* ***ஆழிய*** *- ஆழ்ந்த. சிவனருள் பெறாத ஏனை எவர்க்கும் அளவு காண்டலும், அதனுட் பெறு மணிகளைப் பெறுதலும் அரிய என்பது.*

அதனிடை அமுது - அமுது *- இறத்தல் பிறத்தலை நீக்குவது. "உணர்வரிய மெய்ஞ்ஞானம்" (மேற்படி) என்ற கருத்து; கலைஞானத்தின் பயனை அடைந்தவர்; அதனின் மேலாகிய திருவருளை அடைந்தவர்; அதனின் மேலாய் உலக உபகாரமாக அதனை அடைந்தவர் என்க.*

அடியார் முன் வாழிய வந்து - வாழிய *- வாழும்பொருட்டு.* ***முன் வந்து*** *- எனக் கூட்டுக. திருமேனிகொண்டு கண்முன்வரு தியானப் பொருளாகக் கண்டு பயன் பெற வந்து அவதரித்து என்பதாம்.* ***முன் வாழிய*** *- அடியார்கள் முன்னே வாழ்வடைய என்றலுமாம். என்னை? நல்லூர்ப்பெருமணத்தில் "ஈறில்பெருஞ் சோதியினு ளெல்லாரும் புகச்" செய்து அதன்பின் தாம் புக்கு ஒன்றினாராகும் சரிதக் குறிப்புக் காண்க.*

1990. "மறைவளர் திருவே! வைதிக நிலையே! வளர்ஞானப்
பொறையணி முகிலே! புகலியர் புகலே! பொருபொன்னித்
துறைபெறு மணியே! சுருதியி னொளியே! வெளியேவந் 92
திறையவ னுமையா ளுடனரு டரவெய் தினை" யென்பார்;

மண்மிசை வந்து என்றும், *மண்மிசைப் பெற்றனை* என்றார். இருவழியும் கூட்டி உரைக்கநின்றது. வாழியவந்து என்றதனால் வருதலினாற் றடைக்கென ஒன்றும் வேண்டுவதில்லாதவர் என்பதாம். முன் பெற்றிருந்தது போலவே மண்ணின்மிசையும் அருளப் பெற்றனை என எச்சவும்மை விரிக்க,

தனிநாதன் - மொழியாள் என்றிருவரும் கூடிச் செய்த அருள் என்க. நாதனும் மொழியாளும் கூடிய சிவ சத்தி உருவமாகிய ஒன்றன் அருள் என்பது. *தன்* என்பது சாரியை; பன்மை யுருபுக்குத் *தம்* என்பது சாரியை. நாதனும் மொழியாளும் குண குணிகளாகப் பன்மையாற் கூறப்படினும் பொருட்டன்மையால் (வஸ்து) ஒன்றேயாதலின் **தன்** என்ற ஒருமைச் சாரியை புணர்த்தி ஓதினார்; "தானுந் தன் றையலுந் தாழ்சடையோ னாண்டிலனேல்" (திருவா - கோத் - 15);

தனிநாதன் - முழுமுதல்வன். 91

தமதிரு - என்பதும் பாடம்.

1990. பொருளுரை;- வெளிப்படை. "மறைகளை வளர்க்குந் திருவே!; வைதிகத்தின் நிலைப்பொருளே!; வளரும் ஞானமாகிய சூல் தங்கிய முகிலே!; புகலி நகரார்களுக்குப் புகலிடமே! மோதியலைக்குங் காவிரித் துறையிற் பெறுமணியே!; சுருதிகளின் விளங்கும் ஒளியே!; இறையவர் உமையம்மையாருடன் வெளிப்பட்டெழுந்தருளி வந்து அருள்தரப் பொருந்தினீர்" என்பவர்களும்;

விளக்கவுரை;- **மறைவளர் திருவே - மறை வளர்** - மறைகளை வளர்க்கும் என்றது. "வேதநெறி தழைத்தோங்க" (1899) என்பதுமுதலாகச் சொல்லிய கருத்து. "வேத வேள்வியை (தேவா) முதலிய திருவாக்குக்களும் காண்க. **திரு**-திருப்போன்றவர். மறைகளால் வளர்க்கப்படும் என்றுரைப்பினு மமையும். **தருவே** என்பது பாடமாயின் (சாகை - உபசாகை) கிளை பக்கக்கிளை என்று மறைகள் வளர்வது போல அதனையே தமிழில் வளர்க்கும் கற்பகமே என்க. "வேதமென்னும் பாதவம்".

வைதிக நிலை - வேதவொழுக்கம் நிலைபெறத் தங்குமிடம். "தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத் தோலொடுநூ றாங்கினார் சுரர்கள் போற்ற" (புரா - 263); "இருநிலத்து மறைவழக்க மெடுத்தீர்நீர்" (ஷை - 1158) முதலியவை காண்க. "வைதிகவாரணம்" (தக்-பர)

ஞானப் பொறை அணி முகில் - சிவஞானமாகிய சூல்கொண்டமேகம். **பொறை** - சூல்; கருப்பம். **அணிதல்** - தாங்குதல். "கார்கோண் முகந்த கமஞ்சூன் மாமழை" (முருகு);

1991. "புண்ணிய முதலே! புனைமணி யரைஞா ணொடுபோதுங்
கண்ணிறை கதிரே! கலைவளர் மதியே! கவின்மேவும்
பண்ணியல் கதியே! பருவம தொருமூ வருடத்தே
யெண்ணிய பொருளாய் நின்றவ ரருள்பெற் றனை"யென்பார். 93

பொறை - நீரை அருமையாகத் தன்னுட் சுமந்து பருவத்தில் உயிர்கட்கு உதவும் முகில்போல. கமை-பொறை - கம - நிறைவு; உரிச்சொல் என்றலுமாம்.

புகல் - புகலிடம்; புகலியர் புகல் - தேவர்கள் தஞ்சமாக அடையுமிடம் புகலியாகவே, அங்குள்ளார் அடையுமிடம் பிள்ளையாராயினர் என்பது. "பூமருவுங் கங்கை முதற் புனிதமாம் பெருந்தீர்த்த, மாமகந்தா னாடுதற்கு வந்துவழி படுங்கோயில்" (புரா-409) என்புழிப்போன்ற கருத்துக் காண்க.

பொன்னித் துறை பெறு மணி - பொன்னித் துறை *- காவிரி நாடு என்ற பொதுமை யுணர்த்திநின்றது. **துறைபெறும் மணி** - மணிகள் நீர்த் துறைகளிற் பெறும் வழக்குக்குறித்தது. சீகாழிக்கு வருதல் குறிவைத்தே காவிரி சோழநாட்டுக்கு வந்த வரலாறு காண்க.*

சுருதியின் ஒளி *- வேத வொளியும் கருத்தும் விளங்கும் இடம் என்பது. ஒளியேயாகிய சிவம் வெளியே வந்து என்று பின் வருவதனுடன் கூட்டியுரைத்தலுமாம்.*

வெளியே வந்து *- எங்குநிறைந்து மறைந்துள்ள நிலையினின்றும் வெளிப்பட்டுப் போந்து.* 92

*1991. **பொருளுரை:-** வெளிப்படை. "புண்ணியங்களின் முதலே!; மணிபுனைந்த அரைஞாணொடு போந்து காட்சியளிக்கும் கண்ணிறைந்த கதிரே!; கலைகள் வளரும் மதியே!; அழகு பொருந்தும் பண்களுக்கு இயலும் கதியே!; ஒருமூவாண்டாகிய பருவத்திலே, தியானங்கட்கெல்லாம் பொருளாய் நின்றவராகிய சிவபெருமானது திருவருளைப் பெற்றருளினீர்" என்பவர்களு மாயினார்கள்.*

இந்த நான்கு பாட்டுக்களும் ஒருபொருள் பற்றியனவாய் ஒருமுடிபுபடுத்தி யுரைக்க நின்றன.

விளக்கவுரை:- புண்ணிய முதல் - புண்ணியம் *சிவபுண்ணியங்களின் தொகுதி. **முதல்** - முதல்வர்; கற்பிக்கும் குரு. புண்ணியத்திற் றலைசிறந்தவர் என்றலுமாம்.*

அரைஞாணொடு-கதிர் *- மழவிளங் கோலங் காட்டிக் கண்பெறும் விருந்தாய் நின்ற கதிர். இங்கு, வெப்பத்தினால் உலகை உளதாக்கி நிறுத்தும் ஞாயிற்றின் கதிர் என்றது குறிப்பு.*

கலைவளர் மதி *- மதி, மிகுந்தும் குறைந்தும் வரும் கலைகளையுடையவன்; இவர் அவ்வாறு குறைவுபடாது வளரும் கலைகளையுடையவர் என்பதும், அமிர்த கலைகளினால் சைவப்பயிரைக் காப்பவர் என்பதும் குறிப்பு. **கலை** - அபரஞானமாகிய*

வேறு

1992. என்றினைய பலகூறி யிருக்குமொழி யந்தணரு
மேனை யோரு
நின்றுதுதி செய்தவர்தா ணீண்முடிக்கண் மேலேந்தி
நிரந்த போது,
சென்றணைந்த தாதையார் சிவபாத விருதயர்தாந்
தெய்வ ஞானக்
கன்றினைமுன் புக்கெடுத்துப் பியலின்மேற் கொண்டுகளி 94
கூர்ந்து செல்ல,

சிவ கலைஞான முங் குறிப்பு. "மண்ணில் வளர் மதிக்கொழுந்தை" (புரா - 728); "கலைச்செழுந் திங்கள் போலுங் கவுணியர்" (ஷை - 751) முதலியவை பார்க்க. மதி - ஞானம் என்றதும் குறிப்பு.

கவின் மேவும் பண் இயல் கதியே - கவின் - பண்ணின் இனிமை; பண்களுக்கு இயல்பின்நின்ற கதிபோன்றவர். பண்கள் சிறந்த பேறடைய வந்தடையுமிடம் என்க. பண்கள் நடக்கும் மந்த முதலிய கதி என்பாருமுண்டு. கதி - என்றது எல்லாப் பண்களும் அவற்றின் கட்டளைபேத முதலிய பாகுபாடுகளும் பிள்ளையாரது திருவாக்கில் விளக்கம்பெறும் குறிப்பு.

எண்ணிய பொருள் - அறிவோர்களது தியானத்திற்குப் பொருளாய் நிற்கும் சிவபெருமான். "சிவ ஏகோ தியேய; (சிவன் ஒருவனே தியானிக்கப்படுபவன்) என்பது வேதம்.

நின்றவர் - என்ற திருத்தாண்டகம், திருவுருத்திரம் முதலிய மறைகளுட்பேசும் நிலை.

இம் மூன்று பாட்டுக்களாலும் பிள்ளையாரது அன்றைய மூவாண்டுமுதல் புண்ணியப் பதினாறாண்டுவரை உள்ள பதினான்கு ஆண்டுகளின் குறிப்பாகப் பதினான்கு வகையாகப் போற்றிய குறிப்பும் காண்க. காழியர் தவமே! கவுணியர் தனமே! என்று தவத்தின்பேறாக வந்தவதரித்தது தொடங்கி, கதியே! என்று திருப்பதிகங்கள் நிறைவுபெற்று உயிர்களுக்கு முத்திக்கதி யருளுதல் இறுதியாகக் கூறிய பிற்சரித விளைவுக் குறிப்பும் காண்க. 93

1992. பொருளுரை:- என்று...கூறி - என்று மேலே கூறியபடி யிவ்வாறு பலவற்றையும் எடுத்துப் போற்றி; இருக்கு...துதி செய்து - வேதங்கள் பயிலும் அந்தணர்களும் ஏனையோர்களும் நின்று துதித்து; அவர்தாள்..போது - பிள்ளையாரது திருத்தாள்களை நீண்ட தமது முடியிற் சூட்டி வரிசைபெற நின்றபோது; தாம்சென்று அணைந்து - தாமே முன்சென்று அணைந்து; தாதையார் சிவபாதவிருதயர் - தந்தையா ராகிய சிவபாவிருதயர்; தெய்வ ஞானக்கன்றினை...செல்ல - தெய்வத்தன்மையுடைய சிவஞானக் குழவியாகிய பிள்ளையாரை முன்பு புகுந்து எடுத்துத் தோளின்மேற் கொண்டு பெரு மகிழ்ச்சியுடன் செல்ல,

1993. மாமறையோர் குழாத்தினுடன் மல்குதிருத் தொண்டர்குழா
மருங்கு சூழ்ந்து
தாமறுவை யுத்தரியந் தனிவிசும்பி லெறிந்தார்க்குந்
தன்மை யாலே
பூமறுகு சிவானந்தப் பெருக்காறு போதவதன்
மீது பொங்குங்
காமர்நுரைக் குமிழியெழுந் திழிவனபோல் விளங்குபெருங்
காட்சித் தாக; 95

விளக்கவுரை:- **இருக்கு** - வேதப் பொதுமையுணர்த்தியது. **இருக்குமொழி அந்தணர்** - மறையோர். மரபிற் பிறப்பினளவின்மட்டி லமையாது உரிய ஒழுக்கமும் கொண்டவர் என்பது. இதனை ஆசிரியர் பலவிடத்தும் எடுத்துக்காட்டுதல் காண்க. பிள்ளையார்-அரசுகள் தேவாரங்களும் பார்க்க.

தாள் - முடிகண் மேலேந்தி - பாதங்களில் முடி பொருந்தும்படி நிலத்தின் வீழ்ந்து பணிந்து. **நீண்முடி** - என்றது பிள்ளையாரது திருவடிகளில் முதலில் வீழும் பேறுபெற்ற சிறப்பு உணர்த்திற்று.

நிரந்த - வரிசைபெற நின்ற.

தாதையார் சிவபாதவிருதயர்தாம் - "இவன்றந்தை என்னோற்றான் கொல்?" என்றுலகுபுகழ வருநிலை அன்றே பெற்ற அவர் என்பதும், அது சிவனடி மறவாது செய்த தவத்தின் பயனாய் வந்தது என்பதும் குறிப்பு

தெய்வ ஞானம் - சிவ ஞானம். **கன்று** - குழவி; இளமை குறித்த மரபு வழு வமைதி ஆர்வம்பற்றி வந்தது.

பியலின் மேற்கொண்டு - "அத்தர் பியன்மே லிருந்து" (நனிபள்ளி) என்பது முதலிய திருவாக்குக்கள் காண்க. பியன் - தோள்.

களி கூர்ந்து - "மக்கண்மெய் தீண்டல் உடற்கின்பம்" என்றபடி முன் பல நாளும் பிள்ளையாரை எடுத்து இன்புற்ற தந்தையார், நின்மல ஞான உருவத்திருமேனியைத் தீண்டிய நினைவுபெற்று மிக்க மகிழ்ச்சியினைப் பெற்றனர். **கூர்தல்** - உள்ளது சிறத்தல்.

மேலேந்த - என்பதும் பாடம். 94

1993. பொருளுரை:- மாமறையோர்...சூழ்ந்து - பெரிய மறையவர் கூட்டத்தி னுடன் பொருந்திய திருத்தொண்டர் கூட்டமும் பக்கத்திற்சூழ்ந்து; தாம்...தன்மை யாலே - தாங்கள் (உடையின்மேற் சுற்றிய) ஆடைகளையும் உத்தரியங்களையும் ஆகாயத்தில் வீசி ஆரவாரிக்கும் தன்மையினாலே; பூமறுகு - சீகாழியின் அழகிய திருவீதி; சிவானந்தப் பெறுக்காறு போத - சிவானந்தமாகிய பெருக்கெடுத்த ஆறு செல்ல; அதன்மீது...காட்சித்து ஆக - அதன்மேல் பொங்கும் அழகிய நுரைக்குமிழின் மேல் எழுந்தும் கீழ் இறங்கியும் வருவனபோல விளங்கும் காட்சியையுடையது ஆக,

1994. நீடுதிருக் கழுமலத்து நிலத்தேவர் மாளிகைமே
னெருங்கி யங்கண்
மாடுநிறை மடவார்கண் மங்கலமா மொழிகளால்
வாழ்த்தி வாசத்
தோடுமலி நறுமலருஞ் சுண்ணமும்வெண் பொரியினொடுந்
தூவி நிற்பார்
கோடுபயில் குலவரைமேன் மின்குலங்கள் புடைபெயருங்
கொள்கைத் தாக; **96**

விளக்கவுரை:- குழாம் - சூழ்ந்து - அறுவை உத்தரியம் - விசும்பில் எறிந்து **ஆர்க்கும்** தன்மையாலே - சிவானந்தப் பெருக்காறு போத - மீது நுரைக் குமிழி எழுந்து - இழிவனபோல் - மறுகு - விளங்கும் - காட்சித்து என்று உவமையைக் கூட்டி உரைத்துக்கொள்க. மறையோர் குழாமும் தொண்டர் குழாமும் சேர்ந்து **மறுகிற்** செல்லுதல், சிவமும் ஆனந்தமும் பெருகி வெள்ளமாகச் செல்வதற்கும், அறுவை உத்தரியம் விசும்பில் ஏறுதலால்அவை மேலேபோய்க் கீழிறங்குதல், அப்பெருக்கில் வெண்குமிழி மேல் எழுதல் இறங்குதலுக்கும், ஆர்த்தல் ஆற்றுப் பெருக்கின் இரைச்சலுக்கும் **விளையும்** உருவும் பயனும்பற்றி வந்த உவமம்.

அறுவை-துணி. இது உடையின்மேல் அணியும் துணியைக் குறித்தது. **உத்தரியம் -** மேலாடை. உத்தரியம் வீசுதல் மகிழ்ச்சிக் குறிப்பு. இவ்வழக்கு இந்நாளினும் மேனாட்டாற்பாற் காணப்படும். **உத் -** மேலே; **தரியம் -** தரிக்கப்படுவது; காரணக் குறி, **ஆர்த்தல் -** மகிழ்ச்சிபற்றிய துதிகளையும் வாழ்த்துக்களையும் எடுத்துக்கூறி ஆரவாரித்தல். இதுவும் இந்நாள் வழக்கிற் காணலாம்.

மறுகு - காட்சித்து - ஆக - என்ற கூட்டுக. **மறுகு -** வீதி.

காமர் நுரைக் குமிழி - நீரில் வரும் குமிழிகள் நீர்க்குற்றம் எனப்படும். ஆனால் இங்கு உவமிக்கப்படுவன சிவானந்தப் பெருக்கில் தோற்றுவன ஆதலின் அவ்வாறன்றி விரும்பத்தக்கன என்பார் **காமர்** என்று விசேடித்தார்.

இப்பாட்டினால் மறுகிற் சென்ற ஆடவர்களின் செயலும் தோற்றமும் கூறப்பட்டன. ***95***

1994. ***பொருளுரை:-*** நீடு...மடவார்கள் - நீடும் திருக்கழுமலத்தில் பூசுரர்களது திருமாளிகைகளின மேலே நெருங்கி அவ்விடத்தில் பக்கத்தே நிறைந்த மறையோர் மகளிர்கள்; கோடுபயில்...கொள்கைத்தாக - உயர்ந்த சிகரங்களையுடைய பெருமலைகளின்மேல் மின்னற் கூட்டங்கள் புடைபெயர்ந்து செல்லும் காட்சியைக்கொண்டது போல; மங்கல மாமொழிகளால்...தூவி நிற்பார் - மங்கலமாகிய பெருஞ் சொற்களால் வாழ்த்தியும், வாசனையுடைய இதழ்கள் நிறைந்த புதிய குளிர்ந்த பூக்களையும் சுண்ணப் பொடிகளையும் வெண் ணெற்பொரியுடனே தூவி நிற்பாராக;

விளக்கவுரை:- **நிலத்தேவர் -** பூசுரர் என்ற கருத்து; மறையவர். **மாடு -** பக்கங்கள்.

1995. மங்கலதூ ரியந்துவைப்பார்; மறைச்சாமம் பாடுவார்;
மருங்கு வேதிப்
பொங்குமணி விளக்கெடுத்துப் பூரணகும் பமுநிரைப்பார்;
போற்றி செய்வார்;
அங்கவர்கண் மனத்தெழுந்த வதிசயமும் பெருவிருப்பு
மன்பும் பொங்கத்
தங்குதிரு மலிவீதிச் சண்பைநகர் வலஞ்செய்து
சாருங் காலை, 97

நறுமலர் - நறுமை - ஈண்டுப் புதுமையும் தண்மையும் அழகுங் குறித்தது.

பொரி - வெண்ணெற் பொரி. **சுண்ணம்** - மஞ்சள் கலந்த வாசனைத் தூள். பொற்சுண்ணமென்பர். மலரும், சுண்ணமும், பொரியுங் கலந்து தூவுதல் மங்கலம்புரி செயல்களுள் ஒன்று. இது பெரும்பான்மை பெண்களாற் செய்யப்படுவது.

மாளிகைகளின் மேல் பக்கங்களில் நெருங்கிப் பெண்கள் புடைபெயர்த்து மலரும் சுண்ணமும் பொரியும் தூவுதல், சிகரங்களையுடைய மலைகளின்மேல் மின்னற் கொடிகள் அசைந்து மழைத்துளிகளைப் பெய்தாற்போலும் என்று முன் பாட்டிற் கண்டவாறே ஈண்டும் வினையும் உருவும் பயனும்பற்றி வந்த உவமம் விரித்துக் கூட்டிக்கொள்க. **கோடு பயில் குலவரை** என்ற உவமானத்திற்கேற்பச் சிகரிகளையுடைய மாடங்கள் என்று உவமேயத்திலும், **மலரும் பொரியும் தூவி** என்ற உவமேயத்திற்கேற்ப மழைப்பெயல் தூற்றி என்று உவமானத்திலும் விரித்துக்கொள்க. **புடைபெயர்தல்** பிள்ளையாரது உலாவிற்கேற்ப அங்கங்கும் காணப் பெண்களும் பல விடத்தும் பெயர்ந்து செல்லுதல் உவமம். **மொழிகளால் வாழ்த்தல்** - "மின்னுவ தெல்லாம் பின்னுக்கு மழை" என்றபடி மழைப்பெயலின் ஓசை குறிப்பதாம்.

இப்பாட்டாற் பெண்களின் செயல் கூறப்பட்டது. *96*

1995. **பொருளுரை:-** மங்கல தூரியந் துவைப்பார் - (வேறு சிலர்) மங்கல வாத்தியங்களை முழக்குவார்களாக; மறைச்சாமம் பாடுவார் - (சிலர்) சாமகானங்களைப் பாடுவார்களாக; மருங்குவேதி-நிரைப்பார் - (சிலர்) பக்கத்தில் திண்ணைகளிலே பொங்கும் அழகிய விளக்குகளை ஏந்திப் பூரண கலசங்களையும் வரிசையாக வைப்பார்களாக; போற்றிசெய்வார் - (வேறு சிலர்) துதி செய்வார்களாக; அங்கு அவர்கள்...பொங்க- இவ்வாறு அங்கு அவர்களது மனத்தில் எழுந்த அதிசயமும் பெரிய விருப்பமும் அன்பும் பொங்கும்படி; தங்கு....காலை - தங்கிய திரு மலியும் வீதிகளின் வழியே சண்பை நகரை வலமாக வந்து சாரும்போது,

விளக்கவுரை:- இப்பாட்டால் முன்னிரண்டு பாட்டுக்களாற் கூறியவாறன்றி வெவ்வேறு பலவகையினர்களின் செயல்கள் கூறப்பட்டது.

துவைப்பார் பாடுவார் - நிரைப்பார் - போற்றி செய்வார் - என்ற வினை முற்றெச்சங்களுக்கு வேறு சிலர் என்ற தனித்தனி எழுவாய்கள் தொக்குநின்றன.

1996. தந்திருமா ளிகையின்க ணெழுந்தருளிப் புகும்பொழுது
சங்க நாதம்
அந்தரதுந் துபிமுதலா வளவில்பெரு கொலிதழைப்ப
வணைந்து புக்கார்
சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரா னுடனணைந்த
துணைவி யாகும்
பைந்தொடியா டிருமுலையின் பாலறா மதுரமொழிப்
பவள வாயார். **98**

தூரியம் - வாத்தியங்கள். ***துவைத்தல்*** - முழக்குதல்.

சாமம் - வேதப் பொதுமை குறித்தது.

வேதி - ***திண்ணை, விளக்கு எடுத்தலும், பூரணகும்பம் நிரைத்தலும்*** மங்கல அணி செய்வகைகள்; ***நிரைத்தல்*** - வரிசைபெற வைத்தல்.

துவைப்பாராகவும், பாடுவாராகவும், ***நிரைப்பாராகவும்*** போற்றிசெய்வாராகவும் இவ்வாறு அதிசயமும் விருப்பும் அன்பும் பொங்க என்க. ***பொங்குதல்*** - உரிய மெய்ப் பாடுகளால் வெளிப்படுதல்.

தங்குதிருமலிவீதி - திரு - சைவமெய்த்திரு. ***தங்குதல்*** - மாறாது நிலைத்திருத்தல். ஊழியினும் அழியாது சிவச்சார்புபெற்று நிற்றலின் குறிப்பு.

நிறைப்பார் - என்பதும் பாடம். *97*

1996. பொருளுரை:- சுந்தரப்பொற் றோணிமிசை....பவள வாயார்-அழகிய பொன் பூண்ட திருத்தோணியின் மேல் இருந்த இறைவருடனே அணைந்த துணைவியாராகிய பெரியநாயகியம்மையாரது திருமுலையின் பால்மணமறாத மதுரமொழியினை யுடைய பவளவாயராகிய பிள்ளையார்; தம் திருமாளிகையின்கண்....ஒலி தழைப்ப - தமது திருமாளிகையினிடத்து எழுந்தருளிப் புகும் அப்பொழுது சங்கநாதமும், தேவ துந்துபிகளும் முதலாக அளவில்லாத பெருகும் ஒலி தழைப்ப; அணைந்து புக்கார் - சேர்ந்து உட்புகுந்தருளினர்.

இந்த ஐந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன.

விளக்கவுரை;- எழுந்தருளிப்புகும்பொழுது - அத்தர் பியலினின்று கீழே எழுந்தருளி மாளிகையினுட் புகும்போது என்க.

சங்கநாதம்-அந்தரதுந்துபி - முன்னது இவ்வுலகத்ததுவும், மற்றது மேலுலகத்ததும் ஆம். இவை திருவருள் பெற்றபின் இதன்முறை தந்திருமாளிகையிற் புகும் மங்கல நிகழ்ச்சியின் குறியாக இசைத்தன. அந்தரதுந்துபி தழைத்தது பிள்ளையார் திருவருள் பெற்ற சிறப்பினால் வானுலகமும் சிவப்பயன்பெற நின்றமையால் என்க.

முதல் நாள்

1997. **தூமணிமா ளிகையின்க ணமர்ந்தருளி, யன்றிரவு**
தொல்லை நாத
இரவு மாமறைக டிரண்டபெருந் திருத்தோணி மன்னிவீற்
றிருந்தார் செய்ய
காமருசே வடிக்கமலங் கருத்திலுற விடையறாக்
காதல் கொண்டு
நாமநெடுங் கதிருதிப்ப நண்ணினார் திருத்தோணி
நம்பர் கோயில். **99**

"மண்ணுலகமேயன்றி வானுலகுஞ் செய்தபெரும், புண்ணியத்தின் படையெழுச்சி போலெய்தும் பொலிவெய்த" (புரா - 650).

பாலறா மதுரமொழி-பாலின் தன்மையாகிய ஞானம் இடையீடின்றிக் கலந்தெழும் இன்மொழி. அப்போது அணிமையில் பாலுண்டெழுந்தருளியதும் குறிப்பு.

பிரான் உடன் அணைந்த துணைவி -"பாலடிசில் - ஊட்டு" (1963) என்று பிரான் அருளத் துணைவியார் ஊட்டினார் என்ற குறிப்புப்பெற இவ்வாறு கூறினார்.

துந்துபிநாதம்-**உடனமர்ந்த**-என்பனவும் பாடங்கள். 98

1997. பொருளுரை:- தூமணி...அமர்ந்தருளி - தூய அழகிய திருமாளிகையினிடத்து அமர்ந்தருளியிருந்து; அன்றிரவு - திருஞானம் அருளப்பெற்ற முதனாளாகிய அன்று இரவில்; தொல்லைநாதம்...காதல்கொண்டு - பழைமையாகிய நாத உருவாகிய பெருமறைகள் திரண்டு உருவெடுத்த திருத்தோணியில் நிலைபெற்று வீற்றிருந்த பெருமானது செய்ய அழகிய திருவடித் தாமரைகள் தமது கருத்தினிற் பொருந்தியதனாலே இறையறாத ஆசைகொண்டவராகி; நாமநெடும்...கோயில் - பெரிய நீண்ட ஞாயிறு உதிக்கும் முன்னேரத்தில் திருத்தோணி நம்பரது திருக்கோயிலைச் சென்று அடைந்தனர்.

விளக்கவுரை:- திருஞானப் பாலுண்டருளிய அன்றிரவு பிள்ளையார் தமது திருமாளிகையில் சரித்த நிலையினையும், பிற்றைநாள் விடிதலுமே ஆர்வங்கொடு முயன்ற திருப்பணியினையும் இப்பாட்டால் அறிவிக்கின்றார் ஆசிரியர். இவ்வாறே பின்னர் வரும் எல்லா நாள்களினும் கொள்க என்பதைக் காட்டியவாறு. "பண்டு திருவடி மறவாப் பான்மையோரா" (1953) யிருந்த பிள்ளையார் இந்நிலையில் வளர்ஞான வமுதுண்டு சிவனடியே சிந்திக்குந் திருப்பெருகு சிவஞான முதலியவற்றைப்பெற்றவர் அன்று முதல் இரவுபக லெல்லாக் காலத்தும் சாக்கிரம் முதலிய எல்லா நிலைகளிலும் சிவனடி மறவா நிலையிற் சரித்தனர் என்பது சரிதவிளைவிற் காண்க. புரா - 191 - 205 - 554 - 555 முதலியவை பார்க்க.

தொல்லை நாத மாமறைகள் திரண்ட பெருந் திருத்தோணி - மறைகளே திரண்டு தோணியாக மிதந்து இறைவரைச் சிவமும் சத்தியுமாகத் தமக்குள் வைத்துத் தாங்கி

பிள்ளையாரது முதல் யாத்திரை

1998. காதலுட னணைந்துதிருக் கழுமலத்துக் கலந்துவீற்
றிருந்த தங்கள்
தாதையா ரையும்வெளியே தாங்கரிய மெய்ஞ்ஞானந்
தம்பால் வந்து
போதமுலை சுரந்தளித்த புண்ணியத்தா யாரையுமுன்
வணங்கிப் போற்றி
மேதகைய வருள்பெற்றுத் திருக்கோலக் காவிறைஞ்ச
விருப்பிற் சென்றார். 100

நிற்பன என்பதாம். "சுருதி தொடர்ந்த பெருந்தோணி" (1981)

செய்ய... கருத்திலுற - செய்ய - செம்மை தரும். காமருதல் - கண்டாரால் விரும்பப்படுதல்; உற-உறுதலினால்.

இடையறாக்காதல் - எப்போதும் பற்றுவிடாத மிக்க அன்பு. 780 - 781 ல் கூறியபடி கண்ணப்ப நாயனார் காதல்கொண்ட கருத்துக்கள் காண்க.

நாமநெடுங்கதிர் - ஞாயிறு. நாம - பெரிய; அகர வீற்று உரிச்சொல்.

நண்ணினார்-கோயில்-பிள்ளையார் திருமேனி திருக்கோயிலுட் சென்று சார்வதன் முன் அங்கு அவரது திருவுள்ளம் சென்று சார்ந்தது என்ற விரைவும் ஆர்வமிகுதியும் 99
குறிக்கப் பயனிலையை முன்வைத்துக் கூறினார்.

1998. பொருளுரை:- காதலுடன் அணைந்து - மிக்க அன்புடனே அங்குச் சேர்ந்து; திருக்கழுமலத்து-போற்றி - திருக்கழுமலம் என்ற அத்திருத்தலத்திலே உடனாக எழுந்தருளி யிருந்த தமது தந்தையாரையும், தம்மிடத்து வெளிப்பட்டு வந்து யாவராலும் தாங்குதற்கரிய மெய்ஞ்ஞானத்தை ஞானப்பாலாக்கித் திருமுலை சுரந்து தமக்கு அளித்து ஊட்டிய புண்ணிய உருவுடையாராகிய திருத்தாயாரையும் முன்னே தொழுது துதித்து; மேதகைய அருள்பெற்று - மேன்மையுடைய திருவருளைப்பெற்று; திருக்கோலக்கா...சென்றார் - திருக்கோலக்கா என்ற திருத்தலத்தை வணங்கும் பொருட்டு விருப்பத்துடனே சென்றருளினர்.

விளக்கவுரை:- திருக்கழுமலத்துக் கலந்து வீற்றிருந்த - கலந்து - சிவமும் சத்தியுமாகப் பிரிக்கமுடியாத சம்பந்தத்தினாலே கூடியிணைந்து. "இளங்கொம் பனாளோ டிணைந்தும் பிணைந்தும்" (தேவா). "மாதினையு மொருபாகத் தடக்கி" (சித்தி - பாயிரம்). **கழுமலத்துக்கலந்து** -உயிர்களின் மலம் கழுவிச் சிவபோக நுகரச்செய்யும் அருட்செயலின் கண்ணே இவ்வாறும் கலந்துள்ளார் என்றதும் குறிப்பு. "ஐந்தொழிற்கும் வித்தாய்" (சிவப்பிரகாசம் - பாயிரம்).

கலந்து - கழுமலத்தில் பிரியாது வீற்றிருந்த என்றலும் பொருள்.

தங்கள் - ஞான வமுது தரப்பெற்ற தமது சிறப்புரிமை குறித்தது. மேல் **தந்தையார் தாயார்** - என்பதும் காண்க

தாதையாரையும் - தாயாரையும் - தோணியப்பரையும் பெரியநாயகி யம்மையாரையும். சிவபாத விருதயர் - பகவதியார் என்று இதுவரை கொண்டாடிய இருவரையன்றி அவர் சார்வு கண்டு இனி, இத்தாதையார் தாயாரையே பிள்ளையார் தமது தந்தை தாயாராகக் கொண்டருள்கின்றார் என்பது குறிப்பு. "தவமான நெறியணையுந் தாதையா ரெதிர்தொழுவா, ரவர்சார்வு கண்டருளித் திருத்தோணி யமர்ந்தருளிப், பவபாச மறுத்தவர்தம் பாதங்க ணினைவுற்றார்" (புரா. 879); "அரும றைக்குலத் தாயர்வந் தடிவணங் கிடத்தாமுந், துங்க நீள்பெருந் தோணியிற் றாயர்தாண் மனங்கொளத் தொழுவாராய்" (மேற்படி - 958) என்பவை காண்க.

போதமுலை சுரந்து - மெய்ஞ்ஞானம் அளித்த என்று கூட்டுக. "போதையார் பொற்கிண்ணத் தடிசில்" (தேவர்) **போதமுலை** - அபர பர ஞானங்கள் அம்மையாரது திருத்தனங்கள் என்பது மரபு. **முலைசுரந்து** ஞானமளித்தலாவது திருமுலைப்பாலில் எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்து ஊட்டியது.

வெளியே..தாயார் - பாலூட்டிய பண்பும் அருளின் உருவும் ஆகிய சிறப்பும் உணர்த்த அடைமொழிகள் புணர்த்தி ஓதினார். **தாதையார்** என்று முன்வைத்தோதியது "ஊட்டு" என முன் ஆணைதந்த குறிப்புணர்த்தியது.

புண்ணியத் தாயார் - சிவபுண்ணியத்தின் விளைவாகியவர் என்பது.

முன்வணங்கிப்போற்றி - **முன்** - திருமுன்பு. எப்போதும் மறவாத கருத்திலுற நின்றாராதலின் வணங்காத நேரமில்லை; ஆதலின் **முன்** என்பது இடங்குறித்து நின்றது. **முன்** - தமது முதலாவது தலயாத்திரை தொடங்கித் திருக்கோலக்கா விறைஞ்சச் செல்வதற்கு முன் வணங்கி விடைபெறப் போற்றி என்றலுமாம்.

அருள்பெற்று - அருள் விடைபெற்று என்க. தலத்தினின்றும் புறப்படும்போது அத்தல நாயகரின் விடைபெற்றுச் செல்லும் நியதி குறித்தது.

திருக்கோலக்கா விறைஞ்ச விருப்பிற்சென்றார் - **விருப்பாவது** "நாடு நகரமு நற்றிருகோயிலுந், தேடித் திரிந்து சிவபெருமா னென்று, பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின், கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே" (திருமந்திரம்) என்றபடி திருக்கோயில் வழிபாடு பற்றிய சரியையினை உள்ளடக்கிய கிரியை நிலையை உலகிற் சரித்துக்காட்டி உலகை வழிப்படுத்த வந்த பரமாசாரியராதலின் அருள்பெற்ற அடுத்தநாள் முதலாகவே தலயாத்திரையைத் தொடங்கிக் காட்டினார் என்பது. **விருப்பம்** - காட்டக் கண்டு உலகுய்ய வைத்தல் வேண்டுமென்பது. "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே" முதலிய **பிள்ளையாரது** திருவாக்குக்கள் பார்க்க.

100

வம்புறா வரிவண்டுச் சருக்கம்

திருஞானசம்பந்த நாயனார் புராணம்

(1 - 100 பாட்டு வரை - பின் சேர்க்கை - I)

சரிதச் சுருக்கம்:

ஆறு - நாடு - நகர்

சென்னிவளர் மதியணிந்த சிவபெருமானது நிலைபெற்ற சைவத்துறையிற் றவறாது வழிவழி வந்த குடியாகிய சோழ அரசர்களால் ஆட்சி செய்யப்பட்டுக், காவிரியாறு பாய்ந்து வளஞ்செய்யும் சோழநாட்டினை அணிசெய்து நிலைத்துள்ளது கழுமலம் என்ற பெயரையுடைய பழைய ஊர்; அது மிக்க செழிப்பும் சிறப்புமுடைய பதி; மறையவர்களது பழங்குடிகள் சிறந்து விளங்குவன அவ்வூரின் அழகிய தெருக்கள்; பன்னிரண்டு ஊழிகளிலும் வந்த நீர்ப்பெருக்கில் ஆழாது மேலே மிதந்தமையால் பன்னிரண்டு பெயரும் பெற்றுள்ளது அப்பழம்பதி. அப்பெயர்களாவன - பிரமபுரம், வேணு புரம், புகலி, வெங்குரு, தோணிபுரம், பூந்தராய், சிரபுரம், புறவம், சண்பை, காழி கொச்சைவயம், கழுமலம் என்பன. "துயரிலங்கும் முலகிற் பலவூழிகள் தோன்றும் பொழுதெல்லாம், பெயரிலங்கு பிரமாபுரம்" (தேவா).

மரபு - குலம் - பெற்றோர்

அத்திருப்பதியிலே, அந்தணர் மரபிலே, கவுணியர் கோத்திரத்திலே, இவ்வுலகம் வாழும் பொருட்டுத் தவஞ்செய்யும் தன்மையுடைய சிவபாத விருதயர் என்ற பெரியார் உளரானார்; அவரது திருமனைவியார் வாய்ந்த மரபில் வந்தவரும் பெறுதற்கரிய பெருமையுடையவருமாகிய பகவதியார் என்பவர். கற்பு மேம்படு சிறப்பினாலே கணவனாரது கருத்தமைந்தாராய் இல்வாழ்க்கை நிலையிலே சிறக்க ஒழுகிவந்தனர். இவ்விருவரது மரபுகளும் வழிவழியாகச் சைவ நெறியிலே வந்தன. இவர்கள் சிவபெருமானது திருவடிகளையன்றி வேறொன்றினையும் பற்றாக அறியாது மனைவாழ்க்கை நடத்தி வந்தனர்.

சமண்சாக்கியம் மிகுதல் பற்றி வருந்துதல்

அந்நாளில் உலகிலே சமணர் புத்தர்களது பொய்ந்நெறிகள் மிகப் பரவின. அதனால் ஆதியாகிய சைவநெறியின் திருநீற்று விளக்கம் போற்றப்படாது அருகியது. இதனைக்கண்டு சிவபாத விருதயர் மிகவும் துன்பமடைந்தனர்.

வரங்கிடத்தல்

அதனோடு அவர் தமக்கு இல்வாழ்க்கையின் இன்பம் பயக்கும் மகப்பேறு வேண்டப்படுவதாயிற்று; அவ்வாறு தாம் வேண்டும் மகவு பரசமயங்களை நிராகரிக்கவும், திருநீற்றினை ஆக்கம் செய்யவும் வல்லதாயிருத்தல் வேண்டும் என்று எண்ணிச்

சிவபாதவிருதயர் அத்தகைய மகவைப் பெறும் பொருட்டுத் திருத்தோணியில் எழுந்தருளிய பெரிய நாயகி யம்மையார் தோணியப்பர் இவர்களது திருவடிகளில் வழிபட்டு வரங்கிடந்தனர். இறைவாது அருளால் பகவதியம்மையாரது திருவயிற்றில் கருப்பப் பேறு உலகமுய்ய உளதாயிற்று. திருவருளைப்போற்றி உரிய மறைநூல்விதிச் சடங்குகளை யெல்லாம் பத்துமாதங்களிலும் சிறக்கச்செய்து சுற்றத்தாருடன் பேரின்பங் கிளர்ந்து மகிழ்ந்தனர் சிவபாதவிருதயர்.

திருவவதாரம்

அருக்கன் முதலாகிய கோள்கள் எல்லாமும் அழகிய உச்சநிலைகளிலேயும் பெருகும் வலிய நிலைகளிலும் நிற்க, நல்ல ஓரை எழ, திருமிகும் திருவாதிரை நாளிலே பரசமயத் தருக்கு ஒழிய, சைவ முதலாகிய வைதிகம் தழைத்து ஓங்கத், திருநீற்றுநெறி யெங்கும் ஒப்பற்றுச் சிறந்து செல்ல, தமிழ்செய் தவம் நிரம்ப, திசையனைத்தின் பெருமையும் தென்றிசையே வெல்ல, மேல்கீழ் உலகங்களை நிலவுலகம் வெல்ல, நிகழ்கால எதிர்காலக் குற்றங்கள் நீங்க, அமண் முதலாய பரசமயநெறிகள் பாழ்படச் சிவம் பெருக்கும் பிள்ளையார் சீகாழிப் பதியில் திருவவதாரம் செய்தார். அப்பொழுது சீகாழிப்பதியவர்கள் அனைவர்க்கும் அவரறியாமே களிபெருகிற்று; எங்கும் நன்னிமித்தங்களும் சுபசகுனங்களும் நிகழ்ந்தன; பிள்ளையாரது திருமாளிகையினை அழகிய மங்கலஞ் செய்து சூத நல்வினைகள் செய்வாராய்ச் சாதக முறைப்பல சடங்குகள் பத்து நாட்களினும் செய்தனர்; நாமகரணச் சடங்கு உரியநாளிற் செய்தனர்; தாமரையிற் றனிமுதற் குழவிபோலே, உதய ஞாயிறு போன்ற பிரானைத் தொட்டில் அமர்வித்தார்; பால் ஊட்டி நீற்றுக்காப்பு மணி வித்தார்கள்; இவ்வாறு தால், செங்கீரை, சப்பாணி, முதலாகிய பருவப் பாராட்டுடன் ஓராண்டு வளர்ந்து பிள்ளையார் தளர்நடைப்பருவமடைந்தனர்; அவர்க்கு மேல் மூவாண்டு எய்தும்போது ஒரு சிறப்பு நிகழ்ந்தது. முன்னை நிலையில் திருவடி மறவாத் தன்மை பெற்றிருந்தவரை இறைவர் சிவபாதவிருதயரது தவத்திற் கிரங்கிப் பிள்ளையாராக அளித்தருளினாராதலின், தமக்கென ஒன்றும் வேண்டும் காரியமின்றித் திருத்தொண்டின் நிலைமையினை உலகுக்குத் தரும்பொருட்டே இங்கு வந்து அவதரித்த பிள்ளையார், முன்னை நிலையில் இறைவரைத் தொடர்ந்துநின்ற தன்மையினின்றும் பிரிந்து போந்த உணர்வு ஓரோர்கால் திருவுள்ளத்திற்கொண்டு மேல் எழுதலும், அதனால் உடனே வெருவு கொண்டாற் போல அயலாகிய குறிப்புடனே அழுவார்.

பிரமதீர்த்தக் கரை

இவ்வாறாகிய மேம்பட்ட நாட்களிலே வேறொரு நாளில், தமது நியதியாகிய வேதவிதி முடிப்பதற்காகத் தாதையார் குளிப்பதற்குச் செல்லும்போது தமது பெருமானது திருவருள் கூடியதனாலே அழுது அவரைத் தொடர்ந்து பின் சென்றார்; அது கண்டு முனிவார் போலத் தாதையார் விலக்கவும் விடாது கிங்கிணியணிந்த சீறடிகளைக் கொட்டிப் பிள்ளையார் மீளாது தொடரவே "உனது செய்கை யிதுவாகில் உடன் போதுக!" என்று அவரும் உடன் அழைத்துச் சென்றனர். பிரம தீர்த்தக்கரையினை அடைந்து பிள்ளையாரைக் கரையினில் வைத்துத், தாம் பிரிவஞ்சித் தோணியப்பரை வணங்கித்

தாதையார் வாவியினுட் புகுந்து நீராடியபின் நியமங்கள் பலவும் செய்து அகமருடணம் படிவதற்கு நீரினுள் மூழ்கினார். அவரைக் காணாது சிறிதளவும் தரிக்கலாற்றார் என்பது காரணமாகக் காட்டி, இறைவரது திருவடிகளை முறைமையால் இடைவிடாது நினைந்திருந்த முன்னை உணர்வு வந்து மூண்டமையாலே கரையில் நின்ற பிள்ளையார் கண்ணீர் ததும்பக் கைகளால் கண்பிசைந்து உதடுகள் துடிக்கப் பொருமி உலகமுய்ய அழத்தொடங்கினார்; கண்கள் நீர்த்துளி பெருக, வேறெங்கும் பார்த்து அழாது தமது மேலைச்சார்பு உணர்ந்ததனாலோ? அன்றிப் பிள்ளைமையினாலோ? ஆளுடைய இறைவரது திருத் தோணிச்சிகரத்தைப் பார்த்து "அம்மே! அப்பா!" என்று அழைத்தருளி அழுதருளினார். அந்நிலையிலே திருத்தோணியப்பர் அவரது முன்னைநிலைத் திருத்தொண்டு முன்னி அவர்க்கு அருள்புரியும் பொருட்டுத் தேவியாரும் தாமும் விடையின்மேல் எழுந்தருளி வந்து பொய்கையின் கரையில் எழுந்தருளினார். சிவபாதவிருதயர்க்கும் பகவதி யம்மையாருக்கும் தாம் கொடுத்த பெருகுவரத்தை நினைந்தோ? தமது திருவடியே பேணும் ஒரு நெறியில் வரும் சிவஞானம் கொடுப்பதற்காக அம்மையாரை நோக்கித் "திருமுலைப்பாலினைப் பொன் வள்ளத்துக் கறந்து சிவஞானங் குழைத்து ஊட்டுக" என்றருளினர்; அவ்வாறே அம்மையாரும் முன் அணைந்து, கண்ணீர் துடைத்துக் கையிலே சிவஞானங்குழைத்த திருமுலைப்பால் நிறைந்த பொற்கிண்ணத்தைக்கொடுத்து, "அடிசில் உண்க!" என ஊட்டியருளிப் பிள்ளையாரை அழுகை தீர்த்தருளினர்.

ஆளுடைய பிள்ளையார் - சிவஞான சம்பந்தர்

எல்லார்க்கும் தந்தையும் தாயுமாகிய அவர் இவ்வாறு ஞானப்பாலூட்டி அருளியமையால் இப்பிள்ளையார் **ஆளுடைய பிள்ளையா** ராயினார்; அதனோடுஎல்லாத் தேவர் முனிவர்களுக்கும் தெரியவரிய பொருளாகிய ஒப்பற்ற **சிவஞானசம்பந்தரு**மாயினார்; அபர பர ஞானங்களாகிய "உவமையிலாக் கலை ஞானம், உணர்வரிய மெய்ஞ்ஞானம்" என்ற இருவகை முழு ஞானங்களையும் தவ முதல்வராகிய பிள்ளையார் அந்நிலையில் உணர்ந்தார். இறைவரும் அடியார்களுமே மெய்ப்பொருளாவார் என்றும், இத் துணிவு பெறாத பரசமயத்தாரது கொள்கை அழிவுபெறத் தக்கன என்றும் சூழ்ந்தெழுவாராயினர். நீர்மூழ்கிய சிவபாதவிருதயரும் சிறுபோதிலே தமது நியமங்களை முடித்து ஏறிக் கரையில் வந்தனர்; பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் தமைக் கண்டனர்; "யார் அளித்த பாலடிசில் நீ உண்டனை?" என்று முனிந்து, "எச்சில் மயங்கிட உனக்கு இதனை இட்டாரைக் காட்டு!" என்று கையில் சிறியதொரு மாறு கொண்டோச்சினார்; சிறிய பெருந்தகையாராகிய பிள்ளையார் ஆனந்தக் கண்ணீர் பெருக, உச்சியின்மேல் எடுத்த திருக்கையின் ஒரு விரலாலே சுட்டி, நிறைந்த ஞான ஒளியோடும் விண்ணிலே விடையின்மேல் அம்மையாரோடும் கருணையினா னின்றாரை, எதிர்காட்டி, உள்ளே நிறைந்து வழிந்த உயர் ஞானத் திருமொழியினாலே, "தோடுடைய செவியன்" என்று எடுத்த மெய்ம்மை மொழித் திருப்பதிகத்தினை ஓதியருளித் , தோணியப்பரை அடையாளங்களுடன் கூறி, "எம்மை இது செய்த பிரான் இவனன்றே" என்று அருளிச்செய்தனர். அப்பதிகத்தினுள்ளே உலகினர் பிழைசெய்திடினும் வந்தடைந்தால்

இறைவர் கைக்கொண்டு அருள்புரிவர் என்று காட்ட இராவணனுக் கருளிய திறத்தினை வைத்தருளினர்; அகங்காரத்தாற் காணமுயலாது பணிந்து தொழுவார்க்கே சிவபெருமான் அருள்புரிவர் என்று காட்ட அயனு மரியும் துதித் துய்ந்தபடியினை விரித்தருளினர்; சமணர் புத்தர்களது வழிகள் பழியாக்கும் புன்னெறிகளேயாம் என்றும் போதித்தருளினர். இவ்வாறு திருப்பதிகத்தினை நிறை வாக்கித் திருக்கடைக்காப்பும் சாத்திப் பிள்ளையார் நின்றருளினர். இறைவரது அருள்கண்டு தேவர்கள் வானில் பூமழை பொழிந்தனர்; வான துந்துபிகள் முழங்கின; கணநாதர்கள் அர வோசை செய்தார்த்தனர். அடியார்களுக்குப் பிறவிக்கடல் நீந்தும் புணையருள் அங்கணரும் அம்மையுடனே விண் ஆறாகத் திருத்தோணியில் எழுந்தருளினர்.

தோணி

இறைவர் எழுந்தருளியது கண்ட பிள்ளையாரும் அவரைத் தொடர்ந்து நடந்து திருத்தோணிக்குச் சென்றருளினர். தாதையார் கைகுவித்து மகிழ்ந்து ஆடினர்; பதிகத் தமிழின் குறிப்பினை ஓர்ந்தனர்; இறைவரைத் தனி கண்டு தொடர்ந்த பிள்ளையாரைப் போலத் தாம் காணாராயினும் நிகழ்ந்த நிகழ்ச்சிகளினாலே "இது தோணிபுரேசரின் அருளே யாம்" என்று துணிந்து தாதையார் அவரைப் பின்றொடர்ந்து சென்று திருத்தோணியிற் சேர்ந்தனர். இவ்வற்புத நிகழ்ச்சி கண்டோரும் கேட்டோரும் மறையோரும் கோயில் வாயிலில் வந்து கூடினர்; பிள்ளையார் திருத் தோணியில் அம்மையப்பரைக் கண்டு "இங்கெனை யாளுடையா னுமையோடு மிருந்தான்" என்று பதிகம் பாடித் தொழுது அங்கு நின்றும் புறப்பட்டனர். கோபுர வாயிலிற் கூடியவர்களும் தொண்டர்களும் அவரது திருவடிகளைத் தலைமேற் கொண்டு வணங்கிப் பலபடியும் துதித்து மகிழ்ந்தனர். தாதையார் பிள்ளையாரைத் தோளின்மேற் றரித்து ஏனையோர் சூழ நகல்வலமாகத் திருமாளிகைக்கு வந்தனர். அப்பொழுது சங்கநாதம் துந்துபி முதலிய மங்கல இயங்கள் ஒலித்தன. அன்று திருமாளிகையில் எழுந்தருளியிருந்து இரவும் திருத்தோணியில் சென்று அம்மையப்பரை வணங்கி யருளி, மறுநாள் அவ்வாறே சென்று இறைஞ்சித் திருக்கோலக்காவினை வணங்கப் பிள்ளையார் சென்றருளுவாராயினர்.

பின் சேர்க்கை – 2

சீகாழி

தலவிசேடம்:–

காவிரி வடகரையில் 14-வது பதி: தலச் சிறப்புப்பற்றி முன் I - 257 - ம் பாட்டின் கீழும், IV - 1912 - ம் பாட்டின் கீழும் உரைத்தவை பார்க்க. பர சமய நெறிகளை நிராகரித்துத் திருநீற்று நெறியினை ஆக்கம் செய்ய இப்பதியில் **திருஞானசம்பந்த நாயனார்** அவதரித்து மூவாண்டளவில் பிரம தீர்த்தக் கரையில் அம்மையப்பரால் ஞானப் பாலூட்டப் பெற்று உலகம் விளங்க ஞானப்பாடல்கள் அருளிய வரலாறு புராணத்துட் காண்க. **திருநாவுக்கரசு நாயனார்** பிள்ளையாரது பெருமை கேட்டவுடனே எழுந்தருளிவந்து அவரை வணங்கி அவரது நட்புப் பெற்ற பெருமையுடைய பதி: **திருவாரூர் நம்பிகள்**, பிள்ளையாரவதரித்த பதி என்று இதனை மிதிக்க அஞ்சி நகர்ப்புறத்தே நின்று பாட, இறைவர் அங்குக் காட்சிதரக் கண்ட பெருமைபெற்றது: **திருநீலகண்டயாழ்ப் பாண நாயனார்** வந்து, பிள்ளையாரை வணங்கி அவரது பதிகங்களை யாழிலிட்டு வாசித்து அவருடனே இருக்கும் பேறு பெற்ற தலம்: **கணநாத நாயனார்** இங்கு அவதரித்து அடியார்களைப் பல திறத்துத் திருத்தொண்டுகளிலும் பயிற்றித் தொண்டர்களை ஆக்கியும், திருஞானசம்பந்த நாயனாரது திருவடி மறவாதேத்தியும் பணி செய்து முத்தி பெற்றுக் கணநாயகராகும் பேறு பெற்ற பதி: இவரது சந்நிதி தனிக் கோயிலாகப் பிரம தீர்த்தத்தின் மேல்புறம் வெளிச்சுற்றில் உள்ளது: பிரமபுரேசர் என்ற **இலிங்கமாகிய** திருமேனியும், தோணியப்பர் என்ற குருவாகிய திருமேனியும், சட்டைநாதர் என்ற **சங்கமமாகிய** திருமேனியுமாக மூவகைத் திருமேனிகளுள்ளும் விளங்கச் சிவபெருமான் எழுந்தருளிருக்கும் பெருமையுடைய பதி: இரணியனைச் சங்கரித் தெழுந்த நரசிம்மத்தைத் தடிந்து அதன் தோலைச் சட்டையாக அழகிய திருமேனியுடன் வரப்பிரசாதியாய் வீற்றிருந்தளுதல் இத்தலச் சிறப்பு: அவர் கையில் கொண்டிருப்பது அகங்கரித்தெழுந்த வாமனரைத் தடிந்து அவரது முதுகெலும்பைத் தண்டாக ஆக்கிய படை: பிரதி வெள்ளிக் கிழமையிலும் நள்ளிரவில் இவருக்கு மிக நியமமாகிய சிறப்பு வழிபாடு நடைபெறுகின்றது.

விடூரதன், காலவர், சந்திரன், முருகவேள், ஆதிசேடன், கேது, இவர்களும், தேவராதியரும் பூசித்துப் பேறு பெற்ற பதி: சூரனாதியோர்க்குப் பயந்து இந்திரன் வந்து புகலடைந்து வழிபட்டமை கந்தபுராணத்துட் பேசப்படுகின்றது: சிவபூசைக்காக இந்திரனமைத்த நந்தவனம் பற்றியும், அதன்பொருட்டு விநாயகக் கடவுள் அகத்தியரது கமண்டலத்தினின்ற காவிரியை இங்கு வரத் தந்தருளியமை பற்றியும் ஆண்டுக் காண்க: இந்திர நந்தவனம் என்பது இன்றும் வழக்கில் உள்ளது:

பிரமபுரத்தில் சுவாமி - **பிரமபுரீசர்:** - அம்மை - **திருநிலை நாயகி:** திருத்தோணியில் சுவாமி - **தோணியப்பர்** - அம்மை - **பெரிய நாயகி:** தோணிச் சிகரத்தில் தென் முகத்தின் முகமாய்ச், **சட்டை நாதர்:** தீர்த்தம் கோயிலினுள் வடகிழக்கில் **பிரமதீர்த்தம்:** இன்னம் –

சூல தீர்த்தம். ஆனந்த தீர்த்தம், காணித் தீர்த்தம், இராகு தீர்த்தம், வயிணவ தீர்த்தம், ஆழி தீர்த்தம், சங்க தீர்த்தம், சுக்ர தீர்த்தம், பராசர கூவம், அகத்தியர் தீர்த்தம், கௌதம தீர்த்தம், கழுமல நதி, புறாநதி முதலிய பற்பல தீர்த்தங்களும் உண்டு: பதிகங்கள் மிக அதிகமாக 71. மூவர் பதிகங்களும், மணிவாசகர் அருளிய திருவாசகமும் (பிடித்த பத்து), பதினொராந் திருமுறையில் பட்டினத்தடிகன் அருளிய திருக்கழுமல மும்மணிக்கோவையும், ஆளுடைய பிள்ளையாரைப் பற்றி நம்பியாண்டார் நம்பிகளருளிய நூல்களும் உண்டு. (அணிமையில் இயற்றப்பட்ட தல புராணமும் பிறவும் உண்டு: அவை தல வரலாறுகள் பலவற்றை விளக்குவன: ஆளுடைய பிள்ளையார் வரலாற்றினளவில் அவற்றுள் திருமுறைகளுடன் மாறுபடும் பகுதிகள் திருமுறைகளுக்குட்பட்டுக் கொள்ளத்தக்கன.)

குறிப்பு: சீகாழிப் பன்னிரு பெயர்களுக்கும் பன்னிரண்டு தனிக் கோயில்கள் உண்டு. அவற்றுள், தோணிபுரம் என்றதற்குரிய திருத்தோணிக்கோயில் சிறந்து விளங்கவுள்ளது: ஏனையவற்றுள் ஒன்றிரண்டு தனிச் சிறு சந்நிதிகளாகப் பெரிய கோயில் வெளிச்சுற்றில் மேல்புறம் காணப்படுகின்றன. ஏனைய மூர்த்திகளையும், கோயில்களையும் கண்டு, புதுக்கி, அங்கங்கேனும் அல்லது ஒரு சேரத் திருக்கோயிலி லேனும் அமைப்பித்து வழிபாடு நிகழச் செய்வது சிறந்த சிவபுண்ணியமாகும். அவ்வாறே இராகு முதலிய கோள்களும், தேவர்களும் பூசித்த கோயில்களும் கிலமாயுள்ளவற்றைப் புதுப்பித்து வழிபட வைத்தலும், பிற நினைவுக்குறிகளையும், பழஞ்சரிதம் காட்டும் கல்வெட்டுக்களையும் காப்பாற்றிப் பலரறிய வைத்தல் பெருஞ் சிவபுண்ணியச் செயல்களாம்.

பின் சேர்க்கை – 3

கற்பனை

(1) சிவச்சார்பிலே நிலைபெற்ற சைவத்துறையில் வழிவழி தவறாது வந்த குடியாக நின்று உலகுபுரத்தல் சோழமரபின் சிறப்புரிமை: அவ்வாறு வழிவழி வருதல் அரசர் மரபுச் சிறப்பு: (1900)

(2) நாயன்மார்களது சரிதமயமாக நின்று அக்கண்கொண்டு பார்க்கும் பெரியோர்களுக்கு அவ்வந்நாடு நகரத் தாவர வளங்கள் அவ்வச்சரித சம்பந்தமான செயல்களுடையனவாகவே காட்சிப்படும். (1905-1907)

(3) அவ்வம் மரபிலும் பெற்றோர்களது செயல்களைப்பார்த்து அச்செயல்களே தமது விளையாட்டுச் செயல்களாகக் கொண்டு பழகுவது சிறார்களது இயல்பு. (1909)

(4) ஒரு நகரம் பல பெயர்களைக் கொண்டு விளங்குதல் அதன் பழஞ்சரிதப் பெருமையினைக் காட்டும். (1912)

(5) மரபிரண்டும் சைவநெறி வந்த கேண்மையுடன் சிவனடி மறவாத சிந்தை யோடு திருநீற்றன்பு பாலிக்கும் தன்மையுடன் மனைவாழ்க்கை நடாத்துதல் அந்தணர்களுள் சிறப்பு. (1915)

(6) புறச்சமயப் பொய்கள் மிகுத்துத் திருநீற்றின் விளக்கம் போற்றப்பெறா தொழியக்கண்டு இடருழந்து வருந்துதல் பெரியோர் செயல். (1916)

(7) அவ்வாறு வருந்தி அந்நிலையினைத் தவிர்க்குமகவே தமது மனைவாழ்க்கைக் குரிய மகவாகப்பெற வரங்கிடந்து இறைவனை வழிபட்டுத் தவம் புரிதல் மிகப்பெருஞ் செயல். (1917)

(8) நன்மகப்பேறு உளதாதல் சிவனருளால் வருவது. (1918)

(9) ஒரு பதியில் ஒரு குடியில் ஒரு சிறந்த மகப்பேறுளதாயின் அது அப்பதி முழுதும் களிப்புறும் நற்செய்தியாகும். (1926)

(10) மகவுபிறந்து பத்து நாட்களிலும் மறைநூல் விதிச்சடங்குகள் செய்து சாதகருமம், நாமகரணம், பாலூட்டல், காப்பணிதல் முதலியவை செய்தல் அந்தணர் மரபு. (1933-1941)

(11) திருநீற்றுக் காப்பே முதற்காப்பு. (1941) அதனினும் சிறந்த காப்பு வேறில்லை.

(12) செங்கீரை - தாலம் - சப்பாணி - வருகை - முதலியானவை பிள்ளைப் பருவத்துக்குரிய கொண்டாட்ட வகைகள். (1942-1948)

(13) முன்னைத் தவமுதிர்ச்சியுடைய குழவிகள் இப்பிறவியில் சிலசமயங்களில் முன்னை நினைவு கொள்ளுதலும் இயல்பு. (1953)

(14) தமது குழவிகளுக்குத் தமது காவலினும் இறைவரது காவல் பெரிது என்றெண்ணிக் கடனாற்றுதல் பெரியோர் தன்மை *(1918)*

(15) எங்கும் கொள்ளத்தக்கதென எண்ணவரும் பால்தானும், இடம், கொள்கலம் முதலியவற்றின் தூய்மை நோக்கிக் கொள்ளற்பாலது: அப்படி நோக்கிக் கொள்வது குழவிகளின் உடல்நலக் குறைவிற் கேதுவாகும். *(1970)*

(16) முன்னைத் தவமுதிர்ச்சியுடைய குழவிகளின் அழுகை முதலிய செயல்கள் கீழைச் சார்பாகிய உலகியல் நிகழ்ச்சிபோலத் தோற்றினும், சிலபோது தமது மேலைச் சார்பினால் நிகழும்: அது பின்னை நிகழும் அருள்வெளிப் பாட்டினால் அறியத்தக்கது. *(1961 - 1969)*

(17) அபர பர ஞானங்களுக்கு மேலாகிய முற்றுமுணரும் சிவஞானம் தவ முதிர்ந்த வழிவரும் இறைவரது திருவருளினாலன்றி அடைதற்கரிது. *(1967-1968)*

பின் சேர்க்கை – 4

பெயர் விளக்கம்

எண்கள் - பாட்டு எண்கள்

அருக்கன் - 1920 ஞாயிறு: கோள்கள் ஒன்பதனுளொன்று

ஆதிரை - 1920 திருவாதிரை நாள்: பிள்ளையார் திருவவதாரஞ் செய்த நாள்: சிவனுக் குகந்த நாள். பிள்ளையாரமுது பாலுண்டு ஞானம்பெற்ற நாளுமாம்.

ஆளுடைய பிள்ளையார் - திருஞான சம்பந்தர் 1899: சிவம் பெருக்கும் பிள்ளையார் 1924: புகலிப் பிள்ளையார் - 1943: பிள்ளையார் 1959: சிவஞான சம்பந்தர் 1967: சம்பந்தர் - 1968: இருக்குமொழிப் பிள்ளையார் - 1978:

சேயபொருட் டிருமறையுந் தீந்தமிழுஞ் சிறக்கவரு நாயகன் 1942: சடை முடியார் ஞானமளித்திடவுரியார் 1945: எங்கள் பிரான் 1951: தெய்வஞானக் கன்று 1892: பைந்தொடியாள் திருமுலையின் பாலறா மதுரமொழிப் பவளவாயர் 1996: சேம வுதயப் பரிதியிற் றிகழ்பிரான் 1939: ஏழிசையும் பலகலையும் எவ்வுலகுந் தனித்தனியே, வாழ வருமவர் 1946: பண்டு திருவடிமறவாப் பான்மையோர் - தொண்டினிலைதர வருவார் 1953: புண்ணியக்கன் றனையவர் - 1960: தவ முதல்வர் 1968: பேருணர்விற் பொலிகின்ற பிள்ளையார் 1970: சிறிய பெருந்தகையார் 1971: மறைச்சிறு போதக மன்னார் 1982: ஞானத்தமுதுண்டார் 1885.

உமை அம்மையார் - ஆளுடையாள் 1919: பெருமலை பயந்த கொடி 1940: மங்கை 1951: பொன்மலைவல்லி - பைந்தொடியாள் 1996: உடையவள் 1973: மலைக்கொடி 1964: சீரணங்கு 1965: உமையம்மை 1966: உமை 1986: ஏழிசை மொழியாள் 1989: சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரா னுடனணைந்த துணைவி யாகும் பைந்தொடியாள்.

கவுணியர் - ஆளுடைய பிள்ளையார் அவதரித்த குடிப் பெயர். கவுணியர் கோத்திரம் 1913: கவுணியர் குலம் 1926.

கழுமலம் 1900 : சீகாழியின் 12 பெயர்களுள் 12-வது பெயர்.

சாமம் 1907 : நால் வேதத்துளொன்று. வேதப் பொதுமையுமாம்.

சிவபாத விருதயர் 1913 : ஆளுடைய பிள்ளையாரது தந்தையார் 1960, 1992.

சிவபெருமான் - சென்னிவளர் மதியணிந்த சிலம்பணி சேவடியார் 1900: புகலித் திருத்தோணி வீற்றிருந்தார் 1918: திருத்தோணி யமர்ந்தபிரான் 1923: நம்பர் 1936: விண்ணோர் நாயகன் 1938: பரமர் 1940, 1953, 1973: ஆறுலவு செய்ய சடை ஐயர் 1941: பெருமழுவர் 1943: கங்கைநதி தவழுஞ் சடைமுடியார் 1945: மங்கையோ டுடனாகி வளர்தோணி வீற்றிருந்த திங்கள்சேர் சடையார் 1951: சேவாண்ட கொடியவர் 1952; தம் பெருமான் 1954; தேவியொடுந் திருத்தோணி வள்ளலாரிருந்தார் 1959, 1997: செம்மேனி வெண்ணீற்றார்

1961: அருட்கருணை யெழுகின்ற திருவுள்ளத் திறையவர் 1964: ***சிவபெருமான் 1965, 1975: அங்கணனார் 1966: யாவர்க்குந் தந்தை தாயெனுமவர் 1967: சிவன் 1968: ஈசன் 1969:*** *ஆளுடையார் 1969: கண்ணுதலான் - அண்ணல் 1975, 1982: வேதகாரணர் - வெண்பிறைசேர் செய்யசடை நாதர் 1977: அருட்கருணைத் திருவாளன் 1978: அங்கணர் 1981: புண்ணியர் 1982: தாணு 1984: துப்புறழ் வேணியர் 1985: பிரான் 1988: வானோர் தனிநாதன் 1989: இறையவன் 1990: எண்ணிய பொருளாய் நின்றவர் 1991: சுந்தரப்பொற் றோணிமிசை யிருந்தபிரான் 1996.*

சீகாழி *- 12 பெயர்பிரமபுரம், சண்பை முதலியன 1912, 1924, 1931, 1995: காழி 1928:*

திருத்தோணி 1923: *சீகாழியில் தோணியப்பர் பெரியநாயகியாருடன் எழுந்தருளியிருக்கும் தோணிவடிவாயமைந்த கோயில். இது விமானம் சிகரத்துடன் கூடியது: இங்குத் தோணியப்பரை வழிபட்டுச் சிவபாத விருதயர், பிள்ளையாரை மகவாகப் பெற்றனர். இங்கு இறைவர் குருவடிவாயெழுந்தருளியிருப்பர் என்பது மரபு 1956: திருத்தோணிச் சிகரம் 1961, 1962: பொற்றோணி 1986:*

திருமகள் *- 1952 இலக்குமி.*

பகவதியார் *- 1914 ஆளுடைய பிள்ளையாரது தாயார்.*

பெரிய நாச்சியார் - 1918 *பெரிய நாயகியம்மையார். திருத்தோணியில் தோணியப்பருடன் எழுந்தருளியுள்ளவர்.*

பொன்னி *- 1900 காவிரி.*

பின் சேர்க்கை – 5

மேற்கோள் நூலகராதி

(1–100 பாட்டுக்கள்)

எண்கள் - பாட்டு எண்கள்

பின் சேர்க்கை – 6

அருஞ்சொற்றொடரகராதி

(1–100 பாட்டுக்கள்)

(எண்கள் - பாட்டு வரிசை எண்கள் குறிப்பன)

அகமருடம்	1956
அடையாளங்கள்	1973
அந்தர துந்துபி - தேவவாத்தியம்	1995
அந்திமாலை	1906
அருட்கருணைத் திருவாளன்	1978
அறுவை யுத்தரியம் - மேலாடை	1993
ஆகுதி வேட்கும்	1905
இருக்கு மொழி	1978
இருதாளின்புணை	1981
உச்சம் - கிரகநிலையின் உயர்வு (சோதிடம்)	1920
உரோம முகிழ்வு - மயிர்க்கூச்சு	1985
உறை நீர்த்துளி	1981
ஐயவி(ப்புகை)	1937
ஓமதூமத் திரவு வேள்விப்புகையினால் உளதாகும் இருள்	1904
ஓரை-காலக் கூறுபாடு-2½ நாழிகை கொண்டது	1920
கத்தவழ	1945
கருவிலங்கு	1976
கலைஞானம்	1968
காப்பு	1941
கிடை - அந்தணச்சிறுவர் மறைபயி லிடம் பள்ளி	1901
குதூகலிப்ப	1960
கோள் - (நவக்கிரகம்)	1920
சப்பாணிக்கொட்டினார் - (பிள்ளைப் பருவம்)	1944
சாதகமுறைப் பல சடங்கு	1933
சாமம்பாடும்	1907
சிவஞான சம்பந்தர்	1966
சிவஞானம்	1968
சிறுமணித்தேர்	1950
சூதநிகழ் மங்கலவினை	1933
செங்கீரையாடினார்- பிள்ளைப்பருவம்	1942
செந்நின்று	1948
செய்தவத்தின் அங்குரம்	1951
செவ்வொளிய மதியம்	1906
தருபித்து	1958
தலைக்கீடு	1959
தலைப்பாடு	1986
தழல்வேதி - யாகத்திண்ணை	1908
தளர்நடையிட்டருளினார்	1948
தளர்நடையி னசைவு	1949
தனிவெள்ளம் பலவிரிக்குங்கருப்பம்	1956
தாணு - இறைவர் - நிறையானவர்	1984
தாமரை மிசைத்தனி முதற்குழவி	1939
திருக்கடைக்காப்புச் சாத்தி	1978
துப்பு - பவளம்	1985
துப்புரவில்லார்	1969

பின் சேர்க்கை – 7

திருஞானசம்பந்த நாயனார் புராணம்

பாட்டு முதற்குறிப்பகராதி

(எண்கள் - பாட்டு வரிசை எண்கள் குறிப்பன)

1999. பெருக்கோலிட் டலைபிறங்குங் காவிரிநீர் பிரசமலர் தரளஞ் சிந்த
வரிக்கோல வண்டாட மாதரார் குடைந்தாடு மணிநீர் வாவித்
திருக்கோலக் காவெய்தி தேவர்பிரான் கோயில்வலஞ் செய்து முன்னின்
றிருக்கோலிட் டறிவரிய திருப்பாத மேத்துவதற் கெடுத்துக் கொள்வார், 101

1999. பொருளுரை:- பெருக்கு ஒலிட்டு...காவிரி-பெருக்கினால் இரைச்சல் செய்து அலைகள் பொருந்தும் காவிரியாறு; நீர்...சிந்த - நன்னீரினுடன் தேன் பொருந்திய மலர்களையும் முத்துக்களையும் சொரிய; வரிக்கோலவண்டு ஆட - மலர்களைச் சூழ்ந்து வரிவண்டுகள் பறந்து செல்ல; மாதரார்...வாவி - பெண்கள் குடைந்து குளிக்கும் அழகிய நீரினையுடைய வாவிகள் பொருந்திய; திருக்கோலக்கா எய்தி-திருக்கோலக்காவினை அடைந்து; தேவர்பிரான்...முன்னின்று-தேவர்களது பெருமானுடைய திருக்கோயிலினை வலமாக வந்து திருமுன்பு நின்று; இருக்கு-எடுத்துக் கொள்வார் - வேதங்கள் முறையிட்டும் அறிவதற்கரிய திருவடிகளைத் துதித்தற்குத் தொடங்கிக் கொள்வாராய்,

விளக்கவுரை:- *காவிரியாறு நீருடன், மலர் தரள மிவற்றைச் சிந்த, நிறையும் நீரினையுடைய வாவி என்று கூட்டிக்கொள்க. சோழ நாட்டிற் பல தலங்களிலும் உள்ள மலர்ப்பொய்கைகள் பலவும் காவிரி நீரினால் நிரம்பும் தன்மை குறிக்கப்பட்டது.*

பெருக்கு ஒல் இட்டு அலைபிறங்கும் *- காவிரியின் அலைகள் பெருஞ் சத்தமிட்டு விளங்கும் தன்மை குறித்தது. "அரவந் திரைக் காவிரி" (நம்பி. தேவா - ஐயாறு -1).* ***பிறங்கும்:*** *பெருக்க ஒலமிட்டு வரினும் அழகுறவிளங்கும்.*

மலர் - தரளம் *- உம்மைத்தொகை.* ***சிந்த*** *- மென்மையுடன் வீச.* ***நீர் சிந்து*** *தலாவது மெல்லெனப்பாய்ந்து வாவிகளை நிரப்புதல்.* ***சிந்துதல்*** *- உகுத்தல்.*

வண்டு ஆட *என்றது தேன் உண்ணும் பொருட்டு மலர்களைச் சூழ்ந்து மொய்த்துப் பறக்க என்ற பொருளில் வந்தது.* ***கோல வரிவண்டு*** *என்று கூட்டி வரிப்பாட்டுக் களைப் பாடும் வண்டுகள் என்றலுமாம்.*

மாதரார்... வாவித் திருக்கோலக்கா *- "மாதரார், குடையும் பொய்கைக் கோலக்கா" என்ற இத்தலத் தேவார ஆட்சி போற்றப்பட்டது. "மொய்யார் தடம் பொய்கை புக்கு முகேரென்னக் கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி" (திருவா.திருவெம். 11)*

இருக்கு *- வேதப்பொது.* ***ஓலமிட்டு அறிவரிய*** *- ஓலிடுதல். பலவாறும் எடுத்துப் போற்றுதல்.* ***அறிவரிய*** *- எல்லை காண முடியாது இளைத்து நின்ற.*

எடுத்து கொள்வார் *- தொடங்குவாராகி; முற்றெச்சம். எடுத்துக் கொள்வார் - கைந்நிறைந்த வொத்தறுத்து என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.* *101*

2000. பொருளுரை:- மெய்...விழுப்பொருளை - உண்மை நிறைந்த செம்பொருள் எனப்படும் வேதங்களிற் கூறிய விழுமிய பொருளாயுள்ளவரை; வேணி...பரித்தருளுவானை - சடையின் மேல் பையினையுடைய பாம்போடு பசுங்குழவிப் பிறையினைத் தாங்குபவரை;

2000. மெய்ந்நிறைந்த செம்பொருளாம்வேதத்தின் விழுப்பொருளை. வேணிமீது
பைந்நிறைந்த வரவுடனே பசுங்குழவித் திங்கள்பரித் தருளு வானை.
மைந்நிறைந்த மிடற்றானை, "மடையில்வா ளைகள்பாய வென்னும் வாக்காற்
கைந்நிறைந்த வொத்தறுத்துக் கலைப்பதிகங் கவுணியர்கோன் பாடுங் காலை. 102

மை-மிடற்றானை - விடம்பொருந்திய திருமிடற்றினை உடையவனை: மடையில் வாளை: வாக்கால் - மடையில் வாளைகள் பாய என்று தொடங்கும் திருப்பதிகத் திருவாக்கினாலே: கை...காலை - திருக்கரங்களினால் அமைந்த கால வரையறையினைச் செய்யும் தாளவொத்துச் செய்து கலைகள் நிறைந்த திருப்பதிகத்தினை கவுணியர் பெருமானாகிய பிள்ளையார் பாடியருளும்போது,

விளக்கவுரை:- செம்பொருளாம் - விழுப்பொருள் என்று கூட்டுக. செம்பொருள் - சிவம். முத்தி முதல். "செம்பொருட் டுணிவே" (திருவா): மெய் நிறைந்த - உண்மையாகிய இறைமைக்குணங்கள் முழுவதுமுடைய என்க.

விழுப்பொருள் - வேதத்துள் கூறப்படும் பொதுவும் சிறப்புமாகிய பலவற்றுள்ளும் விழுமிய பொருளாயுள்ள சிவம் என்பது. "விழுப்பொருளே" (திருவா-பள்ளி 9)

பைந் நிறைந்த அரவு - விடம் நிறைந்த பை என்றும் ஐந்தலை யரவுகளாதவின் மிகுதியாகக்கூடிய நச்சுப்பைகளின் நிறைவுடைய என்றும் உரைக்க நின்றது.

மைந் நிறைந்த மிடற்றானை - தலையிற்றாங்கும் அரவுகளின் பையில் நிறைதலுடன், மிடற்றிலும் நிறைந்த விடம் என்பது: உள்ளும் புறம்பும் விடம் நிறைந்த என்றதாம்.

பரித்தருளுவானை - தாங்கித் திரிந்து அதனால் உயிர்களுக்கு அருள் செய்வர் என்பதாம்.

"மாடையில் வாளைகள் பாய" - பதிகத் தொடக்கம்,

வாக்கால் திருப்பதிகத் துதியினால்.

கைந் நிறைந்த ஒத்து அறுத்து - ஒத்தறுத்தல் - தட்டுதல் நிறுத்தல் எடுத்தலாகிய தொழில்களால் பாட்டின் இசைக் கேற்றபடி கால வரையறையைத்தக்க அளவு படுத்துதல்.

கையதனால் - கைகளை ஏற்றவாறு தாளம் பெற ஒத்துதலினால்.

கலைப்பதிகம் - வேத முதலிய கலைஞான சாரங்களைக்கொண்ட திருப்பதிகம். **கலை** - இசைக்கலை என்றலுமாம். "இன்னிசை யாற்றமிழ் பரப்பும். " (தேவா) 102

2001. பொருளுரை:- கையதனால்...பாடுதலும் - (அவ்வாறு) திருக்கைகளினால் தாளவொத்து அறுதியிட்டுப் பாடியருளுதலும்: கண்டருளி....தாளங்கள் - கண்டு அருள்செய்து கருணைகூர்ந்த சிவந்த சடையினையுடைய தேவர்பெருமானது திருவைந் தெழுத்தினையும் எழுதியுள்ள செம்பொற்றாளங்கள்: ஐயரவர்...ஒத்த - ஐயரவரது திருவருளினாலே எடுத்த அத்திருப்பதிகத்திற்குப் பொருந்திய அளவுபட: தாள

தாளம் பெறுதல்

2001. கையதனா லொத்தறுத்துப் பாடுதலுங் கண்டருளிக் கருணை கூர்ந்த
செய்யசடை வானவர்த மஞ்செழுத்து மெழுதியசெம் பொற்றா ளங்கள்
ஐயரவர் திருவருளா லெடுத்தபா டலுக்கிசைந்த வளவா லொத்த
வையமெலா முய்யவரு மறைச்சிறுவர் கைத்தலத்து வந்த வன்றே. 103

*2002. காழிவரும் பெருந்தகையார் கையில்வருந் திருத்தாளக் கருவி கண்டு,
வாழியதந் திருமுடிமேற் கொண்டருளி, மனங்களிப்ப மதுர வாயில்
ஏழிசையுந் தழைத்தோங்க வின்னிசைவண் டமிழ்ப்பதிக மெய்தப்பாடித்
தாழுமணிக் குழையார்முன் றக்கதிருக் கடைக்காப்புச் சாத்தி நின்றார். 104

ஒத்தறுக்கும்படி: வையமெலாம்... வந்தவன்றே - உலகமெல்லாம் உய்யும்படி வந்தருளிய மறைச்சிறுவராகிய பிள்ளையாரது திருக்கரத்திலே அப்போதே வந்தன.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபுகொண் டுரைக்கநின்றன.

விளக்கவுரை: *கருணை கூர்ந்த - வானவர் என்க.* ***வானவர்தம் அஞ்செழுத்து-*** *வாச்சியத்தோடு வாசகத்தின் இயைபு தோன்ற இவ்வாறு வைத்துக் கூறினார் என்பர் ஆறுமுகத்தம்பிரானார். வானவர் திருநாமமாகிய ஐந்தெழுத்து. அவரது உருவும் திருவுமாகிய எழுத்து என்றலுமாம்.* ***எழுதிய*** *- பொறித்த.*

தாளங்கள் - வந்த *- இதனை "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞான சம்பந்தனுக்குல கவர்முன், றாளமீந்து" என்று ஆளுடைய நம்பிகள் இத்தலத் தேவாரத்தினுட் போற்றுதல் காண்க.*

அன்றே *- அப்போதே.*

எழுதியநற் செம்பொற்றாளம் - ஐயர் திருவருளாலே - வந்ததன்றே என்பனவும் பாடங்கள். 103

2002. ***பொருளுரை:-*** *காழிவரும்...கொண்டருளி - காழியில் வந்தவதரித்த பெருந்தகை யாரான பிள்ளையார் தமது திருக்கரத்தில் வந்த திருத்தாளக் கருவியைக்கண்டு: வாழ்வடையும்படி அதனைத் தமது திருமுடியின் மேலே வைத்துக் கொண்டருளி: மனங்களிப்ப - மனமகிழ: மதுரவாயில்...பாடி - மதுரம் மிக்க திருவாக்கினால் ஏழிசைகளும் தழைத்து ஓங்கும்படி இனிய இசையுடைய வண்மை பொருந்திய தமிழ்ப் பதிகத்தை பொருந்தும்படி பாடியருளி: தாழும்...நின்றார்-விரும்பி ஏற்றருளிய அழகிய குழையணிந்த சிவபெருமானது திருமுன்பு தக்க திருக்கடைக் காப்புச் சாத்தி நின்றருளினர்.*

விளக்கவுரை:- கையில் வரும் திருத்தாளக் கருவிகண்டு - கையில் *- கையினால் ஒத்த றுத்தலைத் தவிர்த்துத் தாளக் கருவிகொண்டு இயற்றுக என்பது போன்று முன்னர் ஒத்தறுத்தியற்றிய அக்கையினுள். வரும்-வந்த வாறறியாமே வந்து இருந்த.* ***தாளக் கருவி கண்டு****-காலவரையறை காட்ட ஒத்த உதவும் கருவியாக வந்ததனைக் கண்டு: வந்த வழி*

காணாது கருவியை மட்டிற்கண்டு. **தாளம்** - காலவரையறை காட்டும் கதி: ஆகு பெயராய்க் கருவிக்கு வழங்கும். அது திருவருளால் வந்ததென்பதைக் கருதலளவையாற் **கண்டு. வாழிய-கொண்டருளி** - திருவைந்தெழுத்து எழுதப்பெற்றிருந்தமையாலும், **திருவருள்** தரவந்த பொருளாதலாலும் திருமுடிமேற் கொண்டனர். **வாழிய** - வாழ்வு **பெறும்படி:** உயிர்கள் வாழ்வடைய என்க. வாழ்வு தரும் என்றலுமாம். "வினைபோய் ஓங்கி **வாழ்வரே**" என்ற பதிகத் திருகடைக் காப்புப் பார்க்க.

மதுரவாயில் - பாடி - "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பும்" என்று **ஆளுடைய** நம்பிகள் இத்திருப்பதிகத்தினைச் சிறப்பித்துப் போற்றிய கருத்து. **ஏழிசை** - துத்தம் முதலிய ஏழு சுரங்கள். **இன்னிசை** - தாளம் முதலிய அமைப்புக்கள். **வண் தமிழ்** - **யாப்பும்,** இசையமைதற் கடனாகிய மொழியும், பயனும். **மதுரம்** - அருள் ஞானச் சுவை.

தாழும் மணிக்குழையார் - குழையணிந்த சிவபெருமான். **தாழ்தல்** - **விரும்புதல்:** அசுவதரன் கம்பளன் என்ற இரண்டு கந்தருவருடைய இசையை விரும்பி **அவர்கள்** வேண்டியவாறே அவர்களைத் தோடும் குழையுமாக அணிந்துள்ளார் என்பது வரலா**று,** அவரிசையின் விருப்பம் பிள்ளையாரது இசையின் விருப்பத்துக்குத் தாழும் என்ப**தும்** குறிப்பு. **குழையார்** என்ற தன்மைபற்றிக் கூறியது இக்குறிப்பு. "தோடுடைய **செவியன்**" என்ற விடத்துரைத்தவையும் காண்க. **தாழும்** - கீழ்தாழ்ந்து தொங்கும் என்றலுமாம்.

தக்க திருக்கடைக் காப்பு - "வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார், **உலங்கொள்** வினைபோய் ஓங்கி வாழ்வரே" என்ற பயன் குறிப்பார் **தக்க** என்றார். **வாழிய** **என்ற** கருத்துமிது. **வாழியர்**-என்பதும் பாடம்.

எய்த - இன்னிசை யியல்பு எல்லாம் எய்த என்க: தாளவொத்தறுத்தல் **பெற** வைத்தார். "எடுத்த பாடலுக் கிசைந்த வளவா லொத்த" (2001) என்று முன் கூறினாராதலின் கையில் வந்த தாளங்கொண்டு ஒத்தறுத்தார் என்று வேறு கூறவேண்டுவதில்லையாயிற்று. மேல்வரும் பாட்டில்" ஓங்கிய நாதத்தளவின்" (2003) என்று தொடர்ந்து கூறுதலும் காண்க.
104

திருக்கோலக்கா திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம்**

மடையில் வாளை பாய மாதரார்
குடையும் பொய்கைக் கோலக் காவுளான்
சடையும் பிறையுஞ் சாம்பற் பூச்சுங்கீழ்
உடையுங் கொண்ட வுருவ மென்கொலோ. **(1)**

நலங்கொள் காழி ஞான சம்பந்தன்
குலங்கொள் கோலக் காவு ளானையே
வலங்கொள் பாடல் வல்ல வாய்மையார்
உலங்கொள் வினைபோ யோங்கி வாழ்வரே. **(11)**

திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு:- சிவபெருமானது இறைமைத் தன்மைகளையே தனித்தனிப் பாடி வியந்தது: இறைமை - உயிர்களை வினை நீக்கி ஆட்கொள்ளும் தலைமை: பறையும் பிணிகள்: பாவந்தளர வேண்டுவீர்: வினையைவீட்ட வேண்டுவீர்: துயரமில்லையே: வினைகணீங்குமே: வினைபோய் ஓங்கி வாழ்வரே என்றவை காண்க. "கோலக்கா வுளானையே வலங்கொள் பாடல்" எனத் திருக்கடைக்காப்பும் காண்க. "வேதத்தின் விழுப்பொருளை - அரவுடனே திங்கள் பரித்தருளு வானை - மைந்நிறைந்த மிடற்றானை" (2000) என்று இக்குறிப்பை ஆசிரியர் எடுத்துக்காட்டியருளுதல் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மடையில் வாளைபாய** - நீர்ச்சிறப்பு: **சடை, பிறை, சாம்பல், கீழுடை** - சிவனது முதன்மை அடையாளங்கள்: (3) **நற்பொறி கொள் அரவம் பூண்** என்க. **மாண** - சிறக்க: **பிணிகள்** - பிறவியால்வரும் கேடுகள்: "பிறவியால் வருவன கேடுள" (**குழகன்** - நம்பி தேவா-7)-(4) **தழுக்கொள்** - உளப்படுத்தித் தழுவிக்கொள்ளும்: **பூதப்படையன்** - நம்பிகள் தேவா - (8): **இழுக்கா** - தவிர்தலின்றி:-(5) **எயிலார்** திரிபுராதிகள்: **எயில்** - மதில்: இரும்பு - வெள்ளி - பொன் இவற்றிலியன்ற மும்மதில்: **எயிலார் சாய எரித்த** - நம்பிகள் பதிகம் (1): -(6) **வெடிகொள்** - நாசம் செய்யும்: -(7) **நிழலார்சோலை** - நீர்வளம்: **கழல்** - வீரக்கழல்: காலணி: **தொழலார்** - தொழும் நெறியினிற்பவர்: (9) **குழகன்** - 3 வது பாட்டுப் பார்க்க. **ஏற்றான்** - ஏறு. இடபம் - இடபத்தை உடையவன்: (10) **பெற்ற** - தாமே செய்து பெற்றுக்கொண்ட: **குலம்** - செழிப்பு - அழகு: வலம் வினைதீர்க்கும் வலிமை: **உலம்** - திண்மை.

*தலவிசேடம்:-***திருக்கோலக்கா** - சோழநாட்டில் காவிரி வடகரை 15-வது பதி. இது திருத்தாளமுடையார்கோயில் என வழங்கப்படும். ஆளுடைய பிள்ளையார் ஞானவமுதுண்ட நாளின் அடுத்தநாள் இங்கு வந்து வழிபடும்போது "மடையில் வாளை" என்ற திருப்பதிகத்தினைக் கையினால் தாளவொத்தறுத்துப்பாடுதல் கண்டிரங்கி, இறைவர், திருவைந்தெழுத்தும் எழுதிய செம்பொற்றாளம் அருளி அதற்கு ஓசையும் கொடுத்தருளினர். அதன்பின் அத்திருத்தாளங்கொண்டு ஒத்தறுத்துப் பதிக நிறைவாக்கி யருளினர் பிள்ளையார். இவ்வருளிப்பாட்டினை ஆளுடைய நம்பிகள் இத்தலப்பதிகத்தினில் 8-வது திருப்பாட்டிற் சிறப்பித்துப் போற்றியருளினர். சுவாமி - **சத்த புரீசர்:** அம்மை - **ஓசை கொடுத்த நாயகி:** பதிகம் 2.

இது சீகாழிப்பதிக்குத் தென்மேற்கு ½ நாழிகையளவில் அடையத்தக்கது. நல்ல பாதை. சீகாழி இருப்புப்பாதை நிலையத்தினின்றும் தெற்கில் வயல்வழி ரயில் பாதைஓரமாக ¼ நாழிகையளவிலும் அடையலாம்: ஆனால் இவ்வழி யிடையில் கழுமல நதியினைக் கடத்தல் வேண்டியுமிருத்தலின் சிரமமானது.

2003. *பொருளுரை:-* உம்பருலகு...நோக்கி - தேவருலகம் அதிசயித்துக் கேட்கும் படி ஓங்கிய அத்திருத்தாள நாதத்தின் அளவு உண்மையினை நோக்கி: தும்புரு...பொழிந்தார்-தும்புரு நாரதர் முதலாகிய சுருதிபயில் இசைத்துறையில் வல்லோராகிய தேவச்சாதியார் யாவரும் துதிசெய்து மண்ணுலகின்மேற் பொருந்தும்படி மணங்கமழும் பூமழை பொழிந்தனர்: மறைவாழ...அருள்போற்றி - வேதங்கள்

2003. உம்பருல கதிசயப்ப வோங்கியநா தத்தளவி னுண்மை நோக்கித்
துமபுருநா ரதர்முதலாஞ் சுருதியிசைத் துறையுள்ளோர் துதித்து மண்மேல்
வம்பலர்மா மழைபொழிந்தார்: மறைவாழ வந்தருளு மதலை யாருந்
தம்பெருமா னருள்போற்றி, மீண்டருளிச் சண்பைநகர் சாரச் செல்வார், 105

வாழ்வடையும் பொருட்டு அவதரித்தருளும் பிள்ளையாரும் தமது பெருமான் செய்த திருவருளினைப் போற்றி: மீண்டருளி - அங்கு நின்றும் விடைகொண்டு மீண்டருளி: சண்பை.சார்வார் - சீகாழியினைச்சென்று சார்பவராகி.

விளக்கவுரை:- உம்பருலகு அதிசயிப்ப - இசை நூல் வல்லோராய்த் தேவச் சாதியார் பலருமிருத்தலின் அவர்பாற் கேட்டதும் தாம் அறிந்ததும் ஆகிய நாதத்தளவின் மிக்கு இருத்தலின் தேவர் அதிசயித்தனர். **அதிசயம்** - இதுவரை கண்டும் எதிர்பார்த்தும் இராத பொருளைக் கண்ட விடத்துத் தோன்றும் பெருமித உணர்ச்சி.

நாதத்து அளவின் உண்மை - நாதத்து அளவினுடன் விளங்கும் மெய்ஞ்ஞானப் பொருள் விளக்கம். **அளவின் நுண்மை** என்று பிரித்துக் கொண்டுரைக்கவும் நின்றது. **உண்மை** - நாதத்தின் அளவு பொருந்திய தன்மை: பண்ணிலே சுரமும் இராகமும் தாளமும் பாட்டின் பொருளோடு அமைந்து நிற்றல். கமகம் என்பர்.

நாதத்தின் நுண்மையாவது எத்துணை யளவால் கூறுபடுத்தினும் மேலே செல்லினும் தன்னியல்பு குன்றாது விளக்கம் பெறக் காணநிற்றல். **நாதம்** - செம்பொற் றாளத்துக்கு அம்மையார் ஓசை தந்தருளினார்: ஆகையால் இத்தல அம்மையார் “ஓசை கொடுத்த நாயகியார்” எனவும், இறைவர் திருத்தாள முடையார் எனவும் பெறுவர் என்பது தலவரலாறு. கோயில் திருத்தாளமுடையார் கோயில் எனப்பெறும்.

தும்புரு நாரதர்...இசைத்துறை உள்ளோர் - இசைவல்ல தேவர்கள்- **சுருதி** - சுதி என வழங்கப்படும். வேதம் எனக்கொண்டு வேதநூல்களுள் விரிக்கப்படும் இசையின் துறை என்றலுமாம்.

மறை வாழ வந்தருளும் மதலையார் - “வேதநெறி தழைத்தோங்க” (1899):

அருள் போற்றி மீண்டருளி - முன்னர்க் “கலைப்பதிகங் கவுணியர் கோன் பாடுங் காலை” (2000) என்றது தாளம் அருளப்பெறு முன்னர்த் தல வழிபாட்டிற் போற்றியது. இடையிற் றாளம் வந்தபின் அவ்வழிபாட்டினையே இடையீடின்றித் தொடர்ந்து “திருக்கடைக்காப்புச் சாத்தி” (2002) முடித்தருளினர். இங்கு **“அருள்போற்றி”** என்றது திருத்தாளம் அருளியது பற்றித் திருவருளினை வந்தித்ததாம்.

மீண்டருளி-அங்கு நின்றும் மீண்டு. **சாரச் செல்வார்** முற்றெச்சம். (2003) **சாரச் செல்வாராகி - நடந்து செல்லும்போது - தோளின்மிசை எழுந்தருளி - அணைந்தார்** (2004) என்று வரும்பாட்டுடன் முடிக்க. 105

2004. செங்கமல மலர்க்கரத்துத் திருத்தாளத் துடனடந்து செல்லும் போது
தங்கள்குலத் தாதையார் தரியாது தோளின்மேற் றரித்துக் கொள்ள,
அங்கவர்தந் தோளின்மிசை யெழுந்தருளி யணைந்தார்சூழ்ந் தமரரேத்துந்
திங்களணி மணிமாடத் திருத்தோணி புரத்தோணிச் சிகரக் கோயில். **106**

2004. பொருளுரை:- செங்கமல மலர்க்கரத்து...செல்லும்போது - செந்தாமரை போன்ற தமது கையில் திருத்தாளத்துடன் நடந்து செல்லும்போழ்து: தங்கள்...தரித்துக்கொள்ள-தமது குலத்தந்தையார் பிள்ளையார் நடந்து செல்வதனைத் தரியாதவராய் அவரை எடுத்துத் தமது தோளின் மேல் தரித்துக்கொள்ள: அங்கு அவர்தம்...எழுந்தருளி - அங்கு அவரது தோளின்மேல் எழுந்தருளியபடியே: சூழ்ந்து...சிகரக்கோயில் - சுற்றிச் சூழ்ந்துகொண்டு தேவர்கள் போற்றுகின்ற திருத்தோணிபுரம் என்ற அத்தலத்தில் திருத்தோணியாகிய சிகரக் கோயிலினை: அணைந்தார் - வந்தணைந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை:- தரியாது - தரித்துக்கொள்ள - *முரண் அணிச் சுவைபடக் கூறியது: "உயிர்வாழத் தரியேனான் றரிப்பதனுக்கு" (1415) என்புழிப்போல.* **தோளின்மிசை எழுந்தருளி** - *"பியலின் மேற்கொண்டு" (1992) என்ற விடத்துரைத் தவை காண்க.* **தரியாது** - *பிள்ளையார் நடந்து செல்லுதலைக் காண மனஞ்சகியாமல்:* **தரித்துக்கொள்ள** - *தாங்கிக்கொள்ள.*

அணைந்தார் - சிகரக்கோயில் - *"நண்ணினார்...நம்பர் கோயில்" (1997) என்ற விடத்துரைத்தவை பார்க்க.*

சிகரக் கோயில் - *"திருத்தோணிச் சிகரம்பார்த்து" என்றது காண்க.*

சூழ்ந்து அமரர் ஏத்தும் - தோணி - *பிரளயத்தும் தாம் அழியாதிருக்கவேண்டித் தேவர்கள் பறவையுருவுடன் தோணியைப்பற்றி சூழ்ந்துகொண்டு துதிக்கின்றனர் என்பது. 1452ல் கீழ்த் தேவாரக் குறிப்பும் பார்க்க.*

திங்களணி - *என்றது மாடம், தோணி சிகரம் என்பவற்றுடன் தனித்தனி கூட்டியுரைக்க நின்றது.*

106

2005. பொருளுரை: திருப் பெருகு...நின்றே...செல்வம் பெருகும் அப்பெருங்கோயிலைச் சூழ வலமாக வந்தருளி இறைவர் திருமுன்பு நின்று: அருட்பெருகு...அவற்றுளொன்று - அருளினாலே பெருகும் திருப்பதிகத்தினைத் தக்கராகப் பண்ணில், பின்னர் வகுத்தபடி, கட்டளைகளுள் எட்டுப்பதிகங்கள் கொண்டதாகிய கட்டளையொன்றில்: விருப்புறு...கொன்றை - தோணியப்பரைப் பாடவேண்டுமென்று பொருந்திய ஆசைக்குத் தக்க வாறே திருவருள் பெற்றுப் "பூவார் கொன்றை" என்று தொடங்கியருளினார்.

விளக்கவுரை: அருட்பெருகு திருப்பதிகம் எட்டு ஒரு கட்டளையாக்கியவற்றுள் ஒன்று - *பிள்ளையாரது திருப்பதிகங்களுள் எட்டுத் திருப்பதிகங்கள் கொண்டதொரு*

2005. திருப்பெருகு பெருங்கோயில் சூழவலங் கொண்டருளித்
திருமுன் னின்றே
யருட்பெருகு திருப்பதிக மெட்டொருகட் டளையாக்கி
யவற்று ளொன்று
விருப்புறுபொற் றிருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட
மேவு காதற்
பொருத்தமுற வருள்பெற்றுப், போற்றியெடுத் தருளினார்
"பூவார் கொன்றை". 107

கட்டளை தக்கராகப் பண் பதிகங்களுள் உண்டு: அந்தக் கட்டளையில் அவ்வெட்டுப்பதிகங்களுள் இத்திருப்பதிகம் ஒன்றாக என்பது கருத்து. தக்காரகப் பண்ணில் இப்போது கிடைத்துள்ள பதிகங்கள் ஏழு (ஆறு? 2909 பார்க்க). கட்டளைகளில் அமைந்தன. அவற்றுள் எட்டுப் பதிகங்கள் கொண்டது முதலாவதாம்: அது இந்தப் பதிகத்தின் கட்டளை அமைவு என்றபடி. இப்பண் பதிகங்கள் எட்டுவகை யாப்பில் அமைந்தன என்பாருமுண்டு.

எட்டு ஒரு கட்டளையாக்கியவற்றுள் என்பது பின்னர் எல்லாப் பதிகங்களையும் பண்முறை வகுத்துப் பாகுபடுத்தியதாகத் திருமுறைகண்ட புராணத்தினுள் கேட்கப் படும் வரலாற்றின் வழி குறித்து, ஆசிரியர் சேக்கிழார் பெருமான் தாம் கண்ட வகையாகக் கூறியது. ஆளுடைய பிள்ளையார் இத்திருப்பதிகம் அருளியபோது இந்தக் கட்டளையில் எட்டுத் திருப்பதிகம் அருளத் திருவுளங்கொண்டு அமைத்தனர் என்பது கருத்தன்று. **ஆக்கியவற்றுள்** - எட்டுப் பதிகங்களை ஒரு கட்டளையாகப் பின்னர் வகுத்தவற்றுள் இத்திருப்பதிகம் ஒன்று என்க. இதற்கு இவ்வாறன்றி வெவ்வேறு பொருள்படக் கொண்டனர் முன் உரைகாரர்கள்.

கட்டளை - ஒரு பண்ணினுள் அமைதியும், யாப்பமைதியும், தாள பேதமும், பாட்டுப் பாதங்களின் நீட்டல் குறுக்கல்களும் கொண்டதொரு பாகுபாடு: திருமுறை கண்ட புராணம் பார்க்க: அருட்பெருகு திருப்பதிகம் - கட்டளையாக்கியவற்றுள் - என்ற கருத்தும் அது.

திருத்தோணி வீற்றிருந்தார் தமைப்பாட மேவுகாதற் பொருத்தமுற அருள்பெற்று - திருக்கோலக்காவில் "மடையில் வாளை" என்ற திருப்பதிகம் பாடி அருளும்போது அதனிடையில் திருத்தாளம் தரப் பெற்றருளினாராதலின், அதன்பின் திருத்தோணியில் அருளும் முதற்பதிகத்தை அப்பண்ணில் அந்தக் கட்டளையில் அந்தத் தாளவிசை யமையப் பாடியருளப் பிள்ளையார் காதல் கொண்டருளினார்: அவ்வாறே திருவருள் செயப் பெற்றனர் என்பது, "இசைதிருத் தாளத்தினா லிசை வொத்தி" என்று இக் கருத்தை மேற்குறிப்பது காண்க.

எடுத்தருளினர் - தொடங்கியருளினர். "**பூவார் கொன்றை**" பதிகத் தொடக்க மாகிய முதற்குறிப்பு. 107

2006. எடுத்ததிருப் பதிகத்தி னிசைதிருத்தா ளத்தினா
லிசைய வொத்தி,
யடுத்தநடை பெறப்பாடி, யார்வமுற வணங்கிப்போந்,
தலைநீர்ப் பொன்னி
மடுத்தவயற் பூந்தரா யவர்வாழ மழவிளங்கோ
லத்துக் காட்சி
கொடுத்தருளி வைகினார் குறைவிலா நிறைஞானக்
கொண்ட லார்தாம். 108

2006. பொருளுரை: எடுத்த.. ஒத்தி - மேலே கூறியவாறு தொடங்கிய அத்திருப்பதிகத்தின் இசையமைதியினைத் திருவருளாற்பெற்ற அத்திருத்தாளத்தினால் பொருந்தும்படி தாள வொத்தறுத்து: அடுத்த-பாடி - முன் பாடியருளிய திருப்பதிகத்தினை அடுத்து அதுபோலவே நிகழும்படி பாடியருளி: ஆர்வமுற வணங்கிப் போந்து - பேர் அன்பு பொருந்த வணங்கிச் சென்று: குறைவிலா நிறை ஞானக் கொண்டலார்தாம் - குறைதல் இல்லாத நிறைவாகிய ஞான மழை சூற்கொண்ட மேகம்போன்ற பிள்ளையார்தாம்: அலைநீர்...வைகினார் - அலைகளையுடைய நீர்பெருகும் காவிரிபாய்கின்ற வயல்கள் சூழ்ந்த சீகாழிப்பதியுள்ளோர் வாழ்வடையும்படி இளங்குழவியாகிய திருக்கோலத்தின் காட்சியைக் கொடுத்து எழுந்தருளியிருந்தனர்.

விளக்கவுரை : திருத்தாளத்தினால் இசைய ஒத்தி *- தாளம் பெற்றபின் பாடிய முதற்பதிகமாதலின் இதனைக் குறித்தருளினார்.* ***இசைய*** *- முன்பாடிய "மடையில் வாளை" என்றதனைப் போலவே அந்தப் பண்ணின் அந்தக் கட்டளைக்குப் பொருந்த.*

அடுத்த நடைபெற *- அதனை அடுத்து அவ்வாறே இதுவும் நடைபெற.* ***அடுத்த*** *- பொருந்திய என்றலுமாம்.*

பொன்னி மடுத்தவயல் *- காவிரி தானாகவே வந்து புகுந்து பாயும் வளம்பெற்ற வயல்கள்.*

பூந்தராயவர் வாழக் - காட்சி *- கொடுத்து சீகாழிவாணர் யாவர்களும் வந்து தம்மைக் கண்டு வாழ்வடையும்படி காட்சிக்கு எளியராய் வீற்றிருந்தருளினர் என்பது. திருநனிபள்ளி முதலிய ஏனைய தலங்களில் உள்ளோர் இவ்வற்புதங் கேட்டு வந்து தரிசிக்கப்பெற்று வாழ்வடைந்தமை மேற்பாட்டிற் கூறப்படுதல் காண்க.*

குறைவிலா நிறை ஞானம் *- "குறைவிலா நிறைவே" (திருவா). ஏனை அளவை எவையும் தத்தமக்கு மேற்பட்ட அளவையை நோக்கக் குறைவுபடக் காணும்: ஆனால் பிள்ளையார் பெற்ற ஞான நிறைவானது பூரணமாய்த் தனக்கு மேற்பட்டதொரு ஞானமில்லாமையால் குறைவிலா நிறைவாமென்க.* ***ஞானக்கொண்டல்*** *- ஞான அமுதமாகிய மறை மொழிகளைப் பெய்யும் மேகம். 108*

2007. பொருளுரை:- அந்நிலையில் - அவ்வாறிருந்தருளும் நாள்களிலே: ஆளுடைய...மறையோரெல்லாம் - ஆளுடைய பிள்ளையாரை முன்னம் ஈன்றளித்த

திருநனிபள்ளி முதல் மறையோர் வருதல்

2007. அந்நிலையி லாளுடைய பிள்ளையார் தமைமுன்ன
மளித்த தாயார்
முன்னுதிக்க முயன்றதவத் திருநன்னி பள்ளிமுதன்
மறையோ ரெல்லாம்
மன்னுபெரு மகிழ்ச்சியுடன் மங்கலதூ ரியந்துவைப்ப
மறைக ளோதிக்
கன்னிமதிற் சண்பைநகர் வந்தணைந்து கவுணியர்கோன் 109
கழலிற் றாழ்ந்தார்.

திருத்தாயாகிய பகவதியம்மையார், முதலில் தன்னிடத்தே வந்து உதிக்க முயன்ற தவத்தினுடைய திருநனிப்பள்ளியில் உள்ள முதன் மறையவர்கள் எல்லாரும்: மன்னுபெரு...தாழ்ந்தார் - நிலைபெறப் பொருந்திய பெருமகிழ்ச்சியுடனே மங்கல வாத்தியங்களின் முழக்குடனே வேதங்களையும் ஓதிக்கொண்டு, கன்ன மதில் சூழ்ந்த சீகாழி நகரின் கண் வந்து அணைந்து கவுணியர் பெருமானது திருவடிகளில் தாழ்ந்து வணங்கினர்.

விளக்கவுரை:- ஆளுடைய-திருநன்னிபள்ளி - பகவதியம்மையார் தன்னகத்தே வந்து உதிக்கும் பொருட்டுத் திருநனிபள்ளி நகரம் தவமுயன்று அப்பேறு பெற்ற தென்பது. நாயன்மார்களும் அவர் தம் தாய்மார்களும் வந்துதித்தலால் அத்தொடர்பு பெற்ற அந்நகரங்கள் தவமுடையன என்பதாம். "ஐயர் நீரவ தரித்திட விப்பதி யளவின்மா தவமுன்பு, செய்தவாறு" (புரா. 179): "தருமபுரம் பெரும் பாணர் திருத்தாயர் பிறப்பிடமாம்" (வை - 444) முதலியவை காண்க.

முன் உதிக்க - பிள்ளை அவதரிப்பதற்கு முன் அதன் பொருட்டுத் தாயார் உதிக்க என்ற திருத்தொடர்புக் குறிப்பு

திருநன்னிபள்ளி - யாப்பு இசை நிறைவு நோக்கி நனிபள்ளி என்பது நன்னி பள்ளியென நின்றது: விரித்தல் விகாரம்.

முதன்மறையோர்- முதன்மைபெற்ற வேதியர். முதன்மையாவது பிள்ளையாரது திருத்தாயரின் சுற்றத் தொடர்புடைய சிறப்பு. முதல் - வழிமுதல் என்றலுமாம். தாயைப்பெற்ற பாட்டனார் (மாதாமகர்) முதலியவர்கள். "மன்னுசீ ரனபாயன் வழிமுதல்." (98)

பெருமகிழ்ச்சி - சிவனருளிய பெருஞானம் பெற்றபேறு தமது மரபுக்குக் கிடைத்த தென்ற பெருங்களிப்பு.

மங்கல தூரியம் துவைப்ப மறைகள் ஓதி - சிவஞானச் சிறப்புக்காண வருகின்றமையால் மங்கலஞ் செய்தலும் மறையோதுதலும் வேண்டப்பட்டன.

கன்னிமதில் - பகைவரால் அழிக்கப்படாத மதில்கள். 1900 பாட்டுப் பார்க்க.

தொண்டர்களும் ஏனையோரும் வருதல்

2008. மங்கலமா மெய்ஞ்ஞான மண்களிப்பப் பெற்றபெரு
வார்த்தை யாலே
எங்கணுநீள் பதிமருங்கி லிருபிறப்பா ளருமல்லா
வேனை யோரும்
பொங்குதிருத் தொண்டர்களு மதிசயித்துக் குழாங்கொண்டு
புகலி யார்தஞ்
சிங்கவிள வேற்றின்பால் வந்தணைந்து கழல்பணியுஞ்
சிறப்பின் மிக்கார். 110

கழலில் தாழ்ந்தார் - "மூவேழ் சுற்ற முரணுறு நரகிடை, யாழா மேயரு ளரசே போற்றி" (திருவா) என்றபடி சுற்றமுழுதும் உய்யச் செய்யும் சிவஞானம் பெற்றாராதலின் பிள்ளையாரது திருவடியில் முதன் மறையோர் எல்லாம் தாழ்ந்தனர். 109

2008. பொருளுரை:- மங்கலமாம்...வார்த்தையாலே - மங்கலஞ் செய்யும் சிவ மெய்ஞ்ஞானத்தை உலகம் மகிழும்படி பெற்ற பெருவார்த்தை கேட்டலாலே: எங்கணும்...அதிசயித்து - நீண்ட அத்திருத்தலத்தின் பக்கத்தில் எங்கணும் உள்ள இருபிறப்பாளர்களும், அவரல்லாத ஏனையோர்களும், பொங்கும் திருத்தொண்டர்களும் அதிசயங்கொண்டு: குழாங்கொண்டு - கூட்டமாகக்கூடி: புகலியார்தம்...மிக்கார் - சீகாழி யவர்களுடைய இளஞ்சிங்கமாகிய பிள்ளையாரிடத்து வந்து அணைந்து அவரது திருவடிகளில் வணங்கும் சிறப்பில் மிகுந்தார்கள்.

விளக்கவுரை:- மங்கலம் ஆம் மெய்ஞ்ஞானம் - **ஆம்** - ஆக்கும். **மங்கலமாவது** இறப்பும் பிறப்பும் இல்லாத பேரின்ப நிலை. "பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம்...உணர்வரிய மெயஞ்ஞானம்" (1968) என்றவிடத் துரைத்தவை பார்க்க. **மங்க** - பேரின்பம்: ல - அணைவிப்பது.

மண்களிப்பப் பெற்ற - மண் - நிலவுலகத்தவர்: **களித்தல்** - துன்பங் கலவாத இன்பமாகிய சிவானந்த வாழ்வடைதல். **களிப்ப** - களிக்கும் பொருட்டு: **பெற்ற** - தம்பொருட்டன்றி உலகமுய்ய ஞானம் பெற்ற.

பெருவார்த்தை - உலகறிசொல். "கடன்கழித்த பெருவார்த்தை" (1296): **திருவார்த்தை** - என்பதும் பாடம். **நீள்பதி மருங்கில் எங்கணும்** - என்க. **நீள்பதி** - திருநனிபள்ளி. **மருங்கில் எங்கணும்** - முன்பாட்டில் அப்பதியில் முதன் மறையோ ரெல்லாம் வந்தமை கூறினார்: இப்பாட்டால் பதியின் எல்லாப் பக்கத்து நின்றும் வந்து கூடிய திருத்தொண்டர், மறையவர் அல்லால் ஏனையோர் - இவர்களது வருகை கூறுகின்றார்.

இருபிறப்பாளர் - முதன் மூன்று வருணத்தார். இவர்கள் உபநயனச் சடங்கு செய்யப்பெற்ற நிலையில் பிரமோபதேசத்தின் மூலம் வேறுபிறப்பினை அடைகின்றார்கள் என்பது மரபு.

அல்லா ஏனையோர் - இருபிறப்பாளரல்லாதாரும், நால்வகை வருணப் பாகுபாட்டில் வாராதோரும்.

2009. வந்ததிருத் தொண்டர்க்கு மல்குசெழு மறையவர்க்கு
மற்று ளோர்க்குஞ்
சிந்தைமகிழ் வுறமலர்ந்து திருவமுது முதலான
சிறப்பின் செய்கை
தந்தமள வினில்விரும்புந் தகைமையினாற் கடனாற்றுஞ்
சண்பை மூதூர்
எந்தைபிரான் சிவலோக மெனவிளங்கி யெவ்வுலகு
மேத்து நாளில், **111**

பொங்கு திருத்தொண்டர்களும்-முன்னர்க் கூறிய பாகுபாடு அவ்வவர் மரபு பற்றியது. ***திருத்தொண்டர்*** என்றது பிறப்பின் மரபுபற்றி எண்ணப்படாது சிவனடிமைத் திருத்தொண்டாகிய ஒன்றேபற்றி எண்ணப்படும் சிறப்புப்பற்றியது. ***பொங்கு***-என்றது முன்னையவற்றினும் சிறப்பாற் பெருகும் என்றதாம். இறுதியில் வைத்த குறிப்புமது. பிள்ளையாரது திரு அவதாரத்தினால் வேதநெறியும் தழைத்தோங்கிற்று: மிகு சைவத் துறையும் விளங்கிற்று என்று தோற்றுவாய் செய்த கருத்தினை, இங்கும், இவ்வாறே பின்வரும் எல்லா இடங்களிலும் கொள்க. இதனையே மேல்வரும் பாட்டில் திருத்தொண்டர்களை முன்வைத்துக் காட்டிய திறமும் காண்க.

குழாங் கொண்டு - அவ்வவரும் திரளாகக் கூடி.

சிங்க இள ஏறு - பிள்ளையார். ஏறுபோல்பவரை ஏறு என்ற துவமையாகுபெயர். ***சிங்கம்*** - "பரசமய கோளரி" என்பது கருத்து.

கழல்பணியும் சிறப்பின் மிக்கார்-முன்பாட்டில் நனிபள்ளி முதன் மறையோர் ***கழலிற்றாழ்ந்தார்*** என்றது அவர்தம் மரபின் தொடர்பு பற்றிப் போந்த குறிப்பு: ஈண்டுக் ***கழல்பணியும் சிறப்பின் மிக்கார்*** என்றது மரபின் தொடர்ச்சி பற்றாது மெய்ஞ்ஞானம் பெற்ற சிவத்தொடர்பே கருதிப்போந்தனர் என்ற சிறப்புக் குறிப்பு. ***சிறப்பின்மிக்கார்*** - என்றது அக்குறிப்பு. ***110***

2009. பொருளுரை:- வந்த- மற்றுளோர்க்கும்-வந்து கூடிய திருத்தொண்டர்களுக்கும், பொருந்திய செழுமறையவர்களுக்கும், மற்றையோர்களுக்கும்: சிந்தை...தகைமை யினால் - மனமகிழ்ச்சியுற்று முகமலர்ந்து திருவமுது செய்வித்தல் முதலாகிய சிறப்புடைய செயல்களைத் தங்கள் தங்கள் அளவினில் விரும்புந் தன்மையினாலே: கடன் ஆற்றும் - தத்தம் கடமையாகச் செய்தற்கிடமாகிய சீகாழிப்பதியானது: எந்தை பிரான்...நாளில் - எமது இறைவரது சிவலோகமே என்று விளக்கம் பெற்று எல்லா வுலகமும் துதிக்கின்ற நாளிலே,

விளக்கவுரை:- ***வந்த...மற்றுளோர்க்கும்*** - வைப்புமுறை சிறப்புக் குறித்தது. ***பல்கு செழு மறையவர்*** - அடைமொழிகள் மரபொழுக்க மேன்மை குறித்தன.

சிந்தை மகிழ்வுற மலர்ந்து - "அகத்தி னழகு முகத்திற் றெரியும்" என்பது பழமொழி. ***மலர்தல்*** - முகமலர்தல்: நகை முகமும் இன்சொல்லும் முதலாயின.

2010. செழுந்தரளப் பொன்னிசூழ் திருநன்னி பள்ளியுள்ளோர்
தொழுது, "திங்கட்
கொழுந்தணியுஞ் சடையாரை யெங்கள்பதி யினிற்கும்பிட்
டருள வங்கே
யெழுந்தருள வேண்டு" மென, விசைந்தருளித், தோணிவீற்
றிருந்தார் பாதந்
தொழுந்தகைமை யாலிறைஞ்சி, யருள்பெற்றுப், பிறபதியுந்
தொழமுன் செல்வார்; 112

சிறப்பின் செய்கை - ஏனை உபசரிப்புக்கள். **சிந்தை** - மனத்தின் செய்கையினையும், **மலர்ந்து** - வாக்கின் செய்கையினையும், **செய்கை** - காயத்தின் செய்கையினையும் குறித்தன.

தம்தம் அளவினில் - தமது இயல்பு செல்லும் அளவும்.

கடன்ஆற்றும் சண்பைமூதூர் - தமது கடமையென்று மேற்கொண்டு செய்யும் ஊர். ஊரில் உள்ளார் தொழில் ஊரின்மேல் ஏற்றப்பட்டது.

சிவலோகம் என விளங்கி - சிவஞான குருமூர்த்திகளாகி விளங்கிய பிள்ளையாரை வழிபட வந்தார்களை அத்தொடர்பொன்றே கருதி வழிபட்டமையால் சிவனை வழிபடலன்றி வேறறியாத கணங்களின் தன்மைபெற்றனர் சீகாழி வாழ்வார்: அவர்க்கிடமாதலின் சீகாழி சிவலோகமென விளங்கிற்று என்பது.

நாளில் (2009): என - இசைந்தருளி - அருள்பெற்றுத் தொழச் செல்வார் (2010), போந்தார் - ஞானமுண்டார் (2011) என இம்மூன்று பாட்டுக்களையும் கூட்டி முடிக்க.

தொண்டர்கட்கும் - என்பதும் பாடம். 111

2010. *பொருளுரை:-* செழுந்தரளப்பொன்னி...தொழுது - செழுமையுடைய முத்துக்களைத்தரும் காவிரி சூழ்ந்த திருநனிபள்ளியிலுள்ளவர்கள் (பிள்ளையாரைத்) தொழுது: "திங்கள்..வேண்டும்" என - "இளஞ்சந்திரனையணியும் சடையினை யுடைய சிவபெருமானை எங்கள் தலத்திலே கும்பிட்டருளும் பொருட்டுத் தேவரீர் அங்கு எழுந்தருள வேண்டும்" என்று விண்ணப்பிக்க: இசைந்தருளி - அதற்கு உடன்பட்டருளி: தோணி...அருள்பெற்று - திருத்தோணியிலே வீற்றிருந்த பெருமானுடைய திருவடிகளை வணங்கும் முறையாலே வணங்கி அருள்விடை பெற்று: பிற பதியும்தொழ முன் செல்வார் - (திருநனிபள்ளியேயன்றிப்) பிறபதிகளையும் தொழுவதற்கு முற்பட்டுச் செல்வாராயினர்: அப்போது,

விளக்கவுரை:- **தொழுது...என** - இது திருநனிபள்ளியவர்கள் பிள்ளையாரிடம் செய்துகொண்ட விண்ணப்பம். **தொழுது** - விண்ணப்பிக்கும் முறை. **திங்கட் கொழுந்து** - பிறைச்சந்திரன். இவ்விண்ணப்பம், அவர்கள், பிள்ளையார், எழுந்தருளு வதனால் தாமும் தமது பதியும் தவப்பயன்பெற்று உய்யும்படி செய்துகொண்டனர். **"யானுமென்பதியுஞ் செய்ததவ மென்கொல்"** (புரா - 672) என்று மங்கையர்க்கரசியார் கூறிய கருத்துக்காண்க.

பிள்ளையாரது இரண்டாவது தலயாத்திரை

2011. தாதவிழ்செந் தாமரையி னகவிதழ்போற் சீறடிக
டரையின் மீது
போதுவதும் பிறரொருவர் பொறுப்பதுவும் பொறாவன்பு
புரிந்த சிந்தை
மாதவஞ்செய் தாதையார் வந்தெடுத்துத் தோளின்மேல்
வைத்துக் கொள்ள,
நாதர்கழ றம்முடிமேற் கொண்டகருத் துடன்போந்தார் 113
ஞான முண்டார்.

தோணிவீற்றிருந்தார்...அருள்பெற்று - ஒரு தலத்தினின்று புறப்படும்போது இறைவரது அருள் விடைபெற்றுச் செல்வது மரபு. இதனைப் பின்னரும் பல இடங்களிலும் காணலாம். **அருள்** -அருள்விடை.. திருவீழிமிழலையில் பிள்ளையார் திருவருள் வினவியதற்குக் கனவில் நாயகர் அருளிய வரலாறும், பிறவும் காண்க.

பிறபதியும் தொழ - ஒரு தலத்தைக் குறித்துச் செல்லும்போது இடையிலும் மருங்கிலும் உள்ள தலங்களிலும் சென்று வணங்குதல் மரபு.

இங்குக் கூறிய கருத்துக்களை நமது வாழ்க்கையிலும் கைக்கொண்டொழுகுதல் அருள்வழி நிற்கும் நலத்தைத்தரும் வழியாகும்.

முன் செல்வார் - முற்பட்டுச் செல்வாராயினர்: அப்போது - என வருவித்துக் கொள்க. **செல்வார் - போந்தார்** என்று முடிக்க.

112

முன்சென்றார் - என்பதும் பாடம்.

2011. பொருளுரை:- ஞானமுண்டார் - திருஞானவமுதுண்டவராகிய பிள்ளையார்: தாதவிழ்...போதுவதும் - இதழ்கள் விரியும் செந்தாமரை மலரின் உள்ளிதழ்கள் போன்ற சிறிய திருவடிகள் தரையிற் பொருந்த நடந்து செல்வதனையும்: பிறரொருவர் பொறுப்பதுவும் - மற்றவர்களுள் எவர் ஒருவர் தாங்குவதனையும்: பொறாஅன்பு...தாதையார்-பொறுக்கலாகாத அன்பு புரிந்த சிந்தையினையுடைய மாதவஞ்செய் தந்தையார்: வந்து-வைத்துக்கொள்ள - வந்து எடுத்துத் தமது தோளின்மேல் தரித்து வைத்துக்கொண்டு செல்ல: நாதர்கழல்...போந்தார் - **தாம் சிவபெருமானது திருவடிகளைத் தமது திருமுடியின் மேற்கொண்ட சிந்தையினையுடையவராய் இவ்வாறு போந்தருளினர்.**

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை:- தாதவிழ்...போதுவதும் - இது சிவபாத இருதயர் எண்ணியது. **சீறடிகள்** - சிறிய திருவடிகள். **தாமரையின் அகவிதழ்போல்** - மெய்யும் உருவும் பற்றிவந்த உவமை. செம்மை, மென்மை, தண்மை, வடிவம் முதலிய ஒப்புமை. **அகவிதழ்** - புறவிதழ்களினும் அகவிதழ் இத்தன்மைகளால் மிக்கன. **போதுவது** - பொருந்த நடத்தல்.

2012. தேனலருங் கொன்றையினார் திருநன்னி பள்ளியினைச்
சாரச் செல்வார்
"வானணையு மலர்ச்சோலை தோன்றுவதெப் பதி?" யென்ன,
மகிழ்ச்சி யெய்திப்
"பானல்வயற் றிருநன்னி பள்ளி"யெனத் தாதையார்
பணிப்பக் கேட்டு
ஞானபோ னகர்தொழுது நற்றமிழ்ச்சொற் றொடைமாலை
நவில லுற்றார். **114**

பிறர் ஒருவர் பொறுப்பது - அத்திருவடிகள் தரையில் சேராமல் பிள்ளையாரைப் பிறர் ஏந்துதல். *பொறுத்தல்* - தாங்குதல்.

போதுவதும் பொறாஅன்பு - *பொறுப்பதுவும் பொறாஅன்பு* என்க. பிள்ளையார் நடந்து செல்வதனைப் பொறுக்கலாற்றாமைக்கும், அவ்வாறு நடந்து செல்லாது பிறர் தாங்குதலைப் பொறுக்கலாற்றாமைக்கும் காரணம் அவர்பால் வைத்த அன்பு ஒன்றே என்பது.

பொறாஅன்பு புரிந்த - பொறுக்கலாற்றாதபடி - சகியாதபடி - கூர்ந்த அன்பினை இடைவிடாது மேற்கொண்ட.

மாதவஞ்செய் தாதையார் - "ஈறில் பெருந்தவ முன்செய்து தாதை யெனப் பெற்றார்" (1983) என்ற கருத்துக் காண்க.

வந்தெடுத்துத் தோளின்மேல் வைத்துக்கொள்ள - மாதவஞ்செய் தாதையா ராதலின் இவ்வாறு செய்தனர் எனக் காரணக் குறிப்புப்பட அடை புணர்த்தி யோதினார்:

நாதர்கழல் தம்முடிமேற்கொண்ட கருத்துடன் - தம்மைத் தாதையாரும் பிறரொருவரும் ஒரோவழித் தாங்கினும் தாம் இடைவிடாது நாதர்கழலைச் சிரமேற் றாங்கிக்கொண்ட கருத்தினையே கொண்டிருந்தனர். "அடியலாற் பேணா வெம்பிரான்" "மறக்குமா றிலாத வென்னை" "ஈசன் கழலே பேணும்" (தேவா முதலியவை கருதுக.

ஞானமுண்டாராதலின் என்று கழல் முடிமேற்கொண்ட கருத்துடையவராதற்குக் காரணங் கூறியபடி. - **தோளின்மிசை** - என்பதும் பாடம். 113

2012. (பொருளுரை) தேனலரும்..செல்வார் - தேன் துளிக்க அலர்கின்ற கொன்றை மாலையினை அணிந்த இறைவர் எழுந்தருளியுள்ள திருநனிபள்ளியினை சாரும்படி அணிமையில் செல்வாராகிய: ஞானபோனகர் - ஞானவமுதுண்ட பிள்ளையார்: வான் அணையும்..என்ன - "வானமளாவும் மலர்ச் சோலைகளுடன் தோன்றுவது எந்தப்பதி?" என்று வினவ: தாதையார் - தந்தையாராகிய சிவபாத விருதயர்: மகிழ்ச்சி எய்தி...எனப் பணிப்பக்கேட்டு - மகிழ்ச்சியடைந்து, "அது நீலங்கள் மலரும் வயல்கள் சூழ்ந்த திருநனிபள்ளியாம்" என்று சொல்லக்கேட்டு: தொழுது..நவிலலுற்றார் - வணங்கி,

நன்மைதரும் தமிழ்த்தொடை மாலையாகிய திருப்பதிகத்தைச் சொல்லத் தொடங்கினவராய்:

விளக்கவுரை:- சாரச்செல்வார் - ஞானபோனகர் - என்னக் கேட்டுத் **தொழுது - நவிலலுற்றார்** என்று கூட்டி முடிக்க.

தேன் அலரும் - தேன்பாய விதிகின்ற: தேன் - வண்டு என்று கொண்டு, **தேன்கள்** அலர்த்தும் எனலுமாம். "தேனலர் கொன்றையார்" (681)

சார - அணிமையில் சாரும்பொருட்டு என்றலுமாம். சேர - என்பதும் **பாடம்.**

வான் அணையும் மலர்ச்சோலை தோன்றுவது எப்பதி? என்ன - இது **பிள்ளையார்** தமது தாதையாரை அவர் தோளிலிருந்தபடியே வினவியது. அவர் "அது **திருநனிபள்ளி"** என்று கூறக்கேட்டு அங்குத் திருத்தோளிலிருந்தபடியே தலத் திருப்பதிகத்தினை**யும்** அருளிச்செயதனர் என்பது "இடுபறை யொன்ற **அத்தர் பியன் மே லிருந்தின் னிசையா லுரைத்த பனுவல்"** என்ற திருக்கடைக்காப்பின் அகச் சான்றினா லறியக்கிடக்கின்**றது.** "தோளின்மேல் வைத்துக்கொள்ள" (2011) என்று முன் பாட்டிற் கூறிய வரலாற்றுக்**கும்** இஃது அகச்சான்றாகும்

வான் அணையும் மலர்ச்சோலை-இவை அத்தலத்தின் நந்தனவனங்கள் போ**லும்.** "சோலை நகர்தான்" என்ற திருப்பதிகமும் காண்க.

பானல் வயல் திருநன்னிபள்ளி - 'வயன்மேதி வைகு நனிபள்ளி" "மணநாறு **நீல** மலரும்" என்ற திருப்பதிகமும் காண்க.

பணிப்ப - கருதிச் சார்ந்ததலம் காட்சிப்படுதலால் வணங்கும் இடம் இது என்று குறிப்பார் போன்று கூறுதலால் **பணிப்ப** என்றார்.

தொழுது - மனத்தாலும் கைகளாலும் சிரத்தாலும் வணங்கி எனப் பொதுப் படக் கூறிய கருத்து.

நவிலல் - வாக்கின் வணக்கம்.

நற்றமிழ்ச்சொற் றொடைமாலை - அடைமொழிகள் இப்பதிகப் பெருமை குறித்தன.

இப்பதிகத்தின் ஐந்திணை நெறியளாவிய தமிழ்வள நிலையும் பாலை நெய்தலும் முல்லையுமாக்கிய பயனும், வினைகெடுதலாகிய பெரும்பயனும் குறிக்க **நற்றமிழ்** என்றார். **சொற்றொடைமாலை** - யாப்பியலும் சந்தவியலும் பிறநலன்களும் குறித்தது. பதிகக் குறிப்பும் பதிகப் பாட்டுக் குறிப்பும் பார்க்க. **114**

2013. பொருளுரை:- காரைகள்-பாடி -"காரைகள் கூகை முல்லை" என்று தொடங்கிச் செல்லும் கலைசேரும் வாய்மை விளங்கும் சிறப்புடைய இயற்பதிகத்தினைப் பாடியருளி: திருக்கடைக் காப்புத்தன்னில்-திருக்கடைக்காப்பில்: நாரி... பெருமை வைத்தார் - உமையம்மையாரை ஒருபாகத்திலுடைய சிவபெருமான் நிலை பெற்று எழுந்தருளிய

வேறு

2013. "காரைகள் கூகை முல்லை" யெனநிகழ் கலைசேர் வாய்மைச்
சீரியற் பதிகம் பாடித் திருக்கடைக் காப்புத் தன்னில்
"நாரியோர் பாகர் வைகு நனிபள்ளி யுள்கு வார்தம்
பேரிடர் கெடுதற் காணை நம"தெனும் பெருமை வைத்தார். **115**

திருநனிபள்ளியை நினைப்பவர்களுடைய பேரிடர்கள் கெடுவதற்கு நமதே ஆணையாம்" என்ற பெருமையினைப் பொறித்துவைத்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை:- "**காரைகள் கூகைமுல்லை**" என இது பதிகத் தொடக்கம்.

கலைசேர் - அபரஞானம் என்னும் வேத முதலிய சகல கலை ஞானங்களின் தொகுதி - **வாய்மை** - பரஞானம். **கலைசேர் - சீர்ப் பதிகம்** என்றும், **வாய்மை யியற் பதிகம்** - என்றும் நிரனிறையாகக் கூட்டுக. "கலைஞானம் - மெய்ஞ்ஞானம்" (1968) என்ற கருத்துக்களை ஈண்டுச் சிந்திக்க. இவ்வாறு கூறுதலின் காரணம் திருக்கடைக்காப்பின் "**ஆணை நமது எனும் பெருமை**" என்ற குறிப்பும் என்பது மேல் ஓதப்பட்டது.

"**நாரியோர்..நமது**" **எனும் பெருமை** - இது "எந்தை நனிபள்ளி யுள்க வினை கெடுத லாணை நமதே" என்ற பதிகத் திருக்கடைக்காப்பைச் சொல்லும் பொருளும் ஆட்சிபெற ஆசிரியர் விளக்கியபடி. பெருமை - பெரும்பயன் குறித்தலாலும், "ஆணையின்" என்ற ஞானநூற் கருத்துப்பெற ஆணை பெறக் கூறுதலானும், அதுதான் தாம்பெற்ற ஞானச்சிறப்பின் றேற்றம் பெறக் கூறுதலானும் பெருமை எனப்பட்டது. இத்திருப்பதிகம் "பாலை நெய்தல் பாடியதும்" என்று ஞான சாத்திரத்தினுள் விதந்து பேசப்பட்ட பெருமையுடையது. நம்பியாண்டார் நம்பிகளால் பலவாறும் போற்றப்பட்டது. பதிகக் குறிப்புப் பார்க்க. பாகர் **மன்னும்**-என்பதும் பாடம். *115*

திருநனிபள்ளி **பாலைநெய்தல் பாடியது** **பண் - பியந்தைக்காந்தாரம்**

திருச்சிற்றம்பலம்

காரைகள் கூகை முல்லை களவாகை யீகை படர்தொடரி கள்ளி கவினிச்
சூரைகள் பம்மி விம்மு சுடுகாட மர்ந்த சிவன்மேய சோலை நகர்தான்
தேரைக ளாரை சாய மிதிகொள்ள வாளை குதிகொள்ள வள்ளை துவள
நாரைக ளாரல் வாரி வயன்மேதி வைகு நனிபள்ளி போலு நமர்காள். (1)

கடல்வரை யோத மல்கு கழிகானல் பானல் கமழ்காழி யென்ற கருதப்
படுபொரு ளாறு நாலு முளதாக வைத்த பதியான ஞான முனிவன்
இடுபறை யொன்ற வத்தர் பியன்மே லிருந்தி னிசையா லுரைத்த பனுவல்
நடுவிரு ளாடு மெந்தை நனிபள்ளி யுள்க வினைகெடுத லாணை நமதே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு - தந்தையார் தோளின்மேல் இருந்து எழுந்தருளும்போது எதிர் தோன்றியபதி திருநன்னிபள்ளி எனக் கேட்ட பிள்ளையார் அத்திருத்தலம் இறைவனது பதியாகும்: அதனை உள்குவார் வினைகெடும்: அதற்கு ஆமோ நாது என்றருளிய பதிகம் பாலை நெய்தலாக்கி, அதனையே கானமும் மருதமுமாக்கிய பதிகம் என்று இதன் தன்மைபற்றிப் பலவிடத்தும் எடுத்துப் போற்றினர் நம்பியாண்டார் நம்பிகள். "நாதனனிபள்ளி சூழ்நகர் கானக மாக்கியஃதே, போதின் மலிவய லாக்கிய கோன்" (ஆளு. பிள். அந் - 17,) "கள்ளம் பொழினனி பள்ளித் தடங்கா மாக்கியஃதே. வெள்ளம் பணிநெய்த லாக்கிய வித்தகன்" (ஆளு. பிள். சண்பை விருத் - 4): "ஒண்கெழுவு ஞாலத் தினரறிய மன்னுநனி பள்ளியது, பாலைதனை நெய்த லாக்கியும்" (ஆளு. பிள். உலா - 75) என்றவையும், பிறவும் காண்க. "பாலை நெய்தல் பாடியதும் நந்தங் காணம்போ லல்லாமை காண்" (களிற் - 12) என்று இதன் நுட்பத்தை ஞானசாத்திரம் விளக்கிப் போற்றிற்று. ஆனால் பிள்ளையார் இன்னின்னவாறு ஆகுக என்று எண்ணிப் பாடியருளினாரிலராதலாலும், அவர் தெய்வத் திருவாக்கின் வாய்மைத் திறம்பற்றியே அவை அவ்வாறு விளைந்தனவாதலாலும், பிறவாற்றாலும் ஆசிரியர் இதனை அவ்வாறு விரித்துக் கூறினாரிலர் போலும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு - (1) **காரைகள்..சுடுகாடு** - பாலையும் பாலைக் கருப்பொருள்களும் குறிப்ப. **சோலைநகர்** - முல்லையும், **வயன்மேதி**-மருதமும் குறித்தன: **நமர்காள்** - சூழ இருந்த அடியாரை விளித்துக் கூறியருளியபடி. **சிவன்மேய - நகர், இடங்கொள்பதி, காதனகர், உகந்த நகர், அமர்ந்த நகர்** என்றிவ்வாறு பதிகத்துள் வரும் கருத்துக்களைத் தொகுத்து "நாரியோர் பாகர் வைகும் நனிபள்ளி" (2013) என்று உரை வகுத்தருளினர் ஆசிரியர். **போலும்** - தேற்றப் பொருள்பட வந்தது.-(2) **வெள்ளம்** - கங்கை.-(3) **அலர்ந்த** தொண்டர் வழிபாடு செய்ய, மலருக்காக வளைத்துவிடுத்த கொம்பினால் அலர்ந்த என்க. "தவமுயல்வோர் மலர்பறிப்பத் தாழவிடு கொம்புதைப்ப" (மேகரா. கழுமலம்) என்ற கருத்து. **நறுமலர்**-நீலம்.-(4) **உமைபாகமாக வுடையான்**-"நாரியோர் பாகர்" (2013). **சோலைமாலை** - சோலையினிடத்து மாலைப்போதில். -(5) **விதி** - நூல் விதி: விதியென்று விரலால் வெறிநீர் தெளிப்ப-வெள்ளமாகும் என்க. **நீர் தெளித்தல்**-உரியமந்திரம் பாவனைகளுடன் தெளித்தல்.-(6) **மலரா**-மலர்போல.-ஆ-ஆக: ஆக்கம் உவமை குறித்தது. (7) **அனலுமிழு நாகம்** - நாக வடிவுடைய படை: **புகை**-தூபம், **பூசல் பணிவார்கள்** - பூசலிட்டுப் பணிபவர்கள். **பூசல்** - பேரொலி "பூசலிட" (நம்பி) **நகைமலிமுத்திலங்கு மணல்சூழ் கிடக்கை** - இது நெய்தல் பாடியது என்பர்.-(8) **உலம்** - வல்லமை. **யாதும் நிகர் இல்லை** என்க. - அளவுகடந்தது. (9) **புறவிரி** - முல்லை..**கொன்றை** "கானகமாக்கி": முல்லையின்குறிப்பு -(11) **காழிபதி** - காழி என்பது 10-வது பெயராய்வரும் தலம். **ஆன** - உதித்த: **அத்தர்பியன் மேலிருந்து..பனுவல்** - சரித அகச்சான்று. **ஆணைநமதே** - "ஆணைநம தென்னவலான்" (ஆளு. பிள். தொகை) என்று நம்பி யாண்டார் நம்பிகள் போற்றினர்.

தலவிசேடம் - **திருநனிபள்ளி** - III பார்க்க.

2014. ஆதியார் கோயில் வாயி லணைந்துபுக் கன்பு கூர
நீதியாற் பணிந்து போற்றி நீடிய வருள்முன் பெற்றுப்
போதுவார் தம்மைச் சூழ்ந்து பூசுரர் குழாங்கள் போற்றும்
காதல்கண் டங்க மர்ந்தார் கவுணியர் தலைவ னார்தாம். 116

2015. அம்பிகை யளித்த ஞான மகிலமு முய்ய வுண்ட
நம்பெருந் தகையார் தம்மை யெதிர்கொண்டு நண்ண வேண்டி
உம்பரும் வணங்கு மெய்ம்மை யுயர்தவத் தொண்ட ரோடுந்
தம்பெரு விருப்பால் வந்தார் தலைசையந் தணர்க ளெல்லாம். 117

2014. பொருளுரை: ஆதியார்...போதுவார் - ஆதியாருடைய திருக்கோயிலின் வாயிலினை அணைந்து உள்ளே புகுந்து அன்புமேலிட நீதியாலே பணிந்து துதித்து நீடிய அருளைப் பெற்று வெளிப்போதுவாராகிய: கவுணியர் தலைவனார் தாம்-கவுணியர் தலைவனாராகிய பிள்ளையார்: தம்மை...அமர்ந்தார் - தம்மைச் சூழ்ந்துகொண்டு மறையவர் கூட்டங்கள் போற்றுகின்ற காதலினைக்கண்டு அங்கு விரும்பி எழுந்தருளியிருந்தனர்.

விளக்கவுரை: கோயில் வாயில் அணைந்து - *வரும் வழியில் பதி தோன்றக்கண்டு பாடிய அந்த இடத்தினின்றும் கோயிற்றிருவாயிலை அணைந்து,*

நீதி *- நியதி: பணியும் முறை.*

தம்மைச் சூழ்ந்து...போற்றும் காதல் கண்டு அங்கு அமர்ந்தார் *- தமது தாயர் பிறப்பிடம் என்ற தொடர்பினாலன்றிச், சூழ்ந்து போற்றும் பூசுரர்களது காதலினைக் கண்டு அவர்களுக்கு அருண்முகமளித்துக் காட்சியளிக்கும் பொருட்டு என்க. "காட்சி கொடுத்தருளி வைகினார்" (2006) என்றது காண்க.*

அன்பு கூரும் காதல் *- என்பதும் பாடம்.* 116

2015. பொருளுரை: அம்பிகை...வேண்டி - உமையம்மையார் அளித்த திருஞான அமுதத்தினை உலகமெல்லாம் உய்யும்படி உண்டருளிய நமது பெருந்தகையாகிய பிள்ளையாரை எதிர்கொண்டு அடையும்படி: உம்பரும்...தொண்டரோடு - தேவர்களும் வணங்குகின்ற மெய்ம்மையுடைய உயர் தவத்திற் சிறந்த திருத்தொண்டர்களுடனே: தலைசை அந்தணர்களெல்லாம் - திருத்தலைச்சங்காட்டில் வாழும் அந்தணர் எல்லாரும் தம்பெருவிருப்பால் வந்தார் - தமது பெருவிருப்பத்தினால் வந்தார்கள்.

விளக்கவுரை: *பெருந்தகையாரை எதிர்கொண்டு வணங்க வேண்டித் தவத்தொண்டரோடும் அந்தணர்கள் வந்தார் என்று முடிக்க.*

அம்பிகை - பெருந்தகையார் - தவத்தொண்டர் - அந்தணர் *என்று இப்பாட்டில் வைத்த வைப்பு முறையின் சிறப்புக் குறிப்புக் கருதுக.*

பிள்ளையார் திருநனிபள்ளியில் எழுந்தருளியுள்ளதனை அறிந்து தலைச்சங்காட்டி னின்றும் தொண்டர்களோடு அந்தணர்கள் அவரை எதிர்கொண்டு வணங்கித் தமது தலத்துக்கு அழைத்துகொண்டு செல்லும்பொருட்டு வந்தனர். அவர்கள் எதிர்கொண்டு

2016. காவணம் மெங்கு மிட்டுக் கமுகொடு கதலி நாட்டிப்
பூவணை தாமந் தூக்கிப் பூரண கும்ப மேந்தி
யாவண வீதி யெல்லா மலங்கரித் தண்ண லாரை
மாவணை மலர்மென் சோலை வளம்பதி கொண்டு புக்கார். **118**

---

*அழைத்த முறை வரும்பாட்டிற் கூறப்படுகின்றது தலைச்சங்காடு - திருநனிபள்ளியின் தென் கிழக்கில், திருச்செம்பொன்பள்ளி - திருவாக்கூர் இவற்றின் வழியாய் **6** நாழிகையளவில் உள்ளது.*

உம்பரும் வணங்கும் - மெய்ம்மை - உயர்தவம் - *இம்மூன்று அடைகளும் திருத்தொண்டரின் சிறப்புணர்த்தின. ஓடு உருபை அவர்களுடன் சார்த்தியோதியதும் அக்கருத்து.*

தலைசை *- திருத் தலைச்சங்காடு. பெருவிருப்பு - பேரார்வம்.* ***117***

*2016. **பொருளுரை:** காவணம்...அலங்கரித்து - பந்தர்கள் எங்கும் இட்டும், கமுகுகளையும் வாழைகளையும் நாட்டியும் பூமாலைகளைத் தொங்கவைத்தும், பூரண கலசங்களை ஏந்தியும், அங்காடி வீதிகளையெல்லாம் பலவகையாலும் அலங்காரம் செய்தும்: அண்ணலாரை - பெருமையுடைய பிள்ளையாரை: மாவணை...புக்கார் - வண்டுகள் மொய்க்கும் பூக்கள் நிறைந்த மென்சோலைகள் சூழ்ந்த வளத்தையுடைய தமது தலத்திற் கொண்டு புகுந்தனர்.*

விளக்கவுரை: *பிள்ளையாரது வருகையின் பெருமைக்கு ஏற்றவாறு தமது பதியினை அலங்கரித்து எதிர்கொண்டு அழைத்துச் சென்றனர். பெரியோர்களை வரவேற்கும் முறைபற்றி முன் உரைத்தவையும் கருதுக.*

பூவணை தாமந் தூக்கி *- "பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, துணையுற வறுத்துத் தூங்க நாற்றி" (முருகு)*

ஆவண....அலங்கரித்து *- ஆவண வீதிகளில் பண்டங்களைப் பார்வைபெறப் பல வேறு வகைகளில் வைக்கும் முறையே அலங்கரிப்பாமாதலின் அங்கு அலங்கார வகை வேறு கூறிற்றிலர்.*

மா *- வண்டு*

பூவணத் - மாவண-*என்பனவும் பாடங்கள்.* ***118***

*2017. **பொருளுரை:** திருமறையோர்கள்...மல்க - திருமறையவர்கள் சூழ்ந்து அவ்வவர் சிந்தையில் மகிழ்ச்சி மேன்மேற் பெருகப் பெருமறைகளை ஓதும் ஓசையைப் பெருக்க: பெருந் திருக்கோயில்...பணிந்து - பெருந்திரு மாடக் கோயிலினைச் சேர்ந்து அருமறைகளின் பொருளாய் விளங்கும் இறைவரை வணங்கி: அணிநற் சங்கத்தின்...அருளிச் செய்தார் - அழகிய வலம்புரிச் சங்கத்தின் முறைநெறியில் அமைக்கப்பட்ட அத்திருக்கோயிலின் கண் அவ் விறைவர் விரும்பி வீற்றிருந்தருளும் தன்மை பற்றித் திருப்பதிகத்தை அருளிச் செய்தனர்.*

2017. திருமறை யோர்கள் சூழ்ந்து சிந்தையின் மகிழ்ச்சி பொங்கப்
பெருமறை யோசை மல்கப் பெருந்திருக் கோயி லெய்தி
அருமறைப் பொருளா னாரைப் பணிந்தணி நற்சங் கத்தின்
தருமுறை நெறியக் கோயில் சார்ந்தமை யருளிச் செய்தார் 119

விளக்கவுரை: மறைஓசை மல்க - மல்க - மல்குவிக்க எனப் பிறவினைப் பொருளில் வந்தது. மறைகளின் ஓசை முழங்கும்படி கூடி ஓத.

*பெருந் திருக்கோயில் - மாடக்கோயில். இது கோச்செங்கட் சோழ நாயனார் இறைவருக்கு அமைத்த 78 மாடக் கோயில்களுள் ஒன்று. இவை **பெருங் கோயில்** எனப்பெறும். இறைவர் மாடத்தின்மேலே எழுந்தருளியிருப்பர். மேலே செல்லும் படிகள் நேரே அமையாது, யானை ஏறாதபடி இருபுறமாகப் பக்கங்களில் வகுத்து அமைக்கப்பட்டிருக்கும். "செங்கணான், அந்தமில்சீர்ச் சோணாட்டி லகனாடு தொறு **மணியார், சந்திரசே கரனமருந் தானங்கள் பலசமைத்தான்**" (கோச்-சோ-புரா-14). வைணவ ஆசாரியரான திருமங்கை யாழ்வாரும் இதனைப் பாராட்டிப் பாடியுள்ளார்.*

***அணிநற் சங்கத்தின் முறை நெறிதரும் அக்கோயில்** - என்க. **நற்சங்கம்** - வலம் புரிச்சங்கம்.*

***முறை நெறி தரும்**-அத்திருக்கோயில் பிரணவாகாரமாகிய வலம்புரிச் சங்கத்தின் வடிவமாக அமைக்கப்பட்டிருக்கின்றமை குறிப்பு. வலமாகச் சுழித்து வரும் சுற்றுக்களும், நடுவில் கருப்பவீடும், அதன் நடுவில் மேலே இறைவர் விளங்குவதும் **முறை. நெறியா**வது சங்கத்தினில் எப்போதும் முழங்கும் நாதத்தின் பொருளாய் இறைவர் விளங்குவர் என்பது. **அருமறைப் பொருளானாரை** என்றதும் இக்குறிப்பு.*

***சார்ந்தமை**-இத்திருக்கோயிலை எடுத்துத் தாபித்த சோழர்கருதியவாறே இறைவர் இதனுள் எழுந்தருளி விரும்பி வீற்றிருத்தல். "தலைச்சங்கைக் கோயிலே கோயிலாகத் தாழ்ந்தீரே" - "கோயிலாக அமர்ந்தீரே" - "இருந்தீரே" - "மகிழ்ந்தீரே" - "கொண்டீரே" - "நயந்தீரே" - "கலந்தீரே" - "நினைந்தீரே" "**சேர்ந்தீரே**" - "நின்றீரே" "ஓங்குகோயில் மேயானை" என்ற தேவாரக் கருத்தினை விளக்கியது. முன் உரைகாரர்கள் வேறு உரைத்தனர். 119*

***அடிபணிந் தஞ்சொன்மாலை**-என்பதும் பாடம்.*

*2018. **பொருளுரை:** கறையணிகண்டர்..வந்து - விடத்தினை அணியாக வைத்தருளிய கழுத்தினையுடைய சிவபெருமானது திருக்கோயிலைப் பேரார்வத்தினாலே பணிந்து, திருப்பதிகம்பாடிப் பின், வேதியர்கள், தம்மைச் சூழ்ந்து துதிக்க வெளிப் போந்து: திருவலம்புரத்து..போந்து - திருவலம்புரம் என்ற திருத்தலத்திலே சிவ பெருமானைத் தொழுதுபாடும், "கொடியுடை மும்மதில்" என்று தொடங்கும் திருப்பதிகத்தினால் துதித்துப் புறம்போந்து: நிறைபுனல்...செல்வார் - நிறைபுனலை யுடைய திருச்சாய்க்காட்டினைத் தொழுவதற்கு நினைந்து செல்வாராய்,*

2018. கறையணி கண்டர் கோயில் காதலாற் பணிந்து பாடி
மறையவர் போற்ற வந்து திருவலம் புரத்து மன்னும்
இறைவரைத் தொழுது பாடுங்"கொடியுடை" யேத்திப் போந்து
நிறைபுனற் றிருச்சாய்க் காடு தொழுதற்கு நினைந்து செல்வார். **120**

விளக்கவுரை:- காதலால் - செங்கண்ணனார் கருத்துக்கிசைய இறைவர் **அங்கு** விரும்பி வீற்றிருக்கும் திருவருட் பெருக்கினை நுகர்ந்த காதல்.

திருவலம்புரம் - இது மேலப் பெரும் பள்ளம் என்று வழங்கப்படும்.

கொடியுடை - முதற் குறிப்பு. **கொடியுடை ஏத்தி** - "கொடியுடை" **என்று** தொடங்கும் பதிகம் பாடி. முதற் குறிப்பினாற் போந்த பெயர்.

நிறைபுனல் திருச்சாய்க்காடு - காவிரி கடலுடன் கலக்குமிடமாதலின் **நிறை புனல்** என்றார். காவிரிவெள்ளம் பெருகும் காலத்தில் நேரே பாய்வதும் குறிப்பு. **நீர்** நிறைந்ததாயினும் கடல் முழுமதி முதலிய நாட்களிலன்றிக் குளிக்கப் பயன்படாது: **ஆயின்** இங்குக் காவிரி கூடுவதனால் எப்போதும் பெரும் தீர்த்தமாக ஆகியது என்பதும் **குறிப்பு.** "புணரி தன்னையும் புனிதமாக் குவதோர் நன்னெடும் பெருந்தீர்த்தம்" (404) **என்றதும்,** ஆண்டுரைத்தவையும் பார்க்க.

நினைந்து - திருத்தலைச்சங்காடு பணிந்து, திருவலம்புரத்துக்குப் போந்த பிள்ளையார், மற்றும் அயலில் உள்ள தலங்களையும் வணங்க வேண்டும் என்று **நினைந்து.** தலயாத்திரை நியதியறிந்து உலகுய்யக் காட்டவந்த ஆசாரியராதலின், இவ்வாறு கூறினார்.

செல்வார் - ஏத்திப் - பாடிப் - புக்கார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

பாடி யினிதமர்ந் தேத்தி-என்பதும் பாடம். 120

திருவலம்புரம் திருச்சிற்றம்பலம் **பண் - பழம்பஞ்சுரம்**

கொடியுடை மும்மதி லூடுருவக் குனிவெஞ் சிலைதாங்கி
யிடிபட வெய்த வமரர்பிரா னடியா ரிசைந்தேத்தத்
துடியிடை யாளையோர் பாகமாகத் துதைந்தா ரிடம்போலும்
வடிவுடை மேதி வயல்படியும் வலம்புர நன்னகரே. 1

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அடியார் இசைந்து உள்ளுருகி ஏத்த ஆவியுள் நின்றருள் செய்யவல்ல அழகர் இடம் வலம்புர நன்னகரே: அவரது அடிக்கே சிறுகாலை ஏத்துமின்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) இசைந்து-மனமொன்றி: கூடி என்றலுமாம். **துதைதல்**-பிரிவின்றிக் கூடுதல்: **வடிவு**-அழகிய உருவம்-(2) **கோத்த கல்லாடை**-காவிக்கல் தோய்த்த உடை. **திசையவர்**-எல்லாத்திசையிலுமுள்ளோர்: **காய்ந்த கல்ஆல்** - ஒருவகை ஆல்-(3) **நொய்யதோர்...நிலையாக்கி** - மெல்லிய மான்கன்றை விரனுனியில் நிலைபெற நிறுத்தி.

2019. பன்னகப் பூணி னாரைப் பல்லவ னீச்ச ரத்துச்
சென்னியால் வணங்கி யேத்தித் திருந்திசைப் பதிகம் பாடிப்
பொன்னிசூழ் புகாரி னீடு புனிதர்தந் திருச்சாய்க் காட்டு
மன்னுசீர்த் தொண்ட ரெல்லா மகிழ்ந்தெதிர் கொள்ளப் புக்கார். **121**

இறைமைத்தன்மை காட்டுவது குறிப்பு. - (4) **பொருள்** - **உறுதிப்பொருள்** - நிலைபெற்றபொருள், **சிறு காலை** - புலர் காலை - வைகறை. சூரியனுதிக்க ஐந்து நாழிகை உள்ள பொழுது-(5) **கலுழி** - காட்டாறு: **செழுநீர்** - கங்கை:- (6) **பண்ண வண்ணத்தன்** - பண்ணேயுடைய வண்ணப்பாடல். **வண்ணவண்ணப்பறை**-பலவகையினவாகிய பெரும்பறைகள். -(7) **வரைதருதொல் புகழ்வாழ்க்கை** - **வரைதல்** - விதித்தல். விதிப்படி நிகழும் பழமையும் புகழுமுடைய வாழ்க்கை. -(10) **ஆவியுள்நின்று** - உயிர்க்குயிராய் நீங்காமலிருந்து. **வல்ல** - பிறர்க்கு அருமை குறித்தது - (11) **வல்லியம்** - புலி: உடையும் மேல் ஆடையும்.

தலவிசேடம் - **திருவலம்புரம்** - காவிரியின் தென் கரையில் 44-வது தலம். சிவலிங்கப் பெருமான் றிருமுடியில் பெரும்பள்ளம் உண்டு. அதனால் இது மேலப் பெரும்பள்ளம் என்று பெயர் வழங்கப்படும் என்ப. கீழைப் பெரும்பள்ளத்தினின்றும் பிரித்தறிய இப்பெயர் வழங்குவ தென்றுலுமாம். விட்டுணு பூசித்துச் சங்கு பெற்றனர். திருநாவுக்கரசரை இறைவர் வாவா எனத் தாமே அழைத்துக் காட்சியளித்த பதி என்பது அவர் தேவாரத்தால் கருதப்படும். சுவாமி-**வலம்புரநாதர்:** அம்மையார் - **வடுவகிர்க்கண்ணியம்மை**. பதிகம் 4. பல்லவனீச்சரத்தினின்றும் தென்மேற்கு மட்சாலை வழி 2 நாழிகையளவில் அடையலாம்: திருவெண்காட்டினின்றும் 5 நாழிகையளவில் உள்ளது.

2019. **பொருளுரை:** பன்னகப்பூணினாரை-பாடி - பாம்புகளை அணிகளாக அணிந்த பரமசிவனைத் திருப்பல்லவனீச்சரத்தில் முடியால் வணங்கித் துதித்துத் திருந்தும் இசையினையுடைய திருப்பதிகத்தினைப்பாடியருளி: பொன்னி...புக்கார் - காவிரி சூழும் புகார் நகரத்தின் நீடு புனிதராகிய இறைவர் எழுந்தருளியுள்ள திருச்சாய்க் காட்டில் நிலைபெற்ற சிறப்பினையுடைய திருத்தொண்டர்கள் எல்லாம் மகிழ்ச்சியுடன் எதிர்கொள்ளப் புகுந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்க நின்றன.

விளக்கவுரை:- பல்லவனீச்சரத்துப் பூணினாரை வணங்கி என்க.

பல்லவனீச்சரம் - திருவலம்புரத்தினின்றும் திருச்சாய்க்காடு சென்று அடையத் தக்க திருக்கோயில்.

திருந்து இசைப் பதிகம் - திருந்து - பதிகம் என்று கூட்டுக. திருந்துதற்கேது வாகிய பதிகம் என்க. "இவர் தன்மை யறிவார்" என்று உலகர் அறிவுறுத்தப் பெற்று திருந்தும் தன்மை காண்க. **திருந்து இசை** என்பதற்கு இதுவரை நான்கு அடிகளாலியன்ற இசை விருத்தப்பாவின் யாப்பினாற் பதிகங்கள் கட்டளையிட்டருளிய பிள்ளையார், இங்கு, அதனை மாற்றி ஈரடி யாப்பினால் அமைத்தும், **அறிவாரார்** என்ற வினாவினால் முடிபு

காட்டியும் வைத்த முறை குறித்ததென்று கொள்வது பொருந்தும். இப்பொருளில் திருந்து என்பது வேறுபாடு காட்டும் என்று கொள்க.

புகார் - காவிரிப்பூம்பட்டினம். *நீடு* - திருச் சாய்க்காடு என்க. புகார் - சோழர்களது வளமிக்க தலைநகரங்களுள் ஒன்று. நீண்ட பழங்காலத்துத் தமிழ் மக்களது நாகரிக மிக்க அழகிய கடற் றுறைமுகப் பட்டினம், பட்டினப்பாலை சிலப்பதிகாரம் முதலிய பழந்தமிழ்ப் பெருநூல்களுள் இதன் உண்மை வளம் பேசப்பட்டுள்ளது. வாணிபச் சிறப்பு வாய்ந்தது. திருப்பல்லவனீச்சரமும், திருச்சாய்க்காடும் இதன் அணிமையில் அமைதலால் இதனை ஒட்டியே "பட்டினத்துறை பல்லவனீச்சரம்", "பூம்புகார்ச் சாய்க்காடு" என்று பெயர் வழங்கப் பெற்றமை காண்க. "வளம்புகார் நகரம்" (404) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

திருச்சாய்க்காட்டுப் - புகார் என்க. சில பிரதிகளில் இப்பாட்டு அடிகள் மாறியும், **121**
வேறு பாட பேதங்கொண்டும் காணப்படுகின்றது.

திருப்பல்லவனீச்சரம் திருச்சிற்றம்பலம் **பண் - பழம்பஞ்சுரம்: ஈரடி**

பரசு பாணியர் பாடல் வீணையர் பட்டி னத்துறை பல்லவ னீச்சரத்
தரசு பேணிநின் றாரிவர் தன்மை யறிவாரார். **(1)**

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பரசு பாணியர் - பச்சை மேனியர் என்பன முதலாக ஏத்தப் படுகின்ற இறைவர் பட்டினத்துப் பல்லவனீச்சரத்தில் எழுந்தருளியுள்ளார்: இவர் தன்மை அறிவார் யார்? அருண்ஞானம் பெறாதவர் யாவராலும் அறிய வொண்ணாதவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு- (1) பாணி - கை: **பரசுபாணியர்** - மழுவைத் தாங்கிய கையினர்:- (2) **பட்டநெற்றி** - தலைமைப் பட்டத்திற்குரிய அடையாளம் காட்டிய நெற்றி. (5) **எல்லி** - இரவு -(6) **பச்சைமேனியர்** - மேனியில் ஒருபாகத்தில் பசிய நிறமுடைய அம்மையை உடையவர் - (7) **எங்குமாயிருப்பர்** - சர்வ வியாபகர். இவ்வாறு ஒரு தலத்தில் விளங்க வீற்றிருந்தும் எங்கும் நிறையும் தன்மைக்கு இழுக்கில்லை என்பது. **(8) ஆதியாயிருப்பவர்** - நித்தியர்: என்று மிருப்பவர் என்ற தன்மைக் கிழுக்கில்லை என்பது - (9) **படி** - உலகம். **படிகொள்மேனியர்** - விசுவரூபி: படி - முறைமை எனக்கொண்டு, ஆணும் பெண்ணும் முறைமையிற் பூண்ட மேனியர் என்றலுமாம். **படி** -- முறைமை என்பது "அழுந்தை மறையோர் படியாற்றொழ", "அடியார் படியார விசைபாடி" **(தேவா)** முதலியவற்றாற் காண்க. இது திருவ. சு. செங்கல்வராய பிள்ளையவர்கள் குறிப்பு. -**(11) மாதர்** - அழகிய.

தலவிசேடம் - திருப்பல்லவனீச்சரம் - பல்லவ அரசனால் எடுக்கப்பட்ட கோயிலாதலின் இப்பெயர் பெற்றது. **இயற்பகை நாயனாரது தலமாகிய புகார் நகரத்தின்** அணிமையில் உள்ளது, **பட்டினத்தடிகள்** அவதரித்துப் பேறடைந்த தலம். அவரது திருநாள் பெரு விழாவாக நகரத்தார் எனப்படும் தனவைசியர்களால் ஆடிமாதத்திற் கொண்டாடப்

2020. வானள வுயர்ந்த வாயி லுள்வலங் கொண்டு புக்குத்
தேனலர் கொன்றை யார்தந் திருமுன்பு சென்று தாழ்ந்து
மானிடந் தரித்தார் தம்மைப் போற்றுவார் "மண்புகா" ரென்
றூனெலா முருக வேத்தி யுச்சிமேற் குவித்தார் செங்கை. **122**

பெறுகின்றது. கோயில் அணிமையில் திருப்பணி செய்யப் பெற்றுள்ளது. பட்டினத்தடிகளும், தேவியாரும், அவர் தாயார் - பத்திரகிரியார் - நாயடியார் - சேந்தனார் - தேவியார் என்ற இவர்களது உற்சவத் திருவுருவங்கள் அமைக்கப் பெற்றுள்ளன. இது காவிரிப்பூம் பட்டினத்துப் பல்லவனீச்சரம் எனப்படும். **பட்டினத்துறை** என்ற தேவார ஆட்சியும் காண்க. சீகாழிக்குத் தென்கிழக்கில் 10 நாழிகையளவிலும், திருச்சாய்க்காட்டுக்குக் கிழக்கே 1/4 நாழிகையளவிலும் உள்ளது.

2020. பொருளுரை:- வலங்கொண்டு - வலமாகச் சுற்றிவந்து: வானளவுயர்ந்தவாயிலுள் புக்கு - வானளவும் உயர்ந்த திருவாயிலினுள்ளே புகுந்து: தேனலர்..தாழ்ந்து - தேன்பிலிற்ற மலர்கின்ற கொன்றைமாலை யணிந்த பெருமானது திருமுன்பு சென்று தாழ்ந்து: மானிடம்..என்று - மானை இடத்திற்றரித்த சிவபெருமானைப் போற்று வாராய், "மண்புகார்" என்று தொடங்கி: ஊனெலாம்...செங்கை - ஊன் எல்லாம் உருகும்படி ஏத்தித் தமது சிவந்த திருக்கைகளை உச்சிமேற் கூப்பி வணங்கினார்.

விளக்கவுரை:- வலங்கொண்டு - வாயில் - உள்புக்கு - என்க. திருக்கோயிலை **வலங்கொண்டு** என்றும், வாயிலின் உள்புக்கு வலங்கொண்டு என்றும் உரைக்க. **வானள வுயர்ந்த** - உயர்ச்சிக் குறிப்பு. இந்திரன் முதலிய வானவர் பூசித்த வரலாற்றுக் குறிப்புமாம். தலவிசேடம் பார்க்க.

புக்குத் - திருமுன்பு சென்று - மாடக் கோயிலாதல் குறிப்பு.

போற்றுவார் - போற்றுவாராகி: முற்றெச்சம். **போற்றுவார் என்று - ஏத்தி** - என்ற கூட்டுக. இனி, இரட்டுற மொழிதலால், போற்றுவார் என்பதனைப் பலர்பாற் பெயரென்று கொண்டு "மானிடந் தரித்தார் தம்மைப் போற்றுபவர்கள் மண்புகார்" என்று பதிகப்பாட்டுக் குறிப்புப்பெற உரைத்ததாகக் கொள்ளுதலுமொன்று.

ஊனெலா முருக - கற்றாருங் கேட்டாரும் ஆகிய எல்லாருடைய ஊனும் உயிரும் உருக. **எல்லாம்** - ஊன் முதலிய ஏழுவகைத் தாதுக்கள் எல்லாம். ஊனும் அதனுள் வாழும் உயிரும் எல்லாம் என்றலுமாம்.

செங்கை குவித்தார் - என்க. வினையின் விரைவுபற்றி வினைச்சொல் முன்வந்தது.

மான் இடந் தரித்தார் - மானை இடது கையில் ஏந்தியவர். மான்போன்ற உமையம்மையாரை இடப்பாகத்து வைத்தவர் என்றலுமாம். மும்மலமுடைய உயிர்களுக்கு அருளவேண்டி அவர் போன்று மானிடச் சட்டை தரித்துக்கொண்டு குருவாக வெளி வந்தருள்பவர் என்ற குறிப்புமாம். இப்பொருளில் மானுடம் என்பது மானிடம் என நின்ற தென்க. *122*

திருச்சாய்க்காடு I திருச்சிற்றம்பலம் பண் - **சீகாமரம்**

மண்புகார் வான்புகுவர் மனமிளையார் பசியாலுங்
கண்புகார் பிணியறியார் கற்றாருங் கேட்டாரும்
விண்புகா ரெனவேண்டா வெண்மாட நெடுவீதித்
தண்புகார்ச் சாய்க்காட்டெந் தலைவன்றாள் சார்ந்தாரே. **1**
நீநாளு நன்னெஞ்சே நினைகண்டாய் யாரறிவார்
சாநாளும் வாழ்நாளுஞ் சாய்க்காட்டெம் பெருமாற்கே
பூநாளுந் தலைசுமப்பப் புகழ்நாமஞ் செவிகேட்ப
நாநாளு நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே. **3**
நொம்பைந்து புடைத்தொல்கு நூபுரஞ்சேர் மெல்லடியார்
அம்பந்தும் வரிக்கழலு மரவஞ்செய் பூங்காழிச்
சம்பந்தன் றமிழ்பகர்ந்த சாய்க்காட்டுப் பத்தினையும்
எம்பந்த மெனக்கருதி யேத்துவார்க் கிடர்கெடுமே. **11**

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு - *புகார்ச் சாய்க்காட்டின் எம் தலைவன்தாள் சார்ந்தார் மண்புகார்: வான்புகுவார்: அவர்தாள் சாரும் நெறி அவரை எந்நாளும் நினைப்பதுவும், பூச்சுமந்து வணங்குதலும், நாமஞ் சொல்லுதலும், புகழ் கேட்பதுவுமாம். ஆதலின் அவர் தாள் மலர் தூவித் தொழுமின்: அவரை அடைமின்: அவரது அடியார்க்குச் சுவர்க்கங்கள் பொருளல: அவரை எண்ணுவார்க்கிடரிலை.*

பதிகப் பாட்டுக் குறிப்பு-*(1)* **புகார்** - சொற்பின்வருநிலை. இத்தலத்தினைப் **புகார்** நகரச் சார்பு பற்றியே கூறுதலும் காண்க. "பூம்புகார்ச் சாய்க்காடே பதியாக" "காவிரிப்பூம் பட்டினத்துச் சாய்க்காடு" என்பன காண்க. இப் பாட்டுப் பதிகக் குறிப்பு உணர்த்துவதாம் என்று **"போற்றுவார் மண்புகார்" என்று - ஏத்தி** - என ஆசிரியர் காட்டி யருளுதல் காண்க. **மண்புகார்** - மண்ணுலகிற் பிறவார். **வான்** - சிவனது உலகம். **விண்புகாரென வேண்டா** - போக பூமியாகிப் பிறவிக் கேதுவாகிய தேவருலகத்தும் புகமாட்டார் என்பது சொல்ல வேண்டியதில்லை. **மனமிளைத்தல் பசியாற் கண்புகுதல் - பிணி அறிதல் - இவை** சொல்ல வேண்டியதில்லை. மனமிளைத்தல் பசியாற் கண்புகுதல் - பிணி அறிதல் - இவை இம்மைப் பிறவியில் வரும் துன்பங்கள். இனிப் பிறவியில்லை யென்பதனோடு இம்மையிலும் துன்பமில்லை என்பது இடரிலையே -*(8)* இடர்கெடுமே-*(11)* என்பவற்றாற் காண்க. **வெண்மாட நெடுவீதித் தண்புகார்** - புகாரின் அற்றைநாட் சிறப்பும் வளமும் குறித்தது. புகார் என்ற சொற்பின்வருநிலையும் அக்கருத்து. **சார்ந்தார்** - "சார்புணர்ந்து" (குறள்)-*(2)* **காடு-வாய்** - என்க. **வந்தடைந்த பேய்க்காடல் புரிந்தான்**-தலவரலாறு பற்றியது. பொதுவியல்பு பற்றிய தென்றலுமாம்.-*(3)* நெஞ்சை நோக்கிக் கூறுவது போல உலகுக்குக் கூறும் நல்லுபதேசம். **நன்னெஞ்சே** - நன்மைபெறும் ஆசை உடைய என்பது குறிப்பு. யாரறிவார்? ஆதலின் - நாளும் நினை என்க. பின்னை என்னாது இன்று தொட்டே நாணாளும் நினைவதற்குக் காரணங்கூறியபடி. **சுமப்ப** - மிகுதி குறித்தது. புகழும் நாமமும் கேட்ப என்று உம்மைத் தொகை.-*(4)* உலகை நோக்கி வழிகாட்டி ஆணையிட்டது.-*(5)*

ஓங்கினார் ஓங்கினார் - சொற்பின் வருநிலை: அடியின் கீழ் ஓங்கினார், நிலையில் மேல் ஓங்கினார் என்க. கீழ் ஓங்குதலாவது அடிமைத் திறத்தில் முந்துதல். **ஓங்கினார்** - உறுதியும் விரைவும் பற்றி எதிர்காலம் இறந்த காலமாகக் கூறப்பட்டது. **உலகம்** - அறிந்தோர்-(6) **ஒய்ந்து ஆர** - **ஓய்தல்** - தேயும் நிலை அற்று ஓய்வு பெறுதல்: **ஆர** - அமர.-(7) **மங்குல் தோய் மணிமாட மதி தவழும்** - அந்நாளின் புகாரின் நகரச் சிறப்பு. **மங்குல்** - மேகம். **கொங்கு உலா** - மணம் தெரிந்து அவ்விடத்துச் சேரும். மண முதிர்தலால் அலரும் பருவம் அறிதல் என்க. **சுவர்க்கங்கள்** - விண்ணுலக போகங்கள். அவற்றை அடியார் பொருட்படுத்தார். "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்த ராதி யின்பமும்" (திருவா)-(8) **தொடலரியதொருகணை** - எரி - அரி - கால் - என்ற மூன்றுமே கணையாதல் குறிப்பு: கணை தொட்டாரலர் என்றதும் குறிப்பு (9) **வையம் நீர் ஏற்றான்** - பூமியை நீரினின்றும் (கடல்) எடுத்தவன்: திருமால்: நீரினால் ஏந்தப்பட்டவன்-கடலிற் பள்ளிகொள்ளும் - என்றலும் கருத்து. வையத்தை மாவலி வார்த்த நீரோடு ஏற்றவன் என்றலுமாம்: **ஐயன்** - பெருமையுடையோன்-(10) **குறங்கு** - தொடை. **ஓவி** - நீக்கி - என்க. இடையில் கட்டும் நால் விரற் கோவணமுமின்றி அமணாக. சமண குருமார் வழக்கு. **அறங்காட்டும்** - அறத்தை உபதேசிக்கும். (அறம் - கொல்லாமை). **காட்டல்** - காட்டும் பேச்சு - சொல். பெருமானைத் தெய்வமாய்ப் பேணாதார் தெளிவுடையரல்லர் என முன்பாட்டிலருளி, இங்கு அலர்தூற்றும் சொற்கேளாதார் தெளிவுடையர் என்றது எதிர் மறையானும் உடன்பாட்டானும் எடுத்துக் காட்டியது. (11) **நொம்பைந்து** - பந்து என்பது பைந்து என நின்றது. **எம்பந்தமென** - எமது உறுதியான கடமை என்றவாறு,

தலவிசேடம் - திருச்சாய்க்காடு - இது சாயாவனம் என்று வழங்கப்படும். காசிக்குச் சமானமாக எண்ணப்படும் திருமறைக்காடு (வேதாரணியம்) - திருவையாறு - திருமயிலாடுதுறை (மாயூரம்)-திருவிடைமருதூர் (மத்தியார்ச்சுனம்) - திருச்சாய்க்காடு (சாயாவனம்) - திருவாஞ்சியம் (ஸ்ரீவாஞ்சியம்) என்ற ஆறுதலங்களுள் ஒன்று. இத்தலங்களில் இறக்கப் பெறகின்றவர் முத்தியடைகுவர் என்பது கொள்கை. இத்தலத்தில் அமுதேசுவரரை ஒரு காலத்தில் இந்திரனது தாயார் தினமும் வந்து பூசித்துச் சென்றமை கண்டு, அந்தச் சிரமத்தை ஒழிக்க இந்திரன் எண்ணி, அவரைத் தேவவுலகில் கொண்டுபோய்த் தாபிக்கும்பொருட்டுப் பாதலவுலகம் வரை அகழ்ந்தும் திருமேனி மேலும் ஊடுருவிச் செல்ல, நாகராசர் பணாமுடியின் ஒளி எங்கும் வீசிய தென்றும், அது கண்டு பயந்து முன்போலவே இறைவரைத் தாபித்து வணங்கித், தேவபூசையை மாற்றி மானுட பூசையாக ஆக்கிச் சென்றனன் என்றும் வரலாறு கேட்கப்படும். இங்கு உபமன்னிய முனிவர் பூசித்துப் பேறுபெற்றனர் என்பதும் வரலாறு. இத்தலத்தின் பெருமைகளும் சரித வரலாறுகளும் பழந் தமிழ்ச் சங்க நுல்களுள் பேசப்பட்டன. ஆண்டுக் கண்டு கொள்க. நாகமணி "ஒளி வீசியதால் சாயாவனம்" என்பர் போலும் (சாய் - ஒளி): மாடக் கோயில்களுள் ஒன்று. சுவாமி - **சாயாவனேசுவரர் - அமுதேசுவரர் - செல்வர்:** - அம்மை. **குயிலினு நன்மொழியம்மை: தீர்த்தம் - காவிரி - கடற்சங்கமத்துறை.**

இது சீகாழிக்குத் தென்கிழக்கில் 7-நாழிகையில் திருவெண்காட்டை அடைந்து, அங்கு நின்றும் தென்கிழக்கில் மட்சாலை வழி 2-நாழிகையில் அடையத்தக்கது. மயிலாடு

2021. சீரினிற் றிகழ்ந்த பாடற் றிருக்கடைக் காப்புப் போற்றிப்
பாரினிற் பொலிந்த தொண்டர் போற்றிடப் பயில்வார் பின்னும்
ஏரிசைப் பதிகம் பாடி யேத்திப்போந் திறைவர் வெண்கா
டாருமெய்க் காத லோடும் பணிவதற் கணைந்தா ரன்றே. **123**

---

*துறையினின்று (மாயவரம்) கிழக்கே நேரே 18 நாழிகையளவிலும் அடையலாம். **இது** நல்ல சாலைவழி: காவிரிப்பூம்பட்டினம்வரை செல்வது.*

*2021. **பொருளுரை:** சீரினில்...போற்றி - சிறப்பின் விளங்கும் பாடலினால் திருக்கடைக் காப்புச்செய்து துதித்து: பாரினில்...பயில்வார்-உலகில் விளங்கிய திருத்தொண்டர்கள் போற்ற அங்கு எழுந்தருளிய பிள்ளையார்: பின்னும்...பாடி - மேலும் அழகுடைய இசையினையுடைய திருப்பதிகம்பாடி: ஏத்திப்போந்து - துதித்துச் சென்று: இறைவர்...அன்றே - இறைவர் எழுந்தருளிய திருவெண்காட்டின் நிறைந்த மெய்க் காதலோடும் பணிவதற்கு அப்பொழுதே அணைந்தனர்,*

***விளக்கவுரை:** சீரினில்...போற்றி - இது அத்திருப்பதிகத்தில் "நொம்பைந்து" என்ற 11-வது திருப்பாட்டினைச் சிறப்பித்தது. முன்பாட்டுக்களில் பூம்புகார்த் திருச்சாய்க்காட்டின் சிறப்புக்கள் கூறப்பட்டன. இப்பாட்டில் சீகாழிச் சிறப்பும் எடுத்துக் கூறப்பட்டது.*

***போற்றி** - திருக்கடைக்காப்புப் பதிகப் பயன் கூறுவதாயினும் அதுவும் தலத்தைத் துதித்த தன்மையே என்பது.*

***பின்னும்...பதிகம்பாடி** - இஃது "நித்தலு நியமஞ்செய்து" என்ற இந்தளப் பண்ணில் அருளிய பதிகம். "சாய்க்காடே" என்று பாட்டுத்தோறும் முடிபு கொண்டு, எந்தை சாய்க்காட்டை - நவில என்று திருக்கடைக்காப்புக் கொள்ளுதலால் இஃது தலத்தினின்றும் புறப்படும்போது தலத்தை நோக்கிப் பாடி ஏத்திப் போந்தது என்று ஆசிரியர் காட்டியருளக் காண்கின்றோம். பண்முறை வகுப்பில் இரண்டாவது திருமுறையில் இந்தளம் சீகாமரத்துக்கு முன்வைத்து வகுக்கப் பட்டமையால் அதனைப் பின்பற்றித் தலமுறை வகுப்பிலும் இத்தலத்துப் பிள்ளையாரது பதிகங்களிரண்டனுள் (இது பின்னர் அருளப்பட்டதாயினும்) முன் வைக்கப்பட்டது.*

***ஆரும் மெய்க்காதலோடும் பணிவதற்குத் திருவெண்காடு அணைந்தார்** என்க. பிள்ளையார் சீகாழியினின்றும் நேரே திருநனிபள்ளிக்கு அழைத்துச் செல்லப்பட்டு, அங்கு நின்றும் திருத்தலைச்சங்காடு சென்று, அங்கிருந்து திருவலம்புரம், திருப்பல்லவ னீச்சரம், திருச்சாய்க்காடு சென்று, வணங்கினாராதலின் அங்கு நின்றும் வடகிழக்காகத் திருவெண்காடு சென்றருளுகின்றார். **காதல்** - திருவெண்காட்டின் சிறப்பினையும், அது சீகாழிக்கு ஏனைவற்றினும் அணிமையாதலின் முன்னரே வணங்க உள்ள நிலையினையும் உட்கொண்டது.*

அன்றே** - அப்பொழுதே. அசையென்பாருமுண்டு.* ***123

2022. பொன்னிதழ்க் கொன்றை வன்னி புனலிள மதிய நீடு
சென்னியர் திருவெண் காட்டுத் திருத்தொண்ட ரெதிரே சென்றங்
கின்னதன் மையர்க ளானா ரெனவொணா மகிழ்ச்சி பொங்க
மன்னுசீர்ச் சண்பை யாளு மன்னரைக் கொண்டு புக்கார். 124

2022. பொருளுரை: பொன்-திருத்தொண்டர் - பொன்போன்ற இதழ்களையுடைய கொன்றையும், வன்னியும், கங்கையும், பிறையும் என்ற இவை நீடியிருக்கும் சென்னியினையுடைய சிவபெருமானது திருவெண்காட்டில் உள்ள திருத் தொண்டர்கள்: எதிரே சென்று...பொங்க - எதிரில் வந்து இன்ன தன்மையினையுடையார்களாயினர் என்று சொல்ல முடியாதபடி மகிழ்ச்சி மேன்மேற் பெருக: மன்னுசீர்...புக்கார் - நிலைபெற்ற சிறப்பினையுடைய சீகாழியில் வந்து ஆளும் தலைவராகிய பிள்ளையாரை வரவேற்று அழைத்துக்கொண்டு அப்பதியினுட் புகுந்தனர்.

விளக்கவுரை: கொன்றை-மதியம் *- எண்உம்மைகள் தொக்கன.* ***நீடு*** *- அழிவில்லாத பெருமானையடைந்ததனால் தாமும் அழிவின்றியிருக்கப் பெற்ற.*

இன்ன...எனவொணா மகிழ்ச்சி *- அளவில்லாத பெருமகிழ்ச்சி வந்தபோது தாம் அடைந்த நிலை இன்னதென்று அறியவும் சொல்லவும் இயலாது என்பது.*

மன்னர்-தலைவர். *ஒருசார் உடலாட்சியேனும் பெறாத ஏனை உலக மன்னர் என்பார்போலாது, உலகரின் உயிரினை ஞான ஆட்சி செய்து நல்வழிச் செலுத்தி உறுதி தருதலின் பெருமன்னராவார் என்பது.*

சண்பை ஆளும் மன்னர் *- சண்பையில் அவதரித்து உலகை ஆளும் என்க.*

எதிரே சென்றுகொண்டு *- எதிர்கொண்டு சென்று வணங்கி உடன் கொண்டு:* ***புக்கார்*** *- தலத்தினுள் என்பது எஞ்சி நின்றது.* *124*

திருச்சாய்க்காடு II *திருச்சிற்றம்பலம்* **பண் - இந்தளம்**

நித்தலுந் நியமஞ் செய்து நீர்மலர் தூவிச்
சித்த மொன்ற வல்லார்க் கருளுஞ் சிவன்கோயில்
மத்த யானையின் கோடும்வண் பீலியும் வாரித்
தத்து நீர்ப்பொன்னி சாகர மேவு சாய்க்காடே. *(1)*

திருச்சிற்றம்பலம்

பதிகத்தின் சில குறிப்புக்கள்:

(1) ***தத்துநீர்ப் பொன்னி சாகரம் மேவு*** *- என்றது நீர்ப்பெருக்கு உள்ள காலத்தில் மட்டும் காவிரி நீர் கடலிற் பாய்வது: ஏனைக்காலத்துக் "கடல் வயிறு நிறையாத காவிரி" என்பதுண்மை: (404-ல் உரை).* ***யானைக்கோடு - பீலி*** *- குறிஞ்சிக் கருப்பொருள்கள். காவிரி பிறந்த நிலங் குறித்தது.-(4)* ***இரங்கலோசையும்*** *- நெய்தலின் உரிப் பொருள்:* ***ஈட்டியர்***

2023. முத்தமிழ் விரகர் தாமு முதல்வர்கோ புரத்து முன்னர்ச்
சித்தநீ டுவகை யோடுஞ் சென்றுதாழ்ந் தெழுந்து புக்குப்
பத்தரா மடியார் சூழப் பரமர்கோ யிலைச்சூழ் வந்து
நித்தனார் தம்முன் பெய்தி நிலமுறத் தொழுது வீழ்ந்தார். **125**

சாத்து - துறைமுகப் பட்டினச் சார்பினால் ஈட்டியேந்திய படைகளின் முழக்கு: **ஈட்டிய சரக்கொடும்** என்பதுவும் பாடம். பல திசையினின்று பல்வேறு மக்கள் வாணிபமும் அரசுநிலையும் பற்றி வந்து கலக்கும் முழக்கும் ஆரவாரமும் குறிப்பு. "வேறுதிசை யாடவர்கள் கூற விசை தேரும்" என்பதும், அப்பதியும் (வேதவனம்) கடற்றுறைமுகப்பட்டினமாதலும் கருதுக.-**ஈட்டிய சரம்** - நெருங்கி வரும் நீர்: **ஈட்டியர்** - தேடிச் சம்பாதிப் போர்: (வ. சு. செ. குறிப்பு).- **சாத்து** - பலவேறு வாணிபம் செய்யும் வணிகர் திரள்: புகாரில் பலவேறு தேயத்தினரும் இருந்தனர்: 'மகத வினைஞரும் மராட்டக் கம்மரும், அவந்திக் கொல்லரும் யவனத் தச்சரும், தண்டமிழ் வினைஞர் தம்மொடுங்கூடி" (மணி), (ஸ்ரீ சிவப்பிரகாசதேசிகர் குறிப்பு.-(5) **நுளைச்சியர்-தாழை** - நெய்தற்கரு: (6) **வங்கம்** - கப்பல். **இப்பி-முத்து-மணி-சங்கு**-நெய்தற்கரு: வாரி என்றது கடலினுள் மூழ்கி முத்துக் குளித்தல் - பவளம் முதலிய மணிவாருதல் முதலிய நெய்தற் கருவாகிய தொழில் குறித்தன. கடல் வாணிபமும் குறித்தது - (11) **ஏனையோர்** - வெவ்வேறு திசையாளர்கள். முன் 4-வது திருப்பாட்டில் **ஈட்டியார் சாத்து** - என்றது: **ஏனையோர்** - தேவர் என்ற தலவரலாறு பற்றிய குறிப்புமாம்.

2023. **பொருளுரை:** முத்தமிழ்...புக்கு-முத்தமிழ் விரகராகிய பிள்ளையார் இறைவருடைய திருக்கோபுரத்தின் முன்பு மனத்திற் பெருகி மகிழ்ச்சியுடனே சென்று தாழ்ந்து வணங்கி எழுந்து உள்ளே புகுந்து: பத்தராம்..சூழ்வந்து - பத்தர்களாகிய அடியவர்கள் சூழ இறைவரது திருக்கோயிலைச் சூழ்ந்து வந்து: நித்தனார்...வீழ்ந்தார் - நித்தனாராகிய பெருமானது திரு முன்பு சேர்ந்து நிலம் பொருந்தத் தொழுது வீழ்ந்தனர்.

விளக்கவுரை: முத்தமிழ் விரகர் - மும்மை என்றது தமிழுக்கு இயற்கை யடைமொழி. தமிழ்த் தலைவர்.

சித்தநீடு உவகையோடு - "ஆருமெய்க்காத" (2021) லோடும் அணைந்தாராதலின் அவ்வாறு நீடிய, உவகை. பின்னர் இங்கு அருளும் இத் திருப்பதிகச் சார்பினால் அவதரித்த மெய்கண்ட தேவநாயனார் உபதேசத்தால் உலகமுய்யப்பெறும் உவகையும் குறிப்பு.

தாழ்ந்து - நிலமுற வீழ்ந்து. இவ்வணக்கம் திருக்கோயிலின் முன்பு வெளியே கோபுரத்தின்முன் நிகழ்ந்தது. கும்பிடும் முறை குறித்தது.

கோயிலைச் சூழ்வந்து - உலகபோகம் வேண்டுவோர் வலமாகவும் முத்தி விரும்புவோர் இடமாகவும் சுற்றி வந்து வணங்குதல் மரபு. பிள்ளையார் ஒரு விருப்பமுமில்லாதவராதலின் உலகர்க்கறிவுறுத்தி வழிகாட்ட இருவழியும் நிகழ்த்துதல் அமையும். வழிபாட்டு முறை ஏனையவும் இவ்வாறே காணத்தக்கன. *125*

2024. மெய்ப்பொரு ளாயி னாரை வெண்காடு மேவி னாரைச்
செப்பரும் பதிக மாலை "கண்காட்டு நுதன்" முன் சேர்த்தி
முப்புரஞ் செற்றார் பாதஞ் சேருமுக் குளமும் பாடி
யொப்பரு ஞான முண்டா ருளமகிழ்ந் தேத்தி வாழ்ந்தார். **126**

2024. பொருளுரை:- மெய்ப்பொருள்...மேவினாரை - மெய்ப்பொருளா யுள்ளவராகிய திருவெண்காட்டில் எழுந்தருளிய இறைவரை: செப்பரும்...சேர்த்தி - சொல்லுதற் கரிய திருப்பதிகமாகிய "கண்காட்டு நுதலானும்" என்று தொடங்கும் பதிகத்தை மாலையாகச் சேர்த்தி: முப்புரம்..பாடி - திரிபுரங்களையும் எரித்த சிவபெருமானது திருவடிகளைச் சேரும் முக்குளங்களையும் அத்திருப்பதிகத்தினுள் வைத்துப்பாடி: ஒப்பரும்...வாழ்ந்தார் - ஒப்பற்ற சிவஞான அமுதமுண்ட பிள்ளையார் மனமகிழ்ந்து துதித்து வாழ்ந்தனர்.

விளக்கவுரை:- மெய்ப் பொருள் ஆயினார் - *சுட்டறிவினால் அறியப்படு பொருளுமன்றி, எவ்வாற்றானு மறியப்படாத பொருளுமன்றிச் சிவஞானத்தினால் அறியப் படும் சத்துப்பொருள்.*

பதிகமாலை கண்காட்டு நுதன் முன்சேர்த்தி - *பதிகத்தைக் "கண்காட்சி நுதல்" என்ற தொடக்கத்தை முன்வைத்து மாலையாக்கி என்பது.*

கண்காட்டு நுதல்முன் - *தமிழ்மாலை பாடி என்க. பதிகம் காண்க. இரட்டுற மொழிதலால் நெற்றிக்கண் காண அதன் முன்பாகவே பதிகமாலை பிணைத்துப் பாடி - அதாவது திருமுன்பே தொடர்ந்து பாடி - என்ற உரைக்கவும் நின்றது.*

முப்புரம் செற்றார் பாதம் சேரு முக்குளமும் பாடி - *"முக்குளநீர் தோய் வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே" என்ற பதிகக் குறிப்பு.* **சேரும்** - *சேர்தற் கேதுவாகிய. பாதம் சேர்ந்த - திருக்கோயிலுக்குள் இருத்தலால் திருமேனித் தொடர்பு கொண்ட - என்றுரைப்பதுமாம்.* **சேரும்** - *என்றதனால் சேர்கின்ற உயிர்களும்,* **முப்புரஞ் செற்றார் பாதம்** *என்றதனால் அவை சேருமிடமாகிய பதிப்பொருளும், அதனைக் கூட்டும் அருளும்,* **முக்குளம்** *என்றதனால் வழியும் பெறுவித்த குறிப்பும் காண்க. இவ்வாறு உயிர்களை உய்விப்பது சிவஞானம். அதனை இறைவர் சிவாகமங்களால் அறிவுறுத்த அவற்றின் வழியே சிவ ஞான போதம் என்ற மெய்ப்பொருள் நூலால் உலகுக்குதவியவர் மெய்கண்டதேவ நாயனார். அவரை உலகில் தோற்றுவிக்கத் துணைக்காரணமாயிருந்தவை முக்குளங்களும் அவற்றைப் பாடிய இத்திருப்பாட்டுமாம். என்னை? மெய்கண்ட நாயனாரின் தந்தையார்க்குப் புத்திரப்பேறின்மையாற் தமது குலகுருவின்பால் வேண்டினார்: அவர் தேவாரத் திருமுறைகளை வேண்டிக் கயிறு சாத்தினார்: சாத்தவே "பேயடையா" என்று தொடங்கி முக்குளத்தைப் பாடும் தேவாரத் திருப்பதிகப் பாட்டு உதயமாயிற்று: அதன்படி அத்தந்தையார் தமது மனைவியாருடன் திருவெண்காட்டுக்கு வந்து முக்குளத்தினும் தோய்ந்து இறைவரை வழிபட்டு வரங்கிடந்தனர்: அதன் பயனாக மெய்கண்ட தேவர் அவதரித்து, இரண்டு வயதளவில் பரஞ்சோதியாரால் உபதேசிக்கப்பெற்றுச், சிவாகமப் பொருள்நிச்சயிப்பதாகிய சிவஞானபோதமும் உரையும் வகுத்து, உலகுக்கு உபதேசித்தருளினர். அதன் பயனாக உலகம் சிவன்பதம் சேரும் பயன்*

பெற்று வருகின்றது என்ற இத்துணையும் பிற்கால நிகழ்ச்சிகள் இவை யெல்லாம் முற்குறிப்பிற் பெறும் படி "முப்புரஞ் செற்றார் பாதம் சேருமுக் குளமும் பாடி" என்றும் "மெய்ப்பொருளானார்" என்றும் அமைந்தது தெய்வத்திருவாக்கின் நலம் என்க

முக்குளமும்பாடி - "வெண்காட்டு முக்குளநீர்" என்ற பதிகக் குறிப்பு. இவை சோம, சூரிய, அக்கினி தீர்த்தங்கள் என்று வழங்கப்பட்டுத் திருக்கோயிலினுள் இருக்கும் மூன்று திருக்குளங்கள். தலவிசேடம் பார்க்க. காந்தாரப்பண், தலப்பதிகம் "தடமூன் றுடையான்" என்பதும் காண்க.

ஒப்பரும் ஞானம் உண்டார் - ஞானம் - முன்கூறிய சிவஞான விளைவுக் குறிப்பு.

ஏத்தி வாழ்ந்தார் - சிவனை ஏத்துதலே வாழ்வாவது - வாழ்வுதருவது என்பது - வாழ்வித்தார் - உலகை வாழச்செய்தார் - என்பதும் கருத்து. "வாழ்ந்தார்க ளாவாரும் வல்வினையை மாய்ப்பாருந், தாழ்ந்துலக மேத்தத் தகுவாரும்...நன்றிறைஞ்சி யேத்து நமர்" (பண்டாய நான்மறை - 4) என்றது திருவாசகம். **126**

I. திருவெண்காடு திருச்சிற்றம்பலம் பண் - சீகாமரம்

கண்காட்டு நுதலானுங் கனல்காட்டுங் கையானும்
பெண்காட்டு முருவானும் பிறைகாட்டுஞ் சடையானும்
பண்காட்டு மிசையானும் பயிர்காட்டும் புயலானும்
வெண்காட்டி லுறைவானும் விடைகாட்டுங் கொடியானே. (1)

பேயடையா பிரிவெய்தும் பிள்ளையினோ டுள்ளநினை
வாயினவே வரம்பெறுவ ரையுறவேண் டாவொன்றும்
வேயனதோ ளுமைபங்கன் வெண்காட்டு முக்குளநீர்
தோய்வினையா ரவர்தம்மைத் தோயாவாந் தீவினையே. (2)

வேலைமலி தண்கானல் வெண்காட்டான் றிருவடிக்கீழ்
மாலைமலி வண்சாந்தால் வழிபடுநன் மறையவன்றன்
மேலடர்வெங் காலனுயிர் விண்டபினை நமன்றூதர்
ஆலமிடற் றானடியா ரென்றடர வஞ்சுவரே. (5)

சக்கரமாற் கீந்தானுஞ் சலந்தரனைப் பிளந்தானும்
அக்கரைமே லசைத்தானு மடைந்தயிரா வதம்பணிய
மிக்கதனுக் கருள்சுரக்கும் வெண்காடும் வினைதுரக்கும்
முக்குளநன் குடையானு முக்கணுடை யிறைவனே. (7)

தண்பொழில்சூழ் சண்பையர்கோன் றமிழ்ஞான சம்பந்தன்
விண்பொலிவெண் பிறைச்சென்னி விகிர்தனுறை வெண்காட்டைப்
பண்பொலிசெந் தமிழ்மாலை பாடியபத் திவைவல்லார்
மண்பொலிய வாழ்ந்தவர்போய் வான்பொலியப் புகுவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு - உலகபோக நல்வாழ்வும், வினைத்தீர்வு பெற்ற முத்திவாழ்வும், பெறுதல் குறிப்பு. பதிகம் 2-11 பாட்டுக்கள் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு- (1) **கண்காட்டுநுதல்**-நெற்றியிலுள்ள கண் சிவனது இறைமையைக் காட்டுகின்றது. வேண்டும்போது மட்டும் திறந்து காட்டும் கண்: கோபமும் அருளும் இரண்டும் காட்டும் கண் என்பன பலவும் குறிப்பு. **கனல் காட்டும் கை** - கையில் தீயேந்திய தன்மை. கனலை வேறுபடுத்துக் காட்டவல்லவாறு சிவந்த கை என்க. "அழலாட வங்கை சிவந்ததோ வங்கை, யழகா லனல்சிவந்த வாறோ" (அற். அந் - 98) என்றது அம்மையார் திருவாக்கு. இதுவும் பின்வருவனவும் சிவனது பேரருள் முதலிய இறைமையாகிய எண் குணங்களின் குறிப்பு. ஆசிரியர் "மெய்ப் பொரு ளாயி னாரை" என்றது இக்கருத்து. 3-வது திருப்பாட்டின் கருத்தும் காண்க. **நுதல் - கை - உரு - சடை** - திருமேனி நிலைகள். **பண் - இசை** - அத்துவிதக் கலப்பு. "பண்ணி லோசை பழத்தினி லின்சுவை" (குறுந். கச்சி 8): "பண்காட்டிப் பரமாயதன் பத்தர்க்குக், கண்காட்டிக் கண்ணி னின்ற மணியொக்கும், பெண்காட்டிப் பிறைச் சென்னிவைத் தான்றிரு, வெண்காட் டையடைந் துய்மட நெஞ்சமே" (குறுந்) என்ற அரசுகளது திருவாக்கும் ஈண்டு வைத்து ஒப்புநோக்கற்பாலது. **பயிர் காட்டல்** - காத்தல் - (2) **பேய் அடையா - பேய்** - மக்களுக்கு நோய்செய்யும் விடத் தன்மை வாய்ந்த வாயுசரீரமுடைய உயிர் வகைகள். **பிரிவெய்தும்** - இனி அடையாமை மட்டுமன்றி முன்னர்ப் பீடித்திருப்பினும் மக்கட்பேறே முதன்மை பெறுவதாதலின் அதனை எடுத்துக் காட்டி ஏனைய எல்லாவற்றையும் ஒருசேரத் தொகுத்துக் கூறியருளினார். இம்மை நலமும் வீட்டு நலமும் கூறப்பட்டன. 11-வது பாட்டும் பார்க்க.-(3) **மண்ணொடு-இயமானன்** - இறைவரது எட்டுத் திருமேனிகள். "அட்ட மூர்த்தி" (குறுந் 8) **விண்ணவர்கோன் வழிபட** --இந்திரனும், அவனது வெள்ளையானையும் வழிபட்டமை தலவரலாறு. -(4) **தாழை முத்தம்** - நெய் தற்றினைக் கரு. இப்பாட்டில் மயக்கவணியும் தற்குறிப்பேற்றமும் நாடகச் சுவையும் நகைச் சுவையும் காண்க.-(5) **வேலை - கானல்** - கழிக்கானல்: இப்பாட்டின் சரிதம் தலசம்பந்தம் பெற்ற தனிச் சரித மென்பர். மார்க்கண்டரைப் பற்றிய தென்றாலு மிழுக்கின்று. காந்தாரப் பண் பதிகம் "மாணிக்காய்" (7) என்பது காண்க.-(7) **பிளந்தான்** - மாலுக்கீந்த சக்கரத்தால் அதற்கு முன்னர்ப் பிளந்தவன்.- (8) பின் இரண்டடிகள் நாடகச் சுவை பெற்ற தற்குறிப்பேற்ற அணி. (9) **வெள்ளானை தவம் செய்யும்** - தலவரலாறு. - (10) **பேதையர் - பிரிமின் அறிவுடையீர் - கேண்மின்** - "மிண்டு மனத்தவர் போமின்கள் மெய்யடியார்கள் விரைந்து வம்மின்" (திருப்பல்லாண்டு) -(11) **தமிழ்மாலை பாடிய** - "பதிகமாலை - (கண்காட்டுநுதன் முன்) சேர்த்தி" (2024). **மாலை** - மலரும் இடைவெளியிட்ட நாரும்போல் இப்பதிகத்தினுட் பாட்டுக்கள் சரிதமும் சாத்திர உண்மையுமாக இடை யிட்டுவருதல் காண்க. **பொலியப் புகுவார்** - பொலிதலால் வான்புகுவர் என்க. **வான்** - முத்தியுலகம். சிவலோகம்.

II. திருச்சிற்றம்பலம் **பண்-காந்தாரம்**

உண்டாய் நஞ்சை யுமையோர் பங்கா வென்றுள்கித்
தொண்டாய்த் திரியு மடியார் தங்க டுயரங்கள்
அண்டா வண்ண மறுப்பா னெந்தை யூர்போலும்
வெண்டா மரைமேற் கருவண் டியாழ்செய் வெண்காடே (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு-அடியார் துயரந் தீர்க்கும் ஐயன் ஊர் வெண்காடே என்று தலத்தைத் துதித்தது.

பதிகப் பாட்டுக் குறிப்பு-(1) அண்டுதல் - அணுகுதல். "உண்டாய்...பங்கா" **என்று** - துதிக்கும் முறை. 2-5-6-8-9 பாட்டுக்களும் இவ்வாறே கற்பித்தமை காண்க. **தொண்டாய்த் திரிதல்** - மனத்தாலும் உடலாலும் பணிசெய்தல்.-(2) **வேதத் தொலி யாற் கிளிசொற் பயிலும்** - "கிள்ளை வேதங்கள் பொருட்சொல்லும் மிழலை" (பிள்.) - (3) **தடமூன்று** - முக்குளம். **கண்முத்தரும்ப** - கண்ணீர்வார: **உள்முத்தரும்ப** - உள்ள மகிழ. **முத்தரும்பி - புனல் அலைக்கும்** - கடற்புனல் முத்துக்களை வாரி அலைவீசுதல் குறித்தது. **வெண்முத்தருவிப் புனல்**-என்பதும் பாடம். (4) **வேறா உள்குவார்**- "பொது நீக்கித் தனைநினைய" (தேவா): **கரையா** - வருந்தி நையாத - (6) ஒளி - ஞானவொளியே **சிவன்** திருமேனி. - (7) மார்க்கண்டர் சரிதம்,

III. திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரபஞ்சமம்**

மந்திர மறையவை வான வரொடு, மிந்திரன் வழிபட விருந்த வெம்மிறை
வெந்தவெண் ணீற்றர்வெண் காடு மேவிய வந்தமு முதலுடை யடிக ளல்லரே. 1

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அடிகளல்லரே, சதுரரல்லரே, இறைவரல்லரே, பரமரல்லரே என்று திருவெண்காட் டிறைவரது பதித்தன்மைபற்றிப் பலவும் துதித்து அவரை தொழ அல்லல் இல்லை என்றது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) மறைகள் - தேவர்கள் - இந்திரன் வழிபட்ட வரலாறு. -(3) **தோல்** - மான்றோல். **ஆல்** - இத்தலத்தில் கல்லாலமரத்தின் சிறப்புக் குறிப்பு.-(4) **கானல்** - கடற்கானல். **ஞாழல் - செருந்தி - புன்னை - தாழை-நெய்த** - **னிலக் கருப்பொருள்கள்**. **யாழினதிசை** - "நல்வீணை வாசிக்குமே" (திருவிருத்.) - (7) **இந்திரன் கயம் - வழிபடநின்ற** - வெள்ளையானை வழிபட்ட தலவரலாறு.-(8) **சங்கரர்-தலையுடல்** நெரித்தருளினாலும் உடன் சுகமும் அருள்பவர் என்ற குறிப்பு. **விலையுடை நீறு** - பரமசுகம் தரும் பொருள் என்பது.-(9) **வேடம்** - "பலபல வேடமாகும் பரனாரி பாகன்" (பிள். தேவா.) **ஆடல்** - ஐந்தொழில் விளையாடல். அருட்கூத்து அகோரமூர்த்தியின் சிறப்பும், ஆதிசிதம்பரேசர் என்ற கூத்தப்பெருமானின் சிறப்பும் குறிப்பு. வேடமும் ஆடலும்பற்றி

"விடங்கராகித் திரிவதென்னே?" முதலியனவாக வரும் இத்தலத்து ஆளுடைய நம்பிகளது (பண் - இந்தளம்) பதிகமும், "வெண்காடு மேவிய விகிர்தனாரே" என்ற திருத்தாண்டகப் பதிகமும், பார்க்க.-(11) **ஆணையே** - உறுதியிட் டருளியது.

தலவிசேடம்:-திருவெண்காடு - இந்திரனும் ஐராவதமும் பூசித்துச் சாபநீங்கப் பெற்ற தலம். இவை பதிகங்களுட் போற்றப்பட்டன. சிவபெருமான் ஆனந்த நடனஞ் செய்தபோது அவரது மூன்று கண்களினின்றும் வீழ்ந்த நீர்த்துளிகள் மூன்று தீர்த்தங்களாயின என்பது தலபுராணம், இவை சோமசூரியாக்கினி தீர்த்தங்கள் எனப்படும். முக்குளம் எனத் தேற்றமாயறியப்படுவன. பதிகம்காண்க. முன் 2024-ல் உரைத்தவை பார்க்க. "இருகாமத் திணேயேரி" (பட்டினப்பாலை) என்றும் "கடலொடு காவிரி சென்றலைக்கு முன்றில், மடலவிழ் நெய்த லங்கானற் றடமுள, சோம குண்டஞ் சூரிய குண்டஞ் சுனைமூழ்கி" (சிலப்) என்றும் பண்டையநூல்களினும் இவை கூறப்படுதல் காண்க. தெற்கில் சூரியதீர்த்தமும் மேற்கில் சந்திரதீர்த்தமும் வடக்கில் அம்மையார் கோயிலுக்கெதிரில் அக்கினிதீர்த்தமும் உள்ளன. இவற்றை முறையே சூரியன் - சந்திரன் - அக்கினி என்ற தேவர்கள் கண்டு பணிசெய்து வழிபட்டுப் பேறு பெற்றனர். இவை மூன்றும் ஒரு தொடர்புடையனவேனும் தத்தம் பெயர்களுக்கேற்ப வெவ்வேறு தட்ப வெப்பப் பரிச நிலையுள்ளன. சூரியதீர்த்தம் வெப்பமும் சந்திர தீர்த்தம் தட்பமும், அக்கினிதீர்த்தம் கந்தகச்சூடுபற்றிய புகைப்பரிசமும் உடையன. இவற்றுள் நியமமாகத் தோய்ந்து வழிபட்டோர் வேண்டும் வரம்பெறுவர் என்பது பதிகத்துள் ஆணையிட்டருளப்பட்டது. இவ்வழிபாட்டின் பயனாகவும், ஆளுடையபிள்ளை யாரது பதிகப்பாட்டின் பயனாகவும் அவர்போலவே மெய்கண்டதேவ நாயனார் அவதரித்துச் சைவ சித்தாந்த பரமாசாரியராக விளங்குகின்றனர் என்பது முன் உரைக்கப் பட்டது. அகோரமூர்த்தி இங்குத் தேற்றமாக விளங்கி யருள்கொடுத்து நிற்கின்றனர். இவர் சிவபெருமானது அகோரம் என்று சொல்லப்படும் தெற்குநோக்கிய ஞானமுகத் தெய்வமாகிய சிவமூர்த்தி. (அகோர வீரபத்திரர் வேறு.) இவர்க்கெதிரில் காளியின் சந்நிதி. இவருக்கு ஞாயிற்றுக்கிழமைதோறும் இரவு விசேடபூசையும் பெருவிழாவில் 6-ம் திருநாட் சிறப்பும் உண்டு. மூவர் பாடலும்பெற்ற பெருமையுடைய தலம். சுவாமி - **திருவெண்காட்டீசர் - சுவேதாரண்யேசர்:** அம்மை - **பிரமவித்தியாநாயகி:** - தீர்த்தம் - **முக்குளம்:** தலமரம் - **வடவாலமரம் - கொன்றைமரம்** - பிரமமயானத்தில் **வில்வமரம்**. பதிகம் 6.

இது சீகாழிக்குத் தென்கிழக்கில் மட்சாலைவழி 7 நாழிகையளவில் உள்ளது. மாயூரத்தினின்றும் காவிரிப்பூம்பட்டினத்துக்கு நேரே செல்லும் மட்சாலையில் 15 நாழிகையளவிலும் அடையலாம்.

2025. **பொருளுரை:** அருமையால்....நாளில் - அரிதின் வெளியே போந்து வணங்கிச் சென்று அத்தலத்தில் எழுந்தருளி யிருக்கும் நாள்களில்: திருமுல்லைவாயில் ... சாத்தி - திருமுல்லைவாயிலினைச் சென்று சேர்ந்து செந்தமிழ் மாலையாகிய திருப்பதிகத்தினைச் சாத்தி: மருவிய-சார்ந்தார் - பொருந்திய பிற தலங்களையும் வணங்குவாராகி, மறையவர்கள் போற்ற வந்து திருஞானசம்பந்தர் அருட்டிரு மிகுந்த சீகாழியில் சேர்ந்தனர்.

2025. அருமையாற் புறம்பு போந்து வணங்கியங் கமரு நாளிற்
றிருமுல்லை வாயி லெய்திச் செந்தமிழ் மாலை சாத்தி
மருவிய பதிகண் மற்றும் வணங்குவார் மறையோ ரேத்தத்
திருமலி புகலி வந்து ஞானசம் பந்தர் சார்ந்தார். **127**

விளக்கவுரை: அருமையாற் புறம்பு போந்து - அத்திருக்கோயிலி னுள்ளிருந்து வெளிப்போத மனமெழாமையின் அரிதாகச் சென்று என்க.

திருமுல்லைவாயில்...சாத்தி - பதிகக் குறிப்புப் பார்க்க. ***செந்தமிழ்மாலை*** - ***பதிகம்*** *11 பாட்டுப் பார்க்க.*

வணங்குவார் - வந்து - சார்ந்தார் என்று கூட்டுக. வணங்குவாராகி. ***பதிகள் மற்றும்*** - சீகாழிக்கு அணிமையில் உள்ளன. இவற்றை மேல் 2027-ல் ஆசிரியர் விரித் தருளுவார்.

சேர்த்தி - தருமலி -என்பனவும் பாடங்கள். ***127***

தென்றிருமுல்லையில் *திருச்சிற்றம்பலம்* ***பண் - பியந்தைக்காந்தாரம்***

துளிமண்டி யுண்டு நிறம்வந்த கண்ட னடமன்னு துன்னு சுடரோன்
ஒளிமண்டி யும்ப ருலகங்க டந்த வுமைபங்க னெங்க ளரனூர்
களிமண்டு சோலை கழனிக்க லந்த கமலங்க டங்கு மதுவின்
றெளிமண்டி யுண்டு சிறைவண்டு பாடு திருமுல்லை வாயி லிதுவே. **(1)**

அணிகொண்ட கோதை யவனன்று மேத்த வருள்செய்த வெந்தை மருவார்
திணிகொண்ட மூன்று புரமெய்த வில்லி திருமுல்லை வாயி லிதன்மேற்
றணிகொண்ட சிந்தை யவர்காழி ஞான மிகுபந்த னொண்ட மிழ்களின்
அணிகொண்ட பத்து மிசைபாடு பத்த ரகல்வான மாள்வர் மிகவே. **(11)**

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு:- உமையம்மை வழிபடஅருளிய அரனது ஊர் திருமுல்லைவாயில் இதுவே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) துளி - மண்டிஉண்டு - கடலிற்பெருகிய விடத்தைத் துளிபோல ஆக்கி உண்டு. ***மண்டுதல்*** - செறிதல். ***ஒளிமண்டி*** - பேரொளியாக. ***தெளிமண்டி உண்டு*** - தெளிந்ததனை மிக உண்ணுதலால். "தெளிந்த தேறல்" (தேவா).-(2) ***பருவத்தில் வந்து பயனுற்ற பண்பன்***-வேண்டும் காலத்தில் வெளிப் பாடுற்றுப் பயன்செய்யும் தன்மையுடையவன். ***அரவிக்க*** - சந்திக்க.-(3) ***வருவார்*** - தம்மை நோக்கி வருபவர். ***வருதல்***- வழிபட வருதல். ***உருவில்லின் மெல்கி*** என்க. ***வில்லின் மெல்குதல்*** - வில்போலக் குனிவுபட்டுக் கட்டுண்டு மெலிதல். ***வாராத நாடன்*** - "சென்றடையாத திருவுடையான்" என்ற கருத்து. "வாரா வுலகநெறி" (திருவா) ***நெதி*** - நிதி - செல்வம். ***வாராத நாடு*** - திரும்பிவந்து பிறவாநிலை தருகின்ற நாடு - சிவலோகம்.-(4) ***ஒன்றொன்றொடு-அறியாமை நின்ற அரன்*** - இருபத்தைந்தாவது புருட தத்துவ அளவில் நிற்கும் விட்டுணுவினால்

2026. தோணிவீற் றிருந்தார் தம்மைத் தொழுதுமுன் னின்று தூய
ஆணியாம் பதிகம் பாடி யருட்பெரு வாழ்வு கூரச்
சேணுயர் மாட மோங்குந் திருப்பதி யதனிற் செய்ய
வேணியார் தம்மை நாளும் போற்றிய விருப்பின் மிக்கார். **128**

அறியப்படாதவன் என்ற கருத்துப் போலும்.-(6) **வேலின்உரு ஏறுகண்ணி** *- வேல்போன்ற உருவுடைய கண்ணையுடையவள். கோபமும் பிரசாதமும் வல்ல கண் என்றது.-(7) பின்னிரண்டடிகள் ஊரி லுள்ளாரது அன்பின் தன்மை குறித்தன.* **செஞ்சாலி** *- செந்நெற் சிறப்பு. (அரிவாட்டாயர் புராணம்).-(8)* **உரைவந்த பொன்** *- மாற்றமிக்க பொன். "பொன்னார் மேனியனே, "பொன்வண் மெவ்வண்ண மவ்வண்ண மேனி" -(9)* **விரிநூலன்-** *பிரமன்.* **நூல்** *- பூணூல்.* **விரிநூல்** *- எல்லா நூல்களும் தன்னிடமிருந்து விரிதற் கிடமாகிய மறை என்றலுமாம்.* **கால்** *- வாய்க்கால்.* **கதிர்** *- நெற்கதிர்.-(10)* **பனை** *- பனைபோன்ற உரு.-(11)* **அணி..எந்தை** *- இத்தலத்தில் உமை அம்மை வழிபட்ட வரலாற்றுக் குறிப்பு.* **தணிகொண்ட சிந்தையவர்** *- "தணிந்தமனத் திருமுனிவர்" (789)* **தணி** *- தணிவு. முதனிலைத் தொழிற்பெயர்.* **ஒண்தமிழ்களின் அணி கொண்ட பத்து** *- "செந்தமிழ் மாலை" (2025) என்று ஆசிரியர் காட்டினார்.*

தல விசேடம்:- தென்திருமுல்லைவாயில் *- தொண்டைநாட்டில் உள்ள வட திருமுல்லைவாயிலினின்று வேறுபிரித்துணர இவ்வாறு வழங்கப்பெறும். உமையம்மை வழிபட்டத் தட்சிணாமூர்த்தியிடம் பஞ்சாக்கர உபதேசம் பெற்றனர் என்ப. (பதிகம் 11-வது பாட்டு.) இந்திரனும் சுதர்மனும் பூசித்த தலம். சுவாமி -* **முல்லைவனநாதர்:** *அம்மை -* **கோதையம்மை:** *பதிகம் 1.*

இது சீகாழிக்குக் கிழக்கே 8 நாழிகையளவில் கற்சாலையில் கடற்கரையில் உள்ள தலம்.

2026. பொருளுரை: தோணி...கூர - திருத்தோணியில் எழுந்தருளிய இறைவரைத் தொழுது திருமுன்பு நின்று தூய்மையுடைய உரை ஆணியாகிய திருப்பதிகம் பாடி அருட்பெருவாழ்வு பெருக: சேணுயர்..பதியதனில் - சேணிலுயரும் மாடங்கள் ஓங்கும் அத்திருத்தலத்தில்: செய்ய...மிக்கார் - சிவந்த சடையினையுடைய சிவபெருமானைத் தினமும் போற்றிய விருப்பத்தின் மிக்கவரானார்.

விளக்கவுரை: தோணி..தொழுது *- தோணி வீற்றிருந்தார்பால் விடைபெற்று (2010)ச் சென்றபின் மீண்டு அணைந்தவுடன் நேரே அவரிடம் சென்று தொழுத பின்பே திருமாளிகையில் சென்று அமர்தல் மரபு. பின்னரும் இவ்வாறே காண்க. நம்பிகள் சரிதத்திலும் இவ்வாறு காண்க. ஏயர்கோன் புரா. 54, ஷை 125. முதலியவை பார்க்க.*

தூய ஆணியாம் பதிகம் - ஆணி *- பொன் உரையாணி. இது தூய பொன்னினால் இயன்று ஏனைப் பொன்னையெல்லாம் மாற்று உயர்வு தாழ்வு காண்பதற்கு அளவையாக உதவுவது.* **ஆணியாம் பதிகம்** *- உலகில் ஏனைப் பதிகங்களைக் காண்பதற்கு அளவுகோல் போன்ற பதிகம் என்க. திருத்தொண்டின் நிறத்தை அளந்து காட்டும் கருவி என்றலுமாம்.*

மூன்றாவது தல யாத்திரை

2027. வைகுமந் நாளிற் கீழ்பால் மயேந்திரப் பள்ளி வாசஞ்
செய்பொழிற் குருகா வூருந் திருமுல்லை வாயி லுள்ளிட்
டெய்திய பதிக ளெல்லா மின்புற விறைஞ்சி யேத்தித்
தையலாள் பாகர் தம்மைப் பாடினார் தமிழ்ச்சொன் மாலை. **129**

"தொண்டர்க் காணி" (1896) 'தொண்ட ராணிப்பொன்' (திருவிருத்தம்) முதலியவை காண்க. இப்பதிகம் இன்னதென்று துணியக்கூடவில்லை. "வண்டரங்கப் புனற்கமலம்" என்ற பழந்தக்கராகப்பதிகம்: "எம்பிரா னெனக்கமுதமாவானும்" என்ற சீகாமரப்பண் பதிகம் எனுமிவ் விரண்டனுள் ஒன்றாயிருத்தல்கூடுமென்பது கருதப்படும். இவற்றுள் முன்னையதே பொருந்தும் என்பர் திரு. வ. சு. செ. அவர்கள்.

அருட்பெரு வாழ்வுகூர - உயிர்கள் அருள்வாழ்வு பெற்று ஓங்க. **கூர்தல்** - உள்ளது சிறத்தல்.

சேணுயர் மாடம் - சேண் விசும்பில் உயர்ந்து காட்டும் மாடங்கள்: "மாடம் விண் டாங்குவபோலும்" (தேவா)

போற்றிய விருப்பின்மிக்கார் - போற்றுதல் செய்யச் செய்யச் சலிப்புறாது அதனில் மேலும் விருப்பு மிகுதல். இது சிவானந்தானுபவத்தி னியல்பு. ஒவ்வொரு நாளும் திருத்தோணிபுரேசரைப் போற்றும் விருப்பு மிகுந்தவராதலின், மேல்வரும் பாட்டில் கூறும் தலங்களிற் சென்று வணங்கினும் அவ்வந்நாளே தோணிபுரத்தில் மீண்டு எழுந்தருளி வணங்கி இவ்வாறு வைகியருளினார் என்பது.

இதனுடன் பிள்ளையாரது இரண்டாவது தலயாத்திரை நிறைவாகியது. I - **முதல் யாத்திரை** - சீகாழியினின்றும் திருக்கோலக்காவுக்குச் சென்று வணங்கித் **தாளம் பெற்றுச்** - சீகாழிக்குத் திரும்பியது (1998 - 2003). II - **இரண்டாவது தலயாத்திரை** - சீகாழியினின்றும் திருநனிபள்ளி சென்று, **பாலை நெய்தல் பாடி** - அங்குநின்றும் திருத்தலைச்சாங்காடு, திருவலம்புரம், திருப்பல்லவனீச்சரம், திருச்சாய்க்காடு, திருவெண்காடு, திருமுல்லைவாயில் சென்று வணங்கிச் சீகாழியில் எழுந்தருளியது (2010-2025). 128

2027. பொருளுரை: வைகும் அந்நாளில் - முன்கூறியபடி வைகிய அந்நாள்களில்: கீழ் பால்...ஏத்தி - கிழக்கேயுள்ள திருமயேந்திரப்பள்ளியும், மணம் வீசும் பொழில் சூழ்ந்த திருக்குருகாவூரும், திருமுல்லைவாயிலுள்ளிட்டு முன்சென்றுவணங்கியபதிகள் எல்லாவற்றையும், இன்பம்பொருந்த வணங்கித் துதித்து: தையலாள்...மாலை - அம்மையை ஒரு பாகத்தில் உடைய சிவபெருமான்மீது தமிழ்ச் சொல் மாலைகளைப் பாடியருளினார்.

விளக்கவுரை: வைகும் - முன்பாட்டிற் கூறியபடி "போற்றிய விருப்பின் மிக்கா" ராய் எழுந்தருளியிருக்கும்.

கீழ்பால் மயேந்திரப்பள்ளி - சீகாழிக்குக் கிழக்கே கடற்கரையில் உள்ளதென்பது. **பள்ளி** - இடம்.

திருமுல்லைவாயில் உள்ளிட்டு எய்திய பதிகள் எல்லாம் - *உள்ளிட்டு* என்பது திருமுல்லைவாயிலினைப் போன்று, முன்சென்று வணங்கிய தலங்கள் என்ற பகுப்பை யுணர்த்தி நின்றது. எல்லாம் - எல்லாவற்றையும் என விரிக்க. **மயேந்திரப் பள்ளி - குருகாவூரும்** - இவை முதன்முறையாகச் சென்று வணங்கியவை என்று காட்ட உம்மை தந்து பிரித்தோதினார். **எய்திய** - முன்சென்று வணங்கிய. இரட்டுற மொழிதலால் அவற்றுள் இந்த யாத்திரையில் இடையிலும் அணிமையிலும் பொருந்தவந்த என்ற பொருளும் தந்து நின்றது. **எல்லாம்** - பதிகளில் எல்லாம் என்றும், பதிகள் எல்லாம் இன்புற - எல்லாஇன்பமும் பொருந்த, உயிர்கள் எல்லாம் இன்பமுற என்றும் உரைக்க நின்றது. **எல்லாம்** - தாப்பிசைப் பொருள்கோள் என்ப.

(பாகர்) **தம்மை** - மீது: இரண்டாவது ஏழாவதன் பொருளில் வந்தது.

தமிழ்ச்சொன் மாலை - பதிகங்கள். **மாலை** - பால்பகா அஃறிணை.

இவ்வாறு, பிள்ளையார் சீகாழியை அகலாது மயேந்திரப்பள்ளி, குருகாவூர், திருமுல்லைவாயில் முதலிய அணிய தலங்களை வணங்கி மீண்டருளியது அவரது III - **மூன்றாவது தலயாத்திரையாகும்.** 129

திருமயேந்திரப்பள்ளி

திருச்சிற்றம்பலம் பண் - கொல்லி

திரைதரு பவளமுஞ் சீர்திகழ் வயிரமுங்
கரைதரு மகிலொடு கனவளை புகுதரும்
வரைவிலா லெயிலெய்த மயேந்திரப் பள்ளியுள்
அரவரை யழகனை யடியிணை பணிமினே. 1

சந்திரன் கதிரவன் தகுபுக ழயனொடும்
இந்திரன் வழிபட விருந்தவெம் மிறையவன்
மந்திரம் மறைவளர் மயேந்திரப் பள்ளியுள்
அந்தமில் லழகனை அடிபணிந் துய்ம்மினே. 6

வம்புலாம் பொழிலணி மயேந்திரப் பள்ளியுள்
நம்பனார் கழலடி ஞானசம் பந்தன்சொல்
நம்பர மிதுவென நாவினா னவில்பவர்
உம்பரா ரெதிர்கொள வுயர்பதி யணைவரே. 11

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருமயேந்திரப்பள்ளியுள் எழுந்தருளியுள்ள அழகருடைய அடிகளைப் பணிந்துய்யுங்கள்.

பதிகப் பாட்டுக் குறிப்பு-(1) திரைதரு பவளம் - பவளம் கடல்படு மணிகளுள் ஒன்று. **கரைதரும்** என்பதனை வயிரம் என்பதனொடும் கூட்டுக. **வளை** - சங்கு. இத்தலம் கடற்கரையணிமையில் உள்ளமை காண்க. **அழகன்** - சுவாமி பெயர்.-(2) **கண்டல் - கைதை**

- நெய்தற் கரு. **கைதை** - தாழை -(3) **புன்னை** - நெய்தற் கரு கொன்றை - **வேங்கை - குரா** - திணைமயக்கத்திற் பெற்றவை - (4) **வங்கம்** - கப்பல்-(5) **நித்திலம்** - முத்து கடலுட்படுவது நெய்தற் கரு. **தொகை பல** - மூங்கில், நெல் கரும்பு முதலியவற்றினூர் படுவனவாய் குறிஞ்சி - மருதத் திணைப் பொருள்கள். ஆற்றின்வழி அலைக்கப்பட்டுக் கடலுட் சேர்வனவாதல் குறிப்பு. **புணரி சேர்த்திட** என்றதும் காண்க.-(6) இத்தலத்து வழிபட்ட தேவர்கள்-சந்திரன், சூரியன், பிரமன், இந்திரன்.-(7) முனிவர்கள் வழிபட்டமை.-(9) **யோகணைந்தவன் - கூடி** எழுந்தருளியுள்ளவன்.-(10) **உடை துறந்தவர்கள்** - அமணர்: **துவர் உடை** - துவர் தோய்த்த உடை. (11) **நம்பரம் இதுவென** - நமது கடமை இது வென்று

தலவிசேடம்:-திருமயேந்திரப்பள்ளி - இது கொள்ளிட நதி கடலொடு கலக்கு மிடத்தணிமையில் உள்ளது. பதிகம் 5-வது பாட்டும் பிறவும் பார்க்க. இது கோயி லடிப்பாளையம் என்று வழங்கப்படும். மயேந்திரன் என்ற ஓர் இந்திரன் வழிபட்டமையால் இப்பெயர் பெற்றது. (**பள்ளி** - இடம். நனிபள்ளி - சக்கரப்பள்ளி - அகத்தியான்பள்ளி) பிரமன் - சந்திரன் - சூரியன் முதலிய தேவர்களும், பெருமுனிவர்களும் வழிபட்ட தலம். சுவாமி - **திருமேனியழகர்**. பதிகம் 1-6 பாட்டுக்களில் இப்பெயரால் போற்றப்பட்டமை காண்க. அம்மை - **வடிவாம்பிகை**. பதிகம் 1. சுவாமி திருமேனி மிக அழகிய திருவுருவம்.

இது நல்லூர்ப்பெருமணத் தினின்றும் வடகிழக்கில் மட்சாலை வழி 4 நாழிகையில் அடையத்தக்கது. சீகாழியிலிருந்து வடகிழக்கில் 6 நாழிகையில் உள்ளது.

திருக்குருகாவூர்

பண் - அந்தாளிக்குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

சுண்ணவெண் ணீறணி மார்பிற் றோல்புனைந்
தெண்ணரும் பல்கண மேத்தநின் றாடுவர்
விண்ணமர் பைம்பொழில் வெள்ளடை மேவிய
பெண்ணமர் மேனியெம் பிஞ்ஞக னாரே. 1

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பெண்ணமர் மேனியுடன் தீயகலேந்திப் பொரிபுல்கு காட்டிடையாடுவர் வெள்ளடை. நாதர். உலகம் புனருற்பவமாதற் பொருட்டு நினைத்த ஆடற் குறிப்பு. (இப்பதிகத்துள் 6 பாட்டுக்களே கிடைத்துள்ளன! ஏனையவை சிதலரித்தொழிந்தன போலும்!)

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **ஆடுவர்** - ஐந்தொழிற்கூத்து. **நீறணி மார்பு** - ஊழிச் சங்காரத்தின் குறிப்பு. **பல்கணமேத்த** - ஏனையோர் சங்காரத்தின்வழி ஒடுங்குவராகலான் கணங்களேத்தின. **பெண்ணமர் மேனி** - புனருற்பவத்தின் பொருட்டுச் சிவமும் சத்தியுமா யிணைந்த திருமேனி.-(2) **ஆடுதீர்**-இத்தலத்துக் கூத்துச் சிறப்பு. மேற்பாட்டுக்களும் காண்க.-(3) **அடையலர்** - பகைவர்; முப்புரவாணர்.-(5) **துடியிடை** - அம்மை. **பொரி** - தீப்பொரி. ஈமத்துப் பொரியுமாம். **பொங்க.** - உலகு மீள உளதாக.-(6) **காவியங் கண்மடவாள்- தல** அம்மை பெயர். **தீ - அகல்** - "எரியகலும்" (நம்பி): அந்தாளிக்குறிஞ்சிப் பண்ணிற் கண்ட

2028. அவ்வகை மருங்கு சூழ்ந்த பதிகளி லரனார் பொற்றாள்
மெய்வகை ஞான முண்ட வேதியர் விரவிப் போற்றி,
யுய்வகை மண்ணு ளோருக் குதவிய பதிகம் பாடி
யெவ்வகை யோரு மேத்த விறைவரை யேத்து நாளில், **130**

பதிகங்களிரண்டனுள் இஃது ஒன்று. மற்றையது பிள்ளையார் முத்தி விண்ணப்பஞ் செய்து சிவச்சோதி கண்ட நல்லூர்ப்பெருமணப் பதிகமாம்.

தலவிசேடம்:- திருக்குருகாவூர் - ஆளுடைய நம்பிகளுக்கும் திருத்தொண்டர் களுக்கும் இறைவர் பொதிசோறளித்த தலம். "பாடுவார் பசிதீர்ப்பாய்" (நம்பி) என்ற பதிகக் குறிப்புக் காண்க. இத்திருவிழா சித்திரா பௌர்ணமியிற் கொண்டாடப்படுகின்றது. ஏயர்கோன் கலிக்காமநாயனார் புராணம் (156 - 166) பார்க்க. வேட வடிவத்தோடு வந்து நம்பிகளுக்கு இறைவர் வழிகாட்டினமையால் "வேடனே" என்று பதிகத்துப் பாடப்பட்டனர் என்பதும், அடியார்களுக்குத் திருஅமுதூட்டிய இடம் இப்பொழுதும் அக் குறிப்புப்பட "வரிசைப் பற்று" என்று வழங்கப்படுவது என்பதும் தல வழக்குக்கள். "பாற்கிணறு" என்ற தீர்த்தக் கிணற்றில் தை அமாவாசையன்று சுவாமி தீர்த்தம் கொடுக்கும்போது நீர் பால்நிறமாக ஆவது இன்றும் காணும் அற்புத நிகழ்ச்சி. வெள்விடை என்பது **வெள்ளடை** என மருவியது. சுவாமி - **வெள்ளடை நாதர்:** அம்மை - **காவியங்கண்ணி**. பதிகம் 2. பதிகத்து **வெள்ளடை** என்பது சுவாமி பெயர்.

இது சீகாழிக்குக் கிழக்கில் மட்சாலையில் திருமுல்லைவாயிற் பாதையில் மூன்றாவது நாழிகையளவில் தென்புறம் திரும்பிச் சென்று அரை நாழிகையில் அடையத் தக்கது.

2028. **பொருளுரை:-** அவ்வகை...போற்றி - அவ்வாறே பக்கத்தில் சுற்றிலுமுள்ள திருத்தலங்களில் சென்று அரனாருடைய பொன்னடிகளை மெய்ஞ்ஞான அமுதினை உண்டருளிய பிள்ளையார் போற்றி; உய்வகை... பாடி - இந்நிலவுலகத்துள்ளோருக்கு உய்யும்வகை உதவும்பொருட்டுத் திருப்பதிகங்களைப் பாடியருளி; எவ்வகையோரும்... நாளில் - எல்லா வகையோர்களும் போற்றும்படி சிவபெருமானை ஏத்தி எழுந்தருளியிருக்கும் நாள்களில்,

விளக்கவுரை:- நாளில் - வந்தணைந்தார் என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

அவ்வகை மருங்கு சூழ்ந்த பதிகள் - செம்பங்குடி - திருக்கொண்டல் - திரு மயிலாடி - நல்லூர்ப்பெருமணம் - நல்லூர் முதலியவை என்று கருதப்படும்.

பதிகம் பாடி - இப்பதிகங்கள் கிடைத்தில! **உய்வகை மண்ணுளோருக் குதவிய** என்பது பிள்ளையாரது அருட்டிரு வாக்குக்களின் இயல்பு.

எவ்வகையோரும் ஏத்த - ஏத்தும். எல்லாரும் இறைவரை வணங்கிப் போற்றி யுய்யும்பொருட்டுத் தாம் ஏத்தி என்றும், எவ்வகையோரும் இப்பதிகங்களையே பாடி இறைவரை யேத்தும்படி என்றும் உரைக்கநின்றது. **எவ்வகையோர்** - "ஆறுவகைச் சமயத்தி

வேறு

2029. திருநீல கண்டத்துப் பெரும்பாணர் தெள்ளமுதின்
வருநீர்மை யிசைப்பாட்டு மதங்கசூ ளாமணியார்
ஒருநீர்மை யுடனுடைய பிள்ளையார் கழல்வணங்கத்
தருநீர்மை யாழ்கொண்டு சண்பையிலே வந்தணைந்தார். **131**

லருந்தவரும்" (புரா - 1252) என்பது போன்ற எவ்வகைக் கொள்கையுடையோரும் பலதிறப்பட்ட பக்குவபேதமுடைய மக்களும் என்றலும் பொருந்தும். **ஏத்த** - பிள்ளையாரைத் துதிக்க என்றலுமாம். *130*

2029. **பொருளுரை:-** திருநீலகண்டத்துப் பெரும்பாணர்...மதங்க சூளாமணியார் - திருநீலகண்டத்துப் பெரும்பாண நாயனாரும் தெள்ளிய அமுதம்போன்ற நீர்மையைக் கொண்ட இசைப்பாட்டினையுடைய மதங்கசூளாமணியாரும்; ஒரு நீர்மையுடன் - ஒன்றுபட்ட அன்பின் திறத்தினாலே; உடைய பிள்ளையார்...அணைந்தார்-ஆளுடைய பிள்ளையாருடைய திருவடிகளை வணங்குதற்கு இசையின்பந் தரும் யாழினைக் கொண்டு சீகாழியில் வந்து சேர்ந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் ஒருமுடிபு கொண்டன.

விளக்கவுரை:- பாணரும் மதங்கசூளாமணியாரும் - அணைந்தார் என்று உம்மை விரிக்க.

அமுதின்விரு நீர்மை இசை - அமுதம்போல வருந் தன்மை. சுவை யின்பமும் பயனும்பற்றி வந்த உவமை. **அமுதின்** - இன் ஒப்புப் பொருளில் வந்த ஐந்தனுருபு. **அமுதின் வரும்** - இனி, நஞ்சு முதலிய பல தானங்களிளுளவாதலின் அவை நீங்க அமுதத்தானத்தினின்றும் வரும் என்று உரைத்தலுமொன்று. இப்பொருளில் **இன்** நீக்கப்பொருளில் வந்த உருபு.

உடைய பிள்ளையார் - ஆளுடைய பிள்ளையார். (1968)

கழல் வணங்க - வந்து - அணைந்தார் என்றும், **கழல் வணங்கத் - தரும் யாழ்** என்றும் கூட்டி உரைக்கநின்றது. இவ்வாறே பிள்ளையார் கழல் வணங்குதற்கென்றே ஆளுடைய அரசுகளும் வரும்தன்மை காண்க. "இறைஞ்சுதற் காக, வந்தண் பூந்த ராய் தன்னி லணைந்தனர் நாவுக் கரையர்" (புரா. 268).

இசைப்பாட்டு மதங்கசூளாமணியார் - பாணனார் யாழ்க்கருவி கொண்டு வாசிக்க மதங்கசூளாமணியார் அதனுடனிசைய மிடற்றுப் பாடல் பாடுவார் என்பது குறிப்பு. இசைப்பாட்டின் வடிவமேயாகிய என்றலுமாம். "மன்னுமிசை வடிவான" என்பது காண்க. **மதங்கசூளாமணியார்** - பாணனாரது தேவியார் பெயர்.

ஒரு நீர்மையுடன் - கழல் - வணங்க - "ஒன்றி யிருந்து நினைமின்க ளுந்தமக் கூனமில்லை" (தேவா. திருவிருத்) என்றபடி இறைவர் கழல்களைப்போலவே, பிள்ளையாரது

2030. பெரும்பாணர் வரவறிந்து **பிள்ளையா ரெதிர்கொள்ளச்**
சுரும்பார்செங் கமலமலர்த் துணைப்பாதந் தொழுதெழுந்து
விரும்பார்வத் தொடுமேத்தி மெய்ம்மொழிக ளாற்றுதித்து
வரும்பான்மை தருவாழ்வு வந்தெய்த மகிழ்சிறந்தார். **132**

கழல்களும் ஒருநீர்மை (ஒன்றிய . ஒன்றுபட்ட - வேறொன்றினும் செல்லாத - நினைப்பின் றன்மை) யுடன் வணங்கத் தக்கன என்பது. பாணனாரும் **தேவியாரும்** *இசையில் ஒருநீர்மைப்பட்டது போன்றே கழல் வணங்குதலினும்* **ஒருநீர்மையுட னிருந்தனர்** *என்றதும் குறிப்பு.*

கழல் வணங்கத் தரும் நீர்மை யாழ் *- கழல் பிரிவின்றிச் சேவித்து உடனிருக்கவும், இறுதியில் முத்தியெய்தவும் பேறு தந்தது* **யாழ்** *என்ற குறிப்பும் காண்க.* **யாழ் கொண்டு** *- என்று யாழினைத் தனி பிரித்துக் கூறியதும் இச்சிறப்புப்பற்றி.*

ஒருநீர்மை யுடனுறைய-*என்பதும் பாடம்.* *131*

2030. பொருளுரை:- பெரும்பாணர்... எதிர்கொள்ள-பெரும்பாணரும் மதங்கசூளாமணியாரும் மேற்கூறியபடி வருகின்ற செய்தியை அறிந்து பிள்ளையார் எதிரே சென்று அவர்களை எதிர்கொள்ள; சுரும்பு ஆர்...எழுந்து - வண்டுகள் பொருந்திய செங்கமல மலர்கள் போன்ற அவரது இரண்டு திருப்பாதங்களையும் தொழுது எழுந்து; விரும்பு...துதித்து - விரும்பும் ஆர்வத்தோடும் ஏத்தி மெய்ம்மொழிகளாலே துதித்து; வரும்....மகிழ் சிறந்தார் - வரும் பான்மையினாற் றரப்பட்ட வாழ்வு வந்து பொருந்த, அவ்விருவரும் பெருமகிழ்ச்சியிற் சிறந்தனர்.

விளக்கவுரை:- பெரும்பாணர்...எதிர்கொள்ள - வரவு அறிந்து *- சீகாழி நகரத்தில் அவ்வாறு அவ்விருவரும் வருகின்ற செய்தியை அறிந்து.* **எதிர்கொள்ள-அடியார்களை** *எதிர்கொள்ளும் முறைமையின்படி திருமாளிகையினின்றும் போந்து நகரின் புறம் சென்று நல்வரவேற்று எதிர்கொண்டருள; "ஏற்கும் பெருவிருப் போடு மெதிர்கொள வெய்தும் பொழுதில்" (புரா. 369) என்று அரசுகளையும் பிள்ளையார் எதிர்கொள்ளச் சென்றமையும், பிறவும் காண்க. மறையவர்களின் மாளிகையாதலின் சூழ்ந்த அந்தணர்களை விலக்கிப் பாணனார் வந்து காணுதல் கூடாமையின் அருளினால் பிள்ளையார் தாமே முன்சென்று காட்சி கொடுத்தருளினர் என்றும், இது வேதநெறி சைவநெறி யிரண்டுங் காத்தநிலை என்றும், இவ்வாறு பலவும் இங்கு விசேடவுரை காண்பாரும் உண்டு; குறை காண்பாருமுண்டு. அவை சிறிதும் ஈண்டைக்கேலா என்றொதுக்குக. "நண்ணியுறை யிடஞ்சமைத்து" (2035), "யாழ்ப்பாணர் பின்னே வர வவரை வளம்பெருகு மனையிற்போக அருள்செய்து தந்திருமா ளிகையின் வந்தார்" (புரா . 261) என்று வருவனவும், இதுபற்றித் திருநீலநக்க நாயனார் புராணத்திலும் (1857), அப்பூதியார் புராணத்திலும் உரைத்தனவும் கருதுக.*

துணைப் பாதம் *- இரு பாதங்கள்.* **துணை** *- இரண்டு; அடைந்தார்க்குத் துணை நிற்கும் பாதங்கள் என்றலும் ஆம். பிள்ளையார் சரித நிகழ்ச்சிகளும், நம்பியாண்டார்*

2031. அளவிலா மகிழ்ச்சியினார் தமைநோக்கி "யையர்! நீர்
உளமகிழ விங்கணைந்த வுறுதியுடை யோ" மென்றே
யிளநிலா நகைமுகிழ்ப்ப விசைத்தவரை யுடன்கொண்டு
களநிலவு நஞ்சணிந்தார் பாலணையுங் கவுணியனார். **133**

நம்பிகளது "என்று மடியவ ருள்ளத் திருப்பன", "ஞான சம்பந்தன் பத்தர்கள்போய் **வாழும்** பதி" முதலிய திருவாக்குக்களும் காண்க.

தொழுது - நிலமுற விழுந்து வணங்கி.

விரும்பு ஆர்வம் - பலகாலம் விருப்பங்கொண்டமையாற் பெருகிய ஆர்வம். **ஏத்தி - துதித்து** - ஏத்துதல் நாமங்களை எடுத்து ஓதுதல்; **துதித்தல்** - தன்மைகளைப் **பாராட்டிப்** போற்றுதல். **மெய்ம்மொழி** - சத்தினின்றும் மாறாது என்றும் ஒரு படித்தாய் **உள்ளதாம்** தன்மையிற் தோன்றிய மொழிகள். உபசாரம் என்பதனின் வேறாய் உண்மைநிலத்தி**னின்று** மனமார எழும் மொழிகள்.

வரும்பான்மை தருவாழ்வு வந்துஎய்த - **பான்மை** - நல்ஊழ்; **வரும் - வாழ்வு** என்று கூட்டுக. தாம் கருதிவந்த வாழ்வு. அவ்வாழ்வாவது பிள்ளையாரை வணங்குதல். அது முன்னைத்தவத்தானாகிய நல்லூழினாலன்றிக் கிட்டாது என்பார் **பான்மைதரு** என்றார். **வந்து எய்த** - பிள்ளையார் தாமே எதிர்கொள்ள (2029) இவர்கள்முன் எழுந்தருளி வந்து காட்சி கொடுத்துத் தொழும்படி தம்மை அளித்தாராதலின் வந்து எய்த என்றார். **வந்து** - முன்வந்து. **எய்துதல்** - கிடைத்தல். *132*

2031. **பொருளுரை:-** அளவிலா...நோக்கி - அளவுகடந்த மகிழ்ச்சி கொண்ட அவ்விருவரையும் நோக்கி; "ஐயர்!...இசைத்து - "ஐயரே! நீங்கள் மனமகிழ இங்கு அணைந்ததனாலாகிய உறுதிப்பொருளைப் பெற்றவர்களாயினோம்" என்றே, இளநிலா வீசும் புன்முறுவலுடன் சொல்லி; அவரை...கவுணியனார் - அவர்களையும் தம் முடனேகொண்டு கழுத்தில் விளங்கும் நஞ்சினை அணிந்த சிவபெருமானிடம் அணைகின்ற கவுணியராகிய பிள்ளையார்,

விளக்கவுரை:- ஐயர் நீர்...உறுதியுடையோம் - இது பிள்ளையார் பாணரையும் பாடினியாரையும் நோக்கி நல்வரவேற்றுக் கூறிய இன்மொழி, **உறுதி** - சிறந்த நலம். **உடையோம்** - உடையோமாயினோம். **ஐயர்** - பெருமையுடையவர் என்ற பொருளில் வழங்கியது. பெருமை பற்றாது சாதிப் பெயராக இடுகுறியளவாய் வழங்குவது பிற்கால வழக்கு. "ஐயரே!" (1070) என்றதும், ஆண்டும், II (829)-ஆம் பக்கத்திலு முரைத்தவையும் பார்க்க.

நகை இளநிலா முகிழ்ப்ப - என்க. **நகை** - புன்சிரிப்பு. சிறிதே பல் தோன்ற நிகழும் புன்முறுவல். **இளநிலா** - இளஞ்சந்திரனொளி போன்ற வொளி. **முகிழ்த்தல்** - தோன்றுதல்.

அவரை - பாணரையும் பாடினியாரையும்.

2032. கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்பிடுவித்
"தேயுமிசை யாழுங்க ளிறைவருக்கிங் கியற்று" மென
வாயபுகழ்ப் பிள்ளையா ரருள்பெற்ற வதற்கிறைஞ்சி,
மேயதொடைத் தந்திரியாழ் வீக்கியிசை விரிக்கின்றார், 134

உடன்கொண்டு-கவுணியனார் - தம்மை அவருக்கு அறிவித்து அங்கு வரச்செய்து தமக்கு உறுதியுடைமைதந்த இறைவரை அவருக்கு அறிமுகஞ் செய்விப்பார்போன்று இறைவரது திருக்கோயிலுக்கு, அவரை எதிர்கொண்ட அங்குநின்றும் நேரே உடன் கொண்டணைந்தனர் பிள்ளையார். இவ்வாறே ஆளுடைய அரசுகளையும் எதிர்கொண்டிறைஞ்சிய அங்குநின்றும் ''பிள்ளையார்கொண் டுடன்போந்து, போர்விடையார் திருத்தோணிப் பொற்கோயிலுட்" சென்று அவருடன் கும்பிட்டுப் பின் திருமாளிகை யினிற் சேர்ந்தார் (புரா.277) என்ற வரலாறும் பின்னர்க் காண்க.

களநிலவு நஞ்சணிந்தார் - பாணரது குலநலம் பாராது அன்புபற்றி ஏற்றருளும் அருளின் தன்மைக் குறிப்பு. கவுணியனார்-கொடுபுக்கு - கும்பிடுவித்து - என (2032) என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 133

2032. பொருளுரை:- கோயிலினில்...கும்பிடுவித்து - திருக்கோயிலினில் புறத் திருமுற்றத்தில் கொண்டு புகுந்து கும்பிடச்செய்து; "ஏயுமிசை-இயற்றும்" என - "பொருந்திய இசையினையும் யாழினையும் உங்கள் பெருமானுக்கு இங்கிருந்து இயற்றுங்கள்" என்று கட்டளையிட்டருள; ஆயபுகழ்....இறைஞ்சி - புகழ் பொருந்திய பிள்ளையாரது திருவருளினைப் பெற்றவதற்காக வணங்கி; மேய...விரிக்கின்றார் - பொருந்திய தொடைத் தந்திரிகளை - நரம்புகளை - இழுத்து வீக்கி இசையினை விரிப்பார்களாகி;

விளக்கவுரை:- கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்குக் கும்பிடுவித்து - திருக்கோயில் அமைப்பினில் இன்னின்ன மரபினர் இன்ன அளவுவரை புகுதலும் நின்று கும்பிடுதலும் சாலும் என்பதுபற்றித் திருக்கோயிலமைப்பினை விதித்த சிவாகமங்களுள் விதிக்கப்பட்டுள்ளன. சாதி குலம் முதலிய சமூக மரபுபற்றிய நிலைகளும் அவ்வாறே. உடல் நினைவும், உலக நினைவும் தொடர்பும் உள்ள அளவும் இவை பின்பற்றிக் காக்கத்தக்கன. அவற்றை விடுத்து முத்தியின் விருப்பநிகழு நிலையில் அவை பற்றாது தாமாகவே கழன்றுவிடும். ஆளுடையபிள்ளையார் வேதநெறி சைவநெறி யிரண்டினையுங் காத்து வாழிகாட்டியும் அளவுபடுத்தியும் உயிர்களை ஈடேற்றவந்த ஆசாரிய ராதலின் பாணரை அவர் மரபுபற்றிச் சிவாகமவிதிப்படி. கோயிலினிற் புறமுன்றிற் கொடுபுக்கார். அதனால் அன்புநெறிக்கு இழுக்கின்மை யறிக. இனி, இவ்வாறு மதிற்புறத்தினின்றும் புறத் திருமுன்றிலிற் கொடுபுக்குக் கும்பிடுவித்ததும் அன்பு நெறி முறையினாலே வரும் தகுதிபற்றியே யன்றிப் பாணனாரது மரபுபற்றியன்று என்பதும் கண்டுகொள்க. பிள்ளையாரே பின்னர் நல்லூர்ப்பெருமணத்தில் சாதிகுல மரபு பற்றாது புண்ணிய மணத்தில் வந்தோர் எல்லாரும் பேதமின்றி முத்திநிலை பெறும் வாயில் வகுத்தருளி, "ஞானமெய்ந் நெறிதான் யார்க்கு நமச்சிவா யச்சொலாம்" என்று பதிகத்தை எல்லாரும் கேட்க அருளி, "ஈனமாம் பிறவிதீர யாவரும் புகுக!" என்று அருளியதும், அங்குக்

2033. தானநிலைக் கோல்வடித்துப் படிமுறைமைத் தகுதியினால்
ஆனவிசை யாராய்வுற் றங்கணர்தம் பாணியினை
மானமுறைப் பாடினியா ருடன்பாடி வாசிக்க
ஞானபோ னகர்மகிழ்ந்தார்; நான்மறையோ ரதிசயித்தார்; **135**

குலநலம்பற்றாது மறையவர்களுடன் ஒருசேரச் "சீ ரார்திருமெய்ப் பெரும்பாணர் மற்றெனையோ ரணைந்துளோர், பார்நிலவு கிளைசூழப் பன்னிகளோ டுடன்புக்கார்" என்றதும் காண்க. ஆயின், ஈண்டே பிள்ளையார் அம்முறை யியற்றியிருத்தல் ஆகாதோ? எனின், ஆகாது; அவ்வவர்க்கேற்றபடி காலமும் இடமும் பக்குவமுநோக்கிப் பார்த்து அருள்புரிதல் கடவுள் நியதி. அதுவே ஆகமவிதியும் ஆசாரியர் ஒழுக்கமுமாமென்க. இவைபற்றித் திருநாளைப் போவார் நாயனார் புராணத்தும், மற்றும் அங்கங்குமுரைத்தவையும் பார்க்க. கும்பிடுவித்து - கும்பிடப் பணித்து இயற்றுவித்தல் ஆசாரியரியல்பு. 3144ல் இறைவராணை காண்க.

ஏயும் இசையாழ் உங்கள் இறைவருக்கு இங்கு இயற்றும் - **ஏயும்இசை** - காலத்துக்கும் இடத்துக்கும் பொருந்தும்படி கூடும் இசை. **இசையினையும் யாழினையும் இயற்றும்** என்க. **இசை** - மிடற்றுப் பாடல். **யாழ்** - யாழ் மிழற்றுதல். **இங்கு** - புறமுன்றிலின்கண் இங்கிருந்தபடியே. இறைவரைப் பாடுதல் எங்குநின்றும் செய்யத் தக்கதாமென்பது.

உங்கள் இறைவருக்கு - அன்பின் உரிமைபற்றித் தமது இறைவரை அவருக்கு உரிமைப்படுத்திக் கூறிய அருமைப்பாடு காண்க. " அப்பர்! உங்கடம் பிரானாரை நீர் பாடீர்" (1451) என்று இவ்வாறே ஆளுடைய அரசுகளிடம் பிள்ளையார் கூறியருளியதும் காண்க.

அருள்பெற்ற அதற்கு இறைஞ்சி-முன்னர்த் "தொழுது" (2030) என்றது, பிள்ளை யாரைத் தாம் வணங்கவந்த எண்ணம்நிலை கைகூடியதற்குச் செய்த வணக்கம். இங்கு **"இறைஞ்சி"** யது அவர் தம்மை வழிப்படுத்தும் ஆசாரியத் தன்மையினை ஏற்றுக் கும்பிடவும் இசை பாடவும் பணித்த வருள்பெற்றதற்குச் செய்த வணக்கம்.

தொடைத் தந்திரி யாழ் வீக்கி - தொடுக்கும் நரம்புகளை யாழின் உறுப்புக்களின் கண்ணே முறுக்கி. **தந்திரி** - நரம்புத் தந்தி.

இசை விரிக்கின்றார் - **விரித்தல்** - உள் அமைந்து கிடந்தவை வெளிப்படும் நிலைகளை அமைத்தல். விரிக்கும்வகை மேற்பாட்டிற் காண்க. 134

2033. பொருளுரை:- **தானநிலைக் கோல்வடித்து** - சுரத்தானங்கள் உரிய நிலைகளில் உண்டாக்கும்படி கருவியினால் அமைவுசெய்து; **படிமுறைமைத் தகுதியினால்** - நரம்பு படியும் முறைமையின் தகுதியினாலே; **ஆனஇசை ஆராய்வுற்று** - ஆன ஆரோகண அவரோகண வகையால் இசையைத் தெரிந்து; **அங்கணர்தம் பாணியினை** - சிவபெருமானது திருப்பாட்டினை; **மானமுறை** - அளவுபடும் முறையில்; **பாடினியாருடன்- வாசிக்க** - பாடினியாராகிய மதங்கசூளாமணியாருடனே ஒன்றித்துப் பாடி வாசிக்கக்

2034. யாழிலெழு மோசையுட னிருவர்மிடற் றிசையொன்றி
வாழிதிருத் தோணியுளார் மருங்கணையு மாட்சியினைத்
தாழுமிரு சிறைப்பறவை படிந்ததனி விசும்பிடைநின்
றேழிசைநூற் கந்தருவர் விஞ்சையரு மெடுத்திசைத்தார். 136

கேட்டு; ஞானபோனகர்...அதிசயித்தார் - ஞானவமுதுண்டாராகிய பிள்ளையார் மகிழ்ச்சியடைந்தனர்; நான்மறையவர்கள் அதிசயித்தனர்.

இந்த மூன்று பாட்டுக்களும் ஒரு தொடர்புகொண் டுரைக்கநின்றன.

விளக்கவுரை:- **தானநிலை - படிமுறைமைத் தகுதி - இசை ஆராய்வுறுதல்** - *இவை இசைக்கலையின் மரபுப் பெயர்கள்.*

"முறைத்தானம்" - "படிமுறையா மத்தகைமை" (949); "இசைவகை" (953) என்றவிடத்துரைத்தவை பார்க்க. 221-ல் உரைத்தவையும் பார்க்க.

அங்கணர்தம் பாணி - *பாணி - தாளம் (221);* **அங்கணர்தம் பாணி** *என்ற தாளத்துடன் கூடிய, இறைவரைப் பாடும் பாட்டினைக் குறித்தது. "பாணியு மியலும்" (953).*

மானமுறை - *மானம் - "அளவுபெற வாசித்து" (952).* **படிமுறை** - *நண்பு - பகை - அமுதம் என்ற வகையுள் அமுதநரம்பு படியும் முறை. இவற்றின் வகை எல்லாம் முன்னர் விரித்துரைத்தமையின் இங்குச் சுருக்கிச் சுட்டினமட்டி லமைந்தார். இசையின் முன்னங்கமாகிய தொழில்கள் எல்லாம் குழலுக்கும் யாழுக்கும் ஒக்கும். குழல் நாதவிசை முழக்குதலில் அதரம் வைத்து ஊதும் வகையாலும் யாழில் நரம்புகளில் கோல்வடித்து நாதம் எழுப்பும் வகையாலும் தொழில் செய்யப்படும்.*

பாடினியாருடன் பாடி - **பாடினியார்** - *பாணரது மனைவியார்.* **பாடுதல்** - *மிடற்றுப் பாடல்.* **வாசித்தல்** - *யாழிசைத்தல்.* **பாடுதல்** *வகைபற்றி 221-ல் உரைக்கப்பட்டன.*

பாடி வாசிக்க - *இவையிரண்டும் ஒன்றித்து நிகழ்வது குறிக்க வினையெச்சங்களை ஒருசேர முடிபுகொள்ளக் கூட்டியுரைத்தார். இதன் வகை மேற்பாட்டில் விரிக்கப்படும். இவற்றின் விரிவெல்லாம் சிலப்பதிகாரம் (கானல்வரி - அரங்கேற்றுகாதை) உரை முதலியவற்றுட் கண்டுகொள்க.*

மறையோர் - *சுரபேதங்கள் பொருந்த உதாத்தம் முதலிய நிலைகளில் வைத்து வேதங்களை ஓதும் பயிற்சியுடையோர் என்பது குறிப்பு.* 135

2034. **பொருளுரை:-** *யாழின்...ஒன்றி - யாழினின்றும் எழுகின்ற ஓசையுடனே இருவருடைய மிடற்றின் இசையும் ஒன்றாகக் கூடி; வாழி...மாட்சியினை - வாழும் திருத்தோணியின் உள்ளாரிடம் அணைகின்ற பெருமையினை; தாழும்...விசும்பிடை நின்று - தாழ்ந்துவரும் கின்னர மிதுனங்களாகிய இரு பறவைகள் வந்து படிந்த தனி விசும்பினில் நின்று; ஏழிசைநூல்...எடுத்திசைத்தார் - ஏழிசை நூலில் வல்லவர்களாகிய கந்தருவர்களும் வித்தியாதரர்களும் எடுத்துப் பாராட்டினார்கள்.*

2035. எண்ணருஞ்சீர்த் திருத்தோணி யெம்பெருமான் கழல்பரவிப்
பண்ணமையா ழிசைகூடப் பெரும்பாணர் பாடியபின்,
கண்ணுதலா ரருளினாற் காழியர்கோன் கொடுபோந்து
நண்ணியுறை யிடஞ்சமைத்து நல்விருந்து சிறந்தளிப்ப, 137

விளக்கவுரை:- முன்பாட்டால் நிலவுலகத்துள்ளார் பாராட்டியதனையும். இப்பாட்டால் இசைநூல் வல்ல விண்ணுலகோர் பாராட்டியதனையும் கூறினார்.

யாழிலெழும்ஓசை - மிடற்று இசை - ஓசை என்றது உயிரில் கருவியின் சத்த மாதலின் பொருள்பற்றியதன்று என்பதும், இசை என்றது உயிர்க் கருவியாகிய மிடற்றினின்றும் பொருள்பற்றி உதிப்பது என்பதும் குறிப்பு.

ஓசையுடன் இசை ஒன்றி - ஒன்றுதல் - ஓசையும் இசையும் வேறுபிரித்தறிய முடியாதபடி ஒன்றுபட ஒலித்தல்.

தோணியுளார் மருங்கணையும் மாட்சி - தோணியுளார் - தோணிபுரேசரும் பெரியநாயகியம்மையும் **மருங்கணைதலாவது** - கோயிலினிற் புறமுன்றிலினின்றும் இறைவரைப் பாடுதலால் இசைத்த இசை திருத்தோணியில் வந்து சேர்தல். இறைவரது திருவருளுக் கேற்புடைத்தாதல் என்றது குறிப்பு.

வாழி - உலகம் வாழ வாழ்கின்ற, **மாட்சி** - பெருமை.

தாழும் இருசிறைப் பறவை படிந்த - இருசிறைப் பறவை - சந்திரமண்டலத்திலிருக்கும் கின்னர மிதுனங்கள் எனப்படும் இரண்டு எகினங்கள். இவை உயர்ந்த கீதங்கள் நிகழும்போது அங்குநின்றும் இறங்கிவந்து இசையை விசும்பினின்றபடியே கேட்டு அனுபவித்து நிற்கும் என்பது மரபு. **தாழும் - படிந்த தனிவிசும்பு** என்பன இக்குறிப்பு. **தாழும்** - சந்திரமண்டலத்தினின்று கீழே நிலவுலகத்தில் வருதல். விரும்புதல் என்ற குறிப்பும்பட நின்றது.

படிந்த தனி விசும்பிடை - கின்னர மிதுனங்கள் நிலவுலகத்தின் வந்து ஆகாய வெளியில் நின்று இசையினை நுகர்ந்து நின்றன என்பதும், அந்த விசும்பினிடமே கந்தருவர் முதலியோரும் நின்று பாராட்டினர் என்பதுமாம்.

எடுத்து இசைத்தல் - மேம்பாட்டைப் புகழ்ந்து பாராட்டுதல். 136

2035. பொருளுரை:- எண் அரும் சீர்...பின் - எண்ணுதற்கு மருமையாகிய சிறப்பினையுடைய திருத்தோணியில் எழுந்தருளிய எம்பெருமானது பாதங்களைத் துதித்துப் பண் அமைந்த யாழும் (மிடற்று) இசையும் பொருந்தும்படி திருநீலகண்டப் பெரும் பாணர் பாடி முடித்ததன் பின்பு; கண்ணுதலால்...கொடுபோந்து - நெற்றிக்கண்ணை யுடையாரது திருஅருளினாலே சீகாழித்தலைவராகிய பிள்ளையார் அழைத்துக்கொண்டு போய்; நண்ணி...சமைத்து - அவர்கள் தங்கியிருப்பதற்குத் தனியிடம் அமைதிப்படுத்தி; நல்விருந்து சிறந்தளிப்ப - நல்ல விருந்தினைச் சிறப்பாய் அளிப்ப;

2036. பிள்ளையா ரருள்பெற்ற பெரும்பாணர் பிறையணிந்த
வெள்ளநீர்ச் சடையாரை யவர்மொழிந்த மெய்ப்பதிகம்
உள்ளபடி கேட்டலுமே யுருகுபெரு மகிழ்ச்சியராய்த்
தெள்ளமுத மருந்தினர்போற் சிந்தைகளிப் புறத்தொழுதார். 138

விளக்கவுரை:- பரவி - பாட்டின் பொருள் சிவபெருமானைத் துதித்தது என்றது. பொருள் பற்றாத வெறும் இசை பயனற்றது என்பதாம்.

பண் அமை யாழ் - யாழ் - யாழ்ப் பாடல்; பண்ணின் தன்மை முற்றும் தோன்றும் அமைப்புடையவை குழலும் யாழும் என்னுமிரண்டே என்ப. இவைபற்றி முன் ஆனாயர் புராணத் துரைக்கப்பட்டன. நரம்பின் தொகை வகைகளாலும் அமைப்பினாலும் யாழ் நான்கு திறப்படும். அவை பேரியாழ், மகர யாழ், சகோடயாழ், செங்கோட் டியாழ் என்பன. இவை முறையே 21 - 17 - 14 - 7 நரம்புகளுடையன. இவற்றுள் திருநீலகண்ட யாழ்ப்பாணர் கொண்டது சகோட யாழ். "சகோட யாழ்த் தலைவர்" (1858). யாழ் வகைகள்பற்றிச் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை IV-22 "யாழும்" (26) என்றவிடத்து அடியார்க்கு நல்லாருரையினும், யாழ் வாசிக்கு முறைபற்றி வேனிற்காதை மேற்படி உரையினும், அரும்பத வுரையினும் விரிவாய்க் கண்டுகொள்க.

இசை கூட - இசையும் ஒன்றுகூடப் பொருந்த.

கண்ணுதலார் அருள்கூட - திருவருள் வெளிப்பட்ட குறிப்புக் கலந்ததாக. கண்ணுதலார் - வருங்கால நிகழ்ச்சியும் காட்டக் கண்டு என்ற குறிப்புமாம்.

நண்ணியுறை இடம் - பாணரும் பாடினியாரும் உறைவதற்குரிய தனியிடம். குலத் தன்மைபற்றிய நிலையால் நகர அமைப்பின் அமைதிக்கும் மாறுபடாவண்ணமுள்ள குறிப்புமாம். உறை - என்ற குறிப்புமது. பின்னர்ப் பலகாலமும் அவ்விரு வரும் அங்கு உடனிருக்கும் நிலையைக் கண்ணுதலார் அருள் கூடியதனால் உணர்ந்தாராதலின் அதற்குத் தக்கபடி நிலையான இடம் சமைத்தனர் என்பதும் குறிப்பு.

நல்விருந்து - விருந்து - விருந்தினர்க்களிக்கும் உணவு என்ற பொருளில் நின்றது. உலகநிலைத் தொடர்பும் உடலின் தொடர்பும்பற்றி வரும் ஏனை விருந்து போலாது, சிவனைப்பற்றிய அன்பு விருந்தாதலின் நல் விருந்து என்றார். "ஏதந்தீர் நல்விருந்தா வின்னடிசி லூட்டுவார்" (1734). 137

2036. பொருளுரை:- பிள்ளையார்...பெரும்பாணர் - முன்கூறியபடி பிள்ளையாரது திருவருளைப்பெற்ற பெரும்பாணர்; பிறை.கேட்டலுமே - பிறைசூடிய கங்கையைத் தரித்த சடையினையுடைய சிவபெருமானை அவர் துதித்த மெய்ப்பதிகங்களை உள்ளவாறு அடியார்கள் சொல்லக் கேட்டவுடனே; உருகு...தொழுதார் - உள்ளமுருகும் பெருமகிழ்ச்சியை யுடையவராய்த் தெளிந்த அமுதத்தை உண்டவர்போல மனம் களிப்படையத் தொழுதனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

2037. காழியார் தவப்பயனாங் கவுணியர்தந் தோன்றலார்
ஆழிவிட முண்டவர்த மடிபோற்றும் பதிகவிசை
யாழின்முறை மையினிட்டே யெவ்வுயிரு மகிழ்வித்தார்
ஏழிசையும் பணிகொண்ட நீலகண்ட யாழ்ப்பாணர். **139**

விளக்கவுரை:- அவர் - பிள்ளையார். ***மொழிந்த*** - துதித்த. "வாயே ***வாழ்த்து*** கண்டாய்", "வாழ்த்த வாயும்" என்றபடி மொழிதல் எல்லாம் இறைவர் ***புகழ்*** வழுத்தலேயாதலின் இங்கு ***மொழிந்த*** என்றது போற்றிய என்றதாம்.

மெய்ப் பதிகம் - "அன்ன மெய்த்திரு வாக்கெனு மமுதம்" (புரா. 1088), "ஈனும்என்னும் வாய்மை குலவுதலால்" (மேற்படி - 980). ***மெய்*** - சத்தாகிய தன்மை.

உள்ளபடி கேட்டல் - உள்ளபடியினை - தன்மையினை - உள்ளவாறே அடியார் ஓதக் கேட்டல்.

உருகு - மகிழ்ச்சி - கேட்டலால் உள்ளமுருகிற்று; உருகுதலால் மகிழ்ச்சி பெருகிற்று எனக் காரணப்பொருளில் வந்தது.

தெள்ளமிர்தம் - தெள்ளுதல் - தெளிவித்தல். பிறவி மயக்கை ஒழித்தல்-போக்குதல் - என்றலுமாம். "உள்ளத் துறுதுய ரொன்றொழியா துள்ளவெலாந், தெள்ளும் கழலுக்கே" (திருவா.)

திருப்பதிகம்-களியுற-அருளினார்-என்பனவும் பாடங்கள். *138*

2037. ***பொருளுரை:-*** காழியார்...பதிக இசை - சீகாழி நகரார் செய்த தவப்பயனாயுள்ள கவுணியர் குலத்தோன்றலாராகிய பிள்ளையார் கடல்விடத்தை யுண்டருளிய இறைவரது திருவடிகளைப் போற்றும் திருப்பதிகங்களின் இசையினை; ஏழிசையும்....யாழ்ப் பாணர் - ஏழிசைகளையும் ஏவல்கொண்ட திருநீலகண்ட யாழ்ப்பாணர்; யாழின்...மகிழ்வித்தார்-யாழின் முறைமையினாலே வாசித்து எல்லாவுயிர்களையும் மகிழ்வித்தனர்.

விளக்கவுரை:- இசை - யாழின் முறைமையின் இட்டே - இசையினை யாழிசையிற் பொருந்த வாசித்தே. ***இடுதல்*** - வாசித்தல்.

எவ்வுயிரும் மகிழ்வித்தார் - பாட்டின் பொருளறிய வாராத உயிர்களும் இசையில் ஈடுபடுமாதலின் ***எவ்வுயிரும்*** என்றார். ***மகிழ்வித்தல்*** - தெய்வவுணர்ச்சி பொருந்தி வருதலின் இம்மகிழ்ச்சி ஏனைச் சடசம்பந்தமான இசையின் மகிழும் புல மயக்கம் போன்றதன்று என்பது.

ஏழிசையும் பணிகொண்ட - ஏழிசைகளும் இவரை அடைந்து வணங்கி இவரது ஏவல்வழி நின்று பயன்பெற்றன என்பது. பயனாவது சிவன் புகழ் பரப்பக் கருவி யாதல். *139*

2038. சிறியமறைக் களிறளித்த திருப்பதிக விசையாழின்
நெறியிலிடும் பெரும்பாணர் பின்னு "நீ ரருள்செய்யும்
அறிவரிய திருப்பதிக விசையாழி லிட்டடியேன்
பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டு" மெனத்தொழுதார். **140**

2038. பொருளுரை:- சிறிய....பெரும்பாணர் - மறையெலாந் தாமுணர்ந்த சிறிய களிறாகிய பிள்ளையார் அளித்தருளிய திருப்பதிக இசையினை யாழிசையின் நெறியில் வாசித்த பெரும்பாணனார்; பின்னும் - மேலும் பிள்ளையாரை நோக்கி; "நீர்...வேண்டும்" எனத் தொழுதார் - தேவரீர் கட்டளையிட் டருள்செய்கின்ற அறிவதற்கரிய பெருமையுடைய திருப்பதிகங்களின் இசையினை யாழில் வாசித்து "அடியேன் தேவரீரைப் பிரியாமல் சேவித்து உடனிருக்கும் பேறு பெறவேண்டும்" என்று விண்ணப்பித்து வணங்கினர்.

*விளக்கவுரை:- **சிறிய மறைக்களிறு** - **சிறிய** - பருவம் குறித்து நின்றது; **மறைச்சிறு களிறு** - என்க - களிறுபோல்வாரைக் களிறு என்றதுருவகம். **களிறு**-ஞானமதம் பொழிந்து பரசமயக் காடு எறிதல் குறிப்பு.*

***மறைக்களிறு அளித்த திருப்பதிகம்** - மறைக்களிறு அளித்தலால் திருப்பதிகமும் மறையேயாம் என்பது.*

***யாழின் நெறி** - யாழிசை வாசிக்கும் முறை.*

***"நீர்...வேண்டும்"** - இது பிள்ளையார் திருமுன்பு பாணனார் செய்துகொண்ட விண்ணப்பம். பிள்ளையாரை நோக்கி என்பது தொக்கு நின்றது.*

***அறிவரிய திருப்பதிகம்** - இசையின் தன்மை - தமிழின் பெருமை - பொருளின் உண்மை முதலிய பெருமைகளின் அளவு அறிதற்கரிய. இசையின் அளவும் அறிதற்கரியதென்பது பின்னர் யாழ்மூரித் திருப்பதிக நிகழ்ச்சியானறிக.*

***பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டும் - சேவித்தல்** - இன்னியங்கள் முழக்குதலைக் குறிக்க வழங்கும் மரபு வழக்கு. இங்கு இரட்டுற மொழிதலால் யாழிசை வாசித்தலையும், பிள்ளையாரை வழிபடுதலையும் குறித்து நின்றது. **யாழில் இட்டுப் பிறி வின்றிச் சேவிக்கப்பெற** என்றதனால் பிள்ளையாரது திருக்கூட்டத்தில் ஒவ்வொருவரும் ஒவ்வோர் பணிசெய்து நின்றனர் என்பதாம்.*

***பிறிவின்றிச் சேவிக்கப்பெற வேண்டும்** - என்று பாணனார் விண்ணப்பித்தமையும், அவ்வாறே பிள்ளையார் அருளியமையும் உண்மைநிலையா மென்பது பின்னர்ப் பெருமணத்தில் உடனே திருவடி சேர்ந்த நிகழ்ச்சியாலறியப்படும். **சேவிக்க** என்பது முத்தியினும் உயிர் சிவனுக்கு அடிமை செய்யப்பெறுவது என்ற சைவ சித்தாந்த ஞானநூன் முடிபுணர்த்தும் குறிப்புத் தருவதாம்.*

***பிறிவின்றிச் சேவிக்கப்பெற வேண்டும் எனத்தொழுதார்** - "**பிள்ளையார் கழல் வணங்கும்**" (2029) நினைவுடன் பாடினியாரோடும் வந்தணைந்த பாணனார், பிள்ளை யாரைவணங்கப் பெற்ற பின்னர், அமைவு பெறாது, அவருடனே என்றும் பிரியாது*

2039. மற்றதற்குப் பிள்ளையார் மனமகிழ்வுற் றிசைந்தருளப்
பெற்றவர்தாந் "தம்பிரா னருளிதுவே" யெனப்பேணிச்
சொற்றமிழ்மா லையினிசைகள் சுருதியாழ் முறைதொடுத்தே
யற்றைநாட் போலென்று மகலாநண் புடனமர்ந்தார். **141**

சேவித்து உடனிருத்தலை வேண்டினார் என்றதனால் பிள்ளையார் ஆசாரியராக அவரை ஆட்கொண்டருளிய திறம் போந்தவாறு காண்க. "முன்ன மவனுடைய நாமங்கேட்டாள்...தலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே..." (தாண்) என்ற திருவாக்கின் உண்மை ஈண்டுப் புலப்படுதலும் காண்க.

சிறிய மறைக் கன்றளித்த - திருப்பதிகத்திசை - என்பனவும் பாடங்கள், **140**

2039. **பொருளுரை:-** மற்றதற்கு...பெற்றவர்தாம் - அவ்வாறு விண்ணப்பம் செய்த அதற்குப் பிள்ளையார் மனமகிழ்ச்சி பொருந்தி யிசைந்தருள, அப்பேறு பெற்ற பாணனார்; தம்பிரான்..பேணி - இது தமது பெருமானாரது அருளேயாம் என்று விருப்பத்துடன் ஆதரித்துக்கொண்டு; சொற்றமிழ்...தொடுத்தே - பிள்ளையாரது திருப்பதிங்களாகிய தமிழ்மாலைகளைச் சுருதியுடைய யாழிசையின் முறையில் வைத்து வாசித்துக் கொண்டே; அற்றைநாள்....அமர்ந்தார் - அந்தநாளிற்போலவே என்றும் பிரியாத நண்புடனே விரும்பி எழுந்தருளி யிருந்தனர்.

விளக்கவுரை:- **இசைந்தருளப் பெற்றவர்தாம்** - திருநீலகண்ட யாழ்ப்பாணர். பிள்ளையார் இசைந்தருளவே அந்த அருளிப்பாட்டினைப் பெற்றவர் என்க.


மன மகிழ்வுற்று - அடிமைத்திறத்தினையும் அன்பின்றிறத்தினையும் எண்ணி மகிழ்ந்தனர். இதனுள் குலம்பற்றிய நினைவுகள் எவ்வாற்றானும் குறுக்கிடாமை கண்டுகொள்க.

தம்பிரான் அருளிதுவே - இது தம்பிரான் அருளே என்று ஏகாரம் பிரித்துக் கூட்டுக. இறைவர் உயிர்களுக்குச் செய்யும் அருளாவது ஆசாரியனாக வந்து அருளுதலும், அடியார் கூட்டத்துட் சாரவைத்தலுமாம் என்பது உண்மை நூல்களின் முடிந்த துணிபு. பலகாலம் அரனைப் பயின்று பணிந்ததற்கு அவர் கருணை புரிந்து செய்த அருள் இது என்பது. "கும்பிட்ட பயன் காண்பார்போல்' (புரா - 1023) என்னும் கருத்துக் காண்க. "தன் சீரடியார், குலம்பணி கொள்ள வெனைக்கொடுத்தோன்" (திருக்கோவை - 54); "அன்பரொடு மரீஇ" (12 சூத்); "அன்பர்பணி செய்யவென்னை ஆளாக்கி விட்டுவிட்டால், இன்பநிலை தானேவந் தெய்தும் பராபரமே" (தாயுமானார்) முதலிய கருத்துக்கள் கருதுக.


சொற்றமிழ் மாலை - திருப்பதிகங்கள். **சுருதி யாழ்** - சுருதியுடைய யாழ். **யாழ் சுருதி முறை** - என்ற கூட்டியுரைத்தலுமாம். **தொடுத்தல்** - யாழ் தொட்டு வாசித்தல்.

அற்றைநாட்போ லென்றும் அகலா நண்புடன்-பின்சரிதங் காண்க. "நிறை நீர நீரவர் கேண்மை" (குறள்). **என்றும் அகலா** - இவ்வுலகத்திலும், இறைவனடி சாரும் அந்நிலையிலும் பிரியாமை காண்க.

அமர்தல் - விருப்புடன் ஒருங்குகூடி யிருத்தல். **141**



திருநெல்வாயிலரத்துறை வெள்ளாறும் (நிவாநதி) - கோயிலும்
- பாட்டு - 2122




சிதம்பரம் - பாண்டி நாயகம் - கோயிலும் முகப்பும்
- பாட்டு - 2056-2062




கொள்ளிடத் திருநதி வடகரை - சத்திரமும் மடமும் - சிதம்பரம் தெற்குத் திருவெல்லை - பாட்டு - 2044



சிதம்பரம் - தெற்குத் திருஎல்லைப்புறம் கொள்ளிடத் திருநதி



திருத்துரங்கானை மாடம் - வடபுறம் பார்வை -
கருப்பக்கிருகமும் - சண்டீசர் கோயிலும் - பாட்டு - 2082



திருக்கழிப்பாலை - பின்புறம் பார்வை - கருப்பக்கிருகம்
- பாட்டு - 2065

நான்காவது தலயாத்திரை

2040. சிரபுரத்தி லமர்ந்தருளுந் திருஞான சம்பந்தர்
பரவுதிருத் தில்லைநடம் பயில்வாரைப் பணிந்தேத்த
விரவியெழும் பெருங்காதல் வெள்ளத்தை யுள்ளத்திற்
றரவிசையுங் குறிப்பறியத் தவமுனிவர்க் கருள்செய்தார். **142**

---

*2040. **பொருளுரை:-** சிரபுரத்தில்..திருஞானசம்பந்தர் - சீகாழியில் **விரும்பி** எழுந்தருளி யிருக்கும் திருஞானசம்பந்தர்; பரவு-தர - பரவும் திருத்தில்லையில் **திருக்கூத்து** இயற்றும் பெருமானைப் பணிந்து துதிக்கப் பொருந்தி எழும் விருப்பமா**கிய** பெருவெள்ளத்தைத் திருவுள்ளத்திலே கொள்ள; இசையும் குறிப்பு அறிய - **இசையும்** திரு அருட்குறிப்பு உணர நிகழ்ந்ததாக; தவமுனிவர்க்கு அருள் செய்தார் - **அதனைத்** தவமுனிவராகிய தந்தையார் சிவபாதவிருதயருக்கு அருளிச்செய்தனர்.*

***விளக்கவுரை:-** பரவு **திருத்தில்லை** என்றும், பரவு நடம் பயில்வாரை என்**றும்** கூட்டி உரைக்க நின்றது. **பரவுதல்** - எங்கும் வியாபித்தல். போற்றுதல் என்றலு**மாம்.** "எப்புவனங் களுநிறைந்த திருப்பதி" (1444). **பரவு திருத்தில்லை** - என்றது **"சிவபூமி"** என்று திருமந்திரத்தினுள் பேசப்படுவதும், விராட்புருட னுருவத்தில் இதயத்தானமாதலும், பிறவும் குறிப்பு. **பரவு நடம் பயில்வார்** - என்றது படைத்தலாதி ஐந்தொழிலும் எங்கும் என்றும் நிகழ்தலும், நடத்தைப் பரவுதலே பிறவியறுக்கும் சாதனமாதலும் குறிப்பு.*

***நடம் பயில்வார்** - எப்போதும் நடம் செய்பவர். **காதற் பெருவெள்ளம்**-என்க.*

***உள்ளத்திற் றர** - மனத்திற் கொள்ள; **தருதல்** - மேற்கொள்ளுதல் என்ற பொருளில் வந்தது. திருவருள் தருதலால் என்றலுமாம். "அவனரு ளாலே அவன் றாள் வணங்கி" (திருவா).*

***இசையும் குறிப்பு அறிய** - தாம் கொண்ட நினைவுப்படியே இறைவரது திருவருள் இசைய அதனைத் தாம் உணர. "வேண்டி நீயா தருள்செய்தா யானு மதுவே வேண்டினல்லால்" (திருவாசகம்). பிள்ளையார் தில்லைநடம் பயில்வாரைப் பணியக் காதல் கொண்டனர்; அதனைத் திருவருள் இசையும் குறிப்பு உண்டாயிற்று; அதனைத் தாம் உணர்ச்சியுள் அறிந்தனர் என்பது. "உள்க மனம்வைத்த உணர்வுங் கண்டேன்" (தாண். வாய்மூர் - 5).*

***நடம் பயில்வாரைத் தில்லையிற் பணிந்தேத்த** - என்க.*

***தவமுனிவர்** - தாதையாராகிய சிவபாதவிருதயர்.*

***அருள் செய்தார்** - சொல்லியருளினார்.*

*இப்பாட்டுடன் பிள்ளையாரது நான்காவது தலயாத்திரை தொடங்குகின்றது. **1448ன்** கீழ் உரைத்தவை பார்க்க.* ***142***

2041. பிள்ளையா ரருள்செய்யப், பெருந்தவத்தாற் பெற்றெடுத்த
வள்ளலார் தாமுமுடன் செல்வதற்கு மனங்களிப்ப,
வெள்ளிமால் வரையென்னத் திருத்தோணி வீற்றிருந்த
புள்ளிமா னுரியாரைத் தொழுதருளாற் புறப்பட்டார். **143**

2042. தாவில்யாழ்ப் பாணரொடுந் தாதையார் தம்மோடும்
மேவியசீ ரடியார்கள் புடைவரவெங் குருவேந்தர்
பூவின்மே லயன்போற்றும் புகலியினைக் கடந்துபோய்த்
தேவர்கடம் பெருந்தேவர் திருத்தில்லை வழிச்செல்வார்; **144**

2041. பொருளுரை:- பிள்ளையார் அருள்செய்ய - மேற்சொல்லியவாறு பிள்ளையார் அருளிச்செய்ய; பெருந் தவத்தால்..மனங்களிப்ப - பெருந் தவத்தின் பயனாகப் பிள்ளையாரைத் தமக்கு மகனாராகப் பெற்றெடுத்த வள்ளலாராகிய சிவபாதவிருதயர் தாமும் அவருடனே செல்வதற்கு மனமகிழ்ச்சியுடன் ஒருப்பட்டாராக; வெள்ளி-தொழுது-பெரிய வெள்ளிமலையிற்போலத் திருத்தோணியில் வீற்றிருந்தருளிய புள்ளி மான்றோல் தரித்த இறைவரை வணங்கி; அருளாற் புறப்பட்டார் - அருள் விடை பெற்றுச் சீகாழியினின்றும் (பிள்ளையார்) புறப்பட்டனர்.

***விளக்கவுரை:-** பெருந் தவத்தால்-வள்ளலார் - சிவபாதவிருதயர். 1983 பார்க்க. தமக்காகவன்றி உலகமுய்யத் தவஞ் செய்து பிள்ளையாரை உலகுக்கு அளித்தாராதலின் **வள்ளலார்** என்றார்.*

***வெள்ளி மால்வரை என்னத் திருத்தோணி வீற்றிருந்த** - வெள்ளிமலையில் காதலித்து வீற்றிருத்தல்போலத் தோணியில் வீற்றிருந்த. **வரை என்ன** - வரையில் வீற்றிருத்தல் போல. தோணியையும் மலை என்று வழங்கும் வழக்கும் காண்க. “மாதினொடும்வரையென வீற்றிருந்தான்” (பிள். தேவா - பஞ்சமம் - பிரமபுரம்-11).*

***தொழுதுஅருளாற் புறப்பட்டார்** - தலத்தினின்றும் புறப்படும்போது தல நாயகரைத் தொழுது அருள் விடைகொண்டு புறப்படுதல் மரபு. மணிவாசகப் பெருமானார் ஆலவா யிறைவரைத் தொழுது புறப்பட்ட சரிதமும் காண்க. இஃது அவனருளா லல்லது ஒன்றையுஞ் செய்யாது இறைபணி நிற்குநிலையின் தன்மை.*

***உடன் செல்வதற்கு மனங்களிப்ப** - தாதையாரும் உடன்செல்லுதல் பின்னர் வரும் யாத்திரைகளிலும் காண்க. சிறுபான்மை பிள்ளையார் மறுத்துத் தாதையாரைச் சீகாழியில் இருத்தித் தாமே செல்வதுங் காணப்படும் (புரா - 961). **உடன் செல்லுதல்** - பிள்ளையாரது இளமை கருதிய நிலையும், பிரிவாற்றாநிலையுமாம்.*

***பிள்ளையா ருரைசெய்ய**-என்பதும் பாடம். 143*

2042. பொருளுரை:- வெங்குரு வேந்தர் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; தாவில்...புடைவர-கெடுதலில்லாத யாழ்ப்பாணருடனும் தந்தையாருடனும் பொருந்திய சிறப்புடைய அடியார்கள் பக்கத்திற் சூழ்ந்து வர; பூவின்மேல்...போய் - நிலவுலகத்தில்

வேறு

2043. நள்ளி ருட்கணின் றாடுவா ருறைபதி நடுவுகண் டனபோற்றி
முள்ளி டைப்புற வெள்ளிதழ்க் கேதகை முகிழ்விரி மணஞ்சூழப்
புள்ளு டைத்தடம் பழனமும் படுகரும் புடைகழிந் திடப்போந்து
கொள்ளி டத்திரு நதிக்கரை யணைந்தனர் கவுணியர் குலதீபர். 145

வந்து பிரமதேவன் பூசித்து வழிபடும் சீகாழியினைக் கடந்து சென்று; தேவர்கள்தம்...செல்வார் - தேவர்களுக்கெல்லாம் பெரிய தேவராகிய கூத்தப் பெருமானுடைய திருத்தில்லையினை நோக்கிச் செல்லும் வழியில் செல்வாராகி;

விளக்கவுரை:- தாவில் - கெடுதலில்லாத. குற்றமில்லாத என்றலுமாம். குற்றமில்லாத யாழ் என்றும், குற்றமில்லாத பாணர் என்றும் கூட்டி உரைத்துக் கொள்க. முன்னையதில் யாழின் குற்றங்கள் என்றும், பின்னையதில் குலம்பற்றிய கீழ்மையும், அது நோக்காமல் பிள்ளையாருடன் திருக்கூட்டத்தில் கூடிய நிலைபற்றிய குற்றமும் இல்லாத என்க.

சீர் மேவிய என்க. சீராவது பிள்ளையார் திருவடிச் சார்பு.

வெங்குரு - சீகாழியின் நான்காவது பெயர்.

பூவின்மேல் அயன் போற்றும் புகலி - **பூ** - நிலவுலகம். **அயன் பூவின்மேற் போற்றும்** என்க. **பூவின் மேற் போற்றுதலாவது** விண்ணுலகினின்று இந்நிலவுலகில் வந்து போற்றுதல். பிரமன் பூசித்ததனால் பிரமபுரம் என்றாயிற்று. "திருவடியே சரணென்று சிறந்த வன்பா, னாவியலு மங்கையொடு நான்முகன்றான் வழிபட்ட நலங்கொள் கோயில்" (பிள். தேவா - மேகரா - 1). பூ - தாமரை என்று கொண்டு தாமரையில் இருக்கும் அயன் என்றுரைப்பாருமுண்டு. **மேல்** - முன்னாள் என்றலுமாம். முன்னாளாவது முதல் ஊழி. "இந்தப்பூமி சிவனுய்யக் கொள்கின்றவாறு" (திருவா)

புகலி - சீகாழியின் மூன்றாவது பெயர்.

தேவர்கடம் பெருந்தேவர் - தேவதேவர்; மகாதேவர்.

செல்வார் - முற்றெச்சம். செல்வாராகி; செல்வார் - போற்றிப் - போந்து - அணைந்தார் என்று வரும்பாட்டுடன் முடிக்க. 144

2043. **பொருளுரை:-** நள்ளிருட்கண்...போற்றி - நடுவிருளில் நின்று ஆடுகின்ற இறைவர் எழுந்தருளிய தலங்கள் இடையிற் கண்டனவற்றை வணங்கித் துதித்து; முள்..போந்து - இடையில் முட்களுடன் கூடிய புறவிதழ்களையுடைய தாழைகளின் மொட்டு அலர்தலாலாகிய மணஞ் சூழ, நீர்ப்பறவைகளையுடைய இடம் அகன்ற வயல்களும் பள்ளநிலங்களும் பக்கங்களில் கழிந்திடச் சென்று; கவுணியர் குலதீபர் - கவுணியர்களது குலவிளக்காகிய பிள்ளையார்; கொள்ளிடத் திருநதிக்கரை அணைந்தனர் - கொள்ளிடத் திருநதியின் தென்கரையினை அணைந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

2044. வண்டி ரைத்தெழு செழுமலர்ப் பிறங்கலு மணியுமா ரமுமுந்தித்
தண்ட லைப்பல வளத்தொடும் வருபுனல் தாழ்ந்துசே வடிதாழத்
தெண்டி ரைக்கடற் பவளமும் பணிலமுஞ் செழுமணித் திரண்முத்துங்
கொண்டி ரட்டியுந் தோதமங் கெதிர்கொளக் கொள்ளிடங் கடந்தேறி, **146**

விளக்கவுரை:- **குலதீபர்** - குலவிளக்கு. குலத்தை விளக்கம் செய்பவராதலின் தீபர் எனப்பெற்றார். குலவிளக்காவது குலத்தின் புகழும் உயர்வும் விளங்கக் காரணமாதல். "கானவர் குலம் விளங்க" (662).

நள்ளிருள் - உலகமழிந்த ஊழி.

நடுவு கண்டன பதி போற்றி - ஒரு தலத்தினின்றும் மற்றொரு தலத்திற்குச் செல்பவர் இடையிற் கண்ட தலங்களையும் வணங்கிச் செல்லுதல் மரபு. இவை திரு மயிலாடி முதலியனபோலும்.

முள்இடை - புற - வெள் - இதழ் - கேதகை - தாழை மலரின் புறஇதழ்கள் வெளியனவாயும் புறத்தில் இடையிடையே செறிவின்றி முள்ளுடையனவாயும் உள்ள நிலை. நெய்தற்றிணை யாதலின் அதற்குரிய கருப்பொருளாகிய தாழை கூறப் பட்டது. **முகிழ்விரி மணம்** - மொட்டினின்றும் விரிகின்ற மணம் என்றலுமாம்.

மணஞ் சூழ - மிகுதி குறித்தது. "கைதைத் துன்றுநீறு" (242) என்று இக்குறிப்பினை ஆசிரியர் தொடக்கத்திலே காட்டியருளினர்.

தடம் பழனமும் - புள்ளுடை - என்றதற்கேற்பத் தடம் - வாவிகள் என்று கொண்டு தடங்களைக் கொண்ட பழனமும் என்றுரைத்தலுமாம். இப்பொருளில் **படுகர்** - என்பது பள்ளநிலம் என்க. இது இப்போது படுகை என வழங்கப்படும்; இவ்வாறுள்ள நிலங்கள் தில்லையின் தெற்குப் பாகங்களில் உள்ளன காண்க.

கொள்ளிடத் திருநதிக்கரை - கொள்ளிடம் - 256-ன் கீழ் உரைத்தவை பார்க்க. **கரை** - தென்கரை.

முள்ளுடைப்புற-முகைவிரி-படுகருமிடை-பெருநதி-என்பனவும் பாடங்கள். 145

2044. பொருளுரை:- வண்டு....உந்தி - வண்டுகள் சத்தித்து எழுகின்ற செழுமை யாகிய மலர்களின் தொகுதிகளையும் மணிகளையும் சந்தனக் கட்டைகளையும் வாரிக் கொண்டு; தண்டலை...தாழ - சோலைகளின் வளங்கள் பலவற்றுடன் வருகின்ற ஆற்றின் நீர் தாழ்ந்து தமது சேவடிகளில் வணங்கவும்; தெண்டிரை..எதிர்கொள - தெளிந்த அலைகளையுடை கடலினின்றும் பவளங்களையும் சங்குகளையும் ஏனை மணிகளையும் திரண்ட முத்துக்களையும் வாரிக்கொண்டு வீசிவரும் கடற் கழிநீர் அங்கு எதிர்கொள்ளவும்; கொள்ளிடம் கடந்து ஏறி - கொள்ளிடத் திருநதியினைக் கடந்து மேல் (வடகரையில்) ஏறி,

விளக்கவுரை:- **பிறங்கல்** - மலை. **மலர்ப் பிறங்கல்** - மலர்களை மலை போலக் குவியலாக ஆறு வாரிக்கொண்டு வருகின்றதென்பது.

மணி - மலையினும் நிலத்தினும் படுவனவாகிய முத்து. இரத்தினம் முதலியன.

ஆரம் - சந்தனமரக் கட்டைகள். **உந்தி** - இவை மலைபடு பண்டங்களாதலின் "பள்ளந்தா ழுறுபுனலிற் கீழ்மேலாக" (திருவா) என்றபடி மேட்டு நிலத்தினின்றும் பள்ளத்திற்கு நீர் வேகமாக **உந்திச்** சென்றது.

தண்டலை - சோலைகள். இவை சமவெளிநிலச் சோலைகளாதலானும், மலைப் பண்டங்களைப்போற் பெரியனவன்றி அளவாற் சிறியவையாதலானும் **வளத்தொடும் வருபுனல்** - என்றார். இவ்வளங்களாவன - சோலைகளின் தேனும் மலர்களும் கனிகளும் முதலியன.

தாழ்ந்து - தாழ - தாழ்தல் முன்னையது அளவால் குறைந்து கீழே சேர்தலும், பின்னையது வணங்குதலுமாம்.

வருபுனல் சேவடி தாழ - ஓதம் அங்கு எதிர்கொள - பிள்ளையார் கொள்ளிடங் கடந்த இடம் கடற்கரையின் அணியதாதலின் மணற்கரை எக்கரிட்ட திடல்களை யுடையது. "எட்டவிட்ட விடுமண லெக்கர்மேற், பட்ட நுண்டுளி பாயும்" (பராய்த்துறை - குறுந் - 8) என்றபடி ஆற்றின் புனல் தாழ்ந்து படிந்து செல்லும்; கடலினின்றும் அலைகள் எதிர்த்து அலைத்துக் கடற்பண்டங்களை உள்ளே சிந்தும். இதனைப் பிள்ளையார் சேவடிகளைக் **கொள்ளிடத்தின் வருபுனல்**, மலர் - மணி-ஆரம்-தேன் - கனிகள் - இவற்றுடன் தாழ்ந்து, அடிவிளக்கி வணங்குதல் என்றும், ஓதம், பவளம் - பணிலம் - முத்து - இவற்றுடன் அலைகளின் திவலைவீசி எதிர்கொள்ளுதல் என்றும் தற்குறிப்பேற்ற அணிநலம் பெறக் கூறினார். மலர் மணி சந்து இவற்றைத் திருமஞ்சன நீரில் இட்டுப் புனலாட்டுதலும், தேனும் கனிகளும் கொண்டு வணங்குதலும்; பவளம் - முத்து இவற்றை வீசியும் சங்கு ஏந்தியும் முழக்கியும் எதிர்கொள்ளுதலும் மரபுகளாம் என்பதும் காண்க. **எதிர்கொள** - கடல் அலைகளால் நீர் எதிர்த்து வர என்றும், எதிர்கொண்டு வரவேற்க என்றும் இரட்டுற மொழியநின்றது காண்க.

இரட்டி - வீசி. ஒலித்து என்றுலுமாம். **இரட்டி** - இருபங்காக என்றலுமாம். இரு பங்காவன ஆற்றின் வந்த மணி முதலியவற்றுடன் கடலிற் படும் பவளம் மணி முதலியவையும் கூட்டி வீசப்படுவன.

தெண்டிரைக் கடல் - கரை அணிமையாதலின் அலைகள் பெரியனவாய் அலைக் காது மெல்லிதாய் வீசிப் பரவுதலால் **தெண்டிரை** என்றார். **தெள்ளுதல்** - கலங்காது தெளிந்திருத்தல்

திரள் முத்து - திரள் என்றதனால் ஏனைய மணிகள்போலாது, முத்துக்கள் முற்றி முழுதும் திரண்டபின்பே இப்பி, சங்கு., கரும்பு, மூங்கில் முதலினவாகிய அவற்றின் பிறப்பிடங்களினின்று விடுபட்டு உதிர்தல் குறிப்பு.

கொள்ளிடம் - மணிகளைச் சிதறி உதவும் தன்மையுடையது என்பது "திகழ்ந்த புனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரத்தால், முகந்துதர" (1041) என்றதனாற்

2045. பல்கு தொண்டர்தங் குழாத்தொடு முடன்வரும் பயின்மறை யவர்சூழச்
செல்க திப்பயன் காண்பவர் போற்களி சிந்தைகூர் தரக்கண்டு
மல்கு தேவரே முதலனைத் துயிர்களும் வணங்கவேண் டினவெல்லாம்
நல்கு தில்லைசூழ் திருவெல்லை பணிந்தனர் ஞானவா ரமுதுண்டார். **147**

காண்க. அவ்வாறு அலைகளால் மணிகளைக் கரையிற் சிதறுதல் கொள்ளிடத்தின் இன்னும் நெடுந்தூரம் மேலைப் புறத்தில் நிகழ்வன. இந்த இடத்தில் அலைகளின்றித் தாழ்ந்து செல்லுந் தன்மையே நிகழ்வது.

செம்மலர் பிறங்கலும்-இரட்டிவந்து-கொண்டிரைத்து வந்தெதிர்கொளுந் தடஞ்சுழிக் கொள்ளிடம்-என்பனவும் பாடங்கள். 146

2045. பொருளுரை:- பல்கு...சூழ - நிறைந்த அடியவர் திருக்கூட்டத்துடனே பயிலும் வேதியர்கள் சூழ்ந்து வர; செல்கதி...கண்டு - செல்லும் கதியின் பயனைக் காண்பவர்போல மனத்தில் மிக்க மகிழ்ச்சிகூரக் கண்டுகொண்டு; மல்கு...வணங்க - பொருந்திய தேவர்களே முதலாக எல்லா உயிர்களும் வணங்க; வேண்டின எல்லாம்...திருவெல்லை - அவரவர் வேண்டிய வரங்களை யெல்லாம் கொடுக்கும் தில்லையைச் சூழ்ந்த திருவெல்லையினை; ஞானஆர் அமுதுண்டார் பணிந்தனர் - ஞானமாகிய நிறைந்த அமுதினை உண்டருளிய பிள்ளையார் நிலமுற வீழ்ந்து பணிந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

விளக்கவுரை:- பல்குதல்-பெருகுதல்; நிறைதல். **தொண்டர் தம் குழாத் தொடும்** - தொண்டர் குழாத்தினை முன் வைத்தமை சிறப்புப் பற்றி.

சூழ - நடந்து செல்கின்ற நிலை யாதலின் குழாமும் மறையவரும் சுற்றிச் சூழ என்றார். சிவிகை சின்னம் முதலியவை பின்னர்ப் பெறவுள்ளன.

செல் கதிப்பயன் காண்பவர் போல் கண்டு - செல்கதிப் பயன் - சிவகதி. **பயன்** - இறவாதவின்பம்; பேரானந்தம்; அளவிலாவானந்தம். **போல்** - முன்னரே கண்டு திருவடி மறவா நிலை பெற்ற பெரியோராதலின் **போல** என்றார். தில்லையைக் **காண முத்தி** யாதலின் ஏனையோர்க்கு அஃது ஒக்கும். பிள்ளையாரது தன்மையில் அது மிகையாய் ஏனையோர்க்குக் காட்டும் அளவில் பயன் தருவதாம் என்பது.

சிந்தை களி கூர் தரக் கண்டு - செல் கதிப்பயன் காண்பவர்பால் நிகழும் உள்ள நிலை. **கண்டு** - பிறர்க்குக் காட்டும் பொருட்டுத் தாம் கண்டு. "சிந்தை தெளிவுறுந் திண்ண னார்தாங், களி வரு மகிழ்ச்சி பொங்கக் காளத்தி கண்டு கொண்டு" (749); "ஆர்வமுன் பெருக வாரா வன்பினிற் கண்டு கொண்டே; (779) என்பன செல்கதிப் பயன் காண்பவர் நிலை. கண்டுபணிந்தவரது வினை போக்கி முத்தி யளிக்குந் தன்மை யுடையது **தில்லைத் திருவெல்லை** என்பது. "தில்லை வட் டந்திசை கைதொழு வார்வினை, யொல்லைவட் டங்கடந் தோடுத லுண்மையே" (கோயில் - குறுந். 9).

பொய்கை எதிர்கொண்ட காட்சி

2046. செங்கணேற்றவர் தில்லையே நோக்கி,யித்
திருந்துல கினுக்கெல்லாம்
மங்க கலந்தரு மழவிளம் போதகம்
வரு,மிரு மருங்கெங்குந்
தங்கு புள்ளொலி வாழ்த்துரை யெடுத்துமுன்
றாமரை மதுவாசப்
பொங்கு செம்முகைக் கரங்குவித் தலர்முகங்
காட்டின புனற்பொய்கை. **148**

திருவெல்லை(யினை) - செல் கதிப்பயன் காண்பவர் போற் கண்டு - பணிந்தனர் - *என்று கூட்டி முடிக்க.*

வணங்க - வேண்டினவெல்லாம் - நல்கு - **திருவெல்லை** என்க. **நல்கு தில்லை** என்று கூட்டினுமமையும். **வேண்டின** - அவ்வவர் வேண்டிய வரங்கள். வணங்க **நல்கும்** என்க. **வணங்க** - வணங்கினால்.

தேவரே - ஏகாரம் சிறப்பு.

வணங்கி வேண்டின - என்பனவும் பாடம். ***147***

2046. **பொருளுரை:-** இத் திருந்து... வரும் - இந்தத் திருந்து முலகுக் கெல்லாம் மங்கலம் தருகின்ற இளமையுடைய யானைக் கன்றாகிய பிள்ளையார் வருகின்ற; இருமருங்கு எங்கும் - இரண்டு பக்கங்களில் எவ்விடத்தும்; தங்கு...எடுத்து - தங்குகின்ற பறவைகளின் ஒலியாகிய வாழ்த்துரை எடுத்து; முன் தாமரை.... கரங் குவித்து - முன்பு தாமரை மலர்களின் பொங்கு செம் முகைகளாகிய கை குவித்து; புனற் பொய்கை - நீர்ப் பொய்கைகள்; அலர் முகம் காட்டின. மலர்ந்த முகத்தைக் காட்டி வரவேற்றன.

விளக்கவுரை:- திருந்தும் இவ்வுலகு - என்க. **திருந்து உலகு** - "கதிப்பாற் செல்ல எது நெறியெனும் அவர்கள்" (சித்தி. பாயி - 10) என்றபடி, நன்னெறி நாடும் சத்திநிபாதர்களாகிய உயிர்கள்; "மாதவஞ், செய்த தென்றிசை" (35) என்றவிடத் துரைத்தவை பார்க்க.

மங்கலம் - சிவநெறி. **மங்கலந் தரும்** - சிவநெறி காட்டி அதனுட் செலுத்தி உய்விக்கும்.

மழ இளம் போதகம் - மழ இள - ஒரு பொருட் பன்மொழி. இளமைச் சிறப்பின் மிகுதி குறித்தது. **போதகம்** - யானைக் கன்று.

புனற் பொய்கை - அலர் முகம் - காட்டின என்க. **அலர் முகம்** என்பது மலர்ந்த முகம் என்றும், மலர்களாலாகிய முன் தோற்றம் என்றும் இரு பொருள்படவும், உருவகத்தோடு தற்குறிப்பேற்ற அணி நலம் படவும் நின்றது.

சோலை எதிர்கொண்ட காட்சி

2047. கலவ மென்மயி லினங்களித் தழைத்திடக்,
கடிமணக் குளிர்கால்வந்
துலவி முன்பணிந் தெதிர்கொளக், கிளர்ந்தெழுந்
துடன்வருஞ் சுரும்பார்ப்ப,
இலகு செந்தளி ரொளிநிறந் திகழ்தர,
விருகுழை புடையாட,
மலர்மு கம்பொலிந் தசைய,மென் கொம்பர்நின்
றாடுவ மலர்ச்சோலை. **149**

புள் ஒலி வாழ்த்து எடுத்து - செம்முகைக் கரங் குவித்து - அலர் முகம் காட்டின - தாமரை அலர்முகங் காட்டி வாழ்த்தலாலும், கை கூப்புதலாலும் பொய்கை பிள்ளையாரை வணங்கி வரவேற்றன என்பது. ஒலி - வாழ்த்து; முகை - குவித்த கரம். மலர்முகங் காட்டலும், கைகூப்புதலும், வாழ்த்துதலும் வரவேற்கும் நிலைகள். 148

2047. பொருளுரை: மலர்ச்சோலை - பூஞ் சோலைகள்; கலவ... அழைத்திட - தோகையுடைய மெல்லிய மயிற் கூட்டங்கள் களிப்புடன் அழைத்திடவும்; கடிமணக் குளிர்.... எதிர்கொள - மிக்க மணத்துடனே குளிர்ந்த காற்று வந்து உலாவி முன்னே பணிந்துஎதிர் கொள்ளவும்; கிளர்ந்து.....ஆர்ப்ப-பெயர்ந்து எழுந்து உடன்வரும் வண்டுகள் ஆரவாரிக்கவும்; இலகு...திகழ்தர விளங்கும் செந்தளிர்கள் ஒளியுடைய நிறம் விளங்கவும்; இரு...ஆட - இருகுழைகள் பக்கங்களில் ஆடவும்; மலர்.....அசைய - மலர்கள் முகம் பொலிந்து அமையவும்; மென்... ஆடுவ - மெல்லிய கொம்புகளால் நின்று ஆடுவன.

விளக்கவுரை:- *முன்பாட்டின்* **பொய்கைகள்** *பிள்ளையாரை வரவேற்கும் நிலையின் தோற்றம் கூறினார்; இப்பாட்டினால்* **மலர்ச் சோலைகள்** *களித்து எதிரேற்கும் நிலையின் தோற்றம் கூறுகின்றார், இனி இவ்வாறே* **வயற்சாலியும்** *(2048),* **நறும்பூகமும்** *(2049),* **நெடுவானமும்** *(2050) அக்குறிப்புடன் விளங்கும் தோற்றங்களை மேல் வரும் மூன்று பாட்டுக்களாலும் முறையே கூறுவார். மயிலினம், களித்து அழைத்திடக், கால் பணிந்து எதிர்கொளச், சுரும்பு ஆர்ப்பச், செந்தளிர் நிறம் திகழக், குழைபுடை ஆட, மலர் முகம் அசைய, மலர்ச் சோலைகள் கொம்பர்களால் நின்றாடுவன என்று கூட்டி உரைத்துக்கொள்க.*

களித்தழைத்திடல் - முன்பணிந் தெதிர் கொள்ளுதல் - ஆர்த்தல் - ஒளி நிறந் திகழவும் குழை யாடவும் முகம் பொலிந் தசையவும் ஆடுதல் இவை யெல்லாம் வரவேற்பு வகை.

மலர்ச் சோலைகள் - பிள்ளையாரை எதிர்கொண்டு வரவேற்று வணங்குதல்; **மயில் கூவுதல்** *- அழைப்பாக;* **குளிர் கால் உலவுதல்** *- முன்பணிந் தெதிர் கொள்ளுதலாக;* **சுரும்பு பாடுதல்** *- ஆர்த்தலாக;* **செந்தளிர் இலகுதல்** *- ஒளி நிறந்திகழ்தலாக;* **இருகுழை** *(இலைகள்) - குழை புடையாடுதலாக;* **மலர்** *- முகம் பொலிந்தசைதலாக;* **கொம்பர்** *- அசைதல் பெண்களாடுதலாகக் கொள்க.*

சாலி எதிர்கொண்ட காட்சி

2048. இழைத்த டங்கொங்கை யிமயமா மலைக்கொடி
யின்னமு தெனஞானங்
குழைத்த ளித்திட வமுதுசெய் தருளிய
குருளையார் வரக்கண்டு,
மழைத்த மந்தமா ருதத்தி னா னறுமலர்
வண்ணநுண் டுகடூவித்
தழைத்த பொங்கெழில் முகஞ்செய்து வணங்கின
தடம்பணை வயற்சாலி. 150

கலவ - கலாபம் - தோகை - உடைய. மயில் கூவுதல் - அழைத்தல் போன்ற ஓசைக் குறிப்புத் தருவதும் காண்க.

குளிர்கால் வந்து உலவி முன்பணிந்து எதிர்கொள - இளங் காற்று மெல்லியதாய் வீசிச் சேவகம் செய்து கீழே படிய வீசுதல் - பணிதல் எனப்பட்டது. "தென் றலா ரடிவருடச் செழுங்கரும்பு கண்வளருந் திருவை யாறே" (பிள் - தேவா). குளிர்கால் - வடக்கினின்று தெற்கு நோக்கி வீசும் காற்று; வெப்பமுடைய வடக்கு நிலத்தினின்றும் குளிர் நிழற் சோலைகளின் வழியே குளிர்ந்த நீர்ப்பரப்பையுடைய கொள்ளிட நதியினை நோக்கி வரும் காற்று இங்குக் கூறப்பட்டது; பிள்ளையார் வடக்கு நோக்கிச் செல்கின்றாராதலின், தென்றல் என்ற உரைகளின் பொருத்தம் ஆராயத்தக்கது. குளிர் - குளிரும் என்க.

செந்தளிர் ஒளி நிறந் திகழ்தர - நிறம் திகழ்தல் - நிறம் - சோலையின் ஒளி வீசும் மேனி யென்றும், மார்பு என்றும் கொள்க.


இருகுழை - பெரிய இலைகள் என்றும், குழை என்னும் பெண்கள் காதணி என்றும் கொள்க.

மலர் முகம் - மலராகிய முன் தோற்றப்படு பொருள் என்றும், மலர் போன்ற முகம் என்றும் உரைத்துக் கொள்க.


மென் கொம்பர் - மெல்லிய கொம்புகள் - மரக் கிளைகள் - என்றும், கொம்பு போன்ற பெண்கள் என்றும் உரைக்க.

மெய்யொளி சிறந்திட - என்பதும் பாடம். 149


2048. பொருளுரை...... தடம்பணை வயற்சாலி - இடமகன்ற மருத நிலத்தின் வயல்களிலுள்ள நெற் பயிர்கள்; இழைத்தடங் கொங்கை...கண்டு - அணிகளணிந்த பெருங் கொங்கையினையுடைய பார்வதியம்மையார் இனிய அமுதச்சிவஞானத்தைக் குழைத்து அளிக்க உண்டருளிய பிள்ளையார் வரக்கண்டு; மழைத்த...வணங்கின - குளிர்ந்த மென்மையான காற்றினால் மணம் பொருந்திய மலர்களின் அழகிய நுண்ணிய பூந்தாதுக்களாகிய சுண்ணம் தூவித் தழைத்த பொங்கும் எழில் முகம் செய்து வணங்கின.



திருநெல்வாயிலரத்துறை கருப்பக்கிருகம்




பல்லவனீச்சுரம் - கோயிலும் - கோபுரமும் - பாட்டு - 2020




சீகாழி - பிரமதீர்த்தத் தென்கரையில் உள்ளது. சிவபாதவிருதயர்



கொள்ளிடத் திருநதி - இரயில் பாலம்



திருக்கழிப்பாலை - சுவாமி அம்மை கருப்பக் கிருகங்கள்



சிதம்பரம் தெற்குத் திருவீதியும் கோபுரமும்

- பாட்டு - 2055

பூகம் எதிர்கொண்ட காட்சி

2049. ஞால முய்ந்திட ஞானமுண் டவரெழுந்
தருளுமந் நலங்கண்டு,
சேல லம்புதண் புனற்றடம் படிந்தணை
சீதமா ருதம்வீசச்
சால வும்பல கண்பெறும் பயன்பெறுந்
தன்மையிற் களிகூர்வ
போல சைந்திரு புடைமிடைந் தாடின
புறம்பணை நறும்பூகம். **151**

விளக்கவுரை:- *சாலி - கண்டு - துகள் தூவி - முகஞ் செய்து - வணங்கின என்று கூட்டி முடிக்க.*

இழை *- அணிகள்; மலைக் கொடி - மலையரசன் பெற்ற கொடிபோல்வாராகிய பார்வதியம்மை. குருளை - குழவி;* ***குருளையார்*** *- பிள்ளையார்.* ***மழைத்த*** *-* ***மழையின்*** *தன்மையுடைய - குளிர்ந்த. மந்த* ***மாருதம்*** *- மெல்லியதாய் வீசும் காற்று.* ***மாருதம்*** *- காற்று என்றமட்டில் பொருள் தந்து நின்றது. சுண்ணத்துகள் எப்புறத்து நின்றும் தூவலாமாதலின் தென்றல் என்றலு மிழுக்கில்லை.* ***மாருதத்தினால் மலர் நறுந்துகள் தூவி*** *- என்றது மலர்களின் பூந்தாதுக்களைக் காற்று வீசித் தூவச் செய்து. பூந்தாதுக்கள் காற்றினாலலைக்கப்பட்டு மலர்களுட் புகுந்து கருப்பந் தரித்துக் காய்ப்பன என்பது தாவர நூலார் கண்ட உண்மை.*

தழைத்த பொங்கு எழில் முகஞ் செய்து *- பசுமை தழைத்ததனால் மேன்மேல் மிகுத்த அழகிய முகப்புக் காட்டி; மந்த மாருதத்தினால் வாசனைத்துகள் தூவுதலும், எழில் முகஞ் செய்தலும், வணங்குதலும் வரவேற் றுபசரிக்கும் நிலைகள்.*

சாலி - வணங்கின *- நெற் பயிர்க் கதிர்கள் வளைந்து நிற்றல் வணங்குதல் எனப் பட்டது. "தலையினால் வணங்கு மாபோல்...தலை வணங்கி - விளைந்தன சாலி" (72) என்று இக் கருத்தை முன்னர் விரித்ததும் காண்க. சாலி - நெற்பயிர் -* ***பணை*** *மருத நிலம்.* *150*

2049. பொருளுரை: *புறம்பணை - வயல்களின் பக்கங்களிலுள்ள;* ***நறும் பூகம்*** *- மணம் வீசும் கமுகுகள்; ஞாலம்...கண்டு - உலகம் உய்யும் பொருட்டு ஞான வமுதுண்டவர் எழுந்தருளி வரும் அந் நலத்தினைக் கண்டு; சேல்..வீச - சேல் மீன்கள் அலம்பும் குளிர்ந்த நீரையுடைய தடாகங்களிற் படிந்து அணைகின்ற குளிர்ந்த காற்று வீச; சாலவும்...போல் - மிகப் பல கண்கள் பெற்ற பயன்பெறுந் தன்மையினால் மகிழ்வன போல்; அசைந்து—ஆடின - அசைந்து இரண்டு பக்கங்களிலும் நெருங்கி ஆடின.*

விளக்கவுரை:- ***நறும் பூகம்*** *- கமுகுகள்.* ***நறுமை*** *- கமுக மரங்களின் செழுமையும் பூக்கள் விரிதலால் வீசும் நறு மணமும்.*

வான் எதிர்கொண்ட காட்சி

2050. பவந்த விர்ப்பவர் தில்லைசூ ழெல்லையின்
மறையவர் பயில்வேள்விச்
சிவந்த ரும்பய னுடையவா குதிகளின்
செழும்புகைப் பரப்பாலே
தவந்த ழைப்பவந் தருளிய பிள்ளையார்
தாமணை வுறமுன்னே
நிவந்த நீலநுண் டுகில்விதா னித்தது
போன்றது நெடுவானம். 152

ஞாலமுய்ந்திட ஞானம் உண்டவர் - பிள்ளையார் ஞானவமுது உண்டது தம் பொருட்டன்றி உலகின் பொருட்டேயாம் என்பது.

நலம் - நன்மை தரும் அருளிப்பாடு. எழுந்தருளுதல்.

சேல் அலம்பு தண்புனல் - அலம்புதல் - ஒலித்தல். சேல் - சேல் மீன்கள் துள்ளியாடுதலால் புனலில் ஒலி உண்டாகும். அலம்புதல் - கழுவுதல் என்று கொண்டு, சேல்மீன்கள் புனலின் அழுக்குகளை உண்டு தூய்மையாக்கி வைத்திருக்கும் நிலைக்குறிப்பு எனினுமாம்.

தடம் படிந்தணை சீதமாருதம் - தடம் படிதலால் குளிர்ச்சியுற்ற காற்று.

சாலவும் பல கண் பெறும் பயன் பெறும் தன்மை - கண் - கமுக மரத்திற் காணப்படும் கணுக்கள் கண் எனப்படும். புல் என்னும் வகையுட் பட்ட மூங்கில் - கரும்பு முதலியவற்றினும் இவ்வாறே உள்ள கணுக்கள் கண் எனப்படும். "செழுங்கரும்பு கண்வளரும் திருவை யாறே" (பிள். தேவா). கமுகில் கணுக்கள் பல இருத்தலால் பல கண்கள் பெற்றதனாலாகிய பயன் இன்று பிள்ளையாரது வரவைக் காணப்பெறுதலால் அடைந்தோம் என்று எண்ணிக் களிப்பனபோல.

அசைந்து - இருபுடை - மிடைந்து ஆடின - கமுகமரங்கள் செறிவு பெற நீண்டு வளர்ந்து காற்றில் அசைந்தாடுமியல்பினை மகிழ்ச்சியால் ஆடும் மெய்ப்பாடு என்று தற்குறிப்பேற்ற நலம்படக் கூறினார். மிடைதல் - செறிவுபெற இருத்தல்.

புறம்பணை - மருத நிலத்தின் புறம். பணைப்புறம் என்க. வயல்களை அடுத்து நகரின் அணிமை பெறக் கமுகஞ் சோலை அமைவன.

நெடும்பூகம்-என்பதும் பாடம். 151

2050. பொருளுரை: தவம்...முன்னே - தவம் தழைக்கும்படி திருவவதரித்து வந்தருளிய பிள்ளையார்தாம் வந்தணைய உபசரிக்கும்பொருட்டு முன்னே; பவம்...எல்லையில் - பிறவியைப் போக்கும் சிவபெருமானது திருத்தில்லை நகரினைச் சூழ்ந்த எல்லையிலே, மறையவர் பயில் வேள்வி - வேதியர்கள் பயிலும் வேள்விகளிலே; சிவம் தரும்...பரப்பாலே - சிவத் தன்மையை விளைக்கும் பயனையுடைய ஆகுதிகளினின்றும் எழும் செழும்

2051. கரும்பு செந்நெல்பைங் கமுகொடு கலந்துயர் கழனியம் பணைநீங்கி,
யரும்பு மென்மலர் தளிர்பல மூலமென் றனைத்தினா கரமான
மருங்கி னந்தன வனம்பணிந் தணைந்தனர் மாடமா ளிகையோங்கி
நெருங்கு தில்லைசூழ் நெடுமதிற் றென்றிரு வாயினே ரணித்தாக. 153

புகையின் பரப்பினாலே; நெடுவானம் - நீண்ட ஆகாயம்; நீல...போன்றது - உயர்ந்த நீலநிறமுள்ள நுண்ணிய துகிலினை மேற்கட்டியாக விரித்துக் கட்டியதுபோன்றிருந்தது.

விளக்கவுரை: பவம் - பிறவி. உற்பவம் என்பதுமிது.

வேள்வி - பொது வேள்விச்சாலைகளிற் செய்யப்படும் யாகங்கள், இவை வேறு; மறையவர் மனைகளில் வளர்க்கப்படும் நித்தியாக்கினி எனப்படும் முத்தீ வேறு. "பல் குஞ்செந் தீவளர்த்த பயில்வேள்வி யெழும்புகை" (1063) என்றும், "குன்றனைய மாளிகைக டொறுங்குலவும் வேதிகைகள், ஒன்றியமூ வாயிரமங் குளவென்பா ராகுதிகள்" (1064) என்றும் திருநாளைப்போவார் புராணத்துள் இவற்றை வேறு எடுத்துக் காட்டிக் கூறியது காண்க. அந்நாயனாரும் இதுபோலத் தெற்கு நின்றே போந்தமையும் காண்க.

சிவந் தரும் பயனுடைய ஆகுதிகள் - இவ்வேள்விகளிற் செய்யப்படும் ஓமங்கள் சிவத்தன்மையே பயப்பிப்பன. ஏனை வேள்விகள் காமிய புண்ணியங்களை விளைத்துப் பிறவிக்கேதுவாவன. இவையோ எனிற் சிவம் தரும் பயனுடையவாகிப் பிறவியைத் தவிர்ப்பன. பவந்தவிர்ப்பவர் என்றதும் இக்கருத்து.

தவம் - சிவபூசை முதலிய சிவசாதனங்கள்; சிவநெறிகள். "வேதநெறி தழைத் தோங்க மிகுசைவத் துறைவிளங்க" (1899).

நிவந்த நீல நுண் துகில் விதானித்தது-வானம் நீலநிறமுடைத்தாகத் தோன்றுதலைத் தற்குறிப்பேற்ற அணிநயம்படப் பிள்ளையார் வரும்முன்னர் உபசரிப்பிற்காக நுண்ணிய நீலப் புடவையால் உயர்ந்த மேற்கட்டி விரித்ததுபோலும் என்றார். **நீலத் துகில்** கண்ணுக்கினிமையும் குளிர்ச்சியும் தருவதென்பர் மருத்துவ நூலோர். குழவிப்பருவ முடையோர் மிக்கு விரும்புவது நீலத் துகிலாம் என்பது குறிப்பு. "நீல அறுவை விரித்துடுத்து" (பேதை) என்ற ஞானவுலாவின் கருத்தும் கருதுக. புகையின் பரப்பு-நீலவிதானம் கட்டியதுபோலும் என்றதாம், "வான் தூமம்" என்ற ஞானநூலும் காண்க. (உண்மை விளக். 5) ஓவியப் புலவர்கள் சித்திரங்களின் எடுப்புக் காட்சிக்குப் பின்பார்வை (Background) நீலநிறந் தீட்டுதல் காண்க.

நீலம் - வானம் - ஆகாயவெளி. அது காட்சிப் புலனாவதன்றாகலிற் கண்ணிந்திரி யத்துக்கு விடயமாகாது; அங்ஙனந் தோன்றுவது மயக்கவுணர்வு.

எல்லையிற்பயில் மறையவர் வேள்வி-செய்புகை-என்பனவும் பாடங்கள்.

152

2051. பொருளுரை: கரும்பு...நீங்கி - கரும்பும் செந்நெல்லும் பசிய கமுகுகளோடு கலந்து உயர்தற்கிடமாகிய வயல்களையுடைய அழகிய மருத நிலத்தினை நீங்கி; அரும்பு...பணிந்து - அரும்புகளும், மெல்லிய மலர்களும், தளிர்களும், பழங்களும்,

வேர்களும் என்றிவை முதலாகிய எல்லாவற்றுக்கும் பிறப்பிடமாகிய பக்கத்தில் உள்ள நந்தனவனங்களைப் பணிந்து; மாடமாளிகை...அணித்தாக - மாடமாளிகைகள் ஓங்கி நெருங்கும் தில்லையினைச் சூழ்ந்த நெடிய மதிலின் தென்திருவாயிலின் நேர் அணிமையாக; அணைந்தனர் - (ஆளுடைய பிள்ளையார்) அணைந்தனர்.

விளக்கவுரை: பணை நீங்கி - நந்தனவனம் பணிந்து - தென்றிருவாயில் நேர் அணித்தாக - அணைந்தனர் என்று கூட்டியுரைத்துக்கொள்க.

கழனி அம்பணை - வயல்களையுடைய அழகிய மருதநிலம்.

கரும்பு-செந்நெல்-கமுகொடு கலந்துயர் - கரும்பும் நெல்லும் கமுகொடு **கலந்து** என்றது இந்நிலத்தில் ஒன்றோடொன்று விரவிக்கலந்து காணப்படும் என்றதாம். ஒடு உருபுதந்து கமுகினை வேறுபிரித்தது கரும்பும் செந்நெலும் மிகுதியாயும் கமுகு இவற்றின் ஒரு கோடியில் அருகியும் காணப்படும் தன்மை குறித்தற்கு. **நறும்பூகம்** (2049) என்று முன்கூறிய செறிந்த கமுகினை அடுத்து நகரணிமையில் உள்ளவை கரும்பும், அவற்றை அடுத்துச் செந்நெல்லும் என்றலுமாம். "கரும்பல்ல நெல்லென்னக் கமு கல்ல கரும்பென்ன" (65) என்ற பாட்டின் கருத்துக்களையும் இங்கு நினைவுகூர வைத்த நயமும் காண்க. **கலந்து - உயர்** என்ற குறிப்புமது. **கமுகொடு கலந்து** என்றதனால் இக்கமுகுகள் முன்கூறிய செறிந்த கமுகஞ் சோலைகளின் வேறாய் அவற்றைத் தொடர்ந்து நன்செய் நிலத்தின் இடையே சிறுபான்மை காணப்படுவன. **உயர்** - உயர்ச்சியினால் ஒன்றோடொன்று மயங்கிக் காண்பன என்ற குறிப்பு.

அரும்பு.......ஆகரமான - அரும்பு. மென்மலர், தளிர், பலம், மூலம் என்ற இவையனைத்தினுக்கும் பிறப்பிடமாகிய, இவை ஒவ்வொன்றும் தனித்தனியே நந்தன வனங்களிற்படு பொருள்களாய் இறைவர் பூசைக்குப் பயன்படுவனவாதலின் பிரித்துக் கூறினார். **மென்மை** என்றதனைத் **தளிர்** என்றதனோடுங் கூட்டுக. அரும்பும் மென்மையுடையதாயினும் மலரினும் அரும்பு மென்மையளவிற் குறைதல் நோக்கி மெல் என்ற அடையை மலருடன் புணர்த்திக் கூறினார். ஆகரம் - பிறப்பிடம்.

நந்தனவனம் பணிந்து-இவை வயல்களையடுத்து நகருக்கு அணிமையில் உள்ளன வாதலின் நகர்த் திருவாயிலினை அடுத்துக் கூறினார். இறைவர் திருமேனியிற் சாத்தவும் நேரே திருவமுதாக உண்பிக்கவும் உரிய பொருள்கள் உண்டாகும் இடமாதலாலும், சிவபுண்ணியத்திற்காகவே பிறப்பு எடுத்த உயிர்களே இங்குத் தாவரங்களாக வரும் தன்மையாலும் நந்தனவனம் பணியப்படுந் தகுதியுடையதாம் என்பது. "பன் மலர்ப் புனித நந்தன வனங்கள் பணிந்து சென்றனன் மணங்கமழ் தாரான்" (240) என்று ஆளுடைய நம்பிகளும், "திருநந்தன வனமெதிர் கண்டார்" என்று அரசுகளும் இவற்றைப் பணிந்து சென்றமைபற்றிக் கூறியதும் காண்க. வலியுறுத்துதல் கருதி ஈண்டும் கூறினார்.

மாடமாளிகை ஓங்கி நெருங்கும் - "செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கி" (பிள். கோயில்) என்று பிள்ளையார் திருவாக்கில் இக்கருத்தை அருளியதனை எடுத்துக் காட்டும் ஆட்சி.

2052. "பொங்கு கொங்கையிற் கறந்தமெய்ஞ் ஞானமாம் போனகம் பொற்குன்ற
மங்கை செங்கையா லூட்டவுண் டருளிய மதலையார் வந்தா"ரென்,
றங்கண் வாழ்பெருந் திருத்தில்லை யந்தண ரன்பர்க ளுடனீண்டி,
யெங்கு மங்கள வணிமிக வலங்கரித் தெதிர்கொள வணைவார்கள், **154**

மதில் தென்திருவாயில் - தெற்கில் உள்ள சீகாழியினின்றும் பிள்ளையார் அணைகின்றாராதலின் தென் திருவாயிலே அவர் அணைவதற்குரியதாம். இது நகரின் மதிலின் வாயில். ஆளுடைய அரசுகள் மேலை வாயிலினும், நம்பிகள் வடக்கு வாயிலினும் போந்தமையும் கருதுக. அணித்தாக - அணைந்தார் என்க. அத்திருவாயிலே அணித்தாகலின் என்ற குறிப்புமாம்.

நேர் - சுற்றிச் செல்லாமல் நேரே அணித்தாகச் செல்லுதற்குரிய என்றபடி. கூத்தப் பெருமான், "தென்மாத் திசைவசை தீர்தர" (திருக்கோவை - 338) என்றபடி தெற்கு நோக்கி அருட்கூத்தியற்றி நிற்றலால் அத் திருமுன்புக்கு நேராகத் தெற்குத் திசையில் உள்ள என்ற குறிப்பும்பட நின்றது. தில்லைத் திருக்கோயிலின் நான்கு திக்கிலும் உள்ள நான்கு திருவாயில்களுள் தென்றிருவாயில் இறைவன் திருக்கூத்துடைய திரு அம்பலத்தினை நேரே நோக்கிய சிறப்புடையது என்பது. 153

2052. பொருளுரை: "பொங்கு..வந்தார்" என்று - "சுரக்கின்ற திருமுலையில் கறந்த மெய்ஞ்ஞானமாகிய பாலமுதத்தினைப் பொன்மலையின் மங்கையாராகிய உமையம்மையார் தமது கையினால் ஊட்ட உண்டருளிய பிள்ளையார் வந்தருளினர்" என்று; அங்கண்...ஈண்டி - அவ்விடத்தில் வாழ்கின்ற பெருமையுடைய திருத்தில்லைவாழந்தணர்கள் அடியார்களுடனே கூடி நிறைந்து; எங்கும்...அணைவார்கள் - எவ்விடத்திலும் மங்கல அணிகளால் அலங்காரம் செய்து பிள்ளையாரை எதிர்கொள்ள அணைவார்களாகி,

விளக்கவுரை: "பொங்கு...வந்தார்" என்று அலங்கரித்து - அணைவார்களாய் (2052) - ஓங்க - ஆர - சென்று - சொல்லி - எதிர்கொண்டு - கொடுபுக்கார் (2053) என்று முடிக்க.

"பொங்கு...வந்தார்" என்று - "இழைத்தடங் கொங்கை...குருளையார் வரக் கண்டு" (2048) என்று முன்கூறிய கருத்து. அஃது அசரவுயிர்ப் பொருள்களாகிய வயற்சாலிகள் கருதியனவாகத் தற்குறிப்பேற்ற அணிநயம்பட ஆசிரியர் உரைத்தது. இங்குக் கூறியது அந்தணர் அன்பர்களுடன் ஈண்டிக் கருதிய சங்கம வுயிர்களின் கருத்து. பொற்குன்ற மங்கை - மலைவல்லி - பார்வதி.

கறந்த போனகம் - செங்கையால் ஊட்ட - "அடிசில் உண்" என்று சொல்லிக் கையால் ஊட்டும்பொருட்டுக் கறந்த என்ற குறிப்புமாம்.

அந்தணர் - தில்லைவாழந்தணர்கள். இவர்களது சிறப்புப்பற்றித் தில்லைவாழந்தணர் புராணம் பார்க்க.

மங்கல அணி - அணிகளால். இவை வாழை, கமுகு, மணிமாலை, பூமாலை, தோரணம் முதலியவை.

பெருந் தில்லைவாழ்-என்பதும் பாடம். 154

2053. வேத நாதமு மங்கல முழக்கமும் விசும்பிடை நிறைந்தோங்கச்,
சீத வாசநீர் நிறைகுடந் தீபங்க டிசையெலா நிறைந்தாரச்,
சோதி மாமணி வாயிலின் புறஞ்சென்று, சோபன வாக்கமுஞ் சொல்லிக்,
கோதி லாதவர் ஞானசம் பந்தரை யெதிர்கொண்டு கொடுபுக்கார். **155**

2053. பொருளுரை: வேதநாதமும்....ஓங்க - வேதங்களின் நாதமும் மங்கல முழக்கங்களும் ஆகாயத்தில் நிறைந்து மிகச் சத்திக்கவும்; சீதவாசநீர்....ஆர - குளிர்ச்சியும் வாசனையும் உடைய நீர் நிறைந்த குடங்களும் தீபங்களும் திசை எல்லாம் நிறைந்து பொருந்தவும்; சோதி...சென்று - ஒளியுடைய பெரிய மணிகளையுடைய திருவாயிலின் புறத்திலே சென்று; சோபன ஆக்கமும் சொல்லிக் கோது இலாதவர்-சோபனமாகுக என்ற நன்மொழிகளையும் வாழ்த்துக்களையும் சொல்லித் தாம் தீது நீங்கப் பெற்று வாழ்ந்தவர்களாகி; ஞானசம்பந்தரை...கொடுபுக்கார் - திருஞானசம்பந்த நாயனாரை எதிர்கொண்டு நல்வரவேற்று உள்ளே அழைத்துக் கொண்டுபோயினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

விளக்கவுரை: நாதம் - நாத தத்துவத்தினின்றும் போந்தது என்ற குறிப்புப்பட நின்றது. நாதம் - பொருட் பற்றிய ஒலி. முழக்கம் - பொருட் பற்றாத ஓசை.

விசும்பிடை நிறைந்து ஓங்க - இவை நிலத்தில் ஒலிக்கப்படினும் ஒலி அலைகளால் மேலே சென்று எதிரொலி வடிவில் விண்ணில் நிறைந்து பெருகின என்பது.

சீத வாசநீர் நிறைகுடம் - குளிர்ந்த நீரில் வாசனைப் பண்டங்களையும் மலர்களையும் இட்டுப் பூரித்த நிறைகுடம் வைத்தல் மரபு. நிறைந்து ஆர - மிகுதி குறித்தது.

வாயிலின் புறஞ் சென்று - நகர் வாய்தலின் புறத்தே சென்று வரவேற்கு மரபு குறிக்கப்பட்டது. "உத்தரத்திசை வாயின்முன் னெய்தி" (243); "அன்பின் வந்தெதிர் கொண்டசீ ரடியார்கள்" (244); "பொங்கெயினீ டுருவாயிற் புறமுறவந் தெதிர்கொண்டார்" (2068); "குடதிசை மணிவாயிற் புறம்வந் துற்றார்" (1426); "அல்லற் பவமற வருளுந் தவமுத லடியா ரெதிர்கொள" (1427).

சோபன வாக்கமுஞ் சொல்லிக் கோதிலாதவர் - சொல்லுதலினால் கோதிலாதவரான அந்தணர் முதலியோர், "வாழ்த்துவதும் வானவர்க டாம்வாழ்வான்" (திருவா) என்றபடி பிள்ளையாரை ஆக்கம் சொல்வதனால் அவருக்கு ஆக்கம் செய்வார் என்பதன்றித் தாம் அதனால் குற்றமில்லாதவர்களாகி ஆக்கம்பெற்றனர் என்பது. கோதிலாதவராகிய ஞானசம்பந்தரை என்ற கூட்டியுரைப்பினுமாம்.

இலாதவர் - இல்லையாக்குபவர்.

முன் 2046 முதல் 2051 வரை உள்ள பாட்டுக்களை, நம்பிகளைப்பற்றிய 237 - 244 வரை உள்ள பாட்டுக்களுடனும், அரசுகளைப்பற்றிய 1422-1427 வரை உள்ள பாட்டுக்களுடனும் வைத்து ஒப்பு நோக்குக. அவை அவ்வந்நாயன்மார்களது நிலைகளுக்கேற்ப விளங்கும் தன்மையும் கண்டுகொள்க. *155*

2054. செல்வ மல்கிய தில்லைமூ தூரினிற் றென்றிசைத் திருவாயில்
எல்லை நீங்கி,யுள் புகுந்,திரு மருங்குநின் றெடுக்குமேத் தொலிசூழ,
மல்ல லாவண மறுகிடைக் கழிந்துபோய், மறையவர் நிறைவாழ்க்கைத்
தொல்லை மாளிகை நிரைத்திரு வீதியைத் தொழுதணைந் தனர்தூயோர். **156**

---

*2054. **பொருளுரை:** செல்வ மல்கிய...நீங்கி - செல்வம் நிறைந்த தில்லை மூதூரில் தெற்குத் திருவாயிலின்வழி எல்லை நீங்கி; உள் புகுந்து - உள்ளே புகுந்து; இருமருங்கும்...சூழ இரண்டு பக்கங்களினும் நின்று எடுத்துப் போற்றும் சத்தம் சூழ்ந்திட; மல்லல்...போய் - செழிப்புடைய வளங்கள் நிறைந்த கடை வீதியினைத் தாண்டிச் சென்று; மறையவர்...தொழுது - வேதியர்களது நிறைவுடைய வாழ்க்கைசெய்யும் பழமையாகிய திருமாளிகைகளின் வரிசைபெறும் திருவீதியினைத் தொழுது; தூயோர் அணைந்தனர் - தூயவராகிய பிள்ளையார் நகரினுள்ளே அணைந்தனர்.*

***விளக்கவுரை:* செல்வ மல்கிய தில்லை மூதூர்** - "செல்வ நெடுமாடம்....செல்வமே" என்ற ஆளுடைய பிள்ளையாரது திருவாக்குக் காண்க. செல்வம் - சிவச் செல்வம்; முத்தித்திரு. "உலகுக் கெல்லாந் திருவுடை யந்தணர்" (திருவிருத்.)

மல்லல் - வாணிபப் பண்டங்களின் வளப்பம். "விளக்க மிக்க கலன்கள் விரவலால்" (94) என்ற கருத்துக் காண்க. கடற்கரையின் அணிமையாற்பெறும் வாணிபச் சிறப்பும் கருதுக.

மறையவர்...திருவீதியைத் தொழுது - இவை தில்லைவாழந்தணர்கள் மூவாயிரவர் வாழும் மூவாயிரம் மாளிகைகளின் வரிசை நிறைந்த மாடவீதி. கூத்தப்பெருமான் எழுந்தருளி அருட்காட்சியளிக்கும் திருவீதி. இவற்றின் பெருமையினையும் தன்மை யினையும் மேல்வரும் பாட்டில் விரிக்கின்றார். மேலும் "மாதவங்கள் நல்குந் திருவீதி நான்கும்" (2063); "சிவமே நிலவிய திருவீதி" (1427) முதலியவை காண்க. இப்பெருமைகள்பற்றித் திருவீதியைத் தொழுது சென்றருளினர் பிள்ளையார்.

தூயோர் - உலகினைத் தூய்மை செய்பவர். *156*

*2055. **பொருளுரை:** மலர்ந்த...மாறி - உலகெலாம் மலர்ந்த பேரொளி குளிர்ச்சியைச் செய்யச் சிவமணம் வீசி வான் குற்றங்கள் நீங்கப்பெற்று; சிலம்பலம்பு...செம்மையால் - சிலம்பு ஒலிக்கும் சேவடியினையுடைய கூத்தப்பெருமான் பயில்கின்ற செம்மைத் தன்மையினாலே; திருத்தொண்டு...சிந்தையில் திகழ - திருத்தொண்டிலே ஒன்றுபட்டுக் கலந்த அன்பர்களுடைய சிந்தைபோல விளங்கும்; திருவீதி கண்களிசெய்ய - அத்திருவீதியானது தமது திருக்கண்களே மகிழச்செய்ய; பலன்கொள்... போற்றி - உலகம் பயன் பெறுதற்குரிய பிள்ளையார் எழுநிலைத் திருக்கோபுரத்தைத் துதித்து நிலமுற வணங்கி எழுந்தனர்.*

***விளக்கவுரை:* சிந்தையின் திகழ் திருவீதி** - இன் - ஒப்புப்பொருளில் வந்த ஐந்தனுருபு. அன்பர்களுடைய மனம்போலத் திருவீதி விளங்குவது என்பதாம். "அபயன் றிருமனத் தோங்கும்" (22) என்புழிப்போலக் கொள்க. ஆண்டுரைத்தவையும் பார்க்க.

2055. மலர்ந்த பேரொளி குளிர்தரச் சிவமணங் கமழ்ந்துவான் றுகண்மாறிச்
சிலம்ப லம்புசே வடியவர் பயில்வுறுஞ் செம்மையாற் றிருத்தொண்டு
கலந்த வன்பர்தஞ் சிந்தையிற் றிகழ்திரு வீதிகண் களிசெய்யப்
பலன்கொண் மைந்தனா ரெழுநிலைக் கோபுரம் பணிந்தெழுந் தனர்போற்றி. 157

திருவீதிக்கு ஆக்கும்போது - மலர்ந்த பேரொளி குளிர்தர - சந்திரகாந்தக் கற்கள், பெரிய மணிகள், விளக்குக்கள் முதலிய ஒளிப்பொருள்கள் குளிர்ந்த ஒளியை வீச; **சிவமணம் கமழ்ந்து** - சிவனுக்கு ஆக்கும் தூபம் முதலிய வாசனைப் பண்டங்கள் மணம் வீசப்பெற்று; **வான்துகள் மாறி** - வானிலும் தெருவிலும் தூய்மையற்ற பொருள்களை இல்லையாகச் செய்து; **சிலம்பலம்பு சேவடியவர் பயில்வுறும் செம்மையால்** - கூத்தப்பிரான் திருவுலாப் போந்து செய்யும் அருட்டன்மையினால்; என்றும்,

அன்பர்தம் சிந்தைக்கு ஆக்கும்போது, மலர்ந்த பேரொளி குளிர்தர - தியானத்தில் மலரும் ஒளிப்பிழம்பாகிய சிவச்சோதி பிறவி வெப்பத்தை நீக்கி அடிநீழலாகக் குளிர்ச்சியைச் செய்யும்படி; **சிவமணம் கமழ்ந்து** - சிவயோகத்தில் உறைத்து; **வான்துகள் மாறி** - வலிய ஆணவ முதலிய பாசங்களின் நீங்கி; **சிலம்பலம்பு சேவடியவர் பயில்வுறும் செம்மையால்** - சிவப் பேறு பெறும் தன்மையால் என்றும், ஒப்புமை காண இரட்டுற மொழிந்துகொள்க.

வீதியினிடத்துப் பேரொளி குளிர்தருதல் - மாளிகைகளின் சந்திரகாந்தங்களும் மணிகளும் பெருநிலவொளி பெருக்குதல்.

வான்துகள் - வீதியிலும் வானிலும் உள்ள தூசுகள். **சேவடியவர் பயில்வுறும் செம்மை** - திருவிழாக்கொண்டு திருவீதி உலா வருதல்.

சிந்தையினிடத்து - மலர்ந்த பேரொளி - கோடி சூரியப் பிரகாசமாய் மின்னும் ஒளிப் பொருளாய்ச் "சோதியே சுடரே சூழொளி விளக்கே" (திருவாசகம்) என்ற படி தியானிக்கப்படுதலின் அவ்வுறைப்பினுள் பேரொளியாகச் சிவவொளி மலர்தல். "கரவி லுள்ளமாம் விசும்பிடைக் காசற விளங்கும் பரசி லாச்சுடர்க் குதயமீ றின்மை யின்" (திருவிளை. புரா-வாத-உப-பட.) என்பது முதலியவை காண்க. "அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர், உண்டு போலுமொ ரொண்சுடர்" (குறுந்). சிவச் சோதியாதலின் ஏனைச் சோதிகள்போல் வெப்பஞ் செய்யாது குளிர்ச்சியைத் தந்தது. "சுழலார் துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னு, நிழலாவன" (திருவிருத்). **குளிர்தர** - குளிர்ச்சி தரும்படி கமழ என்று காரணப்பொருளில் வந்தது **சிவமணம்** - சிவயோகம். **பேரொளி** என்றது யோகத்திற் காணும் சிவச்சோதி. வான்துகள் - வலிய ஆணவம். மாறுதல் - பாசநீக்கம். **சேவடியவர் பயில்வுறுதல்** - சிவப்பேறு. இவ்விரு பயனும் பெறச் சிவயோகத்தில் உறைத்த சிந்தை என்க.

கண்களி செய்ய - அன்பர் சிந்தையின் தோற்றம் விளைத்தலால் அதைக் காணக்கண் களித்தது.

2056. நீடு நீணிலைக் கோபுரத் துள்புக்கு, நிலவிய திருமுன்றின்
மாடு செம்பொனின் மாளிகை வலங்கொண்டு, வானுற வளர்திங்கள்
சூடு கின்றபே ரம்பலந் தொழுது, போந், தருமறை தொடர்ந்தேத்த
ஆடு கின்றவர் முன்புற வணைந்தன ரணிகிளர் மணிவாயில். **158**

திருத்தொண்டு கலந்த - கலத்தலாவது வேறொன்றும் எண்ணாது திருத்தொண்டின் உறைப்பிலே ஒன்றுபட்டு நிற்றல்.

சிந்தையிற் றிகழ் திருவீதி - நான்கு திருவீதிகளுக்கும் இஃதொக்குமாயினும் தென்மாத்திசை வசைதீர்தரத் தெற்கு நோக்கி ஆடும் கூத்தப்பிரான் திருமுன்புக்கு நேராக உள்ளதாதலின் அன்பர் கூட்டம் இங்குச் சிறப்பாக உள்ளது குறிப்பு.

எழுநிலைக் கோபுரம் - எழும் - விண்ணின்மேல் எழும்.

போற்றிப் பணிந்தெழுந்தனர் என்க. - போற்றி என்ற வினையெச்சம் பின்னர் வந்தது பணிதலின் விரைவு குறித்தது.

பலன்கொள - உலகு பயன்பெறும் இடமாகிய.

அலம்புமென் சேவடி-பயில்வுறும்-புலங்கொள்-என்பனவும் பாடங்கள். 157

2056. *பொருளுரை:-* நீடு...புக்கு - நீண்டுயர்ந்த நிலைகளையுடைய தெற்குத் திருக்கோபுரத்தினுள்ளே புகுந்து; நிலவிய...வலங்கொண்டு - நிலைபெற்ற திருமுற்றத்தின் பக்கத்தில் செம்பொன் திருமாளிகைப் பத்தியை வலமாக வந்து; வானுற...தொழுது - வானளாவ வளரும் சந்திரனைச் சூடும்படி உயர்ந்த பேரம்பலத்தைத் தொழுது; போந்து - மேற்சென்று; அருமறை...முன்புற -அருமறைகள் தொடர்ந்து துதிக்கத் திருக்கூத்து ஆடுகின்ற இறைவரது திருமுன்பு சேர்வதற்கு; அணிகிளர் மணிவாயில் அணைந்தனர் - அழகு மிகும் மணிகளையுடைய திருவணுக்கன் றிருவாயிலை அணைந்தனர் (பிள்ளையார்).

விளக்கவுரை: கோபுரத்தை முன்பணிந் தெழுந்தபின்பு, கோபுரத்துள் புகுதல். திருமுன்றிலினுட் புகுதல் - திருமாளிகைப்பத்தி வலம் வருதல் - பேரம்பலந் தொழுதல் - பின் திருவணுக்கன்றிருவாயில் அணைதல் என்றிவை திருக்கோயிலினை வழிபட்டுச் செல்லும் முறை. இவற்றை வற்புறுத்திக் காட்டியருளும் பொருட்டு இத்திருப்பாட்டால் விரித்துக் கூறியருளினார். 248 - 250; 1429 - 1430 முதலியவைவும் பார்க்க.

மாடு செம்பொனின் மாளிகை - திருமுன்றிலின் பக்கத்தில் அமைந்த திருமாளிகைப் பத்தி. இவற்றையும் எல்லையின் வேறிடங்களையும் பேரம்பலத்தையும் பொன்வேய்ந்தவர் அநபாயச் சோழர் என்பது "தில்லைத் திருவெல்லை, பொன்னின் மயமாக்கிய வளவர் போரேறு" (1213) "திருப்பே ரம்பலம் செய்ய, தூய பொன்னணி சோழன்" (8) முதலியவற்றா னறியப்படும்.

வானுற வளர் - பேரம்பலம் என்று கூட்டுக. *திங்கள் சூடுகின்ற* என்றது பேரம்பலத்தின் உயர்ச்சி குறித்தது. "பேரம்பல மேரு" (250); *தொழுது*-இங்குச் சோமாஸ்கந்த

---

*சேக்கிழார் பக்கம் 21 - 22 பார்க்க.

2057. நந்தி யெம்பிரான் முதற்கண நாதர்க ணலங்கொள்பன் முறைகூட
அந்த மில்லவ ரணுகிமுன் றொழுதிரு வணுக்கனாந் திருவாயில்
சிந்தை யார்வமும் பெருகிடச் சென்னியிற் சிறுச்செய்ய கையேற
வுய்ந்து வாழ்திரு நயனங்கள் களிகொள வுருகுமன் பொடுபுக்கார். 159

மூர்த்தி முதலிய உற்சவ மூர்த்திகள் எழுந்தருளியுள்ளார். "பிறை வந்திறைதாக்கும் பேரம்பலம்" என்ற பதிகக் கருத்துப் போற்றப்பட்டது.

அருமறை தொடர்ந்தேத்த ஆடுகின்றவர் - 'அருமறை முதலில்...திருச்சிற்றம் பலம்" (250); வேதமுழக்கங்கள் இடைவிடாது கேட்க இன்றும் நிகழ்வன.

அணிகிளர் மணிவாயில் - திருவணுக்கன் றிருவாயில் மணி - மணிகள் இழைத்த மணிகள் கட்டிய என்றலுமாம். (250 உரை பார்க்க). வரும்பாட்டிற் பெயராற் குறித்தல் காண்க.

வலங்கொள்வார் - என்பதும் பாடம். 158

2057. **பொருளுரை....நந்தியெம்பிரான்...கூட** - திருநந்தி தேவராகிய நமது பெருமானைத் தலைவராகக் கொண்ட சிவகணநாதர்கள் நன்மைமிக்க பல வரிசைகளாகக் கூடி நிற்க; **அந்தமில்லவர் தொழும்** - எண்ணிறந்தவர்களாகிய அடியவர் முனிவர் தேவர்கள் முதலியோர் அவ்வரிசைகளின்பின் நின்று தொழுகின்ற; **திரு அணுக்கனாம் திருவாயில்** - திருவணுக்கன் றிருவாயிலின்கண்; **சிந்தை...புக்கார்** - மனத்தினுள் ஆர்வம் பெருகவும், சென்னியின்மேலே சிறிய சிவந்த திருக்கைகள் ஏறிக் குவியவும், உய்ந்து வாழும் திருக்கண்கள் மகிழ்ச்சி பொருந்தவும் மனமுருகும் அன்புடனே புகுந்தனர்.

விளக்கவுரை-நந்தி எம்பிரான் முதற்கண நாதர்கள் - சிவகணநாதர்களுக்கெல்லாம் நந்தி பெருமான் தலைமை பூண்டு நடத்தும் நிலைபெற்றவர் என்பது. "பிஞ்ஞுகன் றன்னருள் பெறுவார், மற்றவர்க் கெல்லாந் தலைமையாம் பணியும்" (21); "நங்குரு மரபுக் கெல்லா முதற்குரு நாத னாகி" (திருவிளை-புரா); **எம்பிரான்** என்ற குறிப்புமது.

பன்முறைகூட - பலபல வரிசைகள் பெறக் கூடிநிற்க. முறைகூட என்பது நந்திபெருமானது திருக்கையிற் பிரம்பினால் வரிசைப் படுத்தியபடி என்ற குறிப்பும் தருவது.

அந்தமில்லவர் அணுகி முன்தொழ - தேவர் முதலியோர் பின் நிற்க, அடியார்கள் முன்னே சென்று வணங்கும் நிலை. "விண்ணவ ரெண்ணிலார் மற்றுங், காதலான் மிடைந்த முதற்பெருந்தடை' (20); --மாமுனிவர்-அயனிற்பக்,காதலன்பர் புகும்பொற், கோலநீடு திருவாயில்" (249) முதலிய கருத்துக்களையும் இங்கு வைத்துக் காண்க. **அந்தமில்லவர்** - அளவில்லாதவர்கள். "எண்ணிலார்" (20); **"முன் தொழும்"** என்ற குறிப்பினால் "சாவாதவர் பிறவாதவர்" என்னும் அடியவர்கள என்றலுமாம். 159

சிறியசெங்கை-என்பதும் பாடம். 27945

2058. அண்ண லார்தமக் களித்தமெய்ஞ் ஞானமே யானவம் பலமுந்தம்
உண்ணி றைந்தஞா னத்தெழு மானந்த ஒருபெருந் திருக்கூத்துங்
கண்ணின் முன்புறக் கண்டுகும் பிட்டெழுங் களிப்பொடுங் கடற்காழிப்
புண்ணியக்கொழுந் தனையவர் போற்றுவார் புனிதரா டியபொற்பு, 160

2058. பொருளுரை—அண்ணலார்...அம்பலமும் - இறைவர் தமக்கு அளித்தருளிய மெய்ஞ்ஞானமேயாகிய திருவம்பலத்தினையும்; தம்...கூத்தும் - தமதுள்ளே நிறைந்த அந்தச் சிவஞானத்தினுள்ளே எழுகின்ற சிவானந்தமாகிய ஒப்பற்ற பெருமை யுடைய திருக்கூத்தினையும்; கண்ணின்...களிப்பொடும் - கண்களின் முன்னே வெளிப்பாடாகக் கண்டு கும்பிட்டதனால் எழுகின்ற பெருமகிழ்ச்சியுடனே; கடற் காழி...அனையவர் - கடல் சூழ்ந்த சீகாழியில் வந்த சிவபுண்ணியத்தின் கொழுந்து போல்வாராகிய பிள்ளையார்; புனிதர் ஆடிய பொற்பு - தூயவராகிய இறைவர் திருக்கூத்தியற்றும் அழகினை; போற்றுவார் - போற்றுவாராகி;

விளக்கவுரை.....அண்ணலார் அம்பலம்-திருவம்பலம் என்பது சிவ மெய்ஞ்ஞானமேயாம் என்றதாம்.

எல்லா ஞானங்களும் பரஞானம் அபரஞானம் என்பவற்றுளடங்கும். "உவமை யிலாக் கலைஞான" த்துள் ஏனை எல்லாக் கலைஞானங்களும் அடங்குதலின், அதனிற் பிரித்து, உணர்வரிய மெய்ஞ்ஞானமாகியபராசத்தி சொரூபமாகியது அம்பலம் எனவும், ஏகாரம் பிரிநிலையே எனவும் கொள்க; தம்முள் நிறைந்த ஞானமும் அம்பலமும் ஒன்றே; அது அண்டத்தும் பிண்டத்தும் ஒரே பெற்றியது. அதனிற் செய்யுங் கூத்து இருவகைத்து; ஒன்று ஐந்தொழிற் கூத்து; மற்றது ஆனந்தக்கூத்து; முன்னையது பெத்தர்க்கும் பின்னையது முத்தர்க்கும் பயன்தருவன; பெத்தர்க்கு வினைப்பயன் கூட்டுதலும், முத்தர்க்குத் தசகாரியத்துள் முடிவினின்ற சிபோகமாகிய சிவனாந்தானுபவமும் பயன்களாம்; **"உணர்வி னேர்பெறவருஞ் சிவபோகம்"** என்றது "வவ்விய மெய்யுணர்-வின்கண் வருமானந்தக் கூத்தை, யவ்வியல்பிற் கும்பிட்டு" (திருமூலர் - புரா) என்பதனாலும் விளக்கப்பட்டது; பிள்ளையார் உள்ளும் புறம்பும் ஒரு தன்மைக் காட்சியராதலின் **அவ்வாறொன்றாகவே கண்டனர்;** "நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே" (தேவா) என்பதனால் பிள்ளையாருண்ணிறைந்தெழு (மானந்தவொரு) பெருந் தனிக் கூத்தியல்பு விளங்கும் - ஸ்ரீமத் முத்துக்குமாரத் தம்பிரான் சுவாமிகளது குறிப்பு.

மெய்ஞ்ஞானமே - ஏனை எல்லா ஞானங்களினின்றும் பிரிக்க ***மெய்*** என்ற அடைமொழி தந்தோதியதுமன்றித் **தமக்களித்த** என்ற விசேடணமும் தந்தனர். "பவமதனை யறமாற்றும் பாங்கினிலோங் கியஞானம் - உணர்வரிய மெய்ஞ்ஞானம்" (1968) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

உண்ணிறைந்த ஞானத்து எழும் ஆனந்தம் - மெய்ஞ்ஞான நிறைவில் எழுந்து உள்ளே அனுபவிக்கப்படும் சிவானந்தம்; இதனை "உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகம்" என்று மேல்வரும்பாட்டிற் கூறுதல் காண்க.

2059. "உணர்வி னோர்பெற வருஞ்சிவ போகத்தை யொழிவின்றி யுருவின்கண்
அணையு மைம்பொறி யளவினு மெளிவர வருளினை" யெனப்போற்றி
இணையில் வண்பெருங் கருணையே யேத்தி, முன் னெடுத்தசொற் பதிகத்திற்
புணரு மின்னிசை பாடின ராடினர் பொழிந்தனர் விழிமாரி; **161**

---

*மெய்ஞ்ஞானமே என்றதனால் சுத்த அறிவு என்றும், **ஆனந்தம்** - சுத்த **அனு**போகமாகிய பேரின்பம் என்றும், **தமக்களித்த** - அனுபவிப்பதாகிய ஞாதிரு என்ற **சுத்த** ஆன்மா என்றும் சுத்தாவத்தையில் வரும் இம்மூன்றும் பெறவைத்தமை **காண்க.** "முத்திதனில் மூன்று முதலும்" (50) என்ற உண்மைவிளக்கம் இங்குக் கருதத் தக்கது.*

***ஒருபெரும் திருக்கூத்து** - அடைகள் தனிச் சிறப்பும் சிவனது முழுமுதற்றன்மை**யும்** உணர்த்தின. **தனிக்கூத்து** - என்பதும் பாடம்.*

***கண்ணின் முன்புறக்கண்டு** - ஞானமும் ஆனந்தமும் புறக் கண்ணாற் **காணும்** தன்மையவல்ல ஆயினும் அவை உரு வெளிப்பட்டு வந்தாற்போலக் கும்பிட்டு **எழும் களிப்புடன்** போற்றுவாராயினர்.*

***கடற்காழி** - கடலணிமையில் உள்ள என்றும், "கடல்கொளமிதந்த" என்றும் உரைக்க நின்றது.*

***புண்ணியக் கொழுந்து அனையவர்** - சிவபுண்ணியம் என்றது ஒரு **தாவர** உருவாயின் அதன் கொழுந்து போல்பவர். **கொழுந்து** - உயர்ச்சி, இளமை, அழகு, **சத்து** முதலிய எல்லாம் கூடிய நிலைக் குறிப்பு. "புண்ணியக்கன்றனையவர்" (1954).*

*போற்றுவார் - போற்றுவாராகி - முற்றெச்சம். போற்றவார்; போற்றிப் பாடினராய் - ஆடினராய்ப் - பொழிந்தனராய் (2059); எடுத்தாராகிப் (2060); பரவித் திளைத்து - அமுதுண்டார் (2061) என்று இந்நான்கு பாட்டுக்களையும் பொருட் டொடர்புபட **ஒரு** தொடராக்கி முடித்துக் கொள்க.*

*இக்கருத்திற்கு மேல்வரும் பாடினர் - ஆடினர் - பொழிந்தனர் - எடுத்தார் **என்ற** வினை முற்றுக்களை முற்றெச்சங்களாக வைத்து உரைத்துக் கொள்க. இவ்வாறன்றி**,** முற்றுக்களாகவே வைத்து ஏற்றவாறு பிரித்து உரைத்துக் கொள்ளினுமிழுக்கில்லை*

***பொற்புப் போற்றுவார்** என்க. இரண்டனுருபு விரிக்க. "அமுதேயூறி நின்றென்னு ளெழுபரஞ் சோதி" (திருவா.)* **160**

2059. **பொருளுரை:** "உணர்வில்...அருளினை" எனப் போற்றி - "**உள்** உணர்வினுக்குள்ளே நேர்பெறும்படி வருகின்ற சிவபோகத்தை நீக்கமின்றி **வெளி** உருவினிடம் புலப்படுகின்ற ஐம்பொறிகளின் அளவிலேயும் எளிதின் வரும்படி **அருளினீர்"** என்று துதித்து; இணையில்...ஏத்தி - ஒப்பற்ற வண்மையுடைய கருணையினையே **துதித்து;** முன்...பாடினர் - முன்னே தொடங்கிய சொற்பதிகத்தினிற் பொருந்தும் இனிய இசையினைப் பாடினராய்; ஆடினர் - ஆனந்தக் கூத்தாடினராய்; விழிமாரி **பொழிந்தனர்** - கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் மழை பொழிந்தனராய்;

வேறு

2060. ஊழி முதல்வர்க் குரிமைத் தொழிற்சிறப்பால்
வாழிதிருத் தில்லைவா ழந்தணரை முன்வைத்தே,
யேழிசையு மோங்க வெடுத்தா ரெமையாளுங்
காழியர்தங் காவலனார் "கற்றாங் கெரியோம்பி" **162**

விளக்கவுரை: **உணர்வினேர்பெற வரும்** - *சிவசத்தியால் (மலவாசனையும் நீங்கப் பெற்று) விரிந்து விளங்கிய ஆன்மா ஞானசத்தியால் அநுபவிக்கப் பெறுவதாகிய;* **சிவபோகத்தை** - *சிவாநந்தாநுபவத்தை;* **ஐம்பொறியளவினு மெளிவர** *மாயாகரணங்களாலறிகின்ற புறவுணர்ச்சிக் கண்ணும் எளிதாக எய்தும்படி என்பதாம்; "காணுங் கரணங் ளெல்லாம்பே ரின்பமெனப், பேணுமடியார்"; "உள்ளும் புறம்பு மொருதன்மைக் காட்சியருக், கெள்ளுந் திறமேது மில்" என்பன காண்க.*

ஒழிவின்றி-உணர்வின் நேர்பெறவரும் *என்றும்,* **ஒழிவின்றி உருவின்கண் அணையும் ஐம் பொறியளவினும்** *எளிவர என்றும் ஈரிடத்தும் கூட்ட நின்றது.*

உருவின்கண் அணையும் ஐம்பொறி அளவினும் எளிவர - *பொறி வாயிற் காட்சிக்கும் எளிதில் விடயமாகும்படி. அளவினும் - எளிவர என்றதனால் அகநோக்கிலும் அரிதின்வரும் சிவபோகத்தை என்றது குறிப்பு. உண்ணோக்கிற் காண்பதனைப் புறநோக்குக் காணாது. இங்கு அகநோக்குக்கு மட்டும் விடயமாகிய சிவபோகம் அகநோக்கில் கண்டனுபவிப்பதனோடு புறநோக்களவினும் எளிதில் காண என்பது அருளின் மேன்மை என்றபடி.* **அருளினை** *என்றது அக்குறிப்பு.*

இணையில் வண்பெருங் கருணையே - *மேற்கண்டவாறு அகநோக்கினும் புறநோக்கில் எளிதாமாறு அருளுதல் இணையற்ற பெரிய* **கருணை** *என்பது. இதுபற்றியே "தில்லையைக் காணமுத்தி" என்ற உண்மை எழுந்தது.* **இணையில்** - *வேறுயாவர்க்கு மியலாதது;* **வண்மை** - *வரையின்றி யாவர்க்கும் ஈதல்;* **பெருமை** - *எதற்கும் மேற்பட்டது. ஏகாரம்-பிரிநிலை.*

எடுத்த சொற்பதிகம் - *இதனை மேல் வரும் இரண்டு பாட்டுக்களால் விளக்குகின்றார். "சொன்ன தமிழ்மாலை" (பதிகம் 11).*

விழிமாரி - *ஆனந்தக் கண்ணீர் மழை. மாரி போல்வதாகியநீரை மாரி என்றதுபசாரம்.* **பதிகத்திற் புணரும் இன்னிசை** - *பதிகப்பண் அமைதி.*

உருவின்கண் ஐம்பொறியளவினு மெளிவர அருளினை - *"ஐந்து பேரறிவுங் கண்களே கொள்ள" (252); "தெண்ணிலா மலர்ந்த வேணியாய்" (253); "இத்தன் மையர்பல முறையுந் தொழுதெழ" (1433) என்றவற்றின் கருத்துக்கள் இங்கு நினைவுகூர்தற் பாலன.* **161**

2060. **பொருளுரை....ஊழி...முன்வைத்தே** - *ஊழிகளின் முதல்வராகிய கூத்தப் பெருமானுக்கு உரிமைப்பட்ட தொழில் புரியும் சிறப்பினால் வாழி திருத்தில்லை வாழந்தணர்களை முதலில் வைத்தே;* **ஏழிசையும் ஓங்க** - *ஏழு இசைகளும் விளங்க; "கற்றாங்*

2061. பண்ணார் பதிகத் திருக்கடைக்காப் புப்பரவி
உண்ணாடு மென்பு முயிருங் கரைந்துருக்கும்
விண்ணா யகன்கூத்து வெட்டவெளி யேதிளைத்துக்
கண்ணா ரமுதுண்டார் காலம் பெறவழுதார். 163

கெரியோம்பி" - "கற்றாங் கெரியோம்பி" என்ற முதலினையுடைய திருப்பதிகத்தினை; எமையாளும்...காவலனார் - எம்மையாளும் பரமாசாரியாராகிய சீகாழித் தலைவர்; எடுத்தார்; - தொடங்கினராய்;

விளக்கவுரை: ஊழிமுதல்வர் - சங்காரகாரணனாயுள்ள முதல்வனாதலின் உலகிற்கு நிமித்த காரணனாயுள்ள முதல்வன். ஊழியில் உலகமெல்லாம் அழிந்து தன்னுள் ஒடுங்கத், தான் அழியாது நின்று உலகுயிர்களைப் புனருற்பவம் செய்து மீளத் தோற்றுவித்தலின் **ஊழிமுதல்வன்** என்றார். படைத்தல் துடைத்தலாதி ஐந்தொழிலும் செய்யும் ஆனந்தக் கூத்தனாதலின் இவ்வாறு கூறினார்.

உரிமைத்தொழில் - அகம்படிமைத் திருத்தொண்டு. "பொங்கிய திருவி னீடும் பொற்புடைப் பணிக ளேந்தி, மங்கலத் தொழில்கள் செய்து...அகம்படித் தொண்டு செய்வார்" என்பதாதியாக வரும் தில்லை வாழந்தணர் புராணங் காண்க. மேல் (2066) உரைப்பவையும் கருதுக

வாழிதிருத் தில்லைவா ழந்தணரை முன்வைத்தே - எடுத்தார் என்க. வாழி - அசை; முன்வைத்தே - பதிகமுதற்றிருப் பாட்டில் முதலில் வைத்துக் "கற்றாங்கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்வாழ்" என்றது. எடுத்தார்-தொடங்கினார்.

கற்றாங்கெரியோம்பி - இந்த முதலையுடைய பதிகம். முதற் குறிப்பு. 162

2061. பொருளுரை: பண்ணார்...பரவி - பண்ணிறைந்த திருப்பதிகத்தின் திருக்கடைக் காப்பு நிறைவித்துப் போற்றி செய்து; உள்நாடும்...அமுதுண்டார் - உடலினுள் ஆதரவாய் அறியப்படும் எலும்பும் உயிரும் கரையும்படி உருக்குகின்ற தேவநாயகரது அருட்கூத்தினை வெட்ட வெளியிலே அனுபவித்துக் கண்ணிறைந்த அமுதினை உட்கொண்டருளினர்; காலம் பெற அழுதார் - காலமுண்டாக அழுதழைத்தவராகிய பிள்ளையார்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு பொருள் மேல் வைத்துரைக்க நின்றன.

விளக்கவுரை: பண்ணார் பதிகம் - **பண்** - குறிஞ்சி "ஏழிசையும் ஓங்க" என்று இதன் சிறப்பை முன் பாட்டினும் கூறினார். குறிஞ்சிப் பண்ணிற் பிள்ளையார் பாடியருளியதாகக் கிடைக்கும் பதிகம்; இது மார்பிடமாகப் பிறக்கும் சிறப்புடைமை யாலும், வியாழக் குறிஞ்சி, மேகராகக் குறிஞ்சி, அந்தாளிக் குறிஞ்சி என்ற பல பெரு விகற்பங்களுடைமையானும், மற்றும் அகத்திணைப் பகுதியின்றொடர்பு வைத்து இறைவனாகிய நாயகனைக் கூடும் திணைக்குறிப்புடைமையானும், மற்றும் பலவாற்றானும் சிறப்பா யறியப்படும். ஆளுடைய நம்பிகளது தில்லைத் திருப்பதிகமும் குறிஞ்சிப் பண்ணில் அமைந்ததும் காண்க.

திருக்கடைக் காப்புப்பரவி - திருக்கடைக் காப்புச் சாத்திப் பதிக நிறைவாக்கித் துதித்து.

உள்நாடும் என்பும் உயிரும் கரைந்து உருக்கும் கூத்து - "நினைத்தொறுங் காண்டொறும் பேசுந்தோறு மெப்போதும், அனைத்தெலும் புண்ணெக வானந்தத் தேன்சொரியும், குனிப்புடையான்" (திருவா), "அன்பரென் பூடுருகக் குனிக்கும்" (திருக்கோவை), "ஊனினை யுருக்கி யுள்ளொளி பெருக்கி" (திருவா) முதலிய எண்ணிறந்த திருவாக்குக்களும்; நம்பிகளும், அரசுகளும் கொண்ட அனுபவநிலைகளும் கருதுக. **உள்நாடும்** என்றதனை உயிரும் என்றதனுடனும் கூட்டுக. **உள்நாடும் என்பு** - ஏழு தாதுக்களுள் உடம்பு நிற்றலுக்கு ஆதரவாயுள்ள எலும்பு; "கருநரம்பும் வெள்ளெலும்புஞ் சேர்ந்தொன்றாகி" (தாண்); **உள்நாடுமுயிர்** என்றது "உளதிலதென்றலின்" என்பது முதலாக உள்ளே நாடி "மாயா வியந்திர தனுவினு ளான்மா" என்று அளவை முகத்தாலறியப்படும் உயிர். உள் - என்பு தோல் போர்த்த உடலினுள். **கூத்து என்பும் உயிரும் கரைந்துருக்குதல்** தத்துவ சுத்திக்கும் ஆன்ம சுத்திக்கும் சாதனமாம். **கரைந்து உருக்கும்**-கரைய உருக்கும் என்க. செயவெனெச்சம் செய்தெ னச்சமாகத் திரிந்து நின்றது - உண்ணெக-உருக என்ற திருவாசகத் திருக்கோவைச் சொற்களும் காண்க.

விண்நாயகன் - விண் - விண்ணோர்; தேவதேவன். விண் - சிதாகாயம் என்று கொண்டு சிதம்பரநாதன் என்றலுமாம்.

வெட்டவெளியே திளைத்தல் - நிலமுதல் நாதமீறாகிய தத்துவங் கடந்த சிவபோத பூரண வெளியில் நின்மலதுரியாதீதத்தில் ஆன்மா தன் செயலற்றுச் சிவானந்தத்தினுள் நின்றநிலை. "ஒருவி மேற்பெரும் பாழெனு முலப்பிலா னந்தப், பொருளொ டேகமாய்ப் பொருந்திடு முத்தரா யிருந்தார்" என்றும், "முப்பாழும் பாழாய்" என்று வரும் திருவாக்குக்களாலறியப் படுமாறுமுள்ள அநுபவநிலை.

கண்ணார் அமுதுண்டார் - உட்கரணங்களும் கடந்த நிலையில் உண்டனுபவிக்கப்படும் சிவ போகத்தைப் புறக்கரணங்களில் ஒன்றாகிய கண்களாலும் கண்டு அனுபவித்தார். **அமுதுண்ணல்** ஈண்டு "இறவாதவின்பம்" துய்த்தல் என்ற பொருளில் வந்தது. "**கண்களே** கொள்ள", "அத்தாவுன் னாடல் **காண்பான்**" (தேவா) முதலியவை காண்க. (252);

காலம்பெற அழுதார் - உரிய காலத்தில் ஞானம்பெற அழுது ஞானவமுதினைச் சீகாழியில் திருவாயால் உண்டருளியவர் இங்குத் தில்லையில் அவ்வமுதினைக் கண்வழியாலும் உண்டார் என்பது குறிப்பு. "பருகாவின் னமுதத்தைக் கண்களாற் பருகுதற்கு" (ஏயர். புரா. 308); "இரண்டு கண்ணாலும்...அருளைப் பருகித் திளைக்கின்றார்" (மேற்படி 311). 2054, 2061 பாட்டுக்களிற் றிரு.க. சதாசிவச் செட்டியார் உரைக் குறிப்புக்களைத் தழுவி எழுதப்பட்டன. **அழுதார்**-ஆநந்தக் கண்ணீர் பெருக்கினார் என்றலுமாம்.

வெள்ள வெளியே-என்பதும் பாடம். 163

கோயில் **பண் - குறிஞ்சி**

திருச்சிற்றம்பலம்

கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே
செற்றார் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய
முற்றா வெண்டிங்கண் முதல்வன் பாதமே
பற்றா நின்றாரைப் பற்றா பாவமே. **(1)**

செல்வ நெடுமாடஞ் சென்று சேணோங்கிச்,
செல்வ மதிதோயச் செல்வ முயர்கின்ற
செல்வர் வாழ்தில்லைச் சிற்றம் பலமேய,
செல்வன் கழலேத்துஞ் செல்வஞ் செல்வமே. **(5)**

ஞாலத் துயர்காழி ஞான சம்பந்தன்,
சீலத் தார்கொள்கைச் சிற்றம் பலமேய
சூலப் படையானைச் சொன்ன தமிழ்மாலை,
கோலத் தாற்பாட வல்லார் நல்லாரே. **(11)**

- **திருச்சிற்றம்பலம்**

பதிகக் குறிப்பு - தில்லை வாழ்ந்தணர்கள் அணுக்கத் தொண்டு புரியும் தில்லை யம்பலக்கூத்தரது கழல் காணப் பெற்றோர்களைப் பாவங்கள் பற்றா; மையலும் நோயும் தீரும்; அவர் கழல் ஏத்தும் இன்பமே இன்பம்; அதுவே செல்வம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு-(1) கற்று ஆங்கு எரியோம்பி - "கற்க கசடறக் கற்பவை கற்றபின், நிற்க வதற்குத் தக" என்ற திருக்குறளுண்மைக் கிலக்கியமாவார். **கலி - இம்மை** யம்மைகளின் துன்பங்கள். **எரியோம்புதல்** - கலிதீர்வுக்குக் காரணம். இது இவர்களால் உலகமுய்யச் செய்யப்படுவது. "உலகுக்கெல்லாந் திருவுடை யந்தணர்" (திருவிருத்); "வருமுறை யெரிமூன் றோம்பி மன்னுயி ரருளான் மல்க" (354) "அறுதொழி லாட்சி யாலே யருங்கலி நீக்கி யுள்ளார் (355). **முற்றாமை** - பிறை பிறையாகவே இருத்தல்; "வளராத பிறையும்" (நம்பி . தேவா). பற்றா பாவமே-பாதமே பற்றும் நிலையாவது அருளினாலல்லது ஒன்றையுஞ் செய்யானாய் இறைபணி நிற்றலாகிய நின்மல துரியநிலை - அந்நிலை நின்றாங்கே வல்வினையின்றாகும். "பற்றுக" (குறள்)-(2) **பறப்பைப் படுத்து** - கருடன் முதலிய பறவை வடிவமாக வேள்வித் திண்ணை அமைத்து; **பசுவேட்டு-பசு-யாகப் பசு.** பசுத்துவம் என்னும் ஆன்ம போதத்தைப் பலியிட்டு என்றலுமாம். **மையல்-மருள்;** பிறப்புக்குக் காரணமான அவிச்சை. "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருளானாம் மாணாப் பிறப்பு". (குறள்). **மறப்பிலார்** - "மறக்குமா றிலாத வென்னை" (பிள். தேவா); "என்னைநான் மறக்கு மாறு"; "மறந்தென் னினைக்கேனே" (நம்பி). "மறவாமை யானமைத்த மனக்கோயில்" (வாயிலார்.புரா)-(3) **பந்தோச்சுதல்** - பந்தாடுதல்; **செய்யான்**

2062. முன்மா லயனறியா மூர்த்தியார் முன்னின்று
சொன்மாலை யாற்கால மெல்லாந் துதித்திறைஞ்சிப்
பன்மா மறைவெள்ளஞ் சூழ்ந்து பரவுகின்ற
பொன்மா ளிகையைவலங் கொண்டு புறம்போந்தார். **164**

- செம்மை செய்பவன். செம்மேனி எம்மான் என்றலும் ஆம்;-(4) **நெற்றி** - முகடு; **பேரம்பலம்** - **சிற்றம்பலத்தின்** வேறாகிய தனிமன்றம். அது மேரு எனப்படும். **பிறை தாக்குதல்** - உயர்ச்சி குறித்தது. 2058 பார்க்க. இத்திருப்பாட்டினுள் தில்லையும், பேரம்பலமும், சிற்றம்பலமும், அதனுள் அருட்கூத்தாடும் இறைவனும் ஒருங்கே கூறப்படுதல் காண்க. "தில்லை மாநகர் போற்றி; தில்லையுட், செம்பொ னம்பலம் போற்றி; யம்பலத் தாடு நாடகம் போற்றி" (கோயினான் - 40) என்ற பட்டினத்தடிகள் திருவாக்கும் காண்க. **கழல் ஏத்தும் இன்பம் இன்பமே** - இன்பமே இன்பம் என்று பிரிநிலை ஏகாரம் பிரித்துக் கூட்டுக. மேல்வரும் பாட்டினும் இவ்வாறே **செல்வமே செல்வம்** என்க. ஏனைய எல்லாம் இன்பமும் செல்வமு மாகா என்பது-(5) **செல்வ மாடம்** - மாடங்களின் வளம்; **செல்வமதி** - அருளினால் உயிரும் நிலையும் பெற்றமை; **செல்வ முயர்தல்** - முத்தித்திரு நிறைதல்; **செல்வர்**-உலகுக்கெல்லாந் திருவுடையந்தணர்; **செல்வன்**-எல்லா ஐசுவரியத்துக்கும் இருப்பிடமானவர்; ஏத்தும் செல்வமே - ஏத்தப்பெறும் பாக்கியமே. **செல்வமே** - ஏகாரம் பிரிநிலை; இப்பாட்டில் ஏழு செல்வங்கள் வைத்தருளினார்; அவை அனைத்தினுள்ளும் விரவி வெளித்தோன்றா நிலையின் செல்வ மொன்றாக அட்ட ஐசுவரியமும் கொள்க.-(6) **கருமானுரியாடை** - "**கருமானி னுரியதளே யுடையா** வீக்கி....வாண்முகத்தாள் அமர்ந்துகாண ஆடுகின்ற **பெருமானை**" என்ற கோயிற்றிருந்தாண்டகக் கருத்தும் இப்பாட்டிற் கண்டவாறே காண்க. **கழலல்லாற் பேணா துள்ளமே** - எதிர்மறைகள் உறுதிகுறித்தன. "அடியலாற் பேணா வெம்பிரான் சம்பந்தன்" (திருத்தொண்டத் தொகை) "கழலே பேணும் சம்பந்தன்" "கழலலாற் பேணாக் கருத்துடை" (பிள். தேவா).-(7) சிலை - பொன்மலை. **தலையால் வணங்குவார் தலையானார்கள்** - "மனநின்பாற் றாழ்த்துவதுந் தாமுயர்ந்து தம்மையெல்லாந் தொழவேண்டி" "தொழப்படுந் தேவர்தம்மாற் றொழுவிக்குந் தன்றொண்டரையே" (திருவா); "பூவ னூரனைப் போற்றுவார், மனித ரிற்றலை யான மனிதரே" (குறுந்). "தலையே நீ வணங்காய்" "வணங்கத் தலைவைத்து";-(8) **தீரா நோய் எல்லாம்** - ஆணவமூலமலமும் பழவினையும்; "தீராநோய் தீர்த்தருள வல்லான்" (தாண்)-(9) **கோள்** - கொள்ளும் தன்மையுடைய; **நாக அணையான்** நாகணையான் என நின்றது. கோண் - வலிமை என்றலும் வளைவு என்றலுமாம். சேண் - பெருமை; **மாணா நோய்** - மாணாமையினைச் - மங்குதலைச் - செய்யும் நோய்-(10) **பட்டைத்துவர்** - ஆடைச்சாயம் தோய்க்கும் ஒருவகைப் பட்டை. மருதம் பட்டை என்ப. மருதம்பூப் புட்டத்தே அட்டிடுதலும் உண்டு. **படிமம்** - வடிவம். முட்டை - மூடத்தன்மை.

தலவிசேடம் - முதற்பகுதி, பெயர் விளக்கம் (102 பக்கம்) முதலியவை பார்க்க.

2062. **பொருளுரை:**- முன்..முன்நின்று - முன்பு மாலும் அயனும் அறியாத மூர்த்தியாரது திருமுன்பு நின்று; சொன்மாலையால்... இறைஞ்சி - சொன்மாலையாகிய திருப்பதிகங்களால் எல்லாக் காலங்களிலும் துதித்து வணங்கி; பன்மாமறை... வலங்

2063. செல்வத் திருமுன்றி றாழ்ந்தெழுந்து, தேவர்குழாம்
மல்குந் திருவாயில் வந்திறைஞ்சி மாதவங்கள்
நல்குந் திருவீதி நான்குந் தொழுதங்கண்
அல்குந் திறமஞ்சு வார் சண்பை யாண்டகையார்; **165**

கொண்டு - அளவில்லாத பெருமறைகளின் வெள்ளங்கள் சூழ்ந்து துதிக்கின்ற செம்பொன் மாளிகையாகிய பொன்னம்பலத்தினை வலமாகவந்து; புறம் போந்தார் - புறத்திற் போந்தருளினர்.

விளக்கவுரை:- முன்நின்று *- திருமுன்பு நின்று கொண்டு பிள்ளையார் கூத்தப் பெருமானது அருட்கூத்தைக் கும்பிட்டுத் திருப்பதிகம்பாடிக் கண்ணாரமுதுண்டார். அதனுடன் அங்கு நின்றும் அகலாமல் பின்னும் - ஆராமையினால் நீண்டகாலம் அங்குத் திரு முன்பு நின்றுகொண்டேயிருந்தனர்*

சொன்மாலை *- திருப்பதிகங்கள்; இவை கிடைத்தில!*

காலமெல்லாம் *- அங்கு நின்றிருந்த காலமுழுதும். வழிபாட்டு நேரங்கள் எல்லாவற்றிலும் என்றலுமாம்.*

பொன்மாளிகை- *செம்பொன்னம்பலம். பல் மாமறைவெள்ளம் சூழ்ந்து பரவுதலாவது அளவில்லாத வேதங்கள் துதித்தல்; வேதம் பயிலும் கூட்டங்கள் பலவும் சூழ்ந்து பரவுதல் என்றலுமாம். சிதாகாயமானது வேத இருதயத்தில் விளங்கும் என்ற குறிப்புமாம். புறத்தில் பொன்மாளிகையின் தூண்கள் - பலகணிகள் - பலகைகள் - மேல் வேய்ந்த ஓடுகள் என்ற பல அவயவங்கள் வேதங்களின் பற்பல மந்திர உறுப்புக்களாக விளங்கும் அமைப்பும் இங்கு நோக்கத்தக்கது.*

புறம் *- பொன்னம்பலம் கடந்து அப்புறத்தில்.* *164*

2063. பொருளுரை— *செல்வம்...எழுந்து - செல்வமுடைய திருமுற்றத்தில் கீழ்வீழ்ந்து வணங்கி எழுந்து; தேவர்...இறைஞ்சி - தேவர் கூட்டம் நிறைந்துள்ள திருவாயிலில் வந்து வணங்கி; மாதவங்கள்...தொழுது - மாதவங்களைத் தரும் நான்கு திருவீதிகளையும் தொழுது; அங்கண்.... ஆண்டகையார் - அவ்விடத்தில் தங்கும் திறத்தினைச் சீகாழி ஆண்டகையாராகிய பிள்ளையார் அஞ்சுவாராய்,*

விளக்கவுரை: செல்வத்திருமுன்றில் தாழ்ந்து எழுந்து *- செல்வம் திருமுன்றில் - "செல்வ நெடுமாடம்" என்ற (பதிகம்) 5-வது பாட்டுப் பார்க்க. திருமுற்றத்தில் நிலமுறத்தாழ்ந்து வணங்கி எழும் மரபு.*

தேவர்குழாம் மல்கும் திருவாயில் *- காலம் பார்த்து, நந்தி பெருமானது ஆணையை எதிர் நோக்கித் திருவாயிலிற் காத்திருக்கின்றனர் தேவர்கள் என்ற கருத்து.*

மாதவங்கள் நல்குந் திருவீதி நான்கும் தொழுது *- மாதவங்கள் - மாதவங்களின் பயன். ஏனை எவ்விடத்தும் செய்யும் எத்தகைய தவங்களாயினும் அவற்றின் பயனெல்லாம் ஒருங்கே இந்நான்கு திருவீதிகளும் நல்குவன. இத்திருவீதிகளில் கூத்தப் பெருமான்*

2064. செய்ய சடையார் திருவேட் களஞ்சென்று
கைதொழுது சொற்பதிகம் பாடிக் கழுமலக்கோன்
வைகி யருளுமிட மங்காக மன்றாடும்
ஐயன் றிருக்கூத்துக் கும்பிட் டணைவுறுநாள், **166**

திருத்தேரில் உலாப் போந்து, கண்டு வழிபட்டார்க்கெல்லாம் உறுதிப்பயனாகிய முத்திப்பேறு தருதல் குறிப்பு. பிள்ளையார் தெற்குத் திருவாயிலின் வழியே உட்சென்று முறையால் வணங்கிப் புறம்போந்து நான்கு திருவீதிகளையும் முறையால் வலம் வந்து தொழுது மேற்சென்றனர்.

அங்கண் அல்குந் திறம் அஞ்சுவார் - ஆண்டகையார் *- ஆண்டகையாராதலின் அவ்விடத்துத் தங்குதலை அஞ்சினார் என்பது. விராட்புருடனது இதயத்தானமாதலாலும், சிதாகாயமானது ஞான சக்தியின் சொரூபமானதாலும் அங்குத் தங்கினால் உலகர்பால் மனமொழி மெய்களால் பற்பல துரிசுகள் நிகழக்கூடுமாகையால் உலகர்க்கு வழிகாட்டும் ஆசாரிய நிலையின் இவ்வாறு அஞ்சினார் என்க.* ***அஞ்சினார் ஆண்டகையார்*** *-"அஞ்சுவ தஞ்சாமை பேதைமை; யஞ்சுவ, தஞ்ச லறிவார் தொழில்" (குறள்) என்பதுண்மை யாதலின் இறைவர் வகுத்த நியதி நிலையில் நின்றொழுகுதற்கு ஆண்டகைமை வேண்டப்படுவது என்பது. நாயன்மார்கள் சரிதம் பலவும் கருதுக. "வாளுலா மெரியு மஞ்சேன்" (திருவா) "அஞ்சுவ தியாதொன்று மில்லை" (தேவா) என்ற நிலைகளும் காண்க. ஆனால் இந்நாளில் மாக்கள் இதற்கு மாறாக அஞ்ச வேண்டாத சிறு செயல்களுக்கெல்லாம் பெரிதும் அஞ்சியும், அஞ்சி ஒழுக வேண்டிய இறைவர் நியதிகளுக்குச் சிறிதும் அஞ்சாது மனம்போனவாறெல்லாம் ஒழுகியும் கொடுநரகத் தண்டனைக்குள்ளாகத் திரிவது கொடிது! கொடிது!. சிதம்பரமாகிய புண்ணியத் திருத்தலத்தை எண்ணுந்தோறும் மக்கள், ஆளுடைய பிள்ளையாரது இம்மன நிலையையும் செயலையும் எண்ணுவாராயின் நலம்தரும்.*

அல்குதல் *- தங்குதல்.* ***அஞ்சுவார்*** *- அஞ்சுவாராகி; முற்றெச்சம்; அஞ்சுவார் - சென்று என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.* *165*

2064. **பொருளுரை:** *கழுமலக்கோன் - சீகாழித் தலைவர்; செய்ய...பாடி - சிவந்த சடையினையுடைய சிவபெருமானது திருவேட்களத்தின்கண் சென்று கைதொழுது சொற்பதிகத்தினைப்பாடி; வைகி...அங்காக - தங்கி எழுந்தருளியிருக்கும் இடம் அவ்விடமாகக் கொண்டருளி; மன்றாடும்...நாள் - திரு அம்பலத்தில் அருட்கூத்தாடும் ஐயனது திருநடனத்தைக் கும்பிட்டு அணைந்திருக்கும் நாளில்;*

விளக்கவுரை: செய்ய *- சிவந்த.* **வைகி அருளும் இடம்** *- தங்குகின்ற இடம். பரிசனங்களுடன் தாம் எழுந்தருளியிருக்கும் திருமடம்.*

அங்காக - அவ்விடமாக அமைத்துக்கொண்டு.

மன்றுஆடும் ஐயன் *- பொன்னம்பலவாணர்.*

திருக்கூத்துக் கும்பிட்டு அணைவுறும் - திருவேட் களத்தினின்றும் காலந்தோறும் திருத்தில்லைக்கு எழுந்தருளி அருட்கூத்தினைக் கும்பிட்டு மீண்டருளிய.

நாள் - நாள்களில். நாள் - அணைந்து - கும்பிட்டுப் பாடினார் என்று மேற் பாட்டுடன் முடிக்க.

திருவேட்களம் - இறைவர் வேடனாய் வந்து அருச்சுனனுக்குப் பாசுபதம் கொடுத்த நிலைபற்றி இங்கெழுந்தருளி யிருத்தலின் இப்பெயர் பெற்றது போலும். சிதம்பரம் இருப்புப்பாதை நிலையத்தினின்றும் கிழக்கே ஒரு நாழிகையளவில் உள்ளது. சுவாமி பெயர் பாசுபதேசுவரர் என்ற குறிப்பும் காணத்தக்கது. வேள்விகள் வேட்கும் சிறப்புப்பற்றியும் பெயர் போந்தது என்ற குறிப்பும் "உள்ளங் கலந்திசை யாலெழுந்த, வேதமும் வேள்வியு மோவா வேட்களம்" என்ற பதிகக் குறிப்பாற் பெறப்படும். 166

திருவேட்களம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம்**

அந்தமு மாதியு மாகிய வண்ண லாரழ லங்கை யமர்ந்திலங்க
மந்த முழவ மியம்ப மலைமகள் காணநின் றாடிச்
சந்த மிலங்கு நகுதலை கங்கை தண்மதி யம்மய லேததும்ப
வெந்தவெண் ணீறுமெய் பூசும் வேட்கள நன்னக ராரே. (1)

விண்ணியன் மாடம் விளங்கொளி வீதி வெண்கொடி யெங்கும் விரிந்திலங்க
நண்ணிய சீர்வளர் காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
பெண்ணினல் லாளொரு பாக மமர்ந்து பேணிய வேட்கள மேன்மொழிந்த
பண்ணியல் பாடல்வல் லார்கள் பழியொடு பாவமி லாரே. (11)

பதிகக்குறிப்பு:- வெந்த வெண்ணீறு மெய்பூசும் வேட்கள நன்னகராரே அந்தமுமாதியுமாகிய வண்ணல்; பிச்சைநயந்தார்; விடையூர்தி நயந்தார்; பல்கணம் சூழப் பூமியும் விண்ணும் பொருந்தச் சீதமும் வெம்மையுமாகி நின்ற செல்வர்; நொய்யன செய்யலுகந்தார்; இவை முதலிய தன்மைகளுடன் பெண்ணினல்லாளுடன் அமர்ந்து அருள்பேணினர். **குறிப்பு-** "பதிகமெட்டொரு கட்டளை" (2005) என்ற தக்கராகப் பண்ணில் அருளியது இப்பதிகம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு - (1) அந்தமும் ஆதியு மாகிய அண்ணல் - **மலைமகள் காணநின்றாடி** - மதியம் **அயலே ததும்ப வெந்தவெண்ணீறு பூசும்** - என்றவை மாசங்காரமும், உலகப் புனருற்பவமும், அவற்றிற்கு அருளுடன் கூடி நிமித்த காரணராகி நிற்கு நிலையும் குறித்தன. சிவஞான போதம், "அவை ஒடுங்கி மலத்துளதாம் **அந்தமாதி**" என்ற முதற் சூத்திரக்கருத்துமுழுதும் ஈண்டு விளங்குதல் காண்க. **நகரார்-நீறுபூசும் - அண்ணல்** என்று கூட்டுக. **ஆகிய** - ஆக்கச்சொல் சங்காரமும் சிருட்டியும் செய்யும் முதல்வன் ஆகிய என்ற பொருளில் வந்தது. **அந்தம்** - அந்தத்தைச் செய்பவன்; **ஆதி** - (ஆதியை) தொடக்கத்தை-சிருட்டியை-புனருற்பவத்தைச் செய்பவன். **ஆர்அழல்** - "சாற்றியிடு மங்கியிலே சங்காரம்" (உண்மை விளக்கம் 35); சங்காரத்தைப் பொருந்தும்

அழல். **ஆடி** - ஆடுதல் புனருற்பவத்தின் பொருட்டு. 'வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (திருவிருத்.) **நகுதலை - கங்கை - மதியம்** - அருட் குறிப்பாகிய பொருள்கள். மேல்வரும் திருப்பாட்டுக்களுள் - பாரிடஞ் சூழப்போதருதல் - ஊரிடுபிச்சையேற்றல்-(2) சீதமும் வெம்மையு மாகி நிற்றல் (3) ஆமை (4) விடை (5) தலையோடு (6) முதலியவையும் இக்கருத்து; வெந்த - உலகம் சங்கரிக்கப்பட்ட, - (2) **ஏற** - மேலே பொருந்த; சரிந்து - கீழ் தாழ்ந்து - வடிந்து; **போதரும்** - போகும்; **நால்விரற் கோவணம்** - கோவணத்தின் அகல அமைதி; ஐவிரலும் கொள்ளப்படும்.-(3) **பூமியும்-நின்ற - சீதம்** - சங்காரத்தின் அழலின் வெப்பம் தணிந்து குளிர்வதனையும், வெம்மை - உலக நிலை பேற்றுக்குரிய வெப்பம் தருவதனையும் குறித்தன. **உடன்** பொருந்த - ஒருசேரப் பொருந்த என்றதுமிக்கருத்து. சீர்-அருளால் மீளப்படைத்தலும் காத்தலும். **செல்வர்**--புவனபோகங்களெல்லாம் தரும் தன்மையும், தந்தபின் முத்தித் திருவையும்தரும் தன்மையும் குறிப்பு. **கானல்** - கடற்கரைச் சோலை. **வேலை** - இத்தலம் கடற்கரை யணிமையில் உள்ளது. **உள்ளங்கலந்து-ஓவா வேட்களம்** - வேதவேள்விகள் இடையறாது நிகழும் தன்மை. தலப்பெயருக்குக் காரணம் போலும். **உள்ளங்கலந்து இசையாலெழுந்த- இசை** - வேதமந்திரங்களின் சுரம். **உள்ளங்கலந்து** - மனமொன்றி; **உள்ளம் - இசை எழுந்த வேள்வி** என்பன மனம் மொழி மெய் மூன்றுங் கலத்தல் குறித்தன. எழுந்த வேள்வி - என்று கூட்டுக. வேள்வி எழுதலாவது தீ ஓங்குதலும், புகை எழுந்து போய் மேகத்திற்குக் காரணமாதலும். அதனால் உலகுயிர்கள் எழுதலும் ஆம். **ஓவா** - நீங்காத - (4) **ஐந்தலை அரவம்** - "அற்றம் மறைப்பதும் முன் பணியே;" வெண்கோவணத்துடன் அரவினையும் அசைத்து; **அசைத்தல்** - கட்டுதல்; **ஆமை** - திருமாலின் கூர்மாவதாரமாகிய ஆமையின் முதுகோடு.-(6) **கறி** - மிளகு முதலிய மலைபடு பண்டங்கள்; **குன்றமெடுத்தவன் காதல்** - குன்றம் ஏந்திய திருமாலினுடை காதலன்-மகன்; கண்கவர் **ஐங்கணேயோன்** - அழகிய மன்மதன். **மறி**-மான் கன்று; **மைஞ்ஞிறமான்** - கருமான். **வெறி** - மணம். -(7) **சுடலை** - உலகம் சங்கரிக்கப்பட்ட இடம். **நுண்பொடி** - நீறு. **நொய்யன செய்யல்** - சிறியவாகிய தொண்டுகள் செய்தல்; (9) **திருவொளி**-நீண்டழலாய் நிமிர்ந்த அழற்றூணின் எல்லை. **காணிய**-காணும்பொருட்டு; **வரைஏந்திய** - குன்றமேந்திய.-(10) **அத்தமண்** - செந்நிறக்கல்; காவிக்கல்; மண்**தோய்துவரார்** - கல்லாடை உடுக்கும் புத்தர். **அத்தம்** - பொன்; பொன்னிற ஆடையர் என்றலுமாம்-(11) பெண்ணின் **நல்லாள்** - தல அம்மை பெயர் **நல்ல நாயகி**.

குறிப்பு;- தில்லைத் தரிசனத்தின் பின் அணிமையில் அருளிய பதிகமாதலின் ஐந்தொழிற் குறிப்புப்பெறும் வண்ணம் அருளினார்.

தலவிசேடம் - திருவேட்களம் III(1) பா.எண் 1437 பார்க்க.

2065. பொருளுரை: கைம்மான்..பாடி - கையில் மான்கன்றை ஏந்திய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கழிப்பாலையினுள் சேர்ந்து மெய்த்தன்மையுடைய மாலையாகிய சொற்பதிகத்தைப் பாடி; விரைக்கொன்றை..பாடினார் - மணந்தங்கிய கொன்றை மலரானமைந்த அழகிய மாலை சூடிய சடையினையுடைய திருவுச்சி என்னும் தலத்தில் எழுந்தருளிய பெருமானைக் கும்பிட்டு அருந்தமிழ்ப் பதிகத்தினையும் பாடியருளினார்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

2065. கைம்மான் மறியார் கழிப்பாலை யுள்ளணைந்து
மெய்ம்மாலைச் சொற்பதிகம் பாடி விரைக்கொன்றைச்
செம்மாலை வேணித் திருவுச்சி மேவியுறை
யம்மானைக் கும்பிட் டருந்தமிழும் பாடினார். 167

விளக்கவுரை—மான் மறிக்கையார் - என்க.

மெய்ம்மாலைச் சொற்பதிகம் - "மெய்த்திருவாக்கெனு மமுதம்" (புரா - 1088); "வாய்மை" (மேற்படி 980). மெய் - சத்தாம் தன்மை என்றும் பொய்யாது. குறித்த பயனைத் தந்தேவிடும் மொழி.

செம்மாலை - செம்மையாவது ஓங்காரத்தை உள்ளடக்கிச் சிவாகாரமாய் விளங்குதலும், சிவனது திருவடையாள மாலையாதலும் ஆம்.

வேணிஅம்மானை என்று கூட்டுக. *திருவுச்சி* - தலப் பெயர். திருநெல்வாயில் என்றபேரும் பதிகத்துக் காண்க. இப்பொருள் காணமாட்டாது உச்சி - திருமுடி என்று பொருள் கொண்டு, வேணியினையுடைய திருமுடியில் என்று உரைத்து இடர்ப்படுவாருமுண்டு.

அருந்தமிழ் - திருப்பதிகம். 167

திருக்கழிப்பாலை

திருச்சிற்றம்பலம் — பண் - கௌசிகம்

வெந்த குங்குலி யப்புகை விம்மவே, கந்த நின்றுல வுங்கழிப் பாலையார்
அந்த மும்மள வும்மறி யாததோர், சந்த மாலவர் மேவிய சாந்தமே. (1)
அந்தண் காழி யருமறை ஞானசம், பந்தன் பாய்புனல் சூழ்கழிப் பாலையைச்
சிந்தை யாற்சொன்ன செந்தமிழ் வல்லவர், முந்தி வானுல காடன் முறைமையே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு - கழிப்பாலையார் சாந்தம் மேவியவர்; அவர் தலைவர்; அவர் செய்வன ஆர்க்கும் அறிவொணா; அவர் கழல் சிந்தை செய்து அடைமின்; அவ்வாறு தொழுவார் வினை மாயும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு - (1) *சாந்தமே* - சிவம் சாந்தம் என்பது வேதம். - (2) அலங்கல் கண்ணி - "மாதர்ப்பிறைக் கண்ணி" (தேவா)-(4) *நலம்பட வண்டுபண் அறை* என்க. *பண் நலம்* - பண்ணின் தன்மை என்றலுமாம்;- (6) *பலி கள்வனார்* - பலி கொள்ள என்று வந்து வளையும் நிறையும் உள்ளமுங்கவர் கள்வன்;- (7) *மண்ணும் விண்ணும்* பெறவேண்டின் ஏத்துமின். மண்ணுக்கும் விண்ணுக்கும் இவரே தலைவர் என்று எண்ணி என்றுலுமாம்.-(8) *கலங்கள்* - *வந்து உலவும்* கடற்கரையில் உள்ள தலம் - (9) *தாட்சி* - வணக்கம். - (11) *சிந்தையால்* சிந்தனையோடு.

தலவிசேடம்:- *திருக்கழிப்பாலை* - III(1) பா.எண் 1439 பார்க்க.

2066. பாடும் பதிகவிசை யாழ்ப்பாண ரும்பயிற்றி
நாடுஞ் சிறப்பெய்த நாளுநடம் போற்றுவார்
நீடுந் திருத்தில்லை யந்தணர்கள் நீண்மன்றுள் **168**
ஆடுங் கழற்கணுக்க ராம்பே றதிசயிப்பார்,

திருநெல்வாயில் (திருவுச்சி)

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம்

புடையி னார்புள்ளி கால் பொருந்திய, மடையினார்மணி நீர்நெல் வாயிலார்
நடையி னால்விரற் கோவ ணந்நயந், துடையி னாரெம துச்சி யாரே (1)

நெண்ப யங்குநெல் வாயி லீசனைச் சண்பை ஞானசம் பந்தன் சொல்லிவை
பண்ப யன்கொளப் பாட வல்லவர், விண்ப யன்கொளும் வேட்கை யாளரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிக குறிப்பு:- நெல்வாயிலார் - நிலையாய தன்மையர்; ஆதியார் அந்தமாயினார். அவர் எம் உச்சியாரே. உச்சியார் என்றது எம்மால் வணங்கப்படும் உச்சி என்னும் தலத்தில் உள்ளவர் என்றும், எமது உச்சி - தலைமீது உள்ளவர் என்றும் இரு பொருளும்பட நின்றது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:-(1) புடை - பக்கம்; புள்ளி - நண்டு; கால் - சிறு கால்வாய். கால் புடைபொருந்திய மடை என்க. ஒவ்வொரு மடையும் பக்கத்தில் சிறுகால்களை உடையது என்பது நீர்வளம். **நால்விரற் கோவணம்** - (வேட்களம் 4) **(2) தலையாய தன்மை**- முதல்வராம் தன்மை - (3) **தொழ இச்சையால் உறைவார்** - உயிர்கள் தொழுது வந்தடைவதற்காக விரும்பி எழுந்தருளியுள்ளார்.-(5) **விருத்தனார்** - "முன்னைப் பழம்பொருட்கு முன்னைப்பழம் பொரு" ளாகி -(7) **ஆதியா ரந்த மாயினார்** - (வேட்களம் 1). **வினை கோதியார்** - தீவினையாகிய குற்றமுடையார். முப்புரவாணர்.-(10) **பண்டம்** - பொருள். **விண்தயங்கு** - விண்ணோர் பணியும்.

தலவிசேடம் - திருநெல்வாயில் (திருவுச்சி); இத்தல இறைவர் பெயர் உச்சி **நாதர்** - பதிகப்பாட்டுத்தோறும் காண்க. அம்மை - **கனகாம்பிகை** இது சிவபுரி எனவும் வழங்கப்படும். (நடுநாட்டுத்தலமாகிய **திருநெல்வாயிலரத்துறை** வேறு) பதிகம் 1.

இது சிதம்பரம் நிலயத்துக்குத் தென்கிழக்கே **11/2** நாழிகை யளவில் உள்ளது. திருவேட்களத்தினின்றும் **1/2** நாழிகை யளவில் அடையலாம்.

2066. பொருளுரை: பாடும்....எய்த - பாடிய திருப்பதிகத்தின் இசையினைத் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் யாழில் வாசித்து நாடும் சிறப்பினைப் பெற்றாராக; நாளும் நடம் போற்றுவார் - தினமும் தில்லையில் சென்று இறைவரது திருக்கூத்தினைப் போற்றுவாராகிய பிள்ளையார்; நீடும்...ஆம் பேறு - நீடுகின்ற திருத்தில்லைவாழந்தணர்கள் நீளும் திருவம்பலத்தில் ஆடும் திருவடிகளுக்கு அணுக்கத் தொண்டர்களாயிருக்கும் பெரும்பேறுகண்டு; அதிசயிப்பார் - அதிசயங் கொண்டார்;

2067. ஆங்கவர்தஞ் சீலத் தளவின் மையுநினைந்தே
யோங்கியெழுங் காத லொழியாத வுள்ளத்தார்,
தேங்கமழுஞ் சோலைத் திருவேட் களங்கடந்து
பூங்கிடங்கு சூழ்புலியூர்ப் புக்கணையும் போழ்தின்கண். 169

விளக்கவுரை: பாடும் பதிக விசை..பயிற்றி - பாடும் பதிகம் - மேல் 2064-2065-ல் கூறியபடி திருவேட்களத்திலும், திருக்கழிப்பாலையிலும், திருவுச்சி (திருநெல்வாயில்) யிலும் பாடிய பதிகங்கள். இசை பயிற்றி - யாழ் என்னும் கருவி மட்டிலமைவதாதலின் பதிகம் பயிற்றி என்னாது பதிக இசை பயிற்றி என்றார். "பதிக இசை" (2038).

நாடும் சிறப்பு - 2038-2039-ல் கூறியபடி பாணனார்தாம் வேண்டிய அரிதிற் பெற்ற பேறு, நாடுதல் - வேண்டுதல்; "நாடென்ப நாடா வளத்தன" (குறள்)

நாளும் நடம் போற்றுவார் - திருவேட்களத்தில் தங்கிக்கொண்டு நாடோறும் திருத்தில்லைக்குச் சென்று கும்பிட்டு வருவாராயினர். 2064 பார்க்க.

ஆடும் கழற்கு அணுக்கராம் பேறு அதிசயிப்பார் - ஆடும் கழற்கு - அருட்கூத் தாடும் இறைவரது திருமேனிக்கு; அணுக்கராதல் - அணியராய் வந்து திருமேனி தீண்டித் திருமஞ்சனமாட்டுதல் - அலங்கரித்தல் - அருச்சித்தல் முதலிய திருப்பணிகளைச் செய்யும் தன்மையுடையாராகுதல். தில்லைவாழந்தணர் புராணம் பார்க்க.

அணுக்கர் ஆம்பேறு - திருமடத்து முதலிகள், மறையவர், புறத்திருத்தொண்டர்கள் முதலிய பல்லாயிரவருள்ளும் அணுக்கராய்ப் பணிசெய்யும்பேறு இவருக்கே உரியதாகும் பெரும் பாக்கியம். வழிவழி வருதலானும் தில்லையின் ஆடுங்கழலின் சிறப்பினாலும் பேறு என்றார். அணுக்கராம் பேறு - சைவநெறி என்னும் சிவாகம சீலமாகிய வழிபாட்டுச் சிறப்பு. மேல் வரும்பாட்டிற் கூறுவது வேதநெறி என்னும் வைதிக ஒழுக்கச் சீலத்தின் சிறப்பு. தில்லை வாழந்தணர் புராணத்துள்ளும் இவ்வாறு பிரித்து விரித்தல் காண்க. இச்சிவாகமத் தொடர்பு இந்நாளில் மறைந்து வருதல் வருந்தத் தக்கது.

அதிசயிப்பார் - "அதிசயங் கண்டாமே" (திருவா) என்றபடி வேறெங்கும் காணுதல் இயலாத செயல் கண்டபோது உளதாகும் பெருமித உணர்ச்சி அதிசயம் எனப்படும்.

போற்றுவார் - அதிசயிப்பார் (2066)-உள்ளத்தார் - கடந்து - அணையும் போழ்தின்கண் (2067), தோன்றக் கண்டு காட்டினார் (2068) என்று இம்மூன்று பாட்டுக்களையும் முடித்துக் கொள்க. 168

2067. பொருளுரை: ஆங்கவர்தம்..நினைந்தே - (அதனோடு) அங்கு வாழும் அவர்களின் தமது சீலமாகிய ஒழுக்கத்தில் அளவற்ற சிறப்பினுடன் நிற்குநிலையினையும் நினைந்தே; ஓங்கி எழும்...உள்ளத்தார் - மேலோங்கி எழுகின்ற ஆசை நீங்காத மனத்துடன்; தேங்கமழும்...போழ்தின்கண் - (ஒரு நாள்) மணம் கமழ்கின்ற சோலைகள் சூழ்ந்த திருவேட்களத்தினைக் கடந்து பூக்கள் நிறைந்த அகழி சூழ்கின்ற திருப்புலியூரினுட் புகுந்து சேரும் போதில்,

2068. அண்டத் திறைவ ரருளா லணிதில்லை
முண்டத் திருநீற்று மூவா யிரவர்களுந்
தொண்டத் தகைமைக் கணநாத ராய்த்தோன்றக்
கண்டப் பரிசுபெரும் பாணர்க்குங் காட்டினார். 170

விளக்கவுரை: ***சீலத்து அளவின்மையும் நினைந்தே*** - *சீலம் - வைதிக ஒழுக்கம் மறைபயிலுதல் - வேள்வி வேட்டல் முதலியவற்றில் வழாமல் உறைத்து நிற்றல்.* ***அளவின்மையும்*** - *அனுக்கராம் பேற்றினுடன் சீலத்தளவின்மையும் என்று உம்மை இறந்து தழுவிய எச்சவும்மை. இரண்டும் வெவ்வேறு நிலைகள்; இவற்றுள் முன்னையதன் சிறப்பு வைப்பு முறையால் உணர்த்தப் பட்டது.*

ஓங்கி எழும் காதல் ஒழியாத உள்ளத்தார் - *அணுக்கராம் தன்மையும் வைதிக சீலமும் எண்ணிப் பிள்ளையார் திருவுள்ளத்தில் அப்பெருமை காண ஆசைமிக்கனர் என்றால் அவற்றின் உயர்வு நன்கு புலனாகும். காதல் - அப்பெருமையின் அளவை உள்ளவாறு காணும் ஆர்வம். இஃது அதிசயத்தின் (2066) விளைவு.*

கடந்து - "ஒருநாள் இம்மனநிலையுடன்" என்பது எஞ்சி நின்றது. இசையெச்சம்.

பூங்கிடங்கு சூழ்புலியூர் - ***கிடங்கு*** - *அகழி. "மஞ்சிவ ரிஞ்சித் தண்கிடங்கு" (241); பூ - அழகு. கிடங்கிற் பூக்கும் நீர்ப் பூக்கள் என்றலுமாம்.* ***புலியூர்*** - *புலிக்கால் முனிவர் தவம் செய்து தரிசித்த தலம் என்பது பொருள். (41 பார்க்க.)*

ஓவாத உள்ளத்தார்-என்பதும் பாடம். *169*

2068. பொருளுரை: அண்டத்து இறைவர் அருளால்-எல்லா உலகுக்கும் இறைவராகிய கூத்தப் பெருமானுடைய திருவருளால்; அணிதில்லை....தோன்ற - அழகுடைய தில்லையில் வாழ்கின்ற நெற்றியில் திருநீற்றை அணிந்த அந்தணர்கள் மூவா யிரவர்களும் திருத்தொண்டின் தன்மையுடைய சிவகணநாதர்களாகத் தோன்ற; கண்டு - (பிள்ளையார்) தாம்கண்டு; அப்பரிசு...காட்டினார் - அப்பரிசினைத் திரு நீலகண்ட யாழ்ப்பாணருக்கும் காட்டினார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டுரைக்க நின்றன.


விளக்கவுரை: அண்டத்து இறைவர் - *எல்லாவுலகுக்கும் முதல்வர். ஐந்தொழில் நடனத்தால் உலகமுழுதும் படைத்தல் முதலியன செய்து ஆள்பவர் என்பது.*

முண்டம் - நெற்றி; திருநீற்று மூவாயிரவர் - திருநீறே பொருளெனப் போற்றி அணிந்து வாழ்பவர்.


அருளால் - *உலகறிந்துய்ய இறைவர் அருளியதனால்.*

தொண்டத் தகைமைக் கணநாதராய்த் தோன்ற - *தொண்டு செய்யும் தன்மையுடைய சிவகணங்களின் உருவுடன் தோன்ற.*


அப்பரிசு கண்டு காட்டினார் - *அத்தன்மையினைத் தாமும் கண்டு பெரும்பாணர்க்குங் காட்டினார். உம்மை தாம் கண்டதோடு என்று இறந்தது தழுவிற்று. தாம் முன்பே அதிசயித்தும் (2066) நினைந்தும் (2067) கண்டுள்ளார் என்க.* *170*




விருத்தாசலம் - திருமுதுகுன்றம் - முன்மண்டபம் - கோபுரம்
- பாட்டு 2077




திருஎருக்கத்தம்புலியூர் கோயிலும் கோபுரமும் - குளமும்



திருஎருக்கத்தம்புலியூர் - கருப்பக்கிருகம் - கோயிலும் - எருக்கு மரமும்
- பாட்டு 2077




திருமுதுகுன்றம் - திருமணிமுத்தாறும் - கோயிலும் -
(பாலத்திலிருந்து பார்வை) - பாட்டு - 2079



திருநெல்வாயில் (சிவபுரி) சுவாமி - அம்மை - கருப்பக்கிருகம்

திருவுச்சி - திருநெல்வாயில் - பாட்டு 2065



திருநெல்வாயில் (சிவபுரி) - கோயிலும் குளமும்



மாறன்பாடி - திருமடம்

- பாட்டு - 2091



மாறன்பாடி கோயில் - பின்புறம் பார்வை

2069. செல்வம் பிறவறியாத் தில்லைவா ழந்தணரும்
எல்லையில்சீர்ச் சண்பை யிளவே றெழுந்தருளி
யொல்லை யிறைஞ்சாமுன் றாமு முடனிறைஞ்சி
மல்ல லணிவீதி மருங்கணைய வந்தார்கள். 171

2070. பொங்கியெழுங் காதல் புலனாகப் பூசுரர்தஞ்
சிங்க மனையார் திருமுடியின் மேற்குவித்த
பங்கயத்தின் செவ்வி பழித்து வனப்போங்குஞ்
செங்கையொடுஞ் சென்று திருவாயி லுட்புக்கார். 172

2069. பொருளுரை: செல்வம்...அந்தணரும் - செல்வம் நீங்காத தில்லைவாழந்தணர்களும்; எல்லையில்...இறைஞ்சாமுன் - அளவற்ற சிறப்பினையுடைய சீகாழியில் அவதரித்த இளஞ்சிங்க ஏறுபோன்ற பிள்ளையார் எழுந்தருளிவந்து விரைவாகத் தம்மை வணங்குதற்கு முன்னரே; தாமும் உடனிறைஞ்சி வந்தார்கள் - தாமும் உடனே ஒருங்கு வணங்கிச் செழுமையும் அழகுமுடைய திருவீதியில் அவர் மருங்கு அணையும்படி வந்தார்கள்

விளக்கவுரை...செல்வம் பிறிவறியா-அந்தணர் என்று கூட்டுக. "உலகுக்கெல்லாந் திருவுடையந்தணர்" (திருவிருத்). செல்வம் - அருட்செல்வம்.

இள ஏறு - ஏறு போல்வார். ஏறு - சிங்க ஏறு; "சிங்கம்" (2070)

ஒல்லை இறைஞ்சாமுன் தாமும் உடனிறைஞ்சி - கணநாதராய்த் தோன்றக் கண்டவுடன் பிள்ளையார் விரைந்து வணங்க முற்பட்டார்; அதற்குமுன் அவர்கள் தாம் பிள்ளையாரை இறைஞ்சுதலின், முன் வணங்கியவர் யாவர் என்றறியக்கூடாத படி இருவர் வணக்கமும் ஒருசேர நிகழ்ந்தது என்பார் உடன் இறைஞ்சி என்றார். "முன்பி றைஞ்சின ரியாவரென் றறியா முறைமையால்" (244) என்ற கருத்து.

வீதி - மருங்கணைய - வீதியில் பிள்ளையாரது இருமருங்கும் சேர்ந்து கூடும்படி. 171

2070. பொருளுரை...பொங்கி - புலனாக - மேன்மேலும் பொங்கி எழுகின்ற மிக்க ஆசையானது வெளிப்படும்படி; பூசுரர்தம்...சென்று - மறையவர்களின் சிங்கம்போன்ற பிள்ளையார் திருமுடியின் மேலே கூப்பிய தாமரை மலரின் அழகினையும் வென்று அழகினால் ஓங்கும் செங்கையினோடும் போய்; திருவாயிலுட்புக்கார் - திருவாயிலினுள் புகுந்தனர்.

விளக்கவுரை...காதல் புலனாக-முடியின்மேற் குவித்த செங்கை என்றார், உச்சியின் மேற் கைகுவித்தல் காதலை வெளிப்படுக்கும் வாயிலாதலின். "அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்" (குறள்) என்றதனுட் கண்ணீர் அன்பினை வெளிக்காட்டும் குறி என்றார்போல. என்னை? "கொன்றையா னடியலாற் பேணா வெம்பிரான் சம்பந்தன்" என்றபடி சிவபெருமான் கழல்களையன்றி வேறு பேணாத கருத்துடைய பிள்ளையார்

2071. ஒன்றிய சிந்தை யுருக, வுயர்மேருக்
குன்றனைய பேரம் பலமருங்குக் கும்பிட்டு,
மன்று ணிறைந்தாடு மாணிக்கக் கூத்தரெதிர்
சென்றணைந்து தாழ்ந்தார் திருக்களிற் றுப்படிக்கீழ். **173**

அப்பெருமானிடத்துச் செய்யக்கடவதாகிய உச்சியிற் செங்கை கூப்பும் செயல் இங்குக் கண்ட கணநாதராம் தோற்றத்தில் நிகழ நின்றாராதலின். "கருங்குழற் கற்றை மேற்குவி கைத்தளி ருடையார்" (புரா - 670) என்புழி இக்குறிப்புக் காண்க.

சிங்கமனையார் - உயர்வு குறித்தது. வினைபற்றி வந்த உவமம். **பூசுரர்** - மறையவர். இப்பொருளின் குறிப்பு புரா - 264-265-266 பாட்டுக்களில் வரும் உபநயனம் பற்றிய சரித நிகழ்ச்சிகளிற் காண்க.

குவித்த - செங்கை என்று கூட்டுக.

பங்கயத்தின்...ஓங்கும் - செவ்வி - செம்மைத் தன்மை. அழகு - நிறம் - மென்மை - வடிவம் முதலிய பலவும் கூடிய தொகுதி; **பங்கயம்** - தாமரை மலர்; **பழித்து ஓங்கும்** - பழித்தல் ஈண்டுத் தன்மைகள் மிக்கிருத்தல். வெல்லுதல் என்ற பொருளில் வந்தது. சிவகணங்களாகக் கண்டு குவித்தபோது கைகளுக்குச் சிறப்புக் குறித்தபடி "உயர்ந்ததன் மேற்றே யுள்ளுங்காலை" (தொல். பொரு-உவம-3) என்ற படி உவமம் பொருளிலும் உயர்ந்திருத்தல் வேண்டும் என்பது இலக்கணம்; ஈண்டு பங்கயம் என்ற உவமையினைக் குறைபாடு கூறுமுகத்தால் செங்கையின் உயர்வு குறித்த படியாம். இது மெய்பற்றிவந்த உவமம். பொருளும் கல்வியும் என்ற இரண்டற்கும் இடமாகிய இருதாமரைகளையும் கீழ்ப்படுத்தி அவையிரண்டினு மேலாகிய ஞான நிலயமாயினவை இத் திருக் கைகள் என்ற குறிப்பும் காண்க. "ஒப்பதே முன்பு பின்பவ்வாசக முரைப்பக் கேட்ட, வப்பொழு தலர்ந்த செந்தா மரையினை வென்ற தம்மா" என்று கம்பன் இக்கருத்தை எடுத்து விரித்தாண்டமை காண்க.

மேற் குவித்தும்-என்பதும் பாடம். 172

2071. பொருளுரை: ஒன்றிய சிந்தை உருக - சிவனிடத்தில் ஒன்றுபட்ட மனம் உருக; உயர்மேரு...கும்பிட்டு - உயர்ந்த மேருமலை போன்ற பேரம்பலத்தின்கட் கும்பிட்டு; மன்றுள்...திருக்களிற்றுப்படிக் கீழ் - திருவம்பலத்தினுள் நிறைந்து அருட்கூத்தாடுகின்ற மாணிக்கக் கூத்தருடைய திருமுன்பு திருக்களிற்றுப் படியின் கீழ்ச்சென்று தாழ்ந்து எழுந்தனர்.

விளக்கவுரை: ஒன்றிய சிந்தை - வேறொன்றினும் செல்லாது சிவனிடத்தே சென்ற மனம். "ஒன்றுவே றுணர்வுமில்லேன்" "பொதுநீக்கித் தனைநினைய" "ஒன்றியிருந்து நினைமின்கள்" (தேவா). கணங்களின் காட்சி கண்ட நிலையில் இறைவரிடத்துச் சிந்தை பொருந்தி வேறின்றி விளங்கிய நிலைபற்றி **ஒன்றிய** என்றார். **உருக** - தொண்டர்களே இறைவர் **"தாமே தானாகச் செயும்"** அருட்டிறம்பற்றிச் சிந்தை உருகிற்று என்க.

உயர்மேருக் குன்றனைய பேரம்பலம் - "வானுற வளர்திங்கள் சூடுகின்ற பேரம் பலம்" (2056). "பிறைவந் திறைதாக்கும் பேரம்பலம்" (தேவா)

வேறு

2072. "ஆடி னாய்நறு நெய்யொடு பாறயி"
ரென்றெடுத் தார்வத்தாற்
பாடி னார்பின்னு மப்பதி கத்தினிற்
பரவிய பாட்டொன்றில்
நீடு வாழ்தில்லை நான்மறை யோர்தமைக்
கண்டவந் நிலையெல்லாங்
கூடு மாறுகோத் "தவர்தொழு தேத்துசிற்
றம்பல" மெனக்கூறி, **174**

மருங்குக் கும்பிட்டு - மருங்கு - ஏழனுருபின் பொருளில் வந்தது. போம்பல மருங்கு கும்பிட்டு என்று ஈண்டும் குறித்தது வழிபாட்டு முறையும் வழிபடும் இடமும் எப்போதும் குறிக்கொள வேண்டுமென்பதை வற்புறுத்தற்கு.

மன்றுள் நிறைந்தாடும் மாணிக்கக்கூத்தர் - "அம்பலத்துள் நிறைதரு கருணா நிலயமே" (திருவிசை). மன்று - "மெய் ஞானமேயான வம்பலம்" (2058) என்றபடி ஞானமயமாதலின் அது எங்கும் வியாபகமுடையது. அதனுள் நிறைந்தாடுதலாவது அதனில் வியாபகப் பொருளாய் அதனை இயக்கி ஆளும் தன்மையுடன் இருத்தல். **மாணிக்கக்கூத்தர்** - "மாணிக்கக் கூத்தனை வண்டில்லைக் கூத்தனை" (திருமந்-9); மாணிக்கத்தினுள் முழுதும் விரவும் சோதிபோல; "மாமணிச் சோதியான்" (தேவா) என்றபடி, மன்றாகிய மணியினுள்ளே நிறைந்த விளக்கம் என்னும் ஆடல் புரிபவன் என்பது குறிப்பு. மாணிக்கம் போன்ற திருமேனி. செம்மேனி யுடையவன் என்ற குறிப்புமாம். "எங்கும் திருமேனி" (திருக்கூத்துத் தரிசனம். திருமந் - 9). இரத்திநசபாபதி என்ற கருத்தும் காண்க.

திருக்களிற்றுப்படி - "சென்றுதாழ்ந் தெழுந்தான் திருக்களிற்றுப்படி மருங்கு" (251) என்றவிடத் துரைத்தவை பார்க்க. *173*

2072. பொருளுரை: ஆடினாய்..பாடினார் - "ஆடினாய் நறு நெய்யொடு பால் தயிர்" என்று தொடங்கி மிக்க ஆசையினால் பாடினார்; பின்னும்..கோத்து-மேலும் அந்தத் திருப்பதிகத்தில் துதித்தவற்றுள் ஒரு திருப்பாட்டில் நீடு தில்லையின் வாழ்வுடைய அந்தணர்களை அன்று தாம் கணநாதராகக் கண்ட அந்நிலைகள் எல்லாம் பொருந்தும் படி கோவை செய்து; அவர்...கூடு - "அத்தன்மையுடையோர் தொழுதேத்துகின்ற திருச்சிற்றம்பலமாகும்" என்று எடுத்துச் சொல்லி,

விளக்கவுரை: "ஆடினாய்...தயிர்" என்று எடுத்து-எடுத்தல் - தொடங்குதல். ஆடினாய்..தயிர் - இது பதிகத்தின் முதற் குறிப்பாகிய தொடக்கம்.

ஆர்வம் - அதிசயமும் (2066) ஓங்கியெழுங்காதலுமாக (2067) உள்ளே முளைத்துத் தோன்றிய மனநிலை, கணநாதராகக் கண்டபோது பொங்கி எழுங் காதல் புலனாக (2079) வளர்ந்து, அவ்வாறருளிக் காட்டுவித்த இறைவர் திருமுன்பு பேர் ஆர்வமாகக் கூர்ந்தது.

2073. இன்ன தன்மையி லின்னிசைப் பதிகமுந்
திருக்கடைக் காப்பேத்தி
மன்னு மானந்த வெள்ளத்திற் றளைத்தெதிர்
வந்துமுன் னின்றாடும்
பின்னு வார்சடைக் கூத்தர்பே ரருள்பெறப்
பிரியாத விடைபெற்றுப்
பொன்னி னம்பலஞ் சூழ்ந்துதாழ்ந்
தணைந்தனர் புறமுன்றில். **175**

அவ்வாறு கூர்ந்த ஆர்வம் என்க. "கண்ட அந்நிலை எல்லாம் கூடுமாறு கோத்" ததற்கு இதுவே காரணம் என்பதாம்.

பாடினார் - பாடினாராகிப் பரவிய - என்க.

பாட்டு ஒன்றில் - 'நீலத்தார் கரிய" என்னும் 3-வது திருப்பாட்டு.

நீடு தில்லைவாழ் நான்மறையோர் - என்க. **நீடு-தில்லை** என்றும், **நீடும்-மறையோர்** என்றும் கூட்டியுரைக்க நின்றது. **நீடும் மறையோர்** - நீடுதலாவது அளவறியாக் காலத்துப் பொருந்தியிருத்தல்; இறைவரது திருக்கூத்து வெளிப்பட்ட நாள் முதலாக வழிவழித் தொண்டு செய்து இருபாலும் எல்லை கடவாது வாழ்தல். **நீடு தில்லை - நீடுதல்** என்றது என்றும் எப்புவனங்களிலும் நிறைதல்.

கண்ட அந்நிலை எல்லாம் கூடுமாறு - நிலை - தொண்டத் தகைமைக் கணநாதராய்த் தோன்றக்கண்ட நிலை (2068). **எல்லாம்** - "நீலத்தார் கரிய மிடற்றார்" என்று தொடங்கி "உயர்ந்தார்" (11) என்றவரை பதிகத்தினுட் பல பாட்டுக்களினும் கூறியவை எல்லாம்.

கூடுமாறு - பொருந்தி ஒருசேரவறியும்படி. **கோத்து** - தொடுத்து; தோவை செய்து.

அவர் தொழுதேத்து சிற்றம்பலம் - அடியவர்களால் ஆண்டவரது பெருமை கூறி விளக்கியபடி. "பாண்டிமாதேவி பணிசெய்து நாடொறும் பரவ", "குலச்சிறை குலவி நின்றேத்தும்" (பிள் - தேவா) என்று வருவன முதலியவை காண்க.

எனக்கூறி - இன்னதன்மையில் - ஏத்தி என்று மேல் வரும் பாட்டுடன் கூட்டி உரைக்க. 174

2073. **பொருளுரை:** இன்ன...ஏத்தி - இவ்வாறாகிய தன்மையில் இன்னிசை பொருந்திய பதிகத்தைத் திருக்கடைக்காப்புச் சொல்லி நிறைவாக்கித் துதித்து; மன்னும்...திளைத்து - நிலைபெற்ற ஆனந்த வெள்ளத்தில் மூழ்கித் திளைத்து; எதிர்...விடைபெற்று-எதிரில் வந்து நின்றாடும் பின்னிய நீண்ட சடையினையுடைய கூத்தரது பெரிய திருவருளைப் பெறும்படி பிரியா விடைபெற்று; பொன்னின்...புறமுன்றில் - பொன்னம்பலத்தை வலம்வந்து போந்து புறத் திருமுற்றத்தினை அணைந்தனர் (பிள்ளையார்).

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை: திருக்கடைக்காப்பு ஏத்தி - பதிகம் நிறைவித்து. **ஏத்தி** - திருக்கடைக்காப்பிலும் உயர்ந்தார் என்று அவ்வந்தணர்களைப் பாவியதும் குறிப்பு.

திளைத்தல் - அனுபவ முதிர்ச்சி பெறுதல்.

எதிர்வந்து முன்நின்று ஆடும் - **எதிர்வருதல்** - தாமே வெளிப்படுதலும், **முன் நின்று ஆடுதல்** - முன்பு நேரே அருளுதலும் குறித்தன.

அருள்பெறப் பிரியாத விடைபெற்று - பின்னரும் போந்து அருள் பெறும் கருத்துடன் விடைபெற்று. **பிரியா விடை** என்பது மனத்தாற் பிரியலாற்றாதபடி விடை பெற்றுப் பிரிதல்; பின்னரும் அருள் பெறுதல் மேல் இரண்டுமுறை பிள்ளையாரது யாத்திரைகளிற் காண்க.

சூழ்ந்து - தாழ்ந்து - எழுந்து - போந்து - அணைந்தனர் - வினையெச்சங்கள் ஒவ்வோர் தனி வழிபாட்டு முறைகளாகிய தனிச் செயல்களைக் குறித்தன. குறிக் கொள்ளும் பொருட்டும், சொற்பல்காமைப் பொருட்டும் ஒவ்வோர் வினையெச்சச் சொற்களால் குறித்துப் போந்த திறம் காண்க. **முன்றிலின்புறம்** என்க.

மின்னுவார் சடை - **ஏற்றி**-என்பனவும் பாடங்கள். 175

கோயில்

திருச்சிற்றம்பலம் பண் - காந்தார பஞ்சமம்

ஆடி னாய்நறு நெய்யொடு பாறயி ரந்த ணர்பிரி யாதசிற் றம்பலம்
நாடி னாயிட மாநறுங் கொன்றை நயந்தவனே
பாடி னாய்மறை யோடுபல் கீதமும் பல்ச டைப்பனி கால்கதிர் வெண்டிங்கள்
சூடி னாயரு ளாய்சுருங் கவெம தொல்வினையே. (1)

நீலத் தார்கரி யமிடற் றார்நல்ல நெற்றி மேலுற்ற கண்ணி னார்பற்று
சூலத் தார்சுட லைப்பொடி நீறணி வார்சடையார்
சீலத் தார்தொழு தேத்துசிற் றம்பலஞ் சேர்த லாற்கழற் சேவடி கைதொழக்
கோலத் தாயரு ளாயுன காரணங் கூறுதுமே. (3)

நாறு பூம்பொழி னண்ணிய காழியு ணான்மறை வல்ல ஞானசம் பந்தன்
ஊறு மின்றமி ழாலுயர்ந் தாருறை தில்லைதன்னுள்
ஏறு தொல்புக ழேந்துசிற் றம்பலத் தீசனையிசை யாற்சொன்ன பத்திவை
கூறு மாறுவல் லாருயர்ந் தாரொடுங் கூடுவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- தில்லைவாழந்தணர் மூவாயிரவரும் தொண்டத் தகைமைச் சிவகணநாதர்களாய்த் தோன்றக் கண்டு, கண்ட அந்நிலையெல்லாம் பொருந்தும்படி கோவை செய்தருளியதுடன், அவ்வந்தணர் தொழுது ஏத்து சிற்றம்பலம் என்றும், அதனுள் ஆடும் இறைவரைத் தொழத் தொல்வினைகள் தீரும் என்றும் உலகை வழிப்படுத்தியது.

2074. அப்பு றத்திடை வணங்கியங் கருளுட
ணணிமணித் திருவாயில்
பொற்பு றத்தொழு தெழுந்துடன் போதரப்
போற்றிய புகழ்ப்பாணர்
நற்ப தந்தொழு "தடியனேன் பதிமுத
னதிநிவாக் கரைமேய
வொப்பி றானங்கள் பணிந்திட வேண்டு"மென்
றுரைசெய வதுநேர்வார், **176**

குறிப்பு:- இப்பதிகம் தில்லைவாழந்தணர்கள் கணநாதர்களாகத் தோன்றக்கண்டு இறைஞ்சி அக்காதலுடன் இறைவரை அம்பலத்திற் கும்பிட்டபோது அக்குறிப்புக்களெல்லாம் பெற அருளியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு;-(1) **அந்தணர்**-தில்லை வாழ்ந்தணர்களைக் கணநாதர்களாகக் கண்ட குறிப்பு. இவ்வாறே, மறையோர்-நல்லவர் (2); காளையார்- (4); தில்லையார். (5); திருவார்-வழிபாடு - (9) கற்றவர் - - (10) உயர்ந்தார் - (11) என்பவையும் இக்கருத்து. 3-வது பாட்டும், ஆசிரியர் (2072) எடுத்துக் காட்டுவதும் காண்க. **பனிகால்** - குளிர்ச்சியைத் தரும். எம - எம்முடைய ; **எம தொல்வினை சுருங்க வருளாய்** என்க. (2) **கொட்டம்** - ஒருவகை வாசனைப் பண்டம். **பாரிடம்** - பூதகணங்கள். **நட்டமே நவில்வாய் - நவில்தல்** - செய்தல் என்னும் பொருளில்வந்தது. நட்டத்தினாலே உயிர்க் குறுதிப்பொருள்களை உபதேசிப்பதுபோல் விளங்கவைப்பாய் என்ற குறிப்புமாம். "போதியா நிற்குந் தில்லைப் பொதுநடம்" (350). **மறையோர் நல்லவர்** என்க. **இட்டமா** வெளிப்பட. (3) இத்திருப்பாட்டில் தில்லைவாழந்தணர் மூவாயிரவரையும் தொண்டத் தகைமைக்கணநாதராக் கண்டநிலை பாடியருளினார். கரியமிடறு - நெற்றிக்கண் - சூலம் - சுடலைநீறு - சடை - இவை சிவனதுருவம் பெற்ற சிவகணநாதர்களின் நிலை. (2068-2072); **நீலத்தார்** - நீல நிறம் பொருந்திய; **சுடலைப்பொடிநீறு** - சங்காரத்தின் சாம்பல்; **சடை** - சிவனது சிறப்படையாளம். **கழல்** - கழலையணிந்த. **உன** - உன்னுடைய; **கூறுதும்**, அதற்கு அருளாய் என்க. காரணம் - அருள்புரி நிலை - (4) **அலைத்து** - உவமவருபு - (5) **தொல்லையார்** - பழமையானவர்; தேவர்கள்; **பகுவாய்** - பெரியவாய்; **பகுவாய்த் தலை** - **பல்லையார் தலை** என்று கூட்ட நின்றது. **பண்டரங்கம்** - சிவன்கூத்து. - (7) மலி - பெரிய - நிறைந்த; (9) **தாரின்ஆர்** - மாலையின் தன்மை பொருந்திய; **திருவார்** - திருவுடைய அந்தணர். **அணிதில்லையுள் திருவார் வழிபாடொழியாத** என்க.-(10) **வெற்றரை யுழல்வார்**- அமணர்; இவர்களுட் குருமார் இவ்வாறு உடையின்றிச் சரிப்பவர்; துவராடைய வேடத்தார்-புத்தர்; அவர் **உலகின் அவல மாற்றகில்லார்-உலகின் அவலமும்** என்று இழிவு சிறப்பும்மை தொக்கது. சேவடியுற்றவர் உலகின் உறுதிகொள்ள வல்லவர். **உறுதி** - அறமாதி நான்கு உறுதிப்பொருள். (11) **ஊறும்** - "கற்றனைத் தூறு மறிவு"; இங்கு ஞானம் பெருகுதல். **உயர்ந்தார்** - தில்லைவாழந்தணர்.

2074. பொருளுரை—அப்புறத்திடை வணங்கி - அந்தத் திருமுன்றிற் புறத்தினில் வணங்கி; அங்கு...எழுந்து - அங்குத் திருவருள் பெற்று அழகிய மணிகள்கொண்ட

திருவாயிலில் அமைதிபெறத் தொழுது எழுந்து: நன்மைசெய - (**அப்போது**) தம்முடனே வரும் பேறு வேண்டிப் போற்றியவராகிய புகழினையுடைய திருநீல**கண்டப்** பெரும்பாணனார் தமது திருவடிகளைத் தொழுது நின்று "அடியேனது **தலமாகிய** திருவெருக்கத்தம்புலியூர் முதலாக நிவாநதியின் கரையில் பொருந்திய **ஒப்பற்ற** திருத்தலங்களைச் சென்று கும்பிட வேண்டும்" என்று விண்ணப்பிக்க: அது **நேர்வார்** - (பிள்ளையார்) அதற்கு உடன்பட்டருள்வாராகி;

விளக்கவுரை: அப்புறத்திடை - புறம் - புறமுன்றில்; அ - முன்பாட்டில் **அணைந்தனர் புறமுன்றில்** என்று கூறிய அந்த என முன்னறி சுட்டு. **இடை** - ஏழனுருபு.

அங்கு அருளுடன் - அங்குப் பெற்ற அருள்விடையுடன். "**தொழுந்தொறும்** புறவிடை கொண்டு" என்றபடி திருவணுக்கன்திருவாயில் தொழுது **புறத்திற்சேரும்** பிள்ளையார் வாயில்கடோறும் வணங்கி விடைபெற்று வந்தனர்; புறத்திரு **முன்றிலில்** தொழுது திருவாயிலிற் பெறும் விடை அம்முறையின் இறுதியில் நிற்ப**தாதலின்** அருளுடன் என்றார். **அருள்பெற** - (2073) என்றதுமிக்குறிப்பு.

தொழுதெழுந்து - நேர்வார் - போந்து என மேல்வரும் பாட்டுடன் முடிபு கொள்க.

உடன் போதரப் போற்றிய - "பிறிவின்றிச் சேவிக்கப் பெற வேண்டும்" **(2038)** என்று விண்ணப்பித்து அவ்வாறே அருளப்பெற்ற.

நற்பதம் - தமது நற்பதங்களை.

"அடியனேன்பதி-வேண்டும்" - பதி - திருவெருக்கத்தம்புலியூர். முதல் - முதலாக. தில்லையினின்றும் நிவாநதியின் கரைவழி மேற்றிசையிற் செல்லும்போது முதலில் **கண்டு** பணிய நிற்பது திருவெருக்கத்தம்புலியூராகும்.

நிவாக்கரை என்க. **நிவா** - இது வடவெள்ளாற்றுக்குச் சில பகுதிகளில் வழங்கும் பெயர் **"நிவவின் கரைமேல்"** (நம்பி. நெல்வாயிலரத்துறை) என்பதுபோல இப்பெயர் தேவாரத் திருவாக்குக்களுட் பயின்று வழங்கப்பட்டது. நதிக்கரையின் ஊர்கள் பொதுவாக உயர்வுடையன . "கான்யாற் றடைகரை யூரினிது" என்ப. அவற்றுட் புண்ணிய நதிக்கரையில் உள்ளவை புண்ணியதலங்கள். தலயாத்திரை நதிக் கரைகளின் வழியாக வகுக்கப்படுதல் காண்க. காவிரிக்கு வடகரைத்தலங்கள் என்றும், தென்கரைத்தலங்கள் என்றும் பெரியோர் வகுத்தொழுகிய முறையும் காண்க. **ஒப்பில் தானங்கள்** - என்ற குறிப்புமிது. நிவாநதிக்கரையில் இவ்வாறு உள்ள தலங்கள் கூடலையாற்றூர் முதலிய சிலவே. இதனை நெடுந்தூரம் தொடர்ந்து மேற்கே சென்றால் இதன் தென்கரையில் கணம்புல்ல நாயனாரது தலமாகிய இருக்குவேளூர் (சேலம் சில்லா - ஆற்றூர் தாலூகா - பேளூர் என வழங்குவது) உள்ளது.

அடியனேன் பதி முதலாகக் -- கும்பிடவேண்டும். - பாணனார் பிள்ளையாரைத் தமது ஊருக்கு அழைத்த முறையும் மரபுங் காண்க. இவ்வாறே "சடையாரை யெங்கள்பதி யினிற்கும்பிட்டருள வங்கே, யெழுந்தருளவேண்டும்" (2010) என்று திருநனிபள்ளி யடியவர்கள் விண்ணப்பித்துப் பிள்ளையாரை அழைத்துகொண்டு சென்ற செய்தி ஈண்டு

2075. பொங்கு தெண்டிரைப் புனிதநீர் நிவாக்கரைக்
குடதிசை மிசைப்போந்து,
தங்கு தந்தையா ருடன்பரி சனங்களுந்
தவமுனி வருஞ்செல்லச்
செங்கை யாழ்த்திரு நீலகண் டப்பெரும்
பாணனா ருடன்சேர
மங்கை யார்புகழ் மதங்கசூ ளாமணி
யாருடன் வரவந்தார். 177

நினைவு கூர்தற்பாலது. ஆனால் உலகத்தார் கொள்வதுபோல நண்பரது ஊர் - பாட்டனது ஊர் - மாமனது ஊர் என்றெல்லாம் அழிபெறும் உடற் றொடர்பு பற்றாது, சிவனாகிய அழியாத முதல்வனது உயிர்த்தொடர்பு பற்றியே வருதல் குறிக்க. முதல்வனது வீட்டுப் பணியாளர் என்னும் அன்பின் தொடர்பே தொடர்பாக முனைத்து வருதலால் இதனுள் குலநலம் முதலிய வேறுபாடுகளின் எண்ணம் நுழைதற்கிடமில்லை. ஆதலின் இந்நிகழ்ச்சிகளுட் குலம் பற்றிய சீர்திருத்த ஆராய்ச்சியாளர் நுழைந்து இடர்ப்படுதல் வருந்தத் தக்கது. 2077-ல் பிள்ளையார் பாணர்க்குக் கூறியருளுந் திருவாக்கும் கருதுக.

உரைசெய - *விண்ணப்பிக்க என்ற பொருளில் வந்தது.*

அது **நேர்வார்** - *அது-அதனை அவிவிண்ணப்பத்தை;* **நேர்வார்** - *இசைவாராகி; முற்றெச்சம். பிள்ளையார் சீகாழியினின்றும் "தில்லைநடம் பயில்வாரைப் பணிந்தேத்தும் பெருங்காதல் வெள்ளத்தால்" (2040) கொண்ட குறிப்புடனே புறப்பட்டனர். அவ்வழிபாடு முற்றியெழுந்தவுடன் சீகாழிக்கு மீளாது பாணனார் செய்த இவ்விண்ணப்பத்திற்கிணங்கி நிவாநதிக்கரைத்தலங்களைக் கும்பிட இசைந்து அவ்வாறே தலயாத்திரையினை மேற்கொண்டனர். சிவனையே கண்டு பல தலங்களிலும் பணிந்து பேணுதலன்றி வேறொரு செயலையுமறியாத நிலை பிள்ளையாருடைய நிலையாம் என்பது. பாணனார் செய்த இந்த விண்ணப்பமே பிள்ளையார் இனி மேற்கொள்ளும்* **நான்காவது தலயாத்திரைப்** *பகுதிக்குக் காரணமாய் நின்று, வளர்மதி பாற்கடலுதித்தாற்போலப் பிள்ளையாரை முத்துச்சிவிகை மேற்கண்டு வணங்க உலகம் பயன்பெறும் பெரும்பேறுவாய்க்கப்பெற்றது. எனவே இவ்விண்ணப்பம் பாணனார் மூலம் வெளிப்போந்த திருவருளின் குறிப்பு என்பது.* **"அங்கு அருளுடன்"** *என்று முன்கூறிய குறிப்புமிது. இந்த நிகழ்ச்சி நேர்ந்திராவிடின் இத்தலப் பெருமையை நாம் அறிந்திரோம்.* 176

2075. பொருளுரை...பொங்கு...போந்து - பொங்குகின்ற தெள்ளிய அலைகளைக் கொண்ட தூய நீரினையுடைய நிவாநதிக் கரையின் வழியே மேற்குத் திசையின் மேற் சென்று; தங்கு...செல்ல - தம்முடன் தங்கிய தந்தையாராகிய சிவபாத விருதயருடனே பரிசனங்களும் தவமுனிவர்களும்கூட வரவும்; செங்கை...வர - செவ்விய கையில் யாழினையுடைய திருநீலகண்டப் பெருபாணருடன் ஒன்றாக அவரது தேவி யாராகிய மங்கையர்கள் புகழும் மதங்கசூளாமணியாரும் கூடிவரவும்; வந்தார் - எழுந்தருளிப் போந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

திருவாயிலில் அமைதிபெறத் தொழுது எழுந்து: நடைசெய்ய - (அப்போது) தம்முடனே வரும் பேறு வேண்டிப் போற்றியவராகிய புகழ்மையுடைய திருநீலகண்டப் பெரும்பாணனார் தமது திருவடிகளைத் தொழுது நின்று, "அடியேனது தலமாகிய திருவெருக்கத்தம்புலியூர் முதலாக நிவாநதியின் கரையில் பொருந்திய ஒப்பற்ற திருத்தலங்களைச் சென்று கும்பிட வேண்டும்" என்று விண்ணப்பிக்க: அது நேர்வார் - (பிள்ளையார்) அதற்கு உடன்பட்டருள்வாராகி;

விளக்கவுரை: அப்புறத்திடை - புறம் - புறமுன்றில்: அ - முன்பாட்டில் **அணைந்தனர் புறமுன்றில்** என்று கூறிய அந்த என முன்னறி சுட்டு. **இடை** - ஏழனுருபு.

அங்கு அருளுடன் - அங்குப் பெற்ற அருள்விடையுடன். "தொழுந்தொறும் புறவிடை கொண்டு" என்றபடி திருவணுக்கன்றிருவாயில் தொழுது புறத்திற்சேரும் பிள்ளையார் வாயில்கடோறும் வணங்கி விடைபெற்று வந்தனர்; புறத்திரு முன்றிலில் தொழுது திருவாயிலிற் பெறும் விடை அம்முறையின் இறுதியில் நிற்பதாதலின் அருளுடன் என்றார். **அருள்பெற** - (2073) என்றதுமிக்குறிப்பு.

தொழுதெழுந்து - நேர்வார் - போந்து என மேல்வரும் பாட்டுடன் முடிபு கொள்க.

உடன் போதரப் போற்றிய - "பிறிவின்றிச் சேவிக்கப் பெற வேண்டும்" (2038) என்று விண்ணப்பித்து அவ்வாறே அருளப்பெற்ற.

நற்பதம் - தமது நற்பதங்களை.

"அடியனேன்பதி-வேண்டும்" - பதி - திருவெருக்கத்தம்புலியூர். **முதல்** - முதலாக. தில்லையினின்றும் நிவாநதியின் கரைவழி மேற்றிசையிற் செல்லும்போது முதலில் கண்டு பணிய நிற்பது திருவெருக்கத்தம்புலியூராகும்.

நிவாக்கரை என்க. **நிவா** - இது வடவெள்ளாற்றுக்குச் சில பகுதிகளில் வழங்கும் பெயர் **"நிவவின் கரைமேல்"** (நம்பி. நெல்வாயிலரத்துறை) என்பதுபோல இப்பெயர் தேவாரத் திருவாக்குக்களுட் பயின்று வழங்கப்பட்டது. நதிக்கரையின் ஊர்கள் பொதுவாக உயர்வுடையன . "கான்யாற் றடைகரை யூரினிது" என்ப. அவற்றுட் புண்ணிய நதிக்கரையில் உள்ளவை புண்ணியதலங்கள். தலயாத்திரை நதிக் கரைகளின் வழியாக வகுக்கப்படுதல் காண்க. காவிரிக்கு வடகரைத்தலங்கள் என்றும், தென்கரைத்தலங்கள் என்றும் பெரியோர் வகுத்தொழுகிய முறையும் காண்க. **ஒப்பில் தானங்கள்** - என்ற குறிப்புமிது. நிவாநதிக்கரையில் இவ்வாறு உள்ள தலங்கள் கூடலையாற்றூர் முதலிய சிலவே. இதனை நெடுந்தூரம் தொடர்ந்து மேற்கே சென்றால் இதன் தென்கரையில் கணம்புல்ல நாயனாரது தலமாகிய இருக்குவேளூர் (சேலம் சில்லா - ஆற்றூர் தாலுகா - பேளூர் என வழங்குவது) உள்ளது.

அடியனேன் பதி முதலாகக் -- கும்பிடவேண்டும். - பாணனார் பிள்ளையாரைத் தமது ஊருக்கு அழைத்த முறையும் மரபுங் காண்க. இவ்வாறே "சடையாரை யெங்கள்பதி யினிற்கும்பிட்டருள வங்கே, யெழுந்தருளவேண்டும்" (2010) என்று திருநனிபள்ளி யடியவர்கள் விண்ணப்பித்துப் பிள்ளையாரை அழைத்துகொண்டு சென்ற செய்தி ஈண்டு

2075. பொங்கு தெண்டிரைப் புனிதநீர் நிவாக்கரைக்
குடதிசை மிசைப்போந்து,
தங்கு தந்தையா ருடன்பரி சனங்களுந்
தவமுனி வருஞ்செல்லச்
செங்கை யாழ்த்திரு நீலகண் டப்பெரும்
பாணனா ருடன்சேர
மங்கை யார்புகழ் மதங்கசூ ளாமணி
யாருடன் வரவந்தார். 177

நினைவு கூர்தற்பாலது. ஆனால் உலகத்தார் கொள்வதுபோல நண்பரது ஊர் - பாட்டனது ஊர் - மாமனது ஊர் என்றெல்லாம் அழிபெறும் உடற் றொடர்பு பற்றாது, சிவனாகிய அழியாத முதல்வனது உயிர்த்தொடர்பு பற்றியே வருதல் குறிக்க. முதல்வனது வீட்டுப் பணியாளர் என்னும் அன்பின் தொடர்பே தொடர்பாக முனைத்து வருதலால் இதனுள் குலநலம் முதலிய வேறுபாடுகளின் எண்ணம் நுழைதற்கிடமில்லை. ஆதலின் இந்நிகழ்ச்சிகளுட் குலம் பற்றிய சீர்திருத்த ஆராய்ச்சியாளர் நுழைந்து இடர்ப்படுதல் வருந்தத் தக்கது. 2077-ல் பிள்ளையார் பாணர்க்குக் கூறியருளுந் திருவாக்கும் கருதுக.

உரைசெய *- விண்ணப்பிக்க என்ற பொருளில் வந்தது.*

அது நேர்வார் *- அது-அதனை அவிவிண்ணப்பத்தை; நேர்வார் - இசைவாராகி; முற்றெச்சம். பிள்ளையார் சீகாழியினின்றும் "தில்லைநடம் பயில்வாரைப் பணிந்தேத்தும் பெருங்காதல் வெள்ளத்தால்" (2040) கொண்ட குறிப்புடனே புறப்பட்டனர். அவ்வழிபாடு முற்றியெழுந்தவுடன் சீகாழிக்கு மீளாது பாணனார் செய்த இவ்விண்ணப்பத்திற்கிணங்கி நிவாநதிக்கரைத்தலங்களைக் கும்பிட இசைந்து அவ்வாறே தலயாத்திரையினை மேற்கொண்டனர். சிவனையே கண்டு பல தலங்களிலும் பணிந்து பேணுதலன்றி வேறொரு செயலையுமறியாத நிலை பிள்ளையாருடைய நிலையாம் என்பது. பாணனார் செய்த இந்த விண்ணப்பமே பிள்ளையார் இனி மேற்கொள்ளும்* ***நான்காவது தலயாத்திரைப்*** *பகுதிக்குக் காரணமாய் நின்று, வளர்மதி பாற்கடலுதித்தாற்போலப் பிள்ளையாரை முத்துச்சிவிகை மேற்கண்டு வணங்க உலகம் பயன்பெறும் பெரும்பேறுவாய்க்கப்பெற்றது. எனவே இவ்விண்ணப்பம் பாணனார் மூலம் வெளிப்போந்த திருவருளின் குறிப்பு என்பது.* ***"அங்கு அருளுடன்"*** *என்று முன்கூறிய குறிப்புமிது. இந்த நிகழ்ச்சி நேர்ந்திராவிடின் இத்தலப் பெருமையை நாம் அறிந்திரோம். 176*

2075. பொருளுரை....பொங்கு...போந்து *- பொங்குகின்ற தெள்ளிய அலைகளைக் கொண்ட தூய நீரினையுடைய நிவாநதிக் கரையின் வழியே மேற்குத் திசையின் மேற் சென்று; தங்கு...செல்ல - தம்முடன் தங்கிய தந்தையாராகிய சிவபாத விருதயருடனே பரிசனங்களும் தவமுனிவர்களும்கூட வரவும்; செங்கை...வர - செவ்விய கையில் யாழினையுடைய திருநீலகண்டப் பெருபாணருடன் ஒன்றாக அவரது தேவி யாராகிய மங்கையர்கள் புகழும் மதங்கசூளாமணியாரும் கூடிவரவும்; வந்தார் - எழுந்தருளிப் போந்தனர்.*

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை—பொங்குதெண்டிரைப் புனித நீர் நிவாக்கரை - அடைமொழிகள் நிவாநதியின் சிறப்புணர்த்தின. பொங்கு - கொல்லி (சேலம் சில்லா), பச்சைமலை (திருச்சி - சில்லா) இவற்றினின்றும் வரும் கானாரியாறு, எழுமூர் ஆறு என்றவைகளும் (சேலம் சில்லா), கல்விராயன் மலையினின்று பல சிற்றாறுகளாக வந்து பெருகி ஆற்றூர், ஆறகழூர், சின்னசேலம் - வழியாக வரும். இப்போது, வசிஷ்டநதி என்று வழங்கும் ஆறும் கல்விராயன் மலையின் மற்றும் சில சரிவுகளிலிருந்து பெருகிவரும். மயூரநதி - திருமணிமுத்தாறு (திருமுதுகுன்றம் வழி வருவது) - தேனாறு முதலியவைகளும் அங்கங்கு வந்து கூடி, வடவெள்ளாறு என்ற பெயராற் பெருகி வருவதால் பொங்கு என்றார். தெள்ளு திரை - மேற்கூறிய ஆறுகள் பலவும் அங்கங்கும் பற்பல அணைகளிலும் கால்களிலும் குளங்களிலும் தேக்கப்பட்டுத் தெளிந்து மிகுந்த நீரே கீழே வடிந்து பெருகுவது என்றது குறிப்பு. திரை-பல ஆறுகளும் கூடிப் பெருகுதலால் அலைகளுடன் பெருகுவது; புனிதநீர் - "கொல்லி குளிர் அறப்பள்ளி" முதலிய சிவதலங்களையுடைய மலைகளிற் றோன்றி, நெல்வாயிலரத்துறை, பெண்ணாகடம் முதலிய தலங்களின் வழிபட்டு வந்து சார்தலால் தூய்மைபெற்ற நீரினையுடையது என்பது. அன்றியும் வேறு சில நதிகளின் நீர்கள் குளித்தார்க்கும் குடித்தார்க்கும் நோய் செய்யும் தன்மையுடையவையாம்; அவைபோலன்றி நிவாநதிநீர் நலமே செய்யும் தன்மையும் குறிப்பு. இது தில்லையின் வடக்கெல்லை. நடுநாட்டுக்கும் சோழநாட்டுக்கும் இடை எல்லை. இது பறங்கிப் பேட்டை யருகில் கடலொடு கூடுகிறது. இதன் கரையில் வசிட்டர் துறை, அரத்துறை முதலிய ஏழு துறைகளும், பல தலங்களும் உள்ளன. இதில் மணிமுத்தாறு கூடு மிடத்தில் உள்ளது திருக்கூடலையாற்றூர்.

குடதிசை மிசைப்போந்து - இத்தலயாத்திரை கிழக்கினின்றும் ஆற்றின் கரை வழியே மேற்கு நோக்கி ஆற்றின் வரவினை மேற்பார்த்து செய்யப்பட்டது.

தங்கு - தந்தையார் - பரிசனங்களும் தம்முடன் தங்குபவர்கள் என்பது. உடன் என்றதும் அக்குறிப்பு. தவமுனிவர் - சீகாழி அந்தணர் முதலிய மறை முனிவர்களும் அன்புபற்றி வந்த அடியவர்களும்;

பாணனாருடன் - சேர மதங்கசூளாமணியாருடன் வர - பாணனாரும் அவர் தேவியாரும் உடன் செல்வதற்குந்தாமே விண்ணப்பித்து, இசைவினாற் போந்து இவ்விருவரும் சககுடும்பமாய்ப் போந்தாராதலின் வேறு பிரித்துக் கூறப்பட்டார்.

177

வந்தார் - எழுந்தருளி வந்தனர். போந்தனர்.

2076. பொருளுரை: இருந்தடங்களும்.....சென்று - பெரிய தடாகங்களையும் வயல்களையும் கடந்துசென்று திருவெருக்கத்தம்புலியூரின் பக்கத்திற்சென்று சேர; நீலகண்டப் பெரும்பாணனார்- என - திருநீலகண்டப் பெரும்பாணர் எதிர் வந்து வணங்கி நின்று மேகங்கள் நெருங்கிய சோலைகளாற் சூழப்பட்ட இந்தப் பதி அடியேனதுபதி என்று விண்ணப்பிக்க; நெடிது...அருள் செய்வார் - மிக மகிழ்ச்சி பொருந்தி அரியவேத முதலிய கலைகள்யாவும் விளங்குதற்கிடமாகிய சிறிய மிக்கிளைய யானைக் கன்றைப்போன்ற பிள்ளையார் அத்தலத்தினில் அணைந்து அருள் செய்வாராய்,

2076. இருந்த டங்களும் பழனமுங் கடந்துபோ
யெருக்கத்தம் பூலியூரின்
மருங்கு சென்றுற, நீலகண் டப்பெரும்
பாணனார் வணங்கிக் "கார்
நெருங்கு சோலைசூ ழிப்பதி யடியனேன்
பதி" யென, நெடிதின்புற்,
றருங்க லைச்சிறு மழவிளங் களிறனா
ரங்கணைந் தருள்செய்வார். **178**

விளக்கவுரை-இருந்தடங்களும் பழனமும் கடந்து - இருமை - பெருமை; இரு - என்றதனைப் பழனம் என்றதுடனும் கூட்டுக. தடங்கள் அங்கங்கும் உளவாய்ப் பலவாதலாலும், வயல் ஒரே பரப்புடையதாய்த் தொடர்ந்து செல்லுதலாலும், முறையே பன்மையிலும் ஒருமையிலும் கூறினார். இவை நிவா நதிக்கரையில் உள்ளன.

மருங்கு சென்று உற - வணங்கி - என - ஊரின் பக்கத்தில் பிள்ளையார் எழுந்தருளப், பின்னேவந்த பாணனார் முன்வந்து வணங்கி நின்று, இது அடியேன் பதி என்று விண்ணப்பித்தனர். இதனள் எழுந்தருளி இறைவரை வணங்கி எம்மைப் புனிதராக்க வேண்டுமென்பது குறிப்பு.

அங்கு அணைந்து - பதியின்மருங்கு சொல்லக் கேட்டலும் அப்பதியில் வந்து அணைந்து.

அருள் செய்வாராகி - எனச் சிறப்பு உரைத்து - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 178

2077. பொருளுரை: "ஐயர்! நீர்...செய்தவாறு" எனச் சிறப்புரைத்தருளி - "ஐயரே ! நீர் இங்கு வந்து அவதரித்திடப் பெறுவதற்கு இத்தலம் அளவில்லாத பெருந் தவத்தை முன்னே செய்திருந்தபடி'' என்று சிறப்புச் சொல்லியருளிச் செய்து; *அச்செழும்பதி...வணங்கி*-அந்தச் செழிப்புடைய திருத்தலத்தில் இடம் கொண்டு வீற்றிருக்கும் திருநீலகண்டராகிய இறைவரது திருக்கோயிலினுள்ளே சென்று வணங்கி; *பார்...அருள் செய்தார்* - உலகமுய்யும்படி வந்தவராகிய பிள்ளையார் செழுந் தமிழ்ப்பதிகத்தினை அங்குக் கட்டளையிட்டருளிச் செய்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை: "ஐயர் நீர்...செய்தவாறு" என - இது பிள்ளையார் பாணனாரை நோக்கிக் கூறியருளிய சிறப்பு. "நீர் இங்குவந்து அவதரிக்க இத்தலம் முன்பு பெருந்தவம் புரிந்து அப்பேறு பெற்றது" என்றது சிறப்பு. இறைவரைத் தன்னிடத்து வைத்துப் பலகாலம் பூசித்தலின், அடியாருட் சிறந்த நீர் இதில் வரும் பேறு இத்தலம் பெற்றது. தலத்தினுள்ளார் செய்த தவம் தலத்தின்மேல் ஏற்றப்பட்டது. தலத்தை உயர்திணையாக்கி உருவகப்படுத்தி உபசரித்ததுமாம். இதனுள் இறைவர் எழுந்தருளியிருப்பதற்கு மேலாக இவ்வடியவர் வந்த பெருமை விளங்கும் என்பது; என்னை? அடியவர்களே இறைவரைக் காணுமிடங்களாயும்

2077. "ஐயர் நீரவ தரித்திட விப்பதி
யளவின்மா தவமுன்பு
செய்த வா" றெனச் சிறப்புரைத் தருளியச்
செழும்பதி யிடங்கொண்ட
மைகொள் கண்டர்தங் கோயிலி னுட்புக்கு
வலங்கொண்டு வணங்கிப், பார்
உய்ய வந்தவர் செழுந்தமிழ்ப் பதிகமங்
கிசையுட னுரைசெய்தார். 179

அவரருள் விளங்குமிடங்களாயுமுள்ளாராதலின்; "தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத், தன்னுணரத் தன்னு ளிருத்தலால்" (போதம் - 12) என்பது ஞான சாத்திரம்.

சிறப்பு - அங்கு இறைவன் நின்றது பொதுத் தன்மை. அடியவர் அவதரித்த பெருமை சிறப்புத்தன்மை.

மைகொள் கண்டர் - திருநீலகண்டர். இத்தலத்து இறைவர் பெயர்.

பார் உய்யவந்தவர் - பிள்ளையார் திருவவதாரச் சிறப்புப் பார்க்க. ஏனையோரது பிறவிகள் தத்தமக்கென வருவது; பிள்ளையாரது வருகை தமக்கென வொன்றும் வேண்டாது உலகுமுய்ய வந்தது.

இசையுடன் - குறிஞ்சிப் பண்ணிற் பொருந்தும் இசையுடன், **உடன்** - பாணனார் யாழிற் பயிற்றும் இசையும் சிறப்பாற் பொருந்த என்பது குறிப்பு.

செழுந்தமிழ்ப் பதிகம் - "தமிழ் மாலை" பதிகம் (11). செழுமை - சொல்லாலும் பொருளாலும் செழுமை. குறிஞ்சிப் பண்ணியையும் குறிப்பு. 179

திருஎருக்கத்தம் புலியூர்

பண் - குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

படையார் தருபூதப் பகடா ருரிபோர்வை
யுடையா னுமையோடு முடையா னிடுகங்கைச்
சடையா னெருக்கத்தம் புலியூர்த் தகுகோயில்
விடையா னடியேத்த மேவா வினைதானே. (1)

ஏரா ரெருக்கத்தம் புலியூ ருறைவானைச்
சீரார் திகழ்காழித் திருவார் சம்பந்தன்
ஆரா வருந்தமிழ் மாலை யிவைவல்லார்,
பாரா ரவரேத்தப் பதிவா னடைவாரே. (11)

பதிகக் குறிப்பு:- திருவெருக்கத்தம்புலியூர் இறைவரை யேத்த வினை மேவா; திரு ஆம்; அவரடியே அடைவோம். இப்பதிகத்துள் ஒருபாட்டுச் சிதலமாயது!

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) பகடாருரி - யானைத் தோல்;-(2) **நிலையார்** - உண்மை நிலையில்லாதார்; கலையான் - கலைகளின் பொருளாவார் - கலைமான்கன்றை - திங்கட்கலையை-யுடையான் என்றலுமாம். (3) **பித்தா பிறைசூடி**-நம்பிகள் பாடலின் தொடக்கமும் காண்க. எண்ணார்-எண்ணத்தின் கண் ஆர்கின்ற. அண்ணா உறைகின்ற அண்ணா என்க. (4) **வரையான்** திருமலையை உடையவர். **திரு ஆம்**-திரு-முத்தித்திரு-(5) **ஏறான்** - ஏறு - இடபம். இடபத்தை உடையவன். ஏற்றான் என்பது எதுகை நோக்கி **ஏறான்** என நின்றது. **வேறு நினைவார்** - "பொதுநீக்கித் தனைநினைய வல்லார்" (தாண்) என்ற கருத்து; **வேறு** - பசுக்களின் வேறாக என்றலுமாம். -(6) அயம் பெய்ய - பெண்கள் ஐயம் பெய்யும் பொருட்டு. **அயம்** - பலி; ஐயம் என்பது அயம் என மொழிமுதற் போலியாய் நின்றது. **தகைந்து** - பொருந்தி. **தொகுவான்**-கூர்ந்து வெளிப்பட நிற்பவர்.-(8) **அருளார் செல்வம்** - அருளுடன் கூடிய நாளும் வாளும் வலியும் முதலியன.-(9) **நிறையா மதி** - கலைகள் நிரம்பாத பிள்ளைப்பிறை. **முத்தின் தொத்தே இறையான்** - முத்தின் தொகுதிபோன்ற திருமேனியுடைய இறைவர். முத்தின் தோற்றம் திருநீற்றினொளி. "வெண்ணீற்றொளிபோற்றி **நின்று**" (2114) எனக்கண்டு போற்றும் முத்துச் சிவிகை அணிமையிற் பெறும் அருட் குறிப்பு இத்திருவாக்கினுள் விளங்குதல் காண்க. "நித்திலத் தொத்து" -(10) **சுத்தி தரித்து** - உயிர்களைத் தூய்மை செய்யத் திருவுளங்கொண்டு; "சுத்தி சூலம் விளங்க" (பிள்.தேவா-ஒற்றி). (11) **அருந்தமிழ் மாலை**-இக்கருத்தினைச் "செழுந்தமிழ்ப்பதிகம்" என்றருளினர் ஆசிரியர் (2077). **மாலை** - **இவை** - பதிகப் பாட்டுக்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு தனி மாலையாதலின் இவை என்றார். "மாலை பத்தும்" "கலை பத்தும்" "பனுவல்" முதலியவை காண்க.

தலவிசேடம்;- **திருவெருக்கத்தம்புலியூர்** - எருக்குத் தலமரமாதலின் இப்பெயர் பெற்றது. திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனார் அவதரித்த பெருமையுடைய தென்பது புராணத்தினுள் உரைக்கப்பட்டது. நிவாநதியின் தென்கரையில் உள்ளது. சிதம்பரத்தினின்றும் இங்குவரும் வழியிடையே திருக்கூடலையாற்றூரும், வைணவத் தலமாகிய திருமுஷ்ணமும் உள்ளன. இது இராஜேந்திர பட்டினம் என்று தேற்றமாய் வழங்கப்படுவது. சுவாமி - **திருநீலகண்டர்**; அம்மையார் - **நீலமலர்க் கண்ணியம்மை**; மரம் - எருக்கு. பதிகம்-1.

இத்தலம் திருமுதுகுன்றத்தினின்றும் (விருத்தாசலம் ரயில் நிலயம்) தென்கிழக்கில் கற்சாலைவழி ஏழு நாழிகை யளவில் அடையத்தக்கது. மோட்டார் வண்டி வசதி உண்டு.

2078. பொருளுரை-அங்குநின்று எழுந்தருளி - அத்தலத்தினின்றும் புறப்பட்டருளி மேற் சென்று; அம்பொன் மாமலைவல்லி-போய் - அழகிய பெரிய பொன்மலைவல்லியின் பங்கராகிய சிவபெருமான் இனி தெழுந்தருளிய நல்ல தலங்கள் பலவற்றையும் அன்புடன் பணிந்து துதித்துப் பெருமையும் வண்மையும் உடைய தமிழ்ச் சொன்மலர்த் தொடைபாடிச் சாத்திச் சென்று; தொல்லை...அணைகின்றார் - பழமையாகிய சீகாழித் தலைவராகிய பிள்ளையார் செங்கண்களையுடைய இடபத்தை உடையவராகிய சிவபெருமானது திருமுதுகுன்றத்தைத் தொழுது சென்று சேர்வாராய்;

2078. அங்கு நின்றெழுந் தருளிமற் றவருட
ணம்பொன்மா மலைவல்லி
பங்கர் தாமினி துறையுநற் பதிபல
பரிவொடும் பணிந்தேத்தித்,
துங்க வண்டமிழ்த் தொடைமலர் பாடிப்போய்த்
தொல்லைவெங் குருவேந்தர்
செங்க ணேற்றவர் திருமுது குன்றினைத்
தொழுதுசென் றணைகின்றார், **180**

விளக்கவுரை—அவருடன் பாணனாருடன். மற்று - அடியனேன்பதி இது என்று விண்ணப்பித்த அவருடனே என்று சுட்டுப்பொருட் குறிப்புடன் நின்றது.

பதிபல - திருஎருக்கத்தம்புலியூரினின்று திருமுதுகுன்றம்வரை இடையில் உள்ள தலங்கள்.

துங்கம் - பெருமை. வண்தமிழ் - வண்மையாவது எண்ணிய ஆக்கங்களை எல்லாம் எளிதில் தருதல்.

மலர்த்தொடை பாடி - மலர்போலத் தொடை செய்து பாடி.

தொல்லை வெங்குரு - *தொல்லை* - தொன்மையுடைய; பழமையாவது ஊழிகளில் அழியாதிருத்தல். வெங்குரு - சீகாழியின் நான்காவது திருப்பெயர். *வேந்தர்* - தலைவர் என்ற பொருள்தந்து நின்றது.

திருமுதுகுன்றினைத் தொழுது சென்று - திருமுதுகுன்றத்திற் செல்வதற்கு அதனை அங்குநின்றபடியே தொழுதுகொண்டு செல்கின்றார். "தொழுதெழுவாள்" (குறள்) என்புழிப்போலக் கொள்க.

அணைகின்றாராய் - என்று *ஏத்திச்* - *சென்றார்* என்று வரும்பாட்டுடன் முடிக்க.

குன்றினைச் சென்றெதி ரணைகின்றார்-என்பதும் பாடம். *180*

2079. பொருளுரை: "மொய்கொள்...அடைவோம்" என்று - "தொகுதியாகிய பெருமணிகளைக் கொழித்துக்கொண்டு திருமணிமுத்தாறு சூழும் திருமுதுகுன்றத்தினைச் சென்று அடைவோம்" என்று; எய்து...ஏத்தி - பொருந்தும் சொன்மலர்களாகிய திருப்பதிகத்தை இசையுடனே தொடுத்துத் துதித்து; செய்தவத் திரு முனிவரும்....பொருப்பினில் - செய்தவத்தினையுடைய பெருந்திரு முனிவர்களும் தேவர்களும் எல்லாத் திசைகளிலும் நெருங்கும்படி புகுந்து இறைவரது சேவடிகளைப் பணிகின்ற அந்தப் பழமலையினிடத்து; ஆதரவுடன் சென்றார் - மிக்க அன்புடன் எழுந்தருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டுரைக்க நின்றன.

2079. "மொய்கொள் மாமணி கொழித்துமுத் தாறுசூழ்
முதுகுன்றை யடைவோ" மென்
றெய்து சொன்மலர் மாலைவண் பதிகத்தை
யிசையொடும் புனைந்தேத்திச்
செய்த வத்திரு முனிவருந் தேவருந்
திசையெலா நெருங்கப்புக்
கையர் சேவடி பணியுமப் பொருப்பினி
லாதர வுடன்சென்றார், 181

விளக்கவுரை: "மொய்கொள்—அடைவோம்" - என்ற இது தேவாரப் பதிகக் குறிப்பும் கருத்தும் உரைத்தது. முதுகுன்றத்தை நோக்கிச் **செல்கின்ற வழியில்** இத்திருப்பதிகத்தை அருளிச் செய்துகொண்டே வழிச்சென்றனர் என்பது. "அத்தர் கோயி லெதிர்கொள் பாடி யென்ப தடைவோமே" என்ற நம்பிகள் தேவாரம் முதலியவை காண்க. செல்லும்போது அத்தலத்தின் பெருமையில் வைத்த ஆர்வத்தின் மிகுதியையும் உறுதிப்பாட்டினையும் விளக்குவது இந்நிகழ்ச்சி. **அடைவோம்** - என்ற குறிப்பினால் இப்பொருள் பெறப்படும்.

மொய்கொள் மாமணி கொழித்து முத்தாறுசூழ் - மலையினின்றும் மணிகளை வாரியலைத்து வருதலின் இது திரு மணிமுத்தாறு என்று பெயர் பெறும். பெயர்ப் பொருட் காரணத்தை விளக்கியதன்றியும் தேவாரப் பதிகத்தினுள் இவ்வாறு கூறும் பகுதியினைப் போற்றி எடுத்தாண்டதுமாம். "ஒளிர் குங்குமங் கொண்டு, முத்தாறு வந்தடிவீழ்தரு முதுகுன்றடை வோமே" என்பது முதலாகத் தேவாரப் பதிகத்தினுட் பாட்டுத் தோறும் வருவன காண்க.

இசையொடும் - **இசை** - பதிகப்பண்; நட்டபாடை.

முனிவரும் தேவரும் நெருங்கப் புக்கு அடிபணியும் பொருப்பு - "ஞானிகளா யுள்ளார்க ணான்மறையை முழுதுணர்ந்தைம் புலன்கள் செற்று, மோனிகளாய் முனிச்செல்வர் தனித்திருந்து தவஞ்செய்யு முதுகுன்றமே'' என்றும், "சுரர்மாதவர்....முனிவர்தொழ" (பதிகம் - 4) என்றும், "மூவா முனிவர் வணங்குங் கோயில்" என்றும், "முனிவரேத்த மேயது" என்றும், வரும் பிள்ளையாரது இத்தலத் தேவாரங்களின் கருத்துப் போற்றப்பட்டது. தலப்பெருமை காட்டியபடி. **நெருங்கப்புக்கு** - மிகுதி குறித்தது.

அப்பொருப்பு - அந்தத் திருமுதுகுன்றம். **ஆதரவு** - அன்பு; பெருவிருப்பம். 181

1. **திருமுதுகுன்றம்** - **வழியில்** அருளியது.

திருச்சிற்றம்பலம் **பண் நட்டபாடை**

மத்தாவரை நிறுவிக்கடல் கடைந்தவ்விட முண்ட
தொத்தார்தரு மணிநீண்முடிச் சுடர்வண்ணன திடமாம்
கொத்தார்மலர் குளிர்சந்தகி லொளிர்குங்குமங் கொண்டு
முத்தாறுவந் தடிவீழ்தரு முதுகுன்றடை வோமே. (1)

அருகரொடு புத்தரவ ரறியாவரன் மலையான்
மருகன்வரு மிடபக்கொடி யுடையானிட மலரார்
கருகுகுழன் மடவார்கடி குறிஞ்சியது பாடி
முருகன்னது பெருமைபகர் முதுகுன்றடை வோமே (9)

முகில்சேர்தரு முதுகுன்றுடை யானைமிகு தொல்சீர்ப்
புகலிந்நகர் மறைஞானசம் பந்தன்னுரை செய்த
நிகரில்லன தமிழ்மாலைக ளிசையோடிவை பத்தும்
பகரும்மடி யவர்கட்கிடர் பாவம்மடை யாவே (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- மணிகள் கொழித்து முத்தாறு வந்து அடிவீழ்ந்து வலஞ் செய்து வழிபடும் முதுகுன்றத்தினை நாம் சென்றடைவோம். 2079-ல் ஆசிரியர் காட்டியவாறு. "அடியனேன் பதிமுத னதிநிவாக் கரைமேய, வொப்பிறா னங்கள் பணிந்திட வேண்டும்" என்று பாணனார் கூற, அதற்கிசைந்தருளிச் சென்றாராதலின், திருஎருக்கத்தம்புலியூரில் வணங்கிய பின், இனி, அடுத்து உள்ள "முதுகுன்றடைவோம்" என்று பிள்ளையார் கட்டளையிட்டு மேற்சென்றருளினர் (2074).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வரை** - மலை; வரையினை மத்தாக நிறுத்தி; **சந்தும்** அகிலும் குங்குமமும் வாரிக்கொண்டுவந்து முத்தாறு அடிவீழ்தல் என்றது மஞ்சனமாட்டி அருச்சித்து வணங்குதல்போல முத்தாறு கீழே ஓடுதல். மலர் முதலியவை திருமஞ்சன நீரினுள் இடப்படுபவை. தற்குறிப்பேற்றம். **கொத்து** - குளிர்-ஒளிர்-இவை முறையே மலர் - சந்து அகில் - குங்குமம் என்றவற்றின் இயல் புணர்த்தும் அடைமொழிகள். **குங்குமம்** - குங்குமப்பூ; **ஒளிர்தல்**-நிறம் விளங்குதல். **அடைவோமே** - வழியிற்பாடிய குறிப்பு. - (2) **வடவிய** - வடவாலமரம். **சைவன்** - சிவன். **முழை** - முழையினுள்-குகையினுள்; **அரி குமிறும்** - சிங்கம் கர்ச்சிக்கும்- (3) **விளையாததொர் பரிசில்வரு பசுபாச வேதனையொண், டளையாயின தவிர அருள்** - அநாதியாயுள்ள மூலகன்ம முதலிய மும்மலங்களையும் நீங்க அருளும். **கதிராயிரம் உடையவன்** - சூரியன்; **தவழும் உயர்** - தவழும்படி உயர்ச்சி உடைய - (4) **சுரர்...முனிவர்தொழ** - 2079-ல் ஆசிரியர் இக்கருத்தை எடுத்துக் காட்டியருளினர். **நரரான பன்முனிவர்** - மனிதராகிய பல முனிவர்கள். முன்சொல்லிய சுரர் முதலிய தேவச்சாதியர் - (5) அந்தகாசுரசங்காரம் குறிக்கப்பட்டது. (6) **எயின னுருவாகி** - வேடவுருவெடுத்து. **ஓவாத** - நீங்காத. **பன் முனிவர்** - 2079 பார்க்க; **சாவாதவர் பிறவாதவர்** - தவவலிமையாற் சாதல் பிறத்தல்களை வென்றவர். **மூவாத** - மூப்படையாத - (7) **தழல்** - தழலின் நிறம். **சசி** - சந்திரன். - (8) **செதுவாய்மைகள்** - வலிகுறையும் தனது வரங்கள். **செதுத்தல்** - ஒளி மங்குதல் . கது-கத்துகின்ற; **முதுவேய்கள் முத்துதிரும்** - முத்துக்கள் பிறக்கும் இடங்களுள் மூங்கிலுமொன்று; மூங்கில் குறிஞ்சிக்கரு; இம்முத்துக்களை முத்தாறு கொழித்து வருதல்பற்றி "முத்தாறு வெதிருதிர நித்திலம் வாரிக்கொழிக்கும்" (தேவா); 2079-ல் உரைத்தவை பார்க்க.-(9) **இயல் ஆடிய** இகல் என்றது இயல் என நின்றது. **படப்பை** - தோட்டம். (10) **குறிஞ்சி** - குறிஞ்சிக்குரிய பண். **முருகன்னது பெருமைபகர்** -

2080. வான நாயகர் திருமுது குன்றினை
வழிபட வலங்கொள்வார்
தூந றுந்தமிழ்ச் சொல்லிருக் குக்குறட்
டுணைமலர் மொழிந்தேத்தி,
ஞான போனகர் நம்பர்தங் கோயிலை
நண்ணியங் குள்புக்குத்
தேன லம்புதண் கொன்றையார் சேவடி
திளைத்தவன் பொடுதாழ்ந்தார். 182

குறிஞ்சிக்குரிய தெய்வமாகிய முருகனைப்பாடி. பிள்ளையார் முருகனது அவதார மென்பார் இதுபோன்ற திருவாக்குக்களை அறிந்தாயினும் திருந்துவாராக.

தலவிசேடம்:- திருமுதுகுன்றம் III(1)1419 பாட்டின் கீழ்ப் பார்க்க.

2080. பொருளுரை: வானநாயகர்...மொழிந்து ஏத்தி - தேவதேவராகிய இறைவரது திருமுதுகுன்றத்தை வழிபடும் பொருட்டு அதனை வலமாக வருகின்றவர் தூய நறிய தமிழ்ச் சொற்களால் திருவிருக்குக் குறட் பதிகமாகிய துணைமலர்களை மொழிந்து துதித்தருளி; நம்பர்தம்...உள்புக்கு - இறைவரது திருக்கோயிலினைச் சேர்ந்து அங்கு உள்ளே புகுந்து; தேன்...சேவடி - தேன்பிலிற்றும் குளிர்ந்த கொன்றை மலர்மாலை யணிந்த சிவபெருமானது சேவடிகளில்; ஞானபோனகர் - ஞானவமுதுண்ட பிள்ளையார்; திளைத்த அன்போடு தாழ்ந்தார் - மிக்க அன்பினுடனே தாழ்ந்து வணங்கினார்.

விளக்கவுரை: திருமுதுகுன்றினை வலங்கொள்வார் - திருவிருக்குக்குறள் மொழிந் தேத்தி - திருவிருக்குக்குறள் என்ற அமைதியுடைய திருப்பதிகத்தினை நகர்வலமாக வந்து வழிபடும்போது அருளினர்.

முதுகுன்றினை வழிபட வலங்கொள்வார் - வழிபாட்டு முறையில் ஒரு தலத்தை யடைந்தபின் அத்தலத்தை வலங்கொண்டு வணங்கிப்பின் உள்ளே சென்று திருக்கோயிலை அடைந்து வலங்கொண்டு உட்செல்லுதல் மரபு.

தூநறும்-ஏத்தி - தூய்மை - நறுமை - பதிகத்தின் பொருளின் தன்மையும் சொல்லின் தன்மையும் குறித்தன. **தமிழ்ச்சொல் -** பதிகம். **இருக்குக்குறள்**. யாப்பமைதி. **துணைமலர் -** துணை - இரண்டு. **துணைமலர் -** இரண்டு சீர்; இரண்டு சீர்களாலாகிய அடிகளைக்கொண்டது. பயில்வோர்க்குத் **துணைசெய்யும்** என்ற குறிப்புமாம். "உரைவல்லார் என்று முயர்வாரே" என்று திருக்கடைக் காப்பில் பயன்கூறியருளியது காண்க. இரட்டுற மொழிதலால் **"மலர்தூவி"** என்று மலரையும் வைத்து, மலர்போன்ற பாட்டுக்களையும் மொழிந்து என்ற குறிப்புமாம். திருமுதுகுன்றம் என்னும் தலத்தினையே மலர்தூவி வலங்கொண்டு சொன்மலராலும் துதித்து வழிபட்டார் என்பது. மந்திரபுட்பம் என்பர். **குறள் -** குறுகிய அடிகளை உடையது.

உள்புக்கு - கோயிலினுள்ளே புகுந்து. **சேவடி - தாழ்ந்தார்** என்க. இது திருக்கோயிலினுள் இறைவரது திருமுன்பு நிகழ்ந்த வணக்கம்.

தேன் அலம்பு - தேன்பிலிற்றும் - துளித்து வழியப்பெறும்; தேன்வண்டுகள் சத்திக்கும் என்றலுமாம். **அலம்புதல்** - சத்தித்தல்.

திளைத்த இன்பொடு-என்பதும் பாடம். **182**

II. திருமுதுகுன்றம்-தலத்தை வலங்கொள்ளும்போது அருளியது.

திருச்சிற்றம்பலம் *திருவிருக்குக்குறள்; பண் - குறிஞ்சி*

நின்று மலர்தூவி, யின்று முதுகுன்றை,
நன்று மேத்துவீர்க், கென்று மின்பமே. (1)

நின்று முதுகுன்றை, நன்று சம்பந்தன்,
ஒன்று முரைவல்லா, ரென்று முயர்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்


பதிகக் குறிப்பு:- மலர்தூவி முதுகுன்றத்தை வலங்கொண்டு வழிபடுவார் என்றும் இன்பமடைகுவர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **இன்று**-வலங்கொள்ளும் இன்று. -(2) **உய்த்தல்** பொருந்துதல் ஆகும். (4) **வாசமலர்தூவ** - தலத்தை மலர்தூவித் தொழுது வணங்க; **"நின்று மலர்தூவி"** என்றதும் காண்க. திருக்கோயிலினையும், உள்ளே எழுந்தருளியுள்ள இறைவரையுமேயன்றித் தலத்தினையே வணங்கி வழிபடும் மரபு இப்பதிகத்தாலும், தாம் வழிபட்ட நிலையாலும் பிள்ளையார் உலகுக்கு அறிவுறுத்தி யருளினார். "ஆரூரைப், பத்தி மலர்தூவ" என்றவிடத்தும் இக்கருத்துக்காண்க. இதனை "முதுகுன்றினை வழிபட வலங்கொள்வார்" என்ற ஆசிரியர் எடுத்துக் காட்டியருளினர்-(5) **தணிவார்** - தாழ்வெனும் தன்மை சார்ந்து ஆணவ மலவலி கெடப் பெறுவார்.-(6) செய்யாள் **அணியாளே** - ஆதலின் இரவோர்க்குப் பொய்யார் என்று காரணங் குறித்தபடி. **செய்யாள்** - திருமகள்; **இரவோர்** - இரவலர்;-(7) **இடையாது** - இடைவிடாது; படை - உலகுடையாராயின் அதன் காப்பாகப் படை என்ற அரச அங்கத்தினையும் உடையாராவர்;-(8) **பத்துத்தலையோன்** - இராவணன். **கத்த** - கதற. **மொய்த்து** - நெருங்கி - (11) **நின்று** - "நின்ற மலர்தூவி" (1) நடந்து வலங்கொண்டு போந்தருளிய குறிப்பு.


2081. பொருளுரை: தாழ்ந்து-போந்து-வணங்கி யெழுந்து திருமுன்புநின்று "முரசதிர்ந் தெழும்" என்று தொடங்கும் குளிர்ச்சி பொருந்திய தமிழ்ப் பதிகமாகிய மாலையினைச் சாத்தி வாழ்ந்து வெளிப்போந்து; அங்கண்...வைகுவார் - அந்த வளத்தையுடைய தலத்தின்கண் தங்குவாராகிய பிள்ளையார்; மணிவெற்பு....தொடைமாலை - மணிகளையுடைய அந்தத் திருமுதுகுன்றினைச் சூழ்ந்த குளிர்ந்த நீரினையுடைய "முத்தாற்றி" னுடனே சேர்த்துத் தொடுத்த திருப்பதிகமாலையினை; வீழ்ந்த....சிலநாள்கள்- விரும்பிய காதலினாலே பலமுறைகளினாலேயும் சொல்லியே அங்குச் சிலநாள்கள் தங்கினார்.



கலிக்கம்ப நாயனார்
மேல்பாற் பெண்ணாகடம்




திருத்தூங்கானை மாடம் - கருப்பக்கிருகமும்
பல கணியும் - பின்புறம் பார்வை



சீகாழி - பிரம தீர்த்தம் - மேல்கரையும் திருநிலை நாயகியம்மை சந்நிதியும்
கீழைக் கோபுரமும் வட கோபுரமும்

முன்கோபுரம் - முகப்பு

திருக்கழிப்பாலை - கருப்பக்கிரகம் தென்புறம் பார்வை



திருக்கழிப்பாலை - கோயில் பின் பார்வை

2081. தாழ்ந்தெ ழுந்துமுன் "முரசதிர்ந் தெழு" மெனுந்
தண்டமிழ்த் தொடைசாத்தி
வாழ்ந்து போந்தங்கண் வளம்பதி யதனிடை
வைகுவார் மணிவெற்புச்
சூழ்ந்த தண்புனல் சுலவு "முத் தாறொடு"
தொடுத்தசொற் றொடைமாலை
வீழ்ந்த காதலாற் பலமுறை விளம்பியே
மேவினார் சிலநாள்கள். 183

விளக்கவுரை: "முரசதிர்ந்தெழும்" எனும் - இது பதிகத்தொடக்கமாகிய முதற் குறிப்பு. சாதாரிப்பண்ணில் திருமுக்கால் என்ற யாப்பமைதியுடன் விளங்கும் இத்திருப்பதிகம் திருக்கோயிலினுள் இறைவரது சந்நிதியின் திருமுன்பு அருளிச் செய்யப் பட்டது. இறைவரைப் "பரசமர் படையுடை யீரே!" என்பது முதலாக முன்னிலைப் படுத்தியருளியிருத்தல் காண்க.

வாழ்ந்து - சிவனாந்தப் பெருவாழ்வினில் திளைத்து. போந்து - புறத்திலே போந்து.

***வைகுவார்**-வினைப் பெயர். **வைகுவார்-விளம்பியே மேவினார்** என்று கூட்டுக.*

*முத்தாறொடு தொடுத்த சொற்றொடைமாலை - முத்தாறுடன் சேர்த்துத் தலத்தைப்பாடிய பலபதிகங்கள். திருமணிமுத்தாறும் திருமுதுகுன்றமும் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளமையால் **சுலவுமுத்தாறொடு தொடுத்த** என்றும், "பல முறைவிளம்பியே" என்றும் கூறினார். **மாலை** - மாலைகள்; **பலமுறை** - பலவகை; திருமுக்கால் முதலியவை.*

***வீழ்ந்த காதலால் - வீழ்தல்** - விரும்புதல். "தாம் வீழ்வார் மென்றோள்' (குறள்).*

***வைகுவார் மேவினார் சிலநாள்கள்** - அத்தலச் சிறப்பினை உலகறியும் பொருட்டு அங்குச் சிலநாள்கள் தலயாத்திரையினிடையே தங்கியருளினர். பிள்ளையாரது திருவுள்ளக் கிடை அங்கு அவரருளிய பதிகங்கள் பலவற்றாலும் காண்க.* 183

III திருமுதுகுன்றம்-திருக்கோயிலில் இறைவரது திருமுன்பு அருளியது.

திருசிற்றம்பலம் **திருமுக்கால்** **பண் - சாதாரி**


முரசதிர்ந் தெழுதரு முதுகுன்ற மேவிய, பரசமர் படையுடை யீரே! பரசமர் படையுடை யீருமைப் பரவுவா, ரரசர்க ளுலகிலா வாரே. (1)

மூடிய சோலைசூழ் முதுகுன்றத் தீசனை, **நாடிய ஞானசம் பந்தன்**
நாடிய ஞானசம் பந்தன் *செந்தமிழ், பாடிய வவர்பழி யிலரே.* (11)

திருச்சிற்றம்பலம்.

முன்கோபுரம் - முகப்பு

திருக்கழிப்பாலை - கருப்பக்கிரகம் தென்புறம் பார்வை



திருக்கழிப்பாலை - கோயில் பின் பார்வை

2081. தாழ்ந்தெ ழுந்துமுன் "முரசதிர்ந் தெழு" மெனுந்
தண்டமிழ்த் தொடைசாத்தி
வாழ்ந்து போந்தங்கண் வளம்பதி யதனிடை
வைகுவார் மணிவெற்புச்
சூழ்ந்த தண்புனல் சுலவு "முத் தாறொடு"
தொடுத்தசொற் றொடைமாலை
வீழ்ந்த காதலாற் பலமுறை விளம்பியே
மேவினார் சிலநாள்கள். **183**

விளக்கவுரை: "முரசதிர்ந்தெழும்" எனும் - இது பதிகத்தொடக்கமாகிய முதற் குறிப்பு. சாதாரிப்பண்ணில் திருமுக்கால் என்ற யாப்பமைதியுடன் விளங்கும் இத்திருப்பதிகம் திருக்கோயிலினுள் இறைவரது சந்நிதியின் திருமுன்பு அருளிச் செய்யப் பட்டது. இறைவரைப் "பரசமர் படையுடை யீரே!" என்பது முதலாக முன்னிலைப் படுத்தியருளியிருத்தல் காண்க.

வாழ்ந்து - சிவனாந்தப் பெருவாழ்வினில் திளைத்து. போந்து - புறத்திலே போந்து.

***வைகுவார்**-வினைப் பெயர். **வைகுவார்-விளம்பியே மேவினார்** என்று கூட்டுக.*

*முத்தாறொடு தொடுத்த சொற்றொடைமாலை - முத்தாறுடன் சேர்த்துத் தலத்தைப்பாடிய பலபதிகங்கள். திருமணிமுத்தாறும் திருமுதுகுன்றமும் பிரிக்க முடியாதபடி இணைந்துள்ளமையால் **சுலவுமுத்தாறொடு தொடுத்த** என்றும், "பல முறைவிளம்பியே" என்றும் கூறினார். **மாலை** - மாலைகள்; **பலமுறை** - பலவகை; திருமுக்கால் முதலியவை.*

***வீழ்ந்த காதலால் - வீழ்தல்** - விரும்புதல். "தாம் வீழ்வார் மென்றோள்' (குறள்).*

***வைகுவார் மேவினார் சிலநாள்கள்** - அத்தலச் சிறப்பினை உலகறியும் பொருட்டு அங்குச் சிலநாள்கள் தலயாத்திரையினிடையே தங்கியருளினர். பிள்ளையாரது திருவுள்ளக் கிடை அங்கு அவரருளிய பதிகங்கள் பலவற்றாலும் காண்க.* *183*

III திருமுதுகுன்றம்-திருக்கோயிலில் இறைவரது திருமுன்பு அருளியது.

திருசிற்றம்பலம் **திருமுக்கால்** *பண் - சாதாரி*

*முரசதிர்ந் தெழுதரு முதுகுன்ற மேவிய, பரசமர் படையுடை யீரே! பரசமர்
படையுடை யீருமைப் பரவுவா, ரரசர்க ளுலகிலா வாரே.* *(1)*
மூடிய சோலைசூழ் முதுகுன்றத் தீசனை, **நாடிய ஞானசம் பந்தன்**
நாடிய ஞானசம் பந்தன் *செந்தமிழ், பாடிய வவர்பழி யிலரே.* *(11)*

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு - *பரசமர் படையுடையீரே! பையரவம் அசைத்தீரே!* **என்பன** *முதலாக இறைவரை முன்னிலைப்படுத்தி அழைத்து, உம்மைப் பரவுவாரும், பாடு* **வாரும்,** *வாழ்த்துவாரும், கருதுவாரும் உலகில் அரசராவார்; நாடொறும் நலம்* **பெறுவர்;** *பழியொடு பகையிலர்; பயன் தலைநிற்பவர் என்றது.*

குறிப்பு;-(1) *படையுடையீரே! என்பது முதலாகப் பாட்டுக்கள்தோறும்* **இறைவரை** *முன்னிலைப்படுத்தி யருளியமையால் இத்திருப்பதிகம் திருக்கோயிலில்* **இறைவரது திருமுன்பு அருளப்பட்டது** *என்பதாம். (2)* **திருமுக்கால்** *என்பது பாட்டின் யாப்பமைதி. பாட்டுத்தோறும், "***பரசமர் படையுடையீர்***" என்பது போன்ற இரண்டாவதடி* **மீண்டும்** *மூன்றாவது அடியினுள், "***பரசமர் படையுடை** *யீருமைப் பரவுவார்" என்பது* **போன்று** *விரவி உட்புகுந்து விடுதலால், இப்பாட்டுக்கள் விருத்தங்கள்போல நான்கடி* **பெறாது** *மூன்றடியால் நடப்பன என்பது உட்கோளாக முக்கால் எனப்பட்டது - (3)* **இப்பதிகத்துள்** *(5,6,7) மூன்று பாடல்கள் சிதைவுண்டன!* (IV-28)

பதிகப் பாட்டுக் குறிப்பு;- (1) பரசமர் படை *- பரசாகிய படை;* ***அமர்தல் விரும்புதல்*** *என்று கொண்டு அமர்படை - விரும்பிய படையாகப் பரசுகொண்டீர் என்று* **கூட்டி** *உரைத்தலுமாம். உமைப் பரவுவார் உலகில் அரசர்களாவாரே என்க.* **இவ்வாறே** *பாட்டுத்தோறும் நாடொறும் நலம் நைவிலர். (2) - பழியொடு பகையிலர். (3) -* **முதலாகச்** *சிவனைப் பாடியும் வாழ்த்தியும் கருதியும் வழிபடுவார் பெறும் பயன்கள் கூறப்பட்டன. 1,2,3, பாட்டுக்களில் இம்மைப் பயனும், 4-ல் மறுமைப் பயனும் 8,9,10 பாட்டுக்களில் வீடாகிய பயனும் அருளப்பட்டமை காண்க. "இம்மை யேதரும் சோறுங் கூறையு, மேத்த லாமிடர் கெடலுமாம், அம்மையே சிவலோக மாள்வதற் கியாது மையுற வில்லையே" (நம்பி - திருப்புகலூர் -1)-(2)* ***நைதல்*** *- குறைதல்;-(3)* ***விடை அது-ஊர்தியும், அதுவே*** *கொடியும் என்ற குறிப்பு;* ***பழியொடு பகை*** *-* ***பகை*** *- இம்மையிலும்.* ***பழி*** *-* ***மறுமையிலும்*** *வருவன;-(4)* ***உருவமர் சடைமுடியீர்*** *-* ***உருவமர்*** *- உமக்குச் சிறப்பாயுரிய சடைமுடி;* ***திரு - கல்வி*** *செல்வம் - ஞானம்;* ***தேசு*** *- அருள் விளக்கம். இவை வீடு பெறும்* ***சாதனங்கள்;-*** ***(8) முத்திதரும் உயர்முதுகுன்றம்*** *- இத்தலத்தில் இறக்கப் பெறுவார் முத்தி பெறுவா ராதலின் விருத்தகாசி எனப்படும். தலவிசேடம்* **III(1)** - 1419 *பா.எண் பார்க்க.* ***உயர்*** *- எல்லா மலைகட்கும் முன்னர்ப் படைக்கப்பட்டது.* ***பத்துமுடி*** *- இராவணனது* ***பத்து*** *முடிகளையும்;* ***நற்சித்த அடியார்*** *என்க; இது முதல் மூன்று பாட்டுக்களினும் சிவப்பேறாகிய முத்திப்பயன் கூறும் குறிப்புப்பெற இப்பாட்டினை* ***முத்திதரும்*** *என்ற தொடங்கியருளினார்-(9)* ***முயன்றவர்*** *- சரியையாதி நாற்பாதங்களின் முயன்றவர்; இயன்றவர் - நல்வழியில் வணங்கி முயலாது தம் வழியே இயன்றவர்; அயனும் அரியும்;* ***பயன் தலைநிற்பவர்*** *- சிறந்த பயனாகிய முத்தியைத் தலைக்கூடுவர்.- (10)* ***சிட்டர்*** *- நல் ஒழுக்கினர்.* ***சீர்*** *- பெருஞ் சிறப்பாகிய முத்திப்பேறு.*

IV. திருமுதுகுன்றம்-தலத்தில் வைகுநாள் "பலமுறை விளம்பிய" பதிகங்கள்:-

(1) திருச்சிற்றம்பலம் **பண் - பழந்தக்கராகம்**

தேவ ராயு மசுர ராயுஞ் சித்தர் செழுமறைசேர்
நாவ ராயு நண்ணு பாரும் விண்ணெரி கானீரும்
மேவ ராய விரைம லரோன் செங்கண்மா லீசனென்னும்
மூவ ராய முதலொ ருவன் மேயது முதுகுன்றே. (1)

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு:-மூவராய முதலொருவன், முற்றுமாகி வேறுமானான், அந்தணாளர்க்கு அறம் பொருளின்பம் வீடு மொழிந்தவாயான் என்பன முதலாக அறியப்படும் இறைவர் மேயது முதுகுன்றமேயாம். இப்பதிகத்துள் 7-வது பாட்டு முழுதும், 11-வது பாட்டினுள் பின் இரண்டு அடிகளும் சிதைவுண்டன!

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) சிவபெருமானது முழுமுதற்றன்மையும் தேவ தேவனாம் தன்மையும்; (2) சிவன் தத்துவங்களுள் நிற்பன்; அவற்றைக் கடந் தப்பாற்பட்டும் நிற்பன்; எட்டு மூர்த்தியாயும் நிற்பன்; **முற்றுமாகி வேறுமானான்**. (3) **வாரி** - கடல்; **மாகம்** - விண்; கடலிலும் விண்ணிலும் பொருந்தும் மதியம்; திங்களும் அரவும் சூடி - பலிகொள்ளினும் செல்வன்; **நாகம்** - யானை; **செற்றலும்** - பகை கொள்ளலும்; (4) **மூடும்வெள்ளம்** - ஊழி; ஊழியினும் ஆழ்ந்து படாது உயர்வது; (5) **கல்வேந்தன்** - மலையரசன்; **செல்வி** - மகள்; **மொந்தை** - **தக்கை** - இயங்களின் வகை, **மிக்க** - மிகுதியாக முழக்கம்; **ஆடி** - ஆடுபவர்; பெயர்; (6) **இணைத்து** - வேறிடமின்றி முற்றும் பொருத்தி; **ஐம்புலனும் அழிந்த** - "புலனைந்தின் வழியடைத்து"; **அந்தணாளர்** - துறவோர்; நால் வருணத்துள்முதல்வர் - பிரமபுத்திரர் **அறம்பொருளின்பம் வீடு** - உறுதிப் பொருள். இவை மறைப்பொருளும் ஆகமப் பொருளுமாம். (8) **மயங்குமாயம் வல்லர்** - மாயம்வல்ல அரக்கர். மயங்குதற் கேது வாகிய மாயம் என்க. **வானினொடு நீரும் இயங்குவோர்**-எங்கும் சரிக்கவல்லவர். மயக்கும் மாயம் வல்லராதலும், வானிலும் நீரிலும் இயங்குதலும் என்றித் தன்மைகள் இந்நாளின் அரக்கப்போர் செய்யும் கொடியர் பாலினும் வெளிப்பட **நிகழ்தல்** காண்க. **புயங்கராக மாநடத்தன்** - புயங்க நடனம் என்ற கூத்துவகை. **முனிவரேத்த** - 2079 பார்க்க.(10) கோலத்தை அண்டரும் சிந்தைகொள்ள வியலாராயினும், இண்டைகட்டி- நாமம் ஏத்தும் நீற்றர் வாயினிடமாய் விளங்கும் இறைவர். **கோலம்** - கோலத்தை; **அண்டர்** - தேவர்களும்; **கொள்ளார்** - கொள்ளும் வலியிலர்; மூலம் சிவமூல மந்திரம். திருவைந்தெழுத்து; **உண்ட** - உட்கொண்ட; உள்ளே வைத்த. சிந்தித்த. **நீற்றர்** - நீற்றினை நிறைய அணிந்த தொண்டர். **வாயான்** - வாக்கின் விளங்குபவர்.

(2) திருச்சிற்றம்பலம் **பண் - மேகராகக் குறிஞ்சி**

மெய்த்தாறு சுவையுமே ழிசையுமெண் குணங்களும் விரும்பு நால்வே
தத்தாலு மறிவொண்ணா நடைதெளியப் பளிங்கேபோ லரிவை பாக
மொத்தாறு சமயங்கட் கொருதலைவன் கருதுமூ ருலவு தெண்ணீர்
முத்தாறு வெதிருதிர நித்திலம்வா ரிக்கொழிக்கு முதுகுன் றமே. (1)

முழங்கொலிநீர் முத்தாறு வலஞ்செய்யு முதுகுன்றத் திறையை மூவாப்
பழங்கிழமைப் பன்னிருபேர் படைத்துடைய கவுமலமே பதியாக் கொண்டு
தழங்கெரிமூன் றோம்புதொழிற் றமிழ்ஞான சம்பந்தன் சமைத்த பாடல்
வழங்குமிசை கூடும்வகை பாடுமவர் நீடுலக மாள்வர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:-ஆறுசமயங்கட் கொருதலைவன் என்பது முதலாகிய தன்மைகளாலறியப்படும் சிவபெருமான் கருதி எழுந்தருளியுள்ள ஊர் முதுகுன்றமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) மெய்த்த ஆறு என்றது மெய்த்தாறு என நின்றது. **ஆறுசுவை**-புலனறிவு என்ற பொருள்தந்து நின்றது. **ஆறுசுவை** - **ஏழிசை** - **எண்குணங்கள்** - எண்ணலங்காரம். **நடை** - "நின்றதோர் நேர்மை" (தேவா); **பளிங்கேபோல் அரிவைபாகம் ஒத்து** - **ஒத்தல்** - பொருந்துதல்; "சுத்தமார் பளிங்கின் பெருமலை யுடனே சுடர்மர கதமடுத் தாற்போல்" (தேவா) பளிங்குபோல அத்தனும் அதனை ஒத்துப் பொருந்திய மரகதம்போல அம்மை பாகமும் என்க. அரிவை பாகம் அத்தனுள் ஒடுங்கியும் விரிந்தும் நிகழ்தலால் தனி உவமை கூறாராயினர்; **ஆறுசமயம்** - உட்சமயங்கள் ஆறு . **வெதிர்** - மூங்கில். **நித்திலம்** - முத்து; வெதிரினின்றும் முத்து உதிர அவற்றை முத்தாறு தெண்ணீரினால் வாரிக் கொழிக்கும் என்க. **முத்தாறு** என்ற பெயர்க் காரணமும் குறித்தபடி. **"சுலவு முத்தாறொடு** தொடுத்த" (2081) என்று ஆசிரியர் இதனைக் காட்டியிருளினர். "நன்முத்தாறு" -(6) **"முத்தாறு வலஞ்செய்யும்"** -(1) என்று மேலும் பலுவிடத்தும் அருளுதல் காண்க. - (2) **வேரி** - குழலிற் சூடிய மலர்களிலுள்ளது; தேன்; **கயமுயங்கி** - தடாகங்களிற்றவழ்ந்து. தென்றல் பல கனிகளையும் மலர்களையும் உதிர்த்து - முயங்கி - முன்றலிற் புகுந்து உலவும் என்க; இப்பாட்டில் வேடனாகி வந்து விசயற்கருளிய வரலாறு போற்றப்பட்டது. (3) இப்பாட்டில் **தக்கயாக சங்காரம்** போற்றப்பட்டது. **விதி வழியே தண்டித்த** - சிவாபராதம் செய்தோரும் உடந்தைப்பட்டோரும் கடுந் தண்டனைக்குட் படுவர் என்ற விதி. **எச்சன்** - யாகரூபியான தேவதை; **எச்சம்** - யக்ஞம் என்பதன் திரிபு. **விதாதா** - பிரமன்; **அருக்கன்** - சூரியர்களுள் ஒருவன்; **அங்கி** - தீக்கடவுள்; சந்திரன் முதலாக விதாதா வரை சொல்லப்பட்டவர் தக்க யாகத்தில் உடனிருந்துதவிய சிவாபராதத்துக்காக வீரபத்திரரால் அவ்வவர் தகுதிக்கேற்பத் தண்டிக்கப் பட்ட கடவுளர். "எண்பட்ட தக்க னருக்க னெச்ச னிந்துவனல், விண்பட்ட பூதப் படை வீர பத்திரராற், புண்பட்ட வாபாடிப் பூவல்லி கொய்யாமோ" (திருவா); **கொக்கு** - மாமரம்; **வருக்கை** - பலா; **குவை** - கூட்டம், தொகுதி;-(4) இப்பாட்டில் **திரிபுரசங்காரம்** போற்றப்பட்டது; **அரி எரி கால் வாளி** - விட்டுணுவும், தீக்கடவுளும் வாயுவும் அங்கமாகக் கொண்ட அம்பு; **எரி** - கூர்; **அரி** - கோல். **கால் (காற்று)** - ஈர்க்கு; **மாசுணம்** - பாம்பு - (5) இப்பாட்டில் **இறைவர் மாதொரு கூறனாகும்** திருமேனி போற்றப்பட்டது; (அர்த்தநாரீசுரம்); **உழைமேவும் உரி** - மான்தோல். **உம்பர்** - மேலிடம், ஆகாயம், **கழை** - மூங்கில்; **இருப்பிடம் முதுகுன்றமென்பர்** - என்க.- (6) **நகை** - பற்கள்; **நாதனிடம்** - முதுகுன்றமே என்க. **வரைப்பண்டம்** - மலைபடு பொருள்களாகிய மணிகள், சந்து, அகில் முதலியன; **தகையாரும்** - தடுக்கும்; **தகைத்தல்** - தடுத்தல். **முகை** - மொட்டு - (7) **கோயில்** - **முதுகுன்றமே**; ஆற்றின் அலைத்துவரும்

மணிகளைத் திரட்டிக் குறச்சிறுமியர் முறங் களினாற் கொழித்து ஏனை மணிகளை விலக்கி முத்துக்களைச் சிறுசோறடும் விளையாட்டில் உலையில் பெய்வர் என்பது; (8) **அளகைக்கிறை** - குபேரன்; **கண்ணும்-பிறங்க** - மிக்க சினக்குறி;-(9) **கழுகு** இலக்கணையால் அன்னம் என்ற பொருளில் வந்தது; **ஏனம்** - பன்றி; கழுகும் ஏனமும், உயர்ந்தும் ஆழ்ந்தும் என நிரனிறை யாகக் கூட்டுக; சேருமலை - முதுகுன்றமே; **செழுநிலத்தை-உயர்ந்த** - ஊழியில் ஆழாது மேலுயர்ந்த;-(10) தொண்டீர்! முதுகுன்றமே உள்ளுணர்ந்து உய்மின்; **ஞானிகள்** - முனிவரர் - மோனிகளாய்த் தனியேயிருந்து தவஞ்செய்யுமிடம்; "செய்தவத்திரு முனிவரும்" (2079); -(11) **மூவாப் பழங்கிழமை** - முதுகுன்றத் தினைப்போலத் தானும் ஊழியில் ஆழாது மிதந்து அதனால் பன்னிரு பெயரும் பெற்றதனால் பழய உறவு கொண்டது சீகாழி என்பது; தழங்கு எரிமூன்று ஓம்புதொழில் - தீ மூன்று வளர்க்கும் மறையவர் தொழில்; பிள்ளையார் செய்தற்குரிமையுடைய **கிரியையின்றிறன்; சமைத்த பாடல்** - "சமைத்த பாடல் - "தொடுத்த சொற்றொடைமாலை "(2081); **வழங்கும் இசை கூடும் வகை** - உயர்ந்தோராட்சியால் உரித்தாகிய இசைநயம்பட இது வழங்கப்படல் பிள்ளையாரது திருவுள்ளம். **நீடுஉலகம்** - இவ்வுலகமும், **இதன்மேல்** நீடும் சிவனுலகமும்.

(3) திருச்சிற்றம்பலம் **பண் காந்தாரம்**

"தேவா சிறியோம் பிழையைப் பொறுப்பாய் பெரியோனே!
யாவா! என்றங் கடியார் தங்கட் கருள்செய்வாய்!
ஓவா வுவரி கொள்ள வுயர்ந்தாய்!" என்றேத்தி
மூவா முனிவர் வணங்குங் கோயில் முதுகுன்றே. (1)

அறையார் கடல்சூ ழந்தண் காழிச் சம்பந்தன்
முறையான் முனிவர் வணங்குங் கோயின் முதுகுன்றைக்
குறையாப் பனுவல் கூடிப் பாட வல்லார்கள்
பிறையார் சடையெம் பெருமான் கழல்கள் பிரியாரே. **(11)**

பதிகக் குறிப்பு:- முனிவர்களும் தொழுது வணங்கும் கோயில் முதுகுன்றே.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) "தேவா! பெரியோனே! அருள்வோனே! உயர்ந்தவனே; சிறியோம் பிழையைப் பொறுப்பாய்" என்று ஏத்தி முனிவர் வணங்கும் கோயில் என்க. முனிவர் செய்யும்துதி. முனிவர் வணங்கும் (11) **(2079)**பார்க்க. மூவா - சிவயோகத்தின் பலனாக மூப்புப் பெறாத திருமூலர் முதலியோர் சரிதம் காண்க. **உவரிகொள்ள வுயர்ந்தாய்!** - ஊழியில் அமிழ்ந்துபடாது உயர்தல்-(2) இரவி - சூரியன்; **சிந்தையுள்ளே கோயிலா** - "உள்ளம் பெருங் **கோயில்**" (திருமந்); "சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்" (திருவா); மலர்கொண்டு மந்திகளும் - திகழ்வானை - வணங்கும் கோயில்.-(3) **குயிலும் கிள்ளையும் மலரும் புனலுங்கொண்டு - திகழ்வானை** - ஏத்த என்க.-(4) சீர் உள்ளது முதுகுன்றே என்க. **முரிதல்** - இடையீடுபடுதல்.-(5) என்பாரது சிந்தையராகிய - முதல்வரது கோயில் என்க. **வைத்தநிதி** - சேமவைப்பு; **முத்தாறுடைய** - (2081).-(6) **என்ன நல்கும்**-என்று சொல்ல அருள் நல்கும். என்று விளங்குதற்கு அருளிபுரியும் என்றலுமாம்.

கொகுடிமுல்லை - முல்லையின் வகை.-(9) கும்பிட அதுகண்டு முல்லை முறுவல் **செய்யும்** என்பது; தற்குறிப்பேற்றம் - (10) **திருகல்** - வளைவுகளையுடைய; **வேய்** - மூங்கில்.

(4) திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி**

வண்ணமா மலர்கொடு வானவர் வழிபட
வண்ணலா ராயிழை யாளொடு மமர்விடம்
விண்ணின்மா மழைபொழிந் திழியவெள் ளருவிசேர்
திண்ணிலார் புறவணி திருமுது குன்றமே. (1)

திண்ணினார் புறவணி திருமுது குன்றரை
நண்ணினான் காழியுண் ஞானசம் பந்தன்சொல்
எண்ணினா னீரைந்து மாலையு மியலுமாப்
பண்ணினாற் பாடுவார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- வானவர் வழிபட அண்ணலார் அம்மையோடமரும் இடம் திருமுதுகுன்றமே.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) வானவர் வழிபட - "தேவரும்..சேவடி பணியும்" (2079). **திண்ணிலார்** - பெருமையுடைய **புறவு** - குறிஞ்சிப்புறவிடம். (2) வெறி - மணம். செறிதல் - நிறைதல்; -(3) **தேறல்** - தேன் - (4) **உரையினார் உறுபொருள்** - சொற்பொருள். உரை - உயர்ந்த சொல்; வேதம்; வேதத்தா னுதலப்படும் பொருள். **உரையினார் ஒலி என திரையினார் எறி** - மக்கள் சொல்லினது ஒலி இது என்று சொல்லும்படி ஒலிக்கும் அலைகளை வீசுகின்ற - (5) **ஆளி - சிங்கம். வடியவாய்** - கூர்மைபொருந்திய வாயினையுடைய. - (7) மஞ்சர் - மைந்தினை உடையவர். **மைந்து** - வல்லமை. **வேடர்** - குறிஞ்சி நிலமக்கள். **அணிகலைச் செஞ்சொலார்** - கலைவாணர் - புலமையோர்; **மணிகலை** - அழகிய ஆடை; கலை - ஆடை; அழகிய ஆடை கொண்ட பெண்கள் என்றலுமாம். - (9) **அருமறையின் பொருள்** - கீதம். "சொலவல வேதஞ் சொலவல கீதம்" (தேவா); **ஏடினார்** - **ஏடு** - இதழ்கள். இதழ்கள் நிறைந்த; **தேடினாரறிவொணார்** - தேடினாராகிய திருமாலும் பிரமனும், **அறிதற்கு ஒண்ணாதவர்** - உறையுமிடம் என்க-(11) **மாலை** - பாட்டு. **இயலுமா** - இயலும் வகையால். "இசைகூடும் வகையால்" (பிள். தேவா - வைகா)

2082. பொருளுரை:- ஆங்கு நாதரைப் பணிந்து - அத் திருமுதுகுன்றத்தில் இறைவரைப் பணிந்து விடைபெற்றுப்போந்து; பெண்ணாகடம் அணைந்து - திருப்பெண்ணாகடம் என்னும் தலத்தினை அணைந்து; அருமறை...பணிவுற்று - அரிய மறைகளின் ஓசை ஓங்கும் திருத்தூங்கானைமாடம் என்கின்ற அத்தலத் திருக்கோயிலினுள் விரும்பி எழுந்தருளியுள்ள ஒன்றாகிய ஒப்பற்ற பரஞ்சோதியாகிய சிவபெருமான் பாங்கினில் அணைந்து வலங்கொண்டு திருமுன்பு பணிந்தெழுந்து; பரவு..தெரிவித்தார் - போற்றுகின்ற சொற்றமிழ் மாலையாகிய "தீங்கினின்றும் நீங்கும் கருத்துடையீர்களே! இங்குத் தொழுமின்கள்'' என்னும் கருத்துடைய இசைப்பதிகத்தினையும் கட்டளையிட்டருளினார்.

2082. ஆங்கு நாதரைப் பணிந்து, பெண் ணாகட
மணைந்தரு மறையோசை
ஒங்கு தூங்கானை மாடத்து ளமர்கின்ற
வொருதனிப் பரஞ்சோதிப்
பாங்க ணைந்து, முன் வலங்கொண்டு பணிவுற்றுப்,
பரவுசொற் றமிழ்மாலை
"தீங்கு நீங்குவீர் தொழுமின்க" ளெனுமிசைப்
பதிகமுந் தெரிவித்தார். 184

விளக்கவுரை: ***நாதரை ஆங்குப் பணிந்து*** - *என்க. ஆங்கு - "வளம்பதியதனிடை" (2081) என முன்பாட்டிற் கூறிய அங்கு - அத்தலத்தில்-என முன்னறிசுட்டு. நாதரை அங்குப்பணிந்து அவரை மேலும் பல தலங்களிலும் பணியச் சென்று பெண்ணாகடம் அணைந்து என்பது.* ***பணிந்து*** - *விடைபெற்றுச் செல்லும் பொருட்டுப் பணிந்து.*

அருமறை ஓசை ஓங்கு தூங்கானைமாடம் - *மறையவர்கள் வழுத்துதலாலும் மனைகடோறும் பயில்வதனாலும் மறையோசை பெருக நிகழும் கோயில் என்பது; "மனைகடோறு மறையின்னொலி தொடங்கும்" பதிகம்; தூங்கிய யானையின் வடிவமா யமைந்த மாடக்கோயிலாதலின் பிரணவவுருவம் உள்ளது என்பதும்* ***மறைஓசை ஓங்கு*** *என்றதன் குறிப்பு.*

அமர்தல் - *விரும்புதல்.* ***ஒருதனிப் பரஞ்சோதி-ஒரு-ஒன்றாகியது.*** *"ஒன்றேபதி" (சிவஞானபோதம் 2);* ***தனி*** - *தனக்குவமையில்லாதது;* ***பரம்*** - *உலகுயிர்களுக்கு அப்பாற்பட்டது;* ***சோதி*** - *ஒளியுருவானது. "சுடர்க் கொழுந்தீசர்" என்ற இத்தல இறைவரது பெயர்க் குறிப்புமாம்*

மறையோசை ஓங்கு - *என்றதனால் மறைகளாற் பேசப்படும் இவ்வுண்மைகள் போதர வைத்தார்.* ***பாங்கு அணைந்து*** - *பரஞ்சோதி யமர்கின்ற மாடத்தின் பக்கம் புகுந்து.* ***முன்வலங்கொண்டு*** *என்றும்,* ***முன்பணிவுற்று*** *என்றும் கூட்டுக.*

"தீங்குநீங்குவீர் தொழுமின்கள்" எனும் - *இது பதிகக் கருத்து.* ***தீங்கு நீங்குவீர்*** - *'ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம், அடங்குமிடங் கருதிநின்றீர்" - "சாநாளும் வாழ்நாளுந் தோற்றமிவை சலிப்பாய வாழ்க்கை யொழிய" - "இழிப்பாய வாழ்க்கை யொழியத்தவ நிறையூ ணெறிகருதி நின்றீர்" என்பன வாதியாகப் பதிகத்துட் கூறும் கருத்தை ஆசிரியர் வடித்தெடுத்துக் காட்டியபடி.* ***தொழுமின்கள்*** - *பதிகத்தின் ஆட்சி போற்றப்பட்டது*

தெரிவித்தார் - *உலகுக்கு உபதேசித்துத் தெரியப் பண்ணினார். இப்பதிகம், 'தொழுமின்களே!" என்று உலகைநோக்கிக் கூறும் மகுடம் கொண்டதாதலால்* ***தெரிவித்தார்*** - *வழி அறியும் ஆவல் கொண்டோர்க்கு வழியறிவித்தார் என்பது கருத்து.*

இசைச் செய்யவாய் மலர்வித்தார் - *என்பதும் பாடம்.* *184*

திருத்தூங்கானைமாடம்

திருச்சிற்றம்பலம் பண் - **பழந்தக்காரம்**

ஒடுங்கும் பிணிபிறவி கேடென்றிவை யுடைத்தாய வாழ்க்கை யொழியத்தவம்
அடங்கு மிடங்கருதி நின்றீரெல்லா மடிக ளடிநிழற்கீ ழாளாம்வண்ணங்
கிடங்கு மதிலுஞ் சுலாவியெங்குங் கெழுமனைகடோறு மறையின்னொலி
தொடங்குங் கடந்தைத் தடங்கோயில்சேர் தூங்கானை மாடந் தொழுமின்களே. **(1)**

மண்ணார் முழவதிரு மாடவீதி வயற்காழி ஞானசம் பந்தனல்ல
பெண்ணா கடத்துப் பெருங்கோயில்சேர் பிறையுரிஞ்சுந் தூங்கானை மாடமேயான்
கண்ணார் கழல்பரவு பாடல்பத்துங் கருத்துணரக் கற்றாருங் கேட்டாரும்போய்
விண்ணோ ருலகத்து மேவிவாழும் விதியதுவே யாகும் வினைமாயுமே. **(11)**

திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு:- தீங்கு நீங்கக் கருதுவீர் எல்லாம் தூங்கானைமாடம் தொழுமின்கள். ஆசிரியர் (2082) காட்டி யருளியதுகாண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **ஒடுங்கும்** - கன்மத்துக்கீடாய் உயிருடன் ஒடுங்கி நிற்கும்; இது பிறவிக்குக் காரணமாவது. **கேடு** - இறத்தலும் அதற்குமுன் வரும் பல துன்பங்களும். **தவம் அடங்குமிடம்-அடங்குதல்** - இங்குஏற்ற சாதனம் பொருந்துதல் என்ற பொருளில் வந்தது. **ஆளாம்வண்ணம் - தொழுமின்கள்** - என்று கூட்டுக. **மாடம்** என்றது பெருங்கோயிலினுள் இறைவர் எழுந்தருளியுள்ள இடம். மாடமே தொழத்தகுவது என்க; **தடங்கோயில்** - "பெருங்கோயில்" (11); ஏகாரம் ஈற்றசை. எங்கும்... **தொடங்கும்** - "அருமறை ஓசை ஓங்கு (2082) என்று ஆசிரியர் இச்சிறப்பினை எடுத்துக் காட்டியருளினர்.-(2) **கடந்தை** - பெண்ணாகடம். **பிணிநீர** - பிணியின் நீர்மையுடைய. **பிரியப்பிரியாத** - முரண் அணிச்சுவை. **பிரியாத பேரின்பம்** "பேரா வொழியாப் பிரிவில்லா மறவா நினையா வளவிலா மாளா வின்ப மாகடலே" (திருவா.பிரார்.பத். 6); இவ்வுலக இன்பம், சிறிது; துன்பங் கலந்தது; சில கால மிருந்து பிரிவது; ஆனால் **அதுவோ** பெரிது; கலப்பில்லாத இன்பமேயாய் என்றும் பிரியாதது. **மேலுலகம்** - சிவனுலகம்; **துணிநீர்** - துள்ளிக்குதித்து ஓடும் நீருடைய நிவா நதிக்கரையில் உள்ள. -(3) **தோற்றம்** - பிறவி.-(4) **ஊன்றும்** - அழுந்துவிக்கும்; பிறவினை. **மான்றும்** - மயங்கும். **மாறாதல்** - மயங்குதல்; அவ்வாறு **"மனந்திருந்து மண்ணின் மயங்காது"** என்க. **போலும்** - அசைநிலை - (5) **தீர்மை** - **தீர்வு** - நீக்கம்; வியல்தீர - பலதிறப்படுதல் நீங்க. உயர்தீர - நிகரற்று. தமக்குமேலுயர்தலில்லாது.- (6) **பல்நீர்மை குன்றி** - பல்தளர்ந்து; பல நீர்மைகளும் (வன்மைகளும்)குறைந்து என்றலுமாம். **கேட்பிலா** - கேட்கும் தன்மை இல்லையாகி; செவிடுபட்டு. **கேட்பு** - புவ்வீற்றுத் தொழிற் பெயர். கேட்டல். **படர்நோக்கில்** - நெடுந்தூரம்சென்று காணும் தன்மையில். பவளந்நிற நன்னீர்மை - இரத்த ஓட்டத்தால் செழித்த நிற முடைய நற்பண்பு; **திரைதோல்** - திரைந்த சுருக்கங்கொண்ட. தோல். **நற் - சடை** - என்று கூட்டுக.

வேறு

2083. கருவ ரைப்பிற் புகாதவர் கைதொழும்
ஒருவ ரைத்தொழு துள்ள முவந்துபோய்ப்,
பெருவ ரத்தினிற் பெற்றவர் தம்முடன்
"திருவ ரத்துறை சேர்து" மென் றேகுவார்; **185**

பொன்நீர்மை-தோன்றும் செம்பொன்னிறம் தோற்கும்படி சிவந்து வெளியே தோன்றும்; **புனல்** - கங்கை; தொன்னீர் - நிவாநதி; -(7) **இறை ஊண் துகள்** - உணவுச்சுருக்கமும் பிறகுற்றமும்; **ஊண்**-போகங்களின் பொதுமையுமாம். நிறை **ஊண்நெறி** - நிறைவாகிய இன்பானுபவம்கொண்ட நிலைதரும் வழி; **பிரியாத நீர்த்துறை** - நீர்வற்றாத நிவாநதித்துறை-(8) **பல்வீழ்ந்து நாத்தளர்ந்து** - உடற்றளர்ச்சியின் முதிர்ந்த நிலை. **தவம் இல்சூழ் இடம்** - தவம் குடியிருக்கும் இடம். **இல்சூழ்** - இல்லம்போலக் குடிகொள்ளும்; **இறையே** - சிறிதும். **கல்சூழ்** - மலையை நிலைபெயர்க்க எண்ணிச் சூழ்ந்த - (9) **நுகர்** - நுகர்ச்சி; **வாயும்** - வாய்க்கும்; **தாய** - தாவிய என்பது இடைக் குறைந்து நின்றது; தாவிய அடியினால் மண்ணும் விண்ணும் அளந்தான்; திருமால்-என்பது. **அளந்தானும்** - என்க. எண்ணும்மை தொக்கது.-(10) **பகடூர்பசி** - பெரும்பசி. **முகடுஊர் மயிர்** - தலைமயிர். முகடு - உச்சி; தலை; **திகழ்தீர்** - சிறப்பில்லாத; **துகள்** - குற்றம்; **பெண்ணா கடத்து** முன் பாட்டுக்களிற் கடந்தை என்றதனை விரித்துக்கூறியது. **பெண்ணாகடம்** - ஊர்; **பெருங்கோயில்** - அதில் உள்ள கோயில்; **மாடம்** - அக்கோயிலின் இறைவர் எழுந்தருளியுள்ள பகுதி; **கருத்துணர** - கருத்தாவது தீங்கு நீங்கும் சாதனம் கருதுதல். **விதி** - நிலை; **வினை** - பிறவிக்கேதுவாகிய குற்றம்.

தலவிசேடம்:- திருத்தூங்கானைமாடம் III(I) பா.எண் 1416 - பார்க்க.

2083. பொருளுரை...கருவரைப்பில்....உவந்துபோய் - பிறவியின் அளவுக்குட்படாத அடியவர்கள் கைதொழுகின்ற சுடர்க்கொழுந்தீசரைத் தொழுது மனமகிழ்ந்து விடைபெற்றுச் சென்று; பெருவரத்தினிற் பெற்றவர் தம்முடன் - தோணியப்பரிடம் தவங்கிடந்து பெற்ற வரத்தினாற்றம்மைப் பெற்றெடுத்த தந்தையாருடன்; திருவரத்துறை...ஏகுவார் - திருவரத்துறையினைச் சேர்வோம் என்று செல்பவராகி;

விளக்கவுரை...கருவரைப்பிற் புகாதவர் கைதொழும் - **வரைப்பு** - அளவுட்பட்ட இடம்;**கரு** - பிறவி; **புகாதவர்** - புகாமையை வேண்டுபவர்; புகாத் தன்மையை அடைந்தோர் - அஃதாவது "அணைந்தோர்" என்று சிவஞான போதம் பன்னிரண்டாஞ் சூத்திரனுட் பேசப்பட்டோர்-என்றிரண்டு பொருளும் கொள்ள நின்றது. முன்னவர் புகாமை பெறுதற் பொருட்டும், பின்னவர் வாசனாமலம் தாக்காமைபொருட்டும் கைதொழுவர் என்க.

ஒருவர் - தூங்கானை மாடத்தில் எழுந்தருளியுள்ள இறைவர்; சுடர்க்கொழுந்தீசர். "தூங்கானைமாடச் சுடர்க்கொழுந்தே" (அரசு - தேவா); "ஒரு தனிப் பரஞ்சோதி" (2082).

தொழுது உள்ளம் உவந்து - **தொழுதல்** - விடைபெறும் பொருட்டு வணங்குதல். உவந்தது அருள் விடைபெற்றதனாலும் அரத்துறை சேரும் விருப்பினாலும் ஆயது.

2084. முந்தை நாள்க ளொரோவொரு கான்முது
தந்தை யார்பியன் மேலிருப் பார்தவிர்ந்
தந்த ணாள ரவரரு கேசெலச்
சிந்தை செய்விருப் போடுமுன் சென்றனர். **186**

பெருவரத்தினிற் பெற்றவர் - தந்தையார் சிவபாத விருதயர் "பெருகுவரம்" **(1962); பெருவரம்** - "சிவம்பெருக்கும்" வரம். (1924). **வரத்தினில்** - வரங் காரணமாக - **வரத்தினால்; பெற்றவர்** - பிள்ளையாகக் கிடைக்கப்பெற்றவர். சென்றனர் - நடந்துசென்றனர். **ஏகுவார் - இருப்பார் - தவிர்ந்து - சென்றனர்** என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

சேருமென்றேகினார் - சேறுமென்றேகினார்-என்பனவும் பாடங்கள். **185**

2084. **பொருளுரை**-முந்தை...இருப்பார் - அதற்கு முன்னை நாட்களில் **செல்லும்** போது முதுமையுடைய தந்தையாரது திருத்தோளின்மேல் ஒவ்வொருபோது எழுந்தருளிச் செல்பவராகிய பிள்ளையார்; தவிர்ந்து - இப்போது அப்படிச் செல்வதனைத் **தவிர்ந்து;** அந்தணாளர்...முன் சென்றனர் - அந்தணர்களும் அவரும் அருகே வர மனத்திற்கொண்ட பெரு விருப்போடு முன்னே சென்றனர்

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை....**முந்தைநாள்கள்** - இதற்குமுன் யாத்திரை செய்த **நாள்களில் ஒரோவொருகால் - பியன் மேலிருப்பார்** - தாதைதோளின் மேலிருந்து **செல்லுதல் முன்** நாள்களினும் சிற்சிலபோது என்பதும், சிலபோது வேறு சிலர் பொறுப்பர் **என்பதும்,** ஏனையபோது நடந்து செல்வர் என்பதும் ஆம். 2011 ம் பாட்டும் **ஆண்டுரைத்தவையும்** பார்க்க. **பியல்** - தோள். **முதுதாதை** - அக்காலத்திலேயே சிவபாதவிருதயர் **வயது** முதிர்ந்தவர் என்பது.

தவிர்ந்து சென்றனர் - அவ்வாறு பியன்மேற் செல்வதைவிட்டு, நடந்து **சென்றனர்.** நடந்து என்பது சொல்லெச்சம். திருவரத்துறைக்கு நடந்தே சேர்வோம் என்று **பிள்ளையார்** திருவுள்ளங்கொண்டனர் என்பது. முன் பாட்டிற் **"சேர்தும்"** (2083) என்றதும் **நடந்து** சேர்வோம் என்ற குறிப்புத் தருவது இது பிள்ளையார் பின்னர்ச் சிவிகை தரப்பெற்ற அதன்மீது திருவரத்துறை சாரும் திருவருள் நிகழ்ச்சியின் முற்குறிப்பாகும். **சிவனடியிற் றாழ்தல் உயர்வைத்** தேடிவைக்கும் என்ற உண்மையை உலகுக்கு அறிவுறுத்தும் **திருவருட்** குறிப்பினால் பிள்ளையார் திருவுள்ளத்தில் இவ்வாறு குறிப்பு நிகழ்ந்தது என்க. **சிந்தைசெய் விருப்போடு** என்றது இக்குறிப்பினை விளக்குவதாம். 2092 பார்க்க. "மாநிலத் தின்னிரு ணீங்கிட" (2088) என்பதும் காண்க. **முன்** - ஏனையோர் தம்மைப் பின்பற்ற அவர்க்கு முன்னே.

அந்தணாளர் அவர் - "பரிசனங்களும் தவமுனிவரும்" (2075). அந்தணாளரும் அவரும் - தந்தையாரும் என்று உம்மைத்தொகை. அந்தணாளரும் தாதையாரும் என்ற இருதிறத்தார்களும் ஒரோர்போது முன்னே பிள்ளையாரை எடுத்துத் தாங்கி

2085. ஆதி யார்த மரத்துறை நோக்கியே
காத லாலணை வார்கடி தேகிடத்
தாதை யாரும் பரிவுறச் சம்பந்தர்
பாத தாமரை நொந்தன பைப்பைய **187**

---

*வந்தாராதலின் அவ்விருதிறத்தவரும் அவ்வாறு செய்யவிடாது தம் பக்கத்தில் நடந்து வர என்றதாம். **அந்தணாளராகிய அவர்** - சிவபாத விருதயர் என்றுரைப்பினுமமையும்*

***அவர்க்கருகே**-என்பதும் பாடம்.* *186*

*2085. **பொருளுரை: ஆதியார்தம்...ஏகிட** - ஆதிமுதல்வரது திருவரத்துறையினை நோக்கிக் கொண்டே மிக்க விருப்பத்தினாலே அணைபவராய் மிக விரைவாய்ச் செல்ல; **தாதையாரும் பரிவுற** - தந்தையாரும் வருந்த; **சம்பந்தர்...பைப்பைய** - திருஞான சம்பந்த நாயனாரது பாததாமரைகள் சிறிது சிறிது நொந்தன.*

***விளக்கவுரை: அரத்துறை நோக்கியே** - அரத்துறையினை நோக்கி - குறிவைத்துத் திசை நோக்கி. அகநோக்கிற் கண்டுகொண்டே என்றலுமாம். "காளத்தி கண்டு கொண்டு" (749); "ஆர்வ முன்பெருக வாரா வன்பினிற் கண்டுகொண்டே, நேர்பெற நோக்கி" (777); பிரிநிலையேகாரமும் இக்குறிப்பு.*

***காதலால்...கடிது ஏகிட** - விரைந்து செல்வதற்குக் காரணம் காதல்·என்பது. "உள்ள முவந்து போய்" (2083); "சிந்தைசெய் விருப்போடும்" (2089).*

***தாதையாரும்** - ஏனையடியவர் பரிவுறுதலோடும் என்று உம்மை எச்சவும்மை இத்தந்தையாரேயன்றி அரத்துறை ஆதியாராகிய தாதையாரும் என்றிரு தாதை யாரும் என்ற குறிப்புமாம். ஆதிதந்தையார் பரிவுறுதல் 2092 ல் காண்க. "தந்தையார்" (2088) என்ற குறிப்புமிது.*

***பாத தாமரை நொந்தன** - பல நாழிகையளவு மாலையின் கடிய வெப்பத்தில் நடந்தமையாலும். பருவத்தின் இளமையாலும் பாதங்கள் பையப்பைய நொந்தன. "தாதவிழ்செந் தாமரையி னகவிதழ்போற் சீறடிகள்" (2011). பாதம் நொந்தனவேயன்றி அதனாற் பிள்ளையார் நொந்து அயரவில்லை என்பார் **பாதம் நொந்தன** என்று பாதங்களின்மேல் வைத்துக் கூறினார். சிறிதும் பிள்ளையார் அயராமை, மேல் விரைந்தேகினார். (2086); தொழுதேகினார் (2087); தாழ்ந்தெழுந்தேகினார் (2088) என்று அவர் தாழாது ஏகியதனையே மும்முறை அடுக்கிக் கூறியதனால் விளங்கும். பின்னர் "ஞானசம்பந்தருடன்வந்தார்க் கெய்து வெம்மையிளைப்பு" (2090) என்று பரிசனங்களின் இளைப்பினையே கூறிய குறிப்பும் காண்க.* *187*

*2086. **பொருளுரை....மறை..என** - மறைகள் யாவையும் ஒருருவம் கொண்டு வந்தாற்போல; **நிறைமதி...என** - நிறையும் மதிப்பிள்ளை ஒன்று நீண்ட நிலவுலகத்தில் வந்து சேர்ந்ததுபோலச்சென்று; **துறை...ஏகினார்** - துறைகளில் அலைகளை வீசும்*

2086. மறைய னைத்து மொருவடி வாமென
நிறைம திப்பிள்ளை நீணிலஞ் சேர்ந்தெனத்,
துறைய லைக்கங்கை சூடு மரத்துறை
யிறைவ ரைத்தொழு வான்விரைந் தேகினார்; 188

கங்கையினைச் சூடுகின்ற திருஅரத்துறையில் எழுந்தருளிய இறைவரைத் தொழுவதன் பொருட்டு விரைந்து சென்றனர்;

விளக்கவுரை—மறை அனைத்தும் ஒரு வடிவாமென நிறை மதிப்பிள்ளை - மறை முதலிய கலைகள் எல்லாம் ஒரு வடிவுபெற்று நிறைந்ததொரு மதியின் கொழுந்து; **மறை அனைத்தும்** - மதியின் பதினாறு கலைகளுக்கும் எல்லாக் கலைஞானங்களுக்கும்; **நிறைமதி** - முழுமதிக்கும்-முழுமையான ஞானத்துக்கும்; மதிப்பிள்ளை - பிறைக்கும், மதி-ஞான-நிறைந்த குழவிக்கும் பொருந்த இருட்டுற மொழிந்துகொள்ள நின்றது.

சேர்ந்தென - சேர்ந்தாலென என்பது சேர்ந்தென என நின்றது.

நிறைமதிப் பிள்ளை - "கலைவளர்மதியே" (1990); "வானத்தின் மிசையன்றி மண்ணில்வளர் மதிக்கொழுந்தை" (புரா. 728); "நிலத்திடை வானி னின்ற நீளிரு ணீங்க வந்த, கலைச்செழுந் திங்கள் போலும்" (மேற்படி 751);

நிறைமதிப்பிள்ளை - நீள்நிலஞ்சேர்ந்தென - நிறைமதியினைக் குழவியாக்கி அது வானத்தினின்று நிலத்திற் போந்தாற்போல. தொழில் பற்றி வந்த இல்பொருளுவமம். "இளம்பிறைதன்னைப் பெருகுசிறு மதியாக்கி" (சிறுத்-புரா-28) என்ற கருத்தினை இங்கு வைத்துக் காண்க. சூரியன் முதலிய எல்லாப் புவன தத்துவங்களையும் தன்னுளடக்கிய சிவஞானக்கலைநிறைந்த மதியமாதலின் சூரியனது வெப்ப முதலியவற்றால், இளைத்தல்இலர் என்றதும் குறிப்பு.

இனி, இதற்கு இவ்வாறன்றி, ஒரு வடிவானாற் போலவும், மதிப்பிள்ளை நிலஞ்சேர்ந்தாற்போலவும் என்று இரண்டு உவமைகளாகக் கொண்டு உரைத்தனர்முன் உரைகாரர்கள்.

துறை அலைக்கங்கை - கங்கையின் இயற்கையடை. இறைவர் சூடிய கங்கையிற் றுறையும் அதில் அலையும் உண்டு என்பதன்று;"புற்றரவுசூடும்" - "பச்சைத் தாளர வாட்டி" என்பனபோல.

தொழுவான் - தொழும்பொருட்டு. **விரைந்து** - விரைவு இறைவரைத் தொழுவதில் வைத்த பேரார்வங்குறித்தது. "உள்ளமுவந்து" (2083); "சிந்தைசெய். விருப்போடு" (2084).

விரைந்தேகினார் - தொழுதே தொழுதேகினார் - தாழ்ந்தெழுந்தேகினார் - என மூன்றிடத்தும் ஏகினார் - என்ற முற்றுக்கள் ஏகுவாராயினர் எனப் பொருள் தொடர்ந்து செல்லும் வினையெச்சமுற்றாக நின்றன. விரைந்தும் - தொழுதே தொழுதும் - தாழ்ந்தெழுந்தும் ஏகினார் என மூன்றையும் தொடர்புபடுத்தி உரைக்க. **விரைந்து** - என்றது மனத்தின் வணக்கமும், **தொழுதே தொழுது** - வாக்கின் வணக்கமும் கூப்பும் கைகளின்

2087. பாச மற்றில ராயினும் பார்மிசை
யாசை சங்கரற் காயின தன்மையாற்
தேசு மிக்க திருவுரு வானவர்
ஈச னைத்தொழு தேதொழு தேகினார்; 189

வணக்கமும், தாழ்ந்தெழுந்து - உடலின் வணக்கமும் உணர்த்தின. அறிவு இச்சை செயல்கள் வியாபரித்தமை உணர்த்தப்பட்ட தென்றுலுமாம். 188

2087. பொருளுரை...பாசம் மற்று இலராயினும் - மற்றுப் பாசம் சிறிதும் இல்லாதவராயிருந்தும்; பார்...தன்மையால் - உலகில் சங்கரனிடத்து ஆசையாயின தன்மையினாலே; தேசுமிக்க திருவுரு வானவர் - சிவவொளி மிகுந்த திருவுருவான வராகிய பிள்ளையார்; ஈசனை...ஏகினார் - சிவபெருமானைத் தொழுது தொழுது சென்றனர்;

விளக்கவுரை....மற்றுப்பாசம் இலராயினும் என்க. மற்றுப்பாசம் - என்பது மலவாசனை (வாசனாமலம்) குறித்து நின்றது. "வேடமு மாலயந் தானு மரனெனத் தொழுமே" என்ற பாச நீக்கம்பெற்ற சீவன்முத்தர்க்கு ஆலயந்தொழுதல் விதிக்கப்பட்டது அவரது அறிவிச்சை செயல்கள் ஒரோவழிப் புறத்துச் செல்லுங்கால் வாசனாமலம் தாக்காது காத்தற்பொருட்டென்பர். ஆனால் இங்குப் பிள்ளையார் அவ்வாறு வாசனை முதலிய எவ்வித மலமுமற்ற சுத்த நிலையினராயினும் என்பது **மற்றுப்பாசமிலராயினும்** என்பதனாற் பெறப்பட்டதாதலின், அவர் திருவரத்துறை யீசனைத்தொழுதே தொழுதேகிய தென்னை? என்ற ஐயம் எழுமாதலின்; அதனை நீக்குதற்குப், "**பார்மிசை ஆசை சங்கரற் காயின தன்மையால்**" என்றார். (முத்தம்பல வாண தேசிகர் தசகாரியம் பார்க்க.) சீவன்முத்தர்களுக்கும் உரியது எவ்விடத்தும் எப்போதும் சிவானுபவமொன்றேயாம் என்னுமுண்மை விளக்கப்பட்டது.

பாசம் மற்று இலர் - இதற்கு, இவ்வாறன்றி அறம்பொருளின்ப மென்பவற்றின் பற்று என்றுரைத்தனர் முன் உரைகாரர்.

தேசுமிக்க திருவுருவானவர் - பிள்ளையார்; தேசு - சிவவொளி. "தன்னொளி மிக்குயர்ந்த தமிழ்ஞான சம்பந்தன்" (பிள் - தேவா - பாதாளேச்சரம் - வியாழக் குறிஞ்சி- 11.) தேசு - சிவஞான ஒளி என்றலுமாம். "ஞானத்தின் றிருவுருவை" என்பது காண்க.

தொழுதே தொழுது - வாக்கினாலும் கைகூப்புதலாலும் தொழுது. தொழுது கொண்டே என்றலுமாம். இப்பொருட்குத் **தொழுது தொழுதே** என்று கொள்க. 189

2088. பொருளுரை...இந்த...ஆனவர் - இந்தப் பெரிய நிலவுலகத்தின் இருள்நீங்கிட வந்த மறைக்குலமணியாகிய பிள்ளையார்; சிந்தை...ஏகினார் - மனத்தில் ஊறும் பெரிய அமுதமாகிய சிவந்தசடையினையுடைய தந்தையாராம் சிவபெருமானது திருவடிகளைத் தாழ்ந்து வணங்கி எழுந்து சென்றனர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு பொருள் மேற்செல்லும்படி உரைக்கின்றன.

2088. இந்த மாநிலத் தின்னிரு ணீங்கிட
வந்த வைதிக மாமணி யானவர்
சிந்தை யாரமு தாகிய செஞ்சடைத்
தந்தை யார்கழ றாழ்ந்தெழுந் தேகினார். 190

2089. மாறன் பாடி யெனும்பதி வந்துற
ஆறு செல்வருத் தத்தி னசைவினால்
வேறு செல்பவர் வெய்துறப், பிள்ளையார்
ஏறு மஞ்செழுத் தோதியங் கெய்திட; 191

விளக்கவுரை....இந்த...ஆனவர்-இருள்-புறச்சமயப்பீடையாகிய இருளும் அறியாமையும். "பூதிசாதன விளக்கம் போற்றல்பெறாத" (1916) இருள்.

வந்த - *அருள்தர அவதரித்த. "மண்ணிலே வந்த பிறவியே" (253.)*

வைதிகமாமணி - *"வேதநெறி தழைத்தோங்க" (1899);* **வைதிக மணி** - *வேதநெறியை விளக்கும் மணி; மணியொளியால் இருள் நீங்குதல்போலப் பிள்ளையார் வருகையால் (புறச்சமய) இருள் நீங்கிற்று என்றது உருவகம்.*

இருள் நீங்கிட வந்த - *இனிப் பெற நின்ற முத்துச்சிவிகையின் நீற்றொளியால் உலக இருள் நீங்குதலும் குறிப்பு. "வளர்மதி யுதித்தென வந்தார்" (2117)*

சிந்தை ஆர் அமுது ஆகிய - *ஏனையமுதம் வாயின் வழி உண்ணிறையும்; இவ்வமுது சிந்தையுள்ளே பொருந்தி நிறைவது. "சிந்தைசெய் விருப்போடு" (2084) என்றபடி சிந்தையுள் நிறையக் கொண்டு போந்த அமுது என்றலுமாம்.*

தந்தையார் - *அரத்துறை யீசர். "தாதையாரும் பரிவுற" (2085) என்ற அந்தத் தாதையார், வருந்தின மட்டிலமைய, இத்தந்தையார், அதனைச் சிவிகை தந்து மாற்றுவார் என்றது குறிப்பு. "எந்தையீசன்" (தேவா) என்று பிள்ளையார் இத்தலப் பதிகம் தொடங்குதல் குறிக்க.*

தாழ்ந்து எழுந்து ஏகினார் - *விரைதல் - தொழுதல் - தாழ்ந்தெழுதல் என்ற இத்தொழில்களே தலஞ் செல்லும்போது செய்யத்தக்கன. உலகர் செல்வதிற்போல் ஏனைய நினைவு - சொல் - செயல்கள் நிகழலாகா என்பது பிள்ளையார் தம் செயலால் உணர்த்தி யருளினார் என்க.*

தாந்தொழுது - *என்பதும் பாடம்.* 190

2089. **பொருளுரை..மாறன்பாடி..வந்துற** - *மாறன்பாடி என்னும் ஊரின் கண் வந்து சேர;* **ஆறுசெல்...வெய்துற** - *வழி நடந்துசெல்லும் வருத்தத்தினால் உண்டாகிய சோர்வினால் தம்மைச்சூழ வரும் பரிசனங்கள் முதலாயினோர் இளைப் படைய;* **பிள்ளையார்.. எய்திட** - *பிள்ளையார் உயர்ந்த திருவைந்தெழுத்தினை ஓதிக் கொண்டு அங்குச் சேர;*

2090. உய்ய வந்தசம் பந்த ருடன்வந்தார்க்
கெய்து வெம்மை யிளைப்பஞ்சி னான்போலக்
கைக ளாயிரம் வாங்கிக் கரந்துபோய்
வெய்ய வன்சென்று மேல்கடல் வீழ்ந்தனன். 192

விளக்கவுரை: பிள்ளையார் - மாறன்பாடி - வந்துற - வேறு செல்பவர் வெய்துற - ஓதி அங்கு எய்திட - வெய்யவன் - வீழ்ந்தனன் என்று இந்த இரண்டு பாட்டுக்களையும் முடிக்க.

பிள்ளையார் எய்திட வெய்யவன் வீழ்ந்தனன் - எய்திட என்ற வினையெச்சம் **வீழ்ந்தனன்** என்னும் பிறவினை முதல் வினைகொண்டு முடிந்தது.

ஆறுசெல் வருத்தம் - ஆறு சென்றதனாலுண்டாகிய வருத்தம். வந்த இளைப்பு, உண்ட இளைப்பு என்பனபோல.

அசைவு - சோர்வு; அலுப்பு என்பர்.

வேறு செல்பவர் - வேறு - ஏனையவராகிய. **செல்பவர்** - பரிசனங்கள் முதலியோர்; **வேறு செல்பவர்** - பிள்ளையார் ஏகிய நிலையினன்றி வேறு மனநிலையினராய் உடன் செல்பவர் என்ற குறிப்புமாம். பிள்ளையார் சிறிதும் வெய்துறவில்லை என்பதும் குறிப்பு.

வெய்துறுதல் - வருந்தல்; இளைத்தல்.

ஏறும் அஞ்செழுத்து - ஏற்றமுடைய சிபஞ்சாக்கரம் என்னும் திருவைந்தெழுத்து; அடியவர் நாவிலும் மனத்திலும் ஏறும் என்றும், அரனாரது திருச்செவியில் ஏறும் என்றும் உரைக்க நின்றது. பயில்வோரை மேல் ஏறச்செய்யும் எனப்பிறவினைப் பொருள் கொள்ளுதலுமாம். இங்கு நடந்துவரும் பிள்ளையார் முத்துச்சிவிகை ஏறிச் செல்வதற்கு உதவும் என்ற குறிப்பும் காண்க. "ஏறுமயிலேறி" (திருப்புகழ்).

அங்கு எய்திட - அப்பதியில் சேர - தங்க. 191

2090. **பொருளுரை:** உய்ய...போல - உலகமுய்யும் பொருட்டு வந்தவதரித்த திருஞானசம்பந்தப் பிள்ளையாருடன் வந்தவர்களுக்கு வழிநடந்து வந்ததன் வெப்பத்தினால் நேர்ந்த இளைப்பினைக் கண்டு அஞ்சியவன்போல; கைகளாயிரம்...வீழ்ந்தனன் - தனது அளவிறந்த கரங்களையும் உள்ளிழுத்துக்கொண்டு மறைந்துபோய் வெய்யவனாகிய சூரியன் சென்று மேல் கடலில் வீழ்ந்தனன்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை: உய்ய - உலகம் உய்ய; ஏனையோரெல்லாம் தாந்தாம் உய்ய வினைக்கீடாகிய பிறவியில் வருவபராகப், பிள்ளையார் அவ்வாறன்றி **உலக முய்யவந்தவர்** என்க.

உடன் வந்தார்க்கு எய்தும் வெம்மை இளைப்பு அஞ்சினான்போல - தற்குறிப்பேற்றம். 159-ம் பிறவும் பார்க்க. சம்பந்தர்க்கு வெம்மை யிளைப்பின்று என்பது

2091. அற்றை நாளிர வப்பதி யின்னிடைச்
சுற்று நீடிய தொண்டர்கள் போற்றிடப்
பெற்ற மூர்ந்த பிரான்கழல் பேணுவார்
வெற்றி மாதவத் தோருடன் மேவினார். 193

குறிப்பு. **உடன் வந்தார்** '- முன் பாட்டில் **வேறு செல்பவர்** - எனப்பட்டமை **காண்க.** 'கால நிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீரெனினு. மேல வும்மை வழிபடுவார்க் களிக்க வளிக்கின்றோம்" (1522); "பரிசனங்கள், பன்னாளு மந்நாட்டிற் பயின்றதனால் பனித்தகுளிர், முன்னான பிணிவந்து மூள்வதுபோல் முடுகுதலும்" (புரா - 333); "இரிந்தோடி யல்லலுடன் பறியுண்டா ராரூரர் மருங்கணைந்தார்" (கழறிற் - புரா - 167) முதலியவை காண்க.

வெம்மையிளைப்பு - சூரிய வெம்மையாலும், அதுகாரணத்தாலும் வழி நடந்து வந்ததனாலும் வந்த இளைப்பும்.

அஞ்சுதல் - அடியாரிடத்து அபசாரம் செய்து விட்டேனே என்பது **அச்சம்.** அடியார்பா லபசாரம் சிவாபசாரமேயாகும் என்று நினைவும், தக்க யாகத்திற் சிவாபசாரத்தாற் பட்ட தண்டத்தின் நினைவும் குறிப்பு

அஞ்சினான்போல் - அஞ்சி அதற்குத் தீர்வு தேடிக்கொள்வான்போல்.

கைகள் ஆயிரம் வாங்கி - **கைகள்** - கதிர்கள். கரம் - என்பதும் இப்பொருள் தருவது. **ஆயிரம்** - அனேகம் என்ற பொருளில் வந்தது. **வாங்கி** - உள்வாங்கி; நீட்டியிருந்ததை மடக்கிக்கொண்டு; எதேனும் தாக்க வரும்போது கைகளிற் றாக்காது மடக்கும் இயல்பு காண்க.

கரந்துபோய் - **கரத்தல்** - மறைதல்; இது அச்சத்துட்பட்டபோது மறைந்து கொள்ளும் இயல்புக் குறிப்பும், **போதல்** - அவ்விடம் விட்டு அகன்றபின் வருதற் குறிப்புமாம்.

வெய்யவன் - சூரியன். அடியார்க்கு வெப்பம் செய்த கொடுமையாளன் என்ற குறிப்புத்தரக் கூறியது கவிநயம்.

போய்ச் - சென்று - என்றது வேகமாகப் போய் என்றதாம்.

கடல் வீழ்ந்தனன் - அபசாரப்பட்டார் கடலில் வீழ்ந்திறத்தல்போல என்ற குறிப்பும் காண்க. **வீழ்ந்தனன்** - மேனிலையினின்றும் வீழ்தல் என்பதும் குறிப்பு.

இத்திருப்பாட்டின் அரிய தமிழ்நயமும் கவிநயமும் அணிநயமும் உள்ளுறை நயமும் பிறவும் குறிக்க. 192

2091. **பொருளுரை:** அற்றைநாள் இரவு அப்பதியின் இடை - அன்று இரவில் அந்தத் தலத்தின் கண்; சுற்று...போற்றிட - தம்மைச்சூழ்ந்து திருத்தொண்டர்கள் **துதிக்க;**

2092. இந்நி லைக்க ணெழில்வளர் பூந்தராய்
மன்ன னார்தம் வழிவருத் தத்தினை
அன்ன மாடுந் துறைநீ ரரத்துறைச்
சென்னி யாற்றர் திருவுள்ளஞ் செய்தனர். **194**

பெற்ற...மேவினார் - இடபத்தை ஊர்ந்து எழுந்தருளும் பெருமான் திருவடிகளையே பேணுவாராகிய பிள்ளையார் வெற்றி பொருந்திய மாதவத்தவர்களுடன் எழுந்தருளியிருந்தனர்.

விளக்கவுரை: *பேணுவார் - இரவு - அப் பதியிடை மாதவத்தோருடன் மேவினார் என்க.*

கழல்பேணுவார் *- கழலே பேணுவாராகிய பிள்ளையார். "அடியலாற் பேணா எம்பிரான்" "கழலே பேணும் சம்பந்தன்" (தேவா).* ***பேணுவார்*** *- வினைப்பெயர்.*

தொண்டர்கள் *- அவ்வூரில் உள்ளவர் என்பாருமுண்டு.*

மாதவத்தோர் *- அந்தணாளர்.* ***வெற்றி*** *- தவத்தின் வலிமை. சிவனை நோக்கிச் செய்த தவத்தினால் பிள்ளையாரது சார்புபெற அச்சார்பினாலே தீங்கு நீக்கும் வெற்றி பெற்றவர்.* *193*

2092. பொருளுரை: வெளிப்படை. இந்த நிலையில் அழகு மிகுந்த சீகாழித் தலைவரது வழி வருத்தத்தினை அன்னங்கள் ஆடும் நீர்த்துறைகளையுடைய திருவரத்துறையில் எழுந்தருளிய சென்னியில் ஆறுசூடிய பெருமான் றமது திருவுள்ளத்திற்கொண்டனர்.

விளக்கவுரை...இந்நிலை *- 2089 - 2091 - பாட்டுக்களிற் கூறிய நிலை.*

பூந்தராய் *- சீகாழியின் பன்னிரண்டு திருப்பெயர்களுள் ஆறாவது பெயர்.*

மன்னனார்தாம் வழிவருத்தத்தினை *- பிள்ளையார் தமது வருத்தத்தை அறிந்தாரிலர் என்று முன் (2085) உரைக்கப்பட்டது. அவரது பாததாமரைகள் கருவியியல்பின் படி நொந்தமையும், உடன் வந்தார் ஆறு செல்வருத்தத்தின் அசைவினாலும் சூரிய வெப்பத்தாலும் கொண்ட இளைப்பும், அவற்றால் தம் விருப்பின்படி திருவரத்துறை சாராது இரவு மாறன்பாடியிற் றங்க நேர்ந்தமையும்* ***வழிவருத்தம்*** *எனப்பட்டன.*

அன்னம் ஆடும் நீர்த்துறை அரத்துறை *- இத்துறையிற் சாரவருவோர் அன்னங்கள் விடுதிபெற்று விளையாடுதல்போல இளைப்புடனல்லாது இன்புடன் அணைதல் வேண்டுமென்பது குறிப்பு.*

சென்னியாற்றர் *- "எடுத்துச் சுமப்பானை" என்றபடி தம்மை வந்து அடைவோரது வருத்தத்தினை தாமே தலைதாங்கிச் சுமந்து ஆற்றுபவர் என்ற குறிப்பும் தருவது காண்க*

2093. ஏறு தற்குச் சிவிகை; யிடக்குடை;
கூறி யூதக் குலவுபொற் சின்னங்கள்;
மாறின் முத்தின் படியினான் மன்னிய
நீறு வந்த நிமல ரருளுவார், **195**

திருவுளஞ் செய்தனர் - வழிவருத்தத்தினை மாற்றவும் இனி அவ்வாறு வருத்தம் வராமற் காக்கவும் திருவுள்ளம் கொண்டனர். மாற்றவும்-காக்கவும் என்பன குறிப்பெச்சம். ***194***

2093. பொருளுரை—ஏறுதற்குச் சிவிகை - பிள்ளையார் ஏறி எழுந்தருளுதற்குச் சிவிகையும்; *இடக் குடை* - மேலே கவித்திடுதற்குக் குடையும்; *கூறி...சின்னங்கள்* - கூறி ஊதுதற்கு விளக்கமுடைய அழகிய சின்னங்களும் என்ற இவை; *மாறில்-மன்னிய* - ஒப்பற்ற முத்துக்களின் படியினால் மன்னியனவற்றை; *நீறு உவந்த நிமலர் அருளுவார்* - திருநீற்றை உவந்தருளும் நின்மலராகிய அரத்துறை யிறைவர் அருளுவாராகி,

விளக்கவுரை....சிவிகையும், குடையும், சின்னங்களும் முத்தின்படியினால் மன்னியவற்றை - என்று உம்மைகளும் இரண்டனுருபும் விரித்துக் கூறிக்கொள்க.

ஏறுதற்கு - இட (இடுதற்கு) - **கூறி ஊத** (ஊதுதற்கு) - இவை இறைவர் **தரும் சிவிகை - குடை-சின்னம்** இவை பயன்படும் வகைகள்; முறையே உரைக்கப்பட்டன.

இட - மேலே சூரிய வெப்பம் தாக்காது கவித்திட. சின்னம் - காளம் - திருச்சின்னம் - தாரை என்னும் இவை ஊதியறிவிக்கும் கருவிகள்.

கூறி - ஊத-ஏனை இயங்கள் போல ஒலிவிகற்பங்களை மட்டும் ஒலிக்காது, மெய்க் கீர்த்திகளையும் திருப் பெயரையும் கூட்டி எடுத்துக்கூறி இவை ஊதப்படும். மேல் 2119-2120-2121 பாட்டுக்கள் பார்க்க. பெரிதும் சிறிதுமாகிய குழாய்களாய் உடல் வளைந்தும் நீண்டும் ஒருபுறம் வாயகன்றும் உள்ள இவை, ஒருபுறம் வாய் வைத்தூதிய ஒலியினைப் பெருக்கிக் கேட்கச் செய்வன; ஒருவகை இசையுடனும் ஒலிப்பன. இந்நாளில் ஒலிபெருக்கி விளம்பரங்களுக்காக உள்ள இவ்வகைக் கருவிகளைக் காண்க. இவை சில பழம்பெருங்கோயில்களினும் திருமடங்களினும் இன்றும் காணவுள்ளன.

மாறு இல் முத்தின்படியினான் மன்னிய - மாறில் முத்து - அருளால் வருதலின் விலைமதிக்க முடியாத நன்முத்துக்கள்; படியினான் - படியவைத்த தன்மையுடன். மன்னிய - மன்னியவற்றை; பலவின்பாற் சொல்; இரண்டனுருபு தொக்கது.

நீறு வந்த நிமலர் - நீறு - முத்திக் குறிப்புடையது. "முத்தி தருவது நீறு" (தேவா). முத்து என்ற மணியும் அக்குறிப்புடையது. இதுபற்றி 492-ம் பாட்டின்கீழ் தொகுதி (1-இல்) உரைத்தவை பார்க்க. பிள்ளையார் திருமணத்தில் முத்துக்களால் அணி செய்யப்பட்ட வரலாறும் காண்க. இவையெல்லாம் குறிப்பிற்பெற "நீறு உவந்த" என்ற கூறியருளிய நலம் காண்க. நிமலர் - என்ற குறிப்புமது.

2094. நீடு வாழ்பதி யாகுநெல் வாயிலின்
மாட மாமனை தோறு மறையோர்க்குக்
கூடு கங்குற் கனவிற் குலமறை
தேடு சேவடி தோன்றமுன் சென்றுபின், 196

2095. "ஞான சம்பந்த னம்பா லணைகின்றான்;
மான முத்தின் சிவிகை, மணிக்குடை,
யான சின்னநம் பாற்கொண் டருங்கலைக்
கோன வன்பா லணைந்து கொடு"மென, 197

அருளுவார் (2093) - சென்றுபின் (2094) - என (2095) - உரைத்த - அப்போழ்தினில் - எய்தினர் (2096) என்று இந்த நான்குபாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க. என - என்றுரைத்தருள. *195*

2094. பொருளுரை....வெளிப்படை. நீடும் வாழ்வுடைய பதியாகிய திருநெல் வாயிலின்கண் மாடங்களையுடைய பெரிய மனைகள்தோறும் மறையவர்களுக்குக் கூடிய அன்றிரவு கனவிலே, பெரிய வேதங்கள் தேடும் செவ்விய திருவடிகள் தோன்றும்படி அவர் முன்சென்று, பின்பு;

விளக்கவுரை-நீடு வாழ்பதி என்றும், நீடுவாழ் மறையோர்க்கு என்றும் கூட்டியுரைக்க நின்றது.

மறையோர்க்குக் கனவில் சேவடி தோன்ற முன்சென்று-பின் என - என்க.

கூடு கங்குல் - வெய்யவன் மேல்கடல் வீழ்ந்தபின் (2090) வந்துகூடும் கங்குல்-இரவு-பின்னாளின் பகல் வந்து கங்குலிற்கூடும் நேரமாகிய வைகறை என்ற குறிப்பும் தருவது காண்க. என்னை? விழித்த அணிமையிற் கனாவின் பயன்பெறக் கனா நிகழும் காலம் அதுவா மென்பர்.

குலமறை....முன்தோன்ற - மறை தேடிக்காணாத் திருவடிகள் தாமே முன் வந்து தோன்ற என்று அம்மறையோர் பெற்ற நற்பேறு குறிக்கப்பட்டது.

முன் சென்று - பின் முன் - பின் - முரண் அணி நயம்பட உரைத்தது காண்க. முன் - காலமும் இடமும் குறித்தது. பின் - காலங்குறித்தது.

கனவில் - என - அவர் பக்குவ நோக்கிக் கனவில் தோன்றி உரைத்தனர் என்பது. *196*

2095. பொருளுரை: வெளிப்படை. "ஞானசம்பந்தன் நம்மிடத்தில் அணைகின்றனன்; அரிய கலைகளுக்கெல்லாம் தலைவனாகிய அவனிடம் நீங்கள் சென்றணைந்து பெரிய முத்துச்சிவிகையினையும், அழகிய குடையினையும், ஆனசின்னங்களையும், நம்மிடம் பெற்றுக்கொண்டு கொடுமின்கள்" என்று உரைத்தருள;

2096. அந்த ணாள ருரைத்தவப் போழ்தினில்
வந்து கூடி மகிழ்ந்தற் புதமுறுஞ்
சிந்தை யோடுஞ் செழுநீ ரரத்துறை
யிந்து சேகரர் கோயில்வந் தெய்தினர். 198

விளக்கவுரை: "ஞானசம்பந்தன்..கொடும்" - இது இறைவர் மறையோர்க்குக் கனவில் உரைத்தருளிய கட்டளை.

சிவிகை - குடை - சின்னம் - முன் (2093) பாட்டிற்போல உம்மைகளும் இரண்டனுருபும் தொக்கன.

நம்பாற்கொண்டு - நாம் கொடுத்த அவற்றை எடுத்துக்கொண்டுபோய்.

அருங்கலைக்கோன் அவன்பால் அணைந்து கொடும் - அருங்கலை - கலைகளின் முடிபாகிய சிவஞானம். கலைக்கோன் - ஞானத்தலைவன்; நம்பாற்கொண்டு - அவன் பாற்கொடும் - இருதிறத்தும் பால் என்றது குறிக்கற்பாலது ஈரிடத்தும் அஃது ஒரே தன்மையில் இருக்கும் தகுதிக் குறிப்பு. "கொண்டுங் கொடுத்துங் குடிகுடி யீசற்காட் செய்ம்மின் குழாம்புகுந்து" (திருப்பல்லாண்டு) என்ற திருவாக்கின் குறிப்பும் காண்க. பால் - இடம் பக்கம்.

அவன்பால் அணைந்துகொடும் - அணைந்து - அவன் ஈண்டு "நம்பால் அணைகின்றான்"; அவ்வாறு அணையுமுன்னர் நீவிர் முன்சென்று கொடும் என்பது இவற்றின் பயனால் "வழிவருத்த" மின்றி அவன் நம்பால் அணைதல் வேண்டுமென்பது திருஉள்ளம் என்பதாம். 197

2096. **பொருளுரை**....வெளிப்படை. அம்மறையவர்கள், இறைவர் இவ்வாறு உரைத்தருளிய அப்போது, வந்து கூடித், தந்தாங் கண்ட கனவைக் கூறி மகிழ்ந்து, அற்புதமுற்ற சிந்தையுடனே., செழுமையாகிய நீரினையுடைய திருவரத்துறையில் எழுந்தருளிய சந்திரனைச் சூடிய முடியையுடைய பெருமானது திருக்கோயிலின் வாயிலில் வந்து சேர்ந்தனர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை—வந்துகூடி - அவ்வவர் மனைகளினின்றும் வெளிவந்து அங்கங்கும் கூடி;

மகிழ்ந்து - தாந்தாங்கண்ட கனாத்திறத்தினை ஒருவருக்கொருவர் கூறி அறிந்து மகிழ்ந்து.

அற்புதம் உறுஞ்சிந்தை - இறைவரது கருணையின் உள்ளே கண்டதன் தன்மை விளம்பத்தக்கதன்றாதல் குறிக்க இவ்வாறு கூறினார். "அற்புதம் அறியேனே" (திருவா)

கோயில் வந்து எய்தினர் - "நம்பாற்கொண்டு" என்றதனாலும், இறைவரது அருளாணையாதலாலும் அவர் முன்பு திருக்கோயில் எய்தினர்.

அந்தணாளர்க் குரைத்த-என்பதும் பாடம். 198

2097. ஆங்கு மற்ற வருளடி யாருடன்
ஓங்கு கோயிலுள் ளார்க்குமுண் டாயிட,
"ஈங்கி தென்ன வதிசயம் ?" என்பவர்
தாங்க ளம்மறை யோர்கண்முன் சாற்றினார். 199

2098. சால மிக்க வியப்புறு தன்மையின்
பால ராதலும் பள்ளி யெழுச்சியின்
கால மெய்திடக் காதல் வழிப்படுஞ்
சீல மிக்கார் திருக்காப்பு நீக்கினார். 200

2097. பொருளுரை: ஆங்கு...உண்டாயிட - அவ்விடத்து முன் குறித்தபடியுள்ள அந்த அருள் அடியார்களோடு ஓங்கு கோயிலில் உள்ளவர்களுக்கும் உண்டாகவே; ஈங்கு...என்பவர்- "இங்கு இது என்ன பேரதிசயமாயுள்ளதே!" என்று சொல்லுமவர்; தாங்கள்-சாற்றினார் - வந்துகூடிய அம்மறையவர்களுக்குத் தாங்கள் முன்பு சொன்னார்கள்.

விளக்கவுரை: ஆங்கு - மறையவர் வந்துகூடிய அவ்விடத்தில். அதாவது திருக்கோயிலில்; அப்போது என்றலுமாம்.

மற்ற அருள் - மற்று அவ்வருள். மறையவர் கண்டவாறு கனாவிற் கூறிய அந்த அருளிப்பாடு; கட்டளை.

அடியாருடன் கோயிலுள்ளார்க்கும் உண்டாயிட - அடியார் - தலத்திலுள்ள தொண்டர்கள்; முன்கூறிய "பதிமறையோர்" (2094) வேறு; அடியார் - வேறு. இவர்கள் சரியையாதியாகச் சிவன் அடிமைத்திறத்தினின்று சரிப்போர்; இவர் சிவாகமவிதி வழிச் செல்வோர் - மறையோர் - மறைகளோதி அவற்றின் வழி அறு தொழில் நியமத்தினிற்போர்; அவர் வேதநெறிச் செல்வோர். கோயிலுள்ளார் - கோயிற்றொண்டு செய்வோர். இவர்கள் அடியாருடன் ஒரு சார்புடையவர்களாதலின் உடன் உருபாற் சேர்த்துக் கூறப்பட்டனர். உண்டாயிட-கனாத்திறம் நிகழ.

முன்சாற்றினார் - அவர்கள் சாற்றுமுன் என்றும், அவர்கள் முன்னிலையில் என்றும் உரைக்க நின்றது.

ஈங்கு இது என்ன அதிசயம் - தாந்தாங்கண்ட பெருமையை எடுத்துக்கூறி அதிசயித்தார்.

மறையோர்க்கு முன்-என்பதும் பாடம். 199

2098. பொருளுரை: சால...பாலராதலும் - மிகப் பெரிய வியப்பினை அடைதலும்; பள்ளி-எய்திட - திருப்பள்ளி எழுச்சிக்குரிய காலம் சேர்தலும்; காதல்-நீக்கினார் - அன்பின் வழிப்படும் சீலத்தின் மிகுந்த அவர்கள் கோயிலின் திருக்காப்பினை நீக்கினார்.

விளக்கவுரை...பாலராதலும் பாலர் - பான்மையுற்றவர் - பாற்பட்டவர். இவர்கள் "கோயில் உள்ளார்" (2097) என்று முன்பாட்டிற் கூறப்பட்டவர். காதல் வழிப்படும் சீலம்

2099. திங்க ணீர்மைச் செழுந்திரண் முத்தினாற்
றுங்க வெண்குடை தூய சிவிகையும்
பொங்க வூதும் பொருவருஞ் சின்னமும்
அங்க ணாத ரருளினாற் கண்டனர். 201

மிக்கார் - என்றமையாலும் இவர்களது சிறப்புக் கூறப்பட்டது. பாலராதலும் அந்தச் சீலமிக்கார் என்று சுட்டுவிரிக்க.

பள்ளி எழுச்சியின் காலம் எய்திட - இது "திருப்பள்ளி எழுச்சி" என்னும் வழிபாடு நிகழ்தற்குரிய காலம். அது சூரியனுதிக்க ஐந்து நாழிகையளவில் உள்ள நேரமென்பர். இந்நேரத்தின் வழிபாடு, நாளின் வழிபாடுகளில் முதற்காலமாதலாலும், ஏனைச் சிறப்புக்களாலும் மிகச் சிறந்ததாகக் கொண்டாடப்படும். திருவாசகத்தினுள் "திருப்பள்ளி யெழுச்சி" என்ற தனிப்பகுதி இதன் சிறப்பை உணர்த்தும். "நீறணிந்தா ரகத்திருளும் நிறைகங்குற் புறத்திருளும், மாறவரும் திருப்பள்ளி யெழுச்சியினில்" (1333) என்று முன் உரைத்த சிறப்பும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

காலம் எய்திட - என்றதனால் கனா நிகழ்ந்தது இதற்குமுன் என்றது. உரிய காலமல்லாக் காலத்தில் திருக்கதவு திறத்தற்கு விதியின்மையால் காலம் எய்தும்வரை காத்திருந்தனர் என்ற சீலமும் காண்க.

காதல் வழிப்படும் - இறைவனருளிய கனா நிகழ்ச்சியிற் சென்ற மிக்க ஆர்வத்தினால் ஈர்க்கப்பட்ட; இறைவன் பணியில் ஈடுபட்ட என்றலுமாம்.

சீலமிக்கார் - அடியவரும் கோயிலுள்ளாரும்; இவர்களது அன்பின் ஒழுக்கத்தின் உயர்வு உணர்த்தப்பட்டது. கோயிலுள்ளாரும் அடியவரும் இத்தகையாராக இருத்தல் வேண்டுமென்ற குறிப்புமாம்.

குறிப்பு;-ஊதியத்திற்காக எந்நேரத்திலும் திருக்கோயில் கதவு திறக்கும் விதிதவறிய தீய வழக்கம் இந்நாளில் பல கோயில்களிலும் கூத்தாடி வருதல் வருந்தத் தக்கது. அதிகாரிகள் கவனித்தல் வேண்டும்.

திருக்காப்பு நீக்கினார் - திருக் கதவு திறத்தற்குக் கூறும் மரபு வழக்கு.

பாலராயினும் - வெளிப்படும்-என்பதும் பாடங்கள். 200

2099. ***பொருளுரை—வெளிப்படை*** - சந்திரன் போன்ற தன்மை பொருந்திய செழிய திரண்ட முத்துக்களிழைத்த பெரிய வெண் குடையும், தூய சிவிகையும், பொங்கும்படி ஊதும் ஒப்பற்ற சின்னங்களும் என்ற இவைகளை அவ்விடத்தே இறைவரது திருவருளினால் அவர்கள் கண்டனர்.

விளக்கவுரை—திங்கள் நீர்மை - நீர்மை - தன்மை; நீரின் தன்மையாகிய குளிர்ச்சி என்றலுமாம்.

2100. கண்ட பின்னவர் கைதலை மேற்குவித்
"தெண்டி சைக்கும் விளக்கிவை யா"மெனத்
தொண்ட ரோடு மறையவர் சூழ்ந்தெழுந்
தண்டர் நாடு மறிவுற வார்த்தனர். **202**

செழும் திரள் முத்து - செழுமை - ஒளி மிகுதல். திரள் - என்றது முழுதும் விளைந்து பரியவண்ணம் பெற்ற என்றதாம். நீர்மை - மணிகளின் ஒளியினை நீரோட்டம் என்னும் மரபு வழக்கும் காண்க.

திங்கள் நீர்மையுடைய - முத்து - பண்புவமமாகக் கொண்டு மதிபோல வெண்மையுடைய என்றும், தொழிலுவமமாகக் கொண்டு குளிர்ச்சி செய்யும் என்றும் கொள்க.

முத்தினால் - ''முத்தின் படியினால்'' (2093); முத்துக்களால் அணிபெறப் பொதியப்பட்டு.

பொங்க - ஒலிமிக. திருப்பெயரின் மேன்மைகளும் மெய்க்கீர்த்திகளும் புகழ்களும் பரவ என்றலும் குறிப்பு. 2119-2120-2121 பார்க்க. சின்னம் - சாதி ஒருமை.

அங்கண் நாதர் - அவ்விடத்தில் என்றும், அங்கண்மையுடைய என்றும் உரைக்க நின்றது.

அருளினால் கண்டனர் - முன் இல்லாதன, அவர் கனவில் அருளியதுபோலவே வைத்தருள் செய்தமையால் காணலாயினர். "அடிகடம் மருளே" என்ற தேவாரமும் காண்க.
201

2100. பொருளுரை: வெளிப்படை கண்டுபின்பு அவர்கள் கைகளைத் தலையின்மேற் கூப்பிக்கொண்டு, ''இவை எண்டிசைக்கும் விளக்காவன'' என்று சொல்லித், தொண்டர்களோடும் மறையவர்கள் சூழ்ந்து வணங்கி எழுந்து தேவருலகமும் அறியும்படி ஆரவாரித்தனர்.

விளக்கவுரை-கண்டபின் - மேற்பாட்டிற் கூறியபடி கண்டபின்பு.

எண்திசைக்கும் இவை விளக்கு ஆம் - என்க. எண்ணும் திசைக்கும் என்றும், எட்டுத் திசைக்கும் என்றும் உரைக்க நின்றது. எண்ணும் திசையாவது-இவற்றுள்ளே திருவருளின் பெருமையினையும் அடிமைத்திறத்தின் மேன்மையினையும் எண்ணியறியும் திசை. உம்மை - முற்றும்மை. இவை விளக்கு ஆம் - பாசவிருள் போக்குதற்கு உதவுதலால் விளக்கு என்றார்.

"வெண்ணீற்றொளி போற்றி" (2114) என்பது காண்க. "திருநிலவு மணி முத்தின் சிவிகையின்மேற் சேவித்து, வருமதிபோல் வளரொளிவெண் குடைநிழற்ற" (புரா - 648);"அண்டமெலாங் கொண்டதொரு, ஞானமணி விளக்கெழுந்து வருவ தென நலம்படைப்ப" (மேற்படி 652) என்பவை காண்க.

தொண்டர் - அடியவரும் கோயிலுள்ளாரும்.

2101. சங்கு துந்துபி தாரைபே ரிம்முதற்
பொங்கு பல்லிய நாதம் பொலிந்தெழ
அங்க ணன்னரு ளாலவை கொண்டென்
பொங்கு காத லெதிர்கொளப் போதுவார். **203**

அண்டர் நாடும் அறிவுற -*அண்டர்* - தேவர்; *நாடும்* - உம்மை சிறப்பு. அந்நெடுந் தூரமும் கேட்க என்றும், அறிவோராயினும் உண்மை அறியாத அண்டரும் அறிய என்றும் உரைக்க நின்றது.

ஆர்த்தல் - ஆரவாரித்தல். நாமங்களை எடுத்துப் புகழ் கூறிச் சத்தித்தல். **202**

2101. பொருளுரை: வெளிப்படை. சங்கு, துந்துபி, தாரை, பேரி, முதலாகப் பொங்கி எழும் பல இயங்களின் ஓசை பொலிவு பெற்று எழும்படி செய்து. இறைவரது திருவருளாலே அந்தச் சிவிகை, குடை, சின்னங்கள் என்ற இவற்றை உடன் கொண்டு பொங்கி எழும் ஆசை எதிர்கொளப் போவாராகி.

விளக்கவுரை.. அருளால் அவை கொண்டு - போதுவார் - மறையவர் - பல்லிய நாதம் - எழச் - சிவிகை முதலாயின-அருளாற்றாங்கி - ஏகினார் - என்று இந்த இரண்டு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக்கொள்க.

மறையவர் - கொடுத்தருள்பவர்; மறையவர், மறைகளைச் சொன்னவர் - மறைகளாற் பேசப்படுபவர்; மறைகளின் பொருளானவர்; பெறுபவரும், மறையவர், அம்மறைகளைத் தமிழ் மறையாகச் சொல்பவர்; ஆதலின் மறையவர் - குலத்தாலும் நலத்தாலும் தாங்கி ஏகுதல் தகுதி என்ற குறிப்புப்பெற மாசில் நெல்வாயின் மறையவர் என்றார். நெல்வாயிலின் மறையோர்க்குக் - கனவில் தோன்றி முதலில் அறிவித்த குறிப்புமிது.

சங்கு...எழ - இறைவரது அருட்பிரசாதங்களாகிய சிவிகை முதலியவற்றைக் கொண்டுபோதலால் அவற்றுக்குரிய வழிபாட்டு உபசாரங்களுடன் செல்லும் மரபுப்படி சங்கு முதலிய இயங்களை முழக்கிக்கொண்டு சென்றனர். அவற்றைக் கண்டபோது "கை தலைமேற் குவித்து"ச் சூழ்ந்து எழுந்தனர் என்ற கருத்தும் காண்க.

அங்கணன் அருளால் "அங்கணாத ரருளினால்" (2099)

அவை - அவற்றை; சிவிகை முதலாயினவற்றை; இரண்டனுருபு தொக்கது.

கொண்டு - தாங்கிக்கொண்டு - கொண்டு போதுவாராகிய - மறையவர் ஏகினார் என்க.

உடன் பொங்கு காதல் எதிர்கொள - காதலால் எதிர்கொள என்றும், காதல் தம்முடன் முன்சென்று எதிர்கொள; என்றும் உரைக்க நின்றது. "நாணனு மன்பு முன்பு நளிர்வரை யேற" (752)

போதுவார் - முற்றெச்சம்; போதுவார் - ஏகினார் என்க. **203**

2102. மாசில் வாய்மைநெல் வாயின் மறையவர்
ஆசில் சீர்ச்சண்பை யாண்டகை யார்க்கெதிர்
தேசு டைச்சிவி கைமுத லாயின
வீச ரின்னரு ளாற்றாங்கி யேகினார். **204**

2102. பொருளுரை: வெளிப்படை. குற்றமில்லாத உண்மையினை உடைய திரு நெல்வாயிலின் மறையவர் குற்றமற்ற சிறப்புடைய சீகாழித் தலைவனார்க்கெதிரே ஒளியுடைய சிவிகை முதலாயினவற்றை இறைவரது இன்னருளாற் றாங்கிக்கொண்டு ஏகினார்கள்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவு கொண்டன.

விளக்கவுரை: மாசில் வாய்மை - மறையவர் *- அருட்பொருள்களைத் தாங்கிச் செல்லுதற்குரிய சீலத் தகுதியும், பிள்ளையார்பாற் சென்று ஏந்துதற்குரிய தகைமையும் குறித்தது.*

ஆசில் சீர்ச்சண்பை ஆண்டகையார்க்கெதிர் *- பெறுமவர் பெருமைக்கேற்ற பண்பு கொண்டுபோதுமவர்பால் உள்ள தகுதிக்குறிப்பு.*

தேசு *- அருட்பொலிவு; முத்துக்களின் ஒளியுமாம்.*

ஈசரின் அருளால் *- "அருளினால்" 2099; "எந்தை யீசன்...அருளே" (தேவா) ஈசரது இனிய அருளினால் என்றலுமாம்.*

சிவிகை முதலாயின *- பிள்ளையாரது வழிவருத்தத்தினையே முதலாகத் திருவுளங் கொண்டனர் இறைவராதலின் அதனை மாற்றுதற்கு முதன்மையாக உதவுவது சிவிகையாம். அன்றியும் அதன்மீது பிள்ளையார் நேரே எழுந்தருளுதலின் அவரது திருமேனிச்சார்பின் மேன்மையும் பெற்றுடையது. "பாற்கடல் வளர்மதி யுதித்தென" (2117) என்னும் பெருமையின் பொருத்தமுடையது. இச்சிறப்புக்கள் பற்றிச் சிவிகையை வெளிப்பட முதலிற்கூறி, ஏனையவற்றை* ***முதலாயின*** *என்றார். "ஏறுதற்குச் சிவிகை" 2093 என்று முன்கூறிய வைப்புமுறையும் இக்கருத்து.*

தாங்கி *- அருட்பொருள்களைச் சிரத்திற்றாங்கும் மரபின்படி தாங்கி; இவை பிள்ளையார் ஏற்ற பின்னரே பயன்படுத்தத் தக்கன. அம்முறை 2114 - 2116 - 2119 - 2120 - 2121 - பாட்டுக்களில் உரைக்கப்படுவன. இப்போது அவை இம்மறையவரால் தாங்கிச் செல்வதற்கு மட்டும் உரியன என்பது.* *204*

2103. பொருளுரை....இத்தலை...ஏகினார் - இங்கு இவர்கள் இவ்வாறு சென்றனர்; அத்தலை...அவ்விரா - அங்குச் சீகாழித் தலைவராகிய பிள்ளையாருக்கும் அன்றிரவே; முத்தம்...உய்த்தளிக்கும்படி - நல்ல முத்துக்கள் படிய வைத்த சிவிகை முதலாயினவற்றை ஏற்றுச் செலுத்தும்படி; முன் உணர்த்துவார் - முன்னர் உணர்த்து வாராய்;

விளக்கவுரை....இத்தலை *- இங்கு;* ***அத்தலை*** *- அங்கு; இங்குத் திருவரத் துறையின்கண்; அங்கு மாறன்பாடியின்கண்;* ***தலை*** *- இடம்.*

2103. இத்த லையிவ ரின்னண மேகினார்;
அத்த லைச்சண்பை நாதர்க்கு மவ்விரா
முத்த நற்சிவி கைம்முத லாயின
உய்த்த ளிக்கும் படிமுன் உணர்த்துவார், **205**

2104. அள்ள னீர்வயல் சூழு மரத்துறை
வள்ள லார் "நா மகிழ்ந்தளிக் கும்மவை
கொள்ள லாகுங்; கொண் டுய்த்தல்செய் வா"யென **206**
வுள்ள வாறருள் செய்ய வுணர்ந்தபின்,

இவர் - மறையவரும் அடியார்களும்; இத்தலை - இவர் - என்ற **அணிமைச்** சுட்டுக்கள் இதுவரை நமது கருத்து இவர்பால் இருந்த நிலைமை குறித்தன.

அவ்விரா - இவர்களுக்கு அருளிய அந்த இரவு என அகரம் முன்னறிசுட்டு.

உய்த்து - அளிக்கும்படி - உய்த்தல் - செலுத்துதல். **அளிக்கும் என்றது** செலுத்துதலால் உலகுய்யச் செய்தல் என்ற பொருளில் வந்தது.

முன் - இவர்கள் தாங்கிவந்து விண்ணப்பிக்கு முன்னர்.

முன் உணர்த்துதல் - பிள்ளையார் இவையொன்றும் வேண்டா நிலையினராதலின் மறுத்துவிடாதபடி முன் உணர்த்துதல் வேண்டப்பட்டது. திருவீழிமிழலையில் பிள்ளையாருக்கும் அரசுகளுக்கும் படிக்காசு பெற வைத்தருளுமுன் அதனைக் கனவில் உணர்த்தியருளுவதனையும் காண்க. (1521 - 1522 - புரா. 563-564- 565)

உணர்த்துவார் - முற்றெச்சம். முன் உணர்த்துவார் - (2103) - வள்ளலார் - என அருள்செய்ய - உணர்ந்து பின் - (2104) - ஆளியார் - அருள்செய்து தொழா முனம் - இருள் - நீங்கலும் - (2105) - எழுந்தனர் (2106) - என்று இந்நான்கு பாட்டுக்களையும் தொடர்ந்து முடித்துக் கொள்க.

இத்தலையவர்-என்பதும் பாடம். **205**

2104. பொருளுரை: அள்ளல்...வள்ளலார் - சேறுபொருந்திய நீர்வளமுடைய வயல்கள் சூழ்ந்த திருவரத்துறையில் எழுந்தருளிய வள்ளலாராகிய சிவபெருமான்; "நாம்...செய்வாய்" என - "நாம் மகிழ்ந்து அளித்தருளும் இந்தச் சிவிகை முதலாயினவற்றை ஏற்றுக் கைக்கொள்ளுதல் பொருத்தமுடைத்தாகும்; (ஆதலின்) அவற்றை ஏற்றுக் கைக்கொண்டு உரியபடி செலுத்துவாயாக!" என்று; உள்ள...பின் - உள்ளவாறு அருளிச்செய்ய அறிந்து துயில் நீங்கிய பின்பு;

விளக்கவுரை: அள்ளல் நீர்வயல் - அள்ளல் - சேறு; அள்ளலுடைய நீர், வயலுக்குச் செழிப்பும் பயிருணவும் தருவது என்பது உழவு நூலுண்மை. நீர்ச் செழிப்புக் குறித்தது. "அன்னமாடுந் துறைநீர்" (2092) "கடும்புனல் நிவாமல்கு கரைமேல், " "பொன்னுந்தி வருபுனல்" என்பன வாதியாகப் பதிகப்பாட்டுத் தோறும் பிள்ளையார் நிவாநதியின் நீர்ச்சிறப்பின் தொடர்பு பற்றியே இத்தலத்தைக் கூறியருளிய குறிப்பினை ஆசிரியர் எடுத்துக் காட்டியவாறு காண்க.

2105. சண்பை யாளியார் தாங்கண்ட மெய்யருட்
பண்பு தந்தையார் தம்முடன் பாங்கமர்
தொண்ட ருக்கருள் செய்து தொழாமுனம்
விண்பு லப்பட வீங்கிரு ணீங்கலும், **207**

வள்ளலார் - தற்பயன் குறியாது கொடுத்தலும் கேளாது கொடுத்தலும் உலகமுய்யக் கொடுத்தலும் முதலிய கொடைச்சிறப்புக்களின் குறிப்பு.

நாம் மகிழ்ந்தளிக்கும் அவை *- அவை "முத்த நற்சிவிகை முதலியன" என்று முன் பாட்டிற் கூறிய அவை. முன் கூறியதனால் இங்கு அவை என்று சுட்டிய மட்டிலமைந்தார்.*

கொள்ளல் ஆகும் *-* ***கொள்ளல்*** *- மாறாது ஏற்றுக்கொள்ளுதல்.* ***ஆகும்*** *- பொருத்த முடையதாகும். உலகுக்கு ஆக்கஞ்செய்யத் தக்க செயலாகும் என்பதுமாம்.*

கொண்டு உய்த்தல் செய்வாய் *-* ***கொண்டு*** *- ஏற்றுக்கொண்டு-கைக்கொண்டு - உய்த்தலைச் செய்வாய் என்க.*

உள்ளவாறு *- செயல் உள்ளபடியினை - தமது திருவுள்ளம் இருந்தபடியை; திருவுள்ளக்கிடையினை - என்றலுமாம்.*

உணர்ந்த *- உணர்த்துவார் (2103) - அருள்செய்ய - அதனால் உணர்ந்த - என்க. "உணர்த்த உணர்தலின்" (போதம் - 3); அவ்வாறிறைவர் அருளியதனை அறிந்த. உணர்ந்த - இந்நினைவோடு துயிலுணர்ந்த என்றும் இரட்டுறமொழிந்து கொள்க.* *206*

2105. ***பொருளுரை:*** *சண்பை...பண்பு - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் தாம் கனவிற் கண்டுணர்ந்த மெய்யருளின் தன்மையினை; தந்தையார்...அருள்செய்து தொழாமுனம் - தாதையாரோடும் பக்கத்தில் அமர்ந்து இருந்த திருத்தொண்டர்களுக்கும் அருளிச்செய்து திருவருளைத் தொழுவதன் முன்பே; விண்..நீங்கலும் - முன்னர்த்திணிந்து மூடிய இருள், வானம் வெளிப்படத் தோன்றும்படி நீங்கவே;*

விளக்கவுரை: சண்பை ஆளியார் - சண்பை *- சீகாழியின் ஒன்பதாவது பெயர். ஆளி - ஆள்பவர்; தலைவர். ஆளியார் - சிங்கம்போன்றவர் என்றலுமாம். கண்ட - கனாவில் அறிந்த.*

மெய் அருட்பண்பு *- உள்ளவாறருளிய தன்மை; அருள் - அருளிய சிவிகை முதலியவையும், அருளிய கனாவின் பொருளும். பண்பு-அவற்றின் பெருமை; மெய்-ஏனைய கனாக்கள் போலாது மெய்த்தன்மைப் பயன் தருவது என்பது குறிப்பு.*

தொண்டர் - "சுற்று நீடிய தொண்டர்கள் போற்றிட - மாதவத்தோருடன் மேவினார்" (2091);

அருள்செய்து - எடுத்துச் சொல்லியருளி.

தொழாமுனம் *- திருவருளினைத் தொழாமுன். முன் - விரைவு குறித்தது.*

2106. மாலை யாமம் புலர்வுறும் வைகறை
வேலை செய்வினை முற்றிவெண் ணீறணி
கோல மேனிய ராய்க்கைம் மலர்குவித்
தேல வஞ்செழுத் தோதி யெழுந்தனர். 208

வீங்கிருள் விண்புலப்பட நீங்கலும் - என்க. **வீங்குதல்** - செறிதல். முன்னம் விண்புலப்படாதபடி செறிந்த. **நீங்குதல்** - வலி குறைதல் என்ற பொருளில் நின்றது. இதனால் பிள்ளையாருக்குக் கனவில் இறைவரது அருள் நிகழ்ந்த நேரம் வைகறைப் பொழுது என்றதாம்.

பேரருள் - மெய்ப்பொருள் - தொழுமுனம்-எனபனவும் பாடங்கள். 207

2106. பொருளுரை: வெளிப்படை - மாலையின் பின் இரவின் யாமமும் தீர்ந்து பொழுது புலரும் வைகறைப்பொழுதில் செய்யும் கடன்களை முடித்து வெள்ளிய திருவெண்ணீற்றினை அணிந்த சிவக்கோலமாகிய அழகிய திருமேனியாராகிக், கைம்மலர்களைச் சிரமேற் கூப்பிப், பொருந்தும்படி திருவைந்தெழுத்தினை ஓதிக்கொண்டெழுந்தருளியிருந்தனர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை: மாலை யாமம் புலர்வுறும் வைகறை - மாலையின் பின் முறையாகவரும் யாமமும் சென்று, பொழுது புலரும் காலமாகிய வைகறைப்போது. **மாலை - யாமம் - வைகறை** - என்பன சிறுபொழுதைந்தனுள் பகலின் பின்னும் இரவின் முன்னும் உள்ளது **மாலை; யாமம்** - நடுஇரவு; **வைகறை** - விடியல் - புலரி - என்பன. "வைகுறு விடியல்" (தொல் - பொருள் - அகத். 8); ஆசிரியர் மாதவச்சிவஞான முனிவர் முதற் சூத்திர விருத்தியுள் உரைத்தவை பார்க்க. **புலர் வுறும் வைகறை** என்றதும் கருதுக. "வைகறை யெழுந்து போந்து" (559) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

மாலை யாமம் வைகறை வேலை - என்ற மூன்று பொழுதுகளையும் முறையே கூறியது முன் "வெய்யவன் சென்று மேல்கடல் வீழ்ந்தனன்" (2090) என்று பிள்ளையார்பால் சரித நிகழ்ச்சியைக் கூறிப் போந்த முறையினைத் தொடர்ந்து சரிதம் செல்வதற்கென்க. மேல்வரும்பாட்டில் இம்முறையினையே தொடர்ந்து **வந்தெய்தினன் வெய்யவன்** - (2107) என்று எற்பாடு என்ற சிறுபொழுதினைக் கூறுதலும் காண்க.

வேலை - பொழுது; வேலையில் என்க. ஏழனுருபு தொக்கது.

வேலை செய்வினை - விடியலில் எழுந்தவுடன் செய்யத் தக்க நியமங்கள். காலைக் கடன்கள். **முற்றி** - முற்றச் செய்து.

வெண்ணீறணி...ஓதி - திருவருட் பரிசாயின பிரசாதங்களை வழிபட்டு வரவேற்கு முறையால் ஒழுகும் மரபு உணர்த்தப்பட்டது.

2107. போத ஞானப் புகலிப் புனிதரைச்
சீத முத்தின் சிவிகைமே லேற்றிடக்
காதல் செய்பவன் போலக் கருங்கடன்
மீது தேரில்வந் தெய்தினன் வெய்யவன். **209**

கோல மேனியராய்-கோலம் - அழகு குறித்தது. முத்துச்சிவிகையினைக் கண்டு பிள்ளையார் "வெண்ணீற்றொளி போற்றி - நின்று - அஞ்செழுத்தோது" (2114) வதும் காண்க.

ஏல அஞ்செழுத்தோதி-ஏலுதல் - பொருந்துதல்; "அஞ்செழுத்தோதி" (1635) என்ற விடத்துரைத்தவை பார்க்க. மேல் "அஞ்செழுத்தோதி" என்று (2174-ல்) கூறுவதுமிக்கருத்து.

எழுந்தனர் - எழுந்தருளியிருந்தனர். எழுந்து அரத்துறை நோக்கிப் போகத் தொடங்கினர் என்றலுமாம். *208*

2107. பொருளுரை: போத ஞானப்புகலிப் புனிதரை - போதஞானம் பெற்ற சீகாழியில் வந்தவதரித்த தூயராகிய பிள்ளையாரை; சீத...போல - குளிர்ந்த முத்துச்சிவிகையின் மேலே கண்டு கும்பிட மிக்க அன்பு செய்பவனைப்போல; வெய்யவன் - சூரியன்; கருங்கடல்...எய்தினன் - கரிய கீழைக்கடலின்மேல் தனது தேரில் வந்து தோன்றினான்.

விளக்கவுரை: இச்செய்யுள் தற்குறிப்பேற்ற வணி.

வெய்யவன் கருங்கடல் - வந்து - எய்தினன் - "வெய்யவன் சென்று மேல் கடல் வீழ்ந்தனன்" (2090) என முன்கூறிய அணி நயத்தினையே தொடர்ந்து கொண்ட தற்குறிப்பேற்ற நயம்பட, அவ்வாறு அஞ்சினான்போலச் சென்று மேல் கடலில் வீழ்ந்த அவ்வெய்யவன், காதல் செய்பவன்போலக் கீழ்கடலில் வந்து தோன்றினான் என்று கூறியபடி. வெய்யவன் - என ஈரிடத்தும் ஒரு பெயரால் கூறிய கருத்துமிது; முன் வீழ்ந்த அந்த என முன்னறிசுட்டு வருவிக்க. சென்று வீழ்ந்தவன் தேரில் வந்து எய்தினன் என்றது முன்னர்ப் பிழைக்கஞ்சிய தன்மையும் இங்கு அன்பு செய்து உய்யும் ஆர்வத்தின் மேன்மையும் குறித்தது. வெய்யவனும் (தீயவனும்) காதல் செயத்தக்க புனிதமுடையார் என்ற குறிப்பும் காண்க.

கருங்கடல் - கீழ்கடல். முன்னர் மேல்கடல் - என்ற அதனின் இது வேறாயது என்பார் வந்து என்றார். நீந்தி வந்து என்ற குறிப்பும்பட நின்றது. மீது - பெருமிதக் குறிப்பும் தருவது.

சிவிகைமேல் ஏற்றிட - சிவிகையின் மேல் கண்டு உயர்த்திக் கும்பிட என்க. ஏற்றுதல் - உயர்த்துதல். இடுதல்-வணக்கத்தைச் செலுத்துதல். "ஏற்றற்கண்ணும்" (தொல்.பொ.147). முன்னர்ப் பிள்ளையார் பாததாமரை நோவ நடந்து சென்றதைக் கண்டு வழிபட்டவன் இப்போது சிவிகை மேற்கண்டு வணங்கியிட ஆர்வம் கொண்டனன். பிள்ளையாருடன் வந்தார்க்குத் தன்னால் எய்தும் வெம்மை யிளைப்பினை அஞ்சிச் சென்றவன்

2108. ஆய போழ்தி னரவெனும் மார்ப்புடன்
றூய முத்தின் சிவிகை, சுடர்க்குடை,
மேய சின்னங்கள் கொண்டுமெய் யன்பரோ
டேய வந்தணர் தாமெதிர் தோன்றினார். **210**

பிள்ளையாரைச் சிவிகையின்மேல் ஏற்றி வணங்கி அதற்குத் தீர்வு தேடுவான்போல **என்ற** குறிப்பும் **காதல் செய்பவன்** என்றதனாற் பெறப்படும்.

சீதமுத்தின் சிவிகை - சீதம் - சூரிய வெப்பம் தாக்காத நிலைக்குறிப்பு.

போதஞானப் புனிதர் - சிவஞான போதம் பெற்ற புனிதர் என்பாருமுண்டு.

போதஞானம் - போதமாவது ஞானத்தின் மேற்பட்ட அனுபவநிலை என்பாருமுண்டு. உலகுக்குணர்த்தும் பொருட்டுப் பெற்ற அமுதஞானம் என்க.

வெய்யவன் எய்தினன் - இது “எற்பாடு” என்னும் சிறுபொழுது. முன் பாட்டிற் கூறிய வைகறைக்குப் பின் வருவது. **எற்பாடு** - நாள் வெயிற்காலை. **எல் - ஞாயிறு; படுதல் -** உண்டாதல்; (சூத்திர விருத்தி). **209**

2108. **பொருளுரை:** வெளிப்படை. அவ்வாறாகிய பொழுதில் **அர! அர! என்னும்** முழக்கத்துடனே, தூய முத்தின் படியினால் மன்னிய சிவிகையினையும், ஒளியுடைய குடையினையும், பொருந்திய சின்னங்களையும் தாங்கிக்கொண்டு, மெய்யன்பர்களுடனே பொருந்திய அந்தணர்கள் தாமும் அவ்வாறு எழுந்த பிள்ளையாருக்கெதிரே வந்து தோன்றினார்கள்.

விளக்கவுரை: ஆயபோழ்தில் - பிள்ளையார் எழுந்ததும், வெய்யவன் தோன்றியதும் உளவாகிய அப்போழ்தில்.

அர எனும் ஆர்ப்பு - “அருளால் அவை கொண்டு” (2101), “அருளால் தாங்கி” (2102) என்றபடி அருளாணையின்படி வருபவர் சிவன் அருளை வழுத்தி ஆர்த்து வந்தனர். அரவென்று சிவநாமம் ஆர்த்தல் இவ்வாறுள்ள நிகழ்ச்சிகளில் அருள் வெளிப்பாடு கண்டு அருளை வழுத்தும் முறை. “சிவம்பெருகு மொலிநிறைத்தார்” (1448).

சிவிகை - குடை - சின்னங்கள் - என மூன்றையும் விரித்துக் கூறியது இவை பிள்ளையாரது திருக்கண்களின் முன் காட்சிப்படும் முதல் இடம் ஆதலின். **சின்னங்கள்** என்ற பன்மையினால், காளம், சின்னம், தாரை என மூவகையும் உணர்த்தப்பட்டன.

அன்பரோடு ஏய அந்தணர் - “மறையோர்” (2094). “அடியாருடன் - கோயிலுள்ளார்” (2097) என முன் இறைவர் கனவில் உணர்த்தியருளியவர்களாகிய அரத்துறை வாழ்வார்.

ஏய - முதலில் உணர்த்தப்பட்ட சிறப்புக் குறித்தது. “மறையவர்” (2100-2102) பார்க்க.

எதிர் - எழுந்த பிள்ளையார்க்கெதிரில். **210**

2109. வந்து தோன்றிய வந்தணர் மாதவர்
கந்த வார்பொழிற் காழிநன் னாடர்முன்
"அந்த மில்சீ ரரத்துறை யாதியார்
தந்த பேரருள் தாங்குவீ" ரென்றனர். **211**

2109. பொருளுரை....வெளிப்படை. வந்து எதிரில் தோன்றியவர்களாகிய அந்தணர்களும் மெய்யன்பர்களும், மணம் மிக்க பொழில்களையுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையார் திருமுன்பு நின்று, அழிவில்லாத சிறப்பினையுடைய திருவரத்துறை யிறைவர் தந்த இப்பேரருள் வடிவாகிய பொருள்களை ஏற்றுக்கொள்வீராக! என்று விண்ணப்பித்தனர்.

விளக்கவுரை: "அந்தமில்சீர்...தாங்குவீர் *- இது வந்தவர்களாகிய அரத்துறை அந்தணர்களும் அன்பர்களும் பிள்ளையாரை நோக்கிக் கூறியது.*

அந்தமில்சீர் *- என்றது* ***அரத்துறை*** *- என்பதனுடனும்,* ***ஆதியார்*** *- என்பதனுடனும். பேரருள் - என்பதனுடனும் தனித்தனிக் கூட்டி யுரைக்க நின்றது. முதனிலைத்தீபம். அந்தம் - அழிவு.*

தந்த பேரருள் *- அருளினாற்றந்த பொருள்கள் மேனின்றது. அருளினாற்றந்த பொருள்களை அருள் என்றது உபசாரம், "அரத்துறை யடிகடம் மருளே" என்று பதிகத்துட் கூறுவதும் காண்க. பேரருள் - வேறு எவருக்கும் வைக்காத அருளின் சிறப்பு; பொருள்களின் சிறப்பும் அவற்றை அருளிச்செய்தனுப்பிய வகையின் சிறப்பும் குறித்ததுவுமாம். அருள் தாங்குவீர் எனவே, அருளின் சிறப்பைப் போற்றும் "அருளே" எனும் பதிகம் பாடினார்.*

தாங்குவீர் - தாங்குதல் *- ஏற்றுக்கொண்டு உரியபடி செலுத்துதல் என்ற பொருளில் வந்தது. இவற்றைத் தாங்கும் வன்மை உமக்கே உண்டு என்ற குறிப்பும் காண்க. 211*

2110. பொருளுரை: *என்று.....தொழுதிட - முன் கூறியபடி சொல்லித் தங்களுக்கு இறைவர் அருள்செய்த வரலாறுகள் ஒன்றும் ஒழியாது எடுத்துக்கூறித் திருமுன்பு நின்ற துதித்துத் தொழுதனராக; நேர்ந்தது...வணங்கினார் - "இவ்வாறு நிகழ்ந்து பொருந்திய செயல் திருவம்பலத்தில் ஆடும் அருட்கூத்தருடைய திருவருளேயாகும்" என்று பிள்ளையார் வணங்கினார்.*

விளக்கவுரை..என்று *- முன் பாட்டிற் கூறியபடி 'அந்தமில்...தாங்குவீர்" என்று கூறி.*

தங்களுக்கு ஈசர் அருள்செய்தது *- மனைகடோறும் மறையவர்க்கும், (2093) அடியாருடன்-கோயிலுள்ளார்க்கும் (2093) தனித்தனிக் கனவில் இறைவர் தோன்றி அருளிச்செய்த செயல்களும், திருக்காப்பு நீக்கித் தாம் கண்டவையும் பிறவும்.* ***செய்தது*** *- சாதி ஒருமை - அருளிய செயல்களும் சொற்களும் ஆகிய நிகழ்ச்சிகளின் தொகுதி.*

ஒன்றும் ஒழியாமை *- எல்லாவற்றையும். அங்கு - பிள்ளையாரிடத்து வரலாறுகளை எல்லாம் அறிவிக்கும் இடத்து - அறிவித்தற்கண்.*

2110. என்று தங்களுக் கீச ரருள்செய்த
தொன்று மங்கொழி யாமை யுரைத்துமுன்
னின்று போற்றித் தொழுதிட, "நேர்ந்தது
மன்று ளாரரு" ளென்று வணங்கினார். **212**

2111. "மெய்ம்மை போற்றி விடாத விருப்பினாற்
றம்மை யுன்னும் பரிசுதந் தாள்பவர்
செம்மை நித்தில யானச் சிறப்பருள்
எம்மை யாளுவப் பானின் றளித்ததே:" **213**

"நேர்ந்தது மன்றுளார் அருள்" என்று - இயல்பு குறித்தது. இது பிள்ளையார் ஏற்றுக்கொண்டபோது சொல்லியது. "அவனருளா லல்ல தொன்றையுஞ் செய்யா ராகி", "ஏகனாகி யிறைபணி நிற்க" என்ற சிவஞான போதம் பத்தாஞ் சூத்திரக் கருத்தினை இங்கு வைத்துக்காண்க. திருப்பதிகங்கள் தோறும் பலன் கூறுமிறுதிப்பாட்டில் பிள்ளையார் தம்மை பற்றிக் கூறும் பகுதிகள் இக்கருத்தினைக் கொண்டு காணற் பாலன. "கழலேபேணும்", "அடியலாற்பேணா" என்பனவும் இக்கருத்து. இறைவர் தம்பால் கனாவில் அருளிய திறம் அவர்களிடத்துப் பிள்ளையார் அறிவித்த குறிப்புமாம். இக்குறிப்பில் நம்பாலும் நேர்ந்தது - அருள் - என்க. நேர்தல் - கொடுத்தல்; "கரவாளை நேர்ந்தா னிடம்போலும்" (பிள். காழி. குறிஞ்சி - 8).

மன்றுளார் - இவ்வாறு தமக்கு அருளிய வகையாற் "சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்"ப் பொதுவினின்று அருளைந்தொழில் செய்பவர் என்பது குறிக்க இங்கு ***மன்றுளார்*** என்றார்.

வணங்கினார் - திருவருளை வணங்கினார். அருளால் வந்த பொருள்களையும் அருளால் அவை தாங்கி வந்த அந்தணர் முதலிய திருக்கூட்டத்தவர்களையும் என்றலுமாம்.

தொழுதுடனேர்ந்தது-என்பதும் பாடம். ***212***

2111. **பொருளுரை**...மெய்ம்மை...ஆள்பவர் - மெய்ம்மை போற்றிப் பற்றுவிடாத விருப்பத்தினாலே தம்மை நினைத்தேயிருக்கும் தன்மையைக் கொடுத்தாட் கொள்ளும் இறையவர்; செம்மை...அளித்ததே - செம்மை செய்யும் முத்துச்சிவிகையின் சிறப்பினை அருளுதல், எம்மைத்தம் அடியாராக உவந்து ஆட்கொள்ளும் பொருட்டு இன்று அளித்த பேறுதான் என்னே!

குறிப்பு:- இவை இவ்வாறன்றிப் பல பதிப்புக்களிலும் வைப்புமுறை மாறியுள்ளன "மெய்ம்மை போற்றி" என்ற 2111-ம் பாட்டு "எந்தை யீசன்" 2112-ம் பாட்டின்பின் சில பதிப்புக்களிலும், "பொடியணிந்த" என்ற 2113 ம் பாட்டின்பின் சில பதிப்புக்களிலும் காணப்படுகின்றது. இவ்வாறு மாறியதுடன் இப்பாட்டு முன்னே ஏனையவற்றொடு பொருட் பொருத்தமின்மை, இன்றியமையாது வேண்டப்படாமை, பொருள் சிறவாமை, இஃதன்றியே பொருள் தொடர்ந்து செல்லுதல் முதலிய ஐயப்பாடுகளுக்கும் இடந்தருகின்றது.

2112. "எந்தை யீச" னென்றெடுத் "தின்னருள்
வந்த வாறுமற் றிவ்வண மோ?" வென்று
சிந்தை செய்யுந் திருப்பதி கத்திசை
புந்தி யாரப் புகன்றெதிர் போற்றுவார், 214

விளக்கவுரை....இப்பாட்டுப் பிள்ளையாரது கூற்றாகக் கூறப்பட்டது.

மெய்ம்மை போற்றி - கள்ளமின்றி உள்ளவாறு போற்றி. 'கரவாடும் வன் னெஞ்சர்க் கரியானைக் கரவார்பால், விரவாடும் பெருமானை" (தேவா); மெய்ம்மை யாகப் போற்றி; மெய்ந்நூல் வழிபோற்றி என்றலுமாம். "பொய்யஞ்சி வாய்மைகள் பேசி" (தேவா).

விடாத விருப்பு-இடைவிடாது - இடையறாது-செல்லும் விருப்பம். "மறக்குமா றிலாத வென்னை" (தேவா.) - "புகழ் புரிந்தார்" (தேவா.)

தம்மை உன்னும் பரிசு தந்து - அவரை நினைக்குந் தன்மையும் அவரே தந்தாலன்றி நிகழாது என்றது. "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவா). "என்னை நினைந்தடிமை கொண்டென் னிடர்கெடுத்துத், தன்னை நினையத் தருகின்றான்" (11 ம் திருமுறை - திருநாரையூர் விநாயக ரிரட்டைமணி மாலை - 1) தசகாரியங்களுட் பத்தாவதாகிய சிவபோகத்தைத் தருதல்.

ஆள்பவர் - ஆள்பவராதலின் அளித்ததே என்று அளித்தற்குக் காரணங் கூறும் வகையால் உடம்பொடு புணர்த்தி ஒதினார்.

யானம் - இங்குச் சிவிகை என்ற பொருளில் வந்தது. எம்மை - அடியார்களை உள்ளிட்ட உளப்பாட்டுப் பன்மை.

ஆள் உவப்பான் - ஆளாகக்கொள்ள; அடிமைத் தன்மையினை உவந்து ஏற்றுக் கொள்ளும் வகையால்.

இக்கருத்துட் கொண்டு பதிகம் போற்றும் சிறப்பை மேலே கூறுகின்றார்.

எந்தையீச னெனவெடுத் திவ்வருள்-என்பதும் பாடம். 213

2112. பொருளுரை...எந்தை...எடுத்து - "எந்தை ஈசன்" என்று தொடங்கி; இன்னருள்...என்று - இறைவரது திருவருள் வந்த வழிதான் இவ்வண்ணமோ? என்று; சிந்தை...போற்றுவார் - சிந்திக்கும் திருப்பதிகத் திசையினை புந்தி நிறைந்து கொள்ளப் புகன்று எதிர்நின்று போற்றுவாராகி,

விளக்கவுரை... எந்தை ஈசன் - இது பதிகத்தொடக்கம். இப்பதிகம் முத்துச்சிவிகை முதலாயினவற்றை முன்னிலையாக வைத்து அவற்றுள் திருநெல் வாயில் இறைவரது திருவருள் வெளிப்படக் கண்டு மாறன்பாடியிற் பிள்ளையார் எழுந்தருளிய திருமடத்தில் அருளப்பெற்றது.

2113. "பொடிய ணிந்த புராண னரத்துறை
யடிக டம்மரு ளேயிது வா" மெனப்
படியி லாதசொன் மாலைகள் பாடியே
நெடிது போற்றிப் பதிக நிரப்பினார். 215

"இவ்வருள் வந்தவாறு மற்று இவ்வணமோ?" *என்று - இது பதிகக்குறிப்பு.* ***"அருளே"*** *என்பது பதிகப்பாட்டுத்தோறும் வரும் மகுடம். அதனை அருள் வந்த வழி* ***இதுவோ?*** *என்று பொருள் கொள்ளுக என்பது கருத்து.*

சிந்தை செய்யும் திருப்பதிகம் *- "ஏத்திச் சிந்தை செய்பவர்க் கல்லால்"* ***என்ற*** *பதிகப்பாட்டின் குறிப்பு.* ***சிந்தை செய்தல் - திருவருளின் பெருமையை இடைவிடாது எண்ணி எண்ணித் துதித்தல்*** *என்ற பொருளில் வந்தது.*

பதிகத்து *- பதிகத்தின் கண். ஏழனுருபு தொக்கது.*

இசை *- இறைவனது புகழ்கள்;* ***இசை*** *- கீதம் என்பாருமுண்டு.*

புந்தி ஆரப் புகன்று *- மனம் செல்லுமளவும் செலுத்தி; உள்ளம்* ***நிறைவு*** *கொள்ளும்வரை துதித்து. சீரும் செல்வமும் ஏத்தல் - சிவனெனப் பேணிப்* ***பணிகலந்து*** *செய்தல் - உன்னி நைதல் - உருகி நைதல் - உள்குளிர்ந் தேத்திப் பரவி நைதல் -* ***வணங்கி*** *நைதல் - பேணும் சீலமுடைமை - போற்றுதல் - வணங்குதல்* ***என்றித்*** *தன்மையுடையாராயினாரே அருள்பெறத் தக்கவர் - அடியேன் பெற்ற* ***திவ்வணமோ?*** *என்ற குறிப்புப்படப் பதிகத்துள் வருவன காண்க.*

எதிர் *- அருட்பொருள்களை இறைவரது முன்னிலையாகக் கொண்டு* ***அவற்றுக்*** *கெதிரில்.*

போற்றுவார் - போற்றி நிரப்பினார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 214

மற்றெவ்வணமோ *- என்பதும் பாடம்.*

2113. ***பொருளுரை:*** *பொடி....என - திருநீற்றினை அணிந்த* ***பழையோராகிய*** *திருவரத்துறை இறைவரது திருவருளே இதுவாகும் என்று; படி....பாடியே* ***ஒப்பில்லாத*** *சொல் மாலைகளைப் பாடியே; நெடிது...நிரப்பினார் - நீளத் துதித்துத் திருப்பதிகத்தை நிறைவாக்கினார்.*

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை: "பொடி...இதுவாம்" *என-இதுவும் முன்பாட்டிற் கூறிய* ***பதிகக்*** *குறிப்பினைத் தொடர்ந்து சிந்தை செய்த குறிப்பு.* ***அருள் வந்தவாறு இவ்வணமோ? என்று*** *சிந்தித்தார். இது அருளேயாம் என்று துணிந்த படியாம். பொடி - திருநீறு - "பொடிநுகரும் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாக" (தேவா). புராணன் - பழமையானவர். இது அருளாம்-என்க. இது-இவ்வாறு நிகழ்வித்தல். அருளே - என்றது பதிகம். இதுவாம் என்பது இசையெச்சம்.*

அரத்துறை அடிகள் தம்மருளே - "நெல்வாயி லரத்துறை யடிகடம் மருளே" என்ற பதிகத்தின் மகுடத்தைப் போற்றி அருளே இது எனப் பொருள் முடித்துக் காட்டியபடி.

படி - ஒப்பு; ***மாலைகள்*** - பதிகப்பாட்டொவ்வொன்றும் தனித்தனி **"அருளே"** என்ற முகப்புக்கொண்ட சொன் மணிமாலையாம். ஆதலின் மாலைகள் என்று பன்மை யாற் கூறினார். இறைவரருள் பெறுதல் மக்கட் பிறப்பின் உறுதிப்பொருளாகும். அவ்வாறு அருள்பெறும் வழியைத் தனித்தனி ஒவ்வொரு பாட்டிலும் "செய்பவர்க் கல்லாற் - கைகூடுவதன்றால்" என்று எதிர்மறை முகத்தால் எடுத்துபதேசித்து உறுதி கூறுதல் குறிக்கப் **படியிலாத** என்றார். சிவனருளானது சிவிகையில் உலகெலாம் விளக்கும் ஆசாரியர் உருவத்திற் காட்டியளிக்கும் பேறு இனி நிகழ்வதாதலும் குறிப்பு. "எண்டிசைக்கும் விளக்கிவை யாமென" (2100) என்று தொண்டர்கள் கண்ட குறிப்பும் இங்கு வைத்துக் காண்க.

நெடிது போற்றி - நெடுமையாவது போற்றிய வகைகளின் அளவின் பெருமை. சிந்தை செய்யும் - என்றும், புந்தியார - என்றும் (2112) முன் உரைத்தவையும் இக்குறிப்பு. சிவனுக்கு அன்பு செய்து அருள்பெறுந்திறம் அளந்து போற்ற வியையாமையின் **நெடிது** என்றார். "நீண்டு நின்ற நீளம் போற்றி" (கோயினான்-40) "உரையின் வரையும் பொருளி னளவும், இருவகைப் பட்ட வெல்லையும் கடந்து" (மேற்படி 1). பதிகப்பாட்டுத்தோறும் அன்பு செய்யும் திறங்களைப் பலவாறும் பன்னிப் போற்றிய திறமும், "அருளே, முறைமையாற் சொன்ன பாடல்" (பதிகம் - 11) என்றதும் கருதுக. "என்னை! அம்பல நிறைந்தார் தொண்ட றறிவதற் கரியார்" (604).

புராண ரரத்துறை-என்பதும் பாடம். *215*

திருநெல்வாயி லரத்துறை

திருச்சிற்றம்பலம் **பண் - பியந்தைக்காந்தாரம்**

எந்தை யீசனெம் பெருமா னேறமர் கடவுளென் றேத்திச்
சிந்தை செய்பவர்க் கல்லாற் சென்றுகை கூடுவ தன்றாற்
கந்த மாமல ருந்திக் கடும்புன னிவாமல்கு கரைமேல்
அந்தண் சோலைநெல் வாயி லரத்துறை யடிகடம் மருளே. (1)

கறையி னார்பொழில் சூழ்ந்த காழியுண் ஞானசம் பந்தன்
அறையும் பூம்புனல் பரந்த வரத்துறை யடிகடம் மருளை
முறைமை யாற்சொன்ன பாடல் மொழியு மாந்தர்தம் வினைபோய்ப்
பறையு மையுற வில்லை பாட்டிவை பத்தும்வல் லார்க்கே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு;- முன் 2111-2112-2113 ல் உரைத்தவை பார்க்க. அரத்துறை அடிகடம்மருள் வந்தவாறு இவ்வணமோ? அவர் அருளே இதுவாம். சிந்தை செய் பவர்க்கல்லால் அவர் அருள் கைகூடுவதன்று.

பதிகப்பாட்டுக் குறிப்பு;-(1) சிந்தை செய்பவர்க்கல்லாற் - கைகூடுவதன்று - எதிர்மறையாற் கூறியது உறுதி குறித்தற்கு. நிவாமல்கு கரைமேல் - பாட்டுத்தோறும் நதியின் தொடர்பு பற்றிக் கூறியது நீர்வளமும் சிறப்பும் உணர்த்தற்காம். "அன்ன மாடுந் துறைநீர்" - (2092) "அள்ள னீர்வயல் சூழும்" (2104) என்று ஆசிரியர் குறித்தது மிக்கருத்து. எந்தை ஈசன் - கால் நொந்தன என்று ஒரோ வழிப்பியலின் மேற்கொண்ட தந்தையினும், எப்போதும் நோவுறாது சிவிகை தந்தவர் தந்தையினும் மேலான தந்தையும், இறைவருமாவார் என்பது குறிப்பு. அருளே - அருளே இதுவாம் என்க. (2113). பாட்டுத்தோறும் இவ்வாறே முடிக்க. அருளை முறைமையாற் சொன்னபாடல் (11) என்றதும் காண்க. சென்று கைகூடுவது - முன் சென்று தானே பொருந்துவது. சரிதக்குறிப்பு.-(12) ஈரம் - கங்கையினால் உள்ள குளிர்ச்சி. சிதடர் - கீழ்மக்கள். "-செம்மைநல மறியாத சிதடர்" (திருவா - அச் - பதி -9). செல்வது - "சென்று கைகூடுவது" (1) - (3) பிணி-பிணித்தல்-கட்டுதல். முதனிலைச் தொழிற்பெயர். பணிகலந்து செய்தலாவது மனமும் வாக்கும் கலந்து பணி செய்தல்.-(4) துன்ன ஆடை - தைத்த உடை. "சின்னச்சீரை துன்னற் கோவணம், அறுதற் கீளொடு பெறுவது புனைந்து..நின்செல்வக் கடவுட்டொண்டர்" (திருவிடை - மும்-கோ - 7). உன்னி நைபவர்-சிவனது அருளை நினைந்து நினைந்து மனமுருகி நைதல் அன்பினிலக்கணம். "உருகிநைபவர்" (5); "பரவிநைபவர்' (6); "வணங்கிநைபவர்" (9) ஒன்றும் - ஒருசிறிதும். ஒன்றாலும் - (5) வெருகு - மரநாய்; காட்டுப்பூனை என்றலுமாம்.-(6) குரவம் - குரா என்பது "குறியதன் கீழாக் குறுகலும்" என்றபடி குர என நின்று அம் சாரியை பெற்றுக் குராமரம் என்ற பொருள் தந்தது. அரவம் - ஓசை-(7) பேணும் சீலம் - சிவனைப் பேணுதலே சீலம் என்பது. ஆலும் - அசையும்; ஆலி - நீர் என்று கொண்டு ஆலியினையுடைய என்றலுமாம். -(8) அழுந்தும் - வேரூன்றிச் செழிக்கும்.-(9) நுணங்கும் - துவளும். அணங்கும் - செறிவினாற் பின்னிவளரும்;-(10) சாக்கியப்படுவார் - சாக்கியன் சமயத்துட் படுவோர். சமண்படுவோர் - சமணர்; - மற்றும்...பாவிகள் - ஏனைய புறச்சமயத்தோர். சிவனையடைந்து இன்பம் பெறும் நெறியிருப்பவம் பெறாது துன்படைகின்றாராதலின் பாக்கியப்படகில்லா என்றார். பாவிகள் - சிவனை நினையாமையும் மறத்தலும் இகழ்தலும் பாவமாம். ஆர்க்கும். ஓசை செய்யும். பாட்டுத் தோறும் கரைமேல் சோலை குறித்தது நீர்வளமும் நிலவளமும் குறித்தற்கு. கறை - நிழல்; இருள். பூம்புனல். நீரின் செழுமையும், மெல்லிய ஓட்டமும், இருகரைசோலை மலர்கள் நிறைதலும் குறித்தபடி; முன் பாட்டுத்தோறும் கூறியவை காண்க.

தலவிசேடம்:-திருநெல்வாயில் அரத்துறை - III(I) பா.எண் 1420 பார்க்க.

2114. பொருளுரை:- வெளிப்படை ஒளி விளங்கும் முத்தின் சிவிகையினைச் சூழ்ந்து வலம் வந்து, நிலத்தின் மேல் வீழ்ந்து வணங்கி, (அதனுடைய) திருவெண்ணீற்றொளியைத் துதித்து நின்று, அது ஆதியாருடைய அருள் ஆதலால் திருவைந்தெழுத்தினை ஓதி. உலகெலாம் உய்யும்படி அதன்மீது ஏறியருளினர் (பிள்ளையார்).

2114. சோதி முத்தின் சிவிகைசூழ் வந்து, பார்
மீது தாழ்ந்து,வெண் ணீற்றொளி போற்றி,நின்,
றாதி யாரரு ளாதலி னஞ்செழுத்
தோதி யேறினா ருய்ய வுலகெலாம். **216**

விளக்கவுரை:- சோதிமுத்து - சோதி - ஈண்டுச் சிறப்பாய் அருள் ஒளி குறித்து நின்றது. கடைந்து தீட்டப்பட்டபோது ஒளிவிடும் ஏனை மணிகள் போலன்றி இயல்பில் ஒளி வீசும் என்ற குறிப்புமாம்.

இன் - இனிமையுடைய; இனிமையாவது உலகுக்கு உய்யும் வழிகாட்டும் பரமாசாரியர் எழுந்தருளும் தன்மை பெறுதல். துன்பங்கலவாத முத்தியின்பம் பெறத் துணைசெய்யும் கருவியாதல் குறிப்பு.

வெண்ணீற்றொளி போற்றி - வெண்மை ஒளி திருநீற்றின் ஒளியாகக் காணுதல் பெரியோர் இயல்பு. கழறிற்றறிவார் உவரேறிய வண்ணானது பொலிவை நீற்றின் பொலிவாகக் கண்டமை காண்க.

ஆதியார் அருளாதலின் - இக் காரணக்குறிப்பைச் சூழ்வருதல், தாழ்தல், போற்றுதல், நிற்றல், அஞ்செழுத்தோதுதல் என்ற வழிபாடு ஒவ்வொன்றுக்கும் கூட்டுக.

ஆதியார் - "அந்தம் ஆதி" என்றபடி உலகுக்கு நிமித்த காரணராய் அருள் செய்யும் முதல்வர் என்பது குறிப்பு.

அருள் - "அருளே" என்ற தேவாரக் குறிப்பு. அருளுருவம் - அருளப்பட்ட பிரசாதம்.

அஞ்செழுத்தோதி - அருளைத் துதிக்கும் முகத்தால் ஓதினார். அன்றியும் தல யாத்திரையிற் சிவிகையேறிச் சென்று தலங்களை வணங்கவும் உலகுக்கு அருளவும் புகும் இத்தனிப்பெருஞ் செயலை நிகழ்த்தத் தொடங்கும் இப்போழ்து இறைவர் திருநாமத்தைத் துதித்துத்தொடங்குதல் மரபும் ஆம். "அஞ்செழுத்தோதி" (1635) என்றவிடத் துரைத்தவையும் பார்க்க.

உய்ய உலகெலாம் - பிள்ளையார் சிவிகை ஏறியருளியதும் தம் பொருட்டன்று; உலகுய்யும் பொருட்டேயாம் என்பதும் வற்புறுத்தப்பட்டது.

உலகெலாம் - இறைவர் இப்புராணத்துக்கு எடுத்துக் கொடுத்தருளிய அருள் முதல் மொழியாகிய சிவமந்திரம். இதனை ஆசிரியர் இப்புராணத்திற்கு நடுநாயகமாகப் பதித்து வைத்தருளிய இடம் இது. முதற்பாட்டின்கீழ் "உலகெலாம்" என்ற விடத்துரைத்தவை பார்க்க. *216*

2115. பொருளுரை-தொண்டர்-அண்டர் ஆர்த்தனர் - ஆடியவர்கள் அர அர என்று முழக்கம் செய்தனர்; வேதங்கள் முழங்கின; பழமையான தேவர்கள் ஆரவாரித்தனர்; அகிலமும்...கொண்டல் ஆர்த்தன - உலகம் ஆர்த்தெழும்படி மேகங்கள் முழங்கின;

வேறு

2115. தொண்ட ரார்த்தனர்; சுருதிக ளார்த்தன; தொல்லை
யண்ட ரார்த்தன; ரகிலமு மார்ப்புட னெய்தக்
கொண்ட லார்த்தன; முழவமு மார்த்தன; குழுமி
வண்ட றாப்பொலி மலர்மழை யார்த்தது வானம்; 217

முழவமும் ஆர்த்தன - முழவங்களும் முழங்கின; குழுமி....வானம் - கூட்டமாகச் சேர்ந்து வண்டுகள் நீங்காத அழகிய மலர்மழை வானம் ஆர்த்துப் பெய்தது.

விளக்கவுரை: ஆர்த்தன - இதிலும், மேல் வரும் பாட்டிலும் சொற்பின் வருநிலை.

தொண்டர்கள் ஆர்த்தனர் - தொண்டர்களை முதலில் வைத்தது சிறப்புப்பற்றி; அருள் விளைவிற் றிளைப்போர் அவரே யாதலின்.

சுருதிகள் (ஆர்த்தன) வேதங்களை முழக்கும் வேதக் கூடங்கள் ஆகுபெயர். வேதங்களின் ஒலி இயம்புவோரின்றியும் தாமே முழங்கின என்ற பொருள், மேல் வரும் பாட்டில் **மறையின் கிளையுமார்த்தன** - என்றதனாற் பெறப்படும்.

தொல்லை - பழமை; தவத்தால் நீண்ட ஆயுள் பெறுதல் குறிப்பு. அவ்வப்போது சிலகாலம் சிவாபராதம் செய்த அசுரர்களால் தொல்லைப்படும் என்றதும் குறிப்பு. தேவர்களுள் படைப்புக் காலத்தில் தேவராகப் படைக்கப்பட்ட தேவச்சாதியர் என்றும், தமது தாளாண்மையால் தேவரானவர் என்றும் இருவகையினர் உளர். இவர்களை முறையே ஆஜாநதேவர் என்றும், கர்மதேவர் என்றும் வடநூலார் வழங்குவர். இங்குத் **தொல்லை அண்டர்** என்பது தேவச்சாதியிற் படைக்கப்பட்ட பழமையோர் என்றலுமாம்.

தொல்லை - என்பதனை நடுநிலைத் தீபமாக வைத்துச் சுருதிகளுடனும் கூட்டியுரைத்தலுமாம்.

அகிலமும்...கொண்டல் ஆர்த்தன - மழையின்றி மாநிலத்தார்க்கில்லை என்றபடி உலகுக்கு உதவிசெய்து செழிக்கச் செய்யும் கொண்டல் - மேகங்கள் - ஆர்த்தன.

அகிலமும் ஆர்ப்புடன் எய்த - மேக வோசை கண்டு அகிலமும் களிப்படைய.

முழவமுமார்த்தன் - கொண்டல் ஆர்த்ததற்கு எதிரொலிபோல முழவங்களும் முழங்கின."முழவதிர மழையென் றஞ்சி" (பிள் - தேவா - ஐயாறு-மேகரா) என்ற குறிப்புத்தரக் கொண்டலை அடுத்து முழவத்தை வைத்தார். ஆர்த்தன - முழக்குப்பவரின்றித் தாமே முழங்கின. "இயற்றுபவ ரின்றியு மியம்பு, மங்கல முழக்கொலி மலிந்த" (1931).

வானம் மலர்மழை ஆர்த்தது - என்க. வானம் (மேகம்) ஆர்த்து மலர்மழை பெய்தது. நீக்கப்பொருளில் வரும் ஐந்தனுருபுவிரிக்க. குழுமுதல் - கூடுதல். 217

2116. வளையு மார்த்தன; வயிர்களு மார்த்தன; மறையின்
கிளையு மார்த்தன; கிளைஞரு மார்த்தனர் கெழுவுங்
களைக ணார்த்ததோர் கருணையி னார்த்தன; முத்து
விளையு மாக்கதிர் வெண்குடை யார்த்தது மிசையே. 218

2116 . பொருளுரை...வளையும் - ஆர்த்தன - சங்குகளும் ஒலித்தன; வயிர்களும் ஆர்த்தன - கொம்புகளும் ஒலித்தன; மறையின் கிளையுமார்த்தன - வேதங்களின் சாகைகளும் ஆரவாரித்தன; கிளைஞரும் ஆர்த்தனர் - உறவினர்களும் ஆரவாரித்தனர்; கெழுவும் களைகண் ஆர்த்ததோர் கருணையின் ஆர்த்தன - (ஆன்மாக்களுடனாகக்) கூடியிருக்கும் உயிர்க்குயிராகிய சிவபெருமானது கருணையினாலே பிணிக்கப்பட்டன வாகிய; முத்து விளையும் மாக்கதிர் வெண்குடை மிசையே ஆர்த்தது - முத்துக்களினின்று வீசும் பெருங்கதிர்களுடன் விளங்குகின்ற வெண்குடை மேலே கவிக்கப்பட்டு ஆரவாரித்தது.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு பொருள்மேற் சென்ற ஒரு சேர முடிக்க நின்றன.

விளக்கவுரை: வளை *- சங்குகள் - "சங்கங்கள் முரன்றன" (1003) என்ற நிகழ்ச்சி மூர்த்திநாயனாரை யானை தன் பிடரியிற் கொண்டபோது நிகழ்ந்தமை நினைவு கூர்க. சங்கு முரலுதல் மங்கலங்களுள் ஒன்று.*

வயிர் *- ஊதுகொம்பு; நீண்டு வளைந்து வாயகன்ற வாச்சியவகை; கொம்பு ஊதுதல் இன்றும் கிராமங்களில் காணும் பழைய வழக்கு.*

மறையின் கிளை *- வேதங்களின் பல பிரிவுகளாகிய சாகைகள் எனப்படும்.*

கிளைஞர் *- உறவினர்களாகிய வேதியர்.*

கெழுவும் களைகண்-கெழுவுதல் *- உடன் கூடியிருத்தல். களைகண் - உறுதுணை . இங்கு உயிர்களை விட்டகலாது உடனாய் நின்று தாங்கும் உறுதுணையாகிய சிவபெருமானைக் குறித்து நின்றது. "பந்தம் வீடவை யாய பாரபரன்" என்றபடி பெத்த முத்தியிரண்டிலும் உடனின்று உபகரிக்கும் பரமன்.*

களைகண் ஆர்த்ததோர் கருணையின் ஆர்த்தன *- சிவன் செய்யும் கருணை. "ஆர்த்தாடுங் கூத்தன்" (திருவா)* ***ஆர்த்த கருணை*** *என்றது என்றும் விடாது செய்யும் பேரருள்.* ***கருணையின் ஆர்த்தன*** *- கருணையினால் பிணைக்கப்பட்ட செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த பெயரெச்சம். ஆர்க்கப்பட்டனவாகிய* ***முத்து*** *என்க.*

முத்து விளையும் மாக்கதிர் *- முத்துக்களினின்றும் வெளிப்போதும் பேரொளிக்கதிர்கள்.*

மிசையே குடை ஆர்த்தது *- என்க. குடை ஆர்த்தலாவது ஓங்கி விளக்கம்பெறத் தோன்றுதல்.*

2117. பல்கு வெண்கதிர்ப் பத்திசேர் நித்திலச் சிவிகைப்
புல்கு நீற்றொளி யுடன்பொலி புகலிகா வலனார்
அல்கு வெள்வளை யலைத்தெழு மணிநிரைத் தரங்கம்
மல்கு பாற்கடல் வளர்மதி யுதித்தென வந்தார். **219**

இந்த இரண்டு பாட்டுக்களாலும், பிள்ளையார் சிவிகையில் ஏறியவுடன் நிகழ்ந்த ஆரவாரமும், முத்து வெண்குடை மேல்நிழற்றலும் ஆகிய சிறப்புக்கள் கூறப்பட்டன. சிவிகை யேறியவுடன் குடை நிழற்றலும், அவ்வாறெழுந்தருளும்போது சின்னங்கள் ஊதுதலும் நிகழ்வனவாதலின், இங்குக் குடையார்த்தமை கூறினார். மேல் வரும் பாட்டிற் றிருவெழுச்சியும், அதன்மேல் 2119, 2120, 2121 மூன்று பாட்டுக்களாற் சின்னங்கள் ஊதுதலும் கூறுவார்.

ஆர்ந்ததோர்-கருணையினாற் கவின்முத்தும்-என்பனவும் பாடங்கள். ***218***

*2117. **பொருளுரை:** பல்கு..சிவிகை - பெருகும் வெண்கதிர்களின் ஒழுங்கு சேர்ந்த முத்துச்சிவிகையின்மீது; புல்கு..காவலனார் - பொருந்திய தீருநிற்றொளியுடன் விளங்கும் சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; அல்கு..பாற்கடல் - தங்கும் வெள்ளிய சங்குகளை வாரி எழுகின்ற அழகிய வரிசையாகிய அலைகள் நிறைந்த பாற்கடலிலே; வளர்மதி உதித்தென வந்தார் - வளர்மதி உதித்தாற்போல எழுந்தருளி வந்தனர்.*

***விளக்கவுரை:** பல்குதல் - பெருகுதல்; பல வாதல். **பத்தி** - ஒழுங்கு. **பத்திசேர் நித்திலம்** - ஒழுங்குபெறப் பதித்து அமைக்கப்பட்ட முத்துக்கள். **சிவிகையின் மேல்; ஏழனுருபு** தொக்கது.*

***புல்கு நீற்றொளியுடன் பொலி** - "வெண் ணீறணி கோலமே னியராய்" **(2106)** என்றபடி முற்றும் திருநீறணிந்த ஒளி பொலிவுறும்.*

***புகலி காவலனார்**-சிவிகை ஏறுதலாற் காவலன் என்ற குறிப்புப்பெறக் கூறினார். ஞான அரசு செலுத்தி உலகுயிர்களுக்குக் காவல் செய்பவர். உயிர்க்குக் காவலாவது அறிவு அறைபோகாமற் காத்து, நிரம்பிய இன்பம் தருதல்.*

***அல்குதல்** - தங்குதல். **வளை அலைத்து** - சங்குகளை உள்ளிருந்து அலைகளால் வாரி மேலெடுத்து,*

***பாற்கடல் வளர்மதி உதித்தென** - பாற்கடல் - முத்துச்சிவிகைக்கும், **வளர்மதி உதித்தல்** - நீற்றொளியுடன் பிள்ளையார் எழுந்தருளுதலுக்கும் உவமை. **பாற்கடல் - வளர்மதி** - உருப்பற்றி எழுந்த உவமம். **உதித்தென** - (வந்தாற்போல) தொழிலுவமம் **உதித்தாலென** என்பது உதித்தென என நின்றது. **வளர்மதி** - பதினாறு கலை வரையும் வளர்கின்ற மதி. பிள்ளையாரும் "புண்ணியப் பதினாறாண்டு பேர் பெறு" வதும் குறிப்பு - **உதித்தென** - உதிக்கும் காலத்தில் முழுமதியின் தோற்றம் உவமை. **உதித்தென** - பிள்ளையாரின் அவதார உள்ளுறையான செயல்கள் இது தொடங்கி இனி நிகழவுள்ளவையாதலின் **உதயம்** என்பது உவமக் குறிப்பு.*

2118. நீடு தொண்டர்கண் மறையவ ரேனையோர் நெருங்கி
மாடு கொண்டெழு மகிழ்ச்சியின் மலர்க்கைமேற் குவித்தே
யாடு கின்றன ரயர்ந்தனர்; அளவிலா னந்தங்
கூடு கின்றகண் பொழிபுனல் வெள்ளத்திற் குளித்தார். 220

வந்தார் - வருகையே மதியின் உதயத்துக்கு உவமம். "பலர் புகழ் ஞாயிறு கடற்கண்டாஅங்கு" என்ற கருத்துக் காண்க. உலகினரின் மதியினை விளக்கஞ் செய்தல் **வந்தாரென்றதன்** குறிப்பு. 219

2118. பொருளுரை: வெளிப்படை. நீடுகின்ற திருத்தொண்டர்களும் மறையவர்களும் ஏனையோர்களும் நெருங்கி வந்து (தம்மனத்தின்) பக்கமிடங்கொண்டெழுகின்ற மகிழ்ச்சியினாலே மலர்க்கைகளை மேலே குவித்து பரவசமானாரும் ஆடுகின்றனர். அளவில்லாத ஆனந்தம் சேர்கின்ற கண்களினின்று பொழியும் கண்ணீர் வெள்ளத்திற் குளித்தார்களாதலின்.

விளக்கவுரை: ***நீடு*** - என்றும் நீடியுள்ள. வழிவழி என்றும் எங்கும் நீடுபவர் தொண்டர்கள்.

மாடுகொண்டு ஏழும் - மகிழ்ச்சி மாடுகொண்டு - தம்மனத்தின் பக்க முழுதும் இடங்கொண்டு, மாடு - செல்வம் எனக் கொண்டு, பிள்ளையாரைச் சிவிகையின் மேற்கண்ட பெருஞ் செல்வத்தை உட்கொண்டு என்றலுமாம்.

ஆடுகின்றனர் - அயர்ந்தனர் - குளித்தார் - அயர்தல் - தன்வச மிழத்தல் குறித்தது. **அயர்ந்தனர்** என இறந்த காலத்தாலும் **ஆடுகின்றனர்** - என நிகழ்காலத்தாலும் கூறியது தம் வசமிழந்த பின்னும் ஆடிக்கொண்டிருக்கின்றனர் என்பது. **குளித்தாராதலின்** என அதற்குக் காரணம் கூறியபடி. குளித்தாராதலின் அயர்ந்தாரும் ஆடுகின்றனர் என்க. ஆடுகின்றாராயும் அயர்ந்தனராயும் குளித்தார் என்று வினைப்பெயர்களாகக் கொண்டு முடிப்பினுமமையும். தனித்தனி வினைமுற்றுக்களைக் கொண்டுரைப்பினுமிழுக்கில்லை. **கூடுகின்ற புனல்** - கூடுகின்றதனால் கண்கள் பொழிகின்ற ஆனந்தக் கண்ணீர்.

குளித்தார் - குளித்தார் போன்றார். "மூழ்குவார் போன்று தோன்ற" (398); "இருகண்பம்பு தாரைநீர் வாவியிற் படிந்தெழும் படியார்" (1637);

ஆடுதல் - அயர்தல் - கண்ணீர் பொழிதல் - அன்பினால் மிகும் ஆனந்தத்தின் மெய்ப்பாடுகள். "ஆடுகின்றிலை கூத்து" (திருவா). 220

2119. பொருளுரை: செய்ய...சிறக்க - சிவந்த பொன்னினாற் புனையப்பட்ட வெண்முத்துக்களின் அழகு சிறக்கும்படி உள்ளதாகிய; சைவ...பெறும் - சைவத்துக்கும் பெருவேதங்களிற் கூறும் வைதிகத்துக்கும் தலைவராகிய சிவபெருமானிடத்துப் பெறும்; தனிக்காளம் - ஒப்பற்ற எக்காளம் என்னும் சின்னம்; வையம்...என ஊத - உலகமேழும், வேதங்களும், நிறைந்த தவத்தையுடையவர்களும் உய்யும்படி திருஞான சம்பந்தன் வந்தான் என்று கூறி ஊதவும்,

2119. செய்ய பொன்புனை வெண்டர ளத்தணி சிறக்கச்
சைவ மாமறைத் தலைவர்பாற் பெறுந்தனிக் காளம்
"வைய மேழுடன் மறைகளு நிறைதவத் தோரும்
உய்ய ஞானசம் பந்தன்வந் தா"னென வூத **221**

விளக்கவுரை: *2119, 2120, 2121,* இம்மூன்று பாட்டுக்களாலும் பொன் முத்துச் சின்னங்களின் எழுச்சிச் சிறப்புக் கூறப்பட்டன. இவை (எக்) காளம், திருச்சின்னம், தாரை என்பன. ஏனை இயங்கள்போல் இவை வெறும் ஓசை எழுச்சி மட்டும் பயவாது தலைவனது மெய்க்கீர்த்தி பற்றிய வாக்கியங்களை எடுத்து ஊதுதலினால் பேரொலியுடன் பரவச்செய்து ஒலி முழக்குவன. இந்நாளில் வாணிகத்துறை விளம்பரங்களிலும் அரசாங்கப் பிரசாரங்களைப் பரப்பும் நிலையிலும் இவைபோன்ற இயங்கள் (ஊதுகுழாய்கள்) பயன்படுவன காண்க. கூறி ஊத (2093) பார்க்க. **காளம்** - எக்காளம் எனப்படுவது; **என ஊத** - எனக் கூறி ஊத. **திருச்சின்னம்** - ஊதுவதனைச் சின்னம் - பிடித்தல் என்பது மரபு வழக்கு. இவை மூன்றிலும் கூறும் பொருள்கள் தலைவரது மெய்க்கீர்த்திகளாகிய புகழ்களாம். இங்கு, இவ்வாறன்றி, ஒருமுறை, இருமுறை, மும்முறை ஊதின என்றுரைப்பாருமுளர். **சிறக்க உள்ளம் காளம்** என்க.

சைவ மாமறைத்தலைவர் - சைவம் - சிவநாமநெறி. மாமறை - வேதநெறி "வேதநெறி-மிக சைவத்துறை" (1899) பார்க்க. குறித்துக் கூறப்படும் பொருள் பற்றி வேதங்கள் பல பெயராற் பாகுபாடு செய்து கூறுவதும் உண்டு. ஒவ்வொரு தெய்வத்தைக் கூறும் பகுதிக்கு அவ்வத்தேவர் பெயரால் வருணசூத்திரம், விஷ்ணு சூக்தம் எனக் கூறுவதுபோலச், சிவபெருமானைச் சிறப்பித்துக் கூறும் பகுதிகளுக்குச் சைவமாமறை - என்பதும் உண்டு. சைவோபநிடதங்கள் என்பதும் வழக்கம்; இப்பொருள்பட இதற்கு மாமறைச்சைவம் என்று மாற்றி வைதிக சைவம் என்றுரைகொள்வர் முன் உரைகாரர்கள்.

வையம்-உய்ய வந்தான் - இது காளம் எடுத்துக் கூறி ஊதின வாசகம். வையம் ஏழு - உய்தலாவது உலகத்துயிர்கள், மயக்கமும், அது காரணமாக வரும் துன்பமும் நீங்கி உண்மை நெறியடைந்து இன்பமுறுதல்; மறைகள் - உய்தலாவது இறைவன் திருவாக்காயிருந்தும் எல்லார்க்கும் பயன்படாதிருந்த வேதம், பிள்ளையாரது திருவாக்கில் தமிழ் வேதமாக வெளிப்பட்டபோது அக்குறை நீங்கி யாவர்க்கும் பயன்படும் நிலை பெறுதல்; நிறைதவத்தோர் - உய்தலாவது தமது தவப்பயன் பெற்று முத்தியடைதல்.

என ஊத - எனக்கூறி ஊத. மேல்வரும் பாட்டுக்களிலும் இவ்வாறே கூறிப் பிடிக்க - கூறி ஊத என்க. **ஞானசம்பந்தன் வந்தான்** *(2119)* - **பாலறாவாயன் வந்தான்** - *(2120)*; **முத்தமிழ் விரகன் வந்தான்** *(2121)* - என்பன மெய்க்கீர்த்திகள். அடைமொழிகள் முறையே இவற்றை விரித்துரைத்தன. "தென்றமிழ் விளங்க வந்த திருக்கழு மலத்தான் வந்தான்" (புரா. 810); "வெற்றிபுனை சின்னங்கள்" (மேற்படி 907) முதலியவை பார்க்க. *221*

2120. சுற்று மாமறைச் சுருதியின் பெருகொலி நடுவே
தெற்றி னார்புர மெரித்தவர் தருதிருச் சின்னம்
"முற்று மானவண் ஞானமே முலைசுரந் தூட்டப்
பெற்ற பாலறா வாயன்வந் தா"னெனப் பிடிக்க, **222**

2121. புணர்ந்த மெய்த்தவக் குழாத்தொடும் போதுவார் முன்னே
யிணைந்த நித்திலத் திலங்கொளி நலங்கிளர் தாரை
"யணைந்த மாமறை முதற்கலை யகிலமு மோதா
துணர்ந்த முத்தமிழ் விரகன்வந் தா" னென வூத, **223**

2120. பொருளுரை: சுற்று...நடுவே - சூழ்ந்து ஒலிக்கும் பெரு வேதச் சுருதிகளின் பெரு முழக்கத்தின் இடையே; தெற்றினார்...திருச்சின்னம் - பகைவரது முப்புரங்களை எரித்த சிவபெருமான் அளித்தருளிய திருச்சின்னம்; முற்றுமானவள்....எனப்பிடிக்க - ஞானமே முழுமாகிய திருமேனியுடைய பெரியநாயகியம்மையார் தமது போதத் திருமுலை சுரந்து ஞான வமுதூட்டப்பெற்ற பாலறாவாயன் வந்தான் என்று கூறிப்பிடிக்க,

*விளக்கவுரை...சுற்று...நடுவே - "சுருதிகள் ஆர்த்தன" (2115); "மறையின் கிளையு மார்த்தன" (2116) என்றபடி மறைகளின் பெருகிய ஒலி. நடுவே - மறையொலி இடையறாது பெருக, சின்னங்களின் ஒலி அதனிடையிடையே விட்டு விட்டு இசைத்தெழுந்தன. **திருச்சின்னம்** - சின்னங்களின் ஒருவகை; மரபு வழக்கு.*

தெற்றினார் - பகைவர். திரிபுரவாணர்களாகிய அரக்கர்.

ஞானமே முற்றுமானவள் என்க. சித்தே உருவாயிருப்பவர்; உமையம்மையார். உலகெலாமாய் நிறைந்திருப்பவள் முலைசுரந்து ஞானமே ஊட்ட என்று கூட்டி உரைப்பார் முன் உரைகாரர்கள்.

*பாலறாவாயன் - "துணைவியாகும், பைந்தொடியா டிருமுலையின் பாலறா மதுர மொழிப் பவள வாயா" (1996); **பால் அறாமையாவது இங்குப் பால் என்னும் சிவ ஞானமானது என்றும் இடையறாது தேவார இசையாகப் பொங்கி வழிதல்.** 222*

2121. பொருளுரை: புணர்ந்த...முன்னே - கூடிய மெய்த் தவ முனிவர் கூட்டத்துடனே செல்கின்றவர் முன்னே; இணைந்த...தாரை - மாறுபடாது இணைந்த முத்துக்களின் விளங்கும் ஒளிப்பெருமை சூழ்ந்து கிளர்தற்கிடமாகிய தாரை என்னும் சின்னம்; அணைந்த...என ஊத- அணைந்த பெரிய வேதங்களும் அவற்றின் வழித்தாக வரும் எல்லாக் கலைகளும் ஓதாதுணர்ந்தவனாகிய முத்தமிழ் விரகன் வந்தான் என்று கூறி ஊதவும், ஆக இவ்வண்ணமாய்,

*விளக்கவுரை: போதுவார் - போதுகின்ற பிள்ளையார். **முன்னே** - திருக்கூட்டத்தின் முன் அணியில். "பிள்ளையார் முன்வரு சின்னப் பெருகொலியும்" (புரா. 906). **தாரை** - சின்னங்களின் ஒருவகை.*

2122. தெருளு மெய்க்கலை விளங்கவும், பாருளோர் சிந்தை
யிருளு நீங்கவு மெழுதுசொன் மறையளிப் பவர்தாம்
பொருளு ஞானமும் போகமும் "போற்றி" யென் பாருக்
கருளு மங்கணர் திருவரத் துறையைவந் தணைந்தார். **224**

இணைந்த (நித்திலம்) - ஒன்றற்கொன்று மாறுபடாது பொருந்திய. பிள்ளையாரது பெருமைக்கேற்பப் பொருந்திய என்ற குறிப்புமாம்.

மாமறை முதற்கலை-மறையாகமங்களே எல்லாக் கலைகளுக்கும் முதல் என்பது. கலை என்பது ஞான காரணமான அறிவு நூல். இங்கு மறை என்ற பொதுச் சொல் வேதம் ஆகமம் இரண்டினையு முணர்த்திற்று. "வேதமும் சிவாகமம் எனப்படும்" என்றார் நீலகண்ட ஆசிரியரும்.

ஓதாதுணர்ந்த - இப்பிறப்பில் ஓதாமல், முற்செய் தவப்பயனால், பாலமுதுண்ட அளவிலே உணர்ந்த. 1967 - 1968 பார்க்க. "தவத்தினி லுணர்த்த" (சூத்-) என்றும் "ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான், ஞான நிகழும் என்றது" (வார்த்திகம்) என்றும், "ஆளுடைய பிள்ளையார் முதலாயினார்க்குத் தவமின்றியும் ஞான நிகழ்ந்தவாறென்னை யென்னுங் கடாவை விடுத்தற்கு"மேற்செய்துழி" என ஈண்டும் வலியுறுத்தார் (சிற்றுரை) என்றும் வரும் சிவஞானபோதம் (8 - சூத்) கருத்துக்கள் காண்க.

முத்தமிழ் விரகன் - முத்தமிழ்களிலும் தலைமையுடையவர். இப்பெயர் பிள்ளையாரது தேவாரங்களினும் காணப்படும்.

உணர்ந்த - தமிழ் விரகன் - உணர்ந்த மறைகளைத் தமிழால் விரித்தவர் என்பது குறிப்பு. "வேதந் தமிழால் விரித்தார்." *223*

2122. **பொருளுரை:** தெருளும் மெய்க்கலை விளங்கவும் - தெருட்சியைத்தரும் உண்மைக்கலைகள் விளங்கும்படியும்; பாருளோர்...நீங்கவும் - அதனோடு உலகில் உள்ளவர்களுடைய சிந்தையிற்றங்கிய இருளும் நீங்கும்படியும்; எழுதுசொன் மறையளிப்பவர் தாம் - எழுதும் சொல்மறையை அளிப்பவராகிய ஆளுடைய பிள்ளையார்; பொருளும்... அணைந்தார் - "போற்றி" என்று துதிப்பவர்களுக்குப் பொருளையும் ஞானத்தையும் போகத்தையும் அளித்தருளும் அங்கணராகிய சிவபெருமானுடைய திருவரத்துறையினை வந்து அணைந்தார்.

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை....தெருளும் - தெருட்டும் எனப் பிறவினைப் பொருளில் வந்தது.தெருளுவதற்குக் காரணமாகிய.

மெய்க்கலை - பொருள் முடிபு உணர்த்தும் ஞான நூல்கள். கலை விளங்குதலாவது முன் மறைகள் உய்ய - (2119) என்ற விடத்துரைக்கப்பட்ட கருத்து.

2123. வந்து கோபுர மணிநெடு வாயில்சேய்த் தாகச்
சந்த நித்திலச் சிவிகைநின் றிழிந்துதாழ்ந் தெழுந்து
சிந்தை யார்வமு மகிழ்ச்சியும் பொங்கிமுன் செல்ல
அந்தி நாண்மதி யணிந்தவர் கோயிலு ளடைந்தார். 225

இருளும் - கன்ம மாயைகளேயன்றி அஞ்ஞானமும் என்பர் முன் உரைகாரர். *விளங்கவும்-நீங்கவும்* - எண்ணும்மைகள். *சிந்தை யிருள்நீங்க-சிந்தை இருள்* - அஞ்ஞானம், ஆணவம். 10 - 1333 பாட்டுக்களும் பிறவும் பார்க்க,

எழுது சொன்மறை - இறைவர் சொன்ன மறை எழுதாக்கிளவி எனப்படும். "எழுதாத மறையளித்த வெழுத்தறியும் பெருமானை" (1660); ஆனால் பிள்ளையார் அந்த முதற்கலைகளை எல்லாம் ஓதாது உணர்ந்து அளித்து அருளிச்செய்த மறை எழுதும் மறையாம் என்பதும், சொன்மறை - ஆனால் அதுபோலவே எல்லாச் சுர பேதங்களுடன் சொல்லவும் படுவது என்பதும் குறிப்பு.

பொருளும்...அருளும் அங்கணர் - சிவபெருமான்; தம்மை வழிபடுவாருக்குப் பொருளையும் ஞானத்தையும் போகத்தையும் அருள்பவர். பொருள் வேறு - ஞானம் வேறு. இங்குப் பொருள் என்றது பொன்னின் வேறாகிய மெய்ப்பொருள் காணும் சாதன அறிவு. ஞானம் - சிவஞானம். பொருள் கண்டதன்பின் உளதாவது "நன் னெறியாகிய ஞானம்" போகம்-சிவபோகம். தசகாரியங்களுள் இறுதிக்கண்ணதாயுள்ளது. பொருளும் - பொன் முதலிய போகப் பொருளாகிய புவனம் என்றும், போகம் - அவற்றால் துய்க்கப்படும் அனுபோகங்கள் என்றும் கூறுவாருமுண்டு. "பொன்னு மெய்ப்பொரு ளுந்தரு வானைப் போகமுந் திருவும் புணர்ப்பானை" (நம்பி - ஆரூர்) என்றதும் காண்க. பொன் - பொருள் என்பன பொன்னும் கல்வியும் எனவும் போகம் - திரு - என்பன, அவற்றால் விளைவன - உலக போகமும் வீடும் எனவும் கொள்வர். பிள்ளையாருக்குச் சிவிகை - ஞானம் - பொருள் (பொன்) முதலிய அளித்தலும் குறிப்பாமென்பர் முன் உரைகாரர். இனிப், பொருளும் ஞானமும் போகமும் நீயே என்று போற்றி செய்வாருக்கு என்றுரைப்பினுமமையும்; "திருவு மெய்ப் பொருளும் செல்வமும்" (தேவா); "போகமே யோகத்தின் பொலிவே", "புங்கமான் போகமே", "போற்றியென் வாழ்முத லாகிய பொருளே", "மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற" (திருவா) என்பது திரு.வ.சு.செ. அவர்கள் குறிப்பு.

போற்றிசெ யன்பருக்கு - என்பதும் பாடம். 224

2123. பொருளுரை...வந்து-பதியில் வந்தணைந்து; *கோபுரவாயில்...எழுந்து* - கோபுரவாயில் தூரத்தே தோன்றிய அளவில் அழகிய முத்துச்சிவிகையினின்றும் கீழ் இறங்கி நிலமுற விழுந்து தூலலிங்கமாகிய அத்திருக்கோபுரத்தை வணங்கி எழுந்து; *சிந்தை....முன்செல்ல* - மனத்தில் எழுந்த ஆசையும் மகிழ்ச்சியும் மேன்மேற் பொங்கித் தமக்கு முன்னே செல்ல; *அந்தி....அடைந்தார்* - மாலையிற்றோன்றும் இளம்பிறையினை அணிந்த திருவரத்துறை நாதருடைய திருக்கோயிலினுள் அடைந்தனர்.

2124. மன்னு கோயிலை வலங்கொண்டு திருமுன்பு வந்து
சென்னி யிற்கரங் குவித்துவீழ்ந் தன்பொடு திளைப்பார்
"என்னை யும்பொரு ளாகவின் னருள்புரிந் தருளும்
பொன்ன டித்தலத் தாமரை போற்றி"யென் றெழுந்தார். 226

விளக்கவுரை: மணி நெடுவாயில் சேய்த்தாக - *கோபுரவாயில் தூரத்தே தோன்று மிடத்தே; கோபுரத்தையும் திருவாயிலையும் தூரத்தே கண்டபொழுதே வணங்க வேண்டுமென்பது விதி.* ***மணி*** - *வாயிலிற் கட்டிய மணி. "கடை தூங்குமணி" (தேவா); வாயிலின் இழைத்த மணிகள் என்றலுமாம்.*

சிந்தை ஆர்வமு மகிழ்ச்சியும் முன்செல்ல - *பிள்ளையார் செல்லும் விரைவின் முன்னே அதிவிரைவாக அவரது ஆர்வமும் மகிழ்ச்சியும் முன் வழிகாட்டிச் சென்றன என்பது. "நாணனு மன்பு முன்பு நளிர்வரை யேற" (752).*

அந்தி நாண்மதி - *மாலையில் புதிதாய் முளைத்துத் தோன்றும் மதி; மூன்றாம் பிறை.* ***225***

2124. ***பொருளுரை:*** *வெளிப்படை. நிலைபெற்ற அத்திருக்கோயிலை வலமாக வந்து திருமுன்பு சேர்ந்து தலையின் மேலே குவித்து நிலத்தின்மேல் வீழ்ந்து அன்பினொடு திளைப்பாராய், "என்னையும் ஓர் பொருளாகக் கொண்டு இனிய அருளினைச் செய்தருளும் பொன்னடித்தலங்களாகிய தாமரைகள் போற்றப்படுவன" என்று துதித்து எழுந்தனர்.*

விளக்கவுரை: வீழ்ந்து - அன்பொடு திளைப்பார் - "போற்றி" என்று எழுந்தார் *என்பது முடிபு.*

திளைத்தல் - ஆனந்தானுபவத்தி லழுந்துதல்.

"என்னையும்-போற்றி" என்று எழுந்தார் *- இது வணங்கி எழும்போது பிள்ளையார் துதித்தும். என்னையும் பொருளாக - பொருள் செய்யத் தகாத என்னையும் என்பது.* ***"அருள் புரிந்து"*** *என்றதில்* ***அருள்*** *- பதிகத்துள் "அடிகடம்மருளே" என்ற கருத்துப் புலப்பட நின்றது.* ***அடித்தலம்*** *- திருவடிகள். முருகப் பெருமானே இங்குப் பிள்ளையாராய் வந்தனர் என்பார் இக்கருத்தைச் சிந்திக்கக்கடவர். "யாவர்க்கு மேலா மளவிலாச் சீருடையான், யாவர்க்குங் கீழா மடியேனை-யாவரும், பெற்றறியா வின்பத்துள் வைத்தாய்க்கென் னெம்பெருமான், மற்றறியேன் செய்யும் வகை" (திருவாசகம்); "சீருந் திருவும் பொலியச் சிவலோக நாயகன் சேவடிக்கீழ் ஆரும் பெறாத வறிவுபெற்றேன்" (திருப்பல்) என்பனவாதி திருவாக்குக்களின் இறைவரது அருளைப் பாராட்டுந் திறமே இங்கும் காண்க.*

போற்றி *- போற்றப்படுவது. இகரம் செயப்படுபொருள் விகுதி.* ***226***

2125. சூடி னார்கர கமலங்கள்; சொரிந்திழி கண்ணீர்
ஆடி னார்திரு மேனியி; லரத்துறை விரும்பி
நீடி னார்திரு வருட்பெருங் கருணையே நிகழப்
பாடி னார்திருப் பதிகமே ழிசையொடும் பயில. 227

2126. இசைவி ளங்கிட வியல்பினிற் பாடிநின் றேத்தி,
மிசைவி ளங்குநீர் வேணியா ரருளினால் மீண்டு,
திசைவி ளங்கிடத் திருவருள் பெற்றவர் சிலநாள்
அசைவில் சீர்த்தொண்டர் தம்முட னப்பதி யமர்ந்தார். 228

2125. பொருளுரை: வெளிப்படை கைமலர்களை உச்சியின்மேற் சூடிக்கொண்டனர்; பொங்கி வழிகின்ற கண்ணீர்த் தாரையினால் திருமேனி நனைய நீராடினார்; திருவரத் துறையை விரும்பிப் பழமையாக வீற்றிருந்தருளும் இறைவரது கருணையே நிகழும்படி ஏழிசையொடும் பயிலும்படி திருப்பதிகம் பாடினார்.

*விளக்கவுரை: **சூடினார் கர கமலங்கள்** - மலர்களைச் சிரத்திற் சூடுதல்போலக் கைகளாகிய மலர்களைச் சிரத்தில் சூடிக்கொண்டார் என்பது குறிப்பு.*

திருமேனியிற் சொரிந்திழி கண்ணீ(ரில்) ஆடினார் *- கண்ணீர் திருமேனி மேல் பெருக வழிதலின் அந்நீரினுள் ஆடினார் (நீராடினார்) போன்றார் என்பது.*

நீடினார் *- பெயர்.*

கருணையே நிகழத் திருப்பதிகம் *- கருணையின் பெருமையை விளக்கும் திருப்பதிகம். இப்பதிகம் இப்போது கிடைத்திலது. சிதலரித்தொழிந்தது போலும்!*

ஏழிசையொடும் பயில *- ஏழு சுரங்களோடும் பயிலப்படும் வேதங்களோ டொப்பப் பயிலப்படும்படி.* 227

2126. பொருளுரை: வெளிப்படை. ஏழ்இசையும் விளங்கும்படி இயல்பினில் திருப்பதிகத்தினைப் பாடி நிறைவாக்கி நின்று துதித்து, மேலே கங்கைநீர் விளங்குதற்கிடமாகிய சடையினையுடைய சிவபெருமானது திருவருள் பெற்று, அங்கு நின்றும் மீண்டெழுந் தருளி, எல்லாத் திசைகளில் உள்ளோரும் சிவஞானம் பெற்றுய்யும்படி திருவருள் பெற்றவராகிய பிள்ளையார் சில நாள்கள் அத்திருத்தலத்தின்கண் அசைதலில்லாத சிறப்புடைய திருதொண்டர்களோடு விரும்பி எழுந்தருளியிருந்தார்.

*விளக்கவுரை: **இயல்பினிற் பாடி** - செயற்கையாலன்றித் தன் இயல்பாகவே இசைகளும் திருஅருளும் சென்றொழுகும்படி.*

மீண்டு *- இறைவரது திருமுன்பு நின்றும் புறத்தில் மீண்டு.*

திசை விளங்கிட திருவருள் பெற்றவர்-திசை *- எல்லாத் திசையிலுள்ளோரும்; ஆகுபெயர். **விளங்கிட** - விளங்கும் பொருட்டு. விளங்குதலாவது சிவஞானம் விளங்கப்*

2127. தேவர் தம்பிரான் றிருவரத் துறையினி லிறைஞ்சி
மேவு நாட்களில் விமலனார் நெல்வெண்ணெய் முதலாத்
தாவி லன்பர்க டம்முடன் றொழுது, பின் சண்பைக்
காவ லாரருள் பெற்றுடன் கலந்துமீண் டணைந்தார். **229**

பெறுதலால் சிவநெறியில் நின்று மேம்படுதல். பிள்ளையார் அருள் பெற்றது தம் பொருட்டன்றி உலகம் கண்டுணர்ந்து உய்யும் பொருட்டென்பது அருள் - பதிகத்தில் "அருளே" என்ற கருத்து. ஈண்டைக் கேற்பச் சிவிகை முதலியவற்றையும் குறிப்பாகக் கொள்க.

அசைவில் சீர் - அசைவின்மையாவது எதுவரினும் தன்னிலையிற் பிறழா திருத்தல். "மலையே வந்த விழினு மனிதர்காள், நிலையி னின்றுநீர் கலங்கப் பெறுதிரேல்", "வானந் துளங்கிலென்...ஒருவனுக் காட்பட்ட உத்தமர்க்கே" முதலிய திருவாக்குக்களுக்கு இலக்கியமாக ஒழுகும் தவ உறைப்புடைய சிறப்பு.

அமர்ந்தார் - விரும்பி எழுந்தருளியிருந்தார் - ***அமர்தல்***-விரும்புதல். **228**

2127. **பொருளுரை:** தேவர்...நாட்களில் - தேவ தேவராகிய சிவபெருமானது திருவரத் துறையின்கண் அவ்விறைவரை வணங்கி அங்கு எழுந்தருளியிருக்கும் நாட்களில்; விமலனார்...தொழுது - சிவபெருமானது திருநெல்வெண்ணெய் முதலாகவுள்ள தலங்களைக் குற்றமில்லாத அன்பர்களுடன் தொழுது; பின்...அணைந்தார் - பின் சீகாழித் தலைவராகிய பிள்ளையார் இறைவரது திருவருளைப் பெற்று உடன் கலந்திருந்து மீண்டும் திருவரத்துறையினில் வந்தணைந்தார்.

விளக்கவுரை: இறைஞ்சி - இறைவரை வணங்கி.

நெல்வெண்ணெய் முதலாத் தொழுது - நெல்வெண்ணெய் முதலாகிய தலங்களில் இறைவரை வணங்கி; தலங்களையே தொழுவதனோடு அவற்றுள் எழுந்தருளிய இறைவரையும் தொழுது என்ற குறிப்புத் தரக் கூறினார்; தலங்களையும் தொழுதல் மரபாதலின்; "முதுகுன்றடைவோமே" முதலிய பதிகங்கள் பார்க்க.

சண்பைக்காவலார் - பிள்ளையார். ***சண்பை*** - சீகாழியின் ஒன்பதாவது பெயர். ***காவலர்*** - தலைவர்.

அருள்பெற்று உடன் கலந்து - நெல்வெண்ணெய் முதலிய தலங்களில் தொழுது அங்கங்கும் திருவருள் பெற்று அங்கங்கும் தொண்டர்களுடன் கலந்து இனிதிருந்துமீண்டு திருவரத்துறையில் அணைந்தனர். அணிமையில் உள்ள வேறு தலங்களுக்குச் சென்றாலும் திருவரத்துறையை அகலாது மீண்டு அணைந்திருந்தனர் என்பது. 2027 - 2028 பார்க்க.

அணைந்தார் - அணைந்தெழுந்தருளி யிருந்தனர். **229**

திருநெல்வெண்ணெய்

திருச்சிற்றம்பலம் **திருமுக்கால்** பண் - சாதாரி

நல்வெண்ணெய் விழுதுபெய் தாடுதிர் நாடொறும், நெல்வெண்ணெய் மேவிய நீரே,
நெல்வெண்ணெய் மேவிய நீருமை நாடொறுஞ், சொல்வண மிடுவது சொல்லே. (1)

நிலமல்கு தொல்புகழ் நெல்வெண்ணெ யீசனை, நலமல்கு ஞானசம் பந்தன்,
நலமல்கு ஞானசம் பந்தன் செந்தமிழ், சொலமல்கு வார்துய ரிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நெல்வெண்ணெய் மேவிய இறைவரே! உம்மை நாடொறும் வாழ்த்தி வழிபடுவோர் அச்சமும் வினையு மிலராகுவர்; பழியிலர்; புகழும் பாக்கியமும் பண்புமுடையவர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) நல்வெ(ண்)ணெய் விழுது பெய்து நாடொறும் **ஆடுதிர்** - வெண்ணெய் ஆடுதல் இத்தலத்தின் சிறப்பு. இதுகொண்டு ஆனைந்தில் வெண்ணெய் ஒன்றென்று கூறுவோருமுளர். அது பொருந்தாமை முன்னர் உரைக்கப்பட்டது. **சொல்வண மிடுவது சொல்லே** - உம்மைச் சொல்வதுதான் சொல்.- (2) கச்சு - கச்சாக. -(3) **உரைவிரிப்போர்** - உரையால் விரித்துப் போற்றுவோர்.- (4) **அவர் பண்பு பார்மல்கு புகழ்** என்க.

தலவிசேடம்:- திருநெல்வெண்ணெய் - இதனை இப்போது நெய்வெண்ணெய் என்று வழங்குகின்றனர். இங்குத் தினமும் வெண்ணெயாட்டி வழிபடுதல் சிறப்பு என்பது தலசரிதக் குறிப்பு. பதிகமும் சுவாமி பெயரும் பார்க்க. சனகாதி முனிவர் வழிபட்டதலம். சுவாமி - **வெண்ணெயப்பர்**; அம்மை - **நீலமலர்க்கண்ணி**; தீர்த்தம் - **பெண்ணையாறு;** பதிகம் - 1.

இத்தலம் திரிசிரபுரம் - விழுப்புரம் இருப்புப்பாதையில் உழுந்தூர்ப்பேட்டை நிலயத்தினின்றும் வடமேற்கில் 3 நாழிகையில் காற்பாதைவழி அடையத்தக்கது. வண்டிப்பாதை உழுந்தூரினின்றும் மேற்கில் - எல்லவனாகூர் 3 நாழிகை - அங்கு நின்றும் வடக்கு 2 நாழிகை - இறையூர் பாதையில் கிழக்கில் 1/2 நாழிகையளவில் அடையலாம்.

நெல்வெண்ணெய் முதலா - இத்தலங்கள், திருவெண்ணெய்நல்லூர், திருவிடையாறு முதலிய அணிமையிலுள்ளவை என்பது கருதப்படும். பிள்ளையார் பதிகங்கள் கிடைத்தில!

2128. பொருளுரை: விளங்கு...வெளிப்பட - விளங்கும் வேணுபுரத்தில் திருத்தோணிக் கோயிலின்கண் வீற்றிருந்த திருநீலகண்டராகிய இறைவர் தமது தேவியாராகிய பெரிய நாயகியம்மையாருடன் கூடத் தமது உள்ள மிடங்கொள்ள நிறைந்து உட்புகுந்து உணர்வின்கண் வெளிப்படக் கண்டு; உருகி...மனம் வைத்தார் - மனமுருகி வளம்

2128. விளங்கு வேணுபு ரத்திருத் தோணிவீற் றிருந்த
களங்கொள் கண்டர்தங் காதலி யாருடன் கூட
வுளங்கொ ளப்புகுந் துணர்வினில் வெளிப்பட வுருகி
வளங்கொள் பூம்புனற் புகலிமேற் செலமனம் வைத்தார். **230**

2129. அண்ண லார் திரு வரத்துறை யடிகளை வணங்கி
நண்ணு பேரரு ளால்விடை கொண்டுபோய் நடங்கொண்
டுண்ணி றைந்தபூங் கழலிணை யுச்சிமேற் கொண்டே
வெண்ணி லாமலர் நித்திலச் சிவிகைமேற் கொண்டார். **231**

கொள்ளும் அழகிய நீர்வளமுடைய சீகாழியின்கட் செல்ல மனம் கொண்டனர் (பிள்ளையார்)

விளக்கவுரை: வேணுபுரம் *- சீகாழியின் இரண்டாவது பெயர்.*

தோணிவீற்றிருந்த களங்கொள் கண்டர் *- தோணி - "திருத்தோணி புரத் தோணிச் சிகரக்கோயில்" (2004). தோணி என்று வழங்கும் கோயில். **களம்** - கறுப்பு; விடம் குறித்தது. **காதலியார்** - தேவியார் - பெரியநாயகியார். "பெரிய நாச்சியா ருடன்புகலித் திருத்தோணி வீற்றிருந்தார்."*

உளம்கொளப் புகுந்து உணர்வினில் வெளிப்பட *- **உளங்கொளப் புகுந்து** - எங்கு நிறைந்த தன்மையால் பொதுவகையாலும், பிள்ளையார் எஞ்ஞான்றும் மறவாத் தன்மையால் சிறப்பு வகையாலும், தோணியப்பர் பிள்ளையாரது உள்ளத்தில் நீங்காமல் விளங்கியருளுகின்றனராகவும், இங்குப் **புகுந்து** என்றதென்னை? எனின், திருவரத் துறையினின்றும் சீகாழிக்குச் செல்லும் நினைவைத் தூண்டும் இறைவரது அருள் சிறந்து விளங்குவதனைப் **புகுந்து** என்று உபசரித்தவாறென்க.*

உணர்வினில் வெளிப்பட *என்றதனால் உள்ள உருவம் வெளியிற் காணப்படும் உருவெளித் தோற்றத்தின் வேறாய காட்சி என்பதும், புறக் கரணத்துக்குப் புலப்படுவதாகிய வாயிற் காட்சியின் வேறாகிய தன்வேதனைக் காட்சியாகிய உண்மை யனுபவக் காட்சி என்பதும் பெறப்படும்.*

புகலிமேற் செலமனம் வைத்தார் - மேல் *- ஏழனுருபு. **மனம் வைத்தல்** - எண்ணுதல். பிள்ளையார் என்ற எழுவாய் முன்பாட்டிலிருந்து வருவிக்க.* *230*

*2129. **பொருளுரை:** அண்ணலார்....வணங்கி - அண்ணலாராகிய திருவரத்துறை யடிகளாரை வணங்கி; நண்ணு...போய் - பொருந்திய அவரது பெரிய திருவருளினால் விடைபெற்றுக் கொண்டுபோய்; நடம் கொண்டு...கொண்டே - ஆனந்தக் கூத்தியற்றி உள்ளே நிறைந்த அழகிய திருவடிகளைத் தமது உச்சியின்மேற் ஏற்றிக் கொண்டபடியே; வெண்ணிலா...மேற்கொண்டார் - வெள்ளிய நிலாக்கதிர் போன்ற ஒளி வீசுகின்ற முத்துச் சிவிகையின்மேல் எழுந்தருளினார்.*

விளக்கவுரை: விடைகொண்டுபோய் - உச்சி மேற்கொண்டே - சிவிகை மேற்கொண்டார் *- என்று கூட்டி முடிக்க.*

2130. சிவிகை முத்தினிற் பெருகொளி திசையெலாம் விளக்கக்
கவிகை வெண்மதிக் குளிரொளி கதிர்செய்வான் கலப்பக்
குவிகை மேற்கொண்டு மறையவர் குணலையிட் டாடப்
புவிகை மாறின்றிப் போற்றவந் தருளினார் போந்தார். 232

விடைகொண்டு - புறப்படுதல் மரபு. **நண்ணு பேரருளால்** - என்றது, இங்கு, எதிர்கொண்டு பொருந்தி வரவிடுத்த, சைவம் பெருகுதற்கிட்ட சிவிகை, முதலிய அருட்பண்டங்களைக் குறிக்கப் **பேரருள்** என்றார்.

அரத்துறை அடிகள் - என்பதும்,, **"அருள்"** என்பதும் "அரத்துறை யடிகடம் மருளே" என்ற பதிக மகுடக் குறிப்புக்கள். **பேரருளால் விடைகொண்டு** - எதிர்கொண்டு அழைத்த பேரருளால் வந்தது போலவே, அருளால் விடைகொண்டு என்ற குறிப்புத் தருவது.

நடங்கொண்டு...உச்சிமேற்கொண்டே-கழலினை-இறைவரது திருவடிகளாவன அருள். **நடம்கொண்டு** - ஆநந்தக்கூத்தினைக் குறித்தது. **உண்ணிறைந்த பூங்கழல்** - என்பது மும்மல நீங்கிய முத்தான்ம சைதன்னியத்திற் சிறப்பாக வெளிப்பட்டு விளங்கி வியாபகமாகி நிற்கின்ற அழகிய கழலிணை. "நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே" "ஒன்றுவே றுணர்வு மில்லேன்...நின்றுநீ யாடல்செய்கை நினைப்பதே நியமமாகும்" என்பன காண்க. "ஞானவம்பலம்" (சித் - அம்பரம்) (2058), "எப்புவனங்களும் நிறைந்த திருப்பதி" (1444).

சீகாழியினின்றும் திருத்தில்லை பணியப் புறப்பட்டு வந்த வழிபட்ட பிள்ளையார் திருநீலகண்டப் பாணனாரது வேண்டுகோளின்படி. நிவாநதிக்கரை வழியே போந்து திருவெருக்கத்தம்புலியூர் முதலிய தலங்களை வணங்கிப் போந்தனர். தமக்கு ஞான வமுதுதவிய தோணியப்பரைத் தரிசித்துச் சால நாளாயினமை யுணர்ந்து உருகிச் சீகாழிக்கு மீண்டு செல்ல மனங்கொண்டனர். திரும்பும் வழியில் முன்வந்த வழியே மீண்டும் திருத்தில்லை பணிந்து செல்லுதல் மரபாயினும் ஆர்வமேலீட்டினால் விரைந்து வேறு வழிச் செல்கின்றாராதலின் தில்லையின் அருட்பெருங்கூத்தியற்றும் திருவடிகளை நினைந்து துதித்து உச்சிமேற் கொண்டு சென்றனர் என்பது குறிப்பு.

கழலிணை உச்சிமேற்கொண்டே - சிவிகை மேற்கொண்டார் - சிவிகையினைத் தாம் ஊர்ந்துசெல்ல அதன் மேற்கொண்டாராயினும், அதனைச் சிவிகை என்னும் வாகனமாகக் காணாது அருளாகக் கண்டாராதலின் அது தம்மைத் தாங்குதல் என்பதின்றி அதனை அளித்த அருட்கழலைத் தம் உச்சிமேற்கொண்டு தாம் அதனைத் தாங்கிச் செல்வதாகவே உட்கொண்டு சென்றனர் என்பது. திருவருளைச் சிரமேற்றாங்கிச் சிவன் பெருமையை உலகறியச் செய்து உயிர்களை உய்யச் செய்வது கடமையாக மேற்கொண்டெழுந்தனர் என்க. **சிவிகையினை மேற்கொள்ளுதல்** - அதன் மீது எழுந்தருளுதல். 231

2130. பொருளுரை: சிவிகை....விளக்க - சிவிகையிற் பதித்த முத்துக்களினின்றும் பெருகும் ஒளியானது எல்லாத் திசைகளையும் விளக்கவும்; கவிகை..கலப்ப - மேலே கவித்த முத்துக் குடையின் வெள்ளிய மதிபோன்ற குளிர்ந்த ஒளி சூரியனது கதிர் பரவும் ஆகாயத்திற் கலக்கவும்; குவிகை...ஆட - குவித்த கைகளை மேலே கொண்டு வேதியர்கள்

2131. மறைமு ழுங்கின; தழங்கின வண்டமிழ்; வயிரின்
குறைந ரன்றன; முரன்றன வளைக்குலங்; காளம்
முறையி யம்பின; வியம்பல ஒலித்தன; முரசப்
பொறைக றங்கின; பிறங்கின போற்றிசை யரவம். **233**

ஆனந்த மேலீட்டினால் குணலையிட்டு ஆரவாரித்து ஆடவும்; புவி-போந்தார் - **உலகத்தை** எந்தக் கைம்மாறுமில்லாமற் காக்கும் பொருட்டே வந்தவதரித்தருளிய **பிள்ளையார்** போந்தருளினர்.

விளக்கவுரை: இப்பாட்டு அடிதோறும் முதற்சீர் திரிபு என்ற யாப்பணி **கொண்டது.**

சிவிகை-விளக்க - சிவிகையின் முத்துக்கள் அதனை சுற்றி நாற்புறமுமிருத்தலின் அவ்வொளி நாற்றிக்கிலும் வீசுதலால் **திசையெலாம்** விளக்க என்றார். **திசை - நாற்றிசை** குறித்தது. எண்டிசை என்றலுமாம்.

கவிகை - குடை. **கவிகையின்** - ஒளி என்க. வெண்மதிக் குளிர் என்பன **ஒளிக்கு** அடைகள். மதியின் ஒளிபோன்ற. **கவிகையாகிய** வெண்மதி என்று **கூட்டி** உரைப்பினுமமையும்.

கதிர்செய் வான் கலப்ப - **கதிர்** - சூரியனது கதிர். சூரியனது கதிர் **விளங்கும்** வானில் மதியின் குளிர் ஒளியும் கலக்க. கவிந்த குடையின் முத்துக்கள் **மேற்பக்கத்தில்** இருத்தலால் அவற்றின் ஒளி வானிற் கலக்க என்றார். வேறு எல்லா **வொளிகளையும்** கீழ்ப்படுத்தும் ஞாயிற்றின் ஒளியினையும் இம்முத்துக்களின் ஒளி தன் கீழ்ப்படுத்த **என்ற** குறிப்புமாம்.

குவி - கை - கூப்பிய கைகள். **குணலை** - குணலைக்கூத்து என்பர். **மிக்க** மகிழ்ச்சியினால் ஆரவாரத்துடன் நடிக்கும் கூத்து. இங்கு ஆரவாரம் என்ற **மட்டில்** அமைந்தது. மறைவிளங்குதலால் மறையவர் ஆடினர் என்க.

கைம்மாறின்றிப் புவிபோற்ற என்க. தாம் யாதொரு கைமாற்றினையும் **வேண்டாது;** உலகத்தைக் காக்க. **புவி** - புவியை இரண்டனுருபு தொக்கது. **போற்றுதல் - தீ தகற்றி** நலம் செய்து காத்தல். மேலும், சுற்றுத் திசையும் முத்து ஒளி விளக்கத் தாம் புவி **காத்தனர்** என்ற நயமும் காண்க.

வந்தருளினார் போந்தார் - முரண் அணி. **வந்தருளினார்** - வினைப் **பெயர்.** பிள்ளையார்.

விரிக்க - என்பதும் பாடம். **232**

2131. பொருளுரை-வெளிப்படை..... வேதங்கள் முழங்கின; வண்மையுடைய **தமிழ்** மறைகளும் ஒலித்தன; கொம்புகளின் குறைகள் ஒலித்தன; சங்கினங்கள் **முழங்கின;** எக்காளங்கள் முறைப்படி மெய்க் கீர்த்திகளைக் கூறி ஊதின; மற்றும் பலவகை **இயங்கள்** ஒலித்தன; முரசங்களாகிய பெரிய இயங்கள் முழங்கின; அடியார்கள் துதிக்கும் **சத்தம்** இவற்றின் மேலாய் விளங்கின.

விளக்கவுரை...முழங்கின என்பது முதலாக வந்த எட்டு வினைமுற்றுக்களும் ஒலித்தன என்ற ஒரே பொருளைத் தருவன. ஆயின் சத்திக்கும் வெவ்வேறு பொருள்களுக்கேற்ப ஒலிகளும் வேறு படுவனவாதலின் அவ்வவற்றுக்கு ஏற்றபடி வெவ்வேறு வினைகளாற் கூறினார். அதிர்வு - ஆர்ப்பு முதலாக வெவ்வேறு ஒலிப் பெயர்களாற் கூறும் கவிநயம்பற்றி - 1175-லும், பிறாண்டும் உரைத்தவை பார்க்க.

திருவரத்துறையினின்றும் விடைபெற்றுப் பிள்ளையார் சிவிகையில் ஏறிப் புறப்படும் இதுபோழ்து எழுச்சியின் ஆர்ப்புக்களை, முழங்கின, தழங்கின என்பது முதலாகப் பலவேறு சொற்களால் கூறி ஒரு பாட்டினுள் முடித்தனர். முன்னர்த் திருவரத் துறையை நோக்கிவரச் சிவிகையிலெழுந்தருளி வரும்போழ்து அந்நிகழ்ச்சியின் ஆர்ப்புக்களை "ஆர்த்தல்" என்ற ஒரே சொற்பின்வருநிலை யணியில் இரண்டு பாட்டுக்களாற் கூறியருளினமை காண்க. ஆங்குத் திருவரத்துறையினின்றும் வந்த வேதியர் தொண்டர் கோயிலுள்ளார் முதலியோர் ஒரு திறமும், பிள்ளையார் உடனிருந்தோர் ஒரு திறமும் ஆக இரு திறத்தார்களின் ஆர்ப்பும் ஒருமுகப்பட்டெழுந்தன. ஈண்டு அவ்வாறன்றிப் பிள்ளையாருடைய பரிசனங்களின் மகிழ்வின் முழக்கம் ஒன்றுமே காணப்படும் என்பதாம். ஈண்டு வெவ்வேறு சொற்களாற் கூறியது திருவரத் துறையினர்பாலிற் பிள்ளையாரது பிரிவாற்றாமையும், பிள்ளையாரது பரிசனங்கள் பாலில் தாம் வரும்போதில்லாத சிவிகை முதலிய அருள் பெற்றெழுந்த மகிழ்வும் பொருந்தியன என்பதும் குறிப்புப் போலும். முன்னர் விரித்தமையின் ஈண்டுச் சுருக்கியமைந்தார் என்றலுமாம்.

மறை முழங்கின - வண்தமிழ் தழங்கின - மறை முழங்கினது போலவே தமிழ் தழங்கின என்பார் வினைமுற்றுக்களை அடுத்து வரவைத்தார். மேல் **நரன்றன - முரன்றன** என்பதுமிக்கருத்து. **மறைகள் - தமிழ்கள்** எனப் பன்மையிற் கொள்க, தமிழ் என்று வேறு பிரித்துக் கூறினமையால், ஈண்டு **மறை** என்பது தமிழல்லாத மறை என்க. **மறைகள்**- வேதங்கள். இவை மூன்றென்றும், நான்கென்றும், அனந்தம் என்றும் கூறுபவாதலின் பன்மையிற் கொள்ளப்படும். **தமிழ்** - தமிழ் மறைகளும் கீதங்களும் கொள்ளப் பன்மையிற் கூறினார். **வண்மை** என்ற அடைமொழி **தமிழ்க்குச்** சிறப்பு. **வண்மையாவது** வேண்டும் பயனை வரையாது எஞ்ஞான்றும் கொடுத்தல். இங்குத் தமிழ் என்றதனுட் பிள்ளையாரது திருப்பதிகங்களும் கொள்ளப்படும், அவற்றை அப்போதே எழுதியும் பாடியும் வருவோர் உடனிருந்தார் என்பதறியப் படுதலின்.

வயிரின் குறை - வயிர் - ஊது கொம்புகள். **குறை** - இவை சில துண்டங்களாக உள்ளவை பற்பலவாறு சேர்த்தும் பொருத்தியும் முழக்கப்படுதல் குறிப்பு.

வளைக்குலம் - அளவாலும் உருவாலும் பலவகைப்பட்டவையும், தொகையாற் பன்மையும் குறிக்கக் **குலம்** என்றார்.

காளம் - இனம் பற்றித் தாரையும் திருச்சின்னமும் உடன் கொள்க. **முறை** - முறைப்படி.

இயம்பின - மெய்க் கீர்த்திகளைக் கூறி ஊதுதலின் இயம்பின - சொல்லின - என்றார். **முறை** என்றதுமிக் கருத்து.

2132. உடைய பிள்ளையார் மருமெல்லை யுள்ளவப் பதியோர்
புடையி ரண்டினுங் கொடியொடு பூந்துகில் விதானம்
நடைசெய் காவணந் தோரணம் பூகநற் கதலி
மிடையு மாலைக ணிறைகுடம் விளக்கொடு நிறைத்தார். **234**

முரசப்பொறை - பொறை - சிறுகுன்று; குன்று போலும் பெரிய உருவுடையதனைக், குன்றென்ற துபசாரம். பொற்றை - (சிறு மலை) என்பது எதுகை நோக்கி இடை குறைந்து நின்றது போலும். இயங்களுட் பெரிய உருவுடையன முரசங்கள். **பொறை** - பேருருவுடைமையின் தாங்கிச் செல்லும் முயற்சி குறித்துச் சுமை என்றலுமாம்.

போற்றிசை - **இசை** - இசைக்கும். போற்று - துதிகள்; பிள்ளையாரையும் திருவருட் பெருமையினையும் அடியார் அர!அர! என்று பலவாறும் துதித்து உடன் சென்றனர் என்க.

பிறங்கின - அர!அர! முழக்கம் எல்லாவற்றினும் மேலாய் விளங்கின என்பது. "அரகர வென்பது கடலின் முழங்கின தருணை வளம்பதியே" (அருணா - புரா). **233**

கானம்-பறை-போற்றி செய்-என்பனவும் பாடங்கள்.

2132. பொருளுரை: உடைய- பதியோர்-ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளி வரும் இடங்களில் உள்ள பதியவர்கள்; புடை— நிறைத்தார் - இரு பக்கங்களிலும் கொடிகளோடு, அழகிய துகில்களையும், விதானங்களையும், நடைக்காவணங்களையும், தோரணங்கள் - கமுகு - வாழை - நெருங்கிய மாலைகள் இவற்றால் செய்யும் அலங்காரங்களையும், விளக்கினோடு நிறைகுடங்களையும் வரிசைப் படுத்தினார்களாக,

விளக்கவுரை: உடைய - ஆளுடைய. உலகத் தந்தை தாயாரால் ஆட்கொள்ளப்பட்ட என்க. "ஆளுடைய பிள்ளையாராய்" (1967). எம்மை ஆளாகவுடைய என்றலுமாம்.

எல்லை - இடம், அளவுபட்ட நாட்டின் பகுதி.

கொடியொடு - வெற்றிக் குறியும் தசாங்கத்துள் ஒன்றும் ஆகும் சிறப்பு நோக்கி ஏனை அணி செய்வகைகளின்முன் வைத்தும், ஒடு உருபு தந்து பிரித்தும் ஓதினார். கொடி - வெண் கொடி. தூய்மையும் புகழும் சித்த அமைதியும் காட்டுவது. "விதானமும் வெண்கொடியு மில்லா வூரும்" (தேவா.) வெண்கொடி (White flag) சமாதான விருப்பம் காட்டும்படியை இந்நாள் நவீனர்களது போர்முறையினுங் காண்க.

நடைசெய் காவணம் - நடந்து நீளச் செல்லும்படி அமைக்கப்பட்ட பந்தர்.

பூந்துகில் விதானம் - அழகிய மெல்லிய துணிகள் கட்டிய மேற்கட்டி

விளக்கொடு நிறைகுடம் - என்க. இவை யிரண்டும் அங்கங்கும் மனைவாயில்களிலும் பிற குறித்த இடங்களிலும் வைக்கப்படுவன. இவை யிரண்டும் கூடி ஒரே அணிவகை என்பார், **நிறைகுடம் விளக்கொடு** - என்று ஒடு உருபினாற் கூட்டி யுரைத்தார்.

நிறைத்தல் - வரிசைப்பட வைத்தல். **234**

2133. அனைய செய்கையா லெதிர்கொளும் பதிகளா னவற்றின்
வினைத ரும்பவந் தீர்ப்பவர் கோயில்கண் மேவிப்
புனையும் வண்டமிழ் மொழிந்தடி பணிந்துபோந் தணைந்தார்
பனைநெ டுங்கைமா வுரித்தவர் மகிழ்பெரும் பழுவூர். **235**

2133. பொருளுரை: அனைய...பதிகளானவற்றின் - அத்தகைய செயல்களினாலே தம்மை எதிர்கொண்ட தலங்களில்; வினை..பணிந்து போந்து - வினை காரணமாக வரும் பிறவி தீர்த்தருளும் சிவபெருமானது திருக்கோயில்களிற் சென்று புனைகின்ற வளப்பமுடைய தமிழ்ப் பதிகங்களை அருளிச் செய்து அடிவணங்கிச் சென்று; பனை..பழுவூர் - பனைபோன்ற நீண்ட கையினையுடைய யானையை யுரித்த இறைவர் மகிழ்ந்து எழுந்தருளும் திருப்பழுவூர் என்ற தலத்தை அணைந்தனர் (பிள்ளையார்).

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு பொருள் படுத்தி உரைக்க நின்றன.

விளக்கவுரை: அனைய செய்கையால் எதிர்கொளும் பதிகளானவற்றின் *- எல்லாத்தலங்களையும் வழிபட்டுச் செல்லுதல் முறையேயாயினும், பிள்ளையார் புகலி மேற்செல மனம் வைத்துப் போந்தாராதலின் விரைந்து செல்லும் அச்செலவினிடையிடை பல தலங்களிலும் சென்று தடைப்படுதல் முறையன்று; ஆயினும் முன்பாட்டிற் கூறியபடி அடியார் எதிர்கொண்ட பதிகளில் சென்று சேராது விடுதலும் முறையன்று; ஆதலின்* **எதிர்கொளும் பதிகளில் - கோயில்கள் மேவி** *என்றார்.* **எதிர் கொளும்** *- எதிர்கொண்டு அழைக்கும்.*

வினை தரும் பவம் *- வினை காரணமாக வரும் பிறவி; வினை காரணமாக வருதால்* **வினைதரும்** *என்றார்;* ***தரும்*** *- தரப்படும் எனச் செயப்பாட்டுவினையாகக் கொள்க. அவ்வவர் வினைக்கீடாக இறைவனால் பிறவி தரப்படுவது என்பது ஞானசாத்திர முடிபு.* **பவம்** *- பிறவி - உற்பவம்.*


பவந்தீர்ப்பவர் *- சிவபெருமான், தனு முதலியவற்றையும் நூல்களையும் தந்து தன்மையாதி மூவிடங்களிலும் தாமே அருளிப் பிறவி தீர்ப்பவர்.*

பனை நெடும் கைமா *- நீண்ட கையினையுடைய விலங்கு; யானை; பனைபோன்ற கை; "பனைக்கை மும்மத வேழம்" (தேவா).*


பழுவூர் *- இது வேறு, வழுவூர் வேறு என்பர். தலவிசேடம் பார்க்க.*

வண்டமிழ் மொழிந்து *- பிள்ளையார் திருவரத்துறையினின்று போந்து வழியிடை அடியார் எதிர்கொள்ளச் சென்று இறைவர் கோயில்களை வழிபட்ட தலங்கள் இன்னவை என்று தெரியவில்லை. பதிகங்களும் கிடைத்தில! எழுமூர் (வைப்பு) வாலிகண்டபுரம் துறைமங்கலம், அரியலூர் என்ற தலங்களில் கோயில்கள் உள்ளன. (பெரம்பலூர் தாலுகா - திருச்சி சில்லா).* *235*

2134. பொருளுரை: வெளிப்படை அங்குச் சார்ந்து, பிறை சூடிய முடியினையுடைய பெருமானது அழகுமிக்க திருக்கோபுரத்தைத் தொழுது திருக்கோயிலினுள்ளே புகுந்த



திருப்பழுவூர் (பாட்டு 2133)



திருவிசயமங்கை (பாட்டு - 2137)

2134. அங்கணைந் திளம்பிறை யணிந்த சென்னியார்
பொங்கெழிற் கோபுரந் தொழுது புக்கபின்
துங்கநீள் விமானத்தைச் சூழ்ந்து வந்துமுன்
பங்கயச் சேவடி பணிந்து பாடுவார், **236**

2135. மண்ணினிற் பொலிகுல மலையர் தாந்தொழு
தெண்ணில்சீர்ப் பணிகள்செய் தேத்துந் தன்மையில்
நண்ணிய வகைசிறப் பித்து நாதரைப்
பண்ணினிற் றிகழ்திருப் பதிகம் பாடினார். **237**

பின்னர்ப், பெரிய நீண்ட விமானத்தைச் சூழ்ந்து வலம் வந்து திருமுன்பு சென்று தாமரை போன்ற திருவடிகளைத் தொழுது பாடுவாராய்,

விளக்கவுரை...கோபுரந் தொழுது *- என்றும், பின்னர்* ***விமானம் - சூழ்ந்து*** *என்றும், அதன் பின்னர் முன்பணிந்து என்றும் எடுத்து வகுத்துக் கூறியது வழி பாட்டு முறையினை வற்புறுத்தற்கு*

தொழுது - சூழ்ந்து - பணிந்து *- வினையெச்சங்கள் தனித்தனி வழிபாட்டு முறையின் அங்கங்களைக் குறித்தன.*

பாடுவார் - சிறப்பித்துப் பாடினார் *- என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.* ***பாடுவார்*** *- பாடுவாராகி; முற்றெச்சம்,*

துங்கம் *- பெரிய.* ***துங்கநீள்*** *- மிகவுயர்ந்த; மீமிசைச்சொல் என்றலுமாம்.* ***துங்கம்*** *- தூய்மையுமாம்.* ***வந்து*** *- வலம்வந்து. புக்க - கோயிலினுள் புகுந்த.* *236*

2135. பொருளுரை: மண்ணினில்...சிறப்பித்து-நிலவுலகத்திற் சிறந்து விளங்கும் அந்தணர் குலத்தில் வந்த மலையாளர்கள் தொழுது எண்ணில்லாத சிறந்த பணிகள் செய்து துதிக்கும் தன்மையில் பொருந்தியுள்ள வகைகளைச் சிறப்பித்து; நாதரை....பாடினார் - இறைவரைப் பண்ணிசையால் விளங்கும் திருப்பதிகம் பாடியருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை: மண்ணினிற் பொலிகுல மலையர் *- என்றும்,* ***சீர்ப்பணிகள் செய்து*** *- என்றும்,* ***ஏத்தும்*** *- என்றும் கூறியவை "மண்ணின்மிசை யாடிமலை யாளர் தொழு தேத்திப், பண்ணினொலி கொண்டுபயில் கின்ற பழுவூரே" (4), "வேதமொழி சொல்லிமறை யாளரிறை வன்றன், பாதமவை யேத்த" (5), "ஒன்றுமிரு மூன்றுமொரு நான்குமுணர் வார்கண், மன்றினி லிருந்துடன் மகிழ்ந்த" (9), "அந்தணர்களானமலை யாளரவ ரேத்தும்" (11) என்று வரும் பிள்ளையாரது பதிகப் பகுதிகளின் பொருளை எடுத்துக் காட்டிப் போற்றிய படியாம். பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க.*

வகை சிறப்பித்துப் பதிகம் பாடினார் என்க. சிறப்பித்த வகை முன் தொகுத்துக் காட்டப்பட்டது. மேலும் காண்க.

பணிகள் - அணுக்கத் தொண்டுகள்.

பண்ணினில் திகழ் - பண் - இந்தளப்பண். **திகழ்**தலாவது "நடையின் முடுகு **மிராகம்**" என்றபடி முடுகிய சந்தங்கொண்டிசைக்கும் கட்டளையின் விளங்குதல். **மலையாள** அந்தணர் பணி செய்தது இத்தலத்துச் சிறப்பு. ஆதலின் பிள்ளையார் அதனை **எடுத்துப்** போற்றியருளினர். அதனைப் பதிகக் குறிப்பாக ஆசிரியரும் காட்டியருளினர். **237**

திருப்பழுவூர்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் **பண் - இந்தளம்**

முத்தன்மிகு மூவிலைநல் வேலன்விரி நூலன்
அத்தனெமை யாளுடைய வண்ணலிட மென்பர்
மைத்தழை பெரும்பொழிலின் வாசமது வீசப்
பத்தரொடு சித்தர்பயில் கின்றபழு வூரே. (1)

எண்ணுமொ ரெழுத்துமிசை யின்கிளவி தேர்வார்
கண்ணுமுத லாயகட வுட்கிடம தென்பர்
மண்ணின்மிசை யாடிமலை யாளர்தொழு தேத்திப்
பண்ணினொலி கொண்டுபயில் கின்றபழு வூரே. (4)

அந்தணர்க ளானமலை யாளரவ ரேத்தும்
பந்தமலி கின்றபழு வூரரனை யாரச்
சந்தமிகு ஞானமுணர் பந்தனுரை பேணி
வந்தவண மேத்துமவர் வானமுடை யாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- ஆசிரியர் 2135ல் காட்டியருளியபடி காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **முத்தன்** - இயல்பாகவே பாசங்களினீங்கியவர்; முத்தியருள்பவர்; **விரிநூலன்** - கலைகளெல்லாமாய் விரியும் மறையின் பொருளானவர். நூல் சொன்னவர்; **பத்தர்** - அன்பர்; **சித்தர்** - சித்தத்தைச் சிவன்பால் வைத்த யோகியர். "காரணபங் கயமைந்தின் கடவுளர்தம் பதங்கடந்து, பூரணமெய்ப் பரஞ்சோதி பொலிந்திலங்கு நாதாந்தத், தாரணையாற் சிவத்தடைந்த சித்தத்தார்" என்று ஆசிரியர் இந்நிலையை விரித்தருளுதல் காண்க. அணிமாதிசித்திவல்லோர் - சித்தர் என்பாருமுளர். இது முன்னையதினும் தாழ்ந்த நிலை என்பர். "திண்டிறற் சித்தர்களே கடைக்கூழைச் சென்மின்கள்" (படையெழுச்சி) என்பது திருவாசகம்.-(2) **கோடல்** - வெண்காந்தள்; - (3) **விழி செய்த** - நினைத்த என்ற பொருளில் வந்தது. விழித்த - என்றலுமாம். (4) **எண்ணும், ஓர் எழுத்தும், இசையின் கிளவி(யும்) தேர்வார்-கண்ணும்** (நினைக்கின்ற-கண்ணுகின்ற) முதல் (வன்) என்க. - "எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்"; **மண்ணின்...பயில்கின்ற** - இதனை ஆசிரியர் (2135) எடுத்துக்காட்டியருளினர். (5) **மறையாளர்**-மறைபயிலும் மலையாளர். முன்பாட்டில் **தொழுதேத்த** என்றும், இங்கும், மேல் 11 ம் பாட்டிலும் **ஏத்த**

2136. பாவின திசைவழி பாடி யங்ககன்
றியாவருந் தொழுதுட னேத்த வெய்தினார்
மூவுல குய்யநஞ் சுண்ட மூர்த்தியார்
மேவிய பெருந்திரு விசய மங்கையில். 238

---

*என்றும் வரும் கருத்தை ஆசிரியர் "ஏத்தும் தன்மை" (2135) என்று எடுத்துப் போற்றினர். -(6) **மா அயர அன்று உரிசெய் மைந்தன்** - மா - யானை; **மைந்தன்** - வன்மையுடையோன். "பனை நெடுங்கைமா வுரித்தவர் மகிழ்பெரும் பழுவூர்" (2133) என்று இதனை எடுத்து ஆண்டனர் ஆசிரியர். யானை யுரித்த வீரம் நிகழ்ந்த தலம் இது என்ற குறிப்புப் போலும். **பூவை** - நாகணவாய்ப் பறவை. **கற்பு** - கற்பித்தல். -(7) **மந்தணம்** - மந்திரம். இரகசியம் என்றலுமாம். மாமடி - தக்கன். **சுவடு ஒற்று** - அடையாளம்பட ஒற்றிக் கொள்ளுதல் - (8) **உரம்** - வலிமை - (9) **ஒன்றும்** - ஒன்றுகின்ற - பொருந்துகின்ற. **ஒன்றும்** - ஒன்றாகிய தாரக மந்திரத்தையும் என்றலுமாம். **இருமூன்று** - வேதங்களின் ஆறு அங்கம். **ஒருநாலும்** - நான்மறைகள். **மன்று** - அம்பலம். இறைவரது கோயில். நகரசபை என்றுலுமாம். திருநீலகண்டர் புராணம் பார்க்க-(10) **முட்டைகள்** - கீழ்கள். "முட்டை கட்டுரை மொழிவ கேளாதே" (தேவா); "திட்டை முட்டைப் பெண்ணரை" (திருவிசைப்பா). - (11) **அந்தணர்களான மலையாளர் அவர் ஏத்தும்** "மலையர் தாந்தொழுது ஏத்தும்" (2135).*

*தலவிசேடம் : **திருப்பழுவூர்** - இது சோழநாட்டில் உள்ளது. காவிரிக்கு வடகரையில் 55வது தலம். அந்தணர்களாகிய மலையாளர்கள் அணுக்கன் றொண்டர்களாய்ப் பணி செய்யும் சிறப்பியல்புடைய தென்பது பதிகத்துக் காண்க. புராணத்தும் ஆசிரியர் இதனை எடுத்தோதுதலும் காண்க. **பரசுராமர் வழிபட்ட தலமென்றும், மலையாளர் பூசிக்கும் சிறப்புக்கு அது காரணம் என்றும் கூறுப**. யானை யுரித்த வீரம் நிகழ்ந்த வீரட்டம் இதுவன்று என்றும் மாயூரத்திற்குத் தெற்கில் உள்ள வழுவூர் அதுவாமென்றும் கூறுவர். ஆனால் வழுவூருக்குத் தேவாரப் பாடல் இல்லாதும், இத்தலப் பதிகத்தில் "மாவயர வன்றுரிசெய் மைந்தனிடமென்பர்" (6) என்றும், புராணத்துள் "பனைநெடுங்கைமா வுரித்தவர் மகிழ் பெரும் பழுவூர்" (2133) என்றும் வருவன யானையுரித்த விவரத்தைக் கூறுதலும் குறிக்கத்தக்கன. சுவாமி - வடமூல நாதர்; அம்மை - **அருந்தவநாயகி;** பதிகம் 1.*

இது, திருச்சி - விழுப்புரம் இருப்புப்பாதை, அரியலூர் நிலயத்தினின்றும், தெற்கில் நான்கு நாழிகை யளவில் கற்சாலைவழி அடையத்தக்கது. கல்லகம் என்ற நிலையத்தினின்றும் வட கிழக்கில் கற்சாலை வழி 3 நாழிகையிலும் அடையலாம்.

2136. பொருளுரை: வெளிப்படை. (திருப்பதிகத்தைப்) பாவின் இசை வழியே பாடி, அங்கு நின்றும் போய் யாவர்களும் உடனே கூடி ஏத்தும்படி, மூன்றுலகங்களும் உய்ய நஞ்சினை உண்டருளிய சிவபெருமான் விரும்பி எழுந்தருளிய பெரிய திருவிசயமங்கையில் சென்று சேர்ந்தனர்.

*விளக்கவுரை: **பாவினது இசைவழிபாடி** - திருப்பதிகம் பண் வழி பாடப்பட்டதனை முன் கூறினார். யாப்பும் உரிய இசையும் பொருந்தியது இங்குக் கூறப்பட்டது. **பா** - கலிவிருத்தம் என்ற விருத்தப் பாவினம்.*

2137. அந்தணர் விசயமங் கையினி லங்கணர்
தந்தனி யாலயஞ் சூழ்ந்து தாழ்ந்துமுன்
வந்தனை செய்துகோ தனத்தை மன்னிய
செந்தமிழ் மாலையிற் சிறப்பித் தேத்தினார். **239**

அங்கு அகன்று - அங்கு நின்றும் அகன்று, நீக்கப்பொருளில் வரும் **ஐந்தனுருபு** தொக்கது.

யாவரும் தொழுதுடன் ஏத்த - விசயமங்கையில் - எய்தினார் என்க. ***யாவரும் -*** உடன் வந்தார்களும் அங்கு வந்து கூடியவரும் எதிர்கொண்ட அன்பர்களும்.

பாவினமிசைவழி-என்பதும் பாடம். ***238***

2137. பொருளுரை: அந்தணர்...வந்தனை செய்து - அந்தணர்கள் வாழ்கின்ற விசயமங்கையில் சிவபெருமானது ஒப்பற்ற திருக்கோயிலை வலம் வந்து வணங்கி முன்பு வந்தித்து நின்று; கோதனத்தை - அங்குப் பசுக்களும் காமதேனுவும் பூசித்த செயலை; மன்னிய...ஏத்தினார் - நிலைபெற்ற செந்தமிழ்ப் பதிகத்திற் சிறப்பித்து எடுத்துத் துதித்தனர்.

விளக்கவுரை: கோதனத்தை - கோதனம் - பசுக்கள் - வழிப்பட்ட செயலை. ***கோதனம்*** - பசுக்குலம்; பசுவாகிய செல்வங்கள்.

கோதனத்தைத் - தமிழ் மாலையிற் சிறப்பித்து-பசுக்கள் வழிபட்ட செய்தியைப் பிள்ளையாரது பதிகம் "கோதனம் வழிபட" எனவரும் இரண்டாவது திருப்பாட்டிற் காண்க. "வெள்விடைக் கருள்செய் விசயமங்கை" என்று திருக்குறுந்தொகை (3)-யுள் ஆளுடைய அரசுகள் அருளிய துமிக் குறிப்பென்பர்.

அந்தணர் விசயமங்கை - "குலவு நான்மறை" வேதியர் தொழுதெழு விசய மங்கையே" (2) என்பது பதிகம். அந்தணர்களும் பசுக்களும் ஒருசேர வாழ்த்தற்குரியவர்; "வாழ்க வந்தணர் வானவ ரானினம்" (தேவா); இரண்டு தன்மையாலும் ஒருசேர அத்திருப்பாட்டிற் சிறப்பித்தமை குறிக்க, இவ்விரண்டினையும் இத்திருப் பாட்டில் அமைத்துக் காட்டியருளினர் ஆசிரியர். ***239***

திருவிசயமங்கை

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தார பஞ்சமம்

மருவமர் குழலுமை பங்கர் வார்சடை, யரவமர் கொள்கையெம் மடிகள் கோயிலாம்,
குரவமர் சுரபுன்னை கோங்கு வேங்கைகள், விரவிய பொழிலணி விசய மங்கையே.(1)

கீதமு னிசைதரக் கிளரும் வீணையர், பூதமு னியல்வுடைப் புனிதர் பொன்னகர்,
***கோதனம் வழிபடக் குலவு** நான்மறை, **வேதியர் தாந்தொழும்** விசய மங்கையே (2)*

***விண்ணவர் தொழுதெழு** விசய மங்கையை, நண்ணிய புகலியுள் ஞானசம் பந்தன்,*
பண்ணிய செந்தமிழ் பத்தும் வல்லவர், புண்ணியர் சிவகதி புகுத றிண்ணமே. (11)

திருச்சிற்றம்பலம்

2138. விசயமங் கையினிட மகன்று, மெய்யர்தாள்
அசைவில் வைகாவினி லணைந்து பாடிப்போந்
திசைவளர் ஞானசம் பந்த ரெய்தினார்
திசையுடை யாடையர் திருப்பு றம்பயம். **240**

பதிகப்பாட்டுக் குறிப்பு:- கோதனமும் அந்தணரும் விண்ணவரும் வழிபட இறைவர் எழுந்தருளியுள்ள சிறப்புடையது திருவிசயமங்கை.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **விசயமங்கையே அடிகள் கோயிலாம்** என்க. குரா - **சுரபுன்னை** - **கோங்கு** - **வேங்கை** - இவை கோட்டுப் பூக்களின் பொருட்டுத் திருநந்தன வனங்களில் வைக்கப்படுவன. **பொழில்** - நந்தனவனச் சோலை - (2) **வீணையர்** - இறைவரது கையில் ஏந்தியது; "மிகநல்ல வீணைதடவி" - "நல்வீணை வாசிக்குமே" (தேவா). **இயல்பு** - சூழச் சரித்தல்; **கோதனம் வழிபட** - **வேதியர் தொழுதெழு** - "அந்தணர் விசயமங்கை" என்றும், "கோதனத்தை" என்றும் (2137) ஆசிரியர் காட்டியருளிய சிறப்புப் பெருமைகள்.- (3) **அக்கும்** அரவும் அரையில் உடையவர்;- (6) **ஒப்பு உரை** - ஒப்பாகச் சொல்லப்பட்ட;- (7) **பொனின்மலை** - மேரு.- (10) கவணர் - கீழ்கள். -(11) **விண்ணவர் தொழுதெழு** - வானவர் மெய்ப்பட (6), **"விண்ணவர் தொழுதெழு"** (9); விஞ்சையர் தொழுதெழு (10).

தலவிசேடம்:- **திருவிசய மங்கை** - சோழநாட்டில் காவிரி வடகரை - 47வது பதி. விசயன் (அருச்சுனன்) வழிபட்டு வரம் பெற்றமையால் இப்பெயரெய்தியது. "பாண்டு வின்மகன் பார்த்தன் பணிசெய்து, வேண்டுநல் வரங்கொள் விசயமங்கை" என்று ஆளுடைய அரசுகள் இதனைப் போற்றியருளினர். காமதேனு, பசுக்கள், இடபம், வானவர்கள் பூசித்த சிறப்புடையது. பிள்ளையார் பதிகம் பார்க்க. சுவாமி - **விசயநாதர்;** அம்மை - **மங்கைநாயகி;** தீர்த்தம் - **அருச்சுன தீர்த்தம்;** பதிகம் - 2. (சிறிய கோயில்.)

குறிப்பு:- "கொள்ளி டக்கரைக் கோவந்த புத்தூரில்...விசயமங்கை" (குறுந்தொகை); கொள்ளிடத்தின் வடகரையில் உள்ளது கோவந்தபுத்தூர். எதிர் தென்கரையில் உள்ளது விசயமங்கை. இவை யிரண்டும் ஒரு நகராகக் கருதப்பட்டு வழங்கப்பட்டன; துருத்தியும் வேள்விக்குடியும்போல.

இத்தலம் திருப்புறம்பயத்தினின்றும் தென்மேற்கில் மட்சாலை வழி இரண்டு நாழிகையளவில் அடையத்தக்கது. கும்பகோணம் செயங்கொண்டசோழபுரம் வண்டிப் பாதையில் வடக்கு நோக்கி 2 நாழிகையளவில் மேற்கே திரும்பிச் சென்றால் 2 நாழிகையளவில் மட்சாலை வழியும் அடையத்தக்கது.

2138. பொருளுரை:- விசயமங்கை...அகன்று - விசயமங்கையினின்றும் நீங்கிச் சென்று; மெய்யர்தாள்...போந்து - அசைதல் இல்லாத வைகா(வில்) என்னும் தலத்தில் அணைந்து சத்தே சொரூபமாயுடைய இறைவரது திருவடிகளைப் பாடிப் போந்து; இசைவளர்...திருப்புறம்பயம் - (தமிழ்) இசையினை வளர்க்கின்ற திருஞானசம்பந்த நாயனார் திசைகளையே ஆடையாக உடைய இறைவரது திருப்புறம்பயம் என்னும் தலத்தை அடைந்தனர்.

விளக்கவுரை: ***விசயமங்கையினிடம்*** - மங்கையினது இடத்தினின்றும் ஐந்தனுருபுவிரிக்க.

மெய்யர் - சத்தாயுள்ளவர். ***அசைவில்*** - நிலையுதலில்லாமை.

வைகா (வில்) சோழ நாட்டுத் தலம். திருவைகாவூர் தலவிசேடம் பார்க்க.

இசைவளர் - இன்னிசையினால் தமிழை வளர்க்கும் "நாளு மின்னிசை யாற்றமிழ் பரப்பு ஞான சம்பந்தன்" (நம்பி - தேவா. கோலக்கா). இசை - புகழ் என்று கொண்டு, புகழ் பெருகும் என்றலுமாம்.

திசையுடை ஆடையர் - திக்குக்களே இறைவனது ஆடை என்பர். திகம்பரர் என்ற பெயர் காண்க.

திருப்புறம்பயம் - சோழ நாட்டுத்தலம். தலவிசேடம் பார்க்க. **240**

திருவைகாவில்

திருச்சிற்றம்பலம்   திருவிராகம்   **பண் - சாதாரி**

கோழைமிட றாககவி கோளுமில வாகவிசை கூடும்வகையால்
ஏழையடி யாரவர்கள் யாவைசொன சொன்மகிழு மீசனிடமாம்
தாழையிள நீர்முதிய காய்கமுகின் வீழநிரை தாறு சிதறி
வாழையுதிர் வீழ்கனிக ளூறிவயல் சேறுசெயும் வைகாவிலே. (1)

இன்னவுரு வின்னநிற மென்றறிவ தேலரிது நீதிபலவுந்
தன்னவுரு வாமென மிகுத்ததவ னீதியொடு தானமர்விடம்
முன்னைவினை போம்வகையி னான்முழு துணர்ந்துமுயல் கின்றமுனிவர்
மன்னவிரு போதுமரு வித்தொழுது சேரும்வயல் வைகாவிலே. (4)

முற்றுநமை யாளுடைய முக்கண்முதல் வன்றிருவை காவிலதனைச்
செற்றமலி னார்சிர புரத்தலைவன் ஞானசம் பந்தனுரைசெய்
உற்றதமிழ் மாலையீ ரைந்துமிவை வல்லவ ருருத்திரரெனப்
பெற்றமர லோகமிக வாழ்வர்பிரி யாரவர் பெரும்புகழொடே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு;- சிற்றடிமை செய்யினும் மகிழ்ந்து கொண்டு பேரருள் புரியும் இறைவரது இடம் திருவைகாவில் என்பது. "வைகாவிலே" என்றும், "வைகாவிலதனை" என்றும் வருவனவாற்றால் **வைகாவில்** என்பது தலப் பெயராகக் கொள்ளப்பட்டது. கள்ளில் - காறாயில் - நெல்வாயில் என்பனபோல.

பதிகப்பாட்டுக் குறிப்பு;- (1) கீதம் பாடும் அடியார்க்குச் சிவன் இரங்கி யருளும் எளிமை குறிக்கப்பட்டது. "கீதத்தை மிகப்பாடு மடியார்கள்" (தேவா). **கோழைமிடறு** - சுரம் நன்கு வெளிப்பட முடியாதபடி அடைக்கும் கோழையுடைய மிடறு. **கவிகோளுமில** - பாடும் கீதம் பொருள்கோ ளற்றன; **இசைகூடும் வகை** - நன்கமையாது இயன்ற அளவில்

பொருந்துதல்; ஏழை - வேறு பற்றுக்கோடு இல்லாதவர். **தாழை** - தென்னை. **இளநீர் முதியகாய்** - இளநீர் முற்றிய நெற்று; இளநீரும் முற்றிய கனியும் என்றலுமாம். தென்னை - கமுகு - வாழை - இவை செழித்து ஒன்றன்கீழ் ஒன்றாய் வரிசையிற் காணப்பயன்றந்து நிற்கும் வளம் குறித்தது. தெங்கங்கனியும் வாழைக் கனியும் முன் பறிப்பா நின்றித் தாமே விழ உள்ள நிலையும் குறிப்பு. **வயல் சேறு செயும்** - உழவர்க் குபகாரமாக என்ற குறிப்பும் காண்க. "காய்மாண்ட தெங்கின் பழம்வீழ...வாழைப் பழங்கள் சிந்தும்" என்று உபகாரக் குறிப்பாகிய பயனின்றி, வாளா செயலின் றோற்றங்கூறும் சிந்தாமணிப் பாட்டு ஈண்டு ஒப்பு நோக்கற்பாலது. "தாழையிள நீர்முதிய வாழையில் விழுந்தவதரில்...பூகநிரை தாறுதிர" (தேவா); "தெங்கம் பழம் கமுகின் குலை சாடிக் கதலி செற்று" (கோவை - 100-(2) **விண்டவர்** - பகைவர்;- (3) **உணர்ந்த** - அனுபவநிலை கைவந்த. **ஞானமிக** - சிவஞானம் முறுகி வளர; மல் - வளமை. **சூழி** - நீர் நிலை. **அணவும்** - கூடும்.-(4) இறைவர திலக்கணம் உரைத்தது. **நீதி - அறநூல் விதித்த ஒழுக்க முறைமை; "நீதி நூல்"** என்னும் வழக்குக் காண்க. **முன்னைவினை** - பழவினை -(5) **கேதகை** - தாழை.-(6) **அஞ்சுடர்** - தீபம். **ஆறுபதம்** பிரணவ முதலாகிய பஞ்சாட்சரம். **மைஞ்சர்** - மைந்தர் என்பதன் திரிபு. ஆண்மக்கள்.-(7) **குளிர** - நிரம்ப; நிறைய. "தோளைக் குளிரத் தொழுதேனே" (தேவா); **நாளி** - நாளிகேரம், தென்னை.-(8) **விலங்கல்** - மலை; **கடியோன்** - கொடியவன்; (9) **அந்த முதலாதி - முதல்** - முதல்வன்; **அந்த முதல்** - அந்தத்தைச் செய்கின்ற முதல்வனும், **ஆதி** - ஆதியைச் (சிருஷ்டி) செய்கின்ற முதல்வனுமாகிய அமரர் கோனை என்க.-(10) **அணேயா** - விளங்காத. (11) **செற்றமலினார்** - செறிந்த வளங்களால் நிறைந்த. **மாலை** - பாட்டு. **உருத்திரர் எனப்பெற்று** - "உருத்திர பல் கணத்தார்" களில் வைத்து எண்ணப்பட்டு; **புகழோடே பிரியார்** - ஓடு நீக்கப் பொருளில் வரும் ஐந்தனுருபு. உருபு மயக்கம். புகழினின்றும் பிரியார்.

தலவிசேடம் - திருவைகாவில் - தலப்பெயர்; **வைகாவூர்** என்பது இதுவரை பல பதிப்புக்களிலும் கொண்ட பெயர். காவிரிக்கு வடகரையில் 48 வது தலம். புலிக்குப் பயந்து வில்வமரத்தின்மேல்ஏறிய வேடனொருவன் இரவு முழுதுந் துயில்வராமலிருக்க வில்வ இலைகளைப் பறித்துச் சிவலிங்கத்தின் மேலே போட்டுக்கொண்டிருந்தமையால் முத்தியடைந்த தலம் என்பர். இங்குச் சிவராத்திரி சிறப்பாகக் கொண்டாடப்படுகிறது. உபதேச காண்ட வரலாறு பார்க்க. சுவாமி - **வில்வவன நாதர்;** அம்மை - **வளைக்கை நாயகி;** மரம் - **வில்வம்;** தீர்த்தம் -**இயமதீர்த்தம்**. பதிகம் -1.

குறிப்பு;- ஆளுடைய பிள்ளையாரது பதிகமுழுமையிலும் இறைவரை வழிபடும் சிறப்பும், வழிபாட்டு முறைகளும், அருட்பெருமையும் கூறப்பட்டமை காண்க.

இது திருவிசயமங்கையினின்றும் (2137ன் உரைத்த தலவிசேடம் பார்க்க.) மேற்கே மட்சாலை வழி இரண்டு நாழிகை யளவில் அடையத் தக்கது.

2139. **பொருளுரை:** புறம்பயத்து...போற்றிசெய் - திருப்புறம்பயத்தில் எழுந்தருளிய இறைவரை வணங்கித் துதிக்கும்; திறம்புரி நீர்மையில் பதிகச் செந்தமிழ் - திறம் புரிகின்ற நீர்மையில் வரும் பதிகமாகிய செந்தமிழினை; நிறம்பயில் இசையுடன் பாடி - வண்ணம் மிகும் இசையுடனே பாடி; நீடிய...மேவினார் - நீடும் அறத்தை உதவும் கொள்கையாராகிய பிள்ளையார் அங்கு விரும்பி எழுந்தருளியிருந்தனர்.

2139. புறம்பயத் திறைவரை வணங்கிப் போற்றிசெய்
திறம்புரி நீர்மையிற் பதிகச் செந்தமிழ்
நிறம்பயி லிசையுடன் பாடி நீடிய
அறந்தரு கொள்கைய ரமர்ந்து மேவினார். **241**

விளக்கவுரை: திறம் - நீர்மை - நிறம் - இசை - இவை பண்ணமைதியாகிய ***இசையின்*** பாகுபாடுகள். 221ம் பாட்டிலும், 948 - 953 பாட்டுக்களிலும், 2033 பாட்டினும் ***உரைத்தவை*** இங்கு ஏற்ற பெற்றி அமைத்துக் கண்டுகொள்க. ***நீர்மை*** - பண்ணின் முதல்முறை ***முதலாகிய*** பதினொரு பாகுபாடுகளுள் ஒன்று. (சிலப். அரங். 41-42 உரை); ***திறம்புரி - பண்வகை*** நான்கு; அவை பண், பண்ணியல், திறம், திறத்திறம் என்பன. அவற்றுள் ***திறம் பொருந்த திறம்*** - பன்னிரண்டென்பர். (சிலப். புறஞ். 187 - உரை). ***நிறம்*** - வண்ணம்.

நிறம்பயில் இசை - '-பல இயற்பாக்களுடனே நிறத்தை இசைத்தலால் ***இசை என்று*** பெயராம்" (சிலப். அரங். 28. "இசையுடன் படுத்து" - உரை.)

திறம்புரி-இசையுடன் - இதனுள் பண்ணிசைப் பாகுபாடுகள் பற்றிக் கூறிய***து. நிறம் - பசுமை-நீர்மை*** - திறம்பய னுறும்பொருள் என்று வரும் பதிக முதற் பாட்***டின் குறிப்பை*** அறிவுறுத்தியவாறாம். பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க.

நீடிய அறந்தரு கொள்கையார் - நீடிய அறம் - சிவதருமம். ***தருதல்*** - உலகுக்கு எடுத்துக்காட்டி உபதேசித்தல். ***கொள்கையார்*** - கொள்கையராய். "அறம் ***பயனுரைத்தனை"*** என்ற பதிகப் பாட்டுக் குறிப்புப் பார்க்க. ***241***

திருப்புறம்பயம்

திருச்சிற்றம்பலம் **திருவிராகம்** **பண் - இந்தளம்**

மறம்பய மலைந்தவர் மதிற்பரி சறுத்தனை;
நிறம்பசுமை செம்மையொ டிசைந்துனது நீர்மை
திறம்பய னுறும்பொரு டெரிந்துணரு நால்வர்க்
கறம் பய னுரைத்தனை புறம்பய மமர்ந்தோய். ***(1)***

விரிந்தனை குவிந்தனை விழுங்குயி ருமிழ்ந்தனை
திரிந்தனை குருந்தொசி பெருந்தகையு நீயும்
பிரிந்தனை புணர்ந்தனை பிணம்புகு மயானம்
புரிந்தனை மகிழ்ந்தனை புறம்பய மமர்ந்தோய், ***(3)***

கருங்கழி பொருந்திரை கரைக்குலவு முத்தஞ்
தருங்கழு மலத்திறை தமிழ்க்கிழமை ஞானன்
சுரும்பவிழ் புறம்பய மமர்ந்ததமிழ் வல்லார்
பெரும்பிணி மருங்கற வொருங்குவர் பிறப்பே. ***(11)***

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு:- இறைவர் உயிர்களிடத்துச் செய்யும் உபாயங்களை எடுத்துரைத்துப் போற்று முகத்தால் சிவதருமங்களை எடுத்து உபதேசித்தல். இதனை அறந்தரு கொள்கையார் (2139) என்று ஆசிரியர் காட்டியருளினர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **மறம்பயம் மலைந்தவர் - மறம்** - பாவச் செயல்கள். மறங்களையே பயனாகக் கொண்டு போரிட்டவர். முப்புரவாணர். **நிறம் - நீர்மை - திறம்** - இசைக் கூறுபாடுகள். இசையாவது சிவன் புகழை உள்ளடக்கிக் கூறுதலேயாம் என்பர்; இனி, இரட்டுற மொழிதலால், **நிறம் பசுமை செம்மையொடு இசைந்து** என்றது, நிறம் என்ற கூறுபாடாவது அம்மை (பசுமை) அப்பர் (செம்மை) என்ற சிவனருட் பண்பும், **திறம்பயனுறும் பொருள் தெரிந்து** என்றது திறம் என்பதெல்லாம் பயன்படும் மெய்ப் பொருளை உள்ளடக்கியனவே என்ற பொருட் பண்பும், **உணருநால்வர்க்கு** என்றதனால் பெறுவோர் பண்பும், **அறம் பயனுரைத்தனை** என்றதனால் சிவதன்மமாகிற ஞானப் பயனின் பண்பும், என்றலுமாம்; உபதேசித்தபடி; ஈண்டு **நீர்மை** - தன்மை; அளியின் தன்மை என்க. "அறங்கொண்டு சிவதன்ம முரைத்த பிரான்" (பிள். தேவா. புள்ளிருக்குவேளூர். சீகா. 6) "புறம்பய மதனில் அறம்பல வருளியும்" (திருவா) - (2) **எருத்து** - மார்பு - (3) **விரிந்தனை** - புனருற்பவம் - சிருட்டி. **குவிந்தனை** - ஒடுக்கம் - சங்காரம்; **விழுங்குயிர் உமிழ்ந்தனை** - சங்காரத்திலும் சிருட்டியிலும் உயிர்கள் சூக்கும சரீரத்துடன்மாயையில் கிடப்பன. தாரகமா மத்தன்றாளாகிய சிவனருளில் கிடப்பனவாயினும், மலம் நீங்கியபோது தான் திருவடிச் சம்பந்தம் வெளிப்படும்; விரிதலுங் குவிதலும் ஈண்டு வியாபகமாதலும் நுணுகுதலும் என்றல் பொருந்தும்; இத்திருப்பாட்டின் சொல்லும் பொருளும் "விரிந்துங் குவிந்தும் விழுங்குவர்கள்" எனத் திருக்களிற்றுப்படியில் எடுத்தாளப்பட்டன. **பிரிந்தனை புணர்ந்தனை** - முதல்வன் திரோதான சத்தியின் கூறாகிய ரோதயித்திரி சத்தியை அதிட்டித்து நின்று காத்தல் செய்யுங்கால், திருமாலொடு புணர்ந்தனன் என்றும், அத்தொழிலை ஒடுக்கிக் கொண்டு ஆரணி சத்தியால் உருத்திரமூர்த்தியை அதிட்டித்துச் சங்காரஞ் செய்யுங்கால் அத்திருமாலைப் பிரிந்தனன் என்றும் கூறப்படுமாதலான் "பெருந்தகையு நீயும் பிரிந்தனை புணர்ந்தனை" என்றருளிச்செய்தனர். **பிணம் புகு மயானம் புரிந்தனை மகிழ்ந்தனை** - சங்காரத்தின் பின் புனருற்பவத்தின் பொருட்டுச் செய்யும் நடனம் குறித்தது -(4) **உளங்கொள வளைந்தவர்** - சிவபூத கணங்கள். -(5) இறைவர் பிணி - இறப்பு - பிறப்பு இல்லாதவர். **படுதல்** - உண்டாதல். இத்தல அம்மை **கரும்படுசொல்லம்மை** என்பது.-(6) **அனற்படு தடக்கையவர்** - எரியோம்பும் மறையவர். வேதியர்களது வலக் கையில் அனல்உள தென்பது மரபு. அனலை உண்டாக்கும்-வளர்க்கும்-என்பது. **நினைப்புடை மனத்தவர்**-மறவா மனமுடையோர். **வினைப்பகை** - வினைக்குப் பகை. பகைப்பொருளில்வரும் நான்கனுருபு தொக்கது. **கனற்படு** - படு - உவமவுருபு. **கிடக்கையை** - கிடக்கை யுடையை.-(7) **மறுத்தவர்** - கொன்றவர்; அதனுட் செல்லாதவர். அறத்துறையிற் செல்லும்படி உள்ளம் ஒறுத்து என்க. **ஒறுத்தல்** - ஐம்புலவின் பங்களிற் செல்லாது அறத்துறையில் நிற்கும்படி தடை செய்து நிறுத்துதல். "நெறிசேர் புலனுறு மனனிடை தடைசெய்த பொறிகளி னளவு" (734); **அருட்கிழமை** - அருளுக் குரியராந் தன்மை. **திறத்துள** - வசமாக உள்ள - (8) **இறை** - அரசன்; **உலம்** - திரண்ட கல் - (10) **விடக்கு** - புலால்; **ஒருவர் நன்றெென** - **ஒருவர் தீதென**

2140. அத்திருப் பதிபணிந் தகன்று போயனற்
கைத்தலத் தவர்பதி பிறவுங் கைதொழு
முத்தமிழ் விரகரா முதல்வர் நண்ணினார்
செய்த்தலைப் பணிலமுத் தீனுஞ் சேய்ஞலூர். **242**

- முறையே புத்தர் - சமணர் கொள்கைகள். படக்கர் - கீழ்கள்: பிடக்கு - பொய். **வஞ்சம் பெரும்பிணி** - ஆணவம். ஒருங்கு - மலவாதனையும். ஒருங்குதல் - நீங்குதல். **சிவதன்மப் பயன் கூறியபடி.** '-"அறந்தரு கொள்கையர்" (2139) என்று ஆசிரியர் இத்தன்மையவாகிய வுபதேச மொழிபற்றி எடுத்துக் கூறியமை காண்க.

தலவிசேடம் - திருப்புறம்பயம் - சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் 46வது தலம் ஊழிப் பெருவெள்ளநீர் உள்ளே வராமல் தடைபட்டு வெளியில் - புறத்தில் - நின்றமையால் இப்பெயர் பெற்றதென்பர். புறம் - வெளிப்பக்கம்; பயம் - நீர். பிரளயங்காத்த பிள்ளையார் என்ற காரணப் பெயரும் காண்க. தனது பெற்றோரைத் துறந்து, தான் மணந்து கொள்ளவுள்ள காதலனொடு ஒரு வணிகப் பெண் வந்து தங்கியபோது, அவ்வணிகனைப் பாம்பு தீண்டி அவன் இறக்க, அப்பெண்ணின் பொருட்டு இறைவர் சித்தராகி எழுந்தருளி வந்து விடந்தீர்த்து அவ்விருவருக்கும் மணம் முடித்து வைத்தனர் என்பதும், பின் ஒருகால் அந்த மணத்தினைப்பற்றி வழக்கு நேர்ந்தபோது இறைவர் வன்னியும் கிணறும் இலிங்கமும் ஆகிச் சான்று பகர்ந்தனர் என்பதும் தலவரலாறு. இது சம்பந்தமான வன்னிநாடகம் என ஒன்று அணிய காலம்வரை நடிக்கப்பட்டு வழங்கி வந்தது. திருவிளையாடற் புராணத்துள் இச்சரிதம் திருஞானசம்பந்த நாயனார் திருமருகலில் விடந்தீர்த்த வரலாற்றுடன் பிணைத்துக் கூறப்பட்டுள்ளது. இவ்வரலாற்றின் காரணத்தால் சுவாமி சாட்சிநாத ரென்றும், வழங்கப்படுவர். அம்மை பெயர் **கரும்படு சொல்லம்மை** என்பது பதிகத்துக் (5) காணப்படும். இங்குச் சிவபெருமான் சனகாதியர்களுக்கு அறமுரைத் தருளினர் என்ற வரலாறு முன் 2139ன் கீழும், பதிகக் குறிப்பு, பதிகப்பாட்டுக் குறிப்புக்களினும் உரைக்கப்பட்டது. இறைவர் திருமுன்புக்குக் கீழ்பக்கம் தீர்த்தக் கரையில் எழுந்தருளிய குருமூர்த்தி இம் மூர்த்தி என்பர். இவர் திருமடப்பள்ளிக்கு விறகு கொண்டுவரும் பஞ்சம அடியார்க்கு அருளும் பொருட்டு அங்கெழுந்தருளினர் என்பதும் வரலாறு.

இத்தலம் திருவிசய மங்கையினின்றும் கிழக்கே மட்சாலை வழி ஒரு நாழிகை யளவில் அடையத் தக்கது. விசயமங்கைத் தலவிசேடம் முன் 2137ன் கீழ் உரைக்கப்பட்டது.

2140. பொருளுரை: அத்திருப்பதி...போய்-அந்தப் புறம்பயம் என்னும் திருத் தலத்தைப் பணிந்து சென்று; அனல்...முதல்வர் - தீயை ஏந்திய கையினை உடைய இறைவரது திருத் தலங்கள் பலவற்றையுங் கைதொழும் முத்தமிழ் விரகராகிய தலைவர்; செய்த் தலை...சேய்ஞலூர் நண்ணினார் - வயல்களில் சங்குகள் முத்துக்களை ஈனுதற்கிடமாகிய திருச் சேய்ஞலூரை வந்தடைந்தனர்.

விளக்கவுரை: பதி பிறவும் கை தொழும் - முதல்வர் என்க. தொழச் செல்லும் தலைவர் என்க. **பதிபிற** என்பவை இடையில் உள்ள திருவியலூர், திருந்துதேவன் குடி முதலாயின என்று கருதப்படும்.

செய்த்தலைப் பணிலம் முத்து ஈனும் - தலை - ஏழனுருபு. **பணிலம்** - சங்கு; வயலினுட் சங்கம் முத்தீனுதற்கிடமாகிய என்க. "கடலேறித் திரைமோதிக் காவிரியி னுடன்வந்து கங்குல் வைகித், திடலேறிச் சுரிசங்கம் வெண்முத்தங் கீன்றலைக்குந் திருவை யாறே' (பிள் - தேவா); சங்குகள் ஆற்றினின்றும் அலையால் கொணரப்பட்டவை.

பணில முத்தீனும் சேய்ஞலூர்-சங்கங்கள் முத்து ஈனுதல்போல, அத்திருத்தலம் சிவபூசைப் பயனை உயிர்களுக்கு அருளி முத்திக்கு நெறிகாட்டும் பிள்ளையார் திருவவதரிக்கப் பெற்றது என்ற குறிப்புப்பெற இச்சிறப்பாற் கூறினார். முத்து - விடுபட்டது; வீடுபேறு குறிப்பது; மேற்பாட்டுப் பார்க்க.

பிறவுங் கைதொழு - என்பதும் பாடம். 242

திருவியலூர்

திருச்சிற்றம்பலம். **பண் - நட்டபாடை**

குரவங்கமழ் நறுமென்குழ லரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றத னுரிவையுட லணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதியுந்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர் வியலூரே. (1)

விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதோர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கிறமிழ் பரவித்தொழு மடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும்முடை யாரே. (11)

திருச்சிற்றம்பலம்.

பதிகக் குறிப்பு:- விரிநீர் வியலூரே இறைவர்க்கிடம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **விரிநீர்** - காவிரி பரவிச்செல்ல அதன் கரையில் உள்ளமை குறிப்பு. -(2) **ஒருவன் பலவுருவன்** - "ஒருவனுமே பலவாகி நின்றவா" (திருவா); **நிலையானான்** - அழியாதவன் - (3) **உம்மென்று** - ஒலிக் குறிப்பு; **உரை** - முழக்கம்; முழக்கமிடும் சோலைகள். "குன்றங் குமுறிய **வுரை**" (பரிபா. ச. 35) **அடைவு** - புகல்-(5) இறைவர் எல்லாமாய் நிற்கு நிலை - (6) **வசை** - "கொல்லெறி குத்தென் றார்த்துக் குழூவிய வோசை" (654) "விரவலாமை சொலி" (நம்பி-தேவா) **நிலையவனை** - தவநிலையுடையானை; **அசைய** - தவநிலை கலைய; **அசையா வணம்** - தோல்வியுறாதபடி-(7) **இரவு** - இரத்தல்; சங்காரமாகிய இரா என்றலுமாம்; **பகல் நட்டம்** - **ஊனார்தருமுயிரான்** - (புனருற்பவம்) மீளப்படைத்தல்; **விளைபொருள்கள்;** புவனபோகங்கள். -(10) **பிடக்கு** - பொய்ம்மொழி.

தலவிசேடம் - திருவியலூர் - காவிரிக்கு வடகரையில் 43-வது தலம். பரந்த காவிரியின் கரையில் உள்ளது. காவிரி நீர்ச் செழிப்பு மிகஉடையது. "விரிநீர் வியலூர்" என்பது பதிகம். இது பண்டாரவாடைத் திருவிசநல்லூர் என்று வழங்கப்படுவது. மெய்கண்ட சாத்திரங்களுள் முதலாவதாகிய "திருவுந்தியார்" என்ற நூலை அருளிய

உய்யவந்த தேவநாயனார் இத்தலத்தில் எழுந்தருளியிருந்தார் என்பர். **சுவாமி - யோகாநந்தேசுரர்; அம்மை - சாந்தநாயகி;** பதிகம் 1.

இது முன்கூறிய திருப்புறம்பயத்தினின்றும் கிழக்கில் ஒரு நாழிகை யளவில் மட்சாலைவழி அடையத்தக்கது. திருவிடைமருதூர் நிலயத்தினின்றும் வடமேற்கே மட்சாலைவழி 4 நாழிகை யளவிலும் அடையலாம்.

திருந்துதேவன்குடி

திருச்சிற்றம்பலம் — பண் - கொல்லி

மருந்துவேண் டில்லிவை மந்திரங் கள்ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங் கள்ளிவை
திருந்துதே வன்குடித் தேவர்தே வெய்திய
வருந்தவத் தோர்தொழு மடிகள்வே டங்களே. (1)

வீதிபோக் காவன வினையைவீட் டுவ்வன
ஓதியோர்க் ககப்படாப் பொருளையோர் விப்பன
தீதிறே வன்குடித் தேவர்தே வெய்திய
ஆதியந் தம்மிலா வடிகள்வே டங்களே. (2)

சேடர்தே வன்குடித் தேவர்தே வன்றனை
மாடமோங் கும்பொழின் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருந்து தேவன்குடித் தேவர்தேவனது வேடங்களாகிய திருநீறு - அக்கமணி - மருந்து - மந்திரம் - புண்ணியம் முதலியவை எல்லாச் சாதனமும் பயனுமாவன.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **மருந்து வேண்டில்** - வேண்டப்படுமாயின் - வேண்டும்போது; நோய் தீர்க்கும் மருந்து மந்திரம் மணி என்ற மூன்றும் கூறப்பட்டன. தல அம்மையின் பெயர் அருமருந்தம்மை என்ற குறிப்புமாம். **வேடங்கள்** - மணி; நோய் - பிறவிநோய். **"மயக்கந் தீர்க்குநெறி - வீடுகாட்டுநெறி"** என 5வது பாட்டிற் கூறும் குறிப்புக் காண்க. வேடங்கள்-திருநாமம்.-(2) **வீதிபோக்கு** - விதி என்பது வீதி என முதனீண்டு வந்தது. **அகப்படா** - மனத்துள் வராத. **படுதல்** - உண்டாதல். அறியப்படுதல். **ஓர்வித்தல்** - அறிவித்தல்.-(3) **வான்** - சிவலோகம். (7) **கரைதல்** - மெலிதல். ஐயப்பாடு - மாறு சொல்லுதல் என்றலுமாம் - (8) **உட்குதல்** - அஞ்சுதல்.-(9) **துளக்கம்** - நிலையிற் கலங்குதல் -(10) **தொழும்பர்** - கீழ்கள்.

தலவிசேடம்:- திருந்துதேவன்குடி - சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் **42வது** தலம். நண்டு பூசித்துப் பேறுபெற்ற தலம். சிவலிங்கத் திருமேனியில் நண்டு உருவம்

2141. திருமலி புகலிமன் சேரச் சேய்ஞலூர்
அருமறை யவர்பதி யலங்க ரித்துமுன்
பெருமறை யொடுமுழ வொலிபி றங்கவே
வருமுறை யெதிர்கொள வந்து முந்தினார். **243**

காணப்படுகின்றது. ஒரே நிறமுள்ள பசுப்பால் நிறைய ஆட்டினால் திருமேனிக் குள்ளிருந்து நண்டு வருவது காணலாமென்பர். அம்மை கோயில்கள் இரண்டு.

2141. பொருளுரை: திரு_சேர - திருமிக்க சீகாழித் தலைவர் இவ்வாறு எழுந்தருளிவர; சேய்ஞலூர்..பிறங்கவே - சேய்ஞலூரில்வாழும் அரிய வேதியர்கள் தமது பதியை அலங்காரம் செய்து முன் பெரிய மறை முழக்கத்தோடு மங்கல முழவுகளின் ஒலியும் எதிர்கொள்ளும் பொருட்டு வந்து முற்பட்டனர்.

*விளக்கவுரை: **அருமறையவர் - முந்தினார்** என்க. "திருமறையோர் மூதூர்" (1206) ஆதலின் அவர்கள் முந்தினார் என்றார். **அருமறையவர் - அருமைப்பாடாவது** 1207ல் உரைக்கப்பட்டது. மேன்மையோர்களது வழிவழிவந்த சிறப்பு.*

***பதி** - நகரையும் கோயிலையும் கொள்ள நின்றது. பின் "விளங்குகோயில்" (2145) என்பது மிக்குறிப்பு.*

***மறையொடு முழவொலி** - மறையொலியொடு என்க. முழவோசையை ஒலி என்றது சார்ச்சி பற்றி வந்தது. மங்கலப் பொருள் தருதலும் குறிப்பு.*

***பிறங்கவே** - பிறங்குதலாவது முழக்கம் இன்னின்னவை என்று பிரித்தறியப் படும்படி விளங்குதல். **பிறங்க** - பெருக என்பாருமுண்டு.*

***வருமுறை** - பிள்ளையாரது பெருமைக்குத் தக்கபடி அம்முறையில்; முறைமையாவன புண்ணிய நீர்நிறை குடமேந்துதல், பொரியு மலரும் ஏந்துதல், விளக்கு ஏந்துதல் முதலாயின. (2144 பார்க்க.)*

***முந்தினார்** - பிள்ளையார் நகரினை அணுகுமுன் வந்தனர் பிள்ளையார் திருமுன்பு வந்தனர் என்றலுமாம். 243*

2142. பொருளுரை: ஞானசம்பந்தரும்...என்று - திருஞானசம்பந்தப் பிள்ளையாரும், இறைவர் தமது சடையிற் சாத்திய தூய நறிய கொன்றைமாலையை முன்னர்ச் சூட்டும் சண்டீசப் பிள்ளையார் பான்மையினால் வந்தவதரிக்கப் பெற்ற பதியிதுவாம் என்றுட் கொண்டு; நித்தில...எய்தினார் - முத்துச் சிவிகையினின்றும் இறங்கி எதிர் வணங்கி வந்தணைந்தனர்.

*விளக்கவுரை: **நாயனார்** - தலைவர் சிவபெருமான். 470ம் பிறவும் பார்க்க.*

***நாயனார் - தொடையலைச் சூட்டும் பிள்ளையார்** என்க. **தொடையல்** - மாலை. இங்குக் கொன்றைமாலை குறித்தது. 1261 பார்க்க. **பிள்ளையார்** - இறைவர் தமது மகனாகக் கொண்டமையாற் பிள்ளையார் என்பது மரபு. 1259 பார்க்க.*

2142. ஞானசம் பந்தரு, "நாய னார்சடைத்
தூநறுந் தொடையன்முன் சூட்டும் பிள்ளையார்
பான்மையில் வரும்பதி" யென்று, நித்தில
யானமுன் னிழிந்தெதி ரிறைஞ்சி யெய்தினார். **244**

2143. மாமறை யாளர்,வண் புகலிப் பிள்ளையார்
தாமெழுந் தருளிடத், தங்கள் பிள்ளையார்
காமரும் பதியில்வந் தருளக் கண்டன
ராமகிழ் வுடன்பணிந் தாடி யார்த்தனர். **245**

பான்மை - நியதி - ஊழ்; முந்தை யறிவின்றொடர்ச்சியினால் வேதாகமங்களின் முதிர்ந்த உணர்வுடன் விளங்கியமை குறிப்பு; 1218 பார்க்க. வரும் - வந்தவதரிக்கும்.

நித்தில யானம் - யானம் - சிவிகை. இழிதல் - கீழிறங்குதல்.

எதிர் இறைஞ்சி - பதியினை எதிர் வணங்கி. பதியினைக் கண்டவுடன் வணங்கும் மரபும் நகரச்சிறப்பும் உடன் குறிக்கப்பட்டன. *244*

2143. பொருளுரை: மாமறையாளர் - பெரு மறையவர்கள்; வண்...எழுந்தருளிட - வண்மையுடைய சீகாழிப் பிள்ளையார் தாம் அவ்வாறு எழுந்தருளிவர; தங்கள்மகிழ்வுடன் - தங்களுடைய சண்டீசப் பிள்ளையாரே அழகிய பதியினில் அன்று மீண்டும் எழுந்தருளிவரக் கண்டனர் போன்ற மகிழ்ச்சியுடன்; பணிந்து ஆடி ஆர்த்தனர் - வணங்கியும் ஆடியும் ஆரவாரித்தனர்.

விளக்கவுரை: வண் - பிள்ளையார் என்று கூட்டுக. வள்ளன்மையாவது கைம்மாறு கருதாது தாமே எழுந்தருளி வந்து அருள் கொடுத்தல். வண்புகலி என்று புகலியின் வளம் பற்றிக் கூறுதலுமாம். இப்பொருளில் "செய்த்தலைப் பணிலமுத் தீனும்" (2140) என்று முன் சேய்ஞலூருக்குக் கூறிய சிறப்புக் குறிப்பினைப் புகலிக்குங் கொண்டுரைக்க.

புகலிப் பிள்ளையார் - தங்கள் பிள்ளையார் - என்றீரிடத்தும் பிள்ளையார் என்ற பெயராற் கூறினமை மகன்மை முறையால் இருவரு மொப்பாகக் கண்ட குறிப்புத்தருதற்கு.

தங்கள் பிள்ளையார் - பதியில்வந்தருள - சண்டீசப் பிள்ளையார் முன்னர் வந்தது போலவே மீண்டும் வந்தருள என்க. மீண்டும் என்பது இசையெச்சத்தான் வந்தது. வந்தருள - அவர் முன்னர்த் தொழுதணைந்த சிவலோகத்தினின்றும் எழுந்தருளிவர என்பது குறிப்பு.

கண்டனர் ஆம் - கண்டார்கள்போலும். ஆம் - உவம உருபு. வினையும் பயனும் மெய்யும் உருவும் என நான்கும்பற்றி விரவி எழுந்த உவமக் குறிப்பு. சண்டீசப் பிள்ளையார் உபநயன முடித்து ஓதும் பருவத்தே இறைவரை யடைந்த சரித நிகழ்ச்சி உளதாயிற்று. ஆளுடைய பிள்ளையார்க்கும் இதுகாலை அப்பருவமேயாக இனிச் சீகாழி சேர்ந்து அடுத்து நிகழ்வது உபநயன நிகழ்ச்சியாம். (2161) என்பதும் ஈண்டு இவ்வுவமையுள் வைத்துக் கருதத்தக்கன.

2144. **களித்தனர் புண்ணியக் கரக வாசநீர்**
தெளித்தனர்; பொரிகளு மலருஞ் சிந்தினர்;
துளித்தனர் கண்மழை; சுருதி யாயிரம்
அளித்தவர் கோயிலு ளவர்முன் பெய்தினார். **246**

பணிந்து - பிள்ளையாரைப் பணிந்து.

ஆடுதல் - ஆர்த்தல் - மகிழ்ச்சியின் மெய்ப்பாடுகள். *245*

2144. ***பொருளுரை:*** *வெளிப்படை* - மேலே கண்டவாறு மகிழ்ச்சியடைந்தனராகிக் கமண்டலத்தினால் புண்ணியமுடைய மணமூட்டிய நீரினைத் தெளித்தனர்; பொரிகளையும் மலர்களையும் வீசினர்; ஆனந்தக் கண்ணீர் துளித்தனர்; அளவில்லாத வேதங்களை அளித்தருளிய சிவபெருமானது திருக்கோயிலினுள் அப் பிள்ளையாரின் முன்பு (மறையவர்) சென்றனர்.

விளக்கவுரை: *களித்தனர்* - முற்றெச்சம்; களிப்படைந்தவர்களாகி; ஏனையவை வினைமுற்றுக்கள். இஃது ஆசிரியரது கவிநயங்களுள் ஒன்று.

கரகப்புண்ணிய வாசநீர் - என்க. புண்ணிய நீராவது காவிரி முதலிய புண்ணிய நீர்நிலைகளின்றும் கொணர்ந்த நீர் என்றும், அதனோடு புண்ணியந்தரும் மந்திரங்களால் உருவெய்திய நீர் என்றும் பொருள்படும்.

கண்மழை துளித்தனர் - என்க. கண்ணீர் மழைபோலத் துளித்தல் ஆனந்த விளைவின் மெய்ப்பாடாம். துளிக்கப் பெற்றனர்.

சுருதி ஆயிரம் அளித்தவர் - சிவபெருமான். ***ஆயிரம்*** -அளவிறந்தது; அனேகம். ஆறனுருபு தொக்கது.

அவர்முன் பெய்தினார் - மாமறையாளர் என்ற எழுவாய் முன்பாட்டினின்றும் வருவிக்க. "முன்புகு காதலர் பின்சென்றார்" (1983) என்று சிவபாதவிருதயர் சென்றதுபோல இம்மறையவர்களும் பிள்ளையாரைப் பின்பற்றிச் செல்லாது அவர் முன்பு எய்தினமை என்னை? யெனின், தமது பதிக்கோயிலாதலின் அவரை எதிர் கொண்டு அழைத்துச் செல்லும் கடமைப்பாடுபற்றி என்க. *246*

2145. ***பொருளுரை:*** *வெளிப்படை.* சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும் விளக்க முடைய அத்திருக்கோயிலினை மிக்க விருப்பினாலே சுற்றி வலமாக வந்து செங்கைகளைச் சிரத்தின்மேற் குவித்துக்கொண்டு உள்ளே புகுந்து இறைவரது திருமுன்பு அணைந்து வணங்கினார்.

விளக்கவுரை: ***வெங்குரு*** - சீகாழியின் நான்காவது பெயர்.

விளங்குகோயில் - சிவனை வழிபடும் அடியார்களின் மனத்துளெல்லாம் விளங்குகின்ற என்க. என்னை? சிவபூசைப் பயன் பெறும் பொருட்டு அவர் யாவரும் இத்திருக்கோயிலினையும் அதன் பிள்ளையாரையும் உடன் எண்ணுதல் ஒரு தலையாதலின் என்க.

2145. வெங்குரு வேந்தரும், விளங்கு கோயிலைப்
பொங்கிய விருப்பினாற் புடைவ லங்கொடு,
செங்கைகள் சென்னிமேற் குவித்துச், சென்றுபுக்
கங்கணர் முன்புற வணைந்து தாழ்ந்தனர். **247**

2146. வேதியர் சேய்ஞலூர் விமலர் தங்கழல்
காதலிற் பணிந்தவர் கருணை போற்றுவார்
தாதைதா டடிந்தசண் டீசப் பிள்ளையார்
பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார். **248**

பொங்கிய விருப்பினால் - இறைவர்பால் மிகுந்த அன்பு, ஈண்டு அதனோடு மிக்குச் சண்டீசப் பிள்ளையார்பாலும் பெருகிச் சேர்ந்தமையாற் பொங்கிய என்றார். இதனை மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க.

முன்புற அணைந்து - இப்பதிகத்தில் முழுமையும் **நூலடைந்த** என்பது முதலாக **அடைந்த** என்பதுபற்றிய சிறப்புக் கூறுகின்றமையால் அக்கருத்துடன் முன்பு பொருந்த அணைந்தனர் என்பதாம். **உற** என்ற குறிப்புமிது.

அங்கணர் - தாதையை எறியும் பொருட்டுக் கோலினையே மழுவாக்கிக் கொடுத்தும். அது கொண்டு எறிந்தார்க்குப் பதம் கொடுத்தும். பிறவாறும் அருளியமையால் அவ்வருள், அவரது அங்கண்மைக் கிழுக்கில்லாமையுடன், அதனை விளக்கிக் காட்டிற்று என்றது குறிப்பு. 'பாதகப் பயன் பெறும் பரிசு" என்றும், "கருணை" என்றும், மேல் வரும் பாட்டிற்கூறும் குறிப்பும் கருத்தும் காண்க. "நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற், சயமன்றோ வானவர்க்கு" (திருவா - சாழல் 4) என்றதும் "நயனங்கண் மூன்றுடைய நாயகன்" என்ற குறிப்புப்பெற **அங்கணர்** என்றதும் கருதுக. ***247***

2146. பொருளுரை: வேதியர்...போற்றுவார் - வேதியர்கள் வாழ்தற்கிடமாகிய சேய்ஞலூரில் எழுந்தருளிய விமலரது திருவடிகளை வணங்கி அப்பெருமானாரது கருணைத் திறத்தைத் துதிப்பாராகிய பிள்ளையார்; தாதைதாள்....பரிசு பாடினார் - தாதையைத் தாளினை வெட்டிய சண்டீசப் பிள்ளையார் பாதகச் செயலாகிய அதற்குப் பயனாக அரனார் மகனாராகிய பரிசினைப் போற்றிப் பாடியருளினார்.

விளக்கவுரை....வேதியர் சேய்ஞல் - மறையவர் மிகுதியாய் வாழும் பதியாகிய சேய்ஞலூர். "மறையோர் விளங்குவது" (1207); "வேதியர் வாழும் சேய்ஞல்" (திருநேரிசை. ஆப்பாடி - 2)

கருணை - முன்பாட்டில் **அங்கணர்** என்றவிடத் துரைக்கப்பட்டது. கழுவாயில்லாத சிவாபராதத்தினின்றும் தாதையை மீட்க அருளுதலின் கருணை என விதந்தோதப்பட்டது. "நிக்கிர கங்க டானும்...இறைசெய லருளே யென்றும்" - (சித்தி - 2 - 15)

2147. **இன்னிசை வண்டமிழ் பாடி யேத்தியே**
நன்னெடும் பதியுளோர் நயக்க வைகிய
பின்னர்வெண் பிறையணி வேணிப் பிஞ்ஞகர்
மன்னிய திருப்பனந் தாள்வ ணங்கினார். **249**

கருணை போற்றுவார் - பாதகப் பயன்பெறும் பரிசு பாடினார் - பதிகம் - "பீரடைந்த" என்ற 7-வது திருப்பாட்டின் கருத்துரைத்தபடி. போற்றுவார் - போற்றுவாராகிய பிள்ளையார்; வினைப்பெயர். கருணைத் திறமாவது மாவேள்வியும் பாதகச்செயலுமாகிய செய்கைகளைப்பற்றியன்றிக் கருத்துப்பற்றிப் பயன்களளித்தல்.

தாதைதாள் தடிந்ததாகிய பாதகத்துக்குச், சண்டீசப் பிள்ளையாராகிய பரிசு என்க. "பாதக நன்மை யாய்த்தே" (சித்தி - 2-29); "பாதகத் துக்குப் பரிசுவைத் தானுக்கே பல்லாண்டு கூறுதுமே"

பாதகப்பயன் - பாதகத்துக்குப்பயன் என்க. கொடைப் பொருளில் வரும் நான்கனுருபு தொக்கது.

தாதை - எச்சதத்தன். தாள்தடிந்த - வரலாற்றினைச் சண்டீச நாயனார் புராணத்துட் (1256) பார்க்க.

பாதபங்கயம் பெறும் பரிசு-என்பதும் பாடம். *248*

2147. பொருளுரை....இன்இசை...ஏத்தியே - இனிய இசையமைந்த வண்மையுடைய தமிழ்ப் பதிகத்தினைப் பாடித் துதித்தே; நன்னெடும்...பின்னர் - நல்ல பழமையுடைய அத்திருப்பதியினுள்ளோர்கள் விரும்பியதனால் அங்குத்தங்கி எழுந்தருளியிருந்த பின்பு; வெண்பிறை....வணங்கினார் - வெள்ளிய பிறையினை அணிந்த சடையப்பர் நிலைபெற்றருளும் திருப்பனந்தாளினைச் சென்று தொழுதருளினர் (பிள்ளையார்).

விளக்கவுரை...இன் இசை வண்தமிழ் - இன் இசையாவது பதிகப் பண்ணாகிய பழந்தக்கராகமும் அதன் கட்டளை பேதமும்; வண்மையாவது "சேயடைந்த சேய்ஞலூரிற்" "செல்வன் சீர்பரவி" உபதேசித்தும், எல்லாப் பாட்டுக்களிலும் அடைந்த என மேற்கொண்டமையால் அதனை அடைதலால் வரும் பயன் பலவாற்றாலும் எடுத்துக்காட்டியும் உபகரித்தது.

நயக்க - விரும்பியதினால் சீகாழிக்குச் செல்ல மனம்வைத்த பிள்ளையார் அவ்வார்வச் செலவினிடையே இங்கு வைகியதற்கு அந்த நன்னெடும் பதியுளோர் நயந்த தன்மை காரணம் என்பதாம். நயக்க - காரணப் பொருள்பற்றி வந்த செயவெனெச்சம்.

வேணிப்பிஞ்ஞகர் - திருப்பனந்தாளின் இறைவர் சடையப்பர் என்னும் பெயர் பெறும் வரலாற்றுச் குறிப்பு. 831 பார்க்க.

ஏத்தியநன்னெடும்-என்பதும் பாடம். *249*

திருச்சேய்ஞலூர்

திருச்சிற்றம்பலம் **பண் - பழந்தக்கராகம்**

நூலடைந்த கொள்கையாலே நுன்னடி கூடுதற்கு
மாலடைந்த நால்வர்கேட்க நல்கிய நல்லறத்தை
யாலடைந்த நீழன்மேவி யருமறை சொன்னதென்னே
சேலடைந்த தண்கழனிச் சேய்ஞலூர் மேயவனே. (1)

பீரடைந்த பாலதாட்டப் பேணாத வன்றாதை
வேரடைந்து பாய்ந்ததாளை வேர்தடிந் தான்றனக்குத்
தாரடைந்த மாலைசூட்டித் தலைமைவ குத்ததென்னே
சீரடைந்த கோயின்மல்கு சேய்ஞலூர் மேயவனே. (7)

சேயடைந்த சேய்ஞலூரிற் செல்வன சீர்பரவித்
தோயடைந்த தண்வயல்சூழ் தோணிபு ரத்தலைவன்
சாயடைந்த ஞானமல்கு சம்பந்த னின்னுரைகள்
வாயடைந்து பாடவல்லார் வானுல காள்பவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு;-பதிகக் கருத்தும் குறிப்பும் 2146 திருப்பாட்டில் ஆசிரியர் காட்டியருளினர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு;-இப்பதிக முழுமையும் அடிதோறும் அடைந்த என வருவது சொற் பொருட் பின்வருநிலை.-(1) **நூல்** - வேத சிவாகமங்கள். மால் - ஐயப்பாடு. **மால்** - காதலுமாம். **நல்லறம்** - சிவதருமத்துணிபு. அறம்பொருள் இன்பம் வீடென்னு முறுதிப் பொருட்கு முடிபாகியது சிவதருமம். "திறங்கொண்ட வடியார்மேற் றீவினைநோய் வாராமே, யறங்கொண்டு சிவதன்ம முரைத்தபிரான்" (புள். வேளூர். பிள். தேவா.) **என்னே**- சொன்ன கருணைத்திறந்தான் என்ன பெருமை! என்ற அற்புதக் குறிப்பு. இவ்வாறே மேல்வரும் பாட்டுக்களிலும் கொள்க. "கருணை போற்றுவார்" -(2146); - (2) உமையாளைப் பாகம் வைத்துக் கங்கையையும் சடைமேல் வைத்த சதுரப்பாடு-(3) **நோக்கி** - **பெயர்;** நோக்குடையவள்; உமை அம்மையார்;-(4) **பாண்** - இசை; **சேண்** - விசும்பு.-(5) **வாயடைந்த** - எழுதப்படாது வாய்மொழியாக வழிவழி வந்த. **ஐவேள்வி** - பஞ்சமகாயாகங்கள்; **வேள்வித்தீ அடைந்த செங்கையாளர்** - வேள்வித்தீ வளர்க்கும் கையினராகிய மறையவர். சேய்ஞலூர் மறையவர் பதி என்பது-(6) **களிற்றுக்கோச்செங்கணான்** - சிலந்தியாயிருந்தபோது களிற்றினுடன் மாறுபட்டுப் பின் அந்நினைவுடன் கோச்செங்கணானாக வந்தவர். களிற்றின் படையினை யுடையவன் என்றலுமாம். **சேடு** - பெருமை. **அருள்செய் - மேயவன்** என்றுகூட்டுக.-(7) இப்பாட்டின் கருத்து முன் **2146-ல்** ஆசிரியரால் எடுத்துக்காட்டப் பட்டது. **பீர்** - முலையின் வழிக்கறந்த பால்.

2148. ஆங்கணி சொன்மலர் மாலைசாத்தி,யப்
பாங்குபந் தணைநலூர் பணிந்து பாடிப்போய்த்,
தீங்குதீர் மாமறைச் செம்மை யந்தணர்
ஓங்குமோ மாம்புலி யூர்வந் துற்றனர். **250**

பேணாதவனாகியதாதை; பேணாத வன்னெஞ்சனாகிய தாதை என்றலுமாம். **வேரடைந்து** - அவ்வழிபாட்டின் வேராகிய பாற்குடத்தை அடைந்த; **வேர்** - வெயர்வை; கோபித்து என்றலுமாம்; வெகுளியிலும் வேர்வை தோன்றும். "வேர்த்து வெகுளார் விழுமியோர்" குறள். -(8) **நாவடைந்த பாடல்** - துதி. **சே** - இடபம்;-(9) **கனக மனையான்** - பொன்னிறமுடைய பிரமன்;-(10) **வீசடைந்த** - வீசுதலை உடைய. **வீசுதல்** - விரித்தலும் ஆடுதலும். **தோகை** - அதனை உடைய மயிலுக்கு வந்தது. -(11) **சேய்** - முருகப் பெருமான். 1206 பார்க்க. **செல்வன** - அகரம் ஆறனுருபு; **தோய்** - தோயம்; கடைக்குறை; நீர். **சாய்** - சார்பு; **புகழ்** என்றலுமாம்.

தலவிசேடம்- திருச்சேய்ஞலூர்;- சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 41-வது தலம். ஏனைய வரலாறுகள் பற்றிச் சண்டீசநாயனார் புராணத் திறுதியில் (II - பக் - 1082) தலவிசேடம் உரைத்தவை பார்க்க.

2148. **பொருளுரை:** ஆங்கு....சாத்தி - அத்திருப்பனந்தாளில் அழகிய சொல்மலர்களாலாகிய பதிகமாலையினைச் சாத்தியபின்; அப்பாங்கு...போய் - அப்பக்கத்தில் உள்ள திருப்பந்தணை நல்லூரைப் பணிந்து துதித்து மேலே சென்று; தீங்குதீர்-உற்றனர் - தீங்கினைத் தீர்க்கும் பெருமறை பயிலும் செம்மை வேதியர்கள் விளங்கி ஓங்குதற் கிடமாகிய திருவோமாம்புலியூரினில் வந்து சேர்ந்தனர். (பிள்ளையார்).

விளக்கவுரை: ஆங்கு - அவ்விடத்தில் - முன்னறிசுட்டு. முன்சொல்லிய அத்திருப் பனந்தாளில். **அப்பாங்கு** - அதன் பக்கத்தில்.

தீங்குதீர் - **தீமையாவன** கலிவலிமையால்வரும் **தீமைகள். தீர்த்தல்.** தாங் கற்ற மறைவழியே எரிமூன்றும் வளர்த்து உலகை ஓம்புதல். "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" (பிள்ளை. தேவா - குறிஞ்சி; கோயில் - 1) - "உயர் புகழந் தணரேத்த உலகர்க் கென்றுந் **தீங்கிறிரு** வடதளி" (தாண்) என்பன காண்க.

மறைச் செம்மை - தாம்பயின்ற மறைவழி ஒழுகி எரியோம்பும் ஒழுக்கம்.

செம்மை அந்தணர் ஓங்கும் ஓமாம்புலியூர் - கற்றநூல் வழியே எரியோம்பும் அந்தணர் வாழ்தலால் அவ்வாறு காரணப்பெயர் பெற்றதென்று குறிக்க உடம்பொடு புணர்த்திஓதினார். "ஆங்கெரி மூன்று மமர்ந்துட னிருந்த வங்கையா லாகுதி வேட்கும், **ஓங்கிய மறையோ** ரோமமாம் புலியூர்" என்ற பதிகத்தின் கருத்தை ஆசிரியர் எடுத்துக் காட்டியபடி. 250

திருப்பந்தணைநல்லூர்

திருச்சிற்றம்பலம் **பண் - புறநீர்மை**

இடறினார் கூற்றைப் பொடிசெய்தார் மதிலை யிவைசொல்லி யுலகெழுந் தேத்தக்
கடறினா ராவர் காற்றுளா ராவர் காதலித் துறைதரு கோயில்
கொடிறனார் யாதுங் குறைவிலார் தாம்போய்க் கோவணங் கொண்டுகூத் தாடும்
படிறனார் போலும் பந்தணை நல்லூர் நின்றவெம் பசுபதி யாரே. **(1)**

கல்லிசை பூணக் கலையொலி யோவாக் கழுமல முதுபதி தன்னில்
நல்லிசை யாளன் புல்லிசை கேளா நற்றமிழ் ஞானசம் பந்தன்
பல்லிசை பகுவாய்ப் படுதலை யேந்தி மேவிய பந்தணை நல்லூர்
சொல்லிய பாடல் பத்தும்வல் லவர்மேற் றொல்வினை சூழகில் லாவே, **(11)**

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் கடல் - நாடு - காடு - மலை - முதலிய உலகாயுள்ளார்; அவர் அவ்வாறு இருத்தல் யாராலும் அடையாளம்பட அறியவியலாதது; யாவர் யாது சொல்லினும் அது அவரது துதியேயாம்; அவ்விறைவர் பந்தணைநல்லூர் நின்ற எம் பசுபதியார்; அவர் அவ்வாறிருத்தல் பசுக்களாகி உயிர்களுக்குப் பதியாந் தன்மையினாலாம். குறிப்பு; இங்கு அந்தணர் தீயோம்பும் சிறப்புப்பற்றி அரசுகள் திருத்தாண்டகப் பதிகமுழுமையும் அருளுதலும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:(1) இடறினார் - உதைத்தார்; **கடறு** - காடு **கொடிறனார்** - கொடுமையார். **படிறு** - வஞ்சனை; அமர்நீதியார் சரிதக் குறிப்புமாம். **பந்தணைநல்லூர் நின்றவெம் பசுபதியாரே** - பதிகத்தின் மகுடம். பசுபதியாராதலின் இன்னின்ன தன்மையர்போலும் என்பது. **பசுபதியார்** - தலத்துச் சுவாமி பெயர். - (2) **சுவடுதாமறியார் - சுவடு** - அடையாளம். அவர் அவ்வாறு ஒன்றியுடனாயிருந்தும் இருக்கும் அடையாளம் அறியப்படாதவர். **அறியார்** - செயப்பாட்டு வினை - அறியப் படாதவர். "மனமே யொன்றிப் புக்கனன் போந்த சுவடில்லையே" (தேவா). "தாவியவனுடனிருந்துங் காணாத தற்பரன்" (தேவா). **வாய்வந்தன** - இழிப்புக் குறிப்பும்படக் கூறியது. "ஒத்தன வொத்தன சொல்லிட", "தத்த மனத்தன பேசிட"; **பழி** - பழிப்பு - பழித்தல்; போற்றுதல் என்பதுமாம்.- (3) **சூட்டினார்** - சூடினார் என்பது எதுகையின்பொருட்டு ஒற்றிரட்டி நின்றது-(4) **கணங்கள்** - பூதகணங்கள்; அமரர் முதலிய தேவகணங்கள் என்றலுமாம்; **மேனி கருகினார்** - விடமெழுந்ததனால் உடல் கருகிய மால் முதலிய தேவர்கள்;- (5) **பொன்னின்** - பொன்போல். **இன்** - ஒப்புப் பொருளில் வந்த ஐந்தனுருபு. **தோற்றமுங்கேடும் பன்னினார்** - மாறிமாறி உலகைப் படைத்தலும் அழித்தலும் செய்பவர்;-(6) **அன்பினார் பிரியார்** - அணியரானார் பிரியமாட்டாராய். **பிரியார்** - பிரியாராகி. முற்றெச்சம். **பிரியார்தொழ** - என்க. "மேவினார் பிரிய மாட்டா விமலனார்" (818); **அல்லவர் தீயரென் றேத்தும் - அல்லவர்** - அன்பில்லார் - புறச்சமயிகள்; அவர்கள் தீயர் என்றிகழ்ந்தாலும் அதுவும் இறைவருக்குப் புகழ்ச்சி மொழியேயாகும் என்பது. (7) **எற்றுதல்** - மோதுதல். **தெற்றினார்**

2149. மற்றநற் பதிவட தளியின் மேவிய
அற்புத ரடிபணிந் தலர்ந்த செந்தமிழ்ச்
சொற்றொடை பாடி,யங் ககன்று, சூழ்மதிற்
பொற்பதி வாழ்கொளி புத்தூர் புக்கனர். 251

- பகைவர். *அடியிணை சேர்வான் முற்றினார்* - முப்புரத்தினுள் வாழ்ந்த அடியவரான மூவர்; "எண்ணுடை மூவர்" (திருவா). "உய்ந்தமூவர்" (தேவா);- (9) **தோற்றத்தொன்மை** - இருவரின் நடுவே தோற்றிய பொருளின் பழமை; முன்னைப் பழம்பொருளான தன்மை **துணைமைசாற்றினார்** - தாந்தாம் பெரியர் என்று இகலினார். **ஆற்றலோம் என** - இறுதியில் தமது வலியின்மை கூறி யடைய; **பாவம்** - யாம் பரமம் யாமே காண்போம் என்ற ஆணவமுயற்சி; **பாற்றுதல்** - போக்குதல்;- (11) **கல்லிசை** - நூல்கள் கற்கும் இசைபொருந்த; **புல்லிசை கேளா** - புல்லியோர் மொழியைப் பொருட்படுத்தாத; முன் "வாய்வந்தன சொல்லும் பழியுளார்" (2) என்றும், "அல்லவர் தீயரென் றேத்தும்" என்றும் வருவன வாற்றால், இத்தலத்தில் அல்லது அருகில், புறச்சமயத்தினர் அந்நாட்டிற் குழுமி யிருத்தல் கூடுமென்று கருத இடமிருக்கின்றது.

தலவிசேடம்:- **திருப்பந்தணை நல்லூர்** - அம்மையார் ஆடிய பந்து வந்தணை ஊர் என்ற காரணத்தால் இப்பெயர் போந்ததென்பர். **பந்தணநல்லூர்** - என்றும் வழங்குவர். (அணவுதல் - சமீபித்தல்); இந்நாளில் பந்தநல்லூர் என மருவிப் பெரும்பாலும் வழங்குவர். தேவ கன்னியர்களும், காமதேனுவும் பூசித்துப் பேறு பெற்ற தலம். "பைங்கணேற்றார் பலியேற்றார் பந்தணை நல்லூ ராரே" என்ற மகுடங்கொண்ட திருத்தாண்டகப் பதிகக் கருத்துக்களும் பார்க்க. சுவாமி - **பசுபதீசுவரர்** (பதிகம் பார்க்க); அம்மை - **காம்பன்ன தோளியார்;** மரம் - **கொன்றை;** பதிகம் 2.

இத்தலம் திருப்பனந்தாளினின்றும் வடகிழக்கில் 3 நாழியளவில் கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ளது. மற்றொருவழி-குற்றாலம் இருப்புப்பாதை நிலயத்தினின்றும் வடகிழக்கே 1 3/4 நாழிகை யளவில் காவிரிக்கு வடகரையில் மஞ்சிவாய்க்கால் பாலத்தினின்றும் வடமேற்கே மட்சாலைவழி 4 1/2 நாழிகை யளவில் அடைவது.

2149. **பொருளுரை:** மற்ற...பணிந்து - அந்த நல்ல பதியில் வடதளிக் கோயிலில் எழுந்தருளிய அற்புதராகிய சிவ பெருமானது திருவடிகளைப் பணிந்து; அலர்ந்த... அகன்று - விளங்கிய செந்தமிழாலாகிய திருப்பதிகத்தினைப் பாடி அங்கு நின்றும் நீங்கிச் சென்று; சூழ்மதில்...புக்கனர் - சூழ்ந்த மதிலையுடைய அழகிய பதியாகிய திருவாழ் கொளிபுத்தூரில் வந்து புகுந்தனர்.

விளக்கவுரை: வடதளி - வடக்கில் உள்ளகோயில். வடதளி என்பது கோயிலின் பெயர்;

அற்புதர் - உணர்ச்சியுள் வரினும் இன்னரென்று அறியப்படாதவர்; "அற்புதன் காண்க." (திருவா).

அலர்ந்த செந்தமிழ் - அலர்தலாவது மெய்ப்பொருள் விளங்கவிரிதல். பதிகப் பண் புறநீர்மை யாதலின், அஃது ஞாயிற்றின் கதிர் விரியும் விடியற் காலையில் பாடப் படும் மரபு பற்றிய குறிப்புமாம்.

சொற்றொடை-பதிகம்; இத்திருப்பதிகக்கருத்து உலகில் தீங்குதீர் மறையந்தணர் வேள்வித்திறம் பாராட்டுவதாதலின், அச்செயலால் உலகிற் கலிகடியப்பட்டுவிளங்குதலால், **அலர்ந்த** சொற்றொடை என்ற குறிப்புமாம்.

மதில்சூழ் - என்ற மாற்றியுரைத்தலுமாம்.

பொற்பதி - பொன் அழகு குறித்தது. 251

•

திருஓமாம்புலியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - புறநீர்மை**

பூங்கொடி மடவா ளுமையொரு பாகம் புரிதரு சடைமுடி யடிகள்
வீங்கிரு ணட்ட மாடுமெம் விகிர்தர் விருப்பொடு முறைவிடம் வினவிற்
றேங்கமழ் பொழிலிற் செழுமலர் கோதிச் செறிதரு வண்டிசை பாடும்
ஓங்கிய புகழா ரோமமாம் புலியூ ருடையவர் வடதளி யதுவே. (1)

விளைதரு வயலுள் வெயில்செறி பவள மேதிகள் மேய்புலத் திடறி
யொளிதர மல்கு மோமமாம் புலியூ ருடையவர் வடதளி யரனைக்
களிதரு நிவப்பிற் காண்டகு செல்வக் காழியுள் ஞானசம் பந்தன்
அளிதரு பாடல் பத்தும்வல் லார்க ளமரலோ கத்திருப் பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- உயிர்களை ஆளுடையவராகிய இறைவரது உறைவிடம் வினவில் "தீங்குதீர் மாமறைச் செம்மை யந்தணர் ஓங்கும், ஓமாம்புலியூர்" வடதளியதுவே.

குறிப்பு:- ஓமமாம்புலியூர் என்பது ஓமாம்புலியூர் என மருவி வழங்குகிறது; பதிகம் பார்க்க. பதிகக் குறிப்பு ஆசிரியர் (2148) காட்டியருளியபடி கண்டுகொள்க. பதிகப்பாட்டுத்தோறும் இச்சிறப்பின் குறிப்பும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **வீங்கிருள்** - உலகம் சங்கரிக்கப்பட்டொடுங்கிய ஊழி. **நட்டம்** - புனருற்பவத்தின் பொருட்டுச் செய்யப்படுவது. ஓங்கிய புகழார் - தீயோம்பு மறையவர். **புகழாவது** உலகம் தீமை நீங்க வேள்வி யியற்றுதலாலாவது; ஓங்கும் என்பதை ஆசிரியர் (2148) எடுத்துக்காட்டியது காண்க. **புகழ்**-பல்புகழ் 4; உலப்பில் பல்புகழ் 5; உலப்பில் புகழ் 8; ஒள்ளியபுகழ் 9; **வடதளி** - கோயிலின் பெயர். **தளி** - கோயில்; பழையாறை வடதளி, குரக்குத்தளி முதலியவை பார்க்க. **உறைவிடம்**-இனிதின் எழுந்தருளி யிருக்குமிடம்; மேற்பாட்டுக்களிலும் பார்க்க.-(2) சம்பரன் - ஓர் அசுரன் **சலந்தரன்** - ஓர் அசுரன். **ஆகுதியால் மழைபொழியும்** - வேள்விகள் மழைக்குக் காரணம் என்பது - (3) **இழித்த** - சிறுதுளி யளவில் இழியச் செய்த.(4) **அருத்தி** - அன்பு.-(5) **நிலத்தவர்...இமையோர்**- மூவுலகரும் துயர்கெடவும், ஆசறவும் ஆழியளித்தவன் என்க. **சலம்** - சினம் முதலிய

கீழ்மைக் குணம் என்ற பொருளில் வந்தது.-(6) இப் பாட்டு முதலிரண் டடிகளில் 8 முதலாக 1 வரை உள்ள எண்களை கீழ் வரிசைபடக் கோத்த எண்ணலங்காரம். **கொள்பொருள்** - குணங்களாற் கொள்ளப்பட்ட போகநுகரு மிடங்கள். **குற்றம்** - அவற்றால் வரும் குற்றங்கள். **மற்றவை** - ஏனைய பாகுபாடுகள். **உணர்ந்தவர்.** உணர்ந்து அவ்வழியே குற்றம் தம்மையும் உலகையும் சாராமை ஒழுகுபவர்-(8) **மாற்றவர்** - மாறாதவராய்; நிலையினராய்; முற்றெச்சம்;-(9) **கரியோன்** - திருமால்;-(10) **தெள்ளியர்** - அறிவு தெளிந்தவர்; **கலதி** - கீழ்மகன்; **நள்ளிருள் யாமம் நான்மறை தெரிந்து** - யாம முதலிய அவ்வக்காலங்களுங்கேற்றபடி சந்தித் தெய்வ மந்திரங்களாற் சந்திபண்ணு முறைப்படி ஓதி. **ஒள்ளியார்** - ஒண்மையை யுடையார்;- (11) **பவளம் ஒளிதரு** என்க. **இடறி** - இடறுதலினால். **நிவப்பு** - உயர்வு. **அளி** - கருணை; அன்பு - இரக்கம் என்றலுமாம் "அளிவளருள்ளம்" (திருவிசைப்).

தலவிசேடம்:- திருவோமமாம்புலியூர் - இது சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 31-வது தலம்; கொள்ளிடத்துக்கு வடகரையில் உள்ளது. "தீங்குதீர் மாமறைச் செம்மையந்தணர்" (2148); விதிவிழ எரிமூன்று ஓம்பி, ஓமஞ் (யாகம் - வேள்வி) செய்தொழுகும் சிறப்புப்பற்றி இப்பெயர் எய்தியது. **ஓமமாம்புலியூர்** என்ற பெயரும், பதிகக் குறிப்பும் பார்க்க. இக்கருத்துக்கொள்ளாது இது ஓம் என்னும் பிரணவ சத்தம் பற்றிய தொடர்பு கொண்டெழுந்ததென்று மயங்கிப் "பிரணவ வியாக்கிரபுரம்" என்று மொழி பெயர்த்துக்கொண்டனர் உபமந்யு பக்த விலாச ஆசிரியர். அதற்காதரவாக அம்மையார் தட்சிணாமூர்த்தியிடம் பிரணவோப தேசம் பெற்ற தலம் என்ற வரலாறும் வழங்கப்படுகின்றது. புலிக்குப் பயந்த வேடனொருவன் வில்வமரத்தில் ஏறி இரவு முழுதும் துயில்வாராமைப் பொருட்டு வில்வ இலைகளைப் பறித்துப்போட, அவை கீழே இருந்த சிவலிங்கப் பெருமான்மீது வீழ, அபுத்திபூர்வமாகக் கிடைத்த அப்புண்ணியப் பலனாக அவ்வேடன் முத்திபெற்ற தலமென்பதும் வரலாறு. இச்சரிதம் பற்றிப் புலியூர் என வந்தது போலும். அதுவன்றி திருப்பாதிரிப்புலியூர் என்பதுபோல இங்கும் புலிக்கால் முனிவர் பூசித்த தொடர்பும் உண்டுபோலும். சுவாமி - **துயரந் தீர்த்தநாதர்;** அம்மை - **பூங்கொடி நாயகி;** பதிகம் (1) பார்க்க. தீர்த்தம் - **கொள்ளிடம்;** பதிகம் - 2.

இது திருப்பந்தணைநல்லூரினின்றும் வடகிழக்கில் 3 நாழிகையளவில் கொள்ளிடக் கரைவழி ஆற்றைக்கடந்து அதன் வடகரையில் உள்ளது. திருவாழ்கொளி புத்தூரினின்றும் கொள்ளிடத்தைக் கடந்து 2 நாழிகையளவிலும் அடையலாம்; பந்தணைநல்லூரினின்றும் வாழ்கொளிபுத்தூர் வடகிழக்காக 3 நாழிகை யளவில் உள்ளது. கொள்ளிடத்துக்கு வடக்கே சிதம்பரம் - திருநாரையூர் - மன்னார்குடி கற்சாலை வழிவந்து மன்னார்குடியினின்றும் தென்கிழக்கில் மட்சாலைவழி 2 நாழிகை யளவிலும் அடையலாம். எவ்வழியும் இத்தலத்துக்குச் செல்லும் பாதை கடினம்.

ஆளுடைய பிள்ளையார் திருப்பந்தணைநல்லூரினின்றும் கொள்ளிடம் கடந்து போந்து இதனை அடைந்தருளினர் என்றறியப் படுகின்றது. **வடதளி** என்றிருத்தலின் இத்தலத்தில் தெற்கில் அல்லது வேறு திக்கில் மற்றும் ஒரு கோயில் இருந்திருத்தல் கூடும் என்று கருதப்படுகின்றது. பழையாறை வடதளி, பழையாறை மேற்றளி என்பன காண்க.

2150. சீர்வளர் கோயிலை யணைந்து, தேமலர்க்
கார்வளர் கண்டர்தாள் பணிந்து, காண்பவர்
பார்புகழ் பதிகங்கள் பாடி, நீடுவார்
வார்புகழ்க் கடம்பையும் வணங்கி வாழ்ந்தனர். 252

2150. பொருளுரை:- வெளிப்படை. சிறப்புமிக்க கோயிலினுட் சென்று வலங்கொண்டு அணைந்து, தேன்பொருந்திய கருங்குவளை மலர்போன்ற கருநிறம் வளர்தற்கிடமாகிய கண்டத்தினையுடைய இறைவரது திருவடிகளைப் பணிந்து, காண்பவராகி, உலகம் புகழும் திருப்பதிகங்களைப் பாடியருளி, எழுந்தருள்பவராகிய பிள்ளையார், நிறைந்த புகழினையுடைய திருக்கடம்பூரினையும் வணங்கி வாழ்ந்தருளினர்.

விளக்கவுரை: கோயில் - திருவாழ்கொளிபுத்தூர்த் திருக்கோயில்.

தேமலர் - இங்கு இடநோக்கிக் கருங்குவளை மலரைக்குறித்து நின்றது.

காண்பவர் - தரிசிப்பவராய் முற்றெச்சம். அகநோக்கிலே இறைவரைக்கண்டு கொண்டு என்ற குறிப்புமாம். **"காண்போம்"** என்ற பதிகக் குறிப்பு. பார் புகழ் பதிகத்துள் காண்போம் - சேர்வோம் என்று உலகுயிர்களையும் உளப்படுத்திக் கூறிப் போற்றிய குறிப்பு. மாமலரிட்டு அடியிணை "காண்போம்" என்ற தன்மையால் "அடியிணை தந்த அருள்" என்ற தலைப்பில் அகத்தியர் தேவாரத்திரட்டினுள் இப்பதிகத்தைத் தொகுத்துள்ளமை காண்க. "பொடியுடை யரவணை யந்த ணாள, னடி யிணை தந்த வருளே யாகும்".

பதிகங்கள் - பிள்ளையார் பதிகங்களிரண்டு கிடைத்துள்ளன. இன்னும் பல விருத்தல் கூடுமென்பது **பாடி நீடுவார்** - என்றதனாற் கருதப்படும்.

கடம்பை - திருக்கடம்பூர். தலவிசேடம் பார்க்க.

வணங்கி மீண்டனர்-என்பதும் பாடம். 252

திருவாழ்கொளிபுத்தூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம்**

பொடியுடை மார்பினர் போர்விடை யேறிப் பூதக ணம்புடை சூழக்
கொடியுடை யூர்திரிந் தையங் கொண்டு பலபல கூறி
வடிவுடை வாணெடுங் கண்ணுமை பாக மாயவன் வாழ்கொளி புத்தூர்க்
கடிகமழ் மாமல ரிட்டுக் கறைமிடற் றானடி காண்போம். (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரைக் கண்ட பரிசு கூறியதுடன், (2150) பலிதிரிந் தையம் வேட்டு அடியார்க்கருளும் பரிசும் போற்றியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (3) **உண்டி** - உண்டனை.-(5) **புகுதி** - புகுகின்றாய் (6) **களைதலை** - களையப்பட்ட - கிள்ளப்பட்ட - தலை ஓடு.-(7) **கண்ணி** - (8) **கணி** - கண்ணுடையவள். -(9) **உண்ணி** - உண்பவன். (10) தல அம்மை பெயர்.

குறிப்பு: இப்பதிகப் பாட்டுக்கள் 1-3 அடிகள் 7 சீர்ப் பெருமையும், 2-4அடிகள் 6 சீர்ச்சிறுமையும் கொண்ட விகற்பச்செய்யுட்கள்; தக்கராகத்தின் கட்டளை பேதம்.

தலவிசேடம்:- திருவாழ்கொளிபுத்தூர் - காவிரிக்கு வடகரையில் 29வது தலம். இது வாளொளி புத்தூர் எனவும், வாளப்புற்றூர் எனவும் மருவி வழங்கப்படும். மகாவிட்டுணு பூசித்த மரகதலிங்கம் உள்ளமையால் **"அரதனபுரம்"** எனவும் வழங்கப்படும். வண்டுபூசித்தது-அருச்சுனன் பூசித்தது முதலியவரலாறுகள் பதிகத்துட்காண்க. அருச்சுனனது வாளைப் புற்றில் ஒளித்த வரலாறுபற்றி இது வாள் ஒளி புற்றூர் என்று காரணப் பெயர் கொண்டதென்பர். துர்க்கை பூசித்த தலம்; கோட்டத்தில் உள்ள துர்க்கைக்கு உபசாரங்களுடன் பூசை நிகழ்வது அவ்வரத்தின் காரணமாய் வருகின்றது என்பர். சுவாமி - **மாணிக்கவண்ணர்** (திருமேனி ஒளி காரணம்); **அம்மை வண்டமர் பூங்குழலி;** பதிகம் (10) பார்க்க. பதிகங்கள் 3. மீனாட்சிசுந்தரம் பிள்ளை பாடிய தலபுராணமுண்டு.

இது திருப்புன்கூரினின்றும் மண்ணிப் பள்ளத்தை யடைந்து அங்கிருந்து மேற்கே மட்சாலை வழி 1 1/4 நாழிகையளவில் அடையத்தக்கது. பழமண்ணிப்படிக் கரையினின்றும் கிழக்கே மட்சாலைவழி 1/2 நாழிகை யளவிலும் அடையலாம்.

திருக்கடம்பூர் - (கடம்பைக் கரக்கோயில்)

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம்**

வானமர் திங்களு நீரு மருவிய வார்சடை யானைத்
தேனமர் கொன்றையி னானைத் தேவர் தொழப்படு வானைக்
கானம ரும்பிணை புல்கிக் கலைபயி லுங்கடம் பூரில்
தானமர் கொள்கையி னானைத் தாடொழ வீடெளி தாமே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- கடம்பூரிறைவரைத் தொழ வீடு எளிதாம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **கலை** - ஆண் மான். **பிணை** - பெண் மான். -(3) **தீத்தொழில்** - வேள்வி.-(4) **கலையொலி** - ஆடல்பாடல் முதலிய ஒலி; (7) பார்க்க. -(5) (6) (9) **பாடல்** - இறைவரைத் துதிக்கும் பாடல் - (7) **படுகில்** - படுகரில். **படுகர்** - பள்ள நிலங்கள். -(10) **சோடைகள்** - ஈரமிலாதவர்கள்; **(சோஷணம்** - வறட்சி). **சொல்லினும்** - நன்னெறி காட்டினும். **சொல்அல** - அவை நற்பயன் தருவனவாகா. - (11) **நடை** - ஒழுக்கம். **படை** - படுத்தல்; இறைவன் புகழொடு படுக்கும் பாடல்.

தலவிசேடம்:- திருக்கடம்பூர் - காவிரிக்கு வடகரை 34-வது தலம். இது கடம்பைத் திருக்கரக்கோயில் என்று ஆளுடைய அரசுகளால் திருக்குறுந்தொகையுட் போற்றப்பட்டது. மேலைக்கடம்பூர் என்று வழங்கப்படும். இத்தலத்தை வணங்கிய இந்திரன் இதனைத் தன்னுலகத்திற்குக் கொண்டுபோக நினைத்துப் பாதாளம்வரை தோண்டியும், அஃது அப்பாலும் ஊடுருவிப்போவதுகண்டு அஞ்சி, முன்போல் அமைத்துப்

2151. நம்பரை நலந்திகழ் நாரை யூரினிற்
கும்பிடும் விருப்பொடு குறுகிக் கூடிய
வம்பலர் செந்தமிழ் மாலை பாடிநின்
றெம்பிரான் கவுணியர் தலைவ ரேத்தினார். 253

பூசித்து அமிர்தம் உண்டாகும்படி வரப்பெற்றனன் என்ற வரலாறு கருதி **கரக்கோயில்** எனப்படும் என்பர். "கடம்பூர் தன்னி லிடம்பெற விருந்தும்" என்று திருவாசகத்துட் போற்றப்பட்டது மிக் கருத்து என்ப. கரக்கோயிலுக்குக் கிழக்கு 1 நாழிகையில் உள்ளது **கடம்பூர் இளங்கோயில்** என்ற வைப்புத் தலம். சுவாமி - **அமிர்தகடேசர்; அம்மை - சோதிமின்னம்மை;** பதிகம் 3.

இது திருவோமமாம்புலியூரினின்றும் வடமேற்கே மட்சாலைவழி 4 நாழிகை யளவில் அடையத்தக்கது. மன்னார் குடியிலிருந்து 3 நாழிகை.

2151. **பொருளுரை—நம்பரை-குறுகி** - இறைவரை நன்மை விளங்கும் திருநாரையூரிலே கும்பிடும் விருப்பத்துடன் சென்று சேர்ந்து; **கூடிய....நின்று** - தொகையாகச் சேர்ந்த சிவமணம் மிக்கு விரிகின்ற மாலைகளாகிய திருப்பதிகங்களைப் பாடிநின்று; **எம்பிரான்....ஏத்தினார்** - எமது பெருமானாரும் கவுணியர் தலைவருமாகிய பிள்ளையார் துதித்தனர்.

விளக்கவுரை—நலம்திகழ் நாரையூர்-"நலந்தாங்கு, தேம்புனல் சூழ்திகழ் மாமடுவிற் றிருநாரையூர்" (1) "நன்னலனோங்கு திருநாரையூர்" (7) 'நலனோங்கு" (8) என்ற பதிகப்பாட்டுக் கருத்துக் காண்க. **"நலந்தாங்கு" "நலனோங்கு"** என்ற முக்காலத்துக்கும் பொதுவாகிய வினைத்தொகையால், பிள்ளையார் திருவாக்கின் பயனாகப், பின்னர் இத்தலத்திற் பொல்லாப் பிள்ளையார் திருவருள்பெற்றுத் தேவாரத் திருமுறைகளை வெளிப்படுத்தற்கும், திருத்தொண்டர் புராணத்துக்கு ஆதரவாக வழி நூலாகிய திருவந்தாதி தருதற்கும் காரணமாகிய நம்பியாண்டார்நம்பிகள் அவதரிக்கும் நலம் பெறும் குறிப்பும் பெறப்படுதல் காண்க.

நலந்திகழ் - என்று ஆசிரியரும் இக்குறிப்பினை உள்ளடக்கி எடுத்துக் காட்டியருளினர். "நாரையூர் **நன்னகரிற் கண்டே** னானே" என்ற திருத்தாண்டகமுங் கருதுக.

கூடிய வம்பலர் - மாலை - "மாலை" என்றதற்கேற்ப "வம்பலர்" என்றார். வம்பு. மணம்; இங்குச் சிவமணம்.

கூடிய மாலை - பழம்பஞ்சுரப் பண்ணில் "காம்பினைவென்ற" என்ற "திருநாரையூர் தன்மேற்'' (11) பாடிய பதிகத்துடன் அந்தப்பண்ணிலேயே தொடர்ந்து "திருநாரையூரான்மேல்" (11) பாடியதனாற் **கூடிய** "கடலிடை' என்ற பதிகமும் கொள்க.

எம்பிரான் - இங்கு "நங்க ணாதனா நம்பியாண்டார் நம்பி" வர அருள் நோக்கம் செய்து திருவாக்களித்த தன்மை குறித்தது. 253

2152. அப்பதி பணிந்தருந் தமிழ்பு னைந்துதம்
மெய்ப்படு விருப்பொடு மேவு நாளரன்
பொற்பதி பலவுமுன் பணிந்து போந்தனர்
பைப்பணி யவர்கருப் பறிய லூரினில், 254

2152. : பொருளுரை....அப்பதி...மேவுநாள்-அந்தப் பதியினைப் பணிந்து அரிய தமிழாகிய திருப்பதிகத்தினைப் புனைந்து தமது உண்மைமிக்க பெருவிருப்பத்தினோடும் அங்கு எழுந்தருளியிருந்த நாட்களிலே; அரன்.பணிந்து - சிவபெருமானது அழகிய பதிகள் பலவற்றையும் முன்சென்று பணிந்து; போந்தனர்..கருப்பறியலூரினில் - பையினையுடைய பாம்பை யணிந்த இறைவர் எழுந்தருளியுள்ள திருக்கருப்பறியலூரினில் போந்து வந்தணைந்தருளினர் (பிள்ளையார்).

விளக்கவுரை—அருந் தமிழ் - "உரையினில் வந்த பாவம்" என்று தொடங்கிப் பியந்தைக் காந்தாரத்தில் அருளிய திருப்பதிகம். "உரையினில் வந்த பாவம் - உணர் (மனம்) நோய்கள் - செயல் (காயம்) தீங்கு - குற்றம்; வரையில் (அளவில்) நிலாமை; அவை தீரும்" (1) என்று தொடங்கிப் பதிகப் பாட்டுத்தோறும் துன்பந்தரும் இன்ப துன்பமுமாகியவை நீங்கும் பயன்களை உறுதிபடக் கூறியருளுதலினால் **அருந்தமிழ்** என்றார். இது இத்தலத்துப் பதிகத்துக்கு உரிய சிறப்பு. இப்பதிகம் இங்கு **மேவு** நாள்களில் அருளியது என்பது கருதப்படும்.

மெய்ப்படுதல் - உள்ளூற உணரப்படுதல்.

பொற்பதி - பொன் - இங்கு நிலைபெற்ற முத்தித் திருவளிக்கும் மேன்மை குறித்தது. பதிபல - குரக்குக்கா முதலியன போலும்.

பைப்பணி அவர் - பை - நச்சுப்பை. **பணியவர்** - பணியினைப் பூண்டவர். **பணி - பணம்** - படம்; படத்தினை உடையது; பாம்பு.

நாளமர் - நாண்மலர் - (பொற்பதி) - **தமிழ் புனைந்தங்கு** - என்பனவும் பாடங்கள்.

இப்பாட்டுச் சில பிரதிகளிற் கீழ்க்கண்டபடி பலவும் மாறுபட்டுக் காணப்படுகின்றது. "அப்பதி யணைந்துபோ யமரர் நாயகர். பொற்பதி பலவுமுன் பணிந்து போதுவார், மெய்ப்படு விருப்பொடு மேவி னார்பணி, பைப்பணி யவர்கருப் பறிய லூரினை." 254

திருநாரையூர்

I. திருச்சிற்றம்பலம் **பண் - பழம்பஞ்சுரம்**

காம்பினை வென்றமென் றோளிபாகங் கலந்தா னலந்தாங்கு
தேம்புனல் சூழ்திகழ் மாமடுவிற் றிருநாரை யூர்மேய
பூம்புனல் சேர்புரி புன்சடையான் புலியின் னுரிதோன்மேற்
பாம்பினை வீக்கிய பண்டரங்கன் பாதம் பணிவோமே. (1)

திருச்சிற்றம்பலம்

II. திருச்சிற்றம்பலம் பண் - பழம்பஞ்சுரம்

கடலிடை வெங்கடு நஞ்சமுண்ட கடவுள் விடையேறி
யுடலிடை யிற்பொடி பூசவல்லா னுமையோ டொருபாகன்
அடலிடை யிற்சிலை தாங்கியெய்த வம்மா னடியார்மேல்
நடலைவி னைத்தொகை தீர்த்துகந்தா னிடநாரை யூர்தானே. (1)

III. திருச்சிற்றம்பலம் பண் - பியந்தைக் காந்தாரம்

உரையினில் வந்த பாவ முணர்நோய்க ளும்ம செயநீங்கு குற்ற முலகில்
வரையினி லாமை செய்த வவைதீரும் வண்ண மிகவேத்தி நித்த நினைமின்
வரைசிலை யாக வன்று மதின்மூன் றெரித்து வளர்கங்கு னங்கை வெருவத்
திரையொலி நஞ்ச முண்ட சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழவே. (1)

எரியொடு வண்ண மாய வுருவானை யெந்தை பெருமானை யுள்கி நினையார்
திரிபுர மன்று செற்ற சிவன்மேய செல்வத் திருநாரை யூர்கை தொழுவான்
பொருபுனல் சூழ்ந்த காழி மறைஞான பந்த னுரைமாலை பத்து மொழிவார்
திருவளர் செம்மை யாகி யருள்பேறு மிக்க துளதென்பர் செம்மை யினரே. (11)

திருச்சிற்றம்பலம்

I. **பதிகக் குறிப்பு:- திருநாரையூர் என்ற தலத்தைப் போற்றியது.** 11-வது பாட்டுப் பார்க்க. இக்குறிப்பினை ஆசிரியர் "குறுகிப் பாடி" (2151) என்றறிவித் தருளினார்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **நலந்தாங்கு - நாரையூர்** என்று கூட்டுக. முன் 'நலந்திகழ்" (2151) என்ற விடத்துரைத்தவை பார்க்க. **பண்டரங்கன்** - சிவன். **பாண்டரங்கம்** - சிவன் கூத்துவகை-(3) **மாயவன்** - மாயைவல்லவன் - விட்டுணு. **சேயவன்** - செம்மை நிறமுடையவன் - உருத்திரன்; **வெள்ளியவன்** - வெள்ளிய தாமரைப் பூவிலிருப்பவன்; பிரமன்; "செம்பெருமான் வெண்மலரான் பாற்கடலான்" (திருவா)-(4) **துஞ்சிருள் - ஊழி; எம்சிவனார்** - பன்மை முழு முதன்மையாதலும் தமதுரிமையும் குறித்த அருமைப்பாடு குறித்தது - (6) **ஒன்றொடொன்று ஒவ்வாமையாவது** இப்பாசுரத்து இவை எனக் கூறியவை; அவை யாவன;- வாய்மையினாராற் பரவப்படுதலும், பரமேட்டியாதலும் முதலியவை; அவற்றோடு மலையின் தலைவனாதலும் மலை மகளைப் பாகம் வைத்தலும் முதலாயின ஒவ்வா; முன்னவை அசிந்திதனாய தன்மையன; பின்னவை சிந்திதனாய தன்மையன; (8) **தாம் ஓம்** - ஒலிக் குறிப்பு.

II. **பதிகக் குறிப்பு;-திருநாரையூரானைப் பாடியது.** 11-வது பாட்டுப் பார்க்க. இதனை ஆசிரியர் கூடிய - மாலை - பாடி - நின்று - ஏத்தினார் (2151) என்றறிவித்தருளினர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு;-(1) அடலிடையில் - அடுதலிடத்தின்கண். இடை - சமயம் - (3) தோடொருகாது - "தோடுடைய செவியன்" என்றகருத்து -(4) நண்ணல் அமர்ந்து உறைவாக்குமின் - நண்ணுதலை விரும்பி உறுதியாக்குக. உறைவு - உறைவிடம் என்றலுமாம்; நான் அமரும் - நான் விரும்பும்.-(6) புகல் - வெற்றி; கதி என்றலுமாம்.(9) ஆம் அளவும் - தமது ஆன்ம போத முயற்சி செல்லுமளவு வரையும்; பா - சிவன் புகழ்பாடல்-(11) ஆடிய - கொண்டாடிய.

III. பதிகக் குறிப்பு;-சிவன்மேய செல்வத் திருநாரையூர் கைதொழவே பாவங்களும் அவை காரணமாக வரும் துன்பங்களும் நீங்கும்; தவமும் நேசமும் வளரும்; நன்மைவரும். பாட்டுத்தோறும் கூறும் பயன்கள் பார்க்க.

இது இப்பதிகச் சிறப்பும் தலச்சிறப்புமாம். "நலந்திகழ்" (2151) என்றும் "அருந்தமிழ்" (2152) என்றும் ஆசிரியர் இதனைக் குறிப்பிட்டருளியது காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) உரை - வாக்கு; உணர் - உணர்வுக்குரிய கருவி - மனம்; செயல் - செயலுக்குரிய காயம்; மொழி மன மெய்கள் என்ற, குற்றம் வரும் கருவிகள் மூன்றையும் குறித்தபடி; இவை முறையே பாவம், நோய், தீங்கு எனப்படும் என்பது; உரையினில் வந்த பாவம் நான்கு; பொய், குறளை, கடுஞ்சொல், பயனில் சொல் என்பன. வரை - அளவு; இம் மூவழியாலும் உலகில் அளவு படாது செய்த குற்றம் என்க. எண்ணும்மைகள் தொக்கன. -(2) ஊனடைகின்ற குற்றம்-ஊன்-ஆகுபெயர்-பிறவி. குற்றம் இங்குப் பிறவிக்குக் காரணமாகிய முன் வினை குறித்தது. ஒருங்கும் - அழியும்; வினைமுற்று. உயரும் வான் என்க.; என்றும் உயர்கின்ற. விதி - விதிப்பவர். தலைவர். "விதியாள னென்னுயிர்மேல் விளையாடல் விடுத்தானோ" (அரசு - பழனம் - பழந்தக்க) - (4); "அரன் விதிஅருள்" (சித்தி - 2-51); ஆடி - பெயர் ஆடுபவர்; (3) செற்ற - செறும் தொழிலுடைய. தீங்கு - இறப்பு. உறுதிபற்றி இறந்தகாலத்தாற் கூறினார்.-(4) செற்ற - செறுதலினால்; ஆடி - பெயர்; தேய் - தேய்ந்த - (6) நிற்கும் வண்ணம் - சிவனடியில் நிலைபெற்று நிற்கும்படி. திறை - கையுறை.-(7) ஐவர் - ஐம்புலன்; வினயம் - மயக்கம்.-(8) வரைகின்ற - அளவு படுகின்ற.

தலவிசேடம்:- திருநாரையூர் - சோழ நாட்டில் காவிரிக்கு வடகரையில் 33-வது தலம். நாரை பூசித்துப் பேறு பெற்றமையால் இப்பெயர் பெற்றது - பொல்லாப் பிள்ளையார் - சுயம்புமூர்த்தி. இவரை வழிபட்டு இவரது திருவருளால் நம்பியாண்டார் நம்பிகள் தேவாரத் திருமுறைகளைக் கண்டு வெளிப்படுத்தியருளினர். திருத்தொண்டர் திருவந்தாதி பாடியருளினர்; அது திருத்தொண்டர் புராணத்துக்கு மூலமாயுள்ளது. சுவாமி - சவுந்தரேசுரர்; அம்மை - திரிபுரசுந்தரி; பதிகம் 5.

இது சிதம்பரத்துக்குத் தென்மேற்கே மட்சாலைவழி 10 நாழிகை யளவில் உள்ளது. வைத்தீசுரன் கோயில் என்ற நிலயத்தினின்று திருவோமாம்புலியூர் திருக்கடம்பூர் வழியாகவும் இதையடையலாம்.

2153. பரமர்தந் திருக்கருப் பறிய லூரினைச்
சிரபுரச் சிறுவர்கை தொழுது, செந்தமிழ்
உரையிசை பாடி,யம் மருங்கி னுள்ளவாஞ்
சுரர்தொழும் பதிகளுந் தொழுது, பாடினார். 255

2153. பொருளுரை: பரமர்...தொழுது - சிவபெருமானது திருக்கருப்பறியலூரைச் சீகாழிச் சிறிய பெருந்தகையாராகிய பிள்ளையார் கைகூப்பித் தொழுது; செந்தமிழ் பாடி - செந்தமிழ்த் திருப்பதிகத்தைப்பாடி; அம்மருங்கு...பாடினார் - அந்தப் பக்கத்தில் உள்ளனவாகிய தேவர் தொழுகின்ற பிற பதிகளையும் தொழுது பாடியருளினார்.

விளக்கவுரை: சிரபுரம் - சீகாழியின் ஏழாவது திருப்பெயர். சிறுவர் - "சிறிய பெருந்தகையார்" (1970),

செந்தமிழ் உரை இசை - இசை - புகழ் என்றும், இன்னிசை என்றும் உரைக்க நின்றது. உரை - எடுத்து உரைக்கும்; தமிழ் - தமிழினால் "வானுலக மேத்தக் கற்றவன்" "கடந்தவன்" - "கடந்தவன்" - "கருத்தவன்" - "காய்ந்தவன்" என்று பாட்டுத்தோறும் இறைவரது புகழ்களை எடுத்துக் கூறுதல் குறிப்பு.

அம்மருங்கினுள்ளவாம் - பதிகள் - திருக்குரக்குக்கா, திருப்புன்கூர், திருப்புள்ளிருக்கு வேளூர், (திருக்கொண்டல்) முதலாயின என்று கருதப்படும்.

ஆம் - வழிபட்டாரைச் சிவனடிமைத் திறத்தில் ஆக்குவிக்கும் என்று பிறவினைப் பொருளும் கொள்ள நின்றது.

பரமர் தங்கழல் கருப்பறியலூரினில்-என்பதும் பாடம். 255

திருக்கருப்பறியலூர்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - இந்தளம்

சுற்றமொடு பற்றவை துயக்கற வறுத்துக்
குற்றமில் குணத்தினொடு கூடுமடி யார்கண்
மற்றவரை வானவர்தம் வானுலக மேற்றக்
கற்றவ னிருப்பது கருப்பறிய லூரே. (1)
நலந்தரு புனற்புகலி ஞானசம் பந்தன்
கலந்தவர் கருப்பறியன் மேயகட வுள்ளைப்
பலந்தரு தமிழ்க்கிளவி பத்துமிவை கற்று
வலந்தரு மவர்க்குவினை வாடலெளி தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பெருமானது புகழ்களை உரைப்பது. கருப்பறியல் - அடைந்தவர்களது - கரு - பிறப்பு - பறிக்கப்படுதல் என்றது காரணப் பெயராதலால்

அதன் தன்மைபற்றி உரைக்கு முகத்தால் இறைவர்புகழ் பாடுதலாம். "**கலந்தவர் கருப்பறியல்**" என்று பதிகப்பயன் கூறும் பாட்டினானும், "உரையிசை" என்று ஆசிரியரும் குறித்தலானுங் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **துயக்கு** - தொடக்கு. கருப் பறியுண்ணப்படும் அடியார் தகுதியினை இறைவன் புகழுடன் சேர்த்துத் தலத்தின் பெயர்ப் பொருளை விளக்கியபடி.- (3) **போதினொடு** - உரியகாலத்தில்.-(4) **உடம்பினை விடக்கருதித்** - தொடர்ந்த என்று கூட்டுக. **விட** - விடச் செய்ய. **உடம்பினை விடுதல்** - இறத்தல். **அணவு** - **அணுகிய** - (6) **காலும்** - உமிழும்.-(7) **வடு** - மாணி - பிரமசாரி; மார்க்கண்டேயர். **வடு புக்கு** - வடுவினிடத்துப் புகுந்து. **சோதி** - தீபம். **புகை** - தூபம். **வளர்க்கும்** என்றது சந்த நோக்கி ஈற்று மகரவொற்றுக் கெட்டு நின்றது. **அரங்க** - கெடவிருந்த; **காதுதல்** - உதைத்தல்.-(10) **குற்றமறியாத பெருமான்** - தலச்சுவாமி பெயர். தலவிசேடம் பார்க்க. **கொகுடி** - ஒருவகைமுல்லை. **கொகுடிக் கோயில்** - இத்தலக் கோயிற் பெயர் அமைப்பினைப் பற்றியது. ஆளுடைய நம்பிகள் பதிகம் பார்க்க-(11) **கலந்தவர்** - வந்தணைந்தவர். **பலந்தரு** என்றது இறைவனது உபகாரமாகிய புகழ் குறித்தது. **வினைவாடல்** - கரு பறிதல்.

தலவிசேடம்:- திருக்கருப்பறியலூர் - சோழநாட்டில் காவிரிக்கு வடகரையில் 27-வது தலம், மேலைக்காழி என்றும், தலைஞாயிறு என்றும் வழங்கப்படுவது. இந்திரன் ஒரு காலத்தில் அகந்தையினுடன் கயிலைக்குச் சென்றபோது, சிவபெருமான் ஒரு இயக்கனது வடிவுடன் தோன்ற, அவரை யறிந்துகொள்ள மாட்டானாய், வச்சிராயுதம் எறிந்து போர் செய்தான்; அதன்பின் இறைவரென்றறிந்து வணங்கி மன்னிப்புப்பெற்று, அந்தக் குற்ற நீங்குதற் பொருட்டு இங்கு வந்து பூசித்துப் பேறு பெற்றனன். அது காரணமாகச் சுவாமி - **குற்றம் பொறுத்த நாதர்** எனப்படுவர். அம்மை - **கோல்வளை நாயகி**; தீர்த்தம் - **இந்திர தீர்த்தம்**; பதிகம் 2.

திருப்புன்கூரினின்றும் மேற்கே மட்சாலைவழி 2 நாழிகை யளவில் மண்ணிப் பள்ளத்தை யடைந்து, அதன் வடக்கே மட்சாலை வாழி 1/2 நாழிகை யளவில் அடையத் தக்கது. திருநாரையூரினின்றும் கொள்ளிடங் கடந்து தென் கிழக்காக நான்கு நாழிகையளவில் திருக்குரக்குக்காவை அடைந்து அங்கு நின்றும் 1/2 நாழிகையளவிலும் இதனை யடையலாம். இது கடினமான வழி. **குறிப்பு:** இவ்வழி பிள்ளையார் போந்தவழி. சீகாழியினை விரைவில் அணையமேற்கொண்ட பிள்ளையார் இவ்வழிப் போந்தருளினர். ஆளுடைய அரசுகளும் தில்லையிலிருந்து போந்து திருநாரையூரினின்றும் சீகாழிக்கு இவ்வழியே பிள்ளையாரைக்காணும் ஆர்வத்தால் எழுந்தருளினார் என்பது மறியப்படும். 1444 பாட்டுப் பார்க்க. அந்நாளில் வழக்கில் இவ்வாறு சுருங்கியதொரு வழியுமிருந்தது போலும்.

2154. பொருளுரை...மண்ணுலகு...ஏகி-இந்நிலவுலகம் செய்த பெருந் தவத்தின் பயனாகவுள்ள வள்ளலாராகிய பிள்ளையார் அந்தப் பதிகளை வணங்கி அப்பாற்சென்று; எண்ணில்..ஊத - அளவில்லாத முரசங்கள் இரங்கி எழுந்து சத்திக்கவும், சங்கங்கள் ஒலிக்கவும், விளங்கிய எக்காளங்களும் சின்னங்களும் எங்கும் ஊதவும், (ஆக இவ்வாறு);

வேறு

2154. மண்ணுலகு செய்ததவப் பயனா யுள்ள
வள்ளலா ரப்பதிகள் வணங்கி யேகி
எண்ணின்முர சிரங்கியெழப், பணில மார்ப்ப,
விலங்கியகா ளஞ்சின்ன மெங்கு மூதக்,
கண்வளர்மென் கரும்புமிடை கதிர்ச்செஞ் சாலி
கதலிகமு குடனோங்குங் கழனி நாட்டுத்
தெண்ணிலவு சூடியதம் பெருமான் வைகுந்
திருப்பிரம புரஞ்சாரச் செல்லும் போது, 256

கண்வளர்...நாட்டு - கணுக்கள் வளர்கின்ற மெல்லிய கரும்புகளும், நெருங்கிய கதிர்களையுடைய செந்நெல்லும், வாழைகளும், கமுகுகளும் ஒருங்கே ஓங்கும் வயல்களையுடைய சோழநாட்டிலே; தெண்ணிலவு...செல்லும்போது - தெளிந்த நிலவினைச்சூடிய தமது இறைவர் எழுந்தருளியுள்ள திருப்பிரமபுரம் என்னும் சீகாழியை அணுகச் செல்லும் பொழுது;

விளக்கவுரை-மண்ணுலகு செய்த தவப்பயனாயுள்ள வள்ளலார் - "வானிடத் தவரும் மண்மேல் வந்தரன் றனையர்ச் சிப்பர்" என்றபடி ஏனைய மேல் கீழ் உலகர்கள் மண்ணுலகில் வந்தே சிவனை அடையத் தவம் செய்தல் வேண்டுமாதலின் **மண்ணுலகுசெய்த** என்றார். தவத்தின் பயனேயாவார் என்பது. தவப்பயனாவது சிவனைப் பெறுதல். அதற்கு வழிகாட்டிப் பெறுவித்தலின் பிள்ளையாரைப் பயன் என்றார். **வள்ளலார்** - வரையாது கொடுப்பவர். பசிநோய் தீர்த்தல் - பிறவிநோய் தீர்த்தல் என்ற பயன்களை எல்லையின்றி எல்லார்க்கும் அளித்தல் குறிப்பு. உள்ள என்பது அத்தன்மை பண்டு, மின்றும், இனி என்றும் நிகழ இருக்கும் குறிப்பு.

அப்பதிகள் வணங்கி ஏகி - அப்பதிகள் - முன்பாட்டில் "அம்மருங்கி னுள்ளவாம்" என உரைத்தவை. **அகரம்** - முன்னறிசுட்டு; அப்பதிகளிற் சென்று வழிபட்டுப் பாடியமை முன்கூறினார். அவற்றை வணங்கிப் புறவிடைகொண்டு போந்தமை இப்பாட்டாற் கூறினார்.

பணிலம் - சங்குகள்.

இலங்கிய காளம் சின்னம் எங்கும் ஊத-இலங்கிய என்பது இறைவராற் றரப் பட்டமையும், முத்துக்களாற் புனையப்பட்டமையுமாகிய சிறப்பு விளக்கம் குறித்தது. **ஊத** - மரபு வழக்கு (2119 - 2121).

கண்வளர்மென் கரும்பு - கண் - கணுக்கள், **கண் வளர்தல்** என்பது உறங்குதல் என்ற தொனிக் குறிப்பு முடையது. "தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு கண்வளரும்" (தேவா). **மென்கரும்பு** - கரும்பின் ஒருவகை; புறத்தோல் மெல்லிதாய்க் கரும்பு பருத்துள்ளனவும், கரும்பு மெல்லிதாய்த் தோல் கடினமாய் இரசமுடையதாய் உள்ளனவும் என்றிரண்டனுள், ஏனை, மனிதர்க்கும் நரி முதலிய பிராணிகட்கும் சிறிதும் உதவாது

2155. பிள்ளையா ரெழுந்தருளக் கேட்ட செல்வப்
பிரமபுரத் தருமறையோர் பெருகு காதல்
உள்ளமகிழ் சிறந்தோங்கத் தோணி மேவு
முமைபாகர் கழல்வணங்கி யுவகை கூர
வெள்ளமறை யொலிபெருகு மறுகு தோறு
மிடைமகர தோரணங்கள் கதலி பூகந்
தெள்ளுபுன னிறைகுடங்க டீப தூபஞ்
செழுங்கொடிக ணிரைத்தெதிர்கொள் சிறப்பிற் செல்வார், 257

ஊதிய நோக்கமேகொண்டு பின்னைய மென்கரும்பு வகையினையே பெருக்குவது இந்நாண் மாக்களியல்பு. மென்கரும்பு - இளம்பயிர் என்றலுமாம்.

மிடைகதிர்ச் செஞ்சாலி - மிடை - சாலி எனவும், மிடை கதிர் எனவும் இரு வழியும் கூட்டுக. மிடைசாலி-பயிரின் நெருக்கமும், மிடைகதிர்-தூறாகப்பெருகி நென்மணிகள் மிகும் கதிர்களின் நெருக்கமும் குறிப்பன. செஞ்சாலி - நெல்லிற் சிறந்த வகை. அரிவாட்டாய நாயனார் புராணத்தும் (908), பிறாண்டு முரைத்தவை பார்க்க.

கரும்பு - சாலி - கதலி - கமுகுடனோங்கி - இவை மிகுதியாய் வயல்களில் ஒருங்கே பலவும் காணப்பட்டன என்பது. கரும்பும் நெல்லும் கமுகும் மயங்க நின்ற திறமும் குறிப்பு. 65-ம் பாட்டு பார்க்க.

தெள் நிலவு - தெள்ளுதல் - அறிதல். அறிவு தெளிந்த; சிவனை யடைதலே உய்திபெறும் வழி என்ற தெளிவு.

தம்பெருமான் - தமக்கு ஞான வமுதருளி யாண்ட பெருமான். "எனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட பெருந்தகை" (புரா. 880) என்ற பிள்ளையாரது திருவுள்ளக் குறிப்புப்படக் கூறியது.

பிரமபுரம் - ஞானம்பெற்றபோ தருளிய முதற் றிருப்பதிகப் பெயர்குறிப்புப்பட இப்பெயராற் கூறினார். மேல் "பிரமபுரத் தருமறையோர்" (2155) என்பதுங் காண்க.

சார - "சார்பு" சைவ சித்தாந்த மரபுப் பெருமொழி. "சார்புணர்ந்து" (குறள்). செல்லும்போது (2154), மறையோர் - வணங்கி-நிரைத்துச் - செல்வார் (2155); ஏந்தித் - தூவிச் சென்று - கண்டார் - (2156) என்று முடித்துக்கொள்க. 256

2155. பொருளுரை: பிள்ளையார்....மறையோர் - பிள்ளையார் எழுந்தருளிவரும் செய்தியைக்கேட்ட செல்வமுடைய பிரமபுரத்தில் வாழும் அருமறையவர்கள்; பெருக..ஓங்க - பெரும் காதலினால் தம் உள்ளங்களில் மகிழ்ச்சிபெருகி எழுதலாலே; தோணி...வணங்கி - திருத்தோணியில் எழுந்தருளிய பெரியநாயகியார் பாகரது திருவடிகளை வணங்கி; உவகைகூர - மகிழ்ச்சி பெருக; வெள்ளமறை...நிரைத்து - அனந்தமாகிய வேதங்களின் ஒலி பெருகும் திருவீதிகளிலெல்லாம் நெருங்கிய மகர தோரணங்கள், வாழை, கமுகு. தெளிந்த நீர்நிறை குடங்கள், விளக்குக்கள், தூபம், செழுங்கொடிகள், ஆகிய இவற்றை

2156. ஆரணங்கண் மதுரவொலி யெழுந்து பொங்க
வரசிலையுந் தருப்பையும்பெய் தணிந்த வாசப்
பூரணகும் பங்கணிறை கரக மேந்திப்
புதுமலரு நறுந்துகளும் பொரியுந் தூவி
வாரணங்கு முலையுமையாள் குழைத்த செம்பொன்
வள்ளத்தி லமுதுண்ட வள்ள லாரைச்
சீரணங்கு மணிமுத்தின் சிவிகை மீது
செழுந்தரளக் குடைநிழற்கீழ்ச் சென்று கண்டார். **258**

வரிசைபெற அமைத்து; எதிர்கொள் சிறப்பிற் செல்வார் - எதிர்கொள்ளும் சிறப்புக்களை மிகுதியும் செய்து செல்வாராகி,

விளக்கவுரை: தோணி...வணங்கி - பிள்ளையாரைத் தந்தருளி ஞான மளித்து ஆட்கொண்டமையும், இப்போது சிவிகை தந்து அளித்தமையும் உட்கொண்டு தோணியப்பரை வணங்கிப் புறப்பட்டனர். அடியாரைச் சென்று வணங்குமுன் அதற்குத் தகுதிதரும் பொருட்டு ஆண்டவரை வணங்கும் முறையுமாம்.

வெள்ளம் - சாகை உபசாகைகளாகப் (பெருங்கிளை சிறு கிளைகளாகப்) பெருகும் தன்மை குறித்தது. அனேகம்.

மகர தோரணம் - மகரம் - சுறாமீன். சுறவின் வடிவுகாண அமைத்த தோரணம்.

செழுங்கொடிகள் - வெண் கொடிகளும், இடபம் முதலிய முத்திரைகள் பொறித்த கொடிகளும்.

நிரைத்து - வரிசைபெற அமைத்து.

எதிர்கொள் சிறப்பில் - தக்கபடி எதிர்கொள்ளும் சிறப்புக்களுடன். 257

2156. **பொருளுரை:** வெளிப்படை. வேதங்களின் இனிய ஒலி எழுந்து பெருக, அரசிலையும் தருப்பையும் இட்டலங்கரித்த வாசனையுடைய பூரண கும்பங்களையும் நிறைந்தகரங்களையும் தாங்கி, புதிய மலர்களையும் வாசனைச் சுண்ணத்தையும் பொரியையும் தூவி, வார்பூண்ட தனங்களையுடைய உமையம்மையார் செம்பொற் கிண்ணத்திற் சிவஞானத்துடன் குழைத்த பால் அமுதத்தை உண்டருளிய வள்ளலாராகிய பிள்ளையாரைச் சிறப்புடைய அழகிய முத்துச் சிவிகையின்மேல் செழிய முத்துக் குடையின்கீழ் விளங்கக் கண்டார்கள்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு பொருள் கொண்டுரைக்க நின்றன. இவற்றால் பிரமபுரத்தந்தணர் பிள்ளையாரை எதிர்கொண்ட சிறப்புக்கூறப்பட்டது.

விளக்கவுரை: ஆரணங்கள் மதுரவொலி - **ஆரணம்** - வேதம். **மதுரம்** - ஏழு சுரமும் பொருந்த ஒத்திசைக்கும் இசையும் பயனும் குறித்தது.

அணிந்த பூரண கும்பங்கள் - நிறை கரகம் - அலங்கார மாத்திரையான பூர்ண கும்பங்களும், தெளித்தற்கான புனித நீர் நிறைந்த குடங்களும்.

2157. கண்டபொழு தேகைகள் தலைமேற் கொண்டு
கண்களிப்ப மனங்களிப்பக் காதல் பொங்கித்
தொண்டர்களு மறையவருஞ் சென்று சூழ்ந்து,
சொல்லிறந்த மகிழ்ச்சியினாற் றுதித்த வோசை
யெண்டிசையு நிறைவித்தா; ராடை வீசி
யிருவிசும்பின் வெளிதூர்த்தா; ரேறு சீர்த்தி
வண்டமிழ்நா யகருமிழிந் தெதிரே சென்று
வணங்கியவ ருடன்கூடி மகிழ்ந்து புக்கார். 259

---

*நறுந்துகள் - பொற்சுண்ணம்; மஞ்சள் கலந்த வாசனைப்பொடி, **தூவிச் சென்று** என்க.*

குழைத்த அமுது - என்க. குழைத்த - "எண்ணரிய சிவஞானத் தின்னமுதங் குழைத்தருளி" (1965); குழைத்தல் - கூட்டியிழைத்தல்.

சிவிகை மீது - குடைநீழற்கீழ் - முதலில் சிவிகையும், அதன் மேலே நோக்கப் பிள்ளையாரும், பின்னரும் மேல் நோக்க அவரது சிரத்திற் குடை நிழலும் ஆக இவ்வாறு கீழிருந்து மேனோக்கும் காட்சி. அடிமுதல் முடிவரை காணும் மேலாகிய பார்வை என்ற சிறப்புக் குறிப்பு.

வள்ளலார் - முன்னரும் இவ்வாற்றால் கூறுதல் காண்க. (2154) 258

2157. பொருளுரை: கண்டபொழுதே...பொங்கி - முன்கூறியவாறு கண்ட காட்சியினால் அப்பொழுதே கைகளைத் தலைமேல் கூப்பிக்கொண்டு, கண் களிப்புக் கொள்ளவும், மனங்களிப்பவும், காதல் பெருகி; தொண்டர்களும்....சூழ்ந்து - திருத்தொண்டர்களும் வேதியர்களும் சென்று பிள்ளையாரைச் சூழ்ந்து; சொல்லிறந்த...நிறைவித்தார் - சொல்லவொண்ணாத மகிழ்ச்சியின் பெருக்கினாலே துதிசெய்த ஓசையினை எட்டுத் திசைகளிலும் நிறைத்தனர்; ஆடைவீசி....தூர்த்தார் - மேலாடையை வீசுதலினால் பெரிய ஆகாய வெளியையும் மறைத்தனர்; ஏறு...புக்கார் - ஏறும் பெருமையுடைய வளம் பொருந்திய தமிழ்த்தலைவராகிய பிள்ளையாரும் சிவிகையினின்றும் கீழே இறங்கி அவர்கள் எதிரிற்சென்று வணங்கி அவர்களுடனேகூடி மகிழ்ந்து நகரத்தினுள் புகுந்தருளினர்.

விளக்கவுரை: கண்டபொழுதே - ஏகாரம் தேற்றம்; ஆர்வமிகுதி யுணர்த்திற்று.

கை தலைமேற்கொண்டு... மனங்களிப்பக் காதல் பொங்கி - கைகளும் கண்களும் மனமும் முன்பின்னின்றி ஒருங்கே செயல் புரியும்படி காதல் பெருக. மனம் பிரேரித்துக் கலக்கக் கண்காணும்; கண்கண்டு களிக்கப் பின் கை தலைமீது குவியும்; இவ்வாறன்றி மாறிய வைப்பு முறையிற் செயல் ஒருங்கு நிகழ்ந்ததற்குக் காதல் மிகுந்தமை காரணமாம் என்பது குறிப்பு.

2158. திங்களணி மணிமாட மிடைந்த வீதி
சென்றணைந்து தெய்வமறைக் கற்பின் மாதர்
மங்கலவாழ்த் திசையிரண்டு மருங்கு மல்க,
வானவர்நா யகர்கோயின் மருங்கு சார்ந்து,
துங்கநிலைக் கோபுரத்தை யிறைஞ்சிப் புக்குச்,
சூழ்ந்து, திருத் தோணிமிசை மேவி னார்கள்
தங்கடிரு முன்புதாழ்ந், தெழுந்து, நின்று,
தமிழ்வேதம் பாடினார் தாளம் பெற்றார். **260**

தொண்டர்களை முன் வைத்தது சிறப்புப்பற்றியும் பிள்ளையாரது **திருவுள்ளத்** *தார்வம் செல்லும் நிலைபற்றியுமாம்.*

ஓசை - ஓசையை. **திசையும்** - திசைகளினிடத்தும். வேற்றுமைஉருபுகள் தொக்கன.

ஆடை வீசி...தூர்த்தார் - உத்தரியம் மேலே வீசுதல் மகிழ்ச்சிக் குறிப்பாகிய செயல். 1992 பார்க்க.

வெளி தூர்த்தல் - வானவெளியை மறைத்தல்.

ஏறுசேர்த்தி - **ஏறுதல்** - பெருகுதல். அறிவோர்களுள்ளத்தில் ஏறுதல் என்ற குறிப்புமாம். "ஏறுமயி லேறிவிளை யாடுமுகம்" (திருப்புகழ்).

வண்தமிழ் நாயகர் - பிள்ளையார்.

வணங்கி - அடியார் திருவேடத்தினுள்ளே சிவனைக்கண்டு வணங்கி.

உடன் கூடி மகிழ்ந்து - "அடியேனுன் அடியார் நடுவு ளிருக்கு மருளைப் புரியாய்" (திருவா). "உடனுறைவின் பயன்பெற்றார்" (1809).

புக்கார் - பிரமபுரத் திருநகரத்தினுள்ளே புகுந்தருளினர். தொண்டர்களும் மறையவரும்கூடி நகர்ப்புறத்தே வந்து எதிர்கொண்டாராதலின் அவருடன்கூடி நகரினுள்ளே புகுந்தனர். *259*

2158. **பொருளுரை**...திங்கள்...அணைந்து - சந்திரனைத் தாங்கும்படி உயர்ந்த அழகிய மாடங்கள் நிறைந்த திருவீதியிற்சென்று அணைந்து; தெய்வ....மல்க - தெய்வத் தன்மை வாய்ந்த மறைவழிவந்த கற்பின் மிக்க மாதர்கள் முழக்கும் மங்கல வாழ்த்துக்கள் இருபுறமும் நிறைய; வானவர்...சூழ்ந்து - தேவ தேவரது பெரிய நிலைகளை யுடைய திருக்கோபுரத்தை வணங்கிக் கோயிலினுள்ளே புகுந்து வலம்வந்து; தோணி மிசை....தாளம்பெற்றார் - திருத்தாளம் பெற்றவராகிய பிள்ளையார் திருத்தோணியில் எழுந்தருளியவர்களுடைய திருமுன்னர் வீழ்ந்து எழுந்து நின்று தமிழ் வேதமாகிய திருப்பதிகம் பாடியருளினார்.

விளக்கவுரை...**திங்களணி மணிமாடம்**-உயர்ச்சி குறித்தது; "மாடம், விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரம்" (தேவா).

2159. பரவுதிருப் பதிகவிசை பாடி, நீடும்
பரங்கருணைத் திருவருளின் பரிசு போற்றி,
விரவுமலர்க் கண்பனிப்பக் கைகள் கூப்பி,
வீழ்ந்தெழுந்து, புறம்போந்து, வேத வாய்மைச்
சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும் போது,
திருநீல கண்டயாழ்ப் பாணர் பின்னே
வர, வவரை வளம்பெருகு மனையிற் போக
வருள்செய்து, தந்திருமா ளிகையின் வந்தார்; **261**

தெய்வ மறை...மல்க - மாதர்கள் வாழ்த்திசைக்கும் மரபு முன்னாள் வழக்கு; இந்நாளில் அருகியது. முன்னரும் இவ்வாறு காண்க. (1994). இது தெய்விக நிகழ்ச்சிபற்றியும் பிள்ளையாரது இளம்பருவச் சிறப்புப்பற்றியுமாம்.

தோணிமிசை மேவினார்கள் *- பெரிய நாயகியாரும் தோணியப்பரும். இவர்கள் பிள்ளையாருக்கு அமுதருளி யாட்கொண்டவர்கள்.*

தமிழ் வேதம் - இறைவரருளிய வேதத்தையே தமிழில் அருளிய தென்பதாம். *"என துரை தனதுரையாக" (தேவா). இறைவர் அருளிய வேதம் தமிழி னன்றென்பது குறிப்பு. இப்பதிகம் இன்னதென்று துணியக்கூடவில்லை.*

தாளம் பெற்றார் *- வினைப்பெயர்; முன்னர்த் தாளம் பெற்றமையே போல இஞ்ஞான்று சிவிகையும் குடையும் பெற்றார் என்பதும்;* ***எவ்விடத்து எது பெறினும் அவையாவும் தோணியப்பரருளியனவேயாம் என்பது பிள்ளையார் திருவுள்ளக் கருத்தென்பதும் குறிப்பு.*** *"மீனவ னவையெதிர் நதிமிசை வருகர னென்பார்" (புரா - 954) என்ற திருவியமகமும் கருதுக.* *260*

2159. பொருளுரை...பரவு...போற்றி - போற்றும் இசையுடைய திருப்பதிகத்தினைப் பாடிப் பெருங்கருணை செய்ததிருவருளின் பரிசினைத் துதித்து; விரவு...போந்து-பொருந்திய மலர்போன்ற கண்கள் இன்பநீர் துளிப்பக் கைகளைச் சிரமேற் குவித்துக் கீழே விழுந்து வணங்கி யெழுந்து வெளியே போந்து; சிரபுரத்துப் பிள்ளையார் செல்லும்போது - சீகாழிப் பிள்ளையார் செல்லுகின்ற போதில்; திருநீலகண்ட யாழ்ப்பாணர்-அருள் செய்து - திருநீலகண்ட யாழ்ப்பாணர் தமது பின்னே தொடர்ந்துவர அவரை வளம்பெருகும் அவரது திருமனையிற் செல்லும்படி அருளிச் செய்து; தம்...வந்தார் - தமது திருமாளிகையின் அணிமையில் எழுந்தருளினாராக;

விளக்கவுரை...பரவும் *- இறைவன் சீர்களைப் பரவச் செய்யும் - பரப்பும் - எனப் பிறவினைப் பொருளும் கொள்ள நின்றது.*

பரங்கருணைத் திருவருளின் பரிசு *- கருணை இறைவனிடத்துச் சத்திநிற்கு நிலை; அருள் - அது ஆன்மாக்களின் மாட்டுச் சென்று நிற்குநிலை.* ***பரிசு*** *- தன்மை.*

கண் பனிப்ப *- கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் துளிப்ப.*

2160. மறையவர்க ளடிபோற்றத் தந்தை யாரு
மருங்கணைய மாளிகையி லணையும் போதில்,
நிறைகுடமு மணிவிளக்கு முதலா யுள்ள
நீதிமறைக் குலமகளிர் நெருங்கி யேந்த,
விறைவர்திரு நீற்றுக்காப் பேந்தி முன்சென்
றீன்றதா யார்சாத்தி யிறைஞ்சி யேத்த,
முறைமையவர்க் கருள்செய்து மடத்திற் புக்கார்
முதல்வர்பான் மணிமுத்தின் சிவிகை பெற்றார். 262

வளம்பெருகு மனை - "நண்ணியுறையிடம் சமைத்து" (2035) என்ற மனை. தமது மாளிகைக்கண், அவர் (பாணர்) வர, இனி நடக்கும் சிறப்புக்களிற் கலக்கக்கூடாது என்ற குலம்பற்றிய நினைவுகளால் பிள்ளையார் இவ்வாறு ஈண்டே பாணருக்கு விடை தந்தருளினர் என்று சில மந்தமதிகள் இங்குக் குறைகூறி யிடர்ப்படுவர். பாணனார் சண்பையிலே வந்தணைந்து பிள்ளையாரை அவரது திருமாளிகையில் கண்டதும், பிள்ளையார் அவரை எதிர்கொண்டு வரவேற்று உபசரித்துத் திருக்கோயிற்புற முன்றிலுக்கு அழைத்துச்சென்று இறைவருக்கு யாழியற்றச் செய்வித்ததும், பின்னர், அவர் பாடினியாருடனிருத்தலால் "நண்ணியுறை யிடஞ்சமைத்து நல்விருந்து சிறந்தளித்" ததும், பின்னர், அவற்றை நாட்போலென்றும் அகலா நண்புடனமர்ந்ததும், தாம் செல்லும் தலயாத்திரைகளில் தலந்தோறும் அவரையும் பாணினியாரையும் உடன்கொண்டு சென்றதும், அவர் அழைப்புக்கிரங்கி அவரது பதியிற் சென்றதுமாகிய நட்புரிமைச் செயல்கள் முன்னர் விரிக்கப்பட்டன. (2029 - 2035; 2074 - 2077). குலம்பற்றிய கொள்கைகளால் நகரத்தில் இருக்கைகளும் தெருவுகளும் அமைத்தல் முன்னாளிலும் இந்நாளினும் காணும் நன்மரபு; அவை தடுமாறுவது இந்நாளிற் காணும் தடுமாற்றநிலை. இக்குறையாகிய தவறுநிலை கொண்டு முன்னை நன்மரபுகளைக் குறைகாணுதல் பிழை. அன்றியும், இனி நிகழ்வன எல்லாம் பிள்ளையார் பொருட்டே மறையோராற் செய்யலாவன வாதலும், அவற்றைக் கண்டு வாளாநிற்கும் பரிசனங்களுடன் ஒருவராய்ப் பாணனாரும் பாணினியாரும் நிற்றல் சாலாமையும் கருதுக. முன்னர் நாட்டுச் சிறப்பு முதலிய இடங்களில் உரைத்தவையும் பார்க்க.-

மாளிகையில் - அணையும்போதில் என்று மேற்கூறுவதால், ஈண்டு மாளிகையி னணிமையில் புறமுன்றிலில் என்றுகொள்க. **வந்தார்** - வந்தாராக.

பரன் கருணை-என்பதும் பாடம். 261

2160. **பொருளுரை**-மறையவர்கள்...போதில் - வேதியர்கள் தமது திருவடியைத் துதிக்கத் தந்தையாரும் தமது பக்கத்தில் அணையத் திருமாளிகையில் அணையும் பொழுதில்; நிறைகுடமும்...ஏத்த - நீதி மறைக்குல மகளிர்கள் நிறைகுடத்தையும் அழகிய விளங்குக்களையும் ஏந்தி நிற்க; முன்சென்று...ஏத்த - பெற்ற திருத்தாயார் சிவபெருமானது திருநீற்றுக்காப்பினை ஏந்திக்கொண்டு முன்னே போந்து சாத்திப் பணிந்து பாராட்ட; முறைமை அவர்க்கு.....பெற்றார் - முறைமைப்படி அவ்வவர்க்கும் அருளிச் செய்து,

முதல்வரிடம் மணிமுத்துச் சிவிகைபெற்றவராகிய பிள்ளையார் திருமடத்தினுள் புகுந்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை...மறையவர்கள் அடிபோற்றத் தந்தையாரும் மருங்குஅணைய - மறையவர் சீகாழியில் வந்து எதிர்கொண்டவர்களும், **தந்தையார்** - தம்முடன் வந்தவரும் ஆதலின் வேறுபிரித்துக் கூறினார்.

நிறை குடமும்..ஏந்த - உலாப்போந்து மாளிகைக்கு மீளும் தலைவரை இவ்வாறு விளக்கு ஏந்தி உள் அழைத்தல் மரபு. மங்கலம் பற்றியதுமாம். **நீதி** - நியதியின்படி - மரபின்படி என்பது குறிப்பு. இவையிரண்டும் தேவாஷ்டமங்களாகவும் இவற்றை மகளிர் ஏந்தி நிற்பதாகவும் சிவாகமங்களிற் கூறுதல் கருதத்தக்கது.

முன்சென்று ஈன்ற தாயார் திருநீற்றுக்காப்பேந்திச் சாத்தி இறைஞ்சி - என்க. **ஈன்ற தாயார்** - கருவுட்படாது முருகப்பெருமானே பிள்ளையாராய் வந்தார் என்போர் இதனை நோக்கக்கடவர். "தருமறைவியார்...திருமுலை சுரந்தமுது செய்தருளுவித்தார்" (1940) முதலியவையும் கருதுக. **முன்சென்று** - விளக்க முதலிய மங்கலங்களை ஏந்தும் மறைக்குல மகளிர் கூட்டத்தின் முன்னேசென்று, **தாயார்** - பகவதியார்.

இறைவர் திருநீற்றுக்காப்பு ஏந்தி - சாத்தி - "மரபிரண்டுஞ் சைவநெறி வழிவந்த கேண்மை" என்றும், "பரவுதிரு நீற்றன்பு பாலிக்குந் தன்மையினார்" என்றும் (1925) அருளியபடி தமது பிறந்த மரபும் புகுந்த மரபும் திருநீற்று நெறி நின்றமை யாலும், இருமரபினும் சிவவேள்விகளிற் கலந்து திருநீற்றின் உண்மையினைக் கைவர அறிந்தாராதலாலும், திருநீற்றிற் பெரியதொரு மங்கலமும் காப்பும் (1941) செல்வ மளிப்பதும் வேறின்மையாலும் தாயார் திருநீற்றினை ஏந்தியும் சாத்தியும் இறைஞ்சினர் என்க. **நீறு** மந்திரவேள்வியின் விளைவதாம். வேள்வியும் அதுபெறும் பொருட்டே செய்யப்படுவது. **இறைஞ்சுதல்** - மகனார் என்ற முறையானன்றிச் சிவன் திருவருள் விளங்கப்பெற்ற திருத்தொண்டினீர்மைக்கென்க

முறைமை அவர்க்கு - முறைமைப்படி அவ்வவர்க்கு.

முதல்வர்..பெற்றார் - முன் தாளம் பெற்றார் (2158) என்றபடி ஈண்டுச் சிவிகை பெற்றதனைக் கூறினார். அதுமுதல் இதுவரை உள்ள அருளிப்பாடெல்லாம் பெறுதல் குறிப்பு. **பெற்றார்** - பெயர்.

நீடுமறைக் குலமகளிர்-என்பதும் பாடம். 262

2161. **பொருளுரை:** செல்வ...நாளில் - செல்வம் பெருகும் நீண்ட தமது திருமாளிகையில் விரும்பி எழுந்தருளியிருந்து ஒவ்வொருநாளும் திருத்தோணியின்மேல் எழுந்தருளியவரைச் சென்று பணிந்து பொருந்திய திருப்பதிகங்கள் பலவற்றையும் பாடி மன மகிழ்ச்சியுடன் போற்றி செய்து வைகும் நாட்களில்; ஒல்லை...எய்த - விரைந்து

2161. செல்வநெடு மாளிகையி லமர்ந்து நாளுந்
திருத்தோணி மிசையாரைச் சென்று தாழ்ந்து
மல்குதிருப் பதிகங்கள் பலவும் பாடி
மனமகிழ்ந்து போற்றிசைத்து வைகு நாளில்,
ஒல்லைமுறை யுபநயனப் பருவ மெய்த
வுலகிறந்த சிவஞான முணரப் பெற்றார்
தொல்லைமறை விதிச்சடங்கு மறையோர் செய்யத்
தோலொடுநூ றாங்கினார் சுரர்கள் போற்ற. 263

முறைப்படி சேரும் உபநயனப் பருவம் வந்து சார; உலகிறந்த சிவஞான முணரப் பெற்றார் – உலகங் கடந்த சிவஞானத்தை உணரப் பெற்றவராகிய பிள்ளையார் தொல்லை.போற்ற – பழமையாக (தொன்றுதொட்டு) வழங்கிவரும் வேதவிதிகளின் படி உபநயனத்திற்குரிய சடங்குகளை மறையவர்கள் செய்தார்களாகத், தேவர்கள் போற்றும்படி தோலினுடனே நூலினையும் தாங்கிக்கொண்டருளினர்.

விளக்கவுரை....செல்வ நெடுமாளிகை - "செல்வநெடுமாடம்" (கோயில்-தேவா).செல்வமாவது என்றுமழியாத "சைவமெய்த் திருவின் சார்வு", "செல்வத்துட் செல்வஞ் செவிச் செல்வம்" (குறள்) என்று ஞானக் கேள்வியை உள்ளுறையாக வைத்தோதினர் தெய்வப் புலவர்.

திருத்தோணி மிசையார் - நிலத்தைமூடி அதனின்மேல் உயர்ந்தது ஊழி வெள்ளம்; அதனைக் கீழ்ப்படுத்தி மேலுயர்ந்து....மிதந்தது திருத்தோணி; அதன் மேலே இருந்தார் தோணியப்பர் என்பது மிசையார் என்ற குறிப்பு. "மேலையார் மேலையார் மேலையார்" (தேவா).

நாளும் - சென்று - தாழ்ந்து "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" (தேவா) என்ற உண்மையை உலகிற்காட்டி யருளும் ஞான ஆசாரியராதல் குறிப்பு. "கால மானவை யனைத்தினும் பணிந்துடன் கலந்தவன் பர்களோடும்" (புரா-989). கோயில் வழிபாடின்றி வீண்நாள் போக்கும் குருட்டு ஞானிகளும், உலகரும் இதனைக் குறிக்கொள்வாராயின் நலந்தரும்.

திருப்பதிகங்கள் பலவும் - இவை இன்னவென்று துணியக்கூடவில்லை. சீகாழிப் பதிகங்களாக இப்போதுகிடைத்துள்ள திருப்பதிகங்களுள் அரசுகளும் நம்பிகளுமருளிய பதிகங்கள் நான்கினை நீக்கிப் பிள்ளையாரது பதிகங்கள் அறுபத்தேழு உள்ளன. அவற்றுள், காலம் இடம் பொருள்கண்டு முன்னர்க் குறித்தனவும், இனிக் குறிப்பனவும் நீங்க ஏனையவற்றுட்பல இந்நாட்களிற் பாடியருளப் பெற்றவை போலும், மேலும், 2174-2175 பாட்டுக்களிற் குறித்த பதிகங்களும் இக்காலத்தில் அருளியவை. இந்தக் காலந்தான் பிள்ளையார் சில ஆண்டுகள் சீகாழியில் தங்கியருளிய காலம். இதன்பின் 2177-ல் கூறியபடி தொடங்கிய நீண்ட (ஐந்தாவது) யாத்திரை பாண்டி நாட்டிற் சைவத்தாபனம் செய்து திரும்புவதுடன் நிறைவேறுகிறது. அதன்பின் தொண்டை நாடு கண்டு திருமணத்தில் இறைவரை யடைகின்றனர். பிள்ளையார் என்ற குறிப்பினை இங்கு நினைவு கூர்தல்

வேண்டும். அரசுகள் புராணத்தில் 1448-ம் பாட்டின் கீழ்க் குறித்தவையும் பார்க்க. **வைகுநாளில்** என்ற குறிப்புமிது. இவ்வாறு பதிகங்களைத் தலமுறைப் பதிப்பிற்கண்டவாறு பாகுபடுத்திக் கண்டுகொள்ளுதல் நலந்தரும்.

ஒல்லைமுறை உபநயனப் பருவம் எய்த - ஒல்லை முறை - **ஒல்லை** - விரைவு; இருபிறப்பாளருள் ஏனையோரைவிட விரைவில் பிராமணர்க்குச் செய்யப்படுவது உபநயனம் என்ற குறிப்பு.

உபநயனம் - ஏனைய இரண்டுடன் மூன்றாவதாய்ப் பின்னர்வரும் உதவிக் கண் என்பது பொருள். மூன்றாவது கண். ஏனைய இரண்டும் (திரியக்) குறுக்காக இருப்பன; இது அவ்வாறன்றி (ஊர்த்துவம்) நெடுக்காக மேனோக்கி யிருப்பது. **வி** - விரோதம்; **விருப** - மாறுபட்ட வடிவுடைய. **அக்ஷ** - கண். இது பிரமஞானத்தாற் றிறக்கப்படும்; சிவனது அக்கினிக் கண் எனப்படும் நெற்றிக் கண்ணின் தன்மை குறிப்பது; **விருபாக்ஷன்** என்பது சிவன் றிருநாமம். விருபாக்ஷ - (விரோதம் - மாறுபாடு;) குறுக்காகக் கிடக்கும் உலகத்தார் கண்போலன்றி நிமிர்ந்து நிற்பது. சிவன், சூரிய சந்திரர்களாகிய மற்றை இரண்டு கண்களினாலும் இரவு பகல்களைச் செய்து உலகம் காத்து நிறுத்தி, இறுதியிலே நெற்றி நாட்டத்தின் ஒரு பொறியால் சங்காரம் செய்கிறார். சிவனை "நீ ஒருவனே பிராமணன்" என்றது வேதம்; பிரமஞானம் என்னும் சிவஞானம் பெறுவிக்கும் சடங்கு - **உபநயனம்** எனப்படும். "நிகழு முறைமை யாண்டேழு நிரம்பும் பருவம் வந்தெய்த...உபநயனப் பொருவில் சடங்கு முடித்து" (1219) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க; உபநயனப்பருவம் - ஏழாவது வயது.

உலகிறந்த சிவஞானம் உணரப் பெற்றார்...தாங்கினார் - **உலகிறந்த** - பசு பாச ஞானங்களுக்கு மேற்பட்ட; உணர்தல் - சிவானுபவம் சுவானுபூதிகமாகக் கைவருதல்; **பெற்றார்** - பெற்றராகியும்; ஏனையோர் இச்சடங்கின்பின் வேதம் பயின்று, பின் பக்குவம் நிகழ்ந்தபோது சிவஞானம் பெறுவர். பிள்ளையார் அவ்வாறன்றி முன்னரே உலகிறந்த பதிஞானங் கைவரப்பெற்றனர். அவர் மறைவிதிச் சடங்கு செய்யத் தோலும் நூலும் தாங்கினார் என்க. ஆயினும்-என்ற சொல் வருவித்துக்கொண்டு, "இதனால் ஞானிகட்குப் புறக்கோலப் பூணூல், வேத மோதுதல், சடங்கு, சம்பிரதாயங்கள் முதலியவை வேண்டுவதில்லை என்பது புலனாகின்றது" என்று இங்கு விசேட ஆராய்ச்சி செய்வாருமுண்டு. அவர்கள் பிள்ளையார், சடங்குக் குட்பட்டமையால் பயனில்லாத செயல் செய்தனர் என்ற குறை சார்வதனைக் குறிக்கொண்டிலர். இவ்வாராய்ச்சியின் பயனாகப் பரம ஆசாரியருக்குப் பயனில செய்தார் என்ற பழிப்பும் சார்த்தினர்.

"உணரப் பெற்றார் தாங்கினார்" - என்றதனால் ஞானிகட்கும் புறச்செயல் உள்ளளவும் இவை வேண்டப்படுவன என்று முடிப்பதே அறிவின் நியமமென்க. மேல் வரும் பாட்டும் கருதுக.

தொல்லை மறை விதிச்சடங்கு மறையோர் செய்ய - என்றதனால் இவை வேதவிதியாதலும், யாவரும் பொருளற்ற வெறும் சடங்கு என்று இகழாது செய்தற் பாலனவாதலும் வற்புறுத்தப் பட்டன. புறப்பார்வையற்றுத் தன்வசமிழந்து சிவானுபவத்தில் மூழ்கிய நிலையே சடங்கற்ற நிலையாதல் முன் பலவிடத்தும்

2162. ஒருபிறப்பு மெய்தாமை யுடையார் தம்மை
உலகியல்பி னுபநயன முறைமை யாகும்
இருபிறப்பி னிலைமையினைச் சடங்கு காட்டி
யெய்துவிக்கு மறைமுனிவ ரெதிரே நின்று
"வருதிறத்தின் மறைநான்குந் தந்தோ" மென்று
மந்திரங்கண் மொழிந்தவர்க்கு, மதுரவாக்கால்
பொருவிறப்ப வோதினார் புகலி வந்த
புண்ணியனா ரெண்ணிறந்த புனித வேதம். 264

வற்புறுத்தப்பட்டது காண்க. "சாக்கிரத்தே அதீதத்தைப் புரியுந்தமக்கு இடையூறு சிறிது மணுகாமை யறிந்தாராயினும், ஆன்றோ ராசாரம் பாதுகாத்தற் பொருட்டும் மாணாக்கர்க் கறிவுறுத்தற் பொருட்டும் முதற்கண் இடையூறு நீங்கதற்குரிய மங்கல வாழ்த்துக் கூறுகின்றார்" (சிவஞான போதச் சிற்றுரை) என்றது காண்க.

சடங்கு செய்யத் தோலொடு நூல் தாங்கினார் - சடங்காவனவற்றுட் சில சொல்லி ஏனையவற்றை இனம் பற்றிக்கொள்ள வைத்தார். **தோல்** - கருமானின் தோல்; "கருமானி னுரியதளே யுடையா வீக்கி" **நூல்** - முப்புரியாகிய பூணுநூல். இனம்பற்றிப் பஞ்சசிகையும், கோலும் முஞ்சிப்புல் நாணும் முதலியவையும் கொள்க.

தோலொடு நூல் - இரண்டங்குலமாய்ப் பூணூலினளவி லமையச்செய்த கருமானின் றோலொடு சேர்ந்த நூல். கிருட்டினாசினம் பரிசுத்தத்தின் பொருட்டும், முஞ்சி அரைஞாண் பிராண அபானனை நிறுத்தும் பொருட்டும் ஆம். கமண்டலம் என்னும் பாத்திரம் முதலியவையும் சிவனடையாளம். குருகுல வாசமுடைய பிரமசாரிகள் பிச்சை ஏற்றுண்ணுவது மரபு. நவீன முறையிலும் (Bachelor of Arts) முதலிய பட்டங்களுக்கு அடையாளமாகத் தரப்படும் மேலுடையில் பிச்சை கொள்வது போன்ற பை ஒன்று அமைப்பதும் காண்க. (Bachelor = பிரமசாரி).

சுரர்கள் போற்ற - உலகினில் வேத மந்திரங்கள் நிகழ்வதனால் தேவர்கள் கதிநலமாகச் செல்வதாதலின் பிள்ளையாரது உபநயனத்தால் அவர்கள் மிகப்பயன் பெறுதலின் **போற்ற** என்றார்.

தொல்லை முறை-என்பதும் பாடம். *263*

2162. **பொருளுரை:** ஒரு...தம்மை - யாதொரு பிறப்பிலும் வராத நிலைமையுடைய பிள்ளையாரை; உலகியல்பின்...மறைமுனிவர் - உலகில் ஏனையோரின் இயல்பின் வைத்து உபநயன முறைமையான இருபிறப்பின் நிலையினைச் சடங்குகளாற் காட்டிப் பெறச் செய்கின்ற வேதமுனிவர்கள்; எதிரே நின்று....மொழிந்தவர்க்கு - எதிரில் நின்று "வழிவழிவரும் தன்மையில் நான்கு மறைகளையும் தந்தோம்" என்று உரிய மந்திரங்களைச் சொல்லிய அவர்களுக்கு; மதுரவாக்கால்...வேதம் - தமது மதுர முடைய திருவாக்கினால் சீகாழியிலவதரித்த புண்ணியமே உருவான பிள்ளையார் ஒப்பில்லாத நிலையில் எண்ணிறந்த புனித வேதங்களையும் ஓதியருளினார்.

விளக்கவுரை: ஒரு பிறப்பு மெய்தாமை யுடையார் - கன்மத்துக்கீடாக எப்பிறப்பிலும் வாராதவர் பிள்ளையார்.

இருபிறப்பு - தாய்வயிற்றின் வந்த பிறப்பும், சிவத்துவம் விளங்கப்பெற்ற (உபநயனம்பெற்ற) பின் வேறு சிறப்பாகிய பிறப்பும் என்றிரண்டு. **நிலைமை** - தூல உடம்பு அதுவேயாகச், சூக்கும நிலைமட்டும் மாறுதலால் இரு பிறப்பின் **நிலைமை** என்றார். ஒரு பிறப்புமில்லார்க்கு இருபிறப்பின் நிலைமை காட்டிக் காட்டினார் என்பது கவிநயம். இது பிள்ளையார்பால் உலகநெறி நிறுத்தற் பயத்ததாத லளவில் நின்றது என்பது குறிப்பு. இனி, ஒரே சென்மத்தில் தாயின் வயிற்றிற் பிறத்தலால் வருவது ஒன்றும், அதனை அடுத்து உபநயனத்தால் வருவது ஒன்றும், அதனை அடுத்துத் தீட்சையால் வருவது ஒன்றும் என்று மூன்றுவகைப் பிறவிகள் உண்டு என்றும், அவை முறையே ஒன்றற்கொன்று உயர்ந்தவை என்றம் கூறுப. "தீக்ஷா ஜன்மத் திரிதீயம் ஸ்யாது" என்பது காண்க. இது சிதம்பரம் ஸ்ரீ ந. சிவப்பிரகாச ஐயா அவர்கள் குறிப்பு.

மறைநான்கும் தந்தோமென்று - **தந்தோம்** - கொடுத்தோம் என்றும், **தந்து** ஓ மென்று என்று, மறைகளைக் கொடுத்து உரிய மந்திரங்களை உபதேசிப்பார் மறை முதலாகிய பிரணவத்தைத் தொடங்கிக் கொடுத்தனர் என்றும் உரைக்க நின்றது. "எல்லையிலா மறைமுதன்" (1973) என்றவிடத் துரைத்தவை பார்க்க. "ஓமென்று மறைபயில்வார்" (தேவா); வேதம் பிரணவத்துடன் தொடங்குதல் மரபென்பது "நின்ற தோர்தனி மொழியைமுன் னோதின னெறியால்" 'குடிலைமுன் சாற்றி, மாம றைத்தலை யெடுத்தனன்" (அயனைச் சிறைபுரிபடலம் - 8 9) என்ற கந்தபுராணத்தாலு மறிக.

ஓமென்று மந்திரங்கள் மொழிதலாவது - ஓமென்று தொடங்கிக் கொடுத்துக் காயத்திரி சம்மிதா மந்திரம் முதலிய பிரம மந்திரங்களை உபதேசித்தல். இது உபநயத்தின் அங்கம். தீட்சை என்பது மரபு. காயத்திரிக்குப் பொருளாவார் சிவபெருமானே என்பது "காயத்திரீ வல்லபாதித்வாத்து" "உயர்கா யத்திரிக் குரிப்பொருளாதலின்" (அரதத்தாசாரியர் சுலோகபஞ்சகம்) என்பது முதலியவற்றா லறிக. பர்க்கன் - எனக் காயத்திரியிற் கூறப்படும் நாமம் சிவனுடைய நாமமாக நிகண்டிற் படிக்கப்படும். பர்க்கன் - வறுப்பவன் - முளையாமல் விதையை வறுப்பவன் - பிறவியை அறுப்பவன் என்பது; சிவனது சத்தியின் அமிசங்களே ஏனைய எல்லாத் தேவர்களிலும் வியாபித்து அவரவர் தொழில்களைச் செய்விப்பது என்பது, எத்தேவரது ஆண்பாற் பெயர்க்குமுரிய பெண்பாற் பெயராயினும் அவை உமையம்மையாரைக் குறிக்கும் பெயர்ப் பொருள் வழக்கினாலும் அறியப்படும். பைரவி - பிராமி - வைணவி - நாராயணி - முதலிய எல்லாம் உமையையே குறிப்பன காண்க. பிள்ளையாரது சிவபுரத் தேவாரமும் பார்க்க.

மந்திரம் - மந் - நினைப்பது; திர - காப்பது என்று பொருள். "மநநத் திராண தர்மித்துவாத் மந்திர இத்திய பிதீயதே" என்பது ஆகமம்.

மொழிந்தவர்க்கு-ஓதினார் - ஓமென்று தொடங்கி மந்திரங்களைச் சொல்ல வந்த வேதியர்க்கு விடையாக, அவரெதிரே எண்ணிறந்த வேதமெல்லாம் ஓதினார். "அணைந்த மாமறை முதற்கலை யகிலமு மோதா, துணர்ந்த முத்தமிழ் விரகன்" (2121); முற்செய்

2163. சுருதியா யிரமோதி யங்க மான
தொல்கலைக ளெடுத்தியம்புந் தோன்ற லாரைப்,
பருதியா யிரகோடி விரித்தா லென்னப்
பரஞ்சோதி யருள்பெற்ற பான்மை மேன்மை
கருதி,யா தரவோடும் வியப்புற் றேத்துங்
கலைமறையோர், கவுணியனார் தம்மைக் கண்முன்
வருதியா னப்பொருளென் றிறைஞ்சித், தாமுன்
வல்லமறை கேட்டையந் தீர்ந்து வாழ்ந்தார். **265**

தவத்தால் முன்னமே உணர்ந்தவராதல் குறிக்கப் புண்ணியனார் என்றார். **வந்த என்ற** *குறிப்புமது.*

பொருவிறப்ப *- என்றதுவேறு எவரிடமும் காணப்படாத வகையில் என்றதாம்.*

புகலி *- சீகாழியின் மூன்றாவது திருப்பெயர்.*

எண்ணிறந்த *- வேதங்கள் அனந்தம் எனப்பட்டு அளவுபடாது விரியும் தன்மை குறித்தது.*

புனிதமாவது - புனிதம் செய்வது - பிறப்பில்லாமற் செய்வது; "வேதத்தை யோதியே வீடுபெற் றார்களே" (திருமந்திரம் - 57). ***264***

2163. ***பொருளுரை:*** *சுருதி...தோன்றலாரை - அனந்தமாகிய வேதங்களையும் முன் கூறியவாறு ஓதியதுடன், அவற்றின் அங்கமாகிய பழமையாகிய கலைகளையும் எடுத்துச் சொல்லிய பெருமைபெற்ற பிள்ளையாரை; பருதி-கருதி - ஆயிரங்கோடி இளஞ்சூரியர்கள் ஒருங்கே கூடிவந்து விரிந்தனபோலப் பரஞ்சோதியினது திருவருளைப் பெற்ற பான்மையினது மேன்மையினைக்கருதி; ஆதரவோடும்....கலைமறையோர்-அன்பும் ஆச்சரியமுங்கொண்டு துதிக்கும் அந்தக் கலைமறையவர்கள்; கவுணியனார் தம்மை....இறைஞ்சி - கவுணியர் பெருமானாகிய பிள்ளையாரைத் தங்கள் கண்ணின் முன்னே உரு வெளிப்பட்டு வரும் தியானப் பொருளேயாவர் என்று கொண்டு வணங்கி; தாம்முன்..வாழ்ந்தார் - தாங்கள் முன்னே வல்ல மறைகளில் தமக்குள்ள ஐயங்களைக் கேட்டுத் தெளிந்து வாழ்வடைந்தனர்.*

விளக்கவுரை...சுருதி ஆயிரம் *- ஆயிரம் அனேகம் என்னும் பொருளில் வந்தது; "சாகை யாயிர முடையார்" (தேவா); "அநந்தாவை வேதா;".*

அங்கமான தொல்கலைகள் *- வேதங்களுக்கு அங்கமெனப்படும் தருக்க முதலிய ஆறங்கங்களும் ஏனைக்கலைகளும்.*

தோன்றலார் *- இப்பெருமை இப்போதுதான் மறையவர்களறியத் தோன்ற நின்றவர் என்பது குறிப்பு.*

2164. மந்திரங்க ளானவெலா மருளிச் செய்து
மற்றவற்றின் வைதிகநூற் சடங்கின் வந்த
சிந்தைமயக் குறுமையந் தெளிய வெல்லாஞ்
செழுமறையோர்க் கருளியவர் தெருளு மாற்றான்
முந்தைமுதன் மந்திரங்க ளெல்லாந் தோன்று
முதலாகு முதல்வனா ரெழுத்தஞ் சென்பார்
"அந்தியினுண் மந்திரமஞ் செழுத்து மே" யென்
றஞ்செழுத்தின் றிருப்பதிக மருளிச் செய்தார். **266**

---

*பருதி...விரிந்தாலென்ன - அருள்பெற்ற - என்று கூட்டுக. **பருதி** - ஞாயிறு; **ஆயிரகோடி** - அளவிறந்த எண். அளவிறந்த சூரியர்கள் ஒருங்கே விரிந்தாற்போல என்றது ஞானத்தின் பேரொளி; பூதகாரியமாகிய புறவொளியன்று. பயன்பற்றி வந்த உவமம். **பரஞ்சோதி** - சோதிகளை எல்லாம் கடந்த பெருஞ்சோதி. பரஞ்சோதிதான் பருதி முதலிய ஏனை ஒளிப் பொருள்கட்கெல்லாம் ஒளிதருபவர் என்பது குறிப்பு. "ஒளியா யொளியத னொளியா யொளியத னொளியுந் தெளிதரு மொளியாகி" (பேரூர்ப் புரா - நிருத் - பட - 73); பருதியை உவமித்தார் உலகில் இருணீக்கி யின்பம் பயக்கும் பயன் நோக்கி. **ஆயிரகோடி பருதி** என்றார் - அளவிலாத அருமறைகளின் அளவிலாப் பொருள்களையும் எடுத்தோதும் தன்மை குறிக்க. **பரம்** - அப்பாற் பட்டது.*

பான்மை மேன்மை - பால் நியதி - ஊழ் - என்பன ஒருபொருள். இங்குப் பான்மையாவது முற்செய்தவம். பான்மையினது மேன்மை என ஆறனுருபு விரிக்க.

கண்முன் வருதியானப் பொருள் *- "உருவெணத் தவமாமே" என்றபடி மந்திரங்களை விதிப்படி உரு எண்ணுதலினால் அவற்றுக்குரிய தெய்வம் உருவெளிப்பாடு பெற்று முன்வந்தருளும் என்ற உறுதியான உறைப்பின் பயன். இங்கு மறையவர் பலகாலம் மந்திரப் பொருளைத் தியானித்ததன் பயனாகப் பிள்ளையார் அவர்கள் கண் முன்பு உருவுகொண்டு வந்தனர் என்று கொண்டிறைஞ்சினர் என்பது. **இறைஞ்சி** - என்றதுமிக் குறிப்பு.*

தாமுன்தீர்ந்து வாழ்ந்தார்-*தாம் மறைகள் பயின்று வல்லராயினும் தெளித லில்லாது பலவும் ஐயப்பாடுற்றனர் என்றும், அதனால் நல்வாழ்வின்றி வருந்தினர் என்றும், பிள்ளையார்பால் கேட்டு அந்த ஐயங்களின் நீங்கித் தெளிந்தனர் என்றும், அதனால் முன்னர்ப் பெறாத பெருவாழ்வு பெற்றனர் என்றும் கொள்க.*

கலைமறையோர் *- சிவஞானங் கைவரப் பெறாது பாசஞானமாகிய கலைகள் மட்டில் அமைந்தோர்.* *265*

2164. பொருளுரை: மந்திரங்கள் ஆனவெலாம் அருளிச் செய்து - வேதத்துள் மந்திரங் களாகிய எல்லாவற்றையும் எடுத்து அவர்களுக்குச் சொல்லியருளி (அதன்பின்); மற்றவற்றின்...அருளி - மற்றிவைகளுள்ளே வேதத்தின் விதித்த வேள்விச் சடங்குகளில்

வந்த அவர்களது சிந்தையிற் கூடிய ஐயப்பாடுகளை எல்லாம் தெளியும்படி **அந்தச்** செழுமறையவர்களுக்கு அருள் புரிந்ததுடன்; அவர் தெளியுமாற்றால்...**என்பார்** - அவர்களது மனந்தெளியும் வகையால் முந்தையாகிய **முதன்மைபெற்ற** எல்லாமந்திரங்களும் தோன்றுதற்குக் காரணம் சிவபெருமானது **திருவைந்தெழுத்தே** யாகும் என்று எடுத்து உபதேசிப்பாராய்; அந்தியிலுள்... அருளிச் செய்தார் - "**அந்தியில்** ஓதும் மந்திரமாவது திருவைந்தெழுத்துமே யாம்" என்று வரும் **ஸ்ரீபஞ்சாக்கரத்** திருப்பதிகத்தை அருளிச்செய்தனர்.

விளக்கவுரை: மந்திரங்கள் ஆன எலாம் - வேதத்தினுள் மந்திரம், பிராமணம், பிராமணசேடம் என்ற மூன்று பகுப்பினுள் மந்திரம் என்ற பகுதியில் வேத வேள்விகளுள் ஆளப்படும் மந்திரங்கள் எல்லாம் உள்ளன. அவற்றுள் ஆனவற்றையெல்லாம் என்க. **ஆன** - உயர்ந்த உயர்வான.

மற்றவற்றின்.. சடங்கு - இவைகளைப் பயன்படுத்திச் செய்யும் வேள்வி முதலிய வைதிகச் சடங்குகள். இவை அக்கினிகோத்திரம் செய்க என்பனபோன்ற விதி வாக்கியப் பகுதிகளாகிய பிராமணமும் அவற்றின் பின்வரும் பிராமண சேடமாகிய அருத்தவாதமும் ஆம்.

முந்தை முதன் மந்திரங்கள் - முந்தை - முன் உதிப்பது; சிருட்டியிற் குடிலையினின்றும் முன் தோன்றுவன நாதவிந்து முதலிய வடிவான மந்திரங்கள் என்பது.

எல்லாந் தோன்றுமுதல்-மந்திரங்கள் எல்லாம் அகர முதலிய சூக்கும பஞ்சாக்க ரத்தினின்றும் தோன்றுவன. பஞ்சாக்கரம், பிரணவம், பிராசாதம், அசபை முதலியன எல்லாம் நாதவிந்துக்களின் கலாபேதங்களேயன்றி, அவை தம்முள் வேறாவன அல்ல; ஆதலின் எல்லாந் தோன்று முதல் - எழுத்தைஞ்சு - என்றார். சிவஞான மாபாடியம் 4 சூத். "அகார வுகாரம்" என்றவிடத் துரைத்தவை பார்க்க. "மந்திர நான்மறை யாகி" (பதிகம் - 2); "ஆதிமந்திரம் அஞ்செழுத்து" (புரா - 698).

அந்தியுள் - அந்தி நேரம் தேவயாமம் எனப்பட்டு எல்லா மந்திரங்களும் அவற்றின் அதிதெய்வங்களும் விளக்கம் பொருந்த வரும் காலமாதலின், முப்போதும் தீ ஓம்பும் முறைமை யந்தணர்க்கு அது சிறப்புடையதாதலின் அந்தியுண்மந்திரம் என்றார். திருப்பதிகத்தினுள் இரண்டாம் திருப்பாட்டில் இக்குறிப்புப்படச் "செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்கு" என்றதும் காண்க. இவர்கள் வைதிக சைவர்களாகிய சிரௌதிகள் எனப்படுவர்.

அஞ்செழுத்தின் றிருப்பதிகம் - இது சீபஞ்சாக்கரத் திருப்பதிகம் என்று வழங்கப்படும். பிள்ளையார் அருளியவை திருஐந்தெழுத்துப்பதிகங்க ளிரண்டாம்; அவற்றுள் மற்றொரு பதிகமாகிய "காதலாகி" என்ற பதிகம் திருநல்லூர்ப் பெருமணத்தில் இறுதியாகப் பாடியருளியது. அது **நமச்சிவாயத் திருப்பதிகம்** எனப்படும். இவ்விரண்டன் ஒற்றுமை வேற்றுமைகளைப் பற்றிப் பின் உரைக்கப்படுவது காண்க. 266

ஸ்ரீ பஞ்சாக்கரப் பதிகம். (அஞ்செழுத்தின் றிருப்பதிகம்)

திருச்சிற்றம்பலம் பண் - காந்தார பஞ்சமம்

துஞ்சலுந் துஞ்ச லிலாத போழ்தினு
நெஞ்சக நைந்து நினைமி னாடொறும்
வஞ்சக மற்றடி வாழ்த்த வந்தகூற்
றஞ்ச வுதைத்தன வஞ்செ ழுத்துமே. (1)

மந்திர நான்மறை யாகி வானவர்
சிந்தையு ணின்றவர் தம்மை யாள்வன
செந்தழ லோம்பிய செம்மை வேதியர்க்
கந்தியுண் மந்திர மஞ்செ ழுத்துமே. (2)

ஊனி லுயிர்ப்பை யொடுக்கி யொண்சுடர்
ஞான விளக்கினை யேற்றி நன்புலத்
தேனை வழிதிறந் தேத்து வார்க்கிட
ரான கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (3)

நல்லவர் தீய ரெனாது நச்சினர்
செல்லல் கெடச்சிவ முத்தி காட்டுவ;
கொல்ல நமன்றமர் கொண்டு போமிடத்
தல்லல் கெடுப்பன வஞ்செ ழுத்துமே. (4)

கொங்கலர் வன்மதன் வாளி யைந்தகத்
தங்குள பூதமு மஞ்ச வைம்பொழிற்
றங்கர வின்பட மஞ்சுந் தம்முடை
யங்கை யிலைவிர லஞ்செ ழுத்துமே. (5)

தும்ம லிரும றொடர்ந்த போழ்தினும்,
வெம்மை நரகம் விளைந்த போழ்தினு
மிம்மை வினையடர்த் தெய்தும் போழ்தினு
மம்மை யினுந்துணை யஞ்செ ழுத்துமே. (6)

வீடு பிறப்பை யறுத்து, மெச்சினர்
பீடை கெடுப்பன; பின்னை நாடொறு
மாடு கொடுப்பன; மன்னு மாநட
மாடி யுகப்பன வஞ்செ ழுத்துமே. (7)

வண்டம ரோதி மடந்தை பேணின;
பண்டை யிராவணன் பாடி யுய்ந்தன;
தொண்டர்கள் கொண்டு துதித்த பின்னவர்க்
கண்ட மளிப்பன வஞ்செ ழுத்துமே. (8)

கார்வண னான்முகன் காணு தற்கொணாச்
சீர்வணச் சேவடி செவ்வி நாடொறும்
பேர்வணம் பேசிப் பிதற்றும் பித்தர்கட்
கார்வண மாவன வஞ்செ ழுத்துமே. (9)

புத்தர் சமண்கழுக் கையர் பொய்கொளாச்
சித்தத் தவர்க டெளிந்து தேறின;
வித்தக நீறணி வார்வி னைப்பகைக்
கத்திர மாவன வஞ்செ ழுத்துமே. (10)

நற்றமிழ் ஞானசம் பந்த னான்மறை
கற்றவன் காழியர் மன்ன னுன்னிய
வற்றமின் மாலையீ ரைந்து மஞ்செழுத்
துற்றன வல்லவ ரும்ப ராவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சீகாழி மறையவர்க்கு வைதிக நூற்சடங்கின் வந்த சிந்தை மயக்குறு மையந் தெளியும்படி, முந்தை முதல் மந்திரங்களெல்லாந் தோன்றும் முதலாகும் முதல்வனார் எழுத்தஞ்சு என்ற கருத்துப்பட அருளியது. இஃது ஆசிரியர் முன் (2164) அளந்து காட்டியருளியவாறு. சரித அகச்சான்றுமாதல் காண்க.

குறிப்பு:- இது "அஞ்செழுத்துமே" என்று பாட்டுத்தோறும் இறுதி முடிபு செய்து மகுடம் சூட்டியருளியபடியால் **சீபஞ்சாக்கரத் திருப்பதிகம்** என்றே பெயர் வழங்கும், முன்கூறிய மற்றைப் பதிகம், இவ்வாறன்றி மந்திரத்தையே யருளி மகுடம் பெறுதலின், நமச்சிவாயத் திருப்பதிகம் எனப்படும். "அஞ்செழுத்துற்றன" (11) என்றதும், பதிகப் பலனும் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **துஞ்சல்** - உறக்கம்; உறக்கத்திலும்; "உறங்கிலும் விழிப்பிலும்" (தேவா). எல்லா அவத்தைகளிலும். உறக்கம் விழிப்பு வேறு; மெய்வகை யஞ்சவத்தை வேறு; அவை சுத்தாவத்தை என்பதாம். **நெஞ்சக நைதல்** - அன்பினாற் குழைதல். இஃது அழுந்திய நினைப்புக்கு (தியானத்துக்கு) அடிப்படை. **நினைமின்** - தியானியுங்கள். **வஞ்சகம் அற்று அடி வாழ்த்த** - வாழ்த்தியதனால். **உதைத்தன;** மார்க்கண்டேயர் சரிதம். கூற்று அஞ்ச உதைத்தலாவது மேல் இறத்தல் பிறத்தலுட்படாது செய்தல். **உதைப்பன** என்பது பாடமாயின் எதிர்காலம் இயல்பு குறித்ததென்க. இப்பொருட்கு, **வந்த** என்ற இறந்த காலம் விரைவுப் பொருட்டு, திருவைந்தெழுத்தினுள் ஒவ்வோரெழுத்தும் பொருள் பற்றியனவாதலின் பன்மை முடிபு கொண்டது. - (2) **மந்திரம் நான்மறை** - மந்திரமாகத் தோற்றுவிக்கப்பட்ட மறை. மறையினுள் மந்திரம் என்னும் பகுதி என்றலுமாம். **செந்தழல்...மந்திரம்** - வைதிகநெறியில் தீ வேட்கும் வேதியர் மூன்று போதும் சந்தி செய்யும் மறையின் மந்திரம் இதனை உடையது என்பது. இதனையே

பதிகக் கருத்தும் குறிப்புமாக ஆசிரியர் 2164-ல் எடுத்துக் காட்டியருளினர். ஆண்டுரைத்தவை பார்க்க. **ஓம்புதல்** - இடையறாது பாதுகாத்தல்; **அந்தி** - சந்திகள்; **செம்மை** - முத்தித்திரு. -(3) ஊனில் உயிர்ப்பை ஒடுக்குதல் பிராணாயாமமும் சிவராஜயோகநிலையும். **ஊன்**-உடல்; **உயிர்ப்பு** - பிராணவாயு; "உயிராவண மிருந்து" (தேவா). **ஞானவிளக்கினை ஏற்றுதல்** - அகப்பூசையிற் சோதி வழிபாடு. அந்தரியாகம் என்பர். **ஞானவிளக்கு** - சிவச்சோதி. "உடம்பெனு மனையகத்தே" (நேரிசை); **நன்புலத்து ஏனைவழிதிறந்து ஏத்துவார்** - "இருவழியைச் சிக்கெனும்படி யடைத்தொரு வழியைத் திறந்து" (திருவாதவூ - புரா.) **உயிர்ப்பை ஒடுக்குதல்** - இடகலை பிங்கலை என்னும் இரண்டு நாடிகளின் வழியாகப் பிராணவாயுச் செல்லாது நிறுத்துதல். **ஏனைவழி** - சுழுமுனை; **ஏத்துதல்** - தகராகாய உபாசனை; **இடர்** - பிறவித்துன்பமும் அதற்கேதுவாகிய ஆணவமலமும்; **ஆன** - ஆணவ நீக்கத்திற்காக வரும் மாயை கன்மங்கள். **கெடுத்தல்**-வலியிலவாகச் செய்தல்.-(4) **நச்சினர்**-விரும்பிப் போற்றியவர். **செல்லல்** - துன்பம்; பிறவியிற் செல்லுதல் என்றலுமாம்; **சிவமுத்தி** - பரமுத்தி; **அல்லல்** - இயமவாதனை.-(5) **கொங்கு அலர்** - மணத்துடன் மலரும் பூக்களாகிய; **வன்(மை)யாவது** சிவனிடத்தும் சிவஞானிகளிடத்தும் அன்றி ஏனை எல்லாரையும் மயக்கவல்ல தன்மை. **வாளி ஐந்து** - வன்மதன் - வலிய மதனனது பூ அம்புகளாகிய தாமரை - மா - அசோகு - முல்லை - நீலம்; **அகத்து அங்குளபூதம் அஞ்சு** - பூத தன்மாத்திரைகள் ஐந்தும் அவற்றின் வழிவரும் காரியங்களாகிய புலன்களும்; **அ(வ்) ஐம்பொழில்** - அப்புலன்களுக்கிடமாகிய நிலங்கள் - புவனங்கள்; **பொழில்** - உலகம். "பொய்யாது பொழிலேழுந் தாங்கிநின்ற"; (தேவா); "புவிமுதலைம் பூதமாய்ப் புலனைந்தாய் நிலனைந்தாய்" (தேவா). **அலர்** என்றதற்கேற்பப் **பொழில்** என்றார்; ஐந்திணைப் பாகுபாடு என்ற குறிப்புமாம்; **அரவின் படம்** - இறைவரணியும் ஐந்தலை யரவின் பணா முடிகள்; **அங்கையில் ஐவிரல்** - ஐந்தெழுத்தினை எண்ணிச் செபிக்கும் சாதனம்; "அக்கு மாலைகொ டங்கையி லெண்ணுவார்" (தேவா); "அஞ்சுகொலாம்" என்ற அரசுகள் தேவாரம் பார்க்க; மதனன் **வாளிகள்** - உயிர்கள், தத்தமது கன்மத்துக் கீடான போகம் புசிக்கச் செய்தற்கும்; **அகப்பூதம்** - முதலியவை அவ்வாறுபுசித்தற்குரிய கரண முதலியவை பெறுதற்கும் **அரவின்படம், ஐவிரல்** - அதற்குரிய சாதனங்கள் பெறுதற்கும், ஆகின்ற இவையே ஐந்தெழுத்தின் உட்குறிப்பு என்பதும் கருத்து. -(6) **தும்மல் இருமல்** - இம்மையில் அனுபவத்திற்கு வரும் பிராரத்தத் துன்பங்களின் பொதுமை; "தும்மலொ டருந்துயர் தோன்றிடினும்" (தேவா); மரணக்குறி என்றலுமாம்; **நரகம்** - வினைக்கீடாக மறுமையில் வரும் துன்பானுபவம்; **இம்மைவினை அடர்த்தெய்தும்** - பழவினைகளின் மூட்சி; **அம்மையினும்** - இம்மை பற்றுக்கோடு என்றலும் குறிப்பு. -(7) **வீடு** - வீடுதல்; இறத்தல். முதனிலைத் தொழிற்பெயர்; "சாதலும் பிறத்தலும் தவிர்த்து" (நம்பி-தேவா). **பீடை** - வினைத் தொடக்காக வரும் துன்பம்; **பீடா** - என்ற வடசொல் "ஆவீ றையும்" என்பதனால் பீடை என வந்தது. மாடு - நிலைபெற்ற சிவச்செல்வம்; **ஆடி** - ஆடுபவர்; பெயர்; ஆடியினால் உகக்கப்படுவன;-(8) **அண்டம்**-சிவனுலகம்; "அண்ட மாள்வதற் கியாது மையுற வில்லையே" (தேவா); **வண்டமரோதி** - உமையம்மையார்; இவருக்கு இறைவர் பஞ்சாக்கரோபதேசம் செய்தமையும், அதனால் இவர் அதனைப் போற்றியதும் "அணிகொண்ட கோதை யவணன்று மேத்த வருள்செய்த" (தேவா) முதலிய மறைகளாலு மறியப்படுவன. -(9) **பேர்வணம்** - பற்பல

2165. அத்தகைமை பிள்ளையா ரருளிச் செய்ய
வந்தணர்க ளருடலைமேற் கொண்டு தாழ்ந்து
சித்தமகிழ் வொடுசிறப்பத், தாமுந் தெய்வத்
திருத்தோணி யமர்ந்தாரைச் சென்று தாழ்ந்து
மெய்த்தவிசைப் பதிகங்கள் கொண்டு போற்றி
விரைமலர்த்தாள் மனங்கொண்டு மீண்டு போந்து
பத்தருட னினிதமரும் பண்பு கூடப்
பரமர்தாள் பணிந்தேத்திப் பயிலு நாளில், 267

பெயர்களானறியப்படும் பெருமைகள்; ஆர்வணம் - பற்றுக்கோடு; **ஆர்தல்** - அனுபவித்தல்;-(9) **சமண் கழுக்கையர்** - கழுவைக் கையில் ஏந்திய சமணர்; இது சமணரது சமய மரபுகளுள் ஒன்று; தமது சமயத்துக்குத் தீங்கு - இழுக்கு - தவறு - வந்தபோது கழுவை நாட்டி அதன்மேற் பாய்ந்து உயிர்துறத்தல் வேண்டுமென்றது அவரது சமயக் கொள்கைகளுள் ஒன்று. இது பற்றியே திருவாலவாயிற் பிள்ளையாருடன் செய்த சமய வாதத்தினில் "தனிவாதி லழிந்தோ மாகில், வெங்கழு வேற்றுவா னிவ்வேந்தனே" (புரா - 798) என்று ஒட்டினார் என்பதும் காண்க. இத்திருப்பாட்டினால் திருத்தெளிச்சேரியில் புத்தநந்தி தலையில் இடி வீழ்ந்ததென்ற சரித விளைவும் காண்க; (புரா - 908). **அத்திரம்** - அங்க மந்திரங்கள் ஆறனுள் அத்திரமந்திரம். இது பாவம் போக்கி மலச்சேதம் செய்வது. இறைவரது சூலப்படையாகிய பாசுபதம் எனப்படும். விரிவு சிவாகமங்களுட் கண்டுகொள்க. **பித்தர்** - சிவன்பால் பித்துடைய அடியார். "பித்துப் பத்தரினத்தாய்" (போதம்). **புத்தர்** - புத்திதத்துவப் பொருளே பொருளாக் கொள்வோர். **சித்தத்தவர்** - சிவனடியர். **வித்தகம்** - மலங்கழுவிச் சிவஞானம் தருதல் பொருள். - (11) **நற்றமிழ்** - நன்மை பாச நீக்கமும் சிவப்பேறும் பயனாக உடைமை.

குறிப்பு:- இங்குப் பிள்ளையார் வேதமோதிய வேதியர்க்கு ஐயம் தெளிய அருளியமையால் மந்திரோபதேசம் வேண்டாமையின் அஞ்செழுத்து என்று பெயர் மாத்திரையாலுணர்த்தினார். "வேதியர்க் கந்தியுண் மந்திரம்" என்றதும், "மந்திர நான்மறையாகி" என்றதும் வரும் 2-வது பாட்டுப் பார்க்க. முத்திபெறுவிக்க அருள் வதனாற் பின்னர்ப் பிள்ளையார் அருளும் "காதலாகி" என்ற நமச்சிவாயத் திருப்பதிகத்தினுள் அம் மந்திரத்தினையே பொறித்து வைத்துணர்த்தி உபதேசிப்பது காண்க. இந்த இரண்டு பதிகங்களும் ஒப்புநோக்கி உள்ளீடு உணர்தற்பாலன.

2165. பொருளுரை... அத்தகைமை.....அருளிச் செய்ய - அத்தன்மை பிள்ளையார் அருளிச் செய்யவே; அந்தணர்கள்...சிறப்ப - அந்தணர்கள் அவ்வருளிப்பாட்டினைச் சிரமேற்றாங்கி வணங்கி மனமகிழ்ச்சியோடு சிறந்தார்களாக; தாமும்...போந்து - பிள்ளையார் தாமும் தெய்வத் திருத்தோணியில் எழுந்தருளிப் பெருமானைச் சென்று பணிந்து உண்மையுடைய இசையுடன் கூடியபதிகங்களினாற்றுதித்து அவரது வாசனை பொருந்திய மலர்போன்ற பாதங்களை மனத்திலே வைத்து மீண்டு புறம்பே எழுந்தருளி; பத்தருடன்...நாளில் - அடியார்களுடன் இனிதே அமரும் தன்மை கூடும்படி இறைவரது திருவடிகளைப் பணிந்து போற்றிப் பயின்றிருந்த நாளில்,

வேறு

2166. பந்தணை மெல்விர லாளும் பரமரும் பாய்விடை மீது
வந்துபொன் வள்ளத் தளித்த வரம்பின்ஞா னத்தமு துண்ட
செந்தமிழ் ஞானசம் பந்தர் திறங்கேட் டிறைஞ்சுதற் காக
அந்தணர் பூந்தராய் தன்னி லணைந்தனர் நாவுக் கரசர். **268**

விளக்கவுரை—அத்தகைமை - செந்தழலோம்பும் வேதியர்க்கு அந்தியுள் மந்திரம் திருவைந்தெழுத்தே யாமென்னும் தன்மை.

*அருள் தலைமேற் கொண்டு - அருள் - அருளிப்பாடு: **தலைமேற் கொள்ளுதல்** - மிக உயர்ந்த பொருளாகக் கொண்டாடுதல்.*

தாமும் - ஆளுடைய பிள்ளையாரும்: அருளை அவர்கள் தலைமேற்கொண்டது போலத் தாமும் தோணி யமர்ந்தார்தாள் தலைமேற் கொண்டார் என்று உம்மை இறந்தது தழுவியது.

பதிகங்கள் *- இவை இன்னவென்பது துணியக்கூடவில்லை. "திருப்பதிகங்கள் பலவும்" (2161) என்ற விடத்துரைத்தவை பார்க்க.*

தாள் மனங்கொண்டு மீண்டு *- இறைவரைப்போற்றி மீள்வார் அவரது திருத்தாள்களை எண்ணிக்கொண்டவாறே புறம்போந்தனர். "காளத்தி எந்தையா ரிணையடி யென்மனத் துள்ளவே" "ஆரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்ச னெஞ்சே" முதலியவற்றின் கருத்து.*

பத்தருடன் இனிதமரும் பண்புகூடத் தாள் ஏத்திப் பயிலும் *- அடியாரோ டினிதிருக்கும் பேறு சிவனருளாற் பெறப்படுவது. **கூட**-அதனைக் கூடுதற்பொருட்டு. **கூட**- கூடியதனால் என்றலுமொன்று. அடுத்துத் திருநாவுக்கரசரது கூட்டம் நிகழவுள்ளமை திருவுள்ளக் குறிப்பு.* *267*

2166. பொருளுரை.... பந்தணை...அமுதுண்ட - பந்தினைப் பயின்ற மெல்லிய திருவிரல்களையுடைய உமாதேவியாரும் சிவபெருமானும் பாய்விடையின்மேல் எழுந்தருளி வெளிப்பட்டு வந்து பொற்கிண்ணத்தில் அளித்தருளிய எல்லையில்லாத ஞானப்பா லமுதினை உண்டருளிய; செந்தமிழ்...இறைஞ்சுதற்காக - செந்தமிழ்த் தலைவராகிய திருஞானசம்பந்த நாயனாரது திறங்களைக் கேட்டு அவரைக் கும்பிடுவதற்காக; அந்தணர்—நாவுக்கரசர் - அந்தணர்கள் சிறக்க இருக்கும் சீகாழிப் பதியில் திருநாவுக்கரசு நாயனார் அணைந்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை...பந்தணை மெல்விரலாள் *- பெரியநாயகி யம்மையார். "பந்துசேர் விரலாள்" (தேவா): "பந்தணை விரலாள் பங்க" (திருவா). (பந்தாடுதலை மகளிர்களிடை நின்றும் ஆடவர் இந்நாளிற் பெரிதும் கைக்கொண்டு தந்நிலை நீங்கினர்.) இது மகளிரின் பொது வியல்பு குறித்ததன்றி உமையம்மையார் பந்தாடுகின்றார் என்பதன்று.*

அரசும் பிள்ளையாரும் சந்திப்பு – I

2167. "வாக்கின் பெருவிறன் மன்னர் வந்தணைந் தா" ரெனக் கேட்டுப்
பூக்கமழ் வாசத் தடஞ்சூழ் புகலிப் பெருந்தகை யாரும்
"ஆக்கிய நல்வினைப் பேறெ"ன் றன்பர் குழாத்தொடு மெய்தி
யேற்கும் பெருவிருப்போடு மெதிர்கொள வெய்தும்பொழுதில், **269**

"மனைகடொறும் இறைவனது தன்மை பாடிக், கருந்தடங்கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே" என்ற திருவாக்கு இதன் தன்மையை இனிது விளக்குகின்றது. புவனங்களாகிய பந்துகளை இறைவரது சத்தியாகிய அம்மை தன்னிடம் நின்று வெளியே விட்டு அவை மீண்டும் தன்பால் அணையும்படி நிற்கின்றார் என்ற உட்குறிப்பும் காண்க. **அணை** என்ற குறிப்புமது.

திறம் கேட்டு - திறம் - நற்செய்தி. "பந்தணை...ஞானசம்பந்தர்" என்ற பகுதி: **இதுவே** அரசுகள் கேட்ட திறமாவதென்பார், ஞானசம்பந்தர் என்றதனோடு உடம்பொடு புணர்த்தி ஓதினார். 1442 - 1443 பார்க்க. ஆண்டும் "அமுது செய்த பிள்ளையார் திருவார்த்தை" என்றும், "பெருந்தகை சீர்" என்றும் கூறியவை காண்க. கேட்டவர் ஆண்ட அரசுகளாதலின் ஆண்டு அதனை விரித்து இங்குச் சுருக்கிக் கூறிய நயமும் கண்டுகொள்க.

வரம்பில் ஞானத்தமுது - வரம்பில் ஞானம் - எல்லாவற்றையும் அடக்கித் தான் மேம்பட்டு நிற்றலின் வரம்பில் ஞானம் எனப்பட்டது. ஞானத்தைக் குழைத்த அமுது.

திறம் - பெருமை - வன்மை - முதலிய எல்லாம். "திறங்கொண்ட வடியார்" (தேவா).

இறைஞ்சுதற்காக - அணைந்தனர் - "கேட்டலுமே யதிசயமாங் காதல்கூர, வாழியவர் மலர்க்கழல்கள் வணங்குதற்கு மனத்தெழுந்த விருப்பு வாய்ப்ப" (1443). இறைஞ்சுதற் பொருட்டே அரசுகள் அணைந்தனர் என்க.

நாவுக்கரையர் ஆதலின் செந்தமிழின் வரும் ஞானத்தமுதத்தை விரும்பி வந்தனர் என்றதும் குறிப்பு. *268*

2167. **பொருளுரை...** வாக்கின்...கேட்டு - பெருவிறலுடைய வாக்கின் மன்னவனார் வந்து அணைந்தார் என்று கேட்டு; பூக்கமழ்....பெருந்தகையாரும் - நீர்ப்பூக்கள் மணம் வீசும் தடங்கள் சூழ்ந்த சீகாழியில் வந்தருளிய பெருந்தகையாராகிய பிள்ளையாரும்: "ஆக்கிய நல்வினைப்பேறு" என்று - இது முன் செய்த நல்வினையினால் வந்தபேறு ஆகும் என்று கொண்டு; அன்பர்..பொழுதில் - அன்பர் திருக்கூட்டத்தினோடும் கூடி அவரை வரவேற்கும் பெருவிருப்பத்தினோடும் எதிர்கொள்வதற்காக வந்து சேரும் பொழுதிலே;

விளக்கவுரை...பிள்ளையார் திறங்கேட்டு இறைஞ்சுதற்காக என அரசுகள் செயலை (2166) ஒரு பாட்டினாற் கூறினார். இச் செயலை முன் அரசுகள் புராணத்துள் (1443 - 1444 - 1445) மூன்று திருப்பாட்டுக்களினால் விரித்தருளினர். அதுபோலவே அரசுகளைக் கண்ட ஆளுடையபிள்ளையார் செயலை முன் (1446) ஒரு பாட்டாற் கூறியதனை ஈண்டு இம்மூன்று பாட்டுக்களால் விரித்தருளினர். பிள்ளையாரைக் கண்டிறைஞ்சுதற்கண்

2168. சிந்தை யிடையறா வன்பும், திருமேனி தன்னி லசைவுங்,
கந்தை மிகையாங் கருத்துங், கையுழ வாரப் படையும்
வந்திழி கண்ணீர் மழையும், வடிவிற் பொலிதிரு நீறும்
அந்தமி லாத்திரு வேடத் தரசு மெதிர்வந் தணைய, 270

அரசுகளுக்கு இருந்த ஆர்வத்தினளவு அரசுகளைக் கண்டு தொழுதலிற் பிள்ளையார்பாலும் ஆர்வமும் அன்பும் நிறைந்திருந்தன என்பது குறிப்புப்போலும். அரசுகளது உட்கொண்ட கருத்தை அம்மூன்றாலும் பிள்ளையாரது உட்கிடையை இம்மூன்றாலும் உணர்த்தியதும் காண்க.

வாக்கின் பெருவிறன் மன்னர் - திருநாவுக்கரசர். திருஞானசம்பந்தராயின திறத்தினை அரசுகள் கேட்டதுபோலப் பிள்ளையாரும் வாக்கின் பெருவிறன் மன்னராயின செய்தியைக் கேட்டருளினர் என்பது இவ்வடைமொழிகளின் குறிப்பு.

வந்தணைந்தார் - தாம் சென்றடையாது அவர் தாமே வந்து கூடினர் என்பது வந்து என்ற குறிப்பு. "உடையவர் தாமே வந்தார்" (475)

பெருந்தகையார் - "விண்டொழிந்தன நம்முடை வல்வினை...நாதன்மெய்த் தொண்டரோ டினிதிருந் தமையாலே" (திருவலஞ்சுழி - 2) என்ற திருவுள்ளக் குறிப்புடைமை குறிப்பு.

ஆக்கிய நல்வினைப் பேறு - இது பிள்ளையார் கொண்ட கருத்து. முன்செய்து முற்றிய நல்வினையின் பயன் என்க. சமைத்து ஆக்கிய சோறு என்புழிப்போல மேலொன்றும் செய்ய வேண்டாது உடனே பயன் துய்க்கநின்ற நிலை என்பதாம்.

அன்பர் குழாத்தொடும் எய்தி - "பத்தருட னினிதமரும் பண்பு" கூடுதலால் (2165) அப்பண்பினை இருபாலும் உடனிருந்து அமரும் தன்மை யுடையது அன்பர் குழாமேயாதலின், பிள்ளையார், ஏனை வேதியர் பரிசனம் முதலியோரை உடன் கொள்ளாது அன்பர் குழாத்தொடும் எய்தினார்.

ஏற்கும் - நல்வரவு கொண்டு எதிரேற்கும். எய்தும் பொழுதில்-எதிர்வந்தணையக் (2168) - கண்ட - கன்றும் - தொழுதே - அணைந்து - அரசும் - இறைஞ்ச - மதுர மொழியருள் செய்தார் (2169) என்று இம்மூன்று பாட்டுக்களையும் கூட்டி முடிக்க. 269

2168. பொருளுரை... சிந்தை...திருநீறும் - சிந்தையினிடத்தே இடையறாது பெருகுகின்ற அன்பின் பெருக்கும், திருமேனியில் அசைவும், கந்தையும் மிகையாம் என்ற கருத்தும், கையினிடமாகத் திருவுழவாரப்படையும், வந்து பெருகி வழிகின்ற கண்ணீர் மழையும், திருமேனியில் விளங்குகின்ற திருநீறுமாக; அந்த மிலா...அணைய அந்தமில்லாத திருவேடத்தையுடைய அரசுகளும் எதிரில் வந்தணைந்தாராக;

விளக்கவுரை.... இப்பாட்டு அரசுகளைப் பிள்ளையார் கண்ட நிலையை ஓவியம் போலச் சித்திரித்துக் காட்டும் அருமைப்பாடுடையது. முன் 1405 - 1490 பாட்டுக்களில்

உரைத்தவையும் ஈண்டு வைத்துக் காண்க. அங்குக் கூறியவை அரசுகளைத் திருவதிகை அடியார்கள் கண்ட காட்சியும், திருவாரூரில் அரசுகள் சரித்தநிலைபற்றிய ஆசிரியர் மனத்துட் கண்ட காட்சியுமாம். இங்குக் காணும் காட்சி பிள்ளையார் தம் திருமுன்பு கண்ட காட்சி.

அவ்வவர் காணும் நிலைகள்பற்றி இம்மூன்று காட்சிகளின் ஒற்றுமை வேற்றுமை நயங்களை உய்த்துணர்ந்து கொள்க. திலகவதியம்மையார் அஞ்செழுத்தோதி அளித்த திருவாளன் நிருநீற்றை உருவார அணிந்து உய்ந்த திருக்கோலத்துடன் சமணச் சார்பான மன்னவன் அழைக்க அரசுகள், முன், அமணர் சூழலில் உடன்செல்லக் கண்ட திருவதிகை அடியார்கள், அச்சூழலைவிட்டு அவர் கரையேறித் திருவதிகைத் திருவீதியில் அத்திருவேடத்துடன் வர மீண்டும் கண்டாராதலின் "தூயவெண் ணீறு துதைந்த பொன்மேனி" (1405) முதன்மைபெற அவர்க்குப் புலனாயிற்று. திருவாரூர்த் திரு வீதிப் பணிசெய்தமர்ந்த அரசுகள், "குண்டர் முன்னே தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியம் நமக்கு உண்டு கொல்லோ?" என்ற திருவுள்ளக் குறிப்புடன் திருவீதிப் பணி செய்தும் பாடியும் வந்த சரிதநிலையினைத் தாம்கண்டு "மார்பாரப் பொழி கண்ணீர்" (1490) என்ற பாட்டினால் ஆசிரியர் நமக்குக் காட்டியளினார். அது கவிக்கூற்று. அரசுகளின் அகக்கருத்தினால் நைந்த மனம் மார்பார மழைபோலக் கண்ணீர் பெருகுதற்குக் காரணமாயிற்று. இங்குப் பிள்ளையார் காண்பது முதன்மையாக அரசுகளது அகத்தோற்றமாகிய இடையறாத அன்புக் காட்சியேயாதலின் அதனை முதலில் வைத்துக் கூறினார். இக்கருத்தையும் இதன் பெருமையினையும் குறித்தே மாதவச் சிவஞான முனிவர் "இடையறாப் பேரன்பு" என்ற கூறியருளியதும் காண்க. "விருப்புறு மேனி கண்ணீர் வெண்ணீற்று வண்ட லாட" (1436) என்றநிலை: "கண்ணப்பர் தாமறிதல் காளத்தி யாரறிதல், அல்லதுமற் றியாமறியு மன்பன் றது" என்றதுபோல, அருட்பெருங் கூத்தரும் அரசுகளுமே அறிய நின்றதாதலின் அது பற்றி ஈண்டெடுத்துக் கூறவியலாதென்க.

இடையறா அன்பு - எக்காலத்தும் மறத்தலின்றித் தொடர்ந்து செல்லும் அன்பு. "இடையறா வன்பெனக்கு, வாழிநின் பாத மலர்க்கே மருவ வருளுகண்டாய்" (கோயி - விருத் - 37) என்று நம்பியாண்டார் நம்பிகள் அருளியதும், "மறக்குமா றிலாத வென்னை மையல் செய்திம் மண்ணின்மேற், பிறக்குமாறு காட்டினாய்" (தேவா) 'பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" (1952) என்பனவும் காண்க.

திருமேனி தன்னில் அசைவு - மேனியசைதல் அன்பு மீதூர்தலின் மெய்ப்பாடு. "ஆகம் விண்டு கம்பம் வந்து குஞ்சி யஞ்ச லிக்கணே, யாக வென்கை கண்க டாரை யாற தாக" (திருவா).

கந்தை மிகையாம் கருத்து - **கந்தை** - மேல் உடையாகிய ஒற்றைத்துணி. "கந்தை கீளுடை கோவணங் கருத்தறிந் துதவி" (504); **மிகையாங் கருத்தாவது** கந்தையும் வேண்டப்படுவதின்று என்ற துறவாகிய மனநிலை; இழிவு சிறப்பும்மை தொக்கது. **கந்தம் மிகையாம்** - என்று பாடமோதிக், **கந்தம்** - உலகப் பற்றாகிய வாதனை என்பாருமுண்டு. **கந்தம்** - இந்திரியங்களால் உணரப்படும் விடயத் தொகுதிகள்; **மிகையாம்** - குற்றமாம்

2169. கண்ட கவுணியக் கன்றுங் கருத்திற் பரவுமெய்க் காதற்
றொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே
அண்டரும் போற்ற வணைந்தங் கரசு மெதிர்வந் திறைஞ்ச
மண்டிய வார்வம் பெருக மதுர மொழியருள் செய்தார். **271**

என்பது ஆறுமுகத் தம்பிரானாருரை. ***திருமேனி தன்னி லசையும் கந்தை*** *- என்று பாடங்கொண்டு மேனியிற்கொண்ட என்பாருமுண்டு.*

கை - கையினிடத்து; ஏழனுருபு தொக்கது

கண் வந்து இழிநீர் *- என்க. அன்பு மீதூர்தல் காரணமாக வந்து மேல் வழிகின்ற கண்ணீர்.*

திருநீறு *- திலகவதியாரால் அளிக்கப்பட்டு உருவார அணிந்த அன்று முதல் இடைவிடாது அணிந்துகொண்ட திருநீறு.*

பொலிதல் - நாயனாரது திருமேனியில் விளக்கம் பெறுதல்.

அந்தமிலாத் திருவேடம் *- இறைவரது திருவேடமாதலின் அழிவிலாத - என்றார். "தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான்கொடுத்துத், தன்னுணரத் தன்னு ளிருத்தலால் - தன்னுணரு, நேசத்தார் தம்பா னிகழுந் ததிநெய்போல்" (போதம் - 12) என்பதும், அச்சூத்திரத்தின்கீழ் மாதவச் சிவஞான முனிவர் திருவேடத்தியல்பு பற்றி உரைத்தவையும், முன்னர்த் 'தூயவெண்ணீறு" (1405) என்ற திருப்பாட்டின் கீழ் உரைத்தவையும் காண்க. "ஆதியந் தம்மிலா வடிகள்வே டங்களே" (தேவா); இறைவரது வேடமே இவ்வரசுகள் என்பார் வேடத்தரசு என்றார்.* *270*

2169. பொருளுரை.... கண்ட.....தொழுதே - அவ்வாறு வரக்கண்ட கவுணியப் பிள்ளையாரும் "கருத்திற் பரவுகின்ற உண்மையன்பின் பெருக்குக் கிடமாகிய தொண்டர் திருவேடம் நேரே வந்து தோன்றியது" என்று கொண்டு தொழுது கொண்டவாறே; அண்டரும் போற்ற அணைந்து - தேவர்களும் துதிக்கும்படி அங்குச் சேர்ந்து; அரசும்...எதிர்வந்து இறைஞ்ச - அப்போது அரசுகளும் எதிரில் வந்து பணிய; மண்டிய....அருள் செய்தார் - கூர்ந்த ஆசை பெருக அவர்க்கு மதுர மொழிகளை யருளிச் செய்தார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை...கருத்தில் பரவும் மெய்க்காதல் தொண்டர் திருவேடம் நேரே தோன்றியது என்று *- பிள்ளையார் பத்தரது திருவேடத்தையும் சிவாலயத்தைப் போன்று பரமேசுரனெனவே கண்டு வழிபடும் கருத்துடையார் என்பது (போதம் 12);* ***திருவேடம் நேரே தோன்றியது*** *என்றது திருவேடம் என்ற இலக்கணங்களெல்லாம் உருப்பெற்று இலக்கியமாகத் தம் கண்முன் நேர்தோன்றியது என்றதாம். அரசுகளைப் பிள்ளையார் அரசுகளுடைய உருவம் என்று காணாது தொண்டர் திருவேடத் தன்மையின் தொகுதி என்று கண்டார் என்க. 1446-ம் பார்க்க.*

2170. பேரிசை நாவுக் கரசைப் பிள்ளையார் கொண்டுடன் போந்து
போர்விடை யார்திருத் தோணிப் பொற்கோயி லுட்புகும் போதில்
ஆர்வம் பெருக வணையு மவருடன் கும்பிட் டருளால்
சீர்வளர் தொண்டரைக் கொண்டு திருமா ளிகையினிற் சேர்ந்தார். 272

தொழுதே-அணைந்து - தொழுது கொண்டபடியே வந்து; "தொழுதெழுவாள்" (குறள்)

அண்டரும் போற்ற - திருவேடத்தின் பெருமையினை ஆசாரியராகப் பிள்ளையார் உணர்த்த அண்டர்களும் உணர்ந்து உய்ய என்றதனால் ஏனையோர் உணர்ந்தது தானே பெறப்படும் என்க.

அணைந்து - அருள் செய்தார் - என்று முடிக்க. பிள்ளையார் தொழுதே அணைந்தா ராக அவ்வேளையில் அரசுகளும் வந்திறைஞ்ச என்க.

மண்டுதல் - மிகுதி பெறக்கூடுதல்.

மதுரமொழி - வரவேற்றலாகிய இன்மொழி. 271

2170. பொருளுரை... பேர் இசை....போந்து - பெரும் இசையினையுடைய திருநாவுக் கரசரைப் பிள்ளையார் உடன் வரவேற்றுக் கொண்டு சென்று; போர் விடையார்-கும்பிட்டு - போர்விடையினையுடைய இறைவரது திருத்தோணியாகிய அழகிய திருக்கோயிலினுள்ளே புகும்போதில் ஆர்வம் மிக்கதனால் அணையும் அவருடனே கூடி இறைவரைக் கும்பிட்டு; அருளால்....சேர்ந்தார் - திருவருளினாலே சிறப்பு மிகச் செய்யும் அத்திருத் தொண்டராகிய அரசுகளை உடன் அழைத்துக்கொண்டு தமது திருமாளிகையினைச் சேர்ந்தருளினர்.

விளக்கவுரை.... கொண்டு - முன்னையது, மதுரமொழியுடன் நல்வரவேற்றுக் கோயிலுக்கு உடன் சென்றதனையும், பின்னையது, அவ்வழிபாடு முற்றியபின், தமது திருமாளிகைக்கு உடன் அழைத்துச் சென்றதனையும் குறித்தன. எதிர்கொண்டு வரவேற்றணைந்தது நகர்ப்புறத்தே என்பது கருதப்படும்.

கொண்டுடன் போந்து கோயிலுட்புகும் - தலத்தில் அணைந்தவுடன் செய்யும் முதற் கருமமாவது அத்தலத்தில் இறைவரை வணங்குதலேயாம் என்பது இவ்விருவரது துணிபும் முந்தையோர் மரபுமாம். சிவபாதவிருதயர் பிள்ளையாரைக் காணத் திருவாலவாய் சென்றபோது முதலில் திருக்கோயிலிற் சென்று வணங்கிப் பின்னரே திருமடத்தினைக் கேட்டறிந்து சென்றணைந்தனர் (புரா - 877) என்பதும் காண்க. இவ்வுண்மை மர பறியாது ஒழுகும் இற்றைநாளின் நம்போல்வாரது நழுவிய வொழுக்கமும் காண்க.

ஆர்வம் பெருக அணையும் அவருடன் கும்பிட்டு - ஆர்வம் பெருகுதலாவது தாம் கருதிவந்தபடி பிள்ளையாரை முன்பு கண்டு இறைஞ்சப் பெற்றதனுடன், அவருடனே கூடி அவர்க்கு ஞானமளித்த இறைவரையும் வணங்கப்பெற்ற ஆசை. "விருப்பின் மிக்கார்"

2171. **அணையுந் திருத்தொண்டர் தம்மோ டாண்ட அரசுக்கு மன்பால்**
இணையி றிருவமு தாக்கி யியல்பா லமுதுசெய் வித்துப்
புணரும் பெருகன்பு நண்பும் பொங்கிய காதலிற் கும்பிட்
டுணருஞ்சொன் மாலைகள் சாத்தி யுடன்மகிழ் வெய்தி யுறைந்தார். **273**

(1449), அவருடன் கும்பிட்டு - இதனை முன் 1450 - 1451 பாட்டுக்களில் விரித்தருளினர். ஆண்டுக் காண்க. பிள்ளையாரும் உடன் கும்பிட்டாலும், அரசுகளைக் கொண்டு கும்பிடச் செய்தலே கருத்தாதலின், அவ்வழிபாடு அரசுகளது செயலேயாக நிகழ்ந்த செயலாதல்பற்றி அவர் புராணத்துள் விரித்தோதினார்.

அருளாற் கொண்டு *- அரசுகளைக் காணப்பெற்றது திருவருள் கூட்டக் கிடைத்த பேறென்று பிள்ளையார் கொண்டனர். ஆதலின் தோணியப்பரின் அருள் விடை பெற்றபின் கொண்டு சென்றனர்.*

சீர்வளர் *- இறைவரது சீர்களை உலகில் வளரச் செய்கின்ற.*

திருமாளிகை மாடம்*-என்பதும் பாடம்.* *272*

2171. பொருளுரை— அணையும்...அரசுக்கும் - அணையும் திருத்தொண்டர்களுடன், ஆளுடைய வரசுகளுக்கும்; இணையில்...அமுது செய்வித்து - ஒப்பற்ற திருவமுதினை ஆக்குவித்து ஏற்ற இயல்பினாற் பொருந்தும்படி அன்பால் அமுது செய்வித்தருளி; புணரும்..கும்பிட்டு-பொருந்தியதனாற் பெருகிய அன்பும் நண்பும் மேலும் அதிகரித்த காதலினாலே கும்பிட்டு; உணரும்...உறைந்தார் - சிவனை உணர்ச்சியிற் கண்டு சொல்லும் திருப்பதிகங்களைச் சாத்தி மகிழ்ச்சி பொருந்தி உடன் உறைந்தார்கள்.

விளக்கவுரை— *இப்பாட்டு - முன் அரசுகளது புராணத்தினுள் "பிள்ளையார்தந் திருமடத்திலெழுந் தருளியமுது செய்து, மருவியநண் புறுகேண்மை யற்றைநாள் போல் வளர்ந்தோங்க வுடன்பலநாள் வைகுநாளில்" (1452) என்றுரைத்ததனைப் பிள்ளையாரது செயல்பற்றி விரிக்கின்றது. ஆண்டுரைத்தவை பார்க்க.*

அணையும் *- அரசுகளோடு உடன் அணையும் என்றும், மேலும் இருவருங் கூடிய மகிழ்ச்சி கண்டு களிக்க அணையும் என்றும் உரைக்க நின்றது.*

இணையில் *- இணையில்லாத பெருமையுடையார்க்குச் செய்விக்கும் அமுதாதலின் இணையில் திருவமுது என்றார்.*

ஆக்கி - ஆக்குவித்து. பிறவினைப் பொருளில் வந்தது.

இயல்பால் அமுது செய்வித்தலாவது *- அவர் பெருமைக்கு ஏற்ற இயல்பினால் உண்பிப்பது. "அரசர்க் கமைத்த சிறப்பினுமே லடியார்க் கேற்கும் படியாக" (கழறிற். புரா - 73). அவ்வவர்க்கேற்ற இடத்தில் அமைத்து என்ற குறிப்புமாம்.*

புணரும் பெருகு அன்பும் நண்பும் பொங்கிய காதல்*-புணரும் - முன் உணர்ச்சியினாற் புணர்ந்ததன்பயனாக உளதாகிய.* ***புணர்தல்*** *- ஈண்டு அடியார் உடன் உரையும்*

2172. அந்நாள் சிலநாள்கள் செல்ல வருட்டிரு நாவுக் கரசர்
மின்னார் சடையண்ண லெங்கு மேவிடங் கும்பிட வேண்டிப்
பொன்மார்பின் முந்நூல் புனைந்த புகலிப் பிரானிசை வோடும்
பின்னாக வெய்த விறைஞ்சிப் பிரியாத நண்பொடும் போந்தார். **274**

பேரின்பநிலை குறித்தது. அன்புடைமையும் நண்புடைமையும் வெவ்வேறு நிலைகள். உலக வழக்கில் சிற்றின்பச் சார்புபற்றி வழங்குதல் உபசாரம். அன்பு - இறைவனிடத்தும், நண்பு - அதனால் இவ்விரு பெருமக்கள் பாலும் நிகழ்ந்தன என்பதுமொன்று. "புணர்ச்சி பழகுதல் வேண்டா" (குறள்).

உணரும் சொன்மாலைகள் *- இறைவரைக் கும்பிட்டு அதனால் விளையும் சிவ ஞானானந்த அனுபூதி உணர்வு வசப்பட்டுத் தம்வயமின்றி எழும் சொன்மாலைகள். தேவாரத் திருப்பதிகங்கள்.*

மகிழ்வெய்தி உடன் உறைந்தார் *- என்க. உடனாதல் - சைவ சித்தாந்தத்தின் உயர்ந்த மரபுமொழி. "உடனுறைவின் பயன்பெற்றார்" (1509).*

கும்பிட்டு *- இவ்வாறு ஒருவரையொருவர் கூடும்படி தந்தருளியதன்பொருட்டுக் கும்பிடுவார் போல என்ற குறிப்புமாம். "வன்றொண்டர் கூட்டம் வைத்தாய்" (வெள் - சருக் - 47)*

எய்தியிருந்தார்*-என்பதும் பாடம்.* *273*

2172. பொருளுரை–அந்நாள்...செல்ல - அவ்வாறுள்ள சில நாட்கள் கழிய; அருள் திருநாவுக்கரசர்...கும்பிடவேண்டி - சிவனருள் பெற்று விளங்கும் திருநாவுக்கரசுகள் மின்போன்ற சடையினையுடைய இறைவர் எங்கும் பொருந்தி விளங்க வீற்றிருந் தருளியிருக்கும் தானங்களைச் சென்று கும்பிடும் பொருட்டு: பொன் மார்பில்...இசைவோடும் - அழகிய மார்பில் முப்புரி நூல் அணிந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையாரது இசைவு கொண்டு; பின்னாக எய்த இறைஞ்சி - பின்னர் வந்துகூடும்படி நினைத்துக் கொண்டபடியே வணங்கி; பிரியாத நண்பொடும் போந்தார் - பிரிதலில்லாத நண்புரிமையோடும் எழுந்தருளிப் போயினர்.

விளக்கவுரை–அந்நாள் *- முன் பாட்டிற்கூறிய அத்தன்மையனவாகிய நாட்களாய். அகரம் - முன்கூறிய அந்தத் தன்மை என்று முன்னறி சுட்டு. சில நாள்கள் அந்நாள்கள் போலச் செல்ல என்க.*

எங்கும் *- இவ்வுலகில் பற்பல தானங்களிலும்; பல கோயில்களிலும். "நிலவுபல கோயில் கண்டால்" (தேவா).*

பொன்மார்பில் முந்நூல் புனைந்த *- அணிமையில் உபநயனம் செய்யப் பெற்ற குறிப்பு. (2161)*

இசைவோடும் *- எங்கும் கும்பிடவேண்டுமாதலின் பிரான் இசைவு கொண்டனர் என்பது குறிப்பு.*

2173. வாக்கின் றனிமன்ன ரேக, மாறாத் திருவுள்ளத் தோடும்
பூக்கமழ் பண்ணைகள் சூழ்ந்த புகலியின் மீண்டும் புகுந்து
தேக்கிய மாமறை வெள்ளத் திருத்தோணி வீற்றிருந் தாரைத்
தூக்கின் றமிழ்மாலை பாடித் தொழுதங் குறைகின்ற நாளில், 275

பின்னாக எய்த - பிரியாத நண்பொடும் போந்தார் - "உவப்பத் தலைக்கூடி யுள்ளப் பிரித, லனைத்தே புலவர் தொழில்" (குறள்) என்ற உண்மைக்கு இச்செயலையே மாதவச் சிவஞான முனிவர் எடுத்துக்காட்டாகக் காட்டியருளியமை காண்க. பின்னாக எய்துதல் - பிரியும்போது இருவர் திருவுள்ளத்து மிருந்த கருத்து. இக்கருத்துப் பின்னர்த் திருப்புகலூரில் இருவரும் எதிர்பாராதவண்ணம் நிறைவேறியது காண்க. (புரா - 492). 1498-ம் பார்க்க. பிரியாத நண்பொடும் போதலாவது - திருமேனிகள் பிரிவெய்தினும் நண்புரிமை பிரிதலில்லை என்பது. திருப்பூந்துருத்தி நிகழ்ச்சியும் இங்குக் கருதற்பாலது. புரா - 927-ம் 1657-ம் பார்க்க. இங்குக் கூறியது அரசுகளது மனநிலைபற்றியதும், மேல்வரும் பாட்டில் - "மாறாத் திருவுள்ளத் தோடும்" (2173) என்பது பிள்ளையாரது மனநிலைபற்றியதுமாம்.

போந்தார் - அரசர் - வேண்டி - இசைவோடும் - போந்தார் என்க. போந்தார் - சீகாழியினின்றும் புறப்பட்டருளினர்.

இசைவோடும் பின்னாக எய்த - உடன்பாட்டோடும் பின்னேவர என்றுரைப் பாருமுளர். அது பொருளல்லாமை உணர்க. *274*

2173. பொருளுரை...வாக்கின் தனிமன்னர் ஏக - ஒப்பற்ற திருநாவுக்கரசர் போந்தனராக; மாறாத் திருவுள்ளத்தோடும்...புகுந்து - மாறுதலில்லாத திருவுள்ளத்துடனே பூக்கள் மணங்கமழும் வயல்கள் சூழ்ந்த சீகாழிப் பதியினுள் மீண்டுவந்து புகுந்து; தேக்கிய...வீற்றிருந்தாரை - நிறைந்த பெரிய வேதங்களின் மிகுதியின் வடிவாகிய திருத்தோணியில் எழுந்தருளிய இறைவரை; தூக்கின்...நாளில் - தூக்குடைய இனிய தமிழ் மாலைகளைப் பாடித் தொழுது கொண்டு அங்கு எழுந்தருளியிருக்கின்ற நாளில்,

விளக்கவுரை... மாறாத் திருவுள்ளத்தோடு - முன் "பிரியாத நண்பொடும்" (2172) என்றது காண்க.

புகலியின் மீண்டும் புகுந்து - சீகாழியின் திரு எல்லைப்புறம் போந்து இரு பெருமக்களும் விடைகொண்டனர்களாதலின் அவ்விடை நின்று மீண்டும் புகலியிற் புகுந்து என்றார். மீண்டும் - விடைகொண்டு மீளுதல் என்ற குறிப்பும் தருவது. முன்னர் எதிர்கொண்டு அரசுகளையும் உடன் கொண்டு மீண்டமை போல இன்று மீண்டும் என உம்மை இறந்தது தழுவியது.

தேக்கிய மாமறை வெள்ளத் திருத்தோணி - தேக்குதல் - பலவாற்றாலும் வந்து திரண்டு கூடுதல். அனந்தமாகிய மறைகளின் பல நெறிகளும் இங்கு வந்து ஒருங்கே கூடுதல் குறிப்பு. "அன்றென்று மாமென்று மாறு சமயங்கள், ஒன்றொன்றொ டொவ்வா

2174. செந்தமிழ் மாலை விகற்பச் செய்யுட்க ளான்மொழி மாற்று
வந்தசொற் சீர்மாலை மாற்று வழிமொழி யெல்லா மடக்குச்
சந்தவி யமகமேக பாதந் தமிழிருக் குக்குறள் சாத்தி
எந்தைக் கெழுகூற் றிருக்கை யீரடி யீரடி வைப்பு, 276

---

*துரைத்தாலும் - என்றும், ஒருதனையே நோக்குவா ருள்ளத் திருக்கும், மருதனையே நோக்கி வரும்" (திருவிடை - மும் - கோ - 17) என்ற பட்டினத்தடிகள் திருவாக்குக் காண்க. **வெள்ளம்** - மிகுதி; இரட்டுறமொழிதலால் தோணிமிதக்கும் வெள்ளம் (நீர்ப்பெருக்கு) என்ற குறிப்பும் தருவது.*

***தூக்கின் தமிழ்மாலை - தூக்கு** - செய்யுள்; இரட்டுற மொழிதலால் இசைத் தமிழின் பகுதியாகிய ஏழுவகைத் தூக்குக்களின் அமைதியும் குறிக்க வைத்தார், என்னை? மேற்கூறும் விகற்பச் செய்யுட்களின் பெரும்பான்மை சந்த இசைத்தமிழ் அமைதிகள் குறித்தற்கென்க. இவை தாளக் கூறுபாடுகள். **தூக்கு** - உயர்ச்சியுடைய என்ற குறிப்பும் பட நின்றது. உயர்ச்சியாவது சொல்லும் சந்த இசையும் உயர்ந்த நிலையிற் காணப்படுதலுடன் பொருள் உயர்வும் கொண்டு அருளுருவாய் அழியாது நிலவும் தன்மை.*

***பூக்கமழும் பணைசூழ்ந்த** - என்பதும் பாடம்.* 275

*2174. **பொருளுரை**....செந்தமிழ்மாலை விகற்பச் செய்யுட்களால் - விகற்பச் செய்யுட்களாலாகிய செந்தமிழ் மாலைகளாக; மொழி மாற்று - திருமொழிமாற்று என்னும் பதிகமும்;வந்த சொற் சீர் மாலைமாற்று - சொற் சீர்மாற்றி வந்த திருமாலை மாற்றுப் பதிகமும்; வழிமொழி - வழிமொழித் திருவிராகப் பதிகமும்; எல்லாம் மடக்கும் சந்த இயமகம் - எல்லா அடிகளினும் எல்லாச் சீர்களும் மடங்கி வரும் இயமகமாகிய; ஏகபாதம் - திருஏகபாதப் பதிகமும்; தமிழ் இருக்குக்குறள் - தமிழ் சிறந்த திரு இருக்குக்குறள் என்னும் பதிகமும்; சாத்தி - என்ற இவற்றைச் சாத்தியதோடு; எந்தைக்கு எழுகூற்றிருக்கை - எமது தந்தைக்கு அருளிய திருவெழுகூற்றிருக்கையும்; ஈரடி - ஈரடி என்ற திருப்பதிகமும்; ஈரடிமேல் வைப்பு - ஈரடிமேல் வைப்பு என்ற திருப்பதிகமும்,*

***விகற்பச் செய்யுட்கள்** - மிறைக் கவிகள் என்ப. சொல்லும் சந்தமும் விரவிப் பற்பல ஓசை மாறுபாடுகள்படப் பாடப்படுவன மிறைக்கவிகள். **விகற்பம்** - வேறுபாடு. மேற்கூறப்படும் பதிகங்களின் பொது வியல்பை எடுத்துக் கூறியபடி.*

***மொழிமாற்று - மாலைமாற்று - வழிமொழி - இயமகம் - ஏகபாதம் - இருக்குக் குறள் - ஈரடி - ஈரடி - மேல்வைப்பு** - இவை பதிகப் பெயர்கள். இவையும் மேற்பாட்டில் வரும் **நாலடிமேல் வைப்பு - சக்கரம் (மாற்று)** என்பவையும் விகற்பச் செய்யுட்களாதல் கண்டுகொள்க.*

***ஏழுகூற்றிருக்கை** - 1, 1, 2 - 1; 1, 2, 3 - 2 - 1 ; 1, 2, 3, 4 - 3 - 2 - 1; என்றிவ்வாறு 1 முதல் ஏழுவரை ஏறியும் இறங்கியும் எண்ணலங்காரம்படப் பாடப்படும் ஒருவகைப்பாட்டு. பதிகக் குறிப்புப் பார்க்க.*

2175. **நாலடி மேல்வைப்பு மேன்மை நடையின் முடுகு மிராகஞ்**
சால்பினிற் சக்கர மாதி விகற்பங்கள் சாற்றும் பதிகம்
மூல விலக்கிய மாக வெல்லாப் பொருள்கோளு முற்ற
ஞாலத் துயர்காழி யாரைப் பாடினார் ஞானசம் பந்தர். **277**

எந்தைக்கு - எமது - பிரானாகிய சீகாழி இறைவருக்கு என்றும், எமது தந்தையாகிய சிவபாத விருதயரின் பொருட்டு என்றும் இரட்டுற மொழிந்துகொள்ள நின்றது. பதிகக்குறிப்புப் பார்க்க. தந்தையார்க்காக அருளினர் என்பது வழக்கு.

வழிமொழி - சீகாழியின் பன்னிரண்டு பெயர்களும் வந்த வழி - வரலாறு - மொழியப் பெறும் பதிகம் என்க. இது வழிமொழித் திருவிராகம் எனப்படும்; பதிகக் குறிப்புப் பார்க்க.

எல்லாம் மடக்குச் சந்த இயமகம் - **ஏகபாதம்** - அடிதோறும் எல்லாச் சீர்களும் மீண்டும் மடக்கி வருதலாகிய சந்தம்பெற்ற இயமகமாகிய திரு ஏகபாதம் என்க; அடிமுழுதுமாகிய எல்லாச் சீர்களும் மடக்கி வருதலாகிய சிறப்புடைய தென்பார் **எல்லா மடக்குச் சந்தவியமகம்** என்று விசேடித்தார். மடக்கு - தமிழ்ப் பெயர். **இயமகம்** - வடமொழி; மரபு விளக்கவும் இயல்பு குறிக்கவும் இரண்டுங் கூறினார். "உற்றுமைசேர்வது" என்னும் திருவியமகப் பதிகம் பின்னர் அருளியது. புரா - 954 பார்க்க. ஏகபாதமும் இயமக வகையுட் சேர்வதாயினும் எல்லாச் சீர்களும் மடங்கி வரும் சிறப்புடையது.

இருக்குக்குறள் - **குறள்** - இருசீரானியன்ற அடியுடைய பாட்டு. **இருக்கு** - மந்திரப் பொதுமை யுணர்த்திற்று. செய்யுள் விகற்பமுமாம்.

ஈரடி - இரண்டடிகளாலியன்ற பாட்டுக்கள் கொண்ட பதிகம். ஆகுபெயர்.

ஈரடிவைப்பு - செய்யுளின் நான்கடிகள், முன் ஈரடிகள் ஒரு பெற்றியாகவும், பின்னீரடிகள் வேறொரு பெற்றியாகவும் அமைவது. **வைப்பு** - சந்தமும் பொருளும் மேல் ஒட்டிவைத்தது போலக் காணப்படுவது. இவ்வாறு வைப்பாகவுள்ள பின்னீரடிகள் பதிகமுழுதினும் ஒன்றேயாக வருவனவும், வெவ்வேறாக வருவனவும் உண்டு.

மடக்குஞ் சந்தவியமகம் - **ஈரடி வைப்பும்** - என்பனவும் பாடங்கள். *276*

2175. **பொருளுரை**....நாலடி மேல் வைப்பு - நாலடி மேல் வைப்பு என்ற திருப்பதிகமும்; மேன்மை நடையின் முடுகும் இராகம் - மேம்பட்ட முடுகும் நடையிலமைந்த திருவிராகம் என்ற பதிகங்களும்; சால்பினில் சக்கரம் ஆதிவிகற்பங்கள் சாற்றும் பதிகம் - சால்புடைய திருச் சக்கரமாற்று முதலிய திருப்பதிகங்களையும்; மூல இலக்கியமாக எல்லாப் பொருள் கோளும் முற்ற - இவை மூல இலக்கியமாக உலகுக்கு வழிகாட்டியிருக்கும்படி எல்லாப் பொருள் கோள்களும் முற்றிக் காணும்படி; ஞாலத்து....ஞானசம்பந்தர்-உலகத்தில் உயரும் சீகாழி யிறைவரைத் திருஞான சம்பந்தர் பாடியருளினர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2176. இன்னிசை பாடின வெல்லா மியாழ்ப்பெரும் பாணனார் தாமும்
மன்னு மிசைவடி வான மதங்கசூ ளாமணி யாரும்
பன்னிய வேழிசை பற்றிப் பாடப் பதிகங்கள் பாடிப்
பொன்னின் றிருத்தாளம் பெற்றார் புகலியிற் போற்றி யிருந்தார். **278**

---

*விளக்கவுரை... **நாலடி மேல்வைப்பு** - பாட்டின் முன் நான்கடிகள் ஒரு பெற்றியாகவும், மேல்வரும் இரண்டடிகள் வேறுமொர் பெற்றியாகவும் ஒட்டியது போன்று வருவன; ஈரடிமேல் வைப்புப்போல.*

***நடையின் முடுகும் இராகம்** - இராகம் - என்ற பெயரின் தன்மையை விளக்கும் வகையால் உடம்பொடு புணர்த்தி ஓதினார். நடை - ஓசை; முடுகுதல் - விரைந்த - அழுந்திய - தாள விசைகூடுதல். மேன்மை - கதியின் மேம்பாடும் பொருளின் உயர்வும்.*

***சக்கரம்** - திருச்சக்கரமாற்று. கடைக்குறை.*

***மூல இலக்கியமாக** - இந்த விகற்பச் செய்யுட்களுக்கு இலக்கணம் காண்போர்க்கு இலக்கியம் இவையே என்று தெளிய. முன்னர் இவற்றுக்கு இலக்கியம் கிடையாத நிலையில் இவையே மூல இலக்கியமாக அமைய என்க. தமிழ் கற்போர் இவற்றையே அவ்வவ் விகற்பச் செய்யுட்களுக்கு இலக்கியமாகக் கொள்ள.*

***எல்லாப் பொருள்கோளும் முற்ற** - பொருள்கோள் - பொருள் கொள்ளும் முறை. இவை யாற்றுநீர், கொண்டு கூட்டு முதலாக எட்டுவகையா மென்பர்.*

***காழியாரை** - இத்திருப்பதிகங்களனைத்தும் சீகாழியைப் பற்றியன.*

***மோனைநடையின் - எல்லாப் பொருள்களு முற்ற** - என்பனவும் பாடங்கள். 277*

*2176. **பொருளுரை**—இன்இசை பாடின எல்லாம்-இனிய இசையில் முன்கூறியவாறு பாடிய எல்லாப் பதிகங்களையும்; யாழ்ப் பெரும்பாணனார் தாமும்-பாட - பெரும் யாழ்ப் பாணனாரும் பொருந்திய இசையொரு உருவெடுத்தாற் போன்ற மதங்கசூளாமணியாரும் போற்றப்படும் ஏழிசைகளைப்பற்றிப் பாட; பதிகங்கள் பாடி - திருப்பதிகங்களைப் பாடி; போற்றி - சிவபிரானைத் துதித்துக்கொண்டு; பொன்னின்... திருத்தாளம் பெற்றார் - திருப்பொற்றாளம் பெற்ற பிள்ளையார்; புகலியில் இருந்தார் - சீகாழியிலே எழுந்தருளியிருந்தனர்.*

*விளக்கவுரை...**பாடின எல்லாம்** - முன்கூறியவாறு பாடிய விகற்பச் சந்தச் செய்யுட்கள் எல்லாவற்றையும்.*

***இசைவடிவான** - இசையே இவரது திருவுருவம் என்று சொல்லத்தக்க; முழுதும் இசைமயமான.*

***பன்னிய ஏழிசைபற்றிப் பாட** - "பன்னி யாதரித் தேத்தியும் பாடியும்" (தேவா); **பாணனார் தாமும் - மதங்க சூளாமணியாரும் பாட** - கலத்தினும் அதனோடியையக்*

கண்டத்திலுமாகப்பாட. **பன்னிய** - ஏழிசைபற்றி என்றதில் பன்னுதல் - ஏழிசைகளுள் ஒன்றும் பலவும் விரவ என்ற குறிப்பும் தருவது. **பற்றுதலாவது** இசையுடன் சொல்லும் பொருளும் பொருந்துதல்.

பாடப் பாடி - பின் றொடர்ந்து பாடும்படி பாடியருளி.

பொன்னின் திருத்தாளம் பெற்றார் - பிள்ளையாரை இத்தன்மையாற் கூறியது அவர்கள் பாடத் தாம் பாடியருளியதுடன் இசை திருத்தாளத்தினாலிசைய ஒத்தி யருளினர் என்று குறிப்பித்தற்கு.

போற்றி - இறைவரைத் துதித்துக்கொண்டு. "வாழ்த்த வாயும்" என்றபடி மக்கள் வாழ்த்தலெல்லாம் போற்றுதற்கென்றேயாம் என்று உலகறியும்படி போற்றி என்க.

இந்நான்கு பாட்டாலும், அரசுகள் போந்தபின்னரும், தமது திருவவதாரப்பயன் தரும் ஐந்தாவது தலயாத்திரை தொடங்குமுன்னும், சீகாழியில் எழுந்தருளியிருந்த இடைநாட்களின் சரித நிகழ்ச்சிகள் கூறப்பட்டன. 278

திருமொழிமாற்று

திருச்சிற்றம்பலம் **பண் - வியாழக் குறிஞ்சி**

காட தணிகலங் காரர வம்பதி காலதனிற்
றோட தணிகுவர் சுந்தரக் காதினிற் றூச்சிலம்பர்
வேட தணிவர் விசயற் குருவம்வில் லுங்கொடுப்பர்
பீட தணிமணி மாடப் பிரம புரத்தாரே. (1)

கல்லுயர் கழுமல விஞ்சியுண் மேவிய கடவுடன்னை
நல்லுரை ஞானசம் பந்தன்ஞா னத்தமிழ் நன்குணரச்
சொல்லிடல் கேட்டல்வல் லோர்தொல்லை வானவர் தங்களோடுஞ்
செல்குவர் சீரரு ளாற்பெற லாஞ்சிவ லோகமதே. (2)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- காடதுபதி - காரரவம் அணிகலம் என்றிவ்வாறு மொழிகளை மாற்றிக் கூட்டிப் பொருள் கொள்ள வைத்த விகற்பச் செய்யுள் என்னும் மிறைக்கவி. இறைவரது தடத்த சொருப வியல்புகளை எடுத்து அதிசயம்பட இவ்வாறு போற்றுதல் கருத்து. "ஞானத்தமிழ்" (12) என்று தன் இயல்புரைத்துப் பயன் அருளியதும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) காடு - பதி; அரவம் அணிகலம்; காதினில் தோடு; காலதனில் தூச்சிலம்பர்; வேடது உருவம்; விசயற்கு வில்லும் கொடுப்பர்; -(2) கங்கை கற்றைச் சடையது; கங்கணம் முன்கையில்; படைத்தோன் (பிரமன்) தலைபற்றித்து; முப்புரம் சுட்டது; கூற்றை எற்றித்து (உதைத்தது); பாம்பை அணிந்தது; -(3) கூவிளம் சடைமுடிக் கூட்டத்தது. (கூட்டம் - கற்றை; தொகுதி) பேரி - துடி - கையது; பொடி

(நீறு) பூசிற்று; துத்தி பூண்டது; **துத்தி** - படம்; படமுடைய பாம்புக்கு வந்தது. ஆகுபெயர்; நுதலாளைப்பாகம் (வைத்தனர்); நாகம் - (யானை) உரித்தனர்;-(4) களிற்றை உரித்தது. பாம்பை உடல் மிசையிட்டது; எரித்தது முப்புரத்தை;ஓர் ஆமை (ஆமையின் ஓடு)யைப் பூண்டது; (விட்டுணு தமது கூர்மாவதாரத்தில் முதுகோட்டை அர்ப்பணம் செய்து வழிபட்ட வரலாறு குறித்தது); **இன்புற** - ஆதனால் விட்டுணு இன்பமுற; தக்கனை வேள்வி செருத்தது; ஏந்திற்றுச் சூலத்தை; **பன்னூல் விரித்தவர்** - மறை முதலிய கலைகளில் வல்லவர்;- (5) கொட்டுவர்தக்கை; (தக்கை - இயங்களுள் ஒன்று) அரையார்ப்பது அக்கு; (அக்குவடம்); குறுந்தாளனபூதம் கலப்பிலர்; இன்புகழ் விட்டுவர்; மட்டுவரும் மத்தம் சூடுவர் - (**மட்டு** - மணம்); தழல் ஏந்துவர்; **வான்தொட்டுவரும் கொடி** - விண்ணளவுயர்ந்த கொடி;-(6) சாத்துவர் கோவணம்; பாசம் கையிலேந்துவர்; கச்சுக் குலாவிநின்று அவர்கூத்து ஆடுவர்; கொக்கிறகும் சூடுவர்; பல்படை பேயவை பேர்த்தவர்; **படை** - படைகளாக; **பேர்த்தல்** - சூழக் கொள்ளுதல்; **பேர்எழிலார் பூத்தவர்** - மிக்க எழிலுடைய பெண்கள். (7) காலது கழற் சிலம்பு (கழல் - காலணி மணிவடம்); சடையுள்ளார் கங்கை; மாலது பாகம்; முழுஅது ஏந்தல் (ஏந்துவது); ஆலதன்கீழ் இருப்பர்; **ஆல்** - கல் ஆலமரம்; கோடு - கொம்புகள்; ஏறு ஊர்வர்; **சேலதுகண்ணி** - சேல்மீன் போன்ற கண்ணேயுடைய உமையம்மையார்;-(8) நெருப்புறு மேனியர்; வெள்விடை ஏறுவர்; நெற்றியின் கண் கண்ணர்; **மருப்புருவன்** (விநாயகர்) தாதை; மாமுருகன் விருப்புறு தந்தையார்; பாம்புக்கு மெய் காட்டுவர்; **பொருப்பு உறு** - மலைபோன்ற; உறு - உவமவுருபு;-(9) இலங்கைத் தலைவனை இறுத்தது; இரலை (மான்) ஏந்திற்று; கூற்று குமை பெற்றது; மாணி உயிர் பெற்றது; **மாணி** - பிரமசாரி - மார்க்கண்டேயர்; காட்டகத்து ஆடுவர்; மொந்தை (ஒருவகை இயம்) கொட்டுவர்;(10) மால் அடியிணை கண்டிலன்; தாமரையோன் முடிகண்டிலன்; புலித்தோல் உடுப்பர்; ஏறு ஏறுவர்; பிடிநடையாள் ஓர் கூறுடையார்; வெற்பு இருப்பது; (**வெற்பு** - மலை - கயிலை);-(11) கையது சூலம்; காதது குழை; தம்மைச் சமணர் புத்தர் எய்தார்; அடியார் எய்துவர்; ஏனக் கொம்பு பூண்பது; **ஏனம்** - பன்றி; கோவணம் உடுப்பது; (12) **ஞானத்தமிழ்** - இறைவரது சொரூப தடத்த இலக்கணங்களையும், சாதனங்களையும் அறிவிப்பது; "பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத், துறவியெனுந் தோற்றோணி கண்டீர்...சம்பந்தன், தன்மாலை ஞானத் தமிழ்" (ஆளு. பிள். மும். 11); **நன்குணர்தல்** - மொழிமாற்றின் கூறறிந்து பொருளை உள்ளுணர்தல்.

குறிப்பு:- பிரமபுரம் முதலாகக் கழுமல மீறாகச் சீகாழிப் பன்னிரு பெயர்களையும் அம் முறையே இப்பதிகத்தினுள் பன்னிரண்டு பாட்டினும் போற்றுதல் காண்க. இம்முறையே பின்வரும் வழிமொழி, ஏகபாதம், இயமகம், இருக்குக்குறள், ஈரடி, ஈரடி மேல்வைப்பு, நாலடி மேல்வைப்பு, சக்கரமாற்று என்ற விகற்பச் செய்யுட் பதிகங் களிலெல்லாம் அமைத்துப் பன்னிரண்டு பாட்டுக்களாற் பதிகமருளியமை காண்க. திருவெழுகூற்றிருக்கையிலும் அப் பெயர்களை அவ்வரிசையிலே அமைத்துப் போற்றியதும் காண்க. 1912-ம் ஆண்டுரைத்தவையும் நினைவு கூர்க.

திருமாலைமாற்று

திருச்சிற்றம்பலம் சீகாழி பண் - கௌசிகம்

யாமா மாநீ யாமாமா, யாழீ காமா காணாகா,
காணா காமா காழீயா, மாமா யாநீ மாமாயா. (1)

நேரக ழாமித யாசழிதா, யேனநி யேனனி ளாயுழிகா
காழியு ளாநின யேநினயே, தாழிச யாதமிழா கரனே. (2)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் மாயையைஆள்பவர்; (மாயேசர்); ஞான ஆகாயத்தில் விளங்குபவர் என்பனவாதி இறைமைக் குணங்களைப் போற்றியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- இப்பாட்டுக்களின் சொற் பொருள்கள், அறிவும் புலமையும் அன்பும் அருளும் சான்ற பெரியோர்பாற் கேட்டறியத் தக்கன.

குறிப்பு:- மாலை மாற்றென்பது பாட்டினை முன்னிருந்து பின் படிப்பினும். **மாற்றிப்** பின்னிருந்து முன் படிப்பினும் ஒன்று போல் வருவது. **மாலை** - வரிசை; **மாற்று** - மாறுதலுடையது; "ஒரு செய்யுள் முதலீறுரைக்கினு மஃதாய் வருவதை மாலை மாற்றென மொழிப" (மாறனலங்காரம்). இப்பாட்டு ஓரடி முன்னிருந்து செல்வதும், ஓரடி பின்னிருந்து செல்வதுமாக அமைந்து அதுவே ஈரடியால் வந்த வஞ்சித் துறைப்பா. 8-9-10-11 பாட்டுக்கள் ஏனைப் பதிகங்கள்போலக் கருத்தமைந்தன. யாளி வாகனமாதற்கு, "யாமா மாநீ யாமாமா யாழி" என்பது மேற்கோள் காட்டப்பட்டது; (தக்கயாகப்பரணி 594 உரை)

திருவழிமொழித் திரு இராகம்

திருச்சிற்றம்பலம் பண் - சாதாரி

சுரருலகு நரர்கள்பயி றரணிதல முரணழிய வரணமதின்முப்
புரமெரிய விரவுவகை சரவிசைகொள் கரமுடைய பரமனிடமாம்
வரமருள வரன்முறையி னிரைநிறைகொள் வருசுருதி சிரவுரையினாற்
பிரமனுய ரரனெழில்கொள் சரணவிணை பரவவளர் பிரமபுரமே. (1)

ஒழுகலரி தழிகலியி லுழியுலகு பழிபெருகு வழியைநினையா
முழுதுடலி லெழுமயிர்க டழுவுமுனி குழுவினொடு கெழுவுசிவனைத்
தொழுதுலகி லிழுகுமல மழியும்வகை கழுவுமுரை கழுமலநகர்ப்
பழுதிலிறை யெழுதுமொழி தமிழ்விரகன் வழிமொழிகண் மொழிதகையவே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சீகாழிப் பன்னிரு பெயர்களும் வந்த வரலாற்றினை அவ்வழியே மொழிதலினால் **வழிமொழி** (த் திருப்பதிகம்) எனப் பெயர் பெற்றது; முடுகிய சந்தமுடைமையின் **இராகம்** எனப்பட்டது; பாட்டின் ஒவ்வோரடியினும் எல்லாச் சீர்களும்

அப்பாட்டில் கூறப்படும் அப்பெயர் பற்றிய வழியெதுகையாக அமைந்த செய்யுள்யாப்பமைதியுடைமையும் **வழிமொழி** என்றதனாற் குறிக்கப்பெறும். பிரமபுரம் என்ற முதற் பெயர்ப் பாட்டு, சுரருலகு நரர்கள்பயில் என்றும், கழுமலம் என்ற பன்னிரண்டாம் பெயர்ப் பாட்டு அவ்வாறே ஒழுகலரி தழிகலியி லுழியுலகு என்றும் இவ்வாறு வருதல் காண்க. **"வழிமொழிகள்"** (12) என்று இறுதிப் பாட்டினுள் பதிகப் பெயரினைப் பொறித்தருளியமையும் காண்க. "பல்பெயர்ப்பத்து" என்ற பதிகத்தினுமிவ்வாறே காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு;-(1) பிரமபுரமே பரமனிடமாம் என்று முடிக்க. முன்னடிகளில் இறைவரது தன்மையும் பின்னடிகளில் அத்தலத்திற்கு அப்பெயர் போந்த வரலாறும் கூறப்பட்டன. இவ்வாறே ஏனைப் பாட்டுக்களினும் கண்டு கொள்க. **சுரருலகும் - நரர்கள்பயில் தரணிதலமும்** - என்க. **முரண் அழிய** - முரணினால் அழிதலினால்; **மதில் அரணம்** என்க. **சரவிசை** - சரத்தின் விசை; சரத்தின் இசை என்றும் உரைக்க நின்றது. **சரம்** - அம்பு; **இசை** - புகழ்; **விசை** - வன்மை; **நிரை நிறைகொள் சுருதி** - எல்லாச் சுரங்களும் வரிசைபெற அமைந்த; **சுருதி சிரவுரை** - வேதிசிரமாகிய உபநிடதவுரைகள்; **பிரமன் சிரவுரையினால் சரணவிணை பரவ** - என்க. பிரமன் பூசித்தமையாற் பிரமபுரம் எனப்பட்டதென்பது;-(2) **தாணு** - நிலைபெற்றவர்; தம்பம்போலத் தாங்குபவர்; **கோணும்** - வளைவாகிய; **நீள் நயனி** - நீண்ட கண்ணையுடைய அம்மை; **கோணில்** - குற்றமற்ற; **பிடி** - பிடிபோன்றவர்; பிடியும் கரியுமாகப் பிரணவத்தினின்று கரிமுகவரைத் தோற்றுவித்த வரலாறுங் குறிப்பு; **அமரர்கோன்** - இந்திரன்; **வேணு** - மூங்கில்; **வேணு** - என்பான் ஓரிந் திரன்; **காணிறிவி** - சூரபதுமனுக்கு அஞ்சிய இந்திரன் வந்து மூங்கிலில் மறைந் துறைந்து பூசித்த வரலாற்றினாற் போந்த பெயர் வேணுபுரம் என்றது;- (3) **பகல்ஒளி செய்** - ஞாயிறு போலும் ஒளிவீசும்; **நகமணி** - நாகரத்தினம்; **முகைமலர்** - அலரும் தாமரை; **நிகழ்** - உவமவுருபு; போல உள்ள; **சரணஅகவு** - திருவடிகளைப் பாடுகின்ற; **அகலம்** - பெருமை; எல்லா ஞானங்களையும் தன்னுள் அடக்குதல்; **உரை செய்முகம்** - சிவனைம்முகங்களுள் ஈசானமுகம்; **பகை** - தேவர்க்குப் பகையாகிய சூர்முதல்; **அறுமுகவிறை** - முருகக் கடவுள்; **அருள** - கொடுக்கும்படி. **இமையோர்புக - நிகழ்** - தேவர்கள் புகலடைந்தமையால் புகலி என்ற பெயர் பெற்றநகர் என்பது;-(4) **அங்கிநிகர்** - எரியுருவுடைய; **புலன்கள் களைவோர் வெங்குரு** - தவமுனிவர்களுக்குட் பெரியரான வியாழன்; தேவகுரு வழிபட்டமையால் வெங்குரு எனப் பட்டது; **வெங்குரு** - அசுரகுருவாகிய சுக்கிரன், நாரத முனிவர் உபதேசத்தால் பூசித்து உயர்ந்த வரலாறு - என்பது மொன்று;-(5) **ஆண் இயல்பு** ஆண்மைத் தன்மை; வீரம்; **வனவாண இயல்** - வேடவுருவம்; **பேணி** - மேற்கொண்டு; **பாணமழை-நாணி** - விசயனுடன் செய்த விற்போர்; **ஏணுசிலை** - பெருமையுடைய வில்; **பாணியமர்** - மற்போர்; **பாணி** - கை. **அருள்மாணும்** - பேர் அருள்புரிந்த. மாண்அருளும் என்க.; **பிரமாணி** - பிரமாணமாகிய மறைகளுக்கு இலக்கியமாக - வாச்சியமாக - உள்ளவர்; **ஏணுமுறை** - காலாந்தரம். ஊழிநியதி; **பாணி உலகாள** - நீர்ப்பெருக்கு உலகை விழுங்க; ஊழி வெள்ளத்தில் தோணி போன்று மித்தலாற் றோணிபுரம் என்று பேர் பெற்றது; (6) **நிராமய** என்பது முதலியன இறைமைக் குணங்கள் பற்றிப் போற்றிய பெயர்கள்; **புராணன்** - பழமையானவன். முன்னைப் பழம்பொருள்; **அரா** - விட்டுணுவின் பாம்பு அணை; **அர**

பராயண - அரனைத் தியானிக்கின்ற; **வராக உரு** - பன்றி உருவெடுத்த; **வாதராயனை** - விட்டுணுவை; (பன்றி) வராக வுருவெடுத்து விட்டுணு இரணியாக்கனைக் கொன்று பூமியைக் கொம்பிலேற்று வருத்தியபழி போக வழிபட்ட காரணத்தால் **பூந்தாராய்** எனப்பட்டதென்பது. பூ - பூமி; **தராய்** - தரித்தல்; பூந்தாராய் என்பது தராய் என நின்றது; **மொழி** - பெயர்; -(7) அரணே - காவலுடையமதிலை; **முரணர்** - பகைவர். முப்புரவாணர்; **படைக்கரம் விசிறு** - அம்பு எய்த - தொடுத்தமட்டில் நின்ற என்க; **கரணமமர்வன்** - உள் இருப்பவர்; எறிகொள் கரன்-எறி - படை; ஏந்திய கையுடையவர்; **அமுதுவிரவ** - **உடல்புரள உறும் அரவை**-புரளும் உடலுடைய பாம்பினை; **அரி** - அமுதுபடைத்து வந்த விட்டுணு; சிரமரிய சட்டுவத்தினால் தலையை வெட்ட; **சிரம்** - இராகு; **அரன** - அரனுடைய; இருகிரகம் இவ்வாறு இராகு கேதுக்களான இரண்டு கிரகங்கள்; சிரபுரம் என்ற பெயர் போந்த வழி;-(8) **அறம் அழிபுபெற**-தருமம் சிதைய; **உலகுதெறும்** - உலகினை அலைக்கும். புயவன் - புயவலிமைபெற்ற இராவணன்; **அழிய விரல் நிறுவி** - என்க; **மா..உற அருளும்** - பின்னர், வளைந்த பற்களை (வக்ரதந்தம்) யுடைய அவ்வரக்கன் சாம வேதத்தால் முறைப்படி துதிக்கவே அருள் செய்த; **மறை அமரர்** - பருந்தும் புறாவுமாக முறையே மறைந்த உருவொடும் வந்த இந்திரனும் அக்கினியுமாகிய தேவர்கள்; **நிறை** - புறாவின் எடைக்குத் தக்க தசை; **புறவன்**-புறா உருவாய் வந்த தீக்கடவுள் **நிறை நிலவு** - அரிந்த தசை போதாமைகண்டு சிபிச்சக்கிரவர்த்தி தான் துலையேறி எடை சமன்பெற நிலவச்செய்த; **பொறையன்** - பாவம் பொறுத்தவனை; தீக்கடவுள்; **புறவம்** - அப்பழி போகப் புறா பூசித்ததால் வந்தபெயர்;-(9) **பிரமன் விண்பயில, மால்மண்பகிர்** என நிரனிறை யாக்குக; **கண்பரியு மொண்பொழிய** - காணும் முயற்சி யொழிய; **ஒண்பு** - ஊக்கம். **நுண்பொருள்** - காணமாட்டாது நீண்ட தன்மை; **மண்புரியும்...நுண்புசகர்** - மண்ணின் நுண்புழுதிபோல அராவிய இருப்பு உலக்கைத்தூள்; **விண்படர அச்சண்பை** - அவை சண்பைப் புல்லாக முளைக்க அவற்றால் யாதவ குமரர்கள் அனைவரும் இறந்தொழியும்படி; **மொழி** - **பண்பு அ- முனி** - சொல்லிய அக்கபில முனிவர் சாபம் பலிக்க; **கண்பழி செய் பண்புகளை** - அச்சாபம் தன்னைப் பற்றாதபடி களைந்து கண்ணனுக்கு அருளிய; அக்காரணத்தால் சண்பை என்ற பெயர் பெற்ற நகரம்; **கண்ணுதல்** - அடைதல்; **களை** - நீக்கிய; -(10) **பாழி** - சமணகுருமார் தங்குமிடம்; **வேழம்** - பருத்த உடலுடைய என்ற பொருளில் வந்தது; "மந்திரபோற் றிரிந்து" (தேவா); **ஏழை** உமையம்மை; **தாமும்** - விரும்பும்; **கீழ்** - **மேல் உலகில் வாழரசு** - **சூழ் அரசு** - காளிதன் என்னும் நாகராசன் பூசிக்க; காளிதன் பூசித்தமையால் காளி - காழி - யாயிற்று; காளி பூசித்ததனாலும் இப்பெயர் வந்ததென்பதும் வரலாறு. -(11). **அசைச்சு** - அசைத்து - வீக்கி; **மிலைச்சு** சூடி; **மெய்ச்சிரம்** ஒரு கையால் **அணேச்சு** - பிரமன்தலை ஓட்டினை ஒரு கையில் ஏந்தி; **அமர்** - விரும்பும்; **பிச்சன்** - பித்தன்; பிச்சை வேண்டுபவன் என்றலுமாம்; **மச்ச..சிறுமியை** - மச்சகந்தியை; **அவச்சவிரகத் கொச்சை** - வசமிழந்து ஆற்றினிடையிற் செய்த காமச் செயலுடைய - புணர்ந்த -அச்சர் - பராசரமுனிவன்; அம்முனிவன் பூசித்து அக் கொச்சை நீங்கியதனால் கொச்சைவய மாயிற்று;-(12) **ஒழுகல் அரிது அழிகலியில்..நினைந்து** - நல்லொழுக்கத்தினிற்றல் அரிதாகி அழிகின்ற கலிகாலத்தில் உலகில் பழிபெருகுதலை நினைந்து வருந்தி; **முழுது உடலில் எழும் மயிர்கள் தழுவுமுனி**

- உடல் முழுதும் மயிர் உடைய உரோமச முனிவர்; உரோமசர் வழிபட்டு மலம் **நீங்கச்** சிவஞான உபதேசம்பெற்றதனாற் கழுமலமாயிற்று; வழிமொழிகள் - பெயர்வந்த **வழியைச்** சொல்லும் பாட்டுக்கள்; பதிகப்பெயர். மொழிதகைய - பயிலும் தகைமையுடை**யன.**

திருஏகபாதம்

திருச்சிற்றம்பலம் பண் - வியாழக் குறிஞ்சி

பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான்
பிரம புரத்துறை பெம்மா னெம்மான். (1)

கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை. (12)

பதிகக் குறிப்பு:- ஒரு அடிபோலவே எல்லா அடிகளும் வருதலால் இது ஏகபாதம் எனப்படும். இயமகம் அடிதோறும் ஒன்றும் பலவுமாகிய சீர்கள் மடக்கி வருவது; இஃது அதனுட் சிறப்பு வகை என்பார் "எல்லா மடக்குச், சந்த வியமகம்" என்று இதன் இலக்கணத்தை ஆசிரியர் காட்டியருளினர்; (2174). சீகாழிப் பன்னிரு பெயர்களையும் சார்த்தி இறைவர் புகழ்களைப் போற்றுவது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- கண்ணுடைய வள்ளலார் இப்பதிகத்தின் திருவுள்ளக் கருத்துக்களாக உரை செய்தருளியவை காஞ்சிபுரம் சபாபதி முதலியார் துந்துபி வருடம் ஆடி மாதம் பதித்த அடங்கன் முறைப்பதிப்பிலும், பின்வந்த பதிப்புக்களிலும் உள்ளன. அவற்றுள் மேற்காட்டிய முதலிறுதிப் பாட்டுக்களின் திருவுள்ளக் கருத்துக்களை ஸ்ரீ ஆறுமுகத் தம்பிரான் சுவாமிகள் உரையிலும், திரு. சூளை. சுப்பராய நாயகர் பொழிப்புரையிலும் எடுத்துப் பதித்துள்ளார்கள். விரிவுகள் ஆண்டுக்காண்க. அவற்றைத் தழுவிச் சில குறிப்புக்கள் ஈண்டுத் தரப்படுகின்றன:-(1) 1. **பிரமம்** - ஞானா காயமாகிய பராசத்தி; புரத்துறை - அதனை மிகுதியாக வியந்து; பெம்மான்-எம்மான்-எந்தைப் பெரியோன்; ஞானாகாயமாகிய பராசத்தியான பரிபூரணத்தை மிக வியந்து அதற் கதீதமான பெரியோன்; 2. **பிரமபுரத்து** - மேல் நிலத்து; **உறை** - தண்ணீர்; **பெம்** - விருப்பம்; **மான்** - மான்போன்ற பெண்; **எம்** - எம்முடைய; **ஆன்** - ஆன்மா; மேல் நிலமாகிய ஆகாயத்தில் ஓடும் கங்கையை முடியில் வைத்தவன் எமதுயிர்; 3. **பிரமம்** - பிரமத்துவம்; **புரம்** - சக்கரம்; **உறை** - எண்ணுதல்; **பெம்** - ஆசை; **ஆன்** - அமையாமை; **எம்மான்** - என்னை ஒக்க வந்தவன்; பிரம ரூபத்திலே என்னை முத்தியில்விட விரும்பி என்னை யொக்க வந்தவன். 4. பிரமபுரம் என்னும் சீகாழியில் உள்ள இறைவர் எனது கடவுள்;- வெளிப்படை; பெரியோனும் எனக்குயிரானவனும் என்னை ஒக்க வந்தவனும் சீகாழியில் வீற்றிருக்கும் கடவுள் என்று முடிக்க. -(2) 1. **விண்டு** - மலை; **அலர்** - ஒலி; **பொழில்** - உலகம்; **அணிவு** - அகப்படுத்தல்; **ஏண்** - பெருமை; **நுபுரம்** - சிலம்பு; நூபுரம் என்பது

நுபுரம் எனக் குறுகி நின்றது; திருச் சிலம்பின் பருமையும் ஒலியின் பெருமையும் குறித்தது; சிலம்பினைத் தரித்தவன். **தரன்** - தரித்தவன்; 2. **விண்டு** - விட்டுணு; **அலர்** - புறனுரை; **பொழில்** - அரசினிழல்; **அணி** - பொருந்தி; **வேணு** - விருப்பம்; **புரத்து அரன்** - புரத்தை அரித்தவன்; புத்தனாக வந்த விட்டுணுவின் புறனரையை அரசமர நிழலிலிருந்து கேட்டு விரும்பிய புரத்தை எரித்தவன்; 3. **விண்தலர்** - தேவர்; **பொழில்** - கற்பகச் சோலை; **அணிவு** - சூடுதல்; **ஏணு** - எண்ணும்; **புரத்தரன்** - தேவேந்திரனுடைய;-**எணு** - ஏணு என நீண்டது - புரந்தரன் - புரத்தரன் என வலித்து நின்றது. தேவர்கள் கற்பக மலர்களால் ஏத்தும் இந்திரனால் வழிபடப்பட்ட காரணப்பெயர் பெற்ற; 4. வெளிப்படை - (3) 1. **புண்டரிகத்தவன்** - இதய கமலத்திலுள்ளவன்; **மேவிய புகலியே** - எனக்கின்பந்தருவானு மாய் மீளாத புகலிடமாயுள்ளவன்; (புகல் - அபயம் புகுமிடம்) 2. **புண்டரிகம்** - திரிபுண்டரம்; **தவன்** - மிக்க பெருமையையுடையவன்; **மேவிய** - சொல்லப்பட்ட; **புகலி** - சொல்லப்பட்டவன்; (புகல் - சொல்) ஏ - ஈற்றசை;-உயிர்களுக்கு இரட்சையாகத் திருநீற்றை யணிபவனே என் பாடலுக் கிசைந்தவன்; 3. **புண்டரிகம்**-புலி; **தவன்** - முனிவன்; **மே** - கூத்து; **வியம்** - பொன். பு - பொது; **கலி** - கற்றவன். (கல் - பகுதி); கனகசபையில் புலிமுனிவருக்கு நடங்காட்டக் கற்றவன். 4. **புண்டரிகத்தவன்** - பிரமன். (**புண்டரிகம்** - தாமரை); **மேவிய** - பணிந்த; புகலி - சீகாழி.-(4) 1. **விள** - விளாம்பழத்தை; **கொளி** - கன்று குணிலாக எறிந்து கொண்டவன். விட்டணு; **கொளி** - கொள்பவன் கொண்டவன்; **தி** - விட்டுவிளங்கும்; **கழ்தரு** - நின்மலநீடிய; **எங்கு** - எவ்விடத்தில்; **உருமேவினன்** - தன்னுடைய உருவில் பொருந்தியவன்;-கன்று குணிலாக எறிந்து விளங்கனி கொண்ட மாலை மேனியில் ஒரு பாகத்தில் வைத்தவன்; தீ எனற்பாலது தி எனக் குறுகியும், **கழுதரு** என்பது **கழ்தரு** எனவும் நின்றன; 2. **விளங்கு** - (விலங்கு) இடை விட்டுவிட்டு; **ஒளி** - ஒளியுடைய; தி - தீயுடனே; **கழ்(மு)தரு** - மிக்க பயத்தோடும் விழுகின்ற; **எங்கு** (ஏங்கு) - ஒலிக்கின்ற; **உருமு - ஏவினன்** - உருமு என்னும் இடியாகவும் வந்து உலகை ஆள்பவன்; "முழங்கியுரு மெனத்தோன்றி மழையாய் மின்னி யிடித்தவன்காண்" (கச்சி - தாண் - 7); இதற்கு இவ்வாறன்றி, மாறுபடும் ஒலியுடைய புத்தன் தலையில் இடியை ஏவினவன் என்ற சரிதவரலாறுபற்றி உரை கூறினர் முன் உரைகாரர்; அது பின் நிகழ்வதாகலின் மேற்கூறியபடி உரைக்கப்பட்டது. (புராணம் - 909 பாட்டுப் ; பார்க்க.) **தீ - தி** எனவும், **காழ்தரு** என்பது **கழ்தரு** எனவும், **ஏங்கு - எங்கு** எனவும் நின்றன. **ஏங்குதல்** - ஒலித்தல் - குமுறுதல். 3. **விள்** - நீங்குதல்; **அங்கு** - அவ்விடத்தில்; **ஒளிது** - ஒள்ளியது; **இகழ்தருஎம்** - கீழாயின எம்மிடத்தும்; **குருமேவினன்** - குருவாக வந்து கலந்தவன்; **அங்கு** "மறக்குமா றிலாத வென்னை மையல் செய்திம் மண்ணின்மேற் பிறக்குமாறு காட்டினாய்" (தேவா) என்ற அவ்விடத்தினின்றும்; **விள்** - நீங்கிய; **இகழ்தரும்** என்றது மையன்மானிடமாய்ப் பிறந்த என்னிடமும்; **ஒள்ளிது** - சிவஞானம்; **குருமேவினன்** - குருவாக வந்து முன்னின்று ஞானவமுது தந்த செயல் குறித்தது; "தோடுடைய" என்றபதிகம் குருவருள் என்ற கருத்தினைக் கொண்டது. "தோடு கூற்றுப் பித்தா மூன்றும், பீடுடைத் தேசிகன் பேரரு ளாகும்" 4. வெளிப்படை. **வெங்குரு** - சீகாழியின் நான்காவது பெயர்; (5) 1. **சுடர் (சூடுஆர்) மண்**; **இம்** - ஈமம்; **ஆளி** - ஆள்பவன்; **கைத்தோணி**-போர் தொலைத்த தும்பைமாலை; **புரத்து அவன்** - புரத்தை அவம் பண்ணினவன்; **சூடார்** என்பது **சுடர்** எனவும், **ஈமம்** - **இம்** எனவும் குறுகி நின்றன; துரோணம் (தும்பை) என்பது தோணி என மருவிற்று; 2. **சுடர்மணி** - (என் உச்சிக்குச்)சூடாமணி போன்றவர்; **மாளி** (மாலி) ஆன்மாக்களை

ஈடேற்றும் பித்துக்கொண்டவர்; **கைத்தோள்** - துதிக்கையினையுடைய **யானையை; நிபுரத்தவன்** - வடிவில்லாமற் செய்தவன் அழித்தவன்; **தோல்** - என்பது **தோள் என** நின்றது; **தோல்** - யானை; 3. **சுடர்** - சூரியன்; **மணி** - கழுவி; **மாளி** - **கெட்டவன்; கைத்தேணி** - தெப்பம்; **புரத்தவன்** - புரந்தவன்; காத்தவன்;- சூரியனது **களங்கத்தைக்** கழுவும் கடல்போன்ற பிறவியில் கெடும் உயிர்கள் கரையேறும் **தெப்பமாகப்** பிரணவத்தைச் செவியில் உண்டாக்குபவர்; "பெரும் பிறவிப் பௌவத்து-அஞ்செ**ழுத்தின்** புணே பிடித்து"-(திருவா); **மண்ணி** - மணி என நின்றது இடைக்குறை; **புரந்தவன்** - புரத்தவன் என வந்தது வலித்தல்; 4. வெளிப்படை.-(6) 1. **பூ** - பூமியில் உள்ளவர்; **சுரர்** - தேவர்; **சேர்** - தோன்றுதல்; **பூ** - உந்திக்கமலம்; **தராயவன்** - தரித்தவன்; **பொன்** - **பொலிவு; அடி** - (ஆடி) கண்ணாடி; பூவுலகரையும் தேவரையும் தமது உந்திக்கமல**த்தில்** தோற்றுவிக்கும் பிரமா - விட்டுணுவின் போதத்தில் கண்ணாடியும் நிழலும் **போலப்** பிரதி விம்பிப்பவன். ஆடி - **அடி** எனக் குறுகி நின்றது; 2. **பூசுரர்** - மும்மல**த்தையும்** கழுவிய சிவஞானிகள்; **சேர்** - திரட்சி; **பூ** - பொலிவு; **தராய்** - பெறப்பட்ட; **அவன்** - அக்கடவுள்; **பொன்** - வனப்பு; **நடி** - நாடக நடிப்பவன்;-சிவஞானிகளின் கூட்டம் **பொலிவு** பெறத்தக்க வனப்புடைய நடம் செய்பவர்; 3. **பூசு** - திருநீற்றை உத்தூளணமாகப் **பூசும்; உரர்** - மார்பையுடையோர்; **சேர்பு** - அரிதல்; **ஊந்தராய்** - தள்ளுதல்; **யவன்** - **யௌவனம்; பொன்** - அழகு; **அடி** - மூலம்;- நீறுபூசுமார்புடைய சிவஞானிகளும், பாவத்தை **அரிந்து** விசுவத்தைத் தள்ளும் சிறப்புடையாரும் ஆகியவர்களுக்கு மூலமாயுள்ளவன்; **உந்தராய்** என்பது ஊந்தராய் என நீண்டது; 4. வெளிப்படை. பொன்னடி காப்பனவாக என்க.-**(7)** 1. **செருக்கு** - மயக்கம்; **வாய்ப்பு** - மேலீடு; **உடையான்** - கேடுசெய்யான்; **சிரபுரம்** - மேலாகிய இருப்பு; **என்னில்** - என்னுடைய போதமே; தனது திருவருள் ஞானம் **வாய்க்கப்** பெறாதார்க்கு மலமேலீட்டைக் கெடாத சிவனுக்கு விசுவாதீதமான இருப்பிடம் **எனது** அறிவே; 2. **செர்** - சத்தாதிகள் ஐந்தும் சேரப்பட்ட; **உக்கு** - அந்தப்பூமி; **வாய்ப்புடையான்** - தன்வாயினிடமாயுள்ள விட்டுணு; **சீர்** - சிறப்பு; **அபுரம்** - உயிர் போன **களேபரம்; என்னில்** - மேனிலை; பூமியை வாயில் உண்ட மாலின் களே பரத்தை **மேற்றரித்தவன்;** சேர் என்பது **செர்** என்றும், **சீர்** என்பது **சீர்** என்றும் குறுகி நின்றன; 3. **செருக்கு** - ஆத்தும விகாரமாகிய கர்வம்; **வாய்** - இந்திரியம்; **புடையான்** - இடத்தான்; **சிரம்** - மேல்; **புரம்** - சரீரம்; **என்னில்** - சத்தியம்;- கர்வத்தினால் இந்திரியங்களுக்கு விடயமாகிய சுவர்க்கத்தில் இச்சையுடையானுக்கு அது மெய்யாக விசேடித்திருக்குமன்றே; 4. **செருக்கு** - இந்திரியப் போருக்கு; **ஆய்ப்பு** - இளைப்பு; **உள்தையான்** - உள் தைக்கப்படான்; **சிரபுரம் - என்னில்** - சிரபுரம் என்று சொன்னால்; **கருத்து;** ஒருகால் சிரபுரம் என்றால் இந்திரியங்களையும் அவியப்பெறாது சிவனடியில் அடைவன்;-(8) 1. **பொன்** - பொலிவு; **நடி** - நடிப்பவன்; **மாது** - காளி; **அவர்** - பூதகணங்கள்; **சேர்** - தங்குதல்; **புறவத்தவன்** - புறங்காட்டிலுள்ளவன்;2. **பொன்** - தூய்மையான; **அடி** - வழி; **மாதவர்** - தபோதனர்; **சேர்** - திரட்சி; **புறவம்** - முல்லைநிலம்; **தவன்** - தவம் புரிந்தவன்; தூயமாதவர் **தவம்** புரியும் காட்டில் அவர்கட்குத் தவசியாயுள்ளான்; 3. **பொன்** - இலக்குமி; **அடி** - அணிகளின் தொகுதி; **மாது அவர்** - இருடியர் மனைவிமார்; **சேர்பு உறு** - பிச்சையிட வந்தணேதல்; **அவத்தவன்** - கற்புக்குலையச் செய்த நக்கன்; 4. அடிகளிற் பொன்னணிபூண்ட மாதர்கள் சேரும் புறவத்தில் (சீகாழியில்) உள்ளவன்; -(9) 1. **தசமுகன்** - தயவுடையவனும்; **எரிதர** -

எரிவீசு; **ஊன்று** - அழுந்து; **சண்** - வேகம்; **பையான்** - படமுடைய பாம்பை உடையவனும்; 2. **த** - அது; **சமுகம்** - திரட்சி ; **நெரி** - நேரானவன்; **தர** - புலி; **ஊன்** - புலால்; **துசு** - தூசு. (உடை); **அண்பையான்** - விரித்துடுத்தான்;- ஞானிகளின் கூட்டத்துக்கு **அது** என்ற மெய்ப்பொருளைத் தோற்றுவிப்பான்; புலி உரி உடையான்; 3. **தசம்** - தைசதம் (அகங்காரம்); உக - கெட; நெரி - எதிர்ப்பட்டவனும்; **தரம்** - மலை; **ஊன்** - திருவுள்ளத் தடைத்தல்; **து** - விசேடஞானமுள்ளவனும்; **சண்** - ஆறு சமயம்; **பையான்** - பயனாகவுள்ளவனும்; 4. **தசமுகன்** - இராவணன்; **நெரிதர** - முறிய; **ஊன்று** - விரல் ஊன்றிய; **சண்பையான்** - சீகாழியில் இறைவர்.- (10) 1. **காழியானயன்** - நிலைபெற்ற நின்மலசித்தமுடைய பத்தரிடத்து; **உள்ளவா** - மெய்ப்பொருள் விளையும் பொருட்டு; **காண்பரே** - நோக்குவார்; (அருட்கண்ணால் நோக்குவர்); 2. **காழியான்** - களங்கமுள்ளவன்; (**களங்கம்** - மிடற்றின்விடம்) அவனது கருணையை; **நயனுள்ளவா** - ஞானக்கண்ணுள்ளவாறு; **காண்பரே** - நிலைமையாக நினைப்பரே;- ஞானிகள் சிவனருளை நினைப்பர்; 3. **காழியான்** - விட்டுணு (காளிமம்- கறுப்புநிறம்); **அயன்** - பிரமன்; **உள்ள** - நினைக்க; **ஆ** - அதிசயம்; **காண்** - கண் - கருதுதல்; **பரே** - அன்னியம்; கண் எனற்பாலது காண் என நீண்டது. கண்ணுதல் - கருதுதல்; 4. **அயன்** - ஐயன்; **உள்** - அறிவில் உண்டான; **அவா** - ஆசை; **காண்பரே** - தரிசிப்பரோ? சீகாழியில் உள்ள என் ஐயனை - ஆசையை '- அவ்விருவரும் தேடி மறத்தலொழிந்து எவ்வாறு காண்பர்; -(11) 1. **கொச்சை** - அறியாமை செய்யும் ஆணவம்; **அண்ணலை** - பொருந்துதலை; **கூடகில்லார்** - மாறுபட்டார்; **உடல்** - உடலாலே; மூடாரே - மூடப்படார்; ஆணவமயக்கத்தினின்றும் மாறுபட்டார் பிறவிபெறார்; 2. **கொச்சை** - புலால் நாற்றம்; **அண்ணல்** - அணுகுதல்; **கூடகிலார்** - மனம் பொருந்தமாட்டார்; **உடல் மூடரே** - உடலைப் புதைப்பரே; **மூடரே** - இரட்டுறமொழிதலால் எதிர்மறையில் புதைக்காதவரே;- புலாலுடம்பை அழுக்கென்று மனங்கொள்ளாமல் மூடுபவ ராகிய புத்தரும். மூடாதசமணரும்; 3. **கொச்சையள்** - துர்நாற்றமுடைய மச்ச கந்தி; **நலை** - புலப்பட்ட அவளது நலத்தைக் கருதி; **கூடு** - சரீரம்; **அகில்ஆர்** - அகில் மணம் பொருந்திய; **உடன்** - அவளுடன்; **மூடரே** - பொருந்தியவர்; பராசரர்; (காரணமாக) 4.**கொச்சை அண்ணலை** - கொச்சை என்ற பெயர்பெற்ற சீகாழியிறைவரை; **கூடகிலார்** - நேர்படமாட்டார்; **உள்தல்** - உள்ளுதல்; **மூடரே** - இருளடைய போதத்தவரே;- (12) 1. **கழுமல்** - மிகுதிப்பட்ட குற்றம்; **அமுது** - சலம்; **பதிக்க** - விளைவிக்க; **உள்நி** - உள்ளநீ; **கட்டு** - வடிவாகக் கட்டுண்ணல்; **உரை** - தேய்தல்;-மிக்க தோடமுள்ள சுக்கில சுரோணிதமாகிய இருவகை நீரிற் பதிந்து விளையும் உடலுடைய நீ பின்தேய்ந்து மரிக்கும் இப்பிறவி; 2 **கழு** - கழுவப்படுல்; **மலம்** - **உது** - ஆணவ மலமும், உடன் கூடிய மாயை கன்ம மலங்களும்கூடிய விளைவாகும்; (மலத்தால் வருவதாம்); **பதி** - பாதி; **கவுணி** உள்ளே அகப்படுத்திக் கவுளீகரித்துக் கொள்ளுதல்; **அன்கண்** - ஆன்மாவினிடத்து; **துரை** - இறைவர்; தம் பாதியாகிய அருளினால் என்னைக் கவுளீகரித்து என்னுள் விளங்கும் இறைவர்; பாதி என்பது **பதி** எனக் குறுகி நின்றது. 3. **கழும்** - மயக்கம்; **அலக்கம்** - அலக்கண் (துன்பம்) படுதல்; அமுது**போன்றவரும்**; **பதி** - கருத்தரும்; க - தலை (பிரம கபாலம்) யில்; **உணியன்** (பலி) - உண்பவரும்; **கட்டு** - விளக்கம்; **உரை** - பொன் போன்றவரும்; 4. **கட்டு** - காட்டும் உபதேசமிதனை - **உரை** - உரைத்துய்வீராக; வெளிப்படை.

திருஇருக்குக்குறள்

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி**

அரனை யுள்குவீர்!; பிரம னூருளெம்; பரனை யேமனம்; பரவி யுய்ம்மினே. **(1)**
தொழுமனத்தவர்!; கழும லத்துறை; பழுதில் சம்பந்தன்; மொழிகள் பத்துமே. **(12)**

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சிவனையடைந்து உய்யும் நினைவுடையாரை வழிப்படுத்தி அருளும் வகையால் சீகாழிப் பன்னிரு பெயர்களையும் துதித்தது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **உள்குவீர்** - விளி; உள்கும் மனமுடையவர்களே!-(3) **புகல்** - புகலி;-(4) **பங்கம்** - பாதி; -(5) **ஆணிநற்பொன்** - **ஆணி** - பொன்னை உரையிட்டளக்கும் உரையாணி; ஆணிப் பொன் போன்றார். "**அடித்** தொண்டராணிப்பொன்" (தேவா - அரசு). உயிர்களது பக்குவங்களை அளந்து ஏற்றவாறு அருள்பவர் என்பது குறிப்பு; இயல்பாகவே பாசங்களினீங்கியவர் என்றதாம்;- (6) **பாந்தள்** - பாம்பு;-(9) **தென்றில்** - பகை; **தென்றி** - தெற்கு என்றலுமாம். இதனால் இராவணனுக்குத் தென்னவன் என்று ஒரு பெயருமுண்டு; "தென்னவன் மலை எடுக்க" (அரசு) - (10) **பெயலவை** - அருள்பொழிதல்; **பெயல்** - அருண்மழை; **இயலும்** - திளைக்கும்; -(11) **நேர்** - ஒப்பு; (12) தொழுது உய்யும் மனத்தவர்க்கு மொழிகள் பத்துமே பற்றுக் கோடாவன. **பத்து** - பெரும் பான்மை பற்றி வந்தது.

திருஎழுகூற்றிருக்கை

திருச்சிற்றம்பலம் **பண் - வியாழக் குறிஞ்சி**

ஓருரு வாயினை மானாங் காரத்,
தீரியல் பாயொரு விண்முதல் பூதலம்
ஒன்றிய விருசுட ரும்பர்கள் பிறவும்
படைத்தளித் தழிப்பமும் மூர்த்திக ளாயினை;
இருவரோ டொருவ னாகி நின்றனை;

ஓரா னீழ லொண்கழ லிரண்டு
முப்பொழு தேத்திய நால்வர்க் **கொளிநெறி**
காட்டினை; நாட்டமூன் றாகக் கோட்டினை;
யிருநதி யரவமோ டொருமதி சூடினை;
ஒருதா ளீரயின் மூவிலைச் சூலம்

நாற்கான் மான்மறி யைந்தலை யரவ
மேந்தினை; காய்ந்த நால்வாய் மும்மதத்
திருகோட் டொருகரி யீடழித் துரித்தனை;
யொருதனு விருகால் வளைய வாங்கி
முப்புரத் தோடு நானில மஞ்சக்,

கொன்று தலத்துற வவுணரை யறுத்தனை;
யைம்புல னாலா மந்தக் கரண,
முக்குண மிருவளி யொருங்கிய வானோர்
ஏத்த நின்றனை;யொருங்கிய மனத்தோ,
டிருபிறப் போர்ந்து முப்பொழுது குறைமுடித்து

நான்மறை யோதி யைவகை வேள்வி,
யமைத்தா றங்க முதலெழுத் தோதி
வரன்முறை பயின்றெழு வான்றனை வளர்க்கும்,
பிரமபுரம் பேணினை;
யறுபத முரலும் **வேணுபுரம்** விரும்பினை;

இகலி யமைந்துணர் **புகலி** யமர்ந்தனை;
பொங்குநாற் கடல்சூழ் **வெங்குரு** விளங்கினை;
பாணிமூ வுலகும் புதையமேன் மிதந்த,
தோணிபுரத் துறைந்தனை;தொலையா விருநிதி
வாய்ந்த **பூந்தராா** யேய்ந் தனை;

வரபுர மென்றுணர் **சிரபுரத்** துறைந்தனை;
யொருமலை யெடுத்த விருதிற லரக்கன்,
விறல்கெடுத் தருளினை; **புறவம்** புரிந்தனை;
முந்நீர்த் துயின்றோ னான்முக னறியாப்
பண்பொடு நின்றனை; **சண்பை** யமர்ந்தனை;

ஐயுறு மமணரு மறுவகைத் தேரரு,
மூழியு முணராக் **காழி** யமர்ந்தனை;
எச்சனே ழிசையோன் **கொச்சையை** மெச்சினை;
யாறு பதமு மைந்தமர் கல்வியும்
மறைமுத னான்கும், மூன்று காலமுந்

தோன்ற நின்றனை;
யிருமையி னொருமையு மொருமையின் பெருமையு,
மறுவிலா மறையோர்
கழுமல முதுபதிக் கவுணியன் கட்டுரை,
கழுமல முதுபதிக் கவுணிய னறியு

மனைய தன்மையை; யாதலி னின்னை
நினைய வல்லவ ரில்லைநீ ணிலத்தே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இது இணைக்குறள் ஆசிரியப்பா ஆகிய ஒரே பாட்டு; ஆயினும் மரபுபற்றிப் பதிகமெனப்படும்; பிள்ளையாரது பதிகத்தில் 8-9-10-11 பாட்டுக்களின் பெரும்பான்மை நியதியாக வைக்கப்பெறும் பொருள்களாகிய இராவண னருள்பெற்றமை,

அயன்மாலருள் பெற்றமை சமணபுத்தர் நிலை, பதிகப்பயன் என்ற இவை 12 பாட்டுக்கள் கொள்ளும் தலப்பெயர்ப் பதிகங்களுக்கேற்ப 47 அடிப்பெருமை கொண்ட இப்பாட்டிலும் அமைதலுங் காண்க.

இறைவரது தன்மைகள் பலவற்றையும் தொகுத்து அவரை முன்னிலைப் படுத்திப் போற்றப்பட்டது. பிள்ளையாரது திருப்பதிகங்களை நாடோறும் ஓதிப் பயின்றுவந்த பிதா சிவபாத விருதயர், அவை நாடோறும் பெருகிவருதலின் தம்கருத்துப்படி முற்றும் பயிலப்பெறாது வருந்த, அவர் பொருட்டுப் பிள்ளையார் இதனை அருளி, இஃதொன்றனையே விதிப்படி ஓதினால் எல்லாப் பதிகங்களையும் ஓதிய பயன் கிடைக்கும் என்று வகுத்தருளினர் என்பது வரலாறு. "எந்தைக் கெழுகூற்றிருக்கை" (2174) என்ற ஆசிரியர் திருவாக்கும் இக்குறிப்புடன் நிற்பதென்பர். அவ்வாறு இதனை நாடோறும் விதிப்படி பயிலும் அன்பர் பலர். இதனுள் சீகாழிப் பன்னிரு பெயர்களும் முன் பதிகங்களிற் குறித்த அம்முறையிலே போற்றப்படுதலும் குறிக்க.

அகத்தியர் தேவாரத்திரட்டு திரு.க. சதாசிவ செட்டியார் உரையிலும், முன் தேவாரப்பதிப்புக்களிலும் கண்டவற்றைத் தழுவி இங்குப் பொருட் குறிப்புக்கள் வகுக்கப்படுகின்றன.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **ஒருருவாயினை** - தத்துவங்கள் எல்லாங் கடந்து வாக்குமனாதீதகோசரமாய் நின்ற சிவனது சொரூப நிலையினின்ற தேவரீரே உயிர் களுக்கிரங்கி யைந்தொழில் செய்யத் தன்னிசையாகவே ஒரு திருமேனி தாங்கினீர்;சொரூபம் தடத்தமாயிற்று; "அகளமா யாரு மறிவரி தப்பொருள், சகளமாய் வந்த தென் றுந் தீபற; தன்னையே தந்ததென் றுந் தீபற"; **மான் ஆங்காரத்து ஈர் இயல்பு** - சத்தி சிவமாகிய இரண்டு இயல்பு. ஐந்தொழில் நடத்துதலை நினைந்து மேற்கொண்ட நிலை. பொருள் இருவேறன்று என்பார் **ஈர் இயல்பு** என்றார்; **மான்** - சத்தி; **ஆங்காரம்** - உலகுய்யச் செய்யும் நினைவு;-(2) **ஒரு** - சத்தியுடன் ஒன்றாயினை; **படைத்தளித் தழிப்ப - மும்மூர்த்திகளாயினை** - முத்தொழில்களை இயற்றற்குப் பிரமன் விண்டு உருத்திரன் எனத் திருப்பெயர் பெறும் மூன்று திருமேனி தரித்தனை; இங்குக் கூறிய மும்மூர்த்திகள் முதல்வன் கொண்ட திருமேனிகள்; இவற்றோடு மற்றை அயன்மால் உருத்திரன் என்னும் மூவர் வடிவங்களை ஒன்றாக வைத்தெண்ணி மயங்காமைப் பொருட்டு "இருவரோ டொருவ னாகி நின்றனை" என வேற்றுமையும் உடன் உபதேசித்தருளினர். இம் மும்மூர்த்திகள் முதல்வன் கொண்ட சுதந்திர வடிவ மாதலின் **ஆயினை** என்றும், அவை அதிட்டான பக்கமாதலின் **ஆகி நின்றனை** என்றும் வேறுபாடு தோன்றக் கூறினார்; அதிட்டித்தல் - நிலைக்களமாகக் கொண்டு செலுத்தல். (5) **இருவரோடு ஒருவன்** - பிரமவிட்டுணுக்களை இடத்தினும் வலத்தினும் அடக்கிய ஏகபாதத் திருமூர்த்தி; "ஏழுலகுமாய் நின்ற ஏகபாதர்" (தாண்)-(7) **நால்வர்** - அகத்தியர் - புலத்தியர் - சனகர் - சனற் குமாரர்; சனகர், சனற் குமாரர், சனாதனர், சனந்தனர் என்றும் கூறுவர். **ஒளிநெறி** - ஞானநெறி. ஆணவ இருளைப் போக்குதலின் **சிவஞானம்** ஒளி எனப்பட்டது; (8) **நாட்டம் மூன்று** - சூரியன் - சந்திரன் - தீ என்னும் மூன்று கண்கள்; -(9) **இரு** - பெரிய. **நதி** - கங்கை; **ஒருமதி** - ஒருகாலத்திலு முதிராதபிறை; -(10) **ஒருதாள்** - பிரணவமாகிய

காம்பு; ***ஈர்அயில்*** *- ஈருகின்ற - பிளக்கின்ற - கூர்மையுடைய;* ***மூவிலை*** *- அயன் அரி அரன் என்று மூவரையும் அதிட்டிக்கும் சனனி ரோதயித்திரி ஆரணி என்னுஞ் சத்திகளை மூவிலையாகவுடைய; "மூன்று மூர்த்தி யுணின்றிய லுந்தொழில், மூன்று மாகிய மூவிலைச் சூலத்தன்" (தேவா - திருக்குறுந்) மூவிலைகளை "மூவிலைச் சூல மேந்துதல், மூவரும் யானென மொழிந்த வாறே" (ஒற்றி - ஒருபா ஒரு பஃது) என்பதும் காண்க.-(11)* ***நாற்கான் மான்மறி*** *- நான்கு மறைகளையும் நான்கு கால்களாகவுடைய மான்கன்று;* ***ஐந்தலை அரவம்*** *- திருவைந்தெழுத்தை ஐந்தலையாகவுடைய மாநாகம்;-(12)* ***நால்வாய்*** *- தொங்கும்வாய் - துதிக்கை;* ***நாலுதல்*** *- தொங்குதல்;(14)* ***ஒருதனு*** *- மாமேருவாகிய ஒப்பற்றவில்;* ***இருகால்*** *- இரண்டு கால்களையும்; (18)* ***இருவளி*** *- இடைபிங்கலை வழி செல்லும் வளி;* ***ஒருங்கிய*** *மூலாதாரத்தில் ஒடுக்கிய;* ***இருபிறப்பு*** *- உடற்பிறப்பும், உபநயன உபதேசங்களாற் பெற்ற ஞானப் பிறப்பும்;* ***குறை***-*சந்திக்கடமைகள்;-(21)* ***ஐவேள்வி*** *- சிவபூசை - குருபூசை - மாகேசுவரபூசை - மறையவர்க்குணவு - அதிதிப்புசிப்பு என்பன; பிரமயாகம், தேவயாகம், மானுடயாகம், பிதிர்யாகம், பூதயாகம் என்பாருமுண்டு;- (22)* ***ஆறங்கமுதலெழுத்தோதி வரன் முறைபயின்று*** *- ஓதல், ஓதுவித்தல், வேட்டல், வேட்பித்தல், ஈதல், ஏற்றல் என்னும் ஆறு செயல்களையும் மறைவழியே செய்தும், பிரணவமாதி மந்திரங்களுடன் வேத வேள்விகள் செய்தும்;* ***ஆறங்கம்*** *- சிக்கை, வியாகரணம், கற்ப சூத்திரம், சந்தோவிசிதம், நிருத்தம், சோதிடம் என்ற வேதஅங்கங்கள் ஆறு என்றலுமாம்;-(27)* ***பாணி*** *- நீர்ப்பெருக்கு; (36)* ***ஐயுறும் அமணர்*** *- உண்டு இல்லை என்ற ஐயப்பாட்டில் பொருணிச்சயம் செய்பவர். "தெளியா தொருபொருளே பொய்யு மெய்யுமா மென்னும்" (புரா -); "அத்திநாத்தி" என்ற அவரது மந்திரம் இப்பொருட்டு;* ***அறுவகைத்தேரர்*** *- "ஞானம் கணந்தோறும் தோன்றியழியும்; மற்றும் உள்பொருள் எனப்பட்டவையெல்லாங் கணந்தோறும் தோன்றி யழியும்; இந்த ஞானத்திற் றோன்றிய வாசனை* ***அழிவதே முத்தி*** *என்ற கொள்கையுடைய புத்தர்;* ***அறுவகை*** *- அழிதலை முத்தி என்னும் கொள்கையுடைய; இதற்கு அறுசுவை உணவும் உச்சிக்கு முன் புசிக்கிறதே பொருள் என்னும் புத்தர் என்றுரைத்தார் முன் உரைகாரர்;-(38)* ***எச்சன் ஏழிசையோன்*** *- பராசர முனிவன்; எச்சன் - எச்சம் - (யக்ஞம்) எச்சத்தைச்செய்தவன்;* ***ஏழிசை*** *- மிக்க புகழ்;* ***கொச்சை*** *என்ற பெயர் போந்தவரலாற்றுக் குறிப்பு. "வழிமொழி" பார்க்க.-(39)* ***ஆறுபதம்*** *- பிரத்தி, பிரத்தியாகாரம் துல்லியம், துல்லியாதீதம், வித்தை, அவித்தை என்பன;* ***ஐந்தமர் கல்வி*** *- சிவாகமம்; மகாசதாசிவ மூர்த்தியின் ஈசான முகத்துள்ள ஈசான முதலிய ஐந்து முகங்களினின்றும் சிவபெருமான் சிவாகமங்களை அருளிச் செய்தனர். "கற்றதனா லாய பயனென்கொல் வாலறிவ, னற்றா டொழாஅ ரெனின்" (குறள்) என்ற படி கல்விப் பயன் சிவனைத் தொழுதலே; ஆதலின் சிவாகமம்* ***கல்வி*** *எனப்பட்டது; "மாவேட்டாகிய வாகமம் வாங்கியும், மற்றவை தம்மை மகேந்தி ரத்திருந், துற்றவைம் முகங்களாற் பணித்தருளியும்" (திருவா. கீர்த். 18 - 20);* ***அமர்*** *- விரும்புதல்.- (41) மூன்று காலம் - இறப்பு - நிகழ்வு - எதிர்வு; மூன்று* ***காலமுந்தோன்ற நிற்றலாவது*** *- கால தத்துவம், மாயையிற் றோன்றுமாறு தனது சத்தியால் நோக்கி நிற்றல்; - (42)* ***இருமையினொருமை*** *- அத்துவிதக் கலப்பு; சத்தி சிவம் கலந்த அர்த்தநாரீசுர வடிவம் என்றலுமாம். ஒருமை - தனி முதற் பொருள். (44)* ***கழுமல முதுபதிக் கவுணியன்*** *- தீக்கைகளால் மலத்தைக் கழுவும் பழமையாகிய சீகாழியிற் கவுணிய கோத்திரத்தில்*

வந்தவர் - (45) **கழுமலமுது பதிக்கவுணியன்** - கம் என்கின்ற பிரமசிரசிலே உண்கின்றவன். (47) **நினையவல்லவரில்லை நீணிலத்தே** - நினைக்கவல்லார்கள் இந்நிலவுலகத்திற் பிறப்பிலராவர், **முடிப்பு;**- ஒருருவாயினை; ஆயினை; நின்றனை; காட்டினை; சூடினை; ஏந்தினை; உரித்தனை; அறுத்தனை; பிரமபுரம் பேணினை; வேணுபுரம் விரும்பினை; புகலி யமர்ந்தனை; வெங்குரு விளங்கினை; தோணிபுரத் துறைந்தனை; பூந்தரா யேய்ந்தனை; சிரபுரத் துறைந்தனை; புறவம் புரிந்தவனை; சண்பை நின்றனை; கழுமலமுதுபதிக் கவுணியனறியும், அனைய தன்மையை; ஆதலின், நின்னை நினைய வல்லவர் இந்நீணிலத்தில் (இனி வருதல்) இல்லையாவர்-என்று கூட்டி வினை முடிபு படுத்திக் கொள்க.

பிரமபுரம்

திருச்சிற்றம்பலம் திருஈரடி **பண் - பழம்பஞ்சுரம்**

வரம தேகொளா வுரம தேசெயும் புரமெ ரித்தவன் பிரம நற்புரத்
தரனன் னாமமே பரவு வார்கள்சீர் விரவு நீள்புவி யே (1)
கழும லத்தினுட் கடவுள் பாதமே கருது ஞானசம் பந்த னின்றமிழ்
முழுதும் வல்லவர்க் கின்ப மேதரு முக்க ணெம்மிறை யே. (12)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- ஏனைய விருத்தங்கள் போல நான்கடி பெறாது இரண்டடிகளால் வருவதால் ஈரடி எனப்பட்டது. இரண்டாமடி இறுதிச் சீர்குறைந்து வந்தது. சீகாழித் தலத்தைப் பரவுமடியார்களுடைய சீர்களைப் பரவும் வகையாற் பன்னிரு பெயர்களையும் சந்தவிகற்பப் பாவினத்தின் நயம்படவைத்துப் போற்றியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **கொளா** - கொண்டு; **உரம்** - வன்மை.- (2) **வேணு மண்ணுளோர்** -வேண்டும் உலகர்; **ஆணி** - ஆணிப்பொன்; -(5) கற்றவர்க்கு காணியும் (நிலமும்) பொருளும் ஈகையுடையோர்; 8வதும் பார்க்க.-(6) **ஓதி** - கூந்தல்.-(7) **சுரபுரம்** - தேவருலகம். -(8) **அற்றவர்கள்** - நல்கூர்ந்தவர். தரித்திரர்; (11) **விச்சை** - வித்தை; ஞானம்; **ஒன்றும்** என்க. உம்மைதொக்கது; **பிச்சர்** - பித்தர்; **கரிசு** - குற்றம்.

பூந்தராய்

திருச்சிற்றம்பலம் திருஈரடி மேல்வைப்பு **பண் - காந்தார பஞ்சமம்**

தக்கன் வேள்வி தகர்த்தவன் பூந்தராய்
மிக்க செம்மை விமலன் வியன்கழல்
சென்று சிந்தையில் வைக்க மெய்க்கதி
நன்ற தாகிய நம்பன் றானே. (1)
புந்தி யான்மிக நல்லவர் பூந்தராய்
அந்த மில்லெம் மடிகளை ஞானசம்

பந்தன் மாலைகொண் டேத்தி வாழுநும்
பந்த மார்வினை பாறிடுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- முன் ஈரடி ஒரு எதுகை ஒரு சந்தமாகவும், பின் ஈரடி அவற்றின் மேல் ஒட்டிவைத்ததுபோல வேறு எதுகையும் வேறு முடுகு சந்தமாகவும் வரும் விகற்பச் செய்யுளாதலின் ஈரடிமேல்வைப்பு எனப் பெயர் பெற்றது. மேல் வைப்பாகிய பின்வைப்பு அடிகள் (மகுடம்போல) ஒன்றாகவே எல்லாப் பாட்டுக்களிலும் வருதலும், வெவ்வேறாய் வருதலும் உண்டு. இப்பதிகத்துள் வெவ்வேறாய் வந்தன. திருக் கொள்ளம்பூதூர்ப் பதிகத்துள் ஒன்றாக வந்தது காண்க. இது **பூந்தராய்** என்ற பெயரால் இறைவரது அருளின் எளிமையைப் போற்றியது.

பதிகப்பாட்டுக் குறிப்பு:-(1) செம்மை - சிவத்தன்மை; **சென்று** - உலக நிலையின் மேம்பட்டுச் செலுத்தி; -(2) **புள்ளினம் வெள்ளந்தாங்கு** - நீர்ப்பெருக்கில் பறவையுருவுடன் தேவர்கள் திருத்தோணியைத் தாங்கின வரலாறு. "நாலைந்து புள்ளின மேந்தின வென்பர்" (திருவிருத்) **வெள்ளம்** - கங்கை - தாங்கு சடை என்றலுமாம்.-(4) **இந்து** - சந்திரன்.-(6) **பூதம்** - கணங்கள்; **நளிர்புனல்** - குளிர்ந்த கங்கை. (7) **சே** - இடபம்; (8) **போதகம்** - யானை; (9) **மத்தம்** - செருக்கு. உன்மத்தம் - மத்தம் என நின்றது; **இருவர்** - அயனரி.- (11) **வாழும்** - வாழுங்கள்.

திருப்புகலி

திருச்சிற்றம்பலம் — நாலடி மேல்வைப்பு — பண் - காந்தார பஞ்சமம்

இயலிசை யெனும்பொரு ளின்றிறமாம்
புயலன மிடறுடைப் புண்ணியனே
கயலன வரிநெடுங் கண்ணியொடும்
அயலுல கடிதொழ வமர்ந்தவனே
கலனாவது வெண்டலை கடிபொழிற் புகலிதன்னுள்
நிலனாடொறு மின்புற நிறைமதி யருளினனே. (1)

புண்ணியர் தொழுதெழு புகலிந்நகர்
விண்ணவ ரடிதொழ விளங்கினானை
நண்ணிய ஞானசம் பந்தன்வாய்மை
பண்ணிய வருந்தமிழ் பத்தும்வல்லார்
நடலையவை யின்றிப்போய் நண்ணுவர் சிவனுலகம்
இடராயின வின்றித்தா மெய்துவர் தவநெறியே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- ஒரெதுகை ஒரு சந்தமுள்ள நான்கடிகளின் மேல் வேறெதுகையும் முடுகிய வேற்றுச் சந்தமாகிய இரண்டடிகள் வைக்கப்பட்டுவரும் விகற்பப் பாவினம் ஈரடி மேல்வைப்பின்கீழ் உரைத்தவை பார்க்க. இயலிசைகளுக்குப் பொருளாயுள்ளவரே! இரவொடு பகலுமா மெம்மானே! என்று பலவாற்றாலும் சிவனது இறைமைத் தன்மைகளை ஏத்தி முன்னிலைப்படுத்தி, "உம்மை இடர்கெட ஏத்துதும்யாம்; எமக்குத் தவநெறியருள்புரிவீராக" என்றது. "இட ராயின வின்றித்தாம் எய்துவர் தவநெறியே" (11) என்ற பதிகப்பயன் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1)**இயல்** - இயற்றமிழ்; **இசை** - இசைத்தமிழ்; **பொருளின்றிறமாம்** - இவற்றாற் கருதப்படும் முடிந்த பொருள்; **அயலுலகு** - விண்ணுலகம். **கலன்** - உண்கலம்; பலிப்பாத்திரம். அணிகலம் என்றலுமாம்; "வெண்டலை மாலை விரிசடை யோற்கே" (திருமந்). **நிறைமதி** - ஞானம்;- (2) **நிலையுறும் இடர்** - சகசமலமாகிய ஆணவம். **நிலையாத வண்ணம்** - வலிகெடும்படி.- (3) **தவநெறியருள் எமக்கே** - பதிகக் குறிப்பு - பதிகப்பயன் (11) பார்க்க. நம்பிகளது திருத்துறையூர்ப் பதிகமும் பார்க்க. **தவநெறி** - சிவபூசை -2-ம் பாட்டுப் பார்க்க.- (6) **அரிமா** - சிங்கம்; **தருவாய்** - அவ்வவர்க்கேற்ற பயன்களைப் பொருந்தச் செய்வாய்;- (8) **இரவொடு பகலதாம்** - காலமானாய்; துன்பவின்பங்களைக் கூட்டிவைப்பாய் என்ற குறிப்புமாம். **வழியடியேன்** - இப்பிறப்பிலும் முன்னை நிலையினும் வழிவழி அடிமையே பேணினேன்; **குர** - குராமலரும்; **இனமார்தரு** - ஒன்று போல உயர்ந்த.-(9) **உடலினுள்ளாற் பருகிடும் அமுது** - அழுந்திய உணர்வினுள் ஊறிப் பருகநிற்கும் தேன். **இனி....நல்கிடு** - மறக்குமாறிலாத என்னை மயக்கிப் பிறவி காட்டினாய்; இனி, அது மாற்றி உன்பால் முன்பால் பிரியாதிருக்க அருள்; (10) **கணிகை நோன்பர்** - குரத்தியர்களோடும் பாழியிற்றங்கி நோன்பியற்றும் சமணர் - பெருங்கோயில் - தோணி. -(11) **விண்ணவரடிதொழு** - தேவர்கள் தாங்கி நிற்க என்ற குறிப்பு. **இடராயின...தவநெறியே** - 2-3 பார்க்க.

திருச்சண்பை நகர்

திருச்சிற்றம்பலம் — **திருவிராகம்** — **பண் - சாதாரி**

எந்தமது சிந்தைபிரி யாதபெரு மானென விறைஞ்சி யிமையோர்
வந்துதுதி செய்யவளர் தூபமொடு தீபமலி வாய்மையதனா
லந்தியமர் சந்திபல வர்ச்சனைகள் செய்யவமர் கின்றவழகன்
சந்தமலி குந்தளநன் மாதினொடு மேவுபதி சண்பைநகரே. (1)

வாரின்மலி கொங்கையுமை நங்கையொடு சங்கரன் மகிழ்ந்தமருமூர்
சாரின்முர றெண்கடல் விசும்புற முழங்கொலிகொள் சண்பைநகர்மேற்
பாரின்மலி கின்றபுகழ் நின்றதமிழ் ஞானசம் பந்தனுரைசெய்
சீரின்மலி செந்தமிழ்கள் செப்புமவர் சேர்வர்சிவ லோகநெறியே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "மேன்மை நடையின் முடுகும் இராகம்" (2175) என்று ஆசிரியர்

அறிவித்தபடி முடுகிய சந்தத்திசையிற் செல்ல அமைந்தது இத்திருப்பதிகம். அழகராகிய பெருமான் மாதினொடு மிருந்த பதி சண்பைநகரே என்பது குறிப்பு.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **"எந்தமது...பெருமான்" என** - இது விண்ணோர்துதிப்பது. சூரனுக்கஞ்சிய இந்திரன் புகலடைந்த குறிப்புமாம்; **குந்தளம்** - கூந்தல்;-(2) **விரிதுத்தி** - விரிகின்ற படம்;- (3) **போழும்** - பிளந்தது போன்ற; **மாழை** - மாவடு; "மாவடு வகிரன்ன கண்ணிபங்கா" (திருவா); **தாழை முகிழ்** - தாழையின் மொட்டு; **வேழமிகு தந்தம் என** - யானைக் கொம்புபோல; "முள்ளிலைத் தாழை பெருங்களிற்று மருப்பினன்ன" (நற்றி - 19) -(4) **மட்டு** - மணம்; தேன் என்றலுமாம்; **மதிதட்டுபொழில்** - மதியைத் தடவும் படி உயர்ந்தசோலை; **சட்டகலை** - ஆறங்கம்; **எட்டுமரு எட்டும்** - 64 கலைஞானங்கள்; (6) **அணவு** - அணுகிவந்த; **நீலம்** - நீலோற்பல மலர்;-(7) **விண்பொய்...ஒழியினும்** - வானம் பிழைத்தல்; 'விண்ணின்று பொய்ப்பின்" (குறள்) மண் பொய் - மண்ணுலகின் நல்லொழுக்கத்தவறு; இவை பருவ மழை விழாமைக்கும் விளைவுக்குறைவுக்கும் காரணமா மென்றது. **வண்மை வழுவார்** - உலகம் வறண்ட காலத்தும் காழிப்பதியவர் வள்ளற்றன்மை குறையார்; "ஒரு நாளுங் கரவா வண்கைக் கற்றவர்" (குறிஞ்சி - காழி - 1); **அதுவே அடியார் தன்மை** என்க. அவ்வாறு வழுவாதிருத்தல் அடியாராந் தன்மையால் வருவது என்றபடி; பின்னர்ப் பிள்ளையார் இறைவன்பாற் பெற்ற உலவாக்கிழிகொண்டு திருக்கழுமலத்து வேதவேதியரனைவரும் வேள்வி செய்யவு மிகுந்திருக்கும் வரலாற்றை இங்கு நினைவுகூர்க - (8) **மறுக்கம்** - அச்சம்; **உரம்** - மார்பு; **ஏழ்** - எழும்; (9) **பறவை** - அன்னம்; **மாலு மலரானும்** - முறையே கேழலுரு - நீள்பறவையும் ஆக என்று நிரனிரை; **வரதன்** - தீயுருவாகிய அறியப்படாத நிலையினின்றும் பின் வெளிப்பட்டு வரமும் தந்தவன் என்பது குறிப்பு;-(10) **போதியார்** - போதியடியில் அமர்ந்தவனது சமயத்தினர் (புத்தர்); **பிண்டியர்** - அசோகினடியில் அமர்ந்த அருகனது சமயத்தினர் (சமணர்) **போது வழுவாதவகை** - காலந்தவறாது. நாட்காலையில்; **திரை** - **மணி எறி** என்க.

பிரமபுரம்

திருச்சிற்றம்பலம் — **திருச்சக்கரமாற்று** — **பண் - காந்தாரம்**

விளங்கியசீர்ப் பிரமனூர் வேணுபுரம் புகலிவெங் குருமேற் சோலை
வளங்கவருந் தோணிபுரம் பூந்தராய் சிரபுரம்வண் புறவ மண்மேற்
களங்கமிலூர் சண்பைகமழ் காழிவயங் கொச்சைகழு மலமென் றின்ன
விளங்குமரன் றன்னைப்பெற் றிமையவர்தம் பகையெறிவித் திறைவ னூரே. (1)

அக்கரஞ்சேர் தருமனூர் புகலிதராய் தோணிபுர மணிநீர்ப் பொய்கை
புக்கரஞ்சேர் புறவஞ்சீர்ச் சிலம்பனூர் புகழ்க்காழி சண்பை தொல்லூர்
மிக்கரஞ்சீர்க் கழுமலமே கொச்சைவயம் வேணுபுர மயனூர்மேவிச்
சக்கரஞ்சீர்த் தமிழ்விரகன் றான்சொன்ன தமிழ்தரிப்போர் தவஞ்செய்தோரே. (11)

திருச்சிற்றம்பலம்

ஐந்தாவது தலயாத்திரை

2177. அங்க ணமர்கின்ற நாளி "லருந்தமிழ் நாடெத்தி னுள்ளுந்
திங்கட் சடையண்ண லார்தந் திருப்பதி யாவையுங் கும்பிட்
டெங்குந் தமிழ்மாலை பாடி யேத்தியிங் கெய்துவ" னென்று
தங்குலத் தாதைய ரோடுந் தவமுனி வர்க்கருள் செய்தார். 279

பதிகக் குறிப்பு:- இது சீகாழியிலருளியது. சக்கர வடிவாக அடைத்துச் சுழன்று வருவதுபோலச் சீகாழியின் பன்னிரண்டு பெயர்களும் மாறிச் சுழன்றுவரப் பாடியருளிய சித்திரகவி; இதுபோன்று "பிரமனூர்" என்று தொடங்கு மற்றொரு பதிகம் உண்டு; அது மதுரையிற் பின்னர்க் கூன்பாண்டியன் அவைக்களத்தே அருளுவது; (புரா - 754 - பார்க்க); அது "நாம் கருதும் ஊரே" என்ற குறிப்புடையதாய், "உமது பதி யாது?" என்று அரசன் கேட்ட வினாவுக்கு விடையாக அமைந்தது. இஃது இப்பன்னிரண்டு பேர் படைத்தது இறைவனூர் என்று போற்றிய குறிப்புடையது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1)**களங்கம் இல்ஊர்** - ஆணவமலக் குற்றத்தை இல்லையாகச் செய்யும் ஊர் கொச்சைவயம் என்க. **இளங்குமரன்** - முருகப் பெருமான்;பகை - சூரன்; **எறிவித்த இறைவன்** - என்க. பெயரெச்சத் தகரம் விகாரத்தாற்றொக்கது.-(4) **பூமகன்** - பிரமன்;-(5) **தரைத் தேவர்** - பூசுரர், அந்தணர்; **உணர்ந்த அயனூர்** - என்க;-(8) **மோடி** - காளி; **சிலையன்**; வில்லுடையவன்; **அருளி** - அருள்பவன்; பெயர்;-(10) மேல் - மேலோர் - **மெய்ம்மைநூல்** - வேதம்; -(12) **சக்கரம்** - பதிக அமைதியின் பெயர்; **தரிப்போர்** - மனங்கொள்வோர்.

குறிப்பு:- **"ஆதிவிகற்பங்கள்"** (2175) என்றதனால் ஈண்டுப் **பல்பெயர்ப்பத்து** என்ற - தக்கேசி - "எரியார்மழு" என்னும் பதிகமும், "பூமகனூர் புத்தேளுக் கிறைவனூர்" **என்னும்** - காந்தாரம் - கோமுத்திரிப் பதிகமும் இவை முதலாயின பிறவும் வைத்துக் கருதப்படும்.

2177. *பொருளுரை*...அங்கண்...நாளில் - அத்தலத்தில் விரும்பி எழுந்தருளியிருக்கும் நாள்களில்; "அருந்தமிழ்நாடு...எய்துவன்" என்று - "அரிய தமிழ்நாடு எவற்றினுள்ளும் திங்களைச் சூடிய சடையையுடைய பெருமான் எழுந்தருளியுள்ள திருத்தலங்கள் எல்லாவற்றையும் சென்று கும்பிட்டு எவ்விடத்திலும் தமிழ்மாலைத் திருப்பதிகங்களைப் பாடித் துதித்து இங்குவந்து சேர்வேன்" என்று; தம்குலத் தாதையாரோடும்–அருள் செய்தார் - தமது பெருமையுடைய தந்தையார் சிவபாத விருதயரோடும் தவமுனிவர்களுக்கு அருளிச் செய்தார்.

விளக்கவுரை—அருந் தமிழ்நாடு எத்தினுள்ளும் - தமிழ்நாடும் வேறும் உள்ள எல்லா நாடுகளினும் என்க. இந்த **ஐந்தாவது யாத்திரை** பிள்ளையாரது பெருந் திருத்தலயாத்திரையாகும். இதனுள் அவரது திருஅவதார உட்கிடையாகிய சமணம் பவுத்தமென்னும் பரசமய நிராகரணமும் சைவ விளக்கமுந்தாபனமும் நிகழ உள்ளன; **தமிழ்நாடு** - வடவேங்கடம் தென்குமரி இடைப்பட்ட தமிழ் வழங்கும் நிலப்பரப்பு.

2178. பெருகு விருப்புட னோக்கிப் பெற்ற குலத்தாதை யாரும்
"அருமையா லும்மைப் பயந்த வதனாற் பிரிந்துறை வாற்றேன்;
இருமைக்கு மின்ப மளிக்கு மியாகமு மியான்செய வேண்டும்
ஒருமையா லின்னஞ் சிலநா ளுடனெய்து வே"னென் றுரைத்தார். 280

நாடு எத்தினுள்ளும் திருப்பதி யாவையும் கும்பிட்டு - பாடி - ஏத்தி - "நாடு நகரமு நற்றிருக் கோயிலுந், தேடித் திரிந்து சிவபெருமா னென்று, பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின், கூடிய நெஞ்சத்துக் கோயிலாக் கொள்வனே" (திருமந் - 5) என்றும், "சுத்த சைவத்துக் குயிரதே" என்றும் சைவ நாற்பாதத்தினுள் வைத்து இச் சரியையின் இயல்பினையும் பயனையும் வற்புறுத்தியருளினர் திருமூலதேவர். உலகம் இதிற்புகுந்து மேல் எழும் பொருட்டு வழிப்படுத்தும் வகையால் பிள்ளையார் இவ்வாறு தலயாத்திரைகளை மேற்கொண்டருளினர்.

"ஏத்தி இங்கு எய்துவன்" என்று - விடைகொண்டு தாம் புறப்படும் குறிப்பு. ஆதலின் அக்குறிப்பறிந்த தாதையார் பிரிவாற்றாது "இன்னும் சிலநாள் உடன் எய்துவேன்" என்று கேட்டனர் என்பது மேல்வரும் பாட்டிற் காண்க.

தவமுனிவர் - அடியார்களும் அந்தணர்களும். 279

2178. பொருளுரை. பெருகு..நோக்கி - மேன்மேலும் பெருகுகின்ற விருப்பத்தோடும் பிள்ளையாரை நோக்கி; பெற்ற குலத்தாதையாரும் - ஈன்றெடுத்த குலத்தந்தையாராகிய சிவபாத விருதயரும்; "அருமையால்..எய்துவன்" என்று மொழிந்தார் - "அரிய தவஞ்செய்து அதன்பயனாக உம்மை ஈன்றெடுத்தேனாதலினால் உம்மைப் பிரிந்து இங்கிருத்தலைச் சகிக்கமாட்டேன்; இம்மைக்கும் மறுமைக்கும் இன்பம் கொடுக்கும் சிவவேள்வியையும் யான் செய்யவேண்டும்; ஆதலால் ஒருப்பாட்டுடனே இன்னும் சில நாட்கள் உம்முடனே இருப்பேன்" என்று மொழிந்தனர்.

விளக்கவுரை.. பெருகுவிருப்புடன் நோக்கி - பிரிந்திருக்கலாற்றாமையான் எழுந்த விருப்பமும், அதனால் நிகழ்ந்த நோக்கமும்.

அருமையால்...உடன் எய்துவேன் - "திருப்பதி யாவையும் கும்பிட்டு - இங்கு எய்துவன்" (2177) என்று விடைகொண்டு தாமேயேகும் குறிப்பினுடன் கூறிய பிள்ளையார்க்கு, அவரது கருத்துக்குமாறுபாடாகத் தாமும் உடன் வருதலைக் கூறுகின்றா ராதலின் அதற்கு இரண்டு காரணங்கள் காட்டிக் கூறுகின்றார். அவை, அருந்தவஞ் செய்து பெற்றாராதலின் பிரிவாற்றாமை ஒன்று; உடன் சென்று யாகஞ் செய்தற்கு வேண்டும் பொருளை உரியகாலத்திற் பெறுதல் மற்றொன்று. இவற்றை எடுத்துக்கூறி, "ஆதலால் இன்னுஞ் சிலநாள் உடன்எய்துவேன்" என்றார் என்க. "எய்துவன்" (2177) என்ற பிள்ளையார் செயலுக்கு உடன்பாடும் உடனே குறிப்பார் போன்று தாமும் "உடன் எய்துவேன்" என்றசொல் ஒற்றுமை நயமும் குறிக்க.

2179. ஆண்டகை யாரு மிசைந்தங் கம்பொற் றிருத்தோணி மேவும்
நீண்ட சடையா ரடிக்கீழ்ப் பணிவுற்று நீடருள் பெற்றே
ஈண்டு புகழ்த்தாதை யார்பின் னெய்திட யாழ்ப்பாண ரோடுங்
காண்டகு காழி தொழுது காதலி னாற்புறம் போந்தார். **281**

அருமையால் - அரிய தவஞ்செய்து அதன் பயனாக; "ஈறில் பெருந்தவ முன் செய்து" (1983); "பெறப் போற்றும் தவம் புரிந்தார்" (1917).

பயந்த - தந்தையின் அன்பினால் பிள்ளையார் திருமேனிக்கு யாங்கு யாது நிகழுமோ என்று ***பயமடைந்த*** என்ற குறிப்புமாம். (புரா. 872 - 873-ம், 616-ம் பார்க்க.)

பிரிந்து உறைவு ஆற்றேன் - மகவின்மேல் வைத்த காதல்; வாத்சல்யம் என்பர் வடவர். தன் மகனாகிய இராமன் பிரிந்த செயல் கேட்டலும் தசரதன் உயிர்நீத்த வரலாறும் கருதுக.

இருமைக்கும் இன்பர் பயக்கும் யாகம் - இருமை - இம்மையும் மறுமையும்; இம்மையின்பமாவது "வேள்வி நற்பயன் வீழ்புனலாவது" என்றபடி வேள்வியாற் பெறும் மழையினாலும், அதன் மூலமாகக் கலிகெடுதலானுமாம். மறுமையின்பயனாவது அது தரும் சிவபுண்ணியத்தால் பரம்பரையில் சிவநெறி கைகூடச் செய்து வீடு பேற்றுக்கு வழியாகுதல். ஈண்டு வேள்வி என்றது வேதவேள்வியாகிய பசுவேட்டலை; அதனையே அமணொடுதேரர் நிந்தனை செய்துழன்றனர். மற்றுஞ் சிவபூசை முதலிய வற்றையன்று.

யாகம் - சிவனைக் குறித்த ஐவகை வேள்வி - "ஐவகை வேள்வியமைத்து" (எழுகூற்).

யான் செயவேண்டும் - அதற்கு ஆம் பொருளையும் அருளையும் உரிய காலத்திற் பெறவேண்டும் என்பது குறிப்பு. புரா, 422-423 பார்க்க. இவ்வாறு பெறும் குறையினைக் குறிப்பில் பெறவைத்து மொழிதல் பெரியோர் மரபு.

ஒருமையால் - உம்முடைய ஒருமைப் பாட்டினால். ஒருமை - இசைவு, மேல் "இசைந்து" (2179) என்பது காண்க. உடன்-உம்முடன், "With your permision" " If you please" என்னும் உயர் நவீனர் வழக்கும் காண்க. உடன்வராவிட்டால் உயிர் அங்கும் உடல் இங்குமாக இருக்குமாதலின் அப்படிக்கன்றி உயிரும் உடலும் ஒருவழிச் செல்ல என்ற குறிப்புமாம். **280**

2179. பொருளுரை.....ஆண்டகையாரும் இசைந்து - ஆண் தகையாளராகிய பிள்ளையாரும் அதற்கு உடன்பாடு செய்து; அங்கு...பெற்றே - அங்கு அழகிய பொன்னார்ந்த திருத்தோணியில் எழுந்தருளிய நீண்ட சடையினை உடைய இறைவரது திருவடிக் கீழே வீழ்ந்து வணங்கி நீடிய திருவருளைப் பெற்றுக் கொண்டவராகி; ஈண்டு-எய்திட - மிக்க புகழினையுடைய தந்தையார் பின்பற்றித் தமது பின்னேவர; யாழ்ப் பாணரோடும்..புறம்போந்தார் - திருநீலகண்ட யாழ்ப்பாணனார் தம்முடனே வர காண்டக்க சீகாழிப் பதியைத் தொழுதுகொண்டு நீங்காத காதலுடன் புறம்போந்தருளினர்.

***விளக்கவுரை*....ஆண்டகையார்** - தமது குறிப்புக்கு மாறுபட்டுத் தந்தையார் கூறிய போதும் அவர் கருத்தின் நேர்மை கருதி உடன்படுதல் ஆண்டகைமைப்பாலது என்றபடி; ஒழுக்கத்தின் உயர்வு.

இசைந்து - தந்தையார் வேண்டுதலை உடன்பட்டு.

அம்பொன்...அருள்பெற்றே - தலத்தினின்றும் புறப்படுவார் இறைவரை வணங்கி அருள் விடைபெற்றுப் புறப்படும் நியதிமட்டிலன்றி, இங்குச் சிறப்பாக நீடிய திருவருளின் குறிப்பினைப் பெற்றார் என்க.

நீண்டசடையார் - என்றும், **நீடருள்** - என்றும் கூறினார். நீண்டசடை - இடத்தின் நீட்சிக்கும், **நீடுஅருள்** - காலத்தின் நீட்சிக்கும் குறிப்புத்தந்தன. இந்த ஐந்தாவது யாத்திரை நிகழ்ச்சிகளின் நீண்ட அளவும் சிறப்பும் கருதுக. நீடு - என்றகுறிப்புமது.

நீண்டசடையார் - "நீள் சடையார்" (831) என்ற விடத்துரைத்தவை இங்கு நினைவு கூரத்தக்கன.

நீடருள் - பரசமய நிராகரிக்கவும், நீறு ஆக்கவும் தாதையார்க்குக் கொடுத்த வரத்தினை நிகழ்விக்கும் அருள், தோணியப்பருடைய திருவருளே திருவாலவாயில் வந்து கை தந்து நிகழ்வித்ததென்பது பிள்ளையார் திருவுள்ளம்; திருக்கழுமலத் திருவியமகத்தில் "பருமதின் மதுரைமன் னவையெதிரே பதிகம தெழுதிலை யவை யெதிரே, வருநதி யிடைமிசை வருகரனே வசையொடு மலர்கெட வருகரனே, கருதலி லிசைமுர றருமருளே கழுமல மமரிறை தருமருளே" என்றருளுவதனால் இனிது விளங்கும்.

தாதையார் பின்எய்திட - யாழ்ப்பாணரோடும் - தாதையார் ஏனைப் பரிசனங் களுடன் தம்மைப் பின்பற்றிவந்த அளவி லமைந்தனர், அவர் வேண்டியவாறு உடன் எய்துவதன்றி ஏனைப் பணிகள் ஒன்றும் அவர்க்கில்லாமையால்; யாழ்ப்பாணர், அவ்வாறன்றித் திருப்பதிகங்களை அவ்வப்போது யாழிலிட்டுப் பணி செயவேண்டி யிருத்தலின் அவர் பிள்ளையாருடனே முன்சென்றனர். திருக்கூட்டச் செலவின் இந்நிகழ்ச்சிகள் குறிக்கற்பாலன என்று ஆசிரியர் எடுத்துக் காட்டியவாறு. பின்னர் இவ்யாத்திரையில் ஆளுடைய அரசுகள் கலந்து செல்லும்போது, அவர் முன்பு செல்ல, அவரைப் பின்பற்றிப் பிள்ளையார் செல்லும் அமைதியும் இங்கு வைத்துக் காண்க. (புரா. 527 பார்க்க.)

காழிதொழுது - நகர்ப்புறம் போந்து பதியினை நோக்கித் தொழுது விடை கொண்டு.

காதல் - புறம்போந்து செல்லினும் அகலாத விருப்பம்.

புறம் போந்தார் - பதியினின்றும் புறப்பட்டருளினார். 281

2180. பொருளுரை... அத்திரு...போத - அந்தச் சிவச் செல்வமுற்ற பழம்பதியின் உள்ளவர்களுள்ளே, மெய்த்தவர் (உண்மைத் தவசிகள்) விருப்பத்தோடும் உடன் போதுவார்களாகிக் கூடத் தொடர்ந்து செல்லவும்; அந்தணர்...மீள - அந்தணர்கள் பிரியா

2180. அத்திரு மூதூரி னுள்ளா ரமர்ந்துடன் போதுவார் போத,
மெய்த்தவ ரந்தணர் நீங்கா விடைகொண்டு மீள்வார்கண் மீள,
முத்தின் சிவிகைமேற் கொண்டு மொய்யொளித் தாம நிரைத்த
நித்தில வெண்குடை மீது நிறைமதி போல நிழற்ற, **282**

2181. சின்னந் தனிக்காளந் தாரை "சிரபுரத் தாண்டகை வந்தார்"
என்னுந் தகைமை விளங்க வேற்ற திருப்பெயர் சாற்ற,
முன்னெம் மருங்கு நிரந்த முரசுடைப் பல்லிய மார்ப்ப,
மன்னுந் திருத்தொண்ட ரானார் வந்தெதிர் கொண்டு வணங்க, **283**

விடைபெற்று பதியில் மீண்டு செல்பவர்கள் மீளவும்; முத்தின் சிவிகை மேற்கொண்டு – முத்துச் சிவிகையின்மேல் பிள்ளையார் எழுந்தருளி; மொய்யொளி...நிழற்ற - மொய்த்துக் கூடிய முத்துமாலைகளை வரிசைபெறக் கட்டிய வெள்ளிய முத்துக் குடையானது மேலே முழுமதிபோலக் கவிந்து நிழலைச் செய்யவும்.

விளக்கவுரை... உடன் போதுவார் போத - மீள்வார்கள் மீள - பிள்ளையார் மேற்கூறியவாறு புறம்போதும் பொழுது சீகாழியிலுள்ள அடியார்களும் அந்தணர்களும் ஆகிய கூட்டத்தினுள் பலர் பின்றொடர்ந்து உடன் சென்றார்கள்; பலர் உடன் செல்லாவிடினும் மனம் பிரியாநிலையில் விடைகொண்டு மீண்டனர். இவ்விரு திறத்தாரையும் பற்றி அறிவிக்கின்றனர்.

மெய்த்தவ அந்தணர் - என்பதைப் போத என்பதனுடனும் மீள என்பதனுடனுமாக முன்னும் பின்னும் கூட்டியுரைக்க இடையில் வைத்தார். மெய்த்தவர் அடியார்கள். சிறப்புப்பற்றி முன்வைத்தார்.

மொய் ஒளித்தாமம் நிரைத்த - முத்துக்குடையில் மொய்த்து வீசும் ஒளியுடைய முத்துமாலைகள் வரிசைபெறக் கட்டித் தொங்கவிட்ட. பெருநன் முத்துக்களாதலின் மொய்ஒளி என்றார். குளிர்ந்த ஒளியாதலின் நிறைமதியை உவமித்தார். உருப்பற்றிவந்த உவமம். பிறவி வெப்பத்தை மாற்ற உதவும் பிள்ளை யாரைச் சூழ்ந்து கதிர்விடுதலின் அக்குறிப்புப்பற்றி வினைபற்றிவந்த உவமமெனினு மமையும். **282**

2181. பொருளுரை.... சின்னம்...சாற்ற - முத்துத் திருச்சின்னமும், ஒப்பற்ற முத்துக் காளமும், முத்தினாலியன்ற தாரையும், "சிரபுரத்தில் அவதரித்த ஆண்டகையார் வந்தருளினார்" என்ற தன்மை உலகுக்கு விளங்கும்படி ஏற்றவாறு அவரது பற்பல திருப்பெயர்களையும் எடுத்து ஊதிப் பிடிக்கவும்; முன்.. ஆர்ப்ப - திருமுன்பு எப்பக்கங்களினும் வரிசையாக முரசங்களும் மற்றும்பல இயங்களும் முழங்கவும்; மன்னும்...வணங்க - நிலைபெற்ற திருத்தொண்டராயினார்கள் வந்து எதிர்கொண்டு வணங்கவும்;

விளக்கவுரை.. சின்னம் - காளம் - தாரை - இவை திருவரத்துறையிறைவர் முத்துச் சிவிகையுடனருளியவை, இவையும் முத்துக்களால் அணியப்பட்டவை. சிவிகையிற்

2182. சங்கநா தங்க ளொலிப்பத், தழங்குபொற் கோடு முழங்க,
மங்கல வாழ்த்துரை யெங்கு மல்க, மறைமு னியம்பத்,
திங்களும் பாம்பு மணிந்தார் திருப்பதி யெங்குமுன் சென்று
பொங்கிய காதலிற் போற்றப் புகலிக் கவுணியர் போந்தார். 284

செல்லும் சிறப்புக்கு இவை இன்றியமையாத அங்கமாக உள்ளனவாதலின் ஒருங்கே அருளப்பெற்றன. வெறும் ஆரவாரநீர்மையன என்றெண்ணுதல் தவறு. இவை சைவ அரசாங்கத்தின் பெருமைதேற்றும் திருவடையாளங்களேயாம். ''பிரபஞ்ச மெல்லாவற்றிற்கும் மூலகாரணமாகிய ஒரு பெரு வெண்கொற்றக் குடையும்" (போத. 8. சிற்) என்றது காண்க. குடைக்குப் போல ஏனையவற்றுக்கும் கொள்க. "சைவநெறி தழைத்தோங்க வுரைசெய்" (புரா . 653) என்பதும் பார்க்க.

என்னும் தகைமை விளங்க - சின்னம் முதலியவைகூறி ஊதிப் பிடிக்கும் திருப் பேர் பலவும், திருமெய்ப்புகழ் பலவும் பிள்ளையாரது ஆண்டகைமையினையே கருத்தாகக்கொண்டு விளக்குவன என்பது. **தகைமையாவது** ஆண்டகைமை. (2119 - 2120 - 2121 பார்க்க) அஃது உலகரை உய்ய ஆளும்தன்மை; பரசமயத் துகள் நீக்கிச் சைவம் விளங்கச் செய்து அதனால் உலகுயிர்களை உய்யச் செய்தல்.

ஏற்ற திருப்பெயர் - எடுத்துக்கூறும் தன்மைகளுக்கு ஏற்றபடி உள்ள பிள்ளையாரது திருப்பெயர்கள்.

சாற்ற - இவை பெயர்களையும் தகைமைகளையும் எடுத்துக்கூறி ஊதுதலால் **சாற்ற** என்றார். திருவருள் தர வரப்பெற்றமையாலும் இவை தலைமையாக ஏனையவற்றின் வேறு ஓதப்பட்டன.

முரசுடைப்பல்லியம் - பேரொலி செய்தற்றன்மையால் முரசை முன்னாக வைத்து ஏனைய இயங்களை அதனுள் அடக்கிக் கூறினார். **ஆர்ப்ப** - என்ற குறிப்புமது.

மன்னும் திருத்தொண்டர் ஆனார் - வணங்க - மன்னுதல் திருத்தொண்டில் நிலை பெறுதல். **ஆனார்** - ஆக்கச் சொல், வணங்கியதனால் ஆக்கமிகுதி பெற்றார் என்ற குறிப்புத்தருவது. இவர்கள் சீகாழிப் புறநகரிலும் பக்கங்களிலும் உள்ளவர்கள். 283

2182. பொருளுரை- சங்க..ஒலிப்ப - சங்குகளின் நாதம் ஒலிசெய்யவும்; தழங்கு-முழங்க - விளங்கிய அழகிய கொம்புகள் முழங்கவும்; மங்கல...மல்க - மங்கலமாகிய வாழ்த்து உரைகள் எங்கும் பொருந்தவும்; மறைமுன் இயம்ப-முன்னே வேதங்கள் பயிலவும்; திங்களும்-போற்ற - சந்திரனையும் பாம்பினையும் அணிந்த சிவபெருமானது திருத்தலங்கள் எங்குமுள்ளனவற்றில் முன்சென்று மேன்மேலும் பொங்கும் விருப்பத்தினுடன் துதிக்க; புகலிக் கவுணியர் போந்தார் - சீகாழிக் கவுணியர் குலதனமாகிய பிள்ளையார் எழுந்தருளிச் சென்றனர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2183. திருமறைச் சண்பைய ராளி சிவனார் திருக்கண்ணார் கோயில்
பெருவிருப் பாலணைந் தேத்திப், பிஞ்ஞகர் கோயில் பிறவும்
உருகிய வன்பா லிறைஞ்சி வுயர்தமிழ் மாலைகொண் டேத்தி,
வருபுனற் பொன்னி வடபாற் குடதிசை நோக்கி வருவார், **285**

விளக்கவுரை... கோடு - கொம்பு; இயங்களுள் ஒருவகை.

மங்கல வாழ்த்து உரை - அத்திருப்பதியின் அந்தணர் மாதர் முதலியவர்களுடைய வாழ்த்துரை; (1994 - 2160 - புரா - 956 முதலியவை பார்க்க.)

மறைமுன் இயம்ப - மறை முனிவர்கள் முன்னே மறைகளை ஓதிக்கொண்டு செல்ல; ***மறை*** - தமிழ் மறையுமாம். திருப்பதிகங்களை ஓதிச் செல்பவரு முன்செல்ல என்பதாம்.

திங்களும் பாம்பும் அணிந்தார் திருப்பதி எங்கும் - போற்ற - மதியும் பாம்பு மாகிய பகைப் பொருள்களை ஒரு சேரவைத்து அணிந்ததுபோல அடியார்களுடனே புறச்சமயிகளையும் தாங்கி வரும் இறைவர் என்ற குறிப்பு. இவ்யாத்திரையில் சமணர் புத்தர் மிக்க திருவாலவாய், திருத்தெளிச்சேரி முதலிய தலங்களைச்சென்று வணங்குதலும் குறிப்பு.

முன்சென்று பொங்கிய காதலிற் போற்ற - நேரிற் செல்லாது புறத்தே நின்று காதலாற் போற்றிய ஈழநாட்டுத் தலங்களும் குறிப்பு.

சங்கநாதங்கள் ஒலிப்ப - பிரணவாகாரமாய்ப் புரித்த வடிவுடைய சங்கங்களில் மறைமூலமாயுள்ள பிரணவநாதம் எப்போதும் ஒலிப்பதால், ஓசை செய்ய என்னாது ஒலிப்ப என்றார்.

குறிப்பு:- எங்கும் - கொங்கு, பாண்டி, ஈழ முதலிய நாடுகளும் குறிப்பு (2177). இவ்வெழுச்சியினை இவ்வாறு மூன்று பாட்டுக்களாற் சிறப்பித்துக் கூறித் "திங்களும் பாம்பு மணிந்தார் திருப்பதி" என்று முடித்துக் காட்டியது பரசமய நிராகரிப்பும் திருநீற்றின் ஆக்கமுமாகிய பின்னிகழ்ச்சிகளின் குறிப்பாம். இத்தொடக்கக் குறிப்பினைப் பின்னர் புரா. 648 முதல் 653 வரை ஆறு பாட்டுக்களால் நிறை வாக்குதலும் காண்க.

284

2183. பொருளுரை... திருமறைச் சண்பையர் ஆளி - திருமறையவர் பதியாம் சீகாழியவர்களுக்குத் தலைவராகிய பிள்ளையார்; சிவனார்...ஏத்தி - சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கண்ணார் கோயில் என்னும் தலத்தைப் பெருகிய விருப்பத் தினாலே அணைந்து திருப்பதிகம் பாடித்துதித்து; பிஞ்ஞகர்...ஏத்தி - இறைவருடைய தலங்கள் பிறவற்றையும் உருகிய அன்பினாலே சென்று வணங்கி உயரும் தமிழ்மாலைகளாகிய தேவாரத் திருப்பதிகங்களைப் பாடித் துதித்து; வருபுனல்...வருவார் - வரும் புனலினை உடைய காவிரியின் வடகரை வழியாக மேற்குத் திசை நோக்கி வருவாராகி,

2184. **போற்றிய காதல் பெருகப் புள்ளிருக் குந்திரு வேளூர்**
நாற்றடந் தோளுடை மூன்று நயனப் பிரான்கோயி னண்ணி
யேற்றவன் பெய்தவ ணங்கி யிருவர்புள் வேந்த ரிறைஞ்சி
யாற்றிய பூசனை சாற்றி யஞ்சொற் பதிக மணிந்தார். 286

விளக்கவுரை... **மறைச் சண்பை** - மறையவர்கள் வாழும்பதி. மறைகளாற்றுதிக்கப்படும் பதி என்றும், மறை மூலவடிவாகிய திருத்தோணியிருக்கும் பதி என்றும் உரைப்பினுமமையும். **ஆளி** - ஆள்பவர், தலைவர்; சிங்கம் போன்றவர் என்றலுமாம்.

திருக்கண்ணார் கோயில் - தலப்பெயர்; தலவிசேடம் பார்க்க.

கோயில் பிறவும் - இவை திருக்கண்ணார் கோயிலை அடுத்து அணிமையில் உள்ளனவாகிய திருக்கடைமுடி, திருக்காட்டுப்பள்ளி, திருநாங்கூர் முதலியன என்பது கருதப்படும்.

உயர் தமிழ்மாலை - ஆன்மாக்கள் உயர்தற்கேதுவாகிய அருளுபதேசங்களைக் கட்டளையிட்டருளிய தமிழ்மாலை.

வருபுனல் - காலம் பொய்யாது வரும் புனலையுடைய. "வான்பொய்ப்பினும் தான் பொய்யா" "பொன்னி எந்நாளும் பொய்யாதளிக்கும் புனல்" (1206).

வடபால் குடதிசை நோக்கி - வடகரையில் மேற்கு நோக்கி.

வருவார் - வருவாராகி. முற்றெச்சம்; **வருவார் - நண்ணி** என் வரும்பாட்டுடன் முடிக்க. 285

2184. பொருளுரை... போற்றிய காதல் பெருக - போற்றிய விருப்பம் மேன்மேல் அதிகரிக்க; புள்ளிருக்கும் திருவேளூர் நண்ணி - திருப்புள்ளிருக்கு வேளூரில் நான்கு பெருந் தோள்களையுடைய முக்கட்பெருமான் எழுந்தருளிய திருக்கோயிலை அடைந்து; ஏற்ற அன்பு எய்த வணங்கி - தக்க பேரன்பு பொருந்த வணங்கி; இருவர்...அணிந்தார் - புள்ளரசர்களான சம்பாதி, சடாயு என்றிருவர்கள் வணங்கிச் செய்த பூசனையின் பெருமையை எடுத்துப் பாராட்டிப்போற்றி அழகிய சொற்களாலமைந்த திருப்பதிகத்தினை இறைவர்க்குச் சாத்தியருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு - கொண்டன.

விளக்கவுரை... **போற்றிய** - போற்றும் வண்ணம்; துதிக்கும் பொருட்டு;

திருப்புள்ளிருக்கு வேளூர் - என்க. புள்வேந்தர் பூசை செய்து பேறு பெற்ற சிறப்பைப் பிள்ளையார் எடுத்துக் காட்டியருளியமையால் அத்தொடர்ச்சியை அச் செய்திபற்றி விளக்கமாயறிதற் பொருட்டுத் தலப்பெயரை இவ்வாறு புள்ளிருக்கும் திருவேளூர் எனக் கூறினார். மேலும் அங்குச் செவ்வேளின் சிறப்புடைப்பூசையினை அறிவித்தற்குத் திரு என்பதனை அப்பெயருடன் சாரவைத்த நயமும் குறிக்க. ஆசிரியர் புள்ளிருக்கும் எனப் புள்ளரசர் சரித காரணம்பற்றிவிரித் தாரேனும் புள்ளிருக்கு வேளூர் என்பதே பதிகம். "புள்ளிருக்கு வேளூரானைப் போற்றாதே" என்பது காண்க.

கோயில் நண்ணி - இத்தலம் வைத்தீசுவரன் கோயில் என்று விளக்கமாயறியப் படுதலின் அது குறிக்க வேளூர் நண்ணி என்னாது கோயில் நண்ணி என்றார்.

ஏற்ற அன்பு எய்த - அத்தலத்திற் பொருந்திய அன்பு. ஏற்றமுடைய அன்பு என்ற குறிப்புமாம்.

இருவர்_சாற்றி - "தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர், புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே" என்பதாதியாகப் பதிகத்துட் பிள்ளையார் சம்பாதி சடாயு என்னும் கழுகரசரிருவரும் இத்தலத்தில் பூசித்துப் பேறுபெற்ற சிறப்புக்களைப் பதிக முழுமையும் பலவாறும் எடுத்துப் போற்றிய திறம் காண்க. "யோசனை போய்ப் பூக்கொணர்ந்தங் கொருநாளு மொழியாமே, பூசனைசெய் தினிதிருந்தான்" (3); பத்தியினால் வழிபட்டுப் பலகாலந் தவஞ்செய்து, புத்தியொன்ற வைத்திருந் தான்" (7) "ஆதித்தன் மகனென்ன வகன்ஞாலத் தவரோடும், போதித்த சடாயென்பான்" (9) முதலியவை பார்க்க. **சாற்றி** - எடுத்துப் பாராட்டிப் போற்றி.

அணிந்தார் - சொன்மாலை அழகுபடச் சாத்தினார். 286

திருக்கண்ணார் கோயில்

திருச்சிற்றம்பலம் பண் - குறிஞ்சி

தண்ணார் திங்கட் பொங்கர வந்தாழ் புனல்சூடிப்
பெண்ணா ணாய பேரரு ளாளன் பிரியாத
கண்ணார் கோயில் கைதொழு வோர்கட் கிடர்பாவம்
நண்ணா வாகு நல்வினை யாய நணுகும்மே. (1)

மறுமா ணுருவாய் மற்றிணை யின்றி வானோரைச்
செறுமா வலிபாற் சென்றுல கெல்லா மளவிட்ட
குறுமா ணுருவன் றற்குறி யாகக் கொண்டாடுங்
கறுமா கண்டன் மேயது கண்ணார் கோயிலே. (5)

முன்னொரு காலத் திந்திர னுற்ற முனிசாபம்
பின்னொரு நாளவ் விண்ணவ ரேத்தப் பெயர்வெய்தித்
தன்னரு ளாற்கண் ணாயிர மீந்தோன் சார்வென்பா
கன்னியர் நாளுந் துன்னமர் கண்ணார் கோயிலே. (7)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருக்கண்ணார் கோயிலைத் தொழுவோர்களுக்குப் பாவம் நண்ணா; முன் உள்ள பழிபோகும்; நல்வினை நணுகும்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) பேர் அருளாளனாதலின் பெண்ணும் ஆணுமாய் நின்றவன்;-(2) **மண்ணி** - காவிரியின் பிரிவுகளுள் ஒன்று; **கோகிலம்** - குயில்; **வண்டு** - அடியார்களேயன்றி வண்டுகளும். எச்சவும்மை தொக்கது. **செந்து** - பெரும் பண்களுள்

ஒன்று. (3) **பாணி** - தாளம். **பாரிடம்** - பூதகணம்; **எல்லி** - ஊழியிரவு; **கல்இயல் இஞ்சி** - கல்மதில்; **மஞ்சு** - மேகம்;-(5) **குறுமாண் உருவன் - மாண்** - மாணி - பிரமசாரி; வாமன உருவுடைய மால்; **தற்குறியாக** - தன்னால் குறிக்கொண்டு வணங்கப்படும் குறியாக. சிவலிங்கக்குறி. விட்டுணு வாமனாவதாரத்திற் பூசித்த தலவரலாற்றுக் குறிப்பு. இத்தலத்துக்கு குறுமாணக்குடி என்ற பெயர் வழங்குதலும் காண்க.-(7) **கண்ணார் கோயில்** என்ற பெயர்வந்த காரணம் குறிக்கும் தலவரலாறு குறித்தது. கோதம முனிவன்பால் இந்திரன் பெற்ற சாபமும், அது தீர்ந்த வகையுமாகிய வரலாறு. **முனி** - கோதமன்; **விண்ணவர்** - இந்திரனும் அவனைச் சார்ந்த தேவர்களும் என்றலுமாம்; **கண்ணார் கோயில்** என்ற பெயர்க் காரணம் கூறியபடி.-(8) **கண்ணார்** - கண்ணார் கோயில்; -(9) **செல்வனும்** என உம்மை விரிக்க; **அங்கு அம்மலக்கண்கொண்டு** - என்க. **மலக்கண்** - யான் காண்பேன் என்று அகங்கரித்த கண்; **அழலானான் தங்கு அமலக்கண்ணார் கோயில்** - அழலாகிய இறைவர் தங்குமிடமாகிய; **அமலம்** - மலமின்மை செய்யும். **உள்ளமாகிய அம்(அழகிய)கமலம்** - இதயதாமரை. **ஓடு** - ஏழனுருபாய் வந்த உருபு மயக்கம். தமதுள்ளமாகிய அங்கு அமலத்தோடு (அகங்கரமாகிய மாசு நீங்கிய) தூய்மையோடு என்றலும் ஆம்.

தலவிசேடம்:- திருக்கண்ணார் கோயில் - தலவரலாறுகள் பதிகம் 5-7 பாட்டுக்களுட் குறிப்பிடப்பட்டன. இது **குறுமாணக்குடி** என்று வழங்கப்படுகின்றது. சுவாமி - **கண்ணாயிர நாதர்;** அம்மை - **முருகுவளர் கோதை;** தீர்த்தம் - **இந்திர தீர்த்தம்** - இது வைத்தீசுவரர் கோயில் நிலயத்தினின்று தெற்கே 4 நாழிகையில் அடையதக்கது.

திருப்புள்ளிருக்கு வேளூர்

திருச்சிற்றம்பலம் **பண் - சீகாமரம்**

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா ருறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. (1)

செடியாய வுடறீர்ப்பான் றீ வினைக்கோர் மருந்தாவான்
பொடியாடிக் கடிமைசெய்த புள்ளிருக்கு வேளூரைக்
கடியார்ந்த பொழிற்காழிக் கவுணியன்சம் பந்தன்சொ ன்
மடியாது சொல்லவல்லார்க் கில்லையாம் மறுபிறப்பே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சம்பாதி சடாயு என்ற கழுகரசர் இருவர் பூசித்துப் பேறு பெற்றதனாற் புள்ளிருக்கும் வேளூர் என்ற பெயருடைய இத்தலத்தை வழிபட்டவர் வினைக்கீடாகிய பிறவிநோய் நீங்கி யின்பம் பெறுவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **சம்பாதி - சடாயு என்பார் - புள்ளானார் இருவர்க்கு அரையன்** என்க. **அரையன்** - தலைவன். அரசன் என்பது மருவிவந்தது. பாட்டுத்தோறும்

இவ்விரு கழுகுகளது பூசனையை எடுத்துச் சாற்றியமை காண்க. ஐயறிவேயுடைய புட்களும் வழிபட்டுப் பேறடையுமானால் அதைக் கண்டேனும் மக்கள் வழிபட்டுத் துன்ப நீங்கக் கடவர் என்று வழிப்படுத்தியது. -(2) **ஒருபாகம் தையலாளோடும்** என்க. **தையலாள்** - உமையம்மை; தலஅம்மை **தையனாயகி** என்ற பெயர்க் குறிப்புமாம்; **ஐயந்தேர்ந்துழல்வான்** - மூலமாகிய மல நோயுடைய உயிர்களின் துன்பங்களாகிய பலியைத் தாம் ஏற்றுத் தமது இன்பத்தை அவர்களுக்குக் கொடுப்பவர்; வைத்தியநாதர் என்ற குறிப்புக் காண்க. **மெய் சொல்லா இராவணன். பொய் சொல்லாது** என்பன இராமன் கதையுள் இராவணனும் சடாயுவும் எதிர்ந்த போது அவரவர் தத்தம் உயிர் தங்கும் பிராண நிலைகளை முறையே பொய்யாகவும், மெய்யாகவும் தெரிவித்துக் கொண்டு அதனால் சடாயு உயிரிழக்க நேர்ந்த வதத்தின் வரலாறு குறித்தன; **உயிர்போனான்** - உயிரை இழந்த சடாயு; அவன் பூசித்தபதி. அதனால் சடாயுபுரி எனப் பெயர் பெற்ற பதி என்றலுமாம்;-(3) **யோசனை-இனிதிருந்தான்** - சம்பாதி தான் பூசிப்பதற்காகக் காவிரிப்பூம்பட்டினத்தில் நந்தவனம் வைத்து அங்கு நின்றும் நாடோறும் மலர் கொண்டு வந்து வழிபட்ட வரலாறு. புகார் நகரம் இங்கு நின்று ஒரு யோசனைவழி (10 நாழிகையளவு) யுள்ளதும், மணிமேகலையுட் (3-53-54) புகார் நகரிற் சம்பாதிவனம் பற்றிப் பேசப்படுவதும் காண்க. **இமையோர் நாடொறும் மலர்தூவ** - சூரியன், செவ்வாய் முதலியோர் பூசித்திருத்தல் தலவரலாறு.-(4) **ஏகாயம்** - ஏகாசம் - மேலாடை - (5) **கீதம்** - இறைவரது புகழ் பாடும் இசை. **வேதத்தின்-வழிபட்டான்** - சடாயு பூசித்த வரலாறு; **போதம்** - சிவஞானம்;-(6) **திறங்கொண்ட....சிவதன்மமுரைத்த பிரான்** - தலவரலாற்று ளொன்றன் குறிப்பு-(7) **புத்தி ஒன்ற வைத்துகந்தான்** - "ஒருநெறிய மனம் வைத்துணர்ந்து" வழிபட்டான்; (சடாயு).(8) **முக்கோடிவாணாளுடையான்** - இராவணன்; (9) **ஆதித்தன்மகன்.... சடாயென்பான்** - சடாயு-சம்பாதி என்ற இருவரும் சூரியனது மக்கள் என்பது வரலாறு. இவர்கள் ஞாயிற்று மண்டலம்வரை பறந்து சென்று, சிறகுகள் கரிந்து வீழ்ந்து, இத்தலத்தில் வழிபட்டுச் சிறகும் பேறும் பெற்றனர் என்பது தலச் சிறப்பு. "வெங்கதிர் வெம்மையின் விரிசிறை யிழந்த, சம்பாதி யிருந்த சம்பாதி வனமும்" (3-53-54) என்று மணிமேகலையினும் குறிக்கப் பட்டது. **போதித்தல்** - ஆற்றலால் எடுத்துக் காட்டுதல். (10) **விடைத்துவரும்...பொருதழித்தான்** - இராவணன் சீதையை வெளவிச் செல்லாமற் றடுத்து அவனுடன் சடாயு போர் புரிந்தான் என்ற இராமன் கதைக் குறிப்பு,-(11) **செடியாய...மருந்தாவான்** - இத்தல இறைவர் வைத்தியநாதர் எனப்படும் பொருள்; 2-வது பாட்டும், "மந்திரமுந் தந்திரமு மருந்துமாகித் தீராநோய் தீர்த்தருள வல்லான்" என்ற தாண்டகமும் பார்க்க. **மடியாது** - மடி (சோம்பல்) யில்லாது; உலகில் வாளாபிறந்தும் செத்தும் கழியாமல் என்றலுமாம். **இல்லையாம் மறுபிறப்பே** என்று பலன் அருளுதல் காண்க.

தலவிசேடம்:- திருப்புள்ளிருக்கு வேளூர் - இது வைத்தீசுவரர் கோயில் என்று விளக்கமாய் அறியப்படும்; சடாயு, சம்பாதி என் கழுகரசர் இருவர் பூசித்துச் சிறகும் பேறும் பெற்றனர். சடாயுபுரி, சம்பாதிபுரி என்று அவர்கள் பேருடன் சேர்த்து ஊர்ப்

2185. நீடு திருநின்றி யூரி னிமலனார் நீள்கழ லேத்திக்
கூடிய காதலிற் போற்றிக் கும்பிட்டு வண்டமிழ் கூறி
நாடுசீர் நீடூர் வணங்கி நம்பர் திருப்புன்கூர் நண்ணி
யாடிய பாத மிறைஞ்சி யருந்தமிழ் பாடி யமர்ந்தார். **287**

பெயர் வழங்கப்படும்; அவர்களைப்பற்றி இராமன் கதைத் தொடர்புகளும் அவர்கள் பூசித்த சிறப்பும் பதிகத்துள் விதந்து பேசப்படும். வேதங்களும், முருகப்பெருமானும், சூரியன், செவ்வாய் முதலிய தேவர்களும், இராமன், இலக்குவன் அனுமன் முதலியோரும் பூசித்துச் சித்திபெற்றனர். - புள் - (சடாயு-சம்பாதி); இருக்கு-(வேதம்); வேள் - (முருகக் கடவுள்), ஊர் (சூரியன்) என்று இவ்வரலாறுகள் ஊர்ப் பெயரினுள் அமைந்தமை காண்க. முத்துக்குமாரசுவாமி மிக விளக்கமாய் வீற்றிருந்து வேண்டுவார்க்கு வேண்டும் வரங்கொடுத்து விளங்கியருள்கின்றார். இது பற்றிக் குமரகுருபர சுவாமிகளது முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ் சிறப்புடையது. சுவாமி - **வைத்தியநாதர்** - அம்மை - **தையனாயகி; தீர்த்தம் - சித்தாமிர்த தீர்த்தம்.** இது மிகச் சிறப்புடையது. மூழ்கினோர் நோய்களைத் தீர்த்து இன்பந்தருவது.

இது வைத்தீசுவரன் கோயில் என்ற இருப்புப்பாதை நிலயத்தினின்றும் கிழக்கே 1/2 நாழிகை யளவில் உள்ளது.

2185. பொருளுரை... நீடு...கூறி - நீடும் திருநின்றியூரில் இறைவரது நீண்ட பாதங்களைத் துதித்துப் பொருந்திய விருப்பத்தினாற் பரவி வணங்கி வண்மையுடைய திருப்பதிகத்தை அருளிச் செய்து; நாடுசீர் நீடூர் வணங்கி - நாடும் சிறப்புடைய திருநீடூரைப் பணிந்து; நம்பர்...அமர்ந்தார் - இறைவரது திருப்புன்கூரைச் சேர்ந்து அருட் கூத்தியற்றும் திருவடிகளை வணங்கி அருந்தமிழ்ப் பதிகம்பாடி அங்கு விருப்புடன் எழுந்தருளியிருந்தனர்.

விளக்கவுரை... நாடுசீர்நீடூர் - திருநீடு என்ற குறிப்புமாம். "நெல்லால் விளை கழனி நீடூர்" "நிலையார் மணிமாட நீடூர்" "நிறைபுனற் கழனிச் செல்வ நீடூர் (தேவா) என்ற சிறப்புக்களின் குறிப்பும் காண்க. **நிமலனார் -** இயல்பாகவே பாசங்களினீங்கியவர். இது சிவனெண்குணங்களுள் ஒன்று.

கூடியகாதல் - அங்குச் சேர்ந்ததனால் உண்டாகிய காதல் என்க. கழலை ஏத்துதலாற் கூடிய - பெருகிய - காதல் என்றலுமாம். "சிந்தை செயச் செயக், கருப்புச் சாற்றிலு மண்ணிக்குங் காண்மினே" (தேவா - திருப்புத்தூர்).

ஏத்தி - போற்றி - ஏத்தும் வகையிற் போற்றி; **கூறி -** சொன்மலர் மாலையாகச் சொல்லி.

ஆடிய - அருட்பெருங் கூத்தியற்றிய. *287*

திருநின்றியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டபாடை**

சூலம்படை சுண்ணப்பொடி சாந்தஞ்சுடு நீறு
பாலம்மதி பவளச்சடை முடிமேலது பண்டைக்
காலன்வலி காலின்னொடு போக்கிக்கடி கமழும்
நீலம்மலர்ப் பொய்கைநின்றி யூரின்னிலை யோர்க்கே. **(1)**

அச்சம்மிலர் பாவம்மிலர் கேடும்மில ரடியார்
நிச்சம்முறு நோயும்மிலர் தாமுந்நின்றி யூரில்
நச்சும்மிட றுடையார்நறுங் கொன்றைந்நயந் தானாப்
பச்சம்முடை யடிகடிருப் பாதம்பணி வாரே. **(2)**

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நின்றியூர் நிமலரையல்லாது எனது உள்ளம் வேறொன்றையும் உணராது; பதிகம் 3-6-9 - பார்க்க. அவர் பாதம் பணியும் அடியார் அச்சம் பாவம், கேடு, நோய் முதலிய தீமைகள் என்றும் இலராவர். 2 - பாட்டுப் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பாலம்மதி** - பால் போன்ற மதி; இளையமதி என்றலுமாம்; **பாலம்** - நெற்றி; நெற்றி மேற்றிங்கள் என்றலுமாம். 4-வது பாட்டும் பார்க்க. (2) **அடியார்** - அடிகள் திருப்பாதம் பணிவார்; அச்சம். பாவம், கேடு, நோய் இலராவர். நஞ்சம் என்பது எதுகை நோக்கி வலிந்துநின்றது; **நச்சும்மிடறு** - மென்றொடர்க் குற்றுகரம் மெல்லொற்று வல்லொற்றாயது; அம் - சாரியை; மகர வொற்று விரித்தல் விகாரம். **பச்சம்** - பக்ஷம் என்பதன்றிரிவு.-(4) கழல் தொழல் அல்லது அவர் அறிவு வேறு அறியார்;- (5) **குழல்** - புல்லாங்குழல்; குழலும் வண்டும் இசை செய்தலைக் கேட்டுக் குயில் எதிர் இசைபோலக் கூவும் என்பது தற்குறிப்பேற்றம்; (5) **களைகண்** - பற்றுக் கோடு. -(6) **சலவம்** - கங்கை, - (9) **அல்லரென ஆவாரென** - இன்னரென்றறியப் படாது நின்ற இவ்வழற்றூணர் பகைவரோ அன்றி நாட்டாரோ என்ற ஐயம் - (10) **நெறியில்-நினைவு ஒன்றை - அயராதே** - சிவஞானக் குறியில் வைத்த நினைப்பை மறவாமல்;**ஆதர்** - கீழ்கள்; சிவ நெறி நினைவினை மறவாமலும், அவநெறிக் குறிகளை நினையாமலும் அடிவாழ்த்து மதுவே வாழ்த்தாவது;

தலவிசேடம்:- திருநின்றியூர் - III பக்கம் - 415 பார்க்க.

திருநீடூர்

பிள்ளையார் பதிகம் கிடைத்திலது! **தலவிசேடம்** தொகுதி III பக்கம் 408, 412 பார்க்க.

2186. அங்குநின் றேகியப் பாங்கி லரனார் மகிழ்கோயி லான
எங்கணுஞ் சென்று பணிந்தே யேத்தி யிமவான் மடந்தை
பங்க ருறைபழ மண்ணிப் படிக்கரைக் கோயில் வணங்கித்
தங்கு தமிழ்மாலை சாத்தித் திருக்குறுக் கைப்பதி சார்ந்தார்; 288

திருப்புன்கூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம்**

முந்தி நின்ற வினைக ளவைபோகச், சிந்தி நெஞ்சே சிவனார் திருப்புன்கூர்
அந்த மில்லா வடிக ளவர் போலுங், கந்த மல்கு கமழ்புன் சடையாரே. (1)

மாட மல்கு மதில்சூழ் காழிமன், சேடர் செல்வ ருறையுந் திருப்புன்கூர்
நாட வல்ல ஞான சம்பந்தன், பாடல் பத்தும் பரவி வாழ்மினே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- *அந்தமில்லா அடிகள் சடையார்; பிறை வைத்தார்; எயில் மூன்றெரித்தார்; கபாலி; இத்தன்மையான இறைமைக் குணங்களையுடையவர் திருப்புன்கூர்ச் சிவனார்; அவர் எங்கள் உச்சி உறையும் இறையார்.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1)* **சிவனார்** *- தலச்சுவாமி பெயர்* **சிவலோகநாதர்** *என்ற குறிப்பு-(2)* **மூவராய் முதல்வர்** *- அயனரியரனெனு மூவரையும் அதிட்டித்து நிற்கும்முதல்வனார். "மூவரும்* **யானென மொழிந்த வாறே**"*- (3)* **உச்சி** *- துவாதசாந்தத் தாமரை - (4)* **சேவடியார்** *- 3-ல்கூறிய உச்சியிற் சேவடி வைத்தார் என்ற குறிப்பு.- (8)* **மலை அது அ(ன்)னார்** *- மலைபோன்றார்;-(9)* **பாடல்** *- வேதாகமங்களும், புனருற்பவத்தின் பொருட்டு நாத தத்துவத்தினின்று செய்யும் வீணையொலியும்;* **ஆடல்** *ஐந்தொழிற்கூத்தும்;-(10)* **கூறை** *- உடை; துணி;* **பிண்டம்** *- சோற்றுக் கவளம்;* **பிராந்தர்** *- மயக்க அறிவினர்.* **கபாலி வேடம் கண்டுதொழுமின்** *- நக்க உருவமும் பலியுண்ணுதலும் ஒத்திருப்பினும், அவர்கள் பிராந்தர். ஆதலின் அதனுள் மயங்காதீர்; அடிகளது* **கபாலி வேடமே** *மருளை நீக்குவது; அதனைத் தொழுமின் என்றது குறிப்பு.*

தலவிசேடம்: *திருப்புன்கூர்- 261-வது பாட்டின் கீழ்ப் பார்க்க. அதனுள் "சீகாழிக்கு" என்பதை "வைத்தீசுவரன் கோயிலுக்கு" என்று திருத்தி வாசித்துக்கொள்க.*

2186. பொருளுரை—அங்கு நின்று ஏகி - அத்தலத்தினின்றும் புறப்பட்டுச் சென்று; அப்பாங்கில்...ஏத்தி - அந்தப் பக்கத்தில் இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக் கோயில்களாயினவற்றை எங்கும் சென்று பணிந்து துதித்து; இமவான்...சாத்தி - பார்வதியம்மையாரது பங்கராகிய சிவபெருமான் எழுந்தருளிய திருப்பழமண்ணிப் படிக்கரைக் கோயிலை வணங்கி நிலைபெற்ற தமிழ் மாலையைச் சாத்தி; திருக்குறுக் கைப்பதி சார்ந்தார் - திருக்குறுக்கைப் பதியினைச் சார்ந்தருளினார்.

2187. திருக்குறுக் கைப்பதி மன்னித் திருவீரட் டானத் தமர்ந்த
பொருப்புவில் லாளரை யேத்திப் போந்தன்னி யூர்சென்று போற்றிப்
பருக்கை வரையுரித் தார்தம் பந்தணை நல்லூர் பணிந்து
விருப்புடன் பாட லிசைத்தார் வேதந் தமிழால் விரித்தார். 289

விளக்கவுரை... **அப்பாங்கில்** - அந்தப்பக்கங்களில்; **திருநின்றியூர் - திருநீடூர் - திருப்புன்கூர்** - என்ற இத்தலங்களின் பக்கங்களில்.

கோயிலான எங்கணும் - இவை திருக்கருப்பறியலூர் திருக்குரக்குக்கா, திருவாழ்கொளிபுத்தூர் முதலாயின என்பது கருதப்படும். **ஆன** - வெளிப்படலான; இறைவர் எங்கணும் நிறைந்து வீற்றிருப்பவராயினும் அவர் வெளிப்படலாயின இடங்களே திருக்கோயில்களாக வழிபடப் பெறுவன என்பது குறிப்பு.

இமவான்மடந்தை - இமவான் - இமயமலையரசன்; பர்வதராசன் என்பர். இக் காரணத்தால் உமையம்மையாரைப் பார்வதி என்ப.

பழமண்ணிப் படிக்கரை - பதிகம் கிடைத்திலது! தலவிசேடம் பார்க்க. 288

2187. *பொருளுரை...* திருக்குறுக்கைப்பதி....போந்து - திருக்குறுக்கையில் பொருந்தி அங்குத் திருவீரட்டானத் திருக்கோயிலில் விரும்பி எழுந்தருளிய மேரு மலை வில்லாளராகிய இறைவரைத் துதித்துப் புறப்பட்டுச்சென்று; அன்னியூர் சென்று போற்றி- திருஅன்னியூர் சென்று துதித்து; பருக்கை...விரித்தார்-பெரிய கையினையுடைய மலை போன்ற யானையை யுரித்த இறைவரது திருப்பந்தணை நல்லூரைப் பணிந்து, வேதங்களைத் தமிழால் விரித்துரைத்தருளிய பிள்ளையார் விருப்பத்துடனே பாடல்களைப் பாடியருளினார்.

விளக்கவுரை...**திருக்குறுக்கைப்பதி மன்னித் திருவீரட்டானத்தமர்ந்த - குறுக்கை** - தலப்பெயரும், வீரட்டானம் கோயிலின் பெயரும் ஆம். தலவிசேடம் பார்க்க.

பொருப்பு வில்லாளர் - (பொன்) மலையை வில்லாகக் கொண்டவர். சிவபெருமான்.

பருக்கைவரை - பரு - பருத்த. பெரிய; "பனைக்கை மும்மத வேழம்" "பருங்கை யானை" (தேவா); (2569)

கைவரை - கையையுடையமலை; யானை; வரைபோன்றதனை வரை என்றார்.

வேதம்தமிழால் விரித்தார் - பிள்ளையார் வேதப் பொருள்களைத் தமது தேவாரத் தமிழ்ப் பதிகங்களில் விரித்து உரைத்து உலகுக்கு எடுத்து உபதேசித்தருளியவர்.

விரித்தல் - மறைந்தும் சுருங்கியும் கிடந்த பொருள்களை விரித்து வெளிப்படுத்தலும், வேதம் பயிலும் ஒரு சிலரேயன்றிப் பலரும் அறியவிரித்தலுமாம்.

வேதம் தமிழால் - என்றதனால் ஆளுடைய பிள்ளையாரும் ஆசிரியர் சேக்கிழார்

பெருமானும் கண்டும் கொண்டும் கூறிய வேதம் தமிழ்மொழியின் உள்ளதன்று என்பது பெறப்படும். இதுபற்றிய ஆராய்ச்சியாளர் இதனைக் குறிக்கொள்வாராக.

வேதந் தமிழால் விரித்தார் - பாடல் இசைத்தார் - என்க. **விரித்தார்** - விரித்தாராகிய பிள்ளையார்; வினைப்பெயர்; இவ்வாறன்றி, **விரித்தார்** - முற்றெச்சமாகக் கொண்டு, **விரித்தாராய்ப் பாடல் இசைத்தார்** என்று முடித்தலுமொன்று, ஈண்டு வேதம் விரித்தல் இறைவரது எங்கு நிறைந்த தன்மை முதலிய பலவும் எடுத்துரைக்கப்படுதல்; பதிகக் குறிப்புப் பார்க்க.

விருப்புறுபாடலிசைத்தார் - என்பதும் பாடம். 289


திருப் பழமண்ணிப்படிக்கரை - இத்தலத்திற்கு ஆளுடைய பிள்ளையாரருளிய பதிகம் சிதலரித் தொழிந்தது போலும்,

தலவிசேடம்:- பழமண்ணிப் படிக்கரை - காவிரி வடகரை 30-வது பதி; **மண்ணி** - காவிரியினின்றும் பிரியும் கிளைகளுள் ஒன்று. **பழமண்ணி** - முன் காலத்தில் வந்த கிளை, நாளடைவில் தூர்வைப்பட்டோ, வேறு அதிகமான நிலங்களின் பயன்கருதியோ, பிற காரணங்களாலோ கையாளப்படாமற் போயினமையின் இப்போதுள்ள **மண்ணியாறு** வெட்டியமைக்கப் பட்டதென்றும், அதனால் அது **பழமண்ணி** என்று வழங்கப்பட்டதென்றும் கூறுவர். இத்தலம் **இலுப்பைப்பட்டு** என்று வழங்கப்படுகின்றது; இறைவர் நஞ்சுண்டபோது அது உள்ளே போகாமல் அம்மையார் கையாற் றடுத்து நிறுத்தினமையால் சுவாமி இங்கு நீலகண்டம் காட்டினர் என்ற வரலாறு இத்தலம்பற்றிக் கேட்கப் படுகின்றது. "திருநீலமிடற் றெம்பிரான்" என்ற நம்பிகள் திருப்பதிகக் குறிப்பும், தலத்துச் சுவாமி - அம்மை - பெயர்களும் காண்க. பாண்டவர் வழிபட்ட சிவலிங்கங்கள் ஐந்து உள்ளன. சுவாமி - நீலகண்டர்; அம்மை - **அமிர்தகரவல்லி;** பதிகம் 1.


இது திருவாழ்கொளி புத்தூரினின்றும் மேற்கே மட்சாலைவழி ஒருநாழிகை யளவில் உள்ளது.

திருக்குறுக்கை வீரட்டானம் - இதற்கும் பிள்ளையார் பதிகம் கிடைத்திலது!


தலவிசேடம் - இறைவர் வீரஞ் செய்த (எட்டு) வீரட்டங்களுள் காமனை எரித்த வீரம் நடந்த தலம். **"தீர்க்கவாகு"** (நீண்ட கையினையுடையவர்) என்னும் முனிவர் ஆகாய கங்கை நீரினால் திருமஞ்சன மாட்டவிரும்பி தம் நீண்ட கைகளை உயர்த்த அவை குறுகின காரணத்தால் திருக்குறுக்கை எனப் பெயரெய்தியது என்பது தல வரலாறு. இத்தலத்துச்சபை "காமாங்க நாசனி சபை" என்றும், "சம்பு வினோத சபை" என்றும் திருமறைக்காட்டுத் தலபுராணம் கூறும். பதிகம் 2. (III - 414 பக்கம் பார்க்க.) குறுக்கையிற் காமதகன மூர்த்தியும், கடுக்காய் மரமும், ஊரின் தென்மேற்கில் தகனகுண்டமும் மனதை உருக்குவன என்பர் திரு. வ. சு. ஷண்முகம் பிள்ளை.




தென்குரங்காடுதுறை



திருக்கடம்பூர் "கரக்கோயில்" "கடம்பை" - பாட்டு 2150



திருப்பழமண்ணிப்படிக்கரை - பாட்டு 2186



திருப்பந்தணைநல்லூர் - பாட்டு 2187

2188. அப்பதி போற்றி யகல்வா ரரனார் திருமணஞ் சேரி
செப்பருஞ் சீர்த்தொண்ட ரோடுஞ் சென்று தொழுதிசை பாடி
எப்பொரு ளுந்தரு மீச ரெதிர்கொள்பா டிப்பதி யெய்தி
யொப்பில் பதிகங்கள் பாடி, யோங்குவேள் விக்குடி யுற்றார். **290**

திருஅன்னியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி**

மன்னி யூரிறை, சென்னி யார்பிறை, அன்னி யூரமர், மன்னு சோதியே. (1)
பழகுந் தொண்டர்வம், மழக னன்னியூர்க், குழகன் சேவடி, தொழுது வாழ்மினே. (2)
இன்பம் வேண்டுவீ, ரன்ப னன்னியூர், நன்பொ னென்னுமின், உம்பராகவே (6)
பூந்த ராய்ப்பந்தன், ஆய்ந்த பாடலால், வேந்த னன்னியூர், சேர்ந்து வாழ்மினே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- *அன்னியூர் இறைவர் உயிர்க்குயிராகிய ஞானஒளி உருவர், அவரை அடைந்து வாழ்மின்.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1) மன்னி ஊர் இறை - உயிர்க்குயிராய் நிலை பெற்று உயிர்களை நடத்தும் தலைவர்;* ***சோதி*** *- ஞானஒளி உருவர்;- (2) வம் - வம்மின்;- (3)* ***நீதி*** *- நியதி;* ***பேணுதல்*** *- அதன்படி ஒழுக ஒருப்படுதல் - (4)* ***சித்தர்*** *- சித்தத்துள் நிலைபெறுபவர். சித்திகளைத் தருபவர் என்றலுமாம், -(5)* ***நிறைவு*** *- உயிர்களின் குறைகள் நீங்க இறைவனது நிறைவாம் தன்மை பெறுநிலை;* ***உறவு*** *- அன்பு;* ***அறவன்*** *- தரும உருவினன். (7)* ***பந்தம்*** *- மலம்; -(8)* ***தீர்த்தன்*** *- தூய்மை செய்பவன்; -(9)* ***அரவன்*** *- அரவு பூண்பவன்; (11)* ***ஆய்ந்த*** *- மறையின் நுட்பங்களைக் கூறிய.*

தலவிசேடம்:- ***திருஅன்னியூர்*** *- காவிரிக்கு வடகரையில் 22-வது தலம். இது* ***பொன்னூர்*** *என்று வழங்கப்படுகின்றது. வருணன் பூசித்ததலம். இறைவரது ஒளியுருவம் இரண்டு பதிகங்களிலும் போற்றப்பட்டது. அடியார்களை வழிப்படுத்திப் பிள்ளையார் அருளிய பதிகப் பெருமையுடையது. சுவாமி -* ***ஆபத்சகாயர்;*** *அம்மை -* ***பெரியநாயகியம்மையார்;*** *தீர்த்தம் -* ***வருண தீர்த்தம்*** *- பதிகம் 2.*

இது காவிரியின் வடகரையில் 21-வது தலமாகிய திருநீடூரினின்றும் மேற்கே மட்சாலைவழி மூன்று நாழிகையளவில் அடையத்தக்கது.

2188. ***பொருளுரை....*** *அப்பதி - அகல்வார் - அத்திருப்பதியினைப் போற்றி மேற்செல்வாராகி; அரனார்...பாடி - சிவபெருமானது திருமணஞ்சேரியினைச் சொல்லுதற்கரிய சிறப்பையுடைய திருத்தொண்டர்களுடனே சென்று வணங்கித் திருப்பதிகம்பாடி; எப்பொருளும்...பாடி - எல்லாப் பொருள்களையும் தருகின்ற இறைவரது திரு எதிர்கொள்பாடிப் பதியினையடைந்து ஒப்பற்ற திருப்பதிகங்களைப் பாடியருளி; ஓங்கு...உற்றார் - ஓங்கும் திருவேள்விக்குடியினைச் சேர்ந்தார்.*

2189. செழுந்திரு வேள்விக் குடியிற் றிகழ்மண வாளநற் கோலம்
பொழிந்த புனற்பொன்னி மேவும் புனிதத் துருத்தி யிரவிற்
றழும்பிய தன்மையுங் கூடத் தண்டமிழ் மாலையிற் பாடிக்
கொழுந்துவெண் டிங்க ளணிந்தார் கோடிகா விற்சென் றடைந்தார். 291

---

*விளக்கவுரை... **அரனார்அரன்** - பசுக்களின் பாசங்களை அரிப்பவன். பந்தணைநல்லூரில் வேதமூலப் பொருள்களை விரித்தருளிய பிள்ளையார், திருமணஞ்சேரியில் அம்முதல்வரே முதல்வராந்தன்மையை உலகுக் கறிவுறுத்தியருளினார் என்பது குறிக்க **அரனார்** என்றார். பதிகக் குறிப்புப் பார்க்க.*

***எப்பொருளும் தரும் ஈசர் எதிர்கொள்பாடி** - உலகுக்கு முதல்வராதலின் தமது அருளைத் தொழிற்பாட்டிற்கு இடமாயுள்ள உயிர்களுக்கு வேண்டுவன எல்லாம் தரும் இறைமைத் தன்மையையுடையராதலை ஈண்டு உலகுக் கறிவுறுத்தினார் என்பது குறிப்பு. பதிகக் குறிப்புப் பார்க்க. நம்பிகள் பதிகமும் பார்க்க. **ஒப்பில் பதிகங்கள்** என்ற குறிப்புமிது. "அடியவ ரிச்சையி லெவையெவை யுற்றன வவைதரு வித்தருள் பெருமாளே" (திருப்புகழ்)*

***பதிகங்கள்** - தலப்பதிகங்கள் பலவும் குறிப்பு. 290*

2189. பொருளுரை... செழுந்திரு...கோலம் - செழுமையாகிய திருவேள்விக் குடியில் விளங்கும் திருமணவாளக் கோலமானது; பொழிந்த...துருத்தி - பொய்யாது வருகின்ற நீர்வளத்தையுடைய தூய்மையாகிய திருத்துருத்தியில் பகலில் காணக் காட்டி; இரவில்...பாடி - இரவில் இங்கு (வேள்விக்குடியில்) எழுந்தருளிய தன்மையினையும் சேர்த்து அறிவுறுத்தித் தண்ணிய தமிழ்மாலையாகிய திருப்பதிகத்திற் பாடியருளி; கொழுந்து...அடைந்தார் - முளைக்கும் கொழுந்துபோன்ற வெள்ளிய பிறைச் சந்திரனை அணிந்த இறைவரது திருக்கோடிகாவிற் போய் அடைந்தனர்.

*விளக்கவுரை... **மணவாள நற்கோலம் - துருத்தியிலே (பகலிற் காட்டி) - இரவில் வேள்விக் குடியில் தழும்பிய தன்மை** என்க. பகலிற் காட்டி என்பது தொக்கு நின்றது. துருத்தி - திகழ்மணவாள நற்கோலம் வேள்விக் குடியில் இரவில்-தழும்பிய என்றதனால் துருத்தியில் பகலில் விளங்குதல் பெறப்படும். "பகலிடம் புகலிடம் வீங்கு நீர்த்துருத்தியார்" என்ற பதிகம் காண்க.*

***கூட** - இந்த இரண்டும் ஒரே தலமாகக் கருதப்படுதல் மரபு. தலவிசேடம் பார்க்க.*

***பொழிந்த... துருத்தி - துருத்தி** - ஆற்றிடைக்குறை. காவிரியின் நீர்ச் செழிப்பினால் உளதாகிய ஆற்றிடைத்திடர் என்பது குறிப்பு. **பொழிந்தபுனல்** - பருவந்தவறாது வரும் தன்மையும் மிகுதியாய் வரும் நிலையும் குறிப்பு. திடர் உண்டாதலுக்குரிய காரணமுங் குறித்துணர்த்தியபடி.*

***புனிதத்துருத்தி** - ஆற்றிடைக் குறையானது, இறைவரை வணங்குதற்குரிய தூய இடங்கள் பலவற்றுள் ஒன்றாக வைத்தெண்ணப்படுதல் குறிக்கப் **புனிதம்** என்றார். "காடுங் காவுங் **கவின்பெறு துருத்தியும்**" (திருமுருகு).*

***தழும்புதல்** - விளங்க வெளிப்பட்டு எழுந்தருளியிருத்தல்.*

கொழுந்து - புதிதாய்த் தோன்றுதலிற் கொழுந்து போலும் என்பதாம்; 291

சில குறிப்புக்கள்:- இறைவர் வேள்விக்குடியும் துருத்தியுங்கூட வீற்றிருந்த தன்மைபற்றிப் பிள்ளையார் அருளியதுபோல, ஆளுடைய நம்பிகளும் "மூப்பதுமில்லை" என்ற பண் - நட்டராகப் பதிகத்துள் "காப்பது வேள்விக்குடி தண்டுருத்தி யெங்கோன்" என்று சேர்த்துப்பாடி அருளியதும் காண்க. துருத்தி காவிரிக்குத் தென்கரையில் 37-வதாகத் தனித் தலமாகவும் போற்றப்பட்டு மூவர் முதலிகள் திருப்பதிகங்களும் பெற்ற சிறப்புடன் விளங்குகின்றது. பிள்ளையாரும் இவ்வியாத்திரையில் பின்னர்த் தொடர்ந்து காவிரிக்குத் தென்கரைத் தலங்களை வணங்கிச் சென்றருளிய போது திருவாவடுதுறைற் பொற்கிழிபெறப் பாடிப் பின் திருத்துருத்தியினையும் வணங்கி "வரைத்தலைப் பசும்பொன்" (நட்டராகம் - திருவிராகம்) என்ற பதிகம் பாடியருளினர். புரா. 436 பாட்டுப் பார்க்க. இதில் ஆளுடைய நம்பிகள் வடகுளத்துக் குளித்துப் புதியபிணி நீங்கினர். அரசுகளது திருநேரிசைப் பெருமையும் கருதுக. இது (துருத்தி) குற்றாலம் என வழங்கப்படும். (பாண்டி நாட்டுத் திரு குற்றாலம் வேறு.)

திருமணஞ்சேரி

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம்**

அயிலாரு மம்பத னாற்புர மூன்றெய்து, குயிலாரு மென்மொழி யாளொரு கூறாகி
மயிலாரு மல்கிய சோலை மணஞ்சேரிப், பயில்வானைப் பற்றிநின் றார்க்கில்லை பாவமே.(1)
கண்ணாருங் காழியர் கோன்கருத் தார்வித்த, தண்ணார்சீர் ஞானசம் பந்தன் றமிழ்மாலை
மண்ணாரு மாவயல் சூழ்ந்த மணஞ்சேரி, பண்ணாரப் பாடவல் லார்க்கில்லை பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- மணஞ்சேரி யிறைவரைப் பணிபவர் வினைதீரும். அவர்மேல் வினைசேரா; அவர்க்கு இன்பம் எய்தும்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) அயில் - கூர்மை;- (3) **எய்ப்பானார்** - தொண்டு செய்து இளைத்தவர்; (5) **எறி** - பறித்தல்; **வெறி** - மணம் விரித்தல் என்றலுமாம்.

தலவிசேடம்:- திருமணஞ்சேரி-காவிரிக்கு வடகரை 25-வது தலம். கீழைத் திருமணஞ்சேரி என்று வழங்கப்படும்; காமவேள் பூசித்துப் பேறு பெற்றதலம் என்ப. வணிகப் பெண்களிருவர் தங்கள் சந்ததிகளுட் கொண்டுங் கொடுத்தும் சம்பந்தம் செய்துகொள்ள உடன்பட்டிருக்க, ஒருத்தி வயிற்றில் மகவு ஆமையாயிருக்கக்கண்டு மற்றவள் பெண் கொடுக்க மறுக்கவே, அந்த ஆமை பூசித்து மனித உருவம்பெற்று அப்பெண்ணை மணக்கும் பேறு பெற்றது என்பது தலவரலாறு. சுவாமி - **அருள் வள்ளனாதர்;** அம்மை - **யாழினு மென்மொழியம்மை** - பதிகம் 2.

இத்தலம் 24-வது திரு எதிர்கொள்பாடியினின்றும் கிழக்கே 1/2 நாழிகையளவில் உள்ளது.

திருஎதிர் கொள்பாடி - பிள்ளையாரது பதிகம் கிடைத்திலது. அத்திருப்பதிகக் குறிப்பு இறைவர் எப்பொருளும்தரும் ஈசராவார் என்பது போலும். 2188-ல் ஆசிரியர்

*காட்டியருள்வது காண்க. நம்பிகள் பதிகம் பார்க்க. தலவிசேடம் 111 - பக்கம் 421 பார்க்க. ஐராவதம் பூசித்த காரணத்தால் சுவாமி **ஐராவதேசுவரர்** எனப்பெறுவர். அம்மை - **மலர்க்குழல் நாயகி.***

திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்

திருச்சிற்றம்பலம் **பண் - சாதாரி**

ஓங்கிமே லுழிதரு மொலிபுனற் கங்கையை யொருசடைமேற்
றாங்கினா ரிடுபலி தலைகல னாக்கொண்ட தம்மடிகள்
பாங்கினா லுமையொடும் பகலிடம் புகலிடம் பைம்பொழில்சூழ்
வீங்குநீர்த் துருத்தியா ரிரவிடத் துறைவர்வேள் விக்குடியே... (1)

விண்ணுலாம் விரிபொழில் விரைமணற் றுருத்திவேள் விக்குடியும்
ஒண்ணுலா மொலிகழ லாடுவா ரரிவையோ டுறைபதியைத்
தண்ணுலாம் புகலியு ளருமறை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணுலா மருந்தமிழ் பாடுவா ராடுவார் பழியிலரே. (11)


திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் உமையொடும் பகலில் திருத்துருத்தியிலும் இரவில் திருவேள்விக் குடியிலுமாக மணவாளக் கோலமாக எழுந்தருளியுள்ளார். இரண்டும் ஒரே தலமாகக் கருதப்படுவன.

*பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வீங்குநீர்** - நீர்ச் செழிப்பு மிக்க. **துருத்தி** - ஆற்றிடைக் குரை. (3) **மழைவளர்** - **மழை** - இங்குக் குளிர்ச்சியுடைய என்ற பொருள்தந்து நின்றது; **விழை** - விருப்பம்;-(5) **களம்கொள** - இருக்குமிடமாக;- (9) **கரைகடல்** - கரையும் கடல். **கரைதல்** - ஒலித்தல்; **அரவணைக் கடவுள்** - திருமால்;- (10) **அயமுக வெயில்** - கொடிய வெயில்; **வியனகர்** - இடமகன்ற நகரம்; -(11)**விரைமணல் துருத்தி** - மலர்த் தாது படிந்த மணமுடைய மணற்பரப்புடைய துருத்தி; "தூமணற் றுருத்தி யானை" (அப்-தேவா);*

*தலவிசேடம்:- **திருவேள்விக்குடி** - காவிரியின் வடகரையில் 23-வது தலம். காவிரியின் தென்கரை 37வது தலமாகிய துருத்தியுடன் சேர்த்து ஒருதலமாகக் கருதப்படுவது. "துருத்தி வேள்விக்குடியும்...அரிவையோடுறை பதியை" என்று பதிகத்துள் பிள்ளையார் அருளுதல் காண்க. இரண்டனையும் சேர்த்து ஒரே பதிகத்தாற் போற்றியதும் குறிக்க. தலவிசேடம் III - பக்கம் 421 - பார்க்க.*


2190. பொருளுரை... திருக்கோடிகாவில்... பாடி - திருக்கோடிகாவில் விரும்பி எழுந்தருளிய தேவர்களுக்குச் சிகாமணி போன்ற இறைவரை, எருக்குடனே கொன்றையினையும் அணிந்தவரை, வெள்ளைப் பன்றியாகிய திருமாலினது பரிய கொம்பினைப் பூண்ட பெருமானைப் பணிந்து சொன்மாலையாகிய திருப்பதிகத்தினைப் பாடி: கருக்கோடி...சென்றார் - கருவின் கோடியை நீப்பவர்கள் சேர்தற்கிடமாகிய திருக்கஞ்சனூரைத் தொழுவதற்குச் சென்றருளினர்.




கஞ்சனூர் - கோயில் முன் பார்வை (பாட்டு - 2191)



திருமாந்துறை (பாட்டு - 2191)



திருமணஞ்சேரி (பாட்டு - 2188)



திருக்கோடிகா - கருப்பக்கிருகம் (பாட்டு - 2190)

2190. திருக்கோடி காவி லமர்ந்த தேவர்சி காமணி தன்னை,
எருக்கோ டிதழியும் பாம்பு மிசைந்தணிந் தானை, வெள் ளேனப்
பருக்கோடு பூண்டபி ரானைப், பணிந்துசொன் மாலைகள் பாடிக்
கருக்கோடி நீப்பார்கள் சேருங் கஞ்சனூர் கைதொழச் சென்றார். 292

விளக்கவுரை–தேவர்சிகாமணி - தேவர்கள் தலைமேற் சூடும் முடிமணி போன்றவர். *சிகா* - சிகை; முடி என்ற பொருளில் வந்தது. *சிகாமணி;* முடிமேற் சூடும்மணி. மணிபோன்றவரை மணி என்றார். தரித்தார்க்குச் செல்வ நலங்களையும், கண்டார்க்கு விருப்பத்தையுந் தருவன மணிகள்; அவைபோல இறைவரும் தம்மைச் சென்னிமீது தரித்தார்க்குப் போகமும் வீடும் தருபவர்; ஆதலின் சிகாமணி எனப் பெறுவர். தேவரும் தம் சிகாமணியாகக் கொண்டு சென்னி மேல் தரித்துக் கொள்ளும் இறைமைத் தன்மையுடையோன் என்றபடி

எருக்கோடு இதழியும் - புல்லியதாகிய எருக்குடன் நல்லதாகிய இதழியும் என்க. இரண்டும் ஒப்பாக. எருக்கு. *அணிந்தான்* - விருப்பு வெறுப்பு இல்லாத இறைமைத் தன்மையின் குறிப்பு.

சிகாமணித்தன்னை - அணிந்தானை - பிரானைப் பணிந்து என மூன்றும் ஒரு பொருள் மேனின்றன; *கோடிகா* - மூன்று கோடி - (திரிகோடி) இருடிகள் பூசித்த தலமென்று தலப்பெயர் வரலாற்றுக் குறிப்புமாம்.

வெள்ளேனப் பருக் கோடு பூண்டானை - வெள்ளேனம் - திருமால் கொண்ட வெள்ளைப்பன்றி யவதாரம். *கோடுபூண்டது.* அந்த அவதாரத்தில் அப்பன்றியின் ஆற்றலைச் சிவபிரான் அடக்கி அதன் கொம்பைப் பறித்தணிந்து கொண்டவரலாறு குறித்தது. "ஏன முளைக்கொம் பவை பூண்டு" (தேவா)

கருக்கோடி நீப்பார்கள் - கரு - பிறவி; *கோடி* - எல்லை; பிறவியின் எல்லையினைக் கடப்பவர்களே திருக்கஞ்சனூரினை அணுகி வணங்குவார் என்பது. கோடிக்கணக்கான பிறவி என்று எண்பற்றி உரைப்பாருமுண்டு. *நீத்தல்* - கடத்தல்;

பருக்கோடணிந்த - என்பதும் பாடம். 292

திருக்கோடிகா

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம்**

இன்றுநன்று நாளைநன் றென்றுநின்ற விச்சையாற்
பொன்றுகின்ற வாழ்க்கையைப் போகவிட்டுப் போதுமின்
மின்றயங்கு சோதியான் வெண்மதி விரிபுனற்
கொன்றைதுன்று சென்னியான் கோடிகாவு சேர்மினே. (1)
கொந்தணி குளிர்பொழிற் கோடிகாவு மேவிய
செந்தழ லுருவனைச் சீர்மிகு திறலுடை
யந்தணர் புகலியு ளாயகேள்வி ஞானசம்
பந்தன தமிழ்வல்லார் பாவமான பாறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

2191. கஞ்சனூ ராண்டதங் கோவைக் கண்ணுற் றிறைஞ்சிமுன் போந்து,
மஞ்சணை மாமதில் சூழு மாந்துறை வந்து வணங்கி
யஞ்சொற் றமிழ்மாலை சாத்தி யங்ககன் றன்பர்முன் னாகச்
செஞ்சடை வேதியர் மன்னுந் திருமங் கலக்குடி சேர்ந்தார். 293

பதிகக் குறிப்பு:- வாழ்க்கை நிலையாமை கூறி மக்களை இறைவன் திருநெறியில் வழிப்படுத்தியது. "கோடி காவனைக் கூறாத நாளெல்லாம், பாடி காவலிற்பட்டுக் கழியுமே" (தேவா); "காலைக் கரையிழையாற் கட்டித்தாங் கையார்த்து, மாலை தலைக் கணிந்து மையெழுதி, மேலோர், பருக்கோடி மூடிப் பலரழா முன்னம் திருக்கோடி காவடைநீ சென்று", (ஐயடிகள் - க்ஷேத் - வெ - 6-11-ம் திருமுறை) என்பன முதலிய திருவாக்குக்களின் கருத்தும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **பொன்றுகின்ற** - கழிந்துபோய்க் கொண்டிருக்கின்ற; உறுதியாய் இறந்துபடுகின்ற - "பொன்றுங்காற் பொன்றாத் துணை" (குறள்): **விரிபுனல்** - கங்கை; (2) **ஆதரித்து** - அபிமானித்து; விரும்பி; **நல்லதோர் நெறி** - இவ்வாழ்க்கை போலாது துன்பமற்ற நெறி; சிவநெறி - "தக்கதோர் நெறி" (3) என்பதும் காண்க; **வெள்வளை** - வளையணிந்த அம்மை; (6) **ஏவம்** - எவ்வம்; குற்றம்;-(7) **ஏண்** - பெருமை; **மாண்** - மாட்சி - (8) **தசமுகன்** - இராவணன்; **வரை** - மலை; கயிலை;-(10) **தட்டு** - தடுக்கு; **விட்ட** - தொங்கிவிட்ட.

தலவிசேடம்:- **திருக்கோடிகா** - 3 கோடி முனிவர்கள் பூசித்தபதி. திருத்தாண்டகமும் திருக்குறுந்தொகையும் பெற்றதலம். சுவாமி - **திருகோடீசுரர்;** அம்மை - **வடிவம்மை;** தீர்த்தம் - **காவிரி - சிருங்கதீர்த்தம்** - (கோயிலுக்கு வடக்கில் உள்ள குளம்.) பதிகம் - 4.

நரசிங்கன்பேட்டை நிலயத்தினின்று 1 நாழிகை யளவும், 36-வது கஞ்சனூரினின்றும் கிழக்கே மட்சாலைவழி 2 நாழிகை யளவிலும் அடையலாம். திருவிடைமருதூரினின்றும் 1 1/2 நாழிகை; இடையில் காவிரியைக் கடந்து அடைவது மற்றொருவழி.

2191. பொருளுரை.... கஞ்சனூர்...போந்து - திருக்கஞ்சனூரில் ஆட்சிபுரிந்து வீற்றிருந்தருளும் தமது பெருமானைக் கண்டு கும்பிட்டு மேலே சென்று; மஞ்சு...சாத்தி - மேகந் தவழும் மதில் சூழ்ந்த திருமாந்துறையிற்போய் வணங்கி அழகிய சொன்மாலையாகிய திருப்பதிகம் சாத்தி; அங்ககன்று...சேர்ந்தார் - அங்கு நின்றும் புறப்பட்டு அன்பர்கள் எதிர் கொள்ளச் சிவந்த சடையினையுடைய வேதியராகிய சிவபெருமான் நிலைபெற வீற்றிருந்தருளும் திருமங்கலக்குடியினைச் சேர்ந்தருளினர்.

விளக்கவுரை... **கஞ்சனூராண்ட தம் கோவை** - "கஞ்சனூ ராண்ட கோவை" என்ற ஆளுடைய அரசுகளது இத்தலத் திருத்தாண்டகத்தின் ஆட்சிபோற்றப்பட்டது.

கண்ணுற்று - தமது மனத்துப்பொருந்தக் கண்டு. **கண்ணுறல்** - காதல்.

மாந்துறை-இது மேற்கில் காவிரிக்கு வடகரை 58-வது தலமாய்த்

2192. வெங்கண் விடைமேல் வருவார் வியலூ ரடிகளைப் போற்றித்
தங்கிய வின்னிசை கூடுந் தமிழ்ப்பதி கத்தொடை சாத்தி
அங்க ணமர்வார்தம் முன்னே யருள்வேடங் காட்டத் தொழுது
செங்கண்மா லுக்கரி யார்தந் திருந்துதே வன்குடி சேர்ந்தார். 294

திருஅன்பிலாலந்துறைக்கு அணிமையில் உள்ள மற்றொரு திருமாந்துறையுடன் மயங்கியறிதற்பாலதன்று. இதற்குப் பிள்ளையார் பதிகம் கிடைத்திலது! இது வைப்புத் தலங்களுள் ஒன்று. கஞ்சனூருக்கும் திருமங்கலக்குடிக்கும் இடையில் அணிமையில் உள்ளது. **அன்பர் முன்னாக** - அடியார்கள் முன்வந்து எதிர்கொள்ள.

மஞ்சணிமாமதில் - என்பதும் பாடம்.

தலவிசேடம்- திருக்கஞ்சனூர் - பிள்ளையார் பதிகம் கிடைத்திலது! கஞ்சனது (கம்சன்) நகரம் என்பது தலப்பெயர். பிரமதேவரும் அனற் கடவுளும் பூசித்த தலமென்ப. "அனலோன் போற்றும்" (தேவா); அரதத்த சிவாசாரிய சுவாமிகள் அவதரித்துச் சிவவிளக்கமுடையராய் வீற்றிருந்து பல அற்புதங்களாற் சைவத்தாபனம் செய்த சிறப்புடையது; தலத்துக்கு மேற்கே இவரும் இவர் வழிபட்ட சிவலிங்கமூர்த்தியும் தாபிக்கப்பட்டு வழிபடப் பெறுகின்றனர். நடராசர் சிவகாமித் திருவுருவங்கள் சிலா உருவமாக உள்ளன. பதிகம் 1.

நரசிங்கன் பேட்டை நிலயத்திலிருந்து வடக்கே காவிரிக்கு வடகரையில் 1 நாழிகையளவில் உள்ளது. 293

2192. பொருளுரை- வெங்கண்...சாத்தி - வெவ்விய கண்ணுடைய இடபத்தின் மேல் வருவாராகிய திருவியலூர் இறைவரைத் துதித்துத் தங்கிய இனியஇசை பொருந்திய தமிழ்ப் பதிகமாலை சாத்தி; அங்கண்...தொழுது - அத்தலத்தில் விரும்பி எழுந்தருளியிருக்கும் தமது முன்பு இறைவர் அருட்டிருவேடம் நேரே காட்டிடத் தொழுது; செங்கண்-சேர்ந்தார் - செங்கண்மாலுக்கு அறிவரியவராகிய இறைவரது திருந்து தேவன்குடியினைச் சென்று சேர்ந்தருளினார்.


விளக்கவுரை- **வருவாராகிய** - **அடிகளை** என்க.

தங்கிய இன்னிசைகூடும் - தங்கிய ஓசை பெற்று மேற் செல்லும் பதிக யாப்பிசையமைதிக் குறிப்பு.


அங்கண்-தொழுது - இத்தலத்தில் பிள்ளையாருக்கு இறைவர் நேரே அருள் வேடம் காட்டிய செய்திக் குறிப்பு. "கண்ணார்தரு முருவாகிய கடவுள்ளிடம்" "விண்ணோரொடு மண்ணோர்தொழும்" என்ற பதிகம் (5) இக்குறிப்புப் போலும்.

அமர்வார் - இறைவர் என்று கொண்டு **அமர்வார்** - காட்ட என்று கூட்டியுரைப்பாருமுண்டு.


விடைமீதுமேவும் - என்பதும் பாடம். 294




திருந்துதேவன்குடி (பாட்டு - 2193)



திருஅன்னியூர்



திருப்புறம்பயம் (பாட்டு - 2139)



திருவியலூர் - பாட்டு 2192

2193. திருந்துதே வன்குடி மன்னுஞ் சிவபெரு மான்கோயி லெய்திப்
பொருந்திய காதலிற் புக்குப் போற்றி வணங்கிப் புரிவார்
"மருந்தொடு மந்திர மாகி மற்று மிவர்வேட" மாமென்
றருந்தமிழ் மாலைபு னைந்தா ரளவில்ஞா னத்தமு துண்டார். **295**

திருவியலூர்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டபாடை**

குரவங்கமழ் நறுமென்குழ லரிவையவள் வெருவப்
பொருவெங்கரி படவென்றத னுரிவையுட லணிவோன்
அரவும்மலை புனலும்மிள மதியுந்நகு தலையும்
விரவுஞ்சடை யடிகட்கிடம் விரிநீர்விய லூரே. (1)
விளங்கும்பிறை சடைமேலுடை விகிர்தன்விய லூரைத்
தளங்கொண்டதொர் புகலித்தகு தமிழ்ஞானசம் பந்தன்
துளங்கிறமிழ் பரவித்தொழு மடியாரவ ரென்றும்
விளங்கும்புக ழதனோடுயர் விண்ணும்முடை யாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது இடம் விரிநீர் வியலூரே.

பதிகப்பாட்டுக் குறிப்பு:-(1) குரவம் - குராமலர்;- (2) ஏறு - இடபம்; ***நிலையானான்*** *- அழிவில்லாதவன்; எல்லா உயிருள்ளும் நிலைபெற்றவன், -(4)* ***கழை முத்தந் நிரை சிந்தி*** *- மூங்கிலினின்று முத்துத் தோன்றுதல் குறிப்பு. (492)-(6)* ***நிலையவன்*** *- தவத்தின் உறைத்து நின்ற அருச்சுனன்.-(7)* ***இரவு*** *- இரத்தல் - பலி ஏற்றல்.* ***உயிரான்*** *- உயிர்க்குயிராயுள்ளவன்;* ***விளைபொருள்கள் தானாகிய தலைவன்*** *- புவனங்களை மாயையாகிய தனது பரிக்கிரக சத்தியினின்றும் தோற்றுவிப்பவன். -(9)* ***அளம்படுதல்*** *- வருந்துதல்;* ***விளம்பட்டு*** *- வெளிப்பட்டு;- (10)* ***தடுக்கு*** *- பாய்.* ***பிடக்கு*** *- பிடகநூல்*

தலவிசேடம்:- ***திருவியலூர்*** *- காவிரிக்கு வடகரையில் 43-வது தலம். இங்குக் காவிரி பரந்து செல்லுதலின்* ***விரிநீர் வியலூர்*** *என்று பதிகத்துப் போற்றப்பட்டது. இது பண்டாரவாடைத் திருவிசநல்லூர் என்று வழங்கப்படுகின்றது. இங்கு ஆளுடைய பிள்ளையாருக்கு இறைவர் அருள்வேடங் காட்டிய வரலாற்றுக் குறிப்புப் பதிகத்துள் 5-ம் பாட்டினும் புராணத்துள்ளும் காண்க. சுவாமி -* ***யோகாநந்தேசுவரர்;*** *அம்மை -* ***சாந்தநாயகி;*** *பதிகம் 1.*

இது திருவிடைமருதூர் நிலயத்தினின்றும் வடமேற்கே வேப்பத்தூர் மட்சாலை வழி 2 1/2 நாழியளவில் அடையத்தக்கது.

2193. ***பொருளுரை-*** *திருந்து தேவன்குடி...புரிவார் - திருந்துதேவன்குடியில் நிலைபெற வீற்றிருந்தருளும் சிவபெருமானது திருக்கோயிலினைச் சேர்ந்து; பொருந்திய...புரிவார் - பொருந்திய காதலினாலே புகுந்து துதித்து வணங்கி நினைவாராகி; மருந்தொடு....என்று*

– இவர்வேடம் மருந்தும் மந்திரமும் ஆம் என்று; அருந்தமிழ்மாலை...அமுதுண்டார் - அளவில்லாத ஞான அமுதினை உண்டாராதலின் பிள்ளையார் அரிய தமிழ்மாலையைச் சாத்தியருளினர்.

விளக்கவுரை– **திருந்து தேவன்குடி** - தலப்பெயர்; **திருந்து** என்பது காரணக் குறியாகிய அடைமொழியாய்த் தேவன் குடி என்ற தலப்பெயரோடு சேர்த்து வழங்க லாயிற்று. **திருந்துதலாவது** உயிர்கள் சீர்திருந்துதற் கேதுவாதல். பிறவினை தன்வினையாய் வந்தது. **தேவன்** - சிறப்புப்பற்றித் தேவதேவனாகிய சிவபெருமானைக் குறித்தது. 'தேவர் தேவு" (1) - (11) பதிக ஆட்சி காண்க. சிவபெருமான் என்று இறைவரது சிறப்பாகிய பெயராற் கூறியதும் இக்குறிப்பு.

புரிவார் - புரிதல் - இடைவிடாது நினைத்தல்; புரிவார் - முற்றெச்சம். புரிவாராகி; "புரிந்து கேட்கப்படும்" (பதிகம்). **புரிதல்** - வலம்வருதல் என்ற குறிப்பும் பட நின்றது.

"மருந்தொடு...வேடமாம்" என்று - பதிகக் கருத்து. பதிகக் குறிப்புப் பார்க்க.

அளவில் ஞானத்தமுதுண்டார் - அணைந்தார் - உண்டாராதலின் எனக்காரணக் குறிப்புப்பட உரைக்க நின்றது. என்னை? அடிகள் வேடங்களின் தன்மையும், அது உயிர்களுக்குத் துன்பநீக்கி இன்பமளித்து உறுதி பயக்கும் நிலைமையும் அளந்து காட்டும் இயல்பு அளவில்லா ஞானத்தினாலன்றி வேறு எதனாலும் அமையாதாதலின். "அருந்தமிழ்" என்ற கருத்தும் இது.

வேடம் - இறைவரது திருவடையாளங்கள்; மருந்து - துன்பநீக்கமும், **மந்திரம்** - இன்ப ஆக்கமும் செய்வன என்பதும், இவை இகந்துபடாமல் காவல் செய்வது திருவேடத்தினியல் பென்பதும் ஞானநூல்களின் முடிபுகளாய்ச் சிவஞானபோதம் 10 - 11 - 12 சூத்திரங்களானுணர்த்தப்படுவன. **வேடம்** - திருவேடம்; ஆண்டவன் வேடத்தையும் அதனை உட்கொண்ட அடியார் வேடத்தையு முளப்படுத்திக் கூறிய படி; "நேய மலிந்தவர் வேடமும்"; "தன்னுணர வேண்டித் தனதுருவைத் தான் கொடுத்துத் தன்னுணரத் தன்னுளிருந்ததலாற், றன்னுணரு நேயத்தார்," என்ற சிவஞானபோதமும் (12 - சூத் -உதா) 'தேவர்கள் போற்றும் திருவேடத் தாரையும்" என்ற திருமந்திரமும், பிறவும் இங்கு இப்பதிகக் கருத்துடன் வைத்துச் சிந்திக் கற்பாலன. 295


திருந்துதேவன்குடி

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி**


மருந்துவேண்டில் லிவை மந்திரங்கள் ளிவை
புரிந்துகேட் கப்படும் புண்ணியங்கள் ளிவை
திருந்து தேவன்குடித் தேவர்தே வெய்திய
அருந்தவத் தோர்தொழு மடிகள் வேடங்களே. (1)

சேடர் தேவன்குடித் தேவர் தேவன்றனை
மாடமோங் கும்பொழில் மல்குதண் காழியான்
நாடவல் லதமிழ் ஞானசம் பந்தன
பாடல்பத் தும்வல்லார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்



திருவின்னம்பர் (பாட்டு 2194)



திருமழபாடி (பாட்டு - 2204)

2194. மொய்திகழ் சோலையம் மூதூர் முன்னகன் றந்நெறி செல்வார்
செய்தரு சாலி கரும்பு தெங்குபைம் பூகத் திடைபோய்
மைதிகழ் கண்டர்தங் கோயின் மருங்குள்ள வெல்லாம் வணங்கி
யெய்தினர் ஞானசம் பந்த ரின்னம்ப ரீசர்தங் கோயில். **296**

பதிகக் குறிப்பு:- திருந்து தேவன்குடித் தேவதேவனது திருவேடங்கள் மருந்தொடு மந்திரமாவன; வீதிபோக்காவன; வினையை வீட்டுவன; வீடுகாட்டு நெறியாவன.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **மருந்து** - தலஅம்மை பெயர்க் குறிப்புமாம். **வேண்டில்** - "தெய்வமென்பதோர் சித்தமுண்டாகி" விரும்பியபோது; **புரிந்து** - இடைவிடாதுநினைந்தும் சொல்லியும்; விரும்பி என்றலுமாம். **அருந்தவத்தோர்** - **வேடங்கள்** "தேவர்கள் போற்றுந் திருவேடத்தார்" (திருமந்)-(2) **வீதி** - விதி என்பது **வீதி** - என முதனீண்டுவந்தது. **வீதிபோக்கு** - விதியையும் வெல்வது; **ஓதியோர்** - (அபரஞானம்) கலைஞானம் - மட்டும் கைவந்தார். **தீதில்** - தீமையை இல்லையாகச் செய்யும்; "**திருந்து**" என்ற பொருள்.-(3) **வான்** - சிவனுலகம்;-(4) **அவிகள் உய்க்கப்படும்** - வேள்விகளின் கருத்தாய் நிகழும்;(6) **புங்கம்**-உயர்வு; "புங்கமே யுயர்ச்சி யம்பு பொருவில்லின் குதைமுப் பேரே" (நிகண்டு). **புங்கம் என்னப்படா** - உயர் வென்று சொல்லப் படாநின்ற என்க.-(7) **கரைதல்** - மெலிதல்;-(10) **ஆதர்** - அறிவிலிகள் - கீழ்கள்; உரு - காண்டகைய தோற்றம்.

தலவிசேடம்:- திருந்து தேவன்குடி - காவிரியின் வடகரை 42-வது தலம். இது சுற்றிலும் குடியிருக்கைகள் ஒன்றுமின்றி வயல்மத்தியில் தனிக்கோயிலாக உள்ளது. கோயிலைச் சூழ்ந்து ஒரு தீர்த்தம் (திருப்புகலூரின் வாவிபோல) மூன்று பக்கமும் அகழிபோல உள்ளது. நண்டு பூசித்த தலமாதலின் சுவாமிக்குக் **கர்க்கடகேசுவரர்** என்ற காரணப் பேர் வழங்கும்;சுவாமியின் திருமுடியில் நண்டு உருவம் - காணப் படுகின்றது. ஒரே நிறமுள்ள பசுப்பால் (ஓரளவு) திருமஞ்சனமாட்டினால் சுவாமியின் உள்ளிருந்து நண்டு வெளிவருதல் இன்றும் காணலாகும் அற்புதம். இங்கு அம்மையார் சந்நிதிகள் இரண்டு; சுவாமி - **தேவதேவேசர்; கர்க்கடகேசர்;** அம்மை - அரு மருந்தம்மை பதிகம் 1.

இத்தலம் 43-வது திருவியலூரினின்று வடக்கே வரப்புவழி ஒரு நாழிகையளவில் அடையத்தக்கது. மழை நாளில் செல்வது கடினம்; திருவிடைமருதூர் நிலயத்தினின்றும் வடமேற்கில் மட்பாதை வழி 4 1/2 நாழிகையிலும் அடையலாம்.

2194. **பொருளுரை...** மொய்திகழ்....அகன்று - மலர் அரும்புகள் விளங்கும் சோலைகளையுடைய அந்த மூதூரினின்று நீங்கி; அந்நெறி செல்வார் - அவ்வழியே செல்வாராகி; செய்தரு...போய் - வயல்களில் விளையும் நெல்லும், கரும்பும், தென்னையும், பசிய கமுகும் ஆகிய இவற்றினிடையே சென்று; மைதிகழ்...வணங்கி - விடம் விளங்கும் கண்டத்தினையுடைய சிவபெருமானது கோயில்களுள் அப்பக்கத்தில் உள்ளவை எல்லாவற்றையும் வணங்கிக்கொண்டு; இன்னம்பர்...கோயில் - திருவின்னம்பர் இறைவரது திருக்கோயிலினை; ஞானசம்பந்தர் எய்தினர் - திருஞானசம்பந்தப் பிள்ளையார் அடைந்தனர்.

2195. இன்னம்பர் மன்னும் பிரானை யிறைஞ்சி யிடைமடக் கான
பன்னுந் தமிழ்த்தொடை மாலைப் பாடல் புனைந்து பரவிப்
பொன்னங் கழலிணை போற்றிப் புறம்போந் தணைந்து புகுந்தார்
மன்னுந் தடங்கரைப் பொன்னி வடகுரங் காடு துறையில். 297

விளக்கவுரை— மொய்...அரும்புகள். மொய்திகழ் என்பதற்கு மொய்த்து விளங்கும் என்றுரைப்பாருமுண்டு;

அந்நெறி - காவிரி வடகரையின் வழியே மேற்கு நோக்கிய வழியாக.

செல்வார் - செல்வாராகி முற்றெச்சம். செல்வார் - செல்வாராகிய ஞான சம்பந்தர் என்று வினைப்பெயராகக் கொள்வதுமாம்.

செய்தரு - பின்குறித்த சாலி முதலியவை எல்லாம் மருதநிலமாகிய வயல்களில் விளைவன என்பது.

கோயில் மருங்குள்ள எல்லாம் - திருக்கொட்டையூர் - திருவிசயமங்கை - திருப்புறம்பயம் - திருவைகாவூர் முதலாயின என்பது கருதப்படும்.

இன்னம்பர் நம்பர்தம் - என்பதும் பாடம். 296

2195. பொருளுரை... இன்னம்பர்.. இறைஞ்சி - திருஇன்னம்பரில் நிலைபெற்று வீற்றிருந்தருளும் பெருமானை வணங்கி; இடைமடக்கான...போற்றி - இடைமடக்காகிய யாப்பிலமைந்த திருமுக்கால் என்கின்ற இறைவரது புகழ்களைப் பரவும் திருப்பதிகத் தமிழ்ப்பாடல் மாலைகளைச் சாத்தித்துதித்து இறைவரது பொன்னார்ந்த திருவடிகளைப் போற்றி; புறம்போந்து - புறப்பட்டுச்சென்று; மன்னும்....வடகுரங்காடு துறையில் நிலைபெற்ற பெரியகரைகளையுடைய காவிரியின் வடகரையில் உள்ள வடகுரங்காடு துறையின்கண்; புகுந்தார் - வந்து புகுந்தருளினர்.

விளக்கவுரை— இடைமடக்கு - யாப்பின் விகற்பம். இது திருமுக்கால் எனப் பெயர் பெறும். அஃதாவது செய்யுளின் நான்கு அடிகளுள் இரண்டாவது அடி மூன்றாவது அடியினுள் மீண்டும் மடக்கப்பட்டு விரவிவருதலால் மூன்று அடியுள்ளது போல இயல்வது. முதல் அடி நான்காமடிகளில் மடக்குவராது இடையின் இரண்டின் வருதலால் இடைமடக்கென்னப்பட்டது.

பன்னும் - மீண்டும் எடுத்துச் சொல்லும் தொடைவகை என்ற குறிப்புமாம். பதிகப்பாட்டுக்கள் பார்க்க.

மன்னுந் தடங்கரை - ஏனைப் பெருநதிகளிற் போலவும், காவிரியின்மேல் ஏனைய யிடங்களிற் போலவும் பெருவெள்ளங்களாற் கரையினை ஈண்டுக் காவிரி அழிவு படுத்தாது பரவிச் செல்லுதலால் மன்னும் என்றார். காவிரி பெருகிக் கரைபுரண்டு ஊர்க்குள்வராது நிலையான கரைகளை யிருபுறமும் உடைமையும் குறிப்பு. 297

2196. வடகுரங் காடு துறையில் வாலியார் தாம்வழி பட்ட
அடைவுந் திருப்பதி கத்தி லறியச் சிறப்பித் தருளிப்
புடைகொண் டிறைஞ்சினர் போந்து புறத்துள்ள தானங்கள் போற்றிப்
படைகொண்ட மூவிலை வேலார் பழனத் திருப்பதி சேர்ந்தார். **298**

திரு இன்னம்பர்

திருச்சிற்றம்பலம் **பண் - சாதாரி**

எண்டிசைக் கும்புக ழின்னம்பர் மேவிய
வண்டிசைக் குஞ்சடை யீரே
வண்டிசைக் குஞ்சடை யீருமை வாழ்த்துவார்
தொண்டிசைக் குந்தொழி லோரே. **(1)**
ஏடமர் பொழிலணி யின்னம்ப ரீசனை
நாடமர் ஞானசம் பந்தன்
நாடமர் ஞானசம் பந்தன நற்றமிழ்
பாடவல் லார்பழி யிலரே. **(11)**

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- *இன்னம்பர் ஈசரை விளித்து, உம்மைச் சார்ந்தவர் துன்ப நீங்கப் பெறுவார் என்று புகழ்ந்தது.*

பதிகப்பாட்டுக் குறிப்பு:- *(1)* **தொண்டு இசைக்கும்**-தொண்டின் நெறியிலே தம்மை இசைவிக்கும்;-(2) **ஆழ்துயர்** - ஆழ்த்து துயரம் பிறவினை.-(3) **இளமதி நுதலி** - பிறைவடிவாக வளைந்த நெற்றியினை உடைய உமையம்மை.-(4) **இடி** - இடித்தலால்வரும் முழா முதலிய ஓசை.-(5) **அன்பே அமைகிலர் ஆகிலர்** - அன்பினால் உள்ளம் முற்றுப்பெறாது பெருகுபவர்.-(6) **விண்ணவர் அடைவு** - தேவர்களால் சாரப்படும்நிலை. -(7) **நிழல்** - ஒளி; (8) **கூர்த்த** - மிகுந்த .-(9) **இயல்** - நல்லியல்பு.

தலவிசேடம்:- **திரு இன்னம்பர்** - காவிரியின் வடகரை 45-வது தலம்; இன்னம்பூர் என வழங்கப்படும்; ஞாயிறு (இனன்) - ஐராவதம் - அகத்திய முனிவர் முதலியவர் பூசித்த தலமென்பர்; இனன் நம்பு ஊர் என்பது இன்னம்பர் என மருவிற்று என்று கூறுவர். சுவாமி - **தான்றோன்றியீசர்; எழுத்தறிந்தநாதர்;** அம்மை - **பூங்கொம்பு நாயகி; தீர்த்தம் - ஐராவத தீர்த்தம்.** பதிகம் 5.

இது கும்பகோணம் நிலையத்திலிருந்து வடக்கில் 4½ நாழிகையிலும், சுவாமிமலை நிலையத்தினின்று வடகிழக்கில் 3½ நாழிகையிலும் அடையத்தக்கது. 44-வது திருக்கொட்டையூரினின்றும் வடமேற்கே மட்சாலைவழி 1½ நாழிகையில் அடையலாம்.

2196. **பொருளுரை**... வடகுரங்காடு துறையில்...போந்து - திருவடகுரங்காடு துறையில் வந்து வாலியார் வழிபட்டுச் சரணடைந்த வரலாற்றைத் திருப்பதிகத்தில் உலகறியும்படி சிறப்பித்துப் பாடியருளித் திருக்கோயிலினைச் சூழ வலம்வந்து வணங்கிப் புறப்பட்டு;

புறத்துள்ள தானங்கள் போற்றி - அதனப்புறத்தே உள்ள திருத்தலங்களைத் துதித்து வணங்கிக்கொண்டு; படை...சேர்ந்தார் - மூவிலைச் சூலத்தினைப் படையாகக் கைக்கொண்ட இறைவர் எழுந்தருளிய திருப்பழனமாகிய திருத்தலத்தைச் சென்று சேர்ந்தனர்.

விளக்கவுரை... வடகுரங்காடு துறையில் - தென்குரங்காடு துறையினின்றும் பிரித் துணர்தற் பொருட்டு வடக்கில் உள்ள என்று அடைமொழி தந்தோதினார்; பிறிதினியைபு நீக்கிய விசேடணம். தென்குரங்காடுதுறை ஆடுதுறை என வழங்கப்படும். காவிரிக்குத் தென்கரை 31-வது தலம். அது அனுமனும் சுக்கிரீவனும் பூசித்ததலம்.

வாலியார்தாம் வழிபட்ட அடைவு - அருளி - "**வாலியார் வழிபட**" என்ற பதிகச் சொற்பொருளாட்சி போற்றப்பட்டது.

அடைவு - வழிபட்டுச் சரணடைந்த வரலாறு. **அறிய** - உலகறியும்படி. தலவிசேடம் பார்க்க. **வாலியார்** - பன்மை சிறப்புக் குறித்தது.

புடைகொண்டு - புடைவலங்கொண்டு; கோயிலினையும் தலத்தையும் சூழ்ந்து வலம்வந்து விடைகொண்டு என்க.

புறத்துள்ள தானங்கள் - திருத்திங்களூர் முதலாயின என்பது கருதப்படும்.

மூவிலைவேல் படைகொண்டார் - என்க. **வேல்** - ஆயுதப் பொதுமை யுணர்த்திற்று. 298

திருவடகுரங்காடுதுறை

திருச்சிற்றம்பலம் **பண் - சாதாரி**

கோங்கமே குரவமே கொழுமலர்ப் புன்னையே கொகுடிமுல்லை
வேங்கையே ஞாழலே விம்முபா திரிகளே விரவியெங்கும்
ஓங்குமா காவிரி வடகரை யடைகுரங் காடுதுறை
வீங்குநீர்ச் சடைமுடி யடிகளா ரிடமென விரும்பினாரே. (1)

நீலமா மணிநிறத் தரக்கனை யிருபது கரத்தொடொல்க
வாலினாற் கட்டிய **வாலியார் வழிபட** மன்னு கோயில்
ஏலமோ டிலையில வங்கமே யிஞ்சியே மஞ்சளுந்தி
ஆலியா வருபுனல் வடகரை யடைகுரங் காடுதுறையே (8)

தாழிளங் காவிரி வடகரை யடைகுரங் காடுதுறைப்
போழிள மதிபொதி புரிதரு சடைமுடிப் புண்ணியனைக்
காழியா னருமறை ஞானசம் பந்தன கருதுபாடல்
கோழையா வழைப்பினுங் கூடுவர் நீடுவா னுலகினூடே, (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- வாலியார் வழிபட இறைவர் நிலைபெற வீற்றிருந்தருளிய கோயில் வடகுரங்காடுதுறையே.

2197. பழனத்து மேவிய முக்கட் பரமேட்டி யார்பயில் கோயில்
உழைபுக் கிறைஞ்சிநின் றேத்தி யுருகிய சிந்தைய ராகி
விழைசொற் பதிகம் விளம்பி விருப்புடன் மேவி யகல்வார்
அழனக்க பங்கய வாவி யையாறு சென்றடை கின்றார்; 299

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) ஏகாரங்கள் எண்ணுப் பொருளில் வந்தன; **கொகுடி** - முல்லையின் ஒருவகை. **விம்முதல்** - செழித்தல். இவை மலர்கள்.- (2) **மந்தமாய்** - மிக்கு; மெதுவாக என்றலுமாம்- (3) **ஆரம்** - சந்தனமரம்;- (4) **நுந்தி** - அலைத்து; **உள்ளக்குறி** - குறிக்கோள்;- (5) **ஓடு**-ஓடுதல். முதனிலைத் தொழிற்பெயர்; -(6) "**வாலியார் வழிபட**" - சொல்லும் பொருளும் புராணத்துட் போற்றப்பட்டது. இராவணனை வாலி வாலினாற் பிணிந்த வரலாறு இராமன் கதையுட் காண்க. 8-வது பாட்டும்பார்க்க; வாலி வழிபட்டமையால் தலம் குரங்காடுதுறை என்ற காரணப்பெயர் பெற்றது. (8) **நீலம்** - கருமை குறித்தது. **அரக்கன்** - இராவணன்; **ஆர்** - பன்மை விகுதி சிறப்பு; ஏலம் முதலியவை ஆறுவரும் வழியில் உள்ள சோலைகளிற்படும் பொருள்கள். **ஆலியா** - கலித்து;- (9) **அனங்கமாக** - அங்கமழிய; வேவ; **இருவர்** - அரி யயன்.- (10) **கொள்ளலும்** - கொள்ளற்க; **கொள்ளல்** - அல்லீற்று எதிர்மறை வியங்கோள்; **உம்** - சாரியை, **வரைப்பண்டம்** - மலைபடு பொருள்கள்;- (11) **தாழ்** - மலையினின்று கீழே வருகின்ற; **இளங்காவிரி** - **இளமை** என்றும் புதிய பொற்புடன் விளங்குதல். பூந்தண்பொன்னி"; **போழ்** - போழப்பட்டது; **கோழையா** - மிடற்றிற் கோழை அடைப்புண்டு ஒலி நயமின்றி; "கோழை மிடறாக" (தேவா); **தாழிளம்** - முன்னைய பாட்டுக்களிலும் பல வளங்களையும் காவிரி அலைத்து வருதல் கூறப்பட்டமை குறிப்பு.

தலவிசேடம்:- திருவடகுரங்காடுதுறை:- காவிரியின் வடகரையில் 49-வது தலம். வாலி வழிபட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றது, பதிகம் 6-8 பாட்டுக்கள் பார்க்க. நிறைந்த கருப்பத்துடன் வழிவருத்தத்தோடும் நீர்வேட்கையோடும்வந்த ஒரு பெண்ணுக்குத்தென்னங்குலையை வளைத்துக்கொடுத்தருளிய காரணத்தால் சுவாமி **குலைவணங்குநாதர்** எனப் பெற்றனர் என்ப; அம்மை - **அழகு சடைமுடியம்மை;** பதிகம்-1.

இது ஐயம்பேட்டை நிலையத்துக்கு மேற்கே ½ நாழிகையில் திருச்சக்கரப் பள்ளியினின்றும் 3 நாழிகையளவில் வடக்கே குடமுருட்டியாற்றினையும் காவிரி யாற்றினையும் பரிசினாற் கடந்து கணபதி அக்கிரகாரத்துக்குக் கிழக்கே ½ நாழிகை யளவில் அடையத்தக்கது.

2197. பொருளுரை- பழனத்து-ஏத்தி - திருப்பழனத்தில் மேவிய மூன்று கண்ணுடைய சிவபெருமான் எழுந்தருளியுள்ள திருக்கோயிலினுள் புகுந்து நின்று துதித்து; உருகிய சிந்தையராகி - உருகிய மனத்தையுடையவராகி; விழை சொல்....அகல்வார் - விரும்பும் தமிழ்ச் சொற்பதிகத்தினைப்பாடி விருப்பத்துடனே அங்கு எழுந்தருளி யிருந்து அங்கு நின்றும் நீங்குவாராகி; அழல் நக்க...அடை கின்றார் - தீயைப் பழித்த தாமரைகள் பூத்த தடாகங்களையுடைய திருவையாற்றினைச் சென்று அடைகின்றவராகி;

வேறு

2198. மாடநிரை மணிவீதித் திருவையாற் றினில்வாழு மல்கு தொண்டர்
"நாடுய்யப் புகலிவரு ஞானபோ னகர்வந்து நண்ணி னா"ரென்,
றாடலொடு பாடலறா வணிமூதூ ரடையவலங் காரஞ் செய்து
நீடுமனக் களிப்பினொடு மெதிர்கொள்ள, நித்திலயா னத்து நீங்கி, **300**

விளக்கவுரை— பரமேட்டி - *சிவபெருமான். பரம்பொருள்;* **பயிலல்** - *விளங்க வீற்றிருத்தல் - உழை - ஏழனுருபு.*

விழை - *விரும்பும்; தாம் விழையும்; இறைவர் விழையும்; உய்யும் உயிர்களும் அடியார்களும் விழையும்; செல்வோரும் கேட்போரும் விழையும். "பேசற்கினிய மாலை" பதிகம்.*

அழல்நக்க - *அழலை நகுதலாவது சிவந்த பொலிவினால் அழலினும் மேற்படுதல்; உருவகம்; 1868 பார்க்க. "பங்கயமாம் பொங்கெரியில்" (1905) என்றதும், பிறவும் காண்க.*

அடைகின்றார் - *அடைகின்றாராகி; முற்றெச்சம். அடைகின்றாராகி - நீங்கி என மேற்கூட்டுக. அடைகின்றாராகி - நீங்கி (2198) - இறைஞ்சி நண்ணும் போதில் - என்று போற்றிசைத்தார் - புகலிவேந்தர் - (2199) என மேல்வரும் பாட்டுக்களுடன் கூட்டி முடித்துக் கொள்க.* *299*

2198. பொருளுரை— மாடநிரை-தொண்டர் - மாடங்களின் வரிசையினைக் கொண்ட அழகிய வீதிகளையுடைய திருவையாற்றில் வாழ்கின்ற திருத்தொண்டர்கள்; நாடுய்ய.. என்று - "உலகம் உய்யும் பொருட்டுச் சீகாழியில் அவதரித்து ஞான முண்ட பிள்ளையார் வந்தணைந்தார்" என்று உட்கொண்டு; ஆடலொடு....எதிர் கொள்ள - ஆடலுடன் பாடல் நீங்காது நிறைந்த அழகிய அந்தப் பழவூரினை முற்றும் அலங்காரங்கள் செய்து பெருகிய மன மகிழ்ச்சியினோடும் எதிர்கொள்ளும் போது; நித்திலயானத்துநீங்கி - முத்துச் சிவிகையினின்றும் நீங்கி வந்து,

விளக்கவுரை...*திருவையாற்றில் பிள்ளையாரருளிய தேவாரத் திருவாக்கின் சிறப்பினை அறிவுறுத்தும்படி ஆசிரியர் இதுவரை சரிதங்கூறிவந்த யாப்பினைமாற்றி அத்திருப்பதிக யாப்பினிற் சரிதங்கூறத் தொடங்குகின்றார்.*

மாடநிரை மணிவீதி - *"கமழ்தார் வீதித், தேரோடு மரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும்" என்ற திருப்பதிகக் கருத்தை விளக்கியபடி.*

மல்குதல் - *நிலைபெற்றுப் பெருகி நிகழ்தல்.*

"நாடுய்ய...நண்ணினார்" என்று - *இஃது அத்தொண்டர் பிள்ளையாரது பெருமையினை உளங்கொண்டெழுந்தநிலை.* **நாடுய்ய** - **வரும்** *என்க.* **வருதல்** - *ஈண்டு வந்தவதரித்தல் என்ற பொருள்தந்து நின்றது.* **நாடுய்தல்** - *தாவில் சராசரங்களெல்லாஞ் சிவம் பெருக்குதல் (1924). திருவவதார வரலாறு காண்க.*

2199. வந்தணைந்த திருத்தொண்டர் மருங்குவர மானேந்து கையர் தம்பால்
நந்திதிரு வருள்பெற்ற நன்னகரை முன்னிறைஞ்சி நண்ணும் போதி
"ஐந்துபுல னிலைகலங்கு மிடத்தஞ்ச லென்பார்த மையா"றென்று
புந்திநிறை செந்தமிழின் சந்தவிசை போற்றிசைத்தார் புகலி வேந்தர். **301**

வந்து - தாமேவந்து; அடியார்களுய்யத் தாமே அத்திருநகரினை விரும்பிவந்து.

ஆடலொடு பாடலறா - "வலம்வந்த மடவார்கள் நடமாட" (1); "அரங்கேறிச் சேயிழையார் நடம்பயிலும்" (5); "கவினார்வீதித், தேந்தாமென் றரங்கேறிச் சேயிழையார் நடமாடும்" (6); "கோலோடக் கோல்வளையார் கூத்தாடக் குவிமுலையார் முகத்தி னின்று, சேலோடச் சிலையாடச் சேயிழையார் நடமாடும்" (9); என வரும் பதிகக் கருத்துக்கள் பார்க்க.

*அடைய - முழுதும். பிள்ளையாரை அடைந்துய்யும் பொருட்டு என்ற குறிப்புமாம். ஆளுடைய அரசுகளது திருவாரூர்க் குறிஞ்சிப் (முத்துவிதானம்) பதிகக் கருத்துக்கள் காண்க. தொண்டர் எதிர்கொள்ளப் புகலிவேந்தர் நீங்கி என்க. எதிர் கொள்ள என்ற வினையெச்சம் நீங்கி எனப் பிறவினைமுதல் வினைகொண்டு முடிந்தது. **எதிர்கொள்ள** - எதிர்கொண்டாராக.*

*நித்தில யானத்து நீங்கி - யானத்தினின்றும் இறங்கி; ஐந்தனுருபு தொக்கது. **நீங்குதல்** - இங்குக் கீழ் இறங்குதல் என்ற பொருளில் வந்தது.*

*நீங்கி - நகரை முன் இறைஞ்சி நண்ணும்போதில் - என்றதனால் தொண்டர் நகரின்புறத்து வந்து எதிர்கொண்டனர் என்பது பெறப்பட்டது. **நித்தில யானம்** - முத்துச்சிவிகை.* 300

2199. பொருளுரை - வந்தணைந்த...மருங்குவர - வந்துகூடிய திருத்தொண்டர்கள் தமது பக்கத்தில் சூழ்ந்துவர; மான்ஏந்து...போதில் - மானை ஏந்தியகையினையுடைய இறைவரிடத்தில் திருநந்தி பெருமான் திருவருள்பெற்ற அந்த நல்ல நகரத்தை முன் வணங்கி அடையும் பொழுதில்; ஐந்துபுலன்...என்று - ஐம்புலன்களும் நிலைகலங்கும் காலத்தில் "அஞ்சாதே" என்று அபயம் கூறுமிறைவரது திருவையாறு இது என்ற கருத்துடன்; புந்திநிறை....புகலிவேந்தர் - உள்ளம் நிறைந்து எழுந்த செந்தமிழினது சந்தவிசைத் திருப்பதிகத்தால் துதி செய்தனர், புகலியின் தலைவராகிய ஞானசம்பந்த நாயனார்;

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டு உரைக்கநின்றன.

விளக்கவுரை - வந்த அணைந்த - எதிர்கொள்ள வந்துகூடிய.

மருங்குவர - தம்மைப் பின்பற்றித் தமதுபக்கத்தில் வர. *மருங்குவர* - **முன் இறைஞ்சி நண்ணும் போதில்** என்று கூட்டுக. *முன்* - அவர்கட்கெல்லாம் முன்பு.

மான் ஏந்து கையர் தம்பால் நந்தி திருவருள்பெற்ற நன்னகர்- "நங்க ணாதனா நந்தி தவஞ்செய்து, பொங்கு நீடரு ளெய்திய பொற்பது" (45); "முந்தை மாதவப் பயன்

பெறு முதன்மையான்" *(1643)* என்றவையும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. நந்திதேவர் தவஞ்செய்து அருள்பெற்ற இத்தலத்து வரலாறுகள் முன் உரைக்கப்பட்டன. **நன்னகர்** - நன்மையாவது இறப்புத்துன்பநீக்கி யின்பமளித்தல் குறிப்பு. இது மேல் உரைக்கப்படுதல் காண்க.

நகரை இறைஞ்சி நண்ணும் போதில் - ஐயாறென்று போற்றிசைத்தார் - இப் பதிகம், நகரை அணுகும்போது புறத்தே அதனைத் தொழுது நின்று போற்றியது. "ஆலவா யாவது மிதுவே", "இடைமரு தீதோ" முதலிய பதிக வரலாறுகள் இங்கு நினைவு கூர்தற்பாலன. பதிகக் குறிப்புப் பார்க்க.

சந்த இசை - மேகராகக் குறிஞ்சி என்ற இப்பதிகப் பண்ணின் இசைச் சிறப்புக் குறித்தது.

செந்தமிழின் - இப்பதிகப் பாட்டுக்களில் இயல் இசை நாடகமென்னும் முத்தமிழும் பொருந்தவரும் தமிழ்ச் சொற் பொருட் சிறப்புக் குறித்தது. **இசை** - காந்தார மிசையமைத்து *(4)*; நாடகம் - "தென்றலா ரடிவருடச் செழுங்கரும்பு கண்வளரும்" *(7)* முதலியவை காண்க.

வந்தணைந்து - என்பதும் பாடம். *301*

திருப்பழனம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி**

வேத மோதி வெண்ணூல் பூண்டு வெள்ளை யெருதேறிப்
பூதஞ் சூழப் பொலிய வருவார் புலியி னுரிதோலார்
நாதா வெனவு நக்கா வெனவு நம்பா வெனநின்று
பாதந் தொழுவார் பாவந் தீர்ப்பார் பழன நகராரே. *(1)*

வேய்முத் தோங்கி விரைமுன் பரக்கும் வேணு புரந்தன்னுள்
நாவுய்த் தனைய திறலான் மிக்க ஞான சம்பந்தன்
பேசற் கினிய பாடல் பயிலும் பெருமான் பழனத்தை
வாயிற் பொலிந்த மாலை பத்தும் வல்லார் நல்லாரே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "பரமன் பகவன் பரமேச்சுரவன் பழன நகரார்" என்றது. "பரமேட்டியார்" *(2197)* என்று ஆசிரியர் காட்டிய குறிப்பு. சந்தவிசையும் பண்ணிசையும் பொருந்த இறைவரது முதல்வராந் தன்மை பேசப்பட்டது. "பேசற் கினிய மாலை" - பதிகம்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- *(1)* **'நாதா...என'** - அடியார் போற்றும்வகை; பழனநகரார் - **புலியினுரிதோலார்** - தொழுவோரது பாவந்தீர்ப்பார் என்க. ஏனைய பாட்டுக்களினும் இவ்வாறே கூட்டுக-*(2)* **புண் ஆறு** - புண்வழியாக; **எண்ணாது** - எளிதில். *(3)* **பறைபோல்விழி** - பரந்து உருண்ட தன்மை உவமை; **தலைமகன்** - தலைவர். பற்றுக்கோடு; **ஆடல்...ஓவா** - சிறப்பும் பூசையும் என்ற இவற்றின் அங்கங்கள்; - *(4)* **நறவம்** - குருதி -

இரத்தம்-செந்நீர்; **பரமன் பகவன் பரமேச்சுவரன்** - இறைவன் இயல்; **பரமன்** - கடந்தவன்; **பகவன்** - இறைமைக் குணங்கள் ஆறும் உடையவன்; **பரமேச்சுவரன்** - தேவதேவன்.-(5) **குதிகொண்டு** - குதிக்கச்செய்தல் போலத் திரையால் அலைத்து. -(6) **வீளைக்குரல்** - சிள் என்ற ஓசை; "விளைப்பருந்தின்" (அகநா33); குரல் - ஓசை. **விளிசங்கொலி** - சாவின்சடங்கில் ஊதும் சங்குஒலி. "கடைச்சங்கம் ஆம்போதனலூட்டும்" (பட் - தனிப்); **விழவின் ஒலி** - இங்கு ஈமச்சடங்கின் ஒலி குறித்தது; **மூளைத்தலை** - முன்னர் மூளைக்கிடமாயிருந்த படுதலை; **மூளை** மண்டையின் உள்ளீடு; **கொண்டு** - ஏந்திக்கொண்டு; **கொண்டு - எய்தார்** - என்று கூட்டுக. **ஈளைப்படுகில்** ஈரமுள்ள மருதநிலம். படுகர் என்பது படுகு என நின்றது. **விழவின் ஒலி ஓவாப் பழனநகர்** என்று கூட்டி வீளைக் குரல் - விளிசங்கொலி என்பவற்றைத் திருநாள் விழாவின் அங்கங்களாகக் கொண்டுரைத்தலுமாம். இப்பொருளில், **விளி** - விளித்தல் - அடியாரைக்கூவி அழைத்தல் - என்றுரைக்க. "சங்கொலிப்பித்திடுமின் சிறுகாலை" "இயம்பின சங்கம்" (7) **பொய்யாமொழியார்** - மெய்த்திருவாக்குடைய அடியார். பொய்யாமொழி - வேதம் என்றுகொண்டு; இறைவர்க்காக்கி உரைப்பினுமாம். **முறை** - விதிமுறை; **கை ஆடலினார்** - வீசுகரம்; துடியசைக்கும் கை என்றலுமாம்; கையேந்திய தீயினால் ஆடல் - (அடுதல் - அழித்தல்) செய்பவர் என்றலுமொன்று. **உடனே** - பகைகொண்ட பிறையும் அரவும் ஒருங்கே தங்க என்பது குறிப்பு. "பாம்போடு திங்கள் பகைதீர்த் தாண்டாய்" (தாண்) -(8) **உயர்மலை, உடையான்மலை** என்று தனித்தனி கூட்டுக. **நஞ்சார்** - நைஞ்சார் (இறந்தார்) என்பதன் மரூஉ.-(9) **கொன்றை** - மாலை - என்க. **முடியா** - அடங்காத. அளவுபடாத, **படியார்** - தன்மையினார்; **பொடி** - நீறு; உலகமழிந்தநீறு உடையார் எனக் காணாத தன்மைக்குக் காரணங்கூறியவாறு;- (10) **கண்டான்உண்டாங்கவர்கள்** - புத்தர் வழக்கு. விடிய எழுந்ததும் முகங்கழுவாது உணவு கொள்ளுதல். நவீனரின் Bed Coffee என்ற ஆபாச வழக்கும் காண்க. **ஓரார்** - ஓராத (பொருட்படுத்தாத) அடியார். தாமரையில் நறவு உண்டு வண்டு யாழ்போலப் பண்பாடும் நல்லியல்புமில்லார்; கண்தான்உண்டாங்குச் சிறு சொல்லுரைக்குமவர் என்ற உட்குறிப்பும் காண்க.-(1) **நாவுய்த்தனைய திறல்** - நாவினால் படைசெலுத்தினாற் போன்ற வல்லமை; "செல்லவுந்துக" "நாவலமே கோலாக" (புரா - 898); **உய்த்தல்** - படை செலுத்துதல். "அம்புய்க்கும்" என்புழிப்போல; **பேசற்கினிய** - சொற்பொருளமைதி.

தலவிசேடம்:- திருப்பழனம் - III பக்கம் 468 பார்க்க.

1. திருஐயாறு

பண் - மேகராகக் குறிஞ்சி

திருச்சிற்றம்பலம்

புலனைந்தும் பொறிகலங்கி நெறிமயங்கி யறிவழிந்திட் டைமே லுந்தி
யலமந்த போதாக வஞ்சேலென் றருள்செய்வா னமருங் கோயில்
வலம்வந்த மடவார்க ணடமாட முழவதிர மழையென் றஞ்சிச்
சிலமந்தி யலமந்து மரமேறி முகில்பார்க்குந் திருவை யாறே. (1)

அன்னமலி பொழில்புடைசூழை யாற்றெம் பெருமானை யந்தண் காழி
மன்னியசீர் மறைநாவன் வளர்ஞான சம்பந்தன் மருவு பாடல்

இன்னிசையா லிவைபத்து மிசையுங்கா லீசனடி யேத்து வார்கள்
தன்னிசையோ டமருலகிற் றவநெறிசென் றெய்துவார் தாழா தன்றே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:-ஆசிரியர் 2199-ல் காட்டியருளியது. இப்பதிகம் நகரின் புறத்தே நின்று தலத்தினைப் பாடியது. "திருவையாறே" என்றதும் காண்க.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **அலமந்தபோது** - சாங்காலம். **போது ஆக** - சமயம் உளதாக. **ஆக** - **அஞ்சேல்** என்க. **ஆக** - உளதாக; ஆசிகூறல்; "பாண்டி யற்காகவே"(தேவா); **அஞ்சேல்** - அபயம். **மழை** - **முகில்பார்க்கும்** - முழவதிர மழையென்றஞ்சி மரமேறி முகில்பார்க்கும்; மயக்கவணி; "மடல்விண்ட முடத்தாழை மலர்நிழலைக் (சீகாமரம் திருவெண்காடு) குருகென்று - தடமண்டு துறைக்கெண்டை தாமரையின் பூமறைய" என்புழிப்போல; பிராந்தமதாலங்கார மென்பர்வடநூலார். தன்மைநவிற்சி யணியுமாம். மேல்வரும் பாட்டுக்களும் தன்மை நவிற்சி:- (2) **விடல் ஏறுபடம்** - விடத்தினை மேலே கொண்ட படம். **விடலம்** - நஞ்சு. **விடலம்** - விடல் என நின்றது. **பலி** - பலி பெய்யுமின்; **திடல்** - மணல்மேடு;- (3) **கொங்கு** - மணம். -(4) **ஊன்பாயும்** - ஊன் உலர்ந்து பரவிய; **முடை** - முடைநாற்றம்; **உடை** - உடைந்த என்றலுமாம்; **பாயும் விடை** - "பாயும்விடையரன்" (கோவை); **தேன்பாயும்** - தேன் ஒழுகும்;-(5) **கூவிளம்** - வெள்எருக்கு - கொன்றை - கரந்தை இவை சிவபிரானுக் குகந்தவை;-(6) **காந்தாரம்**-பண்; **தேந்தாம்** - இசைக்கியைய முழக்கும் முழவொலிக் குறிப்பு. "முழவதிர" 1.-(7) **சிலை** - வில்; மலையாகிய வில் என்றிரட்டுற மொழியவும் நின்றது; **மலையாளி** கயிலைமலையை ஆள்பவர். **பிரசம்** - தேன்; **மலர்** - மலர்களினின்றும்; **தென்றலார் - ஆர்** - சிறப்புக் குறித்த பன்மை விகுதி; **அடிவருடக் கண்வளர்தல்** - சிலேடையணி; **கண்** - கரும்புகள் முற்றியபோது வளைந்து சாய்வனவாதலின் தென்றல் அவற்றின் அடியில்பட வீசிற்று; மெல்லிதாய் வீசுதலின் **வருட** என்றார். **கண் வளர்தல்** - துயிலுதல் என்றும், கணுக்கள் வளர்ச்சி பெறுதல் என்றும் இரட்டுற மொழிந்துகொள்க. தென்றல் வீசுங்காலத்தில் கரும்புகள் முற்றி விளையும் நிலையும் குறிப்பு. "கரும்பருகே கருங்குவளை கண்வளரும் கழனி" (தேவா. நம்பி - கலய நல்லூர் 1); "செஞ்சாலிக்கதிர்" என்ற குறிப்பும் காண்க. மேலும் பிள்ளையார் எழுந்தருளிய சிறப்புப்பற்றித் தொண்டர் ஆடலொடு பாடலறா அணிவீதி அடைய அலங்காரஞ் செய்தனர் (2198) என்பது பதிகம் - 1 - 5 - 6 - 9 - பாட்டுக்களாலும் கருதப்படும்;-(8) **இளந் தெங்கின் பழம்வீழ** - தெங்கின் பழங்கள் தாமாய் முற்றி வீழ்வனவன்றிப் பறிப்பாரிலர் என்ற நகர்வளமும் குறித்தது. **செஞ்சாலி** - சிறப்புக் குறித்தது. 904 - பார்க்க. -(9) **அணவி** - அணுகி. **அணவியும் அகழ்ந்தும்** என்க. உம்மைகள் தொக்கன. **மாலோடு நான்முகனும்**-எதிர் நிரனிறையாக்கித் கொள்க. **கோல்** - ஆடலாசிரியன் ஏந்தும் தலைக்கோல்; **கூத்து** - அரங்கில் ஆடல்; **சேல்** - மீன் போன்றகண்; **சிலை** - சிலைபோன்ற புருவம். ஆகுபெயர். "பொருகயற்கண் புடைபெயர" (1685); **நடமாடும்** - இவ்வியல்பெல்லாம் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதையினும், பிறாண்டும் கண்டுகொள்க;- (10) **குற்றுடுக்கை** - மேலேற உடுத்தபாய் உடை; **செண்டு** - மலர்க்கொத்துக்கள்.

தலவிசேடம் - திருவையாறு - III பக்கங்கள் 822, 823 பார்க்க.

2200. மணிவீதி யிடங்கடந்து மாலயனுக் கரியபிரான் மன்னுங் கோயில்
அணிநீடு கோபுரத்தை யணைந்திறைஞ்சி யுள்ளெய்தி யளவில் காதல்
தணியாத கருத்தினொடுந் தம்பெருமான் கோயில்வலங் கொண்டு தாழ்ந்து
பணிசூடு மவர்முன்பு பணிந்துவீழ்ந் தெழுந்தன்பாற் பரவு கின்றார், 302

2200. பொருளுரை.. மணிவீதி இடம் கடந்து-அழகிய திருவீதியின் இடங்களைக் கடந்துபோய்; மாலயனுக்கு...உள் எய்தி - மாலுக்கும் அயனுக்கும் அறிதற்கரியவராகிய சிவபெருமான் நிலைபெற வீற்றிருக்கும் திருக்கோயிலின் அழகு நீடும் திருக்கோபுரத்தைச் சார்ந்து பணிந்து கோயிலினுள்ளே சேர்ந்து; அளவில்...பரவுகின்றார் - அளவில்லாத ஆசையானது பெருகித் தணியாத மனத்தோடும் இறைவரது திருக்கோயிலினை வலம்வந்து வணங்கிப், பாம்புகளைச் சூடிய அவரது திருமுன்னர்ப் பணிந்து நிலமுற விழுந்து எழுந்து அன்பினாலே துதிப்பாராகி;

விளக்கவுரை...இடம் - இடங்களை; நகரின் புறத்து நின்று பதிகம்பாடி நகரினை வணங்கிப் பின் திருவீதியினுள் அணைந்து, அச்சிறப்புக்களைக்கண்டு அவ்வீதியின் எல்லைநீங்கி. வீதி - பிள்ளையார் எழுந்தருளிவந்த திருவீதி. இது வடக்கிலுள்ள திருப்பழனத்தினின்றும் திருவையாற்றினுள்வரும் வீதி.

அளவில் காதல் தணியாத கருத்து - காதலின் பெருக்கு முன்பதிகத்தாலும், அது தணியாத நிலை மேல்வரும் பதிகத்தானும் அறியக்கிடக்கின்றன.

பணி - பாம்பு - பணம் (படம்) உடையது.

பரவுகின்றார் - பரவுகின்றாராகி - முற்றெச்சம்; பரவுகின்றார் - பாடினார் என மேல்வரும் பாட்டுடன் முடிந்தது. எழுவாய் மேலைச் செய்யுளினின்றும் வருவித் துரைக்க.
302


2201. பொருளுரை... கோடல்....மாலை - "கோடல் கோங்கம் குளிர்கூவிளம்" என்று தொடங்கும் திருப்பதிகமாகிய சிறந்த சொல் மாலையினை; நீடு...தோன்ற - நீடிய பெருந் திருக்கூத்தின் சிறப்பு நிறைவாகிய தமது திருவுள்ளத்தின் நிலைமை தோன்றும் படி; ஆடுமாறது...நின்று - "ஆடுமாறு வல்லான் ஐயாற்றெம் ஐயனே" என்ற கருத்தினை முடிபாகக் கொண்ட பதிகத்தினை அருளி, நின்று; பாடினார்.பாய - அன்புப் பண்பினோடு கண்களினின்றும் வழிகின்ற ஆனந்தக் கண்ணீர் இடையீடின்றிப் பரந்து பாயப் பாடினார்; ஆடினார்:

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.


விளக்கவுரை... கோடல்...கூவிளம் - இது பதிகத் தொடக்கம். பதிகம் பார்க்க.

குலவுமாலை - குலவுதல் - பெருஞ் சிறப்புடன் நிலவுதல். "குலாவு பாதம் விளக்கியே" (443)


நீடுபெரும்...நிலைமைதோன்ற - இப்பதிகமருளியபோது பிள்ளையாரது திருவுள்ள நிலையிருந்தபடி பதிகத்துக் காணப்படுகின்றதென ஆசிரியர் காட்டியருளுகின்றார்.



திருக்கானூர் (பாட்டு - 2206)



திருப்பெரும்புலியூர் (பாட்டு - 2202)



திருநெய்த்தானம் (பாட்டு 2203)

2201. "கோடல்கோங் கங்குளிர்கூ விள" மென்னுந் திருப்பதிகக் குலவு மாலை
நீடுபெருந் திருக்கூத்து நிறைந்ததிரு வுள்ளத்து நிலைமை தோன்ற
"ஆடுமா றதுவல்லா னையாற்றெம் மையனே" யென்று நின்று
பாடினா ராடினார் பண்பினொடுங் கண்பொழிநீர் பரந்து பாய; 303

திருக்கூத்து *- ஆனந்தக் கூத்து. "தம்முண்ணிறைந்த ஞானத் தெழு மானந்த வொருபெருந் திருக்கூத்தும்" (2058) என்றது காண்க. நீடு - என்று முள்ள; நித்தமாகிய; பெரும் என்றது தமக்கே உரியநிலை குறித்தது; **திரு** - முத்தித் திரு; **கூத்து நிறைந்த திருவுள்ளத்து நிலைமை** - "பாடல் வீணை பண்ணாகவே ஆடுமாறு வல்லான்" என்ற பதிகப்பாட்டின் **பண்பினாற்** போதரும் என்று மேல் உரைக்கின்றார்.*

ஆடுமாறது வல்லான்... *என்று - இது பதிகக் கருத்து. **வல்லான்** - வேறெவர்க்குமியலாமை குறிப்பு. **வல்லமை** - எளிதாயியற்றுதல் - விளையாட்டு என்ற கருத்து. **ஐயனே** - ஏகாரம் பிரிநிலை.*

பண்பு *- அன்பு நிரம்பி மேலோங்கிய தன்மை. இவை பாடுதல் - ஆடுதல் - **கண்ணீர்** வார்தல் முதலாயின.*

பண்ணோடுங் கண்பொழி *- என்பதும் பாடம். 303*

II. திருவையாறு

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம்**

கோடல்கோங் கங்குளிர் கூவிள மாலை குலாயசீர்
ஓடுகங் கையொளி வெண்பிறை சூடு மொருவனார்
பாடல்வீ ணைமுழ வங்குழல் மொந்தைபண் ணாகவே
யாடுமாறு வல்லானு மையாறுடை யையனே (1)

ஓதியாருமறி வாரில்லை யோதி யுலகெலாஞ்
சோதி யாய்நிறைந் தான்சுடர்ச் சோதியுட் சோதியான்
வேதி யாகிவிண் ணாகிமண் ணோடெறி காற்றுமாய்
ஆதி யாகிநின் றானுமை யாறுடை யையனே (7)

பலிதி ரிந்துழல் பண்டங்கன் மேயவை யாற்றினைக்
கலிக டந்தகை யான்கடற் காழியர் காவலன்
ஒலிகொள் சம்பந்த னொண்டமிழ் பத்தும்வல் லார்கள்போய்
மலிகொள் விண்ணிடை மன்னிய சீர்பெறு வார்களே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- *முன் 2201 ன் கீழ் உரைக்கப்பட்டது. ஐயன் திருக் கூத்து நிறைந்த திருவுள்ளத்து நிலையில் அருளப்பெற்ற பெருமையுடையது இத்திருப் பதிகம்.*

2202. பலமுறையும் பணிந்தெழுந்து புறம்போந்து பரவுதிருத் தொண்ட ரோடு
நிலவுதிருப் பதியதன்க ணிகழுநா ணிகரிலா நெடுநீர்க் கங்கை
அலையுமதி முடியார்தம் பெரும்புலியூர் முதலான வணைந்து போற்றிக்
குலவுதமிழ்த் தொடைபுனைந்து மீண்டணைந்து பெருகார்வங் கூரு நாளில், **304**

---

*பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **கோடல்** - காந்தள்; **பாடல்பண்ணாகவே** - **ஆடுமாறு** - திருக்கூத்தின் இயையும் அங்கங்கள். "துத்தங் கைக்கிளை" என்ற அம்மை மூத்த திருப்பதிகம் பார்க்க.-(2) **யாரும் இவர் தன்மை அறிவாரிலர்** - "இயல்பறியப் படா" (6); இவர் தன்மையறிவாரார் (தேவா.) "தன்பெருமை தானறியாத் தன்மையன்" (திருவா) -(3) **ஆறு** - அங்கம்; **நான்கு** - வேதம்:- (4) **வண்ணம்-வலி-வாய் மொழி** - தமது வண்ண முதலியன சொல்லும் மறைகள்; மொழியார் முதலியவை அம்மையாரைக் குறிப்பன;-(6) **பதினெட்டு** - புராணங்கள்; **நான்கு** - மறைகள். (7) **சோதி** - அருள்ஞானஒளி; **வேதி** - வேதத்தையுடையவன்;- (9) **தொல்வழி** - பழமையாகிய பத்திநெறி. -(10) **கொழுந்து** - ஆலின் கொழுந்தின் செழுமை; **பவளம் திரண்டது** - ஆலின் காய்.- (12) **பண்டங்கம்** - சிவன் கூத்து. "பண்டரங்க வேடத்தான்" (தேவா); "ஆடுமாறு வல்லான்" என்றதற் கேற்பச் சிவன் ஆடலைக் கூறி முடித்தபடி.*

*2202. **பொருளுரை**...**பலமுறையும்...நிகழும் நாள்** - பலமுறையாலேயும் பணிந்து எழுந்து திருக்கோயிலின் புறத்தே போந்து பரவும் திருத்தொண்டர்களுடனே நிலவிய அத்திருப்பதியினிடத்து எழுந்தருளியிருக்கும் நாள்களில்; **நிகரிலா...மீண்டு அணைந்து** - ஒப்பற்ற நெடிய நீரினை உடைய கங்கை அலைதற்கிடமாகிய முடியில் மதியினைச் சூடிய இறைவரது பெரும்புலியூர் முதலாகிய பதிகளில் சென்று அணைந்து துதித்துக் குலவும் தமிழ்மாலைகளைப் புனைந்து மீண்டும் (திருவையாற்றில்) அணைந்து; **பெருகு ஆர்வம் கூரும் நாளில்** - பெருகும் ஆசை சிறக்க இருக்கும் நாள்களில்;*

*விளக்கவுரை...**பலமுறையும்** - ஒருமுறை, மும்முறை முதலாகப் பலகாலும்; பஞ்சாங்கம், அட்டாங்கம் முதலாகப் பல முறைகளாலும் என்றலுமாம்,*

***பரவுதிருத்தொண்டர்** - பரவு - இறைவரைப் பரவும் - தம்மைப் பரவும் - தாம் பரவும் என்று பலவும் உரைக்க நின்றது. பரவு - எண்ணில்லாது பெருகும் என்றலுமாம்.*

***நிகழுநாள்...மீண்டு அணைந்து** - பிள்ளையார் திருவையாற்றிற் பல நாள்கள் தங்கியருளினர் என்றும், அந்நாட்களில் அங்கிருந்தபடியே பெரும்புலியூர் முதலாகிய அணிமையில் உள்ள பதிகளிற் சென்று வணங்கித் திருவையாற்றினை அகலாது அதன்கண் மீண்டு அணைந்தனர் என்றும் கூறியபடி. ஆளுடைய அரசுகள் இவ்வாறே திருவாரூரில் எழுந்தருளியிருந்ததுவும் (1493), பிறவும் காண்க.*

***பெருகு ஆர்வம் கூரும் நாளில்** - **கூர்தல்** - உள்ளது சிறத்தல். "ஆர்வங்கூர வடியேற்கே" (திருவா); முன்னரே பெருகிய ஆர்வம் மேலும் சிறந்து முறுக என்க. "அளவில் காதல் தணியாத கருத்தினொடும்" (2200).*

***தொண்டுகளி பெருகார்வம்**- என்பதும் பாடம்.* 304

2203. குடதிசைமேற் போவதற்குக் கும்பிட்டங் கருள்பெற்றுக் குறிப்பி னோடும்
படருநெறி மேலணைவார் பரமர்திரு நெய்த்தானப் பதியி னண்ணி
யடையுமன முறவணங்கி யருந்தமிழ்மா லைகள்பாடி யங்கு நின்றும்
புடைவளர்மென் கரும்பினொடு பூகமிடை மழபாடி போற்றச் சென்றார். 305

2203. பொருளுரை... குடதிசைமேல்....அருள் பெற்று - மேற்குத் திசையின் மேல் செல்வதற்கு விடைபெறக் கும்பிட்டுத் திருவருளினைப் பெற்று; குறிப்பினோடும் .மேல் அணைவார் - அவ்வாறு பெற்ற திருவருட் குறிப்பின் வழியே செல்கின்ற மேலை வழியில் அணைவாராய்; பரமர்-பாடி - பரமரது திருநெய்த்தானப் பதியிற் சேர்ந்து அடையும் மனம் பொருந்த வணங்கி அரிய தமிழ் மாலைகளைப்பாடி; அங்கு... சென்றார் - அங்கிருந்து பக்கங்களில் வளரும்மென் கரும்பினோடு கமுககள் நெருங்கியுள்ள திருமழபாடியினைப் போற்றச் சென்றருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... குடதிசை *- காவிரிக்கு வடகரை வழியே மேற்குத் திசையாக; "பொன்னி வடபாற் குடதிசை நோக்கி" (2183)*

போவதற்குக் கும்பிட்டு அங்கு அருள் பெற்று *- பதியினின்றும் புறப்படுவார் அங்கு இறைவரது அருள்விடை பெற்றுப் புறப்படும் மரபு.*

குறிப்பு *- திருவருள் பெற்ற அக்குறிப்பு.* ***நெறிமேல்*** *- நெறியின் மேல்;* ***மேல் (குடக்கு) நெறி*** *என்று கூட்டி உரைத்தலுமாம்.*

அடையும் மனம் உற *- வந்து அடைகின்ற ஆர்வமுடைய மனம் அவ்வார்வ முற்றப் பொருந்த.*

புடைவளர் மென்கரும்பு - புடைவளர் *- பக்கங்களில் தூறு கொள்ளப் புடைத்து வளர்தல் கரும்புப் பயரின் இயல்பு. மென்கரும்பு - கரும்பின் ஒருவகை.* ***மென்மை*** *- பூகத்தை நோக்க மெல்லிய என்ற குறிப்புமாம். பூகமும் கரும்பும் அடுத்தடுத்து உள்ள நிலை. '-கரும்பல்ல கமுகென்ன" (65) பார்க்க.*

மழபாடி *- மழநாட்டைச் சேர்ந்த ஊர். மருதநில மாதலால் கரும்பும் பூகமுமாகிய மருதநிலக் கருப்பொருள்களால் அறிவித்தருளினர்.* *305*

திருப்பெரும்புலியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம்**

மண்ணுமோர் பாக முடையார் மாலுமோர் பாக முடையார்
விண்ணுமோர் பாக முடையார் வேத முடைய விமலர்
கண்ணுமோர் பாக முடையார் கங்கை சடையிற் கரந்தார்
பெண்ணுமோர் பாக முடையார் பெரும்புலி யூர்பிரி யாரே. (1)

பிறைவள ரும்முடிச் சென்னிப் பெரும்புலி யூர்ப்பெரு மானை
நறைவள ரும்பொழிற் காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
மறைவள ருந்தமிழ் மாலை வல்லவர் தந்துயர் நீங்கி
நிறைவளர் நெஞ்சின ராகி நீடுல கத்திருப் பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் பெரும்புலியூர் பிரியார்,

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மண் - விண் - பாகமுடையார்** என்றது புவனங்களைத் தோற்றுவிக்கும் மாயையைப் பரிக்கிரக சத்தியாக உடையவர் என்ற கருத்து;- (2) நீண்ட தோள்கள் பவளம் போல உள்ளன; மேனியினாளும் கங்கையுமாகிய கன்னிகள்; **புனை** - புனைதல் கூடுதல்; அணிதல் என்றலுமாம். புனையப்படுவது- "புரைபடுமொன்றோ புனைபூணும்" (குறள்).-(3) **கள்ளமதித்த** - மல வலியை நிலையிட்டு அறுத்த; கள்ளமாகச் செருக்கிய (கபாலம்) என்றலுமாம். **மதித்தல்** - தருக்கி அல்லாதசொல் லுரைத்தல், **மதித்த - தொழிலர்** என்று கூட்டுக; -(4) **இலயம்** - பொருந்த இசைதல்; **ஊடலிலயம்** - ஊடலிலும் ஒற்றுமை. -(6) **கற்றதுறப் பணிசெய்து காண்டும்** - கற்றபடி பணிசெய்து இறைவனைக்காண்போம்; முதலியர் - முதல்வர்;- (9) **ஐந்நூற்றுப் பத்தாயபேர்** - ஐ- அழகிய. **நூற்றுப்பத்து** - ஆயிரம். "ஆயிரம் பேருடை யானும்" (தேவா); **அந்நூற்றுப் பத்தாய** - என்பதும் பாடம். -(11) **மறைவளர்** - வேதப் பொருள்களைத் தெருட்டிப் பரவச் செய்யும். **துயர்** - மலவாதனை; **நிறை** - அன்பு; **நீடுலகம்** - சிவலோகம்.

தலவிசேடம் - **திருப்பெரும்புலியூர்**-காவிரிக்கு வடகரையில் 53-வது தலம். கொள்ளிடத்தின் தென்கரையில் உள்ளது. புலிக்கால் முனிவர் - வியாக்கிரபாதர் - பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றது; சுவாமி - **பிரியாநாதர் - வியாக்ரபுரீசுவரர்**; அம்மை - **சௌந்தர நாயகி** - பதிகம் 1.

இது திருவையாற்றினின்றும் கரை வழியாய் வடமேற்கில் 1 1/2 நாழிகை யளவில் அடையத் தக்கது.

திருநெய்த்தானம்

திருச்சிற்றம்பலம் பண் - நட்டபாடை

மையாடிய கண்டன்மலை மகள்பாகம துடையான்
கையாடிய கேடில்கரி யுரிமூடிய வொருவன்
செய்யாடிய குவளைம்மலர் நயனத்தவ ளோடு
நெய்யாடிய பெருமானிட நெய்த்தானமெ னீரே. (1)

தலமல்கிய புனற்காழியுட் டமிழ்ஞானசம் பந்தன்
நிலமல்கிய புகழான்மிகு நெய்த்தானனை நிகரில்
பலமல்கிய பாடல்லிவை பத்தும்மிக வல்லார்
சிலமல்கிய செல்வன்னடி சேர்வர்சிவ கதியே. (11)

திருச்சிற்றம்பலம்

2204. செங்கைமான் மறியார்தந் திருமழபா டிப்புறத்துச் சேரச் செல்வார்
"அங்கையா ரழ" லென்னுந் திருப்பதிக மெடுத்தருளி யணைந்த போழ்தின் புக்கார்
"மங்கைவாழ் பாகத்தார் மழபாடி தலையினால் வணங்கு வார்கள்
பொங்குமா தவமுடையா" ரெனத்தொழுது போற்றிசைத்தே கோயில் 306

பதிகக் குறிப்பு:- இறைவனது இடம் நெய்த்தானம் என்று போற்றுங்கள். போற்றுவோரை நோய் நலியா.

பதிகப்பாட்டு குறிப்பு:- (1) மை - விடம்; ஆடிய-விளங்கிய; **நெய்யாடிய பெருமான் இடம்** - தலப்பேர்க் காரணம் காட்டியபடி; 3-வது பாட்டும் பார்க்க. **நெய்யாடுதல் - ஆடுதல்** - மஞ்சனமாடுதல்; நெய்யாடல் விழா என்ற குறிப்புமாம். -(2) **பறையும்** - நீங்கும்;- (3) **வேயாயின**-வேய்போன்ற; ஆக்கச்சொல் உவமை குறித்தது. **தாயாகிய உலகங்கள்** - உயிர்கட்கு ஆதாரமாகிய (தரணி) உலகங்கள்; தாய் - தாரகமாவது. "தாய் தரையேயாந் துணேயான்" (போதம்); எதுகையின் பொருட்டு - நெய் என்பது நேய் என முதனீண்டது;- (4) **நடுகள் இருள்** - சங்கார காலம்; **ஆடுமிழ்** - ஆடுதலினால் உமிழும்;-(5) **காவிரி பரவிப் பணிந்தேத்தும்** - இக்கருத்தை ஆசிரியர் சேக்கிழார் "வம்பு லாமலர் நீரால் வழிபட்டு....சிவாலயத் தெம்பிரானை யிறைஞ்சலின்" (57) என்ற திருப்பாட்டில் விரித்தருளினர்.-(8) **இறையார** - கைபொருந்த; -(9) **காலம்பெற** - விதித்த காலத்தில்;-(10) **இறை** - சிறிதும்; உம்மை தொக்கது;- (11) **தலமல்கிய** - நிலத்தை வளம்படுத்திய.

தலவிசேடம்- திருநெய்த்தானம்:- III - 827 பக்கம் பார்க்க.

2204. *பொருளுரை*- செங்கைமான்–செல்வார் - செங்கையிலே மான் கன்றை ஏந்திய இறைவருடைய திருமழபாடியின் புறத்திற் சேரச் செல்வாராகிய பிள்ளையார்; "அங்கையார் அழல்"...போழ்தில் - "அங்கையாரழல்" என்னும் திருப்பதிகத்தைத் தொடங்கியருளி யணேந்தபோது; மங்கை..தொழுது - அம்மை வாழ்கின்ற ஒரு பாகத்தையுடைய பெருமான் எழுந்தருளிய திருமழபாடியை வணங்குவார்கள் மேன் மேலும் பொங்கும் தவமுடையார்கள் என்று பாடித் தொழுது; போற்றிசைத்தே - துதித்துக் கொண்ட வண்ணமே; கோயில் புக்கார் - கோயிலுனுள் புகுந்தனர்.

விளக்கவுரை... **மழபாடிப்புறத்துச் சேரச் செல்வார்** - இத்திருப்பதிகம் மழபாடிப் பதியின் புறநகரினை அணுகும் பொழுது அவ்விடத்தே அருளியது. "மழபாடி தொழுவார்கள்" என்றது பதிகக் குறிப்பு.

அங்கை யாரழல் - பதிகத் தொடக்கம். **எடுத்தே** - தொடங்கியே. **எடுத்தருளி** - உயிர்களை இவ்வருளுபதேசத்தினால் மேலெடுத்து ஈடேற்றி என்ற குறிப்புமாம்.

மங்கைவாழ்— தவமுடையார் - என - இது முதற்பாட்டின் கருத்தும் பதிகக் குறிப்புமாம். "மழபாடியை வணங்கத் தவமாகுமே" (4) என்பது பதிகம். "இடமேவிய மங்கையான்" பதிகம். **தவமுடையார்** - முன்னைத்தவம்; வணங்கத் தவம் பெறுவர் என்பதும் குறிப்பு.

போற்றிசைத்தே - துதித்துக் கொண்ட வண்ணமாகவே. 306

I திருமழபாடி

திருச்சிற்றம்பலம் **பண் - கௌசிகம்**

அங்கை யாரழ லன்னழ கார்சடைக்
கங்கை யான்கட வுள்ளிட மேவிய
மங்கை யானுறை யும்மழ பாடியைத்
தங்கை யாற்றொழு வார்தக வாளரே. *(1)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- மழபாடியை வணங்குவார்கள் தவமுடையார். "தவமும் தவமுடையார்க் காகும்" (குறள்) என்ற கருத்து. ஆசிரியர் முன் 2204-ல் காட்டியருளியமை காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மழபாடியைத் தொழுவார்** - தலத்தின் புறத்தே வந்த போது அதனை நோக்கிக் கைகூப்பி வணங்குவார்; **தகவு** - நற்றகைமை;- (2) **விதி** - நியதி - **விளைவு;** நியதியால் வரும் அனுபவம்; **ஒளி...கதி** - ஞான சாதனம்; **கசிவு** - அன்பு. **வசியாற்ற** - மா - மதியுமாம் என்று பிரிக்க. **வசி** - ஐந்தெழுத்தின் வகையுள் ஒன்று; **ஆற்ற** - நிற்க;- (3) **குலவுங்கையிலேந்திய மழுவினான்** - மழு (பரசு) இங்குத் தவஞ் செய்து இறைவரது கையிலேந்தப் பெற்றது என்பதும், அதனால் இத்தலம் மழுவாடி என்றதொரு பெயரும் பெற்றது என்பதும், பரசிராமர் இங்குத் தவஞ் செய்து பரசு பெற்றனர் என்பதும் வடநூலார் தரும் தலவரலாறுகள். அவர் இப்பாட்டு அக்குறிப்புத் தருவதென்ப:- (4) **கதியாகியமலை - கதி** - சென்று புகலடையுமிடம். **மலை** - கயிலை; **தலையினால் வணங்கத் தவமாகுமே** - இதன் சொல்லும் பொருளும் இப்பதிகக் கருத்தாக முன் (2204) எடுத்தாண்டு காட்டியருளியது காண்க - (5) **கல்வியாய கருத்தன்** - கல்விப் பயனாகிய. "கற்றதனாலாய பயனென் கொல்" (குறள்); **கருத்தன்** - கருத்துள் நிறைந்தவன், **கருத்தன்** - முதல்வன் என்றலுமாம்; (11) **மந்தம்** - மணம்.

தலவிசேடம்:- திருமழபாடி :- மழபாடி - மழவர்பாடி என்பதன் மரூஉ; மழவர் - இளைஞர் - ஒருவகை வீரர்; "உருவக் குதிரை மழவ ரோட்டிய" (அகம்). இனி, வேறு கதைபற்றி வடநூலார் "பரசு நர்த்த புரி" என்பர். இவை ந. சிவப்பிரகாசக் குருக்களையா அவர்கள் குறிப்புக்கள்.

2205. பொருளுரை.. மழபாடி... எய்தி - திருமழபாடியில் அழகிய வயிரத்தூண்நாதர் விரும்பி மகிழ்ந்தருளும் திருக்கோயிலினை வலமாகச் சூழ்ந்து சேர்ந்து; செழுவாச... நின்று - செழுமையுடைய மணம் பொருந்திய தாமரைமலர் போன்ற திருவடிக் கீழே சென்று வணங்கி எழுந்து நின்று; தொழுது.... போந்தே - தொழுதும் ஆடியும், பாடியும், நறிய சொன்மாலைத் தொடை யணிந்து துதித்தும், வெளிப்போந்து; ஒழியாத.... சின்னாள் - இடையறாத அன்பினுடன் தமது தலைவராகிய இறைவரைக் கும்பிட்டுக் கொண்டு அத்தலத்திற் சிலநாள்கள் தங்கியருளினார்.

2205. **மழபாடி வயிரமணித் தூணமர்ந்து மகிழ்கோயில் வலங்கொண் டெய்திச்**
செழுவாச மலர்க்கமலச் சேவடிக்கீழ்ச் சென்றுதாழ்ந் தெழுந்து நின்று
தொழுதாடிப் பாடிநறுஞ் சொன்மாலைத் தொடையணிந்து துதித்துப் போந்தே
யொழியாத நேசமுட னுடையவரைக் கும்பிட்டங் குறைந்தார் சின்னாள். 307

---

*விளக்கவுரை.. **வயிரமணித் தூண்** - தலச் சுவாமி பெயர். "வயிரத்தூணே" (தேவா)*

__வலஞ் செய்து.. துதித்து__ - வலங்கொள்ளுதல் முதலிய வழிபாட்டு முறைகளை எல்லாம் ஒன்றொழியாது செய்து; எண்ணும்மைகள் தொக்கன.

__சொன்மாலைத் தொடை__ - மாலையாகிய தொடை; சொல்லால் மாலையாகத் தொடுக்கப்பட்ட பதிகம். பல பதிகங்கள் என்ற குறிப்புமாம்.

__ஒழியாத நேசம்__ - இடையீடில்லாது செல்கின்ற அன்பு; அத்தலத்தைவிட்டு நீங்காத நிலைமையை விளக்கும் அன்பு என்றலுமாம். அங்குச் சின்னாள் உறைதற்குக் காரணங் குறித்தபடியுமாம்.

__உடையவர்__ - தம்மை ஆளாக உடைய தலைவர். "தமையுடைய தன்னுணர்வார்" (போதம் - அவையடக்கம்)

__கும்பிட்டு__ - கும்பிடும்பொருட்டு என்றது குறிப்பு. 307

II திருமழபாடி

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம்**

களையும் வல்வினை யஞ்சனெஞ் சேகரு தார்புரம்
உளையும் பூசல்செய் தானுயர் மால்வரை நல்விலா
வளைய வெஞ்சரம் வாங்கியெய் தான்மதுத் தும்பிவண்
டளையுங் கொன்றையந் தார்மழ பாடியு ளண்ணலே. (1)

திருச்சிற்றம்பலம்

__பதிகக் குறிப்பு:-__ மழபாடியுள் இறைவரைக் கும்பிடக் குறி கூடும்.

__குறிப்பு:-__ இப்பதிகத்துள் 11-வது பாட்டில் பின்னிரண்டடிகள் சிதலரித்தொழிந்தன.

__பதிகப் பாட்டுக் குறிப்பு:-__ (1) அண்ணலே - வல்வினைகளையும்; நெஞ்சே அஞ்சேல்; என்க; __உளைதல்__ - அழிதல்; __அளைதல்__ - சேர்தல்; தாரினையுடைய அண்ணல்;- (2) __காய்ச்சு__ - மேலும் காய்ச்சப்படும் அவசியம்; காய்ச்சுதலில்லாத - காய்ச்சுதல் வேண்டாத; __ஆசு__ - ஆச்சு என நின்றது எதுகை நோக்கி; __ஆசு__ - குற்றம்; __பேச்சு__ - வேறு பேச்சு; __வாய்ச்ச__ என்பது வாச்ச என நின்றது. __வாய்த்தல்__ - பல்லாற்றாலும் பொருத்தமுடையதாதல். (5) __குறி__ - உயிர்க் குறுதியாகிய குறிக்கோள். வீடுபெறும் நிலை. (6) __பரவினான்__ - பரவி நிறைந்தான்; (8) __உரம்__ - வன்மை; __வரத்தையே__ - ஏகாரம் தேற்றம்; (10) __கலி__ - கொடுமை; தீமை; __நலியும்__ - நலிவு செய்யும்; பிறவினை; (11) __கலிசெய்__ - கலித்தல் - சத்தித்தல்; புகழ்தல்;

2206. அதன்மருங்கு கடந்தருளாற் றிருக்கானூர் பணிந்தேத்தி யான்ற சைவ
முதன்மறையோ ரன்பிலா லந்துறையின் முன்னவனைத் தொழுது போற்றிப்
பதநிறைசெந் தமிழ்பாடிச், சடைமுடியார் பலபதியும் பணிந்து பாடி
மதகரட வரையுரித்தார் வடகரைமாந் துறையணைந்தார் மணிநூன் மார்பர். **308**

2206. பொருளுரை.. அதன்.. ஏத்தி - அப்பதியாகிய திருமழபாடியின் பக்கத்தினைக் கடந்துபோய்த் திருவருளினாலே திருக்கானூரினைப் பணிந்து போற்றி; ஆன்ற- தமிழ்பாடி - பெருமையுடைய ஆதிசைவரது திருஅன்பிலாலந்துறையில் இறைவரைத் தொழுது போற்றிப் பதங்கள் நிறைந்த செந்தமிழ்த் திருப்பதிகத்தினைப்பாடி; சடை...பாடி - சடைமுடியாரது பல பதிகளையும் பணிந்து பாடல் புரிந்து; மதகரட... மார்பர் - மத அருவி பாயும் மாலைபோன்ற யானையை யுரித்த இறைவரது வடகரை மாந்துறையினை அழகிய நூலணிந்த மார்பினையுடைய பிள்ளையார் சென்று அணைந்தனர்.

விளக்கவுரை.. அருளால் - பணிந்து - "அவனருளாலே அவன்றாள் வணங்கி" (திருவா) என்றபடி தலவணக்கம் செய்யும்பேறும் அவனருள் தர வருவதொன்றாம் என்பது; "நணியார் சேயார்" (தேவா)

ஆன்றசைவமுதன்மறையோர் அன்பிலாலந்துறை - ஆன்ற - எல்லா நற்குணங்களும் அமைந்த; புறம் 191 பார்க்க. புலனடங்கிய என்பாருமுளர். முதற்சைவ மறையோர் என்க. ஆதி சைவர் வாழ்வதற்கிடமாகிய. ''மறையும்பல வேதியரோத" (4) என்றும், "கிடையாரொலி யோத்தரவத்திசை" (2) என்றும், ஆரணப்பொருள் (குறுந். 2) என்றும் வரும் தேவாரங்கள் காண்க. சைவத்துக்கு முதன் மறையோராகிய பிள்ளையார் மணிமார்பர் என்று கூட்டி உரைப்பர் முன் உரைகாரர். முதன் மறையோர் - இறைவருக்கு ஆக்கி யுரைப்பது மொன்று. சத்தியவாகீசர் என்ற தலத்துச் சுவாமி பெயர்க் குறிப்பும் காண்க.

பதநிறை செந்தமிழ் - சொற்கள் தனித்து ஓசைப்பட ஒலிக்கும்படி அமைந்த தமிழ் என்பார் பதநிறை என்றார். வேதத்தைப் பதமாக ஒலிக்கும் முறைபோல ஒலிக்க அமைந்ததென்பது; பதம்பாடுதல் என்ற மறைஓது முறை காண்க. பதிக யாப்பமைதி குறித்தது. பதம் - மந்திரம் என்பாருமுண்டு.

கரடம் - அருவி; மதம்பாய் சுவடு;

சடை முடியார் - சடைமுடி - தஞ்சை சில்லா கோவிலடி என்ற ஊரின் சிவாலயம்; "சடைமுடி..... தக்களூர்" (க்ஷேத் - கோ) - என்று ஆராய்ச்சி செய்வாருமுண்டு.

பயில் பதியும் - என்பதும் பாடம். *308*

திருக்கானூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி**

வானார் சோதி மன்னு சென்னி வன்னி புனங்கொன்றைத்
தேனார் போது தானார் கங்கை திங்க ளொடுசூடி
மானேர் நோக்கி கண்டங் குவப்ப மாலை யாடுவார்
கானூர் மேய கண்ணார் நெற்றி யானூர் செல்வரே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- கானூர் மேய ஆனூர் செல்வர் உமையம்மை கண்டு அங்கு உவப்பச் சிருட்டி காரணமாக மாலை ஆடுவார். "அருளால்" என்பது புராணக் குறிப்பு.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வானார் சோதி** - ஒளி உருவர். **வான்** - ஞானாகாயம். **மானார் நோக்கி** - ஆர் - உவமவுருபு. நோக்கி - நோக்கினை (கண்ணை) உடையவள்; பெயர். **அங்கு** - ஊழிமுடிவில். **காலை மாலை** - மாலை - சங்காரம் - **காலை** - புனருற்பவம். (2) **மென்சொல் இன்பம்** - புனருற்பவத்துக்குரிய நாதகீதம். "வேதத் தொலிகொண்டு வீணை கேட்பர்" "வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (தேவா); **பயந்த** - கொடுத்த. (3) **தேன்** - தேன் வண்டு வகை; **கறை** - நிழல்; இருள்; (4) **எவ்வம்** - துன்பம்; **திங்கள் மாலை** - பிறையாகிய வெண்மாலைக் கண்ணி; (6) **முளி** - எலும்புப் பொருத்தல்கள்; (7) **பொக்கம்** - ஒவ்வாத பொய் மொழி; (8) **தமிழ்** - இசை; (9) **மாலை** - **காலை** - சங்காரமும் புனருற்பவமும்; (1)-(11) **கழுது** - பேய்; **துஞ்சும்** - உறங்கும்; "பேயு முறங்கும் பிறங்கிருள்வாய்" (3476).

தலவிசேடம் - திருக்கானூர் - III. சுவாமி - **செம்மேனி நாதேசுவரர்** - "வானார் சோதி" (1) பதிகம்; "பரஞ்சுடர்" (குறுந்); அம்மை - **சிவயோக நாயகி** - பதிகம் 2.

இது பூதலூர் நிலயத்தினின்றும் வடக்கே கற்சாலை வழி 5 நாழிகையில் உள்ள திருக்காட்டுப் பள்ளியினின்றும் வடக்கே விஷ்ணும்பேட்டை மட்சாலையில் 2 நாழிகையில் உள்ளது.

திருஅன்பிலாலந்துறை

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம்**

கணைநீ டெரிமா லரவம் வரைவில்லா
இணையா வெயின்மூன் றுமெரித்த விறைவர்
பிணைமா மயிலுங் குயில்சேர் மடவன்னம்
அணையும் பொழிலன்பி லாலந்துறை யாரே. (1)

திருச்சிற்றம்பலம்

2207. சென்றுதிரு மாந்துறையிற் றிகழ்ந்துறையுந் துறைநதிவாழ் சென்னி யார்தம்
முன்றில்பணிந் தணிநெடுமா ளிகைவலஞ்செய் துள்புக்கு முன்பு தாழ்ந்து
துன்றுகதிர்ப் பரிதிமதி மருத்துக்க டொழுதுவழி பாடு செய்ய
நின்றநிலை சிறப்பித்து நிறைதமிழின் சொன்மாலை நிகழப் பாடி, 309

பதிகக் குறிப்பு:- 2206ல் ஆசிரியர் குறித்தபடி.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **எரியும் மாலும் கணையாக; அரவம் பிணித்த வரைவில்லா** *என்க. (2)* **கிடை** *- ஓது கிடை. வேதம் பயில் சிறார் கூட்டம்;* **ஒத்து அரவம்** *- வேதம் பயிலும் ஒலி;* **கிள்ளை ஒத்தரவம் அடை** *என்க. அடைதல் - பழகுதல்; (6)* **ஊனமிலார்...சுவையாகிய** *-* **ஊனம்** *- பாவம்;* **ஊறு** *- ஊற்று. (11)* **பரவு** *- துதி.*

தலவிசேடம் - **திருஅன்பிலாலந்துறை** *- III. தொகுதி பக்கம் 669 பார்க்க.*

2207. பொருளுரை... சென்று... தாழ்ந்து - சென்று, திருமாந்துறையிலே விளங்க வீற்றிருக்கின்ற, துறைகளையுடைய கங்கை நதி தங்கி வாழ்வடைந்த சென்னியினை யுடையாரது திரு முற்றத்தினைப் பணிந்து, அழகிய நீண்ட திருமாளிகையினை வலமாக வந்து, உள்ளே புகுந்து, திருமுன்பு வீழ்ந்து வணங்கி; **துன்று கதிர்.. பாடி** *- நெருங்கிய கதிர்களையுடைய ஞாயிறும், சந்திரனும், மருத்துக்களும் தொழுது வழிபட இறைவர் எழுந்தருளிய நிலையைப் பாராட்டி நிறைவாகிய தமிழின் சொன்மாலையை நிலைபெற்று நிலவும்படி யருளிச்செய்து,*

விளக்கவுரை... **திருமாந்துறை** *- வடகரை மாந்துறை; தலவிசேடம் பார்க்க.*

துறைநதி *- துறைகளையுடைய நதி - கங்கை;* **துறையாவது** *கருவாகிய துறையினின்று ஏறுதற்கு வழியாயிருத்தல். "கங்கைநீ டுறையாடிக் கருத்துறைநீள் கடலேற்றும் அங்கணர்த மவிமுத்தம்" என்ற குறிப்பு.*

அணி நெடுமாளிகை *- அழகிய திருக்கோயில்.* **மாளிகை** *- மரபு வழக்கு.*

துன்று கதிர்ப் பரிதி - துன்று *- சேர்ந்த; செறிந்து பொருந்திய.* **துன்று கதிர்** *- என்றது எழுநிறக் கதிர்களையும் உள்ளடக்கி ஒரு கதிராகச் சேர்த்து ஒளி தருதல் என்றும், இந்நிலவுலகில் ஏனைப் பூத ஒளிகளெல்லாம் அடங்க நிற்றல் என்றும் குறிப்புக்கள் தருவது.*

பரிதி மதி மருத்துக்கள் - வழிபாடு செயநின்ற நிலை - மருத்துக்கள் *- தேவ மருத்துவர் இருவர். இவர்கள் வழிபட்டது தலவரலாறு. தலவிசேடமும் பதிகமும் (6) பார்க்க. பரிதியும் மதியும் மருத்துக்களும் என்க. எண்ணும்மைகள் தொக்கன.*

நிறை தமிழின் சொன்மாலை *- பதிகச் சிறப்புணர்த்தியது.* **நிறை தமிழ்** *- இயல் - இசை - நாடகம் என்ற முத்தமிழ் இயல்புகளும் நிறையப் பெற்ற தமிழ் வளம்;* **இன்** *- இனிய; பதிகப் பாட்டுக் குறிப்புப் பார்க்க.*

நிகழ - நிலைபெற்று என்றும் சிறப்பு நிகழும்படி. 309

2208. அங்கணகன் றம்மருங்கி லங்கணர்தம் பதிபிறவு மணைந்து போற்றிச்
செங்கமலப் பொதியவிழச் சேல்பாயும் வயன்மதுவாற் சேறு மாறாப்
பொங்கொலிநீர் மழநாட்டுப் பொன்னிவட கரைமிசைப்போய்ப் புகலி வேந்தர்
நங்கள்பிரான் றிருப்பாச்சி லாச்சிரா மம்பணிய நண்ணும் போதில், 310

2208. பொருளுரை.. அங்கணகன்று.. போற்றி - அவ்விடத்தினின்றும் நீங்கிச் சென்று அந்தப் பக்கத்தில் உள்ள, சிவபெருமானது பிறபதிகளையும் சென்று துதித்து; செங்கமலம்.. மழநாட்டு - செந்தாமரை மலர்களின் பொதிமலரச் சேலமீன்கள் பாயத் தேன் பொழிதலாற் சேறு உலராத வயல்களையுடைய பொங்கும் ஒலியுடன் பெருகும் நீரினையுடைய மழநாட்டிலே; பொன்னி வடகரை மிசைப்போய் - காவிரியின் வடகரை வழியாக மேலே சென்று; புகலி வேந்தர்... நண்ணும் போதில் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் நமது இறைவரது திருப்பாச்சிலாச்சிராமத்தை வணங்கச் சாரும் பொழுதில்,

விளக்கவுரை.. அங்கண் - அவ்விடத்தினின்றும்; இன் என்னும் நீக்கப் பொருளில் வரும் ஐந்தனுருபு தொக்கது.

பதி பிறவும் - வடகரைமாந்துறைக்கும் திருபாச்சிலாச்சிராமத்துக்கும் இடையிலும் அருகிலும் உள்ளவை. திருத்தவத்துறை (லாலுகுடி), பூவாளூர், திருமங்கலம் முதலாயின என்பது கருதப்படும்.

செங்கமலம் - பொதி அவிழச் சேல்பாயும் - என்க. பொதி - முடிப்பு; பொகுட்டு, கேசரம், பூந்தாது, தேன் முதலியனவற்றை உள்வைத்துப் பொதிந்தது போன்றிருத்தலால் பொதி என்றார். அவிழ - அவிழும்படி.

மழநாடு - மழவர்களால் ஆளப்பட்ட நாடு; 310

திருவடகரைமாந்துறை

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம்**

செம்பொ னார்தரு வேங்கையு ஞாழலுஞ் செருந்திசெண் பகமானைக்
கொம்பு மாரமு மாதவி சுரபுனை குருந்தலர் போந்துந்தி
யம்பொ னேர்வரு காவிரி வடகரை மாந்துறை யுறைகின்ற
யெம்பி ரானிமை யோர்தொழு பைங்கழ லேத்துதல் செய்வோமே. (1)

வரைவ ளங்கவர் காவிரி வடகரை மாந்துறை யுறைவானைச்
சிரபு ரம்பதி யுடையவன் கவுணியன் செழுமறை நிறைநாவன்
அரவெ னும்பணி வல்லவன் ஞானசம் பந்தனன் புறுமாலை
பரவி டுந்தொழில் வல்லவ ரல்லலும் பாவமு மிலர்தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருமாந்துறை யிறைவரை ஏத்துவோம்; அவரைத் தொழுத லல்லது மற்றறியோம்; அவரைச் சிந்தியா மனத்தார் சேர்வது தீநெறிதான்;

2209. அந்நகரிற் கொல்லிமழ வன்பயந்த வரும்பெறலா ரமுத மென்சொற்
கன்னியிள மடப்பிணையாங் காமருகோ மளக்கொழுந்தின் கதிர்செய் மேனி
மன்னுபெரும் பிணியாகு முயலகன்வந் தணைவுறமெய் வருத்த மெய்தித்
தன்னுடைய பெருஞ்சுற்றம் புலம்பெய்தத் தானுமனந் தளர்வு கொள்வான், **311**

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) பொன் - நிறம்; (2) ***விளவு*** *- விளா; (3)* ***கூந்தல்*** *- கூந்தற்பனை;* ***வாடினார்*** *- இறந்தார்;* ***சாதியின் பலம்*** *- சாதிக்காய்; (6)* ***இரவியும் மதியமும் மருதவானவர் வழிபடும்*** *- 2207 பார்க்க. மருத* ***வானவர்*** *- மருத்துவர்- (7)* ***இறவில்*** *- கானலில்;* ***அறவன்*** *- இயமதருமன்;* ***அறமாவது*** *வாழ்நாள் பிழையாது அளந்தெடுத்து மரணம் துய்ப்பித்தல் - (8)* ***மந்திகள் மாந்திட*** *- என்க. "சேராதார் தீ நெறிக்கே சேர்கின்றாரே" (தேவா) - (11)* ***வரைவளம் கவர்*** *- மலைபடுபொருள்களை வாரிவரும். முன் 1-10 பாட்டுகளிற் கூறிய குறிஞ்சிப் பொருள்கள்;* ***அரவெனும் பணி*** *- அரனைத் துதியுமின் என்று உயிர்களை வழிப்படுத்தும் பணி;*

தலவிசேடம் *-* ***திருவடகரைமாந்துறை*** *- காவிரிக்கு வடகரையில் 58வது தலம்; ஆம்ரவனம் என்று வழங்கப்படும்; தென்கரை மாந்துறை வேறு. சூரிய சந்திரர்களும் மருத்துக்களும் வழிபட்டமை பதிகத்துக் காண்க (6). இச்சிறப்பு 2208-ம் பாட்டில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது. கண்ணுவ முனிவரும் வழிபட்ட தலம். சுவாமி -* ***ஆம்ரவனநாதர்****. அம்மை -* ***அழகம்மை****; பதிகம் 1. (****ஆம்ரம்*** *- மா).*

இது திருவானைக்காவினின்றும் வடகிழக்கே லாலுகுடி போகும் கற்சாலையில் 10 நாழிகை யளவில் உள்ளது.

2209. பொருளுரை... அந்நகரில்... அணைவுற - அந்நகரிலே கொல்லி மழவன் தான் பெற்ற ஆரமுதம் போன்ற மென் சொல்லுடைய கன்னியாகிய இளமான் போன்ற அழகிய இளங் கொழுந்தினையுடைய பெண்மகளின் ஒளி பொருந்திய மேனியிலே பொருந்திய பெருநோயாகிய முயலகன் வந்து சார்ந்ததனாலே; மெய்... தளர்வு கொள்வான் - மெய் வருந்தித் தனது பெருஞ் சுற்றத்தார் புலம்பத் தானும் மனந்தளர்ச்சி யடைந்தவனாகி,

விளக்கவுரை... கொல்லி மழவன் *- அந்நாட்டின் தலைவனான சிற்றரசன். இந்நாடு கொல்லிமலைத் தொடரை அரணாகிய எல்லையாகக் கொண்டதனால் இப்பெயர் போந்ததென்பது கருதப்படும். புகழ்ச் சோழ நாயனார் புராணக் குறிப்புக்கள் பார்க்க.*

அரும்பெறல்... கொழுந்து *- அடைமொழிகள். அப்பெண்மகவின் அருமைப்பாடும், அதற்கு நோய் வந்தமையால் தாதைக்கு நேரும் துன்பத்தின் மிகுதிப்பாடும் குறித்தன.*

முயலகன் *- பெரு நோய்களுள் ஒன்று. அபஸ்மாரம் என்பர் வடவர். உணர்வற்றுக் கிடக்கவும், வலிப்புக்களுடன் கூடவும், பிறவாறும் நலிவு செய்வது.*

மெய் வருத்தம் - மனம் தளர்வு *- உடல் வருத்தமும் மன வருத்தமும் அடைந்த நிலை.*

2210. மற்றுவே றொருபரிசாற் றவிராமை மறிவளருங் கையார் பாதம்
பற்றியே வருங்குலத்துப் பான்மையினா னாதலினாற் பரிவு தீரப்
பொற்றொடியைக் கொடுவந்து போர்க்கோலச் சேவகராய்ப் புரங்கண் மூன்றுஞ்
செற்றவர்தங் கோயிலினுட் கொடுபுகுந்து திருமுன்பே யிட்டு வைத்தான். 312

பெருஞ்சுற்றம் - செல்வர்க்கழகு செழுங்கிளை தாங்குதல் என்றபடி பெருகிய சுற்றத்தார். "பேதுறு மைந்தரோடும் பெருகுசுற் றத்தை நோக்கி" (839) "பரிபவப்பட்டு வந்த படர்பெருஞ் சுற்றத் தாரை" (420); "ஒட்டி உலர்வா ருறவு" என்ற நீதி யிலக்கணப்படி துன்பிலும் உடனின்ற நற்சுற்றமாதலின் புலம்பெய்தினார். 311

2210. பொருளுரை... மற்று... தவிராமை - மற்று வேறொரு வழியாலுந் தீர்க்க மாட்டாமையால்; மறிவளரும்... ஆதலினால் - மான்கன்று பொருந்தி வளர்தற்கிடமாகிய கையினையுடைய இறைவரது திருவடிகளைப் பற்றியே வழிவரு வரும் மரபில் வந்த தன்மையுடையவனாதலாலே; பரிவுதீர - துன்பம் நீங்கும் பொருட்டு; பொற்றொடியை- வைத்தான் - பொற்றொடியணிந்த அப்பெண்ணைக் கொண்டு வந்து போர்க் கோலம் பூண்ட சேவகராய் முப்புரங்களையும் அழித்தவரது திருக்கோயிலினுள்ளே உடன்கொண்டு புகுந்து அவருடைய திருமுன்பே இட்டு வைத்தான்.

இந்த நான்கு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை- மற்றுவேறு ஒரு பரிசால் - பரிசினாலும் என்ற முற்றும்மை தொக்கது. *மற்று - வேறு* - ஒரு என்பன பலதிறப்பட்ட தீர்வுகளின் தன்மை குறித்தன.

தவிராமை - தவிராமையால்; *தவிராமையால்* - இட்டு வைத்தான் என்க.

மறிவளரும்... பான்மையினான் ஆதலினால் - சிவனடிமைத் திறத்தில் வழிவழியாக வந்த மரபு. "சிலம்பணிசே வடியார்தம், மன்னியசை வத்துறையின் வழிவந்த குடிவளவர்" (1990); "மரபிரண்டும் சைவ நெறி வழிவந்த கேண்மையினார்" (1915); இரு மரபிலும் வழிவழி சிவனடிப் பற்றினில் வந்தவர்க்கேயன்றி இத்துணிபும் பண்பும் வராதென்பது குறிப்பு. *ஆதலினால்* என்ற கருத்தும் காண்க. மிகக்கோரமாயும் கோபமாயும் என்பர் திருவ.சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள்.

திருமுன்பே யிட்டு வைத்தான் - திருமுன்பு இடப்பட்டபோது நேரே திருப்பார்வை விசேடமாகிய சிவாகார சத்தியினால் நோய் முதலிய பீடைகள் வலி கெடுமென்பது துணிபு. வாயு சரீரமுடைய சிறு தெய்வங்களின் சேட்டைகள், திருக்கோயிலில் இறைவர் திருமுன்பு நீக்கம் பெறுதல் திருவாலவாய், திருச்செந்தூர் முதலிய பதிகளில் இன்றும் நிகழக் காணப்படும் உண்மையாகும்.

போர்க்கோலச் சேவகராய்... செற்றவர் - முப்புரப்பகை செற்றமைபோல மும்மலப் பகை விளைவாகிய இந்நோயினையும் நீக்குபவர் என்றது குறிப்பு.

2211. அவ்வளவி லாளுடைய பிள்ளையா ரெழுந்தருளி யணுக வெய்தச்
"செவ்வியமெய்ஞ் ஞானமுணர் திருஞான சம்பந்தன் வந்தா"னென்றே
எவ்வுலகுந் துயர்நீங்கப் பணிமாறுந் தனிக்காளத் தெழுந்த வோசை
வெவ்வுயிர்க்கு மவன்கேளா மெல்லியலை விட்டெதிரே விரைந்து செல்வான், 313

இட்டு வைத்தான் - திருவடிச் சார்புபற்றி வந்த குலப்பான்மையால் மழவன் செய்த செயல் காரணமாகத் திருவருள் ஆளுடைய பிள்ளையார் வருகையை நிகழ்வித்து நோய் நீக்கம் செய்வித்த உண்மையும் கண்டு இவ்வுலகம் தெளிந்துய்யக்கடவது. "அவ்வளவில்" என்று வரும்பாட்டின் தொடக்கக் குறிப்பும் காண்க.

பொன்தொடி - தொடியை அணிந்தவள்; அன்மொழித் தொகை. தொடிபோலத் துவண்டு உணர்வற்றிருந்த நிலையும் குறிப்பு. 312

2211. பொருளுரை... அவ்வளவில்.... எய்த - அந்த அளவிலே ஆளுடைய பிள்ளையாரப் பதியினுக்கு எழுந்தருளி அதன் அணிமையிற் சேர; செவ்விய... ஓசை- "செம்மை தருகின்ற மெய்ஞ்ஞானத்தினை உணரும் திருஞான சம்பந்தன் வந்தான்" என்று எல்லா வுலகங்களும் துன்ப நீங்கும்படி ஒலிக்கின்ற திருக்காளம் முதலிய இயங்களினின்றும் எழுந்த ஓசையினை; வெவ்வுயிர்க்கும் அவன் கேளா - துக்கத்தினால் பெருமூச்சு விட்டிருக்கும் அந்தக் கொல்லி மழவன் கேட்டு; மெல்லியலை... செல்வான் - மெல்லியலாகிய அந்தப் பெண்ணை விட்டுப் பிள்ளையாரது வரவினை எதிர்நோக்கி விரைந்து செல்வானாகி;

*விளக்கவுரை... அவ்வளவில்.... எய்த - பொற்றொடியைத் திருமுன்பு இட்டு வைத்தலும், பிள்ளையார் எழுந்தருளி அணுக எய்துதலும், இடையீடின்றி உடனிகழ்ந்தன போன்றன என்பார் **அவ்வளவில் - எய்த** என்றார். **அணுக** - வினை நீங்கும் செவ்வி அணுக என்பதும் குறிப்பு.*

***செவ்விய மெய்ஞ்ஞானமுணர்** என்றது ஞானமே எல்லாத் துன்பத்தையும் போக்கி யின்பமளிக்க வல்லதாகும் என்ற குறிப்பாகும். திருவருள் வயத்தானிகழ்ந்ததாதலின் காளங்கள் பிள்ளையாரது வேறு தன்மைகளைப் பற்றியன்றி இத்தன்மைபற்றி ஒலித்தலும், அவ்வோசையே மழவனது செவிக்குப் புலமாதலும் நேர்ந்தன. **என்றே** - தேற்ற ஏகாரத்தின் குறிப்புமது. பிரிநிலையுமாம்.*

***எவ்வுலகும் துயர் நீங்கப் பணிமாறும்** - காள முதலிய இயங்கள் பிள்ளையாரது தற்பெருமை சாற்றவன்றி உலகம் பயன்பெறும் பொருட்டே இறைவனாற்றரப்பட்டு ஒலித்தன என்பதாம்.*

***வெவ்வுயிர்க்கும்** - வேறொரு பரிசினாலும் நோய் தவிராமையின் மனந்தளர்தலினாற் பெருமூச்சு எறிந்து என்க. அருமையுடைய பெண்ணின்பால் வைத்த அன்பு மிகுதி அதற்குக் காரணமாம்.*

2212. "மாநகர மலங்கரிமின், மகரதோ ரணநாட்டு மணிநீர் வாசத்
தூநறும்பூ ரணகும்பஞ் சோதிமணி விளக்கினொடு தூப மேந்தும்!
ஏனையணி பிறவுமெலா மெழில்பெருக வியற்று"மென வேவித் தானும்
வானவர்நா யகர்மகனார் வருமுன்பு தொழுதணைந்தான் மழவர் கோமான். **314**

---

*மெல்லியலைவிட்டு எதிரே விரைந்து செல்வான் - விட்டு - இறைவன்பால் ஒப்புவித்தது என்றும், அப்பெண்ணின்பால் வைத்த பாசப் பற்றினைவிட்டு என்றும் உரைக்க நின்றது. இறைவனருள் பெற்றார்மாட்டு இவ்வாறு கொண்டு நிகழ்ந்த அன்புச் செயல் "மறிவளருங் கையார் பாதம், பற்றியே வருங்குலத்துப் பான்மை யினா னாதல்" காரணமாக விளைந்தது, **எதிரே** - எதிர்கொண்டு. **விரைந்து** - அன்பின் மிகுதியினால் உண்டாயின் ஆவல் காரணம்; **செல்வான்** - செல்வானாகி; முற்றெச்சம்; **செல்வான் - அணைந்தான்** என வரும்பாட்டுடன் முடிந்தது.* *313*

2212. பொருளுரை... "மாநகரம்... என ஏவி - "பெரிய இந்நகரத்தினை அலங்காரஞ் செய்யுங்கள்; மகர தோரணங்களை உரிய எவ்விடத்தும் நாட்டுங்கள்; மணிகளை யிட்ட வாசநீர் நிறைந்த அழகிய நிறை குடங்களையும், சோதியையுடைய அழகிய விளக்குக்களுடனே தூபங்களையும் ஏந்துங்கள்; இன்னும் ஏனையபிற அணிகளை யெல்லாம் பெருகும்படி செய்யுங்கள்!" என்று கட்டளையிட்டு; தானும்...கோமான் - திரு மழவர்களது அரசனாகிய தானும், தேவ தேவராகிய சிவபெருமான்றிருமகனார் திரு முன்பு தொழுதுகொண்டே அணைந்தான்.

*விளக்கவுரை... மாநகரம்...ஏவி - **நாட்டும் - ஏந்தும்** என்பன நாட்டுக. ஏந்துக என விதிப்பொருள் குறித்த வியங்கோள் வினைமுற்றுக்கள். இங்குக் கூறியன அடியாரையும் குருவையும் எதிர்கொண்டு வரவேற்கும் மங்கலச் செயல் மரபுகள். **எழில் பெருக** - அரசனது நகரமாதலின் என்றும் மங்கலங்கள் செய்யப்பட்டு விளங்கினும், இப்போது அவை மேலும் பெருக என்பது.*

மணிநீர் வாசத் தூநறும் பூரணகும்பம் *- அடைமொழிகள் குடத்தின் அணியும், உள் நிறைத்த நீரின் நலமும் குறித்தன.*

விளக்கினொடு தூபம் *- தூபதீபம் என இவை இணைபிரியா துள்ள இயல்பு குறிக்க ஒடு வுருபு புணர்த்தி ஓதினார்.*

ஏனை அணி பிறவுமெலாம் *- "முத்துவிதானம்" முதலியன.*

தானும் - அணைந்தான் *என்க. ஏவியதனோ டமையாது தானும் என உம்மை இறந்தது தழுவியது; அன்பின் பெருக்குக் குறித்த சிறப்பும்மையுமாம்.*

வானவர் நாயகர் *- தேவதேவர்; சிவபெருமான்;*

மகனார் *- பால் உண்ட செய்திபற்றிய உபசார வழக்கு. இதுகொண்டு வேறு முடிவு கொள்வார் கூற்றுப் பொருந்தாமை முன்னரே நாட்டப்பட்டது.*

2213. "பிள்ளையா ரெழுந்தருளப் பெற்றே"னென் றானந்தம் பெருகு காதல்
வெள்ளநீர் கண்பொழியத் திருமுத்தின் சிவிகையின்முன் வீழ்ந்தபோது
வள்ளலா "ரெழுக"!வென மலர்வித்த திருவாக்கான் மலர்க்கை சென்னி
கொள்ளமகிழ்ந் துடன்சென்று குலப்பதியின் மணிவீதி கொண்டு புக்கான். 315

வருமுன்பு - முன்பு - திருமுன்பு; எதிர்கொண்டு; அவர் இங்கு வருவதற்குமுன் தான் அணைந்தான் எனக் காலங் குறித்தது எனலுமாம்.

தொழுது அணைந்தான் *- தொழுது கொண்டே; தொழுத நிலையிலே என்க. "தொழுதெழுவாள்" (குறள்) என்புழிப்போல.*

கோமான் *- சோழர்கட்குட்பட்ட சிற்றரசனாயினும், அன்பின் சிறப்பினாலும், பிள்ளையா ரருள்பெறும் சிறப்பினாலும்* ***கோமான்*** *என்றார்.* ***மழவர்*** *- மழநாட்டவர்.*
314

2213. பொருளுரை... பிள்ளையார்... என்று - "பிள்ளையார் எழுந்தருளும் பெரும் பேற்றினைப் பெற்றேன்" என்று எண்ணி; பெருகு... வீழ்ந்தபோது - மேன்மேலும் பெருகும் அன்பினாலே பெருக்காக நீரினைக் கண்கள் பொழியத் திருமுத்துச் சிவிகையின் முன்பு (மழவன்) வீழ்ந்தபோது; வள்ளலார்... திருவாக்கால் - வள்ளலாராகிய பிள்ளையார் "எழுக!" என்று திருவாக்கால் மலர்வித்தமையினாலே; மலர்க்கை.... புக்கான் - மலர்க்கைகளைத் தலையின்மேல் கூப்பிக்கொண்டு எழுந்து அவருடனே சென்று பழமையுடைய அப்பதியின் அழகிய திருவீதியின் வழியே அழைத்துக் கொண்டு வந்து நகரினுட் புகுந்தனன்.

விளக்கவுரை... பிள்ளையார்...பெற்றேன் *- இது மழவனது மனத்துள் நிகழ்ந்த எண்ணம். தனக்குள் தானே சொல்லிய தென்றலுமாம்.*

திருமுத்தின் சிவிகையின்முன் வீழ்ந்த *- நகர்ப்புறத்துச் சென்று எதிர்கொண்ட மழவன் பிள்ளையாரின் முத்துச்சிவிகையின் முன்பு நிலமுற வீழ்ந்து கொண்டனன். இஃது அவரை எதிர்கொள்வதற்கேற்ற முறையாதலுடன், அவர்பால் எழுக! எனப் பின்னிகழ்ச்சிக்குரிய அருளிப் பாட்டினை அப்போதே பெறுதற்குரிய வழியுமாம். குலச் சிறையார் பிள்ளையாரை எதிர்கொள்ளும்போது அவரது திருக்கூட்டத்தின் முன் வீழ்ந்து கிடக்கும் நிலை இங்குக் கருதற்பாலது (புரா. 657).*

வள்ளலார் *- (கேளாமலே) உலகுக்கெல்லாம் ஞான உபதேசம் செய்து ஈடேற்றுதல் குறிப்பு.*

"எழுக!" என மலர்வித்த - எழுதல் *- துன்பக் கடலினின்றும், பிறவிக்கடலினின்றும் கரையேறுதல். இது மழவனுக்கும் அவனது மகளுக்கும் பொருந்தும்படி பொதுமையினிற்பது காண்க.*

மலர்வித்த திருவாக்கு - மலர்வித்தல் *- கூம்பிய அரும்பை வாயினால் வண்டுகள் ஊதி அலர்த்துதல் போலப் பிள்ளையார், எழுக என்ற திருவாக்கினால், மனந்தளர்வினாற்*

2214. மங்கலதூ ரியமுழங்கு மணிவீதி கடந்துமதிச் சடையார் கோயில்
பொங்குசுடர்க் கோபுரத்துக் கணித்தாகப் புனைமுத்தின் சிவிகை நின்றும்
அங்கணிழிந் தருளுமுறை யிழிந்தருளி யணிவாயில் பணிந்து புக்குத்
தங்கள்பிரான் கோயில்வலங் கொண்டுதிரு முன்வணங்கச் சாருங் காலை, 316

கூம்பியிருந்த மழவனது சிந்தையினையும், நோயினுள் ஒடுங்கிக்கிடந்த மகளது உயிரினையும் விரியச் செய்தனர் என்பது குறிப்பு.

உடன் - திருக்கூட்டத்துடன் கூடிச் சிவிகையின் முன்பு.

மணிவீதி கொண்டுபுக்கான் - திருவீதியின் வழியே அழைத்துக் கொண்டு வந்து நகரினுட் புகுந்தனன் என்றதனால் எதிர்கொண்டு வணங்கிய இடம் வீதியினைக் கடந்த நகர்ப்புறமாம். **குலப்பதி** - **குலம்** - பழமையும், **மணிவீதி** - பெருந்திருவீதியின் மேன்மையும் குறித்தன. 315

2214. பொருளுரை... மங்கல தூரியம்... கடந்து - மங்கலமுழக்காகிய வாத்தியங்கள் ஒலிக்கும் அழகிய வீதியினைக் கடந்துசென்று; மதிச்சடையார்... இழிந்தருளி - பிறையணிந்த சடைமுடியினையுடைய பெருமானது திருக்கோயிலின் பொங்கும் ஒளி வீசும் திருக்கோபுரத்துக்கு அணித்தாக அழகிய முத்துச் சிவிகையினின்றும் அங்குக் கீழ் இறங்கும் முறையிலே இறங்கியருளி; அணிவாயில்... காலை - அழகிய திருவாயிலினைப் பணிந்து உள்ளே புகுந்து தமது பெருமானாரது கோயிலினை வலங்கொண்டு திருமுன்பு வணங்கப் பிள்ளையார் சாரும்போது,

விளக்கவுரை... மணிவீதி - நகர முழுமையும் எல்லா வீதிகளையும் அணி செய்வித்தானாயினும், இங்குக் குறித்தது மழவன் உடன்வரப் பிள்ளையார் எழுந்தருளி வரும் பேறுபெற்ற திருவீதி; இது கிழக்கினின்றும் திருநகரினுள் வரும் திருவீதி.

கோபுரத்துக்கு அணித்தாக - திருக்கோபுரம் கட்புலப்பட்டு வழிபடவுள்ள எல்லை அருகாக. **இழியுமுறை** - விதிப்படி.

கோயில் - புறத்தும் உள்ளும்; **திருமுன்** - இறைவர் திருமுன்பு.

கடந்து - **இழிந்தருளிப்** - **புக்கு** - **வலங்கொண்டு** - **சாரும்** என்க. இவ்வளவும் வழிபாட்டு முறை குறிக்கப்பட்டது. சாருங்காலை (2214) - கண்டு நோக்கி - அருள் செய்ய - மழவன் - என மொழிந்து நின்றா(னாக) (2215); சண்பைநாதர் கேட்டு - அந்நிலையினின்றே - பணிந்து - என்று - பாடினா(ராகி) (2216); பாடிச் சாத்திப் - போற்றி நிற்ப - பிணிநீங்க - கன்னி - ஒல்கி - வந்து - அணைந்தாள் (2217) என்று இந்நான்கு பாட்டுக்களையும் கூட்டி முடித்துக்கொள்க. 316

2215. பொருளுரை... கன்னி.... நோக்கி - கன்னியாகிய இளங்கொடி போன்ற பெண் உணர்வு இன்றி நிலத்தில் கிடந்ததனைக் கண்டு நோக்கி; "என் இது!" என்று அருள் செய்ய - இது என்ன என்று கேட்டு அருளிச் செய்ய; மழவன்றான்... மொழிந்து நின்றான்-

2215. கன்னியிளங் கொடியுணர்வு கழிந்துநிலன் சேர்ந்ததனைக் கண்டு நோக்கி
"யென்னிது ?"வென் றருள்செய்ய, மழவன்றா னெதிரிறைஞ்சி "யடியேன் பெற்ற
பொன்னிவளை முயலகனாம் பொருவிலரும் பிணிபொருந்தப் புனிதர் கோயின்
முன்னணையக் கொணர்வித்தே னிதுபுகுந்த படி"யென்று மொழிந்து நின்றான். 317

மழவன் அவர் எதிரே பணிந்து "அடியேன் பெற்ற பொன்போன்ற இந்தப் பெண்ணை ஒப்பற்ற தீர்த்தற்கரிய முயலகன் என்கின்ற நோய் பொருந்துதலினாலே இறைவரது திருக்கோயிலின் முன் அணையும்படி கொண்டு இடும்படி செய்வித்தேன்; இதுவே நிகழ்ந்த வரலாறு" என்று மொழிந்து நின்றான்; (நிற்கவே;)

விளக்கவுரை... கன்னி இளங்கொடி - கன்னி - கன்னியாகிய என்று பண்புணர்த்தி நின்றது. **கொடி** - கொடிபோல்வாள் என ஆகுபெயர். துவண்டு கிடந்த குறிப்புப் பெறக் **கொடி** என்றார்.

நிலன்சேர்தல் - நிலத்திற் கிடத்தல். **உணர்வு** - பெண்களுக்குரிய நாண் முதலியவாகிய தன்னுணர்ச்சி.

கண்டு நோக்கி - கண்டு - புறநோக்கமும், **நோக்கி** - கூர்ந்த அகநோக்கமும் குறித்தன. காரணகாரிய நிகழ்ச்சி;

அருள் செய்ய - கேட்டருள; பிள்ளையாரது திருக்கண்களாற் காணப் பெற்றதும், பின் நோக்கப் பெற்றதும், பின்னர்க் கேட்கப்பெற்றதும் ஆகிய இவையே அருளிப்பாடுகளாவன என்றது. "திருச் செவியிற் சார மேவுதலுந் திருவுள்ளக் கருணை மேன்மேல் வைத்து" (புரா. 438) என்னும் நிலையும் ஈண்டுக் கருதுக.

இறைஞ்சி - பெரியோர்களிடம் விடை மொழியும்போது பணிந்து கூறுதல் மரபு.

பொன் - பொன் போன்றாள், உவம ஆகுபெயர். அருமை குறித்தது. **பொன்னி** - இலக்குமி போன்ற இவளை, **வளை** - வளைத்த என்றலுமாம். திரு. வ.சு.செ. அவர்கள் குறிப்பு.

முயலகனாம் பொருவிலரும் பிணி - பொருவில் - என்றது நோயினது மிக்க கொடுமையும், **அரும்** என்றது அது எதனாலும் தீர்த்தற் கரிதாயினமையும் குறித்தன. அடைமொழிகள் பின்னர் வைக்கப்பட்டமை அதுவரை நோயின் தன்மையேயன்றி நிகழ்ச்சியினையும் உடன் எடுத்துச் சுருங்கக் கூறுதற்கென்க.

புனிதர்... கொணர்வித்தேன் - உயிரினைப்பற்றிய கறையினைப் போக்குபவர் என்ற குறிப்பும், தான் வேறு பற்றின்றி நிற்கும் நிலைக் குறிப்பும் உணர்த்தியபடி. "புனிதர்" பதிகத் திருக்கடைக்காப்புக் காண்க.

புகுத்தபடி - நிகழ்ந்த வகை; உணர்வுகழிந்த பெண் இங்குப் புகுந்த தன்மை என்பதும் குறிப்பு.

நின்றான் - திருவருட் குறிப்பினை எதிர்நோக்கி நின்றான் என்பது. 317

வேறு

2216. அணிகிளர் தாரவன் சொன்னமாற்ற
மருளுடன் கேட்டந் நிலையினின்றே
பணிவளர் செஞ்சடைப் பாச்சின்மேய
பரம்பொரு ளாயினா ரைப்பணிந்து
"மணிவளர் கண்டரோ மங்கையை வாட
மயல்செய்வ தோவிவர் மாண்ப ?"தென்று
தணிவில் பிணிதவிர்க் கும்பதிகத்
தண்டமிழ் பாடினார் சண்பைநாதர். 318

2216. பொருளுரை... சண்பைநாதர் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; அணி கிளர்... கேட்டு - அழகிய மாலையணிந்த அவன் சொன்ன மாற்றத்தினை அருளோடுங் கேட்டருளி; அந்நிலையினின்றே - கேட்ட அந்நிலையில் நின்றபடியே; பணிவளர்.. பணிந்து - பாம்பு வளர்தற் கிடமாகிய சிவந்த சடையினையுடைய திருப்பாச்சிலின் மேவிய பரம்பொருளாகிய இறைவரைப் பணிந்து; "மணி... மாண்ப?"தென்று - "மணிவளர் கண்டரோ! மங்கையை வாடும்படி மயக்கம் செய்வதோ இவரது மாண்பு" என்று எடுத்து; தணிவில்... பாடினார் - தீர்த்தற்கரிய அந்நோயினைத் தீர்க்கும் திருப்பதிகமாகிய தண்ணிய தமிழினைப் பாடியருளினார்; (அவ்வாறு அருளி);

விளக்கவுரை.. *இது முதல் சரித நிகழ்ச்சியை இத்திருப்பதிக யாப்பில் அமைத்த நயமும் இயைபும் காண்க.*

அருளொடும் கேட்டு *- "திருவுள்ளக்கருணை மென்மேல்வைத்து";* **அந்நிலையின் நின்றே பணிந்து - பாடினார்** *- இறைவரது திருமுன் வணங்கச் சாரும்போது இதனைக் கண்டு கேட்டாராதலின் மேலே வணங்க உட்செல்லாது, கேட்ட அவ்விடத்தில் அந்நிலையிலே நின்றும், உட்சென்று நியதியின் வணங்காது அங்கு அந்நிலையே நின்று பணிந்தும் என்க.*

செஞ்சடை *- "சுடர்ச்சடை சுற்றி முடித்து" என்ற பதிகக் குறிப்பு.*

"மணிவளர்... மாண்பு" என்று *- தேவாரம் சொல்லும் பொருளும் அவ்வாறே எடுத்தாண்டு வைத்தார். பதிகம் பார்க்க. பதிகத் தொடக்கத்தின் முதற் பாட்டின் இறுதியடி அப்பதிகக் கருத்தும் குறிப்புமாதல் காண்க. பதிகமுழுதும் ஏனைய பாட்டுக்களும் இக்கருத்தேபடக் கொண்டு இறுதியடிகள் விளங்குவது காண்க.* **மணிகண்டர்** *- தல இறைவர் பெயர்.* **விடத்தின்பாற்பட்ட தேவர்களைக் காத்த இவர் இவளைக் காப்பர்** *என்பது குறிப்பு.*

தணிவில்பிணி தவிர்க்கும் பதிகத் தண்டமிழ் - தணிவில் *- வேறொருபரிசினாலும் தீராத. சாத்தியம், சாத்தியா சாத்தியம், அசாத்தியம் என்ற முத்திறத்தினுள் அசாத்தியத்தின் பாற்பட்ட.* **பிணி** *- பிணியினையும் எனச் சிறப்பும்மை தொக்கது;* **தவிர்க்கும்** *- அன்று தவிர்த்தல் மட்டுமன்றி இன்றளவும் இனியும் தவிர்க்கும் என்பது குறிப்பு.*

பாடினார் *- பாடத் தொடங்கினார்.* *318*

2217. பன்னு தமிழ்மறை யாம்பதிகம்
பாடித் திருக்கடைக் காப்புச்சாத்தி
மன்னுங் கவுணியர் போற்றி நிற்க,
மழவன் பயந்த மழலைமென்சொற்
கன்னி யுறுபிணி விட்டுநீங்கக்,
கதுமெனப் பார்மிசை நின்றெழுந்து
பொன்னின் கொடியென வொல்கிவந்து
பொருவலித் தாதை புடையணைந்தாள். **319**

2217. பொருளுரை... பன்னு... நிற்க - எடுத்துச் சொல்கின்ற தமிழ் மறையாகிய திருப்பதிகத்தினைப் பாடி முடித்துத் திருக்கடைக்காப்புச் சாத்தி நிலைபெற்ற கவுணியர் தலைவராகிய பிள்ளையார் துதித்து நிற்க; மழவன்- கன்னி - மழவன் பெற்ற மழலையாகிய மெல்லிய சொல்லினையுடைய கன்னி; உறுபிணிவிட்டு நீங்க - தன்னைப் பொருந்திய நோய்விட்டு நீங்கியதனாலே; கதுமென.. அணைந்தாள் - அதிவிரைவாக நிலத்தினின்றும் எழுந்து பொன்னின் கொடிபோல ஒதுங்கி நடந்து வந்து போர் வன்மையுடைய தந்தையின் பக்கத்தில் அணைந்தனள்.

இந்நான்கு பாட்டுக்களும் ஒரு முடிபுபடுத்தி உரைக்க நின்றன. முன்னிரண்டையும் ஒரு முடிபாக்கியும் பின்னிரண்டினையும் தனித்தனி வேறு முடிபுகளாக்கியும் உரைப்பினுமமையும். பொருணிகழ்ச்சியின் தொடர்பு நோக்கி இவ்வாறுரைக்கப்பட்டது.

*விளக்கவுரை... **பன்னுதல்** - பலவாற்றாலும் எடுத்துப் போற்றுதல். பதிகப் பாட்டுக்களின் 3-4 அடிகள் தோறும் வரும் கருத்துக்கள் காண்க.*

__மன்னுதல்__ - என்றும் நிலைத்திருத்தல்; அடியாருள்ளத்தில் நீங்காதிருத்தல்.

*__மழலை மென்சொற்கன்னி__ - முன்னர்க் கன்னி - உணர்வு கழிந்து நிலன் சேர்ந்திருந்தனளாக (2215), ஈண்டு அவள் உணர்வுபெற்றுப் பேசும் திறம் பெறும் நிலை பெறுதல் குறிக்க **மழலை மென்சொற் கன்னி** என்றார்.*

__பார்மிசை நின்றும்__ - என்க. பார் - வீழ்ந்து கிடந்த நிலம் (2215).

*__பொன்னின் கொடி என ஒல்கி__ - ஒல்கி - நுடங்கி; "வல்லியி னொல்கி". (கோவை) "பொற்றொடி" (2210). **ஒல்கி வந்து** - நாணம் காரணமாக ஒல்கி; கன்னியாதலின் தாதை புடை வந்தணைந்தாள் என்க.*

*__எழுந்து - வந்து - அணைந்தாள்__ - என்று கூட்டுக. **கதுமென** எழுந்தபின் ஆடவர் முன் நிற்க நாணினள் போன்று என்க.*

*__உறுபிணிவிட்டு நீங்க - எழுந்து - விட்டு நீங்க__ - விரைவாக என்றது முழுதும் நீங்க என்ற உறுதி குறித்தது. நோய் உணர்வு கழியச் செய்தமையால் கிடந்த பெண், நோய் நீங்கியவுடன் உணர்வு பெற்றதனால் எழுந்தனள். **உறுபிணி** - பிள்ளையார்முன் வலியின்றி நீங்குதலின் அடையின்றி வாளா கூறினார். 319*

2218. வன்பிணி நீங்கு மகளைக்கண்ட மழவன் பெருகு மகிழ்ச்சிபொங்கத்
தன்றனிப் பாவையுந் தானுங்கூடச் சண்பையர் காவலர் தாளில்வீழ
நின்ற வருமறைப் பிள்ளையாரு நீரணி வேணி நிமலர்பாதம்
ஒன்றிய சிந்தை யுடன்பணிந்தா ரும்பர் பிரான்றிருத் தொண்டரார்த்தார். 320

2218. பொருளுரை... வன்பிணி... வீழ - வலியநோய் நீங்கப் பெற்ற மகளைக் கண்ட மழவன் பெருகிய மகிழ்ச்சி மேன்மேற் பொங்கியதனால் தனது பெண்ணும் தானும் சேர்ந்து சீகாழியர் தலைவராகிய பிள்ளையாரது திருவடிகளில் வீழ்ந்து பணிய; நின்ற... பிள்ளையாரும் - நின்றருளிய அருமறை வல்லாராகிய ஆளுடைய பிள்ளையார் தாமும்; நீர்அணி.... பணிந்தார் - கங்கையைத் தரித்த சடையினையுடைய இறைவரது திருப்பாதங்களை ஒன்றுபட்ட சிந்தையினோடும் பணிந்தனர்; உம்பர்.... ஆர்த்தார் - தேவ தேவராகிய இறைவரது திருத்தொண்டர்கள் சிவமுழக்குடன் ஆரவாரித்தனர்.

விளக்கவுரை... வன்பிணி - "மன்னு பெரும்பிணி யாகு முயலகன்" (2209); "முயலகனாம் பொருவிலரும் பிணி" (2215); "தணிவில் பிணி" (2216) என்றவை காண்க.

பெருமகிழ்ச்சி பொங்க - பெருகிய மகிழ்ச்சி மேன்மேலும் அதிகரிக்க.

பாவையுந்தானும்... தாளில் வீழ - புரா - 1110 - 1111ம் வெள்ளையானைச் சருக்கம் 12-ம் பார்க்க. அப்பூதியாரது மகன் வணக்கமும் அப்பூதியார் வருத்தமும் ஈண்டு வைத்துக் காண்க.

நின்ற பிள்ளையாரும்...நிமலர்பாதம் - பணிந்தார் - மழவனும் மகளும் தம்மடி பணியத் தாம் இறைவரது அடிபணிந்தார் என்றது எல்லா வணக்கமும் இறைவரைச் சாரத்தக்கன என்ற உண்மையினையும், தம் செயல் எல்லாம் இறைவர் செயலேயாம் என நிகழ்ந்த உண்மையினையும் உணர்த்திற்று. பிள்ளையார், அவர்களது வணக்கத்தினை இறைவர்பாற் சார்த்தினார் என்க. நின்ற - "அந்நிலையில் நின்றே" (2216) என்றபடி "திருமுன் வணங்கச் சார்ந்த" (2214) பிள்ளையார் அவ்வாறு வணங்குமுன் இடையில் நிலமிசைக் கிடந்த கன்னியைக் கண்டு, நோக்கிக், கேட்டு அங்கு நின்றபடியே இறைவரைப் பாடி நின்றாராதலின், அதுவரை வணங்கும் செயல் அங்குத் தடைபட்டு நின்றது என்றும், நின்ற நிலையிலிருந்த என்றும் உரைக்க நின்றது.

அருமறை - பிள்ளையார் வல்ல எண்ணிறந்த புனித வேதமும் (2162), அப்போது உறுபிணி நீக்கிய அரிய தமிழ் வேதமும் குறிப்பு.

நீர் அணி வேணி - நீர் - கங்கை; **வேணி** - "செஞ்சடைப் பரம்பொருள்" (2216) என்ற குறிப்புக் காண்க. "சுடர்ச்சடை" பதிகம். இத்தலத்தில் இறைவர் (நடராசர்) திருக்கோலம் சுற்றிய சடையுடன் விளங்குதல் காண்க.

ஒன்றிய சிந்தையுடன் பணிந்தார் - "அவனே தானே யாகிய வந்நெறி, யேகனாகி யிறைபணி நிற்க" (போதம் - 10 சூ.) என்ற கருத்து. **ஒன்றுதல்** - இரண்டற்கு அதுவே நிறைவாகிப் பொருந்துதல்.

ஆர்த்தார் - சிவநாம முழக்கம் செய்தனர். 320

திருப்பாச்சிலாச்சிரமம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம்**

துணிவளர் திங்க டுளங்கி விளங்கச் சுடர்ச்சடை சுற்றிமுடித்துப்
பணிவளர் கொள்கையர் பாரிடஞ் சூழ வாரிட மும்பலி தேர்வர்
அணிவளர் கோலமெ லாஞ்செய்து பாச்சி லாச்சிரா மத்துறை கின்ற
மணிவளர் கண்டரோ மங்கையை வாடமயல்செய்வ தோவிவர் மாண்பே. (1)

அகமலி யன்பொடு தொண்டர் வணங்க வாச்சிரா மத்துறை கின்ற
புகைமலி மாலை புனைந்தழ காய புனிதர்கொ லாமிவ ரென்ன
நகைமலி தண்பொழில் சூழ்தரு காழி நற்றமிழ் ஞானசம் பந்தன்
தகைமலி தண்டமிழ் கொண்டிவை யேத்தச் சாரகி லாவினை தானே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- முன் 2216-ல் ஆசிரியர் காட்டியபடி பதிகக் கருத்து.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) துணிபட்டுத் துளங்கிப் பின் வளர வரம் பெற்று விளங்கி என்க. **துளங்குதல்** - அசைதல் - நிலைகலங்கி வருந்துதல்; **சுடர்ச்சடை சுற்றி முடித்து** - **சுடர்ச்சடை** - செவ்வொளியுடைய சடை. "மின்வண்ண மெவ்வண்ணம் - வீழ்சடை"; **சுற்றி முடித்து** - கற்றையாக முடிகவித்தது போல மேலே முடித்து. தல இறைவராகிய கூத்தப்பிரானது திருமேனியில் இவ்வண்ணம் காணப்பெறும். **பணி** - பாம்புகள்; **வளர்** - தங்கும் - அன்பின் பணி என்றலுமாம். **கொள்கை** - முன்பொருளிற் கொள்ளுதல் என்றும், பின் பொருளில் தன்மை என்றும் கொள்க. **அணிவளர் கோல மெலாஞ் செய்து** - **மங்கையை வாட** - என்று கூட்டுக. **கோலஞ் செய்தல்** - அழகிய உடலும் கருவி கரணங்களும் தருதல். **கண்டரோ** - ஓகாரம் ஐயப் பொருளில் வந்தது. **மணிகண்டர்** - தலச்சுவாமி பெயர். **இவர் மாண்பே** - தொண்டர்களை நோக்கி முறைப்பாடுரைத்தல் போலக் கூறியது; விடத்தால் வாடிய மயக்கம் நீக்கிய மணிகண்டரோ மயக்கம் செய்வதோ?; இது மாறன்றோ? மாண்பன்று; ஓகாரமிரண்டும் ஐயம். ஏகாரவினா எதிர்மறை. "இவரலா தில்லையோ பிரானார்" என்ற இத்தலத்து நம்பிகள் பதிகக் கருத்தை ஆசிரியர் "புறம் பொருபான் முன்புநின்ற திருத்தொண்டர் முகப்பே முறைப்பாடுடையார் போல்" (ஏயர்கோன் - புரா. 80) என்று காட்டியருளியது காண்க. (2) **கனல் சுடர்** - கனலும் இருசுடர்களும்; **தலை** - நகுதலை. **ஈடு** - உயர்வு; **ஏழை** - பெண் - அபலை. (3) **வெஞ்சுடர்** - தீ; **பைந்தொடி** - "பொற்றொடி" (2210); (4) **மனமலி** - எண்ணத்துள் நிறைந்த; **மைந்தர்** - வலிமையை யுடையவர் (5) **வாய்மூரி** - இசைவகை; (6) **ஐவிரற்கோவணம்** - கோவணத்தின் அளவு; ஐந்தலையரவினை அரைக்கசைத்த குறிப்புமாம். "மறையே நமது கோவணமாம்" என்ற குறிப்புப்பட நால்விரற் கோவணம் என்பது மொருமரபு. (7) **ஏகவடம்** - ஒற்றைச் சரமாலை. ஏகாவலி என்பர். (10) **சாய்** - சாயகம் - அம்பு. **நகுவர்** - சிரிப்பர். **உட்கும்** - நாணத்தகும்; **தகையார்** - புத்த சமணர். **சாய்** - நிறம் என்று கொண்டு நாணத்தக்க நிறமுடைய - கருநிறமுடைய சமணர் என்றலுமாம். "கருகு முடலார்" "காரமண்" (தேவா).

2219. நீடு திருவாச்சி ராமமன்னு
நேரிழை பாகத்தர் தாள்வணங்கிக்
கூடு மருளுட னங்கமர்ந்து,
கும்பிடுங் கொள்கைமேற் கொண்டுபோந்தே
யாடன் மகிழ்ந்தார் பதிபிறவு
மணைந்து பணிந்தடி போற்றியேகிச்
சேடர்கள் வாழுந் திருப்பைஞ்ஞீலிச்
சிவபெரு மானையி றைஞ்சச்சென்றார். 321

---

*தலவிசேடம் - **திருப்பாச்சிலாச்சிரமம்** - காவிரியின் வடகரை 62-வது தலம். **திருவாசி** - என வழங்கப்படும். ஆளுடைய பிள்ளையார், இங்குக் கொல்லி மழவனது பெண்ணைப் பற்றியிருந்த முயலகனோய் நீங்கப் பாடி யருளிய வரலாறு புராணத்துட் காண்க. பதிகத்திற் கட்டளையிட்டருளியவாறே இத்தலத்திற் கூத்தப் பெருமான் சுடர்ச்சடை சுற்றி முடித்த திருக்கோலத்தோடு விளங்குகின்றனர். முயலகன் அவரது திருவடிக்கீழன்றி அருகில் நின்று வணங்கி நிற்கும் கோலமும் காண்க. திருவடிக்கீழ்ப் பாம்பு உண்டு; சர்ப்பநடனமூர்த்தி; "பணிவளர்கொள்கையர்" (பதிகம்); ஆளுடைய நம்பிகள் இங்கு "இவரலா தில்லையோ பிரானார்" என்று பதிகம் பாடிப் பொன் பெற்ற வரலாறு ஏயர்கோன் கலிக்காமர் புராணத்துட் காண்க. பாச்சில் என்பது பதி; **ஆச்சிராமம்** - கோயில் - தளி என்ற பொருளில் வந்தது. சுவாமி - **மணிகண்டீசர்** - **நீலகண்டேசர்**; (பதிகம் பார்க்க); **மாற்றறிவரதர்**; அம்மை - **பாலசுந்தரி**; பதிகம் 2.*

இது கொள்ளிடத்தின் வடகரையில், திருச்சி, விழுப்புரம் இருப்புப்பாதையில் பிட்சாண்டார் கோயில் நிலயத்தினின்றும் மேற்கில் மட்சாலை வழி 3 நாழிகையில் உள்ளது. கொள்ளிடம் வடகரையில் திருவானைக்காவுக்கு வடமேற்கில் மட்பாதை வழி 3 நாழிகையிலும் அடையலாம்.

2219. பொருளுரை- நீடு-வணங்கி - நீடுகின்ற திருப்பாச்சிலாச்சிராமத்தில் நிலைபெற எழுந்தருளிய உமையம்மையை ஒரு பாகத்திலுடையவரது திருவடிகளை வணங்கி; கூடு.. அமர்ந்து - கூடும் திருவருளுடனே அங்கு விரும்பியெழுந்தருளியிருந்து; கும்பிடும்.. போந்தே - மேலும் வணங்கும் திருவுள்ளக் குறிப்பினை மேற்கொண்டு சென்றே; ஆடல்.. ஏகி - திரு வைந்தொழிற் பெருங்கூத்தினை மகிழ்கின்ற இறைவரது திருப்பதி பிறவற்றையும் அணைந்து வணங்கித் திருவடிகளைத் துதித்து மேற்சென்று; சேடர்கள்.. சென்றார் - அறிவிற் சிறந்தவர்கள் வாழ்கின்ற திருப்பைஞ்ஞீலிச் சிவபெருமானை வணங்குதற்குச் சென்றருளினர்.

*விளக்கவுரை... **நேரிழை பாகத்தர்** - அருள்புரிந்தவர் என்பது குறிப்பு.*

*கூடும் **அருளாவது** - வணங்குந்தோறும் பெறும் வகையினாற் பெருகும் திருவருள்.*

கும்பிடும் கொள்கை - மேலும் திருப்பதிகளைச் சென்று வணங்கும் திருவுள்ளக் குறிப்பு.

2220. பண்பயில் வண்டினம் பாடுஞ்சோலைப்
பைஞ்ஞீலி வாணர் கழல்பணிந்து
மண்பர வுந்தமிழ் மாலைபாடி
வைகி வணங்கி மகிழ்ந்துபோந்து
திண்பெருந் தெய்வக் கயிலையில்வாழ்
சிவனார் பதிபல சென்றிறைஞ்சிச்
சண்பை வளந்தரு நாடர்வந்து
தடந்திரு வீங்கோய் மலையைச்சார்ந்தார். 322

பதிபிற - திருப்புலிவலம் - திருத்துடையூர் முதலாயின என்பது கருதப்படும்.

ஆடல் - ஐந்தொழில் அருட்கூத்து. "ஆடலை யுகந்தவெம் மடிகள்" (பைஞ்ஞீலி-4) என்ற பதிகம் பார்க்க.

சேடர்கள் - அறிவிற் பெரியோர்கள்; "பழியிலார் பரவு" (2219)

திருப்பாச்சிராமம் - ஆடல் பயின்றார் - என்பனவும் பாடங்கள். 321

2220. பொருளுரை... பண்... சோலை - பண்களைப் பயிலும் வண்டினங்கள் பாடுதற்கிடமாகிய சோலைகள் சூழ்ந்த; பைஞ்ஞீலி வாணர் கழல் பணிந்து - திருப்பைஞ்ஞீலியின் இறைவரது திருவடிகளைப் பணிந்து; மண் பரவும்.. போந்து - உலகர் பரவும் தமிழ் மாலையாகிய திருப்பதிகத்தைப் பாடி அப்பதியினில் தங்கி வணங்கி மகிழ் வடைந்து மேலே சென்று; திண்பெரும்... இறைஞ்சி - திண்ணிய பெரிய, தெய்வத் தன்மை வாய்ந்த திருக்கயிலாய மலையினில் வாழ்கின்ற சிவபெருமானது பதிகள் பலவற்றையும் சென்று வணங்கி; சண்பை... சார்ந்தார் - வளங்களைத் தருகின்ற சண்பை நாட்டினுக்குத் தலைவராகிய பிள்ளையார் வந்து பெரிய திருவீங்கோய் மலையினைச் சார்ந்தருளினார்.

விளக்கவுரை- பயில் - பயின்ற; பாடிப் பழகிய இவற்றைக் கண்டு மக்கள் பயில்கின்ற; "பஞ்சுரம் பயிற்றும்" (பதிகம்) என்றலுமாம். பண் - செவ்வழி, பஞ்சுரம் முதலாயின; "வண்டு, வேறாய வுருவாகிச் செவ்வழிநற் பண்பாடு மிழலை யாமே" "தேன், பஞ்சுரம் பயிற்று பைஞ்ஞீலி" (4); "பாடல் வண்டிசை முரல்பயில்" (4) என்ற பதிகம் பார்க்க.

மண்பரவும் - மண்ணுலகினர் போற்றிப் பாராட்டும்.

பதிபல - திருத்தலையூர், திருநெற்குன்றம், முசிறி முதலாயின.

வளந்தருசண்பை நாடர் - வளந்தரு சண்பை - என்று கூட்டி நீர்-நில வளங்களையும், வளந்தரு நாடர் என்று கூட்டித் தெய்வச் சிவவளங்களையும் கொள்க. "கண் புனல் விளைவயற் காழிக் கற்பகம்" (திருபைஞ்ஞீலி) என்ற பதிகக் கருத்துப் பார்க்க.

தடம் - பெரிய. "திருஈங்கோய்மலை எழுபது" என்ற நூலுள் ஆசிரியர் நக்கீரர் எடுத்துப் போற்றிய பெருமைகளும் காண்க. மேற்பாட்டின் குறிப்பும் பார்க்க.

வண்டிசை - என்பதும் பாடம். 322

2221. செங்கட் குறவரைத் தேவர்போற்றுந்
திகழ்திரு வீங்கோய் மலையின்மேவுங்
கங்கைச் சடையார் கழல்பணிந்து
கலந்த விசைப்பதி கம்புனைந்து
பொங்கர்ப் பொழில்சூழ் மலையுமற்றும்
புறத்துள்ள தானங்க ளெல்லாம்போற்றிக்
கொங்கிற் குடபுலஞ் சென்றடைந்தார்
கோதின்மெய்ஞ் ஞானக் கொழுந்தனையார். 323

2221. பொருளுரை... செங்கட்குறவரை... பணிந்து - சிவந்த கண்ணுடைய குறவர்களைத் தேவர்கள் வந்து போற்றுதற்கிடமாகிய விளக்கமுடைய திருவீங்கோய் மலையில் எழுந்தருளியுள்ள கங்கையைச் சடையில் வைத்த இறைவரது திருவடிகளை வணங்கி; கலந்த.... புனைந்து - இசையோடு கலந்து பொருந்திய திருப்பதிகத்தினை அணிந்து; பொங்கர்- போற்றி - மிக்கெழுகின்ற சோலைகள் சூழ்ந்த மலைகளையும் மற்றும் புறத்தேயுள்ள இறைவரது திருப்பதிகளையெல்லாம் துதித்து; கொங்கில்.... கொழுந்தனையார் - கொங்கு நாட்டிலே மேல் கொங்கிலே குற்றமில்லாத மெய்ஞ்ஞான வல்லியின் கொழுந்து போன்ற பிள்ளையார்தாம் சென்று அடைந்தனர்.

விளக்கவுரை... செங்கண் குறவரைத் தேவர் போற்றும் - *“இமையவ ரரம்பையர் பிறந்து, மாறில் வேடரு மாதரு மாகவே வணங்கும்” (1090) என்றதும், ஈங்கோய்மலை யெழுபதும் பார்க்க.*

இசைகலந்த பதிகம் - என்க. இசை கலத்தலாவது பண்ணையும் ஓசையையும் பாவ இராக தாளங்களையும் பிரிக்கலாகாதபடி இசை பொருந்துதல். **சடையார் கழல் - கலந்த** - இப்பதிகத்தினுள் 7 பாட்டுக்களில் “சடை” என்றும், ஒன்றில் முடி - என்றும், திருக்கடைக்காப்பில் “**கழல் சேர்பாடல்**” என வருவதும், குறிப்புப் போலும்.

பொங்கர் - மிக்கெழுதல். கொம்புகள் - கிளைகள் - செறிதல் என்றலுமாம்.

மற்றும் - மலைசாராத பிற; **புறத்துள்ள** - பக்கத்தில் உள்ள.

தானங்கள் - இறைவர் விரும்பி வீற்றிருக்கும் தளிகள்.

புறத்துள்ள தானங்களெல்லாம் - கடம்பந்துறை - வாட்போக்கி முதலாயின போலும்?

கொங்கிற் குடபுலம் - மேல் கொங்கு. கொங்கு நாடு - வட கொங்கு, தென் கொங்கு, மேல் கொங்கு என மூன்று பிரிவுகளையுடையது. இங்குக் கூறிய மேல்கொங்கு மேற்கில் வெள்ளிமலை யளவும் உள்ள பரப்பு என்ப. 2225 பார்க்க. **சென்று** - வடமேற்காகச் சென்று.

கோதி மெய்ஞ்ஞானம் - கோது - உயிர்களைப் பற்றிய ஆணவக் கறை. இல் - இல்லையாகச் செய்யும். போக்கும்; **மெய்ஞ்ஞானம்** - மெய்யினது ஞானம்; சிவஞானம்; “உணர்வரிய மெஞ்ஞானம்” (1968).

கொழுந்து - இளையதாம் தன்மை. இன்பமுடன் எளிவரும் தன்மை.

சென்றணைந்தார் - என்பதும் பாடம். *323*

திருப்பைஞ்ஞீலி

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தார பஞ்சமம்**

ஆரிடம் பாடில ரடிகள் காடலால்
ஓரிடங் குறைவில ருடையர் கோவணம்
நீரிடஞ் சடைவிடை யூர்தி நித்தலும்
பாரிடம் பணிசெய்யும் பயில்பைஞ் ஞீலியே. (1)

மருவிலார் திரிபுர மெரிய மால்வரை
பருவிலாக் குனித்தபைஞ் ஞீலி மேவலான்
உருவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத்
திருவிலா ரவர்களைத் தெருட்ட லாகுமே. (2)

கண்புனல் விளைவயற் காழிக் கற்பகம்
நண்புண ரருமறை ஞான சம்பந்தன்
பண்பினர் பரவுபைஞ் ஞீலி பாடுவார்
உண்பின வுலகினி லோங்கி வாழ்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் தன்மையும் அவரடியார் தன்மையும் அவரை நினையாதாரின் கேடும் உணர்த்தப்பட்டன.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **ஆரிடம் பாடிலர்** - **ஆரிடம்** - முனிவர் கண்ட நூல். வேத சாகைகள் பலவும் பல முனிவர்களாலும் காணப்பட்டமையால் வேதம் **ஆர்ஷம்** எனவும் படும். **பாடிலர்** - அவற்றால் பேசப்பட்டவர். பாடப்படும் இயலையுடையவர். **இல்** - வாசத்தானம்; 'அத்துவாக்களின் முடிவிலுள்ள சிவலோகம் இறைவனுக்கு வாசத்தானம். (அவன்) அத்துவாவின் கரையை அடைகின்றான்; அது வியாபகமாகிய இறைவனுடைய பரமபதம்' என்பது சுருதி. -(2) **திருவிலார்** - சிவன் பெருமையை உளங்கொளாமையே திருவின்மை. உளங்கொள்ளுதல் திருவுடைமை. (3) **பஞ்சுரம்** - பழம்பஞ்சுரம்; பண். **தேன்** - தேன் வண்டு. **பயிற்று** - மக்கள் கண்டு பயில்வதற்குக் காரணமான. (4) **ஆடலை உகந்த** - ஆடல் மகிழ்ந்தார் (2219) (5) **பழியிலார்** - எவ்வாற்றாலும் குறையில்லாத பெரியோர். "சேடர்கள் வாழும்" (2219); **கிழியிலார்** - கீளுடையை விரும்பியணிவோர். **கேண்மை** - சிவன் பாலன்பு. (10) **பீலியார்** - மயிற்பீலி ஏந்திய சமணர்; **பிடகர்** - திரிபிடகத்தைத் தம் நூலாக வுடைய புத்தர். (11) **உண்பின** - நல் அனுபவத்துக்கிடமான.

தலவிசேடம்:- திருப்பைஞ்ஞீலி - தொகுதி III பக்கம் 690 பார்க்க.

திருவீங்கோய்மலை

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி**

வானத் துயர்தண் மதிதோய் சடைமேன் மத்த மலர்சூடித்
தேனொத் தனமென் மொழிமான் விழியா டேவி பாகமாக்
கானத் திரவி லெரிகொண் டாடுங் கடவு ளுலகேத்த
ஏனத் திரள்வந் திழியுஞ் சார லீங்கோய் மலையாரே. (1)

விழவா ரொலியு முழவு மோவா வேணு புரந்தன்னுள்
அழலார் வண்ணத் தடிக ளருள்சே ரணிகொள் சம்பந்தன்
எழிலார் சுனையும் பொழிலும் புடைசூ ழீங்கோய் மலையீசன்
கழல்சேர் பாடல் பத்தும் வல்லார் கவலை களைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- ஈங்கோய் மலையார் சங்கார கருத்தர்; உமையாளோடும் எனையாளுடையார்; வினையாயின தீர்த்தருளே புரியும் விகிர்தர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **தேவிபாகமாய்** - பதிகப்பாட்டுத்தோறும் சங்காரமும் அம்மையாருடனிருந்தருளுதலும் கூறப்படுதல் குறிக்க. **உயர்** - வளர்தல் குறிப்பு. **தேனொத்தன** என்றதற்கேற்ப மானன என்க. உவம உருபு தொக்கது. **கானம்** - சங்கார இடம். (2) **ஒத்தனைய** - ஒத்தால் அனைய. **ஒவ்வுதல்** - பொருந்துதல். (3) **எண்கு** - கரடி; **அரி** - சிங்கம்; (4) **படுகாடு** - இறந்த இடம். சங்காரம். "சுடுகாடிடம்" (2)-(5) **நொந்த** - வீந்த; இறந்த; (6) **அகலம்** - மார்பு; (7) **தனை ஆர் கமலம்** - தன்னைப் பொருந்தவைத்த உள்ளக் கமலம்; (11) **கழல்சேர பாடல் - வல்லார் - கவலைகளைவார்** - "தாள்சேர்ந்தார்க் கல்லான், மனக்கவலை மாற்ற லரிது" (குறள்).

தலவிசேடம்:- திருவீங்கோய்மலை - காவிரிக்கு வடகரையில் 63-வது தலமாயும், இறுதித் தலமாயும் உள்ளது. திருவிங்கநாதமலை என மருவி வழங்குவர். "காலைக் கடம்பர்; மத்தியானச் சொக்கர்; அந்தித் திருவீங்கோய் நாதர்" என்பது விளக்கமாய் வழங்கும் பழமொழி. (**கடம்பர்** - கடம்பந்துறையீசர்; தென்கரையில் இரண்டாவது தலத்தீசர். **சொக்கர்** - திருவாட்போக்கி என்ற தென்கரையில் முதலாவது தலத்தின் இறைவர்). இம்மூன்று தலங்களையும் மேற்கூறியபடி தரிசிக்க நற்பலன் தருமென்ப. நக்கீரர் பாடிய திருவீங்கோய்மலை எழுபது என்ற பிரபந்தம் பெற்ற பெருமையுடையது. அது 11-ம் திருமுறையுள் நம்பியாண்டார் நம்பிகளால் கோவை செய்யப்பட்டது; அகத்தியர் தரிசிக்க வந்தபோது அடியார் கூட்டம் நிரம்ப இருந்தமையால் தாம் வழிபடக் காலம் கிடையாது வருந்தி ஈ உருவாய்ப் பூசித்தனராதலின் இப்பெயர் பெற்றது. சுவாமி - **மரகதாசலர்** மரகதத் திருமேனியின் ஒளி இன்றும் காணப் பெறும். அம்மை - **மரகதவல்லியார்; பதிகம் 1.**

இது ஈரோடு திருச்சிக் கிளை இருப்புப் பாதையில் குழித்தலை நிலயத்தினின்றும்

வேறு

2222. அண்டர்பிரா னாலயங்க ளம்மருங்குள் ளனபணிந்து
தெண்டிரைநீர்த் தடம்பொன்னித் தென்கரையாங் கொங்கினிடை
வண்டலையும் புனற்சடையார் மகிழ்விடங்க டொழுதணைந்தார்
கொண்டல்பயி னெடும்புரிசைக் கொடிமாடச் செங்குன்றூர். 324

வடக்கே அகண்ட காவிரியைப் பரிசினாற் கடந்து இரண்டு நாழிகை யளவில் உள்ள முசிறியினின்றும் மேற்கே கற்சாலை வழி 3 நாழிகையில் அடையத்தக்கது.

2222. பொருளுரை... அண்டர்பிரான்.... பணிந்து - தேவதேவராகிய இறைவரது திருக்கோயில்கள் அந்தப் பக்கங்களில் உள்ளனவற்றைப் பணிந்து சென்று; தென் திரைநீர்-தொழுது - தெளிந்த அலைகள் பொருந்திய நீரினையுடைய பெரிய காவிரியினது தென் கரையில் உள்ள கொங்கு நாட்டிலே வண்டுகள் அலைதற்கிடமாகிய நீரினையுடைய சடையார் மகிழ்ந்து எழுந்தருளிய பதிகளைத் தொழுது; கொண்டல்பயில்- கொடிமாடச் செங்குன்றூர் - மேகங்கள் பயில்கின்ற நீண்ட மதிலையுடைய திருக்கொடிமாடச் செங்குன்றூரினை; அணைந்தார் - சென்றணைந்தனர். (மெய்ஞ்ஞானக் கொழுந்தனையார்).

விளக்கவுரை.... அம்மருங்குள்ளன ஆலயங்கள் - இவை கொடிமாடச் செங்குன்றூருக்குக் கிழக்கே காவிரிக்கு வடகரையில் கொங்கு நாட்டில் உள்ளன.

தென்கரை ஆம் கொங்கினிடை - பைஞ்ஞீலி திருவீங்கோய்மலை இவை காவிரியின் வடகரையிலுள்ளன. அந்தக் கரைக்கு எதிர்ப்புறத்தில் தென்கரை கொங்கு நாட்டின் எல்லையாம். தலைமலை என்னும் மலைத்தொடரினின்றும் குழித் தண்டலை (குழித்தலை) வரையில் காவிரித் தென்கரை கொங்கு நாட்டின் ஒரு காலத்து எல்லை என்பர்.

மகிழ்விடங்கள் - காவிரிக்கும் திருக்கொடிமாடச் செங்குன்றூருக்கும் இடையேயும் பல பழைய சிவதலங்கள் உள்ளன. மகிழ்தல் - விளங்க வீற்றிருத்தல். பிள்ளையார் இங்குக் காவிரியி னிருபுறமும் சென்றருளினர் என்பது கருதப்படும். மகிழ்வு - மகிழும் பதிகள்.

கொண்டல்பயில் நெடும்புரிசை - அந்நாளிலும் இத்திருப்பதி அரசர் வாழும் தலைநகரங்களுள் ஒன்றாகவும் பெருநகரமாகவும் விளங்கியது. இஃது இப்போது திருச்செங்கோடு என விளக்கமாய் வழங்கப்படுகிறது.

வண்டலைதல் - இறைவர் சடையிற் சூடிய கொன்றை முதலிய மலர்களில் வண்டுகள் வாழ்தலால் வண்டலையும் மலர் சூடிய சடையார் என்க. மலர்களின் நிகழ்ச்சி மலரிருத்தற்கிடமாகிய சடையின்மேல் ஏற்றப்பட்டது. வண்டலையும் - சடையார் என்க. நீரில் அலைத்துவரும் மலர்களில் வண்டுகள் அலையும் என்றலுமாம். இஃது இயற்கையடை. மெய்ஞ்ஞானக்கொழுந்தனையார் என்ற எழுவாய் முன்பாட்டினின்றும் வருவிக்க.
324

2223. அந்நகரில் வாழ்வாரு மடியவரு மனமகிழ்ந்து
பன்னெடுந்தோ ரணமுதலாப் பயிலணிகள் பலவமைத்து
முன்னுறவந் தெதிர்கொண்டு பணிந்தேத்தி மொய்கரங்கள்
சென்னியுறக் கொண்டணைந்தார் சினவிடையார் செழுங்கோயில். 325

2223. **பொருளுரை...** அந்நகரில்.... மகிழ்ந்து - அத்திருநகரில் வாழ்வார்களும் சிவனடியார்களும் மனமிக மகிழ்வடைந்து; பல்நெடும்.... அமைத்து - பலநெடிய தோரணங்கள் முதலாகியவை அமைந்த அலங்காரங்கள் பலவற்றையும் செய்து; முன்னுற–ஏத்தி - முன்னரே பொருந்த வந்து எதிர்கொண்டு வணங்கித் துதித்து; மொய் கரங்கள் சென்னியுற - கூடிய கைகள் தலைமீது பொருந்த ஏற்றி; சினவிடையார் மகிழ்கோயில் - சினமுடைய விடையினையுடைய இறைவர் எழுந்தருளிய திருக்கோயிலின்கண்; கொண்டு அணைந்தார் - அழைத்துக்கொண்டு சேர்ந்தனர்.

விளக்கவுரை... நகரில் வாழ்வாரும் அடியவரும் - இருவேறு திறத்தினர்; நகரில் வாழ்வாருள் அடியரல்லாரும், அடியவர்களுள் நகர் வாழ்வாரல்லாரும் இருத்தல் கூடும்; அடியவரை வேறு கூறியது சிறப்புப்பற்றி, இவர்கள் அன்பினாலும் அடிமைத் திறத்தானும் பிணைக்கப்பட்டு உயிரினைப் பற்றிய தொடர்புடையோர்; நகர் வாழ்வார் அங்ஙனமன்றி உலக நிலையில் ஊரும் உடலும் ஆகிய பௌதிகத் தொடர்புமட்டுமுடையோர்.

பயில் அணிகள் பல - வாழை - கமுகு - நிறைகுடம் - தீபம் முதலாயின.

முன்னுறவந்து - **முன்** - பிள்ளையார் நகரினுக்குள் வந்து அணைவதன் முன்; திருமுன்பு என்றலுமாம்.

மொய்கரங்கள் - அனேகராதலின் அனைவருடைய கரங்களும் என்க. **மொய்** - தொகுதியாகக்கூடிய.

கோயிலின்கண் கொண்டு அணைந்தார் - என்க. **கொண்டு** - உடன் கொண்டு, ஏழனுருபு தொக்கது.

சினவிடை - அடையலர்பாலும் தீமையின்பாலும் முரண்கொள்ளும் சினம்; "அண்ண லரண்முர ணேறும்" (தேவா) 325

2224. **பொருளுரை...** தமிழ்விரகர் - பிள்ளையார்; தம்பெருமான்.... எழுந்தருளி - தமது பெருமானது திருக்கோயிலினுள்ளே எழுந்தருளி; நம்பரவர்– தமிழ்பாடி - நம்பராகிய அவரது திருமுன்பு வீழ்ந்து வணங்கி எழுந்து நன்மை பெறும்படி இவ்வுலகத்தோரும் விண்ணுலகத்தோரும் போற்ற இனிய இசையினையுடைய வண்மையுடைய தமிழ்த் திருப்பதிகத்தினைப்பாடி; கும்பிடும்... அமர்ந்தார் - மேலும் கும்பிட்டிருக்க வேண்டும் என்னும் ஆசையினாலே அந்தப் பெருநகரத்தில் இனிதாக விரும்பி எழுந்தருளியிருந்தனர்.

விளக்கவுரை.... தம்பெருமான் - நம்பரவர் - இத்தன்மைகளாற்கூறியது மேற்சரித விளைவில் "அவ்வினைக்கிவ்வினை" என்ற தேவாரப் பதிக நிகழ்ச்சியின் பயன் குறித்தற்கு.

2224. தம்பெருமான் கோயிலினுள் ளெழுந்தருளித் தமிழ்விரகர்
நம்பரவர் திருமுன்பு தாழ்ந்தெழுந்து நலஞ்சிறக்க
இம்பருமும் பருமேத்த வின்னிசைவண் டமிழ்பாடிக்
கும்பிடுமா தரவுடனக் கோநகரி லினிதமர்ந்தார். 326

நலஞ்சிறக்க - *ஏத்த* - பதிகம் பாடிய அது கண்டு அன்று துதிக்க என்றும், பின்னரும் அப்பதிகத்தைப் பயின்று பாடி அதனாற்போற்றித் துதிக்க என்றும் உரைக்க நின்றது.

இன்இசை வண் தமிழ் - "வெந்த வெண்ணீ றணிந்து" என்ற பண் - வியாழக்குறிஞ்சித் திருப்பதிகம் என்பது கருதப்படும். பதிகக் குறிப்பும் பாட்டுக் குறிப்பும் பார்க்க.

கும்பிடும் ஆதரவுடன்.. இருந்தார் - **ஆதரவு** - ஆசை - காதல் - அன்பு; **கோநகர்** - அரசன் இருக்கும் நகர் என்பதும் குறிப்பு. **கோ** - தலைமை. **இருந்தார்** - எழுந்தருளியிருந்தார். யாத்திரையில் தரிசித்த பின் ஏனைத் தலங்களுக்கு எழுந்தருளுதல் போலன்றி இங்குப் பின்னுஞ் சிலகாலம் தங்கி அதனைக் கும்பிட்டிருக்கத் திருவுளங் கொண்டு இருந்தனர் என்பதாம். **கும்பிடும்** - அங்கிருந்தபடியே ஏனைப்பதிகளைக் கும்பிடும் என்றலுமாம். மேல்வரும் பாட்டுப் பார்க்க. 326

திருக்கொடிமாடச் செங்குன்றூர்

திருச்சிற்றம்பலம் — பண் - வியாழக்குறிஞ்சி

வெந்தவெண் ணீறணிந்து விரிநூ றிகழ்மார்பி னல்ல
பந்தண வும்விரலா ளொருபாக மமர்ந் தருளிக்
கொந்தண வும்பொழில்சூழ் கொடிமாடச் செங்குன்றூர் நின்ற
அந்தண னைத்தொழுவா ரவல மறுப்பாரே. (1)

அலைமலி தண்புனல்சூழ்ந் தழகார் புகலிந்நகர் பேணுந்
தலைமக னாகிநின்ற தமிழ்ஞான சம்பந்தன்
கொலைமலி மூவிலை யான்கொடி மாடச் செங்குன்றூ ரேத்தும்
நலமலி பாடல்வல்லார் வினையான நாசமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இப்பதியின் இறைவரது திருக்கோலம் மாதிருக்கும் பாதியனாகி நின்ற திருக்கோலம்; அது வெந்த வெண்ணீறணிந்து தத்துவனாகிய தொன்மைக் கோலம். அவனை ஏத்தல் மெய்ப்பொருள். அதனால் வினை தீரும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வெந்த வெண்ணீறணிந்து** - இங்கு இறைவரது திருக்கோலம் முழுமையும் வெண்மை நிறமுடைமை குறிப்பு. அது சங்காரத்தின் பின் அதன் நீறு அணிந்து உலகம் உளதாக மீள நினைந்து சிவமும் சத்தியுமாய் நின்ற திருக் கோலமாய் உள்ள தத்துவம் குறித்தது என்பதாம். **விரலாள் ஒருபாகம்** - என்றும், **நின்ற** - என்றும். **அந்தணன்** - என்றும் வருவன காண்க. பின்னர்த் **தலைமகன்** (2) **தத்துவன்** (8)

2225. **அப்பாலைக் குடபுலத்தி லாறணிந்தா ரமர்கோயில்**
எப்பாலுஞ் சென்றேத்தித், திருநணா வினையிறைஞ்சிப்,
பைப்பாந்தள் புனைந்தவரைப் பரவிப்,பண் டமர்கின்ற
வைப்பான செங்குன்றூர் வந்தணைந்து வைகினார். **327**

என்பனவும் இக்குறிப்பு. ***அவலம்*** *- வினையால்வரும் பிறவியாகிய கேடு;- (3)* ***பாலன நீறுபுனை*** *- வெண்ணீறு (1):- (3)* ***நீதி*** *- நியதி. (5)* ***வானில் மின் திகழ்செஞ்சடை*** *- வானத்தின் கண்ணுள்ள மின் போன்ற சடை; மின் வண்ணம் - சடை. (6)* ***ஓங்கிய சூலம் ஒருகையன்*** *- இங்கு இறைவர் ஒரு கையில் ஏந்தி ஊன்றிய தண்டு பற்றிய குறிப்பு. "சூலமுந் தண்டும் சுமந்ததுண்டு" (தேவா)- (7)* ***சேடன்*** *- ஞானத்துக் கிருப்பிடமானவன்; மாதுபாதியன் (1-5);* ***நின்ற*** *- (1-2-4-7-10).*

2225. பொருளுரை... அப்பாலை...சென்றேத்தி - அந்தப் பக்கத்தின்கண் மேற்குத் திசையிலே கங்கையை அணிந்த இறைவர் விரும்பி எழுந்தருளிய திருக்கோயில்களை எல்லா இடத்திலும் சென்று போற்றி; திருநணாவினை இறைஞ்சி... பரவி - திருநணா என்னும் பவாநித் திருப்பதியினை வணங்கிப் பையினையுடைய பாம்பை யணிந்த இறைவரைத் துதித்து; பண்டு.... வைகினார் - முன்னே தங்குதற்கு விரும்பிக் கொண்டுள்ள பதியான திருக்கொடிமாடச் செங்குன்றூரில் வந்து சேர்ந்து தங்கியருளினார்.

(வி-ரை) ***அப்பாலைக் குடபுலம்*** *- திருச்செங்குன்றூரின் பக்கத்தில் மேற்குத் திசையிலுள்ள நாடு. மேல்கொங்கு நாடு.* ***பால்*** *- பக்கம்.*

கோயில் எப்பாலும் சென்று ஏத்தி *- இவை மேல்கொங்கு நாட்டில் உள்ளனவாய்த் தேவாரங்களிற் கிடைப்பனவும் கிடையாதனவுமாகிய தலங்கள் எங்கும் என்க. இவை பேரூர், அவிநாசி, கொல்லி குளிர் அறப்பள்ளி, மாட்டூர் (சேவூர்), ஏழூர், தோழூர், திருமுருகன்பூண்டி, குரக்குத்தளி, குமரி கொங்கு, முதலாயின. இவை நாயன்மார்களது க்ஷேத்திரக் கோவை முதலிய பதிகங்களுட் கண்டன ஆதலின் இங்கு ஆசிரியர்* ***கோயில் எப்பாலும்*** *என்று இவையெல்லாம் கருத வைத்தார் எனப்பட்டது. கொங்கு ஏழுபதிகளுள் மேல் கொங்கில் பதிகம் உள்ள (பவாநியை)* ***திருநணாவினை*** *யிறைஞ்சி என்று வேறு பிரித்தோதினார்; ஆதலின் அஃதொழிந்த ஏனையவை மட்டும் இங்குக் கருதப்பட்டன. கொங்கிற் பிள்ளையார் பாடல் உள்ள ஏனைக் கொடுமுடியும், கருவூரும், பிள்ளையாரது பாடல் கிடையாத வெஞ்சமாக் கூடலும் மேல் வருவனவற்றாற் காண்க.*

திருநணாவினை... பரவி *-* ***நணா*** *- பவாநி என்று வழங்கப்படும். தலவிசேடமும் பதிகக் குறிப்பும் பார்க்க.* ***பை*** *- நச்சுப்பை; படம் என்றலுமாம்.* ***பாந்தள்*** *- பாம்பு;* ***பரவி*** *- பதியிலக்கணம்பலவும் பரவிய பதிகக் குறிப்பு.*

பண்டு அமர்கின்ற வைப்பான செங்குன்றூர் *-* ***பண்டு*** *- பண்டே. முன்னிருந்தே.* ***அமர்கின்ற*** *- விரும்பிக்கொண்ட* ***வைப்பு*** *- நிலையாகத் தங்குமிடம். "கும்பிடும் ஆதரவுடன்*

அக்கோநகரில் இனிதமர்ந்தார்" (2224) என்றபடி அங்கு அமர்ந்தாராதலின் அங்கு நின்றும் அப்பாலைக் குடபுலத்தில் பதிகள் கும்பிடச் சென்றருளிய பிள்ளையார், அதனைத் தங்குமிடமாக விரும்பிக் கொண்டருளினர் என்பது.

வைகினர் - பலநாட்கள் எழுந்தருளியிருந்தனர்.

சென்றிறைஞ்சி யின்மொழிமா லைகள்சாத்தி - என்பதும் பாடம். 327

திருநணா (பவாநி)

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம்**

பந்தார் விரன்மடவாள் பாகமா நாகம்பூண் டேறதேறி
யந்தா ரரவணிந்த வம்மா னிடம்போலு மந்தண்சாரல்
வந்தார் மடமந்தி கூத்தாட வார்பொழிலில் வண்டுபாடச்
செந்தேன் றெளியொளிரத் தேமாக் கனியுதிர்க்குந் திருநணாவே. (1)

கல்வித் தகத்தாற் றிரைசூழ் கடற்காழிக் கவுணிசீரார்
நல்வித் தகத்தா லினிதுணரு ஞானசம் பந்தனெண்ணும்
சொல்வித் தகத்தா லிறைவன் றிருநணா வேத்துபாடல்
வல்வித் தகத்தான் மொழிவார் பழியிலரிம் மண்ணின்மேலே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருநணாவே ஈட்டுந் துயரறுக்கும் எம்மானிடமாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அந்தண் சாரல் வந்தார் மடமந்தி - சாரல்** - மலைச்சாரல்; சாரலினின்றும் வந்து இங்குப் பொருந்திய மந்திகள். **தேன் தெளி** - தேனினது தெளிவு - தெளியின் ஒளி. தெளிதேன் என்றலுமாம். **உதிர்க்கும்** - உதிர்த்தலைச் செய்யும். கூத்தாடல் கண்டும், பாடல் கேட்டும் பரிசு செய்வார் போன்று மாமரங்கள் கனியுதிர்க்கும் என்பது தற்குறிப்பேற்ற முள்ளுறுத்தி நாடகச் சுவைபட வந்த உருவகக் குறிப்பு. அம்மான் இவ்வாறு வரையாது அருள் வழங்குமிடம் என்பது குறிப்பு. (2) **நாட்டம்** - கண். **மற்றும்** - மேலும்; அதுவன்றி. **வீணை ஏந்தி** - வீணையிசைப்பது உலகம் புனருற்பவம் பெறும் பொருட்டு; "மிகநல்ல வீணைதடவி" "நல்வீணை வாசிக்குமே" (தேவா); **ஈட்டும் துயர்** - பழவினையும் இனி ஈட்டப்படும் வினையும். **துயர்** - துயருக்குக் காரணமாகிய வினை; காரிய ஆகுபெயர். வினை வழியால் வரும் துன்பத்தை அறுக்கும் என்றலுமாம்; இப்பொருட்கு வினையின் துன்பம் துயருறுத்தாமல் உடலூழாகிய அளவில் அநுபவிக்கும்படி அறுதியிடும் என்க; **முந்தூழ்** - மூங்கில். **அருவி வீழும் விசை(யை) முந்தூழ் காட்ட** என்க. விளையின் அளவை அதனாலலைக்கப்படும் மூங்கில் மேலே காட்டும்; **கேட்டார் மணி - சேடு** - ஒளி. எதுகை நோக்கி வல்லொற்று இரட்டித்தது. **மணிகள்** - அருவியாலலைக்கப்பட்டு வருவன. **சேர்த்தல்** - திரட்டுதல்; அருவியின் விசையினை மேலே மூங்கில் காட்டவும், உள்அலைத்த மணிகளைத் திரைகள் சேர்த்திக்

காட்டவும் நிகழ்வன. இவ்வாற்றானன்றி ஆழ்ந்து ஓடும் அருவியி னியல் அறியப்படாதது போல, வீணை ஓசையாலும், இப்பதியின் இடத்தினை யடைந்தோர் வினை நீங்கி விளங்குதலாலும் அருள் பெருகுமியல் அறியப்படுமென்ற உள்ளுறை பொருளும் காண்க. **முந்தூழ்** - பழவினை என்ற பொருள் தருதலும் குறிக்க. இவ்வாறே ஏனைப் பாட்டுக்களிலும் கண்டு கொள்க. (3) **ஆங்கு இசை நன்று மொழிந்து** - **இசை** - வீணை ஓசை. (5) **தெத்தே** - ஒலிக் குறிப்புச் சொல். **தும்பிமுரலக்** - கேட்டார் வினை கெடுக்கும் என்ற கருத்து இறைவன் புகழ் முரலுதலாலாம் என்பது; திருக்கோத்தும்பிக் (திருவாசகம்) கருத்துக் காண்க. **தெத்தே - தெவ்வுக்கு எல்லாம்** - தேவ தேவன் என்றது உட்குறிப்பு - (6) **புலியும்- கைகூப்ப** - புலி முதலிய பகுத்தறிவிலாத உயிர்களும் வழிபடுதல் குறிப்பு. புலிவலம் - கரவீரம் - ஈங்கோய் - எறும்பியூர் - ஆனைக்கா முதலிய தலவரலாறுகள் கருதுக. **அல்லாத சாதி** - ஏனைய பிராணிகளும், மக்களுள்ளும் தவம் செய்யாத சாதியும். **அடியார்கூடி - அருள் புரியும்** - அடியார் கூட்டத்தின் பயனாக அல்லாதவையும் அருள் பெறுவன. (7) **நானாவிதத்தால் விரதிகள்** - காபாலம், பாசுபதம் முதலிய விரதியர். இவர் அகப்புறச் சமயத்தாராதலின் **நாமமே ஏத்தி வாழ்த்த** என்றும், **அடியார்** - அகச் சமயத்தாராதலின் **மலர்கொண் டடிவணங்கும்** என்றும் அருளினார். (8) **அல்நீர்மை** - பகைச் செயலின் தன்மை. **அழலால்.. பரப்ப** - தீக்கதுவ வலியிழந்து இரத்தம் சிந்துதல் கண்டு; **சிறந்து** - பயமின்றி. (9) **செய்** - செம்மையாகிய. (11) **கல்வித்தகம்** - கற்களின் வடிவின் செம்மையினைப் பற்றி; **நல்வித்தகம்** - நல்ல சிவஞானம்; **சொல்வித்தகம்** - சொல்லின் திருத்தம்; **வல்வித்தகம்** - வன்மையுடைய உறுதிப்பாடு; சொற்பின் வருநிலை.

தலவிசேடம்:- **திருநணா** (பவாநி) - கொங்கு நாட்டில் தேவாரப் பாடல் பெற்ற பதிகள் ஏழனுள் மூன்றாவது தலம். வழிபடுவோர்க்கு யாதொரு தீங்கும் நண்ணாத தலமாதலின் நண்ணாவூர் அல்லது திருநணா எனப்படும். **பவாநியாறும்** காவிரியும் கூடுதலால் **பவாநி கூடல்** என்றும், தலமரம் இலந்தையாதலால் **பதரிவனம்** என்றும் பெயர் சொல்லப் பெறுவது. பவாநி என்பது காவிரியின் உபநதிகளுள் ஒன்று. சங்க மருவிய பழந்தமிழ் நூல்களுள் **வாணி** என்று வழங்கப்பெறும். மேவாணி - கீவாணி - சிறுவாணி என்ற இக்காலப் பெயர் வழக்குக்கள் காண்க; வானி என்பதன் மரூஉ. "திருவானிகூடற் பெருமாளே" என்று திருப்புகழுள் இத்தலம் போற்றப்பட்டது. குபேரன், விசுவாமித்திர முனிவர், பராசர முனிவர் முதலியோர் வழிபட்டுப் பேறுபெற்ற தலம். பவாநியாறு வந்து காவிரியாறுடன் கூடும் சங்க முகத்துறைச் சிறப்புடையது. அத்துறையினுள், பராசர முனிவர் அமிர்தகுடம் வைத்திருந்த இடத்தினின்று அகழ்ந்து எடுத்த குழியினின்றும் போந்த **அமுதநதியும்** கூடுவதாகிய ஐதிகத்தினால் இது பவாநி முக்கூடல் எனப் பெயர் பெறும் தீர்த்தச் சிறப்புடையது. இவ்வாறு கூடுதுறையின்கண் இறைவர் திருக்கோயில் கொண்டருளியுள்ளார். கோயிலினுள் "பூமி யளந்தானும் போற்றமன்னி.... வணங்கும்" (பதிகம் -8) என்றபடி இங்கு வழிபடும் ஆதிகேசவப் பெருமாள் சந்நிதியும் தனியே உள்ளது. 100 ஆண்டுகளின் முன் வாழ்ந்த செட்டிபாளையம் வித்வான் வாசுதேவ முதலியார் இத்தலபுராணம் இயற்றியுள்ளனர். இது பாயிரம் முதலாகப் பதினெட்டுச் சருக்கங்களுக்கு 901 பாட்டுக்களை உடையது. 65 ஆண்டுகளின் முன் அச்சிடப்பட்டது; வடமொழி

2226. ஆங்குடைய பிள்ளையா ரமர்ந்துறையு நாளின்கண்,
தூங்குதுளி முகிற்குலங்கள் சுரந்தபெய லொழிகாலை
வீங்கொலிநீர் வைப்பெல்லாம் வெயில்பெறா விருப்புவரப்
பாங்கர்வரை யுங்குளிரும் பனிப்பருவ மெய்தியதால். **328**

மொழிபெயர்ப்பு. சுவாமி - **சங்கமுக நாதர்;** அம்மை - **வேதநாயகி யம்மை;** தலமரம் - **இலந்தை;** (கோயிலினுள் உள்ளது). பதிகம் 1.

இது ஈரோடு நிலயத்தினின்றும் வடமேற்கே கற்சாலையில் 9 நாழிகையில் உள்ளது.

2226. பொருளுரை... ஆங்கு.. நாளின்கண் - அப்பதியில் ஆளுடைய பிள்ளையார் விரும்பி எழுந்தருளியிருக்கும் நாள்களில்; தூங்குதுளி.... ஒழிகாலை - பெய்கின்ற துளியினையுடைய முகிலின் கூட்டங்கள் நீர் சுரந்து மழை பெய்தலைத் தவிர்த்த காலத்தில்; வீங்கு... விருப்புவர - பெருகிய ஒலியினையுடைய நீர் சூழ்ந்த உலகினுள்ளோர் யாவரும் வெயில் பெறாததனால் அவ்விருப்பம் மேலிடும்படி; பாங்கர்... எய்தியதால் - பக்கத்தில் உள்ள மலைகளும் குளிர்ச்சி பொருந்தத்தக்க முன்பனிப் பருவம் எய்தின.

(வி-ரை) தூங்குதுளி - தூங்குதல் - பெய்தல் - பரவுதல்; வெளிப்படா தொடுங்குதல் என்ற குறிப்பும் தொனிப் பொருளாற் பெறவைத்தார்.

பெயலொழிகாலை...பனிப்பருவ மெய்தியது - மழை பெய்தல் ஒழிந்தபோது பனி பெய்யும் பருவமாம். இது முன்பனிப்பருவம் வரும் முறையியல்பும் குறித்தது.

வைப்பு எல்லாம் - வைப்பு - உயிர்கள் வாழுமிடங்கள்; இங்கு உயிர்களுக்கு ஆகி வந்தது. விருப்புவர - உயிர்களுக்கு நிகழ. பெறா இருப்பு நிலை - என்றலுமாம்.

வெயில்பெறு விருப்புவர - வெயில் பெறாமையின் அதன்மேல் விருப்பம் மிகுதியும் வரும்படி. பெறாத பொருளை நச்சும் உயிரியல்பானன்றியே குளிருக்கு மாற்றாகப் பயன் படுத்தும் இன்றியமையாமையானும் விருப்புவர என்பது குறிப்பு.

வரையும் குளிரும் - வெயில் - கால் - மழை என்ற பருவங்களின் தன்மைகளாலே தனது தன்மையிற் சலியாது நிற்கும் மலைகளும் என்று உம்மை உயர்வு சிறப்பு.

வரையும் குளிர்தல் - குளிர்க்குடைந்து ஆற்றாதது போன்ற வடிவடைதல்; தற்குறிப்பேற்றம். மேல் (2227-ல்) இக்கருத்தினை விரிக்கின்றமை காண்க.

எய்தியது - எய் - **தியது** - தீ என்பது தி எனக் குறுகியதெனக் கொண்டு எய்கின்ற தீப்போன்று கொடியது என்ற குறிப்பும் காண்க.

ஆங்குறையும் - **சுரந்த** - **வெயில் வெறு** - என்பனவும் பாடங்கள். *328*

2227. அளிக்குலங்கள் சுளித்தகல, வரவிந்த முகம்புலரப்
பளிக்குமணி மரகதவல் லியிற்கோத்த பான்மையெனத்
துளித்தலைமெல் லறுகுபனி தொடுத்தசையச் சூழ்பனியாற்
குளிர்க்குடைந்து வெண்படாம் போர்த்தனைய குன்றுகளும்; 329

2227. பொருளுரை... அளிக்குலங்கள் தளித்து அகல - வண்டின் கூட்டங்கள் வெறுத்து நீங்கும்படி; அரவிந்தம் முகம்புலர - தாமரைகள் முகம் கருக; பளிக்குமணி-பான்மை என - பளிங்கு மணியினை மரகதக் கொடியிற் கோத்த தன்மைபோல; துளி-அசைய - மெல்லிய அறுகிலை நுனியில் பனித் துளியினைக் கோத்து அசைய; சூழ்-குன்றுகளும் - சூழ்ந்த பனியினால் நேர்ந்த குளிர்க்கு ஆற்றாது உடைந்து குன்றுகளும் வெள்ளைப்படாம் போர்த்திருந்தால் ஒத்தன.

(வி-ரை) இப்பாட்டு மிக உயர்ந்த கருத்துடைய தன்மை நவிற்சியும் உவமையும் தற்குறிப்பேற்றமும் பெற்றது.

சுளித்தகல - முகம்புலா - தற்குறிப்பேற்ற முள்ளுறுத்த சிலேடை. தேனுண்ண வந்த வண்டு தாமரைமுகம் புலரக் கண்டு அகன்றது என்க. "முகந் திரிந்து நோக்கக் குழையும் விருந்து" (குறள்).

பளிக்கு- பான்மை என - மெய்யும் உருவும்பற்றி வந்த உவமம். பளிங்கு என்பது பளிக்கு என இடநோக்கி வலிந்தது.

குளிர்க்கு உடைந்து வெண்படாம் போர்த்தனைய - தற்குறிப்பேற்ற அணியினை உள்ளுறுத்து உருப்பற்றி வந்த உவமம்.

அனைய - அனையவாயின; வினைமுற்று. குன்றுகளும் அனைய வாயின என்று கூட்டுக.

மெல் அறுகுதலை பனித்துளி தொடுத்து என்க. **தலை** - புல்லின் நுனி. **துளி தொடுத்தல்** - துளியினைக் கோத்துக் கொள்ளுதல். அறுகின் இலை நுனியில் பனித்துளி கோத்து நிற்றல் பளிங்கு மணியை மரகதக் கொடியிற் கோத்ததுபோன்ற தென்க. குன்றுகளின் வெண்பனி சூழ்ந்து கொண்டிருக்கும் கோலம், மலைகளும் குளிருக்காற்றாது வெள்ளைப் போர்வை போர்த்துக் கொண்டன போன்றன என்க. வெள்ளை நிறம் தட்ப வெப்பங்களை உள்வாங்கி நுழைய விடாது, வெளிச் சிதறவிடும் தன்மையுடைய தென்பர். ஆதலின் வெண்படாம் என்றார். நிறம்மட்டிலன்றிப் பயனும் குறித்தது அணிநயம்.

சுளித்து - முகம் சுளித்து. வெறுப்புக்குறி காட்டி.

முகம்புலர - புலர்தல் - வாடுதல்; பனியால் நுனி கருகுதல்; வண்டுகள் குளிரினால் பறவாதொழிதலும், தாமரை நுனி கருகுதலும், தற்குறிப்பேற்றம் படக் கூறப்பட்டன. இவை இந்நோயின் தன்மையுமாம்.

மேல் அறுகு - என்பதும் பாடம். 329

2228. மொய்பனிகூர் குளிர்வாடை முழுதுலவும் பொழுதேயாய்க்
கொய்தளிர்மென் சோலைகளுங் குலைந்தசையக், குளிர்க்கொதுங்கி
வெய்யவனுங் கரநிமிர்க்க மாட்டான்போல் விசும்பினிடை
ஐதுவெயில் விரிப்பதுவு மடங்குவது மாகுமால்: 330

2228. பொருளுரை... மொய்பனி.... பொழுதேயாய் - மிகுந்த பனி கூர்ந்த குளிரினையுடைய வாடைக்காற்று முழுதும் வீசுகின்ற காலமானமையால்; கொய்- அசைய - கொய்யப் பெறும் தளிர்களையுடைய மெல்லிய சோலைகளும் குளிர்ச்சி பெற்று அலைய; குளிர்க்கு ஒதுங்கி - குளிரினால் ஒரு பக்கம் ஒதுங்கிக் கொண்டு; வெய்யவனும்... போல் - சுடுங்கிரணமுடைய சூரியனும் தனது கரங்களை நிமிர்த்து விரிக்கமாட்டாதவன் போல; ஐது- ஆகும் - சிறிது வெயில் விரிப்பது மற்றுச் சிறிது ஒடுங்குவதும் ஆகிய நிலை உளதாம்.

(வி-ரை) **மொய்பனிகூர் குளிர் வாடை** - மொய் - கூர் - அடை மொழிகள் மிகுதி உணர்த்தின. வாடை - வடகாற்று; தெற்கினின்றும் வருவது தென்றல் என்பதுபோல. வாடை துன்பமும் தென்றல் இன்பமும் செய்யும் என்பர். வாடை பனிக் காலத்திற்குரியது. "வாடை யடிப்ப வைகறைப் போதிற், றனிநீ போந்து பனி நீர் ஒழுகக், கூசிக் குளிர்ந்து பேசா திருந்து, மேனி வெளுத்த காரணம்" (ஆளு - பிள் - மும் - கோ - 25).

முழுது உலவும் பொழுது - நாட்போது முற்றும் வீசும் பனிக்காலம் -

ஆய் - ஆகிய அதனால். ஆய் - அசைய - ஆகும் என முடிக்க.

கொய்தளிர் மென்சோலை - மிகத் தளிர்த்தபோது அளவுபடக் கொய்தகற்றும் நிலைபெறும்படி முன்தளிர்த்த செழித்த சோலைகள். தளிர்ப் பருவத்தில் குயில் மாந்தளிர்களைக் கோதிக் கொய்யும் நிலையின் குறிப்புமாம்; **மென்றளிர்** என்று கூட்டி யுரைத்தலுமாம். "பானாறு மலர்ச்சூதப் பல்லவங்க ளவைகோதி" (பிள் - தோணி - பழந்தக்க - 8).

குலைந்தசைய - குலைதல் - பனிக்குளிரின் கொடுமையால், தளிர்த்தல் மாறிக் கருகி வருந்திய நிலை அடைதல்.

குளிர்க்கு ஒதுங்கி..போல் - தற்குறிப் பேற்றம். **கரம்** - கதிர்; கை என்ற சொற் சிலேடைப் பொருளுந்தர வைத்தது கவிநயம். குளிரின் மிகுதியினால் பிராணிகள் கை விரித்து நீட்டமாட்டாது சிறிது விரித்தலும் பின் முடக்கலுமாய் நிற்குமியல்பினைப் பனிக் காலத்தில் மலைச் சாரலில் சூரியன் சிறிது ஒளிமங்கி வீசியும், பின் மந்தமாய் மறைந்தும் வரும் இயல்பு காட்டச் சிலேடை வகையால் உரைத்தது; குளிர் மிகுதி காட்டும் தற்குறிப்பேற்ற வுவமையும் தன்மை நவிற்சியும் விரவிவந்த கலவை யணி; இதில் உவமை வினைபற்றி வந்தது. வெப்பம் வந்து நீங்கும் இந்நோய் நிலைக் குறிப்பும் காண்க.

ஐது....ஆடும் - **ஐது** - சிறிது; **வெயில்** - வெப்பக் கதிர்ஒளி; வெய்யவனும் விரிப்பதுவும் அடங்குவதும் ஆக இத்தன்மை கொண்டவனாகும். **விரிப்பதுவும்**

2229. **நீடியவப் பதிகளெலா நிரைமாடத், திறைகடொறும்**
பேடையுடன் பவளக்காற் புறவொடுங்கப், பித்திகையின்
தோடலர்மென் குழன்மடவார் துணைக்கலச வெம்முலையுள்
ஆடவர்தம் பணைத்தோளு மணிமார்பு மடங்குவன. **331**

அடங்குவதும் எனப் பிறவினையாலும் தன்வினையாலும் கூறியது, குளிர் மிகுதியில் **கரம்** விரிப்பதில் முயற்சி மிகுதியும், கரம் முடக்குவது இயல்புமாம் தன்மை குறித்தது. வெய்யவனேயாயினும் தனது ஆண்மை குன்றியவனானான் என்ற குறிப்புந் தருவது. **கரம் - விரிப்பதும் - அடங்குவதும்** என்றவை சொல்லாற்றலால் மாட்டாமைக் குறிப்புப்பட நிற்பனவும் காண்க.

மொய்யொளிகூர் - என்பதும் பாடம். 330

2229. **பொருளுரை... நீடிய... மாடத்து** - தொன்மையால் நீடிய அந்தத் திருப்பதிகளிலெங்கும் வரிசையாக உள்ள மாடங்களின்; **இறைகள் தொறும்... ஒடுங்க** - வீட்டு இறப்புக்கள் தொறும் தமது பெட்டைகளுடனே பவளம் போன்ற கால்களையுடைய புறாக்கள் ஒடுங்கியிருக்க; **பித்திகையின்... அடங்குவன** - சிறு சண்பகங்களின் இதழ்கள் விரிதற்கிடமாகிய மெல்லிய கூந்தலையுடைய தமது பெண்களின் இணைக் கலசம்போன்ற வெம்முலைகளினுள்ளே ஆடவர்களின் பருத்த தோள்களும் அழகிய மார்புகளும் அடங்குவனவாம்.

(வி-ரை) மாடங்களின் இறைகளுள் புறா ஒடுங்க, அம்மாடங்களின் மடவார் முலையுள் தோளும் மார்பும் அடங்குவன என்பதாம். பனிக்குளிரினால் வரையுங் குளிர்ந்துபடாம் போர்த்தன; வெய்யவனும் கரம் விரிப்பதுவும் அடங்குவதுமாகும் - என்று தற்குறிப் பேற்றம்படக் கூறிய ஆசிரியர் அவற்றுக் கேற்ப இங்கு மாடங்களில் உயிர் வருக்கத்துள் புறாவும் மக்களும் ஒடுங்குதல் கூறுகின்றார்.

இறைகள் - இறப்புக்களில் புறாத் தங்குதற்கு அமைக்கப்படும் கபோத பாலிகைகள்.

பேடையுடன் - புறவு ஒடுங்க - புறாக்கள் மக்களைப் போலத் தத்தம் பெட்டைகளுடன் குடும்பமாக வாழும் இயல்பு குறித்தது. **ஒடுங்குதல்** - வெளியிற் பிரியப் பறந்து செல்லாது தமதிடத்தில் ஒடுங்கி அமர்தல்.

பித்திகை - பனிக்காலத்தில் வெப்பந் தருதற் பொருட்டு அணியப்படும் கருமுகை என்னும் ஒருவகை மலர் என்றும் கூறுவர்.

வெம் முலை - வெம்மை - விருப்பம்; விருப்பம் தரும் என்றும், வெப்பம் தரும் என்றும் சிலேடை வகையினால் இருபொருளும்பட நின்றது. வெயிற் காலத்திற் குளிர்ச்சியும், குளிர் காலத்தில் வெப்பமும் தருவது பெண்களின் தனம் என்று "அம்முகை தான் தண்ணெனவும் வெச்செனவும் தாராதே" "வாவியுறை நீரும் வட நிழலும் பாவகமும், ஏவனைய கண்ணா ரிளமுலையும் - ஓவியமே, மென்சீத காலத்தில் வெம்மைதரும்

2230. அரிசனமுங் குங்குமமு மரைத்தமைப்பா ரயலெல்லாம்
பரியவகிற் குறைபிளந்து புகைப்பார்கள் பாங்கெல்லாம்
எரியுமிழ்பேழ் வாய்த்தோணி யிரும்பீர்ப்பா ரிடையெல்லாம்
விரிமலர்மென் புறவணிந்த மீப்புலத்து வைப்பெல்லாம். 332

வெம்மைதனி, லின்பாருஞ் சீதளமா மே" என்பனவாதியாகக் கூறும் கருத்துக்களை இங்கு நினைவு கூர்க.

புறாக்களையும் மக்களையும் - ஒன்று படுத்திக் கூறியது, ஒன்று போலவே ஐயறிவும் ஆறறிவும் நோக்காது உயிர்த் தொகைகள் யாவும் குளிரின் முன்னே வருந்திய தன்மை குறித்தற்கு.

பவளக்காற் புறா - பவளக்கால் - என்றது உவமையணி; "காராருஞ் செழு நிறத்துப் பவளக்காற் கபோதகங்காள்" (தோணிபுரம் - பழந்தக்க -5); இங்கு ஆண் தன்மை குறித்தது.

பவளக்காற் புறவு - என்று அவ்வினத்தில் ஆணினத்தையும், *பித்திகையின் மடவார்* என்று மக்களினத்தில் பெண்ணினத்தையும், அடைமொழிகளாற் சிறப்பித்தமை பறவை யினத்துள் அழகிலும் கவர்ச்சியிலும் ஆணினம் மிகுந்து பெண்ணினத்தாற் பேணப்படும் என்றும், அவ்வாறன்றி மக்களினத்தில் பெண்ணினம் அணிமிக அமைந்து ஆணினத்தாற் பேணப்படும் என்றும் வரும் உடற்கூற்று நூலாரும் உயிர்வகை வாழ்வு நூலாரும் காணும் உண்மையைக் காட்டுதற் குறிப்பாம்.

அடங்குவன - பணைத்தும் அகன்றுமிருப்பினும் வலிமையுள்ள ஆண் மார்பு பெண் தனத்தினுள் அடங்கும் என்ற குறிப்பும் காண்க.

331

நீள்மாடத் துறையுள் - *மென்முலை* - என்பனவும் பாடங்கள்.

2230. பொருளுரை... விரிமலர்... வைப்பெல்லாம் - விரிகின்ற மெல்லிய மலர்களையுடைய குறிஞ்சிப் புறவுகளிலெங்கும்; *அயலெல்லாம் அரிசனமும்... அமைப்பர்* - அயலிடங்களெங்கும் மஞ்சளும் குங்குமமும் சேர அரைத்து வைப்பார்கள்; *பாங்கெல்லாம் பரிய அகிற்குறை பிளந்து புகைப்பார்கள்* - பக்க இடங்களிலெங்கும் பெரிய அகிற்றுண்டங்களைப் பிளந்து புகையிடுவார்கள்; *இடையெல்லாம் எரிஉமிழ்... ஈர்ப்பார்* - இடையிடங்களில் தீயை உமிழ்கின்ற பெரிய வாயினையுடைய தோணிவடிவா யமைந்த இரும்புச் சட்டியைக் குளிர் காய்வதன்பொருட்டு தம் அணிமைக்கண் இழுத்துக் கொள்வார்கள்.

விளக்கவுரை... வைப்பெல்லாம் - *வைப்பு* - மக்கள் வாழிடங்கள். *எல்லாம்* - எங்கெங்கும்; எவ்விடத்தின் கண்ணும்; எல்லாவற்றிலும்; அயலும் பாங்கும் இடையும் இந் நிகழ்ச்சிகள் நிகழ்வன என்க.

மீப்புலத்து வைப்பு - குறிஞ்சி. *புறவு* - குறிஞ்சிப் புறவு. *புறவு* - முல்லை என்றலுமாம்.

அரிசனமும் குங்குமமும் அரைத்து அமைப்பார் - *அரிசனம்* - மஞ்சள்; *குங்குமம்* - குங்குமப்பூ. இவற்றைச் சேர அரைத்து அமைத்தல் - பொடி செய்து அனலிட்டூவிப்

2231. அந்நாளிற் கொடிமாடச் செங்குன்றூ ரமர்ந்திருந்த
மெய்ஞ்ஞானப் பிள்ளையா ருடன்மேவும் பரிசனங்கள்
பன்னாளு மந்நாட்டிற் பயின்றத்னாற் பனித்தகுளிர்
முன்னான பிணிவந்து மூள்வதுபோன் முடுகுதலும், 333

புகைத்தற் பொருட்டு வைத்தல். இப்புகை பனி குளிர் முதலியவற்றின் கொடுமை தாக்காது செய்யும் குணமுடைத் தென்பது மருத்துவ நூன் முறையும் வழக்குமாம். "அரைத்த மஞ்சள தாவகை" (நம்பி, தக்கேசி - இடைமருது - 2) என்ற திருவாக்கின் குறிப்புமது. இதற்கு இவ்வாறன்றிப் பூச்சின் பொருட்டு அமைத்தல் என்றுரைப்பர் முன் உரைகாரர். அரைத்துத் தூள் செய்தலும், மேல் அதனைத் தூவுதற்கு அகிற்குறை பிளந்து புகைத்தலும், அதன்மேல் அத்தீயினையுடைய இரும்புச் சட்டியை - இடையீர்த்தலும் தொடர்ந்து கூறுதல் காண்க.

அகிற்குறை - *அகிற் கட்டைகளைப் பிளந்து துண்டமாக்கியவை.*

எரிஉமிழ் பேழ்வாய்த் தோணி இரும்பு - *இரும்பினாலியன்ற கனற்சட்டி.* ***தோணி*** - *தோணி வடிவமாகச் செய்யப்பட்ட.* ***பேழ்வாய்*** - *திறந்த பகுவாய்.* ***எரி உமிழ்*** - *தீ மேலே கிளம்ப நிற்றல் உமிழ்தல் போன்ற தென்றதாம்.* ***உமிழ்தல்*** - *ஒப்புமை மெய்பற்றி வந்தது. "இயற்றுந போலவு, மஃறிணை மருங்கினு மறையப் படுமே" என்பது இலக்கணம்; "எரிதுள்ளினாலென" (527);* ***இடை*** - *இடங்கள்.* ***இடை ஈர்ப்பார்*** - *மக்கள் தத்தம் பக்கல் தீக்காய்தற் பொருட்டு அவ் இரும்பினை இழுத்துக் கொள்வார்கள். "அகலா தணுகாது தீக்காய்வார்" (குறள்).*

வண்புறவு - *என்பதும் பாடம்.* *332*

2231. பொருளுரை... அந்நாளில் - அக்காலத்தில்; கொடிமாடச் செங்குன்றூர்... பரிசனங்கள் - திருக்கொடிமாடச் செங்குன்றூரில் பலநாளும் தங்கி இருந்தவர்களாகிய மெய்ஞ்ஞானப் பிள்ளையாருடனிருக்கும் பரிசனங்கள்; பன்னாளும்... பயின்றதனால் - பலநாள்கள் அந்நாட்டிலே தங்கியிருந்ததனால்; பனித்த... முடுகுதலும் - நடுங்குதற்கேதுவாகிய குளிர் முன்னே காணும் சுரநோய் வந்து மேல் அடர்வதுபோல முடுகவே,

விளக்கவுரை... அமர்ந்திருந்த - பரிசனங்கள் - *என்று கூட்டுக.* ***அமர்ந்திருந்த*** *என்றதனால் பிள்ளையார் 'அப்பாலைக் குடபுலத்தில் அரனார் மகிழும் தானங்கள்' பணியச் சென்றருளியபோது பரிசனங்கள் பலரை இங்கு விடுத்துச் சென்றனர் என்பது குறிப்பு.* ***பண்டமர்கின்ற*** *(2225) என்றமையாலும் இக் குறிப்புப் பெறப்படுதல் காண்க.* ***பன்னாளு மந்நாட்டிற் பயின்றதனால்*** *என்ற குறிப்புமது.* ***உடன் மேவும்*** *என்றது பிள்ளையார் மீண்டருளியபோது முன்போல உடன் மேவிய என்றதாம்.*

பனித்த - பனித்தல் - *நடுங்குதல்; பனியினால் மூண்ட என்றலுமாம்.*

குளிர் முன்னான பிணி - *முன்னர்க் குளிர் வந்து பின்னர்ச் சுரங்காணும் கொடிய நளிர் சுரம். இது மலைச்சுரம் - Malaria - எனப்படும். இது மலையும் மலையடுத்த கானல்*

2232. அந்நிலைமை யாளுடைய பிள்ளையார்க் கவர்களெலாம்
முன்னறிவித் திறைஞ்சுதலு முன்னவனா ரருடொழுதே
"யிந்நிலத்தி னியல்பெனினு நமக்கெய்தப் பெறா"வென்று
சென்னிமதி யணிந்தாரைத் திருப்பதிகம் பாடுவார்; **334**

நாடுகளிலும் அதிகமாக உண்டு. இந்நாட்டில் பிள்ளையார் எழுந்தருளிய காலத்தில் இது மிகப் பரவியிருந்தது. பின்னர்ப் பிள்ளையார் திருவாக்கின் அருட்டுணையினால் இது இந்நாடு அடங்கலும் தீர்ந்தது அருள்வாக்கின் பெருமை! (2234)

மூள்வது போல் முடுகுதல் - **மூளுதல்** - தீர்வு காணாதவாறு உள்ளுறப் பற்றுதல்; **முடுகுதல்** - விரைந்து தொடர்தல். **மூள்வதுபோல்** - நாட்டினியல்பேயாயினும் பிள்ளையாரது பரிசனங்கள்பால் முற்றக் கொடுமை செய்யும் வலியிலது என்பது குறிக்கப் **போல்** என்றார்.

செங்குன்றூரிடத்திருந்த - என்பதும் பாடம். 333

2232. **பொருளுரை**... **அந்நிலைமை... இறைஞ்சுதலும்** - அந்நிலைமையினை அப்பரிசனங்களெல்லாரும் ஆளுடைய பிள்ளையாரின் திருமுன்பு விண்ணப்பித்து வணங்குதலும்; **முதல்வனார் அருள் தொழுதே** - இறைவருடைய திருவருளைத் தொழுதே; **"இந்நிலத்தின்...பெறா" என்று** - இந்த நாட்டின் இயல்பே இஃது ஆயினும் இதன் கொடுமைகள் நமக்கு வந்து சேரமாட்டா என்ற கருத்துடன்; **சென்னி... பாடுவார்** - சென்னியில் சந்திரனை அணிந்த இறைவரைத் திருப்பதிகம் பாடுவாராகி,

விளக்கவுரை... **முன் அறிவித்து** - **முன்** - திருமுன்பு; முடுகுதலால் மூள்வதன் முன் என்ற குறிப்பும் தரும். **நிலைமை** - நிலைமையினை.

முதல்வனா ரருள் தொழுதே - சாக்கிரத்தே நின்மல துரியாதீத நிலையிற் சரிப்பவர் பிள்ளையாராதலின், **அருள் தொழுதது** - அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யார் என்பதை உலகுக்குக் காட்டும் பொருட்டு என்பது குறிப்பு.

இந்நிலத்தின் இயல்பு எனினும் நமக்கு எய்தப்பெறா - இது அத்திருப்பதிகக் கருத்தும் உட் குறிப்புமாம். **நிலத்தின் இயல்பு** - நிலத்தின் இயற்கை யமைப்பினாற் போந்த தன்மை. உயிர்களின் கன்மத்தால் வருவதன்று என்பது. **எனினும் நமக்கு எய்தப்பெறா** - நளிர் சுரத்தால் உயிர்களைப் பீடித்தல் நிலத்தின் அமைந்த தன்மையே யாயினும், சிவன் அடியாராகிய நம்மிடம் வந்து பொருந்தாது. மந்திரவாதியை விடம் பற்றாமை போலவும், அங்கித் தம்பனம் வல்லோரைத் தீச் சுடாமை போலவும் நிலத்தின் தன்மை சிவன் அடியாரைத் தொடராது என்றதாம்; என்னை? மேலாகிய சிவன் அடிமைத் திறமாகிய சத்தியின் முன் கீழாகிய பௌதிக சத்தி தன்மை குன்றிச் செயல் செய்யமாட்டா தென்க. "சத்தின்முன் அசத்துப் பிரகாசியாது"; "யாவையுஞ் சூனியஞ் சத்தெதிர்" (போதம்) என்பன ஞானநூன் முடிபுகளாகிய உண்மை. **நமக்கு** - அடிமைப் பண்புடைய நமக்கு; "நாம் அடியோம்; (ஆதலின்) செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா" என்பது பதிகம்;

வேறு

2233. "அவ்வினைக் கிவ்வினை" யென்றெடுத் "தைய ரமுதுசெய்த
வெவ்விட முன்றடுத் தெம்மிடர் நீக்கிய வெற்றியினால்
எவ்விடத் தும்மடி யாரிடர் காப்பது கண்ட"மென்றே
"செய்வினை தீண்டா திருநீல கண்ட" மெனச்செப்பினார். 335

"தாழ்பொழில் சூழ், "கொங்கின் பனிநோய் பரிசனத்தைத் தீர்ப்பித்தும்" (ஆளு - பிள் - உலாமாலை - 78 - நம்பியாண்டார் நம்பி).

சென்னிமதியணிந்தார் - மதி *- அமுதகலை யுடைமை குறிப்பு.*

அந்நிலையில் *- என்பதும் பாடம்.* *334*

2233. பொருளுரை... *அவ்வினைக்கு... எடுத்து - "அவ்வினைக்கு இவ்வினை" என்று தொடங்கி; "ஐயர்... கண்டம்" என்றே - முதல்வர் உண்டருளிய கொடியவிடத்தினைத் தடுத்து எமது துன்பங்களையெல்லாம் வராமற் காத்தது அவரது திருநீலகண்டமேயாம் என்ற உறுதியிட்ட கருத்தினை வைத்து; செய்வினை... செப்பினார் - "செய்வினைவந்து எம்மைத் தீண்டப்பெறா" என்று திருநீலகண்டத்தினிடம் ஆணை என்று அருளிச் செய்தனர்.*

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... "அவ்வினைக் கிவ்வினை" *என்பது பதிகத் தொடக்கம்; "செய்வினை தீண்டாதிரு நீலகண்டம்" என்பது முதற்பாட்டின் கருத்து (2233); "தீவினை வந்தெமைத் தீண்டப்பெறா திருநீலகண்டம்" பதிகப்பாட்டுக்களின் மகுடம்.*

ஐயர்...கண்டம் *- பதிகக் கருத்து. ஆசிரியர் கண்டு காட்டி யருளியபடி;* ***ஐயர்*** *- பெருமையுடையோர் - தலைவர். சாதிப் பெயராய் வழங்குதல் பிற்கால வழக்கு.*

அமுதுசெய்த வெவ்விடம் முன்தடுத்து *- நீலகண்டத்தின் கருமை அவர் உண்ட விடந் தங்கியதனால் ஆகியது;* ***தடுத்து*** *- விடம்பரவித் துன்பம் செய்யாமல் தடுத்து;* ***எம்மிடர் நீக்கிய வெற்றி*** *என்றது காண்க. உட்புகாமற் றடுத்து என்று புராண வரலாறு பற்றி உரைப்பது மொன்று;* ***வெற்றியினால்*** *- வெற்றியாவது அன்று தேவர்களைக் காத்தமைபோலவே இன்றுங் காத்து நிற்பதுவும், பேரிடரும் பிணியும் துன்பஞ் செய்யாமைக் காப்பதுவும் ஆம்; வெற்றி காரணமாக.*

எவ்விடத்தும்... கண்டம் - எவ்விடத்தும் *- எத்தகைய பேரிடர் வந்த போதும்;* ***இடத்தும்*** *- இடமும் காலமும் குறித்தது.*

அடியார் இடர் தீர்ப்பது *- அடியாராதலின்; "நாமடியோம்; செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா" என்றது பதிகம்.*

செய்வினை *- நாம் செய்யும் வினையும், பிறர் நம்மாட்டுச் செய்வினையும்;*

திருநீலகண்டம் - இஃது தீண்டப் பெறாமை திருநீலகண்டத்தின் ஆணை என்றபடி. திருநீலகண்ட நாயனார் புராணம் பார்க்க. "தீண்டுவீ ராயி னெம்மைத் திருநீல கண்ட மென்றார்" (365); "ஆணை கேட்ட பெரியவர்" (366): **ஆணைநிகழ** - (2134), 335

II. திருக்கொடிமாடச் செங்குன்றூர் திருநீலகண்டப் பதிகம் (பொது)

திருச்சிற்றம்பலம் **பண் - வியாழக்குறிஞ்சி**

அவ்வினைக் கிவ்வினை யாமென்று சொல்லு மஃதறிவீர்
உய்வினை நாடா திருப்பது முந்தமக் கூனமன்றே
கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோம்;
செய்வினை வந்தெமைத் தீண்டப் பெறாதிரு நீலகண்டம். (1)

பிறந்த பிறவியிற் பேணியெஞ் செல்வன் கழலடைவான்
இறந்த பிறவியுண் டாகி லிமையவர் கோனடிக்கண்
திறம்பயில் ஞானசம் பந்தன செந்தமிழ் பத்தும்வல்லார்
நிறைந்த வுலகினில் வானவர் கோனொடுங் கூடுவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- எவ்விடத்தும் அடியாரிடர் காப்பது திருநீலகண்டம் என்று ஆணையிட்டருளியது. ஆசிரியர் காட்டியருளியது 2233-ல் பார்க்க. இப்பதிகம் தீவினை வயத்தான் வரும் துன்பங்களெல்லாம் வராமற் காக்கும் பயனுடையது. இதனுள் ஒரு திருப்பாட்டுச் சிதலமாயழிந்தது!. நளிர் சுரம் அடியாரை நலியாதபடி ஆணை தந்தருளினர்.

பதிகப்பாட்டுக் குறிப்பு:- (1) **அவ்வினை...அறிவீர்** - துன்பானுபவம் முன்னைத் தீவினை வயத்தான் வருவதென்றும், அஃது அனுபவித்தன்றித் தவிர்க்கலாகா தென்றும் கூறும் அறிவுடையீர்களே; **உய்வினை** - அதனின்றும் உய்தி - தீர்வு - பெறும் வழி; **கைவினை** - கையினாற் செய்யும் தொண்டு - சரியை முதலாயின;- (2) **கா - குளம்** - இவை சிவனை நினைந்து சிவன் பொருட்டுச் செய்யும் பதி தருமங்கள், இவ்வாறு உயிர்களின் பொருட்டுச் செய்யப்படுவனவற்றி னின்றும் பிரித்துணரத் தக்கன. "காவளர்த்தும் குளந்தொட்டும்" (1301) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. **கா** - சோலை; **இடுதல்** - வைத்துக் காத்தல்; **தொடுதல்** - தோண்டுதல். **இருபொழுதும்** - வழிபடும் காலமுறை; **பூவினைக் கொய்து** - தாமே கொய்தல் முறை; **காவினை இடுதல்** - பூக்கொய்தற்கு.-(3) **போகங்கள்** - பெண் போகம்; **முலைத்தடம்** - முலையாகிய தடம்; **தடம்** - உயர்வும் அகலமுமாம்; **மற்றெவையும்** - வேறு எல்லா வகையான போகங்கள்; "மடவாரோடும் பொருந்தணைமேல் வரும்பயனைப் போக மாற்றிப் பொதுநீக்கித் தனைநினைய வல்லார்க்கென்றும், பெருந்துணையை" (அரசு - தாண் - கோயில்). **விலைத்தலை ஆவணம் கொண்டு** - ஆவணத்தால் விலைப்படுத்தப் பெற்று. **விலை செய்தல்** - அப் போகங்களைத் தமது சிவ போகத்துக்காக விலை கொள்ளுதல். **சிலைத்து**-சினந்து.- (4) **திண்ணிய** ஏனையோர்க்குத் திண்மையாகிய;- (5) **கிற்றெமை ஆட்கொண்டு** - வலிமையால் எம்மை ஆளாகக் கொண்டும்; **சொற்றுணை வாழ்க்கை** - சொல்லளவாய்க்

கழிகின்ற வாழ்க்கை! "சொல்லாய்க் கழிகின்ற தறிந்தடியே னுயப் போவதோர்சூழல்" (நம்பி - நெல்வாயிலரத் துறை - 1); **துணை** - அளவு;- (6) **வற்புறுத்தி** - தவவலிமை பெற்றதாக்கி; **பறித்தமலர்** - தாமே பறித்த; "பூவினைக் கொய்து" (2), **சிறப்பில் இத்தீவினை** - சிறப்பினை இல்லையாகச் செய்யும்; **சிறப்பிலி** - சிறப்பில்லாதது - சிறப்பிலியாகிய தீவினை என்றலுமாம்.-(8) **கரு** - இனிப் பிறவிக்கு வித்தாகும் வினைகள். **வாழ்க்கை கடிதல்** - துறவு மேற்கொள்ளுதல், **திருவிலித் தீவினை** - சிவனடிமைத் திறத்தில் ஆகாவண்ணம் செய்யும் தீவினை. "உருவிலான் பெருமையை யுளங்கொ ளாதவத் திருவிலார்" (தேவா - பைஞ்). - (9) **தோற்றம்** - தொடக்கம்.-(10) **இருதலைப் போகம்** - இம்மை மறுமையின்பங்கள். **பற்று** - உலகப்பற்று; இல்லறப் பற்று. -(11) **பிறந்தபிறவி** - பெறுதற்கரிதாக மக்களுட் பிறந்த பிறப்பு. **இறந்த பிறவி** - துறந்தார். "செத்தாரைப் போலே திரி"; நிறைந்தவுலகு - சிவனுலகு.

தலவிசேடம்:- திருக்கொடிமாடச் செங்குன்றூர் (திருச்செங்கோடு) - இது கொங்கு நாட்டுப் பாடல் பெற்ற தலங்கள் ஏழனுள் நான்காவது. அந்நாட்டில் காவிரிக்கு வடபுறம் (கீழ்புறம்) உள்ளது இஃது ஒன்றே; ஏனையவை காவிரிக்குத் தென்புறம் உள்ளன. திருச்செங்கோடு என்ற விளக்கமாய் வழங்கப்படுவது. மலையின் வடிவம் நோக்கி நாககிரி - நாகாசலம் எனவும் வழங்குவர்; நாகம் (ஆதிசேடன்) பூசித்த தல வரலாறும் உண்டு. பிரமன் - விட்டுணு - துர்க்கை - கந்தர் பூசித்த வரலாறுகளும் உண்டு. இது முருகனுக்குச் சிறப்பாயுரிய குன்று தொறாடல்களுள் ஒன்று. திருப்புகழ் பெற்றது. இத்தலத்து எழுந்தருளிய செங்கோட்டு வேலரது அழகின் பெருமை பற்றிச், "செங்கோடனைக் கண்டுதொழ, நாலா யிரங்கண் படைத்தில னேயந்த நான்முகனே!" என்று பாராட்டினர் அருணகிரியார்; மாதொருபாகர் என்று விளக்கமாய்ச் சைவத்திறத்தில் வேத சிவாகமங்களாலும், மாபுராணங்களாலும் பேசப்பட்ட "தொன்மைக் கோலமே" இங்கு எழுந்தருளிய திருமூலட்டானனா ருடைய திருவுருவமாகும் தனிச் சிறப்புடைய தலம். மலைமேல் உள்ள தலம்; மலையில் பல அரிய தூய நீர்நிலைகள் உள்ளன. அதிசயங்களும் அனேகமுள்ளன. இங்குப் பரிசனங்கள்பாலும் நாட்டினர்பாலும் முடுகிய நளிர்சுரத்தை ஆளுடைய பிள்ளையார் பதிகம் பாடிப் போக்கியருளிய வரலாறு முன்னர்ப் புராணத்துட் காண்க. போதாயன சூத்திரம் காசிப கோத்திரத்தில் காசித் தலபுராணம் பாடிய சங்கர நாராயணவையர் மகன் கவிராச பண்டிதர் இத் தலபுராணம் பாடியுள்ளார். அதற்குச் சிற்றம்பல உபாத்தியாயர் (ஏர் விளம்பி - ஆவணி - 14-ந்தேதி திங்கட்கிழமை - அபர பக்கம் பதின்மூன்றாந் திதி பூசம் கூடிய நன்னாளில் தொடங்கி எழுதிய) உரையுடன் கி.பி. 1876 ஆண்டில் அச்சிடப்பட்டுள்ளது. பருவத காண்டம் (அர்த்த நாரீசர் பெருமை கூறுவது); காந்த காண்டம் (முருகன் பெருமை கூறுவது);தீர்த்தகாண்டம் (சுனைகளின் பெருமை கூறுவது) என்று மூன்று காண்டங்களை யுடையது. வடமொழி மான்மியத்தின் வழித்தாகலின் இப்புராணத்துள் ஆளுடைய பிள்ளையார் அருள் பற்றிய வரலாறு பேசப்படவில்லை. மகப்பேறு முதலிய வரங்கள் தரும் வறடிக்கல் (வந்திய - பாடாணம் என்பர் வடவர்) என்ற சிகரம் ஒன்று இன்றும் விளக்கமாய் வழிபடப் படுகின்றது. சுவாமியும் அம்மையும்-**அர்த்தநாரீசர்; மாதிருக்கும் பாதியன்;** கந்தர் - **செங்கோட்டு வேலர்;** தீர்த்தம் - **குமார தீர்த்தம்;** நாக தீர்த்தம், சிவதீர்த்தம் முதலிய சுனைகள்; பதிகங்கள், தலப்பதிகம் 1. பொதுப் பதிகம்1.

2234. **ஆய குறிப்பினி லாணை நிகழ வருளிச்செய்து**
தூய பதிகத் திருக்கடைக் காப்புத் தொடுத்தணிய
மேயவப் பொற்பதி வாழ்பவர்க் கேயன்றி மேவுமந்நாள்
தீய பனிப்பிணி யந்நா டடங்கவுந் தீர்ந்ததன்றே. **336**

இது சங்ககிரி துருக்கம் என்ற நிலையத்தினின்றும் தென் கிழக்கில் கற்சாலை வழி 5 நாழிகையில் அடையத்தக்கது. எல்லா வசதிகளும் உண்டு.

2234. பொருளுரை...ஆய....அருளிச் செய்து - அவ்வாறாகிய அருட் குறிப்புடனே திரு ஆணை நிகழும்படியாக அருளிச் செய்து; தூய...அணிய - தூய திருப்பதிகத்திற்குத் திருக்கடைக்காப்பும் தொடுத்து அணிந்தருளவே; மேய...அன்றி - பொருந்திய அந்தத் திருத்தலத்தில் வாழ்கின்றவர்களுக்கே யல்லாமல்; அந்நாள் - அந்நாளிலே; அந்நாடு அடங்கவும் - அந்நாடு முழுமையும்; அன்றே தீய பனிப்பிணி தீர்ந்தது-அப்பொழுதே தீய பனிச்சுரமானது நீங்கியது.

விளக்கவுரை... ஆய குறிப்பு - முன் (2233) பாட்டிற் கூறியபடி அவ்வாறாகிய திருவுள்ளக் குறிப்பு.

ஆணைநிகழ - பிள்ளையாரது ஆணையாக - கட்டளையாக நிகழும்படி. அடியாரைச் சாரலாகாது என்று திருநீலகண்டத்தின் ஆணையாக நிகழ்வுற. நிகழ என்றதனால் அன்று மட்டுமன்றி அது முதல் இனி வருங்காலமெல்லாம் என்றதும் குறிப்பு.

தூய பதிகம் - தூய்மைதரும் பதிகம் - தூய்மையாவது பழவினைப் பயனும் பற்றாதபடி செய்யும் நலம்.

பதி வாழ்பவர்க்கே யன்றி - நாடு அடங்கவும் - அந்நகரத்தில் வாழ்வாரும் நாட்டில் வாழ்வாரும் ஆகிய அனைவரும். அடங்க - முற்றும். நாடு - நாட்டில் வாழ்வார். பதி வாழ்பவர் - அடியவர்களையும் பரிசனங்களையும் உளப்படுத்தி நின்றது.

அந்நாள் - பதிகம் அருளியணிந்த அந்நாளே; அன்றே - அப்போதே.

அணிய - அணிந்ததனால்; காரணப் பொருளில் வந்த வினையெச்சம். அணியத் - தீர்ந்தது என்று கூட்டுக.

பிள்ளையாரது திருவுள்ளக் குறிப்பினில் ஆணை நிகழ்வதாகலின் இத்திருப் பதிகத்தை நியதியாய் நியமமாய் ஓதுபவர்கள் பிணி முதலிய துன்பங்களினீங்குதல் இன்றும் நிகழ்வதாகும். *336*

2235. பொருளுரை...அப்பதி...அகன்று - அத்திருப்பதியினிடத்தில் விரும்பி எழுந்தருளியிருந்து பின் சில நாட்களில் அங்கு நின்றும் நீங்கிச் சென்று; துப்பு உறழ்...தொழுதருளி - பவளம்போன்ற சிவந்த சடையினையுடைய இறைவரது இடங்கள் பலவற்றையும் தொழுதருளி; முப்புரி... மார்பர் - மான் தோலுடன் கூடிய முப்புரி நூலினை அணிந்த திருமார்பினையுடைய பிள்ளையார்; முனிவரொடும்....அணைந்தார் -

2235. அப்பதி யின்க ணமர்ந்து சிலநாளி லங்ககன்று
துப்புறழ் வேணியர் தானம் பலவுந் தொழுதருளி
முப்புரி நூலுடன் றோலணி மார்பர் முனிவரொடுஞ்
செப்பருஞ் சீர்த்திருப் பாண்டிக் கொடுமுடி சென்றணைந்தார். 337

சொல்லுதற்கரிய சிறப்பையுடைய திருப்பாண்டிக் கொடுமுடியை முனிவர்களுடன் சென்று அணைந்தருளினர்.

விளக்கவுரை—தானம் பலவும் - *இவை திருச்செங்கோட்டுக்கும் கொடுமுடிக்கும் இடையில் பொன்னி யிருகரையிலுமுள்ளவை. பழங்கோயில்கள் பலவும் குன்று தோறாடல்களும் உள்ளன.*

முப்புரி நூலுடன் தோல்அணி - *உபநயனம் செய்யப் பெற்றுத் "தோலொடு நூல் தாங்கினார்" ஆதல் குறிப்பு; தோல் - கருமானின்தோல்.*

முனிவர் - *உடன் வந்த அந்தணர்கள்; மறை முனிவர்.*

செப்பருஞ்சீர் - *தலப்பெருமை குறித்தது. தலவிசேடம் பார்க்க.*

துப்பு உறழ்வேணி - துப்பு - *பவளம்; மின்போற் செவ்வொளி வீசும் சடைக்கு ஒப்பு.*

சிலநாளில் அங்கு அகன்று - *முதலில் தலம் தொழுது கும்பிடுமாதரவுடன் அக் கோநகரில் இனிதமர்ந்தார்; (2224); பின்னர்க் குடபுலத்தில் தானங்கள் கும்பிட்டு மீண்டும் வந்து வைகினார்; (2225); பின்னர் நாட்டிற் பிணி மூளக்கண்டு பதிகம் பாடிப் போக்கியருளிப் பின்னும் சிலநாள்கள் அங்கு வைகினார் என்க. அங்கு - வைகிய அங்கு நின்றும். உருபு தொக்கது.*

பிறவும் தொழுதிறைஞ்சி - *என்பதும் பாடம்.* 337

2236. பொருளுரை—பருவம் அறா—சாத்தி - *பருவம் தவிர்தலில்லாத நீரினை யுடைய காவிரிக் கரையில் உள்ள திருப்பாண்டிக் கொடுமுடியில் இறைவர் திருவடிகளைப் பொருந்தி வணங்கி வளந்தரும் தமிழ்ப் பதிகத்தை மகிழ்ந்து பாடிச் சாத்தி; விரிசுடர்...போற்றி-ஒளி வீசுகின்ற மாளிகைகளையுடைய வெஞ்சமாக் கூடல் முதலாக விடையவருடைய ஒப்பற்ற தானங்கள் பலவற்றையும் கும்பிட்டுத் துதித்து; குணதிசை போதுகின்றார்* - *கிழக்குத் திசையில் செல்வாராகி,*

விளக்கவுரை—பருவம் அறாப்பொன்னி - பருவம் - *வெள்ளம் வரவேண்டிய காலம். அறு - தவறாத; தப்பாத. "பூந்தண் பொன்னி யெந்நாளும் பொய்யா தளிக்கும் புனல்நாட்டு" (1206) என்று கூறிய சோழ நாட்டின் வளமானது, இக் கொங்கிற் குடபுலம் ஈந்த வள்ளன்மைத் திறத்தாலாயது என்று மனங்கொள்ளும் பொருட்டு அக்கருத்தையே ஈண்டு நினைவூட்டினார். அன்றியும் இதுவரை தெற்கு வந்த காவிரி இங்குக் கிழக்கே சோழ நாடு நோக்கிச் செல்லத் தொடங்குவதாம். இந்திரன் சீகாழியில் வைத்த நந்தவனத்தின்*

2236. பருவ மறாப்பொன்னிப் பாண்டிக் கொடுமுடி யார்தம்பாதம்
மருவி வணங்கி வளத்தமிழ் மாலை மகிழ்ந்துசாத்தி,
விரிசுடர் மாளிகை வெஞ்சமாக் கூடல் விடையவர்தம்
பொருவிறா னம்பல போற்றிக், குணதிசை போதுகின்றார்; 338

பொருட்டு அகத்தியரது குண்டிகையினை விநாயகர் கவிழ்த்ததனாற் பெருகிய காவிரி, கொங்கிற் கணித்தாயோர் தலத்தினின்றும் சோழநாட்டுக்கு வந்தது என்ற கந்தபுராண வரலாறும் காண்க. "கோலநற் குண்டிகை தாங்கும் கொள்கையால்" (54); "கொங்கிற் கணித்தி னோரிடை" (கந்தபு - காவிரிநீங்கு); இத்தலத்து விநாயகர் காவிரிகண்ட விநாயகர் எனப் பெறுதலும் காண்க. "அமர முனிவ னகத்தியன் றனாது, கரகங் கவிழ்ந்த காவிரிப் பாவாய்" (மணிமேகலை).

வளத்தமிழ் - வளம் - அருள்வளம். "பெண்ணமர் மேனியி னாரும்" என்று பதிகம் தொடங்கும் குறிப்பும், அதனுள் "வினைப்பகை யாயின தீர்க்கும்" "நினைத்தெழுவார் துயர் தீர்ப்பார்" (2) என்றும், "போற்றியென் பாரவர் தங்க, ளாக முறைவிட மாக வமர்ந்தவர்" (5) என்றும் அருளாணைதரும் குறிப்பும் காண்க. மேலும், "காவிரிக் கோலக் கரைமேல்" (7), "காரகில் பன்மணி யுந்திப் பரந்திழி காவிரிப் பாங்கர்" (8) "மருமலி வெண்மலர்ச் சந்து வந்திழிகாவிரி" (9) என்று சீகாழிக்கும் சோழநாட்டுக்கும் வளம் கொடுத்த காவிரியின் வளத்தைக் கூறும் தமிழ் என்றலுமாம்.

விரிசுடர் மாளிகை வெஞ்சமாக் கூடல் - இது வெஞ்சன் என்னும் ஓர் அரசனுடைய தலைநகரமாயிருந்த குறிப்பு. தலவிசேடம் பார்க்க. "வளங்கொண்மதில் மாளிகை கோபுரமும் மணிமண்டபமும் இவை மஞ்சுதன்னுள் விளங்கும் மதிதோய்" (2) என்ற இத்தலத்து ஆளுடைய நம்பிகள் தேவாரம் காண்க.

வெஞ்சமாக் கூடல் - தானம்பல - வெஞ்சமாக்கூடல் முதலாகிய விடையவர்தம் பல பதிகள் என்க. முதலிய என்பது அவாய்நிலையால் எஞ்சி நின்றது. இப் பொருள் முன் உரைகாரர்கள் கொண்டது. வெஞ்சமாக் கூடலில் உள்ள தானங்கள் பலவும் என்றலுமாம். மாக்கூடல் என்ற பெயர்க் குறிப்பும் காண்க.

தானம்பல போற்றி - பிள்ளையாரது பதிகங்கள் கிடைத்தில! சிதலரித்தொழிந்தன போலும்! இது பல பதிகளைக் குறிப்பின் அவை வெஞ்சமாக் கூடலின் அணிமையில் உள்ள பழங்கோயில்கள்.

குணதிசை - வெஞ்சமாக் கூடலினின்றும் கிழக்குத் திசைநோக்கி. கருவூர் இதன் கிழக்கே உள்ளது. 338

திருப்பாண்டிக் கொடுமுடி

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம்**

பெண்ணமர் மேனியி னாரும் பிறைபுல்கு செஞ்சடை யாருங்
கண்ணமர் நெற்றியி னாருங் காதம ருங்குழை யாரும்

எண்ணம ருங்குணத் தாரு மிமையவ ரேத்தநின் றாரும்
பண்ணமர் பாடலி னாரும் பாண்டிக் கொடுமுடி யாரே. (1)

தனைக்கணி மாமலர் கொண்டு தாடொழு வாரவர் தங்கள்
வினைப்பகை யாயின தீர்க்கும் விண்ணவர் விஞ்சையர் நெஞ்சில்
நினைத்தெழு வார்துயர் தீர்ப்பார் நிரைவளை மங்கை நடுங்கப்
பனைக்கைப் பகட்டுரி போர்த்தார் பாண்டிக் கொடுமுடி யாரே. (2)

கலமல்கு தண்கடல் சூழ்ந்த காழியுண் ஞானசம் பந்தன்
பலமல்கு வெண்டலை யேந்தி பாண்டிக் கொடுமுடி தன்னைச்
சொலமல்கு பாடல்கள் பத்துஞ் சொல்லவல் லார்துயர் தீர்ந்து
நலமல்கு சிந்தைய ராகி நன்னெறி யெய்துவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "வளத்தமிழ்" (2236); காவிரித் துறைப் பாண்டிக் கொடுமுடியார்; எண்ணமருங்குணத்தார்; தொழுவார் வினைப்பகை தீர்ப்பார்; நினைந் தெழுவார் துயர் தீர்ப்பார்; போற்றி என்பார்க்குப் போகமு மின்பமுமாகி ஆக முறைவிடமாக அமர்ந்தார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பெண்ணமர் மேனி** - அருள்வளம்; **கண் அமர்** - அறக்கருணை - மறக்கருணை என்ற இரு நோக்கமுள்ள; **காது அமர்** - முறை கேட்டு அருளும் செவி; "தம்பாடல் பரமர்பாற், செல்லுமுரை பெறுவதற்குத் திருச் செவியைச் சிறப்பித்து" (1972); **அமரும் எண்ணம்** என்க; **பண் அமர்பாடலினார்** - பாட்டின் பொருளாவார்; பாட்டினையுடையார்; "மறைவளர் பாடலினார்" -(2) **கணி** - **கண்ணி** - நினைந்து; கண்ணி கணி என்றாயது. (4) **வினைப்பகை** - பழ வினையாகிய பகை; **தொழுவார்** - மெய்யினாலும், **நினைத்தெழுவார்** - மனமொழிகளாலும் செயப்படுவன; **பனைக்கைப்பகடு** - யானை; பகடிபம் பெருமை (நிகண்டு) (3) **சாந்தவெண்ணீறு** - சாந்தமாக; **சாந்து** - சந்தனச் சாந்து - "சாந்தமென நீற ணிந்த சைவர்" (குறும்பலா - காந்தாரம் - 8); சாந்தத்தைத் தரும் நீறு என்றலுமாம்; **பூதம்** - சிவபூதகணம்; **கொள்கை** - கொள்ளுதல் - ஏந்துதல்; தத்துவம் என்றலுமாம்; -(4) **வளர்மறைப் பாடல்** என்க. **வளர்தல்** - உலக சிருட்டிக்குக் காரணமாதல்;-(5) **போகமும் இன்பமும்** - அனுபவிக்கப்படும் பொருளும் அதனால் வரும் இன்பமும்; **ஆகம் உறைவிடம்** - "நினைப்பவர்மனங் கோயிலாக் கொண்டவன்" (தேவா); "உள்ளம் பெருங் கோயில்; ஊனுடம் பாலயம்" (திருமந்) "மனத்தகத்தான்; றலைமேலான் வாக்கினுள்ளான்" "காயமேகோயிலாக, (தேவா); -(6) கொள்கை - தத்துவம்; **படிபடுகோலம்** - எல்லாவற்றும் படிந்த - தங்கிக்கடிந்த - தன்மை.-(7) கோலம் - அழகு. **பால் ந(ல்)ல நீறு** - பால் போன்ற வெள்ளிய நல்லநீறு. **பால்** - பான்மை என்றலுமாம்; 7- 8 - 9 பாட்டுக்களிற் கூறும் காவிரிச் சிறப்பினைப் 'பருவமறாப் பொன்னி" (2236) என்று எடுத்துக் காட்டினர் ஆசிரியர்;-(8) **பேர் இடர் செய்து உகந்தார்** - பேரிடர் செய்தல் உவப்புத்தருதற்கு என்றது குறிப்பு; **உகந்தார்** - உவகை தருதற்குத் தாம் உகந்தார் என்க; **பரந்து இழி** - வானிற் றூய கங்கை கீழே

நிலனில் வந்து இழிந்த என்ற குறிப்புமாம்.-(9) **திருமகள் காதலினான்** - திருமால்; இத்தலத்தில் திருமகளை மார்பிற்கொண்டு பள்ளிகொண்ட அரங்கர் இறைவரது பின்புறம், நினைந்து கிடக்கும் சந்நிதி உள்ள குறிப்பு; **மாமலர்** - தாமரை; **மாமலர் மேலைப் பெருமகன்** - இத்தலத்தில் வன்னிமரத்தின் கீழ் வழிபட்டு அமரும் பிரமன் சந்நிதி உள்ள குறிப்பு; **சந்து** - சந்தனம்;-(10) புந்தியிலாத சமணர் என்றதனால் "புந்தி உள்ள" - புத்தி தத்துவ மட்டில் அமைதியுள்ள - புத்தர் என்பதும் குறிப்பு. **மெய்த்தவம் பேசிட மாட்டார்** - அவ்விருவரும் பேசுதல் தவம் போன்றிருப்பினும் அவை மெய்த்தவமல்ல; **வேடம் பலபல** - காபாலம் - மாவிரதம் - பாசுபதம், முதலாயின;-(11) **ஏந்தி** - பெயர், ஏந்தியவருடைய; **நன்னெறி** - சிவநெறி.

தலவிசேடம்:- **திருப்பாண்டிக் கொடுமுடி** - இது காவிரியின் தென்கரையில் உள்ளது. கொங்கு நாட்டின் 6-வது தலம். கொடுமுடி என்று விளக்கமாக வழங்கப்படுவது; மாமேருவின் சிகரங்களுள் ஒன்று என்பது வரலாறு; பிரமவிட்டுணுக்கள் வழிபட்டுத் தனித்தனியே இவ்வாலயத்தினுள் கோயில் கொண்டமர்ந்துள்ளனர். இறைவரது நினைவுடன் அவரது பின் அமர்ந்து வழிபட்டிருப்பதை அறியாது அவர்களை இறைவரோடொப்ப எண்ணி இத்தலத்தைத் திரிமூர்த்தி சந்நிதி என்று வழங்குவது பாமர வழக்கு. அவ்வாறு வழங்குதல் மாபாதகம், "மூவரென் றேயெம் பிரானொடு மெண்ணிவிண் ணாண்டுமண்மேற், றேவரென் றேயிறு மாந்தென்ன பாவந் திரி தவரே" என்ற திருவாசகக் கருத்துக் காண்க. இப்பாமர வழக்கைப்பற்றியேமாந்து அணிமையில் சில ஆண்டுகளின்முன் கோயில் திருப்பணி செய்த அன்பரும் விட்டுணு சந்நிதிக்குப் புதிதாய்ப் புறத் தனிவாயிலும் கோபுரமும் தவறாக அமைத்துவிட்டனர். இத்தலத்துக் கணிமையில் விநாயகர் காக வுருவுடன் சென்று அகத்தியரது குண்டிகையினின்றும் காவிரியைக் கவிழ்த்துச் சோழ நாட்டில் சீகாழியில் இந்திரனது நந்தனவனத்தைச் செழிக்கச் செய்தருளினர் என்பது வரலாறு. கந்த புராணம் காவிரிநீங்கு படலம் பார்க்க. இது பற்றிய அடையாளங்கள் காவிரிக் கறையூர் என வழங்கப்படுமென்பர். நம்பிகள் தேவாரத்துள் "கறையூரில்" என்றதும், "'பாண்டிக்" கொடுமுடி என்றதும் இது குறித்தனவென்பர். 11-ம் திருமுறையினும் போற்றப்பட்டது. (கபிலர் - சிவபெருமான் இரட்டை மணிமாலை-33); ஆளுடைய நம்பிகள் இங்குத் தரிசித்து "உன்னை நான் மறக்கினும் எனது நாவானது மறவாமல் உனது நாம மந்திரத்தைச் சொல்லும்" என்ற கருத்துடன் இத்தலத்தில் வைத்துப் பஞ்சாக்கரப் பதிகம் பாடியருளினர். மூவர் பாடலும் பெற்ற பெருமை யுடையது. இத்தலபுராணம் சில பகுதி கோயமுத்தூர் வித்துவான் கந்தசாமி முதலியாராலும், ஏனைய பெரும் பகுதி முற்றும் அவர் மாணாக்கரும், வைணவரா யிருந்து சிவ தீக்கை பெற்றவரும், சைவத்திற் பெரும் பற்றுடன் விளங்கிப் பரப்பிவந்த வலிய கலியுக அரதத்தர் என்று பட்டம் பெற்றவரும் ஆகிய சர்க்கார் சாமக்குளம், வெங்கடரமணதாசர் என்பவராலும் ஏறக்குறைய 50 ஆண்டுகளின்முன் இயற்றப் பட்டன. **சுவாமி** - கொடுமுடிவரதர்; **அம்மையார்** - பண்மொழியம்மை; **விநாயகர்** காவிரி கண்ட விநாயகர்; **தீர்த்தம்** - காவிரி; **தலமரம்** - வன்னி; **பதிகம்** 3.

இது கொடுமுடி என்ற நிலையத்தினின்றும் 1/4 நாழிகை யளவில் அடையத்தக்கது.

2237. செல்வக் கருவூர்த் திருவா னிலைக்கோயில் சென்றிறைஞ்சி
நல்லிசை வண்டமிழ்ச் சொற்றொடை பாடியந் நாடகன்று,
மல்கிய மாணிக்க வெற்பு முதலா வணங்கிவந்து
பல்கு திரைப்பொன்னித் தென்கரைத் தானம் பலபணிவார், 339

---

*2237. **பொருளுரை**-செல்வக் கருவூர்...பாடி - செல்வமுடைய கருவூரில் திருவானிலை என்னும் திருக்கோயிலிற் சென்று வணங்கி நல்ல இசை பொருந்திய வளப்பமுடைய தமிழ்ச் சொற்றொடையாகிய திருப்பதிகத்தினைப்பாடி; அந்நாடு அகன்று - கொங்கு நாடாகிய அந்நாட்டினை நீங்கி; மல்கிய...வந்து - பொருந்திய மாணிக்க மலை என்னும் திருவாட்போக்கியினை முதலில் வணங்கி மேற்சென்று; பல்கு...பணிவார் - பெருகும் அலைகளையுடைய காவிரியின் தென்கரைப் பதிகள் பலவற்றையும் பணிவாராய்;*

விளக்கவுரை*....செல்வக் கருவூர்த் திருவானிலைக் கோயில் - செல்வம் - அருட்செல்வம். "அண்ட னாரரு ளீயு மன்பரே" (1) "கொடுத்த வன்னருள் கூத்தனல்லனே" (8) என்ற பதிகம் காண்க. இவ்வாறன்றிப் பொருட் செல்வங் குறித்ததென்று கொண்டு இத்தலத்தில் காமதேனுவுக்கு இறைவர் அருளிய அருளிப் பாட்டின் செல்வக் குறிப்பென்றுரைத்தலுமொன்று. இவ்வரலாற்றைப் பேரூர்ப் புராணத்திலும் இத்தல புராணத்திலும் காண்க. இறைவர் பசுபதீசர் என்ற பெயருடன் விளங்கும் காரணம் இவ்விரு பொருளையுங் குறிப்பதாம்; கருவூர் - ஊர்ப் பெயர்; ஆனிலை - கோயிலின் பெயர். "ஆனிலை யென்னுங் கோயில்" (555).*

நல்இசை வண்தமிழ்ச் சொல் தொடை *- நல்இசை - இறைவரது புகழ்; "இறைவன் பொருள்சேர் புகழ்' (குறள்); இசை - பண் என்றலுமாம், வண்மை - அருளின் செல்வத்தை வரையாது வழங்குதல்.*

அந்நாடு *- கொங்குநாடு. அந்நாடு அகன்று - இதனுடன் பிள்ளையாரது கொங்கு நாட்டு யாத்திரை முற்றுப் பெறுகின்றது.*

மாணிக்க வெற்பு *- இரத்தினகிரி என்னும் வாட்போக்கி; குணதிசை போதுகின்றார் (2236) இறைஞ்சிப் பாடி - அகன்று - வணங்கிவந்து - பணிவார் (2237) - இறைஞ்சி - உட்புகுந்தார் (2238) என்று முடிக்க.*

பொன்னித் தென்கரைத் தானம் பல *- இவை ஆம்பிராவதிக் கூடல் முதலாயின; கருவூருக்கும் இரத்தினகிரிக்கும் இடையில் உள்ளவை. 339*

திருக்கருவூர்த் திருவானிலை

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம்**

தொண்டெ லாமலர் தூவி யேத்தநஞ்
சுண்ட லாருயி ராய தன்மையர்
கண்ட னார்கரு வூரு ளானிலை
யண்ட னாரரு ளீயு மன்பரே. (1)

கந்த மார்பொழிற் காழி ஞானசம்
பந்தன் சேர்கரு வூரு ளானிலை
யெந்தை யைச்சொன்ன பத்தும் வல்லவர்
சிந்தை யிற்றுய ராய தீர்வரே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- கருவூருள் ஆனிலையார் அருள் ஈயும் அன்பர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) தொண்டு - தொண்டர்; கண்டனார் - அகண்டிதமாகிய நிலையினின்றும் உயிர்களின்மேல் வைத்த அருளினால் கண்டிதமாகத் திருமேனி தாங்கியவர்; வீரர் - என்றலுமாம்; "கறுத்த கண்டனார்" (தேவா)- (3) வேதமே பண் - வேதப் பாடல்; கண் - அருட்கண்;-(9) உழுது - அகழ்ந்து; உபசார வழக்கு; கழுது - பேய்;-(10) ஆதர் - கீழ்கள்.

தலவிசேடம்:- (1) திருக்கருவூர்த் திருவானிலை - இது கொங்கு நாட்டு ஏழாவதுதலம். கருவூர் - ஊர்ப்பெயர்; ஆனிலை-கோயிலின் பெயர்; பனந்தாள் தாடகை யீச்சரம் - சாந்தை அயவந்தி என்பன போலக் காண்க. எறிபத்த நாயனார் இங்கு அடியார்களுக்கு இடர் செய்தாரை மழுவினாலெறிந்து பேறு பெற்றனர். அவர்தம் புராண வரலாறும் (II தொகுதி பக்கம் - 109), ஆண்டுக் கூறிய தலவிசேடமுங் காண்க. இது சோழர்மரபின் முடிசூட்டுந் தன்மை நிலவும் ஐந்து பதிகளுள் ஒன்று என்பது பற்றிச் சண்டீச நாயனார் புராணத்துள் விரிக்கப்பட்டது. (1206). இது ஆம்பிராவதி யாற்றின் வடகரையில் உள்ளது; ஆன்பொருநை என்பது ஆம்பிராவதி என மருவிய தென்பதும் ஒரு கொள்கை. இதற்குத் தலபுராணம் உண்டு. பாயிரம் முதல் கருவூர்த் தேவர்கதி பெறு சருக்கமீறாக 21 சருக்கங்களுக்குத் திருவிருத்தம் 1129 கொண்டது. அதனுள் எறிபத்த நாயனார் வரலாறு எறிபத்தச் சருக்கம், புகழ்ச் சோழச் சருக்கங்களுட் கூறப்படுகின்றது. ஆக்கியோர் பெயர் முதலியவை தெரியவில்லை. இப்புராணத்தைச் பரிசோதித்துத், தாம் எழுதிய புராண வசனத்துடன் 60 ஆண்டுகளின்முன் கோயமுத்தூர் வித்வான் கந்தசாமி முதலியார் அச்சிட்டுள்ளார்.

(2) திருவாட்போக்கி - இரத்தினகிரி - இதனை மாணிக்க வெற்பு என்பர் ஆசிரியர். இதற்குப் பிள்ளையார் பதிகம் கிடைத்திலது! இது சோழ நாட்டில் காவிரிக்குத் தென்கரையில் முதலாவது தலம். சோழ நாட்டில் தில்லையினின்றும் மேற்கில் காவிரி வடகரையில் பதிகளை வணங்கிக் கொங்கு நாட்டுப் பதிகளைப் பணிந்து சோழ நாட்டுக்கு மீளும் பிள்ளையார் முதலில் வணங்கியது இத்தலமாம். "முதலா வணங்கி" (2237);

2238. பொருளுரை.... பல் நெடுங் குன்றும்...பலபதியும்-பல நீண்டகுன்றுகளிலும் படர்ந்த பெரிய கானங்களிலும் பல பதிகளிலும்; அந்நிலை...இறைஞ்சி - அங்கங்கும் இறைவர் நிலையாக வீற்றிருக்கும் தானங்களாகிய திருக்கோயில்களையெல்லாம் விரும்பிச் சென்று வணங்கி; மன்னு...மறையவனார் - நிலைபெற்ற சீகாழியின்கண் அவதரித்த

2238. பன்னெடுங் குன்றும் படர்பெருங் கானும் பலபதியும்
அந்நிலைத் தானங்க ளாயின வெல்லா மமர்ந்திறைஞ்சி,
மன்னு புகலியில் வைதிக வாய்மை மறையவனார்
பொன்னியல் வேணிப் புனிதர் பராய்த்துறை யுட்புகுந்தார். 340

வேதவுண்மையினை நாட்டும் மறையவனாராகிய பிள்ளையார்; பொன் இயல்...புகுந்தார் - பொன்போன்ற சடையினையுடைய புனிதராகிய சிவபெருமானது திருப்பராய்த் துறை என்னுந் தலத்தினுள்ளே புகுந்தருளினார்.

விளக்கவுரை.. பல்நெடும் குன்றும்..தானங்களாயின எல்லாம் - இவை மாணிக்க வெற்பு என்ற வாட்போக்கிக்கும் திருப்பராய்த் துறைக்கும் இடையில் உள்ளன.

அமர்தல் - விரும்புதல்; தங்குதல் என்றலுமாம்.

அந்நிலை - அந்தப் பக்கத்தில் உள்ள.

தானங்கள் ஆயின - குன்றும் கானும் பதியும் பல இருப்பினும் அவற்றுள் சிவனுக்கிருப்பிடமாகிய பதிகளாயினவற்றை. ஆயின-ஆக்கச் சொல் எழுந்தருளி யவை என்ற பொருள் குறித்து நின்றது.

மன்னுதல் - ஊழியில் அழியாது மிதந்து நிலைபெறுதல்.

புகலியில் மன்னும் மறையவனார் என்று கூட்டியுரைப்பினுமாம்.

வைதிக வாய்மை - வேதநெறி தழைத்தோங்க அவதரித்துப் புனித வாய் மலர்ந் தழுதல். வைதிக வாய்மையாவது அரன் பணியும் அடியார் பணியுமேயாவன என்பது 1832-ல் விளக்கப்பட்டது.

மறையவனார் - மறைகளைத் தமது திருவாக்கின்மூலம் வெளிப்படுப்பவர்.

பொன்னியல் வேணிப் புனிதர் - பொன் இயல் - பொன்போன்ற. ஆறுசேர் சடைஅண்ணல் (1) சடை - புனல் வைத்தவர் (2) சடையிற் கங்கை தரித்தவர் (7) என்ற தேவாரக் குறிப்பு.

படர் நெடுங்கானும்-என்பதும் பாடம். 340

2239. **பொருளுரை..நீடும்...நண்ணி** - நீடுகின்ற திருப்பராய்த் துறையில் எழுந்தருளிய நெற்றிக் கண்ணுடைய இறைவரது திருக்கோயிலைச் சென்று அடைந்து; கூடுங் கருத்தொடு கும்பிட்டு - ஒன்றுபடும் மனத்தினுடனே வழிபட்டு; கோதில்...கவுணியர் - குற்றமில்லாத தமிழ்ச் சொல் மாலையைப் பாடும் கவுணியராகிய பிள்ளையார்; கண் பனி...தொழுது நின்றார் - கண்களினின்றும் நீர்மழை பெருகி வழியக் கைகளைத் தலையிற் குடி அஞ்சலியாகக் கூப்பித் தொழுது நின்றருளினார்.

2239. நீடும் பராய்த்துறை நெற்றித் தனிக்கண்ணார் கோயினண்ணிக்
கூடுங் கருத்தொடு கும்பிட்டுக் கோதி றமிழ்ச்சொன்மாலை
பாடுங் கவுணியர் கண்பனி மாரி பரந்திழியச்
சூடுங் கரதலத் தஞ்சலி கோலித் தொழுதுநின்றார். **341**

2240. தொழுது புறம்பணைந் தங்குநின் றேகிச் சுரர்பணிவுற்
றெழுதிரு வாலந் துறைதிருச் செந்துறை யேமுதலா
வழுவில்பல் கோயில்கள் சென்று வணங்கி மகிழ்ந்தணைவார்
செழுமலர்ச் சோலைத் திருக்கற் குடிமலை சேரவந்தார். **342**

விளக்கவுரை—நீடுதல் - *சிறப்பினால் நீடியிருத்தல்.*

கூடும் கருத்து - *இறைவனிடத்து ஒன்றுபட வைக்கும் கருத்து. எல்லா உயிர்களும் இறைவரைக் கூடுதல் வேண்டுமென்னும் கருத்து என்றலுமாம்.*

கோதில் - *உயிர்களுக்குக் குற்றம் நீக்கம் செய்யும் என்ற குறிப்புமாம்.*

சூடும் - *சிரத்திற் சூடும். அஞ்சலிகோலுதல் - அஞ்சலியாகக் கைகளைச் சேர்த்திக் கூப்புதல்.* *341*

2240. பொருளுரை... தொழுது...ஏகி - தொழுது வெளியே அணைந்து அப்பதியினின்றும் சென்று; சுரர்...மகிழ்ந்தணைவார் - தேவர்கள் வந்து வணங்கி எழுகின்ற திருவாலந் துறை, திருச்செந்துறை முதலாகக் குற்றமற்ற பல கோயில்களையும் சென்று வணங்கி மகிழ்ச்சியுடன் அணைவாராகிய பிள்ளையார்; செழுமலர்...வந்தார் - செழுமை பொருந்திய மலர்ச் சோலைகளையுடைய திருக்கற்குடி மலையினைச் சேரும்படி வந்தருளினர்.

விளக்கவுரை... சுரர்பணிவுற்று எழும் - *"புவனியிற் போய்ப் பிறவாமையில்" என்ற திருவாசகக் கருத்துக் காண்க.*

எழுதல் - *தம் நிலையில் மேம்படுதல்.*

வழுவில் - *உயிர்களின் வழுக்களை இல்லையாகச் செய்யும் - வழுவற்ற - பூசை நிகழும்.*

சேர - *சேரும் பொருட்டு.* *342*

திருப்பராய்த்துறை

திருச்சிற்றம்பலம் — பண் - மேகராகக் குறிஞ்சி

நீறு சேர்வதொர் மேனியர் நேரிழை, கூறு சேர்வதொர் கோலமாய்ப்
பாறு சேர்தலைக் கையர்ப ராய்த்துறை, யாறு சேர்சடை யண்ணலே. *(1)*

செல்வ மல்கிய செல்வர்ப ராய்த்துறைச், செல்வர் மேற்சிதை யாதன
செல்வன் ஞானசம் பந்தன செந்தமிழ், செல்வ மாமிவை செப்பவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பராய்த்துறை அடிகள் நீறு சேர்வதொர் மேனியர், வேத மோத நின்ற ஒருவனார் முதலிய தன்மைகளாலறியப்படுபவர்; அவரை வாழ்த்துமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நீறு சேர்வதொர் மேனியர்** *- சங்கார காரணனாகிய தனி முதல்வன்; நீறு - (5); பொடி - (7)* **நேரிழை கூறுசேர்வதோர் கோலம்** *- புனருற்பவத்தின் பொருட்டுச் சத்தியுடன் இணைந்து நீக்கமின்றி நிற்பவர் என்றது; பாதி பெண்ணுரு (3);* **ஆறுசேர் சடை அண்ணல்** *- அருளுடையவர் என்றது;-(3)* **ஒருவனார்** *- தனி முதல்வர்;* **வேதமெல்லாம் முறையால் விரித்து ஓதநின்ற** *- வேதங்களைச் சொன்ன; வேதங்களாற் சொல்லப்பட்ட; "தனிமுதலாம் பரனென்று பன்முறையாற் றுணிந்த மறைமொழி" (789); (5)* **இரவில் எரியாடுதல்-சங்காரம்; வேதம் பரவினார்** *- வேதங்களாற் பரவப்படுபவர்; செயப்பாட்டுவினை;- (6)***பறையுஞ் சங்கும் ஒலிசெய்** *- விழாச் சிறப்பு; நித்திய மங்கல ஒலிகளுமாம்;- (7)* **அடைய** *- உயிர்கள் தம்மை வந்து அடையும்படி;-(8)* **தருக்கு** *- செருக்கு;- (9)* **ஆற்றல் மிக்க***-என்றது அளவிலாற்றலுடைமை; சிவனது எண் குணங்களுள் ஒன்று; (10)* **உருவிலா***-உருப்படாத;-(11)* **செல்வமல்கிய செல்வர்** *- நிலையுடைய பெருஞ் செல்வம்; முத்தித்திரு;* **சிதையாதன** *(வாகிய) -* **செந்தமிழ்** *என்று கூட்டுக.* **சிதையாமை** *- என்றும் அழிவுபடாதிருத்தல்.*

தலவிசேடம்:- **திருப்பராய்த்துறை** *- காவிரிக்குத் தென்கரையில் மூன்றாவது தலம்; பராய் என்பது முருடுகள் உள்ள ஒருவகை மரம்; "வன்பராய் முருடொக்கு மென்சிந்தை" (திருவாசகம்). பராய் இங்குத் தலமரமாதலின் இப்பெயர் பெற்ற தென்பர்; "பரக்குநீர்ப் பொன்னி மன்னு பராய்த்துறை" என்றது திருக்குறுந் தொகை. காவிரி இங்குப் பரவிச் செல்லும் துறையினையுடையது. தொகுதி III பக்கம் 680 பார்க்க.*

(1) திருஆலந்துறை - (2) திருச்செந்துறை - இவற்றின் பதிகங்கள் கிடைத்தில.

(1) **திருஆலந்துறை** *- "திரிசிராப்பள்ளிக்கு மேற்கே 7 மைலில் காவிரிக்குத் தென்கரையில் உள்ளதும்* **அந்தநல்லூர்** *என்று இப்போது வழங்குவதுமான தலமே (இது) என்க. இவ்வூரிலுள்ள சிவாலயம் பழமைவாய்ந்திருத்தலோடு முதற் பராந்தகன் முதல் ராஜராஜன் என்ற சோழர்கள் காலத்தவும் பிற்பட்ட பாண்டியர் காலத்தவுமான சாஸனங்கள் உடையது மாகும். அவற்றிலெல்லாம் அத்தலம்* **அந்தவனல்லூர், அந்துவனல்லூர்** *என்றும், அதன்கணுள்ள சிவாலயம்* **'திருவாலந்துறை'** *என்றும்...வழங்கப்பட்டிருத்தலைக் காணலாம். **இவ்வாலந்துறைச் சிவாலயத்துக்குத் திருப்பதியமொன்று வழங்கிவந்த தென்று அவ்வூர்ச் சாஸனமொன்று கூறும்.*

(2) **திருச்செந்துறை** *- இது திரிசிராப்பள்ளிக்கு மேற்கே 6 மைலிலும், மேற்கூறிய அந்தநல்லூருக்கு கிழக்கே 1 மைலிலும் உள்ளது. இவ்வாலயத் திரு மதில்களிலே முதற் பராந்தகச் சோழன் காலத்துச் சாஸனங்கள் பலவும், பிற்பட்ட சோழர் சாஸனங்களும்*

வேறு

2241. கற்குடி மாமலை மேலெழுந்த கனகக் கொழுந்தினைக் கால்வளையப்
பொற்றிரண் மேருச் சிலைவளைத்த போர்விடை யாளியைப் போற்றிசைத்து
நற்றமிழ் மாலை புனைந்தருளி ஞானசம் பந்தர் புலன்களைந்துஞ்
செற்றவர் மூக்கீச் சரம்பணிந்து திருச்சிராப் பள்ளிச் சிலம்பணைந்தார். 343

வரையப்பட்டுள்ளன. இத்தலத்துச் சிவபிரான் திருச்செந்துறைக் கற்றளிப் பரமேசுரர் என்று..வழங்கப்பட்டனர் என்பதும் விளங்குவன. ("தேவாரம் பெற்ற தலங்களும் சிலாசாஸன வழக்கும்"-கலைமகள் Vol. XI, P. P. 5-11, 408-419)

(3) **பூவாளூர்** - "காமர்பதி" என்பது பூவாளூர்; "மன்மதன் இங்கு பூசித்தான் என்பது புராண வரலாறு. அதனால் இது "பூவாளியூர்" என ஆகிப் பின்னர் மருவிப் பூவாளூராயிற்று. பூவாளூர்ப் பதிற்றுப்பத்தந்தாதியில் இவ்வூர் "காமர் வளம்பதி, காமர் பூம்பதி, காமரூர், காமர்பதி" என வழங்கப் பெறுகிறது.

(மஹா மஹோபாத்தியாயர் - வித்வான் தியாகராச செட்டியார் - வரலாறு - பக்கம் 6-7).

2241. பொருளுரை... கற்குடி...புனைந்தருளி - பெரிய திருக்கற்குடி மலையின்மேல் எழுந்தருளியிருந்த பொற்கொழுந்து போல்பவரைப் பொன்மேருச்சிலையை வளைத்த போர்விடை யாள்பவரைத் துதித்து நல்ல தமிழ்மாலை சாத்தியருளி; ஞானசம்பந்தர்- ஆளுடைய பிள்ளையார்; புலன்கள் ஐந்தும்....பணிந்து - ஐம்புலன்களையும் செற்றவரது திருமூக்கீச் சரத்தினைப் பணிந்து சென்று; திருச்சிராப்பள்ளிச் சிலம்பணைந்தார் - திருச்சிராப்பள்ளி மலையினை அணைந்தருளினார்.

விளக்கவுரை.... **கற்குடி மாமலைமேல் எழுந்த கனகக் கொழுந்து**- "கற்குடிமா மலையாரே" என்பது பிள்ளையார் தேவாரம்; மேல் எழுந்த - மலையின்மேல் தாமே முளைத்தெழுந்தவர். தான்றோன்றியார். கனகக் கொழுந்து - திருமேனிப் பொலிவும் அருட்செல்வ நல்கும் எளிமையும் தூய்மையும் கருதியது. "விழுமியானைக் கற்பகத்தை" என்பது ஆளுடைய அரசுகள் தேவாரம்.

கால்வளையப் பொன்திரள் மேருச் சிலைவளைத்த - கால்வளைய - இருதலையும் நெருங்கி - வளையும்படி; மேருச்சிலை - மேருவாகிய சிலையை (மலையை) என்க. பொற்றிரள் - பொன்திரண்டெழுந்ததாகிய - பொன்மலையாகிய;


விடையாளி - விடையை ஆள்பவர்; கொடியாகவும் ஊர்தியாகவும் கொண்டு அரசு செய்வார்;

நற்றமிழ்மாலை - "வடந்திகழ் மென்முலையாளை" என்ற திருப்பதிகம்; "பாமரு செந்தமிழ்மாலை" (11) என்பது பதிகம்.

புலன்கள் ஐந்தும் செற்றவர் - ஐந்து புலன்கள் ஈண்டுப் பழவினைப் பாசமாகிய மலம் என்ற அளவிற் பொருள் தந்து நின்றது. **செற்றவர்** - இயல்பாகவே நீங்கியவர்




வடகரை மாந்துறை
கோயில் விமானம்




வடகரை மாந்துறை
கோயில் முன்பார்வை

பாட்டு - 2206



அன்பிலாலந்துறை முன்பார்வை




அன்பிலாலந்துறை
கோயில் உட்பார்வை

பாட்டு - 2206




திருவானைக்கா ஊறும் தீர்த்த கிணறு




திருவானைக்கா சுவாமி கோபுரங்கள்

பாட்டு - 2243




திருவானைக்கா இராசகோபுரம்

பாட்டு - 2243




திருமூக்கீச்சரம் கோயில் முன் பார்வை

பாட்டு - 2241




வடகரை மாந்துறை
கோயில் விமானம்




வடகரை மாந்துறை
கோயில் முன்பார்வை

பாட்டு - 2206



அன்பிலாலந்துறை முன்பார்வை




அன்பிலாலந்துறை
கோயில் உட்பார்வை

பாட்டு - 2206




திருவானைக்கா ஊறும் தீர்த்த கிணறு




திருவானைக்கா சுவாமி கோபுரங்கள்

பாட்டு - 2243



திருவானைக்கா இராசகோபுரம்

பாட்டு - 2243



திருமூக்கீச்சரம் கோயில் முன் பார்வை

பாட்டு - 2241

என்னுந் துணையாய் நின்றது. இயல்பாகவே பாசங்களினீங்கியவர் என்க. "பொறி வாயி லைந்தவித்தான்" என்ற திருக்குறட் கருத்துக் காண்க. தம்மை அடைந்தார்க்கு ஐம்புல அவாவினையும் செறுப்பவர் என்றலுமாம்.

முக்கீச்சரம் - உறையூர் என்று வழங்கப்படும், சிலம்பு - மலை. 343

திருக்கற்குடி

திருச்சிற்றம்பலம் — பண் - தக்கராகம்

வடந்திகழ் மென்முலை யாளைப் பாகம தாக மதித்துத்
தடந்திரை சேர்புனன் மாதைத் தாழ்சடை வைத்த சதுரர்
இடந்திகழ் முப்புரி நூலர் துன்பமொ டின்பம தெல்லாங்
கடந்தவர் காதலில் வாழுங் கற்குடி மாமலை யாரே. (1)

காமரு வார்பொழில் சூழுங் கற்குடி மாமலை யாரை
நாமரு வண்புகழ்க் காழி நலந்திகழ் ஞானசம் பந்தன்
பாமரு செந்தமிழ் மாலை பத்திவை பாடவல் லார்கள்
பூமலி வானவ ரோடும் பொன்னுல கிற்பொலி வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- கற்குடி மாமலையார் துன்பமொடின்பம தெல்லாங் கடந்தனர்; காதலில் வாழ்பவர்; சைவர்; நலந்தரு சிந்தையராகி நாமலிமாலையினாலே கலந்தவர் காதலில் வாழுமிடத்தில் உறைபவர்; பத்தர்கள் சித்தர் இறைஞ்ச அவரிட ரெல்லாம் காத்தவர்; என்றினைய தன்மைகளையுடையார்.

பதிகப் பாட்டுக்குறிப்பு:- (1) வடம் - முத்துவடம்; மதித்து - பாகமாகிய கொள்கையில் நின்று; பிரியாவிடையாகிய போக சத்தி என்பது குறிப்பு. புனன் மாதைச் சடை - வைத்த - அளவிலாற்றலாகிய சதுரப்பாடு குறித்தது. புனல் மாது - கங்கை. துன்பமொடின்பம தெல்லாம் கடந்தவர் - வெறுப்பும் விருப்பும் கடந்தவர்; "வேண்டுதல் வேண்டாமை யிலான்" (குறள்); காதலில் - காதல் - அன்பின் பெருக்கு; -(2) அங்கம் - வேதாங்கம்; ஐவேள்வி-சிவவேள்வி. பாணி - தாளம்; சங்கம் - சங்கு வளையல்; சங்கம் ஆர்-கை என்க; அது - பகுதிப்பொருள் விகுதி.-(3) அகலந் தரும் - பரவி நிற்கும்; தாரகை - சந்திர மண்டலத்தைச் சுற்றும் தாரகைகள்;சைவர் - சிவபரம்பரையின் முதல்வர்-(4) உண்ணிய - உண்ட; வெதிர் - மூங்கில்; -(5) ஒருவர் - அருச்சுனர்; (6) நலந்தரு...கலந்தவர் - மனத்தாலும் வாக்கினாலும் அன்புகலந்த பணிசெய்யுமடியவர்;-(7) சிறை - கொம்பு; வித்தி - உழுது விளைத்து. -(8) விட்டவிசை - விட்டதனால் உண்டாகிய விசை; காளம் - கறுப்பு; முகில் கீறுதல் - மேக மண்டலத்தினுட் புகுதல். -(9) கொள்கை - நிலை; வண்டு பாட - மயில் ஆடும் - என்க;- (10) கடுப்பொடியார் - கடுக்கவளம் தின்னுமவர்; சமணர்; பத்தர்கள் சித்தர் இறைஞ்ச - ஈழநாட்டரசன் முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற வரலாறுகள் குறிப்பு. இடர்காத்தல் - இடர் நீக்குதலும் வராமற் காத்தலும்.

தலவிசேடம்: திருக்கற்குடிமாமலை - மூவர் பாடலும் பெற்ற பெருமை யுடைய தலம். இறைவர் அருளும் இயல்புகளை ஆளுடைய பிள்ளையாரும், அவர் கண்ணாரக் காண்பார்க்கோர் காட்சியாவர் என்பதனை அரசுகளும், அவர்பால் "அடியேனையு மஞ்சல்என்னே" என வேண்டி யபயம் பெறும் நிலையினை நம்பிகளும் அருளிய திருப் பாடல்கள் பெற்ற தலம். III பக்கம்-679 பார்க்க.

திருமூக்கீச்சரம்

திருச்சிற்றம்பலம் **பண் - செவ்வழி**

சாந்தம்வெண் ணீறெனப் பூசிவெள் ளஞ்சடை வைத்தவர்
காந்தளா ரும்விர லேழையோ டாடிய காரணம்
ஆய்ந்து கொண் டாங்கறி யந்நிறைந் தாரவ ரார்கொலோ
வேந்தன்மூக் கீச்சரத் தடிகள்செய் கின்றதோர் மெய்ம்மையே. (1)

மல்லையார் மும்முடி மன்னர்மூக் கீச்சரத் தடிகளைச்
செல்வரா கநினை யும்படி சேர்த்திய செந்தமிழ்
நல்லராய் வாழ்பவர் காழியுண் ஞானசம் பந்தன
சொல்லவல் லாரவர் வானுல காளவும் வல்லரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- உமையோடும் கங்கையோடும் மேவி நின்று அழலாடல் முதலிய செய்கைகள் செய்வனவெல்லாம் மூக்கீச்சரத்தடிகள் செய்கின்ற மெய்ம்மையே; மூக்கீச்சரம் தென்னவனும் சேரலனும் ஆகிய கோச்செங்கட் சோழர் செய்த மாடக் கோயில் போற்றத்தகுவது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வெள்ளம்** - கங்கை; **சாந்தமென வெண்ணீறு பூசி** என்க; **காந்தளாரும்** - காந்தளின் வடிவு போன்ற; **ஆர்தல்** - போலுதல்; உவம உருபு. **ஏழை** - பெண்; உமையம்மை; **காரணம் - மெய்ம்மையே** - என முடிக்க; ஏனைப்பாட்டுக்களிலும் இவ்வாறே; **வேந்தன்** - கோவாகிய செங்கணான்; வேந்தன்- இறைவன் என்றலுமாம்; **மெய்ம்மை** - "நல்ல அடியார்மேல் ஊனத்திரளை நீக்கு மதுவு முண்மைப் பொருள்; போலும்" (தேவா - அண்ணாமலை); பின்னர்க், கன்மமே - பூசலே - மாயமே - அச்சமே - ஏதமே - மொய்ம்பதே - செம்மையே - பச்சையே என வருவனவும் இப்பொருளுக் கேற்பக் கொள்ளத்தக்கன; -(2) **கூட்ட மாய்** - கூடி; **விண்டவர்** - நீதி விடுத்தவர்; அரக்கர்; பகைவர்; **வேனில் வேள்** - மன்மதன்; மேல்வரும் பாட்டிலும் இவையிரண்டையும் குறித்தல் காண்க. அடியார்களிடத்துக் காம முதலிய குற்றங்களும் ஆணவப் பகையும் வாராமற் காப்பவர் என்பது குறிப்பு; **கன்மம்** - தொழில்;-(3) **மருவலார்** - பகைவர்; **மால்மதலை** - விட்டுணுவின் மகனாகிய மன்மதன். **அவ்வெரி உருவிலார ஊட்டியது** - என்க. எரியூட்டி எரித்ததும் பின்னர் உருவிலாது இருக்கச் செய்ததுமாகிய இரு தன்மை யுடைய எரி; **வில் - புலி - கயல்** - தமிழ் மூவேந்தரது கொடிகள். கோச்செங்கணார் தமிழ்நாடு மூன்றையும் அடிப்படுத்தி ஆண்டமை குறிப்பு; மேல் 5 - 6

- 9 - 11 - பாட்டுக்களும் இவ்வாறே; "தென்னவனா யுலகாண்ட செங்கணாற்கடியேன்" (தேவா) மூவேந்தரும் வழிபட்ட குறிப்பு என்றலுமாம். **பூசல்** - அருட்போர்; -(4) 2-வது பாட்டின் கருத்து; **சாயலாள்** - உமை; **கோழி** - **வஞ்சி** - சேரர் தலைநகரங்கள். சேர நகரம் கோழிக்கூடு என இன்றும் (Calicut) வழங்குதல் காண்க; **கோழி** - தலப் பெயருமாம்:- (6) **நேரியன்** - சோழன்; **மானதன்** - அரசன்;--(7)**அரையிலாருங் கலையில்லவன்** - திகம்பரன்; **ஏதம்**-நன்மை; "ஏத நன்னில மீரறு வேலி" (தேவா); (மலத்தைக்) கெடுத்தல் என்றலுமாம்; விரவலார் - பகைவர் - முப்புர வாணர்; **உடன்** - விரைவில்;- (8) **சடைக்கு நீர் ஏற்றதும்** என்க. குவ்வுருபு ஏழனுருபின் பொருளாய் வந்தது; **கூர்க்கும்** - கூரினை உடைய; **மூர்க்கன்**-வலியன் என்ற பொருளில் வந்தது; மொய்ம்பு என்றது காண்க;- (9) **நீருள் ஆரும்மலர்** - நீரினிற் பூக்கும் தாமரை; நீர்ப்பூக்களுள் உயர்வு பற்றித் தாமரையைக் குறித்தது; **செம்மை** - செம்மையாக்கும் தன்மை;- (10) **புலான் மார்பு** - பருத்த உடல்; **துகிலினர்** - துகில் போர்ப்பவர் - புத்தர்; **வெற்றரை உழல்பவர்** - சமணர். **உண்பு** - தத்தம் சமயப் பிணக்குக் கொள்கை; **கிள்ளி** - சோழரின் சிறப்புப் பெயர்; **பச்சை** - வாடாது நிலைபெறும் தன்மை குறித்தது. "பச்சைப் பதிகம்" என்னும் வழக்குக் காண்க- (11) **தமிழ் நல்லராய்** - தமிழ் பயிலும் நன்மையுடையராகி.

தலவிசேடம்:- திருமூக்கீச்சரம் - காவிரியின் தென்கரையில் 5-வது பதி; உறையூர் என்று விளக்கமாய் வழங்கப்படுவது; "உலகில்வள ரணிக்கெல்லா முள்ளுறை யூ ராமுறையூர்" (புகழ்ச் - 1). தலமரம் வில்வமாதலின் வில்வாரணிய மெனப்படும்; வீரவாதித்தன் என்னும் சோழ அரசன் உலாவரும்போது கோழி ஒன்றினால் அவனைத் தோற்கச் செய்து இறைவர் தம் இருக்கையை வெளிப்படுத்திய காரணத்தால் கோழி எனவும் பெறும். உதங்கமுனி முற்பிறப்பில் சிவ சொத்தைக் கவர்ந்த மனைவியைக் கூடிய பாவத்தையும்; காசிபன் மனைவி கத்துரு தன் சக்களத்தியை வஞ்சித்த பாவத்தினால் வந்த நோயினையும்; கத்துருவின் மகன் கார்க்கோடகன் தன் பெரிய தாயை வஞ்சித்த பாவத்தினால் பெற்ற குருட்டினையும்; இத்தலத்தில் இறைவரைப் பூசித்து நீங்கப் பெற்றனர். இங்குப் பூசித்ததனால் தன்னைத் தரிசித்தோரும் தன் ஒலி கேட்டோரும் நற்பயன் பெறும் வரத்தினைக் கருடன் பெற்றனன்; வேடன் ஒருவன் பசு நிரை கவர்ந்து செல்லும்போது அதற்கு இடையூறா யிருந்ததொரு கிழட்டுப் பசுவை இங்கு விட்டுச் சென்றதன் பயனாகப் பேறடைந்தனன். நாகராசன் மகள் காந்திமதியை மணந்து நாகலோகத்திலிருந்து கொண்டுவந்த ஐந்து சிவலிங்கங்களை வெவ்வேறிடங்களிற்றாபிக்கச் சூரவாதித்த சோழன் எண்ணியபோது அவையாவும் இங்கு மூலலிங்கத்தினுட் கலந்தமையால் சுவாமி - **பஞ்சவர்ணேசுவரராயினர்**. அம்மை - **காந்திமதி; தீர்த்தம் - சிவதீர்த்தம்**; மரம் - **வில்வம்**. பதிகம் 1.

இது திருச்சிராப்பள்ளிக் கோட்டை நிலயத்தினின்றும் மேற்கே கற்சாலை வழி 11/2 நாழிகையில் அடையத்தக்கது.

2242. **பொருளுரை**.... செம்மணி...மாலை வேய்ந்து - செம்மை மணிகளை வாரிக்கொண்டு அருவி இடையறாது பாய்தற்கிடமாகிய திருச்சிராப்பள்ளி மலையின்மீது

2242. செம்மணி வாரி யருவிதூங்குஞ்
சிராப்பள்ளி மேய செழுஞ்சுடரைக்
கைம்மலை யீருரி போர்வைசாத்துங்
கண்ணுத லாரைக் கழல்பணிந்து
மெய்ம்மகிழ் வெய்தி யுளங்குளிர
விளங்கிய சொற்றமிழ் மாலைவேய்ந்து,
மைம்மலர் கண்டர்தம் மானைக்காவை
வணங்கும் விருப்பொடு வந்தணைந்தார். **344**

எழுந்தருளிய செழுஞ்சுடரை - யானையினை உரித்து அத் தோலைப் போர்த்த நுதற்கண்ணுடையவரைத் திருவடிகளிற் பணிந்து, மெய்ம்மகிழ்ச்சி யடைந்து உள்ளங் குளிர்ந்து விளக்கமாகிய சொற்றமிழ் மாலையினை அணிந்து, பின்னர்; மைம்மலர்...வந்தணைந்தார் - நீலம் மலரும் திருக்கண்டத்தினை யுடைய இறைவரது திருவானைக்காவினை வணங்கும் விருப்பத்தோடும் வந்து அணைந்தனர்.

விளக்கவுரை...**செம்மணி** - சிவப்புமணி - அரதனம். ஒன்பது மணிகளுள் ஒன்று. இது குறிஞ்சிக் கருப்பொருள்களுள் ஒன்றாதலின் மலைபடு பொருளாகத் திருச்சிராப் பள்ளி மலைவளத்தொடு படுத்துக் கூறினார். அணிவார்க்கு உடல் நல முதலிய செம்மை செய்யும் மணிகள் என்று பொதுமையிற் கொள்ளுதலுமொன்று.

கைம்மலை - யானை; ஈர்உரி - ஈர்ந்து உரித்த தோல்.

மெய் - உடல்; **உளம்** - மனம்; **சொல்** - வாக்கு என்ற முக்கரணங்களும் ஒன்றிய நிலை குறித்தது. "கூற என் உள்ளங் குளிரும்மே" என்றது தேவாரக் குறிப்பு. **வேய்ந்து** - புனைந்து-சாத்தி; போற்றிசைத்து.

மைம்மலர் - விடம் விளங்குதற்கிடமாகிய.

வந்தணைவார் - என்பதும் பாடம். *344*

திருச்சிராப்பள்ளி

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி**

நன்றுடை யானைத் தீயதில் லானை நரைவெள்ளே
றொன்றுடை யானை யுமையொரு பாக முடையானைச்
சென்றடை யாத திருவுடை யானைச் சிராப்பள்ளிக்
குன்றுடை யானைக் கூறவென் னுள்ளங் குளிரும்மே. *(1)*

தேனயம் பாடுஞ் சிராப்பள்ளி யானைத் திரைசூழ்ந்த
கானல்சங் கேறுங் கழுமல வூரிற் கவுணியன்
ஞானசம் பந்த னலமிகு பாட லிவைவல்லார்
வானசம் பந்தத் தவரொடு மன்னி வாழ்வாரே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சிராப்பள்ளிக் குன்றுடையார் சென்றடையாத திருவுடையவர்; அவர் எங்கள் பெருமானாகிய தலைவர்; அவர் செய்கை யறியவல்லார் யாவர்; அவரடியார்க் கல்லலில்லை; அவரது பதியைச் சென்று சேர்மின்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நன்றுடையான் - தீயதிலான்** - இப்பதியில் உள்ள இரண்டு தீர்த்தங்களின் பெயர்; இறைவரியல்பு குறிப்பனவுமாம். சகல வேதாந்த வாக்கியங்களாலும் சிவபெருமானது தன்மைகள் இரண்டுவிதமாகக் கூறப்படும் என்றும், அவற்றுள் ஒன்று முடிவிலா இன்ப குணமான ஒரே கனமாயிருத்தல் - மற்றையது துன்பங்களுக்கெல்லாம் மூலகாரணமான மலத்தினியைபு அநாதியே யின்மை என்றும் விரித்து விளங்கக் காட்டினர் நீலகண்ட பாடியகாரர்; அவ்விரு தன்மைகளுமே ஈண்டு "நன்றுடையானைத் தீயதில்லானை" என உபதேசித்தருளப் பட்டன என்ப. **சென்றடையாத திருவுடையான்** - எங்கு நிறைதலாகிய இயற்கைத் திருவுடையவர். **என் உள்ளங் குளிரும்** - (2242) **குளிர்தல்** - மகிழ்தல்;- (2) **கடுவன்** - ஆண் குரங்கு; **பாய்வான்** - பாயும் பொருட்டு; **மந்தி** - பெண் குரங்கு; **செம்முகம்** - கருவரை - முரண் அணி. **நாகம் மதியுடன் வைத்தல் பழி யன்றே** - பகைப் பொருள்களைச் சார வைத்தல் பழியாம் என்றும், பழியன்று என்றும் உரைக்க நின்றது;-(3) **மழலை** - மெல்லிய கனிந்த இனிய ஓசை.-(4) **துறை** - ஏறுதுறை; இறங்கு துறை; நீர் ஓடும் வழிகளுமாம்; **நீலம்** - மலர்; **பெருமான்** - தலைவன்; -(5) **வரையாத** - நீக்காத; **தலைவரல்லாமை** - தலைவரன்றென்ற சொல்லை; **நிலவரை** - நிலத்தின்மேல்; **நீலம்** - நீலநிறமுள்ள விடம்; ஆகு பெயர்; **ஆமே** - ஆமோ; வினா - நீலம் நீலமாயே யிருத்தலின் தலைவர் என்பதே துணிக என்ப துணர்த்தி நின்றது. நீலம் வெள்ளையாயினன்றோ அவர் தலைவரல்லாமை யுரைத்தல் கூடும்;-(6) **பொன்சேரும்** - பொன் போலும்; செல்வனாரும் தையல் பாகருமாயினார் நஞ்சுண்பதும் தலையோட்டில் ஐயங்கொள்வதும் பொருந்தாத செயல்களாதலின் ஆரிவர் செய்கை அறிவாரே என்றார். -(7) **ஊகம்** - கருங் குரங்கு; **சேய்** - சேய்மையில்; விண்ணில்; **பேய் உயர் கொள்ளி** - பேய்கள் சுடலையிற் பிடிக்கும் குறைக் கொள்ளி; **திருக்குறிப்பு** - உலகங்களை உளவாக்கி ஈடேற்றும் திருவுள்ளக் குறிப்பு; **ஆகாதே** - ஏகாரம் வினா;- (8) **சொலவல** - சொல்லத்தக்க; **சிலவல** - பல; உயிர்களின் பக்குவபேத நோக்கிப்பல; **சேடர்** - அறிவுடையோர்;- (9) **அரப்பள்ளி** - பாம்பணை; **கரப்பு உள்ளி நாடி** - **கரப்பு** - மறைதல்; அளவுகாணாது மேற் செல்லுதல். **உள்ளி** - காரணத்தை நினைத்து; **சிரப்பள்ளி** - சிராப்பள்ளி; **இரப்பு** - ஐயமேற்றல்; (இரத்தல்);-(10) **உடைநீத்தோர்கள்** - சமணர்; **கஞ்சிநாட்காலை ஊணாப்பகல் உண்டு ஓதுவோர்கள்** - புத்தர். "கண்டான் கழுவா முன்னே யோடிக் கலவைக் கஞ்சியை, உண்டாங் குரைக்குஞ் சிறுசொல்" (பிள்-தேவா - பழனம் - தக்கேசி - 10); இது புத்தர் வழக்கு. **உறுசீர் பெறுதும் என்பீர்** - உறத்தக்க சிறப்பை அடைவோம் என்று எண்ணுகின்றவர்களே!-(11) **தேன்** - தேன் வண்டுகள்; **நயம்** - நல்லிசை; **திரை..ஏறும்** - சீகாழி, கடலருகில் இருத்தல் பற்றியது; **கானல்** - கடற்கரைக் கழிக்கானல்; **வானசம்பந்தத்தவர்** - சிவகணத்தவர்

தலவிசேடம்:- திருச்சிராப்பள்ளி - தொகுதி III பக்கம் 678 பார்க்க.

2243. பொருளுரை... விண்ணவர்...மெய்ப் பொருளை - தேவர்கள் துதிக்கும் திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தினடியில் திரண்டெழுந்த மெய்ப்பொருளாகிய இறைவரை; **நண்ணி...எழுந்து** - அடைந்து வணங்கி விழுந்து எழுந்து;

2243. விண்ணவர் போற்றிசெ யானைக்காவில்
வெண்ணாவல் மேவிய மெய்ப்பொருளை
நண்ணி யிறைஞ்சிமுன் வீழ்ந்தெழுந்து
நாற்கோட்டு நாகம் பணிந்ததுவும்
அண்ணல் கோச்செங்க ணரசன்செய்த
வடிமையு மஞ்சொற் றொடையில்வைத்துப்
பண்ணுறு செந்தமிழ் மாலைபாடிப்
பரவிநின் றேத்தினர் பான்மையினால்; **345**

நாற்கோட்டு...அடிமையும் - நான்கு - கொம்புகளையுடைய வெள்ளை யானை பணிந்த திறத்தினையும் பெருமையுடைய கோச்செங்கட் சோழ மன்னர் செய்த அடிமைத் திறத்தினையும்; அஞ்சொல்...பாடி - அழகிய சொற்றொடையில் வைத்துப் பண் பொருந்திய செந்தமிழ் மாலையாகிய திருப்பதிகத்தினைப்பாடி; பரவி...பான்மையினால் - துதித்து நின்று பான்மையினால் போற்றினார் திருஞானசம்பந்தப் பிள்ளையார்.

விளக்கவுரை...விண்ணவர் போற்றிசெய் - வெள்ளையானை பூசித்தமை போலத் தேவர்களும் போற்றினர் என்பது தலவரலாறு.

வெண்ணாவல் - தலமரம். இதனடியில், இறைவர், அம்மையார் நீரினால் திரட்டத் திரண்டெழுந்தமை குறிக்க மேவிய - என்றார். "செழுநீர்த்திரளை" (திருநா - தாண்)

மெய்ப்பொருள் - நித்தியமானவர்; அழிவில்லாதவர்.

நாற்கோட்டு நாகம் - நான்கு கொம்புகளுள்ள ஐராவதம் என்னும் யானை; நாகம் - யானை; இது தேவேந்திரனது வெள்ளையானை என்ப.

பணிந்ததுவும் - அடிமையும் - வைத்துப்பாடி - என்க.

அண்ணல் கோச்செங்கண் அரசன் - செய்த அடிமை - நாகம் பணிந்ததுவும் என்றதற் கேற்பச் சரித வரலாற்றினைப் பற்றிச், சிலந்தி பணிந்ததுவும் என்றுரையாது அரசன் செய்த அடிமை என்றார்; பணிந்த அதனோடு யானை வரம்பெற்றொழிந்தது என்பதும், சிலந்தி அவ்வாறன்றி அரசனாய்ப் பிறந்து சிவனுக்கு 78 மாடக் கோயில்கள் அமைத்து அடிமை செய்தது என்பதும் குறித்தற்கு. கோச்செங்கட் சோழ நாயனார் புராணம் பார்க்க. பதிக ஆட்சியும் காண்க. "கரிக்கருள் செய்தவனே" "செம்பியர் கோன்" பதிகம்.

அஞ்சொல் தொடையில் வைத்து - பதிகம் பார்க்க. **தொடை** - தொடுக்கப் பட்டது கோவை செய்யப்பட்டது.

பண்ணுறு செந்தமிழ்மாலை - பண் - இந்தளம்; **மாலை** - பதிகங்கள்.

பான்மையினால் - நற்பண்பினால்; **பான்மையாவது** அடிமைத்திறத்தைப் போற்றிச் சைவத்திறத்தில் உலகத்தை வழிப்படுத்தும் பண்பு. 345

2244. நாரணனான்முகன் காணாவுண்மை வெண்ணாவ லுண்மை மயேந்திரமுஞ்
சீரணி நீடுந் திருக்கயிலை செல்வத் திருவாரூர் மேய பண்பும்
ஆரணத் துட்பொரு ளாயினாரை யானைக் காவின்கட் புகழ்ந்துபாடி
ஏரணி யும்பொழில் சூழ்ந்த சண்பை யேந்தலா ரெல்லையி லின்பமுற்றார். 346

2244. பொருளுரை.... நாரணன்..உண்மை-திருமாலும் பிரமனும் காணாத உண்மையுடையவரும்; வெண்ணாவல்-பண்பும் - வெண்ணாவலினும், உண்மை தோன்றும் மயேந்திரத்திலும், சிறப்புடைய அழகு நீடியிருக்கும் திருக்கயிலையிலும் செல்வத் திருவாரூரிலும் எழுந்தருளிய பண்புடையவருமாகிய; ஆரணத்துட் பொருள்...பாடி- வேதங்களினுட் பொருளாய் விளங்கும் இறைவரைத் திருவானைக்காவின் கண்ணே புகழ்ந்து பாடியருளி; ஏர் அணியும்...இன்பமுற்றார் - அழகு பொருந்திய பொழில்கள் சூழ்ந்த சீகாழிப் பெருந்தகையாராகிய பிள்ளையார் எல்லையற்ற இன்பத்தை யடைந்தனர்.

விளக்கவுரை...நாரணன் நான்முகன் காணாவுண்மை - "மண்ணது வுண்டரி மலரோன் காணா" என்பது தேவாரம்.

இப்பதிகத்துள் பாட்டுக்கள் தோறும் இவ்வுண்மை பேசப்படுதலின் உண்மை புகழ்ந்துபாடி என்றார்.

சீரணி நீடும் திருக்கயிலை - எல்லாத் தலங்களின் சீரும் இத்தலத்துச் சென்றடங் குதலானும், என்று மழியாதிருத்தலானும் சீர் நீடும்-என்றார். "நிலவு மெண்ணில் தலங்களும்" (13) என்ற பாட்டின் கருத்துக் காண்க.

செல்வத்திருவாரூர் - செல்வச் செல்வியாகிய திருமகளுக்குச் செல்வங் கொடுத்தலும், செல்வத் தியாகேசர் வீற்றிருத்தலும் குறிப்பு.

உண்மை மயேந்திரம் - உண்மைப் பொருளாகிய ஆகமங்களை வெளிப்படுத்திய இடம் என்பது குறிப்பு. உண்மைப் பொருள் பதிபசுபாச இயல்பும் பயனும். "நல்ல அடியார்மேல் ஊனத்திரளை நீக்குமதுவு முண்மைப் பொருள் போலும்" (தேவா); "மன்னு மாமலை மகேந்திர மதனிற், சொன்ன வாகமந் தோற்றுவித் தருளியும்" "மற்ற வைதம்மை மகேந்தி ரத்திருந், துற்றவைம் முகங்களாற் பணித் தருளியும்" (திருவா); **மயேந்திரம்** - இமயத்தின் ஒரு சிகரம் என்பாரும்; தென்கடலில் இருந்து நீரினுள் மூழ்கிய மலை என்பாரும்; இரண்டிடங்களிலும் ஆகமம் வெளிப்படுத்தி யருளினார் என்பாரும் ஆகப் பலதிறத்தார் ஆராய்ச்சியாளர்; மகேந்திரமலை கயிலையின் சார்பிலே உள்ளதொரு மலை என்பது திருவிசைப்பாவினாற் புலமாகின்றது. "பன்றிப்பின் சென்றொருநாள் விசயற் கருள்செய்த வேந்தே என்னும்" என்பதனாலும், விசயன் கயிலைச் சாரலிற் றவஞ்செய்தமை பாரதத்துக் கேட்கப்படுதலானும், "மகேந்திரப் பொன்மலையின் மலைமகளுக் கருளுங் குருநீ என்னும்" எனக் கூறலானும், "வெள்ளி மால்வரைக் கயிலையில் வீற்றிருந் தருளி-ஆகமத் திறனெலாந் தெளிய, உள்ளவாறுகேட் டருளினா ளுலகையா ளுடையாள்" என்பதனாலும் உணரப்படும்,

ஆனைக்காவின்கண் - இப்பதிகம் கூடற் சதுக்கம் எனப் பெயர்பெற்றுப் பாட்டுத் தோறும் இந்நான்கு தலங்களிலும் இறைவர் வெளிப்பட அருளுந்திறம் போற்றப் படினும் இது திருவானைக் காவினிடத்திருந்து பாடியருளப் பெற்றது என்பதாம்.

பாடி எல்லையில் இன்பமுற்றார் - பாடுதலே இன்பமாவது; பாடுதலால் வரும் அப்பேரின்பத்தை அடைந்தனர்.

வெண்ணாவல் நன்மை-என்பதும் பாடம். *346*

திருவானைக்கா

திருச்சிற்றம்பலம்

பண் - இந்தளம்

மழையார் மிடறா மழுவா ளுடையாய்
உழையார் கரவா வுமையாள் கணவா
விழவா ரும்வெணா வலின்மே வியவெம்
அழகா வெனுமா யிழையா ளவளே. (1)

சுறவக் கொடிகொண் டவனீ றதுவா
யுறநெற் றிவிழித் தவெமுத் தமனே
விறன்மிக் ககரிக் கருள்செய் தவனே
அறமிக் கதுவென் னுமெனா யிழையே. (4)

செங்கட் பெயர்கொண் டவன்செம் பியர்கோன்
அங்கட் கருணை பெரிதா யவனே
வெங்கண் விடையா யெம்வெணா வலுளாய்
அங்கத் தயர்வா யினளா யிழையே. (5)

வெண்ணா வலமர்ந் துறைவே தியனைக்
கண்ணார் கமழ்கா ழியர்தந் தலைவன்
பண்ணோ டிசைபா டியபத் தும்வல்லார்
விண்ணோ ரவரேத் தவிரும் புவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- தலைவனுக்கு மனந்தந்து வருந்தும் தலைவியின் செவிலித்தாய் கூற்றாகிய அகப் பொருட்கருத்தில் அமைந்தது இத்திருப்பதிகம். உயிர்நாயகராகிய இறைவரது அருட்பெருக்கில் ஈடுபட்டுத் தம்வயமிழந்து நிற்றல் வேண்டுமென்பது வழிப்படுத்தும் முறை.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மழை** - மேகம்; இங்கு மேகத்தின் நிறமாகிய கருமை குறித்தது; ஆகுபெயர்; **ஆர்** - போன்ற; **கார்கண்டிரங்கல்** என்ற பிரிவுபற்றிய அகத்துறைக் குறிப்புமாம்; **உழை** - மான்; **அழகா** - தலைவனது அழகில் ஈடுபட்டு வசமிழந்த நிலை;- (2) **விலையா** - மீளா அடிமையாக; விலைக்குக் கொண்ட பொருளாக;- (3) **வேல்** -

ஆயுதப்பொது; **ஆல்** - கல்லால மரம்;-(4) **சுறவம்** - மீன். **சுறவக் கொடிகொண்டவன்** - மன்மதன்; **விறல்மிக்க கரி** - வெள்ளானை; (2243); **அறமிக்கது என்னும்** - அறவனாயிருந்தும் அறமின்றி என்னை நைவிப்பது தகுமோ என்றது குறிப்பு.-(5) **செங்கட்பெயர்...செம்பியர் கோன்** - கோச்செங்கட் சோழர்; **கருணை பெரிதாயவனே** - பெரிய அருள்புரிந்தவர் (2243) -(7) **குன்றே** - கயிலைமலையினையே; **அமர்வாய்** - விரும்புவாய்;- (8) **அலைசாமல்** - வருந்தாமல்;- (9) **திரு** - இலக்குமி; **அரவா** - பாம்பினை அணிந்தவனே; -(11) **வேதியன்** - வேதப் பொருளானவன். "ஆரணத் துட்பொரு ளாயி னாரை" (2244); **பண்ணோடு பாடிய** - "பண்ணுறு செந்தமிழ்" (2243); **வல்லவர்** - வல்லார்களை.

தலவிசேடம்:- **திருவானைக்கா** - தொகுதி III - பக்கம் 673 பார்க்க.

திருக்கயிலாயமும் திருவானைக்காவும் திருமயேந்திரமும் திருவாரூரும் -

கூடற்சதுக்கம்

திருச்சிற்றம்பலம் **பண் - பழம்பஞ்சுரம்**

மண்ணது வுண்டரி மலரோன்காணா
வெண்ணாவல் விரும்பு மயேந்திரரும்
கண்ணது வோங்கிய கயிலையாரும்
அண்ணலா ரூராதி யானைக்காவே. (1)

ஏனமா லயனவர் காண்பரியார்
கானமார் கயிலைநன் மயேந்திரரும்
ஆனலா ரூராதி யானைக்காவை
ஞானசம் பந்தன் றமிழ்சொல்லுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- 2244-ல் ஆசிரியர் காட்டியருளியது காண்க. திதிக் கடவுளும் படைப்புக் கடவுளும் தோன்றுதற்குக் காரணமாகிய அச்சங்காரக் கடவுளே உலகிற்கு முதற் கடவுள் என்ற சிவஞானபோத முதற் சூத்திரக் கருத்துக் குறிப்புமாம். "காணா உண்மை" (2244) என்றது காண்க. திருக்கயிலை - நொடித்தான் மலையாதலின் சங்காரத்தையும், திருவாரூர்-புற்றிடங் கொண்டாராதலின் பிருதிவி நிலயமாய்ப் படைப்பினையும், திருவானைக்கா வுடையார்-செழுநீர்த்திரளாய் நீரினை யிடங்கொண்டாராதலின் திதியினையும், உண்மை மயேந்திரத்தில்-ஆரணத்துட் பொருளாயினாராதலின் அவ்வியல்புகளெல்லாம் தெரிக்கும் நிலையினையும் குறிப்பால் உணர்த்துதலின் இந்நான்கு தலங்களையும் சேர்த்துக் கூடற் சதுக்கமாக இத்திருப் பதிகம் அருளப்பட்டதென்பதும் கருதவுள்ளது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **உண்ட அரி** - என்றது பெயரெச்ச வீற்றகரம் கெட்டு **உண்டரி** என நின்றது. உண்டு - கீண்டு தேடியும் என்று கொள்வதுமொன்று; **கண்** -

2245. கைதொழு தேத்திப் புறத்தணைந்து காமர் பதியதன் கட்சிலநாள்
வைகி வணங்கி மகிழ்ந்தணைவார் மன்னுந் தவத்துறை வானவர்தாள்
எய்தி யிறைஞ்சி யெழுந்துநின்றே யின்றமிண் மாலைகொண் டேத்திப்போந்து
வைதிக மாமணி யம்மருங்கு மற்றுள்ள தானம் வழுத்திச் செல்வார்; **347**

அருட்கண். இடம் என்றலுமாம்; ஆனைக்காவில் உள்ளார் - அமர்ந்தார் என்க. -(3) **வேலையது ஓங்கும்** - ஊழி வெள்ளத்திலும் அழியாது நிலைக்கும்;-(4) **கருள்** - கறுப்பு.-(5) **மதுசூதனன்** - மால்; **மதி** - ஆகமம்; **சொல்லிய** - உபதேசித்தருளிய; **கதிர்முலை** - முலையினையுடைய உமை; ஆகுபெயர்;-(7) **கண்ணப்பர்க்கருள் செய்த கயிலையார்** - அருச்சுனனைப்பற்றிக் கயிலையின் நிகழ்ந்த வரலாறு காளத்தியில் முற்றிய குறிப்பு. கண்ணப்பர் புராணம் பார்க்க. (751) "முன்புசெய் தவத்தி னீட்டம்" என்றவிடத்து உரைத்தவை பார்க்க.-(8) **விடமதுவுண்ட** - ஆகம உபதேசத்தால் பாசங்களை அரித்த என்ற குறிப்பு. மேல் 9-ல் வேதங்கள் துதி செயும் என்றதும், ஆசிரியர் (2244) "ஆரணத்துட் பொருளாயினாரும்" என்றதும் இக்குறிப்பு.

தலவிசேடம்:- I **திருவாரூர்** - I பக்கம் 336; (II) **திருக்கயிலாயம்** - III பக்கம் 804 பார்க்க; III **திருமயேந்திரம்** - முன் 2244-ல் உரைக்கப்பட்டது. **கூடற்சதுக்கம்** என்பது ஒருவகைச் சித்திரக்கவி. நான்கு பதிகளையும் இந்த ஒரு பதியிற்கண்டு பாடியது தலச்சிறப்பு.

2245. பொருளுரை- கைதொழுது--- அணைவார் - கைதொழுது போற்றிப் புறத்தில் வந்து அழகிய அந்தப் பதியின் கண்ணே சிலநாள் தங்கி வணங்கி மகிழ்ந்து மேற் செல்வாராய்; மன்னும்....போந்து - நிலைபெற்ற திருத்தவத்துறைத் தேவரின் தாள்களை யடைந்து வணங்கி எழுந்து நின்று இனிய தமிழ்மாலை கொண்டு துதித்துப் போய்; வைதிக- செல்வார் - வைதிக நெறியின் பெருமணி போன்ற பிள்ளையார் அந்தப் பக்கத்தில் மற்றும் உள்ள தானங்களைத் துதித்துச் செல்வாராய்,


விளக்கவுரை- கைதொழுது ஏத்திப் புறத்து அணைந்து - முன்பாட்டில் கூறியபடி கூடற்சதுக்கம் என்ற திருப்பதிகத்தினை வெண்ணாவலின்கீழ் இறைவர் திருமுன்புபாடி இன்பமுற்றுக் கைதொழுதும் ஏத்தியும் திருமுன்பு நின்று வெளியே போந்து; **ஏத்துதல்** - பலபடியும் புகழ்தல்; **புறத்து** - திருக்கோயிலின் புறத்து.

காமர்பதி - திருவானைக்கா;


தவத்துறை - எழுவர் தவத்துறை எனப்படுவது. இப்போது **லால்குடி** என்று வழங்கப்படுவது.

இன்தமிழ்மாலை கொண்டு ஏத்தி - பிள்ளையாரது திருப்பதிகம் கிடைத்திலது!

அம்மருங்கு மற்றுள்ள தானம் - மேல்வரும் பாட்டிற் கூறுவனவும், திருமங்கலம், வடகரைமாந்துறை முதலாயின பிறவுமாம். 347




திருஎறும்பியூர் மலையும் படிகளும்



திருஎறும்பியூர் கோயில்

பாட்டு - 2246




திருப்பராய்த்துறை கோயில் மேல்பார்வை



திருப்பராய்த்துறை உட்புரம் இராச கோபுரம்

பாட்டு - 2239




கற்குடி உய்யக்
கொண்டான்மலையும்
கோயிலும் பாட்டு - 2241



திருப்பாச்சிலாச்சிரமம்
சுவாமி விமானம்



திருப்பாச்சிலாச்சிரமம்
அம்மன் கோயில் அன்னமாம்
பொய்கைத் தீர்த்தம்



திருப்பாச்சிலாச்சிரமம்
கோயில் முன்பார்வை

பாட்டுக்கள் - 2208-2218
(கொல்லி மழவன் மகளை முயலகன் பிணி தீர்த்த பதி)

2246. ஏறுயர்த் தார்திருப் பாற்றுறையு மெறும்பியூர் மாம லையேமுதலா
வேறு பதிகள் பலவும் போற்றி விரவுந் திருத்தொண்டர் வந்துசூழ
ஈறில் புகழ்ச்சண்பை யாளி யார்தா மெண்டிசை யோருந் தொழுதிறைஞ்ச
நீறணி செம்பவ ளப்பொருப்பி னெடுங்கள மாநகர் சென்று சேர்ந்தார். 348

2246. பொருளுரை... ஏறுஉயர்த்தார்.... போற்றி - விடைக் கொடியினை ஏந்திய இறைவரது திருப்பாற்றுறையும் திருவெறும்பியூர் மாமலையும் முதலான மற்றும் பதிகளையும் போற்றி; விரவும்...சூழ - பொருந்தும் திருத்தொண்டர்கள் வந்து தம்மைப் புடைசூழ; ஈறில்.... இறைஞ்ச - முடிவில்லாத புகழினையுடைய சீகாழித் தலைவர் எண்டிசையில் உள்ளவர்களும் தொழுது வணங்க; நீறு அணி... சேர்ந்தார் - திருநீற்றினை அணிந்த செம்பவளமலை போன்ற இறைவரது திருநெடுங்கள மாநகரத்தினைச் சென்று சேர்ந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... **விரவும் திருத்தொண்டர் வந்து சூழ - விரவும்** - பிள்ளையார் எழுந்தருளியது கேட்டுவந்து கூடிய.

எண் திசையோரும் தொழுது இறைஞ்ச - சேர்ந்தார் - என்க. **எண்திசையோர்** - முன்கூறியபடி வந்து சூழ்ந்த திருத்தொண்டரல்லாத ஏனையோர். **இறைஞ்ச** - இறைஞ்சி நலம் பெறற்பொருட்டு என்ற குறிப்புமாம். பதிகக்குறிப்பும் பயனுமாய் மேல்வரும் பாட்டில் ஆசிரியர் எடுத்துக் காட்டியருளுதலும் காண்க. திருத்தொண்டர் வந்து சூழ்ந்தனராக, ஏனையோர் தொழுதிறைஞ்சினர் எனவும் இப்பதிகப் பயன்கண்டு பின் ஏனையோர் தொழுது இறைஞ்சி நலம்பெறற் பொருட்டு எனவும் உரைக்க நின்றது.

பொருப்பு - மலை. பொருப்புப் போல்வாரைப் பொருப்பு என்றதுபசாரம். 348

திருப்பாற்றுறை

திருச்சிற்றம்பலம் **பண் - பழந்தக்கராகம்**

காரரார் கொன்றை கலந்த முடியினர், சீரார் சிந்தை செலச்செய்தார்,
பாரரார் நாளும் பரவிய பாற்றுறை, ஆரா ராதி முதல்வரே. (1)

பத்தர் மன்னிய பாற்றுறை மேவிய, பத்து நூறு பெயரனைப்,
பத்தன் ஞானசம் பந்தன தின்றமிழ், பத்தும் பாடிப் பரவுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பாற்றுறை மேவிய பரமர் தம்பால் என் சிந்தை செலச் செய்து என் தன்மை போக்கி என்னைத் தம்வண்ணமாக்கிக் கொண்டார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **காரரார்** - கார்காலத்தை உரித்தாக்கொண்ட; முல்லையின் கருப்பொருள்களுள் ஒன்றாகிய என்க. **சிந்தை செலச் செய்தார்** - சிந்தை

2247. நெடுங்களத் தாதியை "யன்பா னின்பா
னெஞ்சஞ் செலாவகை நேர்விலக்கும்
இடும்பைக ளீர்த்தருள் செய்வா"யென்னு
மின்னிசை மாலைகொண் டேத்தியேகி
யடும்பணிச் செஞ்சடை யார்பதிக
ளணைந்து பணிந்து நியமம்போற்றிக்
கடுங்கை வரையுரித் தார்ம கிழ்ந்த
காட்டுப்பள் ளிப்பதி கைதொழுவார், 349

தம்மிடம் செல்லும்படி செய்தனர். "நினையுமா நினையே" (திருவிசைப்பா); **ஆரார்** - நிறைந்தவர்; **ஆர்** - ஆத்தி; கொன்றை சூடினவர் என்றலுமாம். -(2) **தீயர் எனப்படும் சொல்லார்** - "அல்லவர் தீயரென் றேத்த" (தேவா); தீயர் என்றாலும் அதுவும் அவர்க்குப் புகழே;- (3) **என் எழில் கொண்டார்** - பசுத்தன்மையைப் போக்கினர்; "தன்னை மறந்தாள்" (தேவா); 5-6-7-8-10 பாட்டுக்களும் இக்கருத்து. (5) **பொன்னிறமாக்குதல்** - பிரிவாற்றாமையால் மாமையுறச் செய்தல்; **உடையார்** - உடையராயிருந்தும் என்றது குறிப்பு;- (7) **கோடல்** - கொள்ளுதல். தம் தன்மையாக்கிக் கொள்ளுதல்;- (8) **எவ்வம்** - நோய்; மௌவல் - முல்லையின் ஒருவகை; -(9) **பானல்** - நீலோற்பலம்.

தலவிசேடம்:- திருப்பாற்றுறை - காவிரியின் வடகரையில் 59-வது பதி மார்க்கண்டேயர் தமது சிவபூசைக்குப் பால் பெறாது வருந்தி இறைவரை வேண்டத் திருவருளால் பால் பெருகிய காரணத்தால் இப்பெயர் பெற்றது. சுவாமி - **திருமூலநாதர்;** அம்மை - **மோகநாயகி; மேகலாம்பிகை;** பதிகம் 1.

இது திருவெறும்பியூரினின்றும் வடக்கே கற்சாலையில் 31/2 நாழிகை யளவில் உத்தமச் சேரிப்பாலத்தினின்றும் வடக்கே 1/2 நாழிகையளவில் உள்ளது. சீரங்கம் நிலயத்தினின்று 5 நாழிகையளவிலும் அடையத்தக்கது.

திருவெறும்பியூர்மலை - பிள்ளையார் பதிகம் கிடைத்திலது!

2247. பொருளுரை... நெடுங்களத்து ஆதியை - திருநெடுங்களத்தில் எழுந்தருளிய ஆதிமூர்த்தியை; அன்பால்...மாலை கொண்டு - "அன்பினாலே உம்மிடத்து மனம் செல்லாதபடி நேர்மையினின்றும் விலக்குகின்ற இடும்பைகளை யெல்லாம் தீர்த்து அருள்புரிவீராக!" என்று விண்ணப்பிக்கும் குறிப்பினையுடைய இன்னிசைத் திருப்பதிகமாகிய மாலையினால்; ஏத்தி ஏகி - துதித்து மேற்சென்று; அடும்.... பணிந்து - கொல்லுந் தன்மைகொண்ட பாம்புகளை அணிந்த சடையினையுடைய இறைவரது திருப்பதிகளை அணைந்து வணங்கி; நியமம் போற்றி - திருநியமத்தினைத் துதித்து; கடுங்கை... கைதொழுவார் - வலிய கையினையுடைய யானையை உரித்த இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக்காட்டுப்பள்ளி யென்னும் திருப்பதியைக் கைதொழுவாராகி,

விளக்கவுரை... "அன்பால்... செய்வாய்" என்னும் இது பதிகக் கருத்தும் குறிப்புமாம். "கொள்கையினாலுயர்ந்த நிறையுடையா ரிடர்களையாய்" என்பது முதலாகப் பதிகப்

2248. சென்று திகழ்திருக் காட்டுப்பள்ளிச்
செஞ்சடை நம்பர்தங் கோயிலெய்தி
முன்றில் வலங்கொண் டிறைஞ்சிவீழ்ந்து
மொய்கழற் சேவடி கைதொழுவார்
கன்றணை யாவின் கருத்துவாய்ப்பக்
கண்ணுத லாரைமுன் போற்றி செய்து
மன்றுணின் றாடன் மனத்துள்வைப்பார் 350
"வாருமன்னும்முலை" பாடி வாழ்ந்தார்.

பாட்டுக்கள் தோறும் வரும் விண்ணப்பம் காண்க. இஃது அடியார்களின் பொருட்டுக் கருணையினாற் பிள்ளையார் செய்துகொண்ட வேண்டுகோள். இத்திருப்பதிகத்தினை நியமமாகப் பாராயணம் செய்து பயன் பெறும் அன்பர்கள் பலர்; "நின்தாள் பரவி யேம்பலிப் பார்கட் கிரங்குகண்டாய்" - "பாதந் தலைவைத்து வுத்தமர்க ளிடும்பைப் படாம லிரங்குகண்டாய்" - "எம்மையாளும் பசுபதியே" என்று இவ்வாறே அருளிய ஆளுடைய அரசுகளது பசுபதித் திருவிருத்தம் என்னும் அருட்டிருவாக்கும் இங்கு வைத்துக் காணத்தக்கது.

அடும்பணிச் செஞ்சடை - அடுகின்ற - கொல்லவல்ல பணிகளை (பாம்புகளை) அணிந்த சிவந்தசடை. "மாலையின், றாங்குருவே போலுஞ் சடைக்கற்றை" (அம்மையார் - அற். அந்.); **அடும்பு** - ஒருவகை மலர்; அடும்பு அணியாக்கொண்ட - என்றலுமாம்; இஃது அடம்பு என்றும் வரும். "சடைமே லடம்பு கொன்றை" (அப்பாலும் - புராணம்) "அடம்புங் கொன்றையும்" (குறுந்)

நியமம் போற்றி - திருநியமம்; திருநெடுங்களத்தின் வடகிழக்கில் 8 நாழிகை யளவில் காவிரித் தென்கரையில் உள்ள தலம். தாம் கைக்கொண்ட நியமத்தினின்றும் தவிராது போற்றி என்றும், **நியமமாவது** - பதிகளிற் சென்று வணங்குதலும், அதன் இடையிற் கண்ட பதிகளை வணங்குதலும் பிறவுமாம் என்றும் உரைப்பாருமுண்டு.

கடுங்கைவரை - **கைவரை** - கையையுடைய மலைபோன்ற வுருவம்பற்றி யானைக்குப் பெயர்; **கடும்** - வலிய.

கைதொழுவார் - எய்தி - வலங்கொண்டு - இறைஞ்சி - வீழ்ந்து - தொழுவார் - போற்றி செய்து - பாடி வாழ்ந்தார் - என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

பதிகள் - நெடுங்களத்துக்கும் மேலைத் திருக்காட்டுப்பள்ளிக்கும் இடைப்பட்டுள்ள பதிகள். கடையக்குடி முதலாயின என்பது கருதப்படும்.

நேசஞ் செலாவகை - **நேசஞ் செயாவகை** - **பதிகளனைத்தும்** - என்பனவும் பாடங்கள். *349*

2248. **பொருளுரை**... சென்று... எய்தி - போய்த், திகழும் திருக்காட்டுப்பள்ளியில் எழுந்தருளிய சிவந்த சடையினையுடைய இறைவரது திருக்கோயிலினைச் சேர்ந்து;

முன்றில்.. வீழ்ந்து - திருமுற்றத்தினை வலமாக வந்து வணங்கி வீழ்ந்து எழுந்து; **மொய்கழற் சேவடி கைதொழுவார்** - வலிய கழல்களை யணிந்த திருவடிகளைக் கைதொழுவாராகி; **கன்றுஅணை... போற்றி செய்து** - கன்றினை அணையும் பசுவின் கருத்துப் போன்ற கருத்துடைய அன்பு திருவுள்ளத்திலே பொருந்த; **கண்ணுதலாரை... பாடிவாழ்ந்தார்** - நெற்றிக் கண்ணுடைய இறைவரைத் திருமுன்பு நின்று துதித்துத் திருவம்பலத்தினுள் நின்று செய்யும் அருட்கூத்தினைத் தமது திருமனத்தினுள்ளே கொள்வாராகி "வாருமன்னும்முலை" என்று தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடி வாழ்வு பெற்றருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... ஆவின் கருத்து - "கற்றா மனமெனக் கதறியும் பதறியும்" (திருவா); "கற்றாவின் மனம்போலக் கசிந்துருக" (திருவா) முதலியவை பார்க்க. **ஆவினை அணையும் கன்றின் கருத்துவாய்ப்ப** - என்று கூட்டியுரைத்தலுமாம். "ஈன்றஆன் கனைப்புக் கேட்ட கன்றுபோற் கதறி" (214); இறைவர் பாலமுதூட்ட உண்ட குருளையாராதலும், "புண்ணியக் கன்றனையவர்" (1929) என்றதும், பிறவும் காண்க.

மன்றுள் நின்று ஆடல் மனத்துள் வைப்பார்–பாடி - இத்திருப்பதிகம் இறைவரது அருட்கூத்தின் பெருமைகளை உட்குறிப்பாகக் கொண்டு அருளப்பட்டது என்பதாம். **"நிருத்தனார்"** (2) என்ற பதிகக் குறிப்புக் காண்க.

"வாருமன்னும் முலை" - பதிகத் தொடக்கம். மங்கை பங்கராய் வெளிவந்து தமக்கருள் புரிந்த அருளை நினைந்துகொண்ட குறிப்பு இத்திருப்பதிகத்தின் பாட்டுக்களில் "மங்கையோர் பாகமா" "தையலோர் பாகமா" "உமையொரு கூறனார்" முதலாக வருவனவற்றாற் பெறப்படும்.

வாழ்ந்தார் - வாழ்வு பெற்ற மனநிலை குறித்தது. 350

திருநெடுங்களம்

திருச்சிற்றம்பலம் **பண் - பழந்தக்கராகம்**

மறையுடையாய் தோலுடையாய் வார்சடை மேல்வளரும்
பிறையுடையாய் பிஞ்ஞகனே யென்றுன்னைப் பேசினல்லாற்
குறையுடையாய் குற்றமோராய் கொள்கையி னாலுயர்ந்த
நிறையுடையா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே. (1)

நின்னடியே வழிபடுவா னிமலா நினைக்கருத,
"என்னடியா னுயிரைவவ்வே" லென்றடற் கூற்றுதைத்த
பொன்னடியே பரவிநாளும் பூவொடு நீர்சுமக்கும்
நின்னடியா ரிடர்களையாய் நெடுங்கள மேயவனே. (3)

நீடவல்ல வார்சடையான் மேயநெடுங் களத்தைச்
சேடர்வாழு மாமறுகிற் சிரபுரக் கோனலத்தால்
நாடவல்ல பனுவன்மாலை ஞானசம் பந்தன்சொன்ன
பாடல்பத்தும் பாடவல்லார் பாவம் பறையுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- 2247-ல் ஆசிரியர் எடுத்துக் காட்டியருளினார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பேசினல்லாற் குறையுடையார் குற்றம் ஓராய்** - "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல், சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்... பிறர் தங்கள்வினை தான்கொடுத்தல்" (போதம் - 10. வெண்); "சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே" (தாண்டகம்); "சார்ந்தவர்க் கல்லா னலமிலன்"; **கொள்கை** - உலகைவிட்டுச் சிவனையே பற்றுக்கோடாகக் கொண்டநிலை. **இடர்** - அன்பால் நெஞ்சம் செலாவகை விலக்கும் இடும்பைகள்;- (3) **கூற்றுதைத்த** - **பொன்னடி** - மார்க்கண்டேயர் வரலாறு; **சுமக்கும்** - மிகுதி குறித்தது;- (4) **நிலைபுரிந்தார்** - நிலையாக இடைவிடாது நினைப்போர்; சொல்வோர்;- (5) **படிமம்** - தெய்வ வழிபாட்டு முறை; **பாங்கு** - அடிமைப்பண்பு; திறம்;- (6) **விருத்தனாகிப் பாலனாகி** - எல்லார்க்கும் முன்னாகியும் பின்னாகியும் உள்ள நிலை. விருத்த குமார பாலரான திருவிளையாடற் குறிப்பு என்றலுமொன்று;- (7) **மூன்றும்** - புரமூன்றினையும்; - (9) **அடியின் நீழல் வாழ்வார்** - அடியின் சார்பே பற்றாக அமைந்து வாழும் அடியவர்;- (10) **தஞ்சம்** - நற்சார்பு; **தத்துவம்** - பொருளுண்மை; **துஞ்சலில்லா** - இடையறாத.

தலவிசேடம்:- **திருநெடுங்களம்** - காவிரியின் தென்கரையில் 8-வது தலம். திருநட்டாங்குளம் என்று வழங்கப்பெறும்; வங்கிய சோழன் பூசித்துப் பேறுபெற்ற பதி என்ப. 11-ம் திருமுறையில் போற்றப் பெற்றது. (க்ஷேத். வெ 8); சுவாமி - **நித்திய சுந்தரர்;** அம்மை - **ஒப்பிலா நாயகி**. பதிகம் 1.

இது தொண்டைமான்பட்டி நிலயத்தினின்றும் தெற்கில் இரண்டு நாழிகையளவில் அடையத்தக்கது.

மேலைத்திருக்காட்டுப்பள்ளி

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி**

வாருமன் னும்முலை மங்கையோர் பங்கினன்
ஊருமன் னும்பலி யுண்பதும் வெண்டலை
காருமன் னும்பொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி
நீருமன் னுஞ்சடை நிமலர்தந் நீர்மையே. (1)

நிருத்தனார் நீள்சடை மதியொடு பாம்பணி
கருத்தனார் கடிபொழில் சூழ்ந்தகாட் டுப்பள்ளி

2249. அங்கப் பதிநின் றெழுந்தருளி
யணிதிரு வாலம் பொழில் வணங்கிப்
பொங்கு புனற்பொன்னிப் பூந்துருத்திப்
பொய்யிலி யாரைப் பணிந்துபோற்றி
யெங்கு நிகழ்திருத் தொண்டர்குழா
மெதிர்கொள்ள வெப்பதி யுந்தொழுது
செங்கயல் பாய்வய லோடைசூழ்ந்த
திருக்கண்டி யூர்தொழச் சென்றணைந்தார். **351**

அருத்தனா ரழகமர் மங்கையோர் பாகமாப்
பொருத்தனார் கழலிணை போற்றுதல் பொருளதே. (2)

பொருபுனல் புடையணி புறவநன் னகர்மன்னன்
அருமறை யவைவல்ல வணிகொள்சம் பந்தன்சொல்
கருமணி மிடற்றினன் கருதுகாட் டுப்பள்ளி
பரவிய தமிழ்சொலப் பறையுமெய்ப் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- 2248-ல் ஆசிரியர் காட்டியருளிய உட்குறிப்புக் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வாரு - ஊரு - காரு - நீரு** - உகரங்கள் சாரியை. எதுகை யோசைநயம் நோக்கி வந்தன; **வாரு...பங்கினன்** - "கன்றணை ஆவின் கருத்துவாய்ப்ப" என்றதற்கு ஆதரவு. (2) **நிருத்தனார்** - "மன்றுள் நின்றாடல்" என்றதன் குறிப்பு. (3) **பண்ணினார்** - பண்பொருந்தப் பாடினார்; தமிழ்மறை பாடுவித்த குறிப்பும் ஆம். **எம்மை ஆளுடைய - எம் அடிகள் - எம்மை** - என்றதன், **எம்** - அவர்பாலும், **எம் - அடிகள்** - என்றதன் எம் பிள்ளையார்பாலும் கொண்டுரைக்க நின்றன; (4) **உணங்கல்** - சோறு.

தலவிசேடம்:- மேலைத் **திருக்காட்டுப்பள்ளி** - தொகுதி III பக்கம் 671 பார்க்க.

இத்தலத்தின் பதிகங்களிரண்டும் அரியஞான உண்மைக் குறிப்புக்கள் தருவன.

2249. பொருளுரை.. அங்கு அப்பதிநின்று எழுந்தருளி - அவ்விடத்து அந்தத் திருப்பதியினின்றும் எழுந்தருளிச் சென்று; அணி திரு ஆலம்பொழில் வணங்கி - அழகிய திருஆலம் பொழிலினை வணங்கிக் கொண்டு; பொங்கு...போற்றி - பொங்கும் நீர்வளமுடைய காவிரி நடுவுள் உள்ள திருப்பூந்துருத்திப் பதியின் அமர்ந்தருளும் பொய்யிலியப்பரைப் பணிந்து துதித்து; எங்கும்... தொழுது - எவ்விடத்திலும் நிகழ்கின்ற திருத்தொண்டர் கூட்டங்கள் வந்து எதிர்கொண்டழைத்துச் செல்ல; எப்பதியும் தொழுது - எல்லாப் பதிகளையும் வணங்கிச் சென்று; செங்கயல்... சென்றணைந்தார் - செங்கயல்கள் பாய்தற்கிடமாகிய வயல்களும் ஓடைகளும் சூழ்ந்த திருக்கண்டியூரை வணங்குதற்குச் சென்று அணைந்தருளினார்.

விளக்கவுரை... அணி - அடைமொழி அப்பதியின் நீர்வளமுடைய அமைப்பும் அது காரணமாக வந்த பெயர்க் குறிப்பும் உணர்த்தியது.

பொங்குபுனற் பொன்னிப் பூந்துருத்தி - காவிரிக் கரையின் செழுமை முழுமையும் கொண்டது. "பொங்கா வருகாவிரி" (தேவா); பதியின் பெயரும் அது காரணமாகப் போந்தது; 1656-ல் உரைத்தவை பார்க்க.

பொய்யிலியார் - இறைவர் பெயர். "நில்லாத நீர்சடைமேல்" என்ற திருத்தாண்டகம் பார்க்க.

எங்கும் நிகழ் திருத்தொண்டர் குழாம் எதிர்கொள்ள - பல திசையினின்றும் தொண்டர்கள் போந்து அங்கங்கும் எதிர்கொள்ளப் பல பதிகளிலும் சென்று வணங்கினர் என்க. நிகழ்தலாவது என்றும் நீடியிருத்தல்; திருக்கண்டியூர்த் திருப்பதிகத்துள் இத்தொண்டரை நோக்கிப் பிள்ளையார் வினாவியருளும் பெருமைக் குறிப்பு.

எப்பதியும் - அம்மருங்குமுள்ள எல்லாப் பதிகளிலும். திருநெய்த்தானம் முதலாயின என்பது கருதப்படும். இப்பக்கத்தில் இறைவரது பழங்கோயில்கள் பலவுள்ளன. திங்களூர் முதலியவை போலக் காண்க.

வயல் ஓடை - வயல்களும் ஓடைகளும்; ஓடை - நீர் ஓடும் கால்கள்; வடிகால்களுமாம்.

சண்பையாளியார் (2246) - என்ற எழுவாயை 2247-2249 வரை பாட்டுக்களிலும் வருவித்துரைத்துக் கொள்க. 351

தலவிசேடம்:- திருவாலம்பொழில் - பிள்ளையாரது தேவாரம் கிடைத்திலது. இத்தலத்தில் ஆளுடைய பிள்ளையார் இயற்றியருளிய ஓர் அருட்செயல் பற்றிக் கர்ண பரம்பரையாய் வழங்கும் வரலாறு தொகுதி III - ல் "பூந்துருத்தி வளநகரின் புறம்பணை" (1657) என்றதன் கீழ்க் குறிக்கப்பட்டது பார்க்க.

திருப்பூந்துருத்தி - பிள்ளையாரது பதிகங் கிடைத்திலது!

தலவிசேடம்:- திருப்பூந்துருத்தி - காவிரிக்குத் தென்கரை 11-வது தலம். இந்திரன், காசிபர், சோழன் முதலியோர் பூசித்துப் பேறுபெற்ற பதி; திருவையாறுள்ளிட்ட சத்தத்தானம் என்னும் ஏழுதலங்களுள் ஒன்று; ஆளுடைய பிள்ளையார் வெளியிலிருந்தபடியே கோபுரந் தொழுது (938-939) வழிபடும் பொருட்டு இடபங்கள் விலகின என்பர்; ஆளுடைய அரசுகள் திருமடங் கட்டிப் பலகாலம் எழுந்தருளியிருந்து 'பல பதிகநெறி மனிதர்க் கினிதியம்பி' யிருந்த வரலாறும், அவரும் பிள்ளையாரும் சந்தித்து எழுந்தருளிய வரலாறும் அவர்தம் புராணத்தும் (1651-1663), பின்னர் இப்புராணத்தும் (புரா. 927-948) கண்டுகொள்க. சுவாமி - **பொய்யிலியார்** - **ஆதிபுராணன்** - (இவை பதிகத்தும் புராணத்தும் கண்டன); **புட்பவனநாதர்** - என்பது பிற்றைநாள் வடமொழியாளர் வழக்கு; அம்மை - **அழகார்ந்த நாயகி**; பதிகம் 3.

2250. கண்டியூர் வீரட்டர் கோயிலெய்திக்
கலந்தடி யாருடன் காதல்பொங்கக்
கொண்ட விருப்புடன் றாழ்ந்திறைஞ்சிக்
குலவு மகிழ்ச்சியின் கொள்கையினாற்
றொண்டர் குழாத்தினை நோக்கிநின்று
தொடுத்த விசைத்தமிழ் மாலைதன்னில்
அண்டர் பிரான்ற னருளின்வண்ண
மடியார் பெருமையிற் கேட்டருளி, 352

இது தஞ்சாவூர் நிலயத்தினின்றும் வடக்கில் திருவையாற்றுக்குச் செல்லும் கற்சாலையில் 5 நாழிகையளவில் உள்ள திருக்கண்டியூரினின்றும் மேற்கே மட்சாலை வழி 2 நாழிகையளவில் அடையத்தக்கது.

2250. பொருளுரை- கண்டியூர்- எய்தி - திருக்கண்டியூரில் திருவீரட்டானேசுவரரது திருக்கோயிலினை அடைந்து; கலந்து- இறைஞ்சி - கலந்த அடியார்களுடன் அன்பு மேலிடக்கூடிய விருப்பத்துடனே கீழே வீழ்ந்து வணங்கி; குலவு-நோக்கி நின்று - குலவிய மகிழ்ச்சியினை மேற்கொண்டதனாலே திருத்தொண்டர் குழாத்தினைப் பார்த்து நின்று; தொடுத்த- கேட்டருளி - தாம் அருளிய இசைத் தமிழ்மாலையாகிய திருப்பதிகத்தில் தேவ தேவராகிய சிவபெருமானது திருவருள் வண்ணங்கள் பலவற்றையும் அடியார் பெருமையில் வெளிப்படுத்தும் வகையாலே வினவியருளி.

விளக்கவுரை- கலந்த அடியார் - என்றது பெயரெச்சத் தகரங் கெட்டுக் கலந்தடியார் என நின்றது. சலத்தலாவது - முன்பாட்டில் "எங்குநிகழ் திருத்தொண்டர் குழாமெதிர் கொள்ள" (2249) என்றபடி பலபதிகளினின்றும் போந்து அன்பு மேலீட்டினால் வந்து கூடுதல். அடியாருடன் காதல் பொங்கக் கலந்து - என்று கூட்டி உரைத்தனர் முன் உரைகாரர்.

குலவு- கேட்டருளி - இது பதிகக் கருத்தும் உட்குறிப்புமாம். "குலாவு பாதம் விளக்கியே" "குலாத்தில்லை". தொண்டர் குழாத்தினை நோக்கி நின்று - இறைவர் திருமுன்பு நின்றபடியே தொண்டர்களை முன்னிலைப்படுத்தி இறைவர் புகழ்களை அவர்கள் பாற் கேட்பது புகழ் பாடும் முறைகளுள் ஒன்று; இறைவரை முன்னிலையாக்கிக் கூறுதல் - உலகரை முன்னிலையாகக் கொண்டு கூறுதல் - தனிப்பட்டவர்களை முன்னிலையாக்குதல் - என்று பலவகைகளாலும் இறைவர் புகழ்பாடும் வகைகளைப் பிள்ளையார் தேவாரங்களுட் காணலாம். இங்குக் காண்பது அவற்றுட் சிறந்ததொரு முறையாகும் என்பதாம்.

அண்டர் பிரான்றன் அருளின் வண்ணம் அடியார் பெருமையிற் கேட்டருளி - என்றது அத்தன்மையின் சிறப்பைக் காட்டியபடி; "வினவினேன் அறியாமையில்" என்று தொடங்கி "அருத்தனைத் திறம் அடியர்பான்மிகக் கேட்டுகந்த" என்று அம்முறையினைப் பிள்ளையார் பதிகத்துள்ளே தேற்றுதல் காண்க. இது இப்பதிகத்தின் தனிச்சிறப்பு.

2251. வினவி யெடுத்த திருப்பதிக
மேவு திருக்கடைக் காப்புத்தன்னில்
அனைய நினைவரி யோன்செயலை
யடியாரைக் கேட்டு மகிழ்ந்ததன்மை
புனைவுறு பாடலிற் போற்றிசெய்து
போந்து புகலிக் கவுணியனார்
துனைபுனற் பொன்னித் திரைவலங்கொள்
சோற்றுத் துறைதொழச் சென்றடைவார், 353

அடியார் பெருமையில் - பெருமையின் மூலம்; இப்பதிகத்தால் முழுஞானமுடைய ஆளுடைய பிள்ளையாரால் பாராட்டி மகிழப் பெற்ற அடியார் பெருமையும் அரன் பெருமையும் ஒருங்கே விளங்கவைத்ததும் "பெருமையில்" என்றதன் குறிப்பு.

கேட்டருளி - வினாவியருளி; அறியாமையில் வினவினேன்; உரை செய்ம்மின்; உள்ளவாறெனக் குரைசெய்ம்மின்; அடியராயினீர் சொல்லுமின்; பழைய தொண்டர்கள் பகருமின்; இறை நல்குமின்; விரவிலாதுமைக் கேட்கின்றேன் என்றிவ்வாறு வரும் பதிகக் கருத்துக்கள் காண்க. 352


2251. பொருளுரை... வினவி... திருக்கடைக் காப்புத் தன்னில் - (அவ்வாறு) "வினவினேன்" என்று தொடங்கிய திருப்பதிகத்தில் பொருந்திய திருக்கடைக் காப்பினில்; *அனைய...போற்றி செய்து* - அத்தகைய நினைக்க வரியவராகிய சிவபெருமானது அருட் செயலின் றிறங்களை அடியாரைக் கேட்டு மகிழ்ந்த தன்மையினைச் சொல்லிய பாடலினாற்றுதித்து; *போந்து* - மேற்சென்று; *புகலி...சென்றடைவார்* - சீகாழியில் வந்த கவுணிய குலதீபராகிய பிள்ளையார் விரைந்து செல்லும் நீரையுடைய காவிரியின் அலைகள் வலங்கொண்டு போகும் திருச்சோற்றுத்துறையினைத் தொழுவதற்குச் சென்று அடைவாராகி,

விளக்கவுரை— வினவி எடுத்த - "வினவினேன்" என்று தொடங்கிய; *எடுத்தல்* - தொடங்குதல்.


நினைவரியோனது அனைய செயலை - என்க. *அனைய* - பதிகப் பாட்டுக்களிற் கூறிய "வைய மாப்பலி தேர்ந்ததே" என்பது முதலாகிய அத்தகைய; முன்னறி சுட்டு; *அனைய நினைவரியோன்* என்று கூட்டிப், பாடியபடி அத்தகை நினைத்தற்கரிய சிவன் என்றுரைத்தலுமாம்.

கேட்டு மகிழ்ந்த தன்மை - கேட்டல் மகிழ்தற் பொருட்டேயன்றி அறிந்து கோடற் பொருட்டன்று என்பதாம்; ஆசிரியர் மாணவரைக் கேட்டு மகிழ்தல் போலவும், ஈன்றோர் மகார் வாயிற் கேட்டு மகிழ்தல் போலவும் கண்டு கொள்க. "அடியார்பாற் கேட்டுகந்த வினாவுரை" என்பது பதிகம்.

புனைவுறு - ஏற்றபடி புனையப்பெற்ற.




திருக்கோழம்பம்




திருக்கண்டியூர் உள்கோபுரம்
பாட்டு 2250



குடந்தைக் கீழ்க்கோட்டம்
கூத்தனார் சபை - பாட்டு 2306




குடந்தைக் கீழ்க்கோட்டம்
கீழைக்கோபுரம் - பாட்டு 2306




திருச்சோற்றுத்துறை

பாட்டு 22252



வடகுரங்காடுதுறை

பாட்டு 2196



குடமூக்கு கீழைக்கோபுரம்

பாட்டு 2306

வேறு

2252. "அப்பர் சோற்றுத் துறைசென் றடைவோ"மென்
றொப்பில் வண்டமிழ் மாலை பொருமையாற்
செப்பி யேசென்று சேர்ந்தனர் சேர்விலார்
முப்பு ரஞ்செற்ற முன்னவர் கோயின்முன். 354

பொன்னி திரைவலங்கொள் - காவிரிக்கரை சூழ்ந்த;

சென்றணைவார் - என்பதும் பாடம். 353

2252. பொருளுரை- அப்பர்-என்று - "அப்பருடைய திருச்சோற்றுத் துறையினைச் சென்றடைவோம்" என்ற முடிபும் கருத்துமுடையதாய்; ஒப்பில்-செப்பியே சென்று - ஒப்பில்லாத வண்மையுடைய தமிழ்மாலையினை மனஒருமைப் பாட்டுடன் அருளிக் கொண்டபடியே சென்று; சேர்ந்தனர்- கோயிலின்முன் - பகைவரது திரிபுரங்களை எரித்த முதல்வருடைய திருக்கோயிலின் முன்பு சேர்ந்தனர் (பிள்ளையார்).

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை— "அப்பர்- அடைவோம்" என்று - இது பதிகத்தின் முதற் பாட்டில் "அப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே" என்ற ஈற்றடியும் மகுடமும் பதிகக் கருத்தும் குறிப்புமாம்.

ஒப்பில் வண்தமிழ் மாலை - பதிகச் சிறப்புக் குறித்தது. பதியினை நோக்கி நினைந்து அடையும் வழியில் அருளிய சிறப்புமாம்.

ஒருமையால் - அத்திருப்பதியினை அழுந்திய நினைப்பாகிய ஒருமைப்பாட்டுடன் வழிபட்ட சிறப்பு. 354


திருக்கண்டியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி**

வினவி னேனறி யாமை யில்லுரை செய்ம்மி னீரருள் வேண்டுவீர்
கனைவி லார்புனற் காவி ரிக்கரை மேய கண்டியூர் வீரட்டன்
தனமு னேதனக் கின்மை யோதம ராயி னாரண்ட மாளத்தான்
வனனில் வாழ்க்கைகொண் டாடிப் பாடியிவ் வைய மாப்பலி தேர்ந்ததே. (1)


கருத்த னைப்பொழில் சூழுங் கண்டியூர் வீரட் டத்துறை கள்வனை
அருத்த னைத்திற மடியர் பான்மிகக் கேட்டு கந்த வினாவுரை
திருத்த மாந்திகழ் காழி ஞானசம் பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்த ராகிலும் பலர்க ளாகிலு முரைசெய் வாருயர்ந் தார்களே. (11)

திருச்சிற்றம்பலம்




திருச்சோற்றுத்துறை

பாட்டு 22252



வடகுரங்காடுதுறை

பாட்டு 2196



குடமூக்கு கீழைக்கோபுரம்

பாட்டு 2306

வேறு

2252. "அப்பர் சோற்றுத் துறைசென் றடைவோ"மென்
றொப்பில் வண்டமிழ் மாலை யொருமையாற்
செப்பி யேசென்று சேர்ந்தனர் சேர்விலார்
முப்பு ரஞ்செற்ற முன்னவர் கோயின்முன். **354**

பொன்னி திரைவலங்கொள் - காவிரிக்கரை சூழ்ந்த;

சென்றணைவார் - என்பதும் பாடம். *353*

2252. பொருளுரை - அப்பர்-என்று - "அப்பருடைய திருச்சோற்றுத் துறையினைச் சென்றடைவோம்" என்ற முடிபும் கருத்துமுடையதாய்; ஒப்பில்-செப்பியே சென்று - ஒப்பில்லாத வண்மையுடைய தமிழ்மாலையினை மனஒருமைப் பாட்டுடன் அருளிக் கொண்டபடியே சென்று; சேர்ந்தனர்- கோயிலின்முன் - பகைவரது திரிபுரங்களை எரித்த முதல்வருடைய திருக்கோயிலின் முன்பு சேர்ந்தனர் (பிள்ளையார்).

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை - "அப்பர் - அடைவோம்" என்று - இது பதிகத்தின் முதற் பாட்டில் "அப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே" என்ற ஈற்றடியும் மகுடமும் பதிகக் கருத்தும் குறிப்புமாம்.

ஒப்பில் வண்தமிழ் மாலை - பதிகச் சிறப்புக் குறித்தது. பதியினை நோக்கி நினைந்து அடையும் வழியில் அருளிய சிறப்புமாம்.

ஒருமையால் - அத்திருப்பதியினை அழுந்திய நினைப்பாகிய ஒருமைப்பாட்டுடன் வழிபட்ட சிறப்பு. *354*

திருக்கண்டியூர்

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி**

வினவி னேனறி யாமை யில்லுரை செய்ம்மி னீரருள் வேண்டுவீர்
கனைவி லார்புனற் காவி ரிக்கரை மேய கண்டியூர் வீரட்டன்
தனமு னேதனக் கின்மை யோதம ராயி னாரண்ட மாளத்தான்
வனனில் வாழ்க்கைகொண் டாடிப் பாடியிவ் வைய மாப்பலி தேர்ந்ததே. *(1)*

கருத்த னைப்பொழில் சூழுங் கண்டியூர் வீரட் டத்துறை கள்வனை
அருத்த னைத்திற மடியர் பான்மிகக் கேட்டு கந்த வினாவுரை
திருத்த மாந்திகழ் காழி ஞானசம் பந்தன் செப்பிய செந்தமிழ்
ஒருத்த ராகிலும் பலர்க ளாகிலு முரைசெய் வாருயர்ந் தார்களே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- மன் 2250-2251-ல் ஆசிரியர் காட்டியருளியது காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அருள்வேண்டுவீர்** - அடியார்களே; **அருள் வேண்டுவீர் நீர் உரை செய்ம்மின்** என்க; **தமர்** - அடியார்கள்; **தமர் அண்டமாளவும்** என்க. **முனே தனக்குத் தனம் இன்மை** என்ற காரணம் தக்கதன்று என்பது குறிப்பு. இக்குறிப்பினால் இவை அறியாமையால் வினாவியதன்று; கேட்டு மகிழ்வது குறிப்பு என்பதும் குறித்தபடி. இவ்வாறே பிறவும் காண்க. **கனைவில்** - **கனைவு** - ஓசை; (2) **பிறை வைத்ததும்** - தண்மையை வேண்டி வெள்ளந்தாங்கியதன்று - பிறையுமிருத்தலான் என்பது குறிப்பு. (3) முற்றுமாயினார்க்கு நீறும் நூலும் தம்மில் வேறன்றே என்ற குறிப்பு; **முழவு** - **முதல்** - "ஈறேமுதல்" "அந்தமாதி" என்பது ஞானசத்திரம்; சங்காரமும் புனருற்பவமும் குறித்தன. (4) **பழைய** - தம்மினும் அதிக உரிமையுடைய என்றது குறிப்பு. "பழவடியீர் பாங்குடையீர் புத்தடியோம்" (திருவா). **பலவாய** - "பல பல வேடமாகும்"; **புழைநெடுங்கை** - துளையினையுடைய நீண்ட துதிக்கை. (5) **விரவு** - பொருந்துதல்; **முழங்கு** - ஆரவாரிக்கும்;- (6) **இயலுமாறு** - பொருந்தும் வகையினை; **வானுளோர்களுக்காக** - வானுளோர்கள் அறிந்து உய்யும் பொருட்டு; **பொய்** - அழியும் தன்மையுடைய; **அருத்தி** - விருப்பம்; சிரம் அரிந்தமை வானுளோர்க்காக; அதில் ஊணுகத்தல் அவர்க்காக வேண்டப்படாது தம்பொருட்டு மேற்கொண்டதாகக் காணப்படுதலில் இவை தம்முள் இயலுமாறு இயம்புமின் என்றார்;- (7) **திருந்து** - உலகந் திருந்துதற் கேதுவாகிய; தாம் உரைத்த அறமும், மதில்மாட்டிய மறமும் ஒவ்வாதனவோ என்பது குறிப்பு:- (8) **இறை**- விடை; **புனல்செய்** - நீர் பரந்து செல்லும்; **கோவிரிப்பயன்** - கோக்களினின்றும் உளதாகும் விரிந்த பயன்; **விரிப்பயன்** - எதுகை நோக்கி ஒற்றுமிக்கது; "ஆவினுக் கருங்கல மரனஞ்சாடுதல்" (தேவா); **கொடிவரை பெற** - கொடிபோன்ற உமையம்மை அச்ச நீங்கி அமைதி பெற; **வரை** - வரைவு - அமைதி; **மாவரைத்தலத்தால்** - பெரிய (இமயம்) மலையினால் - (மலையை ஊன்றியதனால்); (9) **சரணாக வாழ்வே பெருமையுறும்** - என்று மாற்றுக. **கருமை** - பசுமை வளங்குறித்தது. **ஒருமை** - உண்மை. அடிகண்டிலேன் எனப் பேசிய உண்மை; **மற்றை** - அவ்வாறுண்மை யுரையாத; (10) **நமர் (ஆகிய) மாந்தர்காள்** - என்க. **கமர்** - வயல் வெடிப்பு; **அழிதல்** - நீர்பரந்த சேற்றினால் மூடுதல்; (11) **அடியர்பால் மிகக் கேட்டு உகந்த வினாவுரை** - பதிகக் குறிப்பு; (2251); **ஒருத்தர்** - தனித்து; **பலர்கள்** - பலர்கூடி; **உயர்ந்தார்கள்** - இறந்தகாலம் விரைவுக் குறிப்பு.

தலவிசேடம்:- திருக்கண்டியூர் : தொகுதி III பக்கம் 670 பார்க்க. சூரியபூசை மாசி 13-15 தேதிகள்; சதாநந்தர் - பிரமா - சரசுவதி உருவங்கள் கோயிலுள் உள்ளன.

திருச்சோற்றுத்துறை

திருச்சிற்றம்பலம் — பண் - தக்கராகம்

செப்ப நெஞ்சே நெறிகொள் சிற்றின்பந், துப்ப னென்னா தருளே துணையாக,
ஒப்ப ரொப்பர் பெருமா னொளிவெண்ணீற், றப்பர் சோற்றுத் துறைசென் றடைவோமே.

அந்தண் சோற்றுத் துறையெம் மாதியைச், சிந்தை செய்ம்மி னடியீ ராயினீர்
சந்தம் பரவுஞான சம்பந்தன், வந்த வாறே புனைதல் வழிபாடே. (11)

திருச்சிற்றம்பலம்

2253. தொல்லை நீடிருச் சோற்றுத் துறையுறை
செல்வர் கோயில் வலங்கொண்டு தேவர்கள்
அல்ல றீர்க்கநஞ் சுண்ட பிரானடி
எல்லை யில்லன்பு கூர விறைஞ்சினார். 355

பதிகக் குறிப்பு:- 2252 பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நெறிகொள் சிற்றின்பமும்** *- என்க. உயர்வு சிறப்பும்மை தொக்கது;* **நெறிகொள்** *- விதித்த நெறிவழி யனுபவிக்கப்படும்;* **துப்பன்** *- அனுபவிப்பேன்;* **ஒப்பர் ஒப்பர்** *- தம்மைத் தாமே ஒப்பாவார்; வேறு ஒப்பில்லாதவர் என்பது; "ஒப்பில் வண்டமிழ்" (1) என்ற பதிகக் குறிப்புமிது. (2)* **மாலும்** *- நிழல் மிகுதியான வழி; மயக்கஞ் செய்யும்;* **ஆலும்** *- அசையும்; ஒளிக்கும் (3)* **வேல்** *- ஆயுதப்பொது; (4)* **துணி** *- துணித்தல் - துண்டித்தல்; (5)* **அறையும்** *- ஓசையுடன் பாயும்; (10)* **கோது** *- குற்றம்; (11)* **ஞான சம்பந்தன் பரவு சந்தம் புனைதல்** *- என்று கூட்டுக.*

தலவிசேடம் : திருச்சோற்றுத்துறை - தொகுதி III பக்கம் 473 பார்க்க.

2253. பொருளுரை... தொல்லை வலங்கொண்டு - பழைமையாக நீண்ட திருச்சோற்றுத்துறையுள் எழுந்தருளிய அருட்செல்வராகிய இறைவரது திருக்கோயிலை வலங்கொண்டு வணங்கி; தேவர்கள்...அடி - தேவர்களது துன்பங்களைத் தீர்க்கும் பொருட்டு விடத்தை உண்டருளிய பெருமானுடைய திருவடிகளை; எல்லையில் அன்பு... இறைஞ்சினார் - அளவில்லாத அன்பு பெருக வணங்கினார்.

விளக்கவுரை... **தொல்லைநீள்** *- மிகப் பழைமையாக வளர்ந்திருக்கும்;*

செல்வர் *- அருட் செல்வத்தாற் குறைபாடில்லாதவர். "செல்வன் கழலேத்தும் செல்வம்"; "செல்வமேவிய செல்வர்" (தேவா); இப்பதியின் சுவாமி பெயர்* **"தொலையாச் செல்வர்"** *என்பதும் குறிப்பு.* **செல்வம்** *- எண்குணங்கள் என்பாருமுண்டு;*

தேவர்கள் அல்லல் தீர்க்க - உண்ட *- தேவர்களுடைய துன்பந் தீர்க்கும் கருணையே நஞ்சு உண்டதற்கு காரணம்; பிறிதில்லை என்பது; ஏனையோர் யாவரேயாயினும் நஞ்சுண்பதனால் தமக்கு வரும் ஏதமே கருதி யொழிகுவர்; சிவபெருமான் தேவர்களது துன்பம் தீர்த்தலையே பொருளாகக் கொண்டனர் என்ற பேரருட்டன்மையும், நஞ்சுண்டும் சாவாமையாகிய அளவிலாற்றலுடைமையும் புலப்படக் கூறியது குறிப்பு.* **செல்வர்** *என்ற குறிப்புமது.*

சோற்றுத்துறை உறை *- பிறர் உண்டு மரணந் தவிர்க்க உதவும் துறை என்ற பெயர்க் காரணக் குறிப்பும் காண்க.*

எல்லையில் அன்புகூர - கூர்தல் *- ஒருமுகப்பட்டு மிகுதல்.* **எல்லைஇல்** *- அளவுபடாத; "சோற்றுத்துறை சென்றடைவோமே" என்று பாடி வணங்கிக் கொண்டபடியே வந்தடைந்த குறிப்பு.*

நஞ்சுண்டாரடியிணை *- என்பதும் பாடம்.* 355

2254. இறைஞ்சி யேத்தி யெழுந்துநின் றின்னிசை
நிறைந்த செந்தமிழ் பாடி நிலாவியங்
குறைந்து வந்தடி யாருட னெய்தினார் 356
சிறந்த சீர்த்திரு வேதி குடியினில்.

2255. வேத வேதியர் வேதி குடியினில்
நாதர் கோயி லணைந்து நலந்திகழ்
பாத பங்கயம் போற்றிப் பணிந்தெழுந் 357
தோதி னார்தமிழ் வேதத்தி னோங்கிசை.

2254. பொருளுரை– இறைஞ்சி... உறைந்து - வணங்கிப் போற்றி எழுந்து நின்று இனிய பண்ணிசை நிறைந்த செந்தமிழ்ப் பதிகம் பாடிப் பொருந்தி அப்பதியின்கண் தங்கி; வந்து–திருவேதி குடியினில் - அடியார்களுடன் கூடச் சிறந்த சீர்களையுடைய திருவேதி குடியினில் வந்து சேர்ந்தனர்.

விளக்கவுரை– ஏத்துதல் *- கீதங்களாற் புகழ்களைப் பரவுதல்; **பாடி** என்று பின்னர்க் கூறுவது தோத்திரமாக அமைதி பெறத் திருப்பதிகம் பாடுதல் குறித்தது.*

இன்னிசை *- இனிய பண்ணமைதி; **தமிழ்** - தமிழ்ப் பதிகம். இப்பதிகம் கிடைத்திலது!*

நிலாவி உறைதலாவது *- அமைதிபெறப் பன்னாள் தங்குதல்.*

சிறந்த சீர் *- சிறப்புக்களுட் பெருமை பெற்றது. எல்லாராலும் வணங்கப்படும் இறைவர் இருக்குமிடமாகிய சிறப்பு என்றதும் குறிப்பு. "யாவரு மிறைஞ்சுகழ லாதிய ரிருந்தவிடமாம்" என்று பிள்ளையார் திருப்பதிகத்துள்ளும், "ஆரா அமுதன்" என்று அரசுகளது திருவிருத்தத்துள்ளும் வரும் குறிப்புக்களும் காண்க. வேதங்கள் பூசித்த சிறப்பும் ஈண்டுக் கருதத் தக்கதென்பது "வேதவேதியர் வேதிகுடி" (2255) என வரும் மேற்பாட்டினாற் காண்க.* 356

2255. பொருளுரை... வெளிப்படை. வேதங்களை ஓதிய வேதியர்கள் வாழும் திருவேதிகுடியின்கண் முதல்வரது திருக்கோயிலை அணைந்து நன்மை விளங்கும் திருப்பாதமாகிய தாமரைகளைப் போற்றி வணங்கி எழுந்து நின்று, தமிழினால் வேதங்களினும் ஓங்கும் இசையையுடைய திருப்பதிகத்தை ஓதியருளினார்.

விளக்கவுரை– வேத வேதியர் வேதிகுடி *- பதியின் பெயர்க் காரணத்தை விளக்கிக் காட்டிய குறிப்பு. **வேத வேதியர்** - வேதங்களையோதும் வேதியர்கள் என இரண்டாம் வேற்றுமையுருபும் பயனும் தொக்கன. **வேதியர்** - பிள்ளையார் என்றலுமாம்; "வேதியர்" (2258).*

நலம்திகழ் பாதபங்கயம் - நலமாவது *- உயிர்களுக்குப் பாச நீக்கமும் சிவப்பேறும் தந்து நிலவுதல்; **திகழ்தலாவது** அத்தன்மையே உருவமாக விளங்குதல். திருவருள் நிறைவே திருவடியாக உபசரித்துக் கூறப்படும்.*

2256. எழுது மாமறை யாம்பதி கத்திசை
முழுதும் பாடி முதல்வரைப் போற்றிமுன்
றொழுது போந்துவந் தெய்தினார் சோலைசூழ்
பழுதில் சீர்த்திரு வெண்ணிப் பதியினில். 358

வேதத்தின் ஓங்கிசை தமிழ் ஓதினார் - என்க. இன் - உறழ் பொருவில் வந்த ஐந்தனுருபு. உயர்வு சிறப்பும்மை தொக்கது. வேதத்தினும் ஓங்கும் இசை என்றது ஏழ் இசைமயமாயும், எல்லாக் கலைகட்கும் (வித்து) மூலமாயும் விளங்கும் வேதத்தினும் மிக்குப் பெருகும் என்றதாம். தமிழ் வேதம் சொல்லாலும் இசையாலும் பொருளாலும் வேதத்தினும் மிக்கது என்பது குறிப்பு. வேதத்தின் உயர்ந்த இசைக்கு ஒத்தது பண் சாதாரிபோலும்; விறகு விற்ற திருவிளையாடலில் வேதவேதியர் பாடியது சாதாரியேயாம்; சாதாரிப் பண்ணின் இசைபட அமைந்த இத்திருப்பதிகப் பெருமை குறித்தது. எழுது மாமறையாம் பதிகத்திசை - என்று இக்கருத்தை வற்புறுத்தித் தொடர்ந்து மேல்வரும் பாட்டில் ஆசிரியர் எடுத்துக் காட்டியருளுதல் காண்க. தமிழ் - "வேதந் தமிழால் விரித்தார்". 357

2256. பொருளுரை- எழுதும்- வந்து - எழுதும் பெரிய மறையாகிய இசையுடைய திருப்பதிகத்தினை முழுவதும் பாடி இறைவரைத் துதித்து முன்னே தொழுது மேற்சென்று அணைந்து; எய்தினார்- பதியினில் - சோலைகளாற் சூழப்பட்ட பழுதில்லாத சிறப்புடைய திருவெண்ணி என்னும் திருப்பதியின்கண் சேர்ந்தனர்.

விளக்கவுரை- எழுதும் மாமறையாம் இசைப்பதிகம் - என்க. வேதத்தினும் ஓங்கும் இசை - என்று முன்பாட்டிற் கூறியதனை மேலும் விரித்தருளியபடி; வேதம் எழுதாக்கிளவி எனப்படும்; பதிகம் அவ்வாறன்றி அப்பொருளையே தருதலுடன் எழுதப்படும் சிறப்பும் வாய்ந்தது என்பதாம். ஆம் - ஆக்கச்சொல் இயல்பு குறித்த மட்டில் நின்றது. அதிட்டான வகையால் இறைவரது திருவாக்கேயாகியது என்பதுமாம். "மறைவிரி நாவன்" என்பது இத்தலத்து அரசுகள் பதிகம். இங்குத் தாமே விரித்த வேதத்தினும் பிள்ளையாரது திரு வாக்கின் மூலம் விரித்த இப்பதிகச் சிறப்பினால் இப்பதியின் பெயர் மேலும் சிறந்தது என்பது குறிப்பு.

முழுதும் - பதிகம் நிரம்பும்படி; இசை முழுதும் என்று கூட்டி உரைப்பினுமமையும்.

பதியினில் வந்து எய்தினார் - என்று கூட்டுக. 358

திருவேதிகுடி

திருச்சிற்றம்பலம் பண் - சாதாரி

நீறுவரி யாடரவொ டாமைமன வென்புநிரை பூண்பரிடபம்
ஏறுவரி யாவரு மிறைஞ்சுகழ லாதிய ரிருந்தவிடமாம்
தாறுவிரி பூகமலி வாழைவிரை நாறவிணை வாளைமடுவில்
வேறுபிரி யாதுவிளை யாடவள மாரும்வயல் வேதிகுடியே. (1)

கந்தமலி தண்பொழினன் மாடமிடை காழிவளர் ஞானமுணர்சம்
பந்தன்மலி செந்தமிழின் மாலைகொடு வேதிகுடி யாதிகழலே
சிந்தைசெய வல்லவர்க ணல்லவர்க ளென்னநிகழ் வெய்தியிமையோர்
அந்தவுல கெய்தியர சாளுமது வேசரத மாணைநமதே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் இனிதிருக்குமிடம் திருவேதிகுடி; "சிறந்தசீர்" (2254) என்றது காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **யாவரும் இறைஞ்சுகழல் ஆதியர்** - முழுமுதல்வர். **இணை- விளையாட** - வாளைகள் இணையாகப் பாய்ந்து விளையாடுதல் குறிப்பு. **வளம்** - நீர்வளம் (2) **துற்பரிய** - பெருங் கொடுமையினை யுடைய; **துப்பரிய** - எவராலும் உண்ணற்கரிய; எதுகை நோக்கித் **துற்பரிய** என வந்தது என்றலுமாம்; **மங்கை** - **மங்கையர்க்கரசி** என்பது இத்தலத்தின் அம்மை பெயர்; "**மங்கையொடு**" (6) - (3) **போழும்** - பிளந்தது போலும்; **இரவாளர்** - இரவினை ஆள்பவர் - **இரவு** - சங்காரம். **இரவு** - பிச்சை என்று கொண்டு பெண்கள் சூழ பலி ஏற்பவர் என்றுரைத்தலுமாம் - (4) **அனல்மெய்யர்** - எரியுருவர்; "எரியலா வுருவமில்லை" (தேவர்); **செய்யர்** - சிவந்த நிறமுடையர்; **செம்மை** - தூய்மை - தூய வுடம்பினனாதல் என்ற எண்குணத்தொன்று; **ஆவணவர்** - உயிர்களை ஆவணங்கொண்டு அடிமையாகவுடையவர். **ஆவணம்** - ஓலை; "அன்றே சிவனுக்கெழுதிய ஆவணம்" (திருமந்); பாட லுடையராகிய **அடியார்கள் பணிவாராகிப்** பொடிபூசி இசைமேவுதற்கிடமாகிய; **ஒளியான பொடி** - திருநீறு; (5) **சொக்கர்** - அடியார் மூவர்; **பக்கமுற** - முனிவும் அருளும் ஒருசேர இருக்க; **கொக்கு** - மா; (5) **வெண்பொடி** - திருநீறு; **மங்கை** - தல அம்மை பெயர்க் குறிப்பு; **வையம்விலை மாறுதல்** - வற்கடம் (இலம்பாடு) வருதல்; பொருள்கள் எளிதிற் பெற இயலாதபடி விலை ஏறுதல் (**குறிப்பு** - இந்நாளின் விலை ஏற்ற நிகழ்ச்சி காண்க); **மிக்கு ஏறுபுகழ் இழிவிலாத வகை** என்க;- (7) **ஒல்குதல்** - நீங்குதல் - குறைதல்; **ஆடவர் கன்னிய ரொடு மாமணம் விரும்பி** எனவும், **மங்கையர் அருமங்கலமியற்றும்** எனவும் கூறியதனால் முன் ஒருவன் மணம் புரிந்த மாதரை மீளவும் மணத்தல் மரபன்றென்பதும், கன்னியின் மணத்துக்கே மங்கலமியற்றுவர் என்பதும் குறிப்பு; (8) **உரம்** - வலிமை; **வரைகரம்பற்றிய** என்க; **ஒருத்தனாகிய அரக்கனை; விண்** - ஆகாயத்தில் உயரும் மாடங்கள்; "நெடுமாடம்" (9) "நன்மாடம்" (11); **பாவலர்கள் ஓசையியல் வேள்வி** - "தண்புலவர்" (6); (10) **சைவன்** - சிவத்துவத்துக்கிருப்பிடமானவன்; **அஞ்சு புலன்** - **அறுவகைப் பொருள்** - **எழு இசை** - எண் அணி; **அறுவகைப் பொருள்** - ஆறு அங்கம்; (11) **ஆணைநமதே** - தம்மது ஆணை பற்றி நிகழ உறுதி கூறுதல் பிள்ளையார்க்குரிய சிறப்பு. "முதல்வன் றிருவடியை அத்திக்கும் பத்தரெதி ராணைநம தென்னவலான்" (11 திருமுறை - ஆளு - பிள் - திருத்தொகை - நம்பியாண்).

தலவிசேடம்:- திருவேதிகுடி - தொகுதி III பக்கம் 669 பார்க்க. காவிரிக்குத் தென்கரையில் 14-வது தலம்; வேதங்களும் வேதியர்களும் விட்டுணுவும் பூசித்த தலம்;

2257. வெண்ணி மேய விடையவர் கோயிலை
நண்ணி நாடிய காதலி னாண்மதிக்
கண்ணி யார்தங் கழலிணை போற்றியே
பண்ணி னீடும் பதிகமும் பாடினார். **359**

2258. பாடி நின்று பரவிப் பணிந்துபோய்
ஆடு மங்கணர் கோயிலங் குள்ளன
மாடு சென்று வணங்கி மகிழ்ந்தனர்
நீடு சண்பை நிறைபுகழ் வேதியர். **360**

பதிகம் பார்க்க; இத்தலத்தில் நல்லிசைப் புலவரும் புலவரைப் பேணுவோரும் மிக்கிருந்த சிறப்புப் பதிகத்துக் காண்க; "சிறந்தசீர்" (2254) என்பது புராணம்;

2257. பொருளுரை... வெண்ணி... நண்ணி - திருவெண்ணிப் பதியின் கண்ணே பொருந்திய இடபத்தையுடைய இறைவரது திருக்கோயிலினை அடைந்து; நாடிய காதலின் - உள்ளே நாடிக்கொண்ட அன்பின் மிகுதியினாலே; நாண்மதி... போற்றியே - புதிய பிறையினைக் கண்ணியாக அணிந்த இறைவரது திருவடிகளைப் போற்றியே; பண்ணில்... பாடினார் - பண்ணினால் பெருகிய திருப்பதிகத்தினையும் பாடியருளினார்.

விளக்கவுரை... நாடிய காதல் - மனத்தினுள் நாடி அமைத்துக்கொண்ட ஆசை.

நாள்மதி - புதிய மதி - பிறை;

பதிகமும் பாடினார் - போற்றியதன்றிப் பதிகமும் பாடியருளினார் என்று உம்மை இறந்தது தழுவிற்று.

பண்ணின் நீடு - பண் - பதிகப் பண்ணாகிய இந்தளம்.

பதிகமுன் - என்பதும் பாடம். 359

2258. பொருளுரை... வெளிப்படை. பதிகம் பாடி நின்று துதித்து வணங்கி மேற்சென்று அருளாடல் புரிகின்ற இறைவர் எழுந்தருளிய அப்பக்கத்துள்ளனவாகிய திருக்கோயில்களைச் சென்று வணங்கி, நீடும் சீகாழியில் அவதரித்த நிறைந்த புகழினை யுடைய வேதியராகிய பிள்ளையார் மகிழ்ந்தருளினர்.

*விளக்கவுரை... பாடி - பரவி என்க; முன், **போற்றி** (2257) என்றது பதிகக் கருத்து; இங்குப் பரவி என்றது வேறு; துதித்தல், கீதம் பாடுதல் முதலாயின.*

*அங்கு மாடு உள்ளன கோயில் என்று கூட்டுக; மாடு - பக்கம்; மாடு - செல்வம் என்று கொண்டுரைத்தலுமாம்; வேதிகுடியினின்றும் நெடுந்தூரத்திருப்பதால் **அங்குள்ளன - மாடு** - என்றார் என்று கருதப்படும்.*

*ஆடும் அங்கணர் - ஆடுதல் - ஐந்தொழில் அருட்கூத்து இயற்றுதல். அது அருள் காரணமாக நிகழ்த்துதலின் **அங்கணர்** என்றார்.*

அங்கு மாடு உள்ளன கோயிலாவன வெண்ணியூரின் அருகிலும் வழியிலும் உள்ளவை.

நீடு சண்பை - நீடுதல் - ஊழியில் அழியாது மிதந்து இருத்தல். "மல்குகாழி" (11) என்ற பதிகக் குறிப்பு.

நிறைபுகழ் வேதியர் - "வேதத்தின் ஓங்கிசை" பாடுமவர் என்பதாம். 2255 பார்க்க. நிறைபுகழ் என்ற குறிப்புமது. 360

திருவெண்ணியூர்

திருச்சிற்றம்பலம் — பண் - இந்தளம்

சடையானைச் சந்திர னோடுசெங் கண்ணரா
வுடையானை யுடைதலை யிற்பலி கொண்டூரும்
விடையானை விண்ணவர் தாந்தொழும் வெண்ணியை
யுடையானை யல்லதுள் காதென துள்ளமே. (1)

மருவாரு மல்குகா ழித்திகழ் சம்பந்தன்
றிருவாருந் திகழ்தரு வெண்ணி யமர்ந்தானை
யுருவாரு மொண்டமிழ் மாலை யிவைவல்லார்
பொருவாகப் புக்கிருப் பார்புவ லோகத்தே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- வெண்ணி யெம்மானை அடையவல்லார் வினை ஓயும்; அவரை யல்லாது எனதுள்ளம் வேறு உள்காது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அல்லது உள்காது** - எதிர்மறை உறுதிப்பொருள் குறித்தது; (2) **நீதி** - நியதியின் முதல்வன்; (3) **நனிதன்** - நன்மையை உடையவன்; (4) **கனிந்தவர்** - உள்ளமுருகியவர்; **கலந்து** - அந்தக் கனிவுக்குள் நின்று; (5) **நீள்** - மாலைபோலக் கொத்தாய் நீளும் - (6) **விளக்காய வித்து** - அறிவு. (9) **மண்ணினை** - **மண்** என்னும் பூதத்துள் நின்றவனை; **கண்** - கண்போலக் காட்டுபவன்; **மண்** - கீழுக்கும், **விண்** மேலுக்கும் குறியாய் நின்றன; (10) **துயர் தோன்றா** - ஊழினால் வரும் துன்பங்களும் முனைத்து நில்லா; துயர் செய்யும் ஆற்றலின்றி வலியிழந்துபோம்;

தலவிசேடம்:- திருவெண்ணியூர் - காவிரிக்குத் தென்கரை 102-வது தலமாகக் கருதப்படும்; கோயில்வெண்ணி என்றும், இட்சுபுரி என்றும், வழங்கும்; இட்சு (இக்கு) - கரும்பு. இறைவரது இலிங்கத் திருவுருவம் கரும்புக் கழிபோன்ற அடையாளங்களுடன் விளங்கும் சுயம்பு; சுவாமி - **வெண்ணிநாதர்**; அம்மை - **அழகியநாயகி**;

குறிப்பு:- "ஆர்கலி நறவின் வெண்ணி வாயில்" (அகம்); "கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை" (புறம்); "வெண்ணி தாக்கிய... கரிகால் வளவன்" (பொருந) என இவ்வூர் பழந்தமிழ் நூல்களுட் பேசப்பட்டுள்ளது; **வெண்ணிக் குயத்தியார்** என்னும் குயவர் குலத்திற்றோன்றிய பெண்பாற் சங்கப் புலவரும் இவ்வூரினர் - இவை ஸ்ரீ ந. சிவப்பிரகாசக் குருக்களையா அவர்கள் குறிப்புக்கள்.

2259. மொய்தருஞ் சோலைசூழ் முளரிமுள் ளடவிபோய்
மெய்தரும் பரிவிலான் வேள்வியைப் பாழ்படச்
செய்தசங் கரர்திருச் சக்கரப் பள்ளிமுன்
பெய்தவந் தருளினா ரியலிசைத் தலைவனார். 361

இது கோயில் வெண்ணி நிலயத்தினின்றும் வடக்கே அரை நாழிகை யளவில் உள்ளது.

குறிப்பு:- இப்பதி திருவேதி குடியினின்றும் நீண்ட தொலைவில் தென்கிழக்கில் உள்ளது; இடையில் பல பதிகளுமுள்ளன; இதனைக் கும்பிட்ட பின்னர் மாடுள்ள பல கோயில்களை நண்ணி மீண்டும் வடமேற்கில் நெடுந் தொலைவில் உள்ளதும் திருவேதிகுடிக்கு அண்மையில் வடக்கிலுள்ளதுமாகிய திருச்சக்கரப்பள்ளிக்குச் சென்றருளியதாகக் காணப்படுகின்றது; வெண்ணிக்கு அணிமையில் உள்ள கருகாவூர், அவளிவணல்லூர், பருதிநியமம், பூவனூர், இவற்றை வழிபட்டமை பின்னர் 2271 - 2273 பாட்டுக்களுட் கூறப்படுவது காண்க; இன்னோரன்னவாற்றால் இங்குக் கூறப்படும் வெண்ணி என்பது வேதிகுடிக்கும் சக்கரப்பள்ளிக்கும் இடைப்பட்ட வேறு பதியாமோ? என்பது ஆராய்தற்குரியது.

2259. பொருளுரை- மொய்தரும்... சோலைசூழ் - செறிந்துள்ள சோலைகள் சூழ்ந்த; முளரிமுள் அடவிபோய் - தாமரைத் தண்டுகளின் முட்காடு என்னப்படும் வாவிகள் மிக்க மருத நிலத்திற் சென்று; மெய்தரும் பரிவு இலான் - உண்மை நிலையினைச் செய்யும் அன்பு இல்லாத தக்கனது; வேள்வியை... முன்பு - யாகத்தை அழியச் சங்காரம் செய்த சங்கரர் எழுந்தருளிய திருச்சக்கரப்பள்ளி என்னும் பதியின் முன்பு; எய்த.... தலைவனார் - பொருந்த வந்து இயலிசைத் தமிழிற்குத் தலைவராகிய பிள்ளையார் சேர்ந்தருளினர்.

விளக்கவுரை.... **மொய்தரும் சோலை - மொய்தரும்** - மொய்த்துச் செறிந்த; **மொய்** - முகைகளை, **தரும்** - ஈனும் என்றலுமாம்.

முளரி முள் அடவி - முளரி - தாமரை; **முள்அடவி** - தாமரைத் தாள்களின் முட்கள் செறிந்த காடு; தடாகம்; தடாகங்களின் மிகுதி குறித்தது - "செந் தாமரைக்காடனைய மேனி" (திருவா); "காய்த்த செந்நெலின்காடு" (1828) என்றதுபோலக் காண்க.

மெய்தரும் பரிவு - உண்மையன்பு. "பரனடிக் கன்பி லாதார் புண்ணியம் பாவ மாகும்" என்றவிடத்து "வரமுடைத் தக்கன் செய்த மாவேள்வி" என்று இதனை மேற்கோள் காட்டியது காண்க. (சித்தி-2-29). **பரிவிலான்** - தக்கன்.

பாழ்படச் செய்த - சங்கரித்த. பயனிலதாகச் செய்த.

மெய்தரும் - சத்தாந்தன்மையை உளதாக்கும்.

பாழ்படச் செய்த சங்கரர் - சங்கரர் - சுகத்தைச் செய்பவர். பாழ்படச் செய்தமையே தக்கனுக்கும் அவனைச் சார்ந்து நின்ற தேவர் கூட்டத்துக்கும் இதஞ்செய்ததாகும் என்பது

2260. சக்கரப் பள்ளியார் தந்திருக் கோயிலுட்
புக்கருத் தியினுடன் புனைமலர்த் தாள்பணிந்
தக்கரைப் பரமர்பா லன்புறும் பரிவுகூர்
மிக்கசொற் றமிழினால் வேதமும் பாடினார். **362**

குறிக்கச் சங்கரர் என்ற பெயரால் முரண் அணிச்சுவைபட இங்குக் கூறினார். "நயனங்கண் மூன்றுடைய நாயகனே தண்டித்தாற், சயமன்றோ வானவர்க்கு" (திருவா - சாழல்).

முன்பு - பதியினை அணுக அதன் முன்பு.

இயல் இசை - இயற்றமிழும் இசைத்தமிழும். "கவுணியர் நாவுக்கரசர் பேயாரிம் மூவர் கற்குமிய விசைவல்லோர்" (திருத்தொண்டர் புராண வரலாறு - 46).

தலைவனார் - இயலும் இசையும் இவர் ஆணை வழி நின்று நடப்பனவாம் என்பது; "மூலவிலக்கியமாக" (2175) என்ற கருத்துக் காண்க.

தலைவனார் - போய் - எய்த - வந்தருளினார் - என்று கூட்டி முடிக்க. முன் கூறிவந்த யாப்பினை மாற்றிப் பதிகப் பண்ணின் யாப்புக்கியையச் சரிதங் கூறப்புகும் அமைதி கருதுக. *361*

2260. பொருளுரை... சக்கரப்பள்ளியார்... பணிந்து - திருச்சக்கரப்பள்ளியில் எழுந்தருளிய இறைவரது திருக்கோயிலினுள்ளே புகுந்து விருப்பத்துடனே அலங்கரித்த மலர் போன்ற திருவடிகளை வணங்கி; அக்கு அரைப் பரமர்பால் - அக்குமணி மாலைகளின் கோவையை அணிந்த திருவரையினையுடைய இறைவரிடத்து; அன்பு உறும்... பாடினார் - அன்பு பொருந்தும் பரிவினை மிகுவிக்கும் ஆற்றல் மிக்க சொற்களினாலாகிய தமிழாலே நால் வேதப் பொருள்களையும் உடைய திருப்பதிகத்தினையும் பாடியருளினார்.

விளக்கவுரை... அருத்தி - மிக்க விருப்பம்; புனைமலர் - புனைந்த - அணிபெறச் செய்தமைத்த - மலர்.

மலர் புனைதாள் - என்று கூட்டி அடியவர்கள் மலர்களைச் சூட்டிய திருவடிகள் என்றும், பிள்ளையார் தாம் அருத்தியினுடன் புனைந்த (அருச்சித்துச் சூட்டிய) மலர்களைக் கொண்ட திருவடிகள் என்றும் உரைத்தலுமாம்.

அக்கு அரை - அக்குமணி மாலையைக் கட்டிய திருவரை.

அக்கு - எலும்பு. எலும்பானியன்ற மணிகளாகிய மாலைக்கு ஆகு பெயர். சங்குமணி என்றலுமாம்.

அன்பு - பரிவு - இவை ஒரு பொருளனவாயினும், அன்புமிக்க போது பரிவாக விளையுமென்ப. பரிவு - மிக்க அன்பு. கூர்தல் - மேலும் மிகுதல்;

மிக்க சொல் - சொல் மிகுதலாவது சிறந்த பொருள் பயத்தல்.

நால்வேதமும் தமிழிற் பாடினார் - என்க. உம்மை முற்றும்மை. "வேதந் தமிழால்

*விரித்தார்" தமிழினாற் பாடினார். **வேதமும் பாடினார்** - பணிந்ததன்றி வேதமும் பாடினார் என எச்சவும்மை.*

மிக்க சொற்றமிழ் - *திருப்பதிகம்.*

தனிக் கோயிலுள் - *என்பதும் பாடம்.* *362*

திருச்சக்கரப்பள்ளி

திருச்சிற்றம்பலம் **பண் - கொல்லி**

படையினார் வெண்மழுப் பாய்புலித் தோலரை
யுடையினா ருமையொரு கூறனா ரூர்வதோர்
விடையினார் வெண்பொடிப் பூசியார் விரிபுனற்
சடையினா ருறைவிடஞ் சக்கரப் பள்ளியே. *(1)*

தண்வயல் படையணி சக்கரப் பள்ளியெங்
கண்ணுத லவனடிக் கழுமல வளநகர்
நண்ணிய செந்தமிழ் ஞானசம் பந்தன்சொற்
பண்ணிய விவைசொலப் பறையுமெய்ப் பாவமே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- *இறைவனார் உறைவிடம் சக்கரப்பள்ளியே.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1)* **மழுப்படையினார்** *என்க;* **வெண்பொடி** *- திருநீறு; (3)* **மின்னின் ஆர்** *- மின் போன்ற;* **தன்னினார்** *- தன்னுள் நிறைந்தவர்; (6)* **புனல்** *- கங்கை; (7)* **பாரினார்** *- உலகவர்;- (8)* **முதிர்இலா** *- இளமையான;* **சதிர்** *- வலிமை;* **பணி** *- பாம்பு;* **தணிவினர்** *- மிகை தணித்தவர்;- (10)* **விடம்** *- கெடுதி;* **வடம்படுமலர்** *- மலர்மாலை; கொன்றை என்றலுமாம்; (11)* **மெய்ப்பாவம்** *- வலிய பாவம்; உடம்பால் ஈட்டப்பட்ட பாவம் என்றலுமாம்.*

தலவிசேடம்:- **திருச்சக்கரப்பள்ளி** *- காவிரிக்குத் தென்கரை 17-வது தலம். சக்கரவாகம் என்னும் நேமிப்புள் பூசித்த காரணத்தால் இப்பெயர் பெற்றதென்பர். சயந்தனும் தேவர்கள் முதலியோர்களும் பூசித்துப் பேறு பெற்றனர். இது சிவ ரகசியம், பிரம கைவர்த்த புராணம், இலிங்க புராணம் முதலியவற்றுள் மிகவும் சிறப்பாகப் பாராட்டியுள்ள ஏழு பதிகளுள் ஒன்று; அவை சக்கரப்பள்ளி, அரிமங்கை, சூலமங்கை, நந்திமங்கை, பசுபதி மங்கை, தாழை மங்கை, புள்ள மங்கை என்பன; இவை முறையே பிராமி, மாகேச்சுவரி, கௌமாரி, வைணவி, வாராகி, மாகேந்திரி, சாமுண்டி என்னும் ஏழு மங்கையர்களால் பூசிக்கப் பெற்றதனால் சத்த மங்களத் தலங்கள் என்று வழங்கப் பெறுவன. நாதசர்மா தமது மனைவியார் அனவித்திய தேவியுடன் நியமமாகத் தேவகாத தீர்த்தத்தில் மூழ்கி இவ்வேழு பதிகளையும் வழிபட்டுப் பேறு பெற்றனர் என்ப. மால் பூசித்துச் சக்கரம் பெற்ற காரணமும் கூறுவர். சுவாமி -* **சக்கரவாகேசுவரர்;** *அம்மையார் -* **தேவநாயகி;** *பதிகம் 1.*

2261. தலைவர்தஞ் சக்கரப் பள்ளிதன் னிடையகன்
றலைபுனற் பணைகளி னருகுபோ யருமறைப்
புலனுறுஞ் சிந்தையார் புள்ளமங் கைப்பதி
குலவுமா லந்துறைக் கோயில்வந் தெய்தினார். 363

இது மகமதியர்களது ஆக்கிரமிப்புக்களால் சீரணப்பட்டு அலங்கோல நிலையிலிருந்ததனைத் திருவாவடுதுறை ஸ்ரீலஸ்ரீ அம்பலவாண தேசிக மகா சந்நிதானம் அவர்கள் 30 ஆண்டுகளின் முன் சீரணோத்தாரணம் செய்தருளிச் சிறப்புச் செய்தருளினர். மீண்டும் முன்னைய கெடுதிகள் தலையெடுக்கத் தொடங்குகின்றன. அவை வாராமற் காத்தல் சைவ வுலகத்தின் கடமை.

இஃது ஐயம்பேட்டை நிலயத்தினின்றும் மேற்கே முக்கால் நாழிகை யளவில் அடையத்தக்கது.

2261. பொருளுரை... தலைவர்தம்... அகன்று - இறைவரது திருச்சக்கரப்பள்ளியினிடத்தை நீங்கி; அலை... போய் - அலைகின்ற புனல் பரந்த வயல்களின் பக்கமாகச் சென்று; அருமறை... எய்தினார் - அரிய மறைகளின் உள்ளீடாகிய ஞானத்தினையே தம் அறிவில் நிரம்பப்பெற்ற பிள்ளையார்; புள்ளமங்கைப்பதி.... குறுகினார் - திருப்புள்ளமங்கை என்னும் திருப்பதியினிடத்து விளங்கும் திருவாலந்துறை எனப் பெறும் திருக்கோயிலை அடைந்தனர்.

விளக்கவுரை... தலைவர் *- "பரிவிலான் வேள்வியைப் பாழ்படச் செய்த சங்கரர்" (2259) என்று கூறியதற் கேற்பச் சாபமும் அருளும் செய்யவல்ல அளவிலாற்றலுடைமைக் குறிப்பு.*

அலைபுனல் *- அலைகின்ற - ஓடுகின்ற; வயல்களில் நீர் நிலைத்துத் தங்காது ஓடிக் கொண்டிருத்தல் வேண்டுமென்பது உழவு விதிகளுள் ஒன்று.*

பணைகளின் அருகு *- பணை - பண்ணை - வயல்; அருகு - அருகாக; பக்கங்களில்; இந்நிலம் மருதநிலப் பரப்புடையது.*

அருமறைப்புலன் உறும் சிந்தையார் *- பிள்ளையார்.* ***புலனுறுதலாவது*** *- மறைகளின் முடிந்த ஞானமே தமது அறிவின் நிறைவாகுதல். இதற்கு இவ்வாறன்றி மறைகளின் அறிவுடைய மறையோர் வாழும் என்று உரைத்தனர் முன் உரைகாரர்.*

புள்ளமங்கைப்பதி... கோயில் *- புள்ளமங்கை என்பது பதியின் பெயரும், ஆலந்துறை என்பது கோயிலின் பெயருமாம். சாத்தமங்கை அயவந்தி - ஆவூர்ப் பசுபதீச்சரம் - முதலியனபோல. "புளமங்கை... ஆலந்துறை" என்பது பதிகம்.*

குலவுதல் *- விளங்குதல்; நீடுதல் என்றலுமாம்.* 363

2262. பொருளுரை... மன்னும்.... தமிழ் புனைந்து - நிலைபெற்ற அந்தக் கோயிலில் எழுந்தருளிய மான் கன்றினை ஏந்திய கையினை உடையவரது பொன்போன்ற

2262. மன்னுமக் கோயில்சேர் மான்மறிக் கையர்தம்
பொன்னடித் தலமுறப் புரிவொடுந் தொழுதெழுந்
தின்னிசைத் தமிழ்புனைந் திறைவர்சே லூருடன்
பன்னுபா லைத்துறைப் பதிபணிந் தேகினார். **364**

திருவடிகளிற் பொருந்த அன்பினோடும் தொழுது எழுந்து இனிய இசையினையுடைய தமிழ்ப் பதிகத்தினைச் சாத்தி; இறைவர்.... ஏகினார் - இறைவர் எழுந்தருளிய திருச்சேலூருடனே துதித்துச் சொல்லப் பெறும் திருப்பாலைத்துறைப் பதியினையும் வணங்கிச் சென்றருளினர்.

விளக்கவுரை— அக்கோயில் - ஆலந்துறை என்று முன் எடுத்துச் சொல்லிய அந்த என முன்னறிசுட்டு. **மன்னுதல் -** புள்ளமங்கைப் பதியில் நிலவிப் பொருந்துதல்.

புரிவு - இடைவிடாது செய்யும் மிக்க அன்பு.

பன்னுதல் - விரும்பி எடுத்துப் பல முறையும் சொல்லப்படுதல்.

திருச்சேலூர் - பிள்ளையாரது பதிகம் கிடைத்திலது! *364*

திருப்புள்ளமங்கைத் திருஆலந்துறை

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டபாடை**

பாலுந்துறு திரளாயின பரமன்பிர மன்றான்
போலுந்திற லவர்வாழ்தரு பொழில்சூழ் **புளமங்கைக்**
காலன்றிற லறச்சாடிய கடவுள்ளிடங் கருதில்
ஆலந்துறை தொழுவார்தமை யடையாவினை தானே. *(1)*

பொந்தின்னிடைத் தேனூறிய பொழில்சூழ் **புளமங்கை**
அந்தண்புனல் வருகாவிரி **யாலந்துறை** யானைக்
கந்தம்மலி கமழ்காழியுட் கலைஞானசம் பந்தன்
சந்தம்மலி பாடல்சொலி யாடத்தவ மாமே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- புளமங்கை ஆலந்துறை இறைவர் அமுதர்; புலை களைவார்; இளநாயிற்றின் சோதியன்னார்; அவரை மெய்த்தன்னுறும் வினைதீர்வகை தொழுமின்; அவரது இடம் ஆலந்துறையதுவே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பாலுந்துறுதிரள் -** பால் கடையக் கிடைக்கும் அமுது போன்றவர்; **பிரமன் - போல் - திறல்.** (2) **கடல் சூழ்தரு தன்மைப்புலை -** கடல் போலப் பெருகிச் சூழ்கின்ற தன்மையுடைய புலை; உலகில் வரும் பிறப்புக் காரணமாகிய பழமலம் என்ற பொருளில் வந்தது. (4) **பணி -** பணிப்பவன் - நாயகன்; **கனகம் - அணியார் மணல்** - பொற் பொடியை மணலுடன் அலைத்துக் கொண்டு வருதலின் **பொன்னி** எனப்படுவது

(5) **மெய்த்தன் உறும்வினை** - முன் (2)ல் புலை என்ற கருத்து. மெய் - உடம்பு. உடம்பு பொருந்தத்தரும் பழவினை. (6) **மன்** - **மழை** - **பொன்** - இவை உலகம் நிலவுதற்கு ஆதாரப் பொருள்கள். முதல் - முதல்வன். நிமித்தகாரணன்; **என் ஆனவன்** - என்னினும் எனக்கு இனியான்; (7) **பொடி** - திருநீறு; "வெந்த சாம்பல்" (திருப்பாசுரம்). **அடியார் தமக்கினியான்** - "சார்ந்தாரைக் காத்தல் தலைவர் கடனாதல், சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்" (போதம் - 10. சூ. வெண்) என்ற கருத்துக் காண்க; (8) **விலங்கல்** - (கயிலை) மலை; **இடை** - கீழ்; **புலன்கள் தமை வென்றார்** - அந்தணர்; "தம்மை யைந்து புலனும்பின் செல்லுந் தகையார்" (1207); **அலங்கல்** - முடிமாலை; இங்குக் கொன்றை மாலையைக் குறித்தது;- (9) **முண்டம்** - நெற்றி; (11) **பொந்தின்னிடைத் தேன் ஊறிய** - மக்கள் காணாதவகையில் மறைவாகத் தேன் ஈக்கள் கூடு அமைக்கும் இயல்பு குறித்தது; "அந்த விடை மருதி லானந்தத் தேனிருந்த பொந்தை" (திருவா - பூவல்);

தலவிசேடம் : திருப்புள்ளமங்கைத் திருஆலந்துறை - காவிரிக்குத் தென் கரையில் 16-வது பதி; இறைவர் விடமுண்டருள் செய்த பதியாதலின் இப்பெயர் போந்ததென்பது வழக்கு. புள்ளமங்கை என்ற பதியின் பெயரும் ஆலந்துறை என்ற கோயிலின் பெயரும் சேர்த்து வழங்கப்படும் மரபு பதிகத்திற் காண்க; அன்பிலாலந்துறை என வேறு பிரித்து அறியக் கூறுதலும் காண்க. இப்பதி வேளாளப் பசுபதி கோயில் என்று வழங்கப்படும்; (பசுபதி கோயில் என்ற இருப்புப்பாதை நிலயம் வேறு). பிரமன் பூசித்த தலம்; 'புள்ளமங்கை என்றதற் கேற்பக் கழுகுகள் கோபுரத்துள் நிலையாய்க் குடிகொண்டுள்ளன என்பர். (புள் - கழுகு; புள்ளிருக்கு வேளூர் என்பது காண்க); மேலும் பதிகத்துள் "பொந்தின்னிடைத் தேனூறிய பொழில் சூழ்" என்ற உண்மை விளங்க இன்றும் இப்பதியில் பொந்துகளில் எங்கும் தேன் கூடுகள் காணப் பெறுவன; திருச்சக்கரப்பள்ளியை முதலாக் கொண்ட ஏழு தலங்களுள் ஒன்று. அத்தலவிசேடம் பார்க்க; சுவாமி - **ஆலந்துறை நாதர்;** அம்மையார் - **அல்லியங்கோதை;** பதிகம் 1.

இது திருச்சக்கரப்பள்ளியிளின்றும் மேற்கே கற்சாலைவழி ஒன்றேகால் நாழிகை யளவு சென்று, வடக்கே திரும்பிச் சென்று, கால் நாழிகையளவில் உள்ளது. (திருச்சக்கரப்பள்ளி - ஐயம்பேட்டை நிலயத்தினின்றும் மேற்கே முக்கால் நாழிகையளவில் உள்ளது.

தலவிசேடம்:- திருச்சேலூர் - தேவாரவைப்புத் தலங்களுள் ஒன்று; பிள்ளையாரது பதிகம் சிதலரித் தொழிந்தது போலும்! இதனைத், திருப்புள்ளமங்கை ஆலந்துறையினின்றும் கால் நாழிகை யளவில் தெற்கில் சென்று சேரும் கற்காலை வழி கிழக்கே எட்டு நாழிகை யளவில் பாவநாசத்தை யடைந்து, தென்மேற்கில் 3 நாழிகையளவில் பிள்ளையார் அணைந்தனர் என்பது கருதப்படும். பாவநாசம் நிலயத்தினின்றும் இப்போது அடைவது சுருங்கிய வழி.

திருப்பாலைத்துறை - பிள்ளையாரது பதிகம் கிடைத்திலது! **தலவிசேடம்** - தொகுதி III பக்கம் 448 பார்க்க.

2263. காவின்மேன் முகிலெழுங் கமழ்நறும் புறவுபோய்
வாவிநீ டலவன்வாழ் பெடையுடன் மலர்நறும்
பூவின்மேல் விழைவுறும் புகலியார் தலைவனார்
சேவின்மே லண்ணலார் திருநலூர் நண்ணினார். 365

2264. மன்றலங் கழனிசூழ் திருநலூர் மறைவலோர்
துன்றுமங் கலவினைத் துழனியா லெதிர்கொளப்
பொன்றயங் கொளிமணிச் சிவிகையிற் பொலிவுறச்
சென்றணைந் தருளினார் சிரபுரச் செம்மலார். 366

2263. பொருளுரை... வாவி... தலைவனார் - வாவிகளில் பொருந்திய ஆண்ஞெண்டுகள் தம்முடன் வாழும் பெட்டைஞெண்டுகளுடனே, மலர்கின்ற நல்ல மணமுடைய தாமரைப்பூவின்மேல் விரும்பியமர்தற் கிருப்பிடமாகிய சீகாழியின் தலைவராகிய பிள்ளையார்; காவின்மேல்... புறவுபோய் - சோலைகளின் மேலே முகில்கள் எழுகின்ற மணங்கமழும் நல்ல புறவு நிலத்தின் வழியே சென்று; சேவின்மேல்.. நண்ணினார் - இடபத்தின் மேலே எழுந்தருளும் இறைவரது திருநல்லூரினை அடைந்தனர்.

விளக்கவுரை... தலைவனார் - போய் - நண்ணினார் - என்று கூட்டி வினைமுடிபு கொள்க.

காவின்மேல் முகில் எழும் - புறவு - மேகமண்டலம் அளாவச் சோலைகள் உயர்ந்துள்ள செழிப்புக் குறித்தது; புறவின் நீர்வளமும் நிலவளமும் குறித்தபடி; **புறவு** - மருதப் புறவு. முல்லை நிலம் என்பர் முன் உரைகாரர். முகில் எழும் என்றதனால் சோலைகளின் வளமாகிய இருப்பு முகில்கள் உண்டாதற்கும் பரவுதற்கும் ஏதுவாகும் என்ற உண்மையின் குறிப்புமாம்.

வாவிநீடு அலவன் பெடையுடன் பூவின்மேல் விழைவுறும் - நீரினுள் வாழும் நண்டுகள் தாமரை மலரில் பெடையுடன் தங்குதலை விரும்பின என்பது சிற்றறிவுடைய உயிர்கள் தாமும் வாழும் நாகரிக மேம்பாடு குறித்த வகையால் மக்களினத்தவர்களது மிகச் சிறந்த வாழ்க்கை நயம் உள்ளுறையாக வைத்துக் கூறியபடி. 365

2264. பொருளுரை.. மன்றலங்கழனி... எதிர்கொள - மணமுடைய அழகிய வயல்கள் சூழ்ந்த திருநல்லூரில் வாழும் மறைவல்ல அந்தணர்கள், நெருங்கிய மங்கலச் செயல்களின் நிறைவுடனே எதிர்கொள்ள; பொன்தயங்கு.... அணைந்தருளினார் - பொன் விளங்கும் ஒளியினையுடைய முத்துச் சிவிகையின் மேலே அழகு பொருந்தச் சென்று அணைந்தருளினார்; சிரபுரச் செம்மலார் - சீகாழிப் பெருந்தகையாராகிய பிள்ளையார்.

விளக்கவுரை... மன்றல் அங்கழனி - கழனி - வயல்கள்; மன்றலாவது தாமரை ஆம்பல் நீலம் முதலிய பூக்களின் மணம்.

துன்றும் மங்கல வினைத் துழனி - துன்றும் - மங்கலங்களின் பெருக்கமாகிய வகையும் தொகையுங் குறித்தது; **மங்கலவினை** - நிறைகுடம் - மணிவிளக்கு - தோரணம்

2265. நித்திலச் சிவிகைமே னின்றிழிந் தருளியே
மொய்த்தவந் தணர்குழா முன்செலப் பின்செலும்
பத்தரும் பரிசனங் களுமுடன் பரவவே
யத்தர்தங் கோபுரந் தொழுதணைந் தருளினார். 367

முதலாயின. **துழனி** - முழக்கு; ஆரவாரம் என்றலுமாம். இயங்களின் முழக்கம் என்றலும் பொருந்தும்.

எதிர்கொள - செம்மலார் - அணைந்தருளினார் என்க.

பொன் தயங்குதல் - முத்துக்களைப் பொதிந்த பொன் வேலைப்பாட்டின் விளக்கம். **பொன்** - அழகுமாம்.

சிவிகையில் - சிவிகையின் மேல். **இல்** - ஏழனுருபு.

அணைந்தருளினார் - பதியினுள்ளே கோயிலை நோக்கி அடைந்தருளிய செய்தி குறித்தது. *366*

2265. **பொருளுரை...** நித்திலம்... இழிந்தருளியே - முத்துச் சிவிகையினின்றும் இறங்கியருளி; மொய்த்த... முன்செல - கூட்டமாகிய மறையவர் குழாம் முன்னே செல்ல; பின் செலும்... பரவவே - பின்னே செல்கின்ற அடியவர்களும் பரிசனங்களும் தம்முடன் கூடிப் பரவிவர; அத்தர்... அணைந்தருளினார் - இறைவரது திருக்கோபுரத்தினை வணங்கித் திருக்கோயிலினுள் அணைந்தருளினார்.

விளக்கவுரை.... அணைந்தருளினார் - ஈண்டுக் கோபுரந் தொழுதபின் திருக்கோயிலினுள்ளே அடைந்தருளிய செய்தி குறித்தது.

மொய்த்த அந்தணர்குழாம் - மொய்த்த - பிள்ளையாரைச் சூழ்ந்து கொண்ட செயலின் செறிவினையும், **குழாம்** - கூட்டத்தின் தொகைப் பெருக்கத்தையும் குறித்தன.

அந்தணர்குழாம் முன்செலப் பின்செலும் பத்தரும் பரிசனங்களும் உடன் பரவ - அந்தணர் குழாம் மொய்த்ததாயினும் அவர் முன்னே சென்றனர் என்றும், சிறப்பும் பிள்ளையாருக் கணுக்கராம் தகுதியும்பற்றிப், பத்தர் பின்னே பிள்ளையாருடன் பரவினர் என்றும் கூறிய குறிப்புக் காண்க. **பத்தர்** - அடியவர்; **பரிசனம்** - பிள்ளையாருக் கணுக்கராய்ப் பணிபுரிவோர். **அந்தணர் குழாம்** என்றவர் எதிர்கொண்டவர்கள்.

கோபுரம் தொழுது - தூலலிங்கமாகிய கோபுரத்தைச் சிவனெனவே கண்டு தொழுதபின்பே திருக்கோயிலினுட் புகும் மரபும் விதியும் குறிக்கப்பட்டன.

தொழுது அணைந்தருளினார் - "ஆலயந் தானு மரனெனத் தொழுமே" என்று அணைந்தோர் தன்மையினை ஞானசாத்திரம் (போதம் 12-சூத்) கூறும் பகுதி இங்கு நினைவுகூர்தற்பாலது.

பரவவே - அணிமையாகிய இடமிகுதியும் பரவிச் செல்ல என்ற குறிப்புமாம். *367*

2266. வெள்ளிமால் வரையைநேர் விரிசுடர்க் கோயிலைப்
பிள்ளையார் வலம்வரும் பொழுதினிற் பெருகுநீர்
வெள்ளவா னந்தமெய் பொழியமே லேறிநீர்
துள்ளுவார் சடையரைத் தொழுதுமுன் பரவுவார், 368

2266. பொருளுரை... வெள்ளி மால்வரையை.... பொழுதினில் - திருக்கயிலை மாமலையை ஒத்து விளங்கும் ஒளியினையுடைய அத்திருக் கோயிலைப் பிள்ளையார் வலமாக வரும்பொழுதில்; ஆனந்த வெள்ளம் மெய் பொழிய - ஆனந்தக் கண்ணீர் பெருகி வழிந்து திருமேனி யெங்கும் பொழிய; மேல் ஏறி - அந்த மாடக்கோயிலின் மேலே ஏறிச் சென்று; நீர்துள்ளும்.... பரவுவார் - கங்கைநீர் குதித்துப் பாய்வதற்கிடமாகிய சடையினையுடைய இறைவரை வணங்கித் திருமுன்பு நின்று துதிப்பாராகி,

விளக்கவுரை... வெள்ளிமால் வரை - கயிலைமலை; வெள்ளி - வெண்மை நிறங் குறித்தது; "விரிசுடர்" என்ற குறிப்பும் காண்க. மால் - பெரிய; 1127-ம் பிறவும் பார்க்க.

வெள்ளிமால் வரையைநேர் விரிசுடர்க் கோயில் - பெருமாடக் கோயிலாதலின் வரையை நேர் என்றார். மெய்யுவமம். சுடர்விரிதலிற் றொழிலுவமமுமாம். இறைவரை மேற்கொண்டு பேரின்பம் பயத்தற்கிடமாந்தன்மை பற்றியதாகக் கொண்டு பயனுவமம் என்றலுமாம். விரிசுடர் - புறவொளியும் ஞானவொளியுமாம்;

கோயிலை வலம் வருதல் - கோபுரத்தினுட்புக்கு உள்ளே கீழே வலமாக வருதல். மேல் ஏறி வணங்குதல் மேற்கூறப்படுதல் காண்க.

பெருகும் ஆனந்த வெள்ளம் - என்க; வெள்ளம் - ஆனந்தத்தால் வரும் கண்ணீரின் பெருந்தாரை குறித்தது.

மெய் பொழிய - மெய்ம்முழுதினும் பொழிந்து நனைக்க. ஏழனுருபு தொக்கது. மேல்ஏறி - பிள்ளையார் வரையை நேர்மாடக் கோயிலின் மேலே ஏறிச் சென்று; இதற்கு இவ்வாறன்றிக் கங்கை நீர் மேலே இவர்ந்து ததும்பும் என்றுரைத்தனர் முன் உரைகாரர்கள்; அது பொருந்தாமை யுணர்க.

பரவுவார் - பாடினார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. பரவுவார் - முற்றெச்சம்.

விரைநிகர் - பெருகு சீர் என்பனவும் பாடங்கள். 368

2267. பொருளுரை... பரவு... பாடினார் - துதிக்கும் சொல் நிறைந்த திருப் பதிகத்தினைத் திருமுன்பு பாடியருளினாராய்; பரிவுதான்வர அயர்த்து உருகும் நேர் மனனுடன் புறம் அணைந்து - மிக்க அன்பு மேலிட்டமையினாலே தம்மையும் மறந்து உருகும் நேர்மை பெற்ற திருமனத்தினுடனே திருக்கோயிற் புறத்திலே அணைந்து; அரவு உடை... பெருமையால் - பாம்புகளைப் பூண்ட சடையினையுடைய இறைவரது பெருந் திருவருளினைப் பெறுகின்ற பெருமையினாலே; விரவும்... மேவினார் - இறைவர் பொருந்த வீற்றிருக்கும் அத்திருப்பதியில் விரும்பி எழுந்தருளியிருந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2267. பரவுசொற் பதிகமுன் பாடினார் பரிவுதான்
வரவயர்த் துருகுநேர் மனனுடன் புறமணைந்
தரவுடைச் சடையர்பே ரருள்பெறும் பெருமையால்
விரவுமப் பதியமர்ந் தருளியே மேவினார். 369

விளக்கவுரை– *பரவுசொல்* - இறைவர் புகழ்களைப் பரவும் சொற்கள். புகழ் பரவுதற் கேதுவாகிய சொல் என்றும், உலகம் போற்றும் சொல் என்றும், உரைக்கவும் நின்றது.

பரிவுதான்வர அயர்த்து - *பரிவு* - முதிர்ந்தது முடுகிய அன்பு; *தான்* - தானாகவே; தானே; முயற்சியின்றி;

அயர்த்தல் - மறத்தல்; இங்குத் தம்மை மறந்த நிலை குறித்தது.

உருகும் நேர்மனன் - தம்மை அயர்ந்த நிலையில் பாடாணம் போற்கிடவாது இறைவரது தன்மையினை உட்கொண்டு உருகுதல் பெற்றமையால் நேர்ச்சியுடைய மனம். கண்ணப்ப நாயனார் சரிதம் இங்கு நினைவு கூர்தற்பாலது.

சடையர் பேரருள் பெறும் பெருமையால் விரவும் அப்பதி - உலகுயிர்கள் சடையாரது பேரருளைப் பெறும் பெருமையாலே பொருந்திய அப்பதி என்க. பேரருளைப் பெறும் வகையால் உலகர் வந்து அடையும்படி சடையார் தேற்றமாக நின்ற என்பதாம். "தேற்றப் படத்தைரு நல்லூ ரகத்தே சிவனிருந்தான்"; "வடபாற் கயிலையுந் தென்பானல் லூருந்தம் வாழ்பதியே" என்பனவாதி திருவாக்குக்களும், தலவிசேடமும் இங்கு நினைவு கூர்தற்பாலன. ஆளுடைய அரசுகளுக்குத் திருவடி சூட்டிய அருளிப்பாடும் கருதுக. பதிகம் 5-ம் பாட்டும், பதிகப் பயனும் பார்க்க. பேரருளைப் பிள்ளையார் பெறும் என்றுரைப்பாருமுண்டு. 369

திருநல்லூர்

திருச்சிற்றம்பலம் பண் - சாதாரி

வண்டிரிய விண்டமலர் மல்குசடை தாழவிடை யேறிப்
பண்டெரிகை கொண்டபர மன்பதிய தென்பரத னயலே
நண்டிரிய நாரையிரை தேரவரை மேலருவி முத்தம்
தெண்டிரைகண் மோதவிரி போதுகம ழுந்திருநல் லூரே. (1)

திரைகளிரு கரையும்வரு பொன்னிநில வுந்திருநல் லூர்மேற்
பரசுதரு பாணியைந லந்திகழ்செய் தோணிபுர நாதன்
உரைசெய்தமிழ் ஞானசம் பந்தனிசை மாலைமொழி வார்போய்
விரைசெய்மலர் தூவவிதி பேணுகதி பேறுபெறு வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- (1) உலகுயிர்கள் தமது பேரருள் பெறும் பெருமையால் இறைவர் விரவும்பதி திருநல்லூர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- வண்டு இரிய - வண்டுகள் மொய்த்துப் பறக்க; **விண்ட** - வாய்விரிந்த; மலர் - கொன்றை; "ஏடுலவு கொன்றை" (3) **விடை ஏறுதல்** - அனுக்கிரகத்தையும், எரிகை கொள்ளுதல் சங்காரத்தையும் குறிக்கும்; "எரி கையதனில் ஏந்தி" (4); **நண்டு** - நாரை - அருவி - மருதப் பொருள்கள்; (2) **பல்வளரும்** - கூரிய நீண்ட பல்; (3) **சேடு** - ஒளி; (4) மிடறர் - காடர் - **அதளர்** - **அரவர்** - இறைமைத் தன்மைகள்; மேற்பாட்டுக்களிலும் இவ்வாறே; மணநாற நுகர்ந்த இன்பத்தால் மயில் ஆலுதலும், மயில் ஆலுதல் கண்ட இன்பத்திற்கு ஈடாகப் பரிசு கொடுப்பன போன்று மந்தி கனி சிந்துதலும் நிகழ்வனவாகக் கூறியது தொடர்நிலைத் தற்குறிப்பேற்ற அணிநயம்; **மதுஆர்தல்** - இன்பப் பொதுமை குறித்தது; (5) **விழமல்க.. இனியவர்கள் சேர்** - விழாச் சேவித்தலால் வினை நீங்கும்; வினை நீங்க மனம் இனிமை பெறும்; இவ்வாற்றை அறிந்து உயிர்கள் சேரும் இடம்; "பேரருள்பெறும் பெருமையால் விரவும்" (2267) என்ற கருத்து; **முதலாளர்** - முதன்மையை ஆள்பவர்; **இடிகொள்... தொழிலாளர்** - விழாவில் முழவினது இன்றியமையாச் சிறப்பும், அதனை முழக்குதலிற் செய்தொழில் விசேடமும் குறித்தது; (6) **அடையாளம்.. உற்றுணர்வது** - **இருள்** - கேவல நிலை; "இருளிடத் துன்னைச் சிக்கெனப் பிடித்தேன்" (திருவா); இருளாதலின் கண்டு கொள்ளும் அடையாளம் வேண்டப்படுவதென்பது நயம்; கட்புலனுக்கு இருள் தடையாதலின் செவிப்புலனால் அறிந்து கொள்ளப் பூதம்பாடும் இசை துணையாகும் என்றதொரு நயமும் காண்க. "திருச்சிலம் போசை யொலிவழி யேசென்று" (திருவுந்தி) என்ற கருத்து. **உணர்வது** - உயிர்கள் உணரும் பொருட்டுத் தாமுணர்வர். **நெருக்குதல்** - மிகுதியாதல். (7) **தங்கு அரவமாக உழிதந்து** - ஐயம்கேட்டுப் பெறும் சத்தம் கேட்கும்படி உழன்றும்; "அஞ்சொலீர் பலி!யென்னும்" (தேவா). (8) சீறி அவனுக்கே யருள்செயும் - கோபமும் பிரசாதமும் உடன் சேரும் இறைமைத் தன்மை; **வலம்வந்தயரும்** - **திருநல்லூரே** - என்று கூட்டுக; **வலம் வந்து அயர்தல்** - வலம் வருதலால் இளைத்தல்; கால்களின் வலிமை குறையும் அளவும் வலம் வருநிலை குறித்தது; (9) **கோதில் புகழ்** - "பொருள் சேர்புகழ்" (குறள்); (10) **ஓவியதவத்தர்** - நீக்கப்பட்ட - நூல்களால் விலக்கப்பட்ட - தவம்; **ஏறும்** - பாகம் பொருந்திய; **மனவார முடையார் குடிசெய்** - 2267 பாட்டின் கருத்து; **வாரம்** - அன்பு.

திருநல்லூர் - தலவிசேடம் தொகுதி I பக்கம் 940 பார்க்க.

2268. பொருளுரை.. அன்ன....அமர்ந்தருளி - அத்தன்மையிலே அப்பதியின்கண் வீற்றிருந்தருளி; மின்நெடும்...வணங்கி - மின்போன்ற நீண்ட சடையினையுடைய இறைவரது திருவடிகளை விருப்பினோடும் பணிந்து; பன்னும்...பாடி - சொல்கின்ற இனிய இசையுடன் கூடிய திருப்பதிகங்களையும் பல முறையும் பாடி யருளி; நன்நெடும்.. நயந்தார் - நல்ல நீண்ட பெரிய மறையவர்கள் தொழாநிற்ப, விரும்பி எழுந்தருளியிருந்தனர்;

விளக்கவுரை.. **அன்னதன்மை** - அருள்பெறும் பெருமையால் விரவும் அப்பதியின் தன்மை என்றும் கூட்டி உரைக்க நின்றது.

வேறு

2268. அன்ன தன்மையி லப்பதி யினிலமர்ந் தருளி
மின்னெ டுஞ்சடை விமலர்தாள் விருப்பொடு வணங்கிப்
பன்னு மின்னிசைப் பதிகமும் பலமுறை பாடி
நன்னெ டுங்குல நான்மறை யவர்தொழ நயந்தார். 370

2269. நீடு மப்பதி நீங்குவார் நிகழ்திரு நல்லூர்
ஆடு வார்திரு வருள்பெற வகன்றுபோந் தங்கண்
மாடு முள்ளன வணங்கியே பரவிவந் தணைந்தார்
தேடு மாலயற் கரியவர் திருக்கரு காவூர். 371

பன்னும் இன்னிசைப் பலமுறைப் பதிகமும்பாடி *- என்க. பல பதிகங்கள் என்பதாம்; இவை "கொட்டும் பறை சீரால்" என்ற குறிஞ்சிப் பண் பதிக முதலாயின. பல என்றமையால் இஃதொன்றொழித் தொழிந்த ஏனைய பதிகங்கள் சிதலரித் தொழிந்தன போலும்!*

நல் - நெடும் குலம் *- என்ற அடைமொழிகள் மறையவர்களின் சிறப்புப் பண்பு குறித்தன.*

நயத்தல் *- விரும்பி எழுந்தருளியிருத்தல்.*

பாடி - நயந்தார் *என்று முன்கூறியபடி பாடுதலைப் பிள்ளையாரது செயலாகக் கூட்டி யுரைத்தலன்றிப்,* ***பாடி - மறையவர் - தொழ*** *- என்று பதிகங்களைப் பல முறையும் பாடிப் பயின்று மறையவர்கள் தம்மைத் தொழ என்று, பாடுதலை மறையவர் செயலாகக் கொண்டு உரைத்தலுமாம். 93-99-1020 பாட்டுக்களின் குறிப்புக்கள் பார்க்க.*

மின்னு செஞ்சடை *- என்பதும் பாடம்.* *370*

2269. பொருளுரை... ***நீடும்... போந்து*** *- நீடுகின்ற அத்திருப்பதியினின்றும் நீங்குவாராகிய பிள்ளையார், விளங்கும் அந்தத் திருநல்லூரில் எழுந்தருளிய ஐந்தொழிற் பெருங்கூத்தினை ஆடுகின்ற இறைவரது திருவருளினைப் பெற்றதனால் அதனை நீங்கிப் புறப்பட்டுச் சென்று;* ***அங்கண்...பரவியே*** *- அவ்விடத்திலும் பக்கத்திலும் உள்ளனவாகிய திருப்பதிகளை வணங்கிக் கொண்டே;* ***தேடும்....திருக்கருகாவூர்*** *- தேடும் மாலுக்கும் அயனுக்கும் அரியவராகிய இறைவரது திருக்கருகாவூரினில்;* ***வந்தணைந்தனர்*** *- வந்து சேர்ந்தனர்.*

விளக்கவுரை... நீடுதல் *- நிலைத்தல் - அருள் பெருகுதல்.* ***நிகழ்தல்*** *- நிலைபெற விளங்குதல்.*

ஆடுவார் - ஆடுதல் *- ஐந்தொழிற் பெருங்கூத்து இயற்றுதல்.*

அருள்பெற அகன்றுபோய் - பெற *- பெற்றதனால்.*

அங்கண் மாடும் உள்ளன - மாடு *- பக்கம்;* ***உள்ளன*** *- உள்ளனவாகிய பதிகள்.*
371

2270. வந்து பந்தர்மா தவிமணங் கமழ்கரு காவூர்ச்
சந்த மாமறை தந்தவர் கழலிணை தாழ்ந்தே
"அந்த மில்லவர் வண்ணமா ரழல்வண்ண"மென்று
சிந்தை யின்புறப் பாடினார் செழுந்தமிழ்ப் பதிகம். 372

2270. பொருளுரை— வந்து...தாழ்ந்தே - அணைந்துவந்து பந்தரில் படர்ந்தேறிய முல்லைகள் மணம் கமழ்தற்கிடமாகிய திருக்கருகாவூரில் எழுந்தருளிய சந்தங்களையுடைய பெருமறைகளை யளித்த இறைவரது திருவடிகளை வணங்கி; அந்தம்... என்று - என்றும் அழியாது நித்தியராகிய இறைவரது வண்ணமானது பொருந்திய தீயின் வண்ணமேயாம் என்ற கருத்தும் முடிபும் உடையதாக; செழுந்தமிழ்ப் பதிகம் - செழிய தமிழ்ப் பதிகத்தினை; சிந்தை இன்புறப் பாடினார் - மனம் இன்பமடையப் பாடியருளினார்.

விளக்கவுரை— **பந்தர்மாதவி மணம்கமழ்** - முல்லை இப்பதிக்குத் தலவிருக்கமாதல் குறிப்பு; (பதிகம் 2-4-5-7-10); பந்தரிற் படர்ந்த மாதவி; **மாதவி** - முல்லை விசேடம்; **மணங்கமழ்** - என்றதனால் பிள்ளையார் இங்கு எழுந்தருளியது முல்லை பூக்கத் தொடங்கும் இளவேனிற் காலமாதலும் குறிப்பு. அடுத்துப் பின்னர் "முதிர்ந்தது வேனில்" என 2282-ல் வருதலும் காண்க.

சந்தமாமறை - **சந்தம்** - சந்தசு என்பர்; சுரங்கள்; **மா** - அனந்தமாய்ப் பெருகும். **சந்தம்** - புகழ் என்று கொண்டு உயிர்க்குறுதியாகி அருள்பொதிதலுள்ள புகழ் என்றலுமாம்.

"அந்தமில்லவர்...வண்ணம்" என்று - இது பதிகக் கருத்தும், குறிப்பும், மகுடமுமாம். **ஆரழல்** - அழலின் தன்மை பொருந்திய. **"அழலும் அழல்"** (பதிகம்)

சிந்தை இன்பு உற - சொல்வார் - பயில்வார் - கேட்டார்களின் மனமாசு நீங்கி இன்பமடையும்படி; வண்ணம் ஆரழல் வண்ணமென்றதனால் துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமும் குறிக்கப்பட்டமை காண்க.
372

திருக்கருகாவூர்

திருச்சிற்றம்பலம் பண் - கௌசிகம்

முத்தி லங்குமுறு வல்லுமை யஞ்சவே
மத்த யானைமறு கவ்வுரி வாங்கியக்
கத்தை போர்த்தகட வுள்கரு காவூரெம்
மத்தர் வண்ணம்மழ லும்மழல் வண்ணமே. (1)

கலவ மஞ்ஞை யுலவுங் கருகாவூர்
நிலவு பாட லுடையான்ற னீள்கழல்
குலவு ஞானசம் பந்தன செந்தமிழ்
சொலவல் லாரவர் தொல்வினை தீருமே. (11)

திருச்சிற்றம்பலம்

2271. பதிக வின்னிசை பாடிப்போய்ப், பிறபதி பலவும்
நதிய ணிந்தவர் கோயில்க ணண்ணியே வணங்கி
மதுர முத்தமிழ் வாசக ரணைந்தனர் மன்று
ளதிர்சி லம்படி யார்மகி ழுவளிவ ணல்லூர். **373**

பதிகக் குறிப்பு:- *முன் 2270-ல் உரைக்கப்பட்டது.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1) மறுக - சிதைய; கத்தை - தோல்;* ***அழலும்*** *- எரியும்; "எரிகின்ற ஞாயிறு போன்றது மேனி" (பொன். அந்) (2)* ***விமுதம்*** *- நீக்கம்;* ***கமுதம்*** *- மணம்; (3)* ***கழக*** *- அடிமைப் பண்பின் நிகழ; (4)* ***செடியர்*** *- தீயவர்;* ***கடி*** *- மணம்; (5)* ***மையல்*** *- பிறவிக் கேதுவான மயக்கம். "பொருளல்லவற்றைப் பொருளென், றுணரும் மருள்'' (குறள்);* ***மையலின்றி*** *- ஏனையவை பொருளல்ல; இறைவனே பொருளென்றுணர்ந்து;* ***செய்ய உள்ளம்*** *- செம்மை (முத்தி) விருப்பமிக்க உள்ளம்;* ***மிக நல்கிய செல்வம்*** *- மிகவும் கொடுக்கும் செல்வப் பெருக்கு; (6)* ***ஆர*** *- பொருந்த; ஆசைதீர; (7)* ***மௌவல்*** *- முல்லை; "கமுதமுல்லை" (2) "கடிகொள் முல்லை" (4) "கைதன் முல்லை" (5); "கார்த்தண் முல்லை" "மாதவி" (2270);- (10)* ***தீர்த்தம்*** *- தூய்மை.*

தலவிசேடம் :- ***திருக்கருகாவூர்*** *- தொகுதி III பக்கம் 448 பார்க்க. (ஐயம்பேட்டை நிலயத்தினின்றும் தென்கிழக்கு - 4 நாழிகை.*

2271. ***பொருளுரை...*** *பதிக .இன்னிசை பாடிப்போய் - பதிகத்தின் இனிய இசையினைப் பாடிச் சென்று; பிறபதி...வணங்கி - பிற பதிகள் பலவற்றின் கண்ணும் கங்கை சூடிய இறைவரது திருக்கோயில்களைப் பொருந்தியே வணங்கி; மன்றுள்... அவளிவணல்லூர் - திருவம்பலத்தில் கூத்தாடுகின்ற அதிரும் சிலம்பினையுடைய இறைவர் மகிழ்ந்தெழுந்தருளிய திருஅவளிவணல்லூரினை; மதுர முத்தமிழ்.... அணைந்தார் - இனிமையுடைய முத்தமிழும் பொருந்திய திருவாக்கினையுடைய பிள்ளையார் அணைந்தருளினர்.*

விளக்கவுரை... ***பதிக இன்னிசை பாடினார்*** *- முன்பாட்டில் "பாடினார் செந்தமிழ்ப் பதிகம்" என்ற பதிகத்தினை இசை பொருந்திய தன்மையில் மீண்டும் பாடியருளினார் என்பதாம். இசை பாடுதலாவது "பதிகவிசை, யாழின்முறை மையினிட்டே யெவ்வுயிரு மகிழ்வித்தார்'' (2037) என்றும், ''சொற்றமிழ்மா லையினிசைகள் சுருதி யாழ் முறைதொடுத்தே, யற்றைநாட் போலென்று மகலாநண் புடனமர்ந்தார்" (2039) என்றும் வரும் குறிப்புக்களின்படி மீண்டும் இசைத்தன்மை விளங்கப்பாடுதல்.*

மதுர முத்தமிழ் வாசகர் *- மதுரம் - தமிழுக்கு இயற்கையடைமொழி; முத்தமிழ் மதுரவாசகர் என்று கூட்டி வாசகத்துக்குச் சிறப்படைமொழி யாகக் கொள்வதுமாம். இருவழியும் மதுரமென்பது அறிவின்ப மாத்திரையானன்றிப் பேரின்பமாகிய பெரும்பயனின்பமும் குறித்தது.*

2272. மன்னு மப்பதி வானவர் போற்றவு மகிழ்ந்த
தன்மை யார்பயில் கோயிலுட் டம்பரி சுடையார்
என்னு நாமமு நிகழ்ந்திட வேத்திமுன் னிறைஞ்சிப்
பன்னு சீர்ப்பதி பலவுமப் பாற்சென்று பணிவார்; 374

அதிர்சிலம்பு அடியார் - அடிச்சிலம்பு அதிர்தல் கூத்தாடலானன்றி இயலாமையால் ஆடும் திருஅடியினையுடையார் என்ற பொருள்தந்து நின்றது. 373

2272. பொருளுரை... மன்னும்... கோயிலுள் - நிலைபெற்ற அத்திருப்பதியில் தேவர்களும் துதிக்க மகிழ்ந்து வீற்றிருக்கும் தன்மையினையுடைய இறைவரது திருக்கோயிலினுள் புகுந்து; தம்பரிசு உடையார்....இறைஞ்சி - தம்பரிசுடையார் என்ற திருநாமமும் வெளிப்பட நிகழும்படியாகவைத்துத் துதித்துத் திருமுன்பு வணங்கி; பன்னுசீர்... பணிவார் - சொல்கின்ற சிறப்புடைய பதிகள் பலவற்றிலும் மேலேசென்று பணிவாராகி;

விளக்கவுரை.... **வானவர் போற்றவும் மகிழ்ந்த தன்மையார்** - ஏனை மண்ணுலகத்தவர்கள் போற்றுதலேயன்றி வானவர் போற்றவும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

"தம்பரிசுடையார்" என்னும் நாமமும் நிகழ்ந்திட ஏத்தி - "தம்பரிசுடையார்" என்ற பெயரும் விளங்க அறியும்படி பதிகத்துள் வைத்துத் துதித்து; "தம்பரிசி னோடு சுடு நீறுதட வந்திடப மேறி" (1) என்று பதிகம் முதற்பாட்டில் விளக்கமாய் நிகழ்ந்திட அருளியது காண்க. **தம்பரிசுடைமையாவது** இயல்பாகவே பாசங்களினீங்குதல், அளவிலாற்ற லுடைமை, பேரருளுடைமை, முற்றறிவுடைமை முதலாய எண் குணங்களுந் தமக்கே உரிமையுடைமை. இப்பதியில் இறைவர்க்கு இப்பெயரும் வழங்கும்.

நாமமும் - தன்மைகளேயன்றி நாமமும் என இறந்தது தழுவிய எச்சவும்மை.

பணிவார் - பணிந்து - போற்றி - வணங்கியே - அணைந்து - (2273) - போந்து - பணிந்தே - அணைந்தார் (2274) என்று மேல் வரும் இரண்டு பாட்டுக்களுடன் கூட்டி முடிக்க.

பன்னுதல் - பலவாற்றானும் பாராட்டுதல். பதிகம் -4-5-6 பாட்டுக்கள் பார்க்க. 374

2273. பொருளுரை... பழுதில்சீர்... பணிந்து - குற்றங்களை யில்லையாக்கும் சிறப்பினையுடைய திருப்பரிதி நியமத்தினை வணங்கி; அங்கு...போற்றி - அங்கு எழுதும் வேதமாகிய திருப்பதிகத்திசையினைப் பாடித் துதித்தருளி; முழுதுமானவர்... வணங்கியே - எல்லாமாயிருப்பவராகிய சிவபெருமானது திருக்கோயில்களை வணங்கியே; முறைமை... அணைந்து - முறைமையினின்றும் வழுவாத சிறப்புடைய திருப்பூவனூரை வணங்கி வந்து சேர்ந்து;

2273. பழுதில் சீர்த்திருப் பரிதிநன் னியமமும் பணிந்தங்
கெழுது மாமறை யாம்பதி கத்திசை போற்றி
முழுது மானவர் கோயில்கள் வணங்கியே முறைமை 375
வழுவில் சீர்த்திருப் பூவனூர் வணங்கிவந் தணைந்து,

2274. பொங்கு காதலிற் போற்றியங் கருளுடன் போந்து
பங்க யத்தடம் பணைப்பதி பலவுமுன் பணிந்தே
எங்கு மன்பர்க ளேத்தொலி யெடுக்கவந் தணைந்தார் 376
அங்க ணர்க்கிட மாகிய பழம்பதி யாவூர்.

---

*விளக்கவுரை... **பழுதில்சீர்** - பழுது - மலம்; இல் - இல்லையாகச் செய்யும்; **சீர்** - சிறப்பு. "ஏர்கவர்ந்த கள்வர்" - "எழில் கவர்ந்த இறைவர்" என்பனவாக வரும் பதிகக் குறிப்பு; **எழில்** - ஆன்மபோதம்; **கவர்தல்** - சிவபோதத்துள் அடங்கி நிற்கச் செய்தல்; "ஐயுறவில்லை பிறப்பறுத்தல்; அவலம் அடையாவே" என்ற பதிகப்பயனும் பார்க்க;*

எழுதும் மாமறைஆம் பதிகம் *- இறைவர் அருளிய மறை எழுதாக்கிளவி எனப்படும்; ஆனால் அதுவே பிள்ளையார் திருவாக்கிற் பதிகமாக வெளிப்படும்போது எழுதும் மறையாயிற்று. ஒலிவடிவின் மட்டில் அமைந்து நின்ற மறையே வரிவடிவினும் வந்து அமையும் சிறப்பும் குறித்தது. **மாமறை - மா** என்ற சிறப்பு அடைமொழியும் அது குறித்தது.*

முழுதும் ஆனவர் *- "உலகெலாமாகி" (சித்தி - 2-1); ஆதல் ஈண்டு நிறைதல் குறித்தலுடன் தம் பரிக்கிரக சத்தியாகிய மாயையினின்றும் உலகங்களைத் தோற்றுவித்தலும் குறித்தது.*

முறைமை *- சென்று சேரும் முறையிலே. **முறைமை - வணங்கி** என்று கூட்டுக. **முறைமை வழுவில்** - என்று கிடக்கை முறையிற் கூட்டி நான்முறை மரபினின்றும் சிறிதும் வழுவாத என்றுரைப்பினுமமையும்;*

கோயில்கள் *- இவை பாதாளேச்சுரம் முதலாயின என்பது கருதப்படும்.*

375

நான்மறை - வழுவிலார் *- என்பனவும் பாடங்கள்.*

2274. பொருளுரை... பொங்கு...போந்து - வளர்கின்ற விருப்ப மிகுதியினால் துதித்து அவ்விடத்தினின்றும் அருள்பெற்றுச் சென்று; பங்கயத்தடம்....பணிந்தே - தாமரைகளையுடைய பெரிய வயல்கள் சூழ்ந்த பதிகள் பலவற்றையும் முன்னர்ப் பணிந்து கொண்டே; எங்கும்...வந்து - எங்கும் அன்பர்கள் துதித்து ஒலிபெருக வாழ்த்தியிட வந்து; அங்கணர்க்கு...ஆவூர் - சிவபெருமான் அமரும் இடமாகிய பழம் பதியாகிய திருஆவூரினை; அணைந்தனர் - சேர்ந்தனர்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

*விளக்கவுரை... **பொங்கு காதல்** - தணிவின்றி மேன்மேலும் அதிகரிக்கும் அன்பின் பெருக்கு.*

போற்றி - இப்பதிக்குப் பிள்ளையார் பதிகம் கிடைத்திலது!

ஏத்து ஒலி எடுக்க - வாழ்த்தி எதிர்கொள்ளும் ஆரவாரம் - துழனி - மேலோங்கிப் பெருக; எடுத்தல் - மிகுதல்.

பழம்பதி - பழமையாவது இறைவர் வெளிப்படையாக நீண்ட காலம் வீற்றிருத்தல்.

தடம்பணை - தடாகங்களையும் பணை (வயல்)களையும் உடைய என்றலும், தடம் - (பெரிய) வயல்களை உடைய என்றலும் ஆம்.

அருளுடன் - அருள் விடைபெற்று.

பதிபலவும் - இவை திருவெண்ணியூர், திருவரதைப் பெரும்பாழி முதலாயின என்பது கருதப்படும்.

376

திருஅவளிவணல்லூர்

திருச்சிற்றம்பலம் **திருவிராகம்** **பண் - சாதாரி**

கொம்பிரிய வண்டுலவு கொன்றைபுரி நூலொடு குலாவித்
தம்பரிசி னோடுசுடு நீறுதட வந்திடவ மேறிக்
கம்பரிய செம்பொனெடு மாடமதில் கல்வரைவி லாக
வம்பெரிய வெய்தபெரு மானுறைவ தவளிவண லூரே.

(1)

ஆனமொழி யானதிற லோர்பரவு மவளிவண லூர்மேற்
போனமொழி நன்மொழிக ளாயபுகழ் தோணிபுர வூரன்
ஞானமொழி மாலைபல நாடுபுகழ் ஞானசம் பந்தன்
தேனமொழி மாலைபுகழ் வார்துயர்க டையதிலர் தாமே.

(11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- 2272-ல் ஆசிரியர் காட்டியருளினர். மண்ணவரும் வானவரும் போற்றுதல் பதிகம் 4-6 பாட்டுக்களுட் காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **கொம்பிரிய வண்டுலவு கொன்றை** - கொன்றை முழுதும் அலங்கல் போன்ற மலர்க் கொத்துக்களாக நிற்க அவை முழுதும் வண்டுகள் மொய்த்து மாலைபோலத் தொங்குதலால் கொம்புகள் தம் நிலையினின்றும் விலகுகின்றன என்பது; **புரிநூல்** - பூணூல்; **தம்பரிசினோடு** - இறைவர் இப்பதியில் **தம்பரிசுடையார்** எனப் பெறுவர். (2272); **தடவந்து** - தடவி - பூசி; **கம்பரிய மதில்** - **கம்** - மேகம்; மேக மண்டலத்தினுள் பறந்துலாவும் பெரிய மும்மதில்கள்; மதில் - எரிய வரைவில்லாக - அம்பு எய்த என்று கூட்டுக. (2) **ஓமை** - பாலைக்குரிய உகா என்னும் ஒருவகை மரம்; **கூகை** - பாலைப் புள்; கூகை ஓமையனவாக, கள்ளியனவாக, வாகையனவாகத் தங்கி முரலும் ஓசை; **ஈமம்** - சுடுகாடு; **ஆமையொடு** - ஒடு என்பது ஒடு என நின்றது. **ஆமை** -

ஆமையோடு என்று கொண்டு, ஒடு - (உடன்) மூன்றனுருபாக வைத்துரைப்பினுமாம். (4) **பிணியும்.. என்று** - இது அடியார் பேணிப் பணியும் வகை. பிணி - கேடு - **தோற்றம் இல்லாமை** - இறைமைக் குணங்கள். உலகு - மண்ணுலகருள்; **துணிபுடைய - துணி** - துணித்தல். துணித்தலால் பெறப்பட்ட தோல்; துணி (ஆடை)யாகத் தோலினை உடைய என்றலுமாம்; (5) **குழலின் - இன்** - உவமப் பொருளில் வந்த ஐந்தனுருபு. குழல் போல. **கழல்** - திருவடி; **"கடவுள்" என்று அமரர் கூடித் தொழலும்** வழிபாடுமுடையார் - "வானவர் போற்றவும்" (2274); "அமரர் நின்று தொழுதேத்த" (6) பாட்டும் பார்க்க. (6) **துஞ்சல்** - சாதல்; கண்ணிமையாமையின் துயில் என்றலுமாம்; (7) **கூடு அரவமொந்தை** - பேரொலி செய்யும் மொந்தை என்னும் இயம்; **குழல் யாழ்** - இன்னிசை இயங்கள்; (8) **"இப்பெருவரையின்.. உளனோ?"** என - இஃது இராவணன் எண்ணியது. (9) **பொறி** - புள்ளி. **வெறி** - இன்ப மேலீடு; **வரிய** - வரிகளையுடைய; (10) **மீன்கள் கவர்வார் - புத்தர்; வெயினின் றடிசில் உள்கிவருதல்** - அமணகுருமார் வழக்கு; **பழி அருகினார்** - பழியினால் குறைவுபட்டவர்; (11) **ஆனமொழி** - மறை. **போன** - புகுந்த; **தேன** - தேன்போன்ற.


தலவிசேடம்:- **திருஅவளிவணல்லூர்** - காவிரியின் தென்கரையில் 100வது பதி. இப்பதியின் இறைவரைப் பூசிக்கும் ஆதிசைவரது பெண்களிருவருள் மூத்தவளை மணந்தவர் தீர்த்தயாத்திரை சென்றனர்; சென்றபின் அவள் வைசூரி நோயினால் உருவும் நிறமும் மாறிக் கண்ணுமிழந்தனள்; அவளுக்கிளைய பெண் மணம் செய்யப் பெற்றுப் பருவமடைந்திருந்தனள்; தீர்த்தயாத்திரையிலிருந்து திரும்பியவர் இவ்விருவருள் இளையவளே தம் மனைவி என்றும், மூத்தவளைத் தம் மனைவி என்று சொல்லித் தம்மை ஏமாற்றுகின்றனர் என்றும் வழக்கிட்டனர்; இறைவர் வெளிப்பட்டுச் சான்று கூறி "உன் மனைவியானவள் இவளே" என்று காட்டினர்; இக்காரணத்தால் இப்பதி இப்பெயரெய்தியதென்பது வரலாறு; பின் இறைவர் அப்பெண்ணைத் தீர்த்தத்தில் மூழ்கச் செய்து இழந்த நலங்களைப் பெற நல்கினர் என்பர். இவ்வாறு திருமூலட்டான மூர்த்தியின் பின்புறம் தீட்டப்பட்டுள்ளது. "தம்பரிசுடையார்" என்ற திருநாமம் பதிகத்துக் குறித்தது இக்குறிப்பு என்பர். வரலாற்றினால் பதிப்பெயரும், பெயரால் வரலாறும் போந்து ஒன்றையொன்று ஆதரவாகப் பற்றி நின்றன என்பர். இது இராவணனுக்கு அருளிய தொடர்புடையதென்பது அரசுகள் பதிகத்தாற் கருதப்படும்; பூளைவனமாகிய திருவிரும்பூளையும், பாடலீவனமாகிய இப்பதியும், சமீ வனமாகிய திருவரதைப் பெரும் பாழியும், வில்வ வனமாகிய திருக்கொள்ளம்பூதூரும் நேர்பட, மேற்கினின்றும் கிழக்காக ஒன்றற்கொன்று அணிமையில் அமைந்துள்ள சிறப்புக் கருதத்தக்கது; வராகரும், காசிபர் முதலாயினோரும் வழிபட்ட பதி. சந்திரன், சூரியன், தீ என்றவர் பெயரால் மூன்று தீர்த்தங்கள் உண்டு; சுவாமி - **தம்பரிசுடையார்; சாட்சிநாதர்;** அம்மை - **சவுந்தரியவல்லி;** தீர்த்தம் - **சந்திர புட்கரணி;** மரம் - **பாதிரி;** பதிகம் 2;

இது கோயில் வெண்ணி நிலயத்தினின்றும் வடமேற்கில் மட்சாலை வழி. இடையில் விண்ணாற்றைக் கடந்து 5 நாழிகை யளவில் அடையத் தக்கது. சாலியமங்கலம்

பாட்டு - 2280



திருவலஞ்சுழி பிள்ளையார் கோயில்



திருவலஞ்சுழி கோபுரம் உள்பார்வை



ஏரண்ட மகரிஷி
(திருவலஞ்சுழி)




திருநாரையூர் (பின்புறமிருந்து பார்வை)


1. சுவாமி, 2. அம்மை 3. முருகப்பெருமான்,
4. நடராச விமானங்கள், 5. முன்கோபுரம்.




சிவபுரம் திருக்குளமும் கோயிலும்
பாட்டு - 2302



திருப்புள்ளமங்கை
பசுபதிகோயில் உட்பிரகாரம்
பாட்டு - 2261



திருவிடைமருதூர் மேலக்கோபுரம்
பாட்டு - 2313



குடந்தைக்காரோணம்
காசிவிஸ்வநாதர் கோயில்
பாட்டு - 2308

நிலயத்தினின்றும் வடக்கே கற்சாலை வழி 21/2 நாழிகை யளவில் களஞ்சேரிப் பாலத்தால் விண்ணாற்றைக் கடந்து ஆற்றின் வடகரையில் மட்சாலை வழி கிழக்கே நான்கு நாழிகை யளவில் அடைவது மற்றொரு வழி.

திருப்பரிதி நியமம்

திருச்சிற்றம்பலம்

பண் - பழம்பஞ்சுரம்

விண்கொண்ட தூமதி சூடிநீடு விரிபுன் சடைதாழப்
பெண்கொண்ட மார்பில்வெண் ணீறுபூசிப் பேணார் பலிதேர்ந்து
கண்கொண்ட சாயலொ டேர்கவர்ந்த கள்வர்க் கிடம்போலும்
பண்கொண்ட வண்டினம் பாடியாடும் பரிதிந் நியமமே. (1)

பையர வம்விரி காந்தள்விம்மு பரிதிந் நியமத்துத்
தையலொர் பாக மமர்ந்தவனைத் தமிழ்ஞான சம்பந்தன்
பொய்யிலி மாலை புனைந்தபத்தும் பரவிப் புகழ்ந்தேத்த
வையுற வில்லை பிறப்பறுத்தல் லவலம் மடையாவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "இரவில் புகுந்தென் எழில் கவர்ந்த இறைவர்க்கிடம் - பரவ வல்லார் வினைபாழ் படுக்கும் பரிதிநியமமே" (பதிகம் 2); "பழுதில் சீர்த்திருப் பரிதி நியமம்" (2273) என்று ஆசிரியர் இதனைக் குறித்தருளினர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **சாயலோ டேர் கவர்ந்த கள்வர்** - "இனவெள் வளைசோர என்னுள்ளங் கவர் கள்வன்" (பிள்ளையார் - முதற் பதிகம்); **எழில் கவர்தல்** - பசுத்தன்மையைக் கவர்ந்து சிவத்தன்மையை விளக்குதல். பாட்டுத்தோறும் இவ்வாறே வருதல் காண்க; "பிறப்பறுத்தல் ஐயுறவில்லை" என்றது பதிகப்பயன்; (2) **அரவு** - திரிபுர சங்காரத்தில் மலைவில்லிற் கட்டிய வாசுகியாகிய அரவு; **அம்பு** - தீயும் வாயுவும் கூடிய அம்பு; **இரவு** - கருவி யுணர்வற்றநிலை; **கருவிகளால் உணர்வு விளங்கும் சகல நிலையைப் பகல் என்பதும், கருவியுணர்வு கழன்ற நிலையை இரவு என்பதும் சைவநூன் மரபு.** **பரவவல்லார்** - பரவுதலின் அருமை குறித்தது; **நீண்முகம்** - நெடுந் துதிக்கை கொண்ட முகம்; "முகத்தது கை" (11-திருமுறை; விநா - இரட் - மா-6); **நாண்முகம்** - புதிய அருண்முகம்; நாணம் விளைக்கும் முகம் என்றலுமாம். (4) **வெஞ்சுரம்** - சுடலை; **பஞ்சுரம்** - பதிகப்பண் - பழம்பஞ்சுரம் என்ற குறிப்பு; **யாழ்** - யாழ்போல; (8) **மாசு அடையாத** - குற்றம் அடையாமற் செய்யும்; (10) **கல்** - காவிக்கல்; முன்னாளில் புத்த குருமார் கல்லாடை உடுத்தல் மரபாயிருந்தது போலும்; கல்லாடை போன்ற துவராடை என்றலுமாம்; **வளர்** - உவமவுருபு; **வளமாக** - உண்மையென்று; உறுதியென்று; **பல்வளர்** - பல் போன்ற உருவுடன் வளர்கின்ற; (11) **அரவம் விரி** - அரவின்படம் போல விரியும்;

2275. பணியு மப்பதிப் பசுபதீச் சரத்தினி திருந்த
மணியை யுள்புக்கு வழிபடும் விருப்பினால் வணங்கித்
தணிவில் காதலிற் றண்டமிழ் மாலைகள் சாத்தி
யணிவி ளங்கிய திருநலூர் மீண்டும்வந் தணைந்தார். 377

தலவிசேடம்:- திருப்பரிதி நியமம் - காவிரிக்குத் தென்கரையில் 103-வது தலம்; சூரியன் பூசித்துப் பேறுபெற்ற காரணம்பற்றி இப்பெயர் பெற்றது; நியமம் - கோயில்; "உவணச் சேவ லுயர்த்தோ ணியமமும்" (சிலப். 14-18); அடைந்த நகரம் - இடம் என்றலுமாம்; இது பரிதியப்பர் கோயில் எனவும் வழங்கப்படும்; சுவாமி - பரிதியப்பர்; அம்மை - மங்களநாயகி; தீர்த்தம் - சூரிய தீர்த்தம் : பதிகம் 1.

இது தஞ்சாவூர் நிலயத்தினின்றும் தென்கிழக்கில் உரைத்த நாட்டுச் சத்திரம் மட்சாலை வழி 8 நாழிகையில் உள்ள உழுவூருக்குக் கிழக்கே அரை நாழிகை யளவில் உள்ளது.

திருப்பூவனூர் - பிள்ளையார் பதிகம் கிடைத்திலது!

தலவிசேடம் : திருப்பூவனூர் - காவிரிக்குத் தென்கரையில் 103-வது தலம். "புஷ்பவனம்" என்றும் வழங்கும்; சுகர் பூசித்தது. சுவாமி - புஷ்பவன நாதர்; அம்மை - கற்பகவல்லி; சதுரங்கவல்லவேசுவரர், இராஜராஜேஸ்வரி என்றும் வழங்குவர்; பதிகம் 1.

இது நீடாமங்கலம் நிலையத்தினின்றும் தெற்கே மன்னார்குடி கற்சாலை வழி 2 நாழிகை யளவில் பாமணியாறு கடந்து மேல் கரையில் 1/2 நாழிகையில் உள்ளது.

2275. பொருளுரை- பணியும்- வணங்கி - அணைந்து பணியும் அந்தத் திருப்பதியிலே பசுபதீச்சரத் திருக்கோயிலின்கண் இனிது வீற்றிருந்த மணியாகிய இறைவரைத் திருக்கோயிலினுள்ளே புகுந்து வழிபடும் விருப்பத்தினாலே வணங்கி; தணிவில்- சாத்தி - குறைதலில்லாத ஆசையினாலே தண்ணிய தமிழ்மாலைகளாகிய திருப்பதிகத்தினைப் புனைந்து அணிந்து; அணி.... அணைந்தார் - அழகிய திருநல்லூரினை மீளவும் வந்து அணைந்தருளினர்.

விளக்கவுரை.... பணியும் அப்பதி - பணியும் என்றதனால் முன் பாட்டில் ஆவூர் அணைந்தார் என்ற அந்தப் பதியினைப் பணிந்தனர் என்றபடி;

பசுபதீச்சரம் - ஆவூர் என்பது பதியின் பெயர்; பசுபதீச்சரம் - கோயிலின் பெயர்;

உள்புக்கு - திருக்கோயிலினுள்ளே புகுந்தருளி;

வழிபடும் விருப்பினால் வணங்கி - வணங்குதல் வழிபாட்டு முறைகளுள் ஒன்று.

தணிவில் காதல் - வழிபட வழிபடக் குறைவுறாது மேலும் மேலும் பெருகும் ஆசை.

அணி விளங்கிய - வேறு புனையப்படாமலே இயல்பின் அழகு பொருந்த எப்பொழுதும் விளங்கிக் கொண்டிருக்கும்.

2276. மறைவி ளங்குமப் பதியினில் மணிகண்டர் பொற்றாள்
நிறையு மன்பொடு வணங்கியே நிகழ்பவர் நிலவும்
பிறைய ணிந்தவ ரருள்பெறப் பிரசமென் மலர்வண்
டறைந றும்பொழிற் றிருவலஞ் சுழியில்வந் தணைந்தார். 378

மீண்டும் வந்தணைந்தார் - மீண்டும் - முன்னர்த் திருப்பாலைத் துறையினின்றும் அணைந்து (2263) அருள்பெற அகன்று போந்தவர் (2269) மீளவும் வந்தருளினர். முன்னர் அருள்பெற அகன்றுபோய் (2269) என்ற குறிப்பும் காண்க.

பசுபதீச்சரத்திருந்தருளும் - பசுபதீச்சரத்தினிதமர்ந்து - என்பனவும் பாடங்கள். 377

2276. பொருளுரை.. மறை விளங்கும்.. நிகழ்பவர் - மறைகள் விளங்குதற்கிடமாகிய அத்திருப்பதியின்கண் மணிகண்டராகிய இறைவரது பொன்போன்ற திருவடிகளை நிறைந்த அன்பினோடு வணங்கிக் கொண்டே எழுந்தருளும் ஆளுடைய பிள்ளையார்; நிலவும்... பெற - பிறையினைச் சூடிய இறைவரது நிலைபெறும் திருவருளைப் பெற்று உலகம் உய்தியடைய; பிரசமென்மலர்.... அணைந்தார் - தேன் பொருந்திய மெல்லிய மலர்களில் வண்டுகள் சத்திக்கின்ற மணம் வீசும் பொழில்கள் சூழ்ந்த திருவலஞ் சுழியின்கண் வந்து அணைந்தருளினர்.

விளக்கவுரை... மறைவிளங்கும் அப்பதி - "மறைநவின்ற கோயிலே கோயிலாக மகிழ்ந்தீரே" "செல்வமறை யோர்கண்முறை யேத்தவள ருந்திருந லூரே" "அமரர் காணா மறைவைத்தார்" என்ற தேவாரத் திருவாக்குக்கள் காண்க.

வணங்கியே நிகழ்தலாவது வணங்கிக் கொண்ட வண்ணமே - அதன் பொருட்டே - எழுந்தருளியிருத்தல்.

பிறை யணிந்தவர் நிலவும் அருள்பெற என்று மாற்றிக் கூட்டுக. உலகம்பெற என்க; நிலவும் பிறை என்று கொண்டு அழியாது நிலைபெற்று நிற்கும் பிறை என்றலுமாம்.

உலகம் அருள்பெற - பதிகக் குறிப்புக்கள் பார்க்க. "என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே" "விண்டொழிந்தன நம்முடை வல்வினை" என்ற திருப்பாட்டுக்களின் குறிப்பும் பார்க்க. பிள்ளையார் அருள்பெற அணைந்தார் என்றுரைப்பாருமுண்டு;

பிரசமென்மலர்.. பொழில் - காவிரிக் கரையாதலின் நீர்வளங் குறித்தது. பிலத்தினுட் புகுந்த காவிரி வலமாகச் சுழித்தெழுந்து வளஞ்செய்த வரலாற்றுக் குறிப்புமாம். பிரசம் - தேன். 378

2277. பொருளுரை.. மதிபுனைந்தவர்...போழ்தினில் - மதியைச் சூடிய இறைவரது திருவலஞ்சுழியில் பொருந்தி வாழ்கின்ற பெருந் தவத்தின் முதிர்ச்சியையுடைய அன்பர்கள் கூடி முத்தமிழ் விரகராகிய பிள்ளையார் திருமுன்பு வந்து எதிர்கொள்ளும் பொழுதில்; இழிந்து - முத்துச் சிவிகையினின்றும் இறங்கி; அவர் எதிர்செல - பிள்ளையார் அவர்களுக்கு எதிரிற் செல்லவே; மதியை..சூழ்ந்தென - சந்திரனை ஒளியுடைய வெண்முகிற் கூட்டம் சுற்றிச் சூழ்ந்தாற்போல; கலந்தார் - கூடினார்கள்.

2277. மதிபு னைந்தவர் வலஞ்சுழி மருவுமா தவத்து
முதிரு மன்பர்கண் முத்தமிழ் விரகர்தம் முன்வந்
தெதிர்கொள் போழ்தினி லிழிந்தவ ரெதிர்செல, மதியைக்
கதிர்செய் வெண்முகிற் குழாம்புடை சூழ்ந்தெனக் கலந்தார். 379

விளக்கவுரை... புனைந்தவரது வலஞ்சுழி என்க. ஆறனுருபு தொக்கது.

மருவு மாதவத்து முதிரும் அன்பர்கள் *- "மெய்த் தொண்டர்" (2) என்று பதிகத்துள் அருளிய குறிப்பு. வலஞ்சுழியில் மருவுதலும், அங்கு எழுந்தருளிய இறைவரை வாயாரப் பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடும் மாதவம் செய்தலும் அரியன;* ***முதிரும் அன்பு*** *- திருத்தொண்டின் உறைப்பு;* ***மாதவம்*** *- மா என்ற அடைமொழியின் குறிப்புமது; பிள்ளையாரது திருவாக்கிற் போற்றப்படும் தகுதி குறித்தது.*

இழிந்து *- முத்துச் சிவிகையினின்றும் பிள்ளையார் கீழே இறங்கி அடியார் முன்பு தம்மைச் சிறியராக் கொண்டு வணங்கி என்ற குறிப்பும் பட நின்றது; "மெய்த் தொண்டரோ டினிதிருந் தமையாலே - விண்டொழிந்தன நம்முடை வல்வினை" என்றது பதிகக் குறிப்பு.*

மதியை-சூழ்ந்தென *- உருவும் வினையும்பற்றி வந்த உவமம்.* ***மதி*** *- பிள்ளையார்க்கும்,* ***கதிர்செய் வெண்முகில்*** *- அன்பர் கூட்டத்தின் பரப்புக்கும் உவமை;* ***கதிர்செய்*** *- மதியின் ஒளிக்கதிர்கள் மேலே பட்டதனால் அக்கதிர்கள் மேகங்களின் செறிந்த நீர்த்துளிகளிற் பிரதிவிம்பித்தும், பெருக்கப்பட்டும் பல திக்கினும் வீசுவன; இவ்வாறன்றிக்* ***கதிர் செய்*** *என்றதனை மின்னொளிவிடும் என்றுரைப்பாருமுண்டு; "ஒளிசெய் வெண்முகி லாய்ப்பரந் தெங்கும் பெய்யு மாமழை" என்ற நம்பிகள் திருவாக்கு ஈண்டுச் சிந்திக்கற்பாலது.* ***வெண்முகில்*** *என்றார், அடியார்களின் "மாசிலாத மணிதிகழ் மேனிமேற் பூசுநீற்றின்" ஒளியின் செறிவு குறித்தற்கு. "இரண்டு நிலவின் கடல்கள்" (1498) என்றதனை இங்கு நினைவுகூர்க.* ***மதியை*** *- "கலைவளர் மதியே" (1991) "கலைச் செழுந்திங்கள் போலும்" (2650) முதலியவை காண்க.* ***சூழ்ந்தென*** *- சூழ்ந்தால் என என்பது சூழ்ந்தென என்று நின்றது; மதியை முகில்கள் சூழ்தல் தம்பயன் கருதியென்பர்;*

கலந்தார் *-* ***கலப்பு*** *- புறக்கூட்டமும் அகக்கூட்டமும் குறித்தது.* 379

2278. ***பொருளுரை...*** *கலந்த அன்பர்கள் தொழுதெழ - முன்கூறியவாறு வந்து கூடிய அன்பர்கள் கீழ்விழுந்து தொழுது எழுந்து நிற்க; கவுணியர் தலைவர்.... அணைவார் - கவுணியர் பெருமானாகிய பிள்ளையார் அன்றலர்ந்த செந்தாமரை போன்ற திருக்கைகளைக் கூப்பி அணைவாராகி; வலஞ்சுழி... எய்தி - திருவலஞ்சுழி இறைவர் மகிழ்ந்தெழுந்தருளிய திருக்கோயிலைச் சென்று சேர்ந்து; பொலங்கொள்... புகுந்தார் - பொன்பூண்ட நீண்ட ஒளிவீசும் திருக்கோபுரத்தினைத் தொழுதெழுந்து திருக்கோயிலினுள்ளே புகுந்தருளினர்.*

விளக்கவுரை... தொழுதெழ கைகுவித்து *- இருதிறத்தும் நிகழ்ந்த வழிபாட்டு முறை கூறப்பட்டபடி.*

2278. கலந்த வன்பர்க டொழுதெழக் கவுணியர் தலைவர்
அலர்ந்த செங்கம லக்கரங் குவித்துட னணைவார்
வலஞ்சு ழிப்பெரு மான்மகிழ் கோயில்வந் தெய்திப்
பொலங்கொ ணீள்சுடர்க் கோபுர மிறைஞ்சியுட் புகுந்தார். 380

2279. மருவ லார்புர முனிந்தவர் திருமுன்றில் வலங்கொண்
டுருகு மன்புட னுச்சிமே லஞ்சலி யினராய்த்
திருவ லஞ்சுழி யுடையவர் சேவடித் தலத்திற்
பெருகு மாதர வுடன்பணிந் தெழுந்தனர் பெரியோர். 381

அலர்ந்த செங்கமலக் கரங்குவித்து - விரிந்திருந்த இரண்டு கைகளையும் சேர்த்துக் கூப்பியபடியால் *அலர்ந்த* என்றார். அன்றலர்ந்த என்ற குறிப்பும் காண்க.

அணைவார் - முற்றெச்சம்; *அணைவார் - புகுந்தார்* என்று முடிக்க.

வந்து - அடியார்கள் எதிர்கொண்ட புறநகர் எல்லையினின்றும் வந்து.

பொலங்கொள் - பொன்வேய்ந்த பகுதிகளையுடைய.

கோபுரம் இறைஞ்சி - தூலலிங்கமாகிய கோபுரத்தின் முன்வீழ்ந்து முறைப்படி வணங்கி எழுந்து. "வழிபடுமதனாலே" என்றது பதிகக் குறிப்பு. 380

2279. பொருளுரை- மருவலார்புரம்- வலம்கொண்டு - பகைவர்களது திரிபுரங்களை எரித்த இறைவரது திருமுற்றத்தினை வலமாகச் சுற்றிவந்து; உருகும்-அஞ்சலியினராய் - மனமுருகிய அன்புடனே தலையின்மேற் கைகுவித்து அஞ்சலி செய்து கொண்டவராகி; திருவலஞ்சுழி.... பெரியோர் - திருவலஞ்சுழி யிறைவரது திருவடிகளிலே பெருகுகின்ற அன்புடனே பெரியோராகிய பிள்ளையார் பணிந்து எழுந்தனர்.

விளக்கவுரை.... *மருவலார் புர முனிந்தவர்* - "திருந்த லார்புரந் தீயெழச் செறுவன" (3) என்ற (நட்டராகம்) பதிகக் குறிப்பு.

உருகுமன்புடன் - பெருகுமாதரவுடன் - "ஆதரித் தேத்தியும் பாடியும் வழிபடும்" என்ற பதிகக் குறிப்பு.

அஞ்சலி - கைகூப்பிய நிலை. 381

2280. பொருளுரை.. ஞானபோனகர்.... காதலில் - ஞானவமுதுண்ட பிள்ளையார் இறைவரது திருமுன்பு தொழுது எழுகின்ற விருப்பத்தினாலே விளைந்த காதன்மையினால்; அங்கணர் அவர் தமைவினவும்... திருப்பதிகம் - இறைவரை முன்னிலைப்படுத்தி வினவுகின்ற கருத்தினையுடைய குற்றமில்லாத இசையுடனே விளங்குகின்ற திருப்பதிகத்தினை; பானலார் மணிகண்டரைப் பரவிப்பாடினார் - நீலோற்பலம் போன்ற அழகிய கழுத்தினையுடைய இறைவரைப் பரவிப் பாடியருளினார்.

2280. ஞான போனகர் நம்பர்முன் றொழுதெழும் விருப்பால்
ஆன காதலி லங்கண ரவர்தமை வினவும்
ஊன மில்லிசை யுடன்விளங் கியதிருப் பதிகம்
பான லார்மணி கண்டரைப் பாடினார் பரவி. 382

விளக்கவுரை– காதலில் தொழுதெழும் விருப்பால் வினவும் திருப்பதிகம் பாடினார் – இந்தளப் பண்ணில் அருளிய வினாவுரைப் பதிகத்தினை ஏனைய பதிகங்கள் போலல்லாது இறைவரையே முன்னிலைப்படுத்தி வினாவிய கருத்தாய்ப் பாடியருளியதன் காரணம் தொழுதெழும் விருப்பால் வந்த காதலேயாம் என்று காட்டியருளியபடி. இறைவரே! உலகெலாம் பலிகொண்டுழல் செல்வத்தை உரையீர்! என்ற பதிகம் காண்க. பதிகக் குறிப்புப் பார்க்க. இவ்வினாக்கள் அறி வினாவின்பாற் படுமாதலின் ஞான போனகர் என்றார்.

விருப்பால் ஆன காதல் - ஆன - ஆயின; விளைந்த; உண்டாயின. காதல் விளைந்ததன் காரணம் குறிக்கப்பட்டது.

ஊனமில் இசை - ஊனம் - குற்றம்; இல் - இல்லையாக்கும். இசை - பண்; புகழ் என்றலுமாம்.

பரவிப் பாடினார் - என்க. பதிகப்பாட்டுக்கள் இறைவரை வினாவும் முகத்தால் அமைந்துள்ளனவாயினும் அவற்றின் கருத்துப் பரவுதலேயாம் என்பது. 382

I. திருவலஞ்சுழி

திருச்சிற்றம்பலம் வினாவுரை பண் - இந்தளம்

விண்டெ லாமல ரவ்விரை நாறுதண் டேன்விம்மி
வண்டெ லாநசை யாலிசை பாடும் வலஞ்சுழித்
தொண்டெ லாம்பர வுஞ்சுடர் போலொளி யீர்சொலீர்
பண்டெ லாம் பலி தேர்ந்தொலி பாடல் பயின்றதே. (1)

வீடும் ஞானமும் வேண்டுதி ரேல்விர தங்களால்
வாடி ஞானமென் னாவது மெந்தை வலஞ்சுழி
நாடி ஞானசம் பந்தன செந்தமிழ் கொண்டிசை
பாடும் ஞானம்வல் லாரடி சேர்வது ஞானமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரை வினவும் வகையாலே அவரது இசையினைப் பரவுதல் குறிப்பு; (2280) பலிதேர்ந்து கொண்டு அடியாரை வாழ்விக்கும் புகழ் பதிகமுழுதும் பரவப்பட்டது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) விண்டு - விரிந்து; விரிதலால்; நசை - ஆசை. பலிதேர்ந்து ஒலிபாடல் பயின்றதே - பதிகப் பாட்டுத்தோறும் இப்புகழே பரவப்பட்டது

2281. புலங்கொ ளின்னிசை போற்றினர் புறத்தினி லணைந்தே
யிலங்கு நீர்ப்பொன்னி சூழ்திருப் பதியினி லிருந்து
நலங்கொள் காதலி னாதர்தா ணாடொறும் பரவி
வலஞ்சு ழிப்பெரு மான்றொண்டர் தம்முடன் மகிழ்ந்தார். 383

காண்க. "நிரந்தரமாக நினையு மடியார், இரந்துண்டு தன்னடி யெட்டச் செய்தானே" என்று திருமூலர் இதனை விளக்குதல் காண்க;- (2) பாரல் - பரவிச் சென்று இரைதேரும் இயல்பு; பகுவாய் - பிளந்தவாய்; வாரல் - வருகின்ற; முறுவல் நகும் - புன்முறுவலாகச் சிரிக்கும்; ஊரல் - சுடுகாட்டில் உருளுதலுடைய; (3) கிண்ணவண்ணமலரும் - கிண்ணம்போல மலர்கின்ற; தாமரை மலருக்கு மெய்பற்றிவந்த சிறந்த உவமம்; (4) கோடு - வாவிகள்; கரைகள் என்றலுமாம்; (6) பூசம் - தீர்த்த நாள்; "பூசத் தீர்த்தம் புரக்கும் பொன்னி" (திருவிடை - மும் - கோ); நீர்குடைவாரிடர் தீர்க்கும் - தீர்த்த நாளிற் குளித்தலால் வரும் பயன் கூறியபடி; தேசம் நீர் - திருநீர் - விசுவமும் விசுவநாதனும் ஆனவர்; "தேசனைத் தேசங்கள் தொழநின்ற திருமாலாற், பூசனை"; ஏச - பிறர்பழிக்க; ஏசக் கொள்வதிலாமை - ஏசுதல் பொருட்டாலன்றி உள்ளபடியே பலிகொள்வது;- (7) பந்தம் - கீழ்மை; நீர்குடைவார் - இது தீர்த்த நாளிலன்றி ஏனை எந்நாளினும் குடைதல்; 9-ம் இவ்வாறு:- (11) வீடும் ஞானமும் - வீடும் அதற்குச் சாதனமான ஞானமும்; விரதங்களால்...என்னாவதும் - விரதங்களே வீடுதரும் என்றும் வேதியர் கொள்கையின் பயனின்மை; "விரத மேபர மாகவே தியரும், சரதமாகவே சாத்திரங் காட்டினர்" (திருவா).

தலவிசேடம் : திருவலஞ்சுழி - தொகுதி III பக்கம் 481 பார்க்க.

2281. பொருளுரை... புலங்கொள் இன்இசை போற்றினர் - ஞான உபதேசமாய் நன்மக்கள் மனத்துட் கொள்ளும் இனிய இசையினைத் துதித்தவராகி; புறத்தினில்... அணைந்தே - திருக்கோயிலின் புறத்தினில் வந்துஅணைந்து; இலங்கு-இருந்து - விளங்கும் நீரினையுடைய காவிரி சூழும் அத்திருப்பதியினிடத்தே எழுந்தருளியிருந்து; நலங்கொள்... மகிழ்ந்தார் - நன்மைபொருந்திய அன்பினாலே இறைவரது திருவடிகளை நாள்தோறும் துதித்து வலஞ்சுழிப் பெருமானுடைய திருத்தொண்டர்களுடனே கூடி மகிழ்ந்தருளினர்.

விளக்கவுரை... புலன்கொள் இன் இசை - புலம் - நன்மக்களின் அறிவு; இசை - புகழ்; இசையினையுடைய (பண்) பதிகம் என்றலுமாம். "ஞானசம்பந்தன் செந்தமிழ் கொண்டு இசைபாட வல்லார் அடிசேர்வது ஞானமே" (இந்தளம் - 11) என்ற திருப்பாட்டின் கருத்துக் குறிப்பு. திருவடிசேரும் விருப்புடைய மக்கள் இத்திருப்பதிகத் தமிழை மனங்கொண்டு இசைபாடுவர் என்க.

போற்றினர் - போற்றினராகி - அணைந்து என முடிக்க; முற்றெச்சம்.

இலங்குநீர் - இலங்குதலாவது எந்நாளும் பொய்யா தளித்தல் - பொன்னும் மலரும் மணியும் தூவிப் பதிகளை வழிபடுதல் - தமிழ் முனிவனது கைக் குண்டிகையினின்றும் போந்து உலகூட்டி வளர்த்தல் முதலாகிய (காவிரியின்) சிறப்பியல்புகளுடைமையாம்.

பொன்னிசூழ் திருப்பதி - பிலத்தினுட்புக்க காவிரி இங்கு மீண்டும் வலஞ்சுழித்து மேற்பொங்கிப் போந்த வரலாற்றுக் குறிப்பு. தலவிசேடம் பார்க்க. 383

II. திருவலஞ்சுழி

திருச்சிற்றம்பலம் பண் - நட்டராகம்

என்ன புண்ணியஞ் செய்தனை நெஞ்சமே! யிருங்கடல் வையத்து
முன்ன நீபுரி நல்வினைப் பயனிடை முழுமணித் தரளங்கண்
மன்னு காவிரி சூழ்திரு வலஞ்சுழி வாணனை வாயாரப்
பன்னி யாதரித் தேத்தியும் பாடியும் வழிபடு மதனாலே. (1)

விண்டொ ழிந்தன நம்முடை வல்வினை விரிகடல் வருநஞ்சம்
உண்டி றைஞ்சுவா னவர்தமைத் தாங்கிய விறைவனை யுலகத்தில்
வண்டு வாழ்குழன் மங்கையொர் பங்கனை வலஞ்சுழி யிடமாகக்
கொண்ட நாதன்மெய்த் தொழில்புரி தொண்டரோ டினிதிருந்
தமையாலே. (2)

திருந்த லார்புரந் தீயெழச் செறுவன; விறலின்க ணடியாரைப்
பரிந்து காப்பன; பத்தியில் வருவன; மத்தமாம் பிணிநோய்க்கு
மருந்து மாவன; மந்திர மாவன; வலஞ்சுழி யிடமாக
விருந்த நாயக னிமையவ ரேத்திய விணையடித் தலந்தானே. (3)

மாதொர் கூறனை வலஞ்சுழி மருவிய மருந்தினை வயற்காழி
நாதன் வேதியன் ஞானசம் பந்தன்வாய் நவிற்றிய தமிழ்மாலை
யாத ரித்திசை கற்றுவல் லார்சொலக் கேட்டுகந் தவர்தம்மை
வாதி யாவினை; மறுமைக்கு மிம்மைக்கும் வருத்தம்வந் தடையாவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அரன்வழிபாடும் அடியவருடனிருக்கும் பேறும் என்ற இரண்டுமே உயிர்க்குறுதிப் பொருளாவன என்றும், இவை முன்னை நல்வினைப் பயனாக வருவன வென்றும் காட்டிச் சுவானுபூதி நிலையிலிருந்து உபதேசித்தருளியது. நாதர் தாள் நாடொறும் பரவித் தொண்டர் தம்முடனிருந்து மகிழ்ந்தார் என இதனை ஆசிரியர் (2281) காட்டியருளினர். பதிகம் 1-2-11 பாட்டுக்கள் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) வழிபடும் அதனாலே முன்னமே புரி நல்வினைப் பயனிடை என்ன சிவபுண்ணியம் செய்தனை? என்று பூட்டுவிற் பொருள் கோளாகக் கொள்க; முன்னைச் சிவபுண்ணியப் பயனாலன்றிச் சிவனை வழிபடும் பேறு ஒருவற்குக் கிட்டாது என்றபடி; "தவத்தினில்' (8. சூத்) என்ற சூத்திரப்பகுதிக்கு "இனி, இவ்வான்மாக்களுக்கு முற்செய் தவத்தான் ஞான நிகழும்" என்று அதிகரணம் வகுத்து, "தவஞ்செய்தா ரென்றுந் தவலோகஞ் சார்ந்து" என்று உதாரணங் காட்டியதும் இங்கு

நினைவு கூர்தற்பாலது. வையத்து முன்னம்புரி நல்வினை என்றும், வையத்து - (வந்து) வலஞ்சுழி வாணனை வழிபடும் என்றும் கூட்டி உரைக்க நின்றது; **முன்னம்** - முன்னைப் பிறவி; **புண்ணியம்** - சிவபுண்ணியம்; **நல்வினை** - சிவபுண்ணியத்தைப் பரம்பரையிற் பயப்பிக்கும் ஏனை நற்கருமங்கள்; (2) தொண்டரோ டினிருந்தமையாலே நம்முடைய வல்வினை விண்டொழிந்தன என்று கூட்டுக; இதுவும் பூட்டுவிற் பொருள்கோள்; அரன் பணியும் அடியார் கூட்டமும் ஒருங்கே எண்ணப்படும் முறையினைப் பொருள்கோளினும் வைத்துக் காட்டியபடி; அடியார் கூட்டத்தால் வாசனா மலமும் பற்றறக் கழியும் என்ற ஞான சாத்திரம் 12-ம் சூத்திரக் கருத்து; **உலகத்தில்** - "வையத்து" (1) சிவபுண்ணியஞ் செய்து வீடு பெறுதற்குரிய இடம் இந்நிலவுலகமே என்பது இரு தன்மையாலும் ஒப்பவிளக்கியபடி; **மெய்த்தொழில்** - (ஏனைத்தொழில் யாவும் பொய்ம்மையே பெருக்கிப் பொய்யா யொழிந்து போவன). இவை சரியை முதலாயின; தொண்டரோ டினிதிருத்தலின் பயனைப் பிள்ளையார் ஈண்டு நடத்திக் காட்டியும் உபதேசித்து மருளினர். (2281); (3) **திருந்தலார்** - பகைவர்; **மத்தம்** - உன்மத்தம்; தலைக்குறை; மயக்கம்; அஃதாவது பொருளல்ல வற்றைப் பொருளென் றுணரும் மருள் (குறள்); "ஞானத்தின், கண்ணை மறைத்த கடியதொழி லாணவம்" (போற்றிப்பஃறொடை, 10); **மருந்து** - நோய் போக்குவது; **மந்திரம்** - (அதன்பின்) நோய் வராமற் காப்பது; **தானே** - ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம்; (4) **கறை** - விடத்திற்காயிற்று; **காய்கதிர்** - தீ; **இறைவர்** - இறைவராக; ஆசிரியராக; (5) ஐம்பூதமும் கலப்புடைய; **எண்ணர்** - எண்ணப்படுபவர்; (6) **பலிக்கென்று வருவரேல்** - அடையாளங்கள் குறித்த நக்கவேடம். (7) **ஊர்களிலோம்** - ஊர்களை இடமாகவுடையோம்; இலோம் - இல்லோம்; இல்லமாகவுளோம்; தாய் கூற்று என்னும் அகத்துறை; முன்பாட்டு மிவ்வாறு;- (8) **பயில** - பயின்று பரவ; **வல்லவர் காண்பவர் - அல்லவர் காணார்** - உடன்பாட்டினும் எதிர்மறையினும் கூறியது உறுதிபயத்தற்கு (9) **அழலதோம்பிய** - பிரமன் வேத விதியிற் றீயோம்புதல் முறை என்ற குறிப்பு; **மழலை வீணை** - மழலை போன்ற இன்பமொழிப் பண்பு தோன்ற இசைக்கும் வீணை; **சுழலும்** - பல காலும் வலம் வருதல் குறிப்பு; "சூழாக் கால்களாற் பயனென்?" (அங்கமாலை); (10) **வன்சமணர்** - **வன்மை** - மனக்கொடுமை; **அவஞ் செய்வார்** - **கூறுவர்** - சமணர் சாக்கியர்க்கு நிரனிறையாகக் கூட்டுக; **மறி** - அலையாக மறித்து;

III. திருவலஞ்சுழி

திருச்சிற்றம்பலம்

பண் - பழம்பஞ்சுரம்

பள்ளம தாய படர்சடைமேற் பயிலுந் திரைக்கங்கை
வெள்ளம தார விரும்பி நின்ற விகிர்தன் விடையேறும்
வள்ளல் வலஞ்சுழி வாண னென்று மருவி நினைந்தேத்தி
யுள்ள முருக வுணரு மின்க ளுறுநோ யடையாவே. (1)

வாழியெம் மானெனக் கெந்தை மேய **வலஞ்சுழி மாநகர்மேற்**
காழியுண் ஞானசம் பந்தன் சொன்ன கருத்தின் றமிழ்மாலை
யாழியிவ் வையகத் தேத்த வல்லா ரவர்க்குந் தமருக்கு
மூழி யொருபெரு மின்ப மோக்கு முருவும் முயர்வாமே. (11)

திருச்சிற்றம்பலம்

2282. மகிழ்ந்த தன்றலை வாழுமந் நாளிடை வானிற்
றிகழ்ந்த ஞாயிறு துணைப்புண ரோரையுட் சேர்ந்து
நிகழ்ந்த தன்மையி னிலவுமேழ் கடனீர்மை குன்ற
வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில். 384

பதிகக் குறிப்பு:- இறைவர் தொண்டரொடு கூடித் துதைந்து நின்ற தொடர்பைத் தொடர்ந்து வலஞ்சுழிப் பதியினைப் பற்றி அவரது புகழ்களைப் பரவியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பள்ளம் அது ஆய** - நீர்தங்குமிடம் என்றது; **உறு** - வரக்கடவனவாய; (2) **தழைய** - நிரம்ப; "உவகை யறியோமே" (திருவாசகம்) அற்புதப் பத்துக் கருத்துக் காண்க; மேற்பாட்டும் இவ்வாறு; (4) **ஒரு பாலொரு பால்** - சொற்பொருட் பின்வரு நிலை; **அடை - அடையாதன** - முரண் அணி; (5) **பொழில் சூழும்வேலி** - பொழில் சூழ்ந்த; **தொண்டொடு கூடித் துதைந்து நின்ற தொடர்பு** - "அடியார் நடுவ ளிருவீரு மிருப்பது" (திருவா); நட்டராகப் பண்பதிகம் (2)ம், 2281-ம் நினைவுகூர்க; (7) **கல்** - கற்களால்; (9) **சரிதை** - "ஆட்பாலவர்க் கருளும் வண்ணம்";

2282. பொருளுரை.. மகிழ்ந்து அதன் தலை வாழும் அந்நாளிடை - மகிழ்ச்சியுற்று அப்பதியின் கண் வாழ்ந்தருளிய அந்நாளிலே; வானில்.. தன்மையில் - வானத்தில் விளங்கிய ஞாயிறு மிதுன ஓரையினுள்ளே சேர்ந்து நிகழ்ந்த தன்மையினாலே; நிலவும்... பரப்பலின் - பொருந்தும் ஏழ்கடலும் தந்நீர்மை குறையும்படி வெகுட்சியுடனே வெவ்விய கதிர்களைப் பரப்புதலினாலே; வேனில் முதிர்ந்தது - முதுவேனிற் பருவம் வந்தது.

விளக்கவுரை.. **தலை** - ஏழனுருபு; **அதன் தலை** - அப்பதியினிடத்து;

அந்நாளிடை - தொண்டர் தம்முடன் மகிழ்ந்திருந்த அந்த என அகரம் முன்னறிசுட்டு.

வானில் - வான வீதியில்; **திகழ்தல்** - முகில் - பனி - முதலியவற்றால் மறைக்கப் படாது முழு நோக்குடன் விளங்குதல்;

துணைப்புணர் ஓரை - மிதுனஓரை - **ஓரை** - இராசி யென்பது வடநூல் வழக்கு; ஆணும் பெண்ணுமாக இருவர் சேர்ந்துள்ளதாகக் கணிக்கப்படுதலின் இது மிதுனம் எனப்படும், என்பார் **துணைப்புணர்** என்று விரித்துச் சுட்டினார்; ஓரையுட் சேர்தலாவது ஞாயிற்றின் செலவில் வான வீதியின் பன்னிரண்டு பகுதிகளில் அப்பெயர் பெற்ற பகுதியில் ஞாயிறு வழங்குதல்;

ஏழ்கடல் நீர்மைகுன்ற - மேகம் வழங்காது வெப்பமிகுவதனால் கடல்நீர்மை குறையும் என்பது; **நீர்மை** - நீரின் அளவு என்றும், இயல்பு என்றும் பொருள்பட நின்றது. "நெடுங்கடலுந் தன்னீர்மை குன்றும்" (குறள்) என்றது காண்க. **குன்றுதல்** - நீர்வாழுயிர்கள் பிறவாமையும் மணி முதலியன படாமையும் என்ப (பரிமே).

வெகுண்டு - வெகுண்டதால்; வெப்ப மிகுதியை வெருட்சி என்றது உபசாரம்.

2283. தண்பு னற்குளிர் கானறுஞ் சந்தனத் தேய்வை
பண்பு நீடிய வாசமென் மலர்பொதி பனிநீர்
நண்பு டைத்துணை நகைமணி முத்தணி நாளும்
உண்ப மாதுரி யச்சுவை யுலகுளோர் விரும்ப. **385**

"எரிதுள்ளினாலென வெகுண்டான்" (527) என்றும், "கதமிக் கெரிகதிரின் முன்னிருள் போல்" (போதம் - 10. உதா) என்றும் போந்தன காண்க.

வெங்கதிர் - வெவ்விய - வெப்பமுடைய - கதிர்கள். **ஞாயிறு** - **வெங்கதிர்** - **பரப்பலின்** - என்க.

முதிர்ந்தது வேனில் - இளவேனில் கழிய முதுவேனிற் பருவம் வந்தது. இளவேனில் முற்றிக் கடிய வெப்பமாய் வருதலால் **முதிர்ந்த**தென்றார். **முதிர்தல்** என்றது ஒப்புமைபற்றி வந்த உபசாரவழக்கு; பெரும் பொழுதாறனுள் ஆனியும் ஆடியும் கொண்ட காலம் முதுவேனில் எனப்படும். இது பிரிவு காட்டும் பாலைக்குரிய முதற் பொருள். "நடுவுநிலைத் திணையே நண்பகல் வேனிலொடு" (தொல். அகத். 9); "காலவேனிலில்" (1092) என்றதும், ஆண்டுரைத்தவையும் பார்க்க. பிள்ளையார் திருவலஞ்சுழியில் அமர்ந்திருந்து அங்கு நின்றும் திருப்பழையாறை - திருஆறை மேற்றளி (2287) - திருச்சத்திமுற்றம் (2288) பணிந்து திருப்பட்டீச்சரம் பணியச் சென்றருளியபொழுது வெய்யில் வெப்பந் தணிப்பதற்கு இறைவர் தண்ணிய முத்துப்பந்த ரளித்தருளினர் (2290). இதனைக் குறிக்கும் திருவிழா ஆனி மாதத் தொடக்கத்தில் இன்றும் திருப்பட்டீச்சரத்தில் கொண்டாடப்பெறுதல் காண்க. 384

2283. பொருளுரை– தண் புனல் குளிர்கால் - தண்மையுடைய நீரின் புணர்ப்பினால் குளிர்ந்து வீசும் காற்றினையும்; நறும் சந்தனத் தேய்வை - மணமுடைய சந்தனத் தேய்வையினையும் ; பண்பு... பனிநீர் - நன்மைத் தன்மை நீடிய மணமுடைய மலர்களுட் பொதிந்த பனிநீரினையும்; நண்புடைத்துணை - அன்புடைய வாழ்க்கை துணையாகிய மனைவியையும்; நகைமணி முத்தணி - ஒளி வீசும் மணிகளாகிய முத்துமாலை வகைகளையும்; உண்ப மாதுரியச்சுவை - உண்ணத் தகுந்தனவாகிய மதுரச்சுவைப் பண்டங்களையும்; உலகுளோர் விரும்ப - உலகில் வாழும் மக்கள் விரும்பும்படி; (வேனில் முதிர்ந்தது).

விளக்கவுரை– **முதிர்ந்தது வேனில்** - என்ற முன்பாட்டின் கருத்தினைத் தொடர்ந்து, அது முதிர்ந்ததன் தன்மையினை இப்பாட்டாற் கூறுகின்றார். **கதிர் பரப்பலின்** (2282), **விரும்ப** - **முதிர்ந்தது வேனில்** - என்று விரித்து முன்பாட்டுடன் கூட்டி முடித்துக் கொள்க.

தண்புனற் குளிர்கால் - தண்ணிய புனலின் புணர்ப்பினாற் குளிர்ந்து வீசும் காற்று; காற்றுக்குத் தண்மையும் வெப்பமும் சேர்க்கையால் வருவனவாம்; "சிறந்தணைந்தது தெய்வநீர் நாட்டிடை..... மறம் பயின்றதெங்கோ தமிழ் மாருதம்" (313) என்ற குறிப்பிற் காண்க.

வேறு

2284. அறன்மலியுங் கான்யாற்றி னீர்நசையா லணையுமான்
பெறலரிய புனலென்று பேய்த்தேரின் பின்றொடரும்;
உறையுணவு கொள்ளும்புட் டேம்பியய லிரைதேரும்;
பறவைசிறை விரித்தொடுங்கப் பனிப்புறத்து வதியுமால்; **386**

பண்பு நீடியவாசம் மென்மலர் பனிநீர் - பண்பு நீடியவாசம் - நீடிப்பதனால் துன்பம் செய்யாது இன்பமே செய்யும் தன்மை பண்பு எனப்பட்டது. சண்பகம் முதலியவற்றின் மணம் நீடிப்பின் நோய் செய்தல் காண்க. மென்மலர் - என்ற குறிப்புமது; மென்மை - கடிய மணமல்லாது மென்மையாய் மணந்தருதல்; மலர் பொதி பனிநீர் - மலர்களைக் குளிர்ந்த நீரினுட் பெய்தலும், பனிநீரானது மலர்களினின்றும் எடுக்கப்படுதலும் குறித்தமை காண்க.

நண்புடைத் துணை - மனைவியரின் கூட்டம். இது காலநிகழ்விற் கேற்க விரும்பப்படும் ஏனைப்பொருள்களின் அனுபவத்தை முதிர்விக்கு மியல்புடைய தென்பது.

நகைமணி முத்தணி - தண்ணிய வெள்ளிய ஒளி, நகை எனப்பட்டது; உபசாரம்; முத்து வேனிற்காலப் போகங்களை மிகுவிக்கும் இயல்புடையது. "நீற்றொளி" "களைகணார்த்ததோர் கருணையின்" என்று வரும் குறிப்புக்களும் காண்க.

உண்ப மாதுரியச்சுவை - உண்ப - உண்ணப்படுபவையாகிய; சுவை - சுவை தரும் பண்டங்கள்; ஆகுபெயர்; வேனிற் காலத்துப் போகப் பொருள்களை இப்பாட்டால் விரித்தார்; தன்மையணி;

நகைமதி - என்பதும் பாடம். *385*

2284. பொருளுரை... அறன்மலியும் கான்யாற்றின் - கருமணல் மிகுந்த காட்டாற்றினிடத்து; நீர்நசையால் அணையும் மான் - தண்ணீர் பெறும் விருப்பத்தினால் சேர்ந்த மான் கூட்டம்; பெறல் அரிய... தொடரும் - (அங்கு நீர் பெறாமையால்) பெறுதற்கரிய நீர் என்று தோற்றம்பற்றி மயங்கிக் கானற் சலத் (பேய்த்தோ)தின் பின்னே தொடர்ந்து செல்லும்; உறை உணவுகொள்ளும் புள் - மழைத்துளிகளை உணவாக உட்கொள்ளும் சாதகப்புட்கள்; தேம்பி - அவ்வுணவு பெறாமையால் வருந்தி; அயல் இரைதேரும் - அயல் இரையினைத் தேடியலையும்; பறவை... வதியுமால் - பறவைகள் சிறகுகளை விரித்துக்கொண்டு வெய்யிலின் வெப்பம் பொறாமையால் தாம் ஒடுங்குதற்குத் தக்க குளிர்ச்சியுடைய இடங்களில் தங்கும்;

விளக்கவுரை.... அறல் - கருமணல்; அறன்மலியும் கான்யாறு - என்றதனால் கருமணல் வெளித் தோன்றுதலின் நீரின்மை குறிக்கப்பட்டது; நீர் என்ற பொருளில்லாமையை அச்சொல்லையும் மறைத்து உய்த்துணர வைத்த நயம் காண்க. கான் யாறு - காட்டாறு; மழைக்காலத்திற் பெருகியும், ஏனைக்காலத்திற் சுருங்கியும், வேனிலில் வறண்டும் நிகழ்வது.

மான் - மான் கூட்டங்கள். இருமுச் சமயத் தொருபேய்த் தேரினை, நீர்நசை தரவரு நெடுங்கண் மான்கணம்" (திருவா);

கான்யாற்றின் நீர் நசையால் அணையும் - என்றமையால் அங்கு வேறு அயல் உள்ள சுனை முதலிய நீர்நிலைகளில் எங்கும் நீர்பெறாமை குறிப்பாலுணர்த்தப்பட்டது.

பெறல் அரியபுனல் என்று - வேறெங்கும் பெறற்கரிதாய் நின்ற; **என்று** - புனலல்லாததைப் புனல் என மயங்கி.

பேய்த்தேர் - கானற்சலம். பாலைநிலத்தின்கண் வேனிலிற் காணப்படுவதோர் தோற்றம்; "பேய்த்தேர்நீ ரென்றுவரும் பேதைக்கு மற்றணைந்து, பேய்த்தே ரசத்தாகும் பெற்றிமை" (போதம். 7. உதா); "அருஞ்சுரத்தின் முதுவேனிலின் நண்பகற் கடுமை பற்றித் தோற்றி, ஞாயிற்றின் கிரணம் முகிற்படலத்தின் மறைந்த வழித் தானும் மறைந்து போவதாகிய பேய்த்தேர்" என்று "நீரிலெழுத்தும் நிகழ்கனவும் பேய்த்தேரும்" என்ற (6-சூத்) உதாரண வெண்பாவின்கீழ் ஆசிரியர் மாதவச் சிவஞானமுனிவர் இதன் இயல்பை விரித்துரைத்தல் காண்க.

பின் தொடரும் - அணிமையில் உள்ளதுபோலக் காட்டிப் பெறும் நசையால் அதனை அணுகச் செல்லச் செல்ல அதுவும் அகன்றுகொண்டே செல்வதாதலின் **பின்தொடரும்** என்றார்.

உறை - மழைத்துளி. **உறை உணவு கொள்ளும்புள்** - சாதகப்புள்; வானம்பாடி என்பர். இது மழைத் துளிகளை உணவாகக் கொள்ளும் இயல்புடையது என்பர். **தேம்பி** - இயல்பாகிய உணவு பெறாமையின் வருந்தி என்ற பொருளில் வந்தது.

அயல் இரை - இயல்பாகிய அதனின் அயலாகிய - வேறாகிய - இரை என்றும், அயலிடத்தில் இரை என்றும் உரைக்க நின்றது.

தேம்ப என்பது பாடமாயின் **உறை உணவுப் புள்** தேம்பி நிற்க, வேறு உணவு கொள்ளும் ஏனைய பறவை என்று உரைத்துக் கொள்க.

சிறை விரித்து ஒடுங்க - சிறகு விரித்துப் பறக்க முயலுகையில் வெயில் வெப்பத்தால் அது செய்யமாட்டாது சிறகு ஒடுங்கக்கொண்டு.

பனிப்புறம் - அதற்கு புறமாகிய குளிர்ந்த அயலிடம்.

வதியும் - பறந்து சென்று இரை தேடமாட்டாது வருந்தி உறையும்.

இப் பாட்டிற் கூறியவை நடப்பன பறப்பனவாகிய உயிர் வகைகளின் செயல் பற்றிய கால நிகழ்ச்சி.

பின்படரும் - என்பதும் பாடம். 386

2285. பொருளுரை... **நீள்நிலை மாளிகை மேலும்** - நீண்ட நிலைகளையுடை மாளிகைகளின் மேனிலைகளிலும்; **நிலாமுன்றில் மருங்கினிலும்** - நிலாமணி முற்றங்களின் பக்கங்களிலும்; **வாள்நிழல் நல்சோலையிலும்** - ஒளியுடைய நிழலைப் பரப்பும் நல்ல

2285. நீணிலைமா ளிகைமேலு நிலாமுன்றின் மருங்கினிலும்
வாணிழனற் சோலையிலு மலர்வாவிக் கரைமாடும்
பூணிலவு முத்தணிந்த பூங்குழலார் முலைத்தடத்துங் 387
காணுமகிழ்ச் சியின்மலர்ந்து மாந்தர்கலந் துறைவரால்.

சோலைகளிலும்; மலர்வாவிக் கரைமாடும் - மலர்வாவிகளின் கரைப்பக்கத்திலும்; பூண்– முலைத்தடத்தும் - முத்துக்களைக் கொண்ட பூங்குழலையுடைய மாதர்களின் முலைத் தடங்களிலும்; காணும்.... உறைவர் - மாந்தர்கள் காணத் தக்க மகிழ்ச்சியில் கலந்து உறைகுவர்;

விளக்கவுரை... நீள்நிலை - உயர்ச்சி குறித்தது; மேலும் - மேல் - மேலிடம் மேன்முற்றம்;

நிலாமுன்றில் - நிலாக் கதிர் ஒளிவீச அதனுள் வெளியிடத்தில் இருந்து இன்பந் துய்க்கும் முற்றம்.

வாள்நிழல் - இருட் செறிவுபடக் கூர்தலின்றி ஒளிபடத் தண்மை செய்யும் நிழல். **வாழ்நிழல்** என்றலுமாம்.

நற்சோலை - நன்மையாவது நோய்க்கிடமாதலின்றி உடற்குக் குணம்தரும் தன்மை.

மலர்வாவிக்கரை - பூக்களின் மணமும், நீரின் தண்மையும், அதனுட் படிந்து வீசும் இளங்காற்றின் பரிசமும், வண்டுகளின் பண் பாட்டும், சார்தலால் இது வெயிற் காலத்தில் இன்பம்பட இருக்குமிடமாம். "மூசு வண்டறை பொய்கையும்" (தேவா) என்றவிடத்துத் "தைவருதண் டென்றலணை தண்கழுநீர்த் தடம்போன்று" (1363) என்று ஆசிரியர் விரித்தருளியமை காண்க.

முத்துநிலவு பூண்அணிந்த - என்க. முத்துக்கள் உடற் குளிர்ச்சிக் கேதுவாதல் "நகைமணி முத்தணி விரும்ப" (2183) என்று முன்னரும் குறிக்கப்பட்டது. இங்குப் பின்னரும் கூறியது "முத்தணிந்த முலைத்தடம்" எனத் தன்னியல்பாலன்றி முத்தணிந்தமையால் மேலும் மிக்க தண்மை பெற்ற முலை என்பது குறிக்க. **"முலைத்தடம்"** வெயிற் காலத்தில் தண்மையும், கார்காலத்தில் வெப்பமும் தரும் இருதன்மையுடைய தென்ப; "தண்டாமரையின் முகையெனலா மம்முகைதான், தண்ணெனவும் வெச்செனவுந் தாராது" என இதனைச் சுவைபடப் பாராட்டிய காளமேகப் புலவன் பாட்டும் காண்க.

காணும் மகிழ்ச்சியில் - அக நிகழ்ச்சியாகிய மகிழ்ச்சி புறத்திலும் காணும்படி.

மாந்தர் - "பூங்குழலார்" என முன்னர்க் கூறியமையின், முலைத்தடத்து ஆண் பாலரையும், ஏனையிடத்து இருபாலரையுங் குறித்தது.

பூங்குழலார் - காலநிலைக் கேற்பப் பூக்களை முடித்த குழல் என்பது. பூ - அழகு என்றலுமாம்.

2286. மயிலொடுங்க வண்டாட மலர்க்கமல முகைவிரியக்
குயிலொடுங்காச் சோலையின்மென் றளிர்கோதிக் கூவியெழத்
துயிலொடுங்கா வுயிரனைத்துந் துயில்பயிலச் சுடர்வானில்
வெயிலொடுங்கா வெம்மைதரும் வேனில்விரி தருநாளில், 388

காணும்... உறைவர் - முன்கூறிய "மேலும்" முதலிய ஐந்திடங்களிலும் தனித்தனிக் கூட்டுக. ஐம்புலனுகர்ச்சிக் குறிப்புப்படத் தொகைக் குறிப்பாக ஐந்திடங்கள் கூறினார்.

மாந்தர் - ஆறறிவுடைய மக்கள் என்பது குறிப்பு. முன்பாட்டில் மான் - புள் முதலியனவாய் நடப்பன பறப்பனவாதி, மக்களொழிந்த ஏனை உயிர்வகைகளைக் கூறினார். 2283-ல் மக்கள் வேனிலில் விரும்பும் பொருள் வகைகளையும், இங்கு அவர் இருந்து இன்பந் துய்க்கும் இடவகைகளையும் கூறினார். 2283 முதல் 2286 வரை நான்கு பாட்டுக்களும் முது வேனில் நிகழ்ச்சிகளைத் தன்மையணியிற் காட்டிய கவிநலம் கண்டுகொள்க.
387

2286. **பொருளுரை...** மயில்... விரிய - மயில்கள் ஒடுங்கவும், வண்டுகள் ஆடவும், தாமரை மலர்கள் மொட்டு விரியவும்; ஒடுங்காச் சோலையில் மென்தளிர் கோதிக் குயில் கூவி எழ - ஒடுங்காத சோலையின்கண் மெல்லிய தளிர்களைக் கோதிக்கொண்டு குயில்கள் கூவி எழவும்; துயில்.... பயில - துயில் பயின்று ஒடுங்காத உயிர்கள் எல்லாம் துயின்று ஒடுங்கவும்; சுடர்வானில்... நாளில் - ஆகாயத்தினிடத்து விளங்கும் சுடராகிய சூரியன் தனது வெப்பமுடைய கதிர்கள் ஒடுங்காது வெம்மை தருகின்ற முதுவேனில் விரிகின்ற நாளில்,

விளக்கவுரை... ஒடுங்க - விரிய - எழ - பயில - விரிதரும் என்க. இவை வேனில் விரிந்து முதிர்ந்ததன் காரணமாக நிகழும் நிகழ்ச்சிகள்; ஒடுங்கும்படி விரியும்படி - எழும்படி - பயிலும்படி - விரிதரும்.

மயில் ஒடுங்க - கார்கண்டு மகிழ்வன மயில்களாதலின் வேனில் விரியக்கண்டு ஒடுங்கின என்க;

வண்டு ஆட - வேனிலில் மலரும் மிக்க பூக்களின் தேன் உண்டு வண்டுகள் பாடி ஆட ஆடுதல் - களிமிகுதியாற் பறத்தல் குறித்தது.

கமலமலர் முகைவிரிய - என்க.

ஒடுங்காச் சோலை என்றது இலைதளிர்கள் கூம்புதலின்றி விரிந்து நின்ற நிலையில் முற்பகல் காலம் குறித்தது. மரஞ் செடிகளின் இலைகள் இரவில் ஒடுங்கித் துயில்வன போல்வன என்பது தாவரநூற்றுணிபு. "கண்படாத காயாப்புளி" (1156) என்ற விடத் துரைத்தவை ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

மென்றளிர் கோதிக் குயில் கூவிஎழ - என்க. **மென்றளிர்** - மாந்தளிர்கள். "பானாறு மலர்ச்சூதப் பல்லவங்க ளவைகோதி, யேனோர்க்கு மினிதாக மொழியு மெழி விளங்குயிலே" (பிள் - தேவா - தோணி).

2287. சண்பைவரும் பிள்ளையார் சடாமகுடர் வலஞ்சுழியை
எண்பெருகத் தொழுதேத்திப் பழையாறை யெய்துதற்கு
நண்புடைய வடியார்க ளுடன்போத நடந்தருளி
விண்பொருநீண் மதிளாறை மேற்றளிசென் றெய்தினார். 389

துயில் ஒடுங்கா - பகலில் உறங்காத.

சுடர்வானில் - ***சுடர்*** - ஞாயிறு; ***வெயில்*** - ஞாயிற்றின் வெப்பமுடைய கதிர். வெப்ப மிகுதியே தருதற்கிடமாகிய முதுவேனில்; இஃது இளவேனிற்கின்றி முதுவேனிலின் சிறப்பியல்பு.

விரிதருதல் - முதிர்தல். நாளில் - பிள்ளையார் - ஏத்தி - நடந்தருளி - எய்தினார் என மேல்வரும் பாட்டுடன் கூட்டிமுடிக்க.

குயிலொடுங்கும் - ஊரனைத்தும் - வேனில் தருமந்நாளில் - என்பனவும் பாடங்கள்.
388

2287. பொருளுரை— சண்பைவரும் பிள்ளையார் - சீகாழியில் அவதரித்தருளிய ஆளுடைய பிள்ளையார்; சடாமகுடர்... தொழுதேத்தி - சடையை மகுடமாகக் கொண்ட இறைவரது திருவலஞ்சுழி என்னும் அப்பதியினை எண்ணத்திற் பெருகும்படி தொழுது துதித்து; பழையாறை எய்துதற்கு - திருப்பழையாறையினைச் சார்வதன் பொருட்டு; நண்புடைய.... எய்தினார் - நண்பு பெருகவுடைய அடியவர்களுடன் போதலை விரும்பி நடந்தருளியவராகி வானமளாவ நீண்டுயர்ந்த மதிலையுடைய திருப்பழையாறை மேற்றளியினைச் சென்று சேர்ந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை— சடாமகுடர் - சிவபெருமான் சடையையே மகுடம்போல முடித்துக் கட்டியவர்; "சடைமுடி" (திருவிசை - சாட்டியக்குடி); "சுடர்ச்சடை சுற்றிமுடித்து" (பிள்ளை - தேவா - பாச்சில்-1). இது சிவனது சிறப்படையாளம்.

எண்பெருக - பின்னர்த் தமது எண்ணத்துள் என்றும் நின்று பெருகும்படி; "எந்தையா ரிணையடி என்மனத் துள்ளவே" (பிள் - தேவா - காளத்தி); "ஏகம்பன் காணவனென் னெண்ணத் தானே" (தாண்); ***எண்*** - திருவருள் நினைவு என்பாருமுண்டு. பிள்ளையார் முதலிய பெரியோர் ஒரு பதியினின்றும் விடைபெற்றுப் புறப்படும் போது அப்பதியினை மனத்துட்கொண்டு பதியவைத்துத் துதித்து வணங்கி மேற்செல்வது இயல்பு. ***எண்*** - அன்பு - உறைப்பு - என்றலுமாம்.

எய்துதற்கு - எய்தும் பொருட்டு; எய்துதற்கு - எய்தினார் என்க. பழையாறையினை நோக்கிச் சென்ற பிள்ளையார் இடையில் மேற்றளியினை எய்தினார் என்பது.

அடியார்களுடன் போக நடந்தருளி - அடியார்களுடன் தாம் உடன் செல்லும் பேறு எய்தும் பொருட்டுச் சிவிகையில் எழுந்தருளாது நடந்தருளினர் என்பது. "மெய்த்

2288. திருவாறை மேற்றளியில் வீற்றிருந்த செந்தீயின்
உருவாள னடிவணங்கி யுருகியவன் பொடுபோற்றி
மருவாருங் குழன்மலையாள் வழிபாடு செய்யவருள்
தருவார்தந் திருச்சத்தி முற்றத்தின் புறஞ்சார்ந்தார். **390**

தொண்டரோ டினிதிருந் தமையாலே - விண்டொழிந்தன நம்முடை வல்வினை" என்று பாடியருளிய நினைவுடனிருந்து அதனையே நடந்து காட்டியருளினர் என்பதும் குறிப்பு. அடியார்களுடன் தாம் போதும் பொருட்டு என்க. அடியார்கள் தம்முடன் போத என்றுரைப்பாருமுண்டு. அஃதுரையன்மை யுணர்க.

விண் பொருநீள் - விண்ணைப் பொருவுதல் போல நீண்ட. **பொருவுதல்** - உயர்ச்சியால் ஒத்தல்; மாறுகொண்டு ஓங்குதல் என்ற குறிப்புமாம்.

பழையாறை - ஆறைமேற்றளி.

389

2288. பொருளுரை... திருஆறை மேற்றளியில்.... போற்றி - திருப்பழையாறை மேற்றளியின் கண் எழுந்தருளிய செந்தீவண்ணராகிய இறைவரது திருவடிகளை உருகிய அன்புடனே துதித்து; மருவாரும்.... சார்ந்தார் - மணம் பொருந்திய கூந்தலையுடைய மலைமகளார் வழிபட அருள் செய்த இறைவரது திருச்சத்தி முற்றம் என்னும் பதியின் புறத்திலே அணைந்தருளினர் (பிள்ளையார்).

விளக்கவுரை.... போற்றிச் - சார்ந்தார் - என்க. பிள்ளையார் என்ற எழுவாய் முன்பாட்டிலிருந்து வருவிக்க.

செந்தீயின் உருவாளன் - சிவபெருமான் - "தீவண்ணர் திறம்" (தாண்); 'எரியலா லுருவ மில்லை' (நேரிசை); எட்டு மூர்த்தியுள் ஒன்று; "அட்டமூர்த்தியைப் பொருளென வுடைமையின்" (2684)); துறந்த முனிவர்கள் அணியும் கல்லாடையும் அக்கருத்தினை உணர்த்துவதென்பர்.

மருவாரும் குழல் - இயற்கை மணமுடைய உயர்வு குறித்தது. "கொங்குதேர் வாழ்க்கை" என்ற திருப்பாட்டின் வரலாறு இங்கு நினைவு கூர்தற்பாலது.

மலையாள்... திருச்சத்திமுற்றம் - சத்தி வழிபட்டு அருள்பெற்ற காரணத்தால் இப்பெயர் பெற்றதென்பார் அக்குறிப்புப்பெற உடம்பொடு புணர்த்தி ஓதினார்; தல வரலாறு பார்க்க; மேல்வரும் பாட்டும் பார்க்க.

புறம் - புறநகர்.

அடிவணங்கி - என உடம்பாலும்; **உருகிய அன்பொடு** - என மனத்தாலும்; **போற்றி** - என வாக்காலும் கூடிய முக்கரணமும் ஒன்றுபட்ட வழிபாடு குறிக்கப்பட்டது.

குழலுமையாள் திகழ்ந்திருந்த - என்பனவும் பாடங்கள்.

2289. திருச்சத்தி முற்றத்திற் சென்றெய்தித் திருமலையாள்
அருச்சித்த சேவடிக ளார்வமுறப் பணிந்தேத்திக்
கருச்சுற்றி லடையாமற் கைதருவார் கழல்பாடி
விருப்புற்றுத் திருப்பட்டீச் சரம்பணிய மேவுங்கால், 391

திருஆறை மேற்றளி - திருச்சத்தி முற்றம் - இவற்றின் பிள்ளையார் பதிகங்கள் கிடைத்தில!

சத்திமுற்றம் - தலவிசேடம் - தொகுதி III *பக்கம் 442 பார்க்க.* *390*

2289. பொருளுரை.. திருச்சத்தி முற்றத்தில்.... ஏத்தி - திருச்சத்தி முற்றத்திற் போய்ச் சேர்ந்து திருமலை வல்லியார் அருச்சனை செய்து வழிபட்ட அழகிய திருவடிகளை ஆர்வத்தோடும் வணங்கித் துதித்து; கருச்சுற்றில்... பாடி - பிறவிச் சூழலில் அடையாத வண்ணம் கைகொடுத்து ஈடேற்றுவாராகிய இறைவரது திருவடிகளைப் பாடி; விருப்பு உற்று.. மேவுங்கால் - விருப்பம் பொருந்தித் திருப்பட்டீச்சரத்தினை வணங்கும் பொருட்டுச் செல்கின்ற காலத்திலே;

விளக்கவுரை.... சென்று எய்தி *- "புறஞ்சார்ந்தார்" என முன்பாட்டிற் கூறிய புறநகரினின்றும் பதியினுள்ளே சென்று திருக்கோயிலை அடைந்து;*

திருமலையாள் அருச்சித்த *- முன் பாட்டிற் கூறிய குறிப்பு. முன்கூறியது பிள்ளையார் திருவுள்ளத்தில் எண்ணிய நிலையும், இங்குக் கூறியது அவர்கண்ட நிலையும் குறித்து நின்றமையாற் கூறியது கூறலன்மை யுணர்க.*

ஆர்வமுறப்பணிந்து ஏத்தி *- தமக்கு ஞானவமுதூட்டிய அம்மை அருச்சித்த பெற்றி நினைய அத்தொடர்பு பற்றி ஆர்வமிகுந்த தென்பது குறிப்பு.*


கருச்சுற்றில் அடையாமல் கைதருவார் *- உயிர், பிறவிச் சூழலினுள் சேராமல் கைகொடுத்து ஏற்றுவார்; ஆன்மாக்களிடத்துத் தமது முதல்வன துபகாரம் குறித்தது. கரு - பிறவி;* ***சுற்று*** *- சூழல்; அகப்பட்டார் தன்னுள்ளே சுழன்று நிற்பதல்லாது வெளிப்போதலியலாது செய்து உள் அழுத்துதலின்* ***சுற்று*** *எனப்பட்டது. "இழைக்கும் வினைப் பயன்சூழ்ந்த விப்பிறவிக் கொடுஞ்சூழல்" (876);*

அடைதல் *- அதுவே புகலாக உள் அழுந்துதல்;* ***கைதருதல்*** *- உபகரித்தல்; ஆழ் குழியினுள் வீழ்ந்தானை மேல் உள்ள அருளுடை ஒருவன் கைகொடுத்து ஏற்றும் செயல்போல என்று உவமத்தை உள்ளடக்கிய உபசார வழக்கு; "பொருடரு கண்ணிழந் துண்பொரு ணாடிப் புகலிழந்த, குருடருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழி நின், றருடரு கைகொடுத் தேற்றும்" (திருவிருத்); மலையாள் அருச்சித்தமை தமது குழவிகளாகிய உயிர்களின் பொருட்டேயாகலின் அத்தன்மையைத் தந்தருளிய அப்பனார் என்பது உட்குறிப்பு.*


பாட்டு - 2242



திருச்சி பல்லவர் குடைந்த மலைக்குகை



திருச்சிராப்பள்ளி (மலைக்கோட்டை) தலமும் உச்சிப்பிள்ளையார் கோயிலும்



திருச்சி மலை உச்சிப்பிள்ளையார் கோவில்



திருச்செந்துறை


திருப்பட்டீச்சரம்
முத்துப்பந்தல் திருஞானசம்பந்தர்



திருப்பட்டீச்சுரம்
முத்துப்பந்தல்சுவாமி, அம்பாள்



ஆளுடைய பிள்ளையாருக்கு முத்துப் பந்தர் அளித்த விழாக் காட்சி



திருப்பட்டீச்சுரம் கோவில் வெளிப்புறம் - பாட்டு - 2295

2290. வெம்மைதரு வேனிலிடை வெயில்வெப்பந் தணிப்பதற்கு
மும்மைநிலைத் தமிழ்விரகர் முடிமீதே சிவபூதந்
தம்மையறி யாதபடி தண்டரளப் பந்தரெடுத்
"தெம்மைவிடுத் தருள்புரிந்தார் பட்டீச" ரென்றியம்ப, **392**

விருப்பு உற்ற - விருப்பமாவது இப்பதியினுள் சிவாகமங்களுள்ளும் வேதத்துள்ளும் துதிக்கப்படும் சிறப்பாம் பசுபதியாகிய தன்மை பற்றி நினைந்தமையாற் போந்த ஆர்வம். **தல இறைவர் பசுபதீசர்;** தலப் பெயர்க்குறிப்பும் காண்க; தலவிசேடம் பார்க்க.

மேவுங்கால் *(2289)* - சிவபூதம் - இயம்பப் *(2290)* - பிள்ளையார் - தாழ்ந்தார் *(2291)* என்று இம்மூன்று பாட்டுக்களையும் கூட்டி முடித்துக்கொள்க. *391*

2290. பொருளுரை- வெம்மைதரு... தணிப்பதற்கு - வெப்பத்தையே மிகத் தருகின்ற முதுவேனிலில் வெயிலின் கொடிய வெப்பத்தினைத் தணித்து ஆற்றும் பொருட்டு; மும்மைநிலை...பந்தர் எடுத்து - முத்தமிழ் விரகராகிய பிள்ளையாரது திருமுடியின் மேலே, தம்மை அறியாத வகையிலே சிவபூதம், முத்துப் பந்தரினை எடுத்துப் பிடித்து; எம்மை... இயம்ப - பட்டீசர் எங்களை இதனுடன் சென்று தரும்படி விடுத்தருளினர் என்று சொல்ல,

விளக்கவுரை- மும்மை நிலைத்தமிழ் - தமிழ் ஒன்றே மூன்று நிலையின் விளங்குவது என்பார் நிலை என்றார். "தெரிமாண் டமிழ் மும்மை" என்றார் பிறரும். தமிழ் ஒன்றே - ஒரு தன்மைத்தே - என்பது உலகளந்து துணியும் தெய்வத்தன்மையாகிய மேன்மை. "ஞாலமளந்த மேன்மைத் தெய்வத்தமிழ்" *(970)*; நிலை அழிவில்லாத என்ற குறிப்புமாம்.

சிவபூதம் தம்மை யறியாதபடி - பூதங்கள் தம்மைப் பிறர் அறியாத வகையாலே; தம்மைப் பிறர் உருக்காணாதபடி;

தண்டரளப் பந்தர் எடுத்து - முத்துப்பந்தர் மட்டும் காணும்படி எடுத்து.

எம்மை... என்று இயம்ப - பட்டீசர் எம்மை விடுத்தருளினார் என்ற சொல்லோசை மட்டும் கேட்கும்படி கூறி; **பட்டீசர்** - திருஆவூர்ப் பசுபதீச்சரத்திறைவரது பெயர்;

தண் தரளப் பந்தர் - வேனிலில் "உலகுளோர் முத்தணி விரும்ப" (2283) எனவும், "முத்தணிந்த" (2285) எனவும், முன்னர்க் கூறியவை கருதுக. **"வெயில் வெப்பந் தணிப்பதற்கு"** என்ற குறிப்பு மிது; முன்னர்ச் சிவிகையும் சின்னங்களும் முத்தினாளியன்றபடி அருளியவை வேறு குறிப்பு; ஆண்டுக் காண்க. *392*

2291. பொருளுரை... அவ்வுரையும்... எழ - அந்தச் சொற்களும் அழகிய முத்தின் பந்தரும் ஆகாயத்தில் எழுந்தனவாக; செவ்விய...பிள்ளையார் - செம்மையுடைய சிவமெய்ஞ்ஞானத்தினை உணர்ந்த சீகாழிப் பிள்ளையார்; "இவ்வினை.... இசைவ"தென - "இச் செயல்தான் இறைவரது திருவருளானால் அது நமக்கு இசைவதாக" என்று உட்கொண்டு; மெய்விரவு.... தாழ்ந்தார் - திருமேனியில் மயிர்ப்புளக முண்டாக நிலத்தின்மேல் விழுந்து வணங்கினார்.

2291. அவ்வுரையு மணிமுத்தின் பந்தருமா காயமெழச்
செவ்வியமெய்ஞ் ஞானமுணர் சிரபுரத்துப் பிள்ளையார்
"இவ்வினைதா னீசர்திரு வருளாகி லிசைவ"தென
மெய்விரவு புளகமுடன் மேதினியின் மிசைத்தாழ்ந்தார். **393**

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... அவ்வுரையும்...எழ *- உரையும் உரையின் பொருளாகிய பந்தரும் ஒருங்கே ஆகாயத்தில் தோன்ற; சத்தமாகிய உரைக்கிடம் ஆகாயமாம்; இங்கு உரையும் அதன் பொருளும் ஆகாயம் என்ற ஓரிடத்தே ஒரு காலத்து எழுந்தன என்றது கவிநயம்.*

அவ்வுரை *- முன் "எம்மை...பட்டீசர்" (2290) என்ற அந்த உரை என முன்னறி சுட்டு;*

செவ்விய மெய்ஞ்ஞானம் உணர் - பிள்ளையார் இசைவதெனத் தாழ்ந்தார் *- உணர்ந்தாராதலின் எனக் காரணப்பொருள் குறிக்க உடம்பொடு புணர்த்தி ஓதினார்; "முழுதுணர்ந்த மெய்ஞ்ஞானச் சிந்தையினில்" (திருமூலர் - புரா. 22)* ***செவ்விய*** *- செம்மை பயத்தற் கேதுவாகிய;* ***செவ்விய மெய்*** *- என்பன இயற்கையடைமொழி;*

இவ்வினை *- அவ்வாறு உரையும் பந்தரும் ஒருங்கே எழும்பொருள் குறித்த செயல்.*

இசைவது *- நாம் இசைவது - ஏற்றுக்கொள்வது - ஆக என்ற வியங்கோள்; "கொள்ள லாகுங்கொண் டுய்த்தல்செய்வாய்" (2104) என்ற அருளை நினைவு கூர்ந்தபடி.*

மெய்விரவு புளகம் *- திருமேனி முழுதும் புளகாங்கிதமாகி மயிர்க்கூச்செறிதல் அருளுணர்ச்சியின் விளைவாகிய மெய்ப்பாடுகளுள் ஒன்று.*

மேதினியின் மிசைத்தாழ்ந்தார் *- சிவிகையின்மேல் எழுந்தருளாது நடந்தருளினாராதலின் (2287) நிலத்திற்றாழ்ந்து வணங்கியமை மட்டும் கூறினார்.*

தாழ்ந்தார் *- திருவருள் வெளிப்பாட்டினைப் போற்றும் வகையாற் பந்தரினை வணங்கியபடி.* *393*

2292. ***பொருளுரை... அதுபொழுதே...கைக்கொண்டார்*** *- அப்பொழுதே அழகிய முத்துப் பந்தரைத் திருவருள் சிறந்தோங்கும்படி ஒளிவீசும் அழகிய காம்புகளைப் பரிசனங்கள் கைக்கொண்டனர்;* ***மதுரமொழி....மருங்கு*** *- இனிய மொழியினையுடைய தமிழ் மறைத் தலைவராகிய பிள்ளையாரது பக்கத்தில்;* ***இமையோர்... போலும்*** *- தேவர்கள் பொழிந்த மணமுடைய தெய்வப்பூக்களால் அந்தப் பந்தர் பூம்பந்தரும் போன்றிருந்தது.*

விளக்கவுரை... அதுபொழுதே *- உரையும் பந்தரும் ஆகாயம் எழுந்த அப்பொழுதே என முன்னறி சுட்டு. ஏகாரம் தேற்றம். "அப்பொழுதே அம்பலத்து ளாடுகின்ற கழல்வணங்கி" (1444); "அப்பொழுதே" என்றது உரை கேட்டலும் பந்தர் எழுதல் காணலும் நிகழ்ந்தவுடனே மணிக்காம்பு பரிசனங்கள் கைக்கொள்ளுதலும் உடனிகழ்ச்சிபோல நிகழ்ந்தன என்ற விரைவு குறித்தது.*

2292. அதுபொழுதே யணிமுத்தின் பந்தரினை யருள்சிறக்கக்
கதிரொளிய மணிக்காம்பு பரிசனங்கள் கைக்கொண்டார்;
மதுரமொழி மறைத்தலைவர் மருங்கிமையோர் பொழிவாசப்
புதுமலரா லப்பந்தர் பூம்பந்த ரும்போலும். **394**

2293. தொண்டர்குழா மார்ப்பெடுப்பச், சுருதிகளின் பெருந்துழனி
யெண்டிசையு நிறைந்தோங்க வெழுந்தருளும் பிள்ளையார்
வெண்டரளப் பந்தர்நிழன் மீதணையத் திருமன்றில்
அண்டர்பிரா னெடுத்ததிரு வடிநீழ லெனவமர்ந்தார். **395**

அருள் சிறக்க - திருவருள் வெளிப்பாடு உலகிற் பரந்தோங்க. திருவருள் புலப்பட என்றார் முன்னுரைகாரர்.

பந்தரினைக் காம்பினைக் - கைக்கொண்டார் - என்க. *காம்பு* - பந்தரின் கோல். **கைக்கொள்ளுதல்** - கைகளாற் பற்றிக் கொள்ளுதல். "முதலையைப் பிள்ளை தரச் சொல்லு காலனையே" (தேவா) என்புழிப்போல; இரு செயப்படுபொருள்கள் வந்தன.

மறைத்தலைவர் மருங்கு பொழி - மலர் - பந்தர் பிள்ளையார் மேலே நிழற்றியதாதலின் இமையோர் பொழிந்த மலர்கள் அதன் மேலும், நடந்தருளும் பிள்ளையாரது (முடிமேலன்றிப்) பக்கங்களிலும் வீழ்ந்தன என்பது. **மறைத்தலைவர்** - பிள்ளையார். **மதுரமொழி மறை** - தேவாரம்.

புதுமலரால் - பூம்பந்தரும் போலும் - முத்துப்பந்தரேயன்றிப் பூம்பந்தரும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

மலரால் - மலர்கள் நிறைந்தவதனால்; "புண்ணிய விளைவுபோல்வார் பூம்பந்தர் முன்பு சார்ந்தார்" (புரா. 1225) என்பதும் இங்குக் கருதத் தக்கது. **புதுமலர்** - மந்தாரம் - முதலிய தெய்வ மரங்களின் மலர்.

கதிரொளிசெய் - என்பதும் பாடம். *394*

2293. பொருளுரை.... தொண்டர் குழாம்.... பிள்ளையார் - தொண்டர் கூட்டம் ஆரவாரிக்கவும், வேதங்களின் பெருமுழக்கமானது எட்டுத் திசைகளிலும் நிறைந்து ஓங்கி யெழவும் எழுந்தருளி வருகின்ற பிள்ளையார்; வெண்தரளப்பந்தர்நிழல் மீது அணைய - வெள்ளிய முத்துப் பந்தரின் நிழலானது தமது முடியின் மேலே நிழல் பரப்பி அணையப் பெறுதலாலே; திருமன்றில்... என அமர்ந்தார் - திருவம்பலத்தில் தேவ தேவராகிய இறைவரது எடுத்த திருவடி நீழலில் அமர்ந்திருத்தல்போல் அமர்ந்தருளினர்.

விளக்கவுரை.... ஆர்ப்பெடுத்தல் - அரகரவென்று சிவநாம முழக்கம் செய்தலும் பல்லாற்றானும் எடுத்துப் போற்றுதலுமாம்.

சுருதிகளின்... ஓங்க - உயர்ந்த சுரங்களில் ஒருசேர ஒலிக்கப்படுதலால் பெருந்துழனியாய் எல்லாத் திசைகளிலும் நிறைந்து மேலோங்கக் காரணமாயிற்று.

2294. **பாரின்மிசை யன்பருடன் வருகின்றார் பன்னகத்தின்**
ஆரமணிந் தவர்தந்த வருட்கருணைத் திறம்போற்றி
யீரமனங் களிதழைப்ப வெதிர்கொள்ள முகமலர்ந்து
சேரவருந் தொண்டருடன் றிருப்பட்டீச் சரமணைந்தார். **396**

மீது பந்தர்நிழல் அணைய - என்க. *அணைய* - அணைதலால். காரணப்பொருளில் வந்த வினையெச்சம். *அணைய - அமர்ந்தார்* - என்று முடிக்க.

திருஅடி நீழல்என - திருவடி நீழலில் அமர்தல்போல. பந்தர் நிழலில் அமர்தல் அடிநீழலில் அமர்தலுக்கு ஒப்பாயிற்று. வினையும் உருவும் பயனும்பற்றி வந்த உவமம். பந்தர்நிழல் திருவருட் பேறாதலின் அருளாகிய திருவடி நீழலேயாம் என்க. *எடுத்த* - தூக்கிய; உயிர்களைப் பிறவிப் பெருங்குழியினின்றும் மேல் எடுத்த; "எடுக்குமாக்கதை" (3).

எழுந்தோங்க - என்பது பாடம். 395

2294. பொருளுரை— பாரின்மிசை... வருகின்றார் - நிலத்தின்மேல் அன்பர்களுடனே நடந்து வந்தருளுகின்றாராகிய பிள்ளையார்; பன்னகத்தின்... போற்றி - பாம்புகளாகிய ஆரங்களை யணிந்த இறைவர் தந்த திருவருட் கருணைப் பெருக்கின் றிறத்தினைப் போற்றிக் கொண்டபடியே; ஈரமனம்... தொண்டருடன் - அன்பு நிறைந்த மனம் களிப்போங்க எதிர்கொள்ளும் பொருட்டு முகமலர்ந்து ஒன்றுகூடி வருகின்ற திருத்தொண்டர்களுடனே; திருப்பட்டீச்சரம் அணைந்தார் - திருப்பட்டீச்சரத்தினை அணைந்தனர்.

விளக்கவுரை— *பாரின்மிசை அன்பருடன் வருகின்றார்* - அன்பருடன் கூடிவரும் பேறு பெறும்படி சிவிகையினை ஊர்ந்து வருதலின்றி நிலத்தில் நடந்துவருகின்றவராகிய பிள்ளையார். "நண்புடைய அடியார்க ளுடன்போத நடந்தருளி" (2287); இவ்வாறன்றிப் *பாரின்மிசை வருகின்றார்* என்றதற்கு நிலவுலகின்கண் வரும் என்று உரைத்தனர் முன் உரைகாரர்.

ஈர மனங்களிதழைப்ப - ஈரம் - அன்பு; முன்னமே அன்பு நிறைந்த அடியார்களின் மனம், பிள்ளையாரது வருகையினால் களிப்பு மேலிட்டுப் பெருக.

மனம் களிதழைப்ப எதிர்கொள்ள வரும்தொண்டர் - என்று கூட்டுக. இவர்கள் பிள்ளையாரை எதிர்கொள்ளத் திருப்பட்டீச்சரத்தினின்றும் வரும் அடியவர்கள்.

மனங் களிதழைப்ப - என்றதற்கு இவ்வாறன்றிப் பிள்ளையார் தமது அன்பு பொருந்திய திருவுள்ளத்தில் மகிழ்ச்சி அதிகரிக்க என்றுரைப்பாருமுண்டு.

சேர - திரளாக ஒன்றுகூடி; பிள்ளையாருடன் வரும் அன்பர் கூட்டத்தினுடன் சேர என்றலுமாம். இப்பொருளில் சேர என்றது சேரும்பொருட்டு என்ற பொருள் தந்து நின்றது.

அன்பருடன் வருகின்றார் - தொண்டருடன் - அணைந்தார் என்று கூட்டி முடிக்க. 396

2295. சென்றணைந்து திருவாயிற் புறத்திறைஞ்சி யுட்புக்கு
வென்றிவிடை யவர்கோயில் வலங்கொண்டு **வெண்கோட்டுப்**
பன்றிகிளைத் தறியாத பாததா மரைகண்டு
முன்றொழுது விழுந்தெழுந்து மொழிமாலை போற்றிசைத்தார். 397

2295. பொருளுரை- வெளிப்படை - சென்று அணைந்து திருவாயிலின் புறத்திலே வணங்கி, உள்ளே புகுந்து, வெற்றி பொருந்திய விடையினை உடைய இறைவரது திருக்கோயிலை வலமாக வந்து, வெள்ளைக்கொம்பையுடைய பன்றி வடிவெடுத்த திருமால் நிலத்தைக் கிளைத்தும் காணமுடியாத திருவடித் தாமரைகளைக் கண்டு, திருமுன்பு தொழுது நிலமுற விழுந்து, எழுந்த சொன்மாலையால் துதித்தருளினார்.

விளக்கவுரை- அணைந்து - இறைஞ்சி - புக்கு - வலங்கொண்டு - கண்டு - தொழுது - விழுந்து - எழுந்து - போற்றிசைத்தார் - என்று வழிபாட்டு முறைகளை எல்லாம் தொடர்ந்து கூட்டி - வினைமுடிபு செய்துகொள்க. வினையெச்சங்கள் தனித்தனி வழிபாட்டு அங்கங்களைக் குறித்து நின்றன.

வெண்கோட்டுப் பன்றி - பன்றி உருவெடுத்த விட்டுணு; **வெண்பன்றி கோட்டினாற் கிளைத்தறியாத** என்று மாற்றி கூட்டி உரைத்தலுமாம். "வெள்ளைப் பன்றி பலநாளும் வழிபட்டேத்த" (தாண்); **கிளைத்தல்** - மண்ணைக்கீண்டித் தேடிச் செல்லுதல்; **வெண்கோட்டுப்பன்றி** என்றதனால் ஒற்றைக்கொம்பினையுடைய பன்றி என்பர் முன்னுரைகாரர். வராகாவதாரத்தில் சிவபிரான் பறித்ததொன்றொழிய நின்ற மற்றை ஒரு கொம்பு என்பது குறிப்பென்பர்.

அறியாத பாதம் கண்டு - பெருந் தேவனாகிய மாலுக் கறிவரிதாயினும் அன்பர் எளிதிற் காண்டற்குரியது என்பது குறிப்பு; **பன்றியும்** என உயர்வு சிறப்பும்மை தொக்கது.

மொழிமாலையால் போற்றிசைத்தார் - என மூன்றனுருபு விரிக்க.

முன் - திருமுன்பு;

கிழித்தறியாத - என்பதும் பாடம். 397

திருப்பட்டீச்சரம்

திருச்சிற்றம்பலம்

பண் - சாதாரி

பாடன்மறை சூடன்மதி பல்வளையொர் பாகமதில் மூன்றொர்கணையாற்
கூடவெரி யூட்டியெழில் காட்டிநிழல் கூட்டுபொழில் சூழ்பழையையுள்
மாடமழ பாடியுறை பட்டிசர மேயகடி கட்டரவினார்
வேடநிலை கொண்டவரை வீடுநெறி காட்டிவினை வீடுமவரே. (1)

மந்தமலி சோலைமழ பாடிநகர் நீடுபழை யாறையதனுட்
பந்தமுயர் வீடுநல பட்டிசர மேயபடர் புன்சடையனை

யந்தண்மறை யோரினிது வாழ்புகலி ஞானசம் பந்தனணியார்
செந்தமிழ்கள் கொண்டினிது செப்பவல தொண்டர்வினை நிற்பதிலவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் தந்த அருள் வெள்ளத்திறம் பரவி ஆனந்தப் பெருவெள்ளத்திடை மூழ்கித் திளைத்து, இறைவரைப் போற்றியது; (2296)

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) மறை பாடலையும், மதி சூடலையும், பல்வளையொர் பாகத்தையு முடையவன்; **மதில் மூன்று எரி ஊட்டி** (ஊட்டியவன்); **அரவினார்** - வீடுநெறி காட்டிவினை வீடுமவர் - என்று வினை முடிவு செய்க; பாடல் - சூடல் - பாகம் - உடையான் என்க. **ஊட்டி** - பெயர்; **நிழல் கூட்டு** - மிக்க நிழல் செய்யும்; **பழைசை** - பழையாறை; இளையான்குடி இளைசை என வழங்கியது போல; **பட்டிசரம்** - கோயிலின் பெயர்; **மழபாடி** - நகரின் பெயர் பழையூர் என்பது போலும்; இது திருப்பூந்துருத்திக் கருகில் காவிரிக்கு வடகரை 54-வது தலமாகிய திருமழபாடியுடன் மயங்கற்பாலதன்று; இது சிறு நகரமாய்ப் பழையாறை என்னும் பெரிய தலநகருட் சேர்ந்து நின்றமையால் **பழைசையுள் - மழபாடி** என்றார். 11-வது பாட்டுப் பார்க்க. வீட்டுமவரே என்பது சந்தநோக்கி **வீடுமவரே** என நின்றது. (2) **நச்சு இலையதோர்** - நஞ்சுத் தன்மையுடைய இலைவடிவாகிய; (3) **கௌவை** - மிக்க ஓசை; **மேலை** - பின்நிலை; **ஒரு** - ஒப்பற்ற; (4) **கண்ணின்...செஞ்சடையினான்** - பகீரதன் தவஞ் செய்தவிடத்து வந்து உலகில் இறங்கச் செய்ய அவ்வாறு இறங்கிய கங்கையின் ஒரு முகம் துதித்து வீற்றிருக்கும் சடையினை உடையவன்; **நேர்இல்** - ஒப்பற்ற; **உடனாதலது - அது** - அதனை; (5) **மத்தவிழவு** - சுத்தமத்தளத்துடன் நிகழும் ஒருவகை விழா; **வரையார் பருவமழை** - மலைமுகடேறிப் பெய்யும் பருவகால மேகம்; **பண்கவர் செய்** - "முழவதிர மழையென்றஞ்சி" (தேவா); பண்ணுக் கொத்தபடி ஒலிக்கும்; **யானைவெருவ** - என்றும், **எரியுருவ விடையினான்** என்றும் கூட்டிக் கொள்க; (6) **ஒலிபாடுவன** - உரிய சுரத்துடன் பாடும்; **விரவார்** - பொருந்திய; **ரட்டம் அமர்** - கூத்தாடும்; **நட்டம் அமர் - இறைவன்** என்று கூட்டுக. **பிறையினொடு - புனல் தோற்ற நிலையாம்** - பிறை தோற்றமும் - புனல் நிலையுமாம் என்று நிரனிறையாகக் கூட்டுக; (7) **பேணலுறுவார் - உள்ளமுடையார்கள் - மறவாத வவரே (யாகி) - ஏத்தி எழுவார்கள்** என்ற கூட்டி வினை முடிவு செய்க; **துறவி எனும்** - துறந்த; **தொகுசீர்** - சீர்கள் யாவும் தொக்க; **ஏத்தி** - தலவணக்கம்; **வழிபாடு** - இறைவரை வணங்குதல்; **விரை** - மணமுடைய மலர்கள்; **நறவ** - தேனுடைய; (8) **வலவனாகி** - வல்லவன் ஆகி - வலியே கருதி; **வரையுற்றதுணராத** - மலையை அசைவு செய்த நிலையினை உணராத; **உணர்தல்** - ஈண்டுப் புலனாதல் என்ற பொருளில் வந்தது; **நிரம்பாமதி** - பிள்ளைப் பிறை; **நாசமற** - பிறப்பிறப்பு ஒழிய; (9) **அவன** - அவனுடைய; **அது** - வகையினை; **அகலம்** - பரப்பு; **பாய** - பரவிய; பொருந்திய; (10) **உழறும்** - கடுப்பொடியையுடைய அமணரும், உடற் கவசம் உடைய புத்தரும் கத்தும் மொழி என்க. **படை** - சூலம்; மழு என்றலுமாம். **பற்று அறுதலே** - உறுதி. (11) **மந்தம்** - மணம்; செறிவு - புதுமை, தென்றல் - என்றலுமாம். "மந்தமார் பொழில்" "மந்தம்வந் துலவும்" (தேவா). **பந்தமுயர் வீடுநல** - "பந்தமும் வீடும் படைப்போன்" (திருவா);

தலவிசேடம் : திருப்பட்டீச்சரம் - காவிரிக்குத் தென்கரையில் 23-வது தலம்; தேவராவின் கன்று பூசித்தமையால் இப்பெயர் பெற்றது; **திருவான்பட்டி** என்று கொங்கு நாட்டுத் திருப்பேரூருக்கு இக்காரணத்தாற் பெயர் வழங்குதல் காண்க; இராமன் பூசித்துப் பிரமகத்தி நீங்கப் பெற்றனன். இவ்விழா மார்கழி அமாவாசையிற் சிறப்பாகக் கொண்டாடப் பெறுகின்றது; மிகப் பழைமையாகிய இராம படம் ஒன்று கோயிலில் உள்ளது. ஆளுடைய பிள்ளையார் தூரத்தில் எழுந்தருளிவரும் பொழுதே இடப தேவர்களை விலக்கி இறைவர் நேர் காட்சி கொடுத்தருளினர் என்பர். இங்குப் பல சிறந்த திருப்பணி செய்த கோவிந்த தீட்சிதரும் தேவியாரும் கோயிலில் தாபிக்கப் பெற்றுள்ளனர். **சுவாமி** - **பட்டீச்சர நாதர்**; அம்மை - **பல்வளை நாயகி**; தீர்த்தம் - **ஞானதீர்த்தம்**; மரம் - **வன்னி**; பதிகம் - 1.

இது திருச்சத்தி முற்றத்தின் தெற்கே அடுத்த வீதி திருமலைராயன் ஆற்றுக்கு வடகரையில் உள்ளது.

2296. பொருளுரை- அருள்.. பரவி - திருவருட் பெருக்கினது திறத்தினைத் துதித்து; அளப்பரிய- மூழ்கி - (அதனாற் போந்த) அளவிடற்கரிய ஆனந்தமாகிய பெருவெள்ளத்திற் றிளைத்து; பேராத... பரிவுடனே - பெயர்தலில்லாத பெருங் காதல் கொண்ட திருவுள்ளத்தின் பரிவுடன்; செம்பொன் மலைவல்லியார்.. புறத்தணைந்தார் - செம்பொன் மலையரசனது மகளாராகிய பார்வதி யம்மையார் பொற்கிண்ணத்தில் தந்த ஞானவமுத முண்டருளிய திருஞானசம்பந்தர் திருக்கோயிற் புறத்திலே அணைந்தருளினர்.

விளக்கவுரை... **அருள் வெள்ளத் திறம்பரவி** - அவ்வாறு பரவியதனாற் பெற்ற **அளப்பரிய ஆனந்தப் பெருவெள்ளம்** என்க. அதனாற் பெற்ற என்பது குறிப்பெச்சம்; அருளைப் பரவுதல் ஆனந்தத்தை விளைக்கும் என்க.

பேராத - பெயராத; **பெயர்தல்** - நீங்குதல்.

திருவுள்ளப் பரிவுடனே - **சம்பந்தர் புறத்தணைந்தார்** - என்று கூட்டி முடிக்க.

திருவுள்ளப் பரிவுடனே - **மலைவல்லியார்** - **தரும்** - **அமுது** - என்று கூட்டி அதனை மலைவல்லியாரது செயலின் றன்மை கூறியபடி என்று உரைத்தலுமாம்.

அருள் வெள்ளத்திறம் - மாறன்பாடிக் கருகில் பிள்ளையார் நடந்து சென்றருளிய போது பாத தாமரை பைப்பைய நொந்தமைகண்டு இறைவர் முத்துச் சிவிகையருளினார். அதனை "அரத்துறை யடிகட மருளே" என்று வியந்து போற்றியருளினர் பிள்ளையார்; ஈண்டு முதுவேனிலில் வெயிலில், அச்சிவிகை யிருப்பவும், அடியாருடன்போத நடந்து போந்தமை கண்ட இறைவர் வெயில் வெப்பந் தணிப்பதற்குப் பந்தரிட்டருளினர்; "பட்டீசர மேத்தியெழு வார்கள்வினை யேதுமிலவாய், நறவவிரை யாலுமொழி யாலும்வழி பாடுமற வாதவவரே" என்பது முதலாகவரும் திருப்பதிகக் குறிப்புக் காண்க.

வள்ளத்து - வள்ளத்தின்கண்; ஏழனுருபு தொக்கது.

அருள் வள்ளற்றிறம் பரவி - என்பதும் பாடம்.

2296. அருள்வெள்ளத் திறம்பரவி, யளப்பரிய வானந்தப்
பெருவெள்ளத் திடைமூழ்கிப், பேராத பெருங்காதற்
றிருவுள்ளப் பரிவுடனே செம்பொன்மலை வல்லியார்
தருவள்ளத் தமுதுண்ட சம்பந்தர் புறத்தணைந்தார். 398

2297. பொருளுரை— அப்பதியில்.... சென்று இறைஞ்சி - அந்தத் திருப்பதியின் கண் விரும்பி எழுந்தருள்கின்ற பிள்ளையார் சொல்லுதற்குரிய சிறப்பினையுடைய திருப்பழையாறை வடதளியில் போய் வணங்கி; ஒப்பரிய தமிழ்பாடி - ஒப்பரிதாகிய தமிழ்ப் பதிகத்தினைப்பாடி; உடன் அமரும்.... எய்தினார் - தாம் உடனாய், விரும்பிய திருத்தொண்டர்களுடனே, எல்லாப் பொருள்களுமாய் நின்ற இறைவரது திருவிரும்பூளையினை அடைந்தருளினர்.

***விளக்கவுரை*— அமர்கின்ற பிள்ளையார் - சென்றிறைஞ்சி** - "திருஅடிநீழல் என அமர்ந்தார்" (2293) என்று பந்தர் நீழலில் அமர்ந்தது போலவே அப்பந்தரினை அருளிய பட்டீச்சரப் பதியிலும் அமர்கின்றார் என்க. **அமர்கின்ற** என்று நிகழ்காலத்தாற் கூறியது அப்பதியும் வடதளியும் மிக அண்மையில் உள்ளனவாதலின் ஒன்றில் இருக்கின்றார் மற்றதனையும் உடன் வணங்கு மியல்பு குறித்தற்கு.

செப்பருஞ் சீர்த்திருவாறை வடதளி - திருப்பழையாறை வடதளி; பிள்ளையார் இறைஞ்சிச் சென்ற பின்னும், அதன்பின் ஆளுடைய அரசுகள் சென்றிறைஞ்சும் நிகழ்ச்சிக்கு முன்னும், உள்ள இடைப்பட்ட காலத்தில் இப்பதியின் விமானத்தினைச் சமணர் மறைத்துத் தமது பாழி ஆக்கியிட்டனர் என்பது கருதப்படும். அரசுகள் புராணம் பார்க்க (1559-1565); ***செப்பரும்சீர்*** - என்றது பின்வரும் அந்த நிகழ்ச்சிக் குறிப்புப்போலும்.

ஒப்பரிய தமிழ்பாடி - பிள்ளையாரது பதிகம் கிடைத்திலது!

உடன் அமரும் தொண்டரொடும் - பிள்ளையார் தாம் உடன் இருத்தலை விரும்பிய தொண்டர்; "நண்புடைய அடியார்க ளுடன்போத" (2287), "அன்பருடன் வருகின்றார்" (2294) என்ற விடங்களில் உரைத்தவை இங்கு நினைவு கூர்தற்பாலன. இவ்வாறன்றிப் பிள்ளையாருடன் அமரும் தொண்டர் என்றுரைப்பாருமுண்டு.

எப்பொருளுமாய் நின்றார் - கலப்பினால் இறைவன் எல்லாப் பொருள்களினும் அவையேயாய் நிற்கின்றார்; ***பொருள்*** - என்றது இங்குச் சடமும் சித்துமாகிய எல்லா வற்றையும் குறித்தது; ஏனைத் தனு, கரண, புவனங்களாகிய பொருள்கள் எனக் கொள்ளின், தனது மாயை என்னும் சத்தியால் அவற்றைத் தருபவன் என்க. "இரு நிலனாய்த் தீயாகி... எம் அடிகள் நின்றவாறே" என்ற நின்ற திருத்தாண்டகமும், "அவையே தானேயாய்" (2-சூத்) என்ற சிவஞான போதமும் காண்க. 399

2298. பொருளுரை– தேவர்பிரான்– எய்த - தேவதேவராகிய சிவபெருமான் விரும்பி வீற்றிருக்கும் திருவிரும்பூளையினைப் பிள்ளையார் சென்று சேர; காவணம்... நாட்டி - பந்தர்களைத் தோரணங்களுடன் நிறுத்தி; உடன் களிசிறப்ப - கூடிய பெரு மகிழ்ச்சி

2297. அப்பதியி லமர்கின்ற வாளுடைய பிள்ளையார்
செப்பருஞ்சீர்த் திருவாறை வடதளியிற் சென்றிறைஞ்சி
யொப்பரிய தமிழ்பாடி யுடனமருந் தொண்டருடன்
எப்பொருளு மாய்நின்றா ரிரும்பூளை யெய்தினார். 399

2298. தேவர்பிரா னமர்ந்ததிரு விரும்பூளை சென்றெய்தக்
காவணநீ டோரணங்க ணாட்டியுடன் களிசிறப்பப்
பூவணமா லைகணாற்றிப் பூரணபொற் குடநிரைத்தங்
கியாவர்களும் போற்றிசைப்பத் திருத்தொண்ட ரெதிர்கொண்டார். 400

ஓங்குதலினால்; பூவணமாலைகள்... நிரைத்து - பூக்களாலமைந்த அழகிய பெருமாலைகளைத் தொங்கவிட்டு நிறை பொற்குடங்களை வரிசைபெற அமைத்து; அங்கு... எதிர்கொண்டார் - யாவரும் துதிக்கத் திருத் தொண்டர்கள் அவ்விடத்து எதிர் கொண்டனர்.

விளக்கவுரை... தோரணமும் காவணமும் என்க. **நாட்டி** - நிலைபெறச் செய்து.

உடன் - நாட்டியதனோடு; **களிசிறப்ப** - மகிழ்ச்சி மிகுதலால்; நாட்டியதனுட னமையாது மேலும் மாலைகள் நாற்றுதற்குக் காரணம் கூறியபடி; வினையெச்சம் காரணப் பொருளில் வந்தது.

பூவணமாலை - வண்ணப்பூமாலைகள்; **வண்ணம்** - அழகும் உருவும் குறித்தது. வண்ணம் என்பது எதுகை நோக்கி **வணம்** என நின்றது; "மண்ணினல்ல வணம் வாழலாம்" என்புழிப்போல (தேவா); இவை தோரணங்களோடன்றித் தனியே நாற்றப்பட்டவை.

நாற்றுதல் - தொங்க வைத்தல்; "பெருந்தண் கணவீர நறுந்தண் மாலை, துணையுற வறுத்துத் தூங்க நாற்றி" (முருகு).

நிரைத்து - பலவற்றையும் வழி முழுதும் வரிசையாக அமைத்து. **நிரை** - வரிசை.

யாவர்களும் போற்றிசைத்தல் - தொண்டர்களும் அல்லாவேனையோரும் மாதர்களும் பிறரும் ஆகிய யாவரும்; **போற்றிசைத்தல்** - வாழ்த்தித் துதித்தல். இது எதிர்கொள்ளு முறைகளுள் ஒன்று.

பூவணை மாலைகள் - என்பதும் பாடம். 400

2299. பொருளுரை... வண்தமிழின்... தொழுதே - வளப்பமுடைய தேவாரத் தமிழின் இனியமொழித் தலைவராகிய பிள்ளையார் அழகிய முத்துச் சிவிகையினின்றும் (எதிர்கொண்ட) தொண்டர் கூட்டத்தின் எதிர் இறங்கி அங்கு அவர்கள் தம்மைத் தொழும் பொழுதே தாமும் அவர்களைத் தொழுதே; அண்டர்பிரான்... இறைஞ்சி - தேவர்கள் நாயகரது திருக்கோயிலை அணைந்து வணங்கி; முன்நின்று - திருமுன்பு நின்று; பண்தரும்... பாடுவார் - பண்களை வெளிப்படுக்கும் இனிய இசையினையுடைய திருப்பதிகத்தினால் பரம்பொருளா மிறைவரைப் பாடுவாராய்;

2299. வண்டமிழின் மொழிவிரகர் மணிமுத்தின் சிவிகையினைத்
தொண்டர்குழாத் தெதிரிழிந்தங் கவர்தொழத்தா முந்தொழுதே
யண்டர்பிரான் கோயிலினை யணைந்திறைஞ்சி முன்னின்று
பண்டருமின் னிசைப்பதிகம் பரம்பொருளைப் பாடுவார், 401

---

*விளக்கவுரை... **வண்தமிழின் மொழி விரகர்** - வண்டமிழின் மொழி - தேவாரம்; **வண்மை**யாவது உயிர்க்குறுதி தருதலின் வள்ளன்மை; **இனிமை**யாவது சொல்லாலும் இசையாலும் பயனாலும் இன்பமுடைமை;*

***தொண்டர் குழாத்தெதிர் சிவிகையினை இழிந்து** என்க.*

***இழிந்தமை** - வணங்குதற் பொருட்டும் மரபு பற்றியுமாம்.*

***அங்கு** - அவ்விடத்தே - அது போழ்தே - எனக் காலமும் இடமும் ஒருங்கே தலைப்பட்டமை குறித்தது.*

***அவர் தொழத் தாமும் தொழுதே** - "முன்பி றைஞ்சின ரியாவரென் றறியா முறைமை"யின் (244) இரு திறத்தின் வணக்கமும் உடனிகழ்ந்தன என்பதாம்; **உம்மை** - உயர்வு சிறப்பு; தொழப்பட்டதாமும் என எச்சமுமாம்.*

***பண்தரும் இன்இசை - பண் தருதல்** - பண்களின் அமைதியெல்லாங் காட்டுதல்; **இன்இசை** - இசை வேறு; பண் வேறு என்றபடி. இதன் விரிவெல்லாம் 221-ம் பாட்டின் கீழும் பிறாண்டும் பார்க்க.*


***பரம்பொருள்** - எல்லாப் பொருள்களுக்கும் அப்பாற்பட்டவர். அத்தன்மை இதுவென மேல்வரும் பாட்டிற் கூறுகின்றார்.*

***பாடுவார் - பாடினார்** - என்று கூட்டி முடிக்க; **பாடுவார்** - பாடுவாராகி; முற்றெச்சம். 401*


2300. பொருளுரை... நிகரிலா.... நீண்டானை - ஒப்பற்ற மாமேரு மலையும் ஒரு அணுவாகும்படி நீண்ட பெருமையராகியும்; நுகர்கின்ற... நொய்யானை - தம்மையே அனுபவிக்கின்ற அடியவர்களுக்கு அமுதமாய் மிகவும் நொய்யவராகியும் நிற்கும் அப்பரம்பொருளை; தகவு ஒன்ற... வினவி - தகைமை பொருந்த அடியார்களை வினவும் தன்மையில்; தமிழ் விரகர்... பாடினார் - தமிழ் விரகராகிய பிள்ளையார், சொல்லப்படுகின்ற அரிய மறைகளின் உட்பொருள்கள் விரியும்படி பாடியருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

*விளக்கவுரை... **நிகரிலா.. நீண்டானை - நிகரிலா மேரு** - மேரு - பொன்மலை; இறைவர் கையிலேந்தி வில்லாக வளைக்கப்பட்டமையும், உலக நடுவாக நின்று சூரியனாற் சுற்றப்படுகின்ற பெருமையும், கிரிகளுட் டலைமையாம் பெருமையும் முதலாகிய பல பெருமைகளை யுடைமையால் **நிகரிலா** என்றார். "பொங்குகிரி களிற்றலைமை யோதும் போது பொற்புடைய பொற்கிரிமுன் மாபோல்" (கந்தபு - சுருக்).*



திருப்பழனம் உட்கோபுரம்
பாட்டு 2197




திருச்சேறை
பாட்டு 2301




திருநாலூர் மயானம் - பின்
பக்கத்திலிருந்து பார்வை பாட்டு 2301



திருநாலூர் மயானம் - முன் பார்வை
பாட்டு 2301



திருவேதிகுடி
பாட்டு 2255



திருநல்லம் கோயிலும், குளமும்
பாட்டு 2332

2300. நிகரிலா மேருவரை யணுவாக நீண்டானை
நுகர்கின்ற தொண்டர்தமக் கமுதாகி நொய்யானைத்
தகவொன்ற வடியார்க டமைவினவித் தமிழ்விரகர்
பகர்கின்ற வருமறையின் பொருள்விரியப் பாடினார். 402

மேரு அணுவாக நீளுதலாவது - இதனை நோக்க மிகப் பெரிய மேருவும் மிகச் சிறிய அணுவேயாம் என்னும்படி மிக மிகப் பெரியனாகுதல். *அணு* - சிறியதுட் சிறிது; "அண்டமோ ரணுவாம் பெருமைகொண் டணுவோ ரண்டமாஞ் சிறுமை கொண்டு" (கருவூர் - திருவிசை - கங்கை) "அணோரணீயாம் மகதோர் மகீயாம்" என்பது வேதம்.

நீண்டானை - நொய்யானை - நீண்டானாயினும் நொய்யானாயினான்; *நீளுதல்* - அன்பில்லாதவழி யெட்டப்படாது அரியனாந் தன்மையும், *நொய்தாதல்* அன்புள்ள வழி மிக எளியனாந் தன்மையும் குறித்தன. *தொண்டர் தமக்கு* - நொய்யான் என்றதனால் இது விளக்கப்பட்டது; "கனவிலுந் தேவர்க் கரியாய் போற்றி, நனவிலு நாயேற் கருளினை போற்றி" (திருவா).

நுகர்கின்ற - நுகர்தலாவது மனமொழி மெய்களால் வணங்குதலன்றி எப்போதும் இடையறாது சிவானந்தத்தினில் மூழ்கி அனுபவித்தல்; "பொடி நுகரும் சிறுத்தொண்டர்" (பிள் - தேவா - திருச்செங்காட்டங்குடி).

தகவொன்ற - வினவி என்க. கேட்கப் பெற்ற அடியார்களின் பெருமைக்கேற்க. (2297-2287) இறைவனது தன்மைகள் விளங்கப் பொருந்தும்படி என்பதும் குறிப்பு.

அடியார்கள் தமை வினவி - வினவியதாக அமைந்தது; "அண்டர்பிரான்ற னருளின் வண்ண மடியார் பெருமையிற் கேட்டருளி" (2250), "வினவி யெடுத்த திருப்பதிகம்... நினைவரியோன் செயலை யடியாரைக் கேட்டு மகிழ்ந்த தன்மை" (2251) என்றவை ஈண்டு நினைவு கூர்தற்பாலன.

பகர்கின்ற - மெய்ம்மை எடுத்து உரைக்கின்ற எனவும், எழுதப்படாது சொல்லப்பட்டே வழிவழி வருகின்ற எனவும், மேலோர்கள் பரவிச் சொல்கின்ற எனவும், நித்தமாய் இறைவன் பகர்கின்ற எனவும் உரைக்க நின்றது; நிகழ்காலத்தாற் கூறியது எல்லாக் காலத்தும் நிகழ்தலுணர்த்தற்கு; "முந்நிலைக் காலமுந் தோன்று மியற்கை, யெம்முறைச் சொல்லு நிகழுங் காலத்து, மெய்ந்நிலைப் பொதுச்சொற் கிளத்தல் வேண்டும்" (தொல் - சொல் வினை - 43) என்றபடி பெயரெச்சப் பொதுச்சொல்லாற் கூறினார். பகர்தலைச் செய்யும் என்க.

அருமறையின் பொருள் விரிய - மறைகளின் உட்கருத்தாகிய உண்மைகள் விளங்கும்படி; அவை சிவனே முழுமுதற் கடவுள்; சிவனே தியானிக்கத் தகுந்தவன்; சிவன் பேரருள், வரம்பிலாற்றல் முதலிய எண் குணங்களுடையவன்; உயிர்கள் சிவனுக்

கடிமைப்பட்டுய்யத்தக்கன என்பன முதலாயின; அப்பொருள்கள் பதிகத்துட் போந்தவாறு பதிகக் குறிப்புக்களுட் கண்டுகொள்க.

அடியார் கடமை விரவி - என்பதும் பாடம். *402*

திருஇரும்பூளை

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம்**

சீரார் கழலே தொழுவீ! ரிதுசெப்பீர்,
வாரார்முலை மங்கையொ டும்முட னாகி
யேரா ரிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
காரார் **கடனஞ் சமுதுண்ட கருத்தே**. (1)

எந்தை யிரும்பூளை யிடங்கொண்ட வீசன்
சந்தம் பயில்சண்பையுண் ஞானசம் பந்தன்
செந்தண்டமிழ் செப்பிய பத்திவை வல்லார்
பந்தம்மறுத் தோங்குவர் பான்மையி னாலே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவனது தன்மைகளை அடியார் பெருமையிற் கேட்டருளுதல்; வினாவும் உரையும் ஒவ்வொர் பாசுரத்தினுட் பெறப்படுமாறு அருளியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **கழலே தொழுவீர்!** - தொண்டர்களே!; ஏகாரம் பிரிநிலை; தொண்டர்கள் - அன்பருள்ளீர் என மேற்பாட்டுக்களில் வருவன காண்க; **மங்கையோடும் உடனாகி** - பேரருளுடைமை குறிப்பு. **கடனஞ் சுண்ட கருத்து** - அருளுடைமை காரணம் என்றபடி; பேராற்றலும் குறித்தவாறு; **மங்கை யோடுடனாதல்** மேல் ஒவ்வோர் பாசுரங்களினும் கூறுதல் காண்க. கானிடையாடுதல் (2) அரவொடு என்பு பூணுதல் (5) முதலாகப் பின்வருவன எல்லாம் இக்கருத்தே பற்றியன; **காரார்கடல் - கார்** - கரிய நிறம்; மேகம் என்றலுமாம்; காரார் நஞ்சு என்று கூட்டினுமமையும்; (2) **தொழலார்** - யாவரும் தொழுந் தன்மையுடைய; **குழல்** - வேய்ங் குழலிசை; **வளை** - வளையினையுடையவர்; **கரிகாடு** - சங்காரத்தின் பின் உள்ள காடு. **ஆடுதல்** - அருளால் உலகை மீள உளதாக்குதற் பொருட்டும் ஆம். (3) **புனல்** - கங்கை; (4) **நச்சி** - விரும்பி; **உச்சித்தலை** - (கபாலம்) மண்டையோடு; **கச்சிப்பொலி காமக்கொடியுடன் கூடிய** - காமாட்சியம்மைக்கும் இத்தல அம்மைக்கும் ஏலவார் குழலி என்பது பெயராகும் என்ற குறிப்பு. (திரு. வ.செ. குறிப்பு). **உச்சி** - உச்சம் போதில் என்றலுமாம்; "உச்சம் போதா லூரூர் திரிய"; (நம்-தேவா-கச்சூராலக் கோயில்); **ஊண்** - உண்ணுதல்; **பலிதேர்தல்** - அடியாரை வாழ்வித்தற் பொருட்டு என்பர் திருமூலர். (5) **சுற்றார்ந்து** - வலமாகச் சுற்றிவந்து; **எற்றே** - எவ்வாற்றானும்; **என்பு பூணுதல்** - முழுமுதற் றன்மையும், **அரவு பூணுதல்** - வரம்பிலாற்றலும் என்று மழியாத தன்மையும் குறிப்பன; **புற்றாடு** - என்பது

2301. **பாடுமர தைப்பெரும் பாழியே முதலாகச்**
சேடர்பயி றிருச்சேறை திருநாலூர் குடவாயில்
நாடியசீர் நறையூர்தென் றிருப்புத்தூர் நயந்திறைஞ்சி
நீடுதமிழ்த் தொடைபுனைந்தந் நெடுநகரி லினிதமர்ந்தார். **403**

சாதியடை; (6) **ஈடாய்** - வேடுவனாய என்று கூட்டுக; ஈடாதல் அருள் பொருந்துதல்; (8) **ஒருக்கும்** - ஒன்றுபடுத்தும்; ஒருங்கும் என்பது மெல்லொற்ற வல்லொற்றாய்ப் பிறவினைப் பொருள் தந்து நின்றது; **உரம்** - வலிமை; (9) **துயராயின நீங்கி** - துன்பந்தரும் யானென தென்னும் செருக்கு நீங்கி; **கயலார்** - கயல் போன்ற; **ஆர்** - உவமவுருபு; **முயல்வார்** - காண முயன்றவராகிய பிரம விட்டுணுக்கள்; (10) **துணை** - திருவடிபோன்ற; திருவடிச் சார்பு தருதற்குத் துணை செய்யும் என்றலுமாம்; **அணைவு இல்** - சிவனை அறிந்து சாரும் தவமில்லாத; **ஆக்கிய ஆறு** - புறச்சமயங்களும் படிமுறையால் அவ்வத் தரமுள்ள உயிர்கள் ஈடேறும் பொருட்டு இறைவனருளால் ஆக்கப்பட்டவை என்பது. (11) **ஈசன்** - ஈசனைச் செப்பிய; சம்பந்தனுரை ஈசன் தனதுரையாகச் செப்பிய என்ற குறிப்புமாம்; **வல்லார் - பான்மையினால் - பந்தம் அறுத்து ஓங்குவர்** என்க. இறைவனது அருட்டன்மைகளை உணரப்பெறுதலே உய்யும் வகையாகும் என்றிவ்வாறு பயன் அருளினார்.

தலவிசேடம் : திருஇரும்பூளை - காவிரியின் தென்கரையில் 68-வது பதி; இது **ஆலங்குடி** என வழங்குவது. பூளை என்ற செடி தலமரமாதலின் இப்பெயர் பெற்றது. இது பூளைவனம் எனவும்படும்; விசுவாமித்திரர் பூசித்த தலம். சுவாமி - **காசியாரணியர்**; அம்மை - **உமையம்மையார் - ஏலவார்குழலி**; தலமரம் - **பூளை**; பதிகம் 1.

இது நீடாமங்கலம் நிலயத்தினின்றும் வடக்கே கற்சாலைவழி கும்பகோணம் சாலையில் 4 நாழிகை யளவில் உள்ளது.

2301. **பொருளுரை... பாடும்... முதலாக** - பாடப் பெறுகின்ற திரு அரதைப் பெரும்பாழியே முதலாக; **சேடர்பயில்... இறைஞ்சி** - அறிவுடையோர்கள் பயில்கின்ற திருச்சேறையும், திருநாவலூரும், திருக்குடவாயிலும், நாடிய சிறப்புடைய திருநறையூரும், தென்திருப்புத்தூரும் ஆகிய பதிகளை விருப்பத்துடன் சென்று வணங்கி; **நீடுதமிழ்த்தொடை புனைந்து** - நீடுகின்ற தமிழ் மாலைகளைச் சாத்தி; **அந்நெடு நகரில் இனிது அமர்ந்தார்** - அந்தப் பெரிய நகரத்தின்கண் இனிதே விரும்பி எழுந்தருளியிருந்தனர்.

விளக்கவுரை... பாடுதல் - பெரியோர்களாற் பரவப்படுதல்.

அரதைப் பெரும்பாழியே முதலாக - திருவிரும்பூளையினின்றும் மேற்கிலும், இப்பாட்டில் மேற்குறிக்கும் திருச்சேறை முதலியவை வேறாக வடக்கிலும் வடகிழக்கிலும் உள்ளனவாதலின் வேறு பிரித்துணரப் பெரும்பாழியே முதலாக என்று பிரித்து ஓதினார்.

சேடர் - அறிவோர்; ஞானிகள்; "சேடர்வாழ் சேறை" சீரியார்பயில் சேறை" (குறுந்); **பயிலுதல்** - வாழ்ந்து மிக வழிபடுதல்; இதனை மேல்வரும் எல்லாத் தலங்களுடனும் கூட்டுக.

திருச்சேறை - திருநாலூர் - (மயானம்) - (திருக்) **குடவாயில் - நறையூர் - திருப்புத்தூர்** - இப்பதிகள் இவ்வரிசையில் ஒன்றற்கொன்றணிமையில் அடையத் தக்கனவாய் அமைந்துள்ளன.

நாடியசீர் நறையூர் - சீர் - சிறப்பு. சிறப்புக்கள் இப்பதியினை நாடி வருவன என்பது குறிப்பு. **சித்தீச்சரம்** என்பது இங்குள்ள கோயிலின் பெயர்.

நாலூர் - திருநாலூர் மயானம் என்ப.

தென் திருப்புத்தூர் - இது அரிசொற் கரைப்புத்தூர் என்று வழங்கப்படும்; **தென்** - அழகு; "அழகார் திருப்புத்தூர்" (நம்பி - தேவா); **தென்** - திசையைக் குறித்ததன்று; தெற்கில் பாண்டி நாட்டில் உள்ள திருப்புத்தூர் வேறு.

நயந்து - விரும்பிச் சென்று; "நயப்பாடு" (1241) அன்பின் முதிர்ச்சியின் விளைவு **நயப்பு** என்பர்.

அந்நெடுநகர் - திரு அரிசிற்கரைப் புத்தூர். இங்குப் புகழ்த்துணை நாயனாரது சிறப்புக் குறிப்பு. திருத்தொண்டத் தொகையும், பிள்ளையார் பதிகமும் பார்க்க. **நெடுமையாவது** சிவன் அருள் நீடுதல்.

இனிதமர்ந்தார் - சின்னாள் விரும்பி எழுந்தருளியிருந்தனர். 403

திருஅரதைப் பெரும்பாழி

பண் - கொல்லி

திருச்சிற்றம்பலம்

பைத்தபாம் போடரைக் கோவணம் பாய்புலி
மொய்த்தபேய் கண்முழக் கம்முது காட்டிடை
நித்தமா கந்நட மாடிவெண் ணீறணி
பித்தர்கோ யில்லர தைப்பெரும் பாழியே (1)

நீரினார் புன்சடை நிமலனுக் கிடமெனப்
பாரினார் பரவர தைப்பெரும் பாழியைச்
சீரினார் காழியுண் ஞானசம் பந்தன்செய்
யேரினார் தமிழ்வல்லார்க் கில்லையாம் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நிமலனுக்கு இடம் எனப் பாரினார் பரவுவது அரதைப் பெரும்பாழியாம். (பதிகம் 11).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பைத்த** - (நச்சுப்)பையினையுடைய; **புலி** - புலித்தோல் அரைக்கோவணம்; **நித்தமாக** - இறைவரது ஐந்தொழில் நடம் இடையீடின்றி என்றும் நிகழ்வது (திருமந்) (2) **கயல** - **சேல** - கயல்போன்ற - சேல் போன்ற; **பயலை** - பசலை; வேட்கை முதலியவற்றால் மெய் பசத்தல்; **இயலை** - நினைந்து என்க; (3) **கோடல்** - வெண்காந்தள்; ஏற்றுக்கொள்ளுதல் என்றலுமாம்; **சால** - மிக; சந்தநோக்கி வகரவொற்று விரிந்தது; **மூடல்** - உரிப்போர்வை; **முளிதல்** - வெந்துபோதல். **முளி** - வெந்த. "எயில்அழல் அன்பின் முளிய" (பரிபா); **பீடு** - பெருமை; (4) **மண்ணர்-விண்ணர்** - ஐம்பூதங்களினும் நிறைந்து இயக்குபவர்; **மெய்ப் பொருள் பண்ணர்** - மெய்ப் பொருளைக் கூறும் மறை யோசையினை யுடையவர்; மேற்பாட்டில் "மறையர் வாயின்மொழி " எனத் தொடர்ந்து கூறினார்; (5) **கார்** - கார்காலம். (6) **தற்று** - உடுத்து - தரித்து; **பெற்று** - **பெற்றம்** - இடபம்; **பெற்றம்** - இடபக்கொடி - ஊர்தி - உடையவர்; (7) **சுரிசங்கு துணையில் துத்தம் அமர்** - சுரிசங்குகள் ஒப்பற்ற துத்தம் முதலிய இசைகளை முழக்கும்; **துத்தம்** - ஏழிசையுள் ஒன்று; இங்கு இசைப் பொதுமையுணர்த்தி நின்றது; **வெண்பொடி** - திருநீறு - பொடி பூசியவர்; **துணையில் துத்தம்** - நிகரிலாப் பால் - **அமர்** - உவம உருபு எனக் கொண்டு பால் போலவும் சங்கு போலவும் வெள்ளிய திருநீறு என்பது திரு. வ.சு.செ. அவர்கள் குறிப்பு. **எரிகணை** - எரி - (தீ)யாகிய அம்பு; **பிணை** - மான்; (8) **சரிவு** - இளைத்தல்; **நெரிவில்ஆர** - நெரிதலைப் பொருந்த; (9) **எரி அராவும் சடை** - எரிபோன்று சிவந்த சடை; **அராவுதல்** - வெல்லுதல் - தன்மை மேம்பட்டு அழித்தல் என்ற பொருளில் வந்தது; (10) **ஏண்** - நன்மை; (11) **நீரினார்-பரவு** - பதிகக் கருத்து.

தலவிசேடம் :- திருவரதைப் பெரும்பாழி - காவிரியின் தென் கரையில் 99-வது பதி; அரித்துவார மங்கலம் என வழங்கப்படுவது; திருமால் வராக அவதாரத்திற் பூசித்தபதி என்றும், அவ்வராகத்தின் கொம்பைச் சிவபிரான் பறித்தணிந்த இடம் என்றும் வரலாறு கேட்கப்படும்; சுவாமி சந்நிதியில் பன்றிகிளைத்த பிலத்துவாரம் உள்ளதென்பர். ஊர்ப் பெயரும் இதனை அறிவுறுத்துவதாம்; (துவாரம் - பிலம்); இது **சமீவனம்** எனப்படும்; சுவாமி - **பாதாளவரதர்**; அம்மை - **அலங்காரவம்மை**; தீர்த்தம் - **பிரம தீர்த்தம்**; மரம் - வன்னி; பதிகம் 1.

இது கோயில் வெண்ணி நிலயத்தினின்றும் வடமேற்கே ½ நாழிகை யளவில் திருவெண்ணியூரினின்றும் வடக்கே மட்சாலை வழி 3½ நாழிகை யளவில் அடையத்தக்கது. சாலியமங்கலம் நிலயத்தினின்றும் வடக்கே கற்சாலை வழி 2½ நாழிகை யளவில் நலஞ்சேரிப் பாலத்தினால் விண்ணாறு கடந்து, அதன் வடகரையில், கிழக்கே மட்சாலை வழி 4 நாழிகையில் திரு அவளிவணல்லூரை அடைந்து, அதன் கிழக்கு ஒரு நாழிகையளவிலும் இதனைச் சேரலாம். இவ்வழி சுற்றும் அதிக தூரமுமுள்ளது.

திருச்சேறை

திருச்சிற்றம்பலம்

திருவிராகம் பண் - சாதாரி (3-ம் திருமுறை)

முறியுறு நிறமல்கு முகிழ்முலை மலைமகள் வெருவமுன்
வெறியுறு மதகரி யதள்பட வுரிசெய்த விறலினர்
நறியுறு மிதழியின் மலரொடு நதிமதி நகுதலை
செறியுறு சடைமுடி யடிகடம் வளநகர் சேறையே (1)

கற்றநன் மறைபயி லடியவ ரடிதொழு கவினுறு
சிற்றிடை யவளொடு மிடமென வுறைவதொர் சேறைமேற்
குற்றமில் புகலியு ளிகலறு ஞானசம் பந்தன
சொற்றக வுறமொழி பவரழி விலர்துயர் தீருமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் "கவினுறு சிற்றிடையவளொடு மிடமென வுறைவதோர் சேறை" (11)

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **முறியுறு நிறம்மல்கு முகிழ்முலை** - மாந்தளிர் போலும் நிறத்தினையும் அரும்புபோலும் முலையினையுமுடைய; "வருமாந்தளிர்மேனி" (தேவா); முறி - கொழுந்திலை; **நறி** - நறுமையுடைமை; (2) **புரிவினரது** - புரிவினராகிய அடியவர் என்க; **புரிதல்** - இடைவிடாது பயிலுதல்; செயலினர் என்றலுமாம்; (3) **வளையினர் - மனைதொறும் - திரிதரு** - என்க; (4) **செடிபடு சடை** - செடிபோல விரிந்த; (5) **அர அரிவாளி** - வாசுகி என்னும் பாம்பாகிய நாணிற் கோத்த அரி (மால்) ஆகிய அம்பு; (6) **மத்தரம்** - கொடுமை; **பத்தொரு பெயருடைய விசயன்** - 10 பேர்களையுடைய அருச்சுனன்; "பெயர்கள் பத்துடைய மன்னன்" (பிள். தேவா - கோகரண - சாதாரி-10) **அத்திரம்** - பாசுபதாத்திரம்; (7) **வாடினர்** - வீந்தவர்; இறந்தவர்; (8) **கட்டுரம்** - உடல் வலிமை; **நிட்டுரன்** - கொடியவன்; **மட்டுரம்** - வாசம்; (9) **பன்றியர் பறவையர்** - பன்றியும் பறவை (அன்னம்)யுமாகிய வடிவுகொண்ட மாலு மயனும்; **அன்றிய** - மாறுபட்டெழுந்த - இகலிய; **அடியோடு முடியவை** - நிரனிறையாகக் கூட்டுக;- (10) **துகடு உறு** - பட்டைச் சாயம் தோய்த்த; **துகள் துறு** - குற்றமுடைய - அழுக்குடைய என்றலுமாம்; "மாசார் துவராய போர்வையார்" (நாலூர்மயானம் - 10) **விகடம்** - விகற்பம்; வேற்றுமை; **வினவிடல்** - கேட்க வேண்டா; (11) **இடமென வுறைவதோர் சேறை** - பதிகக் கருத்து; இறைவர் என்ற எழுவாய் வருவிக்க; **இகலறு** - குற்றமற்ற; "இகலில ரெனினும்" (புரா - 854); **தகவுற** - தக்கவாறு.

தலவிசேடம் :- திருச்சேறை - தொகுதி III பக்கம் 487 பார்க்க.

திருநாலூர் மயானம்

திருச்சிற்றம்பலம்

பண் - சீகாமரம் (2-ம் திருமுறை)

பாலூரு மலைப்பாம்பும் பனிமதியு மத்தமும்
மேலூருஞ் செஞ்சடையான் வெண்ணூல்சேர் மார்பினான்
நாலூர் மயானத்து நம்பான்ற னடிநினைந்து
மாலூருஞ் சிந்தையர்பால் வந்தூரா மறுபிறப்பே. (1)

ஞாலம் புகழ்காழி ஞானசம் பந்தன்றான்
நாலு மறையோது நாலூர் மயானத்தைச்
சீலம் புகழாற் சிறந்தேத்த வல்லாருக்
கேலும் புகழ்வானத் தின்பா யிருப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நாலூர் மயானத் திறைவரை யேத்துவார்பாற் றொல் வினைசூழா; அவரைப் பாவம் பற்றா; இன்பம் எய்தும்; அவரை ஏத்தாதார் தொன்னெறி செல்லார் - நன்னெறி நண்ணாதார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மாலூரும்** - அடி நினைவிலே சிக்குண்டு மயங்கும்; **மால்** - ஆசை என்றலுமாம்; (3) **சொல்லாதவரெல்லாம் தொன்னெறிக்கே செல்லாதார்** என்க - எதிர்மறையானுங் கூறியது உறுதிபயத்தற்கு. "சேராதார் நன்னெறிக்கட் சேரா தாரே" "சேராதார் தீநெறிக்கே சேர்கின் றாரே" (தாண்); 6-வது பாட்டுமிக் கருத்தது; **தொல்நெறி** - பழமையாகிய சிவநெறி; (4) **கோலம்** - அழகு; **சூழா** - அடரா; (7) **நாகத்தோல்** - யானைத்தோல்; **எண்பாவு** - எண்ணத்தில் முற்றும் பரவிய; (8) **நத்து** - சங்கு; (9) **வேதங்கள் நாலோடும் ஆறங்க நாலூர்மயானம்** - சங்காரத்தின் பின் உலகங்களை மீள உளவாக்கற் பொருட்டு இறைவர் நாத தத்துவத்தினின்று வீணை ஒலிசெய்து வேதங்களைத் தோற்றுவிக்கும் இடமாய், அந்நான்கு மறைகளாலும் போற்றப்பட்ட பதியாதலின் நாலூர் எனப்படுமென்ப; "**நாலு மறையோது நாலூர் மயானத்தை**" (11) என்றது மிக் கருத்தது; **நாலூர்** என்ற தொகைக் குறிப்பும், **மயானம்** என்ற பெயர்க் குறிப்பும் காண்க; **மாசார்** - குற்றமுடைய - அழுக்குடைய; **துவராய போர்வை** - பட்டைச் சாயம் தோய்த்த உடை; **நண்பால்** - அன்பினாலே; **சிவாய எனா** - சிவாய என்று சொல்லித் துதித்து; **சிவாய** - சுத்த பஞ்சாக்கரம்; **சிவாய எனா** - என்று - **ஏத்துவார்** - என்க. (11) **புகழ் ஏலும்** என்க.

தலவிசேடம் :- திருநாலூர் மயானம் - காவிரிக்குத் தென்கரையில் 96-வது தலம்; இது நாலூர் எனவும், நாலூர்மயானம் எனவும் இரண்டு பதிகளாக உள்ளது; திருக்கடவூரும் திருக்கடவூர் மயானமும் போலக் காண்க; நாலூர் மாடக்கோயில்; நாலூர் மயானம் வேதங்கணான்கும் பரவிய பதி; ஆபத்தம்ப இருடி பூசித்த தலம்; "பாலூரு மலைப்பாம்பும்... மேலூருஞ் செஞ்சடையான்" என்ற பதிகத் திருவாக்குக்கேற்பப் பெரும்

பாம்பொன்று அடிக்கடி சுவாமியின் சிரத்தில் ஊர்வது காணலாம் என்று இப்பதிவாணர் அறிவிப்பர்; சுவாமி - பலாசவனநாதர்; அம்மை - பெரியநாயகி; பதிகம் 1.

திருக்குடவாயிலினின்று வடக்கே கற்சாலைவழி 2 நாழிகை யளவில் உள்ளது திருநாலூர்; இதினின்றும் வடகிழக்கே கரை வழியாய் ஒருநாழிகை யளவில் அடையத்தக்கது நாலூர் மயானம்; கும்பகோணத்தினின்றும் தென்கிழக்கே கற்சாலை வழி 81/2 நாழிகை யளவில் அடைவது மற்றொருவழி; இரு வழியிலும் மோடார் வசதி உண்டு;

I. திருக்குடவாயில்

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம் (2-ம் திருமுறை)**

திகழுந் திருமா லொடுநான் முகனும், புகழும்பெருமா னடியார் புகல,
மகிழும் பெருமான் குடவா யின்மன்னி, நிகழும் பெருங்கோ யினிலா யவனே, (1)
கடுவாய் மலிநீர் குடவா யிறனில், நெடுமா பெருங்கோ யினிலா யவனைத்
தடமார் புகலித் தமிழார் விரகன், வடமார் தமிழ்வல் லவர்நல் லவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் குடவாயில் மன்னி நிகழும் பெருங் கோயில் நிலாயவரேயாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) மாலொடு நான்முகன் புகழவும் அடியார் புகல்வதற்கு மகிழ்பவர் என்று அடியார் பெருமையையும், இறைவரது அடியார்க்கெளியராந் தன்மையையும் காட்டியபடி; **நிகழும்** - என்றும் நீடிய; **நீடும் - நிலையார் - நிலவும் - நின்ற - மன்னும் - உயரும்** - என மேல்வருவனவும் காண்க; **பெருங்கோயில்** - மாடக் கோயில்; **நிலாயவன்** - நிலவியவர்; **நிலாவுதல்** - மாறாது வீற்றிருத்தல்; (2) **உரகம்** - பாம்பு; **ஓடும் நதி** - கங்கை; சடையிற்றங்கியும் அருளினால் நில வுலகிற் பரந்து ஓடும் என்பது; (3) **கலை** - மான்; ஞானக் கலைகள் என்றலுமாம்; **சிலை** - மேரு வில்; மலை என்றும், வில் என்றும் இரட்டுற மொழிய நின்றது; (4) **சுலவும்** - சுற்றிய; (5) **கன்றல்** - கருகுதலுடைய; (6) **சதுரன்** - முழுதும் வலியவன்; **விதிரும்** - சுழலும்; **படை** - மழு; (7) **அறைஆர்** - ஒலிக்கும்; **அழலன்** - கையில் ஏந்திய தீயை உடையவன். சங்காரத்தில் தீயாடுபவன் என்றலுமாம்; (8) **வரைஆர்** - மலைபோன்ற; **வரையார** - கயிலைமலை உறப்பொருந்த; **வரை** - சொற்பொருட் பின்வரு நிலையணி; (9) **பொன் ஒப்பவன்** - பொன்னிறமுடைய பிரமன்; **புயல் ஒப்பவன்** - மேக நிறமுடைய மால்; **தன் ஒப்பு** - தனது அளவு; (10) **வெயிலின் நிலையார்** - சமணர்; வெயிலின் நிற்றல் - சுடுபாறையிற் கிடத்தல் முதலாகிய சமணரது தவநிலை குறித்தது; **விரி போர்வையினார்**- புத்தர்; **பயிலும் உரை** - தாம்தாம் கற்ற பொய் பயிலும் சொல்லே; **குயிலன்** - குயிலான் என்பது எதுகை நோக்கிக் குயிலன் என நின்றது செய்யுள் விகாரம்; பதிதலில்லாதவன்; (11) **கடுவாய்** - ஆற்றின் பெயர்; காவிரியின் கிளைகளுள் ஒன்று; (கடுவாய்க் கரைப்புத்தூர் என்பது காண்க), குடமுருட்டி என வழங்குவர். நீர்மலி கடுவாய் என்க; **வடமார் தமிழ்** - தமிழ் மாலை; **வடம்** - மாலை.

II. திருக்குடவாயில்

திருச்சிற்றம்பலம் பண் - காந்தாரம் (2-ம் திருமுறை)

கலைவாழு மங்கையீர்! கொங்கை யாருங் கருங்கூந்தல்
அலைவாழுஞ் செஞ்சடையி லரவும் பிறையு மமர்வித்தீர்!
குலைவாழை கமுகம்பொன் பவளம் பழுக்குங் குடவாயில்
நிலைவாழுங் கோயிலே கோயி லாக நின்றீரே. (1)

நளிர்பூந் திரைமல்கு காழி ஞான சம்பந்தன்
குளிர்பூங் குடவாயிற் கோயின் மேய கோமானை
யொளிர்பூந் தமிழ்மாலை யுரைத்த பாட லிவைவல்லார்
தளர்வான தானொழியத் தகுசீர் வானத் திருப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரே! நீர் குடவாயில் நிலைவாழும் கோயிலே விரும்பும் கோயிலாக நின்றீர்!

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **கலை** - மான்; ஞானக் கலைகள்; **அலை** - கங்கை மங்கை; வாழையும் - கமுகும் முறையே பொன்னும் பவளமும் பழுக்கும் என நிரனிறையாகக் கொள்க. கனிகளின் நிறங்குறித்த உரு உவமத்தை உள்ளிட்ட அணிநயம்; **நிலைவாழும்** - நிலைபெற்ற வாழ்வுடைய; **படியார்ந்த** - **நிழலார்ந்த** - **நெறியாரும்** - **விழவார்ந்த** - என மேல்வருவனவும் இவ்வாறே இப்பெருங்கோயிலின் சிறப்புக் குறித்தன. முன் பதிகத்திற் குறித்தன நித்தியமும், இவை நைமித்திகச் சிறப்புமாம். **கோயிலே கோயிலாக** - ஏகாரம் தேற்றம்; பிரிநிலையுமாம்; உமக்கு விருப்பமுள்ள கோயிலாகக் கொண்ட; **நின்றீரே** - நிலைபெற்று விளங்க வீற்றிருந்தீர்; ஏகாரம் - தேற்றம்; மேல், **பயின்றீரே - மகிழ்ந்தீரே - நிகழ்ந்தீரே - திகழ்ந்தீரே.** **பரிந்தீரே - சேர்ந்தீரே** என்பனவும் இக் கருத்தன. (2) **செடியார்ந்த** - இழிவுடைய; **படியார்ந்த** - சிறந்த; படியெடுக்குமாறு உயர்ந்த; (3) **அழலாரும்** - அழிக்கும் தன்மையுடைய விடம்பொருந்திய; **குழலார்** - குழல்போல; **ஆர்** - உவமவுருபு; (4) **எறியாரும்** - எறிதலுடைய; (5) **பிழையாத** - குறிதவறாத; **குழை** - இலை; **விழவு** - விழாச் சிறப்பு; (6) **ஆன** - உலக சங்காரத்திலாயின - போந்த; (7) **பாடல்** - மறை பாடல்; (9) **குறளாய் நிமிர்ந்தான்** - விட்டுணு. குறள் - வாமனன்; **அங்காந்து** - வாய் பிளந்து. (10) **தூசு** - உடை; அழுக்கு என்றலுமாம்; **ஏசு** - இகழ்தல்; **ஆசாரம்** - மறைவிதி ஒழுக்கம்; **அளவில் குன்றாது** - வேதம் பயிலும் சுரபேத அளவு பிறழாது; காலந் தவறாது என்றலுமாம்; **தேசு** - தெய்வ ஒளி; (11) **தகுசீர்வானம்** - சிவனுலகு; **தளர்வு** - மல நோய்;

தலவிசேடம் :- திருக்குடவாயில் - காவிரிக்குத் தென்கரையில் 94-வது தலம்; மாடக் கோயில்களுள் ஒன்று எனப் பதிகத்து விளக்கம் பெறப் போற்றப்பட்டது; தம்மை

வழிபட்ட திருணபிந்து முனிவருக்குச் சிவபெருமான் குடத்தின் வாயில் வெளிப்பட்டுக் குட்டநோய் தீர்த்தளித்த காரணம்பற்றி இப்பெயர் பெற்றதென்பது வரலாறு; கருடன் பூசித்து அமுதம் கொண்டுவந்து தானும் தனது தாயும் சாபம் நீங்கப்பெற்ற தலமென்பர்; திருமதிலின் மேலும் மண்டப முதலியவற்றின் மீதும் கருடன் உருவம் இருப்பது கருதத் தக்கது; ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளியபோது இங்குப் பூசையும் சிறப்பும் மிக விளங்கின என்பது பதிகங்களாற் பெறப்படும். சுவாமி - **கோணேசுவரர்;** அம்மை - **பெரிய நாயகி;** பதிகம் 2.

இது கொரடாச்சேரி நிலயத்தினின்று வடக்கே கற்சாலை வழி 6 நாழிகை யளவில் அடையத்தக்கது; கும்பகோணத்தினின்றும் தென்கிழக்கில் கற்சாலைவழி 10 நாழிகையளவில் அடைவது மற்றொரு வழி; இருவழியும் மோடார் வசதி உண்டு.

I. திருநறையூர்ச் சித்தீச்சரம்

திருச்சிற்றம்பலம்

பண் - தக்கராகம் (1-ம் திருமுறை)

ஊரு லாவு பலிகொண் டுலகேத்த, நீரு லாவு நிமிர்புன் சடையண்ணல்,
சீரு லாவு மறையோர் நறையூரிற், சேருஞ் சித்தீச் சரஞ்சென் றடைநெஞ்சே. (1)

மெய்த்து லாவு மறையோர் நறையூரிற், சித்தன் சித்தீச் சரத்தை யுயர்காழி,
யத்தன் பாத மணிஞான சம்பந்தன், பத்தும் பாடப் பறையும் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நெஞ்சே! நறையூரில் இறைவர் சேரும் சித்தீச்சரத்தையே சென்று அடைக; அதனையே நினைக; அதனையே தெளிக; அவையே தவமாம்; அஃது இறைவர்க்கிடம். (இப்பதிகம் பதியினையடையும் வழியில் அருளியது).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **ஊர் உலாவுபலி** - ஊர்தோறும் பெறும் பலி; **நீர்** - கங்கை. நீருலாவு சடை - என்க. நீருலாவு சடை - நிமிர்சடை என்று கூட்டுக. **மறையோர் நறையூர்** - மறையோர் சிறந்த ஊர். (2) - (5) - (11); **நறையூர்** - ஊர்ப்பெயர்; **சித்தீச்சரம்** - கோயிலின் பெயர்; **நெஞ்சே** - தம் நெஞ்சிற்கு அறிவுறுத்தும் வகையால் உலகினைத் தெருட்டியது; (2) **காடு நாடும் கலக்க** - சுடுகாடாகிய சங்காரத்தினின்றும் மீள நாடு உளதாகும்படி. **வீடும் ஆக** - சங்காரமும் சிருட்டியுமாதலேயன்றி இறுதியில் வீடும் கிடைக்க உளது ஆகும்படி; **உம்மை** - இறந்தது தழுவிய எச்சம். (3) **கல்வி ஆளர்** - கலைகட்கு முதல்வர்; (4) **நீடவல்ல** - நீள; **நீடுதல்** - நீளுதல்; "கங்கை தோய்ந்த நீள் சடையார்" (831); **சேடர்** - அறிவு திருமேனியாக வுடையவர்; (5) **நண்பு** - அன்பு; (7) அன்றி - பகைத்து; (10) **செய்யும்** - நன்மை செய்யும்; (11) **மெய்த்து உலாவு மறையோர்** - மறைகளின் மெய்மை விளங்கும்படி வாழும் மறையோர்; **மெய்த்து** - மெய்ப்பித்து; உண்மை யுணரக் காட்டி. இப்பதியிற் சித்தர்கள் பூசித்து வந்தனர் என்ற வரலாற்றுக் குறிப்பு. **சித்தன் - சித்தீச்சரம்** - இங்கு இறைவரும் சித்தராய் வந்தனர் என்பது கருத நின்றது.

II. திருநறையூர்ச் சித்தீச்சரம்

திருச்சிற்றம்பலம் பண் - தக்கேசி (1-ம் திருமுறை)

பிறைகொள் சடையர் புலியி னுரியர் பேழ்வாய் நாகத்தர்
கறைகொள் கண்டர் கபால மேந்துங் கையர் கங்காளர்
மறைகொள் கீதம் பாடச் சேடர் மனையின் மகிழ்வெய்திச்
சிறைகொள் வண்டு தேனார் நறையூர்ச் சித்தீச் சரத்தாரே. (1)

குயிலார் கோல மாத விகள் குளிர்பூஞ் சுரபுன்னை
செயிலார் பொய்கை சேரு நறையூர்ச் சித்தீச் சரத்தாரை
மயிலார் சோலை சூழ்ந்த காழி மல்கு சம்பந்தன்
பயில்வார்க் கினிய பாடல் வல்லார் பாவ நாசமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- தேவருமறிவரிய இறைவர் - நினைப்பார் மனத்தாராய் விடையேறிச் சிலம்பு புலம்ப வருவார் நறையூர்ச் சித்தீச்சரத்தாரே;

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(1)* **பேழ்வாய்** - *திறந்த வாய்; (2)* **பொங்கார்** - *பொங்குதலையுடைய; (4)* **மின்தாழ் உருவில்** - *மின்னலும் ஒளியிற் குறைந்துபடும் உருவுடைய;* **சங்கார் குழை** - *சங்கக் குழை;* **ஒரு காதர்** - *ஒரு காது குழையுடையது; (மற்றது தோடுடையது);* **பொன்தாழ்..செல்வம்** - பொன் போன்ற பூந் தாதுக்களைத் தரும் கொன்றையும், செருந்தியும், புன்னையும், செண்பகமும் சொரிகின்ற செல்வமுடைய; *(7)* **புலம்ப** - *ஒலிக்க; (8)* **உலப்பில்** - *குறையாத;* **உரையார் கீதம்** - *சாமம்; (9)* **காணார் மனத்தாராய்** - காணாராயும் நினைப்பார்களது மனத்து வருவார்; (10) **ஊமர்** - பேசினும் பயனற்றவர்; **கபாலமயல் பொழிய** - மிக்க பால் கன்றின் தலையில் வழிய; (11) **செயிலார்** - செய் - (வயல்)களில் நிறைந்த; **இனிய** - இன்பஞ் செய்கின்ற.

III. திருநறையூர்ச் சித்தீச்சரம்

திருச்சிற்றம்பலம் பண் - பியந்தைக் காந்தாரம் (2-ம் திருமுறை)

நேரிய னாகு மல்ல னொருபாலு மேனி யரியான்மு னாய வொளியான்
நீரியல் காலு மாகி நிறைவானு மாகி யுறுதீயு மாய நிமலன்
ஊரியல் பிச்சை பேணி யுலகங்க ளேத்த நல்குண்டு பண்டு சுடலை
நாரியொர் பாக மாக நடமாட வல்ல நறையூரி னம்ப னவனே. (1)

கானலு லாவி யோத மெதிர் மல்கு காழி மிகுபந்தன் முந்தி யுணர
ஞானமு லாவு சிந்தை யடிவைத் துகந்த நறையூரி னம்ப னவனை
யீனமி லாத வண்ண மிசையா லுரைத்த தமிழ்மாலை பத்து நினைவார்
வானநி லாவவல்லர் நிலமெங்கு நின்று வழிபாடு செய்யு மிகவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நிமலன் - இறைவன் - நறையூரினம்பனவனே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நேரியன்—அரியான்** - ஒன்றாய மேனியல்லன்; ஒருபால் அரி என ஆவர்; **நலங்கண்டு** - நன்மை செய்து;- (2) **இடம் - மங்கை - கை - நாணிபூண** இடத்தில் உள்ள மங்கையின் கையானது வில்லைப் பிடிக்க என்க. **நாணி** - நாணை உடையது; வில் - புரமெய்த காலை இடது கை வில் பிடிக்க, வலது கை நாண் வலித்து அம்பு எய்தது; இடதுபாகம் அம்மை பாகமாதலின் அம்மையின் கை வில் பிடிக்க என்றார். "விற்றாங் கியகரம் வேனெடுங் கண்ணணி வியன் கரமே" (நாகை - திருவிருத் - 2); **மயிலூர்தி** - முருகவேள்; **மைந்தன்** - வலிமையுடையான்; **மைந்து** - வலிமை; (3) **சூடகம்** - வளை; (4) **மலை** - கயிலை; (5) **நெதி** - நன்மை (நியதி); (6) **கணிகை** - கங்கை நங்கை; **பணி** - பாம்பு; (8) **நடலைகள்** - வஞ்சம்; துன்பம்; (10) **அல்ல** - ஆடை உடல் போர்வையற்ற; அல்லாராகிய என்றலுமாம்; **கவர்** - பொய்மை; வஞ்சம்; **சித்தர் - பேண** - சித்தர்கள் போற்றத் தாமும் சித்தராய் எழுந்தருளிய வரலாற்றுக் குறிப்புப் போலும். (இந்தளம் - பதிகம் - 11); (11) **முந்தி— அடிவைத்துகந்த** - சிந்தையில் திருவடியைப் பதித்து வைத்த என்க; **வல்லார்.. மிகவே** - (அவரை) நிலம் எங்கும் மிக வழிபடும்.

தலவிசேடம்:- **திருநறையூர்ச் சித்தீச்சரம்** - காவிரியின் தென்கரையில் 64வது தலம்; ஊர்ப்பெயரும் கோயிற் பெயரும் சேர்ந்து வழங்குவது. மறையோரும் சித்தர்களும் பூசிக்க இறைவர் சித்தராய் எழுந்தருளுவர் என்பது பதிகக் குறிப்பு. சுவாமி பெயரும் காண்க. சுவாமி - **சித்தநாதர்**; அம்மை - **அழகம்மை**; **தீர்த்தம் - பிரமதீர்த்தம்**; பதிகம் 4.

இது கும்பகோணத்தின் தென் கிழக்கில் கற்சாலைவழி 41/2 நாழிகை யளவில் அடையத்தக்கது. மோடார் பஸ் வசதியுண்டு.

திருஅரிசிற்கரைப்புத்தூர்

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தாரம் (2-ம் திருமுறை)

மின்னுஞ் சடைமே விளவெண் டிங்கள் விளங்கவே
துன்னுங் கடனஞ் சிருடோய் கண்டர் தொன்மூதூர்
அன்னம் படியும் புனலா ரரிசி லலைகொண்டு
பொன்னும் மணியும் பொருதென் கரைமேற் புத்தூரே. (1)

நறவங் கமழ்பூங் காழி ஞான சம்பந்தன்
பொறிகொ ளரவம் பூண்டா னாண்ட புத்தூர்மேற்
செறிவண் டமிழ்செய் மாலை செப்ப வல்லார்கள்
அறவன் கழல்சேர்ந் தன்போ டின்ப மடைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது மூதூர், அவரது நாமம் ஓதி நாடோறும் மறையோர் பூவாலும் நீராலும் போற்றும் புத்தூரே.

2302. அங்கணினி தமருநா ளடல்வெள்ளே னத்துருவாய்ச்
செங்கணெடு மால்பணியுஞ் சிவபுரத்துச் சென்றடைந்து
கங்கைசடைக் கரந்தவர்தங் கழல்வணங்கிக் காதலினாற்
பொங்குமிசைத் திருப்பதிக முன்னின்று போற்றிசைத்தார். 404

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **தொன்மூதூர்** - மிகத் தொன்மையுடைய ஊர்; **அரிசில்** - ஆறு; காவிரியின் கிளைகளுள் ஒன்று; (2) **மேவா** - பகைமை பூண்ட; **மேவா - மேவு - எய்தான் - எய்தும்** - முரணணி; **நாவால்..போற்றும்** - ஆன்மார்த்த பூசை; பரார்த்த பூசையினைப் புகழ்த்துணையார் சரித வரலாற்றுக் குறிப்புடன் 7-ம் பாட்டிற் கூறுதல் காண்க. (3) **பல்லார் தலை** - இறந்த பிரம விட்டுணுக்களாகிய பலர்; பல்லோருடைய தலை; பல் வெளிப்பட்ட தலை என்றலுமாம்; **கல்லார்** - மலையரசன்;- (4) **அரி** - நெல்அரி; **பொரி** - பொரி போன்ற தாது; (6) **வள்ளி..குமரன்** - முருகவேள்; (7) **சிலந்தி... ஊர்** - கோச்செங்கட் சோழர் வரலாறு; **அலந்த அடியான்.. போற்றும்** - புகழ்த்துணை நாயனார் சரிதம்; இது இப்பதியின் தொடர்பு; (8) **ஏக** - தடையின்றி ஏகும் பொருட்டு; **வரதன்** - வரமீபவன்; **காணப் புகுவார்** - முயல்வார்; (10) **பொய்யா மொழி** - வேதம்; **அந்தணர்** - வேதியர்; 2-ம் பாட்டிற் கூறியவர், சிவபூசை செய்யும் வேதியர்; (11) **அறவன்** - அறவாழியந்தணன். **அன்போ டின்பமடைதல்** - முத்தியனுபவ நிலை.

தலவிசேடம் : திருஅரிசிற்கரைப்புத்தூர் - காவிரியின் தென்கரை 66-வது பதி; மூவர் பாடலும் பெற்ற பெருமை கொண்ட பழம்பதி; அந்தணர் பல்லோர் வாழ்வுடையது; அழகார் புத்தூர் என்றும், செருவிலிப்புத்தூர் என்றும் வழங்கப்படும்; புகழ்த்துணை நாயனாரது பதி; (வரலாறு அவர்தம் புராணத்துக் காண்க). இச்சரித உண்மையினைப் பிள்ளையாரும் நம்பிகளும் பதிகத்துள் வைத்துப் போற்றியருளினர்; புகழ்த்துணையார் பெருமையினைத் திருத்தொண்டத் தொகையுள் போற்றிய திறமும் காண்க; சுவாமி பெயரும் காண்க. உண்மையானந்த முனிவரும் பூசித்துப் பேறு பெற்றனர் என்ப. சுவாமி - படிக்காசு வைத்த பரமர்; அம்மை - அழகம்மையார்; பதிகம் 3.

இது கும்பகோணத்தின் தென்கிழக்கில் கற்சாலையில் குடவாயிலுக்குச் செல்லும் பெருவழியில் 4 நாழிகையில் உள்ளது. மோடார் பஸ் வசதி யுண்டு.

2302. *பொருளுரை..* அங்கண் இனிது அமருநாள் - அப்பதியினிடத்தில் இனிதாக எழுந்தருளிய காலத்தில்; அடல்.... வணங்கி - வலிமை பொருந்திய வெள்ளைப்பன்றி யுருவெடுத்துச் சிவந்த கண்ணுடைய நெடிய மால் பணியும் திருச் சிவபுரத்திலே சென்று அடைந்து கங்கையினைச் சடையில் தங்கவைத்த இறைவரது திருவடிகளை வணங்கி; காதலினால்.... போற்றிசைத்தார் - மிக்க விருப்பத்தினாலே இசை பொங்குகின்ற திருப்பதிகத்தினைத் திருமுன்பு நின்று பாடியருளினார்.

விளக்கவுரை.... வெள்ளேனம் - வெள்ளைப்பன்றி; சுவேத வராகம் என்பது வடமொழி. திருமால் வெள்ளைப்பன்றி உருவுடன் வணங்குதல் இப்பதியின் விசேடம்.

தல விசேடம் பார்க்க. பிள்ளையார் திருப்பதிகம் 7-ம் திருப்பாட்டிலும், "பிறையெயிற்று வெள்ளைப் பன்றி பிரியாது பலநாளும் வழிபட்டேத்தும், சீரவன்காண்" (6) என்று இப்பதியில் அரசுகள் திருத்தாண்டகத்திலும் இதனைப் போற்றுதல் காண்க.

பொங்கும் இசைத் திருப்பதிகம் - **இரை** - இறைவரது திருப்புகழ்கள். பதிகக் குறிப்பும் பாட்டுக் குறிப்பும் பார்க்க. இப்பதிகத்தின் இன்னிசை - பண் - என்றலுமாம்; சைவசித்தாந்தத்தின் சிறந்த பல உண்மைகளை விளக்குவது. **பொங்குமிசை** - திருவிராகம் என்ற குறிப்புமாம்.

போற்றிசைத்தல் - ஒருசொல்; போற்றுதல். 404

I. திருச்சிவபுரம்

திருச்சிற்றம்பலம்

திருவிராகம் பண் - நட்டபாடை (1-ம் திருமுறை)

புவம்வளி கனல்புனல் புவிகலை யுரைமறை திரிகுண மமர்நெறி
திவமலி தருசுரர் முதலியர் திகழ்தரு முயிரவை யவைதம
பவமலி தொழிலது நினைவொடு பதுமநன் மலரது மருவிய
சிவனது சிவபுர நினைபவர் செழுநில னினினிலை பெறுவரே. (1)

திகழ்சிவ புரநகர் மருவிய சிவனடி யிணைபணி சிரபுர
நகரிறை தமிழ்விர கனதுரை நலமலி யொருபது நவில்பவர்
நிகழ்குல நிலநிறை திருவுரு நிகரில கொடைமிகு சயமகள்
புகழ்புவி வளர்வழி யடிமையின் மிகைபுணர் தரநல மிகுவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சிவனே உயிர்களுக்காகப் படைத்தல் காத்தல் அழித்தல் முதலிய தொழில்களைச் செய்பவன்; அவனையடைந் துய்யும் நெறிகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் என்பன; அவற்றுக்கு முறையே சிவனுலகடைதல், சிவனருகடைதல், சிவனுருவடைதல், சிவனடியடைதல் என்பன பயன்களாம்; அவனைச் சிவபுரத்தில் அடைபவர் பெருமைகளெல்லா மடைகுவர். இத்திருப்பதிகத்துள் ஒவ்வொரு திருப்பாட்டிலும் உரிய பலன் அருளப்பட்டுள்ளது. திருக்கடைக்காப்பில் அப்பலன்களனைத்தையும் தொகுத்துப் பதிகப் பலன் அருளப்பட்டுள்ளது. அவ்வப் பாட்டுகளிற் கூறியவை அவ்வவற்றிற் கூறிய வழிபாடுகளின் பலன். திருக்கடைக்காப்பிற் கூறி யருளியது பதிகப்பயன். இவை இத்திருப்பதிகத்தின் தனிச் சிறப்பு.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **புவம் - வளி - கனல் - புனல் - புவி** - வான்முதல் மண் அந்தமாகிய ஐம்பூதம்; **புவம்** - வான் - ஆகாயம்; **உரைமறை** - இறைவனது வாக்காகிய மறை; **திவம்** - வான உலகம்; **முதலியர் திகழ்தரும் உயிர்** முதலியவாகப் பல பக்குவ வேறுபாடுகளுடன் விளங்கும் உயிர்கள்; **உயிர்அவை** - உயிர்த்தொகுதி; **அவை தம** -

அவற்றினுடைய; **அவையவை தம பவமலிதொழிலது நினைவொடு** - அப் பிறவியில் வரும் படைத்தலாகிய தொழிலை நினைத்து; **நினைவொடு** - இறைவர் கருவி கரணங்களின்றித் தன் இச்சையினாலே உலகைப் படைத்தலாதி தொழில் செய்கின்றார் என்பது மறை; **பதும நன்மலரது மருவிய சிவன்** - படைக்கும் நினைவொடு சிவன் மேற்கொள்ளும் நிலை; இவ்வுருவினைப் பிரமன் பெறுகின்றான் என்றபடி. இவ்வாறே வரும் இரண்டு பாட்டுக்களினும் பிரமனுக்குக் கூறியாங்குக் கொள்க. (2) **மலைபல வளர்தரு புவி** - நிலவுலகப் படைப்பில் முதலில் எழுந்து கடினமாய்த் தரிப்பன மலைகள் என்பது நில நூற்றுணிபுகளுள் ஒன்று. **மறைவழிமலி** - வேத விதிப்படி நிகழ்வனவாகிய; **மனிதர்கள் - சுரர் - முதல் உலகுகள்** - நிலவுலகு வானுலகு முதலியவை; **நிலைமலி** - நீண்டகால எல்லையுள்ள; **உலகுகள்** - உலகுயிர்கள்; **நிலைபெறுவகை** - காத்தலாகிய தொழில்; **அரியுருவியல்பரன் (3) படி முதலிய உலகுகள்** - முன் இரண்டுபாட்டிலும் கூறியவை; **குழுவிய சுரர்பிற மனிதர்கள்.. உயிரவை** - முன்பாட்டிற் கூறியவை; **முழுவதும் அழிவகை** - சங்காரத் தொழில்; **முதல் உருவியல்பரன்** - (உருத்திரன்); 1வது பாட்டிற் போலக்கொள்க. (4) **நறை மலிதரும் அளறு** - மணமுடைய சந்தனக் குழம்பு; **முகை நகுமலர்** - மொட்டுவிரியும் புதுமலர்; **புகை** - தூபம்; **வளரொளி** - வரிசையான விளக்குந் தீபங்கள்; **புனல்கொடு- வழிபடும்** - நீர் முதலியன கொண்டு நித்திய பூசை புரிவோர்; இது சரியையும் கிரியையும் கூறியபடி; இவையிரண்டும் புறப் பூசையும் புறமும் அகமும் கூடிய பூசையு மாதலானும், இரண்டினையும் சேர்த்துச் **சிவதருமங்கள்** எனக் கூறுவதானும் இப்பாட்டில் இரண்டும் சேர்த்துக்கூறியருளினார். "நல்லசிவ தன்மத்தால்" என்ற திருக்களிற்றுப் படியாரினும் இவ்வாறு கூறுதல் காண்க. **குறைவில பதம்** - விதித்த (சாலோகமும் சாமீபமும்) உலகிருத்தல் - அருகிருத்தல் என்ற பதங்கள்; (5) **சினமலி அறுபகை** - கோப முதலிய ஆறு குற்றங்கள்; **வளி நிறுவிய** - பிராண வாயுவை நிலைபெறச் செய்த; **மனன் உணர்வொடு** - ஒன்றித்த உணர்வுடன்; **மலர்மிசை எழுதருபொருள்** - அகமலரில் உதித்து விளங்கும் இறை; **நியதமும் உணர்பவர்** - தவறாது உணரப்பெறும் யோகிகள்; **தனதுஎழில் உருவதுகொடு** - (சாரூபம்) உருவடைதலாகிய பதம் பெற்று; (6) **அரு தவம்** - முயல்பவர் - ஞானிகள்; **அடியடைவகை** - (சாயுச்சியம்) அடிசேர்பதம்; (7) **கதமிகு...புவியது நிறுவிய எழிலரி வழிபட** - திருமால் வெள்ளைப்பன்றி உருவெடுத்துக், கடலில் மூழ்கிய உலகினைத் தனது வளைந்த பெருங் கொம்பின் மேல் ஏந்தி நிறுவிப், பூசித்த வரலாறு; **கருவுரு** - கருவிலங்கின் உரு; வெள்ளைப் பன்றியின் உருவங் குறித்தது; **மதமிகு நெடுமுகன் அமர்** - கோபமுடைய நீண்ட முகத்தில் உள்ள; **வளைமதிதிகழ் எயிறு** - வளைந்த பிறைமதி போன்ற கொம்பு; **புவி** - உலகு; இது தலவரலாறு; (8) **தவமுயல்வினில்** - பெருந்தவ முயன்றதனால்; **அயன்...வலி** - பிரமன் தந்த வரத்தின் வலிமை; **நிசிசரன்** - அரக்கன் இராவணன்; (9) **எதிர்...உரு வெளிபடும் அவன்** - நீலகண்டமும் நெற்றிக் கண்ணும் கொண்ட திருவுருவுடன் வெளிப்பட்டவன்; (10) **குணமறிவுகள்...திணமெனுமவர்** - புத்தர்; அவரது கணபங்கக் கொள்கை குறித்தது; **செதுமதி** -துன்மதி; **நலகணம்** - சிவகணம்.

II. சிவபுரம்

திருச்சிற்றம்பலம் பண் - வியாழக்குறிஞ்சி

இன்குர லிசைகெழு மியாழ்முரலத், தன்கர மருவிய சதுரனகர்,
பொன்கரை பொருபழங் காவிரியின், தென்கரை மருவிய சிவபுரமே. (1)

சிவனுறை தருசிவ புரநகரைக், கவுணியர் குலபதி காழியர்கோன்,
தவமல்கு தமிழிவை சொல்லவல்லார், நவமொடு சிவகதி நண்ணுவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது நகர் சிவபுரமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **யாழ்** - வீணை; **பழங்காவிரி** - அரிசிலின் ஒரு பெயர்; (3) பார்க்க; (2) **வெண்பன்றி - அடி வீழ்தரும்** - தலவரலாறு; (3) **செண்பகமலர் பொழில்** - தலமரம்; (9) **அளவிய** - ஏந்திய.

III. சிவபுரம்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - வியாழக்குறிஞ்சி

கலைமலி யகலல்கு லரிவைத னுருவினன், முலைமலி தருதிரு வுருவம துடையவன்
சிலைமலி மதில்பொதி சிவபுர நகர்தொழ, இலைநலி வினையிரு மையுமிடர் கெடுமே. (1)

புந்தியர் மறைநவில் புகலிமன் ஞானசம் பந்தன தமிழ்கொடு சிவபுர நகருறை
யெந்தையை யுரைசெய்த விசைமொழி பவர்வினை, சிந்திமு னுறவுயர் கதிபெறு வர்களே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சிவபுரத்தைத் தொழுவார் இடர்கெடும்; உயர்கதி பெறுவது திடனே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (2) **நலிவினை இலை** என்க; (3) **கடல் அகடு அரவு வரைதிரிதர அழல் எழ வருவிடம்** என்க. **அகடு** - நடு; **அழல்எழ** - அழல்போல வர; (4) **தொழுமவர் - துணிவுடையார் - பொடியினர் - பிறவியற விசிறுவர் - தணிவுடையவர்** என்று கூட்டுக. பூட்டுவிற் பொருள்கோள்; **பொடி** - நீறு; **விசிறுதல்** - நீங்குதல்; (5) **சிவபுரமுடையவன் மறையவன் - மதியவன் - மலையவன் - நிலையவன் - நடநவில்பவன்;** **அவன் எமையுடையவன்** என்க. (6) **உளம் உடையவரது சிவபுரமே இணையிலி அணைமதி;** (7) **உழை** - கருமான்; (9) **அன்றியல் உரு** - மாறுபட்டவுரு; **ஒன்று இலி** - இல்லாதவன்; (7) ... - **ஒன்றும்**; முற்றும்மை தொக்கது; (10) அறவுரைகள் புறவுரைகளேயாம்; அவை **வித்தகம்** (உண்மை ஞானம்) மொழிகில.

2303. போற்றிசைத்துப் புனிதரருள் பெற்றுப்போந் தெவ்வுயிருந்
தோற்றுவித்த வயன்போற்றுந் தோணிபுரத் தந்தணனார்
ஏற்றுமிசை யேற்றுவந்த விறைவர்தமை யேத்துதற்கு
நாற்றிசையோர் பரவுதிருக் குடமூக்கு நண்ணினார். 405

---

*தலவிசேடம் :- **திருச்சிவபுரம்** - காவிரியின் தென்கரை 67-வது பதி; திருமால் இச் சுவேதவராக கற்பத்திற் கடலுள் மூழ்கிய உலகைத் தமது கொம்பில் ஏந்தி நிறுவி வழிபட்ட பதி; மேற் பதிகங்களின் பாட்டுக் குறிப்புக்கள் பார்க்க; சண்பகவனம் எனவும்படும்; இன்றும் கோயிலின்முன் சண்பகமரமுண்டு. தேவாரக் குறிப்பும் காண்க; சுவாமி - **பிரமபுரி நாதர்**; அம்மை - **பெரியநாயகி**; மரம் - **சண்பகம்**; பதிகம் 4.*

இது கும்பகோணத்திலிருந்து தென்கிழக்கில் கற்சாலை வழி 21/2 நாழிகை யளவில் அடையத்தக்கது.

2303. பொருளுரை- போற்றிசைத்து.. போந்து - முன்கூறியபடி துதித்து இறைவரது திருவருளைப் பெற்றுப் புறம்போந்து; எவ்வுயிரும்... அந்தணனார் - எல்லா உலகுயிர்களையும் பிறவித்தொழிலிற் புகுத்தும் பிரமன் போற்றும் திருத்தோணிபுரத்தில் வந்தருளிய அந்தணனாராகிய பிள்ளையார்; ஏற்றுமிசை... ஏத்துதற்கு - இடபத்தின் மேல் வருதலை விரும்பிய இறைவரைத் துதித்ததற்காக; நாற்றிசையோர்....நண்ணினார் - நாற்றிசையிலுள்ளோரும் துதிக்கின்ற திருக்குடமூக்கினைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை— **எவ்வுயிருந் தோற்றுவித்த** - உயிர்கள் நித்தமாதலின் அவற்றைச் சிருட்டியிற் புகுத்தலே படைப்பு எனப்படும்.

அயன் போற்றும் தோணிபுரம் - பிரமபுரம். சீகாழியின் தலப்பெயர்களுள் பிரமபுரம் என்பது இக்காரணம் பற்றியது. தலவரலாறு காண்க. "சிறந்த வன்பால், நாவியலு மங்கையொடு நான்முகன்றான் வழிபட்ட நலங்கொள் கோயில்" (தேவா);

ஏற்றுமிசை - ஏற்றுவந்த - சந்தவிசைபடவந்த சொற்பின்வருநிலையணி; **ஏறு** - இடபம்; **ஏற்று உவந்த** - ஏறிவருதலை விரும்பிய. இவ்வடிமுற்று மோனை.

நாற்றிசையோர் பரவு - 2307ல் கூறும் சிறப்புக்குறிப்பு. "எக்கரை யாரு மேத்த" (பதிகம்-4).

எவ்வுருவும் - என்பதும் பாடம். 405

2304. பொருளுரை- தேமருவு...மாமறையோர் - தேன்பொருந்திய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த திருக்குடமூக்கினில் வாழும் செல்வப் பெருமறையவர்கள்; பூந்தராய்- வந்தருள - சீகாழி வள்ளலாராகிய பிள்ளையார் வந்தருளினாராக; தூமறையின்.... கொடுபுக்கார் - தூய்மை செய்யும் வேதவொலிகள் பெருகவும் மங்கலவியங்கள் முழங்கவும்

2304. தேமருவு மலர்ச்சோலைத் திருக்குடமூக் கினிற்செல்வ
மாமறையோர் பூந்தராய் வள்ளலார் வந்தருளத்
தூமறையி னொலிபெருகத் தூரியமங் கலமுழங்கக்
கோமுறைமை யெதிர்கொண்டு தம்பதியிற் கொடுபுக்கார். 406

2305. திருஞான சம்பந்தர் திருக்குடமூக் கினைச்சேர
வருவார்தம் பெருமானை வண்டமிழின் றிருப்பதிகம்
உருகாநின் றுளமகிழக் "குடமூக்கை யுவந்திருந்த
பெருமானெம் மிறை"யென்று பெருகிசையாற் பரவினார். 407

அரசரை எதிர்கொள்ளும் முறைமையில் எதிர்கொண்டு தமது பதியினிடத்திற் கொண்டு புகுந்தனர்.

விளக்கவுரை— செல்வ மாமறையோர் - செல்வம் - மறைவழிவரும் ஒழுக்கமாகிய செல்வம்; மறையோர் மிக்க பதியாதலின் பெரும்பான்மை பற்றி அவர்களைக் கூறினார்; ஏனையவரையும் உடன்கொள்க; அந்நாளில் அடியார்களை எதிர்கொண்டு செல்லும் ஒழுக்கச் செல்வ மறையவர் அப்பதியின் மிக்கிருந்தனர் என்பது கருதப்படும்.

மறையின் ஒலிபெருக - எதிர்கொண்டழைக்கும் மறையோர் மறைமுழக்குப் பெருகச் சென்றனர் என்க. மறையின் ஒலிபெருக என்றும், தூரியம் முழங்க என்றும் கூறியது ஒன்று பொருளுள்ளதெனவும், மற்றது அவ்வாறன்றெனவும் உணர்த்தற்கு.

தேமருவு மலர்ச்சோலை - "மாவிரிபோது மௌவன் மல்லிகை கள்ளவிழும், குரவிரி சோலை சூழ்ந்த" என்ற பதிகக் குறிப்பு.

கோமுறைமை - கோவினை - அரசரை - எதிர்கொள்ளும் முறைமையில்; உபசாரங்களிற் றலைசிறக்க என்பாருமுண்டு; (சக்ரவர்த்யுபசாரேண) சக்கரவர்த்தி யுபசாரத்தோடு என்பது வடமொழி.

தம்பதியுள் - என்பது பாடம். 406

2305. **பொருளுரை**— திருஞான சம்பந்தர்.... வருவார் - திருக்குடமூக்கினை அணுக வருவாராகிய திருஞானசம்பந்த நாயனார்; தம்பெருமானை - தமது இறைவரை; வண்தமிழின்.. என்று - வள்ளன்மையுடைய திருப்பதிகத்தை மனமுருகவும் உண்மகிழவும் "திருக்குடமூக்கை உவந்து வீற்றிருந்த பெருமான் எமது இறைவர்" என்று; பெருகிசையாற் பரவினார் - பெருகிய இசையுடன் போற்றினார்.

விளக்கவுரை— சேரவருவார் - என்று - பரவினார் - என்று கூட்டுக. சேரவரும் போது - அணித்தாய் வரும்போது என்க. இப்பதிகம் நகரைச் சாரவரும் வழியில் நகரணிமையில் அருளியது; "திருக்குடமூக்கிடமா இருந்தானவன்" என்று வேறு சுட்டியும் படர்க்கையிற் கூறியும் போற்றிய குறிப்புக்கள்.

"குடமூக்கை...எம்மிறை" - பதிகக் குறிப்பும் கருத்துமாம். பதிகம் பார்க்க. 407

திருக்குடமூக்கு

திருச்சிற்றம்பலம் பண் - பஞ்சமம் 3-ம் திருமுறை

அரவிரி கோடனீட லணிகாவிரி யாற்றயலே
மரவிரி போதுமவ்வன் மணமல்லிகை கள்ளவிழுங்
குரவிரி சோலைசூழ்ந்த குழகன்குட மூக்கிடமா
இரவிரி திங்கள்சூடி யிருந்தானவ னெம்மிறையே. (1)

வெண்கொடி மாடமோங்கு விறல்வெங்குரு நன்னகரான்
நண்பொடு நின்றசீரான் றமிழ்ஞானசம் பந்தனல்ல
தண்குட மூக்கமர்ந்தா னடிசேர்தமிழ் பத்தும்வல்லார்
விண்புடை மேலுலகம் வியப்பெய்துவர் வீடெளிதே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "குடமூக்கினை உவந்திருந்த பெருமான் அவனெம்மிறைவன்" ஆசிரியர் காட்டியருளியபடி (2305).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அரவிரி கோடல்** - பாம்பின் படம்போல மலரும் வெண்காந்தள்; **மரவிரிபோது மவ்வல்** - மரமேறிப் பூக்கும் முல்லைவகை. **மணமல்லிகை குரவிரிசோலை** - மல்லிகை குரா மரங்களினருகில் விரியும். குரா மலர் போல விரி என்றலும், குரவின் ஏறிமல்லிகை விரியும் என்றலுமாம்; **இரவிரி** - இரவில் கதிர் விரிந்து ஒளிதரும், (2) **ஓத்தரவங்கள்** - வேத ஒலிகள்; **ஓத்து** - வேதம்; பலர்கூடி இசைத்தலால் பன்மையிற் கூறினார்; **பூத்தரவங்கள்** - பூவுடன்கூடிய துதிகள்; **புகை** - தூபம்; **ஏத்தரவங்கள்** - ஏத்தும் ஒலி; (4) **கொக்கரை** - இயங்களுள் ஒன்று; **எக்கரையாரும்** - எத்திசையோரும்; "நாற்றிசையோர் பரவு" (2303) (5) **இடிபடுவானம்** - சத்தம் ஆகாயத்தின் சிறப்புக் குணம் என்பது காண்க; **வானம்** - வானவர்; ஆகுபெயர்; (6) **கழைவளர்** - **முத்தம்** - மூங்கிலிற்படும் முத்தம்; "வேரல் விளையுங் குளிர்முத்தும்" (492); (6) **மாவின் நல்ல பலவின் கனிகள் தயங்கும் - சோலை** - கனிகள் பறிப்பாரின்றி மிக்கிருந்த சோலை; "பலவின் பழம்வீழ்" (7) எனவும், "தெங்கு பழம்வீழ்" (8) எனவும், மேற்பாட்டுக்களிற் கூறுவதும் இக்குறிப்புடையது; (9) **எரி** - எரிபோன்ற; **ஈரிரு கோவணம்** - நான்கு வேதம்; "மறையே நமது கோவணமாம்" (திருவிளை - புரா-).

தலவிசேடம்:- திருக்குடமூக்கு - தொகுதி III பக்கம் 482, 483 பார்க்க.

2306. பொருளுரை.. வந்தணைந்து - முன்கூறியபடி பரவிவந்து அணைந்து; திருக்கீழ்க் கோட்டத்திருந்த... வணங்கி - திருக்கீழ்க் கோட்டத்தில் எழுந்தருளியிருந்த பரம்பொருளை மனமகிழ வணங்கி; திருத்தொண்டருடன் செல்வார் - திருத்தொண்டர் கூட்டத்துடன் செல்வாராகிய பிள்ளையார்; அந்தணர்கள்... சென்றடைந்தார் - அந்தணர்கள் சுற்றிலும் சூழ்ந்து துதிக்க அவரோடுங்கூடி மணம்பொருந்திய மலர்ச் சோலைகள் சூழ்ந்த திருக்காரோணத்தினைச் சென்றடைந்தனர்.

2306. வந்தணைந்து திருக்கீழ்க்கோட் டத்திருந்த வான்பொருளைச்
சிந்தைமகிழ் வுறவணங்கித் திருத்தொண்ட ருடன்செல்வார்
அந்தணர்கள் புடைசூழ்ந்து போற்றிசைப்ப வவரோடுங்
கந்தமலர்ப் பொழில்சூழ்ந்த காரோணஞ் சென்றடைந்தார். 408

2307. பூமருவுங் கங்கைமுதற் புனிதமாம் பெருந்தீர்த்தம்
மாமகந்தா னாடுதற்கு வந்துவழி படுங்கோயில்
தூமருவு மலர்க்கையாற் றொழுதுவலங் கொண்டணைந்து
காமர்கெட நுதல்விழித்தார் கழல்பணிந்து கண்களித்தார். 409

விளக்கவுரை... ***கீழ்க் கோட்டம்*** - குடமூக்கில் கிழக்குப் பாகத்திலிருத்தலின் கீழ்க் கோட்டம் எனப்படும்; ***கோட்டம்*** - கோயில். "கோழிச் சேவற் கொடியோன் கோட்டமும்" (சிலப்-14-10); பிள்ளையார் குடமூக்கினுக்குக் கிழக்குத் திக்கினின்றும் போந்தருளுகின்றா ராதலின் நகரினுட் புகுந்தபின் அப்பதியிலுள்ள பல தளிகளினுள், அமைப்பினால் முதலில் வணங்க உள்ளது இக்கோயில் என்க; இக்கோயில் இப்போது மாறுபட்டு வேறாக வழங்கப்படுகின்றதென்பது சில அன்பர்கள் கருத்து.

வான்பொருள் - பரம்பொருள்; ***வான்*** - பெரிது; எட்டாதது என்னும் பொருள் தந்து நின்றது.

திருத்தொண்டருடன் செல்வார் - உடன் வந்தார்களும் அப்பதியினிற் கூடியவர்களும்.

அந்தணர்கள்... போற்றிசைப்பர் - செல்வார் - சென்றடைந்தார் - அந்தணர்கள் - மறைமுனிவர்கள்; ***அவரோடும்*** - அவ்வந்தணர்களோடும்; பிள்ளையார் தாம் திருத்தொண்டருடன் செல்வார். அந்தணர் போற்ற, அவரோடும் கூடிச் சென்று - என்றதனால் அடியார்களின் சிறப்புக் குறித்தவாறு.

காரோணம் - திருக்குடந்தைக் காரோணம் என்னும் தனித் திருக்கோயில். இதன் அமைவும் சிறப்பும் மேல்வரும் பாட்டிற் கூறுவார்.

திருக்குடந்தைக் கீழ்க்கோட்டம் - பிள்ளையார் பதிகம் கிடைத்திலது! 408

2307. பொருளுரை... ***பூமருவும்... வழிபடுங் கோயில்*** - பூக்கள் பொருந்திய கங்கை முதலாகிய புனிதமாம் பெருந் தீர்த்தங்கள் மாமகத்தில் ஆடும்பொருட்டு வந்து வழிபடுகின்ற பெருமையுடைய அத்திருக்கோயிலை; ***தூமருவு... கண் களித்தார்*** - தூய மலர்க்கைகளாலே தொழுது வலமாகச் சூழ்ந்து வந்து காமனை நெற்றிக் கண்ணினால் விழித்தெரித்த இறைவரது திருவடிகளைப் பணிந்து கண்களித்தனர்.

விளக்கவுரை... பூமருவும்...வழிபடும் - இதனால் இப்பதியில் நிகழ்வதாகிய மாமகம் என்னும் விழாவின் சிறப்புக் கூறப்பட்டது; "தாவிமுதற் காவிரிநல் யமுனை கங்கை சரச்சுவதிபொற் றாமரைபுட் கரணி தெண்ணீர்க் கோவியொடு குமரிவரு தீர்த்தஞ் சூழ்ந்த

2308. கண்ணாரு மருமணியைக் காரோணத் தாரமுதை
நண்ணாதார் புரமெரித்த நான்மறையின் பொருளானைப்
பண்ணார்ந்த திருப்பதிகம் பணிந்தேத்திப் பிறபதியும்
எண்ணார்ந்த சீரடியா ருடன்பணிவுற் றெழுந்தருளி, 410

குடந்தைக்கீழ்க் கோட்டத்தெங் கூத்த னாரே" (தாண்); தம்முள் தோயும் உயிர்களின் பாவமாசுகளைப் போக்குதலிற் சிறந்த காவிரி கங்கை முதலாகிய ஏழு பெருந் தீர்த்தமாதாக்களும், அதனாலாய தமது மாசுகளின் தொகுதியைப் போக்கிக் கொள்ளும் வரத்துடன் இங்கு மாமகத் தீர்த்தத்தில் வந்து மூழ்கி இக்கோயிலில் வழிபடுகின்றனர் என்பது வரலாறு. இந்நிகழ்ச்சி 12 ஆண்டுகளுக்கு ஒருமுறை மாசி மகத்தில் பெருவிழாவாக நிகழ்வது. எத்திசையிலுமிருந்தும் அன்பர் பெருந்திரளாகக்கூடி நீராடுவர். "நாற்றிசையோர் பரவு" (2303); **பூமருவும்** - இருகரையிலும் அருகு உள்ள பெருஞ் சோலைகளின் மலர்கள்; அடியார் வழிபட்டு இட்ட மலர்கள் என்றலுமாம்; ஆகாயத்திலிருந்து பூவுலகிற் பொருந்திய என்ற குறிப்புமாம். **புனிதமாம்** - தம் இயல்பிலே புனிதமாகிய; தோய்ந்தாரைப் புனிதமாகச் செய்யும் எனப் பிறவினைப் பொருள் கொள்ளலுமாம். தாம் புனிதமாயினும் தம்மிடம் வந்த மாசுகளை நீக்கிப் புனிதம் ஆகும்படி என்ற வரலாற்றுக் குறிப்புப் பெறவைத்த நயமும் காண்க; **பெருந்தீர்த்தம்** - தீர்த்தங்கள் அனேகங் கோடியாதலின் அவற்றுட் பெரியன; பெருமை - உண்மாசு கழுவும் தன்மையாற் பெற்ற சிறப்பு. இவை கங்கை, யமுனை, சரச்சுவதி, நருமதை, காவேரி, குமரி, கோதாவிரி என்பன; இவை இங்குத் தூல உருவானன்றி, ஆதியான்மிகமாகிய சூக்கும உருவுடன் செல்லுமென்பர்; இவற்றின் அதி தெய்வங்கள் செல்லுமென்றலுமாம்.

மாமகம்தான் ஆடுதற்கு - மாமகத்தில் நீராடுவதற்காக; **வந்து** - தத்தம் இடங்களிலிருந்து வந்து; கங்கை **முதல்** என்றது சிறப்பாகிய தலைமை நோக்கி.

தூமருவு மலர்க்கையால் - மலர் போன்ற கை என்றும், மலர்களை ஏந்திக்கொண்ட கை என்றும் உரைக்க நின்றது; "நின்று மலர்தூவி" (தேவா).

காமர் கெட நுதல் விழித்தார் - காமர் - காமன்; மன்மதன் - இழித்தற் குறிப்பின்கண் வந்த பன்மை; **கெடுதல்** - நிலையழிதல்; **நுதல்** - நுதற்கண். ஆகுபெயர்; "நெற்றி ஒற்றைக்கண்" என்ற பதிகக் குறிப்பு.

கண்களித்தார் - கண்களாற் கண்டு அதன் பயனாகக் களிப்படைந்தனர். 409

2308. பொருளுரை... கண்ணாரும்... பொருளானை - கண்ணிற் பொருந்திய அரிய கருமணிபோல்பவரும், திருக்குடந்தைக் காரோணத்தில் எழுந்தருளிய நிறைந்த அமுதம் போல்பவரும், பகைவர்களது திரிபுரங்களை எரித்த நான்மறைகளின் உட்பொருளாய் விளங்குபவருமாகிய பெருமானைச் சென்று வணங்கி; பண்ஆர்ந்த... ஏத்தி - பண்ணிசை பொருந்திய திருப்பதிகத்தினைப் பணிந்து பாடித் துதித்து; பிற பதியும்... பணிவுற்று -

2309. திருநாகேச் சரத்தமர்ந்த செங்கனகத் தனிக்குன்றைக்
கருநாகத் துரிபுனைந்த கண்ணுதலைச் சென்றிறைஞ்சி
யருஞானச் செந்தமிழின் றிருப்பதிக மருள்செய்து
பெருஞான சம்பந்தர் பெருகார்வத் தின்புற்றார். **411**

பிறபதிகளையும் எண்ணிறைந்த சிறந்த அடியார்களுடனே கூடிச் சென்று பணிந்து; எழுந்தருளி - அங்கு நின்று மேற்சென்றருளி,

விளக்கவுரை— **கண்ணாரும் அருமணி** - கண்ணினுள்மணி; "கண்ணே கண்ணிற் கருமணியே மணியாடு பாவாய்!" (தேவா) **மணி** - மணிபோன்றார்; **அமுது** - அமுது போன்றார். காட்டுமுபகாரமும், சாவாமற் காக்குமுபகாரமும் உவமை உள்ளுறைகள்.

நான்மறையின் பொருள் - பொருள் - உட்பொருள்; மறைகளாற் றுதிக்கப்படும் முதற்பொருள்; சிவன்.

பண்ணார்ந்த திருப்பதிகம் - தக்கேசிப் பண்ணில் அமைந்த "வாரார் கொங்கை" என்ற திருப்பதிகம்.

காரோணத்தாரமுது - "தீர்ப்பா ருடலி லடுநோ யவலம் வினைக ணலியாமைக், காப்பார் கால னடையா வண்ணம்" (6) என்ற பதிகப் பாட்டுக் குறிப்பு.

பணிந்து பதிகம் ஏத்தி என்க; **பிறபதி** - திருக்குடமூக்கில் உள்ள பிறதளிகளும், அருகில் உள்ள திருக்கொட்டையூர் - திருக்கலயநல்லூர் முதலாயினவும்.

எண்ணார்ந்த சீர் அடியார் - சிவனையே தம் எண்ணத்தில் நிறையக் கொண்ட அடியார்; பிள்ளையார்தம் எண்ணத்திற் பொருந்தவைத்த என்றலுமாம்.

எழுந்தருளி - சென்றிறைஞ்சி - அருள்செய்து - இன்புற்றார் - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

அருங்கனியை - நண்ணார்தம் - என்பனவும் பாடங்கள். 410

2309. பொருளுரை— திருநாகேச்சரத்தமர்ந்த— இறைஞ்சி - திருநாகேச்சரத்தில் விரும்பி எழுந்தருளி ஒப்பற்ற செம்பொன்மலை போல்வாராகிய, கரிய யானையின் தோலைப் போர்த்த கண்ணுதற் பெருமானைச் சென்று பணிந்து; அருஞானச் செந்தமிழின்.... இன்புற்றார் - பெருந் திருஞானசம்பந்தர் அரிய ஞானம் விளங்கும் செந்தமிழினிய திருப்பதிகத்தினைப் பாடியருள்செய்து பெருகும் அன்பு மீதூர்தலினால் இன்புற்றருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை— **தனிச் செங்கனகக்குன்றை** என்க; **தனி** - "நின்னாவார் பிறரின்றி நீயே யானாய் - பொன்னானாய்" (தாண்); **கனகக்குன்று** - பண்பும் பயனும் பற்றி வந்த உவமை யாகுபெயர்; **குன்று** - குன்று போல்பவர்.

கருநாகம் - கரிய யானை; **உரி** - உரித்தலாற்பெற்ற தோல்.

அருஞானச் செந்தமிழின் திருப்பதிகம் - **ஞானம்** - ஞானம் வாயிலாக வீடுகூட்டு நெறி; **செந்தமிழ்** - **செம்மை** - செம்மைப்பண்பு; சிவத்தன்மை; **இன்** - இனிய;

பெருஞானம் - முடிந்த முடிபாகிய சிவஞானம்; தனக்கு மேற்பட்ட ஞானம் பிறிதில்லையாய்த் தனக்குள் எல்லா ஞானத்தையும் அடக்கி நிற்கும் ஞானம்.

பெருகு ஆர்வம் - மேன்மேல் ஓங்கும் அன்பு.

பெருகார்வத் தின்புற்றார் - நாகேச்சர நகரின் மன்னே! செல்வா! தலைவா! அரசே! தாயே! என - வினைதானறுமே என்ற அருமைப் பாட்டுக் குறிப்புடைய பதிகமும், "அழகர்பாதம் தொழுதேத்த வல்லார்க் கழகாகுமே" "கண்ணினாற் காணவல்லாரவர் கண்ணுடையார்களே" என்ற குறிப்புத்தரும் பதிகமும் கருதத்தக்கன. **நான்மறையின் பொருளான்** - வேதநான்கினு மெய்ப்பொருளானவன். 411

திருக்குடந்தைக் காரோணம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கேசி 1-ம் திருமுறை**

வாரார் கொங்கை மாதோர் பாக மாக வார்சடை
நீரார் கங்கை திங்கள் சூடி நெற்றி யொற்றைக்கண்
கூரார் மழுவொன் றேந்தி யந்தண் குழகன் குடமூக்கிற்
காரார் கண்டத் தெண்டோ ளெந்தை காரோ ணத்தாரே. (1)

கருவார் பொழில்சூழ்ந் தழகார் செல்வக் காரோ ணத்தாரைத்
திருவார் செல்வ மல்கு சண்பைத் திகழுஞ் சம்பந்தன்
உருவார் செஞ்சொன் மாலை யிவைபத் துரைப்பா ருலகத்துக்
கருவா ரிடும்பைப் பிறப்ப தறுத்துக் கவலை கழிவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- குடமூக்கில் காரோணத்தார் இறைவர்; உடலில் அடுநோய் அவலம் அடையாமையும் காலனடையா வண்ணமும் காப்பார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **எந்தை** - **காரோணத்தாரே** - என்று கூட்டுக; மாதோர்பாகம் - நெற்றிக்கண் முதலியவை திருவடையாளங்கள். (2) **மன்னர்** - **முதலிய பலரும் ஏத்த** - **விடையார் காரோணத்தாரே** - என்க; (3) **பங்கர்** - **அனலர்** - **காரோணத்தாரே** - என்க. (4) இறைவர் காரோணத்தார் என்று எழுவாய் தொக்கு நின்றது; **கூவார் குயில்கள்; ஆலு மயில்கள்; இன்சொற் கிளிப்பிள்ளை** - கூவுதல் - ஆலுதல் - சொல்லுதல் இவை அவ்வவற்றின் சிறப்பியல்பு குறித்த அடைமொழிகள். அடைமொழி யொவ்வொன்றினாலும் அதனதன் சிறப்பு இயல்பு காட்டிய கவிநலம் காண்க;- (6) **மூப்பூர்** - பழய மூன்று ஊர்கள்; திரிபுரவாணர்; **தீர்ப்பர்.... அடையா வண்ணம்** - பதிகக் குறிப்பு. (9) **கழறி** - இகலி; அறை கூவி; **அண்டம்** - மேலும் கீழும் உள்ள உலகங்கள்; (10) **குரத்திகள்**

2310. மாநாக மருச்சித்த மலர்க்கமலத் தாள்வணங்கி
நாணாளும் பரவுவார் பிணிதீர்க்கு நலம்போற்றிப்
பானாறு மணிவாயர் பரமர்திரு விடைமருதிற்
பூநாறும் புனற்பொன்னித் தடங்கரைபோய்ப் புகுகின்றார், 412

- பெண் துறவிகள்; கோணாகரம் - வளைந்த கடல் போன்ற குளம்; (11) **கவலை கழிவார்** - "தாள்சேர்ந்தார்க் கல்லான் மனக்கவலை மாற்ற லரிது" (குறள்).

தலவிசேடம்:- **திருக்குடந்தைக் காரோணம்** - காவிரியின் தென்கரை 28-வது தலம். காயாரோகணம் காரோணம் என நின்றது; சிவனது திருமேனியில் ஆரோகணம் - (ஒன்றுபட்டுப் போதல்) ஆன பதி என்பது; மூர்க்க நாயனாரது சூதுக்கு உரிதாக்கொண்ட இடம்போல் உள்ளது. இப்போது பெருமைக்கும் சிறுமைக்கும் சான்றாயுள்ளது. மகாமகத் தீர்த்தத்துக்கு வடகீழ்பால் உள்ள திருக்கோயில் என்பர்; கங்கை முதலிய தீர்த்த மாதாக்கள் எழுவரும் இங்கு எழுந்தருளியுள்ளார்கள். காசி விசுவநாதர் கோயில் என வழங்கப்படும். இம்மூர்த்தி தீர்த்த மாதாக்களை அழைத்து வந்து தாம் மேற்கு நோக்கியிருந்து தமக்கு நேரே அவர்களைத் தீர்த்தத்தில் மூழ்கச் செய்தருளினர் என்பர். இப்பதி இதுவன்றி இதன் தென்புறமாகத் தீர்த்தத்தின் கீழ்ப்பக்கம் உள்ள அபிமுகேசுவர் கோயில் என்பதும் ஒரு வழக்கு; சுவாமி - **சோமநாதர்**; அம்மை - **தேனார் மொழியம்மை**; பதிகம் - 1. இது கும்பகோணம் நிலயத்தினின்றும் மேற்கே 1/2 நாழிகையளவில் மகாமகத் தீர்த்தத்தின் வடகீழ்பால் உள்ளது.

2310. பொருளுரை- மாநாகம்...வணங்கி - ஆதிசேடன் அருச்சித்த தாமரை போன்ற திருவடிகளை வணங்கி; நாள்நாளும்- போற்றி - தினமும் துதிப்பவர்களுடைய பிணிகளைத் தீர்க்கின்ற நன்மையினைத் துதித்து; பால்நாறும் மணிவாயர் - ஞானப்பா லமுதின் மணம் வீசுகின்ற அழகிய திருவாயினையுடைய பிள்ளையார்; பரமர்- புகுகின்றார் - மலர்களின் மணம் வீசுகின்ற நீரினையுடைய காவிரியின் பெரிய கரைவழியே சென்று பரமசிவனது திருவிடை மருதிற் புகுகின்றவர்,

விளக்கவுரை... மாநாகம் அருச்சித்த - **மாநாகம்** - ஆதிசேடன்; எட்டுப் பெருந் திக்கு நாகங்களுள் முதன்மையுடையது ஆதிசேடன் என்பது; அது அருச்சித்த வரலாறாவது, ஒரு சிவராத்திரியில் நான்கு சாமங்களிலும் முறையே, திருவலஞ்சுழி, திருநாகேச்சரம், திருப்பாம்புரம், திருநாகைக் காரோணம் என்ற நான்கு பதிகளிலும் பூசித்தது என்பதாம்.

நாள் நாளும் பரவுவார் பிணிதீர்க்கும் நலம்- "வல்வினை மாய்ந்தறும்" 'இடரில்லை' என்பனவாதி பதிகக் குறிப்புக்கள் காண்க. இப்பதி யிறைவரை ஆசிரியர் சேக்கிழார் பெருமான் தமது ஆன்மார்த்த பூசாநாயகராகக் கொண்டு வழிபட்டார் என்ற குறிப்பும் இங்குக் காணத்தக்கது. ***பிணி** - பிறவிக்குக் காரணமாகிய வல்வினை.

பால் - ஞானப்பால் மணம்; **பாறுதல்** - ஞானம் விளங்குதல்.

---

*திருத்தொண்டர் புராண வரலாறும் (8-9); சேக்கிழார் (9-11) பக்கங்களும் பார்க்க.

2311. ஓங்குதிருப் பதிக"மோ டேகல"னென் றெடுத்தருளித்
தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்குந் தகைமையினால்
"ஈங்கெனையா ளுடையபிரா னிடைமருதீ தோ ?"வென்று
பாங்குடைய வின்னிசையாற் பாடியெழுந் தருளினார். 413

பொன்னித் தடங்கரைபோய் திருவிடை மருதிற் புகுகின்றார் - என்க. *புகுகின்றார்* - புகுகின்றாராய்; முற்றெச்சம். *புகுகின்றார்* - என்று *எடுத்தருளி* - என்று *பாடி எழுந்தருளினார்* என மேல்வரும் பாட்டுடன் முடிக்க; புகுகின்றபோது பதியை நோக்கிப் பாடிய பின் பதியினுள் அணைகின்றார். இப்பதிகம் பதியின் புறத்தே நின்று அருளியது. *"இடைமருது ஈதோ"* என்றது காண்க.

மாணாகம் - என்பதும் பாடம். 412

2311. *பொருளுரை*– ஓங்கு...எடுத்தருளி - ஓங்கும் திருப்பதிகத்தினை "ஓடேகலன்" என்று தொடங்கியருளி; தாங்கரிய... தன்மையினால் - தாங்குதற் கருமையாகிய பெருமகிழ்ச்சி மேன்மேலும் மிகுகின்ற தன்மையினாலே; "ஈங்கு...ஈதோ?" என்று - இங்கு என்னை ஆளுடைய இறைவர் வீற்றிருக்கும் திருவிடைமருது இது தானோ? என்ற கருத்துடன்; பாங்குடைய– எழுந்தருளினார் - நற்பான்மையுடைய இனிய இசை பொருந்தப் பாடி அப்பதியினுள்ளே எழுந்தருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... *"ஓடேகலன்"* - இது பதிகத் தொடக்கம்; *எடுத்தல்* - தொடங்குதல்.

தாங்கரிய பெருமகிழ்ச்சி தலைசிறக்கும் தன்மையினால் - பதியின்புறத்தே நின்று பதியினைப் பாடித் துதித்துப் பின்னர்ப் பதியினுள் புகுதற்குக் காரணங் கூறியபடி; பெருமகிழ்ச்சி உள்ளே நிறைந்து தாங்கற்கரிதாய் மீதூர்ந்தபடியால் புறத்தில் பதியினுட் புகும்போதே பாடினார்.

ஈங்கு எனையாளுடைய பிரான் இடைமருது ஈதோ? - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம். "மங்கையுந் தானுமகிழ்ந், தீடாவுறை கின்ற விடைமரு தீதோ?" என்பது முதலாகவரும் பதிகப் பாட்டுக்கள் காண்க. *"மங்கையும் தானும்"* என்ற பகுதிக்கு *எனையாளுடைய பிரான்* என்பது கருத்து எனக் காட்டியருளினார்.

பாங்கு - அமைதி; சொல்லும், பொருளும், இசையும், உள்ளுறையுமாகிய எல்லா வகைகளாலும் அமைதி.

இன்னிசை - தக்கராகப் பண்ணிசை. "எட்டொரு கட்டளையாக்கியவற்றுள்" (2004) என்று பண்களின் கட்டளை பேதங்களை ஆசிரியர் வகுத்து எடுத்துக் காட்டிய பண்.

எழுந்தருளினார் - பதியினுட் சென்றருளினார். 413

I. திருவிடைமருதூர்

திருச்சிற்றம்பலம்

பண் - தக்கராகம் - 1-ம் திருமுறை

ஓடேகல னுண்பது மூரிடு பிச்சை. காடேயிட மாவது கல்லா னிழற்கீழ்
வாடாமுலை மங்கையுந் தானு மகிழ்ந். தீடாவுறை கின்ற விடைமரு தீதோ. (1)

கண்ணார்கமழ் காழியுண் ஞானசம் பந்தன், எண்ணார்புக ழெந்தை யிடைமரு தின்மேல்
பண்ணோடிசை பாடிய பத்தும் வல்லார்கள், விண்ணோருல கத்தினில்
வீற்றிருப் பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "ஈங்கெனையாளுடைய பிரானிடை மருதீதோ?" என்பது. "எங்கோன்" (3) "எந்தை" (4)

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வாடாமுலை மங்கையும் தானும்** - "பவன் பிரமசாரியாகும், பான்மொழி கன்னியாகும்" (சித்தி-277); "பொற்றா மரையின் முற்றா முகிழென, வுலகே ழீன்று நிலையிற் றளரா, முலையுடன் பொலியு மொருபாலாகம்" (திருவிடைமருதூர் - மும்மணிக்கோவை -1) என இப்பதியில் இக்கருத்தையே பட்டினத்தடிகள் விரித்தருளினர்; ஓடேகலனும், உண்பது பிச்சையும், காடேயிடமும், ஆல் நிழலும் கொண்டு மங்கையும் தானும் உறைகின்ற என்க. ஈடா - இடமாக; "இடம் கொண்டு" (2) பெருமையாக என்றலுமாம் - (2) **தாமரை** - அந்தணர்க்குரிய அடையாள மலர்; (4) **அந்தம் அறியாத அருங்கலம்** - கணக்கற்ற அருமணிகள்; (5) **பூசம் புகுத்தாடிய** - பூசத் தீர்த்தச் சிறப்பு; "பூசத்தீர்த்தம் புரக்கும் பொன்னி, யயிரா வணத்துறை யாடுமப்ப!" (திருவிடை - மும் - கோ 29) (9) **எற்றே** - எனது தெய்வம். **என்தேவு** - என்பது எதுகை நோக்கி **எற்றே** எனத் திரிந்து நின்றது.

தலவிசேடம் :- **திருவிடைமருதூர்** - III பக்கம் 434 பார்க்க.

I. திருநாகேச்சரம்

திருச்சிற்றம்பலம்

பண் - இந்தளம் 2-ம் திருமுறை

பொன்னேர் தருமே னியனே புரியு,மின்னேர் சடையாய் விரைக்கா விரியி
னன்னீர் வயனா கேச்சுர நகரின், மன்னே யெனவல் வினைமாய்ந் தறுமே (1)

கலமார் கடல்சூழ் தருகா ழியர்கோன், றலமார் தருசெந் தமிழின் விரக
னலமார் தருநா கேச்சரத் தானைச், சொலன்மா லைகள்சொல் லநிலா வினையே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- 'நாணாளும் பரவுவார் பிணிதீர்க்கு நலம் போற்றுதல்' (2310) என்று ஆசிரியர் காட்டியபடி; மேல்வரும் பதிகமும் இக்குறிப்புடையது; இரண்டு பதிகங்களின் குறிப்புத்தர ஆசிரியர் இரண்டு பாட்டாற் கூறியருளினர். வல்வினை அறும்; இன்பமுறும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நேர்தரும்** - ஒத்த; **வல்வினை** - பிறவிக்குக் காரணமாகிய பழவினை; (2) **சிறவார்** - தீயோர்; **அறவா** - "அறவாழி யந்தணன்" (குறள்); (3) **கரும்பின் வில்லான்** - மன்மதன்; **எழில்வேவ** - முன்னர் வெந்து நீறாயிடினும், பின்னர் உயிர்பெற்று அவ்வுரு மாய்ந்து இன்று மிருக்கின்றானாதலின் எழில் (மட்டில்) வேவ என்றார்; (7) **காரணன்** - உலகுக்கு நிமித்த காரணன்; (10) **மலம்பாவிய** - கழுவுதலில்லாமையில் அழுக்குப்படிந்த; **மண்டையது உண்கலம்** - மண்டையோட்டினை உண்கலமாகக் கொண்ட; இது புத்த சமண குருமார் வழக்கு;

II. திருநாகேச்சரம்

திருச்சிற்றம்பலம் — பண் - செவ்வழி - 2-ம் திருமுறை

தழைகொள்சந் தும்மகி லும்மயிற் பீலியுஞ் சாதியின்
பழமுமுந் திப்புனல் பாய்பழங் காவிரித் தென்கரை
நழுவில்வா னோர்தொழ நல்குசீர் மல்குநா கேச்சரத்
தழகர்பா தந்தொழு தேத்தவல் லார்க்கழ காகுமே. (1)

கந்தநா றும்புனற் காவிரித் தென்கரைக் கண்ணுத
னந்திசே ருந்திரு நாகேச் சரத்தின்மேன் ஞானசம்
பந்தனா விற்பனு வல்லிவை பத்தும்வல் லார்கள்போய்
எந்தையீ சன்னிருக் கும்முல கெய்தவல் லார்களே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- முன் பதிகத்தின் கீழ் உரைக்கப்பட்டது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பழங்காவிரி** - காவிரி பின்னர் வேறு நிலை பெற்று ஓடுதல் குறிப்பு. அரிசில்நதியெனவும் பெறும்; பழமண்ணி என்பதுபோல; **அழகர்** - "நித்த மணாளர் நிரம்ப வழகியர்" (திருவா - அன்-பத்); அழகுக்கெல்லா மிருப்பிடமானவர்; **அழகர் பாதம் தொழ - அழகாகும்** - என்றது கவிநயம். **அழகு** - முத்தித்திரு வியல்பு, (2) **நாளும் தொழுதேத்தி நன்கெய்தும்** - "நாணாளும் பரவுவார் பிணிதீர்க்குநலம்" (2310); **"கண்ணினாற் காணவல்லார் கண்ணுடையார்களே** - சென்று காண்பார் கண்பெற்றவர்கள்; ஏனையோர் கண்பெற்றும் பெறாதவர்" என்பது குறிப்பு; கண்பெற்ற பயன் இது என்பது; (3) **குறவர் கொல்லை புனம்கொள்ளை கொண்டு** - காவிரிப் பெருக்குக் குறவர்களது கொல்லைப் புனத்துப் பொருள்களை வாரி வருதல் குறிப்பு. தற்குறிப்பேற்றம்; **குறவர் கொல்லை** - குறிஞ்சிக் கரு; **பறவை** - நீர்ப்பறவை - (4) **கூச...பொய்** - பொய் சொல்லுதல் தீமையே என்று அஞ்சாது முன் பொய் சொன்ன பாவம்; "பொய்யும், வினையும், **ஏனைக் குற்றங்களும்; நாசமாக்கும் மனத்தார்கள்** - இவற்றின் பாவத்தை நீக்கிக் கொள்ளும் எண்ணமுடையவர்கள்; **ஆடுதல்** - அடுத்தல்; திளைத்தல்; (6) **காலனும் காமனும் பட்டனவற்றை நினைவுறின்** - **காலன்** - இறப்பினையும், **காமன்** - பிறப்பினையும் விளைத்தலின் இவற்றினீங்க விரும்பினால்; **கோளும்...நன்காம்** - "வேயுறு தோளி" (கோளறு பதிகம்) என்ற பதிகக் கருத்து; சர்ப்பதோடம் முதலிய பாவ பலன்களையும் நீங்குவோர்

2312. அடியவர்க ளெதிர்கொள்ள வெழுந்தருளி யங்கணைந்து
முடிவில்பரம் பொருளானார் முதற்கோயின் முன்னிறைஞ்சிப்,
படியில்வலங் கொண்டுதிரு முன்பெய்திப் பார்மீது
நெடிதுபணிந் தெழுந்தபின்பு நிறைகண்ணீர் நிரந்திழிய, 414

நாகந் தாபித்தல் முதலிய கழுவாய்களைச் செய்யும் பலன்கள் எல்லாம் ஈண்டுப் பெறப்படும் என்பது; மாநாக மருச்சித்துப் பெற்ற பேற்றின் பலனாம் என்னும் வரலாறு குறிக்க "மாநாக மருச்சித்த" (2310) என்று ஆசிரியர் காட்டியருளியதும் ஈண்டுக் குறிக்க; **குறிக்கொண்மின்** என்றதும் குறிக்க; (7) **ஞாயிறும் திங்களும் கூடிவந்து ஆடும்** - சூரிய சந்திரர்கள் கூடி வழிபட்ட வரலாறு; (10) **கொள்ள** - கொள்ள வேண்டா; **உம்** அசை நிலை - (11) **நந்தி** - சிவன்.

தலவிசேடம்:- திருநாகேச்சரம் - தொகுதி III பக்கம் 436, 437 பார்க்க.

2312. **பொருளுரை..** வெளிப்படை. (முன் கூறியபடி பாடிப், பின்) அடியவர்கள் தம்மை எதிர்கொள்ளச் சென்று அத்திருப்பதியினுள் அணைந்து முடிவில்லாத பரம்பொருளாயுள்ள இறைவரது பெருங் கோயிலை முன்னே வணங்கி, நிலத்தின்மீது வலஞ்சூழ்ந்து வந்து திருமுன்பு சேர்ந்து நிலமுற வீழ்ந்து பலமுறையும் பணிந்து எழுந்து அன்பு நிறைதலினால் பொழியும் கண்ணீர் இடையறாது வழிய,

விளக்கவுரை.... **முடிவில் பரம்பொருளானார்** - முடிவு - எல்லை; அளவு; பரம்பொருள் - எல்லாம் கடந்த பொருள்; பரம் - அப்பாற்பட்டது; இத்தலத்தில் இறைவரது அருவுருவமாகிய சதாசிவமூர்த்தம் எனப்படும் சிவலிங்கங்களுட் சிறந்த மகாலிங்கம் விளங்குவது என்பது குறிப்பு.

முதற் கோயில் - முதல் - முதன்மை பெற்ற; முன்கூறிய கருத்து. இதனைச் சுற்றி உரிய இடங்களில் உள்ள பரிவார ஆலயங்களாகத் தனிப்பெருங் கோயில்கள் அமைந்துள்ளன என்பது வழக்கு. அவை - திருவலஞ்சுழி (விநாயகர்); சுவாமிமலை (முருகப்பெருமான்); திருத்தில்லை (நடராசர்); திருவாரூர் (தியாசேர் - சோமாஸ் கந்தர்); ஆலங்குடி - திருஇரும்பூளை (தட்சிணாமூர்த்தி); திருச்சேய்ஞலூர் (சண்டீசர்); சூரியனார் கோயில் (நவக்கிரகம்) என்பன; **முன் இறைஞ்சுதல்** - கோயிலின் முன்பு வணங்குதல்.

படியில் - நிலமிசை நடந்தருளித் திருக்கோயிலைச் சூழ்ந்து; இத்தலத்தில் திருக்கோயிலினுள் திருவீதி வலம் வருதலின் சிறப்புக் குறித்தது.

திருமுன்பு - திருக்கோயிலினுள் இறைவரது திருமுன்னர்.

நெடிது - மிகவும்; பலமுறையும்;

அன்புநிறை - அன்பு மிகுதியினால் உண்ணிறைந்து மேலே பெருகும்.

நிரந்து - இடையறாது மழைபோன்ற ஒழுக்குடனே பரந்து என்றலுமாம்.

2313. பரவுறுசெந் தமிழ்ப்பதிகம் பாடி,யமர்ந் தப்பதியில்
விரவுவார் திருப்பதிகம் பலபாடி, வெண்மதியோ
டரவுசடைக் கணிந்தவர்தந் தாள்போற்றி, யார்வத்தால்,
உரவுதிருத் தொண்டருள் பணிந்தேத்தி யுறையுநாள், 415

2313. பொருளுரை– வெளிப்படை - இறைவரைப் பரவுகின்ற செந்தமிழ்ப் பதிகத்தினைப்பாடி விருப்பத்துடன் அப்பதியில் தங்கி எழுந்தருளும் பிள்ளையார், மேலும் பல திருப்பதிகங்களையும் பாடியருளி, வெண்பிறையினுடன் பாம்பினையும் சடையில் அணிந்த பெருமானது திருவடிகளைப் போற்றி, வலிமைபெற்ற திருத்தொண்டர்களுடனே இறைவரைப் பணிந்து போற்றி அன்பு மிகுதியினால் அங்குறைகின்ற காலத்தில்;

விளக்கவுரை– பரவுறு - *துதித்தல் பொருளாகவுடைய; யாவரும் போற்றுகின்ற என்றலுமாம்.*

செந்தமிழ்ப் பதிகம் *என்றது பதியில் அணைந்த அன்று திருமுன்பு பாடியருளியது;* **திருப்பதிகம்பல** *என்றவை அப்பதியிற்றங்கிய பின்னாள்களிற் பாடியருளியவை.*

வெண்மதியோடு அரவு சடைக்கு அணிந்தவர் - **சடைக்கு** - *சடையின்கண்;* **அணிதல்** - *சூடுதல்; இப்பொருளில்* **சடைக்கு** - *நான்கனுருபு ஏழன் பொருளில் வந்தது;*

ஆர்வத்தால் - உரவு - திருத்தொண்டர் - **ஆர்வம்** - *மீதூர்ந்த அன்பு;* **உரவு** - *வன்மை;*

விரவுவார் - *தங்குவாராகிய பிள்ளையார்; வினையாலணையும் பெயர்;*

விரவுவார் - பணிந்தேத்தியுறையும் நாள் *என்று கூட்டுக. கண்ணீர் - நிரந்திழியப் (2312) - பாடி - போற்றி - பணிந்தேத்தி உறையுநாள் (2313) - பணிந்து - போய் - அணைந்து - அருள் செய்து பரவினார் (2314) என்று இம் மூன்று பாட்டுக்களையும் கூட்டி முடித்துக் கொள்க.*

தொண்டருடன் பணிந்து - *"அன்பரொடுமரீஇ.. ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" (போதம் - 12 சூத்) என்பது சாத்திரம்.* 415

2314. பொருளுரை... வெளிப்படை - பக்கத்தில் உள்ள நல்ல திருப்பதிகள் பலவற்றினையும் பணிந்து, காவிரிப் பெருநதியின் கரைவழியே சென்று, திருக்குரங்காடு துறையினை அணைந்து இறைவரது சத்திக்கின்ற கழல்களையுடைய திருவடிகளைப் பெருங் காதலினாலே பணிந்து, விரும்பிய இனிய இசை பெருகவுள்ள அரிய கலை நூல்களின் பொருள்களை விரிக்கும் திருப்பதிகத்தினை அருளிச் செய்து போற்றியருளினார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2314. மருங்குளநற் பதிகள்பல பணிந்துமா நதிக்கரைபோய்க்
குரங்காடு துறையணைந்து குழகனார் குரைகழல்கள்
பெருங்காத லாற்பணிந்து பேணியவின் னிசைபெருக
அருங்கலைநூற் றிருப்பதிக மருள்செய்து பரவினார். 416

விளக்கவுரை.... மருங்குள நற்பதிகள் பல - இவை திருவிடை மருதூருக்கு அணிமையிலும், அதற்கும் குரங்காடுதுறைக்கும் இடையிலும் உள்ளன. திரிபுவனம் முதலாயின என்பது கருதப்படும்.

குழகனார் - அழகுடையவர்; சிவன். *குழகு* - அழகு.

குரைகழல்கள் - *குரை* - சத்திக்கின்ற; *கழல்கள்* - வீரக் கழல்களை அணிந்த திருவடிகள்; ஆகுபெயர்.

குறிப்பு:- இத்தலத்தின் பிள்ளையாரது ஏனைய பதிகங்களுள் "பொங்குநூன் மார்பினீர்" (காந்தாரம்) என்ற பதிகம் திருமுன்னரிலும்; "தோடொர்காதினன்" (குறிஞ்சி - திருவிருக்குக் குறள்), "மருந்தவன்" (வியாழக் குறிஞ்சி - திருவிராகம்) "நடைமரு திரிபுரம்" "விரிதருபுலியுரி" (ஷை) என்ற பதிகங்கள் பதியினுள் விரவி எழுந்தருளி யிருந்தபோதும் பாடியவை என்பது கருதப்படும்; "தோடொர் காதினன்" என்ற பதிகம் திருமுன்பு அருளப்பட்டதென்று கருதினும் இழுக்கில்லை. திருவாலவாய்ப் பதிகக் குறிப்புப் பார்க்க. *416*

II. திருவிடைமருதூர்

திருச்சிற்றம்பலம் **திருவிருக்குக்குறள் - பண் - குறிஞ்சி - 1-ம் திருமுறை**

தோடொர் காதினன், பாடு மறையினன், காடு பேணிநின், றாடு மருதனே (1)
கருது சம்பந்தன், மருத ரடிபாடிப், பெரிதுந் தமிழ்சொலப், பொருத வினைபோமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இடைமருதரை அடைய வினைதீரும்;

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **காதினனும் மறையினனும் மருதனே** என்க. **தோடொர்காதினன்** - "தோடுடைய செவியன்" (தேவா); இக் கருத்தே "எனையாளுடையான்" என்ற நினைவை ஆண்டும் ஈண்டும் எழுவித்ததென்று கருதுக. 1986-ம், 2311-ம் ஒப்பிடுக. (2) **விருது** - வெற்றிச் சின்னம்; (4) **தரியாது** - வேறொன்றினையும் மனங்கொள்ளாது. (5) **பந்தவிடை** - பாசக்கட்டுடைய ஆன்மாவாகிய பசு; "ஆய பசுவு மடலே றெனநிற்கும்" (திருமந்) (7) **நிறை** - உள்ளம் புலன் வழிச் செல்லாது நிறுத்தல் (3) **அடுத்தார்** - ஒறுத்தவர்; **அடுதல்** - தண்டித்தல்.

III. திருவிடைமருதூர்

திருச்சிற்றம்பலம் பண் - வியாழக்குறிஞ்சி - 1-ம் திருமுறை

மருந்தவன் வானவர் தானவர்க்கும், பெருந்தகை பிறவினோ டிறவுமானான்
அருந்தவ முனிவரொ டானிழற்கீழ், இருந்தவன் வளநக ரிடைமருதே. (1)

இலைமலி பொழிலிடை மருதிறையை, நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன,
பலமிகு தமிழிவை பத்தும்வல்லார், உலகுறு புகழினொ டோங்குவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது இடம் திருவிடைமருதூரே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மருந்து** - பிறவிப் பிணிக்கு மருந்து; "பிறவிப் பிணிக்கோர் மருந்தே" (திருவா) **பிறவினோடு இறவுமானான்** - **பிறவு** - பிறப்பு; **இறவு** - இறப்பு; இவை "போக்கு வரவு" என மாறிக் கூறப்படும். **ஆனான்** - ஆகுமாறு செய்பவன்; **தோற்றவன் கேடவன்** - **தோற்று** - **கேடு** - என்பவை முதனிலைத் தொழிற் பெயர்கள்; **தோற்று** - சிருட்டி. **கேடு** - சங்காரம். (4) **இணையிலி** - "தனக்குவமை யில்லாதான்" (குறள்); (5) **பொழில்** - உலகு; **புயல்** - உலகை வளர்க்கும் நீர்; **புயல் இயக்கும் தொழில்** - மாயைக்குக் கர்த்தாவாயிருந்து செலுத்துபவன்; **துயரவன்** - கன்மம் புசிப்பித்தற் பொருட்டுத் துன்பங்களை ஊட்டுவிப்பவன்; **துயரகற்றும் கழலவன்** - துயரத்தை நீக்குகின்ற திருவடியை உடையவன்; (10) **புந்திஇல்** - நற்புத்தியில்லாத; உரை கொள்ளாது இடைமருதைத் தொழுமின் என்றபடி.

IV. திருவிடைமருதூர்

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - வியாழக்குறிஞ்சி - 1-ம் திருமுறை

நடைமரு திரிபுர மெரியுண நகைசெய்த, படைமரு தழலெழ மழுவல பகவன்,
புடைமரு திளமுகில் வளமமர் பொதுளிய, விடைமரு தடையநம் மிடர்கெட லெளிதே
தடமலி புகலியர் தமிழ்கெழு விரகினன், இடமலி பொழிலிடை மருதினை யிசைசெய்த
படமலி தமிழிவை பரவவல் லவர்வினை, கெடமலி புகழொடு கிளரொளி யினரே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பகவனாரது இடம் இடைமருது; அதனை அடைய நம் இடர் கெடுதல் எளிது; குணம் அணுகும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நடைமரு** - இயங்குகின்ற. (2) **அழி தலை.** இறந்த நகுசிரம்; **குழை நுழை செவி** - குழையணிந்த காது; **நுழை** - இசைபாடுவதற்காகக் கந்தருவர் குழையாகி நுழைந்த; **புரி** - முப்புரி நூல்; (3) **பிணைபெணொ டொருமையின் இருமையும் உடை அணல்** - இருமையின் ஒருமையு மொருமையின் பெருமையும் உடைய அண்ணல்

(திருஎழுகூற்றிருக்கை) - (4) பொரிபடு - காய்ந்த; பொரிந்த; **முதுகுஉற** - மேலே பொருந்த; **முனி** - காய்ந்த; **களி** - கள்ளி; **களி-நரி**- இவை பாலைக் கரு; **வரிவளர்** - கீற்றுப்போலிருந்து பின்வரும் - (6) **இலையுடைபடை** - திரி சூலம்; (9) **மருது இடை நடவிய** - இரு மருத மரங்களிடையே தவழ்ந்து சென்று திருமால் அவற்றை வீழ்த்திய வரலாறு; **பெரியதோர் எருது உடை** - இப்பதியின் இடபம் மிகப் பெரிய உருவமுடைய குறிப்பு.

V. திருவிடைமருதூர்

திருச்சிற்றம்பலம்

திருவிராகம் பண் - வியாழக்குறிஞ்சி - 1-ம் திருமுறை

விரிதரு புலியுரி விரவிய வரையினர்
திரிதரு மெயிலவை புனைகணை யினிலெய்த
வெரிதரு சடையின ரிடைமரு தடைவுனல்
புரிதரு மனனவர் புகழ்மிக வுளதே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது இடைமருதினை நினைப்பவர் புகழ் மிகவுளது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **புனைந்தகணையினால் எய்த** - என்க; **எரிதரு** - தரு - உவமஉருபு; **புரிதல்** - இடைவிடாது நினைத்தல்; (2) **திரைநரை செலவு** - திரையும் நரையும் சாதலும்; **பிறிது இரைபெறும் உடல் பெறுகுவது** - இனிமேலும் உலகானுபவத்துக்குரிய பிறவி பெறுதல். (4) **இடைவிடலரியவர்** - பிரிவிலாது எங்கு நிறைந்தவர்; (5) **உரையருமுரு** - அளவிட்டுச் சொல்லாகா உருவம்; **இரைமரும்** - உயிருள்ள. (7) **கலைமலி விரல்** மானேந்திய விரல். (8) **இருவகை விரல்** - கோபமும் பிரசாதமும் உடன் உடைய விரல். ஒறுத்துப்பின் அருள் செய்த என்றபடி; **செரு அடையில வல** - போர்த் தன்மையுடைய நலமல்லாத வலிய, (10) **தழை** - இறகு; தழைத்தது போறலின் தழை எனப்பட்டது.

VI. திருவிடைமருதூர்

திருச்சிற்றம்பலம்

திருவிராகம் பண் - காந்தாரம் - 2-ம் திருமுறை

பொங்குநூன் மார்பினீர் பூதப் படையீர் பூங்கங்கை
தங்குசெஞ் சடையினீர் சாம வேத மோதினீர்
எங்கு மெழிலார் மறையோர்கள் முறையா லேத்த விடைமருதின்
மங்குறோய் கோயிலே கோயி லாக மகிழ்ந்தீரே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் திருமுன்பு நின்று "இறைவரே! தேவரீர் இப்பெருந் திருக்கோயிலினையே உமக்குச் சிறந்த விருப்பமுடைய கோயிலாக மகிழ்ந்து கொண்டு எழுந்தருளினிரே?" என்று வியந்து பாடியது.

2315. அம்ம லர்த்தடம் பதிபணிந் தகன்றுபோந் தருகு
மைம்ம லர்க்களத் திறைவர்தங் கோயில்கள் வணங்கி
நம்ம லத்துயர் தீர்க்கவந் தருளிய ஞானச்
செம்ம லார்திரு வாவடு துறையினைச் சேர்ந்தார். 417

---

*பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) முறையால்— ஓது முறையும் வழிபடும் முறையும். (4) **செல்வாய** - செல்வம் பொருந்திய; (5) **தைப்பூசம்** - இத்தலத்தின் தீர்த்தச் சிறப்புநாள்; முன் பதிகங்களும் பார்க்க; (6) **சாந்தம்** - "சாந்தமென நீறணிந்த சைவர்" (தேவா) (7) **செய்யீர்** - சிவந்த திருமேனியுடையீர்; **செய்யீர்** - கரிய கண்டத்தீர் - முரண்அணி. (10) **சின்போர்வை** - சிறிய போர்வை உடை. (11) எல்லி - ஒளியுடைய.*

*தலவிசேடம்:- **திருவிடைமருதூர்** III பக் 300 பார்க்க.*

திருத்தென்குரங்காடுதுறை

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம் - 2-ம் திருமுறை

பரவக்கெடும் வல்வினை பாரிடஞ்சூழ, விரவிற் புறங்காட்டி டைநின் றெரியாடி
அரவச்சடை யந்தணன் மேயவழகார், குரவப் பொழில்சூழ் குரங்காடு துறையே.

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது இடம் குரங்காடுதுறை.

*பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) பாரிடம் - பூதகணம். (2) **இண்டு** - முட்செடி; பாலைப்பொருள். (9) **பண்டங்கன்** - சிவன்; **பண்டரங்கம்** - சிவனாடல்; "பண்டரங்க வேடத்தான்" (தேவா).*

*தலவிசேடம்:- **தென்குரங்காடுதுறை** - காவிரியின் தென்கரையில் 31-வது பதி. இஃது ஆடுதுறை என வழங்கப்படும். திருப்பழனத்துக்கு கிழக்கில் உள்ள வாலியார் வழிபட்ட வடகுரங்காடுதுறையுடன் இது மயங்கற்பாலதன்று; சுக்கிரீவனும் அனுமனும் ஆகிய குரங்குகள் பூசித்ததால் இப்பெயர் எய்தியது. இத்தலத்தின் மேற்கே மருத்துவக்குடி என்ற பழைய கோயில் ஒன்றுள்ளது. சுவாமி - **ஆபத்சகாயர்**; அம்மை - **பளக்கொடியாள்**; பதிகம் 2.*

இஃது ஆடுதுறை என்ற நிலையத்தினின்றும் வடக்கே கற்சாலை வழி 1/2 நாழிகை யளவில் அடையத்தக்கது.

2315. பொருளுரை— அம்மலர்த்தடம்... வணங்கி - தாமரைப் பூக்கள் நிறைந்த தடங்களையுடைய அந்தப் பதியினைப் பணிந்து அதனை நீங்கிச் சென்று பக்கத்தில் திருநீலகண்டமுடைய இறைவருடைய கோயில்களை வணங்கிக்கொண்டு; நம் மலத்துயர்— சேர்ந்தார் - நம்முடைய பாசத் துன்பங்களைத் தீர்ப்பதற்கென்றே அவதரித்தருளிய ஞானச் செம்மலாராகிய பிள்ளையார் திருவாவடுதுறையினை அடைந்தனர்.

2316. மூவ ருக்கறி வரும்பொரு ளாகிய மூலத்
தேவர் தந்திரு வாவடு துறைத்திருத் தொண்டர்
பூவ லம்புதண் பொருபுனற் றடம்பணைப் புகலிக்
காவ லர்க்கெதிர் கொள்ளுமா தரவுடன் கலந்தார். 418

விளக்கவுரை... மலர்த்தடம் அப்பதி - என்க; தாமரைத் தடாகங்கள் இங்குச் சூழ்ந்திருப்பதனை இன்றுங் காணலாம்.

அருகு-கோயில்கள் - இவை சாத்தனூர் முதலாயின என்பது கருதப்படும்.

நம்மலத்துயர் தீர்க்க வந்தருளிய ஞானச் செம்மலர் - பிள்ளையார் அவதரிக்க வந் காரணங் கூறியவாறு; உலகில் வரத் தமக்கென்று வேறு காரணமில்லாதவர்; 2087- பார்க்க. "உலகுய்ய" (1918) என்றது முதல் "சராசரங்களெல்லாஞ், சிவம் பெருக்கும்" (1924) என்றது வரை கூறியனவும், பிறவும் பார்க்க; **ஞானச் செம்மலார்** - நம் மலத்துயர் தீர்த்தற்குரிய சாதனமாகிய ஞானம் பெற்றவர் என்பது;

மலத்துயர் - பழமலமும் அது காரணமாக வரும் பிறவித்துயரும், சிவவேள்விகள் உலகங் கலிநீங்கி யுய்தற் பொருட்டுச் செய்யப் பெறுவன; "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" (தேவா); அவ்வாறு உள்ள வேள்வி செய்தற்குரிய பொருளைத்தரும் உலவாக்கிழியினைப் பிள்ளையார் இப்பதியினில் இனிப் பெற்றுத் தந்தையார்க் களித்து உலகந் "தீதுநீங்க"க் காரணராக்கும் நிலைபெறவுள்ள சரித நிகழ்ச்சியின் முற்குறிப்புப்பெற ஈண்டு இவ்வாற்றாற் பிள்ளையாரைப் போற்றிக் காட்டியருளினர் ஆசிரியர். 2327 பார்க்க. **நம்** - உலகுயிர்களை எல்லாம் உளப்படுத்திய பன்மை. **செம்மலார் - செம்மை** - தலைமை; சிவத்தன்மை என்றலுமாம்.

மலர்த்துயர் நீங்க - என்பதும் பாடம். 417

2316. பொருளுரை- மூவருக்கு... திருத்தொண்டர் - அயன் முதலிய முத்தேவர்க்கும் அறிதற்கரிய மூலத்தேவராகிய சிவபிரானது திருவாவடுதுறையில் வாழும் திருத்தொண்டர்கள்; **பூ அலம்பு.... கலந்தார்** - பூக்களை வாரிக்கொண்டு பெருகிவரும் குளிர்ந்த அலைகளையுடைய நீர்நிரம்பிய தடங்களையும் வயல்களையும் உடைய சீகாழித் தலைவரை எதிர்கொள்ளும்படி மிக்குப் பெருகும் அன்புடனே வந்து கலந்தார்கள்.

விளக்கவுரை... மூவருக்கு-மூலத்தேவர் - மூவர் - அயன் - அரி - அரன்; பிரமா - விட்டுணு - உருத்திரன் என்பர். முத்தொழிலுக்கும் அப்பாற்பட்டு அவ்வத்தொழில் செய்வோரைத் தொழிற்படுத்தி நிற்கும் கருத்தன். "நான்காவதானவன்" "சிவம் சதுர்த்தம்" என்பது வேதம்; "விரை மலரோன் செங்கண் மாலீசனென்னும் மூவராய முதலொருவன்" (பிள் - தேவா); "மூவ ருருத்தனதா மூல முதற்கருவை" (நம்பி-தேவா); "மூவர்கோனாய் நின்றமுதல்வன்" (திருவா-சத); **மூலத்தேவர்** - ஆதிகாரணர்; திருமூல நாயனார்க்கு அருள்புரிந்த சரிதக்குறிப்புப் படவும் நின்றது.

2317. வந்த ணைந்தவர் தொழாமுன மலர்புகழ்ச் சண்பை
அந்த ணர்க்கெலா மருமறைப் பொருளென வந்தார்
சந்த நித்திலச் சிவிகைநின் றிழிந்தெதிர் தாழ்ந்தே
சிந்தை யின்புற விறைவர்தங் கோயின்முன் சென்றார். 419

பூஅலம்பு - பூக்களை அலைத்துவரும்; ***பொருபுனல்*** - மோதியலைக்கும் நீர்; ***தடம்பணை*** - தடமும் பணையும்.

காவலர்க்கு - காவலரை; குவ்வுருபு இரண்டனுருபின் பொருள்தந்து நின்றது. ***காவலர்க்கெதிர்*** - (தொண்டருடன்) ***கலந்தார்*** என்று கூட்டி யுரைக்கினுமமையும்; ***இப்பொருளில் கொள்ளும்*** - மேற்கொள்ளும் என்க.

கலந்தார் - மன ஒருமைப்பாட்டுடன் கிடைத்தனர். 418

2317. பொருளுரை.. வந்தணைந்தவர் தொழாமுனம் - அவ்வாறு வந்து அணைந்த திருத்தொண்டர்கள் தம்மைத் தொழாதமுன்பு; மலர்புகழ்... வந்தார் - விரிகின்ற புகழினை யுடைய சீகாழி மறையவர்கட்கெல்லாம் அரிய மறைகளின் பொருளே இவர் என்று தியானப் பொருளாய்க் கொள்ளும்படி அவதரித்தவராகிய பிள்ளையார்; சந்த... தாழ்ந்தே - அழகிய முத்துச் சிவிகையினின்றும் கீழே இறங்கி அவர்களுக்கெதிரில் வணங்கிப் பின்; சிந்தை... சென்றார் - மனம் இன்பமடைய இறைவரது திருக்கோயிலின் முன்பு சென்றருளினர்.

விளக்கவுரை.... வந்தணைந்தவர் - எதிர்கொள்ள வந்த திருவாடுதுறைத் திருத்தொண்டர். ***மலர்தல்*** - விரிதல்.

தொழாமுனம் - இழிந்து - தாழ்ந்தே - தொழுதற்கான முயற்சிகளையும் செய்யும் முன் என்பார் தொழுமுன் என்னாது ***தொழாமுன்*** என்றார்; தொழுமுன் தாழ்தல் எதிர் வணக்கமும், தொழாமுன் தாழ்தல் தொண்டர் வணக்கமுமாம் என்க.

சிந்தை இன்புற - தாழ்ந்தமையால் சிந்தை இன்பமுற்ற தென்பது.

அந்தணர்க்கெலாம் - மறைப் பொருள் என - வந்தார் - உபநயனத்தில் மறையோர்களது ஐயந்தீர்த்த முன்வரலாற்றுக் குறிப்பு (2163) 419

வளர்புகழ் - என்பதும் பாடம்.

2318. பொருளுரை.. வெளிப்படை. நீண்ட திருக்கோபுரத்தை வணங்கி உள்ளே புகுந்து நீண்ட வரிசையால் பக்கத்திற் சுற்றிலும் உள்ள திருமாளிகையினை வலமாக வந்து வணங்கி, அருட்பெருங் கூத்தாடும் ஆதிமூர்த்தியும் திருவாவடுதுறையினுள் எழுந்தருளியுள்ள நிறைந்த அமுதம் போல்பவருமாகிய இறைவரை நாடும் பேரன்பினாற் பணிந்து எழுந்து அரிய தமிழினால் திருப்பதிகத்தினை அருளிச் செய்தனர்.

2318. நீடு கோபுர மிறைஞ்சியுள் புகுந்துநீ ணிலையான்
மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கி
யாடு மாதியை யாவடு துறையுளா ரமுதை
நாடு காதலிற் பணிந்தெழுந் தருந்தமிழ் நவின்றார். 420

2319. அன்பு நீடிய வருவிகண் பொழியுமா ர்வத்தான்
முன்பு போற்றியே புறம்பணை முத்தமிழ் விரகர்
துன்பு போமனத் திருத்தொண்டர் தம்முடன் றொழுதே
யின்ப மேவியப் பதியினி லினிதமர்ந் திருந்தார். 421

விளக்கவுரை.... இப்பாட்டினால் பிள்ளையார் முறைப்படி வணங்கிக் காட்டியருளிமை கூறப்பட்டது.

நீடுகோபுரம் - நீடுதல் - காலத்தால் நீடுதலும் பெருமையால் நீடுதலும் ஆம்.

நீள்நிலையால் மாடுசூள் திருமாளிகை - இது திருமாளிகைப்பத்தி எனப்படும்; மாடு - கோயிலின் பக்கம்; நீள்நிலையால் என்றது நீண்ட வரிசை அடுக்குக்கள் என்றுரைப்பாருமுண்டு.

ஆடும் ஆதி - அருட்கூத்தாடு முதல்வர்; "மூவருக்கு.... மூலத்தேவர்" (2316); ஆடுதலினால் ஆதியாந் தன்மை விளங்க நின்றவர்.

ஆதியை - அமுதை - நிலைபற்றியும் பயன்பற்றியும் கூறியபடி; ஆடும் - என்றது பயன் விளைத்தற் சாதனம்.

அருந்தமிழ் - திருப்பதிகம். இப்பதிகம் கிடைத்திலது. 420

2319. பொருளுரை- வெளிப்படை அன்பினால் பெருகிய கண்ணீர் அருவிபோலப் பொழியும் ஆர்வத்தினாலே, திருமுன்பு துதித்துப் பின்னர் வெளிப்போந்தருளிய பிள்ளையார் துன்பமற்ற மனத்தினையுடைய திருத்தொண்டர்களுடன் தொழுதே, யின்பம் பொருந்தி அந்தப் பதியினில் இனிதாக விரும்பி எழுந்தருளியிருந்தனர்.

விளக்கவுரை.... அன்பு...ஆர்வத்தால் - அன்புப் பெருக்கினாற் கண்ணீர் பொழியும் படி விளைந்த ஆர்வம்.

புறம்பு அணை - திருக்கோயிலின் புறத்தில் அணைந்த.

துன்பு போம்மனம் - வரக்கடவ துன்பங்கள் தமக்கு இங்குச் செயலில்லை என்று நீங்கிவிடப் பெற்ற மனம்; "பேதமிலா வோருணர்விற் பெரியவரைப் பெயர்விக்க, யாதுமொரு செயலில்லா மையினிறைஞ்சி யெதிரகன்றார்" (1689). போம் - தாமே நீங்கி விடும். திருத்தொண்டரினியல்பு குறித்தவாறு.

திருத்தொண்டர் தம்முடன் தொழுதே - தொண்டருடன் கூடித் தொழுதலிற்

2320. மேவி யங்குறை நாளினில் வேள்விசெய் வதனுக்
காவ தாகிய காலம்வந் தணைவுற வணைந்து
தாவில் சண்பையர் தலைவர்க்குத் தாதையார் தாமும்
போவ தற்கரும் பொருள்பெற வெதிர்நின்று புகன்றார். 422

பெறும் இன்பமும் பயனும் பெரிதென்பது ஞானசாத்திர உண்மை; அதனைக்காட்டியருளினார் என்க; "இன்பமேவி" என்ற கருத்துமிது.

போற்றியப் புறம்பணை - என்பதும் பாடம். 421

2320. பொருளுரை... மேவி அங்கு உறை நாளினில் - பொருந்தி அப்பதியினில் அமர்கின்ற நாட்களில்; வேள்வி.... அணைவுற - வேள்வி செய்தற்குரிய காலம் வந்து சேர்ந்ததாக; தாவில் சண்பையர் தலைவர்க்கு - குற்றமற்ற சீகாழியின் தலைவராகிய பிள்ளையாரிடம்; அணைந்து - வந்து; தாதையார்.... புகன்றார் - தாதையாராகிய சிவபாத விருதயரும் விடைபெற்றுச் சீகாழிக்குச் செல்லும் பொருட்டு வேள்விக்குரிய அரும்பொருளைப் பெறுதல் வேண்டுமென்று எதிரில் நின்று சொன்னார்.

விளக்கவுரை... வேள்வி செய்தவனுக்கு ஆவதாகிய காலம் - வேள்வி - இவை வேதங்களில் விதித்தவை. வேதங்களுள் அக்னி - பிரமன் - இந்திரன் முதலிய பற்பல கடவுளர்க்கும் வழிபாடுகளும் வேள்விகளும் பொது வகையால் விதிக்கப்படினும், சிறப்பாகக் கூறிச் சிவவழிபாடும் சிவனுக்குரிய வேள்விகளுமே போற்றப்படுவன. இங்குக் கூறியது வேதங்களுள் விதித்த சிவ வேள்விகள். "ஆதி மாமறை விதியினால் ஆறுசூழ் வேணி, **நாத னாரைமுன் னாகவே புரியுநல் வேள்வி**" (2327) என்பது காண்க. இவை நித்தியம், நைமித்திகம், காமியம் என்ற மூன்றனுள், இம்மையிலும் மறுமையிலும் பயன்றருவனவாகிய காமிய இட்டிகளாம். "இருமைக்கு மின்ப மளிக்கும் யாகமும் யான் செய வேண்டும்" (2178) என்றதும், அதனையே "தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழுமலத்து, வேத வேதிய ரனைவரும் செய்யவும்" (2327) என்பதும் காண்க. சத்தி நிபாதர்க்குரியனவாய்ச் சிவாகமங்களுள் விதிக்கப்படும் வேள்விகள் வேறு; "வேத வேள்வியை" (தேவா), "வேதநெறி தழைத்தோங்க" (1899) முதலியவையுங் காண்க. இம்மையிற் பலிப்பன மழை முதலியவற்றை விரும்பிச் செய்யும் காமிய முதலிய யாகங்கள்; மறுமையிற் பயப்பன சுவர்க்காதி பலன்களை விரும்பிச் செய்யு சோதிட்டோமம் முதலாயின என்பர்.

ஆவதாகிய காலம் வந்து அணைவுற - ஆவணி புரட்டாசியாகிய கார்ப் பருவத்தில் பூரணையிலாவது, அமாவாசையிலாவது பசுவேட்க என ஆபத்தம்பத்துக் கூறப்படும் என்பது ஆறுமுகத் தம்பிரானாருரை; "கற்றாங் கெரியோம்பிக் கலியை வாராமே செற்றார்" "பறப்பைப் படுத்தெங்கும் பசுவேட் டெரியோம்பும் சிறப்பர்" (தேவா).

போவதற்கு - சீகாழியின் கண் செல்வதற்கு.

அரும்பொருள் பெற - வேள்விக்குரிய பொருளைப் பெறுதல் வேண்டுமென்று;

எதிர்நின்று புகன்றார் - முன்பு நின்று விண்ணப்பித்தனர். 422

2321. தந்தை யார்மொழி கேட்டலும் புகலியார் தலைவர்
முந்தை நாளிலே மொழிந்தமை நினைந்தருண் முன்னி
யந்த மில்பொரு ளாவன வாவடு துறையுள்
எந்தை யாரடித் தலங்களன் றோ?வென வெழுந்தார். 423

2321. பொருளுரை– தந்தையார் மொழி–முன்னி - தந்தையாருடைய மொழியினைக் கேட்டலும், சீகாழியவர்களின் தலைவராகிய பிள்ளையார் முன்னை நாளில் மொழிந்ததனை நினைவுகூர்ந்து திருவருளை நினைந்து; *அந்தமில் பொருள்–எழுந்தார்* - "அந்த மில்லாத பொருளாயுள்ளன எமது இறைவரது திருவடிகளே யாமன்றோ?" என்று உட்கொண்டு எழுந்தனர்.

விளக்கவுரை– தந்தையார் மொழி - வேள்வி செய்வதனுக்காவதாகிய காலம் வந்தணைந்த தென்றும், அதன் பொருட்டுத் தாம் சீகாழிக்குப் போவதற்குரிய பொருள் பெறுதல் வேண்டும் என்றும் முன்பாட்டிற் கூறியவை.

புகலியார் தலைவர் - புகலியில் வாழும் பூமகனனைய பூசுரர்க்கெல்லாம் தலைவராய் அவர்களை வேதவிதிவழி நிறுத்தற்கடன் பூண்டாராதலின் வேள்வி செய்தற் குரிய பொருளினைத் தாதையார் மூலமாகத் தருபவர் என்பதும் குறிப்பு. "வேதவேதிய ரனைவரும் செய்யவும்" (2327) என்பது காண்க.

முந்தை நாளிலே மொழிந்தமை நினைந்து - "இருமைக்கு மின்பம் பயக்கும் யாகமும் யான்செய வேண்டும்" (2178) என்று தந்தையார் உரைத்ததுவும், அதற்குத் தாம் இசைந்தருளித் தமது யாத்திரையில் அவர் தம்முடன் உறையத் தந்தருளியதும் ஆகியவற்றை நினைவுகூர்ந்து.

அருள் முன்னி - திருவருளை நினைத்தல்; தமது செயல் எல்லாம் சிவச் செயலே யாகும் என்று சிவன்வழி ஒப்படைத்தல். "நஞ்செய லற்றிந்த நாமற்ற பின்னாதன், தான்செய றானேயென் றுந்தீபற; தன்னையே தந்தானென் றுந்தீபற" (உந்தி-6).

அந்தமில் பொருள் - அழிவில்லாதன; குறைவில்லாதன; தோன்றி நின்று மறையும் நிலையில்லாது என்றும் உள்ளன. "அந்தமின்மனை" (458); மேல் "உலவாக் கிழி" (2325); "மிகுமால்" (2327) என்று எடுக்கக் குறையும் ஏனைப் பொருள் போலன்றி, இப்பொருள் எடுக்க எடுக்க மிகுதியாகும் தன்மை குறிப்பது காண்க.

எந்தையார் - உயிர்த் தந்தையார் என்ற உரிமைக் குறிப்பு.

அன்றோ? - வினா உறுதி குறித்தது.

எழுந்தார் - திருமடத்தினின்றும் திருக்கோயிலுக்குச் செல்ல எழுந்தருளினர். 423

2322. பொருளுரை– சென்று–நின்று - எழுந்தருளிச் சென்று தேவதேவராகிய இறைவர் மகிழ்ந்தெழுந்தருளியுள்ள திருக்கோயிலின் முன்பு சேர்ந்து நின்று; *போற்றுவார்* - துதிப்பாராகி; *நீள் நிதி– என்று* - நீளும் நிதியினை வேண்டினவர்க்கு ஈவதற்கு மற்றுப்

2322. **சென்று தேவர்தம் பிரான்மகிழ் கோயின்முன் பெய்தி**
நின்று போற்றுவார் "நீணிதி வேண்டினார்க் கீவ
தொன்று மற்றிலே னுன்னடி யல்லதொன் றறியேன்"
என்று பேரருள் வினவிய செந்தமி ழெடுத்தார். **424**

பொருள் ஒன்றும் இல்லேன்; பொருளாகும் உனது திருவடிகளேயன்றி வேறொன்றும் பற்றுக்கோடு அறியேன் என்று; பேர்அருள்... எடுத்தார் - இறைவரது பேரருளினை வினாவிய கருத்துடைய செந்தமிழ்ப் பதிகத்தினைத் தொடங்கி யருளினார்.

***விளக்கவுரை*– கோயில் முன்பு எய்தி** *- முன்பு - முன்புறம்; பலிபீடத்தின் பக்கம்; 2324 பார்க்க.*

நின்று போற்றுவார் - எடுத்தார் *- நின்ற நிலையிலே துதிக்கத் தொடங்கினார்.*

நீள் நிதி *- எடுக்க எடுக்கக் குறையாத உலவாக்கிழி; பயனால் நீளும் நிதி என்ற குறிப்புமாம்;*

வேண்டினார்க்கு ஈவது மற்று ஒன்றும் இல்லேன் *- "மற்றுப் பற்றெனக் கின்றி நின்றிருப் பாத மேமனம் பாவித்தேன்" (நம்பி).* ***மற்று ஒன்றும் பொருள் இல்லேன்*** *- என்க. "ஈவதொன்று எமக்கில்லையேல்" (தேவா) என்ற தேவாரத்தின் பொருளை ஆசிரியர் விரித்துக் காட்டியபடி;* ***"ஈவது ஒன்று"*** *- வேண்டினார்க்கு ஈயக் கடவதாகிய பொருள் ஒன்றும் என்பதாம்; "ஏல வும்மை வழிபடுவார்க் களிக்க வளிக்கின்றோம்" (1522) என்ற கருத்துக் காண்க.*

உன்னடி யல்லதொன்று அறியேன் *- உன்னடிகளையன்றி வேறு ஒன்றினையும் பொருளென்று அறியாதவன்; என்னை? "பொருளல் லவற்றைப் பொருளென் றுணரும் மருள்" (குறள்) என்றபடி ஏனைய எல்லாம் மருள் எனப்படுமாதலின்; "இடரினுந் தளரினும்" "வாழினுஞ் சாவினும்" "அடியலாலரற்றாதென்னா" என்பன முதலாக வரும் பதிகக் கருத்துக் காண்க.*

பேர் அருள் வினவிய செந்தமிழ் *- "அதுவோ வுனதின் னருள்" (தேவா) என்று இறைவரது இன்னருளினைப் பொருள் வேண்டும் குறிப்புப்பெற வினாவுகின்ற முகத்தால் போற்றியது. வினாவுரைப் பதிகம் முதலியவை காண்க.* ***வினவிய*** *- "அதுவோ" என்று, வினாவுருவில் அமைந்த;* ***பேரருள் - "இன்னருள்"*** *(தேவா).*

எடுத்தார் *- தொடங்கினார்; பயன்பற்றிக் கிழியினையே எடுத்தார் போன்று தமிழினை எடுத்தார் என்பது குறிப்பு.* *424*

*2323. **பொருளுரை**– எடுத்த வண் தமிழ்ப்பதிகம் - தொடங்கிய வளப்பமுடைய தமிழ்ப் பதிகத்தினை; நால்அடியின்மேல்... துதிப்பார் - நான்கடியின் மேலும் இரண்டு சீர்கள் தொடுத்த மேல்வைப்பாகத் தொடர்புபெற அமைத்த இனிய இசையினாலே*

2323. எடுத்த வண்டமிழ்ப் பதிகநா லடியின்மே லிருசீர்
தொடுத்த வைப்பொடு தொடர்ந்தவின் னிசையினாற் றுதிப்பார்
மடுத்த காதலில் வள்ளலா ரடியிணை வழுத்தி
யடுத்த சிந்தையா லாதரித் தஞ்சலி யளித்தார். 425

துதிப்பாராய்; மடுத்த...அளித்தார் - நிறையக் கொண்ட காதலினாலே வள்ளலாராகிய இறைவரது இணையார் திருவடிகளைத் துதித்து அடுத்த சிந்தையினால் அன்புமிக்குக் கைகள் கூப்பித் தொழுதனர்.

விளக்கவுரை... **நால் அடியின்மேல் இருசீர் தொடுத்த வைப்பொடு தொடர்ந்த - இன்இசை** - இப்பதிகம் நாலடியின்மேல் வைப்பு என்ற பெயருடைய யாப்பில் அமைந்தது; பதிகப் பெயர் பார்க்க. பெரும்பாலும் நான்கடியால் அமைவன விருத்தப்பா. இப்பதிகப் பாட்டுக்கள் அந்நான்கடிகளின்மேல் விகற்பமாக இரண்டு அடிகள் தொடர்ந்து அமையப் பெற்று நிறைவு பெறுகின்றன. மேல் இரண்டு அடிகள் தொடர்புபெற வைக்கப் பெறுதலின் இது நாலடி மேல் வைப்பு எனப்பெறும்; இதுபோன்றே 'கொட்டமே கமழும்' என்ற திருக்கொள்ளம்பூதூர்ப் பதிகம் முதலாயின ஈரடி மேல்வைப்பு எனப் பெறுவனவும் காண்க; இவை காந்தார பஞ்சமப் பண்ணில் அமைந்தன. அரசுகளது காந்தாரப் பண்ணில் அமைந்த "மாதர்ப்பிறைக் கண்ணியானை" (திருவையாறு) என்ற திருப்பதிகம் மேல்வைப்பாக வந்ததனையும் ஈண்டு ஒப்பு நோக்குக. இவை விருத்தப்பாவினமாகிய விகற்பச் செய்யுட்கள். 2174 பார்க்க.

இருசீர் - மேல்வந்த நான்கடிகளின் யாப்பிசை யமைதியின் வேறாக அமைந்து அவற்றின் பொருளை முடித்துச் சீர்பெற நிறுவுதலின் இந்த இரண்டடிகளைச் சீர் என்றார்.

தொடுத்த...தொடர்ந்த தொடுத்த - யாப்பமைதியும் ("தொடை"), **"தொடர்ந்த"** பொருட்டொடர்பும் இசையமைதியும் குறித்தன.

வைப்பு - தனி வைக்கப்பெற்ற யாப்பமைதி.

இன்இசை - நான்கும் இரண்டும் இசை விகற்பமாயினும் பண்ணமைதியின் இனிமை பெறத் தொடர்ந்திசைக்கப்படுவன என்பது குறிப்பு.

துதிப்பார் - வழுத்தி - அளித்தார் - என்று முடிக்க. **துதிப்பார்** - முற்றெச்சம்.

மடுத்தகாதல் - நிறையக் கொண்ட அன்பின் பெருக்கு.

வள்ளலார் - குறையா நிதியினை வரையாது கொடுக்கும் சரித விளைவுக் குறிப்பு.

அடியிணை வழுத்தி - பேரருள் வினவிய செந்தமிழ் எடுத்த பிள்ளையார் அடியிணை வழுத்தினார் என்றது திருவருள் நிறைவே திருவடியாக உபசரித்துக் கூறப்படும் என்ற கருத்தை விளக்கியபடி; "பொருள் - அடித்தலங்களன்றோ" (2321) என்றதும் காண்க.

வழுத்தி - என்றதனால் வாக்கின் செய்கையும், **சிந்தை** - என்றதனால் மனத்தின் செய்கையும், **அஞ்சலி அளித்தார்** என்றதனால் உடலின் செய்கையும் கூறப்பட்டன.

அடுத்த சிந்தை - "சிந்தையே கோயில் கொண்டவெம் பெருமான்" (திருவா) என்றபடி இறைவரை இடையறாது குடிகொள்ளக் கொண்டிருத்தல் குறிக்க **அடுத்த** என்றார்.

ஆதரித்தல் - அன்பு பற்றுக்கோடாக வைத்தல்.

அஞ்சலி அளித்தல் - கைகூப்பி மலர்தூவித் தொழுதல். 425

திருவாவடுதுறை

திருச்சிற்றம்பலம் | நாலடி மேல்வைப்பு | பண் - காந்தாரபஞ்சமம்

இடரினுந் தளரினு மெனதுறுநோய்
தொடரினு முனகழ றொழுதெழுவேன்
கடறனி லமுதொடு கலந்த நஞ்சை
மிடறனி லடக்கிய வேதியனே.
இதுவோ வெமையாளுமா றீவதொன் றெமக்கில்லையேல்
அதுவோவுன தின்னரு ளாவடுதுறை யரனே (1)

அலைபுன லாவடு துறைய மர்ந்த
இலைநுனை வேற்படை யெம்மிறையை
நலமிகு ஞானசம் பந்தன்சொன்ன
விலையுடை யருந்தமிழ் மாலைவல்லார்
வினையாயின நீங்கிப் போய் விண்ணவர் வியனுலகம்
நிலையாகமுன் னேறுவர் நிலமிசை நிலையிலரே (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "நீள்நிதி வேண்டினார்க்கீவ தொன்றுமற்றிலேன்! பொருளாவது உன்அடியல்ல தொன்றறியேன்" (2321) என்று ஆசிரியர் காட்டியருளியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **இடரினும் தளரினும்** - இடர் - தளர்வு இவை வரினும்; முன்செய் வினைப்பயனாக வரினும்; **உறுநோய்** - பழவினை; **ஈவது** - வேண்டினார்க்கு ஈயும் பொருள்; **எமக்கு** - எம்மிடம்; **அதுவோ உனது இன்னருள்?** - "பேரருள் வினவியது" (2322);- (2) **சாவினும்** - **சாதல்** - சாவு போன்ற மிக்க வருத்தங் குறித்தது; **வீழினும்** - நிலைகுலைந்து படுதல்; **இளம்புனல்** - கன்னிநீத்தம் (3) **மனவினும்** - மனத்தாலும்; (4) **தும்மல்** - மரணக் குறிகளுள் ஒன்றாய் வரும் நோய் குறித்தது; (5) **கைவீழ்தல்** - பக்கவாதம்; **கழிவுறுதல்** - உயிர்வன்மை குறைதல்; (11) **விலையுடையருந்தமிழ்** - பொருள் பெறுங் குறிப்பு.

தலவிசேடம் :- **திருவாவடுதுறை** - தொகுதி III. பக்கம் 430, 431 பார்க்க.

2324. நச்சி யின்றமிழ் பாடிய ஞானசம் பந்தர்
இச்சை யேபுரிந் தருளிய விறைவரின் னருளால்
அச்சி றப்பருள் பூதமுன் விரைந்தகன் பீடத்
துச்சி வைத்தது பசும்பொனா யிரக்கிழி யொன்று. 426

2324. பொருளுரை- நச்சி... அருளால் - விரும்பி இனிய தமிழ்ப் பதிகம்பாடிய திருஞானசம்பந்தப் பிள்ளையாரது இச்சையின்படியே முன்னர் அருள் புரிந்த இறைவரது திருவருளினாலே; அச்சிறப்பு அருள்பூதம் - அந்தச் சிறப்பினை அருளும் சிவபூதம்; விரைந்து... ஒன்று - விரைவில் வந்து இடமகன்ற பலிபீடத்தின் உச்சிமேல் ஆயிரம் பசும்பொன் கொண்ட கிழி ஒன்றினை வைத்தது.

விளக்கவுரை- நச்சுதல் - விரும்புதல்; இங்குப் பொருள் பெறுங் கருத்தினைக் குறித்தது.

ஞானசம்பந்தர் இச்சையே புரிந்தருளிய - பிள்ளையார் விரும்பிய வண்ணமே முன்னெல்லாம் அருள் புரிந்த; புரிந்தருளிய - புரிந்தருளும் பொருட்டு எனச் செய்யிய எனும் வாய்பாட்டு வினையெச்சமாக்கி, **அருளிய - வைத்தது** - எனக் கூட்டி முடிப்பினுமாம். ஞானசம்பந்தர் இச்சை இறைவரது இச்சையேயாம்; தமக்கென்று வேறு இச்சை ஒன்று மின்மையான்; "எனதுரை தனதுரையாக" (பிள் - தேவா - இலம்பையங் கோட்டூர்); "வேண்டிநீயா தருள்செய்தாய்; யானுமதுவே வேண்டி னல்லால்" (திருவா).

அச்சிறப்பு - நீணிதி வேண்டினார்க்கீயும் பொருள்; சிறப்பைப் பெருவதற்குக் கருவியாதல் பற்றிய பொருளைச் சிறப்பென்றார்.

பூதம் - சிவபூதகணங்களுள் ஒன்று; **அச்சிறப்பருள் பூதம்** - "முத்துப்பந்தரை முன்னர் அருளிய பூதம்" என்றுரைப்பாருமுண்டு; இது பொருந்துமாறு ஆராயத்தக்கது.

அகன்பீடம் - பலிபீடம்; இது கோயிலின் முன்புறம் வெளியில் உள்ளது. இதில் பூதத்தின் உருவமும் பிள்ளையாரின் திருவுருவமும் தீட்டப்பட்டுள்ளன; இந்நிகழ்ச்சி இன்றும் பெருவிழாவில் 4-வது திருநாளிற் கொண்டாடப்படுகின்றது.

பசும்பொன் - பசுமை - பொன்னின் உரையேற்றமும், தூய்மையும், நயமும் குறித்தது; **கிழி** - முடிப்பு. "கழுமல வூரர்க் கம்பொன்ஆயிரங் கொடுப்பர் போலும்" என்று இதனை அரசுகள் போற்றியருளினர்; "ஞானபோ னகர்க்குச் செம்பொ னாயிரமும் பாவுக் களித்த திறம்போற்றி" (1558) என்றமை காண்க. **கிழி** - கிழித்த துணியின் முடிப்பு என்றதனாற் போந்த பெயர் என்பர்; அது பொருந்தாமையறிக. 426

2325. பொருளுரை- வைத்த... நின்று - கிழியினைப் பலிபீடத்தின் உச்சியில் வைத்த சிவபூதம் அங்குச் சேர்ந்து முன்பு நின்றுகொண்டு; நல்வாக்கால்.... என்றுரைக்க - நல்ல வாக்கினாலே, பிள்ளையாரை நோக்கி விளித்துக் கொண்டு "வைத்த இக்கிழியானது பொன்கொண்டது; எடுக்க எடுக்கக் குறையாத நிதி; இது உமக்கு இறைவர் அருள்

2325. **வைத்த பூதமங் கணைந்துமுன் னின்றுநல் வாக்கால்**
"உய்த்த விக்கிழி பொன்னுல வாக்கிழி; யுமக்கு
நித்த னாரருள் செய்த"தென் றுரைக்கநேர் தொழுதே
யத்த னார்திரு வருணினைத் தவனிமேற் பணிந்தார். **427**

2326. **பணிந்தெ ழுந்துகை தொழுதுமுன் பனிமலர்ப் பீடத்**
தணைந்த வாடகக் கிழிதலைக் கொண்டரு மறைக
டுணிந்த வான்பொரு டரும்பொரு டூயவாய் மையினாற்
றணிந்த சிந்தையத் தந்தையார்க் களித்துரை செய்வார், **428**

செய்தது" என்று சொல்ல; நேர்தொழுதே.. பணிந்தார் - நேராகத் தொழுதே அத்தனாரது திருவருளினை நினைந்து நிலத்தின் வீழ்ந்து வணங்கினார் (பிள்ளையார்).

விளக்கவுரை... வைத்த *- முன்பாட்டிற் கூறியபடி பீடத்திற் கிழியினை வைத்த;*

அங்கு அணைந்து *- அந்தரத் தலத்தினிடை நின்று அகன் பீடத்துச்சியில் வைத்த இடத்தினின்றும் பிள்ளையார் நின்றருளிய அவ்விடத்தில் போந்து.*

நல்வாக்கால் *- சிவபூதமாதலின் நன்மையே உரைக்கும் வாக்கு என்பது; இயற்கை யடைமொழி.*

"உய்த்த-அருள் செய்தது" என்றுரைக்க *- இது பிள்ளையாருக்குப் பூதம் உரைத்தது; உய்த்த - கொண்டுவந்து வைத்த.*

நேர்தொழுதே *- பூதத்தினையும், நல்வாக்கினையும், அதனாற் புலப்பட்ட திருவருளினையும் நேரே தொழுது;* ***நேர் தொழுதல்*** *- நேரே கண்டு தொழுதல்.*

அத்தனார் *- "எந்தையார்" 2321;* ***நித்தனார்*** *- நித்தனாராதலின் அவர் அருளிய பொருளும் நித்தமாய் உலவாக்கிழியாயிற்று என்பது குறிப்பு. "மறைகள் துணிந்த வான்பொருள் தரும்பொருள்" என மேற்பாட்டிற் கூறுவதும் காண்க.* 427

2326. பொருளுரை- பணிந்தெழுந்து- தலைக்கொண்டு - வணங்கி யெழுந்து கைகள் கூப்பித் தொழுது முன்பு இருந்த குளிர்ந்த மலர்கள் பொருந்திய பலிபீடத்தில் சேர்ந்த பொற்கிழியினை எடுத்து உச்சிமேல் கொண்டு; அருமறைகள்.. தரும்பொருள் - அரிய மறைகளாற்றுணிய நின்ற பெரும் பொருளாகிய இறைவர் தரும் அந்தப் பொருளினை; தூய....அளித்து - தூய்மையாகிய வாய்மையினாலே தணிந்த மனத்தையுடைய தந்தையாருக்குக் கொடுத்து; உரை செய்வார் - உரைப்பாராகி,

விளக்கவுரை.... முன்பனிமலர்ப் பீடத்தணைந்து *- முன் - பதிகம் பாடிய இடத்தின்முன்;* ***மலர்ப் பீடம்*** *- மலர்கள் பீடத்தில் நித்திய வழிபாட்டிற் சூட்டப் பெற்றவை;* ***பீடத்தணைந்த*** *- பீடத்தின்கண் பூதத்தினால் வைக்கப்பட்டுச் சேர்ந்த;*

தலைக் கொள்ளுதல் *- எடுத்துத் தலைமேற் சூடிக்கொள்ளுதல். திருவருட் பொருளாதலின் தலைக் கொள்ளுதல் முறையென்க.*

2327. "ஆதி மாமறை விதியினா லாறுசூழ் வேணி
நாத னாரைமுன் னாகவே புரியுநல் வேள்வி
தீது நீங்கநீர் செய்யவுந், திருக்கழு மலத்து
வேத வேதிய ரனைவருஞ் செய்யவு மிகுமால்", 429

அருமறைகள் துணிந்தவான் பொருள் - மறைகளும் பலவாற்றாலும் துணியநின்ற பெரும் பொருள் - சிவபெருமான். **துணிதல்** - பல்லாற்றாலும் ஆய்ந்து நிச்சயித்தல்.

வான் பொருள்தரும் பொருள் - சொற்பின் வருநிலை - சொல்லாற்றலாற் பொருட் பின்வரு நிலையுமாம்; மறைவேள்விக்கு மறைப்பொருளே பொருள் தருதல் முறையாமென்ற குறிப்பும் காண்க.

தூயவாய்மையினால் தணிந்த சிந்தை - தணிதல் - சின முதலிய அறுபகையும் அடங்குதல்; **வாய்மையினால்** - சிந்தை தணிதற்கு வாய்மையே வாயில் என்றதாம். "தணிந்தமனத் திருமுனிவர்" (789). **உரை** செய்வார் - முற்றெச்சம்; உரை செய்வார் (2326) - "ஆதி..மிகுமால்" (2327) என்று கூறி (2328) - என மேல்வரும் பாட்டுக்களுடன் முடித்துக் கொள்க. 428

2327. பொருளுரை.. ஆதிமாமறை விதியினால் - ஆதியாகிய பெரு மறைகளின் விதிப்படி; ஆறு..வேள்வி - கங்கையை முடித்த சடையினையுடைய முழுமுதற் கடவுளாகிய சிவபெருமானையே முதல்வராக உட்கொண்டு செய்யும் நல்ல சிவயாகத்தினை; தீதுநீங்க - தீமைநீங்கி யின்பமுறும் பொருட்டு; நீர்செய்யவும்... அனைவரும் செய்யவும் - நீர்செய்திடவும், சீகாழியின் கண் உள்ள வேத வேதியர்களாகிய எல்லவரும் செய்திடவும்; மிகுமால் - குறைவுபடாது மிகுதிப்படும்,

விளக்கவுரை.... **ஆதிமாமறை** - எல்லா நூற்பொருட்கும் முதலாகிய மறை; ஆதியாகிய சிவன்தந்த மறை என்றலுமாம்.

மறைவிதியினாற் - புரியும் - நல்வேள்வி - வேதங்களுள் பல கடவுளர்க்கும் விதித்த பல வேள்விகளுள் சிவனையே நோக்கிச் செய்யும்படி விதித்த நல்ல வேள்வி; **நாதனாரையே முன்னாக** என்று ஏகாரம் பிரித்துக் கூட்டுக. வேறு எக்கடவுளரை நோக்கிச் செய்யினும், அக்கடவுளிடமாகநின் றருள்புரிபவன் சிவனேயாம்; "அத்தெய்வ மாகி யாங்கே மாதொரு பாக னார்தாம் வருவர்"; அவ்வாறன்றிச் சிவனையே நேரில் குறித்துச் செய்வன என்றபடி; **நல்வேள்வி** - அசமேதம், பரிமேதம் முதலியவை போலன்றி என்பது குறிப்பு.

தீதுநீங்க - இவ்வேள்விகள் கலிநீங்கி உலகம் இம்மை மறுமைப் பயன்பெறச் செய்யும் காமிய யாகங்கள் என்பது; முன் 2320-ல் உரைத்தவை பார்க்க.

நீர் செய்யவும்-வேத வேதியர் அனைவரும் செய்யவும் - காழி மறையோர் யாவரும் கலிகடிந்த கையராய் உலகமின்புற வேத வேள்விகள் செய்ய நியமமுடையார் என்பது;

2328. என்று கூறியங் கவர்தமை விடுத்தபின், னவரு
நன்று மின்புறு மனத்தொடும் புகலிமே னண்ண,
வென்றி ஞானசம் பந்தரும் விருப்பொடு வணங்கி
மன்ற லாவடு துறையினின் மகிழ்ந்தினி திருந்தார். 430

காழித் தேவாரங்கள் காண்க. **வேத வேதியர்** என்ற அடைமொழிக் குறிப்புமது.

மிகுமால் - எடுக்க எடுக்கக் குறையாதுமிகும். 429

2328. பொருளுரை- என்று-பின் - என்று சொல்லி அவ்விடத்து அவரை விடைதந்து அனுப்பிய பின்னர்; அவரும்...நண்ண - அத்தந்தையாரும் பெரிதும் இன்பம்பெற்ற மனத்துடனே சீகாழியை நோக்கிச் செல்ல; வென்றி- இனிதிருந்தார் - வெற்றியினையுடைய திருஞானசம்பந்தப் பிள்ளையாரும் விருப்புடனே வணங்கி மணம் மிக்க திருவாவடுதுறையின்கண் மகிழ்ச்சியுடன் இனிதமர்ந்தருளினார்.

இம் மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... நன்றும் இன்புறும் மனம் - நன்றும் - பெரிதும் - மிகவும்; "நன்று பெரிதாகும்" (தொல் -)

புகலிமேல் - புகலியை நோக்கி; புகலியிற் சேர்தலை உட்கொண்டு.

விருப்பொடு வணங்கி - முன்னர் 2325-ல் "**பணிந்தார்**"; என்ற வணக்கம் பலிபீடத்தின் முன்செய்தது; இங்குக் கூறிய வணக்கம் உட்சென்று விதிப்படி திருமுன்பு செய்தது.

மன்றல் - மலர்களின் மணம். சிவமணம் என்ற குறிப்புமாம்; சிவமணமாவது திருமூலர் மூவாயிரம் ஆண்டுகள் சிவராசயோகத் தமர்ந்தருளிச் சிவாகமப் பொருளைத் தமிழிற் றந்த மணம்; தமிழ் மணம் என்றலுமாம்.

மகிழ்ந்து இனிது இருந்தார் - **மகிழ்ந்**தென்றது அகநிலையும், இனிதென்றது புறநிலையுங் குறித்தன; **இறைவரின்னருளாற்** பெற்ற பொருள் கொண்டு தந்தையாராலும் வேத வேதியராலும் உலகம் தீதுநீங்கச் செய்தமையான் **மகிழ்ந்து** என்றும், இனி, இறைவர்தரும் பொருள்கொண்டு வீழிமிழலையினில் உலகங் கலிநீக்கித் தாமே உய்யவைக்க உள்ள குறிப்பின் **இனிது** என்றும் கூறினார் என்றலுமாம். 430

2329. பொருளுரை... அண்ணலார்.... உறைந்து - திருவாவடுதுறையில் விரும்பி வீற்றிருந்தருள்வாராகிய இறைவரை மனத்தினுள்ளே நிறைந்த காதலினாலே வணங்கி அங்குத் தங்கி; மண்ணெலாம்.... போந்து - உலகமெல்லாம் உய்யும்பொருட்டே திருவவதரித்து வந்த பிள்ளையார் சென்று; வார்சடைமேல்... சேர்ந்தார் - நீண்ட சடையின்மேல் தெளிந்த நிலாவைச் சூடுவாரது திருக்கோழம்பத்தினைச் சேர்ந்தனர்.

2329. அண்ண லார்திரு வாவடு துறையமர்ந் தாரை
யுண்ணி லாவிய காதலி னாற்பணிந் துறைந்து
மண்ணெ லாமுய வந்தவர் போந்து,வார் சடைமேற் 431
றெண்ணி லாவணி வார்திருக் கோழம்பஞ் சேர்ந்தார்.

2330. கொன்றை வார்சடை முடியரைக் கோழம்பத் திறைஞ்சி
யென்று நீடிய வின்னிசைப் பதிகமுன் னியம்பி
மன்று ளார்மகிழ் வைகன்மா டக்கோயின் மருங்கு 432
சென்று சார்ந்தனர் திருவளர் சிரபுரச் செல்வர்.

விளக்கவுரை.... அமர்ந்தாராகிய அண்ணலாரை என்க; அண்ணலாராகிய அமர்ந்தாரை எனக் கிடக்கை முறைபற்றி உரைப்பினுமமையும்.

உள் நிலாவிய - நிலாவுதல் - நிறைதல்; மிகுதல்; மண் - எலாம் - என்றதனால் மண் என்றது இங்கு உலகங்களின் பொதுமை யுணர்த்தி நின்றது.

உயவந்தவர் - உய - உய்யும் பொருட்டு. காரணப் பொருள் தந்தது; வருதற்குத் தமக்கெனவொரு காரணமுமின்றி உலக முய்தற்பொருட்டே வந்தவர் என்க.

தெள்நிலா - புகலிடமிதுவே என்று தெளிந்த நிலா. கண்டு பிறர் தெளியநின்ற நிலா என்றலுமாம். 431

2330. பொருளுரை... கொன்றை.... இறைஞ்சி - கொன்றை மலர் சூடிய நீண்ட சடையுடன் கூடிய முடியினையுடைய இறைவரைத் திருக்கோழம்பத்தில் வணங்கி; என்றும்... இயம்பி - என்றும் அழியாது நீடியிருக்கும் இன்னிசையினையுடைய திருப்பதிகத்தினைத் திருமுன்பு பாடியருளி; மன்றுளார்... செல்வர் - திருவம்பலமுடைய இறைவர் மகிழ்ந்து எழுந்தருளியுள்ள திருவைகன் மாடக் கோயிலின் பக்கத்திற் சென்று முத்தித்திரு வளர்தற்கிடமாகிய சீகாழித் தலைவர் சேர்ந்தருளினர்.

விளக்கவுரை... வார்சபை முடியரை - "வார்சடைமேல்" (2329) என்ற முன்பாட்டும் காண்க. "நீள்சடைமேல்" என்ற பிள்ளையாரது பதிக முதற்பாட்டுக் குறிப்புப்போலும்.

என்றும் நீடிய இன்இசை - "பண்கொளப்பாட வல்லார்க்கில்லை பாவமே" (11) என்று பிள்ளையார் பதிகப் பயன் அருளிய குறிப்பு.

வைகன் மாடக்கோயில் - வைகல் - நகரப் பெயர்; இதனுள் மேற்கில் உள்ளது கோச்செங்கட் சோழர் செய்த மாடக்கோயில். தலவிசேடம் பார்க்க.

திருவளர் - முத்தித்திருவை வளரச் செய்யும். 432

திருக்கோழம்பம்

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம் 2-ம் திருமுறை**

நீற்றானை நீள்சடை மேனிறை வுள்ளதோர்
ஆற்றானை யழகமர் மென்முலை யாளையோர்
கூற்றானைக் குளிர்பொழிற் கோழம்ப மேவிய
வேற்றானை யேத்துமி னும்மிட ரேகவே. (1)

தண்புன லோங்குதண் ணந்தராய் மாநகர்
நண்புடை ஞானசம் பந்தனம் பானுறை
விண்பொழிற் கோழம்ப மேவிய பத்திவை,
பண்கொளப் பாடவல் லார்க்கில்லை பாவமே. (11)


திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நும்மிடர் ஏகவே திருக்கோழம்ப முடையானை உள்ளங்குளிர உள்குமின்;


பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **ஏற்றான்** - கொடியும் ஊர்தியுமாகிய ஏற்றினை உடையவன்; "ஏற்றின் கொடியான்" (9) - (2) **மை** - விடம்; **செய்யான்** - செம்மையுடையவன்; (3) **ஏதன்** - நன்மையுடையவன்; "ஏத நன்னில மீரறுவேலி" (தேவா - நம்பி); (4) **வேதமும் வேள்வியுமாய நன்குடையான்** - அணிமையில் ஆவடுதுறையில் வேத வேள்வி மிகும்படி பொருள் பெற்ற நினைவுக் குறிப்பு; ஆசியுமாம்; (7) "வேதமும் வேள்வியுமானானை" என்றதுமிது (5) **கொன்றை** - "கொன்றைவார் சடைமுடியரை" (2330) (8) **வில்தானைவல் அரக்கர்** - வில்ஏந்திய சேனையுடைய வலிய அரக்கர்களது; **குற்றான்** - குறுகுவித்தவன். **பற்றாணை.. பற்றாவே** - "பற்றுக பற்றற்றான் பற்றினை" (குறள்); (10) **பொய்ம்மொழிப் பித்தர் - சமணர்;- (11) தராய்**-சீகாழியின் பெயர்; "பூந்தராய்"; **நம்பான்** - நம்பி அடையத்தக்க புகலாகவுள்ளவன்; **பண்கொள்** - "என்று நீடிய வின்னிசை" (2330).

தலவிசேடம்: திருக்கோழம்பம் - காவிரியின் தென்கரை 35-வது தலம்; இது கொழம்பியம் என மருவி வழங்கப் பெறுகின்றது. இந்திரனாற் குயிலுருவாகும்படி சாபம் பெற்ற சந்தன் என்னும் வித்தியாதரன் பூசித்துச் சாபம் நீங்கப் பெற்ற பதி; திருக்குறுந்தொகையுள் "குயில் பயில் பொழில்" என்றது இக்குறிப்பென்பர். சுவாமி பெயரும் காண்க; இத்தலத்துக் குறுந்தொகையுள் "சமர சூரபன் மாவைத் தடிந்த" (10) என்ற பாட்டு இங்கு முருகன் பெருமையினை எடுத்துக் கூறுவது; இப்பாட்டுப் பயின்று வழங்கப் பெறும் சிறப்புடையது. பிள்ளையாரது பதிகம் "என்று நீடிய வின்னிசைப் பதிகம்" (2330) என்று போற்றப்பட்டது. சுவாமி - **கோகிலேசுவரர்**; அம்மை - **சௌந்தரிய நாயகி**; பதிகம் 2. (கோகிலம் - குயில்).


இது நரசிங்கன் பேட்டை நிலயத்தினின்றும் தென்கிழக்கில் மட்சாலைவழி ஒரு நாழிகை யளவில் உள்ள திருவாவடுதுறையினின்றும் தெற்கே மட்சாலைக் கரை வழியாய் 1½ நாழிகை யளவில் அடையத்தக்கது.




வைகல் மாடக் கோயில்
பாட்டு 2332



வைகல் மாடக் கோயில் முன்புறம்
பாட்டு 2331



தேரழுந்தூர் உட்பார்வை
பாட்டு 2332



தேரழுந்தூர் முன்கோபுரம்
பாட்டு 2333




திருக்குடவாயில்
பாட்டு 2301



திருக்குடவாயில் அமிர்த தீர்த்தம்
பாட்டு 2301



திருநெய்த்தானம் -
உள்ளிருந்து பார்வை - பாட்டு 2203



நறையூர்ச்சித்தீச்சரம்

2331. வைக னீடுமா டக்கோயின் மன்னிய மருந்தைக்
கைக ளஞ்சலி கொண்டுதாழ்ந் தெழுந்துகண் ணருவி
செய்ய வின்னிசைச் செந்தமிழ் மாலைகண் மொழிந்து
நையு முள்ளத்த ராய்த்திரு நல்லத்தி னண்ணி, 433

2332. நிலவு மாளிகைத் திருநல்ல நீடுமா மணியை
யிலகு சேவடி யிறைஞ்சியின் றமிழ்கொடு துதித்துப்
பலவு மீசர்தந் திருப்பதி பணிந்துசெல் பவர்தாம்
அலைபு னற்றிரு வழுந்தூர்மா டக்கோயி லடைந்தார். 434

2331. பொருளுரை- வைகல்...மருந்தை - வைகலில் நீடிய மாடக் கோயிலின்கண் பொருந்திய பெருமருந்தாகிய இறைவரை; கைகள்...அருவி செய்ய - கைகளைக் கூப்பி வீழ்ந்து வணங்கி எழுந்து கண்களில் நீர் அருவிபோல வழிய; இன்இசை...மொழிந்து - இனிய இசையினையுடைய செந்தமிழ் மாலைகளாற்றுதித்து; நையும்...நண்ணி - உருகி நைகின்ற திருமனத்தினை யுடையவராகித் திருநல்லம் என்னும் பதியினிற் சேர்ந்து,

விளக்கவுரை-மருந்து - பிறவிப் பிணிதீர்ப்பவராதலின் மருந்தென்றார். **கண் அருவி செய்ய**-கண்கள் அருவிபோல நீரினைச் சொரிய; **அருவி செய்தல்** - அருவிபோலப் பொழிதல்.

நையும் உள்ளத்தராய் - நைதல் - இளகுதல்; வைகலின் வணங்கப்பெற்றமையும், நல்லத்தில் வணங்கப் பெறுவதும் ஆகிய இருபெரும் பேறுகளையும் எண்ணி மனமுருகிய நிலைகாட்ட இடைநிலைத் தீபமாய் இரண்டனுக்கு மிடையில் வைத்தார்.

நண்ணி (2331) - இறைஞ்சி - துதித்துப் - பணிந்து - அடைந்தார் (2332) என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. 433

2332. பொருளுரை... நிலவு...துதித்து - நிலைபெற்ற மாளிகைகளையுடைய திருநல்லத்தில் நீடி எழுந்தருளிய மாமணியாகிய இறைவரை விளங்கும் திருவடிகளைப் பணிந்த இனிய தமிழ்மாலை சாத்திப்பரவி; பலவும்...செல்பவர் (தாம்) - இறைவரது திருப்பதிகள் பலவற்றையும் பணிந்து செல்வாராகிய பிள்ளையார்; அலைபுனல்.... அடைந்தார் - அலைகளையுடைய நீர்சூழ்ந்த திருஅழுந்தூர் மாடக் கோயிலினை அடைந்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை...**மாளிகை நிலவு திருநல்லம்** என்க;

மாமணி- மணிபோல்வாரை மணி என்றதுபசாரம்; இயல்பாகவே அருள் ஞானப் பேரொளி பரப்பி நிற்றலால் **மாமணி** என்றார். "அண்டமெலாங் கொண்டதொரு ஞானமணி விளக்கு" (திருஞா - புரா - 652); "அண்ட மாரிரு ளூடு கடந்தும்பர், உண்டு போலுமொ ரொண்சுடர்" (திருக்குறுந்).

ஈசர்தம் திருப்பதி பலவும் - என்க; இவை அணிமையில் உள்ளன; இவை சிறுகுடி, மீயச்சூர் - மீயச்சூரிளங் கோயில், திருப்பாம்புரம், திருக்குத்தங்குடி, திருவழுவூர் முதலாயின என்பது கருதப்படும்; இங்குத் தென்கோவையாறு, நந்தலாறு, வீரசோழனாறு முதலியனவாகிய காவிரியின் பல கிளைகளும் அந்நாளிலிருந்திருப்பின் அவற்றைப் பிள்ளையார் கடந்து சென்றிருத்தல் வேண்டும்.

பணிந்து செல்பவர் - பணிந்து மேற்சென்றார்; அவ்வாறு செல்பவராகிய பிள்ளையார் என வினைப்பெயரைப் பிரித்துரைத்துக் கொள்க. **தாம்** - அசை.

அலைபுனல் - அலைகளையுடைய காவிரியின் கிளைகளின் அணிமையையும் வாவி களையும் குறித்தது. 434

திருவைகல் - மாடக்கோயில்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தார பஞ்சமம் - 3-திருமுறை**

துளமதி யுடைமறி தோன்று கையினர், இளமதி யணிசடை யெந்தை யாரிடம்
உளமதி யுடையவர் வைக லோங்கிய, வளமதி தடவிய மாடக் கோயிலே. (1)

மெய்யக மிளிரும்வெண் ணூலர் வேதியர், மையகண் மலைமக ளோடும் வைகிடம்
*வையக மகிழ்தர **வைகன் மேற்றிசைச்**, செய்யகண் வளவன்முன் செய்த கோயிலே.* (2)

மைந்தன திடம்வைகன் மாடக் கோயிலைச் சந்தமர் பொழிலணி சண்பை ஞானசம்
பந்தன தமிழ்கெழு பாடல் பத்திவை, சிந்தைசெய் பவர்சிவ லோகஞ் சேர்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- வைகன்மாநகர் மேற்றிசையில் செங்கண் வளவன் செய்த மாடக் கோயிலே எந்தையாரது இடம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) துளமதியுடை - துள்ளும் அந்த மதியினை யுடைய; **மதி** - நினைவு; **மறி** - மான்கன்று; **உளமதியுடையவர்** - அறிவோர்;- (2) **மைய** - மைதீட்டிய; **வைகல்** - வைகல் நகரில்; **செய்யகண் வளவன்** - கோச்செங்கட் சோழர்; **செய்த** - எடுத்த;- (3) **கணி** - விதித்த; வேங்கை என்றும், **கண்ணி** - மதித்து என்றுமாம்; **பணி** - திருப்பணியாக; மாலையினை; **தணி** - குளிர்ந்த;-(4) **கொம்பியல்** - கொம்பு போன்ற; **குஞ்சரத்தும்பி** - குஞ்சரமாகிய தும்பி; இருபெயரொட்டு; **துங்கர்** - பெரியவர்; **செம்பியன்** - சோழன்;-(5) **குடதிசை** - மேற்கு; **மூவெரி..வாணர்** - முத்தீ வேட்டு வேதம் பயில்பவர்; **வளர்வு** - வளர்ச்சியை; **வாணர்** - அங்கு வாழ்பவர்; **திறை** - வெல்லப்பட்ட பகைவர் கொணர்ந்த திறை;- (7) **எரிசரம்** - தீயாகிய அம்பு; **அணவுதல்** - தவழ்தல்.- (9) **மாலனமணி** - நீலமணிகள்; மெய்யுவமம்; **கஞ்சிவாயினர்** - சமணர்; **பிடகுரை** - பொய்ம்மொழி; பிடகத்தினைப்பற்றிய உரை; **மடமுடையவர்** - **மடம்** - பெண்களின் நாற்குணத்தொன்று; **வடமலை** - இமயம்.

தலவிசேடம்:- வைகல்-மாடக்கோயில்- காவிரியின் தென்கரை 33-வது தலம்; வைகல் நகருள் மேற்றிசையில் உள்ள பெருங் கோயில்: கிழக்கிலும் ஒரு கோயில் உண்டு; இப்பதிகம் மேற்றிசை மாடக் கோயிலைப் பாடியது: சுவாமி - வைகனாதர்; அம்மை - கொம்பிலிளங்கோதை; பதிகம் 1.

ஆடுதுறை நிலயத்தினின்றும் தெற்கே மட்சாலைவழி 2 நாழிகை யளவில் உள்ள பழியஞ்சிய நல்லூர் வழியாய்த் தெற்கே மட்சாலை வழிப் பின்னும் ஒருநாழிகை யளவில் உள்ளது.

திருநல்லம் (கோனேரி ராஜபுரம்)

திருச்சிற்றம்பலம்

பண் - குறிஞ்சி - 1-ம் திருமுறை

கல்லா னிழன்மேய கறைசேர் கண்டாவென்
றெல்லா மொழியாலு மிமையோர் தொழுதேத்த
வில்லா லரண்மூன்றும் வெந்து விழவெய்த
நல்லா னமையாள்வா னல்ல நகரானே. (1)

நலமார் மறையோர்வாழ் நல்ல நகர்மேய
கொலைசேர் மழுவானைக் கொச்சை யமர்ந்தோங்கு
தலமார் தமிழ்ஞான சம்பந் தன்சொன்ன
கலைக ளிவைவல்லார் கவலை கழிவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நமையாள்வார் நல்ல நகரிறைவரே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **எல்லா மொழியாலும்** - மொழி செல்லும் எல்லா அளவாலும்; **எல்லா** - ஆரியந்தமிழ் என்ற மொழி அனைத்தானும்; **எல்லாம்** என்றது "எழுத்தெல்லாம்" (குறள்) என்புழிப்போல இருமொழி என்னுந்துணையாய் நின்றது-(2) **துக்கம்** - துன்பம்வரும் தண்டனை என்ற பொருளில் வந்தது;-(3) **தீரா வினை** - பிறவிப்பிணிக் கேதுவாகிய பழவினை; **நந்தி** - இறைவரது பெயர்; "நந்தி நாம நமச்சிவாய எனும்" (தேவா).-(5) **தொழுதேத்த நணியான்** - ஏத்துவார்க்கு அணிமையில் உள்ளான். ஏனையோர்க்குச் சேயான்; **அணிமை** - விளங்குதற் பொருட்டு; "சார்ந்த வர்க்கல்லா னலமிலன்" (தேவா); "சார்ந்தாரைக் காத்துஞ் சலமிலனாய்" (போதம்) முதலிய திருவாக்குக்கள் சிந்திக்கத் தக்கன. (7) **அங்கோல்வளையாள்**-தல அம்மை பெயர்-(9)**போகம்** - அவ்வவரது தொழில்.

தலவிசேடம்:- திருநல்லம் - காவிரியின் தென்கரை 34-வதுபதி. கோனேரி ராஜபுரம் என வழங்கும்; "கொல்லத் தானமனார்தமர் வந்தக்கால், இல்லத்தார் செய லாவதென்? ஏழைகாள்! நல்லத்தான்...கழல், சொல்லத் தான்வல்லி ரேற்றுயர் தீருமே" "நமக்குநல்லது நல்லமடைவதே" "நல்ல நல்லம்" (தேவா - குறுந்) என்று அரசுகள் சுவைபடப் போற்றிய பெருமையுடையது; சுவாமி பெயரை "உமைக்கு நல்லவன்" என்று (குறுந் -4) அரசுகள்

2333. மன்னு மாமட மகிழ்ந்தவான் பொருளினை வணங்கிப்
பன்னு பாடலிற் பதிகவின் னிசைகொடு பரவிப்
பொன்னி மாநதிக் கரையினின் மீண்டுபோந் தணைந்து
சொன்ன வாறறி வார்தமைத் துருத்தியிற் றொழுதார். 435

---

*பதிகத்துட் போற்றியருளினர். சுவாமி - உமாமகேசுவரர்-அம்மை - **மங்கள நாயகி; அங்கோல்வளை நாயகி;** (அங்கவளை நாயகி என வழங்கும்); பதிகம் 2.*

ஆடுதுறை நிலயத்தினின்று தெற்கே மட்சாலை வழி 2 நாழிகையில் உள்ளது திருநீலக்குடி; அதன் கிழக்கே 2 நாழிகையில் உள்ள பழியஞ்சிய நல்லூர் வழியாய்க் கிழக்கே 1/2 நாழிகை யளவில் உள்ளது பிரியம்புதூர்; அதன்வழி நாட்டார் வாய்க்காலைக் (மானாறு) கடந்து தென் கிழக்கில் 3 நாழிகையில் இப்பதியை யடையலாம். வைகன்மாடக் கோயிலினின்றும் தென் கிழக்கில் 3 நாழிகை யளவிலும் அடையலாம்.

பலவும் ஈசர்தம் திருப்பதி:-

திருச்சிறுகுடி

திருச்சிற்றம்பலம் ***திருமுக்கால் பண் - சாதாரி - 3-ம் திருமுறை***

திடமலி மதிலணி சிறுகுடி மேவிய, படமலி யரவுடை யீரே!
படமலி யரவுடை யீருமைப் பரவுவார், அடைவது மமருல கதுவே. (1)

திருச்சிற்றம்பலம்

தலவிசேடம்:- திருச்சிறுகுடி - காவிரித் தென்கரை *- 60-வது பதி. மிகச் சிறு கோயில்; கருடன், செவ்வாய், கந்தருவர் முதலியோர் பூசித்தது.* ***சுவாமி*** *- மங்களநாதர்;* ***அம்மை*** *- மங்களநாயகி; பதிகம் 1.*

திரும்பாம்புரத்தின் தென்மேற்கே கரைவழி 2 நாழிகையில் உள்ளது.

2333. ***பொருளுரை***...மன்னும்...வணங்கி - நிலைபெற்ற **மாமடம்** என்று திருப்பாட்டினுள் பாடப்பெற்ற கோயிலில் மகிழ்ந்தெழுந்தருளிய பெரும் பொருளாகிய இறைவரை வணங்கி; பன்னு...பரவி - ஏத்தும் பாடலினால் திருப்பதிகத்தினைப் பண்ணுடன் பாடித் துதித்து; பொன்னி...அணைந்து - காவிரிக் கரையில் மீளவும் வந்தணைந்து; சொன்னவாறறிவார்-பணிந்தார் - சொன்னவாறறிவாரைத் திருத்துருத்தியினில் தொழுதருளினர்.

விளக்கவுரை.மாமடம் - "மறையோர் வழிபாடுசெய் மாமடமன்னினையே" (1) என்று **மாமடம்** எனப் பிள்ளையார் பதிகத்தில் இக்கோயிலைப் போற்றியருளிய குறிப்பும் சிறப்பும் காட்டப்பட்டது. மாடக் கோயிலாதலும், மறையோர் வழிபாடாதலும் குறிக்க **மாமடம்** என்றருளியபடி; **மாமாடம்** என்பது மாமடம்எனக் குறுக்கல்விகாரம் பெற்றதென்பாருமுண்டு.

27945

வான் பொருள் - பெரும் பொருள். பெரியதிற் பெரிது; "வான் பொருள்" (2336) பார்க்க. வானோர்க்கும் பொருளாவார் என்றலுமாம்; "பெரும் பெயர்க் கடவுள்" என்றலுமாம்.

இன்னிசை கொடு - பதிகப் பண்ணாகிய இந்தளப் பண்ணில்.

பொன்னி மாநதிக்கரையினில் மீண்டுபோந்து அணைந்து - திருவாவடுதுறையினின்றும் காவிரித் தென்கரையினை நீங்கி நெடுந்தூரம் தெற்கே சென்று திருக்கோழம்பம், திருவைகல், திருநல்லம் முதலிய பதிகளிலும், திருவழுந்தூரிலும் சென்று வழிபட்ட பிள்ளையார், மீண்டும் வடக்கு நோக்கி எழுந்தருளிக், காவிரிக் கரையினை வந்தணைந்தனர் என்பார் மீண்டு - **போந்து** - **அணைந்து** என்றார்.

சொன்னவாறறிவார் - திருத்துருத்தியில் இறைவரது பெயர். நம்பிகள் பதிகம் (1) காண்க. தாம் அருளிய வேதங்களை உயிர்கள் அறியும் பொருட்டுத் தாமே அறிந்து சொன்னமையானும், தாமே பிரமசாரியாயிருந்து இத்தலத்தில் ஓதினார் என்ற வரலாற்றாலும் இப்பெயர் போந்தது. இதற்கு இவ்வாறன்றிச் "சொல்லப்பட்ட ஆறறிவை யுடையோரை" (ஆறு - அறிவார்) என்றும், அடியார் விண்ணப்பம் செய்தபடி அறிந்து செய்பவரை என்றும் கூறும் உரைகளின் பொருத்தம் ஆராயத் தக்கது; வேதம் ஓதியபின் வேள்விக்குடியில் அவ்விதிப்படி அம்மையை மணந்தருளினர் என்பதும் வரலாறு. 435

திரு அழுந்தூர்

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம் - 2-ம் திருமுறை

தொழுமா றுவல்லார் துயர்தீ ரநினைந்
தெழுமா றுவல்லா ரிசைபா டவிம்மி
யழுமா றுவல்லா ரழுந்தை மறையோர்
வழிபா டுசெய்மா மடமன் னினையே. (1)

அருஞா னம்வல்லா ரழுந்தை மறையோர்
பெருஞா னமுடைப் பெருமா னவனைத்
திருஞா னசம்பந் தனசெந் தமிழ்கள்
உருஞா னமுண்டா முணர்ந்தார் தமக்கே (11)

பதிகக் குறிப்பு:- இறைவரே! அழுந்தூர் மறையோர் வழிபாடுசெய் மாமடம் மன்னினீரே என்று வியந்தது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- இப்பதியில் மறையோர் வழிபாட்டுச் சிறப்புக் கூறப்பட்டது. மாமடம் - பெருங்கோயில்;- (1) தொழுமாறும், எழுமாறும், அழுமாறும் வல்லாராகிய மறையோர் என்க. **அழுந்தை** - அழுந்தூர்;-(2) **விடலே** - இடைவிடாது;- (3) **கழி காடலன்** - இறந்தாரையிடும் காட்டை இடமாவுடையவன்; இது உலகம் சங்கரிக்கப்பட்ட இடம். **கனலாடலினாய்** என்பது இக்குறிப்புத் தருவது; **அழிபாடு** -

2334. திரைத்த டம்புனற் பொன்னிசூழ் திருத்துருத் தியினில்
"வரைத்த லைப்பசும் பொன்" னெனும் வண்டமிழ்ப் பதிகம்
உரைத்து மெய்யுறப் பணிந்துபோந் துலவுமந் நதியின்
கரைக்கண் மூவலூர்க் கண்ணுத லார்கழல் பணிந்தார். **436**

துன்பம்; -(5) **இவை ஏந்து செல்வம்** *- இவற்றை ஏந்திய சிவனது தன்மை பெறும் முத்தித்திரு;* **நினையே** *- உயிர்கள் இச் செல்வத்தைக் கொள்க எனத்திருவுளங் கொள்க;- (7)* **தடுமாறு** *- தடுமாற்றநீக்குவதன்றி அதனை உளதாக்கவும்;* **மதியம் சுடுமாறு** *தண்ணிய மதியம் அத்தன்மையன்றிச் சுடச் செய்யவும்;* **சடையில் அடுமாறு** *- காக்கின்ற சடையில் அடுதலைச் செய்யவும்; இவை இறைவரது எல்லாம்வல்ல தன்மைகளைக் குறித்தன; மேல்வரும் பாட்டும் பார்க்க;* **பெரியாய் சிறியாய்; அரியாய் எளியாய்** *- எல்லாம்வல்ல தன்மை;-(9)* **எடுத்தான்**-*எடுத்தானை;-(10)* **படியால்** *- விதிப்படி;-(11)* **பெருஞானம்** *- முழுஞானமே உருவாம்.* **உருஞானம்** *- சிவனுருவாம் ஞானம்.*

தலவிசேடம்:- **திருஅழுந்தூர்** *- காவிரித் தென்கரையில் 38-வது பதி.* **தேரழுந்தூர்** *என வழங்கும். அகத்திய முனிவர் கீழே இறைவரைப் பூசித்திருந்ததனை அறியாது, ஊர்த்துவ ரதன் என்னும் அரசன் ஆகாயத்தில் செலுத்திய தேர் செல்லாது அழுந்தியதால் இப்பெயர் பெற்றதென்பர். திக்குப்பாலகர்கள், வேதங்கள், தேவர்கள், முனிவர்கள் பூசித்த பதி; இது மாடக்கோயில் என்பது பதிகத்துட்போற்றப் பட்டது. சுவாமி -* **வேதபுரீசர்;** *அம்மை -* **சௌந்தரியாம்பிகை;** *தீர்த்தம் -* **வேத தீர்த்தம்;** *கோயிலுக்கு வெளியில் மேற்புரத்தில் உள்ளது. பதிகம் 1, மேற்குப் பார்த்த சந்நிதி.*

இது மாயூரத்திற்குத் தென்மேற்கு 5 1/2 நாழிகையில் உள்ள குத்தாலம் நிலையத்தி னின்றும் தென்கிழக்கில் 3 நாழிகை யளவில் உள்ளது.

துருத்தி *- திருத்துருத்தி - தலவிசேடம் பார்க்க. (III - பக் 421)*

2334. **பொருளுரை**- *திரைத்தடம்..திருத்துருத்தியினில் - அலைகளையுடைய பெரிய நீர்ப் பெருக்காகிய காவிரி சூழ்ந்த திருத்துருத்திப் பதியிலே; "வரைத்தலைப் பசும்பொன்" எனும்...உரைத்து - "வரைத்தலைப் பசும்பொன்" என்று தொடங்கும் வளப்பமுடைய திருப்பதிகத்தினைப் பாடியருளி; மெய்யுறப் பணிந்து போந்து - உடல்நிலம் பொருந்தப் பணிந்துபோய்; உலவும்...பணிந்தார் - உலவுகின்ற அந்தக் காவிரி நதியின் கரையில் திருமூவலூரில் சென்று இறைவரைப் பணிந்தருளினர்.*

விளக்கவுரை-திரைத்தடம் புனல் பொன்னி-தடம்புனல் *- பெருநீர்;* **தடம்** *- வாவிகள் என்று கொண்டு அலைகளையுடைய வாவிகட்கெல்லாம் நீர் நிரப்பும் காவிரி என்றலுமாம். "அடுத்தவயற் குளநிரப்பி" (திருவிளை - வாதவூ).*

"வரைத்தலைப் பசும்பொன்" *- பதிகத் தொடக்கம். முதற் குறிப்பு.* **பொன் எனும்** *- பொன் போன்ற பதிகம் என்ற குறிப்பும்பட நின்றது. பதிகக் குறிப்புப் பார்க்க.*

வண்டமிழ்ப் பதிகம் *- மலைப் பொன்னும் மணியும் காவிரி உந்திச் சுமந்து கொண்டு*

இங்கு எறிந்துலவுகின்றது என்ற பதிகக் கருத்தினைக் குறிப்பிற் கொள்ள **வண்டமிழ்** என்றார்; உலவுமந்நதி - என்றதுமிக் குறிப்பு.

மெய்யுறப் பணிந்து - மெய்உறுதல் - திருமேனி நிலம்பொருந்த வீழ்ந்து வணங்குதல்; மெய் - உண்மை என்று கொண்டு மெய்மைநிலை யுற்றமையினாலே (உற - உறுதலால்) என்ற குறிப்புப்படவும் நின்றது. *436*

திருத்துருத்தி

திருச்சிற்றம்பலம் **திருவிராகம் பண் - நட்டராகம் - 2-ம்திருமுறை**

வரைத்தலைப் பசும்பொனோ டருங்கலன்க ளுந்திவந்
திரைத்தலைச் சுமந்துகொண் டெறிந்திலங்கு காவிரிக்
கரைத்தலைத் துருத்திபுக் கிருப்பதே கருத்தினாய்
உரைத்தலைப் பொலிந்துனக் குணர்த்துமாறு வல்லமே. *(1)*

துறக்குமா சொலப்படாய் துருத்தியாய் திருந்தடி
மறக்குமா றிலாதவென்னை மையல்செய்திம் மண்ணின்மேற்
பிறக்குமாறு காட்டினாய் பிணிப்படும் முடம்புவிட்
டிறக்குமாறு காட்டினாய்க் கிழுக்குகின்ற தென்னையே. *(5)*

கற்றுமுற்றி னார்தொழுங் கழுமலத் தருந்தமிழ்
சுற்றுமுற்று மாயினா னவன்பகர்ந்த சொற்களாற்
பெற்றமொன் றுயர்த்தவன் பெருந்துருத்தி பேணவே
குற்றமற்று மின்மையிற் குணங்கள்வந்து கூடுமே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:-ஒருத்தியைப் பாகம் பொருத்தி வைத்தும் உடம்பு விட்டு யோகியாயிருத்திநீ; இது என்னமாயம் என்பனவாதியாக இறைவரது இறைமைக் குணங்களை எடுத்து வினாவும் முகத்தாற் போற்றியது; "மறக்குமாறிலாத என்னை மையல் செய்திம் மண்ணின்மேற் பிறக்குமாறு காட்டினாய்" (5) எனப் பிள்ளையார் தமது முன்னை நிலையின் நினைவினைக் கூறிப் போற்றிய பெருமையுடைய திருப்பதிகம்; முன் "பண்டுதிரு வடிமறவாப் பான்மையோர்" (1953) என்றவிடத்தும், பிறாண்டுமுரைத்தவை இங்கு நினைவுகூர்தற்பாலன; "திருந்தடி உளங் குளிர்ந்த போதெலா முகந்துகந் துரைப்பனே" (9).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வரைத்தலைப் பசும்பொன் உந்திச் சுமந்து காவிரி எறிந்திலங்கும்**- காவிரியின் உற்பத்தி நிலையாகிய சையமலை பசும்பொன்னுடையது (Kolar gold fields - Coorg) என்பதுபற்றி முன் உரைத்தவை பார்க்க. காவிரியின் மேன்மையும் வண்மையு முரைத்தபடி, **உரைத்தலைப் பொலிந்து** - உரையினால் நிரம்ப; **வல்லமே** - ஏகார வினா - எதிர்மறை; (2) **கடுத்து** - சினந்து; **நிறம்** - மார்பு; **எடுத்தெடுத்துரைத்தல்** - மிகப் போற்றுதல்;- (3) **துருத்திபுக்கு** - புக்கும்; ஒரு இடத்திலே விளங்கியும் எங்கும்

2335. மூவ லூருறை முதல்வரைப் பரவிய மொழியான்
மேவு காதலி லேத்தியே விருப்பொடும் போந்து
பூவ லம்புதண் புனற்பணைப் புகலியர் தலைவர்
வாவி சூழ்திரு மயிலாடு துறையினில் வந்தார். **437**

இடமாக நிறைதல் என்னை? -(4) **காணியில் விருத்தி** - உழவு தொழில்; **தொண்டர்தம் அருத்தியால்** - தொண்டர்மேல் வைத்த இச்சையினால்; **தம்அல்லல் சொல்லி** - தமக்கு அல்லல்கள் உள்ளனவாகச் சொல்லி; **அன்றியும்** - பொருத்தமற்ற செயல் இஃதல்லாமலும்; **ஒருத்தியாய்...இருத்தி** - இது மற்றொரு பொருந்தாத செயல் என்ற குறிப்பு; **இதென்ன மாயம்** - என்ற குறிப்பு. **யோகியாய் இருத்தல்** - துருத்தியில் பிரமசாரியாய் வேதமோதுதல்;- (5) **இப்பாட்டுப் பிள்ளையார் தமது முன்னை நிலையினைக்கூறும் அகச்சான்று;** "பண்டு திருவடி மறவாப் பான்மையோர்" (1953) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க; **மறக்குமாறிலாத** - முத்தநிலை;- (6) **வெயிற் கெதிர்ந் திடங்கொடாது** - வெயிலைப் பகைத்தது போன்று உள் நுழைய இடங்கொடாமல்; **அகங்குளிர்ந்த** - வெற்றியினால் மனம் மகிழ்ந்த என்ற தற்குறிப்புமாம்; **துயிற்கெதிர்ந்த** -உறங்கும் பொருட்டு வந்த;-(7) **கணிச்சி** - மழு;-(9) **உளம்...உரைப்பனே** - அன்பின் உறைப்பு:- (10) **துத்தம்** - ஏழிசையினொன்று; **பித்தர்-பித்தன்** - தம்பாற்பித்துடையவர்பாற் பித்துடையவர்; **தமிழ் சுற்றுமுற்று மாயினான்** - தமிழாகரன்.

தலவிசேடம்:- **திருத்துருத்தி** - 111 - பக்கம்-421 பார்க்க. 1265-ன் கீழ் (பக் - 1095 தொகுதி II) உரைத்தவையும் பார்க்க.

2335. பொருளுரை... **மூவலூர் உறை...போந்து** - திருமூவலூரில் எழுந்தருளிய இறைவரைத் துதிக்கின்ற மொழிகளாலே பொருந்திய ஆசையுடன் போற்றி நின்று விருப்பமுடன் சென்று; **பூ அலம்பு...வந்தார்** - பூக்களை அலம்பி வருகின்ற குளிர்ந்த நீரையுடைய வயல்கள் சூழ்ந்த சீகாழியில் வாழ்வார்களின் தலைவராகிய பிள்ளையார் வாவிகள் சூழ்ந்த திருமயிலாடு துறையினில் வந்தருளினார்.

விளக்கவுரை... காதலிற் பரவிய மொழியால் - ஏத்தியே - என்க. **பரவிய மொழி** - பதிகப் பாட்டுக்களின் சொற்களின் தன்மையும், **ஏத்துதல்** - பாட்டுக்களின் கருத்துமாம்.

ஏத்தியே - இப்பதிகம் கிடைத்திலது!

பணை - வயல்கள்; புறம்பணை என்றலுமாம்.

வாவிசூழ் - வாவி - மலர்த்தடங்கள். **சூழ்தல்**-பல இடங்களிலும் பொருந்துதல்;

மூவலூர் - தேவார வைப்புத் தலங்களுள் ஒன்று; திருக்கோவையாரிலும் இத் தலம் போற்றப்பட்டுள்ளது; திருத்துருத்திக்குக் கிழக்கே மாயூரம் போகும் பாதையில் காவிரித் தென்கரையில் கிழக்கே 2 நாழிகை யளவில் உள்ளது. 437

2336. மல்கு தண்டலை மயிலாடு துறையினின் மருவுஞ்
செல்வ வேதியர் தொண்டரோ டெதிர்கொளச் சென்று
கொல்லை மான்மறிக் கையரைக் கோயில்புக் கிறைஞ்சி
யெல்லை யில்லதோ ரின்பமுன் பெருகிட வெழுந்தார். 438

2337. உள்ள மின்புற வுணர்வுறும் பரிவுகொண் டுருகி
வெள்ளந் தாங்கிய சடையரை விளங்குசொற் பதிகத்
தெள்ளு மின்னிசைத் திளைப்பொடும் புறத்தணைந் தருளி
வள்ள லார்மற்ற வளம்பதி மருவுதன் மகிழ்ந்தார், 439

2336. பொருளுரை- மல்கு...சென்று - மிகுந்த சோலைகள் சூழ்ந்த திருமயிலாடு துறையினில் வாழ்கின்ற திருவுடை யந்தணர்கள் திருத்தொண்டர்களோடுங் கூடி எதிர் கொள்ளப் புகுந்து; கொல்லை....இறைஞ்சி - புனத்தில் வாழும் மான்மறியை ஏந்திய கையினை யுடைய இறைவரைத் திருக்கோயிலினுள்ளே புகுந்து வணங்கி; எல்லை....எழுந்தார் - அளவில்லாத ஒப்பற்ற மகிழ்ச்சி முன்னே பெருக, அதனை மேற்கொண்டெழுந்தனர்.

விளக்கவுரை—மல்குதல் - மிகுதல்; நிறைதல். **தண்டலை** - சோலைகள்.

வேதியர் தொண்டரோடு - சிறப்புப்பற்றி ஓடு உருபைத் தொண்டருடன் சார்த்தி ஓதினார்; **செல்வம்** - சைவ மெய்த்திருவின் சார்வு. "செல்வன் கழலேத்தும் செல்வம் செல்வமே" (தேவா) "ஆனபுகழ் வேதியர்கள்" "தொண்டரிசை பாடியும்" என்ற இத்தலத் தேவாரங்கள் காண்க.

கொல்லை மான்மறி - கொல்லை - இயற்கை யடைமொழி.

ஓர் இன்பம் முன் பெருகிட - இன்பம் - வணங்குதலால் உளதாயிற்று; **ஓர்** - ஒப்பற்ற. **ஓரின்பம்** - பேரின்பம்; **ஓர்தல்** - அறிதலால் என்ற குறிப்புமாம். "ஒருகாதன்மையினால்" (11) என்ற இத்தலம் பதிகமும் காண்க.

எழுந்தார் - எழுதல் - இறைஞ்சிய நிலையினின்றும் எழுதல். 438

2337. பொருளுரை....உள்ளம்...உருகி - அவ்வாறு உள்ளத்தில் இன்பம் பொருந்த அவ்வுணர்ச்சியுடன் கூடிய அன்பு மிகுதியினால் உருகி; வெள்ளம்.அணைந்தருளி - கங்கை வெள்ளத்தைத் தாங்கிய சடையினையுடைய இறைவரை விளங்கும் சொற்பதிகமாகிய தெள்ளும் இனிய இசையுடன் கூடிய திளைத்தலுடனே புறத்திலே போந்தருளி; வள்ளலார்...மகிழ்ந்தார் - வள்ளன்மையுடைய பிள்ளையார் அந்த வளத்தையுடைய பதியிலே பொருந்தி எழுந்தருளியிருத்தலை மகிழ்ந்தருளினர்.

விளக்கவுரை- உள்ளம் இன்புற - முன்பாட்டில் கூறிய எல்லையில்லதோர் இன்பம் உள்ளத்திற் பொருந்த.

உணர்வு உறும் பரிவு - அவ்வின்பம் நிறைந்த வுணர்ச்சியிற் பொருந்திய மிக்க அன்பு.

சடையரை - திளைப்பொடும் - என்று கூட்டுக. சடையரைத் திளைக்கும் அவ்வனுபவத்துடனே என்க.

திளைத்தல் - ஆனந்தானுபவத்துள் மூழ்கி நிற்றல்.

பதிக இசைத் - திளைப்பு - பதிகமாகிய இசையுடன் கூடிய ஆனந்தம். **இன் இசை** - சாதாரிப்பண் திருவிராகம்; "இசையா லுரைசெய்வார்" (பதிகம்).

இன்புற - உணர்வுடன் - உருகிப் பதிகத்து - இன்னிசைத் திளைப்பு - என்று கூறிய இவ்வளவும் பதிகச் சிறப்பும், அதனாலறியப்படும் இறைவனுடன் கலந்த இன்ப நுகர்ச்சியின் செறிவும் உணர்த்தின. அம்மையார் மயிலுருவாய் வழிபட்ட வரலாற்றைத் திருவுளங்கொண்ட குறிப்பும் காண்க. "இளைஞராய்" (1)"அழகராம்" (2),"கழலேத்திமிக **வாய்த்ததொரு காதன்மையினால்**" (11) என்பனவாதியாய் வரும் பதிகக் கருத்துக்கள் இங்குச் சிந்திக்கத் தக்கன.

பதி மருவுதல் மகிழ்ந்தார் - அப்பதியினிற் பொருந்தி வீற்றிருத்தலில் மகிழ்ச்சி யுற்றனர்; அதனை விரும்பியருளினர். மகிழ்ந்து மருவினார் என்னாது மருவுதல் மகிழ்ந்தார் என்று விருப்ப மிகுதியைக் குறிக்க எழுந்த கவிநயமும் அமைதியும் காண்க.

வளம்பதி - "வாவிசூழ்" (2335) என்றும், "மல்குதண்டலை" (2336) என்றும் முன்கூறிய கருத்துக்கள் காண்க. அருளின் வளம்பற்றிய குறிப்புமாம் "சந்தினொடு காரகிலும் வாரிவரு காவிரியுளால்" (2) "மணிசிந்த" (5) என்ற பதிகக் கருத்துக்கள் காண்க.

வள்ளலாரும் மற்றுளபதி - என்பது பாடமாயின், மகிழ்ந்தார் என்பதனை முற்றெச்சமாகக் கொண்டு, **மகிழ்ந்தாராய்** - அகன்றுபோய் என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டிமுடித்துரைத்துக் கொள்க. 439

I. திருமயிலாடுதுறை

திருச்சிற்றம்பலம் திருவிராகம் பண் - சாதாரி - 3-ம் திருமுறை

ஏனவெயி றாடரவொ டென்புவரி யாமையிவை பூண்டிளைஞராய்
கானவரி நீடுழுவை யதளுடைய படர்சடையர் காணியெனலாம்
ஆனபுகழ் வேதியர்க ளாகுதியின் மீதுபுகை போகியழகார்
வானமுறு சோலைமிசை மாசுபட மூசுமயி லாடுதுறையே. (1)

நிணந்தரு மயானநில வானமதி யாததொரு சூலமொடுபேய்க்
கணந்தொழு கபாலிகழ லேத்திமிக வாய்த்ததொரு காதன்மையினால்
மணந்தண்மலி காழிமறை ஞானசம் பந்தன்மயி லாடுதுறையைப்
புணர்ந்ததமிழ் பத்துமிசை யாலுரைசெய் வார்பெறுவர் பொன்னுலகமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- எல்லையில்ல தோரின்பம் பெருகிட உள்ளம் இன்பம் நிறைந்த வுணர்வுடன் **மிகவாய்ந்ததொரு காதன்மையினால்** இறைவரது திருவருளின் பேரின்பத்

துள்ளே ஈடுபட்டு அழுந்திநிற்றல். அரசுகளின் திருக்குறுந் தொகைப் பதிகக் குறிப்பும் காண்க. இறைவரது பழவூர் மயிலாடுதுறையே என்பது பதிகக்கருத்து.

பதிகப்பாட்டுக் குறிப்பு:-(1) ஏன எயிறு - திருமாலாகிய வெள்ளைப்பன்றியின் கொம்பு; **ஆமை** - ஆமை முதுகோடு; **இளைஞராய்** - காதல் விளைத்து மனங்கவர் கோலக் குறிப்பு. மேல் "அழகாராம்" (2) முதலாக வருவனவும் "வாய்த்த தொருகாதன்மையினால்" (11) என்பதும் காண்க. உழுவை - புலி. வரி - வரிகளை யுடைய; **அதள்** - தோல்; காணி - உரிமையாகிய இருப்பு; **மீதுபுகை** - மேலெழுகின்ற புகை; **மாசுபடமுசும்** - புகை நிறமும் துகளும் பொருந்தப் பரவிப்படிகின்ற; **சோலை** - "தண்டலை" (2336) -(2) **எழிலார்பதி** - "வளம்பதி" (2337);- (3) **வீக்கி** - கட்டி; **நோக்கரியர்**- நோக்க அரியவர்; **மூளைபடு**-மூளைவற்றிய; **பாளைபடு** - பாளைகள் உண்டாகும்; **செங்கனி** - மிகப் பழுத்த கனி; **பூ** - மடல்விரிய என்க; **பூ** - நீர்ப்பூக்கள்; -(4) **மார்பதிடமாகப் பேதை உறைகின்ற** என்க; **கவ்வை** - ஓசை; "கவ்வையொடு" (7); **காதன்மிகு** - காதலை மிகுவிக்கும் ஓசை; காவிரி நீத்தம் வரும் ஓசை காதலை விளைக்கும் என்பது. நீர்ச் செழிப்பும் பயனும் குறித்தது-(5) **கதுப்பு** - தலைமயிர்; **பழமை**-பழய இருப்பிடம்;-(6) **கடம்** - மதம்; **வேல்** - ஆயுதப் பொது; **தொடர்ந்தொளிர்** - பல்வரிசை;-(7) **அவ்வ திசையார்** - பற்பல திசையினராகிய தேவர் மக்கள் முதலியோர்; **எவ்வம்** - குற்றம் - துன்பம்; பிறவித் துன்பங் குறித்தது; **மவ்வல்** - மாதவி - முல்லை வகைகள்; **மயங்கி** - கூடி;- (9) **அங்கி** - தீ; **கெண்டை** - **கெளிறு** - மீன்வகை;- (11) **ஏத்தி மிகவாய்த்ததொரு காதன்மை** - பதிகம் அருளியபோது மனத்தின் உளதாகிய இன்பானுபவ நிலை; **புணர்ந்த** - அழுந்திய.

II. திருமயிலாடுதுறை

திருச்சிற்றம்பலம்

பண் - தக்கராகம் - 1-ம் திருமுறை

> கரவின் றிநன்மா மலர்கொண்டு, விரவும் பகலுந் தொழுவார்கள்
> சிரமொன் றியசெஞ் சடையார்வாழ், வரமா மயிலாடு துறையே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகப் பாட்டுக் குறிப்பு:- இறைவனதூர் மயிலாடுதுறையே; அதனைத் தொழுவார் மேற் பிணிதுஞ்சும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) கரவு - மருள்; கொண்டிரவும் என்பது "அடித்தடித்து வக்கார முன்றீற்றிய" (திருவாசகம்) என்புழிப் போலக் குற்றுய லுகரங் கெடாமல் வகர உடம்படு மெய் பெற்றுக் **கொண்டு விரவும்** - என நின்றது. புறனடை;- (3) **ஊனம்** - பிறவிக் காரணமான மலம்; **ஞானப் பொருள்** - சிவஞானம்;-(4) **ஒண்புலன்** - ஒண்மை - இகழ்ச்சிக் குறிப்பு;- **துஞ்சும்** - ஒழியும்;- (5) **மணியான்** - மணிபோன்று இயற்கை ஒளியுள்ளவன்;- (8) **சிரம்** - மண்டை ஓடு.

தலவிசேடம்;- திருமயிலாடுதுறை - தொகுதி III - பக்கம் 420, தொகுதி (I) பக்கம் 509 பார்க்க.

2338. அத்தி ருப்பதி யகன்றுபோ யணிகிளர் சூலக்
கைத்த லப்படை வீரர்செம் பொன்பள்ளி கருதி
மெய்த்த காதலில் விளநகர் விடையவர் பாதம்
பத்தர் தம்முடன் பணிந்திசைப் பதிகமுன் பகர்ந்தார். **440**

2338. பொருளுரை... அத்திருப்பதி அகன்றுபோய் - அந்தத் திருப்பதியினை நீங்கிப்போய்; அணிகிளர்.. கருதி - அழகு பொருந்திய சூலப்படையினைக் கையில் ஏந்திய வீரராகிய இறைவரது திருச்செம் பொன்பள்ளியினைக் கருதிச் சென்று பணிந்து; மெய்த்த.. பகர்ந்தார் - மெய்த்தன்மையுடைய பெருவிருப்பினாலே திருவிளநகரின் கண் எழுந்தருளிய விடையினையுடைய இறைவரது திருவடிகளை அடியார்களுடனே கூடப் பணிந்து இசையுடைய திருப்பதிகத்தினைத் திருமுன்பு அருளிச் செய்தனர்.

விளக்கவுரை.... *அத்திருப்பதி, திருமயிலாடுதுறை.*

சூலப்படைக் கைத்தல வீரர் *- என்க;* ***அணிகிளர்*** *- சூலப்படையின் அழகாவது மூவர்தொழிலு முருவாய் விளங்குதல் - மும்மலஞ் சிதைத்தல் முதலிய அருளிப் பாடுகளின் தொகுதி. "கையார் சூலமேந்து கடவுள்" (தேவா).*

வீரர் *- படையேந்துதலின் வீரர் என்றார்; வீரமாவது முழுமுதல்வராய்ப் பிறர் எவராலும் செய்தற்கரிய வெற்றியை விளைவித்தலும், சங்கார காரணராகிக் கோபமும் பிரசாதமும் உடன் செய்யும் அளவிலாற்ற லுடைமையுமாம்.*

கருதி *- கருதிச் சென்றடைந்து மீண்டு என்றபொருள் தந்துநின்றது.*

மெய்த்த காதல்*-மெய்த்தன்மையிற் காதலாய் விளைந்த அன்பு. "மெய்த்தன்மை விளங்கு திருச்செவி" (2376) "மெய்த்திரு வாக்கெனு மமுதம்" (2986)*

பத்தர் தம்முடன் பணிந்து *- அடியருடனிருக்கும் இன்பமும் அதனுடன் இறைவரை வணங்கும் இன்பமும் ஒருங்குபெற நின்றமை குறிப்பு. உலகம் கண்டுய்யும் பொருட்டுக் காட்டியருளினார். இறைவரை வணங்கும் இன்பம் அடியாருடனே கூடச் சார்தலால் மிகுவதாம் என்பது.* *440*

திருச்செம்பொன்பள்ளி

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம் - 1-ம் திருமுறை**

மருவார் குழலி மாதோர் பாகமாய்த், திருவார் செம்பொன் பள்ளி மேவிய,
கருவார் கண்டத் தீசன் கழல்களை, மருவா தவர்மேன் மன்னும் பாவமே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவனைச் சேராதார்மேற் பாவமும் வினையும் சேரும்; "சேராதார் தீநெறிக்கே சேர்கின்றாரே" (தேவா).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) மரு - மணம்; **குழலி** - குழலை - கூந்தலை - உடையவள் - கரு - கருமைநிறம்; இங்கு அந்நிறமுடைய விடத்திற்கு வந்தது ஆகுபெயர்;-(5) **இலையார் மலர்** - இலையும் நிறைந்த மலரும்: **இலை** - தோடு - இதழ் என்றலுமாம்; **எல்லி** - இரவு. **மலர்கொண்டு வணங்குதல்** - பூசித்தல் - **கிரியை** யியற்றுதல்;- (7) **கையார் சூலம் ஏந்துகடவுள்** - "சூலக் கைத்தலைப் படைவீரர்" (2338); **கடவுள்** - எல்லாங் கடந்தவர் - அப்பாற்பட்டவர் - பரம்பொருள்: "மூவரும் யானென மொழிந்த வாறே" (11-ம் திருமுறை); **மெய்யால் வணங்க** - "மெய்த்த காதலில்" (2338); **மெய்** - உடல் என்றலுமாம்.

தலவிசேடம்:- **திருச்செம்பொன்பள்ளி** - செம்பொனார் கோயில் என்று வழங்கும் III பக்கம் 419 பார்க்க.

திருவிளநகர்

திருச்சிற்றம்பலம்

பண் - காந்தாரம் - 2-ம் திருமுறை

ஒளிரி ளம்பிறை சென்னிமே லுடையர் கோவண வாடையர்
குளிரி ளம்மழை தவழ்பொழிற் கோல நீர்மல்கு காவிரி
நளிரி ளம்புனல் வார்துறை நங்கை கங்கையை நண்ணினார்
மிளிரி ளம்பொறி யரவினார் மேய துவிள நகரதே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவர் மேவியது காவிரிக்கரை விளநகரதே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) **இளம்மழை** - மெல்லிதாய்க் கூதன்மாரி நுண்டுளிதூற்றும் மழை; **இளம்புனல்** - பெருக்கெடுக்காது தெளிந்து ஓடும் நீர்; **இளம்பொறியரவு** - "இளநாகம்" (தேவா) -(2) **காவிரிப்புக்கவர்** - காவிரித் துறை படிந்தாடினோர்; **மிக்கவர்** - அன்பினான் மிக்கோர்;-(4) **எரிகழல்** - **எரிதல்** - வீரங்குறித்தது; **வேல்** - ஆயுதப் பொது. **பிறப்பும்** - இறப்பும் இலராதலுடன் என இறந்தது தழுவிய எச்சவும்மை;-(5) **பழங்காவிரித்துறை** - **முன்னினார்** - இப்பதியின் இறைவரதுபெயர் துறைகாட்டும் வள்ளல் என்றதாம்; மேல் "காவிரித்துறை காட்டினார்" (7) என்பதும் காண்க. **பழங்காவிரி** - காவிரி முன்னாள் ஓடியநிலை; பழமண்ணி என்பதுபோல; வந்து அடைந்தோர் தூநெறி பெறுவாரெனத் துறை முன்னினார் - என்க. -(6) **அமைதி** - அறிவால் அறிய முடியாமை;-(7) **வில்தரும்-வில்** - ஒளி;-(8) **அடர்தரும் பிணி** - பிறவி நோய்;- (11) **பிறைநுதல்** - பிறையை மேல் வைத்தநுதல். பிறைபோன்ற நுதலினையுடைய அம்மைபாகர் என்றலுமாம்.

தலவிசேடம்:- **திருவிளநகர்** - காவிரித் தென்கரை 40-வது தலம்; காவிரித் தென்கரையில் திருவாரூருக்கு வடமேற்கில் 1 1/2 நாழிகையில் உள்ள விளமர் என்பதனோடு இது மயங்கற்பாலதன்று. திருநந்தவனப் பணிசெய்த அருள்வித்தர் என்னும் வேதியர் ஆற்றுவெள்ளத்துள் அகப்பட்டுச் சிந்தித்தபோது இறைவர் துறை காட்டிக் கரையேற்றினர் என்பது வரலாறு; இக்காரணத்தால் சுவாமி **துறைகாட்டும் வள்ளல்** என்று பெயர்

2339. பாடு மப்பதி பணிந்து போய்ப் பறியலூர் மேவுஞ்
தோடு லாமல ரிதழியுந் தும்பையு மடம்புங்
காடு கொண்டசெஞ் சடைமுடிக் கடவுளர் கருது
நீடு வீரட்டம் பணிந்தனர் நிறைமறை வேந்தர். 441

2340. பரமர் தந்திருப் பறியலூர் வீரட்டம் பரவி
விரவு காதலின் வேலையின் கரையினை மேவி
யரவ ணிந்தவர் பதிபல வணைந்துமுன் வணங்கிச்
சிரபு ரத்தவர் திருத்தொண்ட ரெதிர்கொளச் செல்வார், 442

பெறுவர்; பதிகம் 5 - 7 - பாட்டுக்கள் காண்க. அம்மை - ***வேயுறு தோளியம்மை - தோழியம்மை;*** *தீர்த்தம் - காவிரித்துறை; பதிகம் 1.*

இது மாயூரம் டவுன் நிலையத்தினின்றும் கிழக்கே 4 நாழிகை யளவில் அடையத் தக்கது.

2339. பொருளுரை.... நிறைமறைவேந்தர் - நிறைவுடைய வேதத் தலைவராகிய பிள்ளையார்; பாடும்....போய் - முன் சொன்னவாறு திருப்பதிகம் பாடிய திருவிளநகர் என்னும் அத்திருப்பதியினை வணங்கிப்போய்; பறியலூர்...பணிந்தனர் - திருப்பறியலூரில் எழுந்தருளிய இதழ்களையுடைய கொன்றையும் தும்பையும் அடம்புமலரும் செறிந்த சிவந்த சடைமுடியினையுடைய முழுமுதற் பெருமான் விரும்பி நீடு வீற்றிருக்கும் திருவீரட்டானத்தினைப் பணிந்தனர்.

விளக்கவுரை... பாடும் அப்பதி *- "பதிகம்முன் பகர்ந்தார்" (2338) என்று முன் கூறிய திருப்பதிகத்தினாற் பாடப்பட்ட அத்திருப்பதியாகிய விளநகர்.*

பறியலூர் *- ஊர்ப்பெயர்;* ***வீரட்டம்*** *- அங்கு இறைவர் எழுந்தருளிய கோயில்.*

தோடுஉலாம் மலர்இதழி *- கொன்றை;* ***தோடு*** *- இதழ்;* ***உலாம்*** *- நெருங்கிய; இதழியாகிய மலர் என்க.* ***இதழி*** *- கொன்றைக்குச் சிறப்பாயுரிய பெயர். அதனை விளக்கம் செய்தபடி.*

காடு கொண்ட *- காடுபோலச் செறிவுகொள்ள அணிந்த.*

நீடு வீரட்டம் *- பழமை பெற்ற திருக்கோயில்.*

தும்பையும் அறுகும் *- என்பதும் பாடம்.* *441*

2340. பொருளுரை... பரமர்...பரவி - இறைவரது திருப்பறியலூர் வீரட்டத்தினைப் போற்றி செய்து; விரவு..மேவி - பொருந்திய காதலினாலே அங்கு நின்றும் கடலின் கரையினை அடைந்து; அரவணிந்தவர்...வணங்கி - பாம்புகளை அணிந்த இறைவரது பதிகள் பலவற்றையும் சென்று முன்னே வணங்கிக்கொண்டு; சிரபுரத் தவர்...செல்வார் -

2341. அடியவர்கள் களிசிறப்பத் திருவேட்டக் குடிபணிந்தங் கலைவாய்ப் போகிக்கை
கடிகமழு மலர்ப்பழனக் கழனிநாட் டகன்பதிகள் கலந்து நீங்கிப்
கொடிமதில்சூழ் தருமபுரங் குறுகினார் "குண்டர்சாக் கியர்தங் கொள்
படியறியப் பழு" தென்றே மொழிந்துய்யு நெறிகாட்டும் பவள வாயர். 443

சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அங்கங்கும் திருத்தொண்டர்கள் வந்து எதிர்கொள்ளச் செல்வாராகி,

விளக்கவுரை-திருப்பறியலூர் வீரட்டம் பரவி - "திருப்பறியலூரில் வீரட்டத்தானே" - "திருப்பறியல் வீரட்டத்தானை" என்று பதிகத்துள்ளே பதியும் கோயிலும் சேர்த்துப் பரவப்பட்ட படியை அறிவித்தவாறு.

வேலையின் கரையினைமேவி - திருப்பறியலூரினின்றும் மேலே பிள்ளையார் சென்றருளுகின்ற யாத்திரை தரை வழியாக நிகழாது, கடற்கரை வழியாக நிகழ்வதாம் என்று அறிவித்த ஆசிரியரது உண்மைச் சரிதவியலின் நுட்பம் காண்க.

வேலையின் கரை - திருப்பறியலூரினின்றும் கடற்கரை கிழக்கே 10 நாழிகை யளவில் அடையவுள்ளது. மேவி - வேலைக்கரையினை நோக்கிச் சென்று என்றபடி.

அரவணிந்தவர் பதிபல அணைந்துமுன் வணங்கி - இவை திருவிடைக்கழி. திருஅளப்பூர் முதலாயின என்பது கருதப்படும். முன்வணங்கி - என்றதனால் வேலைக் கரையினை அணையும்முன் இடையிலே பட்ட இத்தலங்களை வணங்கிச் சென்றருளினார் என்ற குறிப்பும் பெறப்படும்.

செல்வார் - முற்றெச்சம்; செல்வாராகிப் - பணிந்துபோகி - நீங்கிக் - குறுகினார் (2341) என மேல்வரும் பாட்டுடன் கூட்டிமுடிக்க. 442

2341. பொருளுரை- அடியவர்கள்...பணிந்து - அடியார்கள் மிக மகிழ்ச்சிகூரத் திருவேட்டக் குடியினைச் சென்று பணிந்து; அங்கு அலைவாய்ப்போகி - அவ்விடத்தில் கடலின் கரைவழியே சென்று; கடிகமழும்...நீங்கி - மணம் பொருந்திய பூக்களை யுடைய வயல்கள் நிறைந்த சோழநாட்டின் பெரிய பதிகளை அடைந்து மனம் பொருந்த வணங்கி அவைகளை நீங்கி; குண்டர்....பவளவாயர் - சமணர் சாக்கியர்களது கொள்கைகள் குற்றமுள்ளவை என்றே உலகமறியக்கூறி, மற்று உய்யும் நெறிகளையும் எடுத்துக் காட்டும் பவளவாயினை யுடைய பிள்ளையார்; கொடிமதில்....குறுகினார் - கொடிகளையுடைய மதில் சூழ்ந்த திருத்தருமபுரத்தைச் சென்றடைந்தருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை-அலைவாய் - கடற்கரை யோரத்தில் அலைகள் அலைத்து மீளும் நீர்மணற் பாதைவழி; அல்லது - கடற்கரையின் வழி என்றலுமாம்.

கழனிநாடு - நீர்நாடு எனப்படும் சோழ நாடு.

கழனிநாட்டு அகன்பதிகள்-பின்சென்று சேர்வனவும் கழனிநாட்டுப் பதிகளாதலின் இங்குச் சோழ நாட்டின் பிற பதிகள் என்று பொருள் கொள்க. பிறிதினியைபின்மை நீக்கிய விசேடணம்.

கலந்து - சென்று வணங்கித் தங்கியருளி என்க.

குண்டர்.பழுதென்றே மொழிந்து - குண்டர் - சமணர்; **படியறிய - மொழிந்து** என்று கூட்டுக.

இவை பிள்ளையாரது திருப்பதிகங்களுள் பத்தாவது திருப்பாட்டுக்களில் பற்பல படியும் எடுத்து மொழியப்பட்டமை காண்க; "முட்டைக்கட்டுரை மொழிவ கேளாதே-நட்டப்பெருமானை நாளுந் தொழுவோமே" (கோயில்); "உரைகொள்ளன்மின், மற்றவ ருலகின்னவலம்மவை மாற்றகில்லார்...சேவடிகைதொழ, வுற்றவ ருலகின் னுறுதிகொள வல்லவரே" (மேற்படி) முதலாகவரும் தேவாரங்களும், அக்கருத்தை விளக்கி "போதமிலாச் சமண்கையர் புத்தர்வழி பழியாக்கு மேதமே என மொழிந்தார்" (1976) என்று ஆசிரியர் முன் காட்டியருளியமையும் காண்க.

மொழிந்து - உய்யும் நெறிகாட்டும் - அவர் கொள்கை பழுதென்றே மொழிதலோடு நில்லாமல் மற்று அடைந்து உய்யும் நெறியாவது சிவநெறியேயாம் என்று வழியும் காட்டியருளும் என்றபடி. **ஏகாரம்** - தேற்றம்.

பவளவாயர் - பவளம் போன்ற வாயினை உடையவர்; **வாய் இங்கு இதழ்களைக்** குறித்தது; உருப்பற்றி வந்த உவமத்தொகை; செம்மையாகிய - சிவப்பண்பு தரும் என்ற குறிப்புமாம்.

கொள்கை - பால்பகா அஃறிணை; சமண புத்தர்களின் சமயக் கோட்பாடுகளின் தொகுதி என்றலுமாம். *443*

திருப்பறியலூர் வீரட்டம்

திருச்சிற்றம்பலம் **பண் - மேகராகக்குறிஞ்சி 1-ம் திருமுறை**

கருத்தன் கடவுள் கனலேந்தி யாடும்
நிருத்தன் சடைமே னிரம்பா மதியன்
திருத்த முடையார் திருப்பறிய லூரில்
விருத்த னெனத்தகும் வீரட்டத் தானே. (1)

நறுநீ ருகுங்காழி ஞானசம் பந்தன்
வெறுநீர்த் திருப்பறியல் வீரட்டத் தானைப்
பொறிநீ டரவன் புனைபாடல் வல்லார்க்
கறுநீ டவல மறும்பிறப்புத் தானே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:-கருத்தன் - கடவுள் - நிருத்தன் என்பன முதலாக வரும் தன்மைகளா லறியப்படும் இறைவர் திருப்பறியலூரில் வீரட்டத்தானத்தை இடமாகக் கொண்டுள்ளார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-**கருத்தன்-மதியன்** - சிவனை அறியும் தன்மைகள்; **நிரம்பா மதி** - பிறை; **திருத்தமுடையார்** - திருந்திய உள்ளமுடைய அடியவர்; **பறியல்** - ஊர்; **வீரட்டம்** - கோயில்;- (2) மருந்தன் - பாசநீக்கமும், **அமுதன்** - சிவப் பேறும் குறித்தன; **மைந்தன் - மைந்து** - வல்லமை:-(3) **விளிந்தானாய் அடங்கவும், வீந்தானாய் மீள உயிர் பெறவும் செற்றவன்** என்க. -(4) **பிறப்பும் ஆதியும்** என்க. **பிறப்புச் செறப்பு** - பிறப்பும் - (செறப்பு) இறப்பும்; **செறுதல்** - அழித்தல்: **தேசன் - தேசு** - சிவஞான ஒளி; **பாரிடம்** - சிவபூத கணங்கள்;-(5) **படுதம்** - கூத்து வகை;-(6) **வெருவுற்றவர்** - **வெரு** - அச்சம்; அஞ்சினவர்; பிறவி யிறவிக் கஞ்சியோர்: "வஞ்சநமன் வாதனைக்கும் வன்பிறவி வேதனைக்கும், அஞ்சி யுனையடைந்தேன்"(தாயுமா);-(9) **இணைந்தும் பிணைந்தும்** - "இருமையி னொருமையு மொருமையின் பெருமையும்" (திருஎழுகூற்); சிவமுஞ் சத்தியும் அத்துவிதமாக் கூடி நிற்குநிலை. **இளங்கொம்பனாள்** - தலஅம்மை பெயர்;- (11) **நறுநீர்** நீருக்கு நறுமை (மணம்) அதனில் வரும் நறுமலர்களாலாயது; **நறுமை** - புதுமையுமாம். **வெறுநீர்** - அகந்தை கொண்ட தக்கனை அழிக்கும் தன்மை; **வெறும்** - வெற்றதாக்கும். வேறு படுத்தும்; தலவிசேடம் பார்க்க; **நீடு அவலம்** - நீண்ட ஆணவச்சேட்டை - அவலம் அறும்; அதனால் பிறப்பு அறும் என்று காரண காரியமுறை குறித்தது.

தலவிசேடம்-திருப்பறியல் வீரட்டம் - காவிரித்தென்கரை 41-வது பதி. பரசலூர் என வழங்குவது; **தக்கயாக சங்காரமாகிய வீரம் நிகழ்ந்த பதி**; அட்டவீரட்டத்தொன்று; "மாமன்பறியல்"; தக்கயாகத்தில் உடனிருந்ததேவர்களது பாவங்களைத் தண்டனையினால் பறித்த (போக்கிய) காரணத்தால் இப்பெயர் பெற்றது. "நாயகனே தண்டித்தாற், சயமன்றோ வானவர்க்கு" (திருவா); வீரபத்திரர் தக்கனோடு எழுந்தருளியுள்ளார். சுவாமி **வீரட்டேசுவரர்**; அம்மை - **இளங்கொம்பனையாள்**; பாடல் (9); பதிகம் 1.

இது மயிலாடுதுறையினின்று கிழக்கில் மட்சாலையில் 4 நாழிகையில் உள்ள திருவிளநகரினின்றும் கிழக்கே மட்சாலையில் ஒரு நாழிகை சென்று, பின் தெற்கே திரும்பி ஒருநாழிகை யளவில் உள்ளது; செம்பொனார் கோயில் நிலயத்தினின்றும் தென்கிழக்கில் மட்சாலை வழி 1 1/2 நாழிகையிலும் அடையலாம்.

பதிபல - திருவிடைக்கழி - சேந்தனாரால் திருவிசைப்பாவில் இத்தலத்து முருகப் பெருமானைப் பாடப்பெற்ற சிறப்புடையது; இங்குச் சிவபெருமானைப் பூசிக்கும் நிலையில் முருகப் பெருமான் எழுந்தருளியுள்ளார். நின்ற திருக்கோலம். குரா - தலமரம். "திருக்குரா நீழற்கீழ் நின்ற" (திருவிசைப்பா). திருஅளப்பூரினின்றும் மேற்கில் மட்சாலைவழி 6 நாழிகை யளவில் அடையத்தக்கது.

திரு அளப்பூர் - தேவார வைப்புத்தலம். "ஆரூரத்தா வையாற் றமுதே யளப்பூ ரம்மானே" நம்பிகள் - (ஊர்த் தொகை). தில்லையாடிக்குக் கிழக்கே ஒரு நாழிகை யளவில் கடற்கரையில் உள்ளது. இங்கு நின்றும் தெற்கே செல்லும் தரங்கம்பாடி - காரைக்கால் கற்சாலைவழி 5 நாழிகையளவு சென்று வரிச்சிக்குடியை யடைந்தால், கிழக்கே

மட்சாலைவழி ஒரு நாழிகையில் திருவேட்டக்குடியை அடையலாம். இது பிள்ளையார் சென்றருளிய வழி என்பது கருதப்படும்.

திருவேட்டக்குடி

திருச்சிற்றம்பலம் பண் - பஞ்சமம்

வண்டிரைக்கு மலர்க்கொன்றை விரிசடைமேல் வரியரவங்
கண்டிரைக்கும் பிறைச்சென்னிக் காபாலி கனைகழல்கள்
தொண்டிரைத்துத் தொழுதிறைஞ்சத் துளங்கொளிநீர்ச் சுடர்ப்பவளந்
தெண்டிரைக்கள் கொணர்ந்தெறியுந் திருவேட்டக் குடியாரே. (1)

பாய்திமிலர் வலையோடு மீன்வாரிப் பயின்றெங்குங்
காசினியிற் கொணர்ந்தட்டுங் கைதல்சூழ் கழிக்கானற்
போயிரவிற் பேயோடும் புறங்காட்டிற் புரிந்தழகார்
தீயெரிகை மகிழ்ந்தாருந் திருவேட்டக் குடியாரே. (2)

தெண்டிரைசேர் வயலுடுத்த திருவேட்டக் குடியாரைத்
தண்டலைசூழ் கலிக்காழித் தமிழ்ஞான சம்பந்தன்
ஒண்டமிழ்நூ லிவைபத்து முணர்ந்தேத்த வல்லார்போய்
உண்டுடுப்பில் வானவரோ டுயர்வானத் திருப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பரஞ்சோதி - சிவமூர்த்தி - தேவாதி தேவனார்-திருவேட்டக் குடியாரே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வண்டு இரைக்கும்** - வண்டுகள் சத்திக்கும்; **இரைக்கும் பிறை**-அச்சத்தால் அசையும் பிறை; **இரைத்து**-ஒலியுடன் துதித்து; **தெள் திரைக்கள்** - தெளிந்த அலைகள். எதுகை நோக்கி வல்லொற்று மிக்கது **பவளம்** - **கொணர்ந்து** என்க. **எறியும்**-பொருட்படுத்தாத வள்ளன்மை-(2) **பாய்திமிலர்...கழிக் கானல்**-இயற்கைவளம். தன்மை நவிற்சியணி; **தீயெரிகை மகிழ்ந்தார்** - தலவிசேடம் -(3) **தோத்திரமா...பரிந்தருளி** - சண்டீசர் சரிதம்; (4) **கலவம்** - (மயில்) இறகு; **அலவன்**-கடல் நண்டு; **நிலவம்** - ஒளி;-(5) **பங்கம்** - சேறு;-(6) **நாவாய** - தோணி போன்ற; **கோவாத** - கோக்கப்படாத; இயல்பின் விளைந்த;-(7) **பால் நிலவும்** - பான்மையினால் நிலவுகின்ற; **பால்** - பக்கம்;-(8) **இறை** - அரசாட்சி -(9) **அகலிடம் நீர் ஏற்றான்** - விட்டுணு;-(10) **மணலில்** - திருவேட்டக்குடி - (மணலில் உள்ள) என்று கூட்டுக.-(11) **திரை** - நீர்த்திரை; **உண்டு உடுப்பு இல் வானவர்** - போக உலகமல்லாத மேலுலகத்துள்ளோர். சிவனுலகக் கணங்கள் உயர்வானம் என்ற குறிப்புமது.

தலவிசேடம்:- திருவேட்டக்குடி - காவிரித் தென்கரை 49-வது பதி; இறைவர் வேடர் உருவுடன் அருச்சுனனுக்காக வெளிப்பட்டு அருளிய தலமாதலின் இப்பெயர் பெற்றதென்று கருதப்படுகிறது; சந்நிதியின் கிழக்கே கடற்கரையோரம் நாடோறும் இரவில்

2342. **தருமபுரம் பெரும்பாணர் திருத்தாயர் பிறப்பிடமா மதனாற் சார**
வருமவர்தஞ் சுற்றத்தார் வந்தெதிர்கொண் டடிவணங்கி வாழ்த்தக் கண்டு
பெருமையுடைப் பெரும்பாண ரவர்க்குரைப்பார் பிள்ளையா ரருளிச் செய்த
அருமையுடைப் பதிகந்தா மியாழினாற் பயிற்றும்பே றருளிச் செய்தார். 444

தீயெரிவதுபோன்ற காட்சி காணைப்படுமென்பர்; அதுவே பதிகத்துள் "தீயெரிகை மகிழ்ந்தாரும்" (2) என்று குறிக்கப்பட்டதென்பதுமாம். சுவாமி - **திருமேனியழகர்;** அம்மை - **சாந்தநாயகி;** பதிகம் 1.

இது பொறையாறு ரோடு நிலயத்தினின்றும் வடக்கே கற்சாலையில் 3 நாழிகையில் உள்ள வரிச்சிக்குடியினின்றும், கிழக்கே மட்சாலையில் 1 நாழிகையில் உள்ளது. காரைக்காலினின்றும் 5 நாழிகை யளவில் அடையலாம்.

2342. பொருளுரை... தருமபுரம்...அதனால் - திருத்தருமபுரம் திருநீலகண்ட யாழ்ப்பாண நாயனாருடைய திருத்தாயாரது பிறப்பிடமாகுமாதலின்; சார-கண்டு - அத்திருப் பதியினைச் சாரவரும் அவருடைய சுற்றத்தார்கள் வந்து எதிர்கொண்டு அவரை அடிவணங்கி வாழ்த்தினார்களாக, அதனைக் கண்டு; பெருமையுடை...உரைப்பார் - பெருமையுடைய திருநீலகண்டப் பெரும்பாணர் அவர்களுக்குத் தம் நிகழ்ச்சியினை எடுத்துச் சொல்வாராக; பிள்ளையார்-பேறு அருளிச் செய்தார் - ஆளுடைய பிள்ளையார் அருளிச் செய்து அருமையுடைய திருப்பதிகங்களைத் தாம் யாழில் இட்டுப் பயிற்றப் பெறும் பெரும் பேற்றினை அருளிச் செய்தனர்.

விளக்கவுரை.. பெரும்பாணர் **திருத்தாயர்** பிறப்பிடமாம் அதனால் - ஏனைப் பதிகளிற் றொண்டர்கள் பிள்ளையாரை எதிர்கொண்டனர். "திருத்தொண்ட ரெதிர்கொள்ள" (2340); அதனோடு இங்குச் சிறப்பாகப் பெரும்பாணரை அவரது சுற்றத்தார் வந்து எதிர்கொண்டமைக்குக் காரணங் கூறியபடி. திருநனிபள்ளி மறையவர்கள் வந்து பிள்ளையாரை வணங்கித் தமது பதியினிற் கொண்டு சென்றமையும் (2011), தொண்ட ரோடு தலைசை யந்தணர்களெல்லாம் எதிர்கொண்டு நண்ண வந்தமையும் (2017), அவை போன்ற பிறவும் ஈண்டுக் கருதற்பாலன. தொண்டர் எதிர்கொள்ளும் நிலை வேறு; சுற்றத்தார் எதிர்கொள்ளும் நிலைவேறு; முன்னையது உயர்ந்த சிவச்சார்பு பற்றியும், பின்னையது தாழ்ந்த உடற்சார்பு பற்றியும் நிகழ்வன ஆதலின் அவ்விரண்டியல்புகளையும் பிரித்துக் காட்டியபடியாம். மேற்சரித நிகழ்ச்சிக்கு அடிகோலிய குறிப்பும் கண்டுகொள்க.

சாரவரும் அவர் - திருநீலகண்டப் பாணனார்.

பெருமையுடைப் பெரும்பாணர் - பெருமை - பிள்ளையாரது திருவடிச் சார்பினாற் பெரும்பேறு பெற்ற மகிழ்ச்சியிற் றலைநின்ற சிறப்பு; "இறுமாந் திருப்பன் கொலோ ஈசன், பல்கணத் தெண்ணப்பட்டுச், சிறுமா னேந்திதன் சேவடிக்கீழ்ச் சென்றங்கு" (அங்கமாலை) என்ற கருத்து; மேல்வரும் நிகழ்ச்சிக் குறிப்புக் காண்க. யாழ்ப்பாண னாரது அன்பின் பெருமையுமாம்.

உரைப்பார் - முற்றெச்சம்; உரைப்பாராகி - அருளிச் செய்தார் என்று கூட்டுக.

2343. கிளைஞருமற் றதுகேட்டுக் "கெழுவுதிருப் பதிகத்திற் கிளர்ந்த வோசை
யளவுபெறக் கருவியினீ ரமைத்தியற்று மதனாலே யகில மெல்லாம்
வளரவிசை நிகழ்வ"தென விளம்புதலும் வளம்புகலி **மன்னர் பாதம்**
உளநடுங்கிப் பணிந்துதிரு நீலகண்டப் பெரும்பாண ருணர்த்து கின்றார், 445

அருமையுடைப் பதிகம் - திருத்தில்லை - திருநெல்வாயி லரத்துறை, சீகாழி, சீபஞ்சாக்கரம், திருப்பாச்சிலாச்சிராமம், திருநீலகண்டம், திருப்பட்டீச்சுரம், திருவாவடுதுறை முதலியவற்றின் பதிகங்களும், அவற்றின் அற்புத நிகழ்ச்சிகளைத் திருநீலகண்டப் பெரும்பாணநாயனார் நேரே உடனிருந்து கண்டருளியதுடன் அவற்றை யாழிலிட்டும் பயின்றாராதல் காண்க.

யாழினாற் பயிற்றுதல் - பிள்ளையார் திருத்தாளத்துடன் பாடப், பின்றொடர்ந்து அப்பதிக விசைகளையாழிலிட்டு வாசித்தல்.

தாம் யாழினாற் பயிற்றும்பேறு - இப்பெரும் பேற்றினைத் தாம் பிள்ளையார்பால் இரந்து வேண்டிப் பெற்ற நிலையினைத் "திருப்பதிக விசையாழி லிட்டடியேன், பிறிவின்றிச் சேவிக்கப் பெறவேண்டு மெனத்தொழுதார்" (2038), "மற்றதற்குப் பிள்ளையார் மனமகிழ்வுற் றிசைந்தருளப், பெற்றவர்தாந் தம்பிரா னருளிதுவே யெனப்பேணி" (2039) என்ற நினைவுக் குறிப்பு. 444

2343. பொருளுரை...கிளைஞரும் மற்று அதுகேட்டு - சுற்றத்தார்களும் அதனைக் கேட்டு; கெழுவு திருப்பதிகத்தில்...என விளம்புதலும் - "கூடிய திருப்பதிகத்திற் போந்த ஓசையானது அளவு பெறும்படி யாழாகிய இசைக் கருவியிலே நீர் பொருந்தும்படி வைத்து வாசிக்குமதனாலே உலகமெல்லாம் அவற்றின் இசை வளரும்படி நிகழ்கின்றது" என்று சொன்னதுமே; திருநீலகண்டப் பெரும்பாணர் - திருநீல கண்ட யாழ்ப்பாண நாயனார்; உளநடுங்கி - மன நடுங்கி; வளம்புகலி மன்னர் பாதம் பணிந்து - வளமுடைய சீகாழித் தலைவராகிய பிள்ளையாருடைய திருவடிகளில் வீழ்ந்து வணங்கி; உணர்த்துகின்றார் - சொல்கின்றாராகி,

விளக்கவுரை...கெழுவுதல் - பொருந்துதல்.

அளவுபெற...இசை நிகழ்வது - பதிகத்தினுள் அமைந்து பொதிந்துகிடந்த ஓசையினை நீர் அளவுபடும்படி கருவியில் வைத்து இயற்றுதலினால் உலகர் அறிய அது இசையாக வளர்வதாயிற்று என்று, கருவியியற்றுதலினாற் பதிக ஓசைக்குப் பயனும் உலகறி பெருமையும் வருவதாக அவர்கள் உட்கொண்டு கூறிய புகழ்ச்சியுரை; கருவி - யாழ்.

பதிகத்திற் கிளர்ந்த ஓசை - பதிகத்தினுள் சொல்லும் பொருளும் ஓசையுமாகிய மூன்று பகுதியினுள் சொல்லும் பொருளும் வெளிப்படையாக அறியவருவன வாதலின், இசைத்துக் காட்டினாலன்றி அறியவாராது அமைந்து கிடந்த ஓசை என்பது அவர் கொண்ட கருத்து; **கிளர்ந்த** - அமைந்து கிடந்த.

அளவுபெற - இராகமும் தாளமும் ஆகிய அளவு அறியும்படி;

2344. "அலகிறிருப் பதிகவிசை யளவுபடா வகையிவர்க ளன்றி யேயும்
உலகிலுளோ ருந்தெரிந்தங் குண்மையினை யறிந்துய்ய வுணர்த்தும் பண்பாற்
பலர்புகழுந் திருப்பதிகம் பாடியரு ளப்பெற்றாற் பண்பு நீடி
யிலகுமிசை யாழின்க ணடங்காமை யான்காட்டப் பெறுவ" னென்றார். **446**

வளர - பெருகி நிகழ; **இசை நிகழ்வது** - இசையாக நிகழ்வது; ஓசை - இசையாக உருப்பட்டு நிகழ்வது; இசை - புகழ் என்பாருமுண்டு.

உளநடுங்கி - (மன்னர் பாதம்) - **பணிந்து** என்க. உளம் நடுங்குதல் பதிகத்தை இசைக்கப் பெறுவதால் கருவி பெருமையுடைத்தாம் என்பதுண்மையாயிருப்பவும், கருவியிசையினால் பதிகம் இசை வளர்வதாயிற்றென்ற பொய்யுரை கேட்டதனாலாயிற்று; அஃது உண்மைக்கு மாறுபாடாவதுடன் திருப்பதிகத்தின்பாற் செய்த அபசாரமும் சிவாபசாரமுமாம் என்று கொண்டனர் பாணனார்; அதனைக் கேட்க நேர்ந்ததே என்று உளம் நடுங்கினர்.

மன்னர் - குற்றத் தீர்வுதரும் உரிமையும் ஆற்றலும் உடையார் அரசரேயாதலின் மன்னர் என்றார்.

உணர்த்துகின்றார் - தமது உள்ளக்கிடையை உணரும்படி எடுத்துச் சொல்கின்றாராய்; முற்றெச்சம். **உணர்த்துகின்றார் - என்றார்** (2344) என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

"தம்சுற்றத்தார் தம்மைப் புகழ்ந்துகூறும் அறியாமை கருதி உளம் நடுங்கினார்" என்றும், "இச்செயல் யாழ்ப்பாணரின் முனைப்பின்மையைக் குறிப்பது" என்றும் இங்கு விசேட ஆராய்ச்சியுரை காண்பாருமுண்டு. அதன் பொருத்தம் ஆராயத்தக்கது. 445

2344. பொருளுரை- அலகில்..வகை - அளவினுட்படாத திருப்பதிக விசை கருவியில் அளவுட்படாத வகையினை; இவர்களன்றியேயும்...பண்பால் - இவர்களேயன்றி இன்னும் உலகிலுளோர்களும் தெரிந்து: அவ்வுண்மையை உணர்ந்து உய்யும்படி உணர்த்தும் தன்மையினாலே; பலர்...அருளப் பெற்றால் - பலதிறத்தவர்களும் புகழும் ஒரு திருப்பதிகத்தினைப் பாடியருளும் பேறுநான் பெறுவேனாகில்; பண்புநீடி...பெறுவன் என்றார் - பண்பினால் நீண்டு விளங்கும் அவ்விசையானது யாழினிடத்து அடங்காத நிலையினை யான் அவர்க்கு எடுத்துக் காட்டப் பெறுவேன் என்று விண்ணப்பித்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

விளக்கவுரை..**திருப்பதிக** - **அலகில்** - **இசை** - என்க. **அலகு** - அளவு; **அலகில்** - பதிகம் என்றலும் பொருந்தும்.

அளவுபடா வகை - கருவி நூலின் அளவினுள் அடங்காத வகையினை. இரண்டனுருபு விரிக்க. **வகை** - **தெரிந்து** - என்று கூட்டுக. மேல்வரும் பாட்டுப் பார்க்க.

இவர்களன்றியேயும் உலகிலுளோரும் - இவர்களேயன்றியும் ஏனை இக்கருத்துக் கொள்ளக்கூடிய உலகரும்; ஏ - அசைநிலை.

2345. வேதநெறி வளர்ப்பவரும் விடையவர்முன் றொழுதுதிருப் பதிகத் துண்மை
பூதலத்தோர் கண்டத்துங் கலத்தினிலு நிலத்துநூல் புகன்ற வேத
நாதவிசை முயற்சிகளா லடங்காத வகைகாட்ட நாட்டு கின்றார்
"மாதர்மடப் பிடி" பாடி வணங்கினார் வானவரும் வணங்கி யேத்த. 447

இலகும் இசை - பதிகத்தினுள் விளங்கும் இசை. கிளைஞர் - "பதிகத்திற் கிளர்ந்த ஓசை" என்றாராதலின் அஃது அவ்வாறன்றி இலகும் இசையேயாவது; என்றபடி.

யாழின்கண் அடங்காமை-கருவியி னளவுள் அடங்கி நில்லாது உள்ள நிலையினை. இரண்டனுருபு விரிக்க.

யான் காட்டப் பெறுவன் - இவர்களறியும்படி இவர்க்கும் ஏனைய உலகர்க்கும் காட்டும் பேறு பெறுவேன். யான் அறிவேனாயினும் இவர்களும் ஏனையோரும் கண்டு அறியாமை நீங்கப்பெற்று உய்யும்படி காட்ட என்றார். அவ்வாறாகிய பதிகம் பாடி யருளப் பெறேனாயின் காட்டப் பெறேன்; ஆதலின் விண்ணப்பித்தேன் என்றது குறிப்பு. 446

2345. பொருளுரை– வேதநெறி...தொழுது - வேதநெறியினை வளர்ப்பவராகிய பிள்ளையாரும் இடபத்தையுடைய இறையவர் திருமுன்பு சென்று தொழுது; திருப்பதிகத்து உண்மை...நாட்டுகின்றார் - திருப்பதிகத்தின் உண்மைத்திறமானது உலகத்தார்களுடைய கண்டப் பாட்டிலும், கலத்தினிலும், உலகில் வேதங்களின் இசைநூல்களாக வகுத்த நாத வகைகளின் முயற்சிகளால் அடங்காத வகையினை அறியக் காட்டும்படி நிலைநாட்டுகின்றாராகி; வானவரும் வணங்கி ஏத்த-தேவர்களும் வணங்கிப் போற்றும்படி; "மாதர்மடப் பிடி" பாடி வணங்கினார் - "மாதர் மடப்பிடி" என்று தொடங்கும் திருப்பதிகத்தினைப் பாடி வணங்கி யருளினார்.

விளக்கவுரை–*வேதநெறி வளர்ப்பவர்* - ஆளுடைய பிள்ளையார்.

நாட்டுகின்றார் - பாடி - வணங்கினார் - என்று கூட்டுக.

விடையவர்முன் தொழுது பாடுதல் - திருவருள் விளக்கத்தின் பொருட்டு. "கொன்றைநறுஞ் சடையார்தங் கோயிலின்முன் கொணர்வித்தே" (1473); "கோயின்முன் பெய்திநின்று போற்றுவார்" (2322) முதலியவை காண்க.

நாட்டுகின்றார் - நாட்டுகின்றவராகி - முற்றெச்சம்.

நாட்டுதல் - நிலைநாட்டுதல் - நிறுவுதல்.

உண்மை - உளதாம் தன்மை. உண்மை - *அடங்காதவகை* என்க. வகையினை - என இரண்டனுருபுவிரிக்க.

வேதநூல் புகன்ற நாத இசை முயற்சிகளால் அடங்குதலாவது - வேதங்கள் வகுத்துக் காட்டிய இசை நூல்களின் விதித்த இசைக்குரியனவாகிக் கண்டப் பாடலுக்கும் கருவிப் பாட்டுக்கும் உள்ள முயற்சிகளுக்கு உட்படுதல். இவற்றை இசை நூல்களுட் கண்டு கொள்க.

2346. **வண்புகலி வேதியனார் "மாதர்மடப் பிடி" யெடுத்து வனப்பிற் பாடிப்**
பண்பயிலுந் திருக்கடைக்காப் புச்சாத்த வணைந்துபெரும் பாண னார்தாம்
நண்புடையாழ்க் கருவியினின் முன்புபோற் கைக்கொண்டு நடத்தப் புக்கார்க்
கெண்பெருகு மப்பதிகத் திசைநரம்பி லிடவடங்கிற் றில்லை யன்றே. **448**

---

221 - 948 - 951 - பாட்டுக்களின் கீழ் உரைத்தவையும் பார்க்க. இங்கு **வேதம்** - காந்தருவ வேதம் எனப்படும்.

மாதர் மடப்பிடி - இத்தொடக்கத்தையுடைய பதிகம்.

வானவரும் வணங்கி ஏத்த - என்றது இசை விஞ்சை வல்லவர்களாகிய தேவர்களும் வணங்கி, இது தமது தரத்தின் மேம்பட்ட இசைவகையாதல்கண்டு திருவருளைத் துதிக்க என்றதாம். உம்மை சிறப்பு; மண்ணவரையும் தழுவுதலின் எதிரது தழுவிய எச்சவும்மையுமாம்.

பேத நாத இசை முயற்சிகளால் - என்பது பாடமாயின் ஏழிசையாகிய சுரபேதங்களை கொண்ட என்று உரைத்துக் கொள்க. 447

2346. பொருளுரை... வண்புகலி...சாத்த - வண்மையுடைய சீகாழி வேதியராகிய பிள்ளையார் "மாதர் மடப்பிடி" என்று தொடங்கி அழகு பொருந்தப் பாடிப் பண் பயில்கின்ற திருக்கடைக் காப்பினைச் சாத்தி முடிக்க; பெரும்பாணனார் தாம் அணைந்து - திருநீலகண்டப் பெரும்பாணனார் அங்கு அணைந்து; நண்புடை...புக்கார்க்கு - நண்புடைய யாழ்க்கருவியில் அமைத்து முன்புபோல அப்பதிகத் திசையினை வாசிக்கப் புகுந்த அவர்க்கு; எண்பெருகும்...அன்றே - எண்ணிற் பெருகும் அந்தத் திருப்பதிகத்தின் இசை யாழ் நரம்பில் வைத்து வாசிக்க அமைந்து அடங்கவில்லை; அப்போது.

விளக்கவுரை....வண்புகலி வேதியனார்-வள்ளன்மையாவது திருப்பதிகத் துண்மை உலகறியக் காட்டப் பெறுதற்கு ஒரு பதிகம் வேண்டுமென்று கேட்டவாறே யாழ்ப் பாணருக்கு உதவுதல்; அவர்பாலும் உலகர்பாலும் கொண்ட பேரருளும் அதற்குத் தக்க பதிகம் அருளும் கொடைவண்மையுமாம்.

வேதியனார் - முன்னரும் "வேதம் வளர்ப்பவர்" (2345) என்றார்; வேதநூல் விதித்த நாத முயற்சிகளால் அடங்காத வகையேயும் வேதப் பொருளைப் பாடியருள்பவர் என்பது குறிப்பு. "வேதமோ டேழிசை பாடுவர்" (பதிகம் - 1.)

எடுத்து - என்று தொடங்கி.

வனப்பிற்பாடி - வனப்பாவது - அழகு - அமைதி; செய்யுளின் சொல் - பொருள் - யாப்பு - ஓசை உட்கோள் - உயிர் - முதலிய எல்லா அமைப்புக்களின் உயர்வாகிய தொகுதி. வனப்பு வண்ணக் கூறுபாடுகள் மூன்றனுள் ஒன்றாயும், நிறம் எனப் பெறுவதாயும் உள்ள இசைநிலை என்றலுமொன்று 953 - உரை பார்க்க.

பண் பயிலும் திருக்கடைக்காப்புச் சாத்த - இப்பதிகத்துக்கென்று எடுத்த தனிப் பண்ணின் தன்மையினை முற்றுப்பெற வைக்க என்றது குறிப்பு. சாத்த-சாத்தி முடிக்கவே.

வேதியனார் - சாத்தப் - பாணனார் - அணைந்து - புக்கார்க்கு - சாத்த என்ற வினையெச்சம் **புக்கார்க்கு** என்ற பிறவினைமுதல் வினையின் வினைப் பெயர்ப்பகுதி யொடுமுடிந்தது. **புக்கார்க்கு** - புக்காராகிய அவர்க்கு. **அணைந்து** பதிகம் பாடிய திருமுன்பு நின்றும் பிள்ளையார் புறமுன்றிலில் அணைய, அவர்பால் அணைந்து; 2355 பார்க்க.

எண்பெருகும் - இதன் தனித் தன்மைபற்றி நூல் வல்லோர் யாவருடைய எண்ணத்திலும் பெருக நிகழும். எண் - மதிப்பு என்றலுமாம்

நரம்பில் அடங்கிற் றில்லை - யாழ் நரம்பில் அமைவு பெறவில்லை; அடங்கவில்லை என்னாது அடங்கிற்றில்லை என்றதனால், பின்னர்ப் பிள்ளையார் தெரிந்துணர்த்து மாற்றால் (2350) ஒருவாறு நரம்பில் அடங்கிற்றாயினும், முன்புபோல் கைக்கொண்டு நடத்த அடங்கவில்லை என்பது குறிப்பு.

நண்புடை யாழ் - தாம் பன்னாட் பழகிய மரபில் வந்த யாழ்; தலை நட்புடை யார் போல் எந்நாளும் பிரியாதுடனிருத்தலும் குறிப்பு. பகை நரம்பு தொடாது நிகழ்வது என்றலும் குறிப்பு.

முன்புபோல் - இதற்கு முன்னெல்லாம் பிள்ளையா ரருளிச்செய்த அருமையுடைப் பதிகம்தாம் யாழினாற் பயிற்றிய வழக்கம்போல (2342).

அன்றே - அசை. 448

திருத்தருமபுரம்

திருச்சிற்றம்பலம் **யாழ்மூரிப் பதிகம்**

மாதர்ம டப்பிடியு மட வன்னமு மன்னதோர்
நடை யுடைம் மலை மக. டுணையென மகிழ்வர்
பூதவி னப்படைநின் றிசை பாடவு மாடுவ
ரவர் படர் சடைந் நெடு முடியதொர் புனலர்
வேதமொ டேழிசைபா டுவ ராழ்கடல் வெண்டிரை
யிரைந் நுரை கரை பொரு துவிம்மிநின் றயலே
தாதவிழ் புன்னைதயங் கும லர்ச்சிறை வண்டறை
யெழில் பொழில் குயில் பயில் தருமபு ரம்பதியே (1)

பொன்னெடு நன்மணிமா ளிகை சூழ்விழ வம்மலி
பொரூஉ புன றிரூஉ வமர் புகலியென் றுலகிற்
றன்னொடு நேர்பிறவில் பதி ஞானசம் பந்தனஃ
துசெந் தமிழ்த் தடங் கடற் றருமபுரம் பதியைப்

பின்னெடு வார்சடையிற் பிறை யும்மர வும்முடை
யவன் பிணை துணை கழல் கள்பேணுத லுரியா
ரின்னெடு நன்னுல கெய்துவ ரெய்திய போகமும்
முறு வர்கள் ளிடர் பிணி துயரணைவ் விலரே. (11)

திருச்சிற்றம்பலம்

குறிப்பு:- இப்பதிகப் பண் இன்னதென்று துணியக்கூட வில்லை. **பண் யாழ்மூரி** என்று சில பதிப்புகளிற் கண்டுள்ளது. யாழ்மூரி என்றதொரு பண்ணில்லை. சில பதிப்புகளில் இதன் பண் - மேகராகக் குறிஞ்சி என்றும், சிலவற்றில் வியாழக் குறிஞ்சி என்றும் பலவாறு காணப்படுகிறது.

பதிகக் குறிப்பு:- இறைவர்க்கிடம் தருமபுரம் பதியே (8)

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) மாதர் - அழகிய; பாடுவர் - அவர்க்கிடம் தருமபுரம் பதியே என்று விரித்துரைக்க. பிறவு மிவ்வாறே. (2) சங்கு-இலங்கொளி - கடற்றிரையால் உதையுண்டு. வெண்மணற்குவைசேரும் சங்கு அங்கு முத்து ஈன அவ் வொளியினால் இருள் நீங்க நின்றது என்றது; "கடலேறி-முத்தங்கீன் றலைக்கும்" என்ற மேகராகக் குறிஞ்சிப் பண் - திருவையாறு (2) பாட்டுக் கருத்தும் பார்க்க. இங்குக் கடற்கரை யாதலின் **வெண் மணற்குவை** என்றார். குவைமேல் ஏறும்படி அலை பெருகி மோதுகின்றதென்பது.-(3) **கழிந்தவர்** - இறந்தோர்; பிரியார் - **அரிவையை** - எப்போதும் அருளுடன் கூடியிருப்பர்;- (4) **கார்** - கார் காலம்; **உறைபதி காடர்** என்க; **கொளல் பரிபவம் நினையார்** - கொள்ளுதலின் (ஏற்பதன்) அவமானத்தை எண்ணாதவர்;- (5)**உணரப்புகில் நேர் அவர்க்கு இல்லை** - என்க. **நேர்** - உவமம் - ஒப்பு; **அலங்கல்** - மாலை;-(6) **எள்கிட** - இகழ **வண்டு ஏழிசை முரன்று** என்க. கானலில் **அள்ளல்** - கழிக்கானல்; **இசை** - இடத்துக்கு இசைந்த; வண்டு பாடும் இசையினால் என்ற குறிப்புமாம்;- (7) இப் பாட்டில் மருதமும் நெய்தலும் மயங்கிய வளம் திணை மயக்கம் பெறக் கூறப்பட்டது. 1123 பார்க்க. -(8) **பாவணமா அலற** - சாமவேதம் பாடி அலறிப் போற்ற; **தாவணம்** - தாண்டித் - தாவிச் செல்லும் இயல்பு; **அடிகட்கிடம் தருமபுரம் பதியே** என்று இப்பதிகப் பாட்டுக்களை முடிக்கும் இயைபு இதனுட் குறிக்கப்பட்டது.- (9) **சிலை** - வில்லாக; **தனிமலை** - மேரு; **செல்வனும் மிசையவனும் அளவும் அறியார்** என்க.-(10) **பொய்ம்மொழிந்து** - பொய் மொழிய; செய்ய என்ற வாய்பாட்டு வினையெச்சத் திரிபு; **சவம் தவர்** - பிணங்கள் கிடக்கின்ற; அலைபடு கின்ற; **சிவந்தவர்** என்பதும் பாடம் **பிரியார்-3-வது** பாட்டுப் பார்க்க; **தத்து**-மேலே தவழ்ந்து வீழ்கின்ற; (11) **பொருபுனல்** - மோதும் அலையுடைய (காவிரி).

தலவிசேடம்:- திருத்தருமபுரம் - காவிரித் தென்கரை 51-வது பதி; பாண்டவருள் தருமராசன் வழிபட்ட பேறுபெற்ற காரணத்தால் இப்பெயர்பெற்றது; பிரமதேவனும் வழிபட்ட தலம். திருநீலகண்டப் பாண நாயனாரது தாயார் பிறந்த பதி; இங்கு ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளியபோது யாழ்மூரிப் பண் பதிகம் அருளிய வரலாற்றினாற் புகழ் சிறந்தது. வரலாறு புராணத்துட் காண்க; சுவாமி மிக அழகுடைய பசிய சோதிலிங்கத்

2347. அப்பொழுது திருநீல கண்டவிசைப் பெரும்பாண ரதனை விட்டு
மெய்ப்பயமும் பரிவுமுறப் பிள்ளையார் கழலிணைவீழ்ந் தெழுந்து நோக்கி
"யிப்பெரியோ ரருள்செய்த திருப்பதிகத் திசையாழி னேற்ப னென்னச்
செப்பியதிக் கருவியைநான் றொடுதலினன் றோ?" வென்று தெளிந்து செய்வார். 449

---

*திருமேனி; சுவாமி - **யாழ்மூரி நாதர்;** அம்மை - **மதுரமின்னம்மை;** பதிகம் 1. பிரெஞ்சுக்காரர் ஆளுகைக்குட்பட்டது.*

இது காரைக்கால் நிலயத்தினின்றும் மேற்கே கற்சாலை வழி 1/2 நாழிகை யளவில் உள்ளது; காரைக்காலினின்றும் கிழக்கே 1½ நாழிகை யளவிலும் அடையலாம்.

2347. **பொருளுரை...** *அப்பொழுது...விட்டு - அப்பொழுது திருநீலகண்ட யாழ்ப்பாணனார் யாழ் நடத்தப்புகும் செயலைவிட்டு; மெய்ப் பயமும்...நோக்கி - உடலில் நடுக்கமும் மனத்தில் வருத்தமும் பொருந்தப் பிள்ளையாரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி எழுந்து நின்று அவரை நோக்கி; இப்பெரியோர்...என்ற - இந்தப் பெரியோர் அருளிச் செய்த திருப்பதிகத்தின் இசையினை யாழில் இயற்றுவேன் என்று மேற்கொள்ளச் செய்தது இந்த யாழ்க் கருவியை நான் தொடுதலால் விளைந்த தல்லவா? என்று; தெளிந்து செய்வார் - மனத்தினுள் தெளிவு கொண்டு அதற்குத் தகவே மேற்செயல் செய்வாராகி;*

விளக்கவுரை...அப்பொழுது...*திருப்பதிகத்தின் இசை யாழ் நரம்பில் இட அடங்காமை கண்ட அப்போது;* ***அதனை*** *- பதிகத் திசையினை யாழில் இட்டு நடத்தும் அச்செயலை.*

மெய்ப்பயமும் பரிவுமுற *- மெய்ப்பயம் - அச்சத்தால் வந்த உடல் நடுக்கம்; அச்சமாவது இசை முயற்சிகளால் கண்டத்தும் கலத்தும் அடங்காதவகை அருளாற் பாடிய பதிகம் அவ்வாறு அடங்குமோ அடங்காதோ என்று காண முயன்ற அபசாரத்தால் ஆகியது;* ***பயம்*** *- பயத்தாற் போந்த நடுக்கத்துக்காகியது;* ***பரிவு*** *- உள்ளத்தில் வந்த வருத்தம். முன்னையது புற நிகழ்ச்சி; இது அக நிகழ்ச்சி; இதற்கு இவ்வாறன்றி மெய்யொழுக்கங் காரணமாக நிகழ்ந்த அச்சமும் பிள்ளையார்பால் அன்பும் மிக மேலிட்டுப் பொருந்த என்று உரைப்பினுமமையும்.*

பிள்ளையார் கழலினை வீழ்ந்து எழுந்து *- அவர்பால் அபசாரத்திற்குத் தீர்வு வேண்டுவார்போலப் பணிந்தனர்.*

நோக்கி - என்று தெளிந்து *- என்று கூட்டுக.* ***நோக்கி*** *- (பிள்ளையாரை) நோக்கி -* ***என்று*** *- (2348) என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.* ***நோக்கி*** *- உள்ளே நோக்கி ஆய்ந்து தெளிந்து என்றலுமாம்.*

"இப்பெரியோர்-தொடுதலினன்றோ?" என்று தெளிந்து *- இது பாணனார் மனத்துள் ஆய்ந்து தெளிந்து கொண்ட முடிபாகிய உள் நிகழ்ச்சி; மேல்வரும் பாட்டில் "வீக்கு-இது" என்று - என்பது அம் முடிபின் பயனாய்ப் புற நிகழ்ச்சி யாகிய சொல்.*

2348. "வீக்குநரம் புடையாழி னால்விளைந்த திது" வென்றங் கதனைப் போக்க
வோக்குதலுந், தடுத்தருளி, "ையயரே! யுற்றவிசை யளவி னானீர்
ஆக்கியவிக் கருவியினைத் தாரு" மென வாங்கிக்கொண் டவனி செய்த
பாக்கியத்தின் மெய்வடிவாம் பாலறா வாயர்பணித் தருளு கின்றார், **450**

திருப்பதிகம் - இங்கு யாழிலடங்காத வகைகாட்ட எழுந்த இத்திருப்பதிகம்; *யாழில் ஏற்பன் என்னச் செப்பியது* - *செப்பியது* - தூண்டியது; உள்ளே நின்று சொல்லியது - என்ற பொருளில் வந்தது; *என்ன* - என்று முயற்சிக்க; இதற்கு இவ்வாறன்றிப் பிள்ளையாரது எப்பதிகங்களையும் யாழிலிட்டியற்றுவேன் என்று பாராட்டிக்கொண்டு சுற்றத்தாரிடம் சொல்லியது என்று உரை கொண்டனர் முன் உரைகாரர். அது பிள்ளையார் அருள் வழியே இதுவரை நிகழ்ந்ததாதலானும், அதனுட் குற்றமாகிய செயல் ஒன்றுமின்மையானும் அப்பொருள் பொருந்தாமை யறிக.

கருவியை நான் தொடுதலின் அன்றோ - *தொடுதல்* - தொட்டுப் பயிற்றுதல். யாழ் வாசிக்கு முறை நரம்புகளைத் தொட்டுத் தடவித் தெறிக்கு முயற்சிகளே யாதல் காண்க. இதனைத் தொட்ட குற்றம் என்று இழிவுக் குறிப்புப்பட உரைத்தலுமாம்.தொடுதலான் அன்றோ செப்பிய குற்றம் நிகழ்வதாயிற்று என்று விரித்துரைத்துக் கொள்க.

இப்பெரியோர் - *இக்கருவி* - என்ற அண்மைச் சுட்டுக்கள் முறையே பெருமையும் சிறுமையும் குறித்து நின்றன. "எத்தனையு மரியநீ யெளியை யானாய்" (தேவா) என்புழிப்போலக் காண்க.

தெளிந்து - மனத்தினுள் ஆய்ந்து முடிபு செய்து. *செய்வார்* -- முற்றெச்சம். செய்வாராய் - ஓக்குதலும் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

அருள் செய்ய - *செப்பியவிக்* - என்பனவும் பாடங்கள். *449*

2348. பொருளுரை...வீக்கு நரம்புடை...ஒக்குதலும் - "முறுக்கிக் கட்டிய நரம்புகளையுடைய யாழினால் விளைந்தது இந்தக் குற்றம்" என்று கூறி, அவ்விடத்து அதனை மோதி முரிக்கும்படி ஓங்கினபோது; *அவனிசெய்த-பாலறாவாயர்* -உலகம் செய்த பாக்கியத்தின் மெய்வடிவாயுள்ள பாலறாவாயராகிய பிள்ளையார்; *தடுத்தருளி*- பாணனாரது அச்செயலைத் தடுத்தருளி; *ஐயரே!..வாங்கிக் கொண்டு* - ஐயரே! பொருந்திய இசைநூலில் விதித்த அளவுப்படி நீர் இயற்றல் செய்யும் இந்த யாழ்க் கருவியினைத் தாரும் என்று பணித்து அதனைத் தமது திருக் கரத்தினில் வாங்கிக் கொண்டு; *பணித்தருளுகின்றார்* - மேலும் கட்டளையிடுகின்றாராய்;

விளக்கவுரை- *இது* இவ்வபராதம் - திருவருளை ஐயப்பட்டு அளக்க முயன்ற தீமை. முன்பாட்டில் *அதனை விட்டு* - என்ற செயலின் குறிப்பு.

அதனைப் போக்க - யாழினைக் கெடுக்க - முரிக்க; தீமை விளைதற்குக் கருவியா யிருந்த அதனை என்க. *அதனை* - விளைந்தது இது என்ற அத் தீமையை ஒழிக்க என்ற

குறிப்புப்பட உரைத்தலுமொன்று; இப் பொருளில் தீமை, அதற்குக் காரணமாயிருந்ததனை ஒழிக்க ஒழியும் என்றது குறிப்பு.

ஒக்குதல் - தரையில் மோதி முரிக்கும்படி எடுத்து மேல் ஓங்குதல்.

ஐயரே - இது பாணனாரைப் பிள்ளையார் விளித்தது.

ஐயர் - மேன்மை யுடையவர்; "ஐயரே!" (1070), "ஐயர் நீரவதரித்திட" (2007) முதலியவை காண்க. **ஐயர்** என்பது குலமரபின் நிலைகுறியாது குணப் பெருமை பற்றிக் கூறும் பெருமை குறிக்கும் பெயராய் வழங்கியது முற்கால நல்வழக்கு. மேற் பாட்டிலும் "ஐயர்நீர்!" என்பதும் கருதுக. தில்லை வாழந்தணர்கள் திருநாளைப் போவார் நாயனாரையும், ஆளுடைய பிள்ளையார் திருநீலகண்டப் பெரும்பாணனாரையும் ஐயரே! என விளித்த வரலாற்றின் குறிப்பும் ஓர்க.

உள்ள இசையினால் நீர் ஆக்கிய இக்கருவி - இசை - இசைநூல் விதித்த இலக்கண அமைதி; ஆகுபெயர். **நீர் ஆக்கிய** - இறைவராற் படைக்கப்பட்டதன்றி மக்களின் முயற்சியினால் ஆக்கப்பட்டதாதலின் இறைவரது அருளின் அளவு அமைக்கப் பெறாதென்பது குறிப்பு, இசைக் கருவி ஆக்கும் முறை முன் 938 - 939 - 948 - முதலியவற்றுள் குழலுக்கு உரைத்தாங்கு யாழுக்கு ஏற்பவை கொள்க. **இக்கருவி** - பெரும்பான்மையால் பேரியாழ், மகரயாழ், சகோடயாழ், செங்கோட்டியாழ் என யாழ் நான்கு வகைப்படும். இவையன்றிச் சிறு பான்மையால் வருவனவும் உண்டு. பேரியாழினுக்கு இருபத்தொன்றும், மகர யாழிற்குப் பதினேழும், சகோட யாழிற்குப் பதினாலும், செங்கோட்டி யாழுக்கு ஏழுமாக நரம்புகள் கொள்ளப்படும். இவற்றுள் திருநீலகண்டப் பெரும்பாணர் கைக்கொண்டது சகோட யாழ் (1858). மற்றும் இவற்றின் பலவுறுப்புக்களாகிய கோடு, ஆணி , பத்தர் நரம்பு முதலாயின எல்லாம் சிலப்பதிகாரம் அரங்கேற்று காதை 26, கானல்வரி - கட்டுரை 34, சிந்தாமணி காந்தருவதத்தையாரிலம்பகம் 228 எனும் இவற்றின் உரைகளிலும் அரும்பதவுரையினும் கண்டுகொள்க.

அவனி செய்த பாக்கியத்தின் மெய்வடிவாம் - நில உலகத்தினர் செய்த புண்ணியத்தின் சத்திய வடிவம்; **பாக்கியம் - தெய்வம் - நல்வினை - ஊழ்** - என்பர் பரிமேலழகர்; "பலரறியார் பாக்கியத்தால்" குறள் - (1141); **மெய்வடிவு** - பாக்கிய மெல்லாம் உருவெடுத்தாற் போன்ற திருவடிவு; "எங்கள் பாக்கியப் பயன்" (காஞ்சிப் புராணம்) என்று மாதவச் சிவஞானமுனிவர் இக்கருத்தை எடுத்தாண்டருளினர். இவ்வாறன்றிப் **பாக்கியத்தின் மெய்வடிவாம்** என்றதற்கு பாக்கியத்தினால் வந்த மெய்யே வடிவமாயுள்ளவர் என்றுரைத்தலுமாம். அவனி செய்த பாக்கியத்தால் பிள்ளையார் இவ்வுலகில் வந்தார் என்பது "மிசையுலகும் பிறவுலகும் மேதினியே தனிவெல்ல" என்றும், "திசையனைத்தின் பெருமையெலாந் தென்றிசையே வென்றேற" (1922) என்றும் கூறிய வாற்றானறிக; இப்பொருளில் **மெய்வடிவு** - பாசத்தானன்றி ஞானமே உருவாய் வந்த வடிவம்; "மெய்த்திரு வாக்கெனு மமுதம்' (ஞான - புரா - 1088); "மெய்த்தன்மை விளங்கு திருச்செவி" (2376); 'பாசமற்றிலராயினும்" (2087) என்பவை காண்க.

2349. "ஐயர்! நீர் யாழிதனை முரிக்குமதெ? னாளுடையா ளுடனே கூடச்
செய்யசடை யாரளித்த திருவருளின் பெருமையெலாந் தெரிய நம்பால்
எய்தியவிக் கருவியினி லளவுபடு மோ ?நந்த மியல்புக் கேற்ப
வையகத்தோ ரறிவுறவிக் கருவியள வையினியற்றல் வழக்கே"யென்றார்; 451

பாலறாவாயர் - "சுந்தரப் பொற்றோணிமிசை... பவளவாயர்" (1995) என்ற விடத்து விரித்துரைத்த கருத்தினாற் போந்த பெயர்.

பணித்தருளுகின்றார் - முற்றெச்சம்: அருள்வாராய் - என்றாராகி (2349) - எனக் கொடுப்ப (2350) என்று மேல்வரும் பாட்டுக்களுடன் தொடர்ந்து முடிக்க.

இசை யுணர்வினால் - பரிந்தருளுகின்றார் - என்பனவும் பாடங்கள். 450

2349. பொருளுரை:"ஐயர்!நீர்...முரிக்கும் அதென்?" - ஐயரே! நீர் இந்த யாழினை முரிக்கும் செயல் யாது கருதி; "ஆளுடையாளுடனேகூட...அளவு படுமோ?" - ஆளுடைய பிராட்டியாருடனே கூடிச் சிவந்த சடையினையுடைய இறைவர் அளித்தருளிய திருவருளினது பெருமையெல்லாம் தெரிவதற்கு நம்மிடத்தில் பொருந்திய இந்தக் கருவியின் அளவில் அடங்குமோ?; (அடங்காது); "நந்தம்...வழக்கே" என்றார் - "நமது இயல்புக்குத் தக்கவாறு இவ்வுலகத்தவர்கள் அறியும்படியாக இந்தக் கருவியின் அளவைக்குள் அமையும் நிலையில் இயற்றுதலே வழக்காகும்" என்றருளிச் செய்து;

விளக்கவுரை... முரிக்குமது என்? என்பதும், அளவுபடுமோ? என்பதும், இயற்றல் வழக்கே! என்பதும் ஆகிய மூன்று திறமும் பிள்ளையார் பணித்த நிலைகள்.

ஆளுடையாள்.... அளவுபடுமோ? - இது பிள்ளையார் பணித்த இரண்டாவது பொருள்; முரித்தற்குக் காரணமுமில்லை எனவும், காரணம் இருத்தல் இயலாது எனவும் அறிவித்தற் பொருட்டுக் கூறியபடி; படுமோ? ஓ - எதிர்மறை குறித்தது. இது அருளின் பெருமை அளவுபடா தென்றது.

நந்தம்...வழக்கே! - இது பிள்ளையார் அருளிய மூன்றாவது பொருள்; அவ்வாறு அளவுபடாதாயின் கருவியினியற்றல் எவ்வாற்றானும் வேண்டப்படாதே என்று எழும் ஐயப்பாட்டினை நீக்க எடுத்து முடித்துக் காட்டியபடி இசையின் பெருமை யளவுபடாமை கூறியது.

வையகத்தோர் அறிவுற - அளவுபடாவாயினும் அக்குறைவுடன் இயற்றுதற்குக் காரணங் கூறியபடி; ஒன்றும் அறியாதாரை ஒருவாறு தெருட்டுதல் வழக்கேயாம் என்றார்; வழக்கு - தொன்று தொட்டுவரும் ஆன்றோர் வழக்கு என்று அமைதியும் நியாயமும் காட்டப்பட்டன. வழங்கிவரும் முறை வழக்கு; "வந்தவா றிசைவே யன்றோ வழக்கு" (198); "வழக்கினைச் சாரச் சொன்னான்" (199) முதலியவையும் இப்பொருளேபற்றி எழுந்தன காண்க.

நந்தம் - தன்மையும் உளப்படுத்திக் கூறினார் முன் இதுவரை தாமும் உடனிருந்து திருப்பதிகங்களை யாழிலியற்ற அருளிச் செய்து உடன் தாளங்கொடு பாடிவந்த

2350. "சிந்தையா லளவுபடா விசைப்பெருமை செயலளவி லெய்து மோ ?நீர்
இந்தயா ழினைக்கொண்டே யிறைவர்திருப் பதிகவிசை யிதனி லெய்த
வந்தவா றேபாடி வாசிப்பீ" ரெனக் கொடுப்பப் புகலி மன்னர்
தந்தயா ழினைத்தொழுது கைக்கொண்டு பெரும்பாணர் தலைமேற் கொண்டார். 452

வழக்கினையும், பாணனாரையும் உலகரையும் உண்மை அறிவுறுத்தித் தெளிவிக்கும் உரிமையினையும் குறித்தற்கு; நம்பால் - என்றதுமிது.

என்றார் - என்றாராகி; முற்றெச்சம்; மேல் **என்றார்** - எனக் கொடுப்ப என்றதனோடு கூட்டி முடிக்க. வினைமுற்றாகவு முரைப்பர்; இப்பாட்டிற் கூறிய மூன்று பொருள்களாற் காட்டி முடிபுக்கு, மேலும் தொடர்ந்து காரணங்கூறி, முடிந்த முடிபாகப் பணித்துக் கட்டளையும் இடுகின்றாராதலின் வினை எச்சமாகக் கொண்டுரைத்தலே பொருத்த முடைத்தாம்.

ஆளுடையாளுடனேகூட - அளித்த திருவருள் - அம்மையப்பராய் நின்ற நிலைதான் உலகுக்கருளும் நிலை. "அம்மையப்ப ரேயுலகுக் கம்மையப்ப ரென்றறிக" எனவரும் திருக்களிற்றுப்படியாரும் காண்க. அபின்னமாகிய சத்தியுடனாக; "உடையா ளுன்ற னடுவிருக்கு முடையா ணடுவு ணீயிருத்தி" (திருவா)

திருவருளின் பெருமையெலாம் தெரிய - எய்திய இக்கருவி - அருட்பதிகப் பெருமைகளைச் சிறிய ஆற்றல்பெற்ற உயிர்கள் தம் அளவுக்கேற்ப அறியும்படி இசை நூல் வகுத்து அதன்மூலம் அறிவு ஊட்டியும், மேல் அப்பெருமை ஒருவாற்றான் அளவு பட்டும் முற்றும் அளவுபடாமை தெரிதற்குக் கருவியாய் வந்த இக்கருவி என்றதும் குறிப்பு.

கருவியின் அளவையின் - கருவியின் சிறிய அளவுக்குட்பட்டு; அடங்கும் அவ்வளவிலே.

தெளிய நம்பால் - திகழ நம்பால் - என்பனவும் பாடங்கள். 451

2350. பொருளுரை..."சிந்தையால்...எய்துமோ?" - மனத்தாலும் அளவு படுத்தப்படாத இசையின் பெருமை செயலினுட் பொருந்தச் செய்யவருமோ?; "இந்த யாழினைக் கொண்டே...வாசிப்பீர்" எனக் கொடுப்ப - இந்த யாழினைக் கருவியாகக் கொண்டு வைத்தே இறைவரது திருப்பதிகத்தினிசையினை இதனுள் பொருந்த வந்த அவ் அளவிலே பாடி வாசிப்பீராக!" என்று பாணனாரது கையினிற் கொடுத்தருள; புகலி மன்னர்...தலைமேற் கொண்டார் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அவ்வாறு பணித்துத்தந்த யாழினை அவரைத் தொழுது கையில் வாங்கிக்கொண்டு திருநீலகண்ட யாழ்ப்பாணனார் அதனைத் தலைமேல் வைத்து ஏற்றுக் கொண்டனர்.

இந்நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... **"சிந்தையால்...எய்துமோ?"** - "இக்கருவி யளவை யினியற்றல் வழக்கே" என்று பணித்தருளியதற்குக் காரணங் காட்டியவாறு. உட்கரணங்களுள் உயர்வுடைய

2351. அணைவுறுமக் கிளைஞருடன் பெரும்பாண ராளுடைய பிள்ளை யார்தந்
துணைமலர்ச்சே வடிபணிந்து துதித்தருளத் தோணிபுரத் தோன்ற லாரும்
இணையில்பெருஞ் சிறப்பருளித் தொண்டருட னப்பதியி லினிது மேவிப்
பணைநெடுங்கை மதயானை யுரித்தவர்தம் பதிபிறவும் பணியச் செல்வார், 453

சிந்தையளவுக்கும் அளவுபடா இது தாழ்ந்த புறக்கருவிகளின் தொழிற் பாடாகிய செயல் அளவுக்குட்படுமோ என்றபடி; **செயல் அளவு** - எடுத்தல் படுத்தல் முதலிய காயமுயற்சியும், வார்தல் வடித்தல் முதலிய கருவி முயற்சியுமாம்.

நீர் வாசிப்பீர் - இது, மேற்கூறியவாற்றால், கருவியளவையின் உட்படாதாயின் என் செய்வது என்று எழும் ஐயப்பாட்டினை உட்கொண்டு முடிபாகப் பிள்ளையார் கட்டளையிட்டருளியது.

எனக் கொடுப்ப - என்று பணித்து யாழினை மீண்டுந் திருநீலகண்டப்பாணனாரிடம் கொடுப்ப. யாழினைப் பிள்ளையார் தமது திருக்கரத்தில் வாங்கிப் பரிசித்து உரிய பாவனையும், தொடுதலும், "வாசிப்பீர்" என்று சொல்லுதலுமாகிய சடங்குகள் செய்து மீளத் தந்தாராதலின் பின்னர்ப் பாணனார் அது கொண்டு ஒருவாறு வாசிக்க இயல்வதாயிற்று என்க.

புகலிமன்னர்தந்த - சமஸ்காரங்கள் செய்துதந்த - என்றது குறிப்பு; பிள்ளையார் திருக்கரத்தினின்றும் போந்தமையால்.

தலைமேற் கொண்டார் - யாழினைத் தலைமேற்கொண்டார்; அவரது கட்டளையினையும் தலையிடத்தில் வைத்து ஏற்றுக் கொண்டார் என்பதும் குறிப்பு.

இந்த யாழினைக் கொண்டே - நீர்முரிக்க ஒக்கிய இந்த - இசையளவினால் நீர் ஆக்கிய இந்த - திருவருளின் பெருமை அளவுபடாதென்று தெரிந்ததாயினும் இந்த - என்று முன்கூறிய பலவும் குறிக்க **இந்த** என்று கூறினார். 452

2351. பொருளுரை - அணைவுறும் - துதித்தருள - சேர்ந்த அந்தச் சுற்றத்தார்களுடனே பெரும்பாணனார் ஆளுடைய பிள்ளையாரது இரண்டு மலர்போன்ற திருவடிகளையும் வணங்கித் துதித்தருள; தோணிபுர... மேவி - சீகாழியில் வந்தருளிய தலைவரும் ஒப்பற்ற பெருஞ் சிறப்புக்களை அவர்களுக்கு அளித்தருளித் தொண்டர்களுடனே அந்தப் பதியில் இனிது அமர்ந்தருளி; பணை... செல்வார் - பெரிய நீண்ட கையினையுடைய யானையை உரித்த இறைவரது பிற பதிகளையும் வணங்கச் செல்வாராகி,

விளக்கவுரை... **அணைவுறும் அக்கிளைஞர்** - "சாரவரும் அவர்தஞ் சுற்றத்தார்" (2342); பாணனார்பால் உடற்சார்பு பற்றி அணைந்தவர் என்பதாம்; அகரம் அருளின் நிலையறியாது யாழினாற் பதிக இசை வளர்வதாம் என்று (2343) புகழ்ச்சி மொழி கூறிய அந்த என முன்னறிசுட்டாகி, இகழ்ச்சிக் குறிப்புப்பட நின்றது. முன் அறியாதாராயினும் இப்போது பிள்ளையாரது அருளினால் உணர்த்த உணர்ந்து நன்மை பெற்றாராதலின்

2352. பங்கயப்பா சடைத்தடஞ்சூழ் பழனநாட் டகன்பதிகள் பலவு நண்ணி
மங்கையொரு பாகத்தார் மகிழ்கோயி லெனைப்பலவும் வணங்கிப் போற்றித்
தங்கிசையாழ்ப் பெரும்பாண ருடன்மறையோர் தலைவனார் சென்று சார்ந்தார்
செங்கைமான் மழுவேந்துஞ் சினவிடையா ரமர்ந்தருளுந் திருநள் ளாறு. 454

---

*அவர் திருவடி பணிந்து சிறப்பருளப் பெற்றனர் ஆதலின் **கிளைஞருடன்** என்று ஒன்று சேர்த்துப் பேசப்பட்டனர்.*

தோணிபுரத் தோன்றல் *- சீகாழியில் வந்து அவதரித்தவர்;* ***தோன்றல்*** *- புகழுடையவர் என்றலுமாம். **ஆர்** என்ற சிறப்புப் பன்மை விகுதிக் குறிப்புமது.*

சிறப்பு அருளுதல் *- திருவருள் சிறக்க என்று ஆசி கூறியருளித் திருக்கடைக்கண் சாத்துதல்.*

தொண்டருடன் *- திருநீலகண்டரேயன்றி, உடன் வந்தாரும் அங்குக் கூடினாருமாகிய ஏனைத் திருத்தொண்டர்களோடு; "உன்பற்றொழிய வொருபற்று மில்லை யுடையவனே" எனத் திருத்தொண்டினையேயன்றி ஏனை ஒரு பற்றுமில்லாதவர்களுடன். **இனிதுமேவுதலுக்குக்** காரணங் கூறியபடி.*

செல்வார் *- செல்வாராகி; முற்றெச்சம்; செல்வாராகி - நண்ணி - வணங்கிப் போற்றிச் - சார்ந்தார் என்று வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.* 453

2352. பொருளுரை... பங்கய...நண்ணி - இலைகளையுடைய தாமரைத் தடாகங்கள் சூழ்ந்த வயல்களையுடைய சோழ நாட்டின் பெரிய பதிகள் பலவற்றையும் சேர்ந்து; மங்கை....போற்றி - அம்மையாரை ஒரு பாகத்தில் உடைய இறைவர் மகிழ்ந்தமரும் திருக்கோயில்கள் ஏனைய பலவற்றையும் வணங்கித் துதித்து; செங்கை... திருநள்ளாறு - செங்கைகளினிடத்து மானையும் மழுவினையும் ஏந்துகின்ற சினத்தையுடைய விடையினையுடைய இறைவர் விரும்பி எழுந்தருளும் திருநள்ளாற்றினை; தங்குஇசை.. சார்ந்தார் - இசை தங்கும் யாழ்ப்பாணனாருடனே மறையோர் தலைவராகிய பிள்ளையார் சென்று சேர்ந்தருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... பாசடை *- பசிய இலை; தாமரைக் கொடிகள் இலைகளே பெருமையும் மிகுதியும் பசுமையும் கொண்டு வளர்வது இயல்பு; பூக்கள் சில பருவத்தே மட்டும் காணவுள்ளதும் ஏனை எல்லாக் காலத்தும், நீர்ப் பரப்பும் வெளிக் காண வியலாது, இலைகள் தடமுழுதும் செறிந்துநிறையும் தன்மை குறிக்கப் **பாசடைத்தடம்** என்றார்.*

அகன் பதிகள் பலவும் நண்ணி *- இவை **திருத்தக்களூர்** முதலாயின என்பது கருதப்படும். **திருத்தக்களூர்** - திருத் தருமபுரத்தினின்றும் வடமேற்கில் மட்சாலை வழி ஒரு நாழிகை யளவில் யடையத்தக்கது. தேவார வைப்புத்தலம்.*

பாணருடன் - மறையோர் தலைவனார் *- அன்பு நெறியின் உடன் கூடிய மரபு குறித்தது.*

2353. நள்ளாற்றி லெழுந்தருளு நம்பர்திருத் தொண்டர்குழா நயந்து சென்று
கொள்ளாற்றி லெதிர்கொண்டு குலவியுடன் சூழ்ந்தணையக் குறுகிக் கங்கைத்
தெள்ளாற்று வேணியர்தந் திருவளர்கோ புரமிறைஞ்சிச் செல்வக் கோயில்
உள்ளாற்ற வலங்கொண்டு திருமுன்பு தாழ்ந்தெழுந்தா ருணர்வின் மிக்கார். 455

எனைப்பல - மிகப்பல: ஏனைய பல: என்றலுமாம்.

இசைதங்கு யாழ் - **தங்குதல்** - நிகழ்தல்: இருப்பிடமாதல். தங்கியிசைத்தல் என்றலுமாம்.

செங்கைமான் மழுவேந்தும் சினவிடையார் - இரு கரங்களில் ஒன்றில் மானும் ஒன்றில் மழுவுமுடையார்; **கை** - கைகள் என்று பன்மையிற் கொள்க; **விடை** - ஊர்தியும் கொடியும் கொள்க. இவ்வாறு இவ்விரண்டு தன்மை பற்றிக் கூறியது பின்னரும் இருமுறை வணக்கமும் வழிபாடும் நிகழவுள்ள குறிப்புத் தருதற்கு; "பைங்கண் வெள்ளேற்றண்ணல்" முதலிய பதிகக் குறிப்புக்கள் காண்க.

அமர்ந்தருளும் - **அமர்தல்** - விரும்பி வீற்றிருத்தல்; **அருளுதல்** - வேண்டுவார்க்கு வேண்டியாங்கு அருள் புரிதல்; பின்னர்த் திருவாலவாயிலில் நிகழும் வரலாற்றுக் குறிப்பு; **நாடுடை நாயகர்** என்பது இப்பதியின் சுவாமி பெயரும், "நள்ளாறுடைய நம் பெருமானிது" வென்கொல் சொல்லாய்.... கூட லாலவா யின்க ணமர்ந்தவாறே" (நட்டபாடை) என்ற பதிகமும் காண்க. மேல்வரும் பாட்டில் "எழுந்தருளு நம்பர்" (2353) என்பதும் குறிக்க.
454

2353. **பொருளுரை**... நள்ளாற்றில்... குறுகி - திருநள்ளாற்றில் எழுந்தருளும் இறைவரது திருத்தொண்டர் கூட்டமானது விரும்பிச் சென்று எதிர்கொள்ளும் முறைமையில் எதிர்கொண்டு மகிழ்ச்சியுடன் கலந்து தம்மைச் சூழ்ந்து வரச்சென்று அடைந்து; கங்கை....இறைஞ்சி - கங்கையாகிய தெளிந்த ஆற்றினைச் சூடிய சடையினையுடைய இறைவரது செல்வம் வளரும் திருக் கோபுரத்தை வணங்கி; செல்வக் கோயிலுள் ஆற்ற வலங்கொண்டு - அருட் செல்வமிகுந்த திருக்கோயிலினுள்ளே மிகுதியாகச் சூழ்ந்து வலம்வந்து; உணர்வின்மிக்கார் - உணர்வில் மிக்கவராகிய பிள்ளையார்; திருமுன்பு தாழ்ந்தெழுந்தார் - திருமுன்னர் வணங்கி எழுந்தனர்.

விளக்கவுரை... நயத்தல் - விரும்புதலின் மிகுதி.

குலவுதல் - மகிழ்ச்சியினால் மனங்கலந்து உடன் சார்தல்.

செல்வக் கோயிலுள் - ஆற்ற - வலங்கொண்டு - செல்வ நிறைந்த கோயிலின் உள்ளே; **ஆற்ற** - மிகவும்; அனேக முறை; விதித்த முறையான் மட்டுமன்றிப் பல முறையும்; விதித்த முறையாவது கணபதி 1. சூரியன் 2. சுவாமி 3 - 5 - 7 - 9 - 11 - வரை; அம்மை - விட்டுணு 2 - 4 - வரை என்ப.

கங்கைத் தெள்ளாறு - கங்கையாகிய தெளிந்த நீரினையுடைய ஆறு; கங்கையின் நீர் மிகத் தெளிவுடைத்து என்பது; **தெள்** - தெளிவிக்கும் எனப் பிறவினையாக

2354. உருகியவன் புறுகாத லுள்ளுருகி நனையீரம் பெற்றாற் போல
மருவுதிரு மேனியெலா முகிழ்த்தெழுந்த மயிர்ப்புளகம் வளர்க்குநீராய்
அருவிசொரி திருநயனத் தானந்த வெள்ளமிழிந் தலைய நின்று
பொருவில்பதிகம்"போக மார்த்தபூண் முலையா"ளென் றெடுத்துப் போற்றி, 456

உரைப்பதுமாம்; தெளிவித்தலாவது தனது ஆற்றல் மிக்க விரிவை அடக்கிப் பனி போலாகச் செய்த சிவபெருமானது அளவிலாற்றலை உலகமறியச் செய்து உய்வித்தல்; "பரந்திழியும் புனற்கங்கை பனிபோலாகச் செறுத்தானை" (தாண் - திருவீழி - 10), "ஆயுங் கடவு ளவிர்சடைமுன் கண்டளவில் - வீயுஞ் சுரநீர் மிகை" எனப் பிற்காலத் தான்றோர் இக்கருத்தை விரித்தல் காண்க.

திருவளர்கோபுரம் - செல்வக்கோயில் - திருமுன்பு *- இம்மூன்றிடங்களினும் முறையே* ***இறைஞ்சுதல் - உள்வலங் கொள்ளுதல் - தாழ்ந்தெழுதல்*** *என்ற வழிபாட்டு முறை நிகழும் மரபு அறிவிக்கப்பட்டமை காண்க.* ***திரு - செல்வம்*** *- என்பன அருட் செல்வங் குறித்தன. பொருட் செல்வச் சிறப்பும் உடன் குறிப்பிலுணர்த்தினார்.*

உணர்வின் மிக்கார் *- உணர்வு - சிவானுபூதியாகிய அனுபவத்தினைக் குறித்தது.*

கொள் ஆற்றில் *- பிள்ளையாரை அவரது பெருமைக்குத் தக்கவாறு எதிர்கொள்ளும் முறைப்படி;* ***ஆறு*** *- முறைமை;* ***ஆறு*** *- எதிர்கொள்ள வேண்டிய வழியாகிய புறநகரில் என்றலுமாம்.* *455*

2354. பொருளுரை... உருகிய.. போல - உருகுதற்குக் காரணமாகிய அன்பு முதிர்ந்த பெருவிருப்பத்தினால் உள்ளம் உருக அதனால் நனைக்கும் ஈரத்தைப் பெற்றாற் போல; மருவு...மயிர்ப்புளகம் - பொருந்திய திருமேனி முழுதும் முகுளித்து எழுந்த மயிர்ப் புளகத்தை; வளர்க்கு நீராய்... நின்று - வளர்க்கும் நீர்போல அருவிபோல் வழிகின்ற ஆனந்தக் கண்ணீர் வெள்ளம் பெருகி அலையநின்று; பொருவில் பதிகம்... போற்றி - ஒப்பற்ற திருப்பதிகத்தைப் "போகமார்த்த பூண்முலையாள்" என்று தொடங்கித் துதித்து,

விளக்கவுரை... உருகிய...மயிர்ப்புளகம் *- உருகக் காரணமாகிய; உருகிய என்னும் பெயரெச்சம் அன்பு என்னும் ஏது (கருவி)ப் பெயர் கொண்டது.* ***உள் உருகு*** *- உள்ளே நின்றும் உருகிய;* ***அன்பு உறுகாதல்*** *- அன்பு பொருந்தி மிக்கு விளைதலால் உளதாகும் பெறவிருப்பத்தால்; காரணப் பொருளில் வந்த மூன்றனுருபு தொக்கது;* ***நனைஈரம் பெற்றாற் போல - முகிழ்த்து எழுந்த மயிர்ப்புளகம் - மயிர்ப்புளகம்*** *- மயிர்க் கூச்செறிந்து நேர்நிற்றல்; வித்து முளைப்பதற்குரிய அடி ஈரம்பெற்றபோது முளை கிளம்பி நேர்நிற்பதுபோல அன்பினால் உள் ஈரம் பெற்று மயிர் முகிழ்த்தது என்பது; வினையும் மெய்யும் பற்றி எழுந்த உவமம்.* ***முகிழ்த்தெழுதல்*** *- முளைத்து எழுதல்; அங்குரித்து என்பர். மயிர்ப்புளகம் முகிழ்த்தல் - விதை முளைத்தலும், அன்பினால் மனமுருகும் நிலை - உள்ளீரம் பெறுதலும் குறிப்பாலுணர்த்துவன. ஈரம் - இங்கு முளை நிலங்குறித்தது.*

முகிழ்த்து எழுந்த மயிர்ப்புளகம் வளர்க்கு நீராய் - நயனத்து ஆனந்த வெள்ளம்

2355. யாணரம்பி லாரவிய லிசைகூடப் பாடியே யெண்ணில் கற்பச்
சேணளவு படவோங்குந் திருக்கடைக்காப் புச்சாத்திச் செங்க ணாகப்
பூணகலத் தவர்பாதம் போற்றிசைத்துப் புறத்தணைந்து புவன மேத்தும்
பாணனார் யாழிலிடப் பாலறா வாயரருள் பணித்த போது, 457

இழிந்து அலைய - இவ்வாறு உள் ஈரத்தால் முளைத்தெழுந்த பயிரை மேல் நீர் பாய்ச்சி வளர்த்தல்போலக் கண்ணீர் உடம்பெல்லாம் மேல் வழிய என்றது வினையும் மெய்யும்பற்றி எழுந்த தொடர்நிலையுவமம். **நீராய்** - நீர் (தண்ணீர்) போன்று என்றும், நீர்மை (தன்மை) யாகி என்றும் இரட்டுற மொழிந்து உரைக்க நின்றது; **அலைய** - பலபுறமும் பரவ.

பொருவில்பதிகம் "போகமார்த்த பூண்முலையாள்" என்று எடுத்து - "போகமார்த்த பூண்முலையாள்" என்பது பதிகத்தின் தொடக்கம்; பதிகப் பாட்டுக் குறிப்புப் பார்க்க; **பொருவில் பதிகம்** - இதன் ஒப்பற்ற தன்மை ஆலவாயின்கண் பின் நிகழ்ச்சிகளாலறிய வுள்ளது. இப்பதிகமே வேறுமொரு தனிப் பதிகத்தாற் போற்றப்பட்டது காண்க.

போற்றிப் - பாடியே என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

சொரிந் திருநயனத் - என்பதும் பாடம். *456*

2355. பொருளுரை... யாழ்... பாடியே - யாழின் நரம்பில் பொருந்த இயற்றமிழும் இசைத் தமிழும் கூடும்படி பாடி; எண்ணில்.... சாத்தி - அளவில்லாத கற்ப காலங்கள் விண்ணுக்கு அப்பாலும் நிலைபெறும்படி ஓங்கும் திருக்கடைக்காப்புச் சாத்தியருளி; செங்கண்நாகம்... புறத்தணைந்து - செங்கண்ணுடைய பாம்பணியினையுடைய மார்பராகிய இறைவரது திருப்பாதங்களைத் துதிசெய்து புறமுன்றிலில் அணைந்து; பாலறாவாயர் - பிள்ளையார்; புவனமேத்தும்... யாழிலிட - உலகம் துதிக்கும் பெரும்பாணனாரை யாழில் இயற்றும்படி; பணித்தபோது - கட்டளையிட்டருளிய போது;

விளக்கவுரை... **யாழ் நரம்பில் ஆர - இயல் - இசை - கூடப் பாடியே** - முன் "மாதர் மடப்பிடி" என்ற பதிகத்தைக் "கண்டத்தும் - கலத்தினிலும் - வேத நாதவிசை முயற்சிகளால் அடங்காத வகைகாட்ட"ப் பாடியருளியது போலன்றி, இது **யாழ் நரம்பில் ஆர - இசை கூடப்** பாடியருளினார் என்பதாம். கருவியில் இசை அடங்குவதும் கூடாமையும் உயிர் முயற்சியாலும் கருவியின் அமைப்பாலுமன்றி அருள்கொண்டெடுத்த திருவுள்ளக் குறிப்பாலமைவது திருப்பதிகங்களின் உண்மைத் திறமென்க; **இயல்** - இயற்றமிழ்; **இசை** - இசைத்தமிழ்; இவை **யாழ் நரம்பில் ஆர** - கருவியினிற் பொருந்த என்றது எவ்வாறெனின், சொற்றிறனை மழலை மொழித் திறத்தின் இசை பொருந்த அவ்வாறே ஒலிப்பது யாழினியல்பாதலின் என்க. "தேம்பொ திந்தசின் மழலைமென் மொழியசெவ் வழியாழ்" (1115). **இயல் இசை கூட** - இசை பொருந்த; மிகுதிப்பட என்றலுமாம். மிகுதிப்படுதலாவது கண்டப்பாட்டில் இயலும் இசையும் பொருந்தும் அளவுக்குமேல் யாழ் நரம்பின் இன்னிசை பொருந்துதலாலுளதாம்.

எண்ணில் கற்பச்சேண் அளவுபட ஓங்கும் - "உண்புநீங்கி வானவரோ டுலகில்

2356. பிள்ளையார் திருத்தாளங் கொடுபாடப் பின்புபெரும் பாண னார்தாம்
தெள்ளமுத வின்னிசையின் றேம்பொழிதந் திரியாழைச் சிறக்க வீக்கிக்
கொள்ளவிடும் பொழுதின்கட் குவலயத்தோர் களிகூரக் குலவு சண்பை
வள்ளலார் திருவுள்ள மகிழ்ந்துதிருத் தொண்டருடன் மருவுங் காலை, 458

உறைவாரே" என்று கூறிய பதிகப்பயன் காண்க. ***கற்பம்*** *- காலமிகுதி;* ***சேண்*** *- விண்ணுலகம். "சேண்மக பதிக்கு நல்கி" (கந்தபு).* ***அளவுபட ஓங்கும்*** *- அவ்வளவும் உள்ளடங்க மேலொங்கும்;* ***ஓங்கும்*** *- இப்பதிகம் வல்லாரை ஓங்குவிக்கும் எனப் பிறவினைப் பொருளில் வந்தது.*

செங்கண் நாகப்பூண் அகலத்தார் *- சிவபெருமான். செம்மை - சினப்பண்பு; பாம்பின் கண்ணது இயல்புமாம்; "அகலம்.... நாகமார்த்த நம்பெருமான்" (1) என்ற பதிகக் கருத்தும் காண்க.*

புறத்தணைந்து - பாணனார் யாழிலிடப் பணித்த *- பாணனார் புறமுன்றிலின் நின்று தொழுதாராகப், பிள்ளையார் உள்ளே திருமுன்பு அருளிய பதிகத்தினை மீண்டும் புறமுன்றிலிற் கொடிக்கம்பத் தருகு நின்ற பாணனார்பால் அருளி, யாழிலிடும்படி பணித்தனர் என்க. முன் "அணைந்து பெரும்பாணனார்" (2346) என்ற விடத்துரைத்தவையும் பார்க்க. யாழ்ப் பெரும்பாணனார் புராணமும் (8),* ***"புறமுன்றிற்*** *கொடு புகுந்து.... யாழுங்க* ***ளிறைவருக்கிங் கியற்றுமென"*** *(2032) என்றதும் ஆண்டுரைத்தவையும் காண்க. மரபுபற்றித் திருக்கோயிலில் நின்றுதொழும் இடம் குறித்தது ஆகமநூல் விதியும், முன்னைநாள் மரபும், வழக்குமாம். இவை உயர்வு தாழ்வு குறிப்பன என்று கொண்டு இந்நாளிற் காணும் பிணக்கங்கள் வேண்டற்பாலன வல்லவென்று விடுக்க.*

புவனமேத்தும் பாணனார் *- பாணனாரது பெருமை குறித்தது.* ***பாணனாரை இடப்பணித்த*** *- என்று இரண்டனுருபு விரிக்க.* ***இட*** *- இடும்படி;* ***இடுதல்*** *- வாசித்தல்;*

பணித்தபோது *- பாடப் - பாணனார் - இடும்பொழுதின்கண் - குவலயத்தோர் களிகூர - வள்ளலார் மகிழ்ந்து - என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.*

பாலறாவாயர் அருள் பணித்தபோது *- முன்னரும் "பாலறாவாயர் பணித்தருளுகின்றார்" (2348) என்று இவ்வாற்றாற் கூறியது அருள்ஞானத் திருவாக்கு எழும் இடம் என்று குறித்தற்கு; ஈரிடத்தும்,* ***பணித்த*** *- கட்டளையிட்ட என்றது கட்டளை யிட்டருளும் உரிமையும் தகைமையும் உடையார் என்பது குறிக்க.* 457

2356. பொருளுரை... *பிள்ளையார்... பாட - பிள்ளையார் திருத்தாளத்தினைக் கொண்டு அளவொத்தறுத்து அத்திருப்பதிகத்தினைப்பாட; பின்பு...பொழுதின்கண் - அதனைப் பின்தொடர்ந்து பெரும்பாணனாரும் தெள்ளிய அமுதமாகிய இனிய இசைத்தேன் பொழியும் நரம்புகளையுடை யாழினைப் பண்ணமைதி மிக விளங்கும்படி முறுக்கிப் பதிக விசையை அமைத்துப் பாடும்போது; குவலயத்தோர் களிகூர - உலகத்தார் யாவரும் மிக்க மகிழ்ச்சியடைய; குலவு...காலை - விளங்கும் சீகாழிப் பெருவள்ளலாராகிய*

2357. மன்னுதிரு நள்ளாற்று மருந்தைவணங் கிப்போந்து வாச நன்னீர்ப்
பொன்னிவளந் தருநாட்டுப் புறம்பணைசூழ் திருப்பதிகள் பிறவும்போற்றிச்
செந்நெல்வயற் செங்கமல முகமலருந் திருச்சாத்த மங்கை மூதூர்
தன்னிலெழுந் தருளினார் சைவசிகா மணியார்மெய்த் தவத்தோர் சூழ. 459

பிள்ளையார் திருவுள்ளம் மகிழ்ந்து திருத்தொண்டர்களுடனே எழுந்தருளியிருக்கும் காலத்தில்,

விளக்கவுரை... திருத்தாளம் கொடுபாட - சிவனருளால் தரப்பெற்றும், திரு அஞ்செழுத்து எழுதப் பெற்றும், பொன்னாலியன்றதாயினும் ஓசை தரப்பெற்றும் வந்த சிறப்பெல்லாங் குறிக்கத் திரு என்று அடைமொழி தந்து சிறப்பித்தார். தாளங் கொடு பாடுதல் - தாளவொத் தறுத்தலால் இசையளவு படச் செய்து, அவ்வியைபு பெறக், கண்ட வொலியாற்பாடுதல்.

பின்பு - கொள்ள இடும்பொழுது - பாடியபின் அதனைப் பின்பற்றி அப்பதிக இசையை யாழில் வைத்து இயற்றும்பொழுது; பிள்ளையார் தாளத்துடன் பாட, அதன்பின்பு அதற்கிசையப் பாணனார் யாழினியற்றினார் என்க. இதுவரை நிகழ்ந்து வந்த முறையும் கூறியபடி.

தெள் அமுத இன்இசையின் தேம்பொழி - யாழில் இயற்றிய இசையின் சிறப்பு; தெள் அமுதம் - தெளிவிக்கும் அமுதம் போன்றது. இன்னிசை, நோய் நீக்கி உயிர்க் கின்பம் தந்து வளர்த்தலின் அமுதம் என்றார். அமுதம் பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; அதனால் நீக்கப்பட்டது நச்சிசை. இசையின் தேன் - இசையாகிய இனிய தேன். அமுதம் பயனும், தேன் சுவையும் குறித்தன. பொழிதல் - மிகத் தருதல்; மழைபோல.

கொள்ள இடும் - பதிக இசை அதனுள் அடங்க இயற்றும்.

தந்திரி - நரம்பு; தந்திரியாழ் - நரம்பையுடைய யாழ்.

வீக்குதல் - முறுக்குதல். 458

2357. பொருளுரை- மன்னு-போந்து - நிலைபெற்ற திருநள்ளாற்றில் வீற்றிருந்தருளும் மருந்தாகிய இறைவரை வணங்கி விடைபெற்றுச் சென்று; வாசநன்னீர்.... போற்றி - மணமுடைய நல்லநீர் பொருந்திய காவிரியானது பல வளங்களையும் தரும் சோழ நாட்டின் புறம்பணை சூழ்ந்த பல திருப்பதிகளையும் வணங்கித் துதித்து; சைவ சிகாமணியார் - சைவ சிகாமணியாராகிய பிள்ளையார்; மெய்த்தவத்தோர் சூழ - மெய்யடியார்கள் சூழ்ந்துவர; செந்நெல்.... எழுந்தருளினார் - செந்நெல் வயல்களில் செந்தாமரைப் பூக்கள் மாதர் முகம்போல மலர்தற்கிடமாகிய திருச்சாத்தமங்கையென்னும் பழம்பதியில் எழுந்தருளினார்.

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

2358. **நிறைசெல்வத் திருச்சாத்த மங்கையினி னீலநக்கர் தாமுஞ் சைவ**
மறையவனா ரெழுந்தருளும் படிகேட்டு வாழ்ந்துவழி விளக்கி யெங்குந்
துறைமலிதோ ரணங்கதலி கமுகுநிறை குடந்தூப தீப மாக்கி
முறைமையில்வந் தெதிர்கொள்ள வுடனணைந்து முதல்வனார் கோயில் சார்ந்தார். **460**

விளக்கவுரை. **மருந்தை** *- மருந்து போல்வாரை மருந்தென்றார். பிறவிநோய் தீர்த்தல் கருத்து; திருஆலவாயில் வந்து வாதந்தீர்த்து உதவிய கருத்தும் காண்க.*

பொன்னிவளம் தருநாடு *- சோழநாடு;* **வாசநன்னீர்** *- இடையில் மலர்ச்சோலைகளுட் புகுந்து சேரும் சிறப்புக் குறித்தது;* **நன்மை** *- உடலுக்கும் உயிர்க்கும் ஒருங்கே உறுதிதரவுள்ள தன்மை. "பூந்தண் பொன்னி" (1206).*

புறம்பணைசூழ் திருப்பதிகள் பலவும் *- புறம்பணை என்றார் கீழ்கோடிக் கடற்கரை அணித்தாகும் தன்மைபற்றி; இவை திருநள்ளாற்றுக்கும், திருச்சாத்த மங்கைக்கு மிடைப்பட்டவை. இந்நாளில் விளக்கமின்றி உள்ளன.*

செந்நெல்.. மூதூர் *- 1828-ம் பாட்டும் ஆண்டுரைத்தவையும் பார்க்க;* **முகமலர்தல்** *- மலர் முகை விரிதல் என்றும், முகம்போல மலர்தல் என்றும் உரைக்க நின்றது. "பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகயல் உகளும்" (1828) என்ற விடத்து,* **கமலம்** *முகமாகவும்,* **கயல்** *- கண்ணாகவும் இக்குறிப்புக் கொள்ளவைத்துக் கூறிய நயமும் உய்த்துணர்தற்பாலது. "வாவிதொறும் வண்கமல முகங்காட்ட" (மேகரா-1. கழுமலம்) என்றதும் இங்குக் கருதத்தக்கது.*

மெய்த்தவத்தோர் *- மெய்யடியார்கள்;* **தவம்** *- சிவபூசையும் சிவயோக சிவஞானச் செயல்களுமாம்.*

சைவசிகாமணியார் - சிகாமணியார் *- தலைமேற் சூடும் மணிபோன்றவர்; சைவத் திறத்திற் றலைசிறந்தவர் என்பதாம்.*

வளத்திரு - பிறவும் போற்ற *- என்பனவும் பாடங்கள்.* *459*

2358. பொருளுரை. *நிறைசெல்வ. கேட்டு - நிறையும் செல்வத்தையுடைய திருச்சாத்த மங்கையில் வாழும் திருநீலநக்க நாயனாரும், சைவ மறையவராகிய பிள்ளையார் எழுந்தருளும் நற்செய்தியினைக் கேட்டு; வாழ்ந்து - பெருவாழ் வடைந்தவராய்; வழி விளக்கி.. எதிர் கொள்ளவரும் - வழியெல்லாம் விளக்கஞ் செய்து எங்கும் இடையிடையே நெருங்கிய தோரணங்களையும் வாழை கமுகுகளையும் அங்கங்கே நிறைகுடம் - தூபம் - தீபம் முதலியவற்றையும் அமையச் செய்து எதிர்கொள்ள வேண்டிய முறைமைப்படி வந்து எதிர்கொள்ள; உடன் அணைந்து.. சார்ந்தார் - உடன் கூடிச் சென்றருளி இறைவரது திருக்கோயிலைச் சார்ந்தனர்.*

விளக்கவுரை: **நிறைசெல்வம்** *- "பொன்னி வளம்தரு"தலால் நிறையும் செல்வங்கள்; எந்நாளும் குறையா நிலையாதலின்* **நிறை** *என முக்காலத்துக்கும் பொது வினையாற் கூறினார்.*

2359. அயவந்தி யமர்ந்தருளு மங்கணர்தங் கோயின்மருங் கணைந்து வானோர்
உயவந்தித் தெழுமுன்றில் புடைவலங்கொண் டுட்புக்கா றொழுகுஞ் செக்கர்
மயவந்தி மதிச்சடையார் முன்றாழ்ந்து மாதவமிவ் வைய மெல்லாஞ்
செயவந்த வந்தணனார் செங்கைமேற் குவித்தெழுந்து திருமுன் னின்றார். 461

எழுந்தருளும்படி கேட்டு - படி - தன்மையினை: படியினை; இரண்டனுருபு விரிக்க.

வாழ்ந்து - கேட்ட துணையானே பெரு வாழ்வடைந்து - மகிழ்ந்து.

வழி விளக்குதல் - வரும் வழியெங்கும் திருவலகிட்டும் குளிர்புனல் விட்டும் தூய்மைப்படுத்துதல்; 1428-ன் கருத்துக் காண்க.

துறை - இடையிடங்கள்.

ஆக்கி - அமைக்கு மாற்றால் அமைத்து. தோரணம் தூக்கியும், கதலி கமுகு நாட்டியும், நிறைகுடம் முதலியன அமைதிபெறச் செய்தும் இயற்றும்வகை எல்லாம் குறிக்க **ஆக்கி** என்ற பொது வினையாற் கூறினார்.

முறைமையில் வந்து - நூல்களானும், ஆன்றோராசாரத்தானும் விதித்த முறைமையில் வந்து;

உடன் அணைந்து - மன வொருமையாற் கலந்து கூடுதல் குறித்தது. 460

2359. பொருளுரை... அயவந்தி... அணைந்து - அயவந்தி என்னும் அந்தத் திருக்கோயிலின் கண் விரும்பி வீற்றிருக்கும் இறைவருடைய திருக்கோயிலின் பக்கத்திற் சார்ந்து; வானோர் உயவந்தித்து... புக்கு - தேவர்கள் உய்யும் பொருட்டு வந்தனைகள் செய்து எழுகின்ற திருமுன்றிலின் பக்கமாக வலம் வந்து உள்ளே புகுந்து; ஆறு ஒழுகும் செக்கர் மயஅந்தி மதிச்சடையார் முன்தாழ்ந்து - கங்கையாறு ஒழுகுதற் கிடமாகிய செக்கர் மயமாகிய அந்தி மாலையிற்றோன்றும் மதியினைச் சூடிய சடையை யுடைய இறைவரது திருமுன்பு தாழ்ந்து; மாதவம்... நின்றார் - இந்தப் பூவுலக முழுதும் பெருந்தவம் செய்ததன் பயனாக இங்கு வந்து அவதரித்த அந்தணனாகிய பிள்ளையார் தமது செங்கையினைத் தலைமேற் கூப்பி வணங்கி எழுந்து நின்றார்.

விளக்கவுரை: இப்பாட்டுத் திரிபு என்ற அணியில் அழகுபெற அமைந்துள்ளது. இவ்வணியினை ஆசிரியர் மிகச் சில இடங்களில் அருகி வழங்குவர்; அவற்றுள் இஃதொன்று.

அயவந்தி - "முதல்வனார் கோயில் சார்ந்தார்" (2358) என்றது முன்பாட்டு; இங்கு அத்திருக்கோயிலினைப் பெயராற் கூறுகின்றார்.

உய வந்தித்து எழும் - உய - உய்யும்படி; **வந்தித்து** - வழிபட்டு வணங்கி; "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்" (திருவா).

புடைவலங் கொண்டு - புறத் திருமுன்றிலைச் சுற்றி வலம்வந்து; இதனால் வானோர் புறமுன்றிலில் வழிபட்டுக் கிடத்தல் கூறப்பட்டது.

2358. நிறைசெல்வத் திருச்சாத்த மங்கையினி லீலநக்கர் தாமுஞ் சைவ
மறையவனா ரெழுந்தருளும் படிகேட்டு வாழ்ந்துவழி விளக்கி யெங்குந்
துறைமலிதோ ரணங்கதலி கமுகுநிறை குடந்தூப தீப மாக்கி
முறைமையில்வந் தெதிர்கொள்ள வுடனணைந்து முதல்வனார் கோயில் சார்ந்தார். **460**

விளக்கவுரை- மருந்தை - மருந்து போல்வாரை மருந்தென்றார். பிறவிநோய் தீர்த்தல் கருத்து; திருஆலவாயில் வந்து வாதந்தீர்த்து உதவிய கருத்தும் காண்க.

பொன்னிவளம் தருநாடு - சோழநாடு; ***வாசநன்னீர்*** - இடையில் மலர்ச்சோலைகளுட் புகுந்து சேரும் சிறப்புக் குறித்தது; ***நன்மை*** - உடலுக்கும் உயிர்க்கும் ஒருங்கே உறுதிதரவுள்ள தன்மை. "பூந்தண் பொன்னி" (1206).

புறம்பணைசூழ் திருப்பதிகள் பலவும் - புறம்பணை என்றார் கீழ்கோடிக் கடற்கரை அணித்தாகும் தன்மைபற்றி; இவை திருநள்ளாற்றுக்கும், திருச்சாத்த மங்கைக்கு மிடைப்பட்டவை. இந்நாளில் விளக்கமின்றி உள்ளன.

செந்நெல்- மூதூர் - 1828-ம் பாட்டும் ஆண்டுரைத்தவையும் பார்க்க; ***முகமலர்தல்*** - மலர் முகை விரிதல் என்றும், முகம்போல மலர்தல் என்றும் உரைக்க நின்றது. "பூத்த பங்கயப் பொகுட்டின்மேற் பொருகயல் உகளும்" (1828) என்ற விடத்து, ***கமலம்*** முகமாகவும், ***கயல்*** - கண்ணாகவும் இக்குறிப்புக் கொள்ளவைத்துக் கூறிய நயமும் உய்த்துணர்தற்பாலது. "வாவிதொறும் வண்கமல முகங்காட்ட" (மேகரா-1. கழுமலம்) என்றதும் இங்குக் கருதத்தக்கது.

மெய்த்தவத்தோர் - மெய்யடியார்கள்; ***தவம்*** - சிவபூசையும் சிவயோக சிவஞானச் செயல்களுமாம்.

சைவசிகாமணியார் - சிகாமணியார் - தலைமேற் சூடும் மணிபோன்றவர்; சைவத் திறத்திற் றலைசிறந்தவர் என்பதாம்.

வளத்திரு - பிறவும் போற்ற - என்பனவும் பாடங்கள். *459*

2358. பொருளுரை- நிறைசெல்வ- கேட்டு - நிறையும் செல்வத்தையுடைய திருச்சாத்த மங்கையில் வாழும் திருநீலநக்க நாயனாரும், சைவ மறையவராகிய பிள்ளையார் எழுந்தருளும் நற்செய்தியினைக் கேட்டு; வாழ்ந்து - பெருவாழ் வடைந்தவராய்; வழி விளக்கி- எதிர் கொள்ளவரும் - வழியெல்லாம் விளக்கஞ் செய்து எங்கும் இடையிடையே நெருங்கிய தோரணங்களையும் வாழை கமுகுகளையும் அங்கங்கே நிறைகுடம் - தூபம் - தீபம் முதலியவற்றையும் அமையச் செய்து எதிர்கொள்ள வேண்டிய முறைமைப்படி வந்து எதிர்கொள்ள; உடன் அணைந்து.. சார்ந்தார் - உடன் கூடிச் சென்றருளி இறைவரது திருக்கோயிலைச் சார்ந்தனர்.

விளக்கவுரை: நிறைசெல்வம் - "பொன்னி வளம்தரு"தலால் நிறையும் செல்வங்கள்; எந்நாளும் குறையா நிலையாதலின் ***நிறை*** என முக்காலத்துக்கும் பொது வினையாற் கூறினார்.

2359. அயவந்தி யமர்ந்தருளு மங்கணர்தங் கோயின்மருங் கணைந்து வானோர்
உயவந்தித் தெழுமுன்றில் புடைவலங்கொண் டுட்புக்கா றொழுகுஞ் செக்கர்
மயவந்தி மதிச்சடையார் முன்றாழ்ந்து மாதவமிவ் வைய மெல்லாஞ்
செயவந்த வந்தணனார் செங்கைமேற் குவித்தெழுந்து திருமுன் னின்றார். 461

எழுந்தருளும்படி கேட்டு - படி - தன்மையினை; படியினை; இரண்டனுருபு விரிக்க.

வாழ்ந்து - கேட்ட துணையானே பெரு வாழ்வடைந்து - மகிழ்ந்து.

வழி விளக்குதல் - வரும் வழியெங்கும் திருவலகிட்டும் குளிர்புனல் விட்டும் தூய்மைப்படுத்துதல்; 1428-ன் கருத்துக் காண்க.

துறை - இடையிடங்கள்.

ஆக்கி - அமைக்கு மாற்றால் அமைத்து. தோரணம் தூக்கியும், கதலி கமுகு நாட்டியும், நிறைகுடம் முதலியன அமைதிபெறச் செய்தும் இயற்றும்வகை எல்லாம் குறிக்க **ஆக்கி** என்ற பொது வினையாற் கூறினார்.

முறைமையில் வந்து - நூல்களானும், ஆன்றோராசாரத்தானும் விதித்த முறைமையில் வந்து;

உடன் அணைந்து - மன வொருமையாற் கலந்து கூடுதல் குறித்தது. 460

2359. பொருளுரை... அயவந்தி... அணைந்து - அயவந்தி என்னும் அந்தத் திருக்கோயிலின் கண் விரும்பி வீற்றிருக்கும் இறைவருடைய திருக்கோயிலின் பக்கத்திற் சார்ந்து; வானோர் உயவந்தித்து... புக்கு - தேவர்கள் உய்யும் பொருட்டு வந்தனைகள் செய்து எழுகின்ற திருமுன்றிலின் பக்கமாக வலம் வந்து உள்ளே புகுந்து; ஆறு ஒழுகும் செக்கர் மயஅந்தி மதிச்சடையார் முன்தாழ்ந்து - கங்கையாறு ஒழுகுதற் கிடமாகிய செக்கர் மயமாகிய அந்தி மாலையிற்றோன்றும் மதியினைச் சூடிய சடையை யுடைய இறைவரது திருமுன்பு தாழ்ந்து; மாதவம்... நின்றார் - இந்தப் பூவுலக முழுதும் பெருந்தவம் செய்ததன் பயனாக இங்கு வந்து அவதரித்த அந்தணனாகிய பிள்ளையார் தமது செங்கையினைத் தலைமேற் கூப்பி வணங்கி எழுந்து நின்றார்.

விளக்கவுரை: இப்பாட்டுத் திரிபு என்ற அணியில் அழகுபெற அமைந்துள்ளது. இவ்வணியினை ஆசிரியர் மிகச் சில இடங்களில் அருகி வழங்குவர்; அவற்றுள் இஃதொன்று.

அயவந்தி - "முதல்வனார் கோயில் சார்ந்தார்" (2358) என்றது முன்பாட்டு; இங்கு அத்திருக்கோயிலினைப் பெயராற் கூறுகின்றார்.

உய வந்தித்து எழும் - உய - உய்யும்படி; **வந்தித்து** - வழிபட்டு வணங்கி; "வாழ்த்துவதும் வானவர்கள் தாம்வாழ்வான்" (திருவா).

புடைவலங் கொண்டு - புறத் திருமுன்றிலைச் சுற்றி வலம்வந்து; இதனால் வானோர் புறமுன்றிலில் வழிபட்டுக் கிடத்தல் கூறப்பட்டது.

2360. போற்றிசைக்கும் பாடலினாற் பொங்கியெழு மாதரவு பொழிந்து விம்ம
ஏற்றின்மிசை யிருப்பவர்த மெதிர்நின்று துதித்துப்போந் தெல்லையில்லா
நீற்றுநெறி மறையவனார் நீலநக்கர் மனையிலெழுந் தருளி யன்பால்
ஆற்றும்விருந் தவரமைப்ப வன்பருட னின்புற்றங் கமுது செய்தார். 462

ஆறு ஒழுகும் செக்கர்மய அந்தி மதிச்சடையார் - ஆறு - கங்கையாறு; ***ஆறு ஒழுகுதலாவது*** ஆயிரமாமுகத்தினொடு பரந்து விரிந்து பாய்ந்த கங்கை அதன் மிகை தணிந்து பனிபோலாகச் சிறிதாகி ஒழுங்குபட வழிதல்; ***செக்கர் மயம் - சடை*** - செவ்வானம் போன்ற நிறமுடைய சிவந்த சடை; "மாலையின் தாங்குருவே போலுஞ் சடைக்கற்றை" (அற்-அந்-65). ***அந்தி மயச்சடை - மதிச்சடை*** என்க; ***அந்தி*** - மாலைப் பொழுது; ***மதி*** - பிறை "குடதிசை மதியது சூடு சென்னி" (பிள் - தேவா - கடை முடி 6)

இவ்வையம் எலாம் மாதவம் செயவந்த அந்தணனார் - பிள்ளையார்; இந்த நிலஉலகில் உள்ள உயிர்கள் எல்லாம் செய்த தவத்தின் பயனாக அவதரித்தவர் என்பது. பிள்ளையாரது திருவவதாரத்தின் பெருமையும் அதனால் "மிசையுலகும் பிறவுலகு மேதினியே தனிவென்ற" பெருமையும் குறித்தார். ***மாதவம்*** - சிவபூசை என்று கொண்டு இவ்வுலகத்தோர் இவரது அருளுபதேசத்தால் தவஞ் செய்து உய்ய வந்த என்பதுமாம்.

அந்தணனார் - "சைவ மறையவனார்" (2358); "மறையவனார்" (2360) இப்பதி மறையவரது பதியாதற் குறிப்பு. 461

2360. பொருளுரை... போற்றிசைக்கும்... துதித்துப் போந்து - இடபத்தின்மேல் இருக்கும் இறையவர் திருமுன்பு நின்று, போற்றிசெய்யும் பாடல்களினாலே மேன்மேலும் பொங்கி எழும் அன்பு பெருகிக் கண்ணீர் பொழிந்து விம்முதல் செய்யத் துதிசெய்து புறம்போந்து; எல்லையில்லா... எழுந்தருளி - அளவுட்படாத திருநீற்று நெறியாகிய சைவ நெறியை விளக்கும் மறையவனாராகிய பிள்ளையார் திருநீலநக்க நாயனாருடைய திருமனையின்கண் எழுந்தருளிச் சென்று; அன்பால்....அமுது செய்தார் - அன்பினாற் செய்யப்படும் விருந்தினியல்புக்குரியவற்றை அவர் அமைப்பிக்க அன்பர்களோடும் இன்பம் பொருந்தி அமுதுசெய்தருளினார்.

விளக்கவுரை: பாடலினாற் றுதித்து - என்று கூட்டுக; ***போற்றிசைக்கும் பாடல்*** - யாவரும் எடுத்தேத்தும் திருப்பாடல்.

ஆதரவு பொழிந்து - ஆதரவு - அன்பு; இங்கு அன்பின் பெருக்கால் உளதாகும் கண்ணீரைக் குறித்தது; ***விம்முதல்*** - உடல் அசைதலாகிய மெய்ப்பாடு.

எல்லையிலா நீற்றுநெறி மறையவனார் - எல்லையில்லாமையாவது எக்காலத்தும் அழியாதிருக்கு மியல்பும், இன்னகாலத்துத் தோன்றிற்றென்று கூறவொண்ணாத இயல்புமாம். ***நீற்றுநெறி*** - சிவநெறி; ***நீற்றுநெறி மறையவனார்*** - பிள்ளையார்; "தூயதிரு நீற்றுநெறி யெண்டிசையுந் தனிநடப்ப" (1921); இதனை மறையவனாராகிய திருநீலநக்கர் என்று பொருள் கொண்டுரைத்து, "அந்தணனார்" என்ற எழுவாய் மேற்பாட்டினின்றும் கூட்டி உரைத்தலும் பொருந்தும்; 1832-ல் கூறிய அவரது சிவநெறியின் மேன்மையும்

2361. **நீடுதிரு நீலநக்கர் நெடுமனையில் விருந்தமுது செய்து நீர்மைப்**
பாடுமியாழ்ப் பெரும்பாண ருந்தங்க வங்கிரவு பள்ளி மேவி
யாடுமவ ரயவந்தி பணிவதனுக் கன்பருட னணைந்து சென்று
நாடியநண் புடைநீல நக்கடிக ளுடனாதர் கழலிற் றாழ்ந்து. **463**

ஈண்டுக் கருதத்தக்கது. "ஆய்ந்த மெய்ப்பொரு ணீறென வளர்க்கும்" (1830) என்றதும் கருதுக.

அன்பால் ஆற்றும் - அன்பு மிகுதியினாற் செய்யத்தக்க.

விருந்து - ஈண்டு விருந்தோம்புதலின் கண்ணே செய்யப்படும் உணவு முதலியவற்றைக் குறித்து நின்றது: ஆகுபெயர்.

அன்பருடன் - **அன்பர்** - பிள்ளையாருடன் வந்தாரும் அங்குச் சார்ந்தாரும்; **இன்புற்று** - அன்பருடன் கூடி அமுது செய்தலால் வரும் இன்பம் பெரிது என்பதாம்; **இது சுற்றம்** - நண்பர் முதலிய ஏனையோருடன் அமுது செய்தலால் உளதாகாது என்பது குறிப்பு.

விம்மி - **திளைத்துப் போந்து** - என்பனவும் பாடங்கள். 462

2361. பொருளுரை... நீடு...செய்து - நீடுகின்ற திருநீலநக்க நாயனாரது நெடிய திருமனையில் விருந்தமுது செய்தருளி; நீர்மை- மேவி - நீர்மையினிற் பாடும் திருநீலகண்ட யாழ்ப்பாணரும் உடன்தங்க அன்று அங்குப் பள்ளியமர்ந்தருளி; ஆடுமவர்... தாழ்ந்து - ஐந்தொழிற் பெருங்கூத்து ஆடும் இறைவரது அயவந்தியினைப் பணிவதற்கு அன்பர்களுடனே கூடிச் சென்று நாடிய நண்பினையுடைய திருநீலநக்க நாயனாருடனே இறைவரது திருவடிகளில் வீழ்ந்து வணங்கி,

விளக்கவுரை: விருந்தமுது செய்து - முன்னரும் "விருந்து" (2360) என்றார்; அன்பர் கூட்டம் காணுந்தோறும் புதிதாய் விளைந்து இன்பந்தர நிற்றலின்; "புணர்ந்தாற் புணருந் தொறும்பெரும் போகம்பின் னும்புதிதாய்" (கோவை - 9) என்ற தன்மை.

நீர்மைப் - பெரும்பாணர் - என இயையும். **நீர்மையாவது** சிவனடிமைத் திறத்தின் உயர் பண்பு. பண்ணின் நீர்மையுமாம்.

பாடும் யாழ் - கருவியின் இசையே யாயினும் மொழிபோல மிழற்றும் யாழின் தன்மை குறிக்கப் பாடும் என்றார்.

பெரும்பாணருந் தங்க- பாணனாரும் மதங்க சூளாமணியாரும் நீலநக்கர் திருமனையில் நடுமனை வேதியின் பாங்கர் அன்றிரவு தங்க இடம்பெற்ற வரலாற்றுக் குறிப்பு. 1856 - 1858 பாட்டுக்கள் பார்க்க. அது திருநீலநக்கரது பேரன்பின் செயலாய் அவர் புராணத்துள் விரித்தோதும் தகுதிபற்றி ஆண்டு விரிக்கப்பட்டதனால் ஈண்டு இரண்டு சொற்களாற் சுட்டிக்கூறிய கவிநயம் கண்டு கொள்க.

ஆடுமவர் - **ஆடுதல்** - ஐந்தொழிற் பெருங் கூத்தியற்றுதல். எஞ்ஞான்றும் நிகழ்வதால் ஆடும் என்ற நிகழ்கால வினையாற் கூறினார்.

2362. கோதிலா வாரமுதைக் கோமளக்கொம் புடன்கூடக் கும்பிட் டேத்தி
ஆதிமா மறைப்பொருளா லருந்தமிழின் றிருப்பதிக மருளிச் செய்வார்
நீதியா னிகழ்கின்ற நீலநக்கர் தம்பெருஞ்சீர் நிகழ வைத்துப்
பூதிசா தனர்பரவும் புனிதவிசைத் திருப்பதிகம் போற்றி செய்தார். 464

அயவந்தி பணிவதனுக்கு - அயவந்திக் கோயிலினுள் எழுந்தருளியிருக்கும் இறைவரை வழிபடுவதற்காக. கோயிலைத் தொழ என்றலும் பொருந்தும்; ஆலயந்தானு மரனெனத் தொழு மென்றதனால் அரனுக்கே வழிபாடெல்லாமாம்; தனித்தனி வழிபடினும் அவ்வழிபா டரனுக்கேயாம்.

நாடிய நண்புடை - ***நண்பு*** - அன்பு என்ற பொருளில் வந்தது; ***நாடிய*** திறம் முன் 2358-ல் எதிர்கொண்ட திறத்தாலும், 2360-ல் விருந்தமைத்த திறத்தாலும் உரைக்கப்பட்டது.
463

2362. பொருளுரை... கோதிலா... ஏத்தி - குற்றமில்லாத ஆரமுதாகிய இறைவரை அழகிய இளங் கொம்புபோன்ற அம்மையாருடனே வணங்கித் துதித்து; ஆதி... அருளிச் செய்வார் - ஆதிமாமறைகளின் பொருள்பற்றி அருந்தமிழின் றிருப்பதிகத்தினை அருளிச் செய்வாராகி; நீதியால்...போற்றி செய்தார் - வேதாகம விதியின்படி ஒழுகுகின்ற திருநீலநக்கரது பெருஞ் சிறப்புக்கள் விளங்கவைத்துத் திருநீற்று நெறித்தொண்டர்கள் போற்றுகின்ற தூய இயலிசை பொருந்திய பதிகத்தினைப் போற்றியருளிச் செய்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை: கோது இலா ஆர்அமுது - சிவபெருமான்; ***கோது*** - குற்றம்; ***இலா*** - இல்லையாகச் செய்யும்; குற்றமாவது பிறப்பிறப்புகளுக்குக் காரணமான மலக்குற்றம். ***ஆர்தல்*** - எங்கும் என்றும் நிறைதல். ***அமுது*** - மரணம் போக்கி யின்பமளிக்கும் பொருள். இஃது இறைவனுக்கன்றி ஏனைப் பொருள்களுக்கு வருதல் உபசாரம்.

கோமளக் கொம்பு - அழகிய இளம் பூங்கொம்பு போன்றாராகிய உமையம்மையார். தளிர்கள் தழைத்தற்கும் மலர்கள் பூத்தற்குமிடமாதலானும், மெல்லிதாய் ஒல்குதலானும் கொம்பு உவமானமாயிற்று; மெய்யும் பயனும் பற்றிய உவமை ஆகுபெயர். இங்கு அம்மைக்கு ***மலர்க்கண்ணி (யம்மை)*** - என்று பெயர் வழங்குதலும் "இருமலர்க் கண்ணி தன்னோடு" என்ற பதிகக் குறிப்பும் காண்க.

அமுதைக் - கொம்புடன்கூடக் கும்பிட்டேத்தி - பதிக முழுமையும், "கண்ணி தன்னோடுடனாவது", "கொடியன சாயலாளோ டுடனாவது" என அம்மையுடன் கூடிய நிலைபற்றியே போற்றியது காண்க. இது பதிகக் குறிப்பு என்பது ***உடன்கூட ஏத்திப் - பதிகம் அருளிச் செய்வார்*** என்றதனாற் காட்டப்பட்டது.

ஆதிமாமறைப் பொருளால் - பதிகம் - வேதப் பொருளை எடுத்துக்கூறி விளக்கும் பதிகம். ***மறைப் பொருளாவது*** சிவபெருமான் அம்மையப்பராயிருந்து உலகுக்கு அளும் திறத்தை விளக்குதல். "அம்மையப்பரே யுலகுக் கம்மையப்ப ரென்றறிக, வம்மையப்ப

ரப்பரிசே வந்தளிப்பர்" (1) என்ற திருக்களிற்றுப்படியாரும் காண்க. **ஆதி** - முதலாகிய; முதல்வனால் தரப்பட்ட என்றலுமாம்.

நீதியால் நிகழ்கின்ற நீலநக்கர் - "நிறையினார் நீலநக்கன்" இப்பதிகப்பாடல் (11) மற்றும் 1832-ல் கூறிய உண்மைத் தன்மையும் கருதுக. பதிகத்தினால் உலகுக்கு விளக்கப்பட்டவர்; "ஞாலமிக்க நான்மறைப் பொருள் விளக்கிய நலத்தார்" (1831) **நீதி** - சிவனருளிய ஒழுக்க நெறிவழி.

பெருஞ்சீர் நிகழவைத்து - நிகழவைத்தலாவது உலகில் நீடு பெருகும்படி பதிகத்தால் விளக்குதல்.

பூதிசாதனத்தவர் பரவும் - பதிகம் என்க. சிவநெறியில் வாழும் அன்பர்கள்; **சாதனம்** - முத்திக்கு வழியாக வுதவுவது. "போற்றிசைக்கும் பாடல்" (2360) என்ற கருத்து.

இயல் இசை - இயலும் இசையும் என்ற இருதன்மையும் பொருந்தும்.

ஆதியாமறை - என்பதும் பாடம். 464

திருச்சாத்தமங்கை

திருச்சிற்றம்பலம்

பண் : பஞ்சமம் - 3ம் திருமுறை

திருமலர்க் கொன்றைமாலை திளைக்கும்மதி சென்னி வைத்தீர்
இருமலர்க் கண்ணிதன்னோ டுடனாவது மேற்ப தொன்றே
பெருமலர்ச் சோலைமேக முரிஞ்சும் பெருஞ் சாத்த மங்கை
அருமலராதி மூர்த்தி யயவந்தி யமர்ந் தவனே. (1)

மறையினார் மல்குகாழித் தமிழ்ஞானசம் பந்தன் மன்னும்
நிறையினார் நீலநக்க னெடுமாநக ரென்று தொண்டர்
அறையுமூர் சாத்தமங்கை யயவந்திமே லாய்ந்த பத்தும்
முறைமையா லேத்தவல்லா ரிமையோரிலு முந்துவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நீலநக்கர் பரவ அயவந்தி யமர்ந்த இறைவரே! நீர் அம்மையோடுடனாவதன் கருத்து உரையீர் என்று வினாவும் முகத்தால் "ஆரமுதைக் கோமளக் கொம்புடன் கூடக் கும்பிட்டது" (2362).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மலர்க்கண்ணி** - அம்மை பெயர்; **இரு** - பெரிய; இரண்டென்றலுமாம்; பதிக முழுதும் அம்மையோடுடனாதல் போற்றப்பட்டது; (2) **அடிகள் நக்கன்** - திருநீலநக்கர்; 11-வது பாட்டும் பார்க்க; (3) **ஆனலம் தோய்ந்த** - பசுபதி (4) **பாவமற்றவர்** - தொழுதலினால் பாவ நீங்கப் பெற்ற தொண்டர்; (6) **மிக்கசீரால்**- பிறப்புக்கேற்ற ஒழுக்கச் சிறப்பால்; **தகுவார்** - தகுதி பெற்றவர்கள் - சாதியால்; பிறந்த மரபினால்; (7) **தரித்தார்** - பயின்று அறிவில் அடங்கத் தாங்கிய மறையவர் (8) **ஈரெழிற்**

2363. பரவியகா தலிற்பணிந்து பாலறா வாயர்புறத் தணைந்து பண்பு
விரவியநண் புடையடிகள் விருப்புறுகா தலிற்றங்கி மேவு நாளில்
அரவணிந்தார் பதிபிறவும் பணியவெழு மாதரவா லணைந்து செல்வார்
உரவுமனக் கருத்தொன்றா முள்ளமுடை யவர்க்குவிடை யுவந்து நல்கி, 465

கோலம் - மாதொரு பாகத் திருவுருவம்; (10) மறையோர் - இந்நகர் மறையவர் மிக்க பதியாதல்பற்றி 3-4-5-6-7 திருப்பாட்டுக்களிலும் போற்றப்பட்டது. "மறையவர் முதற்பதி" (1828), "திருமறையோர் செழுமூதூர்" (1831) என்றும், 1829-1830-1832 பாட்டுக்களினும் கூறுவன காண்க.

தலவிசேடம்:- திருச்சாத்தமங்கை - திருநீலநக்க நாயனார் புராணத்திறுதியிற் காண்க.

2363. பொருளுரை... பரவிய.... அணைந்து - போற்றிய அன்பு மிகுதியினாலே வணங்கிப் பாலறாவாயராகிய பிள்ளையார் திருக்கோயிலின் புறத்திற் சேர்ந்து; பண்பு... நாளில் - அன்பின் தன்மை பொருந்திய நட்புடைய திருநீலநக்கடிகளின் விருப்பமிக்க ஆசையினால் அங்குத் தங்கியிருந்தருளிய நாள்களில்; அரவு அணிந்தார்.... செல்வார் - பாம்பினை அணிந்த இறைவனாரது பிற பதிகளையும் வணங்க எழுந்த அன்பினாலே அங்கங்கும் சேரச் செல்வாராகி; உரவுமனம்.. நல்கி - அறிவினால் மனத்தில் எழும் கருத்து ஒன்றேயாகும் திருவுள்ளத்தையுடைய திருநீலநக்கருக்கு மகிழ்ச்சியுடன் விடை கொடுத்தருளி,

விளக்கவுரை: பரவிய...அணைந்து - இவ்வளவும் இரண்டாம் நாள் பிள்ளையார் திருப்பதிகம் பாடியருளிப் பிள்ளையார்பால் திருக்கோயிலில் நிகழ்ந்த செயல்கள். இவை முன் (2361-2262) பாட்டுக்களிற் கூறப்பட்டவை. அதன் முன்னை நாள் திருக்கோயிலில் நிகழ்ந்தவை முன் 2359-லும் 2360 முற்பகுதியிலும் கூறப்பட்டன. 2361 முற்பகுதியில் கூறியவை முன்னைநாள் இரவு நிகழ்ச்சிகள்.

பண்பு.. நாளில் - அதன்பின் பல நாள்கள் பிள்ளையார் அப்பதியிற் தங்கியருளினர் என்பதும், அது திருநீலநக்கருடைய விருப்புறு காதலின் காரணமாக நிகழ்ந்தது என்பதும் கூறியபடி.

பதிபிறவும் - செல்வாராய் - விடைநல்கிச் சென்று - ஏத்தி என மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க.

உரவு மனம் - உரவு - உணர்வு - அறிவு - நிரம்பிய. "உணர்ச்சிதான் நட்பாம் கிழமை" (குறள்)

கருத்து ஒன்றும் உள்ள முடையவர் - ஒருங்கிய மனமுடையவர்; திருநீலநக்கர்.

விடை நல்குதலாவது - தம்முடன் பின்தொடர்ந்து வருவார்க்கு விடை கொடுத்து நிறுத்துதல்.

விரவிய நண்புடை அடிகள் - "நாடிய நண்புடை" (2361). பிள்ளையாருடன் அன்புரிமையுடன் நண்புரிமையும் கொண்டவர் திருநீலநக்கர் என்க. "உரவுமனக்

2364. மற்றவர்தம் பெருங்கேண்மை மகிழ்ந்து கொண்டு
மாலயனுக் கரியபிரான் மருவு தானம்
பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப் பாடிப்
பரமர்திருத் தொண்டர்குழாம் பாங்கி னெய்தக்
கற்றவர்வாழ் கடனாகைக் காரோ ணத்துக்
கண்ணுதலைக் கைதொழுது கலந்த வோசைச்
சொற்றமிழ்மா லைகள்பாடிச் சிலநாள் வைகித்
தொழுதகன்றார் தோணிபுரத் தோன்ற லார்தாம். 466

கருத்தொன்றா முள்ளமுடையவர்" என்றதுமிக் கருத்தது. *465*

*2364. **பொருளுரை... மற்றவர்தம்.... கொண்டு** - அவருடைய (திருநீலநக்கர்) பெருநட்பினை மகிழ்ந்து மனத்துள் தாம் வைத்துக் கொண்டருளி; மாலயனுக்கு...பாடி - பிரமவிட்டுணுக்களுக்கு அரிய சிவபெருமானார் பொருந்திய பதிகள் பலப்பலவும் சென்று வணங்கித் துதித்துப் பாடி; பரமர்...பாடி - இறைவரது திருத்தொண்டர் கூட்டம் உடன் சூழ்ந்துவரச் சென்று கற்றவர்கள் வாழ்கின்ற திருநாகைக் காரோணத்தின் இறைவரை வணங்கி இசையுடன் கூடிய சொல் நிறைந்த தமிழ் மாலைகளைப் பாடி; சிலநாள்... தோன்றலார்தாம் - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அங்குச் சிலநாள்கள் தங்கி தொழுது விடைபெற்று நீங்கியருளினார்.*

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

***விளக்கவுரை: பெருங்கேண்மை மகிழ்ந்து கொண்டு** - கேண்மையினைத் தாமும் மனத்துட்கொண்டு.*

***தானம் பற்பலவும் - பணிந்து** - இவை இறையான்சேரி முதலாயின என்பது கருதப்படும்.*

***கற்றவர் வாழ்** - "கற்றவர்பயிலு நாகைக் காரோணம்" (திருநேரிசை); "கற்றார் பயில் கடனாகைக் காரோணம்" (திருவி). நாகைக்காரோணத்தின் சிறப்பு. **கற்றவர்** - அன்பினால் இறைவனை வழிபடக் கற்றவர் என்க. "கற்றதனாலாய பயன்" (குறள்).*

***ஓசை கலந்த சொல்** - என்க. **ஓசை** - இன்னிசை. இப்பாட்டு ஐயப்பாடு; முன் பின் தொடர்ந்து செல்லும் அறுசீர் விருத்தப் பாட்டுக்களினிடையே இது எண்சீர் விருத்தமாய்த் தனிப்படப் புகுந்து நிற்கின்றது. *பொருட் பொலியும் முன்பின் அறாத சொற்பொருட்டொடர்பும் காணப்பட வில்லை. மேல்வரும் பாட்டில் "கடனாகையது நீங்கி" என வருதலால் நாகைக்குச் சென்றார் எனக் கூறுதற்குப் பாட்டு வேண்டுமென்று யாத்ததுபோலக் காணப்படுகின்றது. மூர்த்தியார் புராணத்தும் (987), பிறாண்டும் இவ்வாறு காணப்படும் இடங்களும் கருதுக.*

***பரவு திருத்தொண்டர் குழாம்** - என்பதும் பாடம்.* *466*

---

* சேக்கிழார் 217 பக்கம் பார்க்க.

வேறு

2365. கழிக்கானன் மருங்கணையுங் கடனாகை யதுநீங்கிக் கங்கை யாற்றுச்
சுழிக்கானல் வேணியர்தம் பதிபலவும் பரவிப்போய்த் தோகை மார்தம்
விழிக்காவி மலர்பழனக் கீழ்வேளூர் விமலர்கழல் வணங்கி யேத்தி
மொழிக்காதற் றமிழ்மாலை புனைந்தருளி யங்ககன்றார் மூதூர் நின்றும், 467

2365. பொருளுரை... கழிக்கானல்... நீங்கி - உப்பங்கழிச் சோலைகளின் பக்கங்களில் வரும் கடற் கரையில் உள்ள நாகப்பட்டினத்தை நீங்கிப் போய்; கங்கை... போய் - கங்கை நதியின் கழிகளின் ஒலித்தல் பொருந்திய சடையினை உடைய இறைவரது பதிகள் பலவற்றையும் துதித்துச் சென்று; தோகைமார்தம்... ஏத்தி - மயில் போன்ற சாயலையுடைய பெண்களின் கண்போல நீலோற்பவ மலர்கள் மலர்தற்கிடமாகிய வயல்கள் சூழ்ந்த திருக்கீழ்வேளூரில் எழுந்தருளிய விமலனாரது திருவடிகளை வணங்கித் துதித்து; மொழிக்காதல்...புனைந்தருளி - அன்பு மிகுதியினால் தமிழ் மொழி மாலையினைச் சாத்தியருளி; அங்கு மூதூர் நின்றும் அகன்றார் - அந்தப் பழம்பதியினின்றும் நீங்கிச் சென்றருளினார்.

*விளக்கவுரை: **கழிக்கானல் மருங்கணையும் கடல்** - கழிக்கானல் - கடற்கரைச் சோலை; மணற்றிடர்களுமாம். "காதலராகிக் கழிக்கானற் கையுரைகொண்டு" (சிலப் - 6-150 - உரை); **கானல் மருங்கு கடல் அணைதலாவது** கடல் அலைகள் மேலேறி வருதல்.*

***கடல் நாகை** - கடற்கரைப் பட்டினமாகிய நாகப்பட்டினம்.*

***ஆற்றுச்சுழிக்கு ஆல் நல் வேணி** - ஆற்றுச் சுழிகள் நிறைதற்கிடமாகிய சடை. **ஆலுதல்** - ஒலித்தல், நிறைதல். **சுழி - கால் - நல்** - என்றலுமாம். (கால் - இடம்)*

***விழிக்காவி மலர் - காவி** - நீலமலர்கள் காவிகள் விழிபோல மலர்தற்கிடமாகிய; "கண்போல் மலர்ந்த காமர் சுனைமலர்" (முருகு).*

***காதன் மொழி** - என்றும், **அங்கு மூதூர் நின்றும் அகன்றார்** - என்றும் இயைவு படுத்திக் கொள்க.*

இப்பாட்டுத் திரிபு அணியில் அமைந்த சிலவற்றுள் ஒன்று. (2359 போல).

***பதிபல** - இவை திருச்சிக்கல், திருக்கண்ணங்குடி, திருவாழியூர் முதலாயின என்பது கருதப்படும். 467*

திருக்கீழ்வேளூர்

திருச்சிற்றம்பலம் **பண் : நட்டராகம் - 2ம் திருமுறை**

*மின்னு லாவிய சடையினர் விடையினர் மிளிர்தரு மரவோடும்
பன்னு லாவிய மறையொலி நாவினர் கறையணி கண்டத்தர்
பொன்னு லாவிய கொன்றையந் தாரினர் புகழ்மிகு கீழ்வேளூர்
உன்னு லாவிய சிந்தையர் மேல்வினை யோடிட வீடாமே. (1)*

குருண்ட வார்குழற் சடையுடைக் குழகனை யழகமர் கீழ்வேளூர்த்
திரண்ட மாமறை யவர்தொழும் பெருந்திருக் கோயிலெம் பெருமானை
யிருண்ட மேதியி னினமிகு வயன்மல்கு புகலிமன் சம்பந்தன்
தெருண்ட பாடல்வல் லாரவர் சிவகதி பெறுவது திடமாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருக்கீழ்வேளூரின் இறைவரைச் சிந்தை செய்தணைபவர் மேலுள்ள பிணியொடு வினைபோம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **உலாவிய** - விளங்கிய; பன் உலாவிய - பல முறை சொல்லிய வாய்மொழி வழியாக வரும்; **பன்னுதல்** - பலமுறை சொல்லுதல்; **பொன்** - பொன்நிறம்; பொன்போன்ற தாது; உன் - உன்னுதல். அழுந்தியறியதல்; ஓடிட - ஓடுதலால்; காரணப் பொருளில் வந்த வினையெச்சம்;- (2) **நீர் உலாவிய**-தங்கி யசைகின்ற; **சிர நிரைமாலை** - தலைகளை வரிசையாக்கிய மாலை; **வார் உலாவிய** - வாரணிந்த;-(3) **பண் நிலாவிய பாடல்** நிலாவுதல் - பண்பு மிகப் பரவி நிறைதல்; **உள் நிலாவி** - முற்றும் உள்ளே பொருந்தி; **உள்ளார்** - உள்ளவர்; **ஏனையோர்** - அல்லார்; **பெருந் திருக்கோயில்** - மாடக்கோயில்; மேல்வரும் பாட்டுக்களும் காண்க.-(4) **தொங்க வைத்து** - ஒழுங்குபெற ஒழுகவைத்து; **நாடு உலாவிய** - நாட்டில் பல இல்லம் தோறும் சென்று ஏற்ற;-(5) **நினைவோடும் சென்று உலாவி நின்று** - வேறு நினைவின்றி அவரையே நினைந்து சென்று வலம்வந்து திருமுன்பு நின்று;- (6) **குழல்** - அம்மையார் கூந்தல் (ஓர்புறம்). 'ஞான்ற குழல்சடைகள்" (அற்புத-அந்-26); "சடைமேலக் கொன்றை தருகனிகள் போந்து, புடைமேவித் தாழ்ந்தனவேபோலும்..குலப்பாவை நீலக்குழல்" (மேற்படி 50); **கொத்து**- பூங்கொத்து; **பித்து உலாவிய** - இறைவர்பாற் பித்துக் கொண்டு வாழும்;- (7) **நிறை** - நிறைவுடன்; நிறையுடைய அன்பரது அன்பினுள்;- (8) மலை-கயிலை;- (9) **பஞ்சு உலாவிய**-பஞ்சு போன்ற; செம்பஞ்சு தீட்டிய என்றலுமாம்; **செஞ்சொலார்** - செம்மை தரும் சொல் - மறை.-(11) **குழற்சடை** - 6-வது பாட்டுப்பார்க்க; **இருண்ட**-கரிய; **தெருண்ட** - ஞான நிறைந்த;-குறிப்பு-(1) **உலாவிய** என்ற சொல் பல பொருள்களிலும் அணிபெற அமைந்த பதிகம். பிள்ளையாரது சேய்ஞலூர்-(பழந்தக்கராகம்) "நூலடைந்த" என்ற பதிகத்துள் **அடைந்த** என்ற சொல்லணியும், அரசுகளது **கொப்புளித்த திருநேரிசையுட்** கொப்புளித்த என்ற சொல்லணியும் பிறவும் காண்க. (2) **இதனால் பெருந் திருக்கோயிலாதற்** சிறப்புவிளக்க எடுத்துக் காட்டப் பட்டது. தலச்சிறப்பு.

தலவிசேடம்:- திருக்கீழ்வேளூர் - காவிரித் தென்கரை 84-வது தலம். இங்கு வேள் -முருகப் பெருமான் வழிபட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றது. (திருப் புள்ளிருக்கு வேளூர் வேறு). இது அழகிய மாடக்கோயில். "பெருந்திருக்கோயில்" என்று பதிகத்துட் சிறப்பிக்கப்பட்டது; விமானம் கருங்கற்றிருப்பணி; மிகப் பெரிய அமைப்பு. அதுவே போன்று மற்றொரு விமானமும் உள்ளது ஆராய்ச்சிக்குரியது; அகத்தியர், இந்திரன், குபேரன் முதலியோர் பூசித்த தலம்; முருகப் பெருமானது தவத்தை அம்மை ஐந்து திக்குகளினும் காவல் புரிந்தமையால் "அஞ்சுவட்ட நாயகி" என்ற பெயருடன் துர்க்கையின் அம்சமாக முதற் சுற்றில் வடபுறத்தில் எழுந்தருளியுள்ளார்; குபேரன் கோயில் தனியாக வுள்ளது; அகத்தியர் கூத்தப்பெருமானின் வலது திருவடி தரிசித்த பதி; சுவாமி -

கேடிலியப்பர் எனத் திருத்தாண்டகத்துப் போற்றப்பட்டனர்; அதனை வடமொழி அட்சயநாதர் என மொழி பெயர்த்து வழங்கலாயிற்று; அம்மை பெயர் - **வனமுலை நாயகி;** பதிகத்துள் "வனமுலை யவளோடு" என்று போற்றப்பட்டதும் காண்க; தீர்த்தம் - **சரவணப் பொய்கை;** மரம் - **இலந்தை;** பதிகம் 2.

இது கீழ்வேளூர் நிலையத்தினின்றும் வடக்கே ஒரு நாழிகை யளவில் உள்ளது. திருவாரூர் மட்சாலை வழி 6 நாழிகையில் எளிதாயடையலாம்.

திருச்சிக்கல்

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம் - 2-ம் திருமுறை**

வானுலா வும்மதி வந்துலா வும்மதின் மாளிகை
தேனுலா வும்மலர்ச் சோலைமல் குந்திகழ் சிக்கலுள்
வேனல்வே ளைவிழித் திட்டவெண் ணெய்ப்பெரு மானடி
ஞானமா கந்நினை வார்வினை யாயின நையுமே. (1)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- (1) திருச்சிக்கலுள் வெண்ணெய்ப் பெருமானடி நினைவார் வினை நைந்து அறும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- மதிவந்து உலாவும் - சந்திரன் நிலவுலக மண்டலத்தைச் சுற்றி வருகிறான் என்பது வானநூல்; **வெண்ணெய்ப் பெருமான்** இங்கு இறைவர் பெயர்; பாட்டுத்தோறும் வைத்துப் பாடப் பெற்றது; ஞானமாக-அறிவினுள் பொருந்த வைத்து; ஞானமுண்டாகும் பொருட்டு என்றலுமாம்; நைதல் - வலியழிதல்;-(2) **மடங்கோள்வாளை** - உடல் பெருத்தும் அறிவுநிலை குன்றியும் உள்ள வாளைமீனின் இயல்பு;-(3) **வேலொண் கண்ணியினாள்** - தல அம்மை பெயர்; **நெய்தல்** - மலர். நிலக்கருப் பொருள்; 4 பாட்டில் **கைதையினைக் கூறுதலும்** காண்க.

தலவிசேடம்:- திருச்சிக்கல்:- காவிரித் தென்கரை 83-வது பதி. மாடக் கோயில்; முருகப்பிரான் விளக்கமாகச் **சிங்காரவேலர்** என்ற பெயருடன் அமர்ந்தருளும்பதி; கந்தசட்டி விழாச் சிறப்புற விளங்கும்; வசிட்டர் வழிபட்டுக் காமதேனுவைப் பெற்றனர்; வசிட்டர் காமதேனுவின் வெண்ணெய் கொண்டு இறைவர் திருமேனி கண்டு தாபித்துப் பூசித்தபின் இலிங்கத் திருவுருவம் எடுக்க இயலாதபடி சிக்கியதால் இப்பெயர்பெற்ற தலமென்பது வரலாறு. இறைவர் பெயரும் காண்க; நவநீதப் பெருமாள் என்ற பெயருடன் விட்டுணுவும் வடக்குச் சுற்றில் எழுந்தருளி யுள்ளார்; **வெண்ணெய்ப் பெருமான் - நவநீத நாதர்** என்பது வடமொழியின் பெயர்ப்பு; அம்மை - **வேனெடுங்கண்ணி** - (பதிகம் 2 பார்க்க); முருகர் - **சிங்காரவேலர்;** தீர்த்தம் - **பாற்குளம்** (க்ஷீரபுஷ்கரணி); மரம் - **மல்லிகை.** (கொடியையும் தலமரமென்பது மரபு வழக்கு) பதிகம் 1.

இது சிக்கல் நிலையித்தினின்றும் வடக்கில் 1/2 நாழிகை யளவில் உள்ளது.

2366. அருகணையுந் திருப்பதிக ளானவெலா மங்கணரைப் பணிந்து போற்றிப்
பெருகியஞானம் பெற்றபிள்ளையா ரெழுந்தருளும் பெருமை கேட்டுத்
திருமருவு செங்காட்டங் குடிநின்றுஞ் சிறுத்தொண்ட ரோடிச் சென்றங்
குருகுமனங் களிசிறப்ப வெதிர்கொண்டுதம்பதியுட் கொண்டுபுக்கார். 468

2367. சிறுத்தொண்ட ருடன்கூடச் செங்காட்டங் குடியிலெழுந் தருளிச் சீர்த்தி
நிறுத்தெண்டிக் கிலுநிலவுந் தொண்டரவர் நண்பமர்ந்து நீல கண்டம்
பொறுத்தண்ட ருயக்கொண்டார் கணபதீச் சரத்தின்கட் போகமெல்லாம்
வெறுத்துண்டிப் பிச்சைநுகர் மெய்த்தொண்டருடனணைந்தார் வேதகீதர். 469

2366. பொருளுரை— அருகணையும்...பெருமைகேட்டு - பக்கத்தில் அணையத்தக்க திருப்பதிகளிலெல்லாம் இறைவரைப் பணிந்து துதித்துப் பெருகிய ஞானத்தினைப் பெற்ற பிள்ளையார் எழுந்தருளி வருகின்ற பெருமையினைக் கேட்டு; திருமருவு-சென்று அங்குச் - செல்வம் பொருந்திய திருச்செங்காட்டங் குடியினின்றும் சிறுத்தொண்ட நாயனார் அங்கு ஓடிச்சென்று; உருகுமனம்...புக்கார் - அன்பினால் உருகும் மனம் மிக மகிழ்ச்சியடைதலினால் எதிர்கொண்டு அழைத்து வந்து தமது பதியினுள்ளே உடன்கொண்டு புகுந்தனர்.

விளக்கவுரை—அருகணையும் திருப்பதிகள் - சென்றடையத் தக்கனவாய் அருகில் உள்ள பதிகள்.

பணிந்து - போற்றி-எழுந்தருளும் பெருமை - என்று கூட்டுக.

பெருகிய ஞானம் - உலகெலாம் நிறைவுள்ள பெரிய சிவஞானம்.

ஓடி அங்கு சென்று - இது சிறுத்தொண்டருடைய அன்பின் மிகுதியும் செறிவு முணர்த்திற்று. விரைவுக்குக் காரணம் அடியார்பால் வைத்த அன்பின் மிகுதி என்பார் மேல் உருகுமனங் களிசிறப்ப என்றார்.

எதிர்கொண்டு - கொண்டு - விதிப்படி அன்பு நெறியால் போய் எதிர்கொண்டு உடன் அழைத்துக்கொண்டு. 468

2367. பொருளுரை....சிறுத்தொண்டருடன்...எழுந்தருளி - சிறுத்தொண்ட நாயனாருடனே கூடத் திருச்செங்காட்டங் குடியில் எழுந்தருளிச் சென்று; சீர்த்தி-நண்பமர்ந்து - தமது சிறப்பினை எட்டுத் திக்குகளினும் நிறுத்தி நிலைபெறும் திருத் தொண்டராகிய அவருடைய நண்பினை விரும்பி; போகமெல்லாம்..மெய்த் தொண்டருடன் - எல்லாப் போகங்களையும் உவர்த்துத் துறந்து பிச்சைஏற்ற உண்டியை நுகரும் மெய்த்தொண்டர்களுடனேகூடி; நீலகண்டம்...கணபதீச்சரத்தின்கண் - திருநீலகண்டத்தைத் தாங்கித் தேவர்களை உய்யக் கொண்டருளிய இறைவரது கணபதீச்சரத் திருக்கோயிலின்கண்; வேதகீதர் அணைந்தார் - வேதப்பொருள்தரும் கீதங்களாகிய பதிகங்களைப் பாடியருளும் பிள்ளையார் சென்று அணைந்தருளினர்.

விளக்கவுரை-செங்காட்டங் குடியில் எழுந்தருளி - இதனால் சிறுத்தொண்டர் போந்து எதிர்கொண்ட இடம் நகருக்குப் புறம்பாகிய தனியிடம் என்பதாம். ஓடிச் சென்று (2366) என்ற குறிப்பும் காண்க.

சீர்த்தி எண்திக்கிலும் நிறுத்தி நிலவும்-சீர்த்தி-மிகு புகழ். எண்டிக்கிலும் நிறுத்தி - "தேசங்கள் பல கொண்டு தேர்வேந்தன் பாற்சிறந்த" நிலையினாலும் (3664) அதற்குக் காரணமாகிய "மதியணிந்தார் திருத்தொண்டு வாய்த்த வலியுடைமை" (3666) யினாலும் இவ்வுலகில் இவர் தமக்கு எதிர் ஒருவரில்லை என்னும் பெருமையினை எங்கும் நிலைபெற வைத்து; நிலவும்-நிகழும்; இவர் தம் புராணம் பார்க்க.

தொண்டரவர் நண்பு அமர்ந்து - திருத்தொண்டு பற்றிய நண்புரிமையை விரும்பி. அமர்தல்-விரும்புதல்.

வேதகீதர் மெய்த்தொண்டருடன் - கணபதீச்சரத்தின்கண் - அணைந்தார் - என்று கூட்டுக.

போகமெல்லாம்-மெய்த்தொண்டர் - "அண்டர் வாழ்வு மமர ரிருக்கையுங், கண்டு வீற்றிருக் குங்கருத்தொன்றிலோம்..தொண்டர் பாதங்கள் சூடித் துதையிலே" (குறுந்-மயிலாடுதுறை-3); "போகம் வேண்டி வேண்டிலேன் புரந்த ராதி யின்பமும்" (திருவா); மெய்த்தொண்டர் - இயற்கை அடைமொழி; போகம் வெறுத்து - உண்டிப் பிச்சை நுகர் என்றது உண்மைத் துறவுநிலை யுணர்த்திற்று. "ஊரெலா மட்டசோறு நம்மதே" (திருவிளை - புரா.) என்ற திருவாதவூரடிகள் சரித வரலாறு ஈண்டுக் கருதற்பாலது.

நீலகண்டம் பொறுத்து அண்டர் உ(ய்)யக் கொண்டார்- தாம் விடத்தை உண்டு அண்டர் உய்யும்படி செய்து அமுதமீந்தவர்; அவரடி சார்ந்த அடியாரும் அது போலவே போகம் வெறுத்து உண்டிப்பிச்சை நுகர்பவர் என்பதும் குறிப்பு. கணபதீச்சரத் திறைவரும் பின்னர் உத்தராபதியாராய் வந்து பிள்ளைப் பலிப்பிச்சை ஏற்ற நிலையும், இங்குக் குறிப்பிற் காணத்தக்கன. இறைவர் எவ்வெத் தன்மையால் யாண்டுயாண்டு வெளிப்படுகின்றாரோ அவ்வத் தன்மை ஆண்டாண்டு அவர் அடியர்பாலும் நிகழக் காணலாம் என்பதும் குறிப்பு. இங்குப் பிள்ளையாருடன் கணபதீச்சரத் திருக்கோயிலின்கட் சென்ற தொண்டர் இயல்பினை இவ்வாற்றாற் குறித்தது மேற்காட்டிய குறிப்புக்கள் பலவும் போதருதற் கென்க.

வேதகீதர் - வேதப் பொருளையே கீதமாகப் பதிகமருளிச் செய்பவர்.

வேதவாயர் - என்பதும் பாடம். 469

2368. பொருளுரை... அங்கு அணைந்து...கூப்பி - கணபதீச்சரத் திருக்கோயிலின்கண் அணைந்து உட்புகுந்து கோயிலினை வலமாகச் சுற்றி வந்தருளிப் பாம்பையணியாகப் பூண்ட இறைவரது திருவடிக் கீழே விழுந்து சிவந்த கண்கள் கண்ணீரருவிகளைப் பொழியத் திருமுன்பு பலமுறையாலும் வணங்கி எழுந்து செங்கைகளைச் சிரமேற் குவித்துக்கொண்டு; *தங்கள்..போற்றிசைத்து*-தம்மையாண்ட பெருந்தகையாராகிய இறைவரை, சிறுத்தொண்ட நாயனார் தொழும்படி எழுந்தருளியிருந்த தன்மையினைப் பற்றிப் போற்றி மேன்மேலும்

2368. அங்கணைந்து கோயில்வலங் கொண்டருளி
யரவணிந்தா ரடிக்கீழ் வீழ்ந்து
செங்கணரு விகள்பொழியத் திருமுன்பு
பணிந்தெழுந்து செங்கை கூப்பித்
தங்கள் பெருந் தகையாரைச் சிறுத்தொண்டர்
தொழவிருந்த தன்மை போற்றிப்
பொங்கியெழு மிசைபாடிப் போற்றிசைத்தங்
கொருபரிசு புறம்பு போந்தார். 470

பொங்கி எழுகின்ற இசைப் பதிகத்தினைப் பாடித்துதித்து; அங்கு..போந்தார் - அவ்விடத்தினின்றும் ஒருவாறாக அரிதின் நோக்கிப் புறம் போந்தருளினார்.

விளக்கவுரை- அணைந்து - வலங்கொண்டருளி - வீழ்ந்து - பொழிய - பணிந்து - எழுந்து - கூப்பி - பாடிப் - போற்றிசைத்து - என்ற வினையெச்சங்கள் தனித்தனியே வழிபாட்டின் செயல்களைக் கூறினவாறு காண்க.

தங்கள் பெருந்தகையாரைப் - பாடி - என இயையும், சிறுத்தொண்டர் தொழ இருந்த தன்மைபற்றிப் பாடி என்க. சிறுத்தொண்டர் தொழத் தமது இறைவர் இருந்த தன்மை பற்றி பாடியது பதிக முழுதும் காண்க. "சிறுத் தொண்டன் பணிசெய்ய" "சிறுதொண்டர்க் கருள் செய்யும் பொருட்டாக வீற்றிருந்தான்" என்பன காண்க. "பாண்டிமாதேவி பணிசெய்து பரவ-அமர்ந்த" "குலச்சிறை குலாவி நின்றேத்தும்" - "அடிகள் நக்கன் பரவ" முதலியனவாக வரும் பதிகங்களும் கருதுக.

தங்கள் பெருந்தகையார் - அருள் தரும் உரிமைப்பாடு மிகுதி குறித்தது.

ஒருபரிசு - ஒருவாறு - பிரிந்து தரியா நிலையில் விடைபெற்று.

ஆறணிந்தார் - என்பதும் பாடம். 470

I. திருச்செங்காட்டங்குடி

திருச்சிற்றம்பலம் பண் : பஞ்சமம் - 3ம் திருமுறை

பைங்கோட்டு மலர்ப்புன்னைப் பறவைகாள் பயப்பூரச்
சங்காட்டந் தவிர்த்தென்னைத் தவிராநோய் தந்தானே
செங்காட்டங் குடிமேய **சிறுத்தொண்டன் பணி**செய்ய
வெங்காட்டு ளனலேந்தி விளையாடும் பெருமானே. (1)

பொன்னம்பூங் கழிக்கானற் புணர்துணையோ டுடன்வாழும்
அன்னங்கா ளன்றில்கா ளகன்றும்போய் வருவீர்காள்
கன்னவிறோட் சிறுத்தொண்டன் கணபதீச் சரமேய
இன்னமுத னிணையடிக்கீ ழெனதல்ல லுரையீரே. (2)

செந்தண்பூம் புனல்பரந்த செங்காட்டங் குடிமேய
வெந்தநீ றணிமார்பன் சிறுத்தொண்ட னவன்வேண்ட
அந்தண்பூங் கலிக்காழி யடிகளையே யடிபரவுஞ்
சந்தங்கொள் சம்பந்தன் றமிழுரைப்போர் தக்கோரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- தங்கள் பெருந்தகையாரைச் சிறுத்தொண்டர் தொழவிருந்த தன்மை போற்றிப் பாடியது என்று ஆசிரியர் காட்டியருளினர் (2368).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பைங்கோட்டு** - பசிய இலைகளையுடைய கொம்புகளில்; **பயப்புஊரச் சங்குஆட்டம் தவிர்த்து** - பயலை போர்த்தலால் சங்கு வளைகள் ஒலிக்க நடத்தல் தவிரச் செய்து; (சங்காட்டம் கூடுதல் என்றலுமாம்); **வெங்காடு** - சுடலை. (2) **பொன்னம்பூ** - தாழை; **கல்நவிய** - மலைபோன்ற .இதுவும் மேல்வருவனவும் கைக்கிளையின் பாற்பட்ட தூது என்னும் அகத்துறை; (3) **குட்டம்** - சிறுவாவி; **குழிக்கரை** - நீர் தங்கும் வேறு சில குழிகளின் அருகு; **சிட்டன்** - நல்ஒழுக்கமுடையவர்; (4) **மீன்இரிய** - மீன்கள் குதிக்க; குதித்தாடல் மீன்களின் இயல்பு; பாய - பிறழ; (5) **ஆரல்** - மீன்வகை; **பாரல்வாய்** - திறந்தவாய். **தூவி** - சிறுஇறகு. (7) **கருவடிய** - கருநிறமாகிய அடிப்புறமுள்ள; **ஒருவு அடியாள்** - தலைவனால் நீக்கப்பட்ட அடியவள்; **செருவடி தோள்** - போர் வல்லனவாய், வடித்தெடுக்கப்பட்டன போன்றதோள்; (8) **சீராளன்** - சிறுத்தொண்டரது திருமகனார்; சீராள தேவருக்கு 5 ஆண்டு நிறைவதன்முன் பிள்ளையார் எழுந்தருளினார் என்பது கருதப்படும்; சிறுத்தொண்ட நாயனாருக்கு அடைமொழி என்றலுமாம். (10) **நற** - தேன்; **சிறப்புலவன்** - சிறப்புடைய புலவன்; **புலவன்** - ஆயுள் வேதக் கலைஞன்; **பிறப்பிலி** - சிவபெருமான்; (11) **வேண்ட** - சிறுத்தொண்டர் பிள்ளையார்பால் அணுகிப் பணிந்து வேண்டி அவரை இங்கு அழைத்துச் சென்றனர் என்ற வரலாற்றின் அகச்சான்று. **வெந்தநீறணிமார்பன்** - "பொடிநுகரும் சிறுத்தொண்டன்" பழந்தக்கராகப் பதிகம் (10); "உம்மைப்போல நீறிட்டாருளரோ?" (சிறுத் - புரா - 78).

II. திருச்செங்காட்டங்குடி

திருச்சிற்றம்பலம்

பண் : பழந்தக்கராகம் - 1ம் திருமுறை

நறைகொண்ட மலர்தூவி விரையளிப்ப நாடோறு
முறைகொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச்
சிறைகொண்ட வண்டறையுஞ் செங்காட்டங் குடியதனுட்
கறைகொண்ட கண்டத்தான் கணபதீச் சரத்தானே. (1)

செடிநுகருஞ் சமணர்களுஞ் சீவரத்த சாக்கியரும்
படிநுகரா தயருழப்பார்க் கருளாத பண்பினான்
பொடிநுகருஞ் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாகக்
கடிநகராய் வீற்றிருந்தான் கணபதீச் சரத்தானே. (11)

திருச்சிற்றம்பலம்

2369. **போந்துமா மாத்திரர்தம் போரேற்றின் றிருமனையிற் புகுந்து சிந்தை**
வாய்ந்தமா தவரவர்தா மகிழ்ந்தருள வமர்ந்தருளி மதில்கண் மூன்றுங்
காய்ந்தமால் விடையார்தங் கணபதீச் சரம்பரவு காதல் கூர
ஏந்துநூ லணிமார்ப ரின்புற்றங் கன்பருட னிருந்த நாளில், **471**

பதிகக் குறிப்பு:- முறை கொண்டு நின்றடியார் முட்டாமே பணிசெய்யச் செங்காட்டங் குடியதனுட் சிறுத்தொண்டர்க்கருள்செய்யும் பொருட்டாகக் கணபதீச் சரத்தில் இறைவர் எழுந்தருளியுள்ளார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **முறை** - ஆகமவிதி; முறையிட்டு; (2) **பறை சங்கு** - விழாக்களின் சிறப்பு. (3) **சிரந்தை** - உடுக்கை; **வரந்தை - கிரந்தை** - பதிகள். (4) **தொங்கல்** - மாலை; (6) **நுண்ணியான் - மிகப் பெரியான்** - அணுவுக்கணுவும் மேருவுக்கு மேருவுமாவான்; வேதக் கருத்து. **நோயுளார் வாயுளான்** - நோயுள்ளார் வந்து அடையும் இயல்பும். ஏனைக்காலத்து மறக்கும் உயிரியல்பும் குறித்தது; (8) **சேடு - ஒளி;** (9) **வாழ்த்துவார் மனத்துளான்** - விளங்கியுள்ளான்; (10) **படி** - உண்மைத் தன்மை; **பொடி** - திருநீறு; **நுகர்தல்** - திருநீற்று நெறிநின்று தொண்டுபடுதல்; **அருள் செய்யும் பொருட்டாக - வீற்றிருந்தான்** - இங்கு இதன்பொருட்டே எழுந்தருளியுள்ளார் எனச் சிறுத்தொண்டரது தொண்டின் பெருமை குறித்தபடி; பிற்சரித விளைவுக் குறிப்புமாம். **பொருட்டாக** என்றதன் கவிநயமும் அணிநலமும் உட்குறிப்பும் கண்டுகளிக்க; அயர் உழப்பார்க் கருளாதான் சிறுத்தொண்டர்க் கருள்செய்யும் பொருட்டாக வீற்றிருந்தான் என்றது முரண் அணி. இஃது இறைமைத் தன்மைக் கிழுக்கின்றென்பது; "சார்ந்தாரைக் காத்தும் சலமிலனாய்" (சிவஞான - போதம்) - (11) **கண்காட்ட** - கண்போல மிளிர - **காட்ட** - உவமவாசகம்.

தலவிசேடம்:- **திருச்செங்காட்டங்குடி** - தொகுதி III பக்கம் 548.

2369. பொருளுரை- போந்து...புகுந்து - புறம்போந்து மாமாத்திரர் மரபில் அவதரித்த போரேறு போல்வாராகிய சிறுத்தொண்ட நாயனாரது திருமனையில் புகுந்து; சிந்தை... அமர்ந்தருளி - மாதவம் வாய்ந்த அவர்தாம் மனத்தில் மகிழ்ச்சியடைய விரும்பி அங்கு இருந்தருளி; மதில்கள்... கூர - மதில்களையுடைய மூன்று புரங்களையும் எரித்த மால் விடையினையுடைய இறைவரது திருக்கணபதீச்சரத்தினைத் துதிக்கும் பேரன்பு மேலுமேலும் அதிகரிக்க; ஏந்துநூல்... நாளில் - பூணுநூலினை ஏந்திய அழகிய மார்பினையுடைய பிள்ளையார் இன்பம் பொருந்தி அங்கு அன்பர்களுடனே எழுந்தருளியிருந்த நாளில்,

விளக்கவுரை: மாமாத்திரர் தம்போரேறு - மாமாத்திரர் - சிறுத்தொண்ட நாயனாரது திருமரபு.

போர் ஏறு - போரில் சிங்கஏறு போல்வார்.

ஏறு - பெரும்பான்மை விலங்கின் ஆண்பாற் பொதுப் பெயர். இங்கு உவமை ஆகுபெயர்.

*2370. திருமருக னகரின்க ணெழுந்தருளித் திங்களுடன் செங்கட் பாம்பு
மருவுநெடுஞ் சடைமவுலி மாணிக்க வண்ணர் கழல் வணங்கிப் போற்றி
யுருகியவன் புறுகாத லுள்ளலைப்பத் தெள்ளுமிசை யுடனே கூடப்
பெருகுதமிழ்த் தொடைசாத்தி யங்கிருந்தார் பெரும்புகலிப் பிள்ளையார்தாம். 472

சிந்தை - மகிழ்ந்தருள என்க. சிறுத்தொண்டர்; **மாதவமாவது அடியார் பணியும் அரன் பணியுமாம்; வாய்த்தல்** - இடைவிடாது நினைக்கப் பெறும் பேறு பெறுதல். **வாய்ந்த** - என்றது அதன் அருமை குறித்தது. பிற்சரித விளைவுக் குறிப்பு.

மகிழ்ந்தருள அமர்ந்தருளி - அவர் மன மகிழும்படி விரும்பி வீற்றிருந்து; அவரை மகிழ்வித்தலைக் கடனாகக் கொண்டு தங்கியருளி என்க.

மதில்கள் - மதில்களையுடைய புரங்கள் - நகரங்கள் - என்ற பொருள் தந்து நின்றது; ஆகுபெயர்.

மால்விடை - மால் - விட்டுணுவாகிய; பெரிய என்றலுமாம்.

காதல்கூர - கூர்தல் மிகுதல்; **கூர** - கூர்தலால் மிகுதலால்.

அன்பருடன் - ஏனைய அன்பர்களுடனும்கூடி.

நாளில் - எழுந்தருளி - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 471

2370. **பொருளுரை**... திருமருகல்... எழுந்தருளி - திருமருகல் நகரத்தில் எழுந்தருளி; திங்களுடன்...போற்றி - சந்திரனுடனே செங்கண்களையுடைய பாம்பு தங்குதற்கிடமாகிய நீண்ட சடைமுடியினையுடைய மாணிக்க வண்ணநாதருடைய திருவடிகளை வணங்கித் துதித்து; உருகிய... அலைப்ப - உருகிய அன்பு பெருகிய ஆசையானது மனத்தினுட் பொருந்தி யலைத்தலைச் செய்ய; தெள்ளும்.. சாத்தி - தெளிவிக்கும் இசையுடன் பொருந்தப் பெருகும் தமிழ் மாலையைச் சாத்தி; அங்கு இருந்தார் பெரும் புகலிப் பிள்ளையார்தாம் - அப்பதியில் பெரிய சீகாழிப் பிள்ளையார் எழுந்தருளியிருந்தனர். (தாம் - அசை).

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

விளக்கவுரை: திங்களுடன் செங்கட் பாம்பு மருவும் நெடுஞ்சடை மவுலி - திங்கள் - அமுத கலசம்; **பாம்பு** - விடம். பின்னர்ப் பாம்பின் விடந்தீர்த்து மரணம் போக்கிய அமுத நிலையின் சரித விளைவுக் குறிப்பு. **நெடுஞ்சடை** - விடமும் அமுதமுமாகிய மாறுபட்ட தன்மையுள்ள இரண்டுக்கும் இடங்கொடுத்தலின் நீண்ட சடை என்பது; பதிகம் **"சடையாய் எனுமால்"** என்று தொடங்கப்பெறும் குறிப்புமாம்.

மாணிக்க வண்ணர் - பதியின் சுவாமி பெயர்.

காதல் உள் அலைப்ப - காதல் பெருகியதனால் உள்ளத்தை நிலைகொள்ளாது அலையச் செய்ய.

தெள்ளும் இசை - தெள்ளும் - தெளிவிக்கும்; வடித்துத் தெளிந்த என்றலுமாம்.

வேறு
திருமருகல் விடந்தீர்த்தருளியது

2371. அந்நாளி லொருவணிகன் பதிக னாகி
யணைவானோர் கன்னியையு முடனே கொண்டு
பொன்னார்மே ருச்சிலையார் கோயின் மாடு
புறத்திலொரு மடத்திரவு துயிலும் போது
மின்னார்வெள் ளெயிற்றரவு கவ்வுதலுங் கிளர்ந்த
விடவேகங் கடிதுதலை மீக்கொண் டேறத்
தன்னாவி நீங்குமவன் றன்மை கண்டு
சாயலிளங் கன்னிநிலை தளர்ந்து சோர்வாள், 473

இசையுடனே கூடப் பெருகு தமிழ் - இசையும் இயலும் உடன் பொருந்தப் பெருகும் தமிழ்; பெருகுதல் - வழிவழி அதிகரித்துப் பயிலப் பெறுதல்; வண்மையினாற் பெருகும் என்றலுமாம்.

தமிழ்த் தொடை - இப்பதிகங்கள் கிடைத்தில!; "சடையாய்" என்ற பதிகம் பின்னர்ச் சரித நிகழ்ச்சியில் அருளியது. 2380 பார்க்க. 472

2371. பொருளுரை... அந்நாளில்.... ஆகி - அந்நாள்களில் ஒருநாள் ஒரு வணிகன் வழிச் செல்வோனாகி ஓர் கன்னியையும் உடனே கொண்டு - ஒரு கன்னிகையையும் உடன் அழைத்துக் கொண்டு; அணைவான் - அணைவான்; பொன்னார்.... போது - பொன்மலையாகிய மாமேருவை வில்லாக உடைய இறைவரது திருக்கோயிற் புறத்தில் ஒரு மடத்தில் இரவில் தூங்கும் போதில்; மின்ஆர்- கவ்வுதலும் - ஒளியுடைய வெள்ளைப் பற்களையுடைய அரவம் தீண்டியதனால்; கிளர்ந்த... ஏற - எழுந்து சென்ற விடத்தின் வேகமானது விரைவில் தலையின் மேலும் ஏறிவிட; தன்ஆவி... சோர்வாள் - தனது உயிர் நீங்கும் அவனுடைய தன்மையைக் கண்டு மெல்லிய சாயலினையுடைய இளங்கன்னி நிலைகலங்கித் தளர்வடைந்து சோர்வாளாகி,

விளக்கவுரை: பதிகன் - வழிச் செல்வோன்; ஓரூரினின்றும் வேற்றூருக்குச் செல்லும் வழியில் நிகழ்வது இச்சரிதம்; (2378).

வணிகன் - (கன்னியையும் உடன்கொண்டு) அணைவான் - துயிலும்போது - ஆவி நீங்குமவன் - தன்மை - என்று கூட்டிக்கொள்க.

கோயில் மாடு புறத்திலொரு மடத்திரவு துயிலும்போது - வழிப்போக்கர் தங்கும் மடங்கள் கோயில்களின் பக்கத்தில் புறத்தில் அமைவது முன்னைநாள் நகர அமைப்புக்களின் நற்பகுதி. இச்சரித விளைவுக்கு இவ்வமைப்பே துணையாய் நின்றமை காண்க. இங்குக் கோயில் அணிமையில் மடம் அமைந்தமையால் வணிகக் கன்னிகை கோயில் வாயில் நோக்கி அரற்றவும் அவ்வோசை பிள்ளையார் கும்பிட வந்தணைகின்றார் தம் திருச்செவியில் மேவவும் காரணமாயிற்று; **புறத்தில் மடத்தில் துயிலும்போது** -

2372. வாளரவு தீண்டவுந்தான் றீண்டகில்லாள்
மறுமாற்ற மற்றொருவர் கொடுப்பா ரின்றி
யாளரியே றனையானை யணுக வீழ்ந்தே
யசைந்தமலர்க் கொடிபோல்வா ளரற்றும் போது
கோளுருமும் புள்ளரசு மனையா ரெல்லாக்
கொள்கையினா லுந்தீர்க்கக் குறையாதாக
நீளிரவு புலர்காலை மாலை வாச
நெறிகுழலா ணெடிதயர்ந்து புலம்பு கின்றாள், **474**

திருக்கோயிலின்கண் துயிலல் முதலியவை செய்யலாகாது என்றது விதியாதலின் புறத்தில் துயிலுமிடம் கொள்ளப்பட்டது.

மடத்துத் துயிலும்போது - அரவு - கவ்வுதலும் *- இந்நாளிற்போலவே முன்னை நாளிலும் இவ்வாறாகிய பொது மடங்களை மக்கள் நன்கு பாதுகாவாமல் விட செந்துக்கள் உலாவித் தங்குமிடங்களாக விட்டுவைத்திருந்தனர் போலும்! ஆயின் ஊழ்த்திறம் வேறு;*

மின்னார் வெள்ளயிற்று அரவு *- பாம்பின் பல் ஒளியுடைய வெண்மையாகயுள்ளது. மேல் "வாளரவு" (2372) என்பதும் காண்க.* ***கவ்வுதல்*** *- கடித்தல் என்ற பொருளில் வந்தது;* ***தீண்டுதலும்*** *- என்ற பாடமுண்டு.*

கிளர்ந்த விடவேகம் தலைமீக்கொண்டு ஏற - கிளர்ந்த *- இரத்தத்துட் கலந்து உடல் முழுதும் செலுத்தப்பட்டுப் பரவிய;* ***விடவேகம் தலைமீக்கொள்ளுதலாவது*** *"தலைக்கொண்ட ஏழாம்வேகம்" (1803) என்னும் நிலை*

தன் ஆவி நீங்கும் அவன் *- உயிர் நீங்கும் நிலையடைந்தவனை; "விடந்தீர்ந்தெழுந்தான்" (2381) என்றதனாலும் அவன் உயிர்போகும் நிலையில் உணர்வற்று மூர்ச்சை யடைந்தான் என்பது கருதப்படும்.*

சாயல் இளங்கொடி போல்வாள் - சாயல் *- ஐம்பொறிகளாலும் நுகரப்படும் அழகின் தொகுதி; சாய்தலைக் கொண்ட என்ற குறிப்புமாம்.*

இளங்கன்னி *- என்றது மிக்க இளமை குறித்தது; கன்னி என்பதே இளமை குறிக்குமாதலின்.*

சோர்வாள் - புலம்புகின்றாளாக *- (2372) -* ***அயர்வாள் கைதொழுதாளாய்*** *(2373) -* ***என்றும்*** *(2374) -* ***என்றும்*** *(2375) -* ***ஏங்கும் - ஓசை*** *(2376) என்று மேல்வரும் பாட்டுக்களுடன் கூட்டி முடித்துக்கொள்க.*

மேற்கொண்டேற *- என்பதும் பாடம்.* *473*

2372. ***பொருளுரை-*** *வாளரவு- தீண்டகில்லாள் - அவ்வணிகனை ஒளியுடைய அரவந் தீண்டினபோதும் தான் தீண்டாதவளாகி; மறுமாற்றம்... இன்றி - ஆறுதல் மொழி சொல்வதற்கும் வேறொருவருமில்லாதவளாய்; ஆளரியேறு அனையானை...*

அரற்றும்போது - ஆண் சிங்கம் போன்ற அவ்வணிகனை அணுகிப் பக்கத்தில் விழுந்தே அசைந்து வீழ்ந்த மலர்க் கொம்பு போல்வாளாகிய அவள் அரற்றும்போதில்; கோள் உருமும்... தீராதாக - வலிய இடியினையும். புள்வேந்தனாகிய கருடனையும் போன்ற மந்திரவாதிகள் எல்லாக் கொள்கையின் மூலமும் தீர்க்க முயலவும், அந்தவிடம் குறைவுபடாது நிற்கவே; நீள்இரவு... புலம்புகின்றாள் - நீண்ட அந்த இரவில் விடியற் காலம் அளவும், மாலை அணிந்த மணம் மிகுந்த நெறிந்த குழலையுடைய அந்தப் பெண் புலம்புகின்றாளாகி,

விளக்கவுரை: அரவுதீண்டவும் - **தான் தீண்டகில்லாள்** - கன்னிகை தன் கற்புக் காக்கும் இயல்பை விளக்கமாக எடுத்துக் காட்டிய சிறந்த இடம்; இத்தகைய உடன் போக்குக்களில் இந்நாளில் நிகழும் மிகத் தாழ்ந்த நிலையுடன் இதன் ஒப்புயர்வற்ற குறிக்கோள் கொண்ட உயர் வொழுக்க நிலையினை ஒப்பிட்டு உண்மை யுயர்வைக் கண்டுகொள்க. இதனை இங்குத் தெருட்டி உலகினை நல்வழிப்படுத்திய ஆசிரியரது தெய்வக் கவிநலமுங் காண்க. "தாம்பரப்பிய கயல்களின் விழிக்கய றவிர... கழிக்கயல் விலைசெய்" (1116) என்றதும் ஆண்டுரைத்தவையும் கருதுக.

மறுமாற்றம் - ஆறுதல் மொழி; "ஏனென்று கேட்பார்" என்பது உலக வழக்கு. **மறுமாற்றங் கொடுப்பார்** - ஈண்டு உறவினர் முதலிய நெருக்கமுடையோரைக் குறித்தது. "சுற்றத்தா ரெனவந்து" (2379).

அணுக வீழ்ந்தே - அவனது உடலைத் தீண்டாத நிலையில் பக்கத்தில் வீழ்ந்தாள் என்க.

அசைந்த - கொழுகொம் பறுதலால் நிலைதவறி அசைவுகொண்ட என்றதும் குறிப்பு. முன் "சாயல் இளங்கன்னி" என்ற குறிப்பும் காண்க.

கோளுருமும் புள்அரசும் அனையார்... தீர்க்க உரும் - இடி; **கோள்** - வலிய; **கோள் உருமு** - கோளினை விலக்கும் உருமு என இரண்டனுருபும் பொருளும் விரிதலுமாம்.

புள் அரசு - கருடன்; இடியும் கருடனும் பாம்புக்குப் பகையாவன; இவை நேர்படின் அரவின்விடம் நீங்குமென்பது நூற்கொள்கை, **உருமும் புள்அரகம் அனையார்** - இடியும் கருடனும் போல்பவர்; உவமை அவ்வத் தன்மையிற் பயன்வாய்க்கப் பெறுதல் குறித்து நின்றது; பயன்பற்றி வந்த உவமம்; இவர் மந்திரவாதிகள்; இவர்கள் இவ்வாறு இடியின் இயல்பும் கருடனியல்பும் பெறுதல் அவ்வம் மந்திர ரூபங்களில் அழுந்தியறிந்து நின்ற சாதனையாலாவது; கருடோகம் பாவனை என ஞானசாத்திரத்துள் உயிர் சிவனைப்போலத் தன்மை பெறுதற்குரிய சாதனப் பகுதியில் வைத்து இதன் உள்ளுறை பேசப்படும். இவர்கள் அவ்வம் மந்திரக் கண் கொண்டு பார்க்கவே விடவேகம் நீங்கும் என்பது உண்மை; இடி மின்னல் தாக்க எழும் ஓசையேயாதலின் அது ஒரு பொருளாகாது என்று ஐயப்படுவோர்க்கு அஃது குணமும் செயலும் உடைமையால் - ஓர் உள்பொருளே யாமென்று விடுக்க; "கருட னுருவங் கருதுமளவிற், பருவிடந் தீர்ந்துபயங் கெடுமாபோல்" (2659) (9 - ஞானகுரு தரிசனம் - 4) என்பது திருமூலர் திருமந்திரம். "ஒண்கருட சானத்திற்

நீர்விடம் போல்" (போதம் - 9-2-உதா) என்ற ஞான சாத்திரமும் காண்க. இன்னும் இதன் விரி வெல்லாம் ஞான மெய்ந் நூல்களிலும் அனுபவமுடைய தேசிகர்பாலும் அறிக*.

அனையார் எல்லாக் கொள்கையினாலும் தீர்க்க - **அனையார்** - இம்மந்திரவாதிகள் வணிகப் பெண்ணின் அரற்றுதல் கேட்டு வந்து சேர்ந்த இரக்கமுடைய அயலவர்; இதனால் "மறுமாற்ற மற்றொருவர் கொடுப்பாரின்றி" என்றதற்கு முரணாமை காண்க. **எல்லாக் கொள்கை** - "திடங்கொண் மந்திரந் தியானபா வகநிலை முட்டி, தொடர்ந்த செய்வினைத் தொழில்" (புரா-1060). "புரையில் செய்கை" (மேற்படி-1064); உருமுவின்பாற் பட்டனவும் புள்ளரசின்பாற் பட்டனவும் ஆகிய தீர்வுச் செயல்களின் பகுதிகள் யாவும்; **தீர்க்க** - தீர்வுக்குரியவற்றைச் செய்யவும்; எச்சவும்மை தொக்கது; இதற்குப் "பாவனையன்றி மற்ற மணிமந்திர ஔடதாதிகளையும் குறிப்பதாகும்" என்றுரைப்பாருமுண்டு.

நீள் இரவு புலர்காலை - இரவு புலரும்போதின் அளவும் என்க. துன்ப நீடித்தலால் பொழுது நீடித்துத் தோன்றுமியல்பு பற்றி **நீள்இரவு** என்றார். "புலரும் படியன் றிரவென் னளவும்" (321),

புலர்காலை - வைகறை - விடியற்காலம்; திருப்பள்ளி யெழுச்சிக்குரிய காலம்.

நெடிது அயர்ந்து - இரவு முழுதும் அயர்ந்து அமைந்தாளாதலின் நெடிது என்றார்.

புலம்புகின்றாள் - வணிகனது பிரிவு நினைந்து புலம்புகின்ற திறம் மேற்பாட்டிற் காண்க; அதன்மேல் இரண்டு பாட்டால் புலம்புதலின்றிச் சிவனருளே சிந்தித்து அதன் பொருட்டுப் போற்றுகின்ற திறம் கூறப்பட்டது. புலம்புகின்றாளாகி - அயர்வாள் - தொழுதழுதாள் என்று மேல்வரும் பாட்டுடன் கூட்டி முடிக்க. 474

---

*"கருடபாவனை யென்றது யாதெனிற் கூறுதும்:- ஆதிபௌதிக கருடன், ஆதிதைவிக கருடன், ஆத்தியான்மிக கருடன் எனக் கருடன் மூன்று வகைப்படும். இவ்வாறு பொருடோறுங் கண்டுகொள்க. அவற்றுள், **உலகத்திற் காணப்படும் கருடன் ஆதி பௌதிக கருடன்**. அதற்கு அதிதெய்வமாய் மாந்திரிகன் உள்ளத்தில் அதுபோல வைத்துத் தியானஞ் செய்து கணிக்கப்படும் **மந்திரம் ஆதிதைவிக கருடன்**. அம்மந்திரத்தினிடமாக நின்று மாந்திரிகனுக்குப் பயன் கொடுப்பதாகிய **சிவசத்தி ஆத்தி யான்மிக** கருடனெனப்படும். அவற்றுள், ஈண்டுக் **கருடன்** என்றது கருடனுக் **கதிதெய்வமாய் மாந்திரிகனுளத்திற் காணப்படும் மந்திர ரூபமாகிய ஆதிதைவிய கருடனை**; அதனைப் பாவித்தலாவது நாடோறும் பயின்று வந்த பயற்சி விசேடத்தால் அம்மந்திரரூபமே **தானாக** அநந்நிய பாவனை செய்து **தன்னறிவு அதன் வசமாம்படி உறைத்து நிற்றல்**. அங்ஙனம் நின்று, அம் **மந்திரக் கண்கொண்டு பார்க்கவே அஃது அவ்விடவேகத்தை மாற்றுதல் ஒருதலையாகலின்**, அப்பாவனை ஈண்டைக்கு உவமை யாயிற்று. இதனானே கருடபாவனை சத்தியமா மென்பதூஉம், அதனை அசத்திய மென்பார் மதம் போலி யென்பதூஉம் தெற்றென வுணர்க. **புள்ளு, விலங்கு, மரம்** முதலிய **சராசரங்களுக் கெல்லாம் அதிதெய்வ மந்திரம் உள** வென்பதூஉம், **படிகம் போல அதுவதுவா மியல்புடைய ஆன்மா அவற்றுள் எவ்வெம் மந்திரங்களைக் கணிப்பினும் அவ்வம் மந்திர சொரூபியாவா** னென்பதூஉஞ் சர்வஞானோத்தர முதலியவற்றுட் காண்க". - (சிவஞான மாபாடியம், 9-2. மாதவச் சிவஞான முனிவர்).

2373. "அன்னையையு மத்தனையும் பிரிந்து நின்னை
யடைவாக வுடன்போந்தே னரவால் வீடி
யென்னையுயிர் விட்டகன்றா யானென் செய்கே?
னிவ்விடுக்கண் டீர்க்கின்றா ரியாரு மில்லை
மன்னியசீர் வணிகர்குல மணியே! யானும்
வாழே"னென் றென்றயர்வாண் மதியி னாலே
சென்னியிளம் பிறையணிவார் கோயில் வாயிற்
றிசைநோக்கிக் கைதொழுதாள் செயலொன் றில்லாள், 475

2373. பொருளுரை... அன்னையையும்.... விட்டகன்றாய் - தாயையும் தந்தையையும் பிரிந்து நீத்து உன்னையே சார்பாக அடைந்து உன் உடனே போந்தேன்; அரவு தீண்டுதலினால் இறந்துபட்டு என்னை விட்டுச் சென்றாய்! யான் என்செய்கேன் - நான் என்ன செய்வேன்!; இவ்விடுக்கண் - யாருமில்லை - இந்த இடையூற்றைத் தீர்க்கின்றவர்கள் எவரும் இல்லையே!; மன்னியசீர்.. அயர்வாள் - நிலைபெற்ற சிறப்பையுடைய வணிகரின் குலமணியே; நானும் இனிவாழேன்! என்று பலவாறு அரற்றி வருந்துகின்றாளாகிய அப்பெண்; மதியினாலே - தன் அறிவினாலே; சென்னி.. செயல் ஒன்றில்லாள் - தலையில் இளம்பிறையினை அணிந்த சிவபெருமானது திருக்கோயில் வாயிலின் திசையை நோக்கி கைகூப்பித் தொழுதவளாய் வேறு செயல் ஒன்றும் கிடையாதவளாகி,

விளக்கவுரை: அன்னையையும்... வாழேன் - இது அப்பெண் வீடிய வணிகனை நோக்கிப் புலம்பி அரற்றிய நிலை. இறந்து கிடப்பாரை நோக்கி உயிருடனிருப்பார் போன்று விளித்து இவ்வாறு அரற்றுதல் துன்ப மிகுதியால் நிகழ்வது.

அடைவாக - காவல்கொண்டு அடையப்படும் இடமாக; ''அடைவு திருத்தாண்டகம்"; அடைந்த கருத்தைத் "தளர்ந்தழிபு மிவனுக்காகத் தகவுசெய்து... இவனையே சார்ந்து போந்தேன்" (2378) என்ற இடத்து விளக்கப்படுவது காண்க.

என்னைவிட்டு உயிர் அகன்றாய் - என்க. உயிர் அகலுதல் - இறத்தல்; உயிர் நீத்தல்; என்னை உயிருடன் இங்கு விட்டு என்றலுமாம்; உயிருடன் விடுதலென்றல் தன் உயிரோடு என் உயிரையும் உடனே கொண்டு போகாமல் இங்கு விடுதல்.

தீர்க்கின்றார் யாருமில்லை - தீர்க்கின்றார் - தீர்க்க வல்லவர்; "எல்லாக் கொள்கை யினாலும் தீர்க்கக் குறையாதாக" (2372) என்றதனால் வேறு எந்த மனிதரது முயற்சி யாலும் அமையாது என்பது கருதி யாரும் என்று முற்றும்மை தந்தோதினாள்.

யானும் வாழேன் - நீ இங்கு வாழாது சென்றதுபோல யானும் இனி வாழேன் என, உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; "பற்றுநான் மற்றிலேன்... வார் கடலுலகில் வாழ்கிலேன் கண்டாய் வருகவென் றருள்புரி யாயே" என்ற திருவாசகம் ஈண்டுச் சிந்திக்கத் தக்கது.

2374. "அடியாரா மிமையவர்தங் கூட்ட முய்ய
வலைகடல்வாய் நஞ்சுண்ட வமுதே! செங்கண்
நெடியானு நான்முகனுங் காணாக் கோல
நீலவிட வரவணிந்த நிமலா! வெந்து
பொடியான காமனுயி ரிரதி வேண்டப்
புரிந்தளித்த புண்ணியனே! பொங்கர் வாசக்
கடியாரு மலர்ச்சோலை மருங்கு சூழுங்
கவின்மருகற் பெருமானே! காவா" யென்றும், 476

என்று என்று - இக்கருத்துடன் பன்முறையும் அரற்றுதல் குறிக்க அடுக்கிக் கூறினார்.

மதியினாலே - விதியை மதியால் வெல்லலாம் என்பது பழமொழியாதலின் இவள் முன்பயிற்சியின் காரணமாகத் திக்கற்றவர்க்குத் தெய்வமே துணை என்று கண்டு சிவனருளைச் சிந்தித்துக் கோயில் வாயிற் றிசைநோக்கி அழுதாள் என்க. தீராத துன்பம் வந்தபோதும் சிவனருளை மறக்கலாகாது என்பதும் மறவாதார்க்குச் சிவனருள் கைகொடுத் தேற்றும் என்பதும் பெறப்படுதல் காண்க. ***மதியினாலே*** - ***என்றும்*** - ***என்றும்*** - ***அருளே சிந்தித்து*** என்பனவும் இக் குறிப்புத் தருவன.

இளம்பிறை யணிவார் - பிறை அமுத சொரூபமாயது என்பதும், ஒன்றொழிய எல்லாக் கலையும் குறைந்து இறந்துபட நின்ற மதியை உய்வித்து உயிர்பெற்று வளரச் செய்த இறைவர் என்பதும் குறிப்பு.

தொழுதழுதாளாகி - ***செயலொன்று மில்லாளாய்*** என்க. முற்றெச்சம்.

தொழுதழுதாள் - என்பதும் பாடம். *475*

2374. பொருளுரை- *அடியாராம்-அமுதே!* - அடியவர்களாகிய தேவர்களின் கூட்டம் முழுதும் உய்யும் பொருட்டு அலைகளையுடைய கடலில் எழுந்த நஞ்சினை உண்டருளிய அமுதமே!; *செங்கண்... நிமலா!* - சிவந்த கண்ணையுடைய நீண்ட திருமாலும் நான்கு முகங்களையுடைய பிரமதேவனும் காணாத கோலமுடைய நீலவிடப் பாம்புகளை அணியாக அணிந்த நின்மலனே!; *வெந்து... புண்ணியனே* - வெந்து சாம்பராய்விட்ட காமனது உயிரினை அவன் தேவியாகிய இரதி வேண்டுதலுக்கிரங்கி மீண்டும் அருளிக் கொடுத்த புண்ணியனே!; *பொங்கர்.... காவாய் என்றும்* - மலர்களின் மணமிகுந்த சோலைகள் பக்கங்களில் எவரும் சூழ்ந்துள்ள அழகுடைய திருமருகலில் எழுந்தருளியுள்ள இறைவரே காக்கக் கடவீராக! என்று பின்னும்,

விளக்கவுரை: அடியாராம்.... அமுதே - இது வணிகப் பெண்ணின் மனத்துள் அந்நிலையில் வேறு தஞ்சம் ஒன்றும் காணாது சிவனை நினைந்தபோது சிவன் தன்மை பற்றி முதலில் எழுந்த கருத்து; அடியாரைக் காத்தலும், அதன் பொருட்டுப் பெருவிடத்தை

உண்டருளியதும் தனது நிலைக்கேற்ற அருளிப் பாடுகளாக நினைக்கின்றாள்; இமையவர் கூட்டம் பெருங்கூட்டமாக, அவர்களுக்கு இன்னல் விளைத்துப் பெருங்கடலில் ஆலாலவிடமாக நிற்க, அத்தனையும் காத்த நீர் ஒரு சிறிய பெண்ணை ஒரு சிறிய பாம்பின்விடம் நலியும் இங்குக் காத்தல் எளிது என்பது உட்குறிப்பு. **அமுது** - விடத்துக்கு மாறாக மரணத்தைப் போக்குதல் குறிப்பு. அலைகடல் துன்பக்கடலினைக் குறிப்பிப்பது.

செங்கண்..நிமலா - பற்பலவாகிய அரவுகளை யணிந்தும் ஊறின்றி நிற்கும் உமக்கு இவ்வொரு சிறிய அரவின் விடம் போக்குதல் எளிது என்பது உட்குறிப்பு. அரவணிந்த செய்தி பற்றிக் கூறியது இக்கருத்தது.

நெடியானும் நான்முகனும் காணாக்கோலம் - பிரம விட்டுணுக்கள், அழற்றூணாய் நின்ற சிவபெருமானது முடியினையும் அடியினையும் தேடிக் காணமாட்டாது நின்ற அத்திருக்கோலம்; இக்கருத்து இரண்டாவதாக அப்பெண்ணின் மனத்துள் தன்னிலைமைக் கேற்க எழுந்தது. இவ்வரலாறு சிவ மாபுராணங்களுள் விரித்துப் பேசப்படும்; இதனை ஆளுடைய பிள்ளையார் தமது பதிகங்களுள் பெரும்பாலும் ஒன்பதாவது திருப்பாட்டில் குறித்துப் போற்றியருளுகின்றார். அதன் கருத்தும் 1976-வது பாட்டில் ஆசிரியரால் விளக்கப்பட்டுள்ளது. இங்ஙனமாகவும் இது சில தத்துவார்த்தங்களைக் குறிக்கக் கதையாகப் புராணிகர்களால் கட்டப்பட்டதென்றும், அத்தத்துவப் பொருள்கள் இவை என்றும் ஈண்டு ஆராய்ச்சி செய்வாருமுண்டு; அவர் சங்காரமே முதல் என்ற ஞான சாத்திர உண்மையே இதன் உள்ளுறை என்றும், மற்றும் பலவாறும் விரிப்பர். ஒரு சரித நிகழ்ச்சியிலிருந்து ஒரு உண்மைத் தத்துவம் விளங்குதலினால் அத்தத்துவமே பொருள் என்றும் சரிதம் பொய்யான கட்டுக் கதை என்றும் முடித்தல் பொருந்தாதென்பது அறிஞர் துணிவு, அவ்வாறு முடிப்பின் எல்லாச் சரிதங்களும் கட்டுக் கதைகளாய் முடியுமென்க.

வெந்து... புண்ணியனே - இது அப்பெண்ணின் உள்ளத்தே தனது கையறு நிலைக் கேற்றபடி பொருந்தத் தொடர்ந்து எழுந்த **மூன்றாவது** கருத்து. காமன் வெந்து பொடியாய்க் கழிந்தபின் பலகாலம் கழித்து அவனது மனைவிக்காக அவனுயிரை மீளக் கொடுத்த தேவரீருக்கு அண்மையில் உயிர் கழிந்த நிலையில் கிடக்கும் இவனுடலில் உயிரை மீளப் புகுத்தி இவனை நாயகனாக இசைவினாற் கொண்ட என்னைக் காத்தல் எளிது என்றது குறிப்பு. **புண்ணியனே** - கைம்மாறு கருதாது உதவும் வள்ளல் என்பது.

பொங்கர் வாசக் கடியாரும்.. காவாய் - மேற்கூறிய மூன்று கருத்துக்களாலும் என்னைக் காத்தல் பொருந்துவதாம் என்று விண்ணப்பித்தபடி; மேல்வரும் பாட்டிலும் இவ்வாறே பின்னுமொரு கருத்துக்கூறி முடித்து விண்ணப்பித்தல் காண்க.

வாசக்கடி - ஒரு பொருள் பன்மொழி; **வாசம்** - மணம்; **கடி** - வாசனையினையும் மன்றலினையும் குறிக்கும்; மணஞ் சூழ்ந்த இடமாகிய இது எங்கள் மணத்துக்குக் காரணமாக இருத்தலே தகுதி என்பது குறிப்பு. **வாசம்** - தாங்கள் எண்ணிப்போந்த மணத்தினையும், **கடியாரும்** - இனித் திருஅருளின்வழிப் பிள்ளையார் நிகழ்த்த உள்ள மணத்தினையும், குறிப்பில் உணர்த்த நின்றன. **மலர்ச்சோலை மருங்குசூழும்** - "சுழலார்

2375. "வந்தடைந்த சிறுமறையோ னுயிர்மேற் சீறி
வருங்காலன் பெருங்கால வலயம் போலுஞ்
செந்தறுகண் வெள்ளெயிற்றுக் கரிய கோலஞ்
சிதைந்துருள வுதைத்தருளுஞ் செய்ய தாளா!
விந்தவிடக் கொடுவேக நீங்கு மாறு
மியானிடுக்கட் குழிநின்று மேறு மாறும்
அந்திமதிக் குழவிவளர் செய்ய வேணி
யணிமருகற் பெருமானே! யருளா"யென்றும், 477

துயர்வெயிற் சுட்டிடும் போதடித் தொண்டர்துன்னு, நிழலாவன" (தேவா) என்றபடி துன்ப வெப்பத்தை மாற்றும் தட்பமுடைமை குறிப்பு. **கவின் மருகல்** - அழகையுடைய பொருள் அழகினை அழிக்குமிடமாதல் தகாது என்பது.

அலைவாயின் - பொங்குவார் - என்பனவும் பாடங்கள். 476

2375. **பொருளுரை**... **வந்தடைந்த**.... **தாளா!** - உன்பால் வந்து அடைந்த சிறிய மறையோனாகிய மார்க்கண்டேயரது உயிரின்மேல் கோபித்து வந்த இயமனது பெரிய விடத்தின் சூழ்வுபோன்ற சிவந்த கடுங் கண்களையும் வெள்ளிய பற்களையுமுடைய கரியகோலம் சிதைவுபட்டு உருளும்படி உதைத்தருளிய சிவந்த திருவடியை உடையவரே!; **இந்த விடக்கொடுவேகம்... அருளாய் என்றும்** - இந்த விடத்தின் கொடிய வேகம் நீங்கிப் போகும்படியும், நான் துன்பமாகிய குழியிலிருந்து மேல் ஏறும்படியும் மதி வளர்தற்கிடமாகிய சிவந்த சடையினையுடைய அழகிய மருகலில் அமர்ந்த பெருமானே! அருள்புரிவீராக என்றும்,

விளக்கவுரை: வந்தடைந்த- தாளா! - இது அற்றை நாளில் தன்னிலைக்குப் பொருந்த வணிகப் பெண்ணின் மனத்துள் தொடர்ந்து எழுந்த நான்காவது கருத்து; முன்கூறிய எல்லாம் அமையினும் கால நியதியின்படி வரும் காலனது செயலை விலக்குதல் கூடுமோ? என்னின் அதுவும் தேவரீர் செயத்தக்கது; முன்னர் மறைச் சிறுவனுக்காகக் காலனை உதைத்தருளியதுபோல என்பது குறிப்பு. இவ்வாறு இறைவனிடம் மன்றாடி விண்ணப்பித்துக் கொள்வது அடியார்களுக் குரிமையாகியதொரு மரபு என்க; "கருணைக் கிணங்காத வன்மையையு நான்முகன் கற்பிக்க வொரு கடவுளோ? - வல்லான் வகுத்ததே வாய்க்கால் எனும்பெரு வழக்குக் கிழுக்கு முண்டோ?" (தாயுமானார்); "திருமுன் பெய்தப் பெற்றன னளியனேன் பற்றிலனாயினும், அன்பிலை கொடியை யென்றரு ளாயல்லை" (சிதம்பர மும்மணிக்கோவை குமரகுருபரர்) முதலியவை காண்க.

காலவலயம் - நஞ்சின் வளைவு; காலச் சக்கரம் என்பாருமுண்டு. **செந்தறுகண் - வெள்எயிறு; கரியகோலம்** - அடைமொழிகள் அவ்வப் பொருள்களின் இயல்பையும் தன்மையினையும் விளக்குவன. **செந்தறுகண்** - கோப மிகுதி குறித்தது.

உதைத்தருளும் - முன் உதைத்தலும் பின் பிழைத்தெழ அருளுதலும் செய்த என்க.

2376. இத்தன்மை சிவனருளே சிந்தித் தேங்கு
மிளங்கொடிபோ னுடங்குமிடை யேழை யேத்தும்
அத்தன்மை யோசையெழுந் தெங்கள் சண்பை
யாண்டகையார் கும்பிடவந் தணைகின் றார்தம்
மெய்த்தன்மை விளங்குதிருச் செவியிற் சார
மேவுதலுந் திருவுள்ளக் கருணை மேன்மேல்
வைத்தன்ன மெனவயர்வாண் மாடு நீடு 478
மாதவத்தோர் சூழவெழுந் தருளி வந்தார்.

இடுக்கட்குழி நின்றும் ஏறுதல் - உருவகம்.

மதிக்குழவி - பிறைச்சந்திரன். குழவி - "பிள்ளை குழவி கன்றே போத்தெனக், கொள்ளவு மமையு மோரறி வுயிர்க்கே" (தொல்-பொருள்-மரபியல் 24) என்புழிக், கொள்ளவும் அமையும் என்னும் உம்மையை எச்சப்படுத்துப் பிறவழியும் கொள்ளப்படும்; அவை குழவித் திங்கள், என்பர் பேராசிரியர்; குழவி வளர் - என்றதனால் அதுபோல இறந்துபடுதல் நீங்கி யாங்களும் வளர என்பது குறிப்பு.

477

சுழிநின்றும் - என்பதும் பாடம்.

2376. பொருளுரை- இத்தன்மை- ஓசை - இவ்வாறு சிவபெருமானது அருளினையே சிந்தித்தவண்ணமாய் ஏங்குகின்ற இளங்கொடி போன்று துவளும் இடையினையுடைய ஏழையாகிய அப்பெண் துதிக்கின்ற அத்தன்மை ஓசையானது; எழுந்து...மேவுதலும் - எழுந்து எமது பெருமானாகிய சீகாழி ஆண்டகையார் இறைவரைக் கும்பிடும் பொருட்டு வந்தணைகின்றவருடைய மெய்த்தன்மையே உருவாகிய திருச்செவிகளிற் சாரப் பொருந்துதலும்; திருவுள்ளக்கருணை மேன்மேல் வைத்து - திருவுள்ளத்திலே கருணையினை மிகவும் கொண்டருளி; அன்னமென... வந்தார் - அன்னம்போல அயர்கின்றவ ளிருந்த பக்கத்தில் மாதவத்தார்களாகிய அடியவர்கள் சூழ்ந்துவர எழுந்தருளி வந்தனர்.

இந்த ஆறு பாட்டுக்களும் தொடாந்து ஒருமுடிபு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை: இத்தன்மை சிவனருளே சிந்தித்து எங்கும் - ஏத்தும் - அத்தன்மை ஓசை - திருச்செவியில் சாரமேவுதல் - சிவனருளே சிந்தித்து ஏத்தும் அத்தன்மை ஓசையாதலின், பிள்ளையாரது மெய்த்தன்மைச் செவியில் மேவிற்று; ஏனை ஓசைகள் அங்கு மேவா என்பது கருத்து; மெய்த்தன்மை விளங்கும் செவியாதலின் சிவனருளை ஏத்திய ஓசை புக்கது எனக் காரணக் குறிப்புப்பட நின்றது. "செவித் தொளைகளால் யாவுங்கே ளாரவன் பெருமை யல்லால்" (தேவா - பிள் - புகலூர்); "செவியவன தெண்ணருஞ்சீ ரல்ல திசைகொள்ளா" (ஞானவுலா - பேரிளம்பெண்) "செவிகாள் கேண்மின்களோ - சிவன்... பிரான்திறம் எப்போதும்" (தேவா).

மெய்த்தன்மை விளங்கு திருச்செவி - "மெய்த்திரு வாக்கெனு மமுதம்" (புரா-1088);

2377. சிரபுரத்து மறையவனார் சென்று நின்று,
சிவபெருமா னருள்போற்றிச் சிந்தை நைந்து
பரிவுறுவா டனைநோக்கிப் "பயப்ப டேனீ
பருவரலு நும்பரிசும் பகர்வா"யென்னக்
கரமலர்க ளுச்சியின்மேற் குவித்துக் கொண்டு
கண்ணருவி சொரிந்திழியக் காழி வேதப்
புரவலனார் சேவடிக்கீழ் வீழ்ந்து தாங்கள்
போந்ததுவும் புகுந்ததுவும் புகல லுற்றாள், 479

பிள்ளையாரது; செவி - வாக்கு முதலாகிய கருவி கரணங்கள் யாவும் மெய்யே வடிவாகிச் சத்துருவமாகிய பதிகரணங்களாம் என்பது.

ஆண்டகையார் *- ஆண்மைக் கழகு அலந்தோர்க் களித்தல்.*

கும்பிட வந்தணைகின்றார் தம் *- வைகறைப் போதில் (நீளிரவு புலர்காலை 2372) திருப்பள்ளி யெழுச்சியினில் வழிபாடு செய்ய வருகின்றவருடைய.*

கருணை மேன்மேல் வைத்து *- அரற்றுதலாற் கேட்ட துன்ப நீக்கம் ஒன்று; பெண்ணின் துன்பநீக்கம் மற்றொன்று; சிவனருளே சிந்தித்தேத்துமவரின் துன்ப நீக்கம் மேலும் ஒன்று என இவ்வாறு படிப்படி மேற்செல்லுதல் குறித்தது.*

அன்னமென அயர்வாள் *- உதவுவோர் யாரும் இலராயின் அப்பெண்ணும் இறந்துபடுவாள் என்பது குறிக்க மயில் குயில் என்னாது அன்னமென என்றார். ஆங்கிலத்திலும் Swan Song (அன்னப் பாட்டு) இறுதியிறுங்காலத்தே (அன்னம்) பாடுதலைக் குறிக்கும். (வ.சு.செ. குறிப்பு).*

மாதவத்தோர் சூழ *- "மாதரார் தாமிருந்த, இடவகையிற் றனிபுகுதோம்" (சிறுத் - புரா - 38) என்ற வொழுக்கத்தின் குறிப்புமாம். மாதவத்தோர் சூழுமிடத்தில் இடர் இல்லை என்பது குறிப்பு.* *478*

2377. பொருளுரை... சிரபுரத்து... நின்று - சீகாழியில் அவதரித்த மறையவராகிய பிள்ளையார் முன் சொல்லியபடி அயர்வாளிருந்த பக்கம் சென்று நின்று; சிவபெருமானருள்... பகர்வாய்" என்ன - சிவனருளையே நினைந்து துன்பமுறும் அவளைப் பார்த்து "நீ பயப்பட வேண்டாம்! உனது துன்பத்தினையும் உங்கள் தன்மைகளையும் சொல்வாயாக!" என்று கேட்டருள; கரமலர்கள்... புகலலுற்றாள் - கைம்மலர்களை உச்சியின் மேலே கூப்பிக்கொண்டு கண்களினின்றும் கண்ணீர் அருவி சொரிந்து வழியச் சீகாழியில் வந்த மறைக் காவலரின் திருவடிக் கீழே வீழ்ந்து தாங்கள் வந்த வரலாற்றினையும் இத்துன்பம் புகுந்ததனையும் சொல்லலுற்றனள்.

விளக்கவுரை: சிவபெருமானருள்... பரிவுறுவாள் தனைநோக்கி - சிவபெருமானருளைப் போற்றிப் பரிவுறுவாளாதலின் நோக்கிக் கூறினார் என்று காரணங் காட்டுதற்கு உடம்பொடு புணர்த்தி ஓதினார்.

2378. "வளம்பொழில்சூழ் வைப்பூர்க்கோன் றாம னெந்தை
மருமகன்மற் றிவ;னவற்கு மகளிர் நல்ல
இளம்பிடியா ரோரெழுவ; ரவரின் மூத்தா
ளிவனுக்கென் றுரைசெய்தே யேதிலானுக்
குளம்பெருகத் தனம்பெற்றுக் கொடுத்த பின்னு
மோரொருவ ராகவெனை யொழிய வீந்தான்
றளர்ந்தழியு மிவனுக்காத் தகவு செய்தங்
கவரைமறைத் திவனையே சார்ந்து போந்தேன்," 480

பரிவுறுதல் - துன்பமுறுதல்: *பரிவுறுவாள்தனை* - துன்பப் படுகின்றாளை.

பயப்படேல்நீ பருவரலும் நும்பரிசும்பகர்வாய் - பயப்படேல் என்று யார்க்கும் அஞ்சல் அளித்தல் சிவபெருமானுக்கும், அறிவாற் சிவனேயாகிய அவனடியார்க்குமே இயல்வதாம்; என்னை? அவர்களே எல்லாம் வல்லாராதலின் என்க. ஏனையோர் தத்தம் அளவில் அமைந்தொழுகுவர். *பயப்படேல்* என்று முதற்கண் அஞ்சல் அளித்துப் பின்னர் வரலாறு கேட்கும் முறை காண்க; வரலாறும் வந்த இடையூறு இத்தன்மைத் தென்றும் அறியாமுன் அஞ்சல் அளிப்பது தகுமோ? எனின், இடையூறு எதுவாயினும் தீர்த்தளிக்கும் பேர் ஆற்றல் சிவனுக்குண்மையால் தகும் என்க; "புலனைந்தும் பொறிகலங்கி... அலமந்த போதாக வஞ்சேலென் றருள் செய்வான்" (தேவா). *நீ பயப்படேல்* என்றும், *நீ பகர்வாய்* என்றும் இரு வழியும் கூட்டியுரைக்க நின்றது.

பருவரல் - துன்பம் - வருத்தம்; *பருவரலும்* என முன்வைத்தது துன்பமின்ன தென்று தெரிதல் முதற்கண்ணும், அது வந்த பரிசு பின்னரும் தெரியும் அருள் முறை பற்றி; ஆனால் உலகநிலை முறைபற்றி அப்பெண் தாங்கள் போந்த வரலாறாகிய *பரிசினை* முன்னரும் (2378); *புகுந்த* பருவரலினைப் பின்னரும் (2379) ஆக சொல்லும் முறையும் காண்க.

புரவலனார் - இங்குப் புரக்கும் - காக்கும் - தன்மையை மேற்கொண்டருளியமை குறிப்பு.

போந்தது - அங்குவந்து சாரும் வரையில் உள்ள முன்னை வரலாறு; *புகுந்தது* - இத்துன்பம் வந்து புகுந்தநிலை. இவை முறையே மேல்வரும் பாட்டிலும், அதன் மேல் வரும் பாட்டாலும் கூறுதல் காண்க.

புகல லுற்றாள் - முற்றெச்சம்; புகலலுற்றாளாகி - என்ன - (2379) என மேல் (2379-ல்) வரும் பாட்டுடன் கூட்டி முடித்துக் கொள்க.

பரவுறுவாள் - என்பதும் பாடம். 479

2378. பொருளுரை... வளம்... எந்தை - வளத்தையுடைய வைப்பூரின் தலைவனாகிய தாமன் என்பவன் எனக்குத் தந்தை; மருமகன் மற்று இவன் அவற்கு - இவன் அவனுக்கு மருமகன்; (அவற்கு) மகளிர்... எழுவர் - அவனுக்குப் (எந்தைக்கு) பெண்மக்கள் நல்ல இளம்பிடி போன்றவர்களாயுள்ளார் ஓரெழுவர்; அவரில்... கொடுத்த பின்னும் - அவ்வேழு

பெண்களில் மூத்தவளை இவனுக்கு மணஞ் செய்வதென்று உரைசெய்தேயும்; ஏதிலானுக்கு ஈந்தான் - தன்மன நிறையப் பணம் பெற்றுக்கொண்டு அயலானுக்கு மணம் செய்து கொடுத்து அதன் பின்னரும் ஒவ்வொருவராக என்னை யொழிய மற்றைப் பெண்களையெல்லாம் அவ்வாறே கொடுத்துவிட்டான்; தளர்ந்தழியும்... போந்தேன் - மனந்தளர்ந்து அழியும் இவனுக்காக அன்பு பூண்டு, அங்கு அவர்களைவிட்டு மறைத்து நீங்கி இவனையே சார்பாகக் கொண்டு நான் போந்தேன்.

விளக்கவுரை: வைப்பூர் - இவ் வணிகப் பெண்ணின் பிறந்த ஊர்; இது திருமருகலின் தென்மேற்கில் புத்தாறு, வனப்பாறுகளைத் தாண்டி மட்சாலையும் கரைவழியும் ஆக 15 நாழிகையளவில் அடையத் தக்கது.

தாமன் - பெண்ணின் தந்தை பெயர்; இதில் வணிகர் அந்நாளில் பெயர்சூடும் வழக்குக் காணலாம்.

மருமகன் - உடன் பிறந்தாள் மகன்.

இனம் பிடியார் - இளம் பெண்யானையின் நடை போன்ற நடையுடைய பெண் மக்கள்.

ஏதிலான் - முன் உறவில்லாத அயலவன்.

உளம் பெருகத் தனம் பெற்று - பெண் விலையாகப் பெரிதும் பணம் பெற்றுக் கொண்டு; இந்நாளில் மணமகனுக்குப் பணம் பெரிதும் தரும் கொடிய வழக்கு வரதக்கிணை என்ற பேரால் நிகழ்தல் போல் அந்நாளில் பெண்ணுக்கு விலை கொடுக்கும் தீய வழக்கம் இருந்தது போலும்; சில மரபுகளில் இந்நாளிலும் இஃதருகி வழங்குகின்றது! வணிகனாதலால் தாமனுக்கு இருந்த பொருட்பேராசை காட்டுவது.

ஓர் ஒருவராகி எனை ஒழிய ஈந்தான் - எழுவர் பெண்களில் நான் ஒருத்தி நீங்கலாக ஏனை அறுவரையும் பணம் பெற்று ஒருவர் பின் ஒருவராக அயலாருக்கு ஈந்து இவனை ஏமாற்றி விட்டான் என்பது. **தளர்ந்து அழியும் இவனுக்காகத் தகவு செய்து** - அவ்வாறு ஆறு பெண்களின் அளவும் தனக்கு உரிமையுடையோரில் ஒருத்தியையும் பெறாது தளர்ந்து மனமழிந்த இவன் பொருட்டு இரங்கி,

அங்கு அவரை மறைத்து - அவ்வூரில் அவர்களுக்குத் தெரியாதபடி நீங்கி.

சார்ந்து - சார்பாகக் கொண்டு.

இவனுக்கா - ஆக என்பது கடை குறைந்து ஆ என நின்றது.

இவன் - அணிமையில் வீந்து கிடக்கும் இவன் என்று சுட்டியது அவனைப் பிள்ளையார் பார்த்தருள வேண்டும் குறிப்புடையது.

இப்பாட்டு நீண்ட சதி வரலாற்றைச் சில சொற்களில் சுருங்கிய மொழிகளில் விளக்கும் கலிநயம் கொண்டதுமன்றி, இந்நிலையிற்றுன்புறுவோர் சொல்லும் இயல்பு பற்றிச் சிறுசிறு முடிபுகள் கொண்ட வாக்கியங்களாலமைந்த தன்மையணிச்சுவையும் நாடகக் கூற்றினது இயல்பின் நலமும் கொண்டு ஆற்றொழுக்கில் அமைந்துள்ள நலங்கள் யாவும் கருதத் தக்கன. 480

2379. "மற்றிவனும் வாளரவு தீண்ட மாண்டான்;
மறிகடலிற் கலங்கவிழ்ந்தார் போல நின்றேன்;
சுற்றத்தா ரெனவந்து தோன்றி யென்பாற்
றுயரமெலா நீங்கவருள் செய்தீ" ரென்னக்,
கற்றவர்க டொழு தேத்துங் காழிவேந்தர்
கருணையினாற் காரிகையா டனக்கு நல்கப்
பற்றியவா ளரவின்விடந் தீரு மாறு
பணைமருகற் பெருமானைப் பாட லுற்றார், 481

2379. பொருளுரை... மற்றிவனும்.... மாண்டான் - மற்றிவனும் ஒளியுடைய அரவம் தீண்டுதலினால் மாண்டுபோயினன்: மறிகடலில்....நின்றேன் - மீளமீளவரும் அலைகளையுடைய கடல் நடுவில் கப்பல் கவிழப் பெற்றார்போல நின்றேன்; சுற்றத்தாரென... செய்தீர் என்ன.. எனது சுற்றத்தார்போலத் தோன்றி என்பால் உற்ற துயரங்களெல்லாம் நீங்கும்படி அருள் புரிந்தீர் என்று சொல்ல; கற்றவர்கள்.. வேந்தர் - கற்றவர்கள் தொழுது துதிக்கும் சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; கருணையினால்... பாடலுற்றார் - அருள்மீக் கூர்தலினாலே அந்தப் பெண்ணுக்கு நல்கும்படி தீண்டிய வாளரவின்விடம் தீருமாறு வயல்கள் சூழ்ந்த திருமருகலிறைவரைப் பாடலுற்றனர்.

விளக்கவுரை: மற்றிவனும் - மற்று - வினை மாற்றின் கண் வந்தது; மறைத்ததனால் விட்டொழிந்த அவர்போல இவனும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

வாளரவம் தீண்ட மாண்டான் - (ஆதலின்) மறிகடலிற் கலங் கவிழ்ந்தார் போல நின்றேன் - இஃது என் பருவரல் புகுந்தபடி என்றது.

மறி கடலிற் கலங்கவிழ்ந்தார் - பழமொழி; இருபுறமும் பற்றுக்கோடின்றி இடை முறிந்தொழியும் கையறு நிலை குறிக்க வழங்கப்படுவது. கடல் வாணிகம் புரியும் வணிக மரபினளாதலின் இவ்வுவமை கூறினார்.

சுற்றத்தாரென - "மறுமாற்ற மற்றொருவர் கொடுப்பாரின்றி" (2372) என்ற படி தேறுதல் சொல்லச் சுற்றமற்று நின்ற எனக்குச் சுற்றத்தார் போல.

துயரமெலா நீங்க அருள் செய்தீர் - எலாம் - மேலே போந்ததுவும் புகுந்ததுவும் ஆகிய துன்பங்களும் அவற்றின் காரணங்களும்; அருள் செய்தீர் - சுற்றத்தார் இருந்து தேற்றிய போது துன்ப நீங்கி மனமாறுதல் போன்ற நிலையை உமது மொழிகள் கேட்ட துணையே விளைவித்தது; செய்வீர் - எனற்பாலது விரைவும் துணிவும் பற்றிச் செய்தீர், என இறந்த காலத்தாற் கூறப்பட்டதென்பதுமாம். திருவருள் வழியே வணிகப் பெண்ணின் வாக்கில் வந்த சரித முற்குறிப்புமாம்.

ஏத்தும் காழி - என்றும், ஏத்தும் வேந்தர் என்றும் உரைக்க நின்றது;

நல்க - வேண்டும் வரங்கொடுக்க; நல்கும் பொருட்டு.

தீருமாறு நல்கப் - பாடலுற்றார் என்று கூட்டுக.

2380. சடையானை யெவ்வுயிர்க்குந் தாயா னானைச்
சங்கரனைச் சசிகண்ட மவுலி யானை
விடையானை வேதியனை வெண்ணீற் றானை
விரவாதார் புரமூன்று மெரியச் செற்ற
படையானைப் பங்கயத்து மேவி னானும்
பாம்பணையிற் றுயின்றானும் பரவுங் கோலம்
உடையானை "யுடையானே தகுமோ விந்த
வொள்ளிழையா ளுண்மெலி"யென் றெடுத்துப் பாட, 482

பற்றிய - அரவுவிடம் தீருமாறு - "தன்னாவி நீங்கும் அவன் தன்மை" (2371), "குறையாதாக" (2372) என்றமையால் விடந் தலைக்கேறி உயிர் நீக்கம் போன்ற நிலை அளவு விளைத்ததென்பது கருதக் கிடந்தது. பின் "பற்றிய விடம்" என்பது விடம் நீங்கினவுடன் உயிர் நன்னிலை பெற நின்றதென்பதாம்; "விடந் தீர்ந்தெழுந்து நின்றான்" (2381) என மேற்கூறுவதும் காண்க. உயிர் நீங்கியிருப்பின் விடம் தீர்ந்து எழுந்தான் என்பதற்கிடமில்லை என்பதும், அஃது மீள உயிர்ப்பித்தல் எனப்படும் என்பதும் போதரும்; "விடத்தினால் வீந்த பின்னையான்... உற்பவிப்பித்தலால்" (புரா 1114) என்பதனோடு இதனை ஒப்பு நோக்குக. பிள்ளையார் வந்து விடந் தீர்த்தருளா திருப்பின் சாவு நேரிடும் தருவாயின் நின்ற நிலை இது என்க. "என்னையுயிர் விட்டகன்றாய்" (2373), "இவனும் வாளரவந் தீண்ட மாண்டான்" (2379) என்பன, மரணம் விளைந்ததாகப் பெண்ணும், பிறரும் கொண்ட நிலை என்க.

481

கவிழ்த்தாற் போல - என்பதும் பாடம்.

2380. பொருளுரை- வெளிப்படை. சடையினையுடையவரை, எல்லாவுயிர்களுக்கும் தாயாகியவரை, சங்கரரைச், சந்திரன் தங்கும் திருமுடியை யுடையவரை, விடையவரை, வேதியரைத், திருவெண்ணீற்றினை உடையவரை, பகைவர்களது திரிபுரங்களையும் எரியும்படி செய்து அழித்த படையினையுடையவரைத், தாமரையில் வீற்றிருக்கும் பிரமதேவனும், பாம்பாகிய அணையில் துயிலும் விட்டுணுவும், துதிக்கும் திருக்கோல முடையவரை, "உடையவரே! இந்த ஒளிபொருந்திய அணிகளை யணிந்த பெண்ணினுடைய உண்மெலிவாகிய துன்பம் உமக்குத் தகுதியாமா?" என்று தொடங்கிப் பாடவே,

விளக்கவுரை: சடையானை- உடையானை - இங்குக் கூறிய ஒன்பது தன்மைகளும் திருப்பதிகத்தில் பிள்ளையார் அக்கன்னி இறைவரை விளித்தரற்றியதாகப் போற்றியவை; பதிகப் பாட்டுக்கள் பார்க்க.

சடையானை - "சடையா யெனுமால்" என்பது பதிகத் தொடக்கம். "விடையாய் எனுமால்" "பிறையார் சடையுமுடையாய்" "சடைமேன் மலரும் பிறையொன் றுடையாய்" "இருவர் தெரியா தோர்தீத் திரளா யவனே" "முந்தா யெனுமால்" "எந்தாய்" "பெரிய மறையார் மருகன் மகிழ்வாய்" "மழுவா ளுடையாய்" முதலியவை காண்க.

சடையானை - என்பது பகீரதற்காக இறந்த மூதாதையரை உயிர்ப்பிக்கக் கங்கையினை ஏற்று உலகில் விடுத்த அருளும். **தாயானானை** - தாய்போலிரங்கும் அருளும், **சங்கரனை** - சுகத்தைச் செய்யும் அருளும். **சசிகண்ட மவுலியானை** - கலை எல்லாம் தேய்ந்து இறக்கு நிலையிலிருந்த சந்திரனை ஏற்றுச் சாவாமற் காத்தும் வளரவும் செய்த அருளும், **விடையானை** - அறத்தின்வழிச் செய்யும் அருளும், **வேதியனை** இவை தாமே சொல்லிய மறைகளில் எடுத்துக் காட்டிய அருளும், **வெண்ணீற்றானை** - சங்காரப்பட நின்ற உலகை ஒடுக்கி மீளவுளதாக்கும் அருளும், **விரவாதார் படை யானை** - மலந்தீர்த்து இன்பமளிக்கும் அருளும். **பரவுங்கோலமுடையானை** - முழு முதல்வனாகிய அருளும், **உடையான்** - உயிர்களை உடைப் பொருளாகக் கொண்டு செய்யும் அருளும் குறிப்பால் உணர்த்தி நின்ற நிலைகளும் கண்டு கொள்க.

"உடையானே... உண்மெலி"வென்று - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம்; "உடையாய் தகுமோ விவளுண் மெலிவே" "எந்தாய் தகுமோ விவளே சறவே" என்ற பதிகம் காண்க.

சடையானை...உடையானை - "பித்தா பிறைசூடி" "கூற்றா யினவாறு" முதலிய பல பதிகங்களின் வரலாறுகள் கூறுமிடத்தும், அவ்வப்பண்களமைவும் பதிக யாப்பும் சந்தமும் அமையப் பாடிக் காட்டியருளும் மரபு ஆசிரியர் திருத்தாண்டகப் பண்ணினைப் பற்றி மட்டும் எங்கும் பதிகவரலாறுகள் கூறுமிடத்துப் பாடாராயினர்; தாண்டகவேந்து - தாண்டகர் சதுரர் என்று ஆளுடைய அரசுகளுக்குரிய சிறப்புரிமை பற்றி அஞ்சிய நிலைபோலும்; ஆனால் தாண்டகப்பண்ணினைப் பற்றாத இவ்விடத்து அப்பண்ணின் சந்தமும் யாப்பும் அமையப் பாடியருளுதல் குறிக்கத் தக்கது; இவ்வரலாற்றின் தகுதிக்கேற்ற நிலைபோலும். இப்பாட்டுத் திருத்தாண்டகச் சுவை கொண்டது. **உரைத்துப் பாட** - என்பதும் பாடம். இதுபோன்ற மற்றொரு இடம் "வானாகி நிலனாகி" என்ற (புரா-563) பாட்டு. வேறு எங்கும் இவ்வாறு பாடியருளாதது அப்பண்ணின் சிறப்பமைதியினையும், அதன்கண் ஆசிரியர் கொண்டருளிய அளவில்லாத பத்தி நிலையினையும் குறிப்பன. 482

திருமருகல் - விடந்தீர்த்த திருப்பதிகம்

திருச்சிற்றம்பலம் **பண் : இந்தளம்**

சடையா யெனுமால் சரணீ யெனுமால், விடையா யெனுமால் வெருவா விழுமால்
மடையார் குவளை மலரு மருக, **லுடையாய் தகுமோ விவளுண் மெலிவே.** (1)

வயஞா னம்வல்லார் மருகற் பெருமா, னுயர்ஞா னமுணர்ந் தடியுள் குதலா
லியன்ஞா னசம்பந் தனபா டல்வல்லார், வியன்ஞா லமெல்லாம் விளங்கும் புகழே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- முன் (2380) ஆசிரியரால் காட்டப்பட்டது. இப்பதிக முழுமையும் சரித வரலாற்றுக்குப் பேராதரவாக விளங்கும் அகச்சான்றுகளுடையது. "எந்தாய் இவள் ஏசறவும் உண்மெலிவும் உனக்குத் தகுமோ? இவளை எழில் வவ்வினை" - மெலிவித்து -

2381. பொங்குவிடந் தீர்ந்தெழுந்து நின்றான்; சூழ்ந்த
பொருவிறிருத் தொண்டர்குழாம் பொலிய வார்ப்ப
வங்கையினை யுச்சியின்மேற் குவித்துக் கொண்டங்
கருட்காழிப் பிள்ளையா ரடியில் வீழ்ந்த
நங்கையவ டனைநயந்த நம்பி யோடு
நானிலத்தி லின்புற்று வாழும் வண்ணம்
மங்குறவழ் சோலைமலி புகலி வேந்தர்
மணம்புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார். 483

அயர் வாக்கினை - துயராக்கினை - அலராக்கினை; புலருந்தனையும் துயிலாள்; இவள் புடைபோந்து அலரும்படுமோ?" என்பன காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) இவளது உண் மெலிவு உனக்குத் தகுமோ? தகாது; ஆதலின் அருளுக என்பதாம் (2) **சிந்தாய்** - சிந்தையில் இடங் கொள்பவர். சிந்தமாட்டாய் என்றலுமாம். **சிந்துதல்** - அழிதல். (3) **அறை** - சந்தித்தல்; **இறை** - முன்கை; (4) **ஒலிநீர்** - வேகத்தால் ஒலித்து வீழும் நீர் - கங்கை. **ஒலித்தல்** - பெருகி முழக்குதல்; **வேண்டினை**- நீ வேண்டாவிடின் இது புகுத வழக்கில்லை என்பது. (5) **நீல வண்ண முகில்** - கருக்கொண்ட மேகம். **துணி** - துண்டம்; **முகில் தோன்றியன்ன - நீலகண்டம்** - முகிலின் நன்மைபோல நலந்தருவது என்ற குறிப்பு; (6) **புலருந் தனையும் துயிலாள்** - பிள்ளையார் கேட்டு வந்த காலம் குறித்தது. **"புலர் காலை"** (2372); **தனையும்** - அளவும்; **புடைபோந்து அலரும் படுமோ** - சரிதக் குறிப்பு - தாய் தந்தையரை மறைத்து வணிகனைச் சார்ந்து போந்தமையும் அதனால் வரும் அலர்ச் சொல்லும்; **அடியாள்** - துயரத்துள்ளும் திருவடிப் பற்று விடாதவள்; (7) **வழுவாள்** - அடிமைத் திறத்தினின்றும் வழுவாதவள்; **கழல் வாழ்க எனா எழுவாள்** - கழல் வாழ்த்தி எழுகின்ற நியமமுடையவள்; **நினைவாளிரவும் பகலும்** - மறவாதவள்; (8) **அலர்** - வசைச்சொல் (6); - (9) **எரி ஆர்** - எரிபோற் சிவந்த; **ஆர்** - உவமவுருபு; **மரியார்** சாவாதவர்; நித்தியத்துவம் பெற்ற அடியார்; (10) **நெறி ஆர்** - நெறிபொருந்திய; **நெறி** - வளைவுகள்; (11) **வயஞானம்** - தானற்றுச் சிவன் வயமாகிய ஞானம்; **வயஞானம்** - வயம் - வெற்றியுமாம்; **ஆதலின்** - ஏனையவற்றினுஞ் சிறந்து மேம்பட்ட சிவஞானம் என்றலும் ஆம்.

தலவிசேடம் திருமருகல் தொகுதி **III** பக்கம் 553 பார்க்க.

2381. பொருளுரை.. பொங்கு.. நின்றான் - வணிகன் மேன்மேற் பொங்கிய விடந்தீரப் பெற்று எழுந்து நின்றான்; சூழ்ந்த... ஆர்ப்ப - சூழ்ந்த திருத்தொண்டர்களின் கூட்டம் விளக்கமாக ஆர்ப்பெடுக்க; அங்கையினை.... வீழ்ந்த - கைகளை உச்சிமேலே கூப்பிக் கொண்டு அங்கு அருளுடைய சீகாழிப் பிள்ளையாரின் திருவடிகளில் வீழ்ந்தவர்களாகிய; நங்கையவள்தனை.... வகுத்துவிட்டார் - கங்கையாகிய அப்பெண்ணை அன்பு கொண்ட நம்பியாகிய அவ்வணிகனோடும் இந்நானிலத்தில் இன்பம் பொருந்தி வாழும்படியாக மேகந் தவழும் சோலைமிகச் சூழ்ந்த சீகாழித் தலைவர் மணம் புணர்கின்ற பெருவாழ்வினைச் செய்து வகுத்து விட்டருளினார்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண் டுரைக்க நின்றன.

விளக்கவுரை: பொங்கு விடம் - மேல் மேல் பரவி உயிர் கவர்கின்ற விடம். **தீர்ந்து** - விலகுவதால்; காரணப் பொருட் டாய் வந்த வினையெச்சம்;

நங்கை - மகளிரிற் சிறந்தவள்: **நம்பி** - ஆடவரிற் சிறந்தவன். **நயந்த** -அன்பு பூண்ட; **நானிலத்தில் இன்புற்று வாழ்தல்** - மணத்தின் பயன். **இன்பம்** - இவ்வுலக இன்பமும் அவ்வுலக இன்பமும்;

மணம் புணரும் பெருவாழ்வு வகுத்து விட்டார். அப்போதே அவ்விடத்தே தமது திருமுன்பு மணச் சடங்கு நிகழ்த்தி மணத்தை நிறைவாக்கி யருளினார். **பெரு வாழ்வு வகுத்துவிட்டார்** - ஆளுடைய பிள்ளையா ரருள்நோக்கினால் மணம் செய்விக்கப் பெறுதல் **பெருவாழ்வு** என்பதாம். நற்பயனால் நீண்ட வாழ்வு; **வகுத்து விடுதல்** - உலக முறைப்படி சடங்கு நிகழ்த்தி ஒழுங்கு செய்தல் காரணம் என்பர்.

குறிப்பு:- (1) இப்பதிகத்தையும் இவ்வரலாறு கூறும் புராணப் பகுதியாகிய 11 திருப்பாடல்களையும் பத்தி செய்து நியமமாகச் சில காலம் ஓதி வந்தால் மணம் பெறாமல் வருந்தும் கன்னியர்கள் மங்கல நன் மணம் பெறுவர் என்பது கண்கூடாகப் பலவிடங்களிற் கண்டவுண்மை. இது பிள்ளையாரது திருவருட் பெருமையினை இன்றும் காண உணர்த்துவதாம்.

(2) திரும்புறம்பயத்தில் ஒரு வணிகன் விடத்தினால் வீந்துவிடப் பிள்ளையாரது திருவருளால் உயிர் பெற்றெழுந்து கன்னியை மணந்தனன் என்பது திருவிளையாடற் புராணத்துள் (பரஞ்சோதியார் 64) வன்னியுங் கிணறும் இலிங்கமும் அழைத்த படலத்தினுள்ளும், பெரும்பற்றப்புலியூர் நம்பி - புராணம் (62) சான்றழைத்த திருவிளையாடலினுள்ளும்) கூறப்படும். இவ்விரண்டு வரலாறுகளும் வெவ்வேறாகப் பிள்ளையாரருளாலே நிகழ்த்தப் பெற்றன என்றும், திருமருகலில் பிள்ளையாரது பதிகத்தாலும் திருப்புறம்பயத்தில் திருநோக்கத்தாலும் நிகழ்ந்தன என்றும், "காழி வேந்தர் சடையெனும் யாப்பெடுத்து, விரைத் திருமருகறன்னில் வெவ்விடந் தீர்த்த தன்றித் திருப்புறம் பயத்தலத்திற்றீர்த்தனர் திருக்கண் சாத்தி" என்று பெரும் பற்றப்புலியூர் நம்பி கூறுமாற்றால் இவ்விருகூற்றுக்களின் நிகழும் ஐயப்பாட்டினை அமைவு படுத்தல் வேண்டுமென்றும் கொண்டுரைப்பது திரு. வி. கல்யாண சுந்தரனார் விசேட ஆராய்ச்சியுரை; இதன் பொருத்தம் ஆராயத்தக்கது; பெரிய புராணத்தினுள் இவ்வெளிப்பாடாகிய அற்புதம் நிகழ்த்தக் கண்டிலேம்; திருப்புறம்பய வரலாறாவது ஒரு வணிகன் மணஞ் செய்து கொள்வதற்காகத் தன் மாமன் பெண்ணைஉடன் அழைத்துக் கொண்டு மதுரைக்கு வரும் வழியில் திருப்புறம்பயத்திலே தங்கிய போது பாம்பு தீண்டி இறந்தான்; அப்பெண்ணுக்கு இரங்கி இறைவர் மந்திரவாதி (சித்தர்)யாக வந்து விடந் தீர்த்து அவ்விருவருக்கும் அங்குள்ள வன்னி - கிணறு இலிங்கம், அம்பிகை, அடுக்களை என்பவற்றைச் சாட்சியாக வைத்து மணம் செய்வித்து மறைந்தனர்; இவைகளே பின்னர் அவ்வணிகனது மனைவியர்களுக்குள் கலகம் நிகழ்ந்தபோது மதுரையில் சான்றாக வந்தன என்பதாம். இதற்கும் இங்குத் திருமருகலில் பிள்ளையாரது அருள்நிகழ்ச்சிக்கும் பெரிதும்

2382. மற்றவர்க்கு விடைகொடுத்தங் கமரு நாளின்
மருகனக ரினில்வந்து வலிய பாசஞ்
செற்றபுகழ்ச் சிறுத்தொண்டர் வேண்ட மீண்டுஞ்
செங்காட்டங் குடியிலெழுந் தருள வேண்டிப்
பற்றியெழுங் காதன்மிக மேன்மேற் சென்று
பரமனார் திறத்துன்னிப் பாங்க ரெங்குஞ்
சுற்றுமருந் தவரோடுங் கோயி லெய்திச்
சுடர்மழுவாண் டவர்பாதந் தொழுவான் புக்கார்; **484**

வேறுபாடுகள் காண உள்ளன. அன்றும் சான்று வேண்டியபோது பிள்ளையாரும் உடனிருந்த அளவிறந்த அடியார்களுமிருத்தலின் அவர்களை வேண்டியிருத்தலே தகுதியாம்? திருப்புறம்பயத்தில் விடந் தீர்த்தவர் சித்தராய் வந்து சிவபெருமான்; இது சம்பந்தமாகிய வன்னி நாடகம் சில்லாண்டுகளுக்கு முன் வரை ஆண்டுதோறும் திருப்புறம்பயத்தில் நடிக்கப்பட்டு வந்தது; இவ்விரு வேறு வரலாறுகளையும் பிறழ உணர்ந்து பிணைத்து வடமொழியாளர் ஆலாஸ்ய மான்மியத்தில் வகுத்துவிட, அதனை அப்படியே கொண்டு பரஞ்சோதி முனிவரும் பெரும்பற்றப்புலியூர் நம்பியும் தத்தம் நூல்களில் மொழிபெயர்த்து விட்டார்கள் என்று தமிழ்ப் பேராசிரியர் P. சுந்தரம் பிள்ளை அவர்கள் துணிந்துள்ளார். அக்கருத்தினையே எனதாசிரியர் பண்டிதர் ச. திருச்சிற்றம்பலம் பிள்ளை அவர்கள் தமது "மாணிக்கவாசகர்" என்ற நூலில் விவரித்துள்ளார்கள். இது பற்றி "கருவூர்த்தேவர்" 33-37 பக்கங்களும் பார்க்க. *483*

2382. பொருளுரை... மற்றவர்களுக்கு... நாளில் - மற்று அவ்விருவர்க்கும் விடை கொடுத்து அங்குப் (மருகனகரில்) பிள்ளையார் எழுந்தருளியிருக்கும் நாளில்; மருகல் நகரினில்.... வேண்ட - வலிய மலத்திண்மையினை அழித்த புகழுடைய சிறுத்தொண்ட நாயனார் திருமருகல் நகரில் வந்து குறையிரந்து வேண்டிக்கொள்ள; மீண்டும்... உன்னி - மீளவும் திருச் செங்காட்டங்குடியில் எழுந்தருளுதற்காக மேன்மேலும் தொடர்ந்தெழுகின்ற பெருவிருப்பானது அதிகரிக்கச் சென்றருளி இறைவரது திருவருளைப்பெற நினைந்து; பாங்கர்.... புக்கார் - எப்பக்கத்திலும் சூழ்ந்த அடியார் கூட்டத்தோடும் திருக்கோயிலினை அடைந்து ஒளியுடைய மழுவை ஏந்திய இறைவரது திருவடிகளைத் தொழுவதன் பொருட்டு உள்ளே புகுந்தருளுவாராகி;

விளக்கவுரை: மற்றவர்க்கு விடைகொடுத்து *- தாம் மணம் புணரும் பெருவாழ்வு வகுத்து விட்ட அவ்வணிக மணமக்களிருவருக்கும் தம்மூர்க்குச் செல்லும்படி விடைகொடுத்தருளி; இவ்வாறன்றி "மணம் புணரும் பெருவாழ்வு வகுத்துவிட்டார்" (2381) என்பதற்கு இல்லற நிலையின் மேன்மை நிலையினை எடுத்துச் சொல்லி என்று உரைத்தும், இங்கு மற்றவர்க்கு விடைகொடுத்து என்றதற்கு ஊர்க்குச் சென்று மணமுடித்துக் கொள்ளும்படி விடுத்து என்று உரைத்தும் உரை கண்டனர் முன் உரைகாரர்கள்; அவை பொருந்தாமையறிக.* ***அங்கு*** *- திருமருகலின் கண்;* ***அமர்தல்*** *- விருப்பத்துடன் எழுந்தருளி யிருத்தல்;* ***சிறுத்தொண்டர் - மருகல் நகரினில் - வந்து - வேண்ட*** *என்க.*

2383. புக்கிறைஞ்சி யெதிர்நின்று போற்று கின்றார்
பொங்குதிரை நதிப்புனலும் பிறையுஞ் சேர்ந்த
செக்கர்முடிச் சடைமவுலி வெண்ணீற் றார்தந்
திருமேனி யொருபாகம் பசுமை யாக
மைக்குலவு கண்டத்தார் மருகற் கோயின்
மன்னுநிலை மனங்கொண்டு வணங்கு வார்முன்
கைக்கனலார் கணபதீச் சரத்தின் மேவுங்
காட்சிகொடுத் தருளுவான் காட்டக் கண்டார். **485**

வலியபாசம் - ஆணவம்: **வலியபாசம் செற்றது** - "மேதகை யாரவர் முன்பு மிகச்சிறிய ராயடைந்தார், ஆதலினாற் சிறுத்தொண்டரெனநிகழ்ந்தா ரவனியின்மேல்" (சிறுத். புரா) என்பது காண்க; **வலியபாசம்** - உலகப்பற்றாகிய மக்கட் காதல்; முதலாயினவுமடங்கும். **புகழ்**, ஏனையாவர்க்கும் அரிய இத்தன்மை பெற்ற புகழ்.

சிறுத்தொண்டர் - மருகனகரில் - வந்துவேண்ட, என்க; **புக்கார்** - புகுந்தருளுவாராகி; முற்றெச்சம். சிறுத்தொண்டர் வேண்டுதலினால் திருச்செங்காட்டங் குடியில் மீண்டும் எழுந்தருளும் காதல் மிகத் திருவுள்ளங்கொண்ட பிள்ளையார் இறைவரது திருவுள்ள மறிய எண்ணி அவரைத் தொழுவதற்கு அடியார்களோடும் திருக்கோயிலினை அடைந்தருளினர் என்கின்றது இப்பாட்டு.

மருகனகர் தனினின்று பாசமெல்லாம் - என்பதும் பாடம். 484

2383. **பொருளுரை**- புக்கிறைஞ்சி- போற்றுகின்றார் - திருக்கோயிலினுள்ளே புகுந்து வணங்கித் துதிக்கின்றாராகி பிள்ளையார்; பொங்குதிரை.... பசுமையாக - பொங்கும் அலைகளையுடைய நீர்நிறைந்த கங்கை நதியும், பிறைச்சந்திரனும் சேர்ந்த செவ்வானம் போலும் முடிச்சடையாகிய கிரீடமணிந்த திருவெண்ணீற்றினையுடைய இறைவரது திருமேனி ஒருபாகம் பசுமையாக; மைக்குலவு.... வணங்குவார் முன் - விடம் விளங்கும் கண்டத்தினை உடைய இறைவர் திருமருகலின் கோயிலின் கண்ணே பொருந்தியிருந்த நிலைமையினை மனத்துட்கொண்டு வணங்குவாராகிய அப்பிள்ளையார் முன்பு; கைக்கனலார்.... கண்டார் - கையில் அனலை ஏந்திய இறைவனார் திருக்கணபதீச் சரத்திற் பொருந்திய காட்சியினை இங்குக் கொடுத்தருளும் பொருட்டுக் காட்டியருளக் கண்டனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை: போற்றுகின்றார் - ஒருபாகம் பசுமையாக - மன்னு நிலை மனங் கொண்டு வணங்குவார் முன் - கணபதீச்சரத்தின் - காட்சி - அருளுவான் காட்டக் - கண்டார் - என்றுரைத்துக் கொள்க.

போற்றுகின்றார் - திருமேனி ஒருபாகம் பசுமையாக - வணங்குகின்றார் - என்றது அருளுடன் கூடிய உமையொருபங்கராகத் தியானித்து வணங்கிப் போற்றுவார் என்பது. **ஒரு பாகம் - பசுமை** அம்மையின் பக்கம் திரு அருட்குறிப்பினைப் பெற வேண்டி யிவ்வாறு எண்ணினார் என்க.

ஒருபாகம் பசுமையாகக் கண்டத்தார் மருகற்கோயிலின் மன்னு நிலை - என்றது இறைவர் அம்மையப்பராகத் திருமருகலில் எழுந்தருளும் தன்மை; முன்சரித நிகழ்ச்சிக் குறிப்புமாம். **கணபதீச்சரத்தின் மேவும் காட்சி கொடுத்தருளுவான் காட்டக்கண்டார்** - கணபதீச்சரத்தில் மேவுகின்ற காட்சியினைக் கொடுத்தருளும் நிலையில் அக்கோலம் இங்கே காணக் காட்டியருளினர். ஒவ்வொரு திருக்கோயிலிலும் மேவும் காட்சிகள் ஒவ்வொரு தன்மையன; அவற்றை அவ்வாறே கண்டு வணங்குதல் வேண்டும் என்பது மரபு. பின்னர்ப் பிள்ளையாருக்குத் திருவீழிமிழலையுள்ளே புகலியின் கோலங் காட்டுவதும், நம்பிகளுக்குத் திருக்கானப் பேருறை காளைக் கோலங்காட்டுவதும், பிறவும் காண்க. ஆயின் அவ்வக்காட்சிகளின் அருட்குறிப்பினை அவ்வப் பெரியாரே திருவருள் உண்ணின்றுணர்த்த உணர்வர்; இங்குக் கணபதீச்சரக்காட்சி காட்டியதனால் அங்கு மீளவும் செல்வது திருவருட் குறிப்பாகப் பிள்ளையார் உணர்ந்து அங்குச் சென்று வணங்கினர்; பின்னர்த் திருவீழியிலே "புகலிக் காட்சி காட்டக் கண்டபோது பலபதிகளிலும் சென்று பணியும் காதல்கண் டங்கமர்ந்த வகையில் அளித்த" (2457) தென்று திருவருட் குறிப்பினை உணர்ந்த பிள்ளையார் புகலியந்தணர் வேண்டிக் கொண்டபடி வீழியினின்றும் புகலியின்கட் செல்லாது அவர்கட்கு விடைகொடுத்து மேலும் பலபதிகளை வணங்கச் சென்றருளுகின்றார்; இங்குச் சிறுத்தொண்டர் வேண்டியபடி தாமும் காதல் மேன்மேல் மிகக் கொள்ளக் கணபதீச்சரக் கோலத்தை மருகலிற் கண்டபோது அங்குச் சென்று வருதலையே திருவருட் குறிப்பாக உணர்ந்து சென்றருளினர் பிள்ளையார்; "கண்ணப்பர் தாமறிதல் காளத்தி யாரறிதல், அல்லது மற் றியாமறியு மன்பன் றது" (களிறு) என்றது நிலை;

கொடுத்தருளுவான் காட்டக் கண்டார் - அக்காட்சியினைக் கொடுத்தருளும் பொருட்டே இங்குக் காட்டியருளினாராக, அவ்வாறு திரு வருள் காட்டத் தாம் கண்டார். காட்டக் காண்பது உயிரியல்பு, "காண வுள்ளத்தைக் கண்டு காட்டலின்" (போதம்-11) என்பது ஞானசாத்திர வுண்மை. இது பாச நீக்கம் பெற்ற உள்ளங்களுக்கு இறைவன் உணர்த்தும் தன்மையாம்.

அனற்கையார் என்க.

செக்கர் முடிச்சடைமவுலி வெண்ணிற்றார் - மைக்குலவு - கண்டத்தார் - கைக்கனலார் - இறைவரைத் தியானித்துணரும் நிலையினை இம்மொழிகளால் குறிப்பிட்ட நயம் காண்க. 485

2384. பொருளுரை.. மருகலமர்ந்து.. தோன்ற - திருமருகலின்கண் விரும்பி நிறைந்த கோலமானது பொருந்திய திருச்செங்காட்டங்குடியில் நிலை பெற்றுப் பெருகும் கணபதீயிச் சரத்தாரது பெருமையுடைய கோலமேயாகித் தோன்றியிட; உருகிய...நீட - மனமுருகுதலா லுளதாகும் காதல் மேன்மேற் பொங்கவும் உலகத்தார்க்கு அறிவுறுத்தும்

வேறு

2384. மருக லமர்ந்து நிறைந்த கோலமல்குசெங் காட்டாங் குடியின்மன்னிப்
பெருகு கணபதி யீச்சரத்தார் பீடுடைக்கோலமே யாகித்தோன்ற,
வுருகிய காதலு மீதுபொங்க வுலகர்முன் கொள்ளு முணர்வுநீட
அருவிகண் வார்வுறப் பாடலுற்றார் 'அங்கமும்வேதமு' மென்றெடுத்து; 486

கருணை உணர்வு நீடவும்: அருவி...எடுத்து - கண்களினின்றும் ஆனந்தக் கண்ணீர் அருவிபோலப் பொழிய "அங்கமும் வேதமும்" என்று தொடங்கிப் பாடுவாராகி,

விளக்கவுரை: மருகல்...தோன்ற - திருமருகலின் றிருக் கோலம் கணபதீச்சரத் திருக்கோலமேயாகிப் புலப்பட. மணிவாசகப் பெருமானார்க்குச் சென்ற சென்ற பதிகள்தோறும் குருமூர்த்தத் திருக்கோலமேயாகக் காட்டிய வரலாறும். "கணக்கிலாத் திருக்கோல நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" என்று அதனைப் போற்றிய திருவாசகமும் இங்கு நினைவு கூர்தற் பாலன.

உருகிய காதலும் மீதுபொங்க - "காத லாலுனை யோத நீ வந்து காட்டினாய் கழுக்குன்றிலே" (திருவா). "பற்றி யெழுங்காதல் பொங்க" (2382). தாம் விரும்பி வேண்டிய திருவருட் குறிப்பினை உணர்த்த அத் திருக்கோலத்தினையே இங்கு வந்து காட்டிய கருணையின் எளிமை கருதி மனம் நெக்குருகிக் காதல் பொங்கிற்று. **பொங்குதல்** - மேன்மேலும் அதிகரித்தல்; அந்நிலைமையிற் கண்ட அநுபவத்தை அங்கு நின்றபடியே பதிகமாகப் பாடியருளுதற்குக் காதலும், உலகர் அறிய வைக்க எண்ணிய கருணையும் காரணமாயின என்பதாம். **உருகிய காதல்** - உருகியதனால் உளதாகும் காதல்.

உலகர் முன்கொள்ளும் உணர்வு நீட - உலகர்க் கறிவுறுத்தும் கருணைத் திருவுள்ளம் பெருக; **முன்கொள்ளும்** - முன்கொள்ளச் செய்யும்; கொளுத்தும் எனப் பிறவினையாகப் பொருள் தந்து நின்றது. **உணர்வு** - திருவுள்ளத் தெழுந்த அருட்குறிப்பு. **நீடுதலாவது** முன் என்றுமுள்ள அவ்வுணர்வு இன்று இங்குப் பெருக; திருச்செங்காட்டங்குடியில் எழுந்தருள வேண்டிப் பரமர் திறத்தை உன்னிய பிள்ளையார் அங்குச் சென்று பாடும்வரை தாழ்க்காது இங்குக் கண்ட அந்நிலையே பாடியருளிய தன்மை நீட எனப்பட்டது.

கண்அருவி வார்வுற - என்க. **வார்தல்** - இடையறாது வழிதல்; இது திரு அருளின் எளிமை கண்டதனால் ஆகிய மெய்ப்பாடு.

அங்கமும் வேதமும் - இது பதிகத் தொடக்கம். இங்கு இப்பதிக யாப்பில் ஆசிரியர் வரலாறும் கூறத் தொடங்குகின்றதாகிய, அத்திருப்பதிகத்தின் சிறப்பினை மனங்கொளவைத்தற் குறிப்புடையதாயது. 486

திருமருகலும் திருச்செங்காட்டங்குடியும்

திருச்சிற்றம்பலம் வினாவுரை பண் - நட்டபாடை

அங்கமும் வேதமு மோதுநாவ ரந்தணர் நாளு மடிபரவ
மங்குன் மதிதவழ் மாடவீதி மருக னிலாவிய மைந்தசொல்லாய்
செங்கய லார்வயற் செல்வமல்கு சீர்கொள்செங் காட்டங் குடியதனுட்
கங்குல் விளங்கெரி யேந்தியாடுங் கணபதி யீச்சரங் காமுறவே. (1)

அந்தமு மாதியு நான்முகனு மரவணை யானு மறிவரிய
மந்திர வேதங்க ளோதுநாவர் மருக னிலாவிய மைந்தசொல்லாய்
செந்தமி ழோர்கள் பரவியேத்துஞ் சீர்கொள்செங் காட்டங்குடியதனுட்
கந்த மகிற்புகை யேகமழுங் கணபதி யீச்சரங் காமுறவே. (9)

நாலுங் குலைக்கமு கோங்குகாழி ஞானசம் பந்த னலந்திகழும்
மாலின் மதிதவழ் மாடவீதி மருகலின் மற்றதன் மேன்மொழிந்த
சேலுங் கயலுந் திளைத்தகண்ணார் சீர்கொள்செங் காட்டங் குடியதனுட்
சூலம்வல் லான்கழ லேத்துபாடல் சொல்லவல் லார்வினை யில்லையாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருச்செங்காட்டங்குடிக்கு எழுந்தருளவேண்டிச் சிறுத்தொண்டர் குறை யிரக்க அதன் பொருட்டு விடைகொள்ளத் திருமருகலில் இறைவரைச் சென்று வணங்கிய போது கணபதி யீச்சரம் காதலித்த திருக்கோலத்தை இறைவர் அங்குக் காட்டியருள "இஃதென்கொல் சொல்லாய்" என வினவிப் பாடியருளியது; விரும்பியவாறே கணபதி யீச்சரஞ் செல்ல விடைகொடுத்த குறிப்பினைப் போற்றியது -2383-ம் பாட்டின் கீழ் உரைத்தவை பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அங்கம்** - வேதாங்கம் ஆறு; **மங்குலும் மதியும் தவழ் மாடம்** என்க. உயர்ச்சி குறித்தது; **மைந்த** - இறைவரே!; **மைந்து** - வல்லமை; **காமுறவு** - விரும்பியிருந்த தன்மை; கணபதி யீச்சரத்தில் விரும்பிய கோலத்தை இங்கு மருகலிற் கொண்டது என்னை? சொல்க; மேல்வரும் பாட்டுக்களினுமிவ்வாறே கொள்க; (2) **தவழ்** - இடையறாது வீழ்கின்ற; **மை** - மேகம்; **கைதவழ்** - கையினில் ஏந்திய; (4) **நாமருகேள்வியர்** - வழிவழியாகச் சொல்லப்பட்டும் கேட்கப்பட்டுமே வரும் மறைவல்லவர். **எல்லி** - இரவு; (5) **சேடு** - பெருமை; (6) **கனை** - ஓசை; (8) **அந்தமும்...காண்பரிய** - எதிர் நிரனிரை; **செந்தமிழோர்கள் பரவி ஏத்தும்** - மருகலில் மறையவர் போற்றுதல் சிறப்பு - அது போல செங்காட்டங்குடியில் தமிழோர் போற்றலின் சிறப்பு. (10) **துவர்க்காயொடு சுக்குத் தின்னும் நிலை** - இது சமணர் வழக்கு; **நீதர்** - நீசர் - கீழோர்; **கலை** - கருமான்; (11) **நாலும்** - தொங்கும்;

தலவிசேடம்:- திருமருகல் தொகுதி III பக்கம் 553 பார்க்க. திருச்செங்காட்டங்குடி தொகுதி III பக்கம் 548 பார்க்க; இவ்விரண்டும் சேர்த்துப் பாடியருளிய வரலாறு முன் உரைக்கப்பட்டது.

2385. கண்டெதிர் போற்றி வினவிப்பாடிக் கணபதியீச்சரங் காதலித்த
அண்டர் பிரானை வணங்கி வைகுமப்பதி யிற்சில நாள்கள்போற்றித்
தொண்ட ருடனருள் பெற்றுமற்றத் தொல்லைத் திருப்பதியெல்லைநீங்கிப்
புண்டரி கத்தடஞ் சூழ்பழனப் பூம்புக லூர்தொழப் போதுகின்றார். 487

2385. பொருளுரை... கண்டெதிர்... வணங்கி - அவ்வாறு தோன்ற கண்டு நேரே போற்றி அருள் வினவிய கருத்துப்படப்பாடிக் கணபதீச் சரத்தினைக் காமுற்று எழுந்தருளிய தேவதேவரைச் சென்று வணங்கி; வைகும்... போற்றி - தங்கிய அத்திருப்பதியில் சில நாள்கள் துதித்து: தொண்டருடன் அருள்பெற்று.... நீங்கி - தொண்டர்களுடனே அருள் விடைபெற்றுக் கொண்டு மற்று அந்தப் பழமையான திருப்பதியின் எல்லையை நீங்கிச் சென்று; புண்டரிகத்தடம்... போதுகின்றார் - தாமரைப் பூந்தடாகங்கள் சூழ்ந்த வயல்களை யுடைய பூம்புகலூரினைச் சென்று தொழுவதற்காகப் போவாராகி,

விளக்கவுரை: வினவிப்பாடி - அருளிப் பாட்டின் குறிப்பினை வினவியதாக வைத்து. வினாவாக அமைத்து; "மருகல் நிலாவியமைந்த! கணபதியீச்சரங் காமுறவே (என்?) சொல்லாய்" எனப் பாட்டுத்தோறும் வருவன காண்க.

பாடிப் பின் திருச்செங்காட்டங்குடி சென்று என்க.

கணபதியீச்சரங் காதலித்த அண்டர்பிரான் வணங்கி - திருச்செங்காட்டங்குடியிற் சென்று வணங்கி என்பதாம். இதற்கு இவ்வாறன்றித் திருமருகலின் கண்ணே யிருந்தபடி வணங்கி என்றுரைத்தும், அதற்குத் தக்கவாறு முன்பாட்டின் கருத்து விளக்கியும் பொருள் கொண்டனர் முன் உரைகாரர்கள்.

வைகும் அப்பதியில் - இறைவர் காதலித்து எழுந்தருளியுள்ள அந்தத் திருச்செங் காட்டங்குடியில்; முன் உரைகாரர்கள் தாம் கொண்ட பொருளுக்கு ஏற்ப **அப்பதி** திருமருகல் என்றுரைத்தனர்.

மற்றத்தொல்லைத் திருப்பதி - திருச்செங்காட்டங்குடி; முன் உரைகாரர் இதனைத் திருமருகல் என்பர்.

புண்டரிகத் தடம்சூழ் பூம்புகலூர் என்க. **புண்டரிகத் தடம்** - திருக்கோயிலைச் சூழ்ந்த "வம்பலர் மென்பூங்கமல வாவி".

போதுகின்றார் - போகின்றாராகி; முற்றெச்சம்.

கண்டடி போற்றி - என்பதும் பாடம். 487

2386. பொருளுரை... சீரின்... உடன் செல்ல - சீரினாற் பெருகிய சிறப்புடைய சிறுத்தொண்ட நாயனார் நண்புடனே தம்முடன்வர; நல்ல... பின்பு - நல்லதேன் பொருந்திய மணமுடைய மாலையணிந்த அந்நாயனாரும் விடைகொடுக்கப் பெற்று நம் நகருக்கு மீண்ட பின்பு; நீரின்... பணிந்து - கங்கை பெருகிய சடையினையுடைய பெருமான்

2386. சீரின் மலிந்த சிறப்பின்மேவுஞ் சிறுத்தொண்டர் நண்புடன் செல்லநல்ல
வேரி நறுந்தொங்கன் மற்றவரும் விடையரு ளப்பெற்று மீண்டபின்பு,
நீரின் மலிந்த சடையார்மேவி நிகழும் பதிகள் பலபணிந்து,
பாரின் மலிந்து நிறைந்தசெல்வம் பயில்புக லூர்நகர்ப் பாங்கணைந்தார். **488**

எழுந்தருளி விளங்கும் பலபதிகளையும் பணிந்து சென்று; பாரின்.... பாங்கணைந்தார் - உலகிலே பெருகி நிறைந்த செல்வம் மிகும் புகலூர்த் திருநகரின் பக்கத்திற் சென்று அணைந்தனர்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டுரைக்க நின்றன.

விளக்கவுரை: சீரின் மலிந்த சிறப்பு - சீராவது அடியார் பணியின் பெருமை.

நண்புடன் செல்ல - பிரியா நண்பினால் தம்மைப் பின்பற்றித் தொடர்ந்து போத.

விடையருளப் பெற்று - செங்காட்டங் குடியிற் றங்கிப் பணி செய்தமர்ந்திருக்க என்று பிள்ளையார் விடையளித்தருள; **மீண்டபின்பு** - பின்றொடர்ந்து வந்த இடத்தினின்றும் தம் பதிக்கு மீண்ட பின்னர்.

நிகழும் பதிகள் - வெளிப்பட அருள்புரிந்து வீற்றிருக்கும் பதிகள். **நிகழ்தல்** - அருள் நிகழ்தல்.

பதிகள் பல - இவை திருஇராமனதீச்சரம், திருப்பனையூர் முதலாயின என்பது கருதப்படும்.

பாரின் மலிந்து நிறைந்த செல்வம் பயில் - "பூமியெல் லாம்புகழ் செல்வ மல்கும் புகலூர்" (பிள். செவ்வழிப் பதிகம் 9); பொருட் செல்வமும் அருட் செல்வமும் நிறைந்து வழங்கும்; இங்கு இனிப் பலகாலம் பிள்ளையார் திருமுருக நாயனாரது திருமடத்தில் சூழவுள்ள தொண்டர்களோடும் அரசுகள், திருநீலநக்கர், சிறுத்தொண்டர் முதலிய நாயன்மார்களோடும் உறைகின்ற நிலையின் குறிப்பு; அரசுகளுக்கு அருளும் நிலையும், "புகலூரிலங்கு பொன்னினை" என்ற (பாவநாசத் திருப்பதிகம்) கருத்தும், நம்பிகளுக்குச் செங்கல் செழும் பொன்னாக அருளும் நிலையும்; பிறவும் இங்கு நினைவு கூரத்தகும் குறிப்புமாம். **பாங்கு** - அருகு. 488

2387. பொருளுரை... திருப்புகலூர்த் திருத்தொண்டர்.... வந்து - திருப்புகலூரில் வாழும் திருத்தொண்டர்களுடனே கூடிச் செம்மையால் மிக்க முருக நாயனார் மெய்ம்மை மிகுந்த விருப்பத்தோடும் நகரின் புறத்து வந்து தம்மை எதிர்கொள்ள நகரின் உள்ளே வந்து; ஓதாது வேதமெல்லாம் உணர்ந்தார் - ஓதாமலே எல்லா வேதங்களையும் உணர்ந்தாராகிய பிள்ளையார்; வேத முதல்வர் தம்... உள் அணைந்தார் - வேதங்களின் முதல்வராகிய சிவபெருமானுடைய திருக்கோயிலினை அடைந்து மலைபோன்ற திருக்கோபுரத்தினுள்ளே புகுந்து அழகிய திருமுன்றிலின் பக்கத்தில் வலமாக வந்து ஒன்று பட்ட சிந்தையோடும் திருக்கோயிலினுள்ளே அணைந்தனர்.

2387. திருப்புக லூர்த்திருத் தொண்டரோடுஞ் செம்மை முருகனார் மெய்ம்மகிழ்ந்த
விருப்பொடு சென்றெதிர் கொள்ளவந்து வேத முதல்வர்தங் கோயிலெய்திப்
பொருப்புறழ் கோபுரத் துட்புகுந்து பூமலி முன்றில் புடைவலங்கொண்
டொருப்படு சிந்தையொடுள்ள ணைந்தா ரோதாது ஞானமெல் லாமுணர்ந்தார். 489

2388. புக்கெதிர் தாழ்ந்து விழுந்தெழுந்து. பூம்புக லூர்மன்னு புண்ணியரை
நெக்குரு குஞ்சிந்தை யன்புபொங்க நிரைமலர்க் கண்ணீ ரருவிசெய்ய
மிக்க தமிழ்த்தொடை மாலைசாத்தி மேவிய வேழிசை பாடிப்போந்து
திக்கு நிறைசீர் முருகர்முன்பு செல்ல வவர்மடஞ் சென்றுபுக்கார். 490

விளக்கவுரை: *செம்மை முருகனார் - செம்மை நெறியில் நிற்கும் முருக நாயனார்;* செம்மை நெறி - இது சிவநெறி - திருநெறி - ஒளிநெறி - குருநெறி என்று பேசப்படும்.

பொருப்பு - உறழ் - பொருப்பு - மலை; சிறப்பும் தலைமையும் தகுதியும் பற்றி ஈண்டுக் கயிலைமலை என்க. சிவனை அடையும் வழியாயிருத்தலின், உறழ்தல் - ஒப்புமை பெறப்பட்டது. பயனுவமம்; மலைபோல உயர்ந்த என மெய்யுவமமாகக் கொள்வாருமுண்டு.

பூமலி முன்றில் - பூ - அழகு; பின்னர்ப் "பொன்னினொடு நவமணிகள் பொலிந்திலங்க"வுள்ள முன்றில் என அரசுகளின் சரித விளைவுக் குறிப்புமாம்.

புடைவலங் கொள்ளுதல் - கோயிற் புறத் திருமுன்றிலிற் சூழ்ந்து வலம் வருதல்.

ஓதாது - இப்பிறவியில் ஓதாது முன்னைத் தவத்தால் உணர்ந்து; "ஆளுடைய பிள்ளையார் முதலாயினார்க்குத் தவமின்றியும் ஞான நிகழ்ந்தவாறென்னை? யென்னுங் கடாவை விடுத்தற்கு மேற் சரியை கிரியா யோகங்களைச் செய்துழியென ஈண்டும் வலியுறுத்தார்" எனப் போதம் எட்டாஞ் சூத்திரத்துள் முதலதிகரணம் "ஈண்டு இவ்வான்மாக்களுக்கு முற்செய்தவத்தான் ஞான நிகழும்" என்ற விடத்துரைத்தது காண்க.

ஞானமெலாம் உணர்ந்தார் - எலாம் - உணர்வரிய மெய்ஞ்ஞானம், உவமையிலாக் கலைஞான முழுவதுமாகிய அனைத்தும்; உணர்ந்தார் - அறிவினுள்ளே சிவன் நின்றுணர்த்த உணர்தல்.

"தவமுதல்வர் சம்பந்தர் தாமுணர்ந்தா ரந்நிலையில்" (1967) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.
489

2388. பொருளுரை- புக்கெதிர்- போந்து - திருக்கோயிலினுள்ளே புகுந்து இறைவரது திருமுன்பு வணங்கி நிலமுற விழுந்து எழுந்து திருப்பூம்புகலூரில் நிலைத்து எழுந்தருளிய புண்ணியராகிய சிவபெருமானை நெகிழ்ந்து உருகும் சிந்தையின்கண் அன்பு பொங்க மலர்க் கண்களில் நிறைந்த நீர் அருவிபோல வழிய, மிக்க தமிழ் மாலையாகிய திருப்பதிகம் சாத்திப் பொருந்திய ஏழிசைப் பாடிப் புறம்பு போந்து; திக்கு... புக்கார் - எல்லாத்

2389. ஆங்கவர் போற்றுஞ் சிறப்பின்மேவி யப்பதி தன்னி லமருநாளில்
வாங்கு மலைச்சிலை யார்மகிழ்ந்த வர்த்தமா னீச்சரந்தான்வணங்கி
யோங்கிய வன்பின் முருகனார்த முயர்திருத்தொண்டு சிறப்பித்தோங்கும்
பாங்குடை வண்டமிழ் பாடிநாளும் பரமர்தம் பாதம் பணிந்திருந்தார். **491**

திக்குக்களினும் நிறையும் சிறப்புப் பொருந்திய முருக நாயனார் முன்னே அழைத்துச் செல்ல அவரது திருமடத்தின்கண் சென்று புகுந்தருளினார் (பிள்ளையார்).

விளக்கவுரை: புக்கெதிர்..போந்து - வழிபாடு செய்த முறைகளும் பதிகம் பாடிய புறம் போந்த நிலைகளும் விரிக்கப்பட்டன. ***தாழ்ந்து - விழுந்து - எழுந்து*** (பொங்கச் செய்ய) - ***சாத்திப் - பாடிப் - போந்து*** என்ற வினையெச்சங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வோர் தனிச் செயல் முறைகளைக் குறித்தன.

சிந்தை நெக்குருகும் அன்பு பொங்க - ***நெக்குருதல்*** - நெகிழ்ந்து அழலிடைப்பட்ட வெண்ணெய் போல உருகுதல். ***பொங்குதல்*** - மேன்மேல் அதிகரித்தல்; சூடு அதிகம் பெற்றவழிப் பால் பொங்குதல் போல் அன்பினால் சிந்தை உருகி மீதூர்தல்.

நிறை மலர்க் கண்ணீர் அருவி செய்தல் - அன்பினால் சிந்தை உருகி அன்பு பொங்கிய வழிப் புறத்து நிகழும் மெய்ப்பாடு. 'அன்பிற்கு முண்டோ வடைக்குந் தாழ்" (குறள்).

மிக்க.. பாடி - ***மிக்க*** - பொருளமைதி சொல்லமைதிகளாலும் மிகுந்த; ***தொடை சாத்துதல்*** - இறைவர் திருமுன்பு அருளுதல்; ***மேவிய ஏழிசை பாடுதல்*** - அதனைப் பின்னர்த் திருமுற்றத்தில் இருந்து தாளம் பொருந்த யாழிசை கூடப் பாடுதல். ***மேவிய*** - அதனுள்ளே இயல்பிற் பொருந்திய.

திக்கு நிறை நீர் - எங்கும் பரவிய சிறப்பு.

முன்பு செல்ல - அழைத்து முன்பு வழிகாட்டிச் செல்ல.

மடம் - அடியார் திருமனையும், தங்கு மிடங்களும் திருமடங்கள் எனப்படுவது மரபு. இத் திருமடம் பரிசனங்களுடன் பிள்ளையாரும், அரசுகளும், சிறுத்தொண்டர் - திருநீலநக்கர் முதலிய நாயன்மார்களும் உடனுறையும் பெருமையும், நாயன்மார்களுக்கு நேரே மாகேசுர பூசை நிகழ்ந்த பெருமையும் உடையது. *490*

2389. பொருளுரை.. ஆங்கவர்.. நாளில் - அத்திருமடத்தில் அவர் வழிபட்டுபசரிக்கும் சிறப்பால் எழுந்தருளி அத் திருப்பதியின்கண் விரும்பியிருக்கும் நாள்களில்; ***வாங்கும்... பாடி*** - வளைத்த மலையாகிய வில்லினையுடைய இறைவர் மகிழ்ந்தெழுந்தருளிய வர்த்தமானீச் சரத்தினை வணங்கிப், பெருகிய அன்பினாலே முருக நாயனார் அங்கு செய்யும் உயர்ந்த திருத்தொண்டினைச் சிறப்பித்துப் பாராட்டி ஓங்கிய பண்பினையுடைய

வண்மை பொருந்திய தமிழ்ப் பதிகத்தினைப் பாடியருளி; பரமர்தம் பாதம் பணிந்திருந்தார் - சிவபெருமானது திருவடிகளைப் பணிந்து அமர்ந்தருளினர்.

விளக்கவுரை: ஆங்கவர் போற்றும் சிறப்பின் மேவி - **ஆங்கு** - முருக நாயனாரது திருமடத்தில்; **அவர்** - முருக நாயனார்; **போற்றும் சிறப்பின்** - விருந்தமைத்தும் மற்றும் குறைவறுத்தும் உபசரிக்கும் சிறப்புகளை ஏற்று; **போற்றுதல்** - அடியார்களை வழிபட்டும் அமுதளித்தும் உபசரித்தல் என்ற பொருளில் வந்தது; சுட்டுக்களிரண்டும் முன்னறி சுட்டு.

மலைவாங்கு சிலையார் - வாங்குதல் - வளைத்தல். **சிலை** - வில்.

வர்த்தமானீச்சரம் தான் - திருப்புகலூரில் அக்கினீசர் கோயிலில் உள்ள தனியாலயம்; **தான்** - சிறப்புப் பொருள் தந்து நின்றது. **வர்த்தமானீச்சரர் தாள்** - என்பது பாடமாயின் மலைச் சிலையாராகிய வர்த்தமானீச்சருடைய திருவடிகளை என்றுரைத்துக் கொள்க.

ஓங்கிய அன்பின் வண்தமிழ் பாடி- பதிகம் 3-5 பாட்டுக்கள் பார்க்க; **ஓங்கிய அன்பு** - பதிகம் 3வது பாட்டிற் பாராட்டப் பட்ட தன்மைகளின் குறிப்பு.

உயர் திருத்தொண்டு - முருக நாயனார் புராணத்துள் விரித்தமை பார்க்க; **"குறிப்பறி முருகன்"** (பதிகம் 3) என்று பிள்ளையாரது மெய்த் திருவாக்கிற் போற்றப்படும் தன்மையினால் திருத்தொண்டின் உயர்வு கணிக்கப்படும்.

ஓங்கும் பாங்குடை வண் தமிழ் - பதிகச்சிறப்பு. **இருந்தார்** - அப்பதியில் அமர்ந்தருளினார். *491*

திருப்புகலூர்

திருச்சிற்றம்பலம்

பண் - செவ்வழி; 2-ம் திருமுறை

வெங்கள்விம்மு குழலினைய ராடவ்வெறி விரவுநீர்ப்
பொங்கு செங்கட் கருங்கயல்கள் பாயும்புக லூர்தனுள்
திங்கள்சூடித் திரிபுர மொரம்பா லெரியூட்டிய
வெங்கள்பெம்மா னடிபரவ நாளும்மிடர் கழியுமே. (1)

வாழ்ந்தநாளும் மினிவாழு நாளும்மிவை யறிதிரேல்
வீழ்ந்தநாளெம் பெருமானை யேத்தாவிதி யில்லிகாள்
போழ்ந்ததிங்கட் புரிசடையி னான்றன்புக லூரையே
சூழ்ந்தவுள்ளம் முடையீர்க ளுங்கடுயர் தீருமே. (2)

புந்தியார்ந்த பெரியோர்க ளேத்தும்புக லூர்தனுள்
வெந்தசாம்பற்பொடிப் பூச வல்லவிடை யூர்தியை
யந்தமில்லா வனலாட லானையணி ஞானசம்
பந்தன்சொன்ன தமிழ்பாடி யாடக்கெடும் பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- வாழ்ந்த நாளும் இனி வாழுநாளும் மிவையறிதிரேல், குலவ ராகக் குலமிலருமாக உலகினல்ல கதியே பெறுதிரேல், பூவுநீரும் பலியும் சுமந்து புகலூரை ஏத்துமின்; இடர் கழியும்; அமருலகாளப் பெறுவீர்கள்; "இம்மையே தருஞ் சோறுஞ் கூறையு மேத்தலாமிடர் கெடலுமாம், அம்மையே சிவலோக மாள்வதற்கியாதுமையுற வில்லையே" நம்பிகள்; அரசுகளின் தேவாரக் குறிப்புக்கள் முன் விரிக்கப்பட்டன.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **வெங்கள்** - விரும்பப்படும் தேன்; **நீர்** - நீரினுள்; **நீர்ப் - பாயும்** என்க. **இளையாராடக் கண்டு** - **கயல்கள் பாயும்** என்பது; (2) **ஏத்தா நாள் - வீழ்ந்தநாள்** என்க. **வீழ்தல்** - சாதல்; "பேசாத நாளெல்லாம் பிறவா நாளே" (தேவா, நம்பி); 4-வது பாட்டுப் பார்க்க; **வாழ்ந்த நாள்** - மிக்கவை; இனி வாழுநாள் சில. இவற்றுள்ளும் ஏத்தா நாள் வீணாய்க் கழிவன; சூழ்ந்த - நினைத்த; (3) தொடைகொள் - தொடைபோல மலர்கின்ற; (4) பலி - தெய்வத்தை ஊட்டும் உணவு; சுமந்து - மிகுதி யுணர்த்திற்று; "போதொடுநீர் சுமந்தேத்தி" (தேவா); **ஓவார்** - நீங்கார்; ஒழியார்; **பெருமையல்லால் யாதும் கேளார்** என்க. "செவிகாள் கேண்மின்களோ - சிவன் பிரான்றிற மெப்போதும்" (தேவா. அரசு) அல்லால் - கேளார் - எதிர்மறை உறுதி குறித்தது; **ஓவுநாளும் உணர்வொழிந்த நாள்** - "ஓவுநாளுணர் வழியுநாள்" (தேவா. நம்பி);- (5) **அணிநடைய** - அழகிய நடையினை உடையவனாகி; அன்னம் நடையழகுக் குவமிப்பது. **இன்னர் என்னப் பெரிதரியர்** - அறிந்து இவர் இத்தன்மையினர் என்று எடுத்துக் கூறுதல் மிகவும் அரிதானவர்; **பெரிது** - மிகவும்; பெரிதும்; உம்மை தொக்கது; "இப்படியன்... இவனிறைவனென் றெழுதிக் காட்டொணாதே" (தேவா. அரசு); **ஏத்தச் சிறிது எளியர்** - அரியராயினும் ஏத்தினால் சிறிதும் எளிமையுமானவர்; "அரிய காட்சியர்... ஆயினும் பெரியர்" (பிள். தேவா); (6) **குலவர்** - நற்குலத்தோர்; **குலமிலர்** - நற்குலத்தில் வாராதவர்; "நாடவர் நாடறிகின்ற, குலமிலராகக் குலமதுண்டாக" (பிள். தேவா); "குலமிலா தானைக் குலவனே யென்று கூறினும்" (நம்பி - புகலூர்) **பெறுவரேனும்** - பெறும் விருப்புடை யாராயினும்; **புலவம்** - புலம்; புறவு இடம்; "புலமெ லாம்வெறி கமழும் பூம்புகலூரைப் பாடுமின்" (நம்பி - தேவா) என்று இதனை நம்பிகள் எடுத்தாண் டருளினர்; (7) **ஆணும் பெண்ணும்** மென நிற்றல் - அரவாரம் பூணுதல் - பிச்சையேற் றுண்ணுதல், உடைகோவணம் பூணுதல் - இவை சிறுமை காட்டும் தன்மைகளாயினும், இவற்றை ஒருங்கேயுடைய இவரைப் பிரான் என்பரால்; இஃதோரற்புதம்! என்பது; (8) **செய்கை தோன்ற** - ஓர் விரலினால் அழுத்திய காரணம் தோற்றப்படாமல் அதனால் விளைந்த சிதைவு வெளித்தோன்ற; **சிதைத்தருள** - சிதைத்துப் பின் அருள; **பொய்கை சூழ்ந்த** - திருக்கோயிலைச் சூழ்ந்த; (9) **ஆமீது என்று தகைந்து** - இஃது எதுவோ ஆம் என்று மயங்கி; **சாமி** - முருகன்; **பூமியெல்லாம் புகழ் செல்வமல்கும்** - 2386 பார்க்க. (10) உருவத்துடை விட்டுழல்வார் - சமண குருமார்; **போர்ந்த கூறை** - புத்தர் மரபு; ஓர்தல் - ஆராய்தலுமாம். அறுவகைச் சமயத்தோர்க்கும் (சித்தி) - **ஓர்த்து** - உவர்த்து; வெறுத்து; (11) **வெந்த** - உலகம் வெந்ததனால் விளைந்த; **அந்தமில்லா ஆடலான் - அனலாடலான்** - என்று பிரித்துரைக்க;

தலவிசேடம்:- திருப்புகலூர் - முருக நாயனார் புராணத் திறுதியில் உரைக்கப்பட்டது; காவிரித் தென்கரை - 75வது தலம்; அம்மை பெயர் அரசுகளது திருக்குறுந்தொகையினுட் போற்றப்பட்டது.

திருப்புகலூர் வர்த்தமா னீச்சரம்

திருச்சிற்றம்பலம்

பண் - பியந்தைக்காந்தாரம்; 2-ம் திருமுறை

பட்டம் பானிற மதியம் படர்சடைச் சுடர்விடு பாணி
நட்ட நள்ளிரு ளாடு நாதனார் நவின்றுறை கோயில்
புட்டன் பேடையோ டாடும் பூம்புக லூர்த்தொண்டர் போற்றி
வட்டஞ் சூழ்ந்தடி பரவும் வர்த்தமா னீச்சரத் தாரே. (1)

பொங்கு தண்புனல் சூழ்ந்து போதணி பொழிற்புக லூரில்
மங்குள் மாமதி தவழும் வர்த்தமா னீச்சரத் தாரைத்
தங்கு சீர்திகழ் ஞான சம்பந்தன் றண்டமிழ் பத்தும்
எங்கு மேத்தவல் லார்க ளெய்துவ ரிமையவ ருலகே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- புகலூர் வர்த்தமா னீச்சரத்தார் இறைவர்; அவர் முருக நாயனார் விதி தவறாது முப்போதும் திருப்பூப் பணியையும் ஏனைத் திருத்தொண்டுகளாகிய பூசைகளையும் ஏற்று அருள் புரிந்தமர்கின்றார்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பட்டம் பால் நிறம் - பட்டம்** - சிறப்பு - முதிர்வு. **பாணி** - தாளம்; **நள் இருள்** - நடு இரவு; சங்காரத்தின் பின் நிலை. **சடைச் சுடர்விடு - நாதனார்** என்று கூட்டுக. **நவின்று** - வெளிப்பட்டு; **புள் - தன் பேடையோடு ஆடும்** - நீர்வளத்தாலாகிய சோலை வளம் குறித்தது; **தொண்டர்** - முருகநாயனாரின் குறிப்பும் கொள்க; **வட்டம் சூழ்ந்து** - வலம் வந்து; (2) **முயல்** - சந்திரனிடைத் தோன்றும் கறை; **வளாவிய** - பொருந்திய; சொற்பொருட் பின்வருநிலை; (3) முருகநாயனாரின் தொண்டினியலும் சிறப்பும் குறித்தது. "உயர்திருத் தொண்டு சிறப்பித்து.. வண்டமிழ்பாடி" (2389); **குறிப்பறிதல்** - திருத்தொண்டின் முதிர்ந்த நிலை. இறைவரது திருவுள்ளக் குறிப்பினை அறிதல். **கண் குளிர** - கண்ணார - நிறைய; **கண்டு கண்டு** - அடுக்கு அன்புமிகுதி யுணர்த்திற்று - (4) **வண்ணம்** - நிலை; சொற் பொருட் பின்வருநிலை. இசையின்ப நிறைவு கருதியது; **விண்ண** - விண்ணின் தன்மையுடைய; **பெண்ண** - பெண்ணையுடைய; **வண்ண வண்ணம்** - மிகுதியாகிய அழகு (5) முருக நாயனாரது தொண்டின் சிறப்பு. (6) **இளங்சுனை** - புதிய நீர் ஊறும் சுனை; (7) **தென் சொல்.. நரம்பெடுத்து** - இன்றமிழிலும் வடமொழியிலும் ஏனைத்திசை மொழிகளிலும் கீதங்களை யாழிலமைத்து; **நெஞ்ச இருள் நீங்க** - மனமாக கழிய; புலர்காலை என்ற குறிப்புமாம்; (8) **வாமதேவர்** - சதாசிவரது நான்காவது திருப்பெயராற் போற்றியது; (9) **அணங்குற** - அழிவுற.

தலவிசேடம் : திருப்புகலூர் வர்த்தமானீச்சரம் - தொகுதி II பக்கம் 769 பார்க்க.

2390. மற்றத் திருப்பதி வைகுநாளில் வாக்கின் பெருவிறன் மன்னனார்தாம்
புற்றிடங் கொண்டாரை வந்திறைஞ்சிப் பொன்மதி லாரூர் புகழ்ந்துபோற்றிச்
சிற்றிடைப் பொற்றொடி பங்கர்தங்குந் திருப்புகலூர் தொழச் சிந்தைசெய்து
கொற்றவ னாரருள் பெற்ற தொண்டர் குழாத்துட னவ்வூர் குறுகவந்தார். 492

2390. பொருளுரை... மற்ற... நாளில் - மற்று அந்தத் திருப்பதியின்கண் எழுந்தருளி யிருக்கும் நாள்களில்; வாக்கின்... போற்றி - திருநாவுக்கரசர் வந்து புற்றிடங் கொண்ட இறைவரை வணங்கி அழகிய மதில்களையுடைய திருவாரூரைப் புகழ்ந்து துதித்து; சிற்றிடை.... சிந்தை செய்து - சிறிய இடையினையும் பொன்னாலாகிய தொடியினையும் உடைய உமையம்மையாரை ஒரு பங்கில் வைத்த இறைவர் எழுந்தருளி யிருக்கும் திருப்புகலூரினைச் சென்று தொழுவதற்கு மனங் கொண்டு; கொற்றவனார்.... வந்தார் - இறைவரது திருவருள் பெற்ற தொண்டர் கூட்டத்தோடும் அவ்வூரினை அணுக வந்தருளினர்.

விளக்கவுரை: வாக்கின் பெருவிறல் மன்னனார் - திருநாவுக்கரசர். பெருவிறல் - 1339 பார்க்க.

வந்து இறைஞ்சி - ஆரூர் புகழ்ந்து போற்றி - வந்து - திருப்பெருவேளூர்; திருவிளமர் முதலிய பதிகளைக் கும்பிட்டு வந்து; வந்திறைஞ்சி - என்பது திருவாரூரை முதலில் வணங்கி வழிபட்ட நிலையினையும் (1482-1492); ஆரூர் புகழ்ந்து போற்றி என்பது அங்குத் தங்கிப் பின் திருவலிவலம், கீழ்வேளூர், கன்றாப்பூர் முதலிய பதிகளைக் கலந்துபாடிப் பின் மீண்டும் திருவாரூரினை அணைந்து திருவாதிரை விழாச் சேவித்த நிலையினையும் (1493) உணர்த்தின.

திருப்புகலூர் தொழச் சிந்தை செய்து - 1495 பார்க்க.

சிற்றிடைப் பொற்றொடி மங்கை பங்கர் - சிவனருள் இங்கொரு முறையிலும் பின்னர் ஒருமுறையிலுமாக அரசுகளை ஆட்கொள்ளவுள்ள தன்மை. சிற்றிடை - பொற்றொடி என இரு தன்மையிற் குறிப்பு நிகழ ஓதப்பட்டது.

கொற்றவனார் மன்னவனாருடன் சூழும் தகுதிக்கேற்பக் கொற்றவனா ரருள் பெற்ற தொண்டர் குழாம் என்றார். 492

2391. பொருளுரை... நாவுக்கரசர்....போதே - திருநாவுக்கரர் எழுந்தருளி வருகின்ற நன்மையாகிய திருவார்த்தையினைக் கேட்ட அப்பொழுதே; சேவில்... எதிர்கொள்ள - இடப வாகனத்தில் விளங்கிய சிவபெருமானது திருமகனாராகிய திருஞான சம்பந்தர் திருவுளத்தில் அன்பு பொருந்தியதனால் ஆசை மிகவும் பெருகிவிட; விரைவாக எதிர்கொள்ளும் பொருட்டு; மெய்யன்பரோடும்... கடந்து போந்தார் - மெய்யன்பர்களுடனே தாமரைப் பூக்களினால் பொலிகின்ற வாவிசூழ்ந்த திருப்புகலூரின் புறம்பணையின் எல்லையினைக் கடந்து போந்தருளினர்.

2391. நாவுக்கரச ரெழுந்தருளு நல்லதிரு வார்த்தை கேட்டபோதே
சேவிற் றிகழ்ந்தவர் மைந்தரான திருஞான சம்பந்தர் சிந்தையன்பு
மேவுற்ற காதன் மிகப்பெருக விரைந்தெதிர் கொள்ளமெய் யன்பரோடும்
பூவிற் பொலிபொய்கை சூழ்புகலூர்ப் புறம்பணை யெல்லை கடந்துபோந்தார். 493

விளக்கவுரை: **நாவுக்கரசர் எழுந்தருளும் நல்ல திருவார்த்தை** - அரசுகள் எழுந்தருளுவதாகச் சொல்லும் சொல் நன்மை தரும் பெருவார்த்தை என்பதாம்; அடியார்களின் கூட்டம் பெறுதல் பெரும் பேறென்பதும், அதனுள்ளும் அரசுகள் வரப்பெறுதல் பெரும் பேறென்பதும் கருத்து: "கருத்திற் பரவு மெய்க்காதல், தொண்டர் திருவேட நேரே தோன்றிய தென்று தொழுதே" (2169) என்றது இங்கு நினைவு கூரத்தக்கது; அன்றியும், "பின்னாக வெய்த இறைஞ்சிப் பிரியாத நண்பொடு போந்தார்" (2172) என்றபடி என்றும் நீங்காது மனத்துட் கொண்டு எதிர்பார்த்திருந்த அரசுகளது வருகை கேட்கப் பெற்றது நல்ல திருவார்த்தை யாயிற்று என்றலுமாம் (2393 பார்க்க); "அருளறிவார் எம்பிரானாவாரே" என்ற திருவாசகப் பகுதிக்குத் **திருவார்த்தை** என்று பெயர் வழங்குதலும் இங்குக் கருதத் தக்கது.

சேவில் திகழ்ந்தவர் மைந்தரான திருஞானசம்பந்தர் - மைந்தர் - பால் உண்டருளிய முறைமையால் மைந்தராந் தன்மை பெற்றவர்; "இப்படியளித்தா ராவதனா லாளுடை பிள்ளையாராய்" (1967) என்றதும், ஆண்டுரைத்தவையும், பிறவும் நினைவு கூர்க. இவ்வாறன்றி முருகப் பெருமானைப்பற்றி ஈண்டுக் குறிப்பதாகவும் பிறவும் கொள்ளும் உரைகள் பொருந்தாமை முன் விளக்கப்பட்டது.

சிந்தை அன்பு மேவுற்ற காதல் மிகப்பெருக விரைந்து எதிர்கொள்ள - புறம்பணை எல்லை கடந்து போந்தார் - இந் நிகழ்ச்சிகளின் காரணம் முன் **"நல்ல திருவார்த்தை"** என்றதன் கீழ் உரைக்கப்பட்டது.

பூவிற் பொலி பொய்கை சூழ் - பூ - தாமரைப்பூ; **பொய்கை** - திருக்கோயிலைச் சுற்றிச் சூழ்ந்துள்ள "பூங்கமல வாவி".

புறம்பணை எல்லை கடந்து போந்து எதிர் கொள்ளுதல் - காதன் மீக்கூர்தலும் அரசுகளை எதிர்கொள்ளும் மரபும் குறித்தது. **புறம்பணை** - நகர்ப்புறத்து வயல்கள். **எல்லை**- நகரின் தெற்குத் திருவெல்லை. அங்கு நின்றபடியே பிள்ளையார் திருவாரூர் தொழப் புறப்படவுள்ள நிலை (2394) கருதி இவ்வாறு குறித்துக் காட்டியருளினர். 1497 பார்க்க. **திகழ்பவர்** - என்பதும் பாடம். 493

2392. *பொருளுரை...* **அங்கணர்... அணைய** - இறைவரது திருவாரூரை வணங்கி வந்தருளிய அரசுகளும் எதிரில் வந்து சேர; **வாசப்பொங்கு... எய்தி** - மணமுடைய புதிய நீர்வளம் பொருந்திய குளிர்ந்த சீகாழிப் பதியில் அவதரித்த வேதியர்பெருமானாகிய பிள்ளையாரும் அணிதிகழக் கூடி; **தங்களின்... வணங்கி** - ஒருவர்க்கொருவர் தமது

2392. அங்கணராரூர் வணங்கிப் போந்த வரசு மெதிர்வந் தணையவாசப்
பொங்கு புனற்றண் புகலிவந்த பூசுரர் சிங்கமும் பொற்பி னெய்தித்
தங்களினன்பின் முறைமையாலே தாழ்ந்து வணங்கித் தனித்தனியே
மங்கல மாகிய நல்வரவின் வாய்மை வினவி மகிழும்போது, 494

2393. மெய்த்திரு ஞானசம் பந்தர்வாக்கின் வேந்தரை நோக்கி "விருப்பினாலே
அப்பரை யிங்கணை யப்பெ றும்பே ரருளுடை யோமியா மந்தணாரூர்
எப்பரி சாற்றொழு துய்ந்த ?"தென்று வினவிட வீறில் பெருந்தவத்தோர்
செப்பிய வண்டமிழ் மாலையாலே **திருவாதிரைநிகழ்– செல்வஞ் சொன்னார்.** 495

அன்பினது முறைமையினால் எதிர் தாழ்ந்து வணங்கி; தனித்தனியே... மகிழும் போது - அவரவர் தனித்தனி மங்கலம் பொருந்திய நல்வரவின் மெய்த்தன்மையாகிய நிகழ்ச்சிகளைக் கேட்டு மகிழ்கின்ற போது,

விளக்கவுரை: *அரசும் எதிர் வந்து அணைய - அரசுகளை எதிர் கொள்ளப் பிள்ளையார் புறம்பணை எல்லை கடந்து போதலும் அதுபோது அரசுகளும் எதிர் வந்து அணைய என்று உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. அவர் போதலும் இவர் வந்தணைதலும் ஒரு காலத்துக் கூடின என்பது.*

பூசுரர்சிங்கம் *- **பூசுரர்** - மறையவர்; நிலத்தேவர்.*

சிங்கம் *தலைமையும் ஆண்மையும் குறித்து வந்த உவமையாகுபெயர்.*

பொற்பின் எய்தி - பொற்பாவது *எய்தும் முறையின் மரபால் பொருந்த எய்துதல்.* ***அன்பின் முறை*** *- சாதிமுறையா னன்றி அன்பின்முறை.*

தனித்தனியே *- பிள்ளையார் அரசுகளையும், அரசுகள் பிள்ளையாரையும் தனித்தனி வினவி.*

மங்கலமாகிய நல்வரவின் வாய்மை *- இருவரும் சீகாழியிற் கூடிப் பிரிந்த பின்னை அதுவரை இருவர்பாலும் நிகழ்ந்த திருவருளின் மங்கல நிகழ்ச்சிகளது நல் வரலாற்றின் உண்மைத் திறம்; **மங்கலம்** - சிவனருள் பொருந்துதலின் **மங்கலம்** எனப்பட்டது.*

விரும்பி மகிழும் *- என்பதும் பாடம்.* *494*

*2393. **பொருளுரை...** மெய்த்திரு...நோக்கி - மெய் வடிவாகிய திருஞானசம்பந்தர் திருநாவுக்கரசுகளை நோக்கி; விருப்பினாலே... அருளுடையோம் யாம் - விருப்பத்தினாலே அப்பராகிய தேவரீரை இங்கு வந்தணையப் பெறுகின்ற பெரிய அருளினை நாங்கள் பெற்றுடையவர்க ளாயினோம்; அந்தண் ஆரூர்.... என்று வினவிட - அழகிய குளிர்ச்சியுடைய திருவாரூரினை எத்தன்மையில் தேவரீர் கும்பிட்டுய்ந்தபடி என்று கேட்டருள; ஈறில்... சொன்னார் - எல்லையில்லாத பெரிய தவத்தோராகிய அரசுகள் (அதற்கு விடையாகச்) சொல்லியருளிய வளப்பமுடைய தமிழ்மாலைத்*

திருப்பதிகத்தினாலே திருஆரூரில் திருவாதிரைத் திருவிழாவின் நிகழும் செல்வத்தை எடுத்துக் கூறினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை: *மெய்த்திரு ஞானசம்பந்தர்* - மெய் - சத்தாந் தன்மை. சிவத்தன்மை.

விருப்பினாலே - இருபாலும் உளதாகிய விருப்பம் காரணமாக.

அப்பரை - அப்பராகிய தேவரீரை: முன்னிலைப் படர்க்கை.

இங்கு அணையப்பெறும் பேரருளுடையோம் - அணையப் பெறுதல் பேரருளாற் பெற்ற பெரும் பேறென்பதாம்; *அருள்* - இறைவரருளும், அரசுகளினருளும் குறித்து நின்றது.

யாம் - அடியவர் திருக்கூட்டத்தை உள்ளடக்கிய உளப்பாட்டுத் தன்மைப்பன்மை.

எப்பரிசால் தொழுது உய்ந்தது - தொழுது உய்ந்த தன்மை என்ன?; ஆரூரைத் தொழுத பரிசு என்னை?

பரிசு - தொழுது அனுபவித்த தன்மை.

ஈறில் பெருந் தவத்தோர் - அரசுகள்; "ஞானத் தவமுனிவர்" (1266) "பரமுனிவன்" (1694) என அவர் தம் புராணத் தொடக்கத்திலும் இறுதியிலும் இத்தன்மை பற்றிப் போற்றியது காண்க.

செப்பிய - வினாவுக்கு விடையாகச் செப்பிய.

தமிழ் மாலையாலே - *சொன்னார்* - என்று கூட்டுக. வினாவுக்குத் திருப்பதிகத்தினாலே விடை பகர்ந்தார் என்பது.

திருவாதிரை நிகழ் செல்வம் - திருவாதிரை விழாவின் நிகழ்ந்த சிறப்பு. 1499 - 1500 பார்க்க. "ஆதிரை நாளின் மகிழ் செல்வம்" (1500); செல்வம் எனப்பட்ட ஏனைய வெல்லாவற்றினும் சிறந்ததாதலின் ஆரூர் ஆதிரைத் திருவிழாக் கண்ட சிறப்பே செல்வமெனப் படுமென்பது; "செல்வம் கழலேத்துஞ் செல்வம் செல்வமே" (பிள். கோயில் - குறிஞ்சி).

அப்பர் - பிள்ளையார் தாம் அரசுகளுக்கு இட்டழைத்த அப்பெயராலே விளிக்கின்ற மரபு காண்க. "அப்பரே யெனவவரு மடியே னென்றார்" (147); உடனிருக்கும் சிவபாத விருதயராகிய அப்பரிருக்கவும் அரசுகளையே பிள்ளையார் அப்பர் என மகிழ்ந்தனர் என்பது "அப்பரை இங்கு அணையப்பெறும் பேரருளுடையோம்" என்ற சிறப்பினால் விளங்கும். *495*

2394. பொருளுரை... அரசு...அப்பொழுதே - அரசுகள் திருப்பதிகத்தினால் விடையருளிச் செய்த வாய்மையினைக் கேட்ட அப்போதே அவ்விடத்தே; *அருள்... வேந்தரும்* - திரு அருளால் ஞானமுண்டருளிய சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும்;

2394. அரசரு ளிச்செய்த வாய்மை கேட்ட வப்பொழு தேயருண் ஞானமுண்ட
சிரபுர வேந்தருஞ் "சிந்தை யின்கட் டென்றிரு வாரூர் வணங்குதற்கு
விரவிய காதலிற் சென்று போற்றி மீண்டும்வந் தும்முடன் மேவுவ"னென்
றுரவு கடற்கன் மிதப்பின்வந்தார்க் குரைத்துடன் பாடுகொண் டொல்லைபோந்தார். **496**

சிந்தையின் கண்... என்று - "தென் திருவாரூரினைச் சென்று வணங்குதற்கு மனத்தில் பொருந்திய காதலினாலே அங்குச் சென்று துதித்து மீண்டும் உம்முடனே வந்து கூடுவேன்" என்று; உரவு....போந்தார் - வலிய கடலைக் கல்லாகிய மிதப்பினால் கடந்து வந்த அரசுகளுக்குச் சொல்லி அவரது உடன்பாட்டினைப் பெற்று விரைந்து சென்றருளினர்.

விளக்கவுரை: வாய்மை - மெய்த்திருவாக்கு; மந்திரம்; கேட்ட அப்பொழுதே சென்று வணங்க வேண்டுமென்னும் நிலைமையிற் பிள்ளையார் நின்றமையால் இக்குறிப்புப்படக் கூறினார். "அஞ்செழுத்தும்பயில் வாய்மையவர்" (1499) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

கேட்ட அப்பொழுதே - அப்போதே - அவ்விடத்து நின்றவாறே; கேட்டபோதே துணிதல் அன்பின் உறைப்பு; இவ்வாறே "பிள்ளையார் திருவார்த்தை யடியார்களுரைப்பக் கேட்டார்" (1442); "அப்பொழுதே... அருண்முன் பெற்றுச்... செல்வார்" (1444) என்று கேட்டபோதே பிள்ளையாரைக் காணப் புறப்பட்ட அரசுகளது வரலாறு இங்கு நினைவுகூர்தற்பாலது; **பொழுதே** என்ற காலப்பெயர் இடத்தையும் குறித்து நின்றது.

"சென்று போற்றி மீண்டும் வந்து உம்முடன் மேவுவன்" - என்று கூறி அரசுகளிடம் பிள்ளையார் விடைபெற்றருளினர். **மீண்டும் வந்து - மேவுவன்** - இப்போது வந்து எதிர்கொண்டு உடன் மேவியதுபோன்றே மீண்டும் மேவுவன். உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; முன்னர்ச் சீகாழியில் மேவியதுபோல மேவுவன் என்ற குறிப்புமாம்; **மேவுவன்** - பின்னர்ப் பலகாலம் பிரியாது உடன்கூடியிருக்க உள்ள குறிப்பும் காண்க. "ஆரூர் கும்பிட்டே உம்முடன் வந்திங் குடனுறைவேன்" (1501) .

வணங்குதற்கு விரவிய காதலின் - அரசுகளை எதிர்கொண்டழைக்க எழுந்தருளிய பிள்ளையார், அவ்வாறு அவரை உடன்கொண்டு திருப்புகலூரின்கட் செல்லாது, நகர்ப் புறம்பணையில் கண்டு வணங்கிய அவ்விடத்துநின்றே அப்போதே அவரை நீங்கிச் செல்ல விடைகொண்டதற்குக் காரணங் கூறியபடி; **காதலின்** - காதலால்; காதல் காரணமாக; **இன்** - ஏதுப்பொருளில் வந்தது.

இவ்வாறு உடன்சென்றுறைதல் வேண்டிய அப்பரையும் நீங்கிக், கேட்ட அப்போதே செல்லும் பெருங்காதல் விளைத்தது திருப்பதிகத்தின் பெருமை! அஞ்செழுத்தும் பயில்வாய்மை அப்பரின் பெருமை! ஆரூர் திருவாதிரைத் திருவிழாவின் பெருமை! இவற்றைச் சைவ வுலகம் தெளிந்துபோற்றியுய்வதாக.

கல் மிதப்பின் உரவு கடல் வந்தார் - திருநாவுக்கரசர்; **மிதப்பின்** - மிதவையின் உதவிகொண்டு; **உரவு - வலிய கடல்** - கடல்மீது; இப்பரிசாற் கூறியது அவர் பெருமையும்

வழி

2395. சொற்பெரு வேந்தருந் தோணிமூதூர்த்
தோன்றல்பின் காதல் றொடரத்தாமும்
பொற்புக லூர்தொழச் சென்றணைந்தார்;
புகலிப் பிரானும் புரிந்த சிந்தை
விற்குடி வீரட்டஞ் சென்றுமேவி
விடையவர்பாதம் பணிந்து போற்றிப்
பற்பல வாயிரந் தொண்டரோடும்
"பாடல னான்மறை" பாடிப்போந்தார். 497

அஞ்செழுத்தும் பயில் வாய்மையின் (நமச்சிவாயத் திருப்பதிகம்) பெருமையும் உணர்த்தற்கு; "பொங்குகடற் கன்மிதப்பிற் போந்தேறு மவர்பெருமை" (1797) என்று அப்பூதியார் இதுபற்றியே போற்றுதல் கருதுக. "ஒருகன்மே லேற்றிடல்", "கருங்கல்லே சிவிகையாயிட".

உடன்பாடு கொண்டு - இசைவுபெற்று; பிள்ளையார் அப்போது தம்முடன் வந்துறைதலினும், திருவாரூர் சென்று கும்பிட்டு மீண்டுவந்து மேவுதலையே பெரிதெனை மகிழ்ந்துட்கொண்டு அரசுகள் மாறாது உடன்பட்டனர்; இது அன்பின் பெருமை; அன்புபெறாத எம்மனோர்க்கீ தியலாதென்பது கண்கூடு; பின்னர்த் திருமறைக்காட்டி னின்றும் தம்மைப் பிரிந்து பிள்ளையார் பாண்டிநாடு செல்ல விடைகொண்டருளும் போது அப்பர் உடன்படாது மறுக்கும் மன்நிலையினையும், அவர் முன்னே தாமுமெழுந் தருள வமைந்த மனநிலையினையும், அதனைப் பிள்ளையார் விலக்கத் தாம் அரிதாங் கருத்தின் நேர்ந்திருக்கும் மனநிலையினையும் (பிள்ளையார் புராணம் 616-617) இங்கு வைத்து அவற்றின் உட்கிடைகளைக் கண்டுகொள்க.

தென்திருவாரூர் - இறைவரது பூங்கோயில் உள்ள பகுதி திருவாரூரின் தென்பகுதி; "தென்றிருவாரூர் புக்கு" (நம்பி - புறநீர்மை).

ஒல்லை போந்தார் - காதலின் முதிர்வால் நிகழும் விரைவு : அன்றியும் திருவிழா நிறைவெய்தினும் அதன் அடையாளங்கள் மறையாமுன் காணும் ஆர்வமும், தியாகேசர் திருஇருக்கை சேருமுன் சென்று கும்பிடும் விருப்பமும் குறித்தபடி; மேல் "புரிந்த சிந்தை" (2395) என்னும் குறிப்பும் காண்க. 496

2395. பொருளுரை... சொற்பெரு வேந்தரும்... சென்றணைந்தார் - வாக்கின் பேரரசாகிய அரசுகளும் சீகாழிப் பழம்பதியில் வந்தருளிய பெருந்தகையாரின் பின்னே தமது காதல் சென்று தொடரத், தாமும் அழகிய திருப்புகலூரின்கண்ணே தொழுவதற்குச் சென்றணைந்தனர்; புகலிப்பிரானும்... போற்றி - சீகாழித் தலைவரும் இடைவிடாது நினைவுபூண்ட மனத்துடனே திருவிற்குடி வீரட்டானத்தை யடைந்து இடபத்தையுடைய இறைவரது திருவடிகளைப் பணிந்து போற்றியபின்; பற்பல... போந்தார் - பற்பல ஆயிரம்

திருத்தொண்டர்களுடனே "பாடல னான்மறை" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடிய வண்ணமே திருவாரூரை நோக்கிச் சென்றருளினர்.

விளக்கவுரை: தோன்றல்பின் காதல் தொடர - தாமும் திருப்புகலூர் தொழச் சென்றணைந்தார் - அரசுகளது மனத்திற்பெருகிய காதல் பிள்ளையாரைத் தொடர்ந்து சென்றது; அரசுகள் திருப்புகலூர் தொழச் சென்றணைந்தனர். "திருவாரூ ரொருவாறு தொழுதகன்று அங்குள்ளம் வைத்து.... பதிபிறவும் பணிந்து போந்தார்" (1495) என்றதும் பிறவும் இந்த மனநிலையினை விளக்குவன.

புரிந்த சிந்தை - புரிதல் - இடைவிடாது நினைத்தல்; சொல்லுதலுமாம்; **சிந்தை** - சிந்தையுடன்; திருவாரூரை நினைந்து என்க; இது "பாடல னான்மறை"ப் பதிகத்தா லறியலாம்.

விற்குடி வீரட்டம் சென்றுமேவி - திருவாரூரை நினைந்து செல்வாராயினும் இடையிற் கண்ட பதிகளை வணங்கிச் செல்லவேண்டும் நியதிப்படி விற்குடியிற் சென்று வணங்கி மேற்சென்றருளினர் என்க. இத்தலம் திருப்புகலூரினின்றும் தெற்குநோக்கித் திருவாரூருக்கு வரும் சாலையினருகில் இடையில் உள்ளது.

பற்பலவாயிரம் தொண்டர் - அனேகம் தொண்டர்கள் என்க. **ஆயிரம்** - அனேகம் என்ற பொருள்தந்து நின்றது; இவர்கள் பிள்ளையாருடன் செல்லும் திருக்கூட்டம்.

"பாடலனான் மறை" பாடி - இது பதிகத் தொடக்கம்; திருவாரூரிறைவரை நினைந்து பதிகம் பாடிக்கொண்டே பிள்ளையார் சென்றருளினர். இதனைப் பதிகக் குறிப்பிற் காண்க.
497

திருவிற்குடி வீரட்டம்

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டராகம்; 2-ம் திருமுறை

வடிகொண் மேனியர் வானமா மதியினர் நதியினர் மதுவார்ந்த
கடிகொள் கொன்றையஞ் சடையினர் கொடியின ருடைபுலி யதளார்ப்பர்
விடைய தேறுமெம் மானமர்ந் தினிதுறை விற்குடி வீரட்டம்
அடிய ராகிநின் றேத்தவல் லார்தமை யருவினை யடையாவே. (1)

விலங்க லேசிலை யிடமென வுடையவன் விற்குடி வீரட்டத்
திலங்கு சோதியை யெம்பெரு மான்றனை யெழிறிகழ் கழல்பேணி
நலங்கொள் வாழ்பொழிற் காழியுண் ஞானசம் பந்தனற் றமிழ்மாலை
வலங்கொ டேயிசை **மொழியுமின்; மொழிந்தக்கான் மற்றது** வரமாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது பெருமைகள் பல பேசி, அவர் உறைவிற்குடி வீரட்டம் ஏத்தவல்லாரை அருவினை அடையா என்றது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **உடை** - உடையாக; **புலிஅதள்** - புலித்தோல்; (2) **களங்கொள்** - **கள்** - தேன்; **அம்** - சாரியை; (3) **வல் அங்கை** - வலிய அங்கை; வலது கை

நகர்ப்புறம்

2396. துணரிணர்ச் சோலையுஞ் சாலிவேலித்
துறைநீர்ப் பழனமுஞ் சூழ்கரும்பின்
மணமலி கானமு ஞானமுண்டார்
மருங்குற நோக்கி மகிழ்ந்தருளி,
யணைபவ "ரள்ளற் கழனியாரூ
ரடைவோ" மெனமொழிந் தன்புபொங்கப்
புணரிசைச் செந்தமிழ் கொண்டுபோற்றிப்
பொன்மதி லாரூர்ப் புறத்தணைந்தார். 498

என்றல் பொருந்தாது, எரி இடது கையில் ஏந்தப்படுதலால்; (4) **கலம்** - மரக்கலம்; **அல்லதுண்டோ** - எதிர்மறை உறுதிகுறித்தது; (5) **படியதாக** - முன்னிலையாக; (8) **உரையார் தருபொருளினன்** - சொற்பொருளாவார்; (10) **இடமெனில் - வீரட்டம் - அதனைக் கண்டு** என்க; (11) **விலங்கலே** - விலங்கலையே சிலையும் இடமுமென; **மற்றது வரமாமே** - திருப்பதிகத்தை மொழிதலே எல்லா வரங்களையும் தரும்.

தலவிசேடம்:- **திருவிற்குடிவீரட்டம்** - காவிரித் தென்கரை - 74-வது தலம்; சிவபெருமானது வீரங்கள் நிகழ்ந்த எட்டுத் தலங்களுள் ஒன்று; சலந்தரனைச் சங்கரித்த பதி; சுவாமிகோயில் கட்டுமலையின்மேல் உள்ளது. மாடக்கோயில் போலும்; உற்சவ மூர்த்தி திருக்கரத்தில் சலந்தரனைப் பிளந்த சுடராழி உள்ளது காணலாம். சுவாமி - வீரட்டநாதர்; அம்மை - ஏலார் குழலி; பதிகம் 1. இது விற்குடி நிலையத்தினின்றும் ஒரு நாழிகையளவில் உள்ளது.

2396. **பொருளுரை... துணர்இணர்ச் சோலையும்... அணைபவர்** - பூங்கொத்துக்களையுடைய சோலைகளையும் நெல்லை வேலிபோலக்கொண்ட நீர்த்துறைகளையுடைய வயல்களையும், மணம்பொருந்திய கரும்புக் காடுகளையும், ஞானமுண்ட பிள்ளையார் பக்கங்களெங்கும் கண்டு மகிழ்ந்து அணைகின்றவராகி; **அள்ளற் கழனி... புறத்தணைந்தார்** - "அள்ள லகன் கழனியாரூர் அடைவோமே" என்று சொல்லி அன்பு மேன்மேல் பொங்க இசையுடன் கூடிய செந்தமிழ்ப் பதிகத்தினாற் றுதித்து அழகிய மதிலையுடைய திருவாரூரின் புறத்தே அணைந்தனர்.

விளக்கவுரை: சோலையும், பழனமும், கானமும் - நோக்கிய மகிழ்ந்து என்க. இவை நாட்டு வளமும் இயல்பும் குறித்தன; "கற்சுரமு நீரூருங் கான்யாறு நெடுங்கானும் பலகழிய" (கழறிற் - புரா - 164) என்றும், "நலஞ்சேர் தலமுங் கானகமுந், துன்று மணிநீர்க் கான்யாறுந் துறுகற் சுரமுங் கடந்தருளி" (வெள்-சருக்-15) என்றும் வருவனபோலக் காண்க.

துணர்இணர்ச் சோலை - மலர்ச்சோலைகள்; **துணர்** - கொத்து; **இணர்** - மலர். **சாலிவேலி** - நெல்வேலி; வேலிபோலச் சூழ்வதனை **வேலி** என்றதுபசாரம்; **சாலி** - நெற்பயிர்.

கரும்பின் காடு - காடு - மனிதரால் உழவில் விளைக்கப்படுவனபோலன்றித் தம்மியல்பிற் செறிந்து மிக வளரும் தாவரம் காடு எனப்படும்; காடுபோல்வதனைக் காடென்ற துபசாரம்; "காய்த்த செந்நெலின் காடுசூழ்" (1828) "கமுகின் காடு" (832) முதலியவை காண்க.

"அள்ளற் கழனி ஆரூர் அடைவோம்" என - பதிகக் கருத்தும் குறிப்புமாம். பதிகம் 3-வது பாட்டுப் பார்க்க. இப்பதிகம் பாடியபடி ஆரூரை நோக்கிப் பிள்ளையார் போந்தார் என்று கூறும் வரலாற்றின் அகச்சான்று.

புணர் இசைச் செந்தமிழ் கொண்டு - புணர்இசை - தான் மேன்மைபெற இதனுள் வந்து இசைபுணர்ந்தது என்பது குறிப்பு. கொண்டு - கருவிப் பொருளில் வந்த மூன்றாவதன் சொல்லுருபு.

அன்பு பொங்க - "உள்ளமோ ரிச்சையினா லுகந்தேத்தி" (3) "வல்லதோ ரிச்சையினால் வழிபாடிவை" (11) என்ற தேவாரக் குறிப்பு.

பொன்மதில் - அழகிய மதில்; அங்கங்கும் பொன்னால் அணிசெய்யப்பட்ட மதில் என்றலுமாம்.

ஞானமுண்டார் - அணைபவர் - அணைந்தார் - என்று வினைமுடிவு செய்க. **அணைபவர்** - முற்றெச்சம்.

ஆரூர்ப்புறத்து - திருவாரூர்த் திருநகரின் புறம்பணையில். 498

I. திருவாரூர் (செல்லும் வழியில் அருளியது)

திருச்சிற்றம்பலம் **பண் - வியாழக் குறிஞ்சி; 1-ம் திருமுறை**

பாடல னான்மறையன் படி பட்ட கோலத்தன் றிங்கள்
சூடலன் மூவிலைய சூலம் வலனேந்திக்
கூடலர் மூவெயிலும் மெரி யுண்ணச் சுடரெரிகொண் டெல்லி
யாடல னாதிரைய னாரூ ரமர்ந்தானே. (1)

உள்ளமோ ரிச்சையினா லுகந் தேத்தித் தொழுமின் றொண்டீர் மெய்யே
கள்ள மொழிந்திடுமின் கரவா திருபொழுதும்
வெள்ளமோர் வார்சடைமேற் கரந் திட்ட வெள்ளேற் றான்மேய
அள்ள லகன்கழனி யாரூ ரடைவோமே. (3)

நல்ல புனற்புகலித் தமிழ் ஞானசம் பந்தனல்ல
அல்லி மலர்க்கழனி யாரூ ரமர்ந்தானை
வல்லதோ ரிச்சையினால் வழி பாடிவை பத்தும்வாய்க்கச்
சொல்லுதல் கேட்டல்வல்லார் துன்பந் துடைப்பாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- ஆரூரைச் சென்று பாடுதல் கைதொழுதல் பணிதல் கருமம்; அதனை ஏத்தியடைவோம்: **திருவாரூரை நோக்கிச் செல்லும் வழியில் இப்பதிகத்தைப்** பாடிக்கொண்டு நகர்ப்புறத்துச் சென்றருளினர். வழிநடைச் செலவுக்கேற்ப இப்பதிகப் பாட்டுக்கள் இரண்டு விகற்பச் செய்யுளா யமைந்தமை காண்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பாடலன்** - பாடுபவன்; பாட்டுக்குரியவன்; "நன்பாட்டுப் புலவனாய்" (திருபுத்தூர் - தாண்). **படிபட்ட கோலம்** - கண்டார் விரும்பும் கோலம்; **படி** - முதனிலைத் தொழிற்பெயர்; **படிதல்** - விருப்பம் தங்குதல்; "கண்டார் காதலிக்குங் கணநாதன்" (நம்பி - காளத்தி); **கூடலர்** - பகைவர்; **எல்லி** - இரவு. சங்காரமாகிய இரவு; **ஆதிரையன்** - "ஆதிரை நாளுகந்தான்" "ஆதிரை நாளர்போலும்" (நேரிசை); **ஆதிரை** - சிவனுக்குகந்தநாள்: இந்நாள் திருவாரூரிற் பெருஞ்சிறப்புடையது; அரசுகளது ஆதிரை விழாப்பற்றிய தனிப் பதிகம் பார்க்க. அப்பதிகத்தினைக் கேட்ட துணையானே பிள்ளையார் திருவாரூர் தொழப் போந்தருளிய வரலாற்றுக் குறிப்புமாம்; **ஆடலன்** - திருவாதிரைத் திருவிழாக் கூத்துமாம்; (2) **பாலொடு நெய்தயிரும் பயின்றாடும்** - திருவாதிரைத் திருமஞ்சனச் சிறப்புக் குறிப்பு; **பணிதலே கருமம்** - என்க; செய்தக்க கருமம். ஏகாரம், பிரிநிலை; 5-வது பாட்டும் பார்க்க; **போய்க் காலையு மாலையும் பணிதல்** என்று கூட்டுக; ஆரூரை நோக்கிச் சென்றுகொண்டிருந்த நிலை; (3) **உள்ளமோரிச்சையினால் உகந்தேத்தித் தொழுமின் - ஆரூர் அடைவோமே** - "ஆரூர் வணங்குதற்கு விரவிய காதலில்" (2394), என்றதற்கும், வழியில் அருளிய பதிகம் என்றதற்கும் அகச்சான்று; **அள்ளல் அகன்கழனி** - நீர்ச்சிறப்பு. "சாலிவேலித் துறைநீர்ப் பழனமும்... மருங்குற நோக்கி மகிழ்ந்தருளி" (2396) என்றதன் அகச்சான்று. **கழனி** 11-ம் பார்க்க. (4) **பாவம் நைந்தறும்** - மலநீக்கமும், **நல்லன வந்தணையும்** - இன்ப ஆக்கமுங் குறித்தன. (5) **வீடுபிறப்பு** - பிறப்பு வீடுதல் என்க; வீடுதல் - நீங்குதல்; விரைவு பற்றி முன்வைத்தார்; **எளிதாம்** என்ற குறிப்புமது. **அதனை** - எளிதாவதற்குரிய சாதனத்தை; **சென்று** - வழியில் பாடியருளிய வரலாற்றின் குறிப்பு. (9) **வல்லியம்** - புலி; **நறவு** - குருதி; இரத்தம் - என்ற பொருளில் வந்தது. (10) **இந்திரஞாலம்** - மெய்போற் காட்டும் பொய்; 64 கலைகளுள் ஒன்று இந்திரஜாலம் - இந்திரஞாலம் என்றாயிற்று. **தந்திரம்** - தமது நிலைத்த இடம்; **திரம்** - நிலைத்தல்; (11) **அல்லிமலர்க் கழனி** - திருவாரூர்ச் சிறப்பாகிய கோயில், குளம், ஓடை என்ற ஐவேலி மூன்றனுள் செங்கழு நீரோடைப் பரப்பையுடைய; **வல்லதோரிச்சையினால் வழிபாடிவை பத்தும்** - "அன்பு பொங்க" (2396); "காதலிற் சென்று" (2394); **வாய்க்க...வல்லார்** - வாய்த்தலின் அருமை குறித்தது.

தலவிசேடம்:- திருவாரூர் - முன் உரைக்கப்பட்டன.

2397. பொருளுரை... வானுயர்... முன்கண்டு - வானத்தில் உயரச் செல்கின்ற சிவந்த கதிர்களையுடைய ஞாயிற்றின் மண்டலத்தின் பக்கத்தில் அணையும் நீண்ட கொடிகள் பொருந்திய திருவாரூர்த் திருநகர் ஒரு பொன்னுலகம் போலத் தோன்றும் விளங்கிய ஒளியினை முன்னே கண்டு; **சண்பை...நீற்றர்** - சீகாழியில் வந்தருளிய பால்போன்ற வெண்ணிறமுடைய திருநீற்றினை அணிந்த பிள்ளையார்; **"பருக்கை...ஆடி** - பருக்கை

நகரின் ஒளிகண்டு போற்றி எல்லையடைந்தது

2397. வானுயர் செங்கதிர் மண்டலத்து மருங்கணை யுங்கொடி மன்னுமாரூர்
தானொரு பொன்னுல கென்னத்தோன்றுந் தயங்கொளி முன்கண்டு சண்பைவந்த
பானிற நீற்றர் "பருக்கை யானைப்" பதிகத் தமிழிசை பாடியாடித்
தேனொடு வண்டு முரலுஞ்சோலைத் திருப்பதி மற்றதனெல்லை சேர்ந்தார். 499

யானை என்று தொடங்கும் திருப்பதிகத் தமிழிசையினைப் பாடிப்பாடிப் போந்து; தேனொடு... சேர்ந்தார். தேனுடன் வண்டுகள் முரல்கின்ற சோலைகள் சூழ்ந்த அத்திருப்பதியின் எல்லையினைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை: வானுயர்-கொடி மன்னுமாரூர் - "மாளிகைக் கொடி, யருக்கன் மண்டலத்தணாவு மந்தணாரூர்" என்ற பதிகப்பொருளையும் சொல்லையும் சிறக்க எடுத்துக்காட்டியபடி; **வானுயர் செங்கதிர் மண்டலம்** - ஞாயிற்றின் உலகம்.

ஒரு பொன்னுலகு - பொன்வேய்ந்து அழகுடன் விளங்கும் தனி உலகு.

ஒரு பொன்னுலகு - ஒரு - விண்ணுலகமன்றி வேறுமொரு என்பது குறிப்பு; விண்ணுலகத்தவர் அங்கு இன்பமன்றிப் பற்பல துன்பங்களும் அடைதலானும், அது இறுதியில் பிறவிக்கேதுவாக முடிதலானும், அங்குச் சின்னாள் தங்கிய தியாகேசர் அதன் பின்னும் இங்கு என்றும் "பூங்கோயி லுண்மகிழ்ந்து போகாதிருந்" தருள்வதனாலும், விண்ணுலகத்தவர் யாவரும் இங்குவந்து பயன்பெற் றுய்தலானும் பிறவாற்றானும் ஆரூர்க்குப் பொன்னுலகு எவ்வாற்றானு மிணையன்றென்பது குறிக்க இஃது வேறு ஒரு **பொன்னுலகென்ன** என்றார். ஆரூராண்ட (தேவா).

தயங்கு ஒளிமுன் கண்டு - ஒளி - விண்ணுலகு ஓர் ஒளி மண்டலம்; இஃது அதனின் மிக்க ஒளியுடன் விளங்குதலால் அவ்வொளி நெடுந்தூரத்திலே கட்புலப்பட்ட தென்பது. **முன் கண்டு** - ஒளியலைகள் நெடுந்தூரம் முன்சென்று தாக்கும் உண்மை குறித்தது.

பால்நிற நீற்றர் - திருநீறு தூய வெண்மையுடையது; சிறப்பு. **நீற்றர்** - திருமேனியில் நீறு விளங்கவுள்ளவர் பிள்ளையார்.

பருக்கையானைப் பதிகம் - முதற்குறிப்பு; "பருக்கையானை" என்று தொடங்கும் பதிகம்.

இசை பாடி ஆடி - இப்பதிகத்தின் நடையின் முடுகுமிராக இசையமைதி, பாடுதலுடன் ஆடுதலுக்கும் ஒத்திசைவது; திருவிராகம் என்பதாம்.

தேனொடு வண்டு முரலும் - தேன் - ஒருவகை வண்டு; பெண் வண்டுடன் ஆண் வண்டுகள் பாட என்றலுமாம்; தேன் அருந்தியதனால் என்றுரைத்தலுமாம். "சுரும்பொடு வண்டுந்தேறும் தும்பியும்".

499

II. திருவாரூர் (நகர்கண்ட போது திருநகரின் ஒளிகண்டு பாடியது)

திருச்சிற்றம்பலம் **திருவிராகம் பண் - நட்டராகம்; 2-ம் திருமுறை**

பருக்கை யானை மத்தகத் தரிக்கு லத்துகிர்ப்புக
நெருக்கி வாய நித்திலந் நிரக்கு நீள்பொ ருப்பனூர்
கருக்கொள் சோலை சூழநீடு மாட மாளி கைக்கொடி
யருக்கன் மண்ட லத்தணாவு மந்த ணாரூ ரென்பதே. (1)

வல்லி சோலை சூத நீடு மன்னு வீதி பொன்னுலா
அல்லி மாத மர்ந்திருந்த வந்த ணாரூ ராதியை
நல்ல சொல்லு ஞானசம் பந்த னாவி னின்னுரை
வல்ல தொண்டர் வானமாள வல்லர் வாய்மை யாகவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அந்தணாரூரென்பதே சிவனது ஊர் என்று கண்டு பாடித் திளைத்தது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பருக்கை** - பரிய - பெரிய - கை; "பனைக் கை மும்மத வேழம்" (குறுந்); **அரிக்குலம்** - சிங்கக்கூட்டம்; **உகிர்** - நகம்; **நித்திலம் நிரக்கும்** - முத்துக்கள் பல உதிரும்; **பொருப்பு** - மலை (கயிலை); யானை மத்தகத்தைச் சிங்கம் உகிரினாற் பிளக்க, அங்கு விளைந்த முத்துக்கள் உதிர்தற்கிடமாகிய கயிலைமலையினை யுடையவன்; **கொடி அணாவு** - மாளிகைகளின் மேல் உள்ள கொடிகள் ஞாயிற்றின் மண்டலத்தினை அணுகச்செல்லும்; **"செங்கதிர் மன்னும்"** (2397) என்று ஆசிரியர் இதனை ஆண்டருளினர்; (2) **விண்ட** - வாயவிழ்ந்த; **ஊடறுக்கும்** - ஊடுருவும்; (3) **மாணி** - பிரமசாரி; மார்க்கண்டர்; **வண்மை** - என்றுமுள்ளதாகச் செய்த எளிமையும் நலமும்; வள்ளைக் கொடியறுத்து மேதி வாவியுட் பாயும் என்க. **வெறித்து** - மதத்தால் மிகுந்து; **மேதி** - எருமைகள்; (4) **அஞ்சு** - புலன்கள்; **ஆறு** - காம முதலிய குற்றங்கள்; **குஞ்சி** - குடுமியையுடைய தலை என்ற பொருளில் வந்தது. **என்னி** - என்பவர்; **அரங்கு எடுக்கும்** - அரங்கில் ஆடும் - பாடும்; (5) **சங்குலாவு** - சங்கு போன்று வளைந்த வடிவும் வெள்ளை நிறமும்; (6) **நாரை அள்ளல் ஆரல் வாரும்** - நாரைகள் சேற்றில் ஆரல் மீன்களை இரைகொள்ளும்; (7) **மங்க** - அழிய; (8) **வரைத்தலம்** - மலையினை; **நிரைத்த** - வரிசையாகிய (9) **இருந்தவன்** - தாமரையில் இருந்த பிரமன்; **கிடந்தவன்** - பாம்பணையிற் பள்ளிகொண்ட விட்டுணு; **கிடந்தவன் இடந்தும், இருந்தவன் பறந்தும்** என எதிர்நிரனிரையாகக் கொள்க; (10) **பறித்த** - மயிர்பறித்த; **கடு** - பொடி; **வெறித்த** - முனிந்த; **அசும்பு** - ஊற்று; கசிவு. (11) **சூதம்** - மா; **அல்லிமாது** - **அல்லியங்கோதை** என்ற பெயருடைய தல அம்மை; **அமர்ந்து** - விரும்பி; அல்லி மாதினை விரும்பி யெழுந்தருளிய இறைவரை; **அந்தண் ஆரூர்** - அழகும் குளிர்ச்சியுமுடைய திருவாரூர்; **அழகு** - அங்கு வந்து வழிபட்டு வரம்பெற்ற இலக்குமியின் இருப்பும்; **தண்மை** - பிறவி வெம்மை தீர்க்கும் இறைவரது இருப்பும் குறிப்பால் உணர்த்தின.

நிறை மலர் தூவிப் போற்றியது

2398. பொங்கிய சிந்தை விருப்பின்வெள்ளம்
 பொழிந்து புவிமேற் பொலிவதென்ன
எங்குங் குளிரொளி வீசுமுத்தி
 னிலங்கு சிவிகை யிழிந்தருளிச்
செங்கை நிறைமலர் கொண்டுதூவித்
 திருவிருக் குக்குறள் பாடியேத்தித்
தங்கள் பிரானர சாளுமாரூர்
 தனைப்பணி வுற்றார் தமிழ்விரகர். **500**

---

*2398. பொருளுரை... பொங்கிய....வீசும் - சிந்தையினின்றும் பொங்கிய பெருங்காதலாகிய வெள்ளம் சொரிந்து நிலவுலகின்மேல் விளங்குவதுபோல எப்பக்கமும் குளிர்தரும் ஒளியினை வீசுகின்ற; முத்தின் சிவிகை இழிந்தருளி - முத்துச்சிவிகையினின்றும் கீழே இறங்கி வந்தருளி; தமிழ் விரகர் - தமிழ் விரகராகிய பிள்ளையார்; செங்கை... தூவி - சிவந்த திருக்கைகளில் நிறைய மலர்களைத் தூவி அருச்சித்து; திருவிருக்குக் குறள்... பணிவுற்றார் - திருவிருக்குக்குறட் பதிகத்தினைப் பாடித் துதித்துத் தமது பெருமான் அரசாட்சி புரிகின்ற திருவாரூர்த் **திருநகரினைப் பணிந்தருளினர்.***

விளக்கவுரை: *திருவாரூரின் பெருகொளியினை முன் கண்டு பதிகம் பாடித் துதித்த படியே திருவெல்லையினை அடைந்தருளிய பிள்ளையார், அத் திருவெல்லையினிற் சிவிகையினின்றும் இறங்கி மலர்தூவித் திருநகரினைப் போற்றித் திருவிருக்குக் குறட்பதிகம் பாடிப் பணிந்தருளினர்.*

சிந்தை(யிற்) பொங்கிய *என்க;* ***விருப்பின் வெள்ளம்*** *- பெருவிருப்பாகிய வெள்ளம்;* ***வெள்ளம்*** *- மிகுதி குறித்தது.*

பொழிந்து - பொலிவது *- அடங்காது மேலே சொரிந்து விளங்குதல்.*

குளிரொளி எங்கும் வீசும் முத்து *என்க.* ***குளிர் ஒளி - முத்து*** *- முத்துக்களின் இயல்பாகிய தண்ணிய ஒளி; குளிர்விக்கும் ஒளி என்று பிறவி வெப்பத்தைப் போக்கிக் குளிர்ச்சிச் செய்யும் ஒளி எனப் பிறவினைப் பொருள்கொண்டு பிள்ளையாரது சிவிகையின் முத்துக்களின் சிறப்பியல்பாகக் கொண்டுரைத்தலும் குறிப்பு.*

சிவிகை இழிந்தருளி *- திருநகரைக் கண்டபோதே இறங்கி வணங்குதல் விதி; "கண்டு மலர்தூவ" (5) என்பது பதிகம்.*

செங்கை மலர் கொண்டு தூவி - ஆரூர்தனைப் பணிவுற்றார் *- தலத்தின் மீது மலர் தூவி நகரினை வணங்கினார். "பத்திமலர் தூவ" (1), "நன்பொன் மலர்தூவ" (3), "வாசமலர் தூவ" (6), "செய்யமலர் தூவ" (7) என்ற பதிகக் கருத்து. திருமுதுகுன்றத்தினையும் இவ்வாறே நகரத்தினை மலர்தூவி வலஞ்செய்து வழிபட்டமையும் கருதுக; "நின்றுமலர் தூவி" என்ற அத்தலப் பதிகமும் பார்க்க. தலநாயகரை வணங்குதலேயன்றிப் பதியினை வணங்குதலும்*

பதியின் பெயர்களைப் போற்றுதலும் சிறந்த தொண்டாகும். பிதற்றாய் பிறைசூடி தன் பேரிடமே (பிள்-க்ஷேத்) காப்புத் திருத் தாண்டகம் - அடைவுத் திருத்தாண்டகம் பார்க்க.

திருவிருக்குக்குறள் - பதிகச் செய்யுளின் யாப்பியல்பு; இருசீரடியால் வரும் பாவினம்.

தங்கள்பிரான் அரசாளும் ஆரூர் - தியாகராசப்பெருமான் வீதிவிடங்கராய் அரசு செய்து வீற்றிருக்கின்ற இடமாதலின் **அரசாளும்** என்றார். "அமரர்நா டாளாதே யாரூ ராண்ட அயிரா வணமே" (தேவாரம்); **ஆரூர்தனை** - ஆரூர்த் திருநகரினை.

கதிரொளி - என்பதும் பாடம். 500

III. திருவாரூர் (நகரை மலர்தூவிப் பாடிப் பணிந்தது)

திருச்சிற்றம்பலம் **திருவிருக்குக்குறள்** **பண்-குறிஞ்சி; 1-ம் திருமுறை**

சித்தந் தெளிவீர்காள், அத்த **னாரூரைப், பத்தி மலர்தூவ, முத்தி** யாகுமே (1)

பிண்ட மறுப்பீர்கா, ளண்ட னாரூரைக், **கண்டு மலர்தூவ,** விண்டு வினைபோமே. (5)

சீரூர் சம்பந்தன், ஆரூரைச் சொன்ன, பாரூர் பாடலார், பேரா ரின்பமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- செங்கை நிறைமலர் தூவி ஏத்தி ஆரூர்த் திருநகரைப் பணிந்தது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **தெளிவீர்காள்** - தெளிதலை விரும்புபவர்களே. மேல்வரும் ஏனையவும் இவ்வாறே; ஆரூரைப் பத்தியுடன் மலர்தூவி வணங்க என்றதனால் இப்பதிகம் திருநகரின் புறத்துநின்று நகரை வணங்கிப் பாடியருளியது என்பது பெறப்பட்டது; **முத்திஆகும்** - வீடுபெறும் வழியாகும்; (2) **அறவன்** - அறங்களையே உருவாகக் கொண்டவன்; அறங்களுக்கு இருப்பிடமானவன்; "நீதிபலவும் தன்ன துருவாமென மிகுத்ததவ நீதியொடு தானமர்விடம்" (தேவா); "அறவாழி யந்தணன்" (குறள்); **துறவி** - பாசந் துறத்தல்; துறவியைப் (கோவை)-3, **பொன்மலர்** - அழகிய மலர்; பொன் போன்ற மலர்; பொன்னும் மலரும் என்ற குறிப்புமாம்; இவ்வழகு இன்றும் தியாகேசர் எழுந்தருளும்போது நிகழ்வது; (5) **பிண்டம்** - பிண்டத்தில் வரும் பிறவி; ஆகுபெயர்; (7) **வையம்** - சிவனுலகம்; (9) **துள்ளும்** - அகங்கரித்து மேலெழும்; இகலும் என்றலுமாம்.

2399. பொருளுரை- படியில்-பணிதற்கு - ஒப்பில்லாத ஞானவமுதினை உண்டருளிய பிள்ளையாரைப் பணிவதற்காக, அடியர்....அஞ்ஞான்று - அடியவர்கள் சென்று எதிர் கொள்ள எழுந்தருளும் அத்திருநாளில்; வடிகொள்.. பொலிவை - வடித்தலைக் கொண்ட சூலத்தினை ஏந்திய இறைவர் நிலைபெற எழுந்தருளிய பொன்மதிலையுடைய திருவாரூரினது ஒளிபொருந்திய பேரலங்காரத்தின் அழகினை; முடிவுறக் காண்பார் யார் - முழுதும் காணவல்லவர் யாவர்? (ஒருவருமிலர்).

வேறு

2399. படியின் ஞானமுண் டருளிய பிள்ளையைப் பணிதற்
கடியர் சென்றெதிர் கொளவெழுந் தருளுமஞ் ஞான்று
வடிகொள் சூலத்தர் மன்னிய பொன்மதி லாரூர்க்
கடிகொள் பேரணிப் பொலிவையார் முடிவுறக் காண்பார்? 501

விளக்கவுரை: படி இல் - படி - ஒப்பு; இல் - இல்லாத; படி - பூமி என்று கொண்டு இப்பூமியில் என்றலுமாம்.

அடியர் பணிதற்கு எழுந்தருளும் - எதிர்கொளச் சென்றது அவரைத் தாங்கள் முன்சென்று பணிவதன்பொருட்டு, பிள்ளையாரைப் பணிவதில் அடியார்களின் ஆர்வ மிகுதி குறித்தது.

எழுந்தருளும் - அவ்வடியார்களின் பெருமை குறித்தது; பிள்ளையார் எதிர் வணங்கி அவர்களை நோக்கி "என், எந்தை தானெனை யேன்று கொளுங்கொலோ?" என்று பதிகம் பாடி வினவும் பெருமைவாய்ந்த பெருமையும், பிறத்தலால் முத்திதரும் திருவாரூரில் பிறக்கும் பெருமையும், பிறவும் குறிப்பு; நம்பிகளும், அரசுகளும் இவ்வாறே வணங்கிப் பாடி உள்ளணையும் வரலாறுகளும் நினைவுகூர்தற்பாலன. 269-1484 பார்க்க.

அஞ்ஞான்று - பேரணிப் பொலிவை - தியாகேசர் அரசாளுதலானும், சோழர்களின் தலைநகராதலானும், பிறவாற்றானும் திருவாரூர், என்றும் "தானொரு பொன்னுலகென்னத் தோன்றும்" தன்மையுடையது; "பருக்கை யானை" என்னும் நட்டராகத் திருப்பதிகமும், திருநகரச் சிறப்பிலுரைத்தனவும் காண்க; அவ்வாறாயினும் **அஞ்ஞான்று** அதனின்மிக்க **பேரணிப்** பொலிவுடன் விளங்கியது என்பதாம்; பேரணி (2403ல்) என மேலும் கூறுதல் காண்க. **கடி** - விளக்கம்.

யார் முடிவுறக் காண்பார் - **முடிவுற** - முற்றும், முழுதும்; **காண்பார்** - காண வல்லவர்; **யார்** - வினா ஒருவருமிலர் என எதிர்மறை குறித்தது; "யார் தொடர்ந்தெட்ட வல்லார்" (190); "யாவரே எழுதுவாரே" (தேவா); "ஆர்தா மறிந்தணைப்பா ராங்கு" (போதம் - 2 சூத் - 2 அதி).

முடிவுறக் காண அரிதாயினும் காணாரும் வேட்பச் சில சொல்வோமென்று மேல் வரும் நான்கு பாட்டுக்களிற் கூறும் சிறப்புக்களுக்குத் தோற்றுவாய் செய்தார்.

பிள்ளையார் பணிதற்கு - என்பதும் பாடம். 501

2400. பொருளுரை- நான- சேற்றிடை - புனுகும் கத்தூரியும் கலந்த குளிர்ச்சியுடைய பெருஞ் சேற்றில்; நறும்...சொரிதலில் - உயர்ந்த பொன்போன்ற தூய மணமுடைய சுண்ணப் பொடிகளைச் சொரிவதனாலே; சுடரொளி.... அடிவலித்து - ஒளி வீசுகின்ற படலை அணி செய்யப்பட்ட தெருவுகள் அடிவழுக்கும்படி; அவை... மாரி - அந்தச் சேறும் துகளும் கரைந்துபோக வானத்தினின்றும் வீழும் மழைபோல மலர்களினின்றும் தேன்மாரி பொழிந்தது.

2400. நான மான்மத நளிர்பெருஞ் சேற்றிடை நறும்பொற்
றூந றுந்துகள் சொரிதலிற் சுடரொளிப் படலை
யான வீதிக ளடிவலித் தவைகரைந் தலைய
வான மாரியிற் பொழிந்தது மலர்மது மாரி. **502**

2401. ஆட னீடுவ துகிற்கொடி யணிகுழற் கொடிகள்;
தோடு சூழ்வன சுரும்பொடு தமனியத் தகும்பு;
காடு கொண்டன கதலிதோ ரணநிரைக் கமுகு;
மாட மாளிகை மண்டபங் களின்மருங் கெல்லாம். **503**

விளக்கவுரை: **நானமான் மதம்** - புனுகும் கத்தூரியும் **நானம்** - நாவிமதம் - புனுகும்; **மான் மதம்** - கத்தூரி. **துகள்** - சுண்ணப்பொடி; **பெருஞ்சேறு** - சந்தனக் குழம்பினாலாகிய சேறு.

அடிவலித்து - அடிவழுக்குதல் செய்ய; **வலித்து** - வலிக்க எனச் செயவென்னும் வாய்பாட்டு வினையெச்சமாக்கி உரைக்க. வானமாரியின் மதுமாரி பொழிந்தது என்க.

அவை - சேறும் துகளும் கூடிய தொகுதி; **கரைதல்** - சேறு முதிர்ந்து இழுக்கும் தன்மை நீங்கிக் கரைந்துபோதல்; "எண்ணில் குங்குமச் சேறே யிழுக்கின" (185) என்ற பாட்டிலுரைத்தவை ஈண்டு நினைவு கூரத்தக்கன. முன், திருநகரப் படலத்துள் குங்குமத்தின் குழம்பைப் பூந்துகள் வீழ்ந்து அளறுபுலர்த்தும் (92) என்று கூறிய கருத்தும், அதனைத் தொடர்ந்து மேலும் சிறப்புக் கூறியவாறும் காண்க.

மான்மதக் குங்குமச் சேறு தெளித்தலும் பொன்துகள் சொரிதலும் வீதிகளின் அணியின்பொருட்டு நிகழ்வன; "தெளிந்த செங்குங்குமம்" (92) **துகள்** - பூந்துகள் என்றலுமாம். **துகள்** - குற்றம் என்றும், **சேறுந் துகளும்** இழுக்குந் தன்மையுடையன எனறும், அவை **கரைந்தலையத்தக்கன** என்றும் கருதக்கிடக்கும் உட்குறிப்பும் காண்க. திருவாரூரின் அசேதனப் பொருள்களும் இழுக்குநீக்கும் தன்மையுடையன என்றதும் குறிப்பு.

அவைகரைந்தலைய - மாரி பொழிந்தது - உவமையணி.

மதுமலர் - என்றதும் பாடம். *502*

2401. *பொருளுரை...* மாட.... எல்லாம் - மாடங்கள் மாளிகைகள் மண்டபங்கள் இவற்றின் பக்கங்களிலெல்லாம்; துகிற்கொடி அணிகுழல் கொடிகள் ஆடல் நீடுவ - துணிக்கொடிகளும் அழகிய கூந்தலையுடைய கொடிபோன்ற பெண்களும் ஆடலின் நீடுவன; சுரும்பொடு தமனியத் தகும்பு தோடுசூழ்வன - வண்டுகளும் பொற்குடங்களும் மலரிதழ்கள் சூழ்வன; கதலி தோரணம் நிரைக்கமுகு காடுகொண்டன - வாழைகளும், தோரணங்களும் வரிசையாகிய கமுகுகளும் காடுபோன்ற காட்சிகொண்டு விளங்கின;

விளக்கவுரை: **மருங்கெல்லாம் - ஆடல்நீடுவ; தோடுசூழ்வன; காடுகொண்டன** என்க.

2402. **மாலை சூழ்புறங் கடைகளின் மணிநிரை விளக்கின்**
கோல நீள்சுட ரொளியுடன் கோத்திடை தூக்கும்
நீல மாமணி நிழல்பொர நிறம்புகர் படுக்கும்
பால வாயின பவளவே திகைமலர்ப் பந்தர். **504**

துகிற்கொடி - குழற்கொடி - "அளக பாரக் குழைக்கொடி யாடமீது சோதிவெண் கொடிகளாடும்" (474) என்றவிடத்துரைத்தவற்றை நினைவுகூர்க. ஆண்டுக் கரிய கொடிகளும் வெண்கொடிகளும் வெவ்வேறு நிலைக்குறிப்பில் ஆடுதல் குறிக்கத் தனித்தனி வினைகள் தந்தோதிய ஆசிரியர், ஈண்டு இரண்டும் ஒருநிலைத் தன்மையின் ஆடுதல் குறிப்பது காட்டி ஒருவினையான்முடித்த நுட்பமும் ஓர்க. நடமாடுதல் உபசரிப்பு வகைகளுள் ஒன்றும் நகரமங்கலங்களுள் ஒன்றுமாம். "அரங்கேறிச் சேயிழையார் நடமாடும்" (தேவா).

சுரும்பொடு-தசும்பு-தோடு சூழ்வன - சுரும்பும் தோடுசூழ்வன; தசும்பும் தோடுசூழ்வன; சுரும்பு - வண்டுகள்; தசும்பு - குடம். தமனியத் தசும்பு - பொன்னாற் செய்த நிறைகுடம். வண்டுகள் அலரும் பருவத்து மலர்த் தோடுகளைச் சூழ்ந்து மொய்ப்பன என்று முன்னையது செய்வினை; தசும்பு தோடுகளையுடைய மாலைகளாற் சூழப்படுவன என்று பின்னையது செயப்பாட்டுவினை; இங்குத் தோடுகளையுடைய மலர்களாகிய மாலை என இருமடியாகுபெயர்; சுரும்பொடு உள்ள மாலைகள் நிறைகுடத்தைச் சூழ்வன என்று பொருள்கொண்டு ஒரு தொடராக்கி யுரைப்பினு மமையும். இப்பொருளில் வண்டொடு தோடுசூழ்வன என்றது சூழும்போது மாலைகளின் மலர்கள் வண்டுடன் பொருந்தியிருந்தன என்க. "வம்பலர் நறுந் தொடையல் வண்டொடு தொடுப்பார்" (1936) என்றது பார்க்க.

காடுகொள்ளுதலாவது காடுபோல இயற்கையின் வளர்ச்சியும் செறிவும் காட்டல் என்பதாம்.

மாடமாளிகை மண்டபங்களின் மருங்கு - உம்மைத்தொகை; மருங்கு - பக்க இடங்கள் - ஏழனுருபு விரிக்க. *503*

2402. பொருளுரை... சூழ்புறங்கடைகளின் - அம்மருங்குகளைச் சூழ்ந்த புறவாயில்களில்; மாலை - மாலைப்போதில்; மணிநிரை... உடன்கோத்து - மணிகளையுடைய வரிசையாகத் தூக்கிய விளக்குகளின் அழகிய நீண்ட சுடரொளியுடனே தொடர்புபடும்படி கோவை செய்து; இடைதூக்கும்.... நிழல்பொர - இடையிடையே தொங்கவிட்ட பெரிய நீல மணிகளின் நிழலானது கூடியலைத்தலினாலே; பவள வேதிகை மலர்ப்பந்தர் - பவள நிறமுடைய திண்ணைகளின் மேல் உள்ள பூம்பந்தர்கள்; நிறம்... ஆயின - செந்நிறம் புகர்நிறத்தைக் கொள்ளும் தன்மையுடையவாயின.

விளக்கவுரை: பவளவேதிகை மலர்ப்பந்தர் - புகர்நிறம்படுக்கும் பால வாயின - பவளநிறம் பொருந்திய திண்ணைகளின்மேல் இட்டபந்தர்கள் திண்ணைகளின் செந்நிறங்

2403. தழைம லர்த்தடஞ் சாலைக டெற்றிகள் சதுக்கங்
குழைமு கத்தவ ராடரங் கிமையவர் குழாமும்
விழைசி றப்பின வியலிடம் யாவையு மிடைந்து
மழைமு ழக்கென வியம்பின மங்கல வியங்கள். 505

கொண்டு விளங்காது புகர்நிறந்தரும் தன்மையுடையவாயின; இது நிறைவிளக்கின் ஒளியுடன் இடைகோத்துத் தூக்கிய நீலமணிகளின் நிழல் கலந்து அலைத்ததனாலாகியது என்றதாம்.

இவ்வாறன்றி மாலை - என்றதற்கு மலர்மாலைகள் என்றும், **விளக்கின் - ஒளியுடன்** - என்றதற்கு விளக்குப்போன்று ஒளிவீசும் என்றும் உரைத்து அதற்குத் தக்கவாறு பொருள் கொள்ளுதலுமாம்.

புகர்நிறம் - கருமைகலந்த செந்நிறம்.

நிரை விளக்கு - இடைதூக்கும் நீலமாமணி - விளக்குகளை வரிசைப்பட அமைத்தலும், அவற்றினைச் சுற்றிப் பல்வேறு நிற மணிகளைத் தொங்கவைத்து அணி செய்தலும் இன்றும் காணவுள்ள அணிவகை வழக்குக்களாம்.

பவள வேதிகை - திண்ணைகளைப் பவளநிறம் பொருந்தத் தீட்டி ஒளிசெய்யும் வழக்கும் காண்க. **வேதிகை** - வீடுகளின் திண்ணைகளேயன்றி நிறைகுடங்கள் அமைத்ததற்கு பொருந்தச் செய்வனவும் உண்டு.

நிழல்பொர - பொருதலால்; **பொரப் படுக்கும்பால** - என்று கூட்டுக. **பொருதல்** - கலந்து அலைத்தல். **பால** - பான்மையையுடையன. 504

2403. பொருளுரை... தழைமலர்த்தடம்.... வியலிடம் யாவையும் - தழைத்த மலர்வாவிகளும், சாலைகளும், தெற்றிகளும், சதுக்கங்களும், குழைகளை யணிந்து விளங்கும் முகங்களையுடைய பெண்கள் ஆடும் அரங்குகளும், எனப்பட்ட தேவர் கூட்டங்கள் தாமும் விரும்புகின்ற சிறப்பினையுடைய விசாலமான இடங்கள் யாவையும்; மிடைந்து.... இயங்கள் - நெருங்கி மேக முழக்கம்போல மங்கல வாத்தியங்கள் சந்தித்தன.

விளக்கவுரை: தெற்றி - நீண்ட திண்ணை; **சதுக்கம்** - நான்கு தெருக்கள் கூடுமிடம்; "சதுக்கமுஞ் சந்தியும்" (முருகு). நாற்சந்தி - முச்சந்தி என்பது உலக வழக்கு.

சாலைகள் - தெற்றிகள் - சதுக்கம் - ஆடரங்கு - வியலிடம் - என்றின்னவை **யாவையும்** என்க. எண்ணும்மைகள் தொக்கன; **யாவையும்** - முற்றும்மை; அணி வகைகளின் பொலிவை முடித்து இனி வேறு கூறுதல் குறிப்பு.

தடஞ்சாலைகள் முதல் **ஆடரங்கு** வரை உள்ள இவை **இமையவர்குழாமும் விழை சிறப்பினவாம்** என்று முடித்துக்கொண்டு இரு தொடர்படுத்தி உரைப்பதுமாம்.

இமையவர் குழாம் - அமரர்நா டாளாதே ஆரூராளும் தியாகேசரை வணங்க

2404. விரவு பேரணி வேறுவே றின்னன விளங்கும்
பிரச மென்மலர்ச் சோலைசூழ் பெருந்திரு வாரூர்
அரச ளிப்பவ ரருளினா லடியவர் குழுவும்
புரிச னங்களும் புறத்தணைந் தெதிர்கொளும் பொழுது; **506**

வந்து ஆரூரைப்பற்றி நின்றும் சமயம் நோக்கித் தேவாசிரியனிற் காத்துநின்றும் உள்ள தேவர் கூட்டம் என்ற குறிப்பும் காண்க.

இயங்கள் மழைமுழக்கென வியம்பிய என்க. "முழவதிர மழையென் றஞ்சி" (தேவா). **இயம்புதல்** - சந்தித்தல்; இயங்கள் இயம்பின என்பது மரபு வழக்கு; இனி வருவது மழை முழக்கம் என்று சொற்குறிப்புப்பட ஒலித்தன என்று ஆளுடையபிள்ளையாரின் வருகையினால் உளவாகும் நலங்களை எடுத்துக் கூறும் குறிப்புடன் நிகழ்ந்தன என்ற குறிப்பும் காண்க.

குழை முடித்தவர் - குழை - மகரக்குழை; குழையணிதலால் முகம் அழகு பெறுவதென்றலின் **குழை முடித்தவர்** - பெண்கள் என்பது குறித்தது. ஆடற் பெண்கள் பலவகை அணிகளணிந்து ஆடும் வழக்குக் குறித்தது. **குழையும்** - அன்பினால் உருகும் தன்மையைக் காட்டும் முகக் குறிப்புடைய; **முடித்தவர்** - பெண்கள் என்றலுமாம்.

தழை மலர் - தழைகளையும் மலர்களையும் என்றும், பொலிவுடன் முகிழ்க்கும் மலர்கள் என்றும் கொள்வதுமாம். *505*

2404. **பொருளுரை**- விரவு– திருவாரூர் - (முன் கூறியவாறு) பொருந்திய வெவ்வேறு வகைப்பட்ட இத்திறமுடைய பேரலங்காரங்களுடன் விளங்குகின்ற, தேன்பொருந்திய மெல்லிய மலர்கள் நிறைந்த சோலைகள் சூழ்ந்த பெருமையுடைய திருவாரூரின்கண்; அரசளிப்பவர் அருளினால் - அரசளித் தாளுகின்ற தியாகேசப் பெருமான் திருவருளினாலே; அடியவர் குழுவும்... எதிர்கொளும்பொழுது - அடியவர் கூட்டமும் ஏனைய மாந்தர்களும் நகரின் புறத்தேவந்து அணைந்து பிள்ளையாரை எதிர்கொள்ளும்போது,

விளக்கவுரை: வேறு வேறு விரவு இன்னன - நான்கு என்க. இவை முன் நான்கு பாட்டுக்களானும் வெவ்வேறாகக் கூறப்பட்டவை.

அரசளிப்பவர் - முன் வைகுண்டத்திலும், பின் தேவலோகத்திலும், இப்போது திருவாரூரிலும் அரசளிப்பவர் தியாகேசர்.

விளங்கும் திருவாரூர் - சூழ்திருவாரூர் - பெருந்திருவாரூர் என்றும், திருவாரூரின் **அரசளிப்பவர்** என்றும் கூட்டிக்கொள்க; "அரசாளும் ஆரூர்" (2399).

அருளினால் - அருளின்வழி - அருளாவது **எதிர்கொள்க** என்று உணர்த்தியது. "மகிழ்ந் தெதிர்கொள்வீர்" (264) என்று முன்கூறிய வரலாறு காண்க; **அருளினால்** -

2405. வந்தி றைஞ்சுமெய்த் தொண்டர்தங் குழாத்தெதிர் வணங்கிச்
சந்த முத்தமிழ் விரகராஞ் சண்பையர் தலைவர்
"அந்த மாயுல காதியாம்" பதிகமங் கெடுத்தே
"எந்தை தானெனை யேன்றுகொ ளுங்கொ"லென் றிசைத்தார். 507

அணைந்து என்றமையால் முன் அருளியமை பெறவைத்தார்; அன்றியும் நான் செய்வேன் என்னும் தற்போதமின்றி அருளின்வழியே தம்மை ஒப்புவித்து நிகழும் தன்மையுடையோர் என்ற பெருமைக் குறிப்பும் காண்க. என்னை? அற்றாகலினன்றே பிள்ளையாரை எதிர்கொண்டு இறைஞ்சும் பேறும், தம்மை முன்னிலைப்படுத்தி விளித்து "எந்தை தான்எனை என்றுகொளும் கொலோ...?" என்று திருப்பதிகம் பாடப்பெறும் பேறும் வாய்க்கப்பெற்றனர் என்க.

புரிசனங்கள் - அடியவர்களைச் சார்ந்து பணிபுரியும் நகர மக்கள்.

புறத்து - நகரின் புறத்து; **எதிர்தொழும்** என்ற பாடம் பொருத்தமின்று; மேல் **வந்திறைஞ்சும்** என்பது காண்க. அடியவர் குழுவும் புரிசனங்களும் - எதிர்கொளும் - பொழுது (2404) இறைஞ்ச - சண்பையர் தலைவர் - எதிர்வணங்கி - அங்குப் - பதிகம் - அந்தமாய் உலகாதியுமாகி (என்று) எடுத்து - எனை என்றுகொளுங் கொல்? என்று இசைத்தார் (2405) எனக் கூட்டி முடிக்க.

அடியவர் குழுவும் - புரிசனங்களும் எனப் பிள்ளையாரை எதிர்கொண்டிறைஞ்சப் பெற்றோர் இரு வேறுதிறத்தினர்; அவருட் டொண்டர் குழாத் தெதிர் பிள்ளையார் வணங்கினர் என்ற வேறுபாடு உய்த்துணரற்பாலது; "நேய மலிந்தவர் வேடமும் - அரனெனத் தொழுமே" (போதம் - 12 சூ.) என்ற ஞானசாத்திர உண்மையினை ஈண்டு வைத்துக் காண்க. 506

2405. பொருளுரை... வந்து...எதிர்வணங்கி - வந்து வணங்கும் மெய்த்தொண்டர் கூட்டத்தின்முன்னே தாமுமெதிர்வணக்கஞ் செய்து; சந்த முத்தமிழ்....தலைவர் - சந்தமுடைய முத்தமிழ் விரகராம் சீகாழித் தலைவராகிய பிள்ளையார்; "அந்தமாய்.... எடுத்தார் - "அந்தமா யுலகாதி"யாம் திருப்பதிகத்தை அங்குத் தொடங்கி, "எமது பெருமான்றான் என்னை ஏற்றுக்கொள்வாரா?" என்ற கருத்துடன் பாடி முடித்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை: மெய்த்தொண்டர் - மெய் - இயல்புகுறித்த விசேடணம்.

சந்தம் - ஈண்டுப் பெருமை, இலக்கண வரம்பு என்ற பொருளில் வந்தது. புகழ் என்று கொண்டு பிள்ளையாருக்காக்கி உரைத்தலுமாம்.

அங்கு - அடியவர் எதிர்கொண்ட நகரின் புறமாகிய அவ்விடத்து; அப்பொழுது;

எடுத்தல் - ஈண்டுத் தொடங்குதல்; "அந்தமா யுலகாதியு மாயினான்" என்பது பதிகத் தொடக்கம்.

அந்தமா யுலகாதியாம் பதிகம் - **ஆம்** - ஆக்கச்சொல். **ஆதியுமாயினான்** எனப் பதிகத்துள் இறைவன் உலகிற்குச் சங்காரகாரணனாயும் சங்கரித்த உலகைத் தன்னுள் ஒடுக்கி மீளப் படைக்கும் சிருட்டி காரணனாயுமுள்ள தன்மை குறித்தது; **ஆதல் நிமித்த** காரணனாதல் - பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க. **ஆதியாம்** - ஆரூர் சிருட்டி குறிக்கும் பிருதுவித்தலமாதலும் குறிப்பு;

ஆம் பதிகம் - ஆம் என்று கூறும் பதிகத்தை **ஆம் பதிகம்** என்றார். பதிகம் அவ்விறைவனது தன்மை கொண்டது என்ற குறிப்பும் காண்க.

"எந்தை.. கொல்?" என்று - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம். பதிகக் குறிப்புப் பார்க்க.

இசைத்தார் - சொல்லி - வினவி - அருளினார்; உரிய பண் இசையுடன் புணர்த்தி ஓதியருளினார் என்றதும் குறிப்பு. 507

IV. திருவாரூர் *(நகர்ப்புறத்து அடியார் கூட்டத்தை வணங்கிப் பாடியது)*

திருச்சிற்றம்பலம் **பண் - கௌசிகம்; 3-ம் திருமுறை**

அந்த மாயுல காதியு மாயினான்
வெந்த வெண்பொடிப் பூசிய வேதியன்
சிந்தை யேபுகுந் தான்றிரு வாரூரெம்,
மெந்தை தானெனை யேன்று கொளுங்கொலோ? (1)

வன்னி கொன்றை மதியொடு கூவிளஞ்
சென்னி வைத்த பிரான்றிரு வாரூரை
மன்னு காழியுண் ஞானசம் பந்தன்வாய்ப்
பன்னு பாடல்வல் லார்க்கில்லை பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "திருவாரூர் எந்தைதான் எனை என்றுகொளுங்கொல்?" என்று தொண்டர்குழாத்து எதிர்வணங்கிக் கேட்டருளியது (2405).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அந்தமாய் உலகாதியு மாயினான்** - "ஒடுங்கி மலத்துளதாம் - அந்தமாதி" (சிவஞானபோதம் - 1 சூத்). **அந்தம்** - அந்தத்தைச் செய்யும் கடவுளை **அந்த**மென்றார்; **ஆதி** - தன்னிடத்தொடுங்கிய உலகம் தன்னிடத்தினின்று மீளத் தோன்றுதற்குக் காரணன்; **அந்தம் - ஆதி** என்பன உபசாரம். **வெந்த வெண்பொடி பூசிய** - சங்கரித்த என்றது குறிப்பு. **ஏன்று கொளும் கொல்** - ஏற்று அருள்புரிகுவாரா? மேல்வரும் பாட்டுக்களிலும் இவ்வாறே காண்க. (2) இஃது அடியார்க்குள் ஆரூர்ப் பெருமானைக் கண்டு கேட்டருளிய கருத்து; **கருத்தன்** - கர்த்தா - முதல்வன்; அடியார் கருத்தில்

நகரினுள் அணைதல்

2406. ஆன வத்திருப் பதிகமுன் பாடிவந் தணையும்
ஞான வித்தகர் மெய்த்தவர் சூழவந் நகரார்
தூந றுஞ்சுண்ண மலர்பொரி தூஉய்த்தொழு தேத்த
வான நாயகர் கோயில்வா யின்மருங் கணைந்தார். 508

---

*இருப்பவன் என்பதும் குறிப்பு: **அருத்த** - மெய்ப்பொருளானவரே!; (3) **முனிவன்** - முன்னுதற்குப் பொருளாவான். **இறையின் மாத்திரை** சிறிய காலஅளவில் **மாத்திரை** அளவு; (4) **பல்இல் ஓடு** - பற்கள் உதிர்ந்த மண்டை ஓடு; **எல்லி** - சங்காரமாகிய இரவு; (5) **குருந்தம்** - குருந்த மரம்; மாதவியும் கொன்றையும் பக்கங்களில் திருந்தி விளங்கும் மாடங்கள்; (6) **ஆர்கண்** - களை கண்; உற்றிடத்துதவி; (8) **அலங்கல்** - மாலை. **அலங்கல் தருதல்** - பிரிதலால் வாடிய தலைவியைத் தேற்றும் செயல்; ஆதரவு என்ற பொருளில் வந்தது; (9) **செடி** - குற்றம்; (10) **காசை** - துவராடை.*

2406. பொருளுரை... ஆன...ஞானவித்தகர் - ஆயின அந்தத் திருப்பதிகத்தைப் பாடி வந்தணைகின்ற ஞானவித்தகராகிய பிள்ளையார்; மெய்த்தவர் சூழ - மெய்யடியார்கள் தம்மைச் சூழ்ந்து வரவும்; அந்நகரார்.... ஏத்த - அத்திருவாரூர் நகரமாந்தர்கள் தூய நறிய சுண்ணப்பொடியினையும் மலர்களையும் பொரியினையும் தூவித் தொழுது துதிக்கவும் (இவ்வண்ணமாக நகருள்ளே திருவீதிகளைக் கடந்துசென்று); வான நாயகர்.. அணைந்தார் - தெய்வநாயகரது திருக்கோயில் வாயிலின் பக்கத்தே யணைந்தருளினர்;

*விளக்கவுரை: **ஆன அத்திருப்பதிகம்** - **ஆன** - முன் பாட்டில் **ஆம் பதிகம்** என்று பாராட்டப் பெற்றதாயின.*

***பாடி** - பாடித் திருக்கடைக்காப்புச் சாத்தி முடித்து; **வந்து** - நகரினுள் வந்து.*

***ஞானவித்தகர்** - **வித்தகம்** - ஞானம்; இங்குச் சிறந்த ஞானமாகிய சிவமெய்ஞ்ஞானங் குறித்தது. இங்கு ஞானத்துள் ஞானம் என்னும் முடிந்தநிலையின் நின்றவர் என்பது கருத்து.*

***மெய்த்தவர்** - பிள்ளையாருடன் வந்தாரும் முன்கூறியபடி எதிர்கொண்ட திருவாரூரின் அடியவர்களும்; **தவம்** - சிவபூசை - சிவநெறி நிற்றல்.*

***அந்நகரார்** - முன் 2404ல் கூறிய **புரிசனங்கள**ல்லாத ஏனைய நகரமாந்தர். இவர்கள் நகரினுள் தத்தம் மனைகளினின்று பிள்ளையாரைத் தொழுதேத்தி வரவேற்றனர் என்க.*

***சுண்ணம் - மலர் - பொரி** - உம்மைத்தொகை. இவற்றைக் கலந்து தூவுதல் வழிபாட்டு முறைகளுள் ஒன்று. **தூஉய்** - தூவி.*

***வான நாயகர்** - வானவர் நாயகர் - தியாகேசர்; **வானம்** - ஞானவாகாயம் என்று கொண்டுரைத்தலும் ஆம்;*

***வாயிலின்** - என்பதுவும் பாடம். 508*

வாயில் - தேவாசிரியன்

2407. மன்னு தோரண வாயின்முன் வணங்கியுள் புகுவார்
தன்னு ளெவ்வகைப் பெருமையுந் தாங்கிய தகைத்தாம்
பன்னெ டுஞ்சுடர்ப் படலையின் பரப்பினைப் பார்த்துச்
சென்னி தாழ்ந்துதே வாசிரி யன்றொழு தெழுந்தார். 509

2407. பொருளுரை- மன்னு- புகுவார் - தோரணங்களால் நிலைபெற அலங்கரிக்கப் பெற்ற விளங்கும் திருவாயிலின்முன்னே வணங்கித் திருக்கோயிலினுள்ளே புகுவாராகிய பிள்ளையார்; தன்னுள்...சென்னிதாழ்ந்து - தனக்குள் எல்லா வகையான பெருமைகளும் கொண்ட தன்மையுடையதாகிய பல நீண்ட ஒளிவரிசையினது பரப்பினைப் பார்த்துத் தலைவணங்கி; தேவாசிரியன் தொழுது எழுந்தார் - தேவாசிரிய மண்டபத்தைத் தொழுது எழுந்தனர்.

விளக்கவுரை: **தோரணவாயில்** *- எப்பொழுதும் அலங்கரிக்கப்பட்டு விளங்கும் முன்வாயில்;* **மன்னு** *என்ற குறிப்புமது; பிள்ளையார் வருகையின்பொருட்டுத் தோரணங்கள் கட்டி அணிசெய்த திருவாயில் என்றலுமாம். "தோரணவாயில்" (1485).*

புகுவார் - பார்த்து - தாழ்ந்து - தொழுதெழுந்தார் *என்று முடிக்க. பிள்ளையார் திருவுள்ளம் கொண்டது உட்புக்கு இறைவரை வணங்குதல்; ஆயின் அச்செயல் கூடுமுன் திருவாயிலுட் புகுந்த உடனே நெடுஞ்சுடர்ப்படலையின் பரப்புடைய தேவாசிரியன் கட்புலப்பட்டமையின் உட்சென்று இறைவரை வணங்க எண்ணியருளிய செயலின்முன், அங்குத் தொழுது எழுந்தார் என்று அம்முயற்சி வினையினை முற்றுப்படுத்தினர். "வீழ்ந் தெழுவார், குறிப்பிட்ட பயன் காண்பார்போன் மெய்வேடர் பெருமானைக் கண்டு வீழ்ந்தார்" (புரா - 1022) என்று வரும் கருத்தினை இங்கு வைத்துக் காண்க. ஆளுடைய நம்பிகள் "தேவாசிரியன் றொழுதிறைஞ்சித் திருமூலட்டானஞ் சூழ்திரு மாளிகை வாயில்புக்கார்" (270) என்றதும், ஆளுடைய அரசுகள் "வாழி திருநெடுந் தேவாசிரியன் முன் வந்திறைஞ்சி, யாழி வரைத்திரு மாளிகை வாயிலவை புகுந்து" (1486) என்றதும் இங்கு நினைவுகூர்தற்பாலன. இறைவரை வணங்கச் செல்லுமிடையில் வேறு எச்செயலும் இடையீடாக வருதற்பாலன வல்லனவென்னும் விதி ஈண்டுப் பொருந்தாமையேயன்றி, இறைவரது வணக்கத்தின்முன் இவ்வணக்கம் ஒருதலையாகச் செய்யப்படவேண்டுவதொன் றென்பதும் உய்த்துணர்க.*

தன்னுள்....தகைத்து-எவ்வகைப் பெருமையும் தாங்கிய *என்றது அடியார் பெருமையுள் எல்லாப் பெருமைகளும் அடங்குவன என்ற கருத்து. "பெருமையாற் றம்மையொப்பார்" (342) என்றது காண்க.*

பன்னெடும்... பரப்பு *- இங்குக் குறித்தது சிவன்பால் உறைத்த அன்பு காரணமாக விளங்கும் தெய்வஞானவொளி. "ஐந்துமா றடக்கி யுள்ளா ரரும்பெருஞ்சோதி" (780) என்றதும் ஆங்குரைத்தனவும் காண்க. அடியார்களின் திருநீற்றின் ஒளியும் குறிப்பு.*

2408. மாடு சூழ்திரு மாளிகை வலங்கொண்டு வணங்கிக்,
கூடு காதலிற் கோபுரம் பணிந்துகை குவித்துத்
தேடு மாலயர்க் கரியராய்ச் செழுமணிப் புற்றில்
நீடு வார்முன்பு நிலமுறப் பலமுறை பணிந்தார். **510**

பார்த்து - "பரமே பார்த்திருப்பர் - பதார்த்தங்கள் பாரார்" (சித்தி - 11) என்றபடி சிவனுணர்வன்றி, வேறொன்றும் புலனாகாத ஞான உணர்வுடையார் பிள்ளையார்; இங்குக் காணப்பட்டது "ஒளிநெறி" என்னும் சிவநெறிநின்ற பெருமக்களின் சிவஞான வொளியின் றொகுதியாதலின் பிள்ளையாரது காட்சிக்குப் புலப்பட்ட தென்க. *509*

2408. பொருளுரை... மாடு... வணங்கி - பக்கத்திற் சுற்றிலும் சூழ்கின்ற திருமாளிகையினை வலமாக வந்து வணங்கி; *கூடு... கைகுவித்து* - கூடும் அன்பு மிகுதியினாலே திருக்கோபுரத்தைப் பணிந்து கைகூப்பித் தொழுது; *தேடும்.. பணிந்தார்* - தேடிய மாலுக்கும் அயனுக்கும் தெரிதற்கரியவராகிச் செழிய மணிப்புற்றினுள் இடங்கொண்டு நீடி எழுந்தருளியுள்ள இறைவரைப் பலமுறையும் நிலம்பொருந்த வீழ்ந்து பணிந்தனர்.

விளக்கவுரை: **மாடுசூழ் திருமாளிகை** - இறைவரது பொன் மாளிகையினைச் சுற்றிலும் சூழ்ந்துஉள்ள திருமாளிகைப் பத்தியின் வெளிச்சுற்று அமைப்பு.

கோபுரம் - இது உட்கோபுரம்; முன்கூறிய தோரணவாயில் வெளிக்கோபுரத்தின் அமைந்தது. இங்குக் கூறியது "திருமாளிகை வாயிற் கோபுரம்" (1486) இவை முறையே "வானுற நீடிருவாயில்" என்றும்; "திருமாளிகை வாயில்" என்றும் (270) குறிக்கப்பட்டன. இத் திருக்கோபுர வாயிலின்முன் நம்பிகளுக்கு எதிர்காட்சி கொடுத்தருளித் திருத்தொண்டத்தொகை பாட இறைவர் அடியெடுத்துக் கொடுத்தருளினர்; (336) பார்க்க.

தேடும் மால் அயர்க்கு அரியராய்ச் செழுமணிப் புற்றில் நீடுவார் - மால் அயர்க்கு இரண்டு பெயரும் "உயர்திணை யும்மைத் தொகை பலரீறே" என்ற நன்னூற் சூத்திரத்தால் கபிலபரணர் என்பது போல உம்மைத்தொகையாய் இணைந்து பன்மை முடிபுகொண்டது; அவர்கள், இருவர் என்றமையாது பற்பல கற்பங்களினும் எண்ணிறந்தோராதலிற் பன்மையாற் கூறினாரெனினும் அமையும். "நூறு கோடி பிரமர்க ளொங்கினார்; ஆறு கோடி நாராயண ரங்ஙனே" (தேவா); தேடும் என்ற அடைமொழி இங்குப் புற்றினிடம் வந்து பணிந்து பெற அறியாது தேடினாராதலின் அரியரானார் என்பதும் குறிப்பானுணர்த்தி நின்றது.

நீடுவார் - "முன்னோ பின்னோ திருவாரூர் கோயிலாக் கொண்டநாளே" (திருத்தாண்டகம்) என்ற குறிப்பு. **நீடுவார்** - புற்றிடங்கொண்டார். தியாகேசர் என்பாருமுண்டு. அது பொருந்தாமையறிக.

மாலயற்குரியராய் - என்பதும் பாடம். *510*

வழிபாடு

2409. பணிந்து வீழ்ந்தனர்; பதைத்தனர்; பரவிய புளகம்
அணிந்த மேனியோ டாடினர்; பாடின; ரறிவிற்
றுணிந்த மெய்ப்பொரு ளானவர் தமைக்கண்டு துதிப்பார்
தணிந்த சிந்தையின் விரைந்தெழு வேட்கையிற் றாழ்ந்தார். 511

2409. பொருளுரை- பணிந்து- பாடினர் - (ஞானவித்தகராகிய பிள்ளையார்) பணிந்து கீழ் விழுந்தனர்; பதைத்தனர்; மயிர்சிலிர்த்தல் திருமேனி முற்றும் பரவிய நிலையினில் ஆடினர்; பாடினர்; அறிவில்... துதிப்பார் - தமது அறிவினுள்ளே துணிந்து கண்டு கொண்டிருந்த மெய்ப்பரம்பொருளாகிய சிவபெருமானைப் புறத்திலேயும் கண்டு துதிப்பாராகித் தமது தணிந்த திருமனத்தினுள் விரைந்து எழும் விருப்பத்தினுள் தாழ்ந்தனர்.

விளக்கவுரை: வீழ்தல் - பதைத்தல் - புளகம் போர்த்தல் - ஆடுதல் - பாடுதல் - துதித்தல் - அன்புமீதூர்தற்கண் விளையும் மெய்ப்பாடுகள்; "ஆடுகின்றிலை... அன்பிலை... பாடுகின்றிலை.... பதைப்பதும் செய்கிலை" (திருவா).

பரவிய புளகம் அணிந்த மேனி - முழுதும் பரந்த மயிர்ப்புளகம் முகிழ்த்த திருமேனி.

அறிவில் துணிந்த மெய்ப்பொருளானவர்தம்மைக் கண்டு - இறைவர் உள்ளே நின்று காட்டிக் கண்டு செய்யும் உபகாரத்தை மறவாது கடைப்பிடித்துச் செய்யும் அன்பானே சிவானந்தாநுபூதியைத் தலைப்பட்டு மனத்தினுள் தெளிய அறிந்து நிட்டைகூடி யனுபவித்த மெய்ப்பொருளையே புறத்திலும் கண்டு; சிவஞானபோதம் 11ம் சூத்திரக் கருத்து; திருவடிப் பேறாகிய சிவானந்தாநுபூதியை எப்போதும் தலைப்பட்டு உணர்ந்து கொண்டிருக்கும் நிலையினை உடையவர் பிள்ளையார் என்பது "நின்றயங்கிய யாடலே நினைப்பதே நியமமே" (தேவா); "பண்டுதிரு வடிமறவாப் பான்மை யோர்" (1952) "தலைப்படுஞ் சார்பு நோக்கிப், பவமற வென்னை முன்னா ளாண்டவப் பண்பு கூட" (புரா - 1244) என்பன முதலிய திருவாக்குகளாற் காண்க.

துணிந்த - தெளிந்து அநுபவித்துக் கொண்டிருந்த.

மெய்ப்பொருள் - சிவபெருமான்; சத்தாயுள்ளவர்.

கண்டு - அறிவினுள்ளே தெளியக் கண்டுகொண்டதன்றிப் புறத்திலும் கண்டு; "உணர்வி னேர்பெற வருஞ்சிவ போகத்தை யொழிவின்றி யுருவின்கண், அணையு மைம்பொறி யளவினு மெளிவர வருளினை" (2059); "அண்ண லார்தமக் களித்த மெய்ஞ் ஞானமே யானவம் பலமுந்தம், உண்ணி றைந்தஞா னத்தெழு மானந்த வொரு பெருந் தனிக்கூத்தும், கண்ணின் முன்புறக் கண்டு" (2058) என்ற கருத்துக்களையும் இங்கு வைத்துக் காண்க. "அணியாரூர் நின்றந்தி கொள்ளக் கொள்ளப், பொன்றீ மணிவிளக்குப் பூதம்பற்றப் புலியூர்ச்சிற் றம்பலமே புக்கார் தாமே" (தேவா) என்ற குறிப்பின் - இயைபுகள் பற்றித் தில்லை - ஆரூர் என்ற இரண்டு பகுதிகளிலும் இவ்வாறு நிகழ்ச்சிகள் ஒரு தன்மையனவாகக் கூறிய நுட்பமும் காண்க.

2410. செஞ்சொல் வண்டமிழ்த் திருப்பதி கத்திசை யெடுத்து,
நஞ்சு போனக மாக்கிய நம்பர்முன் பாடி,
மஞ்சு சூழ்திரு மாளிகை வாயிலின் புறம்போந்,
தஞ்செ ழுத்தின்மெய் யுணர்ந்தவர் திருமடத் தணைந்தார். 512

தணிந்த சிந்தையின் - வேட்கை - தணிதல் - உலகச் சூழலுட்படாது சாந்தியாகிய அமைதிபெறுதல்; "தணிந்தமனத் திருமுனிவர்" (789) என்றது காண்க.

தாழ்ந்தார் - அழுந்த விரும்பினார்; **தாழ்தல்** - அழுத்தமாய் விரும்புதல்; "தாழ்வராந் தலைவன்பாலே".

துதிப்பார் - துதிப்பாராகி; முற்றெச்சம். துதிப்பார், தாழ்ந்தார் என்க. **ஞான வித்தகர்** என்ற (2406) எழுவாய் முன்பாட்டினின்றும் வருவிக்க.

தாழ்ந்தார் - மீளவும் நிலமுறப் பணிந்தனர் என்றுரைப்பாருமுண்டு.

பரப்பிய புளகம் - என்பதும் பாடம். *511*

2410. பொருளுரை- செஞ்சொல்-எடுத்து - செஞ்சொல் வண்தமிழ்த் திருப்பதிகத்தின் இசையினைத் தொடங்கி; நஞ்சு...பாடி - விடத்தை அமுதமாக்கிய இறைவர் திரு முன்பு பாடி முடித்து; மஞ்சு.. புறம் போந்து - மேகங்கள் சூழ்கின்ற திருமாளிகை வாயிலின் புறத்தே அணைந்து; அஞ்செழுத்தின்... அணைந்தார் - திருவைந்தெழுத்தின் மெய்ப்பொருளை உணர்ந்தவராகிய பிள்ளையார் திருமடத்தின்கண் அணைந்தருளினர்.

விளக்கவுரை: செஞ்சொல்....எடுத்து - செவ்விய சொற்களால் வளம் படைத்த தமிழ்ப் பதிகத்தினை இசையுடன் எடுத்து. இப்பதிகம் கிடைத்திலது! இக்குறிப்பினால் இப்பதிகம் செஞ்சொல் என்ற முதற் குறிப்பினை யுடையதென்பதும் கருதக் கிடக்கின்றது.

நம்பர்முன் பாடி - இறைவரது திருமுன்னர்ப் பதிகம் பாடியருளுதல் வழக்கு; இவ்வருமைத் திருப்பதிகம் கிடைக்கப்பெறாமை சைவ வுலகின் பேறின்மையேயாம்.

அஞ்செழுத்தின் மெய்உணர்ந்தவர் - விதிப்படி திருவைந்தெழுத்தை எண்ணுவதனால் மெய்ப்பொருளைத் தம் உணர்ச்சியில் கைவரப்பெற்றவர். **அஞ்செழுத்து** என்றது முத்தி பஞ்சாக்கரம்; திருவஞ்செழுத்தால் சாதிக்கப்படும் பொருளும் அதுவேயாம்; **உணர்தல்** - "பாசத்தையொருவி ஞானத்தைப் பெற்று ஞேயத்தைக் கண்ட காட்சி சலியாமைப்பொருட்டு அப்பொருள் பயக்கும் திருவஞ்செழுத்தை அவ்விதிப்படி அறிந்து கணித்தல்" (சிவஞானபோதம் - 9சூ. சிற்றுரை - பிண்டப் பொழிப்பு); **மெய்** - சத்தாகியுள்ள சிவம். (இது பதி - சிவம் எனப் பலவாற்றானும் உணரப்படுவது). இதன் இயல்பெல்லாம் உண்மை விளக்கம் முதலிய ஞான சாத்திரங்களுட் காண்க.

திருமடம் - பிள்ளையார் எழுந்தருளித் தங்கிய இடமே திருமடமாம். மரபு வழக்கு.
512

2411. அங்க ணைந்தமர்ந் தருளுவா ரரனெறி யமர்ந்த
செங்க ணேற்றவர் சேவடி வணங்கிமுன் றிளைத்துப்
பொங்கு பேரொளிப் புற்றிடங் கொண்டவர் புனிதப்
பங்க யப்பதந் தொழுதுகா லந்தொறும் பணிந்தார். 513

2411. பொருளுரை... அங்கு... அருளுவார் - அத் திருமடத்தில் விரும்பி எழுந்தருளுவாராகிய பிள்ளையார்; *அரனெறி...திளைத்து* - திருவரனெறி என்னும் கோயிலின்கண் விரும்பி எழுந்தருளியுள்ள சிவந்த கண்ணுடைய ஏற்றினையுடையவராகிய சிவபெருமானது செம்மையாகிய திருவடிகளை வணங்கி முன் திளைத்து; *பொங்கு-பணிந்தார்* - பொங்கு பேரொளியினையுடைய புற்றிடங்கொண்ட பெருமானது தூய தாமரைபோன்ற பாதங்களைத் தொழுது காலங்கள்தோறும் பணிந்து வந்தனர்.

விளக்கவுரை: அங்கு - அத் திருமடத்தினிடமாக; சுட்டு முன்கூறிய அத் திருமடம் என் முன்னறி சுட்டு.

அமர்ந்தருளுவார் - இறைவரைக் கும்பிட நேர்ந்த மிக்க விருப்பத்தினால் தங்கி யருள்பவர்.

அரனெறி - திருவாரூர்ப் பெருங்கோயிலினுள் தென் கீழ்த்திசையிலுள்ள தனியாலயம்; நமிநந்தியடிகணாயனார் "நீரால் திருவிளக் கிட்டமை நீணா டறியுமன்றே" என்று அரசுகளாற் போற்றப்பட்ட பெருமையுடையது. தலவிசேடம் - நமிநந்தியடிகள் புராணத் திறுதியிற் பார்க்க.

திளைத்தல் - சிவானந்தப் பெருக்கினுள் மூழ்கித் தம்மையும் மறந்து இன்புறுதல்.

பொங்கு பேரொளிப் புற்றிடங் கொண்டவர் - வன்மீகநாதர் - **பேர்ஒளி** - சிவவொளியின் விளக்கம். புற்றில் மணி ஒளிப்பது இயல்பாதல்போல, இங்குப் பொங்கு மாமறைப் புற்றிடங்கொண்டமர்ந்த மாமணியின் ஒளி என்பதாம்.

காலந்தொறும் - பூசைக்குரிய காலங்கள்தோறும்; "காலமெல்லாந் துதித்திறைஞ்சி" (2062) என்று இவ்வாறே திருத்தில்லையிலும் காலங்களில் வழிபட்டமை காண்க. இவ்விரண்டு பதிகளினியைபும் ஈண்டுக் கருதவுள்ளது.

பங்கயப் பதம் - முன்னரும் "பங்கயத்தாள்" (271) என்றமை காண்க. 513

2412. பொருளுரை- புற்றிடங்கொளும்-பாடி - புற்றிடங்கொண்டருளும் புனிதராகிய இறைவரைத் துதிக்கும் இசைபெருகும்படி பற்றும் அன்புடனே பணிந்து இன்னிசையாற் றிருப்பதிகங்களைப் பாடியருளி; *நல்தவத் தொண்டர்களுடன்... நாளில்* - நல்ல தவஞ்செய்யும் திருத்தொண்டர்களுடனே நன்மை சிறந்தோங்கும்படி அந்த உண்மையுடைய திருப்பதியினிடைத் தங்கியருளும் நாட்களில்,

விளக்கவுரை: புற்றிடங்கொளும் புனிதர் - வன்மீகநாதர்.

2412. புற்றி டங்கொளும் புனிதரைப் போற்றிசை பெருகப்
பற்று மன்பொடு பணிந்திசைப் பதிகங்கள் பாடி,
நற்ற வத்திருத் தொண்டர்க ளொடுநலஞ் சிறப்ப
மற்ற வண்பதி தன்னிடை வைகுமந் நாளில், **514**

போற்று இசை பெருக - துதிக்கும் புகழ்பெருகும்படி; **இசை** - புகழ்; எடுத்துப் போற்றும் புகழ்கள் உலகில் பெருகிநிகழும்படி; **பெருகப் - பாடி** என்று கூட்டுக.

பற்றும் அன்பு - பிறவெல்லாம் விட்டு அவனையே பற்றுக்கோடாகப் பற்றுதற்குரிய அன்பு; "முதல்வன் பாதமே பற்றாநின்றாரை"; **இசைபெருகப் பற்றும்** என்று ஒன்றுகூட்டி உரைத்தலுமாம்; **பித்துபோன்ற அன்பு.**

இசைப் பதிகங்கள் - இன்னிசைகளையுடைய பல பதிகங்கள்; இவை கிடைத்தில!

நற்றவத் திருத்தொண்டர்கள் - "பரனுணர்வி னாலுணரும் மெய்த்தவர்". **நல் தவம்** - மெய்த்தவம். "சிவபத்தர்பாலன்பு சார்பாக விளங்கும் சிவஞானக் கண்ணால் அந்நிலை கடைப்பிடித்துணரப்பெற்ற மெய்த்தவம்". "ஏனைத் தவங்களெல்லாம் மெய்யாதலின்றி மலநடையாய்ப் போதலின் பரனுணர்வினாலுணரும் தவமொன்றே மெய்த்தவ மெனப்பட்டது". (போதம் - சிற்றுரை - 12சூ). **நற்றவத் திருத்தொண்டர்களொடு நலஞ்சிறப்ப** - தொண்டர் கூட்டத்தில் வைகுதல் நலஞ்சிறக்கும் பயன் செய்வதொன்றென்பது (போதம் - 12சூ). இத்தொண்டராவார் சிவனை அகலாது பிடித்த சீவன்முத்தர். திருவாரூரின் அடியார்களின் சிறப்புக் குறித்தபடியுமாம்.

நாளில் - தொழுதே - ஏத்தி - அணைந்தனர் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. *514*

2413. பொருளுரை... மல்லல்... தொழுதே - செழிப்பினால் நீடியுள்ள திருவலிவலம், திருக்கோளிலி முதலாகவுள்ளனவாகிய பழமையுடைய நான்மறைகளின் முதல்வராகிய இறைவரது திருப்பதிகள் பலவற்றையும் தொழுதே; எல்லையில்...ஏத்தி - அளவில்லாத திருப்பதிகங்களால் வணங்கித் துதித்து; அல்லல் தீர்ப்பவர்... அணைந்தார் - உலகில் துன்பந் தீர்க்க வந்தருளிய பிள்ளையார் மீளவும் திருவாரூரின்கண் தொழுவதற்கு அணைந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை: மல்லல் - அருட்செழிப்பு.

வலிவலம் - திருவலிவலம். **கோளிலி** - திருக்கோளிலி. இவையும், **முதலா** என்ற பிறவும் திருவாரூருக்கு அணிமையில் உள்ள பதிகள்.

பதிபல - இவை திருஏமப்பேறூர், திருக்காறாயில், திருச்சாட்டியக்குடி, திருக்கன்றாப்பூர் முதலியன என்பது கருதப்படும்.

2413. மல்ல னீடிய வலிவலங் கோளிலி முதலாந்
தொல்லை நான்மறை முதல்வர்தம் பதிபல தொழுதே,
யெல்லை யில்திருப் பதிகங்க ளாற்பணிந் தேத்தி
யல்ல றீர்ப்பவர் மீண்டுமா ரூர்தொழ வணைந்தார். 515

எல்லையில் திருப்பதிகங்கள் - கிடைத்தனவும், கிடைக்காதனவும் குறிக்க இவ்வாறு கூறினார். திருப்பதிகங்களின் பெருமை அளவிலாமையும் குறிப்பு.

அல்லல் தீர்ப்பவர் - ஆளுடைய பிள்ளையார். ***அல்லல்*** - பிறவித் துன்பம்; பரசமயத் தொடக்காகிய துன்பமுமாம். உலகம் துன்பம் நீக்கி யின்பமடைதற்கென்றே வந்தவர்.

மீண்டும் ஆரூர்தொழ - ஆரூர் தொழுதற்கென்று திருப்புகலூரினின்றும் வழிக் கொண்டு போந்தாராதலின் அவ்வாராமை மீக்கூர மீண்டும் தொழஅணைந்தார் என்க. ஆயின் அங்குத் தங்காது பல பதியும் சென்றதென்னையோ எனின்? ஒரு பதியினைச் சென்று வணங்குவார் அடுத்த பிற பதிகளிலும் சென்று வணங்கும் நியதியும் மரபும் பற்றியும் உலகர்க்கறிவுறுத்தல் பற்றியும் என்க. 515

திருவலிவலம்

திருச்சிற்றம்பலம் — *திருவிராகம் பண்-வியாழக்குறிஞ்சி; 1-ம் திருமுறை*

பூவியல் புரிகுழல் வரிசிலை நிகர்நுதல்
ஏவியல் கணைபிணை யெதிர்விழி யுமையவள்
மேவிய திருவுரு வுடையவன் விரைமலர்
மாவியல் பொழில்வலி வலமுறை யிறையே. (1)

பிடியத னுருவுமை கொளமிகு கரியது
வடிகொடு தனதடி வழிபடு மவரிடர்
கடிகண பதிவர வருளினன் மிகுகொடை
வடிவினர் பயில்வலி வலமுறை யிறையே. (5)

மன்னிய வலிவல நகருறை யிறைவனை
யின்னியல் கழுமல நகரிறை யெழின்மறை
தன்னியல் கலைவல தமிழ்விர கனதுரை
யுன்னிய வொருபது முயர்பொரு டருமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- வலிவல முறையிறையே உமைமேவிய திருவுருவுடையவன்; கணபதி வரவருளினன்; இவை முதலிய அருட்பண்புகளுடையவன்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) ***கணை*** - அம்பு; ***பிணை*** - மான்; கணையும் பிணையும் ஒத்த விழி; ***எதிர்*** - உவமவுருபு; (5) கணபதி திருவவதார வரலாறும் அவரது பெருமையும்

கூறிற்று. கந்த புராணம் பார்க்க: **மிகுகொண்ட வடிவினர் - பயில் வலிவலம் - கொடை வடிவினர்;** அங்குப் பயில்வோர் (6) **உயிர் புணர்தகை - உமையொடு விரவதுசெய்து -** உயிர்கள் போகம் புசித்தற்பொருட்டுத் தாமும் போகியாயிருந்து; **நரைதிரை கெடுதகவு -** இறப்பும் பிறப்புமில்லாமை: (11) **உயர் பொருள் -** சிவபதம்.

தலவிசேடம்:- திருவலிவலம் - காவிரித் தென்கரை 121-வது தலம். மூவர் பாடலும்பெற்ற பெருமையுடையது. "வலியான்" என்னும் கரிக்குருவி பூசித்தமையால் இப்பெயர் பெற்றதென்று கூறுவர்: மாடக்கோயில்; திருப்புகலூர், திருமுண்டீச்சரம் முதலியவைபோலத் திருக்கோயிலைச் சுற்றி அகழி சூழ்ந்துள்ளது. பிள்ளையாரது பதிகத்துள் கணபதியின் அவதார வரலாறு போற்றப்படுதலும், நம்பிகளது பதிகத்தினுள், பிள்ளையார் - அரசுகள் பாட்டுக்களில் பரமன் பெருவிருப்புடையராதல் போற்றப்படுதலும் குறிக்கத்தக்கன. கணபதி சந்நிதி சிறப்பு. சுவாமி - **மனத்துணைநாதர் -** திருத்தாண்டகத்துள் மனத்துளானே என்று போற்றப்பட்டனர்; அம்மை - **மாழையங் கண்ணியம்மை.** பதிகம் - 4.

இது திருவாரூரினின்றும் தென்கிழக்கில் 8 நாழிகையளவில் அடையத்தக்கது. இவ்வழியில் இடையில் நான்கு நாழிகையளவில் திருஏமப்பேறூரும் (நமிநந்தியடிகள் பதி), அதன்மேல் நான்கு நாழிகையில் திருக்காறாயிலும் வழிபட்டுச் செல்லலாம். திருக்கன்றாப்பூரினின்றும் தெற்கே அரை நாழிகையளவில் இதனை அடையலாம்; இதன் வடகிழக்கில் இரண்டு நாழிகையளவில் திருவிசைப்பாத் தலமாகிய திருச்சாட்டியக்குடி வழிபடவுள்ளது.

திருக்கோளிலி

திருச்சிற்றம்பலம் — பண் - பழந்தக்கராகம்; 1-ம் திருமுறை

நாளாய போகாமே நஞ்சணியுங் கண்டனுக்கே
யாளாய வன்புசெய்வோ மடநெஞ்சே யரனாமங்
கேளாய்நங் கிளைகிளைக்குங் கேடுபடாத் திறமருளிக்
கோளாய நீக்குமவன் கோளிலியெம் பெருமானே. (1)

வஞ்சமனத் தஞ்சொடுக்கி வைகலுநற் பூசனையால்
நஞ்சமுது செய்தருளு நம்பியென வேநினையும்
பஞ்சவரிற் பார்த்தனுக்குப் பாசுபத மீந்துகந்தான்
கொஞ்சுகிளி மஞ்சணவுங் கோளிலியெம் பெருமானே. (5)

தாவியவ னுடனிருந்துங் காணாத தற்பரனை
யாவிதனி லஞ்சொடுக்கி யங்கணனென் றாதரிக்கும்
நாவியல்சீர் நமிநந்தி யடிகளுக்கு நல்குமவன்
கோவியலும் பூவெழுகோற் கோளிலியெம் பெருமானே. (9)

நம்பனைநல் லடியார்க ணாமுடைமா டென்றிருக்குங்
கொம்பனையாள் பாகனெழிற் கோளிலியெம் பெருமானை
வம்பமருந் தண்காழிச் சம்பந்தன் வண்டமிழ்கொண்
டின்பமர வல்லார்க ளெய்துவர்க ளீசனையே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- கோளிலி யெம்பெருமானே கோளாய நீக்குமவன்; மலர் கொடுத்தான் - பாசுபதமீந்துகந்தான் என்பனவாதி தன்மைகளால் அறியப்படுபவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நாளாய போகாமே** - வாழ்நாள் வீணே கழிந்து போகாமல்; **கேளாய் நம் கிளைகிளைக்கும் கேடு** - மீளமீளப் பிறந்து பிறந்து புதிது புதிதாகச் சுற்றந் தேடிக்கொண்டு அலைதல்; **கோளாய** - குற்றங்களாகியவற்றை; அகரவீற்றுப் பலவின்பால் வினைப்பெயர்; **கோள்ஆயம்** - குற்றங்களின் தொகுதி என்றலுமாம்; கோள் ஆகியவை எல்லாம் நீக்கிக் கேடுபடாத் திறமருளுவான் என்ற மேற்கோளை மேல்வரும் பாட்டுக்கள் பலவற்றுள்ளும் வரும் ஒவ்வோர் சரித வரலாறுகளாகிய ஏதுக்களாற் சாதிக்கின்றார், **கோளிலி** என்ற பெயர்க் காரணமும் விரித்தபடி; **பெருமானே** - ஏகாரம் பிரிநிலை; "நக்கனைத்தொழ நம்வினை நாசமே" "காலம்வந்து கடைமுடியாமுனம் - கோளிலி மேவிய - நீலகண்டனை நின்று நினைமினே" (குறுந்) (2) **கோடரவம் - கோடு - வளைவு. அரவம்** - பற்றிய விடத்தன்மையுடைய ஆணவ மலம்; (3) **இருக்கு** - வேதப்பொது; **ஒன்றி** - ஒன்றுதலாவது தானென்னும் உணர்வு வேறு புலப்படாது சிவனுணர்வே தன்னுணர்வாக நிற்றல்; "ஒன்றியிருந்து நினைமின்கள்" (தேவா); **வழிபாடு செய்யலுற்றவன்** - மார்க்கண்டேயன்; **கண்டு** - உயிர் வேறாகக் கண்டு - செய்து; **பொன்திகழும்** - பொன்போல விளங்கும்; **பொன்போல்** என உவமவுருபு விரிக்க; (4) **வந்த** - கிடைத்த; கைக்கு வாய்த்த; சிவக்குறி காணும் பொருளாய்ப் பெற்ற; புற்று மண் - மணல் - திருநீறு முதலியவற்றுள் ஒன்றானே சிவக்குறி கண்டு வழிபடும் விதி குறித்தது; **பாலாட்டும் சிந்தை செய்வோன்** - பாலாட்டுதலே கருத்தாகக் குறித்து இயற்றுமவர்; **கருமம் தேர்ந்து** - கருத்துணராது புறச்செயலொன்றையே பொருளாகத் துணிந்து; ஏகாரம் தொக்கது; **சண்டீசன் என்று** - சண்டீசன் என்ற பதம் ஏற்பாய் என்று சொல்லி; **மலர்** - தாம் அணிந்த கொன்றைமலர்; (5) இதனால் அருச்சுனனது சிவவழிபாட்டுச் சிறப்பு அருளப்பட்டது; **அஞ்சு** - ஐம்புலன்; **பூசனையால் நினையும்** என்று கூட்டுக. கிரியை, மாபாரதத்துட் கூறப்படும் வரலாறு; பாசுபதம் பெற்ற சரிதம்; **கிளிமஞ்சு அணவும்** - கிளிகள் மேகமண்டலம் அணுகும் அளவு பறக்கும்; (6) **தாவியவன் உடனிருந்தும் காணாத தற்பரன்** - இறைவர் உயிர்களோடு உடனாய் நிற்கும் நிலை; **காணாத** - வேறு பிரித்துக் காணப்படாத; நமிநந்தியடிகளின் சிறப்புக் கூறப்பட்டது; **தாவி** - பிணைந்துபற்றி; "அவையே தானாய்" (போதம் - 2சூ); **நாவியல்சீர்** - வேதம் பயிலும் சிறப்பு; **கோ இயலும்பூ எழ கோல்** - அரசன்வழி நிற்கும் உலகில் அரசாட்சி புரிந்து விடங்கராய் இறைவர் இருத்தற்கிடமாகிய; (சத்த விடங்கப் பதிகளுள் ஒன்றாகிய);

(7) கல்நவிலும் மால்வரை - கல்லின் தன்மையுடைய பெரிய மேரு மலை; **சொல்நவிலும் மாமறை** - **சொல்** - விதிவிலக்கு வாக்குக்கள்: சொல் வழிவழியாக என்றலுமாம்; **மின் நவிலும்** - மின்போன்ற: **நவிலும்** - உவமவுருபு; **நவிலும்** - சொற்பின் வருநிலை; (8) **அந்தரம்** - ஆகாயம்; **மந்திரத்த மறை** - மந்திரங்களையுடைய சாமவேதம்; **கொந்து அரத்த மதிச்சென்னி** - கொத்தாகிச் சுழன்ற சிவந்த மதிசூடிய தலை; (9) **நாணமுடை வேதியன்** - முடிகண்டிலேன் என்று தோல்வித் தானத்தை ஏற்க நாணிய பிரமன்; **அன்புடைமை** - அன்புடைமையினால்; **பாணன்** - பாணபத்திரன்: **பரிந்தளித்தான்** - திருமுகங் கொடுத்த வரலாறு; (10) **தடுக்கு** - பாய்; **சாத்திரத்தவர்** - புத்தர்; **நடுக்கம்** - பயம். **கொடுக்ககிலர்** - பிறராற் கொடுக்க இயலாத; (11) **நாமுடை மாடு** - நாம் பெற்ற பெருஞ் செல்வம்.

தலவிசேடம் :- **திருக்கோளிலி** - காவிரித் தென்கரை 123வது தலம்; "**திருக்குவளை**" என்று வழங்கப்படும்; மூவர் பாடலும் பெற்ற பெருமையுடையது; பிரமதேவர் அகத்தியர் முதலியோர் பூசித்த பதி; பாண்டவருட் பீமன் பகாசுரனைக் கொன்ற பழிதீரப் பூசித்த பதி; பகாசூரப் பிரமகத்தி உருவங்கள் கோபுரவாயிலில் உள்ளன; முசுகுந்தச் சக்கரவர்த்தி தேவவுலகத்தினின்றும் கொணர்ந்து தாபித்த விடங்கத் தலங்கள் ஏழனுள் ஒன்று. இதன் வடக்கே அணிமையில் ஒரு நாழிகையளவில் உள்ள ரிஷபபுரி என்னும் குண்டையூரில் வாழ்ந்த வேளாளர் குண்டையூர்கிழார் ஆளுடைய நம்பிகளுக்கு அமுதுபடி சமைக்கப் பெருமானார் நென்மலை அளித்தருளவே, அதனை நம்பிகள் இங்குப் பதிகம் பாடச் சிவபூதகணங்களைக் கொண்டு திருவாரூரிற் சேர்த்த வரலாறு ஏயர்கோன் கலிக்காமர் புராணத்தினுட் காண்க. (ஏயர்-புரா-10-29); அகத்தியர் பூசித்த லிங்கம் பிரகாரத்தில் உள்ளது. சுவாமி - **கோளிலிநாதர்**; அம்மை - **வண்டமர் பூங்குழலி**; தீர்த்தம் - **பிரமதீர்த்தம்** - கோயிலுக்கெதிரில் உள்ளது; தியாகர் - **அவனிவிடங்கர்**; நடனம் - **பிருங்கு நடனம்**; பதிகம் 4.

இது நெல்லிக்கா நிலயத்தினின்றும் கிழக்கே மட்சாலை வழி 2 நாழிகையளவில், திருக்கைச்சினத்தினின்றும் கிழக்கே மட்சாலை வழி 4 நாழிகையளவில் உள்ளது; இதன் தென்கிழக்கே ஒன்றரை நாழிகையளவில் "எட்டுக்குடி" என்னும் பிரசித்தமாகிய முருகன் றிருப்பதி உள்ளது. **குண்டையூர்** - கோளிலியினின்றும் 3/4 நாழிகையளவில் உள்ளது. இடையில் சந்திர நதி ஓடுகின்றது. மதுரையைத் தரிசிக்க விரும்பிய குண்டையூர் கிழாருக்கு மதுரை மீனாட்சிசுந்தரேசர் இங்கே காட்சியளித்தாராதலின் சுவாமியும் தேவியும் அப்பெயரால் வழங்கப்படுகின்றனர்.

திருக்காறாயில்

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம்; 2-ம் திருமுறை**

நீரானே நீள்சடை மேலோர் நிரைகொன்றைத்
தாரானே தாமரை மேலயன் றான்றொழுஞ்
சீரானே சீர்திக ழுந்திருக் காறாயில்
ஊரானே யென்பவ ரூனமி லாதாரே. (1)

ஏய்ந்தசீ ரெழிறிக ழுந்திருக் காறாயில்
ஆய்ந்தசீ ரானடி யேத்தி யருள்பெற்ற
பாய்ந்தநீர்க் காழியுண் ஞானசம் பந்தன்சொல்
வாய்ந்தவா றேத்துவார் வானுல காள்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "திருக்காறாயில் ஊரானே" என்று ஏத்துமவர் மேல்வினை நில்லாவே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நீரானே** - அருள்நீர்மையே குணமாக உடையவனே; நீர் - கங்கை என்றலுமாம். **ஊனம்** - மலவாதனை; **என்பவர்** - என்று துதிப்போர்; மேற்பாட்டுக்களிலும் இவ்வாறே. (2) **மதி** - அறிவுச் சொரூபம்; சந்திரன் என்றலுமாம்; **நெதி** - நன்மை - நியதி; (3) **விண்ணான்** - ஞானாகாயத்தில் விளங்குபவன்; **விண்ணவர் ஏத்தி விரும்பும் சீர் மண்ணான்** - தேவர்களும் இங்குவந்து துதிக்க மண்ணுலகத்தில் வந்தவர்; விடங்கர் எழுந்தருளும் குறிப்பு; (4) **தந்தையும்** - தாயாவதன்றி என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. **சேயானே** - அன்பர்க்கு அணியானே என்றதனால் அன்பரல்லாத ஏனையோர்க்குச் சேயான் என்க. (5) **கலைமலி** - கலைகளில் விதந்து போற்றப்பட்ட; "கலைமலிந்த சீர்நம்பி கண்ணப்பர்க் கடியேன்" (திருத்தொண்டத்தொகை); **கலை** - மான் என்றலுமாம். **கலையான்** - கலைகளாயவன்; **மலைபவர்** - பகைவர்; (6) **ஆற்றான்** - **ஆறு** - வழி; உயிர்களின் பக்குவத்துக்கேற்றபடி நெறிகள் வகுப்பவன். (7) **இடர் காத்தல்** - இடர்கள் வாராமே காத்தல்; (8) **காலற் கடுத்தானே** - **கடுத்தல்** - சினத்தல்; **எடுத்தானே** - **ஏதமாக** - **ஏதம்** - கேடு; கேடுநினைந்து எடுத்து அவனே கேடு பொருந்த.

தலவிசேடம்:- திருக்காறாயில் - காவிரித் தென்கரை 119வது தலம். "திருக்காறை வாசல்" என வழங்கும். தியாகேசரை இந்திரனிடத்திற் பெற்றுத் தேவவுலகத்தினின்றும் முசுகுந்தச் சக்கரவர்த்தி நிலவுலகிற் கொணர்ந்து தாபித்த விடங்கத் தலங்கள் ஏழனுள் ஒன்று. "விண்ணவ ரேத்தி விரும்புஞ்சீர் மண்ணானே" (3) என்று இவ்வரலாறு பதிகத்துப் போற்றப்பட்டது. இந்திரபூசை இப்போதும் புரட்டாசி மாதத்தில் நிறைமதியன்று நிகழ்வது; முசுகுந்தர் அருள்பெற்ற பதி; குளத்தின் வடகரையில் கடுக்காய்ப் பிள்ளையார் வீற்றிருக்கின்றார்; ஒரு வணிகர் சாதிக்காய் முட்டையைக் கடுக்காய் என்று சொல்ல, அவை அவ்வாறே ஆகப், பின், இவரருளால் மீளச் சாதிக்காயாகியன என்பது வரலாறு; சுவாமி - **கண்ணாயிர நாதர்**; அம்மை - **கைலாசநாயகி**; தீர்த்தம் - **இந்திர தீர்த்தம்**; (கோயிலுக்கு வடபுறம்); தியாகர் - **ஆதிவிடங்கர்**; நடனம் - **குக்குட நடனம்**; பதிகம் 1.

இது மாவூர் ரோடு (முன் திருநாட்டியத்தான்குடி என்றிருந்தது) என்னும் நிலையத்தினின்றும் தென்கிழக்கே கற்சாலை வழி 2 நாழிகையளவில் - திருவாரூர் - திருத்துறைப்பூண்டிச் சாலையில் தென்புறம் உள்ள திருப்புனவாசலினின்றும் தெற்கே கற்சாலை வழி 1 நாழிகையளவில் அடையத்தக்கது. திருவாரூரினின்றும் தெற்கு 81/4 நாழிகை; நல்லபாதை.

2414. ஊறு காதலி லொளிவளர் புற்றிடங் கொண்ட
ஆறு லாவிய சடைமுடி யையரைப் பணிந்து
நீறு வாழ்வென நிகழ்திருத் தொண்டர்க ளோடும்
ஈறி லாத்திரு ஞானசம் பந்தரங் கிருந்தார். 516

திருஏமப்பேறூர் - பதிகம் இல்லை: திருமப்பற்று என வழங்குவது. நமிநந்தியடிகணாயனார் பதி: அவர்தம் புராணம் - தலவிசேடம் பார்க்க.

திருச்சாட்டியக்குடி - திருவிசைப்பாத் தலங்களுள் ஒன்று. கருவூர்த்தேவர் திருவிசைப்பாப்பெற்றது. இத்தலத்தின் கோயில் "ஏழிருக்கை" எனப் பெயர்பெறும். சுரநோயென்னும் வெப்ப விளைவுக்குத் தெய்வமாகிய தீக்கடவுளை இங்கு இறைவரது திருவுருவமேயாக வைத்து வழிபடப்பெறுவது. "இருமுகங் கழன்மூன் றேழு கைத் தலமே ழிருக்கையு ளிருந்தவீ சனுக்கே" (கரு - திருவிசை). இது கீழ்வேளூர் என்னும் நிலயத்தினின்றும் தென்மேற்கில் திருவலிவலம் போகும் சாலையில் 6 நாழிகையளவில் உள்ளது. இடையில் 3 நாழிகையளவில் கடுவாயாறு கடத்தல் வேண்டும். ஆற்றுக்குப் பாலமுண்டு. ஏனைய விவரங்கள் "கருவூர்த்தேவர்" என்ற நூலுட் காண்க. ஆண்டுக் கூறிய தலவிவரம் முன்சொன்னபடி திருத்தி வாசிக்கத்தக்கது.

திருக்கன்றாப்பூர் - பிள்ளையார் பதிகம் கிடைத்திலது!

தலவிசேடம்:- அரசுகள் புராணம் - III - (1) முற்சேர்க்கை, 63 பக்கம், **சில தலக் குறிப்புக்கள்** என்றவிடத்துப் பார்க்க.

2414. பொருளுரை... ஊறு... பணிந்து - மேன்மேற் பொங்கியெழுகின்ற ஆசைப்பெருக்கினாலே ஒளிவளரும் புற்றிடங்கொண் டெழுந்தருளிய கங்கை உலாவுதற்கிடமாகிய சடையினை முடியாக உடைய ஐயராகிய இறைவரைப் பணிந்து; நீறு..தொண்டர்களோடும் - திருநீறே தமது வாழ்வாவது என்று நிகழும் திருத்தொண்டர்களுடனே; ஈறிலா...இருந்தார் - இறுதிபெறாத சிவஞானமுடைய திருஞானசம்பந்த நாயனார் அங்குத் தங்கியிருந்தருளினர்.

விளக்கவுரை..... ஊறுகாதல் - இடையறாத ஊற்றுப்போல மேன்மேல் பொங்கும் அன்பின் மிகுதி. இதுபற்றி "அயரா வன்பின்" (11 சூத்) என்று ஞானநூற்பகுதியும், "ஏகனாகி யிறைபணி நிற்குமுயிர் முதல்வன் அங்ஙனம் அத்துவிதமாய் உபகரித்து நிற்கு முரிமையை நோக்குமாயின், நோக்குந்தோறும் நோக்குந்தோறும் அப்பொருட்கட் செல்லுமிச்சை அடங்காது மீதூருமாகலின் அவ்வழி அவ் இச்சையே தானாக விளங்கித் தோன்றும் பேரானந்தத்தை அனுபவிக்கப் பெறும்" என்றும், இணையடிக ளுணருந்தோறும் போகம் மேன்மேல் விளைதல் "புணர்ந்தாற் புணருந் தொறும் பெரும் போகம்பின் னும்புதிதாய் -மணந்தாழ் புரிகுழ லாளல்குல் போல வளர்கின்றதே" (கோவை - 9) என்றும்,

2415. அங்கு நன்மையில் வைகுமந் நாள்சில வகல
நங்க டந்திரு நாவினுக் கரசரை நயந்து
பொங்கு சீர்ப்புக லூர்தொழ வருளினாற் போவார்
தங்கு மப்பதிப் புறம்பணை சார்ந்தருள் செய்வார். 517

அப்பொருண்மேல் வைத்தோதிய திருவாக்கானு மறிக" என்றும் மாதவச் சிவஞான முனிவர் வகுத்த உரைப்பகுதிகளும் ஈண்குச் சிந்தக்கற்பாலன.

ஒளி *- சிவவொளி; "அலகின் ஞானச் கடலி டைப்படும் அமிர்த யோகச் சிவ வொளிப் புக" (11 திருமுறை - திருநா - எகா - 1).*

நீறுவாழ்வென நிகழ்திருத்தொண்டர் *- திருநீற்றின் சார்வே உறுதிப்பொருளாகக் கொண்ட வாழ்க்கையுடையார்; மெய்ப்பொருளார் - ஏனாதிநாதர் - மூர்த்தியார் முதலிய நாயன்மார்களது சரித உள்ளுறைகளைக் கருதுக.*

ஈறு இலாத் திருஞானசம்பந்தர் *- ஈறு இலா - அழிதல் இல்லாத; சிவனைப் போலவே சிவஞானமும் அழியாது நிலைபெற்றது. அதனைப் பெற்றுடைய என்க. ஈறிலா ஞானத்தைப் பெற்றவரை ஈறிலாதவர் என்றுபசரித்தார். திருஞானம் - எல்லாங் கடந்த சிவஞானம் என்பவாகலின் திருஞானம் எனினும் சிவஞானம் எனினும் ஒக்கும். "அந்தமில் ஞான சம்பந்தன்" (பிள். சீகாழி - மாற்பேறு).* 516

அங்கு *- திருவாரூரின்கண்.*

2415. ***பொருளுரை***–*அங்கு...அகல - அவ்விடத்தில் அத் (திருவாரூரில்) அவ்வாறு நன்மைக்கண்ணே தங்கிய அந்நாட்கள் சில செல்ல; நங்கள்...நயந்து - நம்முடைய திருநாவுக்கரசுகளை விரும்பி; பொங்குசீர்...போவார் - பொங்குகின்ற சிறப்பினையுடைய திருப்புகலூரினைத் தொழுவதற்கு அருள்விடை பெற்றுப் போவாராய்; தங்கும்....அருள்செய்வார் - தங்கிய அத்திருவாரூர்த் திருப்பதியின் புறம்பணையினைச் சென்றுசார்ந்து அருளிச்செய்வாராகி,*

விளக்கவுரை–நன்மையில் - நன்னெறியாகிய சிவநெறியின்கண்; "நன்னெறியாகிய ஞானத்தை" (8 சூ - அதி - ஏது) என்ற விடத்து "நன்மை யெனப்படுவன வெல்லாவற்றினுஞ் சிறந்த நன்மையாவது வீடுபேறென்பது; அதனைத் தலைப்படுதற் கேதுவாய்ச் சிறந்த நெறியாகலின் ஞானம் நன்னெறி எனப்பட்டது"; "வீட்டிற்கு நெறியென அவ்வச் சமயத்தாராற் கூறுப்படுவன வனைத்துந் தன்கண்ணே வந்து கூடநின்ற பெருநெறியாகலானும் அது நன்னெறி எனப்பட்டது" என்ற உரை காண்க. "தொன்மைத் திருநீற்றுத் தொண்டின் வழிபாட்டின், நன்மைக்கணின்ற நலம்" (610).

நங்கள்தம் திருநாவுக்கரசர் - உளப்பாட்டுத் தன்மைப் பன்மை; உலகுயிர்கள் மேல் அரசுகள் கொண்டொழுகிய பெருங்கருணைத்திறனது எளிமை கருதியது. அடியவர் பொருட்டுப் பாடியருளிய பசுபதித் திருவிருத்தம் முதலியவை காண்க. "நின் தாள்பரவி

வேறு

2416. புவனவா ரூரினிற் புறம்புபோந் ததனையே நோக்கிநின்றே
"அவமிலா நெஞ்சமே யஞ்சனீ யுய்யுமா றறிதியன்றே
சிவனதா ரூர்தொழ னீமற வா" தென்று செங்கைகூப்பிப்
"பவனமாய்ச் சோடையா" யெனுந்திருப் பதிகமுன் பாடினாரே. 518

யேம்பலிப் பார்கட் கிரங்குகண்டாய்" "அடியார் தடுமாற்ற மென்னும் மூரித் திரைப்பௌவ நீக்குகண்டாய்" (தேவா)

நயந்து - விரும்பி; விரும்புதலாவது - "தென்திருவாரூர் சென்றுபோற்றி மீண்டும்வந் தும்முடன் மேவுவன்" என்று உரைத்து உடன்பாடு பெற்று (2394) போந்ததனை நினைந்து மீண்டுசென்று அவருடன் மேவுதலை விரும்புதல்.

அரசரை நயந்து சீர்ப்புகலூர் தொழ - அரசுகள் அங்கு எழுந்தருளிய காரணத் தால் அவரது கூட்டத்தினையே முதன்மையாக விரும்பித் திருப்புகலூரினைத் தொழ நினைந்தனர் என்பதாம்.

புறம்பணை - நகரின் புறத்தே உள்ள வயலிடங்கள்; நகரின் புறவிடம் என்றலுமாம்.

அருள்செய்வார் - பாடினார் என மேல்வரும் பாட்டுடன் முடிக்க; அருள் செய்வார் - முற்றெச்சம். 517

2416. பொருளுரை...புவனஆரூரினில்...நின்றே - நிலவுலகிற் சிறந்த திருவாரூரின் நகரின்புறத்தின் மருதநிலத்திற் சென்றணைந்து அத்திருநகரினையே நோக்கி நின்ற படியே; "அவமிலா...மறவாது" என்று - பயனற்றுக் கழிந்துபோகாத நெஞ்சே! நீ அஞ்சற்க; உய்யும் வகையினை அறிவாயன்றே! சிவபெருமானது திருவாரூரினை நீ மறவாது தொழுவாயாக!" என்று கூறி; செங்கை கூப்பி - சிவந்த திருக்கைகளைச் சிரமேற் குவித்துக்கொண்டு; பவனமாய்ச் சோடையாய்...பாடினாரே - பவனமாய்ச் சோடையாய் என்று தொடங்கும் திருப்பதிகத்தை முன்னே பாடி யருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை-புவன ஆரூர் - புவனத்தில் மிக்க நகர்; "நிலம கட்கழ கார் தரு நீணுதற், றிலக மொப்பது" (97); "மேதினிக் காதன் மங்கை யிதயகமலம்" (43); புவனம் - நீர் என்று கொண்டு நீர்வளமுடைய என்றுரைத்தலுமாம்.

அதனையே - அத்திருநகரையே; நோக்கிநின்றே - இப்பதிகம் ஆரூராகிய பதியினைப் போற்றியது என்றறிவித்தபடி. ஏகாரம் அதனையே என்புழிப் பிரிநிலை; ஏனையவை அசைநிலைகள்; நெஞ்சமே - விளி.

புறம்புபோந்து - "ஆரூர் தொழுது" என்றதனால் ஆரூருக்குப் புறம்பு நின்றமையும், "தொழுது உய்யலாம் மையல்கொண்டு அஞ்சல்" என்றதனால் விடைகொண்டு நீங்கிச் செல்லும்போது அருளியமையும் கருதப்படுவன.

அவமிலா நெஞ்சமே - அவமாவது - சிவனதாட் சிந்தியாப் பேதைமையிற் கழிதல்.

மறவாது - **தொழல்** என்க. **தொழல்** - தொழுக; அல்லீற்று வியங்கோள் வினை முற்று. "மக்கட் பதடி யெனல்' (குறள் 196) "அதனை யவன்கண் "விடல்" (ஷை 517) என்புழிப்போல. "தொழுது உய்யலாம்" என்ற தேவாரம் தொழுக என்னும் பொருள்கொண்டதென்று காட்டியவாறு.

"பவனமாய்ச் சோடையாய்" எனும் - இது பதிகத் தொடக்கமாகிய முதற் குறிப்பு. - எனும் - என்று தொடங்கும்.

முன் - நகரினை முன்னிலையாகக் கொண்டு; நகரத்தின்முன்.

அவமிலா நெஞ்சமே! - பிள்ளையார் திருவாரூரை நீங்கும்போது பிரிவாற்றாமை கருதித் தம் நெஞ்சினைத் தேற்றும்படியில் வைத்து உலகினைத் தெருட்டியபடி.

தொழாய்நீ-பதிகமே பாடிநின்றார்-என்பனவும் பாடங்கள். 518

V **திருவாரூர்** (திருவாரூரினின்றும் புறப்படும்போது அருளியது)

திருச்சிற்றம்பலம் **பண் காந்தாரம் - 2-ம் திருமுறை**

பவனமாய்ச் சோடையாய் நாவெழாப் பஞ்சுதோய்ச் சட்டவுண்டு
சிவனதாட் சிந்தியாப் பேதைமார் போலநீ வெள்கினாயே
கவனமாய்ப் பாய்வதோ ரேறுகந் தேறிய காளகண்டன்
அவனதா ரூர்தொழு துய்யலா மையல்கொண் டஞ்சனெஞ்சே. (1)

பல்லிதழ் மாதவி யல்லிவண் டியாழ்செயுங் காழியூரன்
நல்லவே நல்லவே சொல்லிய ஞானசம் பந்தனாரூர்
எல்லியம் போதெரி யாடுமெம் மீசனை யேத்துபாடல்
சொல்லவே வல்லவர் தீதிலா ரோதநீர் வையகத்தே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சிவனது திருவாரூர் மறவாது தொழுக; இது உய்யுமாறு அறிதி; ஆதலின் ஆரூரினை நீங்கிச் செல்வது பற்றி அஞ்சற்க; நெஞ்சமே! என ஆசிரியர் காட்டியபடி; (2416)

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) பவனம்ஆய் - மூச்சுக்காற்று மேல்நோக்கி யுளதாய்; சோடைஆய் வறட்சியுளதாய்; சோஷா - சோடை; சோஷணம் - வறட்சி; வரண்ட நிலத்தில் நீர்பாய்தலுக்குச் சோடை பாய்தல் என்பது வழக்கு; சுஷ் - உலர் என்பது பகுதிப் பொருள். **(பவனம் மாய்ச்சோடு - ஐஆய்** - மூச்சுக் குறைவினோடு கபமும் கண்டு. **மாய்ச்சு** - மாய்தல் - குறைதல் - பெருமூச்சுக் காணுதல்; **ஐஆதல்** - கபம் உண்டாதல் என்பாருமுண்டு). **நாஎழா** - நாக்குப் பேசஎழாமல்; **பஞ்சுதோய்ச்சு அட்ட உண்டும்** - பாலைப் பஞ்சில் தோய்த்துச் சிறுதுளியாக ஊட்ட உண்டும்; இவை உயிர்போகும் தருவாயில் நிகழ்வன;

2417. காழியார் வாழவந் தருள்செயுங் கவுணியப் பிள்ளையார்தாம்
ஆழியா னறியொணா வண்ணலா ரூர்பணிந் தரிதுசெல்வார்
பாழிமால் யானையின் னுரிபுனைந் தார்பனை யூர்பணிந்து
வாழிமா மறையிசைப் பதிகமும் பாடியப் பதியில்வைகி, 519

அப்போதும் **சிவனதாள்** - சிவனுடைய திருவடிகளை; **மையல்கொண்டு** - மயக்கங் கொண்டு; அதனால் அஞ்சற்க; வெள்குதல் - கவலைப்பட்டு இரங்குதல்;- (2)**தந்தையார் - போயினார் தாயரும் போயினார்** - போதல் உறுதி என்னும் துணிவுபற்றி இறந்தகாலத்தாற் கூறினார்; உலகுக்குபதேசித்தது:- (3) **நிலாயது** - நிலைபெற்றது; குணங்களார் - நற்குணத்தால் மிக்கவர்; **குலுங்கினாய்** - அஞ்சினை; அணங்கன்-பெண்ணொருபாகன் "அணங்காடல்";-(4) நீதி - ஒழுக்க முறை; சாதியார் - தேவச்சாதியார்; **தருமன்** - இயமன் "தருமரா சற்காய் வந்த கூற்றினைக் குமைப்பர் போலும்" (தேவா) -(5) **துறவியார்** - துறவிகள்; **தூங்கினாய் - தூங்குதல்** - துளங்குதல்; வருந்துதல்.-(6) **பாம்பின்வாய்த் தேரை - சிறுபறவை பூத்தேன் சுவைத்து** - முன்னையது பற்றிவிடாது படிமுறையாக மேன்மேல் வரும் துன்பத்தின் இயலுக்கும், பின்னையது இன்பம்போலக் காணும் உலகின்பத்துச் சிறுமைக்கும் குறியீடாக நின்றன. "பாம்பின் வாய்த் தேரைபோலப் பலபல நினைக்கின்றேனை" (தேவா) -(8) **எறிந்திது** - எறிந்த இது;-(9) **பற்றினாய்** - அதனை பற்றாகக் கவன்றனையே:- (11) எல்லி - சங்காரமாகிய நள்ளிரவு. **பல்லிதழ்** - பல இதழ்கள்; பல்போன்ற என்றலுமாம். **அல்லி** - அகவிதழ் - ஆம்பல் என்றலுமாம்.

2417. பொருளுரை....காழியார்...செல்வார் - சீகாழியவர்கள் வாழ அவதரித்துவந் தருளிய கவுணியப்பிள்ளையார் மகாவிட்டுணுவினாலும் அறியொணாத இறைவரது திரு வாரூரினைப் பணிந்து அரிது மேற்செல்வாராய்; பாழிமால்...பணிந்து - வலிமையும் மத மயக்கமும் உடைய யானையின் தோலைப் போர்த்த இறைவரது திருப்பனையூரினைப் பணிந்து; வாழி...வைகி - வாழ்வுடைய பெரிய வேதங்களின் பொருளையும் இசையினையுமுடைய திருப்பதிகத்தினையும் அருளிச்செய்து அத்திருப்பதியில் அமர்ந்தருளி;

விளக்கவுரை..காழியார் வாழவந்து - சீகாழிப்பதியுள்ளோர் - பிள்ளையாரது திருவவதாரத்தினால் வாழ்வடைந்தனர் என்பது. 2429ம் பார்க்க. "கானவர்குலம் விளங்க" (662) முதலியவை காண்க.

அருள் செயும் - உலகினுக்குப் பற்பலவாற்றானும் அருளிப்பாடுகளைச் செய்யும்.

ஆழியான் - விட்டுணுவினாலும்; உயர்வுசிறப்பும்மை தொக்கது. விட்டுணுவுலகத்தினின்றும் தியாகேசர் போந்ததுவும், "மாவா ழகலத்து மான்முதல் வானவர்" வந்து ஓவாது இங்கு வழிபட்டு நிற்பதும் குறிப்பு. தேவர்களிற் றலைமைபற்றி **ஆழி** யானைக் கூறினார்; ஏனையோரையும் உடன்கொள்க. **ஆழி** - கடல்; இங்குச் சிறந்த பாற்கடலைக் குறித்தது. ஆழி - சக்கரமுமாம். **ஆரூர்** - ஆரூர்த் திருநகரினை.

2418. அங்குநின் றரிதெழுந் தருளுவா ரகிலகா ரணருமானார்
தங்குநற் பதிகளும் பிறபணிந் தருளிவண் டமிழ்புனைந்தே
யெங்குமெய்த் தவர்குழா மெதிர்கொளத் தொழுதெழுந் தருளிவந்தார்
பொங்குதண் பாசடைப் பங்கயப் புனல்வயற் புகலூர்சார. **520**

அரிது செல்லுதலாவது நீங்கலாகாத நிலையில் பிரிந்து செல்லுதல்; மேல்வரும் பாட்டில்" "அரிது எழுந்தருளுவார்" என்றதுமது.

பாழி மால் யானை - ***பாழி*** - வலிமை; ***மால்*** - மத மயக்கம்; பெரிய என்றலுமாம்.

வாழி மாமறை இசைப்பதிகம் - ***வாழி*** - வாழ்வுடைய - வாழ்வுதரும்; மறைப் பதிகம் - இசைப்பதிகம் - என்று தனித்தனி கூட்டுக. ***மறை*** - மறைப்பொருளுடைய.

அப்பதியில் - திருப்பனையூரில். *519*

2418. பொருளுரை—அங்குநின்று–புனைந்தே - அத்திருப்பதியினின்றும் அருமையாக எழுந்தருளி மேற்செல்பவராகி உலகமெல்லாவற்றுக்கும் காரணரும் ஆகிய இறைவர் எழுந்தருளும் நன்மையுடைய பதிகள் பிறவற்றையும் பணிந்து திருப்பதிகம் புனைந்தருளி; ***எங்கும்...தொழுது*** - எவ்விடத்தும் மெய்த்தவமுடையார்களாகிய அடியார்கள் தம்மை எதிர்கொள்ளத் தொழுதுகொண்டு; ***பொங்கு....சார*** - பொங்கும் குளிர்ச்சியாகிய இலைகளையுடைய தாமரைப் பொய்கைகள் சூழ்ந்த திருப்புகலூரினை அணுக; ***எழுந்தருளிவந்தார்*** - எழுந்தருளிவந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை—அகில காரணர் - உலகுக்கு நிமித்தகாரணராகிய சிவபெருமான்; ***உம்மை*** - ஏனைய தன்மைகளோடு காரணரும் என இறந்தது தழுவியது. ஏனைய தன்மைகள் முன்கூறிய ஆழியானறியொணாமை முதலாயினவை.

பிற பதிகளும் என்க. இவை திருக்கொண்டீச்சரம், திருஇராமனதீச்சரம் முதலாயின என்பது கருதப்படும். பனையூர் பணிந்து - (பின்பு) பிற பதிகளும் பணிந்துற என்றதனால், திருவாரூருக்கும் திருப்பனையூருக்கும் இடையில் உள்ள திருப்பள்ளியின் முக்கூடல், திருவிற்குடி முதலியவற்றில் பிள்ளையார் இம்முறை எழுந்தருளவில்லை என்பதும் கருதப்படும். என்னை? திருவாரூரினின்றும் நன்னிலம் செல்லும் சாலையின்வழிப் பிள்ளையார் நேரே சென்றருளினார், திருநாவுக்கரசரை நயந்து சென்றருளினாராகலின், என்பது குறிப்பு.

எங்கும் - தொழுது-என்று கூட்டுக. எங்கும் - அப்பதிகளிலெங்கும். தொழுது - இறைவரை வணங்கி. எதிர்கொண்ட மெய்த்தவரைத் தொழுதென்றலும் குறிப்பு.

மெய்த்தவமாவது - சிவபூசையும் ஏனைச் சிவநெறி நிற்றலுமேயாம். "பர னுணர்வினா லுணரும், மெய்த்தவரை மேவா வினை" (போதம் - 12 - சூ - 2.)

புகலூர் சார - எழுந்தருளிவந்தார் என்று கூட்டுக. திருவுள்ளத்தின் தொழில் முன்பு வந்ததாகலின் வினைமுற்றும் முன்பு வைத்தோதப்பட்டது. அரிது செல்வாராகிப் - பணிந்து - வைகி - (2417), எழுந்தருளுவா (ராய்ப்) - பணிந்து - புனைந்தே தொழுது - சார - எழுந்தருளிவந்தார் (2418) என இந்த விரண்டு பாட்டுக்களையும் கூட்டி முடிக்க. 520

அகில காரணமும்-என்பதும் பாடம்.

திருப்பனையூர்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம் - 1-ம் திருமுறை**

அரவச் சடைமேன் மதிமத்தம், விரவிப் பொலிகின் றவனூராம்
நிரவிப் பலதொண் டர்கணாளும், பரவிப் பொலியும் பனையூரே. (1)

பாரார் விடையான் பனையூர்மேற், சீரார் தமிழ்ஞா னசம்பந்தன்
ஆரா தசொன்மா லைகள்பத்தும், ஊரூர் நினைவா ருயர்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பனையூரே இறைவனதூராம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) **நிரவி** - வரிசைபெறப் பொருந்தி; **பல தொண்டர்கள் நாளும் பரவி** - 2-3-4-6-9 பார்க்க; **பொலிதல்** - வேண்டிய வேண்டி யாங்குப்பெற்று மகிழ்ந்து விளங்குதல்:-(2) **எண்ஒன்றி** - மனத்தின் ஒருமைப்பாட்டுடன்; **எண்** - எண்ணம்; **உள்** - அவ்வெண்ணத்தினுள்;- (3) **சிலர்**-அணுக்கத் தொண்டர்கள்; **பலர்** - வழிபடுவோர்.- (4) **படியார்** - உலகோர்;- (5) **இறையார்** -தலைமைபற்றி; கையினால் என்றலுமாம்; **பொறை** - பொருட் பொலிவு;- (8) **அலல்**-அல்லல்; துன்பம்; எதுகைநோக்கி அலல் என நின்றது செய்யுள் விகாரம்; **பல கண்டவன்** - பல சிருட்டி காலங்கள் கண்டவன் - அழியாதவன்; உண்ணின்று மகிழ்ந்தவன் (2); பலகண்டவன் (8); பரமன் (9); இழிவில்லதோர் செம்மையினான் (10) முதலியவை மாமறைப் பொருள் விரித்தபடி.

தலவிசேடம்:-**திருப்பனையூர்** - காவிரித் தென்கரை 73 வது பதி; பனை தலமரமாதலிற் போந்த பெயர்; ஆளுடைய நம்பிகளுக்கு இறைவர் நடன தரிசன மாக எதிர்காட்சி கொடுத்தருள "ஆடுமாறு வல்லா ரவரே அழகியரே" என்று அவர் பாடியருளிய சிறப்புடையது; பராசரர் பூசித்துப் பேறுபெற்றனர். இங்குக் கரிகாற் சோழனுக்குத் துணைசெய்த விநாயகர் துணையிருந்த பிள்ளையார் எனப்பெறுவர். (சுவாமி - சௌந்தரநாதர் - அழகிய நாதர் - நம்பிகள் பதிகம் பார்க்க); அம்மை - பெரியநாயகி; தீர்த்தம் - அமுதவாவி; மரம் - இரண்டு பனைகள்; பதிகம் 2.

இது நன்னிலம் நிலயத்தினின்றும் கரை வழி தென்கிழக்கில் ஒரு நாழிகை யளவில் அடையத்தக்கது.

2419. நாவினுக் கரசரு நம்பிசீர் முருகரு மற்றுநாமச்
சேவுகைத் தவர்திருத் தொண்டரா னவர்கள்முன் சென்றுசீதப்
பூவினிற் பொலிபுனற் புகலியார் போதகத் தெதிர்பணிந்தே
மேவமற் றவருடன் கூடவே விமலர்கோ யிலையடைந்தார். 521

திருஇராமனதீச்சரம்

திருச்சிற்றம்பலம் *பண் - வியாழக்குறிஞ்சி - 1-ம் திருமுறை*

சங்கொளிர் முன்கையர் தம்மிடையே, யங்கிடு பலிகொளு மவன்கோபப்
பொங்கர வாடலோன் புவனியோங்க, வெங்கும திராமன தீச்சரமே (1)

*சந்தநன் மலரணி தாழ்சடையன், **தந்த மதத்தவன்** றாதையோதான்,*
அந்தமில் பாடலோ னழகனல்ல, வெந்தவ னிராமன தீச்சரமே (2)

***தழைமயி லேறவன்** றாதையோதான், **மழைபொழி சடையவன்** மன்னுகாதிற்*
குழையது விலங்கிய கோலமார்பி, னிழையவ னிராமன தீச்சரமே. (3)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- *அவன் (மறைகளால் அவன் என்று சுட்டப்பட்ட அவன்) எழுந்தருளியிருப்பது இராமனதீச்சரமே.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:- *(2)* **தந்த மதத்தவன்** *- விநாயகர்;-(3)* **தழை மயில் ஏறு அவன்** *- முருகப்பிரான்;* **மழைபொழிசடை** *- மழைபோல உதவும் கங்கையினை ஏற்ற சடை; இப்பதிகத்துப் பதினொராவது பாடல் திருக்கடைக் காப்புச் சிதைவுபட்டது!; “தேன்மலர்க் கொன்றையோன்..முந்தமக்கூன மன்றே” என்றமட்டிலேனும் கிடைத்துள்ளது நமது பேறு!*

தலவிசேடம்:- **திருஇராமனதீச்சரம்** *- காவிரித் தென்கரை 77-வது பதி. இராமன் பூசித்த காரணத்தால் இப்பெயர்பெற்றது. அவன் - (1) என்பதாதிவேத மந்திரங்களாற் போற்றிய குறிப்புக்கள் பதிகத்துட் காண்க. சுவாமி -* **இராமநாதர்;** *அம்மை -* **கருவார்குழலி;** *தீர்த்தம் -* **இராமதீர்த்தம்** *- பதிகம் 1. இது இந்நாளில் கவனமற்ற சிறு கோயிலாக உள்ளது. திருப்புகலூரினின்றும் தெற்கே முடிகொண்டான் ஆற்றைக் கடந்து மட்சாலை வழி ஒரு நாழிகையளவில் உள்ள திருக்கண்ணபுரம் என்ற வைணவப் பதிக்குக் கிழக்கே உள்ளது. (***புகலூர்** *- II பார்க்க. முருக நாயனார் புராணத்திறுதி). இதன் கிழக்கில் ஒரு நாழிகையளவில் திருச்செங்காட்டங்குடி உள்ளது.*

2419. பொருளுரை.. *நாவினுக்கரசரும்...முன்சென்று-திருநாவுக்கரசரும் ஆடவருட் சிறந்த சிறப்புடைய முருகநாயனாரும், மற்றும் பெரிய இடபக்கொடியை உயர்த்தவராகிய சிவபெருமானது திருத்தொண்டர்களும் எதிர்கொண்டு முன்பு சென்று; சீதப் பூவினில்..மேவ - குளிர்ந்த பூக்களினாற் பொலிவுபெற்ற நீர்வளமுடைய சீகாழியவர்களது ஆனைக்கன்றினுடைய திருமுன்பு பணிந்தே சேர; மற்றவருடன்...அடைந்தார் -*

வேறு

2420. தேவர்தந் தலைவனார் கோயில்புக் கனைவருஞ் சீர்நிலத் துறவணங்கிப்
பாவருந் தமிழிசைப் பதிகமும் பாடிமுன் பரவுவார் புறம்பணைந்தே
தாவில்சீர் முருகனார் திருமனைக் கெய்தியத் தனிமுதற் றொண்டர்தாமே
யாவையுங் குறைவறுத் திடவமர்ந் தருளுவா ரினிதினங் குறையுநாளில், 522

அவர்களுடனேகூடப் பிள்ளையார் சென்று இறைவரது திருக்கோயிலினை அடைந்தருளினர்.

விளக்கவுரை - **நாவினுக்கரசரும்** - பிள்ளையார் விரும்பியபடி அவர் வருகையினை எதிர்பார்த்துத் திருப்புகலூரினில் எழுந்தருளியிருந்த அரசுகளும் என்க. உம்மை எண்ணின்கண் வந்தது. அரசுகளை நயந்து பிள்ளையார் எழுந்தருளுவதனாலும், பிள்ளை யாரது வருகையினை எதிர்பார்த்தே அரசுகள் அங்குத் தங்கியருளியமையாலும், அரசுகளை முன்வைத்துக் கூறினார்.

நம்பி - ஆடவரிற் சிறந்தவர். சிறப்பாவது பன்னாள் அரசுகளையும் பிள்ளையாரையும் ஒருங்கே தமது திருமடத்தில் திருத்தொண்டர்களுடன் எழுந்தருளச்செய்து பணி செய்த அன்பின் மேன்மை. **சீர்** - என்று மேலும் அதனை வலியுறுத்தியபடி; "தாவில் சீர்" என்று பின்னும் காட்டியபடி. மேல்வரும் பாட்டுப் பார்க்க.

நாமச் சே - **நாமம்** - அச்சம்; அடையாதார்க்கு அச்சம் விளைக்கும் என்க; "அண்ண லரண்முரணேறும்" (தேவா). **நாமம்** - நாம் என்றதன்றிரிவு.

தொண்டரானவர்களும் என உம்மை விரிக்க.

முன் சென்று - எதிர்கொண்டழைத்துவரும் பண்பினாலே நகர்ப்புறத்து முன் சென்று; பிள்ளையார் அங்குச் சாரவரு முன்னரே சென்று என்றலும் குறிப்பு.

சீதப்புனல் என்று கூட்டுக. **பூவினிற் பொலிபுனல்** - தாமரைத் தடங்கள்.

போதகம் - யானைக் கன்று. இங்குப் பெருமையும் இளமையும் குறித்துநின்று பிள்ளையாரை உணர்த்திநின்றது. போதகம் போன்றாரைப் போதகம் என்பது உவமை யாகுபெயர். "மறைச்சிறு போதக மன்னாரும்" (1981).

கோயிலையடைந்தார் - எதிர்கொண்டு பணிந்த அவ்விடத்தினின்றபடி நேரே திருக்கோயிலை அடைந்தருளினர். இது மரபு. 521

2420. பொருளுரை - **தேவர்...வணங்கி** - தேவர்களின் நாயகரது திருக்கோயிலினுட் புகுந்து யாவரும் சிறப்புடைய நிலம்பொருந்த வீழ்ந்து வணங்கி; **பாவரும்...அணைந்தே** - பாக்களின் பாகுபாட்டிற்கமைந்த தமிழிசை பொருந்திய திருப்பதிகத்தினைப் பாடித் திருமுன்பு துதிப்பவராகிய பிள்ளையார் வெளியில் அணைந்து; **தாவில் சீர்...எய்தி** - குற்றமற்ற சிறப்பினையுடைய முருக நாயனாரது திருமனையின்கண்ணே சேர்ந்து;

2421. **நீலநக் கடிகளு நிகழ்சிறுத் தொண்டரு முடனணைந் தெய்துநீர்மைச்**
சீலமெய்த் தவர்களுங் கூடவே கும்பிடுஞ் செய்கைநேர் நின்றுவாய்மை
சாலமிக் குயர்திருத் தொண்டினுண் மைத்திறந் தன்னையே தெளியநாடிக்
காலமுய்த் தவர்களோ டளவளா விக்கலந் தருளினார் காழிநாடர். 523

அத்தனிமுதல்...அமர்ந்தருளுவார் - அந்த ஒப்பற்ற முதன்மையுடைய திருத்தொண்டரே திருவமுது, உறையுள் முதலிய எல்லா வகையாலும் குறை வின்றி அமைக்க, அங்கு விரும்பி எழுந்தருளுவாராகி(ப் பிள்ளையார்); இனிதின் அங்கு உறையும் நாளில் - இனிதாக அங்குத் தங்கியருளிய நாட்களில்;

விளக்கவுரை...கோயில் புக்கு *- எதிர்கொண்ட புறம்பணையிடத்தினின்றும் நேரே இறைவரது திருக்கோயிலின்கண் சென்று புகுந்தனர்.*

அனைவரும் *- பிள்ளையாரும், அரசுகளும், முருகநாயனாரும், ஏனைய அடியார்களும்,*

பாவரும் தமிழ் *- பா - பாவினம்; யாப்பமைதி.*

தமிழிசைப் பதிகம் *- இப்பதிகம் கிடைத்திலது!*

முருகனார் திருமனைக்கு எய்தி *- முன்னரும் முருகனாரது திருமடத்தில் பிள்ளையார் எழுந்தருளியமர்ந்திருந்தனர் என்பது 2338 - 2389 பாட்டுக்களிற் காண்க. அதனைத் தொடர்ந்தே முருகனார் மீண்டும் பிள்ளையாரை எதிர்கொண்டு வழிபட்டுத் தமது திரு மனையில் எழுந்தருளுவித்துக் குறைவறுத்தனர் என்க.* ***தாமே*** *- என்ற குறிப்புமிது; முன்செய்த தாமே என்றபடி. இது தொண்டர்க்குத் தொண்டராம் புண்ணியத்தின் மேன்மேலெழும் ஆராமையின் இயல்பு.* ***தனிமுதலுக்கு*** *- தொண்டர் என்றலுமாம்.*

அமர்ந்தருளுவார் - இனிதின் - உறையும் - மேற்கூறிய திருத்தொண்டினீர்மையின் இயல்பு இருபாலும் நிகழ்வதாம் என்பது குறிப்பு. *522*

2421. ***பொருளுரை...நீலநக்கடிகளும்...நேர்நின்று*** *- செய்திகேட்டு வந்தணைந்த திருநீலநக்க நாயனாரும், உலகில் புகழுடன் விளங்குகின்ற சிறுத்தொண்ட நாயனாரும், உடனாகக் கூடிப் பொருந்திய நீர்மைபொருந்திய சீலமுடைய ஏனைய மெய்த்தவர்களாகிய திருத்தொண்டர்களும் தம்முடன்கூடவே இறைவரை வழிபடும் செய்கையில் ஒருப்பட்டுநின்று;* ***வாய்மை..நாடி*** *- வாய்மையின்கண் மிகவும் உயர்ச்சியுடைய திருத்தொண்டின் உண்மைத் திறங்களையே தெளிவுபெற நாடிக்கொண்டு;* ***காலமுய்த்து...காழிநாடர்*** *- சீகாழித் தலைவராகிய பிள்ளையார் அவர்களுடனே கலந்து காலம்போக்கி அளவளாவியிருந்தருளினார்.*

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

2422. கும்பிடுங் கொள்கையிற் "குறிகலந் திசை"யெனும் பதிகமுன் னானபாடல்
றம்பெருந் தலைமையா னிலைமைசால் பதியதன் பெருமைசால் புறவிளம்பி
யும்பரும் பரவுதற் குரியசொற் பிள்ளையா ருள்ளமெய்க் காதல்கூர
நம்பர்தம் பதிகளா யினவெனைப் பலவுமுன் னண்ணியே தொழநயந்தார். 524

விளக்கவுரை-நீலநக்கடிகள் - திருநீலநக்க நாயனார் - **நிகழ்** - புகழினால் விளங்கும்; **நிகழ்** - இனி நிகழவுள்ளதாக; சிறுத்தொண்ட நாயனாரது பெருஞ்சிறப்பும் உட்குறிப்பு.

நீலநக்கடிகளும் - சிறுதொண்டரும் - இவர்கள் பிள்ளையாரது வருகையைக் கேட்டு வழிபட வந்தவர்கள்.

உடன் அணைந்து எய்தும் நீர்மைச் சீலமெய்த்தவர்கள் - இவர்கள் பிள்ளையாருடன் இருந்த அடியார்.

நீர்மைச் சீலம் - திருத்தொண்டின் உறைப்பாகிய சிறப்பு. **சீலம்** - தவவொழுக்கம்; ஆண்டானடியார் வழிபாட்டு நலம்.

வாய்மை...உயர் திருத்தொண்டின் உண்மைத்திறம் - வாய்மையிற் பிறழாது திருத்தொண்டில் உறைத்து நிற்றலின் பெருமை. அதனைத் தெளிய நாடுதலாவது அடியார் பெருமையினையும், அதற்கு ஆண்டவன் வைக்கும் திருவருளின் எளிமையையும் கேட்டும் சிந்தித்தும் தெளிந்து மகிழ்ந்திருத்தல். "ஆட்பாலவர்க் கருளும் வண்ணமு மாதி மாண்பும் கேட்பான் புகிலளவில்லை"; (தேவா).

தெளிய நாடி - காலமுய்த்து - அளவளாவி கலந்தருளினார் - இஃது இறைவரது வழிபாட்டிற் கழியும் நேரங்கள் தவிர, எஞ்சிய காலத்தை எல்லாம் அடியவர் கூட்டத்திற் கழியநிற்கும் அன்பரியல்பினை வகுத்தோதியது; அருட்பிள்ளையார் இவ்வாறு காலமுய்த்தனர் என்று அறிவோமாயின், ஏனை எளிய அன்பர்களுக்கும் இதுவே இன்றியமையாத படிப்பினை முறையாம் என்பது சொல்லாமலே யமையும் என ஆசிரியர் அறிவுறுத்தியவாறு; திருத்தொண்டின் திறத்தின் அளவில்லாத பெருமை யினையும் உடன்வைத்துத் தெருட்டியவாறுமாம். அவப்போது போக்கும் உலகம் இதனைக் குறிக்கொண்டுய்யக்கடவதாக! கலந்து - பதிகம் பார்க்க.

காலம் உய்த்தல் - காலம் கழித்தல்.

சால்பின் மிக்கு-காலமெய்த-என்பனவும் பாடங்கள். 523

2422. **பொருளுரை... கும்பிடும் கொள்கையில்** - கும்பிடும் கொள்கையினது குறிப்பினை உள்ளடக்கி; குறிகலந்துஇசை..விளம்பி - "குறிகலந்திசை" என்று தொடங்கும் முதற் பாட்டினையுடைய திருப்பதிகத்தினைத் தமது பெரிய தலைமைப் பாட்டினால் நன்னிலைமை நிறைந்த அத்திருப்பதியின் பெருமைகளைச் சிறப்புப்பொருந்த எடுத்துச் சொல்லி; உம்பரும்...காதல்கூர - தேவர்களும் போற்றுதற்குரிய சொல்லினை யுடைய பிள்ளையார் திருவுள்ளத்தில் மெய்க்காதல் பெருகியதனாலே; நம்பர்தம்...நயந்தார் -

இறைவரது திருப்பதிகளாயின பிறவற்றையும் சென்று பொருந்தித் தொழுவதற்கு விருப்பங்கொண்டருளினர்.

விளக்கவுரை–கும்பிடும் கொள்கையில் - பதிகக் கருத்தும் குறிப்புமாம். பதியை நோக்கி கும்பிட்டு விடைபெற்றுச் செல்லுதல்.

பதியதன் பெருமை சால்புற விளம்பி - இது பதிகப்பாட்டுக் குறிப்பு. "தோல்அரை மேலுடையானிடம்..புகலூரே" (1) என்பனவாதியாக வரும் பாட்டுக் கருத்துக்கள் பார்க்க. புகலூரே என்று பதியினைப் பாடுதலின், பதியினுக்குப் புறம்பே நின்று போற்றிச்செல்லுதல் பெறப்படும். "புறம்போந் ததனையே நோக்கி நின்றே" (2416) என்றதும் பிறவும் பார்க்க.

"குறிகலந்திசை" - பதிக முதற்குறிப்பு; குறி - உட்குறிப்பு - இறைவனைக் குறி வைத்து. "குறித்த பூசை" (1241) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க.

முன்னான பாடற்பதிகம் - விளம்பி - என்று கூட்டுக. **முன்னானபாடல் - தலைமையால்** - "தோடுடைய" என்னும் பெருமையுடைய முதற் பதிகப் பண்ணினைப் பற்றி என்ற குறிப்புமாம். **தம்பெரும் தலைமையால் - தலைமை** - மேலாந் தன்மை - பெரும் பெயர்ப்பொருள் உடைமை; சொல்லின் பெருமை, மேல் **"சொற்பிள்ளை யார்"** என்று கூறுவதனாற் பெறப்படும்.

நிலைமை சால்பகுதி - நிலைமை சாலுதலாவது அடைந்தார்க்கு அங்கங்கும் நன்னிலைமை அளித்தற்கு இடனாயிருத்தல். இப்பதியிற் பின் நிகழும் வரலாறுகளாகிய ஆளுடைய அரசுகளது சரிதப் பகுதிகளும் ஆளுடைய நம்பிகளது சரிதப் பகுதிகளும் இங்கு நினைவுகூர்க.

பெருமை - பதி - இறைவனது திருஅருள் வெளிப்பாட்டிற்கு இடமாயிருத்தல்.

உம்பெரும் பரவு சொல் - தீ - நீர் - இயமன் முதலிய தேவர்களை ஏவல் கொண்டருளிய பதிக வரலாறுகள் இங்குச் சிந்திக்கத் தக்கன. இக்கருத்தினை நம்பியாண்டார் நம்பிகளும் பின்வந்த நல்லாசிரியர்களாகிய சிவப்பிரகாச சுவாமிகள், மாதவச் சிவஞான முனிவர் முதலியோரும் தங்கள் நூல்களுள் விரித்தவற்றையும் பார்க்க.

நண்ணியே தொழ - திருக்கேதாரம் - திரிகோணமலை முதலியனபோல் ஆண்டாண்டும், தாமிருந்த வேற்றுப் பதிகளினின்றபடியே தொழலாமாயினும், அவ்வாறன்றிச் சென்று பொருந்தித் தொழ என்பார் நண்ணியே என்றார்.

நயந்தார் - விரும்பினார்; **நயத்தல்** - விரும்புதல்; "நாவினுக் கரசரை **நயந்து**" (2415).

பதிகளாயின - எனைப் பலவும் - இவை மேலுரைக்கப்படுவன. **எனை** - எத்தனையாயினவும். எண்ணளவாலும் சிறப்பாலும் பெருமைகுறித்தது. பலவும் - உம்மை முற்றும்மை. திருத்தொண்டின் திறம் போற்றும் இவ்வரலாற்றினைப் போதம் 12 சூத்திரக்கருத்தாக வைத்துத் தனி யாப்பாக யாத்து அமைத்தருளிய திறம் காண்க. 524

11. திருப்புகலூர்

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டபாடை - 1-ம் திருமுறை

குறிக லந்தவிசை பாட லினானசை யாலிவ் வுலகெல்லாம்
நெறிக லந்ததொரு நீர்மைய னாயெரு தேறிப் பலிபேணி
முறிக லந்ததொரு தோலரை மேலுடை யானிட மொய்ம்மலரின்
பொறிக லந்தபொழில் சூழ்ந்தய லேபுய லாரும் புகலூரே. (1)

புற்றில்வா ழும்மர வம்மரை யார்த்தவன் மேவும் புகலூரைக்
கற்று நல்லவவர் காழியுண் ஞானசம் பந்தன் றமிழ்மாலை
பற்றி யென்றுமிசை பாடிய மாந்தர் பரமன் னடிசேர்ந்து
குற்ற மின்றிக் குறைபா டொழியாப்புக ழோங்கிப் பொலிவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நிலைமைசால் பதியாகிய புகலூரதன் பெருமை சால்புற விளம்பியது (2422) என்று ஆசிரியர் காட்டியபடி.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) **குறிகலந்த இசைபாடலினா னசையா லிவ்வுல கெல்லாம் நெறிகலந்த தொருநீர்மை** - கும்பிடுங் கொள்கை இனைத்தென்றறிவித்தபடி (2422). **குறி** - மனத்துள் நிறுவிய குறிப்பு - குறிக்கோள்; **இசைபாடல்** - இறைவர் புகழைப் பாடுதல்; "எந்தை புகலூர் பாடுமின் புலவிர்காள்" (நம்பிகள்) என்று நம்பிகள் இக்கருத்தேபற்றி யருளிச்செய்தலும் காண்க. **பாடலினால்** - பாடலைக் கொண்டு; பாட்டின்மூலம். "பாடல்தம் பெரும் தலைமையால்" (2422); **முறி** - முறைத்தல் - கொல்லுதல். **பொறி** - வண்டு; **குறி - பாடல் - நெறி** என்றவை மனம் வாக்குக் காயம் என்ற மூவகை வழிபாடும் குறித்தன;-(2) **இழை** - இழை யுடைய பூணூல்; ஆகுபெயர்; "ஒன்பது போலவர் மார்பினி னூலிழை" (அரசு); **போது இலங்கு நகை** - போதில் விளங்கும் தேனின்பால் வைத்த ஆசை;- (3) **இறை** - முன்கை; **இறைசேரும்** - வளை என்று கூட்டுக; **அவர்** - பெரியார்; **குடிமை** - வழிவழியடிமை:- (4) **செம்மை** - முத்தித் தன்மை;- (5) **பைய** - வருத்த; **மெய்ய** - மெய்த்தன்மை விளங்க;-(6) **கலிக்க** - ஒலிக்க; **முந்நீர் அயர் வெய்த** - கடல்ஓசையும் பிற்பட. **முந்நீர்** - கடல் ஒசைக்கு வந்தது ஆகுபெயர்;- (7) **கள்ளம்** - ஆணவமலம்; கள்ளஞ்செய்து மறைப்பதனைக் கள்ளமென்றதுபசாரம்; **பழி** - பிறவி - "பழிநோய்செய்த பறிதான்" (தேவா)-(9) **ஆகம்வைத்த** - ஆகம் இடமாகக் கொண்ட; **ஏகம் வைத்த** - ஒப்பற்ற; முதன்மையான;- (10) **செய்தவத்தர்** - தவமொன்றுதவமல்லாதன செய்பவர்; **கொய்து-தூவி** - "அப்போடு மலர்தூவி" (தேவா - அரசு - ஏகம்பம்) **நீர் தூவுதல்** - ஆகம விதிப்படி அர்க்கிய முதலியன தருதல்; **மெய்தவம்** - முன்னர்ச் **செய்தவம்** என்றதற்கு மாறாகிய மெய்த்தவம்; சிவபூசை;- (11) **குறைபாடொழியா** - குறைபாட்டினை ஒழித்து; குறைந்து போகாத; **ஒழியா** - ஒழித்து - நீக்கி.

தலவிசேடம்:- **திருப்புகலூர்** - தொகுதி II பக்கம் 769 பார்க்க.

வேறு

2423. புள்ள லம்புதண் புனற்புக லூருறை புனிதனா ரருள்பெற்றுப்
பிள்ளை யாருட னாவினுக் கரசரும் பிறபதி தொழச்செல்வார்
வள்ள லார்சிறுத் தொண்டரு நீலநக் கரும்வளம் பதிக்கேக
வுள்ள மன்புறு முருகரங் கொழியவு முடன்பட விசைந்தார்கள். 525

2423. பொருளுரை... புள்...பெற்று-நீர்ப்பறவைகள் சத்தித்தற்கிடமாகிய குளிர்ந்த நீர்வாவி சூழ்ந்த திருப்புகலூரினில் எழுந்தருளிய இறைவரது திருவருள் விடைபெற்றுக் கொண்டு; பிள்ளையாருடன்-செல்வார்-பிள்ளையாருடனே திருநாவுக்கரசரும் இறைவரது பிறபதிகளையும் தொழும்பொருட்டுச் செல்வார்களாகி; வள்ளலார்... இசைந்தார்கள் - வள்ளலாராகிய சிறுத்தொண்ட நாயனாரும் திருநீலநக்க நாயனாரும் தங்கள் வளம் பொருந்திய பதிகளுக்குச் செல்லவும், உள்ளத்தில் அன்புபூண்ட முருக நாயனார் அங்குத் தங்கியிருக்கவும் அவர்கள் உடன்படித் தாமும் இசைந்தார்கள்.

விளக்கவுரை...செல்வார் - செல்வாராகி - முற்றெச்சம்; செல்வார் - இசைந்தார் என்க.

வள்ளலார் - மகனை அரிந்த பிற் சரித விளைவுக் குறிப்பு.

வளம்பதிக்கு - தத்தம் வளம் பதிகளுக்கு; பதி - பால்பகா அஃறிணை ; ஏக - ஏகவும்; எண்ணும்மை விரிக்க.

உள்ளம் அன்புறும் முருகர் - பிள்ளையாரையும் உடன்வந்த அடியார் கூட்டங்களையும் உபசரித்தற்கு அன்பின்நிறைவு காரணமாம் என்று குறிப்பு.

அங்கு ஒழியவும் - ஒழிதல் - பின்பற்றிச் செல்லாது அங்கே தங்கிவிடுதல்.

உடன்பட இசைந்தார் - ஆர்வமிகுதியால் உடன்பட மனம் ஒருப்படாரேனும் ஒருவாறு இசையும்படி மனங்கொண்டனர் என்பது குறிப்பு.

525

இசைவித்தார் - என்பதும் பாடம்.

2424. பொருளுரை...கண்ணகன்...பொழுதினில் - இடமகன்ற திருப்புகலூரினைத் தொழுது மேலே செல்லும்போதே; கடற்காழி...அகலாதே - கடற்கரையில் உள்ள சீகாழிப்பதியின் வந்த பெருமையுடைய பிள்ளையார் திருநாவுக்கரசரது பக்கத்தைவிட்டு நீங்காமல்; வண்ணநித்திலம்...உறும்காலை - அழகிய முத்துச்சிவிகையும் பின்னே வரவும் வழிச்செல்லத் தொடங்கியபோது; எண்ணில்-இசைக்கின்றார் - ஞானிகளது எண்ணத்துள் நிற்கின்ற சிறப்புடைய திருநாவுக்கரசர் பெருமானும் மற்று அந்தப்பிள்ளையாருக்கு எடுத்துச் சொல்வாராகி;

விளக்கவுரை...புகலூரினைத் தொழுது போம்பொழுதினில் - பதியைத் தொழுது

2424. **கண்ண கன்புக லூரினைத் தொழுதுபோம் பொழுதினிற் கடற்காழி**
அண்ண லார்திரு நாவினுக் கரசர்தம் மருகுவிட் டகலாதே,
வண்ண நித்திலச் சிவிகையும் பின்வர. வழிக்கொள வுறுங்காலை
யெண்ணில் சீர்த்திரு நாவினுக் கரசரு மற்றவர்க் கிசைக்கின்றார். **526**

மேற்சொல்லும் நியதியினைப் பற்றி "பதியதன் பெருமை சால்புற விளம்பி" (2422) என்றவிடத்து முன் உரைத்தவை பார்க்க.

திருநாவுக்கரசர்தம்-சிவிகையும் பின்வர - வழிக்கொள உறும் - பெருமக்களிருவரும் ஒருசேரப் புறப்பட்டருளுகின்றார்களாதலின், அப்பராகிய அரசுகள் நடந்து வரத் தாம் சிவிகையினூர்ந்துவருதல் தகாமையின், பிள்ளையார் அரசுகளின் அருகு நின்றகலாதே வழிக்கொள்ள உற்றனர் என்க.

சிவிகையும் பின்வர - பாததாமரை நோவாது தாம் ஊர்ந்து செல்வதற்குரியதாக இறைவர் அருளிய சிவிகையும் என உம்மை உயர்வு சிறப்பின்கண் வந்தது. "வேணியர் அருளும் இவ்வாறு" என்ற மேற்குறிப்புமது. பின்வர - சிவிகை பொறுப்பார் தாங்கிப் பின்றொடர்ந்து வர.

வழிக்கொள உறுதலாவது மேல் நடந்து செல்லத் தொடங்குதல்.

அண்ணலார் - இறைவர் அருளிய சிவிகையிருப்பவும் அரசுகள் நடக்கத் தாம் சிவிகை ஊர்ந்துவருதல் தகாதென்று கொண்ட பெருமையின் குறிப்பு. "எழுதரிய மலர்க்கையா லெடுத்திறைஞ்சி-யப்பரே! என" (1447) என்றும், "தொண்டர் திருவேட நேரே தோன்றியதென்று தொழுதே" (2169) என்றும், இவ்வாறு முன்கூறிய ஒழுக்க நிலைகளை ஈண்டுவைத்துச் சிந்திக்க.

மற்று அவர்க்கு - மற்று - பிள்ளையார் கொண்டருளிய கருத்துக்கு வேறாக என்ற குறிப்புடன் நின்றது. அவர்க்கு - அவ்வாறு வழிக்கொள உற்ற பிள்ளையாருக்கு.

இசைக்கின்றார் - இசைக்கின்றாராகி; முற்றெச்சம். இசைக்கின்றாராகி - என்றலும் என மேல்வரும் பாட்டுடன் கூட்டுக.

மருங்குவிட்டு-என்பது பாடம். 526

2425. பொருளுரை..."நாயனார்...அருளிவீர்" என்றலும் - "இறைவர் உமக்கு அருளிச்செய்து கொடுத்த இந்த நன்மைபொருந்திய அழகிய ஒளியுடைய தூய முத்துச் சிவிகையினை மேற்கொண்டு எழுந்தருள்வீராக" என்ற அருளிச்செய்தலும்; "சுடர்த் திங்கள்...போவது" என்று அருள்செய்தார் - ஒளியுடைய சந்திரன் பொருந்திய சடையினையுடைய இறைவரது திருவருளும் இவ்வாறே பொருந்துவதாயின் விரும்பும் தொண்டர்களுடனே நீர் முன்னாகச் சென்றருளுகின்றது எத்தலமோ அங்கு யான் பின்தொடர்ந்து வரும்படியாகப் போவது" என்று விடை அருளிச்செய்தனார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

2425. "நாய னாருமக் களித்தருள் செய்தவிந் நலங்கிள ரொளிமுத்தின்
றூய யானத்தின் மிசையெழுந் தருளுவீ" ரென்றலுஞ், "சுடர்த்திங்கள்
மேய வேணியா ரருளுமிவ் வாறெனில் விரும்புதொண் டர்களோடும்
போய தெங்குநீ ரங்குயான் பின்வரப் போவ"தென் றருள்செய்தார். 527

விளக்கவுரை...நாயனார் - தலைவர் - இறைவர். முழுமுதற்றலைவராகிய சிவபெருமான்; இருவருக்கும் தலைவராகிய அவர் அருளின்வழி நாம் இருவரும் ஒழுகுதல்வேண்டுமாதலின் என்ற குறிப்புப்பட நின்றது.

உமக்கு - உமக்கென்றே; சிறப்புரிமையாக.

அளித்து அருள்செய்த - இறைவர் செய்வன யாவையும் (இன்பத் துன்பமாகிய எவையும்) அருள் என்றே சொல்லப்படும்; ஆயின் ஏனையோர்க்குப்போலாது உமக்குச் சிவிகை அளித்தலால் அருள்செய்தனர் என்பது.

இ-நலங்கிளர் - தூய - யானம் - அடைமொழிகள் சிவிகையின் பெருமையினைக் குறித்தன; பிறிதினியைபு நீக்கிய விசேடணம்; நன்மை - தூய்மை யிரண்டும் அடைந்தார்க்கு உதவும்பொருட்டு இச் சிவிகையின்கண் அருளாற் பொருந்தின வாகலின் நீர் அதனில் எழுந்தருளுதல் வேண்டுமென்ற காரணக்குறிப்புப்பட நின்றன.

எழுந்தருளுவீர் - ஊர்ந்து மேற்செல்வீராக; வினைமுற்று வேண்டிக்கோடற் பொருளில் வந்தது.

அருளும் இவ்வாறு எனின் - அருளும் - உமது திருவுள்ளக் கருத்தேயன்றி இறைவரது அருளும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை. இவ்வாறு ஆயின் "நாயனார் உமக்கு அளித்து அருள்செய்த" எனத் திருவருளின்மேல் வைத்துக் கூறினாராகலின் அருளும் இவ்வாறு என மேற்கொண்டபடி; இறைவர் ஈண்டு உண்ணின்றுணர்த்தப்பெற்ற அருளும் இவ்வாறு என்று கொள்ளலுமாம். பிள்ளையார் இறைவரது திருவுள்ளத்தினை வேண்டி அறியும் தன்மையுடையார் என்பது மேற் பாண்டிநாட்டு நிகழ்ச்சிகளுட் காணத்தக்கது.

விரும்பு - உம்முடன் முன்னர் மேற்செல்லுதலை விரும்பிய.

போய தெங்குநீர் அங்குயான் பின்வரப்போவது-தாம் முன்பு எங்குச் செல்வதோ அங்குயான் வேறு செயலின்றி அறிவு செல்லும் வழிச் செயல்நிகழ்வதுபோலப், பின்றொடர்ந்துவரும்படி உமது செலவு நிகழ்வதாக என்று பிள்ளையார் தமது இச்சையினை அறிவித்த மரபின் மேன்மை காண்க. இதனால் பிள்ளையார் அரசுகளைத் தம் முன்பு செல்லும்படி விரும்பியது, அவர், தமக்கு வழிகாட்டுபவராகவும் தாம் அவரைப் பின் தொடர்ந்து செல்பவராகவும் வைத்து ஒழுகும்நிலையில் தம்மை அமைத்துகொண்டமை விளக்குதற்கென்க. **நீர் - தொண்டர்களோடும் - போயது எங்கு - அங்கு யான் பின்வர** - "நேய மலிந்தவர் வேடமும் ஆலயந்தானும் அரனெனத் தொழுமே" (போதம் - 12 சூத்). என்றபடி, **நீர் தொண்டர்களோடும்** என்றதனால் திருவேடத் தினையும், **போயது எங்கு**

2426. என்று பிள்ளையார் மொழிந்தருள் செய்திட விருந்தவத் திறையோரும்
"நன்று நீரருள் செய்ததே செய்வ"னென் றருள்செய்து நயப்புற்ற
அன்றை நாண்முத லுடன்செலு நாளெலா மவ்வியல் பினிற்செல்வார்
சென்று முன்னுறத் திருவம்ப ரணைந்தனர் செய்தவக் குழாத்தோடும். 528

என்றதனால் ஆலயத்தையும். பின்வர - (பின்பற்றி வழி பட்டு வர) என்று அரனெனத் தொழுவதனையும் குறித்து உலகுக்கு உபதேசிக்கு முறையில் ஒழுகிக் காட்டியபடியாம். பின்வருதல் - தொண்டர்களைப் பின்பற்றுதல் என்ற குறிப்பும் தருவது. "புகுவா ரவர்பின் புகுவோம்" எங்கு - திருப்பதிகள் - கோயில்கள். போவது - போவது நிகழ்வதாக; இவ்வாறு போவோமாக என்றலுமாம். இச்செலவில் பின்னர்வரும் நிகழ்ச்சிகளில் இத்திறம் மறவாது மனத்துள் வைத்துக் கோடற்பாலது என மேற்பாட்டில் வற்புறுத்துவது காண்க. 527

2426. பொருளுரை- என்று...மொழிந்தருள் செய்திட - என்று (முன்சொன்னவாறு) பிள்ளையார் கூறியருள; இருந்தவத்து...என்றருள்செய்து - பெரிய தவவேந்த ராகிய திருநாவுக்கரசரும் "நன்று; நீர் அருளிச்செய்தபடியே செய்வேன்" என்று அருளிச்செய்து; நயப்புற்ற...செல்வார் - விரும்பிய அற்றைநாள் முதலாகப் பிள்ளையாருடன் செல்லும் எல்லா நாட்களிலும் அந்த இயல்பிலே செல்வாராகி; சென்று-குழாத்தோடும் - செய்தவத் திருக்கூட்டமாகிய தொண்டர்களோடும் முன்புசென்று பொருந்தத் திருவம்பர் நகரினை அடைந்தனர்.

விளக்கவுரை...மொழிந்தருள்செய்திட...அருளிச்செய்து - இரும் - தவத்து - இறையோர் - அரிய தவத்தின் முதல்வர் - தவமுற்றிய பெரியோருள்ளே தலைமையாக நிற்பவர்; திருநாவுக்கரசர். "வருஞானத் தவமுனிவர் வாகீசர்" (1266); "பரமுனிவன்" (1694).

நன்று - நன்மையுடையது என்று உடன்பாடு குறித்தது.

அருள்செய்து - "பிள்ளையார் மொழிந்தருள் செய்" திட என்றபடி தவத்து இறையோரும் அருள்செய்து என்ற மரபும் நயமும் காண்க. இருவரும் ஒத்த அருளிப்பாடுடையார் என்பது குறிப்பு. "ஒருமையி னின்ற தொண்டர் தம்பிரா னார்பா லொக்க, வருமருட் செய்கை தாமே வகுத்திட வல்லோர்" (2490).

அன்றை...அவ்வியல்பினிற் செல்வார் - இப் பெருமக்களது இந்த யாத்திரை இவ்வாறே ஒழுங்குபட நிகழ்ந்தது என்பதனை ஈண்டு ஆசிரியர் வற்புறுத்தி அறிவித்தவாறு. இதனை நினைவினில் ஊன்றிவைத்துப் பொருள் அமைத்துக் கொள்க என்றபடி. அவ்வாறு வைக்காவிடில் 2427 - 2437 - 2438 - 2475 முதலிய பாடல்களுக்குப் பொருள்விளங்காமை யறிக. 528

2427. பொருளுரை....சண்பை...தலைச்செல்வார் - சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும் தமது பெருமானின் திருவருளின் வழியே ஒழுகுவதனை மேற்கொண்டு செல்வாராகி; பண்பு...ஏறி - சிவப் பண்பினால் மேம்படும் குளிர்ந்த கதிர்களையுடைய முத்துச் சிவிகையிலே பணிந்து ஏறி; வண்...போய் - வண்மையும் பெருமையுமுடைய

2427. சண்பை மன்னருந் தம்பிரா னருள்வழி நிற்பது தலைச்செல்வார்
பண்பு மேம்படு பனிக்கதிர் நித்திலச் சிவிகையிற் பணிந்தேறி,
வண்பெ ரும்புக லூரினைக் கடந்துபோய், வரும்பரி சனத்தோடுந்
திண்பெ ருந்தவ ரணைந்ததெங் கென்றுபோய்த் திருவம்பர் நகர்புக்கார். 529

2428. அம்பர் மாநக ரணைந்து, மாகாளத்தி லண்ணலா ரமர்கின்ற
செம்பொன் மாமதிற் கோயிலை வலங்கொண்டு, திருமுன்பு பணிந்தேத்தி
வம்பு லாமலர் தூவி,முன் பரவியே. வண்டமி ழிசைமாலை
யும்பர் வாழநஞ் சுண்டவர் தமைப்பணிந் துருகுமன் பொடுதாழ்ந்தார். 530

திருப்புகலூரினைக் கடந்துசென்று; வரும் பரிசனத்தோடும் - தம்முடன்கூட வருகின்ற பரிசனங்களுடனே சென்று; திண்பெரும்...புக்கார் - திண்ணிய பெருமையுடைய தவமுனிவராகிய அரசுகள் எங்கு அணைந்தருளினர் என்று கேட்டுச்சென்று அவர் அணைந்தருளிய திருவம்பர் நகரினை அடைந்து புகுந்தனர்.

விளக்கவுரை–**தம்பிரா னருள்வழி நிற்பது தலைச்செல்வார்** - இறைவரது திருவருள் வழியே நிற்பதாவது - நாயனார் உமக்களித்தருளிய இச் சிவிகையில் எழுந்தருள்வீர் என்று அரசுகள் இறைவரது திருவருளின் மேலேற்றிக் கூறியபடி மேற்கொண்ட ஒழுக்கம். ஈண்டு அரசுகள் அருளிச்செய்த வழி என்னாது தம்பிரானருள்வழி என்ற தென்னை? எனின், அரசுகள் அருளியதும் தம்பிரானருளியதும் ஒன்றேயாம் என்று பிள்ளையார் கொண்ட கருத்து என்க; தம்பிரானருளையே அரசுகளும் எடுத்துக் கூறியமையும் குறிப்பு. "நீரருள் செய்ததே செய்வன்" (2426) என்றதுமிக் கருத்தேபற்றி என்க. தலைச்செல்வதாவது - மேற்கொண்டொழுகுதல்.

பண்பு மேம்படு - சிவிகை - நாயனார் அருளியதோடு அரசுகள் பணித்தருளிய பண்பும் கூடி மேம்பட்டதென்ற குறிப்பு.

பணிந்து - திருவருளினை எண்ணி வணங்கியதாம்.

வரும் பரிசனத்தோடும் - தொண்டர்கூட்டம் அரசுகளுடன் முன்னேசெல்லத் தமது பரிசனங்கள் தம்முடன் வந்தனர் என்பது குறிப்பு. வரும் - உடன்வரும்.

எங்கு என்று போய் - எங்கு என்று வினவித் தெரிந்து அவ்வழியே போய். 529

2428. பொருளுரை...அம்பர் மாநகர் அணைந்து - திருவம்பர் என்னும் பெரும்பதியினை யடைந்து; மாகாளத்தில்....வலங்கொண்டு - மாகாளத்தில் இறைவர் விரும்பி எழுந்தருளியுள்ள செம்பொன்னா லணியப்பட்ட பெருமதிலையுடைய திருக்கோயிலை வலங்கொண்டு சூழ்ந்து; திருமுன்பு பணிந்தேத்தி - இறைவரது திருமுன்பு பணிந்து துதித்து; வம்புலா மலர்தூவியே - மணமுடைய மலர்களைத் தூவியும் மற்றும் விதிப்படி அருச்சித்தும்; வண்தமிழ் இசைமாலை - பரவியே - வண்மையுடைய தமிழிசைமாலை பாடித் துதித்து; உம்பர்...தாழ்ந்தார் - தேவர்கள் வாழும்பொருட்டு

2429. தாழ்ந்து நாவினுக் கரசுடன் தம்பிரான் கோயின்முன் புறமெய்திச்
சூழ்ந்து தொண்டரோ டப்பதி யமர்பவர் சுரநதி முடிமீது
வீழ்ந்த வேணியர் தமைப்பெருங் காலங்கள் விருப்பினாற் கும்பிட்டு
வாழ்ந்தி ருந்தனர் காழியார் வாழவந் தருளிய மறைவேந்தர். **531**

நஞ்சினை அமுதுசெய்த இறைவனை வணங்கி மனமுருகிய அன்பினாலே நிலமுற விழுந்து வணங்கினார்.

விளக்கவுரை...அம்பர்-மாகாளத்தில்-கோயிலை - அம்பர் என்பது பதியின் பெயர்; மாகாளம் - கோயில்; தலவிசேடம் பார்க்க.

வம்புலாம் மலர்தூவி - வம்புலாம் - புதிதின் அலர்ந்த என்பது குறிப்பு. மலர் தூவி என்றதனால் இனம்பற்றி ஏனைப் புகை - ஒளி முதலியவையுங் கொள்க. "மாகாளம், புதிய பூவொடு சாந்தமும் புகையுங்கொண் டேத்துதல் புரிந்தோர்க்கே" (நட்ட ராகம் -5) என்ற பதிகம் காண்க.

வண்தமிழ் இசைமாலை பரவியே என்க. மாலை - மாலையினால்.

உம்பர் வாழ நஞ்சுண்டவர் - இத்தலத்தில் இறைவர் பெயர் காளகண்டேசுவரர் என்ற குறிப்பும் காண்க.

திருமுன்பு பணிந்தேத்தி - **ஏத்துதல்** - பல பெருமைகளை எடுத்துச்சொல்லிக் கீதங்களைப் பாடுதல்; நாமங்களை எடுத்துச் சொல்லி அருச்சித்தலுமாம். மலர்தூவி என்ற குறிப்பும் காண்க.

தமிழ்இசைமாலை பரவியே - **பரவுதல்** - பதிகம் பாடித் துதித்தல். பரவியே பணிந்து என்று கூட்டுக. இங்குப் பணிதல் முடிசாய்த்தும் கைகூப்பியும் வணங்குதலையும், தாழ்தல் - நிலமுற வீழ்ந்து எட்டுறுப்பு ஐந்துறுப்புக்களால் வணங்குதலையும் குறித்தன.

உருகும் அன்பு - மனமுருகி நெகிழ்தற்குக் காரணமாகிய உறைத்த அன்பு. 530

2429. **பொருளுரை**...தாழ்ந்து...புறமெய்தி - வணங்கிப்பின் திருநாவுக்கரசுகளுடனே தமது பெருமானுடைய திருக்கோயிலின் புறத்திலே சேர்ந்து; சூழ்ந்த-அமர்பவர் - தம்மைச் சூழ்ந்த திருத்தொண்டர்களுடனே அந்தத் திருப்பதியில் விரும்பி எழுந்தருள்வாராகி; காழியார்...மறைவேந்தர் - சீகாழிப்பதியவர்கள் வாழ்வடையும்படி திருவவதரித்தருளிய மறைத் தலைவராகிய பிள்ளையார்; சுரநதி...வாழ்ந்திருந்தனர் - கங்கை தமது தலைமேல் வீழ்ந்து ஒடுங்கும்படிநின்ற சடையினையுடைய பெருமானைப் பெருங்காலங்கள்தோறும் விருப்பத்தினாற் கும்பிட்டுப் பெருவாழ்வடைந்திருந்தனர்.

விளக்கவுரை...**நாவினுக்கரசுடன்** என்பதனை மேல்வரும் வினையெச்சமுற்றுக்க ளெல்லாவற்றுடனும் கூட்டுக. பயணஞ் செல்கின்ற அக்காலங்களில் அரசுகள்முன் செல்லப் பிள்ளையார் பின்பற்றிச் சென்றனரேயன்றி, வழிபடும்போதும் பதியினில் எழுந்தருளியிருக்கும்போதும் அரசுகளுடனே அமர்ந்தனர் என்பது குறிப்பு.

2430. பொருவி லாதசொற் புல்குபொன் னிறமுதற் பதிகங்க ளாற் போற்றித்,
திருவி னார்ந்தகோச் செங்கணா னந்நகர்ச் செய்தகோயிலைச் சேர்ந்து,
மருவு வாய்மைவண் டமிழ்மலர் மாலையவ் வளவனைச் சிறப்பித்துப்
பெருகு காதலிற் பணிந்துமுன் பரவினார் பேணிய வுணர்வோடும். **532**

சூழ்ந்த - தம்மைச் சூழ்ந்திருந்த. சூழ்ந்த - தம்மைப் பின்பற்றித் தம்முடனே இறைவரது திருக்கோயிலினை வலங்கொண்டு சூழ்ந்து வழிபட்ட என்றதும் குறிப்பு.

அமர்பவர் - முற்றெச்சம். அமர்ந்து இருக்கும் திருவுள்ளமுடையவராகி.

சுரநதி முடிமீது வீழ்ந்த வேணியர் - சுரநதி - கங்கை; தெய்வயாறு என்பது; வீழ்ந்த - செருக்காகிய மிகை தணிந்து வீழ்ந்து தங்கிய என்ற குறிப்பும் காண்க. "பரந்திழியும் புனற்கங்கை பனிபோ லாகச் செறுத்தானை" (தாண் - வீழி - 10). **வேணிமீது வீழ்ந்த முடியர்** எனற்பாலதனை **வேணியர்** என்று வேணியினை வைத்து முடித்தார், வீழ்ந்த நதியினைத் துளியாக்கிச் சிறுகவைத்து வேணியின்வழி உலகுக்கு அருளியதன்மை குறித்தற்கு.

பெருங்காலங்கள் - வழிபாட்டுக்குரிய திருப்பள்ளியெழுச்சி முதலிய காலங்கள், "காலமெல்லாந் துதித்திறைஞ்சி" (2062). பெறுங்காலங்கள் என்பது பாடமாயின் தரிசனம் பெறக்கூடிய காலங்கள் என்க.

வாழ்ந்திருந்தனர் - பிள்ளையார்க்கு வாழ்வாவது உலகுயிர்களுக்கெல்லாம் வாழ்வு தருதற் கேதுவாந் தன்மை; "காழியார் வாழவந்தருளிய" என்ற குறிப்பும் காண்க.

காழியார் வாழ - சிறப்புப்பற்றிக் காழியாரைக் கூறினாரேனும் வாழியாரின் காரணமாக உயிர்கள் யாவையும் என்க.

"வையகமுந் துயர்தீர்கவே", "எங்களை வாழ முன்னா ளேடுவை கையினிலிட் டார்" (புரா - 1230) முதலியவை கருதுக. *531*

2430. பொருளுரை- பொருவிலாத-போற்றி - ஒப்பில்லாத சொற்களையுடைய "புல்கு பொன்னிறம்" என்ற தொடக்கத்தையுடைய பதிகம் முதலாகிய பல பதிகங்களாலே துதித்து;திருவினார்ந்த...சேர்ந்து - சைவமெய்த் திருவினாலே நிறைவுடையவராகிய கோச்செங்கட் சோழர் அந்தத் திருஅம்பர் நகரிலே செய்த மாடக்கோயிலினைச் சேர்ந்து; மருவு...சிறப்பித்து - வாய்மைபொருந்திய வண்மையுடைய தமிழ் மாலையில் அந்தச் சோழரைச் சிறப்பாக எடுத்துக்கூறி; பெருகு-உணர்வோடும் - பெருகுகின்ற ஆசையினாலே பணிந்து பேணிக்கொண்ட வுணர்வினுடனே திருமுன்பு நின்று துதித்தருளினர்.

விளக்கவுரை-பொருவிலாத சொல் புல்கு பொன்னிறம் முதல் - "புல்கு பொன்னிறம்" - பதிக முதற்குறிப்பு - "பொன்வண்ணத் தந்தாதி" என்புழிப்போலப் "புல்கு பொன்னிறம்" என்ற தொடக்கம் அப்பதிகப் பெயராக ஆயிற்று.

அந்நகர்ச் செய்த கோயில் - அந்நகரிலே இறைவரது பழங்கோயிலுக்கு வேறாகக் கிழக்கே அமைந்த தனிக்கோயில் இது மாடக் கோயில்களுள் ஒன்று; **பெருந்திருக்கோயில்** எனப்படும்.

வாய்மை மருவு - என்க. **செய்த** - **கோயில்** - எடுப்பித்த மாடக்கோயில்; தலவிசேடம் பார்க்க.

அவ்வளவனைச் சிறப்பித்து - "அம்பர்மாநகர்க். குரிசில் செங்கண்ணவன் கோயில்" (1) என்பது முதலாக வரும் பதிகப் பாட்டுக்கள் பார்க்க. சிறப்பித்து - குரிசில், செய்ய கணிறை, செங்கணலிறை. செறிகழலிறை என வரும் பதிகக் குறிப்பு.

சேர்ந்து - **பரவினார்** - **பேணிய உணர்வோடும்** - மெய் மொழி மனம் ஒன்றிய வழிபாட்டுமுறை உணர்த்தப்பட்டது. **பேணுதல்** - இறைவரது அருட்டன்மையினை அனுபவித்தல். *532*

I. திருவம்பர்மாகாளம்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம் - 2-ம் திருமுறை**

புல்கு பொன்னிறம் புரிசடை நெடுமுடிப் போழிள மதிசூடிப்
பில்கு தேனுடை நறுமலர்க் கொன்றையும் பிணையல்செய் தவர்மேய
மல்கு தண்டுறை யரிசிலின் வடகரை வருபுனன் மாகாளம்
அல்லு நண்பக லுந்தொழு மடியவர்க் கருவினை யடையாவே. *(1)*

மாறு தன்னொடு மண்மிசை யில்லது வருபுனன் மாகாளத்
தீறு மாதியு மாகிய சோதியை யேறமர் பெருமானை
நாறு பூம்பொழிற் காழியுண் ஞானசம் பந்தன தமிழ்மாலை
கூறு வாரையுங் கற்றுவல் லாரையுங் குற்றங்கள் குறுகாவே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அம்பர்மாகாளம் - புதிய பூவொடு சாந்தமும் புகையுங் கொண்டு ஏத்தித்தொழும் அடியவர்க்கு அருவினை அடையா; அவர்க்கு நெதிய மென்னுள? போகம் மற்றென்னுள? அவர் இவ்வுலகினிலுயர்வார்; அவர்மேல் வினை கனலிடைச் செதிளாம்; அப்பதியினைக் கையினால் தொழுமவர் அவலமும் பிணியும் தம் கவலையும் களைவார்; அவரே பயன்றலைப்படுவார்; **இப்பதிகம் பதியினை வழிபட்டது.**

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) புல்கு - பொருந்திய; பில்கு - துளிக்கும்; **பிணையல்** - மாலையாகச் சேர்த்தல்; மதிசூடி அதனோடு கொன்றையும் என்க.- (2) **சரிதைகள்** - சரிப்பவை - செய்பவை; **பயன்தலைப்படுவோர்** - பயன்பெறுபவர்; தலைப்படப் பெறுதல், அடைதல். "தலைப்பட்டா ணங்கை தலைவன் றாளே" (தேவா)- (3) **குற்றங்கள் பரவியும்** - குற்றங்கள்போல எடுத்துக்கூறித் துதித்து; நிந்தைத் துதி; **கண்டவர்** - உளக்கண்ணாற்

கண்டவர்; **காதன்மை** யுடையாரேயாவர் அடியவர் பிணியிலர் - கேடிலர் - என்று கூட்டுக; **காதன்மை** - பேரன்பு;- (5) **நெதியம்** - அருநிதி; போகம் - அவற்றை அனுபவிக்கும் இன்பம்; **நலமாய கதியம்** - அந்த இன்பானுபவத்தின் விளைவு; கதியம்-அம்-சாரியை. வானவர் என்னுளர்? - இவ்வாறன்றி மேலைவானவர் வேறென்ன சிறப்பினையுடையார்? வினாக்கள் இல - இலர் என்று எதிர்மறை குறித்தன; ஏத்ததல் புரிந்தோர்க்கே - கருதிய பொருள் கூடும்; அவ்வாறு கூடின் நெதியம் - போகம் - கதி - மற்று என் உள? தேவரும் வேறெவ்வகையின் சிறந்தனர்? என்றுரைத்துக்கொள்க; புதிய..ஏத்துதல் புரிதல் - வழிபாட்டுமுறை;-(6) உள்நிலா(வும்) நினைப்பு - உள்ளே நிறைந்த நினைவு; யாவர் அவர் - உயர்வார் என்க; மேல்வரும் பாட்டிலும் இவ்வாறே உரைத்துக்கொள்க;- (7) தூசு - ஆடை; தூசு-தோல்; கண்ணி - கொன்றை; பூச்சு - வெண்பொடி என்பது. அன்றியும் புகழ்புரிந்தவர் - இவை புகழ்ச் செயல்கள்; இவையேயின்றி எண்ணில்லாத மற்றும் புகழத் தக்கவற்றைச் செய்பவர்; பூசு - பூச்சு; பூசும் பொருள்; இடைக்குறை. எதுகைநோக்கிவந்த செய்யுள் விகாரம்; பூசுவது - பூசுதலாகிய செயல்; மாசு - நிழல்; ஞாயிற்றின் கதிர்களைப் புகவொட்டாது மறைத்தலின் நிழல் மாசு எனப்பட்டது;-(8) மவ்வம் - அழகு; கவ்வை - ஒலி - துதி. கனலிடைச் **செதிள்** - கனலிடைப்பட்ட செதில்போல அழியும். செதிள் மாய்வதுபோல என்பதனைச் செதிள் என்றதுபசாரம்; செதிள் மரத்தூள்;- (9) களைவார் - உணர்வோர் என்ற எழுவாய் தொக்குநின்றது; உய்யும் காரணம்-உய்தற்குரிய காரணம்;- (10) பிண்டிபாலர் - சமணருள் ஒரு சாரார்; மண்டைகொள் தேரர் - பிச்சைப் பாத்திரத்திற் பலியேற்றுண்ணும் புத்தர். பீலி கொண்டுழல்வார் - கண்நூலர் - சமணருள் பலவகையினர்; கடுந் தொழில் - சுடுபாறை கிடத்தல் முதலியவையும், கொலைசூழ்தலும், பிறவும்; கழற - அலர்தூற்ற;- (11) மாறு - ஒப்பதும் மிக்கதும்.

II. திருவம்பர் மாகாளம்

பண் - குறிஞ்சி-1-ம் திருமுறை

திருச்சிற்றம்பலம்

அடையார் புரமூன்று மனலாய் விழவெய்து
மடையார் புனலம்பர் மாகா ளம்மேய
விடையார் கொடியெந்தை வெள்ளைப் பிறைசூடுஞ்
சடையான் கழலேத்தச் சாரா வினைதானே. (1)

வெருநீர் கொளவோங்கு வேணு புரந்தன்னுட்
டிருமா மறைஞான சம்பந் தன்சேணார்
பெருமான் மலியம்பர் மாகா ளம்பேணி
யுருகா வுரைசெய்வா ருயர்வா னடைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இப்பதிகம் பதியின் இறைவரது வழிபாட்டின் பயனுரைக்கு முகத்தால் இறைவரை வழிபட்டது. அம்பர்மாகாளத்தி னிறைவன்கழலேத்த வினை சாரா; இன்பம் அடையும்; உரையாதவர் தம்மேல் ஊனம் ஒழியா; என உடன்பாட்டாலும் எதிர்மறையாலும் அறிவுறுத்தியபடி

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) **அடையார்** - பகைவர்;- (3) **நரையார்** - நரைத்ததுபோன்ற வெள்ளைநிறமுடைய; காலங்கடந்த. மூப்புடைய என்றதும் குறிப்பு;- (5) **ஆகம்** - தமது திருமேனியில்; **துணியார்** - **துணித்தல்** - வெட்டுதல் - துண்டித்தல். பிராணிகளை (மானை அல்லது புலியை) வெட்டி உரித்த தோலை உடையாகவுடையவன்;- (8) **நிலையா** - நிலை ஆக; நிலைபெற்ற பொருளாக; சலன மில்லதாக; (11) **வெருநீர்** - யாவரும் அச்சுறும் (கண்டு வெருவும்) ஊழிவெள்ள நீர்; **கொள** - உலகத்தை உட்படுத்த மேல் எழ; **ஓங்குதல்** - மேல் மிதத்தல்.

111. திருஅம்பர் மாகாளம்

திருச்சிற்றம்பலம் **பண் - சாதாரி - 3-ம் திருமுறை**

படியுளார் விடையினர் பாய்புலித் தோலினர் பாவநாசர்
பொடிகொண்மா மேனியர் பூதமார் படையினர் பூணநூலர்
கடிகொண்மா மலரிடு மடியினர் பிடிநடை மங்கையோடும்
அடிகளா ரருள்புரிந் திருப்பிட மம்பர்மா காளந்தானே. (1)

செம்பொன்மா மணிகொழித் தெழுதிரை வருபுன லரிசில்சூழ்ந்த
வம்பர்மா காளமே கோயிலா வணங்கினோ டிருந்தகோனைக்
கம்பினார் நெடுமதிற் காழியுண் ஞானசம் பந்தன்சொன்ன
நம்பிநாண் மொழிபவர்க் கில்லையாம் வினைநலம் பெறுவர்தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அம்பர் மாகாளமே இறைவர் அணங்கினோடும் அமரும் இடம்; வழிபடுவீர் அதனை அடைமின்; இப்பதிகம் பதியின்புறத்திருந்து பதியினைத் துதித்த குறிப்புடையது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **படியுளார்** - உலகில் மறைந்துநிற்பவர்; **பொடி** - திருநீறு; **மலரிடும்** - அன்பர்கள் (வழிபட்டு) இடும் என்று எழுவாய் தொக்குநின்றது;- (2) **வையம்** - உலகம்;- (3) **படுதலைப் பலிகொளும் இரவினர்** - இரவு - இரத்தல்; இரத்தலையுடையவர்;- (4) **எரிபுரி** - எரியை ஏந்தி வளர்க்கும்;- (5) **அறம் அருள்புரிந்தவர்** என்க.-(6) **பழக** - நியதமாக; **கழகனார்** - கூட்டத்துள் உறைபவர்; **கழகம்** - கூட்டம் - அன்பர் கூட்டத்தினுள் இருப்பவர்; "ஆர்வலர் ஏத்து மேவரு நிலையினும்" (முருகு);-(9) **அராஅணி கழல்** - அரவினைப் பூணாகவுடைய. **அணியராய்** - **அரியராய்** - உடன்பாட்டானும் எதிர் மறையானும் எடுத்துரைத்தவாறு;- (10) **எல்லாம் ஆக்கிய** - எல்லா நலங்களையும் கொடுத்த;- (11) **கம் பின் ஆர்**-மேகமும் கீழாக உயர்ந்த; **கம்**-மேகம்; **சொன்ன**-சொன்னவற்றை; வினையாலணையும் பலவறி சொல்; இரண்டனுருபு தொக்கது; **நாள்** - நாளுநாளும்; வினை இல்லையாம்; நலம்பெறுவர்.

தலவிசேடம்:- **திருஅம்பர் மாகாளம்** - காவிரித் தென்கரை 55-வது பதி; அம்பன் அம்பாசுரன் என்ற இரண்டு அரக்கரை வதைத்த பழிநீங்கக் காளி பூசித்த பதியாதலின்

இப்பெயர் பெற்றது; கோயில் மாகாளமெனவும் வழங்கும்; காளிக் கோட்டம் தெற்குச் சுற்றில் தனியாக உள்ளது; மாகாள இருடியரும் பூசித்துப் பதிகத்துட் பாராட்டப்பட்டது. வைகாசி மாதத்து ஆயில்ய நாளில் சோமாசிமாற நாயனார் யாகவிழா மிக்க சிறப்புடன் நடைபெறும் தலம்; சுவாமி - காளகண்டேசுவரர்; அம்மை - பட்சநாயகி; தீர்த்தம் - மாகாள தீர்த்தம்; பதிகம் 3. இத்தலம் மாகாளம் என்று வழங்கப்படும். இது பூந்தோட்டம் (பேரளம் - திருவாரூர்) நிலயத்தினின்றும் கிழக்கே மட்சாலை வழி 1 1/2 நாழிகையளவில் உள்ளது.

திருஅம்பர்ப் பெருந்திருக்கோயில்

திருச்சிற்றம்பலம் பண் - காந்தார பஞ்சமம் 3-ம் திருமுறை

எரிதர வனல்கையி லேந்தி யெல்லியில்
நரிதிரி கானிடை நட்ட மாடுவர்
அரிசிலம் பொருபுன லம்பர் மாநகர்க்
குரிசில்செங் கண்ணவன் கோயில் சேர்வரே. (1)

அழகரை யடிகளை யம்பர் மேவிய
நிழறிகழ் சடைமுடி நீல கண்டரை
யுமிழ்திரை யுலகினி லோது வீர்கொண்மின்
தமிழ்கெழு விரகினன் **றமிழ்செய்** மாலையே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- கோச்செங்கட் சோழர் செய்த அம்பர்ப் பெருந்திருக்கோயிலில் இறைவர் பிரிவிலாது சேர்ந்திருப்பர்; அடியர் வந்து பணிமின். குறிப்பு:- இப்பதிகத்துள் முதல் ஏழு திருப்பாட்டுக்களிலும் இறைவரது ஆடல் கூறப்படுதல் கவனிக்கத்தக்கது. (திரு. வ. சு. செ. குறிப்பு).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அம்பர் - செங்கண்ணவன் கோயில்** - அம்பர் என்னும் பெருநகரில் கோச்செங்கட் சோழர் எடுப்பித்த மாடக்கோயில்; 2-3-5-9 பாட்டுக்கள் பார்க்க.-(2) **மைய** - மைஎழுதிய; "மைப்படிந்த கண்ணாளும்" (தேவா); **இருள்** - சங்காரகாலம் - ஊழி - குறித்தது; **ஐய** - அழகுடைய; **செய்ய கண் இறை** - செங்கட் சோழர்;-(5) **சங்கக்குழை - அணியினர்** என்க. **கனல்தர** - சுடர்விட்டு எரிய;- (8) **புரியவர்** - இடைவிடாது சொல்பவர் - நினைப்பவர்;- (10) **உழிதரல்** - திரிதல்; **நிழல் திகழ்** - ஒளியுடைய.

தலவிசேடம்:- திருஅம்பர்ப் பெருந்திருக்கோயில் - காவிரித் தென்கரை 54-வது தலம். அம்பரில் உள்ள மாடக்கோயில் என்பது பெயர்ப் பொருள்; பெருங்கோயில் என்பது மாடக்கோயில்; இதுகோச்செங்கட்சோழ நாயனார் எடுப்பித்தது என்பது பதிகத்துட் போற்றப்பட்டது. சுவாமி - அம்மையார் திருவுருவங்கள் கருப்பக்கிரகத்தில் மூலலிங்கத்

2431. இன்ன வாறுசொன் மாலைக ளாற்றுதித் திறைஞ்சியங் கமர்நாளிற்
கன்னி மாமதிற் றிருக்கட வூர்தொழக் காதல்செய் தருளிப்போய்
மன்னு கோயில்கள் பிறபதி வணங்கியே வாக்கின்மன் னவரோடும்
அந்நெ டும்பதி யணைவுறக் கலயரோ டடியவ ரெதிர்கொண்டார். 533

திருவுருவின்பின்னே அமைந்துள்ளன சுவாமி - பிரமபுரிநாதர் : அம்மை - பூங்குழனாயகி; தீர்த்தம் - பிரமதீர்த்தம்; மரம் - புன்னை; பதிகம் 1.

இது திருஅம்பர் மாகாளத்துக்குக் கிழக்கே அரை நாழிகையளவில் உள்ளது.

2431. பொருளுரை...இன்னவாறு...அமர்நாளில் - இவ்வாறு திருப்பதிகங்களினாலே துதித்துப் பணிந்து அங்கு எழுந்தருளியிருக்கும் நாட்களில்; கன்னிமாமதில்...வணங்கியே - பகைவர்களால் கட்டழிக்கப்படாத பெருமதில் சூழ்ந்த திருக்கடவூரினைத் தொழுவதற்கு மிகவும் இச்சைகொண்டருளிச்சென்று வழியில் பிற பதிகளில் நிலை பெற்ற திருக்கோயில்களிலும் இறைவரை வணங்கிக்கொண்டே; வாக்கின் மன்னவரோடு... அணைவுற - திருநாவுக்கரசுகளுடனே அந்தப் பெரும்பதியாகிய திருக்கடவூரினை அணையும்போது; கலயரோடு... எதிர்கொண்டார் - குங்குலியக்கலய நாயனாருடன் அடியவர்கள் வந்து எதிர்கொண்டனர்.

விளக்கவுரை... இன்னவாறு - மேற்பாட்டிற் கூறியபடி திருவம்பர் மாகாளத்திலும், திருப்பெருங்கோயிலிலும் பதிகங்களைப் பாடி.

அங்கு - திருவம்பர் மாகாளத்தில்.

கன்னிமாமதில் - பகைவராற் கட்டழியாத நிலைமைக்கு வழங்கும் மரபு வழக்கு. காலனாலும் கடக்கலாகாத காவலுடைமையும் குறிப்பு.

போய் - திருவம்பரினை நீங்கிச் சென்று.

பிறபதி மன்னு கோயில்கள் என்க. இவை பேரளம், திருத்திலதைப் பதிமுத்தம், வழுவூர் வீரட்டம், திருவிடைக்கழி முதலியனவாகக் கருதப்படும்.

அந்நெடும்பதி - "காதல்செய்தருளிய" அந்தத் திருக்கடவூர்.

கலயர் - குங்குலியக்கலய நாயனார். 533

2432. பொருளுரை... மற்று அவ்வண்பதி...வலங்கொண்டு - முன்கூறிய அந்த வளம்பொருந்திய பதியினை அணைந்து இளமைபொருந்திய விடையினையுடைய இறைவரது வீரட்டத் திருக்கோயிலின் சுற்றுமாளிகையினை வலஞ்சூழ்ந்து; காலனை...வணங்கி - கூற்றுவனை உதைத்து உருட்டிய செம்பொற் சிலம்பினை யணிந்த திருவடித்தாமரைகளை வணங்கி; முன்போற்றி...இசைபாடி - துதித்து உய்ந்து திருமுன்பு

2432. மற்ற வண்பதி யணைந்து,வீ ரட்டத்து மழவிடை யார்கோயில்
சுற்று மாளிகை வலங்கொண்டு, காலனை யுதைத்துருட் டிச்செய்ய
பொற்சி லம்பணி தாமரை வணங்கி, முன் போற்றி, யுய்ந், தெதிர்நின்று
பற்ற றுப்பவர் "சடையுடை யா" னெனும் பதிகவின் னிசைபாடி, **534**

நின்று, பற்றுக்களை அறுப்பவராகிச், "சடையுடையான்" என்று தொடங்கும் இன்னிசையினையுடைய திருப்பதிகம் பாடி.

விளக்கவுரை...மற்று - அ-வண்-பதி - மற்று *- அசைநிலை; அகரம் முன்னறி சுட்டு.*

மழவிடையார் வீரட்டத்துக் கோயில் *என்று கூட்டுக.*

சுற்றுமாளிகை *- பல சுற்றுக்களையுடைய திருமாளிகை.*

காலனை...தாமரை *- காலசங்காரமாகிய அத்தலத்துக்குரிய வரலாற்றுச் சிறப்புக் கூறியது; உருட்டிய - உருளச்செய்த; இங்கு உயிர் போக்கிய என்ற பொருளில் வந்தது.*

போற்றி உய்ந்து *- போற்றுதலினால் உய்தியடைந்து; உய்தியாவது உலகின் பொருட்டுப் பிள்ளையார் மேற்கொள்ளும் நலம்.*

"சடையுடையான்" எனும் *- பதிக முதற் குறிப்பு.*

இன்னிசைப் பதிகம் *என்று கூட்டுக.*

பற்றறுப்பவர் *- "அணைவுற வந்தெழு மறிவு தொடங்கின அடியார்பால்" (1908) பற்றுக்களை எல்லாம் போக்குபவராகி; முற்றெச்சம். சிரபுரத்தவர் பற்றறுப்பவராகிப் பாடிப் (2432) - பரவி - ஏத்தி - போந்து - மேவி - அமர்ந்து - பணிந்து இருந்தனர் என்று முடித்துக்கொள்க.*

தொலைத்துருட்டிய-*என்பதும் பாடம்.* *534*

2433. ***பொருளுரை***...*பரவி...போந்து - பரவித் துதித்து அங்குநின்றும் அரிதாகப் புறம்போந்து; பார்பரவு...மேவி - உலகம் போற்றும் சிறப்புடைய திருநாவுக்கரசுகளுடனே, பொருந்திய நண்புடைய குங்குலியக்கலய நாயனாரது திருமனையில் எழுந்தருளி; கரையில்...அமர்ந்து - எல்லையில்லாத காதலினால் அவர் அமைத்தளித்த விருந்தினை இனிதாக விரும்பி; அங்கு...சிறப்பெய்தி - சீகாழிப்பிள்ளையார் அங்குத் திருக்கடவூர்த் திருமயானத்தினையும் பணிந்து சிறப்பெய்தி எழுந்தருளியிருந்தனர்.*

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை... *பரவி - ஏத்தி - பரவுதல் - பதிகத்தாற் பரவுதலும்; ஏத்துதல் - கீதம் முதலியவற்றாற் றுதித்தலும் ஆம். பரவுதலினால் ஏத்தி என்றுரைத்தலுமாம்.*

2433. **பரவி யேத்தியங் கரிகின்றிற் போந்துபார் பாவுசீ ராரோடு**
விரவு நண்புடைக் குங்குலி யப்பெருங் கலயர்தம் மனைமேவிக்
கரையில் காதன்மற் றவரளித் தருளிய விருந்தினி தமர்ந், தங்குச்
சிரபு ரத்தவர் திருமயா னமும்பணிந், திருந்தனர் சிறப்பெய்தி. **535**

பார் - பரவு சீர் - அமையலார் பாவுதல் பல்லவன் வந்து மழவிடையோன் றாளடைந்த வரலாற்றாலும். அமைந்தோர் பாவுதல் அப்பூதியார் முதலியோரது வரலாறுகளாலும் அறியப்படும்.

விரவு-சிறப்பெய்தி - *863-1512 பாட்டுக்கள் பார்க்க: காதல் - காதலினால்;* **அருளிய** - *அன்புடன் அளித்த என்ற பொருளில் வந்தது: "வனமுறை வேட னருளிய பூசை" (திருப்புகழ்). விரவு - தம்முடன் பொருந்திய.*

விருந்து - நாளும் வெவ்வேறு புதிது புதிதாக அமைத்த திருவமுது வகை.

அமர்ந்து - விரும்பி.

அங்குச் சிறப்பெய்தி இருந்தனர் - என்று கூட்டுக.

திருமயானம் - திருக்கடவூர்த் திருமயானமாகிய தனிப்பதி. தலவிசேடம் பார்க்க. *535*

திருக்கடவூர்த் திருவீரட்டம்

திருச்சிற்றம்பலம் — **பண் - காந்தார பஞ்சமம் - 3-ம் திருமுறை**

சடையுடை யானுநெய் யாடலா னுஞ்சரி கோவண
வுடையுடை யானுமை யார்த்தவொண் கண்ணுமை கேள்வனுங்
கடையுடை நன்னெடு மாடமோங் குங்கட வூர்தனுள்
விடையுடை யண்ணலும் வீரட்டா னத்தர னல்லனே. *(1)*

வெந்தவெண் ணீறணி வீரட்டா னத்துறை வேந்தனை
யந்தணர் தங்கட வூரு ளானையணி காழியான்
சந்தமெல் லாமடி சாத்தவல் லமறை ஞானசம்
பந்தன செந்தமிழ் பாடியா டக்கெடும் பாவமே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சடையுடையான் - கோவணவுடையுடையான் என்றிவ்வாறு பலவாற்றானும் அறியப்படுபவன் திருக்கடவூர்தனுள் வீரட்டானத்தரன் அல்லனே? அவனேயாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) நெய்யாடலான் - நெய் - ஆனைந்தனுள் ஒன்று; நெய்யாடல் என்ற விழாவுக்குரியவன் என்றலுமாம்; அல்லனே - அல்லனோ? ஏகாரம்

*வினா - அவனேயாம் என்ற உடன்பாடு குறித்து நின்றது; **நல்லனே** என்று பிரித்தலுமாம். (2) **எரிதரு**-தீயின் நிறமுடைய; **புரிதரும்** - மாலைபோன்றமைந்த - அன்பர்களின் நினைவுக்குரிய என்றலுமாம்;- (3) **பசுவேறி** - **பசு** - இடபவகை என்ற பொருளில் வந்தது; **பசுக்கள்** - உயிர்கள் என்றலுமாம்; இப்பொருளில் ஏறி என்பது உயிர்க்குயிராய் விரவுதல்-உண்ணின்றியக்குதல்-குறித்தது; **ஓதி** - ஓதுபவன்; பெயர்;-(4) **குஞ்சித்து** - தூக்கி - (5) **சுடர்மணி** - ஒளியும் அழகுமுடைய;-**கடம் அணி மா** - மதமுடைய யானை; **கடம்** - மதம்; **அணி** - சிறப்பாகவுடைய; **விடம்அணி** - விடத்தை அணிந்து;- (6) **வானின் ஒளி** - வானில் விளங்கும் சோமன் - சூரியன் - அக்கினி என்ற முச்சுடர்களின் ஒளி; **திங்கள்** - சடையிற் சூடியது; **பூசி** - பெயர்; பூசுபவன்;- (7) **சிவமூர்த்தி** - மங்கள வடிவினன்; **மூர்த்தி** - வடிவு; **ஐந்து** - பூதங்கள் ;- (8) **மூர்க்கு** - மூர்க்கம் என்பதன் இறுதி அம் கெட்டது; வாதம் - வாது; பெற்றம் - பெற்று; என்பனபோல;-(9) **வரை-தாங்கினான்** - திருமால்; **வரை** - மலை; "குன்றமேந்திக் குளிர்மழை காத்தவன்" (திருவாய்மொழி - நம் 3 - 3 - 8); **வையங் காக்கின்றான்** - கூற்றுவனால் வரும் பயநீக்கிக் காக்கின்றவன்; **வீரம்** - என்றதும் இக்குறிப்பு;-(11) **சந்தமெல்லாம்** - எல்லாப் பண்களும்; பா விகற்பமெல்லாம் என்றலுமாம். "மூலவிலக்கியமாக" அமைத்தமை குறிப்பு.*

தலவிசேடம் - திருக்கடவூர் - வீரட்டம்:- **III** *பக்கம் 565 பார்க்க.*

திருக்கடவூர்த் திருமயானம்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம் - 2-ம் திருமுறை**

*வரிய மறையார் பிறையார் மலையோர் சிலையா வணக்கி
யெரிய மதில்க ளெய்தா ரெறியு முசல முடையார்
கரிய மிடறு முடையார் கடவூர் மயான மமர்ந்தார்
பெரிய விடைமேல் வருவா ரவரெம் பெருமா னடிகளே.* (1)

*மரவம் பொழில்சூழ் கடவூர் மன்னு மயான மமர்ந்த
வரவ மசைத்த பெருமா னகல மறிய லாகப்
பரவு முறையே பயிலும் பந்தன் செஞ்சொன் மாலை
இரவும் பகலும் பரவி நினைவார் வினைக ளிலரே.* (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:-*மறையார் - பிறையார் என்பனவாதியாகப் பலவாறும் பரவப்படும் பண்புடையவர் திருக்கடவூர்த் திருமயானத்தில் எழுந்தருளிய எம்பெருமா னடிகளேயாவர்.*

பதிகப் பாட்டுக் குறிப்பு:-*(1) **வரியமறை** - இசையினையுடைய; **சிலையா** - வில்லாக; **வணக்கி** - வளைத்து; **எரிய** - **எய்தார்** - என்க; **எறியும்** - வீசுகின்ற; **முசலம்** - தண்டு; **பெருமானடிகள்** - இறைவர்;-(2) **செய்யா** - செய்து; அடியார்க்குச் செல்வங் கொடுத்து; **செல்வம்** - சிவச்செல்வம்:-(3) **ஈடல்** - ஒப்பில்லாத;-(4) **மலையார்** - மயக்கமில்லாத உறுதிப்பாடுடையோர்; **கறை** - நிழல்:-(8) **பெற்று** - இடபம்;-(10) **பேய்பேயென்ன** - கணங்களைக் கண்டு அஞ்சிப் பேயென்றலறி ஒட; கண்டவர் வியப்புற் றஞ்சிக் கையகன்*

2434. சிறப்பு டைத்திருப் பதியத னிடைச்சில நாளமர்ந் தருளோடும்
விறற்பெ ருங்கரி யுரித்தவர் கோயில்கள் விருப்பொடுந் தொழச்செல்வார்
மறைப்பெ ருந்திருக் கலயரு முடன்பட வணங்கிய மகிழ்வோடும்
அறப்பெ ரும்பய னனையவத் தொண்டரோ டணைந்தனர் திருவாக்கூர். 536

றோடு வார்கள். கொண்ட தோர் வேடத் தன்மை யுள்ளவர் கூறக் கேட்டே" (1770); -(11) **அகலம் அறியல் ஆக** - தன்மைகள் அறியலுற்று: அறியும்படியாக.

குறிப்பு - இப்பதிகம் இறைவரது திருவிழாவில் வழிபாட்டுக் குறிப்புடையது.

தலவிசேடம்:- திருக்கடவூர் மயானம் - III பக்கம் 568 பார்க்க.

2434. பொருளுரை- சிறப்புடை—அமர்ந்து - சிறப்புடைய அத்திருப்பதியின் கண்ணே சில நாள்கள் விரும்பித் தங்கியருளி: அருளோடும்-தொழச்செல்வார் - வலிய பெரிய யானையை யுரித்த இறைவர் எழுந்தருளிய பிறகோயில்களையும் தொழுவதற்கு அருள்பெற்றுச் செல்வாராகி; மறைப்பெரும்-உடன்பட - வேதங்கள் பயின்ற பெரிய சைவ மெய்த்திருவுடைய குங்குலியக்கலய நாயனாரும் உடன்பாடு செய்ய; வணங்கிய... திருவாக்கூர் - வணங்கும்பொருட்டுக்கொண்ட பெருமகிழ்ச்சியுடனே அறத்தின் பெரும்பயனேபோன்ற அத்தொண்டருடனே திருவாக்கூரினைச் சென்று அணைந்தருளினர். (பிள்ளையார்).

விளக்கவுரை- திருப்பதி அதனிடை - முன்கூறிய அந்தத் திருக்கடவூரினில்; முன்னறி சுட்டு.

அருளோடும் - செல்வார் - என்று கூட்டுக. அருள்விடைபெற்றுச் செல்வாராகி; செல்வார் - முற்றெச்சம். அருளோடும் - உரித்தவர் என்று கூட்டி, இறைவருக்காக்கி, அதற்கு ஏற்றவாறுரைத்தலுமாம்.

அமர்ந்து இருந்தவர் விருப்பொடும் தொழச்செல்வார் - என்றது இங்குத் தங்கி வழிபடுதலிற்கொண்ட விருப்பம்போலவே அங்குச் சென்று வணங்குதலினும் விருப்பம் கொண்டனர் என்றதாம். செல்வார் - அணைந்தனர் என்க.

கலயரும் உடன்பட-இறைவரது அருள்பெற்றமைபோலக் கலயருடைய உடன் பாடும் பெற்று; மறை - பெரும் - திரு - அடைமொழிகள் கலயரது சிறப்புக்களை எடுத்துக்காட்டும்முகத்தால் அவரது சரித வரலாற்றுக் குறிப்புக்களையும் குறிப்பா லுணர்த்திநின்றன.

வணங்கிய - வணங்கும்பொருட்டு; செய்யிய என்னும் வாய்பாட்டுவினையெச்சம்; "வணங்கிய மகிழ்வொடும் புகுந்தார்" (250); இவ்வாறன்றி, வணங்கிய மகிழ்வோடும் - அணைந்தனர் - வணக்கம் இனி எதிர்காலத்து நிகழவுள்ளதாயினும் மனம் முன் சென்று வணங்கியமையால் வணக்கம் நிறைவேறியதாகவே கொண்டு அவ்வகை மகிழ்ச்சியுடனே என்று உரைத்தலுமமையும்; அணைந்தனர் திருவாக்கூர் - என வினைமுற்றை முன்வைத்த குறிப்பும் காண்க.

2435. தக்க வந்தணர் மேவுமப் பதியினிற் றான்றோன்றி மாடத்துச்
செக்கர் வார்சடை யண்ணலைப் பணிந்திசைச் செந்தமிழ்த் தொடைபாடி,
மிக்க கோயில்கள் பிறவுடன் றொழுதுபோய், மீயச்சூர் பணிந்தேத்திப்
பக்கம் பாரிடம் பரவநின் றாடுவார் பாம்புர நகர்சேர்ந்தார். 537

அறப்பெரும்பயன் அனைய அத்தொண்டரோடு - ஆளுடைய அரசுகளுடனே - அகரம் முன்னறி சுட்டு; அறம் - சைவ நல்லறம்; பலநாள் முயன்று செய்த பதி புண்ணியங்களின் பயனாற் பெறத்தக்க அந்த என்று அவரது சிறப்புணர்த்தியவாறு; இச்சிறப்புக்கள் ஏனைத் தொண்டர்களும் உடன்கூடி நின்ற திருக்கூட்டத்தினை உணர்த்திற்று என்றலுமமையும். 536

2435. பொருளுரை... தக்க...தொடைபாடி - தக்க அந்தணர்கள் வாழ்கின்ற அத்திருப்பதியினில் தான்றோன்றி மாடக்கோயிலின்கண் சிவந்த நீண்ட சடையுடைய இறைவரைப் பணிந்து இசையினையுடைய செந்தமிழ்ப் பதிகப்பாமாலையினைப் பாடியருளி; *மிக்க...போய்* - பெருமையுடைய பிற கோயில்களையும் உடனே தொழுதுசென்று; *மீயச்சூர் - பணிந்தேத்தி* - திருமீயச்சூரினையும் பணிந்து துதித்து; *பக்கம்-சேர்ந்தார்* - பூத கணங்கள் பக்கங்களிற் சூழ்ந்து துதிக்கநின்று ஆடுகின்ற இறைவரது திருப்பாம்புர நகரினைச் சேர்ந்தனர்.

விளக்கவுரை-தக்க அந்தணர் மேவும் அப்பதி - "இன்மையாற் சென்றிரந் தார்க் கில்லையென்னா தீந்துவக்குந் தன்மையார்" (9) என்று பதிகத்துள் பிள்ளையார் ஈண்டுப் பாராட்டியதும், இத்தலத்துள் அவதரித்துப் பேறுபெற்ற "சீர்கொண்ட புகழ் வள்ளல் சிறப்புலி" நாயனார் வரலாறும் குறிப்பு. "தக்கிருந்தார் ஆக்கூர்" (பதிகம்).

தான்றோன்றி மாடம் - தான்றோன்றி - சிவபெருமான். இங்கு இறைவரது பெயர் **சுயம்புநாதர்** எனப்பெறும்; மாடம் - மாடக்கோயில்; தான்றோன்றியினது மாடம் என விரியும்; இது மாடக்கோயில்; "தான்றோன்றி மாடமே" என்பது பதிக ஆட்சி.

இசைச் செந்தமிழ்த் தொடை - இனிமையுடைய சீகாமரப் பண்ணிலமைந்து, தமிழ்வளம் நிறைந்ததாய்த் தொடுக்கப்பட்ட பதிகமாலை; பதிகப் பாட்டுக்குறிப்புப் பார்க்க.

மிக்க கோயில்கள் பிற - திருச்செம்பொன்பள்ளி, திருப்பறியலூர் முதலாயின என்று கருதப்படும்.

மீயச்சூர் - இதனுடன் திருமீயச்சூர் இளங்கோயிலும் உடன் எண்ணப்படும் - தலவிசேடம் பார்க்க.

பக்கம் - பக்கங்களிற் சூழ்ந்துகொண்டு; "மொய்த்தபூத மாடன் முழவ மதிரக் கண்டேன்" (தாண் - வாய்மூர் - 1). 537

திருஆக்கூர்த் தான்றோன்றி மாடம்

திருச்சிற்றம்பலம் **பண் - சீகாமரம்-2-ம் திருமுறை**

அக்கிருந்த வாரமு மாடரவு மாமையுந்
தொக்கிருந்த மார்பினான் றோலுடையான் வெண்ணீற்றான்
புக்கிருந்த தொல்கோயில் பொய்யிலா மெய்ந்நெறிக்கே
தக்கிருந்தா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. (9)

நன்மையரா நாரணனு நான்முகனுங் காண்பரிய
தொன்மையான் றோற்றங்கே டில்லாதான் றொல்கோயில்
இன்மையாற் சென்றிரந்தார்க் கில்லையென்னா தீந்துவக்குந்
தன்மையா ராக்கூரிற் றான்றோன்றி மாடமே. (9)

ஆட லமர்ந்தானை யாக்கூரிற் றான்றோன்றி
மாட மமர்ந்தானை மாடஞ்சேர் தண்காழி
நாடற் கரியசீர் ஞானசம் பந்தன்சொல்
பாட லிவைவல்லார்க் கில்லையாம் பாவமே. (11)

பதிகக் குறிப்பு:-தக்க வந்தணர்கள் மேவும் ஆக்கூரில் தான்றோன்றி மாடம் இறைவர் புக்கிருந்த தொல்கோயில்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) **அக்கு** - எலும்பு; உருத்திராக்கமுமாம்; **ஆமை** - ஆமை முதுகோடு; **புக்கிருந்த** - கோச்செங்கட்சோழர் அன்பினாலமைக்க அத்திருக்கோயிலினுள் இறைவர் புகுந்து இருந்தனர்; **தொல்கோயில்**-பழங்கோயில். கோயில் அவ்வாறு புதிதாய் அமைக்கப்படினும் இறைவர் தான்றோன்றி யாய்த் (முன்னே தோன்றி முளைத்தவராய்) தொன்மையாய் எழுந்தருளியவர் என்பது; **பொய்யிலா** - பொய்யினை - ஆணவமலத்தை - வலி இல்லாததாகச் செய்யும்; **தக்கிருந்தார்** - தகுதியுடன் வீற்றிருப்பவர்; (2) **ஆரல் கூர்வாய் நிறையக்கொண்டு** என்க. **ஆரல்** - ஒருவகை மீன்; **கோட்டகம்** - கரையினிடம்; கோடு-கரை; **தாராமல்கு ஆக்கூர்**-தாராக்கள் தஞ்செயல் பொருந்தும்;-(3) **வேளாளர்-தாளாளர்** - இப்பதியின் வேளாளரின் சிறப்புக் குறித்துப் பாராட்டியது; **தாளாண்மை** - இடைவிடாமுயற்சி; வள்ளன்மை மிக்கராயினும் பெருமுயற்சியுடையார்; தலச்சுவாமி பெயர்க் குறிப்பும் காண்க.(4) **கொங்கு** - மணம்; பொன் என்று கொண்டு பொன்னிறமுடைய என்றலுமாம்; **பொங்கினான்** - சினந்தான்; **பொங்கு ஒளி** - பொங்குதல் - ஆக்கம் செய்தல்;-(5) **வெண்தலையும் என்பும் பலகலன்களாக ஆக்கினான்** என்க; **கலன்கள்** - அணிகள். **ஆதரித்து** என்பது ஆதரித்துக் கலன்களாக்கினான் என்றும், ஆதரித்துப் பாகம் பெண் ஆக்கினான் என்றும் இருவழியும் கூட்டியுரைக்க நின்றது; **ஆக்கினான்** என்பது பதியின் பெயரைப்பற்றிப் பொருள்கொள்ளவைத்த சொற்சிலேடை; (6) **பண்ணொளி** - ஒளி - ஞானவொளி;-(7) **வீங்கினார்** - வலிமையால் மிக்கார்; **வெந்து அவிய வரையால் வில் வாங்கினார்** - என்க. **வாங்குதல்** - வளைத்தல்; **தாங்கினார்** - சுத்த மாயையினைத் தமது ஒரு சத்தியாகக்கொண்டு தோற்றுவித்தார்; (8) **பூவோடு நீர்சுமக்கும்**

- சுமக்கும் - அளவு மிகுதியும், சுமைபோலத் தலையின் மேலும், தோளின்மேலும் தாங்கும் நிலையும் குறித்தது; **அடியார்** - அடியார்க்கருளுமிடம்;- (9) **தோற்றம் கேடு** - தோற்றமும் கேடும்; உம்மைத்தொகை; **இன்மையால்-தன்மையார்** - இப்பதியில்வாழும் அந்தணர்களின் சிறப்பு. "தக்க அந்தணர் மேவும்" என்று ஈண்டும், "இன்மையா லிரந்து சென்றார்க்க் கில்லையென்னாதே யீயுந் தன்மையா ரென்று நன்மை சார்ந்தவே தியரைச் சண்பை, மன்னனாரருளிச் செய்த மறைத்திரு வாக்கூர்" (சிறப்புலியார் - புரா - 1) என்று பின்னரும் ஆசிரியர் இதனைப் பொருள்விரித்தல் காண்க. மன்னனாரும் போற்றும் வள்ளன்மை என்றபடி; இன்மையால் தம்மிடம் சென்று இரப்போர்க்குத் தாமும் இல்லை எனின் பொருள் இல்லாத அவர்க்கும் பொருள் உடைய தமக்கும் வேறுபாடின்றாம் என்பது நீதி நூல்களின் கருத்து;- (10) **நாமருவு புன்மை** - நாவின்கண் தன் இயல்பல்லாது வந்து மருவும் புன்மை என்பது குறிப்பு; **பூமருவு**-பூக்கள்மிக்குப் பொருந்தும்; **புக்கமரும்** - "புக்கிருந்த" (1);- (11) **ஆடல்** - அருட்கூத்து; **மாடம்சேர்** - இந்த மாடம் போன்ற **தோணியாகிய** மாடம் என்ற குறிப்பும் தருவது.

தலவிசேடம்:- திருஆக்கூர்- III பக்கம் 571 பார்க்க..

திருமீயச்சூர்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம் - 2-ம் திருமுறை**

காயச் செவ்விக் காமற் காய்ந்து கங்கையைப்
பாயப் படர்புன் சடையிற் பதித்த பரமேட்டி
மாயச் சூரன் றறுத்த மைந்தன் றாதைதன்
மீயச் சூரே தொழுதும் வினையை வீட்டுமே. (1)

வேட முடைய பெருமா னுறையு மீயச்சூர்
நாடும் புகழார் புகலி ஞான சம்பந்தன்
பாட லாய தமிழீ ரைந்து மொழிந்துள்கி
ஆடு மடியா ரகல்வா னுலக மடைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சூர் அறுத்த மைந்தன் தாதைதன் மீயச்சூரே தொழுது உம்வினையை வீட்டுங்கள்; மீயச்சூரார் ஆகிய இறைவர் சடையின் முடிமேற் புனலர் முதலிய புகழ்களால் அறியப்படுபவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **செவ்வி** - அழகு; **மாயச்சூர்** - மாயம்வல்ல சூர் முதல்;-(2) **நற** - இரத்தம்:- (3) **நேர்** - ஒப்பு; சொற்பொருட் பின்வருநிலை - (4) **படுதம்** - கூத்தவகை. "பாட லிசைகொள் கருவி படுதம் பலவும் பயில் வார்" (தேவா);-(5) **வேடம்** - முடிசூட்டு; அணி; **பீலி** - மாலை; **விடையார் நடை** - விடையின்மேல் ஊர்ந்துவருதல்;- (6) **கைகோடி** - கைகூட்டி வளைத்து;- (7) **மிடறு நீலவடிவர்** என்க.

2436. பாம்பு ரத்துறை பரமரைப் பணிந்துநற் பதிகவின் னிசைபாடி
வாம்பு னற்சடை முடியினார் மகிழ்விடம் மற்றுமுள் ளனபோற்றிக்
காம்பி னிற்றிகழ் கரும்பொடு செந்நெலின் கழனியம் பணைநீங்கித்
தேம்பொ ழிற்றிரு வீழிநன் மிழலையின் மருங்குறச் செல்கின்றார்; 538

---

*தலவிசேடம்:- (அ) திருமியச்சூர் - காவிரித் தென்கரை 53 வது பதி; சூரியன் சுவாமியம்மையை யானையரித்து வைத்து வழிபட்ட தலம் என்ப; விமானம் கசப்பிருட்டம் என்னும் ஆனைமாடம்; அம்மை இருந்த திருக்கோலம்; சுவாமி - **முயற்சிநாதர்; 'தாளாளர்'** என்ற பதிகக் (3) குறிப்புக் காண்க. அம்மை - **சுந்தரநாயகி**; தீர்த்தம் - **சூரியபுட்கரணி**; மரம் - **வில்வம்**; பதிகம் 1. பேரளம் நிலையத்தினின்றும் மேற்கே மட்சாலை வழி 1 நாழிகையளவில் உள்ளது.*

*(ஆ) திருமீயச்சூர் இளங்கோயில் - காவிரித் தென்கரை 57வது பதி; திரு மீயச்சூர் இறைவர் திருப்பணியின் நிமித்தம் இளங்கோயிலில் - பாலாலயத்தில் - எழுந்தருளியபோது ஆளுடைய அரசுகள் வழிபட்டுப் பாடப்பெற்றது. "தோற்றும் கோயிலுந் தோன்றிய கோயிலும், வேற்றுக் கோயில் பலவுள" என்ற திருக்குறுந் தொகை இக் குறிப்புப்பட நிற்பது என்பர்; காளி பூசித்த வரலாறும் கேட்கப்படும்; சுவாமி - **சகலபுவனேசுவரர்**; அம்மை - **மின்னுமேகலாம்பாள்**; பதிகம் 1. இது (56) திருமீயச்சூர்க் கோயிலினுள் வடக்குச்சுற்றில் உள்ளது.*

2436. பொருளுரை...பாம்புரத்துறை...பாடி திருப்பாம்புரத்தில் எழுந்தருளியுள்ள இறைவரை வணங்கி நல்ல இனிய இசையினையுடைய திருப்பதிகத்தைனைப் பாடி யருளி; வாம்புனல்...போற்றி - வாவும் கங்கையாற்றினைத் தரித்த சடைமுடியினை யுடைய இறைவர் மகிழ்ந்தெழுந்தருளியுள்ள மற்றும் பதிகளைத் துதித்து; காம்பினில்...நீங்கி - மூங்கில்போல விளங்கும் கரும்பும் செந்நெல்லும் உடைய வயலிடங்களைக் கடந்துசென்று; மேம்பொழில்...செல்கின்றார் - தேனையுடைய சோலைகள் சூழ்ந்த திருவீழிமிழலையின் பக்கத்திற் (பிள்ளையார்) செல்கின்றாராக;

*விளக்கவுரை...**இன்னிசைப் பதிகம்** - என்க; **இன்னிசை** - தக்கராகப் பண்ணின் எட்டுக் கட்டளைகளுள் இனிய சந்தபேதமமைந்த பெரிய அமைப்பு.*

***மகிழ்விடம் மற்றும் உள்ளன** - இவை சிறுகுடி, திருவன்னியூர் முதலாயின என்பது கருதப்படும்.*

***காம்பினின் - காம்பு** - மூங்கில்; இன் - ஒப்புப்பொருளில் வந்த ஐந்தனுருபு. மூங்கில்போல; மெய்யுவமம்.*

***பணை** - மருதநிலம். கழனியம்பணை - கழனி - வயல்; வயல்களையுடைய மருத நிலம்; மருதப்புறவம் என்றலுமாம்.*

வேறு

2437. அப்பொழுதி னாண்ட வரசை யெதிர்கொண்ட
மெய்ப்பெருமை யந்தணர்கள் வெங்குருவாழ் வேந்தனார்
பிற்படவந் தெய்தும் பெரும்பேறு கேட்டுவப்பார்
எப்பரிசி னால்வந் தணைந்தங் கெதிர்கொண்டார். 539

மருங்கு உறச் செல்கின்றார் - பிள்ளையார் என்ற எழுவாய் தொக்குநின்றது; செல்கின்றார் - பிள்ளையார் செல்கின்றாராக.

வீழிமா - என்பதும் பாடம். 538

2437. பொருளுரை...அப்பொழுதில்...அந்தணர்கள் - அவ்வாறு பிள்ளையார் செல்கின்றபொழுதிலே முன்வந்தருளிய ஆளுடைய அரசுகளை எதிர்கொண்ட உண்மைத் தன்மையின் மிக்க பெருமையுடைய அந்தணர்கள்; *வெங்குருவாழ்...உவப்பார்* - சீகாழி வாழும் வேந்தராகிய பிள்ளையார் பின்னால்வந்து சேரும் பெரும்பேற்றினைக் கேட்டு மிக மகிழ்வார்களாகி; *எப்பரிசினால்...எதிர்கொண்டார்* - எல்லா வகைகளாலும் ஒருங்கு கூடிவந்து அங்கு எதிர்கொண்டாராய்.

விளக்கவுரை...அப்பொழுதின் - பிள்ளையார் அவ்வாறு செல்கின்றபோதில். *ஆண்டஅரசை எதிர்கொண்ட* - ஆண்டவரசு முன் எழுந்தருளிவந்தனர் என்பது இங்கு நினைவுகூர்தற்பாலது. 2426 பார்க்க.

மெய்ப்பெருமை அந்தணர்கள் - அரசுகளை எதிர்கொண்டது அந்தணர்களின் மெய்யன்புநிலைபற்றி எழுந்தது என்க.

அரசை எதிர்கொண்ட - பெரும் பேறு கேட்டு - எதிர்கொண்ட என்றதனால் அரசுகளது வரவுமட்டில் கேட்டுவந்து எதிர்கொண்டார்கள் என்றும், கேட்டு என்றதனால் அவ்வாறு எதிர்கொண்டார்பால் வெங்குரு வேந்தனார் வரவு கேட்டார்கள் என்றும், கேட்டு அவரை எதிர்கொள்ள அமைந்தார்கள் என்றும், பிள்ளையாரது நல்வரவினை அரசுகளும் அடியார்களும் அந்தணர்களுக்கு அறிவித்தார்கள் என்றும் கருத வைத்த கவிநயம் காண்க.; எதிர்கொண்ட என்றதனால் இப்பாட்டால் அரசுகளை எதிர்கொண்டமையும் மேல்வரும் பாட்டில் **எதிர்கோளேற்றார்** என்றமையால் பிள்ளை யாரை எதிர்கொண்டமையும் கூறினார். பிள்ளையாரது புராணமாதலின் அவரது வரவேற்பினை விரித்துக் கூறினார். இப்பாட்டில் இருவருடைய வரவேற்பினையும் ஒக்கக் குறித்தமையால் அவ்விரு பெருமக்களும் தம்முள் ஒப்பாந் தன்மையும், இனிப் இப்பதியினில் இருவர்பாலும் திருவருள் ஒப்ப நிகழும் வரலாற்றுக் குறிப்பு அறிவித்ததும் காண்க. முன்னரும், அரசுகள் புராணத்தினுள் "வீழிமிழலை" (1515) என்ற திருப்பாட்டில் இருவரையும் எதிர்கொண்டமை ஒக்க ஒருபாட்டிலுரைத்ததனையும், "மாட வீதி" (1516) என்ற திருப்பாட்டில் விரித்து அரசுகளை எதிர்கொண்ட சிறப்பினைக் கூறியதும் இங்கு வைத்துச் சிந்திக்க.

2438. நிறைகுடந் தூபதீப நிரை நிரைத்தேந்தி
நறைமலர்ப்பொற் சுண்ணம் நறும்பொரியுந் தூவி
மறையொலிபோய் வானளப்ப மாமுரச மார்ப்ப
இறைவர்திரு மைந்தர் தமையெதிர்கோ ளேற்றார். 540

அரசை என்றும் வேந்தனார் என்றும் இருவரையும் ஒக்க அறிவித்தவாற்றால் அவ்விருவரது ஒப்பாந் திறமும் அடியார்கள் அவர்களை அவ்வாறு உட்கொண்டு வழிபட்ட திறமும் கருதவைத்தார்

பெரும் பேறு - ஒன்றன்மேலொன்றாய்க் கிடைத்தலின் பெரும் பேறாயிற்று.

எப்பரிசினால் - முற்றும்மை தொக்கது.

பரிசு - தன்மை - வகை

எதிர்கொண்டார் என்றது பிள்ளையாரை எதிர்பார்த்து அந்தணர்கள் திரண்டு எதிர்கொள்ள அமைந்த திறத்தினையும். மேற்பாட்டில் எதிர்கோளேற்றார் (2438) என்றது பிள்ளயார் எழுந்தருளக் கண்டபின் நின்றநிலையினையும் உணர்த்தின. 539

2438. பொருளுரை-நிறை - ஏந்தி - நிறைகுடமும், தூபமும், தீபமும் என்றிவற்றைத் தொடர்ந்து வரிசைபெற ஏந்திக்கொண்டு; நறை..தூவி - தேன்பொருந்திய புதிய பூக்களையும் பொற்சுண்ணத்தினையும் மணமுடைய பொறிகளையும் தூவி; மறையொலி-ஆர்ப்ப - வேதவொலிமிக்கு ஆகாயத்தில் நிறையவும் பெரிய முரசுகள் முழங்கவும்; இறைவர்...ஏற்றார் - இவ்வாறாக இறைவரது திருமைந்தராகிய பிள்ளையாரை எதிர்கொள்ளும்வகையால் வரவேற்றனர்.

இந்த மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒருமுடிபு கொண்டன.

விளக்கவுரை-நிரைத்து - வரிசைபெற அமைத்து. நிறைகுடம்தூபம் தீபம் ஏந்துதலும், மலருடன் பொற்சுண்ணம் கலந்து தூவுதலும், எதிர்கொண்டு வர வேற்றற்குரிய அங்கங்கள்.

மறைஒலி போய் வானளப்ப - உச்ச சுரத்தில் ஓதப்படுதலால் வானளப்ப என்றார். வானுலகத்தேவர்களும் பெறாத சிறப்பு என்பது அளப்ப என்றதன் குறிப்பு. அளத்தல் - நிலையிடுதல்; அளவு காட்டுதல்.

மாமுரசம் ஆர்ப்ப - பொருள் பொதியாத சத்தமாதலின் இதனை மறையொலியினின்றும் வேறுபிரித்துக் கூறினார். மா - மங்கலமுடைய.

இறைவர் திருமைந்தர் - பாலாலமுதமூட்ட உண்டருளிய தொடர்பினால் மைந்தர் என்றார்; உபசாரம்; இவ்வாறு வரும் தொடர்களின் றுணைகொண்டு பிள்ளையாருக்கும் முருகப்பெருமானுக்கும் தொடர்புபடுத்திக் கூறுவோர் கூற்றுக்கள் பொருந்தாமை முன் 1967லும், பிறாண்டும் உரைக்கப்பட்டது. "முதல்வனை மன்னவ னாகவும், அம்முதல்வனது

பேரானந்தப் பெருஞ்செல்வ முழுதுந் தனதேயாகக் கொண்டனுபவிக்குஞ் சுதந்தரமுடைமையும், சித்தென்னுஞ் சாதியொருமையும் பற்றி ஆன்மாவை மன்னவ குமாரனாகவும்" (போதம் - 8 - சூ. சிற்றுரை) உருவகித்துக்கூறும் மரபும் ஈண்டுச் சிந்திக்க.

540

திருப்பாம்புரம்

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம் - 1-ம் திருமுறை**

சீரணி திகழ்திரு மார்பில்வெண் ணூலர் திரிபுர மெரிசெய்த செல்வர்
வாரணி வனமுலை மங்கையோர் பங்கர் மான்மறி யேந்திய மைந்தர்
காரணி மணிதிகழ் மிடறுடை யண்ணல் கண்ணுதல் விண்ணவ ரேத்தும்
பாரணி திகழ்தரு நான்மறை யாளர் பாம்புர நன்னக ராரே. (1)

பார்மலிந் தோங்கிப் பருமதில் சூழ்ந்த பாம்புர நன்னக ராரைக்
கார்மலிந் தழகார் கழனிசூழ் மாடக் கழுமல முதுபதிக் கவுணி
நார்மலிந் தோங்கு நான்மறை ஞான சம்பந்தன் செந்தமிழ் வல்லார்
சீர்மலிந் தழகார் செல்வம தோங்கிச் சிவனடி நண்ணுவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- *மார்பில் வெண்ணூலர் - திரிபுரமெரிசெய்த செல்வர் என்றிவை முதலாகப் பல தன்மைகளாலும் போற்றப்படுபவர் பாம்புர நன்னகரார்; அவர் பண்டு நாஞ்செய்த பாவங்கள் தீர்ப்பார்.*

பதிகப்பாட்டுக் குறிப்பு:- *(2)* **கொக்கிறகோடு-அணி** *இறைவர் திருமுடியிற் சூடும் மலர்களும் இலையும் குறித்தபடி. "நீரோடு கூவிளமும்...தண்கரந்தை" என்ற தேவாரமும் காண்க.-(3) சூறை - (உயிரைக்) கொள்ளைக் கொள்ளும்; மலை யாட்டி - (பொன்) மலைக்கரசி;-(4)* **துஞ்சுநாள்...இல்லா** *- இறப்பும் பிறப்புமில்லாத;-(6)* **உணர்வுடை** *- உணர்வினில் வெளிப்படுபவர்; உணர்பவர் என்றலுமாம்;* **ஒத்து** *- வேதம்;-(8)* **விடைத்த** *- செருக்கிய;* **படப்பை** *- வயல்;-(9)* **செடி** *- குற்றம்;* **படி** *- வண்ணம்;- (10)* **குற்றுவிட்டுகையர்** *- அமணர்களது அவமாகிய தவநிலைகள்;* **பண்டுநாஞ் செய்த பாவங்கள்** *- மூல மலங்கள்; பழ வினைகள்.*

தலவிசேடம்:- **திருப்பாம்புரம்** *- காவிரித் தென்கரை 59வது பதி; பாம்பரசன் (ஆதிசேடன்) பூசித்ததனால் இப்பெயர் பெற்றது; ஆதிசேடனது மூல - உற்சவத்-திருவுருவங்கள் உள்ளன; சுவாமி -* **பாம்புரேசர்;** *அம்மை -* **வண்டார் குழலி;** *மரம் -* **வன்னி;** *பதிகம் 1. இது பேரளம் நிலையத்தினின்றும் மேற்கே 1 நாழிகை யளவில் திருமீயச்சூரைக் கடந்து மேற்கே மட்சாலை வழி 2 நாழிகையளவில் உள்ளது.*

எதிர்கோள் *- எதிர்கொள்ளும் வகை. பண்பு;*

எதிர்கொள் வரவேற்றார் - எதிர்கொள் வரப்பெற்றார் *- என்ற பாடங்களு முண்டு.*

2439. வந்துதிரு வீழி மிழலை மறைவல்ல
அந்தணர்கள் போற்றிசைப்பத், தாமு மணிமுத்தின்
சந்த மணிச்சிவிகை நின்றிழிந்து தாழ்ந்தருளி,
உய்ந்த மறையோ ருடனணைந்தங் குள்புகுவார்; 541

2439. பொருளுரை-வந்து போற்றிசைப்ப - வந்து திருவீழிமிழலையிலுள்ள வேதங்களில் வல்லவர்களாகிய அந்தணர்கள் துதிக்க; தாமும்-தாழ்ந்தருளி - பிள்ளையார் தாமும், மணிகளுட் சிறந்த முத்துக்களாலாகிய புகழ்தக்க அழகிய சிவிகையினின்றும் இறங்கி வணங்கியருளி; உய்ந்த உள்புகுவார் - தமது வருகையினால் உய்திபெற்ற மறையவர்களுடனே அணைந்து அத்திருநகரினுள்ளே புகுவாராகி,

விளக்கவுரை-வந்து - முன்பாட்டிற் கண்டவாறு வரவேற்கப் பிள்ளையார் தாமும் எழுந்தருளிவந்து என்றும், அந்தணர்கள் அவ்வாறு வந்து போற்றிசைப்ப என்றும் இருபாலும் கூட்டி உரைக்க நின்றது.

தாமும்-தாழ்ந்தருளி - தாமும் - அவர்கள் தாழ்ந்ததுபோலவே தாமும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை.

உய்ந்த - பிள்ளையாரை வாவேற்று வணங்கிய பெரும்பேற்றினால்உய்தி பெற்ற; மறையோர்கள் தாழ்ந்து வணங்கியதனை வெளிப்படச் சொல்லாது, தாமும் என்ற எச்ச உம்மையினாலும், "பெரும்பேறு கேட்டுவப்பார்" (2437) என்றும், "எதிர்கோளேற்றார்" (2438) என்றும், "உய்ந்த" என்றும் கூறுமாற்றால் உய்த்துணரவைத்த கவிநயம் காண்க. இவ்வாறே அரசுகளை எதிர்கொண்டு வணங்கியதனையும் "எதிர்கொண்ட" (2437) என்றவாற்றாற் பொதுப்படக் கூறியதும் காண்க; என்னை? வீழிமிழலை வந்தணைய மேவி நாவுக் கரசினையுங், காழி ஞானப் பிள்ளையையுங், கலந்த வுள்ளக் காதலினால்...அடியா ரடியா ரவர்களுடன் வாழி மறையோ ரெதிர்கொண்டு வணங்கி யுள்புக்கார் (1515) என்று இதனை முன்னர் விரித்துக்கூறினாராதலின் என்க.

உள்புகுவார் - உள் - திருநகரத்தினுள்ளே; புகுவார் - புகுவாராகி; முற்றெச்சம்; புகுவார் - மேவினார் என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 541

2440. பொருளுரை-அப்போது-இசைபாடி - அப்போது "அரையார் விரி கோவண வாடை" என்று தொடங்கும் ஒப்புச்சொல்லமுடியாத திருப்பதிகத்தின் ஓங்கும் இசையினைப் பாடியருளி; கவுணியனார்-பிள்ளையார்; கைப்போது...கொண்டு-கைமலர்களைத் தலையின்மேலேகொண்டு; மெய்ப்போதப் போது..மேவினார்-உண்மைஞானத்தாற் பூசிக்கும் தத்துவம் முப்பத்தாறானும் அமைந்த இதயபுண்டரீகத்தில் விரும்பி வீற்றிருந்தருளும் இறைவரது திருக்கோயிலினுள் மேவியருளினார்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை-அப்போது - நகரத்தினுள் புகும்போது.

2440. அப்போ "தரையார் விரிகோ வணவாடை"
யொப்போ தரும்பதிகத் தோங்கு மிசைபாடி,
மெய்ப்போதப் போதமர்ந்தார் தங்கோயின் மேவினார்
கைப்போது சென்னியின்மேற் கொண்டு கவுணியனார். 542

அப்போது - இசைபாடி நகரினுள் புகும்போது இப்பதிகம் அருளப்பட்டது என்பது "வீழிமிழலை உரையால் உணர்வார்" என்பனவாதியாக வரும் பதிகப் பகுதி களினால் பெறப்படுதல் காண்க.

மெய்ப்போதப் போது அமர்ந்தார் - மெய்ப்போதம் - உண்மை ஞானம்; ***போதப் போது*** - ஞானத்தாற் சிந்திக்கப்படும் தத்துவங்களாலமைந்த இதயகமலம்; "ஞானப் புகலுடையோர் தம்முள்ளப் புண்டரிகத் துள்ளிருக்கும் புராணர்" என்பதும் காண்க (தேவா). போதம் - ஞானம்; இதனை அந்தரியாகம் என்னும் அகப்பூசையில் பூசைத்தானம் என்பர். அமர்தல் - விரும்பி வீற்றிருந்தருளிப் பூசைகொண்டருளுதல். இக்குறிப்புக்கள் திரு. க. சதாசிவச் செட்டியாருடையவை; இனி இவ்வாறன்றிப் போதம் ஞானம் - ஆகுபெயராய் அதனையுடைய உண்மைஞானிகளுக்கு ஆகிவந்த தென்று கொண்டு, உண்மைஞானிகளாகிய அடியார்களின் இருதயதாமரை என்று கொள்வதுமாம்.

ஒப்பு ஓத அரும்பதிகத்து ஓங்கும் இசை - இதற்கு ஒப்பென்று பிறிதொன்றனையும் ஓதுதல் அருமையாகிய என்க. பதிகத்து - பதிகமாகிய.

கோயில் மேவினார் - நகரினும் புகுந்துசென்று திருக்கோயிலினுள் எழுந்தருளினார் - பொருந்தினார்.

கைப்போது சென்னியின்மேற் கொண்டு - கைகளாகிய தாமரைகளை முடிமேற் கூப்பிக்கொண்டு; போது - மலர்கள் என்று கொண்டு, மலர்களைக் கையிற் கொண்டபடியே சிரத்தின்மேற்கூப்பி என்றலுமாம்.

மேவினார் - கவுணியனார் - பயனிலையாகிய வினைமுற்று முன்வந்தது விரைவிற் செயல் முற்றிய நிலை குறித்தது. *542*

I திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம் **பண் - தக்கராகம் - 1-ம் திருமுறை**

அரையார் விரிகோ வணவாடை
நரையார் விடையூர் திநயந்தான்
விரையார் பொழில்வீ ழிம்மிழலை
உரையா லுணர்வா ருயர்வாரே. *(1)*

நளிர்கா ழியுண்ஞா னசம்பந்தன்
குளிரார் சடையா னடிகூற
மிளிரார் பொழில்வீ ழிம்மிழலை
கிளர்பா டல்வல்லார்க் கிலைகேடே. *(11)*

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருவீழிமிழலையினை நினைவார் - உணர்வார் - பாவுவார் - அடைவார் உயர்வாரே. அவர் வினை தேயும் என்று துதித்துக்கொண்டு நகரினுட் புகுதல். ***(2440).***

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) நரை - வெண்மை; **விரிகோவணம்** - படம் விரிக்கும் பாம்பாகிய கோவணம்; "அற்றமறைப்பது முன்பணியே" "ஐந்தலைய மாசுணங்கொண் டரையார்க் கும்மே" (தேவா) "அரவிற் கோவண வாடை" என்றதும் இக்குறிப்பு; "நால்விரற் கோவணம்" (தேவா) என்றவிடத்து நான்காகிய மறைகளாகிய கோவணம் என்க.-(2) **புனைதல்** - பின்னுதல், முடித்தல் முதலிய கோலஞ் செய்தல்; **கனைதல்** - சத்தித்தல்; கனைதலையுடைய; நெஞ்சமும் நெஞ்சே - நெஞ்சும் நெஞ்சாமோ, ஆகாது என வினா எதிர்மறை குறித்தது. "நெஞ்சங் கல்லார்" (திருவா):-(3) **வல்லவர்** - அருமைகுறித்து நின்றது;-(4) **உரவம்** - வன்மை; **அடியாரே** - அடியாருட் சிறப்புக் குறித்தது;-(5) **வரிது** - வரிகளை யுடையது; வரி வண்டு; **விரிதார்** - கொன்றைகளே தார்போல அலர, அவற்றை மேலும் மாலையாகத் தொடுத்தணிதலின் விரி என்றார்; **உரிதா** - அடையும் இடமாய் உரிமையுடையதாக உறுதிகொண்டு:-(6) **சரி**-வேகமாகச் சரிக்கின்ற; -(7) **நெறி** - **நெறித்தல்** - வளைவுகளுடனிருத்தல்:- (8) **வலி உளையா ஒல்க** என்க. **உளைதல்** - வருந்ததுதல்; **ஒல்குதல்** - குறைதல்; **விளை** - விளைவுகள்; ஆகுபெயர்; முதனிலைத் தொழிற்பெயர் என்றலுமாம்; **அளைதல்** - நெருங்குதல்;- (9) **தெருள் செய்தவர்** - தெளிந்தடைந்தவர்;-(10) **துளங்குதல்** - அசைந்தொழிதல்; ஈண்டுத் துளங்குதல் நிலைபெறாமை குறித்தது; **புல்அமண் தேர் துளங்குந் நெறியார்** - என்று கூட்டுக. **தொன்மைவளம்** - அவர் கூறும் நூல்களின் தொன்மைத் தமிழ்வளம் முதலாயின; இவையே இன்றுவரையும் மக்களை மயக்கிவரும் தன்மை காண்க. பொருளண்மை நோக்காது தமிழ்வள முதலிய புற நிலைகளை நோக்குதல் மயக்கிற்கிடமாமென்பது; **கொள்ளன்மின்** - பொருளென்று மயங்காதீர்கள்;-(11) **நளிர்** - குளிர்ந்த; **குளிர் ஆர்** - குளிர் ஆகுபெயராய் அதனை யுடைய நீரின்மேனின்றது; **அடிகூற** - எண்ணிப் பாடல் வல்லார் என்க.

2441. **பொருளுரை**...நாவின்...நண்ண - ஒப்பற்ற திருநாவுக்கரசரும் தம்முடன் பொருந்தி யிருக்க; **பூ இயலும் உந்தியான் போற்ற** - (பிரமதேவன் வந்த) உந்தித் தாமரையினை யுடைய திருமால் வணங்கி வழிபடும் பொருட்டு; **புவிக்கு-வியப்பெய்தினார்** - (விண்ணுலகினின்றும்) இம்மண்ணுலகில் இறங்கிய விராட்புருடனின் மெய்யினது உருவமாகிய அவ்விமானத்தினைக் கண்டு சிந்தையில் வியப்பினை அடைந்தனர் (பிள்ளையார்).

விளக்கவுரை— தனிநாவின் மன்னர் என்க; தாமும் உடன்நண்ண - வலங்கொள்வார் - கண்டு - வியப்பெய்தினார் என்று முடிக்க. முன்னே அணைந்து எதிர்கொள்ளப் பெற்றாரேனும், அரசுகள் பிள்ளையாருடனாகக்கூடியே கோயிலில் வழிபட்டனர் என்பது; **தாமும்** - முன்னேவந்தணைந்த அவரும் என உம்மை இறந்ததுதழுவிய எச்சவும்மை.

2441. நாவின் றனிமன்னர் தாமு முடனண்ண
மேவிய விண்ணிழிந்த கோயில் வலங்கொள்வார்
பூவியலு முந்தியான் போற்றப் புவிக்கிழிந்த
தேவியலு மெய்கண்டு சிந்தைவியப் பெய்தினார். 543

விண்ணிழிந்த கோயில் - திருவீழிமிழலைக் கோயில் விண்ணிழி விமானம் எனப்படும்; இது திருமால் தேவலோகத்தினின்றும் கொணர்ந்து தாபித்துப் பூசித்தது என்பது வரலாறு; இம்மாதிரி விமானம் வேறு எந்தக் கோயிலிலும் இல்லை. இதற்கு ஐம்பொன் தகடு வேயப்பட்டுள்ளது. அதனுடைய சிறப்புத்தன்மை கருதி அடியார்கள் அதைத் தங்கத்தில் வேய முயற்சி செய்து வருகிறார்கள். இதனை "பூவியலு முந்தியான் போற்றப் புவிக்கிழிந்த" என்று மேல் விரித்தோதுதல் காண்க. அரி, இப்பதியில் தவஞ்செய்து கண்ணிடந்து பூசித்து ஆழிபெற்ற வரலாறு மாபுராணங்களிலும், தேவார முதலிய திருமறைகளிலும் போற்றப்படுவது; "நீற்றினை நிறையப் பூசி நித்தலா யிரம்பூக் கொண்டு ஏற்றுழி யொருநா ளொன்று குறையக்கண் ணிறைய விட்ட, வாற்றலுக் காழி நல்கி யவன்கொணர்ந் திழிச்சுங் கோயில், வீற்றிருந் தளிப்பர் வீழி மிழலையுள் விகிர்த னாரே" என்ற திரு நேரிசையும், 'மிழலைவிண் ணிழிசெழுங் கோயில்" என்ற திருவிசைப்பாவும், பிறவும் காண்க.

பூ இயலும் உந்தியான் - பதுமநாபன் என்பர் வடவர்; பூ - தாமரை.

தே இயலும் மெய் - இறைவரது திருக்கோயில்கள் விராட்புருடனது உருவின் தத்துவங்களமையும்படி அமைக்கப்படுவன. திருக்கோயில் அமைப்பினுள், விமானம் பிரமரந்திரமாகவும், ஏனையமைப்புக்கள் ஏற்றபெற்றி மூக்கு, செவி, கழுத்து முதலியனவாகவும் வகுப்பது சிவாகமங்களுள் விதித்த சிற்பமுறையாம். தே - விராட் சொரூபனாகிய தெய்வ வடிவம்; இயலும் - பொருந்தும்; மெய் - உடல்; இறைவர் எழுந்தருளி இருக்குமிடமாகலின் கோயிலை அவரது மெய் - உடம்பு - எனப்பட்டது. இனி, இவ்வாறன்றித் தெய்வத்தன்மை வாய்ந்த உண்மை உருவம் என்றலுமாம்; மெய் - இறைவன் திருமேனி என்பாருமுண்டு. அது மேற்கூறப்படும். அன்றியும் புவிக்கிழிந்தது விமானமேயாம்.

வியப்பு - அற்புதம் என்ற மெய்ப்பாடு.

எய்தினார் - (கவுணியனார்) பிள்ளையார் என்னும் எழுவாய்முன் பாட்டினின்றும் வருவிக்க. 543

2442. பொருளுரை- வலங்கொண்டு-மேனியராய் - வலமாக வந்து திருக்கோயிலினுக் குள்ளே புகுந்து திருமுன்பு சென்று ஆகாயகங்கை நீர் தங்கிய சடையினையுடைய ஒப்பற்ற முழுமுதலாகிய இறைவரைத் திருமேனி நிலத்திற்பொருந்த வீழ்ந்து வணங்கி; நீடுபெரும்-மீப்பொழிந்தார் - நீடிய பெரிய காதலாகிய வெள்ளம் சிந்தையின் இடமுழுதும் கொண்டு பெருகியதனால் அது வழிவதுபோன்று இசையாக மேலே பொழிவாராயினர்.

2442. வலங்கொண்டு புக்கெதிரே வான நதியின்
சலங்கொண்ட வேணித் தனிமுதலைத் தாழ்ந்து
நிலங்கொண்ட மேனியராய் நீடுபெருங் காதல்
புலங்கொண்ட சிந்தையினாற் பொங்கியிசை மீப்பொழிந்தார். 544

விளக்கவுரை - எதிரே - எதிரே சென்று.

வான நதியின்...தனிமுதல் - தனி முதல்வராந் தன்மை நதியின் சலங்கொண்ட வரலாற்றினால் பெறப்படுமென்பார் உடம்பொடு புணர்த்தி யோதியருளினார்.

வேணித் தனிமுதல் - வேணியாராதலின் முதல்வராந்தன்மை புலப்பட நிற்பார் என்பது குறிப்பு. பகீரதன் பொருட்டுச் சலத்தைத் தாங்கி உலகுக்கருளுவதுபோல ஈண்டும் எந்தம் பெருமக்கள் இருவர்மூலம் உலகில் வற்கடங் காத்தருளும் பிற் சரித விளைவுக் குறிப்புமாம். மேல்வரும் பாட்டில் "நீற்றழகர்" என்ற குறிப்பும்அது. நீறு - சங்காரத்தின் ஒடுக்கத்தையும், அழகர் - அதன்பின் மீள உளதாக்குதலையும் உணர்த்தும் குறிப்புக்களாதல் காண்க.

நிலங்கொண்ட மேனியராய் - மேனி நிலங்கொண்டாராய்த் தாழ்ந்து என்று கூட்டுக.

காதல் புலங்கொண்ட சிந்தை - சிந்தையுள் இடமெல்லாம் கவர்ந்துகொண்ட பெருவிருப்ப; புலங்கொள்ளுதல் - பற்றிப் பரவுதல்; புலம் - இடம்; புலம் - ஐம்புலம் என்று கொண்டு பெருங்காதல் ஐம்புலன்களையும் கவர்ந்துகொள்ள என்றுரைத்தலுமாம். இசைமீப் பொழிதலாவது - பெருங்காதல் சிந்தை முழுதும் பற்றிப் பரவுதலால் அது மேலே பொங்கி வழிவதுபோன்று இசை உருவமாகத் தடையின்றி மழைபோலப் பொழிதல்.

நின்று வரநதியின் - வந்து - வரநதியின் - இசைபொழிந்தார் - என்பனவும் பாடங்கள். 544

2443. பொருளுரை...போற்றி...சாற்றி - துதித்துச் "சடையார் புனலுடையான்" என்று தொடங்கிப் பெருமானது புகழ்களை எடுத்துக்கூறி; பதிகத் தமிழ்மாலை...பாடி - திருப்பதிகமாகிய தமிழ்மாலையினைச் சந்தமும் இசையும் மிகப் பெருகப் பாடியருளி; ஆனந்த-நீடினார் - நீற்றழகராகிய இறைவரது திருவடிகளின் கீழே ஆனந்த வெள்ளத்தினுள் நின்று அதன் கரை காணமாட்டாது அலைந்து நீடியிருந்தருளினர்.

விளக்கவுரை...போற்றிச் சாற்றிப் - பாடி - என்று கூட்டி முடிக்க; முன் பாட்டில் இசைமீப்பொழிந்தார் என்று கூறினார்; அவ்வாறு இசைபொழிந்தவகை போற்றதலும் சாற்றுதலும்பாடுதலுமாம் என்று ஈண்டு விரித்தார். **போற்றுதல் - துதித்தல்; சாற்றுதல்** - எடுத்துக்கூறுதல்; பாடுதல் - இவற்றைப் பாட்டாகத் தொகுத்தல்.

2443. போற்றிச் "சடையார் புனலுடையா" னென்றெடுத்துச்
சாற்றிப் பதிகத் தமிழ்மாலை சந்தவிசை
ஆற்ற மிகப்பாடி யானந்த வெள்ளத்தில்
நீற்றழகர் சேவடிக்கீழ் நின்றலைந்து நீடினார். 545

சந்த இசை ஆற்ற மிகப்பாடி - இதனால் பாடுதலின் தன்மை கூறப்பட்டது; சந்தம் - தாளவொத்து; இசை - பண் - இராகம் என்பன.

ஆற்ற - மிக - ஒருபொருட் பன்மொழி; ஒன்று சொற்சுவைப்பெருக்கினையும், மற்றொன்று பொருட்செறிவின் பெருக்கத்தையும் குறித்தன.

ஆனந்தவெள்ளத்தில் - அடிக்கீழ் - நின்று - அலைந்து - நீடினார் - ஆனந்தமாகிய இன்பப்பெருக்கு; உருவகம்; ***சேவடிக்கீழ் - நின்று - அலைந்து*** - சேவடியின்கீழே அழுந்தி அடங்குதலாலே மேலே மிதந்து கழியாமல் வெள்ளத்தினுள் நிற்கும் இயைபுளதாயிற்று என்ற குறிப்பும் காண்க. ***அலைதல்*** - நிலைகொள்ள மாட்டாது அனுபவித்தல்; திளைத்தல்; மேலும் ***உள்ளலைப்ப*** (2444) என்பதும் காண்க. ***நீடுதல்*** - இவ்வனுபவம் காலத்தாற் பெருகுதல்.

நீற்றழகர் - முன் பாட்டில் உரைத்தவை பார்க்க; இங்க இறைவர் நித்த மண வாளக் கோல முடையவராதலும் குறிப்பு. 545

II திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம் பண் - ***நட்டபாடை***

*சடையார்புன லுடையானொரு சரிகோவண முடையான்
படையார்மழு வுடையான்பல பூதப்படை யுடையான்
மடமான்விழி யுமைமாதிட முடையானெனை யுடையான்
விடையார்கொடி யுடையானிடம் வீழிம்மிழ லையே.* (1)

*வீழிம்மிழ லைமேவிய விகிர்தன்றனை விரைசேர்
காழிந்நகர்க் கலைஞானசம் பந்தன்றமிழ் பத்தும்
யாழின்னிசை வல்லார்சொலக் கேட்டாரவ ரெல்லாம்
ஊழின்மலி வினைபோயிட வுயர்வானடை வாரே.* (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சடையார் புனலுடையான் என்பதாதியாகிய தன்மைகளால் அறியப்படும் முழுமுதல்வனாகிய இறைவரது இடம் திருவீழிமிழலையேயாம்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) ***சரிகோவணம் - சரித்தல்*** - நகர்தல்; நகரும் கோவணம் என்பது ஐந்தலை அரவினைக் கோவணமாகக் கொண்டமை குறித்தது. ***பூதப்படை*** - பூதகணமாகிய சேனைத்திரள்; ***எனையுடையான்*** - தமது திருவுள்ள நிகழ்வதற்கு ஆளாக

என்னை ஏற்றுக்கொண்டவன்: (2) இப்பாட்டு ஒன்றுமுதல் எட்டுவரை ஏறிவரும் எண்ணலங்காரம். ஈறாய் முதல் ஒன்றாய் - ஈறு - சங்கார காரணன்; முதல் ஒன்று - உலகுயிர்களைத் தன்னுள் ஒடுக்கி மீள உளவாக்கும் முதல்வன்: ஆய் - என முன் வருபவை இறைவன் உலகுயிர்களேயாய் நிற்கு முறைமையினையும்: வேறாய் - இறைவன் அவற்றினின்றும் வேறாய் நிற்கும் முறைமையினையும்: உடன்ஆனான் - இவ்வாறு ஒன்றாயும் வேறாயும் இருப்பினும் அதுவோமையாது அவற்றோடு உடனாகிக் கலந்துநிற்கும் முறைமையினையும் உணர்த்தின: இம்மூன்று நிலைகளை அவையே(யாய்): தானே(யாய்); அவையே தானேயாய் என மூன்று படியாகச் சிவஞானபோதம் இரண்டாஞ் சூத்திரத்தினுள் உணர்த்தப்பட்டன: "ஈறாகி வேறாய் உடனாயிருக்கும் உருவுடைமை" (களிறு - 86) "உலகெலா மாகி வேறா யுடனுமாய்" (சித்தியார்): இவை சைவசித்தாந்தத்தினன்றிப் பேசப்படாத தனிச்சிறப்புடைய பெரிய உண்மைகளாம். இத்திருப்பாட்டுச் சைவத்தின் உயிர் நாடி என்னத்தகும் பெருமையுடையது. தானாய் - தான் என்பது முன் பேசிய நிலைகள் ஒரு தன்மையுடையன என்று காட்டி, அவற்றைப் பின்வரும் தன்மையினின்றும் பிரித்துக்காட்டியது; ஆனான் - ஆக்கச்சொல் பொருட்டன்மை குறித்தமட்டில் நின்றது:- (3) வம்மின்...கோயில் - அடியார் கூட்டத்துடன்கூடி வழிபடுதலின் சிறப்புக் கூறியது; உம்அன்பினொடு எம் அன்புசெய்து மலரிட்டுத் தொழுதுய்ய அடியீர் வம்மின் என்க. மும்மென்று - ஒலிக்குறிப்பு; விம்மும் - மிகும்;-(4) பண் - பண்வகை; பதம் ஏழு - ஏழிசை; பல ஓசைத் தமிழ் - மற்றும் பல பாகுபாடுகளை உடைய இசைத்தமிழ்; உள்நின்றதொர் சுவை - இசைச்சுவை; தாளம் - தாளவகை; பாணி; இவை இசைப் பாகுபாடுகள்; மண்ணும்-விண்ணும் - இறைவனது அட்ட மூர்த்தம்; சுடர்மூன்று - சூரியன் சந்திரன் அக்கினி;- (5) ஆயாதன - தெளிந்த ஆய்வில்லாத; சமயம்பல அறியாத அந்நெறி - பல சமயங்களாலும் அறியப்படாத அந்தச் சிவநெறி; தாய் - மூலம்; தங்குமிடம்; தலை - தலைவன்;- (6) திரிபுர மெரித்த வரலாறு; எரி - வாயாகவும், காற்று (வாயு) - ஈர்க்காகவும்; அரி - கோலாகவும், உள்ள அம்பு; நாண் - வாசுகி நாண்; கல் - மேரு;-(7) கரத்தான்மலி சிரத்தான் - கையினாற் சிரங் கொய்தான்; கபாலத்தை ஏந்திய கையான்; படம் - போர்வை; மூவர் - திரிபுரத்திலிருந்த அன்பர் மூவர்;- (8) முன் - முன்னாக எதிர்த்து; பேர் - இராவணனெனும் பெயர்; "இராவணனென் றவனைப்பே ரியம்பக் கொண்டார்" (தாண்); (10) மசங்கல் - மயங்கல் - மயக்கம்; இசங்கும் இயங்கும்; கூடிய; கிளிகளும் மஞ்ஞைகளும் பகலோன் ஒளிகொண்டெழு விசும்பைப் பொலிவுசெய்யத் தரும் - செய்தற்கிடமாகிய - பொழில்கள்;- (11) யாழின்இசை - சிறப்புப்பற்றி யாழினை எடுத்துக்கூறினார்; ஊழின் மலிவினை - மூல கன்மம்; உயர் வான் - சிவனுலகம்.

2444. பொருளுரை- நீடிய-எழுந்தே - நீடிய பெரிய அன்பு உருகுதலால் நெஞ்சினுள் எல்லாம் அலையச்செய்யத் திருமுன்பு நேர்நின்று பாடியும் எதிரிலே ஆனந்தக்கூத்தாடியும் துதித்தும் பணிந்தும் எழுந்து; ஆடிய...உட்கொண்டு - அருட்பெருங்கூத்து ஆடிய

2444. நீடியபே ரன்புருகி யுள்ளலைப்ப நேர்நின்று
பாடியெதி ராடிப் பரவிப் பணிந்தெழுந்தே
யாடிய சேவடிக ளார்வமுற வுட்கொண்டு
மாடுயர் கோயிற் புறத்தரிது வந்தணைந்தார். **546**

திருவடிகளை அன்புபொருந்தத் திருமனத்துட் கொண்டவராகி; மாடுயர்...வந்தணைந்தார் - உயர்ந்த திருக்கோயிலின் வெளியே பக்கத்தில் அரிதாக வந்து அணைந்தனர். (பிள்ளையாரும் அரசுகளும்).

விளக்கவுரை... **நீடிய** - முன் பாட்டில் **"நீடினார்"** என்றபடி நீடிய; **நீடுதல்** - காலத்தாலும் செறிவினாலும் மிகுதல்.

உள் அலைப்ப - முன் பாட்டில் கூறியது ஆனந்த வெள்ளத்தில் நின்றலைந்த தாகிய புறநிகழ்ச்சிகள்; இங்குக் குறித்தது அன்பு உருகி உள்ளே அலைத்தலாகிய அகநிகழ்ச்சி.

நேர்நின்று - **திருமுன்புநின்று** என்றும், அலைப்பவும் அலைவுபடாமல் செந்நின்று (ஒன்றியிருந்து) என்றும் உரைக்கநின்றது.

பாடி பரவி - **பாடி** - கீத விசை பாடி; **பரவி** - உரையினாற் றுதித்து; முன் பாட்டிற் கூறிய **மிகப்பாடி** என்பது பதிகம் பாடுதலைக் குறித்தமையின் இங்குப் பாடி என்றது கீதப் பாட்டு.

உட்கொண்டு - வெளியே கண்டுவைத்தபடியே திருமனத்தினுள் தங்கக் கொண்டு.

உயர்கோயில் மாடுபுறத்து என்க. **அரிது** - அரிதாக; நீங்கா நிலைமையில்; **அணைந்தார்** - பிள்ளையாரும் அரசுகளும் (2441 பார்க்க). 546

2445. **பொருளுரை...** வந்தணைந்து வாழ்ந்து - அவ்வாறு வந்து அணைந்து வாழ்வுபெற்று; மதிற்புறத்தோர்...சேர்ந்தருள - திருமதிலின்புறத்திலே ஒரு பெருமடத்தின்கண் செந்தமிழின் சொல்வேந்தராகிய அரசுகளும் செய்தவர்களாகிய திருத்தொண்டர்களும் சேர்ந்தருளியிருப்ப; சந்தமணி...மடத்தமர்ந்தார் - சீகாழியில் வந்தருளிய அந்தணர் பெருமானாகிய பிள்ளையார் அழகிய மணிகளையுடைய திருக்கோபுரத்தினைச் சார்ந்த வடபக்கத்தில் அங்கு ஒரு திருமடத்தின்கண் விரும்பி எழுந்தருளினார்.

விளக்கவுரை... வாழ்ந்து - வழிபாட்டினாற்பெற்ற பேறாகிய வாழ்வினைப் பெற்றார்களாகி.

ஓர் மாமடம் சேர்ந்தருள - ஓர் மடத்தமர்ந்தார் - சொல்வேந்தரும் செய்தவரும் மதிற்புறத்தோர் மாமடத்துச் சேர்ந்தருளச், சண்பை அந்தணர் சூளாமணியார் கோபுரத்துச் சார்ந்த வடபாலின் ஓர் மடத்தமர்ந்தார் என்று இப்பாட்டின் கருத்துரைத்துக் கொள்க;

2445. வந்தணைந்து வாழ்ந்து, மதிற்புறத்தோர் மாமடத்துச்
செந்தமிழ்ச்சொல் வேந்தருஞ் செய்தவருஞ் சேர்ந்தருளச்,
சந்தமணிக் கோபுரத்துச் சார்ந்தவட பாற்சண்பை
யந்தணர்சூ ளாமணியா ரங்கோர் மடத்தமர்ந்தார். 547

இந்த இரண்டு திருமடங்களும் திருக்கோயிலின் வடக்கு மடவளாக வீதியில் முறையே மேற்கிலும் கிழக்கிலுமாக அமைந்துள்ளன: சிறு கோயில்களாகக் கட்டப்பட்டு அவற்றுள் அவ்வந் நாயன்மார்களுடைய திருவுருவங்களும் வைத்து வழி படப்பெறுகின்றன. திருமடங்களின் படங்கள் III தொகுதியில் வெளிவந்துள்ளன. இன்றும் அவையிரண்டும் பொலிவுடன் விளங்குகின்றன

அரசுகளும் அடியார்களும் திருமடம் சேர்ந்த பின்னர்ப் பிள்ளையார் ஓர் மடத்தமர்ந்தார் என்றது சிறப்பும் தலைமையும் இருவருடைய யாத்திரையின் நியமமும் பற்றிய முறை; 2426 - 2427 பார்க்க. அங்குக் கூறிய முறையே அரசுகள் அடியார் திருக்கூட்டத்துடன் மாமடத்தில் எழுந்தருளப், பிள்ளையார் பரிசனங்களுடன் தனிப்பெருமடத்தமர்ந்தருளினார்.

சந்தமணிக் கோபுரம் - திருமுன்பு நேர்கிழக்கில் உள்ள பெரிய திருக்கோபுரம். சந்தமணி என்ற அடைமொழிகள் இச்சிறப்புக் குறித்தன.

அந்தணர் சூளாமணியார் - அந்தணர்களின் தலைவர்; சூளாமணி - சிரோமணி.

ஓர் மாமடம் - ஓர் மடம் - இரு திருமடங்களும ஒன்றுபோல ஒப்பற்ற தனிப் பெருமையுடையன என்பார் ஈரிடத்தும் ஓர் என்ற அடைமொழி தந்தோதினார்; ஒப்பற்ற சிறப்பாவது - திருவருளாற் பெறும் காசினால் அடியார்களுக்குப் பன்னாளும் திருவமுதூட்டும் பேரறம் நிகழ்தற்கிடனாதல்; மாமடம் என முன்னையதனை மேலும் சிறப்பித்தது பிற்சரித நிகழ்ச்சியில் தொண்டர்கள் அரசுகளது திருமடத்தில் நாட்கூறு திருவமுது செய்தமையும், பிள்ளையார் திருமடத்தில் அவ்வாறன்றிக் காலந் தாழ்த்துப் பின்னர்த் திருவருளால் நேர்பட நிகழ நின்றமையுமாகிய அருட்செயல்களின் குறிப்பு. 2465-2468 பார்க்க. செய்தவரும் என்றதும் இக்குறிப்புப்பட நின்றமை காண்க. 547

2446. பொருளுரை... அங்கண் அமர்வார் - அங்கு விரும்பி எழுந்தருளுவாராகி; அரனார்... காதலினால் - சிவபெருமான் றிருவடிகளின் கீழ்ப் பொருந்திக் கிடந்த பெரு விருப்பத்தினாலே; காலங்கள் தப்பாமே - பூசைக்குரிய காலங்கள் ஒவ்வொன்றினும் தவிராமல்; பொங்குபுகழ்... போற்றிசைத்தே - பொங்கும் புகழினையுடைய வாகீசத் திருவடிகளும் உடனே கூடச்சென்று வழிபட்டுத் துதித்தருளி; எங்கும் அமர்கின்றார் - எங்கும் துன்பம் தீர்ப்பாராய் இன்பமுடன் விரும்பி எழுந்தருள்கின்றாராயினார்.

விளக்கவுரை... அங்கண் - அத் திருமடத்தில் என்றும், அத்திருநகரில் என்றும் உரைக்கநின்றது.

2446. அங்க ணமர்வா ரரனா ரடியிணைக்கீழ்த்
தங்கிய காதலினாற் காலங்க டப்பாமே
பொங்குபுகழ் வாகீச ருங்கூடப் போற்றிசைத்தே
யெங்கு மிடர்தீர்ப்பா ரின்புற் றமர்கின்றார். 548

அமர்வார் - முன் பாட்டில் "அமர்ந்தார்" என்று கூறியபடி அமர்ந்தாராய் - அமர்வார் - இடர்தீர்ப்பார் - அமர்கின்றார் என்று கூட்டுக.

அடியிணைக்கீழ்த் தங்கிய - கீழ் *- திருவடி என்பது திருவருள் நிறைவு;* ***கீழ்த் தங்குதல்*** *- திருவடி வியாபகத்துள் வியாப்பியமாக அடங்குதல்; "தருவா யெனக்குன் றிருவடிக் கீழோர் தலைமறைவே" (தேவா).* ***கீழ்*** *என்றதனால் திருவடியைத் தலையாகக் கொண்ட நிலைக்குறிப்பு;* ***தங்கிய*** *- பிறழாது எஞ்ஞான்றும் தங்கிக் கிடந்த;*

காலங்கள் தப்பாமே *- காலங்கள் - பரார்த்த பூசையின் வழிபாட்டுக்குரிய காலங்கள்; இவை அவ்வத்திருக்கோயில்களின் முறைகளின்படி ஒன்று, இரண்டு, மூன்று, நான்கு, ஆறு என்பனவாகக் கொள்ளப்படும்;* ***காலங்களில் வழிபடுதல் பெரும்பயன் தருவதென்பது சிவாகமங்களின் துணிபு;*** *"காலமெல்லாம் துதித்திறைஞ்சி" (2062) என்றதும் பிறவும் காண்க.* ***தப்பாமே*** *- ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு காலமும் சென்று வழிபட்டனர்; ஓராண்டிற் பல மாதங்களுள் ஒரு மாதம், ஒரு மாதத்திற் பல நாட்களில் ஒருநாள், ஒருநாளிற் பலகாலங்களில் ஒரு காலந்தானும் உரியவாறு சென்று வழிபடும் நியமமில்லாத இந்நாளின் சைவ உலகம் இதனைக் கண்டு தெளிந்துய்வதாக.*

பொங்குதல் *- மேன்மேலும் அதிகரித்தல்; இப்பதியினுள் நிகழ உள்ள சரித விளைவுக் குறிப்பு.*

கூட *என்பதனை* ***இடர்தீர்ப்பார்*** *என்பதனுடனும்,* ***அமர்கின்றார்*** *என்பதனுடனும் கூட்டுக.*

எங்கும் இடர்தீர்ப்பார் *- பிற்சரித விளைவுக்குறிப்பு. "கூடிய கூட்டத்தி னாலுள தாய்த்திக் குவலயமே" (80-ஆ.பி. திருவந்) என்று இவ்விரு பெருமக்கள் இங்குக் கூடிய கூட்டத்தினால் இவ்வுலகம் (சைவத் தொண்டினுலகம்) இன்றும் நிகழ்வதாயிற்றென் றருளினார் நம்பியாண்டார் நம்பிகள்;* ***இடர்*** *- பசித்துன்பத்தினை முன்வைத்துப் பிறவிப் பிணியுமுள்ளிட்ட எவ்வகை யிடர்களும்;* ***எங்கும்*** *- இப்பதியினன்றி இனி இவ்விரு பெருமக்களும் உடனே சென்று திருமறைக்காட்டில் நிகழ்த்திய வரலாறும் குறிப்பு.*

தீர்ப்பார் *- தீர்ப்பாராகி; முற்றெச்சம்.*

2443 முதல் 2446 வரை பாட்டுக்கள் அந்தாதித் தொடையாக அமைந்தமை காண்க.

இன்புற்றுறைகின்றார் *- என்பதும் பாடம்.* *548*

2447. ஓங்குபுனற் பேணு பெருந்துறையு முள்ளிட்ட
பாங்கார் திலதைப் பதிமுத்த மும்பணிந்து
வீங்கொலிநீர் வீழி மிழலையினில் மீண்டுமணைந்
தாங்கினிது கும்பிட் டமர்ந்தொழுகு மந்நாளில்; 549

2447. பொருளுரை- ஓங்குபுனல்... பணிந்து - பெருகும் நீர்வளமுடைய திருப்பேணு பெருந்துறையினையும் அதனை உள்ளிட்ட தாய்ப் பக்கத்தில் உள்ள திலதைப்பதி முத்தத்தினையும் சென்று வணங்கி; வீங்கொலி - அந்நாளில் - பெருகுகின்ற ஒலியுடைய நீர்சூழ்ந்த திருவீழிமிழலையினில் மீண்டும் எழுந்தருளி அங்கு இனிதாகக் கும்பிட்டு விருப்பத்துடன் இவ்வாறு ஒழுகிவரும் அக்காலத்தில்.

விளக்கவுரை- **ஓங்குபுனல் பேணுபெருந்துறை - புனல்** - அரிசில் ஆற்றின் நீர்ச் சிறப்புக் குறித்தது: "தழையார் மாவின் றாழ்கனி யுந்தித் தண்ணரி சில்புடை சூழ்ந்த, குழையார் சோலை மென்னடை யன்னங் கூடு பெருந்துறை யாரே" (தக்கரா-7); **ஓங்குதல்** - வளங்களால் மிகுதல்: "முள்வாய் தாளின் றாமரை மொட்டின் முகமல ரக்கயல்பாயக், கள்வாய்நீலங் கண்மல ரேய்க்குங் காமர் பெருந் துறை யாரே" (மேற்படி 9) என்ற தேவாரக் குறிப்புக்கள் காண்க.

பேணுபெருந்துறை - பதியின் பெயர்; திருவாதவூரடிகளுக்கு இறைவர் அருள்புரிந்த திருப்பெருந்துறை வேறு; அது பாண்டிநாட்டில் உள்ளது; இப்போது தஞ்சாவூர்ச் சில்லாவைச் சார்ந்த ஆவுடையார் கோயில் என்று வழங்கப்படுகிறது; அதினின்றும் வேறு பிரித்துணர்தற்கு இது "பேணுபெருந்துறை" என வழங்கப்படும்; "பேணுபெருந்துறையாரே" (1-6) என்ற பதிகமும் காண்க; இக்கருத்துணராது **ஓங்குபுனற் பேணும்** - மிகுநீர்வளங் காரணமாகப் பலரும் பேணும் என்றுரை கூறுவாருமுண்டு. **பேணுதல்** - இறைவர் விரும்பி எழுந்தருளியிருத்தல்.

பேணு பெருந்துறையும் உள்ளிட்ட திலதைப்பதிமுத்தமும் பணிந்து - திருவீழிமிழலையின் மேற்கில் 10 நாழிகையளவில் (64-வது தலம்) திருப்பேணு பெருந்துறையும், கிழக்கில் 6 நாழிகையளவில் (58-வது தலம்) திருத்திலதைப்பதிமுத்தமும் உள்ளன. பிள்ளையார் திருவீழிமிழலையின்கண் அமர்ந்த நாட்களில் மேற்கில் திருப்பேணு பெருந்துறையும் கிழக்கில் திருத்திலதைப் பதிமுத்தமும் எல்லை அளவாகக் கொண்டு சென்று மீண்டருளினார்கள் என்பது குறிக்க **உள்ளிட்ட** என்றார்.

வீங்கொலி நீர் - வடக்கில் முத்தியாறும், தெற்கில் அரிசிலாறுமாக ஓடிக் கிழக்கில் அணிமையில் கூட உள்ளமையால் **வீங்கொலிநீர்** என்றார்; **வீங்குதல்** - மிகுதல்.

மீண்டும் அணைந்து - அத்தலங்களில் அமர்ந்து தங்காது மிழலையினில் மீண்டும் அணைந்தருளினர் என்பது.

வேறு

2448. சேணுயர் மாடப் புகலியுள்ளார் திருஞான சம்பந்தப் பிள்ளையாரைக்
காணும் விருப்பிற் பெருகுமாசை கைம்மிகு காதல் கரையிகப்பப்
பூணு மனத்தொடு, தோணிமேவும் பொருவிடை யார்மலர்ப் பாதம்போற்றி
வேணு புரத்தை யகன்றுபோந்து வீழி மிழலையில் வந்தணைந்தார். 550

ஆங்கு - திருவீழிமிழலைப்பதியினில்; பாங்கு - பக்கம்; சென்று மீண்டும் வருதற்குரிய அணிமை.

இனிது-அந்நாளில் *- முன் பாட்டிற் கூறியபடி நியதியாக விரும்பி வழிபட்டு வந்தனர்; அக்காலத்தில், அந்நாளில் - புகலியுள்ளார் - வீழிமிழலையினில் - வந்தணைந்தனர் என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.*

உறையுமந் நாளில் *- என்பதும் பாடம்.* 549

2448. பொருளுரை... சேணுயர் மாடப்புகலியுள்ளார் - வானில் உயர்ந்த மாடங்களையுடைய சீகாழியில் வாழும் அந்தணர்கள்; திருஞானசம்பந்தப் பிள்ளையாரை-மனத்தொடு - திருஞானசம்பந்தப்பிள்ளையாரைச் சென்று காணவேண்டுமென்னும் விருப்பினாலே பெருகுகின்ற ஆசை உள்ளம்பற்றி அதிகரித்தலால் உளதாகும் பெரு விருப்பம் கரைகடந்து செல்லப் பூண்டுகொண்ட மனத்தினோடு; தோணி மேவும்- போற்றி - திருத்தோணியில் எழுந்தருளிய பொருவிடையவருடைய மலரடிகளை வணங்கி விடைபெற்று; வேணுபுரத்தை.... அணைந்தார் - சீகாழியை நீங்கிச்சென்று திருவீழிமிழலையினில் வந்து அணைந்தார்கள்.

விளக்கவுரை... *இத்திருப்பாட்டு முதல் 2459 வரை புகலியந்தணர் வந்து விரும்பிய செய்திபற்றி இறைவரது திருவருள்பெற்றுப் போற்றிய "மைம்மரு பூங்குழல்" என்ற திருப்பதிகத்தினையே ஆசிரியர் திருவுள்ளங்கொண்டு அந்த யாப்பின் சந்தத்தில் சரித வரலாறு அருளிச்செய்யும் கவிமாண்பும் நயமும் காண்க.*

சேண் *- விசும்பு; "சேண் மகபதிக்கு நல்கி" (கந்தபுரா).*

சேணுயர் மாடம் *- விண்ணுலகத்தை உயர்த்தும் - உயரத்தாங்கும் - உய்விக்கும் - தன்மையுடைய மாடங்கள் என்ற குறிப்பும் காண்க. "தவளந்நெடு மாடம் விண்டாங்குவ போலும்மிகு வேணுபுரம்" (தேவா).*

விருப்பு - ஆசை - காதல் *- விருப்பம் மிகும்நிலை ஆசை எனவும், அது செறிவு கொண்டு மேலெழுகின்ற நிலை* ***காதல்*** *எனவும்படும். இதனைப்* ***பெருகும்*** *(ஆசை),* ***கைம்மிகு*** *(காதல்) என்ற அடைமொழிகளாலுணர்த்தியருளிய திறம் காண்க. பலநாட் பிரிந்த தமது பிள்ளையாரைக் காணும் எண்ணம் விருப்பமாய் முளைத்தது; பின் அது ஆசையாய்ப் பெருகிற்று; பின் அது காதலாய் விளைந்தது.*

பூணும் மனத்தொடு - அவ்வாறு முற்றி விளைந்த காதற் கருத்தினைக்கொண்ட மனத்தோடும்; **பூணும்** - அந்நிகழ்ச்சி வெளிப்படப் புறத்திற் றோன்றும்படி மேற்கொண்ட.

தோணிமேவும் போற்றி - பிள்ளையாருக்கு ஞானங்கொடுத்து விடுத்த நாயகராதலின் தோணியப்பரைத் தொழுது விடைபெற்றுப் போந்தனர்; அவரே பின்னர்ப் பிள்ளையாருக்கு இந்தக் கனவிலும் நனவிலும் காட்சி தந்தருளும் வரலாறும் கருதுக. (2451-2457).

கரை இருப்ப - கரைகாணாது கடந்துபெருக.

கைமிகுதல் - **கை** - இடைச்சொல்: கைகூடும் என்புழிப்போல;

வேணுபுரத்தை அகன்று - போந்து - வீழிமிழலையில் வந்தணைந்தார் - இவர்கள் செல்லும்போது இடையில் எதிர்ப்பட்ட பதிகளில் தங்கி வழிபட்டுவந்த நிலைகளைக் கூறாது அங்கு அகன்றதும் இங்கு அணைந்ததும் உடனிகழ்ச்சியாகிய செயல்கள் போலக் கூறியது அவர்கள் போந்துவந்து அணைந்த காதலின் விரைவு குறித்தற்கு. 550

திருப்பேணுபெருந்துறை

திருச்சிற்றம்பலம் — **பண் - தக்கராகம் - 1-ம் திருமுறை**

பைம்மா நாகம் பன்மலர் கொன்றை பன்றிவெண் கொம்பொன்று பூண்டு
செம்மாந் தையம் பெய்கென்று சொல்லிச் செய்தொழில் பேணியோர் செல்வர்
அம்மா னோக்கிய வந்தளிர் மேனி யரிவையோர் பாக மமர்ந்த
பெம்மா னல்கிய தொல்புக ழாளர் பேணு பெருந்தகை யாரே. (1)

கடையார் மாட நன்கெழு வீதிக் கழுமல வூரன் கலந்து
நடையா ரின்சொன் ஞானசம் பந்த னல்ல பெருந்துறை மேய
படையார் சூலம் வல்லவன் பாதம் பரவிய பத்திவை வல்லார்
உடையா ராகி யுள்ளமு மொன்றி யுலகினின் மன்னுவர் தாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- நாகம் கொன்றை முதலியவற்றைப் பூண்டு செய்தொழில் பேணியோர் செல்வர், மூவருமாகி யிருவருமாகி முதல்வனுமாய் நின்றமூர்த்தி, தேவர்கடேவர், எம்பெருமானார் என்பவை முதலாகிய தன்மைகளாலறியப்படும் இறைவர் திருப்பேணு பெருந்துறையாரே யாவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **பை** - நச்சுப்பை; **பன்மலர்** - தும்பை எருக்கு முதலாயின; **செம்மாந்து** - களித்து; **செய்தொழில்** - தமது அருட்டொழில்; **அம்மான்** - அழகிய மான்போல; **நல்கிய** - அருள்புரிந்த; **தொல்புகழாளர்** - **தொல்புகழ்** - "பொருள்சேர் புகழ்" (குறள் - பரிமே. உரை); பெம்மானால் அருள்பெற்ற புகழினைஉடைய பெரியோர் வாழ்வதற்கிடமாகிய என்றலுமாம். (2) **மூவர்** - அயன் அரி அரன்; **இருவர்** - சத்திசிவம்; மூவருமாகி - சிவன் சதாசிவன் மகேசன் என்னும் சுதந்திரவடிவ மூவருமாகி; இருவருமாகி - அரி பிரமன் என்னும் அணுபக்கத்து இருவருமாகி என்றலும் பொருந்தும். **முதல்வன்** -

பரசிவன்; **மூர்த்தி** - வடிவுடையவன். **சாவம்** - வில் - (சாபம்); **வரை** - மேருமலை; **தண்** - எரிக்குமாறுபட்ட என்ற பொருளில் வந்தது; வானிற் பறத்தலால் நிழல்செய்த என்றலுமாம்; **தீதில்** - தீமையை இல்லையாகச் செய்த; (3) **செய்பூங் கொன்றை; கூவிளமாலை** - மாலையாகச் செய்ததுபோன்ற கொன்றையுடன் மாலையாகச்செய்த கூவிளமும்; **கைபோல்** - யானைத் துதிக்கைபோன்ற; "கருங்கதலிப் பெருங்குலைகள் களிற்றுக்கை முகங்காட்ட" (1271); "வாங்குகை யானையென ஈன் குலைவாழை" (திருப்புகழ்); வாழைக் குலையில் கமுகங் காய் குலை கொண்டு ஈன; இரண்டும் ஒருயர்ச்சி யுடையன என்பது; **(4) நலனொடு நீங்கும் தானலதின்றி** - நன்மையும் தீமையும் இறைவர்தாமேயன்றி வேறில்லை என்ற துணிபுகொண்டு; **மலன்** - மூலமலம்; **மாசு** - கன்மமலம்; (5) **துணியார்-சுமடர்கள்** - நன்மையிற் றுணிபுகொள்ளாத கயவர்கள்; (7) **விழைஆர்** - விழைதல் - விருப்பம் - நிறைந்த; **தாழ்கனி** - கீழே தூங்கிவீழ்கின்ற; (9) **அல்லி** - பொகுட்டு; **முள்வாய்தாள்** - முட்கள் வாய்ந்த - பொருந்திய - தாள் - "முட்டாட் டாமரை"; **ஏய்க்கும்** - ஒக்கும்; (11) **மிண்டுசெயாது விரும்பும்** - வெறுப்புக் கொண்டுவிடாது விருப்பம் கொள்ளும்.

தலவிசேடம்:- **திருப்பேணுபெருந்துறை** - காவிரித் தென்கரை 64-வது தலம். **திருப்பத்துறை** என வழங்கும். அம்மை, முருகர், பிரமதேவன் முதலியோர் பூசித்தது; சுவாமி - **சிவானந்தர்;** அம்மை - **மலையரசி;** தீர்த்தம் - **மங்கள தீர்த்தம்;** மரம் - வன்னி; பதிகம் 1. கும்பகோணத்தினின்றும் தெற்கே நீடாமங்கலம் கற்சாலையில் 2 நாழிகையில் சாக்கோட்டையினையும், பின் தென்கிழக்கில் 4½ நாழிகையில் திருஅரிசிற்கரைப் புத்தூரையும், பின்னரும் தென்கிழக்கே 2 நாழிகையில் நறையூர்ச் சித்தீச்சரத்தையும் கடந்து கிழக்கே 2 நாழிகையளவில் உள்ளது; திருவீழிமிழலையினின்றும் மேற்கே மட்சாலை வழி ஐந்தரை நாழிகையளவில் அடைவது மற்றொரு வழி; இவ்வழியே பிள்ளையார் சென்றருளியது.

திருத்திலதைப்பதி மதிமுத்தம்

திருச்சிற்றம்பலம் — **பண் - செவ்வழி - 2-ம் திருமுறை**

பொடிகள் பூசிப்பல தொண்டர்கூ டிப்புலர் காலையே
அடிகளா ரத்தொழு தேத்த நின்றவழ கன்னிடம்
கொடிகளோங் கிக்குல வும்விழ வார்தில தைப்பதி
வடிகொள்சோ லைம்மலர் மணங்கம ழும்மதி முத்தமே. (1)

மந்தமா ரும்பொழில் சூழ்தில தைம்மதி முத்தர்மேல்
கந்தமா ருங்கடற் காழியு ளான்றமிழ் ஞானசம்
பந்தன்மா லைபழி தீரநின் றேத்தவல் லார்கள்போய்ச்
சிந்தைசெய் வார்சிவன் சேவடி சேர்வது திண்ணமே. (11)

திருச்சிற்றம்பலம்

2449. "ஊழி முடிவி லுயர்ந்தவெள்ளத் தோங்கிய காழி யுயர்பதியில்
வாழி மறையவர் தாங்களெல்லாம் வந்து மருங்கணைந் தார்க"ளென்ன
வீழி மிழலையின் வேதியர்கள் கேட்டுமெய்ஞ் ஞானமுண் டாரைமுன்னா
ஏழிசைசூழ்மறையோரை யெய்தியெதிர் கொண்முறைமையிற் கொண்டுபுக்கார். 551

பதிகக் குறிப்பு:- அழகன் இடம் திலதைப்பதி மதிமுத்தமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- பொடிகள் - திருநீறு; பலதொண்டர் - காபாலம் - பாசுபதம் முதலிய பலவேடச் சைவர்; **அழகன்** *- அழகுக்கெல்லா மிருப்பிடமானவன் - சிவன்;* **கொடிகள் ஓங்குதல்** *- விழாக்களின் சிறப்பு;* **மதிமுத்தம்** *- கோயிலின் பெயர்; (2)* **புகை** *- தூபம்;* **துணையல்** *- மாலை;* **குறிப்புணர** *- இறைவர் தமது திருவுள்ளக் குறிப்பினை அறியும்படி; "குறிப்பறி முருகன் செய் கோலம்" (தேவா); (5)* **புரவி தேரினான்** *- சூரியன்;* **வழிபாடு** *- பூசை; இப்பதியிற் சூரியன் பூசித்தமை குறிப்பு; (8)* **பூகம்** *- கமுகு.*

தலவிசேடம்:- **திருத்திலதைப்பதி மதிமுத்தம்** *- காவிரித் தென்கரை 58-வது பதி; இராம விலக்குவர் தந்தைக்குத் திலதர்ப்பணம் செய்த பதியாதலின்* **திலதைப்பதி** *என்றும், சந்திரன் பூசித்துப் பேறுபெற்றமையால்* **மதிமுத்தம்** *என்றும் பெயர் எய்தியது; எழுத்துநிலை மாறிச்* **சிதலைப்பதி** *என வழங்குகிறது; சூரியன் பூசித்தமை "புரவியே ழும்பணி பூண்டியங் குங்கொடித் தேரினான், பரவிநின் றுவழி பாடுசெய்யும்பர மேட்டியூர்" (5) என்றதனால் அறியப்படும்; இங்குத் தென்புலத்தாரைக் குறித்து நீர்க்கடன் முதலியன செய்வோர் பெரும்பலன் பெறுவர்; சுவாமி - முத்தேசர்; "மதிமுத்தர்"; பதிகம் 11. அம்மை - பொற்கொடிநாயகி; தீர்த்தம் - சந்திரதீர்த்தம்; மரம் - மந்தாரம்; பதிகம் 1. இது பூந்தோட்டம் நிலையத்தினின்றும் மேற்கே மட்சாலையில் ஒரு நாழிகையில் அரிசொலாற்றின் தென்கரையில் உள்ளது. பேரளம் நிலயத்துக்குத் தென்மேற்கு 3¾ நாழிகை.*

2449. பொருளுரை- ஊழி.... என்ன - ஊழியில் பெருகும்நீர் வெள்ளத்தில் ஆழாது மிதந்த சீகாழியில் வாழ்வையுடைய மறையோர்களெல்லாரும் வந்து தமது பதியின் பக்கத்திற் போந்து அணைந்தார்கள் என்று; வீழிமிழலையின் வேதியர்கள் கேட்டு - திருவீழிமிழலையில் வாழும் மறையோர்கள் கேள்வியுற்று; மெய்ஞ்ஞானமுண்டாரை... புக்கார் - மெய்ஞ்ஞானபோனக முண்டருளிய பிள்ளையாரை நினைந்து மனத்துட் கொண்டு ஏழிசை சூழும் மறைகளில் வல்ல அந்தச் சீகாழி மறையோர்பாற் சேர்ந்து முறைப்படி எதிர்கொண்டு வரவேற்று அவர்களைத் திருநகரினுள் கொண்டு புகுந்தனர்.

விளக்கவுரை- "ஊழி... அணைந்தார்கள்" என்ன - இது வீழி மறையவர் கேட்ட செய்தி; இவ்வாறு பெரியோர்களது வரவு முதலிய நற்செயல்களை முன்னர் அறிவிக்கப்பெறுதல் அந்நாளின் மரபு. இதுபற்றியே எந்தம் பெருமக்களை அங்கங்கும் அடியவர் கூடி எதிர்கொண்ட செயல்கள் நிகழ்ந்தன என்க.

வேதியர்கள் கேட்டு - ஏனையோரும் கேட்டிருப்பினும் மறையோர்களை உரியபடி எதிர்கொள்ளத்தக்கார் அவர்போன்ற மறையோர்களேயாதலின் வேதியர்கள் கேட்டு என்றார். **"எதிர்கொள் முறைமையில்"** என்றது இக்குறிப்பு. **"ஏழிசை சூழ்மறை யெய்தஓதி"** என்பது பாடமாயின் இக்குறிப்பு விளங்கநிற்றலும் காணப்படும்.

மெய்ஞ்ஞான முண்டாரை முன்னா - எதிர்கொள் முறைமையிற் கொண்டு - **முன்னா** - நினைந்து; இதற்கு இவ்வாறன்றி முதலாகக் கொண்டு என்றுரைப்பது பொருந் தாமையறிக; 2450 பார்க்க. பிள்ளையாரை **முன்னா** - (நினைந்து) எதிர்கொள்ளுதலாவது அவர்களது நிலையினாலன்றிப் பிள்ளையார் சார்புபற்றிய நிலையில் அவர்களை உட்கொண்டு அதற்குத் தக்கவாறு எதிர்கொண்டு ஒழுகுதல்; நீதிமன்றம், அரசாங்கம், திருத்தலம் முதலியவற்றினின்றும் வருவோரை அவரது தனித்த நிலைபற்றி எண்ணாது அவர் போந்த இடம்பற்றிய சார்புகொண்டு பாராட்டும் மரபு உலகநிலை வழக்கிலும் காணப்படும். பின்னும், இங்கு வந்த வேதியர் சீகாழிப்பதியினின்றும் போந்தனராயினும், அவரைத் தந்நிலையின் நோக்காது அப்பதியின் றொடர்புபற்றிய வகையாற் பாராட்டியமை சிறப்பு; இங்கு மிழலை வேதியர் அவ்வாறுமன்றிப் பிள்ளையாரது தொடர்புடைமையே அவ்வேதியர்பால் அதனினும் மிக்க சிறப்பாம் என்றெண்ணினர் என்பது குறிக்க **ஞானமுண்டாரை முன்னா** என்றார்; சீகாழிப்பதியின் றொடர்பினும் பிள்ளையாரது தொடர்பு அவர்பாற் பெருஞ் சிறப்பாகுமென்பது கருத்து. வந்த அவர்களை மறையவர் என்ற நிலையோடுட்கொள்வது சிறப்பு; சீகாழித் தொடர்புபற்றி எண்ணுவது அதனினுஞ் சிறப்பு; பிள்ளையாரது பெருந் தொடர்பு பற்றி முன்னுவது அதனினும் மேற்பெருஞ் சிறப்பு என்பதாம். காழிமறையோர் அணைந்தார் எனக் கேட்டு ஞானமுண்டாரை முன்னா என்ற கருத்துமிது.

எதிர்கொள் முறைமையிற் கொண்டு - முறைமையாவன மங்கலங்களுடன் மறையோதி எதிர்கொண்டு வணங்குதல், நன்மை மொழிதல் முதலாயின செய்து வரவேற்றல்.

மெய்ஞ்ஞானம் - சிவஞானத் திருமுலைப்பால்; ஞானம் அதனை உடைய அமுதுக்காயிற்று.

ஏழிசை சூழ்மறை - ஏழு இசைகளும் பொருந்த ஓதப்படும் வேதங்கள்; **இசை சூழ்**- என்றது எழுத்தால் எழுதப்படாமல் ஒலியுருவமாக இயங்கி வருதலும் நித்தியமாயிருத்தலும் குறித்துநின்றது. 551

2450. பொருளுரை... சண்பை... எய்தி - சீகாழியினின்றும் போந்த அத்திருமறையவர்களெல்லாரும் (திருக்கோயிலினுட் சென்று) இறைவரை வணங்கிச் சென்று நண்பினாலே பெருகிய பெருவிருப்பம் மிகுந்து திருஞானசம்பந்தப் பிள்ளையாரது திருமடத்திற் சேர்ந்து; **பண்பில்.. பூண்டே** - நற்பண்பினாலே பெருகுகின்ற சீகாழியவர்களுக்குரிமையுடைய பிள்ளையாரது திருவடிகளை வணங்கிச்

2450. சண்பைத் திருமறை யோர்களெல்லாம்
தம்பிரா னாரைப் பணிந்துபோந்து
நண்பிற் பெருகிய காதல்கூர்ந்து
ஞானசம் பந்தர் மடத்திலெய்திப்
பண்பிற் பெருகுங் கழுமலத்தார்
பிள்ளையார் பாதம் பணிந்துபூண்டே
"எண்பெற்ற தோணி புரத்திலெம்மோ
டெழுந்தரு ளப்பெற வேண்டு"மென்றார். 552

சிரமேற்கொண்டு; எண்பெற்ற ...என்றார் - மேன்மை பொருந்திய திருத்தோணிபுரத்தில் எங்களுடனே எழுந்தருளும் பேறு யாங்கள் பெறவேண்டும் என்று விண்ணப்பித்தார்கள்.

விளக்கவுரை... தம்பிரானாரைப் பணிந்து - பிள்ளையாரைக் காணும் பெருவிருப்புடன் வந்தார்களாயினும் முதலில் முறைப்படி இறைவரை வணங்கிக்கொண்டு பின்னரே திருமடத்திற் சேர்கின்ற நியதி காண்க. இதுபோலவே பன்னாட் பிரிந்த சிவபாதவிருதயர் பின்னர்த் திருவாலவாயில் பிள்ளையாரைக் காணச்சென்றபோது முதலில் நேரே ஆலவாயிறைவரை வணங்கிப் பின்னரே திருமடத்தினை வினவிக் கேட்டணையும் வரலாறும் இங்கு நினைவு கூர்க. (2774-2775).

கழுமலத்தார் பிள்ளையார் - சிவபாத விருதயருக்கேயன்றிக் கழுமலத்திலுள்ளார் யாவருக்கும் உரிமையுடையாராகக் கொண்டாடப்பெறும் பிள்ளையார்; 1925-1926 முதலியவை பார்க்க. இவ்வாறன்றிக் **கழுமலத்தார்** என்றதனைச் சுட்டுமாத்திரையாய்ச் சண்பைத் திருமறையவரை உணர்த்தி நின்றது என்று உரைத்தலுமாம்.

எண்பெறுதல் - யாவராலும் எண்ணப்படுஞ் சிறப்பு. **எண்** - எண்ணுதல். மேன்மையாகக் கருதப்படுதல்.

எம்மோடு எழுந்தருளப்பெறவேண்டும் - எங்களுடனே உடன்வரும் பேறு யாங்கள் பெறவைக்கவேண்டும் என்பது விண்ணப்பிக்கும் மரபு. காணும் விருப்பினால் வந்த மறையவர்கள், ஆராமை மீக்கூரக், கண்ட களிப்புடனமையாது, பிள்ளையாரைத் தம்முடனே சீகாழிக்குக் கொண்டு மீள நினைந்தமை, எப்போதும் இடைவிடாது உடனிருக்க விரும்பும் ஆர்வமிகுதி குறித்தது. "விண்ணப்பம்" (2451). **பண்பிற் பெருகும்** என்ற கருத்துமிது. 552

2451. பொருளுரை... என்றவர்... சிவஞானப்பிள்ளையாரும் - என்று அந்த மறையவர்கள் விண்ணப்பம்செய்தபோது, அழிவில்லாத சிவஞானம்பெற்ற பிள்ளையாரும் அதனைக் கேட்டு; நன்றிது... என்றே - இது மிகவும் நல்லதே; ஆனால் திருத்தோணியில் எழுந்தருளிய இறைவரது திருவடிகளை நாம் வணங்குதற்கு, இன்று கழித்து, நாளைத் திருவீழிமிழலை யிறைவரது திருவருளைப் பெற்று நாம் போவதாகும்" என்று சொல்லி; அன்று...முகமளித்தார் - அன்று சீகாழி அந்தணர்களுக்குக் கருணை செய்தருளினர்.

2451. என்றவர் விண்ணப்பஞ் செய்தபோதி லீறில் சிவஞானப் பிள்ளையாரும்
"நன்றிது சாலவுந்; தோணிமேவு நாதர் கழலிணை நாமிறைஞ்ச
இன்று கழித்து மிழலைமேவு மிறைவ ரருள்பெற்றுப் போவ"தென்றே
அன்று புகலி யருமறையோர்க் கருள்செய் தவர்க்கு முகமளித்தார். 553

விளக்கவுரை- ஈறில் சிவஞானப்பிள்ளையாரும், அருள்பெற்றுப் போவதென்றே - ஈறில் சிவஞானம் பெற்றவராதலின் அவ்வாறு உரைத்தருளினார் என்பது குறிப்பு; அருள்பெறுமாறு பின்னிகழ்ச்சிகளின் குறிப்பாக அன்றிரவு கனவிலும், பிற்றை நாள் நனவிலும் உணரப்படுதலும், பிற்சரித நிகழ்ச்சிகள் பாண்டிநாட்டுச் செய்திகள் வரை உலகமுய்ய வரும் பெரும் செயல்களாக நிகழ்வனவாதலும் காண்க; அவை யெல்லாவற்றையும் உள்ளிட்டுப் பிள்ளையார் திருவுள்ளத்தில் திருவருள் உணர்த்தும் குறிப்பு எழுதலால், அந்தணர் விண்ணப்பித்ததற்குப் பிள்ளையார், தாமே ஆம் என்றதால், அன்றென்றாதல் விடை பகராது "இன்றுகழித்து நாளைத் திருவருள்பெற்றுப் போவ" தென்றருளினர் என்க. அவை பின்னர்ச் சீகாழியினின்றும் இவ்வந்தணர்கள் போன்றே பெருங் காதலுடன் சிவபாதவிருதயர் சென்று திருவாலவாயின்கண்ணே காணுமளவும் எல்லையாக நிகழும் தன்மையால் அவையாவும் திருவருளால் நிகழ்வனவாம் எனக் கருதக் காட்டிய திருக்குறிப்பும் காண்க.

நன்றிது சாலவும் - நீங்கள் சொல்லிய இச்செயல் மிக நன்மைதான்; ஆனால் - என்று தாம் அதனை உடன்பட்டே அப்போது உடன்படாத நிலைமையும் உடனே குறித்த மரபும் காண்க. இதுவே பெரியோர் வழக்கு.

இன்று கழித்து - மிழலை இறைவர் அருள்பெற்று - விண்ணப்பித்த அன்றைக்கும் மறுநாளைக்கும் இடையில் திருவருள் வெளிப்பட்டமை குறிக்கொள்க.

அருள்பெற்றுப் போவது - அருள்பெற்றால் அவ்வழிநின்று போதல் நிகழ்வதாகும் என்றபடி.

முகமளித்தார் - அருள்முகம் - அருணோக்கம் - செய்தருளினார்.

முகமளித்தல் - கருணைசெய்தல்; இன்னுரையால் உடன்பட்டு மகிழச்செய்தல்; முகமன் கூறினார் என்றுரைப்பாருமுண்டு; "அலர்முகங் காட்டின புனற் பொய்கை" (2046)

போவனென்றே என்பதும் பாடம். 553

2452. பொருளுரை... மேற்பட்ட.... விருந்தளிப்ப - மேன்மையுடைய திருவீழி மிழலையந்தணர்கள் சீகாழிமேவும் வேதியர்களுக்கு ஆகிய விருந்தமுதினை அளித்திட; பாற்பட்ட.. செல்ல - அவர்கள் அன்பிற்பாற்பட்ட மனத்தினை யுடையவர்களாகி மகிழ்ச்சியடைந்து இறைவரை வழிபட்டுத் துதிக்கும் சீர்பொருந்திய கால எல்லை இனிதுகழிய; திருத்தோணி.. அருள்செய்கின்றார் - திருத்தோணியில் எழுந்தருளிய இறைவர் தாமே மேகத்தின் மிக்க வன்மையுடைய கைகளையுடைய பிள்ளையாருக்குக் கனவினிடத்தே முன்னே காட்சிகொடுத்து நின்று அருளிச்செய்கின்றாராகி.

2452. மேற்பட்ட வந்தணர் சண்பைமேவும்
வேதியர்க் காய விருந்தளிப்பப்
பாற்பட்ட சிந்தைய ராய்மகிழ்ந்து
பரம்பொரு ளாயினார் தமைப்பரவுஞ்
சீர்ப்பட்ட வெல்லை யினிதுசெல்லத்,
திருத்தோணி மேவிய செல்வர்தாமே
கார்ப்பட்ட வண்மைக் கவுணியர்க்குக்
கனவிடை முன்னின் றருள்செய்கின்றார். 554

விளக்கவுரை. மேற்பட்ட **அந்தணர்** - மேற்படுதல் - அன்பொழுக்கங்களால் மேம்படுதல்; இயைபின்மை நீக்கிய விசேடணமாகிய பொருட்டன்மை குறித்தமட்டில் நின்றது; பின்னர்ச் "சண்பை வேதியர்க்கு" என்றமையால் இங்கு மிழலை யந்தணர் என்பது கூறாமாலே யமையுமாதலின் **அந்தணர்** என வாளா கூறினார்.

சண்பை விருந்தளிப்ப - சண்பை மேவும் - சண்பையின் மேவும் எனவும், சண்பையினின்றும் வந்து மேவும் எனவும் இரு பொருளும்பட உரைக்கின்றது; **ஆய விருந்து - ஆய** - உரித்தாகிய; தகுதிக்கேற்ற; **விருந்து** - விருந்தினர்க்காகிப், பின், அவர்க்களிக்கும் அமுது முதலிய உணவுப்பொருள்களுக்காகி வந்தது. இருமடியாகுபெயர்.

பாற்பட்ட சிந்தையர் - அவர்களது அன்பின்வசமாக உட்பட்ட; **பால்** - அன்பின்பான்மை. பாற்படுதல் - ஈடுபடுதல் - வசப்படுதல்.

பரவும் சீர்ப்பட்ட எல்லை இனிது செல்ல - பரவும் சீர்ப்பட்ட எல்லை - வழிபாட்டுக்கு விதித்த பூசாகாலங்களின் அளவு; **இனிது செல்ல** - அவை யாவும் இனியனவாக அவ்வாறே வழிபாட்டின்கண் இனிமையாகக் கழிந்து நீங்கித் திருவத்தயாமமும் பணிமாறிய காலமாக; இறைவரது வழிபாட்டிற் கழியும்காலமே இனிது செல்லும் தவப்பொழுதாகிய காலமென்பதும், ஏனையவை அவப்பொழுதாய்க் கொன்னே செல்லும் காலங்களென்பதும் அறிவோர் துணிபு. இதற்கு முன்உரைகாரர் பிறவாறுரைத்தனர்.

தாமே - தாமாந்தன்மை வெளிப்பட நின்று; **முன்னின்று** - முன்னிலைப்பட்டு வந்து; பிள்ளையார் அறிந்து வேண்டாது தாமே முன்னாக என்ற குறிப்புமாம்.

கனவிடை - திருவத்தயாமத்தின் பின்னரும் வைகறைப்போதின் முன்னரும் பிள்ளையார் துயிலினிடையே கனவவத்தையிடத்து.

முன்னின்று - இடபவாகனம் - உமையிடம் - நீலகண்டம் - பிறைசூடுதல், மான்மழுவேந்தாமை முதலிய திருக்கோலங்காட்டி.

கார்கொண்ட வண்கை - பிள்ளையாரது அருட்கொடையின் அகலம் குறித்தது; அவரது சரிதப்பகுதிகள் எல்லாவற்றினும் வைத்துக் கண்டுகொள்க; "கார்கொண்ட கொடைக் கழறிற்றறிவார்" (தேவா) என்பதற்கு "காரா னிகர்க்க வரியகொடைக்கையார்"

2453. "தோணியி னாமங் கிருந்தவண்ணந்
தூமறை வீழி மிழலைதன்னுட்
சேணுயர் விண்ணின் றிழிந்தவிந்தச்
சீர்கொள் விமானத்துக் காட்டுகின்றோம்;
பேணும் படியா லறிதி"யென்று
பெயர்ந்தருள் செய்யப் பெருந்தவங்கள்
வேணு புரத்தவர் செய்யவந்தார்
விரவும் புளகத் தொடுமுணர்ந்தார். 555

(கழறி-புரா) என ஆசிரியர் உரை விரிப்பதனை இங்கு நினைவுகூர்க. **கார்கொண்ட** - காரினை அடிமைகொண்டு வென்ற என்க. **கார்கொண்ட வண்மை** - வண்மைத் தன்மையினைக் காரானது இங்குநின்றும் கைக்கொள்ளநின்ற என்ற குறிப்புப்பட உரைத்தலுமாம்.

அருள் செய்கின்றார் - அருளிச்செய்வாராய்; முற்றெச்சம்; ***அருள்செய்கின்றார் - என்று*** - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. அருள்செய்தது மேற்பாட்டிற் காண்க.

முன்னருள் காட்டுகின்றார் - என்பதும் பாடம். 554

2453. பொருளுரை... "தோணியில்... அறிதி" என்று - அங்கு (சீகாழியில்)த் தோணியின்கண் இருந்த காட்சியினை இங்குத் தூய மறைவடிவாகிய திருவீழிமிழலையினுள் விண்ணினின்றும் இழிந்த இந்தச் சிறப்புடைய விமானத்தினிடம் காணும்படி காட்டுகின்றோம்; கண்டு வழிபடுமாற்றால் அறிவாயாக" என்று; பெயர்ந்தருள் செய்ய - மறைந்து நீங்கி எழுந்தருள; பெருந்தவங்கள்... உணர்ந்தார் - சீகாழிப்பதியவர்கள் முன்னை அரிய பெருந்தவங்கள் செய்த காரணத்தால் அத்தவப்பயனாக வந்தவதரித்த பிள்ளையார் பொருந்திய மயிர்ப்புளகத்துடனே துயிலுணர்ந்து எழுந்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை... "தோணியில்... அறிதி" என்று - இது இறைவர் பிள்ளையாருக்குக் கனவில் அருளியது.

அங்குத் தோணியில் - இந்த விமானத்து - அகரம், இகரம் ஆகிய சேய்மை அணிமைச் சுட்டுக்கள் இடபேதம்பற்றி அந்தணர்கள் இங்கு வீழியினின்றும் அங்குத் தோணிபுரத்திற்கு எழுந்தருளும்படி பிள்ளையாரை வேண்டிய கருத்துப்பற்றி எழுந்தன; அவ்வாறு வெவ்வேறாகச் சுட்டப்பட நிற்பினும் நாமொருவரே அங்கும் இங்கும் இனி எங்குமாக நின்றருளுபவர் என்று இறைவர் காட்டியருளும் தன்மை எங்கு நிறைவாகிய நிலை குறித்ததும் காண்க. "அங்கிங் கெனாதபடி எங்கும் பிரகாசமா யானந்த பூர்த்தியாகி, யருளொடு நிறைந்த தெது?" (தாயுமானார்). ஆயின், அங்கும் இங்கு நிற்பவர் யாமே என்னாது அங்கிருந்தவண்ணம் இங்குக் காட்டுகின்றோம் என்றருளிய தென்னையோ? எனின், அங்குச் சிவஞான வமுதளித்தருளி எமதுரையை உன்னுரையின்கண்நின்று

வெளிப்படுத்தி உலகுக் கருள்புரிந்தோம்; அதனையே தொடர்ந்து இங்கும். இனி மறைக்காட்டிலும் திருவாலவாயிலும் செய்தருளுவோம்: அதனை இங்குக் காட்டும் காட்சியினா லறிவா யாக என்றபடியாம்: "எனையறியாப் பருவத்தே யெடுத்தாண்ட பெருந்தகை" (2778-2779) என்ற திருவாலவாயினுள்ளும் பிள்ளையார் தம்மை ஆண்ட தோணியப்பரையும் பெரியநாயகியாரையும் வினவும் கருத்துங் காண்க. "யாரொருவ ருள்குவாருள்ளத் துள்ளே யவ்வுருவாய் நிற்கின்ற வருளுந் தோன்றும்" (தேவா).

காட்டுகின்றோம் - அறிதி - எங்கு நிறைவாகிய தன் தன்மையுடன் காட்டக் காண்பதாகிய உயிர்களின் தன்மையும் காட்டியருளியது காண்க. "அறிவிக்கப்படுஞ் சித்துமி வன்றான், அவன்றானே யறியுஞ் சித்து" (சித்தி 11-20).

பேணும்படியால் அறிதி - இக்கருத்தின் உண்மையை அறிந்து பேணி இனி நிகழ்ச்சிகளின் வழிபட்டொழுகுக என்றது குறிப்பு. இவ்வருட் குறிப்புணராதார் தோணியிலிருந்தவண்ணம் இங்குக் காட்டியருளியபடியால் அங்கு விரைந்து அழைத்தவாறு - விரைந்து செல்லக்கடவதென்று கூறியமைகுவர்; ஆனால் அருட்குறிப்புணர்ந்த பிள்ளையார் உணர்ந்தமையால் "விரவிய தானங்க ளெங்குஞ்சென்று விரும்பிய கோலம் பணிந்துபோற்றி, வருவது மேற்கொண்ட காதல்கண்டங் கமர்ந்த வகையிங் களித்தது" என்று தாம் கண்டு மறையோருக்குக் காட்டியருளுகின்றார். உணர்ந்தார் என்ற குறிப்புமது.

பெயர்ந்தருள் செய்ய - முன்னின்ற அக்கோலத்தை மறைத்தெழுந்தருள.

பெருந்தவங்கள்...வந்தார் - சீகாழிப்பதியுடைய பெருமக்கள் செய்த பெருந்தவங் காரணமாக அங்குவந்தவரித்த பிள்ளையார்; "மண்டுதவ மறைக்குலத்தோர் வழிபாட்டி னளித்தருள" (1952).

வேணுபுரத்தவர் - சீகாழியவர் யாவரையும் பொதுவாகவும் சிவபாத விருதயரைச் சிறப்பாகவும் உணர்த்திநின்றது; வந்தார் - வினைப்பெயர்.

புளகத்தொடு முணர்ந்தார் - புளகமும் உணர்வும் ஒருங்கே நிகழ்ந்தன. உணர்ந்தார் - அருட்குறிப்பை உணர்ந்தார்; துயிலுணர்ந்தார் என்ற குறிப்புஆம். 555

2454. பொருளுரை- அறிவுற்ற.. கூப்பி - அறிவுபொருந்திய சிந்தையினை யுடையராகி எழுந்து, அதிசயமடைந்து, தலையின் மேலே அழகிய கைகளைக் கூப்பி வணங்கி; வெறியுற்ற.. புக்கு - மணமுடைய கொன்றையினைச் சூடிய இறைவர் மகிழ்ந்தெழுந்தருளும் விண்ணிழி விமானமுடைய திருக்கோயிலிற் சென்று உட்புகுந்து; மறியுற்ற... வாழ்ந்து - மான்மறியேந்திய கையினையுடைய இறைவரைத் திருத்தோணியின்மேல் முன் வணங்கும் அந்த வண்ணமே அவ்விடத்துக் கண்டு வாழ்வடைந்து; குறியிற் பெருகும்... பாடுகின்றார் - அக் குறிநிலையின் பெருமைகாட்டும் திருப்பதிகத்தினைப் பொருந்திய கொள்கையினாலே பாடியருளுவாராகிய,

2454. அறிவுற்ற சிந்தைய ராயெழுந்தே
யதிசயித் துச்சிமே லங்கைகூப்பி,
வெறியுற்ற கொன்றையி னார்மகிழ்ந்த
விண்ணிழி கோயிலிற் சென்றுபுக்கு
மறியுற்ற கையரைத் தோணிமேன்முன்
வணங்கும் படியங்குக் கண்டுவாழ்ந்து
குறியிற் பெருகுந் திருப்பதிகங்
குலவிய கொள்கையிற் பாடுகின்றார்; **556**

விளக்கவுரை... அறிவுற்ற சிந்தையராய் *- கனவுநிலை நீங்கி நனவுநிலையினை யடைந்தவராகி;* ***அறிவுற்ற*** *- கனவு நிகழ்ச்சிகளை முழுதும் நனவிலும் அறிவில் விளங்கக் கொண்டு என்றதுமாம்.*

அதிசயித்து *- காண்டற்கரிய காட்சியும் கேள்வியும் பெற்றமையால் அதிசயித்தார். "அதிசயம் கண்டாமே" (திருவாசகம்).*

கோயிலிற் சென்று புக்கு - திருப்பள்ளி யெழுச்சியாகிய வழிபாட்டுக்காலமாதலின் உடன் திருக்கோயிலின்கண் சென்றருளினர் என்க. ஈண்டுக் கனா நிகழ்ந்தது வைகறைப் போதினில் என்பது கருதப்படும்; வைகறைக் கனா உடன் பலன்றருமென்ப.

மறியுற்ற கையரைமுன் தோணிமேன் வணங்கும்படி - முன்னர்த் தோணியில் வணங்கிய படியினை; **படி** - படியினை - வண்ணத்தை; **மறியுற்ற கையரைமுன் வணங்கும்படி** என்றதனால் மானும் மழுவும் கையினில் ஏந்துவதன் முன் இருந்த கோலம் திருத்தோணியிற் கண்டு வணங்கப்படுவது; **மறியுற்ற** - மறி - (மான்) பின்னர் வந்து பொருந்தநின்ற என்க; இது தோணியப்பரது சிறந்த தொன்மைக்கோலமும் அடையாளமுமாம். அவ்வாறு கண்டு வழிபட்ட பழக்கத்தினால் அதனை ஈண்டுக் கண்டுகொண்டு **வாழ்ந்தார்** என்றார். "எறிமழு வோடிள மான்கையின்றி யிருந்த பிரானிது வென்கொல்சொல்லாய் - மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே" (9) என்ற பதிகக் குறிப்பினை எடுத்துக்காட்ட ஈண்டு **மறியுற்ற கையரை** என்ற தன்மை யினாலறிவித்த ஆசிரியரது தெய்வக் கவிநலம் காண்க.

அங்கு *- வணங்கச்சென்ற அவ்விடத்து - திருக்கோயிலின்கண் விண்ணிழி விமானத்தினுள்,*

குறியிற் பெருகும் - குறிக்கோளை உட்கொண்டு உலகுக் கறிவுறுத்தும்; இறைவரை வினவும்வகையால் திருவருளைப் போற்றுவதனோடு, அருள்நிகழ்ச்சியினை உலகுக்கு அறிவுறுத்திக் காழிமறையவரையும் உலகுயிர்களையும் தேற்றி உய்விக்கும் குறிக்கோளினை உட்கொண்ட; "உண்மைநின்ற பெருகுநிலைக் குறியாள ரறிவு தன்னை" (தாண் - திருச்செங்காட்டங்குடி).

2455. "மைம்மரு பூங்குழ" லென்றெடுத்து
"மாறில் பெருந்திருத் தோணிதன்மேற்,
கொம்மை முலையினாள் கூடநீடு
கோலங் குழாவு மிழலைதன்னிற்,
செம்மை தருவிண் ணிழிந்தகோயில்
திகழ்ந்த படியிது வென்கொ"லென்று
மெய்ம்மை விளங்குந் திருப்பதிகம்
பாடி மகிழ்ந்தனர் வேதவாயர். 557

குலவிய கொள்கை - திருவுள்ளக் கருத்தினை விளங்கவைக்கும் கொள்கை; கொள்கை - கொள்ளவைக்கும் - கொளுத்தும் - தன்மை.

பாடுகின்றார் - பாடுகின்றாராகி - முற்றெச்சம். பாடுகின்றார் - பாடி மகிழ்ந்தனர் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க; வேதவாயர் என்ற எழுவாய் மேற்பாட்டினின்றும் கொள்க.
556

2455. பொருளுரை- "மைம்மரு பூங்குழல்" என்று எடுத்து - "மைம்மரு பூங்குழல்" என்று தொடங்கி; "மாறில்.. என்கொல்" என்று - ஒப்பில்லாத பெருந்திருத்தோணியின் மேலே இளமுலையினையுடைய பெரியநாயகியம்மையாருடன் கூட நீடும் திருக்கோலம் விளக்கமுடைய மிழலையின்கண் செம்மை தருகின்ற விண்ணிழி விமானத்தின்கண் விளங்கவிருந்தவண்ணம் இது என்கொல்?" என்று வினவும் பொருளுடன்; மெய்ம்மை...வேதவாயர் - உண்மைவிளங்கும் திருப்பதிகத்தினை வேதவாயராகிய பிள்ளையார் பாடி மகிழ்ந்தருளினர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை- "மைம்மரு பூங்குழல்" இது பதிகத் தொடக்கம்.

"மாறில்...என்கொல்" என்று - இது பதிகக் கருத்தும் குறிப்புமாம். பதிகப் பாட்டுக் குறிப்புக் காண்க.

கொம்மை முலை - கொம்மை - இளமை; "முதிரா இளமுலைப் பாவையுடனிருந்த பரம யோகி" (கழுமல - மும் - கோவை - 8 - பட்டின - 11-ம் திருமுறை) என்று பட்டினத்தடிகள் இவ்வம்மையைப் போற்றுதல் காண்க.

நீடுகோலம் - பழமையாகிய; காலத்தால் நீடிய. "தொன்மைக் கோலமே நோக்கி" (திருவா).

குலாவுமிழலை - குலாவுதல் - விளங்குதல்; மெய்ம்மறையோர் மிழலை (1) வெந்தவெண் ணீறணி வார்மிழலை (5) வெங்கதிர் தோய்பொழில் சூழ்மிழலை (6) என்பனவாதியாகப் பதிகத்துட் போற்றப்படும் விளக்கம்.

***செம்மைதரு* - கோயில்; *விண்ணிழிந்த* கோயில் என்க. *செம்மை* - முத்தி; சிவத்தன்மை; *கோயில்* - கோயிலின்கண். ஏழனுருபு தொக்கது.**

மெய்ம்மை விளங்கும் - சத்திய வாக்கு; "அன்னமெய்த் திருவாக்கு" (2986); "வாய்மை" (2878).

வேதவாயர் - வேதம் வெளிப்படும் வாய்தலாக விளங்குபவர்; ***வாய்*** - வாய்தல்; வாக்கு எனினுமாம்; வேத வாயராதலால் அந்த வேதம் போன்றே மெய்ம்மை விளங்கும் திருப்பதிகம் பாடியருளினர் என்பது.

இது என் - காட்டிய இக்காட்சி என்னபொருளைக் குறித்தது என்ற வினா அதிசயக் குறிப்பு. இவ்வினாவுக்கு இறைவர் உண்ணின்றுணர்த்தப் பிள்ளையார் உணர்ந்ததனை "வாய்மை நெஞ்சினிறைந்த குறிப்பில்வந்த நீர்மைத்திறம்" (2456) என்றும், அதனைப் பிள்ளையார் புகலி அந்தணர்களுக்கு அருள்புரிந்தனர் (2457) என்றும் மேல் ஆசிரியர் உணர்த்தியருளுதல் காண்க. 557

திருப்புகலியும் திருவீழிமிழலையும்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டபாடை - 1-ம் திருமுறை**

மைம்மரு பூங்குழற் கற்றை துற்ற வாணுதல் மான்விழி மங்கையோடும்
பொய்ம்மொழி யாமறை யோர்க ளேத்தப் புகலி நிலாவிய புண்ணியனே!
எம்மிறை யே!யிமை யாதமுக்க ணீசவெ னேச!வி தென்கொல் சொல்லாய்!
மெய்ம்மொழி நான்மறை யோர்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. (1)

செறிமுள ரித்தவி சேறி யாறுஞ் செற்றதில் வீற்றிருந் தானு மற்றைப்
பொறியர வத்தணை யானுங் காணாப் புகலி நிலாவிய புண்ணியனே
எறிமழு வோடிள மான்கை யின்றி யிருந்தபி ரானிது வென்கொல் சொல்லாய்
வெறிகமழ் பூம்பொழில் சூழ்மிழலை விண்ணிழி கோயில் விரும்பியதே. (9)

விண்ணிழி கோயில் விரும்பி மேவும் வித்தக மென்கொலி தென்று சொல்லிப்
புண்ணிய னைப்புக லிந்நிலாவு பூங்கொடியோ டிருந்தானைப் போற்றி
நண்ணிய கீர்த்தி நலங்கொள் கேள்வி நான்மறை ஞானசம் பந்தன் சொன்ன
பண்ணியல் பாடல்வல் லார்க ளிந்தப் பாரொடு விண்பரி பாலகரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- அம்மையுடன் தோணிமேவும் இறைவரே! நீர் அக்கோலத்தை இங்கு விண்ணிழி விமானத்துள் விரும்பியிருந்து காட்டியதென்கொல்! என்றதிசயித்தது. 2455ல் ஆசிரியர் காட்டியபடி.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- இப்பதிகம் புகலியினையும் வீழிமிழலையினையும் சேர்த்து ஒவ்வோர் திருப்பாட்டிலும் கூறியபடியால் இரண்டு பதிகளையும் சேர்த்துப் பெயர்பெற்றது இவ்வாறே அவ்வச் சரித நிகழ்ச்சிகளின் காரணம்பற்றிப் பெயர் பெற்றனவாய் வரும் திருப்பதிகங்கள் திருச்செங்காட்டங்குடியும் (1). திருநள்ளாறும் திருவாலவாயும் (2) என்ற பதிக வரலாறுகளையும் நினைவுகூர்க: (1) **மைம்மரு பூங்குழல்** இயல்பிலே கருமையும் மணமும் உடைய அழகிய கூந்தல்: **மங்கை** - பெரியநாயகி: **பொய்ம்மொழியா மறையோர்கள்** - மறையவர்களது உயர்ந்த ஒழுக்கம் குறித்தது. "பொய்யிலா மறையோர்" (தேவா): **நான்முகன் போல்வர் (7)** "பூவி லந்தண னொப்பவர்": **புகலி** - இப்பதிக முழுமையும் புகலி என்ற பெயர்பற்றிப் போற்றப்பட்டது. இதனை ஆசிரியர் **"புகலியுள்ளார்"** (2448) என்று எடுத்துக் குறிப்பிற் காட்டியருளினர்; **புண்ணியன்** - புண்ணியங்கட்கெல்லாம் இருப்பிடமானவன்: **மெய்ம்மொழி நான்மறையோர்கள்** - முன் பொய்ம்மொழியா என்று எதிர்மறைமுகத்தாற் கூறியதனையே உடன்பாட்டு முகத்தால் வலியுறுத்தினார்: இறைவர் புகலியிலும் மிழலையிலும் ஒப்ப விளங்கியதனால் இரு பதிகளும் தம்முள் ஒத்தன: அதுபோலவே இரண்டு பதிகளின் மறையோரும் பெருமையால் ஒப்புடையார் என்பது; **விரும்பியது** - விரும்பி அக்கோலத்துடன் எழுந்தருளியது; (2) **கழல் முற்றில்** - "முத்தழலோர் மனைகடொறு மிறைவனது தன்மை பாடிக், கருந்தடங் கண் ணார்கழல்பந் தம்மானைப் பாட்டயருங் கழுமலமே" (தேவா); சிறுமிகள் ஆடல் வகை; **பொழின்மல்கு கிள்ளையைச் சொற்பயிற்றும்** - பொழிலில் சிறுமியர் ஆடல்களுடன் மேற்கண்டவாறு பாடும் பாட்டுக்களைக் கேட்டுப் பொழில்வாழும் கிளிகள் அச்சொற் பாடல்களைத் தாமாகப் பயில்வதற்குக் காரணராயிருந்த நிலைபற்றிப் **பயிற்றும்** என்றுபசரித்தார்; இதுபற்றியே மிழலையிலும் 'பண்டிதர்கள் பயின்றோதுமோசை கேட்டுப் - பொழிற்கிள்ளை வேதங்கள் பொருட்செல்லும்' என்றதும் காண்க. இத்தன்மையாலும் ஈரிடங்களுக்கும் ஒப்புக் கூறியபடி; **வேதியர்** - புகலியந்தணர் போன்ற வேதியர் என்பது குறிப்பு; (3) **ஆடல்** - பந்து குரவை முதலிய ஆடல்வகை; **கந்துகவாடை** - ஆடும்போது பாடும் பாடல்வகை; **நுண்ணிடையார் மிழலை** - நுண்ணிடையாராலும் ஒப்புக்கூறிய குறிப்பு; (4) **திகழ்** - ஒத்த; உவமவுருபு; **மங்கை** - பெரியநாயகி; **ஏக பெருந்தகை** - ஒருவனே பதி; "ஏகமேவ" என்று மறைகளாற் பேசப்படும் பெருமையுடையவர்; (5) **தையல்** - பெரியநாயகி; **புந்தியில்** - தியானத்திற் கொண்டு - நினைந்து; **நீறணிவார்** - அடியார்; (6) **சங்கொளி ஒலிநீர் சுமந்தோங்கு** - புகலி கடல்சார்ந்த நெய்தனிலமாதல் குறிப்பு. இக்குறிப்புப்பற்றியே திருக்கழுமல மும்மணிக்கோவையுள் "தொழுவாளிவள்" (9), ""எனவே யெழுந்திருந்தாள்" (11) என்ற திருப்பாட்டுக்களுள் நெய்தற்குரிய இரங்கல் துறையுட்கொண்டு வைத்து அருளியிருப்பதும் காண்க. **வெங்கதிர் தோய்பொழில்** - வெம்மையிளைப் பாற வெங்கதிரவனும் இங்குப் பொழிலிற் றோய்வான் என்ற தற்குறிப்பேற்றவணிக் குறிப்பும் காண்க. (7) **காம்பனதோளி** - பெரியநாயகியார்; **வீ**-பூ; (8) **ஐந்து புலன்களைக் கட்டவர்** - முனிவர்கள்; **எல்லி** - இரவு - (சங்காரகாலம்); **விலங்கல்** - மலை (போன்ற); (9) **ஆறும் செற்று** - அறுபகை (காமாதி)யும் கடிந்து; **எறிமழுவோ டிளமான் கையின்றி** - இது

2456. செஞ்சொன் மலர்ந்த திருப்பதிகம்
பாடித் திருக்கடைக் காப்புச்சாத்தி,
யஞ்சலி கூப்பி விழுந்தெழுவா
ரானந்த வெள்ள மலையப்போந்து
மஞ்சிவர் சோலைப் புகலிமேவு
மாமறை யோர்தமை நோக்கி,வாய்மை
நெஞ்சி னிறைந்த குறிப்பில்வந்த
நீர்மைத் திறத்தை யருள்செய்கின்றார், **558**

தோணியப்பரது திருவடையாளம்; "மறியுற்ற" என்றவிடத்து முன் 2454-ல் உரைத்தவை பார்க்க; (10) ***பத்தர் கணம் பணிந்தேத்த*** *- சமணும் புத்தரும்* ***அலர்தூற்ற*** *ஏத்துதலையும் தூற்றுதலையும் ஒரு தன்மைத்தாக ஏற்று அவ்வவர்க்கு ஏற்ற பலன்றருவர் என்றபடி;* ***எத்தவத்தோர்க்கு மிலக்காய்*** *என்ற கருத்துமிது. இதனானும் ஒப்புமை கூறியவாறு;* ***வித்தகர்*** *- ஞானிகள்; (11)* ***வித்தகம்*** *- உண்மைத் தன்மை; உள்ளுறை;* ***புகலிப் பூங்கொடியோடிருந்தானை*** *- மைம்மரு பூங்குழல் என்று தொடங்கியவாறே முடித்தமை காண்க; இப்பதிகம் இரு பதிகளும் கூடப் பாடினும், போற்றியது காட்சி கண்ட தோணியப்பரையே என்றது கருத்து.*

2456. ***பொருளுரை***– *செஞ்சொல்.. விழுந்தெழுவார் - செம்மைதரும் சொற்கள் விளங்கும் திருப்பதிகத்தினைப் பாடித் திருக்கடைக்காப்புச் சாத்திக் கைகளை அஞ்சலியாகக் கூப்பி நிலத்தின் வீழ்ந்து எழுவாராகிய பிள்ளையார்; ஆனந்தவெள்ளம் அலையப் போந்து - மிக்க ஆனந்தம் பரந்து தம்மை யலைப்பப் புறத்திற் போந்து; மஞ்சிவர்... நோக்கி - மேகங்கள் தவழும் சோலைகள் சூழ்ந்த புகலியினின்றும் போந்த பெருமறையவர்களை நோக்கி; வாய்மை... அருள் செய்கின்றார் - உண்மை வடிவாகிய தமது திருவுள்ளத்தில் நிறைந்த திருவருட் குறிப்பினால் உணர்த்தப்பெற்ற அருளி னீர்மைத் தன்மையை யருளிச்செய்வாராய்;*

விளக்கவுரை– ***செஞ்சொல் மலர்ந்த*** *- செம்மைதரும் சொற்கள் பொருள் சிறந்து விளங்கிய.*

விழுந்தெழுவார் *- எழுவாராகிய பிள்ளையார்; வினைப்பெயர்.*

அலைப்ப *- நிலைகொள்ளமாட்டாமையை விளைக்க.*

புகலிமேவும் *- "புகலியுள்ளார்" (2448) என்றதுபோலவே பதிகத்தில் இப்பெயர் பற்றி அருளிய குறிப்புப்பெற வைத்தமை காண்க.*

வாய்மை– திறம் *- இறைவர் உண்ணின்று உணர்த்திய உண்மைத்தன்மை; இது விஞ்ஞானகலர்க்கு இறைவர் அருளும் முறை.*

வாய்மை நெஞ்சு *-* ***வாய்மை*** *- சத்து - அழியாத பொருள்;* ***நிறைந்த குறிப்பு*** *- இறைவரது நிறைவு உடனிகழ்வதாகிய குறிப்பு;* ***நீர்மைத் திறம்*** *- செம்மை; இக்கனா*

2457. "பிரம புரத்தி லமர்ந்தமுக்கட்
பெரிய பிரான்பெரு மாட்டியோடும்
விரவிய தானங்க ளெங்குஞ்சென்று
விரும்பிய கோலம் பணிந்துபோற்றி
வருவது மேற்கொண்ட காதல்கண்டங்
கமர்ந்த வகையிங் களித்த"தென்று
தெரிய வுரைத்தருள் செய்து,"நீங்கள்
சிரபுர மாநகர் செல்லு"மென்றார். 559

நிகழ்ச்சியின் குறிப்பினை அருள்நிறைவில்லாத பிறர் சீகாழிக்கு விரைவில் வருவது அருட்குறிப்பாம் என்றும் கூறிவிடுவார்; அவ்வாறன்றி மேற்பாட்டிற் கூறும் குறிப்புப்பெறுவது இறைவாது சத்தாகிய தன்மை நிறைவுடைய திருவுள்ளத்தில் அருளுணர்த்தப்பெற்றதனாலாம்.

அருள்செய்கின்றார் - என்று என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 558

2457. பொருளுரை... "பிரமபுரத்தில்... அளித்தது" என்று - "திருப்பிரமபுரத்திலே விரும்பி எழுந்தருளிய முக்கண்ணராகிய பெரியபிரான் தமது பெருமாட்டியுடனே பொருந்திய தானங்கள் எங்கெங்கும் சென்று அங்கங்கும் விரும்பி மேற்கொண்ட திருக்கோலங்களைப் பணிந்து துதித்துவருதலை நாம் மேற்கொண்ட ஆசையினை அப்பெருமான் கண்டு அங்குத் திருத்தோணியில் விரும்பியிருந்தவகையினை இங்குக் காண அளித்தருளினார்" என்று; தெரிய வுரைத்தருள்செய்து - அறியும்படி சொல்லியருளி; நீங்கள்... என்றார் - நீங்கள் சீகாழிக்குச் செல்லுங்கள் என்று அருளிச் செய்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... "பிரமபுரத்தில்...அளித்தது" என்று - இது பிள்ளையார் தம் உள்ளத்துணர்ந்த அருட்குறிப்பினைப் புகலிமறையோர்க்குப் புகன்றருளியது.

வருவது மேற்கொண்ட காதல் கண்டு - வருவதனைத் தமது உள்ளத்திற்கொண்ட காதலைக் கண்டருளி; கண்டு - உளதாக்கி என்ற குறிப்புமாம்; "அரசன் கண்ட ஆலயம்" என்புழிப்போல; மேனிகழ்ச்சிகள் யாவும் திருவருளால் நிகழ்வன.

வகை - வகையினை - கோலத்தை.

தெரிய - தெளிவுபெற; புகலிமறையோரேயன்றி உலகமும் தெரிந்துய்ய.

நீங்கள் என்றார் - பிள்ளையார் புகலிமறையவர்க்கு இடும் கட்டளை; நீங்கள் - எம்மை உடன் எழுந்தருளப்பெறவேண்டியவாறன்றி நீங்கள்மட்டும் வந்த படியே.

விரும்பிய கோயில் - என்பதும் பாடம். 559

*2458. என்று கவுணியப் பிள்ளையார்தா
மியம்பப் பணிந்தரு ளேற்றுக்கொண்டே
ஒன்றிய காதலி னுள்ளமங்க
ணொழிய வொருவா றகன்றுபோந்து
மன்று ணடம்புரிந் தார்மகிழ்ந்த
தானம் பலவும் வணங்கிச்சென்று
நின்ற புகழ்த்தோணி நீடுவாரைப்
பணியு நியதிய ராயுறைந்தார். 560

2458. பொருளுரை- என்று- இயம்ப - என்று பிள்ளையார் இயம்பியருள; *பணிந்து-கொண்டே* - வணங்கி அவர் கூறியருளிய திருவருட் கட்டளையை ஏற்றுக்கொண்டே; *ஒன்றிய-ஒழிய* - பொருந்திய பெருவிருப்பத்தினாலே தங்கள் மனம் அங்கு நிற்க; *மன்றுள்-சென்று* - அம்பலக்கூத்தர் மகிழ்ந்தெழுந்தருளிய பதிகள் பலவற்றையும் வணங்கிப்போய்; *நின்ற.... உறைந்தார்* - நிலைபெற்ற புகழினையுடைய தோணிமேல் எழுந்தருளியுள்ள இறைவரைப் பணியும் நியதியுடையாராக அமர்ந்தனர்.

விளக்கவுரை- அருள் ஏற்றுக்கொண்டே - தங்கள் கருத்துக்கு மாறாயினும், **திருவருளின் குறிப்பாதலின் அவ்வாணையை உடன்பட்டு ஏற்றுக்கொண்டு. இதுவே** ஆன்மாக்கள் அமைந்தொழுகவேண்டிய உய்யுநிலை.

ஒன்றிய-ஒருவாறு அகன்று - இது புகலியந்தணர்கள் பிள்ளையார்பாற் கொண்ட அழுந்திய அன்புநிலை குறித்தது; இஃது தமது மரபு ஒற்றுமை கருதியதனாலன்றிப், பிள்ளையாரது உபநயனத்தின்போது தாம் பெற்ற வேத விளக்கத்தானும், பல்லாற்றானும் அவர்பாற் றாம்கண்ட அருள்விளக்கத்தானும், பிள்ளையாரது பெருமைகளைத் தங்கள் பெருமையாகவே கொண்ட உரிமைப்பாட்டினாலும் ஆயிற்றென்க. பிள்ளையார் தங்களைப் பிரியாது என்றும் உடனுறைதலை அவர்கள் விரும்பினார் என்பது.

தானம் பலவும் வணங்கிச் சென்று - வீழியினின்றும் புகலி நோக்கித் திரும்புமவர்கள் நேரே சென்றுவிடாது வழியில் இடைப்பட்ட பதிகள் பலவற்றையும் அந்தணர்கள் வணங்கிச் சென்றது வழிபாட்டுமுறையும் மரபுமாம்; **தானம்பல** - இவை திருச்சிறுகுடி, திருமீயச்சூர், திருமயிலாடுதுறை, திருப்புள்ளிருக்கு வேளூர் முதலாயின என்பது கருதப்படும்.

தோணி நீடுவாரைப் பணியும் நியதியராய் - பிள்ளையாரைத் தந்தருளி ஞானங் கொடுத்தமையும், வீழியில் காட்சிதந்து தோற்றுவித்தமையும் கருத்துட்கொண்டு **தோணியப்பரைச் சிறப்பாகப் பணியும் நியதி பூண்டனர்** என்க. நியதி என்ற குறிப்புமது.
560

2459. பொருளுரை- சிரபுரத்து அந்தணர் சென்றபின்னை - புகலிமறையவர் விடைபெற்றுச் சென்றபின்பு; *திருவீழி- பணிந்து* - திருவீழிமிழலையில் மேவிய இறைவரது

2459. சிரபுரத் தந்தணர் சென்றுபின் னணைக்
திருவீழி மேவிய செல்வர் பாதம்
பரவுதல் செய்து பணிந்துநாளும்
பண்பின் வழாத்திருத் தொண்டர்சூழ
உரவுத் தமிழ்த்தொடை மாலைசாத்தி
யோங்கிய நாவுக் கரசரோடும்
விரவிப் பெருகிய நண்புகூர
மேவி யினிதங் குறையுநாளில். 561

திருப்பாதங்களைப் பணிந்து; நாளும் - எந்நாளும்; பண்பின்... சூழ - அடிமைப் பண்பினின்றும் பிறழாது ஒழுகும் திருத்தொண்டர்கள் சூழ்ந்து இருக்க; உரவு...சாத்தி - சிறந்த தமிழாற்றொடுக்கப்பட்ட பாமாலையாகிய திருப்பதிகத்தினைச் சாத்தி; ஓங்கிய...கூர - அருள்மிகுந்த திருநாவுக்கரசருடனே கூடிப் பெருகிய நண்புமிக்கோங்க; மேவி... நாளில் - பொருந்தி இனிதாக அப்பதியினில் தங்கியருள்கின்ற நாள்களில்;

விளக்கவுரை- பரவுதல்செய்து முதலிய வினையெச்சங்களுக்குப் பிள்ளையார் எனும் வினைமுதல் தொக்கு நின்றது.

செல்வர் - "கன்னெடுங் காலம் வெதும்பிக் கருங்கட னீர்சுருங்கிப், பன்னெடுங் கால மழைதான் மறுக்கினும் பஞ்சமுண்டென், றென்னொடுஞ் சூளறு மஞ்சனெஞ் சேயிமை யாதமுக்கட், பொன்னெடுங் குன்றமொன் றுண்டுகண் டீரிப் புகலிடத்தே" (திருவிருத்) என்ற திருவிருத்த அருள்வாக்கின்படி இச்சரிதப் பின்னிகழ்ச்சியில் பஞ்சந் தீரும்வரை படியாகப் பொற்காசு அருளும் நாதர் என்பது குறிக்கச் செல்வர் என்றார்.

நாளும் பண்பின்வழாத் திருத்தொண்டர் - நாளும் - எந்நாளினும்; "செல்வ மேவிய நாளி லிச்செயல் செய்வ தன்றியு மெய்யினால், அல்லல் நல்குர வான போதிலும் வல்லர்" (445), "மன்னு காதலுன் மனைவியை வேண்டி வந்த திங்கென வங்கண ரெதிரே, சொன்ன போதிலு முன்னையின் மகிழ்ந்து" (410), "நிராயுதரைக் கொன்றா ரெனுந்தீமை யெய்தாமை வேண்டு மிவர்க்கு" (646) என்பன முதலிய இடங்களில் வரும் தொண்டின் பண்பு வழாத தன்மைகள் காண்க.

உரவு - சிறப்பு; மேன்மை; சாத்தி - உறையுநாளில் என்று கூட்டிமுடிக்க; சாத்தி ஓங்கிய நாவுக்கரசர் என்று கூட்டினுமமையும்.

நாவுக்கரசரோடும் - நண்புகூர - நண்புநாளும் மேன்மேற் பெருக.

நாளில் - கண்டு - கருத்திற்கொண்டார் - என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 561

2460. பொருளுரை- மண்ணின்மிசை... உணவுமாறி - இந்த நில உலகிலே மழை மறுத்து அதனால் ஆறுகளிற் பருவவெள்ளம் பாயாது தவறி, அதனால் உலகுயிர்கள் வருந்தி உணவின்றி நின்றமையால்; விண்ணவர்க்கும்.... கண்டு - தேவர்களுக்கும்

வேறு
படிக்காசு பெற்றது

2460. மண்ணின்மிசை வான்பொய்த்து நதிக டப்பி
மன்னுயிர்கள் கண்சாம்பி யுணவு மாறி
விண்ணவர்க்குஞ் சிறப்பில்வரும் பூசை யாற்றா
மிக்கபெரும் பசியுலகில் விரவக் கண்டு
பண்ணமரு மொழியுமையாண் முலையின் ஞானப்
பாலறா வாயருட னரசும் "பார்மேற்
கண்ணுதலோன் றிருநீற்றுச் சார்பி னோர்க்குங்
கவலைவரு மோ?"வென்று கருத்திற் கொண்டார். **562**

சிறப்புக்களில் வரும் பூசைகள் செய்யப்படாமல் மிகுந்த பெரும்பசியின் கொடுமை உலகில் பொருந்திய நிலையினைக் கண்டு; பண்அமரும்... அரசும் - பண் பொருந்திய மொழியினையுடைய உமையம்மையாரது திருமுலையின் பாலறாத வாயராகிய பிள்ளையாருடன் அரசுகளும்; பார்மேல்...கொண்டார் - "உலகில் கண்ணுதற்பெருமானது திருநீற்றுச் சார்புகொண்ட திருத்தொண்டர்களுக்கும் கவலை வருமோ?" என்று தமது திருவுள்ளங்களுட் கொண்டருளினார்கள்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை... *புகலிமறையவர் வந்துபோந்த செய்தியை அறு சீர்கொண்ட சந்த யாப்பினால் இதுவரை உரைத்த ஆசிரியர், அருட்காசு பெறும் நிகழ்ச்சியை எண்சீர்ச் சந்த யாப்பினிற் கூறத் தொடங்குகின்றார்; பொருள் வேறுபாடு சந்த வேறுபாட்டால் உணரவைத்தருளினர்.*

வான்பொய்த்து - வான் *- மழை; "வான்சிறப்பு" (குறள்-அதி.)*

நதிகள் தப்புதல் *- மழை பொய்த்ததனால் உரிய பருவத்தில் ஆறுகளில் வெள்ளம் பெருகாமை.*

கண்சாம்புதல் *- கண்குழிந்து இளைத்தல்; வருந்துதல்.*

உணவுமாறி *- மாறுதலால்; காரணப்பொருட்டாய் வந்தது.*

விண்ணவர்க்கும்... ஆற்றா - விண்ணவர் *- இந்திரன் முதலிய தேவர்கள்;* ***சிறப்பு*** *- நைமித்திகம் எனப்படும் விசேடபூசை; "சிறப்பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" (குறள்) என்ற கருத்து;* ***ஆற்றாப் பெரும்பசி*** *- ஆற்ற இயலாதபடி.*

மிக்க பெரும்பசி *- அடைமொழிகள் அவியாது மூண்ட என்ற குறிப்புத்தந்தன;*

பாலறாவாயருடன் அரசும் *- உயிர்களின் வருத்தத்தைப் பரமாசாரியர்களாதலின், இருவரும் ஒக்க உணர்ந்து தீர்வு தேடினர் என்பார் **உடன்** என்றார்.*

2461. வானாகி நிலனாகி யனலு மாகி
மாருதமா யிருசுட ராய் நீரு மாகி
ஊனாகி யுயிராகி யுணர்வு மாகி
யுலகங்க ளனைத்துமா யுலகுக் கப்பால்
ஆனாத வடிவாகி நின்றார் செய்ய
வடிபரவி யன்றிரவு துயிலும் போது
கானாடு கங்காளர் மிழலை மூதூர்
காதலித்தார் கனவிலணைந் தருளிச் செய்வார். 563

"பார்மேல்– வருமோ?" இது அவர்களது மனநிலை: அடியார்களுக்குக் கவலை வராது என்பது துணிபு: ஓகார வினா எதிர்மறை குறித்தது. **நீற்றுச் சார்பு** - நீறே உறுதிப்பொருள் என்று கடைப்பிடித்து ஒழுகுதல்.

திருநீற்றுச் சார்பினோர்க்கும் கவலை வருமோ? - "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தாற் கல்லால். மனக்கவலை மாற்ற லரிது" (குறள்) என்ற திருக்குறட் கருத்தும் காண்க; **சார்பினோர்க்கும்** - சார்புடையோர் கவலை மாற்றுவராதலின் அவர்க்கும் கவலை வருமோ என்றபடி. உம்மை மாற்றக்கூடிய அவர்க்கும் என உயர்வு சிறப்பு. **திருநீற்றுச் சார்பே** சிவச்சார்பு; திருநீறே சைவச் சிறப்பாம். "வெந்துயர் தீர்ப்பது நீறு", "அவலமறுப்பது நீறு", "வருத்தம் தணிப்பது நீறு" என்பன பிள்ளையார் திருவாக்குகள்.

கருத்திற் கொண்டார் - கவலை வாராநிலையினை மனங்கொண்டருளினர். அந்நிலையானது "தாள்சேர்தலாலே" யாமாதலின் **திருவடியைப் பரவித் துயின்றனர்** என்பது மேற்பாட்டிற் காண்க.

கண்ணுதலான் - அடியார்க்கருளுதலையே கண்ணாக உடையவன் என்பதும் 562 குறிப்பு.

2461. பொருளுரை– வானாகி...துயிலும்போது - ஆகாயமும், மண்ணும், தீயும், காற்றும், சூரிய சந்திரர் இரண்டு சுடர்களும், நீரும் ஆகியும், ஊனும் உயிரும் உணர்வுமாகியும், உலகங்களெல்லாமாகியும், உலகங்களுக்கப்பாற்பட்ட கெடுதலில்லாத வடிவாகி நின்ற சிவபெருமானது செம்மையுடைய திருவடிகளைத் துதித்து - அன்று இரவு பிள்ளையாரும் அரசுகளும் துயில்கொள்ளும்போது; கான்ஆடு— அருளிச் செய்வார் - காட்டில் ஆடுகின்ற கங்காளராய்த் திருவீழிமிழலையாகிய பழைய பதியினை விரும்பி எழுந்தருளியிருக்கும் இறைவர் அவர்களுடைய கனவின்கண் எழுந்தருளிவந்து அருளிச்செய்வாராகி,

விளக்கவுரை... இத் திருப்பாட்டில் இறைவர் விசுவரூபியாயும், விசுவாந்தர்யாமியாயும், விசுவாதீதராயும் நிற்குந் தன்மைகள் போற்றப்பட்டன; வானாகி... உணர்வுமாகி - வான் - நிலன் - அனல் - மாருதம் - இருசுடர் - நீர் - ஊன் - உயிர் என்பன எட்டு மூர்த்தங்கள்; ஊன் - தனு; உணர்வு - உணர்வுக் கருவி என்பன;

உலகங்கள் அனைத்தும் - என்றது புவனங்களும் போகங்களும் குறித்தன; **ஊன் -** ஐம்பூதச் சேர்க்கையால் யாக்கப்பட்டமையால் "**யாக்கை**" எனப்படும். இவ்யாக்கை முதலியவற்றுள்ளே உயிரை வைப்பதுவே சிருட்டி எனப்படும். இது குறிக்க வானாதிய பூதங்களாகும் தன்மையை முன்வைத்தார். அவ்வாறு வைக்கப்பட்ட **உயிர்** உட்கரணங்களாகிய ஆக்கைப்பகுதியின் றுணைகொண்டு புவனங்களிடை இன்பத் துன்பங்களனுபவிப்பனவாதலின் **உணர்வாகி** - **உலகங்களனைத்துமாய்** எனப் பின்வைத்தார். "ஊனாகி யுயிராகி யதனு ளின்ற வுணர்வாகிப் பிறவனைத்து நீயாய் நின்றாய்" (தாண்டகம்). "வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி, யூனாகி யுயிராகி" (திருவா); **ஆகி** - என்பது முதலிய ஆக்கச் சொற்கள் வான் முதலிய தத்துவங்களைப் பற்றி, மூவகை மாயைகளையும், இயக்கும் இறைவன் நிமித்தகாரணனாகும் தன்மையினையும், **உயிராகி** என்றவிடத்து "அவையேயாய்" (போதம்-2) என்றபடி உயிர்களேயாகி அவற்றுடன் அத்துவிதமாய் இறைவன் கலந்துநிற்கும் நிலையினையும் உணர்த்தின.

உலகுக்கப்பால் ஆனாத வடிவாகி - தத்துவங்களையெல்லாம் கடந்துநின்ற இறைவனது சொரூபநிலை குறித்தது. இது "தானேயாய்" (போதம்-2) என்ற நிலை. எல்லா உயிர்களுக்கும் அவ்வவற்றின் வினைப்பயன்களை நுகர்வித்தற்பொருட்டு அவ்வுயிர்களுள்ளே கலந்தும், நுகர்தற்கிடமாகிய உடம்புகளையும் உலகுகளையும் போகங்களையும் கொடுத்தும், தான்கடந்து வேறே தனிநின்று ஆணைசெலுத்தியும் நிற்கும் தன்மையால் உயிர்கள் இங்குப் பசி நோய் நுகர்தற்குரிய வினைப்பயன் தந்தருளினார். ஆனால் அவ்வாறு நுகரச்செய்யவல்ல அவரே அடியார்கள் அப்படி நுகராமலே பயன்றுய்த்தலையும் செய்யவல்லவர் என்ற கருத்தால் இங்கு இத்தன்மையாற் கருதி அடிபரவினர் எந்தம் பெருமக்கள் என்க. "இறைபணி வழுவாது நிற்க மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" என்பது ஞானநூல் (போதம்-10); "எத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை, முற்செய்வினை யுந்தருவான் முன்" "சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல்" என்று வரும் உண்மைகள் இங்குக் கருதத்தக்கன. இக்கருத்துப்பற்றியே முன்னர் "நாளும் **பண்பின்வழாத் திருத்தொண்டர்** சூழ" என்று இறைபணி வழுவா துநிற்கும் தன்மைபற்றிக் கூறியருளினார்; இறைவர் எட்டுமூர்த்தியாயும், உலகாயும், அவை கடந்தவராயும் நிற்கும்நிலைபற்றி முன்னர் அங்கங்கும் பல திருவாக்குகள் காட்டப்பட்டன; "இருநிலனாய்த் தீயாகி... அட்டமூர்த்தியாகி" (தேவாரம்); "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புனலா மைந்தனோ டெண்வகையாப் புணர்ந்து நின்றான், உலகேழெனத் திசைபத்தெனத் தா னொருவனுமே, பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ" (திருவா); **உயிர்** - உயிர்ப்பு - காற்று. **மைந்தன்** - உயிர். **உலகேழென** - உலகங்களனைத்துமாய் - (2461).

அடிபரவி அன்றிரவு துயிலும்போது - அடியார்க்கும் கவலைவருமோ என்று கருத்துட்கொண்ட எந்தம் பெருமக்கள் அதனை (கவலை) வாராமற் காக்கவல்லன இறைவரது திருவடிகளே என்ற துணிபினால் அன்று இரவு அடிபரவித் துயின்றனர்; **பரவி** - மேற்கூறிய தன்மையாற் சிந்தித்துத் துதித்து உயிர்கள் கவலைமாற்றும் வழியிது என்று காட்டிய படியுமாம்.

2462. "உலகியல்பு நிகழ்ச்சியா லணைந்த தீய
உறுபசிநோ யுமையடையா தெனினு மும்பால்
நிலவுசிவ நெறிசார்ந்தோர் தம்மை வாட்ட
நீக்குதற்கு நித்தமொரோர் காசு நீடும்
இலகுமணிப் பீடத்துக் குணக்கு மேற்கும்
யாமளித்தோ முமக்;கிந்தக் காலந் தீர்ந்தால்
அலகில்புக ழீர்!தவிர்வ தாகு" மென்றே
யருள்புரிந்தார் திருவீழி மிழலை யையர். **564**

கான் ஆடு கங்காளர் மிழலை மூதூர் காதலித்தார் - **கான்** - காடு; உலகம் சங்கரிக்கப்பட்ட இடம்; இது சங்காரத் தொழில் குறித்தது. **கங்காளர்** - எலும்பணிந்தவர். **"கங்காளராய், வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே"** (திருவிருத்தம்) என்றபடி கங்காள வேடம் மீளச் சிருட்டித்தலைக் குறிக்கும். இங்கு **மிழலை காதலித்தார்** என்றது இனிச் செய்யுமருளினாற் காத்தற்றொழில் குறிப்பித்து நின்றதும் காண்க.

அருளிச்செய்வார் - முற்றெச்சம். **அருளிச்செய்வார் - என்றே அருள்புரிந்தார்** என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. இங்கு அருளிச்செய்வார் என்பது சொல்லுதலையும், மேல் அருள்புரிந்தார் என்பது செய்வதனையும் குறித்தன.

563

2462. பொருளுரை- உலகியல்பு.... எனினும் - இவ்வுலகியல்பினால் நிகழ்வனவாய் வந்தணைந்த தீமைபொருந்திய பசியாகிய நோய் உங்களை அடையாது; என்றாலும்; உம்பால்.... நீக்குதற்கு - உங்களை அடைந்த சிவநெறி நிற்கும் அடியார்களை வாட்டம் நீக்குதற்காக; நித்தம் ஓரோர் காசு... உமக்கு - நித்தமும் ஒவ்வொரு பொற்காசினைக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள விளக்கமாகிய அழகிய பலிபீடத்தில் உங்களுக்கு அளிக்கின்றோம்; இந்தக் காலம்... தவிர்வதாகும் - அளவில்லாத புகழினை உடையீர்களே! இந்தப் பஞ்சகாலம் தீர்ந்தால் அது நிறுத்தப்படும்; என்றே... ஐயர் - என்று திருவீழி மிழலை இறைவர் அருளிச்செய்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை- இப்பாட்டினால் மிழலை இறைவர் எந்தம் பெருமக்களிருவருக்கும் கனாவில் அருளியசெய்தி கூறப்பட்டது. இதனைக் "கால நிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீரெனினும், ஏல வும்மை வழிபடுவோர்க் களிக்க வளிக்கின்றோ மென்று" (1522) என்று அரசுகள் புராணத்துட் கூறியது காண்க.

உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய உறுபசிநோய் - இதனையே முன் "கால நிலைமையால்" என்று கூறினார்; **உலகியல்பு நிகழ்ச்சியாவது** உயிர்கள் தத்தம் கன்மத்துக்கேற்ற பயன்களைக் காலத்தா லனுபவித்தல்; உயிர்களுக்குத் தனித்தனி வினைப்பயன் வருதல்போலக், காலநிலைபற்றி அவை பலவற்றுக்கும் ஒருங்கே வறுமை, பசி, நோய் முதலியவை பீடிக்கும்; "பயில்வித் தெல்லாம், காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்" (சித்தி 1-9) "தம்மு ளொருசாதிப் பல பொருளாகிய வித்து முதலிய

வேறு

படிக்காசு பெற்றது

2460. **மண்ணின்மிசை வான்பொய்த்து நதிக டப்பி**
மன்னுயிர்கள் கண்சாம்பி யுணவு மாறி
விண்ணவர்க்குஞ் சிறப்பில்வரும் பூசை யாற்றா
மிக்கபெரும் பசியுலகில் விரவக் கண்டு
பண்ணமரு மொழியுமையாண் முலையின் ஞானப்
பாலறா வாயருட னரசும் "பார்மேற்
கண்ணுதலோன் றிருநீற்றுச் சார்பி னோர்க்குங்
கவலைவரு மோ?"வென்று கருத்திற் கொண்டார். **562**

சிறப்புக்களில் வரும் பூசைகள் செய்யப்படாமல் மிகுந்த பெரும்பசியின் கொடுமை உலகில் பொருந்திய நிலையினைக் கண்டு; பண்அமரும்... அரசும் - பண் பொருந்திய மொழியினையுடைய உமையம்மையாரது திருமுலையின் பாலறாத வாயராகிய பிள்ளையாருடன் அரசுகளும்; பார்மேல்...கொண்டார் - "உலகில் கண்ணுதற்பெருமானது திருநீற்றுச் சார்புகொண்ட திருத்தொண்டர்களுக்கும் கவலை வருமோ?" என்று தமது திருவுள்ளங்களுட் கொண்டருளினார்கள்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை.. புகலிமறையவர் வந்துபோந்த செய்தியை அறு சீர்கொண்ட சந்த யாப்பினால் இதுவரை உரைத்த ஆசிரியர், அருட்காசு பெறும் நிகழ்ச்சியை எண்சீர்ச் சந்த யாப்பினிற் கூறத் தொடங்குகின்றார்; பொருள் வேறுபாடு சந்த வேறுபாட்டால் உணரவைத்தருளினர்.

வான்பொய்த்து - வான் - மழை; "வான்சிறப்பு" (குறள்-அதி.)

நதிகள் தப்புதல் - மழை பொய்த்ததனால் உரிய பருவத்தில் ஆறுகளில் வெள்ளம் பெருகாமை.

கண்சாம்புதல் - கண்குழிந்து இளைத்தல்; வருந்துதல்.

உணவுமாறி - மாறுதலால்; காரணப்பொருட்டாய் வந்தது.

விண்ணவர்க்கும்.. ஆற்றா - விண்ணவர் - இந்திரன் முதலிய தேவர்கள்; **சிறப்பு** - நைமித்திகம் எனப்படும் விசேடபூசை; "சிறப்பொடு பூசனை செல்லாது வானம், வறக்குமேல் வானோர்க்கு மீண்டு" (குறள்) என்ற கருத்து; **ஆற்றாப் பெரும்பசி** - ஆற்ற இயலாதபடி.

மிக்க பெரும்பசி - அடைமொழிகள் அவியாது மூண்ட என்ற குறிப்புத்தந்தன;

பாலறாவாயருடன் அரசும் - உயிர்களின் வருத்தத்தைப் பரமாசாரியர்களாதலின், இருவரும் ஒக்க உணர்ந்து தீர்வு தேடினர் என்பார் **உடன்** என்றார்.

2461. வானாகி நிலனாகி யனலு மாகி
மாருதமா யிருசுட ராய் நீரு மாகி
ஊனாகி யுயிராகி யுணர்வு மாகி
யுலகங்க ளனைத்துமா யுலகுக் கப்பால்
ஆனாத வடிவாகி நின்றார் செய்ய
வடிபரவி யன்றிரவு துயிலும் போது
கானாடு கங்காளர் மிழலை மூதூர்
காதலித்தார் கனவிலணைந் தருளிச் செய்வார். **563**

"பார்மேல்... வருமோ?" இது அவர்களது மனநிலை: அடியார்களுக்குக் கவலை வராது என்பது துணிபு: ஓகார வினா எதிர்மறை குறித்தது. **நீற்றுச் சார்பு** - நீறே உறுதிப்பொருள் என்று கடைப்பிடித்து ஒழுகுதல்.

திருநீற்றுச் சார்பினோர்க்கும் கவலை வருமோ? - "தனக்குவமை யில்லாதான் றாள்சேர்ந்தாற் கல்லால், மனக்கவலை மாற்ற லரிது" (குறள்) என்ற திருக்குறட் கருத்தும் காண்க; **சார்பினோர்க்கும்** - சார்புடையோர் கவலை மாற்றுவராதலின் அவர்க்கும் கவலை வருமோ என்றபடி. உம்மை மாற்றக்கூடிய அவர்க்கும் என உயர்வு சிறப்பு. **திருநீற்றுச் சார்பே** சிவச்சார்பு; திருநீறே சைவச் சிறப்பாம். "வெந்துயர் தீர்ப்பது நீறு", "அவலமறுப்பது நீறு", "வருத்தம் தணிப்பது நீறு" என்பன பிள்ளையார் திருவாக்குகள்.

கருத்திற் கொண்டார் - கவலை வாராநிலையினை மனங்கொண்டருளினர். அந்நிலையானது "தாள்சேர்தலாலே" யாமாதலின் **திருவடியைப் பரவித் துயின்றனர்** என்பது மேற்பாட்டிற் காண்க.

கண்ணுதலான் - அடியார்க்கருளுதலையே கண்ணாக உடையவன் என்பதும் குறிப்பு. *562*

2461. பொருளுரை... வானாகி...துயிலும்போது - ஆகாயமும், மண்ணும், தீயும், காற்றும், சூரிய சந்திரர் இரண்டு சுடர்களும், நீரும் ஆகியும், ஊனும் உயிரும் உணர்வுமாகியும், உலகங்களெல்லாமாகியும், உலகங்களுக்கப்பாற்பட்ட கெடுதலில்லாத வடிவாகி நின்ற சிவபெருமானது செம்மையுடைய திருவடிகளைத் துதித்து - அன்று இரவு பிள்ளையாரும் அரசுகளும் துயில்கொள்ளும்போது; கான்ஆடு... அருளிச் செய்வார் - காட்டில் ஆடுகின்ற கங்காளராய்த் திருவீழிமிழலையாகிய பழைய பதியினை விரும்பி எழுந்தருளியிருக்கும் இறைவர் அவர்களுடைய கனவின்கண் எழுந்தருளிவந்து அருளிச்செய்வாராகி,

விளக்கவுரை... இத் திருப்பாட்டில் இறைவர் விசுவரூபியாயும், விசுவாந்தர்யாமியாயும், விசுவாதீதராயும் நிற்குந் தன்மைகள் போற்றப்பட்டன;

வானாகி... உணர்வுமாகி - வான் - நிலன் - அனல் - மாருதம் - இருசுடர் - நீர் - உயிர் என்பன எட்டு மூர்த்தங்கள்; **ஊன்** - தனு; **உணர்வு** - உணர்வுக் கருவி என்பன;

உலகங்கள் அனைத்தும் - என்றது புவனங்களும் போகங்களும் குறித்தன; **ஊன்** - ஐம்பூதச் சேர்க்கையால் யாக்கப்பட்டமையால் "யாக்கை" எனப்படும். இவ்யாக்கை முதலியவற்றுள்ளே உயிரை வைப்பதுவே சிருட்டி எனப்படும். இது குறிக்க வானாதிய பூதங்களாகும் தன்மையை முன்வைத்தார். அவ்வாறு வைக்கப்பட்ட **உயிர்** உட்கரணங்களாகிய ஆக்கைப்பகுதியின் றுணைகொண்டு புவனங்களிடை இன்பத் துன்பங்களனுபவிப்பனவாதலின் **உணர்வாகி - உலகங்களனைத்துமாய்** எனப் பின்வைத்தார். "ஊனாகி யுயிராகி யதனு ணின்ற வுணர்வாகிப் பிறவனைத்து நீயாய் நின்றாய்" (தாண்டகம்). "வானாகி மண்ணாகி வளியாகி யொளியாகி, யூனாகி யுயிராகி" (திருவா); **ஆகி** - என்பது முதலிய ஆக்கச் சொற்கள் வான் முதலிய தத்துவங்களைப் பற்றி, மூவகை மாயைகளையும், இயக்கும் இறைவன் நிமித்தகாரணனாகும் தன்மையினையும், **உயிராகி** என்றவிடத்து "அவையேயாய்" (போதம்-2) என்றபடி உயிர்களேயாகி அவற்றுடன் அத்துவிதமாய் இறைவன் கலந்துநிற்கும் நிலையினையும் உணர்த்தின.

உலகுக்கப்பால் ஆனாத வடிவாகி - தத்துவங்களையெல்லாம் கடந்துநின்ற இறைவனது சொரூபநிலை குறித்தது. இது "தானேயாய்" (போதம்-2) என்ற நிலை. எல்லா உயிர்களுக்கும் அவ்வவற்றின் வினைப்பயன்களை நுகர்வித்தற்பொருட்டு அவ்வுயிர்களுள்ளே கலந்தும், நுகர்தற்கிடமாகிய உடம்புகளையும் உலகுகளையும் போகங்களையும் கொடுத்தும், தான்கடந்து வேறே தனிநின்று ஆணைசெலுத்தியும் நிற்கும் தன்மையால் உயிர்கள் இங்குப் பசி நோய் நுகர்தற்குரிய வினைப்பயன் தந்தருளினார். ஆனால் அவ்வாறு நுகரச்செய்யவல்ல அவரே அடியார்கள் அப்படி நுகராமலே பயன்றுய்த்தலையும் செய்யவல்லவர் என்ற கருத்தால் இங்கு இத்தன்மையாற் கருதி அடிபரவினர் எந்தம் பெருமக்கள் என்க. "இறைபணி வழுவாது நிற்க மலமாயை தன்னொடு வல்வினை யின்றே" என்பது ஞானநூல் (போதம்-10); "எத்தனுவி னின்று மிறைபணியார்க் கில்லைவினை, முற்செய்வினை யுந்தருவான் முன்" "சார்ந்தாரைக் காத்த றலைவர் கடனாதல்" என்று வரும் உண்மைகள் இங்குக் கருதத்தக்கன. இக்கருத்துப்பற்றியே முன்னர் "நாளும் **பண்பின்வழாத் திருத்தொண்டர்** சூழ" என்று இறைபணி வழுவா துநிற்கும் தன்மைபற்றிக் கூறியருளினார்; இறைவர் எட்டுமூர்த்தியாயும், உலகாயும், அவை கடந்தவராயும் நிற்கும்நிலைபற்றி முன்னர் அங்கங்கும் பல திருவாக்குகள் காட்டப்பட்டன; "இருநிலனாய்த் தீயாகி... அட்டமூர்த்தியாகி" (தேவாரம்); "நிலநீர் நெருப்புயிர் நீள்விசும்பு நிலாப்பகலோன், புனலா மைந்தனோ டெண்வகையாப் புணர்ந்து நின்றான், உலகேழெனத் திசைபத்தெனத் தா னொருவனுமே, பலவாகி நின்றவா தோணோக்க மாடாமோ" (திருவா); **உயிர்** - உயிர்ப்பு - காற்று. **மைந்தன்** - உயிர். **உலகேழென** - உலகங்களனைத்துமாய் - (2461).

அடிபரவி அன்றிரவு துயிலும்போது - அடியார்க்கும் கவலைவருமோ என்று கருத்துட்கொண்ட எந்தம் பெருமக்கள் அதனை (கவலை) வாராமற் காக்கவல்லன இறைவரது திருவடிகளே என்ற துணிபினால் அன்று இரவு அடிபரவித் துயின்றனர்; **பரவி** - மேற்கூறிய தன்மையாற் சிந்தித்துத் துதித்து உயிர்கள் கவலைமாற்றும் வழியிது என்று காட்டிய படியுமாம்.

2462. "உலகியல்பு நிகழ்ச்சியா லணைந்த தீய
உறுபசிநோ யுமையடையா தெனினு மும்பால்
நிலவுசிவ நெறிசார்ந்தோர் தம்மை வாட்ட
நீக்குதற்கு நித்தமொரோர் காசு நீடும்
இலகுமணிப் பீடத்துக் குணக்கு மேற்கும்
யாமளித்தோ முமக்;கிந்தக் காலந் தீர்ந்தால்
அலகில்புக ழீர்!தவிர்வ தாகு" மென்றே
யருள்புரிந்தார் திருவீழி மிழலை யையர். 564

கான் ஆடு கங்காளர் மிழலை மூதூர் காதலித்தார் - **கான்** - காடு; உலகம் சங்கரிக்கப்பட்ட இடம்; இது சங்காரத் தொழில் குறித்தது. **கங்காளர்** - எலும்பணிந்தவர். "கங்காளராய், வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (திருவிருத்தம்) என்றபடி கங்காள வேடம் மீளச் சிருட்டித்தலைக் குறிக்கும். இங்கு **மிழலை காதலித்தார்** என்றது இனிச் செய்யுமருளினாற் காத்தற்றொழில் குறிப்பித்து நின்றதும் காண்க.

அருளிச்செய்வார் - முற்றெச்சம். **அருளிச்செய்வார் - என்றே அருள்புரிந்தார்** என மேல்வரும் பாட்டுடன் முடிக்க. இங்கு அருளிச்செய்வார் என்பது சொல்லுதலையும், மேல் அருள்புரிந்தார் என்பது செய்வதனையும் குறித்தன. 563

2462. பொருளுரை- உலகியல்பு.... எனினும் - இவ்வுலகியல்பினால் நிகழ்வனவாய் வந்தணைந்த தீமைபொருந்திய பசியாகிய நோய் உங்களை அடையாது; என்றாலும்; உம்பால்.... நீக்குதற்கு - உங்களை அடைந்த சிவநெறி நிற்கும் அடியார்களை வாட்டம் நீக்குதற்காக; நித்தம் ஓரோர் காசு... உமக்கு - நித்தமும் ஒவ்வொரு பொற்காசினைக் கிழக்கிலும் மேற்கிலும் உள்ள விளக்கமாகிய அழகிய பலிபீடத்தில் உங்களுக்கு அளிக்கின்றோம்; இந்தக் காலம்.. தவிர்வதாகும் - அளவில்லாத புகழினை உடையீர்களே! இந்தப் பஞ்சகாலம் தீர்ந்தால் அது நிறுத்தப்படும்; என்றே.. ஐயர் - என்று திருவீழி மிழலை இறைவர் அருளிச்செய்தனர்.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை- இப்பாட்டினால் மிழலை இறைவர் எந்தம் பெருமக்களிருவருக்கும் கனாவில் அருளியசெய்தி கூறப்பட்டது. இதனைக் "கால நிலைமை யாலுங்கள் கருத்தில் வாட்ட முறீரெனினும், ஏல வும்மை வழிபடுவோர்க் களிக்க வளிக்கின்றோ மென்று" (1522) என்று அரசுகள் புராணத்துட் கூறியது காண்க.

உலகியல்பு நிகழ்ச்சியால் அணைந்த தீய உறுபசிநோய் - இதனையே முன் "கால நிலைமையால்'' என்று கூறினார்; **உலகியல்பு நிகழ்ச்சியாவது** உயிர்கள் தத்தங் கன்மத்துக்கேற்ற பயன்களைக் காலத்தா லனுபவித்தல்; உயிர்களுக்குத் தனித்தனி வினைப்பயன் வருதல்போலக், காலநிலைபற்றி அவை பலவற்றுக்கும் ஒருங்கே வறுமை, பசி, நோய் முதலியவை பீடிக்கும்; "பயில்வித் தெல்லாம், காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்" (சித்தி 1-9) "தம்மு ளொருசாதிப் பல பொருளாகிய வித்து முதலிய

சடங்கள் ஒவ்வொரு காலவிசேடத்தின் ஒருங்கே தோன்றுதலும் ஒருங்கே யழிதலும் கண்டாம்" (பொழிப்புரை). இதுபற்றியே இங்கு உலகியல்பு நிகழ்ச்சியால் என்றார்; காலம் பற்றி ஒருங்கே பலவுயிர்களையும் பீடிக்கும் தீவினைப்பயன் என்பது.

அணைந்த - தீவினைப்பயனால் வறுமை படர்ந்தமையால் வந்த.

தீய உறுபசி நோய் - தீய பசியாகிய நோய்; **உறுதல்** - தீவினைப்பயனாய் வருதல்; பொருந்துதல்.

உமை யடையாதெனினும் - அடையாமைக்குக் காரணமாவன; தீவினையிலாமையின் தீவினைப் பயனுமிலாமையும்; "அவனே தானேயாகிய வந்நெறி, ஏக னாகி யிறை பணிநிற்ற"லுமாம். இதன் இயல்பெல்லாம் சிவஞானபோதம் - சித்தியார் - (10 சூத்) முதலிய ஞான நூல்களுள்ளும், அனுபவமுள்ள தேசிகர்பாலும் உணர்ந்துகொள்க.

உம்பால் இலகு சிவநெறி சார்ந்தோர் - உங்களையடைந்தமையால் அடியார்க்கும் அரனுக்கும் பண்பு வழாமற் பணிசெய்வோர். இதனையே முன்னர் "உம்மை வழிபடுவோர்" என்றார். குருவழிபாடும் அடியார் வழிபாடும் சிவநெறி என்றதாம்.

வாட்டம் - பசிநோய் காரணமாக வரும் வருத்தம். **நீக்குதல்** - போக்குதலும் வாராமற் காத்தலுமாம்.

ஓரோர் காசு - குணக்கும் மேற்கும் இலகுமணிப் பீடத்து - காசு - பொற்காசு; **ஓர்ஓர்** - நித்தம் ஒவ்வொரு காசு எனவும், பிள்ளையார்க்கு ஒன்றும் அரசுகளுக்கு ஒன்றும் எனவும் கொள்க. ஓர் என்னாது ஓரோர் என்றது மிக்கருத்து; **பீடம்** - பலிபீடம். இவை இன்றும் இத்தலத்தில் விளக்கமாகக் காண உள்ளன; கிழக்கில் உள்ள பீடத்தில் பிள்ளையாருக்கும், மேற்கில் உள்ள பீடத்தில் அரசுகளுக்குமாக அளித்தருளினர். "விமானத்தின் கிழக்குமேற்கும் பீடத்தி, லண்ணல் புகலி யாண்டகையார் தமக்கு மாண்ட வரசினுக்கும், நண்ணு நாள்க டொறுங்காசு படிவைத் தருள" (1523) என்று முறையே முன்னர்க் கூறியருளியமையால் இங்குப் பொதுப்படக் கூறினார்.

இந்தக் காலம் - உலகியல் நிகழ்ச்சியால் தீய உறுபசிநோய் வருத்தும் காலம்.

காலம் தீர்தல் - உலக நிகழ்ச்சியில் உரியபடி அனுபவிக்கப்பட்டு எல்லை கழிதல்.

தவிர்வது - ஓரோர் காசு நித்தம் அளிக்கப்படுதல் நீங்குதல்.

அலகில் புகழீர் - புகழ் - உயிர்காத்தல்; "உரைப்பா ருரைப்பவை யெல்லா மிரப்பார்க்கொன், றீவார்மே னிற்கும் புகழ்" (குறள்).

ஐயர் - மேன்மையுடையோர்; அருளின் மேன்மை குறித்தது; 564

2463. பொருளுரை... தம்பிரான்... நீங்க - தமது பெருமானார் மேற்கூறியவாறு அருளிச் செய்து கனவினின்று நீங்கியருள; சண்பையார்... என்றே - சீகாழியவர்களது தலைவராகிய இளஏறு போன்ற பிள்ளையார் தாம் துயிலினீங்கி உணர்ந்து "நமது

2463. தம்பிரா னருள்புரிந்து கனவி னீங்கச்
சண்பையா ரிளவேறு தாமு ணர்ந்து
"நம்பிரா னருளிருந்த வண்ண"மென்றே
நாவினிசை யரசரொடுங் கூட நண்ணி
வம்புலா மலரிதழி வீழி நாதர்
மணிக்கோயில் வலஞ்செய்யப் புகுந்த வேலை
அம்பிகா பதியருளாற் பிள்ளை யார்தா
மபிமுகத்துப் பீடிகைமேற் காசு கண்டார். 565

பெருமானாரது திருவருள் இருந்தவண்ணம் இவ்வாறு!" என்று அதிசயங்கொண்டாராகி; நாவினிசை யாசரொடும் கூட - வேலை - (அவ்வாறே உணர்ந்து அதிசயித்த) இசையுடைய திருநாவுக்கரசருடனே கூடச் சேர்ந்து மணமுடைய கொன்றை சூடிய திருவீழிநாதருடைய மணிக்கோயிலினை வலமாகச் சூழப்புகுந்தபோது; அம்பிகாபதி.... கண்டார் - உமையம்மைபாகரது திருவருளினாலே பிள்ளையார் தாம் அபிமுகத்தில் உள்ள பலிபீடத்தின் மேலே பொற்காசினைக் கண்டருளினார்.

விளக்கவுரை.. கனவில் - கனவில் வெளிப்பட்ட நிலையினின்றும், **கனவு** - அதில் வெளிப்பட்டு அருளியநிலை குறித்தது; ஆகுபெயர்.

இள ஏறு - **ஏறு** - ஆண் சிங்கம்; சிங்க ஏறுபோல்வாரை ஏறு என்றதுபசாரம்.

உணர்ந்து - கனவுநிலை நீங்கி நனவுநிலையில் வந்து; துயிலுணர்ந்து; கனவிற் கண்ட நிலைகளை அவ்வாறே நனவில் உணர்ந்து - நினைவில் வரக் கொண்டு என்ற குறிப்புமாம். **இதழி** பொற்காசு தரும் குறிப்பு. "விரைசேர் பொன்னிதழிதர" (தேவா).

"நம்பிரான் அருள் இருந்தவண்ணம்!" - இது அதிசயக் குறிப்பு; அருள இருந்த பரிசுதானென்னே! என்றதிசயித்தபடி. "என்னே! அம்பல நிறைந்தார் தொண்ட ரறிவதற் கரியார் என்று" (604) "தன்னரு ளிருந்தவண்ணம்" (850) என்பன முதலியவை காண்க.

இசைநாவினரசரொடுங்கூட - என்க; தம்போலவே கண்டு உணர்ந்த என்றது அவாய் நிலையான் வந்தது; **இசை** - புகழ்; வாசியின்றிக் காசுபெறும் குறிப்புமாம்; **இசை** - தமக்குப்போலவே பெருமானால் அருள்செய்யப்பெற்ற என்றலுமாம். இப்பொருளில், **இசை** - சொல்லப்பெற்ற என்க.

அம்பிகாபதியருளால் - அம்மையாரது வடிவமே அருள் வெளிப்பாடாதலின் இத்தன்மைபற்றிக் கூறினார்.

பிள்ளையார்தாம்.. கண்டார் - **அபிமுகம்** - எதிர்முகத்தில். அஃதாவது கிழக்கில் இறைவர் திருமுன்புக்கு நேராக; "கிழக்கும்" (1523); **காசு** - பொற்காசு.

பிள்ளையார் கண்டார் - திருநாவுக்கரசர் இதன்பின் மேற்குப் பீடத்தில் கண்டு எடுத்து அடியாரை ஊட்டிய வரலாறுகள் எல்லாம் அவர்தம் புராணத்தினுள் கூறத்

2464. காதலொடுந் தொழுதெடுத்துக் கொண்டு நின்று
கைகுவித்துப் பெருமகிழ்ச்சி கலந்து பொங்க
"நாதர்விரும் படியார்க ணாளு நாளு
நல்விருந்தா யுண்பதற்கு வருக"வென்று
தீதில்பறை நிகழ்வித்துச் சென்ற தொண்டர்
திருவமுது கறிநெய்பா றயிரென் றின்ன
ஏதமுறா தினிதுண்ண வூட்டி யங்க
ணிருதிறத்துப் பெருந்தவரு மிருந்த நாளில். **566**

தக்கவையாய் ஆண்டு முன்னரே உரைக்கப்பட்டமையால், ஈண்டுப் பிள்ளையார் கண்டதும் கொண்டதும் ஊட்டியதும் மட்டில் இப்பாட்டிலும் மேல்வரும் பாட்டுக்களிலும் விரித்தோதும் கவிநலமும் அமைதியும் காண்க. *565*

2464. **பொருளுரை–** *காதலொடும்.. பொங்க - பெருவிருப்புடனே தொழுது அந்தக் காசினை எடுத்துக்கொண்டு நின்று, கைகளைக் கூப்பி வணங்கிப் பெரிய மகிழ்ச்சி உண்ணிறைந்து பொங்க; நாதர்... நிகழ்வித்து - இறைவர் விரும்பும் அடியார்கள் ஒவ்வொருநாளும் நல்ல விருந்தாக அமுதுண்பதற்கு வருக என்று தீதில் பறைசாற்றுவித்து; சென்ற தொண்டர்... உண்ண ஊட்டி - அவ்வாறு வந்த தொண்டர்கள் திருவமுதும் கறிகளும் நெய்யும் பாலும் தயிரும் என்று உள்ள இவைகளைக் குறைவுவராதபடி இனிது உண்ணும்படி ஊட்டி; அங்கண்.... நாளில் - அத்திருநகரின்கண் இருதிறத்துப் பெருந்தவர்களும் தங்கியிருந்த நாட்களில்;*

விளக்கவுரை– **எடுத்துக்கொண்டு** *- பீடத்தில் கண்ட அந்தப் பொற்காசினைக் கையில் எடுத்துக்கொண்டு; திருக்கோயிலிற் கண்ட காசினை இவ்வாறு திருவருள் பெறாதார் யாவராயினும் கைப்பற்றவும் எடுத்துக்கொண்டு பயன்படுத்தவும் உரியரல்லர் என்பது குறிக்கக்* **கையில் எடுத்த செயலைத்** *தனியே விதந்து எடுத்துக் கூறினார்.*

நாதர் விரும்பு அடியார்கள் *- நாதருக்கினியராய் அவரால் விரும்பப்படும் அடியார்கள்; "உம்பால் நிலவுசிவ* **நெறிசார்ந்தோர்** *தம்மை வாட்ட நீக்குதற்கு" (2462) என்று அருளியவாற்றால் அவ்வடியார்களது இடர்தரியாது அருளின செய்கையை* **விரும்பும்** *என்றார். சார்ந்தாரைக் காக்கும் தலைவர் கடன் ஈண்டு விருப்பம் எனப் பட்டது; ஆதலின் "வேண்டுதல் வேண்டாமை யிலான்" என்ற இறைமைத் தன்மை யோடு மாறுபாடின்மை யறிக. நாதரை விரும்பும் அடியார்கள் என்று இரண்டாம் வேற்றுமைத் தொகையாகக் கூறும்படியும் நின்றது. ஈண்டு நாதர் விரும்பியவர் அடியார்க்கடியராந் தன்மைகொண்ட தொண்டர்.*

நல்விருந்து *- விருந்தோம்புதல் எனப்பட்ட பிறவெல்லாம் பசு தருமங்களாயொழிந்து முடிவிற் பிறவிக்கு வித்தாவன; இங்கு ஊட்டப்படும் விருந்து, இறைவரை முன்னிட்டுச் சிவனடியார்பாற் செய்யப்படுதலின் பிறவியை நீக்கி முத்திக்*

2465. நாவினுக்கு வேந்தர்திரு மடத்திற் றொண்டர்
நாட்கூறு திருவமுது செய்யக் கண்டு
சேவுகைத்தா ரருள்பெற்ற பிள்ளை யார்தந்
திருமடத்தி லமுதாக்கு வாரை நோக்கித்
"தீவினைக்கு நீரென்று மடைவி லாதீர்!
திருவமுது காலத்தா லாக்கி யிங்கு
மேவுமிக்க வடியவருக் களியா வண்ணம்
விளைந்தவா றென்கொலோ ? விளம்பு"மென்றார். 567

கேதுவாமென்பார் நல் விருந்தென்று விசேடித்தார். "ஏதந்தீர் நல்விருந்தா வின்னடிசி லூட்டுவார்" (2724) என்றது இங்கு நினைவுகூர்தற்பாலது.

தீதில்பறை - பசிப்பிணியாகிய தீமையை இல்லையாக்கும் கருவியாகிய பறை; "பரம னடியா ரானார்க ளெல்லா மெய்தி யுண்கவென விரண்டு பொழுதும் பறை நிகழ்த்தி" (1524) என்று முன்கூறிய விவரங்களையும் இங்குப் பெய்து கொள்க.

சென்ற - பறைசாற்றக் கேட்டு உண்ண வந்தணைந்த;

திருவமுது கறி நெய் பால் தயிர் என்றின்ன - தலைமையும் சிறப்பும்பற்றி அமுதுக்குத் திரு என்ற சிறப்படைமொழி தந்தோதுதல் மரபு; **அமுது** - அன்னம் சோறு; இது உணவு என்ற பொதுப்பொருளில் பிறவகைகளுடனும் சேர்த்துக் கறியமுது, பாலமுது என்பனவாகவும் வழங்கப்படும்; **என்று இன்ன** - இதனால் இனம்பற்றிய பாற்சோறு - இளநீர் முதலியனவும் கொள்ளவைத்தார்.

ஏதம் உறாவகை இனிதுண்ண ஊட்டி - **ஏதம் உறாமை** - குறையும் மிகையும் முதலிய கேடில்லாமை; **ஏதம் உறாது**; உணவு உடற்பகுதிக் கொவ்வாமை முதலிய கெடுதி நேராதபடி என்ற குறிப்புமாம்.

இனிதுண்ண ஊட்டி - இன்சொல் முதலிய உபசரிப்புடன் உண்பித்து; **ஊட்டி** - குழவியைத் தாய் ஊட்டுதல்போல அன்புடன் உண்பித்து.

இருதிறத்துப் பெருந்தவர் - பிள்ளையாரும் அரசுகளும் அவ்வவருடனிருந்த அடியவரும்; **திறம்** - அன்பின் உறைப்பும் வலிமையும்.

நாளில் - கண்டு என மேல்வரும் பாட்டுடன் முடித்துக்கொள்க. 566

2465. **பொருளுரை**... நாவினுக்கு.... திருஅமுது செய்யக்கண்டு - திருநாவுக்கரசரது திருமடத்தில் தொண்டர்கள் உச்சிப்போதிற்குமுன் திருவமுதுசெய்து முடித்தலைக் கண்டு; சேவுகைத்தார்... நோக்கி - இடபத்தையுடைய சிவபெருமானது திருவருள் பெற்ற பிள்ளையார் தமது திருமடத்தில் அமுதாக்கும் பரிசனங்களைப் பார்த்து; "தீவினைக்கு... விளம்பும்" என்றார் - "தீய தொழில்களுக்கு நீங்கள் என்றும் இடம் தரமாட்டீர்களன்றோ? ஆனால் காலத்தினால் திருவமுது ஆக்கி இங்கு வரும் அடியவர்களுக்கு அளிக்காதபடி விளைந்த காரணம்தான் என்கொலோ? சொல்லுங்கள்" என்று அருளிச் செய்தனர்.

2466. திருமறையோர் தலைவர்தா மருளிச் செய்யத்
திருமடத்தி லமுதமைப்போர் செப்பு வார்கள்
"ஒருபரிசு மறிந்திலோ மிதனை; யும்மை
யுடையவர்பாற் பெறும்படிக்கா சொன்றுங் கொண்டு
கருதியவெல் லாங்கொள்ள வேண்டிச் சென்றாற்
காசுதனை வாசிபட வேண்டு மென்பார்;
பெருமுனிவர் **வாகீசர் பெற்ற காசு**
பேணியே கொள்வ;ரிது பிற்பா"டென்றார். 568

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை. நாட்கூறு *- நாளினை இரணடாகக் கூறுபடுத்த வரும் உச்சிப் போதின்முன்; உச்சம்போது - நண்பகல் - வேளையே நாளின் உணவுக்குரிய காலம் என்பது முன்னையோரின் முடிவு. "பிச்சைக் கெய்ச்சுச்சம் போது" "உச்சம் போதாலூரூர் திரியக் கண்டால்" (தேவா). உச்சிக்குமுன் பலமுறை உணவுட் கொள்ளுதல் நவீன உலகரின் தீய வழக்குக்களுள் ஒன்றாய், உடல் நலன்களும், ஆயுளும் குறைந்துவருவதற்குக் காரணமாயிற்று; முதலுணவு உச்சியில் கொள்ளுதலே மரபு என்று இந்நாளில் அமெரிக்கர்கள்* Noon breakfast system *என்ற முறையினைக் கையாளத் தொடங்கியுள்ளார் என்பதும் காண்க.*

நாவினுக்கு... செய்யக்கண்டு *- அங்கு நாட்கூறு திருவமுது செய்யக்கண்டு என்றதனால் தமது திருமடத்தில் அவ்வாறன்றித் தாழ்த்தது என்பது தானே போதருதல் காண்க. அடியார்பானிகழும் தீமையை வெளிப்படச் சொல்லாது மங்கல முறையால் வேறுவகையாற் கூறும் மரபுபற்றி இவ்வாறு கருதவைத்தோதினார்.*

தீவினைக்கு நீரென்றும் அடைவிலாதீர்! *- நல்லோர் வினவும் இன்சொல் வழக்கு மரபு.* ***தீவினையாவது*** *- அடியார்க்கு நாட்கூறு தாழ்த்து அமுதுசெய்வித்தல்; அவர்களது உயர் பண்பினையும் அன்பினையும் தாம் அறிந்த நிலையும், காலத்தாழ்வு அவர்கள் செயலானன்றிப் பிறிது காரணத்தாலாயிற்றென்று தாம் கருதியநிலையும் புலப்பட இவ்வாறு சொற்சுருக்கமும் அழகும்பட உரைத்த உரைநயம் காண்க.* ***தீவினை*** *- மடைத்தொழில் என்று கொண்டு, மடைத்தொழிலுக்கு இளைப்பு இல்லாதவர்கள் என்பாருமுண்டு.*

விளைந்தவாறு என்கொலோ விளம்பும் *- உங்களாலாயினதன்றென்பதும், பிறிது காரணம் உண்டென்பதும் கருதவருதலின், அக்காரணம் புலப்படாமையின்,* ***என் கொலோ*** *என்றார்;* ***விளைந்தஆறு*** *- காரணம்.* *567*

2466. திருமறையோர் தலைவர்தாம்... செப்புவார்கள் *- திருமறையவர்களுடைய தலைவராகிய பிள்ளையார் மேற்கூறியபடி அருளிச்செய்ய அதனைக் கேட்டுத் திருமடத்தில் அமுது அமைக்கும் அப்பரிசனங்கள் சொல்வார்களாகி; ஒருபரிசும்*

அறிந்திலோம் இதனை - இதன் தன்மையை நாங்கள் ஒன்றும் அறிந்திலோம்: உம்மை- என்பார் - உம்முடைய பெருமானிடம் பெறுகின்ற படிக்காசு ஒன்றினைக்கொண்டு அமுதமைக்கவேண்டிய பொருள்களையெல்லாம் வாங்கவேண்டிச் சென்றால் (ஆவண வீதியில் உள்ள வணிகர்கள் காசுக்கு வட்டம்தர வேண்டுமென்று சொல்வர்: பெருமுனிவர்- கொள்வர் - பெருமுனிவராகிய திருநாவுக்காசர் பெற்ற காசினை (அவ்வாறு கூறாது) மிக விருப்பத்துடன் ஏற்றுக்கொள்வர்: இது பிற்பாடு என்றார் - இதுவே காலந்தாழ்ப்பதற்குக் காரணம் என்று சொன்னார்கள்.

விளக்கவுரை.. திருமறையோர் தலைவர் - மறையவர்களுள் முதன்மையுடைய திருஞானசம்பந்தர்: பிள்ளையாரைப் பெருமறையவராகவும், அரசுகளைப் பெருமுனிவராகவும் அப்பரிசனங்கள் கருதிக்கொண்ட நிலையினைக் குறிப்பில் உணர்த்தும் கவிநயம் காண்க.

ஒரு பரிசும் அறிந்திலோம் - பரிசு - தன்மை: விளைந்தவாறு என்கொலோ? என்று காரணங்கேட்ட பிள்ளையாருக்குக் காசு வாசிபட வேண்டியவதனாற் காலந்தாழ்க்க நேர்ந்ததென்ற ஒரு காரணமும் கூறினார்கள்; ஆனால் அதனோடமையாது அதன் தன்மையாகிய மூலம் இன்னதென்று அறிகிலோம் என்று மேலும் கூறினது இறைவரிடத்து ஒன்றுபோலவே இருவரும் பெறும் காசு இவ்வாறு இரு வேறு திறனாய் நிற்பதனுக்கு உரிய தன்மை தமக்கு அறியவாராமைபற்றிக் கூறியவாறு; பரிசு - காரணம் என்றுரைப்பாருமுண்டு.

உம்மை உடையவர்பால் - உரிமையுடைய உடையவராதலின் இவ்வேறுபாட்டுக்கு ஒரு காரணமின்றி இவ்வாறு வாசிபடும் காசு அளித்தருளமாட்டார் என்ற குறிப்புப்படச் சுட்டிக் கூறியவாறு.

படிக்காசு - நாடோறும் படியாகப் பெறும் காசு; அமுதுபடிக்காகப் பெறும் காசு என்றலுமாம்.

கருதிய எல்லாம் கொள்ள - அமுதமைப்பதற்காகக் கருதி வேண்டிய அரிசி முதலிய பண்டங்கள் எல்லாவற்றையும் வாங்கிக்கொள்ள. கருதிய - அகரவீற்றுப் பலவின்பால் வினைப்பெயர்; எல்லாவற்றையும் என இரண்டனுருபு தொக்கது; கொள்ளுதல்; விலைக்குப் பெறுதல்; என்பர் - கொள்வர் - என்ற வினைகளுக்கு வணிகர் என்ற எழுவாய் தொக்கு நின்றது.

வாசிபட - வாசி - வட்டம்; வாசிபடுதல் வட்டங்கொடுத்துச் செலுத்தப்படுதல்.

பெருமுனிவர் வாகீசர் பெற்ற - அடைமொழி அவரது சிறப்பினையும் வேறுபாட்டின் அருட்குறிப்பினையும் அமுதமைப்போர் தாமுணர்ந்தவாறுணர்த்தி நின்றது; ஆனால் பிள்ளையார் உணர்ந்த அருட்குறிப்பினைத் "தொண்டாற் பெறும்" என மேல்வரும் பாட்டிற் பெறவைத்தார்.

2467. திருஞான சம்பந்த ரதனைக் கேட்டுச்
சிந்திப்பார் "சிவபெருமா னமக்குந் தந்த
வொருகாசு வாசிபட, மற்றக் காசு
நன்றாகி வாசிபடா தொழிவா னந்தப்
பெருவாய்மைத் திருநாவுக் கரசர் தொண்டாற்
பெருங்காசா மாதலினாற் பெரியோன் றன்னை
வருநாள்க டருங்காசு வாசி தீரப்
பாடுவ"னென் றெண்ணியது மனத்துட் கொண்டார். 569

பேணியே - மிக விரும்பியே; அரசாங்கத்தினின்றும் போந்த காகித நாணயங்களிலும், பொன் - வெள்ளி - செம்பு - ஈயம் முதலிய பிற நாணயங்களினும் - பழமை - தேய்வு - சிதைவு முதலிய காரணங்களால் இற்றைநாளினும் ஆவணங்களில் இவ்வாறு வட்டம்படவேண்டி வருவதும், செலுத்திப் பண்டம் பெறுதலிற் காலந் தாழ்த்தலும் நிகழ்தல் காண்க.

பிற்பாடு - காலத்தாழ்வு; அதனால் நிகழும் காரியத்துக்கு ஆகிவந்தது. *568*

2467. பொருளுரை... திருஞானசம்பந்தர்... சிந்திப்பார் - அதனைக் கேட்டுத் திருஞானசம்பந்த நாயனார் அதன் தன்மையைப்பற்றிச் சிந்திப்பாராய்; சிவபெருமான்.... ஒழிவான் - சிவபெருமான் ஒன்றுபோல நமக்குத் தந்தருளிய இரண்டு காசுகளில் ஒன்று வாசிபட நிற்க, மற்றவொரு காசு வாசிபடாதொழிவதற்குக் காரணம்; அந்தப் பெருவாய்மை... பெறுங்காசாம் - அந்த பெருவாய்மையுடைய திருநாவுக்கரசர் கைத்தொண்டினாற் பெறும் காசு ஆகும்; ஆதலினால்... பாடுவன் என்று எண்ணி - ஆகையினாலே இனி வருநாள்களில் தரும் காசு வாசிபடாது தீர்வதற்காக இறைவரைப் பாடுவேன் என்று எண்ணித் துணிந்து; அது மனத்துட் கொண்டார் - அதனைத் தமது திருவுள்ளத்துட் கொண்டருளினார்.

விளக்கவுரை... திருஞானசம்பந்தர் - சிவனது திருவருட் குறிப்புச் சிவஞானத்தாலன்றி யறிய வாராமையில் இங்கு இப்பெயராற் கூறினார்.

சிந்திப்பார் - சிந்திப்பாராகி; முற்றெச்சம். சிந்திப்பாராய் - என்று எண்ணி - என்று கூட்டுக.

நமக்கு - அரசுகளையும் உள்ளிட்ட பன்மை. ஒன்றுபோலவே நம்மிருவருக்கும். **ஒருகாசு வாசிபட - மற்றக்காசு நன்றாக வாசிபடாது ஒழிவான்** - மற்றக்காசு **நன்றாகி** என்றதனால் ஒரு காசு **நன்றாகாது** நின்றது என்று தானே போதருதலின் அதனை உய்த்துணர வைத்தார்; நன்மையில்லாததை வெளிப்படக் கூறாத மரபுபற்றி; மேல் "படிநற் காசு" (2468) என்பதும் காண்க. **ஒழிவான்** - ஒழிதல்; வானீற்றுத் தொழிற்பெயர்.

தொண்டாற் பெறுங் காசு ஆம் - தொண்டுக்குப் பரிசாகப் பெறும் காசு ஆதலின் வாசிபட வரின் பரிசு குறைவுபடும்; அது தகாது; ஆதலின் தொண்டிற்கு ஈடாகத் தருவது

2468. மற்றைநாட் டம்பிரான் கோயில் புக்கு
"வாசிதீர்த் தருளு"மெனப் பதிகம் பாடிப்
பெற்றபடி நற்காசு கொண்டு மாந்தர்
பெயர்ந்துபோ யாவணவீ தியினிற் காட்ட,
"நற்றவத்தீர்! இக்காசு சால நன்று;
வேண்டுவன நாந்தருவோ"மென்று நல்க
அற்றைநாட் டொடங்கிநாட் கூறு தன்னி
லடியவரை யமுதுசெய்வித் தார்வ மிக்கார். 570

வாசிபடாது ஈந்தருளினர் என்பது கருத்து. இந்நாளிலும் சில பகுதிகளுக்கு ஈடாகத் தரும் பரிசு, வட்டி - முதலாயின வருமான வரிக் கடமையின்றி (Free of Income-Tax) நியமிக்கும் முறையும் காண்க.

பெரியோன் - சிவநெறி சார்ந்தோராய்ப் பிள்ளையாரையும் அரசுகளையும் வழிபடுவோர்க் களிக்கும்பொருட்டு இறைவர் தாமே திருநீற்றுச்சார்பு பற்றி யளித்தாராயினும், அதனுள்ளும் இவ்வேறுபாட்டுடன் அவ்வவர் சார்பின் நிலையினால் அளித்தருளிய தன்மைபற்றிப் பெரியோன் என்றார். பெருமையாவது கோட்டமின்றி நிற்றல். "கோவினுக் கருங்கலங் கோட்ட மில்லது" (தேவா). "பிறவாயாக்கைப் பெரியோன்" (சிலப்).

வரு நாள்கள்.. வாசிதீரப் பாடுவன் - "அருச்சனை பாட்டே யாகும்" (216) என்றபடி பாடுதல் திருத்தொண்டாமாதலின், யான் அத்தொண்டுசெய்து அரசுகள் போலவே வாசிதீர்ந்த காசுபெறுவன் என்றது கருத்து.

எண்ணி அது மனத்துட் கொண்டார் - எண்ணித் துணிந்து அதனைக் கடைப்பிடியாக மனத்துள் நிலைபெற வைத்துக்கொண்டார். 569

2468. பொருளுரை.. மற்றை... புக்கு - அடுத்த நாளில் தமது பெருமானுடைய திருக்கோயிலுள்ளே புகுந்து; "வாசிதீர்த் தருளும்" என.. காட்ட - வாசிதீர்த்தருள் செய்யும் என்று விண்ணப்பித்துப் பதிகம் பாடி அதன் பயனாகப் பிள்ளையார் பெற்ற நல்ல படிக்காசினைக் கைக்கொண்டு பரிசனமாக்கள் சென்று ஆவண வீதியில் வணிகர்களிடம் காட்ட; நற்றவத்தீர்.... நல்க - "நல்ல தவத்தைச்செய்தவர்களே! இந்தக் காசு மிக நல்லது; நீங்கள் வேண்டுவனவற்றை நாங்கள் தருவோம்" என்று கூறி அவ்வாறே வேண்டும் எல்லாப் பண்டங்களையும் கொடுக்க; அற்றைநாள்.. மிக்கார் - அந்தநாள் தொடங்கி நாட்கூறாகிய முன் பகலிலே அடியவர்களுக்குத் திருவமுதுசெய்வித்து அன்பு பெருக்கினார்.

விளக்கவுரை.. "வாசி தீர்த்தருளும்" என - இது பதிகக் கருத்து. "வாசி தீரவே காசு நல்குவீர்" என்பது பதிகத் தொடக்கம். பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க.

பெற்ற படி நற்காசு கொண்டு மாந்தர்.. காட்ட - பதிகம் பாடியவுடன் காசு பெற்றனர் என்றும், அது முன் நித்தம்பெற்றதுபோலப் படியின் அளவின்பொருட்டு

அமைந்ததாயிற்று என்றும், ஆனால் அது முன்பெற்றவைபோல வாசிபடாமல் நல்லதாயிருந்தது என்றும், அதனைப் பிள்ளையார் தரப் பரிசனங்கள் கொண்டு ஆவண வீதியினிற் காட்டினர் என்றும், இவ்வளவும் ஒவ்வோர் சொற்களால் பெறுமாறு அடைமொழிகளும் பிறவும் புணர்த்திச் சரித நிகழ்ச்சியைச் சுருக்கியறிவித்து மேற்செல்லும் கவிநலம் காண்க; பதிகம் இருசீர்கொண்ட சுருங்கிய அளவுடைய அடிகளாலமைந்து செல்லுதலாற் சரிதமும் அவ்வாறு செல்வதுபோலும்!

நற்காசு - முன் "மற்றக் காசு நன்றாகி" (2467) என்றது காண்க. **மாந்தர்** - அமுதமைக்கும் பரிசனங்கள்; **ஆவண வீதி** - கடைத்தெரு.

நற்றவத்தீர் - பிள்ளையார் சார்புபெற்றமையும், அடியாரை அமுதூட்டும் சிறந்த பணி வாய்க்கப் பெற்றமையும் கருதி வணிகர் அவர்களை இவ்வாறு விளித்தனர்; இவை முன்னை நற்றவத்தானன்றி யமையாவென்பது கருத்து. "தவத்தினில்" (போதம்-8) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

சால நன்று - முன்னாட்களிலெல்லாங் கொணர்ந்ததைப்போ லன்றி மிக நன்று என்பதாம். இதனை நிறை, உரை, முதலியவாற்றால் எவ்வாற்றானும் அளந்தறிய வேண்டுதலின்றென்பார் **சால** என்றார்.

அமுதுசெய்வித்து ஆர்வமிக்கார் - முன்னை நிலைகளுடனே நாட்கூறு அமுது செய்விக்கப்பெற்ற நிலைபற்றியும் அன்புமிகுதியும் கொண்டனர்.

பெற்ற என்றதற்குப் பிள்ளையார் என்ற எழுவாயும், **நல்க** என்றதற்கு வணிகர் என்ற எழுவாயும் வருவிக்க. **மாந்தர் கொண்டு - அமுதுசெய்வித்து** மிக்கார் என்று முடிக்க. 570

திருவீழிமிழலை

திருச்சிற்றம்பலம் **பண் - குறிஞ்சி - 1-ம் திருமுறை**

வாசி தீரவே காசு நல்குவீர், மாசின் மிழலையீர், ஏச லில்லையே. (1)

இறைவ ராயினீர், மறைகொண் மிழலையீர், **கறைகொள் காசினை**, முறைமை நல்குமே. (2)

காழி மாநகர், வாழி சம்பந்தன் வீழி மிழலைமேற், றாழு மொழிகளே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- வாசிபடாமற் காசு நல்கவேண்டிப் பாடியருளுதல் (2468).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- பெரிய அருள் விளக்கத்திற் போந்ததொரு சிறு நிகழ்ச்சியாதலின் சிறிய அளவுகொண்ட யாப்பினாற் பாடியருளினார்; அன்றியும் பதிக நிறைவு கண்டு காசுகொண்டு அற்றைநாள் அடியார்க்குத் திருஅமுதுபடி நிகழ வேண்டிநின்ற நிலையின் எழுந்த ஆர்வத்தின் விரைவுக் குறிப்புமாம். இப்பண் -

இக்கட்டளை யாப்பின் அமைத்த தனிய திருவாரூர் - திருமுதுகுன்றம் - திருவாலவாய்த் திருவிருக்குக்குறள் பதிகங்களையும் அவ்வச் சரிதக் குறிப்புக்களுடன் இவ்வாறே ஒப்பு நோக்குக. (1) வாசி - வட்டம் "பதிவாசி புடம் புடம்வெய்தும் ஓட் டறுசெம் பொன் னொக்க வொருமாவுங் குறையாமல்" (ஏயர்கோன் - புரா - 137) **"வாசி தீரவே காசு நல்குவீர்"** உட்குறிப்பாகிய விண்ணப்பத்தை எடுத்த எடுப்பில் விரைவாயும் சுருங்கவும் கூறியது இப்பதிகத்தின் சிறப்பு; ஏசல் இல்லை - "கைத்தொண் டாகு மடிமையினால் வாசி யில்லாக் காசுபடி பெற்று வந்தார் வாகீசர்" என்றும், "இமையப்பாவை திருமுலைப்பா, லேசமுய்ய வுண்டவர்தாந் திருப்பதிக மாதலினாற். காசு வாசி யுடன்பெற்றார்" (1525) என்றும் முன்காட்டியபடியாலன்றி இப்போது இப்பதிகம் பாடியபின் அதுகாரணமாக வாசியில்லாத காசினைக் கைத்தொண்டாகு மடிமையில்லாத எனக்கும் அருளியமை பற்றி உம்மை ஏசுதல் நிகழாது என்றபடி; பாட்டினாற் பாவுதலும் தொண்டாகு மடிமையின் பாற்படுமென்று விண்ணப்பித்தபடி: "பணிகொண்டருளுமே" (6) என்ற கருத்து; (2) **இறைவராயினீர்** - யாவர்க்கும் ஒன்றுபோலவே நீர் இறைவராயினமையின் முறைமை நல்கும் எனக் காரணக் குறிப்புப்பட நின்றது; **கறை** - வாசியாகிய குறைபாடு என்ற பொருளில் வந்தது; **முறைமை** - வாசிபடா முறை; (3) **செய்ய** - சிவந்த; **உய்ய** - காலத்தாழ்வின்றி அடியார் அமுதுண்டு உலகமுய்ய; (4) **பேறும்** - அமுதளிப்பதனோடு காலத்தால் ஆக்கியளிக்கும் பேறும் என உம்மை இறந்தது தழுவிய எச்சவும்மை; (5) **தூமம்** - "கட்டழல் பொதிந்த நெற்றிக் கண்ணது கடிதே காமற், சுட்டது கயிலை முற்றுஞ் சூழ்புகை பரவிற் றன்றே" (கந்தபு - காமதகனப் படலம் - 89), "புகையுந் தீயு மெழுதரு மியற்கை" (மேற்படி 90), "செறிந்ததீப் புகையின் மாலை" (மேற்படி 91) **தூபம்** - புகை; இங்கு அதன் காரணமாகிய தீயைக் குறித்துநின்றது; காரிய ஏது எனப்படும்; கண்ணினது தீயை யாவரும் காணகில்லாது புகைமண்டிலமட்டில் கண்டார்களாதல் குறிப்பு; **நாமம்** - பெருமை; **சேமம்** - "உய்ய" (3) என்ற கருத்து; பசிப்பிணியால் இறந்துபடாமை சேமம் எனப்பட்டது; (6) **பிணிகொள்** - முடித்துக் கட்டப்பட்ட; **பணிகொண்டருளுமே** - பாட்டினையும் தொண்டாக ஏற்றுக்கொள்க; (7) **துங்கம்** - பெரிது; **சங்கை** - காசுநலமின்று - வாசிபடவேண்டுமென்ற ஆசங்கை; (8) **கரக்கை** - காசினது விலைமதிப்பினின்றும் வாசியினளவு கழிவித்தல்; அந்த அளவுக்கு உமது கொடை கரத்தலாயினதைத் தவிர்மின் என்றபடி; (9) **பயனும்** - "பேறும்" (4) என்ற கருத்து; அமுது அளித்தும் காலத்திலளிக்கவாராது தாழ்த்தலினால் அது பயனற்றுப்போமென்னும் உண்மையின் குறிப்பு. காசுதந்து அமுதளிக்கும் பேறு தந்ததுபோல வாசிதீர்த்துக் காலத்தால் அமுதளித்தலாகிய பயனும் என்க; (10) **பிறிவது** - அருள்வண்ணத்தினின்றும் நீர் பிறிவது; கொடையும் அதன் பயனும் என்றுரைப்பினுமமையும்; (11) **தாழும்** - விரும்பும்; **இம்மொழிகள் தாழும்** என்க. சம்பந்தனது மொழிகள் மிழலைமேல் தாழும் என்க. பதிகப் பயனும் குறிப்பும் முதற்பாட்டில் அருளியபடியால் திருக்கடைக்காப்பில் விரித்திலர்.

2469. பொருளுரை... அருவிலையில்... ஆகி - அரிய விலைக்குப் பெறற்குரிய காசும் அவைகளேயாய், அமுதுசெய்ய...மாளாதாக - அமுதுசெய்வதற்குத் தொண்டரானார்கள் அளவில்லாது மேலும் மேலும் அதிகரித்து வருகின்றவர்கள் எல்லாருக்கும், முன்னை

2469. அருவிலையிற் பெறுங்காசு மவையே யாகி
மமுதுசெய்யத் தொண்டரள விறந்து பொங்கி
வருமவர்க ளெல்லார்க்கும் வந்தா ருக்கு
மகிழ்ந்துண்ண வின்னடிசில் மாளா தாகத்
திருமுடிமேற் றிங்களொடு கங்கை சூடுஞ்
சிவபெருமா னருள்செய்யச் சிறப்பின் மிக்க
பெருமைதரு **சண்பைநகர் வேந்தர் நாவுக்**
சரசரிவர் பெருஞ்சோற்றுப் பிறங்க லீந்தார். **571**

வந்தவர்களுக்கும், மகிழ்ச்சியினுடன் உணவுண்ண இனிய அடிசில் குறைவுபடாதிருக்கும்படி; திருமுடிமேல்... அருள்செய்ய - திருமுடியின்மேல் திங்களையும் பாம்பினையும் சூடும் சிவபெருமான் திருவருள்புரிய; சிறப்பின்மிக்க... ஈந்தார் - சிறப்பினில் மிகுந்த பெருமையுடைய சண்பை நகரின் அரசராகிய பிள்ளையாரும் வாக்கின் அரசராகிய அடிகளும் என்ற இருவரும் பெரிய சோற்றுமலைகளை அமுதமாக ஈந்தருளினார்கள்.

விளக்கவுரை... அருவிலையிற் பெறுங் காசு - பெறுதற்கரிய விலைக்குப் பெறுதற்குரிய காசு என்றும், பெறுதற்கரியனவாக வேண்டும் எல்லாப் பொருள்களையும் விலைக்குப் பெறும் காசு என்றும் உரைக்கநின்றது; முன்னைப் பொருளில் அருவிலையாக என்றும், பின்னையதில் அருவிலைக்கு என்றும் உரைத்துக்கொள்க. அருவிலையாக என்பது முன்னைத் தவத்தால் பெற்ற திருத்தொண்டாகிய சிவநெறி ஒழுக்கம்; இரண்டு காசும் ஈண்டு ஒத்து நிகழ்ந்தமை குறிப்பு. பின்னைப் பொருளில் எல்லாப் பொருளையும் பெறும் விலையின் அளவு நீளும் பெறுமானமுள்ள என்க.

அவையே - நித்தமும் பெறும் காசு இரண்டாதலின் பன்மையிற் கூறினார்.

பொங்கிவருமவர்கள் - வந்தவர்கள் - வருமவர்கள் - நாடோறும் புதிது புதிதாய் வருவோர்; **வந்தவர்** - முன்வந்த பழந்தொண்டரும் முன்னரே வழிபட்டு உடனிருந்தார்களும்.

மாளாதாக - குறைவிலதாய்ப் பெருகும்; "நல்வேள்வி, தீது நீங்கநீர் செய்யவுந் திருக்கழுமலத்து, வேத வேதிய ரனைவருஞ் செய்யவு மிகுமால்" (2327) என்றது போலக் காண்க. இறைவரை உன்னிச்செய்யும் சிவபுண்ணியச் செயல்கள் மிகும் ஒவ்வோரிடங்களில் இன்றும் இவ்வாறு சோறு திருஅருளால் வளர்ந்து காட்டுதல் கண்கூடாக அறியப்படும். அது திருவருளால் நிகழ்வதென்பார் **மாளாதாக - அருள் செய்ய** - என்றார்; **மாளாதாக அருள்செய்தலாவது** - ஒரே காசு அவ்வந்நாளும் வேண்டும் பொருள்கள் எல்லாம் பெற இயன்றவாறு பெருகவைத்தலும், அமைத்த அமுது முதலியவை அவ்வந்நாளும் அளவிறந்து பொங்கி வரும் அடியார் கூட்டம் வரவரப் பெருக வைத்தலும் ஆம்.

திங்களொடு கங்கை சூடும் - அமுது திங்கள் போல வளர்தலும், அடியார் கங்கை போலப் பெருகுதலும் குறிப்பால் உணர்த்தி நின்றன - திரு. வ.சு.செ. அவர்கள் குறிப்பு.

2470. அவனிமிசை மழைபொழிய வுணவு மல்கி
யனைத்துயிருந் துயர்நீங்கி யருளி னாலே
புவனமெலாம் பொலிவெய்துங் கால மெய்தப்
புரிசடையார் கழல்பலநாள் போற்றி வைகித்
தவமுனிவர் சொல்வேந்த ரோடுங் கூடத்
தம்பிரா னருள்பெற்றுத் தலத்தின் மீது
சிவன்மகிழுந் தானங்கள் வணங்கப் போவார்
தென்றிருவாஞ் சியமூதூர் சென்று சேர்ந்தார். 572

சண்பைநகர் வேந்தர் - நாவுக்கரசர் - இருவரும் ஒப்பாந்தன்மையும் தலைவராந் தன்மையுமுடைய பெருமக்கள் என்பார் வேந்தர் - அரசர் என்றார். இறைவர் தந்த காசுகொண்டு அமுதளித்தமையால் இவர்களது தலைமைக்கு இழுக்கில்லை என்பது குறிப்பு; என்னை? அக்காசினை வாளாபெறாது "அருவிலையிற் பெறுங்காசு மவையே யாகி" என்றாராதலின். அளவு படாத சோறு அளித்தல் அரசர்க்கன்றியியலாது என்பதும் குறிப்பு.

பெருஞ்சோற்றுப் பிறங்கல் - பிறங்கல் - மலை. *பெருஞ்சோறு* - பெரு விருந்து; சிறுசோறு (சிற்றுண்டி) என்பதற்கு வேறாய் இது பெருஞ்சோறு எனப்பட்டது; "பெருஞ்சோற்று உதியன் சேரலாதன்" என புறநானூறுங் காண்க.

இவ்வரிய அருட்செயல் தெய்வத் திருமுறைகள் பலவற்றுள்ளும் போற்றப்பட்டதை இங்கு நினைவுகூர்க; "நேசமுடை யடியவர்கள் வருந்தாமை யருந்த நிறை மறையோ ருறைவீழி மிழலைதனி னித்தல், காசருளிச் செய்தீர்" (கொல்லிக்கௌவாணம் - நம்பி - நாகை - 7); "இருந்து நீர்தமிழோ டிசைகேட்கு மிச்சையாற் காசு நித்த னல்கினீர்" (நம்பி - சீகாமரம் - வீழி - 8); "பாடலங் காரப் பரிசில்கா சருளிப் பழுத்தசெந் தமிழ்மலர் சூடி, நீடலங் காரத் தெம்பெரு மக்க ணெஞ்சினு ளிறைந்து நின் றானை" (திருவிசைப்பா - சேந்தனார் - வீழி - 12) முதலிய திருவாக்குக்கள் காண்க. 571

2470. பொருளுரை... *அவனிமிசை*.... *காலம் எய்த* - உலகில் மழைபெய்ததனால் உணவுப் பொருள்கள் பெருகி அதனால் எல்லா வுயிர்களும் துன்பநீங்கித் திருவருளினாலே உலக முற்றும் செழிப்படையும் நற்காலம் வரவே; *புரிசடையார்.... வைகி* - புரிந்த சடையினை உடைய இறைவரது திருவடிகளைப் பல நாட்கள் போற்றி அங்கு எழுந்தருளி யிருந்து பின்; *தவமுனிவர் சொல்வேந்தரோடுங்கூட.... அருள்பெற்று* - தவமுனிவராகிய திருநாவுக்கரசரோடும்கூடத் தமது பெருமான் திருவருள் விடைபெற்றுக் கொண்டு; *தலத்தின்மீது.... போவார்* - உலகின்மேல் சிவபெருமான் மகிழ்ந்தெழுந்தருளியுள்ள தானங்கள் பலவற்றையும் வணங்குதற்குப் போவாராகி; *தென்... சேர்ந்தார்* - அழகிய திருவாஞ்சியம் என்ற பழைய பதியினைச் சென்று சேர்ந்தருளினர். (பிள்ளையார்).

விளக்கவுரை... அவனிமிசை... காலம் எய்த - "இந்தக்காலம் தீர்ந்தால்" (2462) என முன்னரும் இறைவர் திருவாக்கில் வைத்து இவ்வறுமைத் துன்பத்தைக் காலத்தின்

2471. நீடுதிரு வாஞ்சியத்தி லமர்ந்த முக்க
ணீலமிடற் றருமணியை வணங்கிப் போற்றிப்
பாடொலிநீர்த் தலையாலங் காடு மாடு
பரமர்பெரு வேளூரும் பணிந்து பாடி
நாடுபுகழ்த் தனிச்சாத்தங் குடியி னண்ணி
நம்பர்திருக் கரவீர நயந்து பாடித்
தேடுமறைக் கரியார்தம் விளமர் போற்றித்
திருவாரூர் தொழநினைந்து சென்று புக்கார். 573

இயல்பால் வருவதாகக் கூறியது காண்க; "விதியினுக்குக் காலமுங் கடவுளே வலாற் றுணைக் காரணங் காண்" (சித்தி - 1-10) என்றபடி காலம் இறைவனேவலால் உயிர்களுக்கு வினைப்பயன்களினுகர்ச்சியை வரையறுக்குமாதலின் உயிர்களால் விலக்கலாகாத வலிமையுடைத்து; ஆயினும் அதன் பயன் அடியாரைத் தாக்கி நலிவு செய்யாமல் படிக்காசு வைத்தனர்; அக்கால எல்லை நீங்க உலகம் மழையாற் செழிப்புற்று இன்புறும் காலம் வர; **பலநாள் போற்றிவைகி** *- அதுவரை இறைவரைப் போற்றி நின்றனர் இருபெரு மக்களும் என்பதாம்; காலக்கொடுமை தாக்காமைக்கும், தீர்வதற்கும், நன்மை வருவதற்கும் திருவருளே துணையாமென்பதனை விளக்கியவாறு; இக்காலம் ஏறக்குறைய ஓராண்டளவு இருக்கும் என்பது ஈண்டுக் கருதப்படும்.*

தவமுனிவர் சொல்வேந்தர் *- "வருஞானத் தவமுனிவர் வாகீசர்" (1266); முன்னை நிலையில் தவத்தால் முனிவராயினவர்.* **தவமுனிவா** *- பிள்ளையார் என்று கொண்டு எழுவாயாக்கி யுரைத்தலுமாம்; "மறைஞான ஞான* **முனிவன்**" *(தேவா) "தவமுதல்வர்" (1968).*

சிவன் மகிழும் தானங்கள் *- சிவ தலங்கள்;* **தென்** *- அழகிய; தெற்கில் உள்ள என்றலுமாம்.* *572*

2471. பொருளுரை... நீடுதிரு....போற்றி - நீடுகின்ற திருவாஞ்சியத்தில் விரும்பி யெழுந்தருளிய மூன்று கண்களும் திருநீலகண்டமும் உடைய அருமணியாகிய இறைவரை வணங்கித் துதித்து; பாடொலிநீர்... பாடி - பாடுபெறும் ஒலியுடைய நீர்சூழ்ந்த திருத்தலையாலங்காடும் அதன் பக்கத்தில் உள்ள இறைவரது திருப்பெருவேளூரும் பாடி; நாடுபுகழ்... பாடி - நாடும் புகழினையுடைய ஒப்பற்ற திருச்சாத்தங்குடியில் சென்றுசேர்ந்து நம்பருடைய திருக்கர வீரத்தினையும் விரும்பிப் பாடியருளி; தேடு... போற்றி - தேடுகின்ற மறைகளுக்கும் எட்டாத இறைவரது திருவிளமரையும் துதித்துப் பின்; திருவாரூர்... புக்கார் - திருவாரூரினைத் தொழுவதற்கு நினைந்து சென்று அத்திருநகரினுட் புகுந்தருளினர்.

விளக்கவுரை- இத் திருப்பாட்டினும், மேல்வரும் இரண்டு பாட்டுக்களினும், திருவீழி மிழலையினிற் பன்னெடுநாட் டங்கியதனால் இருபெருமக்களும் அங்குநின்றும் தல யாத்திரை புறப்பட்டுப் பல பதிகளையும் விரைந்துசென்று தொழும் இயல்புகூறும் திறம் காண்க.

திருவாஞ்சியம் - திருத்தலையாலங்காடு - திருப்பெருவேளூர் - திருச்சாத்தங்குடி - திருக்கரவீரம் - திருவிளமர் என்ற ஆறு தலங்களிலும் வணங்கிச் சென்றருளியமை இதனாற் கூறப்பட்டது.

நீடு திருவாஞ்சியத்தில்-போற்றி - திருவாஞ்சியத்தின் தலச்சிறப்புப்பற்றி இவ்வாறு விரித்துக் கூறினார்; தலவிசேடம், தொகுதி III பக்கம் 488 பார்க்க.

பாடொலி - நீர்த்தலையாலங்காடு - பாடு - பெருமை; பெருமையுடைய நீர் - ஒலிநீர் என்று பிரிக்க; பாடுகின்றதுபோலச் சலசலப்புடன் மெல்லியதாய் ஒலித்து ஓடும் நீர் என்றலுமாம். இப்பதி சோழ சூடாமணியாற்றின் வடகரையில் உள்ளது. நீர் - நீரையுடைய ஆற்றினைக் குறித்தலும், ஆற்றையும், பிற நீர்நிலைகளையும் அடக்கிக் கூறுதலுமாம்; பிள்ளையார் பதிகம் கிடைத்திலது!

மாடு - பெருவேளூர் - மாடு - அணிமை. தலையாலங்காட்டினின்றும் பெருவேளூர் கிழக்கே ஒரு நாழிகையளவில் உள்ளது என்பது குறிப்பு.

திருச்சாத்தங்குடி - இது தேவார வைப்புத்தலம்; பதிகம் இறந்துபட்டது போலும்!; திருவாரூர் போகும் பாதையில் பெருவேளூரினின்றும் தென்கிழக்கில் 4 நாழிகையளவில் உள்ளது.

திருக்கரவீரம் - இது திருச்சாத்தங்குடிக்கு வடக்கே கால் நாழிகையளவில் ஆரூர்ப் பாதையில் உள்ளது. இந்த இரண்டு தலங்களும் எதிரெதிராக அந்தப் பாதையில் தெற்கும் வடக்குமாக உள்ளன. பெருவேளூரினின்றும் தெற்காக வந்து பிள்ளையார் சாத்தங்குடியிற் சென்று பின்னர்த் திருக்கரவீரத்திற் சேர்ந்தருளினர் என்பது ஆசிரியர் காட்டியபடி. இவ்வாறன்றி நேரே ஆரூர்ப்பாதை வழி வருவோர் திருக்கரவீரத்தினின்றும் திருச்சாத்தங்குடி செல்வது வசதியாம்.

திருவிளமர் - இது திருச்சாத்தங்குடியினின்றும் தென்கிழக்கில் 6 நாழிகையளவில் திருவாரூர்ப் பாதையில் உள்ளது. திருமயிலாடுதுறைக்கருகில் உள்ள திருவிளநகருடன் இது மயங்கற்பாலதன்று. இதினின்றும் தென்கிழக்கில் 1½ நாழிகையளவில் ஆற்றின் வடகரையில் திருவாரூரை அடையலாம்.

நினைந்து - முன்னர் அரசுகளைப் பிரிந்து ஆரூரை நினைந்துபோந்து பணிந்து அதனையே நோக்கிநின்று அரிதினிற் செல்வாராய், "ஆரூர்தொழு துய்யலா மையல் கொண் டஞ்சனெஞ்சே" என்று பாடி, அரசுகளை நினைந்து விரைந்து போந்தருளியதனை நினைந்து என்க. இப்போது இரு பெருமக்களும் ஒருங்குசென்று திருவாரூரை வணங்குகின்ற சிறப்புக் காண்க.

திருவாஞ்சியம்

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம் - 2-ம் திருமுறை

வன்னி கொன்றை மதமத்த மெருக்கொடு கூவிளம்
பொன்னி யன்றசடை யிற்பொலி வித்த புராணனார்
தென்ன வென்றுவரி வண்டிசை செய்திரு வாஞ்சியம்
என்னை யாளுடை யானிட மாக வுகந்ததே. (1)

தென்றறுன் றும்பொழில் சென்றணை யுந்திரு வாஞ்சியத்
தென்று நின்றவிறை யானை யுணர்ந்தடி யேத்தலால்
நன்று காழிமறை ஞானசம் பந்தன செந்தமிழ்
ஒன்று முள்ளமுடை யாரடை வாருயர் வானமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருவாஞ்சியத்தை இறைவன் உகந்த இடமாகக் கொண்டு என்றும் நின்றனன்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **இயன்ற** - போன்ற; உவமவுருபு; **பொலிவித்த** - அழகுபடச் சூடிய; **புராணனார்** - பழமையானவர்; **தென்ன** - ஒலிக்குறிப்பு; **தென்னனே!** என்று விளிப்பெயராகக் கொண்டுரைப்பினுமாம்; **இடமாக** - காசிக்குச் சமமாகிய தலங்கள் ஆறனுள் ஒன்றாக; (2) **காலகாலர்** - காலனுக்குக் காலர்; **கரிகான்** - சுடுகாடு; **மேலர்** - மேன்மையுடையவர்; **மாலை** - மாலையில்; **மாலைமதி** - பிறைச்சந்திரன்; **மாடமன்னும்** - மாடங்களின்மேற் றவழ்வதுபோலும்; **ஞாலம் வந்து பணியப் பொலிகோயில்** - காசிக்குச் சமமாகச் சொல்லும் தலங்கள் ஆறனுள் ஒன்றாக விளக்கமாயறியப்பட்டு உலகர்வந்து வழிபடுதல் குறிப்பு. (3) இப்பாட்டு எண்ணலங்காரம்; ஒன்று முதல் எட்டு வரை எண்கள் ஏறு முறையில் வருவது காண்க; **மேவில்** - பொருந்துதலின்கண்; **விரிவுற்ற** - சிருட்டித் தோற்றக் கிரமத்தில்; **நாவின் நாலர்** - நற்குணமுடைய நீரின்கண் இடமாகக் கொண்ட நாசுவையினை யறியும்; அந்நாற்குணமாவர்; **உடல் அஞ்சினர்** - ஐம்பூதச் சேர்க்கையால் உடல்களை உயிர்களுக்கு அமைப்பர்; **தேவில் எட்டர்** - தெய்வவுடலில்; எட்டு உடையவர்; அட்டமூர்த்தி (4) **சுவண்டு** - பொருத்தம்; அடையாளம் (சுவடு) என்றலுமாம்; (6) **நாமமே பரவுவார்** - திருவைந்தெழுத்தை விதிப்படி கணிப்பார்; "ஐந்தெழுத்தி னாமத்தான் காண்" (தாண்); (8) **வேடவேடர்** - வேடராக வேடம் பூண்டவர்; "கிராத வேடமொடு" (திருவா); (9) **பாதமடைந்தா ரடியா ரடியவர்கட்கே** - அடியாரடியாரடியார் என முத்திறமும் கூறியது அடிமைத்திறத்தின் பெருமையை வற்புறுத்தியபடி; "அப்பாலும் அடிச்சார்ந்தார் அடியார்க்கு மடியேன்" (திருத்தொண்டத்தொகை). **தீவினையில் திறம்பார்** என்க. **புகல்** - அஞ்சாமை; அஞ்சல் என்னும் நிலை கூடுதல்; புகலிடம்; (10) **அல்லல் இல்லை என்பது பொய்யிலை** என்க. (11) **என்றும் நின்ற** - என்றும் நீங்காது நின்ற; **ஒன்றும் உள்ளம்** - ஒன்றிய - பிறழாத - நினைவு.

தலவிசேடம்:- **திருவாஞ்சியம்** - தொகுதி III, பக்கம் 488 பார்க்க.

பெருவேளூர்

திருச்சிற்றம்பலம் **பண் - பஞ்சமம் - 3-ம் திருமுறை**

அண்ணாவுங் கழுக்குன்று மாயமலை யவைவாழ்வார்
விண்ணோரு மண்ணோரும் வியந்தேத்த வருள்செய்வார்
கண்ணாவா ருலகுக்குக் கருத்தானார் புரமெரித்த
பெண்ணாணாம் பெருமானார் பெருவேளூர் பிரியாரே. (1)

பைம்பொன்சீர் மணிவாரிப் பலவுஞ்சேர் கனியுந்தி
யம்பொன்செய் மடவரலா ரணிமல்கு பெருவேளூர்
நம்பன்றன் கழல்பரவி நவில்கின்ற மறைஞான
சம்பந்தன் றமிழ்வல்லார்க் கருவினைநோய் சாராவே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- விண்ணோரும் மண்ணோரும் வியந்தேத்த வருள்செய்வார் அத் தன்மைகள் பலவும் விளங்கப் பெருவேளூர் பிரியாரே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அண்ணா** - திருவண்ணாமலை; **வாழ்வார்** - இறைவர்; வாழ்தலாவது அடைந்தார்க்கு வாழ்வுதரும்பொருட்டுத் தேற்றப்பட எழுந்தருளியிருத்தல்; **அருள்செய்வாராய்ப்** - பெருவேளூர் பிரியாரே என்று முடிக்க; (2) **இமவான்** - இமயவரசன்; (3) **குணக்கும்... கணக்கென்ன** - நாற்றிசையிலும் அவ்வத் திசைக்கேற்றபடியாக; **தென்றிசைக்கண்ணும்** - என விரித்ததனை "மாதவஞ் செய்த தென்றிசை" (35) என்றவிடத்து ஆசிரியர் விரித்தமை காண்க. **கழிந்தோர்** - மலநீங்கிய முத்தர்; **ஒழிந்தோர்** - பெத்தான்மாக்கள்; **மனத்தராய்க் கழிந்தோர்க்கும் ஒழிந்தோர்க்கும் அருள்செய்வார்** என்று கூட்டுக; **பிணக்கம் செய்தல்** - வினைப்பயன்களைக் கூட்டுவித்து அலமருதல் கண்ணுற்றருளிக் காலாந்தரத்தில் அருள்புரிதல்; (4) **இறை** - முன் கை; "இறைகலந்தவின வெள்வளை சோர" (தேவா); "எல்வளை யிறையூ ரும்மே" (கலித்-7); கை என்றலுமாம்; **சிலை** - மலை என்றும், வில் என்றும் இரட்டுற மொழியநின்றது; **வலவர்** - வல்லவர்; (5) **விழையாதார்** - விருப்பு இல்லாதவர்; இனம்பற்றி வெறுப்பும் உடன்கொள்க; **விகிர்தங்கள்** - வேறுபாடான மொழிகள்; **குழையாதார்** - இன்பத் துன்பங்களுள் தோய்தலில்லாதவர்; **அழையாவும் அரற்றாவும்** - பேர்பிதற்றி அழைத்தும் அரற்றியும்; **பிழையாத** - அருள்பிழையாத; (6) **பெருத்தார்** - அளவுபடாமை நீண்டவர்; (7) **தமக்கெல்லாம் - பிறப்பில்லாப் பெருமானார்** என்று கூட்டுக - பிறப்பினை இல்லையாகச் செய்பவர். **கேடில்லாமை** - நிலைபெற்ற தன்மை; (10) **மற்றோரும் - மல் - தேரும்** - போர்க்கு அங்கமாகிய தேரும் மாவும் களிறும் என்க; "கடகளிறும் பரிமாவும் தேருமுகந் தேறாதே, யிடபமுகந் தேறியவாறு" (திருவா-சாழல்); **பெற்று** - இடபம்; (11) மணிவாரியும் கனியுந்தியும் அணிமல்கியும் வரும் ஆற்றின் கரையினிடம் உள்ள பெருவேளூர் என்க.

தலவிசேடம்:- திருப்பெருவேளூர் - தொகுதி III பக்கம் 602 பார்க்க.

திருக்கரவீரம்

திருச்சிற்றம்பலம் **பண் - பழந்தக்கராகம் - 1-ம் திருமுறை**

அரியு நம்வினை யுள்ளன வாசற, வரிகொண் மாமணி போற்கண்டங்,
கரிய வன்றிக ழுங்கர வீரத்தெம், பெரிய வன்கழல் பேணவே. (1)

வீடி லான்விளங் குங்கர வீரத்தெஞ், சேடன் மேற்கசி வாற்றமிழ்,
நாடு ஞானசம் பந்தன சொல்லிவை, பாடுவார்க் கில்லை பாவமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- கரவீரத்து எம் பெரியவன் கழல்பேண நம்வினை ஆசறும்; நல்லன அடையும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) கழல்பேண - நம்வினை யுள்ளன ஆசற அரியும் என்று கூட்டுக; (2) **கழல்சார வினைதங்குமோ?** தங்கா என்க; (3) **பாதம் நணுக ஏதம் வந்தடையா** என்க; இனி நல்லனவேயாம்; (4) **பறையும்** - நீங்கும்; **ஏத்தவே - பறையும்** என்க; (6) **நிழல்** - ஒளி; தன்னொளியின்றிச் சூரியனது நிழல் - ஒளி - படுதலே தனது ஒளியாகவுடையது மதி என்பது வானநூலார் துணிபுமாம்; **தொழவல்லார்** - தொழுதலின் அருமை குறித்தது; (7) **வண்டர்** - தீயோர்; **கண்டனார்** - பாசச் சேதஞ் செய்பவர்; **அழல்போல் ஒளி - கண்டன்** - விளக்குப் போல விளங்கும் கழுத்தையுடையவன்; இறைவரது எல்லாம்வல்ல தன்மையினை விளக்குவது; இங்கு **அழல்** - அதனையுடைய விளக்கைக் குறித்தது; "நெய்ஞ்ஞின் றெரியும் விளக்கொத்த நீல மணிமிடற்றான்" (தேவா); (9) **தெள்ள** - தெளிய தேட; தீத்திரளாகக் கட்புலப்படினும் இன்னனென்றறியவாரா தொளித்தல் **கள்ளம்** எனப்பட்டது; **உள்ள** - நினைக்க; (10) **செடி** - கீழாயின; **கடியவன்** - தீயோர்க்குக் கடியனாய் விளங்குபவன்; (11) **வீடிலான்** - கெடுதலில்லாதவன்; **கசிவு** - உள்ளூறுமன்பு.

தலவிசேடம் :- திருக்கரவீரம் - காவிரித்தென்கரை 61-வது பதி; கரம் (கழுதை) பூசித்த பதி என்பது தலப்பெயர்ப் பொருள்; தல வரலாறு குறித்தது என்பர்; கரையபுரம் எனவும் வழங்கும்; கௌதமர் பூசித்துப் பேறுபெற்ற தலம்; சுவாமி - **கரவீரநாதர்**; அம்மை - **பிரத்தியட்சமின்னம்மை**; பதிகம் 1. குழிக்கரை நிலையத்தினின்றும் வடக்கில் மட்சாலையில் ஆற்றைப் பரிசினாற் கடந்து 4 நாழிகையளவில் திருக்கண்ணமங்கை யினின்றும் மேற்கே ஒரு நாழிகையளவில் உள்ளது. திருவாரூரினின்றும் மேற்கில் 7 நாழிகை யளவில் உள்ளது. இதன் வடமேற்கில் 1½ நாழிகையில் பெருவேளூர் உள்ளது.

திருவிளமர்

திருச்சிற்றம்பலம் **பண் - சாதாரி - 3-ம் திருமுறை**

மத்தக மணிபெற மலர்வதொர் மதிபுரை நுதல்கரம்
ஒத்தக நகமணி மிளிர்வதொ ரரவின ரொளிகிளர்
அத்தக வடிதொழ வருள்பெறு கணனொடு முமையவள்
வித்தக ருறைவது விரிபொழில் வளநகர் விளமரே. (1)

வெந்தவெண் பொடியணி யடிகளை விளமருள் விகிர்தரைச்
சிந்தையு ளிடைபெற வுரைசெய்த தமிழிவை செழுவிய
அந்தணர் புகலியு ளழகமர் அருமறை ஞானசம்
பந்தன மொழியிவை யுரைசெயு மவர்வினை பறையுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- உமையவள் வித்தகனாராகிய சிவபெருமான் உறையுமிடம் விளமரே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மத்தகம்** - சிரம்; நுதல்புரை ஓர் மதியும், கரம் ஒத்து நகம் போல மணிகள் மிளிர்வதொர் அரவுமுடையவர் என்க. **அகநக** - உள்ளே விளங்க; **ஐந்தலை அரவு** - விரலைந்துடைய கை போலவும். அரவின் ஐந்தலையினும் ஐம்மணிகள் விரல்களின் நகங்கள்போலவும் உள்ளன என்க. **அத்தகவு** - அத்தன்மைத்தாகிய; அகரம் பண்டைமறை பேசும் அந்த எனப் பண்டறி சுட்டு; **கணன்** - பூதகணங்கள்; **உமையவள் வித்தகர்** - உமையின் நாயகர்; ஞான நாயகர்; (2) **மரஅடி** - மரத்தாற் செய்த பாதகுறடு; **சிட்டு** - சிட்டம் - தூய்மை; ஞானம்; **பொடி** - திருநீறு; (3) **அங்கதிர்** - ஞாயிற்றின் ஒளி; **செங்கதிர்** - தீ; (4) **பீடு** - பெருமை; (5) **பண்தலை மழலை செய் யாழ்** - பண் தன்மையிற் சிறந்த மழலை மிழற்றும் யாழ்; **என** - போல; உவமவுருபு; **அலை** - அசையும்; **கழல்** - வீரக்கழல்; **விண்தலை** - விண்ணுலகின்கண் உள்ள; **தலை** - ஏழனுருபு; **வெண்தலை** - வெள்ளிய தலை ஓடு; கபாலம்; **தலை** - மண்டை ஓட்டுக்கு ஆகுபெயர்; (7) **நெறிகமழ் தருமுறை உணர்வினர்** - சிவத் தவநெறியில் விளங்கும் உரையிலும் உணர்வினிலும் இருப்பவர்; **வெறிகமழ் தருமலர்** - கொன்றை; (8) **பண்பட** - உண்மையுணர்ந்து நலம்பட; **கடலடைபுனல்** - கங்கை; (9) **தொண்டு அசையுற** - தொண்டராகிய மார்க்கண்டேயர் வருந்தும்படி; தொண்டு அதனையுடையவர்க்காகி வந்தது ஆகுபெயர்; **அண்டல் செய்து** - கால் ஒற்றி உதைத்து; **கொண்டல் செய்தரு** - கொண்டல் - மேகம்; மேகம்போன்ற கருமைநிறம்; **செய்தல்** - காட்டுதல்; மேகத்தின் தன்மையாகிய கொடைத்திறம் (கருணை) கொண்ட என்றலுமாம். **செய்** - உவமவுருபு; பண்புவமமும் பயனுவமமுமாம்; (10) **ஒள்ளியர்** - ஒண்மையுடையோர்; தெளிந்த ஒழுக்கமும் அறிவுமுடையோர்; **மொழிபல கொள்ளிய களவினர்** - வடமொழி தமிழ் முதலிய பல மொழிகளிலும் உள்ள உயர்ந்த பொருள்களைக் களவுசெய்து தம்மதாகக் காட்டும் திருட்டுத்தனமுடையார்; "திருட்டுப் புரட்டுச் சிந்தாமணி" (புராண வரலாறு); **பள்ளி** - சமண குருமார் வாழுமிடம். அங்கு அவர் செய்யும் உபதேசத்துக்காகிவந்தது ஆகுபெயர்; **பள்ளியை மெய் என** - அடையுமிடம் என்றலுமாம்; (11) **இடைபெற** - இடம்பெற; **பறையும்** - நீங்கும்;

தலவிசேடம்:- **திருவிளமர்** - காவிரித் தென்கரை 60-வது தலம்; திருமயிலாடுதுறைக்கு அணிமையில் உள்ள திருவிளநகர் வேறு. இது பதஞ்சலி முனிவர் வழிபட்ட பதி; சுவாமி - அது காரணத்தால் **பதஞ்சலிமனோகரர்** எனப்பெறுவர்; பதிக முதற்பாட்டில் **அரவினர்** என்றது இக் குறிப்பும்பட நிற்பது காண்க; அம்மை - **யாழினு**

2472. நம்பர்மகிழ் திருவாரூர் வணங்கிப் போந்து
நலங்கொடிருக் காறாயி னண்ணி யேத்திப்
பைம்புனன்மென் பணைத்தேவூ ரணைந்து போற்றிப்
பரமர்திரு நெல்லிக்காப் பணிந்து பாடி
யும்பர்பிரான் கைச்சினமும் பரவித் தெங்கூ
ரோங்குபுகழ்த் திருக்கொள்ளிக் காடும் போற்றிச்
செம்பொன்மதிற் கோட்டூரும் வணங்கி யேத்தித்
திருமலிவெண் டுறைதொழுவான் சென்றுசேர்ந்தார். 574

மென்மொழியாள் - *தீர்த்தம்* - ***அக்கினிதீர்த்தம்****; பதிகம் 1; திருவாரூர் நிலயத்தினின்றும் வடமேற்கே மட்சாலை வழி 1½ நாழிகையளவில் ஆற்றின் தென்கரையில் உள்ளது.*

2472. ***பொருளுரை***.. *வெளிப்படை. இறைவர் மகிழும் திருவாரூரை வணங்கிச் சென்று; நலங்கொள்ளும் திருக்காறாயிலைச் சேர்ந்து துதித்து; பசிய நீரினையுடைய மெல்லிய வயல்கள் சூழ்ந்த திருத்தேவூரினை அணைந்துபோற்றி; இறைவரது திருநெல்லிக் காவினைப் பணிந்து திருப்பதிகம் பாடிச் சென்று; தேவதேவரது திருக்கைச்சினத்தையும் பரவிச்சென்று; ஓங்கும் புகழினையுடைய திருக்கொள்ளிக்காடும் போற்றி மேற்சென்று; செம்பொன்னால் அழகுசெய்யப்பட்ட மதில்களையுடைய திருக்கோட்டூரினையும் வணங்கிப் போற்றித் திருமலிகின்ற திருவெண்டுறையினைத் தொழும் பொருட்டுச் சென்று சேர்ந்தருளினர்.*

விளக்கவுரை.. ***நம்பர்மகிழ்..போந்து*** - *திருப்புகலூரில் அரசுகள், திருவாரூர் நிகழ் பெருமை வகுக்கக்கேட்டுச் சென்று பிள்ளையார் திருவாரூரினை வணங்கி மீண்டருளியது முதன்முறை; அப்போது பிள்ளையார் தனித்துச் சென்றருளினர்; 2393 முதல் 2419 வரை பார்க்க. இப்போது சென்று வணங்கியது இரண்டாவது முறை; இஞ்ஞான்று அரசுகளுடன் எழுந்தருளி வணங்கியருளினர்.*

நலங்கொள் திருக்காறாயில் - *முசுகுந்தர் தேவருலகத்தினின்றும் கொணர்ந்து தாபித்த தியாகேசர் எழுந்தருளியுள்ள நன்மைகொண்டது குறிப்பு; தலவிசேடம் பார்க்க.*

பைம்புனல் மென்பணைத் தேவூர் - *"மாமலர்க் கந்தநீர்க் கடுவாய்" (திருக்குறுந்) என்று அரசுகள் சிறப்பித்தருளிய கடுவாயாற்றின் கரையில் உள்ள சிறப்புப் பற்றிக் கூறியது;* ***மென்பணை*** - *இன்பமளிக்கும் காட்சியினையும், இனிய பயன்களைத் தரும் தன்மையையும், மெல்லியதாய் வீசும் காற்றினையும், தண்ணிய நீரினையும், இசையினிமையையும் உடைமையால்* ***மென்பணை*** *என்றார். "செறுவில் வாளைகள் சேலவை பொருவயற்றேவூர்" (காந்தா-3); "தெருவு தோறுநற் றென்றல்வந் துலவிய தேவூர்" (மேற்படி-8); "செந்தி னத்திசை யறுபத முரறிருத் தேவூர்" (மேற்படி-9) "கறவைக் குருளைகள், சென்றிசைய நின்றுதுளி யொன்றவிளை யாடிவளர்தேவூர்" (சாதாரி - திருவிராகம் -7) முதலிய பதிகக் கருத்துக்கள் காண்க.*

ஓங்குபுகழ்ந் திருக்கொள்ளிக்காடும் - ஓங்குபுகழ் - "குற்றமில் பெரும்புகழ்க் கொள்ளிக் காடதே" என்ற பதிகக் குறிப்பு புகழாவன - "ஆயினும் குணம் பெரிதுடையர்" என்பது முதலாக அத் திருப்பதிகத்திலுள் விரிக்கப்படுவன.

செம்பொன்மதிற் கோட்டூரும் - "கிரிதவழ் முகிலின் கீழ்த்தவழ் மாடங்கெழுவுகம் பலைசெய்கீழ்க் கோட்டூர்" (திருக்கீழ்க்கோட்டூர் - மணியம்பலம்) என்று கருவூர்த்தேவர் இப்பதியின் மற்றொரு பகுதியினைப்பற்றி அருளிய திருவிசைப்பா இங்கு நினைவுகூர்தற்பாலது.

திருமலிவெண்டுறை - "வேதியன் மாதிமையால் விரும்பும்மிடம் வெண்டுறையே" (1) "திருவெண்டுறை" (11) என்று பதிகத்திலுள் விருப்பும் வெறுப்புமில்லாத இறைவர் விரும்பும் இடம் எனப் போற்றிய சிறப்பும். திருவெண்டுறை என்றடைமொழியுடன் போற்றிய சிறப்பும் குறிக்க.

தொழுவான் - தொழும்பொருட்டு: வானீற்று வினையெச்சம்.

சேர்ந்தார் - முன்னிரண்டு பாட்டுக்களினும் மேல்வரும் பாட்டினிலும் இவ்வாறே வரும் வினைமுற்றுக்களுக்குப் பிள்ளையாரும் அரசுகளும் என்ற எழுவாய் முன் 2469ம், பின் 2474ம் ஆகிய பாட்டுக்களின் தொடர்ச்சிபற்றி வருவித்துக்கொள்க. *574*

I. திருத்தேவூர்

திருச்சிற்றம்பலம் **பண் - காந்தாரம் - 2-ம் திருமுறை**

பண்ணி லாவிய மொழியுமை பங்கனெம் பெருமான்
விண்ணில் வானவர் கோன்விம லன்விடை யூர்தி
தெண்ணி லாமதி தவழ்தரு மாளிகைத் தேவூர்
அண்ணல் சேவடி யடைந்தன மல்லலொன் றிலமே. (1)

அல்ல லின்றிவிண் ணாள்வர்கள் காழியர்க் கதிபன்
நல்ல செந்தமிழ் வல்லவன் ஞானசம் பந்தன்
எல்லை யில்புகழ் மல்கிய வெழில்வளர் தேவூர்த்
தொல்லை நம்பனைச் சொல்லிய பத்தும்வல் லாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- தேவூர் அண்ணல் சேவடி யடைந்தனம்; (ஆதலின்) அல்லலொன்றும் இலமே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- குறிப்பு - இந்த யாப்பில் ஐந்து சீருடைய கலி நிலைத்துறைச் சந்தப் பாட்டில் அமைந்த பதிகம் இஃதொன்றேயாம் என்பது இப் பதிகத்தின் சிறப்புகளுள் ஒன்று; **(1) நிலாவிய** - உண்ணிறைந்த; **தெள்நிலா** - தெளிந்த

நிலா; தெளிதலாவது இறைவரது தன்மையினைத் தெரிந்து சென்று அடைக்கலம் புகுதல். **ஒன்று** - ஒன்றும், முற்றும்மை தொக்கது; (2) **வெற்பேறு சோதி வானவன்** - சூரியன்; "மாவேறு சோதியும் வானவரும் தாமறியா" (திருவா) **முகம்மலர்** - முகம்போல மலர்கின்ற; (3) **மாணி** - பிரமசாரி; மார்க்கண்டேயர்; **அறவன்** - "அறவாழி யந்தணன்" (குறள்) "ஆலின்கீ ழுரைத்த அறவன் (தேவா); (4) **முத்தன்** - இயல்பாகவே பாசங்களினீங்குதலாகிய இறைமைக் குணமுடையவன்; **சித்தன்** - சித்தத்துள் குடி இருப்பவன்; (5) பாடுவாரும், கூடுவாரும், தேடுவாருமாகிய அடியார்களுக்குப் பொருளானவன்; **பொருட்பயன் உகந்து** - எல்லாப் பொருள்களும் பெற்றதன் பயனாவார் இறைவரே என்ற துணிவுடன் மகிழ்ந்து; **துணைக்கொண்ட** - **தம்பற்று அற** - துணை என்று கொண்ட தமது பிற பற்றுக்களெல்லாம் ஒழிய; (6) **முலையினையும் வளையினையும்** குழலினையும் உடைய மங்கை என்க; (7) **வன்புயத்த** - வலிய புயங்களையுடைய; **தென்றமிழ்க்கலை தெரிந்தவர்** - தெய்வத் தமிழ்ப் புலவாணர்; தேவூர் தமிழ்ப் புலவாணர்க் கிருப்பிடம் என்பது கருதப்படும்; (8) **ஊன்றிய திருவிரல் நெகிழ்த்து** - முன் ஊன்றியதும் பின் நெகிழ்த்ததும் உடன் கூறியபடி; **பணிந்தான்** - கொடுத்தான்; (9) **முந்தி** - முற்பட்டு; அவர் முந்திக் காணா எந்தை என்க; (10) **பிழையெனக்கொண்டு** - **தேறி** - **அடைந்தனம்** என்க; **பாறு** - அழிந்துபடும்; இப்பதிக முழுமையும் "அடைந்தனம் அல்ல லொன்றிலமே" என்ற மகுடமுடையது; இயல்புரைக்குமாற்றாற் பரவிய நிலை.

II. திருத்தேவூர்

திருச்சிற்றம்பலம் **பண் - சாதாரி - 3-ம் திருமுறை**

காடுபயில் வீடுமுடை யோடுகலன் மூடுமுடை யாடைபுலித்தோல்
தேடுபலி யூணதுடை வேடமிகு வேதியர் திருந்துபதிதான்
நாடகம தாடமஞ்ஞை பாடவரி கோடல்கை மறிப்ப நலமார்
சேடுமிகு பேடையன மூடிமகிழ் மாடமிடை தேவூரதுவே. (1)

துங்கமிகு பொங்கரவு தங்குசடை நங்களிறை துன்றுகுழலார்
செங்கயல்கண் மங்கையுமை நங்கையொரு பங்கனமர் தேவூரதன்மேற்
பைங்கமல மங்கணிகொ டிண்புகலி ஞானசம் பந்தனுரைசெய்
சங்கமலி செந்தமிழ்கள் பத்துமிசை வல்லவர்கள் சங்கையிலரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- வேதியராகிய சிவபெருமானது திருந்துபதி தேவூரதுவே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **காடு** - சுடுகாடு; **வீடு** - இருப்பிடம்; **முடை** - முடைநாற்றமுடைய; பயில்வீடு - காடு; கலன் - ஓடு; ஆடை - தோல்; **ஊண்** - பலி என்று கூட்டுக; ஆக்கச் சொற்கள் வருவிக்க; **கோடல்** - வெண்காந்தள்; **கைமறிப்ப** - கை அசைத்தல் போன்ற சைகை காட்ட; மஞ்சை - ஆட; வரி - பாட; கோடல் கை மறிப்ப; அன்னம் ஊடிமகிழ என்று நாடகத்தைச் சித்திரித்தார். **வரி** - வண்டு - பாட என்க; (2)

அரவு - அராவுதல் - பொருந்துதல் என்ற பொருளில் வந்தது; சொற்பின் வருநிலை; **தேள்** - தெளிவு; (3) தாவுதல் - போவுதல்; **எண்** - எண்ணம். **எண்தடவு** - எண்ணுகின்ற; **செண்** - சேண் என்பது செண் என நின்றது **சேண்** - ஆகாயம்; (4) **மாசின் மனநேசர்** - குற்றமற்ற மனதுடைய அன்பர். (4) **குயில் வாசகம்** - குயிலின் பாட்டு; **மாதர்மொழி** - பூவை மொழி என்க. இவை மூன்றும் உயிர்ப்பொருள்களின் வினை ஒலி; **குயில்** - பூவை மொழிபோல ஒலிப்பன; **வீணைஒலி** - உயிரில் பொருளின் ஒலியாயினும் மொழிபோல மிழற்றலின் உடன் கூறினார். (5) **மருள்** - மருட்பாட்டுவகை; (6) **நீறன்** - திருநீற்றினையுடையவன்; (7) **என்றனது-தந்தை** - "யாவருக்குந் தந்தைதா யெனுமவரிப் படியளித்தார், ஆவதனால் ஆளுடைய பிள்ளையாராய்" (1966) என்ற கருத்து; **முன்றின்மிசை நின்றபலவின் கனிகள் கறவைக் குருளைகள் தின்று** - முன்றிலில் நிற்கும் பலாவின் வேரில் வெடித்துக் கனிந்த பலாப் பழங்களைப் பசுக்கன்றுகள் தின்று; **துளியொன்ற** - துள்ளுதல் பொருந்த; (8) **முரவம்** - முழவுவகை; மத்தளம். **சேதம்** - கூத்தின் ஓர் உறுப்பு. **கரம்வென்றி தொழிலாளர்** - கையினால் முழக்கும் தொழிலாளர்; (9) **சுண்ணம்** - பொற்சுண்ணம். **வண்ணம்** - பொன்னிறம்; (10) இப்பாட்டுச் சிதலமான பாட்டுக்களில் ஒன்று! (11) **சங்கை** - மயக்கம்.

தலவிசேடம்:- **திருத்தேவூர்** - காவிரித் தென்கரை 85-வது தலம். தேவர்கள் பூசித்து மந்திரம் உபதேசிக்கப்பெற்றமையால் இப்பெயரெய்தியது என்பது வரலாறு; சுவாமி பெயர் தேவகுரு என்பது காண்க; "வெற்பேறு சோதிவானவன்" (ஞாயிறு) பூசித்தமை பதிகத்துக் காண்க. (காந்தா-2). இந்திரன், குபேரன், வியாழன் முதலிய தேவர்களும், கௌதமர் முதலிய இருடிகளும் பூசித்த தலம்; மாடக்கோயில்களுள் ஒன்று; சுவாமி - **தேவகுருநாதர்**; அம்மை - **மதுரபாடணியம்மை**; தீர்த்தம் - **தேவதீர்த்தம்**; மரம் - **வாழை**; பதிகம் 2. இது கீழ்வேளூர் நிலயத்தினின்றும் தெற்கே மட்சாலை வழி இரண்டரை நாழிகையளவில் அடையத்தக்கது.

திருநெல்லிக்கா

திருச்சிற்றம்பலம் **பண் - இந்தளம் - 2-ம் திருமுறை**

அறத்தா லுயிர்கா வலமர்ந் தருளி
மறத்தான் மதின்மூன் றுடன்மாண் பழித்த
திறத்தாற் றெரிவெய் தியதீ வெண்டிங்கள்
நிறத்தா னெல்லிக்கா வுணிலா யவனே. (1)

புகரே துமிலா தபுத்தே ளுலகில்
நிகரா நெல்லிக்கா வுணிலா யவனை
நகரா நலஞா னசம்பந் தன்சொன்ன
பகர்வா ரவர்பா வமிலா தவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக்குறிப்பு:- நெல்லிக்காவுணிலாயவனே அறத்தால் உயிர்காவலமர்ந்தருள்பவன்; மும்மதிலும் அழிய மறக்கருணையும் செய்பவ. . விதியும் அதன் விளைவுமாவன்; இன்னும் இவ்வாறாய இறைமைக் குணங்களை யுடையவன்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **அறத்தால் உயிர்காவலமர்தலாவது** அறநெறியை உயிர்களுக்குக் காவலாக வகுத்து அந்நெறியினுள் தாம் எழுந்தருளியிருந்து நடத்தியருளுதல்; **மறத்தால்** - மறக்கருணைசெய்து; சிவ நல் அறத்தினின்ற மூவர்க்குக் காவலாக நின்று உயிர்காத்துநின்று, ஏனைத் திரிபுரவாணர்களை மறக்கருணைசெய்து அழித்து என்றலுமாம்; மூவர்க்கு அறக்கருணையும், ஏனையோர்க்கு மறக்கருணையும் செய்தபடி என்க. **தெரிவு எய்திய** - தெரிய நின்ற. **தீவெண் திங்கள் நிறத்தான்** - தீயினையும் திங்களையும் திருவுடம்பிற் கொண்டவன், தீ - கையில் ஏந்தியும், திங்களைச் சடைமேல் வைத்தும் கொண்டவன்; **நிறம்** - உடம்பு. "மெல்லியலைத் - தன்னிற மொன்றி லிருத்திநின்றோன்" (கோவை-58); இனி, தீ நிறமும் அதன்மேல் திங்கள் நிறமும் கொண்டவன் என்றலுமாம். தீ அவரது மேனியின் நிறம்; "தீவணனே" "எரியலா லுருவ மில்லை" (தேவா); **திங்கள்** அவரது நீறணிந்த கோலநிறம்; "திரண்டுவருந் திருநீற்றுத் தொண்டர்குழா மிருதிறமுஞ் சேர்ந்த போதில், இரண்டுநில வின்கடல்க ளொன்றாகி யணைந்தனபோலிசைந்த வன்றே" (1498) என்று திருநீற்றின் பொலிவுக்குத் திங்களை உவமித்தது காண்க. **நிலாயவன்** - பொருந்தியவர்; (2) **விதிதான்-நெதிதான்** - **விதி** - ஊழ்வினை நின்றநிலை. **வினை** - அதன் காரணமாக நிற்பது; அதன் விளைவு என்றலுமாம்; **விழுப்பம் பயக்கும் நெதி** - வினைப்பயன் தீர்த்துக் கதிதரும் சிவனுடைய நீதி - நியதி - அருள்; (3) **புலம்தான் புலம்** - அறிவு; அறிவுள் இருப்பவன்; அறிவே திருமேனியாகவுடையவன்; **நிலம்** - நிலயமானவன்; (4) **கலை** - மான். **நாடு** - நாடும்; விரும்பும்; **எடுத்தான்** - விரும்பிக்கொண்டவன்; **மலை** - **கயிலை** - காடிடமும் கயிலையும் நாடு இடமாகத் தெரிந்துகொண்டவன்; **மதில் மூன்றுடைய நிலை** - சிவபூசைத் தானங் காக்க ஆகம விதிகளில் மந்திரங்களால் வகுக்கும் மூன்று காவல்கள். "கம்பர், கொள்ளும்பூ சனைகுறித்த தானங் காக்க மந்திரமா மதிலகழி யவர்தாந் தந்த வாய்மையா கமவிதியின் வகுப்பு" (1164); **நிலைதான்** - அந்நிலையுள் நின்றருள்பவன்; (5) **தவமும்** - அதனால் சாரும் **கதியும்** தானே தருபவன்; **சுரவேந்தன்** - மன்மதன்; **செயச்செய்து செறுத்துலகில் நிவந்தான்** - உயிர்கள் வினைகளைப் புரிதற்குத் துணையாய் நின்று பயன்களையும் ஊட்டிக்கழித்து நியதிபுரிபவன்; **நிவத்தல்** - நியமித்தல்; (6) **குறியால்...நெறி** - வினைநீக்கிச் சிவனையடைதலையே குறிக்கோளாகக் கொண்டு ஒழுகுபவர் செல்லும் நெறி; "குறித்த பூசை" (1241); "குறிப்பி னாலே கூப்பினான் தாப ரத்தை" (தேவா); "உண்மை நின்ற பெருகுநிலைக் குறியாள ரறிவு தன்னை" (செங்காட் - தேவா) "குறியைக் குறியாது குறித்தறியும் நெறி" (கந்-அநு) (7) **இறை** - தலைவர்; **மறை தான்** - மறைகளே உருவமானவர்; **நிறை** - நிறுவியவர்; (10) **கான்ற** - உமிழ்ந்த; **நஞ்சை எனத்தா என** - நஞ்சு வந்ததே என்று தேவர் என் அத்தனே என்று ஓலமிட அதனை எனக்குக் கொடுங்கள் என்று; **நஞ்சை** -

ஐகாரம் அசை (11) புகர் - குற்றம்; தீமை: **புகரேதுமில்லாத புத்தேள் உலகில் நிகரா** - துன்பம் இல்லாத தேவவுலகும் ஒப்பாகாத; குற்றமில்லாத தேவவுலகம் ஒன்றிருக்குமாகில் அதனை நிகராகிய என்றலுமாம் நகரா - வணங்கி; நகரினைப்பற்றிச் சொன்ன என்றலுமாம்; சொன்ன - அகரவீற்று பன்மைவினைப் பெயர்; சொன்ன பாடல்களை; இரண்டனுருபும் சாரியையும் விரிக்க.

தலவிசேடம்:- திருநெல்லிக்கா - காவிரித்தென்கரை 117வது தலம். தலமரம் நெல்லியாதலின் அதுகொண்டு இப்பெயர் பெற்றது; ஞாயிறும், பிரமனும் வழிபட்டது. மேற்குப்பார்த்த சந்நிதி; இன்றும் அற்பிசிப் பின்பக்கத்தில் பதினான்கா நாள்முதல் 7 நாட்கள் மாலையிலும் சூரியபூசை - அதாவது சூரியகிரகணம் இறைவரைத் தீண்டி வழிபடுதல் - காணலாம்; சுவாமி - **நெல்லிவனநாதர்;** அம்மை - **மங்களநாயகி;** தீர்த்தம் - **பிரமதீர்த்தம்** (தெற்கே); **சூரியதீர்த்தம்** (வடக்கே); மரம் - **நெல்லி;** இது திருநெல்லிக்கா நிலயத்தினின்றும் மேற்கே கால் நாழிகையில் உள்ளது. அழகிய திருப்பணி செய்யப்பெற்று நன்கு பாதுகாக்கப்படுகின்றது.

திருக்கைச்சினம்

திருச்சிற்றம்பலம் **பண் - சீகாமரம் - 2-ம் திருமுறை**

தையலோர் கூறுடையான் றண்மதிசேர் செஞ்சடையான்
மையுலா மணிமிடற்றான் மறைவிளங்கு பாடலான்
நெய்யுலா மூவிலைவே லேந்தி நிவந்தொளிசேர்
கையுடையான் மேவி யுறைகோயில் கைச்சினமே. (1)

தண்வயல்சூழ் காழித் தமிழ்ஞான சம்பந்தன்
கண்ணுதலான் மேவியுறை கோயில் கைச்சினத்தைப்
பண்ணிசையா லேத்திப் பயின்ற விவைவல்லார்
விண்ணவரா யோங்கி வியனுலக மாள்வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது கோயில் கைச்சினமே என்றதனையே மகுடம் கொண்டது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நிவந்து** - வளர்ந்து; மை - கருமை; கரிய விடம்; (2) **வெள்வளை** - தல அம்மை பெயர்; **கடம்** - மதம்; **கடமல்கு மா** - யானை; (3) **சூடலான்** - சூடிய செயலுடையார்; கொன்றை பாம்பினொடும், மதியம் கரந்தையொடும் சூடலான் என்றும், காடலான் ஆடலான் என்றும் கூட்டுக; (4) **விண்டவர்கள்** - அறநெறியைவிட்டு விலகியவர்கள்; **கண்ட** - இருந்தாங்கிருந்தபடி நினைப்பினால் தொழில் முற்றச்செய்த; "நினையாதார் புரமெரிய நினைந்த தெய்வத் தேரானை", "தீமூழ்க, நினைந்தபெருங் கருணையன்" (தேவா); (5) **தேய்ந்து மலி** - தேய்ந்துபின் வளர்ந்து (புகழடைந்த); **செய்ய**

- சிவந்த; **சாய்ந்து** - வீழ்ந்து வணங்கி; முடிசாய்த்து என்றலுமாம்; **அனங்கு** - காமன்; (11) **பண் இசையா லேத்திப் பயின்ற - பண்** - சீகாமரம் (இப்பதிகப் பண்); **பயின்ற** - பலவாறும் பாடி வழிபட்ட; **வியனுலகம்** - சிவனுலகம்.

தலவிசேடம்:- திருக்கைச்சினம் - காவிரித்தென்கரை 122வது தலம். இந்திரன் இங்கு மணலாற் சிவலிங்கத் திருவுருத் தாபித்துப் பூசித்துப், பின் அதை விதிப்படி ஒடுக்கி, எடுக்க முயன்றபோது, எடுக்கவாராமல் அவனது கைச்சின்னம் (கை அடையாளம்) திருவுருவத்தில் பதிந்துவிட்ட காரணத்தால் இப்பெயர் பெற்றது; கைச்சின்னம் - கைச்சினம் என வழங்குவதாயிற்று. (கச்சினம் என்பர்); திருணபிந்து முனிவர் வழிபட்டது; சுவாமி - **கைச்சினநாதர்;** அம்மை - **வெள்வளைநாயகி;** அம்மை பெயர் பதிகத்து (2)க் காண்க; தீர்த்தம் - **இந்திரதீர்த்தம்; வச்சிர தீர்த்தம்;** இவையிரண்டும் கோயிலுக்கு இருபுறமும் உள்ளன; மரம் - **கோங்கிலவு;** உற்சவர் - இந்திரனுக்கு காட்சி கொடுத்தவர் - **தியாகராசர்;** பதிகம் 1. இது திருநெல்லிக்கா நிலயத்தினின்றும் கிழக்கே மட்சாலை வழி 2 நாழிகையளவில் உள்ளது.

திருத்தேங்கூர்

திருச்சிற்றம்பலம் **பண் - பியந்தைக்காந்தாரம் - 2-ம் திருமுறை**

புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் விண்ணவர் போற்றக்
கரைசெய் மால்கட னஞ்சை யுண்டவர் கருதலர் புரங்கள்
இரைசெய் தாரழ லூட்டி யுழல்பவ ரிடுபலிக் கெழில்சேர்
விரைசெய் பூம்பொழிற் **றேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந்** தாரே. (1)

வெந்த நீற்றினர் **தேங்கூர் வெள்ளியங் குன்றமர்ந் தாரைக்**
கந்த மார்பொழில் சூழ்ந்த காழியுண் ஞானசம் பந்தன்
சந்த மாயின பாடற் றண்டமிழ் பத்தும்வல் லார்மேற்
பந்த மாயின பாவம் பாறுத றேறுதல் பயனே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- புரைசெய் வல்வினை தீர்க்கும் புண்ணியர் என்பது முதலாகிய தன்மைகளா லறியப்படும் இறைவர் திருத்தேங்கூர் வெள்ளியங் குன் றமர்ந்தாரே (பதிக மகுடம் : 1, 2, 3, 4, 6, 7, 10 பாட்டுக்களும்). இப்பதிகக் குறிப்பு, இறைவர் தம்மை அடைந்தாரது வினைதீர்க்கும் பண்பினராகக் கயிலையிற்போல வெள்ளியங்குன்று எனப்படும் இத்திருக்கோயிலில் விரும்பி வீற்றிருப்பர் என்பது இப்பதிகத்துப் பல பாட்டுக்களாலும் காணப்படும். தலப்பெயர் **தேங்கூர்** என்பது சரி.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **புரை** - துன்பம்; **இரைசெய்து** - உண்ட; இரைசெய்த ஆரழல் என்க. பெயரெச்சம் ஈறு கெட்டுநின்றது; "புகழ்புரிந் தில்லி லோர்க்கு" (குறள்)

என்புழிப்போல கருதலர் - பகைவர்; **வெள்ளியங்குன்று** - தேங்கூர்க்கோயிலின் பெயர்; **(2) கொத்து** - புடுக்கு; **வித்தகன்** - வித்தையுடையவன்; **வித்து** - மூலம் - மூலமானவன் என்றலுமாம்; (4) **பண்டு நான்செய்த வினைகள்** - அடியார்பொருட்டுக் கூறியது; **நெறி** - சிவநெறி; (5) **தெழித்து** - அழித்து; **பறவை** - இங்குக் கழுகு என்ற பொருளில் வந்தது; **பறவை கழித்த** - தசைப்பற்று வறண்ட; இங்கு இவ்வாறன்றி, **வானவர்- பறவை** என்றதனை வேறு பிரித்துப், பறவை கருடன் என்று கொண்டும், கருடனைச் செற்றவர் என்றுரைப்பதுமாம்; "கருடன் இவர்ப்பகை செறுத்தோன் (திருவிசை) (6) **சுவண்டர்** - அடையாளமுடையவர்; சுவடு - பன்னாட் பயின்ற அடையாளம்; **எல்லி** - எல் - இரவு; இரவில் வரும் சந்திரன்; (7) **நெறி** - சிவநெறி ஒழுக்கம்; **முறிகொள்** - முறி - தளிர்; தளிர் போன்ற; (8) **புனற்கண்ணி** - புனலாகிய (கங்கை) தலைமாலை; **தயங்கிய** - விளங்கிய; (10) **ஒருகை** - துதிக்கை; சில பதிப்புக்களில் **தெங்கூர்** என்றிருக்கிறது.

தலவிசேடம்:- திருத்தேங்கூர் - காவிரித் தென்கரை 116வது தலம். இலக்குமியும் ஞாயிறு முதலாகிய ஒன்பதுகோள்களும் பூசித்துப்பேறுபெற்ற பதி; நவகோள்கள் பூசித்த ஒன்பது சிவலிங்கங்கள் கோயிற்சுவற்றில் உள்ளன; இலக்குமி பூசித்த சிவலிங்கம் அவளுக்கு எதிரில் உள்ளது; சுவாமி கோயில் **வெள்ளியங்குன்று** எனப்படும். பதிகமும், சுவாமி பெயரும் காண்க; சுவாமி - **வெள்ளிமலைநாதர்**; அம்மை - **பெரியநாயகி**; பதிகம் 1. இது திருநெல்லிக்கா நிலயத்தினின்றும் மேற்கே கால் நாழியில் உள்ள திருநெல்லிக்காத் தலத்தை யடைந்து அதன் தென்மேற்கே மட்சாலை வழி ஒரு நாழிகையளவில் உள்ளது. இதற்குத் தலபுராணம் (201-பாட்டு) உண்டு.

திருக்கொள்ளிக்காடு

திருச்சிற்றம்பலம் — **பண் - காந்தாரபஞ்சமம் - 3-ம் திருமுறை**

நிணம்படு சுடலையி னீறு பூசிநின்
றிணங்குவர் பேய்களோ டிடுவர் மாநடம்
உணங்கல்வெண் டலைதனி லுண்ப ராயினுங்
குணம்பெரி துடையர்நங் கொள்ளிக் காடரே. (1)

நற்றவர் காழியுண் ஞான சம்பந்தன்
குற்றமில் பெரும்புகழ்க் கொள்ளிக் காடரைச்
சொற்றமி ழின்னிசை மாலை சோர்வின்றிக்
கற்றவர் கழலடி காண வல்லரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "குணம் பெரிதுடையர்நங் கொள்ளிக்காடரே" என்று இறைவரது அருட்குணங்களைப் பரவியது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நிணம்** - புலால்; **உணங்கல்** - பலிச்சோறு; **ஆயினும்** - இவை புகழல்லாத இகழ்ச்சிக் குறிப்பாகக் காணப்படினும்; "ஆயினும் பெரியார்" (பாசுரம்); (2) **ஆற்ற** - மிகவும்; **தகுதி** -உயிர் கவரத்தக்க நாள் எல்லை; 16 வயதென்று வரம்கொடுத்த எல்லை முடிந்த தகுதி; (3) **அத்தகு** - வந்து வணங்கி அடைக்கலம் புகுந்த அந்தத் தகுதியுடைய என அகரம் பண்டறி சுட்டு; **கண்டத்தினுள்ளே - வைத்தவர்** என்க; **மலிதல்** - நிறைதல்; **மத்தம்** - ஊமத்தமலர்; மத்தமும் வன்னியும் முன்னரே மலிந்த சென்னிமேல் மேலும் கொத்துக்களாக மலரும் கொன்றையும் வைத்தவர் என்க; (4) **பா**- பாட்டுக்கள்; **நாவணம் கொள்கையில்** - நாவின் இசைக்கும் சுதபேதங்களால் இசைக்கும்படி; **சொன்மாலை** - வேதங்கள்; **ஆள்வாராயினும் கோவணங் கொள்கையர்** - ஆளும் தலைவராயினும் தாம் கோவண உடை கொள்ளும் நிலையுடையார்; (5) **நார்** - வில்லின் நாண்; (6) **பஞ்சுதோய் மெல்லடிப்பாவை** - தல அம்மை பெயர்; **குறை உறும்**- குறைந்துவந்து அடைக்கலம் புகுந்த; **மதி** - பிறை; (11) **குற்றமில் பெரும்புகழ்** - "ஓங்குபுகழ்" (2472) என்று ஆசிரியர் இதனை எடுத்தாண்டருளினர்.

தலவிசேடம்:- திருக்கொள்ளிக்காடு - காவிரித்தென்கரை 115வது தலம் - தீக்கடவுள் (கொள்ளி - தீ) பூசித்தமையால் இப்பெயர் பெற்றது; மேற்குப் பார்த்த சந்நிதி; சனிக்கோளின் கோயில் விளக்கமாகவுள்ளது; சுவாமி - **அக்கினியீச்சுரர்**; அம்மை - **பஞ்சின் மெல்லடியாள்**; (பதிகம்-6-பார்க்க) பதிகம் 1. இது ஆலத்தம்பாடி நிலயத்தினின்றும் வடமேற்கே மட்சாலை வழி 5 நாழிகையில் அரிச்சந்திரா நதியின் வடகரையில் உள்ளது. திருநெல்லிக்காவுக்குத் தென் மேற்கில் 2½ நாழிகையளவிலும் அடையலாம்; இடையில் 3/4 நாழிகையில் திருத்தேங்கூர் உள்ளது.

திருக்கோட்டூர்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம் - 2-ம் திருமுறை**

நீல மார்தரு கண்டனே நெற்றியோர் கண்ணனே யொற்றைவிடைச்
சூல மார்தரு கையனே துன்றுபைம் பொழில்கள்சூழ்ந் தழகாய
கோல மாமலர் மணங்கமழ் **கோட்டுநற் கொழுந்தே**யென் றெழுவார்கள்
சால நீடல மதனிடைப் புகழ்மிகத் தாங்குவர் பாங்காலே. (1)

பந்து லாவிரற் பவளவாய்த் தேன்மொழிப் பாவையோ டுருவாருங்
கொந்து லாமலர் விரிபொழிற் **கோட்டூர்நற் கொழுந்தினைச்** செழும்பவளம்
வந்து லாவிய காழியுண் ஞானசம் பந்தன்வாய்ந் துரைசெய்த
சந்து லாந்தமிழ் மாலைகள் வல்லவர் தாங்குவர் புகழாலே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- "கோட்டூர் நற்கொழுந்தே" என்றெழுவார்கள் நீடுசெல்வத்தராகி யிவ்வுலகினில் **புகழ்** மிகத் தாங்குவர்; அமரரோ டமர்ந்தினி திருப்பர்; அருள்பெறுந் தவமுடையவர். **(புகழ் 1, 4, 7, 9, 11)**

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) "கோட்டூர் நற்கொழுந்தே!" என்று எழுவார்கள் - கொழுந்தீசுவரரே! என்று துதித்து முயல்பவர்கள்; எழுதல் - எத்தொழிலும் செய்தல்; முயலுதல் - துயிலெழுதல் என்றலுமாம்; கொழுந்து - இத்தலத்து இறைவர் பெயர்; தலம் - இவ்வுலகம்; (2) மயில் - பெடைக்குச் சிறப்பாகக் கூறப்படாதாயினும் இனம் பற்றி உடன் கூறப்பட்டது; குணலைசெய்தல் - ஆரவாரத்துடன் செய்யும் ஒருவகைக் கூத்தினை ஆடுதல். சங்கை - ஐயங்கள்; ஒன்று - ஒன்றும்; (3) நம்பன் - இறைவர்; ஆர் நல மலர் - பொருந்திய நல்ல பூக்கள்; ஆர்தல் - விதிப்படி கொண்ட தன்மைகள் நிறைதல்; அடியவர்மல்கிய - அடியவர்க்கெல்லாம் பொருள் - தெருள் - அருள் என்ற மூன்று செல்வங்களையும் நிறையத் தந்துள்ள; எழில் திகழ் முலையவர் - திருமகள் - கலைமகள் - மலைமகள் என்ற மூவர்; இவ்வாறன்றி முலையவராகிய செல்வம் - வாழ்க்கைத்துணை நலம் என்றுரைத்தலுமாம்; (5) உருகுவார் - இறைவர்பால் மனமுருகி நிற்பார்; சுடர் - சுடர்போல் விளக்கம் செய்பவர்; சுடரும் அமுதும் ஆவர் என்று நினைந்து - பத்திசெய்து எழுவார்கள் என்று கூட்டுக; (6) எழுவாரை ஏத்துவார் - அடியாரைத் துதிப்பவர்; அடியார்க்கடியவர்; (7) கெழுவுவர் - மேன்மையுடன் விளங்குபவர்; (8) சுளிய - வருந்த; பாதங்களின் அருள்; கோட்டூர்க் கொழுந்தினைத் தொழுவது அருள்பெறும் தவமாகும் என்க. (9) தெரிவைமார்கூட ஆடவர் கைதொழும் - கணவர் மனைவியருடன் கூட வந்து வணங்குதல்; (11) தேன்மொழிப் பாவை - இதனை மதுரவசனியம்மை என்று இத்தல அம்மை பெயரை வடவர் மொழிபெயர்த்துக்கொண்டனர். "கோட்டூர் நற்கொழுந்து" தலத்துச் சுவாமி பெயர் பதிகப் பாட்டுத்தோறும் வருவதும் அம்மை பெயர் திருக்கடைக்காப்பிற் பொறிக்கப்பெற்றதும் காண்க. "கோட்டூர்க் கொழுந்தே" (நம்பிகள் - ஊர்த்தொகை).

தலவிசேடம் : திருக்கோட்டூர் - காவிரித்தென்கரை 113வது பதி. தேவர்களும் குச்சர விருடியும் இங்குப் பூசித்துப் பேறுபெற்றனர். தேவர்கள் பூசை பதிகம் 3வது திருப்பாட்டிலும், முனிவர் பூசை 5வது திருப்பாட்டிலும் குறிப்பித்தலும் காண்க. சுவாமி சந்நிதி மேற்கு நோக்கியும் அம்மை சந்நிதி கிழக்கு நோக்கியும் உள்ளன. இதனை "தேன்மொழிப் பாவையோடுருவாரும்... கொழுந்தினை" என்று பதிகத்துள் பிரித்தும் கூட்டியும் குறிப்பித்தருளியது காண்க. இத்தலம் கோட்டூரில் மேற்கில் உள்ளது; கிழக்கில் உள்ள தலம் (திருக்கோயில்) கீழ்க்கோட்டூர் மணியம்பலம் என்று வழங்குவது; அது கருவூர்த்தேவர் திருவிசைப்பாப் பெற்றது; சுவாமி - கொழுந்துநாதர்; அம்மை - தேன்மொழிப்பாவையம்மை (மதுரவசனியம்மை); மரம் - வன்னி; (பாட்டு - 6); பதிகம் 1.

இது ஆலத்தம்பாடி நிலயத்தினின்றும் வடமேற்கில் - மன்னார்குடிக்குப் போகும் மட்சாலை வழி 6 நாழிகையளவில் உள்ளது. மன்னார்குடி நிலயத்தினின்றும் தென்கிழக்கில் திருவெண்டுறை வழியாய் மட்சாலை வழி 10 நாழிகையளவிலும், திருத்துறைப்பூண்டி நிலயத்தினின்றும் வடமேற்கில் மன்னார்குடிக்குப் போகும் மட்சாலை வழி 9 நாழிகையிலும் அடையலாம்.

2473. பொருளுரை... மற்றவ்வூர்... பாடி - அந்தத் திருவெண்டுறை என்னும் திருநகரினைத் தொழுது துதித்து மகிழ்ந்து பதிகம் பாடி; *மாலயனுக்கு... பாடி* - பிரம விட்டுணுக்களுக்கு அறிதற்கரியவராய் நின்ற பெருமான் எழுந்தருளியுள்ள தலங்கள் பற்பலவற்றையும் சென்றுபணிந்து துதித்துப் பதிகங்களும் பாடி; *பரவு...எய்த* - பரவும் திருத்தொண்டர் கூட்டம் தமது பக்கத்தில் வர; *கற்றவர்வாழ்.... போற்றி* - கற்றவர்கள் வாழ்தற்கிடமாகிய திருத்தண்டலை நீணெறி முதலாக உள்ள தலங்களும் பொன்மதிலை உடைய திருக்களரும், பகைவரது வேள்வியை அழித்த இறைவர் எழுந்தருளிய பிற பதிகளும் சென்றுபோற்றி; *திருமறைக்காடு அதன் மருங்கு சேர்ந்தாரன்றே* - அப்பொழுதே திருமறைக்காட்டின் பக்கத்துச் சேர்ந்தருளினர்.

விளக்கவுரை.. மற்று அவ்வூர் - மற்று - அசை; **அவ்வூர்** - திருவெண்டுறை; முன் சொல்லிய அந்த என அகரம் முன்னறி சுட்டு.

தானம் பற்பலவும் - இவை குன்றியூர், திருச்சிற்றேமம், மணலி முதலாயின என்பது கருதப்படும்.

தண்டலை - நீணெறி உள்ளிட்ட - திருக்களர் - உள்ளிட்ட - உள்ளிட்டன; அன்பெறாத அகரவீற்றுப் பலவறிசொல்; உள்ளிட்டனவும் திருக்களரும்; உம்மைதொக்கது.

பதி பிறவும் - இவை திருக்களரினின்றும் திருமறைக்காட்டின் மருங்குசேரும் வரையில் சென்று வணங்க உள்ளன. திருக்கணமங்கலம், திருமுகத்தலை, களப்பாள், **திருக்குன்றளூர், திருக்கடிக்குளம், திருஇடும்பாவனம், திருஉசாத்தானம்,** தகட்டூர் முதலாயின என்பது கருதப்படும்.

பரவுதிருத்தொண்டர் குழாம் - இருதிறத்துப் பெருந்தவரும் கூடிய கூட்டம்; **பரவு** - இருபெருமக்களையும் இறைவரையும் பரவும் என்றும், யாவராலும் பரவப்படும் என்றும் உரைக்க நின்றது.

கற்றவர்வாழ் - இத்தலத்துக்கடுத்து அரை நாழிகையளவில் உள்ள கணமங்கலத்தினின்றும் அரிவாட்டாய நாயனார் இங்கு வழிபட்டு வாழ்வடைந்த குறிப்பும் தரக் **கற்றவர்வாழ்** என்றார். **கற்றவர்** - "வாலறிவன் நற்றாடொழக்" கற்றவர். தொழக் கற்றலாவது இறைவன் பணியே பொருளாவது; ஏனையவை பொருளல்ல என்று தெரிந்து இறைபணிநின்று ஒழுகுதல்.

கனகமதில் திருக்களர் - மதிற்சிறப்புடைய தலம். பதிகம் பார்க்க. *575*

திருவெண்டுறை

திருச்சிற்றம்பலம் **பண் - பஞ்சமம் - 3-ம் திருமுறை**

ஆதிய னாதிரையன் னன லாடிய வாரழகன்
பாதியொர் மாதினொடும் பயி லும்பர மாபரமன்
போதிய லும்முடிமேற் புன லோடர வம்புனைந்த

திருமறைக்காடு சேர்தல்

2473. மற்றவ்வூர் தொழுதேத்தி மகிழ்ந்து பாடி
மாலயனுக் கரியபிரான் மருவுந் தானம்
பற்பலவுஞ் சென்றுபணிந் தேத்திப் பாடிப்
பரவுதிருத் தொண்டர்குழாம் பாங்கி னெய்தக்
கற்றவர்வாழ் தண்டலைநீ ணெறியுள் ளிட்ட
கனகமதிற் றிருக்களருங் கருதார் வேள்வி
செற்றவர்சேர் பதிபிறவுஞ் சென்று போற்றித்
திருமறைக்கா டதன்மருங்கு சேர்ந்தா ரன்றே. 575

வேதியன் மாதிமையால் விரும் பும்மிடம் வெண்டுறையே. (1)

திண்ணம ரும்புரிசைத் திரு வெண்டுறை மேயவனைத்
தண்ணம ரும்பொழில்சூழ் தரு சண்பையர் தந்தலைவன்
எண்ணமர் பல்கலையா னிசை ஞானசம் பந்தன்சொன்ன
பண்ணமர் பாடல்வல்லார் வினை யாயின பற்றறுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- ஆதியன் ஆதிரையன் என்பன முதலாகப் படிக்கப்படும் தன்மைகளையுடைய இறைவர் மாதிமையால் விரும்பும் இடம் வெண்டுறையே (பதிக மகுடம்).

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **ஆதிரையன்** - "ஆதிரை நாளுகந்தான்"; **போது** - கொன்றைமலர்; **மாதிமை** - காதல் (2) **வீடு** - விடுதலாகிய செயலை; **பண்டரங்கம்** - சிவன் கூத்து; **மாலைமதி** - பிறை; **வேலன கண்ணி** - தல அம்மை பெயர். (3) **நவில்** - தல்; தண்மை கொள்ளுதல்; இருத்தல்; சொற்பின் வருநிலை; **கடை** - கடையாய தன்மை; கீழ்மை; (4) **எண் அமர்** - எண்ணுதல் கொண்ட; **சிந்தையினான்** - சிந்தையிடங் கொள்பவன்; (5) **படி** - தன்மை; **வீரியம்** - வீரத்தின் தன்மை; (6) **ஊழிகளாய்** - உலகாய் - ஒடுக்கமும் மீளவுளதாகையும்; "ஒடுங்கி மலத்துளதாம்" (சிவஞானபோதம் 1); (7) **கன்றுதல்** - கோபித்தல்; **பொடி** - திருநீறு; **புலன்கள் வென்றவன்** - "பொறிவாயி லைந்தவித்தான்" - குறள்; "பொறிவாயிலிவ் வைந்தினை யும்மவியப் பொருதுன்னடி யேபுகுஞ் சூழல்சொல்லே" (நம்பி - நெல்வாயிலரத்துறை-2); **வென்றவன்** - வெல்லு நெறிகளேயாயினவன்; (8) **கடு வன்சினம்** - கடிய வலிய சினம்; (9) **மூலம்** - முதன்மை; உலகின் நிமித்தகாரணன்; (10) **நக்குருவாயவர்** - உடையின்றித் திரியும் கொள்கையுடைய சமண குருமார்; **பொக்கர்கள்** - இழிசொற் செயலுடையோர்; **பொக்கம்** - பொய் என்றலுமாம்; **கனகம் மிக்குயர்** - 1008 மாற்றாக ஒளிவிடும் பொன்னினும் மிக உயர்ந்த; **இன்** - ஐந்தனுருபும் சிறப்பும்மையும் தொக்கன; (11) **எண்** - எண்ணம். மதிப்பு என்றலுமாம்;

தலவிசேடம்:- **திருவெண்டுறை** - காவிரித்தென்கரை 112வது பதி; **திருவண்டுறை** என வழங்கும்; பிருங்கி முனிவர் வண்டுருவுடன் சுவாமிக்கும் அவரைப் பாகம் பிரியாத அம்மைக்கும் இடையே ஊடுருவிச் சென்று தம் நியதிப்படி சுவாமியை மட்டும் வலம்வந்து வழிபட்ட தலம். வண்டின் பாடலோசை இன்றும் கருப்ப நிலயத்தில் கேட்கக்கூடுமென்பர்; (பிருங்கம் - வண்டு); வித்தியாதரர் முதலியோரும் பூசித்துள்ளார்கள்; அம்மை பெயர் **வேலனகண்ணி** என்று பதிகம் 2-ம் பாட்டில் போற்றப்பட்டது; சுவாமி - **வெண்டுறைநாதர்**; அம்மை - **வேனெடுங்கண்ணியம்மை**; பதிகம் 1.

இது மன்னார்குடி நிலயத்தினின்றும் கிழக்கே மட்சாலை வழி 6 நாழிகையளவிலும், திருநெல்லிக்கா நிலயத்தினின்றும் மேற்கில் 6 நாழிகையளவிலும் அடையத்தக்கது. திருநெல்லிக்காவிலிருந்து நேர்பாதை கிடையாது. ஆலத்தம்பாடி நிலயத்தினின்றும் வடமேற்கே நல்ல மட்சாலை வழி 8 நாழிகையிலும் அடையலாம். இவ்வழி அரிச்சந்திரா நதியின் தென்கரையோரமாகச் செல்கின்றது.

திருத்தண்டலைநீணெறி

திருச்சிற்றம்பலம் — பண் - கௌசிகம் - 3-ம் திருமுறை

விரும்புந் திங்களுங் கங்கையும் விம்மவே
சுரும்புந் தும்பியுஞ் சூழ்சடை யார்க்கிடங்
கரும்புஞ் செந்நெலுங் காய்கமு கின்வளம்
நெருங்குந் தண்டலை நீணெறி காண்மினே. (1)

நீற்றர் தண்டலை நீணெறி நாதனைத்
தோற்று மேன்மையர் தோணி புரத்திறை
சாற்று ஞானசம் பந்தன் றமிழ்வல்லார்
மாற்றில் செல்வர் **மறப்பர் பிறப்பையே.** (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சடையார்க்கிடம் தண்டலை நீணெறி காண்மினே.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- **குறிப்பு** - இப்பதிகத்தின் சந்த யாப்பினை இத்தலத்தின் அணித்தாகிய கணமங்கலத்தில் வாழ்ந்து இங்குப் பணிசெய்து பேறடைந்த அரிவாட்டாய நாயனார் புராணத் தொடக்கத்தில் இந்நினைவுகூர்தற் பொருட்டு அமைத்துப் பத்துப் பாட்டுக்களாற் புராணங் கூறுகின்றது காண்க:- (1) **விரும்பும்** - அடைந்து உய்ய விரும்பிய; **விம்முதல்** - மிகுதல்; இங்குக் கூறிய **கரும்பும்** - **அரும்பும்** - **செந்நெலும்** பற்றியே நாயனார் புராணத்துள் நாடு நகர வளங்கள் கூறப்படுவதும் காண்க; **இகழும் காலன் இதயத்தும் என்னுளும் திகழும் சேவடி** - **கால னிதயத்தும்** - காலனது மார்பிலும்; **இதயம்** - மார்பு; **என்னுளும்** - எனது உள்ளத்தாமரையிடத்தும் என்க. காலனுள்ளத்துட் கொள்ளாமையால் புறத்துப்பட்டிறந்தான்; (1) **தவளப்பொடி** - வெண்ணீறு; **நிவந்த** - விளங்கிய; (9) **கருவர்** - கருவமுள்ள; **உந்தியின்** வந்த என்க; **செரு அருந்திய** - போரை அருந்துதலாவது

இல்லையாகச் செய்து தீர்த்திடுதல்; செம்பியன் கோச்செங்கண் நிருபர் - கோச்செங்கட் சோழமன்னர்; இத்தலம் மாடக்கோயிலாதல் காண்க: (10) கலவு சீவரம் - நிறந்தோய்த்த துவராடை; சீவரத்தர் - புத்தப் பிக்குகள்; கையில் உண்பவர் - சமண குருமார்; குலவுதல் - கூடுதல்; கலவு - கூடும்; 11 நீணெறிநாதர் - தலத்துச் சுவாமி பெயர்; மாற்றில் செல்வர் - முத்திச் செல்வத்தினை உடையவராவர்; மாறில் என்பது எதுகை நோக்கி மாற்றில் என்றாயது. மறப்பர் பிறப்பையே - பல பிறவிகளில் வந்த பிறவி வாசனையையும் அறவே மறந்துவிடுவர்.

தலவிசேடம்:- திருத்தண்டலைநீணெறி - காவிரித்தென்கரை 110-வது தலம்; இப்போது தண்டலைச்சேரி என வழங்கும்; கூர்மாவதாரத்தில் கடல் கலக்கிய விட்டுணுவின் செருக்குத் தவிர்த்து அந்த ஆமையோட்டினைச் சிவபெருமான் மார்பிலணிந்த தலம். கோச்செங்கட் சோழர் அமைத்த 78 மாடகோயில்களுள் ஒன்று. (பாடல் 9). இதற்குக் கால் நாழிகையளவில் வயல் வழியில் உள்ள கணமங்கலம் (ஊர் இப்போது இல்லை) அரிவாட்டாய நாயனாரது தலம்; அவர்தம் புராணத்து இறுதியில் தலவிசேடம் பார்க்க; இத்தலத்தில் (நீணெறி) அரிவாட்டாய நாயனார் திருவுருவம் அவரது பத்தினியாருடன் வைத்து வழிபடப்பெறுகின்றது; சுவாமி - நீணெறிநாதர்; அம்மை - ஞானாம்பிகை; மரம் - குருந்தம்: பதிகம் 1.

இது திருத்துறைப்பூண்டி நிலயத்தினின்றும் வடக்கே கற்சாலையில் இரண்டேகால் நாழிகை அளவில் உள்ளது.

திருக்களர்

திருச்சிற்றம்பலம் பண் - சீகாமரம் - 2-ம் திருமுறை

நீரு ளார்கயல் வாவி சூழ்பொழி னீண்ட மாவய லீண்டு மாமதில்
தேரினார் மறுகில் விழாமல்கு திருக்களருள்
ஊரு ளாரிடு பிச்சை பேணு மொருவ னேயொளிர் செஞ்ச டைம்மதி
யாரநின் றவனே யடைந்தார்க் கருளாயே. (1)

பாக்கி யம்பல செய்த பத்தர்கள் பாட்டொ டும்பல பணிகள் பேணிய
தீக்கியல் குணத்தார் சிறந்தாருந் திருக்களருள்
வாக்கி னான்மறை யோதி னாயமண் தேரர் சொல்லிய சொற்க ளானபொய்
யாக்கி நின்றவனே யடைந்தார்க் கருளாயே. (10)

இந்து வந்தெழு மாடவீதி யெழில்கொள் காழிந்நகர்க் கவுணியன்
செந்து நேர்மொழியா ரவர்சேருந் திருக்களருள்
அந்தி யன்னதொர் மேனியானை யமரர் தம்பெரு மானை ஞானசம்
பந்தன் சொல்லிவை பத்தும் பாடத் தவமாமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- திருக்களருள்நின்ற ஒருவனே! அடைந்தார்க்கருளாயே! என்று அடியார்பொருட்டு விண்ணப்பித்தது; அரசுகளது பசுபதித் திருவிருத்தம் காண்க.

குறிப்பு:- இக்கோயில் உள்ள கல்வெட்டுக்களில் "அடைந்தார்க்கருள் செய்யா நின்ற நாயனார்" என்று சுவாமிபெயர் குறிக்கப்பட்டுள்ளது. பதிகத்துள் **"அடைந்தார்க் கருளாயே"** என்று வருவன சுவாமிபெயர் என்பது குறிக்கத்தக்கது. திரு. வ.சு. செ. அவர்கள் குறிப்பு.

பதிகப் பாட்டுக் குறிப்பு : (1) மாவயல் ஈண்டு மாமதில் - மாமரங்களின் அயலில் அவ்வளவும் உயர்ச்சிகாட்டும் பெருமதில்; இத்திருப்பதி மதிலின் சிறப்புடையது பற்றிக் "கனகமதிற் றிருக்களர்" (2473) என்று ஆசிரியர் இதனை எடுத்துக் காட்டுதல் காண்க; **ஒருவனே** - "ஒன்றென்ற தொன்றேகாண்; ஒன்றே பதி" (சிவ-போதம்); **ஆர** - பெருக; நிறைய; (2) **தாளினார்** - தவமுயற்சியுடைய பெரியோர். "தவமுயல்வோர் மலர்பறிப்ப" (தேவா); **வேள்** - மதனன்; (3) **நன் மைந்தர்** - நன்னெறி நிற்கும்புதல்வன்; **சேடர்** - அறிவுடையோர்; (5) **பிணை** - மான்; **படை** - மழு; ஒரு கையில் மானும், ஒரு கையில் மழுவும் ஏந்தியவர்; (6) **ஆல** - ஆட; மயில் ஆலுதல் என்பது மரபு; (7) **தம் பலம்** - தமது பலக்குறைவை; **பேரம்பலம்** - ஞான அம்பலம்; (10) **தீக்கியல் குணம்** - நன்மையே பார்க்கும் இயல்புடைய தன்மை; (11) **இந்து** - சந்திரன்; **செந்து** - பெரும் பண்புகளுள் ஒன்று.

தலவிசேடம்:- திருக்களர் - காவிரித்தென்கரை 205வது தலம்; இது **பரிசாத வனம்** என்று சொல்லப்பெறும்; துர்வாச முனிவர்க்கு இறைவர் திருக்கூத்துக் காட்சி தந்தருளிய பதி; இம்மூர்த்தி கோயிலில் உள்ளார்; பராசரர் முதலிய முனிவர்களும் வழிபட்ட தலம்; முருகப்பெருமான் சந்நிதி விசேடம்; மதிற் சிறப்புடையதென்பது பதிகத்துக் காண்க. உயர்ந்த திருப்பணி செய்யப்பெற்றுள்ளது; சுவாமி - **களர்முளைநாதர்; அடைந்தார்க் கருள்நாதர்** (பதிகம்); அம்மை - **இளம்கொம்பன்னாள்**; தீர்த்தம் - **தூர்வாசதீர்த்தம்**; மரம் - **பாரிசாதம்**; பதிகம் 1. ஒரு காலத்தில் இங்கு 4 வேதங்களுக்கும் 4 வேத பாடசாலைகள் நிறுவப்பெற்று மாணவர்கள் நான்கு வேதங்களையும் பயின்றுள்ளார்கள்.

இது திருத்துறைப்பூண்டி நிலயத்தினின்றும் மேற்கே களப்பாள் போகும் பாதையில் 4 நாழிகையில் முத்துப்பேட்டைப் பாதைச் சந்திப்பினின்றும் வடக்கே ஒரு நாழிகையில் மட்சாலை வழி அடையத்தக்கது.

2474. பொருளுரை- காரமண்... தாமும் - கரிய சமணராகிய வெவ்விய பாலை நிலத்தைத் திருவருட்டுணை கொண்டு கடந்துவந்த ஆளுடைய அரசுகளும்; கடற்காழி.... தாமும் - கடலின் சார்புடைய காழிப்பதியவர்களுக்குத் தலைவராகிய பிள்ளையாரும்; சேர... கேட்டு - உடனாக எழுந்தருளி வருகின்ற அந்தப் பெரும் பேற்றினைக் கேட்டு; திருமறைக்காட்டு... கொள்ள - திருமறைக்காடாகிய பெரும்பதியின் உள்ளவர்கள் சிறப்பினாலே மிக்கவர்களாகி ஊரினை முற்றும் அலங்காரம் செய்து திருவிழாக் கொண்டாடும்படி எதிர்கொள்ளும் பொருட்டு; உயர்கமுகு- வந்தார் - உயர்ந்த கமுகுகளும் வாழைகளும் நீர்நிறை குடங்களும் விளக்குக்களும் வார்முரச முதலாகிய மங்கல நாதங்களும் பெருக எதிர்கொள்வதற்கு அடியார்களுடனே கூட மகிழ்ந்துவந்தார்கள்.

2474. காரமண்வெஞ் சுரமருளாற் கடந்தார் தாமுங்
கடற்காழிக் கவுணியர்தந் தலைவர் தாமுஞ்
சேரவெழுந் தருளியவப் பேறு கேட்டுத்
திருமறைக்காட் டகன்பதியோர் சிறப்பிற் பொங்கி
யூரடைய வலங்கரித்து விழவு கொள்ள
வுயர்கமுகு கதலிநிறை குடந்தீ பங்கள்
வார்முரச மங்கலநா தங்கண் மல்க
வெதிர்கொள்ள வடியாருடன் மகிழ்ந்து வந்தார். 576

விளக்கவுரை– *காரமண்– கடந்தார்* - அரசுகள்; கடத்தற்கருமையாலும் கொடுமைகளுக்கிடமாதலாலும் சமணச்சார்பை: சுரம் - பாலைநிலம் என்றார்; ஏகதேச உருவகம். இனி இங்குப் பாண்டி நாட்டினின்றும் காரமண் வெஞ்சுரங்கடத்திற்குப் பிள்ளையார் பால் விண்ணப்பம் போதவருதலின் முற்குறிப்பாக இது கூறப்பட்ட நிலையும் குறிக்க.

எழுந்தருளிய அப்பேறு - திருமறைக்காட்டின் மருங்குசேர்ந்த (2473) அப்பேறு.

சிறப்பில் பொங்குதல் - வாழ்வடைந்தேமென்ற மகிழ்வு மீக்கூர்தல்.

அடைய - முழுதும்; *விழவு* - விழா; எதிர்கொள்வதனை ஒரு விழாவாகக் கொண்டாடினர் என்க.

வார் முரசம் - வார்கள் கொண்ட முரசம்; முரசு முதலாகிய மங்கல வியங்களின் ஓசை.

பதியோர் அடியருடன் - வந்தார். பதியவர்கள் வேறு; அடியவர்கள் வேறு; முன்னையவர்கள் உலக நிலையின்மட்டில் அமைபவர்; பின்னையோர் சிவன்பால் அன்பு நிலையிற் பிரியாது அமைந்து பின்பற்றும் சிறப்புடையோர். 576

2475. **பொருளுரை**– *முன்... களிப்பின் மூழ்கி* - முன்னே வந்தணைந்தாராகிய திருநாவுக்கரசுகளை முறைமைப்படி எதிர்கொண்டு பெருமகிழ்ச்சியடைந்து; *பின்அணைய– கேட்டு* - பின்னே அணைய எழுந்தருளுகின்ற பிள்ளையாருடைய பெருகிய காளம் முதலிய சின்னங்களின் ஓசையினைக் கேட்டு; *சென்னி... வணங்குதலும்* - தலையின் மேல் கைகளைக் குவித்துக்கொண்டு முன்னேசென்று தூரத்தே நிலத்தின்மேல் விழுந்து வணங்குதலும்; *திருந்து...போந்தார்* - திருந்தும் சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும் அழகிய முத்துச்சிவிகையினின்றும் வந்திறங்கி வணங்கி அவர்களுடன் மகிழ்ச்சியுடன் போந்தருளினர்.

விளக்கவுரை– *முன்னணைந்த. பின்னணைய* - 2425, 2426 பாட்டுக்களிற் கூறிய நியமத்தின்படி முன்னே அரசுகள் வந்து சேர்ந்தபின்பு, பிள்ளையார் அவரைப் பின் பற்றிவர ஒருப்பட்ட நியமம் குறிப்பித்தபடி.

2475. முன்னணைந்த திருநாவுக் கரசர் தம்மை
முறைமையா லெதிர்கொண்டு களிப்பின் மூழ்கிப்
பின்னணைய வெழுந்தருளும் பிள்ளை யார்தம்
பெருகியபொற் காளத்தி னோசை கேட்டுச்
சென்னிமிசைக் கரங்குவித்து முன்பு சென்று
சேணிலத்து வணங்குதலுந் திருந்து சண்பை
மன்னவரு மணிமுத்தின் சிவிகை நின்று
வந்திழிந்து வணங்கியுடன் மகிழ்ந்து போந்தார். 577

பின்னணைய எழுந்தருளும் - *அரசுகள் முன்னர்ச் சென்று, தலம் சேர்ந்தபின் அங்கு அணையவரும்.*

முறைமையால் - *எதிர்கொள்ளத்தக்க விதிமுறையின்படி என்றும், முன் அணைந்த அரசுகளை முன்னர் எதிர்கொண்டு வரவேற்று நகரினுள் விடுத்தபின்னர்ப் பிள்ளையாரை அம்முறைமையில் எதிர்வரவேற்கும் முறையின்படி என்றும் உரைக்க நின்றது.*

பொற்காளத்தின் ஓசை - *காளம் - எக்காளம்;* ***பொன்*** - *அழகிய; பொன் அணிந்த என்றலுமாம்;* ***காளம்*** - *இனம்பற்றி ஏனைய சின்னம் தாரை முதலியனவும் கொள்க. இவை திருநெல்வாயிலரத்துறை இறைவர் அருளப் பிள்ளையார் கொண்டுய்த்தல் செய்தவை.*

ஓசை கேட்டுச் சென்னிமிசைக் கரம் குவித்து - *ஓசை அவரது திருப்பேர் பலவும் இசைத்துச் செவிப்புலப்படுத்தியமையின் வணங்கியபடி.* ***குவித்த*** - *குவித்தவாறே; கேட்டவுடனே கண்டுகொண்டார்போலக் கருதிய உறைப்புக் குறித்தது.*

வணங்கி - *எதிர்கொண்டு வணங்கிய அடியார்களுக்குத் தாமும் எதிர்வணக்கம் செய்யும் முறையால் வணங்கி.*

உடன் - *பதியோர் அடியார்களுடன் கூடி.*

போந்தார் - *நகர்ப்புறத்தே எதிர்கொண்ட இடத்தினின்றும் நகரினை நோக்கிப் போந்தனர். நகரினுட் புகுந்ததனை மேல்வரும் பாட்டிற் கூறுவார்.* *577*

2476. ***பொருளுரை...*** *சொல்லரசருடன் கூட.... போது - திருநாவுக்கரசருடன்கூட ஆளுடையபிள்ளையாரும் தூய மணிகளையுடைய நீர் சூழ்ந்த திருமறைக்காடு என்னும் பழம்பதியின் நிறைந்த திருவீதியிற் புகுந்தபோது; மாதவர்கள்... ஓசை - மாதவர்களும், மறையவர்களும் மற்றும் உள்ள மாந்தர்களும் அளவில்லாதபடி அர! அர! என்று எடுத்து முழக்கிய ஒலியானது; இரு விசும்பும்.... உற்றது அன்றே - பெரிய ஆகாயமும் எட்டுத் திசைகளும் நிறைந்து மேலெழுந்து ஒலிபொருந்திய நீரினையுடைய கடல் ஓசையினையும் அடக்கி ஆகாயத்தின்மேல் உள்ள விண்ணுலகத்தினப்புறத்தும் சென்றது அப்பொழுதே.*

விளக்கவுரை... சொல்லரசருடன் - *பெருமையும், முன்சென்ற முறைமையும் பற்றி* ***உடன்*** *என்னுஞ் சொல்லுருபை* ***அரசருடன்*** *புணர்த்தி ஓதினார்.*

2476. சொல்லரசு ஞானசம் பந்தப் பிள்ளை யாருந்
தூமணிநீர் மறைக்காட்டுத் தொல்லை மூதூர்
மல்குதிரு மறுகின்கட் புகுந்த போது
மாதவர்கள் மறையவர்கள் மற்று முள்ளோர்
எல்லையில்லா வகை"அர"வென் றெடுத்த வோசை
யிருவிசும்புந் திசையெட்டு நிறைந்து பொங்கி
யொல்லொலிநீர் வேலையொலி யடக்கி விண்மே
லும்பர்நாட் டப்பரந்து முற்ற தன்றே. 578

தூமணி நீர் - கடல் மணிகளையுடைய தன்மைபற்றிக் கூறினார், இக் கடற் பக்கம் முத்துக்கள் பிறக்கும் நிலைபற்றி முத்துக்களைச் சிறப்பாகவும் ஏனை மணிகளைப் பொதுவாகவும் குறித்தது "பொங்கு வெண்மணற் கானல் பொருகடற் றிரைதவழ் முத்தங் கங்குலாரிருள் போழும்" (தேவா) என்ற குறிப்பு.

தொல்லை மூதூர் - தொன்மை - முதுமை - என்ற ஒருபொருட் பன்மொழிகள் மிகப் பழமைகுறித்து நின்றன.

மாதவர்கள் மறையவர்கள் மற்றுமுள்ளோர் - **மாதவர்கள்** - சிவனடியார்கள்; **மறையவர்கள்** - வேதம் பயிலும் வேதியர்கள்; **மற்றுமுள்ளோர்** - ஏனை உலகவர். "படிக்கு நூல்கள் சிவாகமம்" (சித்தி - பர - 63) என்றபடி சிவாகம வொழுக்கம் முத்தி நெறியாதலானும், இங்குப் பின்னர் வேதம் பூசித்துக் காப்பிட்ட கதவைத் திறப்பித்து உலகுக்குச் சிவங் காட்டி உய்விக்க உள்ள பெருமை மாதவர்கள்பா னிற்றலானும் மாதவர்களை முன்வைத்தோதினார்; வேத சிவாகமங்களின்வழி அடியார்களைப் பின்பற்றி உய்யவேண்டிய அளவில் நிற்கும் ஏனை உலகரை இறுதியில் வைத்தார். மேல்வரும் பாட்டிலும் இவ்வாறே காண்க.

அர என்று எடுத்த ஓசை - இரு பெருமக்களும் சேர எழுந்தருளிய அரும்பெரும் பேறும் பயனும் சிவனருளாலன்றி வாய்க்கப்பெறாவாகலின் அரனை நினைந்து அரனாமம் போற்றி முழக்கினர். **ஓசை - முழக்குதல்** - மிகு மகிழ்ச்சியின் மெய்ப்பாடு.

இரு விசும்பும் - இடவகையால் மேலே கலந்து நிற்கும் நிலைபற்றி விசும்பை முற்கூறினார்; ஓசை முதற்கண் மேலெழுந்து செல்லும் இயல்பும் குறித்தபடி.

விசும்பும் திசை எட்டும் - ஓசை கீழ்ச்செல்லும் இயைபு மிகுதியுமின்மை பற்றியும் புண்ணியமின்மை பற்றியும் கீழ்உள்ள திசையினைக் கூறாராயினர்.

ஒல் ஒலி நீர் - ஒலி ஒல்(லும்) நீர் என்க. **ஒல்லுதல்** - பொருந்துதல்; கடல் எப்பொழுதும் ஒலித்துக் கொண்டிருத்தல் காண்க. **ஒல்** - ஒலிக்குறிப்பென்பாருமுண்டு.

வேலை ஒலி அடக்கி - திருமறைக்காடு கடற்கரையில் உள்ளதாதலின் இவ்வாறு கூறினார்; **அடக்கி** - கீழ்ப்படத் தான் மிக்கிசைத்து. கடற்கரைப் பட்டினங்களில் கடல்

2477. அடியவரும் பதியவரு மருங்கு போற்ற
வணிமறுகி னூடெய்தி யருகு சூழ்ந்த
கொடிநுடங்கு செழுந்திருமா ளிகையின் முன்னர்க்
கோபுரத்தைத் தாழ்ந்திறைஞ்சிக் குறுகிப்புக்கு
முடிவிலிமை யவர்முனிவர் நெருங்குந் தெய்வ
முன்றில்வலங் கொண்டுநேர் சென்று முன்னாட்
படியின்மறை யருச்சித்துக் காப்புச் செய்த
பைம்பொன்மணித் திருவாயிற் பாங்கு வந்தார். 579

ஓசை பகலிற் கேட்கப்படாது இரவில் கேட்பதற்குப், பகற்காலத்தில் நகர இரைச்சல் கடல் ஓசையினை அடக்கி மேற்கூர்தல் காரணமாதல் காண்க.

நிறைந்து - பொங்கி - அப்புறத்தும் உற்றது - படிப்படியாக மிகுந்த நிலை. **அப்புறம்** - சிவனுலகம். சிவபுண்ணியம் மேலோங்கிக் கூர்ந்து சிவனடி சாரும் நிலை குறிக்கப்பட்டது. "இத்தன்மை நிகழுநா ளிவர்திருத்தொண் டிருங்கயிலை, யத்தர் திரு வடியிணைக்கீழ்ச் சென்றணைய" (சிறுத் - புரா - 25); "குழலோசை, வையந்தன் னையுநிறைத்து வானுந்தன் வயமாக்கி... ஐயன்றன் றிருச்செவியி னருகணையப் பெருகியதால்" (962) என்பன முதலியவை காண்க.

அன்றே - அப்போதே; அசை என்பாருமுண்டு. 578

2477. பொருளுரை- அடியவரும்... எய்தி - அடியவர்களும் ஊர் மாந்தர்களும் பக்கத்தில் துதித்துவர அழகிய தெருக்களின் வழியே வந்துசேர்ந்து; அருகு... புக்கு - பக்கத்தில் சுற்றியுள்ள கொடிகள் விளங்கும் செழிய திருமாளிகையின் முன்பு உள்ள பெரிய திருக்கோபுரத்தின்முன் தாழ்ந்து வணங்கி உள்ளே புகுந்து; முடிவில்.... நேர்சென்று - முடிவில்லாத தேவர்களும் முனிவர்களும் நெருங்கும் தெய்வத்தன்மை வாய்ந்த திருமுன்றிலினை வலமாகச் சுற்றிவந்து திருமுன்பு நேராகச் சென்று; முன்னாள்... பாங்கு வந்தார் - முன்காலத்தில் இவ்வுலகத்தில் வேதங்கள் அருச்சனை செய்து திருக்காப்புச் செய்துவைத்த பைம்பொன் அணிந்த மணிகளையுடைய திருவாயிலின் பக்கத்தில் வந்தருளினர்.

விளக்கவுரை- அடியவரும் பதியவரும் மருங்குபோற்ற - முன்பாட்டில் "மாதவர்கள்- மற்றுமுள்ளோர்" என்றது காண்க.

அருகுசூழ்ந்த கொடிநுடங்கு செழுந்திரு மாளிகை - பக்கங்களில் எங்கும் கொடிகள் அசைந்து விளங்கும் செழிய திருக்கோயில்; **நுடங்குதல்** - குழைந்து அசைதல்; ஆடுதல்.

கோபுரம் - திருமுன்பு உள்ள பெரிய திருக்கோபுரம். 2514 பார்க்க.

முடிவில் இமையவர் - மருந்துண்டு சாவாதிருக்கப்பெற்ற தேவர்கள்; நீண்ட காலம் இருக்கப்பெறுதலின் **முடிவில்** என்றுபசரிக்கப்பெற்றவர்; சிவபெருமானொருவரே

2478. அருமறைக டிருக்காப்புச் செய்து வைத்த
வக்கதவந் திறந்திடவம் மறைக ளோதும்
பெருகியவன் புடையடியா ரணைந்து நீக்கப்
பெறாமையினா லன்றுமுத லாகப் பின்னை
யொருபுடையோர் வாயிலமைத் தொழுகுந் தன்மை
யுள்ளபடி கேட்டருளி யுயர்ந்த சண்பைத்
திருமறையோர் தலைவர்வியப் பெய்தி நின்று
திருநாவுக் கரசருக்குச் செப்பு கின்றார்; 580

முடிவில்லாதவர்: ஏனை எல்லாரும் பசு வர்க்கத்துட்பட்டுக் காலாந்தரத்தில் இறந்து ஒடுங்க நிற்பவர்; *முடிவில்* - அளவில்லாத; எண்ணிறந்த என்றலுமாம்.

முன்றில் - கோயிலினைச் சூழ்ந்த திருமுற்றம்.

முன்னாள்... திருவாயில் - மறைகளருச்சித்த தலமாதலின் இப்பதி திருமறைக்காடெனப்படும்; தல வரலாறு குறித்தது: மேல்வரும் பாட்டுப் பார்க்க.

பாங்கு - பக்கத்தில்; *வந்தார்* - இரண்டு பெருமக்களும் வந்தருளினர்.

படியின்மறை - படி - உலகு; *படியில்* - ஒப்பில்லாத என்றலுமாம். முறைமையால் என்றலும் பொருந்தும். *அருகு தாழ்ந்து* - என்பதும் பாடம். 579

2478. பொருளுரை... *அருமறைகள்... திறந்திட* - அரிய வேதங்கள் திருக்காப்புச் செய்து மூடிவைத்த அத்திருக் கதவத்தினைத் திருக்காப்பு நீக்கித் திறந்திடுதற்கு; *அம்மறைகள் ஓதும்... பெறாமையினால்* - அந்த மறைகள் ஓதும் பெருமையுடைய அன்புடைய அடியார்கள் வந்து அணைந்து கதவங் காப்பு நீங்கப்பெறாத காரணத்தினாலே; *அன்று முதலாக* - அற்றைநாள் தொடங்கி; *ஒருபுடை... கேட்டருளி* - ஒரு பக்கத்தில் வேறுமோர் வாயில் அமைத்துக்கொண்டு வழிபட்டு ஒழுகும் தன்மையினை உள்ள படியாகக் கேட்டருளி; *உயர்ந்த...நின்று* - உயர்வாகிய சீகாழித் திருமறையவர்களது தலைவராகிய பிள்ளையார் வியப்புற்றுநின்று; *திருநாவுக்கரசருக்குச் செப்புகின்றார்* - ஆளுடைய திருநாவுக்கரசர்பால் சொல்லுகின்றாராகி;

விளக்கவுரை... திறந்திட அம்மறைகளோதும் பெருகிய அன்புடையார் - இங்கு **அம் மறைகளோதும்** அடியார் என்றமையாலும், பின்னர்த் தமிழ்மறையால் திருக்காப்பு நீக்கப்பட்டமையாலும், **அம்மறை** என்றது தமிழில் இருந்த வேதமேயாம் என்றும், நான்மறை என்பன தமிழில் இருந்தனவே பின் அழிந்துபட்டன என்றும், இங்கு முன் அருச்சித்துக் காப்பிட்டவை அத் தமிழ் வேதமே என்றும் புதிய ஆராய்ச்சிமுறைத் துணிவு கொள்வாருமுண்டு. அவை பொருந்தா என்க; என்னை? ஒரு பூட்டினைத் திறக்கவேண்டின் அதனுடைய - அதனைப் பூட்டிய - திறவுகோல் வேண்டும்; அது கிடைக்கப்பெறாவிடின் அதுபோன்ற பிறிதொன்று வேண்டும்; அதுவேபோல் இங்குக் கதவு காப்பு நீக்க அதனைக் காப்புச்செய்த அம்மறைகளே வரவேண்டும்; அவை வராதபோது அவையேபோன்ற இத்

தமிழ்மறை வந்தது என்பது போதரும்; போதரவே காப்பிட்ட அம்மறை வேறு; அம்மறைகளோதும் அன்புடை யடியார் அணைந்திலர்; இப்போது அதனின் வேறாய் அதனைப்போலவே பயன்தரும் தமிழ்மறை வந்தது என்ற முடிபே பயக்குமன்றி அவர் கொள்ளும் துணிபுகள் பொருந்தாவென்க.

அம்மறைகளோதும் - அடியார் - காப்பிட்ட அந்த என அகரம் முன்னறிசுட்டு; **அம்மறைகளோதும் - அடியார்** - என்று கூட்டி மறைகளை ஓதும் பெருமையுடைய அடியார் என்றும், மறைகளோதும் **அன்பு** என்று கூட்டி மறைகளால் ஓதப்படும் அன்பு என்றும் உரைக்கலாம்.

மறைகள் திருக்காப்புச் செய்த அதனைத் திறந்திட அம்மறைகளோதும் - மந்திர விதியினால் அடைத்த செயலை அவ்விதிப்படி வரும் மந்திரவிதியினாலன்றி அவிழ்க்க இயலாது; ஆகமங்களில் திருக்காப்புச் செய்தற்கும் அது நீக்குதற்கும் உரிய மந்திரங்கள் விதிக்கப்பட்டன; உலக நிலையினும், மருத்துவ நூலின் ஒரு விதிப்படிச் செய்த மருந்தின் மாற்று, அந்நூலின் விதித்தவாறு மற்றொரு மருந்தாலாகுமாறும், இவ்வாறே பிறவும் காண்க.

அம்மறைகளோதும் பெருகிய அன்புடை அடியார் - திருக்காப்பு நீக்கவல்ல மறைகளை அந்நியதியின் வைத்துத் திறம்படச் செலுத்தும் ஆற்றலுடையார். வேதங்களின் ஆற்றல் சிவசத்தியே; அதற்குச் சமன்பட இயற்றுதல் அச்சிவசத்தி அவ்வாறே பதிந்து சிவனுரையாக வரும் மனுக்களுக்கன்றி யில்லையென்பதாம். "தொடர்வகற்ற வல்ல அன்ப ரணையாமை" *(1531)*.

அன்றுமுதலாக-ஒழுகும் தன்மை - "மருங்கோர் வாயில் வழியெய்தி, யல்ல ரீர்ப்பார் தமையருச்சிப் பார்க டொழுவா ராம்படி" *(1531)*; நேர்திருவாயிலாகிய அது மறைகளாற் பூட்டப்பட்டமையால் வடபுறம் சுற்றுத் திருமதிலின் ஒருவாயில் வகுத்து அதன்வழியே பூசிப்போரும் அடியாரும் சென்று அன்றுமுதல் வழிபட்டு வந்த நிலையை; எந்தம் பெருமக்கள் நேர்வாயிலைத் திறக்கவும் அடைக்கவும் வழக்க நிகழ்த்தியருளிய அன்று முதல் இந்த **ஒருபுடை ஓர்வாயில்** வழக்கொழிந்து அடைக்கப்பட்டது. அதனை இன்றும் காணலாம். III பகுதியில் 1531-ன் பின் உள்ள படம் பார்க்க.

உள்ளபடி - உண்மை நிகழ்ச்சியினை; **படி** - படியினை; இரண்டனுருபு தொக்கது. உள்ளபடியாகக் கேட்டருளி என்றலுமாம்.

திருமறையோர் தலைவர் வியப்பெய்தி - மறைகளின் வன்மையும், செல்லும் நியதி எல்லையும் மறையோர் தலைவர்க்கன்றி அறிய வாராதென்பது குறிக்க இத்தன்மையாற் கூறினார். **வியப்பு** - நேர்காணமாட்டாவாறு தம்மை மறைத்து ஓர் புடை வாயிலான் விளங்கநின்ற திருவருளின் பெருமையினை வியந்தருளியபடி; தாமே அருளிய மறைகள் கதவம் திருக்காப்புச் செய்யவும், தாம் பெருகிய அன்புடை யடியாருரையின் நின்று வெளிப்படுத்தி அருளிய தமிழ்வேதம் அக் காப்பினை அவிழ்த்து உலகுக்குத் தம்மை

2479. "அப்பரே! வேதவனத் தையர் தம்மை
யபிமுகத்துத் திருவாயி றிறந்து புக்கே
யெப்பரிசு நாமிறைஞ்ச வேண்டும்; நீரே
யிவ்வாயி றிருக்காப்பு நீங்கு மாறு
மெய்ப்பொருள்வண் டமிழ்பாடி யருளு"மென்ன
விளங்குமொழி வேந்தரது மேற்கொண் "டென்னை
யிப்பரிசு நீரருளிச் செய்தீ ராகி
லிதுசெய்வேன்" எனப்பதிக மெடுத்துப் பாட, 581

நேரே காட்டலும் காப்பிட லுமாகிய இரு தன்மை விளங்கவும் ஆக இவ்வகை நினைந்தருளிய திருவருட் குறிப்பினை இறைவர் உள்நின்று உணர்த்த உணர்ந்து பிள்ளையார் வியப்பு எய்தினர் என்றலுமாம்.

நின்று - அடைத்திருந்த அத்திருவாயிலின் முன்பு நின்று.

செப்புகின்றார் - செப்புகின்றாராகி - முற்றெச்சம். **செப்புகின்றாராகி; என்ன** - என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. 580

2479. பொருளுரை- "அப்பரே!.. அருளும்" என்ன - "அப்பரே! திருமறைக்காட்டின் இறைவரை நேர்முன்புள்ள திருவாயிலைத் திறந்து புகுந்தே எவ்வகையானும் நாம் வணங்குதல்வேண்டும்; இத் திருவாயில் திருக்காப்பு நீங்கும்படி நீரே மெய்ப்பொருளினமைந்த வண்மையுடைய தமிழினைப் பாடியருளும்" என்று அருளிச் செய்ய; விளங்கு மொழிவேந்தர்... எடுத்துப்பாட - விளங்கும் சொல்லரசரும் அதனை உடன்பட்டு மேற்கொண்டு "நீர் இவ்வாறு செய்யும்படி என்னை அருளிச் செய்வீராகில் இதனைச் செய்வேன்" என்று சொல்லித் திருப்பதிகத்தினைத் தொடங்கிப்பாட,

விளக்கவுரை- *அப்பரே!* - இது பிள்ளையார் தாமே அரசுகளை ஞானத் தந்தையாகக் கொண்டு அப்பரே! என முன்னர்ச் சீகாழியில் முதலில் காணப்பெற்ற போது விளித்த பெயர்; 1447 பார்க்க. அப்பராதலின் மறைகளின் றொடர்புபற்றிய இந்நிகழ்ச்சியில் அவரே முதற்கண் செயல் செய்தற்குரியார் என்ற குறிப்பும்பட இப்பெயரால் விளித்தபடி; "பாடும் அப்பர்! என" (1532) என முன்னரும் இவ்வாறே கூறியது காண்க.

அபிமுகத்துத் திருவாயில் - திருமுன்பு உள்ள நேர்திருவாயில்; "அபிமுகத்துப் பீடிகை" (2463).

புக்கே - ஏனையோர்போல வேறு ஒருபுடை வாயிலால் புகுதலைப் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலை; தேற்றமுமாம்.

எப்பரிசும் - எவ்வாற்றாலேனும்; தாமதமும் அச்செயலின் திருவருணோக்கிய பெருமுயற்சியும் முதலிய தடைகள் எவையிடையிடினும் என்க. இஃது பெருகிய அன்புடையடிமைத்திறத்தின் உறைப்புக் குறித்தது.

நீரே - ஏகாரம் தேற்றம்.

மெய்ப்பொருள் வண்தமிழ் - மெய்ப்பொருள் - மறைகளது சத்தாந்தன்மை; **வண்மை** - உலகுக்கு நேர்வழி காட்டும் வள்ளன்மை.

விளங்கும் மொழி - இறைவரருளிய மறையின் தன்மை அதனோடொப்ப விளங்கும் மொழி; "திருமறை நம்பர்தாமுன் பருள்செய்த வதனைச் செப்பு, மொருமையினின்ற தொண்டர் தம்பிரானார்பா லொக்க" (2490); திருவருள் வெளிப்பட விளங்கும் மொழி என்றலுமாம்.

"இப்பரிசு நீரருளிச் செய்தீராகில் இது செய்வேன்" என - பிள்ளையாரருளியதனை இறைவரது அருளிப்பாடாகவே கொண்டு அவனருளாலல்லது ஒன்றையுஞ் செய்யாது இறைபணியில் நிற்கும் அரசுகள் கூறிய திறம் கருதுக. பிள்ளையார் அரசுகளை அப்பரே (ஞானத்தந்தை) எனக்கொண்டருள; அரசுகள் பிள்ளையாரை இறைவராகவே கொண்டருளினர் என்பது குறிப்பு. அவரது ஆணையினைச் சிவனதாணை யென்றனர் என்க.

பதிகம் எடுத்துப் பாட - "பண்ணினேர் மொழியாள்" என்ற திருக்குறுந்தொகைப் பதிகம், "பண்ணி னேரு மொழியாளென் றெடுத்துப் பாட" (1533) என இதன் விரிவு முன்னர் இடத்தகுதி பற்றி அரசுகள் புராணத்தில் அறிவித்தருளிய அமைதி காண்க. **எடுத்து** - தொடங்கி.

"அப்பரே!... அருளும்" என - முன்னர் "ஓங்கு வேத மருச்சனைசெ யும்பர் பிரானை யுள்புக்குத், தேங்கா திருவோ நேரிறைஞ்சத் திருமுன் கதவந் திருக்காப்பு, நீங்கப் பாடு மப்ப"ரென (1532) என்றதுடன் இங்குக் கூறியதனை ஒப்பு நோக்குக. இரண்டும் பிள்ளையார் அரசுகளை நோக்கிக் கூறியருளிய செய்தி யொன்றினையே உரைப்பனவாயினும் ஈண்டுப் பிள்ளையார் புராணமாதலின் அவரது அருளிப் பாட்டினைச், சிறிது விரித்துக் கூறுதலும், பொருள் ஒன்றேயாதலும் உய்த்துணர்ந்து கொள்க.

எடுத்துச் செய்தீராக - என்பதும் பாடம். 581

.2480. **பொருளுரை... பாடிய... செய்கையினால்** - பாடியருளிய அந்தத் திருப்பதிகத்தின் தொகைகளாகிய பத்துப் பாடல்களும் நிரம்பியபின்னும் பசும் பொன்னணிந்த திருவாயிலின் பெருமைபொருந்திய பொற்கதவு திருக்காப்பு நீங்காதிருந்த செய்கையினாலே; **சிந்தை நொந்து** - திருவுள்ளம் வருந்தியருளி; **நீடு.... நின்றெடுக்க** - நீடும் திருக்கடைக்காப்பிலே அரிதாக வருந்தி வேண்டிக்கொண்டு நின்று பாட; **திருக்காப்பு நீக்கங் காட்ட** - திருக்காப்பு நீங்குதலைக் காட்டவே; **ஆடிய...மூழ்க** - அருள் திருக்கூத்து ஆடிய திருவடிகளையுடைய இறைவரது அடியார்களும் விண்ணோர்களும் முழக்கிய அரவொலி முழக்கம் அகிலாண்டங்கள் எல்லாம் மூழ்க எழுந்தது.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன. இதுபற்றி 1532, 1533, 1534 பாட்டுக்களின்கீழ் குறிப்புப் பார்க்க.

•2480. பாடியவப் பதிகப்பாட் டான பத்தும்
பாவலிரம் பியபின்னும் பைம்பொன் வாயிற்
சேடுயர்பொற் கதவுதிருக் காப்பு நீங்காச்
செய்கையினால் வாகீசர் சிந்தை நொந்து
நீடுதிருக் கடைக்காப்பி லரிது வேண்டி
நின்றெடுக்கத் திருக்காப்பு நீக்கங் காட்ட
ஆடியசே வடியார்த மடியார் விண்ணோ
ரார்ப்பெழுந்த தகிலாண்ட மனைத்து மூழ்க. 582

குறிப்பு: இம்மூன்று பாட்டுக்களின் வரலாறு அரசுகளின் புராணத்தில் அத்தொடர்புக்கேற்ற பெற்றியாக 1531 முதல் 1534 வரை நான்கு திருப்பாட்டுக்களிற் கூறப்பட்டது. ஆண்டு அரசுகளைப்பற்றியமட்டில் அவரது நிகழ்ச்சியும் தேவாரமும் விரித்தும், பிள்ளையாரது நிகழ்ச்சிகளைச் சுருக்கியும் கூறியருளிய ஆசிரியர், ஈண்டுப் பிள்ளையாரது புராணமாதலின் இம்மூன்று பாட்டுக்களில் அவரது நிகழ்ச்சிகளை விரித்தும் அரசுகளைப் பற்றியமட்டில் உள்ளவற்றைச் சுருக்கியும் கூறும் கவிநயம் ஒப்புநோக்கிக் கண்டுகொள்க.

விளக்கவுரை... பாடிய பின்னும் - *பதிகப் பாட்டு ஆன பத்தும்* - பதிகம் என்பதற்குரிய பத்துப் பாட்டுக்களும்; **பதிகம்** - பத்துப் பாட்டுக்கொண்ட செய்யுட் டொகுதி; பதிகக் குறிப்புக்கள் பார்க்க. பாடல் - பாடிய தொழில். அரசுகள் பெரும்பான்மை பத்துப் பாடல்களிலே பதிக முடிக்கும் மரபும் குறிக்க.

வாயிற் - கதவு - காப்பு நீங்காச் செய்கை - வாயிலிற் கதவுகள் திறந்துகாட்டாமை; இதற்குக் காரணம் "பயன்றுய்ப்பான், தெண்ணீர் முடியார் திருக்காப்பு நீக்கத் தாழ்க்க" (1533) என முன்னர் உரைத்தனர். **செய்கை** - திருவருள் விளைவு; **நீங்காச் செய்கை** - நீக்காத தொழில் என்று கதவின் செயலல்லாது திருவருளின் செயலாதலைக் குறித்தபடி; பதிகமும் இறைவரை விளித்துக் கூறியபடியும் காண்க.

அரிதுவேண்டி - வருந்திவேண்டி; "எண்ணீ ரிரக்க மொன்றிலீ ரென்றுபாடி" (1533) என முன்னர் (1533) **அரிதுவேண்டிய** தன்மையினை விரித்தருளினர்.

எடுக்க - "இரக்க மொன்றிலீர் எம்பெருமா னீரே" என்ற கருத்துடன் தொடங்கி முடிக்க.

அடியார்களும் விண்ணோர்களும் கூடி - முழக்கிய முழக்கு என்க; **அகில அண்டம் அனைத்தும்** - அகிலாண்டம் என்றலே யமையுமாயினும், நில அண்டத் தொகுதியிலேயன்றி ஏனை அண்டகோசங்களிலும் பரவுதலின் மேலும் **அனைத்தும்** என்றார்.

அடியார்தமடியார் - சொற்பின் வருநிலை; சிறப்புப்பற்றி அடியாரை முன் வைத்தார்; ஆர்ப்பு எழுதல் முன்னரும், அது பரவி அண்டமுழுதும் பரவி மூழ்குவித்தல்

2481. மற்றது கண்ட போதே வாக்கின்மன் னவரை நோக்கிப்
பொற்புறு புகலி மன்னர் போற்றிட வவரும் போற்றி
யற்புத நிலையி னார்க ளணிதிரு மறைக்கா டாளுங்
கொற்றவர் கோயில் வாயி னேர்வழி குறுகிப் புக்கார். 583

---

*பின்னரும், நிகழ்வனவாதலின் அம்முறையே **எழுந்தது** - மூழ்க என்று வைத்த நயம் காண்க. "ஞாலத்து, ளோத வொலியின் மிக்கெழுந்த தும்ப ரார்ப்பு மறையொலியும்" (1534) என முன்னர்க் கூறியது காண்க.*

திருக்கதவு நீங்கிக் காட்ட *- என்பதும் பாடம்.* *582*

2481. பொருளுரை *- மற்றது கண்டபோதே - திருக்காப்பு நீக்க காட்ட அதனைக் கண்ட பொழுதே; வாக்கின் மன்னவரை... போற்றி - திருநாவுக்கரசரை நோக்கி அழகிய சீகாழியரசு போற்றியிட அவரும் போற்றிசெய்ய; அற்புத நிலையினார்கள் - அற்புதம் அடைந்த நிலையினையுடையவர்களாகி; அணிதிரு... புக்கார் - அழகிய திருமறைக் காட்டினில் ஆட்சிபுரிந்தருளும் இறைவரது திருக்கோயில் வாயிலில் திருமுன்புள்ள நேர்வழியாலே சென்று புகுந்தருளினர்.*

விளக்கவுரை *- **மற்றது** - **மற்று** - முன்கூறிய என்ற பொருளில் வந்தது; **அது** - திருக்காப்பு நீக்கமாகிய நிகழ்ச்சி; சேய்மைச் சுட்டு ஆர்ப்பு எழுந்ததாகிய நிகழ்ச்சிக்குமுன் நிகழ்ந்ததனைச் சுட்டிற்று; **கண்ட** - நீக்கங் காட்டக்கண்ட.*

வாக்கின் மன்னவர் - புகலிமன்னர் *- இங்குத் திருவருள் வெளிப்பாடுகளாகிய திருக்காப்பு நீக்குதலும், பின் அடைத்தலுமாகிய செயல்கள் முறையே இருவர்பாலும் ஒப்ப நிகழ்தலின் இருவரையும் **மன்னர்** என்ற தன்மையாற் கூறினார். "வரம்பிலாப் பெருமையோரை" (2487); "ஏதங் கணம்பா ணீப்பா ரிருவரும்" (2489); "ஒக்கவரு மருட்செய்கை" (2490); இவ்விரு பெருமக்களையும் ஆளும் இறைவரையும் "**கொற்றவர்**" (கோயில்) என்று கூறும் திறமும் காண்க; பிள்ளையாரது ஆணையினையே இறைவரது ஆணையாகக் கொண்டு புகலாகப் பதிகம் பாடினமை **புகலி** என்ற குறிப்பு.*

வாக்கின் மன்னவரை நோக்கிப் போற்றிட *- மன்னவரைப் போற்றிட என்னாது நோக்கிப் போற்றிட என்றது அவர்பால் நிறைந்து வெளிப்பட்ட திருவருள் விளக்கத்தினைக் கண்டு உடன் போற்றினார் என்றதாம்.*

அவரும் போற்றி *- அரசுகளும் பிள்ளையார்பால் நின்றும் போந்த அருளாணையினைப் பற்றிப் போற்றி.*

அற்புத நிலையினார்கள் ஆகி *- என்று ஆக்கச்சொல் வருவிக்க; அற்புத நிலையினார்களாகிப் - புக்கார் என்று முடிக்க; **அற்புத நிலைமை** அருள்வெளிப் பாட்டினாலாகியது.*

நேர்வழி *- அபிமுகத்தின் நேர்உள்ள வழியாக; கோயிலை வாயிலின் நேர்வழியாற் குறுகிப் புக்கார் என்க.* *583*

2482. கோயிலுட் புகுவா ருச்சி குவித்தசெங் கைக ளோடுந்
தாயினு மினிய தங்க டம்பிரா னாரைக் கண்டார்
பாயுநீ ரருவி கண்கள் தூங்கிடப் படியின் மீது
மேயின மெய்ய ராகி விதிர்ப்புற்று விரைவில் வீழ்ந்தார். 584

2482. பொருளுரை - கோயிலுட் புகுவார் - அவ்வாறு திருக்கோயிலினுள்ளே புகுவாராகிய இருபெருமக்களும்; உச்சி கண்டார் - உச்சிமேற் கூப்பிய கைகளுடனே சென்று, தாயினும் இனியவராகிய தமது இறைவரைக் கண்டார்கள்; பாயுநீர் - வீழ்ந்தார் - கண்களினின்றும் அருவிபோலப் பாயும் நீர் வழிந்திட நிலத்தின்மேலே பொருந்திய திருமேனியுடையவர்களாகி உடல் விதிர்த்து விரைவில் விழுந்து பணிந்தனர்.

விளக்கவுரை - குறிப்பு - இத் திருப்பாட்டினாலும் மேல்வரும் பாட்டினாலும் இரு பெருமக்களும் கதவுக்காப்பு நீங்கியபின் திருக்கோயிலினுள் சென்று இறைவரை நேர்வழியே கண்டு ஆனந்த வெள்ளத்தின் மூழ்கி வழிப்பட்ட நிலையினையும் மெய்ப்பாடு களையும் கூறியவாறாம். இருவர்பாலும் நிகழ்ந்த நிலைகளைக் குறிக்க இரண்டு பாட்டுக்களாற் கூறிய அமைதியும் கண்டுகொள்க.

உட்புகுவார் - முன் பாட்டில் புக்கார் என்பது புகுதலாகிய செயல் நிகழத் தொடங்கிய நிலை மட்டில் உணர்த்திற்று. புகுவார் - அவ்வாறு புகுவாராகிய அவர்கள் என்று வினைப்பெயராக உரைக்க; புகுவார் - கண்டார் - என்று முடிக்க.

உச்சி குவித்த செங்கைகளோடும் - கண்டார் - காண்பதன் முன்னரே கைகளைச் சிரத்திற் கூப்பியவாறே சென்று கண்டனர்.

தாயினும் இனிய தங்கள் தம்பிரானாரைக் கண்டார் - "தாயினுநல்ல சங்கரனுக் கன்பர்" (குறுந்-பொது); "பெற்றிருந்த தாயவளி னல்லாய் நீயே" (தாண்-ஐயாறு-6); "தாயினு நல்ல தலைவரென் றடியார் தம்மடி போற்றிசைப் பார்கள்" (பிள் - புறநீர்மை - திருக்கோணமலை-5) என்ற இருவர் திருவாக்குக்களும் காண்க; தாயினும் இனிமை தருதலாவது தாய் ஒரு பிறவியில் இனிமை செய்வள் - இறைவர் எல்லாப் பிறவிகளிலும் பிறவிக்கு முன்னும் பின்னும் இன்பம் செய்வர்; ஒவ்வோர் பிறவியில் ஒவ்வோர் தாயாவள் - இறைவர், அவ்வாறன்றி, எல்லா பிறவிகளிலும் தாமொருவரேயாவர்; தாய் குறையறிவுடைமையின் நிலை அறிந்து ஏற்றவாறு செய்வர்; தாய் அறியாமையால் இன்பம் போன்று துன்பமும் செய்வள் - இறைவர் எஞ்ஞான்றும் இன்பமே செய்வர்; தாய் நோயும் பிறவியும் ஊட்டி யியற்றுவாள் - இறைவர் அவற்றைப் போக்கி யியற்றுவர் என்றிவ்வாறெல்லாம் வைத்துக் கண்டுகொள்க; "ஆவியி னினிய வெங்க ளத்தனார்" (818) என்ற இதனின் உயர்நிலையும் காண்க.

தங்கள் தம்பிரான் - இருவர்க்கும் பிரானாதலின் தங்கள் என்றார்.

அருவி - அருவிபோல; தூங்கிட - இடையறாது வழிய.

2483. **அன்பினுக் களவு காணா; ரானந்த வெள்ள மூழ்கி,**
யென்புநெக் குருக நோக்கி, யிறைஞ்சிநேர் விழுந்து நம்பர்
முன்புநிற் பதுவு மாற்றார்; மொழிதடு மாற வேத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார். **585**

படியின்மீது மேயின மெய்யராகி.. வீழ்ந்தார் - படி - நிலம்; மேயின - என்ற இறந்தகாலம் விரைவுக் குறிப்புடன் நின்றது; வீழ்ந்தபின் படியில்மீது மெய்மேவுதல் நிகழ்வதாம்; அதனை முன்பின்னாக உரைத்தது விரைவுபற்றி; அவ்வாறுரைத்தாரேனும் **வீழ்ந்து மேயின - மெய்யர்** என்பது கருத்தாகக் கொள்க.

படியின்மீது மேயின மெய்யர் ஆகி - மெய் - உண்மை - சத்தாந்தன்மை; என்று கொண்டு, உலகில் இறைவரது மெய்ம்மை விளங்கவந்து நிலைபெற்றாராகி என்ற குறிப்பும் கொள்ளத்தக்கது.

வீழ்ந்தார் - தம்மிச்சையானன்றி அடியற்ற மரம்போல வீழும் நிலை. 584

2483. பொருளுரை.. அன்பினுக்கு அளவு காணார் - அன்பு செல்லும் எல்லையின் அளவு காணாதவர்களாகி; ஆனந்த.... விழுந்து - ஆனந்தமாகிய வெள்ளத்துள் முழுகி எலும்பும் நெக்குருக நோக்கி மீண்டும் எழுவதும் திருமுன்பு விழுவதுமாகிப் பின்; நம்பர்.. ஆற்றார் - இறைவரது திருமுன்பு நிற்பதும்கூட இயலாதவர்களாகி; மொழி.... ஏத்தி - மொழிகள் தடுமாறும் நிலையில் துதிசெய்து; மின்புரை.... போந்தார் - மின்னலை ஒத்துவிளங்கும் சடையினையுடைய இறைவரைத் திருப்பதிகங்களால் துதித்துப் புறம்பு போந்தருளினர்.

விளக்கவுரை.. **அன்பினுக்கு அளவு** - இறைவரிடத்துத் தமது அன்புசெல்லும் எல்லை; **காணார்** - வினைப்பெயராகக் கொண்டு காணாதவர்களாகிய அவர்கள் என்றுரைப்பாருமுண்டு.

நோக்கி இறைஞ்சி நேர்விழுந்து - "வீழ்ந்தார்" என முன்பாட்டிற் கூறிய நிலையினின்றும் எழுந்தமை கூறாது மேலும் இறைஞ்சி - விழுந்து என்றார்; விரைவில் வீழ்ந்த நிலையினின்றும் அன்பு அளவுகாணாது பெருகியதனால் மேலும் மேலும் வீழ்ந்து வீழ்ந்து வணங்க நினைந்து விரைவில் எழுந்துவிட்டார்களாதலின் அதனைக் கூறாது இறைஞ்சி வீழ்ந்ததுமட்டும் கூறினார்; மீண்டும் மீண்டும் விழுந்த நிலைகளே காணப்பட்டனவன்றி அதிவிரைவினால் எழுந்த நிலைகள் காணப்படவில்லை என்றது குறிப்பு. "பேறெய்தும், மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்" (1432) என்ற கருத்துக் காண்க.

நம்பர்முன்பு நிற்பதுவும் ஆற்றார் - அன்பு கரைகடந்து செல்லுநிலையினால் திருமுன்பு நேர்நிற்பதுவும் ஆற்றமாட்டாதவர்களாகி; இது உலகநிலை அனுபவங்களினுங் காணவுள்ளது.

2484. புறம்புவந் தணைந்த போது புகலிகா வலரை நோக்கி
"நிறங்கிளர் மணிக்க பாட நீக்கமு மடைப்பு நிற்கத்
திறந்தவா றடைக்கப் பாடி யருளுநீ" ரென்றார் தீய
மறம்புரி யமணர் செய்த வஞ்சனை கடக்க வல்லார். 586

மொழி தடுமாறுதல் - அன்புமிகுதியின் மெய்ப்பாடுகளுள் ஒன்று.

ஏத்தி- பதிகங்கள் விளம்பி - ஏத்துதல் பலவகையாலும் கீத முதலியவற்றாற் புகழ்களை எடுத்துப் பாவுதல்; பதிகங்கள் விளம்புதல் திருப்பதிகங்களை அமைத்துப் பாடுதல்; ஏத்தி - விளம்பி என்று கூட்டி. ஏத்தி என்பது பதிகப் பகுதிகளின் கருத்தாகக் கொள்ளலுமாம்.

பதிகங்கள் விளம்பி - இருவரும் அருளிய இப்பதிகங்கள் கிடைத்தில!

போந்தார் - கோயிலினின்றும் அவ்வாயில் வழியே புறம்பு திருமுற்றத்தில் போந்தருளினர் (இருவரும்). 585

2484. பொருளுரை- புறம்பு... நோக்கி - திருவாயிலின் புறத்தில் வந்து சேர்ந்தபோது சீகாழித் தலைவராகிய பிள்ளையாரை நோக்கி; தீய மறம்புரி... வல்லார் - பொல்லாத மறச்செயல்களைச் செய்யும் அமணர்கள் செய்த வஞ்சனைகளையெல்லாம் கடக்கவல்லவராகிய அரசுகள்; நிறங்கிளர்.... அருளும் நீர் என்றார் - பல நிறங்களையுமுடைய மணிகளணிந்த கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய செயல்கள் என்றும் வழங்கும் பொருட்டுத் திறந்தவாறே நீர் அடைக்கும்படி பாடியருளும் என்று சொல்லியருளினார்.

விளக்கவுரை- புறம்பு - திருவாயிலின் புறம்பு திருமுற்றத்தின்கண்; ஏழனுருபு விரிக்க.

நிறங்கிளர் மணிக் கபாடம் - நிறம் - பல நிறங்கள்; மணி - பல மணிகள்; அழகு என்றும், அசைதலான் ஓசைசெய்யும் சிறு மணிகள் என்றும் உரைப்பினுமமையும்; கபாடம் - கதவு.

நீக்கமும் அடைப்பும் நிற்க - முன் அடைத்தது அடைத்தபடி நின்றதுபோல் இப்போது திறந்தது திறந்தவாறே நின்றுவிடாமல், திறத்தலும் அடைத்தலுமாக என்றும் நிகழ்ந்துவரும்பொருட்டு; நிற்கப் - பாடியருளும் - என்க. நிற்றல் - வழங்குதல்.

திறந்தவாறு - இறைவரைப் பாடி அவரருளால் திறப்பித்தபடியே.

தீய மறம் - கொடிய கொலை முதலிய பாவச் செயல்கள். மறம் - அறத்துக்கு மாறானது; பாவம் பயக்கும் செயல்; நூல்களால் விலக்கப்பட்டவை; புரிதல் - இடைவிடாது சிந்தித்தல்; செய்த வஞ்சனை, வஞ்சகச் செயல்கள். அரசுகளது புராணம் பார்க்க. கடத்தலாவது - வென்று மீளுதல். சரிதம் பார்க்க. வல்லார் - வலிமையின் அருமை தோன்ற நின்றது.

புகலிகாவலரை நோக்கி அடைக்கப் பாடி அருளும் என்றார் - வல்லார் - தாமே அடைக்கவும் [illegible] வல்லமையுடையராயினும் புகலிகாவலரை நோக்கிக்
[illegible] யருளும் வல்லமை

**2483. அன்பினுக் களவு காணா; ரானந்த வெள்ள மூழ்கி,
யென்புநெக் குருக நோக்கி, யிறைஞ்சிநேர் விழுந்து நம்பர்
முன்புநிற் பதுவு மாற்றார்; மொழிதடு மாற வேத்தி
மின்புரை சடையார் தம்மைப் பதிகங்கள் விளம்பிப் போந்தார். 585**

__படியின்மீது மேயின மெய்யராகி__ *__வீழ்ந்தார்__* *- படி - நிலம்;* *__மேயின__* *- என்ற இறந்தகாலம் விரைவுக் குறிப்புடன் நின்றது; வீழ்ந்தபின் படியில்மீது மெய்மேவுதல் நிகழ்வதாம்; அதனை முன்பின்னாக உரைத்தது விரைவுபற்றி; அவ்வாறுரைத்தாரேனும்* *__வீழ்ந்து மேயின__* *- மெய்யர் என்பது கருத்தாகக் கொள்க.*

__படியின்மீது மேயின மெய்யர் ஆகி__ *- மெய் - உண்மை - சத்தாந்தன்மை; என்று கொண்டு, உலகில் இறைவரது மெய்ம்மை விளங்கவந்து நிலைபெற்றாராகி என்ற குறிப்பும் கொள்ளத்தக்கது.*

__வீழ்ந்தார்__ *- தம்மிச்சையானன்றி அடியற்ற மரம்போல வீழும் நிலை. 584*

2483. *__பொருளுரை__*_ *அன்பினுக்கு அளவு காணார் - அன்பு செல்லும் எல்லையின் அளவு காணாதவர்களாகி; ஆனந்த.... விழுந்து - ஆனந்தமாகிய வெள்ளத்துள் முழுகி எலும்பும் நெக்குருக நோக்கி மீண்டும் எழுவதும் திருமுன்பு விழுவதுமாகிப் பின்; நம்பர்_ ஆற்றார் - இறைவரது திருமுன்பு நிற்பதும்கூட இயலாதவர்களாகி; மொழி.... ஏத்தி - மொழிகள் தடுமாறும் நிலையில் துதிசெய்து; மின்புரை.... போந்தார் - மின்னலை ஒத்துவிளங்கும் சடையினையுடைய இறைவரைத் திருப்பதிகங்களால் துதித்துப் புறம்பு போந்தருளினர்.*

*__விளக்கவுரை__*_ *__அன்பினுக்கு அளவு__* *- இறைவரிடத்துத் தமது அன்புசெல்லும் எல்லை;* *__காணார்__* *- வினைப்பெயராகக் கொண்டு காணாதவர்களாகிய அவர்கள் என்றுரைப்பாருமுண்டு.*

__நோக்கி இறைஞ்சி நேர்விழுந்து__ *- "வீழ்ந்தார்" என முன்பாட்டிற் கூறிய நிலையினின்றும் எழுந்தமை கூறாது மேலும் இறைஞ்சி - விழுந்து என்றார்; விரைவில் வீழ்ந்த நிலையினின்றும் அன்பு அளவுகாணாது பெருகியதனால் மேலும் மேலும் வீழ்ந்து வீழ்ந்து வணங்க நினைந்து விரைவில் எழுந்துவிட்டார்களாதலின் அதனைக் கூறாது இறைஞ்சி வீழ்ந்ததுமட்டும் கூறினார்; மீண்டும் மீண்டும் விழுந்த நிலைகளே காணப்பட்டனவன்றி அதிவிரைவினால் எழுந்த நிலைகள் காணப்படவில்லை என்றது குறிப்பு. "பேறெய்தும், மெய்யுந் தரைமிசை விழுமுன் பெழுதரும்" (1432) என்ற கருத்துக் காண்க.*

__நம்பர்முன்பு நிற்பதுவும் ஆற்றார்__ *- அன்பு கரைகடந்து செல்லுநிலையினால் திருமுன்பு நேர்நிற்பதுவும் ஆற்றமாட்டாதவர்களாகி; இது உலகநிலை அனுபவங்களினுங் காணவுள்ளது.*

2484. புறம்புவந் தணைந்த போது புகலிகா வலரை நோக்கி
"நிறங்கிளர் மணிக்க பாட நீக்கமு மடைப்பு நிற்கத்
திறந்தவா றடைக்கப் பாடி யருளுநீ" ரென்றார் தீய
மறம்புரி யமணர் செய்த வஞ்சனை கடக்க வல்லார். 586

மொழி தடுமாறுதல் - அன்பு மிகுதியின் மெய்ப்பாடுகளுள் ஒன்று.

ஏத்தி - பதிகங்கள் விளம்பி - **ஏத்துதல்** பலவகையாலும் கீத முதலியவற்றாற் புகழ்களை எடுத்துப் பரவுதல்; **பதிகங்கள் விளம்புதல்** திருப்பதிகங்களை அமைத்துப் பாடுதல்; ஏத்தி - விளம்பி என்று கூட்டி **ஏத்தி** என்பது பதிகப் பகுதிகளின் கருத்தாகக் கொள்ளலுமாம்.

பதிகங்கள் விளம்பி - இருவரும் அருளிய இப்பதிகங்கள் கிடைத்தில!

போந்தார் - கோயிலினின்றும் அவ்வாயில் வழியே புறம்பு திருமுற்றத்தில் போந்தருளினர் (இருவரும்). 585

2484. பொருளுரை- புறம்பு... நோக்கி - திருவாயிலின் புறத்தில் வந்து சேர்ந்தபோது சீகாழித் தலைவராகிய பிள்ளையாரை நோக்கி; தீய மறம்புரி... வல்லார் - பொல்லாத மறச்செயல்களைச் செய்யும் அமணர்கள் செய்த வஞ்சனைகளையெல்லாம் கடக்கவல்லவ ராகிய அரசுகள்; நிறங்கிளர்.... அருளும் நீர் என்றார் - பல நிறங்களையுமுடைய மணிகளணிந்த கதவு திறத்தலும் அடைத்தலுமாகிய செயல்கள் என்றும் வழங்கும் பொருட்டுத் திறந்தவாறே நீர் அடைக்கும்படி பாடியருளும் என்று சொல்லியருளினார்.

விளக்கவுரை- **புறம்பு** - திருவாயிலின் புறம்பு திருமுற்றத்தின்கண்; ஏழனுருபு விரிக்க.

நிறங்கிளர் மணிக் கபாடம் - **நிறம்** - பல நிறங்கள்; **மணி** - பல மணிகள்; அழகு என்றும், அசைதலான் ஓசைசெய்யும் சிறு மணிகள் என்றும் உரைப்பினுமமையும்; **கபாடம்** - கதவு.

நீக்கமும் அடைப்பும் நிற்க - முன் அடைத்தது அடைத்தபடி நின்றதுபோல் இப்போது திறந்தது திறந்தவாறே நின்றுவிடாமல், திறத்தலும் அடைத்தலுமாக என்றும் நிகழ்ந்துவரும்பொருட்டு; **நிற்கப் - பாடியருளும்** - என்க. **நிற்றல்** - வழங்குதல்.

திறந்தவாறு - இறைவரைப் பாடி அவரருளால் திறப்பித்தபடியே.

தீய மறம் - கொடிய கொலை முதலிய பாவச் செயல்கள். **மறம்** - அறத்துக்கு மாறானது; பாவம் பயக்கும் செயல்; நூல்களால் விலக்கப்பட்டவை; **புரிதல்** - இடைவிடாது சிந்தித்தல்; **செய்த வஞ்சனை**, வஞ்சகச் செயல்கள். அரசுகளது புராணம் பார்க்க. **கடத்தலாவது** - வென்று மீளுதல். சரிதம் பார்க்க. **வல்லார்** - வலிமையின் அருமை தோன்ற நின்றது.

புகலிகாவலரை நோக்கி அடைக்கப் பாடி அருளும் என்றார் - வல்லார் - தாமே அடைக்கவும் பாடியருளும் வல்லமையுடையராயினும் புகலிகாவலரை நோக்கித்

2485. அன்றர சருளிச் செய்ய **வருமறைப் பிள்ளை** யாரும்
வென்றிவெள் விடையார் தம்மை விருப்பினாற் **"சதுர"**மென்னும்
இன்றமிழ்ப் பதிகப் பாட லிசைத்திட, விரண்டு பாலும்
நின்றவக் கதவு காப்பு நிரம்பிட **வடைத்த** தன்றே. 587

---

*கூறியதென்னையோ? எனின் "திருக்காப்பு நீங்குமாறு - தமிழ் பாடியருளும்" (2479) என அவர் அருளியபோது அதனையே உடன்பட்டு "நீர்அருளிச் செய்தீ ராகில் இது செய்வேன்" (2479) என்று அரசுகள் அம்மட்டில் செய்தருளி அமைதலே முறையாதலின், மேற் செய்ய வேண்டியதனை அவர்பால் வேண்டினார் என்க. அன்றியும் முன் அடைத்ததாகிய செயலை இறைவனருளிய வேதங்கள் செய்தனவாதலின் அவ்வேதங்களின் உள்ளுறையா சிவஞானத்தை நேரே அந்த இறைவன்பாலமுதுண்டவ ராதலின் "வேதங்கள் மிடைந்து செய்த அந்தப் பணியை" (2489) பிள்ளையார் செய்தலே தகுதி என்று கொண்ட குறிப்புமாம்; மேல் "**அருமறைப்பிள்ளையாரும்**" (2485) என்ற குறிப்பும் காண்க. மேலும் பதிகப்பாட்டான பத்தும் பாடனிரம்பிய பின்னும் கதவம் திறந்துகாட்டாதாகத் திருக்கடைக் காப்பில் சிந்தை நொந்து வருந்தி "எண்ணீர் இரக்கமொன்றிலீர்" என்று கடிந்தார்போல வேண்டிப்பெற்ற அருமை நினைந்து, பின்னும் அவ்வாறு நிகழாதவாறு திருவுளங் கொண்ட குறிப்புமாம். பிற் சரித விளைவும் கருதுக. 1540, 1545 பாட்டுக்கள் பார்க்க. பின்னர்க் கதவம் திருக்காப்புக்கொண்ட எளிமையும் கருதுக.*

நீங்கவு மடைப்பும் - *என்பதும் பாடம்.* *586*

2485. பொருளுரை. *அன்று அரசு அருளிச்செய்ய - அன்று அவ்வாறு அரசுகள் அருளிச் செய்ய; அருமறை... இசைத்திட - அருமறை வல்ல பிள்ளையாரும் வெற்றி பொருந்திய வெள்ளை விடையினையுடைய இறைவரை வேண்டிய விருப்பத்துடனே "சதுரம் மறை" என்று தொடங்கும் இனிய தமிழ்ப் பதிகத்தின் முதற் பாட்டினை அருளிச் செய்தவுடனே; இரண்டு.... அன்றே - இரண்டு பாலுமாகத் திறந்துநின்ற அக்கதவு காப்பு நிரம்ப அடைத்தது; அப்பொழுதே.*

விளக்கவுரை. அருமறைப் பிள்ளையார் *- முன் அருச்சித்து அடைத்த செயலை நிகழ்த்திய அந்த அரிய மறைவல்ல பிள்ளையார் என்றது குறிப்பு. அம்மறை வல்லாராதலின் அவை செய்த செயலை எளிதின் இயற்றவல்லார் என்க. பின்னிகழ்ச்சியும் காண்க.*

விடையார் தம்மை *- "மறைக்காட் டுறைமைந்தா கதவந் திருக்காப்புக்கொளும் கருத்தாலே" என்று இறைவரை வேண்டியவாறு குறித்தது; "மறைக்காடரோ. கதவினைத் திறந்தருள் செய்மினே" என்று அரசுகள் இறைவரை வேண்டியவாறே, பிள்ளையாரும் விடையாரை வேண்டியிசைத்தனர். "திறந்தவா றடைக்கப் பாடியருளும்" என்று அரசுகள் அருளியதும் காண்க.*

சதுரம் என்னும் *- "சதுரம் மறைதான்" என்று தொடங்கும்.*

பதிகப்பாடல் இசைத்திட - பதிகத்திலுள் சதுரம் என்னும் முதற்பாட்டு ஒன்றினைச் சொல்லியருள: "கடுத்துமே நின்பொற் கதவந் திருக்காப்புச்செய்த தெடுத்த திருப்பாட்டில்" (1537) என முன்னரே உரைத்தமையின் என்னும் பதிகப்பாடல் ஈண்டு இசைத்திட அமைந்தது என்றமையும் கூறியமைந்தருளினர்.

இரண்டு பாலும் நின்ற அக்கதவு - இரு பகுதியாய் நின்ற: திறத்தல் - அடைத்தல் என்ற இரு செயலும் இவ்விருவர்பாலுமாக நிகழநின்ற என்ற முறையின் குறிப்புமாம்.

காப்பு நிரம்பிட - அடைப்பின் காவல் நிரம்ப - பொருந்த.

அன்றே - அன்றே - அப்போதே. 587

I திருமறைக்காடு

திருச்சிற்றம்பலம் பண் - இந்தளம் - 2-ம் திருமுறை

சதுரம்மறை தான்றுதி செய்து வணங்கும்
மதுரம்பொழில் சூழ்மறைக் காட்டுறை மைந்தா!
இதுநன்கிறை வைத்தருள் செய்க வெனக்குன்
கதவந்திருக் காப்புக் கொளுங்கருத் தாலே. (1)

பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்றி
மலரால்வழி பாடுசெய் மாமறைக் காடா
வுலகேழுடை யாய்கடை தோறுமுன் னென்கொல்
தலைசேர்பலி கொண்டதி லுண்டது தானே. (6)

காழிந்நக ரான்கலை ஞானசம் பந்தன்
வாழிம்மறைக் காடனை வாய்ந்தறி வித்த
ஏழின்னிசை மாலையீ ரைந்திவை வல்லார்
வாழியுல கோர்தொழ வானடை வாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- சதுரம்மறை துதிசெய்து வணங்கும் மறைக்காடா! உன் கதவந் திருக்காப்புக்கொள்ளுங் கருத்தாலே எனக்கு இது நன்கு இறைவைத்தருள் செய்க என்றது.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) சதுரம்மறை - நான்கு வேதங்கள்; வணங்கும் - வேதங்கள் இங்கு வணங்கி வழிபட்ட வரலாறு; 6-10வது பாட்டுக்களும் பார்க்க; இது நன்கு எனக்கு இறை வைத்தருள் என்க. கதவந் திருக்காப்புக் கொள்ளுங் கருத்தாலே செய்த இது - இவ்விண்ணப்பம் என்க. இறை நன்குவைத்து - நன்மையாக முடித்து. இறை - விரைவாக; இப்பாட்டில் பிள்ளையார் விண்ணப்பிக்க உடனே கதவம் திருக்காப்பிட்டருளப்பட்டது. ஆதலின் இவ்விண்ணப்பம் பற்றிய குறிப்பு மேற்பாட்டுக்களில் இல்லை; இவ்வாறன்றி அரசுகளது பதிகத்துள் இறுதிவரை கதவம்

2486. அடைத்திடக் கண்டு சண்பை யாண்டகை யாரு மஞ்சொற்
றொடைத்தமி ழாளி யாருந் தொழுதெழத், தொண்ட ரார்த்தார்;
புடைப்பொழிந் திழிந்த தெங்கும் பூமழை; புகலி வேந்தர்
நடைத்தமிழ்ப் பதிக மாலை நிரம்பிட நவின்று போற்ற, 588

திறப்பிக்கும் விண்ணப்பம் நிகழ்வதும், திருக்கதவம் பதினொராவது திருப்பாட்டு வரை திறந்து காட்டாது அதன் முடிவில் காட்டிற்று என்ற சரித வரலாற்றுக்கு அகச்சான்றாக விளங்குவதும் உய்த்துணர்ந்துகொள்க; (2) **சங்கம்** *-* **தரளம்** *-* **கரைக்கெற்றும் வங்கக் கடல்** *- இன்றும் இத்தலத்துக் கடற்கரையருகு முத்துக் குளிக்கும் இடமாதலும், இது கப்பல்கள் வந்துபோம் துறையாதலும் காண்க; 4-வது பாட்டும் பார்க்க;* **வங்கம்** *- கப்பல்; (3)* **குரவம்** *- குரா;* **குருக்கத்தி** *- ஒருவகைப் பூ மரம்;* **சிரம்** *- நகு சிரம்; (4)* **படர்** *- கொடி போலப் படர்கின்ற; பவளக்கொடி என்பது காண்க;* **மலர்** *- இப்பி வாய்திறந்து ஈனும்; (5)* **ஏனோர்** *- நலமுடையோர் - சிறந்தோர்; "ஏனோர்க்கு மினிதாக மொழியுமெழில் இளங்குயிலே" (பிள்-பழந்தக்கராகம் - தோணிபுரம் - 8) "வானோர்க்கு மேனோர்க்கும் பெருமானை" (அரசு - காந்தாரம் - கச்சியேகம்பம் - 2); சிறப்பில்லாதார் என்றலுமாம்; (6)* **உடையாய்** *- உடையவனாகியும்; (7)* **வேலாவலயம்** *- கடல்; நிலத்தை வளைத்த வேலிபோன்றது என்பது சொற்பொருள்; (7)* **காலார்** *-* **கால்** *- காற்று; தென்றல் என்ற பொருளில் வந்தது.* **காலார்** *- தென்றலைத் தேராகக் கொண்டு செலுத்தும்;* **ஆர்தல்** *- பொருந்துதல். "தென்றனெடுந் தேரோனைப் பொன்றக் கொண்டார்" (தனித்தாண் - 11); (8)* **கலம்** *- மரக்கலம்;* **கலங்கொள் கடல்** *- கப்பல்கள் வந்துபோகுமிடமாகிய கடற்றுறை; (9)* **வானம் தலம் மண்டியும்** *- வானத்திலும் நிலத்திலும் முயன்றும்;* **மண்டுதல்** *- மிக முயலுதல்; (10)* **ஓமம்** *- வேள்வி;* **ஆதர்** *- கீழ்கள்.*

தலவிசேடம்:- **திருமறைக்காடு** *- தொகுதி* **III** *பக்கம் 648 பார்க்க. வேதங்கள் பூசித்தமையால் இப்பெயர் பெற்றமையும், வேதம் பூசித்துக் கதவு காப்பிட்டமையும், அரசுகள் திறக்கப் பாடியமையும் முதலிய சரித வரலாறுகள் அவ்வவர் தேவாரங்களின் அகச்சான்றுகளால் விளங்க உள்ளன; "கண்ணி னாலுமைக் காணக் கதவினைத், திண்ண மாகத் திறந்தருள் செய்ம்மினே" (குறுந்) "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" (தாண்); "கதவந் திருக்காப்புக் கொளுங்கருத்தாலே" (பிள் - இந்-1); "மறைதான் துதிசெய்து வணங்கும்" (மேற்படி 4) "பல காலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்ற" "வேதம்பல வோமம் வியந்தடி போற்ற" (மேற்படி 10). சுவாமி பெயர் -* **மறைக்காட்டுமணாளர்** *என்பது பிள்ளையார் தேவாரத்தின் 2, 4 பாட்டுக்களில்* **மறைக்காட்டுறை மைந்தா** *என வருவது காண்க.*

2486. **பொருளுரை**... *அடைத்திட.... தொழுதெழ - இவ்வாறு அடைத்திடக் கண்டு சீகாழிப் பெருந்தகையாரும் அழகிய சொற்றொடைத் தமிழை ஆளுகின்றவராகிய அரசுகளும் தொழுதெழுந்து நிற்க; தொண்டரார்த்தார் - அடியார்கள் ஆரவாரித்தனர்; புடை.... பூமழை - பக்கங்களில் எங்கும் கற்பகப் பூமழை சொரிந்து பொழிந்தது; புகலி... போற்ற - சீகாழித் தலைவராகிய பிள்ளையாரும் நன்னடை யுணர்த்தும் தமது தமிழ்த்*

2487. அத்திரு வாயி லன்னி லன்றுநா டொடங்கி நேரே
மெய்த்திரு மறைகள் போல மேதினி புக்குப் போற்ற
வைத்தெதிர் வழக்கஞ் செய்த வரம்பிலாப் பெருமை யோரைக்
கைத்தலங் குவித்துத் தாழ்ந்து வாழ்ந்தது கடல்சூழ் வையம். 589

திருப்பதிகமாலையினை மேல் பத்துப் பாட்டுக்களும் நிறைவுறும்படி அருளித் துதித்து முடிக்க.

விளக்கவுரை- அடைத்திடக் கண்டு- தொழுதெழ - எடுத்த திருப்பாட்டிற் கதவு இரண்டுபாலு நிரம்பி முன்கூறியபடி அடைத்தனைக் கண்டு இருபெருமக்களும் வணங்கின நிலை.

அஞ்சொல் தொடைத்தமிழ் ஆளியார் - ஆளியார் - ஆளுகின்றவர்;

தொண்டர் ஆர்த்தார் - அதுகண்டு தொண்டர்கள் அரகர முழக்கம் செய்தநிலை.

புடை எங்கும் பூமழை பொழிந்து இழிந்தது என்க; புடை - பக்கங்கள்; பூ - கற்பகம் - மந்தாரம் முதலிய தெய்வத்தரு மலர்கள். அதுகண்டு விண்ணோர் வணங்கி யார்த்த நிலை.

புகலிவேந்தர்... போற்ற - நடை - உலகுக்கு நன்னடையினைக் காட்டியருளும்; "அறிவித்த" (11) என்பது பதிகம். நயமுடைய என்பாருமுண்டு; பதிகமாலை நிரம்பிட - பதிகமாகிய மாலை - பத்துப் பாட்டுக் கொண்டதாதலின், முதற் பாட்டிலே கதவு அடைத்திட்ட பின்பு, ஏனைப் பாட்டுக்களையும் பாடியருளித் திருக்கடைக்காப்பும் சாத்திப் பிள்ளையார் பதிகத்தை நிறைவாக்கினர் என்க. பதிகம் என்றும், மாலை என்றும் கூறிய குறிப்புமிது; நிரம்பிட - நியதிப்படி நிறைவாக.

போற்ற - துதிக்க; போற்ற, வையம் வாழ்ந்தது என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க. போற்ற என்ற வினையெச்சம் பிறவினை வினைமுதல்கொண்டு முடிந்தது; போற்ற - இது பிள்ளையாரது நிலை; போற்றி என்று பாடம் கொண்டு, போற்றி நவின்று நிரம்பிட என்று கூட்டி உரைத்தனர் முன் உரைக்காரர்.

புடைத்திடப் பொழிந்த - என்பதும் பாடம். 588

2487. பொருளுரை- அத்திரு... தொடங்கி - அன்று தொடங்கி அந்தத் திருவாயிலின் வழியாக; நேரே.... போற்றவைத்து - நேரே சென்று மெய்வடிவாகிய திருமறைகளைப் போலவே உலகவர்களும் புகுந்து துதிக்கும்படி கூட்டிவைத்து; எதிர் வழக்கம் செய்த... வையம் - வருங்காலத்தும் இவ்வாறு வழங்கும்படி செய்தருளிய எல்லையில்லாத பெருமையுடைய அவ்விரு பெருமக்களையும் கைகள் கூப்பி வணங்கிக் கடல்சூழ்ந்த உலகம் வாழ்வடைந்தது.

இந்த இரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

2488. அருமறை யான வெல்லா மகலிரு விசும்பி லார்த்துப்
பெருமையின் முழங்கப், பஞ்ச நாதமும் பிறங்கி யோங்க,
இருபெருந் தகையோர் தாமு மெதிரெதி ரிறைஞ்சிப் போந்து
திருமடங் களின்முன் புக்கார் செழுநகர் விழவு கொள்ள. 590

விளக்கவுரை- மெய்த்திருமறைகள் - வேதங்கள்; மெய் - சத்து - உண்மை வடிவாகிய; அழியாத; மறைகள் நேரே புக்குப் போற்றியதுபோல; வினைபற்றி வந்த வுவமம்; **நேரே** - நேர்வாயில்வழியாக.

போற்றவைத்தலாவது - போற்றும்படி நியமித்து வைத்தல்.

எதிர் வழக்கம் - எதிர்காலத்தும் இவ்வாறே வழங்கும் ஒழுக்கம்.

வரம்பிலாப் பெருமையோரை - பிள்ளையாரையும் அரசுகளையும்; இறைவரருளிய மறைகளோடொத்த திருவாக்கினையுடைமை வரம்பிலாப் பெருமை எனப்பட்டது.

தாழ்ந்து வாழ்ந்தது - வையம் - தாழ்ந்ததனால் வாழ்வடைந்தது. இறைவரை நேர்திருவாயிலிற் கண்டு வாழ்வினையடைந்த வையம், அவ்வாழ்வு தந்த பெருமையோரைத் தாழ்ந்து பின்னும் பெருவாழ்வடைந்தது; **வையம்** - வையத்துள்ள உயிர்கள்; இது உலகர்நிலை கூறியது.

மேதினி - மேதினியிலுள்ளோர்; **மேதினி** என்றும், **வையம்** என்றும் உலகின் மேல் வைத்துக்கூறியது மக்களேயன்றி ஏனை எல்லா உயிர்களையும் உள் அடக்குதற்கென்க. இத்தலத்தில், திருவிளக்குநெய்யினை உண்டதோர் எலி மாவலியாகப் பிறந்த சரிதம் பதிகத்துக் காணப்படுவதும் பிறவும் நினைவு கூர்க. 589

.2488. பொருளுரை... அருமறை...முழங்க - அரிய வேதங்களும் அவற்றின் வழியவாயின அங்கமுதலாயினவும் ஆகிய எல்லாம் இடம் அகன்ற பெரிய ஆகாயத்தில் ஆரவாரித்துப் பெருமையோடு முழங்க; **பஞ்சநாதமும் பிறங்கி ஓங்க** - ஐந்து துந்துபிகள் என்னும் தேவவாத்தியங்களும் விளக்கமாக மிகவும் சத்திக்க; **இருபெரும்.... போந்து** - பெருந்தகையார்களாகிய அவ்விரண்டு பெரியோர்களும் எதிரெதிர் வணங்கிச் சென்று; **செழுநகர் விழவுகொள்ள** - செழிய அத்திருநகர் முழுதும் பெருவிழா எடுக்க; **திருமடங்களின்முன் புக்கார்** - தத்தமக்கமைந்த திருமடங்களிலே முன் புகுந்தருளினர்.

விளக்கவுரை... அருமறை ஆன எல்லாம் - அருமறைகளும் அவற்றின் வழிவாயின ஆறு அங்க நூல்களும் பிறவும் ஆகிய எல்லாம். வைதிக நூல்களெல்லாம்.

மறைகள் - விசும்பில் - முழங்க - ஓதுவாரின்றியும் மறைகள் நாதவுருவின வாதலின் சிவனருள் வெளிப்பாடானபொழுது எல்லாம் தாமே முழங்குவன.

அகல் இரு விசும்பில் - நாதம் முழங்குதற்கிடமாகிய பெருவிசும்பு - ஆகாயம்; "ஓவா, வேதமொழி யாலொலி விளங்கியெழு மெங்கும்" (1929).

2489. வேதங்க ளெண்ணில் கோடி மிடைந்துசெய் பணியை மிக்க
ஏதங்க ணம்பா னீப்பா ரிருவருஞ் செய்து வைத்தார்;
நாதங்கொள் வடிவாய் நின்ற நதிபொதி சடையார் செய்ய
பாதங்கள் போற்று மேலோர் பெருமையார் பகரு நீரார்? 591

பஞ்சநாதம் - ஐவகைத் தேவ துந்துபி முழக்கு: அருள்விளக்க நிகழ்ச்சிகளில் இவை முழங்குவன என்பது "கடவுண்மால் வரையி னுச்சி யதிர்தரு மோசை யைந்து மார்கலி முழக்கங் காட்ட" (750) என்பது முதலியவற்றாலறிக.

*பெருந்தகை யிருவர்தாமும் என்க: உயிர்களை யுய்விக்கும் செயலேயன்றித் தமக்கென வேறு செயலில்லாதவர்களாதலின் **பெருந்தகை** என்றார்; "பெருந்தகையைப் பெறற்கரிய மாணிக்கத்தை" (தேவா-தாண்); "தாயு மாயெனக் கேதலை கண்ணு மாய்ப், பேய னேனையு மாண்ட பெருந்தகை" (தேவா-குறுந்); முன் "வரம்பிலாப் பெருமை யோரை" (2487) என்றது மிக்கருத்துக் குறிக்கும்.*

எதிரெதிரிறைஞ்சி - ஒருவரை ஒருவர் வணங்குதலும், இருவரும் மாறிமாறி இறைவரை வணங்குதலுமாம்.

செழுநகர் விழவுகொள்ளத் திருமடங்களிற் புக்கார் - நகரவர்கள் விழவுகொண்டாடி எந்தம் பெருமக்களை நகர்வலஞ் செய்விக்க அவர்களுடன் திருமடங்களிற் புகுந்தனர். **திருமடங்கள்** - இருவருக்கும் அமைத்த வெவ்வேறு திருமடங்கள்.

செழும்பதி - என்பதும் பாடம். *590*

2489. பொருளுரை— மிக்க... இருவரும் - நம்பால் வரும் மிக்க குறைபாடுகளை எல்லாம் போக்குபவர்களாகிய இவ்விரு பெருமக்களும்; வேதங்கள்... பணியை - எண்ணில்லாத கோடி வேதங்கள் ஒன்றுகூடி நெருங்கிச்செய்த பணியை; நம்பால் மிக்க ஏதங்கள் நீப்பார் - உயிர்களாகிய நம்மிடத்துவரும் மிக்க குறைபாடுகளையெல்லாம் நீக்குபவர்களாகி; இருவரும் செய்துவைத்தார் - அரசுகளும் பிள்ளையாரும் என்ற பெருந்தகையாரிருவரும் செய்துவைத்தார்கள்; நாதங்கொள்- நீரார் - தாம் மேற்கொள்ளும் திருமேனி நாதமேயாகக் கொண்ட, கங்கையை உள்ளே தாங்கிய சடையினை உடைய, இறைவரது திருவடிகளைப் போற்றும் இப்பெரியவர்களுடைய பெருமையை யாவர் அளவுபடுத்திச் சொல்லவல்லவர்கள்? (ஒருவருமிலர்).

விளக்கவுரை— இப்பாட்டுக் கவிக்கூற்று.

எண்ணில் கோடி வேதங்கள் என்க; "வேதங்கள் அனந்தம்" (அநந்தாவை வேதா;) என்பர்; கிளை சிறு கிளைகள் இலை தளிர் என்றிவ்வாறு எண்ணில்லாதனவாக உள்ள வேதம் என்பதோர் மரம் - "வேதமென்னும் பாதபம்" என்பர். எண்ணில்லாது விரியினும் நுதலிய பொருளும் பயனும் ஒன்றே என்பார் **மிடைந்து செய்பணி** என்று குறிப்பித்தார்.

வேதங்கள் மிடைந்து செய்பணி - என்றது பூசித்துக் கதவம் திருக்காப்பிட்டு வைத்த செயல்; புறக்கண்ணுக்குத் தோன்றாது அகத்துள்ளே பொதிந்துவைத்தல்.

நம்பால் மிக்க ஏதங்கள் நீப்பார் - ஏதங்களானவை இறைவரை அகத்தும் புறத்தும் நேரே கண்டு வழிபாடியற்றுதற்கு வரும் முட்டுப்பாடுகள்; **நம்பால்** - நம்மிடத்து வரக்கடவனவாகிய; **நம்** - உயிர் வருக்கங்களை ஆசிரியர் உளப்படுத்திக் கூறியது. **நீப்பார்** - நீப்பாராகி - முற்றெச்சம்; **நீப்பார்** - **செய்துவைத்தார்** என்று முடிக்க.

கொள் வடிவு நாதமாய் நின்ற சடையார் - என்க. **கொள்ளுதல்** - மேற்கொண்டு வெளிப்படுதல்; **வடிவு** - திருமேனி; **நாதம்** - சூக்குமை, பைசந்தி, மத்திமை, வைகரி என்னும் நான்கு வாக்குக்கட்கும் காரணமான அதிசூக்குமை வாக்கு என்னும் பிரதான நாதம்; இறைவர் நாதம் விந்துவடிவாய் வந்து உபகரிக்கும் இயல்பெல்லாம் சிவஞானசித்தியார் (முதற் சூத்திரம் 39-43) முதலிய ஞானசாத்திரங்களுட் கண்டு கொள்க; "சூக்கும வாக்கத் துள்ளோர் சோதியா யழிவ தின்றி, யாக்கிடு மதிகா ரத்திற் கழிவினை தன்னைக் கண்டால், நீக்கமி லறிவா னந்த முதன்மைநித் தியமு டைத்தாய்ப், போக்கொடு வரவி ளைப்பும் விகாரமும் புருட னின்றாம்" (சித்தி - 43) என்பது முதலியவை கருதுக.

நாதங்கொள் வடிவாய் நின்ற - சடையார் - பாதங்கள் போற்றும் மேலோர் - இறைவரைப் போற்று மேலோர் இறைவரது தன்மை பெறுவர்; தமது கரணங்கள் சிவகரணங்களேயாகப் பெறுவர்; அவர்களை இடமாகக்கொண்டு இறைவர் தாம் செய்யும் தன்மைகளை அவர்கள் செய்யும்படி ஆக்கியிடுவர்; இவை ஞான நூல்களின் முடிபுகளாதலின் அவரைப் போற்று மேலோரும் நாதவடிவாகிய இறைவர் தோற்று வித்த நாதவடிவான மறைகளே தம்பால் தோன்றநிற்பர்; ஆதலின் அம்மறைகளின் செயலையே தமது திருவாக்குக்களாலும் செய்யவல்லர். இக்குறிப்பெல்லாம் தோன்ற இங்கு இறைவரை **நாதங்கொள் வடிவாய் நின்ற** என்றும், மேலோரை அத்தகைய **பாதங்கள் போற்று**பவர் என்றும் இத்தன்மைகளாற் கூறினார். இக்குறிப்புக்களை மேல்வரும் பாட்டில் விரித்தல் காண்க.

மேலோர்-மேம்பாடாவது இறைவரைத் தம்மகத்துக் கொண்டுவிடாது வைத்தல்; இங்கு இருவரையும் குறித்தது.

பகரும் நீரார் யார்? என்க. வினா ஒருவருமிலர் என்று இன்மை குறித்தது.

பகரற்பாலார்-என்பதும் பாடம். 591

2490. **பொருளுரை...திருமறை...தொண்டர்** - திருமறைகளின் இறைவர் முன்பு அருளிச்செய்த அவ்வேதத் தொகுதியினையே சொல்லும் ஒன்றித்த உணர்வோடு நின்ற தொண்டர்கள்; **தம்பிரானார்பால்...என்றால்** - தமது பெருமானிடத்துவரும் அருட்செய்கைபோலத் தாமே செய்யவல்லோர்களாவார் என்றால்; **பெருமறையுடன்...பெரிதாமன்றே** - பெரிய மறைகளுடனே மெய்த்தொண்டர்களுக்கு உள்ள ஒற்றுமை மிகவும் பெரிதேயாகுமன்றோ?

2490. திருமறை நம்பர் தாமுன் பருள்செய்த வதனைச் செப்பும்
ஒருமையி னின்ற தொண்டர் தம்பிரா னார்பா லொக்க
வருமருட் செய்கை தாமே வகுத்திட வல்லோ ரென்றாற்
பெருமறை யுடன்மெய்த் தொண்டர்க் கிடையீடு பெரிதா மன்றே. 592

விளக்கவுரை இது மறைகள் செய்த பணியை ஆளுடையபிள்ளையார் தமது வாக்கினாலே எளிதிற்செய்தருளித் திருக்கதவினை முதற்றிருப்பாட்டிலே அடைப்பித்த எளிமையையும், தாம் அரிதின் முயன்று பதிக நிரம்பியும் இரக்கமிலீர் என்று இறைவரைக் கடிந்துகொண்ட பின் திறக்க நேர்ந்தமையினையும் அரசுகள் எண்ணி நினைந்தருளியது. "இவ்வகை...உன்னி" என்று மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க. இதன் விரிவு 1540ல் காண்க.

திருமறை நம்பர்தாம் - மறைகளாற் பேசப்பட்ட சிவபெருமான்; **தாம்** - அசை.

அதனைச் செப்பும் ஒருமையில்நின்ற தொண்டர் - **அதனை** - அதனையே - அதன்; பொருளையே; பிரிநிலை ஏகாரம் தொக்கது; ஒருமையில் நிற்றலாவது - ஒன்று பட்ட அறிவுடன் நிற்றல்; ஒருமை - அவனோடு அறிவினில் அத்துவிதமாகக் கலத்தல்; இவ்வாறு ஒருமைத் தொண்டர் என்று அரசுகள் எண்ணியது ஆளுடைய பிள்ளையாரையும், அவரது சிவனோடொன்றிய திறத்தினையும் ஆம்; "எனதுரை தனதுரையாக" (இலம்பையங் கோட்டூர் - பிள்ளையார் தேவா - குறிஞ்சி) என்றதும், "எல்லையிலா மறைமுதன்மெய் யுடனெடுத்த வெழுதுமறை" (1973)என்றதும் முதலிய திரு வாக்குக்களின் கருத்துக்கள் கருதுக.

தம்பிரானார்...வல்லோர்-தம்பிரானார்பால் வரும் அருட்செய்கை ஒக்கத் தாமே வகுத்திட என்க; தம்பிரானாரது திருவாக்காகிய மறைகள் செய்யும் பணிபோலத் தாமே தமது திருவாக்கினாற் செய்யும் வல்லமையுடையார் என்றது கருத்து; அருட் செய்கை - அருள்வாக்கின் செய்கை; ஈண்டு இறைவரைப் பூசித்துத் தமக்குட் பொதிந்து அகப்படுத்துமாறு அடைத்துவைத்தல்; கதவம் அடைத்துவைத்தல் குறித்தது. **வல்லோர்** - வல்லமையாவது இறைவரருளிய அளவிறந்த வேதங்கள் ஒன்று கூடி முயன்று கதவம் அடைப்பித்த செயலைத் தமது ஒரு திருப்பாசுரத்தால் எளிதில் நிகழ்வித்த ஆற்றல்.

என்றால் - என்ற உண்மை தெரிந்தோமானால்.

பெருமறையுடன் மெய்த்தொண்டர்க்கு இடையீடு - **இடையீடு** - ஒற்றுமை; ஒட்டுதல்; அணியதாதல்; இடை - அணியதொன்று; "நண்ணியிடை யொன்றின் மறைந்தோ யல்லை" (11 - திருமுறை - கோயினான் - 32); வேற்றுமை என்று கொண்டு ஏனைய என்போன்ற மெய்த்தொண்டர்க்குப் பெருமறையுடன் வேற்றுமை பெரிதாம் என்றுரைப்பாருமுண்டு.

மெய்த்தொண்டர்க் கிடையீடு பெரிதாம் என்றமையால் மெய்த்தொண்டரல்லாத என்போல்வார்க்கு வேற்றுமை பெரிது என்பது தானேபோதரும். முன்னர் (1540) விரித்தமை இங்குக் குறிப்பிற் பெறவைத்தார்.

அன்றே - அசை. 592

**2491. இவ்வகை திரும றைக்காட் டிறையவ ரருளை யுன்னி
மெய்வகை தெரிந்த வாக்கின் வேந்தர்தாந் துயிலும் போதில்,
மைவளர் கண்டர் சைவ வேடத்தால் வந்து "வாய்மூர்
அவ்விடை யிருத்து; மங்கே வா"வென வருளிப் போக,** 593

2491. பொருளுரை–இவ்வகை..போதில் - இவ்வகையாக எண்ணமிட்டுத் திரு மறைக்காட்டின் இறைவரது திருவருளின் தன்மையினை நினைந்துகொண்டு மெய்த் திறம் தெரிந்து ஒழுகும் திருநாவுக்கரசர் துயிலும்போதில்; மைவளர்..வந்து - திரு நீலகண்டராகிய சிவபெருமான் சைவத் திருவேடத்தால் எழுந்தருளி அவருக்குக் காட்சியளித்து; "வாய்மூர்...போக - திருவாய்மூரில் நாம் இருப்போம் அங்கே தொடர வா" என்று அருளிச்செய்து முன்னே போகவே,

*விளக்கவுரை....**இவ்வகை..உன்னி** - **இவ்வகை** - முன் பாட்டிற் கூறியவாறு; மறைகளுக்கும் அவற்றையே செப்பும் ஒருமைத் தொண்டர்க்கும் ஒற்றுமை பெரிது; மறைகளின் செயலை அவர் திருவாக்கு எளிதில் நிகழ்த்தும்; என்போன்ற ஏனையோர்க்கும் மறைகளின் அருட்செயலுக்கும் வேற்றுமை பெரிது; இது நம்பர் திருவுள்ளம் என்பதனை அறிந்திலேனாய் மறைகளின் தொடர்புடைய இச்செயலுள் துணிந்ததுமன்றி இறைவரது கருணைத் திறத்தினையும் கடிந்து சொல்லினேன் என்றிவ்வாறெல்லாம் எண்ணி யெண்ணிக்கொண்ட உணர்வுடனே; இவை முன்பாட்டிற் குறிப்பினும், முன்னர் 1540ல் விரித்தும் உரைத்தவாறுணர்க.*

***அருளை உன்னி** - திருஅருளின் நியதியினையும், பெருமையினையும் நினைந்து; "பாதம் மனத்தின்கண் உன்னி" (1541).*

***மெய்வகை தெரிந்த** - திறக்கத் தாம் பாடிய அருமையினையும் அடைக்க அவர் பாடிய எளிமையினையும் கருதி அவரை நோக்கத், தமது குறைவோ அவரது நிறைவோ என்று இவ்வாறு உலகர் கொள்ளத்தக்க வேற்றுமை உணர்வொன்றும் கொள்ளாது இஃது இறைவரது திருவருள் செல்லும் உண்மைத்திறமே என்று தெளிந்த; "வாய்மை திறம்பா வாகீசர்" (1540).*

***சைவ வேடத்தால் வந்து** - கனவிலே தோன்றக் காட்சி கொடுத்து என்க;*

***வந்து - உன்னித் துயிலும்போதில்** என்றமையால் வாகீசர் இங்கு அறிதுயில் கொண்டருளினர் என்க. விழிப்பு நிலையினின்று கனா நிலையினுட் செல்லும்போது; வந்து - காட்சியருளியதும் அவ்வாறே அவ்விரண்டனுக்கும் இடைப்பட்ட அறிவில் கொள்ளும்படி தோன்றி என்க; கண்மூடிய நிலையினும் கண்ணைத் திறந்த நிலையினும் அவ்வாறே காணும்படி வந்து என்றபடி; இவ்வாறாதலின், பின்னர்த் துயிலுணர்ந்து என்னாது கண்ட அப்போதே கைகள் குவித்துடன் கடிது செல்வார் என்று நனவு நிலையின் செயல் தொடர்ந்து செல்லுதலையே மேற்பாட்டில் கூறியருளுகின்றாராசிரியர்.*

***சைவவேடத்தால் வந்து** - "பொன்னின் மேனி வெண்ணீறு பொலிந்த கோலப் பொலிவி னொடும் துன்னி" (1541); இறைவர் இங்கே காட்டியது தாமாந்தன்மை*

2492. கண்டவப் போதே கைகள் குவித்துடன் கடிது செல்வார்
மண்டிய காத லோடு மருவுவார் போன்றுங் காணார்
எண்டிசை நோக்கு வாருக் கெய்துவார் போல வெய்தா
அண்டர்தம் பிரானார் தம்பின் போயினா ரார்வத் தோடும். 594

யறியவைக்காது சைவத் திருவேடத்திற் காணவைத்ததாம்; நேயமலிந்தவர் வேடமும்-அரனெனத் தொழுமே" (12 - சூ - போதம்) என்ற நியதி ஒழுக்கத்தானும், "வாய்மூரி லிருத்தும் அங்கேவா" என்று இட்ட கட்டளையானும் அத்திருவேடத்துள் மறைந்துவந்தவர் இறைவரே என்று துணிந்தனர் அரசுகள். அற்றாகலினன்றே அப்போதே கைகள் குவித்துடன் கடிதுசெல்வாராயினர் (2492). "தன்னை வாய் மூர்த் தலைவனா மாசொலி, யங்கே வாவென்று போனாரா தென்கொலோ?" என்றது முதலிய தேவாரமும் காண்க. ஆயின், "அது, என்கொலோ?" என்ற தென்னையோ எனின், அது அக்கட்டளையின் திருவுள்ளக் கருத்தை யறியும் வினா என்க; தாமாந் தன்மை யறியும்படி பின்னர்க் கண்டு காட்டும்போது விடை நிகழ்வதாம் என்க. 2494ம் 1546ம் பார்க்க.

வாய்மூர் அவ்விடையிருத்தும் - வாய்மூராகிய அவ்விடத்தில்; வாய்மூரிலும் அவ்விடையிலும் என்ற குறிப்புமாம்; வாய்மூரின் அருகில் "பொன்னின் கோயிலொன்றெதிரே காட்டி யதனுட் புக்கருள" (1544) என்ற சரிதநிகழ்வு காண்க.

வாவென்றங்கருளிப்போக - என்பதும் பாடம். 593

2492. பொருளுரை-கண்ட....செல்வார் - அவ்வாறு கண்ட அப்பொழுதே எழுந்து கைகளைக் கூப்பிக்கொண்டு விரைந்து உடன்செல்வாராகிய அரசுகள்; மண்டிய...நோக்குவாருக்கு - நிரம்பிய காதலுடனே பொருந்துவார்போன்றிருந்தும் காணாராகி எண்டிசையிலும் தேடிப் பார்க்குமவருக்கு; எய்துவார்....ஆர்வத்தோடும் - கிடைப்பார்போன்றிருந்து கிடையாதவராய் நின்ற தேவதேவராகிய பெருமானுடைய பின்பு மிக்கெழும் அன்புடனே போயினார்.

இந்து மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை-கண்ட அப்போதே கைகள் குவித்து உடன் கடிது செல்வார் - உன்னித் துயின்ற அறிதுயில் நிலையிற் கண்டாராதலின் துயிலுணர்ந்து நனவு நிலை யடைந்தமை கூறிற்றிலர்; கண்ட - அவ்வாறே நனவிலும் கண்ட; கண்ட அப்போதே கடிது சென்றாராதலின் எழுந்துசென்றதனையும் கூறிற்றிலர்; விரைவு பற்றி இவை யாவும் உடனிகழ்ச்சிகளாக ஒருங்கு நிகழ்ந்தன என்பார், கடிது - உடன் - என்றார்.

செல்வார் - வினைப்பெயர்; செல்வாராகிய அரசுகள். **செல்வார் - காணார் - போயினார்** என்று முடிக்க. காணார் - காணாராதலின்; முற்றெச்சம் ஏதுப்பொருளி னின்றது.

மண்டியகாதலோடு மருவுவார் போன்றும், எய்துவார்போல எய்தா - பிரானார் என்று கூட்டுக.

2493. அங்கவ ரேகச் சண்பை யாண்டகை யாரு "மப்பர்
எங்குற்றா" ரென்று கேட்ப, "வெய்தினார் திருவாய் மூரிற்
பொங்கிய காத லா"லென் றுரைத்திடப் போன தன்மை
சங்கையுற் "றென்கொ" லென்று தாமுமங் கணையப் போந்தார். 595

எண்திசை நோக்குவாருக்கு - காதலோடும் மருவுவார்போன்று காணப்படினும் காணக்கிடையாதாராகிப் போயினமையால் எல்லாத் திசைகளிலும் காணநோக்குவா ராயினார் அரசுகள்; அவ்வாறு நோக்கும் அவருக்கு; நோக்குதல் - ஊன்றிக் காணுதல். நோக்குவாருக்கு - எய்தாரென்க; எய்துதல் அணிமையிற் சாரக் கிடைத்தல்; எய்துவார்போல - அணியராவார்போல இருந்தும்.

பிரானார் தம்பின்போயினார் - பின் - பின்தொடர்ந்து; மருவுவார் போன்றிருந்த போது கண்டநிலையை எண்ணிக்கொண்டு காணாதபோதும் பின்சென்றார்; எய்துவார் போன்ற நிலையினைத் தொடர்ந்து எய்தாதபோது பின்சென்றார்; காரணம் ஆர்வம் என்க.

மண்டிய காதலோடு மருவுவார் போன்றும் - உம்மை சிறப்பு; "கழிபெருங் காதல் காட்டி" (418). 594

2493. பொருளுரை—அங்கு அவர் ஏக..கேட்ப - அவர் அவ்விடத்துக்குச் செல்லவே, சீகாழி ஆண்டகையாராகிய பிள்ளையாரும், "அப்பர் எங்கு உற்றனர்?" என்று கேட்க; எய்தினார்...உரைத்திட - அறிந்தோர்கள் மேன்மேற் பொங்கிய அன்பு மேலீட்டினாலே திருவாய்மூரின்கண்ணே சென்றனர் என்று செல்ல; போன தன்மை...என்று - அப்பர் அவ்வாறு போயின தன்மைதான் என்ன காரணமோ என்று ஐயப்பட்டுக் கருதி; தாமும்..போந்தார் - அங்குத் தாமும் சென்று அணைவதற்காகப் போந்தருளினர்.

விளக்கவுரை—அங்கு - திருவாய்மூருக்கு.

ஆண்டகையார் - தலைமகனார்; அப்பர்பால்வைத்த ஆர்வத்தின் உறைப்பும், திருவருட்குறிப்பினைத் திருவுள்ளக் குறிப்பிற் புலப்படக்காணும் அருள்வலிமையும் ஈண்டு **ஆண்டகைமை** எனப்பட்டது.

கேட்ப-அணுக்கராகி அவர் திருமடத்தின்கண் உழையிருந்த அறிவுடையடியார் பால் கேட்ட என்க; அடியார்பால் என்பது அவாய்நிலையான் வந்தது.

"எய்தினார்..காதலால்" என்று உரைத்திட - இறைவனார் அப்பருக்குத் துயிலில் உணர்த்தியபடி அப்பர் திருவாய்மூருக்குச் சென்றருளிய செய்தி அப்பரும் ஆண்டவருமே யறிந்ததொரு நிகழ்ச்சியாக, அடியார் அறிந்துரைத்ததெவ்வாறோ? எனின்; "போத நிகழ வாவென்று போனா ரென்கொ லெனப்பாடி, யீதெம் பெருமா னருளாகி லியானும் போவே னென்றெழுந்து" (1542) என்று முன்னர் விரித்தருளியவாறு, அரசுகள் கனவுணர்ந்தெழுந்து "திருவாய்மூர்ச் செல்வனா ரங்கே வாவென்று போனார தென்கொலோ?' (1), "வேண்டிக்கொண்டேன் றிருவாய்மூர் விளக்கினைத் தூண்டிக்

2494. அந்நிலை யணைந்த போதி லம்பிகை யுடனே கூட
மன்னிய வாடல் காட்டத் "தளிரிள வள" ரும் பாடிச்,
சென்னியால் வணங்கி வாய்மூ ரரசொடுஞ் சென்று புக்கங்
கின்னியல் புறமுன் கூடி யிருவரும் போற்றி செய்தார். **596**

கொள்வனா னென்றலுந் தோன்றுமே" (10) என்று திருப்பதிகம் பாடிக் காதன்மிகுதியுடன் திருமடத்தினின்றும் போந்தருளினாராதலின் அது கண்டுங் கேட்டும் உடனிருந்த அடியார்கள் இதனை அறியலாயினர் என்க.

போன தன்மை என்கொல் என்று சங்கையுற்று என்க; **என்கொல்** - என்ன காரணம்?; இறைவர் திருவாய்மூருக்கு வாவென்று அடையாளமருளி அழைக்க அரசுகள் சென்றருளினார் என்று அத்திருப்பதிகத்தினா லறிந்துரைத்தாராயினும், அவ்வாறு இறைவர் அருளவுள்ள காரணமும், அதற்கு முன்னிகழ்ச்சிகளாய் அரசுகளது திருவுள்ளத்தெழுந்த கருத்துக்களும் (1540) அறிந்துரைக்க வாராமையின், பிள்ளையார் அவற்றையே என்கொல் என்று சங்கையுற்றருளினர் என்க. **போனதென்** என்னாது **தன்மை என்** - என்ற கருத்துமிது. **என்று** - என்று உட்கொண்டு.

அங்கு அணைய - அத்திருவாய்மூரில் அரசுகள் சென்றருளிய அவ்விடையிற் சென்று சேர.

எங்குற்றதென்று - என்பதும் பாடம். 595

2494. **பொருளுரை**-அந்நிலை-பாடி - அவ்வாறு சென்று அரசுகள் எழுந்தருளிய இடத்தினை அணைந்தபோது (இறைவனார்) அம்மையுடனேகூடப் பொருந்திய திருக்கூத்தினைக் காட்டியருளவே, அதுகண்டு அரசுகளும் காணக் காட்டித் "தளிரிளவளர்" என்று தொடங்கும் திருப்பதிகத்தைப் பாடியருளி; சென்னியால் வணங்கி - முடிசாய்த்து இறைஞ்சி; வாய்மூர்-போற்றி செய்தார் - அரசுகளோடும் திருவாய் மூரின்கண்ணே சென்று புகுந்து அங்குத் திருத்தொண்டின் இனிய இயல்பு பொருந்த முன்னேகூடி இரு பெருமக்களும் இறைவரைத் துதித்தருளினர்.

விளக்கவுரை-**அந்நிலை** - அங்கு அணைய (2493) என்றபடி அரசுகள் போயின அந்த இடம்; நிலை - நின்ற இடம். எய்துவார்போல எய்தாது சென்ற அவ்வளவும் அரசுகள் நெடிது தொடர்ந்துசெல்ல, "அணித்தே காட்சிகொடுப்பார்போற், பொன்னின் கோயி லொன்றெதிரே காட்டி யதனுட் புக்கருள," அரசுகளும் அங்கு விரைந்து தொடரநின்ற அந் நிலை; இவையெல்லாம் குறிப்பார் அவ்விடை என்னாது அந் நிலை என்றார். 1543 பார்க்க. இது **அற்புதப் பொற்கோயில்** என்று வழங்குகின்றது.

அம்பிகையுடனேகூட மன்னிய ஆடல்காட்ட - "திருவாய் மூருக்கு வா" என்று அழைத்துக்கொண்டு போந்து அற்புதப் பொற்கோயிலினுள் புகுந்து இறைவர் மறைந்தபோது, ஆளுடையபிள்ளையார் அங்கு வந்தணையக்கண்டு, அரசுகள், "பிழைத்துச் செவ்வி யறியாதே திறப்பித் தேனுக் கேயல்லால், உழைத்தா மொளித்தாற் கதவந்தொண்

டுறைக்கப் பாடி யடைப்பித்த, தழைத்த மொழியா ருப்பாலார் தாமிங் கெப்பால் **மறைவ"** தென (1545) விண்ணப்பிக்க, இறைவர் பிள்ளையாருக்கு நேரே காட்சிகொடுத்தருள, அவர் ஆடல்கண்டு பணிந்தேத்தி அரசுங் காணக்காட்ட, அவருங் கண்டு இவ்வாறு இருவரும் கண்டு வணங்கினர் என்ற அளவுள்ள வரலாறுகள் யாவும் இங்கு உய்த்துணர்ந்துகொள்ளவைத்தார், அவை முன் அரசுகள் புராணத்தினுள் 1544 - 1545 - 1546 பாட்டுக்களால் விரித்துக் கூறியமையின்.

தளிரிள வளரும் பாடி - "தளிரிளவளர்" என்பது பதிகத் தொடக்கம். அத்தொடக்கமுடைய பதிகத்தினைப் பாடி.

வாய்மூர் அரசொடும் சென்று - அற்புதப் பொற்கோயிலிற் காட்சிகண்ட நிலையினின்றும் திருவாய்மூருக்குப் பிள்ளையார் அரசுகளுடன் கூடிச் சென்று என்க; அந்நிலைவரை அரசுகள் தனித்து முன்னரும், பிள்ளையார் தனித்துச் சங்கித்துப் பின்னையுமாக வந்தருளினர்; இப்போது பிள்ளையார் அரசுகளுடன் கூடிச் சென்றருளினர் என்பதாம்.

அங்கு இன் இயல்பு உற முன்கூடி இருவரும்போற்றி செய்தார் - இதன்முன் இறைவரது செவ்வி யறியாது அரசுகள் தாம் வலிந்து பாடியதன்பொருட்டுத் தம்மைத் திருவருளுக்கு இயலாக வைத்தும், பிள்ளையாரை அவ்வாறன்றித் திருவருளுக்கு அணியராக வைத்தும் கருதியநிலை நீங்கி, இருவரும் திருவருளின் உண்மைத் திறத்தின் இனிய இயல்பு வெளிப்பட ஒன்றுகூடித் துதித்தனர் என்பதாம். முன்னர்த் திருமடத்தில் அரசுகள் தனிமையிற் பாடியருளியமையும், அற்புதப் பொற்கோயிலிற் றனித்தனி கண்டு பாடியருளியமையும்போலன்றி, ஈண்டு இருவரும் ஒன்றுபோலக் கூடிப் போற்றியருளினர் என்க. இதுபற்றி முன் 1547ல் உரைத்தவையும் பார்க்க.

அம்பிகையுடனேகூட மன்னிய ஆடல் - இது ஐம்பெருங் கூத்தின் மறைத்தலி (திரோபவம்)ன் பின்வருவதாகிய அருளல் என்னும் ஆடலன்றி, ஞானிகளுக்கு எஞ்ஞான்றும் அழுந்தியறிதலின்கண் வெளிப்படும் நித்தியமாகிய ஆடலாம்; "நின்றயங்கி யாடலே நினைப்பதே நியமமே" (பிள் - தேவா - ஆலவாய் - 6). *596*

திருவாய்மூர்

திருச்சிற்றம்பலம் **பண் - நட்டராகம் - 2-ம் திருமுறை**

தளிரிள வளரென வுமைபாடத் தாளம் மிடவோர் கழல்வீசிக்
கிளரிள மணியர வரையார்த் தாடும் வேடக் கிறிமையார்
விளரிள முலையவர்க் கருணல்கி வெண்ணீ றணிந்தோர் சென்னியின்மேல்
வளரிள மதியமொ டிவராணீர் வாய்மூ ரடிகள் வருவாரே. (1)

திங்களொ டருவரைப் பொழிற்சோலைத் தேனலங் கானலந் திருவாய்மூர்
அங்கமொ டருமறை யொலிபாட லழனிற வண்ணர்த மடிபரவி
நங்கடம் வினைகெட மொழியவல்ல ஞானசம் பந்தன் றமிழ்மாலை
தங்கிய மனத்தினாற் றொழுதெழுவார் தமர்நெறி யுலகுக்கோர் தவநெறியே. (11)

திருச்சிற்றம்பலம்.

2495. நீடுசீர்த் திருவாய் மூரில் நிலவிய சிவனார் தம்மைப்
பாடுசொற் பதிகந் தன்னாற் பரவியப் பதியில் வைகிக்
கூடுமெய் யன்பு பொங்க விருவருங் கூடி மீண்டு
தேடுமா மறைகள் கண்டா ரார் திருமறைக் காடு சேர்ந்தார். 597

பதிகக் குறிப்பு:- உமைபாடத் தாளம்இடக் கழல்வீசி யாடும் வேடக் கிறிமை யார் என்றிவ்வாறெல்லாந் தாம் இறைவர் தமக்குக் காட்டக் கண்ட அருளாடற் காட்சியை எடுத்துச்சொல்லி இவ்வாறு வாய்மூரடிகள் வருவாரே! இவர் காணீர் என்று பிள்ளையார் அரசுகளும் காணக் காட்டியது இப்பதிகமும். அரசுகளது இப்பதிப் பதிகங்களும் அற்புதப் பொற்கோயிலின் நிகழ்ச்சிகள் கண்டபோது திருவாய்மூருக்கு வரும்வழியில் அவ்விடையில் அருளப்பட்டன.

*பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **தளிரிள வளர்என** - வளரும் இளந்தளிர் போன்ற மேனியினையுடைய: பாடவும் இடவும் என்க: **மணிகிளர் இளவரவு** என்க; **இளஅரவு** - "முற்றலாமை யிளநாகம்" (தேவா); **கிறிமை** - மாயம்; "கிறிப்பானை" (தாண்டகம் - கீழ்வேளூர்); **விளர்** - விளர்த்த - பயலைகொண்ட; **இவராணீர்** - இவர்காணீர் என்பது ஏதோ காரணத்தால் சுகரம் தவறியிருத்தல் வேண்டுமென்று தோன்றுகிறது. (**இவர் ஆள் நீர்** - இவர் ஆளும் நீர்மையுடையவர் என்று கொள்ளலாம் என்பது திருவ.சு.செ. அவர்கள் குறிப்பு). ஆகலின் இது பிள்ளையார் தாம் கண்ட காட்சியை அரசும் காணக்காட்டிப் பாடியருளியது என்றார்;- (2)கோவண உடை - கோவண மாகிய உடை; கோவணமேல் - உடைமேல் என்க. கடை - முன்வாயில்; முன் கடை; **சிந்தனை புகுந்தெனக் கருணல்கி** - அரசுகளுக்குத் துயிலிடை இறைவர் சைவ வேடங் காட்டி வாய்மூர்க்கு வா வா என்று அழைத்துச்சென்ற நிலைகளை எல்லாம் குறிப்பில் உண்ணின்று உணர்த்தியதும், அவ்விரவில் தாமும் எழுந்து வினவிப் பின்றொடர்ந்துசெல்ல அருளியதும் முதலிய அருட்குறிப்புக்கள்;-(3) **உள்ளமுருகி லுடனாவர்** - உருகி நினைவார்க்கு உடனிருந்தருளும் இறைமைப் பண்பு;-(4) **வாய்மை** - சத்தாம் தன்மை - சரிதை;- (5) **மிடறுஅகம் அணிகொள** என்க; **வஞ்சனை** - மாயம்; "**கிறிமை**" (1);-(6) **அல்லிய** - அகவிதழ்களையுடைய; **வல்லியம்** - புலி;- (8) **வட்டணை யாடல்** - கூத்துவகை;-(9) **கனவிற் றுயர்செய்து** - சரிதக்குறிப்பும்படநின்றது;- (10) **நூலவை பசைந்து** - பூணூலும் பிணைந்து;-(11) **நங்கடம் வினைகெட** - பாடல் பயிலும் ஏனையோர்மேல் வைத்துக் கூறியபடி; **தொழுதெழுவார் தமர்நெறி** - தொழும் அடியவர்களது திருத்தொண்டினெறி; **தமர்** - அடியார்க்கடியவர்.*

குறிப்பு:-அரசுகளது பதிகங்களின் குறிப்பு அவர்தம் புராணத்துட் காண்க.

தலவிசேடம்:- திருவாய்மூர் - III - பக்கம் - 628 பார்க்க.

2495. பொருளுரை...நீடுசீர்...பரவி - நீடும் சிறப்பினையுயை திருவாய்மூரில் நிலைபெற்றெழுந்தருளிய சிவபெருமானைப் பாடும் சொற்பதிகத்தினால் பரவுதல்செய்து; அப்பதியில் வைகி - அந்தத் திருப்பதியினில் தங்கி; கூடுமெய்..சேர்ந்தார் - பொருந்திய

மெய்யன்பு மேன்மேலும் அதிகரிக்க இருபெருமக்களும் கூடி எழுந்தருளியிருந்து பின்னர் அங்குநின்றும் மீண்டருளித், தேடும் பெரிய மறைகளாற் பூசித்துக் காணப் பெற்ற இறைவரது திருமறைக்காட்டினிற் சேர்ந்தருளினார்கள்.

விளக்கவுரை. **பாடு சொற்பதிகம் தன்னால் பரவி** - இப்பதிகம் கிடைத்திலது!; முன் அற்புதப் பொற்கோயிலின்கண் ஆடல் கண்டபோது பாடிய "தளிரிளவளர்" என்ற பதிகம் அங்கு அருளப்பட்டது; "பாடு சொற்பதிகம் தன்னாற் பரவி" என்றமையால் அத்திருப்பதிகத்தினையே கொண்டு "மீண்டும் இப்பதியிற் பரவினார்" என்ற குறிப்பில் உரைத்தலுமாம்; இவ்வழக்கும் உண்டென்பதனை ஆளுடைய பிள்ளையார் திருவாலவாயில் அனல்வாதத்தில் திருப்பதிகத் திருமுறையைக் கையினானிமிர்த்துக் கண்ட திருநள்ளாற்றுப் பதிகத்தினை எடுத்துப் போற்றிய வரலாறும், திருமறைக்காட்டில் ஆளுடையநம்பிகளுடன் கூடிச்சென்று வழிப்பட்ட கழறிற்றறிவார் நாயனார் தமது அந்தாதியில் சிறப்பித்தனவற்றையே ஓதியருளிய வரலாறும் விளக்குவன. "அருட்சேரர் சிறந்து வந்தா தியிற்சிறப்பித் தனவே யோதித் திளைத் தெழுந்தார்" (கழறிற் - புரா - 87.)

அப்பதியில் வைகி - அப்பதியில் சில நாள்கள் தங்கியருளினர் என்பதுபற்றி "நயந்தந் நகரிலுட னுறைந்தார்" (1547) என முன்னர் உரைத்ததுங் காண்க.

கூடு மெய்அன்பு பொங்க இருவரும் கூடி - திருமறைக்காட்டின் நிகழ்ச்சி பற்றித் திருஅருளின்வழியே நள்ளிரவில் அரசுகள் பிள்ளையாரைப் பிரிந்து ஒன்றரைக் காத வழியும் போந்து சென்றமையும், அவரைத் தொடர்ந்து அப்போதே போந்து பிள்ளையார் சென்று கூடியமையும், இருவர்பாலும் இறைவர் அருளியமையும் ஆகிய இவற்றால் கூடிய உண்மை யன்பின்திறம் மேலும் மேலும் பொங்க இருவரும் **உடனாகக் கூடி** என்க. "நாடுங் காதல் வளர்ந்தோங்க நயந்தந் நகரிலுட னுறைந்தார்" (1547); **கூடும்** - திருவருளின் வழியே சென்று கூடும் கலப்பு.

மீண்டு - திருவாய்மூரினின்றும் திருமறைக்காடு நோக்கி மீண்டு.

தேடு மா மறைகள் கண்டார் - முன்னர்த் தேடிய மறைகள் ஈண்டுக் கண்டு பூசித்துத் தம்மகத்தே பொதிந்து காப்புக்கொண்டு வைத்த இறைவர்; மறைகள் கண்டார்-மறைகளாற் காணப்பட்டார் எனச் செய்யப்பாட்டுவினைப் பொருளில் வந்தது. திருவாய்மூர் நிகழ்ச்சி இவ்விரு பெருமக்களிடையே விளங்கும் திருவருட் பெருமையினை இனிது விளக்கும் தன்மை உணத்துணர்ந்துகொள்ளற் பாலது; திருவீழியிலும் திருமறைக்காட்டிலும் நிகழ்ந்தவை ஈண்டு உடன்கருதற்பாலன. 597

2496. பொருளுரை. **சண்பைநாடு...வைகி** - சீகாழித் தலைவராகிய பிள்ளையார் தமிழ் மொழித் தலைவராகிய அரசுகளுடனே கூடி உலகிற் பயின்ற பெருஞ் சிறப்புடைய செல்வநிறைந்த திருமறைக்காட்டில் எழுந்தருளியிருந்து; **கண்பயில் நெற்றியார்...போற்றி**- நெற்றிக்கண்ணேயுடைய இறைவரது திருவடியிணைகளைப் பணிந்து வழி பட்டு; **பண்பயில்...அன்றே** - பண் பயிலும் திருப்பதிகங்களைப் பாடிப் பரவிக் கொண்டே அங்கு அப்போது எழுந்தருளியிருந்தனர்

2496. சண்பைநா டுடைய பிள்ளை **தமிழ்மொழித் தலைவ ரோடு**
மண்பயில் சீர்த்திச் செல்வ மாமறைக் காட்டு வைகிக்
கண்பயி னெற்றி யார்தங் கழலிணை பணிந்து போற்றிப்
பண்பயில் பதிகம் பாடிப் பரவியங் கிருந்தா ரன்றே. **598**

விளக்கவுரை *சண்பைநாடு உடைய - சீகாழித் தலைமையுடைய;* ***நாடுடைமை*** *- தலைவராந் தன்மை; நாடுடைமை என்ற வழக்கும் காண்க; "நாடுடை நாயகர் கோயில்" (2799).*

தமிழ்மொழித் தலைவர் *- இருவரும் ஒக்கத் தலைவராந்தன்மையுடையார் என்பது குறிக்கத் தலைவர் என்றார்;* ***மொழித் தலைவர்*** *- நாவுக்கரசு என்ற கருத்து; பிள்ளையாரைச் சண்பை நாடுடைய என்ற ஆசிரியர், அரசுகளைத் தமிழ்மொழித் தலைவர் என்றார், அரசுகள் ஒரு நாட்டைப்பற்றியே நிலையினன்றித் துறவுநிலையினின்றமையும், இறைவரால் நாவரசர் என்ற பெயர் பெற்றமையும் குறிக்க.*

மண்பயில் செல்வம். சீர்த்திச் செல்வம் *என்று தனித்தனி கூட்டுக;* ***மண் பயில் செல்வமாவது*** *முத்து முதலிய கடல்படு பொருள்களான் வருவது; "திரை தவழ் முத்தம்" என்பது முதலாக வரும் பதிகமும், 1529ம் பார்க்க;* ***சீர்த்திச் செல்வமாவது*** *சைவமெய்த்திரு; சிவச்சார்பால் வருவது.* ***சீர்த்தி*** *- மிகுபுகழ்; "வசையறு மலர்மக ணிலவிய மறைவனம்" (தேவா).*

பண்பயில் பதிகம் பாடி *- இவற்றுள் "சிலைதனை" "பொங்கு வெண்மணல்" "கற்பொலி" என்ற பதிகங்கள்மட்டும் கிடைத்துள்ளன. பதிகக் குறிப்புக்கள் பார்க்க.*

பணிந்து போற்றி *- என்பது மனமெய்களால் வழிபாட்டு முறைகளையும், பாடிப் பரவி என்பது மொழியால் வழிப்பட்ட முறைகளையும் குறிக்கும். ஈண்டுப் போற்றுதல் மனத்துள்வைத்துக் காத்தல்; பாடி என்றது பதிகம் பாடுதலையும், பரவி என்றது ஏனைக் கீதநாத முயற்சிகளால் ஏத்துதலையும் குறித்தன.*

அன்று *- அக்காலத்து - அந்நாளில்; அன்று பரவியே அங்கிருந்தார் என்று கூட்டுக. அன்றே - அசையென்பாரு முண்டு.* *598*

II. திருமறைக்காடு

திருச்சிற்றம்பலம் **திருவிராகம் - பண் - நட்டபாடை**

சிலைதனை நடுவிடை நிறுவியொர் சினமலி யரவது கொடுதிவி
தலமலி சுரரசு ரர்களொலி சலசல கடல்கடை வுழிமிகு
கொலைமலி விடமெழ வவருடல் குலைதர வதுநுகர் பவனெழின்
மலைமலி மதில்புடை தழுவிய **மறைவன மமர்தரு** பரமனே. (1)

இருநில னதுபுன லிடைமடி தரவெரி புகவெரி யதுமிகு
பெருவளி யினிலவி தரவளி கெடவிய னிடைமுழு வதுகெட

விருவர்க ளுடல்பொறை யொடுதிரி யெழிலுரு வுடையவ னினமலர்
மருவிய வறுபத மிசைமுரன் **மறைவன மமர்தரு பரமனே.** (7)

வசையறு மலர்மக ணிலவிய **மறைவன மமர்பர மனைநினை**
பசையொடு மிகுகலை பலபயில் புலவர்கள் புகழ்வழி வளர்தரு
விசையமர் கழுமல நகரிறை தமிழ்விர கனதுரை யியல்வல
விசைமலி தமிழொரு பதும்வல வவருல கினிலெழில் பெறுவரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:-மறைவன மமர்தரு பரமனே விடமெழ அது நுகர்பவன்; அரவுஅணி தருமவன்; மலைமக ளினிதுறை தருமெழி லுருவினன்; கயிலையின் மலி பவன்; பசுபதி; கருணையன்; வெளியுருவிய பரன்; அறிவருபரன் என்றிவ்வாறு பலவாற்றாலு முணரப்படுபவன்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) சுரரும் அசுரரும் பாற்கடல் கடைந்தபோது எழுந்தவிடத்தை நுகர்ந்த அருளிப்பாட்டின் வரலாறுபற்றிப் போற்றுவது இப்பாட்டு; இவ்வாறே மேல்வருவனவற்றிலும் பெரும்பான்மை ஒவ்வொரு வரலாறுபற்றியே பரவுதல் காண்க. **சிலை** - மந்தரம்; **ஓர் சினமலி அரவு** - ஆதிசேடனாகிய பாம்பினைக் கயிறாக; **திவி தலம்** - ஒளியுலகம் - விண்ணுலகம்; **அவர்** - சுரரும் அசுரரும்; **அது** - அந்த - விடத்தை;-(2) கரம் முதலிய அவயவங்களிலெங்கும் பாம்புகளை அணிந்தவர்; **அவை** - அவற்றின்கண்; ஏழனுருபு விரிக்க; **அவை - அணிபவன்** - என்று கூட்டுக; **இமையவர்புரம்** - தேவருலகம்; **மரம்** - கற்பகம்; **கொடை** - கொடையினையுடைய; **நினை(யு)ம் மனிதர்கள்** - என்று கூட்டுக; இரவலர்களது துயர்கள் கெடும்படி நினைந்துசெய்யும் கற்பகம்போன்ற கொடையுடைய மனிதர்கள் வாழும் பதி என்க; சாதாரிப் பதிகம் 8-வது பாட்டுப் பார்க்க;- (3) **அரி முசுவொடு மெழ** - **அரி** - சிங்கம்; **முசு** - குரங்கு; **முழை** - குகை; குகையினிருக்கும் சிங்கத்தைக் குரங்குகள் எழுப்ப எழும்; **முசியொடும்** என்பது பாடமாயின் களைப்பொடும் என்க. **முளரி-கரி** - தாமரைப் பூக்களையும் கரும்புகளையும் தின்னும் யானைக் கூட்டம்; தாமரைகள் பூக்கும் வயல்களில் விளைந்த கரும்பு எனினு மாம்; **கழை** - கரும்பு; **மலிபவன்** - வெளிப்பட வீற்றிருப்பவன்;- (4) **களகி** - ஊமத்தை; **இதழி** - கொன்றை; **நலமிகு-முடியினன்** - கொன்றையும், நகுதலையும், ஊமத்தையும், கங்கையும், பாம்பும், மதியும் இருக்கும் சடைமுடியுடையவர்; **மிகுதலம்** - விரிந்த வுலகம் மனிதர்களும் முனிவர்களும் தமது மலங்கள் அறும்படி நினைத்து வழிபடும்;-(5) **உயர்பசுபதி யதன்மிசை** - உயர்ந்த ஆனேற்றின்மேல்; **பலகலை-முனிகணன்** - பல கலைகளையும் வேதநெறிகளையும் முறைப்படி ஓதிஉணர்ந்து ஒழுகும் மறையவர் கூட்டம்; **மிகுதவம்...நிபுணர்கள்** - சிவபூசைசெய்யும் ஆகமிகர்கள்; வேத சிவாகமநெறிகளினிற்கும் இருவகையும் குறிக்கப்பட்டது. **மிகு தவம்** - சிவபூசை;-(6) **திரிசிகை படை** - முத்தலைச் சூலம்; **எழு** - ஓராயுதம்; **மறி** - மான்மறி; உடைதலை - மண்டை ஓடு; **வடமுகம்** - நெருப்பு; **மலர் மறையவன்** - பிரமன்; பிரமன் சிருட்டி வலிமையையும் ஞானத்தையும் அடைய வழிபடும்;- (7) இப்பாட்டில் சங்காரமுறைபற்றி வேதவாக்கியப்பொருள் வலியுறுத்தி ஓதப்பட்டது;

இருமடிதா மண்ணிற் படியா. அது எரியுக என்க: எரி **வளியினில் அவிய;** வளி - காற்று: வளி வியன் இடை கெட - காற்று ஆகாயத்தில் ஒடுங்க: **முழுவது கெட** - உலக முழுதும் ஒடுங்க: **இருவர்கள்** படைப்புத் திதிக் கருத்தாக்களாகிய பிரம விட்டுணுக்களின்: **உடல்** பொறையொடு - கங்காளங்களாகிய சுமையுடன்: "காலாந்தரத் திருவர். தங்காலஞ் செல்லத் தரித்தனன் திருச்சாழல்": **உடல்...எழிலுரு** - கங்காள வேடம்: எலும்புக்கூட்டைத் தாங்கிய எழில் என்றது அப்போது மீளச் சிருட்டிக்காக வீணை வாசித்தலால்: "கங்காளமாய் வருங்காலன் மீளநின் றெம் மிறை நல்வீணை வாசிக்குமே" (தேவா - விருத்): இப்பாட்டு "ஒடுங்கி மலத்துளதாம்" (போதம் - 1) என்ற ஞானசாத்திர உண்மையினையும். உலக ஒடுக்கத் தோற்றங்களையும். அவற்றைச் செய்யும் சங்கார கருத்தாவினது முதன்மையினையும் எடுத்துக்காட்டும் சிறப்புடையது; இங்கும் ஐம்பூதங்கள் சங்கார முறையில் தத்தமக்கு மேற்பட்ட பூதங்களுள் முறையே ஒடுங்குவனவாகக் கூறப்படினும். அவ்வவ்வற்றின் தன் மாத்திரைகளுள் ஒடுங்குமென்பதே தாற்பரியப் பொருளாகக் கொள்க இத்திருப்பாட்டுச் சிவஞான மாபாடியத்துள் எடுத்தாளப்பட்டுப் பொருள் விளக்கப்பட்டுள்ளது: பாடியம் 2-சூத் - 2 - அதி; (கழகப்பதிப்பு. பக் . 234) பார்க்க. தன் மாத்திரையில் ஒடுங்கும் பூதங்கள் அடுத்த பூதத்தொடுங்குவனவாகக் கூறப்பட்டன என்க. (8) **நிசிசரன்** -அரக்கன்:-(9) **மலர்மகள்** - இலக்குமி; **தலைமகன்** - கணவன்; நாயகன்: எரி-உரு - திரண்ட தீத்தூண்; "செம்பவள மிருளகற்றும்", "முத்தங் கங்குலாரிருள் போழும்" (தேவா): **மணி-தரும்** - மணிகளின் ஒளி வெயில்போல விளங்கும்;- (11) **மலர்மகள்** - ஞானவாணி: **பசை** - பற்று; அன்பு.

111. திருமறைக்காடு

திருச்சிற்றம்பலம் **பண் - பியந்தைக்காந்தாரம்**

பொங்கு வெண்மணற் கானற் பொருகடற் றிரைதவழ் முத்தங்
கங்கு லாரிருள் போழுங் கலிமறைக் காடமர்ந் தார்தாந்
திங்கள் சூடின ரேனுந் திரிபுர மெரித்தன ரேனு
மெங்கு மெங்கள் பிரானார் புகழல திகழ்பழி யிலரே. (1)

மையு லாம்பொழில் சூழ்ந்த மாமறைக் காடமர்ந் தாரைக்
கையி னாற்றொழு தெழுவான் காழியுண் ஞானசம் பந்தன்
செய்த செந்தமிழ் பத்துஞ் சிந்தையுட் சேர்க்கவல் லார்போய்ப்
பொய்யில் வானவ ரோடும் புகவலர் கொளவலர் புகழே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது இடம் மறைக்காடே என இறைவரது புகழ்களை இடத்தின் சிறப்புப்பற்றி எடுத்துக் கூறியது; அங்கு வழிபடுமின் என்று உலகோரைத் தெருட்டியது

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) திரைதவழ்...போழும் - அலைகளினால் வாரி

அலைக்கப்பட்டுக் கரையில் தவழும் முத்துக்கள் இரவினில் ஒளிவீசுகின்றன; "துறைக் கொண்ட செம்பவள மிருளகற்றும் சோதித் தொன்மயிலை" (தேவா); மறைக்காடு முத்துக்குளிக்குந் துறைகளுட் சிறந்தது என்ற உண்மையும் குறிக்கப்பட்டது; **திங்கள் சூடினரேனும் - புரமெரித்தனரேனும் - பழியிலரே** என்றது பழிக்கத்தக்கவற்றைச் செய்த குற்றவாளியான சந்திரனைத் தலையில்வைத்தலும், புரத்துள்ள அனைவரையும் எரித்துக்கொன்றமையும் பழியல்லவோ எனின் அவை பழியாகாது புகழே யாம் என்பது;- (2) **ஆனிலங் கிள ரைந்து** - ஆனைந்து; பஞ்சக்கவ்வியம் என்பது வடமொழி;-(3) **நுண்ணிதாய் வெளிதாகி நூல்** - பூணூலுக்கும் ஞான நூலுக்கும் பொருந்த உரைத்துக்கொள்க. **கண்ணி** - தலையிற் சூடும் மாலை;-(4) **ஏழை** - அறிவில்லாத; **வினை நலிவு** - வினையால் நலியப்படுதல்;- (5) **வண்டியாழ் செயும்** - வண்டுகள் யாழ்போல ஒலிசெய்தற்கிடமாகிய; பதியாகிய மறைக்காட்டில் - ஏத்துதல் குணம் என்று கூட்டிமுடிக்க; **எல்லி** - பகல்;- (6) **பலிதேர் அல்லல் வாழ்க்கை** - பலிகொள்ளுதல் இழிபுதரும் வாழ்வு என்ற நீதி நூலுண்மைக் குறிப்பு; **அழகியது** - அச்செயலினுள் உண்மையின் மேம்பாடு; "தம் அடியார் இரந்துண்டு தன்னடி எட்டச் செய்தானே" (திருமந்) என்றபடி. பலிதேர்தல் தன்னை அடைந்தாரை ஈடேற்றுவ தாகிய உண்மையின் மேன்மை;- (7) கடல்விடம் அருந்தின சரிதம்; பண் - நட்டபாடைப் பதிகம் "சிலைதனை" (1) என்ற பாட்டும், பண் - சாதாரிப் பதிகம் "பண்டிரை" (2) என்ற பாட்டும் காண்க; **அமிர்தமாக்குவித்தான்** - நஞ்சினையே உணவாகச்செய்தவர் என்றும், தாம் நஞ்சுண்டமையால் தேவர்களுக்கு அமுதுண்பதனைச்செய்து கொடுத்தவர் என்றும் இரட்டுறமொழிய நின்றது;-(9) **விண்ட** - வாய்விண்டு அலர்ந்த;- (11) **மை** - கருமைநிறம்; அதனைச் செய்யும் நிழலுக்காயிற்று.

IV. திருமறைக்காடு

திருச்சிற்றம்பலம் **திருவிராகம் - பண் - சாதாரி**

கற்பொலி சுரத்தினெரி கானினிடை மாநடம தாடிமடவா
ரிற்பலி கொளப்புகுது மெந்தைபெரு மானதிட மென்பர்புவிமேன்
மற்பொலி கலிக்கடன் மலைக்குவ டெனத்திரை கொழித்தமணியை
விற்பொலி நுதற்கொடியி டைக்கணிகை மார்கவரும் வேதவனமே. (1)

மந்தமுர வங்கடல் வளங்கெழுவு காழிபதி மன்னுகவுணி
வெந்தபொடி நீறணியும் வேதவன மேவுசிவ னின்னருளினாற்
சந்தமிவை தண்டமிழி னின்னிசையெ னப்பரவு பாடலுலகிற்
பந்தனுரை கொண்டுமொழி வார்கள்பயில் வார்களுயர் வானுலகமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- எந்தை பெருமானாரது இடம் வேதவனமே.

பதிகப்பாட்டுக் குறிப்பு: (1) மறைவனமே எந்தைபெருமான திடமென்பர் என்று கூட்டுக: மற்பொலி-களிற்றினைகொள் கவரும்-மலைச்சிகரம்போலவரும் கடல் அலை கொழித்த மணிகளைப் பெண்கள் வாரும் (2) கல்வி முண்ட வரலாறு: இது மாபுராணங் களெல்லாவற்றுள்ளும் கூறப்பட்டதுபோல இப் பதிகங்களெல்லா வற்றினும் விரிக்கப்பட்டது; இத்தலப் பெருமை குறித்தது: அரசுகளது எனைப் பதிகங்களுள் இறுதிப் பாட்டில் கூறப்படும் இராவணன் கயிலை எடுத்த வரலாறு. "தேரையு மேல்கடாவி" என்ற இத்தலத் திருநேரிசைப் பதிகத்துள் எல்லாப் பாட்டுக்களினும் வரும் சிறப்பும் கருதுக;- (3) மலையார் நாரி - மலையரசன் மகள் - பார்வதி: விழாவினொலியும்-பாடலொலியும் மலியும் என்க;- (4) மிசைத்து - மேலதாக ஒளியுறத்தடவி: **ஊறுபொருள்** - சிறந்துவளரும் பொருளியல்பு: **வேறு திசை யாடவர்கள் கூற இசைதேரும்** - தமிழ் நிலமல்லாத வேற்றுமைத் திசை மொழியாளர்கள் தத்தமொழிப் பொருள்களைக்கூற அவற்றின் தன்மைகளை ஒப்புநோக்கித் தமிழ்ச் சிறப்பினை ஆராயும்: பெண்களின் தமிழ்க்கல்வியின் சிறப்பும், மறைவனம் துறைமுகப்பட்டினமாதலின் வேறு திசையார் வந்து சாரும் சிறப்பும் கூறப்பட்டது;- (5) **கத்தி - ரிகை-படகம்** - இயங்களின் வகை; **அலம்ப** - ஒலிக்க; **ஒத்து** - தாளஒத்து இலயம்பட; **மிதித்து** - அடிகளை ஊன்றிச் சாரிகை செய்து; **உகளுதல்** - பயிலுதல்;- (7)**அரணம்** - புரம்: மதில்: **அஞ்சக மவித்த** - ஐம்புலனடக்கிய;- (8) **அடித்தலம் முன்வைத்து அலமரக் கருணை வைத்தவன்** - துன்பமுற அடிவைத்துப், பின் கருணை வைத்தவன்; அலமரும்படி அடிவைத்து என்றும், அலமரக் கண்டுபின் அருள் வைத்து என்று ஈரிடத்தும் கொண்டுரைக்கும்படி அலமர என்றதனை இடையில் வைத்தோதினார். **அலமருதல்** - வருந்துதல்; **புலவாணர் வறுமை...நிதி நல்குமவர்** -இப் பதியோரது வள்ளன்மை கூறப்பட்டது; "இரவலர் துயர்கெடு வகைநினை" (நட்ட பாடை -2) என இத்தன்மைபற்றி முன்னரும் போற்றியமை காண்க;- (10) **குறுகா** - வந்தணைய மாட்டா.

தலவிசேடம்:- திருமறைக்காடு - III - பக்கம் - 648 பார்க்க. **அத்தலத்து இறைவர் "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்ற திருவாக்கின்படி அரசுகள் வேண்டக் கதவம் திறப்பித்தும், பிள்ளையார் வேண்டக் கதவம் அடைப்பித்தும் அருளிய வரலாற்றுக் குறிப்புக் காண்க;** பிள்ளையார் வேண்ட அரசுகளால் திறப்பிக்கவும், அரசுகள் வேண்டப் பிள்ளையாரால் அடைப்பித்தும் அருள்புரிந்தமையும் கருதுக; இந்நிகழ்ச்சிகள் அவ்வந் நாயன்மார்களது திருப்பதிகங்களின் அகச் சான்றுகளாலேயும் தெளிய உள்ளன; சுவாமி பெயர் திருத்தாண்டகத்து மகுடமாக வைத்துப் போற்றப்படுதல் காண்க. (மணாளன்)

2497. பொருளுரை...இவ்வகை...ஆக - இவ்வகையாக அவ்விரு பெருமக்களும் அத்திருப்பதியில் எழுந்தருளியிருந்தார்கள்; இஃதிவ்வாறாக; இப்பால் - இனி இந்நாளில்; செய்வகை...நாட்டு - இயற்றும் நல்லொழுக்க நெறியினின்றும் இடைக்காலத்தில் தவறிய தென்னவனது பாண்டிநாட்டிலே; மெய்வகை...மிக்கு - உண்மை நெறியில் நில்லாத தீவினைப் படுகுழியாகிய சமண சமயம் மிகுந்து; கைவகை...கழிய - செய் தக்க நல்லொழுக்க நெறியின் முறைமை நீங்கியதனால்; முன் கலங்குங்காலை - முன்னே கலங்கிய காலத்தில்;

2497. இவ்வகை யிவர்க ளங்க ணிருந்தன ராக விப்பாற்
செய்வகை யிடையே தப்புந் தென்னவன் பாண்டி நாட்டு
மெய்வகை நெறியி னில்லா வினையமண் சமய மிக்குக்
கைவகை முறைமைத் தன்மை கழியமுன் கலங்குங் காலை. 599

விளக்கவுரை–இவ்வகை - இறைவரைப் பரவிய வகை; **அங்கண் - இப்பால் - அங்கண்** - திருமறைக்காட்டில்; பாண்டிநாட்டில் இந்நாளில்; **இப்பால்** - என்றது காலக் குறிப்பும், இடக்குறிப்பும்பட நின்றது; **இப்பால் - நாட்டு** என்று தொடர்புபடுத்திக்கொள்க; இதுவரை சோழநாட்டில் திருமறைக்காட்டின் வரலாறு கூறிவந்த ஆசிரியர் இனி அங்குநின்றும் சென்று நமது மனதைப் பாண்டிநாட்டிற் செலுத்துகின்றமையால் அதனை அகரமாகிய சேய்மைச் சுட்டினாலும், இதனை இகரமாகிய அண்மைச் சுட்டினாலும் கூறிய கவிநயம் காண்க.

செய்வகை–நாட்டு - செய்வகை - தெரிந்து சிவநெறிநிற்கும் ஒழுக்கம்; பூவினைக் கொய்து மலரடி போற்றுதும் நாமடியோம் (கொடிமாடச் செங்குன்றூர் 1); **இடையே** - முன்னெல்லாமன்றி இடையில்; பின்னுமில்லாமை குறிப்பு; முன்னும் பின்னுமின்றி இடைப்பட்ட அந்நாளில்; இடை - ஏழனுருபாகக்கொண்டு, செய் வகையின்கண் என்றுலுமாம்; **தப்பும்** - நாட்டு என்று கூட்டுக.

தென்னவன் பாண்டிநாட்டு - சோழரும் சிலகாலத்தில் பாண்டிநாட்டினை ஆண்ட சரிதமும் கேட்கப்படுவதால் தென்னவன் அரசின் கீழ்நின்ற காலம் என்பது குறிக்க வாளா பாண்டிநாட்டு என்னாது; தென்னவன் பாண்டிநாட்டு என்றார்; வாளா பாண்டிநாடு என்றாலே தென்னவனரசினைக் குறிக்கும் என்பதும் காண்க. "மன்னிய சைவத்துறையின் வழிவந்த குடிவளவர், பொன்னிவளந் தருநாடு" (1900) என்றபடி சோழ மரபு எந்நாளும் தவறாது சைவத்தின் வழிவந்தமையும் குறிக்கொள்ள வைத்த நயமும் காண்க.

நாட்டு - அமண் சமயம் மிக்கு - என்க; **நாட்டு** - நாட்டின்கண்.

மெய்வகை நெறியின் நில்லா அமண் சமயம் - மெய்நெறியினை விட்டுப் பொய்மேற் கொண்டொழுகும் சமணம்.

கைவகை முறைமைத் தன்மை கழிய - "கைவினை செய்தெம் பிரான்கழல் போற்றுது நாமடியோம்" (தேவா); சிவநெறியாகிய நால்வகை நெறியினிற்கும் ஒழுக்கமும், பூதிசாதன விளக்கமும் முதலிய முறைமைகள் போற்றப்படாதொடுங்க.

கலங்கும் காலை - நாடு கலக்கமடையும்போது; **கலங்குதல்**-தெளிவின்றி நிகழ்தல்;"பயில்வித் தெல்லாங், காரிட மதனிற் காட்டு மங்குரங் கழியும் வேனில்" (சித்தி -1 - 29) என்றபடி ஒரு மரத்தின்கீழ் அநேக வித்துக்கள் ஒரேகாலம் தோன்றி ஒரே காலம் மடிதல்போல, ஒரு நாட்டின் அனேக உயிர்களுக்கு ஒரே காலத்தில் ஒருங்கே ஒரேவிதமாகிய கன்மானுபவம் வரும் என்க. காலை - நிற்ப - நவைநெறி நடந்தது என்று மேல்வரும் பாட்டுடன் முடிக்க.

2498. தென்னவன் றானு முன்செய் தீவினைப் பயத்தி னாலே
யந்நெறிச் சார்வு தன்னை யறமென நினைந்து நிற்ப
மன்னிய சைவ வாய்மை வைதிக வழக்க மாகு
நன்னெறி திரிந்து மாறி நவைநெறி நடந்த தன்றே. 600

தப்பும் - தென்னவன் என்று கூட்டிப் பாண்டியன் தவறினன் என்றுரைத்து மன்னன் தவறியதனால் மன்னுயிர் நாடு தவறியதென்று உரைகொண்டனர் முன்னுரைகாரர். அது மேல்வரும் பாட்டிற் கூறுதல் காண்க; இங்குக் குறித்தது நாட்டு மக்களிடையே சமணம் மிக்குச் சைவ ஒழுக்கம் தவறிய நிலை என்க.

இவர்களிவ்வா றிருந்தனராக-என்பதும் பாடம். *599*

2498. பொருளுரை: தென்னவன் ...நிற்ப - பாண்டியனும் முன்செய்த தீவினையின் பலனாலே *அந்தச் சமண சமயநெறியின் சார்பினையே* நல்லறமென்று நினைந்து *அவ்வழியில் நின்று ஒழுகினானாக; மன்னிய...மாறி* - நிலைபெற்ற வைதிக வழக்கமாகும் சைவத்தின் *மெய்ம்மையுடைய நன்னெறி* மக்களிடம் வழக்காறற்று மாறி; நவை நெறி நடந்தது *அன்றே - அப்போதே குற்றம்பொருந்திய* தீநெறி ஒழுக்கம் பரவியது;

இவ்விரண்டு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை-தென்னவன் தானும்-நிற்ப - தானும் - நாட்டினர்க்குள் நல்லொழுக்கங் குன்றித் தீயொழுக்க மிக்கதுவேயுமன்றி, அரசனாகிய தென்னவனும் என்ற உம்மை இறந்தததுதழுவியது; **தானும்** - உயர்வு குறித்ததுமாம்.

முன்செய் தீவினைப் பயத்தினாலே...அறமென நினைந்துநிற்ப - முன்னைத் தீவினையாலன்றித் தீயநினைவும் அதனைத் தொடர்ந்த தீயஒழுக்கமும் நிகழா என்பதும், நல்லொழுக்கத்திற்கும் நல்ல நினைவுக்கும் அவ்வாறே முன்னை நல்வினைப்பயன் காரணமாக நிற்கும் என்பதும் எல்லா அறிவு நூல்களுக்கும் ஒப்பமுடிந்த உண்மை; உண்மை யுயர்வுடைய சைவச் சார்பிலும் சைவ அரச மரபினும் பிறந்தும் இடையில் இவ்வாறு தப்பியதற்கும் முன்னைத் தீவினைப்பயனை அனுபவிக்கும் ஊழ் காரணமாவது.

அறநெறிச் சார்வுதன்னை அறமென நினைந்து - அறமென என்றதனால் அச்சார்வு அறமல்லாத தொன்றென்பது போதருதல் காண்க; அறமல்லாததனை அறமென நினைந்தனன். நிற்ப - அச்சார்பினையே தழுவி ஒழுகி நின்றானாக.

மன்னிய சைவ வாய்மை...நன்னெறி - மன்னுதல் - எங்கும் என்றும் அழியாது நிலைபெறுதல்; வைதிகத்தின் உள்ளுறையாகிய வாய்மை என்க; வேதத்தின் உள்ளுறை சைவம் என்பதாம்; வாய்மையாவது இறைவரது சத்தாந் திருவாக்கி னின்றும் வெளிப்பட்ட சிவாகமங்களாலும் வேதங்களாலும் விதிக்கப்படுதல்; சைவம் ஆகமங்களாலும், வைதிகம் வேதங்களாலும் விதிக்கப்படினும் இரண்டும் ஒருமுடிபு கொள்ளுதலின் "வைதிக சைவம் அழகிது அந்தோ" என்று உயர்ந்தோராற் போற்றப்படும்; ஆதலின் சைவ வைதிக

2499. பூழியர் தமிழ்நாட் டுள்ள பொருவில்சீர்ப் பதிக ளெல்லாம்
பாழியு மருகர் மேவும் பள்ளிகள் பலவு மாகிச்
சூழிருட் குழுக்கள் போலத் தொடைமயிற் பீலி யோடு
மூழிநீர் கையிற் பற்றி யமணரே யாகி மொய்ப்ப, 601

வழக்கமாகும் நன்னெறி என்று ஒருமையுட்படுத்துக் கூறினார்; "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" (1899) என்று இப்புராணத்துள் தொடங்கிக் காட்டியதுமிக்கருத்து; பின்னர்ப் பிள்ளையார் திருவாக்கால் நவைநெறி நீங்கிச் சைவம் ஓங்கியபோதும் இக்கருத்தேபற்றி "மறையவர் வேள்விசெய்ய...இறைவனன் னெறியி னோங்க" (2758) என இவ்விரண்டினை யுங்கூட்டி உரைப்பதனையும் காண்க. இவ்விரண்டனையும் இங்கு ஓங்குவிக்கப் பிள்ளையார் திருவவதரித்தருளியமையால் இந்நாட்டின் வரலாறு கூறுமுகத்திலும் முடிபிலும் இத்தன்மைபற்றிக் கூறிய நயமும் கண்டுகொள்க. இவைபற்றி "அருமறைப் பயனாகிய வுருத்திரம்" (1037) "அருமறை யுருத்திரம்" (1034); "வேத வுள்ளுறை யாவன" (1832) என்ற இடங்களினும், பிறாண்டும் உரைத்தவை பார்க்க.

திரிந்து மாறி - திரிதலாவது - முதலில் சிறிது சிறிதாகக் குறைதல்; **மாறுதல்** - முற்றும் வேறுபட்டு நீங்குதல்.

நவைநெறி நடந்தது - நவைநெறி - தீநெறி; நன்னெறி மாறியபோது அது மாறியதனுடன் நில்லாது நவைநெறியே நன்னெறிபோல நடக்குமென்க; இந்நாள் பல துறைகளிலும் நடக்கும் நாகரிகப் போலிகள் இங்குக் கருதத்தக்கன.

அன்றே - நன்னெறி மாறின அன்றே நவைநெறி நடந்தது; **அன்றே** - அப்பொழுதே; இடையீடின்றி; ஏகாரம் தேற்றம்; "திருநெறி நடந்த தன்றே" (2757) என்று இக்கருத்தை இதன் நீக்கத்திலும் கூறுவது காண்க. 600

2499. **பொருளுரை**...**பூழியர்...எல்லாம்** - பாண்டியரது தமிழ்நாடாகிய பாண்டிய நாட்டில் உள்ள ஒப்பற்ற சிறப்புடைய எல்லாப் பதிகளிலும்; **பாழியும்...ஆகி** - பாழிகளும் சமணர்கள் மேவுகின்ற பள்ளிகளும் ஆகி; **சூழ் இருட் குழுக்கள்...மொய்ப்ப** - சூழ்ந்த இருட் கூட்டங்கள்போலக் கட்டிய மயிற் பீலிகளுடனே நீர்க் கமண்டலங்களையும் கையில் பிடித்துக்கொண்டு சமணர்களே எங்கும் காணும்படி மொய்க்க;

விளக்கவுரை...**பூழியர் தமிழ்நாடு** - முன்னர்த் (2497) "தென்னவன் பாண்டிநாட்டு" என்றவிடத்துரைத்தவை பார்க்க; தமிழ்நாடு - பாண்டிநாடு; இப்பெயர் தமிழ் வழங்கும் சோழநாடு தொண்டைநாடு முதலிய எல்லா நாடுகளுக்கும் பொதுப்பெயராக வழங்கற்குரியதாயினும் சிறப்பாக பாண்டிநாட்டிற்கே உரியதாக ஆசிரியராலும் மற்றும் ஆன்றோராலும் வழங்கப்படும்; "தமிழ்நாட்டில் போனார்" (1554) என்றவிடத்தும், பிறாண்டும் உரைத்தவை பார்க்க.

பொருவில் சீர்ப்பதிகள் - இவை திருப்பூவணம், திருநெல்வேலி, திருக்குற்றாலம் முதலியனவாக விளக்கமாக அறியப்படும் பதிகள்.

பாழியும் அருகர்மேவும் பள்ளிகள் பலவும் - பாழி - சமணர்கள் கடவுள் வழிபாட்டுக்கு அமைத்த கோயில்கள்; பள்ளி - சமண குருமார்கள் கூடிப் பயின்று தங்குமிடங்கள்; அமணர் மேவும் பள்ளிகள் என்ற அடைமொழிகளும் இப்பொருள் தருவது காண்க; இவ்வாறன்றிப் பாழிகளில் குருமார்களுக்குத் தனியறைகளும் உண்டு; பாழி என்றும் பள்ளி என்றும் கோயில்களுக்கு வழங்குவது பழங்கால முதற் சைவ மரபு; அரதைப் பெரும்பாழி செம்பொன்பள்ளி முதலியவை காண்க; இவ் வழக்கைச் சமணர் கைக்கொண்டனர்; "பாழி யறையினை வீழ்ந்தார்" (1315); "நன் றறியா ரமண்பள்ளி நண்ணுகிலேன்" (1323) முதலியவை பார்க்க இப்பெயர்கள் சிறுபான்மை மாறியும் வழங்கும்; பாழியும் பள்ளிகள் பலவும் - கோயில் சிலவும், குருமார் பலரும் தங்கவும், வருவோர் பலரையும் உள்ளாக்கிப் பயிற்றி வாழ்வதற்கும் பள்ளிகள் பலவுமாம் என்பது.

சூழ்இருட் குழுக்கள்போலத் தொடை மயிற் பீலி - இருட் குழுக்கள் போலத் தொடுக்கப்பட்டுக் கட்டிய மயிற்பீலிகள் விளங்கின; இருட் குழுக்கள் போல - அமணரேயாகி என்று கூட்டி அமணருக்கு உவமையாக்கி உரைத்தலுமாம்; "இன்ன தன்மையி லிருட் குழாஞ் செல்வதுபோல்" (1349) என இக்கருத்தேபற்றி முன்னர் உரைத்ததும், "இழுது மையிருட் கிருளென" (2576) என்று பின் உரைப்பதும் காண்க; குழுக்கள் - குழு - கூட்டம்; கரிய அமணர் கூட்டமும் இருள்போன்றிருக்க அவர்கள் கையில் கொண்ட தொடைமயிற் பீலியும் இருள்போல விளங்குதலின் குழுக்கள் என்று பன்மையால் கூறினார்.

நீர்மூழி என்க; மூழி - கமண்டலம்; குண்டிகை; நீர்க்கரகம்; மூழி நீரினைத் தெளித்து மயிற்பீலி கொண்டு தடவி மந்திரிப்பது சமணக் குருமார் வழக்கங்களுள் ஒன்று; எறும்பு முதலிய சிற்றுயிர்கள் வழியில் இடர்படாமல் ஒதுக்குதற்கும் மயிற்பீலிகளைப் பயன்படுத்துவர் என்பர்.

கையிற்பற்றி அமணரே யாகி - பற்றி - பற்றிய என்ற பெயரெச்சத்து இறுதி அகரம் குறைந்துவந்தது; ஆகி - ஆக்கச்சொல், பலவாற்றாலும் அக்கூட்டம் பெருக்கப்பட்ட ஆக்கம் குறித்தது.

மொய்த்தல் - செறிந்து கூடுதல்; அமணரே யாகி - ஏகாரம் வேறுநிலையினர் காணப்படாமை குறித்தலின் பிரிநிலை; மொய்க்கும் செறிவும் குறித்தது; இவ்வாறு மொய்த்தல் பாழிகளிலும் பள்ளிகளிலும் காணப்பட்ட நிலை குறித்தது; ஈக்கள் தேன் கூடுகளில் மொய்ப்பதுபோல அரசனது சார்பினாலும், சமணரது வாசகங்களின் மேற்பூச்சாகிய வஞ்சனையினாலும் சுவைகண்டு, மக்கள், அமணச் சார்புடையவர்களே யாகி மொய்த்தனர் என்பதாம்.

குழுஉக்கள்-என்பதும் பாடம். 601

2500. பொருளுரை-பறிமயிர்...எங்குமாகி - மயிர் பறித்த தலை யுடனே பாயினையும் தடுக்கினையும் தாங்கி உடம்பின்மேற் செறித்த முக்குடையினையும் கொண்டு திரிபவர்

2500. பறிமயிர்த் தலையும் பாயும் பீலியுந் தடுக்கு மேனிச்
செறியுமுக் குடையு மாகித் திரிபவ ரெங்கு மாகி
யறியுமச் சமய நூலி னளவினி லடங்கிச் சைவ
நெறியினிற் சித்தஞ் செல்லா நிலைமையி னிகழுங் காலை, 602

களாகிய சமண குருமார்கள் எங்கும் நிறைந்து; அறியும்...அடங்கி - தத்தம் அறிவினிலறிந்தவாறே அந்தச் சமயத்தின் நூல்களினது அளவினில் அடங்கி; சைவநெறியினில்...காலை - சைவநெறியின்கண்ணே மனம் செல்லாத நிலையில் அந்நாட்டிலுள்ளார் நிகழ்கின்ற காலத்திலே;

விளக்கவுரை...மயிர் பறிதலை என்க; **தலையும் ஆகி** - என்றது தலையுடன் என்ற பொருள்தந்து நின்றது.

பீலி - மயிற்பீலி; இது கையிற் பற்றுவது; **தடுக்கு** - பாய்; அமணர் உடுப்பது.

மேனிச் செறியு முக்குடை - முக்குடை - அருகக் கடவுளது குடை; இது பொன்னாலும் மணியாலும் முத்தாலும் ஒரு காம்புடன் செய்யப்படும்; இதனை அருகக் கடவுளது இலச்சினைபோலத் தம் உடம்பில் மார்பு நெற்றி தோள் முதலிய இடங்களில் அடையாளமாக எழுதிக்கொள்ளுதல் சமணர்களது மரபு; அருகனது முக்குடைகளாவன சந்திராதித்தியம், நித்தியவினோதம், சகல பாசனம் என்பன.

மேனிச் செறியும் - என்றதற்கு உடம்பின்மேற் பிடித்த முக்குடையும் என்றுரைப்பாருமுண்டு.

திரிபவர் - முன்கூறியவை சமண முனிவர்களது மரபு அடையாளங்கள். திரியும் சமண குருமார்; முன் பாட்டிற் கூறியவர்கள் சமண சமயச் சார்புகொண்ட மக்கள்; இங்குக் கூறியவர்கள் அவர்களுட் குருமார்; முன்னவர்களைத் தொகை மிகுதிபற்றி மொய்ப்பவர் என்றும், இவர்களைத் திரிபவர் என்றும் கூறிய நயம் காண்க.

அறியும் அச்சமய நூலின் அளவினில் அடங்கி - புறச் சமயமாகிய சமணத்தின் நூல்களின் அளவினில் தாந்தாங் கண்டனவே முடிபாகக் கொண்டு அம்மட்டி லடங்கி.

சைவநெறியினிற் சித்தஞ் செல்லா நிலைமை - தஞ்சமய நெறிகட்கு மேம்பட்ட சைவநெறி யுண்டென்றறிந்தும் அதில் மனம் செல்லாதவர்கள் ஆகி. 602

2501. பொருளுரை...வரிசிலை...மாதேவியாரும் - வரிந்த வில்லையுடைய பாண்டிய மன்னன் உய்யும்பொருட்டாகச் சோழர்பெருமான் மங்கலமாகப் பெற்றருளிய செல்வம் பொருந்திய பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசியம்மையாரும்; குரை கழல்...குலச்சிறையாரும் - ஒலிக்கும் வீரக்கழலை யணிந்த மந்திரியாராகிய குலச் சிறையாரும்; என்னும்...எய்தாதாக - என்னும் இருவர்களுடைய பாங்கினன்றிச் சைவநெறி அந்நாட்டில் வழங்காதாகவே;

2501. வரிசிலைத் தென்னவன்றா னுய்தற்கு வளவர் கோமான்
றிருவுயிர்த் தருளுஞ் செல்வப் பாண்டிமா தேவி யாருங்
குறைகழ லமைச்ச னாராங் குலச்சிறை யாரு மென்னு
மிருவர்தம் பாங்கு மன்றிச் சைவமங் கெய்தா தாக. 603

விளக்கவுரை தென்னவன்றா னுய்தற்கு...திருவுயிர்த்தருளும்-பாண்டியன் உய்வதற்கென்றே சோழர் பெற்றெடுத்தருளிய திருமகளார் என்றபடி: "எம்முடைய குலக்கொழுந்தை யாமுய்யத் தருகின்றோம்" என்று ஆளுடைய பிள்ளையாருக்குப் பெண்கொடுக்க இசைந்த நம்பியாண்டார் கூறினர் (புரா. 1167): ஆனால் இங்கு வளவர்கோமான் பெண்மகளாரைப் பெற்றருளியது "தென்னவன்றா னுய்வதற்கு" என்றது காண்க.

வளவர்கோமான் திருவுயிர்த்தருளும் - பாண்டிமாதேவியார் - "வளவர்கோன் பாவை...பாண்டிமாதேவி" (தேவா).

தென்னவன்றா னுய்தற்கு என்றதனால் இனிமேல் ஈடேறி நெடுமாறனாராக உள்ளவர் என்று குறிப்பிற் பெறவைத்தார்: இவ்வாறு இவரைக் குறிப்பித்துப் பாண்டிமா தேவியார் - அமைச்சர் குலச்சிறையார் என்ற இரு பெருமக்களுடன் மூவரையும் இப்பாட்டில் சேர்த்து அந்நாட்டு அந்நாட் சைவநிலை கூறிய திறம் காண்க.

மாதேவியாரும் - குலச்சிறையாரும் என்னும் இருவர்தம் பாங்குமன்றி - இவ்விருவர்பாலும், இவர்கள் பணித்தவாறுமன்றி என்பார் பாங்குமன்றி என்றார்.

சைவம் - சைவத்தின் மேன்மைநிலை ஒழுக்கம்.

இருவர்தம் பாங்குமன்றி-பிள்ளையார்பாற் சென்று விண்ணப்பிக்க இவ்விருவரும் ஏவியனுப்பிய "அறிவுடை மாந்தர்" களிருந்தனர்; பிள்ளையார் திருவாலவா யிறைவரைக் கும்பிட்டு எழுந்தளும்போது அங்குப் பணிசெய் தல்கு தொண்டர்கள் அவரை வணங்கி வழுத்தினர்; இவ்வாறிருப்பவும், "இருவர்தம் பாங்கு மன்றிச்சைவம் அங்கு எய்தாதாக" என்றதென்னை? எனில், சைவத்தின் காவல்பூண்டு செலுத்தும் மேன்மக்கள் இவ்விருவரேயாயினர் என்பது கருத்து; அரசன் அரசாங்க ஆட்சியின்பாற்படுத்திச் செய்யவேண்டிய சமயப் பாதுகாப்பாகிய இக்கடமையை அரசன் தவறியபோது இவ்விருவரே சைவப் பயிரினுக்குப் புகலிடமாய் நின்றனர் என்பதாம்; பாங்கு - செலுத்தும் வகை.

சைவம் எய்தாதாக - சைவம் தனக்குப் பற்றுக்கோடாகக் கொள்ள வேறிட மில்லையாக. 603

2502. பொருளுரை...ஆங்கவர்...பரிவுகொண்டே - அந்நிலையில் அப் பெருமக்களிருவரும் அவ்விடைப் பெறுதற்கரிய தமிழ்நாடு பொருந்தப்பெற்ற தீமையின் பொருட்டுத் தங்கள் மனதில் அளவுகாணமுடியாத துன்பம் கொண்டவர்களாகி;

2502. ஆங்கவர் தாங்க ளங்க ணரும்பெறற் றமிழ்நா டுற்ற
தீங்கினுக் களவு தேற்றாச் சிந்தையிற் பரிவு கொண்டே
ஓங்கிய சைவ வாய்மை யொழுக்கத்தி னின்ற தன்மை
பூங்கழற் செழியன் முன்பு புலப்படா வகைகொண் டுய்த்தார். 604

ஓங்கிய...தன்மை - தாங்கள் ஓங்கிய சைவ மெய்ந்நெறிக்கண் நின்று ஒழுகிய தன்மை; பூங்கழல்...உய்த்தார் அழகிய கழலையணிந்த பாண்டியன் முன்னர் வெளிப்படாதவகையால் மேற்கொண்டு செலுத்தினார்கள்.

இந்த நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை--ஆங்கு - அந்நிலையில்; **அங்கண்** - காலமும் இடமும் குறித்தது.

அரும்பெறல் தமிழ்நாடு உற்ற தீங்கினுக்கு - தீங்காவது சைவ ஒழுக்கம் குறைந்து சமணம் பரவுதல்; தமிழ் என்றாற் சைவமும், சைவம் என்றாற் றமிழும் சிறப்புவகை யாற் குறியீடுபெற்று இணைபிரியாது நிகழ்வன ஆகலின் இங்குச் சைவநாடு உற்ற தீங்கு என்னாது தமிழ்நாடு உற்ற தீங்கு என்று இதனைக் குறிக்கொளக் கூறினார் ஆசிரியர்; தமிழின் சிறப்புச் சமணத்தின் உயர்வே என்று கூறும் இந்நா ளாராய்ச்சியாளர் இங்கு ஆசிரியர் எடுத்துக்காட்டும் இக்கருத்தை உற்றுநோக்க உண்மை தெளிவார்களாக ; சிவனுக்கு ஆட்படு நெறியில் மக்களை நிறுத்துந் தமிழ் என்ற குறிப்பும் தர அரும்பெறற் றமிழ்நாடு என்றார்; இறையனாரும், குமரவேளும், அகத்தியனாரும், தெய்வப் புலவர்களும் தமிழ்வளர்த்த நாடு என்பதும் குறிப்பு. ஆதலின் இங்குச் சைவத்துக்கு வந்த தீங்கினைத் தமிழ்நாடு உற்ற தீங்கு என்ற தன்மையாற் கூறினார். இது பற்றி "வாயி ருந்தமி ழேபடித் தாளுறா, ஆயி ரஞ்சம ணும்மழி வாக்கினான்" (தேவா - பழையாறை வடதளி - 9) III-பக் 664 அத்தேவாரக் குறிப்பும் பார்க்க.

அளவு தேற்றாப் பரிவு - எல்லை காணமுடியாத துன்பம்.

தீங்கினுக்கு - தீங்கினைப்பற்றி; பரிதல் - தீர்வுநாடித் துன்பப்படுதல்; தீர்வு நாடினாராதலின் அரசன் ஆணைக்கும் கருத்துக்கும் மாறுபாடாயினும் நாட்டினைச் சைவநிலையிற் தீமையுறாது காக்கும் கடப்பாடுபற்றி சைவ வாய்மை ஒழுக்கத்தில் அரசன்முன்பு புலப்படாவண்ணம் தாம் தாம் கொண்டுய்த்தனர் என்க.

தீங்கினுக்கு அளவுதேற்றாச் சிந்தையில் - என்று கிடக்கைமுறையிற் கூட்டி அத் தீங்கு நீங்குங்கால எல்லை அறியமாட்டாது மனத்தினுள் என்று உரைப்பாருமுண்டு; "புலப்படா வகைகொண் டுய்த்தார்" எனப் பின்வரும் ஒழுக்கத்திற்கு ஒரு தொடர்பு மின்மையால் அஃதுரையன்றென்க.

ஓங்கிய...நின்ற தன்மை - நின்ற தன்மை முன் பாட்டிலுரைக்கப்பட்டது.

சைவ வாய்மை ஒழுக்கத்தினின்ற தன்மை - **செழியன்முன்பு புலப்படாவகை கொண்டுய்த்தார்** - அரசன் முன்பு புலப்படா வகை வாய்மை ஒழுக்கத்தின் நின்றது

2503. இந்நெறி யொழுகு கின்றா ரேழுல குய்ய வந்த
மன்னிய புகலி வேந்தர் வைதிக வாய்மைச் சைவச்
செந்நெறி விளக்கு கின்றார் திருமறைக் காடுசேர்ந்த
நன்னிலை கன்னி நாட்டு நல்வினைப் பயத்தாற் கேட்டார். 605

நாட்டின் நன்மை கருதியே என்பார் **தமிழ்நாடுற்ற தீங்கினுக்குப் பரிவுகொண்டே - உய்த்தார்** எனக் காரணக் குறிப்புப்படக் கூறினார்; ஏகாரமும் இக்குறிப்பினை வற்புறுத்துவதாம்: என்னை? இறைவனாணையாகிய வேத சிவாகமங்களின் துணிபாகிய சைவ வாய்மை ஒழுக்கத்தின்வழி நிற்றலும் நிறுத்தலும் அரசனாணையின் கடமை. ஆனால் அரசன் மாறுபட்டொழுகினான். அது பொருளாகாது. மேலாகிய இறைவனாணையே ஒழுகத்தக்கதாம்: ஆதலின் அரசன் திறம்பி வேற்றுவழி நிற்பினும் அம்மையும் அமைச்சரும் மேம்பட்ட இறைவனாணைவழியே சைவ வாய்மை ஒழுக்கத்தின் நின்றார்; அஃதொக்கும்: அதனை அரசன் முன்பு புலப்படாவண்ணம் கொண்டு உய்த்தல் என்னை? எனின், உலக காவல் அரசன் மேலது: அரசன் வழிபட்டாலல்லது உலக ஒழுக்கம் நிலைபெறாது; அரசனை யின்றியமைந்து உலகம் நடைபெறாது: இதனைக் கொண்டுசெலுத்தச் செய்தல் அமைச்சரது கடன்: அரசியாரது கடனுமதுவே யாம்: அதுவேயுமன்றிக் கணவன் வழிநிற்றல் கற்பின் நெறி என்பதனை உலகம் தேற எடுத்துக்காட்டாக நிற்றலும் அரசியின் கடனாம்; ஆதலின் நாடு அரசன்கீழ் உலகநிலை நெறி நிற்றற்பொருட்டுப் **புலப்படாவகை உய்த்தல்** வேண்டப்பட்டது: நாட்டின்உயிர் பற்றியநெறியின் தீங்கு நீங்குதற்பொருட்டு அரசனின் மாறுபட வரினும் தாம் சைவ ஒழுக்கத்தில் நிற்றல் வேண்டப்பட்டது; அவ்வாறு அரசன் முன்பு புலப்படாவகை வாய்மைஉய்க்கப்படாவிடின், முன்னரே சமயநிலையிற் றீங்குற்று நலிந்த நாடு, பின்னும் உலக நிலையினும் அரச காவலின்றி மேலும் தீங்குறும் என்பது கருத்து; **பரிவு கொண்டே** என்றது இக் குறிப்பெல்லாம் தந்துநிற்றல் நுண்ணுணர்விற் கண்டு கொள்க.

கொண்டு உய்த்தலாவது - ஒழுக்கம் செலச்செயதல்; தாமும் நின்று பிறரையும் நிறுத்துதல்; இது பின்னர்ப் பிள்ளையார்பால் விண்ணப்பித்துத் தூது அனுப்பி யதனாலும் பின் நிகழ்ச்சிகளாலும் கடைபோகச் செலுத்தப்பட்டமை காண்க. 604

2503. பொருளுரை....இந்நெறி ஒழுகுகின்றார் - இந்நெறியில் ஒழுகிநின்ற அம்மையாரும் அமைச்சனாரும்; ஏழுலகுய்ய-ஏழுலகங்களும் உய்யும் பொருட்டே; புகலிவந்த வேந்தர் - சீகாழியில் வந்தவதரித்த மன்னவராகிய பிள்ளையார்; மன்னிய- நிலைபெற்ற; வைதிக...விளக்குகின்றார் - வேத உள்ளுறையினைக் கொண்ட சைவமாகிய செந்நெறியினை உலகில் விளங்கச்செய்வாராகி; திருமறைக்காடு...நன்னிலை - திருமறைக்காட்டினிற் சேர்ந்து எழுந்தருளியிருந்த நன்மைதரும் நிலையினை; கன்னிநாட்டு...கேட்டார் - பாண்டிநாட்டின் நல்வினைப்பயன் காரணமாகக் கேள்விப்பட்டார்கள்.

2504. கேட்டவப் பொழுதே சிந்தை கிளர்ந்தெழு மகிழ்ச்சி பொங்க
நாட்பொழு தலர்ந்த செந்தா மரைநகை முகத்த ராகி
வாட்படை யமைச்ச னாரு மங்கையர்க் கரசி யாருஞ்
சேட்படு புலத்தா ரேனுஞ் சென்றடி பணிந்தா ரொத்தார். 606

---

*விளக்கவுரை-**இந்நெறி ஒழுகுகின்றார்** - **நெறி** - சைவவாய்மை ஒழுக்கம்; நெறியில் இவ்வாறு ஒழுகுகின்றார் என்க.*

ஏழுலகு உய்யவந்த *- எல்லா உலகங்களிலும் உள்ள அறிவு தொடங்கிய அடியார்கள் உய்தற்பொருட்டென்றே வந்தவதரித்த; இந் நிலவுலகில் வருதற்குத் தமக்கென வேறு காரணமில்லாதவர். உலகுய்யும் வகைகள் 1920 முதல் 1924 வரை 5 பாட்டுக்களால் விரித்தருளினமை நினைவுகூர்க; ஏழ்உலகு - எழும் என்பது ஏழ் என நீண்டு வந்ததெனக் கொண்டு எழும் அறிவும் நிலையும் பெறும் தன்மைகூடிய உலகுயிர்கள் உய்ய என்ற குறிப்புப்படவும் உரைக்கநின்றது; "அணைவுற வந்தெழு மறிவு தொடங்கின வடியார்பா லிணையில் பவங்கிளர் கடல்க ளிகந்திட, விருதாளின் புணை" (1980) என்றவிடத்துரைத்தவை பார்க்க; இதுவரை சோழநாடு, நடுநாடு, கொங்கு நாடு முதலியவற்றை உய்வித்தருளிய பிள்ளையார், இப்போது பாண்டிநாட்டினை உய்வித்தற்கும், இனி எல்லா வுலகினையும் திருநீற்று நெறியினிறுத்தி உய்யச்செய்தற்கும் எழுந்தருளிவருகின்றாராதலின் ஈண்டு **ஏழுலகுய்ய வந்த** என்ற அத்தன்மையாற் கூறினார்; **புகலிவந்த வேந்தர்** என்க.*

மன்னிய வைதிக வாய்மைச் சைவச் செந்நெறி விளக்குகின்றார் *- என்க; முன்னர் "மன்னிய...நன்னெறி" (2498) என்றதனையே மீண்டும் வலியுறுத்திக் கூறியவாறு காண்க; வைதிகத்தின் வாய்மை - உள்ளுறை - சைவமேயாம் என்பதனை வலியுறுத்திக்காட்டியபடி; "வேத வுள்ளுறை யாவன" (1832) என்ற கருத்துக் காண்க. **செந்நெறி** - செம்மை பயக்கும் நெறி; **செம்மை** - முத்தித்திரு.*

மன்னிய புகலி *என்றும், **மன்னிய-வேந்தர்** என்றும் கூட்டி உரைக்க நின்றது; பிள்ளையாரையே புகல் (அடைக்கலம்) ஆகக் கொண்டமையால் ஈண்டு 2505 - 2509 - 2511 பாட்டுக்களிலும் **"புகலி"** யே கூறப்பட்டது. திரு - வ. சு. செ. அவர்கள் குறிப்பு.*

நன்னிலை - கேட்டார் *என்க. நிலையினை - என்று இரண்டனுருபு விரிக்க.*

கன்னிநாட்டு நல்வினைப் பயத்தால் *- பாண்டியநாடு செய்த நல்ல தவப்பயன் காரணமாக என்றது முன்செய்த தவத்தின் பயன்பெறும் காலம் அணுகியதனாலே. 605*

*2504. பொருளுரை-**கேட்ட அப்பொழுதே** - கேள்வியுற்ற அப்பொழுதே; **வாட்படை அமைச்சனாரும் மங்கையர்க்கரசியாரும்** - வாட்படை ஏந்திய மந்திரியாராகிய குலச்சிறை நாயனாரும் மங்கையர்க்கரசியம்மையாரும்; **சிந்தை...முகத்தராகி** - மனத்தினுள் பொங்கி எழுகின்ற மகிழ்ச்சி மேலும் அதிகரித்தலால் அன்றைக் காலையில் புதிதாய் மலரும் தாமரைபோன்ற முகத்தை யுடையவர்களாகி; **சேட்படு...ஒத்தார்** - இடையிட்ட*

2505. காதலால் மிக்கோர் தாங்கள் கைதொழுங் கருத்தி னாலே
"போதவிழ் சோலை சூழ்ந்த புகலிகா வலனார் செய்ய
பாதங்கள் பணிமின்" என்று பரிசன மாக்க டம்மை
மாதவஞ் சுருதி செய்த மாமறைக் காட்டில் விட்டார். 607

நெடுந்தூரத்தில் இருந்தாராயினும் நேரே சென்று பிள்ளையாரது திருவடிகளில் வணங்கினவர்களைப் போன்றவராயினார்.

விளக்கவுரை நாட்பொழுதலர்ந்த - அன்றே புதிதாகக் காலையில் மலர்ந்த.

செந்தாமரை நகை முகம்-நகையுடைய தாமரையே போன்ற முகம்; உவமைத் தொகை; தாமரை போன்ற முகங்கள் கதிரவனாகிய பிள்ளையாரது வருகையினால் அலர்ந்தனபோன்று நகைமுகமாயின என்பதாம். கதிரவனாகிய பிள்ளையார் இப்போது வெளிப்படாது இனி வரவுள்ளாராதலின் ஈண்டும் வெளிப்பட உரைக்கப்பட்டிலர்.

சேட்படு புலத்தாரேனும் - சேணிற்படும் இடம் - நீண்டதூரத்தில் உள்ள இடமாகிய திருமறைக்காடு; சேண் - நெடுந்தூரம்; புலம் - இடம்; சேண் என்றது தமது பாண்டிநாட்டுக்கு அப்பாற்பட்ட அயல்நாடு என்ற குறிப்பும்படநின்றது.

சென்று அடிபணிந்தார் ஒத்தார் - மனம் அங்குவைத்து அடிவணங்கினாராக, வெறும் உடல்மட்டும் இங்குநின்றமையால் சென்று பணிந்தார் ஒத்தார் என்றார்; சென்று - என்ற குறிப்புமிது. 606

2505. பொருளுரை-காதலால் மிக்கோர் - பெருவிருப்பினாலே மிகுந்த அவ்விரு பெருமக்களும்; தாங்கள் கைதொழும் கருத்தினாலே - தாங்கள் நேரே வணங்கும் கருத்தினைக் கொண்டமையினாலே; 'போதவிழ்...பணிமின்" என்று - "பூக்கள் மலர்தற்கிடமாகிய சோலைகள் சூழ்ந்த சீகாழித் தலைவராகிய பிள்ளையாருடைய பாதங்களைச் சென்று பணிந்து விண்ணப்பம் செய்யுங்கள்" என்று பணித்து; பரிசன மாக்கள் தம்மை...விட்டார் - தமது பரிசனங்களாகிய மாந்தர்களை, வேதங்கள் மாதவம்செய்து பூசித்த திருமறைக்காட்டின்கண் செல்லவிடுத்தனர்.

விளக்கவுரை...தாங்கள் கைதொழும் கருத்தினாலே - தாங்கள் நேரே கண்டு வணங்கும் கருத்தினால்; மனத்தால் வணங்குதலன்றி நேரே கையினால் தொழுது பணியக் கருதி; தாங்கள் நேரே தொழுது விண்ணப்பித்தாற்போலவே கருதிப் பரிசனங்களை விடுத்தனர் என்றலுமாம்.

பாதங்கள் பணிமின் என்று-பணிந்து விண்ணப்பம் செய்மின் என்று பணித்து; விண்ணப்பம் செய்தல் தங்கள் நாட்டின் தீங்கை நீக்கும்படி வேண்டுதல்; இவை அவர்கள் விண்ணப்பம் செய்தவாற்றாலும் (2511), அதனை உள்ளடக்கிப் பொருள் கொண்டு தொண்டர்கள் விண்ணப்பம் செய்தவாற்றாலும் (2512) பின்னார் விரித்துரைக்க வைத்தமையால் ஈண்டுக் குறிப்பினாற்பெறவைத்தார்; அன்றியும் விடுத்த அப்பரிசனங்கள்

2506. ஆங்கவர் விடமுன் போந்த வறிவுடை மாந்த ரங்கண்
நீங்கிவண் டமிழ்நாட் டெல்லை பிற்பட நெறியி னேகி
ஞாங்கர்நீர் நாடுங் காடு நதிகளுங் கடந்து வந்து
தேங்கமழ் கைதை நெய்தற் றிருமறைக் காடு சேர்ந்தார். **608**

அறிவுடை மாந்தர்களாகிப் பாண்டிநாட்டின் பிரதிநிதிகளாய் பிள்ளையாரை வழிபட்டு விண்ணப்பிக்கும் தவப்பேறு பெற்றவர்களாதலின் குறிப்பினாலே உணர்ந்து சொல்லவும்வல்லர் என்றலுமாம்.

பரிசனமாக்கள் *- தமக்குற்ற பணியை அறிந்து செயல்செய்யவல்லவர்கள்; "அறிவுடை மாந்தர்" (2506) என்று இவர்களைச் சுட்டுதல் காண்க; மாக்கள் என்ற சொல் ஏனைப் பொதுப்பெயர்போலாது ஈண்டுப் பரிசனம் என்றதனை விசேடித்தலால் இடம்பற்றிச் சிறந்த அறிவுடையார் என்ற பொருள் தந்து நின்றது.*

சுருதி மாதவம் செய்த *என்க;* ***சுருதி*** *- வேதங்கள்;* ***தவஞ்செய்த*** *- சிவனைப் பூசித்த; 'பலகாலங்கள் வேதங்கள் பாதங்கள் போற்ற" (தேவா. மறைக்-).*

விட்டார் *- போதவிடுத்தனர்.* *607*

2506. பொருளுரை-ஆங்கவர்...மாந்தர் - ஆங்கு அவர்கள் விடுக்க முன்சென்ற அந்த அறிவுடைய மாந்தர்களாகிய பரிசனங்கள்; அங்கண்...ஏகி - அவ்விடத்தினின்றும் நீங்கிச்சென்று வண்மையுடைய தமிழ்நாட்டின் எல்லை பின்னிற்கும்படி வழியில்சென்று; ஞாங்கர்...வந்து - அவ்விடையில் நீர் நாட்டின் மருத நிலத்தையும் காடுகளையும் ஆறுகளையும் கடந்துவந்து; தேம்...சேர்ந்தார் - தேன் பொருந்திய தாழைகள் பூக்கும் நெய்தல்நிலப் பகுதியாகிய திருமறைக்காட்டின் புறத்தினை அடைந்தார்கள்.

விளக்கவுரை-ஆங்கு *- அவ்வாறு மாமறைக்காட்டிற் சென்று 'பாதங்கள் பணிமின்' என்று பணித்து; விட-விடுக்க.*

அறிவுடை மாந்தர் *- அறிவின் மிக்கோரே நாடு உய்யத்தக்க இத்தகைய அரும்பணி செய்தற்குரியார் என்பது குறிப்பு. இவ்வாறு அறிவின் மிக்கோரையே பெண் கொள்ள மணத்திறம் பேச விடுக்கப்பெறும் வழக்கும் இங்கு நினைவுகூர்தற்பாலது; "குலமுத லறிவின் மிக்கார்" (154); "மேலோரைச் செலவிட்டார்" (1288); "முதிருணர்வின் மாதவரும்" (882); முதலியவை பார்க்க.*

அங்கண் நீங்கி *- அங்குநின்றும் புறப்பட்டு; நீக்கப் பொருளில் வரும் ஐந்தனுருபு தொக்கது; அங்கு - என்றது திருவாலவாய்த் திருநகர் எனப் பொருள்தந்து நின்றது.*

வண் தமிழ்நாட்டு எல்லை பிற்பட *- தமிழின் வண்மையாவது பயின்றார்க்கு இறைவனை அடையும் நெறிகாட்டி இம்மை மறுமை அம்மை என்ற பயன்கள் மூன்றனையும் வழங்குதல்;* ***எல்லை பிற்பட*** *- இவர்கள் கடந்து மேற் சென்றமையால்*

எல்லை பின்னதாக நிற்க எல்லையினைக் கடந்துசெல்வோர் முற்பட்டு நீங்கும் செயலை எல்லையின்மேல் வைத்து எல்லை பிற்பட என்று கூறியது உபசார வழக்கு.

நெறியின் ஏகி - தூரத்தின் அளவு சுருங்கிய முறையில் உள்ள நெறியின்வழியே சென்று; இவ்வழி மதுரையினின்றும் வட கிழக்கில் மேலூர் - திருப்புத்தூர் - அறந்தாங்கி - அதிவீரராமன் பட்டினம் வழியாகச் செல்வது என்பது கருதப்படும்; ஆளுடைய பிள்ளையார் எழுந்தருளித் திருக்கொடுங்குன்றத்தினின்றும் போந்தது மற்றொரு வழி; வடக்கினின்றும் மதுரையை நோக்கி வருவது; சிறிது அதிகம் தொலைவில் உள்ளது.

ஞாங்கர் - அவ்விடையில் உள்ள; நீர்நாடு - சோழநாட்டின் பகுதி; இது பாண்டிநாடு கடந்துசெல்லும்போது திருமறைக்காட்டிற் சென்று சேரும் இடையில் உள்ள சோழநாட்டின் பகுதி.

காடும் நதிகளும் கடந்துவந்து - காடு - பாண்டிநாட்டின் கீழ்கோடிப் பகுதிகளும் அதனை அடுத்த சோழநாட்டின் தென் கீழ்க்கோடிப் பகுதிகளும் (வேதாரணியம்) திருமறைக்காடுவரையிற் காடாரம்பமான நிலங்களேயாம்; இதனுள் பற்பல சிறு நதிகளும் கிளை நதிகளும் ஓடிக் கீழ்க்கடலிற் சேர்கின்றன. இவற்றையெல்லாங் கடந்துசென்றமை கூறப்பட்டது; திருக்கானப்பேர், மேற்பனைக்காடு, மரவக் காடு, திருஇடும்பாவனம், திருமறைக்காடு முதலிய பதிகளின் பெயர்களே இந்நாட்டினியல்பை உணர்த்தும். **நதிகள்** - முத்தா நதி - தேனாறு - பாம்பாறு - தென் வெள்ளாறு - அக்கினியாறு முதலியன; **வந்து** - நமது கருத்தை இவர்கள் குறித்த இடமாகிய ஈண்டுப் பிள்ளையாரிருக்குமிடத்தில் வைக்கவிடுகின்றனராதலின் **சென்று** என்னாது **வந்து** என்றார்; **நீர் நாடு** - சோழநாட்டில் இடைப்பட்ட மருதநிலப் பகுதி.

தேங்கமழ் கைதை நெய்தல் - **தேம்** - மணம் என்றலுமாம்; கைதை - தாழை; நெய்தற்கருப்பொருளுட் சிறந்ததாதலின் மிகுதிபற்றித் தாழையை முற்படக் கூறினார்; இவர்களை நல்வரவேற்றல்போல நெடுந்தூரம் மணம்வீசும் தன்மையால் இவர்களை எதிர்கொண்டழைப்பதுபோன்ற கைதையினைப்பற்றிக் கூறினார்; நெய்தல் - நெய்தல் நிலம்; கடலும் கடலைச் சார்ந்த இடமுமாம்.

நெய்தல் - திருமறைக்காடு - நெய்தனிலப் பகுதியினைக்கொண்ட திருமறைக்காட்டின் புறம்; இங்கு நெய்தலைக் குறித்தது, சோழநாடு நீர்நாடு எனப்பட்டு மருதமிக் குள்ளதாதலின், அதனுள் மருதநிலப் பகுதி கடந்து கீழ்க்கோடியில் நெய்தற் பகுதியினைச் சேர்ந்தமை குறித்தற்கு; **ஞாங்கர் நீர்நாடும்** - கடந்து - என்றது காண்க.

பிற்படு நெறி - என்பதும் பாடம். 608

2507. **பொருளுரை**...திருமறைக்காடு நண்ணி - திருமறைக்காட்டிற் சேர்ந்து; சிரபுரநகரில்...வந்து - சீகாழிப்பதியில் அவதரித்தருளிய அரிய மறைப் பிள்ளையார் தாம் விரும்பி இனிதாக எழுந்தருளிய செல்வம் பொருந்திய பெருமடத்தினை அணையவந்து; பெருகிய...சொன்னார் - மேன்மேற் பெருகிய விருப்பத்தினாலே தாங்கள் வரும்

2507. திருமறைக் காடு நண்ணிச், சிரபுர நகரில் வந்த
அருமறைப் பிள்ளை யார்தா மமர்ந்தினி தருளுஞ் செல்வப்
பெருமடத் தணைய வந்து, பெருகிய விருப்பிற் றாங்கள்
வருமுறைத் தன்மை யெல்லாம் வாயில்கா வலர்க்குச் சொன்னார். 609

முறைமையுடைய தன்மைகளையெல்லாம் அறியும்படி வாயில் காவலர்களிடம் சொன்னார்கள்.

விளக்கவுரை-திருமறைக்காடு நண்ணி - நகரினுட் சேர்ந்து; முன் பாட்டில் **நெய்தற் றிருமறைக்காடு சேர்ந்தார்** என்றது நெய்தனிலப் பகுதியாகிய அந்நகரின் புறம்.

சிரபுரநகரில் வந்த - சீகாழியில் அவதரித்தருளிய; **வருதல்**-ஈண்டு அவதரித்தல் என்னும் பொருள்தந்து நின்றது. "சண்பையிலே...பிள்ளையார் திருவவதாரஞ் செய்தார்" (1924); கயிலையில் இறைவரது திருவடி மறவாத நிலையில் ஒன்றியிருந்தவர் அந்நிலையே (தமக்கென வருதற்கு வேறு காரணமின்றி) வந்தவர் என்ற குறிப்புப் பெற **வந்த** என்றார்.

அமர்ந்து இனிது அருளாம் செல்வப் பெருமடம் - **அமர்தல்** - விரும்புதல்; இதனால் உலகம் நலம் பெறற்பொருட்டுப் பரம ஆசாரியர் செய்யும் எல்லாத் தீக்கைகளையும் உள்ளிட்ட சற்பாவனையும், **இனிது அருளும்** என்றதனால் பாச நீக்கமும், செல்வம் என்றதனால் சிவப்பேறும், பெருமை என்றதனால் அடியார் கூட்டத்தின் சிறப்பும்பெற வைக்கும் இடம் என்ற குறிப்புக் காண்க. திருமறைக்காட்டின் அருணிகழ்ச்சிகளின் பின் பிள்ளையார் பலநாள் எழுந்தருளியிருத்தற்கிடமாகியபெருமை (2496) யேயன்றி, அவரது **அவதார உள்ளுறையாகிய பரசமய நிராகரிப்பும், நீறு போற்றுதலாகிய சைவத்தின் நிலை பேறும் நிகழ்தற்குரிய பாண்டிநாட்டு விசயத்துக்குத் தோற்றுவா யாகும் பெருமையும்பற்றி இவ்வாறு விதந்து கூறியருளினார்;** இவையெல்லாம் திருவாலவாயிற் பிள்ளையார் எழுந்தருளிய திருமடத்துக்கும் ஒப்ப உரியது என்பது "காழியா ரிளவேறு, தங்குமிடந் திருநீற்றுத் தொண்டர்குழாஞ் சாருமிடஞ், செங்கமலத் திருமட மற்றிது" (2775-புரா-877) என்பதனாலு மறிக.

பெருமடத்து அணையவந்து - பெருமடத்தின் புறத்திற் சேர்ந்து; **வந்து** - "கடந்துவந்து" (2506) என்ற இடத்திற்போலப் பொருள் கொள்க. முன் **சிரபுர நகரில் வந்த** என்ற இடத்தில் **வந்த** என்றதன் பொருள் வேறுபாடு கண்டுகொள்க.

பெருகிய விருப்பின் - வரும் என்றும், **பெருகிய விருப்பின் - சொன்னார்** என்றும் இரு வழியும் கூட்டி உரைக்க நின்றது.

பெருகிய விருப்பின் தாங்கள் வருமுறைத் தன்மை எல்லாம் - பெருகிய விருப்பில் - அம்மையார்பாலும் அமைச்சனார்பாலும் பெருகிய விருப்பம் காரணமாக என்க; இவ்விருப்பம் பெருகு நிலை 2504-2505ல் உரைக்கப்பட்டது; '**காதலான் மிக்கோர்**" (2505) என்றது காண்க; **இன்** - ஏதுப்பொருளில் வந்த ஐந்தனுருபு; அவ்விருப்பத்துடன் தங்கள்

2508. மற்றவர் சென்று புக்கு "வளவர்கோன் மகளார் தென்னர்
கொற்றவன் றேவி யாருங் குலச்சிறை யாரு மேவப்
பொற்கழல் பணிய வந்தோ" மெனச்சிலர் புறத்து வந்து
சொற்றன" ரென்று போற்றித் தொழுதுவிண் ணப்பஞ் செய்தார். 610

விருப்பமும் கூடப் பெருகியதென்பதும் குறிக்கத் **தாங்கள் வரும்** என்றார். **வரும்முறைத் தன்மை எல்லாம்** - 2505ல் குறித்தவை எல்லாம்; முறை-என்றதால் அங்கு நிகழ்ந்த வரலாறுகளும் தன்மை என்றதனால் அவற்றின் உள்ளுறையாகிய நிலைமைகளும். **எல்லாம்** என்றதனால் 2505 - 2511 - 2512 முதலியவற்றுள் உரைக்கப்படும் குறிப்புக்கள் யாவையும் என்றும் கூறப்பட்டன.

வாயில் காவலர்க்குச் சொன்னார் - இவை யாவும் வாயில் காவலர்க்குச் சொன்னதென்னையோ? எனின் அவர்களே உள்ளே முன்சென்று பிள்ளையாரது திருமுன்னர்ப் பதமறிந்து ஏற்றவாறு செவ்விபெற உரைக்கும் உரிமையுடையாராகலின் என்க; "பதமறிந் துணர்த்துகின்றார்" (2623); "வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர்‥அளியன் றானே முதுவா யிரவலன். வந்தோன் பெருமநின் வண்புகழ் நயந்தென" (முருகு) முதலியவை காண்க.

அருமறைத் தலைவனாரங் கமர்ந்திருந்தருளும்-என்பதும் பாடம். 609

2508. பொருளுரை‥மற்றவர் சென்றுபுக்கு - மற்று அவர்கள் சென்று உள்ளே புகுந்து; போற்றித் தொழுது - பிள்ளையாரைத் துதித்துத் தொழுது; "வளவர்கோன்‥சொற்றனர்" என்று - சில மாந்தர் திருமடத்தின் புறத்தில் அணைந்து சோழ மன்னருக்கு மகளாராகிய பாண்டிய அரசரது மாதேவியாரும் குலச்சிறையாரும் ஏவிவிடுத்தபடி தேவரீருடைய பொற்கழல்களைப் பணிவதற்கு வந்தோம் எனச் சொன்னார்கள் என்று; விண்ணப்பஞ் செய்தார் - விண்ணப்பித்தார்கள்.

விளக்கவுரை‥போற்றித் தொழுது - விண்ணப்பிக்கும்முன் நிகழவேண்டிய மரபு.

மற்று அவர் சென்று புக்கு - அவர் - வாயில்காப்போர்; வாயிற் காவலர் பணியாளராதலின் எப்போதும் உட்புகுந்து அறிவிக்கும் உரிமையுடையார்; அடியார்களுக்கு உள்ள சிறப்பு இத்தன்மைத்து.

வளவர்கோன் மகளார் - தென்னர் கொற்றவன் தேவியார் - சோழரது மகளார் என்ற தன்மையை முதலில் வைத்துக் கூறியது பிள்ளையார்பால் தொடர்புபடுத்தும் நாட்டின் உரிமைபற்றியும் சிறப்புப்பற்றியும் என்க; திருவாதவூரடிகள்பால் தில்லையம்பதியிற் பன்னசாலையின்கண் வந்து திருவாசகத்தினைப் பெற்றெழுத மறையவராய் வந்த இறைவர் தமது நாடு பாண்டிநாடு என்றறிவித்ததன் உட்குறிப்பு இங்கு நினைவுகூர்தற்பாலது; "வளவர்கோன் பாவை‥பாண்டிமாதேவி" என்ற தேவாரத்துள் வைப்புமுறையும் காண்க.

2509. புகலிகா வலர்தாங் கேட்டுப், பொருவிலா வருண்முன் கூர
அகமலர்ந் "தவர்க டம்மை யழையு" மென் றருளிச் செய்ய,
நகைமுகச் செவ்வி நோக்கி நற்றவ மாந்தர் கூவத்,
தகவுடை மாந்தர் புக்குத் தலையினால் வணங்கி நின்றார். 611

தென்னர் - பாண்டிநாட்டவருடைய; தென்னாட்டில் வாழ்வோர் என்ற காரணப் பெயர்; ஆறனுருபு விரிக்க.

புறத்து வந்து - திருமடத்தின் புறத்தில்வந்து அணைந்து. *610*

2509. பொருளுரை—புகலி...கேட்டு சீகாழித் தலைவராகிய பிள்ளையார் வாயில் காவலர்கள் சொல்லியதைக் கேட்டு; பொருவிலா...கூர - ஒப்பற்ற அருள் முன்னே கூர்தலினாலே; அகமலர்ந்து—அருளிச்செய்ய - மனமிக மகிழ்ந்து "அவர்களை இங்கு அழையுங்கள்" என்று கட்டளையிட்டருள; நகைமுகச் செவ்வி...கூவ - பிள்ளையாரது நகைமுகத்தின் செவ்விதாகிய தன்மையைக் கண்ட நல்ல தவமாந்தர்களாகிய தொண்டர்கள் சென்று அவர்களை வரும்படி அழைக்க; தகவுடை....வணங்கிநின்றார் - நல்ல தகைமை பொருந்திய மாந்தர்களாகிய அப்பாண்டிநாட்டவர்கள் உள்ளே புகுந்து பிள்ளையாரைத் தலையினாலே வணங்கி எழுந்து நின்றனர்.

விளக்கவுரை-பொருவிலா அருள்முன்கூர அகமலர்ந்து - ஒப்பற்ற அருள்முன்னே பெருக என்றது **அவர்கள் வந்து விண்ணப்பம் செய்தபின்னர்ச் செய்யநின்ற அருளானது தெய்வத்தன்மையால் முன்னரே இறைவர் உண்ணின்றுணர்த்த விளைந்து பெருகிற்று என்றதாம்; இது பெருவிளைவாய்த் திருநீற்று நெறியின் ஆக்கத்திற்கும் அதற்குத் தடையாய்நின்ற பரசமயங்களின் நீக்கத்திற்கும் காரணமாய் முறுகுதலான்** பொருவிலா அருள் என்றார்; **அருள்** - தெய்வத் திருவருள்; **அருள்கூர அகமலர்ந்து** - கூர - கூர்தலால்; அகமலர்ச்சிக்குக் காரணம் அருள்கூர்தல் என்றபடி.

நகைமுகச் செவ்வி நோக்கி - இது உலகநிலையில் பரிசனங்களும், நன்மைபெற விரும்பும் பிறரும் அறிந்துகொள்ளவேண்டிய உண்மை. தலைவர் இன்முகமாக இருக்கும் பதம் நோக்கி இரவலரை விடுப்பதும், அவ்வாறில்லையாயின் விண்ணப்பம் பயன் பெறாது முடிவதும் உலக இயல்பு; **நகைமுகச் செவ்வி** நோக்கியது அதற்குக் காரணமாகிய **அகமலர்ச்சியினை** யவர்கள் உய்த்துணர்தற்கேதுவாய் நின்றது.

நற்றவ மாந்தர் - இவர்கள் அருகேநின்ற அடியார்கள். இவர்களே மேல் பிள்ளையாரிடம் பாண்டிநாட்டவர்களின் விண்ணப்பத்தின்படி வேண்டுகின்றவர். 2512 பார்க்க. நற்றவமாவது பிள்ளையார்பால் அணுக்கத் தொண்டர்களாய் நின்று பணிபுரிய வாய்த்த தவமும், பாண்டிநாட்டில் இனி நிகழ உள்ள சிவன் அருள் விளக்க நிகழ்ச்சிக்குத் தொடக்கத்தில் உடனிருந்து உதவ வாய்த்த தவமும் ஆம்.

தகவுடை மாந்தர் - பாண்டிநாட்டிலிருந்துவந்த அறிவுடை மாந்தர்; **தகவு** - தகுதி. ஒரு பெருநாடு முழுமைக்கும் சைவ நெறிக்கும் வந்த பெருந்தீங்கினை நீக்குதற்கு உதவிய

2510. நின்றவர் தம்மை நோக்கி நிகரில்சீர்ச் சண்பை மன்னர்
மன்றலங் குழலி யாரா மானியார் தமக்கும் மானக்
குன்றென நின்ற மெய்ம்மைக் குலச்சிறை யார்த மக்கும்
நன்றுதான் வினவக் கூறி நற்பதம் போற்று வார்கள்; 612

தூதர்களாய் நிற்கும் அறிவாற்றல் அன்பு முதலியவற்றின் தகுதி: "அறிவுடை மாந்தர்" என முன் கூறியது காண்க.

தலையினால் வணங்கி நின்றார் - தலை நிலத்திற் பொருந்த வீழ்ந்து வணங்கி எழுந்துநின்றனர். 611

2510. பொருளுரை—நின்றவர் தம்மைநோக்கி - முன் சொல்லியவாறு வணங்கி எழுந்துநின்ற அவர்களை நோக்கி; சண்பை மன்னர்...வினவ - சீகாழி மன்னவராகிய பிள்ளையார் மங்கையர்க்கரசியம்மையாருக்கும் பெருமையுடைய மலைபோல மெய்யடிமைத்திறத்தில் ஒழுகிநின்ற குலச்சிறையாருக்கும் நன்மைபொருந்திய நிலையினைப் பற்றி வினவ; கூறி நற்பதம் போற்றுவார்கள் - அந்நன்மை நிலைமையைச் சொல்லி, அதன்மேல் பின்னும் பிள்ளையாரது நல்ல திருவடிகளைத் துதிப்பவர்களாகி,

விளக்கவுரை...நின்றவர் - திருமுன்பு நிலமுறத் தலையினால் வணங்கி எழுந்துநின்றவர்.

மன்றலங் குழலியாராம்-வினவ - பாண்டி நாட்டவர்களை நலம் வினவப் புகுகின்ற பிள்ளையார் முதலில் அம்மையாரும் குலச்சிறையாரும் நலம்பெருக நிகழ்கின்றார்களா? என வினவினார்; அவர்கள் விடுக்க வந்தாரிவர்களாதலானும், அவர்களிருவரின் நலமே பாண்டிநாட்டுக்கும் மன்னனுக்கும் இனி வரும் நலத்திற்குக் காரணமாய் நிகழ்தலானும் இவ்வாறு அவ்விருவர் நன்மைகளையே வினவியருளினார் என்க; வந்த அவர்கள் அவ்விருவரது ஏவல்வழி வந்தார்களாதலின் அவர்களை வேறு வினவவேண்டிய கடப்பாடு இன்றாதல் காண்க. இதன் உட்கிடையினையும் இயல்பையும்பற்றி மேல் குலச்சிறையாரைக் கண்ட இடத்துப் பிள்ளையார் வினவும் நிலையின் கண்ணும் (2556) விரிவாய்க் கண்டுகொள்க.

மானியார் - மங்கையர்க்கரசியம்மையார்; "வளைக்கை மானி" (தேவா).

மானக் குன்றென நின்ற மெய்ம்மை - பெரிய மலைபோல மெய்யொழுக்கத்தில் நிலைநின்ற குலச்சிறையார்; மானம் - பெரிது; மெய்ம்மை நின்ற என்று கூட்டுக; மெய்ம்மை - மெய்ந்நெறியாகிய சைவத்தின் கடைப்பிடி; மானம் - இங்கு நற்குணத்தின் பெருமை குறித்தது. "குணமென்னும் குன்றேறி நின்றார்" (குறள்). மானம் - "மானம் படவரின்", "உயிர்நீப்பார் மானம் வரின்" என்ற இடங்களிற் போல, தந்நிலை பிறழாமையும், பிறழவரின் உயிர் வாழாமையுமாகிய பொருளையும் குறிப்பால் தந்து நின்றது. குன்றன என்பதும் பாடம்;

2511. "கன்னிநா டமணர் தம்மாற் கட்டழிந் திழிந்து தங்கண்
மன்னனு மவர்கண் மாயத் தழுந்த,மா தேவி யாருங்
கொன்னவி லயில்வேல் வென்றிக் குலச்சிறை யாருங் கூடி
'யிந்நிலை புகலி வேந்தர்க் கியம்பு' மென் றிறைஞ்சி விட்டார்"; 613

மானக் குன்றென மெய்ம்மை நின்ற-மெய்ந்நெறி நிற்றற்கு இடையூறு எதுவரினும் அசையாது ஒழுக்கம் காத்துநிற்றலிற் குன்றென உவமித்தார். "நிலையிற் றிரியா தடங்கியான் றோற்ற, மலையினும் மாணப்பெரிது"(குறள்).

நன்றுதான் வினவக் கூறி - வினாவுக்கு விடை கூறியபின்; விடை கூறும் வகையால்; கூறுவார்களாகி என்றலுமாம்.

போற்றுவார்கள் - போற்றுவர்களாகி; முற்றெச்சம்; போற்றுவார்கள் - என்று விண்ணப்பஞ் செய்தபின்னர் என்று மேல்வரும் (2512) பாட்டுடன் கூட்டி முடிக்க. 612

2511. பொருளுரை-வெளிப்படை. 'பாண்டிநாடு அமணர்களாலே தனது நிலை யழிந்து தங்கள் அரசனும் அவர்களது மாயத்தினுட்பட்டு அழுந்த, அதுகண்டு, பாண்டிமாதேவியாரும் அச்சஞ் செய்கின்ற கூரிய வேலேந்திய வெற்றி பொருந்திய குலச்சிறையாரும் சேர்ந்து "இந்த நிலைமையினைச் சென்று சீகாழி மன்னவருக்குச் சொல்லுங்கள்" என்று கூறித் தேவரீரைத் தொழுது எங்களை ஏவி விடுத்தார்கள்"

விளக்கவுரை... கன்னிநாடு - பாண்டிநாடு; *கட்டழிதல்* - தனது உண்மை நிலையினின்றும் குலைவுபடுதல்.

தங்கள் மன்னன் - தங்கள் என்றது அம்மையாரையும் குலச்சிறையாரையும் குறித்தது.

அவர்கள் மாயத்தழுந்த - அமணர்களது வஞ்சனைக்குள்ளாகி நன்மை தீமை அறியாது அவர்கள் சார்பினுள்ளே - அழுந்தியதனால் (2498) சமணசமயம் சார்ந்து.

கொன் நவில் - *கொன்* - அச்சம்; *நவிலுதல்* - எடுத்துச் சொல்வதுபோல வெளிப்படுத்தி நிற்றல்; *கொல்* - உலைக்களம் என்ற கொண்டு உலைக்களத்தில் வைத்து வடித்தெடுக்கப்பட்ட என்றலுமாம்,

இந்நிலை-இயம்பும் - சென்று விண்ணப்பம் செய்யுங்கள்; இது அம்மையாரும் குலச்சிறையாரும் தம்மைநோக்கிக் கூறியதனை வந்த அறிவுடைமாந்தர் கூறியது.

இறைஞ்சி - அங்கு நின்றவாறே தமது வணக்கத்தைச்செய்து.

இப்பாட்டின் பொருள் முன் 1550-1551இல் விரிக்கப்பட்டமையும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. 613

2512. பொருளுரை...என்று...பின்னர் - என்றிவ்வாறு அவர்கள் விண்ணப்பஞ் செய்தபின்பு; ஏறுயர்த்த சிவபெருமான் தொண்டர் எல்லாரும் - இடபக் கொடியை

வேறு

2512. என்றவர்கள் விண்ணப்பஞ் செய்த பின்ன
ரேறுயர்த்த சிவபெருமான் றொண்ட ரெல்லாம்
"நன்றுநமை யாளுடைய நாதன் பாத
நண்ணாத வெண்ணிலமண் குண்ட ர் தம்மை
வென்றருளி. வேதநூ னெறியே யாக்கி.
வெண்ணீறு வேந்தனையு மிடுவித், தங்கு
நின்றசெயல் சிவனடியார் செயலே யாக
நினைந்தருள வேண்டு" மென நின்று போற்ற. 614

ஏந்திய சிவபெருமானது திருத்தொண்டர்களெல்லாரும்: "நன்று-வேண்டும்" என - "நன்றாக நம்மை ஆளுடைய இறைவனது திருவடிகளைச் சாராத எண்ணிலமண ராகிய குண்டர்களை வெற்றி கொண்டருளி. வேதநெறியே எங்கும் விளங்கச்செய்து. திருநீற்றினை அரசனும் பூசும்படி செய்வித்து. அங்கு மேல்நின்ற ஒழுக்கங்கள் எல்லாம் சிவனடியார்களது செயல்களே யாகும்படித் தேவரீரது திருவுள்ளத்தில் எண்ணங் கொண்டருளவேண்டும்" என்று விண்ணப்பித்து: நின்று போற்ற - நின்று துதிக்க;

விளக்கவுரை...தொண்டர் எல்லாம் "நினைந்தருளவேண்டும்" என - இவர்கள் பிள்ளையாருடனிருந்த தொண்டர்கள் . "அன்பே சிவம்" என்றபடி சிவத்தொண்டர்களாகிய இவர்கள் அன்புமிக்கவர்களாதலானும், சைவத்துக்கும் பாண்டி நாட்டுக்கும் நேர்ந்த தீங்கினுக்கு மனம் நொந்தாராதலானும், தெய்வநெறிச் சிவம் பெருக்குதலில் கருத்துள்ளாராதலானும் இவ்வாறு பிள்ளையார்பால் பாண்டிநாட்டவர்களுடைய விண்ணப்பத்தின்படி கருணைசெய்யும்படி தாமும் வேண்டினர். கருணையாளராகிய பெரியோர்களுடன் சூழ்ந்திருப்பவர்கள் இத்தன்மையரா யிருத்தல் வேண்டுமென்ற உண்மைக் குறிப்புமாம்.

"குறித்தது மொழியா வளவையிற் குறித்துடன், வேறுபல் லுருவிற் குறும்பல் கூளியர் சாறயர் களத்து தோன்றி "அளியன் றானே முதுவா யிரவலன், வந்தோன் பெரும! நின் வண்புகழ் நயந்தென" என்ற திருமுருகாற்றுப் படைக் கருத்தும், குறிப்பும் இங்கு வைத்துக் காணத்தக்கன. **தொண்டரெல்லாம் - என - நின்று போற்ற** என்று கூட்டுக.

நன்று - நண்ணாத - என்று கூட்டுக; **நன்று** - நன்மைபெறும்படி; நன்றாக; "மருத மாணிக்கத் தீங்கனி, பையப் பையப் பழுத்துக் கைவர, வெம்ம னோர்க ளினி தினி தருந்திச், செம்மாந் திருப்பச் சிலரிதின் வாராது...தமக்கும் பிறர்க்கு முதவா, திமைப்பிற் கழியு மியற்கையோர்" (இடைமருது - மும் - கோ - 10) என்றும், 'நின்னது குற்ற முளதோ? நின்னினைந், தெண்ணருங் கோடி யிடர்ப்பகை களைந்து, கண்ணுறு சீற்றத்துக் காலனை வதையா, விறப்பையும் பிறப்பையு மிகந்து சிறப்பொடு, தேவ ராவின் கன்றெனத் திரியாப், பாவிக டமதே பாவம்" (மேற்படி - 16) என்றும் வரும் பட்டினத்தடிகள் திருவாக்குக்கள் ஈண்டுக் கருதத்தக்கன.

நமை ஆளுடையநாதன் பாதம் நண்ணாத - நண்ணினால் நம்மை ஆளுடைமை போல அவர்களையு மாட்கொண்டு நன்றருளுவர் என்பது குறிப்பு.

வென்றருளி - வெல்லுதல் தானே அருளிப்பாடாகும் என்பது; "ஒளிநின்று கொன்றருளி" (791) என்றதும், ஆண்டுரைத்தவையும் இங்கு வைத்து நினைவுகூர்தற் பாலன.

வென்றருளி - நெறியே - ஆக்கி. "பரசமய நிராகரித்து நீறு ஆக்கும்" (1917) என்றவிடத்துரைத்தவை பார்க்க.

வேதநூல் நெறியே ஆக்கி - வேதங்களுள் விதிக்கப்பட்ட நெறியினையே எங்கும் ஆக்கஞ்செய்து.

வேந்தனையும் வெண்ணீறு இடுவித்து - என்க. வேந்தனையும் - சமண்சார்ந்த அந்நாட்டின் ஏனைய மக்களையுமன்றி வேந்தனையும் என உம்மை எச்சவும்மை; இடுவித்தல் - புனித நீறளித்து அணியும்படி செய்தல்; இறைவனதருளின்வழிச் செய்வித்து என்ற குறிப்புப்பெறப் பிறவினை வாய்பாட்டாற் கூறினார்; "தென்னவன் றனக்கு நீறு சிரபுரச் செல்வரீந்தார், முன்னவன் பணிந்து கொண்டு முழுவது மணிந்து நின்றான்; மன்னனீ றணிந்தா னென்று மற்றவன் மதுரை வாழ்வார், துன்னி நின்றார்க ளெல்லாந் தூயநீ றணிந்து கொண்டார்" (2755) என்பதன் முற்குறிப்பு இங்குக் காணத்தக்கது; வேந்தனையும் என்றதனால் "மன்ன னெப்படி மன்னுயி ரப்படி"; "மன்னவன் வழித்தே மன்பதை யுலகம்" என்றபடி அவனைப்பற்றிய மக்களையும் என்பது குறிப்பிடப்பட்டது.

அங்குநின்ற செயல் சிவனடியார் செயலேயாக - செயல் - ஒழுக்கம்; **சிவனடியார் செயலே** - சிவனடியார்கள் மேற்கொள்ளும் ஒழுக்கமேயாக; ஏகாரம் பிரிநிலை.

வென்றருளி - ஆக்கி - இடுவித்து - என்பன அற்றைநாளில் பிள்ளையார் செய்தருளும்படி அவர்கள் வேண்டிய செயல்கள்; **சிவனடியார் செயலேயாக நினைந்தருளல்** என்றது பிற்றை நாள்களிலும் என்றும் இவ்வாறே குறைவின்றிச் சைவ ஒழுக்கம் நிலைநிற்கும்படி எண்ணி ஆசிபுரிதல். இதனை ஏற்றுப் பிள்ளையார் அருள்புரிந்த நிலை "வாழ்க வந்தணர்" என்ற திருப்பாசுரத்தில் அருளியவாற்றாலறிக.

நினைந்தருளவேண்டும் - ஆசாரியரது நினைவு சிவசங்கற்பமுமாதலின் அந்நினைப்பினுள் நின்று இறைவன் அருளுவதுறுதி என்பது கருத்து. "நினையாதார் புரமெரிய நினைந்த" (தேவா).

நின்று போற்ற - வணங்கி எழுந்துநின்று துதிக்க; என்று மொழிந்து.

நம்பர் பாதம் - என்பதும் பாடம். 614

2513. பொருளுரை. மற்றவர்கட்கு அருள்புரிந்து - இவ்வாறு விண்ணப்பித்துநின்ற இருதிறத்தினர்கட்கும் அருள்புரிந்து; பிள்ளையாரும்..போந்து - பிள்ளையாரும் திருநாவுக்கரசருடனேகூடச் சென்று இடபத்தை யுயர்த்திய இறைவரது திருவடிகளைப் பணிந்து புறம்போந்து; பெரிய திருக்கோபுரத்துள்...சொல்லி - பெரிய திருக்கோபுரத்துள்

2513. மற்றவர்கட் கருள்புரிந்து பிள்ளை யாரும்
வாகீச முனிவருடன் கூடச் சென்று,
பெற்றமுயர்த் தவர்பாதம் பணிந்து போந்து,
பெரியதிருக் கோபுரத்து ளிருந்து தென்னா
டுற்றசெயல் பாண்டிமா தேவி யாரு
முரிமையமைச் சருமுரைத்து விட்ட வார்த்தை
சொற்றனிமன் னவருக்குப் புகலி மன்னர்
சொல்லி, யெழுந் தருளுதற்குத் துணிந்த போது. 615

இருவருமாக எழுந்தருளியிருந்துகொண்டு பாண்டிநாடு அடைந்த நிலையினைப் பற்றிப் பாண்டிமாதேவியாரும் அமைச்சுரிமையுடைய குலச்சிறையாரும் தம்மிடம் சொல்லியனுப்பிய வார்த்தையினை ஒப்பற்ற திருநாவுக்கரசருக்குச் சொல்லி; எழுந்தருளுதற்குத் துணிந்தபோது - அதன்பொருட்டுப் பாண்டிநாட்டுக்குத் தாம் எழுந்தருளுவதற்குத் துணிந்தபோது.

விளக்கவுரை மற்று அவர்கட்கு அருள்புரிந்து - அவர்கட்கு - விண்ணப்பஞ் செய்த பாண்டிநாட்டவர்க்கும், நின்று போற்றிய தொண்டர்க்கும்; இருவரும் ஒரே பொருள்பற்றிய விண்ணப்பஞ் செய்தாராதலின் அவற்றிற்குப் பிள்ளையார் அருள்புரிந்ததனை ஈண்டு ஒன்றுசேர்த்துக் கூறினார்.

பிள்ளையாரும் வாகீச முனிவருடன்கூடச் சென்று - திருமடங்களினின்று இருவரும்கூடத் திருக்கோயிலுக்குச் சென்று; பாண்டிநாட்டவர் வந்து விண்ணப்பித்த இடம் பிள்ளையாரது திருமடமாதலின் (2507) அங்குநின்று போந்து அரசுகளுடன் கூடச் சென்றருளினர்; உடன் உருபைச் சிறப்புப்பற்றி அரசுகளுடன் சேர்த்துக் கூறினார்; மேல் 2514ல் நிகழவுள்ள வரலாற்றுக் குறிப்பு.

பெற்றம் உயர்த்தவர் கொடி உயர்த்துதல் வெற்றியும் மேன்மையும் குறிக்கும்; இனிப் பாண்டி நாட்டுக்கும் சைவத்திற்கும் வரும் வெற்றியும் ஆக்கமும் குறிப்பு;

பெற்றம் உயர்த்தவர் பாதம் பணிந்து போந்து - உட்புகுந்து திருமுன்பு பணிந்து திருமுன்றிலிற் புறம்புபோந்து; "அவர்கட் கருள்புரிந்த" பிள்ளையார் பின்னர்த் திருவருளை முன்னிட்டு அதனை அரசுகளிடமும் அறிவித்து முடிபுகொண்டு துணிவதன்முன், இறைவரருளைப் பெற்றுத் தொடங்குவதற்காக இங்குப் பணிந்து புறம் போந்தனர்; இறைவரிடம் விடைபெற்று அப்பதியினின்றும் புறப்படும் கருத்தன்று; அது பின்னர் "மீண்டும் புக்குப் பாதமுறப் பணிந்தெழுந்து பாடிப் போற்றிப் பரசியருள்பெற்று விடைகொண்டு போந்து" (2516) என்றதனாற் பெறப்படும்.

பெரிய திருக்கோபுரத்துள் இருந்து - வார்த்தை - சொற்றனி மன்னவருக்குப் புகலி மன்னர் சொல்லி - பெரிய திருக்கோபுரம் - திருமுன்றிலின்புறத்து அபி முகத்துள்ள கோபுரங்களுட் பெரிய கோபுரம். பெரிய திருக்கோபுரத்துள் இருந்து - சொல்லி -

2514. அரசருளிச் செய்கின்றார் "பிள்ளா! யந்த
வமண்கையர் வஞ்சனைக்கோ ரவதி யில்லை;
யுரைசெய்வ துளதுறுகோ டானுந் தீய;
வெழுந்தருள வுடன்படுவ தொண்ணா" தென்னப்,
"பரசுவது நம்பெருமான் கழல்க ளென்றாற்
பழுதணையா" தெனப்பகர்ந்து, பரமர் செய்ய
விரைசெய்மலர்த் தாள்போற்றிப் புகலி வேந்தர்
"வேயுறுதோ ளி"யை யெடுத்து விளம்பி னாரே. 616

திருக்கோயிலினுள் இறைவரைப் போற்றுதல், துதித்தல், பாடுதலன்றி வேறு பேச்சுக்கள் பேசலாகாதென்பது விதி; ஆயின் இப்பெரும் பேச்சைத் திரு முன்னர் வைத்துப் பேசித் துணிதலும் முடித்தலுமே தகுதி; ஆதலின் கோயிலினுக் குள்ளாகாமலும், புறமாகாமலும் உள்ள தன்மைபெற்ற பெரிய திருக்கோபுரத்துள் ளிருந்து பிள்ளையார் அரசுகளிடம் இவ்வார்த்தை வரலாற்றை சொல்லினார் என்க; அன்றியும் இத்தகைய சைவ மேன்மைப் பேச்சுக்கள் அங்கு நிகழும் மரபும் வழக்கு முண்டு; **சொற்றனி மன்னர் - புகலிமன்னர்** - இருவரையும் ஒன்றுபோல இத்தன்மை யாற் கூறியதுபற்றி முன்னர் உரைத்தவை பார்க்க. பின்னரும் (2838) காண்க.

உரைத்துவிட்ட வார்த்தை - சொல்லி மாந்தரை ஏவி யனுப்பிய செய்தி; "தென்னாடு உற்றசெயல்"; **வார்த்தை** - விண்ணப்பத்தை; இரண்டனுருபு விரிக்க.

தனி - மேற்பாட்டிற் கூறும் உரிமைப்பாட்டின் பெருமை குறிக்கத் தனி என்று சிறப்பித்தார்.

எழுந்தருளுதற்குத் துணிந்த - செல்ல முடிபுசெய்த.

செயலை - உரைத்துவிட்ட வார்த்தையைச் சொல்லி என்று கூட்டிமுடிக்க.

உரிமையமைச்சர் - கோற்றொழில் திருத்தி நாட்டை நன்னெறிப்படுத்தும் உரிமை அமைச்சருடையதே என்பது குறிக்க உரிமை என்றார். 615

2514. பொருளுரை. அரசு அருளிச்செய்கின்றார் - ஆளுடைய அரசுகள் அருளிச் செய்வாராகி; "பிள்ளாய்!...ஒண்ணாது" என்ன - "பிள்ளாய்! அந்த அமண் கையர்களுடைய வஞ்சச் செய்கைகளுக்கு ஒரு அளவு இல்லை. மேலும் யாம் சொல்ல வேண்டுவதுமுண்டு; பொருந்திய கிரகநிலைகளும் தீமை பயப்பனவாயுள்ளன; அங்கு எழுந்தருளுவதற்கு உடன்படுவது தகாது" என்று சொல்ல; "பரசுவது...பழுதணையாது" எனப் பகர்ந்து, "நமது பெருமானுடைய திருவடிகளையே நாம் போற்றுவதாம் என்றால் தீங்கு அணையாது" என்று கூறி" பரமர்...போற்றி - பரமசிவனுடைய செம்மையாகிய மணமுடைய மலர்போன்ற திருவடிகளைத் துதித்து; புகலிவேந்தர்...விளம்பினாரே - சீகாழி மன்னவராகிய பிள்ளையார் "வேயுறு தோளி" என்று தொடங்கும் திருப்பதிகத்தை எடுத்து அருளிச்செய்தனர்.

இவ்வைந்து பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன. இவை பாண்டிநாட்டு வாதுவின்கண்ணும் பிள்ளையாரது துணிந்த முடிபும் ஒரு தொடர்புபடக் கொண்டுநின்றன. இவை திருவைந்தெழுத்தாகிய ஆதி மந்திரமாகவும். சிவ மூல பஞ்சப்பிரம மந்திரங்களாகவும் நின்று பாண்டிநாட்டின் காவலை விளைத்தன என்க: "- ஆதி மந்திர மஞ்செழுத் தோதுவார் நோக்கு மாதி ரத்தினு மற்றைமந் திரவிதி வருமே" (2596) என்றது கருத்து இங்கு வைத்துக் கருதத்தக்கது

விளக்கவுரை - இப்பாட்டுள் அரசுகளருளிய தடையும். அதற்குப் பிள்ளையார் அருளிய விடையும், அதற்கு உள்ள ஆணையாகிய ஆதாவும் எடுத்துக் கூறப்பட்டன.

பிள்ளாய்! - பிள்ளையார் "அப்பரே!" (1451 - 2479) என்றதனையே மேற்கொண்டு அரசுகள் இவ்வாறு விளித்தனர்; பிதாவின் நிலைபூண்டு பிள்ளையாரைத் தீங்குவராமற் காவல்செய்யும் தன்மை கொண்டு மொழிகின்றாராதலின் இவ்வாறு அழைத்தது அவர்பால் அன்பின் மிகுதி குறித்ததேயன்றிக் குறைவுபடுத்தாதென்க.

வஞ்சனை - வஞ்சித்துச்செய்யும் தொழில்கள்: **அவதி** - எல்லை; அளவு; **அவதி** - தீமை - தொல்லை - துன்பம் - என்று கொண்டு. அமண்கையர் வஞ்சனை செய்வார்; ஆனால் அதனால் தீங்கு வாராது என்ற குறிப்புப்படவும் நின்றது; இப்பொருளில் **ஓர்** - ஒன்றும் என முற்றும்மை விரித்துரைத்துக்கொள்க; "ஆனால் உரை செய்வதொன்றுளது; அது கோள் தீய ஆனதாற் செல்ல உடன்படுவதொண்ணாது" என்றுரைக்க. **அமண்கையர்- அமண்**-ஆடையில்லாமை; **கையர்** - கைக்கொள்பவர்; அமணராகிய கீழ்கள் என்றலுமாம் - மானமில்லாமையும் தீக்குணமும் குறிப்பு:

உறுகோள் உறும் - பொருந்தும்; **கோள்** - நவக்கோள்கள்; கிரகநிலை; "உறுகோளு நாளும்" (பதிகம் - 11).

செல்ல உடன்படுவது - பிள்ளையார் உடன்படுவதென்றும், தாம் உடன்படுவதென்றும் இருவழியும் உரைக்கநின்றது.

"பரசுவது-அணையாது" எனப் பகர்ந்து - இது பிள்ளயார் எடுத்துக் கூறிய படி பதிகக் கருத்தும் குறிப்புமாம்; பதிக மகுடம் காண்க.

பரமர் தாள்போற்றி - பதிகத்தால் அரசுகளது தடைக்கு விடை பகர்ந்ததனோடு பரமர் துணைசெய்தருளும்படி போற்றியதுமாம்; "அடியாரை வந்து நலியாத வண்ண முரைசெய், ஆன சொன்மாலை"(பதிகம் - 11).

"வேயுறு தோளி"யை - 'வேயுறு தோளி" என்று தொடங்கும் பதிகத்தை; முதற் குறிப்பு.

எடுத்து விளம்பினார் - தொடங்கிப் பாடியருளினார்; இப்பாட்டின் பொருள் முன் 1552 - 1553 - 1554 பாட்டுக்களில் விரிக்கப்பட்டமையும், ஆண்டுரைத்தவையும் பார்க்க.

பொது - கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

பண் - பியந்தைக் காந்தாரம்

வேயுறு தோளி பங்கன் விடமுண்ட கண்டன் மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமே லணிந்தெ னுளமே புகுந்த வதனால்
ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி சனிபாம் பிரண்டு முடனே
ஆசறு; நல்ல; நல்ல வவைநல்ல நல்ல; வடியா ரவர்க்கு மிகவே. (1)

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க எருதேறி யேழை யுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும் உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (2)

உருவளர் பவளமேனி யொளிநீ றணிந்து உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கண் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி திசைதெய்வ மான பலவும்
அருநெறி நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (3)

மதிநுதன் மங்கையோடு வடபா லிருந்து மறையோது மெங்கள் பரமன்
நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர் கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (4)

நஞ்சணி கண்டன்எந்தை மடவாள்த னோடும் விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடு உருமிடியும் மின்னும் மிகையான பூத மவையும்
அஞ்சிடு நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (5)

வாள்வரிய தளதாடை வரிகோ வணத்தர் மடவாள் தனோடு உடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல் கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (6)

செப்பிள முலைநன்மங்கை யொருபாக மாக விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியுமப்பும் முடிமே லணிந்தென் உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாத மிகையான பித்தும் வினையான வந்து நலியா
அப்படி நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (7)

வேள்பட விழிசெய்தன்று விடைமே லிருந்து மடவாள் தனோடு உடனாய்
வாண்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென் உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும் இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல வவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (8)

பலபல வேடமாகும் பரனாரி பாகன் பசுவேறும் எங்கள் பரமன்
சலமகளோ டெருக்கு முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனுமாலு மறையோடு தேவர் வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (9)

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு குணமாய வேட விகிர்தன்
மத்தமு மதியுநாக முடிமேல் அணிந்தென் உளமே புகுந்த அதனால்
புத்தரொ டமணைவாதில் அழிவிக்கு மண்ணல் திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல அடியா ரவர்க்கு மிகவே. (10)

தேனமர் பொழில்கொளாலை விளைசெந்நெல் துன்னி வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரமா புரத்து மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளுநாளும் அடியாரை வந்து நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில் அரசாள்வர் ஆணை நமதே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- பாசுவது நம்பெருமான் கழல்களென்றாற் பழுதணையாதெனப் பகர்ந்து பரமர்தாள் போற்றுதல் என ஆசிரியர் முன் (2514) காட்டியருளியபடி கண்டுகொள்க. குறிப்பு - **வேயுறு தோளி** என்று தொடங்கியது வெற்றி தரும் சிவ சக்தியை முன்னிட்டது குறிப்பு; "போகமார்த்த பூண் முலையாள்" "தளிரிள வள ரொளி", "பாடகமெல்லடிப் பாவை" முதலியவையும் பார்க்க (வ. சு. செ. குறிப்பு)

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **மிக நல்ல வீணை தடவி** - "கங்காளராய் வருங்கடன் மீளநின் றெம்மிறை நல்வீணை வாசிக்குமே" (திருவிருத் - தனி) என்றபடி உலகம் புனருற்பவமாய் வரும்பொருட்டு இறைவர் சங்காரத்திறுதியில் வீணை ஒலியினை ஆக்கி கேட்பர் என்பது; "ஓதத் தொலிமடங்கி யூருண் டேறியொத் துலக மெல்லா மொடுங்கியபின், வேதத் தொலிகொண்டு வீணைகேட்பார் வெண் காடு மேவிய விகிர்த னாரே" (தாண்) என்றபடி இவ்வீணை ஒலி தம்முள் ஒடுங்கிய உலகம் மீள வருமாறு நாதரூபமாய்ச் சுத்த மாயையின் முதல் விருத்தியாகி நிகழ்வது. இங்கு "வீணை தடவி என்னுளமே புகுந்த" என்றதனால் சமண் மாசும் ஆசும் அறுதலாகிய சங்காரக் குறிப்பும், மீளச் சைவத்தின் ஆக்கமாகிய புனருற்பவக் குறிப்பும் பெற்றப்பட்டன; **புகுந்த அதனால்** - ஆசறுதலும் நல்லவாதலும் அவன் அருள் காரணமாகவே நிகழ்வன என்று தற்போத மிழந்தநிலை குறித்தது; "பரசுவது நம்பெருமான் கழல்க ளென்றால் பழுதணையாது" (2514) என்று ஆசிரியர் இதன் கருத்தை விளக்கியருளினர்; **ஞாயிறு...பாம்பிரண்டும்** - இவை நாளும் கோளும் குறித்தன; ஏழு நாட்களின்பெயரோடு ஒன்பது கோள்களையும் இவ்வாறு அடையின்றி ஓர் அடியில் அடக்கிக் கூறியது தெய்வ அருட்கவி நலம். அவற்றின் விரிந்த பெரிய வன்மைகள் யாவும் இவ்வாறு ஒடுங்கிநிற்கப் பணித்தது அருள்வன்மை; "பெரியநின் வலியை யின்னே, தேற்றம் துறாத கொள்கைச் சிறியநம் வன்மை தன்னா, லூற்றுடைப் பாலிற் புக்க வுறையென வடுது மன்றே" (கந்தபு - இரண் - சூர - யுத் - பட - 252) என்று

சூரனுக்கு முருகப்பெருமானருளிய அருட்கூற்று இங்கு நினைவுகூர்தற்பாலது; **உடனே** - ஒன்றொன்றாயன்றி ஒருங்கே; **ஆசறும் தீமை** - நீங்கும்; **நல்லநல்ல** - பொருளுக்கு அழிவுகூறாத சற்காரியவாதம் சைவ முடிபாதலின் அவை அழிந்துபோகா நல்லனவாய் மாறும்; **அவை நல்லநல்ல மிகவே** - அவை தீங்கு நீங்கித்தாம் நல்ல வாதலேயன்றி ஏனையோர்க்குப் போலல்லாது அடியார்க்கு உயிர்த்திறத்துப்பற்றிய மிக்க நன்மைகளைப் பயக்கும்; இப்பயன்களைப் பிற்சரித விளைவுகளில் வைத்து, **ஆசறுதல்** - சமணர்கள் மாட்டிய தீப் பயன்படாது ஒழிந்தமையாலும், **நல்லவாதல்** - வாதங்கள் மூன்றிலும் அவர்கள் தோற்கச் சைவத்திற்கு வெற்றியாயினமையாலும், **மிகவே, நல்லவாதல்** - சமணீங்கிச் சைவத் திருநெறி நடந்து வேந்தனும் நாட்டவரும் திரு நீறணிந்தமையாலும் சைவம், அம்மை-அமைச்சர் - அரசன் என்ற மூன்று பேரடியார் களைப் பெற்றமையாலும் கண்டுகொள்க; **அடியார் அவர்க்கு** - அடியார்களுக்கும் அடிமைத்திறத்தில் வந்த அவர்க்கும்;- (2) **என்பு** - வீந்தாரிருவர் களேபரம்; **கொம்பு** - பன்றியின் கொம்பு; **ஆமை** - ஆமையின் முதுகோடு; **ஏழை** - உமை யம்மை; **ஒன்பதோடும்நாள்கள்** - நாண்மீன்களின் உற்பத்தி கிருத்திகை முதலாக வருமென்றும், இங்குக் கூறிய 9 - 1 - 7 - 18 என்பவை கிருத்திகை முதலாக எண்ணப்படுதலின் முறையே பூரம், கிருத்திகை, ஆயிலியம், பூராடம் என்றும், **ஆறும் உடனாய நாள்கள்** என்றது முன்கூறிய நான்கல்லாத எட்டு நட்சத்திரங்களாகிய பூரட்டாதி, மகம், கேட்டை, பரணி, சுவாதி, விசாகம், ஆதிரை, சித்திரை என்றும் கூறுவர். ஆக இப்பன்னிரண்டும் வழிநடைக்காகா நாள்கள் என்பர்; "ஆதிரை பரணி கார்த்திகை யாயில்ய முப்பூரங் கேட்டை தீதுறு விசாகஞ் சோதி சித்திரை மகமீ ராறும், மாதனங் கொண்டார் தாரார் வழிநடைப் பட்டார் மீளார், பாய்தனிற் படுத்தார் தேறார்"என்றதொரு (சோதிடகிரக சிந்தாமணி - கூடாநாள்) சோதிடநூல் வழக்கும் உண்டு; இவ்வாறன்றி வேறுமுறையாகவைத்து எண்ணுவதுமுண்டு. **நாள்கள்** - நாண் மீன்கள்;- (3) **திருமகள்** இலக்குமி; **கலையதுார்தி** - துர்க்கை; **செயமாது** - செயமகள்; **பூமி** - **திசை தெய்வமான பல** - எட்டுத் திக்கும் மேலும் கீழுமாகிய பத்தின் அதிதெய்வங்கள்; **நெதி** - நியதி என்பதன் மரூஉ; இவை ஆசற்று நல்லவாதல் தீமை கலவாத நன்மை பயத்தலும், சைவத்துக்குக் கேடு சூழ்வார்க்கு நன்மை பயவா திருத்தலுமாம்; இவை நன்மை செய்ய வேண்டியவை செய்யாதிருத்தல் கூறியது;- (4) **வடவால்** - வடஆலமரம்; **மறை ஓதும்** - மறையின் பொருளை முனிவர்க்கு உணர்த்திய; "ஏரியலும் வடவாலின் கீழிருந்தங் கீரிருவர்க் கிரங்கி நின்று, நேரியனான் மறைப்பொருளை யுரைத்தொளிசேர் நெறியளித் தோன்" (தேவா); **காலனங்கி...நோய்கள்** - இவை தீமை செய்வன தீமை செய்யாதிருத்தல் கூறியது;-- **நோய்கள்** - நோய் செய்யும் கொடிய சிறு தெய்வங்கள்;-(5) **அவுணர் - இடி - மீன் - மிகையான பூதம்** - அவுணரும் பூதச் செயல்களும் தீய சத்தியுடையவை; **மிகையான** - தத்தம் அளவில் நில்லாது மிகைபட்ட;- (6) **கோளரி...ஆளரி** - இவை கொடிய விலங்கின் சாதியால் வரும் ஏதங்கள் குறித்தன;- (7) **வெப்பொடு...வினையான** - வெப்பு முதலிய நோய்களும் அவற்றுக்குக் காரணமான வினைகளும்; முன் **நோய்கள்** (4) என்றது நோய் செய்யும் கொடிய கால சத்திகள்;- (8) **இலங்கை யரையன் தனோடும் இடரான** - அரக்கர் முதலாயின ரால் வரும் துன்பங்கள்;-

2515. சிரபுரத்துப் பிள்ளையா ரருளிச் செய்த
திருப்பதிகங் கேட்டதற்பின் றிருந்து நாவுக்
கரசுமதற் குடன்பாடு செய்து, தாமு
மரசர்முன்னே யெழுந்தருள வமைந்த போது
புரமெரித்தார் திருமகனா "ரப்பர்! இங்குப்
புனனாட்டி லெழுந்தருளி யிருப்பீர்!" என்று
கரகமலங் குவித்திறைஞ்சித் தவிர்ப்ப, வாக்கின்
காவலருந் தொழுதுகிர்கொங் கருத்தி னேர்ந்தார். 617

---

(9) தேவர் வருகாலமான பலவும் - தேவராலும் காலக் கோட்பாட்டினாலும் வரும் ஏதங்கள்: அலைகடல் மேரு - கடலாலும் மலையாலும் வருவன;- (10) **திருநீறு புத்தரொடமணே வாதில் அழிவிக்கும்** - புறச்சமயத்தாரால் வரும் தீமைகள்: இவற்றைப் போக்குவது திருநீறு: இது திடம் - உறுதி: இது பிற்சரித விளைவைக் கூறுமாறு பிள்ளையார் திருவாக்கினில் வெளிப்பட்ட திருவருளின் முற்குறிப்பு: திருநீற்றுப் பதிகமே சமணே வாதில் முதலில் தோற்கச்செய்து பின்னர் முறைப்படி அவர்களைக் கழுவேறி யழியவும் செய்தது;- (11) **பொழில் கொள் ஆலை** - சோலைபோல நெருங்கிய கரும்புக்கூட்டம்; **ஆலை** - கரும்பு; "ஆலை யஞ்சிலைவேள்" (கந்தபு - காமதக - 90) **ஆலை விளை** - ஆலை (கரும்பு) போல விளையும்; "கரும்பல்ல நெல்லென்ன" (65); **வளர்செம்பொன்** - பொன்போன்று விளையும் நெல்; நெல்லின் விலையாகப் பண்டமாற்றாகக் கொண்ட பொன் என்றலுமாம்; இங்குக் கரும்பும் நெல்லும் வளர் என்றுரைத்தலுமாம்; **நான்முகனாதியாய பிரமாபுரம்** - பிரமன் பூசித்தமையாற் பெற்ற பிரமாபுரம் என்ற பெயரைத் தன் பன்னிரண்டு பெயர்களுள் முதற்பெயராகக் கொண்ட பதி. **தானுறு கோளும்-உரைசெய் ஆன சொன்மாலை** - பதிகக் குறிப்புக் கூறியபடி; **ஆன** - ஆக்கச்சொல், ஆக்கம் தருவது குறித்தது (4)ல் **வடபால்** என்ற பாடமும் உண்டு;

குறிப்பு:- இத் திருப்பதிகம் மிக்க சிறப்புடையது; **இதனை நியமமாய்ப் பயில்பவர் தீமையெல்லாம் நீங்குதலும், வழிபோகத் தொடங்குவோர் இதனை எண்ணிச் சென்றால் தீமையின்றிச் சென்றுவருதலும் இன்றும் கண்கூடாகக் காணவுள்ள உண்மைகள். இது அகத்தியர் தேவாரத் திரட்டில் எடுக்கப்பட்டது. இதனுள் ஒவ்வொரு பாட்டிலும் அம்மையோடு நீங்காதிருந்து இறைவர் அருளும்நிலையும் பயனும் குறிக்கப்பட்டது** காண்க;"**வேயுறு தோளிபங்கன்**" என்று அம்மையை முன் வைத்துத் தொடங்கிப் போற்றியது ஆலவாயின் குறிப்பு.

2515. பொருளுரை....சிரபுரத்துப் பிள்ளையார்...உடன்பாடு செய்து - சீகாழிப்பிள்ளையார் முன் கூறியவாறு அருளிச்செய்த அந்தத் திருப்பதிகத்தினைக் கேட்டருளிய பின்னர்த், திருந்திய திருவுள்ளமுடைய திருநாவுக்கரசரும் பிள்ளையார் பாண்டிநாடு செல்வதற்கு உடன்பட்டு; தாமும் போது - முன்னெல்லாம் போந்த நியமத்தின்படி அவர் முன்பதாகத் தாமும் எழுந்தருள அமைவு கொண்டபோது; புரமெரித்தார் திருமகனார்....தவிர்ப்ப - திரிபுரமெரித்த இறைவரது திருமகனாராகிய

பிள்ளையார் "அப்பரே! தேவரீர் இந்த நீர் நாடாகிய சோழநாட்டில்தானே எழுந்தருளியிருப்பீராக!" என்று சொல்லிக் கைமலர்களைக் கூப்பி வணங்கி அவரது செயலைத் தவிர்ப்ப; வாக்கின் காவலரும்...நேர்ந்தார் - திருநாவுக்கரசர் தாமும் எதிர்தொழுது அரிதாம் திருவுள்ளத் தோடு இசைந்தருளினார்.

விளக்கவுரை-திருப்பதிகங் கேட்டதற்பின் திருந்து நாவுக்கரசும் அதற்குடன்பாடு செய்து - திருப்பதிகங் கேட்பதன்முன் பிள்ளையார் பாண்டிநாடு செல்வதற் கிசையேன் என்ற அரசுகள், அதனைக் கேட்டபின் அச்செயலுக்குடன்பட்டனர்; திருப்பதிகத்தின் **ஆணை சிவனதாணையேயாதலின்,** "புத்தரொ டமணை வாதி லழிவிக்கு மண்ணல் திருநீறு செம்மை திடமே" என்றும், "தானுறு கோளு நாளு மடியாரை வந்து நலியாத வண்ணமுரைசெய், ஆனசொன் மாலை" என்றும் ஆணை நிகழ்ந்தமையால் தீமைஎவையும் பிள்ளையாரைச் சாரா; அமணர் அழிவாக்கப்படுவர் என்ற உறுதிகொண்டாராகலின் உடன்பட்டனர் என்பது குறிக்கத் **திருந்து** என்றார்; அரசுகள் பாண்டிநாட்டின் தீமை போக்குதலை விரும்பாதவரல்லர்; சமணரை அஞ்சினாருமல்லர்; திருவருளில் துணிபு இல்லாதவருமல்லர்; ஆனால் பிள்ளையார்பாற்கொண்ட தந்தையன்பே முன்னர் இசையாது தடுத்தமைக்குக் காரணம்; மன்னவன் முன்னர் அமணர் அனேகராய்ப் பிள்ளையாரைச் சூழ்ந்து கதறிப் பதறியபோது அது கண்ட மங்கையர்க்கரசியார் தாய் தலையன்பினாலே அச்சங்கொண்டமையும், "பால னீங்கிவ னென்றுநீ பரி வெய்திடேல்..ஈனர்கட்கு எளியேனலேன் திரு வாலவா யர னிற்கவே" என்று பிள்ளையார் அவரைத் தேற்றியமையும் இங்குக் கருதற்பாலன. இவைபற்றி முன் அரசுகள் புராணத்திலுரைத்தவையும் பார்க்க.

தாமும் அவர்முன்னே எழுந்தருள அமைந்தபோது - இதுவரை தொடர்ந்து யாத்திரைசெய்து போந்த நியமத்தின்படி முன்செல்ல அமைந்தனர். "முன்னணைந்த" (2475) என்றவிடத்தும், முன்னரும் (2426 - 2437), உரைத்தவை பார்க்க.

புரமெரித்தார் திருமகனார் - பால் கொடுத்த தன்மையாற் பிள்ளையார், ஈண்டும், பிறாண்டும் மகனார் என்றுபசரிக்கப்பெற்றனர்; 1966-ம் முன் உரைத்தவையும் பார்க்க.

"அப்பர்..இருப்பீர்" என்று-இறைஞ்சித் தவிர்ப்ப - இவ்வாறு அரசுகள் தம்முடன் அணைதலைப் பிள்ளையார் தடுத்தமைபற்றி முன் 1554ல் உரைத்தவை பார்க்க. III - பக்கம் 640. **கரகமலங் குவித்திறைஞ்சி** - "தந்தைசொன் மிக்க மந்திர மில்லை" என்றிருப்பவும் தந்தையன்புபூண்ட அரசுகளின் செயலைத் தவிர்த்து மொழிதலின் இறைஞ்சிக் கூறினார்; தமது கூற்றுத் திருவருட்கூற்றா யிருப்பதனை அறிந்தா ரேனும் நல் ஒழுக்க நிலை பெறும் மரபுகாட்டினார் என்க.

தொழுது அரிதாங் கருத்தின் நேர்ந்தார் - தொழுது - எதிர்தொழுது; விடை பெறுந் தன்மையிற் றொழுது என்றலுமாம்; "விடைகொடுத்து" என மேல் இக்கருத்துப்படக் கூறுதல் காண்க; அரிதாங் கருத்து - பிள்ளையாரது பிரிவாற்றுதல் அருமையாகிய திருவுள்ளம்; அரிதாங்கருத்து - வேதம் வளர்க்கவும் சைவம் விளக்குதற்கும் பிள்ளையார்

வேறு

2516. வேதம்வளர்க் கவுஞ்சைவம் விளக்கு தற்கும்
வேதவனத் தருமணியை மீண்டும் புக்குப்
பாதமுறப் பணிந்தெழுந்து பாடிப் போற்றிப்
பரசியருள் பெற்றுவிடை கொண்டு போந்து
மாதவத்து வாகீசர் மறாத வண்ணம்
வணங்கியருள் செய்துவிடை கொடுத்து மன்னுங்
காதலினா லருமையுறக் கலந்து நீங்கிக்
கதிர்ச்சிவிகை மருங்கணைந்தார் காழி நாடர். 618

அவதரித்த உள்ளுறை என்றலுமாம். நேர்தல் - முன்னர்ப் பிள்ளையார் செல்வதற்கு உடன்பாடு செய்தருளினர். இங்குத் தாம் அவரைப் பிரிந்திருப்பதற்கும் அவர் தனி செல்வதற்கும் இசைந்தருளினர்.

கருத்து நேர்ந்தார்-என்பதும் பாடம். *617*

2516. பொருளுரை–வேதம் வளர்க்கவும் சைவம் விளங்குதற்கும் - வேதநெறியை வளரச் செய்தற்கும் சைவத்தை விளக்கம் செய்தற்கும்; வேதவனத்து...போந்து - திருமறைக்காட்டின் இறைவரை மீண்டும் புகுந்து திருவடிகளில் தலை பொருந்த வீழ்ந்து வணங்கி எழுந்து பாடியும் போற்றியும் பரவியும் அவரது அருள்விடையினைப் பெற்றுக்கொண்டு புறம்பு போந்து; மாதவத்து...நீங்கி - மாதவமுடைய திருநாவுக்கரசர் மறுக்கவொண்ணாதபடி அவரை வணங்கி அருள்செய்து விடைகொடுத்து நிலைபெற்ற பெருவிருப்பத்தினாலே அருமைபொருந்த அளவளாவி நீங்கிச்சென்று; கதிர்ச் சிவிகையின்-நாடர் - ஒளிவீசும் முத்துச்சிவிகையின் பக்கத்தில் காழிநாடுடைய பிள்ளையார் அணைந்தனர்.

விளக்கவுரை...வேதம் வளர்க்கவும் சைவம் விளக்குதற்கும் - "வேதநெறி தழைத்தோங்க மிகுசைவத் துறைவிளங்க" (1899) என்று முகப்பிற் கூறியபடி பிள்ளையார் இந்த இரண்டும் செய்தற்கே திருவவதரித்தருளினாராதலானும், அவை இனி இப்போது பாண்டிநாட்டில் நிகழவுள்ளமையானும் அத்தொடக்கத்தில் புகுவார் அவ்வாறருளும் படி அந்நினைவுடனே திருமறைக்காட்டிறைவரை வணங்கி யருள்பெற்று விடைகொண்டனர் என்க.

வேதம் வளர்த்தல் - வேத வேள்விகளை நிகழச்செய்தல்; சைவம் - விளக்குதல் - பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாதொழிதலை நீக்கி விளங்கச்செய்தல்; பிறவினைய் வாய்பாடுகளாற் கூறியது அவனருள்கொண்டு செய்வித்தல் குறித்தது.

வேதவனத் தருமணியை - வேதம் வளர்க்கவும் சைவம் விளக்கவும் செய்யத் தக்க பெருமான் இவரே என்ற குறிப்புப்பெற இவ்வாற்றாற் கூறினார்; என்னை? வேதங் காப்புச்செய்து அடைத்த கதவினைத் திறக்க அருளி வேதத்தையும் சைவத்தையும் வளர்த்தும் விளக்கியும் அருளிய பண்பும் சதுரப்பாடும் காட்டியருளியதுபற்றி என்க.

மீண்டும் புக்கு - அன்று முன்னரும் "சென்று பணிந்து போந்" தனராதலின் (2513) **மீண்டும் புக்கு** என்றார்.

பாடிப் போற்றிப் பரசி - **பாடுதல்** - பதிகம் பாடுதல்; **போற்றுதல்** - துதித்தல்; **பரசுதல்** - புகழ்களைப் பரவிநிற்றல்; இப்பதிகம் கிடைத்திலது!

அருள்பெற்று விடைகொண்டு - **அருள்பெற்று** - தாம் நினைந்து வேண்டினார் வேண்டியவாறே அருள்செய்யப்பெற்றனர். "வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்" என்ற இத்தலத் திருத்தாண்டகம் ஈண்டுக் கருதத்தக்கது.

விடைகொண்டு - தலத்தை நீங்குமுன் அவ்விறைவர்பால் விடைகொண்டு புறப் படுதல் மரபு.

மாதவத்து-கலந்து நீங்கி - **மாதவம்** - முன்னைத் தவமும் இம்மைத் தவமு மாகப் பெருந்தவ முனிவராம் தன்மை; 'வருஞானத் தவமுனிவர்' (1266), "அப் பரமுனிவன்" (1694); அருள்செய்து - அரசுகள் தம்முடன் எழுந்தருளாது அங்கு தங்குதற்கு அருள்புரிந்து; விடைகொடுத்து - திருப்புகலூரினின்றும் தம்முடன் தொடர்ந்துவந்தும், இனியும் தொடர அமைந்தும், நின்ற அவரைத் தவிர்த்து அங்குத் தங்கியருளவேண்டினாராதலானும், தமது பிரிவாற்றாத அவரை அரிதாங் கருத்தின் இசைய வைத்தாராதலானும் அங்குத் தங்குகின்ற அவர்பால் அங்கு நீங்குகின்ற பிள்ளையார் விடைகொண்டார், என்னாது விடை கொடுத்தார் என்றார்; "மறாத வண்ணம்" என்ற குறிப்புமிது; ஆயின் அவரும் இவர்பால் விடைகொண்டன ரன்றோ? எனின், அது அவரது செயலாய் அவர்தம் புராணத்துள் உரைக்கத்தக்க தாதலின் ஆண்டுரைக்கப்பட்டது; "வேணுபுரக்கோ னெழுந்தருள விடைகொண்டிருந்த வாகீசர்" (1555) என்றது காண்க; இனி, இவ்வாறன்றித் திருப்பூந்துருத்தியில் எழுந்தருளியிருந்த அரசுகளைப் பிள்ளையார் காணச் சென்று கண்டு கலந்திருந்த பின்னர் அவர்பானீங்கிச் சீகாழிக்குச் செல்ல ஒருப்பட்டபோது அவர் திருவுள்ள முவந்து **விடைகொடுக்கத் தாம் விடைகொண்டருளினர்** என்ற வரலாற்றை இங்கு வைத்து ஒப்புநோக்குக. "திருவாயிற் புறத்தணைந்து நாவினுக்கு, வேந்தர் திருவுள்ள **மேவவிடை கொண்டருளி**, யேந்தலா ரெண்ணிறந்த தொண்டருட **னேகினார்**" (புரா - 948); இறைவர்பால் **அருள்பெற்று விடைகொண்டு** என்றும், வாகீசர்பால் **அருள்செய்து விடைகொடுத்து** என்றும் கூறிய கருத்துக்களையும் நோக்குக.

மன்னும் காதலினால் அருமையுறக் கலந்து - இப்போது பிரிதலினால் இருவர்க்கு மிடைநின்ற காதல் குறையாத நிலைபெற்றுள்ளது என்பார் மன்னும் என்றார்; அவ்வாறு மன்னுதல் பின்னர்ப் பாண்டிநாட்டு நிகழ்ச்சிகளின்பின் பிள்ளையார் திருக்கடவூர் தொழுது அமர்ந்துறையுநாளில் தாமே நினைந்துகொண்டு "வாகீச மாமுனிவர் எந்நகரி லெழுந்தருளிற் றென்றடியார்தமை வினவி"க் கேட்டு அவரைக் காணத் திருப்பூந்துருத்திக் கெழுந்தருளிய வரலாற்றா னறியப்படும். முன்னரும் "பின்னாக வெய்த விறைஞ்சிப் பிரியாத நண்பொடும் போந்தார்" (2172) என்றதும் கருதுக; **கலந்து** - அளவளாவிக்கொண்டு.

2517. திருநாவுக் கரசருமங் கிருந்தா ரிப்பாற்
றிருஞான சம்பந்தர் செழுநீர் முத்தின்
பெருநாமச் சிவிகையின்மீ தேறிப் பெற்ற
முயர்த்தவர்தாள் சென்னியின்மேற் பேணு முள்ளத்
தொருநாமத் தஞ்செழுத்து மோதி வெண்ணீற்
றொளிவிளங்குந் திருமேனி தொழுதார் நெஞ்சில்
வருநாமத் தன்புருகுங் கடலா மென்ன
மாதவரார்ப் பொலிவைய நிறைந்த தன்றே. 619

கதிர்ச் சிவிகை - ஒளிவீசும் முத்துக்களாலாகிய குறிப்பு; "சோதி முத்தின் சிவிகை" (2114).

காழிநாதர்-என்பதும் பாடம். 618

2517. பொருளுரை: திருநாவுக்காசரும் அங்கு இருந்தார் - அரசுகளும் அங்குத் தங்கியருளினர்; இப்பால் - இங்கு; திருஞானசம்பந்தர்-ஏறி - பிள்ளையார் செழிய நீர்மை யுடைய முத்துக்கள் நிரைத்த பெரும்புகழுடைய சிவிகையின்மேல் ஏறி; பெற்றம்-உள்ளத்து- இடபக்கொடியை உயர்த்த இறைவரது திருவடிகளைச் சிரத்தின்மேற் கொண்டு பேணுகின்ற உள்ளத்தோடு; ஒரு நாமத்து...ஓதி - இறைவரது ஒப்பற்ற நாமமாகிய திருவைந்தெழுத்தையும் ஓதி; வெண்ணீற்று...தொழுதார் - இறைவரது திருநீற்றினுடன் விளங்கும் திருமேனியை எண்ணிக் கைதொழுதனர்; நெஞ்சில்...நிறைந்தது - உள்ளத்தில் எப்போதும் வருகின்ற அரனாமத்தினாலே, அன்பு உருகிப் பெருகும் கடலின் ஓசைபோல அடியார்களது அரகர முழக்கமாகிய ஆரவார ஒலி உலகமெங்கும் நிறைந்தது; அன்றே - அப்பொழுதே.

விளக்கவுரை-இத்திருப்பாட்டில், அப்போது அரசுகளது நிலையும், பிள்ளையாரது நிலையும், அடியார்களது நிலையும் கூறப்பட்டன.

அங்கு -இப்பால் - என்பன அரசுகள் பாலும் பிள்ளையார்பாலும் செல்லும் இடங்குறித்த சுட்டுக்கள்; வாசிப்போர்களது நினைவு இதுவரையும் இருபெரு மக்களின்பாலும் செலுத்தப்பட்டுவந்த நிலையில் அரசுகள்பால் செல்வதனை அம்மட்டோடு அங்கு நிறுத்தவும், இனி முழு நினைவும் பிள்ளையார்பால் கொண்டு செலுத்தவும் இவ்வாறு அங்கு என்று சேய்மைச் சுட்டாலும், இப்பால் என்று அணிமைச்சுட்டாலும் கூறினார்.

திருஞானசம்பந்தர்-ஏறிப்-பேணும் உள்ளத்து-ஓதி - தொழுதார் எனக் கூட்டி முடிக்க. பெற்றம் உயர்த்தவர் - என்றது வெற்றிக்குறிப்பு.

தாள் சென்னியின்மேற் பேணும் - தாம் சிவிகையின்மீதேறியபோது தமது சிரத்தின்மேல் திருவடியை ஏற்றிக்கொண்டார்; "பூங்கழலிணை யுச்சிமேற் கொண்டே - மலர்நித்திலச் சிவிகைமேற் கொண்டார்" (2129) என்றது காண்க.

உள்ளத்து - ஓதி என்க; **உள்ளத்தோடு ஓதுத**லாவது ஒன்றியிருந்து நினைந்து ஓதுதல். மானதம், மந்தம், உரை என்ற மூன்றனுள் மானதமாகக் கணித்தல் என்க.

ஒருநாமத் தஞ்செழுத்தும் ஓதி - "ஆலைப் படுகரும்பின் சாறு போல அண்ணிக்கு மஞ்செழுத்தி னாமத் தான்காண்" (தாண்); **ஒரு நாமம்** - ஒப்பற்ற நாமம்; இது போல் உறுதிப் பயன்தரும் நாமம் பிறிதில்லை என்பதாம்.

உள்ளத்து - ஓதி - மனத்துட் கணித்து என்றும், உள்ளத்துடனே வாசிகமாக எடுத்துப் போற்றி என்றும் உரைக்கநின்றது; "சிவாயநம வெனப்பேசி" (ஏயர் கோன் - 158); "வழுக்கி வீழினுந் திருப்பெய ரல்லால் மற்று நானறி யேன்மறு மாற்றம்" (நம்பி - தேவா - ஒற்றியூர் - தக்கேசி); "உண்ணினும் பசிப்பினு முறங்கினுநின் ஒண்மல ரடியலா லுரையா தென் நா" (தேவா-பிள்-காந்தார பஞ்-ஆவடுதுறை-9) முதலியவை காண்க.

வெண்ணீற்றொளி விளங்கும் திருமேனி தொழுதார் - இது பிள்ளையார் இறைவரது திருமேனியை மனத்துட் கண்டு தொழுதுகொண்ட நிலை. அஞ்செழுத்தோதியபோது அதனாற் குறிக்கப்படும் இறைவரது திருமேனி நிலைகள் நினைவினுள் கணிக்கப்பட்டுத் தொழவரும் என்க; உண்மை விளக்கம் (30-44); திருவருட் பயன் - திருமூலர் திருமந்திரம் முதலியவை பார்க்க.

வெண்ணீற்றொளி விளங்கும் திருமேனி - "வெண்ணீற்றொளி போற்றி" (2114) என்றபடி "கதிர்ச் சிவிகை" (2516) திருவெண்ணீற்றின் ஒளியினை ஒத்தலால் திருநீற்றினை நினைவூட்ட, அந்நினைவு தானும் முறையே அவ்வொளி விளங்கும் திருமேனியை நினைவூட்டியதென்க.

நெஞ்சில் வரும் நாமத்து - ஆர்ப்பு என்றும் கூட்டுக; நாமம் நெஞ்சில் வருதலாவது எப்போதும் அதனையே நினைவுட்கொண்டிருத்தல்; "கொடிமே விடபமும்...வடிவேல் வடிவுமென் கண்ணு ளெப்போதும் வருகின்றவே" (பொன்வண் - அந்-) 20 என்ற கழறிற்றறிவார் திருவாக்கு இங்கு நினைவுகூர்தற்பாலது; **மாதவர்** - சுற்றி யிருந்த தொண்டர் குழாம்; 'மாதவர் துயிலுமித் திருமடம்" (2600) என்பது காண்க; திருத்தொண்டர்கள் எப்பொழுதும் அரனாமத்தையே நினைந்து நெஞ்சிற் கொண்டாராதலின் அந்நாமத் தொலிபெருக்கி அரகரவென்று ஆர்த்தனர் என்க; "அடியாரின்ப மெய்தி...சிவம்பெருக்கு மொலிநிறைத்தா ருலக மெல்லாம்" (1448).

அன்புருகும் கடலாமென்ன - வைய நிறைய ஆர்த்தல் கடலின் செயலாதலின் இங்கு நிகழும் அன்பின் பெருக்கில் எழும் ஒலியை அன்புருகும் கடல் என்றார். கடல் நீரினால் நிறையவேண்டுதலின் அன்புருகிய நீர்மை என்றார்; உள்ளம் உருகுதல் - அன்பின் தன்மையாதலும் காண்க; **உருகுமன்புக் கடல்** என்க.

அன்றே - அப்பொழுதே; இம்மூன்று நிகழ்ச்சிகளும் அப்போதே ஒருகாலத்து உடன் நிகழ்ந்தன என்க. அசையென்றொதுக்குவாருமுளர்.

வரும் நாமத்து - பல திருநாமங்களால் என்றுரைப்பாருமுண்டு. 619

வேறு

2518. பொங்கியெழுந் திருத்தொண்டர் போற்றெடுப்ப நாற்றிசையும்
மங்கலதூ ரியந்தழைக்க மறைமுழங்க மழைமுழங்குஞ்
சங்குபட கம்பேரி தாரைகா ளந்தாளம்
எங்குமெழுந் தெதிரியம்ப இருவிசும்பு கொடிதூர்ப்ப. 620

2518. பொருளுரை...பொங்கி எழும்...போற்றெடுப்ப - பெருகி எழுகின்ற திருத்தொண்டர்கள் துதிகளை எடுத்திசைக்கவும்; நாற்றிசையும்...மறைமுழங்க - நான்கு திசைகளிலும் மங்கலவாத்தியங்கள் ஓங்கி இசைக்கவும்; வேதங்களின் ஒலி முழங்கவும்; மழை முழங்கும் எதிரியம்ப - மேகம்போல முழங்கும் சங்குகளும் படகங்களும் எதிரில் முழங்கவும்; இருவிசும்பு கொடி தூர்ப்ப - பெரிய ஆகாய வெளியைக் கொடிகள் மறைக்கவும்;

தோன்றலார் - போற்றெடுப்ப...எதிர்கொள்ள - இடம்பலவும் கைதொழுவாராகி - வணங்கிப் - பாடித் - தொழுது அணைந்தார் என்று முடித்துக்கொள்க.

விளக்கவுரை...பொங்கி - -திரண்டு பெருகி; விருப்பம் பெருகி என்றலுமாம். போற்றெடுத்தல் - துதிகளைப் பலவாறும் எடுத்து இசைத்தல்.

தழங்குதல் - மிக்க ஓசையுடன்கூடி இசைத்தல்.

மறை முழங்க - மறைகள் தாமே உரத்த சுரத்துடன் முழங்க; ஓங்கி முழங்கும் பெருமை பெறுவோம் என்று முழங்க என்ற குறிப்புமாம்.

மறை முழங்கும் - மழைபோல முழங்கும்; உவமவுருபு விரிக்க; மழை - மேகக்கூட்டங்கள்; முழங்கும் - பெயரெச்சம்; முழங்கும் சங்கம் முதலியன.

படகம் - தோற்கருவி வகைகளுள் ஒன்று; சங்கம் - படகம் - பேரி - தாளம் - காளம் - தாரை - இவை இயங்களின் வகை; காளம் - எக்காளம்.

எதிர் இயம்புதலாவது இவற்றின் பற்பல வோசைகளும் ஒன்றினெதிர் ஒன்றாகக் கூடியும் பிரிந்தும் இசைத்தல்.

விசும்பினைக் கொடிகள் தூர்ப்ப என்க; இரண்டனுருபு விரிக்க; தூர்த்தல் - மறைத்தல் ; இப்பாட்டில் விரித்தவை பிள்ளையாருடன் சென்ற பரிசனங்களின் செயல்களின் சிறப்பு.

போற்றிசைப்ப - போற்றெடுப்பார் - மங்கலதூரியந் தழங்க-என்பனவும் பாடங்கள்.
620

2519. பொருளுரை...மலர்மாரி...இசைப்ப - மலர்மாரியைப் பொழிந்தும் மங்கல வாழ்த்துக்களை இனிமைபெற இசைத்துக்கொண்டும்; அலர்வாச...தூபமுடன் - மலர்களைப் பெய்த வாசனையுடைய நீர்நிறை குடங்களையும் அழகிய விளக்குக்களையும்

2519. மலர்மாரி பொழிந்திழிய மங்கலவாழ்த் தினிதிசைப்ப,
அலர்வாசப் புனற்குடங்க ளணிவிளக்குத் தூபமுடன்
நிலைநீடு தோரணங்க ணிரைத்தடியா ரெதிர்கொள்ளக்
கலைமாலை மதிச்சடையா ரிடம்பலவுங் கைதொழுவார், 621

தூபங்களுடனே ஏந்தி; நிலைநீடு...... நிரைத்து - நிலைகளில் நீண்ட தோரணங்களை வரிசைபெற அமைத்து; அடியார்..கைதொழுவார் - அடியார்கள் எதிர்கொள்ளச் சென்று கலையுடைய அந்தி மதியினைச் சூடிய சடையாரது பதிகள் பலவற்றையும் கைதொழுவாராகி.

விளக்கவுரை...*இப்பாட்டிற் கூறியவை அங்கங்கும் எதிர்கொள்ளும் அடியார் கூட்டங்களின் செயல்களின் சிறப்பு.*

மலர்மாரி பொழிந்து இழிய - எங்கும் பூமழை சிந்த; இழிதல் - மேற்பெய்த மலர்கள் கீழ் வீழ்தல்; மலராகிய மாரி என்க; மலர்களை மாரிபோல என்றலுமாம்.

இனிது மங்கல வாழ்த்து இயம்ப *என்க; இனிதாகிய வாழ்த்து;முன் பாட்டில் கூறியவை வாத்தியமுதலியவற்றின் மங்கல இசைப்பு; இங்குக்கூறியது தொண்டர் வாக்கினால் வாழ்த்துதல். குடங்கள் - விளக்கு - தூபம் இவற்றுடன் என்க; இவற்றை ஏந்தி எதிர் கொள்ள என்பதாம்.*

குடங்கள் - விளக்கு - தூபம் இவற்றுடன் *என்க; இவற்றை ஏந்தி எதிர் கொள்ள என்பதாம் .*

நிலைநீடு *- அங்கங்கும் நிறுத்தத்தக்க நிலைகளில் நீண்ட; நிரைத்து - வரிசை பெற அமைத்து.*

கலை *- ஒரு கலையினையுடைய.* ***மாலை மதி*** *- அந்தியிற் றோன்றும் பிறை மதி.*

இடம் பலவும் கைதொழுவார் *- திருவாலவாயினை நோக்கி எழுந்தருளுவாராயினும் வழி இடைப்பட்ட பதிகளையும் வணங்கிச் செல்லும் முறைபற்றி இடம் பலவும் தொழுவாராகித் தொழுதுகொண்டே சென்றார்; அவ்வாறு வழியிடைத் தொழுத பதிகளை மேல்வரும் பாட்டுக்களிற் கூறுவார்.*

கைதொழுவார் *- தொழுவாராகி; முற்றெச்சம்; தொழுவார் வணங்கித் - தொழுது, அணைந்தார் என மேல்வரும் பாட்டின் வினைமுற்றுடன் முடிந்தது.*

கலைமதி - மாலைமதி *- என்க;* ***கலைமதி*** *- கலைகள் தேய்ந்து ஒற்றைக் கலையுடன் வந்து அடைக்கலம் புகுந்த பிறை;* ***மாலைமதி*** *- அந்தியில் புதிது தோற்றும் மதி; "குடதிசை மதியது சூடு சென்னி" (தேவா); கலைகளையுடைய மதி என்பாருமுண்டு; அது பிழை.*
621

2520. தெண்டிரைசூழ் கடற்கானற் றிருவகத்தி யான்பள்ளி
யண்டர்பிரான் கழல்வணங்கி யருந்தமிழ்மா மறைபாடிக்
கொண்டல்பயில் மணற்கோடு சூழ்கோடிக் குழகர்தமைத்
தொண்டருடன் றொழுதணைந்தார் தோணிபுரத் தோன்றலார். 622

2520. பொருளுரை-தெண்திரைசூழ்...மறைபாடி - தெள்ளிய அலைகள் சூழ்ந்த கடற்கரையில் உள்ள திருவகத்தியான்பள்ளியில் எழுந்தருளிய தேவதேவராகிய இறைவரது திருவடிகளை வணங்கி அரிய தமிழ்ப்பெருமறையாகிய தேவாரப் பதிகத்தைப் பாடியருளி; கொண்டல்பயில்...தோன்றலார் - மேகங்கள் பயிலுதற்கிடமாகிய மணற்குன்றுகள் சூழ்ந்த திருக்கோடிக்குழகரை அடியார்கள் சூழத்தொழுது மேற் சென்றருளினார் சீகாழியில் வந்தருளிய பிள்ளையார்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

விளக்கவுரை-தெள்திரை - தெள்ளிய அலை; இங்குக் கடல் கொந்தளித்து மிகக் கலங்குதலின்றித் தெளிந்த நீருடன் விளங்குதல் குறிப்பு; இங்கு உப்பளங்களிற் பாய்ச்சிக் கூர்மைபெறத் தெளியவைத்த நீரையுடைய என்ற குறிப்பும் காண்க; "மன்றல் கமழு மலர்ப்புன்னை மணஞ்சூழ் சோலை யுப்பளத்தின், முன்றி றோறுஞ் சிறு மடவார் முத்தங் கொழிக்கும் மறைக்காடு" (1529).

கடற்கானல் - கானல்போல அகன்ற கடற்கரை; கழிக்கானல் என்பதும் காண்க; மக்கள் குடியில்லாத தன்மையும், துர்க்கையின் (காடுகாள்) இடமாகிய காடாதலும்குறிப்பு; நம்பிகள் தேவாரம் பார்க்க.

அரும் தமிழ்மாலை - திருப்பதிகம்; பதிகப்பாட்டுக் குறிப்புப் பார்க்க.

கொண்டல்பயில் மணற்கோடு சூழ் - கடிய கடற்காற்றினாற் றிரட்டப்பட்ட மணல்மேடுகள் குன்றுகள்போல உயர, அவற்றின்மேல் அங்குக் கடலினின்றும் நீர் பருகிக் கிளம்பும் மேகங்கள் பயின்று செல்வன; இங்கு மழையும் மணல் மலைகளும் இன்றும் காணவுள்ள இதன் தன்மையணிநயம் கண்டு களிக்க; "கடிதாகக் கடற் காற்றுவந் தெற்றக் கரைமேல்" (நம்பி - தேவா).

தொண்டருடன் தொழுது - கோடிக்குழகர் இடம் வேறு குடிகளும் தொண்டர்களும் இல்லாத குறிப்புப்பெறத் தம்முடன் வந்த தொண்டர்களோடும் தொழுது என்றார்.

தொண்டருடன்-தோன்றலார் - இவ்வடி முற்றுமோனை; சோழநாட்டுக் காவிரித் தென்கரைத் தலங்கள் இதனுடன் முற்றுப்பெறும் நிலையின் குறிப்புப்போலும்; மேலே வரும் திருக்கடிகுளம், திருஇடும்பாவனம், திருஉசாத்தானம் என்பவை பாண்டிநாடு செல்லும் வழியில் அமைந்தவை.

தொழுது அணைந்தார் - தொழுது மேற்சென்றனர்.

தோன்றலார் - பெருமையுடையார்; தலைவர்; சீகாழியில் வந்தவதரித்தவர் என்ற குறிப்புமாம். 622

திருச்சிற்றம்பலம்

திருஅகத்தியான்பள்ளி

பண் - காந்தாரம்

வாடிய வெண்டலை மாலை சூடி மயங்கிருள்
நீடுயர் கொள்ளி விளக்கு மாக நிவந்தெரி
ஆடிய வெம்பெரு மான கத்தியான் பள்ளியைப்
பாடிய சிந்தையி னார்கட் கில்லையாம் பாவமே. (1)

ஞாலமல் குந்தமிழ் ஞான சம்பந்தன் மாமயில்
ஆலுஞ் சோலை புடைசூ ழகத்தியான் பள்ளியுட்
சூல நல்ல படையா னடிதொழு தேத்திய
மாலைவல் லாரவர் தங்கண் மேல்வினை மாயுமே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- (1) அகத்திய முனிவர்க்காக அம்மையுடன் மணவாளக் கோலம் கொண்டெழுந்தருளிய இறைவரை இங்கு வழிபடுவார்களது வினை மாயும்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (11) **வாடிய** - வீந்த; **கொள்ளி** - வீந்தாரை இடுகாட்டுள் எரிக்கும் குறைக்கொள்ளி; அதனை இறைவர் ஆடும்போது கைவிளக்குப்போலப் பேய்க்கணங்கள் பிடித்துச் சூழ்வன; "பேயுயர் கொள்ளி கைவிளக்காகப் பெருமானார், தீயுகந்தாடல்" (பிள் - குறிஞ்சி - சிராப்பள்ளி - 7); எரிப்பதற்கேயன்றி விளக்கும் ஆக;-(2) **துன்னம்** - தைத்தல்; **உடை** - கோவணவுடை - "துன்னம் பெய் கோவணமாக் கொள்ளுமது" (திருவா - சாழல்); **உன்னம்** - உன்னுதல்; நினைத்தல்; அம் - தொழிற்பெயர் விகுதி;- (3) **கடுத்து** - கோபித்து; **முப்புரந் துகளாகவே சரந்தொடுத்ததுவும்** என்க; உடுத்ததுவும் முதலியவை அகத்தியான்பள்ளியான் செய்கை என்க. செய்கை அவாய் நிலையான் வந்தது; மேல்வரும் மூன்று பாட்டுக்களிலும் 8-வது பாட்டிலும் இவ்வாறே கொள்க;- (4) அகத்தியர் இறைவரது திருமணக்கோலங்காண இங்கு வழிபட அவர்க்கு அருளிய சரித வரலாறு குறிக்க. இமவான்மகள் ஒரு பாகம் ஏயந்ததுவும் அகத்தியான்பள்ளி யிறைவரது செயல்; 6-வது பாட்டிலும் இவ்வாறே கண்டுகொள்க;- (5) **கூர்த்தது**-கூர்மை உடையது;- (6) **புரிந்ததுவும்** - நினைந்ததுவும்; **நீதி** - நூல் விதி;- (8) **செறுத்தல்** - அழித்தல்; இப்பாட்டில் இறைவர்செய்த வீரங்கள்பற்றிப் போற்றப்பட்டது;-(9) **சிரம்**-நகுதலை;- (10) **செந்துவராடையினார்** - சிவந்த துவர் தோய்த்த உடையுடையார்; புத்தர்;- (11) **ஆலும்** - அசையும்; நல்ல - சார்ந்தாரைக் காத்து நன்மைசெய்யும்; **நல்ல சூலப்படையான்** என்க.

தலவிசேடம்:- திருஅகத்தியான்பள்ளி - காவிரித் தென்கரை 126வது பதி. இறைவரது மணவாளக்கோலங் காணும்பொருட்டு அகத்தியர் தங்கித் தவஞ்செய்த பதியாதலின் இப்பெயர் பெற்றது. பதிகம் 4, 6 பாட்டுக்களில் இக்குறிப்புக் காண்க; அகத்தியர் பூசித்த தலம்; அவரது திருவுருவம் கோயிலில் அமைத்து வழிபடப் பெறுகின்றது; சுவாமி - **அகத்தீசுவரர்**, அம்மை - **பாகம்பிரியா நாயகி**; தீர்த்தம் - **அக்கினிதீர்த்தம்**; பதிகம் 1.

2521. கண்ணார்ந்த திருநுதலார் மகிழ்ந்தகடிக் குளமிறைஞ்சி,
எண்ணார்ந்த திருவிடும்பா வனமேத்தி யெழுந்தருளி,
மண்ணார்ந்த பதிபிறவு மகிழ்தருமன் பால்வணங்கிப்
பண்ணார்ந்த தமிழ்பாடிப் பரவியே செல்கின்றார். 623

இது திருமறைக்காட்டினின்றும் தெற்கே கோடிக்கரை வழியில் 2 நாழிகை யளவில் உள்ளது: அகத்தியான்பள்ளி நிலயத்தினின்றும் மேற்கே மணல் வழியில் அரை நாழிகையளவில் உள்ளது

திருக்கோடிக்குழகர் - இப்பதிகம் கிடைத்திலது! புராணத்தினுள் பதிகம் அருளியதுபற்றிக் கூறப்படவுமில்லை: 2520 பார்க்க.

2521. பொருளுரை- கண்ணார்ந்த-இறைஞ்சி - கண்பொருந்திய திருநுதலையுடைய இறைவர் மகிழ்ந்து வீற்றிருக்கும் திருக்கடிகுளம் என்னும் பதியினை வணங்கி; எண்ணார்ந்த...எழுந்தருளி - மக்களது எண்ணம் நிறைந்த திருஇடும்பாவனம் என்னும் பதியினையும் ஏத்திச் சென்றருளி: மண்ஆர்ந்த-வணங்கி - இம்மண் உலகத்தினில் நிறைந்த பதிகள் பிறவற்றையும் மகிழ்ச்சி பொருந்திய அன்பினாலே வணங்கி; பண் ஆர்ந்த...செல்கின்றார் - அங்கங்கும் பண்பொருந்திய தமிழ்ப் பதிகங்களைப் பாடித் துதித்துக்கொண்டே செல்கின்றாராகி.

விளக்கவுரை-நுதலாரை அவர் மகிழ்ந்த கடிக்குளத்தில் இறைஞ்சி என்க. கடிக்குளம் - பதியின் பெயர்.

எண்ஆர்ந்த இடும்பாவனம் ஏத்தி - "மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கள் மலர்தூஉய்" (1), "நெறிநீர்மையர் - குறிநீர்மையர்" (6); "பொருளார்தருமறையோர்" என்ற பதிகத்துட் பிள்ளையார் அறிவுறுத்தருளிய குறிப்பு.

மண்ஆர்ந்த பதி - மேல் உலகமும் கீழ் உலகுக்கு வந்து வழிபட்டு உய்யும்படி மண்ணுலகிற் பொருந்திய பதிகள். "புவனியிற் போய்ப் பிறவாமையில்" என்ற திருவாசகம் முதலியவை காண்க.

பதிபிற - இவை இடும்பாவனத்தினின்றும் பாண்டிநாட்டினை நோக்கிச் செல்லும் வழியில், அதற்கும் திருஉசாத்தானத்துக்கும் இடையில் உள்ள தில்லை விளாகம் முதலாயின என்பது கருதப்படும்.

பண்ஆர்ந்த தமிழ் பாடிப் பரவியே - "பண்ணொன்ற விசைபாடும்" (தேவா). இதனைக் கடிக்குளமிறைஞ்சி - இடும்பாவனம் ஏத்தி என்பவற்றுடனும் தனித்தனி கூட்டுக.

இடும்பாவனம் ஏத்தி - "இடும்பாவன மிதுவே" என்ற மகுடம் கொண்டு அதனுள் எழுந்தருளிய இறைவரைப் போற்றிய குறிப்பு.

2522. திருவுசாத் தானத்துத் தேவர்பிரான் கழல்பணிந்து
மருவியசெந் தமிழ்ப்பதிக மால்போற்றும் படிபாடி
யிருவினையும் பற்றறுப்பா ரெண்ணிறந்த தொண்டருடன்
பெருகுவிருப் பினராகிப் பிறபதியும் பணிந்தணைவார், 624

தமிழ்பாடி - பரவியே - தமிழ்பாடுதல் - திருப்பதிக மருளிச்செய்தல்; பரவியே - என்றது வேறுவகையாலும் போற்றுதல் குறித்தது. 623

2522. **பொருளுரை**- திருஉசாத்தானத்து-பாடி - திருஉசாத்தானம் என்னும் பதியினில் தேவதேவராகிய இறைவரது திருவடிகளைப் பணிந்து, பொருந்திய செந்தமிழ்ப் பதிகத்தினை அப்பதியினில் திருமால் வழிபட்ட படியினை வைத்துப் பாடியருளி; இருவினையும்-பணிந்தணைவார் - தம்மை வந்தடையும் அடியார்களுக்கு நல்வினை தீவினை என்ற இரண்டும் பற்றுதலை அறுக்கும் பிள்ளையார் அளவில்லாத திருத்தொண்டர்களுடனே பெருகும் விருப்பத்தை உடையவராகிப் பிற பதிகளையும் பணிந்து சென்றணைவாராய்;

விளக்கவுரை-**திருப்பதிகம் மால் போற்றும்படி பாடி** - திருமால் இப்பதியினில் வந்து வழிபட்ட வரலாற்றைச் சிறப்பாக வைத்துப் பாடியருளி; இங்குமால் என்றது இராமாவதாரத்தை; "நீரிடைத் துயின்றவன்...தொழ" என்று பதிகத் தொடக்கத்தில் விளக்கமாய்ப் பிள்ளையார் அறிவித்தருளியதை ஆசிரியர் காட்டியபடி. மலர் போற்றும்படி என்ற பாடம் பிழை.

இருவினையும் பற்றறுப்பார் - இரு வினைகளும் பற்றுதலை அறுப்பவர்; இருவினை - நல்வினை தீவினை என்ற இரண்டும்; இவையிரண்டும் பொன்விலங்கும் இரும்பு விலங்கும்போல ஒப்பவே பிறவிக்கு ஏதுவாதலின் இவையிரண்டும் அறுக்கற் பாலன; "இருள்சே ரிருவினையும் சேரா" (குறள்); அடைந்தார்க்குப் பிள்ளையார் தமது பதிகங்களாகிய புணையைத் தந்தருளிப் பிறவிக்கடல்களைக் கடப்பித்தருளுவர் என்பது. "அணைவுற வந்தெழும்...புணையருள்" (1981) என்றவிடத்துரைக்கப்பட்டது காண்க.

பிறபதி - அணிமையிலுள்ளன; இவை திருக்களந்தை, திருக்களர் முதலாயின என்பது கருதப்படும்.

பணிந்தருள்வார்-என்பதும் பாடம். 624

2523. **பொருளுரை**-கருங்கழி-கடந்தருளி - கரிய கழிகளையும் கடலின் பக்கத்துள்ள நெய்தனிலத்தையும் கடந்து சென்றருளி; திருந்தியசீர்...நோக்கி - திருந்திய சிறப்புக்களையுடைய காவிரி நாடாகிய சோழநாட்டின் தென்மேல்பால் திசையினை நோக்கி; மருங்குமிடை...வழிச்சென்றார் - பக்கங்களில் நெருங்கிய தூறுகொண்டு எழும் பெரிய சாலி என்னும் நெற்பயிர்களையும், எப்பக்கங்களிலும் நெருங்கிய காய்களையுடைய குலைகளைக்கொண்ட தென்னைகளையும், நெருக்கமாய் வளரும் கமுகுகளையும் சூழக்கொண்ட நிறைந்த மருத நிலத்தின் வழியே சென்றருளினர்.

2523. கருங்கழிவே லைப்பாலைக் கழிநெய்தல் கடந்தருளித்
திருந்தியசீர்ப் புனல்நாட்டுத் தென்மேல்பாற் றிசைநோக்கி
மருங்குமிடை தடஞ்சாலி மாடுசெறி குலைத்தெங்கு
நெருங்கிவளர் கமுகுடுத்த நிறைமருத வழிச்சென்றார். 625

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டன.

***விளக்கவுரை*-கருங்கழி**-கடலுடன் தொடர்புடையன. கடல் நீர் உள்ளே பாய்ந்து பரந்துநிற்கும் கழிகள்

வேலைப் பாலைக்கழி - கடலின் அருகில் அமைந்த கழிகள்; வேலைப்பாலை- கடற்கானல் கழிப்பாலை என்ற பதியின் பெயர் இக்காரணத்தாற் போந்தது.

நெய்தல் கடந்தருளி - திருவுசாத்தானத்தினின்றும் சோழநாட்டுத் தென்மேல் பாற் றிசைநோக்கச் சென்றருளும் பிள்ளையார் சோழநாட்டின் தெற்கில் கடல்சார்ந்த இடங்களிற் பயணம் செய்யவேண்டியது நாட்டின் நிலைமையாதலின் கழிகளையுடைய கடல்சார்ந்த நிலங்களைக் கடந்து சென்றருளினர்; கழிகள் நாடும் கடலுமாக இடைப் பட்ட நிலப்பரப்புக்களில் உள்ளன.

திருந்தியசீர்ப் புனல் நாட்டுத் தென்மேல்பாற் றிசை - திருந்தியசீர் என்றது காடும் கானலும் திருத்தி நாடாகிய சிறப்பு; இது சோழ அரசாங்கத்தார் நாடுதிருத்திச்செய்த பல செயல்களையும் குறிக்கும். காடு வெட்டித் திருத்துதல், கானல்களைச் சமன்செய்தல், கால்கள் வெட்டுதல், குடியேற்றுதல் முதலிய பல பெருஞ் செயல்களைச் சோழப் பெருமன்னர்கள் அந்நாள்களில் செய்தனர் என்பது கல்வெட்டுக்களாலும் நாட்டு நடப்புச் சரிதங்களாலும், நாடு - ஊர் - கால் - முதலியவற்றின் பெயர்களாலும் விளங்கும். ஆசிரியர்பெருமான் தமது அமைச்சுத் திறத்திலும் அநபாய மன்னர் காலத்தில் இத்தகைய செயல்கள் பலவும் செய்தனர். அதற்கணிமையில் முன் வந்த குலோத்துங்கச்சோழர்; கங்கை கொண்ட சோழர்; இராசராசர் முதலிய பல பேரரசர்கள் செய்த இத்தகைய அருஞ்செயல்கள் உண்மைச் சரித வாயிலாக உணரப் படுகின்றன. இவ்வாசியின் பயனாகவே இப்போது மேட்டூர் அணைத்தேக்கத்தினால் காவிரிநீர் கால்வழி கொணரப்பட்டு இப்பகுதியில் (பட்டுக்கோட்டைத் தாலூகா ஒரு இலட்சம் ஏக்கர்) பெரும் பரப்பு நிலங்கள் நஞ்சையாகத் திருந்திய சிறப்புப் பெறுகின்றன; என்றால் ஆசிரியரது மெய்ம்மைத் தெய்வத் திருவாக்கின் மாண்பு நன்கு உணரக் கிடைக்கின்றது.

மருங்குமிடை தடஞ்சாலி - மருங்குமிடைதல் - தூறாகக் கிளைத்தெழுதல்; தடஞ்சாலி - நெல்லின் வகைகளுள் ஒன்று; பெரிய செந்நெல் என்பர்; பெருநெல் என்பது வழக்கு; இந்நாட்டுப் பகுதியுள் விளைக்கும் நெல்வகைகளைப்பற்றி அரசுகள் "பெரிய செந்நெற் பிரம்புரி கெந்தசாலி திப்பியமென் றிவையகத், தரியுந்தண் கழனி யணியாரூ ரம்மானே" (சீகாமரம் - 8) என்று அருளியது காண்க.

மாடு செறிகுலைத் தெங்கு - மாடு - மரத்தின்மேல் பல பக்கங்களினும்; செறிகுலை - நெருங்கிக் காய்ந்த காய்களையுடைய குலைகள்.

நெருங்கிவளர் கமுகு - கமுகுகள் அடர்த்தியாய்ப் பயிரிடப்படும் தன்மை குறிக்க நெருங்கிவளர் என்றார்.

உடுத்த நிறைமருதம் - நெல் - தென்னை - கமுகு இவற்றைச் சுற்றிலும் கொண்டிருத்தல், இவற்றை அந்த மருத-நிலம் ஆடையாக உடுத்ததுபோலத் தோற்றமளிக்கும் என்பது. மருதம் - வயல்களையுடைய நாடும், நாட்டைச் சார்ந்த பகுதிகளும்; சோழ நாட்டின் கடல்சார்ந்த பகுதியாகிய நெய்தலை முன்சொன்னார்; அடுத்துக் காடுசார்ந்த முல்லை சாரும் பகுதியை மேல் (2526) கூறுதல் காண்க; இவ்வாறு பிள்ளையார் திருவாலவாய்க்குச் சென்றருளும் புராண வரலாற்றின் வழியே நாட்டின் இயல்புகளையும் வளங்களையும் உடன்கூறிக் காட்டிச்செல்லும் ஆசிரியரது கவிநலம் காண்க; நிறை - வழிச்செலவிற்கும் மக்களின் நலங்கட்கும் உரிய வசதிகள் நிறைந்த; இதனை வரும் பாட்டில் விரிக்கின்றார்.
625

திருக்கடிக்குளம்

திருச்சிற்றம்பலம்

பண் - நட்டராகம் 2-ம் திருமுறை

பொடிகொள் மேனிவெண் ணூலினர் தோலினர் புலியுரி யதளாடை
கொடிகொ ளேற்றினர் மணிகிணி னெனவரு குரைகழல் சிலம்பார்க்கக்
கடிகொள் பூம்பொழில் சூழ்தரு கடிக்குளத் துறையுங்கற் பகத்தைத்தம்
முடிகள் சாய்த்தடி வீழ்தரு மடியரை முன்வினை மூடாவே. (1)

தனம லிபுகழ் தயங்குபூந் தராயவர் மன்னனற் சம்பந்தன்
மனம லிபுகழ் வண்டமிழ் மாலைகண் மாலதாய் மகிழ்வோடுங்
கனம லிகட லோதம்வந் துலவிய கடிக்குளத் தமர்வானை
யினம லிந்திசை பாடவல் லார்கள்போ யிறைவனோ டுறைவாரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- கடிக்குளத்துறையும் கற்பகத்தை வணங்குவோரை வினைமூடா; அவனை ஏத்துவார் குணமுடையவர்.

பதிகப் பாட்டுக் குறிப்பு:-(1) பொடி - திருநீறு; **கிணின்** - ஒலிக் குறிப்பு; **கற்பகம்** - இப்பதியின் சுவாமி பெயர்; பாட்டுத்தோறும் வைத்துப் போற்றப்பட்டது காண்க; இத்தலம் இவ்விறைவர் பெயராலே வழங்கப்படுவது; தலவிசேடம் பார்க்க; **முன்வினை** - பழவினை;-(2) **விண்களார்** - தேவர்; **மண்களார்** - நில வுலகத்தவர்; **ஆர்தர** - நிறைய; பொருந்த;-(3) **நற்கரி** - பின் இறைவரது சார்புபெறுதலால் **நல்** என்றார்;- (4) **தொத்து** - கொத்து; **பார் இடத்தவர்** - நில உலகோர்; **சீர்கொள் செல்வங்கள் ஏத்த** - சிறப்புப்பொருந்திய இறைமைக் குணங்களைத் துதிக்க; **இறைமைக் குணங்கள்** - ஐசுவரியங்கள்; சர்வைசுவர்ய சம்பன்ன; சம்பு என்பது சுருதி;- (5) **மதியொடு** - தழனாகம் - சூடிய முடியினன் என்க; **அலர்ந்தன மலர் - பலகொண்டு** - அலர்ந்தனவாகிய பலவகை

மலர்களையும் கொண்டு; **கரும்பு கார்மலி கொடிமிடை** - கரும்புகள் நிழல்செய்யும் நிறைந்த கொடிகள் போல நெருங்கிய; கரும்பும் கொடிகளும் மிடை என்றுரைத்தலுமாம்; விதி - நல்விதி; (6) **சடைக்கு** - சடையின்கண்; சடையில் - இலங்கிய என்க;- (7) **கோலத்த கொடிகுலவு** - என்க; **கோலத்த** - கோலத்தையுடைய; **கோலம்** - பலநிறம் - அளவு - சித்திரம் முதலிய அழகியல்கள்; மாடங்களின் குழாமும் பல பொய்கைகளும் நிறைந்த கடிக்குளம் என்றும் **புள்ளினம் அன்னங்கள் பூவை சேரும் பொய்கை** என்றும் கூட்டி உரைக்க; **கூந்தல் கலவை சேர்தரு கண்ணியன்** - தமது புரிசடையும் அம்மையாரது கூந்தலும் சேர்ந்து கலக்கும்படி கண்ணி சூடியவர்; **நின்று நின்று** - அடுக்குப் பல படியாக என்ற பொருள் தந்துநின்றது; **நின்று** ஏத்துவார் மேல்வினை **நிற்ககில்லா** என்றது சொல்லணி நயம்:- (8) **குணம்** - நற்குணம்; குணமுடையராவர்; குணமுடையவர்தாம் ஏத்துவார் என்று கூட்டினுமமையும்; முன் விதியுடையவர்தாமே (5) என்றவிடத்தும் இவ்வாறு கூட்டினும் அமையும்:-(9) **துயின்றவன் அயனொடு** - துயின்றவனும் அயனும்;- (10) அடியார் பெருமை கூறிற்று;- (11) **மாலதாய்** - **மால்** - இங்கு மிக்க அன்புமுதிர்ச்சியின் மெய்ப்பாடு குறித்தது; கனம் - மேகம்.

தலவிசேடம்;-திருக்கடிக்குளம் - காவிரித் தென்கரை 109 வது தலம்; இது கற்பகநாதர் கோயில், கற்பகனார் கோயில், கற்பகனார் குளம் என்று பலவாறும் இறைவனார் பெயருடன் சேர்த்து வழங்கப்படும்; கற்பகவிநாயகர் பூசித்து மாம்பழம் பெற்ற வரலாறுபற்றி இப்பெயரெய்தியதென்பர்; இவ் விநாயகமூர்த்தி கோயிலுக்கு வெளியே தென்மேற்கு மூலையில் எழுந்தருளியுள்ளார். சுவாமி - கற்பகநாயகர்; அம்மையார் - **சௌந்தரநாயகி; தீர்த்தம் - விநாயகதீர்த்தம்; பதிகம் 1.**

இது பாண்டி என்னும் நிலயத்தினின்றும் தெற்கே மட்சாலையில் வேதாரணியம் - முத்துப்பேட்டை மட்சாலை சந்திக்குமிடத்திலிருந்து கிழக்கே அரை நாழிகையளவில் அடையத்தக்கது,

திருஇடும்பாவனம்

திருச்சிற்றம்பலம் — பண் நட்டபாடை - 1-ம் திருமுறை

மனமார்தரு மடவாரொடு மகிழ்மைந்தர்கண் மலர்தூய்த்
தனமார்தரு சங்கக்கடல் வங்கத்திர ளுந்திச்
சினமார்தரு திறல்வாளெயிற் றரக்கன்மிகு குன்றில்
இனமாதவ ரிறைவர்க்கிட மிடும்பாவன மிதுவே. (1)
கொடியார்நெடு மாடக்குன்ற ளூரிற்கரைக் கோல
விடியார்கட லடிவீழ்தரு மிடும்பாவனத் திறையை
அடியாயுமந் தணர்காழியு ளணிஞானசம் பந்தன்
படியாற்சொன்ன பாடல்சொலப் பறையும்வினை தானே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது இடம் இடும்பாவன மிதுவே பதிகப் பாட்டுக்களின் மகுடம் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு;-(1) **மனமார்தரு...மைந்தர்கள்** - மனம் பொருந்திய மனைவியாரும் தாமுமாய் வரும் மக்கள் தொழும்; இதனை எண்ணார்ந்த (2521) என்று குறிப்பித்தனர் ஆசிரியர்; **தனமார்தரு...உந்தி** - **தனம்** - கடல்படு பொருள்களாகிய சங்கங்களையும் முத்துக்களையுமுடைய வங்கங்களின் கூட்டம் வரும் சதுப்பு நிலப்பகுதி; அரக்கன் - இடும்பன் என்ற அசுரன்; மிகுகுன்றில் - இறைவர்க்கிடம் இடும்பா வனம் - இடும்பன் தங்கியிருந்த ஊர் குன்றளூர்; அவன் பூசித்தது. **இடும்பாவனம்** இத்தொடர்புபற்றி இவையிரண்டினையும் சேர்த்துப் பதிகத்துப் பாடியருளினர்; 11-வது பாட்டுப் பார்க்க. குன்றில் - குன்றளூரில்; அரக்கன்மிக - அரக்கன் விருப்புடன் இருந்து ஆட்சிபுரிந்த; **இனமாதவரிறைவர்** - பெருந்தவர்களுக்குத் தலைவராகிய இறைவர்; **தனகார்தரு சங்கக் கடல்** என்றும் 11 வது பாட்டில் **இடியார் கடலடி வீழ்தரு** என்றும் கூறியவாற்றால் இது கடற்கரையில் இருந்ததென்பது கருதப்படும்; இதனை எடுத்துக் கடல் உப்பங்கழிகள் நிறைந்த சதுப்பு நிலப்பரப்பு உள்ளது இன்றும் காணலாம்;- (2) **கலையார் தருபுலவோரவர் காவல்மிக** - கலைவல்ல புலமையோர் இக்குன்றளூரைக் காவல்புரியும்படி இடும்பன் அமர்த்தினன் என்பது கருதப்படும்; **புலவோர்** - தேவர் என்ற குறிப்பும் பெறநின்றது; **மடவார் மிகுகுன்றில்** என மேல்வரும் பாட்டுக்களில் கூறியது அரக்கனது நகர்க்குடிவளம்;- (4) **தொழில்** - சிவனடிமைத்தொழில்;- (6) **நெறி நீர்மையர்–கறி நீர்மையர்** - முதற் பாட்டில் "இனமாதவர்க்கிடம்" என்றதனை விரித்துரைத்தபடி; **நெறி** - சிவ நெறி; **அறிநீர்மை** - தியானம்; **கறிநீர்மை** - யோகம்; **"எண்ணார்ந்த"** (2521) என்ற கருத்து;- (8) **குணநாமம்** - குணம்பற்றிய நாமம்; குணம் இங்குச் செயல் குறித்தது. அழுத செயல்பற்றி இராவணனென்றும் பெயர் தந்தருளிய வரலாறு;"இராவணனென் றவனைப்பே ரியம்பக் கொண்டார்" (தாண்);- (9) **மறையோர் - புகழ்விருத்தர் சிந்தையொடு - மலர்தூய்** - என்றது இவர்கள் தியானித்து வழிபடுகின்ற என்றதாம்; "எண்ணார்ந்த" (2521) என்ற கருத்து;- (10) **சமண்டப்பர்** - சமண சமயநெறியில் ஒழுகுவோர்;- (11) **கொடியார்மாடக் குன்றளூர்** - இடும்பனது தலைநகரம் என்ற குறிப்பு; **அடி ஆயும்** - அடிபோற்றும் - **படியால்** - உலகர் அறியும் வழியால்.

தலவிசேடம்;- **திருவிடும்பாவனம்** - காவிரித் தென்கரை 108 வது தலம்; இடும்பாசுரன் பூசித்துப் பேறுபெற்ற தலம் என்பது தலப்பெயர்க் காரணம்; இடும்பனது தலைநகர் அணிமையில் உள்ள குன்றளூர்; இரண்டையும் சேர்த்து ஒன்றாகப் பதிகத்துட் கூறியது காண்க; இங்கு வெள்ளைநிறமுடைய வெள்ளைவிநாயகர் தேற்றமாய் வழிபடப்பெறுவர்; இறைவரது திருமணவாளக்கோலம் மூலட்டான நாதருக்குப் பின்புறம் காணலாம்; அகத்தியருக்குக் காட்சிகொடுத்த தலம் என்பது கருதப்படும்; சுவாமி - **சற்குணநாதர்**; அம்மை - **மங்களநாயகி;** பதிகம் 1.

இது கடிக்குளத்தினின்றும் மேற்கில் முக்கால் நாழிகையில் உள்ளது.

திருவுசாத்தானம்

திருச்சிற்றம்பலம்

பண் - கொல்லி - 3-ம் திருமுறை

நீரிடைத் துயின்றவன் றம்பிநீள் சாம்புவான்
போருடைச் சுக்கிரீ வன்னனு மன்றொழக்
காருடை நஞ்சுண்டு காத்தருள் செய்தவெஞ்
சீருடைச் சேடர்வாழ் திருவுசாத் தானமே. (1)

தாமலார் போலவே தக்கனார் வேள்வியை
யூமனார் தங்கனா வாக்கினா னொருநொடிக்
காமனா ருடல்கெடக் காய்ந்தவெங் கண்ணுதல்
சேமமா வுறைவிடந் திருவுசாத் தானமே. (3)

வரைதிரிந் திழியுநீர் வளவயற் புகலிமன்
றிரைதெரிந் தெறிகடற் றிருவுசாத் தானரை
யுரைதெரிந் துணருஞ்சம் பந்தனொண் டமிழ்வல்லார்
நரைதிரை யின்றியே நன்னெறி சேர்வரே. (11)

திருச்சிற்றம்பலம்

பதிகக் குறிப்பு:- இறைவரது இடம் திருவுசாத்தானமே; பதிகப் பாட்டுக்களின் மகுடம் பார்க்க.

பதிகப் பாட்டுக் குறிப்பு:- (1) **நீரிடைத் துயின்றவன்** - திருமால்; இராமன்; தம்பி - இலக்குமணன்; இப்பாட்டில் இப்பதியிற் பூசித்துப் பேறுபெற்றார்களை கூறியருளினார், உலகர் அது கண்டு வழிபட்டுய்யும்பொருட்டு; சுக்கிரீவன், அனுமன் இவர்கள் இராமன் சரிதத் தொடர்புடையோர்; இராமன் தமர்களுடன் இங்குவந்து பூசித்து மந்திரோபதேசம் கேட்டுப் பேறுபெற்றனன் என்ற தல வரலாறு காண்க; **துயின்றவன் - அனுமன் ;** எண்ணும்மைகள் தொக்கன;- (2) **கொல்லை** - மருதநிலைத்துக்குரிய; வலிய என்றலுமாம்; திருமறைக்காட்டினின்றும் இதுவரை நெய்தற்றொடர்பு; இனித் தென்மேல் பால் சென்றால் கிடைப்பது" **நிறைமருதம்**" இவ்விரண்டற்கும் இடையே இங்கு உற்றது முல்லைத் தொடர்பு என்று குறிக்க **முல்லையார் புறவணி** என்றார்; இது நாட்டியலின் சிறப்புக் கூறியது; **முதுபதி** - பழம்பதி; புதிதாய்க் காடு திருத்தப்பட்டதன்று என்பது;- (3) **தாமலார் போலவே** - தாமே உண்ணின்று இயற்றுவித்தும் புறத்தோற்றத்தில் இவரல்லாது வீரபத்திரர் இயற்றியதாகத் தோன்ற; **ஊமனார் தம்கனா ஆக்கினான்** - ஊமன் கனாக்கண்டாற் சொல்லமாட்டாததுபோலத் தக்கனும் தன் வேள்வி யழிவுபட்டுத் தானும் பட்டதைச் சொல்லமாட்டாது ஆட்டுத்தலை பெற்றனன் என்றது குறிப்பு; பேசவல்லவர்களும் கனவின் செய்தியை முற்றும் உரைக்க வல்லரல்லர்; ஊமன் எவ்வாறுரைப்பன்; அதிலும் (தமிழ் அறியாத) ஆரிய ஊமன் உரைப்பது பின்னும் குளறும்; "தக்கன் பெருமகம் ஆரிய ஊமன், கனவென ஆக்கிய கூடற் பெருமான் "(கல்லாடக்) -

2524. சங்கங்கள் வயலெங்குஞ் சாலிகழைக் கரும்பெங்குங்
கொங்கெங்கு நிறைகமலக் குளிர்வாசத் தடமெங்கும்
அங்கங்கே யுழவர்குழா மார்க்கின்ற வொலியெங்கும்
எங்கெங்கு மலர்ப்படுக ரிவைகழிய வெழுந்தருளி, 626

திரு. வ. சு. செ. குறிப்பு. ஒரு **நொடி** - தக்கன் வேள்வி செற்றதற்கும் காமனை எரித்ததற்கும் ஆக முன்னும் பின்னும் கூட்டி உரைக்கவைத்த இடை நிலைத் தீபம்; **கனா ஆக்கினான்** - கனாப்போல என்க; சொல்லொணாத நிலை பொதுத் தன்மை; உவமவுருபு தொக்கது; பயன்பற்றிவந்த உவமம்; **சேமமா** - அடைந்தார்க்குச் சேமம் ஆக; ஆக என்பது ஆ என நின்றது; ஆக - உண்டாக;- (6) **குறிதரு** - யோகக் குறி;-(8) **அங்கே** - அப்பொழுதே - அவ்விடத்தே - அச்செயலிலே.

குறிப்பு:- இப்பதிகத்தில் இரண்டு பாட்டுக்கள் சிதலமாயின!

தலவிசேடம்:- திருவுசாத்தானம் - காவிரித் தென்கரை 107 வது பதி. திருக்கோயிலூர் என வழங்கும்; இராமன், இலக்குமணன், சாம்புவான், சுக்கிரீவன் அனுமான் முதலியோர் பூசித்த தலம்; பதிகம் முதற் பாட்டுப் பார்க்க; இராமன் மந்திரோபதேசம் பெற்றமையால் சுவாமி மந்திரபுரீசுவரர் எனப்பெறுவர்; தலப்பெயரும் அக்காரணத்தாற் போந்ததென்பர்; **ஊசாவுதல்** - கேட்டல்; இது மாமரங்கள் மிக்க காடாயிருந்தமையால் சூதவனம் எனப்பட்டுச் சுவாமியும் சூதவனேசுவரர் எனவும்படுவர்; இலிங்கத் திருவுருவம் வெண்ணிறமான சுயம்புமூர்த்தி; சுவாமி - **மந்திரபுரீசுவரர்;** அம்மை - **பெரியநாயகி;** பதிகம் 1. அணிமையில் திருப்பணி நிறைவேறிப் பெருஞ்சாந்தியும் செய்யப்பட்டுள்ளது.

இது முத்துப்பேட்டை நிலையத்தினின்றும் வடக்கே மட்சாலையில் ஒரு நாழிகையளவில் உள்ளது.

2524. பொருளுரை-பொழிப்பு. சங்குகள் நிறைந்த வயல்களில் எங்கும் நெல்லும் கழைக்கரும்புகளுமுள்ளன; வாசனை எங்கும் பரவி வீசும் தாமரைகள் நிறைந்த குளிர்ந்த வாசத்தடங்கள் எங்குமுள்ளன; அங்கங்கேயும் உழவர் கூட்டங்கள் கம்பலை செய்யும் ஒலி எங்கும் நிறைந்துள்ளன; மலர்கள் நிறைந்த பள்ள நிலங்கள் எங்கெங்கும் உள்ளனவாம்; இவற்றையெல்லாம் நீங்கி எழுந்தருளி,

விளக்கவுரை-எங்கும் உள்ளனவாகிய இவை கழிய - என்க; 77 முதல் 83 வரை வரும் பாட்டுக்களைப் பார்க்க.

சங்கங்கள் பொருந்திய **வயல்களில் எங்கும்** என்க.

கழைக் கரும்பு - கரும்பின் வகைகளுள் ஒன்று; கழை - மூங்கில்போன்று பருத்து உயர்ந்த என்றுலுமாம். 67 பார்க்க. கழையும் கரும்பும் தாவரத்துள் ஓரின மென்ப.

சாலியும் கரும்பும் என உம்மைத்தொகை; "கரும்பல்ல நெல்லென்ன" (65) என்றபடி கரும்பு என்று தோன்றும் சாலி என்றலுமாம்.

2525. தடமெங்கும் புனல்குடை யருந் தையலார் தொய்யினிறம்
இடமெங்கு மந்தணர்க ளோதுகிடை யாகநிலை
மடமெங்குந் தொண்டர்குழா மனைஎங்கும் புனைவதுவை 627
நடமெங்கு மொலியோவா நற்பதிக ளவைகடந்து.

கொங்கு எங்கு நிறைகமலம் - கொங்கு - வாசம்: **எங்கும் நிறைதல்** - பரவி வீசுதல்: **கமலத் தடம்** என்று கூட்டுக: **வாசத் தடம்** என்றது தடத்தின் அளவில் சிறு மணம் கமழும் ஏனைப் பூக்களின் வாசம்: கமலம் - பெருமணமுடைத்தாதலும், **கொங்கு** - புகழ் - பெருமை - என்ற குறிப்புமை மையால் எங்கும் பரவும் புகழுடைய **தாதலும் காரணமாக** வேறுபிரித்துக் கொங்கு எங்குநிறை என்று சிறப்பித்தோதினார்; ஒரு தடத்தே கமலத்துடன் ஏனை ஆம்பல், உற்பலம் முதலியவையும் இருப்பினும், சிறப்பும் முதன்மையும்பற்றித் தாமரைத்தடம் என்றே கூறிவருதலால் அவற்றை எல்லாம் எடுத்துக்கூறாது வாசத்தடம் என்று தடத்தினுள் அடக்கி அளவுபடுத்திக் கூறினார்; "அலர் செங்கமலம்" (1022) என்றவிடத்துரைத்தவை பார்க்க: II - பக்கம் 756 "துறைமலி யாம்பல்பல் லாயிரத் துத்தமி யேயெழினும், நறைமலி தாமரை தன்னதன் றோசொல்லு நற்கயமே" (சேரமான்பெருமாள் நாயனார் - திருவாரூர் மும்மணிக்கோவை - 24).

அங்கங்கே-ஒலி எங்கும்-அங்கங்கே-நெல்வயல்களேயாக, கரும்புச்சோலைகளையாக, கமலத் தடங்களேயாக அங்கங்கும் **உழவர்** செய்வினைகளிருத்தல் குறிப்பு; ஆர்க்கின்ற ஒலி - ஆர்ப்பு என்னாது ஒலி என்றார்; சேய்மையில் கேட்பார்க்குப் பொருளற்ற ஆர்ப்புப்போன்றிருப்பினும் அணுகச்சென்று கேட்போர்க்கு அவை ஒவ்வோர் பொருள்பற்றிய ஒலிகளேயாம் என்பது குறிக்க; பிள்ளையார் வழிச்சென்றருளும் நிலையாதலின் அது குறிக்க இவ்வாறு கூறினார்; இவை கழிய என்ற குறிப்புமிது. இப்பாட்டினும் மேல்வரும் பாட்டுக்களினும் கூறப்படும் பொருள்களின் வைப்புமுறையும் இக்கருத்தேபற்றியது.

மலர்ப்படுகர் - மருத நிலமாதலின் உழவுகொண்ட வயல்களின் பக்கத்தே வடிகால்கள் கொண்ட படுகர்கள் இன்றியமையாதன; இவையும் எந்நாளும் செழித்த நீருடையனவாய் நீர்ச்சிறு பூக்களை யுடையன.

சங்கங்கள்-இவை - இப்பாட்டால் மருதத்துக்குரிய சாலி - கரும்பு என்ற உணவும், **குளிர்வாசத் தடம்** என்ற நீரும், **உழவர்** என்ற மக்களும், **கமலம்-மலர்** என்ற பூவும், **ஆர்க்கின்ற** ஒலி என்ற செய்தியும் (செய்வினை) முதலிய கருப்பொருள்களும் தெரியக்கூறிய நயமும் காண்க; உழவின் ஆதரவாகிய நீர்நிலையும், உழவு செய்தொழிலும், விளைபயனும், வடிகாலும் ஆகிய உழவுவகை தெரித்த கவிநலமும் காண்க. 626

2525. **பொருளுரை**...**தடமெங்கும்..தொய்யினிறம்** - தடாகங்கள் எங்கும் நீராடும் பெண்களின் தொய்யிற் குழம்பின் நிறம்; **இடமெங்கும்..யாகநிலை** - நகர்ப்புறத்தின் இடங்களில் எங்கும் மறையவர்களின் ஓதுகிடைகளும் யாகசாலைகளும்; **மடமெங்கும் தொண்டர்குழாம்** - மடங்கள் எங்கேயும் தொண்டர்கூட்டங்கள்; மனை எங்கும்

புனைவதுவை - மனைகளில் எங்கும் செய்கின்ற கல்யாணங்கள்; நடமெங்கும் ஒலி - ஆடலின் உடன் எங்கும் பாடலின் ஒலிகள்; ஓவா நற்பதிகள் அவை கடந்து - இவ்வாறு உள்ள தன்மைகள் எல்லாம் நீங்காது நிறைந்துள்ள நல்ல பதிகளையும் கடந்து;

விளக்கவுரை...தடமெங்கும் - இவை நகரங்களின் அணிமையினும் உள்ளும் இருக்கும் நீர்நிலைகள்; குளிர்ப்பதற்கும் மற்றைப் பயன்களுக்கும் உதவுவன; முன் பாட்டிற் கூறிய வாசத்தடம் - பெரு நீர்நிலைகள்; உழவுக்குதவுவனவாய் நகர்ப் புறத்தே பணைகளின்மேல் அமைவன; "திரை வெள்வளை வாவி" (238) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

தடமெங்கும் - தொய்யில் நிறம் - பெண்கள் குளித்தலால் அவர்கள் உடலில் எழுதிய தொய்யிலின் நிறம் கவர்ந்துகொண்டு விளங்குவன தடங்கள்; தொய்யில் - நீர்க்கொடியின் ஒருவகை; இக்கொடிபோன்ற கோலத்தைப் பெண்கள் முலைமேல் எழுதுவது முன்னாளில் அணிசெய்யும் வகைகளுள் ஒன்று; "ஐய பிதிர்ந்த சுணங் கணி மென்முலைமேற், றொய்யி லெழுதுகோ மற்றொன்றான்" (கலி - 111); இவ்வாறே கரும்பையும் வல்லியையும் தோளில் எழுதுவதும் வழக்கு; தொய்யிலினைச், சந்தனம் - அகில் - தேவதாரம் - குங்குமம் முதலியவை கூடிய கலவைக் குழம்பால் எழுதுவர்.

இடமெங்கும் அந்தணர்கள் ஓதுகிடை யாகநிலை - இடம் - புறநகரில் உள்ள வெற்றிடங்கள்; ஓதுகிடை - மறைபயில் மாணவர்களின் ஓதும் இடம்; வேத பள்ளிக்கூடங்கள்; அந்தணர்கள் - ஓதுவிக்கும் கிடை என்க; ஓதும் - ஓதுவிக்கும் எனப் பிறவினையாக வந்தது; கிடை - பள்ளி; போதுதொறும் மாணவர் கூடிக் கிடத்தற்கிடமாதலின் கிடை எனப்படும்; யாகநிலை - யாகங்கள் செய்யும் சாலைகள்; அந்தணர்கள் என்பதனை இதனுடனும் கூட்டுக; (1208 - 1209 பாட்டுக்களில்) சண்டீச நாயனார் புராணத்துள் இவைபற்றி உரைத்தவையும் பார்க்க,

மடம் - சைவ மடங்கள்; "தக்க வணிகொண் மடங்கடொறுஞ் சைவ மேன்மை சாற்றுவன" (கழறிற் - புரா - 3); ஓதுகிடை - அறநிலைகளையும், யாக நிலை - மழைக்குக் காரணமாதலின் பொருணிலைகளையும், புனைவதுவை என்றது இன்பநிலையினையும், தொண்டர்குழாம் என்பது வீட்டுநிலையினையும் குறிப்பின் உணர்த்துவதும் காண்க. இக்கருத்தை விரித்து முன்காட்டிய கழறிற்றறிவார் புராணப் பாட்டில் கூறியதும் கருதுக; மடங்கள் துறவற நிலையினையும், மனைகள் இல்லற நிலையினையும் குறிப்பித்தலும் காண்க.

மனை எங்கும் புனை வதுவை - "-மங்கல வினைக ளெங்கும் மணஞ்செய்கம் பலைகளெங்கும்"(80); வதுவை - கல்யாணம்.

நடமெங்கும் - நட - ஒலி - நடம் - ஆடல் இடம்; ஒலி - அதற்கேற்ற பாடல் ஒலி.

ஓவா - நீங்காத; ஓவா என்பதனை முன்கூறிய எல்லாவற்றுடனும் தனித் தனிக் கூட்டுக; நிறமும், கிடையும், நிலையும், குழாமும், வதுவையும் ஒலியும் ஓவாத பதிகள் என்க; நடமும் ஒலியும் நித்தியமாக வுள்ளவற்றோடு வதுவையைச் சார்த்தி

30

2526. நீர்நாடு கடந்தருளி நெடும்புறவிற் குறும்புதல்கள்
கார்நாடு முகைமுல்லைக் கடிநாறு நிலங்கடந்து
போர்நாடுஞ் சிலைமறவர் புன்புலவைப் பிடைபோகிச்
சீர்நாடுந் தென்பாண்டி நன்னாடு சென்றணைவார். 628

அவற்றின் பொ[illegible] ஒலியும் ஆகிய மங்கலத்துழனிகள் உள எனக் கூறிய நயமும் காண்க; ஆ[illegible]ல்கள் நகர்களின் நித்திய மங்கலங்களுமாம்.

ஓவா நற்பதிகள் - இவை புதுக்கோட்டைச் சீமையினுட்பட்டு இந்நாளில் இந்தியாவினுள் வந்த பதிகள்; நன்மையாவது மேற்கூறியாங்கு உறுதிப் பொருள்கள் நான்கினையும் தருதற்கிடனாயிருத்தல்; இவ்வாறு நன்மை என்றும் ஓவாப் பதிகள் என்று ஆசி கூறியதன் பயனாக, ஆசிரியாது தெய்வத் திருவுள்ளத்தினும் மெய்த்திருவாக்கினும் பட்ட இப்பாட்டிற் கூறிய போறங்களின் வழிவழித் தோன்றியவைகளாய், இந்நாட்டுப் பகுதியில் செட்டிநாட்டு நகரத்து நல்வணிக மக்களின் பலவகைப்பட்ட, சைவப் பேரறச் சாலைகளும், எங்கெங்கும் இந்நாளினும், இனியும் ஓவாது பெருக விளங்கிவருவன என்பது ஈண்டுக் கருதத்தக்கது; இப் பதிகள் அறந்தாங்கி, மிழலைநாட்டுப் பெருமிழலை முதலாயின என்பது கருதப்படும். 627

2526. பொருளுரை—நீர்நாடு கடந்தருளி - இவ்வாறு சென்று நீர்நாட்டினைக் கடந்தருளி (அதன்மேல்); நெடும்புறவில்...நிலங்கடந்து - நெடிய புறவங்களில் சிறுதூறுகளில் கார்காலத்தை நாடுகின்ற முல்லையரும்புகளின் மணங்கமழும் முல்லை நிலங்களைக் கடந்து; போர்நாடும்...போகி - போரினை நாடுகின்ற வில் ஏந்திய மறவர்கள் பயின்று வாழும் புன்புலங்களாகிய பாலை சார்ந்த இடங்களின் இடையே சென்று; சீர் நாடும்...சென்று அணைவார் - சீர்நாடுகின்ற தென்பாண்டி நன்னாட்டினைச் சென்று அணைவாராகி,

விளக்கவுரை—நீர்நாடு - என்பது சோழ மன்னர்களின் நேர் அரசாட்சிக்குட்பட்ட சோழநாட்டின் பகுதி குறித்தது.

புறவில்...நிலங்கடந்து - இவை காடும் காடுசார்ந்த இடங்களாகிய முல்லைநிலப் பகுதிகளும் குறித்தன; புறவு - முல்லைப்புறவம்; அடர்ந்த காடுகளல்லாத சிறு காடுகளையுடைய நிலம்; குறும்புதல்கள் சிறு தூறுகள்; காடாரம்பம் என்பது வழக்கு; "காரு மாலையு முல்லை" (தொல் - பொ - அகத் - 6) என்றபடி முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது காரும், சிறுபொழுது மாலையுமாம்; முகை முல்லைக்கடி - முல்லைப் பூ; அத்திணைக்கரிய பூ; முல்லையரும்புகள் மாலையில் விரியும் தருணத்தில் மிக்க மணம் வீசு மியல்புடைமை குறிப்பு; இத்தகைய முல்லைப்பகுதிகளுடன். இந்நிலப்பகுதி விளங்குதல் காணலாம்

போர்நாடும்...வைப்பு - போர்நாடும் சிலைமறவர் வைப்பு - இவை முடி மன்னர்களுக்குச் சிலகாலம் கீழ்ப்பட்டும் பலகாலம் கீழ்ப்படாமலும், தனிச் சிற்றரசுகளாய்

புனைவதுவை - மனைகளில் எங்கும் செய்கின்ற கல்யாணங்கள்; நடமெங்கும் ஒலி - ஆடலின் உடன் எங்கும் பாடலின் ஒலிகள்; ஓவா நற்பதிகள் அவை கடந்து - இவ்வாறு உள்ள தன்மைகள் எல்லாம் நீங்காது நிறைந்துள்ள நல்ல பதிகளையும் கடந்து:

விளக்கவுரை...தடமெங்கும் - இவை நகரங்களின் அணிமையினும், உள்ளும் இருக்கும் நீர்நிலைகள்; குளிர்ப்பதற்கும் மற்றைப் பயன்களுக்கும் உதவுவன; முன் பாட்டிற் கூறிய வாசத்தடம் - பெரு நீர்நிலைகள்; உழவுக்குதவுவனவாய் நகர்ப் புறத்தே பணைகளின்மேல் அமைவன; "திரை வெள்வளை வாவி" (238) என்ற விடத்துரைத்தவை பார்க்க.

தடமெங்கும் - தொய்யில் நிறம் - பெண்கள் குளித்தலால் அவர்கள் உடலில் எழுதிய தொய்யிலின் நிறம் கவர்ந்துகொண்டு விளங்குவன தடங்கள்; தொய்யில் - நீர்க்கொடியின் ஒருவகை; இக்கொடிபோன்ற கோலத்தைப் பெண்கள் முலைமேல் எழுதுவது முன்னாளில் அணிசெய்யும் வகைகளுள் ஒன்று; "ஐய பிதிர்ந்த சுணங் கணி மென்முலைமேற், றொய்யி லெழுதுகோ மற்றொன்றான்" (கலி - 111); இவ்வாறே கரும்பையும் வல்லியையும் தோளில் எழுதுவதும் வழக்கு; தொய்யிலினைச், சந்தனம் - அகில் - தேவதாரம் - குங்குமம் முதலியவை கூடிய கலவைக் குழம்பால் எழுதுவர்.

இடமெங்கும் அந்தணர்கள் ஓதுகிடை யாகநிலை - இடம் - புறநகரில் உள்ள வெற்றிடங்கள்; ஓதுகிடை - மறைபயில் மாணவர்களின் ஓதும் இடம்; வேத பள்ளிக்கூடங்கள்; அந்தணர்கள் - ஓதுவிக்கும் கிடை என்க; ஓதும் - ஓதுவிக்கும் எனப் பிறவினையாக வந்தது; கிடை - பள்ளி; போதுதொறும் மாணவர் கூடிக் கிடத்தற்கிடமாதலின் கிடை எனப்படும்; யாகநிலை - யாகங்கள் செய்யும் சாலைகள்; அந்தணர்கள் என்பதனை இதனுடனும் கூட்டுக; (1208 - 1209 பாட்டுக்களில்) சண்டீச நாயனார் புராணத்துள் இவைபற்றி உரைத்தவையும் பார்க்க,

மடம் - சைவ மடங்கள்; "தக்க வணிகொண் மடங்கடொறுஞ் சைவ மேன்மை சாற்றுவன" (கழறிற் - புரா - 3); ஓதுகிடை - அறநிலைகளையும், யாக நிலை - மழைக்குக் காரணமாதலின் பொருணிலைகளையும், புனைவதுவை என்றது இன்பநிலையினையும், தொண்டர்குழாம் என்பது வீட்டுநிலையினையும் குறிப்பின் உணர்த்துவதும் காண்க. இக்கருத்தை விரித்து முன்காட்டிய கழறிற்றறிவார் புராணப் பாட்டில் கூறியதும் கருதுக; மடங்கள் துறவற நிலையினையும், மனைகள் இல்லற நிலையினையும் குறிப்பித்தலும் காண்க.

மனை எங்கும் புனை வதுவை - "-மங்கல வினைக ளெங்கும் மணஞ்செய்கம் பலைகளெங்கும்"(80); வதுவை - கல்யாணம்.

நடமெங்கும் - நட - ஒலி - நடம் - ஆடல் இடம்; ஒலி - அதற்கேற்ற பாடல் ஒலி.

ஓவா - நீங்காத; ஒவா என்பதனை முன்கூறிய எல்லாவற்றுடனும் தனித் தனிக் கூட்டுக; நிறமும், கிடையும், நிலையும், குழாமும், வதுவையும் ஒலியும் ஓவாத பதிகள் என்க; நடமும் ஒலியும் நித்தியமாக வுள்ளவற்றோடு வதுவையைச் சார்த்தி

2526. நீர்நாடு கடந்தருளி நெடும்புறவிற் குறும்புதல்கள்
கார்நாடு முகைமுல்லைக் கடிநாறு நிலங்கடந்து
போர்நாடுஞ் சிலைமறவர் புன்புலவைப் பிடைபோகிச்
சீர்நாடுந் தென்பாண்டி நன்னாடு சென்றணைவார். 628

அவற்றின் பொ நட் ந நட புர் ஒலியும் ஆகிய மங்கலத்துழனிகள் உள எனக் கூறிய நயமும் காண்க: ஆடல் பாடல்கள் நகர்களின் நித்திய மங்கலங்களுமாம்.

ஓவா நற்பதிகள் - இவை புதுக்கோட்டைச் சீமையினுட்பட்டு இந்நாளில் இந்தியாவினுள் வந்த பதிகள்: நன்மையாவது மேற்கூறியாங்கு உறுதிப் பொருள்கள் நான்கினையும் தருதற்கிடனாயிருத்தல்: இவ்வாறு நன்மை என்றும் ஓவாப் பதிகள் என்று ஆசி கூறியதன் பயனாக. ஆசிரியாது தெய்வத் திருவுள்ளத்தினும் மெய்த்திருவாக்கினும் பட்ட இப்பாட்டிற் கூறிய பேரறங்களின் வழிவழித் தோன்றியவைகளாய், இந்நாட்டுப் பகுதியில் செட்டிநாட்டு நகரத்து நல்வணிக மக்களின் பலவகைப்பட்ட, சைவப் பேரறச் சாலைகளும். எங்கெங்கும் இந்நாளினும். இனியும் ஓவாது பெருக விளங்கிவருவன என்பது ஈண்டுக் கருதத்தக்கது: இப் பதிகள் அறந்தாங்கி. மிழலைநாட்டுப் பெருமிழலை முதலாயின என்பது கருதப்படும். 627

2526. பொருளுரை-நீர்நாடு கடந்தருளி - இவ்வாறு சென்று நீர்நாட்டினைக் கடந்தருளி (அதன்மேல்); நெடும்புறவில்..நிலங்கடந்து - நெடிய புறவங்களில் சிறுதூறுகளில் கார்காலத்தை நாடுகின்ற முல்லையரும்புகளின் மணங்கமழும் முல்லை நிலங்களைக் கடந்து; போர்நாடும்...போகி - போரினை நாடுகின்ற வில் ஏந்திய மறவர்கள் பயின்று வாழும் புன்புலங்களாகிய பாலை சார்ந்த இடங்களின் இடையே சென்று; சீர் நாடும்...சென்று அணைவார் - சீர்நாடுகின்ற தென்பாண்டி நன்னாட்டினைச் சென்று அணைவாராகி,

விளக்கவுரை-நீர்நாடு - என்பது சோழ மன்னர்களின் நேர் அரசாட்சிக்குட்பட்ட சோழநாட்டின் பகுதி குறித்தது.

புறவில்....நிலங்கடந்து - இவை காடும் காடுசார்ந்த இடங்களாகிய முல்லைநிலப் பகுதிகளும் குறித்தன; புறவு - முல்லைப்புறவம்; அடர்ந்த காடுகளல்லாத சிறு காடுகளையுடைய நிலம்; **குறும்புதல்கள்** சிறு தூறுகள்; காடாரம்பம் என்பது வழக்கு; "காரு மாலையு முல்லை" (தொல் - பொ - அகத் - 6) என்றபடி முல்லைத் திணைக்குரிய பெரும்பொழுது காரும், சிறுபொழுது மாலையுமாம்; முகை முல்லைக்கடி - முல்லைப் பூ; அத்திணைக்குரிய பூ; முல்லையரும்புகள் மாலையில் விரியும் தருணத்தில் மிக்க மணம் வீசு மியல்புடைமை குறிப்பு; இத்தகைய முல்லைப்பகுதிகளுடன். இந்நிலப்பகுதி விளங்குதல் காணலாம்

போர்நாடும்....வைப்பு - **போர்நாடும் சிலைமறவர் வைப்பு** - இவை முடி மன்னர்களுக்குச் சிலகாலம் கீழ்ப்பட்டும் பலகாலம் கீழ்ப்படாமலும், தனிச் சிற்றரசுகளாய்

அக்காலத்தில் தத்தம் பகுதிகளுள் அமைந்து ஆட்சிசெலுத்திவந்த சிற்றரசர்களின் குறுநிலங்கள். இவர்கள் கொங்கர், மறவர், குறும்பர் என்று பலவாறும் அறியப்படுவர்; பேரரசர்களுக்குத் திறைகொடாமலும் அடங்காமலும் பகைத்தும், பற்பல காலங்களில் தொல்லை விளைத்த நிலைகள் சரிதவாயிலாக அறியப்படும்; பேரரசர்கள் தமக்குள் போர் நிகழாமல் எல்லை காவலாக இவ்வைப்புக்களைப் பயன்படுத்திக்கொள்வதும் அந்நாள் வழக்கு; இந்நாளினும் அத்தகைய இராசதந்திர முறைகள் கையாளப்படுதல் பல நாடுகளிலும் காணலாம்; இவ்வைப்புக்களில் வாழும் மறவர் முதலிய குறுநில மன்னர்கள் பேரரசர்களுடன் போர்செய்தலும் அவர்க்குப் போர்த்துணையாதலும் உண்டு; Warlike tribes என்பர் நவீனர்.

போர்நாடுஞ் சிலைமறவர் - போரை நாடிநிற்றல் வீரர்க்குரிய தன்மை என்பர்; "தமிழ் நாட்டெல்லையுள் தன்னோடு எதிர்த்துப் பொரும் அரசரை இரண்டு திசையினும் பெறாத கரிகாலன், போரிலே பேராசையுடையனாதலின் வடதிசை பெருந்திசை யாதலின், பகைபெறலாமென்று கருதி ஆண்டுச் சேறற்கு விரும்பி என்று, "அசைவி லூக்கத்து நசை" (சிலப் - இந்திர - 98) என்றதன்கீழ் அடியார்க்கு நல்லார் எழுதிய உரை காண்க; தமது போர்க்குத் துணையாக இவர்களைப் பிற அரசர் நாடும் என்றலுமாம்; இம்மக்கள் பலரும் இந்நாளிலும் இம்மறவர் பயின்று வாழ்தலும் காண்க. இவர்கள் இந்நாடுகளின் பழங்குடி மக்கள் என்பது பற்பல சரித வரலாறுகளாலறிவர். போர் இவர்களை நாடிவரும் கொடுஞ் செயல்களையுடையார் என்ற குறிப்பும் காண்க. ஆசிரியர் அமைச்சியலின்கீழ் இவர்களை இன்னராக அறிந்த திறம்பற்றி இவ்வாறு கூறிக் காட்டியருளினார்; "கொங்கரொடு குடபுலத்துக் கோமன்னர் திறைகொணரச் சிந்தை களிகூர்ந்து" (புகழ் - புரா - 12), "அளந்ததிறை முறைகொணரா அரசனுள னொருவன்" (மேற்படி); "அதிகனவே னணிந்தாக, வோங்கெயில்சூழ் மலையரணத் துள்ளுறைவான்" (மேற்படி - 17) என்று வரும் புகழ்ச்சோழ நாயனார் புராண வரலாறும், சேரர் பெருமானாராகிய கழறிற்றறிவார் நாயனார் ஆளுடைய நம்பிகளை நோக்கிச் சோழநாட்டுக்கு எழுந்தருளும்போது "கொன்னா ரயில்வேல் மறவர்பயில் கொங்கர்நாடு கடந்தருளி" (கழறிற் - புரா - 50); "குன்றுங் கானு முடைக்குறும்ப ரிடங்க டோறுங் குறைவறுப்பத், துன்று முரம்புங் கான்யாறுந் துறுகற்சுரமும் பலகடந்து" (மேற்படி - 51) என்ற வரலாறும் ஈண்டுவைத்துக் கருதற்பாலன.

புன்புல வைப்பு - நீர்நாடுபோலப் பரந்த நீர்பாயும் வயல்களையின்றிச் சிறுசிறு புன்செய் நிலப்பரப்புக்களையுடைய நிலப்பகுதிகளும் சிற்றூர்களும்.

போர்நாடும்-வைப்பு - குறிஞ்சிநிலமும் மக்களும், தொழிலும், பிறவும் கூறிய தமிழ் நயமும் காண்க.

புன்புலை வைப்பு என்பது பாடமாயின் இங்கு வாழ்நரின் "கொல்லெறி குத்தென் றார்க்கும்" ஓசைகளின் செயல்களும் "ஆறலை துண்ணும் வேடர் அயற்புலங் கவர்ந்து" என்ற செயல்களும் குறிப்பதாகக் கொள்க.

2527. மன்றன்மலர்ப் பிறங்கன்மருங் கெறிந்துவரு நதிகள்பல
சென்றணைந்து கடந்தேறித் திரிமருப்பின் கலைபுணர்மான்
கன்றுதெறித் தணவுகைக்குங் கானவதர் கடந்தணைந்தார்
கொன்றைநறுஞ் சடைமுடியார் மகிழ்ந்ததிருக் கொடுங்குன்றம். 629

சீர்நாடும் - சிறப்பினை நாடிய நிலையில் உள்ள; அக்காலத்துத் தனது முன்னைச் சிறப்பினையிழந்து. இனிப் பிள்ளையாரருளாலே சீர்பெற நின்றநிலை குறிப்பு. சீர்கள் நாடியடையும் இடமாகிய என்ற குறிப்புமாம்.

நகைமுல்லை-என்பதும் பாடம். *628*

2527. பொருளுரை...மன்றல் கடந்து ஏறி - மணமுடைய மலர்க்குவியல்களை இரு பக்கங்களிலும் வீசிவருகின்ற பல நதிகளையும் சென்று அணைந்து கடந்து ஏறிப்போய்; திரிமருப்பின்...கடந்து-முறுக்குடைய கொம்புடைய கலைகளும் அவற்றோடு இணைந்து வரும் மான்களும் அவற்றின் கன்றுகளும் கூட்டமாகத் துள்ளிப் பாய்கின்ற காடுகளின் இடையேசெல்லும் வழிகளைக் கடந்து; கொன்றை-கொடுங்குன்றம்-கொன்றை மலர்களின் மணமுடைய சடைமுடியார் மகிழ்தெழுந்தருளியுள்ள திருக்கொடுங்குன்றத்தினை; அணைந்தார் - அணைந்தருளினார்.

இந் நான்கு பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபுகொண்டுரைக்கநின்றன.

விளக்கவுரை...மன்றல் மலர்ப் பிறங்கல் - பிறங்கல் - குன்று; குன்று போலப் பெருந் திரட்சியாக என்றது பொருள்; உபசாரம்; நதிகள்தாம்வரும் குறிஞ்சி முல்லைநிலங்களினின்றும் மலர்களைக் குவியல்களாக அடித்து அலைத்து இரு கரைகளிலும் ஒதுக்கிச் செல்கின்றன என்பது.

நதிகள் பல - இவை தென் வெள்ளாறும், பாம்பாறும் அதன் பல கிளைகளும், பிறவுமாம்.

சென்று - அணைந்து - கடந்து ஏறி - செல்லுதல் - நதிகளின் இறங்குதுறைகளை நோக்கி வழிகண்டு நடந்துசெல்லுதலும், அணைதல் - அவற்றின்கண் சேர்தலும்; கடத்தல் - அவற்றை ஊடே கடந்துசெல்லுதலும்; ஏறுதல் - அக்கரையில் தாண்டி ஏறிச் செல்லுதலும் குறித்தன. இந்நிலப் பகுதியில் இச்செயல் ஒவ்வொன்றும் தனித்தனி பெருமுயற்சி வேண்டப்படும் தன்மையனவாதல் குறிப்பு; பிள்ளையாரது இவ்வழிச் செலவு இத்துணையும் விரைவிலும், இலகுவிலும் இயன்றதென்பார் ஒவ்வோர் வினையெச்சச் சொல்லாற்றலாற் கூறி வழிகடத்திச் செல்லுவது ஆசிரியரது கவிநலன்.

திரிமருப்பின்...கானஅதர் - திரிமருப்பின்கலை - கலை - ஆண்மான்; **திரி மருப்பு** - முறுக்குடையனவாய்ப் பிளவுபட்ட கொம்புகளையுடையவை கலை மான்; **மான்** - மானின் பெட்டை; **கன்று** - அவற்றின் கன்றுகள்; **தெறித்தல்** - துள்ளிக்குதித்தல்; **உகைத்தல்** - கூட்டமாகச் சரித்தல்; **கலையும் மானும் கன்றும்** என உம்மைத்தொகை; மான்கள்

2528. கொடுங்குன்றத் தினிதமர்ந்த கொழும்பவளச் செழுங்குன்றை
யடுங்குன்ற முரித்தானை வணங்கியருந் தமிழ்பாடி
நெடுங்குன்றும் படர்கானு நிறைநாடுங் கடந்துமதி
தொடுங்குன்ற மதின்மதுரைத் தொன்னகர்வந் தணைகின்றார். 630

கூட்டமாகச் செல்லுமியல்பும் காண்க; இங்கு ஆண் மான்களுடன் சேரும் பெட்டை மான்கள் ஈன்ற மான் கன்றுகள் துள்ளிப் பாயும் என்றுரைகொண்டனர் முன் உரைகாரர்; அது பொருந்தாமையறிக. **கான அதர்** - காட்டுவழிகள்; இங்குக் கூறியன புன்புலவைப்பு இடங்களினின்றும் செறிந்த முல்லைக்காடுகள்; அந்நாளில் புதுக்கோட்டையினின்றும் வெள்ளாறு தாண்டிச் செட்டிநாட்டுப் பகுதிகளின் வழித் திருக்கொடுங்குன்றம் செல்லும்வழி, செறிந்த காட்டுவழிகளாய்க் கிடந்தன என்பது அறியப்படும்; ஆயினும் இடையிடையே மக்கள் வாழும் ஊர்களும் இருந்தன என்ற நிலை, மான் கன்று குறித்த தன்மையாற் கருதவும் படும்.

திருக்கொடுங்குன்றம் - இது பிரான்மலை என வழங்கும்; பல மலைகளின் இடையில் விளங்குவது; தலவிசேடம் பார்க்க. பாண்டிநாட்டிற் பிள்ளையார் வழிபட்ட முதற்பதி இதுவாம். 629

2528. **பொருளுரை**-கொடுங்குன்றத்து...பாடி - திருக்கொடுங்குன்றத்தில் இனிது விரும்பி வீற்றிருந்தருளிய கொழும்பவள மலைபோன்றவராகிய, யானையினை உரித்த இறைவரை வணங்கி அருந்தமிழ்மாலை பாடி; நெடுங்குன்றும்...கடந்து - நீண்ட குன்றுகளையும் படர்ந்த காடுகளையும் நிறைந்த நாடுகளையும் கடந்துசென்று; மதி...அணைகின்றார் - சந்திரனைத் தீண்டும்படி உயர்ந்த மலைபோன்ற மதில்களையுடைய மதுரையென்னும் பழமையாகிய நகரத்தினை வந்து அணைகின்றாராயினார்.

விளக்கவுரை-**கொழும்பவளச் செழுங்குன்று** - நிறம்பற்றிச் சிவபிரானைப் பவளக் குன்றாக உவமித்தார்; உவகை யாகுபெயர்; "தெள்ளு பேரொளிப் பவள வெற்பென" (1644); **கொழுமை** - விளைவு முற்றிய தன்மை; **செழுமை** - பெரிதாந் தன்மை.

அடுங்குன்றம் - யானை; **அடும்** - கொல்லும். குன்றம் போல்வதனைக் குன்றமென்றார்.

நெடுங்குன்றம் படர்கானும் நிறைநாடும் கடந்து - நெடுங்குன்று - அழகர்மலை - சோலைமலை - சிறுமலை முதலாயின; படர்கான் - அம்மலைகளை அடுத்துப் படர்ந்த காடுகள்; நிறைநாடு; அக்காடுகளை அடுத்துள்ள மருதநிலச் செல்வ வளங்கள் நிறைந்த நாட்டின் பகுதிகள்; இதனாற் கொடுங்குன்றத்தினின்றும் மதுரைவரையில் இடைப் பட்ட நிலப்பகுதிகள் குறிஞ்சியும் முல்லையும் மருதமும் என்ற முத்திறத்தினும் பட்டன என்பது அறிவிக்கப்பட்டது. இன்றும் இவை இன்ன தன்மையவாய்ச் சிறந்து விளங்குதல் காணத்தக்கது. படர்கான் - மலையை அடுத்து நிலப்பரப்பில் நீண்டு படர்ந்த தன்மையும், நிறைநாடு - ஆற்றுவளத்தால் நெல்வயல்கள் முதலியவற்றின் செல்வங்களும் மருதநில மக்கட் கூட்டமும் நிறைந்த தன்மையும் உணர்த்தப்பட்டன.

2529. இந்நிலை யிவர்வந் தெய்த வெண்பெருங் குன்ற மேவும்
அந்நிலை யமணர் தங்கட் கழிவுமுன் சாற்ற லுற்றுப்
பன்முறை வெருக்கொண் டுள்ளம் பதைப்பத்தீக் கனாக்க ளோடுந்
துன்னிமித் தங்க ளங்கு நிகழ்ந்தன சொல்ல லுற்றாம். **631**

மதிதொடும் குன்றமதில் மதுரை - **மதிதொடும் மதில்** என்க; **மதி தொடுதல்** - சந்திரமண்டலத்தைத் தீண்டுவபோன் றுயர்தல்; பூமண்டலத்திற்கு மிக அணிமையில் உள்ளது சந்திரன் ஆதலின் **மதிதொடும்** என்றார்; **குன்றமதில்** - குன்றுபோலுயர்ந்த மதில்; எண்பெருங் குன்றங்களே மதில்போன்று சுற்றிச் சூழ்ந்த என்ற குறிப்புமாம்; "பிறைசேரும் கொடுங்குன்றர்" (தேவா) என்ற குறிப்புக் காண்க. **மதி**-கூர்த்த அறிவு எனக்கொண்டு; **மதிதொடும்** - நல்லறிவு வெளிப்படும் நிலைபெறும் என்ற குறிப்புமாம்.

மதுரைத் தொன்னகர் - **மதுரை** என்ற பெயர்ப்பொருள்பற்றி 36வது மதுரையான திருவிளையாடல் (நம்பி திருவிளையாடற் புராணம்) பார்க்க.

நிறைநாடுங் கடந்து - பிள்ளையார் சமயநல்லூர் என்று இப்போது வழங்கும் இடத்திற் றங்கி மதுரைக்கு எழுந்தருளினர் என்றும். அதனால் அது அப்பெயர்பெற்ற தென்றும் ஒரு கர்ணபாரம்பரை வழக்குமுண்டு; இதன் பொருத்தமும் உண்மையும் ஆராய்தற்பாலன.

அணைகின்றார் - அணையும் செயல் தொடர்ந்து நிகழ்ந்துகொண்டு செல்லுதல் குறிக்க நிகழ்காலத்தாற் கூறினார்; இத்தொடர்ச்சி யிவ்வாறே மேல் "ஞானத் தமுதுண்டா ரணைகின்றார்" (2546) என எழுவாயுடன் சேர்த்துத் தொடர்ந்து கூறப்பட்டு மேற்சென்று வரலாற்றுமுறையில் நிறைவெய்த நிற்பது கண்டுகொள்க; சொல்லும் பொருளும் ஒத்தியலும் தன்மை புலப்பட யாத்த கவித் திறமும் காண்க. 630

2529. **பொருளுரை**--இந்நிலை இவர் வந்து எய்த - இவ்விடை இவ்வாறு இவர் வந்து எய்து வாராக; எண் பெருங்குன்றம் மேவும் அந்நிலை-எண் பெருங்குன்றங்களின் மேவிய அந்நிலையில்; அமணர் தங்கட்கு--நிகழ்ந்தன - அமணர்களுக்கு வரும் அழிவை முன்னால் அறியச்செய்து பல முறையும் காரணமுன்றி அச்சங்கொண்டு மனம் பதைக்கும்படி தீக்கனாக்களுடனே அவ்விடத்துத் துன்னிமித்தங்கள் நிகழ்ந்தனவற்றை; சொல்லலுற்றாம் - இனிச் சொல்லத் தொடங்குகின்றோம்;

விளக்கவுரை--இந்நிலை - **அந்நிலை** - இதுவரை இங்கு பிள்ளையாருடன் கூடிச் சென்றிருந்த வரலாற்றின் நினைவினை இனி அங்குப் பாண்டிநாட்டில் அமணர் நிலை பற்றிய வரலாற்றிற் புகச் செலுத்துதற்கு இந்நிலை என்றும், அந்நிலை அமணர் என்றும் கூறிய கவிமாண்பு காண்க; அணிமையும் சேய்மையுமாகிய இகர அகரச் சுட்டுக்கள், பிள்ளையார் நமக்கு அணியராதலும் அமணர் சேயராதலும் குறித்து நிற்கும் நயமும் காண்க.

எண் பெருங்குன்றம் - மதுரையைச் சூழ்ந்துள்ள எட்டுக்குன்றுகள்; ஆனைமலை முதலாயின; இவை ஒவ்வொன்றிலும் சமணர் பள்ளிகளமைந்து ஆயிரம் ஆயிரம் அமண குருமார்கள் தங்கித் தங்கள் சமயம் பரப்பி வந்தனர்; "ஆனை மாமலை யாதி யாய விடங்க ளிற்பல வல்லல்சேர், ஈனர்" (தேவா) இவற்றை "அஞ்சனங் கௌஞ்சங் கோவர்த் தனந்திரி கூடங் காஞ்சி, குஞ்சரஞ் சைய மேம கூடமே விந்த மென்னு, மஞ்சிவர் வரைக ளெட்டும் வைகுறு மமணர்" (திருவிளை - யானையெ;7.) என்று கோவை செய்தனர் பரஞ்சோதியார்; இவை நாகமலை, பசுமலை, பன்றிமலை, யானைமலை முதலாக வழங்கப்படுவன. சிவ நெறியின் மாறுபட்ட முனிவர்களின் செயல்களால் இவை ஒவ்வோர் காலத்தில் யானை - நாகம் - பசு முதலிய உருவுடன் மதுரையை அழிக்க வர, இறைவரது திருவிளையாடல்களால் தாம் அழிவுபட்டுக் கல்லுருவுடன் மதுரையைச் சூழ்ந்து நின்றன என்பது வரலாறு; அவ்வுண்மையைப் புதுப்பிக்கப் பிற்றை நாளில் இக்குன்றங்களில் சமணர் பள்ளிகளை நிறுவிச் சிவநெறிக்கு முரண்பட்டு அழிவு தேடினார்கள்; ஆனால் சைவம் அழியாது தாம் அழிவு பட்டனர்; அதன் பின் இற்றை நாளினும், சிவநெறியினின்றும் முரண்பட்டு அதனைப் பலவாற்றானும் குறையச்செய்யும் நோக்கமும் ஊக்கமும் கொண்ட கிறித்தவர் முதலிய புறச் சமயிகள் இம்மலைகளிலே முன் போந்தாரின் வழித்தோன்றல்களாக வதிந்து வருதல் முன் வரலாற்றின் உண்மையை மேலும் வற்புறுத்தி மெய்ப்படுத்துகின்றது என்க;

அழிவு முன் சாற்றலுற்று - பின் வரும் அழிவை முன்னே தெரிவிக்கும் அறிவிப் பாகி.

வெருக் கொள்ளுதல் - காரணம் தோற்றாது சடுதியில் அச்சங் கொள்ளுதல்; "வெருக் கொண்டாற் போலழுவர்" (1952).

தீக்கனாக்களோடும் துன்னிமித்தங்கள் - நிகழ்ந்தன-கனாக்கள் கனவு நிலையினும், நிமித்தங்கள் நனவு நிலையினும் காணும் அறிவிப்புக்கள்; இவை யிரண்டும் பிற்பயன்களை முன் அறிவிப்பன என்பது துணிபு; நோயும் முன்னினைவுகளும் காரணமாகவும், இவ்வாறுள்ள பிற காரணங்களாலும், பகலிலும், நிகழும் கனாக்கள் பயன் காட்டா என்பர். சிற்சில நிமித்தங்களும் அவ்வாறே கழியும்; ஆனால் கருமம் பற்றி இறைவனியதியில் வரும் கனா நிமித்தங்கள் பலனறிவிப்பனவேயாம் என்க.

அங்கு - எண் பெருங் குன்றங்களில் அவ்வப் பள்ளிகளிலும் அமணர் பதிகளிலும்; 631

2530. பொருளுரை... பள்ளிகள் மேலும் - சமணரது கோயில்களின் மேலும்; மாடு...மேலும் - அவற்றின் பக்கத்தில் சமணகுருமார் தங்கும் குகைகளின் மேலும்; ஒள் இதழ் அசோகின் மேலும் - ஒள்ளிய இதழ்களையுடைய அசோக மரங்களின் மேலும்; உணவு செய்...மண்டபங்கள் மேலும் - உணவு செய்யும் கவளங்களைக் கையில் ஏந்திக் கொள்ளுதற்குரிய மண்டபங்களின் மேலும்; கூகையோடு...அழிவு சாற்றும் - கூகைகளோடு

அமணர்க்குத் துன்னிமித்தங்கள்

2530. பள்ளிகண் மேலு மாடு பயிலமண் பாழி மேலும்
ஒள்ளித ழசோகின் மேலு முணவுசெய் கவளங் கையிற்
கொள்ளுமண் டபங்கண் மேலுங் கூகையோ டாந்தை தீய
புள்ளின மான தம்மிற் பூசலிட் டழிவு சாற்றும் 632

ஆந்தைகளும் பிற தீய பறவைக்கூட்டமும் தம்முட்போர் செய்து பின் வரும் கேட்டைத் தெரிவித்தன.

விளக்கவுரை-இது முதல் மூன்று பாட்டுக்களினும் சமணர்க்கு நேர்ந்த துன்னிமித்தங்கள் கூறப்பட்டன. மேல் 2535 முதல் 2538 வரை நான்கு பாட்டுக்களால் அவர்கள் கண்ட தீக்கனாக்களின் தன்மை கூறப்படுதல் காண்க.

கூகையோடு-அழிவு சாற்றும் - "பல் சகுன மெல்லா முறைமுறை தீங்கு செய்ய, வித்தகு தீய புட்களீண்டமுன் னுதிரங் காட்டு மத்தனுக்கு" (812) என்று புட்கள் தீச்சகுனமாகிய உதிரங்காட்டும் தன்மைபற்றிக் கண்ணப்ப நாயனார் வரலாற்றிற் கூறியது காண்க; **கூகை, ஆந்தை - தீயபுள்ளினம்** - கூகையும் ஆந்தையும் முதலியவை காணலாகாதனவும் கேட்கலாகாதனவுமாகிய புட்கள் என்பர்; இவை பெரும்பான்மை சுடலைகளினும் பாலைவனங்களினும் வசிக்கும்; மூத்த பதிகங்கள் பார்க்க.

தீயபுட்கள் - எப்போதும் தீமை காட்டுவனவும், ஒவ்வோர் நிலையில் தீமை காட்டுவனவுமாம். காக்கை இடம் சென்றால் தீ தென்பது வழக்கு. "கொடியிட மாப் போந்த குறை" -, என்று சிலேடைபட முருகனைப்பாடினன் ஒரு புலவன்.

கூகை - கோட்டான்; **பூசலிட்டு** - ஒலி செய்து; கூவி. இவை கண்களில் தீயின் கூறு மிக்குடையன. ஆதலின் இரவில் இருளில் பார்வையுடையன; பூனைகள்போல; இத்தன்மையால் இருட்டன்மையுடைய சாக்காடு முதலிய துன்பங்களின் அணுகுதலை முன் அறியும் தன்மை பெற்றமையால் அதனை அறிந்து கூவுவன; அது பற்றி இவற்றின் கூவுதல் தீமையை முன்குறிக்கு மென்ப.

புள்ளிவையான-என்பதும் பாடம். 632

அணங்கமர் யாழ்முரித் தாண்பனை பெண்பனை யாக்கியமண்
கணங்கழு வேற்றிக் கருவிடந் தீர்த்துக் கதவடைத்துப்
பிணங்கலை நீரெதி ரோடஞ் செலுத்தின வெண்பிறையோ
டிணங்கிய மாடச் சிரபுரத் தான்ற னிருந்தமிழே. -(39)

காரங் கணைபொழிற் காழிக் கவுணியர் தீபனல்லூர்ச்
சீரங் கணைநற் பெருமணந் தன்னிற் சிவபுரத்து

2531. பீலியுந் தடுக்கும் பாயும் பிடித்தகை வழுவி வீழக்.
கால்களுந் தடுமா றாடிக், கண்களு மிடமே யாடி.
மேல்வரு மழிவுக் காக வேறுகா ரணமுங் காணார்
மாலுழந் தறிவு கெட்டு மயங்கின ரமண ரெல்லாம்.

வாரங் கணைகொங்கை மாதொடும் புக்குறும் போதுவந்தார்
ஆரங் கொழிந்தனர் பெற்றதல் லாலவ் வரும்பதமே -(60)

-ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பி.

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர்-நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
றன்மாலை ஞானத் தமிழ்.

-(11)

-ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை.

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல்-ஏடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

-திருக்களிற்றுப்படியார் - (70)

(மங்கையர்க்கரசி யம்மையாரும் குலச்சிறை நாயனாரும் விடுத்த விண்ணப்பத்துக் கிணங்கி, ஆளுடைய பிள்ளையார் சமண சமய நிராகரிப்பும் சைவ ஆக்கமும் கருதித் திருமறைக்காட்டினின்றும் பாண்டி நாட்டுக்குத் திருவருள் வழியே எழுந்தருளி வருகின்றார். அப்போது சமணர்க்கு மேல் வரும் கெடுதியைக் குறிக்கும் தீக்கனாக்களும் துன்னிமித்தங்களும் நிகழ்ந்தன)

2531. பொருளுரை-பீலியும்-வீழ - மயிற்பீலிக் கற்றையும், தடுக்கும், பாயும் அவற்றைப் பிடித்த கைப்பிடி முதலியவற்றினின்றும் தாமே நழுவி விழவும்; கால்களும் - கால்களும் தடுமாற்றத்தையடைந்து தள்ளாடியும்; கண்களும் இடமே யாடி - கண்கள் இடப்பக்கத்தே துடித்தும்; அமணர் எல்லாம் - அமணர்களெல்லாம்; மேல்வரும்...காணார் - இவற்றால் அறிவிக்கப்படுமாறு பின்னால் உறுதியாகத் தமக்கு வரும் அழிவுக்கு வேறு காரணம் ஒன்றும் தோன்றாதவர்களாகி; மயங்கினர் - மயங்கினார்கள்.

விளக்கவுரை-பீலி - தடுக்கு - பாய் - பீலிக்கற்றைகளைப் பிடித்தலும், தடுக்கினை இடுக்குதலும், பாயினை உடுத்தலும் சமணர் வழக்குக்கள்; **பிடித்த கையினின்றும்** பீலி வழுவி வீழ்ந்தது; தடுக்கு இடுக்கிய இடத்தினின்றும் வழுவிற்று; உடுத்த இடையினின்றும் பாய் வழுவிற்று.

பிலி பிடித்த கை - என்றதனால் ஏனையவற்றின் இடங்கள் ஏற்புழிக் கோடல் பற்றிக் கொள்ளப்பட்டன.

சால்களும் தடுமாறாடிக் கண்களும் இடமேயாடி - கால்கள் பின்னித் தடுமாறுதலும் ஆண்மக்களுக்கு மக்களுக்கு இடக்கண் துடித்தலும் துன்னிமித்தங்கள் என்பர்: கால் தடுமாறுதல் உடலில் உயிர்ச்சத்தி குறைதலால் வருவது; இஃது ஆகாது; ஆண்மக்களுக்கு இடக்கண்ணும் பெண்களுக்கு வலக்கண்ணும் துடித்தலும் ஆகா என்பர். ஆண்மக்கள் உடலில் வலப்பாகம் வலுத்து ஆண்பாகமென்றும் இடப்பக்கம் அத்தகைய வலிவின்றிப் பெண்பாகமென்றும் கூறுவர். கண்துடித்தல் உயிர்ச்சத்தியின் குறைவு காட்டுதலால் முன்னரே வலிகுறைந்த பகுதி மேலும் சத்தி குறைய அழிவு காட்டும் என்பதாம்: இவ்வாறே இராமன் கதையினுள் பன்னசாலையில் இராவணன் வருமுன் சீதைக்கு வலந்துடித்ததென்றும். அசோகவனத்தில் இடம் துடித்ததென்றும் வரும் கூற்றுக்களின் கருத்தும் காண்க:

கால்களும் - உம்மை உடலைத்தாங்கி நிங்கும் வலுத்தன்மை கொண்ட கால்களும் என்று சிறப்பும்மை.

இடமே யாடி- தீமை அறிவிக்குமாறு தொடர்ந்து மாறின்றி இடதுபக்கமே என்று ஏகாரம் பிரிநிலை. **கண் ஆடுதல்** - துடித்தல்.

மேல்வரும் அழிவு - நிமித்தங்கள் அறிவிக்கின்றபடி உறுதியாய் வருமென்றறிந்து கொண்ட அழிவு;

வேறு காரணமும் காணார் - **காரணம்** - நிமித்தங்களும் அவற்றாற்றெரியப்படும் அழிவும் வருதற்கு உரிய காரணம்; **வேறு** - நிமித்தங்களுக்கு. அழிவு காட்டுதலின் பொருட்டு நிகழ்வது தவிர, வேறு நோய் முதலிய காரணங்கள்; காரணங்காணுதல் - அதற்கு மாற்றுத்தேடுதலின் பொருட்டேயாகலின் காரணம் - மாற்று என்றே பொருள் கொண்டனர் முன் உரைகாரர்;

மாலுழத்தல் - அறிவு நிலை தடுமாறுதல். **உழந்து** - **மால்உழந்து** - உழத்தலால்;

அறிவுகெட்டு மயங்கினர் - இப்பாட்டிற் கூறியவை உடற்புறக் கருவிகளின் நிகழ்வன. முன்பாட்டிற் கூறியவை வெளியிற் காண்பன. மேல்வரும் பாட்டில் அகக்கரணங்களின் மாறுபாட்டால் நிகழ்வனவற்றைக் கூறும் முறையும் காண்க.
633

2532. பொருளுரை..கந்தியர்..கொள்ள - சமணத் தவப்பெண்கள் தம்முள் தாங்களே சினந்து எழுகின்ற கலகங்களைச் செய்யவும்; **வந்தவாறு..ஊறுசெய்ய** - நேர்ந்தபடி அமண முனிவர்களும் தம்முள் மாறுபட்டுக்கொண்டு ஒருவர்க்கொருவர் ஊறுசெய்யவும்; **முந்தைய!..விட்டு** - தங்கள் முந்தைய நூல்களின் விதித்தபடி தாம் தாம் மேற் கொண்ட பொறை முதலாகிய அவற்றையும் கைவிட்டு; **சிந்தையில்..தலை நின்றார்கள்** - மனத்தில் சினம் முதலாகிய தீக்குணங்களிற் சிறந்து நின்றார்கள்.

2531. பீலியுந் தடுக்கும் பாயும் பிடித்தகை வழுவி வீழக்,
கால்களுந் தடுமா றாடிக், கண்களு மிடமே யாடி,
மேல்வரு மழிவுக் காக வேறுகா ரணமுங் காணார்
மாலுழந் தறிவு கெட்டு மயங்கின ரமண ரெல்லாம். 633

வாரங் கணேகொங்கை மாதொடும் புக்குறும் போதுவந்தார்
ஆரங் கொழிந்தனர் பெற்றதல் லாலவ் வரும்பதமே. -(60)

-ஆளுடைய பிள்ளையார் திருவந்தாதி - நம்பியாண்டார் நம்பி.

பிறவியெனும் பொல்லாப் பெருங்கடலை நீந்தத்
துறவியெனுந் தோற்றோணி கண்டீர்-நிறையுலகிற்
பொன்மாலை மார்பன் புனற்காழிச் சம்பந்தன்
றன்மாலை ஞானத் தமிழ். -(11)

-ஆளுடைய பிள்ளையார் திருமும்மணிக் கோவை.

ஓடஞ் சிவிகை யுலவாக் கிழியடைக்கப்
பாடல் பனைதாளம் பாலைநெய்தல்-ஏடெதிர்வெப்
பென்புக் குயிர்கொடுத்த லீங்கிவைதா மோங்குபுகழ்த்
தென்புகலி வேந்தன் செயல்.

-திருக்களிற்றுப்படியார் - (70)

(மங்கையர்க்கரசி யம்மையாரும் குலச்சிறை நாயனாரும் விடுத்த விண்ணப்பத்துக் கிணங்கி, ஆளுடைய பிள்ளையார் சமண சமய நிராகரிப்பும் சைவ ஆக்கமும் கருதித் திருமறைக்காட்டினின்றும் பாண்டி நாட்டுக்குத் திருவருள் வழியே எழுந்தருளி வருகின்றார். அப்போது சமணர்க்கு மேல் வரும் கெடுதியைக் குறிக்கும் தீக்கனாக்களும் துன்னிமித்தங்களும் நிகழ்ந்தன)

2531.* பொருளுரை-பீலியும்-வீழ* - மயிற்பீலிக் கற்றையும், தடுக்கும், பாயும் அவற்றைப் பிடித்த கைப்பிடி முதலியவற்றினின்றும் தாமே நழுவி விழவும்; கால்களும் - கால்களும் தடுமாற்றத்தையடைந்து தன்ளாடியும்; கண்களும் இடமே யாடி - கண்கள் இடப்பக்கத்தே துடித்தும்; அமணர் எல்லாம் - அமணர்களெல்லாம்; மேல்வரும்...காணார் - இவற்றால் அறிவிக்கப்படுமாறு பின்னால் உறுதியாகத் தமக்கு வரும் அழிவுக்கு வேறு காரணம் ஒன்றும் தோன்றாதவர்களாகி; மயங்கினர் - மயங்கினார்கள்.

விளக்கவுரை...*பீலி* - தடுக்கு - *பாய்* - பீலிக்கற்றைகளைப் பிடித்தலும், தடுக்கிளை இடுக்குதலும், பாயினை உடுத்தலும் சமணர் வழக்குக்கள்; **பிடித்த கையினின்றும்** பீலி வழுவி வீழ்ந்தது; தடுக்கு இடுக்கிய இடத்தினின்றும் வழுவிற்று; உடுத்த இடையினின்றும் பாய் வழுவிற்று.

பிணி பிடித்த கை - என்றதனால் ஏனையவற்றின் இடங்கள் ஏற்புழிக் கோடல் பற்றிக் கொள்ளப்பட்டன.

சால்களும் தடுமாறாடிக் கண்களும் இடமேயாடி - கால்கள் பின்னித் தடுமாறுதலும் - ஆண்மக்களுக்கு மக்களுக்கு இடக்கண் துடித்தலும் துன்னிமித்தங்கள் என்பர்: கால் தடுமாறுதல் உடலில் உயிர்ச்சத்தி குறைதலால் வருவது; இஃது ஆகாது; ஆண்மக்களுக்கு இடக்கண்ணும் பெண்களுக்கு வலக்கண்ணும் துடித்தலும் ஆகா என்பர். ஆண்மக்கள் உடலில் வலப்பாகம் வலுத்து ஆண்பாகமென்றும் இடப்பக்கம் அத்தகைய வலிவின்றிப் பெண்பாகமென்றும் கூறுவர். கண்துடித்தல் உயிர்ச்சத்தியின் குறைவு காட்டுதலால் முன்னமே வலிகுறைந்த பகுதி மேலும் சத்தி குறைய அழிவு காட்டும் என்பதாம்: இவ்வாறே இராமன் கதையினுள் பன்னசாலையில் இராவணன் வருமுன் சீதைக்கு வலந்துடித்ததென்றும். அசோகவனத்தில் இடம் துடித்ததென்றும் வரும் கூற்றுக்களின் கருத்தும் காண்க:

கால்களும் - உம்மை உடலைத்தாங்கி நிங்கும் வலுத்தன்மை கொண்ட கால்களும் என்று சிறப்பும்மை.

இடமே யாடி- தீமை அறிவிக்குமாறு தொடர்ந்து மாறின்றி இடதுபக்கமே என்று ஏகாரம் பிரிநிலை. **கண் ஆடுதல்** - துடித்தல்.

மேல்வரும் அழிவு - நிமித்தங்கள் அறிவிக்கின்றபடி உறுதியாய் வருமென்றறிந்து கொண்ட அழிவு;

வேறு காரணமும் காணார் - காரணம் - நிமித்தங்களும் அவற்றாற்றெரியப்படும் அழிவும் வருதற்கு உரிய காரணம்; வேறு - நிமித்தங்களுக்கு. அழிவு காட்டுதலின் பொருட்டு நிகழ்வது தவிர, வேறு நோய் முதலிய காரணங்கள்; காரணங்காணுதல் - அதற்கு மாற்றுத்தேடுதலின் பொருட்டேயாகலின் காரணம் - மாற்று என்றே பொருள் கொண்டனர் முன் உரைகாரர்;

மாலுழத்தல் - அறிவு நிலை தடுமாறுதல். **உழந்து - மால்உழந்து** - உழத்தலால்;

அறிவுகெட்டு மயங்கினர் - இப்பாட்டிற் கூறியவை உடற்புறக் கருவிகளின் நிகழ்வன. முன்பாட்டிற் கூறியவை வெளியிற் காண்பன. மேல்வரும் பாட்டில் அகக்கரணங்களின் மாறுபாட்டால் நிகழ்வனவற்றைக் கூறும் முறையும் காண்க. *633*

2532. பொருளுரை..கந்தியர்..கொள்ள - சமணத் தவப்பெண்கள் தம்முள் தாங்களே சினந்து எழுகின்ற கலகங்களைச் செய்யவும்; **வந்தவாறு..ஊறுசெய்ய** - நேர்ந்தபடி அமண முனிவர்களும் தம்முள் மாறுபட்டுக்கொண்டு ஒருவர்க்கொருவர் ஊறுசெய்யவும்; **முந்தைய!..விட்டு** - தங்கள் முந்தைய நூல்களின் விதித்தபடி தாம் தாம் மேற் கொண்ட பொறை முதலாகிய அவற்றையும் கைவிட்டு; **சிந்தையில்..தலை நின்றார்கள்** - மனத்தில் சினம் முதலாகிய தீக்குணங்களிற் சிறந்து நின்றார்கள்.

2532. கந்தியர் தம்மிற் றாமே கனன்றெழு கலாங்கள் கொள்ள
வந்தவா றமணர் தம்மின் மாறுகொண் டூறு செய்ய
முந்தைய வுரையிற் கொண்ட பொறைமுத லவையும் விட்டுச்
சிந்தையிற் செற்ற முன்னாந் தீக்குணந் தலைநின் றார்கள். 634

விளக்கவுரை-கந்தியர் - சமணத்தவ மகளிர்; ஆரியாங்கனைகள் என்பது மரபு. கணவனுள்ளபோதே துறவு பூண்போர்; **கலாம்** - கலகம்;

தம்மில் தாமே கனன்றெழு கலாங்கள் கொள்ள என்றும், **தம்மில் மாறு கொண்டு ஊறு செய்ய** - என்றும், முறையே தவமகளிரும் முனிவரும் தத்தமக்குள் தாமே கலகமிட்டுத் துன்புறுத்திக் கொள்ளுதல் கூறப்பட்டது; பெண் ஆண் என்ற இருபாலாரும் கலாய்த்தல் கூறியதும் காண்க. தம்முடன் மாறுபட்டார் பிறர் வந்து கலாம் விளைத்தலே இயல்பாம்; அங்ஙனம் மாறுபடாது ஒரு நெறிப்பட்ட குழுவினர் தமக்குள் கலாம் கொள்ளுதல் இயல்பு விரோதம்; இங்ஙனம் வேறு காரணமின்றி நிகழ்தலின் இவை அழிவு முன் காட்டுதல் காரணமாக நிகழும் (உற்பாதம்) துன்னிமித்தமாயின. **கந்தியர்களை**-முற்கூறினார் பயிற்சியானன்றி இயற்கையானும் மகளிர் பொறையுடையாராதல் வேண்டும் என்ற சிறப்புப் பற்றி:

வந்தவாறு - நேர்ந்த நேர்ந்தபடி; ஒழுங்கும் முறையுமின்றி; அந்தவாறு என்று கொண்டு முன்கூறிய அம்மகளிர் கலாங்கொண்டது போலவே என்றுரைப்பாரு முண்டு.

அமணர் - அமண முனிவர்களாகிய குருமாரும் பிறரும்; இங்குக் கூறியது ஆண்மக்களை;

ஊறுசெய்ய - தமக்குள் ஊறுபாடு - துன்பம் - செய்ய; பொறை விடுதலோடு இம்சை செய்யாவிரதமும் விட்டார் என்பது;

முந்தைய உரையிற் கொண்ட பொறை முதலவையும் - **முந்தைய உரையில்** - தமது பழ நூல்களின் விதியினால்; உரைப்படி; **கொண்ட** - மேற்கொண்டிருந்த; **முதலவை** - முதன்மையானவை; பொறையினையும் அதுபோன்ற நற்குணங்களையும் முதலாவதாக மேற்கொள்ள வேண்டுமென்பது சமணர்களின் பழைய நூல்களில் கூறப்படுவன; **அவையும்** - உம்மை - உயர்வு சிறப்பு;

செற்ற முன்னாம் தீக்குணம் தலைநின்றார்கள் - நற்குணங்களை விட்டதனோடமையாது, நன்மையும் தீமையுமிரண்டு மின்றிப் பொதுவிலும் அமையாது, அவற்றுக்கு மாறாகிய தீக்குணங்களையும் மேற்கொண்டு அவற்றில் தலைசிறந்து நின்றார்கள். தலை **நிற்றல்** - முற்படுதல்; சிறத்தல்;

பொறை முதல் வைப்பும் விட்டு-என்பதும் பாடம். 634

2533. இப்படி யமணர் கைவரு மெப்பெயர்ப் பதியு மெய்தும்
ஒப்பிலுற் பாத மெல்லா மொருவரி னொருவர் கூறி
மெய்ப்படு தீக்க னாவும் வேறுவே றாகக் கண்டு
செப்புவான் புறத்து ளோருந் தென்னவன் மதுரை சேர்ந்தார். 635

2533 பொருளுரை-இப்படி-கூறி - இவ்வாறு அமணர்கள் தங்கும் எவ்வகைப்பட்ட பெயர்களையுடைய பதிகளிலும் பொருந்திய ஒப்பில்லாத துன்னிமித்தங்களை யெல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டு; மெய்ப்படு..செப்புவான் - பலிக்கக்கூடிய தீயகனாக்களும் வேறு வேறாகக் கண்டு அவற்றையும் சொல்லும் பொருட்டு; புறத்து உள்ளோரும் சேர்ந்தார் - வெளியே உள்ளவர்களும் பாண்டியனது மதுரைமா நகரத்திற் சேர்ந்தனர்

விளக்கவுரை-உற்பாதம் - துன்னிமித்தம்; மேலே கூறியவை; **மெய்ப்படு தீக்கனா** - கனவில் நிகழ்ந்தவை நனவில் மறந்து படுவனவும், பயன் குறியாதொழிவனவு முள்ளனவாதலின் அவற்றை நீக்குதற்கு மெய்ப்படுகனா என்றும், கனாக்களுள் நன்மையும் கலந்து பயப்பனவுளவாதலின் அவற்றை நீக்குதற்குத் தீக்கனா என்றும் கூறினார். பிறிதினியைபு நீக்கிய விசேடணங்கள்;

கண்டு - கனவு நிலையில் கண்டு; **செப்புவான்** - சொல்லும் பொருட்டு; வானீற்று வினையெச்சம்;

புறத்துளோரும் - சேர்ந்தார் - புறத்து - மதுரைநகரின் புறத்து; யானைமலை முதலியவற்றினின்றும்; **புறத்துளோரும்** - என்ற உம்மை அகத்து - நகரத்து - உள்ளோர் அணைதலேயின்றி என இறந்தது தழுவிய எச்சவும்மை; புறத்துள்ளோர் கூடியபோது நகரத்துள்ளோர் கூடியமை கூறாமலேயமையுமாதலின் அதனை வேறு எடுத்துக் கூறாராகி எச்சவும்மையாற் பெறவைத்தார் ஆசிரியர். மேல்வரும் பாட்டுப் பார்க்க;

தீக்கனா - இவை மேல் 2535 முதல் 2538 வரை நான்கு பாட்டுக்களிற் கூறுதல் காண்க. *635*

அமணர்க்கு நிகழ்ந்த தீக்கனாக்கள்

2534. பொருளுரை—அந்நகர்...கூறி - இந்நகரில் உள்ளோரும் வெளியினின்றும் அணைவார்களும் கூடி அரசனுக்கும் அறிவிப்பு அனுப்பிச்சென்று; **மருண்ட....ஈண்டி** - மருட்சி கொண்ட மனதுடையவராகி அழுக்குப்படிந்த உடம்பில் துணியில்லாத அமணர் பலரும் நெருங்கிச் சேர்ந்து, "**இன்ன..இயம்பலுற்றார்** - இன்னின்ன கனாக்களைக் கண்டோம் என்று எடுத்துச் சொல்வார்களாகி,

விளக்கவுரை— வாழ்வாரும் - நின்றாரும் கூடிச்சென்று என்க. உம்மைகள் விரிக்க;

அமணர்க்கு நிகழ்ந்த தீக்கனாக்கள்

2534. அந்நகர் தன்னில் வாழ்வார் புறம்புநின் றணைவார் கூடி
மன்னவன் றனக்குங் கூறி மருண்டவுள் ளத்த ராகித்
துன்னிய வழுக்கு மெய்யிற் றூசிலார் பலரு மீண்டி
"யின்னன கனவு கண்டே" மெனவெடுத் தியம்ப லுற்றார். 636

கூறி - சொல்லி விடுத்து முன்னே சென்று; **கூறிவிடுத்து** என்பது: அவனிடம் அறிவித்த திறங்கள் மேற்கூறப்படுவன.

அழுக்குத்துன்னியமெய்யில் தூசுஇல்லார் - **அழுக்குத்துன்னுதல்** - பலநாட் குளியாது வெயிலின் நிற்றல் முதலிய வழக்குக்களையுடைமையால் ஆவது; "வேர் வந்துற மாசூர்தர" (தேவா) "கழுவாவுடலம்" (11-ம் திருமுறை - ஆளு - அந்) வெளிப்பட அழுக்குத்துன்னக் கண்டும் தூசு இல்லையாக எண்ணும் மயக்கமுடையார் என்று இரட்டுற மொழிதலால் பிறிதொரு பொருளும் பட நின்ற நயம் காண்க. **தூசுஇல்லார்** - ஆடையின்றி அமணேதிரிவார். இவை சமண குருமார் வழக்கு.

"இன்னன கனவு கண்டோம்" என - மேல் இவ்விவ்வாறு என்று கூறுமாறு;

இயம்பலுற்றாராகி - உரைப்பாராய்க் (2535) கவலையுற்றாராய்ச் சொன்னார் (2536) என்று இம்மூன்று பாட்டுக்களையும் முடிவுபடுத்திக் கொள்க.

மேல்வரும் பாட்டில் தமது குரவர் குரத்திகளுக்கும் வரக்கண்ட கேடாகிய நிலைகளைக் கூறினார்; அதன் மேல்வரும் இரண்டு பாட்டுக்களினும் அக்கேடுகள் - அவ்விளைவுகள் வரும் மூலமும் அதனால் மன்னவனுக்கு வரும் பயனும் தமக்கு நேரும் அழிவும் கண்டு கூறுகின்றார்கள்; கலைஞானங்களில் தேர்ந்தாராதலின் இக்கனாக்கள் தீமை பயந்தே விடுமென்றும் கண்டார்கள் (2539); இவற்றை முன்னறிவிப்புச் செய்தது சிவனது கருணைத்திறம்; அவ்வா றறியச் செய்யினும், இவைதாம் சைவத்திற்குச் செய்த தீமைகளின் பயனாக வருவன என்று உணர்ந்து அவற்றினின்றும் நீங்கி உய்யும் வழியை இவர்கள் தேடித் தப்பியிருக்கலாம்; அது செய்யாது கெட்டனர் இவர்; செய்யவொட்டாது தடுத்தது கன்ம நிலையும் ஆணவமல மறைப்புமாம்; கந்தபுராணத்தினுள் சிங்கமுகன் - பானுகோபன் - இரணியன் இவர்கள் அறிவித்தும், அறுமுகக்கடவுள் தாமேநேர் நின்று காட்டி அறிவித்தருளியும் கேளாது, கிளையுடன் வீழ்ந்த சூரபதுமன் வரலாற்றையும், அவை போலவரும் சரிதங்களின் உள்ளுறைகளையும் இங்கு வைத்துக் கூர்ந்து நோக்கிக் கொள்க. அறிவிக்க அறிதல் உயிர்இயல்பு; அறிவித்தாலும் அறியாமற் செய்தல் ஆணவ மலவலிமையும் கன்ம நிலையுமாம் என்பது ஞானசாத்திர உண்மைகள். 636

2535. பொருளுரை-"சீர்மலி..கண்டனம்" - சிறப்புடை அசோகமரம் அதன் அடியில் அமர்ந்தருளிய நமது அருகக்கடவுளின் மேலே வேரோடு சாய்ந்து வீழக் கண்டோம்; அதன் பின்னாக..என்று உரைப்பார் - அதன் பின்னே, அழகிய முக்குடையும் தாமுமாக

2535. "சீர்மலி யசோகு தன்கீ ழிருந்தநந் தேவர் மேலே
வேரொடு சாய்ந்து வீழக் கண்டனம்; அதன்பின் னாக
ஏர்கொண்முக் குடையுந் தாமு மெழுந்துகை நாற்றிப் போக
ஊருளோ ரோடிக் காணக் கண்டனம்;" மென்று ரைப்பார். 637

அத்தேவர் எழுந்து கைகளைத் தொங்கவிட்டுச் செல்லவும், அதனை ஊரிலுள்ள மக்கள் ஓடிச்சென்று காணவும் கண்டோம் என்று மேலும் சொல்வாராகி;

விளக்கவுரை... சீர்மலி அசோகு-தேவர் - அருகக்கடவுள் அசோகமரத்தின் கீழ் இருப்பதாக வைத்து வணங்குதல் சமண சமய வழக்கு.

அசோகு தேவர்மேல் வேரொடு சாய்ந்து வீழ்தல் - நிழல் தந்து அமர இடமும் தந்தமரம் அவர்மேல் சாய்ந்து வீழ்தல் அவரைப் பற்றுக் கோடின்றிச்சாடி அகலச் செய்வதன் குறிப்பு.

முக்குடை - அருகக்கடவுளது குடை: குடையும் தாமும் எழுந்து - குடையுடன் எழுந்து: கை நாற்றுதல் - மேலே உயர்த்தாது கையினைத் தொங்கவிடுதல் அழிவுக் குறிப்பு; நாற்றுதல் - உதறுதல் என்றலுமாம்.

போக - இடப்பெயர்ச்சி குறித்தது; அதுவரை அங்கு அமர்ந்து ஆட்சிசெய்திருந்த தெய்வம் அவ்விடம் விட்டுப் பெயர உள்ள குறிப்பு;

ஊருளோர் ஓடிக்காண - தெய்வம் விரைந்தும் பெயர்ந்தும் போம் நிலைக் குறிப்பு; ஊருளோர் காண என்றது பெயர்ந்து போகும் தெய்வத்தைப் பின்பற்றிச் செல்லாது ஊரவர் கண்டு கழித்துத் தாம் அங்கே தங்கி முன்னைச் சமயம் பற்றுவர் என்ற குறிப்பு;

சீர்மலி - ஏர்கொள் - என்றமையால் முன்இருந்த அச்சீரும் ஏரும் தவிரும்படி என்றது குறிப்பு.

வேரோடும் பறித்து விழ - என்பதும் பாடம். 637

2536. பொருளுரை... குண்டிகை... ஓட - கமண்டலத்தை உடைத்துப் பாயினையுங் கிழித்து ஒரு பெண் குரு ஓடிடவும்; பண்டிதர்... தம்பின் - பண்டிதர்களாகிய சமண முனிவர்கள் தமது குகைகளினின்றும் கழுதைகளின் மேலேறிச் செல்வாராகவும், அவர்களின் பின்னே; ஒண்டொடி.... கண்டனம் - ஒள்ளியதொடிகளையணிந்த தவப் பெண்களும் ஊளையிட்டு அழுது ஓடவும் கண்டோம்; என்று.... உற்றார் - என்று செயலற்றுக் கவலைகொண்டார்களாகிச் சொன்னார்கள்.

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிபு கொண்டன.

விளக்கவுரை... குண்டிகை தகர்த்து - கையில் மந்திரித்த நீருடைய குண்டிகை கொண்டிருத்தல் சமணர் குருமார் வழக்கு. அதைத் தவிர்த்தல் - அச்சமயப் பற்றுக்கோடு கைவிட்டமை குறிப்பு.

2536. "குண்டிகை தகர்த்துப் பாயும் பீறியோர் குரத்தி யோடப்
பண்டிதர் பாழி நின்றுங் கழுதைமேற் படர்வார் தம்பின்
ஒண்டொடி யியக்கி யாரு முளையிட்டுப் புலம்பி யோடக்
கண்டன;" மென்று சொன்னார் கையறு கவலை யுற்றார்; 638

பாயும் பீறி - பாய் - மரவுரியும், உடையாகக் கொள்ளும் தடுக்கும்; ***பீறுதல்*** - கிழித்தெறிதல்; ***தகர்த்துப் பீறி ஓடுதல்*** - தம் சமயச்சார்புகளைத் தாமே விட்டு இடம் விட்டு நீங்குதல் குறித்தது; "பாய்களிழப்பார் பறிதலையர்" (தண்டியடிகள்-22).

குரத்தி - பெண்குரு; பெண்துறவி; குருவின் மனைவி என்பாருமுண்டு;

பண்டிதர் - கலைவல்ல குருமார்; இவ் குருமார்களுள் ஆண்மக்கள்; ***பாழி*** - சமண குருமார் தங்கும் குகை; ***பாழிநின்றும் கழுதை மேற்படர்தல்*** - தமதிருக்கையை விட்டுத் தோல்வியும் பரிபவமும் உற்று நீங்குதல்; ***கழுதை*** - மூதேவியின் ஊர்தி; இழிபுக் குறிப்புமாம்; "கழுதைமேல் வைத்து ஊர்வலஞ் செய்விப்போம்" என்று வஞ்சினங் கூறும் நாட்டு வழக்கும் காண்க.

இயக்கியார் - தவமகளிர்; இயக்கத் தேவதையுமாம். ***இயக்கர்*** - கானநூல் முதலிய விஞ்சை வல்லோர்; இப்பொருளில் கழுதை மேற்படரும் பண்டிதர்களின் பின்னே அவர்கள் பசப்பிப் பரப்பிய மயக்கக் கலைகளும் ஓடின என்பதாம்; ***இயக்கி*** - தரும தேவதை என்பர் முன் உரைகாரர்; அதன் பொருத்தம் ஆராய்க.

உளையிட்டுப் புலம்பி - ***உளையிடல்*** - தீயொலி செய்தல்;

ஓட - ***ஓட*** - நீங்குதலின் விரைவுக் குறிப்பு;

கவலையுற்றாராகிச் சொன்னார் - என்க. ***உற்றார்*** - ***உற்று*** - முற்றெச்சம்; வினைமுற்றாகவே கொண்டுரைப்பினுமிழுக்கில்லை; சொன்னார்; கவலையும் உற்றனர்;

கையறுகவலை - கையறும்படி நேர்வதனாற் போதும் கவலை; ***கையறுதல்*** செயலறல்.

தம்மின் - ***படர்வார்*** - ***உழைவிட்டு*** - என்பனவும் பாடங்கள். 638

2537. ***பொருளுரை....கானிடை...என்பார்*** - சுடுகாட்டில் நடனம் ஆடுகின்ற கண்ணுதலையுடைய சிவனது தொண்டர்கள் எல்லாம் பாண்டியனது மதுரைமாநகரில் வந்து சேர்தலைக் கண்டோம் என்பார்கள்; ***கோன் அவன்...கண்டோம்-அரசன்றானும்*** வெவ்விய கொடிய தீயினுள் மூழ்கக் ***கண்டோம்;*** ***ஆனபின்பு எழவும் கண்டோம்*** - அவ்வாறு மூழ்கிய பின்னர் அதினின்றும் மேலே எழுந்திடவும் கண்டோம்; ***அதிசயம் இது ஆம் என்பார்*** - இது அதிசயமாம் என்பார்கள்:

விளக்கவுரை...கான் - சிவன் நடமாடும் சுடுகாடு.

2537. "கானிடை நட்ட மாடுங் கண்ணுத றொண்ட ரெல்லாம்
மீனவன் மதுரை தன்னின் விரவிடக் கண்டோ" மென்பார்;
"கோனவன் றானும் வெய்ய கொழுந்தழன் மூழ்கக் கண்டோம்;
ஆனபின் பெழவுங் கண்டோ; மதிசய மிதுவா"மென்பார்; 639

2538. "மழவிடை யிளங்கன் றொன்று வந்துநங் கழகந் தன்னை
உழறிடச் சிதறி யோடி யொருவருந் தடுக்க வஞ்சி
விழவொரு புகலு மின்றி மேதினி தன்னை விட்டு
நிழலிலா மரங்க ளேறி நின்றிடக் கண்டோ" மென்பார்; 640

"கானிடை...விரவிடக் கண்டோம்" - கண்ணுதல் தொண்டர்கள் மதுரையில் விரவிடாது சூழ்ச்சி செய்து அவர்கள் இருந்த இடத்தில் நாம் இருந்தோம்; இப்போது அந்நிலை மாறி நம்மை ஓடத்துரந்து அவர்கள் பழையபடி மதுரையில் வந்து பொருந்து தலைக் கண்டோம் - என்பது குறிப்பு. **விரவிட** - இதுவரை விரவாதிருந்தோர் விரவியிட; **விரவுதல்** - வந்து பொருந்துதல்; **மீனவனது மதுரை** - என ஆறனுருபு விரிக்க; **கானிடை - ஆடும்** என்றது சமணர் கூற்றாதலின் இழிவுக்குறிப்பும் பட நின்றது.

கோன்-எழவும் கண்டோம் - **கோன் அவன்** - அம்மீனவனாகிய மன்னவன்; **அவன்** - மீனவன் மதுரை என்று சுட்டிய அவன்; **கொழுந்தழல் முழுகுதல் - பின் எழுதல்** - கொடிய வெப்பு நோயினுட்படுதலும், பின் மீளுதலும் குறிப்பு: தீ மூழ்கி எழுதல் அமண்மாசு நீக்கிப் புனிதமாதற் குறிப்பும் பட நின்றது,

அதிசயம் - கொழுந்தழல் மூழ்கினோன் அழிந்துபடாது மீள எழுதல் அதிசயம் எனப்பட்டது; "அதிசயங் கண்டாமே" (திருவா).

கொடுந்தழல் - மூழ்க - என்பனவும் பாடங்கள். 639

2538. பொருளுரை-மழவிடை..சிதறி ஓடி - இளமையுடைய இடபக்கன்று ஒன்று வந்து நமது சங்கத்தைச் சுழல மிதித்துக் கலக்க அதனால் சிதறுண்டு ஓடி; **ஒருவரும் தடுக்க அஞ்சி** - எவரும் அதனைத் தடுக்கப் பயந்து; **விழ ஒரு..கண்டோம்** - அபயம் வீழ்ந்து ஒளிக்க வேறு ஒரு புகலிடமும் இல்லாமல் பூமியைவிட்டு நிழலில்லாத மரங்களின்மேல் ஏறி நின்றிடவும் கண்டோம்; **என்பார்** - என்று சொல்ல;

விளக்கவுரை-மழவிடை இளங்கன்று ஒன்று வந்து - **மழ - இளம்** - ஒரு பொருட் பன்மொழி; மிக்க இளமை குறித்தது; **கன்று** - என்பது அதனை மேலும் வலியுறுத்திற்று; **விடைக்கன்று** - ஆண் கன்று; **விடை** - ஆண்பால் என்ற குறிப்பளவில் தந்து நின்றது; சிவசம்பந்தமாகிய குறிப்புமாம்; **ஒன்று** - ஒப்பற்றது; **வந்து** - வெளியே நின்றும் போந்து; பிள்ளையாரது வருகைக் குறிப்பு.

2539. "ஆவதென் பாவி காளிக் கனாத்திற மடிகண் மார்க்கு
மேவிய தீங்கு தன்னை விளைப்பது திடமே!" யென்று
நோவுறு மனத்த ராகி நுகர்பெரும் பதமுங் கொள்ளார்
"யாவது செய" லென் றெண்ணி யிடருழன் றழுங்கி னார்கள். **641**

உழலுதல் - சுற்றிச் சூழ்ந்து மிதித்துக் கலைத்தல்;

சிதறி ஓடுதல் - சிதைந்து விரைந்து நீங்குதல்;

விழ ஒரு புகலுமின்றி - விழ - அபயம்புக்கு ஒளிக்க என்ற பொருளில் வந்தது; அரசனது புகலிடம் இழப்பது குறிப்பு.

மேதினிதன்னை விட்டு - பூமியில் பற்றுக்கோடின்றி; நிலவுலக வாழ்வை நீத்து என்ற குறிப்பும்பட நின்றது.

நிழலிலா மரங்கள் - கழுக்கோல்களின் குறிப்பு. இப்பாட்டிற் கூறப்பட்ட கனாத்திறம் பிள்ளையாருடன் சமணர் கூட்டம் வாது செய்து தோற்று ஓடிக்கழுவேறி முடிய நின்ற விளைவுகளைக் குறித்துணர்த்தல் காண்க; 640

என்பார் - என்பதும் பாடம்.

2539. பொருளுரை—ஆவதென்? பாவிகாள்!..என்று - "பாவிகளே! இதன் முடிவுதான் எதுவோ" "இந்தக் கனாக்களின் விளைவு நம் அடிகண்மார்களுக்குப் பொருந்திய தீங்கினை விளைவிப்பது உறுதியேயாம்!" என்று துணிந்துகூறி; நோவுறும்..கொள்ளார் - துன்பமுற்ற மனத்தையுடையவர்களாகி உண்ணத்தக்க உணவுகளையும் உண்ணாதவர்களாகி; யாவது-அழுங்கினார்கள்-யாது செய்வது என்று எண்ணமிட்டுத் துன்பமுற்று இவற்றைக் கேட்டவர்கள் வருந்தினார்கள்;

இம்மூன்று பாட்டுக்களும் தொடர்ந்து ஒரு முடிவுகொண்டன.

விளக்கவுரை—ஆவதென்! இவையெல்லாம் என்னாய் முடியுமோ? நம்மால் இதற்குத் தீர்வு செய்யலாவதென்றோ?என்ற குறிப்புமாம்.

பாவிகாள்! - இரங்குதலின் கண் வந்த குறிப்பு மொழி; "பாவியேன் கண்ட வண்ணம் பரமனார்க் கடுத்த தென்னோ?" (818); இக்கெடுதியைத் தமது பாவநிலையின் மேல் சுமத்திக் கூறும் உலக வழக்குப் பற்றியது.

இக்கனாத்திறம்...திடமே - இதன் காரணமும் முடியுமெல்லையும் நம்மாலறியப் படாவிடினும் இஃதொன்று மட்டும் திடம்-உறுதி - என முடித்தனர்; கனாக்கள் அவர்களையும் அவர்களனைவரையுமே பற்றி நிற்றலால் இவ்வாறு முடித்தனர். ஏகாரம் தேற்றம்

2540. அவ்வகை யவர்க ளெல்லா மந்நிலை மையர்க ளாகச்
சைவநன் மரபின் வந்த தடமயின் மடமென் சாயற்
பைவள ரரவே ரல்குற் பாண்டிமா தேவி யார்க்கும்
மெய்வகை யமைச்ச னார்க்கும் விளங்குநன் னிமித்த மேன்மேல், 642

அடிகண்மார்க்கு மேவியதீங்கு தன்னை விளைப்பது-மேவிய தீங்காவது வரக்கடவ தென்றறிவிக்கப்பட்ட தீமை: முன்கன்மத்தாற் பொருந்துவதாகிய என்ற குறிப்புமாம். அடிகண்மார் சிலமுடை யாராதலின் தீங்குவரக் கடவதன்று; **ஆயின்முன்னை** வினையால் வந்து மேவிய-பொருந்திய-என்பது குறிப்பு: மேவிய - என்று இறந்த காலத்தாற் கூறினார் உறுதி பற்றி: **திடமே** - உறுதியே:

நுகர் பெரும் பதம் - நண்பகலில் கொள்ளும் உணவு: சமணர் இரவுண்ணா மரபுடையாராதலின் பகலுணவை **நுகர்பெரும் பதமும்** - என்றார்; உம்மை சிறப்பு; **பதமும் கொள்ளாதிருத்தல்** - மனவருத்தமும் கவலையும் காரணமாக வந்த நிலை. அவர் தமது சமயத்தில் வைத்த அன்பின் மிகுதி காட்டிற்று. **பதம்** - வீட்டுநிலை என்ற குறிப்புமாம். பதம் கொள்ளார் - வீட்டுநிலை கைக் கொள்ளார்.

யாவது செயல்? - தீர்வாகச் செய்யத்தக்கது இன்னதென்றறிய மாட்டாது திகைத்த நிலை; *641*

அம்மையார்க்கும் அமைச்சனார்க்கும் நிகழும் நன்னிமித்தம்

2540. **பொருளுரை**—அவ்வகை..ஆக -அவ்வகையில் அவ்வமணர்கள் எல்லாம் முன்கூறிய அந்த நிலைமையினையடைந்தவர்களாக; சைவ நன்மரபில்—அமைச்சனார்க்கும் - சைவத்தின் நன்மரபில் வழிவழிவந்த பெரிய மயில்போன்ற இளமையாகிய மெல்லிய சாயலையும் பையரவல்குலையுமுடைய பாண்டிமாதேவியாராகிய மங்கையர்க்கரசி யம்மையாருக்கும் மெய்ம்மையுள் நிற்கும் அமைச்சனாராகிய குலச்சிறையாருக்கும்; நன்நிமித்தம் மேன்மேல் விளங்கும்-நன்னிமித்தங்கள் பலவும் மேலும் மேலும் விளங்கு வனவாயின.

விளக்கவுரை—**அவ்வகை - அவர்கள் - அந்நிலைமையர்கள்** - அகரம் இரண்டும் சேய்மைச் சுட்டுக்கள் இதுவரை அவர்கள் பானின்ற நமது கருத்தை மீட்டு இனி இப்பக்கம் அணியவர்களாகிய அம்மையார்பால் திருப்பும் குறிப்புடையன. இவ்வாறே முன் "இந்நிலையவர்கள்" - "அந்நிலை யமணர்" (2529) என்றதும் ஆண்டுரைத்தவையும் பார்க்க. **அந்நிலை - மையர்கள்** எனப் பிரித்து, **மையர்**-அறிவினுள் இருள் கொண்டவர் என்று குறிப்புமாம்.

சைவ நன்மரபில் வந்த..பாண்டிமாதேவியார்-மங்கையர்க்கரசியார்; இவ்வாறு அம்மையாரைப் போற்றிய திறம் அவர் பாதங்களிற் கொண்ட பேரன்பு மிகுதியையும், சமணத்தை விட்டுச் சைவத்திறத்திற் பேசப் புகுகின்றதனால் விளைந்த பெருமகிழ்ச்

2541. அளவிலா மகிழ்ச்சி காட்டு மரும்பெரு நிமித்த மெய்த
உளமகிழ் வுணருங் காலை யுலகெலா முய்ய வந்த
வளரொளி ஞான முண்டார் வந்தணைந் தருளும் வார்த்தை
கிளர்வுறு மோகை கூறி வந்தவர் மொழியக் கேட்டார். 643

சியினையும் உள்ளக் கிளர்ச்சியினையும் உணர்த்திற்று; சைவத்தாபன நிலைபேசத் தொடங்குகின்ற இவ்விடத்து அதனைச் செய்து உதவிய அம்மையைப் போற்றும் தகுதியும் காண்க. "சைவத் துறையின் வழிவந்த குடிவளவர்" (1900)

மெய்வகை அமைச்சனார் *- குலச்சிறையார்; ஒருபாற் கோடாது நாட்டுக்கும் அரசுக்கும் உறுதி தேடிய மெய்ம்மைத்திறம் போற்றப்பட்டது; அரசன் எவ்வழி நிற்பினும் தாம் உண்மைத்திறத்தினையே நாடிச் செய்தனர் என்பது;* ***மெய்ம்மை***-*சத்தாந் தன்மை; அது அழிவில்லாத சிவநெறியின் தன்மை குறித்தது;*

பையரடதேவி *- பையர வங்குற் பாண்டிமா தேவி (தேவா)*

நன்னிமித்தம் மேன்மேல் விளங்கும் *என்க;* ***விளங்கும்*** *- விளங்கின;* ***விளங்கும்*** *- பூதிசாதன விளக்கம் போற்றல் பெறாது ஒளிகுன்றியிருந்த நிலை நீங்கி விளங்க நின்றமை காட்டுதலின்* ***விளங்கும் நல் நிமித்தம்*** *- என்றார்; பழம்பெருஞ் சைவத்தின் பழம் பெருநிலை விளங்க வருவனவாதலின் இவை பொதுப்படக் கூறுவதன்றி இன்னவென்று விரிக்க வேண்டாவாயின.*

அமணரெல்லாம் *- என்பதும் பாடம். 642*

2541. பொருளுரை...அளவிலா...எய்த - அளவில்லாத பெருமகிழ்ச்சியினை முன்னறிவிப்பாகக் காட்டுகின்ற அரியபெரிய நிமித்தங்கள் வந்து பொருந்த; உளம்மகிழ்வு உணருங்காலை - உள்ளத்தில் மகிழ்ச்சியினை உணர்கின்ற அப்போது; உலகெலாம்...வார்த்தை-உலகெலாம் உய்யும்படி அவதரித்த ஒளி வளரும் ஞானத்தினை உண்டருளிய பிள்ளையார் வந்து சேர்ந்தருளும் நல்வார்த்தையினை; கிளர்வுறும்-கேட்டார் - கிளர்ச்சி பொருந்திய உவகைச் செய்தியை அறிவித்துக்கொண்டு வந்தவர்கள் சொல்லக் கேட்டார்கள் (அம்மையாரும் அமைச்சனாரும்).

விளக்கவுரை—அளவிலா மகிழ்ச்சி காட்டும் *-* ***நிமித்தம்*** *-* ***மகிழ்ச்சி*** *- மகிழ்ச்சியைத் தரும் பின் நிகழ்ச்சியினை.* ***காட்டும்*** *- முன் அறிவிக்கும்.*

உளம்மகிழ்வு உணரும் காலை *- மனத்தினுள் தானே எழுந்த மகிழ்ச்சியினை நுகர்ந்து கொண்டிருக்கும்போது; நல்நிமித்தம் கண்டார் - மகிழ்வுகொண்டார்; அவ்வாறு மகிழ்வுகொண்ட அப்போதே - வார்த்தை கேட்டார் என்று இந்நன்னிமித்தங்கள் பயன்றந்த விரைவு கூறப்பட்டது;*

உலகெலாம் *- இறைவர் இப்புராணத்துக்கு எடுத்துத் தந்தருளிய முதன் மங்கல மொழி; அதனை ஆசிரியர் அருமை காட்ட அருமையாக வைத்தாண்ட சில இடங்களுள்*

இஃது ஒன்று: "உலகெலா முய்ய வுறுதியாம் பதிகம்" (பஞ்சாக்கரப்பதிகம். ஏயர்கோ- 88). "அஞ்செழுத் தோதி யேறினாருய்ய உலகெலாம்" (2114); பிள்ளையார் இனி உலகுய்யச் செய்தருளும் சைவ விளக்கமாகிய அருளிப்பாடுகள் குறித்தன;

ஒளி வளர்ஞானம் - என்க. சிவஞானம்; ஒளி - உள்ளொளி; ஒளி வளர்க்கும் ஞானமாவது சிவத்தன்மையை உள்ளே பெருகச்செய்யும் என்றதாம் "அலகின் ஞானக் கடலி டைப்படு மமிர்த யோகச் சிவவொ ளிப்புக, வடிய ரேமுக் கருளினைச் செயும்" (திருநா ஏகாதச - 1 நம்பியாண்டார் நம்பி. 11-ம் திருமுறை); "உள்ளொளி பெருக்கி" (திருவாசகம்); "ஒளிவளர் விளக்கே" (திருவிசைப்பா).

வந்து அணைந்தருளும் வார்த்தை - மதுரையினை அணுக வந்தணைந்த செய்தி; "மதுரைத் தொன்னகர் வந்தணைகின்றார்" (2528) என்ற வரலாற்றுத் தொடர்ச்சி யாதல் காண்க; 2529 முதல் 2539 வரை கூறியவை யிடைப்பிறவரலாகப் பின்சரித விளைவுகளைத் தொடர்புபடுத்திச் செலுத்திக்கொள்ளும் பொருட்டுக் கூறப்பட்டன.

வந்தவர் ஓகைகூறி - மொழிய என்க. **வந்தவர்** - பிள்ளையாருடன் வந்தவர்களுள் முன்னறிவிப்பாக வந்தவர்; அம்மையாரும் அமைச்சனாரும் விடுக்கச்சென்று வந்தவர் என்றலுமாம்; கண்டுவந்தவர்கள் என்றாலும் பொருந்தும். **ஓகை** - உவகைச் சொல்; ஓகை கூறி மொழிதலாவது மகிழ்வு கூறும் தொடக்கத்துடன் கூறுதல்;

கிளர்வுறும் ஓகை - உணர்வுட்கொண்ட மனமகிழ்ச்சி மேலே பொங்கிச் செயலாக எழும்படியான உவகைச் சொற்கள்; அவ்வாறு கிளர்வுற்ற நிலை வரும்பாட்டிற் கூறப் படுதல் காண்க;

அணைந்தருளும் வார்த்தை கேட்டார்-முன்னர்த் திருமறைக்காடு சேர்ந்த நன்னிலை கேட்டார் (2503); இப்போது அதனைத் தொடர்ந்து மதுரையிலணைந்தருளும் வார்த்தை கேட்டார் என்று தொடர்புபடுத்திக் கூறிய நயம் காண்க.

அணைந்தருளும் - அணைந்து அருளைச் செய்யவுள்ள என்ற பொருளும் தந்து நின்றது.

கேட்டார் - மாதேவியாரும் அமைச்சனாரும் என்ற எழுவாய் அவாய்நிலையான் வந்தது.

ஓகை கூர - என்பதும் பாடம். 643

உ

சிவமயம்

பாட்டு முதற்குறிப்பு அகராதி

(1 – 643 பாட்டுக்கள் வரை) – (எண்கள் பெரியபுராணத் தொடர் பாடல் எண்கள்)

உ
சிவமயம்
திருச்சிற்றம்பலம்

இத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள முதல் மூன்று திருமுறைத் தேவாரப் பதிகங்களின் அட்டவணை

வ. எண்	தலம்	திருமுறை எண்	பதிக முதற் குறிப்பு	சிறப்புக் குறிப்புகள்	திருமுறை பக்க எண்
1.	சீகாழி (பிரமபுரம்)	1	தோடுடைய செவியன்	நட்டபாடை	136
2.	சீகாழி (புறவம்)	1	நறவ நிறை	தக்கேசி	149
3.	திருக்கோலக்கா	1	மடையில் வாளை பாய	தக்கராகம் (முதல் தல யாத்திரை)	182
4.	திருநனிபள்ளி	2	காரைகள் கூகை முல்லை	பியந்தைக் காந்தாரம் (இரண்டாவது தல யாத்திரை)	195
5.	திருவலம்புரம்	3	கொடியுடை	பழம்பஞ்சுரம்	200
6.	திருப்பல்லவனீச்சரம்	3	பரசுபாணியர்	பழம்பஞ்சுரம் (ஈரடி)	202
7.	திருச்சாய்க்காடு I	2	மண்புகார்	சீகாமரம்	204
8.	திருச்சாய்க்காடு II	2	நித்தலும் நியமஞ் செய்து	இந்தளம்	207
9.	திருவெண்காடு I	2	கண்காட்டு	சீகாமரம்	210
10.	திருவெண்காடு II	2	உண்டாய்	காந்தாரம்	212
11.	திருவெண்காடு III	3	மந்திர மறையறை	காந்தார பஞ்சமம்	212
12.	தென்திருமுல்லை வாயில்	2	துளிமண்டியுண்டு	பியந்தைக் காந்தாரம்	214
13.	திருமயேந்திரப்பள்ளி	3	திரைதரு	கொல்லி (மூன்றாவது தல யாத்திரை)	217
14.	திருக்குருகாவூர்	3	சுண்ணவெண்	அந்தாளிக் குறிஞ்சி	218
15.	கோயில் - தில்லை	1	கற்றாங்கெரி	குறிஞ்சி (நான்காவது தல யாத்திரை)	260
16.	திருவேட்களம்	1	அந்தமுமாதி	தக்கராகம்	264

17.	திருக்கழிப்பாலை	3	வெந்த குங்கிலி	கௌசிகம்	266
18.	திருநெல்வாயில்	2	புடையினார்	இந்தளம்	267
19.	கோயில்-தில்லை	3	ஆடினாய்	காந்தார பஞ்சமம்	276
20.	திருஎருக்கத்தம் புலியூர்	1	படையார்	குறிஞ்சி	282
21.	திருமுதுகுன்றம் I	1	மத்தாவரை	நட்டபாடை	285
22.	திருமுதுகுன்றம் II	1	நின்று மலர்	குறிஞ்சி - திருவிருக்குக்குறள்	288
23.	திருமுதுகுன்றம் III	3	முரசதிர்	சாதாரி - திருமுக்கால்	291
24.	திருமுதுகுன்றம் IV	1	தேவராயு	பழந்தக்கஇராகம்	293
25.	திருமுதுகுன்றம் V	1	மெய்த்தாறு	மேகராகக் குறிஞ்சி	293
26.	திருமுதுகுன்றம் VI	2	தேவா-சிறியோம்	காந்தாரம்	295
27.	திருமுதுகுன்றம் VII	3	வண்ணமாமலர்	கொல்லி	296
28.	திருத்தூங்கானை மாடம்	1	ஒடுங்கும்	பழந்தக்கராகம்	298
29.	திருநெல்வாயிலரத் துறை	2	எந்தையீசனெம்	பியந்தைக் காந்தாரம்	325
30.	திருநெல்வெண்ணெய்	3	நல்வெணெய்	சாதாரி - திருமுக்கால்	339
31.	திருப்பழுவூர்	2	முத்தன்மிகு	இந்தளம் - திருவிராகம்	348
32.	திருவிசய மங்கை	3	மருவமர்	காந்தார பஞ்சமம்	349
33.	திருவைகாவூர்	3	கோழை மிடறாக	சாதாரி - திருவிராகம்	352
34.	திருப்புறம்பயம்	2	மறம்பய	இந்தளம் - திருவிராகம்	354
35.	திருவியலூர்	1	குரவங்கமழ்	நட்டபாடை	357
36.	திருந்துதேவன்குடி	3	மருந்துவேண்டில்	கொல்லி	358
37.	திருச்சேய்ஞலூர்	1	நூலடைந்த	பழந்தக்கராகம்	364
38.	திருப்பந்தணைநல்லூர்	3	இடறினார்	புறநீர்மை	366

39.	திருஓமாம்புலியூர்	3	பூங்கோடி	புறநீர்மை	368
40.	திருவாழ்கொளிப் புத்தூர்	1	பொடியுடை	தக்கராகம்	370
41.	திருக்கடம்பூர்	2	வானமர்	காந்தாரம்	371
42.	திருநாரையூர் I	3	காம்பினை	பழம்பஞ்சுரம்	373
43.	திருநாரையூர் II	3	கடலிடை	பழம்பஞ்சுரம்	374
44.	திருநாரையூர் III	2	உரையினில்	பியந்தைக் காந்தாரம்	374
45.	திருக்கருப்பறியலூர்	2	சுற்றமொடு	இந்தளம் (திருவிராகம்)	376
46.	பொது (பஞ்சாக்கரப் பதிகம்)	3	துஞ்சலும்	காந்தாரப்பஞ்சமம்	393
47.	பிரமபுரம்	1	காடதணி	வியாழக்குறிஞ்சி - மொழி மாற்று	409
48.	சீகாழி	3	யாமாமாநீ	கௌசிகம் - திருமாலைமாற்று	411
49.	சீகாழி	3	சுரருலகு	சாதாரி-வழிமொழித் திருவிராகம்	411
50.	சீகாழி	1	பிரமபுரத்துறை	வியாழக்குறிஞ்சி - ஏகபாதம்	414
51.	சீகாழி	1	அரனை	குறிஞ்சி - திருஇருக்குக்குறள்	418
52.	சீகாழி	1	ஒருரு வாயினை	வியாழக்குறிஞ்சி- எழுகூற்றிருக்கை	418
53.	பிரமபுரம்	3	வரமதே	பழம்பஞ்சுரம்-ஈரடி	422
54.	பூந்தராய்	3	தக்கன்	காந்தாரப்பஞ்சமம் - ஈரடி மேல் வைப்பு	422
55.	திருப்புகலி	3	இயலிசை	காந்தாரப்பஞ்சமம் - நாலடிமேல் வைப்பு	423
56.	சண்பை நகர்	3	எந்தமது	சாதாரி - திருவிராகம்	424
57.	பிரமபுரம்	2	விளங்கிய சீர்	காந்தாரம் - சக்கரமாற்று	425

58.	திருக்கண்ணார் கோயில்	1	தண்ணார்	குறிஞ்சி - (ஐந்தாம் தல யாத்திரை)	434
59.	புள்ளிருக்கு வேளூர்	2	கள்ளார்ந்த	சீகாமரம்	435
60.	திருநின்றியூர்	1	சூலம்படை	நட்டபாடை	438
61.	திருப்புன்கூர்	1	முந்திநின்ற	தக்கராகம்	439
62.	திருஅன்னியூர்	1	மன்னியூர்	குறிஞ்சி	444
63.	திருமணஞ்சேரி	2	அயிலாரு	இந்தளம்	446
64.	திருத்துருத்தியும் திருவேள்விக்குடியும்	3	ஓங்கிமேல்	சாதாரி	447
65.	திருக்கோடிக்கா	2	இன்று நன்று	நட்டராகம்	450
66.	திருவியலூர்	1	குரவங்கமழ்	நட்டபாடை	455
67.	திருந்துதேவன்குடி	3	மருந்து வேண்டில்	கொல்லி	456
68.	திருஇன்னம்பர்	3	எண்டிசைக்கும்	சாதாரி	460
69.	வடகுரங்காடுதுறை	3	கோங்கமே	சாதாரி	461
70.	திருப்பழனம்	1	வேதமோதி	தக்கேசி	465
71.	திருவையாறு I	1	புலனைந்தும்	மேகராகக் குறிஞ்சி	466
72.	திருவையாறு II	2	கோடல்	இந்தளம்	470
73.	திருப்பெரும்புலியூர்	2	மண்ணுமோர்	காந்தாரம்	472
74.	திருநெய்த்தானம்	1	மையாடிய	நட்டபாடை	473
75.	திருமழபாடி I	3	அங்கையார்	கௌசிகம்	475
76.	திருமழபாடி II	2	களையும்	இந்தளம்	476
77.	திருக்கானூர்	1	வானார்	தக்கேசி	478
78.	திருஅன்பிலாந்துறை	1	கணைநீ	தக்கராகம்	478
79.	திருவடகரைமாந்துறை	2	செம்பொனார்	நட்டராகம்	480
80.	திருப்பாச்சிலாச்சிரமம்	1	துணிவளர்	தக்கராகம்	491
81.	திருப்பைஞ்ஞீலி	3	ஆரிடம்	காந்தார பஞ்சமம்	495
82.	திருவீங்கோய்மலை	1	வானத்துயர்	தக்கேசி	496
83.	கொடிமாடச் செங்குன்றூர்	1	வெந்தவெண்	வியாழக்குறிஞ்சி	499

84.	திருநணா (பவானி)	2	பந்தார் விரன்	காந்தாரம்	501
85.	பொது (கொடிமாடச் செங்குன்றூர்) சுரம் நீக்கும் பதிகம்	1	அவ்வினை	வியாழக்குறிஞ்சி திருநீலகண்டப் பதிகம்	511
86.	கொடிமுடி	2	பெண்ணமர்	காந்தாரம்	515
87.	கருவூர்	2	தொண்டெலா	இந்தளம்	518
88.	திருப்பராய்த்துறை	1	நீறுசேர்வ	மேகராகக்குறிஞ்சி	521
89.	திருக்கற்குடி	1	வடந்திகழ்	தக்கராகம்	526
90.	திருமுக்கீச்சரம்	2	சாந்தம்	செவ்வழி	527
91.	திருச்சிராப்பள்ளி	1	நன்றுடையானை	குறிஞ்சி	529
92.	திருவானைக்கா	2	மழையார்	இந்தளம்	533
93.	கயிலாயம் - ஆனைக்கா- மயேந்திரம் - ஆரூர்	3	மண்ணது	பழம்பஞ்சுரம் - கூடற்சதுக்கம்	534
94.	திருப்பாற்றுறை	1	காரார்	பழந்தக்கராகம்	538
95.	திருநெடுங்களம்	1	மறையுடையாய்	பழந்தக்கராகம்	541
96.	மேலைத் திருக்காட்டுப்பள்ளி	3	வாருமன்னும்	கொல்லி	542
97.	திருக்கண்டியூர்	3	வினவினேன்	கொல்லி	549
98.	திருச்சோற்றுத்துறை	1	செப்பநெஞ்சே	தக்கராகம்	550
99.	திருவேதிகுடி	3	நீறுவரி	சாதாரி	553
100.	திருவெண்ணியூர்	2	சடையானை	இந்தளம்	556
101.	திருச்சக்கரப்பள்ளி	3	படையினார்	கொல்லி	559
102.	திருப்புள்ளமங்கை	1	பாலுந்துறு	நட்டபாடை	561
103.	திருநல்லூர்	3	வண்டிரிய	சாதாரி	566
104.	திருக்கருகாவூர்	3	முத்திலங்கு	கௌசிகம்	569
105.	திருஅவளிவணநல்லூர்	3	கொம்பிரிய	சாதாரி, திருவிராகம்	573
106.	திருபரிதிநியமம்	3	விண்கொண்ட	பழம்பஞ்சுரம்	577
107.	திருவலஞ்சுழி I	2	விண்டெலா	இந்தளம்	582

108.	திருவலஞ்சுழி II	2	என்ன புண்ணிய	நட்டராகம்	584
109.	திருவலஞ்சுழி III	3	பள்ளமதாய	பழம்பஞ்சுரம்	585
110.	திருப்பட்டீச்சரம்	3	பாடன்மறை	சாதாரி	601
111.	திருஇரும்பூளை	2	சீரார் கழலே	இந்தளம் வினாவுரை	609
112.	அரதைப்பெரும்பாழி	3	பைத்தபாம்	கொல்லி	611
113.	திருச்சேறை	3	முறியுறு	சாதாரி	613
114.	நாலூர் மயானம்	2	பாலூரு மலை	சீகாமரம்	614
115.	குடவாயில் I	2	திகழுந்	இந்தளம்	615
116.	குடவாயில் II	2	கலைவாழு	காந்தாரம்	616
117.	நறையூர்ச்சித்தீச்சரம் I	1	ஊருலாவு	தக்கராகம்	617
118.	நறையூர்ச்சித்தீச்சரம் II	1	பிறைகொள்	தக்கேசி	618
119.	நறையூர்ச்சித்தீச்சரம் III	2	நேரியனாகு	பியந்தைக் காந்தாரம்	618
120.	அரிசிற்கரைப்புத்தூர்	2	மின்னுஞ்	காந்தாரம்	618
121.	சிவபுரம் I	1	புவம் வளி	நட்டபாடை	621
122.	சிவபுரம் II	1	இன்குரலிசை	வியாழக்குறிஞ்சி	623
123.	சிவபுரம் III	1	கலைமலி	வியாழக்குறிஞ்சி திருவிராகம்	623
124.	குடமூக்கு	3	அரவிரி	பஞ்சமம்	626
125.	குடந்தைக் காரோணம்	1	வாரார்	தக்கேசி	630
126.	திருவிடைமருதூர் I	1	ஓடேகலன்	தக்கராகம்	633
127.	திருநாகேச்சரம் I	2	பொன்னேர்	இந்தளம்	633
128.	திருநாகேச்சரம் II	2	தழைகொள்	செவ்வழி	634
129.	திருவிடைமருதூர் II	1	தோடொர்	குறிஞ்சி திருவிருக்குக்குறள்	637
130.	திருவிடைமருதூர் III	1	மருந்தவன்	வியாழக்குறிஞ்சி	638
131.	திருவிடைமருதூர் IV	1	நடைமரு	வியாழக்குறிஞ்சி	638
132.	திருவிடைமருதூர் V	1	விரிதரு	வியாழக்குறிஞ்சி	639
133.	திருவிடைமருதூர் VI	2	பொங்குநூன்	காந்தாரம்	639

134.	தென்குரங்காடுதுறை	2	பரவக்கெடும்	இந்தளம்	640
135.	ஆவடுதுறை	3	இடரினும்	காந்தார பஞ்சமம் - நாலடிமேல் வைப்பு	648
136.	கோழம்பம்	2	நீற்றானை	இந்தளம்	654
137.	வைகல்மாடக்கோயில்	3	துளமதி	காந்தாரபஞ்சமம்	658
138.	திருநல்லம்	1	கல்லானிழன்	குறிஞ்சி	659
139.	சிறுகுடி	3	திடமலி	சாதாரி–திருமுக்கால்	660
140.	திரு.அழுந்தூர்	2	தொழுமாறு	இந்தளம்	661
141.	துருத்தி	2	வரைத்தலை	நட்டராகம் - திருவிராகம்	663
142.	மயிலாடுதுறை I	3	ஏனவெயிறா	சாதாரி–திருவிராகம்	666
143.	மயிலாடுதுறை II	1	கரவின்றி	தக்கராகம்	667
144.	செம்பொன்பள்ளி	1	மருவார்	தக்கராகம்	668
145.	விளநகர்	2	ஒளிரிளம்	காந்தாரம்	669
146.	திருப்பறியலூர் வீரட்டம்	1	கருத்தன்	மேகராகக் குறிஞ்சி	672
147.	திருவேட்டக்குடி	3	வண்டிரைக்கு	பஞ்சமம்	674
148.	தருமபுரம்	1	மாதர்மட	யாழ்முரி	680
149.	சாத்தமங்கை	3	திருமலர்	பஞ்சமம்	699
150.	கீழ்வேளூர்	2	மின்னுலாவிய	நட்டராகம்	702
151.	சிக்கல்	2	வானுலாவும்	இந்தளம்	704
152.	செங்காட்டங்குடி I	3	பைங்கோட்டு	பஞ்சமம்	707
153.	செங்காட்டங்குடி II	1	நறைகொண்ட	பழந்தக்கராகம்	708
154.	மருகல்	2	சடையாய்	இந்தளம் - விடந்தீர்த்தது	725
155.	மருகலும் செங்காட்டங்குடியும்	1	அங்கமும்	நட்டபாடை- வினாவுரை	732
156.	புகலூர்	2	வெங்கள் விம்மு	செவ்வழி	737
157.	புகலூர் வர்த்தமானீச்சரம்	2	பட்டம்	பியந்தைக் காந்தாரம்	739
158.	விற்குடிவீரட்டம்	2	வடிகொண்	நட்டராகம்	746

159.	ஆரூர் I	1	பாடலநான்	வியாழக்குறிஞ்சி	748
160.	ஆரூர் II	2	பருக்கை	நட்டராகம் - திருவிராகம்	751
161.	ஆரூர் III	1	சித்தந்	குறிஞ்சி - இருக்குக்குறள்	753
162.	ஆரூர் IV	3	அந்தமாய்	கௌசிகம்	760
163.	வலிவலம்	1	பூவியல்	வியாழக்குறிஞ்சி	768
164.	கோளிலி	1	நாளாய	பழந்தக்கராகம்	769
165.	காறாயில்	2	நீரானே	இந்தளம்	771
166.	ஆரூர் V	2	பவனமாய்	காந்தாரம்	776
167.	பனையூர்	1	அரவச்சடை	தக்கராகம்	779
168.	இராமனதீச்சரம்	1	சங்கொளிர்	வியாழக்குறிஞ்சி	780
169.	புகலூர்	1	குறிகலந்த	நட்டபாடை	785
170.	அம்பர்மாகாளம் I	2	புல்குபொன்	நட்டராகம்	793
171.	அம்பர்மாகாளம் II	1	அடையார்	குறிஞ்சி	794
172.	அம்பர்மாகாளம் III	3	படியுளார்	சாதாரி	795
173.	அம்பர்பெருந் திருக்கோயில்	3	எரிதர	காந்தாரபஞ்சமம்	796
174.	கடவூர்த்திருவீரட்டம்	3	சடையுடை	காந்தாரபஞ்சமம்	799
175.	கடவூர்த்திருமயானம்	2	வரியமறை	காந்தாரம்	800
176.	ஆக்கூர்தான்தோன்றி மாடம்	2	அக்கிருந்த	சீகாமரம்	803
177.	மீயச்சூர்	2	காயச்செவ்வி	காந்தாரம்	804
178.	பாம்புரம்	1	சீரணி	தக்கராகம்	808
179.	வீழிமிழலை I	1	அரையார்	தக்கராகம்	810
180.	வீழிமிழலை II	1	சடையார்புன	நட்டபாடை	814
181.	பேணுபெருந்துறை	1	பைம்மா	தக்கராகம்	821
182.	திலதைப்பதிமதிமுத்தம்	2	பொடிகள்	செவ்வழி	822
183.	புகலியும், மிழலையும்	1	மைம்மரு	நட்டபாடை	832

184.	வீழிமிழலை III	1	வாசிதீரவே	குறிஞ்சி	850
185.	திருவாஞ்சியம்	2	வன்னி	இந்தளம்	856
186.	பெருவேளூர்	3	அண்ணாவு	பஞ்சமம்	857
187.	கரவீரம்	1	அரியுநம்	பழந்தக்கராகம்	858
188.	விளமர்	3	மத்தகமணி	சாதாரி	858
189.	தேவூர் I	2	பண்ணிலா	காந்தாரம்	861
190.	தேவூர் II	3	காடுபயில்	சாதாரி—திருவிராகம்	862
191.	நெல்லிக்கா	2	அறத்தா	இந்தளம்	863
192.	கைச்சினம்	2	தையலோர்	சீகாமரம்	865
193.	தேங்கூர்	2	புரைசெய்	பியந்தைக் காந்தாரம்	866
194.	கொள்ளிக்காடு	3	நிணம்படு	காந்தாரபஞ்சமம்	867
195.	கோட்டூர்	2	நீலமார்	நட்டராகம்	868
196.	வெண்டுறை	3	ஆதியன்	பஞ்சமம்	870
197.	தண்டலைநீணெறி	3	விரும்பு	கௌசிகம்	872
198.	களர்	2	நீருளார்	சீகாமரம்	873
199.	மறைக்காடு I	2	சதுரம்	இந்தளம்	889
200.	வாய்மூர்	2	தளிரிள	நட்டராகம்	900
201.	மறைக்காடு II	1	சிலைதனை	நட்டபாடை— திருவிராகம்	903
202.	மறைக்காடு III	2	பொங்கு	பியந்தைக் காந்தாரம்	905
203.	மறைக்காடு IV	3	கற்பொலி	சாதாரிதிருவிராகம்	906
204.	மறைக்காடு (பொது)	2	வேயுறுதோளி	பியந்தைக்காந்தாரம் கோளறுபதிகம்	930
205.	அகத்தியான் பள்ளி	2	வாடிய	காந்தாரம்	942
206.	திருக்கடிக்குளம்	2	பொடிகொள்	நட்டராகம்	946
207.	திருஇடும்பாவனம்	1	மனமார்	நட்டபாடை	947
208.	திருவுசாத்தானம்	3	நீரிடை	கொல்லி	949



27945



பன்னிரு திருமுறை ஆய்வு மையம்,

கற்பகம் பல்கலைக்கழகம், கோயம்புத்தூர்.